முன்னுரை

புதிய ஏற்பாட்டில் நான்கு சுவிசேஷங்களுக்குப் பின்பு, அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகம் கோர்க்கப்பட்டிருக்கிறது. இந்தப் புஸ்தகத்தை வாசிக்கும்போது, இதற்கு முன்பு கோர்க்கப்பட்டிருக்கும் சுவிசேஷங்களையும், இதற்கு பின்பு கோர்க்கப்பட்டிருக்கும் நிருபங்களையும் தியானிப்பதற்கு உதவியாயிருக்கும்.

இயேசுகிறிஸ்து "இந்தக் கல்லின்மேல்" தம் சபையைக் கட்டுவதாகக் கூறினார். இயேசுகிறிஸ்து சொன்ன வாக்கியம் இப்போது நிறைவேறியிருக்கிறது. சபை ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது. ஆதித்திருச்சபையின் வளர்ச்சி அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தில் விரிவாக எழுதப்பட்டிருக்கிறது.

இயேசுகிறிஸ்து மரித்து உயிர்த்தெழுந்த பின்பு, தம்முடைய சீஷர்களை உலகம் முழுவதும் சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கிக்குமாறு கட்டளை கொடுத்தார். பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் அவர்களுக்கு ஊற்றப்படும் என்றும் வாக்குப்பண்ணினார். சீஷர்கள் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொண்ட பின்பு, தேவனுடைய வல்லமையினால் நிரப்பப்படுகிறார்கள். சபையார் மத்தியில் அற்புங்களும் அடையாளங்களும் நடைபெறுகிறது. இரக்கத்தின் அற்புதங்களும், நியாயத்தீர்ப்பின் அற்புதங்களும் தேவனுடைய வல்லமையினால் ஜனங்கள் மத்தியிலே நடைபெறுகிறது.

இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த சம்பவம் சுவிசேஷங்களில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அவர் உயிர்த்தெழுந்து பரமேறிப்போனபின்பு, அப்போஸ்தலர்கள் இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தைத் தொடர்ந்து செய்து வருகிறார்கள். அவர்களுடைய ஊழியங்களில் நடைபெற்ற அற்புதங்களும் அடையாளங்களும், இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு மேலும் அதிகமான சாட்சியாயிற்று.

தம்முடைய சீஷர்கள், தமக்குச் சாட்சிகளாகயிருப்பார்கள் என்று இயேசுகிறிஸ்து கூறினார். சீஷர்கள் இயேசுகிறிஸ்துவுக்கு எவ்வாறு சாட்சிகளாகயிருந்தார்கள் என்பதை அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகம் விவரித்துக் கூறுகிறது. இயேசுகிறிஸ்து பிரசங்கம்பண்ணும்போது பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று சொன்னார். அந்த ராஜ்யம் இப்போது ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

இயேசுகிறிஸ்து தம்முடைய ஊழியர்களிடம், அவர்களுக்குத் தம்முடைய நாமத்தினாலே உபத்திரவங்கள் வரும் என்று எச்சரித்துச் சொல்லியிருந்தார். இயேசுகிறிஸ்து சொன்ன பிரகாரமாக சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறவர்களுக்கு உபத்திரவங்களும், பாடுகளும், வேதனைகளும் உண்டாயிற்று. அவர்களில் சிலர் கிறிஸ்துவின் சுவிசேஷத்தினிமித்தமாக இரத்த சாட்சிகளாகவும் மரித்தார்கள். அப்போஸ்தலருடைய பாடுகளுக்கு மத்தியில் அவர்களுக்குப் பரிசுத்த ஆவியானவரின் ஆறுதலும் ஆதரவும் உண்டாயிற்று. இவையெல்லாமே இயேசுகிறிஸ்து முன்னறிவித்த பிரகாரமாகவே நடைபெறுகிறது.

இயேசுகிறிஸ்து உபதேசம்பண்ணிய சத்தியங்களெல்லாம் புதிய ஏற்பாட்டு வரலாற்றில் பிரத்தியட்சமாக ஒவ்வொன்றாக நிறைவேறி வருகிறது. சுவிசேஷத்தையும் நிருபங்களையும் தியானிப்பதற்கு இவை ஒன்றுக்கொன்று உதவியாயிருக்கிறது. சுவிசேஷத்திலுள்ள சத்தியங்களை நிருபங்களிலுள்ள வசனங்கள் விளக்குகிறது. நிருபங்களிலுள்ள சம்பவங்கள் சுவிசேஷத்திலுள்ள வசனங்கள் உறுதிபண்ணுகிறது.

அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தில் இயேசுகிறிஸ்துவின் சபை ஸ்தாபிக்கப்பட்ட விவரம் எழுதப் பட்டிருக்கிறது. இந்தப் புஸ்தகம் சபையின் வரலாற்றிற்கு முன்னுரையாக அமைந்துள்ளது என்று சொல்லலாம். கர்த்தருடைய விசுவாசிகளாகிய நாமெல்லோருமே இயேசுகிறிஸ்துவின் சபையில் அங்கம் வகிக்கிறோம். நாம் மனுஷர் மத்தியில் தேவனுடைய கூடாரமாக இருக்கிறோம்.

நான்கு சுவிசேஷங்களிலும் இயேசுகிறிஸ்துவின் சபைக்கு அஸ்திபாரம் போடப்பட்ட சம்பவம் தெளிவுபடுத்தப் பட்டிருக்கிறது தேவனுடைய சபைக்கு சுவிசேஷத்தில் அஸ்திரபாரம் போடப்பட்டு, அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தில் அது கட்டியெழுப்பப்படுகிறது. யூதர்கள் மத்தியிலும், சமாரியர் மத்தியிலும், புறஜாதியார் மத்தியிலும் இயேசு கிறிஸ்துவின் சபை ஸ்தாபிக்கப்படுகிறது.

அப்போஸ்தலர் நடபடிகள் புஸ்தகத்தை எழுதின ஆசிரியர் லூக்கா. இவரே நான்கு சுவிசேஷங்களில், மூன்றாவது சுவிசேஷமான, லூக்கா சுவிசேஷத்தை எழுதினவர். அப்போஸ்தலர் பவுலின் பாடுகளிலும், பிரயாணங்களிலும், ஊழியங்களிலும் லூக்கா அவரோடு கூடயிருந்தவர். "லூக்கா மாத்திரம் என்னோடே இருக்கிறான்" (2தீமோ 4:11) என்று பவுல் தன் நிருபத்தில் எழுதியிருக்கிறார்.

அப்போஸ்தலர் நடபடிகள் புஸ்தகத்தின் பின்பகுதியில், இந்தப் புஸ்தகத்தின் நடையை தியானித்துப் பார்க்கும்போது, லூக்கா பவுலோடு எங்கே, எப்போது இருந்தாரென்பது தெளிவாக விளங்கும். லூக்கா இந்தப் புஸ்தகத்தை எழுதும்போது, தன்னையும் பவுலோடு சேர்த்து, அவரோடு பிரயாணம் பண்ணுவதாக எழுதுகிறார். "அந்தத் தரிசனத்தை அவன் (பவுல்) கண்ட போது, அவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி கர்த்தர் எங்களை அழைத்தாரென்று நாங்கள் (பவுலும், லூக்காவும், மேலும் சிலரும்) நிச்சயித்துக் கொண்டு, உடனே மக்கெதோனியாவுக்குப் புறப்பட்டுப்போகப் பிரயத்தனம் பண்ணினோம்" (அப் 16:10). "புளிப்பில்லாத அப்பப்பண்டிகை நாட்களுக்குப்பின்பு நாங்கள் (பவுலும், லூக்காவும், மேலும் சிலரும்)கப்பல் ஏறிப் பிலிப்பிபட்டணத்தை விட்டு ஐந்து நாளைக்குள்ளே துரோவா பட்டணத்துக்கு அவர்களிடத்தில் வந்து, அங்கே ஏழுநாள் தங்கியிருந்தோம்" (அப் 20:6).

இந்தப் புஸ்தகத்திற்கு "அப்போஸ்தலருடைய நடபடிகள்" என்று தலைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில் அப்போஸ்தலரின் சரித்திரம் எழுதப்பட்டிருக்கிறது. அவர்களோடு ஸ்தேவான், பர்னபா, ஆகியோரின் சரித்திரமும், அப்போஸ்தல ஊழியத்தைச் செய்த வேறு சிலருடைய சரித்திரமும் இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. மற்ற அப்போஸ்தலர்களைவிட, பேதுரு, பவுல் ஆகியோரின் ஊழிய வரலாறு அதிகமாக எழுதப்பட்டிருக்கிறது. பேதுரு விருத்தசேதனமுள்ளவர்களுக்கு அப்போஸ்தலராயிருந்தார். பவுலோ புறஜாதிகளுக்கு அப்போஸ்தலனாயிருந்தார். "விருத்த சேதனமுள்ளவர்களுக்கு அப்போஸ்தலனாயிருக்கும்படி பேதுருவைப் பலப்படுத்தினவர் புறஜாதிகளுக்கு அப்போஸ்தலனாயிருக்கும்படி என்னையும் பலப்படுத்தினபடியால், விருத்தசேதன முள்ளவர்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி பேதுருவுக்குக் கையளிக்கப்பட்டதுபோல, விருத்தசேதனம் இல்லாதவர்களுக்குப் பிரசங்கிக்கும்படி அது எனக்கும் கையளிக்கப்பட்டது" (கலா 2:7,8) என்று பவுல் எழுதுகிறார்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் என்பதற்கு அப்போஸ்தலருடைய செய்கைகள், ஊழியங்கள் என்றும் பொருள் சொல்லலாம். அப்போஸ்தலர்களில் யாரும் சோம்பேறியாகச் சும்மாயிருக்கவில்லை. அவர்கள் இயேசுகிறிஸ்துவுக்காக சுறுசுறுப்பாக ஊழியம் செய்தார்கள். இயேசுகிறிஸ்துவின் வார்த்தையினால் அற்புதங்களும் அடையாளங்களும் நடைபெற்றது. கிறிஸ்துவின் சுவிசேஷ வார்த்தைகளை அப்போஸ்தலர்கள் தங்கள் வாயினால் விசுவாசத்தோடு அறிவித்தார்கள். அப்போஸ்தலர்கள் சொன்னது கிறிஸ்துவின் வார்த்தையாக இருந்தபடியினால், அவர்கள் சொல்ல அது அப்படியே ஆயிற்று. ஆகையினால் இந்தப் புஸ்தகம் அப்போஸ்தலருடைய நடபடிகள் என்று அழைக்கப்படுகிறது.

1 அதிகாரம்

லூக்கா இந்தப்புஸ்தகத்தின் முன்னுரையில், இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை தான் ஏற்கெனவே எழுதியிருப்பதைப்பற்றி, தன்னுடைய சிநேகிதனாகிய தெயோப்பிலுவுக்கு குறிப்பிடுகிறார் (அப் 1:1,2). இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குச் சாட்சிகள், இயேசு தம்முடைய சீஷர்களோடு உரையாடிய சம்பவம், இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு இந்தப் பூமியில் நாற்பது நாட்கள் இருந்தபோது அவர் தமது சீஷர்களுக்குக் கொடுத்த கட்டளைகள் ஆகியவை (அப் 1:3-5). இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு பரமேறிப்போன சம்பவம் (அப் 1:6-11). கிறிஸ்தவ சபையின் ஸ்தாபனம் (அப் 1:12-14). இயேசுகிறிஸ்துவின் சீஷர்களில் ஒருவனாகிய யூதாஸ்காரியோத்து மரித்த பின்பு, அவனுடைய ஸ்தானத்திற்கு மத்தியாவை தேர்த்தெடுத்த சம்பவம் (அப் 1:15-26).

தியோப்பிலுவே
அப் 1 : 1,2

அப் 1:1. தெயோப்பிலுவே, இயேசுவானவர் தாம் தெரிந்துகொண்ட அப்போஸ்தலருக்குப் பரிசுத்த ஆவியினாலே கட்டளையிட்ட பின்பு,

அப் 1:2. அவர் எடுத்துக்கொள்ளப்பட்ட நாள் வரைக்கும் செய்யவும் உபதேசிக்கவும் தொடங்கின எல்லாவற்றையுங்குறித்து, முதலாம் பிரபந்தத்தை உண்டுபண்ணினேன்.

லூக்கா சுவிசேஷம் எழுதும்போது, அதை தியோப்பிலுவுக்கு பிரயோஜனமுள்ளதாக எழுதுகிறார். அவருக்குப் பிரயோஜனமுள்ளது நமக்கும் பிரயோஜனமுள்ளதாயிருக்க வேண்டும். அதற்கு ஏற்ற விதமாக சுவிசேஷத்தைத் தியானித்து ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தை லூக்கா எழுதும்போது, இதை தியோப்பிலுவுக்காக எழுதினாலும், இது நமக்குத் தனிப்பட்ட முறையில் எழுதப்பட்டிருக்கிறது. "தியோப்பிலுவே" என்னும் வார்த்தையை எடுத்துவிட்டு, அந்த இடத்தில் நம்முடைய பெயரைப் போட்டு, இந்தப் புஸ்தகத்தைத் தியானிக்கவேண்டும். ஏனெனில் வேதவாக்கியங்களெல்லாம் நம்முடைய பிரயோஜனத்திற்காகவே எழுதப்பட்டிருக்கிறது.

லூக்கா தான் எழுதின சுவிசேஷத்தைப் பற்றி இங்கு குறிப்பிடும்போது "முதலாம் பிரபந்தத்தை உண்டுபண்ணினேன்" என்று எழுதுகிறார். முதலாம் பிரபந்தத்தை உண்டுபண்ணின பின்பு, பரிசுத்த ஆவியானவர் "அப்போஸ்தலருடைய நடபடிகள்" புஸ்தகத்தை எழுதுமாறு லூக்காவின் இருதயத்தில் ஏவியிருக்கிறார். ஏற்கெனவே ஒரு பிரபந்தம் எழுதப்பட்டிருப்பதினால் மற்றொரு பிரபந்தம் தேவையில்லையென்று விசுவாசிகள் நினைக்கக்கூடாது. விசுவாசிகளாகிய நாம் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் பரிபூரணமடைய முயற்சிபண்ணவேண்டும். ஏற்கெனவே செய்த ஊழியம் போதுமென்று நினைத்து, இனிமேல் ஊழியம் செய்யாமல் நிறுத்திவிடக்கூடாது. நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் தொடர்ந்து முன்னேறிச் செல்லவேண்டும்.

தான் எழுதின சுவிசேஷத்தில் லூக்கா அஸ்திபாரம் போட்டிருக்கிறார். இப்போது அந்த அஸ்திபாரத்தின்மீது கட்டுகிறார். நாம் புதிய பிரசங்கங்களைக் கேட்கும்போது பழைய பிரசங்கங்களை மறந்துவிடக்கூடாது. அதுபோலவே புதிய புஸ்தகங்களை வாசிக்கும்போது ஏற்கெனவே வாசித்த பழைய புஸ்தகங்களை மறந்துவிடக் கூடாது. நாம் கேட்டது, கற்றது, பார்த்தது எல்லாவற்றையும் நினைவில் வைத்திருக்க வேண்டும். நம்முடைய ஆவிக்குரிய பிரயோஜனத்திற்கு எதெல்லாம் தேவையானதோ, அதெல்லாவற்றையும் மறந்துவிடாமல் நினைவில் வைத்திருப்பது நமக்கு மிகவும் நல்லது.

லூக்கா தான் உண்டுபண்ணின முதலாம் பிரபந்தமான சுவிசேஷத்தில், இயேசுவானவர் செய்யவும், உபதேசிக்கவும் தொடங்கின எல்லாவற்றையும் குறித்து எழுதியிருக்கிறார். இயேசுகிறிஸ்து இவ்விரண்டையுமே செய்திருக்கிறார். அவர் அற்புதங்களையும் செய்திருக்கிறார். உபதேசமும் பண்ணியிருக்கிறார். கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நாமும் உபதேசம் பண்ணவும் வேண்டும். கிரியை செய்யவும் வேண்டும். நம்முடைய ஜீவியத்தில் ஒவ்வொரு பகுதியும் பிரசங்கத்தின் ஒரு பகுதியாகவே இருக்கவேண்டும்.

இயேசுகிறிஸ்து தாம் செய்தது, உபதேசித்தது ஆகியவற்றினால் சபைக்கு அஸ்திபாரம் போட்டிருக்கிறார். கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் அவர் செய்ததையும் உபதேசித்ததையும் தொடர்ந்து செய்கிறார்கள். இயேசுகிறிஸ்து தொடங்கின எல்லாவற்றையும் அப்போஸ்தலர்கள் தொடர்ந்து செய்கிறார்கள். இயேசுகிறிஸ்து தம்முடைய ஊழியத்தை ஆரம்பித்து வைக்கிறார். அவர் ஆரம்பித்து வைத்த ஊழியம் தொடர்ந்து நடைபெறுகிறது. இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களை அப்படியே கைவிட்டுவிடவில்லை. தம்முடைய பரிசுத்த ஆவியானவரை அனுப்பி அவர்களைப் பெலப்படுத்துகிறார். இயேசுகிறிஸ்து ஆரம்பித்து வைத்திருக்கும் ஊழியத்தில் பங்குபெறுகிற நாமெல்லோருமே பாக்கியவான்கள். அவர் நம்மைத் தனியாகக் கைவிட்டு விடுவதில்லை. அவருடைய பரிசுத்த ஆவியானவர் நம்மோடு கூடவேயிருந்து நம்மைப் பெலப்படுத்துகிறார்.

இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை எழுதியிருக்கும் மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகிய நான்கு பேருமே இயேசுகிறிஸ்து செய்யவும் உபதேசிக்கவும் தொடங்கினதைக் குறித்து எழுதியிருக்கிறார்கள். ஒரு சுவிசேஷத்தை மாத்திரம் நாம் வாசித்தால், இயேசுகிறிஸ்து செய்யவும் உபதேசிக்கவும் தொடங்கின எல்லாவற்றையும் குறித்து நாம் வாசித்து அறியமுடியாது. நான்கு சுவிசேஷங்களையும் சேர்த்து வாசித்தால்தான் எல்லாவற்றையும் அறிந்துகொள்ள முடியும். ஒரு சுவிசேஷத்தில் ஒரு சம்பவம் விரிவாக எழுதப்பட்டிருக்கும். மற்றொரு சுவிசேஷத்தில் வேறொரு சம்பவம் விரிவாக எழுதப்பட்டிருக்கும். ஆகையினால் நான்கு சுவிசேஷங்களுமே, இயேசுகிறிஸ்து செய்யவும் உபதேசிக்கவும் தொடங்கின எல்லாவற்றையும் அறிந்துகொள்வதற்கு உதவியாயிருக்கிறது.

இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றில், அவர் பரமேறிப்போன சம்பவம் வரையிலுமே நமக்குச் சுவிசேஷத்தில் எழுதப்பட்டிருக்கிறது. லூக்கா இதைப்பற்றிக் குறிப்பிடும்போது "கிறிஸ்துவானவர் எடுத்துக்கொள்ளப்பட்ட நாள் வரைக்கும், செய்யவும் உபதேசிக்கவும் தொடங்கின எல்லாவற்றையும் குறித்து, தாம் முதலாம் பிரபந்தத்தை" உண்டுபண்ணினதாக எழுதியிருக்கிறார். இயேசுகிறிஸ்து பரமேறிப்போன பின்பு, அவர் தம்முடைய சரீரத்தில் பிரத்தியட்சமாகச் சீஷர்களோடு காணப்படவில்லை. அவர் பரமேறியபோது அவருடைய சரீரப்பிரகாரமான பிரசன்னமும் இந்த உலகத்தை விட்டுப் பரமேறிப்போயிற்று.

பரிசுத்த ஆவி
அப் 1:3-5

அப் 1:3. அவர் பாடுபட்டபின்பு, நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்குத் தரிசனமாகி, தேவனுடைய ராஜ்யத்துக் குரியவைகளை அவர்களுடனே பேசி, அநேகம் தெளிவான திருஷ்டாந்தங் களினாலே அவர்களுக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார்.

அப் 1:4. அன்றியும் அவர் அவர்களுடனே கூடி வந்திருக்கும் போது, அவர்களை நோக்கி: யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுத்தான்; நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்தஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள்.

அப் 1:5. ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளையிட்டார்.

தெளிவான திருஷ்டாந்தங்கள்

அவர் பாடுபட்டபின்பு, நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்குத் தரிசனமாகி, தேவனுடைய ராஜ்யத்துக் குரியவைகளை அவர்களுடனே பேசி, அநேகம் தெளிவான திருஷ்டாந்தங் களினாலே அவர்களுக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார் (அப் 1:3).

இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த சம்பவம் சுவிசேஷங்களில் தெளிவாக உறுதிபண்ணப்பட்டிருக்கிறது. அவர் பாடுபட்ட பின்பு நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்குத் தரிசனமானார். அவர்களுடனே பேசினார். அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே இயேசுகிறிஸ்து தம்மை உயிரோடிருக்கிறவராகத் தம்முடைய சீஷருக்குக் காண்பித்தார். இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த சம்பவம் மெய்யானது. இது சந்தேகத்திற்கிடமில்லாமல் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அவர் உயிரோடு எழுந்தார். நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்குத் தரிசனமானார். அவர்களோடு பேசினார். அவர்களோடு போஜனம்பண்ணினார். தெளிவான திருஷ்டாந்தங்களினாலே தம்மை அவர்களுக்கு உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார். தம்முடைய கரங்களிலுள்ள காயங்களையும், விலாவிலுள்ள தழும்பையும் இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷருக்குக் காண்பித்தார்.

இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்ததை ஒருவர் அல்லது இருவர் என்று மாத்திரம் பார்க்காமல், அநேகர் அவரைப் பார்த்திருக்கிறார்கள். உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவும் ஒருநாள் அல்லது இரண்டுநாள் என்று இந்த உலகத்திலிராமல், நாற்பது நாளளவும் இந்த உலகத்தில் இருந்தார். இந்த நாற்பது நாளும் இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களோடு எப்போதும் கூடவே இருந்தாரென்று சுவிசேஷத்தில் எழுதப்படவில்லை. இந்த நாற்பது நாட்களில் அவர் தம்முடைய சீஷருக்குப் பல சமயங்களில் தரிசனமாகியிருக்கிறார். பல சமயங்களில் அவர்களோடு பேசியிருக்கிறார். பல சமயங்களில் அவர் அநேகம் தெளிவான திருஷ்டாந்தங் களினாலே அப்போஸ்தலர்களுக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்திருக்கிறார்.

இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு, தம்முடைய அப்போஸ்தலர்களிடம் தேவனுடைய ராஜ்யத்துக்குரியவைகளைப் பற்றிப் பேசினார். தம்முடைய அப்போஸ்தலர்கள் இனிமேல் என்ன செய்யவேண்டுமென்பதை அவர்களுக்குத் தெளிவுபடுத்தினார். தாம் தெரிந்துகொண்ட அப்போஸ்தலர்களுக்குத் தம்முடைய பிரதான கட்டளையைக் கூறினார். இயேசுகிறிஸ்து யாரைத் தெரிந்துகொள்கிறாரோ, அவர்களுக்கு அவர் விசேஷித்த சலுகைகளைக் கொடுப்பாரென்று எதிர்பார்க்கக்கூடாது. தம்மால் தெரிந்துகொள்ளப்பட்ட ஊழியக்காரர்களுக்கு, இயேசுகிறிஸ்து தம்முடைய ஊழியத்தைச் செய்யுமாறு கட்டளையைத்தான் கொடுப்பார்.

பரிசுத்த ஆவியானவர் மூலமாக இயேசுகிறிஸ்து அப்போஸ்தலர்களுக்குக் கட்டளை கொடுத்தார். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்குப் பரிசுத்த ஆவியானவரைக் கொடுத்து, அவர்களுக்குத் தம்முடைய கட்டளையையும் கொடுக்கிறார். நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற தேற்றரவாளர், நமக்குக் கட்டளைகொடுக்கிறவராகவும் இருக்கிறார். அப்போஸ்தலர்கள் பிரசங்கம் பண்ணவேண்டிய சத்தியங்களைக் குறித்துப் பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்குப் போதிப்பார்.

இயேசுகிறிஸ்து தாம் பரமேறிப்போவதற்கு முன்பாக, தம்முடைய சீஷர்களிடம் தேவனுடைய ராஜ்யத்திற்குரியவைகளைப் பேசினார். இதற்கு முன்பு அவர் தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து தம்முடைய சீஷர்களோடு பொதுவாகப் பேசியிருக்கிறார். இப்போதோ தம்முடைய ராஜ்யத்தின் ஒவ்வொரு அம்சத்தைக் குறித்தும் சீஷரிடம் தெளிவாக விவரிக்கிறார். தேவனுடைய ராஜ்யம் இந்த உலகத்தில் கிருபையின் ராஜ்யமாகவும், வரப்போகிற உலகத்தில் இது மகிமையின் ராஜ்யமாகவும் இருக்கும்.

பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்வதற்கு இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரை ஆயத்தம்பண்ணுகிறார். தம்முடைய சீஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கும் பாதையில் அவர்கள் ஒவ்வொருவரும் கடந்து செல்வதற்கு இயேசுகிறிஸ்து அவர்களை ஆயத்தம்பண்ணுகிறார்.

இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு, அப்போஸ்தலருக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பிக்கிறார். இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு இதுவும் ஒரு சாட்சியாயிற்று. தம்மை உயிரோடு காண்பிப்பதினால் மாத்திரமல்ல, அவர்களோடு பேசுவதினாலும் இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் நிரூபிக்கப்படுகிறது. இயேசுகிறிஸ்துவைத் தவிர வேறு யாரும் தேவனுடைய ராஜ்யத்திற்குரியவைகளைத் தெளிவாகவும் பூரணமாகவும் பேசமுடியாது.

பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம்

அன்றியும் அவர் அவர்களுடனே கூடி வந்திருக்கும்போது, அவர்களை நோக்கி: யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுத்தான்; நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்தஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள். ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளையிட்டார் (அப் 1:4,5).

அப்போஸ்தலர்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவார்களென்று இயேசுகிறிஸ்து அவர்களிடம் உறுதிபண்ணுகிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடம் "காத்திருங்கள்" என்று கட்டளையிடுகிறார். சீஷர்கள் காத்திருக்கும்போது அவர்களுடைய எதிர்பார்ப்பு அதிகரிக்கும். அவர்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கும் காலம் வரையிலும் காத்திருக்கவேண்டும். நீண்ட நாள் காத்திருக்கவேண்டியதில்லை. ஏனெனில் அவர்கள் "சில நாளுக்குள்ளே" பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவார்கள்.

இயேசுகிறிஸ்து நமக்குத் தம்முடைய கிருபையினால் பல ஆசீர்வாதங்களை வாக்குப் பண்ணியிருக்கிறார். ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள நாம் அவசரப்படக்கூடாது. அது நமக்கு வரும் வரையிலும் பொறுமையோடு காத்திருக்க வேண்டும். வாக்குத்தத்தம் நிறைவேற விசுவாசிகளெல்லோரும் காத்திருக்க வேண்டும். இயேசுகிறிஸ்துவின் கட்டளையின் பிரகாரம் அப்போஸ்தலர்கள் பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருக்கிறார்கள். அவர்கள் எங்கு வேண்டுமானாலும், தாங்கள் விரும்பிய இடத்தில் காத்திருக்கக்கூடாது. "எருசலேம்" நகரமே அவர்கள் காத்திருப்பதற்காக நியமிக்கப்பட்டிருக்கிற இடம். ஆகையினால் அவர்கள் எருசலேமைவிட்டுப் போகாமல், இயேசுகிறிஸ்துவிடத்தில் கேள்விப்பட்ட, பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேற, அங்கேதானே காத்திருக்கவேண்டும்.

இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கையில் எருசலேம் நகரம் முக்கிய இடம் பெற்றிருக்கிறது. இந்த நகரத்தில்தான் கிறிஸ்துவின் சத்துருக்கள் அவரை அவமானப்படுத்தினார்கள், பரியாசம்பண்ணினார்கள், சிலுவையில் அறைந்தார்கள். இயேசுகிறிஸ்து தம்முடைய தெய்வீக திட்டத்தின் பிரகாரம், தம்முடைய மகிமையைப் பெற்றுக்கொள்வதற்கு, இந்த எருசலேம் நகரத்தையே தெரிந்தெடுத்திருக்கிறார். எருசலேம் நகரத்தார் இயேசுகிறிஸ்துவைத் துன்புறுத்தினார்கள். இயேசுகிறிஸ்துவோ தமது கிருபையினால் அவர்களை மன்னித்து, அதே நகரத்தில் தமது மகிமையை வெளிப்படுத்துகிறார்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நம்மிடத்திலும் மன்னிக்கிற சுபாவம் இருக்கவேண்டும். நமக்கு விரோதமாகத் தீங்கு செய்கிறவர்களை நாமும் மன்னிக்கவேண்டும். இயேசுகிறிஸ்து நம்முடைய பாவங்களையும் மன்னித்திருக்கிறாரே.

இயேசுகிறிஸ்து தம்முடைய அப்போஸ்தலரை இந்த உலகத்திற்கு வெளிச்சமாகப் பிரதிஷ்டை பண்ணுகிறார். அப்போஸ்தலர்கள் ஒவ்வொருவரும் இயேசுகிறிஸ்துவுக்காகப் பிரகாசமாக எரிகிற விளக்காயிருக்கிறார்கள். விளக்கானது விளக்குத்தண்டின்மீது ஏற்றி வைக்கப்படவேண்டும். அப்போதுதான் அதன் வெளிச்சம் எல்லோருக்கும் பிரயோஜனமுள்ளதாகத் தெரியும். விளக்குகளாக இருக்கும் அப்போஸ்தலர்களோ, எருசலேம் என்னும் விளக்குத்தண்டின்மீது ஏற்றி வைக்கப்படுகிறார்கள். இயேசுகிறிஸ்து தம்முடைய கிருபையினால், தம்முடைய அநாதி தீர்மானத்தின் பிரகாரமாக, எருசலேம் நகரத்தை விளக்குத்தண்டாகத் தெரிவு செய்திருக்கிறார்.

இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் எருசலேம் நகரத்தில் காத்திருக்கவேண்டும். கர்த்தருடைய வார்த்தையின் பிரகாரம் காத்திருப்பது ஒருபோதும் வீணாகிப்போவதில்லை. அப்போஸ்தலர்கள் தம்முடைய வார்த்தையின் பிரகாரம் காத்திருக்கும் போது, இயேசுகிறிஸ்து அவர்களுக்குத் தம்முடைய ஆசீர்வாதத்தைக் கொடுக்க வேண்டுமென்று தீர்மானம் பண்ணியிருக்கிறார். அவர்கள் பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவார்கள்.

இயேசுகிறிஸ்து ஏற்கெனவே தம்முடைய சீஷர்கள்மேல் ஊதி "பரிசுத்த ஆவியைப்பெற்றுக் கொள்ளுங்கள்" (யோவா 20:22) என்று கூறினார். இதன் ஆசீர்வாதத்தைச் சீஷர்கள் கண்டுகொண்டார்கள். இப்போது பரிசுத்த ஆவியானவரின் நிறைவான ஆசீர்வாதம், அவர்களுக்கு அதிக அளவில் வாக்குப்பண்ணப்படுகிறது. சீஷர்கள் பரிசுத்த ஆவியானவரின் வரங்களையும், கிருபைகளையும், ஆறுதல்களையும் அதிக அளவில் பெற்றுக்கொள்வார்கள்.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் ஆசாரியர்கள் தேவாலயத்தின் ஊழியத்தைச் செய்வதற்கு முன்பாக, அவர்கள் தங்களைத் தண்ணீரினால் சுத்திகரித்துக்கொள்வது வழக்கம். இப்போது இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களை பரிசுத்த ஆவியினால் சுத்திகரிக்கிறார். இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்வதற்கு பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் அவசியம் தேவைப்படுகிறது. பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால், கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள், அவருக்கு அபிஷேகத்தோடு ஊழியம் செய்வார்கள். தங்களுடைய சுயபலத்தினால் செய்யும் வேலைகளைவிட, பரிசுத்த ஆவியின் பலத்தினால் செய்யப்படும் ஊழியம் மிகுந்த ஆசீர்வாதமுள்ளதாக இருக்கும். இது அதிக பெலனைத் தரும்.

அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்ளும்போது, அவர்கள் அவருக்குச் சாட்சிகளாகயிருப்பார்கள். அவர்கள் இயேசுகிறிஸ்துவை மறுபடியும் மறுதலிக்கமாட்டார்கள். இயேசு கிறிஸ்துவோடு அவர்கள் கொண்டிருக்கும் ஐக்கியம் உறுதியாயிருக்கும்.

இயேசுகிறிஸ்து பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப்பற்றித் தம்முடைய சீஷரிடத்தில் சொல்லும்போது "என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம்" என்று குறிப்பிடுகிறார். இயேசுகிறிஸ்துவின் வாக்குத்தத்தத்தில் அப்போஸ்தலர்கள் சார்ந்துகொள்ளலாம். அவரையும் அவருடைய வார்த்தையையும் பூரணமாக நம்பலாம். பரிசுத்த ஆவியானவர் வாக்குத்தத்தத்தினால் கொடுக்கப்படுகிறார். தேவன் நமக்கு மனுஷருடைய ஆவியைக் கொடுத்திருக்கிறார். பரிசுத்த ஆவியானவர் நமக்குக் கொடுக்கப்படுவது, மனுஷருடைய ஆவி நமக்குக் கொடுக்கப்படுவது போலயிராது. தேவனுடைய வார்த்தையினால் பரிசுத்த ஆவியானவர் நமக்குக் கொடுக்கப்படுகிறார்.

பரிசுத்த ஆவியானவர் நமக்கு நிச்சயமாகவே கொடுக்கப்படுவார். தேவனுடைய கிருபையினால், நம்முடைய விசுவாசத்தைக் கொண்டு, நாம் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்ள வேண்டும். நாம் இயேசுகிறிஸ்துவை விசுவாசத்தினால் ஏற்றுக்கொள்வதுபோல, பரிசுத்த ஆவியானவரையும் விசுவாசத்தினால் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

பரிசுத்த ஆவியானவர் பிதாவின் வாக்குத்தத்தமாயிருக்கிறார். பிதாவானவர் இயேசுகிறிஸ்துவின் பிதாவாகயிருக்கிறார். அவர் கிறிஸ்துவின் மூலமாக நம்முடைய பிதாவாகவும் இருக்கிறார். இரக்கங்களின் பிதாவானவராகிய இயேசுகிறிஸ்து நமக்குப் பரிசுத்த ஆவியானவரைக் கொடுக்கிறார். பரிசுத்த ஆவியானவர் பிதாவின் வாக்குத்தத்தமாகவே இருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் பிதாவின் வாக்குத்தத்தத்தை, கிறிஸ்துவின் மூலமாக பல சமயங்களில் கேள்விப்பட்டிருக்கிறார்கள். "தேற்றரவாளர் வருவார்" என்று இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரிடத்தில் பலமுறை உறுதிபண்ணியிருக்கிறார். இது பிதாவின் வாக்குத்தத்தை உறுதி பண்ணுகிறது. இயேசுகிறிஸ்துவிடத்தில் நாம் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நமக்கும் நிறைவேறும்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷருக்குப் பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் கொடுப்பதாகக் கூறுகிறார். இந்த அபிஷேகத்தைப்பற்றி யோவான்ஸ்நானனும் ஏற்கெனவே கூறியிருக்கிறான். "மனந்திரும்புதலுக் கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன்; எனக்குப்பின் வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக்கிறார், அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல; அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்" (மத் 3:11) என்று யோவான்ஸ்நானன் இயேசுகிறிஸ்து கொடுக்கும் ஞானஸ்நானத்தைப் பற்றிக் கூறியிருக்கிறான்.

இயேசுகிறிஸ்து யோவானைப்பற்றிக் குறிப்பிடுவது அவனுக்கு கிடைத்திருக்கும் சிலாக்கியமாகும். இயேசுகிறிஸ்து தம்முடைய ஊழியக்காரர்களின் வார்த்தைகளை உறுதிபண்ணுகிறார். அதே வேளையில் இயேசுகிறிஸ்து தம்முடைய ஊழியக்காரர்களைவிட அதிகமாகக் கிரியை செய்யக்கூடியவர். இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையின் ஊழியத்தில் பங்குபெறுவது அவருடைய ஊழியக்காரராகிய நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் மிகப்பெரிய சிலாக்கியமாகும். இந்த உலகத்திற்கு கிறிஸ்துவின் கிருபையை வெளிப்படுத்தும் பாத்திரங்களாக நாம் ஊழியம் செய்கிறோம். ஆனாலும் கிருபையின் ஆவியானவரே தம்முடைய கிருபையை நமக்குக் கொடுக்கிறார்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடத்தில் "சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள்" என்று கூறுகிறார். இது ஒரு வாக்குத்தத்தம். இந்த வாக்குத்தத்தம் சில நாளுக்குள்ளே நிறைவேறப்போகிறது. சாதாரண விசுவாசிகளுக்கும் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் கொடுக்கப்படுமென்று வேதவசனம் கூறுகிறது. ஆனாலும் இங்கு குறிப்பிடப்பட்டிருப்பது, இயேசுகிறிஸ்துவின் சீஷர்களுக்குக் கொடுக்கப்படும் விசேஷித்த ஆசீர்வாதமாகும். இவர்களே இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை முதன்முதலாகப் பிரசங்கிக்கிற அப்போஸ்தலர்களாக ஊழியம் செய்யப்போகிறவர்கள். இயேசுகிறிஸ்து இவர்களுக்குப் பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் கொடுத்து, தமது வல்லமையினால் அவர்களை நிரப்பி, தம்முடைய ஊழியத்தைச் செய்யுமாறு அவர்களை அனுப்புகிறார்.

இயேசு பரமேறுகிறார்
அப் 1 : 6-11

அப் 1:6. அப்பொழுது கூடிவந்திருந்தவர்கள் அவரை நோக்கி: ஆண்டவரே, இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பீர் என்று கேட்டார்கள்.

அப் 1:7. அதற்கு அவர்: பிதாவானவர் தம்முடைய ஆதீனத்திலே வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல.

அப் 1:8. பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும் யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்.

அப் 1:9. இவைகளை அவர் சொன்னபின்பு, அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கையில், உயர எடுத்துக்கொள்ளப்பட்டார்; அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக்கொண்டது.

அப் 1:10. அவர் போகிறபோது அவர்கள் வானத்தை அண்ணாந்துபார்த்துக் கொண்டிருக்கையில், இதோ, வெண்மையான வஸ்திரந்தரித்தவர்கள் இரண்டுபேர் அவர்களருகே நின்று:

அப் 1:11. கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்துபார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப் போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள்.

இராஜ்யத்தைத் திரும்பக் கொடுப்பீர்

அப்பொழுது கூடி வந்திருந்தவர்கள் அவரை நோக்கி: ஆண்டவரே, இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பீர் என்று கேட்டார்கள் (அப் 1:6).

இயேசுகிறிஸ்து வானத்திற்கு பரமேறிப்போகப்போகிறார். அவருடைய வார்த்தையின் பிரகாரமாக, அவர் சொன்ன இடத்தில் அவருடைய சீஷர்கள் கூடிவந்திருக்கிறார்கள். உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்து பரமேறிப்போவதற்கு முன்பாக, தம்முடைய சீஷர்களுக்கு தரிசனம் கொடுக்கிறார். சீஷர்கள் அவரிடம் "ஆண்டவரே, இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக்கொடுப்பீர்" என்று கேட்கிறார்கள். சீஷர்களின் இந்தக் கேள்விக்கு வேதபண்டிதர்கள் இரண்டுவிதமாக வியாக்கியானம் கூறுகிறார்கள். அவையாவன:

1. யூதர்கள் இயேசுகிறிஸ்துவை விரோதித்தார்கள். அவரைத் துன்புறுத்தினார்கள். இயேசுகிறிஸ்து அப்படிப்பட்ட யூதர்களிடத்தில் ராஜ்யத்தை நிச்சயமாகத் தரமாட்டார் என்று பொருள்படும் விதமாக சீஷர்கள் அவரிடத்தில் சொல்லுகிறார்கள்.

2. இக்காலத்தில் தானே இயேசுகிறிஸ்து யூதருடைய ராஜ்யத்தை அவர்களுக்குத் திரும்பக்கொடுப்பார். அதனால் அவர்கள் இப்போது இயேசு கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிவார்களென்று பொருள்படுமாறும் சீஷர்கள் அவரிடத்தில் சொல்லுகிறார்கள்.

இயேசுகிறிஸ்து தம்முடைய ராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்காகவே இந்தப் பூமிக்கு வந்தார். இயேசுகிறிஸ்துவின் ராஜ்யம் பரலோகத்திற்குரியது. அது பூமிக்குரிய ராஜ்யமல்ல. இஸ்ரவேலுக்கு பூமிக்குரிய ராஜ்யத்தைக் கொடுப்பது இயேசுகிறிஸ்துவின் சித்தமுமல்ல. ஆனால் சீஷர்களோ, பூமிக்குரிய இயேசுகிறிஸ்து ராஜ்யத்தை இஸ்ரவேலுக்கு திரும்பக் கொடுக்கப்போவதாக நினைக்கிறார்கள். அவர் அதை எப்போது கொடுக்கப் போகிறார் என்று தெரிந்துகொள்ள ஆவலாயிருக்கிறார்கள்.

விசுவாசிகளாகிய நாம் ஒவ்வொருவரும் நம்முடைய சிலுவையைச் சுமந்துகொண்டு இயேசுகிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் செல்ல வேண்டும். கர்த்தருடைய பிள்ளைகளெல்லோருக்குமே இந்த உலகத்தில் பாடுகளும் உபத்திரவங்களும் நியமிக்கப்பட்டிருக்கிறது. நாம் பரலோகத்தில் பிரவேசிப்பதற்காகக் காத்துக்கொண்டிருக்கிறோம். நமக்குச் சந்தோஷமும் சமாதானமும், ஆறுதலும் இளைப்பாறுதலும் பரலோகத்தில் தான் நியமிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பூமியிலோ நமக்குப் பாடுகளும் உபத்திரவங்களும் நியமிக்கப்பட்டிருக்கிறது.

கர்த்தருடைய பிள்ளைகளில் சிலர், சபையின் சந்தோஷமென்பது ஆடம்பரம் என்றும், ஆரவாரமான வல்லமை என்றும்நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆடம்பரத்திலும், அலங்காரத்திலும், ஆரவாரத்திலும் தேவனுடைய ராஜ்யம் கட்டப்படவில்லை. இவற்றை ஆதாரமாக வைத்து சபை சந்தோஷமாக இருக்க முடியாது.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடம் பரலோக ராஜ்யத்தைப்பற்றிப் பல சமயங்களில் உபதேசம் பண்ணியிருக்கிறார். இந்த உபதேசத்தை அவர்கள் பலமுறை கேட்டிருந்தும், இன்னும் அதைத் தெளிவாக அறியாதவர்களாகவே இருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து பரலோக ராஜ்யத்தைப்பற்றிச் சொல்லும்போது, அவர்கள் அந்த ராஜ்யம் பூமிக்குரியது என்று தவறாக நினைக்கிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் தேவனுடைய உபதேசத்தில் தெளிவுள்ளவர்களாக இருக்கவேண்டும். பரிசுத்த ஆவியானவர் சகல சத்தியத்திற்குள்ளும் நம்மை வழிநடத்த வேண்டுமென்று ஜெபம்பண்ணவேண்டும். வேதவசனத்தில் நமக்குத் தெளிவு இல்லையென்றால், நாமும் சீஷர்களைப் போலவே, பரலோக ராஜ்யத்தை பூமிக்குரிய ராஜ்யமென்று தவறாக நினைப்பதற்கு வாய்ப்புள்ளது.

இயேசுகிறிஸ்து யூதருடைய குடும்பத்தில் பிறந்தவர். சீஷர்களெல்லோருமே யூதர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் இயேசுகிறிஸ்துவின் சீஷராகயிருந்தாலும், தங்கள் சொந்த இனத்தார் மீது பற்றுதலாகயிருக்கிறார்கள். மற்ற ஜனங்களைவிட தங்களுடைய யூத ஜனத்தார் ஆசீர்வதிக்கப்பட வேண்டுமென்று விரும்புகிறார்கள். இயேசுகிறிஸ்துவுக்குத் தேவனுடைய ராஜ்யம் முக்கியமாகயிருக்கிறது. ஆனால் அவருடைய சீஷர்களுக்கோ பூமிக்குரிய இஸ்ரவேல் ராஜ்யமே முக்கியமானதாக இருக்கிறது. தேவனுடைய ராஜ்யம் எப்போது ஸ்தாபிக்கப்படும் என்னும் அக்கறை சீஷர்களிடத்திலில்லை. அதற்குப் பதிலாக "இயேசுகிறிஸ்து யூதராஜ்யத்தை இஸ்ரவேலுக்கு எப்பொழுது திரும்பக் கொடுப்பார்" என்னும் அக்கறையே அவர்களிடத்தில் அதிகமாய் உள்ளது.

சீஷர்கள் இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தைத் தங்களுடைய சுயவிருப்பத்தின் பிரகாரம் வியாக்கியானம் பண்ணுகிறார்கள். தேவனுடைய சித்தத்திற்கும், அவருடைய திட்டத்திற்கும் முக்கியத்துவம் கொடுப்பதற்குப் பதிலாக, தங்களுடைய விருப்பத்தின் பிரகாரம் தேவன் கிரியைச் செய்யவேண்டுமென்று விரும்புகிறார்கள். வேதவாக்கியத்தைத் தவறாகப் புரிந்துகொள்கிறார்கள். சீஷர்கள் செய்த அதே தவறை நாமும் செய்துவிடக்கூடாது. வேதவாக்கியத்தைக் கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாகவும், அவருடைய திட்டத்தின் பிரகாரமாகவும் வியாக்கியானம் பண்ணவேண்டும்.

இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் தேவனுடைய ராஜ்யத்தைத் தவறாகப் புரிந்துகொள்வதோடு, தங்களுடைய விருப்பம் எப்பொழுது நிறைவேறும் என்பதையும் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறார்கள். "இக்காலத்திலா ராஜ்யத்தைக் கொடுப்பீர்" என்று இயேசுகிறிஸ்துவினிடத்தில் கேட்கிறார்கள். இதுபோன்ற கேள்விகளைத் தம்மிடத்தில் கேட்கலாமென்று இயேசுகிறிஸ்து ஒருபோதும் தம்முடைய சீஷரிடத்தில் சொன்னதில்லை. ஆனால் சீஷர்களோ பொறுமை இழந்தவர்களாகயிருக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்து தம்முடைய ராஜ்யத்தை ஸ்தாபிக்கப்போவதாக சீஷர்களுக்குக் கூறியிருக்கிறார். அந்த ராஜ்யத்தில் அவர்களுக்கு முக்கியமான பங்கு கொடுக்கப்படுமென்றும் வாக்குப்பண்ணியிருக்கிறார். சீஷர்கள் அந்த முக்கியப் பொறுப்பை வகிக்க ஆசைப்படுகிறார்கள். அது சீக்கிரமாக நடக்கவேண்டுமென்று விரும்புகிறார்கள். "நீங்கள் என் ராஜ்யத்திலே என் பந்தியில் போஜனம்பண்ணி, இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாயந் தீர்க்கிறவர்களாய் சிங்காசனங்களின்மேல் உட்காருவீர்கள்" (லூக் 22:30) என்று இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷருக்கு வாக்குப்பண்ணியிருக்கிறார். அந்த சிங்காசனத்தில் இப்போதே உட்காரவேண்டுமென்று சீஷர்கள் அவசரப்படுகிறார்கள்.

பிதாவானவரின் ஆதீனம்

அதற்கு அவர்: பிதாவானவர் தம்முடைய ஆதீனத்திலே வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல (அப் 1:7).

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களின் கேள்விக்கு உடனடியாக மறுத்துப் பதில் கூறுகிறார். "பிதாவானவர் தம்முடைய ஆதீனத்திலே வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல" என்பது இயேசுகிறிஸ்து அவர்களுக்குக் கூறும் பதிலாகும். சீஷர்கள் இன்னும் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்ளவில்லை. ஆகையினால் தேவனுடைய ராஜ்யத்தைப்பற்றி அவர்களுடைய உள்ளத்தில் தவறான சிந்தனை எழும்பியிருக்கிறது. பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்குள் வரும்போது, அவர் அவர்களை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துவார். இப்போதோ அவர்களை சத்தியத்திற்குள் வழிநடத்த யாருமில்லை. ஆகையினால் வேதவசனத்தைக் குறித்து அவர்களுடைய உள்ளத்தில் குழப்பமுண்டாயிற்று. பரலோக ராஜ்யத்தையும், பூமிக்குரிய ராஜ்யத்தையும் ஒன்றாக நினைத்து, குழப்பத்திலிருக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில் சுவிசேஷ ராஜ்யத்தை ஸ்தாபிக்கப்போகிறார். சீஷர்கள் அதற்காக காத்திருக்கவேண்டும். இந்த வியாக்கியானத்தின்படி அவர்கள் காத்திருப்பது நல்லதுதான். அவர்களுடைய கேள்வியும் முறையானதுதான். ஆனால் அவர்களோ சுவிசேஷ ராஜ்யத்தைப்பற்றி சிந்திக்காமல், பூமிக்குரிய இஸ்ரவேல் ராஜ்யத்தைப்பற்றியே சிந்திக்கிறார்கள். தம்முடைய ராஜ்யத்தை ஸ்தாபிப்பது தேவனுடைய கிரியை. அதை அவர் எப்போது, எப்படி ஸ்தாபிப்பார் என்பதை சீஷர்கள் அறிந்துகொள்ளவேண்டும் என்னும் தேவையில்லை. இந்தச் சத்தியத்தை இயேசுகிறிஸ்து அவர்களுக்குத் தெளிவுபடுத்துகிறார்.

வேதத்தின் ரகசியங்களெல்லாமே சீஷர்களுக்கு வெளிப்படுத்தப்படவில்லை. ஒரு சில சத்தியங்கள் நமக்கு இன்னும் அறியாத ரகசியமாகவே இருக்கிறது. தேவனுடைய ராஜ்யம் எப்போது எப்படி ஸ்தாபிக்கப்படும் என்பதும் அப்படிப்பட்ட ரகசியங்களில் ஒன்றாகும். ஆகையினால் இயேசுகிறிஸ்து அவர்களிடம் இந்த ரகசியத்தை "அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல" என்று கூறிவிடுகிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களை விட்டுப் பரமேறிப்போகப்போகிறார். ஆனாலும் அவர் தம்முடைய சீஷர்களைக் கண்டித்து உணர்த்தத் தவறவில்லை. சபைக்குக் கொடுக்கவேண்டிய எச்சரிப்பின் செய்தியை, இயேசுகிறிஸ்து தாம் பரமேறிப்போகும் வேளையிலும் தம்முடைய சீஷருக்குத் தவறாமல் கொடுக்கிறார்.

ஏதேன் தோட்டத்தில் ஆதாமும் ஏவாளும், நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசித்து பாவம் செய்தார்கள். தாங்கள் தேவனைப்போலாவோம் என்று தவறாக நம்பினார்கள். தேவனே அவர்களைச் சிருஷ்டித்தப்போதிலும், தம்முடைய ஆதீனத்திலுள்ள சில காரியங்களை அவர்களுக்கு வெளிப்படுத்தாமல் மறைத்தே வைத்திருந்தார். ஆனால் ஆதாமும் ஏவாளுமோ தங்களுக்குத் தடைபண்ணப்பட்டிருந்த காரியத்தை அறிந்துகொள்ள வேண்டுமென்று ஆசைப்பட்டார்கள். அவர்களுடைய தவறான ஆசையின் விளைவினால் இந்த உலகத்தில் பாவம் பிரவேசித்தது.

இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில் ஊழியம் செய்த காலத்தில், தம்முடைய சீஷர்களுக்குத் தேவனுடைய சத்தியங்களைத் தாராளமாய் உபதேசம்பண்ணினார். மற்ற ஜனங்களுக்கு உபதேசம்பண்ணப்பட்டதை விட, கிறிஸ்துவின் சீஷருக்கு ஆவிக்குரிய சத்தியம் அதிகமாக உபதேசம் பண்ணப்பட்டிருக்கிறது. ஆனாலும் அவர்கள்கூட இன்னும் அறிந்துகொள்ளவேண்டிய சில சத்தியங்கள் இருக்கிறது. தேவனுடைய சத்தியங்கள் சிலவற்றை அறிந்துகொள்ள முடியாதவாறு அவர்கள் தடைபண்ணப்பட்டிருக்கிறார்கள்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் நம்முடைய வேதஅறிவில் பெருமை பாராட்டக்கூடாது. நாம் அறிந்திருப்பது கொஞ்சம். நாம் அறியவேண்டியது அநேகம். தேவனுடைய ரகசியங்களில் ஏராளமானவற்றை நாம் இன்னும் அறியாதவர்களாகவே இருக்கிறோம். ஆகையினால் நம்முடைய உள்ளத்தில் பெருமையை அகற்றி, இயேசுகிறிஸ்துவின் பாதபடியில் அமர்ந்திருந்து, சத்தியத்தைக் கற்றுக்கொள்ளவேண்டும். பரிசுத்த ஆவியானவர் நம்முடைய உள்ளத்தில் சகல சத்தியத்தையும் குறித்து உபதேசம்பண்ண வேண்டுமென்று விண்ணப்பம்பண்ணவேண்டும்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களை ஊழியம் செய்யுமாறு அனுப்புகிறார். கிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்வதற்கு தேவையான எல்லா உபதேசங்களையும் அவர் அவர்களுக்குப் போதகம்பண்ணியிருக்கிறார். தங்களுக்கு உபதேசம்பண்ணப்பட்ட சத்தியத்தில் சீஷர்கள் போதுமென்ற மனதோடு திருப்தியாயிருக்க வேண்டும். இயேசுகிறிஸ்து வெளிப்படுத்தியிருக்கும் சத்தியங்களே சீஷர்களுக்குப் போதுமானது. தங்களுக்குக் கொடுக்கப் பட்டிருக்கும் சத்தியத்தை சீஷர்கள் உண்மையாகவும், உத்தமமாகவும் பிரசங்கம் பண்ணினாலே போதுமானது.

இயேசுகிறிஸ்து தாமே தம்முடைய சீஷர்களுக்கு தேவனுடைய ராஜ்யத்தின் காரியங்களை வெளிப்படுத்தியிருக்கிறார். அவர்களுக்குப் பரிசுத்த ஆவியானவரை வாக்குப்பண்ணியிருக்கிறார். ஆவியானவர் அவர்களுக்கு வரப்போகிற காரியங்களைக் காண்பிப்பார். தங்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கும் காலங்களுக்கும் வேளைகளுக்கும் முன்பாக, இனிமேல் நடைபெறப்போகிற காரியங்களையும், அவை எப்பொழுது நடைபெறும் என்னும் வேளையையும் அறிந்துகொள்ள சீஷர்கள் ஆசைப்படக்கூடாது.

ஒவ்வொரு வருஷமும் சீதோஷ்ண நிலை மாறி மாறி வந்துகொண்டேயிருக்கும். பொதுவாக ஒவ்வொரு வருஷத்திலும் கோடைகாலமும், குளிர்காலமும், மழைகாலமும் இருக்கும். ஆனால் அந்த மழைகாலம் எந்தத் தேதியில் சரியாக ஆரம்பிக்குமென்று நம்மால் நிதானித்து அறியமுடியாது. மழைகாலம் வரும். கோடைகாலம் வரும். ஆனால் அது எந்தநாளில் வருமென்று நமக்கு வெளிப்படுத்தப்படவில்லை. எந்த நாளில் வந்தாலும் அதை நாம் ஏற்றுக்கொள்ள ஆயத்தமாகயிருக்க வேண்டும். காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ள வேண்டும். அந்தக்காலம் எப்பொழுது ஆரம்பமாகுமென்று அதன் வேளைகளைப்பற்றி விவாதம்பண்ணாமல், நியமிக்கப்பட்டிருக்கிற காலம் எப்பொழுது வந்தாலும், அதை ஏற்றுக்கொள்ள நாம் ஆயத்தமாகயிருக்கவேண்டும்.

தேவன் தம்முடைய ரகசியங்களில் பலவற்றைத் தம்முடைய சீஷருக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். இன்னும் வெளிப்படுத்தவேண்டிய ரகசியமுமுள்ளது. அறிவிக்கப்படாத காரியங்கள் கர்த்தருக்கே உரியது. பிதாவானவர் தம்முடைய ஆதீனத்திலே சில காரியங்களை வைத்திருக்கிறார். அதன் காலங்களையும் வேளைகளையும் அறிகிறது நமக்கு அடுத்ததல்ல. தேவன் ஒருவரால் மாத்திரமே அந்தக் காலங்களையும் வேளைகளையும் வெளிப்படுத்த முடியும்.

சீஷர்கள் இயேசுகிறிஸ்துவிடம் "இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக்கொடுப்பீர்" என்று கேட்கிறார்கள். அந்தக்காலத்தையும் வேளையையும் இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷருக்கு இப்பொழுது வெளிப்படுத்த சித்தமாகயில்லை. தமக்கு ஏற்ற வேளையில் அதை வெளிப்படுத்துவார். அது எப்போது என்பது அவருக்கு மாத்திரமே தெரியும். இயேசுகிறிஸ்து இதைச் சொல்லும்போது, சீஷர்களுக்கு இதை ஒருபோதும் வெளிப்படுத்தப் போவதில்லை என்றும் மறுக்கவில்லை. எல்லாம் அதனதன் காலத்தில் நேர்த்தியாக நடைபெறும். எப்பொழுது நடைபெறுமென்பதை கர்த்தரே தீர்மானம்பண்ணுகிறவர். "ஏற்றவேளை" என்பது எப்போதுமே கர்த்தருக்கு சித்தமான வேளையாகவே இருக்கிறது.

பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது

பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும் யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிப் பரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார் (அப் 1:8).

இயேசுகிறிஸ்து சீஷர்களுக்கு அவர்கள் செய்யவேண்டிய ஊழியத்தைக் கொடுக்கிறார். அதோடுகூட அந்த ஊழியம் வெற்றியாக நடைபெறுவதற்கு அவர்களுக்கு அதிகாரத்தையும் உறுதிபண்ணுகிறார். இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் ஆவிக்குரிய வல்லமையைப் பெற்றுக்கொள்வார்கள். பரிசுத்தஆவி அவர்களிடத்தில் வரும். அப்போது அவர்கள் இயேசுகிறிஸ்துவுக்குச் சாட்சிகளாகயிருப்பார்கள். சீஷருடைய சாட்சி எருசலேமிலும் ஏற்றுக் கொள்ளப்படும், அதோடு அதைச் சுற்றிலுமுள்ள தேசங்களிலும், மேலும் உலகம்முழுவதிலும் ஏற்றுக்கொள்ளப்படும்.

இயேசுகிறிஸ்து தம்முடைய ஊழியத்தைச் செய்யுமாறு சீஷர்களை அனுப்புகிறார். அது ஆதித்திருச்சபையின் காலத்தில் நடைபெற்ற சம்பவம். இப்போது இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்யுமாறு நமக்கும் சிலாக்கியம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நாம் நம்முடைய காலத்தில், நம்முடைய சந்ததியார் மத்தியில் இயேசுகிறிஸ்துவின் நாமத்திற்கு மகிமையாக ஊழியம் செய்ய வேண்டும். இந்த ஊழியம் நமக்குப் போதுமானது. நமக்குக் கொடுக்கப் பட்டிருக்கும் ஊழியத்தை உண்மையாகச் செய்யவேண்டும்.

இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் அவருக்காக ஊழியம் செய்கிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் ஊழியம் கனமும் மகிமையுமுள்ளது. அவர்கள் இயேசுகிறிஸ்துவுக்குச் சாட்சிகளாகயிருப்பார்கள். அவர்கள் இயேசுகிறிஸ்துவை ராஜாவாக அறிக்கை செய்வார்கள். அவர்கள் இந்த உலகம் எங்கும் சென்று ஜெபத்தோடும், பயபக்தியோடும், இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை தெளிவாகப் பிரய்ங்கப் பண்ணுவார்கள். சீஷர்கள் தங்களுடைய சாட்சிகளை உறுதிபண்ணுவார்கள்.

வழக்கு விசாரிக்கப்படும்போது, ஒரு உண்மையை உறுதிபண்ணுவதற்கு இரண்டு அல்லது மூன்று பேர் நீதிமன்றத்தில் சாட்சி சொல்லுவார்கள். சீஷர்களுடைய சாட்சி இப்படிப்பட்ட சாட்சியல்ல. சீஷர்கள் இயேசு கிறிஸ்துவுக்குச் சாட்சிகளாகயிருக் கிறார்கள். இவர்களுடைய சாட்சி அற்புதங்களினாலும் அடையாளங்களிலும் தேவனால் முத்திரையிடப்படுகிறது. இவர்கள் கிறிஸ்துவுக்காக இரத்த சாட்சியாக மரிப்பார்கள். சீஷர்கள் தங்களுடைய பாடுகளினாலும் சுவிசேஷத்தின் சத்தியத்திற்குச் சாட்சி கொடுப்பார்கள். சீஷர்கள் தங்களுடைய மரணபரியந்தம் இயேசுகிறிஸ்துவுக்குச் சாட்சிகளாகயிருப்பார்கள்.

கிறிஸ்துவுக்குச் சாட்சியாக இருக்க சீஷர்களுக்குப் பெலன் தேவை. தங்களுடைய சொந்தப் பலத்தினால் இவர்களால் கிறிஸ்துவுக்குச் சாட்சியாக இருக்கமுடியாது. தங்களுடைய சொந்த ஞானத்தினால் சுவிசேஷத்தின் சத்தியத்தை இவர்களால் அறிவிக்க முடியாது. எதிர்ப்புக்கள் மத்தியில் ஊழியம் செய்ய சீஷர்களிடம் தைரியமில்லை. இவர்களுக்குத் தெய்வீக வல்லமை தேவைப்படுகிறது. தமக்குச் சாட்சிகளாகயிருப்பதற்கு இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களைப் பெலப்படுத்துகிறார். பரிசுத்தஆவி அவர்களிடத்தில் வரும்போது அவர்கள் பெலனடைவார்கள். சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணும் பெலன் அவர்களுக்குக் கொடுக்கப்படும். இவர்களுடைய வார்த்தைகள் அற்புதங்களினாலும், அவர்கள் அனுபவிக்கிற பாடுகளினாலும் உறுதிபண்ணப்படும்.

இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்கிறவர்கள், அந்த ஊழியத்தை உண்மையோடு செய்யவேண்டும். உபத்திரவம் வந்தாலும் செய்யவேண்டும். பாடுகளுக்கு மத்தியிலும் செய்யவேண்டும். தாங்கள் பிரசங்கம்பண்ணும் சுவிசேஷச் செய்தியை ஆவியானவர் அற்புங்களினாலும் அடையாளங்களினாலும் உறுதிபண்ண வேண்டும் என்று ஜெபம்பண்ணவேண்டும். கர்த்தருடைய மகத்துவமான ஊழியத்திற்கு, கர்த்தர் தாமே நம்மை தகுதிப்படுத்த வேண்டுமென்று ஜெபிக்கவேண்டும்.

சீஷர்களுடைய ஊழியம் உலகம் முழுவதும் பரவுகிறது. அவர்களுடைய ஊழியத்தின் எல்லை மிகவும் விஸ்தாரமானது. அவர்களுடைய ஊழியம் பெரிது. அவர்கள் இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தை எருசலேமில் ஆரம்பிக்க வேண்டும். அவர்கள் முதலாவதாக எருசலேமில் இயேசு கிறிஸ்துவுக்குச் சாட்சிகளாகயிருக்க வேண்டும். அந்த நகரத்திலிருந்து அவர்களுடைய வெளிச்சம் யூதேயா முழுவதும் பிரகாசமாகயிருக்க வேண்டும். அதன்பின்பு அவர்கள் சமாரியாவிலும் இயேசு கிறிஸ்துவுக்குச் சாட்சிகளாகயிருக்க வேண்டும். இவர்களுடைய ஊழியம் முழு உலகத்திற்கும் ஆசீர்வாதமாகயிருக்கும். இவர்கள் பூமியின் கடைசிபரியந்தமும் இயேசுகிறிஸ்துவுக்குச் சாட்சிகளாகயிருப்பார்கள்.

உயர எடுத்துக் கொள்ளப்பட்டார்

இவைகளை அவர் சொன்னபின்பு, அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கையில், உயர எடுத்துக்கொள்ளப்பட்டார்; அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக்கொண்டது (அப் 1:9).

இயேசுகிறிஸ்து இவைகளைச் சொன்னபின்பு, அவர் உயர எடுத்துக்கொள்ளப்படுகிறார். அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். "தம்முடைய கைகளை உயர்த்தி அவர்களை ஆசீர்வதித்தார். அவர்களை ஆசீர்வதிக்கையில் அவர்களை விட்டுப் பிரிந்து, பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்" (லூக் 24:50,51) என்று லூக்கா இந்தச் சம்பவத்தை எழுதியிருக்கிறார். அப்போஸ்தலர் நடபடிகள் புஸ்தகத்தில் இந்தச் சம்பவமானது "அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கையில் அவர் உயர எடுத்துக்கொள்ளப்பட்டார். அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒருமேகம் அவரை எடுத்துக்கொண்டது" என்று எழுதப்பட்டிருக்கிறது.

தம்முடைய சீஷர்கள் தம்மைப் பார்த்துக்கொண்டிருக்கும் போது இயேசுகிறிஸ்து பரமேற ஆரம்பிக்கிறார். சீஷர்கள் அவரைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து பரலோகத்திற்கு நேராக உயரே போவதை சீஷர்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். சீஷர்களுடைய கண்களெல்லாம் இயேசுகிறிஸ்துவின்மீதே பதிந்திருக்கிறது. மிகுந்த கவனத்தோடும், ஆர்வத்தோடும் கிறிஸ்து பரமேறுவதைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கையில், அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒருமேகம் அவரை எடுத்துக்கொண்டது. இயேசு கிறிஸ்து மேகத்தில் தம்முடைய சீஷர்களின் கண்களுக்கு மறைந்துபோகிறார்.

இயேசுகிறிஸ்து மறுரூபமலையில் மறுரூபமானார். அப்பொழுது ஒளியுள்ள ஒருமேகம் அவர்கள்மேல் நிழலிட்டது (மத் 17:5). அதேபோன்ற ஒளியுள்ள மேகமே இப்போது இங்கும் வந்திருக்கவேண்டும். வானத்துக்கும் பூமிக்கும் இதுபோன்ற மேகங்களே இடையிலிருக்கிறது. பூமியிலுள்ள தண்ணீர் நீராவியாக வானத்திற்குப் போகிறது. வானத்திலிருந்து மேகம் பூமிக்கு மழையைப் பொழிகிறது. தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தராக இருக்கும் இயேசுகிறிஸ்துவை ஒரு மேகம் சீஷர்களின் கண்களுக்கு மறைவாக எடுத்துக்கொள்கிறது. இயேசுகிறிஸ்துவின் மூலமாகவே தேவனுடைய கிருபைகளும் இரக்கங்களும் நமக்குக் கிடைக்கிறது. நம்முடைய ஜெபங்கள் மத்தியஸ்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாகவே பிதாவின் சமுகத்திற்குள் பிரவேசிக்கிறது. சீஷர்கள் இயேசுகிறிஸ்துவை இப்போது கடைசியாகத் தரிசிக்கிறார்கள்.

அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கையில்

அவர் போகிறபோது அவர்கள் வானத்தை அண்ணாந்துபார்த்துக் கொண்டிருக்கையில், இதோ, வெண்மையான வஸ்திரந்தரித்தவர்கள் இரண்டுபேர் அவர்களருகே நின்று: (அப் 1:10)

சீஷர்கள் இயேசுகிறிஸ்துவைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அப்போது இயேசு உயர எடுத்துக்கொள்ளப்படுகிறார். அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவர்களை எடுத்துக்கொள்கிறது. சீஷர்களின் பார்வையைவிட்டு இயேசுகிறிஸ்து மறைந்துபோகிறார். ஆனால் சீஷர்களோ இன்னும் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஒருவேளை பரமேறிப்போகிற இயேசு தங்களிடத்தில் மறுபடியும் வந்துவிடுவாரென்று சீஷர்கள் எதிர்பார்த்திருக்கலாம். சீஷர்கள் இயேசுகிறிஸ்துவின் சரீரப்பிரகாரமான பிரசன்னத்தையே இன்னும் சார்ந்து கொண்டிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து அவர்களைவிட்டுப் போகவேண்டுமென்று சீஷர்களிடத்தில் பலமுறை சொல்லியிருந்தும், அவர் ஒருவேளை தங்களோடு கூடவே இருப்பாரென்று ஆசைப்பட்டு, சீஷர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்து உயர எடுத்துக்கொள்ளப்படும்போது, அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக்கொள்கிறது. இயேசுகிறிஸ்து வானத்தில் பரமேறிப்போவதினால், அந்த வானத்தில் பிரத்தியட்சமான மாற்றம் ஏதாவது காணப்படுமா என்று இவர்கள் வானத்தை ஆசையோடு அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கலாம். இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களிடம் ஏற்கெனவே "வானம் திறந்திருக்கிறதையும், தேவதூதர்கள் மனுஷகுமாரனிடத்திலிருந்து ஏறுகிறதையும் இறங்குகிறதையும் நீங்கள் இதுமுதல் காண்பீர்கள்" (யோவா 1:51) என்று சொல்லியிருக்கிறார். இயேசு கிறிஸ்து சொன்னது இப்போது நிறைவேறும் என்று சீஷர்கள் வானத்தை அண்ணாந்து பார்க்கிறார்கள். வானம் திறந்திருக்கிறதா என்றும், தேவதூதர்கள் ஏறுகிறார்களா, இறங்குகிறார்களா என்றும் சீஷர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

அப்படியே மறுபடியும் வருவார்

கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்துபார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள் (அப் 1:11).

சீஷர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருப்பதை இரண்டு தேவதூதர்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வெண்மையான வஸ்திரம் தரித்திருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவே இவ்விரண்டு தூதர்களையும் தம்முடைய சீஷர்களிடத்தில் அனுப்பியிருக்கிறார். இந்தப் பூமியில் தம்முடைய சபையைக் குறித்து இயேசுகிறிஸ்து மிகுந்த அக்கரையோடும் கரிசனையோடும் இருக்கிறார். கிறிஸ்துவின் இருதயத்தில் பூமியிலுள்ள சபையைப்பற்றிய சிந்தனையே நிரம்பியிருக்கிறது. இயேசுகிறிஸ்து பரமேறிப்போனாலும் அவர் நம்மை மறந்துவிடவில்லை. அவர் நினைவெல்லாம் நம்மைப்பற்றியதாகவே இருக்கிறது.

இயேசுகிறிஸ்துவைச் சந்திப்பதற்காக இவ்விரண்டு தூதர்களும் அவரிடத்தில் வந்திருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவோ இவ்விரண்டு தூதர்களையும் தம்முடைய சீஷர்களிடத்தில் திரும்ப அனுப்புகிறார். இவ்விரண்டு தூதர்களும்தான் வெண்மையான வஸ்திரம் தரித்தவர்களாக சீஷர்களின் அருகே வந்து நிற்கிறார்கள்.

இயேசுகிறிஸ்து பரமேறிப் போனதினால், சீஷர்களுடைய இருதயத்தில் சந்தோஷமும், கலக்கமும், ஆர்வமும் மிகுந்திருக்கிறது. இவர்களுடைய ஆர்வம் தூதர்களுக்குத் தெரிகிறது. அவர்கள் சீஷர்களைப்பார்த்து "கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்" என்று கேட்கிறார்கள். "இன்னும் நீங்கள் எதைப் பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள், எதைப் பார்ப்பதற்காக நீங்கள் அழைக்கப் பட்டீர்களோ அதைப் பார்த்துவிட்டீர்கள், இன்னும் ஏன் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்" என்று பொருள்படுமாறு இரண்டு தூதர்களும் சீஷர்களிடத்தில் கேட்கிறார்கள்.

கிறிஸ்துவின் சீஷர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்து நின்றுகொண்டிருக்க வேண்டிய அவசியம் எதுவுமில்லை. ஏனெனில் இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷருக்கு ஊழியத்தைக் கொடுத்திருக்கிறார். கிறிஸ்துவின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து அவர்கள் எருசலேமிலும், யூதாவிலும், சமாரியாவிலும் பூமியின் கடைசிபரியந்தமும், கிறிஸ்துவுக்குச் சாட்சிகளாயிருக்க வேண்டும். இதுதான் இயேசுகிறிஸ்து அவர்களுக்குக் கொடுத்திருக்கும் ஊழியம். வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிக்கும் ஊழியத்தை இயேசு கிறிஸ்து அவர்களுக்குக் கொடுக்க வில்லை. அவர்கள் செய்யவேண்டிய ஊழியத்தை விட்டுவிட்டு, வேறு எதையோ செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகையினால் இயேசுகிறிஸ்து தம்முடைய தூதர்களில் இரண்டுபேரை அவர்களிடத்தில் அனுப்பி, "நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்" என்று கேட்குமாறு அனுப்புகிறார்.

இயேசுகிறிஸ்து மறுபடியும் வருவார். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரிடத்தில் பல சமயங்களில் இந்தச் சத்தியத்தை உபதேசம்பண்ணியிருக்கிறார். இந்தச் சத்தியத்தை உறுதி பண்ணுவதற்காகவும், சீஷர்களின் விசுவாசத்தை வர்த்திக்கப் பண்ணுவதற்காகவும், இயேசுகிறிஸ்து தம்முடைய தூதரை அவர்களிடத்தில் அனுப்புகிறார். அவர்கள் கிறிஸ்துவின் சீஷரிடம் "உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்" என்று சொல்லுகிறார்கள்.

இயேசுகிறிஸ்து இந்தப் பூமிக்கு வந்தபோது மனுஷரூபமெடுத்து, தாழ்மையுள்ளவராக வந்தார். அவரை அநீதியாக நியாயம் விசாரித்து சிலுவையில் அறைந்தார்கள். அதே இயேசுகிறிஸ்து இனிமேல் நியாயம் விசாரிக்கிறவராக தம்முடைய மகிமையில் வரப்போகிறார். அவர் எப்படி வானத்திற்கு எழுந்தளிப்போனாரோ அப்படியே மறுபடியும் வருவார். ஒரு மேகம் அவரை மறைவாக எடுத்துக்கொண்டது. அது வரையிலும்தான் சீஷர்களால் இயேசுகிறிஸ்துவைப் பார்க்க முடிந்தது. இயேசுகிறிஸ்துவைப் பின்தொடர்ந்த சீஷர்களால், இப்போது வானத்திற்கு அவரைத் தொடர்ந்து போகமுடியவில்லை. ஆகையினால் சீஷர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து மேகங்கள் நடுவே எப்படி வானத்திற்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே அவர் மேகங்கள் நடுவே வானத்திலிருந்து மறுபடியும் இந்தப் பூமிக்கு வருவார்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையை மறந்துவிடாமல் தியானம்பண்ணவேண்டும். நம்முடைய விசுவாசத்தை கிறிஸ்துவின் இரண்டாம் வருகை கட்டியெழுப்பவேண்டும். நமக்கு இந்த உலகத்தில் பாடுகளும் வேதனைகளும் உண்டு. இவற்றிற்கு மத்தியில் இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப்பற்றிய சிந்தனை நமக்கு ஆறுதலாக இருக்கும். நம்மை உற்சாகப்படுத்தும்.

எருசலேமுக்குத் திரும்பிப் போனார்கள் அப் 1 : 12-14

அப் 1:12. அப்பொழுது அவர்கள் எருசலேமுக்குச் சமீபமாய் ஒரு ஓய்வுநாள் பிரயாண தூரத்திலிருக்கிற ஒலிவமலை என்னப்பட்ட மலையிலிருந்து எருசலேமுக்குத் திரும்பிப்போனார்கள்.

அப் 1:13. அவர்கள் அங்கே வந்தபோது மேல் வீட்டில் ஏறினார்கள்; அதில் பேதுருவும், யாக்கோபும், யோவானும், அந்திரேயாவும், பிலிப்பும், தோமாவும், பர்த்தொலொமேயும், மத்தேயும், அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபும், செலோத்தே என்னப்பட்ட சீமோனும், யாக்கோபின் சகோதரனாகிய யூதாவும் தங்கியிருந்தார்கள்.

அப் 1:14. அங்கே இவர்களெல்லாரும், ஸ்திரீகளோடும் இயேசுவின் தாயாகிய மரியாளோடும், அவருடைய சகோதரரோடுங்கூட ஒருமனப்பட்டு, ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள்.

ஒலிவமலையிலிருந்து

அப்பொழுது அவர்கள் எருசலேமுக்குச் சமீபமாய் ஒரு ஓய்வுநாள் பிரயாண தூரத்திலிருக்கிற ஒலிவமலை என்னப்பட்ட மலையிலிருந்து எருசலேமுக்குத் திரும்பிப்போனார்கள் (அப் 1:12).

இயேசுகிறிஸ்து ஒலிவமலையிலிருந்து பரமேறிப்போகிறார். இந்த மலையில்தான் இயேசுகிறிஸ்துவுக்குப் பாடுகள் ஆரம்பமாயிற்று. இதே மலையில்தான் இயேசுகிறிஸ்து இப்போது தம்முடைய மகிமையில் பரமேறிச் செல்கிறார். அவருடைய வேதனைகளும், பாடுகளும், உபத்திரவங்களும் எந்த மலையில் ஆரம்பமாயிற்றோ, அந்த மலையிலேயே அவை நீக்கிப்போடப்படுகிறது. சீஷர்கள் பார்த்துக்கொண்டிருக்கும்போது இயேசு கிறிஸ்து தம்முடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறார்.

இந்த மலை எருசலேமுக்குச் சமீபமாயிருக்கிறது. இது ஒரு ஓய்வுநாள் பிரயாண தூரத்திலிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. யூதமார்க்கத்தில் பக்தியுள்ளவர்கள், ஓய்வுநாளின் மாலைவேளையில் ஒரு குறிப்பிட்ட தூரம் மாத்திரமே நடப்பார்கள். தேவாலயத்தில் ஓய்வுநாள் ஆராதனையை நிறைவேற்றிய பின்பு, தியானம்பண்ணுவதற்காக, சிறிது தூரம் நடந்து செல்வார்கள். இது பொதுவாக ஏழு பர்லாங் தூரம் இருக்கலாமென்று வேதபண்டிதர்கள் கூறுகிறார்கள். எட்டு பர்லாங் என்பது ஒரு மைல். ஆகையினால் ஒரு ஓய்வுநாள் பிரயாண தூரம் என்பது ஒரு மைலுக்கும் குறைவான தூரமேயாகும்.

யூதர்கள் ஓய்வுநாளில் வெளியூர் பிரயாணம் போகமாட்டார்கள். சொந்த வேலைகள் எதையும் செய்யமாட்டார்கள். தேவாலயத்தில் ஆராதனை செய்வது தவிர வேறு எந்த வேலையிலும் ஈடுபடமாட்டார்கள். ஓய்வுநாளில் யூதர்கள் தங்கள் சொந்த வேலையைச் செய்தால், அவர்கள் ஓய்வுநாள் பிரமாணத்தை மீறியதாக குற்றம் சுமத்தப்படுவார்கள்.

சீஷர்கள் எருசலேமுக்குத் திரும்பி வருகிறார்கள். இயேசுகிறிஸ்து சொன்ன பிரகாரமாகவே அவர்கள் எருசலேமுக்கு வருகிறார்கள். இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த நாளிலிருந்து பிரதான ஆசாரியர், கிறிஸ்துவின் சீஷர்களைக் கண்காணித்துக் கொண்டிருக்கிறார்கள். யூதமார்க்கத்துத் தலைவர்களுக்குப் பயந்து சீஷர்களெல்லோரும் எருசலேமைவிட்டுக் கலிலேயாவுக்கு ஓடிப்போய்விடுகிறார்கள். ஆனால் இப்போதோ இயேசுகிறிஸ்துவின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து அவர்கள் எருசலேமுக்குத் திரும்பி வருகிறார்கள். அவர்களை யூதமார்க்கத்துத் தலைவர்கள் யாரும் கண்டுபிடிக்கவில்லை.

தேவன் தம்முடைய பிள்ளைகளை எல்லா சூழ்நிலைகளிலும் பாதுகாத்துக் கொள்கிறார். நம்முடைய சத்துருக்களுக்கு மத்தியில் தேவன் நமக்கு ஒரு மறைவிடத்தை வைத்திருக்கிறார். நாம் இயேசுகிறிஸ்துவின் பாதுகாப்பிலிருக்கும் போது, அவருடைய அனுமதியில்லாமல் யாரும் நம்மைத் தொடமுடியாது.

மேல் வீட்டில்

அவர்கள் அங்கே வந்தபோது மேல் வீட்டில் ஏறினார்கள்; அதில் பேதுருவும், யாக்கோபும், யோவானும், அந்திரேயாவும், பிலிப்பும், தோமாவும், பர்த்தொலொமேயும், மத்தேயும், அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபும், செலோத்தே என்னப்பட்ட சீமோனும், யாக்கோபின் சகோதரனாகிய யூதாவும் தங்கியிருந்தார்கள் (அப் 1:13).

இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் எருசலேமுக்குத் திரும்பி வந்து, அங்கே ஒரு மேல்வீட்டில் ஏறி, அங்கே தங்குகிறார்கள். அங்கு சீஷர்கள் ஒவ்வொருநாளும் கூடி ஜெபிக்கிறார்கள். பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத் திற்காக ஜெபத்தோடு காத்திருக்கிறார்கள். "அவர்கள் நாடோறும் தேவாலயத்திலே தேவனைப் புகழ்ந்து துதித்துக் கொண்டிருந்தார்கள்" (லூக் 24:53). ஜெபவேளையின்போது தேவாலயத்தின் பிரகாரங்களில் சீஷர்கள் தேவனைத் துதிக்கிறார்கள். தேவாலயத்தின் வெளிப் பிரகாரத்திற்கு யார் வேண்டுமானாலும் வந்து தேவனைத் துதிக்கலாம். அவர்களை யாரும் தடைபண்ணமாட்டார்கள். தேவாலயத்தில் துதித்துக்கொண்டிருந்த சீஷர்களோ, இப்போது ஒரு மேல்வீட்டில் கூடியிருக்கிறார்கள். இது யாரோ ஒருவருடைய வீடு. யாருடைய வீடு என்னும் விபரம் தெரியவில்லை.

இந்த மேல்வீட்டில் இயேசுகிறிஸ்துவின் சீஷர்களில் பதினோரு பேர் கூடியிருக்கிறார்கள். அவர்களோடு இயேசுகிறிஸ்துவின் தாயாகிய மரியாளும் கூடயிருக்கிறார். கிறிஸ்துவின் தாயாராகிய மரியாளைப்பற்றி அப் 1:14-ஆவது வசனத்தில் கடைசியாகக் கூறப்பட்டிருக்கிறது. இந்த வசனத்திற்குப் பின்பு வேதாகமத்தில் மரியாளைப்பற்றிய குறிப்பு காணப்படவில்லை.

இவர்களோடு இயேசுகிறிஸ்துவின் சகோதரரும், மேலும் சில சீஷர்களும் மேல்வீட்டில் கூடியிருக்கிறார்கள். இவர்களுடைய எண்ணிக்கை ஏறக்குறைய நூற்று இருபது பேர் (அப் 1:15) என்று எழுதப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் எழுபது சீஷர்களில் அனைவரும் அல்லது அவர்களில் பலரும் இங்கு கூடியிருக்கலாம்.

ஒருமனப்பட்டு

அங்கே இவர்களெல்லாரும், ஸ்திரீகளோடும் இயேசுவின் தாயாகிய மரியாளோடும், அவருடைய சகோதரரோடுங்கூட ஒருமனப்பட்டு, ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள் (அப் 1:14).

மேல்வீட்டில் இவர்களெல்லோரும் ஒருமனப்பட்டு ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருக்கிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகளெல்லோருமே ஜெபிக்கிற பிள்ளைகளாக இருக்க வேண்டும். இயேசுகிறிஸ்துவின் சீஷர்களுக்கு இப்போது பாடுகளும், துக்கமும், வேதனையும் நிறைந்த வேளையாக இருக்கிறது. நாம் துக்கத்திலிருக்கும்போது ஜெபிக்க வேண்டும்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்குப் புதிய ஊழியத்தைக் கொடுத்திருக்கிறார். தம்முடைய ஊழியத்தைச் செய்யுமாறு இயேசுகிறிஸ்து அவர்களை அனுப்பியிருக்கிறார். அவர்கள் அந்த ஊழியத்திற்குள் இப்போது பிரவேசிக்கிறார்கள். ஊழியம் செய்ய ஆரம்பிப்பதற்கு முன்பாக அவர்கள் தேவனுடைய சமுகத்தில் ஒருமனப்பட்டு ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களை முதன்முதலாக ஊழியத்திற்கு அனுப்பியபோது, அவர் சீஷர்களுக்காக ஜெபித்தார். இப்போதோ சீஷர்கள் ஊழியத்திற்குப் போவதற்கு முன்பாக தங்களுக்காக ஜெபிக்கிறார்கள். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில், ஜெபத்தின் மூலமாகவே ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். தேவன் தம்முடைய கிருபைகளையும் இரக்கங்களையும் நமக்கு வாக்குப்பண்ணியிருக்கிறார். நம்முடைய ஜெபத்தில் தேவனுடைய இரக்கங்களுக்காக அவரிடத்தில் கெஞ்சி மன்றாட வேண்டும். முழுமனதோடு அவரிடத்தில் வேண்டுதல் பண்ணவேண்டும். நம்முடைய ஜீவியத்தில் தேவனுடைய வாக்குத்தத்தம் நிறைவேற வேண்டுமானால் நாம் ஜெபிக்கவேண்டும்.

சீஷர்கள் ஜெபத்தில் தரித்திருக்கிறார்கள். சீஷர்கள் தேவனைப் புகழ்ந்து துதித்துக் கொண்டிருக்கிறார்கள் (லூக் 24:53). அவர்கள் ஒருமனப்பட்டு ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருக்கிறார்கள். தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் வாக்குத்தத்தங்களுக்காக நாம் அவரைப் புகழ்ந்து துதிக்கவேண்டும். அப்போது தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நம்முடைய ஜீவியத்தில் நிறைவேறும். தேவன் நமக்கு ஏற்கெனவே காண்பித்த கிருபைகளுக்காக அவரைப் புகந்து துதிக்கவேண்டும். அப்போது புதிய கிருபைகள் நமக்குக் கிடைக்கும்.

சீஷர்கள் மேல்வீட்டில் ஒருமனப்பட்டு தரித்திருக்கிறார்கள். சமாதானத்தின் கட்டினால் நாம் ஒருமனப்பாட்டின் ஆவியைக் காத்துக்கொள்ளவேண்டும். அப்போது பரிசுத்த ஆவியானவரின் ஆறுதல்களை நாம் பெற்றுக்கொள்வோம். தேவனுடைய கிருபைகளையும் இரக்கங்களையும் பெற்றுக்கொள்ள நாம் ஆயத்தமாயிருப்போம்.

யூதாசின் அப்போஸ்தலப்பட்டம் அப் 1 : 15-26

அப் 1:15. அந்நாட்களிலே, சீஷர்களில் ஏறக்குறைய நூற்றிருபதுபேர் கூடியிருந்தபோது, அவர்கள் நடுவிலே பேதுரு எழுந்து நின்று:

அப் 1:16. சகோதரரே, இயேசுவைப் பிடித்தவர்களுக்கு வழிகாட்டின யூதாசைக்குறித்துப் பரிசுத்தஆவி தாவீதின் வாக்கினால் முன் சொன்ன வேதவாக்கியம் நிறைவேற வேண்டியதாயிருந்தது.

அப் 1:17. அவன் எங்களில் ஒருவனாக எண்ணப்பட்டு, இந்த ஊழியத்திலே பங்கு பெற்றவனாயிருந்தான்.

அப் 1:18. அநீதத்தின் கூலியினால் அவன் ஒரு நிலத்தைச் சம்பாதித்து, தலைகீழாக விழுந்தான்; அவன் வயிறுவெடித்து, குடல்களெல்லாம் சரிந்துபோயிற்று.

அப் 1:19. இது எருசலேமிலுள்ள குடிகள் யாவருக்கும் தெரிந்திருக்கிறது; அதினாலே அந்த நிலம் அவர்களுடைய பாஷையிலே இரத்தநிலம் என்று அர்த்தங்கொள்ளும் அக்கெல்தமா என்னப்பட்டிருக்கிறது.

அப் 1:20. சங்கீத புஸ்தகத்திலே: அவனுடைய வாசஸ்தலம் பாழாகக் கடவது, ஒருவனும் அதில் வாசம்பண்ணாதிருப்பானாக என்றும்; அவனுடைய கண்காணிப்பை வேறொருவன் பெறக்கடவன் என்றும் எழுதியிருக்கிறது.

அப் 1:21. ஆதலால், யோவான் ஞானஸ்நானங்கொடுத்த நாள்முதற் கொண்டு, கர்த்தராகிய இயேசுவானவர் நம்மிடத்திலிருந்து உயர எடுத்துக் கொள்ளப்பட்ட நாள் வரைக்கும்.

அப் 1:22. அவர் நம்மிடத்தில் சஞ்சரித்திருந்த காலங்களிலெல்லாம் எங்களுடனேகூட இருந்த மனுஷர்களில் ஒருவன் அவர் உயிரோடெழுந்ததைக் குறித்து, எங்களுடனேகூடச் சாட்சியாக ஏற்படுத்தப்படவேண்டும் என்றான்.

அப் 1:23. அப்பொழுது அவர்கள் யுஸ்து என்னும் மறுநாமமுள்ள பர்சபா என்னப்பட்ட யோசேப்பும் மத்தியாவும் ஆகிய இவ்விரண்டுபேரையும் நிறுத்தி:

அப் 1:24. எல்லாருடைய இருதயங்களையும் அறிந்திருக்கிற கர்த்தாவே, யூதாஸ் என்பவன் தனக்குரிய இடத்துக்குப் போகும்படி இழந்துபோன இந்த ஊழியத்திலும் இந்த அப்போஸ்தலப்பட்டத்திலும் பங்கு பெறுவதற்காக,

அப் 1:25. இவ்விரண்டு பேரில் தேவரீர் தெரிந்துகொண்டவனை எங்களுக்குக் காண்பித்தருளும் என்று ஜெபம்பண்ணி;

அப் 1:26. பின்பு, அவர்களைக்குறித்துச் சீட்டுப் போட்டார்கள்; சீட்டு மத்தியாவின் பேருக்கு விழுந்தது; அப்பொழுது அவன் பதினொரு அப்போஸ்தலருடனே சேர்த்துக் கொள்ளப்பட்டான்.

யூதாஸ்

அந்நாட்களிலே, சீஷர்களில் ஏறக்குறைய நூற்றிருபதுபேர் கூடியிருந்தபோது, அவர்கள் நடுவிலே பேதுரு எழுந்து நின்று: சகோதரரே, இயேசுவைப் பிடித்தவர்களுக்கு வழிகாட்டின யூதாசைக்குறித்துப் பரிசுத்தஆவி தாவீதின் வாக்கினால் முன் சொன்ன வேதவாக்கியம் நிறைவேற வேண்டியதாயிருந்தது. அவன் எங்களில் ஒருவனாக எண்ணப்பட்டு, இந்த ஊழியத்திலே பங்கு பெற்றவனாயிருந்தான். அநீதத்தின் கூலியினால் அவன் ஒரு நிலத்தைச் சம்பாதித்து, தலைகீழாக விழுந்தான்; அவன் வயிறுவெடித்து, குடல்களெல்லாம் சரிந்துபோயிற்று. இது எருசலேமிலுள்ள குடிகள் யாவருக்கும் தெரிந்திருக்கிறது; அதினாலே அந்த நிலம் அவர்களுடைய பாஷையிலே இரத்தநிலம் என்று அர்த்தங்கொள்ளும் அக்கெல்தமா என்னப்பட்டிருக்கிறது. சங்கீத புஸ்தகத்திலே: அவனுடைய வாசஸ்தலம் பாழாகக்கடவது, ஒருவனும் அதில் வாசம்பண்ணாதிருப்பானாக என்றும்; அவனுடைய கண்காணிப்பை வேறொருவன் பெறக்கடவன் என்றும் எழுதியிருக்கிறது (அப் 1:15-20).

இயேசுகிறிஸ்துவின் பன்னிரண்டு சீஷர்களில் யூதாஸ்காரியோத்து அவரைக் காட்டிக்கொடுத்துப் பாவம் செய்தான். தன்னுடைய பாவத்தினிமித்தம் நான்று கொண்டு செத்துப்போனான். இப்போது பதினொரு அப்போஸ்தலர்கள் மாத்திரமே இருக்கிறார்கள். அப்போஸ்தரின் கூட்டத்தில் யூதாசின் ஸ்தானம் காலியாக இருக்கிறது. பன்னிரண்டு பேர் இருக்கவேண்டிய கூட்டத்தில், பதினொரு பேர் மாத்திரம் இருந்தால், இவர்களைப் பார்ப்பவர்கள் எல்லோரும், "பன்னிரண்டாவது பேருக்கு என்ன ஆயிற்று" என்று கேள்வி கேட்பார்கள். தங்களைக்குறித்து இப்படிப்பட்ட கேள்விகள் கேட்கப்பட சீஷர்கள் விரும்பவில்லை. யூதாஸ்காரியோத்தின் மரணத்தினால் காலியாக இருக்கும் ஸ்தானத்தில், கர்த்தருக்குச் சித்தமான ஒருவரை நியமிக்க சீஷர்கள் விரும்புகிறார்கள்.

சீஷர்கள் எருசலேமிலே மேல்வீட்டில் தங்கியிருக்கிறார்கள். அப்போது அங்கு சீஷர்களில் ஏறக்குறைய நூற்றிருபது பேர் கூடியிருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவின் சபை இந்த மேல்வீட்டில் ஆரம்பமாயிற்று. ஆதித்திருச்சபையில் இந்த நூற்றிருபதுபேரும் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். இவர்கள் கடுகுவிதையைப் போன்றவர்கள். இனிமேல் இவர்கள் முளைத்து, பயிராகி, மரமாகி, மற்றவர்களுக்குப் பலன் தரவேண்டும். இவர்கள் கொஞ்சம் புளித்தமாவைப்போன்றவர்கள். இனிமேல் இவர்கள் எல்லா மாவையும் புளிக்கப்பண்ணவேண்டும்.

சீஷர்களில் நூற்றிருபது பேரும் கூடியிருந்தபோது, அவர்கள் நடுவிலே, பேதுரு எழுந்து நின்று பேசுகிறான். எப்போதுமே பேதுரு பேசுவதற்கு முந்திக் கொள்வான். பேதுரு விருத்தசேதன முள்ளவர்களுக்கு அப்போஸ்தலனாக நியமிக்கப் பட்டிருக்கிறான். விருத்தசேதனமுள்ள யூதர்கள் மத்தியில் இயேசுகிறிஸ்துவின் ஊழியம் நடைபெறும்போது அதில் பேதுரு முக்கிய பங்கு வகிக்கிறான். புறஜாதியார் மத்தியில் நடைபெறும் ஊழியத்தில் பவுல் முக்கிய பங்கு வகிக்கிறான்.

யூதாஸ்காரியோத்து மரித்துப் போனதினால், அவனுடைய ஸ்தானத்தில் வேறொரு அப்போஸ்தலனை நியமிக்க வேண்டுமென்று பேதுரு பரிந்துரை செய்கிறான். சீஷர்களில் ஏறக்குறைய நூற்றிருபதுபேர் கூடியிருந்த போது, அவர்கள் நடுவே பேதுரு நின்று பேசுகிறான். ஜீதாஸ் காரியோத்தின் மரணத்தைக் குறித்து பேதுரு மிகுந்த கரிசனை யோடிருக்கிறான். வேதவாக்கியத்தில் யூதாசு இயேசுவை மறுதலிப்பது பற்றியும், அவனுடைய மரணத்தைப்பற்றியும் முன்னறிவிக்கப் பட்டிருக்கிறது. வேதவாக்கியத்தின் நிறைவேற்றமாகவே, யூதாசு மரித்துப் போனானென்று பேதுரு குறிப்பிடுகிறான்.

யூதாசு இயேசுகிறிஸ்துவின் பன்னிரண்டு சீஷர்களில் ஒருவனாக எண்ணப்பட்டவன். அவன் கிறிஸ்துவின் ஊழியத்திலே பங்குபெற்றவன். இயேசுகிறிஸ்து மற்ற சீஷர்களை நேசித்ததுபோலவே யூதாசையும் நேசித்தார். தம்முடைய சீஷர்களில் ஒருவனாக அவனை அங்கீகரித்தார். ஆனால் யூதாசோ சாத்தானுக்கு இடங்கொடுத்து, அவனைப் பின்பற்றிப் போய்விட்டான்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் யூதாசின் வாழ்க்கையைத் தியானித்து மிகவும் எச்சரிப்போடிருக்கவேண்டும். நாம் சபையின் அங்கத்தினர்களில் ஒருவராகயிருக்கலாம். விசுவாசிகளில் ஒருவராக எண்ணப்படலாம். இயேசு கிறிஸ்துவின் ஊழியத்திலும் பங்குபெறலாம். இருந்தாலும் இயேசு கிறிஸ்துவின் ஆவி நமக்குள்ளிருக்க வேண்டும். கிறிஸ்துவின் சுபாவத்தை நாம் தரித்துக்கொள்ள வேண்டும். இல்லையென்றால், நமக்கு இவ்வளவு சிலாக்கியம் கொடுக்கப்பட்டிருந்தும், நம்முடைய முடிவு யூதாசின் முடிவைப்போல பரிதாபமாக முடிந்து போக வாய்ப்புள்ளது.

இயேசுவைப் பிடித்தவர்களுக்கு யூதாசு வழிகாட்டினான். பிரதான ஆசாரியர் அனுப்பின சேவகர்கள் இயேசுகிறிஸ்துவைப் பிடிக்க வருகிறார்கள். யூதாசு அவர்களுக்கு தலைமைப் பொறுப்பேற்று, இயேசுவைப் பிடிக்க அவர்களை வழிநடத்தினான். யூதாசு மறைமுகமாக எதையும் செய்யாமல், வெளிப்படையாகவே இயேசுவுக்கு விரோதமாகச் செயல்படுகிறான். சேவகரை வழிநடத்திச் சென்று இயேசு கிறிஸ்துவைக் காட்டிக்கொடுக்கிறான். இயேசுகிறிஸ்துவைப் பிடிக்க வந்தவர்களுக்கு இவன் தலைவனாகயிருக் கிறான். துன்மார்க்கருக்குத் தண்டனை உண்டு. துன்மார்க்கக் கூட்டத்தாரின் தலைவனுக்கோ மிகுந்த தண்டனை உண்டு. யூதாசுக்கு மிகுந்த தண்டனை கிடைத்தது.

யூதாசு தன் பாவத்தினால் அழிந்துபோனான். யூதமார்க்கத்துத் தலைவர்கள் இயேசுகிறிஸ்துவைப் பிடித்து அவரைக் கொலைபண்ணவேண்டுமென்று ஆலோசனை பண்ணுகிறார்கள். துன்மார்க்கரின் ஆலோசனைக்கு யூதாசு உடந்தையாக இருக்கிறான். இயேசு கிறிஸ்துவையும், அவருடைய சீஷரையும் பிடிப்பதற்கு உதவி செய்தால், தனக்குப் பதவியும் பணமும் கிடைக்கும் என்று யூதாஸ் எதிர்பார்க்கிறான். மற்ற சீஷர்கள் பிடிக்கப்பட்டு தண்டிக்கப்படும்போது, தான் அந்த தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம் என்றும் நினைக்கிறான்.

இயேசு கிறிஸ்துவைக் காட்டிக்கொடுத்ததற்காக யூதாசு பிரதான ஆசாரியனிடத்தில் கூலியையும் வாங்கிக்கொள்கிறான். இது அநீதத்தின் கூலி. இதனால் அவன் ஒரு நிலத்தை சம்பாதித்தான். இயேசுகிறிஸ்துவைக் காட்டிக்கொடுப்பதற்கு இவனுக்கு முப்பது வெள்ளிக்காசுகளைப் பிரதான ஆசாரியர்கள் கூலியாகக் கொடுத்தார்கள். இயேசுகிறிஸ்துவின் ஜீவனுக்கு அவர்கள் முப்பது வெள்ளிக்காசை மாத்திரமே கிரயமாக மதிப்பிட்டிருக்கிறார்கள். யூதாசின் பாவத்திற்கு முப்பது வெள்ளிக்காசு மாத்திரமே கூலியாகக் கிடைத்தது.

தனக்குக் கிடைத்த முப்பது வெள்ளிக்காசைக்கொண்டு யூதாசு தனக்கு ஒரு நிலத்தை வாங்க வேண்டுமென்று ஆசைப்பட்டான். ஆனால் இவனுடைய எண்ணம் நிறைவேறவில்லை. இந்தப் பணத்தினால் அந்நியரை அடக்கம் பண்ணுவதற்கு ஒரு நிலம் வாங்கப்பட்டது. இந்தப் பணத்தினால் யூதாசுக்கு ஒரு பிரயோஜனமும் உண்டாகவில்லை.

யூதாசு இயேசுகிறிஸ்துவைக் காட்டிக்கொடுத்ததினால் அவன் தன் ஆத்துமாவையும் ஜீவனையும் இழந்து போகிறான். அவனுக்கு அவமானமான மரணம் உண்டாயிற்று. இயேசு கிறிஸ்துவைக் காட்டிக்கொடுத்ததற்காக, தனக்குக் கொடுக்கப்பட்ட வெள்ளிக்காசை, அவன் தேவாலயத்திலே எறிந்துவிட்டு, புறப்பட்டுப்போய், நான்று கொண்டு செத்தான் (மத் 27:5). அவன் தலைகீழாக விழுந்தான். அவன் வயிறுவெடித்து குடல்களெல்லாம் சரிந்து போயிற்று. துன்மார்க்கர் யூதாசைப்போல பரிதாபமாக மரித்துப்போவார்கள்.

யூதாஸ்காரியோத்து மரித்துப்போனது ஏதோ ஒரு மூலையில் யாருக்கும் தெரியாமல் ரகசியமாக நடைபெற்ற சம்பவமல்ல. அவன் தலைகீழாக விழுந்ததும், அவனுடைய வயிறு வெடித்ததும், அவன் குடல்களெல்லாம் சரிந்துபோனதும் எருசலேமிலுள்ள குடிகள் யாவருக்கும் தெரிந்திருக்கிறது. தேவனுடைய நியாயத்தீர்ப்பு யூதாசின்மீது பிரத்தியட்சமாக உண்டாயிற்று. எல்லோருக்கும் தெரியும்படி அவன் நான்றுகொண்டு செத்தான். அவனுடைய சரீரத்திற்கு நேரிட்ட பரிதாபமான சம்பவத்தை எருசலேமின் குடிகளெல்லோரும் பார்த்தார்கள். எருசலேமின் குடிகளெல்லோரும் யூதாசின் மரணத்தைப்பற்றிப் பேசுகிறார்கள். இயேசு கிறிஸ்துவைக் காட்டிக்கொடுத்ததினால், யூதாசுக்கு ஆக்கினைத்தீர்ப்பு உண்டாயிற்று என்று எல்லோரும் பேசிக்கொள்கிறார்கள். யூதாசுக்குச் சம்பவித்தது பற்றியும், அவனுக்கு இது ஏன் சம்பவித்தது என்பது பற்றியும் எருசலேமின் குடிகள் யாவருக்கும் தெரிந்திருக்கிறது. சத்தியம் மறைவாகயிராமல் பிரத்தியட்சமாக இருக்கிறது.

யூதாஸ்காரியோத்து இயேசு கிறிஸ்துவைக் காட்டிக்கொடுத்து சம்பாத்தியம் பண்ணின கூலியினால் ஒரு நிலத்தை வாங்கினான். அந்த நிலம் அக்கெல்தமா என்று எபிரெய பாஷையிலே அழைக்கப்படுகிறது. இதற்கு இரத்த நிலம் என்று பொருள். ஏனெனில் இது இரத்தத்தின் கிரயத்தினால் வாங்கப்பட்டிருக்கிறது.

யூதாசுக்கு நடைபெற்ற சம்பவமெல்லாமே வேதவாக்கியத்தில் முன்னறிவிக்கப் பட்டிருக்கிறது. இவனுடைய பாவத்தையும், பாவத்தினால் இவனுக்கு உண்டான தண்டனையையும் தாவீது முன்னறிவித்திருக்கிறான். யூதாசைக் குறித்து பரிசுத்தஆவி தாவீதின் வாக்கினால் முன்சொன்ன வாக்கியம் நிறைவேறிற்று.

சங்கீத புஸ்தகத்தில், யூதாசுடைய வாசஸ்தலம் பாழாகக்கடவது என்றும், ஒருவனும் அதில் வாசம்பண்ணாதிருப்பானாக என்றும், அவனுடைய கண்காணிப்பை வேறொருவன் பெறக்கடவன் என்றும் எழுதியிருக்கிறது. இயேசுகிறிஸ்து தாமே தம்முடைய சீஷருக்கு அப்போஸ்தல ஊழியத்தை நியமித்திருக்கிறார். யூதாஸ்காரியோத்து பாவம் செய்ததினால், அப்போஸ்தல ஊழியம் நின்றுபோய்விடாது. தேவனுடைய ஊழியம் தொடர்ந்து நடைபெறும். யூதாசுக்குக் கொடுக்கப்பட்ட கண்காணிப்பை வேறொருவன் பெற்றுக்கொள்வான். யூதாசுடைய அப்போஸ்தல ஊழியத்தை வேறொருவன் செய்வான்.

கர்த்தருடைய ஊழியக்காரர் களாகிய நாம், நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் ஊழியத்தில் உண்மையுள்ளவர்களாக ஊழியம் செய்யவேண்டும். நாம் துன்மார்க்கராகயிருப் போமென்றால், கர்த்தர் நம்முடைய ஊழியத்தை வேறொருவருக்குக் கொடுத்துவிடுவார். கர்த்தருடைய ஊழியம் தொடர்ந்து நடைபெறும். உண்மையில்லாத ஊழியக்காரர்கள் ஊழியமில்லாமல் பரிதாபமாகயிருப்பார்கள். யூதாஸ் நான்றுகொண்டு செத்துப்போனான். அப்போஸ்தல ஊழியம் மரித்துப்போக வில்லை. கர்த்தர் யூதாசுக்குப் பதிலாக வேறொரு அப்போஸ்தலரை எழுப்புகிறார். நாம் கர்த்தருக்காகச் சாட்சி கொடுக்கவில்லை என்பதற்காக இயேசு கிறிஸ்துவின் சாட்சி பொய்யாகிவிடாது. நாம் கர்த்தரைத் துதிக்கவில்லை யென்பதற்காக அவருடைய மகிமை குறைந்துவிடாது.

சாட்சியாக ஏற்படுத்தப்பட வேண்டும்

ஆதலால், யோவான் ஞானஸ்நானங்கொடுத்த நாள்முதற் கொண்டு, கர்த்தராகிய இயேசுவானவர் நம்மிடத்திலிருந்து உயர எடுத்துக் கொள்ளப்பட்ட நாள் வரைக்கும், அவர் நம்மிடத்தில் சஞ்சரித்திருந்த காலங்களிலெல்லாம் எங்களுடனேகூட இருந்த மனுஷர்களில் ஒருவன் அவர் உயிரோடெழுந்ததைக் குறித்து, எங்களுடனேகூடச் சாட்சியாக ஏற்படுத்தப்படவேண்டும் என்றான் (அப் 1:21,22).

யூதாஸ் காரியோத்தின் மரணத்தினால் அவனுடைய அப்போஸ்தல ஊழிய ஸ்தானம் காலியாக இருக்கிறது. அந்த இடத்திற்கு வேறொருவரை, தங்களுடனேகூட சாட்சியாக ஏற்படுத்த வேண்டுமென்று பேதுரு கூறுகிறான். அந்த அப்போஸ்தலனுக்கு என்னென்ன தகுதிகள் இருக்கவேண்டுமென்பதையும் பேதுரு விவரிக்கிறான். "யோவான் ஞானஸ்நானங்கொடுத்த நாள்முதற் கொண்டு, கர்த்தராகிய இயேசுவானவர் நம்மிடத்திலிருந்து உயர எடுத்துக் கொள்ளப்பட்ட நாள் வரைக்கும், அவர் நம்மிடத்தில் சஞ்சரித்திருந்த காலங்களிலெல்லாம் எங்களுடனேகூட இருந்த மனுஷர்களில் ஒருவனாக இருக்க வேண்டும்". இந்தத் தகுதியுடையவனே, இயேசுகிறிஸ்து உயிரோடெழுந்ததைக் குறித்து தங்களுடனேகூட சாட்சியாக ஏற்படுத்தப்படவேண்டுமென்று பேதுரு சீஷர்கள் நடுவிலே எழுந்து நின்று சொல்லுகிறான்.

கொஞ்சத்தில் உண்மையுள்ளவர்கள் அநேகத்தின்மேல் அதிகாரியாக நியமிக்கப்படுவார்கள். தங்களுக்குக் கொடுக்கப்படும் சிறிய ஊழியங்களை நேர்த்தியாகச் செய்கிறவர்களிடத்தில், தேவன் பெரிய ஊழியங்களை ஒப்புக் கொடுப்பார். மற்ற அப்போஸ்தலர்களோடு ஒருமனப்பட்டு அப்போஸ்தல ஊழியம் செய்கிறவரே அப்போஸ்தலராகயிருக்க முடியும். மேலும் அப்போஸ்தல ஊழியத்தைத் தொடர்ந்து செய்யவேண்டும். இடையில் நிறுத்திவிடக்கூடாது.

பேதுரு அப்போஸ்தல ஊழியத்தைப்பற்றிக் குறிப்பிடும்போது "இயேசுகிறிஸ்து உயிரோடெழுந்ததைக் குறித்து எங்களுடனேகூட சாட்சியாக அறிவிக்கிறவர்" என்று கூறுகிறான். இதன் மூலமாக மற்ற பதினொரு அப்போஸ்தலர்களும் உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவைப் பிரத்தியட்சமாகத் தரிசித்திருக்கிறார்கள் என்பது உறுதியாகிறது. அப்போஸ்தல ஊழியத்தின் முக்கியமான பகுதி உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவை இந்த உலகத்திற்குச் சாட்சியாக அறிவிப்பதாகும். அப்போஸ்தலருக்கு உலகப்பிரகாரமான பதவியோ, பட்டமோ, அதிகாரமோ, பொறுப்போ கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கு இயேசுகிறிஸ்துவைக் குறித்தும், அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையைக் குறித்தும் சாட்சியாக பிரசங்கிக்கிற ஊழியமே கொடுக்கப்பட்டிருக்கிறது.

மத்தியா

அப்பொழுது அவர்கள் யுஸ்து என்னும் மறுநாமமுள்ள பர்சபா என்னப்பட்ட யோசேப்பும் மத்தியாவும் ஆகிய இவ்விரண்டுபேரையும் நிறுத்தி: எல்லாருடைய இருதயங்களையும் அறிந்திருக்கிற கர்த்தாவே, யூதாஸ் என்பவன் தனக்குரிய இடத்துக்குப் போகும்படி இழந்துபோன இந்த ஊழியத்திலும் இந்த அப்போஸ்தலப்பட்டத்திலும் பங்கு பெறுவதற்காக, இவ்விரண்டு பேரில் தேவரீர் தெரிந்துகொண்டவனை எங்களுக்குக் காண்பித்தருளும் என்று ஜெபம்பண்ணி; பின்பு, அவர்களைக் குறித்துச் சீட்டுப் போட்டார்கள்; சீட்டு மத்தியாவின் பேருக்கு விழுந்தது; அப்பொழுது அவன் பதினொரு அப்போஸ்தலருடனே சேர்த்துக் கொள்ளப்பட்டான் (அப் 1:23-26).

அப்போஸ்தலருக்கு என்னென்ன தகுதிகள் இருக்கவேண்டுமென்று பேதுரு குறிப்பிடுகிறான். அப்படிப்பட்ட தகுதியுடையவர்கள் சீஷர்கள் மத்தியில் இரண்டுபேர் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவனை யூதாசுக்குப் பதிலாக அப்போஸ்தலனாக நியமிக்க வேண்டுமென்று சீஷர்கள் விரும்புகிறார்கள்.

அப்போஸ்தல ஊழியத்திற்கு சீஷர்கள் இரண்டுபேரை பரிந்துரை செய்கிறார்கள். இவர்கள் "யோவான் ஞானஸ்நானங்கொடுத்த நாள்முதற் கொண்டு, கர்த்தராகிய இயேசுவானவர் நம்மிடத்திலிருந்து உயர எடுத்துக் கொள்ளப்பட்ட நாள் வரைக்கும், அவர் நம்மிடத்தில் சஞ்சரித்திருந்த காலங்களிலெல்லாம் எங்களுடனேகூட இருந்த மனுஷர்கள்" என்று சீஷர்கள் கண்டு, இவர்கள் இருவரையும் தெரிவுசெய்கிறார்கள். ஒருவனுடைய பெயர் யோசேப்பு. மற்றவனுடைய பெயர் மத்தியா. இவர்கள் இருவருடைய பெயரும் இங்கு மாத்திரமே குறிப்பிடப்பட்டிருக்கிறது. பரிசுத்த வேதாகமத்தில் இவர்களுடைய பெயர்கள் வேறெங்கும் குறிப்பிடப்படவில்லை.

இவர்கள் இருவருமே அப்போஸ்தல ஊழியத்திற்கு தகுதியானவர்களாக இருக்கிறார்கள். ஆனாலும் இவர்களில் யாரைத் தேர்ந்தெடுக்கவேண்டுமென்று அவர்களால் உடனடியாக முடிவுபண்ண முடியவில்லை. இவர்கள் இருவரில் ஒருவரை அப்போஸ்தலராக தேர்ந்தெடுக்க வேண்டுமென்று சீஷர்களெல்லோரும் ஒருமனப்பட்டு அங்கீகரிக்கிறார்கள்.

இவ்விரண்டு பேரில் அப்போஸ்தலனைத் தெரிந்தெடுக்கும் பொறுப்பை சீஷர்கள் கர்த்தரிடத்தில் ஒப்புக்கொடுக்கிறார்கள். "இவ்விரண்டு பேரில் தேவரீர் தெரிந்துகொண்டவனை எங்களுக்குக் காண்பித்தருளும்" என்று சீஷர்கள் ஜெபம்பண்ணுகிறார்கள். கர்த்தரே எல்லாருடைய இருதயங்களையும் அறிந்திருக்கிறவர். ஒருவரை அப்போஸ்தல பட்டத்திற்குத் தெரிந்தெடுக்கும்போது, அவருடைய இருதயத்தை ஆராய்ந்து பார்க்கவேண்டும். தனக்குக் கொடுக்கப்படும் அப்போஸ்தல ஊழியத்தை அவர் எப்படி நிறைவேற்றுவாரென்பதையும் நிதானித்து அறியவேண்டும்.

கர்த்தர் நம் எல்லோருடைய இருதயங்களையும் அறிந்திருக்கிறார். நாம் சபையின் ஊழியத்திற்காகவும் ஊழியக்காரர்களுக்காகவும் ஜெபிக்க வேண்டும். நாம் யாருக்காக ஜெபிக்கிறோமோ அவர்களுடைய இருதயங்களைக் கர்த்தர் அறிந்திருக்கிறார். சில சமயங்களில் ஒரு காரியத்தை முடிவுபண்ணுவதில் நமக்கு குழப்பமுண்டாகலாம். அப்போது அதைக் கர்த்தருடைய சமுகத்தில் ஒப்புக்கொடுத்து ஜெபிக்கவேண்டும். கர்த்தருக்குச் சித்தமானது அவருடைய கையினால் வாய்க்கும்.

சீஷர்கள் அப்போஸ்தல பட்டத்தில் பங்குபெறுவதற்காக இரண்டு பேரை தெரிவுசெய்திருக்கிறார்கள். ஆனாலும் இவ்விரண்டு பேரில் யாரைத் தேர்ந்தெடுக்கவேண்டும் என்பதை இவர்கள் தீர்மானம்பண்ணவில்லை. கர்த்தரே தெரிந்துகொள்ளவேண்டுமென்று ஜெபம்பண்ணுகிறார்கள். கர்த்தருடைய ஊழியத்திற்காக நாமே ஊழியக்காரர்களைத் தேர்ந்தெடுப்பதற்குப் பதிலாக, கர்த்தரே அவர்களைத் தெரிந்தெடுப்பது மிகவும் ஆசீர்வாதமாகயிருக்கும். கர்த்தர் எல்லோருடைய இருதயத்தையும் அறிந்திருக்கிறார். அவரே தம்முடைய ஊழியக்காரரைத் தெரிந்தெடுப்பதற்குப் பாத்திரராகவுமிருக்கிறார்.

கர்த்தர் தெரிந்தெடுக்கும் நபரை, அப்போஸ்தலராக ஏற்றுக் கொள்ள சீஷர்களெல்லோரும் ஆயத்தமாகயிருக்கிறார்கள். யூதாஸ் என்பவன் தனக்குரிய இடத்திற்குப் போகும்படி இழந்துபோன இந்த ஊழியத்திலும், இந்த அப்போஸ்தல பட்டத்திலும் பங்குபெறுவதற்காக, இவ்விரண்டு பேரில் தேவரீர் தெரிந்துகொண்டவனை தங்களுக்குக் காண்பித்தருளுமென்று சீஷர்கள் ஜெபம்பண்ணுகிறார்கள்.

இயேசுகிறிஸ்துவுக்காக ஊழியம் செய்கிறவர்கள் பின்வாங்கிப்போய், அவருடைய ஊழியத்தைவிட்டு விலகிப்போய்விட்டால் அவர்களுடைய நிலமை மிகவும் பரிதாகமாகயிருக்கும். இயேசுகிறிஸ்து யூதாஸ்காரியோத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது "அவன் பிறவாதிருந்தானானால் அவனுக்கு நலமாயிருக்கும்" (மத் 26:24) என்று குறிப்பிடுகிறார்.

கர்த்தருடைய முடிவைத் தெரிந்துகொள்ள சீஷர்கள் அவரிடத்தில் ஜெபம்பண்ணி சீட்டுப்போடுகிறார்கள். சந்தேகத்தைச் சீட்டுப்போட்டு நிவிர்த்தி செய்யும் வழக்கம் சீஷரிடத்திலிருக்கிறது. முடிவுபண்ண கடினமாகயிருக்கும்போது, சீட்டுப்போட்டு முடிவுபண்ணுவது யூதமார்க்கத்தின் பிரமாணத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வழக்கமாகும். ஜெபத்தோடும் விசுவாசத்தோடும் சீட்டுப்போடவேண்டும். சீஷர்களும் ஜெபம்பண்ணி சீட்டுப்போடுகிறார்கள். சீட்டு மத்தியாவின் பேருக்கு விழுகிறது. அப்பொழுது அவன் பதினொரு அப்போஸ்தலருடனே, பன்னிரண்டாவது அப்போஸ்தலனாக சேர்த்துக் கொள்ளப்படுகிறான்.

2 அதிகாரம்

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷருக்குப் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் கொடுக்கப்போவதாக வாக்குப் பண்ணுகிறார். அவர் வாக்குப்பண்ணின சில நாளுக்குள், அவருடைய வாக்குத்தத்தம் நிறைவேறுகிறது. சீஷர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்படுகிறார்கள். அது வரையிலும் சீஷர்கள் பிரசங்கம்பண்ணும் ஊழியத்தைச் செய்யவில்லை. பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்திற்காக காத்துக் கொண்டிருந்தார்கள்.

பெந்தகொஸ்தே என்னும் நாளின்போது பரிசுத்த ஆவியானவர் சீஷர்களெல்லோரையும் நிரப்புகிறார் (அப் 2:1-4). பண்டிகை நாளிலே எருசலேமுக்கு வந்திருந்த ஏராளமான ஜனங்கள் இந்த சம்பவத்தைப் பார்த்து ஆச்சரியப்படுகிறார்கள். அதைப்பற்றி விவாதமும் பண்ணுகிறார்கள் (அப் 2:5-13). ஜனங்கள் மத்தியிலே பேதுரு பிரங்கம்பண்ணுகிறார். பழைய ஏற்பாட்டில் முன்னறிவிக்கப்பட்டிருக்கும் தீர்க்கதரிசனம் இப்போது நிறைவேறியிருப்பதாக தெளிவுபடுத்துகிறார் (அப் 2:14-21). இயேசுவே மேசியா என்பதை பரிசுத்த ஆவியானவரின் அருள்மாரி உறுதிபண்ணுவதாகவும் பேதுரு பிரசங்கம்பண்ணுகிறார் (அப் 2:22-32).

இயேசுகிறிஸ்து பரமேறிப்போனதற்கு பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் ஒரு சாட்சியாக இருக்கிறது (அப் 2:33-36). பேதுருவின் பிரசங்கத்தைக்கேட்டு ஏராளமானோர் இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைக்கிறார்கள். அவர்கள் சபையில் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள் (அப் 2:37-41). புதிய விசுவாசிகள் இயேசுகிறிஸ்துவிடத்தில் தாங்கள் வைத்திருக்கும் விசுவாசத்தையும் பக்தியையும் கிரியைகளினால் வெளிப்படுத்துகிறார்கள் (அப் 2:42-47).

பரிசுத்த ஆவியின் அபிஷேகம் அப் 2 : 1-4

அப் 2:1. பெந்தெகோஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஒரிடத்திலே வந்திருந்தார்கள்.

அப் 2:2. அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று.

அப் 2:3. அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர்மேலும் வந்து அமர்ந்தது,

அப் 2:4. அவர்களெல்லாரும் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள்.

பெந்தெகோஸ்தே

பெந்தெகோஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஒரிடத்திலே வந்திருந்தார்கள் (அப் 2:1).

இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள்மீது பரிசுத்த ஆவியானவர் வந்து இறங்குகிறார். பெந்தெகொஸ்தே என்னும் நாளின்போது இந்த சம்பவம் நடைபெறுகிறது. பெந்தெகொஸ்தே என்பது யூதருக்கு முக்கியமான பண்டிகைகளில் ஒன்று. இந்தப் பண்டிகை நாளின்போது யூதாதேசத்தின் எல்லா பகுதிகளிலிருந்தும் ஏராளமான ஜனங்கள் எருசலேமுக்கு வருவார்கள். எருசலேமில் திரளான ஜனங்கள் கூடியிருப்பார்கள். அப்படிப்பட்ட பண்டிகையின்போது பரிசுத்த ஆவியானவர் இயேசுகிறிஸ்துவின் சீஷர்களை நிரப்புகிறார். இந்தச் செய்தி சாதாரண நாளில் பரவுவதைவிட, பண்டிகை நாளாகயிருப்பதினால் அநேகர் மத்தியில் அதிவேகமாக பரவுகிறது. பண்டிகைக்கு வந்திருக்கும் எல்லா ஊர் ஜனங்கள் மத்தியிலும் இந்த நற்செய்தி பரவுகிறது.

தேவனாகிய கர்த்தர் சீனாய் மலையிலே மோசேக்கு தம்முடைய பிரமாணத்தைக் கொடுத்தார். யூதர்கள் இந்தச் சம்பவத்தை நினைவுகூரும் வண்ணமாக பெந்தெகொஸ்தே பண்டிகையை ஆசரிக்கிறார்கள். பரிசுத்த ஆவியானவரும் பெந்தெகொஸ்தே பண்டிகையின்போது கொடுக்கப்படுகிறார். அக்கினி மயமான நாவுகள்போல பிரிந்திருக்கும் நாவுகளும், பலத்த காற்றும், இடிமுழக்கமும் பரிசுத்த ஆவியானவர் வரும்போது உண்டாயிற்று.

தேவனாகிய கர்த்தர் சீனாய் மலையிலே யூதருக்குப் பிரமாணத்தைக் கொடுத்தார். இந்தப் பிரமாணம் இஸ்ரவேல் புத்திரரை ஆளுகை செய்யும் பிரமாணம். ஆனால் பரிசுத்த ஆவியானவரின் பிரமாணமோ சுவிசேஷப் பிரமாணம். இந்தப் பிரமாணம் இஸ்ரவேல் புத்திரருக்கு மாத்திரமென்று மட்டுப் படுத்தப்படாமல், உலகமெங்கிலுமுள்ள எல்லா ஜாதியாருக்கும் கொடுக்கப் பட்டிருக்கிறது. சர்வ சிருஷ்டிக்கும் இந்தப் புதிய பிரமாணம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

பெந்தெகொஸ்தே பண்டிகை வாரத்தின் முதலாம் நாளில் நடைபெறுகிறது. இந்த நாள் ஞாயிற்றுக்கிழமையாகும். யூதர்கள் ஏழாம் நாளாகிய சனிக்கிழமையைத் தங்களுக்கு ஓய்வுநாளாக ஆசரிக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிற விசுவாசிகளாகிய நமக்கோ, வாரத்தின் முதலாம் நாளாகிய ஞாயிற்றுக்கிழமை, ஓய்வுநாளாகயிருக்கிறது. இந்தப் பரிசுத்த ஓய்வுநாளில் நாம் சபையாகக் கூடி கர்த்தரை ஆராதிக்கிறோம். வாரத்தின் முதலாம் நாளாகிய ஞாயிற்றுக்கிழமையில் இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்தார், பரிசுத்த ஆவியானவர் அருள்மாரியாக ஊற்றப்பட்டார்.

ஞாயிற்றுக் கிழமைகளில், விசுவாசிகளாகிய நாம், சபையாகக் கூடிவரும்போது, இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுந்ததற்காகவும், பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்திற்காகவும் நாம் தேவனைத் துதிக்கவேண்டும். நம்முடைய ஜெபங்களில் இவ்விரண்டு சம்பவங்களையும் நினைவுகூரவேண்டும்.

சீஷர்களெல்லோரும் ஓரிடத்தில் ஒருமனப்பட்டுக் கூடிவந்திருக்கிறார்கள். இந்த இடம் எங்குள்ளது என்று விரிவாகக் குறிக்கப்படவில்லை. ஆனால் இந்த இடம் எருசலேமிலுள்ளது என்பது தெரியவருகிறது. தேவன் தம்முடைய சீஷர்களை எருசலேமுக்குப் போகுமாறு சொன்னார். பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்வதற்கு எருசலேமில் காத்திருக்குமாறு சீஷர்களுக்குக் கட்டளை கொடுத்தார். இயேசுகிறிஸ்து தாமே பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் நடைபெறும் இடமாக எருசலேமைத் தெரிந்தெடுத்திருக்கிறார்.

கர்த்தருடைய வார்த்தை எருசலேமிலிருந்து எல்லா ஜனத்திற்கும் புறப்பட்டுப்போகும் என்பது இயேசுகிறிஸ்துவின் தீர்க்கதரிசனமாகும். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களை எருசலேமில் சந்திப்பதாக வாக்குப் பண்ணினார். தாம் வாக்குப்பண்ணின பிரகாரமாக இயேசுகிறிஸ்து சீஷர்களை எருசலேமில் சந்தித்து அவர்களை ஆசீர்வதிக்கிறார். பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம், ஆசீர்வாதங்களுக்கெல்லாம் பிரதான ஆசீர்வாதமாகயிருக்கிறது.

பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் எருசலேமில் கொடுக்கப்படுவதினால் இயேசுகிறிஸ்து இந்த நகரத்தைக் கனப்படுத்துகிறார். எருசலேமிலுள்ள ஜனங்கள் இயேசுகிறிஸ்துவைத் துன்பப்படுத்தி அவரைச் சிலுவையில் அறைந்தார்கள். இதனால் சீஷர்களுக்கு எருசலேம் ஊரின் மீது கோபமிருக்கலாம். ஆனால் இயேசுகிறிஸ்துவோ எருசலேமைக் கனப்படுத்துகிறார்.

இயேசுகிறிஸ்துக்கு மீதமானவர்கள் எல்லா ஊர்களிலும் இருக்கிறார்கள். மற்ற ஊர்களிலிருப்பது போலவே இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் எருசலேமிலுமிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரர்களாகிய நாம் ஒரு குறிப்பிட்ட ஊரின்மீது அளவுக்கு அதிகமான பாசமோ, அல்லது வெறுப்போ, விருப்போ காண்பிக்கக் கூடாது. நமக்கு எல்லா ஊர்களும் ஒன்றுதான். எல்லா ஊர்களிலும் ஆத்துமாக்களிலிருக் கிறார்கள். அவர்களிடத்தில் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷச் செய்தியை ஜெபத்தோடும் உண்மையோடும் பிரசங்கம்பண்ணவேண்டும்.

இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் எருசலேமில், ஓரிடத்தில் வந்திருக்கிறார்கள். அவர்களெல்லோரும் ஒருமனப்பட்டிருக்கிறார்கள். சீஷர்கள் ஏற்கெனவே கூடி, ஒருமனப்பட்டு, ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருக்கிறார்கள் (அப் 1:14). இதற்கு முன்பு ஒருமனப்பட்டு ஜெபிப்பது சீஷர்களுடைய வழக்கமல்ல. இயேசுகிறிஸ்து கெத்சமனே தோட்டத்தில் ஜெபித்த போது கூட சீஷர்கள் அவரோடுகூட ஜெபிக்காமல் நித்திரையாயிருந்தார்கள். ஆனால் இப்போதோ ஒன்றுகூடி ஒருமனப்பட்டு ஜெபிக்கிறார்கள். ஒருமனப்பட்டு ஜெபிக்கும்போது சகோதர சிநேகம் அதிகரிக்கும். ஒருவர்மீது ஒருவர் அன்புகூருவதும் பெருகும். பரிசுத்த ஆவியானவரின் வரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு சீஷர்கள் ஆயத்தமாகயிருக்கிறார்கள். இந்த ஆயத்தம் தேவனுடைய கிருபையினால் உண்டாயிற்று. அவர்கள் ஒன்றுகூடி ஒருமனப்பட்டு ஜெபித்ததினால் தேவனுடைய கிருபை அவர்களுக்குக் கிடைத்தது.

இயேசுகிறிஸ்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டபோது, பரிசுத்த ஆவியானவர் புறாவின் ரூபங்கொண்டு, வானத்திலிருந்து இறங்கி வந்தார். புறாவானவர் சந்தடி மிகுந்திருக்கும் இடத்திலும், ஆடம்பரமான இடங்களிலும் வந்திறங்கமாட்டார். மிகவும் அமைதியான, அமர்ந்த தண்ணீரைப்போன்ற இடங்களுக்கண்டையில் மாத்திரமே வந்திறங்குவார். குழப்பம் மிகுந்திருக்கும் இடத்தில் புறாவானவர் இறங்கமாட்டார். அமைதியான புறாவை அன்போடு ஏற்றுக்கொள்ளும்போது அவர் நம் மத்தியில் வருவார்.

உன்னத்திலிருந்து பரிசுத்த ஆவியானவர் நம்மீது ஊற்றப்படவேண்டும் என்று நாம் விரும்புவோமென்றால், நாமும் சீஷர்களைப்போல ஒருமனப்பட்டு தேவனுடைய சமுகத்தில் தரித்திருக்கவேண்டும். அன்பினால் ஒருவருக்கொருவர் கட்டப்பட்டவர்களாக, பரிசுத்த ஆவியானவரை அன்போடு வரவேற்கவேண்டும்.

பலத்த காற்று

அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல், வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று (அப் 2:2.).

பழைய ஏற்பாட்டில் கர்த்தருடைய வருகையைப்பற்றி வாசிக்கும்போது, அவர் பல சமயங்களில் வானத்திலிருந்து மேகங்கள் நடுவே வந்ததாக வாசிக்கிறோம். இயேசுகிறிஸ்து பரமேறிப்போனபோது அவர் மேகங்கள் நடுவே பரமேறிப்போனார். அவர் வானத்திற்கு உயர எடுத்துக்கொள்ளப்பட்டபோது, ஒரு மேகம் சீஷர்களுடைய கண்களுக்கு மறைவாக அவரை எடுத்துக்கொண்டது (அப் 1:9). ஆனால் பரிசுத்த ஆவியானவரோ மேகங்களிலிருந்து இறங்கி வரவில்லை. அவர் மேகங்களைக் கலைக்கிறவராக பலத்தோடும் வல்லமையோடும் வருகிறார். மனுஷருடைய மனதில் இயேசுகிறிஸ்துவைப்பற்றிய சந்தேகங்கள் மேகம்போல சூழ்ந்திருக்கலாம். சந்தேகத்தின் மேகங்களையெல்லாம் அகற்றிப்போடும் வல்லமையோடு பரிசுத்த ஆவியானவர் வந்திறங்குகிறார்.

சீஷர்கள் ஓரிடத்தில் ஒருமனப்பட்டு கூடிவந்திருக்கிறார்கள். பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்திற்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல, வானத்திலிருந்து சடுதியாய் ஒரு முழக்கம் உண்டாயிற்று. பரிசுத்த ஆவியானவர் அமைதியாக வராமல் பலத்த முழக்கதோடு வருகிறார். எதிர்பார்த்துக் காத்துகொண்டிருக்கும் சீஷர்களை ஆவியானவரின் அபிஷேகம் அசைக்கிறது. பரிசுத்த ஆவியானவர் வரும்போது உண்டான முழக்கம், சீஷர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று.

பரிசுத்த ஆவியானவரின் வருகை சடுதியாய் உண்டாயிற்று. அவர் வரும்போது மெதுவாக வராமல் சடுதியாக வருகிறார். வானத்திலிருந்து ஒரு முழக்கம் உண்டாகும்போது, அது பூமிக்கு வருவதற்கு அதிக நேரம் எடுத்துக்கொள்ளாது. உடனடியாக வரும். அதுபோலவே பரிசுத்த ஆவியானவர் வரும்போது மெதுவாக வராமல் சடுதியாக வருகிறார்.

அவர்கள் பரிசுத்த ஆவியானவரின் வருகைக்காக காத்திருக்கிறார்கள். அவர் எப்படி வருவார் என்னும் எதிர்பார்ப்பு சீஷர்களுடைய உள்ளத்திலிருக்கிறது. ஆனால் ஆவியானவரோ அவர்கள் எதிர்பார்த்ததைவிட அதிக வேகமாக, சடுதியாக அவர்களிடத்தில் வருகிறார். ஆவியானவர் வந்து தங்களோடு மென்மையான சத்தத்தில் பேசுவாரென்று சீஷர்கள் எதிர்பார்த்திருக்கலாம். ஆனால் பரிசுத்த ஆவியானவர் அவர்கள் மத்தியில் வரும்போதோ பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல ஒரு முழக்கம் உண்டாயிற்று. இந்த முழக்கம் அவர்கள் ஒருமனப்பட்டு கூடியிருந்த அறையிலிருந்து உண்டாகவில்லை. இது வானத்திலிருந்து உண்டான முழக்கம். இது பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போன்ற முழக்கம்.

பரிசுத்த ஆவியானவரின் வருகை காற்றின் வருகையைப்போன்றிருக்கும். காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது. அதின் சத்தத்தை நாம் கேட்கிறோம். ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறது என்றும், இன்ன இடத்திற்குப் போகிறதென்றும் நமக்குத் தெரியாது (யோவா 3:8). பரிசுத்த ஆவியானவரின் வருகையும் காற்றின் வருகை போலவே இருக்கும். இந்தக் காற்று சாதாரண தென்றல் காற்று அல்ல. இது பலத்த காற்று.

பலத்த காற்று அடிக்கும்போது, தன்னுடைய வேகத்திற்குத் தடையாகயிருக்கும் எல்லாவற்றையும் அடித்து கீழே சாய்த்துவிட்டு, தொடர்ந்து தனக்கு இஷ்டமானபடி முன்னேறிச்செல்லும். பலத்த காற்றிற்கு முன்பாக எந்தத் தடையும் எதிர்த்து நிற்கமுடியாது. பரிசுத்த ஆவியானவரின் வல்லமையும் பலத்த காற்று அடிப்பதைப்போலவே இருக்கும். பரிசுத்த ஆவியானவரின் வல்லமைக்கு எதிராக எந்த அந்தகார சக்தியும், சத்துருவின் எந்த அந்தகார வல்லமையும் எதிர்த்து நிற்கமுடியாது.

சீஷர்கள் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே கூடிவந்திருக்கிறார்கள். அவர்கள் வீட்டிலுள்ள ஒரு அறையில் கூடியிருக்கிறார்கள். பரிசுத்த ஆவியானவர் அவர்களிடத்தில் வந்தபோது, வானத்திலிருந்து சடுதியாய் உண்டான முழக்கம், அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. சீஷர்கள் ஒரு அறையை மாத்திரமே நிரப்பியிருக்கிறார்கள். ஆனால் பரிசுத்த ஆவியானவரின் முழக்கமோ, அந்த அறையையும், அதோடு அந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று.

வீடு முழுவதும் முழக்கம் உண்டாகும்போது சீஷர்களுக்கு ஆச்சரியமாகவும், கலக்கமாகவும் இருந்திருக்கும். பரிசுத்த ஆவியானவரின் வருகை சாதாரணமாகயிராது என்பதை சீஷர்கள் புரிந்துகொள்கிறார்கள். பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்ள சீஷர்கள் ஆயத்தமாகயிருக்கிறார்கள். அவர்கள் இருந்த வீட்டில் அசாதாரணமான சூழ்நிலை உண்டாயிற்று.

பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தினால் நம்முடைய ஆத்துமாவிற்கு ஆறுதலும் சமாதானமும் கிடைக்கும். பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தையும், அவருடைய வருகையையும் நாம் புரிந்துகொள்ளவேண்டும். நமக்குப் புரிய வைப்பதற்காக ஆவியானவர் பலத்த கிரியையோடு நம் மத்தியிலே வந்திறங்குகிறார். அவருடைய வருகை பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போலயிருந்தாலும், அவருடைய வருகையினால் நம்முடைய ஆத்துமாவிற்கு ஆறுதலும் சமாதானமும் உண்டாகிறது. பலத்த காற்று அடிக்கிற முழக்கம் சீஷர்களுடைய ஆத்துமாவை ஆயத்தப்படுத்துகிறது. ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்வதற்கு சீஷர்கள் ஆயத்தமாயிருக்கிறார்கள்.

அக்கினி மயமான நாவுகள்

அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர்மேலும் வந்து அமர்ந்தது, (அப் 2:3)

பரிசுத்த ஆவியானவரின் வரம் கண்களால் பிரத்தியட்சமாகக் காணக்கூடிய அடையாளமாயிருக்கிறது. மேல்வீட்டில் ஒருமனப்பட்டு கூடியிருந்த எல்லோருக்கும் அக்கினிமயமான நாவுகள்போல பிரிந்திருக்கும் நாவுகள் காணப்பட்டது. அந்த நாவுகள் அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது. இந்த நாவு பட்சிக்கிற அக்கினியல்ல. காட்டை கொழுத்திவிடும் பயங்கரமான காட்டுத்தீயுமல்ல. இது மிகவும் மென்மையான அக்கினி.

பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்திற்கு அடையாளமாக அக்கினி மயமான நாவுகள் சீஷர்களுக்குப் பிரத்தியட்சமாகக் காணப்படுகிறது. சீஷர்களின் விசுவாசத்தை உறுதிபண்ணுவதற்காக அவர்களுக்கு இப்படிப்பட்ட வெளிப்படையான அடையாளம் கொடுக்கப்பட்டிருக்கிறது. தேவன் தம்முடைய வல்லமையைத் தமக்குச் சித்தமான அடையாளத்தினால் வெளிப்படுத்தலாம். இங்கு பரிசுத்த ஆவியானவரை வெளிப்படுத்துவதற்கு அக்கினி மயமான நாவுகளை அடையாளமாகக் கொடுத்திருக்கிறார்.

இயேசுகிறிஸ்துவைப்பற்றி யோவான் ஸ்நானன் ஏற்கெனவே முன்னறிவித்திருக்கிறான். "அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் ஞானஸ்நானம் கொடுப்பார்" என்று ஏற்கெனவே இயேசுகிறிஸ்துவைப்பற்றி தீர்க்கதரிசனமாகச் சொல்லியிருக்கிறான். சீஷர்களெல்லோரும் பெந்தெகொஸ்தே பண்டிகையை கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். சீனாய் மலையில் கர்த்தர் மோசேக்கு நியாயப் பிரமாணத்தைக் கொடுத்ததற்கு அடையாளமாக பெந்தெகொஸ்தே பண்டிகை கொண்டாடப்படுகிறது. அப்போது அக்கினி வெளிப்பட்டது. அதுபோலவே, இப்போது, இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷருக்குச் சுவிசேஷத்தைக் கொடுத்திருக்கிற போது அக்கினி வெளிப்படுகிறது. இதை உறுதிபண்ணும் விதமாகவும் அக்கினிமயமான நாவுகள் அவர்களுக்குக் காணப்படுகிறது.

பரிசுத்த ஆவியானவர் அக்கினியைப்போல இருக்கிறார். இருதயங்களை உருக்குகிறார். புடமிடுகிறார். அசுத்தத்தை நீக்குகிறார். ஆத்துமாவிலுள்ள தேவபக்தியையும் அன்பையும் பற்றியெரியச் செய்கிறார். இயேசுகிறிஸ்து இந்த உலகத்தின்மீது அக்கினியை அனுப்புவதற்காக வந்தார். அந்த அக்கினி அழிக்கிற அக்கினியல்ல. நம்மை ஆசீர்வதிக்கிற அக்கினி. நம்மைப் பரிசுத்தப்படுத்துகிற அக்கினி.

சீஷர்கள் அக்கினிமயமான நாவுகள் போலப் பிரிந்திருக்கும் நாவுகளைக் கண்டார்கள். பரிசுத்த ஆவியானவரின் கிரியைகள் வெவ்வேறு விதமாக இருக்கும். அவர் எல்லா வேளையிலும் ஒரே விதமாகக் கிரியை செய்கிறவரல்ல. வரங்களில் வித்தியாசமுண்டு. ஆவியானவரின் கிரியைகளிலும் வித்தியாசமுண்டு. அதை எடுத்துக் காண்பிப்பதற்காகத்தான் இங்கு அக்கினிமயமான நாவுகள் பிரிந்திருக்கின்றன.

சீஷர்கள் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொண்டபோது, வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்குகிறார்கள். பரிசுத்த ஆவியானவருக்குத் தேவன் கொடுக்கிற அடையாளம் வித்தியாசமாகயிருக்கிறது. சீஷர்களெல்லோரும் ஒரே பாஷையைப் பேசாமல் வெவ்வேறு பாஷைகளைப் பேசுகிறார்கள். அவையெல்லாமே மெய்யான பாஷைகள்தான். பரிசுத்த ஆவியானவர் மூலமாக இயேசுகிறிஸ்து இந்த உலகத்தாரோடு பேசுவார்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களை அவர் பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணுகிறார். அவர்களைத் தமது வல்லமையினாலும் பெலத்தினாலும் நிரப்புகிறார். இயேசுகிறிஸ்து தங்களுக்கு வெளிப்படுத்தின தெய்வீக சத்தியங்களை, சீஷர்கள் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தோடும் வல்லமையோடும் இந்த உலகத்தில் பிரசங்கம்பண்ணுவார்கள்.

சீஷர்களுக்குக் காணப்பட்ட அக்கினி மயமான நாவுகள் பிரிந்திருக்கிறது. அவர்கள் பேசும் பாஷைகளும் வெவ்வேறாக இருக்கிறது. இவற்றிற்கு மத்தியிலும் அவர்களெல்லோரும் தொடர்ந்து ஒருமனப்பட்டு அதே இடத்தில் கூடியிருக்கிறார்கள். அவர்களுடைய பாஷைகள் மாறினாலும் அவர்களுடைய ஐக்கியமும் சிதறவில்லை. அக்கினி மயமான நாவுகள் பிரிந்திருந்தாலும் சீஷர்கள் பிரியாமல் ஒருமனப்பட்டவர்களாக இருக்கிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்குப் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் கிடைக்கும்போது நமக்குள்ளும் இப்படிப்பட்ட ஒற்றுமையும் ஐக்கியம் உண்டாயிருக்கும். நம்முடைய தேசம் மாறலாம். நிறம் மாறலாம். மொழி மாறலாம். கலாச்சாரம் மாறலாம். இவையெல்லாம் மாறியிருந்தாலும் கர்த்தர் ஒருவரே. ஆவியானவரும் ஒருவரே.

அக்கினிமயமான நாவுகளைப்போல பிரிந்திருக்கும் நாவுகள் சீஷர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது. அந்த நாவுகள் திடீரென்று தோன்றி, மறைந்துவிடவில்லை. அவர்கள்மீது வந்து அமர்ந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்படுகிறார்கள். இந்த அபிஷேகம் திடீரென்று தோன்றி அவர்களைவிட்டு அகன்றுபோய் விடவில்லை. பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் அவர்கள்மீது தொடர்ந்து தங்கியிருக்கிறது. இதை உறுதி பண்ணுவதற்காகத்தான் அக்கினிமயமான நாவுகள்போல பிரிந்திருக்கும் நாவுகள் அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்திருந்ததாக எழுதப்பட்டிருக்கிறது.

சீஷர்களெல்லோரும் பரிசுத்த ஆவியானவரின் வரங்களைப் பெற்றிருக்கிறார்கள். இந்த வரங்களெல்லாம் அவர்களோடு கூடவே தங்கியிருக்கும். அவர்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டபோது தோன்றிய அடையாளங்கள் ஒருவேளை மறைந்துபோகலாம். இந்த அடையாளங்கள் அவர்களைவிட்டு நீங்கிப்போகலாம். ஆனால் பரிசுத்த ஆவியானவரோ அவர்களைவிட்டு நீங்காமல் அவர்களோடு கூடவே இருக்கிறார். தம்முடைய பரிசுத்த ஆவியினால் அவர்களை எப்போதும் நிரப்பிக்கொண்டேயிருக்கிறார்.

பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு

அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள் (அப் 2:4).

சீஷர்கள் ஒருமனப்பட்டு கூடியிருந்த இடத்தில் வானத்திலிருந்து சடுதியாய் ஒரு முழக்கம் உண்டாயிற்று. அக்கினி மயமான நாவுகள் அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது. அவர்களெல்லோரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டார்கள். அவர்கள் ஆவியானவரின் கிருபைகளினாலே நிரப்பப்பட்டார்கள். பரிசுத்த ஆவியானவர் அவர்களைப் பரிசுத்தப்படுத்துகிறார். இதற்கு முன்பு இப்படிப்பட்ட அனுபவம் சீஷர்களுக்கு ஏற்பட்டதில்லை. இதற்கு முன்பு சீஷர்கள் பரிசுத்தமாக்கப்பட்டதைவிட, இப்போது பரிசுத்த ஆவியானவரின் கிருபையினாலும் கிரியையினாலும் சீஷர்கள் அதிகமாய் பரிசுத்தமாக்கப்படுகிறார்கள்.

சீஷர்களெல்லோரும் பரிசுத்த ஆவியானவரின் ஆறுதல்களினால் நிரப்பப்படுகிறார்கள். அவர்கள் இயேசுகிறிஸ்துவின் அன்பிலும், பரலோகத்தைப்பற்றிய நம்பிக்கையிலும், இதற்கு முன்பு எப்போதும் இல்லாத அளவுக்கு, இப்போது அதிக அளவில் சந்தோஷமாகயிருக்கிறார்கள். சந்தோஷப் பட்டு களிகூருகிறார்கள்.

சீஷர்களெல்லோரும் பரிசுத்த ஆவியின் வரங்களினால் நிரப்பப்படுகிறார்கள். சுவிசேஷச் செய்தியை பிரசங்கம்பண்ணும்போது, அற்புதங்களும் அடையாளங்களும் வசனத்தை உறுதிபண்ணுகிறது. அற்புதங்களைச் செய்யும் வரங்களும் சீஷருக்குக் கொடுக்கப்படுகிறது. பரிசுத்த ஆவியானவர் தங்களுக்குக் கொடுத்திருக்கும் வரங்களையெல்லாம் சீஷர்கள் பயபக்தியோடு பயன்படுத்தி, சுவிசேஷத்தை ஆவியானவரின் அபிஷேகத்தோடு பிரசங்கம் பண்ணுகிறார்கள்.

மேலறையில் பன்னிரண்டு சீஷர்களோடு, மொத்தம் நூற்றிருபது சீஷர்கள் ஒருமனப்பட்டு கூடியிருக்கிறார்கள் அவர்களெல்லோருமே ஒரே மாதிரியாக பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுகிறார்கள். இந்த வசனத்தில் "அவர்களெல்லோரும்" என்று எழுதப்பட்டிருக்கும் வார்த்தையானது, அந்த வீட்டில் ஒருமனப்பட்டுக் கூடியிருந்த எல்லோரையும் குறிக்கும் வார்த்தையாகும்.

சீஷர்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டவுடன், அவர்கள் வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள். தங்களுடைய சொந்த பாஷையையும் பேசுகிறார்கள். அத்தோடு ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலும் பேசத்தொடங்குகிறார்கள். அவர்கள் அந்நிய பாஷைகளில் பேசுகிறார்கள். இப்பிரபஞ்சத்திற்குரிய காரியங்களையோ, அல்லது தங்களுடைய சொந்த குடும்பக் காரியங்களையோ அவர்கள் அந்நிய பாஷையில் பேசவில்லை. அவர்கள் தேவனுடைய வார்த்தையையே பேசுகிறார்கள். தேவனுடைய நாமத்தை அந்நிய பாஷையில் துதிக்கிறார்கள். ஆவியானவர் அவர்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளில் தேவனைத் துதிக்கிறார்கள்.

சீஷர்கள் அந்நிய பாஷைகளில் பேசும்போது, தாங்கள் என்ன பேசுகிறோம் என்பது அவர்களுக்குத் தெரிந்திருக்கிறது. அதே சமயத்தில் மற்றவர்கள் அந்நிய பாஷைகளில் என்ன பேசுகிறார்கள் என்பதும் அவர்களுக்குத் தெரிந்திருக்கிறது. தாங்கள் ஏற்கெனவே சிந்தித்து தீர்மானம் பண்ணியிருந்த காரியத்தை சீஷர்கள் அந்நிய பாஷைகளில் பேசவில்லை. தங்களுடைய பழைய தியானங்களையோ, பழைய சிந்தனைகளையோ அவர்கள் அந்நிய பாஷைகளில் பேசவில்லை. பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே அவர்கள் வெவ்வேறு பாஷைகளில் பேசுகிறார்கள். ஆவியானவரே அவர்களுக்குப் பேச வேண்டிய பொருளையும், பேசவேண்டிய வார்த்தையையும் கொடுக்கிறார்.

சீஷர்கள் வெவ்வேறு பாஷைகளில் பேசுவது மிகப்பெரிய அற்புதமாகும். இந்த அற்புதம் சீஷர்களின் எண்ணத்தின்மீதும் சிந்தையின்மீதும் உண்டாயிற்று. அவர்கள் பேசும்போது, பொதுவாக, அவர்களுடைய மனதிலுள்ள சிந்தனையே வார்த்தைகளாக வெளிப்படும். எந்தெந்த வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டுமென்று அவர்களுடைய மனது தீர்மானம்பண்ணும். ஆனால் இப்போதோ அவர்களுடைய மனதை ஆவியானவர் ஆளுகை செய்கிறார். அவர்கள் பேசவேண்டிய வார்த்தைகளை ஆவியானவரே அவர்களுக்குக் கொடுக்கிறார்.

இந்தப் பாஷைகளை யாராவது பேசவேண்டுமென்றால், இவற்றைக் கற்றுக்கொண்டால்தான் பேசமுடியும். ஆனால் சீஷர்களோ இந்தப் பாஷைகள் எதையும் கற்றுக்கொள்ளவில்லை. பரிசுத்த ஆவியானவரே அவர்களுக்கு வெவ்வேறு பாஷைகளைத் தம்முடைய வரங்களாகக் கொடுக்கிறார். சீஷர்கள் இப்போது பேசும் பாஷைகளை அவர்கள் இதற்கு முன்பு தங்கள் காதுகளால் கேட்டதுமில்லை. அவர்கள் பல பாஷைகளைக் கற்று அறிந்திருக்கும் மேதைகளல்ல. அவர்கள் பல தேசங்களுக்கும் பிரயாணம் செய்து பல பாஷைகளைக் கற்றுக் கொண்டவர்களுமல்ல. பரிசுத்த ஆவியானவரின் வரத்தினால் அவர்கள் வெவ்வேறு பாஷைகளைப் பேசுகிறார்கள்.

பேதுரு பல சமயங்களில் தன்னுடைய சொந்த பாஷையில் எல்லோருக்கும் முன்பாக பேசியிருக்கிறான். ஆனால் மற்ற சீஷர்களோ தங்கள் சொந்த பாஷைகளில்கூட பொது இடங்களில் பேசியதில்லை. தேவனே மனுஷனுடைய வாயை சிருஷ்டித்தவர். இப்போது அந்த வாயின் மூலமாக அவர்கள் பல பாஷைகளைப் பேசுமாறு அனுக்கிரகம் பண்ணியிருக்கிறார்.

இந்த சமயத்தில் சீஷர்கள் வெவ்வேறு பாஷைகளிலே பேசுவது பெந்தெகொஸ்தே பண்டிகையின்போது மிகவும் முக்கியமானதாக இருக்கிறது. சீஷர்கள் எபிரெய பாஷையில் ஒரு கிளை மொழியாகிய சீரியாக் பாஷையைப் பேசுகிறவர்கள். இது கலிலேயரின் பாஷை. இயேசுகிறிஸ்துவோ தம்முடைய சீஷர்களை சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்குமாறு கட்டளைகொடுக்கிறார். அவர்கள் எல்லா தேசத்தாரையும் சீஷர்களாக்க வேண்டும். சீஷர்கள் சர்வசிருஷ்டிக்கும் பிரசங்கம்பண்ண வேண்டுமென்றால் அதில் சில நடைமுறைப் பிரச்சனைகள் உள்ளன. சீஷர்களுக்கு எபிரெய பாஷை மாத்திரமே தெரியும். உலகத்திலுள்ள சர்வசிருஷ்டிகளோ ஏராளமான பாஷைகளைப் பேசக்கூடியவர்கள். ஒவ்வொரு தேசத்தாரும் தங்களுடைய ஜென்ம பாஷைகளைப் பேசுவார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் மாத்திரமே, அவரவர்களுடைய ஜென்ம பாஷையில் சீஷர்களால் சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க முடியும்.

இயேசுகிறிஸ்து தாமே உலகம் முழுவதும் சென்று எல்லா ஜாதியாருக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்குமாறு தம்முடைய சீஷருக்குக் கட்டளை கொடுத்திருக்கிறார். அவர்களுக்கு அதிகாரங்கொடுத்திருக்கிறார். இப்போதோ அந்தந்த தேசத்தாருடைய ஜென்ம பாஷைகளில் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணுவதற்கு ஏதுவாக, அவர்களை வெவ்வேறு பாஷைகளில் பேசவைக்கிறார்.

இயேசுகிறிஸ்து பல சமயங்களில் வியாதியஸ்தரை சொஸ்தமாக்கியிருக்கிறார். அதுவும் அற்புதம் தான். ஆனால் இப்போதோ சீஷர்கள் வெவ்வேறு பாஷைகளில் பேசுவது மிகப்பெரிய அற்புதமாகயிருக்கிறது. சீஷர்களெல்லோரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டபோது, அவர்களெல்லோரும் ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளில் பேசத்தொடங்கியது, பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தினால் உண்டான முதலாவது அடையாளமும் அற்புதமும் ஆகும்.

தேவபக்தியுள்ள யூதர்கள் அப் 2 : 5-11

அப் 2:5. வானத்தின்கீழிருக்கிற சகல தேசத்தாரிலுமிருந்து வந்த தேவபக்தியுள்ள யூதர்கள் அப்பொழுது எருசலேமிலே வாசம்பண்ணினார்கள்.

அப் 2:6. அந்தச் சத்தம் உண்டானபோது, திரளான ஜனங்கள் கூடிவந்து, தங்கள் தங்கள் பாஷையிலே அவர்கள் பேசுகிறதை அவரவர்கள் கேட்டபடியினாலே கலக்கமடைந்தார்கள்.

அப் 2:7. எல்லாரும் பிரமித்து ஆச்சரியப்பட்டு, ஒருவரையொருவர் பார்த்து: இதோ, பேசுகிற இவர்களெல்லாரும் கலிலேயரல்லவா?

அப் 2:8. அப்படியிருக்க நம்மில் அவரவர்களுடைய ஜென்ம பாஷைகளிலே இவர்கள் பேசக் கேட்கிறோமே, இதெப்படி?

அப் 2:9. பார்த்தரும், மேதரும், எலாமீத்தரும், மெசொப்பொத்தாமியா, யூதேயா, கப்பத்தோக்கியா, பொந்து, ஆசியா, பிரிகியா,

அப் 2:10. பம்பிலியா, எகிப்து என்னும் தேசத்தார்களும், சிரேனே பட்டணத்தைச் சுற்றியிருக்கிற லீபியாவின் திசைகளிலே குடியிருக்கிறவர்களும், இங்கே சஞ்சரிக்கிற ரோமாபுரியாரும், யூதரும், யூதமார்க்கத்தமைந்தவர்களும்,

அப் 2:11. கிரேத்தரும், அரபியருமாகிய நாம் நம்முடைய பாஷைகளிலே இவர்கள் தேவனுடைய மகத்துவங்களைப் பேசக்கேட்கிறோமே என்றார்கள்.

சகல தேசத்தார்

வானத்தின்கீழிருக்கிற சகல தேசத்தாரிலுமிருந்து வந்த தேவபக்தியுள்ள யூதர்கள் அப்பொழுது எருசலேமிலே வாசம்பண்ணினார்கள் (அப் 2:5).

பரிசுத்த ஆவியானவர் சீஷர்களை நிரப்பியபோது அவர்கள் வெவ்வேறு பாஷைகளிலே பேசுகிறார்கள். எருசலேமிலே இது பெந்தெகொஸ்தே பண்டிகை காலமாகயிருக்கிறது. சகல தேசத்தாரிலுமிருந்து தேவபக்தியுள்ள யூதர்கள் எருசலேமில் வந்து வாசம்பண்ணுகிறார்கள். சீஷர்கள் வெவ்வேறு பாஷைகளில் பேசியது எல்லோருக்கும் முன்பாக பிரத்தியட்சமான அற்புதமாகவும் அடையாளமாகவும் இருக்கிறது.

எருசலேமில் பெந்தெகொஸ்தே பண்டிகை காலத்தில் திரளான ஜனங்கள் கூடியிருக்கிறார்கள். தேவபக்தியுள்ள யூதர்கள் எருசலேமிலே வாசம்பண்ணுகிறார்கள். இவர்கள் சகலதேசத்தாரிலுமிருந்து வந்தவர்கள். அக்காலத்தில் பிரபல்யமாகயிருந்த எல்லா தேசங்களிலுமிருந்தும் தேவபக்தியுள்ள யூதர்கள் எருசலேமுக்கு வந்திருக்கிறார்கள்.

இந்த யூதர்கள் எருசலேமின் கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு ஆகிய எல்லா திசைகளிலுமிருந்தும் வந்திருக்கிறார்கள். இவர்கள் எந்தெந்த தேசத்தைச் சேர்ந்தவர்கள் என்னும் விவரம் அப் 2:9-11ஆகிய வசனங்களில் விவரமாக எழுதப்பட்டிருக்கிறது. இவர்களெல்லோரும் யூதர்கள் அல்லது யூதமார்க்கத்தைத் தழுவியவர்கள். அக்காலத்தில் பிரபல்யமாகயிருந்த எல்லா தேசங்களிலும் யூத மார்க்கம் பரவியிருக்கிறது. அந்த தேசங்களெல்லாவற்றிலுமிருந்து தேவபக்தியுள்ள யூதர்கள் பண்டிகை காலங்களில் எருசலேமுக்கு வருவது வழக்கம்.

ஆனால் இவர்களோ பண்டிகைக்கு வந்து போகிறவர்களல்ல. இவர்கள் எருசலேமிலேயே வாசம்பண்ணுகிறவர்கள். இக்காலத்தில் மேசியா வரப்போகிறார் என்னும் எதிர்பார்ப்பு தேவபக்தியுள்ள யூதர்கள் மத்தியில் மிகவும் பிரபல்யமாகயிருக்கிறது. எல்லோருமே மேசியாவின் வருகையை ஆவலாய் எதிர்பார்க்கிறார்கள். ஆகையினால் அவர்கள் தங்கள் தேசத்தில் தங்கியிருக்காமல், தங்களுடைய சொத்துக்களையெல்லாம் விற்றுவிட்டு, குடும்பத்தாரோடு, எருசலேமுக்கே வந்து தங்கிவிடுகிறார்கள். இவ்வாறாக எருசலேம் நகரத்தில் சகல தேசத்தாரிலுமிருந்து வந்த தேவபக்தியுள்ள யூதர்கள் ஏராளமானோர் வாசம்பண்ணுகிறார்கள்.

ஜென்ம பாஷைகளிலே

அந்தச் சத்தம் உண்டானபோது, திரளான ஜனங்கள் கூடிவந்து, தங்கள் தங்கள் பாஷையிலே அவர்கள் பேசுகிறதை அவரவர்கள் கேட்டபடியினாலே கலக்கமடைந்தார்கள். எல்லாரும் பிரமித்து ஆச்சரியப்பட்டு, ஒருவரையொருவர் பார்த்து: இதோ, பேசுகிற இவர்களெல்லாரும் கலிலேயரல்லவா? அப்படியிருக்க நம்மில் அவரவர்களுடைய ஜென்ம பாஷைகளிலே இவர்கள் பேசக் கேட்கிறோமே, இதெப்படி? பார்த்தரும், மேதரும், எலாமீத்தரும், மெசொப்பொத்தாமியா, யூதேயா, கப்பத்தோக்கியா, பொந்து, ஆசியா, பிரிகியா, பம்பிலியா, எகிப்து என்னும் தேசத்தார்களும், சிரேனே பட்டணத்தைச் சுற்றியிருக்கிற லீபியாவின் திசைகளிலே குடியிருக்கிறவர்களும், இங்கே சஞ்சரிக்கிற ரோமாபுரியாரும், யூதரும், யூத மார்க்கத்தமைந்தவர்களும், கிரேத்தரும், அரபியருமாகிய நாம் நம்முடைய பாஷைகளிலே இவர்கள் தேவனுடைய மகத்துவங்களைப் பேசக்கேட்கிறோமே என்றார்கள் (அப் 2:6-11).

பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்ட சீஷர்கள், ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசுகிறார்கள். இவர்கள் பேசுகிற பாஷைகளோ, எருசலேமுக்கு சகல தேசத்தாரிலும் இருந்து வந்திருக்கிற ஜனங்களின் ஜென்ம பாஷைகளாகயிருக்கிறது. தங்களுடைய ஜென்மபாஷைகளிலே சீஷர்கள் பேசுவதைக் கேட்டபோது அவர்களுக்கு மிகுந்த ஆச்சரியமுண்டாயிற்று.

பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருக்கிற எல்லோரும் கலிலேயர்கள். அவர்களுக்கு அவர்களுடைய பாஷையைத் தவிர வேறு எந்த பாஷையும் தெரியாது. இது எல்லோருக்கும் தெரியும். அவர்கள் அனைவரும் எபிரெய பாஷையின் ஒரு கிளை மொழியான சீரியாக் பாஷையைப் பேசக்கூடியவர்கள். அவர்கள் பேசும் பேச்சை வைத்து, அவர்களை கலிலேயரென்று அடையாளம் கண்டுகொள்ளலாம். இப்படிப்பட்ட சாதாரண ஜனங்களை தேவன் தெரிந்தெடுத்து, அவர்கள் மூலமாக தம்முடைய நாமத்தை மகிமைப் படுத்துகிறார். ஞானிகளையும் பலவான்களையும் வெட்கப்படுத்தும்படியாக, தேவன் இந்த உலகத்தில் பலவீனமானவர் களையும் பைத்தியமானவைகளையும் தெரிந்துகொள்கிறார்.

சீஷர்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு வெவ்வேறு பாஷைகளில் பேசுகிறார்கள். அவர்கள் தங்களுடைய ஜென்ம பாஷைகளிலே பேசுவதாக சகல தேசத்திலுமிருந்து வந்திருக்கிற ஜனங்கள் உறுதிபண்ணுகிறார்கள். "நம்மில் அவரவர்களுடைய ஜென்மபாஷைகளிலே இவர்கள் பேசக்கேட்கிறோமே, இதெப்படி" (அப் 2:8) என்றும், நம்முடைய பாஷைகளிலே இவர்கள் தேவனுடைய மகத்துவங்களைப் பேசக்கேட்கிறோமே" (அப் 2:11) என்றும் ஆச்சரியத்தோடு சொல்லுகிறார்கள்.

பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்ட சீஷர்கள் இயேசுகிறிஸ்துவைப் பற்றி பேசியிருக்கவேண்டும். அவர் மூலமாக உண்டாயிருக்கும் இரட்சிப்பைப் பற்றியும், சுவிசேஷத்தின் கிருபையைப்பற்றியும் சீஷர்கள் வெவ்வேறு பாஷைகளில் பேசியிருக்கவேண்டும். ஏனெனில் இவைகளே தேவனுடைய மகத்துவங்களாக இருக்கிறது.

சீஷர்கள் சகல தேசத்தாரின் பாஷைகளில் தேவனுடைய மகத்துவங்களையும் பேசுகிறார்கள், அவர்களுடைய ஜென்மபாஷைகளில் அவர்களுக்கு தேவனுடைய சத்தியத்தையும் பிரசங்கம்பண்ணுகிறார்கள். அங்கு கூடியிருக்கிற எல்லோருக்குமே யூதருடைய பொதுவான பாஷையான எபிரெய பாஷை தெரியும். அவர்களெல்லோருமே எபிரெய பாஷையில் பேசக்கூடியவர்கள். எபிரெய பாஷையைப் புரிந்துகொள்ளக் கூடியவர்கள். அவர்களுக்கு எபிரெய பாஷையில் பேசினாலே போதுமானது. அதை அவர்களெல்லோரும் அறிந்து கொள்வார்கள்.

ஆனால் சீஷர்களோ எபிரெய பாஷைகளில் பேசாமல், ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வெவ்வேறு பாஷைகளில் பேசுகிறார்கள். இதனால் ஜனங்களுக்கு ஆச்சரிய முண்டாயிற்று. பிரமிப்புண்டாயிற்று. சீஷர்கள் அவர்களுடைய பாஷைகளில் பேசாமல், சகல தேசத்தாரின் பாஷைகளில் பேசுவதினால், அந்தந்த பாஷைகளைப் பேசுகிறவர்களுக்கு மிகுந்த ஆச்சரியமுண்டாயிற்று.

தங்களுடைய பாஷைகளில் சீஷர்கள் தேவனுடைய மகத்துவங்களை பேசுகிறார்களென்று உறுதி பண்ணுகிறார்கள். இதனால் தேவனுடைய வார்த்தை அற்புதங் களினாலும் அடையாளங்களினாலும் உறுதி பண்ணப்படுகிறது. அவர்கள் தேவனுடைய வல்லமையினால் தங்களுடைய ஜென்மபாஷைகளில் பேசுவதை சகல தேசத்தாரும் அங்கீகரிக்கிறார்கள். தங்களுடைய இருதயத்தில் உணர்த்தப்படுகிறார்கள். தேவனுடைய நியாயத்தீர்ப்பைக் குறித்து புரிந்துகொள்கிறார்கள். தேவனுடைய மகத்துவத்தை அறிந்துகொள்கிறார்கள்.

சீஷர்கள் அந்நிய பாஷைகளைப் பேசி, அதன் மூலமாக சகல தேசத்து யூதஜனங்களையும் கண்டித்து உணர்த்த வில்லை. அவர்களை சபிக்கவில்லை. அவர்களெல்லோரும் வெவ்வேறு பாஷைகளிலே தேவனுடைய மகத்துவங்களைப் பேசுகிறார்கள். வார்த்தைகளும் செய்தியும் மிகவும் மென்மையாகவும் அன்பாகவும் இருக்கிறது. அவர்களுடைய வார்த்தைகளைக் கேட்டபோது சகல தேசத்து யூதர்களுக்கும் தேவன்மீது அன்பும் பக்தியும் அதிகரிக்கிறது. தங்கள் ஜென்ம பாஷைகளில் சீஷர்கள் பேசுவதினால், தேவனுடைய சத்தியம் யூதர்களுக்குத் தெளிவாக விளங்கிற்று.

கர்த்தருடைய ஊழியத்தைச் செய்கிற நாமும் இந்த முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டும். ஒவ்வொரு ஜாதியாருக்கும் அவரவர்களுடைய ஜென்மபாஷையில் சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமும் சிந்தையும் ஆகும். அந்தந்த ஜனங்களுடைய பாஷைகளில் பரிசுத்த வேதாகமம் மொழிபெயர்க்கப்பட்டு, அவர்களுடைய பாஷைகளில் தேவனுடைய சத்தியம் பிரசங்கம்பண்ணப்படும்போது, ஜனங்களுக்கு மிகுந்த ஆசீர்வாதமாகயிருக்கும். சபைகளில் ஆராதனைகளை நடத்தும்போதும், ஜனங்களுக்குப் புரிகிற பிரகாரமாக, அவர்களுடைய ஜென்மபாஷைகளிலே சபை ஆராதனையை நடத்தவேண்டும். நம்முடைய ஜென்மபாஷைகளில் நாம் தேவனுடைய மகத்துவங்களைப் பேசி, அவரை மகிமைப்படுத்தலாம். தேவனுக்கு எல்லா பாஷைகளும் தெரியும். அவர் சர்வ ஞானமுள்ளவர்.

பிரமித்து சந்தேகப்பட்டு
அப் 2 : 12,13

அப் 2:12. எல்லாரும் பிரமித்துச் சந்தேகப்பட்டு, இதென்னமாய் முடியுமோ என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள்.

அப் 2:13. மற்றவர்களோ: இவர்கள் மது பானத்தினால் நிறைந்திருக்கிறார்களென்று பரியாசம் பண்ணினார்கள்.

சீஷர்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள். அதைக் கேட்ட சகல தேசத்திலுமிருந்து வந்திருந்த தேவபக்தியுள்ள யூதர்களெல்லாரும் "இவர்கள் நம்முடைய பாஷைகளிலே தேவனுடைய மகத்துவங்களைப் பேசக்கேட்கிறோமே" என்று ஆச்சரியப்படுகிறார்கள். அதே வேளையில் அதைக் கேட்ட வேறுசிலர் பிரமித்து சந்தேகப்படுகிறார்கள். அவர்கள் பேசுவதன் பொருளை அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. இது "என்னமாய் முடியுமோ" என்று ஒருவரோடொருவர் சொல்லிக் கொள்கிறார்கள்.

வேறுசிலரோ அந்நிய பாஷையில் பேசுகிற சீஷர்களைப் பரியாசம் பண்ணுகிறார்கள். இவர்கள் ஒருவேளை வேதபாரகராகவும், பரிசேயராகவும், பிரதான ஆசாரியராகவும் இருக்கலாம். அந்நிய பாஷையில் பேசிக் கொண்டிருக்கிறவர்களை, மது பானத்தினால் நிறைந்திருக்கிறார்களென்று பரியாசம்பண்ணுகிறார்கள். இவர்களும் யூதர்கள்தான். இவர்கள் எருசலேம் ஊரைச் சேர்ந்தவர்கள். மற்ற ஊர்களிலிருந்து வந்திருக்கிறவர்களுக்கு, சீஷர்கள் தங்களுடைய பாஷைகளிலே தேவனுடைய மகத்துவங்களைப் பேசுகிறார்கள் என்பது புரிகிறது. ஆனால் எருசலேமிலுள்ள மார்க்கத் தலைவர்களுக்கோ இந்த ரகசியம் புரியவில்லை.

சீஷர்கள் மெய்யாகவே வெவ்வேறு பாஷைகளிலே பேசுகிறார்கள். எருசலேமிலுள்ள யூதர்களுக்கு எபிரெய பாஷையைத் தவிர வேறு பாஷை எதுவும் தெரியாது. ஆகையினால் சீஷர்கள் வெவ்வேறு பாஷையில் பேசுவதை அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. குடிகாரர்கள் அதிகமாக குடித்துவிட்டு உளறுவதுபோல சீஷர்கள் உளறுவதாகச் சொல்லி அவர்களைப் பரியாசம் பண்ணுகிறார்கள். இயேசுகிறிஸ்துவையே இவர்கள் போஜனப்பிரியரும், மதுபானப்பிரியரும் என்று குற்றம் சொன்னவர்கள். அவருடைய சீஷர்களை இவர்கள் எப்படி வேண்டுமானாலும் பேசுவார்கள்.

பழைய ஏற்பாட்டு வாக்குத்தத்தம் அப் 2 : 14-21

அப் 2:14. அப்பொழுது பேதுரு பதினொருவரோடுங்கூட நின்று, அவர்களை நோக்கி, உரத்த சத்தமாய்: யூதர்களே, எருசலேமில் வாசம் பண்ணுகிற ஜனங்களே, நீங்களெல்லாரும் அறிந்து கொள்வீர்களாக, என் வார்த்தைகளுக்குச் செவிகொடுங்கள்.

அப் 2:15. நீங்கள் நினைக்கிறபடி இவர்கள் வெறிகொண்டவர்களல்ல, பொழுது விடிந்து மூன்றாம் மணி வேளையாயிருக்கிறதே.

அப் 2:16. தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறுகிறது.

அப் 2:17. கடைசிநாட்களில் நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்; உங்கள் வாலிபர் தரிசனங்களை அடைவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களைக் காண்பார்கள்;

அப் 2:18. என்னுடைய ஊழியக்காரர்மேலும், என்னுடைய ஊழியக்காரிகள்மேலும் அந்நாட்களில் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது அவர்கள் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்.

அப் 2:19. அல்லாமலும் உயர வானத்திலே அற்புதங்களையும், தாழ பூமியிலே இரத்தம், அக்கினி, புகைக்காடாகிய அதிசயங்களையும் காட்டுவேன்.

அப் 2:20. கர்த்தருடைய பெரிதும் பிரகாசமுமான நாள் வருமுன்னே சூரியன் இருளாகவும், சந்திரன் இரத்தமாகவும் மாறும்.

அப் 2:21. அப்பொழுது கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான் என்று தேவன் உரைத்திருக்கிறார்.

பேதுரு

அப்பொழுது பேதுரு பதினொருவரோடுங்கூட நின்று, அவர்களை நோக்கி, உரத்த சத்தமாய்: யூதர்களே, எருசலேமில் வாசம்பண்ணுகிற ஜனங்களே, நீங்களெல்லாரும் அறிந்து கொள்வீர்களாக, என் வார்த்தைகளுக்குச் செவிகொடுங்கள் (அப் 2:14).

வேதபாரகரும் பரிசேயரும் சீஷரைப் பரியாசம்பண்ணுகிறார்கள். அப்பொழுது பேதுரு சிறிதும் காலதாமதம்பண்ணாமல் கர்த்தருடைய வார்த்தையைத் தங்களைப் பரியாசம்பண்ணுகிறவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிறான். பரிசுத்த ஆவியானவரின் முதற்கனிகள் இங்கு வெளிப்படுகிறது. பேதுரு யூதர்களிடத்திலும் எருசலேமில் வாசம்பண்ணுகிற ஜனங்களிடத்திலும் பேசுகிறான். தங்களைப் பரியாசம்பண்ணுகிற ஜனங்களிடத்திலும் பிரசங்கம்பண்ணுகிறான். இது பேதுருவின் பிரசங்கம் மாத்திரமல்ல. இயேசுகிறிஸ்துவின் மற்ற சீஷர்களும் அங்கு கூடியிருக்கும் ஜனங்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிறார்கள். ஆயினும் பேதுருவின் பிரசங்கம் மாத்திரமே இங்கு குறிப்பிடப்பட்டிருக்கிறது.

பரிசுத்த ஆவியானவரின் கிருபையினாலும், வல்லமையினாலும் பிரசங்கத்தைக் கேட்டவர்களில், மூவாயிரம் ஆத்துமாக்கள் ஒரே நாளில் இரட்சிக்கப்படுகிறார்கள். பேதுரு ஒரு காலத்தில் இயேசுகிறிஸ்துவை மறுதலித்தவன். தனக்கு ஏதாவது ஆபத்து வந்துவிடுமோ என்று நினைத்து இயேசுகிறிஸ்துவை மூன்றுமுறை மறுதலித்தவன். ஆனால் இப்போதோ அவன் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்று, தெய்வீக வல்லமையினால் நிரப்பப்பட்டு, தைரியமாகப் பேசுகிறான். இயேசு கிறிஸ்துவைச் சாட்சியாக அறிவிப்பதற்கு பேதுரு இப்போது பயப்படவில்லை. மிகவும் தைரியமாக, ஆவியானவருடைய பெலத்தினாலே இயேசு கிறிஸ்துவைக்குறித்து பிரசங்கம் பண்ணுகிறான்.

பேதுரு பிரசங்கம்பண்ணும்போது பதினொருவரோடுங்கூட நின்று பேசுகிறான். யூதர்கள் சீஷர்களைப் பரியாசம்பண்ணுகிறார்கள். அவர்களுக்கு முன்பாக பேதுரு அதிகாரத்தோடும் வல்லமையோடும் எழுந்து நின்று பேசுகிறான். கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நம்மை சிலர் பரியாசம்பண்ணலாம். நமக்கு விரோதமாக எழும்பி நிற்கலாம். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் நாமும் பரிசுத்த ஆவியானவரின் பெலத்தினால் அவர்களுக்கு முன்பாக கர்த்தருடைய வார்த்தையை தைரியமாகப் பேசவேண்டும். ஆவியின் பட்டயத்தையும், கேடயத்தையும் பயன்படுத்த வேண்டும்.

பேதுரு அவர்களை நோக்கிப் பேசும்போது மெதுவாகப் பேசாமல் உரத்த சத்தமாய்ப் பேசுகிறான். தான் பேசுவதில் அவன் உறுதியாயிருப்பதினால் அவனுடைய சத்தம் உரத்த சத்தமாயிருக்கிறது. மேலும் பேதுரு தான் பேசுவதைக் குறித்துப் பயப்படவில்லை, வெட்கப்படவில்லை. தைரியமாய் உரத்த சத்தமாய் பேசுகிறான். பேதுரு பேச ஆரம்பிக்கும்போது "யூதர்களே, எருசலேமில் வாசம்பண்ணுகிற ஜனங்களே" என்று கூறுகிறான். இவர்கள் எருசலேமில் வாசம்பண்ணுகிறவர்கள். இவர்கள் பேதுருவின் வார்த்தைகளை அறிந்துகொள்ளவேண்டும். தன்னுடைய வார்த்தைகளுக்குச் செவிகொடுக்குமாறு பேதுரு அவர்களிடம் கூறுகிறான்.

வெறிகொண்டவர்களல்ல

நீங்கள் நினைக்கிறபடி இவர்கள் வெறிகொண்டவர்களல்ல, பொழுது விடிந்து மூன்றாம் மணி வேளையாயிருக்கிறதே (அப் 2:15).

ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளில் பேசுகிற சீஷர்களை, "இவர்கள் மதுபானத்தினால் நிறைந்திருக்கிறார்கள்" என்று யூதர்கள் பரியாசம்பண்ணினார்கள். பேதுருவோ அவர்களுக்குப் பிரதியுத்தரம் சொல்லும் வண்ணமாக "நீங்கள் நினைக்கிறபடி இவர்கள் வெறிகொண்டவர்களல்ல" என்று கூறுகிறான். இதுவரையிலும் வெவ்வேறு பாஷைகளில் பேசிய சீஷர்கள் இப்போது தங்களுடைய ஜென்மபாஷையாகிய எபிரெயு பாஷையில் பேசுகிறார்கள். அங்கு கூடியிருக்கிற யூதர்களுக்கு சீஷர்கள் பேசிய அந்நிய பாஷை புரியவில்லை. ஆகையினால் பேதுரு அவர்களுக்குப் புரிகிற யூதபாஷையில் பேசுகிறான்.

சீஷர்கள் வெறிகொண்டவர்களல்ல. பொழுது விடிந்து மூன்றாம் மணி வேளையாயிருக்கிறது. மூன்றாம் மணி வேளை என்பது காலையில் ஒன்பது மணியைக் குறிப்பிடும். ஓய்வுநாட்களிலும் பண்டிகை நாட்களிலும் மூன்றாம் மணி வேளைக்கு முன்பாக யூதர்கள் புசிப்பதுமில்லை குடிப்பதுமில்லை. இது யூதருடைய பொதுவான வழக்கம். ஆகையினால் பேதுரு "பொழுது விடிந்து மூன்றாம் மணி வேளையாயிருக்கிறது" என்று சொல்கிறான். அவன் சொன்னதன் பொருளை யூதர்கள் அறிந்துகொள்கிறார்கள்.

யோவேலினால் உரைக்கப்பட்டபடியே

தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறுகிறது. கடைசிநாட்களில் நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்; உங்கள் வாலிபர் தரிசனங்களை அடைவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களைக் காண்பார்கள்; என்னுடைய ஊழியக்காரர்மேலும், என்னுடைய ஊழியக்காரிகள்மேலும் அந்நாட்களில் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது அவர்கள் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள். அல்லாமலும் உயர வானத்திலே அற்புதங்களையும், தாழ பூமியிலே இரத்தம், அக்கினி, புகைக்காடாகிய அதிசயங்களையும் காட்டுவேன். கர்த்தருடைய பெரிதும் பிரகாசமுமான நாள் வருமுன்னே சூரியன் இருளாகவும், சந்திரன் இரத்தமாகவும் மாறும். அப்பொழுது கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான் என்று தேவன் உரைத்திருக்கிறார் (அப் 2:16-21).

பேதுரு தன்னுடைய பிரசங்கச் செய்தியில் இரண்டு சத்தியத்தைக் கூறுகிறான். அவையாவன: 1. சீஷர்கள் பரிசுத்த ஆவியினால் நிறைந்து வெவ்வேறு பாஷைகளைப் பேசுவது வேத வாக்கியத்தின் நிறைவேற்றமாயிருக்கிறது. 2. சீஷர்கள் வெவ்வேறு பாஷைகளில் பேசுவது இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கும் அவர் பரமேறிப்போனதற்கும் சாட்சியாயிருக்கிறது.

சீஷர்கள் வெவ்வேறு பாஷைகளில் பேசுவது பழைய ஏற்பாட்டில் முன்னறிவிக்கப் பட்டிருக்கிற தீர்க்கதரிசனங்களின் நிறைவேற்றமாகயிருக்கிறது. அந்தத் தீர்க்கதரிசனங்களில் தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்ட ஒரு தீர்க்கதரிசனத்தை மாத்திரம் பேதுரு இங்கு குறிப்பிடுகிறான் (யோவே 2:28-32).

பேதுரு பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருக்கிறான். புதிய அனுபவத்தில் கடந்து வந்திருக்கிறான். புதிய அனுபவம் வந்தவுடன் வேதவசனத்தை ஒதுக்கி வைத்துவிடவில்லை. பேதுரு சத்திய வசனத்திற்கு மேலாக தன்னை உயர்த்தவில்லை. தன்னுடைய அனுபவத்திற்குச் சத்திய வசனத்தையே ஆதாரமாகச் சொல்லுகிறான். பேதுரு யோவேலின் தீர்க்கதரிசனத்தை மேற்கோளாகக் கூறுவது, வேதபண்டிதர்கள் அனைவருக்கும் ஒரு முன்மாதிரியாக இருக்கிறது. வேத அறிஞர்கள் வேதத்தை எவ்வளவுதான் கற்றுத் தேறினவர்களாக இருந்தாலும், அவர்களால் வேதாகமத்திற்கு அதிகமாக ஒரு போதும் கற்றுக்கொள்ள முடியாது. நம்முடைய வேத அறிவில் நாம் பெருமைப்படாமல், கர்த்தரையும் கர்த்தருடைய வார்த்தையையும் எப்போதும் மேன்மைப்படுத்த வேண்டும்.

பேதுரு தன்னுடைய பிரசங்கத்தில் "கடைசி நாட்களிலே" என்னும் வார்த்தையைப் பயன்படுத்துகிறார். கடைசிநாள் என்பது சுவிசேஷத்தின் காலத்தைக் குறிக்கும் வார்த்தையாகும். மனுஷர் மத்தியில் தேவனுடைய ராஜ்யம் பூமியில் ஸ்தாபிக்கப்படுகிறது. தேவனுடைய ராஜ்யம் பூமியில் ஸ்தாபிக்கப்படும் காலத்தில் சுவிசேஷத்தின் காலமே முக்கியமான காலம். ஏனெனில் இந்தக் காலமானது தேவனுடைய கிருபையின் கடைசிக் காலமாகயிருக்கிறது. நாம் இப்போது "கடைசிநாட்களிலே" இருக்கிறோம். இது தேவனுடைய கிருபையின் காலம். இந்தக் கடைசிநாட்கள் முடிந்தவுடன், தேவனுடைய கிருபையின் காலமும் முடிந்துபோகும்.

கடைசி நாட்களைப்பற்றியும், இந்தக் காலத்தில் நடைபெறும் சம்பவங்களைப்பற்றியும் கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் ஏற்கெனவே முன்னறிவித்திருக்கிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் தீர்க்கதரிசிகளால் முன்னறிவிக்கப்பட்டிருக்கும் சம்பவங்கள் நிறைவேறுவதற்காக விசுவாசத்தோடு காத்துக்கொண்டிருக்கவேண்டும். அவை நிறைவேறும்போது பயந்துவிடக்கூடாது. ஆச்சரியத்தினால் அதிர்ச்சியடைந்து விடக்கூடாது. அந்தச் சம்பவங்களை வாஞ்சையோடு வரவேற்கவேண்டும். பேதுரு யோவேலின் தீர்க்கதரிசனத்தை இங்கு மேற்கோளாகக் குறிப்பிடும்போது, பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் சம்பந்தமான வசனப்பகுதி முழுவதையுமே சொல்லுகிறார். வேதவசனத்தை எப்போதுமே முழுமையாக தியானிப்பது நல்லது.

பரிசுத்த ஆவியானவரின் அருள்மாரி இதற்கு முன்பு, பழைய ஏற்பாட்டுக் காலத்திலும் கர்த்தருடைய பரிசுத்தவான்களுக்கு அருளப்பட்டது. ஆனால் இப்போதோ, இதற்கு முன்பு எப்போதும் இல்லாத அளவுக்கு, அதிகமான அளவில் பரிசுத்த ஆவியானவரின் அருள்மாரி ஊற்றப்படுகிறது. வானத்திலிருந்து கிருபையின் ஆவியானவர் தாராளமாக வந்து இறங்குகிறார். இக்காலம் கடைசி நாட்களின் காலமாக இருக்கிறபடியினால், மாம்சமான யாவர்மேலும் ஆவியானவர் ஊற்றப்படுகிறார். யூதர்களுக்கு மாத்திரம் என்று மட்டுப்படுத்தப்படாமல், மாம்சமான யாவர்மேலும் பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்படுகிறார். யூதர்கள்மீதும், புறஜாதியார்மீதும் பரிசுத்த ஆவியானவர் இந்தக் கடைசி நாட்களிலே ஊற்றப்படுகிறார்.

யூதமார்க்கத்து ரபீமார்களும் பரிசுத்த ஆவியானவரைப்பற்றி உபதேசம் பண்ணுகிறார்கள். பரிசுத்த ஆவியானவர் ஞானிகள்மீதும், ஐசுவரியவான்கள்மீதும் மாத்திரமே ஊற்றப்படுவாரென்பது அவர்களுடைய உபதேசம். சமுதாயத்தில் மிகவும் முக்கியமானவர்களாகக் கருதப்பட்ட இவர்களே அக்காலத்தில் இஸ்ரவேல் தேசத்தின் வித்தாக மதிக்கப்பட்டார்கள். ஆனால் அவர்களுடைய உபதேசம் வேறு. தேவனுடைய சித்தம் வேறு. அவர்களுடைய உபதேசத்தின் பிரகாரம் பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்படாமல், தேவனுடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாக, இந்தக் கடைசிநாட்களில், பரிசுத்த ஆவியானவர் மாம்சமான யாவர் மேலும் ஊற்றப்படுகிறார்.

பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்கிறவர்கள் தீர்க்கதரிசனம் உரைக்கிறார்கள். பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்குள் தீர்க்கதரிசனத்தின் ஆவியானவராக கிரியை செய்கிறார். ஆண்கள், பெண்கள் என்னும் பாகுபாடில்லாமல், இருபாலாருக்குமே பரிசுத்த ஆவியானவரின் வல்லமை அருளப்பட்டிருக்கிறது. ஆவியானவர் தம்முடைய வல்லமையை வயது வித்தியாசமில்லாமல், சமுதாய அந்தஸ்து வித்தியாசமில்லாமல் தாராளமாக அருளுகிறார்.

பேதுரு யோவேலின் தீர்க்கதரிசனத்தை மேற்கோளாகச் சொல்லும்போது, "கடைசிநாட்களில் நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்; உங்கள் வாலிபர் தரிசனங்களை அடைவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களைக் காண்பார்கள்; என்னுடைய ஊழியக்காரர்மேலும், என்னுடைய ஊழியக்காரிகள்மேலும் அந்நாட்களில் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது அவர்கள் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்" (அப் 2:17,18) என்னும் வசனப்பகுதியை மேற்கோளாகக் கூறுகிறார்.

கர்த்தர் புருஷரையும், ஸ்திரீகளையும் தம்முடைய ஊழியக்காரராகவும், ஊழியக்காரிகளாகவும் அங்கீகரிக்கிறார். இந்த வசனத்தில் "குமாரத்திகள்", "ஊழியக்காரிகள்" என்னும் வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. மேலறையில் இயேசுவின் தாயாகிய மரியாளும், மேலும் அநேக ஸ்திரீகளும்", மற்ற சீஷரோடு அங்கு கூடி, ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருக்கிறார்கள் (அப் 1:11). இந்த வார்த்தைகளை தியானிக்கும்போது, பரிசுத்த ஆவியானவரின் வரம் புருஷர்களுக்குக் கொடுக்கப்பட்டதுபோலவே, ஸ்திரீகளுக்கும் பாகுபாடில்லாமல் தாராளமாகக் கொடுக்கப்பட்டிருப்பது தெரியவருகிறது.

பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொண்டவர்கள் கர்த்தர் கொடுக்கிற செய்தியைத் தீர்க்கதரிசனமாகச் சொல்லுவார்கள். ஆவியானவர் அவர்களை அபிஷேகம்பண்ணி, அவர்கள் சொல்ல வேண்டிய தீர்க்கதரிசன செய்தியையும் அவர்களுக்குக் கொடுக்கிறார். யூததேசத்தின்மீது வரப்போகிற தேவனுடைய நியாயத்தீர்ப்பை இவர்கள் தீர்க்கதரிசனமாக அறிவிக்கிறார்கள்.

தேவனுடைய கிருபையின் வல்லமைக்குத் தங்களை ஒப்புக்கொடுத்து மனந்திருந்தாதவர்கள், தேவனுடைய கோபாக்கினைக்கு உட்படுத்தப்படுவார்கள். ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொண்டவர்கள், கர்த்தருடைய எச்சரிப்பின் செய்தியைத் தீர்க்கதரிசனமாக அறிவிக்கிறார்கள். தேவனுடைய கிருபையைப் பெற்றுக்கொள்ள மனதில்லாதவர்கள், தேவனுடைய கோபாக்கினையைப் பெற்றுக்கொள்வார்கள். கர்த்தருடைய சத்தத்திற்கு வளைந்து கொடுக்காதவர்கள் முறிந்துபோவார்கள்.

யோவேல் தீர்க்கதரிசி "கர்த்தருடைய பெரிதும் பிரகாசமுமான நாளை"ப்பற்றித் தீர்க்கதரிசனமாகச் சொல்லியிருக்கிறார். இயேசுகிறிஸ்து கல்வாரி சிலுவையில் தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்து நாற்பது வருஷங்களுக்குப் பிறகு எருசலேம் நகரம் அழிக்கப்படுகிறது. எருசலேம் அழிக்கப்படும் இந்த நாளே "கர்த்தருடைய பெரிதும் பிரகாசமுமான" நாளாகும். எருசலேமின்மீது உண்டான அழிவைப்போன்ற பேரழிவு, இதற்கு முன்பு வேறு எந்த நகரத்திற்கும் உண்டாகவில்லை. இது கர்த்தருடைய நாள். கர்த்தர் தம்முடைய நாளில் இயேசுகிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்த ஜனங்களை பழிதீர்க்கிறார். இந்த நாளில் தேவனுடைய நியாயத்தீர்ப்பு உண்டாயிற்று. யூதர்கள் அழிக்கப்படுவதினால், இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிற விசுவாசிகளுக்கு விடுதலை உண்டாயிற்று.

எருசலேம் அழிக்கப்படும் நாளின்போது, நடைபெறப்போகும் சம்பவங்களையும் யோவேல் தீர்க்கதரிசி முன்னறிவிக்கிறார். அந்நாளில் கர்த்தர் உயர வானத்திலே அற்புதங்களைக் காட்டுவார். தாழப்பூமியிலே இரத்தம், அக்கினி, புகைக்காடாகிய அதிசயங்களையும் காட்டுவார். ஆதித்திருச்சபையின் வரலாற்று ஆசிரியரான யோசபஸ் என்பவர் இந்த அடையாளங்களைப்பற்றி தன்னுடைய வரலாற்றுப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறார். அந்நாளில் பூமியதிர்ச்சிகள், மின்னல்கள், இடிகள் ஆகியவை உண்டாயிற்று என்றும், அந்நாளில் எறிகிற அக்கினியின் பட்டயம் எருசலேம் நகரத்திற்கு நேராக நீட்டப்பட்டதையும் ஏராளமான ஜனங்கள் தங்கள் கண்களால் பிரத்தியட்சமாகப் பார்த்தார்கள் என்றும் யோசபஸ் எழுதியிருக்கிறார்.

எருசலேம் நகரம் பற்றியெறிந்தது. இந்த நகரத்தோடு யூததேசத்தாரின் எல்லா பட்டணங்களும் பற்றியெறிந்தது. ஜெபாலயங்களெல்லாம் அக்கினியினால் சுட்டெரிக்கப்பட்டது. இறுதியில் எருசலேமிலுள்ள தேவாலயமும் அக்கினியில் பற்றியெறிந்தது. இவையெல்லாம் எறியும்போது அக்னியின் புகைக்காடும் உண்டாயிற்று. யோவேல் தீர்க்கதரிசி இதையே "தாழபூமியிலே அக்கினி, புகைக்காடாகிய அதிசயங்களைக் காட்டுவேன்" என்று தேவன் உரைத்திருப்பதாக தீர்க்கதரிசனமாக முன்னறிவித்திருக்கிறார் (அப் 2:19,20).

எருசலேம் அக்கினியில் பற்றியெறிந்தாலும், இயேசுகிறிஸ்துவை சிலுவையில் அறைந்த யூதர்கள் இரத்தம் சிந்தி மரித்துப்போனாலும், கர்த்தரோ தம்முடைய பெரிதான கிருபையினால், தம்முடைய வாக்குத்தத்தத்தின் பிரகாரம், தம்முடைய பிள்ளைகளை இந்தப் பேரழிவிலிருந்து காத்துக்கொள்கிறார். "அப்பொழுது கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்கிறவனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான் என்று தேவன் உரைத்திருக்கிறார்" (அப் 2:21) என்று யோவேல் கர்த்தருடைய வார்த்தையைத் தீர்க்கதரிசனமாக முன்னறிவித்திருக்கிறார்.

ரோமப்பேரரசு யூததேசத்தை முழுவதுமாக அழித்துப்போட்டார்கள். யூதர்களையெல்லாம் சங்காரம் பண்ணினார்கள். இந்த மகா சங்காரத்தில் கர்த்தருடைய பிள்ளைகள் ஒருவர்கூட அழிந்துபோகவில்லை. யாரெல்லாம் கர்த்தரிடத்தில் ஜெபித்தார்களோ, அவர்களெல்லோரையும் கர்த்தர் பாதுகாத்துக்கொண்டார். ஜெபிக்கிற பிள்ளைகளுக்கு எப்போதுமே பாதுகாப்பு உண்டு. அவர்கள் கர்த்தருடைய நாமத்தில் அவரைத் தொழுது கொள்ளும்போது, கர்த்தர் அவர்களைத் தீங்குகளுக்கு விலக்கிப் பாதுகாத்துக் கொள்கிறார். கர்த்தருடைய நாமம் அவரை நோக்கிக் கூப்பிடுகிறவர்களுக்கு பலத்த துருகமாகயிருக்கிறது.

பேதுரு யோவேல் சொன்ன தீர்க்கதரிசனத்தைத் தன்னுடைய பிரசங்கத்தில் இங்கு குறிப்பிடுகிறார். இப்போது அவர்கள் மத்தியில் நடைபெறுகிற சம்பவம் "தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறுகிறது" (அப் 2:16) என்று யோவேலின் தீர்க்கதரிசனத்தையும், இப்போது நடைபெறுகிற சம்பவத்தையும் இணைத்துப் பேசுகிறார்.

கடைசிநாளிலே மாம்சமான யாவர்மேலும் கர்த்தர் பரிசுத்த ஆவியானவரை ஊற்றுவார். கடைசி நாளிலே ஜீவிக்கிறவர்களாகிய நாம், கர்த்தர் சொன்ன வார்த்தையின் பிரகாரமாக ஆவியானவர் நம்மீது ஊற்றப்படவேண்டும் என்பதை மாத்திரமே எதிர்பார்த்துக் காத்திருக்கவேண்டும். நாம் ஆவியானவருக்காக மாத்திரமே காத்திருக்கவேண்டுமேயல்லாமல், வேறு யாருக்காகவும் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. கிருபையின் ஆவியானவர், நமக்காக வழக்காடுகிறவர், நம்முடைய தேற்றவாளராகிய பரிசுத்த ஆவியானவர் நம்மீது ஊற்றப்படுகிறார். கர்த்தருடைய வாக்குத்தத்தத்தின் பிரகாரமாக பரிசுத்த ஆவியானவர் நம்மை அபிஷேகம் பண்ணுகிறார். பூமியிலுள்ள கர்த்தருடைய சபையாரெல்லார் மீதும், முடிவுபரியந்தம், கர்த்தர் தம்முடைய பரிசுத்த ஆவியானவரை, தொடர்ந்து ஊற்றிக் கொண்டேயிருப்பார். தேவனுடைய கிருபையின் காலத்தில் ஜீவிக்கிற நாம், கர்த்தர் நமக்குக் கொடுக்கிற தெய்வீக ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டு, நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் பெலப்பட்டு வளர்ச்சி பெறவேண்டும்.

இயேசுவே மேசியா
அப் 2 : 22-32

அப் 2:22. இஸ்ரவேலரே, நான் சொல்லும் வார்த்தைகளைக் கேளுங்கள்; நீங்கள் அறிந்திருக்கிறபடி நசரேயனாகிய இயேசுவைக்கொண்டு தேவன் உங்களுக்குள்ளே பலத்த செய்கைகளையும், அற்புதங்களையும், அடையாளங்களையும் நடப்பித்து, அவைகளினாலே அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார்.

அப் 2:23. அப்படியிருந்தும், தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனையின் படியேயும், அவருடைய முன்னறிவின் படியேயும் ஒப்புக்கொடுக்கப்பட்ட அந்த இயேசுவை நீங்கள் பிடித்து, அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணியடித்துக் கொலைசெய்தீர்கள்.

அப் 2:24. தேவன் அவருடைய மரண உபாதிகளின் கட்டை அவிழ்த்து, அவரை எழுப்பினார்; அவர் மரணத்தினால் கட்டப்பட்டிருக்கக் கூடாதிருந்தது.

அப் 2:25. அவரைக்குறித்துத் தாவீது: கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக நிறுத்தி நோக்கிக் கொண்டிருக்கிறேன்; நான் அசைக்கப் படாதபடி அவர் என் வலதுபாரிசத்திலே இருக்கிறார்;

அப் 2:26. அதினாலே என் இருதயம் மகிழ்ந்தது, என் நாவு களிகூர்ந்தது, என் மாம்சமும் நம்பிக்கையோடே தங்கியிருக்கும்;

அப் 2:27. என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர், உம்முடைய பரிசுத்தர் அழிவைக் காணவொட்டீர்;

அப் 2:28. ஜீவமார்க்கங்களை எனக்குத் தெரியப்படுத்தினீர்; உம்முடைய சந்நிதானத்திலே என்னைச் சந்தோஷத்தினால் நிரப்புவீர் என்று சொல்லுகிறான்.

அப் 2:29. சகோதரரே, கோத்திரத் தலைவனாகிய தாவீதைக்குறித்து நான் உங்களுடனே தைரியமாய்ப் பேசுகிறதற்கு இடங்கொடுங்கள்; அவன் மரணமடைந்து அடக்கம் பண்ணப்பட்டான்; அவனுடைய கல்லறை இந்நாள்வரைக்கும் நம்மிடத்திலிருக்கிறது.

அப் 2:30. அவன் தீர்க்கதரிசியாயிருந்து: உன் சிங்காசனத்தில் வீற்றிருக்க மாம்சத்தின்படி உன் சந்ததியிலே கிறிஸ்துவை எழும்பப் பண்ணுவேன் என்று தேவன் தனக்குச் சத்தியம்பண்ணினதை அறிந்தபடியால்,

அப் 2:31. அவன் கிறிஸ்துவினுடைய ஆத்துமா பாதாளத்திலே விடப்படுவதில்லையென்றும், அவருடைய மாம்சம் அழிவைக் காண்பதில்லையென்றும் முன்னறிந்து, அவர் உயிர்த்தெழுதலைக்குறித்து இப்படிச் சொன்னான்.

அப் 2:32. இந்த இயேசுவை தேவன் எழுப்பினார்; இதற்கு நாங்களெல்லாரும் சாட்சிகளாயிருக்கிறோம்.

இஸ்ரவேலரே

இஸ்ரவேலரே, நான் சொல்லும் வார்த்தைகளைக் கேளுங்கள்; நீங்கள் அறிந்திருக்கிறபடி நசரேயனாகிய இயேசுவைக்கொண்டு தேவன் உங்களுக்குள்ளே பலத்த செய்கைகளையும், அற்புதங்களையும், அடையாளங்களையும் நடப்பித்து, அவைகளினாலே அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார் (அப் 2:22).

சீஷர்களெல்லோரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள். அதைக் கேட்ட தேவபக்தியுள்ள யூதர்கள், தங்கள் பாஷைகளிலே அவர்கள் பேசுகிறதைக் கேட்டு கலக்கமடைகிறார்கள். எல்லோரும் பிரமித்துச் சந்தேகப்படுகிறார்கள். இது என்னமாய் முடியுமோ என்று ஒருவரோடொருவர் சொல்லிக் கொள்கிறார்கள். பக்தியில்லாத ஜனங்களோ இவர்கள் மதுபானத்தினால் நிறைந்திருக்கிறார்கள் என்று பரியாசம்பண்ணுகிறார்கள்.

பேதுரு பரிசுத்த ஆவியினால் நிறைந்து, எழுந்து நின்று, தங்களுடைய அனுபவத்தைப்பற்றி அவர்களிடத்தில் தைரியமாகச் சாட்சிகூறுகிறான். தாங்கள் வெவ்வேறு பாஷைகளில் பேசுவது பரிசுத்த ஆவியானவரின் வரம் என்பதை அவர்களுக்குத் தெளிவுபடுத்துகிறான். இந்தச் சம்பவத்தைப் பயன்படுத்தி பேதுரு அவர்களுக்கு இயேசுகிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கம்பண்ணுகிறான். "இஸ்ரவேலரே நான் சொல்லும் வார்த்தைகளைக் கேளுங்கள்" என்று அவர்களுக்கு அழைப்புக் கொடுக்கிறான்.

பேதுரு இஸ்ரவேல் ஜனங்களிடம் இயேசுகிறிஸ்துவைப்பற்றிப் பிரசங்கம் பண்ணும்போது கிறிஸ்துவின் சரித்திரத்தை அவர்களிடத்தில் சுருக்கமாகக் கூறுகிறான். அவன் இயேசுகிறிஸ்துவைப்பற்றிச் சொல்லும் போது, அவரை "நசரேயனாகிய இயேசு" என்று கூறுகிறான். இயேசுகிறிஸ்து தேவனால் அனுப்பப்பட்டவர். தேவனால் அங்கீகரிக்கப்பட்டவர். அவர் மனுஷர் மத்தியிலே மனுஷனாக வாசம்பண்ணியவர். தேவன் அவரை அங்கீகரித்தாலும் மனுஷரோ அவரை தேவகுமாரனாக அங்கீகரியாமல் விடுகிறார் வெறுத்து ஒதுக்கினார்கள். தேவன் தாமே இயேசுகிறிஸ்துவை ஜனங்கள் மத்தியில் வெளிப்படுத்தியிருக்கிறார்.

இயேசுகிறிஸ்து இஸ்ரவேல் ஜனங்கள் மத்தியிலே அடையாளங்களையும் அற்புதங்களையும் நடப்பித்தார். இயேசுகிறிஸ்து செய்த அற்புதங்களுக்கு இஸ்ரவேல் ஜனங்கள் சாட்சிகளாகயிருக்கிறார்கள். தேவன் இயேசுவோடு இருப்பதினாலேயே அவரால் இப்படிப்பட்ட அற்புதத்தைச் செய்ய முடிகிறது. கர்த்தராகிய தேவனே இயேசுவைக் கொண்டு மனுஷருக்குள்ளே பலத்த செய்கைகளையும், அற்புதங்களையும், அடையாளங்களையும் நடப்பித்தார்.

இயேசுகிறிஸ்து அற்புதம் செய்ததை இஸ்ரவேல் ஜனங்களால் மறுக்க முடியாது. ஏனெனில் அவர் செய்த அற்புதங்களெல்லாம் அவர்கள் மத்தியிலே நடைபெற்றது. இஸ்ரவேல் ஜனங்கள் இயேசுகிறிஸ்து செய்த அற்புதங்களைத் தங்கள் கண்களால் பிரத்தியட்சமாகப் பார்த்தார்கள். இயேசுகிறிஸ்துவின் அற்புதங்களுக்கு இவர்களும் கண்ணாரக் கண்ட சாட்சிகளாகயிருக்கிறார்கள். பேதுரு இயேசுகிறிஸ்துவைப்பற்றி இஸ்ரவேலரிடம் சொல்லும்போது, கிறிஸ்து செய்த அற்புதங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பேசுகிறான்.

தேவன் இயேசுவைக் கொண்டு நடப்பித்த பலத்த செய்கைகளையும், அற்புதங்களையும், அடையாளங்களையும் இஸ்ரவேல் ஜனங்கள் அறிந்திருக்கிறார்கள். இந்த அற்புதங்களெல்லாம் அவர்களுக்குள்ளே நடைபெற்றிருக்கிறது. கிறிஸ்துவின் அற்புதங்களுக்கு இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் கண்களால் கண்ட சாட்சிகளாகயிருக்கிறார்கள். ஆகையினால் இயேசுகிறிஸ்து செய்த அற்புதங்களை இஸ்ரவேலரால் மறுதலிக்க முடியாது. இயேசுகிறிஸ்துவின் மூலமாக தேவன் அற்புதங்களைச் செய்து, அவைகளினாலே தேவன் இயேசுவை இஸ்ரவேலருக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். இயேசு கிறிஸ்துவைத் தேவனுடைய குமாரனாகவும், உலக இரட்சகராகவும் பிதாவானவர் பிரகடனம் செய்திருக்கிறார்.

தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனை

அப்படியிருந்தும், தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனையின் படியேயும், அவருடைய முன்னறிவின் படியேயும் ஒப்புக்கொடுக்கப்பட்ட அந்த இயேசுவை நீங்கள் பிடித்து, அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணியடித்துக் கொலைசெய்தீர்கள் (அப் 2:23).

பேதுரு இயேசுவின் சரித்திரத்தைப்பற்றிச் சொல்லும்போது, அவருடைய பாடுகளையும் மரணத்தையும் குறிப்பிடுகிறான். இயேசுகிறிஸ்து செய்த எல்லா அற்புதங்களிலும், அவர் சிலுவையில் தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்ததும், மூன்றாம் நாளில் உயிரோடு எழும்பியதும் மிகவும் முக்கியமான அற்புதமாகும். தேவன் இயேசுகிறிஸ்துவை தம்முடைய குமாரனாக வெளிப்படுத்தியிருக்கிறார். அற்புதங் களினாலும் அடையாளங்களினாலும் கிறிஸ்துவின் தெய்வத்துவத்தை அங்கீகரித்திருக்கிறார். ஆனால் இயேசுகிறிஸ்துவோ கல்வாரி சிலுவையில் தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்து மரித்துப்போனதினால், தேவன் இயேசுவை அங்கீகரியாமல் கைவிட்டுவிட்டாரோ என்னும் சந்தேகம் சிலருக்கு உண்டாயிற்று. ஆனால் பிதாவாகிய தேவன் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை ஒருபோதும் அங்கீகரியாமல் கைவிட்டுவிடவில்லை.

தேவன் இயேசுகிறிஸ்துவை மனுஷர் மத்தியிலே, தேவனுடைய குமாரனாக வெளிப்படுத்தியிருக்கிறார். ஆனால் ஜனங்களோ இயேசுகிறிஸ்துவை தேவகுமாரனாக அங்கீகரிக்கவில்லை. தேவன் அங்கீகரித்திருப்பவரை மனுஷர் அங்கீகரியாமல் புறக்கணித்துவிடுவது ஒரு ரகசியமாகயிருக்கிறது. பேதுரு பரிசுத்த ஆவியானவரின் ஞானத்தினால் இந்த ரகசியத்தைத் தெளிவுபடுத்துகிறார்.

இயேசுகிறிஸ்து இந்தப் பூமிக்கு வந்து மனுஷனாக அவதரித்தது தேவனுடைய தெய்வீக ஆலோசனையாகும். இயேசுகிறிஸ்துவில் தேவனுடைய கிருபையும் அவருடைய அற்புதமான ஞானமும் வெளிப்படுகிறது. தேவனோ இயேசுகிறிஸ்துவை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்தார். பிதாவானவர் தம்முடைய குமாரனை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்தாலும், அவர் இயேசுவை அங்கீகரியாமல் கைவிட்டு விடவில்லை. இயேசுகிறிஸ்துவின் மரணம் தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனையின் படியே நடைபெற்றிருக்கிறது.

இயேசுகிறிஸ்து சிலுவையில் தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுக்கும்போது "பிதாவே உம்முடைய சித்தம் ஆகக்கடவது" என்றும், "பிதாவே உமது நாமத்தை மகிமைப்படுத்தும்" என்றும் சொல்லி ஜெபித்தார். இயேசுகிறிஸ்துவோ தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனையின்படி தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுக்கிறார். ஆனால் ஜனங்களோ இயேசுகிறிஸ்துவின் மரணத்தை உலகப்பிரகாரமாக வியாக்கியானம் பண்ணுகிறார்கள். இயேசுகிறிஸ்து தம்முடைய பாவத்தினிமித்தமாகவும், மீறுதலினி மித்தமாகவும், கல்வாரி சிலுவையில் மரித்தாரென்று தவறாக வியாக்கியானம் பண்ணுகிறார்கள். தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனையின் படியேயும், அவருடைய முன்னறிவின்படியேயும், இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரனாக இந்த உலகத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறார். ஆனால் இந்த உலகத்து ஜனங்களோ இயேசுகிறிஸ்துவைப் பிடித்து, அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணியடித்து கொலைசெய்தார்கள்.

பேதுரு எழுந்துநின்று பிரசங்கம்பண்ணும்போது, அவனுக்கு முன்பாக ஏராளமான யூதர்கள் நின்று கொண்டு அவனுடைய பிரசங்கத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவைப் பிலாத்து விசாரித்தபோது "இயேசுவைச் சிலுவையில் அறையும்" என்று கூக்குரலிட்ட யூதர்களில் சிலர், ஒருவேளை பேதுருவின் பிரசங்கத்தை இப்போது கேட்டுக்கொண்டிருப்பதற்கு வாய்ப்புள்ளது. இயேசுவைச் சிலுவையில் அறைவதற்கு ஒப்புக்கொடுத்த அவர்களுடைய இருதயத்தில் படும்படியாக பேதுரு சத்தியத்தை உணர்த்திப் பேசுகிறான். தாங்கள் செய்த பாவத்திற்கு அவர்கள் மனந்திரும்பவேண்டுமென்றும், இயேசுகிறிஸ்துவை உலக இரட்சகராக அவர்கள் விசுவாசிக்கவேண்டுமென்றும் எதிர்பார்த்து, பேதுரு ஆவியில் நிறைந்து பேசுகிறான்.

தேவன் அவரை எழுப்பினார்

தேவன் அவருடைய மரண உபாதிகளின் கட்டை அவிழ்த்து, அவரை எழுப்பினார்; அவர் மரணத்தினால் கட்டப்பட்டிருக்கக் கூடாதிருந்தது (அப் 2:24).

தேவனே இயேசுகிறிஸ்துவை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்தார். அதே தேவனே இயேசுவை அவருடைய மரணத்திலிருந்து எழுப்பினார். இயேசுகிறிஸ்துவின் மரணத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும் பேதுரு சாட்சியாகயிருக்கிறான். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை பேதுரு இங்கு விவரிக்கிறான். தேவன் இயேசு கிறிஸ்துவினுடைய மரண உபாதிகளின் கட்டை அவிழ்த்துவிடுகிறார். ஏனெனில் இயேசுகிறிஸ்துவை மரணத்தினால் கட்டப்பட்டிருக்கக் கூடாதிருந்தது.

இயேசுகிறிஸ்து கல்வாரி சிலுவையில் தொங்கிக்கொண்டிருக்கும் போது "முடிந்தது" என்று சொல்லி தம்முடைய ஜீவனை விட்டார். இயேசுகிறிஸ்துவின் ஆத்துமா வேதனைப்பட்டது. வருத்தப்பட்டது. தேவனோ அவருடைய ஆத்துமாவின் வேதனையிலிருந்தும் வருத்தத்திலிருந்தும் அவைகளின் கட்டை அவிழ்த்து விட்டிருக்கிறார். இயேசுகிறிஸ்துவை தேவன் உயிரோடு எழுப்பினார். அப்போது அவருடைய மரண உபாதியின் கட்டு அவிழ்க்கப்படுகிறது.

இயேசுகிறிஸ்து மூன்றாம் நாளில் உயிரோடு எழும்பும்போது, அவர் தம்முடைய சரீரத்தில் உயிர்த்தெழுகிறார். இயேசுகிறிஸ்துவோ நாம் செலுத்த வேண்டிய கடனுக்காகச் சிறையாக்கப்பட்டிருக்கிறார். நம்முடைய பாவத்தின் விளைவுகளினால் இயேசுகிறிஸ்து மரண உபாதிகளின் கட்டுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டார். ஆனால் அந்த மரணத்தினாலோ இயேசுகிறிஸ்துவைக் கட்டமுடியவில்லை. கல்வாரி சிலுவையில் இயேசுகிறிஸ்து தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்தாலும், அவர் தமக்குத்தாமே ஜீவனுள்ளவராகயிருக்கிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய உயிர்த்தெழுதலின் மூலமாக மரணத்தின் அதிபதியை ஜெயித்தார்.

தாவீதின் தீர்க்கதரிசனம்

அவரைக்குறித்துத் தாவீது: கர்த்தரை எப்பொழுதும் எனக்குமுன்பாக நிறுத்தி நோக்கிக்கொண்டிருக்கிறேன்; நான் அசைக்கப்படாதபடி அவர் என் வலதுபாரிசத்திலே இருக்கிறார்; அதினாலே என் இருதயம் மகிழ்ந்தது, என் நாவு களிகூர்ந்தது, என் மாம்சமும் நம்பிக்கையோடே தங்கியிருக்கும்; என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர், உம்முடைய பரிசுத்தர் அழிவைக் காணவொட்டீர்; ஜீவமார்க்கங்களை எனக்குத் தெரியப்படுத்தினீர்; உம்முடைய சந்நிதானத்திலே என்னைச் சந்தோஷத்தினால் நிரப்புவீர் என்று சொல்லுகிறான் (அப் 2:25-28).

இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை பேதுரு நிச்சயப்படுத்திப் பிரசங்கம்பண்ணுகிறான். அவர் மறுபடியும் உயிரோடு எழும்பின சம்பவம் மெய்யானது என்பதை பேதுரு உறுதிபண்ணுகிறான். தேவன் இயேசுவை உயிரோடு எழுப்பினார். அதற்கு சீஷர்களாகிய தாங்களெல்லோரும் சாட்சிகளாகயிருப்பதாக அறிவிக்கிறான். சீஷர்களைப் பரிசுத்த ஆவியானவர் நிரப்பினார். அவர்கள் தேவனுடைய வல்லமையைப் பெற்றுக்கொண்டார்கள். இயேசுகிறிஸ்துவுக்காக உண்மையோடும், தைரியத்தோடும் சாட்சி சொல்லுவதற்குத் தேவையான வல்லமையை பரிசுத்த ஆவியானவரிடத்திலிருந்து சீஷர்கள் பெற்றுக்கொள்கிறார்கள்.

இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைப்பற்றிப் பேசும்போது, தாவீது சொன்ன வசனங்களைப் பேதுரு இங்கு மேற்கோளாகக் குறிப்பிடுகிறான். இயேசுகிறிஸ்துவை மரணத்தினாலோ அல்லது அவருடைய கல்லறையினாலோ கட்ட முடியவில்லை. அவர் மரணத்தினால் கட்டப்பட்டிருக்க கூடாதிருந்தது. இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்ததைப்பற்றி தாவீதும் முன்னறிவித்திருக்கிறார்.

பிதாவாகிய தேவனும் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவும் ஆவிக்குரிய ஐக்கியத்திலிருக்கிறார்கள். "கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக நிறுத்தி நோக்கிக்கொண்டிருக்கிறேன்" என்று இயேசுகிறிஸ்து பிதாவிடம் சொல்லுவதாக தாவீது சொன்ன வசனத்திற்கு வேதபண்டிதர்கள் வியாக்கியானம் சொல்லுகிறார்கள். இயேசுகிறிஸ்து எப்போதுமே தம்முடைய பிதாவின் மகிமையை தமக்கு முன்பாக நிறுத்தி நோக்கிக்கொண்டிருக்கிறார். தம்முடைய மரணம் பிதாவாகிய தேவனை மகிமைப்படுத்தும் என்று இயேசுகிறிஸ்து நிச்சயத்தோடிருக்கிறார்.

தாம் பாடுகளை அனுபவிக்கிற வேளையிலும், வேதனைகள் வழியாக கடந்து செல்லும் வேளைகளிலும், கல்வாரி சிலுவையில் மரித்துக்கொண்டிருந்த வேளையிலும், பிதாவானவர் தம்மோடு கூடவே இருந்ததாக இயேசுகிறிஸ்து அறிவிக்கிறார். "நான் அசைக்கப்படாதபடி அவர் என் வலது பாரிசத்திலே இருக்கிறார்" என்று இயேசுகிறிஸ்து பிதாவைப்பற்றிக் குறிப்பிடுகிறார். தேவன் நம்முடைய வலதுபாரிசத்திலிருக்கிறபோது, நாமும் ஒருபோதும் அசைக்கப்படுவதில்லை.

இயேசுகிறிஸ்து தம்முடைய ஊழியத்தையும், பாடுகளையும், மரணத்தையும் குறித்துப் பிதாவிடத்தில் சந்தோஷமாகச் சாட்சிகொடுக்கிறார். "நான் அசைக்கப்படாதபடி அவர் என் வலதுபாரிசத்திலே இருக்கிறார் அதினாலே என் இருதயம் மகிழ்ந்தது. என் நாவு களிகூர்ந்தது" என்று இயேசுகிறிஸ்து தம்முடைய சந்தோஷத்தை வெளிப்படுத்துகிறார். பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவது குமாரனாகிய இயேசுகிறிஸ்துவுக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கிறது. பாடுகள் வழியாகச் சென்றபோதும், கல்வாரி சிலுவையில் வேதனைகளை அனுபவித்தபோதும், பிதாவின் சித்தமே இயேசுகிறிஸ்துவின் உள்ளத்தில் நிரம்பியிருந்தது. ஆகையினால் இயேசுகிறிஸ்து முடிவுபரியந்தம் மிகுந்த சந்தோஷத்தோடு தம்முடைய ஊழியத்தை நிறைவேற்றினார்.

இயேசுகிறிஸ்துவின் பாடுகளும் மரணமும் அவருக்குச் சந்தோஷமாயிற்று. தம்முடைய சந்தோஷத்தை வெளிப்படுத்தும் வண்ணமாக "என் மாம்சமும் நம்பிக்கையோடே தங்கியிருக்கும்" என்று இயேசுகிறிஸ்து விசுவாசத்தோடு சொல்லுகிறார். இதைத் தொடர்ந்து "என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர், உம்முடைய பரிசுத்தர் அழிவைக்காணவொட்டீர்" என்றும் இயேசுகிறிஸ்து தம்முடைய உயிர்த்தெழுதலைப்பற்றி நம்பிக்கையோடு சொல்லுகிறார்.

சரீரமும் ஆத்துமாவும் நித்தியமாகப் பிரிந்திருப்பதில்லை. இயேசுகிறிஸ்துவுக்கு கல்வாரி சிலுவையில் சரீரமரணமுண்டாயிற்று. பிதாவானவர் தம்முடைய ஆத்துமாவைப் பாதாளத்தில் விடமாட்டாரென்று இயேசுகிறிஸ்து மிகுந்த நம்பிக்கையோடு சொல்லுகிறார்.

கல்வாரி சிலுவையில் மரித்துப்போன இயேசுகிறிஸ்துவின் சரீரம் கல்லறையில் அடக்கம்பண்ணப்படுகிறது. அது அங்கு சிறிது காலத்திற்கு மாத்திரமே இருக்கும். மரித்துப்போனவர்களின் சரீரம் கெட்டுப்போகும். அழிந்துபோகும். ஆனால் இயேசுகிறிஸ்துவோ தம்முடைய சரீரத்தைப்பற்றிச் சொல்லும்போது "உம்முடைய பரிசுத்தர் அழிவைக் காணவொட்டீர்" என்று குறிப்பிடுகிறார். இயேசுகிறிஸ்துவின் சரீரம் மரிக்கும். ஆனால் அந்தச் சரீரம் கெட்டுப்போகாது. அழிந்துபோகாது.

இயேசுகிறிஸ்து நித்தியமானவர். அவருடைய மரணமும் பாடுகளும், அவர் ஆசீர்வதிக்கப்பட்ட உயிர்த்தெழுந்த சரீரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு ஒரு வாசலைப்போலாயிற்று. "ஜீவ மார்க்கங்களை எனக்குத் தெரியப்படுத்தினீர்" என்று இயேசுகிறிஸ்து பிதாவிடத்தில் தம்முடைய மரணத்தைப்பற்றி விசுவாசத்தோடு சொல்லுகிறார். இயேசுகிறிஸ்துவின் மரணத்தின் மூலமாகவும், உயிர்த்தெழுதல் மூலமாகவும், மனுக்குலத்திற்கு உயிர்த்தெழுதலின் சத்தியம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

கல்வாரி சிலுவையில் இயேசுகிறிஸ்து அனுபவித்த பாடுகளும் வேதனைகளும் முடிந்துபோயிற்று. "உம்முடைய சந்நிதானத்திலே என்னை சந்தோஷத்தினாலே நிரப்புவீர்" என்று இயேசுகிறிஸ்து பிதாவிடத்தில் சொல்லுகிறார். கல்வாரி சிலுவையின் வேதனைகளும் பாடுகளும் முடிந்துபோயிற்று. இப்போது கிறிஸ்துவின் சந்தோஷம் பரிபூரணமாயிற்று. கல்வாரியை சகித்துக்கொண்டதினால் இயேசுகிறிஸ்துவுக்கு சந்தோஷத்தின் நிறைவு வெகுமதியாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பிதாவின் சந்தோஷத்தினால் இயேசுகிறிஸ்து நிரப்பப்படுகிறார். இயேசுகிறிஸ்து பிதாவாகிய தேவனுடைய வலதுபாரிசத்தில் எப்போதும் கூடவே இருப்பார். பிதாவோடு ஐக்கியமாகயிருப்பதே குமாரனாகிய இயேசுகிறிஸ்துவுக்கு நிறைவான சந்தோஷமாகும். கிறிஸ்துவினுடைய வர்களாகிய நாமெல்லோருமே கர்த்தருடைய சந்தோஷத்தில் பிரவேசிப்போம். அவருடைய சந்தோஷத்தினால் நிரப்பப்படுவோம். அந்தச் சந்தோஷம் நித்திய சந்தோஷமாகயிருக்கும்.

சகோதரரே

சகோதரரே, கோத்திரத் தலைவனாகிய தாவீதைக்குறித்து நான் உங்களுடனே தைரியமாய்ப் பேசுகிறதற்கு இடங்கொடுங்கள்; அவன் மரணமடைந்து அடக்கம் பண்ணப்பட்டான்; அவனுடைய கல்லறை இந்நாள்வரைக்கும் நம்மிடத்திலிருக்கிறது. அவன் தீர்க்க தரிசியாயிருந்து: உன் சிங்காசனத்தில் வீற்றிருக்க மாம்சத்தின்படி உன் சந்ததியிலே கிறிஸ்துவை எழும்பப் பண்ணுவேன் என்று தேவன் தனக்குச் சத்தியம்பண்ணினதை அறிந்தபடியால், அவன் கிறிஸ்துவினுடைய ஆத்துமா பாதாளத்திலே விடப்படுவதில்லையென்றும், அவருடைய மாம்சம் அழிவைக் காண்பதில்லையென்றும் முன்னறிந்து, அவர் உயிர்த்தெழுதலைக் குறித்து இப்படிச் சொன்னான். இந்த இயேசுவை தேவன் எழுப்பினார்; இதற்கு நாங்களெல்லாரும் சாட்சிகளாயிருக் கிறோம் (அப் 2:29-32).

தாவீது சொன்ன வார்த்தைகளைப் பேதுரு இஸ்ரவேல் ஜனங்களுக்கு வியாக்கியானம் செய்து பிரசங்கம் பண்ணுகிறான். மிகுந்த மரியாதையோடு அவர்களை "சகோதரரே" என்று அழைக்கிறான். கோத்திரத்தலைவனாகிய தாவீதைக்குறித்து அவர்களுடனே தைரியமாய்ப் பேசுகிறதற்குத் தனக்கு இடங்கொடுக்குமாறு அவர்களிடத்தில் வேண்டிக்கொள்கிறான்.

இந்த வசனங்களைத் தாவீது தன்னைப்பற்றிப் பேசவில்லை. வரப்போகிற இயேசுகிறிஸ்துவைப்பற்றியே பேசுகிறான். கோத்திரத்தலைவனாகிய தாவீது இந்த வசனங்களைத் தன்னைப்பற்றிப் பேசியிருக்க வாய்ப்பில்லை. ஏனெனில் அவன் மரணமடைந்து அடக்கப்பண்ணப்பட்டான். அவனுடைய கல்லறை இந்நாள் வரைக்கும் இஸ்ரவேலர் மத்தியிலே இருக்கிறது. தாவீது ஒருபோதும் "உம்முடைய பரிசுத்தர் அழிவைக்காணவொட்டீர்" என்று தன்னைப்பற்றிச் சொல்லுவதற்கு வாய்ப்பில்லை. ஏனெனில் மரணமடைந்து அடக்கம்பண்ணப்பட்ட தாவீதின் சரீரம் அழிந்துபோயிற்று. அது அழிவைக்கண்டது. ஆகையினால் தாவீது இந்த வார்த்தைகளை மேசியாவைப்பற்றி தீர்க்க தரிசனமாக அறிவித்திருக்கவேண்டும்.

தன்னுடைய சந்ததியில் இயேசுகிறிஸ்து வருவாரென்பதை தாவீது அறிந்திருக்கிறான். அவன் தீர்க்கதரிசியாயிருந்தான். தன்னுடைய சந்ததியில் தேவன் கிறிஸ்துவை எழும்பப் பண்ணுவார் என்பதை அறிந்திருந்தான். தேவன் இதை தனக்குச் சத்தியம் பண்ணினதையும் கோத்திரத்தலைவனாகிய தாவீது அறிந்திருக்கிறான். இயேசு கிறிஸ்துவின் பிறப்பைக் குறித்து தேவதூதன் கன்னிமரியாளிடம் சொன்னபோது "கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார்" (லூக் 1:32) என்று சொன்னார்.

இயேசுகிறிஸ்து தம்முடைய ஆவியினாலும், தம்முடைய தெய்வீக சுபாவத்தினாலும், கோத்திரத் தலைவனாகிய தாவீதுக்கு ஆண்டவராகயிருக்கிறார். அவர் தாவீதுக்குக் குமாரனில்லை. தாவீது "அவருடைய மாம்சம் அழிவைக் காண்பதில்லை" என்று சொன்னபோது, அவர் இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் குறித்தே இப்படிச் சொன்னார். "என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர்" என்று தாவீது சொன்னபோது, இயேசுகிறிஸ்துவின் ஆத்துமா பாதாளத்தில் விடப்படுவதில்லை என்று இயேசுகிறிஸ்துவைக் குறித்து முன்னறிந்து சொன்னார்.

இயேசு கிறிஸ்து வேத வாக்கியங்களின் பிரகாரமாக மரித்தார். உயிரோடு எழும்பினார். இயேசுவைத் தேவன் எழுப்பினார். இதற்கு சீஷர்களெல்லோரும் சாட்சிகளாகயிருக் கிறார்கள். பேதுரு இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைப் பற்றிச் சொல்லும் போது, அவருடைய பரமேறுதலைப்பற்றியும் குறிப்பிடுகிறான். தாவீது பரலோகத்திற்கு எழுந்து போகவில்லை (அப் 2:34). ஆனால் இயேசுகிறிஸ்துவோ பரமேறிப்போனார்.

தாவீது வேறொரு சங்கீதத்தில் இயேசுகிறிஸ்துவின் பரமேறுதலைப்பற்றித் தெளிவுபடுத்துகிறார். "கர்த்தர் என் ஆண்டவரை நோக்கி: நான் உம்முடைய சத்துருக்களை உமக்கு பாதபடியாக்கிப் போடும் வரைக்கும், நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும் என்றார்" (சங் 110:1).

இயேசு உயர்த்தப்பட்டார் அப் 2 : 33-36

அப் 2:33. அவர் தேவனுடைய வலதுகரத்தினாலே உயர்த்தப்பட்டு, பிதா அருளிய வாக்குத்தத்தத்தின்படி பரிசுத்தஆவியைப் பெற்று, நீங்கள் இப்பொழுது காண்கிறதும் கேட்கிறதுமாகிய இதைப் பொழிந்தருளினார்.

அப் 2:34. தாவீது பரலோகத்திற்கு எழுந்து போகவில்லையே. நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப் போடும்வரைக்கும்,

அப் 2:35. நீர் என் வலதுபாரிசத்தில் உட்காருமென்று கர்த்தர் என் ஆண்டவருடனே சொன்னார் என்று அவனே சொல்லியிருக்கிறான்.

அப் 2:36. ஆகையினால், நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள் என்றான்.

பேதுருவும் மற்ற சீஷர்களும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள். இதைப் பார்த்துக் கேட்ட யூதர்கள் கலக்கமடைகிறார்கள். "இதெப்படி" என்று தங்களுக்குள் கேட்டு ஆச்சரியப் படுகிறார்கள். அவர்களுடைய சந்தேகத்தை நீக்கும் விதமாக, பேதுரு இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைப்பற்றி இங்கு விவரமாகச் சொல்லுகிறார். பரிசுத்த ஆவியானவரின் வரம் ஏற்கெனவே கொடுக்கப்பட்டிருக்கும் தெய்வீக வாக்குத்தத்தம். இந்த வாக்குத்தத்தத்தின் பிரகாரமாகவே சீஷர்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருக்கிறார்கள். வெவ்வேறு பாஷைகளில் பேசுகிறார்கள். தீர்க்கதரிசனஞ்சொல்லுகிறார்கள்.

இயேசுவைத் தேவன் தம்முடைய வலது கரத்தினால் உயர்த்தினார். பிதா அருளிய வாக்குத்தத்தத்தின்படி சீஷர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்கிறார்கள். யூதர்கள் இப்பொழுது காண்கிறதும் கேட்கிறதுமாகிய இதை தேவனே பொழிந்தருளியிருக்கிறார். தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு வாக்குப்பண்ணியிருக்கும் எல்லா வாக்குத்தத்தங்களும் நிறைவேறும் என்பதற்கு பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் அச்சாரமாகயிருக்கிறது. யூதர்கள் இப்போது காண்கிறதும் கேட்கிறதும், இனிமேல் நடைபெறப்போகிற பெரிய காரியங்களுக்கு ஓர் அச்சாரமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

பேதுரு தங்களுடைய அனுபவங்களையெல்லாம் சொல்லிவிட்டு, இந்த உலகத்திற்கு இயேசுவே கிறிஸ்துவாகவும், இரட்சகராகவும் இருக்கிறார் என்று உறுதிபண்ணுகிறார். இந்தச் சத்தியத்தோடு பேதுரு தன்னுடைய பிரசங்கத்தை நிறைவுசெய்கிறார். "ஆகையினால் நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினார் என்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள்" என்று கூறி பேதுரு தன்னுடைய பிரசங்கத்தை நிறைவுசெய்கிறார்.

இயேசுகிறிஸ்துவும், பேதுருவும், யாக்கோபும், யோவானும் மறுரூபமலையிலிருந்து இறங்குகிறபோது, இயேசு அவர்களைநோக்கி "மனுஷகுமாரன் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கும் வரைக்கும் இந்தத் தரிசனத்தை ஒருவருக்கும் சொல்ல வேண்டாம்" என்று கட்டளையிட்டார் (மத் 17:9). ஆனால் இப்போதோ அவர்கள் உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவை அறிவிக்கவேண்டும். எல்லா தேசத்திற்கும் சென்று, சகலஜாதியாரிடத்திலும் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைப்பற்றிச் சீஷர்கள் அறிவிக்கவேண்டும்.

யூதஜனங்களால் சிலுவையில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்துவைத் தேவன் தம்முடைய வலது கரத்தினால் உயர்த்தியிருக்கிறார். இயேசுவைத் தேவன் எழுப்பினார். அவரை மகிமைப்படுத்தியிருக்கிறார். பிதாவானவர் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை ஆண்டவரும் கிறிஸ்துவுமாக உயர்த்தியிருக்கிறார். இயேசுகிறிஸ்து உன்னத மகிமைக்கு உயர்த்தப்பட்டிருக்கிறார். இதுவே சுவிசேஷத்தின் மையச்செய்தியாகும். சிலுவையில் அறையப்பட்ட இயேசுவே ஆண்டவரும் கிறிஸ்துவுமாகயிருக்கிறார். இந்தச் சத்தியமே சுவிசேஷத்தின் சாரம்.

மூவாயிரம் பேர்
அப் 2 : 37-41

அப் 2:37. இதை அவர்கள் கேட்டபொழுது, இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து: சகோதரரே, நாங்கள் என்னசெய்யவேண்டும் என்றார்கள்.

அப் 2:38. பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக் கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்.

அப் 2:39. வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது என்று சொல்லி;

அப் 2:40. இன்னும் அநேக வார்த்தைகளாலும் சாட்சிகூறி, மாறுபாடுள்ள இந்தச் சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள் என்றும் புத்திசொன்னான்.

அப் 2:41. அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையத்தினம் ஏறக்குறைய மூவாயிரம்பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.

இருதயத்தில் குத்தப்பட்டவர்களாகி

இதை அவர்கள் கேட்டபொழுது, இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து: சகோதரரே, நாங்கள் என்னசெய்ய வேண்டும் என்றார்கள் (அப் 2:37).

பரிசுத்த ஆவியானவர் சீஷர்கள்மீது ஊற்றப்பட்டபோது அங்கு அற்புதமான காரியங்கள் நடைபெறுகிறது. சீஷர்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை வல்லமையோடு பிரசங்கம்பண்ணுகிறார்கள். அவர்களுடைய வார்த்தை கேட்போரின் இருதயத்தைத் தொடுகிறது. சீஷர்களின் பிரசங்கத்தைக் கேட்ட ஜனங்கள் தங்கள் இருதயத்தில் குத்தப்பட்டவர் களாகிறார்கள். பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்படும்போது அங்கு ஆவியின் கனி வெளிப்படுகிறது. சுவிசேஷச் செய்தியைக் கேள்விப் படுகிறவர்கள் தங்கள் இருதயங்களில் உணர்த்தப்படுகிறார்கள். சீஷர்கள் பிரசங்கம்பண்ணினாலும், பரிசுத்த ஆவியானவரே அவர்கள் மூலமாகப் பேசுகிறார். அவர்களுடைய வார்த்தைகள் ஒவ்வொன்றும் பரிசுத்த ஆவியினால் அபிஷேகம்பண்ணப் பட்டிருக்கிறது. அவர்களுடைய பிரசங்க வார்த்தைகளோடு ஆவியானவர் மூலமாக தெய்வீக வல்லமையும் வெளிப்படுகிறது.

சீஷர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்போது ஏராளமான ஆத்துமாக்கள் தங்கள் இருதயங்களில் குத்தப்படுகிறார்கள். தங்களுடைய பாவங்களை உணர்ந்துகொள்கிறார்கள். ஏராளமானோர் இரட்சிக்கப்படுகிறார்கள். அங்கு ஆத்தும அறுவடை நடைபெறுகிறது. இரட்சிக்கப்பட்ட ஆத்துமாக்களெல்லோரும் இயேசு கிறிஸ்துவிடமாக அழைத்து வரப்படுகிறார்கள்.

பிரசங்கச் செய்தியைக் கேட்டவர்கள் இருதயத்திலே குத்தப்படுகிறார்கள். அவர்களால் அமைதியாக இருக்க முடியவில்லை. தங்களுடைய ஆத்துமாக்களைப்பற்றிச் சிந்திக்கிறார்கள். ஆத்துமாக்களின் ஆசீர்வாதத்திற்கும் சமாதானத்திற்கும் என்ன செய்யவேண்டுமென்று யோசித்துப் பார்க்கிறார்கள். சுவிசேஷச் செய்தியைத் தங்களுக்குப் பிரசங்கம்பண்ணிய பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து "சகோதரரே நாங்கள் என்ன செய்யவேண்டும்" என்று அவர்களிடத்தில் கேட்கிறார்கள்.

பிரசங்கத்தைக் கேட்போரின் இருதயத்தில் உடனடி மாற்றம் உண்டாயிற்று. பிரசங்கத்தைக் கேட்கிறவர்கள் காலதாமதம் பண்ண விரும்பவில்லை. அவர்கள் இயேசுவைச் சிலுவையில் அறைந்தார்களென்று பேதுரு அவர்கள்மீது குற்றம் சுமத்துகிறான். இயேசுகிறிஸ்துவின் மரணத்தில் இவர்களுடைய துன்மார்க்கமான கைகளும் பங்குபெற்றிருக்கிறது. இவர்கள் கிறிஸ்துவுக்கு விரோதமாகக் கிரியை செய்திருக்கிறார்கள். இவர்கள் இயேசுவைச் சிலுவையில் அறைந்தார்கள். ஆனால் தேவனோ இயேசுவை ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினார்.

பேதுருவின் பிரசங்கச் செய்தி மிகவும் எளிமையாக இருக்கிறது. பேதுரு தன்னுடைய பிரசங்கத்தில் இயேசு கிறிஸ்துவை உயர்த்துகிறான். ஜனங்களுடைய பாவங்களை உணர்த்துகிறான். பிரசங்கச் செய்தியைக் கேட்டுக் கொண்டிருக்கும்போதே, ஜனங்களுடைய உள்ளத்தில் மிகப்பெரிய மாற்றம் உண்டாயிற்று. அவர்கள் தாங்கள் செய்த பாவத்தை உணருகிறார்கள். இயேசுகிறிஸ்துவைச் சிலுவையில் அறைவதற்கு இவர்களும் காரணமாக இருந்தார்கள். "இயேசுவைச் சிலுவையில் அறையும்" என்று பிலாத்துவுக்கு முன்பாக இவர்கள் கூக்குரலிட்டார்கள். இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமாகத் தாங்கள் செய்தது ஒவ்வொன்றையும் நினைத்துப் பார்த்து, தங்கள் இருதயத்தில் குத்தப்பட்டவர்களாக இருக்கிறார்கள்.

பேதுரு தன்னுடைய பிரசங்கச் செய்தியின் மூலமாக அவர்களுடைய மனச்சாட்சியைத் தட்டியெழுப்புகிறான். அவர்களுடைய உள்ளத்தைத் தொடுகிறான். பாவிகளுடைய கண்கள் திறக்கப்படும்போது, அவர்களுடைய இருதயம் பாவத்தினால் குத்தப்பட்டிருக்கும். யூதர்கள் தாங்கள் செய்த பாவத்தை உணருகிறார்கள். அவர்களுடைய மனச்சாட்சி அவர்களுக்கு விரோதமாகச் சாட்சியிடுகிறது. பேதுருவின் ஒவ்வொரு வசனமும் ஜனங்களுடைய இருதயத்தைக் குத்துகிறது.

பேதுருவின் பிரசங்கத்தினால் ஜனங்கள் தங்கள் இருதயத்தில் குத்தப்பட்டவர்களாகி தவிக்கிறார்கள். அவர்களுக்கு ஆறுதலும் சமாதானமும் இல்லாமற்போயிற்று. ஆத்தும சமாதானத்தைப் பெற்றுக்கொள்வதற்காக அவர்கள் பேதுருவிடமும் மற்ற அப்போஸ்தலரிடமும், தாங்கள் என்ன செய்யவேண்டுமென்று கேட்கிறார்கள். பேதுரு அவர்களிடத்தில் பிரசங்கம்பண்ண ஆரம்பித்தபோது, அவர்களை "சகோதரரே" என்று அழைத்தான் (அப் 2:29). அவருடைய பிரசங்கத்தைக் கேட்ட ஜனங்களும், பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து "சகோதரரே" என்றே அழைக்கிறார்கள்.

ஜனங்களுக்குப் பேதுருவின்மீதும் மற்ற அப்போஸ்தலர்மீதும் பிரியமும் சிநேகமும் உண்டாயிற்று. கர்த்தருடைய ஊழியக்காரர்கள் ஆவிக்குரிய மருத்துவர்களைப்போல ஊழியம் செய்கிறார்கள். ஊழியக்காரர்கள் ஜனங்களிடம் அந்நியோன்னியமாகப் பழகவேண்டும். ஜனங்களும் ஊழியக்காரர்களிடம் அந்நியோன்னியமாகப் பழகவேண்டும். வைத்தியரிடம் நம்முடைய வியாதியை மறைத்தால் அவரால் நமக்கு தகுந்த சிகிச்சையைக் கொடுக்க முடியாது. ஊழியக்காரர்களிடமும் நம்முடைய நிலமையை மறைப்பதினால் நமக்குப் பிரயோஜனம் உண்டாகாது. நம்முடைய காரியங்களை நாம் மறைத்தால், ஊழியக்காரர்களால் நமக்குப் பிரயோஜனமுள்ள ஆவிக்குரிய ஆலோசனைகளைக் கொடுக்க முடியாது. ஊழியக்காரர்கள் நம்முடைய ஆத்துமாக்களுக்கு வைத்தியராகயிருக்கிறார்கள். அவர்கள் நம்முடைய ஆத்துமாக்களைக் கர்த்தரிடத்தில் அழைத்துச் செல்வதற்கு உத்தரவாதம் பெற்றிருக்கிறார்கள்.

ஜனங்கள் பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து "சகோதரரே நாங்கள் என்ன செய்யவேண்டும்" என்று கேட்கிறார்கள். ஜனங்கள் குழப்பத்திலிருக்கிறார்கள். இருதயத்தில் குத்தப்பட்டவர்களாக பரிதாபமாக நிற்கிறார்கள். தாங்கள் என்னசெய்ய வேண்டுமென்பதே அவர்களுக்குத் தெரியவில்லை. "நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினார்" என்று பேதுரு சொன்ன வார்த்தை, ஜனங்களுடைய இருதயத்தைத் தொடுகிறது. இந்தச் செய்தியினால் அவர்கள் இருதயத்தில் குத்தப்பட்டவர்களாகிறார்கள்.

இயேசுகிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்ததினால் தங்களுடைய நிலமை என்ன ஆகுமோ என்று பயப்படுகிறார்கள். இயேசுவைச் சிலுவையில் அறைந்தபோது இவர்கள் சந்தோஷப்பட்டார்கள். ஆனால் தேவனோ இயேசுவை ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினார் என்னும் செய்தியைக் கேட்டவுடன், இவர்களுடைய சந்தோஷம் துக்கமாக மாறிற்று. இவர்களுடைய உள்ளத்தில் பயமுண்டாயிற்று. தங்களுக்கு நியமிக்கப் பட்டிருக்கிற தண்டனையிலிருந்து தப்பித்துக்கொள்ள, ஏதாவது ஒரு வழி கிடைக்குமென்று நம்பி, அவர்கள் பேதுருவிடமும் மற்ற அப்போஸ்தலரிடமும் "சகோதரரே, நாங்கள் என்ன செய்யவேண்டும்" என்று கேட்கிறார்கள்.

ஜனங்கள் சுற்றி வளைத்துப் பேசவில்லை. நேரடியாகப் பேசவிரும்புகிறார்கள். எதைச் செய்யவேண்டுமோ அதை உடனடியாகச் செய்ய ஆயத்தமாகயிருக்கிறார்கள். இவர்களுடைய பாவம் உணர்த்தப்பட்டிருக்கிறது. தங்களுடைய பாவத்திற்குப் பரிகாரமாக என்ன செய்யவேண்டுமோ அதை உடனே செய்யவேண்டுமென்று விரும்புகிறார்கள். ஒருவருடைய பாவம் உணர்த்தப்படும்போது அவர் சமாதானத்தையும் மன்னிப்பையும் பெற்றுக்கொள்ளும் வழியை அக்கரையோடு தேடிக்கண்டுபிடித்து விடுவார். தான் இரட்சிக்கப்படுவதற்கு என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்வதற்கு உடனடியாக ஆயத்தமாகயிருப்பார். இருதயத்தில் குத்தப்பட்ட ஜனங்கள் இரட்சிப்படுவதற்கு ஆயத்தமாகயிருக்கிறார்கள்.

நீங்கள் மனந்திரும்பி

பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது என்று சொல்லி; (அப் 2:38,39)

பிரசங்கத்தைக் கேட்டவர்கள் இருதயத்தில் குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து "சகோதரரே நாங்கள் என்ன செய்யவேண்டும்" என்று கேட்கிறார்கள். பேதுருவும் மற்ற அப்போஸ்தலரும் காலதாமதம்பண்ணாமல் அவர்கள் செய்ய வேண்டியதை அவர்களுக்கு விவரமாகச் சொல்லுகிறார்கள். பாவிகள் தங்களுடைய பாவங்களைக்குறித்து உணர்த்தப்படும் போது, நாம் அவர்களை மனந்திரும்புவதற்கு உற்சாகப்படுத்த வேண்டும். அவர்களுடைய பாவத்தின் விளைவு மிகவும் மோசமாகயிருக்கலாம். அவர்களுக்கு உதவி தேவைப்படலாம். அவர்கள் மிகவும் பரிதாபமான நிலமையில் இருக்கலாம். அவர்களுடைய சூழ்நிலை எப்படியிருந்தாலும், தங்களுடைய பாவத்தைக்குறித்து மனந்திரும்பும்போது, அவர்களுக்கு இயேசுகிறிஸ்துவில் நம்பிக்கையுள்ளது.

தங்களுடைய பிரசங்கத்தைக் கேட்கிறவர்கள் அடுத்து என்னசெய்யவேண்டுமென்று பேதுரு அவர்களுக்கு வரிசையாகக் கூறுகிறான். முதலாவதாக அவர்கள் மனந்திரும்ப வேண்டும். யோவான்ஸ்நானனும் இயேசுகிறிஸ்துவும் இதே சத்தியத்தையே பிரசங்கம் பண்ணினார்கள். "மனந்திரும்பவேண்டும்" என்னும் அதே சத்தியத்தையே பேதுரு இங்கு மறுபடியும் வலியுறுத்திக் கூறுகிறான். பாவிகள் தங்கள் பாவவழிகளை விட்டு இயேசுகிறிஸ்துவிடம் திரும்பி வரவேண்டும். அவர்களுடைய இருதயத்திலுள்ள பாவமான சிந்தனைகள் அவர்களைவிட்டு நீங்கவேண்டும்.

அவர்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று பேதுரு அவர்களிடத்தில் கூறுகிறான். கிறிஸ்துவின் உபதேசத்தை விசுவாசிக்கவேண்டும். அதை உறுதியாகப் பற்றிக்கொள்ளவேண்டும். இயேசு கிறிஸ்துவைத் தாங்கள் கர்த்தராகவும் இரட்சகராகவும் விசுவாசிப்பதை அவர்கள் வெளிப்படையாக அறிவிக்கவேண்டும். தங்களுடைய அவிசுவாசத்தை நீக்கிப்போடவேண்டும். இவற்றிற்கு அடையாளமாக அவர்கள் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று பேதுரு கூறுகிறான்.

அவர்கள் இயேசுகிறிஸ்துவின் நாமத்தை விசுவாசிக்கவேண்டும். அவரே வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கும் மேசியாவாகிய கிறிஸ்து என்பதை விசுவாசிக்கவேண்டும். இயேசுவே தங்கள் முற்பிதாக்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிற மேசியா என்பதை விசுவாசித்து அவருக்கு மாத்திரமே ஆராதனை செய்யவேண்டும்.

மனந்திரும்புகிற ஒவ்வொருவரும் தங்களுடைய பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளவேண்டும். அவர்கள் ஒவ்வொருவரும் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளவேண்டுமென்று பேதுரு வலியுறுத்திக் கூறுகிறான். அவர்கள் எவ்வளவு பெரிய பாவிகளாகயிருந்தாலும், அவர்கள் மனந்திரும்பி விசுவாசிக்கும் போது, அவர்களும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளலாம். எல்லோரையும் இரட்சிப்பதற்கு இயேசுகிறிஸ்துவின் கிருபை போதுமானது. இயேசுகிறிஸ்து கிருபையும் இரக்கமும் மிகுந்தவர். தம்மிடத்தில் வருகிற யாரையும் புறம்பே தள்ளிவிடாதவர். அவர் பாவத்தை வெறுத்தாலும் பாவிகளைச் சிநேகித்து அவர்களை இரட்சிக்கிறவர்.

மனந்திரும்புகிறவர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று பேதுரு கூறுகிறான். அவர்கள் தங்கள் பாவத்திலிருந்து மனந்திரும்பவேண்டும். தங்கள் பாவத்தில் அவர்கள் அழிந்துபோய் விடக்கூடாது. இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் விசுவாசம் வைத்து அவர்கள் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளவேண்டும். இந்தச் சத்தியத்தினால் அவர்கள் நீதிமான்களாக்கப்படுகிறார்கள். இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் நாம் ஞானஸ்நானம் எடுக்கும்போது, நம்முடைய இரட்சிப்புக்கு நாம் இயேசுகிறிஸ்துவையே பூரணமாகச் சார்ந்துகொள்ளவேண்டும்.

மனந்திரும்பி இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்போது, அவர்கள் பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெற்றுக்கொள்வார்கள். யாரெல்லாம் பாவ மன்னிப்பைப் பெற்றுக் கொள்கிறார்களோ அவர்களெல்லோருமே பரிசுத்த ஆவியின் வரத்தையும் பெற்றுக்கொள்வார்கள்.

வாக்குத்தத்தமானது அவர்களுக்கும் அவர்களுடைய பிள்ளைகளுக்கும் உண்டாயிருக்கிறது. ஆகையினால் பேதுரு இங்கு உபதேசம்பண்ணுகிற சத்தியம், அதைக் கேட்போருக்கும் அவர்களுடைய பிள்ளைகளுக்கும் உண்டாயிருக்கிறது. பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்டு யூதர்கள் ஒருவேளை தங்கள் பிள்ளைகளைப்பற்றி நினைத்திருக்கலாம். "சகோதரரே நாங்கள் என்ன செய்ய வேண்டும்" என்று கேட்டவர்கள், "சகோதரரே எங்கள் பிள்ளைகள் என்ன செய்யவேண்டும்" என்றும் கேட்டிருக்கலாம். இவர்களைப்போலவே இவர்களுடைய பிள்ளைகளும் மனந்திரும்பி, அவர்கள் ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளவேண்டும். அப்போது அவர்களும் பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெற்றுக்கொள்வார்கள். ஏனெனில் வாக்குத்தத்தமானது அவர்களுக்கு உண்டாயிருப்பது போலவே, அவர்களுடைய பிள்ளைகளுக்கும் உண்டாயிருக்கிறது.

பேதுரு தேவனுடைய வாக்குத்தத்தத்தைப்பற்றிச் சொல்லும்போது, அது யூதருக்கும், அவர்களுடைய பிள்ளைகளுக்கும், அத்தோடு "நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது" என்று கூறுகிறான். இத்தனை பேர்தான் இரட்சிக்கப்பட முடியும் என்று எந்தவிதமான வரையறையும் இல்லை. யாரெல்லாம் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து, தங்களுடைய பாவங்களுக்காக மனந்திருந்துகிறார்களோ அவர்களெல்லோருமே இரட்சிக்கப்பட முடியும். அவர்களெல்லோருமே இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளலாம். அவர்களெல்லோருமே பரிசுத்த ஆவியின் வரத்தைப்பெற்றுக்கொள்ளலாம். தேவன் சமீபத்திலுள்ளவர்களை மாத்திரமல்ல, தூரத்திலுள்ளவர்களையும் நேசிக்கிறார். அவர்களையும் இரட்சிக்கிறார். தேவனுடைய அழைப்பு உலக முழுவதிலுமுள்ள எல்லா ஜனங்களுக்கும் கொடுக்கப்படுகிறது. தேவனிடத்தில் பட்சபாதம் எதுவுமில்லை.

இன்னும் அநேக வார்த்தைகள்

இன்னும் அநேக வார்த்தைகளாலும் சாட்சிகூறி, மாறுபாடுள்ள இந்தச் சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள் என்றும் புத்திசொன்னான் (அப் 2:40).

பேதுரு ஜனங்களுக்கு மனந்திரும்புவதைப்பற்றியும், ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வதைப்பற்றியும் கூறிய பின்பு, இன்னும் அநேக வார்த்தைகளையும் அவர்களுக்கு எச்சரிப்பாக கூறுகிறான். மனந்திரும்புவது, ஞானஸ்நானம் பெறுவது ஆகியவை ஆவிக்குரிய ஜீவியத்தில் ஆரம்ப நிலைகள் மாத்திரமேயாகும். இதற்கு பின்னும் அவர்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சி பெறவேண்டும். அவர்கள் ஆவிக்குரிய ஜீவியத்திற்குத் தேவையான ஆரம்ப சத்தியத்தை மாத்திரமே இதுவரையிலும் கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இன்னும் அதிகமான உபதேசம் தேவைப்படுகிறது.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் பல உபதேசங்களைக் கேட்கிறோம். அவைகள் நம்முடைய ஆத்துமாவுக்கு நன்மை செய்கிறது. இதில் நாம் திருப்தியடைந்து, இன்னும் அதிகமான உபதேசங்களைக் கேட்கக்கூடாதவாறு நம்முடைய செவிகளை அடைத்துக்கொள்ளக்கூடாது. இன்னும் அதிகமான உபதேசங்களைக் கேட்பதற்கு நாம் எப்போதுமே ஆர்வமுள்ளவர்களாக இருக்கவேண்டும்.

மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று உபதேசம்பண்ணிய பின்பு, பேதுரு அவர்களிடம் "மாறுபாடுள்ள இந்தச் சந்ததியை விட்டுவிலகி உங்களை இரட்சித்துக்கொள்ளுங்கள்" என்று புத்தி சொல்லுகிறான். பாவிகள் தங்கள் பாவத்தினால் அழிந்துபோவார்கள். இரட்சிக்கப்பட்டவர்கள் அந்த பேரழிவிலிருந்து தங்களைக் காத்துக் கொள்ளவேண்டும். அவர்கள் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றால் மாத்திரம் போதாது. இந்த உலகத்தின் பாவமான பழக்க வழக்கங்களுக்கு அவர்கள் தங்களை விலக்கிக் காத்துக்கொள்ள வேண்டும்.

கர்த்தருடைய பிள்ளைகள் இந்தப் பிரபஞ்சத்தின் பாவகிரியைகளுக்கு பங்காளிகளாகயிருக்கக் கூடாது. மனந்திரும்பி இரட்சிக்கப்பட்டவர்கள் தங்களுடைய பழைய பாவங்களில் தொடர்ந்து ஜீவித்துக்கொண்டிருக்கக் கூடாது. இரட்சிக்கப்பட்டவர்கள் தங்கள் பாவங்களை விட்டு விலகிவரவேண்டும். அத்துடன் மாறுபாடுள்ள இந்தச் சந்ததியைவிட்டும் விலகி வரவேண்டும். அவர்களுடைய பாவகிரியைகளில் விசுவாசிகள் பங்குபெறக்கூடாது. அவர்கள் கொள்ளைநோயைப்போல இருக்கிறார்கள். அவர்களுடைய பாவம் தொற்றுநோயைப்போன்றது. அவர்களோடு நாம் ஐக்கியம் வைத்திருப்போமென்றால், தொற்றுநோய் பரவுவதுபோல, அவர்களுடைய பாவபழக்கவழக்கங்கள் நமக்கும் வருவதற்கு வாய்ப்புள்ளது. ஆகையினால் மாறுபாடுள்ள இந்தச் சந்ததியை விட்டுவிலகி நாம் நம்மை இரட்சித்துக்கொள்ளவேண்டும்.

துன்மார்க்கரிடமிருந்து நம்மை இரட்சித்துக்கொள்வதற்கு ஒரே ஒரு வழி மாத்திரமே உள்ளது. துன்மார்க்க ஜனங்களைவிட்டு நாம் விலகியிருப்பது மாத்திரமே அந்த ஒரே வழியாகும். ஒருவன் பிரவாகித்து ஓடும் காட்டாற்றில் குதிக்கும்போது, அந்த ஆற்றில் அவனுக்கு அடித்துச் செல்லப்படும் ஆபத்துள்ளது. தனக்கு நீச்சல் தெரியுமென்றும், எதிர்நீச்சல் செய்வதற்கு தன்னிடத்தில் பெலனுள்ளது என்றும் அவன்தன் சுயபலத்தை நம்பக்கூடாது. காட்டாற்றில் விழுந்துவிட்ட பின்பு, நம்மால் எதிர்நீச்சல் போடமுடியவில்லையென்றால், நாம் காட்டாற்றின் வேகத்தில் அடித்துச் செல்லப்படுவது நிச்சயம். துன்மார்க்கரும் காட்டாற்றைப்போலவே இருக்கிறார்கள். அவர்களோடு நாம் சவகாசம் வைத்துக்கொள்ளும்போது, அவர்களுடைய பழக்கவழக்கங்கள் நம்மை ஆளுகை செய்துவிடும் பேராபத்து உள்ளது. ஆகையினால் மாறுபாடான இப்பிரபஞ்சத்தின் சந்ததியைவிட்டு விலகி நாம் நம்மை இரட்சித்துக்கொள்ள வேண்டும்.

தங்களுடைய பாவங்களுக்காக மெய்யாகவே மனந்திரும்புகிறவர்கள், தங்களை இயேசுகிறிஸ்துவிடம் பூரணமாக ஒப்புக்கொடுத்துவிடவேண்டும். நாம் இயேசுகிறிஸ்துவில் மெய்யாகவே விசுவாசம் வைத்திருக்கிறோம் என்பதையும், அவரையே ஆராதிக்கிறோம் என்பதையும், அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடக்கிறோம் என்பதையும், நாம் இந்த மாறுபாடுள்ள சந்ததியைவிட்டு விலகுவதன் மூலமாக நிரூபிக்கவேண்டும். பாவிகளோடு நமக்குள்ள எல்லா ஐக்கியத்தையும் அகற்றிவிட்டு, இயேசுகிறிஸ்துவோடும் அவருடைய பரிசுத்தவான்களோடும் முழுமையாக ஐக்கியமாயிருக்கவேண்டும்.

ஞானஸ்நானம் பெற்றார்கள்

அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையத்தினம் ஏறக்குறைய மூவாயிரம்பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள் (அப் 2:41).

பேதுரு பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு பிரசங்கம்பண்ணுகிறான். பரிசுத்த ஆவியானவரே பேதுருவின் வாயின் மூலமாகப் பேசுகிறார். ஆவியானவர் அற்புதங்களையும் அதிசயங்களையும் நடப்பித்து தம்முடைய வார்த்தையை உறுதிபண்ணுகிறார். பேதுருவின் பிரசங்கத்தை ஏராளமான ஜனங்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இவர்களில் அநேகர் இயேசுகிறிஸ்து கல்வாரி சிலுவையில் அறையப் பட்டதற்குச் சாட்சிகளாகயிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து தம்முடைய ஜீவனை சிலுவையில் ஒப்புக்கொடுத்ததையும் இவர்களில் அநேகர் பார்த்திருக்கிறார்கள். அப்போதெல்லாம் மனந்திரும்பாதவர்கள், இப்போது இரட்சிப்பின் செய்தி பிரசங்கிக்கப்படும்போது, அதைக்கேட்டு, அவர்கள் தங்கள் இருதயங்களில் குத்தப்பட்டவர்களாகயிருக் கிறார்கள். இரட்சிப்பின் செய்தி அவர்களுடைய மனச்சாட்சியில் பேசுகிறது. அவர்களுடைய இருதயத்தைக் குத்துகிறது.

பிரசங்கச் செய்தியைக் கேட்டவர்கள் வார்த்தையைப் பெற்றுக்கொள்கிறார்கள். கர்த்தருடைய வார்த்தை மாத்திரமே நம்மை ஆசீர்வதிக்கும். அந்த வார்த்தையை நம்முடைய இருதயத்தில் பெற்றுக்கொண்டால் மாத்திரமே நமக்கு ஆசீர்வாதமுண்டு. ஆகையினால் இயேசுகிறிஸ்துவின் வார்த்தையைக் கேட்பதற்கும், இருதயத்தில் ஏற்றுக்கொள்வதற்கும் நாம் எப்போதுமே ஆயத்தமாகயிருக்கவேண்டும். பேதுரு இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷ வார்த்தையைப் பேசினான். அந்த வார்த்தையை அவர்கள் சந்தோஷமாக ஏற்றுக்கொண்டார்கள்.

இயேசுகிறிஸ்து பேசிய வார்த்தையை ஏரோது ராஜாவும் தன்னுடைய காதுகளால் கேட்டான். ஆனால் அவருடைய வார்த்தைகளை அவன் தன் இருதயத்தில் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் இங்கோ பேதுருவின் மூலமாக வெளிப்பட்ட கிறிஸ்துவின் வார்த்தையை இவர்கள் சந்தோஷமாக ஏற்றுக்கொள்கிறார்கள். இவர்கள் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெறுகிறார்கள். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நியமனம்பண்ணிய ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொண்டு, இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றுகிற சீஷர்களின் கூட்டத்தில் இவர்களும் தங்களை இணைத்துக்கொள்கிறார்கள்.

இயேசு கிறிஸ்துவின் உடன்படிக்கையைப் பெற்றுக் கொள்கிறவர்கள் ஞானஸ்நானமும் பெற்றுக்கொள்ளவேண்டும். அன்றைய தினம் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டவர்கள் ஏறக்குறைய மூவாயிரம் பேர். இவர்களெல்லோரும் சபையில் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டவர்கள், தங்கள் வாய்களைச் சுவிசேஷச் செய்தியைப் பிரசங்கம்பண்ணுவதற்கும், தங்கள் கைகளை ஞானஸ்நானம் கொடுப்பதற்கும் பயன்படுத்துகிறார்கள். மிகப்பெரிய ஆத்தும அறுவடை உண்டாயிற்று.

சீஷர்களெல்லோரும் சுறுசுறுப்பாக ஆத்துமாக்களை அறுவடை செய்கிறார்கள். அப்பங்களையும் மீன்களையும் வைத்து ஆயிரக்கணக்கான ஜனங்களுக்குப் போஜனம் கொடுப்பதைவிட, மூவாயிரம் பேருக்கு ஞானஸ்நானம் கொடுப்பது மிகப்பெரிய வேலையாகும். சீஷர்கள் இந்த ஊழியத்தை உற்சாகமாகச் செய்கிறார்கள். ஞானஸ்நானம் பெற்றவர்களைச் சீஷர்கள் தங்களிடத்தில் சேர்த்துக்கொள்கிறார்கள். நாம் கர்த்தரை நம்முடைய தேவனாக ஏற்றுக்கொள்ளும்போது, அவருடைய பிள்ளைகளையும் நம்முடைய ஆவிக்குரிய சகோதர சகோதரிகளாக ஏற்றுக்கொள்ளவேண்டும்.

இரட்சிக்கப்படுகிறவர்கள்
அப் 2 : 42-47

அப் 2:42. அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்.

அப் 2:43. எல்லாருக்கும் பயமுண்டாயிற்று. அப்போஸ்தலர்களாலே அநேக அற்புதங்களும் அடையாளங்களும் செய்யப்பட்டது.

அப் 2:44. விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித்தார்கள்.

அப் 2:45. காணியாட்சிகளையும் ஆஸ்திகளையும் விற்று, ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத் தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்துகொடுத்தார்கள்.

அப் 2:46. அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்து, வீடுகள்தோறும் அப்பம்பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம்பண்ணி,

அப் 2:47. தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந்தார்கள். இரட்சிக்கப் படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார்.

உறுதியாய் தரித்திருந்தார்கள்

அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள் (அப் 2:42).

ஆதித்திருச்சபையின் வரலாறு இந்த வசனத்தில் ஆரம்பமாகிறது. இது சபையின் குழந்தைப்பருவத்தைப்போல இருக்கிறது. சிறு குழந்தை கள்ளம் கபடமில்லாமல் இருக்கும். அதுபோலவே இந்த ஆதித்திருச்சபையானது கள்ளம் கபடமில்லாமல் கர்த்தரையே பூரணமாகச் சார்ந்திருக்கிறது. விசுவாசிகளின் இருதயம் கபடமில்லாதிருக்கிறது.

ஆதித்திருச்சபையின் விசுவாசிகள் கர்த்தர் நியமித்த பரிசுத்த நியமங்களை மனப்பூர்வமாகக் கடைபிடித்து வருகிறார்கள். இவர்களுடைய ஆத்துமாக்கள் தேவனோடு ஐக்கியமாகயிருக்கிறது. கர்த்தருடைய வார்த்தையின் பிரகாரமாக ஆதித்திருச்சபையின் விசுவாசிகள் ஜீவிக்கிறார்கள். அவர்களுக்கு அப்போஸ்தலருடைய உபதேசம் கொடுக்கப்படுகிறது. தேவவசனத்தை அவர்கள் அதிகமாய் பிரசங்கம் பண்ணுகிறார்கள். அப்போஸ்தலருடைய உபதேசத்தில் தரித்திருக்கிறார்கள். யாரெல்லாம் இயேசுகிறிஸ்துவைத் தங்களுடைய இரட்சகராக ஏற்றுக் கொள்கிறார்களோ அவர்களெல்லோரும் தேவனுடைய வசனத்தைக் கருத்தாய் கேட்கவேண்டும். வசனத்தைப் பயபக்தியாய் தியானிக்கவேண்டும்.

சீஷர்கள் ஒவ்வொருவரும் அந்நியோன்னியத்தில் தரித்திருக்கிறார்கள். அவர்கள் பரிசுத்தவான்களுடைய ஐக்கியத்தைக் காத்துக்கொள்கிறார்கள். அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய் தேவாலயத்திலே அனுதினமும் தரித்திருக்கிறார்கள் (அப் 2:46). அவர்கள் எங்கு சென்றாலும் ஐக்கியமாகயிருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவின் சீஷர் யாராவது ஒருவர் ஓரிடத்திலிருந்தால், மற்ற சீஷர்களும் அங்கு இருப்பார்கள். ஒரு பறவையின் இறகுகள் அதன் சிறகில் சேர்ந்திருப்பதுபோல, சீஷர்கள் ஐக்கியமாகயிருக்கிறார்கள்.

சீஷர்கள் ஒருவரையொருவர் நேசிக்கிறார்கள். ஒருவர்மீது ஒருவர் அன்புகூருகிறார்கள். ஆவிக்குரிய ஆராதனையில் அவர்கள் ஐக்கியமாகயிருக்கிறார்கள். தேவாலயத்தில் விசுவாசிகள் கூடிவருகிறார்கள். விசுவாசிகள் எல்லோருமாகச் சேர்ந்து தேவனை ஆராதிக்கிறார்கள். அவர்கள் அனுதினமும் தேவாலயத்திற்கு வருகிறார்கள். நாமும் கர்த்தரை அனுதினமும் ஆராதிக்க வேண்டும். விசுவாசிகளெல்லோரும் ஒருமனப் பட்டவர்களாகயிருக்கிறார்கள். அவர்களுக்குள் பிரிவினையோ, கருத்து வேறுபாடோ எதுவுமில்லை. விசுவாசிகளெல்லோரும் பரிசுத்த அன்பினால் கட்டப்பட்டிருக்கிறார்கள்.

கர்த்தர் தம்முடைய சபைக்கு திருவிருந்தை ஒரு பரிசுத்த நியமமாக நியமித்திருக்கிறார். கர்த்தருடைய பந்தியை விசுவாசிகள் அடிக்கொருதரம் ஆசரிக்கிறார்கள். அப்பம் பிட்குதலில் விசுவாசிகள் தரித்திருக்கிறார்கள். அவர்கள் வீடுகள்தோறும் அப்பம் பிட்கிறார்கள். விசுவாசிகள் தேவனுடைய பரிசுத்த நியமத்தை தனிநபர்களுடைய வீடுகளிலும் ஆசரிக்கிறார்கள்.

ஆதித்திருச்சபையின் விசுவாசிகள் எருசலேமைவிட்டு ஒவ்வொரு ஊருக்கும் சென்று அங்கு கர்த்தருடைய சுவிசேஷச் செய்தியைப் பிரசங்கம்பண்ணுகிறார்கள். அந்தந்த ஊர்களிலுள்ள ஜெபாலயங்களிலும், ஜெபாலயங்கள் இல்லாத ஊர்களில், விசுவாசிகளுடைய வீடுகளிலும் அப்பம் பிட்டு ஜெபம் பண்ணுகிறார்கள். ஆதித்திருச்சபையில் விசுவாசிகள் கர்த்தரை ஆராதிப்பதற்காக எங்கெல்லாம் கூடுகிறார்களோ அங்கெல்லாம் அவர்கள் அப்பம் பிட்கிறார்கள்.

ஆதித்திருச்சபையின் விசுவாசிகள் ஜெபம்பண்ணுதலில் உறுதியாய் தரித்திருக் கிறார்கள். பரிசுத்த ஆவியானவர் சீஷர்களை நிரப்பிய பின்பும், நிரப்புவதற்கு முன்பும், சீஷர்கள் ஜெபத்தில் ஒருமனப்பட்டுத் தரித்திருக்கிறார்கள். பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொண்டதினால் சீஷர்கள் ஜெபம் பண்ணுவதை நிறுத்திவிடவில்லை. அவர்கள் தொடர்ந்து ஜெபம்பண்ணுகிறார்கள். ஜெபத்தில் கர்த்தரைத் துதிக்கிறார்கள். அவர்கள் தேவனைத் துதித்து ஜனங்களெல்லோரிடத்திலும் தயவு பெற்றிருக்கிறார்கள் (அப் 2:47).

அற்புதங்களும் அடையாளங்களும்

எல்லாருக்கும் பயமுண்டாயிற்று. அப்போஸ்தலர்களாலே அநேக அற்புதங்களும் அடையாளங்களும் செய்யப்பட்டது (அப் 2:43).

தம்மை விசுவாசிக்கிறவர்களைத் தேவன் தம்முடைய பிள்ளைகளாக அங்கீகரித்து தம்மிடமாகச் சேர்த்துக் கொள்கிறார். தம்முடைய பரிசுத்த பிரசன்னம் அவர்களோடு கூடயிருப்பதை அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும் உறுதி பண்ணுகிறார். அப்போஸ்தலர்களாலே அநேக அற்புதங்களும் அடையாளங்களும் செய்யப்பட்டது. இவர்கள் செய்த அற்புங்களெல்லாமே இவர்களுக்கும் பிர யோஜனமாகயிருந்தது. மற்றவர்களுக்கும் ஆசீர்வாதமாகயிருந்தது. இதனால் ஏராளமானோர் இரட்சிக்கப் படுகிறார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார். அப்போஸ்தலர்களுடைய வாயிலிருந்து புறப்பட்ட வார்த்தைகள் அற்புங்களைச் செய்தது. தேவன் அவர்களுடைய பிரயாசங்களை ஆசீர்வதித்தார்.

அப்போஸ்தலர்களாலே அநேக அற்புதங்களும் அடையாளங்களும் செய்யப்பட்டதினாலே, எல்லோருக்கும் பயமுண்டாயிற்று. ஒவ்வொரு ஆத்துமாவின்மீதும் பயம் வந்தது. பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளைத் தம்முடைய ஆவியினால் நிரப்பியிருக்கிறார். அவர்கள் ஆவியானவரின் பெலத்தினாலும் அநேக வரங்களினாலும் நிரப்பப்பட்டிருக்கிறார்கள். வரங்கள் மெய்யாகவே கனத்திற்குரியவை. வரங்களைப் பெற்றிருக்கிற விசுவாசிகளை ஜனங்கள் கனம்பண்ணுகிறார்கள். அவர்கள் மூலமாக நடைபெறும் அற்புதங்களையும் அடையாளங்களையும் பார்த்து பயப்படுகிறார்கள்.

அப்போஸ்தலருடைய பிரசங்கத்தையும், வாழ்க்கையையும் பார்த்து ஜனங்களுக்குப் பயமுண்டாயிற்று. அவர்களுடைய பேச்சும் கிரியைகளும் சாதாரண ஜனங்களுடைய பேச்சுக்களைப் போலவோ கிரியைகளைப் போலவோ இல்லை. அவர்களுடைய பேச்சில் தேவனுடைய அன்பும் அதிகாரமும் வெளிப்பட்டது. அவர்களுடைய கிரியைகளில் அற்புதங்களும், அடையாளங்களும், பரிசுத்தமும் வெளிப்பட்டது. இதனால் அவர்கள் ஜனங்களெல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந்தார்கள்.

பொதுவாய் வைத்து அனுபவித்தார்கள்

விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித்தார்கள் (அப் 2:44).

விசுவாசிகளெல்லோரும் தேவனைத் துதிக்கிறார்கள். துதித்துக் கொண்டேயிருக்கிறார்கள். ஒவ்வொரு ஜெபத்திலும் விசுவாசிகள் எல்லாரும் பங்குபெறுகிறார்கள். உலகப்பிரகாரமான காரியங்களைத் தெருக்களில் கூடி பேசுவதற்குப் பதிலாக, சீஷர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோன்னியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய் தரித்திருக்கிறார்கள். தேவனைத் துதிக்கிறார்கள். விசுவாசிகள் ஒருவரையொருவர் நேசிக்கிறார்கள். அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய் தேவாலயத்தில் அனுதினமும் தரித்திருக்கிறார்கள். வீடுகள்தோறும் அப்பம் பிட்கிறார்கள். மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம்பண்ணுகிறார்கள்.

விசுவாசிகளெல்லோரும் ஒருமித்திருக்கிறார்கள். ஒவ்வொருவர்மீதும் அன்பை பரிமாறிக்கொள்வதற்காக அவர்கள் ஒருமித்திருக்கிறார்கள். விசுவாசிகளெல்லோரும் ஒருமித்து கூடிவருவதினால் அவர்களுடைய அந்நியோன்னிய ஐக்கியமும், சகோதர சிநேகமும் அதிகரிக்கிறது. அவர்கள் சகலத்தையும் பொதுவாய் வைத்து அனுபவிக்கிறார்கள். ஏதாவது ஒரு விசுவாசிக்கு தேவை ஏற்படும்போது, வேறொரு விசுவாசி அவருக்கு உடனடியாக உதவிசெய்ய ஆயத்தமாகயிருக்கிறார். சிநேகப் பிரமாணத்தின் பிரகாரம் விசுவாசிகள் தங்களுக்குரிய எல்லாவற்றையும், தங்களுக்கு மாத்திரம் என்று வைத்துக் கொள்ளாமல், எல்லா விசுவாசிகளுக்கும் பொதுவாக வைத்து அனுபவிக்கிறார்கள்.

விசுவாசிகள் ஒருமனப்பட்டவர்களாய் மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம் பண்ணுகிறார்கள். போஜனம்பண்ணும்போது தங்களிடத்திலுள்ள ஆசீர்வாதங்களை மற்றவர்களுக்கும் பகிர்ந்து கொடுக்கிறார்கள். மற்றவர்களுக்கு பகிர்ந்துகொடுக்கும்போது விசுவாசிகள் மத்தியில் சந்தோஷமுண்டாயிற்று. அவர்களுடைய இருதயம் பரிசுத்தமான சந்தோஷத்தினால் நிரப்பப்படுகிறது. பிறருக்கு உதவிசெய்யவேண்டும் என்னும் நல்ல எண்ணம் விசுவாசிகளின் இருதயத்தில் நிரம்பியிருக்கிறது.

விசுவாசிகளில் தரித்திரராகயிருக்கிற சகோதரர்களுக்கு மற்ற விசுவாசிகள் தாராளமாக உதவிசெய்கிறார்கள். அவர்கள் ஒருமனப்பட்டுப் போஜனம் பண்ணுகிறார்கள். அவர்களுடைய இருதயமும் தாராளமாக இருக்கிறது. அவர்கள் யாரும் தனியாகப் போஜனம்பண்ணுவதில்லை. எல்லா விசுவாசிகளையும் ஒன்றுகூட்டிச் சேர்த்து, ஒருமனப்பட்டு, மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம் பண்ணுகிறார்கள். விசுவாசிகளின் இருதயமும் திறந்திருக்கிறது. அவர்களுடைய கரங்களும் திறந்திருக்கிறது.

பகிர்ந்து கொடுத்தார்கள்

காணியாட்சிகளையும் ஆஸ்திகளையும் விற்று, ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத் தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்துகொடுத்தார்கள் (அப் 2:45).

விசுவாசிகள் தங்கள் காணியாட்சிகளையும் ஆஸ்திகளையும் விற்று அதனால் கிடைக்கும் பணத்தை தங்களுக்கென்று வைத்துக்கொள்ளாமல், எல்லோருக்கும் பயன்படும் விதத்தில் அதைப் பொதுவான பணமாக மாற்றுகிறார்கள். விசுவாசிகளில் தரித்திரராகயிருக்கிற ஒவ்வொருவருக்கும் தேவையானதற்குத்தக்கதாக அவைகளில் பகிர்ந்துகொடுக்கிறார்கள். விசுவாசிகள் இப்படிச் செய்வதினால் தங்களுடைய காணியாட்சிகளையோ அல்லது தங்களுடைய ஆஸ்திகளையோ அவர்கள் அழித்துப்போடவில்லை. அவர்கள் மாத்திரமே தங்களுடைய சுயநலத்தை அழித்துப்போடுகிறார்கள்.

ஒரு சமயம், ஐசுவரியவான் ஒருவன் இயேசுகிறிஸ்துவிடம் வந்து, நித்திய ஜீவனைப்பெற்றுக்கொள்வதற்கு தான் என்ன செய்யவேண்டும் என்று அவரிடம் கேட்கிறான். இயேசுகிறிஸ்து அவனிடம், அவனுக்குள்ளதை விற்று தரித்திரருக்குக் கொடுக்குமாறு கூறுகிறார். இயேசுகிறிஸ்து இந்த ஐசுவரியவானுக்குக் கூறிய, தங்களுக்குக் கொடுத்திருக்கும் கட்டளையாக எல்லா விசுவாசிகளும் எடுத்துக்கொள்வதில்லை. ஐசுவரியவான் தன் ஐசுவரியத்தின்மீது அதிக நம்பிக்கை வைத்திருக்கிறான். அவனுக்கு மெய்யான ஐசுவரியத்தைப்பற்றி உணர்த்துவதற்காக இயேசுகிறிஸ்து அவனிடம் அவ்வாறு சொன்னார்.

இயேசுகிறிஸ்து நம்முடைய சொத்துக்களையெல்லாம் விற்று தரித்திரருக்குக் கொடுக்கவேண்டுமென்று சொல்லவில்லை. அனனியா தன் நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்து வைத்துக்கொண்டான். பேதுரு அவனிடத்தில் "அதை விற்குமுன்னே அது உன்னுடையதாயிருக்கவில்லையோ" (அப் 5:4) என்று கூறுகிறான். கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கும் சொத்துக்களை பயபக்தியோடு நிர்வாகம்பண்ணவேண்டும். எல்லாவற்றையும் விற்று தரித்திரருக்குக் கொடுக்கவேண்டும் என்னும் நியதி வேதத்தில் சொல்லப்படவில்லை. ஆனால் கர்த்தருடைய பிள்ளைகளெல்லோருமே தரித்திரருக்கு உதவி செய்யவேண்டும் என்று வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்கு கடன்கொடுக்கிறான்.

ஆதித்திருச்சபையின் விசுவாசிகள் உதாரத்துவக் குணத்தோடிருக்கிறார்கள். மற்ற விசுவாசிகளைத் தங்களைப்போலவே நேசிக்கிறார்கள். தரித்திரர்மீது கரிசனையோடிருக்கிறார்கள். ஆதித் திருச்சபை ஆரம்ப நிலையிலிருந்தாலும், விசுவாசிகளிடத்தில் ஆவியின்கனி அதிகமாய்க் காணப்படுகிறது. விசுவாசிகளுடைய அன்பையும், தியாகத்தையும், ஜெபத்தையும் பார்த்து ஏராளமான ஜனங்கள் இயேசு கிறிஸ்துவிடம் வருகிறார்கள். கர்த்தர் நம்மை ஆசீர்வதித்திருக்கிற அளவின் பிரகாரம் நாம் கர்த்தருடைய ஊழியத்திற்குக் கொடுக்கவேண்டும். அந்த அளவின் பிரகாரமே தரித்திரருக்கு உதவிபுரியவேண்டும். விசுவாசிகளில் ஐசுவரியவான்களாக இருக்கிறவர்களும் கொடுக்கவேண்டும். தரித்திரராக இருக்கிறவர்களும் கொடுக்கவேண்டும். எல்லோரும் ஒருவருக்கொருவர் உதவிசெய்யவேண்டும்.

தயவு பெற்றிருந்தார்கள்

அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய் அநுதினமும் தேவாலயத்திலே தரித்திருந்து, வீடுகள்தோறும் அப்பம்பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம்பண்ணி, தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந்தார்கள். இரட்சிக்கப் படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார் (அப் 2:46,47).

இயேசுகிறிஸ்துவையும் அவருடைய சீஷர்களையும் யூதஜனங்கள் வெறுத்தார்கள். இயேசுவைச் சிலுவையில் அறைந்தார்கள். யூதர்கள் மத்தியிலே சீஷர்கள்மீது இன்னும் வெறுப்பு இருக்கிறது. ஆனாலும் ஏராளமான ஜனங்கள் இப்போது சீஷர்கள்மீது பிரியமாகயிருக்கிறார்கள். அவர்களுக்குத் தயவு காண்பிக்கிறார்கள். "இயேசுவைச் சிலுவையில் அறையும்" என்று இந்த ஜனங்கள் பிலாத்துவுக்கு முன்பாக கூக்குரலிட்டாலும், இந்தக் கூக்குரல் இவர்களுடைய இருதயத்திலிருந்து வரவில்லை. பிரதான ஆசாரியருடைய தூண்டுதலினாலும், வஞ்சகத்தினாலுமே, இவர்கள் பிலாத்துவுக்கு முன்பாக இயேசுவுக்கு விரோதமாகக் கூக்குரலிட்டார்கள்.

இப்போதோ இவர்கள் தங்கள் இருதயங்களில் குத்தப்பட்டவர்களாகி, மனந் திரும்பியிருக்கிறார்கள். அப்போஸ்தலர்கள் இவர்களிடத்தில் இப்போது தயவு பெற்றிருக்கிறார்கள். பிரதான ஆசாரியருடைய சூழ்ச்சிகளிலிருந்து இந்த ஜனங்கள் விடுதலைபெற்றிருக்கிறார்கள். இவர்கள் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைத் தங்கள் இருதயங்களில் ஏற்றுக் கொள்கிறார்கள்.

நாம் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே, பிரதிபலன் பாராமல், தொடர்ந்து நன்மை செய்யும்போது, நாமும் மனுஷரிடத்திலே தயவு பெறுவோம். கர்த்தரைச் சந்தோஷமாக ஆராதிக்கும் போது தேவனுடைய கிருபை நமக்குப் பெருகும். ஒவ்வொருநாளும் ஜனங்கள் அப்போஸ்தலரிடத்தில் வந்து "சகோதரரே நாங்கள் என்னசெய்யவேண்டும்" என்று கேட்கிறார்கள். அப்போஸ்தலர்கள் அவர்கள் இரட்சிக்கப்படுவதற்கு உபதேசம் பண்ணுகிறார்கள். இரட்சிக்கப் படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார்.

3 அதிகாரம்

அப்போஸ்தலர் மூன்றாம் அதிகாரத்தில் இயேசுகிறிஸ்து தம்முடைய அப்போஸ்தலர் மூலமாக செய்த ஒரு அற்புதமும், பேதுருவின் ஒரு பிரசங்கமும் எழுதப்பட்டிருக்கிறது. தாயின் வயிற்றிலிருந்து சப்பாணியாய் பிறந்த ஒரு மனுஷன் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே அற்புதமாகக் குணமாக்கப்படுகிறான் (அப் 3:1-8). சப்பாணி எழும்பி நடப்பதைக்கண்டு ஜனங்கள் ஆச்சரியப்பட்டு பிரமிக்கிறார்கள் (அப் 3:9-11). யூதர்கள் இயேசுகிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்து பாவம் செய்தார்கள். அவர்கள் மனந்திரும்பி இயேசு கிறிஸ்துவினிடத்தில் வரவேண்டுமென்று பேதுரு பிரசங்கம் பண்ணுகிறான் (அப் 3:12-19). இயேசுகிறிஸ்து மகிமையடைந்திருக்கிறார். இயேசுவைக் கிறிஸ்து என்று யூதர்கள் விசுவாசிக்கவேண்டுமென்று பேதுரு தன்னுடைய பிரசங்கச் செய்தியில் வலியுறுத்துகிறான்.

சப்பாணி நடந்தான்
அப் 3 : 1-8

அப் 3:1. ஜெபவேளையாகிய ஒன்பதாம்மணி நேரத்திலே பேதுருவும் யோவானும் தேவாலயத்துக்குப் போனார்கள்.

அப் 3:2. அப்பொழுது தன் தாயின் வயிற்றிலிருந்து சப்பாணியாய்ப் பிறந்த ஒரு மனுஷனைச் சுமந்துகொண்டு வந்தார்கள்; தேவாலயத்திலே பிரவேசிக்கிறவர்களிடத்தில் பிச்சை கேட்கும்படி, நாடோறும் அவனை அலங்கார வாசல் என்னப்பட்ட தேவாலய வாசலண்டையிலே வைப்பார்கள்.

அப் 3:3. தேவாலயத்திலே பிரவேசிக்கப்போகிற பேதுருவையும் யோவானையும் அவன் கண்டு பிச்சைகேட்டான்.

அப் 3:4. பேதுருவும் யோவானும் அவனை உற்றுப்பார்த்து: எங்களை நோக்கிப்பார் என்றார்கள்.

அப் 3:5. அவன் அவர்களிடத்தில் ஏதாகிலும் கிடைக்குமென்று எண்ணி, அவர்களை நோக்கிப்பார்த்தான்.

அப் 3:6. அப்பொழுது பேதுரு: வெள்ளியும் பொன்னும் என்னிடத்தில் இல்லை; என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன்; நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட என்று சொல்லி;

அப் 3:7. வலதுகையினால் அவனைப் பிடித்துத் தூக்கிவிட்டான்; உடனே அவனுடைய கால்களும் கரடுகளும் பெலன்கொண்டது.

அப் 3:8. அவன் குதித்தெழுந்து நின்று நடந்தான்; நடந்து, குதித்து, தேவனைத் துதித்துக்கொண்டு, அவர்களுடனே கூடத் தேவாலயத்திற்குள் பிரவேசித்தான்.

பேதுருவும் யோவானும்

ஜெபவேளையாகிய ஒன்பதாம் மணி நேரத்திலே பேதுருவும் யோவானும் தேவாலயத்துக்குப் போனார்கள் (அப் 3:1).

அப்போஸ்தலர்களாலே அநேக அற்புதங்களும் அடையாளங்களும் செய்யப்பட்டது என்று இரண்டாம் அதிகாரத்தில் பொதுவாக எழுதப்பட்டிருக்கிறது (அப் 2:43). அந்த அற்புதங்களுக்கும் அடையாளங்களுக்கும் சான்றாக, இந்த அதிகாரத்தில், ஒரு அற்புதம் எழுதப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்துவே அற்புதம் செய்கிறவர். அவர் தம்முடைய அற்புதத்தை அப்போஸ்தலர்கள் மூலமாகச் செய்கிறார். இங்கு பேதுருவையும் யோவானையும் தம்முடைய அற்புதத்தைச் செய்வதற்கு பயன்படுத்துகிறார்.

பேதுருவும் யோவானும் இயேசுகிறிஸ்துவின் பன்னிரண்டு சீஷர்களில் இருவர். ஒரு தாய் வயிற்றில் பிறந்த சகோதரர்கள் மிகுந்த சிநேகமாகயிருப்பார்கள். அந்த சகோதர சிநேகத்தைவிட பேதுருவும் யோவானும் அதிக சிநேகமாகயிருக்கிறார்கள். இந்தச் சிநேகம் கர்த்தருடைய அன்பினால் உண்டாயிருக்கிறது. இயேசுகிறிஸ்து இந்தப் பூமியில் ஊழியம் செய்து கொண்டிருந்தபோது, பேதுருவும் யோவானும் சிநேகிதராய் இருந்ததைவிட, கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு விசேஷித்த வழியில் நெருங்கிய சிநேகிதராயிருக்கிறார்கள்.

பேதுரு இயேசுகிறிஸ்துவை மூன்று முறை மறுதலித்தான். தான் செய்த பாவங்களுக்காக பேதுரு மனங்கசந்து அழுதான். பேதுரு மனந்திரும்பிய பின்பு, யோவானைப்போலவே இவனும் இயேசுவுக்கு நெருங்கிய சீஷனாகயிருக்கிறான்.

ஜெபவேளையாகிய ஒன்பதாம் மணி நேரத்தில் பேதுருவும் யோவானும் ஜெபாலயத்திற்குப் போகிறார்கள். ஆத்துமாக்களைப் பிடிக்கும் சுவிசேஷம் என்னும் வலை அப்போஸ்தலரிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மீனவர்கள் மீன்கள் அதிகமாகயிருக்கும் இடத்தில் தங்கள் வலைகளைப்போட்டு திரளான மீன்களைப் பிடிப்பார்கள். மனுஷரைப் பிடிக்கிறவர்களாகிய சீஷர்கள், மனுஷர் அதிகமாகயிருக்கும் இடத்தில் சுவிசேஷ வலையை விரித்தால், அதிகமான ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படுவார்கள்.

பேதுருவும் யோவானும் தேவாலயத்திற்குப் போகிறார்கள். தேவாலயத்தில் நடைபெறும் ஜெபவேளையில் பங்குபெற்று ஜெபம் பண்ணுவதற்காகப் போகிறார்கள். யூதர்கள் ஜெபவேளையில் தேவாலயத்திற்குப்போவது வழக்கம். தேவாலயத்திற்குத் தனிமையில் போவதற்குப் பதிலாக, நம்முடைய குடும்பத்தாரோடும், சிநேகிதரோடும் போனால் நமக்கு மிகுந்த ஆசீர்வாதமுண்டாகும். தேவனை ஆராதிக்கிற ஜனமே நமக்கு நெருங்கிய சமுதாயத்தராக இருக்கவேண்டும். விசுவாசிகளின் சமுதாயம் ஜெபிக்கிற சமுதாயம்.

சீஷர்கள் ஜெபவேளையில் தேவாலயத்திற்குப் போகிறார்கள். தேவாலயம் ஜெபவீடாகயிருக்கிறது. அங்கு ஜெபவேளையும் இருக்கிறது. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமும் ஜெபம்பண்ணுவதற்கென்று ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கி வைத்துக் கொள்ளவேண்டும். நம்முடைய ஜெபவேளை நாம் ஜெபம்பண்ண வேண்டியதை நினைவுபடுத்தும். நாம் ஜெபவேளைக்குக் கட்டுப்பட்டவர்களல்ல. ஆனாலும் நமக்கு நாம் ஜெபவேளையை நியமித்துக்கொள்வது நமக்கு மிகவும் ஆசீர்வாதமாகயிருக்கும்.

சப்பாணி

அப்பொழுது தன் தாயின் வயிற்றிலிருந்து சப்பாணியாய்ப் பிறந்த ஒரு மனுஷனைச் சுமந்துகொண்டு வந்தார்கள்; தேவாலயத்திலே பிரவேசிக்கிறவர்களிடத்தில் பிச்சை கேட்கும்படி, நாடோறும் அவனை அலங்கார வாசல் என்னப்பட்ட தேவாலய வாசலண்டையிலே வைப்பார்கள். தேவாலயத்திலே பிரவேசிக்கப்போகிற பேதுருவையும் யோவானையும் அவன் கண்டு பிச்சைகேட்டான் (அப் 3:2,3).

பேதுருவும் யோவானும் ஜெபவேளையில் தேவாலயத்திற்குப் போகும்போது அங்கு ஒரு சப்பாணியைச் சுமந்துகொண்டு வருகிறார்கள். அலங்கார வாசல் என்னப்பட்ட தேவாலய வாசலண்டையில் அந்தச் சப்பாணியை வைக்கிறார்கள். தேவாலயத்தில் பிரவேசிக்கிறவர்களிடத்தில் இந்தச் சப்பாணி பிச்சைக்கேட்டுக் கொண்டிருப்பான். இவன் ஏதோ ஒரு விபத்தினால் கால்கள் இழந்து முடவனாகவில்லை. தன் தாயின் வயிற்றிலிருந்து சப்பாணியாகப் பிறந்திருக்கிறான்.

கர்த்தர் நமக்கு சரீர அவயவங்களை நேர்த்தியாகக் கொடுத்திருப்பதற்காக அவரைத் துதிக்கவேண்டும். தேவனுடைய நாமமகிமைக்காக நம்மையும் நம்முடைய சரீர அவயவங்களையும் பிரதிஷ்டை பண்ணவேண்டும். இவன் தாயின் வயிற்றிலிருந்து சப்பாணியாய் பிறந்ததினால், சரீரத்தில் பலவீனமாகயிருக்கிறான். இவனால் நடக்க முடியாது. மற்றவர்கள் இவனைத் தூக்கி சுமக்கிறார்கள்.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திலும் நாம் பல சமயங்களில் ஆவிக்குரிய ரீதியாகப் பலவீனமாகயிருக்கிறோம். தேவன் காண்பிக்கும் பாதையில் செல்ல முடியாத ஆவிக்குரிய சப்பாணிகளாகயிருக்கிறோம். கர்த்தருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் செல்லமுடியாத ஆவிக்குரிய சப்பாணிகளாகயிருக்கிறோம். தேவனுடைய ஊழியத்தை செய்ய முடியாதவாறு நாம் பலவீனமாகயிருக்கிறோம். தேவாலயத்தின் அலங்கார வாசலண்டையில் சரீரப்பிரகாரமான சப்பாணியிருக்கிறான். நாம் ஒருவேளை ஆவிக்குரிய சப்பாணியாக ஆராதனையில் பங்குபெற்றுக்கொண்டிருக்கலாம்.

தேவாலயத்தில் பிரவேசிக்கிறவர்களிடத்தில் பிச்சைக் கேட்கும்படி சப்பாணி தேவாலய வாசலண்டையில் அமர்ந்திருக்கிறான். அந்த வாசல் வழியாக வருவோர் போவோரிடம் பிச்சைக் கேட்டுக்கொண்டிருக்கிறான். தன்னுடைய ஜீவனத்திற்காக அவனால் வேலை செய்யமுடியாது. யாராவது இவனுக்கு உதவிசெய்தால்தான் இவனுக்குப் போஜனம் கிடைக்கும். மற்றவர்களைப்போல இவனால் ஓடியாடி வேலை செய்யமுடியாது. ஒரு சிலர் இவனை தேவாலயத்தில் பிரவேசிக்கிறவர்களிடத்தில் பிச்சைக் கேட்கும்படி நாடோறும் சுமந்துகொண்டு வந்து தேவாலய வாசலண்டையிலே வைக்கிறார்கள். அங்கு இவன் பிச்சைக் கேட்கிறான். வேலை செய்ய முடியாதவர்கள், தேவையுள்ளவர்கள் மற்றவர்களுடைய உதவியைக் கேட்க வெட்கப்படக்கூடாது. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமும் தரித்திரருக்கு உதவிபுரியவேண்டும். உதவி செய்வதினால் யாரும் இரட்சிக்கப்படுவதில்லை. ஆனாலும் நாம் இரட்சிக்கப்பட்டிருப்பதினால், தரித்திரருக்கு உதவிசெய்து, நாம் ஆவியின் கனியை வெளிப்படுத்த வேண்டும். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் ஜெபமும் தர்மம் பண்ணுவதும் பிறருக்கு உதவிபுரிவதும் இணைந்தே செல்லவேண்டும்.

நாம் ஆலயத்திற்குப் போகும்போது ஆலயவாசலிலே சிலர் பிச்சைக் கேட்டுக்கொண்டிருக்கலாம். ஒரு சில பிச்சைக்காரர்களுக்கு மெய்யாகவே உதவி தேவைப்படும். ஒரு சிலர் தங்கள் சரீரத்தில் பெலனிருந்தும், வேலை செய்யாமல், சோம்பேறிகளாகயிருந்து, பிறரிடத்தில் பிச்சைக் கேட்பார்கள். இப்படிப்பட்ட ஏமாற்றுக்காரர்களைப் பார்க்கும்போது நமக்கு தர்மம் பண்ணவேண்டும் என்னும் ஆர்வமே நம்மைவிட்டுப் போய்விடும். ஆனாலும் ஒரு சிலர் ஏமாற்றுகிறார்கள் என்பதற்காக, தேவைப்படுவோர்களுக்கு உதவியே செய்யாமலிருப்பது நல்லதல்ல. பாத்திரம் அறிந்து பிச்சைப் போடவேண்டும்.

பிச்சைக்காரன் உட்கார்ந்திருக்கும் தேவாலய வாசல் "அலங்கார வாசல்" என்று அழைக்கப்படுகிறது. வாசல் அலங்காரமாகயிருக்கிறது. ஆனால் வாசலுக்கருகில் இந்தப் பிச்சைக்காரன் அலங்கோலமாகயிருக்கிறான். அலங்கார வாசலண்டையில் இந்தச் சப்பாணி பிச்சைக்கேட்டுக் கொண்டிருப்பதினால், வாசலின் அலங்காரம் குறைந்துவிடாது. அலங்காரம் மாசுபடாது. பிச்சைக்காரன் தனக்குச் சாதகமான இடத்தைக் கண்டுபிடித்து அங்கு அமர்ந்திருக்கிறான். தேவாலயத்திற்குள் போகிறவர்கள் இந்த வழியாகத்தான் போகிறார்கள். இவனால் நடந்து எல்லோரையும் போய் பிச்சைக் கேட்கமுடியாது. இவனோ சப்பாணி. ஆகையினால் எல்லோரும் தன்னிடத்தில் வரும் வண்ணமாக, இவன் தேவாலய வாசலண்டையிலே உட்கார்ந்து பிச்சைக் கேட்டுக்கொண்டிருக்கிறான்.

இந்த சமயத்தில் பேதுருவும் யோவானும் தேவாலயத்தில் பிரவேசிக்கப் போகிறார்கள். இவர்களிடத்தில் ஏதாவது பெற்றுக்கொள்ளலாம் என்று எதிர்பார்த்து, இந்தப் பிச்சைக்காரன், இவர்களிடத்திலும் பிச்சைக் கேட்கிறான். அவர்களிடத்தில் பணத்தை எதிர்பார்த்துக் கேட்டான். ஆனால் இந்தப் பிச்சைக்காரனோ சரீர சுகமாதலைப் பெற்றுக்கொண்டான்.

எங்களை நோக்கிப்பார்

பேதுருவும் யோவானும் அவனை உற்றுப்பார்த்து: எங்களை நோக்கிப்பார் என்றார்கள். அவன் அவர்களிடத்தில் ஏதாகிலும் கிடைக்குமென்று எண்ணி, அவர்களை நோக்கிப்பார்த்தான் (அப் 3:4,5).

சப்பாணி குணமாக்கப்பட்ட விவரம் இங்கு எழுதப்பட்டிருக்கிறது. அவன் பேதுருவையும் யோவானையும் கண்டு பிச்சைக்கேட்கிறான். அப்போஸ்தலர்கள் இருவரும் தங்களிடத்தில் இவன் பிச்சைக்கேட்பதினால், தங்கள் பார்வையை வேறு பக்கமாகத் திருப்பிக் கொள்ளவில்லை. அதற்குப் பதிலாக பேதுருவும் யோவானும் அவனை உற்றுப்பார்க்கிறார்கள். சப்பாணி அவர்களைப் பார்த்து பிச்சை கேட்கிறான். ஆனால் அவர்களோ பிச்சை கொடுப்பதற்குப் பதிலாக, அவர்கள் தன்னை அவனை உற்றுப்பார்ப்பதினால், சப்பாணி தன்னுடைய பார்வையை வேறுபக்கமாகத் திருப்பி கொள்வதற்கு வாய்ப்புள்ளது. அதற்கு இடங்கொடுக்காமல் பேதுருவும் யோவானும், அவனை உற்றுப்பார்த்து "எங்களை நோக்கிப் பார்" என்று சொல்லுகிறார்கள்.

அப்போஸ்தலர்கள் இப்படிச் சொல்வதினால் அவர்களிடத்தில் ஏதாகிலும் கிடைக்கும் என்று எண்ணி, சப்பாணி அவர்களை நோக்கிப்பார்க்கிறான். நாமும் தேவனுடைய சமுகத்தில் வரும்போது நம்முடைய இருதயம் தேவனை நோக்கிப் பார்க்க வேண்டும். தேவனிடத்தில் ஏதாகிலும் கிடைக்குமென்று விசுவாசத்தோடு அவரை நோக்கிப்பார்க்கவேண்டும். நாம் மனுஷரை நோக்கிப் பார்க்கவேண்டியதில்லை. பரலோகத்தில் வாசம்பண்ணுகிற தேவனை நோக்கிப் பார்க்கவேண்டும். பெற்றுக்கொள்வோம் என்னும் எதிர்பார்ப்போடு கர்த்தரை நோக்கிப் பார்க்கவேண்டும்.

எழுந்து நட

அப்பொழுது பேதுரு: வெள்ளியும் பொன்னும் என்னிடத்திலில்லை; என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன்; நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட என்று சொல்லி; வலதுகையினால் அவனைப் பிடித்துத் தூக்கிவிட்டான்; உடனே அவனுடைய கால்களும் கரடுகளும் பெலன்கொண்டது. அவன் குதித்தெழுந்து நின்று நடந்தான்; நடந்து, குதித்து, தேவனைத் துதித்துக் கொண்டு, அவர்களுடனேகூடத் தேவாலயத்திற்குள் பிரவேசித்தான் (அப் 3:6-8).

பிச்சைக்காரனோ அவர்களிடத்தில் ஏதாகிலும் கிடைக்குமென்று எண்ணி அவர்களை நோக்கிப்பார்க்கிறான். ஆனால் பேதுருவின் வார்த்தையோ அவனுக்கு ஏமாற்றத்தைக் கொடுக்கிறது. பேதுரு சப்பாணியை உற்றுப்பார்த்து "வெள்ளியும் பொன்னும் என்னிடத்திலில்லை" என்று ஆரம்பத்திலேயே சொல்லிவிடுகிறான். விசுவாசிகள் பொதுவாக ஏழைகளாகவே இருப்பார்கள். அவர்களிடத்தில் அதிகமாக பணம் இருக்காது. பிறருக்குத் தாராளமாக உதவிசெய்ய வாய்ப்பிருக்காது. ஒரு சில விசுவாசிகள் மாத்திரமே ஐசுவரியவான்களாக இருக்கிறார்கள். பேதுருவும் யோவானும் சாதாரண விசுவாசிகளைப்போல, கையில் பணமில்லாதவர்களாவே இருக்கிறார்கள்.

பேதுரு சப்பாணியிடம் "வெள்ளியும் பொன்னும் என்னிடத்திலில்லை" என்று கூறுகிறான். ஆனால் சற்று நேரத்திற்கு முன்புதான் விசுவாசிகள் தங்கள் காணியாட்சிகளையும் ஆஸ்திகளையும் விற்று அப்போஸ்தலருடைய பாதத்திலே கொண்டுவந்து வைத்திருக்கிறார்கள். பேதுருவிடத்திலும் யோவானிடத்திலும் பொன்னும் வெள்ளியும் இருக்கிறது. ஆனால் அந்தப் பொன்னும் வெள்ளியும் சப்பாணிக்குக் கொடுப்பதற்காக அவர்களிடத்தில் கொடுக்கப்படவில்லை. சபையில் விசுவாசிகள் மத்தியிலே, தேவையுள்ளவர்களுக்குக் கொடுப்பதற்காக அவர்களுடைய பாதத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

தங்களிடத்திலுள்ள பணத்தைக் கொண்டு, அப்போஸ்தலர்கள் ஒவ்வொரு விசுவாசிக்கும் தேவையானதற்குத் தக்கதாக அவைகளில் எல்லோருக்கும் பகிர்ந்து கொடுக்கவேண்டும். அதற்காகத்தான் விசுவாசிகள் தங்கள் காணியாட்சிகளை விற்று அந்தப் பணத்தை அப்போஸ்தலருடைய பாதத்தில் வைத்திருக்கிறார்கள். தங்களிடத்தில் எந்த நோக்கத்திற்காக இந்தப் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறதோ, அந்த நோக்கத்திற்காக மாத்திரமே அப்போஸ்தலர்கள் அதை உண்மையாய் செலவுபண்ணவேண்டும். தங்களுக்கு இஷ்டமானபடி பொதுப்பணத்தை செலவு பண்ணிவிடக்கூடாது.

ஊழியத்திலிருக்கிறவர்கள் பண விஷயத்தில் மிகுந்த பொறுப்போடிருக்க வேண்டும். உண்மையோடிருக்கவேண்டும். கர்த்தர் நம்மிடத்தில் ஒப்புக் கொடுத்திருக்கும் பொருளாதாரத்திற்கு நாம் அவருடைய சமுகத்தில் உண்மையோடு கணக்கு ஒப்புவிக்க வேண்டும். ஒரு சிலர் தரித்திரருக்கு உதவிபுரியவேண்டுமென்று விரும்புவார்கள். ஆனால் அவர்களிடத்திலோ உதவிசெய்ய பொருளாதார ஆசீர்வாதம் இருக்காது. வேறு சிலரிடத்திலோ பொருளாதார ஆசீர்வாதம் இருக்கும். ஆனால் தரித்திரருக்கு உதவிசெய்யவேண்டும் என்னும் மனது இருக்காது.

பேதுருவிடத்திலும், யோவானிடத்திலும் விசுவாசிகள் கொடுத்த பொதுப்பணம் இருந்தாலும், அதை தங்கள் இஷ்டப்படி அவர்கள் சப்பாணிக்குக் கொடுத்து விடவில்லை. பேதுரு சப்பாணியிடம் "வெள்ளியும் பொன்னும் என்னிடத்திலில்லை" என்று கூறிவிடுகிறான்.

பேதுருவிடத்தில் வெள்ளியும் பொன்னும் இல்லாமலிருக்கலாம். இதனால் சப்பாணிக்கு ஏமாற்றம் உண்டாகலாம். ஆனால் பேதுருவினிடத்திலோ வெள்ளியையும் பொன்னையும்விட மிகப்பெரிய காரியம் இருக்கிறது. பரலோகத்திலிருந்து கொடுக்கப்பட்டிருக்கும் தெய்வீக வல்லமை பேதுருவினிடத்திலிருக்கிறது. தாயின் வயிற்றிலிருந்து சப்பாணியாய் பிறந்த இவனை குணமாக்கும் தெய்வீக வல்லமை பேதுருவினிடத்திலிருக்கிறது. அப்போஸ்தலர்கள் உலகப்பிரகாரமாக ஐசுவரியவான்களாக இல்லாமல் தரித்திரரர்களாகயிருக்கலாம். ஆனால் இவர்களோ ஆவியின் வரங்களில் ஐசுவரியவான்களாக இருக்கிறார்கள். அப்போஸ்தலர்களைப்போன்றே நாமும் தேவகிருபையிலும், ஆவியின் வரங்களிலும் ஐசுவரியவான்களாயிருக்கவேண்டும்.

பேதுரு சப்பாணியிடம் "வெள்ளியும் பொன்னும் என்னிடத்திலில்லை" என்று கூறிவிட்டு, "என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன்" என்று கூறுகிறான். சப்பாணிக்குத் தேவையானதைக் கொடுக்க பேதுரு விரும்புகிறான். அவனுடைய முடத்திலிருந்து அவன் குணமடையவேண்டும். சப்பாணி எழுந்து நடக்கவேண்டும். அவனால் நடக்க முடிந்தால், அவன் ஓடியாடி வேலை செய்து, ஜீவனம் பண்ணுவான். வேலை செய்ய முடிந்தால் அவன் இனிமேல் பிச்சைக்கேட்க வேண்டிய அவசியமில்லை. இவன் வேலை செய்து மற்றவர்களுக்கும் உதவிசெய்வான். பரிசுத்த ஆவியானவர் இந்தச் சத்தியத்தைப் பேதுருவின் இருதயத்தில் உணர்த்துகிறார். அப்போஸ்தலரிடத்தில் வெள்ளியும் பொன்னுமில்லை. ஆனாலும் பரிசுத்த ஆவியினால் நிறைந்து, பேதுரு சப்பாணியைப் பார்த்து, என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன்" என்று விசுவாசத்தோடு சொல்லுகிறான்.

நம்மிடத்தில் வெள்ளியும் பொன்னும் இல்லையென்றாலும், நமக்குச் சரீர ஆரோக்கியம் இருக்கலாம். கைகளும், கைகளின் விரல்களும் சீராக செயல்படலாம். நம்மிடத்தில் பொருளாதாரம் இல்லையென்றாலும், குருடருக்கும் முடவருக்கும், வியாதியஸ்தருக்கும், நாம் கைகொடுத்து உதவிபுரியவேண்டும். முடவர் நடப்பதற்கு நமது கைகளினால் அவர்களைத் தாங்கி உதவிபுரியலாம். குருடர் நடப்பதற்கு அவர்களுடைய கரங்களைப் பற்றிக்கொண்டு வழிநடத்தலாம். வியாதியஸ்தருக்குச் சில பணிவிடைகளை நாம் செய்யலாம். அதேவேளையில் நம்மிடத்தில் வெள்ளியும் பொன்னும் இருக்குமென்றால், அதை அவர்களுக்கு உதவியாகக் கொடுக்கவேண்டும். தேவைப்படுகிறவர்களுக்குப் பொருளாதார உதவியும் செய்யாமல், நம்முடைய கைகளினால் உதவியும் செய்யாமல், அவர்களைக் கண்டும் காணாமல் போய்விடக்கூடாது.

பேதுரு சப்பாணியைப்பார்த்து "நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட" என்று கூறுகிறான். பேதுருவின் வார்த்தையில் விசுவாசமும் தேவனுடைய வல்லமையும் நிரம்பியிருக்கிறது. தன்னுடைய நாமத்தினால் எழும்பி நடக்குமாறு பேதுரு அவனிடத்தில் கூறவில்லை. நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலேயே எழும்பி நடக்குமாறு கூறுகிறான். தாயின் வயிற்றிலிருந்து சப்பாணியாய் பிறந்தவன் இதுவரையிலும் எழும்பி நடந்ததில்லை. அப்படிப்பட்டவனைப் பார்த்து "நீ எழுந்து நட" என்று பேதுரு சொல்லுகிறான்.

பேதுருவின் வார்த்தையைக் கேட்டு சப்பாணி எழும்பி நடக்க முயற்சிபண்ணவேண்டும். தன்னுடைய சுயபலத்தை நம்பாமல் இயேசுகிறிஸ்துவின் தெய்வீக வல்லமையைப் பூரணமாகச் சார்ந்துகொள்ளவேண்டும். தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை என்று விசுவாசிக்கவேண்டும். சப்பாணியாக இருக்கும் தன்னை எழும்பி நடக்கப்பண்ண இயேசுவால் ஆகும் என்று நம்பவேண்டும். சப்பாணி எழும்பி நடக்கும்போது அவன் தேவனுடைய வல்லமைக்குச் சாட்சி சொல்லுவான். தேவனுக்குத் துதியும் கனமும் உண்டாகும். இவையெல்லாம் உண்டாக வேண்டுமென்றால் சப்பாணி எழும்பி நடக்கவேண்டும்.

சப்பாணி எழும்புவதற்கு பேதுரு உதவிசெய்கிறான். தன்னுடைய வலது கையினால் அவனைப் பிடித்து தூக்கிவிடுகிறான். தேவன் தம்முடைய வார்த்தையினால் நம்மை எழும்பி நடக்கச் சொல்லும்போது, பரிசுத்த ஆவியானவர் தம்முடைய பலத்த கரத்தின் வல்லமையினால் நம்மைத் தூக்கிவிடுகிறார். தேவனுடைய வாக்குத்தத்தம் நம்முடைய ஜீவியத்தில் நிறைவேற நாம் என்ன செய்யவேண்டுமோ அதை செய்ய முயற்சிபண்ணவேண்டும்.

சப்பாணி எழுந்து நடக்க முயற்சிபண்ணுகிறான். அவனுடைய சுயபலத்தினால் எழுந்து நடக்க முடியாது. பேதுரு தன்னுடைய வலது கையினால் அவனைத் தூக்கிவிடுகிறான். பேதுருவின் பலத்தினாலும் சப்பாணியினால் எழும்பி நடக்கமுடியாது. தேவனுடைய வல்லமையினால் மாத்திரமே சப்பாணியால் எழும்பி நடக்க முடியும். ஆனாலும் சப்பாணியும் பேதுருவும் தங்களால் முடிந்ததைச் செய்ய முயற்சி பண்ணுகிறார்கள். நமக்கு நியமிக்கப்பட்டிருக்கும் வேலையை நாம் செய்யும்போது, தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவார். தேவனுடைய கிருபை நமக்குக் கிடைக்கும். சோம்பேறியாகயிருந்துகொண்டு ஒரு காரியமும் செய்யாமலிருப்பது கர்த்தருக்குப் பிரியமாகயிருக்காது. நம்முடைய சுயபலத்தினால் நம்மால் செய்யமுடியாததை, தேவன் தம்முடைய கிருபையினால் நம்மைச் செய்ய வைப்பார்.

பேதுரு தன்னுடைய வலது கையினால் சப்பாணியைத் தூக்கி விடுகிறான். உடனே சப்பாணியினுடைய கால்களும் கரடுகளும் பெலன்கொள்கிறது. சப்பாணி தன்னால் முடிந்ததைச் செய்தாலும், பேதுருவும் தன்னால் முடிந்ததைச் செய்தாலும், இயேசுகிறிஸ்துவே எல்லா காரியங்களையும் வாய்க்கச் செய்கிறவர். அவரே சப்பாணியின் கால்களுக்கும் கரடுகளுக்கும் பெலன்கொடுக்கிறவர். இயேசுகிறிஸ்துவே சப்பாணியைப் பெலப்படுத்தி எழுந்து நடக்கச் செய்கிறவர்.

சப்பாணி பேதுருவின் வார்த்தையைக் கவனமாகக் கேட்கிறான். பேதுரு அவனிடம் "நீ எழுந்து நட" என்று கட்டளை கொடுக்கிறான். அந்தக் கட்டளைக்குக் கீழ்ப்படியும் வண்ணமாக, அவன் குதித்தெழுந்து நின்று நடக்கிறான். நித்திரைதெளிந்து எழும்புகிறவன்போல சப்பாணி எழும்புகிறான். தான் ஒரு சப்பாணி என்னும் ஒரு நினைவே அவனைவிட்டு நீங்கிப்போயிற்று. விசுவாசத்தோடு கிரியை செய்கிறான். அவன் தன் சுயபலத்தை நம்பவில்லை. "நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட" என்று தனக்குச் சொல்லப்பட்ட வார்த்தையை நம்புகிறான். இயேசுகிறிஸ்துவை நம்புகிறான்.

சப்பாணி சிறிது சிறிதாக குணமடையவில்லை. உடனே அவனுடைய கால்களும் கரடுகளும் பெலன்கொள்கிறது. உடனே அவன் குதித்தெழுந்து நிற்கிறான். நின்றவன் உடனே நடக்கிறான். அவனுக்குள் உடனடியாக, திடீரென்று, தேவனுடைய குணமாக்கும் வல்லமை வந்து இறங்கிற்று. அவனுடைய சரீரத்தில் பெலனுண்டாயிற்று. இதுவரையிலும் அவன் சப்பாணியாகயிருந்து தரையில் கஷ்டப்பட்டு தவழ்ந்து சென்றவன், இப்போது பெலன்கொண்டு நேராக நிற்கிறான். நிமிர்ந்து நடக்கிறான். சப்பாணி பூரண குணமடைந்திருக்கிறான் என்பதற்கு, அவன் நிமிர்ந்து நிற்பதும் நேராக நடப்பதும் ஓர் அடையாளமாயிற்று.

தேவனுடைய கிருபை நம்முடைய ஜீவியத்தில் கிரியை செய்யும்போது, நமக்குள் சில மாற்றம் உண்டாகும். தேவனுடைய கிருபையை நம்முடைய ஜீவியத்தில் அனுபவிப்போம். அது மறைவாகயிராது. நம்முடைய அனுபவம் பிறருக்குத் தெரியும் விதத்தில் அது தேவனுடைய கிருபைக்குச் சாட்சியாக இருக்கும். தேவன் நம்மை பெலப்படுத்தியிருக்கிறார். தேவனுடைய பெலத்தை நாம் உண்மையிலேயே பெற்றுக்கொண்டிருப்பதை உணர்ந்தால், நாம் சோம்பேறியாகப் படுத்துக் கொண்டிருக்கமாட்டோம். நாம் கர்த்தருக்காக எழும்பி நிற்போம். கர்த்தரோடு சந்தோஷமாக நடப்போம். அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுவோம். தேவனுடைய கிருபை நமக்குக் கிடைக்கும்போது, அதை நம்முடைய ஜீவியத்தில் வெளிப்படுத்திக் காண்பிக்கவேண்டும். தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்தவேண்டும்.

குணமாக்கப்பட்ட சப்பாணி பேதுருவையும் யோவானையும் பற்றிக்கொள்கிறான் (அப் 3:11). எழுந்து நடந்த சப்பாணி அப்போஸ்தலர்களை ஏன் பற்றிக்கொண்டான் என்பது சரியாக விவரிக்கப்படவில்லை. ஒருவேளை தான் பூரணமாகக் குணமடைந்திருப்பதை அவன் இன்னும் அறியாதவனாகயிருக்கலாம். குணமடைந்த பின்பும், இயேசுகிறிஸ்து தன்னை இன்னும் பூரணமாகக் குணமாக்கவில்லை என்னும் சந்தேகம் அவனுக்குள் இருந்திருக்கலாம். ஆகையினால் பிறருடைய உதவியில்லாமல் நடக்கவேண்டியவன் பேதுருவையும் யோவானையும் இன்னும் பற்றிக்கொண்டிருக்கிறான்.

ஒருவேளை பேதுருவின்மீதும் யோவான்மீதும் அன்புகூரும் விதத்தில் அவர்களைப் பற்றிக்கொண்டிருக்கலாம். குணமாக்கப்பட்ட சப்பாணி அவர்களைப் பற்றிக்கொண்டு தன்னுடைய அன்பை வெளிப்படுத்துகிறான். அவர்களைப் போகவிடாமல் தன்னோடு நிறுத்திக் கொள்கிறான்.

குணமாக்கப்பட்ட சப்பாணியை பேதுருவும் யோவானும் தேவாலயத்திற்குள் அழைத்துச் செல்கிறார்கள். நம்முடைய ஊழியத்தில், இயேசுகிறிஸ்துவின் குணமாக்கும் வல்லமையினால், பலருடைய வியாதி, அற்புதமாக சொஸ்தமாகியிருக்கலாம். சொஸ்தமானவர்களை நாம் அப்படியே அனுப்பிவிடக்கூடாது. பேதுருவும் யோவானும் குணமாக்கப்பட்ட சப்பாணியைத் தேவாலயத்திற்கு அழைத்துச் சென்றதுபோல, நாமும் குணமடைந்தவர்களைச் சபைக்கு அழைத்து வரவேண்டும்.

குணமாக்கப்பட்ட சப்பாணி பேதுருவையும் யோவானையும் பற்றிக்கொள்கிறான். ஆனால் அப்போஸ்தலருடைய கைகளை அவனால் நிரந்தரமாக பற்றிக்கொள்ள முடியாது. குணமாக்கப்பட்டவனைத் தேவனுடைய சமுகத்தில் அழைத்துச் செல்லவேண்டும். தேவனைப்பற்றிக்கொள்வதற்கு அவனை வழிநடத்தவேண்டும். தேவன் ஒருவர் மாத்திரமே தம்மிடத்தில் வருகிற யாரையும் கைவிடாதவராகயிருக்கிறார். தேவனுடைய சமுகத்தில் வரும்போது மாத்திரமே நம்முடைய ஆத்துமாவுக்குச் சந்தோஷமும், சமாதானமும், பாதுகாப்பும் உண்டு.

ஒரு சமயம் இயேசுகிறிஸ்து பெதஸ்தா குளத்தின் கரையில் முப்பத்தெட்டு வருஷமாக திமிர்வாதமாகயிருந்த ஒருவனை சொஸ்தமாக்கினார். சொஸ்தமானவன் தன் வேலையைப் பார்த்துக்கொண்டு போய்விடவில்லை. அவனும் தேவாயலத்திற்குப் போனான் (யோவா 5:14). இங்கு, குணமாக்கப்பட்ட சப்பாணியும், தேவனைத் துதித்துக்கொண்டு, அப்போஸ்தலருடனே தேவாலயத்திற்குள் பிரவேசிக்கிறான்.

தேவன் நமக்கு தெளிந்த சிந்தனையையும், சரீர ஆரோக்கியத்தையும் கொடுத்திருக்கிறார். இவை அனைத்தையும் தேவனைத் துதிப்பதற்காகப் பயன்படுத்தவேண்டும். சப்பாணி தேவாலயத்திற்குள் பிரவேசிக்கும்போது தேவனைத் துதித்துக்கொண்டே போகிறான். நம்முடைய வாயில் எப்போதுமே தேவனைத் துதிக்கும் துதி நிரம்பியிருக்கவேண்டும். தாயின் வயிற்றிலிருந்து சப்பாணியாகப் பிறந்தவன் எழும்பி நடந்தவுடன், அவன் நடந்து குதித்து தேவனைத் துதிக்கிறான். தன்னுடைய சரீரத்தின் பெலனைத் தேவனைத் துதிப்பதற்காகவே பயன்படுத்துகிறான்.

கர்த்தரைத் தங்களுடைய இருதயத்தில் உண்மையாகவே ஏற்றுக் கொள்கிறவர்கள், அவரை எப்போதும் துதித்துக் கொண்டேயிருப்பார்கள். முதிர்ந்த விசுவாசிகள் கர்த்தரைத் துதித்துக்கொண்டே அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடப்பார்கள். புதிய விசுவாசிகளோ, புதிய சந்தோஷத்தினால், குணமாக்கப்பட்ட சப்பாணியைப்போல, நடந்து குதித்து தேவனைத் துதிப்பார்கள். நாம் தேவனைத் துதிக்கும்போது, நின்றாலும், நடந்தாலும், குதித்தாலும், நம்முடைய துதி இருதயத்தின் ஆழத்திலிருந்து வரவேண்டும். கர்த்தருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடப்பதே நம்முடைய இலக்காக இருக்க வேண்டும்.

ஜனங்கள் பிரமித்தார்கள்
அப் 3 : 9-11

அப் 3:9. அவன் நடக்கிறதையும், தேவனைத் துதிக்கிறதையும், ஜனங்களெல்லாரும் கண்டு:

அப் 3:10. தேவாலயத்தின் அலங்கார வாசலண்டையிலே பிச்சைகேட்க உட்கார்ந்திருந்தவன் இவன்தான் என்று அறிந்து, அவனுக்குச் சம்பவித்ததைக்குறித்து மிகவும் ஆச்சரியப்பட்டுப் பிரமித்தார்கள்.

அப் 3:11. குணமாக்கப்பட்ட சப்பாணி பேதுருவையும் யோவானையும் பற்றிக் கொண்டிருக்கையில், ஜனங்களெல்லாரும் பிரமித்து, சாலொமோன் மண்டபம் என்னப்பட்ட மண்டபத்திலே அவர்களிடத்திற்கு ஓடிவந்தார்கள்.

நடைபெற்றுக்கொண்டிருக்கும் இந்த அற்புத சம்பவத்தை அங்குள்ள ஜனங்களெல்லோரும் பார்க்கிறார்கள். குணமாக்கப்பட்ட சப்பாணி நடக்கிறதையும் தேவனைத் துதிக்கிறதையும் ஜனங்களெல்லோரும் காண்கிறார்கள். இப்போது நடந்து தேவனைத் துதிக்கிறவன், இதற்கு முன்பு தேவாலயத்தின் அலங்கார வாசலண்டையில் பிச்சைக்கேட்க உட்கார்ந்திருந்தவன் தான் என்பதை அவர்கள் அறிந்திருக்கிறார்கள். அவன் பல வருஷங்களாகத் தேவாலயத்தின் வாசலில் உட்கார்ந்து பிச்சைகேட்டுக் கொண்டிருந்தவன். ஆகையினால் தேவாலயத்திற்கு வருகிறவர் எல்லோருக்கும் அவனைப்பற்றித் தெரியும். அப்படிப்பட்ட சப்பாணி இப்போது நடக்கிறதையும் தேவனைத் துதிக்கிறதையும் காண்கிறார்கள்.

இந்தச் சப்பாணி அலங்கார வாசலண்டையில், அந்தப் பக்கமாக வருவோர் போவோரிடத்திலும், மிகுந்த சத்தமிட்டு பிச்சை கேட்டுக் கொண்டிருந்தான். அந்த வழியாக போவோர் எல்லோருமே அவன் பிச்சை கேட்கும் சத்தத்தைக் கேட்பார்கள். இப்போதோ அவன் அதைவிட மிகுந்த சத்தத்தில் தேவனைத் துதிக்கிறான். ஜனங்கள் இப்போது இந்தத் துதியின் சத்தத்தைக் கேட்கிறார்கள். குணமாக்கப்பட்ட சப்பாணியின் வார்த்தை பரிசுத்தமாயிருக்கிறது. பிறருடைய இரக்கத்தை எதிர்பார்த்து சத்தமிட்டவன், இப்போது தனக்கு இரங்கிய கர்த்தரைச் சத்தமிட்டுத் துதிக்கிறான்.

குணமாக்கப்பட்ட சப்பாணிக்கு சம்பவித்ததைக் குறித்து ஜனங்கள் ஆச்சரியப்பட்டுப் பிரமிக்கிறார்கள். சீஷர்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டபோது, அதைக் கண்ட ஜனங்களுக்கு இதைப்போல ஆச்சரியமும் பிரமிப்பும் உண்டாயிற்று. இப்போது அதைவிட பெரிய ஆச்சரியமும் பிரமிப்பும் உண்டாயிருக்கிறது. பரிசுத்த ஆவியானவர் தம்முடைய வல்லமையை வெளிப்படுத்தும்போது அது நமக்கு ஆச்சரியமாகவும் பிரமிப்பாகவும் இருக்கும். தேவனுடைய வசனங்கள் அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும் உறுதி பண்ணப்படும்போது நமக்கு ஆச்சரியமுண்டாகும்.

இதற்கு முன்பு கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தாமே அநேக அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தார். இப்போது பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருக்கிற அப்போஸ்தலர்கள், இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்கிறார்கள். இதைப் பார்த்த ஜனங்களுக்கு ஆச்சரியமும் பிரமிப்பும் உண்டாயிற்று.

ஜனங்களெல்லோரும் ஆச்சரியப்பட்டு பிரமித்து அப்போஸ்தலரிடத்தில் ஓடிவருகிறார்கள். குணமாக்கப்பட்ட சப்பாணி பேதுருவையும் யோவானையும் பற்றிக்கொண்டிருக்கிறான். அவர்கள் சாலொமோன் என்னப்பட்ட மண்டபத்தில் நின்றுகொண்டிருக்கிறார்கள். அந்த மண்டபத்தில், அவர்களிடத்திற்கு ஜனங்களெல்லோரும் ஓடி வருகிறார்கள். தேவன் நடப்பித்திருக்கும் அற்புதத்தைக் காண்பதற்காக ஓடிவருகிறார்கள். கர்த்தர் தம்முடைய கிருபையை வெளிப்படுத்தும் ஸ்தலத்தில் ஜனங்கள் கூடிவருவார்கள்.

மனந்திரும்பி குணப்படுங்கள் அப் 3 : 12-21

அப் 3:12. பேதுரு அதைக் கண்டு ஜனங்களை நோக்கி: இஸ்ரவேலரே, இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படுகிறதென்ன? நாங்கள் எங்கள் சுயசக்தியினாலாவது, எங்கள் சுயபக்தியினாலாவது, இவனை நடக்கப்பண்ணினோமென்று நீங்கள் எங்களை நோக்கிப்பார்க்கிறதென்ன?

அப் 3:13. ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களுடைய தேவனாகிய நம்முடைய பிதாக்களின் தேவன் தம்முடைய பிள்ளையாகிய இயேசுவை மகிமைப்படுத்தினார்; அவரை நீங்கள் ஒப்புக்கொடுத்தீர்கள்; பிலாத்து அவரை விடுதலையாக்கத் தீர்மானித்தபோது, அவனுக்குமுன்பாக அவரை மறுதலித்தீர்கள்

அப் 3:14. பரிசுத்தமும் நீதியுமுள்ளவரை நீங்கள் மறுதலித்து, கொலைபாதகனை உங்களுக்காக விடுதலை பண்ணவேண்டுமென்று கேட்டு,

அப் 3:15. ஜீவாதிபதியைக் கொலைசெய்தீர்கள்; அவரை தேவன் மரித்தோரிலிருந்தெழுப்பினார்; அதற்கு நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம்.

அப் 3:16. அவருடைய நாமத்தைப்பற்றும் விசுவாசத்தினாலே அவருடைய நாமமே நீங்கள் பார்த்து அறிந்திருக்கிற இவனைப் பெலப்படுத்தினது; அவரால் உண்டாகிய விசுவாசமே உங்களெல்லாருக்கும் முன்பாக, இந்தச் சர்வாங்க சுகத்தை இவனுக்குக் கொடுத்தது.

அப் 3:17. சகோதரரே, நீங்களும் உங்கள் அதிகாரிகளும் அறியாமையினாலே இதைச் செய்தீர்களென்று அறிந்திருக்கிறேன்.

அப் 3:18. கிறிஸ்து பாடுபட வேண்டுமென்று தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் முன்னறிவித்தவைகளை இவ்விதமாய் நிறைவேற்றினார்.

அப் 3:19. ஆனபடியினாலே கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து இளைப்பாறுதலின் காலங்கள் வரும்படிக்கும், முன்னே குறிக்கப்பட்ட இயேசுகிறிஸ்துவை அவர் உங்களிடத்தில் அனுப்பும்படிக்கும்,

அப் 3:20. உங்கள் பாவங்கள் நிவிர்த்தி செய்யப்படும்பொருட்டு நீங்கள் மனந்திரும்பிக் குணப்படுங்கள்.

அப் 3:21. உலகத்தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித் தீருங்காலங்கள் வருமளவும் பரலோகம் அவரை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

இஸ்ரவேலரே

பேதுரு அதைக் கண்டு ஜனங்களை நோக்கி: இஸ்ரவேலரே, இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படுகிறதென்ன? நாங்கள் எங்கள் சுயசக்தியினாலாவது, எங்கள் சுயபக்தியினாலாவது, இவனை நடக்கப்பண்ணினோமென்று நீங்கள் எங்களை நோக்கிப்பார்க்கிறதென்ன? (அப் 3:12)

பேதுருவும் யோவானும், குணமாக்கப்பட்ட சப்பாணியும் தேவாலயத்தில் சாலொமோன் மண்டபம் என்னும் மண்டபத்தில் நின்று கொண்டிருக்கிறார்கள். ஜனங்களெல்லோரும் பிரமித்து அவர்களிடத்திற்கு ஓடிவருகிறார்கள். பேதுரு தன்னிடத்தில் ஓடிவரும் ஜனங்களைக் காண்கிறான். திரளான ஜனங்கள் அப்போஸ்தலரைச் சுற்றி நிற்கிறார்கள். பேதுரு இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, அவர்களுக்கு இயேசுகிறிஸ்துவைக் குறித்து பிரசங்கம்பண்ணுகிறான். அவர்கள் சப்பாணி நடந்த அற்புதத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டு பிரமித்து நிற்கிறார்கள்.

அவர்களுடைய இருதயம் பண்படுத்தப்பட்டிருக்கிறது. தேவனுடைய சத்திய வசனம் விதைக்கப்படுவதற்கு அவர்களுடைய இருதயம் ஆயத்தமாகயிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் பேதுரு சுவிசேஷத்தின் விதையை நல்ல நிலமாகிய அவர்களுடைய இருதயத்தில் விதைக்கிறான்.

ஜனங்களெல்லோரும், சப்பாணி நடந்ததினால், ஆச்சரியப்பட்டு பிரமிப்படைந்து அவர்களிடத்தில் ஓடிவருகிறார்கள். அவர்களைப் போற்றுவதற்காகவும், அவர்களை வாழ்த்துவதற்காகவும், அவர்களைப் பெருமைப் படுத்துவதற்காகவும் அப்போஸ்தலரிடத்தில் ஓடிவருகிறார்கள். ஆனால் பேதுருவோ அந்த மனுஷருடைய பாராட்டுதலை ஏற்றுக்கொள்ளாமல், அவர்களெல்லோரும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவையே துதிக்க வேண்டுமென்று அவர்களை வழிநடத்துகிறான். கர்த்தர் மாத்திரமே நம்முடைய துதிகளுக்குப் பாத்திரர். பேதுருவும் யோவானும் கர்த்தரால் பயன்படுத்தப்படுகிற சாதாரண பாத்திரங்கள் மாத்திரமே.

சப்பாணி குணமாக்கப்பட்ட அற்புதம் தங்களுடைய சுயசக்தியினாலோ அல்லது சுயபக்தியினாலோ உண்டாகவில்லை என்பதை பேதுரு அங்கீகரிக்கிறான். இந்த அற்புதம் தங்களால் உண்டாகவில்லையென்று ஆரம்பத்திலேயே ஜனங்களிடம் தெளிவாகக் கூறுகிறான். ஜனங்களை அழைக்கும்போது, அவர்களை “இஸ்ரவேலரே” என்று பெயர் சொல்லி அழைக்கிறான். இஸ்ரவேல் ஜனங்கள் தேவனால் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள். கர்த்தருடைய வாக்குத்தத்தத்திற்குச் சொந்தக்காரர்கள். நியாயப்பிரமாணமும், கட்டளைகளும், நியதிகளும் அவர்களுக்கே முதலில் கொடுக்கப்பட்டது. இப்போது இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷமும், சுவிசேஷத்தின் வல்லமையான கிரியைகளும் அவர்களுக்கே முதலில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

பேதுரு இஸ்ரவேல் ஜனங்களிடம் இரண்டு கேள்விகளைக் கேட்கிறான். அவையாவன: 1. இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்படுகிறதென்ன? 2. நீங்கள் எங்களை நோக்கிப் பார்க்கிறதென்ன?

சப்பாணி குணமாக்கப்பட்டதைக் குறித்து ஜனங்கள் ஆச்சரியப்படுகிறார்கள். இது மெய்யாகவே ஆச்சரியமான சம்பவம் தான். இயேசுகிறிஸ்து இதற்கு முன்பு இதுபோன்ற அற்புதத்தைப் பல சமயங்களில் செய்திருக்கிறார். ஆனால் கிறிஸ்துவோ இப்போது அவருடைய சரீரத்தில் அவர்கள் மத்தியிலே பிரத்தியட்சமாகயில்லை. ஆகையினால் இயேசுகிறிஸ்து இல்லாமல், இப்படிப்பட்ட அற்புதம் நடந்திருப்பதினால், ஜனங்களுக்கு மிகுந்த ஆச்சரியமுண்டாயிற்று.

இயேசுகிறிஸ்து செய்த அற்புதத்தை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இப்போது சப்பாணி குணமாக்கப்பட்ட அற்புதம் மிகவும் சாதாரணமானதுதான். இயேசுகிறிஸ்து மரித்துப்போன லாசருவை உயிரோடு எழுப்பினார். அதையெல்லாம் இவர்கள் பார்த்தவர்கள். அப்போது ஆச்சரியப்படாதவர்கள், இப்போது சப்பாணி குணமாக்கப்பட்டதைக் கண்டு ஆச்சரியப்படுகிறார்கள்.

பெரிய அற்புதங்களை மறந்து விட்டு, சிறிய காரியத்திற்காக ஆச்சரியப்படுகிறார்கள். இவர்கள் புத்தியில் மந்தமானவர்கள். பெரிய காரியங்கள் தங்களுக்கு முன்பாக பல நடந்தாலும் அவற்றையெல்லாம் இவர்கள் சிந்தித்துப் பார்க்கமாட்டார்கள். அதற்காகத் தேவனை மகிமைப்படுத்தமாட்டார்கள். ஆனால் இவர்களோ சாதாரண அற்பகாரியத்தை பெரிதுபடுத்தி ஆச்சரியப்பட்டுப் பிரமிப்பார்கள்.

இவர்கள் இயேசுகிறிஸ்து செய்த அற்புதங்களையெல்லாம் தொடர்ந்து தியானித்திருப்பார்களென்றால், இப்போது சப்பாணி குணமாக்கப்பட்டிருக்கிற சம்பவம், அதன் தொடர்ச்சியாக நடைபெறுகிற சாதாரண சம்பவம் என்று நினைத்து ஆச்சரியப்படாமலிருப்பார்கள். பிரமிப்படையாமலிருப்பார்கள்.

ஒரு சில நாட்களுக்கு முன்பு தான் இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்தார். அவர் உயிர்த்தெழுந்த சம்பவம் இந்த ஜனங்களுக்கு அற்புதமாகத் தெரியவில்லை. ஆனால் உயிரோடிருக்கிற சப்பாணி, குணமடைந்திருப்பது இவர்களுக்கு ஆச்சரியமாயிற்று, பிரமிப்பாயிற்று. இதைக்கண்ட பேதுரு, ஜனங்களை நோக்கி "இஸ்ரவேலரே, இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்படுகிறதென்ன" என்று கேட்கிறான்.

பேதுருவும் யோவானும்தான் சப்பாணியைக் நடக்கப் பண்ணினார்களென்று ஜனங்கள் நினைக்கிறார்கள். அவர்களுடைய அற்புதமான சக்தியினாலும், பக்தியினாலும் அவர்கள் இந்தச் சப்பாணியை குணப்படுத்தி இருக்கிறார்களென்று நினைத்து, ஜனங்கள் அப்போஸ்தலரை மேன்மைப்படுத்துகிறார்கள். அவர்களைக் கனப்படுத்துகிறார்கள்.

பேதுருவும் யோவானும் சப்பாணியை நடக்கப்பண்ணவில்லை. இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் உண்டாகும் அற்புத வல்லமையே இந்தச் சப்பாணியை நடக்கப்பண்ணிற்று. அப்போஸ்தலர்கள் இயேசு கிறிஸ்துவினால் பயன்படுத்தப்படுகிற கருவிகளாக மாத்திரமே இருக்கிறார்கள்.

ஆனால் அப்போஸ்தலர்கள்தான் சப்பாணியை நடக்கப் பண்ணினார்களென்று ஜனங்கள் தவறாக நினைத்து, அவர்களை ஆச்சரியத்தோடு நோக்கிப்பார்க்கிறார்கள். அப்படிப்பட்ட ஜனங்களைப் பார்த்து பேதுரு "நாங்கள் இவனை நடக்கப்பண்ணினோமென்று நீங்கள் எங்களை நோக்கிப் பார்க்கிறதென்ன" என்று அவர்களிடத்தில் கேட்கிறான்.

இங்கு நடைபெறும் சம்பவத்தைப் பார்க்கும்போது, அப்போஸ்தலர்கள்தான் சப்பாணியை நடக்கப்பண்ணியதுபோன்று தெரிகிறது. தாயின் வயிற்றிலிருந்து சப்பாணியாய் பிறந்திருப்பவன், இப்போது குணமாக்கப்பட்டு, சாலொமோன் மண்டபம் என்னப்பட்ட மண்டபத்தில் அப்போஸ்தலரோடு நின்று கொண்டிருக்கிறான். அவனுக்கு இந்த அற்புதம் பிரத்தியட்சமாக நடைபெற்றிருக்கிறது. எல்லோரும் இதைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

தேவன் அப்போஸ்தலர்களை இந்த உலகத்திற்கு அனுப்பியிருக்கிறார். தம்முடைய சுவிசேஷச் செய்தியைப் பிரசங்கம்பண்ணுமாறு தேவன் இவர்களை பிரதிஷ்டை பண்ணியிருக்கிறார். அப்போஸ்தலர்களோ சுவிசேஷச் செய்தியைப் பிரசங்கம் பண்ணுவதோடு, இந்த உலகத்திற்கு ஆசீர்வாதமாகயிருக்குமாறும் அனுப்பப்பட்டிருக்கிறார்கள்.

இந்த ஆசீர்வாதம் அப்போஸ்தலருடைய சுயசக்தியினாலோ சுயபக்தியினாலோ உண்டாகவில்லை. இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்வதற்கு அப்போஸ்தலரிடத்தில் சுயவல்லமையோ சுயபரிசுத்தமோயில்லை. இந்த அற்புதத்தை நடப்பிப்பதற்குத் தேவையான வல்லமையை அவர்கள் இயேசுகிறிஸ்துவிடமிருந்து பெற்றுக்கொள்கிறார்கள். இயேசுகிறிஸ்து இவர்களுக்குக் கொடுக்கும் தெய்வீக வல்லமையினால் நடைபெறும் அற்புதங்களுக்கும் அடையாளங்களுக்கும் இவர்களுடைய சுயபக்தியும் சுயசக்தியும் காரணமல்ல. இதனால் உண்டாகும் பாராட்டுதல்களுக்கும், மேன்மைகளுக்கும் இவர்கள் பாத்திரமானவர்களுமல்ல.

பேதுரு நம்மைப்போலவே சாதாரண மனுஷன். அவனும் ஒரு பாவியான மனுஷன். அவனுடைய சுயபரிசுத்தத்தினால் சப்பாணி குணமாக்கப்படவில்லை. ஆனாலும் பேதுரு இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே இந்த அற்புதங்களைச் செய்கிறான். இந்த அற்புதம் தன்னுடைய சுயசக்தியினாலோ அல்லது சுயபக்தியினாலோ நடைபெறவில்லையென்பது பேதுருவுக்குத் தெரியும். இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலேயே சப்பாணி குணமாக்கப்பட்டிருக்கிறான் என்பதும் பேதுருவுக்குத் தெரியும். ஆனால் இதைப் பார்க்கிற ஜனங்களோ தவறாகப் புரிந்துகொள்கிறார்கள். அப்போஸ்தலரின் சுயபக்தியும் சுயசக்தியும் சப்பாணியை நடக்கப்பண்ணிற்று என்று தவறாக நினைக்கிறார்கள்.

நாம் தேவனுடைய கிருபைகளையும் ஆசீர்வாதங்களையும், சிலாக்கியங்களையும் பெற்றுக் கொள்வதற்கு சில ஊழியக்காரர்கள் நமக்கு உதவியாக இருக்கலாம். அதற்காக நாம் அந்த ஊழியக்காரர்களை நம்முடைய தெய்வங்களாக ஆக்கிவிடக்கூடாது. ஜனங்கள் தங்களுடைய அறியாமையினால் இப்படிப்பட்ட தவறுகளைச் செய்தாலும், ஊழியக்காரர்கள் அவர்களை இயேசுகிறிஸ்துவிடம் வழிநடத்தவேண்டும்.

சப்பாணி குணமாக்கப்பட்டதினால், ஜனங்கள் பேதுருவையும் யோவானையும் கனப்படுத்த விரும்புகிறார்கள். ஆனால் அவர்களோ மிகுந்த கவனத்தோடும், எச்சரிப்போடும், ஜனங்களுடைய துதிகளையும், கனத்தையும், மகிமையையும் இயேசுகிறிஸ்துவுக்கே செலுத்துமாறு அவர்களை வழிநடத்துகிறார்கள். கர்த்தருடைய கரத்தில் நாம் வல்லமையாகப் பயன்படவேண்டுமென்றால், நம்மிடத்தில் மனத்தாழ்மை இருக்கவேண்டும். சுயபெருமை இருக்கக்கூடாது. நம்முடைய சுயமகிமையை நாம் தேடக்கூடாது. நாம் கர்த்தரையே மகிமைப்படுத்தவேண்டும். மற்றவர்களும் கர்த்தரையே மகிமைப்படுத்துவதற்கு அவர்களை வழிநடத்தவேண்டும்.

ஜீவாதிபதியை கொலை செய்தீர்கள்

ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களுடைய தேவனாகிய நம்முடைய பிதாக்களின் தேவன் தம்முடைய பிள்ளையாகிய இயேசுவை மகிமைப்படுத்தினார்; அவரை நீங்கள் ஒப்புக்கொடுத்தீர்கள்; பிலாத்து அவரை விடுதலையாக்கத் தீர்மானித்தபோது, அவனுக்குமுன்பாக அவரை மறுதலித்தீர்கள் பரிசுத்தமும் நீதியுமுள்ளவரை நீங்கள் மறுதலித்து, கொலைபாதகனை உங்களுக்காக விடுதலை பண்ணவேண்டுமென்று கேட்டு, ஜீவாதிபதியைக் கொலைசெய்தீர்கள்; அவரை தேவன் மரித்தோரிலிருந்தெழுப்பினார்; அதற்கு நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம் (அப் 3:13-15).

பேதுரு இயேசுகிறிஸ்துவைப்பற்றி யூதருக்குப் பிரசங்கம்பண்ணுகிறான். இயேசுகிறிஸ்துவே மெய்யான மேசியா என்பதைத் தெளிவுபடுத்துகிறான். பிதாவானவர் முற்பிதாக்களுக்கு வாக்குப்பண்ணின மேசியாவானவர் இயேசுகிறிஸ்துவே என்று பேதுரு பிரசங்கம்பண்ணுகிறான். பேதுரு இயேசுவைப்பற்றிக் குறிப்பிடும்போது அவர் தேவனுடைய பிள்ளை என்று குறிப்பிடுகிறான். இயேசுவானவர் பிதாவின் குமாரனாகயிருக்கிறார். இயேசுகிறிஸ்து நமக்கு இரட்சகராகயிருக்கிறார். ஆனால் பிதாவாகிய தேவனுக்கோ அவர் பிரியமான குமாரனாகயிருக்கிறார்.

தேவன் தம்முடைய பிள்ளையாகிய இயேசுவை மகிமைப்படுத்தினார். அவருடைய மரணத்திலிருந்து அவரை உயிரோடு எழுப்பினார். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களுடைய தேவனாகிய நம்முடைய பிதாக்களின் தேவன், தம்முடைய பிள்ளையாகிய இயேசுவை மகிமைப்படுத்தினார். தேவன் தமது ஒரே பேறான குமாரனை இந்த உலகத்திற்கு அனுப்பினார். தம்முடைய முற்பிதாக்களுக்கு வாக்குப்பண்ணின பிரகாரம், தம்முடைய பிள்ளையாகிய இயேசுகிறிஸ்துவை இந்த உலகத்திற்கு அனுப்பினார்.

அப்போஸ்தலர்கள் சுவிசேஷச் செய்தியைப் பிரசங்கம்பண்ணுகிறார்கள். இந்தச் செய்தியானது அப்போஸ்தலருடைய சுயசெய்தியல்ல. ஆபிரகாமின் தேவனாகிய கர்த்தருடைய சித்தமும் சிந்தையுமே சுவிசேஷச் செய்தியாக இருக்கிறது. நாம் சுவிசேஷச் செய்தியைப் பிரசங்கிக்கும்போது, தேவனுடைய சித்தத்தையும் சிந்தையையும் பிரசங்கம்பண்ணுகிறோம்.

யூதர்கள் இயேசுகிறிஸ்துவைக் கொலைசெய்தார்களென்று பேதுரு அவர்கள்மீது குற்றம் சுமத்துகிறான். "இயேசுவை நீங்கள் ஒப்புக்கொடுத்தீர்கள்" என்று பேதுரு யூதர்மீது குற்றம் சுமத்துகிறான். இயேசுகிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்ததில் இந்த யூதர்களுக்கு நேரடியாகத் தொடர்பு இல்லாமலிருக்கலாம். ஆனால் திரளான யூதரோடு இவர்களும் சேர்ந்து, இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமாகயிருந்தார்கள். இயேசுகிறிஸ்து யாரையும் பகைக்கவில்லை. ஆனால் யூதர்களோ இயேசுகிறிஸ்துவைத் தங்களுடைய எதிரியாகவே பாவித்தார்கள்.

பிலாத்து இயேசுவை விடுதலையாக்க வேண்டுமென்று தீர்மானித்தான். ஆனால் யூதர்களோ பிலாத்துவுக்கு முன்பாக இயேசுவை மறுதலித்தார்கள். இயேசுகிறிஸ்து தங்களுக்குத் தேவையில்லையென்று சொல்லி, அவரை ஒதுக்கி தள்ளிவிட்டார்கள். அவர்களுடைய பார்வைக்கு இயேசுவை மேசியாவாகத் தெரியவில்லை. தங்களுடைய மேசியா வெளிப்பிரகாரமான ஆடம்பரத்தோடும், அலங்காரத்தோடும், ஆரவாரத்தோடும், பிரத்தியட்சமான வல்லமையோடும் தங்கள் மத்தியிலே வருவாரென்று யூதர்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால் அவர்கள் எதிர்பார்த்த பிரகாரம் இயேசுகிறிஸ்து ஆடம்பரமாகவோ, ஆரவாரமாகவோ வரவில்லை. ஆகையினால் இயேசு தங்களுடைய மேசியா இல்லையென்று அவரை மறுதலித்துவிடுகிறார்கள்.

பிலாத்து இயேசுவினிடத்தில் ஒரு குற்றமும் காணவில்லை. அவரை விடுதலை செய்துவிடலாமென்று மனதாயிருக்கிறான். ஆனால் யூதர்களோ பிலாத்துவுக்கு முன்பாக இயேசுவை மறுதலிக்கிறார்கள். யூதர்கள் பிலாத்துவை விட மோசமானவர்களாகயிருக்கிறார்கள். பிலாத்து இயேசுவை விடுதலையாக்கத் தீர்மானித்தான். ஆனால் இவர்களோ இயேசுவைக் கிறிஸ்து என்று அங்கீகரிக்காமல், அவரைச் சிலுவையில் அறைந்து கொல்ல ஒப்புக்கொடுக்கிறார்கள். பரிசுத்தமும் நீதியுமுள்ள இயேசுவை அவர்கள் மறுதலித்துவிடுகிறார்கள்.

இயேசுகிறிஸ்து கள்ளம் கபடமற்றவர். அவரிடத்தில் வஞ்சனையில்லை. அவரிடத்தில் பாவமுமில்லை. அவர் பரிசுத்தமுள்ளவர். நீதியுள்ளவர். அப்படிப்பட்ட இயேசுகிறிஸ்துவை யூதர்கள் சிலுவையில் அறைவதற்கு ஒப்புக்கொடுக்கிறார்கள். இயேசுகிறிஸ்து கள்ளம் கபடமில்லாமல், வஞ்சனையில்லாமல் இருப்பதினால் யூதர்களுக்கு ஒரு பிரச்சனையுமில்லை. இதனால் அவர்களுக்கு இயேசுவின்மீது கோபமுண்டாகவில்லை. ஆனால் இயேசுகிறிஸ்துவோ பரிசுத்தமும் நீதியுமுள்ளவராகயிருக்கிறார். யூதரிடத்தில் பரிசுத்தமோ நீதியோ சிறிதுமில்லை. ஆகையினால் பரிசுத்தமும் நீதியுமுள்ள இயேசுவின்மீது யூதர்கள் கோபமாகயிருக்கிறார்கள். அவரை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்துவிட்டால் தங்களுடைய அநீதியும் தங்களுடைய அசுத்தமும் யாருக்கும் வெளியே தெரியாது என்று நினைக்கிறார்கள்.

பிலாத்து ஒவ்வொரு பண்டிகையின்போதும் சிறையில் கைதுபண்ணப்பட்டிருக்கும் ஒருவனை விடுதலைபண்ணுவது வழக்கம். அப்போதுகூட அவர்கள் ஒரு கொலைபாதகனைத் தங்களுக்காக விடுதலை பண்ணவேண்டுமென்று கேட்கிறார்கள். ஜீவாதிபதியாகிய இயேசுகிறிஸ்துவையோ கொலை செய்து விடுகிறார்கள். இயேசுகிறிஸ்து ஆத்தும இரட்சகர். அவர் எல்லா ஜீவனுக்கும் ஆதாரமாகயிருக்கிறவர். அப்படிப்பட்ட ஜீவாதிபதியையே அவர்கள் சிலுவையில் அறைந்து கொன்றுபோடுகிறார்கள்.

யூதர்கள் இயேசுகிறிஸ்துவை மறுதலிப்பதோடு நின்றுவிடவில்லை. அவர்களுக்கு இயேசுவின் மூலமாக மாத்திரமே தேவகிருபையும் இரக்கமும் கிடைக்கும். அவர்களோ அதையும் மறுதலித்து விடுகிறார்கள். தங்களுக்குக் கிடைக்கும் கிருபைக்கும் இரக்கத்திற்கும் எதிராக கலகம்பண்ணுகிறார்கள்.

இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்ததை பேதுரு அவர்களுக்கு ஏற்கெனவே பிரசங்கம் பண்ணியிருக்கிறான். இயேசுவைத் தேவன் எழுப்பினாரென்றும், இதற்கு தாங்கள் எல்லாரும் சாட்சிகளாகயிருப்பதாகவும் பேதுரு பிரசங்கம்பண்ணியிருக்கிறான் (அப் 2:32).

சர்வாங்க சுகம்

அவருடைய நாமத்தைப்பற்றும் விசுவாசத்தினாலே அவருடைய நாமமே நீங்கள் பார்த்து அறிந்திருக்கிற இவனைப் பெலப்படுத்தினது; அவரால் உண்டாகிய விசுவாசமே உங்களெல்லாருக்கும் முன்பாக, இந்தச் சர்வாங்க சுகத்தை இவனுக்குக் கொடுத்தது (அப் 3:16).

தாயின் வயிற்றிலிருந்து சப்பாணியாய் பிறந்தவன் இப்போது குணமடைந்திருக்கிறான். இவன் தங்களுடைய சுயசக்தியினாலோ அல்லது சுயபக்தியினாலோ குணமடையவில்லை என்பதை பேதுரு யூதர் மத்தியிலே அறிக்கை செய்கிறான். அத்தோடு இயேசுகிறிஸ்துவின் வல்லமையினாலேயே சப்பாணி குணமடைந்தான் என்பதையும் அறிக்கை செய்கிறான். "இயேசுகிறிஸ்துவின் நாமமும், அவருடைய நாமத்தைப்பற்றும் விசுவாசமும், இந்தச் சப்பாணியைப் பெலப்படுத்தினது" என்று பேதுரு அவர்களுக்குச் சாட்சியாக அறிவிக்கிறான். தான் சொன்னதை மறுபடியுமாக "இயேசுவால் உண்டாகிய விசுவாசமே, உங்களெல்லாருக்கும் முன்பாக, இந்தச் சர்வாங்க சுகத்தை இவனுக்குக் கொடுத்தது" என்றும் பேதுரு யூதருக்கு முன்பாக இயேசுகிறிஸ்துவைப் பற்றிச் சாட்சிசொல்லுகிறான்.

சப்பாணி மெய்யாகவே குணமடைந்திருக்கிறான். அவனுக்குள் மெய்யாகவே அற்புதம் நடைபெற்றிருக்கிறது. பேதுரு யூதரிடத்தில் அந்த அற்புதத்தைப்பற்றி முதலாவதாகக் குறிப்பிடுகிறான். இந்தச் சப்பாணியை யூதர்கள் பார்த்தும் அறிந்துமிருக்கிறார்கள். அற்புதம் ஏதோ ஒரு மூலையில் யாருக்கும் தெரியாமல் ரகசியமாக நடைபெறவில்லை. எல்லோருக்கும் முன்பாகப் பிரத்தியட்சமாக நடைபெற்றது. சப்பாணி அவர்களெல்லாருக்கும் முன்பாக இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் சர்வாங்க சுகத்தைப் பெற்றுக்கொள்கிறான்.

சப்பாணி முழுவதுமாகக் குணமடைந்திருக்கிறான். அவன் குணமடைந்தவுடன் எழுந்து, குதித்து நடக்கிறான். குதித்தெழுந்து நிற்கிறான். நடந்து குதிக்கிறான். இவனுக்கு சர்வாங்க சுகமுண்டாயிற்று.

சப்பாணிக்கு இந்த சர்வாங்க சுகம் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் உண்டாயிற்று என்பதை பேதுரு சாட்சியாக அறிவிக்கிறான். பேதுரு சப்பாணியிடம் "நசரேயனாகிய இயேசுவின் நாமத்தினாலே நீ எழுந்து நட" (அப் 3:6) என்று சொன்னான். பேதுரு சொன்ன பிரகாரமாகவே சப்பாணி இயேசுவின் நாமத்தினால் எழுந்து நடந்தான். இயேசுகிறிஸ்து என்னும் நாமம் எல்லா நாமத்திற்கும் மேலான நாமம். அவருடைய அதிகாரம் எல்லா அதிகாரத்திற்கும் மேலான அதிகாரம். இயேசுகிறிஸ்துவின் வல்லமையினாலேயே சப்பாணி சர்வாங்க சுகத்தைப் பெற்றிருக்கிறான்.

ஒரு ராஜா ஒருவனுக்குத் தண்டனை கொடுக்கும்போது, அந்தத் தண்டனையை ராஜா நேரடியாக நிறைவேற்றமாட்டான். அவனுக்குக் கீழே பணிபுரியும் அதிகாரிகளில் ஒருவன், ராஜா சொன்ன தண்டனையை நிறைவேற்றுவான். இயேசுகிறிஸ்துவின் வல்லமையும், அவருடைய நாமத்தினால் உண்டாயிருக்கும் வல்லமையும் சப்பாணி குணமான தன் மூலமாக வெளிப்படுகிறது. அவருடைய நாமமகிமைக்காக அவருடைய வல்லமை கிரியை செய்கிறது.

அப்போஸ்தலர்கள் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் அற்புதம் செய்தாலும், அந்த அற்புதம் செய்யும் வல்லமை இயேசுகிறிஸ்துவிடமிருந்தே வருகிறது. அற்புதம் நடைபெறும்போது இயேசுகிறிஸ்துவின் நாமமே மகிமைப்படுகிறது. அப்போஸ்தலர்கள் அற்புதங்களைச் செய்தாலும், இயேசுகிறிஸ்துவே மகிமையடைகிறவர்.

பேதுரு தன்னுடைய பிரசங்கச் செய்தியில் சுவிசேஷத்தின் பிரதான சத்தியத்தைத் தெளிவுபடுத்துகிறான். இயேசுகிறிஸ்துவே எல்லா அதிகாரத்திற்கும், எல்லா கிருபைக்கும், எல்லா இரக்கத்திற்கும் ஆதாரமாகயிருக்கிறவர். அவரே பரம வைத்தியர். அவரே உலக இரட்சகர். இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் நாம் விசுவாசம் வைக்கும்போது, நாம் தேவனுடைய கிருபையையும் வல்லமையையும் பெற்றுக்கொள்கிறோம். இயேசுகிறிஸ்துவின் நாமத்தை நாம் விசுவாசத்தோடு பற்றிக்கொள்ளும்போது நமக்கு தேவனுடைய கிருபையும், தெய்வீக சுகமாதலும் உண்டாகும்.

இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் உண்டாகும் விசுவாசம் வியாதியஸ்தரை சொஸ்தமாக்கும். நாம் இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைக்கும்போது ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வோம். பேதுரு யூதர்களிடம் சர்வாங்க சுகத்தைக் கொடுக்கிற இயேசுகிறிஸ்துவைப்பற்றிப் பிரசங்கம்பண்ணுகிறான். அந்த யூதர்கள் ஜீவாதிபதியாகிய இயேசுவை சிலுவையில் அறைந்து கொலை செய்துவிட்டார்கள் என்று அவர்கள்மீது குற்றம் சுமத்துகிறான்.

அறியாமையினாலே

சகோதரரே, நீங்களும் உங்கள் அதிகாரிகளும் அறியாமையினாலே இதைச் செய்தீர்களென்று அறிந்திருக்கிறேன் (அப் 3:17).

யூதர்கள் ஜீவாதிபதியாகிய இயேசுகிறிஸ்துவைக் கொலை செய்தாலும், அவர்களும் தேவனிடத்தில் கிருபையும் இரக்கமும் பெற்றுக்கொள்ளும் வாய்ப்புள்ளது என்று சொல்லி பேதுரு அவர்களை உற்சாகப்படுத்துகிறான். கிறிஸ்துவின் சுவிசேஷத்தை எப்படியெல்லாம் அறிவிக்கவேண்டுமோ அப்படியெல்லாம் அறிவித்து, இயேசுகிறிஸ்துவின் சத்திய வார்த்தை அவர்களுடைய உள்ளத்தில் பதிவதற்கு உதவிசெய்கிறான். அவர்கள் பயத்தினாலோ அல்லது ஏமாற்றத்தினாலோ அல்லது அவிசுவாசத்தினாலோ இயேசுகிறிஸ்துவை விட்டு விலகிப்போய்விடக்கூடாது என்பதில் பேதுரு மிகவும் எச்சரிகையோடிருக்கிறான். அவர்களைக் கடினமான வார்த்தைகளினால் அதிகமாகக் கடிந்துகொள்ளவில்லை. முடிந்தவரையிலும் அவர்களுக்கு ஆறுதலான வார்த்தைகளையே பேசுகிறான்.

யூதர்கள் ஜீவாதிபதியாகிய இயேசுகிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்து கொன்றது மெய்தான். ஆனாலும் இதை அவர்கள் தங்கள் அறியாமையினால் செய்திருக்கலாம் என்று அவர்களிடத்தில் அறிவிக்கிறான். அவர்களை அழைக்கும்போது "ஜீவாதிபதியைக் கொன்ற கொலைபாதகர்களே" என்று அழைக்காமல், மிகுந்த அன்போடு அவர்களை "சகோதரரே" என்றே அழைக்கிறான். தன்னையும் அவர்களோடு இணைத்துக்கொள்கிறான். அவர்களுடைய மீறுதல்களில் தானும் பங்காளியாகயிருப்பதாக அறிவிக்கிறான்.

யூதஜனங்களைப்போலவே, பேதுருவும் பரிசுத்தமும் நீதியுமுள்ளவரை மறுதலித்தான். அவரைத் தனக்குத் தெரியாது என்று பேதுரு அறிக்கை செய்தான். இயேசுவைத் தனக்குத் தெரியாவே தெரியாது என்று சத்தியமும் பண்ணினான். தன்னைப்போலவே இவர்களும் பரிசுத்தமும் நீதியுமுள்ளவரை மறுதலித்திருக்கிறார்கள். இவர்கள் தங்களுடைய சுயபுத்தியினால் இயேசுவை மறுதலியாமல் அறியாமையினால் இதைச் செய்தார்கள் என்பதை தான் அறிந்திருப்பதாகவும் அவர்களிடத்தில் கூறுகிறான். இவர்கள் மாத்திரமல்ல இவர்களுடைய அதிகாரிகளும் அறியாமையினாலேயே இயேசுகிறிஸ்துவை மறுதலித்தார்கள். தங்கள் அறியாமையினாலேயே அவரைச் சிலுவையில் அறைந்து கொலை செய்தார்கள்.

பேதுருவின் வார்த்தையில் அன்பும் பாசமும் வெளிப்படுகிறது. பேதுரு தயவாய்ப் பேசுகிறான். தன்னுடைய பிரசங்கத்தைக் கேட்கிறவர்கள் எல்லோரும் இரட்சிக்கப்படவேண்டும் என்னும் வாஞ்சையில் மிகவும் நிதானமாகப் பேசுகிறான். வார்த்தைகளைக் கவனமாகக் கையாளுகிறான். கர்த்தருடைய ஊழியத்தைச் செய்கிற நமக்கு பேதுரு ஒரு முன்மாதிரியாக இருக்கிறான். நம்முடைய பிரசங்கத்திலும், நாம் தேவையில்லாமல் எல்லோரையும் அடிக்கடி கடிந்துகொள்ளக்கூடாது. வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் ஜனங்களைச் சபித்துவிடக்கூடாது. ஆறுதலான வார்த்தைகளைப்பேசி, அவர்களை எப்படியாவது இயேசுகிறிஸ்துவிடம் அழைத்து வரவேண்டும்.

இயேசுகிறிஸ்து கல்வாரி சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கும்போதுகூட, தம்மைச் சிலுவையில் அறைந்தவர்களுக்காகப் பிதாவினிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். அவர்கள் இந்தத் தவறை அறியாமல் செய்துவிட்டதாகவும் அவர்களை மன்னிக்குமாறும் இயேசுகிறிஸ்து பிதாவிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார். ஊழியத்தை எப்படி செய்யவேண்டுமென்பதை பேதுரு இயேசுகிறிஸ்துவிடத்தில் கற்றுக் கொண்டவன். நம்முடைய சத்துருக்களையும் நாம் சிநேகிக்க வேண்டுமென்றும், நம்மைச் சபிப்பவர்களையும் நாம் ஆசீர்வதிக்க வேண்டுமென்றும் இயேசுகிறிஸ்து நமக்கு உபதேசம்பண்ணியிருக்கிறார். அதற்கு அவர் ஒருமுன்மாதிரியாகவும் வாழ்ந்து காண்பித்திருக்கிறார். அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி, பேதுருவும் இயேசுகிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்து கொலைசெய்த யூதர்களிடம் அன்போடு பேசுகிறான்.

யூதமார்க்கத்தின் தலைவர்களில் சிலரும், அவர்களுடைய அதிகாரிகளில் சிலரும், யூதமார்க்கத்து ஜனங்களில் சிலரும் இயேசுகிறிஸ்துவின்மீது கோபங்கொண்டு, அவரைச் சிலுவையில் அறைந்திருக்கலாம். ஆனால் பெருவாரியான அதிகாரிகளும் யூதர்களும் இயேசுகிறிஸ்துவின் மரணத்தில் பங்கு பெறவில்லை. அவர்கள் இயேசுகிறிஸ்துவைக் கொலைசெய்ய வேண்டுமென்று வைராக்கிய கோபத்தோடில்லை. ஆனாலும் பிலாத்துவுக்கு முன்பாக எல்லோரும் "இயேசுவைச் சிலுவையில் அறையும்" என்று கூக்குரலிட்டபோது, இவர்களும் தங்கள் அறியாமையினால், அவர்களோடு சேர்ந்து, "இயேசுவைச் சிலுவையில் அறையும்" என்று கூட்டத்தோடு கூட்டமாகக் கூக்குரலிட்டிருக்கலாம். இது இவர்களுடைய அறியாமையினால் செய்த தப்பிதம்.

முன்னறிவித்தவைகள்

கிறிஸ்து பாடுபடவேண்டுமென்று தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் முன்னறிவித்தவைகளை இவ்விதமாய் நிறைவேற்றினார் (அப் 3:18).

யூதர்கள் ஜீவாதிபதியைக் கொலைசெய்தார்கள். இது வேதவாக்கியத்தின் நிறைவேற்றமாக இருக்கிறது என்று பேதுரு தெளிவுபடுத்துகிறான். தீர்க்கதரிசிகளுடைய வாக்கினால் முன்னறிவித்தவைகள் இயேசுகிறிஸ்துவின் மரணத்தின் மூலமாக நிறைவேறியிருக்கிறது. கிறிஸ்து பாடுபடவேண்டுமென்று தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகள் எல்லாருடைய வாக்கினாலும் முன்னறிவித்திருக்கிறார். தேவன் முன்னறிவித்த பிரகாரமாக, இயேசுகிறிஸ்துவின் பாடுகளையும், மரணத்தையும், இவ்விதமாய் நிறைவேற்றியிருக்கிறார்.

வேதவாக்கியத்தில் தேவன் முன்னறிவித்திருப்பதை யூதர்கள் நிறைவேற்றியிருக்கிறார்கள். வேத வாக்கியத்தின் பிரகாரமாகவே யூதர்கள் இயேசுவைக் கொலை செய்திருக்கிறார்கள். ஆனால் தாங்கள் செய்தது என்னது என்று அவர்களுக்கே தெரியாது. தங்கள் அறியாமையினாலே அவர்கள் இயேசுவைக் கொலைசெய்தார்கள். தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகள் எல்லோருடைய வாக்கினாலும் முன்னறிவித்தவைகளை, யூதர்களுடைய கரங்களினால், இவ்விதமாக நிறைவேற்றியிருக்கிறார். இது தேவனுடைய தெய்வீக திட்டம். அவருடைய தெய்வீக திட்டத்தை இவர்கள் அறியாதவர்களாகயிருக்கிறார்கள். தங்கள் அறியாமையினால் ஜீவாதிபதியைக் கொலைசெய்துவிட்டு, தாங்கள்தான் அவரைக் கொலைசெய்துவிட்டோமென்று தங்கள் இருதயத்தில் குத்தப்பட்டவர்களாகயிருக்கிறார்கள்.

தேவன் தம்முடைய திட்டத்தையும் தீர்மானத்தையும் நிறைவேற்றியிருக்கிறார். தேவனுடைய திட்டத்தின் பிரகாரமாகவே இயேசுகிறிஸ்துவுக்குப் பாடுகளும் மரணமும் உண்டாயிற்று. யூதர்கள் இயேசுகிறிஸ்துவின்மீது கோபத்தோடும், கொலைவெறியோடும் இருந்து, அவரைச் சிலுவையில் அறைந்து கொன்றபோதிலும், அவர்கள் செய்த பாவத்தை மன்னிப்பதற்கு தேவன் ஆயத்தமாகயிருக்கிறார்.

தேவனுடைய சித்தத்தின் பிரகாரமாகவே இயேசுகிறிஸ்து சிலுவையில் மரித்தார். ஆனாலும் யூதர்கள் தங்கள் அறியாமையினால் அவரைச் சிலுவையில் அறைந்தார்கள். தாங்கள் செய்த தப்பிதத்திற்கும் பாவத்திற்கும் யூதர்கள் மனந்திரும்பவேண்டும். தேவனிடத்திலிருந்து இரக்கத்தையும், கிருபையையும், மன்னிப்பையும் பெற்றுக்கொள்ளவேண்டும். பாவங்கள் மன்னிக்கப்படும்படியாகவே இயேசுகிறிஸ்து பாடுகளை அனுபவித்தார். சிலுவையில் தம்முடைய இரத்தத்தைச் சிந்தி தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்தார்.

இயேசுகிறிஸ்துவின் மரணத்தின் மூலமாக நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படும் என்னும் நம்பிக்கை நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் பாடுகள் மூலமாகவும், மரணத்தின் மூலமாகவும் தேவனுடைய கிருபையும் இரக்கமும் நமக்குக் காண்பிக்கப்படும் என்னும் சிலாக்கியமும் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தேவன் நம்முடைய பாவங்களை மன்னிக்கும் இரட்சிப்பின் கிருபையை நாம் விசுவாசத்தோடு பெற்றுக்கொள்ள வேண்டும்.

மனந்திரும்பிக் குணப்படுங்கள்

ஆன படியினாலே கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து இளைப்பாறுதலின் காலங்கள் வரும் படிக்கும், முன்னே குறிக்கப்பட்ட இயேசுகிறிஸ்துவை அவர் உங்களிடத்தில் அனுப்பும்படிக்கும், உங்கள் பாவங்கள் நிவிர்த்தி செய்யப்படும் நிவிர்த்திசெய்யப்படும் பொருட்டு நீங்கள் மனந்திரும்பிக் குணப்படுங்கள் உலகத்தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித் தீருங்காலங்கள் வருமளவும் பரலோகம் அவரை ஏற்றுக்கொள்ளவேண்டும் (அப் 3:19-21).

யூதர்களுடைய பாவங்கள் நிவிர்த்தி செய்யப்படவேண்டுமானால் அவர்கள் மனந்திரும்பிக் குணப்படவேண்டும். பாவத்திலிருந்து நாம் குணப்படும்போதுதான் நம்முடைய பாவங்கள் நிவிர்த்தி செய்யப்படும். பாவநிவிர்த்தி செய்யப்படுவது என்றாலே நம்முடைய பாவங்களிலிருந்து நாம் குணப்படுவது என்பது தான் பொருள். தேவன் நம்முடைய பாவங்களை மன்னிக்கும்போது, அதற்குப் பின்பு அவர் நம்முடைய பாவங்களை நினைத்துப் பார்ப்பதில்லை. நம்முடைய பாவங்களை அவர் மன்னித்த பின்பு அவர் நம்மை ஒரு பாவியாக பார்க்கமாட்டார். இயேசுகிறிஸ்து நம்முடைய பாவங்களை மன்னிக்கிறவர், மன்னித்து மறக்கிறவர். நம்முடைய பாவசுபாவம் குணப்படுத்தப்படும்.

நாம் மனந்திரும்பாமலேயே, இயேசுகிறிஸ்து நம்முடைய பாவத்தை மன்னிப்பார் என்று எதிர்பார்க்கக்கூடாது. இயேசுகிறிஸ்துவிடம் விசுவாசத்தோடு மனந்திரும்பி வராமல் நம்முடைய பாவங்கள் நிவிர்த்தியாகும் என்று எதிர்பார்க்கக்கூடாது. மனந்திரும்புதல் இல்லையென்றால் பாவநிவிர்த்தியும் இல்லை. மனந்திரும்பினால் நம்முடைய பாவம் நிவிர்த்தியாகும் என்னும் நம்பிக்கை நமக்குள் இருக்கவேண்டும். இயேசுகிறிஸ்து நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்வார் என்பதற்கு இந்த நம்பிக்கையே வல்லமையுள்ள உபாயமாகயிருக்கிறது.

யோவான்ஸ்நானன் தன்னுடைய பிரசங்கத்தின் ஆரம்பத்திலேயே "மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது" என்று சொல்லி பிரசங்கம் பண்ணினான். இயேசுகிறிஸ்துவின் மூலமாக இப்போது கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து இளைப்பாறுதலின் காலங்கள் வந்திருக்கிறது. நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுவதினால் உண்டாகும் கனிகள் இந்த இளைப்பாறுதலின் காலத்தில் பூரணமாக வெளிப்படும்.

நம்முடைய உள்ளத்தில் பயமும், சந்தேகமும் இருக்கும்போது அது இளைப்பாறுதலின் காலமாகயிராமல் வேதனை அனுபவிக்கிற காலமாகவே இருக்கும். பயத்தினாலும் அவிசுவாசத்தினாலும் நாம் வேதனை அனுபவிக்கும்போது, நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டிருக்கிறது என்னும் நிச்சயம் நமக்கு உண்டாகாது. ஆகையினால் நமக்குள் இளைப்பாறுதலின் காலங்கள் வரும்படிக்கு ஜெபிக்கவேண்டும். இக்காலத்தில் நமக்குள் விசுவாசமும் தேவனுடைய கிருபாசனத்தை நம்பிக்கையோடு கிட்டிச்சேரும் தைரியமும் உண்டாயிருக்கும். கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தே இளைப்பாறுதலின் காலங்கள் வரும். அப்போது நம்முடைய கண்ணீர்களெல்லாம் துடைக்கப்படும். நம்முடைய பயங்கள் நம்மைவிட்டு நீங்கும். அவிசுவாசத்திற்குப் பதிலாக நம்முடைய இருதயத்தில் விசுவாசம் நிரம்பியிருக்கும்.

இயேசுகிறிஸ்துவின் வருகையினால் நமக்கு ஆறுதல் உண்டாயிருக்கும். தேவன் முன்குறிக்கப்பட்ட இயேசுகிறிஸ்துவை அவர் நம்மிடத்தில் அனுப்புவார். நாம் மனந்திரும்பி குணப்படும்போது, இயேசுகிறிஸ்துவின் சரீரப்பிரகாரமான பிரசன்னம் நம்மோடு கூடவே இருக்கவேண்டும் என்றும் எதிர்பார்க்கமாட்டோம். இயேசுகிறிஸ்து பரமேறிப்போனபோது, சீஷர்களுடைய கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக்கொண்டது. இறுதிக்காலம் வரையிலும் அவர் மேகங்களின் நடுவே பரலோகத்திலிருப்பார். இதை நாம் விசுவாசிக்கவேண்டும்.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியமே விசுவாசத்தின் அடிப்படையில் தான் அமைந்திருக்கிறது. நாம் காணக்கூடாதவற்றை நம்புவதுதான் விசுவாசம். விசுவாசம் என்பது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகள் எல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகளெல்லாம் நிறைவேறித் தீரும் காலங்கள் வருமளவும் பரலோகம் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள வேண்டும் (அப் 3:21). வானங்கள் அவரை ஏற்றுக்கொண்டாலும், காலம் நிறைவேறும்போது, இயேசு கிறிஸ்து மனந்திரும்பி இரட்சிக்கப் பட்டவர்களெல்லோருக்கும் அனுப்பப்படுவார். முன்னே குறிக்கப்பட்ட இயேசுகிறிஸ்துவைத் தேவன் நம்மிடத்தில் அனுப்புவார். இயேசுகிறிஸ்துவின் ஆவிக்குரிய பிரசன்னம் நம்மோடு கூடவே இருக்கும்.

இந்த உலகத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்கும் அனுப்பப்பட்டிருக்கிறார். அவருடைய பிரசன்னம் நம்மோடுகூட இருக்கிறது. அவர் நம் மத்தியிலே அனுப்பப்பட்டிருப்பதினால் நமக்கு ஆறுதலும் இளைப்பாறுதலும் உண்டாயிருக்கிறது. காலத்தின் முடிவில் இயேசுகிறிஸ்து இந்த உலகத்தை நியாயந்தீர்ப்பதற்காக அனுப்பப்படுவார். அப்போது இந்த உலகத்தாருக்கு அது நியாயத்தீர்ப்பின் காலமாகயிருக்கும். ஆனால் மனந்திரும்பி இரட்சிக்கப்பட்டிருக்கிற நமக்கோ அது இளைப்பாறுதலின் காலமாகவும், ஆசீர்வாதத்தின் காலமாகவும் இருக்கும். அதுவரையிலும் பரலோகம் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

உலகத்தோற்றமுதல்
அப் 3 : 22-26

அப் 3:22. மோசே பிதாக்களை நோக்கி: உங்கள் தேவனாகிய கர்த்தர் என்னைப்போல் ஒரு தீர்க்கதரிசியை உங்களுக்காக உங்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணுவார்; அவர் உங்களுக்குச்சொல்லும் எல்லாவற்றிலும் அவருக்குச் செவிகொடுப்பீர்களாக.

அப் 3:23. அந்தத் தீர்க்கதரிசியின் சொற் கேளாதவனெவனோ, அவன் ஜனத்திலிராத படிக்கு நிர்மூலமாக்கப்படுவான் என்றான்.

அப் 3:24. சாமுவேல் முதற்கொண்டு, எத்தனை பேர் தீர்க்கதரிசனம் உரைத்தார்களோ, அத்தனைபேரும் இந்த நாட்களை முன்னறிவித்தார்கள்.

அப் 3:25. நீங்கள் அந்தத் தீர்க்கதரிசிகளுக்குப் புத்திரராயிருக்கிறீர்கள்; உன் சந்ததியினாலே பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும் என்று தேவன் ஆபிரகாமுக்குச் சொல்லி, நம்முடைய முன்னோர்களோடே பண்ணின உடன்படிக்கைக்கும் புத்திரராயிருக்கிறீர்கள்.

அப் 3:26. அவர் உங்களெல்லாரையும் உங்கள் பொல்லாங்குகளிலிருந்து விலக்கி, உங்களை ஆசீர்வதிக்கும்படி தேவன் தம்முடைய பிள்ளையாகிய இயேசுவை எழுப்பி, முதலாவது உங்களிடத்திற்கே அவரை அனுப்பினார் என்றான்.

செவி கொடுப்பீர்களாக

மோசே பிதாக்களை நோக்கி: உங்கள் தேவனாகிய கர்த்தர் என்னைப்போல் ஒரு தீர்க்கதரிசியை உங்களுக்காக உங்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணுவார்; அவர் உங்களுக்குச்சொல்லும் எல்லாவற்றிலும் அவருக்குச் செவிகொடுப்பீர்களாக. அந்தத் தீர்க்கதரிசியின் சொற்கேளாதவனெவனோ, அவன் ஜனத்திலிராத படிக்கு நிர்மூலமாக்கப்படுவான் என்றான் (அப் 3:22,23).

ஜீவாதிபதியை கொலைசெய்ததினால் யூதர்கள் இருதயத்தில் குத்தப்பட்டவர்களாகயிருக்கிறார்கள். அவர்கள் என்ன செய்யவேண்டுமென்று பேதுரு அவர்களுக்குச் சொல்லுகிறான். அவர்கள் மனந்திரும்ப வேண்டும். எல்லாவற்றையும் புதிதாக ஆரம்பிக்கவேண்டும். பேதுருவும் இயேசுகிறிஸ்துவை மறுதலித்தவன் தான். தான் செய்த பாவத்திற்காக பேதுரு மனம் வருந்தினான். தன்னைப்போலவே இயேசுகிறிஸ்துவை மறுதலித்த யூதர்களும் மனந்திரும்பவேண்டுமென்று பேதுரு அவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிறான்.

யூதர்கள் தங்கள் பாவவழிகளிலிருந்து விலகி, இயேசுகிறிஸ்துவிடமாக வரவேண்டும். நம்முடைய பாவங்களுக்காக நாம் வருத்தப்பட்டால் மாத்திரம் போதாது. பாவத்திலிருந்து விலகி வரவேண்டும். திரும்பவும் அதே பாவத்தைச் செய்வதற்குத் திரும்பிப்போய்விடக்கூடாது.

யூதர்கள் இயேசுகிறிஸ்துவின் வார்த்தைக்குச் செவிகொடுக்கவேண்டும். அவரே தீர்க்கதரிசிகளுக்கெல்லாம் பிரதான தீர்க்கதரிசியாக இருக்கிறார். "அவர் உங்களுக்குச் சொல்லும் எல்லாவற்றிலும் அவருக்குச் செவிகொடுப்பீர்களாக" என்று பேதுரு அவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிறான். இயேசுகிறிஸ்துவின் வார்த்தையை விசுவாசத்தோடு கேட்கவேண்டும். மற்ற தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளுக்குச் செவிகொடுப்பதுபோல இயேசுகிறிஸ்துவின் வார்த்தைக்கும் செவிகொடுக்கவேண்டும்.

செவிகொடுப்பதைப்பற்றிப் பேதுரு அவர்களுக்குச் சொல்லும்போது "எல்லாவற்றிலும்" அவருக்குச் செவிகொடுக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கூறுகிறான். நம்முடைய கிரியைகள் அனைத்தையும் இயேசுகிறிஸ்துவின் பிரமாணமே ஆளுகை செய்யவேண்டும். அவர் நமக்கு எதைச்சொன்னாலும் அதை விசுவாசத்தோடு ஏற்றுக்கொள்ளவேண்டும். நம்முடைய பிரதான தீர்க்கதரிசியாகிய இயேசுகிறிஸ்துவின் சொற்கேளாதவனெவனோ, அவன் ஜனத்திலிராத படிக்கு நிர்மூலமாக்கப்படுவான்.

நம்முடைய ஆத்தும இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் வார்த்தையைக் கேட்கவில்லையென்றால், நாம் நம்மை நிர்மூலமாக்குகிற சத்துருவின் கைகளில் விழுவது நிச்சயம். நமக்கு அழிவு வரக்கூடாது என்றால் கிறிஸ்துவின் வார்த்தைக்கு நாம் கீழ்ப்படியவேண்டும்.

முன்னறிவித்தார்கள்

சாமுவேல் முதற்கொண்டு, எத்தனை பேர் தீர்க்கதரிசனம் உரைத்தார்களோ, அத்தனைபேரும் இந்த நாட்களை முன்னறிவித்தார்கள் (அப் 3:24).

இயேசுகிறிஸ்துவின் வார்த்தைக்கு யூதர்கள் செவிகொடுத்து விசுவாசிக்கவேண்டுமென்று பேதுரு அவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிறான். இயேசுகிறிஸ்துவே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியா என்பதையும், அவரே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தெய்வீக வித்து என்பதையும் யூதர்கள் விசுவாசிக்கவேண்டும். மாம்சத்தின் பிரகாரம் இயேசுகிறிஸ்து ஆபிரகாமின் வித்தாகயிருக்கிறார். ஆபிரகாமின் சந்ததியினாலே பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும். இந்த வாக்குத்தத்தம் இஸ்ரவேல் ஜாதியாருக்கு மாத்திரமென்று கொடுக்கப்பட்டதல்ல. இயேசுகிறிஸ்துவைத் தங்களுடைய இரட்சகராக ஏற்றுக்கொண்டிருக்கிற எல்லோருமே மெய்யான இஸ்ரவேலராகயிருக்கிறார்கள். ஆகையினால் இந்த வாக்குத்தத்தம் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிற கர்த்தருடைய பிள்ளைகள் எல்லோருக்குமே கொடுக்கப்பட்டிருக்கிறது.

யூதர்கள் இயேசுகிறிஸ்துவைத் தீர்க்கதரிசியாக விசுவாசிக்கவேண்டும். மோசே பிதாக்களை நோக்கி "உங்கள் தேவனாகிய கர்த்தர் என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை உங்களுக்காக உங்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணுவார்" (அப் 3:22) என்று கூறினார். இயேசுகிறிஸ்துவே அந்தத் தீர்க்கதரிசி. இயேசுகிறிஸ்து மூலமாகவே தேவன் நம்மோடு பேசுகிறார். இயேசுகிறிஸ்துவே மோசேயைப்போல ஒரு தீர்க்கதரிசியாக இருக்கிறவர். மோசே இஸ்ரவேல் ஜனங்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து அழைத்து வந்தார். இயேசுகிறிஸ்துவும் மோசேயைப்போல, ஜனங்களை பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலைபண்ணி அழைத்துவருகிறார்.

மோசே தேவனுக்கு உண்மையுள்ள ஊழியக்காரனாகயிருந்தார். இயேசுகிறிஸ்துவோ தேவனுக்குப் பிரியமுள்ள குமாரனாகயிருக்கிறார். மோசே தாழ்மைக்கும் நீடியபொறுமைக்கும் எடுத்துக்காட்டாக விளங்கினார். அவரைப்போலவே இயேசுகிறிஸ்துவும் தாழ்மைக்கும் நீடியபொறுமைக்கும் எடுத்துக்காட்டாகயிருக்கிறார். சிலுவையின் மரணபரியந்தம் தம்மைத் தாழ்த்தினார்.

மோசேயைப்போல வேறொரு தீர்க்கதரிசி இல்லையென்று வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இயேசுகிறிஸ்துவோ மோசேயைவிட பெரியவர். இயேசுகிறிஸ்துவே தேவன் எழும்பியிருக்கிற தீர்க்கதரிசி. தேவன் தம்முடைய பிள்ளையாகிய இயேசுவை எழும்பி, முதலாவது யூதரிடத்திற்கே அவரை அனுப்பினார் (அப் 3:26). இயேசுகிறிஸ்து தமக்குச் சொந்தமானவர்களிடத்தில் வந்தார். ஆகையினால் கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர்கள் அவரை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் ஏராளமான தீர்க்கதரிசிகள் தீர்க்கதரிசனம் சொன்னார்கள். சாமுவேல் முதற்கொண்டு எத்தனையோ பேர் தீர்க்கதரிசனம் உரைத்தார்கள். ஆனால் இஸ்ரவேல் ஜனங்களோ கர்த்தருடைய தீர்க்கதரிசியின் வார்த்தைகளுக்குச் செவிகொடுக்கவில்லை. அவர்களை அவமானப்படுத்தி அனுப்பிவிட்டார்கள். இறுதியில் தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை இந்த உலகத்திற்கு அனுப்பினார்.

கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து இளைப்பாறுதலின் காலங்கள் வரும்படிக்கு, முன்னே குறிக்கப்பட்ட இயேசுகிறிஸ்துவைத் தேவன் யூதஜனத்தாரிடத்தில் அனுப்பினார் (அப் 3:19). தேவனானவர் இயேசுகிறிஸ்துவை நம் மத்தியிலே அனுப்பியிருக்கும் காலமே. உலகத்தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகள் எல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகளெல்லாம் நிறைவேறித் தீரும் காலங்களாக இருக்கிறது.

இயேசுகிறிஸ்து ஜனங்கள் மத்தியிலே தம்முடைய சரீரத்தில் பிரத்தியட்சமாக இல்லாதிருந்த காலத்தில் பாவிகள் தங்களுடைய மனவிருப்பத்தின்படி துன்மார்க்கமாக ஜீவித்தார்கள். கர்த்தருடைய பரிசுத்தவான்களோ தங்கள் மத்தியில் கிறிஸ்துவின் பிரசன்னம் பிரத்தியட்சமாகக் காணப்படாதபடியினால் சோர்ந்துபோனார்கள். நாம் எதிர்பார்த்து காத்துக்கொண்டிருக்கிற இயேசுகிறிஸ்து மறுபடியும் சீக்கிரமாக வரப்போகிறார். அப்போது துன்மார்க்கருடைய வாய்கள் அடைக்கப்படும். அவர்கள் தேவனுடைய பிரசன்னத்திற்கு முன்பாக மௌனமாயிருப்பார்கள். இதுவரையிலும் தங்கள் இருதயத்தில் சோர்ந்து போயிருக்கும் பரிசுத்தவான்கள் உற்சாகமடைவார்கள். ஆயினும் பரிசுத்தவான்கள்கூட கர்த்தருடைய பிரசன்னத்தினால் ஆச்சரியமடைந்து மௌனமாயிருப்பார்கள்.

இயேசுகிறிஸ்துவின் பிரசன்னம் நம் மத்தியிலே வரும்போது, உலகத்தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகள் எல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகளெல்லாம் நிறைவேறித் தீரும். தேவனுடைய வார்த்தைகள் எவ்வாறு நிறைவேறுகிறது என்பது புதிய ஏற்பாட்டில் விவரமாக எழுதப்பட்டிருக்கிறது. பழைய ஏற்பாட்டில் எழுதப்பட்டிருப்பதைவிட புதிய ஏற்பாட்டில் மிகவும் தெளிவாக எழுதப்பட்டிருக்கிறது. தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலமாக உரைத்தவைகளெல்லாம் எவ்வாறு நிறைவேறுகிறது என்பது புதிய ஏற்பாட்டில் தெளிவாக எழுதப்பட்டிருக்கிறது.

தேவனுடைய வார்த்தைகள் நிறைவேறும்போது கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து இளைப்பாறுதலின் காலங்கள் வரும். பகலின் உஷ்ணத்தையும் வெயிலின் கடுமையையும் சந்தித்து சோர்ந்து போயிருப்பவர்களுக்கு இளைப்பாறுதலின் காலம் மரத்தின் நிழலைப்போல குளிர்ச்சியாக இருக்கும். அது சரீரத்திற்கும் ஆத்துமாவிற்கும் அமைதியையும் ஆறுதலையும் தரும்.

கர்த்தருடைய பிள்ளைகளெல்லோருமே தங்களுக்காக நியமிக்கப்பட்டிருக்கும் இளைப்பாறுதலின் காலத்தை விசுவாசத்தோடு எதிர்பார்க்கவேண்டும். இப்பிரபஞ்சத்தில் நமக்கு பலவிதமான பாடுகளும் வேதனைகளும் உண்டாயிருக்கலாம். இளைப்பாறுதல் வரும்போது இந்தப் பாடுகளெல்லாம் முடிந்துபோகும். நம்முடைய துக்கம் சந்தோஷமாக மாறும். நம்முடைய கண்ணீர்கள் யாவும் துடைக்கப்படும். இளைப்பாறுதலின் காலம் இவ்வுலகத்திலிருந்து வராது. இது கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து வருகிறது. இந்த இளைப்பாறுதலின் காலம் நமக்கு கர்த்தருடைய பிரசன்னத்தில் நித்தியமாக நிலைத்திருக்கும்.

தீர்க்கதரிசிகளுக்குப் புத்திரர்கள்

நீங்கள் அந்தத் தீர்க்கதரிசிகளுக்குப் புத்திரராயிருக்கிறீர்கள்; உன் சந்ததியினாலே பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும் என்று தேவன் ஆபிரகாமுக்குச் சொல்லி, நம்முடைய முன்னோர்களோடே பண்ணின உடன்படிக்கைக்கும் புத்திரராயிருக்கிறீர்கள் (அப் 3:25).

யூதர்கள் தாங்கள் செய்த பாவத்திற்கு மனந்திருந்தி, இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து, அவரிடத்தில் சேரும்போது அவர்களுக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் ஏராளமாய் கிடைக்கும். இஸ்ரவேல் தேசத்தார் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட விசேஷித்த ஜாதியாக இருக்கிறார்கள். மற்ற தேசத்தாரைவிட இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருக்குப் பிரியமானவர்கள். இவர்கள் தீர்க்கதரிசிகளுக்கும் உடன்படிக்கைக்கும் புத்திரராயிருக்கிறார்கள். இந்த ஆசீர்வாதம் இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் மேன்மையான சிலாக்கியமாகும்.

யூதர்கள் தீர்க்கதரிசிகளுக்குப் புத்திரராயிருக்கிறார்கள். தேவன் இஸ்ரவேல் ஜனத்தாரிலிருந்தே தம்முடைய தீர்க்கதரிசிகளை எழுப்பினார். இஸ்ரவேல் ஜனத்தாரிடத்திற்கே தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகளை அனுப்பினார். நம்முடைய வரலாற்றுக் காலத்தில் தீர்க்கதரிசனங்கள் ஒழிந்துபோகலாம் என்று பவுல் சொல்லுகிறார். தீர்க்கதரிசனங்கள் ஒழிந்துபோனாலும் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் தீர்க்கதரிசிகளின் புத்திரர் என்றே அழைக்கப்படுவோம். ஏனெனில் நாம் தீர்க்கதரிசிகளின் வார்த்தைகள் வாசிக்கப்படுவதைக் கேட்கிறோம். ஜெபாலயங்களில் ஓய்வுநாள் தோறும் தீர்க்கதரிசிகளின் வாக்கியங்கள் வாசிக்கப்படுகிறது (அப் 13:27).

பேதுருவின் வார்த்தைகள் யூதருக்குப் புரியும்படியாக இருக்கிறது. அவர்களுடைய அன்றாட மார்க்கக் காரியங்களை பேதுரு அவர்களுக்கு எடுத்துச் சொல்லுகிறான். அவர்கள் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதற்குத் தன்னுடைய பிரசங்கத்தின் மூலமாக உதவிசெய்கிறான். யூதர்கள் தீர்க்கதரிசிகள் மூலமாகவும், தீர்க்கதரிசிகளுடைய வார்த்தைகள் மூலமாகவும் தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்டவர்கள். இவ்வாறு ஆசீர்வதிக்கப் பட்டவர்கள் தேவனுடைய கிருபையைப் பெற்றுக் கொள்ளவில்லையென்றால் அவர்களுடைய ஆசீர்வாதங்களெல்லாம் வீணாய்ப்போகும். அவர்கள் மாயையைப் பின்பற்றுகிறவர்களாக இருப்பார்கள்.

தேவன் யூதர்களுடைய முன்னோர்களோடே பண்ணின உடன்படிக்கைக்கும் இவர்கள் புத்திரராகயிருக்கிறார்கள். "உன் சந்ததியினாலே பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்" என்று தேவன் ஆபிரகாமுக்குச் சொன்னார். இந்த உடன்படிக்கைக்கு யூதர்கள் புத்திரர்களாகயிருக்கிறார்கள். பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் இயேசுகிறிஸ்துவின் மூலமாக ஆசீர்வதிக்கப்படும்போது, இந்த ஆசீர்வாதம் யூதர்களுக்குக் கிடைக்கவில்லையென்றால் அவர்கள் மிகவும் பரிதாபத்திற்குரியவர்களாகவே இருப்பார்கள்.

ஏனெனில் யூதர்கள் மாம்சத்தின் பிரகாரம் ஆபிரகாமின் சந்ததியாராகயிருக்கிறார்கள். அதே மாம்சத்தின் பிரகாரம் தேவன் ஆபிரகாமோடு பண்ணின உடன்படிக்கைக்குப் புத்திரராகவும் இருக்கிறார்கள். தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட விசேஷித்த சந்ததியாராகிய யூதர்கள் ஆசீர்வதிக்கப்பட வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாகயிருக்கிறது. ஆகையினால் யூதர்கள் தங்களுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்பி, இரட்சிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்துவைத் தங்களுடைய ஆண்டவராக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று பேதுரு அவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிறான்.

முதலாவது உங்களிடத்திற்கே

அவர் உங்களெல்லாரையும் உங்கள் பொல்லாங்குகளிலிருந்து விலக்கி, உங்களை ஆசீர்வதிக்கும்படி, தேவன் தம்முடைய பிள்ளையாகிய இயேசுவை எழுப்பி, முதலாவது உங்களிடத்திற்கே அவரை அனுப்பினார் என்றான் (அப் 3:26).

புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் தேவனுடைய கிருபை முதலாவதாக இஸ்ரவேல் புத்திரருக்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. இவர்களே தேவனுடைய கிருபையை முதலாவதாகப் பெற்றுக்கொள்ளும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறார்கள். இவர்களிடத்திற்கே இரட்சகராகிய இயேசுகிறிஸ்து முதலாவதாக அனுப்பப்பட்டார். இவர்கள் மனந்திரும்பி இயேசுகிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டிருந்தால் அவர்களுக்கு மிகுந்த ஆசீர்வாதம் உண்டாயிருக்கும். அவர்கள் மனந்திரும்பி குணப்பட்டிருந்தால் அவர்களுடைய பாவங்கள் நிவிர்த்தி செய்யப்பட்டிருக்கும் (அப் 3:20).

யூதர்களெல்லோரையும் அவர்களுடைய பொல்லாங்குகளிலிருந்து விலக்கி, அவர்களை ஆசீர்வதிக்கும்படி, தேவன் தம்முடைய பிள்ளையாகிய இயேசுவை எழுப்பி, முதலாவதாக அவரை யூதர்களிடத்திற்கே அனுப்பினார். உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்து முதலாவதாக யூதர்களை ஆசீர்வதிப்பதற்காக அவர்களிடத்திற்கே அனுப்பப்பட்டார். அவர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய அக்கிரமங்களிலிருந்து விடுதலைபெற்று, தெய்வீக ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளும் படியாக இயேசுகிறிஸ்து அவர்களிடத்திற்கே முதலாவதாக அனுப்பப்பட்டார்.

இந்த வசனத்தில் இயேசுகிறிஸ்துவின் ஊழியம் தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. பிதாவாகிய தேவனானவர் தம்முடைய பிள்ளையாகிய இயேசுவை எழுப்பினார். அவரை யூதரிடத்திற்கு அனுப்பினார். தேவன் இயேசுகிறிஸ்துவைப் பிரதான தீர்க்கதரிசியாக அபிஷேகம்பண்ணி தம்முடைய ஜனங்கள் மத்தியில் அனுப்பினார். சத்தியத்திற்குச் சாட்சிகொடுப்பதற்காகப் பிதாவானவர் குமாரனாகிய இயேசுவை அனுப்பினார். காணாமற்போன ஆத்துமாக்களை தேடிக்கண்டுபிடித்து அவர்களை இரட்சிப்பதற்காகத் தேவன் இயேசுகிறிஸ்துவை அனுப்பினார்.

"தேவன் தம் பிள்ளையாகிய இயேசுவை எழுப்பினார்" என்னும் வாக்கியமானது, இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் குறிக்கும் என்று வேதபண்டிதர்களில் சிலர் வியாக்கியானம் சொல்லுகிறார்கள். வேறுசில வேதபண்டிதர்களோ, "தேவன் இயேசுவை முதலாவது உங்களிடத்திற்கே அனுப்பினார்" என்னும் வாக்கியமானது, இயேசுகிறிஸ்து மனுஷரூபமெடுத்து யூதர் மத்தியிலே வந்ததைக் குறிக்கும் என்று வியாக்கியானம் பண்ணுகிறார்கள்.

இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்தாலும், அவர் தம்முடைய பிள்ளைகளைவிட்டு வானத்திற்கு உயரே எடுத்துக்கொள்ளப்பட்டார். இயேசுகிறிஸ்து பரமேறிப்போனாலும், அவர் தம்முடைய சுவிசேஷத்தினாலும் ஆவியினாலும் நம் மத்தியிலே மறுபடியும் மெய்யாகவே அனுப்பப்பட்டிருக்கிறார். இயேசுகிறிஸ்து பரமேறிப்போனாலும், அவருடைய பரிசுத்த பிரசன்னம், விசுவாசிகளாகிய நம் மத்தியிலே, அவருடைய சுவிசேஷத்தின் மூலமாகவும், பரிசுத்த ஆவியானவர் மூலமாகவும், நம் மத்தியிலே நிறைவாகத் தங்கியிருக்கிறது.

தேவன் தம்முடைய பிள்ளையாகிய இயேசுவை முதலாவது "உங்களிடத்திற்கே" அனுப்பினார் என்று பேதுரு பிரசங்கம் பண்ணுகிறான். "உங்களிடத்திற்கே" என்னும் வாக்கியம் யூதர்களைக் குறிக்கிறது. இவர்களே தீர்க்கதரிசிகளுக்குப் புத்திரராகவும் தேவனுடைய உடன்படிக்கைக்குப் புத்திரராகவும் இருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து யூதர் மத்தியிலே தீர்க்கதரிசியாக ஊழியம் செய்திருக்கிறார். இஸ்ரவேல் வீட்டாரில் காணாமல்போன ஆடுகளாகிய யூதர்கள் மத்தியில் இயேசுகிறிஸ்து தேவனுடைய வார்த்தையைத் தீர்க்கதரிசனமாக அறிவித்திருக்கிறார்.

இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு அவர் எல்லா தேசத்தாருக்கும் தம்முடைய சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணுகிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரையும் உலகம் முழுவதும் சென்று பிரசங்கம்பண்ணுமாறு கட்டளை கொடுக்கிறார். அவர்கள் எருசலேம் தொடங்கி சகல தேசத்தாருக்கும் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே பிரசங்கம்பண்ணவேண்டும் (லூக் 24:47). அவர்கள் மற்ற தேசத்திற்குப் போகும்போது, அங்கு யூதர்கள் யாராவது இருக்கிறார்களா என்பதைத் தேடிப்பார்த்து, முதலாவதாக அவர்களிடத்தில் இயேசுவின் நாமத்தினால் பிரசங்கம்பண்ணவேண்டும்.

யூதர்கள் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாமல் அவரை நகரத்திற்குப் புறம்பே தள்ளி கொலைசெய்தார்கள். இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்போ, அவர் யூதரிடத்திற்கே முதலாவதாக அனுப்பப்படுகிறார். அவர்களை ஆசீர்வதிக்கும்படியாகவே தேவன் தம்முடைய பிள்ளையாகிய இயேசுவை அவர்கள் மத்தியிலே அனுப்புகிறார். அவர்களை சபிக்கும்படியாக அல்ல, அவர்கள்மீது குற்றம் சுமத்தும்படியாக அல்ல, அவர்களை ஆசீர்வதிக்கும் படியாகவே தேவன் இயேசுவை அவர்களிடத்தில் அனுப்புகிறார். இயேசுகிறிஸ்து யூதர்களை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்காவிட்டாலும், அவர்கள் தேவனுடைய ஆக்கினைக்குப் பாத்திரராகவே இருக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்து நம்மை ஆசீர்வதிப்பதற்காகவே இந்த உலகத்திற்கு வந்தார். இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதே தேவனுக்குப் பிரியமானது. நம்மை ஆசீர்வதிப்பதே இயேசுகிறிஸ்துவின் பிரதான ஊழியம். "அவர்களை ஆசீர்வதிக்கையில், இயேசுகிறிஸ்து அவர்களைவிட்டுப் பிரிந்து, பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார்" (லூக் 24:51). இயேசுகிறிஸ்துவின் மூலமாகவே தேவன் நமக்கு ஆசீர்வாதங்களை அனுப்புகிறார். இயேசுகிறிஸ்துவின் மூலமாக மாத்திரமே நாம் தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளலாமென்று எதிர்பார்க்க முடியும்.

நம்முடைய பொல்லாங்குகளிலிருந்து நாம் விலக்கப்பட்டிருப்பதே நமக்குக் கிடைத்திருக்கும் மிகப்பெரிய ஆசீர்வாதமாகும். நம்முடைய பொல்லாங்குகளிலிருந்து நாம் விலக்கப்பட்டால் மாத்திரமே, தேவனுடைய மற்ற எல்லா ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்வதற்கு நாம் தகுதியுள்ளவர்களாக இருப்போம். நம்மிடத்தில் பொல்லாங்குகள் இருக்கும்போது நமக்குத் தேவனுடைய ஆசீர்வாதம் கிடைக்காது. ஆசீர்வாதம் தங்காது. பொல்லாங்கனுக்குத் தேவனுடைய ஆக்கினையும் சாபமுமே வரும்.

நாம் இயல்பாகவே பாவசுபாவத்தினால் நிரப்பப்பட்டிருக்கிறோம். தேவனுடைய கிருபையானது நம்மை பாவசுபாவத்திலிருந்து விடுதலையாக்குகிறது. மனுஷனுடைய இயல்பான சுபாவம் பாவத்தை நேசிக்கும். ஆனால் தேவனுடைய கிருபை நமக்குக் கிடைக்கும்போதோ, நாம் பாவத்தை நேசிப்பதற்குப் பதிலாக, பாவத்தை வெறுத்து ஒதுக்கி, அதைவிட்டு வெளியேறுவோம்.

தேவனுடைய கிருபையைப் பெற்றுக்கொள்வதற்கு நம்முடைய பகுதியில் நாம் செய்யவேண்டியது ஒன்றே ஒன்றுதான். நாம் மனந்திரும்பிக் குணப்படவேண்டும். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோ நம்முடைய பொல்லாங்குகளிலிருந்து நம்மை விலக்கி, நம்மை ஆசீர்வதிப்பதற்கு ஆயத்தமாகயிருக்கிறார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நமக்காக அவர் செய்ய வேண்டியதை உண்மையோடு செய்வார். அதே வேளையில் தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வதற்கு, நாம் செய்யவேண்டியதாகிய "மனந்திரும்பிக் குணப்படுவதை" செய்வதற்கு ஆயத்தமாகயிருக்கவேண்டும்.

இப்போதே இரட்சிப்பின் காலம். இது கிருபையின் காலம். நாம் இரட்சிக்கப்படும்படிக்கு தேவனுடைய கிருபை பெருகியிருக்கிறது. ஆகையினால் கிருபையின் காலத்தைப் பிரயோஜனப்படுத்தி, மனந்திரும்பிக் குணப்பட்டு, தேவன் கிருபையாகக் கொடுக்கும் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்று பேதுரு யூதருக்குப் பிரசங்கம்பண்ணுகிறான்.

4 அதிகாரம்

ஆசாரியர்களும் தேவாலயத்து சேனைத்தலைவனும் சதுசேயரும் பேதுருவையும் யோவானையும் பிடித்து காவலில் வைக்கிறார்கள் (அப் 4:1-4). ஆலோசனைச்சங்கத்தார் பேதுருவையும் யோவானையும் விசாரணை செய்கிறார்கள் (அப் 4:5-7). பேதுருவும் யோவானும் ஆலோசனைச் சங்கத்தாரிடம் இயேசுகிறிஸ்துவைப்பற்றித் தைரியமாகச் சாட்சி சொல்லுகிறார்கள் (அப் 4:8-12). ஆலோசனைச்சங்கத்தார் இயேசுவின் நாமத்தைக்குறித்துப் பேசக்கூடாது என்று சொல்லி அப்போஸ்தலரை பயமுறுத்தி விடுதலை செய்கிறார்கள் (அப் 4:13-22). அப்போஸ்தலர்களோ பயப்படாமல் மற்ற சீஷர்களோடு சேர்ந்து தேவனை நோக்கி ஜெபிக்கிறார்கள் (அப் 4:23-30). தேவன் தம்முடைய பிரசன்னத்தைச் சீஷர்கள் மத்தியிலே வெளிப்படுத்துகிறார் (அப் 4:31-33). விசுவாசிகள் ஒரே இருதயமும் ஒரே மனமும் உள்ளவர்களாயிருக்கிறார்கள். சபை விருத்தியடைகிறது (அப் 4:33-37).

காவலில் வைத்தார்கள் அப் 4 : 1-4

அப் 4:1. அவர்கள் ஜனங்களுடனே பேசிக் கொண்டிருக்கையில், ஆசாரியர்களும் தேவாலயத்துச் சேனைத்தலைவனும் சதுசேயரும் அவர்களிடத்தில் வந்து,

அப் 4:2. அவர்கள் ஜனங்களுக்கு உபதேசிக்கிறதினாலும், இயேசுவை முன்னிட்டு, மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதலைப் பிரசங்கிக்கிற தினாலும், சினங்கொண்டு,

அப் 4:3. அவர்களைப் பிடித்து, சாயங்காலமாயிருந்தபடியினால், மறுநாள்வரைக்கும் காவலில் வைத்தார்கள்.

அப் 4:4. வசனத்தைக் கேட்டவர்களில் அநேகர் விசுவாசித்தார்கள்; அவர்கள் தொகை ஏறக்குறைய ஐயாயிரமாயிருந்தது.

அப்போஸ்தலர்கள் இயேசு கிறிஸ்துவின் நாமத்தைக் குறித்துப் பிரசங்கம்பண்ணுகிறார்கள். கர்த்தருக்காக ஊழியம் செய்கிறார்கள். ஆனால் அந்தகார சக்திகள் அப்போஸ்தலருக்கும் கர்த்தருடைய ஊழியத்திற்கும் விரோதமாக எழும்புகிறது. அவர்கள் செய்கிற ஊழியத்தைத் தடைசெய்வதற்கு முயற்சிபண்ணுகிறது. சாத்தான் எப்போதுமே கர்த்தருடைய ஊழியத்திற்கு எதிர்த்து நிற்பான். ஊழியக்காரர்களாகிய நாம் அதைப் பார்த்து பயந்துவிடக்கூடாது. சோர்ந்துவிடக்கூடாது. ஊழியம் கர்த்தருடையது. யுத்தம் கர்த்தருடையது. கர்த்தர் நமக்காக யுத்தம்பண்ணுவார். நாம் கர்த்தருடைய ஊழியத்தை எல்லா சூழ்நிலைகளிலும் விசுவாசத்தோடும், உண்மையோடும் செய்யவேண்டும்.

அப்போஸ்தலர்களாகிய பேதுருவும் யோவானும் ஜனங்களுடனே இயேசுகிறிஸ்துவைப்பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய பிரயாசம் வீணாய்ப் போகவில்லை. தொடர்ந்து ஊழியம் செய்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தை ஜனங்கள் மத்தியில் விசுவாசத்தோடும் உண்மையோடும் போதிக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவை இன்னும் விசுவாசிக்காத ஜனங்களிடம் அவர்களுடைய பாவத்தை அவர்களுக்கு உணர்த்தி, அவர்களையும் இயேசுகிறிஸ்துவிடம் வழிநடத்துகிறார்கள். அவர்களும் மனந்திரும்பி இரட்சிக்கப்பட்டு இயேசுகிறிஸ்துவண்டையில் வருவதற்கு உபதேசம்பண்ணுகிறார்கள்.

இயேசுகிறிஸ்துவை ஏற்கெனவே விசுவாசிக்கிறவர்களிடத்தில் இரட்சிப்பின் சந்தோஷத்தையும், சமாதானத்தையும், ஆறுதலையும், ஆசீர்வாதத்தையும் குறித்து உபதேசம்பண்ணுகிறார்கள். அவர்கள் தங்களுடைய விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருப்பதற்கு ஆலோசனை சொல்லுகிறார்கள்.

அப்போஸ்தலர்கள் இயேசுவை முன்னிட்டு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதலைப் பிரசங்கிக்கிறார்கள். உயிர்த்தெழுதலின் சத்தியத்தை இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை ஆதாரமாக வைத்து ஜனங்கள் மத்தியிலே பிரசங்கம்பண்ணுகிறார்கள். மரித்தோர் உயிர்த்தெழுவார்கள் என்னும் சத்தியம் இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்ததினால் நிரூபணமாயிருக்கிறது. யூதர்களோ இயேசுகிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்தார்கள். இயேசுகிறிஸ்துவோ உயிர்த்தெழுந்திருக்கிறார்.

இயேசுகிறிஸ்துவைப் பற்றிய சத்தியத்தை அப்போஸ்தலர்கள் எல்லா ஜனங்களிடமும் உபதேசம் பண்ணுகிறார்கள். இயேசுகிறிஸ்து தம்முடைய பிள்ளைகளுக்காகவே உயிர்த்தெழுந்திருக்கிறார். அப்போஸ்தலருடைய உபதேசமெல்லாமே இயேசுகிறிஸ்துவைப் பற்றியதாகவே இருக்கிறது. அவர்கள் எந்தச் சத்தியத்தை உபதேசம்பண்ணினாலும், அந்தச் சத்தியத்தை நிரூபிப்பதற்கு, இயேசுகிறிஸ்துவையே ஆதாரமாகச் சொல்லுகிறார்கள். தேவையில்லாத கட்டுக்கதைகள் எதையும் சொல்லவில்லை. ரோமப்பேரரசைப்பற்றியோ, யூதருடைய ஆலோசனைச் சங்கத்தாரைப்பற்றியோ அப்போஸ்தலர்கள் பேசவில்லை. கர்த்தர் தங்களுக்குக் கொடுத்திருக்கும் ஊழியத்தைத் தொடர்ந்து உண்மையாய் செய்கிறார்கள். பரலோகமே ஜனங்கள் போகவேண்டிய இடம் என்றும், இயேசுகிறிஸ்துவே பரலோகத்திற்குப் போவதற்கு வழியாக இருக்கிறாரென்றும் அப்போஸ்தலர்கள் ஜனங்களிடம் தெளிவாக உபதேசம்பண்ணுகிறார்கள்.

அப்போஸ்தலர்கள் மூலமாக வசனத்தைக் கேட்டவர்கள் அதைச் சந்தோஷமாக ஏற்றுக்கொள்கிறார்கள். வசனத்தைக் கேட்டவர்களில் அநேகர் விசுவாசிக்கிறார்கள். அவர்கள் தொகை ஏறக்குறைய ஐயாயிரமாயிருக்கிறது. வசனத்தைப் பிரசங்கிக்கிறவர்களை யூதருடைய ஆலோசனைச் சங்கத்தார் துன்புறுத்தினாலும், உபத்திரவப்படுத்தினாலும், கர்த்தருடைய வசனம் தொடர்ந்து பிரசங்கம் பண்ணப்படுகிறது. வசனம் ஜெயம்பெறுகிறது.

நம்முடைய சபைகளுக்கு உபத்திரவக்காலம் வரலாம். சபை பாடுகளையும் துன்பங்களையும் அனுபவிக்க வேண்டிய காலம் வரலாம். சபைகள் பாடுகளை அனுபவிக்கும் காலமே அவைகள் வளர்ச்சி பெறும் காலமாகயிருக்கிறது. ஆதித்திருச்சபையும் ஆரம்ப நாட்களில் எல்லாவிதமான பாடுகளையும் உபத்திரவங்களையும் அனுபவித்தது. அவைகளுக்கு மத்தியிலும் ஆதித்திருச்சபை வேகமாக வளர்ச்சியடைந்தது.

அப்போஸ்தலரின் ஊழியத்தைப் பிரதான ஆசாரியரும், யூதமார்க்கத்தின் தலைவர்களும் எப்படியாவது தடுத்து நிறுத்திவிட வேண்டுமென்று முயற்சிபண்ணுகிறார்கள். அவர்களுடைய ஊழியத்தை அழிப்பதற்கு என்ன செய்யலாமென்று சதிஆலோசனை பண்ணுகிறார்கள். அவர்கள் ஜனங்களுக்குப் பயப்படுகிறார்கள். ஆகையினால் அவர்களுடைய கைகள் கட்டப்பட்டிருக்கிறது. ஆனால் அவர்களுடைய இருதயமோ கட்டப்படாமல், அப்போஸ்தலருக்கு விரோதமாய்த் துன்மார்க்கமாகச் சிந்திக்கிறது.

அப்போஸ்தலருக்கு விரோதமாக ஆசாரியர்கள் எழும்பி நிற்கிறார்கள். அவர்களோடு தேவாலயத்து சேனைத்தலைவனும் சேர்ந்துகொள்கிறான். இவன் யூதமார்க்கத்தைச் சேர்ந்தவனல்ல. இவன் ரோமப்பேரரசால் நியமிக்கப்பட்டிருக்கும் அதிகாரி. இவன் ஒரு புறஜாதியான். யூதரும் புறஜாதியாரும் இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமாக வஞ்சனை செய்தார்கள். இப்போது இவர்கள் அப்போஸ்தலருக்கு விரோதமாக ஒன்றுகூடியிருக்கிறார்கள்.

சதுசேயர் ஆசாரியரோடும் தேவாலயத்து சேனைத்தலைவனோடும் சேர்ந்துகொள்கிறார்கள். சதுசேயர் ஆவிகள் இருக்கிறது என்பதையும், மரித்தோரின் உயிர்த்தெழுதலையும் எப்போதுமே நம்புவதில்லை. அப்போஸ்தலர்கள் இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைப்பற்றிப் பிரசங்கம் பண்ணியதினால், சதுசேயர் அவர்கள்மீது மிகுந்த கோபமாயிருக்கிறார்கள். அதனால் இவர்கள் ஆசாரியர்களோடும் தேவாலயத்து சேனைத்தலைவனோடும் அப்போஸ்தலருக்கு விரோதமாகச் சேர்ந்து கொள்கிறார்கள்.

அப்போஸ்தலர்கள் ஜனங்களுக்கு உபதேசிக்கிறதினாலும், இயேசுவை முன்னிட்டு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதலைப் பிரசங்கிக்கிறதினாலும், ஆசாரியர்களும் தேவாலயத்துச் சேனைத்தலைவனும், சதுசேயரும் அப்போஸ்தலர்மீது சினம் கொள்கிறார்கள். அப்போஸ்தலர்கள் பிரசங்கம்பண்ணுகிற சுவிசேஷத்தின் உபதேசம் இவர்களை சினம்கொள்ள வைக்கிறது. ஜனங்களும் அப்போஸ்தலரின் உபதேசத்தை ஆர்வத்தோடு கேட்கிறார்கள். அதைச் சந்தோஷத்தோடு தங்கள் இருதயத்தில் ஏற்றுக்கொண்டு விசுவாசிக்கிறார்கள். இதனால் அப்போஸ்தலர்கள்மீது இவர்கள் கொண்டிருக்கிற சினம் அதிகரிக்கிறது.

இயேசுகிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்தபோது, அவருடைய சுவிசேஷமும் சிலுவையில் அறையப்பட்டு விட்டது என்று யூதமார்க்கத்துத் தலைவர்கள் நினைத்தார்கள். இயேசுகிறிஸ்துவின் ஊழியம் அவருடைய சிலுவை மரணத்தோடு முடிந்துவிடும் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷமோ வேர்கொண்டு வளருகிறது. இதனால் யூதமார்க்கத்துத் தலைவர்கள் அப்போஸ்தலர்மீது சினமடைகிறார்கள். தேவனுடைய ராஜ்யத்தின் மகிமை கர்த்தருடைய பிள்ளைக்கு மிகுந்த சந்தோஷத்தைத் தரும். ஆனால் இயேசுகிறிஸ்துவின் சத்துருக்களுக்கோ அவருடைய ராஜ்யத்தின் மகிமை அவர்களுக்குத் துன்பத்தையும், வேதனையையும், பொறாமையையுமே தரும். இவர்கள் தங்கள் மனவேதனையில் அப்போஸ்தலர்மீது சினங்கொள்கிறார்கள்.

அப்போஸ்தலர்கள் இயேசுவை முன்னிட்டு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதலைப் பிரசங்கிக்கிறார்கள். இதனால் சதுசேயர் அவர்கள்மீது சினங்கொள்கிறார்கள். மரித்தோரின் உயிர்த்தெழுதலை சதுசேயர் விசுவாசிப்பதில்லை. அதற்கு ஆதரவாக யாராவது பிரசங்கம்பண்ணினால் சதுசேயர் அதற்கு எதிர்த்து நிற்பார்கள். இதனால் சதுசேயர் அப்போஸ்தலர்மீது சினங்கொள்கிறார்கள்.

இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தாரென்று அப்போஸ்தலர்கள் பிரசங்கம்பண்ணுகிறார்கள். இதைக்கேட்டு ஆசாரியர்கள் சினமடைகிறார்கள். மரித்தோரின் உயிர்த்தெழுதலை ஆசாரியர்கள் விசுவாசித்தாலும், இயேசுகிறிஸ்து மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்தார் என்பதை ஆசாரியர்கள் விசுவாசிக்க விரும்பவில்லை. ஆனால் அப்போஸ்தலர்களோ மரித்தோரின் உயிர்த்தெழுதலைப்பற்றிய சத்தியத்தை, இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் மூலமாகவே நிரூபிக்கிறார்கள். ஆகையினால் ஆசாரியர்கள் அப்போஸ்தலர்மீது சினங்கொள்கிறார்கள்.

அப்போஸ்தலர்கள் மீது ஆசாரியர்கள், தேவாலயத்து சேனைத்தலைவன், பரிசேயர் ஆகியோரின் கோபம் மிகவும் அதிகரிக்கிறது. ஆகையினால் இவர்கள் அப்போஸ்தலரைப் பிடித்து காவலில் வைக்கிறார்கள். இது சாயங்காலமாக இருக்கிறது. ஆகையினால் அப்போஸ்தலர்களை மறுநாள் வரைக்கும் காவலில் வைக்கிறார்கள்.

கர்த்தர் தம்முடைய ஊழியக்காரர்களுக்கு கொஞ்சம் கொஞ்சமாகப் பாடுகளை அனுபவிக்கும் கிருபைகளைக் கொடுக்கிறார். ஆரம்பத்தில் அப்போஸ்தலர்கள் பிடிக்கப்பட்டு காவலில் வைக்கப்படுகிறார்கள். ஆரம்பகாலத்தில் இந்த உபத்திரவம் மாத்திரமே அப்போஸ்தலருக்குக் கொடுக்கப்படுகிறது. இதற்கு பின்பு அப்போஸ்தலர்கள் இரத்தம் சிந்தி பாடுகளை அனுபவிப்பார்கள். கர்த்தர் தம்முடைய ஊழியக்காரருக்கு பாடுகளை அனுபவிக்கவும் கற்றுத் தருகிறார்.

ஆலோசனைச்சங்கம் அப் 4 : 5-7

அப் 4:5. மறுநாளிலே ஜனங்களுடைய அதிகாரிகளும் மூப்பரும் வேதபாரகரும்,

அப் 4:6. பிரதான ஆசாரியனாகிய அன்னாவும், காய்பாவும், யோவானும், அலெக்சந்தரும், பிரதான ஆசாரியருடைய குடும்பத்தார் யாவரும் எருசலேமிலே கூட்டங்கூடி,

அப் 4:7. அவர்களை நடுவே நிறுத்தி: நீங்கள் எந்த வல்லமையினாலே, எந்த நாமத்தினாலே, இதைச் செய்தீர்கள் என்று கேட்டார்கள்.

மறுநாளிலே

மறுநாளிலே ஜனங்களுடைய அதிகாரிகளும் மூப்பரும் வேதபாரகரும், பிரதான ஆசாரியனாகிய அன்னாவும், காய்பாவும், யோவானும், அலெக்சந்தரும், பிரதான ஆசாரியருடைய குடும்பத்தார் யாவரும் எருசலேமிலே கூட்டங்கூடி (அப் 4:5,6)

பேதுருவையும் யோவானையும் யூதருடைய ஆலோசனைச்சங்கத்தார் விசாரிக்கிறார்கள். அப்போஸ்தலர்களை விசாரிப்பதற்காகவே ஆலோசனைச் சங்கத்தார் கூடிவந்திருக்கிறார்கள். யூதருடைய ஆலோசனைச்சங்கம், அவர்களுடைய யூதமார்க்கத்துச் சம்பந்தமான வழக்குகளை மாத்திரமே விசாரிக்கும். அப்போஸ்தலர்களை முந்தின நாள் சாயங்காலத்தில் பிடித்து, இரவு முழுவதும் அவர்களைக் காவலில் வைத்துவிட்டு, மறுநாளில்தான் விசாரிக்கிறார்கள்.

வழக்கு விசாரணையை ஆலோசனைச்சங்கத்தார் தள்ளிப்போட விரும்பவில்லை. அப்போஸ்தலர்களுடைய ஊழியத்தை உடனே நிறுத்திவிடவேண்டுமென்று தீர்மானமாக இருக்கிறார்கள். ஆலோசனைச் சங்கத்தாருக்கு சிறிதும் பொறுமையில்லை. அவர்கள் மறுநாளிலே கூடிவந்து, பேதுருவையும் யோவானையும் விசாரிக்கிறார்கள்.

ஆலோசனைச் சங்கத்தார் எருசலேமிலே கூடியிருக்கிறார்கள். இந்த ஊரில்தான் இஸ்ரவேலின் மீட்பைக் காணவேண்டுமென்று யூதர்கள் காத்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் எதிர்பார்த்த மேசியாவோ வந்துவிட்டார். மேசியாவாகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் இஸ்ரவேலுக்கு மீட்பு வந்திருக்கிறது. ஆனால் மீட்பு வந்தபின்போ, யூதர்கள் அதைக் காணாதவர்களாகயிருக்கிறார்கள்.

ஆலோசனைச் சங்கத்தில் ஜனங்களுடைய அதிகாரிகளும், மூப்பரும் வேதபாரகரும் இருக்கிறார்கள். யூதமார்க்கத்தின் வேதத்தை வேதபாரகர் கற்று அறிந்தவர்கள். ஜனங்களுடைய அதிகாரிகளும் மூப்பர்களும் யூதஜனங்கள் மத்தியிலே மிகுந்த அதிகாரமுள்ளவர்கள். இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு விரோதமாக உலக ஞானமும் உலகத்தின் அதிகாரமும் எழும்பி நிற்கிறது.

யூதருடைய ஆலோசனைச்சங்கத்தில் கூடிவந்திருக்கும் ஒரு சிலருடைய பெயர்கள் இங்கு குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவர்கள் ஆலோசனைச்சங்கத்தில் விசேஷித்தவர்கள். அன்னாவும், காய்பாவும் இங்கு இருக்கிறார்கள். இவர்கள் இருவருமே பிரதான ஆசாரியர்கள்தான். ஆனாலும் இங்கு அன்னா மாத்திரமே பிரதான ஆசாரியனென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவர்கள் இருவரும் ஆலோசனைச் சங்கத்திற்குத் தலைவர்கள். இயேசுவுக்கு விரோதமாக ஜனங்களைத் தூண்டிவிட்டவர்கள். இவர்கள் எப்போதுமே இயேசுகிறிஸ்துவுக்கும் அவருடைய சுவிசேஷத்திற்கும் எதிர்த்து நிற்கிறவர்கள்.

பிரதான ஆசாரியருடைய குடும்பத்தார் யாவரும் ஆலோசனைச் சங்கத்தில் கூடிவந்திருக்கிறார்கள். குடும்பத்தினரின் எண்ணிக்கை அநேகமாகயிருக்கும்போது அவர்கள் நற்காரியங்களைச் செய்ய முயற்சிபண்ணவேண்டும். பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தீமை செய்யும்போது அவர்கள் அநேகருக்கு கண்ணியாயிருப்பார்கள்.

எந்த நாமத்தினாலே

அவர்களை நடுவே நிறுத்தி: நீங்கள் எந்த வல்லமையினாலே, எந்த நாமத்தினாலே, இதைச் செய்தீர்கள் என்று கேட்டார்கள் (அப் 4:7).

ஆலோசனைச்சங்கத்தார் தங்கள் ஆசனங்களில் அமர்ந்திருக்கிறார்கள். பேதுருவையும் யோவானையும் அவர்கள் நடுவிலே நிறுத்துகிறார்கள். யூதருடைய ஆலோசனைச்சங்கத்தார் பொதுவாக வட்ட வடிவில் அமைக்கப்பட்டிருக்கும் ஆசனங்களில் அமர்ந்து நியாயவிசாரணை செய்வது வழக்கம்.

அவர்கள் பேதுருவிடமும் யோவானிடமும் "நீங்கள் எந்த வல்லமையினாலே, எந்த நாமத்தினாலே இதைச் செய்தீர்கள்" என்று கேள்வி கேட்கிறார்கள். இப்படிப்பட்ட உபதேசத்தைப் பிரசங்கம்பண்ணுவதற்கு அவர்களை யார் அனுப்பினார்கள் என்றும், இப்படிப்பட்ட அற்புதத்தைச் செய்வதற்கு அவர்களுக்கு யார் அதிகாரம் கொடுத்தது என்று பொருள்படுமாறும் கேட்கிறார்கள்.

பேதுருவும் யோவானும் இயேசுகிறிஸ்துவைப் பற்றியே பிரசங்கம் பண்ணினார்களென்பது ஆசாரியருக்கு நன்றாகத் தெரியும். அப்போஸ்தலர்கள் இயேசுவை முன்னிட்டு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதலைப் பிரசங்கித்ததினால்தான், ஆலோசனைச் சங்கத்தார் அப்போஸ்தலர்மேல் சினங்கொண்டார்கள். ஆனால் இப்போதோ அப்போஸ்தலர்கள் எந்த நாமத்தினாலே இதைப் பேசினார்களென்று, ஆலோசனைச் சங்கத்தார் தங்களுக்குத் தெரியாததுபோல கேட்கிறார்கள். அப்போஸ்தலர்களை அவமானப் படுத்துவதற்காகவும், அவர்களைக் குற்றப்படுத்துவதற்காகவும், அவர்களுடைய வாயிலிருந்து ஏதாவது சில வார்த்தைகளை வெளிக்கொண்டு வரவேண்டும் என்னும் வஞ்சக எண்ணத்தோடு ஆலோசனைச்சங்கத்தார் அப்போஸ்தலர்களிடம் தேவையில்லாத கேள்விகளைக் கேட்கிறார்கள். ஆலோசனைச்சங்கத்திற்கு முன்பாக அப்போஸ்தலர்களைக் குற்றவாளிகளைப் போல காண்பிக்கவேண்டும் என்பதற்காகவும் இப்படிப்பட்ட கேள்விகளைக் கேட்கிறார்கள்.

அப்போஸ்தலரின் பிரதியுத்தரம் அப் 4 : 8-14

அப் 4:8. அப்பொழுது பேதுரு பரிசுத்தஆவியினாலே நிறைந்து, அவர்களை நோக்கி: ஜனத்தின் அதிகாரிகளே, இஸ்ரவேலின் மூப்பர்களே.

அப் 4:9. பிணியாளியாயிருந்த இந்த மனுஷனுக்குச் செய்யப்பட்ட உபகாரத்தைக் குறித்து எதினாலே இவன் ஆரோக்கியமானானென்று நீங்கள் இன்று எங்களிடத்தில் விசாரித்துக்கேட்டால்,

அப் 4:10. உங்களால் சிலுவையில் அறையப்பட்டவரும், தேவனால் மரித்தோரிலிருந்து எழுப்பப் பட்டவருமாயிருக்கிற நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலேயே இவன் உங்களுக்கு முன்பாகச் சொஸ்தமாய் நிற்கிறானென்று உங்களெல்லாருக்கும், இஸ்ரவேல் ஜனங்களெல்லாருக்கும் தெரிந்திருக்கக் கடவது.

அப் 4:11. வீடுகட்டுகிறவர்களாகிய உங்களால் அற்பமாய் எண்ணப்பட்ட அவரே மூலைக்குத் தலைக்கல்லானவர்.

அப் 4:12. அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்.

அப் 4:13. பேதுருவும் யோவானும் பேசுகிற தைரியத்தை அவர்கள் கண்டு, அவர்கள் படிப்பறியாதவர்களென்றும் பேதைமை உள்ளவர்களென்றும் அறிந்தபடியினால் ஆச்சரியப்பட்டு, அவர்கள் இயேசுவுடனேகூட இருந்தவர்களென்றும் அறிந்து கொண்டார்கள்.

அப் 4:14. சொஸ்தமாக்கப்பட்ட மனுஷன் அவர்கள் அருகே நிற்கிறதைக் கண்டபடியால், எதிர்பேச அவர்களுக்கு இடமில்லாதிருந்தது.

பரிசுத்த ஆவியினாலே நிறைந்து

அப்பொழுது பேதுரு பரிசுத்தஆவியினாலே நிறைந்து, அவர்களை நோக்கி: ஜனத்தின் அதிகாரிகளே, இஸ்ரவேலின் மூப்பர்களே (அப் 4:8).

பேதுரு பரிசுத்த ஆவியினால் நிறைந்து ஆலோசனைச்சங்கத்தாரிடம் பேசுகிறான். தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டுமென்பது பேதுருவின் நோக்கமல்ல. இயேசுகிறிஸ்துவின் நாமத்தை அறிவிக்கவேண்டுமென்பதும், அவருடைய நாமத்தை மகிமைப்படுத்த வேண்டும் என்பதுமே பேதுருவின் பிரதான நோக்கம். பேதுரு தன்னுடைய சுயவார்த்தைகளைப் பேசவில்லை. சுயமாகச் சிந்திக்கவில்லை. பரிசுத்த ஆவியானவர் அவனை நிரப்புகிறார். அவன் பேசவேண்டிய வார்த்தைகளை அவனுடைய நாவில் கொடுக்கிறார்.

அப்போஸ்தலர்கள் இயேசு கிறிஸ்துவின் வசனத்தைப் பிரசங்கம் பண்ண தங்களை ஒப்புக்கொடுக்கிறார்கள். கர்த்தருக்காக உண்மையாய் ஊழியம் செய்கிறார்கள். கிறிஸ்துவானவர் தம்முடைய வாக்குத்தத்தத்தை அவர்களுக்கு நிறைவேற்றுகிறார். அவர்கள் பேசவேண்டிய வார்த்தையைப் பரிசுத்த ஆவியானவர் தம்முடைய வாக்குத்தத்தத்தின் பிரகாரமாக அவர்களுக்குக் கொடுக்கிறார்.

"நீங்களோ எச்சரிக்கையாயிருங்கள், ஏனெனில் உங்களை ஆலோசனைச் சங்கங்களுக்கு ஒப்புக்கொடுப்பார்கள், நீங்கள் ஜெபஆலயங்களில் அடிக்கப்படுவீர்கள்; என்னிமித்தம் தேசாதிபதிகளுக்கும் ராஜாக்களுக்கும் சாட்சியாக அவர்களுக்கு முன்பாக நிறுத்தப்படுவீர்கள். சகல ஜாதிகளுக்கும் சுவிசேஷம் முந்திப் பிரசங்கிப்பப்பட வேண்டும்.

அவர்கள் உங்களைக் கொண்டுபோய் ஒப்புக்கொடுக்கும்போது, நீங்கள் என்ன பேசுவோமென்று முன்னதாகக் கவலைப்படாமலும் சிந்தியாமலுமிருங்கள்; அந்நாழிகையிலே உங்களுக்கு எது அருள் செய்யப்படுமோ அதையே பேசுங்கள்; ஏனெனில் பேசுகிறவர்கள் நீங்களல்ல, பரிசுத்த ஆவியே பேசுகிறவர்" (மாற் 13:9-11) என்று இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரிடம் ஏற்கெனவே கூறியிருக்கிறார்.

யூதருடைய ஆலோசனைச்சங்கத்தில் அமர்ந்திருக்கும் நியாயாதிபதிகளிடம் பேதுரு பேசுகிறான். அவர்கள் ஜனத்தின் அதிகாரிகளாகவும், இஸ்ரவேலின் மூப்பர்களாகவும் இருக்கிறார்கள். அதிகாரத்தில் அமர்ந்திருக்கிறவர்கள் தங்களுடைய அதிகாரத்தை நீதிக்கேதுவாகப் பயன்படுத்தவேண்டும். அவர்களிடத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தி அவர்கள் நீதியாய் நியாயந்தீர்க்கவேண்டும். நியாயாதிபதிகள் துன்மார்க்கத்திற்குத் துணைபோய்விடக் கூடாது. பேதுரு ஆலோசனைச் சங்கத்தாரை நோக்கி "ஜனத்தின் அதிகாரிகளே, இஸ்ரவேலின் மூப்பர்களே" என்று அழைத்து, அவர்களிடத்தில் தன்னுடைய பேச்சை ஆரம்பிக்கிறான்.

இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலேயே

பிணியாளியாயிருந்த இந்த மனுஷனுக்குச் செய்யப்பட்ட உபகாரத்தைக் குறித்து எதினாலே இவன் ஆரோக்கியமானானென்று நீங்கள் இன்று எங்களிடத்தில் விசாரித்துக்கேட்டால், உங்களால் சிலுவையில் அறையப்பட்டவரும், தேவனால் மரித்தோரிலிருந்து எழுப்பப் பட்டவருமாயிருக்கிற நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலேயே இவன் உங்களுக்கு முன்பாகச் சொஸ்தமாய் நிற்கிறானென்று உங்களெல்லாருக்கும், இஸ்ரவேல் ஜனங்களெல்லாருக்கும் தெரிந்திருக்கக்கடவது (அப் 4:9,10).

பிணியாயிருந்த இந்த மனுஷனுக்குச் செய்யப்பட்டது மெய்யாகவே ஒரு உபகாரம். இதினால் இவன் ஆரோக்கியமானான். சப்பாணி குணமாக்கப்பட்டதற்காக அப்போஸ்தலர்கள் வெட்கப்படவில்லை. உபகாரம் செய்த அவர்களை ஆலோசனைச்சங்கத்திற்கு முன்பாக அழைத்து வந்து நிறுத்தியிருக்கும் ஆசாரியர்களும், தேவாலயத்துச் சேனைத்தலைவனும், சதுசேயரும்தான் வெட்கப்படவேண்டியவர்கள்.

நன்மை செய்தவர்கள் பாடனுபவிப்பது புதுமையான காரியமல்ல. வரலாற்றில் இது சாதாரணமாக நடைபெறுகிற சம்பவம்தான். நல்லவர்கள் தாங்கள் செய்த நன்மையினிமித்தம் பாடுகளை அனுபவித்திருக்கிறார்கள். சப்பாணிக்கு மெய்யாகவே நன்மை செய்யப்பட்டிருக்கிறது. இந்த நன்மையான உபகாரம் தங்களால் உண்டாகவில்லை என்பதை பேதுரு தெளிவுபடுத்துகிறான். பிணியாயிருந்த இந்தச் சப்பாணிக்குச் செய்யப்பட்ட உபகாரத்திற்காக, பேதுரு கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை மகிமைப்படுத்துகிறான். தங்களுடைய வல்லமையினால் சப்பாணி குணமடையவில்லை என்பதை பேதுரு அறிக்கை செய்கிறான். இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் மாத்திரமே சப்பாணி சொஸ்தமாயிருக்கிறான் என்பதையும் பேதுரு சாட்சியாக அறிவிக்கிறான்.

ஆலோசனைச்சங்கத்திற்கு முன்பாக பேதுரு தன்னுடைய நியாயத்தைப்பற்றிப் பேசும்போது, அவர்களை "ஜனத்தின் அதிகாரிகளே, இஸ்ரவேலின் மூப்பர்களே" என்று ஆரம்பத்தில் அழைக்கிறான். அதன்பின்பு இயேசுகிறிஸ்துவை அவர்கள் கொலைசெய்தார்களென்று அவர்களுக்குச் சொல்லுகிறான். "உங்களால் சிலுவையில் அறையப்பட்ட நசரேயனாகிய இயேசுகிறிஸ்து" என்று குறிப்பிட்டு, அவர்களுடைய கொலைபாதகத்தைப்பற்றி அவர்களிடத்தில் சொல்லுகிறான்.

ஆலோசனைச்சங்கத்தார் தாங்கள் செய்த பாவத்தைக்குறித்து மனந்திருந்தவில்லை. ஒருவேளை அவர்கள் அதைப் பாவமென்று உணராமலிருந்திருக்கலாம். ஆனால் பேதுருவோ அவர்களுடைய பாவத்தை அவர்களுக்கு உணர்த்துகிறான். "உங்களால் சிலுவையில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்து" என்று சொல்லி அவர்களுடைய மனச்சாட்சியோடு பேசுகிறான். ஆலோசனைச் சங்கத்தாருடைய மனச்சாட்சி தெளிவாகயிருந்தால், இயேசுகிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்த பாவத்திற்காக அவர்கள் மனம் வருந்தியிருப்பார்கள். சமயம் கிடைக்கும்போதெல்லாம் பேதுரு இயேசுகிறிஸ்துவின் மரணத்தைப்பற்றியும், அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததைப் பற்றியும் எல்லோரிடமும் சாட்சியாக அறிவிக்கிறான்.

இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் மிகவும் முக்கியமான சம்பவம். இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் பேதுருவுக்கு ஆதரவாகவும், ஆலோசனைச் சங்கத்தாருக்கு விரோதமாகவும் சாட்சியாயிருக்கிறது. தேவன் இயேசுகிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பியிருக்கிறார். யூதர்கள் ஜீவாதிபதியைக் கொலைசெய்தார்கள். இயேசுகிறிஸ்துவின் ஜீவனை எடுத்துப்போட்டார்கள். ஆனால் தேவனோ இயேசுகிறிஸ்துவுக்கு மறுபடியும் அவருடைய ஜீவனைக் கொடுத்திருக்கிறார். இயேசுகிறிஸ்துவைத் தேவன் மரித்தோரிலிருந்து எழுப்பியிருக்கிறார் என்னும் சத்தியம், ஆலோசனைச்சங்கத்தார் எல்லோருக்கும், இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோருக்கும் தெரிந்திருக்கக்கடவது என்று அறிக்கை செய்கிறான்.

தேவனால் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவராயிருக்கிற நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலேயே இந்தச் சப்பாணி அவர்களுக்கு முன்பாக சொஸ்தமாய் நிற்கிறான் என்பது, ஆலோசனைச்சங்கத்தார் எல்லோருக்கும், இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோருக்கும் தெரிந்திருக்கக்கடவது என்றும் அறிக்கைசெய்கிறான். ஏதோ ஒரு மந்திரத்தை ஓதியதினால் சப்பாணி சொஸ்தமாகி விடவில்லை. இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலேயே இந்தச் சப்பாணி குணமடைந்திருக்கிறான். இயேசுகிறிஸ்துவின் தெய்வீக வல்லமையை விசுவாசித்து சப்பாணி சொஸ்தமாகியிருக்கிறான். கிறிஸ்துவின் வல்லமையினாலேயே, அவருடைய நாமத்தினால் அப்போஸ்தலர்கள் சப்பாணியைச் சொஸ்தமாக்கி இருக்கிறார்கள். இது ஏதோ ஒரு மூலையில் மறைவாக நடைபெற்ற சம்பவமல்ல. தேவாலயத்தின் அலங்கார வாசலண்டையில் ஏராளமான ஜனங்களுக்கு முன்பாக இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் இந்தச் சப்பாணி சொஸ்தமாகியிருக்கிறான்.

மூலைக்குத் தலைக்கல்லானவர்

வீடு கட்டுகிறவர்களாகிய உங்களால் அற்பமாய் எண்ணப்பட்ட அவரே மூலைக்குத் தலைக்கல்லானவர் (அப் 4:11).

நாம் இரட்சிப்படுவதற்கு இயேசுகிறிஸ்துவின் நாமமேயல்லாமல் வேறு யாருடைய நாமமும் கட்டளையிடப்படவில்லை. நம்முடைய இரட்சிப்புக்கு நாம் இயேசுகிறிஸ்துவின் நாமத்தை மாத்திரமே விசுவாசிக்கவேண்டும். அவருடைய நாமத்தினால் மாத்திரமே இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள முடியும். நம்முடைய இரட்சிப்புக்கு இயேசுகிறிஸ்துவின் நாமத்தை நாம் விரும்பினால் பயன்படுத்திக் கொள்ளலாம் விரும்பவில்லையென்றால் வேறு யாருடைய நாமத்தை வேண்டுமானாலும் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று அனுமதி கொடுக்கப்படவில்லை.

இரட்சிக்கப்பட வேண்டுமென்றால் அதற்கு இயேசுகிறிஸ்துவின் நாமம் மாத்திரமே கட்டளையிடப்பட்டிருக்கிறது. வேறு எந்த நாமத்திற்கும் மனுஷருடைய ஆத்துமாவை இரட்சிக்கக்கூடிய வல்லமையில்லை. நம்முடைய இரட்சிப்புக்கு நாம் இயேசுகிறிஸ்துவின் நாமத்தை விசுவாசிக்கவேண்டுமென்பது தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் கட்டளை. தேவனுடைய தெய்வீக திட்டத்தில் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் மாத்திரமே இரட்சிப்பு உண்டாகுமென்பது தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

ஜனத்தின் அதிகாரிகளும், இஸ்ரவேலின் மூப்பர்களும், கர்த்தருடைய சபையைக் கட்டுகிறவர்களாக இருக்கவேண்டும். தேவனுடைய வீட்டைக்கட்டுவதற்கு இவர்களே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் இவர்களோ இயேசுகிறிஸ்துவாகிய கல்லை அற்பமாக எண்ணுகிறார்கள். தேவன் யூதமார்க்கத்துத் தலைவருக்கு, தம்முடைய வீட்டைக்கட்டுவதற்காக, இயேசுகிறிஸ்துவாகிய கல்லைக் கொடுத்திருக்கிறார். அவர்கள் தேவனுடைய வீட்டின் பிரதான ஸ்தானத்தில் இந்தக் கல்லை வைக்கவேண்டும். ஆனால் யூதமார்க்கத்துத் தலைவர்களோ இயேசுகிறிஸ்துவாகிய கல்லை அற்பமாக எண்ணி, அதை உதாசீனப்படுத்தி, அதைப் புறம்பே தள்ளிவிட்டார்கள். அது ஒன்றுக்கும் உதவாது என்று வெளியே எறிந்துவிட்டார்கள். ஆனால் தேவனோ அவர்களால் அற்பமாய் எண்ணப்பட்ட, இயேசுகிறிஸ்துவாகிய அந்தக் கல்லை, தம்முடைய வீட்டில் மூலைக்குத் தலைக்கல்லாக்கியிருக்கிறார்.

இயேசுகிறிஸ்து ஏற்கெனவே தம்மைப்பற்றிக் கூறும்போது, தம்மை மூலைக்குத் தலைக்கல்லாகக் கூறியிருக்கிறார். "இயேசு அவர்களை நோக்கி: வீடுகட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே மூலைக்குத் தலைக்கல்லாயிற்று, அது கர்த்தராலே ஆயிற்று, அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது என்று நீங்கள் வேதத்தில் ஒருக்காலும் வாசிக்கவில்லையா"? (மத் 21:42). இயேசுகிறிஸ்து சொன்ன இந்த வசனத்தை பேதுரு இங்கு ஆலோசனைச் சங்கத்தாரிடம் மேற்கோளாகக் கூறுகிறான்.

நமக்கு ஆவிக்குரிய பிரச்சனைகளும், போராட்டங்களும் வரும்போது, நாம் வேதவசனம் என்னும் பட்டயத்தினாலேயே யுத்தம்பண்ண வேண்டும். ஆகையினால் வேதவசனத்தை நாம் கட்டியாய்ப் பிடித்துக்கொள்ள வேண்டும். நம்முடைய ஆவிக்குரிய பிரயோஜனத்திற்காக வேதவாக்கியத்தை ஆவிக்குரிய போஜனமாக பயன்படுத்தி, நாம் தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை

அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான் (அப் 4:12).

இயேசுகிறிஸ்துவினால் மாத்திரமே நம்மை இரட்சிக்க முடியும். அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலேயல்லாமல் வேறு எந்த நாமத்தினாலும் சரீரத்தின் வியாதிகள் சொஸ்தமாக்கப்படுவதில்லை. அதுபோலவே இயேசுவின் நாமமேயல்லாமல் வேறு எந்த நாமத்தினாலும் பாவமான ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படுவதில்லை. நம்முடைய ஆத்துமாவின் இரட்சிப்பு நமக்கு மிகவும் முக்கியமானது. நம்மை நாமே இரட்சித்துக்கொள்ள முடியாது. நம்மை நம்மால் அழித்துப்போட முடியும். ஆனால் நம்மை நம்மால் இரட்சிக்க முடியாது என்பது நிச்சயம்.

இயேசுகிறிஸ்துவின் நாமத்திற்கு துதியும் கனமும், மகிமையுமுள்ளது. நாம் இரட்சிக்கப்படுவதற்காக இயேசுகிறிஸ்துவின் நாமம் மாத்திரமே கட்டளையிடப்பட்டிருக்கிறது. நம்முடைய இரட்சிப்புக்குத் தேவன் இயேசுகிறிஸ்துவின் நாமத்தை மாத்திரமே நியமித்திருக்கிறார். வானத்தின்கீழ் இயேசுகிறிஸ்துவின் நாமம் நம்முடைய ஆத்தும இரட்சிப்புக்குக் கட்டளையிடப்பட்டிருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் நாமத்திற்கு வானத்திலும், வானத்தின் கீழெங்கும் வல்லமையுள்ளது. மனுஷருக்கு இரட்சிப்புத் தேவை. மனுஷருக்குள்ளே இயேசுகிறிஸ்துவின் நாமமே கட்டளையிடப்பட்டிருக்கிறது.

இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் மாத்திரமே நாம் இரட்சிக்கப்பட முடியும். அவருடைய நாமமேயல்லாமல் வேறு எந்த நாமத்தினாலும் நம்மால் இரட்சிக்கப்பட முடியாது. ஒரு சிலருக்கு இயேசுகிறிஸ்துவைப்பற்றி சரியான ஞானம் இல்லாமலிருக்கலாம். அப்படிப்பட்டவர்கள்கூட தேவனிடத்தில் கிருபை பெற்றுக்கொள்வார்கள். தங்களிடத்திலுள்ள வெளிச்சத்தை வெளிப்படுத்துவார்கள். மனுஷர் மத்தியிலே பிரகாசமாக வெளிச்சம் கொடுப்பார்கள். அவர்களால் அது எப்படி முடிகிறது என்று தீர்மானம்பண்ணுவது நம்முடைய வேலையல்ல.

இயேசுகிறிஸ்து தம்முடைய இரட்சிக்கும் கிருபையினால் நம்முடைய ஆத்துமாக்களை இரட்சிக்கிறார். நம்முடைய இரட்சிப்பு இயேசுகிறிஸ்து நமக்குக் கொடுக்கும் இலவச ஈவு. நாம் இரட்சிக்கப்படுவது நாம் பெற்றிருக்கும் சிலாக்கியம். இயேசுகிறிஸ்துவாலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை என்று பேதுரு ஆலோசனைச் சங்கத்தாரிடம் கூறுகிறான். ஏனெனில் நாம் இரட்சிக்கப்படும்படிக்கு, வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவுமில்லை, கொடுக்கப்படவுமில்லை.

பேசுகிற தைரியம்

பேதுருவும் யோவானும் பேசுகிற தைரியத்தை அவர்கள் கண்டு, அவர்கள் படிப்பறியாதவர்களென்றும் பேதைமையுள்ளவர்களென்றும் அறிந்தபடியினால் ஆச்சரியப்பட்டு, அவர்கள் இயேசுவுடனேகூட இருந்தவர்களென்றும் அறிந்துகொண்டார்கள். சொஸ்தமாக்கப்பட்ட மனுஷன் அவர்கள் அருகே நிற்கிறதைக் கண்டபடியால், எதிர்பேச அவர்களுக்கு இடமில்லாதிருந்தது (அப் 4:13,14).

பேதுருவும் யோவானும் ஆலோசனைச்சங்கத்தாருக்கு முன்பாகத் தைரியமாகப் பேசுகிறார்கள். சொஸ்தமாக்கப்பட்ட மனுஷன் அவர்கள் அருகே நிற்கிறான். சப்பாணியாக இருந்தவன் இப்போது இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் எழுந்து நிற்கிறான். சப்பாணி எழுந்தது அவனுக்குச் செய்யப்பட்ட உபகாரம். இயேசுகிறிஸ்து அவனுக்கு ஒரு அற்புதத்தைச் செய்திருக்கிறார். அவன் அங்கு நிற்பதை ஆலோசனைச் சங்கத்தாரும் பார்க்கிறார்கள். ஆகையினால் பேதுருவுக்கும் யோவானுக்கும் எதிர்பேச ஆலோசனைச் சங்கத்தாருக்கு இடமில்லாமலிருக்கிறது.

தாயின் வயிற்றிலிருந்து சப்பாணியாகப் பிறந்தவன் இப்போது எழுந்து நடப்பது என்பது சாதாரண காரியமல்ல. இது இயற்கையாக நடைபெறும் சம்பவமுமல்ல. இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் உண்டாகும் வல்லமையே இந்தச் சப்பாணியை எழுந்து நடக்கப்பண்ணிற்று. சொஸ்தமாக்கப்பட்ட மனுஷன் தங்கள் பக்கத்தில் நிற்கும்போது, பேதுருவும் யோவானும் ஆலோசனைச்சங்கத்தாரிடம் தைரியமாகப் பேசுகிறார்கள். அப்போஸ்தலர்களுடைய உள்ளத்தில் சிறிதும் பயமில்லை. சத்தியத்தைத் தைரியமாகச் சொல்லுகிறார்கள்.

இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் பயப்படாமல் தைரியமாக ஊழியம் செய்யவேண்டும். நம்முடைய தைரியத்தைப் பார்க்கும்போது, நம்மைத் துன்புறுத்தவேண்டுமென்று நினைக்கிற துன்மார்க்கருக்குப் பயமும் குழப்பமும் உண்டாகும்.

பேதுருவும் யோவானும் தைரியமாகப் பேசுகிறதைக் கண்டு ஆலோசனைச் சங்கத்தாருக்கு ஆச்சரியமுண்டாயிற்று. பேதுருவும் யோவானும் படிப்பறியாதவர்கள். பேதமையுள்ளவர்கள். இதை ஆலோசனைச்சங்கத்தார் அறிந்திருக்கிறார்கள். அப்போஸ்தலர்கள் கலிலேயாவில் பிறந்து வளர்ந்தவர்களென்பதை ஆலோசனைச் சங்கத்தார் விசாரித்து அறிந்து கொள்கிறார்கள். அவர்கள் மீன்பிடிக்கிற தொழிலைச் செய்தவர்களென்பதையும், கல்வியறிவு இல்லாதவர்களென்பதையும் ஆலோசனைச்சங்கத்தார் விசாரித்து அறிந்துகொள்கிறார்கள்.

கல்வியறிவு இல்லாத பேதுருவும் யோவானும் மேசியாவைப்பற்றியும், தேவனுடைய ராஜ்யத்தைப்பற்றியும் ஆலோசனைச்சங்கத்தாரிடம் தைரியமாகப் பேசுகிறார்கள். அவர்கள் வாயிலிருந்து அபிஷேகிக்கப்பட்ட வார்த்தைகள் தாராளமாகப் புறப்பட்டு வருகிறது. வேதவசனங்களைத் தடையில்லாமல் மேற்கோளாகக் கூறுகிறார்கள். வேதபாரகர்களினால்கூட அவர்களோடு விவாதம்பண்ண முடியவில்லை. அப்போஸ்தலர்களின் கேள்விக்கு வேதத்தின் ஆதாரத்தில் பிரயுத்தரம் சொல்ல முடியவில்லை.

அப்போஸ்தலர்கள் பேதமை உள்ளவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் யூதசமுதாயத்தில் பிரபல்யமானவர்களல்ல. அவர்களுக்கு சமுதாயத்தில் பெரிய அந்தஸ்தோ உத்தியோகமோ இல்லை. ஆனாலும் அவர்கள் சுயதீனமாகவும், தாராளமாகவும், சரளமாகவும், தைரியமாகவும் இயேசுகிறிஸ்துவைப்பற்றி ஆலோசனைச் சங்கத்தாரிடம் பேசுகிறார்கள்.

அப்போஸ்தலர்கள் இயேசுவுடனேகூட இருந்தவர்களென்பதையும் ஆலோசனைச் சங்கத்தார் அறிந்துகொள்கிறார்கள். அப்போஸ்தலர் இயேசுவோடு கூடயிருந்தபடியினால் அவர்கள் தைரியமாகப் பேசுகிறார்களென்பதையும் ஆலோசனைச் சங்கத்தார் அறிந்துகொள்கிறார்கள். அவர்களுக்கு இயேசுகிறிஸ்துவின் மூலமாய் தைரியமுண்டாயிற்று. இயேசுவோடுகூட இருக்கிறவர்கள் அவருடைய சுபாவத்தைப் பெற்றுக்கொள்வார்கள். கிறிஸ்துவினிடத்திலிருந்த சிந்தையே அவரை விசுவாசிக்கிறவர்களிடத்திலும் இருக்கும். கிறிஸ்துவின் சாயல் அவர்களிடத்திலிருக்கும். கிறிஸ்துவின் சுபாவத்தை அவர்கள் பிரதிபலிப்பார்கள்.

அப்போஸ்தலர்களோடு சிறிது நேரம் பேசினாலே, அவர்கள் இயேசுவோடு கூடயிருந்தவர்களென்பதை அவர்களுடைய பேச்சின் மூலமாக அறிந்துகொள்ளலாம். அவர்களுடைய முகத்தில் பிரகாரசமிருக்கும். அவர்களுடைய மனக்கண்கள் பிரகாசமாகயிருக்கும். அவர்களுடைய சிந்தையில் பரிசுத்தமிருக்கும். வார்த்தையில் தெளிவு இருக்கும்.

பயமுறுத்திவிட்டுவிட்டார்கள் அப் 4 : 15-22

அப் 4:15. அப்பொழுது அவர்களை ஆலோசனைச் சங்கத்தைவிட்டு வெளியே போகும்படி கட்டளையிட்டு, தங்களுக்குள்ளே யோசனை பண்ணிக்கொண்டு:

அப் 4:16. இந்த மனுஷரை நாம் என்ன செய்யலாம்? எருசலேமில் வாசம்பண்ணுகிற எல்லாருக்கும் தெரிந்திருக்கிறபடி வெளியரங்கமான அற்புதம் இவர்களால் செய்யப்பட்டதே, அதை நாம் இல்லையென்று சொல்லக்கூடாது.

அப் 4:17. ஆகிலும் இது அதிகமாய் ஜனத்துக்குள்ளே பரம்பாதபடிக்கு, இதுமுதல் ஒருவரோடும் இந்த நாமத்தைக்குறித்துப் பேசக்கூடாதென்று, அவர்களை உறுதியாய்ப் பயமுறுத்த வேண்டுமென்று சொல்லிக்கொண்டு,

அப் 4:18. அவர்களை அழைத்து: இயேசுவின் நாமத்தைக்குறித்து எவ்வளவும் பேசவும் போதிக்கவும் கூடாதென்று அவர்களுக்குக் கட்டளையிட்டார்கள்.

அப் 4:19. பேதுருவும் யோவானும் அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: தேவனுக்குச் செவிகொடுக்கிறதைப் பார்க்கிலும் உங்களுக்குச் செவிகொடுக்கிறது தேவனுக்கு முன்பாக நியாயமாயிருக்குமோ என்று நீங்களே நிதானித்துப்பாருங்கள்.

அப் 4:20. நாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் பேசாமலிருக்கக்கூடாதே என்றார்கள்.

அப் 4:21. நடந்த சங்கதிகளைக்குறித்து எல்லாரும் தேவனை மகிமைப்படுத்தினபடியால், ஜனங்களுக்குப் பயந்து அவர்களை தண்டிக்க வகையொன்றுங்காணாமல், அவர்களைப் பயமுறுத்தி விட்டுவிட்டார்கள்.

அப் 4:22. அற்புதமாய்ச் சொஸ்தமாக்கப்பட்ட மனுஷன் நாற்பது வயதுக்கு மேற்பட்டவனாயிருந்தான்.

தங்களுக்குள்ளே யோசனை

அப்பொழுது அவர்களை ஆலோசனைச் சங்கத்தைவிட்டு வெளியே போகும்படி கட்டளையிட்டு, தங்களுக்குள்ளே யோசனை பண்ணிக்கொண்டு: (அப் 4:15.)

பேதுருவையும் யோவானையும் ஆலோசனைச் சங்கத்தார் விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பேசுகிற தைரியத்தைக் கண்டபோது ஆலோசனைச் சங்கத்தாருக்கு ஆச்சரியமுண்டாயிற்று. தங்களுடைய விசாரணையை எப்படி நடத்தலாமென்றும், அப்போஸ்தலருடைய ஊழியத்தை எப்படி தடுத்து நிறுத்தலாமென்றும் ஆலோசனைச் சங்கத்தார் தனியாக யோசனை பண்ணவேண்டுமென்று விரும்புகிறார்கள். அதற்காக பேதுருவையும் யோவானையும் ஆலோசனைச்சங்கத்தைவிட்டு வெளியே போகும்படி கட்டளையிடுகிறார்கள்.

தங்களுடைய சிந்தனையிலும், பேச்சிலும் தெளிவு உண்டாக வேண்டுமென்றும், ஆலோசனைச் சங்கத்தார் மத்தியில் ஒருமனம் இருக்கவேண்டுமென்றும் அவர்கள் தீர்மானித்து, தங்களுக்குள்ளே யோசனை பண்ணுகிறார்கள். அப்போஸ்தலரை என்ன செய்யலாம் என்பதே அவர்களுடைய பிரதான யோசனை. தேவனுக்குத் தெரியாத ரகசியம் எதுவுமில்லை. அவர்கள் எப்படித்தான் ரகசியமாக ஆலோசனைபண்ணினாலும் அந்த ரகசியம் தேவனுக்கு நிச்சயமாகத் தெரியும். தங்களுடைய யோசனையை பேதுருவும் யோவானும் தெரிந்து கொள்ளக்கூடாது என்று தீர்மானித்து, ஆலோசனைச்சங்கத்தைவிட்டு அவர்கள் இருவரையும் வெளியே போகும்படி கட்டளையிட்டாலும், இயேசுகிறிஸ்துவை வெளியே அனுப்புவதற்கு அவர்களுக்கு அதிகாரமில்லை.

வெளியரங்கமான அற்புதம்

இந்த மனுஷரை நாம் என்ன செய்யலாம்? எருசலேமில் வாசம்பண்ணுகிற எல்லாருக்கும் தெரிந்திருக்கிறபடி வெளியரங்கமான அற்புதம் இவர்களால் செய்யப்பட்டதே, அதை நாம் இல்லையென்று சொல்லக்கூடாது (அப் 4:16).

ஆலோசனைச் சங்கத்தார் தங்களுக்குள் யோசனைபண்ணிக் கொண்டு, தங்களுக்குள் பேசிக்கொள்கிறார்கள். "இந்த மனுஷரை நாம் என்ன செய்யலாம்" என்பதே ஆலோசனைச்சங்கத்தாரின் முக்கியமான யோசனையாகயிருக்கிறது. அற்புதம் பிரத்தியட்சமாக நடைபெற்றிருக்கிறது. எருசலேமில் வாசம்பண்ணுகிற எல்லோருக்கும் தெரிந்திருக்கிறபடி வெளிப்படையான அற்புதம் அப்போஸ்தலரால் செய்யப்பட்டிருக்கிறது. அதை அவர்கள் இல்லையென்று சொல்லக்கூடாது. இந்த அற்புதம் இயேசுகிறிஸ்துவின் வல்லமையினால் நடைபெற்றிருக்கிறது என்பது ஆலோசனைச்சங்கத்தாருக்கு நன்றாகத் தெரிந்திருக்கிறது.

சத்தியம் அவர்களுடைய மனச்சாட்சியில் உணர்த்தப்பட்டிருக்கிறது. ஆனாலும் அவர்கள் சத்தியத்திற்குச் செவிகொடுக்க ஆயத்தமாகயில்லை. சத்தியத்திற்கு விரோதமாக கிரியை செய்யவேண்டுமென்று அவர்கள் தீர்மானமாகயிருக்கிறார்கள். ஆகையினால் சத்தியத்தின்படி யோசனைபண்ணாமல், தங்கள் சுயவிருப்பத்தின் பிரகாரம் யோசனை பண்ணுகிறார்கள். அப்போஸ்தலரை என்ன செய்யலாம் என்று யோசனைபண்ணுவதற்குப் பதிலாக, தங்களுடைய விருப்பத்தை எப்படி நிறைவேற்றலாம் என்று யோசனை பண்ணுகிறார்கள்.

ஆலோசனைச் சங்கத்தார் தங்களுக்குள் யோசனைபண்ணி அவர்கள் இரண்டு காரியங்களைத் தீர்மானம் பண்ணுகிறார்கள். அவையாவன: 1. அப்போஸ்தலர்களைத் தண்டிப்பது ஆலோசனைச் சங்கத்தாருக்குப் பாதுகாப்பானதல்ல. 2. அப்போஸ்தலர்கள் இனிமேல் இயேசுகிறிஸ்துவைப்பற்றி பிரசங்கம்பண்ணக்கூடாது என்று அவர்களைத் தடுத்து நிறுத்தவேண்டும்.

இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் தாயின் கர்ப்பத்திலிருந்து சப்பாணியாய் பிறந்திருக்கிறவன் அற்புதமாகச் சொஸ்தமாக்கப்பட்டிருக்கிறான். எருசலேமில் வாசம்பண்ணுகிற எல்லாருக்கும் தெரிந்திருக்கிறபடி வெளியரங்கமான அற்புதம் அப்போஸ்தலரால் செய்யப்பட்டிருக்கிறது. இதை ஆலோசனைச்சங்கத்தாரால் "இல்லை" என்று சொல்லமுடியாது. அப்படிச் சொன்னால் ஜனங்கள் ஆலோசனைச் சங்கத்தாருக்கு விரோதமாகச் செயல்படுவார்கள். ஆலோசனைச்சங்கத்தார் ஜனங்களுக்குப் பயப்படுகிறார்கள்.

அப்போஸ்தலர்கள் மூலமாக வெளியரங்கமான அற்புதம் செய்யப்பட்டதினால் அவர்களைத் தண்டிக்கவும் கூடாது. தவறு செய்யாதவர்களை ஆலோசனைச் சங்கத்தார் தண்டிப்பது நியாயமல்ல. ஒரு பாவமும் செய்யாத கள்ளம் கபடமற்றவர்களைத் தண்டித்தால், தேவன் தங்களைத் தண்டிப்பார் என்னும் பயம் ஆலோசனைச்சங்கத்தாரின் உள்ளத்திலிருக்கிறது. இவர்கள் தேவனுக்கும் பயப்படுகிறார்கள். அதைவிட அதிகமாக மனுஷருக்கும் பயப்படுகிறார்கள். ஆகையினால் ஆலோசனைச்சங்கத்தாரால் பேதுருவையும் யோவானையும் உடனடியாகத் தண்டிக்க முடியவில்லை.

எருசலேமில் வாசம்பண்ணுகிற ஜனங்களெல்லோருக்கும் இந்த அற்புதம் தெரிந்திருக்கிறது. அப்போஸ்தலர்கள் வெளியரங்கமாக இந்த அற்புதத்தைச் செய்திருக்கிறார்கள். சப்பாணி குணமானது இயற்கையான சம்பவமல்ல என்பதையும், தேவனுடைய அற்புத வல்லமையினால் அவன் குணமாக்கப்பட்டிருக்கிறான் என்பதையும் ஜனங்கள் அறிந்திருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின் வல்லமையினாலேயே சப்பாணி சொஸ்தமாக்கப்பட்டிருக்கிறான் என்பதை ஜனங்கள் அறிந்திருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின் சத்திய உபதேசத்திற்கு, அவருடைய நாமத்தினால் நடைபெற்ற அற்புதம் சாட்சியாக இருக்கிறது.

அப்போஸ்தலர்கள் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணுகிறார்கள். தேவன் தம்முடைய வசனத்தை அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும் உறுதி பண்ணுகிறார். அப்போஸ்தலர்கள் மூலமாக பிரசங்கிக்கப்பட்ட தம்முடைய சுவிசேஷச் சத்தியத்தை, இயேசுகிறிஸ்து தம்முடைய அற்புத வல்லமையினால் உறுதிபண்ணுகிறார். சப்பாணி குணமான சம்பவம் ஏதோ ஒரு மூலையில் யாருக்கும் தெரியாமல் ரகசியமாக நடைபெறவில்லை. எருசலேமில் வாசம்பண்ணுகிற எல்லோருக்குமே இந்த அற்புதம் தெரிந்திருக்கிறது.

அப்போஸ்தலர்களால் அற்புதம் செய்யப்பட்டிருக்கிறது என்பது ஆலோசனைச் சங்கத்தாருக்கும் தெரிந்திருக்கிறது. அவர்களுக்கு அப்போஸ்தலர்மீது கோபமிருந்தாலும், அவர்களால் அற்புதம் செய்யப்படவில்லையென்று ஆலோசனைச் சங்கத்தாரால் சொல்ல முடியவில்லை. மெய்யாகவே நடைபெற்ற ஒரு அற்புத சம்பவத்தை, அது நடைபெறவேயில்லை என்று சாதிக்க முடியாது. ஒருவேளை ஆலோசனைச்சங்கத்தார் தங்களுடைய மனச்சாட்சியை ஏமாற்றலாம். ஆனால் உலகத்தை ஏமாற்ற முடியாது. எருசலேமில் வாசம்பண்ணுகிற எல்லோருக்கும் தெரிந்திருக்கிற வெளியரங்கமான அற்புதத்தை, ஆலோசனைச்சங்கத்தாரால் "இல்லை" என்று சொல்லமுடியாது.

சப்பாணி அற்புதமாகச் சொஸ்தமாக்கப்பட்டதற்காக, எல்லா ஜனங்களும் தேவனைத் துதிக்கிறார்கள். கர்த்தரை ஸ்தோத்திரம் பண்ணுகிறார்கள். இயேசுகிறிஸ்துவையும் அவருடைய சுவிசேஷத்தையும் விசுவாசிக்காதவர்கள் கூட, தாயின் வயிற்றிலிருந்து சப்பாணியாகப் பிறந்தவன் எழும்பி நடந்ததற்காக, தேவனைத் துதிக்கிறார்கள்.

பேசக்கூடாது

ஆகிலும் இது அதிகமாய் ஜனத்துக்குள்ளே பரம்பாதபடிக்கு, இதுமுதல் ஒருவரோடும் இந்த நாமத்தைக் குறித்துப் பேசக்கூடாதென்று, அவர்களை உறுதியாய்ப் பயமுறுத்த வேண்டுமென்று சொல்லிக் கொண்டு, அவர்களை அழைத்து: இயேசுவின் நாமத்தைக்குறித்து எவ்வளவும் பேசவும் போதிக்கவும் கூடாதென்று அவர்களுக்குக் கட்டளையிட்டார்கள் (அப் 4:17,18).

இயேசுகிறிஸ்துவின் உபதேசம் ஜனத்துக்குள்ளே அதிகமாய் பரம்பாதபடி அதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்பதில் ஆலோசனைச் சங்கத்தார் மிகுந்த எச்சரிப்போடிருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவின் அற்புத வல்லமையினால் சப்பாணி சொஸ்தமாக்கப்பட்டிருக்கிறான். இந்த அற்புதத்தைப்பற்றிய செய்தி ஜனங்கள் மத்தியில் வேகமாகப் பரவி வருகிறது. இது இயேசுகிறிஸ்துவினால் செய்யப்பட்ட உபகாரம். ஆனால் ஆலோசனைச் சங்கத்தாரோ இயேசுகிறிஸ்துவின் உபகாரத்தை ஒரு கொள்ளைநோயாகப் பாவிக்கிறார்கள். இதைத் தடுத்து நிறுத்தவில்லையென்றால் இந்த நோய் ஜனங்கள் மத்தியில் வேகமாக பரவிவிடும் என்று பயப்படுகிறார்கள்.

இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை ஜனத்துக்குள்ளே பரம்பாதபடிக்குத் தடுக்க ஆலோசனைச்சங்கத்தார் இரண்டு காரியங்களைச் செய்யவேண்டுமென்று தீர்மானம்பண்ணுகிறார்கள். அவையாவன: 1. இதுமுதல் அப்போஸ்தலர் ஒருவரோடும் இயேசுகிறிஸ்துவின் நாமத்தைக் குறித்து பேசக்கூடாது என்று அவர்களை எச்சரிப்பது. 2. தங்கள் எச்சரிப்பையும் மீறி அப்போஸ்தலர் யாரிடமாவது இயேசுகிறிஸ்துவைக் குறித்து பேசினால் அதன் விளைவு பயங்கரமாகயிருக்குமென்று அவர்களை உறுதியாய் பயமுறுத்துவது.

அப்போஸ்தலர்கள் இனிமேல் இயேசுகிறிஸ்துவின் நாமத்தைப் பொது இடங்களில் பிரசங்கம்பண்ணக்கூடாது என்றும், அத்தோடு தனிநபர்களிடத்திலும் இயேசுகிறிஸ்துவைக் குறித்து பேசக்கூடாது என்றும் ஆலோசனைச்சங்கத்தார் அவர்களைத் தடைபண்ணுகிறார்கள். அப்போஸ்தலரின் வாயிலிருந்து "இயேசு" என்னும் நாமமே உச்சரிக்கப்படக்கூடாது என்பதுதான் ஆலோசனைச்சங்கத்தாரின் கட்டளை. இது சத்துருவின் சதிஆலோசனை.

கர்த்தருடைய உண்மையான ஊழியக்காரர்களைத் தடைபண்ணினால் கிறிஸ்துவின் ஊழியம் தடைபடும் என்று சாத்தான் வஞ்சனையாகச் சிந்திக்கிறான். கர்த்தருடைய ஊழியக்காரர்களைத் தடுத்தால் தேவனுடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்குப் பதிலாக தன்னுடைய பிசாசின் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுமென்று சாத்தான் எதிர்பார்க்கிறான். கர்த்தருடைய பிள்ளைகள் இந்த உலகத்திற்கு வெளிச்சமாகயிருக்கிறார்கள். இந்த வெளிச்சத்தை மரக்காலுக்குள் போட்டு மூடிவிடுவதற்குச் சாத்தான் பிரயாசப்படுகிறான்.

அப்போஸ்தலர்கள் தங்களுடைய கட்டளைக்குக் கட்டுப்படவேண்டுமென்று ஆலோசனைச் சங்கத்தார் எதிர்பார்க்கிறார்கள். தங்களுடைய கட்டளையைமீறி அப்போஸ்தலர்கள் இயேசுகிறிஸ்துவின் நாமத்தைக்குறித்து யாரிடமாவது பேசினால், அவர்களுக்கு கடுமையான தண்டனை கொடுக்கப்படும் என்று எச்சரிக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவோ சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்குமாறு தம்முடைய சீஷருக்குக் கட்டளை கொடுத்திருக்கிறார். ஆலோசனைச் சங்கத்தாரோ சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கக்கூடாது என்று அவர்களைத் தடைபண்ணுகிறார்கள். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷருக்குக் கட்டளைகொடுக்கும்போது, தாமும் அவர்களோடு முடிவுபரியந்தம் கூடவே இருப்பதாக வாக்குப்பண்ணியிருக்கிறார்.

நம்முடைய ஊழியத்தில் நமக்குப் பல பாடுகளும் பிரச்சனைகளும் உண்டாகலாம். இயேசுகிறிஸ்துவே நமக்குப் பாதுகாப்பாக இருக்கிறவர். அவரே நம்முடைய பெலன். இயேசுகிறிஸ்துவின் வாக்குத்தத்தங்களை நாம் சார்ந்துகொள்ளவேண்டும். அப்போதுதான் நமக்குப் பிரச்சனைகளும் சோதனைகளும் வரும்போது, இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் அவற்றை மேற்கொள்ளமுடியும். உலகம் நம்மை பயமுறுத்தினாலும் இயேசுகிறிஸ்துவின் வாக்குத்தத்தத்தின் மூலமாக நமக்குத் தைரியம் கிடைக்கும்.

பேசாமலிருக்கக்கூடாதே

பேதுருவும் யோவானும் அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: தேவனுக்குச் செவிகொடுக்கிறதைப் பார்க்கிலும் உங்களுக்குச் செவிகொடுக்கிறது தேவனுக்கு முன்பாக நியாயமாயிருக்குமோ என்று நீங்களே நிதானித்துப்பாருங்கள் நாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் பேசாமலிருக்கக் கூடாதே என்றார்கள் (அப் 4:19,20).

ஆலோசனைச் சங்கத்தார் தங்களிடத்தில் கூறும் கட்டளையை அப்போஸ்தலர்கள் தங்கள் காதுகளால் கேட்கிறார்கள். அதே வேளையில் இயேசுகிறிஸ்து தங்களிடத்தில் கூறிய பிரதான கற்பனையையும் தங்கள் இருதயத்தில் சிந்தித்துப் பார்க்கிறார்கள். ஆலோசனைச் சங்கத்திற்குச் செவிகொடுக்கிறதைப் பார்க்கிலும் தேவனுக்குச் செவிகொடுக்கிறது நியாயமாயிருக்கிறது என்று தீர்மானம்பண்ணுகிறார்கள்.

அப்போஸ்தலர்கள் ஏற்கெனவே கைதுபண்ணப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். ஆலோசனைச் சங்கத்திற்கு முன்பாக நிறுத்தப்பட்டு விசாரிக்கப்படுகிறார்கள். ஆலோசனைச் சங்கத்தார் அவர்களை இயேசுவின் நாமத்தைக்குறித்து எவ்வளவும் பேசவும் போதிக்கவும் கூடாது என்று அவர்களுக்குக் கட்டளையிடுகிறார்கள். கட்டளையை மீறினால் அவர்களுக்கு விபரீதமான விளைவுகள் உண்டாகுமென்று அவர்களை உறுதியாய் பயமுறுத்துகிறார்கள். இத்தனை காரியங்களுக்கும் நடுவிலும், அப்போஸ்தலர்கள் மிகவும் தைரியமாய் இயேசுகிறிஸ்துவின் நாமத்தைப் பிரசங்கம் பண்ணவேண்டுமென்று தீர்மானம் பண்ணுகிறார்கள். தங்களுடைய தீர்மானத்தை ஆலோசனைச் சங்கத்தாரிடமும் தைரியமாகச் சொல்லுகிறார்கள்.

ஆலோசனைச் சங்கத்தாருக்குப் பிரதியுத்தரம் சொல்லும்போது யோவானும் பேதுருவும் சேர்ந்து பேசுகிறார்கள். “தேவனுக்குச் செவிகொடுக்கிறதைப் பார்க்கிலும் உங்களுக்குச் செவிகொடுக்கிறது தேவனுக்கு முன்பாக நியாயமாயிருக்குமோ என்று நீங்களே நிதானித்துப்பாருங்கள் நாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் பேசாமலிருக்கக்கூடாதே” என்று அப்போஸ்தலர்கள் இருவரும் தைரியமாகவும், எந்தவித கலக்கமும், பயமும், குழப்பமும் இல்லாமலும், தெளிவாகவும் ஆலோசனைச்சங்கத்தாரிடம் பேசுகிறார்கள். இவர்களை பயமுறுத்தவேண்டும் என்று ஆலோசனைச் சங்கத்தார் தீர்மானம்பண்ணினார்கள். ஆனால் அப்போஸ்தலர்களோ பயப்படவில்லை.

இயேசுவின் நாமத்தைக்குறித்து இவர்கள் பேசக்கூடாது என்று ஆலோசனைச் சங்கத்தார் கட்டளையிட்டார்கள். ஆனால் அவர்களுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிய அப்போஸ்தலர்கள் உறுதியாய் மறுத்துவிடுகிறார்கள். இயேசுகிறிஸ்துவைக் குறித்து அப்போஸ்தலர்களைப் பேசவிடாமல் தடைபண்ண வேண்டுமென்பது சாத்தானுடைய சதிஆலோசனை. ஆனால் இவர்களோ இயேசுவின் நாமத்தைக்குறித்து பிரசங்கம் பண்ணவேண்டுமென்பது தேவனுடைய தெய்வீக சித்தமும் திட்டமுமாயிருக்கிறது.

அப்போஸ்தலர்கள் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலேயே தீர்மானம் பண்ணுகிறார்கள். இயேசுகிறிஸ்துவின் கட்டளைக்கும், தங்களுடைய மனச்சாட்சிக்கும் அப்போஸ்தலர்கள் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். “இயேசுவின் நாமத்தைக்குறித்து எவ்வளவும் பேசவும் போதிக்கவும் கூடாது” என்று ஆலோசனைச்சங்கத்தார் அப்போஸ்தலருக்குக் கட்டளை கொடுக்கிறார்கள். ஆனால் தேவனோ “நீங்கள் சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவேண்டும்” என்று சீஷருக்குக் கட்டளை கொடுத்திருக்கிறார். யாருடைய கட்டளைக்குக் கீழ்ப்படியவேண்டுமென்பதை அப்போஸ்தலர்கள்தான் தீர்மானம் பண்ணவேண்டும்.

நாம் எப்போதுமே தேவனுக்கு மாத்திரமே செவிகொடுக்கவேண்டும். பாவியான மனுஷருக்குச் செவிகொடுத்து தேவனைவிட்டு விலகிப்போய்விடக்கூடாது. உலகத்திற்குச் செவிகொடுத்து தேவனுடைய ராஜ்யத்தைவிட்டுத் தூரமாய் விலகிப்போய்விடக்கூடாது. அப்போஸ்தலர்கள் தங்களுடைய சூழ்நிலைகளையும், ஆலோசனைச் சங்கத்தாரின் கட்டளையையும், இயேசுகிறிஸ்துவின் பிரதான கட்டளையையும் தங்கள் இருதயத்தில் ஜெபத்தோடு தியானிக்கிறார்கள். பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலினால் தீர்மானமும் பண்ணுகிறார்கள்.

அப்போஸ்தலர்கள் தங்களுடைய தீர்மானத்தை அப்போஸ்தலர்கள் ஆலோசனைச் சங்கத்தாரிடமே "தேவனுக்குச் செவிகொடுக்கிறதைப் பார்க்கிலும் உங்களுக்குச் செவிகொடுக்கிறது தேவனுக்கு முன்பாக நியாயமாயிருக்குமோ என்று நீங்களே நிதானித்துப்பாருங்கள்" என்று ஒரு கேள்வியாகக் கேட்கிறார்கள். தேவனுடைய கட்டளையை மீறுவது பாவம். தேவனுடைய வார்த்தைக்குச் செவிகொடுக்கவில்லையென்றால் நாம் சாத்தானுடைய வார்த்தைக்குச் செவிகொடுக்க ஆரம்பித்துவிடுவோம். நாம் எப்போதுமே தேவனுக்கு முன்பாக நியாயமாக இருக்கிறதை மாத்திரமே சிந்திக்கவேண்டும். அதை மாத்திரமே செய்யவேண்டும்.

அப்போஸ்தலர்கள் இந்தக் காரியங்களையெல்லாம் சிந்தித்துப் பார்க்கும்போது, அவர்களுடைய மனச்சாட்சியும் அவர்களோடு பேசுகிறது. தாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் பேசாமலிருக்கக்கூடாது என்று அப்போஸ்தலர்கள் தீர்மானம் பண்ணுகிறார்கள். பரிசுத்த ஆவியானவர் அவர்களுடைய மனச்சாட்சியின் மூலமாக அவர்களிடத்தில் பேசுகிறார். ஆவியானவரே அவர்களுடைய சிந்தனையையும் வார்த்தையையும் ஆளுகை செய்கிறார்.

அப்போஸ்தலர்கள் இயேசு கிறிஸ்துவின் வார்த்தையிலிருக்கும் வல்லமையை அனுபவித்திருக்கிறார்கள். ஆகையினால் இயேசுகிறிஸ்துவைக்குறித்து உபதேசம்பண்ணுவது தேவனுக்கு முன்பாக நியாயமாகயிருக்கிறது என்று தீர்மானம்பண்ணுகிறார்கள்.

இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் அப்போஸ்தலருக்கும், சர்வசிருஷ்டிக்கும் மிகவும் முக்கியமானது. இயேசுகிறிஸ்து ஒரு ஆத்துமாவை இரட்சிக்கவில்லையென்றால் அந்த ஆத்துமா அழிந்துபோகும். இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் மாத்திரமேயல்லாமல், வேறு எந்த நாமத்தினாலும் மனுஷருடைய ஆத்துமாவுக்கு இரட்சிப்பு கட்டளையிடப் படவில்லை. இயேசுகிறிஸ்துவினால் மாத்திரமே அழிந்துபோகிற ஆத்துமாவை, அந்த அழிவிலிருந்து இரட்சிக்க முடியும்.

ஜனங்களுக்கு இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷச் செய்தியை உண்மையோடு அறிவிக்க வேண்டுமென்று அப்போஸ்தலர்கள் தீர்மானம் பண்ணுகிறார்கள். இயேசுகிறிஸ்துவைத் தங்களுடைய இரட்சகராக ஏற்றுக்கொண்டு அவரை விசுவாசிக்கவில்லை என்றால், அவர்களுக்கு வரக்கூடிய அழிவைக்குறித்தும் அவர்களிடத்தில் எச்சரித்துக் கூறவேண்டுமென்று தீர்மானம்பண்ணுகிறார்கள்.

அப்போஸ்தலர்கள் தங்களுக்குத் தெரியாத ரகசியத்தையோ அல்லது தங்களுக்குப் புரியாத தத்துவத்தையோ ஜனங்களிடத்தில் பிரசங்கம்பண்ணவில்லை. அவர்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையுமே ஜனங்களிடத்தில் பேசுகிறார்கள். தாங்கள் பேசுகிற செய்தியின் நிச்சயத்தை அப்போஸ்தலர்கள் அறிந்திருக்கிறார்கள். தாங்கள் பேசுவது சத்தியமென்பதில் அவர்கள் உறுதியாயிருக்கிறார்கள்.

அப்போஸ்தலர்கள் தாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும், பேசாமலிருந்தால், அவற்றை வேறு யார் பேசுவார்கள். வேறு யாரால் பேசமுடியும். இவ்வாறெல்லாம் அப்போஸ்தலர்கள் சிந்தித்து "நாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் பேசாமலிருக்கக் கூடாதே" என்று தீர்மானித்து, தங்களுடைய தீர்மானத்தை ஆலோசனைச் சங்கத்தாரிடம் பயப்படாமல் தைரியமாகச் சொல்லுகிறார்கள்.

பயமுறுத்தி விட்டுவிட்டார்கள்

நடந்த சங்கதிகளைக்குறித்து எல்லாரும் தேவனை மகிமைப்படுத்தின படியால், ஜனங்களுக்குப் பயந்து அவர்களை தண்டிக்க வகையொன்றுங்காணாமல், அவர்களைப் பயமுறுத்தி விட்டுவிட்டார்கள். அற்புதமாய்ச் சொஸ்தமாக்கப்பட்ட மனுஷன் நாற்பது வயதுக்கு மேற்பட்டவனாயிருந்தான் (அப் 4:21,22).

அப்போஸ்தலர்கள் கட்டப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். ஆலோசனைச்சங்கத்தாருக்கு முன்பாக நிறுத்தப்பட்டு விசாரிக்கப்படுகிறார்கள். தங்களுடைய தீர்ப்பை அப்போஸ்தலரிடம் கூறுகிறார்கள். ஆனால் அப்போஸ்தலரோ ஆலோசனைச்சங்கத்தாரின் கட்டளைக்குக் கீழ்ப்படிய மறுத்துவிடுகிறார்கள். ஆனாலும் ஆலோசனைச் சங்கத்தார் அப்போஸ்தலரைத் தண்டிக்காமல் அவர்களை பயமுறுத்துவிட்டுவிடுகிறார்கள்.

இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் சப்பாணி குணமாக்கப்பட்டிருக்கிறான். ஆலோசனைச்சங்கத்தாருக்கு முன்பாக அப்போஸ்தலரும் தேவனை மகிமைப்படுத்திப் பேசுகிறார்கள். நடந்த இந்தச் சங்கதிகளைக் குறித்து எல்லாரும் தேவனை மகிமைப்படுத்துகிறார்கள். இதனால் ஆலோசனைச்சங்கத்தாருக்கு ஜனங்களைக்குறித்து பயமுண்டாயிற்று. ஜனங்களுக்கு விரோதமாக செயல்பட ஆலோசனைச்சங்கத்தார் பிரியப்படவில்லை. அவர்களால் செயல்படவும் முடியாது.

தேவனுடைய பிரமாணத்தின்படி ஆலோசனைச் சங்கத்திலுள்ள அங்கத்தினர்கள் நீதியாக நியாயந்தீர்க்க வேண்டும். அவர்கள் துன்மார்க்கருக்குப் பயங்கரமானவர்களாக இருக்கவேண்டும். ஆனால் இந்த ஆலோசனைச்சங்கத்தாரோ துன்மார்க்கராக இருக்கிறார்கள். துன்மார்க்கமாக சிந்திக்கிறார்கள். அநீதியாகப் பேசுகிறார்கள். அநீதியாகக் கட்டளை கொடுக்கிறார்கள்.

தாயின் வயிற்றிலிருந்து சப்பாணியாய் பிறந்தவன் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் எழும்பி நிற்கிறான். நடக்கிறான். அற்புதமாய்ச் சொஸ்தமாக்கப்பட்ட அந்த மனுஷன் நாற்பது வயதிற்கு மேற்பட்டவனாயிருக்கிறான். எருசலேமிலுள்ள ஜனங்கள் மத்தியில் இந்த அற்புத சம்பவம் பிரத்தியட்சமாக நடைபெற்றிருக்கிறது. இந்த அற்புதம் நடக்கவில்லையென்று ஆலோசனைச்சங்கத்தாரால் மூடி மறைக்க முடியாது. இது ஏதோ ஒரு மூலையில் ரகசியமாக நடைபெற்ற சம்பவமல்ல. இந்த அற்புதமும் சாதாரண அற்புதமல்ல. தாயின் வயிற்றிலிருந்து சப்பாணியாய் பிறந்தவன், நாற்பது வருஷங்களுக்கு மேலாக சப்பாணியாகவே இருந்தவன், இப்போது இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே சொஸ்தமாக்கப்பட்டிருக்கிறான் (அப் 3:2).

ஒரு சிலர் தீமையான காரியங்களில் மூழ்கியிருப்பார்கள். நீண்டகாலமாகவே தீமையே செய்வார்கள். இப்படிப்பட்டவர்கள் தேவனுடைய இரட்சிப்பின் கிருபையினால், இரட்சிக்கப்படும்போது, தேவனுடைய நாமம் அதிகமாய் மகிமைப்படும். ஒரு சிலருக்கு இயேசுவின் நாமத்தினால் சாதாரண வியாதி குணமடையும். இதனாலும் தேவனுக்கு மகிமையுண்டாகும். ஆனாலும் சில சமயங்களில் மிகப்பெரிய வியாதிகள் இயேசுவின் நாமத்தினால் குணமடையும்போது, தேவனுக்கு அதிக மகிமையுண்டாகும்.

நாற்பது வருஷத்திற்கு மேலாக, சப்பாணியாகயிருந்தவன் இயேசுவின் நாமத்தினால் குணமடைந்திருக்கிறான். இதனால் தேவனுடைய நாமம் அதிகமாய் மகிமையடைந்திருக்கிறது. தனக்கு இயேசுகிறிஸ்து செய்த உபகாரத்தை இந்த மனுஷனே சாட்சியாக அறிவிப்பான். தான் நாற்பது வருஷமாக சப்பாணியாக இருந்ததையும், இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் இப்போது எழும்பி நிற்பதையும் குணமாக்கப்பட்ட இந்த மனுஷன், சாட்சியாக அறிவிப்பான்.

ஆகையினால் ஆலோசனைச் சங்கத்தாரால் அப்போஸ்தலரைத் தண்டிக்க முடியவில்லை. ஜனங்களெல்லோரும் தேவனை மகிமைப்படுத்துகிறார்கள். தேவனை மகிமைப்படுத்துகிற ஜனங்களுக்கு மத்தியில், தேவனுக்கு விரோதமாகப் பேசுவதோ அல்லது கிரியை செய்வதோ எளிதான காரியமல்ல.

விடுதலையாக்கப்பட்ட பின்பு அப் 4 : 23-31

அப் 4:23. அவர்கள் விடுதலையாக்கப்பட்ட பின்பு, தங்களைச் சேர்ந்தவர்களிடத்தில் வந்து, பிரதான ஆசாரியர்களும் மூப்பர்களும் தங்களுக்குச் சொன்ன யாவையும் அறிவித்தார்கள்.

அப் 4:24. அவர்கள் அதைக் கேட்டு, ஒருமனப்பட்டு தேவனை நோக்கிச் சத்தமிட்டு: கர்த்தாவே, நீர் வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனாயிருக்கிறீர்.

அப் 4:25. புறஜாதிகள் கொந்தளித்து, ஜனங்கள் விருதா காரியங்களைச் சிந்திப்பானேன் என்றும்,

அப் 4:26. கர்த்தருக்கு விரோதமாகவும் அவருடைய கிறிஸ்துவுக்கு விரோதமாகவும் பூமியின் ராஜாக்கள் எழும்பி நின்று, அதிகாரிகள் ஏகமாய்க் கூட்டங்கூடினார்கள் என்றும் தேவரீர் உம்முடைய தாசனாகிய தாவீதின் வாக்கினால் உரைத்தீரே.

அப் 4:27. அந்தப்படி உம்முடைய கரமும் உம்முடைய ஆலோசனையும் முன்குறித்தவைகள் யாவையும் செய்யும்படி,

அப் 4:28. ஏரோதும் பொந்தியுபிலாத்தும், புறஜாதிகளோடும் இஸ்ரவேல் ஜனங்களோடுங்கூட, நீர் அபிஷேகம்பண்ணின உம்முடைய பரிசுத்த பிள்ளையாகிய இயேசுவுக்கு விரோதமாய், மெய்யாகவே கூட்டங் கூடினார்கள்.

அப் 4:29. இப்பொழுதும், கர்த்தாவே, அவர்கள் பயமுறுத்தல்களை தேவரீர் கவனித்து,

அப் 4:30. உம்முடைய பரிசுத்த பிள்ளையாகிய இயேசுவின் நாமத்தினாலே அடையாளங்களும் அற்புதங்களும் நடக்கும்படி செய்து, பிணியாளிகளைக் குணமாக்கும்படி உம்முடைய கரத்தை நீட்டி, உம்முடைய ஊழியக்காரர் உம்முடைய வசனத்தை முழு தைரியத்தோடும் சொல்லும்படி அவர்களுக்கு அநுக்கிரகஞ்செய்தருளும் என்றார்கள்.

அப் 4:31. அவர்கள் ஜெபம்பண்ணினபோது, அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்தஆவியினால் நிரப்பப்பட்டு, தேவவசனத்தைத் தைரியமாய்ச் சொன்னார்கள்.

தங்களைச்சேர்ந்தவர்களிடத்தில்

அவர்கள் விடுதலையாக்கப்பட்ட பின்பு, தங்களைச் சேர்ந்தவர்களிடத்தில் வந்து, பிரதான ஆசாரியர்களும் மூப்பர்களும் தங்களுக்குச் சொன்ன யாவையும் அறிவித்தார்கள் (அப் 4:23).

ஆலோசனைச் சங்கத்தார் அப்போஸ்தலர்களைத் தண்டிக்க வகை ஒன்றும் காணாமல், அவர்களைப் பயமுறுத்திவிட்டு விடுகிறார்கள். அப்போஸ்தலர்கள் விடுதலையாக்கப்பட்ட பின்பு தங்களைச் சேர்ந்தவர்களிடத்தில் வருகிறார்கள். சகவிசுவாசிகளிடத்தில் வந்து சேருகிறார்கள். கட்டும் காவலும் தங்களைவிட்டு நீக்கப்பட்ட பின்பு, அப்போஸ்தலர்கள் ஆவிக்குரிய சிநேகிதர்களிடம் ஐக்கியமாகயிருப்பதற்காக வருகிறார்கள்.

ஆலோசனைச்சங்கத்திற்கு முன்பாக தமக்குச் சாட்சிபகரும் சிலாக்கியத்தை தேவன் பேதுருவுக்கும் யோவானுக்கும் கொடுத்தார். அவர்களும் ஆலோசனைச்சங்கத்தாருக்கு முன்பாக இயேசுகிறிஸ்துவின் நாமத்தைக்குறித்துத் தைரியமாகப் பேசினார்கள். இந்த மேன்மையான சிலாக்கியம் அப்போஸ்தலர்களில் இவர்கள் இருவருக்குமே கிடைத்திருக்கிறது. இதற்காக இவர்கள் இருவரும் பெருமைப்படவில்லை. மற்ற அப்போஸ்தலர்களை ஏளமான நினைக்கவில்லை. தேவன் தங்களைத்தான் ஊழியத்தில் அதிகமாகப் பயன்படுத்துகிறாரென்று பெருமைப்பட்டு, மற்ற அப்போஸ்தலர்களை உதாசீனப்படுத்தவில்லை. அவர்கள் விடுதலையாக்கப்பட்ட பின்பு தங்களைச் சேர்ந்தவர்களிடத்தில் வருகிறார்கள்.

தேவன் நம் மூலமாக பல வரங்களைச் செயல்படுத்தலாம். நமக்கு பெரிய ஊழியத்தைக் கொடுத்திருக்கலாம். நாமும் தேவனுடைய ராஜ்யத்தை ஸ்தாபிப்பதிலும் விஸ்தாரம் பண்ணுவதிலும் மிகவும் பிரயோஜனமுள்ளவர்களாக இருக்கலாம். தேவன் நம்மை எப்படி உயர்த்தினாலும் பரிசுத்தவான்களின் ஐக்கியம் நமக்குத் தேவை. மற்ற பரித்தவான்களோடு நாம் ஐக்கியமாகயிருப்பது நம்முடைய கடமை. இது தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் சிலாக்கியம்.

ஆலோசனைச் சங்கத்தார் அப்போஸ்தலர்களை இயேசுகிறிஸ்துவின் நாமத்தைக்குறித்து பேசக்கூடாது என்று எச்சரித்தார்கள். பயமுறுத்தினார்கள். இதனால் அப்போஸ்தலர்கள் பயந்துவிடவில்லை. தங்களைச் சேர்ந்த மற்ற விசுவாசிகளிடத்தில் மறுபடியுமாக வருகிறார்கள். விசுவாசிகள் ஐக்கியமாகயிருக்கும்போது அவர்கள் மூலமாக தேவனுடைய நாமம் அதிகமாய் மகிமைப்படும். அவர்கள் தேவனுக்காகப் பெரிய காரியங்களைச் செய்வார்கள். விசுவாசிகள் ஐக்கியமாகயிருக்கும்போது ஒரே மனமும் ஒரே இருதயமும் உள்ளவர்களாய் ஒருமனப்பட்டிருக்க வேண்டும்.

அப்போஸ்தலர்கள் இருவரும், மற்ற விசுவாசிகளிடத்தில் வந்து, பிரதான ஆசாரியர்களும், மூப்பர்களும் தங்களுக்குச் சொன்ன யாவையும் அறிவிக்கிறார்கள். பேதுருவும் யோவானும் மற்ற விசுவாசிகளைத் தங்களோடு சம்பந்தப்படுத்திப் பேசுகிறார்கள். ஏனெனில் தங்களுக்கு ஏற்பட்ட இந்தச் சம்பவம் மற்ற விசுவாசிகளுக்கும் ஏற்பட வாய்ப்புள்ளது. தேவனிடத்திலிருந்தும் மனுஷரிடத்திலிருந்தும் அவர்கள் இப்படிப்பட்ட காரியங்களை எதிர்பார்க்கக் கற்றுக்கொள்ளவேண்டும். மனுஷன் பயமுறுத்துவான். தேவன் உற்சாகப்படுத்துவார்.

பேதுருவும் யோவானும் மற்ற விசுவாசிகளிடம் ஆலோசனைச் சங்கத்திற்கு முன்பாகத் தங்களுக்கு உண்டான அனுபவங்களைப் பகிர்ந்துகொள்கிறார்கள். இதைக் கேட்கும்போது விசுவாசிகளின் விசுவாசம் வர்த்திக்கும். உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவை இவர்கள் விசுவாசிக்கிறார்கள். இயேசுகிறிஸ்து தம்முடைய வசனத்தை அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும் உறுதி பண்ணுகிறார். இதனால் உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவின்மீது இவர்கள் வைத்துள்ள விசுவாசம் உறுதிபண்ணப்படுகிறது.

பிரதான ஆசாரியருக்கு முன்பாக அப்போஸ்தலர்கள் இயேசுகிறிஸ்துவைக் குறித்து சாட்சியாகச் சொன்னபோது "தேவனால் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவருமாயிருக்கிற நசரேயனாகிய இயேசுகிறிஸ்து" என்று அறிக்கை செய்தார்கள். தேவன் இயேசுகிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினார் என்று அப்போஸ்தலர் பிரதான ஆசாரியருக்கு முன்பாகவும், மூப்பர்களுக்கு முன்பாகவும் சொன்னபோது, அவர்களால் அதை மறுக்க முடியவில்லை. இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்தது மெய்யான சத்தியம் என்பதை அவர்களும் அறிந்திருக்கிறார்கள்.

ஆகையினால் உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவைக் குறித்து அப்போஸ்தலர்கள் யாரிடத்திலும் சொல்லக்கூடாது என்று கட்டளையிடுகிறார்கள். நடைபெற்ற இந்தச் சம்பவத்திற்காக விசுவாசிகளெல்லோரும் ஒருமனப்பட்டு தேவனுடைய சமுகத்தில் ஜெபிப்பதற்காகக் கூடிவருகிறார்கள். தேவனை நோக்கி சத்தமிட்டுத் துதிக்கிறார்கள்.

தேவனை நோக்கி

அவர்கள் அதைக் கேட்டு, ஒருமனப்பட்டு தேவனை நோக்கிச் சத்தமிட்டு: கர்த்தாவே, நீர் வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனாயிருக்கிறீர் (அப் 4:24).

பேதுருவும் யோவானும் தங்களைச் சேர்ந்தவர்களிடத்தில், பிரதான ஆசாரியர்களும் மூப்பர்களும் தங்களுக்குச் சொன்ன யாவையும் அறிவிக்கிறார்கள். அவர்கள் அதைக்கேட்டு, ஒருமனப்பட்டு, தேவனை நோக்கி சத்தமிட்டுத் துதிக்கிறார்கள். "ஒருமனப்பட்டு தேவனைநோக்கி சத்தமிட்டு" என்னும் வாக்கியத்திற்கு வேதபண்டிதர்கள் இவ்வாறு வியாக்கியானம் கூறுகிறார்கள். விசுவாசிகளின் கூட்டத்திலுள்ள ஒருவர் தேவனுடைய நாமத்தில் சத்தமிட்டு ஜெபிக்கிறார். அப்போது மற்ற விசுவாசிகளும் அவரோடு ஒருமனப்பட்டு சேர்ந்துகொள்கிறார்கள். ஒருவர் சத்தமிட்டுச் ஜெபிக்கும்பொழுது மற்ற விசுவாசிகளின் இருதயம் ஜெபிக்கிறவரின் இருதயத்தோடு ஒருமனப்படுகிறது. ஒருவர் பேசும்போது மற்றவர்கள் அனைவரும் ஜெபிக்கிறார்கள்.

அவர்கள் தேவனைத் துதிக்கும்போது, அவரே சர்வசிருஷ்டிகர் என்று அங்கீகரித்து ஸ்தோத்திரம் பண்ணுகிறார்கள். "கர்த்தாவே நீர் வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனாயிருக்கிறீர்" என்று ஸ்தோத்திரம் பண்ணுகிறார்கள். புறஜாதியார்கள் தங்களுக்கென்று ஒரு தெய்வத்தை உண்டுபண்ணி, தாங்கள் சிருஷ்டித்ததை தேவனென்று ஆராதிக்கிறார்கள். ஆனால் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமோ சர்வலோகத்தையும் சிருஷ்டித்த சிருஷ்டிகரை ஆராதிக்கிறோம். நம்முடைய ஆராதனை சிருஷ்டியை ஆராதிப்பதல்ல. சிருஷ்டிகரை ஆராதிப்பதாகும்.

நாம் ஜெபிக்க ஆரம்பிக்கும்போது, தேவனை நோக்கி "நீர் சர்வவல்லமையுள்ள தேவன்" என்றும், "நீரே வானத்தையும் பூமியையும், சமுத்திரத்தையும், அவைகளிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனாயிருக்கிறீர்" என்றும் சொல்லி நம்முடைய ஜெபத்தை ஆரம்பிக்கவேண்டும். நம்முடைய தேவன் சர்வத்தையும் சிருஷ்டித்தவர். சர்வவல்லமையுள்ளவர். அப்பேர்ப்பட்ட மகிமையான தேவனை ஸ்தோத்தரிப்பது நமக்குக் கிடைத்திருக்கும் மேன்மையான சிலாக்கியம். நம்மை சிருஷ்டித்த தேவன் நம்மை பாதுகாத்து பராமரிக்கிறார். எல்லா சூழ்நிலைகளிலும் நம்மோடு கூடவே இருக்கிறார். நாம் சோர்ந்து போகிற வேளைகளில் நம்மை பெலப்படுத்துகிறார். நம்மை உற்சாகப்படுத்துகிறார்.

தாவீதின் வாக்கு

புறஜாதிகள் கொந்தளித்து, ஜனங்கள் விருதா காரியங்களைச் சிந்திப்பானேன் என்றும், கர்த்தருக்கு விரோதமாகவும் அவருடைய கிறிஸ்துவுக்கு விரோதமாகவும் பூமியின் ராஜாக்கள் எழும்பி நின்று, அதிகாரிகள் ஏகமாய்க் கூட்டங்கூடினார்கள் என்றும் தேவரீர் உம்முடைய தாசனாகிய தாவீதின் வாக்கினால் உரைத்தீரே (அப் 4:25,26).

தற்போது தேவனுடைய கிருபையினால் நடைபெற்றுக் கொண்டிருக்கும் காரியங்களை, அப்போஸ்தலர்கள் பழைய ஏற்பாட்டு வசனங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிறார்கள். தாவீதின் வாக்கினால் உரைத்ததுபோல இப்போது காரியங்கள் நடைபெறுவதாக அப்போஸ்தலர்கள் உணருகிறார்கள். தங்களுக்குப் பாடுகளும் பிரச்சனைகளும் உண்டாவதினால் அப்போஸ்தலர்கள் ஆச்சரியப்படக்கூடாது. இவ்வாறு நடைபெறுமென்று வேதத்தில் முன்குறிக்கப்பட்டிருக்கிறது. வேதத்தில் எழுதப்பட்டிருப்பது நிச்சயமாகவே நிறைவேறும். அது அப்போஸ்தலர்களுடைய காலத்தில் நிறைவேறியிருக்கிறது.

அப்போஸ்தலர்கள் மேற்கோளாகக் குறிப்பிட்டிருப்பது சங்கீத புஸ்தகத்தில் இவ்வாறு எழுதப்பட்டிருக்கிறது. "ஜாதிகள்கொந்தளித்து, ஜனங்கள் விருதாக்காரியத்தைச் சிந்திப்பானேன்? கர்த்தருக்கு விரோதமாகவும், அவர் அபிஷேகம் பண்ணினவருக்கு விரோதமாகவும், பூமியின் ராஜாக்கள் எழும்பிநின்று, அதிகாரிகள் ஏகமாய் ஆலோசனைபண்ணி: அவர்கள் கட்டுகளை அறுத்து அவர்கள் கயிறுகளை நம்மைவிட்டு எறிந்துபோடுவோம் என்கிறார்கள்" *(சங் 2:1-3)*. தேவன் தம்முடைய சத்திய வசனத்தில், தம்முடைய தாசனாகிய தாவீதின் வாக்கினால் இவ்வாறு உரைத்திருக்கிறார்.

புறஜாதிகள் இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமாகவும் அவருடைய ராஜ்யத்திற்கு விரோதமாகவும் கொந்தளிப்பார்கள். தேவனுடைய ராஜ்யத்திற்கு விரோதமாக எல்லாவிதமான விருதா காரியங்களையும் சிந்திப்பார்கள். பூமியின் ராஜாக்கள் இயேசுகிறிஸ்துவின் ராஜ்யத்திற்கு விரோதமாக எழும்பி நிற்பார்கள். அதிகாரிகள் இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமாக ஏகமாய்க் கூட்டங்கூடுவார்கள். கிறிஸ்துவுக்கு விரோதமாக யாராவது ஒரு காரியத்தைச் செய்தால், அந்தக் காரியம் தமக்கு விரோதமாகச் செய்யப்படும் காரியமாகயிருக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார். இயேசுகிறிஸ்துவின் உபதேசமும், கிறிஸ்தவ மார்க்கமும் வரலாற்றில் பல தடைகளைச் சந்தித்திருக்கிறது. பல பிரச்சனைகளுக்கு நடுவே கடந்து வந்திருக்கிறது. ஆயினும் கர்த்தருடைய கிருபையினால் இயேசுகிறிஸ்துவின் உபதேசமும் கிறிஸ்தவமார்க்கமும் இன்றும் நிலைத்திருக்கிறது.

இயேசுவுக்கு விரோதமாய்

அந்தப்படி உம்முடைய கரமும் உம்முடைய ஆலோசனையும் முன்குறித்தவைகள் யாவையும் செய்யும்படி, ஏரோதும் பொந்தியுபிலாத்தும், புறஜாதிகளோடும் இஸ்ரவேல் ஜனங்களோடுங்கூட, நீர் அபிஷேகம்பண்ணின உம்முடைய பரிசுத்த பிள்ளையாகிய இயேசுவுக்கு விரோதமாய், மெய்யாகவே கூட்டங் கூடினார்கள் (அப் 4:27,28).

கர்த்தரால் முன்னறிவிக்கப்பட்டது இப்போது நிறைவேறியிருக்கிறது. கர்த்தருக்கு விரோதமாகவும் அவருடைய கிறிஸ்துவுக்கு விரோதமாகவும் பூமியின் ராஜாக்கள் எழும்பி நிற்பார்களென்று தாவீது ஏற்கெனவே கர்த்தருடைய வார்த்தையை முன்னறிவித்திருக்கிறார். அந்த வார்த்தை இப்போது நிறைவேறியிருக்கிறது. ஏரோது ராஜாவும், பொந்தியுபிலாத்துவும், தேவன் அபிஷேகம்பண்ணின அவருடைய பரிசுத்தபிள்ளையாகிய இயேசுவுக்கு விரோதமாய் மெய்யாகவே கூட்டங்கூடியிருக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துவைக்குறித்து தேவன் தம்முடைய தெய்வீக திட்டத்தில் எல்லாவற்றையும் தீர்மானம் பண்ணியிருக்கிறார். தேவன் சர்வஞானமுள்ளவர். அவருடைய சித்தமும் திட்டமும் அவருடைய ஞானத்தினால் நிரம்பியிருக்கும். இயேசுகிறிஸ்துவைப்பற்றி இங்கு குறிப்பிடும்போது "பரிசுத்தபிள்ளையாகிய இயேசு" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வார்த்தையானது ஒரு குமாரனையும், ஒரு ஊழியக்காரரையும் சேர்த்துக் குறிக்கும் வார்த்தையாகும். இயேசுகிறிஸ்து பிதாவாகிய தேவனுடைய ஒரே பேறான குமாரனாகயிருக்கிறார். ஆயினும் அவர் பிதாவின் ஊழியக்காரராக, மீட்பின் ஊழியத்தைச் செய்கிறார்.

தேவன் இயேசுகிறிஸ்துவை அபிஷேகம் பண்ணியிருக்கிறார். ஆகையினால் இயேசு "கர்த்தருடைய கிறிஸ்து" (அப் 4:26) என்று அழைக்கப்படுகிறார். இயேசுகிறிஸ்துவை அபிஷேகம்பண்ணின கர்த்தரானவர், கிறிஸ்துவுக்கு என்ன செய்யப்படவேண்டும் என்பதையும் தம்முடைய தெய்வீக ஆதீனத்தில் தீர்மானம்பண்ணுகிறார். கர்த்தர் இயேசுகிறிஸ்துவை இரட்சகராக அபிஷேகம் பண்ணியிருக்கிறார். ஆகையினால் பாவத்திற்கு நிவாரணமாக அவர் பலியாகச் செலுத்தப்பட வேண்டுமென்பது கர்த்தரால் தீர்மானம் பண்ணப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்து மனுக்குலத்தின் பாவத்திற்காகச் சிலுவையில் மரிக்கவேண்டும். இது தேவனுடைய திட்டமும் சித்தமுமாகும்.

தேவன் தம்முடைய ஞானத்தினால் இயேசுகிறிஸ்துவை இரட்சகராக அபிஷேகம் பண்ணியிருக்கிறார். தேவனுடைய சித்தத்தின் பிரகாரமாகவே இயேசுகிறிஸ்து பாவிகளுடைய கைகளில் ஒப்புக்கொடுக்கப்பட்டார். தேவனுடைய கரமும் தேவனுடைய ஆலோசனையும் இதை முன்குறித்திருக்கிறது. தேவனுடைய கரமும் அவருடைய ஆலோசனையும் ஒருபோதும் முரண்படுவதில்லை. எப்போதும் ஒன்றுபோல் செயல்படும். பிதாவானவருக்குப் பிரியமானது அனைத்தையும் கிறிஸ்துவானவர் செய்து நிறைவேற்றியிருக்கிறார்.

தேவனுடைய திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அக்கிரமக்காரர்களும் பாவிகளும் கருவிகளாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஏரோது, பொந்தியுபிலாத்து, புறஜாதிகள், யூதர்கள் ஆகியோர் ஒருவருக்கொருவர் ஒத்துப்போகமாட்டார்கள். இவர்கள் தங்களுக்குள் விரோதமாகவே சிந்திப்பார்கள். என்றாலும் இவர்கள் இயேசுவுக்கு விரோதமாய் மெய்யாகவே கூட்டங்கூடியிருக்கிறார்கள். பூமியின் ராஜாக்களும் அதிகாரிகளும் இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமாக எழும்பி நின்று, கூட்டங்கூடியதினால், இயேசுகிறிஸ்துவின் நாமம் அதிகமாய் மகிமையடைந்திருக்கிறது.

பயமுறுத்தல்கள்

இப்பொழுதும், கர்த்தாவே, அவர்கள் பயமுறுத்தல்களை தேவரீர் கவனித்து, (அப் 4:29)

ஆலோசனைச் சங்கத்தார் அப்போஸ்தலரைப் பயமுறுத்தி விட்டுவிட்டார்கள். விசுவாசிகள் அவர்களுடைய பயமுறுத்தல்களைக் கர்த்தரிடத்தில் தெரிவிக்கிறார்கள். "இப்பொழுதும் கர்த்தாவே, அவர்கள் பயமுறுத்தல்களை, தேவரீர் கவனிப்பீராக" என்று விண்ணப்பம் பண்ணுகிறார்கள்.

சீஷர்களுடைய விண்ணப்பத்தில் "இப்பொழுதும் கர்த்தாவே" என்னும் வார்த்தைகள் மிகவும் முக்கியமானதாகும். "இப்பொழுது" என்னும் வார்த்தையானது தேவன் தம்முடைய பிள்ளைகளுக்காகப் பிரத்தியட்சமாகத் தோன்றி கிரியை நடப்பிக்கும் காலத்தைக் குறிக்கிறது. "இப்பொழுது" என்னும் வார்த்தை அப்போஸ்தலரின் சத்துருக்கள் அவர்களுக்கு விரோதமாக எழும்பி நின்று அவர்களைப் பயமுறுத்தும் இந்தக் காலத்தைக் குறிப்பிடுகிறது.

தேவன் தங்களுக்கு என்ன செய்யவேண்டுமென்று அப்போஸ்தலர்கள் தேவனிடம் கட்டளையிடவில்லை. அதற்குப் பதிலாக தங்களுக்கு இருக்கும் பிரச்சனைகளைத் தேவனுடைய சமுகத்தில் தெரியப்படுத்துகிறார்கள். "கர்த்தாவே ஆலோசனைச் சங்கத்தாருடைய பயமுறுத்தல்களை தேவரீர் கவனிப்பீராக" என்று தங்களுடைய பிரச்சனைகளையெல்லாம் தேவனுடைய சமுகத்தில் சமர்ப்பித்துவிடுகிறார்கள். கர்த்தரானவர் தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக தம்முடைய ஊழியக்காரர்களைப் பாதுகாத்துக்கொள்வார். ஒருவேளை ஆலோசனைச்சங்கத்தாரின் கைகளைக் கட்டிப்போடுவார். அல்லது அவர்களுடைய இருதயத்தில் மனமாற்றத்தை உண்டுபண்ணுவார்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நம்மையும் ஒரு சிலர் பயமுறுத்தலாம். நம்மை அநீதியாகத் துன்பப்படுத்தலாம். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் நம்முடைய பாடுகளையும் கஷ்டங்களையும் கர்த்தருடைய சமுகத்தில் ஒப்புக்கொடுத்துவிடவேண்டும். தேவன் தமக்குச் சித்தமானதைச் செய்யுமாறு அவருடைய பாதத்தில் எல்லாவற்றையும் வைத்துவிட்டு, நாம் ஜெபம்பண்ணுவதிலும் ஸ்தோத்திரம் பண்ணுவதிலும் தரித்திருக்கவேண்டும்.

அநுக்கிரகஞ்செய்தருளும்

உம்முடைய பரிசுத்த பிள்ளையாகிய இயேசுவின் நாமத்தினாலே அடையாளங்களும் அற்புதங்களும் நடக்கும்படி செய்து, பிணியாளிகளைக் குணமாக்கும்படி உம்முடைய கரத்தை நீட்டி, உம்முடைய ஊழியக்காரர் உம்முடைய வசனத்தை முழு தைரியத்தோடும் சொல்லும்படி அவர்களுக்கு அநுக்கிரகஞ்செய்தருளும் என்றார்கள் (அப் 4:30).

தேவன் தம்முடைய கிருபையினாலே அவருடைய ஊழியக்காரர்களின் ஆவிகளைக் காத்துக்கொள்வார். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் அவருடைய வசனத்தை முழுதைரியத்தோடும் சொல்லும்படி தேவன் தாமே அவர்களுக்கு அநுக்கிரகம் செய்தருளும் என்று விசுவாசிகளெல்லோரும் ஒருமனதோடு ஜெபிக்கிறார்கள்.

"கர்த்தாவே அவர்களுடைய பயமுறுத்துதல்களைத் தேவரீர் கவனித்து, கர்த்தருடைய ஊழியக்காரர்களை பயமுறுத்துகிறவர்களை நீர் உமது வல்லமையினால் பயமுறுத்தும்" என்று விசுவாசிகள் ஜெபிக்கவில்லை. இவ்வாறு ஜெபிப்பதற்குப் பதிலாக, "கர்த்தாவே அவர்கள் பயமுறுத்தல்களை தேவரீர் கவனித்து, உம்முடைய ஊழியக்காரர் உம்முடைய வசனத்தை முழுதைரியத்தோடு சொல்லும்படி அவர்களுக்கு அநுக்கிரகம் செய்தருளும்" என்றே ஜெபிக்கிறார்கள்.

"கர்த்தாவே அச்சுறுத்தல்கள் அதிகமாகயிருப்பதினால், எங்களுக்கு ஊழியத்திலிருந்து ஓய்வுகொடும்" என்று விசுவாசிகள் ஜெபிக்கவில்லை. இவ்வாறு ஜெபிப்பதற்குப் பதிலாக "கர்த்தாவே ஊழியத்தின் பாதை ஆபத்தாகயிருந்தாலும், பிரச்சனைகளும் பாடுகளும் நிறைந்ததாகயிருந்தாலும், உம்முடைய ஊழியக்காரர்கள் பயப்படாமல், உம்முடைய ஊழியத்தைத் தைரியமாய் செய்வதற்கு அவர்களுக்குக் கிருபை தாரும்" என்றே விசுவாசிகள் ஜெபிக்கிறார்கள்.

கர்த்தருடைய ஊழியத்தைச் செய்யுமாறு அனுப்பப்பட்டிருக்கிறவர்கள், தேவனுடைய செய்தியைத் தைரியமாய்ப் பிரசங்கம்பண்ணவேண்டும். தாங்கள் பிரசங்கம்பண்ணுகிற செய்தியில் அவர்களுக்கே சந்தேகம் வந்துவிடக்கூடாது. பயந்து பயந்து பிரசங்கம்பண்ணக்கூடாது. கர்த்தருடைய ஊழியத்தைச் செய்யும்போது ஆவியானவர் நம்மைப் பலப்படுத்துவார். தேவனுடைய வார்த்தையைத் தைரியமாய்ப் பேசும் பெலனை நமக்குத் தந்தருளுவார்.

சத்துருக்கள் நமக்கு விரோதமாக பயமுறுத்தும்போது நாம் பயந்துபோய்விடாமல், நம்முடைய ஆவியில் கர்த்தருக்காக பக்திவைராக்கியம் காண்பிக்கவேண்டும். பயமுறுத்தல்கள் வரும்போது நாம் இன்னும் தைரியமாய் இருக்கவேண்டும். தேவனையே சார்ந்துகொள்ளவேண்டும். நம்மை பயமுறுத்துகிறவர்களால் தேவனுக்கு விரோதமாக யுத்தம்பண்ண முடியாது. நாம் தேவனுடைய ஊழியத்தைச் செய்கிற ஊழியக்காரர்கள். நம்முடைய தேவன் நம்மோடு கூடயிருக்கிறார். ஆகையினால் கர்த்தருக்காக ஊழியம் செய்கிற நாம் பயப்படுவோமென்றால் அது நமக்கும் அவமானம், இதனால் தேவனுடைய நாமமும் தூஷிக்கப்படும்.

அப்போஸ்தலர்கள் கர்த்தருடைய வார்த்தையைத் தைரியமாய்ப் பிரசங்கம்பண்ணவேண்டும் என்று விசுவாசிகள் ஜெபம்பண்ணுகிறார்கள். வசனத்தை உறுதிபண்ணுவதற்கு அப்போஸ்தலர்கள் அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்யத்தக்க தெய்வீக வல்லமை அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்றும் ஜெபிக்கிறார்கள். "இயேசுவின் நாமத்தினாலே அடையாளங்களும் அற்புதங்களும் நடக்கும்படி செய்து, பிணியாளிகளைக் குணமாக்கும்படி, உம்முடைய கரத்தை நீட்டும்" என்று விசுவாசிகள் ஜெபிக்கிறார்கள்.

நாம் கர்த்தருடைய ஊழியத்தை உண்மையாய் செய்யும்போது கர்த்தருடைய பிரசன்னம் நம்மோடு கூடயிருக்கும். அவருடைய பிரசன்னமே நம்மைப் பெலப்படுத்தும். கர்த்தரே நமக்குத் தைரியம் கொடுக்கிறவர். கர்த்தருடைய பரிசுத்தபிள்ளையாகிய இயேசுவின் நாமத்தினாலே அடையாளங்களும் அற்புதங்களும் நடக்கும்போது, ஜனங்களுடைய உள்ளத்தில் சுவிசேஷத்தின் சத்தியம் உணர்த்தப்படும். கர்த்தருக்கு விரோதமாக கிரியை செய்யும் சத்துருக்கள் செயலிழந்து போவார்கள். அற்புதங்கள் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் நடைபெறுவதினால், கிறிஸ்துவின் நாமம் அதன் மூலமாக மகிமைப்படும்.

கூடியிருந்த இடம் அசைந்தது

அவர்கள் ஜெபம்பண்ணினபோது, அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, தேவவசனத்தைத் தைரியமாய்ச் சொன்னார்கள் (அப் 4:31).

விசுவாசிகளின் ஜெபத்திற்குத் தேவன் கிருபையாய்ப் பதில் கொடுக்கிறார். அவர்களுடைய ஜெபத்தை தேவன் அங்கீகரிக்கிறார். அதற்கான அடையாளத்தையும் கர்த்தர் தாமே பிரத்தியட்சமாக வெளிப்படுத்துகிறார். அவர்கள் ஜெபம்பண்ணியபோது அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது. அந்த இடம் அசைவது ஒரு அடையாளம். கர்த்தர்மீது அவர்கள் வைத்திருக்கும் விசுவாசம் ஸ்திரப்படுகிறது. எல்லா காரியங்களுக்கும் தாங்கள் கர்த்தரையே நம்பியிருக்கவேண்டும் என்னும் ஆர்வம் அவர்களுக்குள் அதிகரிக்கிறது. தேவன் அவர்களோடு கூடயிருக்கிறார் என்னும் உணர்வு அவர்களுக்குள் உண்டாயிற்று.

கர்த்தர் தம்முடைய பிரசன்னத்தை விசுவாசிகள் மத்தியில் பிரத்தியட்சமாக வெளிப்படுத்துகிறார். அவர்கள் ஜெபம்பண்ணினபோது அவர்கள் கூடியிருந்த இடத்தை அசைக்கிறார். இதனால் விசுவாசிகளுக்குத் தேவன்மீது பயம் அதிகரிக்கிறது. மனுஷர்மீது பயம் குறைந்துபோகிறது. அவர்கள் கூடியிருந்த இடம் அசைக்கப்படுவதினால் அவர்களுடைய விசுவாசம் அசைக்கப்படாமல் ஸ்திரமாகயிருக்கிறது.

தேவன் அவர்களுக்கு பரிசுத்த ஆவியானவரை அதிகமான அளவில் கொடுக்கிறார். அவர்களெல்லோரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்படுகிறார்கள். விசுவாசிகளின் ஜெபத்தை கர்த்தர் கேட்டு அவர்களுக்குப் பதில்கொடுக்கிறார். பரிசுத்த ஆவியானவரின் நிறைவு தங்களுக்கு வேண்டுமென்று விசுவாசிகள் ஜெபிக்கிறார்கள். தேவன் அவர்களெல்லோரையும் பரிசுத்த ஆவியினால் நிரப்புகிறார். ஆவியானவரால் நிரப்பப்படும்போது, அவர்களுக்குள் இருக்கும் ஆவியானவர் அவர்களைப் பெலப்படுத்துவார். தேவனுடைய வசனத்தைத் தைரியமாகப் பேச அவர்களுக்குப் பெலன்கொடுப்பார்.

பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வாசம்பண்ணும்போது அவர் நம்மை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துவார். நாம் பேசவேண்டிய செய்தியை நமக்குக் கற்றுத்தருவார். அத்தோடு அதை எப்படிப் பேசவேண்டுமென்றும் நமக்குக் கற்றுக்கொடுப்பார்.

அப்போஸ்தலர்கள் கட்டப்பட்டு ஆலோசனைச்சங்கத்தார் முன்பாக நிறுத்தப்பட்டார்கள். அப்போது பேதுரு பரிசுத்த ஆவியினாலே நிறைந்தான் (அப் 4:8). இப்போது அப்போஸ்தலர்கள் பிரசங்க மேடையில் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுகிறார்கள். இப்போதும் தேவன் அவர்களெல்லோரையும் பரிசுத்த ஆவியினால் நிரப்புகிறார். அவர்கள் தேவவசனத்தைத் தைரியமாய்ச் சொல்லுகிறார்கள்.

"பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்கிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம்" (லூக் 11:13) என்று இயேசுகிறிஸ்து ஏற்கெனவே வாக்குப்பண்ணியிருக்கிறார். விசுவாசிகளும் அந்த வாக்குத்தத்தம் தங்களுக்கு நிறைவேறவேண்டுமென்று ஜெபிக்கிறார்கள். இவர்களுடைய ஜெபத்திற்குப் பதில் கொடுக்கும் விதத்தில், அவர்களெல்லோரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுகிறார்கள்.

ஆவியானவரின் வரம் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு இலவச ஈவாகக் கிடைக்கிறது. நாம் பெற்றுக்கொண்ட வரத்தைத் தேவனுடைய நாமமகிமைக்காகவும், தேவனுடைய பிள்ளைகளின் பிரயோஜனத்திற்காகவும் பயன்படுத்தவேண்டும். அப்போது நமக்கு மேலும் அதிகமாக வரங்கள் கொடுக்கப்படும். அப்போஸ்தலருக்கும் அவ்வாறாகவே வரங்கள் கொடுக்கப்படுகிறது.

ஆலோசனைச்சங்கத்திற்கு முன்பாக, பரிசுத்த ஆவியானவர் பேதுருவை நிரப்பினார். அவர் ஆவியில் நிறைந்து அவர்களோடு வசனத்தைப் பேசினார். தேவன் கொடுத்த வரத்தை அப்போஸ்தலர்கள் நல்லமுறையில் பயன்படுத்துகிறார்கள்.

இப்போது பரிசுத்த ஆவியினால் அவர்களெல்லோரும் நிரப்பப்படுகிறார்கள். இவர்கள் ஏற்கெனவே பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றிருக்கிறவர்கள். அபிஷேகம் பெற்றிருக்கிற இவர்களுக்கு ஆவியானவரின் நிரப்புதல் இன்னும் அதிகமாகக் கொடுக்கப்படுகிறது. இப்போது இவர்களெல்லோரும் தேவவசனத்தைத் தைரியமாய்ச் சொல்லுகிறார்கள். கர்த்தர் நமக்கு வரங்களைக் கொடுக்கும்போது அவற்றைப் பயன்படுத்தவேண்டும். அதைப் பயன்படுத்தாமல் பூமியில் புதைத்து வைத்துவிடக்கூடாது.

சகலமும் பொதுவாயிருந்தது அப் 4 : 32-37

அப் 4:32. விசுவாசிகளாகிய திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள். ஒருவனாகிலும் தனக்குள்ளவைகளில் ஒன்றையும் தன்னுடையதென்று சொல்லவில்லை; சகலமும் அவர்களுக்குப் பொதுவாயிருந்தது.

அப் 4:33. கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலைக் குறித்து அப்போஸ்தலர்கள் மிகுந்த பலமாய்ச் சாட்சிகொடுத்தார்கள்; அவர்களெல்லார்மேலும் பூரண கிருபை உண்டாயிருந்தது.

அப் 4:34. நிலங்களையும் வீடுகளையும் உடையவர்கள் அவைகளை விற்று, விற்கப்பட்டவைகளின் கிரயத்தைக் கொண்டுவந்து,

அப் 4:35. அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தார்கள். அவனவனுக்குத் தேவையானதற்குத் தக்கதாய்ப் பகிர்ந்துகொடுக்கப்பட்டது; அவர்களில் ஒருவனுக்கும் ஒன்றும் குறைவாயிருந்ததில்லை.

அப் 4:36. சீப்புருதீவானும் லேவியனும் அப்போஸ்தலராலே ஆறுதலின் மகன் என்று அர்த்தங்கொள்ளும் பர்னபா என்னும் மறுபேர்பெற்றவனுமாகிய யோசே என்பவன்,

அப் 4:37. தனக்கு உண்டாயிருந்த நிலத்தை விற்று, அதின் கிரயத்தைக் கொண்டு வந்து, அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தான்.

ஒரே இருதயமும் ஒரே மனமும்

விசுவாசிகளாகிய திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள். ஒருவனாகிலும் தனக்குள்ளவைகளில் ஒன்றையும் தன்னுடையதென்று சொல்லவில்லை; சகலமும் அவர்களுக்குப் பொதுவாயிருந்தது (அப் 4:32).

விசுவாசிகள் ஒருவரையொருவர் அன்பாய் நேசிக்கிறார்கள். விசுவாசிகளின் எண்ணிக்கை திரள்கூட்டமாகயிருக்கிறது. அவர்களெல்லோருமே ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருக்கிறார்கள். எருசலேமில் ஒரே நாளில் மூவாயிரம் பேர் இரட்சிக்கப்பட்டார்கள். மற்றொரு நாளில் ஐயாயிரம் பேர் இரட்சிக்கப்பட்டார்கள். இவர்களெல்லோருமே அனுதினமும் சபையில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். சபையின் வளர்ச்சியினால் தேவனுடைய நாமம் மகிமைப்படுகிறது.

விசுவாசிகளாகிய திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாகயிருக்கிறார்கள். அவர்களுக்குள் வயது வித்தியாசமிருக்கிறது. அவர்களுடைய சூழ்நிலை வித்தியாசமானது. சமுதாய அந்தஸ்து வித்தியாசமானது. ஆனாலும் அவர்களெல்லோரும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே, அவருடைய பரிசுத்த அன்பில், ஒரே சரீரத்திலுள்ள வெவ்வேறு அவயவங்களாகச் சீராய் இணைந்திருக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷரிடம் "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பு கூருங்கள்" என்று கூறினார். இயேசுகிறிஸ்து மரிக்கும்போதுகூட "தம்முடைய சீஷர்கள் ஒன்றாயிருக்கவேண்டும்" என்று கூறியே ஜெபம்பண்ணினார். இயேசுகிறிஸ்துவின் விருப்பத்தின் பிரகாரமாக விசுவாசிகளெல்லோரும் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாகயிருக்கிறார்கள்.

விசுவாசிகள் தரித்திருக்குத் தாராளமாய் உதவிபண்ணுகிறார்கள். தங்களுடைய ஆஸ்தியின்மீது அவர்கள் ஆசைப்படவில்லை. சொத்தில் பற்றாயிருக்கவில்லை. பிறர் பொருளை யாரும் அபகரிக்கவில்லை. தங்களுடைய பொருளைக்கூட மற்றவர்களுக்குப் பகிர்ந்து கொடுக்க ஆயத்தமாய் இருக்கிறார்கள். ஒருவனாகிலும் தனக்குள்ளவைகளில் ஒன்றையும் தன்னுடையது என்று சொல்லவில்லை. சகலமும் அவர்களுக்குப் பொதுவாயிருக்கிறது.

ஆதித்திருச்சபையின் விசுவாசிகள் தங்களுடைய ஆஸ்தியின்மீது இருதயத்தைப் பதிக்கவில்லை. ஆஸ்தியைச் சேர்க்கவேண்டுமென்று அலையவில்லை. ஆஸ்தியின் பின்னால் செல்லவுமில்லை. ஆஸ்தியைப் பொருத்தளவில் ஆதித்திருச்சபை விசுவாசிகளின் கருத்து வித்தியாசமாகயிருக்கிறது. தங்களுடைய ஆஸ்தியை ஒரு விசுவாசியும், அது தன்னுடையது என்று சொல்லிக் கொள்ளவில்லை. அவர்களிடத்தில் ஆஸ்திகளிருந்தது. ஆனால் ஆஸ்தியின்மீது அவர்கள் வைத்திருக்கிற அன்பைவிட, இயேசுவின்மீது அவர்கள் வைத்திருக்கிற அன்பு அதிகமாயிருக்கிறது. ஆகையினால் அவர்கள் எல்லாவற்றையும் இயேசுவுக்காக விட்டுவிட்டு, இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி வர ஆயத்தமாயிருக்கிறார்கள்.

ஆதித்திருச்சபையின் விசுவாசிகளில் ஒருவனாகிலும் தனக்குள்ளவைகளில் ஒன்றையும் தன்னுடையதென்று சொல்லவில்லை. இந்த உலகத்தில் நமக்குரியது என்று எதையும் சொல்ல முடியாது. நம்முடைய பாவம் மாத்திரமே நமக்குரியது. நாம் ஒருபோதும் நம்முடைய ஆஸ்திக்குச் சொந்தக்காரர்களல்ல. நம்முடைய பாவத்திற்கு மாத்திரமே நாம் சொந்தக்காராயிருக்கிறோம்.

ஆதித்திருச்சபையின் விசுவாசிகள் தங்களுடைய சொத்துக்களையெல்லாம் பொதுவாக வைத்து அனுபவிக்கிறார்கள். அவனவனுக்குத் தேவையானதுக்குத் தக்கதாய் பகிர்ந்துகொடுக்கிறார்கள். நிலம் வைத்திருக்கிறவர்கள் அதைத் தரித்திருக்குக் கொடுக்கிறார்கள். வசதியுள்ளவர்கள் தங்களுடைய வசதிகளைத் தரித்திரர் அனுபவிக்க விட்டுக் கொடுக்கிறார்கள். போஜனமுள்ளவர்கள் பசியுள்ளவர்களுக்குக் கொடுக்கிறார்கள். வஸ்திரமுள்ளவர்கள் வஸ்திரமில்லாத வர்களுக்குக் கொடுக்கிறார்கள். சகலமும் அவர்களுக்குப் பொதுவாயிருக்கிறது. அவர்களில் ஒருவனுக்கும் ஒன்றும் குறைவாயிருக்கவில்லை.

மனுஷனுக்குள் கிறிஸ்துவின் ஆவியானவர் ஆளுகை செய்யும்போது அவனுடைய சுபாவம் இயேசுகிறிஸ்துவின் சுபாவம் போல் மாறும். அவன் பிறரையும் தன்னைப்போல் நேசிப்பான். ஆனால் மனுஷனுக்குள் அவனுடைய பாவம் ஆளுகை செய்யும்போது, அவன் எல்லாம் தனக்குரியது என்று சொல்லுவான். அவனுக்கு எவ்வளவு இருந்தாலும் போதுமென்ற திருப்தி அவனுக்குள் இருக்காது. இன்னும் அதிகம் வேண்டும் என்று பேராசைப்படுவான். இதனால்தான் யுத்தங்களும் கலகங்களும் மனுஷர் மத்தியிலே உண்டாகின்றன.

பூரண கிருபை

கர்த்தராகிய இயேசுவின் உயர்த்தெழுதலைக் குறித்து அப்போஸ்தலர்கள் மிகுந்த பலமாய்ச் சாட்சி கொடுத்தார்கள்; அவர்களெல்லார்மேலும் பூரணகிருபை உண்டாயிருந்தது (அப் 4:33).

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் தைரியத்தோடு ஊழியம் செய்கிறார்கள். அப்போஸ்தலர்கள் கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலைக்குறித்து பலமாய்ச் சாட்சிகொடுக்கிறார்கள். ஜனங்கள் இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைச் சரியாகப் புரிந்துகொள்ளவேண்டும். நாம் இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைச் சரியாகப் புரிந்துகொள்ளும்போது வேதத்தின் ரகசியங்களில் பல நமக்குத் தெளிவாயிருக்கும்.

தேவன் தம்முடைய அப்போஸ்தலர்களை வல்லமையினால் நிரப்புகிறார். அவர்களும் தைரியமாக இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைப் பிரசங்கம்பண்ணுகிறார்கள். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைப்பற்றிச் சொல்லும்போது, அதை முனகலான ஜீவனற்ற வார்த்தைகளினால் சொல்லவில்லை. அதற்குப் பதிலாக மிகுந்த பலமாய்ச் சாட்சிகொடுக்கிறார்கள். ஜீவனுள்ள வார்த்தைகளையும், அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கிற வார்த்தைகளையும் பயன்படுத்துகிறார்கள். அப்போஸ்தலரின் சாட்சியில் ஜீவன் இருக்கிறது. அவர்கள் பேசிய வசனத்தைத் தேவன் அற்புதங்களையும் அடையாளங்களையும் நடப்பித்து உறுதிபண்ணுகிறார். தேவன் தாமே அவர்களுடைய பிரசங்கச் செய்திக்குச் சாட்சி கொடுக்கிறார். அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவுக்குச் சாட்சி கொடுக்கிறார்கள். கிறிஸ்து அப்போஸ்தலருக்குச் சாட்சி கொடுக்கிறார்.

கர்த்தருடைய ஊழியத்தைச் செய்கிற அப்போஸ்தலர்களைத் தேவன் அதிகமாய் ஆசீர்வதிக்கிறார். அவர்களெல்லார் மேலும் பூரணகிருபை உண்டாயிருக்கிறது. மற்ற ஜனங்களுக்கும் அப்போஸ்தலருக்கும் வித்தியாசம் தெரிகிறது. தேவன் தம்முடைய அளவில்லாத கிருபையைத் தம்முடைய அப்போஸ்தலர்மீது ஊற்றுகிறார். கிறிஸ்துவின் கிருபைக்கு அப்போஸ்தலர்கள் சாட்சிகளாகயிருக்கிறார்கள். தங்களுடைய பேச்சிலும் கிரியைகளிலும் ஆவியின் கனிகளை வெளிப்படுத்துகிறார்கள்.

ஜனங்கள் அப்போஸ்தலர்களை ஏற்றுக் கொள்கிறார்கள். அப்போஸ்தலர்களுக்குத் தேவனுடைய சமுகத்தில் தயவு கிடைத்திருப்பது போலவே, மனுஷனுடைய கண்களிலும் தயவு கிடைக்கிறது. அப்போஸ்தலரைக் காண்கிற எல்லோரும் அவர்கள் மூலமாகத் தேவனுடைய கிருபையையும், தேவனுடைய வல்லமையையும், தேவனுடைய அன்பையும் காண்கிறார்கள். அப்போஸ்தலர்களுக்கு மரியாதை கொடுக்கிறார்கள்.

பகிர்ந்து கொடுக்கப்பட்டது

நிலங்களையும் வீடுகளையும் உடையவர்கள் அவைகளை விற்று, விற்கப்பட்டவைகளின் கிரயத்தைக் கொண்டுவந்து, அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தார்கள். அவனவனுக்குத் தேவையானதற்குத் தக்கதாய்ப் பகிர்ந்துகொடுக்கப்பட்டது; அவர்களில் ஒருவனுக்கும் ஒன்றும் குறைவாயிருந்ததில்லை (அப் 4:34,35).

ஆதித்திருச்சபையின் விசுவாசிகள் தரித்திரருக்குத் தாராளமாய் உதவிசெய்தார்கள். சகலமும் அவர்களுக்குப் பொதுவாயிருந்தது. அவர்களில் ஒருவனுக்கும் ஒன்றும் குறைவாயிருந்ததில்லை. அப்போஸ்தலர்கள் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷச் செய்தியை ஐசுவரியவான்களுக்கும் பிரசங்கம் பண்ணினார்கள். தரித்திருக்கும் பிரசங்கம்பண்ணினார்கள். கர்த்தருடைய இரட்சிக்கும் கிருபையினால் ஐசுவரியவான்களும் இரட்சிக்கப்பட்டார்கள். தரித்திரரும் இரட்சிக்கப்பட்டார்கள்.

ஐசுவரியவான்கள் இரட்சிக்கப்பட்ட பின்பு, அவர்களுடைய ஆஸ்திகளைக் குறித்த சிந்தனையில் மாற்றமுண்டாயிற்று. அவர்கள் தங்களுக்குள்ளவைகளில் ஒன்றையும் தங்களுடையது என்று சொல்லவில்லை. தங்களுடைய ஐசுவரியம் தரித்திரருக்கும் பயன்படவேண்டுமென்று விரும்பினார்கள். தேவனுடைய ஆவியானவர் ஐசுவரியவான்களின் உள்ளத்தில் கிரியை செய்தார். தரித்திரருக்கு உதவிசெய்யவேண்டும் என்னும் வாஞ்சையை அவர்களுடைய உள்ளத்தில் ஏற்படுத்தினார். தேவனுடைய கிருபையினால் தங்களுடைய ஆஸ்திகளை ஐசுவரியவான்கள் பொதுவாக வைத்து அனுபவிக்க முன்வந்தார்கள்.

சுவிசேஷத்தின் வல்லமையினால் சகலமும் அவர்களுக்குப் பொதுவாகயிருக்கிறது. ஐசுவரியவான்கள் தங்களுடைய ஆஸ்திகளை எல்லா விசுவாசிகளும் பொதுவாக அனுபவிப்பதற்கு ஒப்புக்கொடுக்கிறார்கள். அதே வேளையில் தரித்திரரும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி ஐசுவரியவான்களைக் கொள்ளையிடவில்லை. சுவிசேஷம் தரித்திரருடைய உள்ளத்திலும் கிரியை செய்கிறது. அவனவனுக்குத் தேவையானதுக்குத்தக்கதாய்ப் பொதுவாய் வைக்கப்பட்டதைப் பகிர்ந்துகொடுக்க ஆவியானவர் வழிநடத்துகிறார். ஐசுவரியவானும் தரித்திரனை வஞ்சிக்கவில்லை. தரித்திரனும் ஐசுவரியவானை வஞ்சிக்கவில்லை.

ஆதித்திருச்சபையின் காலத்தில் பல விசுவாசிகளிடத்தில் நிலங்களும் வீடுகளும் இருந்தன. அவற்றை உடையவர்கள், அவைகளை விற்கிறார்கள். விற்கப்பட்டவைகளின் கிரயத்தை அவர்கள் கொண்டுவந்து அப்போஸ்தலருடைய பாதத்திலே வைக்கிறார்கள். அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலின்படி, அந்தக் கிரயத்தை எப்படிப் பகிர்ந்துகொடுக்க வேண்டுமோ, அப்படிப் பகிர்ந்துகொடுப்பதற்காக, நிலங்களையும் வீடுகளையும் உடையவர்கள் அவைகளை விற்று, விற்கப்பட்டவைகளின் கிரயத்தை அப்போஸ்தலருடைய பாதத்திலே வைக்கிறார்கள். அப்போஸ்தலர்கள் அந்தக் கிரயத்தை அவனவனுக்குத் தேவையானதற்குத் தக்கதாய் பகிர்ந்துகொடுக்கிறார்கள். அவர்களில் ஒருவனுக்கும் ஒன்றும் குறைவாயிருந்ததில்லை. எல்லோருடைய தேவையும் சந்திக்கப்படுகிறது.

பொதுப்பணத்தைப் பகிர்ந்து கொடுக்கும்போது மிகுந்த கவனம் தேவை. பகிர்ந்துகொடுப்பதற்கு முன்பாக ஜனங்களுடைய தேவைகளை அறிந்துகொள்ளவேண்டும். அவசரப்பட்டு பொதுப்பணத்தை தாறுமாறாக சீரழித்துவிடக்கூடாது. ஒரு சிலருக்கு மற்றவர்களைவிட அதிக தேவையிருக்கலாம். ஒரு சிலருக்கு உதவிகள் உடனடியாகத் தேவைப்படலாம். இவையெல்லாவற்றையும் மனதில் கொண்டுதான் பொதுப்பணத்தைப் பகிர்ந்துகொடுக்கவேண்டும்.

அவனவனுக்குத் தேவையானதற்குத் தக்கதாய் ஆதித்திருச்சபையில் பகிர்ந்துகொடுக்கப்படுகிறது. உதவியைப் பகிர்ந்துகொடுக்கும்போது யாரும் முகதாட்சணியம் பண்ணவில்லை. பட்சபாதம் காண்பிக்கவில்லை. சகலமும் அவர்களுக்குப் பொதுவாயிருக்கிறது. அவர்களெல்லார் மேலும் தேவனுடைய பூரண கிருபை உண்டாயிருக்கிறது. அவனவனுக்குத் தேவையானதற்குத் தக்கதாய் பகிர்ந்துகொடுக்கப்படுகிறது. அவர்களில் ஒருவனுக்கும் ஒன்றும் குறைவாயில்லை.

பர்னபா

சீப்புருதீவானும் லேவியனும் அப்போஸ்தலராலே ஆறுதலின் மகன் என்று அர்த்தங்கொள்ளும் பர்னபா என்னும் மறுபேர்பெற்றவனுமாகிய யோசே என்பவன், தனக்கு உண்டாயிருந்த நிலத்தை விற்று, அதின் கிரயத்தைக் கொண்டு வந்து, அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தான் (அப் 4:36,37).

ஆதித் திருச்சபையிலுள்ள விசுவாசிகள் ஒருவருக்கொருவர் அன்பாயிருக்கிறார்கள். தரித்திரருக்கு தாராளமாய் உதவிசெய்கிறார்கள். நிலங்களையும் வீடுகளையுமுடையவர்கள் அவைகளை விற்று, அவற்றின் கிரயத்தை அப்போஸ்தலருடைய பாதத்தில் வைக்கிறார்கள். அப்போஸ்தலர்களும் விசுவாசிகளின் தேவைக்குத்தக்கதாய், யாருக்கும் ஒரு குறைவுமில்லாமல் பகிர்ந்துகொடுக்கிறார்கள். இவ்வாறு தங்களுடைய நிலங்களையும் வீடுகளையும் விற்றவர்களில் பர்னபா என்பவனும் ஒருவன். இவன் பிற்காலத்தில் அப்போஸ்தலர் பவுலின் உடன்ஊழியனாக ஊழியம் செய்தவன்.

இவன் லேவி கோத்திரத்தைச் சேர்ந்தவன். இவனுடைய பெயர் யோசே. இவன் சீப்புரு தீவில் பிறந்தவன். இந்தத் தீவு எருசலேம் நகரத்திலிருந்து வெகு தூரத்திலுள்ளது. யோசே இரட்சிக்கப்பட்ட பின்பு, விசுவாசிகளோடு சேர்ந்து கொள்கிறான். சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட பின்பு அப்போஸ்தலர்கள் அவனுடைய பெயரை பர்னபா என்று மாற்றுகிறார்கள். பர்னபா என்னும் பெயருக்கு "ஆறுதலின் மகன்" என்று அர்த்தம்.

அப்போஸ்தலர்கள் பர்னபாவை நேசிக்கிறார்கள். இவனும் உற்சாகமுள்ள விசுவாசியாக கர்த்தரையும், கர்த்தருடைய பிள்ளைகளையும் நேசிக்கிறான். தரித்திரருக்கு உதவிபுரிய வேண்டும் என்னும் வாஞ்சை பர்னபாவின் இருதயத்தில் உண்டாயிற்று. ஆறுதலின் மகன் என்னும் அர்த்தமுடைய பர்னபா விசுவாசிகளின் ஆறுதலுக்காக ஊழியம் செய்கிறான். தனக்குண்டாயிருந்த நிலத்தை விற்று, அதன் கிரயத்தைக் கொண்டுவந்து அப்போஸ்தலருடைய பாதத்திலே வைக்கிறான்.

அப்போஸ்தலர்களுடைய கூட்டத்தில் "இடிமுழக்கமக்கள்" என்று அர்த்தங்கொள்ளும் பொவனெர்கேஸ் என்கிறவர்கள் இருக்கிறார்கள் (மாற் 3:17). செபதேயுவின் குமாரனாகிய யாக்கோபுக்கும், யாக்கோபின் சகோதரனாகிய யோவானுக்கும் இயேசு கிறிஸ்து இந்தப் பெயரிட்டு அழைத்தார். இவர்கள் இருவரும் அப்போஸ்தலர்களோடு கூடயிருக்கிறார்கள். இவர்களோடு ஆறுதலின் மகன் என்று அர்த்தங்கொள்ளும் பர்னபாவும் இருக்கிறான்.

கர்த்தர் தம்முடைய ஊழியக்காரர் ஒவ்வொருவருக்கும் ஆவியின் வரத்தைக் கொடுத்திருக்கிறார். நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வரங்களை நாம் ஜெபத்தோடு பயன்படுத்தவேண்டும்.

ஆதித்திருச்சபையில் ஏராளமான விசுவாசிகள் தங்களுக்குண்டாயிருந்த நிலத்தை விற்று அவற்றின் கிரயத்தைக் கொண்டுவந்து அப்போஸ்தலருடைய பாதத்தில் வைக்கிறார்கள். இந்த தர்மகாரியத்தை அநேகர் செய்தாலும், அவற்றுக்கெல்லாம் ஒரு எடுத்துக்காட்டாக, பர்னபா செய்தது மாத்திரம் இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. பர்னபா தனக்குண்டாயிருந்த நிலத்தை விற்று அதின் கிரயத்தைக் கொண்டுவந்து அப்போஸ்தலருடைய பாதத்தில் வைத்ததினால், அவனுக்கு ஒன்றும் குறைந்துபோய்விடவில்லை. நிலம் அவனைவிட்டுப்போனாலும், கர்த்தருடைய கிருபை அவனோடு கூடவே இருக்கிறது.

கர்த்தர் தம்முடைய ஊழியத்தில் பர்னபாவை பயன்படுத்துகிறார். அந்தியோகிய பட்டணத்திலுள்ள சபையிலே விசுவாசிகள் கர்த்தருக்கு ஆராதனை செய்து, உபவாசித்துக் கொண்டிருக்கிற போது, "பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்திற்காக அவர்களைப் பிரித்து விடுங்கள்" என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம்பற்றினார் (அப் 13:2). பர்னபா தனக்குண்டாயிருந்த நிலத்தை விற்று, அதின் கிரயத்தை அப்போஸ்தலரிடம் கொடுத்ததினால் அவன் ஒருவேளை இந்தப் பிரபஞ்சத்தில் தன் நிலத்தை இழந்துபோயிருக்கலாம். இயேசுகிறிஸ்துவுக்காக நாம் ஒன்றை இழக்கும்போது அது நமக்கு இழப்பாகயிராது. பர்னபா நிலத்தை இழந்தான். ஆனால் கர்த்தரோ அவனுக்கு அப்போஸ்தல ஊழியத்தைக் கொடுத்து அவனைக் கனப்படுத்தியிருக்கிறார்.

5 அதிகாரம்

அனனியா, சப்பீராள் ஆகியோரின் பாவமும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட தண்டனையும் (அப் 5:1-11). சபை வளர்ச்சி பெறுகிறது (அப் 5:12-16). அப்போஸ்தலர்கள் காவலில் வைக்கப்படுகிறார்கள். அற்புதமாக விடுவிக்கப்படுகிறார்கள் (அப் 5:17-26). ஆலோசனைச் சங்கத்தார் அப்போஸ்தலர்களை விசாரிக்கிறார்கள் (அப் 5:27-33). ஆலோசனைச் சங்கத்தாருக்கு கமாலியேலின் ஆலோசனையும், அப்போஸ்தலர்கள் கர்த்தருடைய ஊழியத்தைத் தொடர்ந்து செய்வதும் (அப் 5:34-40).

அனனியாவும் சப்பீராளும் அப் 5 : 1-11

அப் 5:1. அனனியா என்னும் பேருள்ள ஒருவனும், அவனுடைய மனைவியாகிய சப்பீராளும் தங்கள் காணியாட்சியை விற்றார்கள்.

அப் 5:2. தன் மனைவி அறிய அவன் கிரயத்திலே ஒரு பங்கை வஞ்சித்துவைத்து, ஒருபங்கைக் கொண்டுவந்து, அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தான்.

அப் 5:3. பேதுரு அவனை நோக்கி: அனனியாவே, நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்துவைத்து, பரிசுத்த ஆவியினிடத்தில் பொய்சொல்லும்படி, சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன?

அப் 5:4. அதை விற்குமுன்னே அது உன்னுடையதாயிருக்கவில்லையோ? அதை விற்றபின்பும் அதின் கிரயம் உன் வசத்திலிருக்கவில்லையோ? நீ உன் இருதயத்திலே இப்படிப்பட்ட எண்ணங் கொண்டதென்ன? நீ மனுஷரிடத்தில் அல்ல, தேவனிடத்தில் பொய்சொன்னாய் என்றான்.

அப் 5:5. அனனியா இந்த வார்த்தைகளைக் கேட்கவே, விழுந்து ஜீவனை விட்டான். இவைகளைக் கேள்விப்பட்ட யாவருக்கும் மிகுந்த பயமுண்டாயிற்று.

அப் 5:6. வாலிபர் எழுந்து, அவனைச் சேலையில் சுற்றி, வெளியே எடுத்துக்கொண்டுபோய், அடக்கம்பண்ணினார்கள்.

அப் 5:7. ஏறக்குறைய மூன்று மணி நேரத்துக்குப்பின்பு, அவனுடைய மனைவி நடந்ததை அறியாமல், உள்ளே வந்தாள்.

அப் 5:8. பேதுரு அவளை நோக்கி: நிலத்தை இவ்வளவுக்குத்தானா விற்றீர்கள், எனக்குச் சொல் என்றான். அவள்: ஆம், இவ்வளவுக்குத்தான் என்றாள்.

அப் 5:9. பேதுரு அவளை நோக்கி: கர்த்தருடைய ஆவியைச் சோதிக்கிறதற்கு நீங்கள் ஒருமனப்பட்டதென்ன? இதோ, உன் புருஷனை அடக்கம் பண்ணினவர்களுடைய கால்கள் வாசற்படியிலே வந்திருக்கிறது, உன்னையும் வெளியே கொண்டுபோவார்கள் என்றான்.

அப் 5:10. உடனே அவள் அவனுடைய பாதத்தில் விழுந்து ஜீவனை விட்டாள். வாலிபர் உள்ளே வந்து, அவள் மரித்துப்போனதைக் கண்டு, அவளை வெளியே எடுத்துக் கொண்டுபோய், அவளுடைய புருஷனண்டையிலே அடக்கம்பண்ணினார்கள்.

அப் 5:11. சபையாரெல்லாருக்கும், இவைகளைக் கேள்விப்பட்ட மற்ற யாவருக்கும், மிகுந்த பயமுண்டாயிற்று.

காணியாட்சியை விற்றார்கள்

அனனியா என்னும் பேருள்ள ஒருவனும், அவனுடைய மனைவியாகிய சப்பீராளும் தங்கள் காணியாட்சியை விற்றார்கள் (அப் 5:1).

ஆதித்திருச்சபை வளர்ந்து பெருகுகிறது. ஏராளமானோர் சபையில் சேர்க்கப்படுகிறார்கள். எல்லா விசுவாசிகளுமே பயபக்தியாக ஜீவிக்கிறார்கள். நற்குணமுள்ளவர் களாயிருக்கிறார்கள். ஆனாலும் அவர்களிலும் சிலர் தீயவர்களாகவும், துர்க்குண முள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். இப்பிரபஞ்சத்தில் நல்லோரும் தீயோரும் கலந்தேயிருக்கிறார்கள். நிலத்தில் கோதுமை விளையும்போது களையும் சேர்ந்து விளைகிறது. அதுபோலவே இந்த உலகத்தில் நல்லோர் இருக்கும்போது ஒரு சில தீயோரும் அவர்கள் மத்தியில் இருக்கிறார்கள்.

நிலத்தில் அறுவடை செய்யும் நாள்வரையிலும் களை இருக்கத்தான் செய்யும். அறுவடை செய்த பின்போ களையும் கோதுமையும் வெவ்வேறாக வேறுபிரிக்கப்படும். களை சுட்டெரிக்கப்படும். கோதுமையோ களஞ்சியத்தில் சேர்க்கப்படும். ஆதித்திருச்சபையிலுள்ள விசுவாசிகள் கர்த்தருடைய வசனத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து ஜீவிக்கிறார்கள். இயேசுகிறிஸ்து ஒரு சமயம், ஐசுவரியவான் ஒருவனிடம், "நீ உனக்குள்ளதை விற்று தரித்திரருக்குக் கொடு" என்று சொன்னார். ஆதித்திருச்சபையிலிருந்த ஐசுவரியவான்கள், இயேசுகிறிஸ்து சொன்ன இந்த வாக்கியத்திற்குக் கீழ்ப்படிந்து, தங்களுடைய நிலங்களையும் வீடுகளையும் விற்று, அப்போஸ்தலர் மூலமாக தரித்திரருக்குக் கொடுக்கிறார்கள்.

ஆனால் ஒரு சில விசுவாசிகளோ தங்களுடைய நிலங்களை விற்று தரித்திரருக்குக் கொடுப்பதிலும் மாய்மாலம் பண்ணுகிறார்கள். அப்போஸ்தலர் மூலமாக இதுவரையிலும் அநேக அற்புதங்களும் அடையாளங்களும் நடைபெற்றிருக்கிறது. இவை அனைத்துமே தேவனுடைய கிருபையையும் இரக்கத்தையும் வெளிப்படுத்தும் அற்புதங்களாகும். ஆனால் இப்போதோ அப்போஸ்தலர் மூலமாக வேறுவிதமான அற்புதங்கள் நடைபெறுகிறது. இந்த அற்புதங்கள் தேவனுடைய இரக்கத்தையும் கிருபையையும் வெளிப்படுத்துவதற்குப் பதிலாக, அவருடைய நீதியை வெளிப்படுத்துகிறது. தேவன் தம்முடைய பிள்ளைகள்மீது அன்பாகயிருக்கிறார். ஏனெனில் அவர் அன்புள்ளவர். அதே வேளையில் அவர் தம்முடைய பிள்ளைகளை நீதியாய் நடத்துகிறார். ஏனெனில் அவர் நீதியுள்ளவர்.

ஆதித்திருச்சபையில் அனனியா என்னும் பெயருள்ள ஒருவனும், அவனுடைய மனைவியாகிய சப்பீராளும் இருக்கிறார்கள். விசுவாசிகளெல்லோரும் தங்களுடைய நிலங்களையும் வீடுகளையும் விற்று அப்போஸ்தலர்கள் மூலமாகத் தரித்திரருக்குக் கொடுக்கிறார்கள். மற்றவர்களைப்போலவே தாங்களும் கொடுக்கவேண்டுமென்று ஆசைப்பட்டு, இவர்கள் தங்கள் காணியாட்சியை விற்கிறார்கள்.

மற்றவர்கள் உண்மையான இருதயத்தோடு, பயபக்தியோடு தங்கள் காணியாட்சியை விற்று அதன் முழுக்கிரயத்தையும் அப்போஸ்தலருடைய பாதபடியிலே வைத்தார்கள். ஆனால் அனனியாவோ, தன் மனைவியறிய, கிரயத்திலே ஒரு பங்கை வஞ்சித்து வைத்து, ஒரு பங்கைக் கொண்டுவந்து, அப்போஸ்தலருடைய பாதத்திலே வைக்கிறான்.

மற்ற விசுவாசிகளைவிட தாங்கள் எந்தவிதத்திலும் குறைந்துவிடக்கூடாது என்று ஆசைப்பட்டு அனனியாவும் சப்பீராளும் தங்களுடைய காணியாட்சிகளையும் விற்கிறார்கள். மற்ற விசுவாசிகள் விற்கிறார்கள். ஆகையினால் இவர்களும் விற்கிறார்கள். ஆனால் இவர்களுடைய இருதயமோ மற்ற விசுவாசிகளின் இருதயத்தைப்போல சுத்தமாகயில்லை.

மாய்மாலக்காரர்கள் ஒரு காரியத்தை நன்றாகச் செய்வார்கள். வேறொரு காரியத்தில் தவறு செய்துவிடுவார்கள். ஒரு ஊழியத்தை உண்மையாகச் செய்வார்கள். மற்றொரு ஊழியத்தில் உண்மையாயிருக்க மாட்டார்கள். இப்படிப்பட்டவர்கள் கர்த்தருக்கும் ஊழியம் செய்யவேண்டுமென்று விரும்புவார்கள். அதேவேளையில் தங்களுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியம் செய்துகொள்வார்கள்.

அனனியாவும் சப்பீராளும் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறார்கள். தங்களுடைய ஆவியில் இவர்கள் கர்த்தருக்கு ஆராதனை செய்யவேண்டும். ஆனால் இவர்களோ தங்களுடைய மாம்சத்திற்கு ஆராதனை செய்கிறார்கள். தங்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கும் எல்லையைத் தாண்டி, ஆசைப்பட்டு அதிகமான தூரம் சென்று அவஸ்தைப்படுகிறார்கள். கர்த்தர் நம் எல்லோருக்குமே ஊழியம் கொடுத்திருக்கிறார். நாம் ஒவ்வொருவரும் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அளவுக்குத்தக்கதாக ஊழியம் செய்யவேண்டும். பேராசைப்பட்டு பெருநஷ்டம் அடைந்துவிடக்கூடாது. அனனியாவும் சப்பீராளும் தங்கள் காணியாட்சியை விற்று அதன் ஒரு பகுதியை மாத்திரம் அப்போஸ்தலரிடம் கொடுக்கிறார்கள்.

ஒரு பங்கை வஞ்சித்து வைத்து

தன் மனைவி அறிய அவன் கிரயத்திலே ஒரு பங்கை வஞ்சித்துவைத்து, ஒருபங்கைக் கொண்டுவந்து, அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தான் (அப் 5:2).

அனனியாவும் சப்பீராளும் இந்த உலகத்து ஆஸ்தியின்மீது ஆசைவைத்திருக்கிறார்கள். கர்த்தரையும் அவருடைய பராமரிப்பையும் பூரணமாக விசுவாசிக்கவில்லை. ஏதோ ஒரு ஆர்வத்தில் அவர்கள் தங்கள் காணியாட்சியை விற்றுவிடுகிறார்கள். இதன் கிரயத்தை அப்படியே முழுவதுமாக அப்போஸ்தலருடைய பாதபடியில் வைக்கவேண்டும் என்று ஆரம்பத்தில் ஆசைப்படுகிறார்கள். அவர்களுடைய கைகளில் காணியாட்சியின் கிரயத்தொகை கொடுக்கப்படுகிறது. கையில் பணம் வந்தவுடன் அவர்களுடைய மனது மாறிவிடுகிறது. காணியாட்சியின் முழுகிரயத்தையும் அப்போஸ்தலரிடம் கொடுப்பதற்கு அவர்களுடைய இருதயம் அனுமதிக்கவில்லை. அந்தக் கிரயத்தின் ஒரு பகுதியை தாங்களே வஞ்சித்து வைத்துக்கொள்ளவேண்டும் என்று அவர்களுடைய இருதயம் ஆசைப்படுகிறது.

அதன் பிரகாரமாக அனனியா தன் மனைவியறிய, கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்து வைத்துக்கொள்கிறான். கிரயத்தில் ஒரு பங்கை மாத்திரம் கொண்டு வந்து அப்போஸ்தலருடைய பாதத்தில் வைக்கிறான். ஆனால் முழுகிரயத்தையும் அப்போஸ்தலருடைய பாதத்தில் வைப்பதுபோல மாய்மாலம் பண்ணுகிறான். பணத்தின்மீது ஆசைப்படுகிறான். முழுகிரயத்தையும் கொடுக்கவேண்டும் என்று பொருத்தனைபண்ணிய பின்பு, அதில் ஒரு பகுதியை வஞ்சித்து தனக்கென்று வைத்துக்கொள்கிறான்.

அனனியாவும் சப்பீராளும் தேவனுடைய வார்த்தையைப் பூரணமாக விசுவாசிக்கவில்லை. "உனக்குரியதை விற்று தரித்திரருக்குக்கொடு" என்று இயேசுகிறிஸ்து கட்டளை கொடுத்திருக்கிறார். இயேசுவின் வார்த்தைப்படி, தன் காணியாட்சி முழுவதையும் விற்று தரித்திரருக்குக் கொடுத்துவிட்டால் தனக்கு என்ன செய்து என்று யோசிக்கிறான். கர்த்தர் தன்னைப் போஷித்து வழிநடத்துவார் என்றும், கர்த்தர் தன்னைப் பராமரிப்பார் என்றும் அனனியா நம்பவில்லை. தன் பணத்தையே நம்புகிறான்.

ஆதித்திருச்சபையிலுள்ள மற்ற விசுவாசிகளைவிட தாங்கள் மிகுந்த ஞானமுள்ளவர்கள் என்று அனனியாவும் சப்பீராளும் நினைக்கிறார்கள். காணியாட்சியை விற்று எல்லாவற்றையும் அப்போஸ்தலருடைய பாதத்தில் வைத்துவிடுவது ஞானமான செயலல்ல என்று இவர்கள் இருவரும் நினைக்கிறார்கள். தங்களிடத்தில் பணம் இருந்தால் அது அவசரத்துக்கு உதவும் என்று நினைக்கிறார்கள். கர்த்தர்தான் நமது அவசரத்திற்கு உதவுகிறவர். நம்முடைய பணமோ, உற்றார் உறவினர்களோ யாரும் அவசரத்திற்கு உதவமாட்டார்கள்.

கர்த்தரால் தன்னுடைய தேவையை முழுவதுமாகச் சந்திக்க முடியாது என்று அனனியாவும் சப்பீராளும் நினைக்கிறார்கள். கர்த்தர் அவசரத்திற்கு உதவி செய்ய வரமாட்டாரென்று அவிசுவாசத்தோடிருக் கிறார்கள். கர்த்தரிடமிருந்து போதுமான பராமரிப்பு கிடைக்காது என்று சந்தேகப்படுகிறார்கள். இப்படிச் சந்தேகப்படுகிறவர்கள் தங்களுடைய காணியாட்சியை விற்கவேண்டும் என்னும் அவசியமில்லை. காணியாட்சியையும் விற்றுவிட்டு, அதன் கிரயத்தில் ஒரு பகுதியை அப்போஸ்தலரிடம் கொடுத்துவிட்டு, வேறொரு பகுதியை தங்களிடத்தில் வஞ்சித்து வைத்துக்கொள்வது நல்லதல்ல.

அனனியாவும் சப்பீராளும் அப்போஸ்தலரை வஞ்சிக்கவேண்டுமென்று நினைக்கிறார்கள். காணியாட்சியின் கிரயத்தில் ஒரு பங்கை மாத்திரம் அப்போஸ்தலரிடம் கொடுத்துவிட்டு, அதுதான் காணியாட்சியின் முழுகிரயம் என்று பொய்சொல்லி அப்போஸ்தலரை வஞ்சிக்கிறார்கள்.

பொய்சொல்லும்படி

பேதுரு அவனை நோக்கி: அனனியாவே, நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்துவைத்து, பரிசுத்த ஆவியினிடத்தில் பொய்சொல்லும்படி, சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன? (அப் 5:3)

சாத்தான் அனனியாவின் இருதயத்தைப் பொய்யினாலும் வஞ்சகத்தினாலும் நிரம்பியிருக்கிறான். தன்னுடைய உள்ளான இருதயம் யாருக்கும் தெரியாது என்று அனனியா நினைக்கிறான். ஆனால் கர்த்தருக்குத் தெரியாத இரகசியம் ஒன்றுமேயில்லை. அனனியாவின் இருதயத்திலுள்ள வஞ்சகத்தை கர்த்தர் பேதுருவுக்கு வெளிப்படுத்துகிறார். அனனியா தன்னுடைய பாதத்தில் வைப்பது அவனுடைய காணியாட்சியின் கிரயத்தின் முழுத்தொகையல்ல என்பதை கர்த்தர் பேதுருவுக்கு வெளிப்படுத்துகிறார். அனனியாவின் உள்இருதயத்தையும், அதிலுள்ள பொய்யையும், வஞ்சனையையும் கர்த்தர் வெளிப்படுத்துகிறார்.

பேதுரு பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருக்கிறான். தேவனுடைய ஆவியானவர் மனுஷருடைய உள்ளங்களை அறிந்திருக்கிறார். நிலத்தின் கிரயத்தில் அனனியா ஒரு பங்கை வஞ்சித்து வைத்துக்கொண்டதை ஆவியானவர் பேதுருவுக்கு வெளிப்படுத்துகிறார். கர்த்தருக்குச் செவிகொடுத்து, அவருடைய வார்த்தைக்குப் பூரணமாகக் கீழ்ப்படிவதற்குப் பதிலாக, அனனியா சாத்தானுக்குக் கீழ்ப்படிகிறான். அனனியாவோ தன்னுடைய ஞானத்தினால் கர்த்தருக்குக் கொஞ்சமும், சாத்தானுக்குக் கொஞ்சமும் கீழ்ப்படியலாமென்று திட்டமிட்டிருந்தான். ஆனால் சாத்தானோ அவனுடைய இருதயத்தைப் பொய்யினாலும் வஞ்சகத்தினாலும் நிரப்பிவிடுகிறான். சாத்தானே அனனியாவை ஆளுகை செய்கிறான்.

பேதுரு அனனியாவின் இருதயத்தை அறிந்து, அவனை மனந்திரும்புமாறு எச்சரித்து அவனுடைய வீட்டிற்கு அவனை அனுப்பியிருக்கலாம். அனனியா சாத்தானால் திடீரென்று சோதிக்கப்பட்டு பாதிக்கப்பட்டிருக்கிறான். ஆனால் கர்த்தரோ பேதுருவின் மூலமாகத் தம்முடைய நீதியை நிலைநிறுத்துகிறார். சாத்தான் அனனியாவின் இருதயத்தை நிரப்பியதே, அவன் செய்த பாவத்திற்கு ஆரம்பம். பொய்சொல்லும் எண்ணத்தையும், வஞ்சனை செய்யும் எண்ணத்தையும் சாத்தான் அனனியாவிடம் ஆரம்பத்தில் ஆலோசனையாகச் சொன்னான். அதன்பின்பு சாத்தான் தன்னுடைய வஞ்சக எண்ணத்தை அனனியாவின் இருதயத்தில் நிரப்பிவிடுகிறான். இப்போது அனனியாவினால் தன் சுயாதீனப்படி சிந்தித்துச் செயல்பட முடியவில்லை. அவன் சாத்தானுக்கு அடிமையாக இருப்பதினால், சாத்தானுடைய ஆலோசனையின் பிரகாரம், அவன் வழிநடத்துகிறபடியெல்லாம் அனனியா வஞ்சிக்கிறான்.

பேதுரு அனனியாவிடம் "அனனியாவே நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்து வைத்து, பரிசுத்த ஆவியினிடத்தில், பொய்சொல்லும்படி, சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினது என்ன" என்று கேட்கிறான். அனனியா மனுஷனிடத்தில் பொய்சொல்லவில்லை. அவன் பரிசுத்த ஆவியானவரிடத்தில் பொய்சொல்லுகிறான்.

சாத்தானுக்கு இடங்கொடுக்கும் போது, அவன் அனனியாவை கெடுத்துப் பாழாக்கியதுபோல நம்மையும் பாழாக்கிவிடுவான். தன்னுடைய வஞ்சகமான எண்ணத்தை சாத்தான் அனனியாவின் இருதயத்தில் நிரப்பி, அவனை பரிசுத்த ஆவியினிடத்தில் பொய்சொல்லுமாறு வழிநடத்திவிடுகிறான். சாத்தானின் கட்டிலிருந்து அனனியாவால் விடுதலை பெறமுடியவில்லை. கர்த்தருக்கும் ஊழியம் செய்யலாம், சாத்தானுக்கும் ஊழியம் செய்யலாம் என்று தன் சுயஞானத்தை நம்பின அனனியாவை சாத்தான் மோசம் போக்கிவிடுகிறான். இப்போது அவனால் சாத்தானுக்கு மாத்திரமே ஊழியம் செய்ய முடிகிறது. சாத்தானுடைய ஆலோசனைப்படி, அவனுடைய வழிநடத்துதலின்படி, அவன் சொல்வதையெல்லாம் அனனியா செய்கிறான். பரிசுத்த ஆவியினிடத்தில் பொய்சொல்லுகிறான்.

அனனியா சொன்ன பொய்யை பேதுரு வெளிப்படுத்திக் காண்பிக்கிறான். "அனனியாவே நீ நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்து வைத்தாய்" என்று அவன் செய்த தப்பிதத்தைப் பேதுரு அவனுக்கு வெளிப்படுத்துகிறான். அனனியா பேதுருவினிடத்தில் வந்து, தன்னுடைய காணியாட்சியைத் தான் விற்றதாகவும், இதுதான் அதனுடைய கிரயத்தொகை என்றும் சொல்லி, அனனியா ஒரு தொகையை அப்போஸ்தலரின் பாதபடியில் வைத்திருக்கிறான். ஆனால் இது முழுக்கிரயமல்ல. இது கிரயத்தின் ஒரு பகுதிதான். மற்றொரு பங்கை அனனியா தனக்கென்று வஞ்சித்து வைத்திருக்கிறான். தன்னுடைய பொய்யும் வஞ்சனையும் அப்போஸ்தலருக்குத் தெரியாது என்று நினைக்கிறான். ஆனால் பேதுருவோ அவனுடைய இருதயத்திலிருக்கும் பொய்யையும் வஞ்சனையையும் வெளிப்படுத்திக் கூறுகிறான்.

எல்லா விசுவாசிகளும் தங்களுடைய காணியாட்சிகளை விற்று அதன் கிரயத்தை அப்போஸ்தலருடைய பாதத்தில் வைப்பதை அனனியாவும் சப்பீராளும் பார்க்கிறார்கள். அவர்களைப்போலவே தாங்களும் செய்யவேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். அப்படிச் செய்தால்தான் விசுவாசிகள் மத்தியில் தங்களுக்கு பெருமையும், பேரும் புகழும் உண்டாகுமென்றும், அப்படிச் செய்யவில்லையென்றால் மற்ற விசுவாசிகள் தங்களை ஏளனமாக நினைப்பார்கள் என்றும் அனனியாவும் சப்பீராளும் மாம்சப்பிரகாரமாகச் சிந்திக்கிறார்கள். பெருமை இவர்களை ஆளுகை செய்கிறது.

பல சமயங்களில் விசுவாசிகளாகிய நம்மையும் பெருமை ஆளுகை செய்கிறது. மனுஷர் நம்மை பாராட்டவேண்டும் என்பதற்காக தர்மம் செய்கிறோம். நமக்குப் பேரும் புகழும் உண்டாகவேண்டுமென்பதற்காக சில நற்காரியங்களைச் செய்கிறோம். சில சமயங்களில் நாம் நற்காரியங்களைச் செய்யவில்லையென்றாலும், நாம் நற்காரியங்களைச் செய்வதுபோல மாய்மாலம்பண்ணுகிறோம். பிறருக்கு உதவிசெய்வதாக வாக்குப்பண்ணுகிறோம். ஆனால் அந்த உதவியைச் செய்யத் தவறிவிடுகிறோம். சில சமயங்களில் நமக்கு அதிக உதவி செய்யத் திராணியிருக்கும்போது, திராணிக்குத்தக்கதாகச் செய்யாமல், மிகவும் குறைந்த அளவே உதவிசெய்கிறோம். இவையெல்லாம் தேவனுடைய பார்வையில் தவறான காரியங்கள். அனனியாவும் சப்பீராளும் இந்த விஷயத்தில் நமக்கு எச்சரிப்பாக இருக்கிறார்கள்.

அனனியா பரிசுத்த ஆவியினிடத்தில் பொய்சொல்லுகிறான். நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்து வைத்து, ஒரு பங்கை மாத்திரம் கொண்டு வந்து அப்போஸ்தலருடைய பாதத்தில் வைக்கிறான். அவனுடைய பாவத்தை பரிசுத்த ஆவியானவர் பேதுருவின் மூலமாக வெளிப்படுத்துகிறார். பேதுரு ஆவியினால் நிரப்பப்பட்டு, ஆவியானவர் தன்னை வழிநடத்துகிற பிரகாரமாக, அனனியாவிடம் "நீ மனுஷரிடத்திலல்ல, தேவனிடத்தில் பொய்சொன்னாய்" என்று சொல்லுகிறான்.

தேவனிடத்தில் பொய் சொன்னாய்

அதை விற்குமுன்னே அது உன்னுடையதாயிருக்க வில்லையோ? அதை விற்றபின்பும் அதின் கிரயம் உன் வசத்திலிருக்கவில்லையோ? நீ உன் இருதயத்திலே இப்படிப்பட்ட எண்ணங்கொண்டதென்ன? நீ மனுஷரிடத்தில் அல்ல, தேவனிடத்தில் பொய்சொன்னாய் என்றான் (அப் 5:4).

அனனியா தன் மனைவியறிய, தன் காணியாட்சியை விற்ற கிரயத்திலே ஒரு பங்கை வஞ்சித்து வைத்துப் பாவம் செய்திருக்கிறான். பேதுரு அவனுடைய பாவத்தை கடினமான வார்த்தைகளினால் பேசி உணர்த்துகிறான். "அதை விற்குமுன்னே அது உன்னுடையதாயிருக்கவில்லையோ. அதை விற்றபின்பும் அதின் கிரயம் உன் வசத்திலிருக்கவில்லையோ" என்று பேதுரு அனனியாவிடம் சொல்லுகிறான்.

கிரயத்தின் ஒரு பங்கை அனனியா அப்போஸ்தலருடைய பாதத்தில் வைக்கவேண்டும் என்னும் கட்டாயம் எதுவுமில்லை. காணியாட்சியின் கிரயத்தை அப்போஸ்தலருடைய பாதத்தில் வைக்கவேண்டுமென்று அனனியாதான் தீர்மானம் பண்ணியிருக்கிறான். காணியாட்சியை விற்பதற்கு முன்பாக அது அவனுக்குச் சொந்தமானதாகவே இருந்தது. அதை விற்ற பின்பும் அதன் கிரயம் அனனியாவிடம் தான் இருந்தது. அனனியா தனக்கு இஷ்டமானபடி, தன் மனவிருப்பம்போல் அந்த முழுகிரயத்தையும் செலவு பண்ணிக்கொள்ளலாம்.

அனனியா தன்னுடைய காணியாட்சியை விற்கவேண்டும் என்னும் கட்டாயம் எதுவுமில்லை. விசுவாசிகளெல்லோரும் தங்கள் காணியாட்சியை விற்கவேண்டுமென்று அப்போஸ்தலர் யாரும் கட்டாயப்படுத்தவில்லை. தன் நிலத்தை விற்றபின்பு கூட, அதன் கிரயத்தை அப்போஸ்தலருடைய பாதத்தில் வைக்கவேண்டும் என்னும் கட்டாயமும் அனனியாவுக்கு இல்லை. நிலத்தை விற்றவர்களெல்லாம் அதன் கிரயத்தை தங்களுடைய பாதத்தில் வைக்கவேண்டுமென்று அப்போஸ்தலர் யாரும் கட்டாயப்படுத்தி உபதேசம்பண்ணவில்லை.

நிலத்தின் கிரயத்தை அனனியா தன் கைவசமாகவே வைத்துக்கொள் வைக்கவேண்டும் என்னும் கட்டாயமும் அனனியாவுக்கு இல்லை. நிலத்தை விற்றவர்களெல்லாம் அதன் கிரயத்தை தங்களுடைய பாதத்தில் வைக்கவேண்டுமென்று அப்போஸ்தலர் யாரும் கட்டாயப்படுத்தி உபதேசம்பண்ணவில்லை.

நிலத்தின் கிரயத்தை அனனியா தன் கைவசமாகவே வைத்துக்கொள் ளலாம். தனக்குப் பிரியமானபடி செலவுசெய்யலாம். நிலத்தை விற்கவில்லையென்றால், அந்த நிலத்தையும் அவன் தனக்குப் பிரியமானபடி பயன்படுத்தலாம். ஆனால் பொருத்தனைபண்ணிவிட்டு அதை நிறைவேற்றாமல் இருப்பது தவறு. பொருத்தனை பண்ணி நிறைவேற்றாமல் இருப்பதைவிட, பொருத்தனைபண்ணாமலயே இருப்பது நல்லது. அனனியாவோ நல்ல காரியம் செய்வதுபோல மாய்மாலம் பண்ணுகிறான். நிலத்தினுடைய கிரயத்தின் ஒரு பாகத்தை மாத்திரம் அப்போஸ்தலருடைய பாதத்தில் வைத்துவிட்டு, அதுதான் நிலத்தின் முழுகிரயம் என்று பொய்சொல்லுகிறான்.

அனனியாவின் மாய்மாலத்தைப் பரிசுத்த ஆவியானவர் பேதுருவுக்கு வெளிப்படுத்துகிறார். பேதுரு அனனியாவிடம் "அதை விற்ற பின்பும் அதின் கிரயம் உன் வசத்திலிருக்கவில்லையோ" என்று சொல்லுகிறான். நிலத்தை விற்ற பின்பும் அந்தக் கிரயம் அனனியாவுடையதுதான். ஆனால் அந்தக் கிரயத்தைக் கர்த்தருக்காகப் பொருத்தனைபண்ணிய பின்பு, அந்தக் கிரயம் அனனியாவுடையதல்ல. அவனுடைய பொருத்தனையின் பிரகாரம் அது தேவனுடையது.

நம்முடைய இருதயத்தை நாம் தேவனிடத்தில் ஒப்புக்கொடுக்கும்போது, முழுஇருதயத்தையும் ஒப்புக்கொடுக்க வேண்டும். முழுமனதோடு ஒப்புக்கொடுக்கவேண்டும். நம்முடைய இருதயத்தின் பாதியை தேவனுக்கும், மீதியை சாத்தானுக்கும் ஒப்புக்கொடுக்கக்கூடாது. நம்முடைய இருதயத்தைப் பங்குவைக்க நமக்கு அனுமதியில்லை.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் சாலொமோனுடைய நீதிமன்றத்தில், இரண்டு ஸ்திரீகள் ஒரு பிள்ளைக்காக விவாதம்பண்ணினார்கள். பிள்ளை தன்னுடையது என்று இரண்டு ஸ்திரிகளுமே வழக்காடினார்கள். குழந்தையின் தாயாகயில்லாதவளோ, அந்தக் குழந்தையை இரண்டாக வெட்டி பாதியை எடுத்துக்கொள்ள சம்மதிக்கிறாள். குழந்தையின் தாயோ, அந்தக் குழந்தையை வெட்டிக்கொல்லாமல் அது யாரிடமாவது உயிரோடிருக்க வேண்டுமென்று விரும்புகிறாள்.

சாத்தான் குழந்தையை இரண்டாக வெட்டி பிளக்க விரும்பும் ஸ்திரீயைப்போலவே துன்மார்க்கனாகயிருக்கிறான். தனக்குப் பாதி கிடைத்தால் போதுமென்று நினைப்பான். ஏனென்றால் அது அவனுக்குச் சொந்தமானதல்ல. ஆனால் தேவனோ நம்முடைய முழுஇருதயமும் தமக்கு வேண்டுமென்று எதிர்பார்க்கிறார். பாதி இருதயத்தை மாத்திரம் நாம் ஒப்புக்கொடுத்தால் தேவன் அதை ஏற்றுக்கொள்ளமாட்டார்.

பேதுரு அனனியாவிடம் "நீ உன் இருதயத்திலே இப்படிப்பட்ட எண்ணங்கொண்டதென்ன" என்று கேட்கிறான். அனனியா செய்த பாவத்தை பேதுரு அவனுக்குச் சுட்டிக்காண்பிக்கிறான். அனனியாவின் இருதயத்தில் துன்மார்க்கமான சிந்தனை உருவாயிற்று. அந்த சிந்தனை பெரிதாகி, இப்போது மனுஷரையும் தேவனையும் வஞ்சிக்கிறது. பல சமயங்களில் நாம் பாவம் செய்யும்போது, அதன் பழியை சாத்தான்மீது போட்டுவிடுகிறோம். நாம் செய்கிற எல்லா தவறுகளுக்கும் பிசாசுதான் காரணம் என்று சாதாரணமாகச் சொல்லிவிடுகிறோம். ஆனால் பேதுருவோ அனனியாவிடம், அவனுடைய பாவத்திற்கு அவன்தான் காரணமென்று உணர்த்துகிறான்.

பிசாசு சோதிப்பான். ஆனால் நாம் பாவம் செய்யவேண்டுமென்று பிசாசு கட்டாயப்படுத்தமாட்டான். பிசாசின் சோதனைக்கு நாம் எதிர்த்துநின்று, அவனை மேற்கொள்ளவேண்டும். சோதனைக்கு நம்மை ஒப்புக்கொடுத்தால், நம்முடைய சுயஇச்சையின் பிரகாரமாக நாம் பாவம் செய்துவிடுவோம்.

பேதுரு அனனியாமீது நியாயமான வார்த்தைகளினால் இவ்வாறு குற்றம் சுமத்துகிறான். "நீ மனுஷரிடத்தில் அல்ல, தேவனிடத்தில் பொய்சொன்னாய்" என்று சொல்லுகிறான். நாம் தேவனை வஞ்சித்தால், நாம்தான் வஞ்சிக்கப்படுவோம். நாம் தேவனை ஏமாற்றினால் நாம்தான் ஏமாற்றப்படுவோம். நம்முடைய ஆத்துமாவுக்குத்தான் பேரிழப்பு உண்டாகும். நம்முடைய முடிவு தான் பாழாய்ப்போகும்.

அனனியா ஜீவனைவிட்டான்

அனனியா இந்த வார்த்தைகளைக் கேட்கவே, விழுந்து ஜீவனை விட்டான். இவைகளைக் கேள்விப்பட்ட யாவருக்கும் மிகுந்த பயமுண்டாயிற்று. வாலிபர் எழுந்து, அவனைச் சேலையில் சுற்றி, வெளியே எடுத்துக்கொண்டு போய், அடக்கம்பண்ணினார்கள் (அப் 5:5,6).

அனனியா பேதுருவின் வார்த்தைகளைக் கேட்டவுடன் பேச்சற்றவனானான். கீழே விழுந்து ஜீவனை விட்டான். அனனியாவால் ஒன்றும் பேசமுடியவில்லை. தன் பக்கத்தில் நியாயம் இருப்பதாக விவாதம்பண்ண முடியவில்லை. எல்லாம் முடிந்து போயிற்று என்று தீர்மானம்பண்ணி கீழே விழுந்து ஜீவனை விட்டுவிடுகிறான். அப்போஸ்தலருடைய வாயிலிருந்து புறப்படும் தேவனுடைய வார்த்தை மிகுந்த வல்லமையுடையது. இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் மனுஷரை நீதிமானாக்குகிறது. அதே சுவிசேஷமே ஒரு சிலரை ஆக்கினைக்குட்படுத்துகிறது.

அனனியாவுக்கு கிடைத்திருக்கும் தண்டனை மிகவும் பயங்கரமாயிருக்கிறது. ஆனாலும் தேவனுடைய நீதியின் பிரகாரமாகவே அனனியா தண்டிக்கப் பட்டிருக்கிறான். அனனியாவுக்குக் கிடைத்திருக்கும் தண்டனை மற்ற விசுவாசிகளுக்கு ஒரு எச்சரிப்பாக இருக்கிறது. தேவனிடத்தில் பொய் சொன்னால் தங்களுக்கும் கடுமையான தண்டனை கொடுக்கப்படும் என்று விசுவாசிகள் புரிந்துகொள்கிறார்கள்.

தேவனிடத்தில் பொய்சொன்னதற்காக, பேதுரு அனனியாவின்மீது, தீர்ப்பின் வார்த்தைகளைக் கூறுகிறான். ஆனால் இதே பேதுரு தன்னுடைய ஆண்டவரை மூன்றுமுறை மறுதலித்தவன் தான். அவரைத் தெரியாவே தெரியாது என்று சத்தியம்பண்ணினவன். பேதுரு தப்பு செய்தாலும், தன்னுடைய தப்பிதத்திற்காக மனங்கசந்து அழுதான். மனந்திருந்தினான். இயேசுகிறிஸ்து தரும் பாவமன்னிப்பைப் பெற்றுக்கொண்டான். ஆனால் அனனியாவுக்கோ மனந்திரும்புவதற்குக் கூட வாய்ப்புக்கிடைக்கவில்லை. பேதுருவின் வார்த்தைகளைக் கேட்டவுடனே அனனியா கீழே விழுந்து ஜீவனை விடுகிறான். அனனியாவுக்கு மனந்திரும்ப வாய்ப்புக் கிடைக்காமல் போகிறது.

நாம் பாவம் செய்தால் நமக்கு மனந்திரும்ப வாய்ப்புக் கிடைக்குமென்று இறுமாப்பாக இருந்து, பாவம் செய்யக்கூடாது. ஒருவேளை அனனியாவைப்போல, நமக்கு மனந்திரும்ப வாய்ப்புக் கிடைக்காமலேயே போய்விடலாம். ஆகையினால் பாவத்தைவிட்டு விலகியே ஜீவிக்கவேண்டும்.

அனனியாவும் தன்னைப்போலவே பலவீனமான மனுஷனென்பது பேதுருவுக்குத் தெரியும். பேதுரு ஒருவேளை தன்னுடைய சுயசித்தத்தின் பிரகாரம் அனனியாவை மன்னித்துவிடலாமென்று விரும்பலாம். ஆனால் பேதுருவை ஆளுகை செய்கிற பரிசுத்த ஆவியானவரோ, பேதுருவின் மூலமாக தம்முடைய வார்த்தையைப் பேசுகிறார். பரிசுத்த ஆவியானவர் பேதுரு செய்த தவறுகளை மன்னிக்கிறார். ஆனால் அனனியா செய்த தவறுகளுக்காக அவனைத் தண்டித்துவிடுகிறார்.

மரித்தோரை உடனே அடக்கம்பண்ணுவது யூதர்களுடைய வழக்கம். இதன்பிரகாரமாக கீழே விழுந்து ஜீவனைவிட்ட அனனியாவை, வாலிபர் எழுந்து, அவனை சேலையிலே சுற்றி, வெளியே எடுத்துக்கொண்டுபோய் அடக்கம்பண்ணுகிறார்கள்.

சப்பீராள்

ஏறக்குறைய மூன்று மணி நேரத்துக்குப்பின்பு, அவனுடைய மனைவி நடந்ததை அறியாமல், உள்ளே வந்தாள். பேதுரு அவளை நோக்கி: நிலத்தை இவ்வளவுக்குத்தானா விற்றீர்கள், எனக்குச் சொல் என்றான். அவள்: ஆம், இவ்வளவுக்குத்தான் என்றாள் (அப் 5:7,8).

சப்பீராள் அனனியாவின் மனைவி. அவள் மூன்றுமணி நேரத்திற்குப் பின்பு, அப்போஸ்தலர்கள் இருக்கும் இடத்திற்கு வருகிறாள். அங்கு நடைபெற்ற சம்பவம் எதுவும் அவளுக்குத் தெரியாது. தன்னுடைய புருஷன் அனனியா இறந்துபோனதைக்கூட அவள் அறியாதிருக்கிறாள். அனனியா தன் மனைவியறிய தங்கள் காணியாட்சியை விற்ற கிரயத்திலே ஒரு பங்கை வஞ்சித்து வைத்திருக்கிறான். ஆகையினால் அனனியாவின் பாவத்தில் சப்பீராளுக்கும் பங்குள்ளது.

தங்களிடத்திற்கு வரும் சப்பீராளிடம், பேதுரு "நிலத்தை இவ்வளவுக்குத்தானா விற்றீர்கள், எனக்குச் சொல்" என்று கேட்கிறான். சப்பீராளோ அனனியாவின் பாவத்தில் பங்காளியாக இருக்கிறாள். "ஆம் இவ்வளவுக்குத்தான்" என்று சப்பீராளும் பொய்சொல்லுகிறாள். தங்களிடத்தில் வேறு பணம் எதுவுமில்லையென்றும், தங்கள் காணியாட்சியை விற்ற கிரயம் இவ்வளவுதான் என்றும், அந்த முழுக்கிரயத்தையும் அனனியா அப்போஸ்தலருடைய பாதத்தில் வைத்துவிட்டானென்றும் சப்பீராள் பொய்சொல்லுகிறாள். கிரயத்தின் ஒருபகுதியை அனனியா வஞ்சித்து வைத்திருப்பது சப்பீராளுக்கும் தெரியும். உண்மை தெரிந்திருந்தும் சப்பீராள் துணிகரமாகப் பொய்சொல்லுகிறாள்.

அனனியாவும் சப்பீராளும் ஒரே பொய்யைச் சொல்லுகிறார்கள். பொய்சொல்லுவதில் இவர்கள் ஒற்றுமையாக இருக்கிறார்கள். ஒரு பொய்யை பலமுறை சொன்னால் அது மெய்யாகிவிடும் என்று நினைக்கிறார்கள். ஒரு தடவை பொய்சொல்லிவிட்டால், அதன் பின்பு அந்தப் பொய்யில் உறுதியாக இருக்கவேண்டும் என்று இவர்கள் நினைக்கிறார்கள். பொய்சொல்வதினால் இவர்களுக்கு லாபம் ஒன்றுமில்லை. ஒருவருக்கொருவர் ஒன்று சேர்ந்து பொய்சொல்லுவது மிகவும் பரிதாபமான காரியம். அவர்களுடைய முடிவும் பரிதாபமாகவே இருக்கும். ஒருவர் பொய்சொல்லும்போது, அது பொய்யென்று தெரிந்தால் மற்றவர் அவரைத் திருத்தவேண்டும். அவரோடு சேர்ந்து அந்தப் பொய்யை மெய்யாக்கும் விதத்தில், திரும்பத் திரும்ப பொய்சொல்லக்கூடாது.

அனனியா நிலத்தின் கிரயத்தில் ஒரு பகுதியை வஞ்சித்து வைத்திருப்பது சப்பீராளுக்குத் தெரியும். ஆனால் சப்பீராளோ அனனியாவின் பாவத்தை அவனுக்குச் சுட்டிக் காண்பிக்கவில்லை. அவனுடைய பாவத்தை அங்கீகரிக்கிறாள். அவனுடைய பாவத்திற்கு பங்காளியாகயிருக்கிறாள். தன்னுடைய இருதயத்தைக் கடினப்படுத்தி தானும் பாவம் செய்கிறாள், அனனியாவையும் பாவம் செய்ய வழிநடத்துகிறாள்.

சப்பீராள் ஜீவனை விட்டாள்

பேதுரு அவளை நோக்கி: கர்த்தருடைய ஆவியைச் சோதிக்கிறதற்கு நீங்கள் ஒருமனப்பட்டதென்ன? இதோ, உன் புருஷனை அடக்கம் பண்ணினவர்களுடைய கால்கள் வாசற்படியிலே வந்திருக்கிறது, உன்னையும் வெளியே கொண்டுபோவார்கள் என்றான். உடனே அவள் அவனுடைய பாதத்தில் விழுந்து ஜீவனை விட்டாள். வாலிபர் உள்ளே வந்து, அவள் மரித்துப்போனதைக் கண்டு, அவளை வெளியே எடுத்துக் கொண்டுபோய், அவளுடைய புருஷனண்டையிலே அடக்கம்பண்ணினார்கள் (அப் 5:9,10).

சப்பீராள் தன் புருஷனுடைய பாவத்தில் பங்காளியாகயிருப்பதினால், அவளுக்கும் தண்டனை கொடுக்கப்படுகிறது. பேதுரு சப்பீராளின் பாவத்தை வெளிப்படுத்திக் காண்பிக்கிறான். "கர்த்தருடைய ஆவியைச் சோதிக்கிறதற்கு நீங்கள் ஒருமனப்பட்டதென்ன" என்று சப்பீராளிடம் கேட்கிறான். அவளுக்குத் தண்டனை அறிவிப்பதற்கு முன்பாக, அவள் செய்த பாவத்தை அவளுக்கு அறிவிக்கிறான். அனனியாவும் சப்பீராளும் கர்த்தருடைய ஆவியைச் சோதித்திருக்கிறார்கள்.

அப்போஸ்தலர்கள் அந்நிய பாஷைகளைப் பேசுகிறார்கள் என்பது அனனியாவுக்கும் சப்பீராளுக்கும் தெரிந்திருக்கிறது. அவர்களுக்கு பற்பல பாஷைகளைப் பேசும் வரம் மாத்திரமே இருக்கிறது என்று இவர்கள் நினைத்தார்கள். ஆனால் அப்போஸ்தலருக்கோ ஆவிகளைப் பகுத்தறியும் வரமும் இருக்கிறது என்பதை இவர்கள் அறிந்துகொள்ளவில்லை.

நம்முடைய பாவத்தில் நமக்குப் பாதுகாப்பு தேடக்கூடாது. பாவம் செய்தால் நமக்கு ஒரு பிரச்சனையும் இல்லை என்று துணிகரமாகப் பாவம் செய்யக்கூடாது. பாவம் செய்தாலும் நமக்கு நியாயத்தீர்ப்பு இல்லை என்று தேவனுடைய நீதிக்கு விரோதமாகச் சிந்திக்கக்கூடாது. இவ்வாறு சிந்தித்துச் செயல்படுகிறவர்கள் எல்லோருமே கர்த்தருடைய ஆவியைச் சோதிக்கிறார்கள்.

இந்த விஷயத்தில் அனனியாவும் சப்பீராளும் ஒருமனப்பட்டு கர்த்தருடைய ஆவியைச் சோதிக்கிறார்கள். இரண்டுபேர் சேர்ந்து ஒரு வேலையைச் செய்யும்போது, இருவரும் அதை ஒற்றுமையாகச் செய்யவேண்டும். ஒருவர் நன்மைக்கேதுவாகவும் மற்றொருவர் தீமைக்கேதுவாகவும் கிரியை செய்யும்போது, இருவருடைய நிலமையும் பரிதாபமாகயிருக்கும். இரண்டு மாடுகள் ஒரு வண்டியை இழுத்துச்செல்லும்போது, அவை இரண்டும் ஒரே வேகத்தில், ஒரே திசையில் செல்லவேண்டும். ஒன்றுக்கொன்று முரண்பட்டால் வண்டி பிரயாணமாகாது.

பேதுரு சப்பீராளிடம் அவளுடைய பாவத்தைச் சுட்டிக்காண்பித்துவிட்டு, அவளுக்குத் தண்டனையையும் அறிவிக்கிறான். "இதோ உன் புருஷனை அடக்கம்பண்ணினவர்களுடைய கால்கள் வாசற்படியிலே வந்திருக்கிறது. உன்னையும் வெளியே கொண்டுபோவார்கள்" என்று பேதுரு சொல்லுகிறான். பேதுருவின் வார்த்தை உடனே நிறைவேறுகிறது. பேதுரு தீர்ப்புச் சொல்ல, வேறு யாரும் தண்டனையை நிறைவேற்றவில்லை. பேதுருவின் வார்த்தையே சப்பீராளுக்குத் தண்டனையை நிறைவேற்றுகிறது. பேதுரு தன்னுடைய தீர்ப்பைச் சொன்னவுடனே சப்பீராள் அவனுடைய பாதத்தில் விழுந்து ஜீவனை விட்டாள்.

ஒரு சிலருடைய பாவங்களுக்கு உடனடியாகத் தண்டனை கிடைக்கிறது. தேவன் சில சமயங்களில் ஒரு சிலரை உடனே தண்டிக்காமல் பொறுமை காண்பிக்கிறார். சில விஷயத்தில் தேவனுடைய சித்தத்தை நம்மால் அறிந்துகொள்ளமுடியாது. தேவன் செய்வதெல்லாமே அவருடைய சித்தத்தின் பிரகாரமாக நன்மையாகவே இருக்கும். தேவன் ஒரு சிலருடைய பாவங்களுக்காக அவர்களை உடனே தண்டிப்பார். அதற்கான காரணத்தை அவர் நம்மிடம் விளக்கிச் சொல்லவேண்டும் என்னும் அவசியம் எதுவுமில்லை.

ஒரு சிலருக்கு திடீரென்று மரணமுண்டாகிறது. இவர்கள் செய்த பாவங்களுக்குத் தண்டனையாகத்தான் இவர்கள் திடீரென்று செத்துப்போனார்களென்று நாம் முடிவுபண்ணிவிடக்கூடாது. திடீரென்று செத்துப்போகிறவர்கள் மற்றவர்களைவிட மோசமான பாவிகளென்று நாம் தீர்மானம்பண்ணக்கூடாது. பல சமயங்களில் திடீர் மரணத்திற்கும் அவர்களுடைய பாவத்திற்கும் சம்பந்தமே இருக்காது. ஒருவேளை கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாகவே ஒரு சிலருக்கு திடீர் மரணமுண்டாகலாம். இந்த உலகத்தில் அவர்கள் பாடனுபவித்தது போதுமென்று தேவன் தீர்மானித்து, அவர்களைத் தம்முடைய சமுகத்தில் சீக்கிரமாகச் சேர்த்துக்கொள்ளலாம். ஆனாலும் அனனியாவுக்கும் சப்பீராளுக்கும் திடீர் மரணமுண்டானது நமக்கு எச்சரிப்பாகவே என்று எழுதப்பட்டிருக்கிறது.

அனனியாவுக்கும் சப்பீராளுக்கும் உண்டான மரணம் அவர்களுடைய பாவத்தினிமித்தமாகவே உண்டாயிற்று. தேவனுடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது உடனடியாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஒரு சிலர் அனனியாவையும் சப்பீராளையும் பற்றி விவாதம்பண்ணுகிறார்கள். அவர்களுடைய நித்திய முடிவு எப்படியிருக்குமென்று விவாதம்பண்ணுகிறார்கள். அவர்கள் பரலோகத்திலிருக்கிறார்களா அல்லது நரகத்திலிருக்கிறார்களா என்று ஆராய்ச்சி பண்ணுகிறார்கள். அறியப்படாத ரகசியங்கள் கர்த்தருக்கே உரியது. நமக்கு வெளிப்படுத்தப்படாத ரகசியத்தை விவாதம்பண்ணுவதினால் நமக்கு ஒரு பிரயோஜனமுமில்லை.

பேதுருவின் தீர்ப்பைக் கேட்டவுடனே சப்பீராள் அவனுடைய பாதத்தில் விழுந்து ஜீவனைவிடுகிறாள். அப்போது அனனியாவை அடக்கம்பண்ணின வாலிபர்கள் அப்போஸ்தலர்கள் இருக்கும் இடத்திற்கு வருகிறார்கள். அங்கு சப்பீராள் மரித்துப்போனதைக் காண்கிறார்கள். அவளை வெளியே எடுத்துக்கொண்டுபோய், அவளுடைய புருஷனண்டையிலே அடக்கம் பண்ணுகிறார்கள்.

அனனியா தன்னுடைய காணியாட்சியின் கிரயத்தில் ஒரு தொகையை அப்போஸ்தலருடைய பாதத்தில் வைத்தான். அந்தத் தொகை என்ன ஆயிற்று என்று ஒரு சிலர் விவாதம்பண்ணுகிறார்கள். அப்போஸ்தலர்கள் அந்தப் பணத்தை வைத்துக்கொண்டார்களா, ஊழியத்தில் பயன்படுத்தினார்களா அல்லது வேறு என்ன செய்தார்கள் என்றெல்லாம் விவாதம்பண்ணுகிறார்கள். அனனியா அப்போஸ்தலருடைய பாதத்தில் வைத்த பணத்தில் பாவம் எதுவுமில்லை. ஆனால் அனனியா வஞ்சித்துத் தன்னிடத்தில் வைத்துக்கொண்ட பணத்தில்தான் பாவம் இருக்கிறது. ஏனெனில் அனனியா வைத்துக்கொண்ட பணம் கர்த்தருக் கென்று பொருத்தனை செய்யப்பட்ட பணம். அது கர்த்தருக்குரியது. அனனியாவோ கர்த்தருக்குரியதை வஞ்சித்து தன்னிடமாக வைத்துக்கொண்டான். ஆகையினால் அந்தப் பணம் மாத்திரமே பாவமானது.

மிகுந்த பயமுண்டாயிற்று

சபையாரெல்லாருக்கும், இவைகளைக் கேள்விப்பட்ட மற்ற யாவருக்கும், மிகுந்த பயமுண்டாயிற்று (அப் 5:11).

ஆதித்திருச்சபையில் திரளான விசுவாசிகள் இருக்கிறார்கள். ஒரே நாளில் மூவாயிரம்பேர் இரட்சிக்கப்பட்டு சபையில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். வேறொரு நாளில் ஐயாயிரம் பேர் சபையில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். இவர்களெல்லோரும் அனனியாவுக்கும் சப்பீராளுக்கும் ஏற்பட்ட முடிவைக் கேள்விப்படுகிறார்கள். ஒரு சிலர் இந்த சம்பவத்தைத் தங்கள் கண்களால் பார்க்கிறார்கள். இவர்களெல்லோருக்குமே மிகுந்த பயமுண்டாயிற்று. சபையார் எல்லோருக்கும் பயமுண்டாயிற்று. அத்தோடு இவைகளைக் கேள்விப்பட்ட மற்ற யாவருக்கும் மிகுந்த பயமுண்டாயிற்று.

கர்த்தருடைய சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் தேவனுடைய நியாயத்தீர்ப்பை பிரத்தியட்சமாகப் பார்க்கிறார்கள். தேவன் அன்புள்ளவர், கிருபையுள்ளவர் அதே சமயத்தில் நீதியுள்ளவர் என்பதையும் விசுவாசிகள் புரிந்துகொள்கிறார்கள். ஆதித்திருச்சபையின் விசுவாசிகள் கர்த்தருக்குள் சந்தோஷமாக இருக்கிறார்கள். அந்தச் சந்தோஷம் பயபக்தியுடன் கூடிய சந்தோஷமாக இருக்கிறது.

இயேசுகிறிஸ்துவையும் அவருடைய வசனத்தையும் குறித்து அக்கரையில்லாமல் ஏனோதானோவென்று ஜீவிக்காமல், பயபக்தியோடும், ஆவிக்குரிய காரியங்களில் மிகுந்த கவனத்தோடும் ஜீவிப்பதற்கு, ஆதித்திருச்சபையில் நடைபெற்ற ஒவ்வொரு காரியமும் அவர்களுக்கு எச்சரிப்பாக அமைந்திருந்தது.

எல்லாரும் குணமாக்கப்பட்டார்கள் அப் 5 : 12-16

அப் 5:12. அப்போஸ்தலருடைய கைகளினாலே அநேக அடையாளங்களும் அற்புதங்களும் ஜனங்களுக்குள்ளே செய்யப்பட்டது. எல்லாரும் ஒருமனப்பட்டுச் சாலொமோனுடைய மண்டபத்தில் இருந்தார்கள்.

அப் 5:13. மற்றவர்களில் ஒருவரும் அவர்களுடனே சேரத் துணியவில்லை. ஆகிலும் ஜனங்கள் அவர்களை மேன்மைப்படுத்தினார்கள்.

அப் 5:14. திரளான புருஷர்களும் ஸ்திரீகளும் விசுவாசமுள்ளவர்களாகிக் கர்த்தரிடமாக அதிகமதிகமாய்ச் சேர்க்கப்பட்டார்கள்.

அப் 5:15. பிணியாளிகளைப் படுக்கைகளின் மேலும் கட்டில்களின்மேலும் கிடத்தி, பேதுரு நடந்துபோகையில் அவனுடைய நிழலாகிலும் அவர்களில் சிலர்மேல் படும்படிக்கு, அவர்களை வெளியே வீதிகளில் கொண்டுவந்து வைத்தார்கள்.

அப் 5:16. சுற்றுப் பட்டணங்களிலுமிருந்து திரளான ஜனங்கள் பிணியாளிகளையும் அசுத்த ஆவிகளால் வாதிக்கப்பட்டவர்களையும் எருசலேமுக்குக் கொண்டுவந்தார்கள்; அவர்களெல்லாரும் குணமாக்கப் பட்டார்கள்.

சாலொமோனுடைய மண்டபம்

அப்போஸ்தலருடைய கைகளினாலே அநேக அடையாளங்களும் அற்புதங்களும் ஜனங்களுக்குள்ளே செய்யப்பட்டது. எல்லாரும் ஒருமனப்பட்டுச் சாலொமோனுடைய மண்டபத்தில் இருந்தார்கள் (அப் 5:12).

அப்போஸ்தலருடைய கைகளினாலே அநேக அற்புதங்களும் அடையாளங்களும் ஜனங்களுக்குள்ளே நடைபெறுகிறது. தேவன் தம்முடைய நியாயாசனத்தில் அமர்ந்து அனனியாவையும் சப்பீராளையும் தண்டித்தார். இப்போதோ மறுபடியுமாக அவர் தம்முடைய கிருபாசனத்தில் அமர்ந்திருக்கிறார். அப்போஸ்தலருடைய தெய்வீக ஊழியத்தை அவர்களுடைய கைகளினாலே செய்யப்பட்ட அற்புதங்களும் அடையாளங்களும் உறுதிபண்ணுகிறது. தேவனுடைய பிரசன்னமும் அவருடைய வல்லமையும் அப்போஸ்தலரோடு கூடயிருக்கிறது. இதற்கு இந்த அற்புதங்களும் அடையாளங்களும் சாட்சியாயிருக்கிறது.

ஆதித்திருச்சபையில் திரளான விசுவாசிகள் இருக்கிறார்கள். அவர்களெல்லோரும் ஒரே இருதயமும் ஒரே மனமும் உடையவர்களாய், ஜெபத்திலும் வேண்டுதலிலும் ஒருமனப் பட்டிருக்கிறார்கள். அவர்களெல்லோரும் ஒருமனப்பட்டு சாலொமோனுடைய மண்டபத்தில் இப்போது இருக்கிறார்கள். இந்த மண்டபம் எருசலேமிலுள்ள தேவாலயத்திலிருக்கிறது. தேவாலயத்தின் தலைவர்கள் விற்கிறவர்களையும் கொள்ளுகிறவர்களையும், காசுக் காரர்களையும் ஆலயத்தில் அனுமதிக்கிறார்கள். உலகப்பிரகாரமான வியாபாரிகள் தேவனுடைய ஆலயத்தில் அனுமதிக்கப்படுகிறார்கள். ஆனால் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்கிற அப்போஸ்தலரையோ தேவாலயத்தில் ஊழியம் செய்ய அனுமதிக்காமல் அவர்களைத் துன்புறுத்துகிறார்கள்.

பிரச்சனைகளுக்கும், பாடுகளுக்கும், உபத்திரவங்களுக்கும் மத்தியிலே ஆதித் திருச்சபையின் விசுவாசிகளெல்லோரும் ஒருமனப்பட்டு, தேவாலயத்திலுள்ள சாலொமோனுடைய மண்டபத்தில் இருக்கிறார்கள். இவர்களுடைய கூட்டத்தைவிட்டு மாய்மாலக்காரர்கள் வெளியேற்றப்பட்டு விட்டார்கள். விசுவாசிகள் மத்தியில் பரிசுத்தமும் ஒருமனப்பாடும் நிரம்பியிருக்கிறது. விசுவாசிகள் ஒருவருக்கொருவர் ஐக்கியமாகயிருக்கிறார்கள். நம்முடைய திருச்சபைகளிலும் மாய்மாலங்கள் வெளியேற்றப்படவேண்டும். நம் மத்தியிலே தேவனுடைய பரிசுத்தத்திற்கு முக்கியத்துவம் இருக்கவேண்டும்.

அவர்களை மேன்மைப்படுத்தினார்கள்

மற்றவர்களில் ஒருவரும் அவர்களுடனே சேரத் துணியவில்லை. ஆகிலும் ஜனங்கள் அவர்களை மேன்மைப்படுத்தினார்கள் (அப் 5:13).

அப்போஸ்தலருக்கு ஜனங்கள் மத்தியிலே மதிப்பும், மரியாதையும், மேன்மையும் உண்டாயிற்று. ஆதித்திருச்சபையின் விசுவாசிகளைத் தவிர, மற்றவர்களில் ஒருவரும் அப்போஸ்தலருடனே சேரத்துணியவில்லை. தங்களை அப்போஸ்தலருக்குச் சமமாக யாரும் எண்ணவில்லை. அப்போஸ்தலர்களை மேன்மைப் படுத்தியதினால், மரியாதையினிமித்தமாக அவர்களைவிட்டு விலகியே இருக்கிறார்கள்.

பிரதான ஆசாரியரும் ஜனத்தின் மூப்பரும் அப்போஸ்தலரை அவமானப்படுத்தினாலும், ஜனங்களோ அப்போஸ்தலரை மேன்மைப் படுத்துகிறார்கள். அப்போஸ்தலரிடத்தில் ஜனங்கள் திரளாய் கூடிவருவதை பிரதான ஆசாரியர் தடைபண்ணுகிறார்கள். அப்போஸ்தலருடைய கைகளினால் ஜனங்கள் மத்தியிலே அநேக அற்புதங்களும் அடையாளங்களும் நடைபெறுவதினால், திரளான ஜனங்கள், எல்லா தடைகளையும் மீறி அப்போஸ்தலரிடத்தில்கூட்டமாய் கூடி வருகிறார்கள். அப்போஸ்தலரை மேன்மைப் படுத்துகிறார்கள். அப்போஸ்தலர்களில் ஒருவரும் தங்களைத்தாங்களே மேன்மைப்படுத்தவில்லை. தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான். தம்மை உயர்த்துகிறவர்களை மாத்திரமே தேவன் உயர்த்துவார்.

புருஷர்களும் ஸ்திரீகளும்

திரளான புருஷர்களும் ஸ்திரீகளும் விசுவாசமுள்ளவர்களாகிக் கர்த்தரிடமாக அதிகமதிகமாய்ச் சேர்க்கப்பட்டார்கள் (அப் 5:14).

ஆதித்திருச்சபையில் ஏராளமான விசுவாசிகள் சேர்க்கப்படுகிறார்கள். திரளான புருஷர்களும் ஸ்திரீகளும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவிடத்தில் விசுவாசமுள்ளவர்களாகிறார்கள். அவர்கள் கர்த்தருடைய சபையில் அதிகமதிகமாய்ச் சேர்க்கப்படுகிறார்கள். அனனியாவும் சப்பீராளும் திடீரென்று செத்துப்போனதினால், ஜனங்கள் பயந்து அப்போஸ்தலரைவிட்டு விலகிப் போயிருக்கலாம். ஆனால் அப்போஸ்தலர் கைகளினாலே அநேக அற்புதங்களும் அடையாளங்களும் நடைபெறுகிறது. அப்போஸ்தலர்களும் ஆதித்திருச்சபை விசுவாசிகளும் மிகுந்த கட்டுப்பாடோடும், மிகுந்த ஒழுக்கத்தோடும் ஜீவிக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய பார்வையிலும், மனுஷர் மத்தியிலும் தயவு பெற்றிருக்கிறார்கள்.

அப்போஸ்தலருடைய ஒழுக்கமான ஜீவியத்தை ஜனங்கள் பார்க்கிறார்கள். அப்போஸ்தலர் மூலமாகச் சுவிசேஷச் செய்தியை கேள்விப்படுகிறார்கள். கர்த்தர் தம்முடைய வார்த்தைகளை அற்புதங்களினாலும் அடையாளங்களிலும் உறுதிபண்ணுகிறார். தேவனுடைய பிரசன்னம் ஆதித்திருச்சபையில் நிரம்பியிருப்பதை ஜனங்கள் புரிந்துகொள்கிறார்கள். இதனால் திரளான புருஷர்களோ ஸ்திரீகளும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைத் தங்களுடைய ஆண்டவராகவும் இரட்சகராகவும் விசுவாசித்து ஏற்றுக்கொள்கிறார்கள்.

விசுவாசிக் கிறவகளெல்லோரும் ஆதித்திருச்சபையில் சேர்க்கப்படுகிறார்கள். சபையில் ஏற்கெனவே திரளான ஜனங்கள் இருந்தாலும், இன்னும் புதிய விசுவாசிகளுக்கு அங்கு இடம் இருக்கிறது. கர்த்தருடைய சபையில் எத்தனை விசுவாசிகள் வேண்டுமானாலும் சேரலாம். அதற்குத் தடை எதுவுமில்லை. ஜனங்களெல்லோரும் ஒருமனப் பட்டவர்களாக ஆதித்திருச்சபையில் சேர்க்கப்படுகிறார்கள்.

திருச்சபையில் திரளான புருஷர்களும் ஸ்திரீகளும் விசுவாசிகளாக யிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில் ஊழியம் செய்து வந்த காலத்திலும் ஏராளமான ஸ்திரீகள் அவரைப் பின்பற்றினார்கள். பரலோகத்திலும் ஏராளமான ஸ்திரீகள் பிரவேசிப்பார்கள். தேவனுடைய ராஜ்யத்தில் ஆண் என்றும் பெண் என்றும் வித்தியாசமில்லை. ஆதித்திருச்சபையில் திரளான புருஷர்களும் ஸ்திரீகளும் ஊழியம் செய்கிறார்கள்.

பிணியாளிகள்

பிணியாளிகளைப் படுக்கைகளின் மேலும் கட்டில்களின்மேலும் கிடத்தி, பேதுரு நடந்துபோகையில் அவனுடைய நிழலாகிலும் அவர்களில் சிலர்மேல் படும்படிக்கு, அவர்களை வெளியே வீதிகளில் கொண்டுவந்து வைத்தார்கள். சுற்றுப் பட்டணங்களிலுமிருந்து திரளான ஜனங்கள் பிணியாளிகளையும் அசுத்த ஆவிகளால் வாதிக்கப்பட்டவர்களையும் எருசலேமுக்குக் கொண்டு வந்தார்கள்; அவர்களெல்லாரும் குணமாக்கப்பட்டார்கள் (அப் 5:15,16).

அப்போஸ்தலரிடத்தில் ஏராளமான பிணியாளிகளைப் படுக்கைகளின்மேலும் கட்டில்களின்மேலும் கிடத்தி கொண்டு வருகிறார்கள். அப்போஸ்தலர்கள் அவர்களெல்லோருக்கும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஜெபம்பண்ணி, அவர்களை சொஸ்தமாக்கு கிறார்கள். அப்போஸ்தலருடைய கைகளினாலே அநேக அடையாளங்களும் அற்புதங்களும் ஜனங்களுக்குள்ளே செய்யப்படுகிறது. ஊழியம் ஜனங்கள் மத்தியில் பரம்பிற்று. எருசலேம் நகரத்திலும், சுற்றுப்பட்டணங்களிலும் உள்ள ஜனங்கள் அப்போஸ்தலர் மூலமாக செய்யப்படுகிற அற்புங்களையும் அடையாளங்களையும் கேள்விப் படுகிறார்கள். தங்களுக்கும் அற்புதம் தேவையென்று விசுவாசித்து அவர்களெல்லோரும் அப்போஸ்தலர்களைப் பார்க்கவருகிறார்கள்.

அப்போஸ்தலர் மூலமாக அநேக அற்புதங்கள் நடைபெறுகிறது. பேதுரு நடந்துபோகையில் அவனுடைய நிழலாகிலும் தங்களில் சிலர்மேல் படும்படிக்கு, பிணியாளிகளை, வெளியே வீதிகளில் கொண்டு வந்து வைக்கிறார்கள். அவர்களெல்லோருமே இயேசுகிறிஸ்துவின் குணமாக்கும் வல்லமையினால் குணமாக்கப்படுகிறார்கள். ஒரு சிலரால் அப்போஸ்தலரை நெருங்க முடியவில்லை. பிணியாளிகளின் கூட்டம் அதிகமாகயிருக்கிறது. பேதுருவின் நிழல் பட்டால்கூட, கர்த்தர் தங்களைக் குணமாக்குவார் என்று ஜனங்கள் விசுவாசிக்கிறார்கள். ஜனங்களுடைய விசுவாசமும் பெரிது. அப்போஸ்தலர் மூலமாக கர்த்தர் வெளிப்படுத்தும் தெய்வீக வல்லமையும் பெரிது.

அநேக வருஷமாகப் பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரீ இயேசுகிறிஸ்துவினுடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டுக் குணமடைந்தாள். அவருடைய வஸ்திரத்தைத் தொட்ட மாத்திரத்திலேயே, அந்த ஸ்திரீயினுடைய உதிரத்தின் ஊறல் நின்றுபோயிற்று. தம்முடைய சீஷர்கள் பெரிய காரியங்களைச் செய்வார்களென்று இயேசுகிறிஸ்து ஏற்கெனவே முன்னறிவித்திருக்கிறார். அவருடைய வார்த்தை இப்போது நிறைவேறுகிறது.

பேதுருவின் நிழல்படும்போது வியாதியஸ்தர்கள் சொஸ்தமாகிறார்கள். பேதுருவைப்போலவே மற்ற அப்போஸ்தலர்கள் மூலமாகவும் தேவன் அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்கிறார். அப்போஸ்தலர் பவுலின் கைகளினாலே, தேவன் விசேஷித்த அற்புதங்களைச் செய்தருளினார். பவுலுடைய சரீரத்திலிருந்து உறுமால்களையும், கச்சைகளையும் கொண்டு வந்து வியாதிக்காரர் மேல்போட வியாதிகள் அவர்களைவிட்டு நீங்கிப்போயின. பொல்லாத ஆவிகளும் அவர்களைவிட்டுப் புறப்பட்டன (அப் 19:12).

அப்போஸ்தலர்கள் எருசலேமிலிருக்கிறார்கள். ஆதித்திருச்சபையார் எருசலேமில் ஒருமனப்பட்டுக் கூடிவருகிறார்கள். எருசலேமில் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் அற்புதங்களும் அடையாளங்களும் நடைபெறுகிறது என்னும் நற்செய்தி சுற்றுப்பட்டணங்களில் பரம்பிற்று. இதைக் கேள்விப்பட்டு, சுற்றுப்பட்டணங்களிலிருந்து திரளான ஜனங்கள் பிணியாளிகளையும் அசுத்த ஆவிகளால் வாதிக்கப்பட்டவர்களையும் எருசலேமுக்குக் கொண்டு வருகிறார்கள். அவர்களெல்லோரும் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் குணமாக்கப்படுகிறார்கள்.

அப்போஸ்தலர்கள் இயேசு கிறிஸ்துவின் உபதேசத்தை ஜனங்கள் மத்தியில் பிரசங்கம்பண்ணுகிறார்கள். இவர்கள் உபதேசம்பண்ணுவது தேவனுடைய உபதேசம்தான் என்பதை, அப்போஸ்தலருடைய கைகளினால் செய்யப்பட்ட அடையாளங்களும் அற்புதங்களும் உறுதிபண்ணுகிறது. ஜனங்கள் சுவிசேஷச் செய்தியை விசுவாசிக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறார்கள். அவர்களுக்கு அப்போஸ்தலர்மேல் பிரியமுண்டாயிற்று. அவர்கள் அப்போஸ்தலரை மேன்மைப்படுத்துகிறார்கள். கர்த்தரைக் கனப்படுத்துகிறார்கள்.

சிறைச்சாலை
அப் 5 : 17-25

அப் 5:17. அப்பொழுது பிரதான ஆசாரியனும் அவனுடனேகூட இருந்த சதுசேய சமயத்தாரனைவரும் எழும்பி, பொறாமையினால் நிறைந்து,

அப் 5:18. அப்போஸ்தலர்களைப் பிடித்து, பொதுவான சிறைச்சாலையிலே வைத்தார்கள்.

அப் 5:19. கர்த்தருடைய தூதன் இராத்திரியிலே சிறைச்சாலையின் கதவுகளைத் திறந்து, அவர்களை வெளியே கொண்டு வந்து:

அப் 5:20. நீங்கள் போய், தேவாலயத்திலே நின்று, இந்த ஜீவவார்த்தைகள் எல்லாவற்றையும் ஜனங்களுக்குச் சொல்லுங்கள் என்றான்.

அப் 5:21. அவர்கள் அதைக்கேட்டு, அதிகாலமே தேவாலயத்தில் பிரவேசித்துப் போதகம் பண்ணினார்கள். பிரதான ஆசாரியனும் அவனுடனேகூட இருந்தவர்களும் வந்து, ஆலோசனைச் சங்கத்தாரையும் இஸ்ரவேல் புத்திரரின் மூப்பரெல்லாரையும் வரவழைத்து, அப்போஸ்தலர்களைக் கொண்டு வரும்படி சிறைச்சாலைக்குச் சேவகரை அனுப்பினார்கள்.

அப் 5:22. சேவகர் போய், சிறைச்சாலையிலே அவர்களைக் காணாமல், திரும்பிவந்து:

அப் 5:23. சிறைச்சாலை மிகுந்த பத்திரமாய்ப் பூட்டப்பட்டிருக்கவும், காவற்காரர் வெளியே கதவுகளுக்குமுன் நிற்கவும் கண்டோம்; திறந்தபொழுதோ உள்ளே ஒருவரையும் காணோம் என்று அறிவித்தார்கள்.

அப் 5:24. இந்தச் செய்தியை ஆசாரியனும் தேவாலயத்தைக் காக்கிற சேனைத்தலைவனும் பிரதான ஆசாரியர்களும் கேட்டபொழுது, இதென்னமாய் முடியுமோ என்று, அவர்களைக்குறித்துக் கலக்கமடைந்தார்கள்.

அப் 5:25. அப்பொழுது ஒருவன் வந்து: இதோ, நீங்கள் காவலில் வைத்த மனுஷர் தேவாலயத்திலே நின்று ஜனங்களுக்குப் போதகம்பண்ணுகிறார்கள் என்று அவர்களுக்கு அறிவித்தான்.

சிறைச்சாலையிலே வைத்தார்கள்

அப்பொழுது பிரதான ஆசாரியனும் அவனுடனேகூட இருந்த சதுசேய சமயத்தாரனைவரும் எழும்பி, பொறாமையினால் நிறைந்து, அப்போஸ்தலர்களைப் பிடித்து, பொதுவான சிறைச்சாலையிலே வைத்தார்கள் (அப் 5:17,18).

அப்போஸ்தலர்கள் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே நற்கிரியைகளைச் செய்கிறார்கள். ஜனங்களுக்கு உபகாரம் செய்கிறார்கள். தேவனுடைய நாமம் மகிமைப்படவேண்டுமென்றும், அவருடைய ராஜ்யம் பூமியிலே ஜனங்கள் மத்தியில் ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்றும் அப்போஸ்தலர்கள் பயபக்தியோடும் விசுவாசத்தோடும் ஊழியம் செய்கிறார்கள். அப்போஸ்தலருடைய ஊழியத்திற்கு எதிர்ப்பு உண்டாயிற்று. இந்த உலகத்தில் எந்த நற்காரியம் நடைபெற்றாலும் அதற்கு ஏதாவது ஒரு வழியில் எதிர்ப்பும் பிரச்சனையும் உண்டாகும். எதிர்ப்பைச் சமாளிக்காமல் எந்த நற்கிரியையும் செய்யமுடியாது.

அப்போஸ்தலருடைய கைகளினாலே அநேக அடையாளங்களும் அற்புதங்களும் ஜனங்கள் மத்தியிலே செய்யப்படுகிறது. வியாதியஸ்தர்கள் எல்லாரும் குணமாக்கப்படுகிறார்கள். தேவனுடைய நாமம் மகிமைப்படுகிறது. திரளான புருஷரும் ஸ்திரீகளும் இயேசுகிறிஸ்துவில் விசுவாசமுள்ளவர்களாகிறார்கள். இது யூதமார்க்கத்துத் தலைவருக்குப் பிரச்சனையாயிற்று. அவர்கள் அப்போஸ்தலர்மேலும் அவர்களுடைய ஊழியத்தின்மேலும் பொறாமையினால் நிறைகிறார்கள்.

கர்த்தருடைய பிள்ளைகளுக்கு எதிராக பிசாசின் அந்தகார சக்திகள் கிரியை செய்கிறது. அப்போஸ்தலர்கள் ஆவிக்குரிய யுத்தம்பண்ணுகிறார்கள். அவர்களுக்கு எதிர்ப்பு வந்தாலும், பரலோகத்திலிருந்து அவர்களுக்கு உதவியும் வருகிறது. ஊழியம் கர்த்தருடையது. ஊழியத்திற்கு எதிர்த்து நிற்கிறவர்கள் கர்த்தருக்கு எதிர்த்து நிற்கிறார்கள். பரலோகத்தின் கிருபைக்கும் நரகத்தின் பொறாமைக்கும் யுத்தமுண்டாயிற்று. பிரதான ஆசாரியரும், சதுசேய சமயத்தாரும் அப்போஸ்தலர்மீது பொறாமைப் படுகிறார்கள். அப்போஸ்தலர்களுடைய ஊழியத்தைத் தடைபண்ண முயற்சிபண்ணுகிறார்கள்.

பிரதான ஆசாரியரும் சதுசேய சமயத்தாரும் அப்போஸ்தலர்களைப் பிடித்து பொதுவான சிறைச்சாலையில் வைக்கிறார்கள். பிரதான ஆசாரியர் என்பது இங்கு அன்னாவாகவோ அல்லது காய்பாவாகவோ இருக்கலாம். அப்போஸ்தலருக்கு விரோதமாக எழும்பியிருக்கும் கூட்டத்திற்கு இவர்களே தலைவர்களாகயிருக்கிறார்கள். கிறிஸ்துவுக்கும் அவருடைய ஊழியக்காரர்களுக்கும் விரோதமாக சதிஆலோசனைபண்ணுகிறார்கள்.

பிரதான ஆசாரியனுடைய துன்மார்க்கமான காரியங்களில் சதுசேய சமயத்தாரும் சேர்ந்துகொள்கிறார்கள். சதுசேயர் ஆவிகளையும் உயிர்த்தெழுதலையும் விசுவாசிப்பதில்லை. இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்தாரென்று அப்போஸ்தலர்கள் பிரசங்கம் பண்ணுகிறார்கள். இதனால் சதுசேயர் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு விரோதிகளாகயிருக்கிறார்கள்.

சதுசேயருக்கு வருங்காலத்திலும் நம்பிக்கையில்லை. மனுஷருடைய வாழ்க்கை அவர்களுடைய மரணத்தோடு முடிந்துபோகும் என்பது இவர்களுடைய நம்பிக்கை. மரித்தபின்பு நியாயத்தீர்ப்பு உண்டு என்பதையும், இயேசு கிறிஸ்துவினால் இரட்சிக்கப்பட்டவர்கள் பரலோகத்திற்கும், இரட்சிக்கப்படாதவர்கள் நரகத்திற்கும் போவார்களென்பதை சதுசேயர்கள் விசுவாசிப்பதில்லை. இதனால் அப்போஸ்தலரின் உபதேசம் தங்களுடைய உபதேசத்திற்கு மாறுபட்டிருப்பதினால் சதுசேயர் அப்போஸ்தலர் மீது பொறாமைப்படுகிறார்கள்.

அப்போஸ்தலர்கள் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதினால் சதுசேய சமயத்தாரனைவரும், ஒன்றுசேர்ந்து அப்போஸ்தலருக்கு விரோதமாக எழும்பி நிற்கிறார்கள். அப்போஸ்தலர்கள் அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்கிறார்கள். பிணியாளிகளைக் குணப்படுத்துகிறார்கள். இவற்றை யெல்லாம் பார்த்து சதுசேயர் அப்போஸ்தலர்மீது பொறாமைப்படுகிறார்கள். திரளான புருஷர்களும் ஸ்திரீகளும் அப்போஸ்தலரிடத்தில் வருகிறார்கள். ஏராளமான பிணியாளிகளையும் அசுத்த ஆவிகளால் வாதிக்கப்பட்டவர்களையும் அப்போஸ்தலரிடத்தில் கொண்டு வருகிறார்கள். இதனால் சதுசேயருக்கு அப்போஸ்தலர்மீது பொறாமையுண்டாயிற்று.

பிரதான ஆசாரியனும், அவனுடனே கூடயிருந்த சதுசேயரும் அப்போஸ்தலர்கள்மீது கைபோட்டு, அவர்களைப்பிடித்து, அவர்களைப் பொதுவான சிறைச்சாலையில் வைக்கிறார்கள். இப்படிப்பட்ட பொதுவான சிறைச்சாலையில் பயங்கரமான குற்றவாளிகள் காவலில் வைக்கப்படுவது வழக்கம். அவர்களுடைய பார்வைக்கு அப்போஸ்தலர்கள் மகா பயங்கரமான குற்றவாளிகளாகத் தெரிகிறார்கள்.

அப்போஸ்தலர்கள் சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருப்பதினால், அவர்களால் வெளியிடங்களுக்கு ஊழியத்திற்குப் போகமுடியவில்லை. ஆலோசனைச் சங்கத்தார் அப்போஸ்தலர்களைப் பயமுறுத்துகிறார்கள். இயேசுகிறிஸ்துவின் நாமத்தைக் குறித்துப் பிரசங்கம்பண்ணினால் அவர்களுக்குக் கடுமையான தண்டனைக் கொடுக்கப்படுமென்று எச்சரித்து அவர்களை அடித்து துன்புறுத்துகிறார்கள்.

இதற்கு முன்பு ஆலோசனைச் சங்கத்தார் அப்போஸ்தலர்களைப் பயமுறுத்திவிட்டுவிட்டார்கள் (அப் 4:21). ஆனால் இப்போதோ அவர்களைப்பிடித்து பொதுவான சிறைச்சாலையில் வைத்திருக்கிறார்கள். அப்போது ஆலோசனைச்சங்கத்தார் ஜனங்களுக்குப் பயந்தார்கள். இப்போதோ பிரதான ஆசாரியனும் சதுசேயரும் அப்போஸ்தலரைப் பயமுறுத்துகிறார்கள்.

ஜனங்கள் அப்போஸ்தலரை மேன்மைப்படுத்துகிறார்கள். இதனால் பிரதான ஆசாரியனுக்கும் சதுசேயருக்கும் அப்போஸ்தலர்மீது பொறாமையுண்டாயிற்று. அவர்களுடைய மேன்மையைக் கெடுக்கும் வண்ணமாக அப்போஸ்தலர்களைப் பிடித்து பொதுவான சிறைச்சாலையில் வைக்கிறார்கள்.

கர்த்தருடைய தூதன்

கர்த்தருடைய தூதன் இராத்திரியிலே சிறைச்சாலையின் கதவுகளைத் திறந்து, அவர்களை வெளியே கொண்டு வந்து: நீங்கள் போய், தேவாலயத்திலே நின்று, இந்த ஜீவவார்த்தைகள் எல்லாவற்றையும் ஜனங்களுக்குச் சொல்லுங்கள் என்றான் (அப் 5:19,20).

பிரதான ஆசாரியனும் சதுசேய சமயத்தாரும் அப்போஸ்தலர்களைப் பிடித்து பொதுவான சிறைச்சாலையிலே வைத்திருக்கிறார்கள். கர்த்தருடைய தூதன் இராத்திரியிலே சிறைச்சாலையின் கதவைகளைத் திறந்து, அவர்களை விடுவித்து, அவர்களை வெளியே கொண்டு வருகிறான். சிறைச்சாலையோ மிகுந்த பத்திரமாய்ப் பூட்டப்பட்டிருக்கிறது. காவற்காரர் வெளியே கதவுகளுக்கு முன்நிற்கிறார்கள். இத்தனை காவல்களுக்கும் மத்தியில், கர்த்தருடைய தூதன் அப்போஸ்தலரை விடுவித்து அற்புதமாக வெளியே கொண்டுவருகிறான்.

சிறைச்சாலை எவ்வளவு இருட்டாக இருந்தாலும், அதற்குப் பாதுகாப்பு எவ்வளவு பலமாகயிருந்தாலும், அதன் கதவுகள் எவ்வளவு பத்திரமாய்ப் பூட்டப்பட்டிருந்தாலும், கதவுகளுக்கு முன் எத்தனை காவற்காரர்கள் காவல்காத்துக் கொண்டிருந்தாலும், கர்த்தரைத் தடைபண்ண எந்த சக்தியாலும் எந்த வல்லமையாலும் முடியாது. கர்த்தருடைய பிள்ளைகள் எங்கு சிறைவைக்கப்பட்டிருந்தாலும், தேவன் அங்கு வந்து அவர்களை விடுதலைசெய்ய வல்லவராகவும், நல்லவராகவும் இருக்கிறார்.

தேவதூதன் அப்போஸ்தலரை சிறைச்சாலைக்கு வெளியே கொண்டுவந்து, "நீங்கள் போய் தேவாலயத்திலே நின்று, இந்த ஜீவவார்த்தைகளெல்லாவற்றையும் ஜனங்களுக்குச் சொல்லுங்கள்" என்று சொல்லுகிறான். அப்போஸ்தலர்கள் கர்த்தருடைய வல்லமையினால் அற்புதமாக விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். கர்த்தருடைய வசனத்தைத் தைரியமாய்ப் பிரசங்கம்பண்ணுவதற்காகவே அவர்கள் விடுதலைசெய்யப்பட்டிருக்கிறார்கள்.

சிறைச்சாலையின் கஷ்டங்களிலிருந்து அப்போஸ்தலரை விடுவித்து, அவர்களை சொகுசாய் வாழவைக்கவேண்டும் என்பது தேவனுடைய சித்தமல்ல. இதற்காக கர்த்தருடைய தூதன் இராத்திரியிலே சிறைச்சாலைக்கு வந்து, அதன் கதவுகளைத் திறந்து அவர்களை வெளியே கொண்டுவரவில்லை. சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கப்பட்டதினால், அப்போஸ்தலரின் பாடுகளும் வேதனைகளும் சிறிது குறைந்திருக்கலாம். அதேவேளையில் தேவனுடைய நாமமகிமைக்காகவும், அவருடைய ஊழியத்தில் பங்கு பெறுவதற்காகவுமே அப்போஸ்தலர்கள் சிறைச்சாலையிலிருந்து அற்புதமாக விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள்.

தேவன் தம்முடைய கிருபையினால் நம்மில் அநேகருடைய வியாதிகளைச் சொஸ்தமாக்குகிறார், பிரச்சனைகளிலிருந்து விடுதலைபண்ணுகிறார். கட்டுக்களிலிருந்து விடுவிக்கிறார். இந்த ஆசீர்வாதங்களையெல்லாம் நாம் பெற்றுக்கொண்டு, நாம் சொகுசாய் வாழ்க்கையை அனுபவிக்கவேண்டுமென்பது தேவனுடைய சித்தமல்ல. தேவன் மெய்யாகவே நம்முடைய வேதனைகளிலிருந்து நம்மை விடுவிக்க விரும்புகிறார்.

அதே வேளையில் நம்முடைய பாடுகளிலிருந்தும், சரீர வியாதிகளிலிருந்தும் நாம் தேவனால் விடுவிக்கப்படும்போது, நம்முடைய ஜீவியத்தின் மூலமாக தேவனுடைய நாமம் மகிமைப்படவேண்டும், நாம் அவருடைய ஊழியத்தில் பங்குபெறவேண்டும் என்பதே தேவன் நம்மை ஆசீர்வதிப்பதன் நோக்கமாயிருக்கிறது. தேவனுடைய ஆசீர்வாதத்தை மாத்திரம் பெற்றுக்கொண்டு, அவர் நம்மிடத்தில் சொல்லும் வார்த்தைகளுக்கு நாம் கீழ்ப்படியாமல் போவது மிகப்பெரிய தவறு.

கர்த்தருடைய தூதன் அப்போஸ்தலரிடம் ஜீவவார்த்தைகளைத் தேவாலயத்திலே பிரசங்கம்பண்ணுமாறு சொல்லுகிறான். ஏற்கெனவே ஜனங்கள் மத்தியில் வெளிப்படையாக இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணியதற்காகத்தான், பிரதான ஆசாரியரும் சதுசேயரும் அப்போஸ்தலரைப்பிடித்து சிறைச்சாலையில் வைத்திருக்கிறார்கள். இப்போது அவர்கள் மறுபடியும் தேவாலயத்திலே நின்று கிறிஸ்துவின் வார்த்தைகளைப் பிரசங்கம்பண்ணினால், நிச்சயமாகவே அவர்களுக்கு அதிகப்படியான தண்டனை கிடைப்பதற்கு வாய்ப்புள்ளது.

இப்படிப்பட்ட சூழ்நிலையில், அப்போஸ்தலர்கள் தேவாலயத்தில் பிரசங்கம்பண்ணாமல், ஏதாவது ஒரு ரகசியமான இடத்தில், ஏதாவது ஒரு ஓரமான இடத்தில் இருக்கும் வீட்டில், அதன் கதவுகளைப் பூட்டிக்கொண்டு பிரசங்கம்பண்ணினால் அப்போஸ்தலருக்குப் பாதுகாப்பாகயிருக்கும் என்று ஒரு சிலர் நினைக்கலாம். ஆனால் அது தேவனுடைய சித்தமல்ல. கர்த்தருடைய தூதன் அப்போஸ்தலர்களிடம் "நீங்கள் போய் தேவாலயத்திலே நின்று, இந்த ஜீவவார்த்தைகளெல்லாவற்றையும் ஜனங்களுக்குச் சொல்லுங்கள்" என்று சொல்லுகிறான்.

கர்த்தருடைய தூதன் அப்போஸ்தலர்களை வீட்டுக்குப்போகச் சொல்லவில்லை. தேவாலயத்திற்குப் போகச்சொல்லுகிறான். அங்குதான் அவர்கள் ஜீவவார்த்தைகளை ஜனங்களுக்குப் பிரசங்கம் பண்ண வேண்டும். தேவாலயம்தான் பிதாவின் வீடு. கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நாம், இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷச் செய்தியை தெரு முனைகளில் மாத்திரம் பிரசங்கம்பண்ணினால் போதாது. அங்கும் பிரசங்கம்பண்ணவேண்டும். ஆலயத்திலும் பிரசங்கம்பண்ணவேண்டும். ஜனங்கள் கூடிவரும் மற்ற இடங்களிலும் பிரசங்கம்பண்ணவேண்டும். திரளான ஜனங்கள் கூடியிருக்கும்போது அங்கு அவர்கள் மத்தியில் சுவிசேஷச் செய்தியைப் பிரசங்கம்பண்ணுவதைத் தவிர்த்துவிடக்கூடாது.

அப்போஸ்தலர்கள் ஜனங்களுக்கு ஜீவவார்த்தைகளைச் சொல்லவேண்டும். யாரெல்லாம் சுவிசேஷத்தைக் கேட்பதற்கு வாஞ்சையோடிருக்கிறார்களோ அவர்கள் எல்லோருக்கும் பிரசங்கம்பண்ணவேண்டும். யாரெல்லாம் போதிக்கப்படுவதற்கு ஆயத்தமாகயிருக்கிறார்களோ, அவர்கள் எல்லோருக்கும் போதிக்கவேண்டும். யாருடைய ஆத்துமாக்களெல்லாம் இயேசுகிறிஸ்துவுக்கு முக்கியமானதாக யிருக்கிறதோ அந்த ஆத்துமாக்களுக்கெல்லாம் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவேண்டும்.

கர்த்தருடைய தூதன் அப்போஸ்தலரிடம் "நீங்கள் போய், நின்று" ஜீவவார்த்தைகளைச் சொல்லுங்கள் என்று சொல்லுகிறான். நின்று பேசுவது என்பது தைரியமாகப் பேசுவதைக் குறிப்பிடும். அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியினால் நிறைந்து, ஆவியானவரின் வல்லமையினாலும் அபிஷேகத்தினாலும் சுவிசேஷச் செய்தியை அறிவிக்கவேண்டும். பிரசங்கம்பண்ணுகிற செய்தியை முழுநிச்சயத்தோடும், உறுதியோடும் பேசவேண்டும். ஏனோதானோவென்று பிரசங்கம்பண்ணக்கூடாது. நாம் பேசுவது தெளிவாக இருக்கவேண்டும். வார்த்தைகள் அதைக் கேட்போருக்குப் புரியவேண்டும். வார்த்தையில் உறுதியிருக்கவேண்டும். உயிர் இருக்கவேண்டும். பயந்து நடுங்கிக்கொண்டு பேசக்கூடாது. தைரியமாகப் பேசவேண்டும்.

அப்போஸ்தலர்கள் பிரசங்கம் பண்ணவேண்டிய செய்தியையும் கர்த்தருடைய தூதன் அவர்களிடத்தில் சொல்லுகிறான். அவர்கள் ஜீவவார்த்தைகளெல்லாவற்றையும் சொல்லவேண்டும். இதே ஜீவவார்த்தைகளைத் தங்களுடைய இருதயத்தில் ஏற்றுக்கொண்டுதான் அப்போஸ்தலர்கள் தேவனுடைய ஆறுதலைப்பெற்றிருக்கிறார்கள். அதே ஜீவவார்த்தைகளையே அப்போஸ்தலர்களும் ஜனங்களிடத்தில் சொல்லவேண்டும். ஓரளவு சொன்னால் போதாது. ஜீவவார்த்தைகளெல்லாவற்றையும் சொல்லவேண்டும். இப்பிரபஞ்சத்தின் பாவத்தையும், பரலோகத்தின் ஆசீர்வாதத்தையும் அப்போஸ்தலர்கள் ஜனங்களிடத்தில் ஒப்பிட்டுச் சொல்லவேண்டும். பாவம் செய்யும் ஆத்துமா சாகவே சாகும் என்பதையும் ஜனங்களிடத்தில் தெளிவுபடுத்தி, இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களுக்கு நித்திய ஜீவன் உண்டு என்னும் ஆசீர்வாதத்தையும் அவர்களுக்கு உறுதிபண்ணவேண்டும்.

சுவிசேஷச் செய்தி சாதாரண செய்தியல்ல. அது நம்முடைய ஜீவனோடும் மரணத்தோடும் சம்பந்தமுள்ள செய்தி. இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டால் நித்திய ஜீவனும், ஏற்றுக்கொள்ளவில்லையென்றால் நித்திய மரணமும் நமக்கு உண்டு. சுவிசேஷச்செய்தி நம்முடைய நித்திய வாழ்க்கையையே தீர்மானிக்கிறது. ஆகையினால் ஜீவவார்த்தைகளைப் பிரசங்கம்பண்ணுகிற ஊழியக்காரர்கள், அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து, முழுமனதோடும், அக்கரையோடும், அபிஷேகத்தோடும் பிரசங்கம் பண்ணவேண்டும்.

அப்போஸ்தலர்கள் ஜீவவார்த்தைகளெல்லாவற்றையும் ஜனங்களிடத்தில் சொல்லவேண்டுமென்று கர்த்தருடைய தூதன் அவர்களிடத்தில் சொல்லுகிறான். ஜீவவார்த்தைகளில் எதையும் அப்போஸ்தலர்கள் மறைத்து வைக்கக்கூடாது. அரைகுறையாக பிரசங்கம்பண்ணக்கூடாது. கர்த்தருடைய ஊழியக்காரர்கள் எப்போதுமே முழுசத்தியத்தையும் பிரசங்கம்பண்ண வேண்டும். கிறிஸ்துவுக்குச் சாட்சியாகயிருக்கிறவர்கள் முழு சத்தியத்தையும் பேசுவார்கள். எதையும் மூடிமறைக்கமாட்டார்கள்.

போதகம்பண்ணினார்கள்

அவர்கள் அதைக்கேட்டு, அதிகாலமே தேவாலயத்தில் பிரவேசித்துப் போதகம் பண்ணினார்கள். பிரதான ஆசாரியனும் அவனுடனேகூட இருந்தவர்களும் வந்து, ஆலோசனைச் சங்கத்தாரையும் இஸ்ரவேல் புத்திரரின் மூப்பரெல்லாரையும் வரவழைத்து, அப்போஸ்தலர்களைக் கொண்டு வரும்படி, சிறைச்சாலைக்குச் சேவகரை அனுப்பினார்கள் (அப் 5:21).

அப்போஸ்தலர்கள் கர்த்தருடைய தூதன் சொன்ன வார்த்தையைக்கேட்டு, அதிகாலமே தேவாலத்தில் பிரவேசித்து, ஜனங்களுக்கு ஜீவவார்த்தைகளெல்லாவற்றையும் குறித்து போதகம்பண்ணுகிறார்கள். அவர்கள் மறுபடியும் தேவாலயத்திலுள்ள சாலொமோனுடைய மண்டபத்தில் திரும்பி வந்து பிரசங்கம்பண்ணுகிறார்கள்.

கர்த்தருடைய தூதன் சொன்ன வார்த்தையினால் அப்போஸ்தலருடைய ஊழியம் மறுபடியும் உறுதிபண்ணப்படுகிறது. புதிய அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்கிறார்கள். அவர்களுடைய ஊழிய வாஞ்சை அதிகரிக்கிறது. கர்த்தருடைய தூதன் தேவாலயத்திலே நின்று ஜீவவார்த்தைகளைப் பிரசங்கம்பண்ணுமாறு சொன்னான். அவனுடைய உத்தரவு தெளிவாகயிருக்கிறது.

அப்போஸ்தலருக்கு ஊழிய வாசல் திறந்திருக்கிறது. எந்தவிதமான பிரச்சனையுமில்லாமல் அப்போஸ்தலர்கள் தேவாலயத்திற்குள் பிரவேசிக்கிறார்கள். அப்போஸ்தலரிடத்தில் மனுஷர் பயம் எதுவுமில்லை. பிரதான ஆசாரியரோ, சதுசேய சமயத்தாரோ, அல்லது வேறு யாரோ அவர்களைத் தடைபண்ணவில்லை. அப்போஸ்தலர்கள் அதிகாலமே தேவாலத்தில் பிரவேசித்துப் போதகம்பண்ணுகிறார்கள்.

கர்த்தர் நமக்குக்கொடுக்கும் ஊழியத்தைச் செய்யவேண்டும். நாம் செய்கிற ஊழியத்தில் நமக்கே திருப்தியுண்டாகவேண்டும். முழுமனதோடு ஊழியம் செய்யவேண்டும். ஊழியத்தில் நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரம் ஆகிய மூன்றும் முழுமையாக ஈடுபடவேண்டும். நம்முடைய பாதுகாப்புக்கு நாம் கர்த்தரையே சார்ந்திருக்கவேண்டும். ஊழியத்தின் தேவைகளையும் கர்த்தரே சந்திக்கவேண்டுமென்று, எல்லாவற்றையும் அவருடைய பாதத்தில் ஒப்புக்கொடுக்கவேண்டும். ஊழியம் செய்வதில் காலதாமதம்பண்ணக்கூடாது. கர்த்தருடைய தூதன் இராத்திரியிலே அப்போஸ்தலரிடத்தில் தேவாலயத்தில் போய் ஊழியம் செய்யுமாறு சொன்னான். அப்போஸ்தலர்கள் அதைக்கேட்டு, காலதாமதம் பண்ணாமல், அதிகாலமே தேவாலயத்தில் பிரவேசித்து போதகம்பண்ணுகிறார்கள்.

போதகம்பண்ணும்போது தங்களுக்கு எதிர்ப்பு உண்டாகுமோ, தங்களுக்குப் பாதிப்பு உண்டாகுமோ என்று அப்போஸ்தலர்கள் பயப்படவில்லை. அவர்கள் ஜனங்கள் மத்தியில் தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்துப் போகதம்பண்ணுகிறார்கள். கர்த்தர் சுவிசேஷத்தின் பொக்கிஷத்தை அப்போஸ்தலருடைய கையில் ஒப்புக்கொடுத்திருக்கிறார். சமயம் கிடைக்கும்போதெல்லாம் அப்போஸ்தலர்கள் சுவிசேஷச் செய்தியைப் பிரசங்கம்பண்ணவேண்டும். காலத்தை வீணாக்கிவிடக்கூடாது. அமைதியாக இருந்துவிடக்கூடாது. கர்த்தர் ஊழிய வாசலைத் திறக்கும்போது, நாம் அதைப் பயன்படுத்தாமல் சோம்பேறியாகப் படுத்துக்கொள்ளக்கூடாது.

கர்த்தர் நமக்கு நன்மை செய்ய வாய்ப்புக் கொடுக்கும்போது நாம் அதை மனப்பூர்வமாகச் செய்யவேண்டும். நமக்கு மனுஷர் மூலமாக பாடுகளும், கஷ்டங்களும், பயமுறுத்தல்களும் வரலாம். அவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்காமல் கர்த்தருக்கு மாத்திரம் முக்கியத்துவம் கொடுத்து அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியவேண்டும். கர்த்தர் கொடுக்கும் வாய்ப்புக்களைத் தவறவிட்டுவிடக்கூடாது. கர்த்தருடைய தூதன் தங்களிடத்தில் சொன்ன பிரகாரமாக, அப்போஸ்தலர்கள் உடனடியாக தேவாலயத்திற்குப்போய் ஊழியம் செய்கிறார்கள்.

பிரதான ஆசாரியனும் சதுசேய சமயத்தாரும் அப்போஸ்தலர்களைப் பிடித்து சிறைச்சாலையில் வைத்தார்கள். அப்போஸ்தலர்கள் இன்னும் சிறைச்சாலையில்தான் இருக்கிறார்களென்று இவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அப்போஸ்தலர்களையோ கர்த்தருடைய தூதன் சிறைச்சாலையிலிருந்து விடுவித்து, வெளியே கொண்டு வருகிறான். தேவாலயத்தில்போய் ஜனங்களுக்கு ஜீவவார்த்தை களெல்லாவற்றையும் சொல்லுமாறு அவர்களிடத்தில் சொல்லுகிறான். அப்போஸ்தலரும் கர்த்தருடைய தூதன் சொன்னபிரகாரம் அதிகாலமே தேவாலத்தில் பிரவேசித்து போதகம்பண்ணுகிறார்கள். நடைபெறும் இந்தச் சம்பவம் எதுவும் பிரதான ஆசாரியருக்கோ, சதுசேய சமயத்தருக்கோ தெரியவில்லை. அப்போஸ்தலர்கள் இன்னும் சிறைச்சாலையில் வைக்கப் பட்டிருப்பதாகவே நினைக்கிறார்கள்.

பிரதான ஆசாரியனும் அவனுடனே கூடயிருந்தவர்களும் ஆலோசனைச் சங்கத்தைக் கூட்டுகிறார்கள். இது சாதாரணமாகக் கூடும் ஆலோசனைச்சங்கமல்ல. இந்தச் சங்கம் விசேஷமாகக் கூட்டப்படுகிறது. இதில் ஆலோசனைச்சங்கத்தாரும், அவர்களோடு இஸ்ரவேல் புத்திரரின் மூப்பரெல்லாரும் வரவழைக்கப் படுகிறார்கள். இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தையும், அவருடைய ஊழியக்காரர்களையும் தடுத்து நிறுத்துவதற்கு இவர்களெல்லோரும் ஒன்றுசேருகிறார்கள். சுவிசேஷத்திற்கு விரோதமாக இவர்கள் எழும்பி நிற்கிறார்கள்.

இதற்கு முன்பு ஆலோசனைச்சங்கம் கூட்டப்பட்டபோது, அந்தச் சங்கத்தில் ஒரு சிலர் மாத்திரமே கூடியிருந்தார்கள். பிரதான ஆசாரியனாகிய அன்னாவும், காய்பாவும், யோவானும், அலெக்சந்தரும், பிரதான ஆசாரியருடைய குடும்பத்தாரும், ஜனங்களுடைய அதிகாரிகளும், மூப்பரும் வேதபாரகரும் மாத்திரமே அந்த ஆலோசனைச்சங்கத்தில் கூடியிருந்தார்கள். பேதுரு கட்டப்பட்டவனாக அவர்களுக்கு முன்பு நிறுத்தப்பட்டான். ஆனால் இப்போது கூடியிருக்கிற ஆலோசனைச்சங்கமோ, மிகவும் விசேஷித்த வழியில் கூட்டப்பட்டிருக்கிறது. ஆலோசனைச்சங்கத்திலுள்ள எல்லா அங்கத்தினர்களும், அவர்களோடு இஸ்ரவேல் புத்திரரின் மூப்பர்களாகிய தலைவர்களெல்லோரும் இந்தச் சங்கத்திற்கு வரவழைக்கப் பட்டிருக்கிறார்கள்.

பிரதான ஆசாரியர் மத்தியில் அப்போஸ்தலரைக் குறித்துப் பயமுண்டாயிற்று. ஆகையினால் அவர் தனியாக அப்போஸ்தலரை விசாரிப்பதற்குப் பதிலாக, யூதமார்க்கத்துத் தலைவர் களெல்லோரையும் வரவழைக்கிறார்கள். இதுவும் தேவனுடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாகவே நடைபெறுகிறது. யூதமார்க்கத்தின் தலைவர்களெல்லோரையும், ஆலோசனைச் சங்கத்தில் கூடிவரச்செய்து, அவர்களுக்கு முன்பாக அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைச் சாட்சியாய் அறிவிக்கவேண்டுமென்பது தேவனுடைய சித்தமாயிற்று.

அப்போஸ்தலர்கள் யூதமார்க்கத்தின் தலைவர்களுக்கு விரோதமாகப் பேசப்போகிறார்கள். தங்களுக்கு விரோதமாகப் பேசப்படும் வார்த்தைகளைக் கேட்பதற்காகவே இவர்கள் கூடி வந்திருக்கிறார்கள். அப்போஸ்தலர்களின் சாட்சியும் யூதமார்க்கத்துத் தலைவர்கள் அனைவருக்கும் வெளியரங்கமாக அறிவிக்கப்படுகிறது. ஏதாவது ஒரு வழியில் ஜனங்கள் தம்முடைய சுவிசேஷத்தைக் கேட்பதற்கு, கர்த்தர் வாசல்களைத் திறந்துகொடுக்கிறார்.

சிறைச்சாலையிலே

சேவகர் போய், சிறைச்சாலையிலே அவர்களைக் காணாமல், திரும்பிவந்து: சிறைச்சாலை மிகுந்த பத்திரமாய்ப் பூட்டப்பட்டிருக்கவும், காவற்காரர் வெளியே கதவுகளுக்குமுன் நிற்கவும் கண்டோம்; திறந்தபொழுதோ உள்ளே ஒருவரையும் காணோம் என்று அறிவித்தார்கள் (அப் 5:22,23).

பிரதான ஆசாரியனும் சதுசேய சமயத்தாரும் அப்போஸ்தலரைப் பொதுவான சிறைச்சாலைலே வைத்தார்கள். மறுநாளில் அவர்கள் ஆலோசனைச்சங்கத்தைக் கூட்டி, அப்போஸ்தலர்களைக் கொண்டு வரும்படிசிறைச்சாலைக்கு சேவகரை அனுப்பினார்கள். ஆனால் முந்தின நாள் இராத்திரியிலே, அப்போஸ்தலர்கள் பொதுவான சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்தபோது, கர்த்தருடைய தூதன் சிறைச்சாலையின் கதவுகளைத் திறந்து அவர்களை வெளியே கொண்டுவந்தான். தேவாலயத்திலே நின்று இயேசுகிறிஸ்துவைப்பற்றிய ஜீவவார்த்தை களெல்லாவற்றையும் ஜனங்களுக்குச் சொல்லுமாறு கர்த்தருடைய தூதன் அப்போஸ்தலரிடம் சொன்னான்.

அவர்கள் அதைக்கேட்டு அதிகாலமே தேவாலயத்தில் பிரவேசித்துப் போதகம்பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அது தெரியாமல் சேவகர்கள் அப்போஸ்தலர்களைக் கொண்டு வரும்படி சிறைச்சாலைக்குப் போகிறார்கள். சிறைச்சாலையிலே அப்போஸ்தலர்களைக் காணாமல் அவர்கள் திரும்பி ஆலோசனைச்சங்கத்தாரிடம் வருகிறார்கள்.

சேவகர்கள் ஏமாற்றமுள்ளவர்களாய், மிகுந்த அவமானத்தோடு திரும்பி வருகிறார்கள். சிறைச்சாலையிலே தாங்கள் கண்டதையும், காணமுடியாமல் போனதையும் ஆலோசனைச்சங்கத்தாரிடம் சொல்லுகிறார்கள். சிறைச்சாலை மிகுந்த பத்திரமாய்ப் பூட்டப்பட்டிருப்பதை இவர்கள் கண்டார்கள். காவற்காரர் வெளியே கதவுகளுக்கு முன் நிற்பதையும் இவர்கள் கண்டார்கள். அந்தக் கதவைத் திறந்து உள்ளே பார்த்தபோதோ, சிறைச்சாலைக்குள்ளே ஒருவரையும் காணோம். சிறையில் அடைக்கப்பட்டிருந்த அப்போஸ்தலர்களை அவர்களால் காணமுடியவில்லை.

கர்த்தருடைய தூதன் அப்போஸ்தலர்களைச் சிறைச் சாலையிலிருந்து வெளியே கொண்டுவந்தான். எந்த வழியாக வெளியே கொண்டுவந்தான் என்பது தெரியவில்லை. ஆனால் அவன் சிறைச்சாலையின் கதவுகளைத் திறந்துதான் அப்போஸ்தலர்களை வெளியே கொண்டுவந்தான். நமக்குத் தெரியாத காரியங்கள் கர்த்தருக்கு மாத்திரமே தெரியும். கர்த்தர் தம்முடைய பிள்ளைகளைச் சோதனைகளிலிருந்து விடுவிக்கிறார். கர்த்தர் தம்முடைய நாமத்தினிமித்தமாக, தம்முடைய பரிசுத்தவான்களை அவர்களுடைய பாவக் கட்டுக்களிலிருந்து விடுதலைபண்ணுகிறார். கர்த்தர் நமக்குச் செய்யும் காரியங்களெல்லாமே அற்புதமாகவும் அதிசயமாகவும் இருக்கிறது. "இதென்னமாய் முடியுமோ" என்று நாமும் ஆச்சரியப்படுகிறோம். நம்மைப் பார்க்கிற பிறரும் ஆச்சரியப்படுகிறார்கள். கர்த்தரால் கூடாத காரியம் ஒன்றுமில்லை.

கலக்கமடைந்தார்கள்

இந்தச் செய்தியை ஆசாரியனும் தேவாலயத்தைக் காக்கிற சேனைத்தலைவனும் பிரதான ஆசாரியர்களும் கேட்டபொழுது, இதென்னமாய் முடியுமோ என்று, அவர்களைக்குறித்துக் கலக்கமடைந்தார்கள் (அப் 5:24).

சேவகர்கள் சிறைச்சாலைக்குப்போய் அங்கு தாங்கள் கண்டதையும், அப்போஸ்தலர்கள் ஒருவரையும் அங்கு காணோம் என்பதையும் ஆலோசனைச் சங்கத்தாரிடம் சொல்லுகிறார்கள். இந்தச் செய்தியைக் கேட்டு ஆசாரியனும், தேவாலயத்தைக் காக்கிற சேனைத்தலைவனும், பிரதான ஆசாரியர்களும் அப்போஸ்தலர்களைக் குறித்து கலக்கமடைகிறார்கள். "இதென்னமாய் முடியுமோ" என்று புலம்புகிறார்கள். இது மெய்யாகவே நடைபெற்றதா என்று சந்தேகப்படுகிறார்கள். இதை அவர்களால் நம்பவும் முடியவில்லை. சிறைச்சாலைக்குப் போய்வந்த சேவகர்கள் இப்படிச் சொல்வதினால், இதை நம்பாமலும் இருக்க முடியவில்லை.

ஆசாரியர்கள் எதை நிச்சயமாக நம்புகிறார்களோ அது அவர்களை ஏமாற்றமடையச் செய்திருக்கிறது. அப்போஸ்தலர்கள் சிறைச்சாலையில்தான் இருக்கிறார்களென்று அவர்கள் நம்பினார்கள். ஆனால் அவர்களோ அங்கு இல்லை. இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமாக ஆசாரியர்கள் எப்பொதெல்லாம் கிரியை செய்தார்களோ அப்போதெல்லாம் அவர்களுக்கு ஏமாற்றமே உண்டாயிற்று. கிறிஸ்துவுக்கும் அவருடைய ஊழியத்திற்கும் விரோதமாக யாரும் எதிர்த்து நின்று ஜெயிக்க முடியாது. ஊழியம் கர்த்தருடையது.

போதகம்பண்ணுகிறார்கள்

அப்பொழுது ஒருவன் வந்து: இதோ, நீங்கள் காவலில் வைத்த மனுஷர் தேவாலயத்திலே நின்று ஜனங்களுக்குப் போதகம்பண்ணுகிறார்கள் என்று அவர்களுக்கு அறிவித்தான் (அப் 5:25).

அப்போஸ்தலர்கள் எங்கு இருக்கிறார்கள் என்னும் செய்தியை ஒருவன் அவர்களிடத்தில் வந்து சொல்லுகிறான். இதனால் அவர்களுடைய ஆச்சரியமும் குழப்பமும் அதிகமாயிற்று. அவர்கள் சிறைச்சாலையில் இருக்கிறார்களென்று ஆசாரியர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களோ தேவாலயத்திலே நின்று ஜனங்களுக்குப் போதகம்பண்ணிக்கொண்டிருக்கிறார்கள்.

தேவாலயத்தில் ஊழியம் செய்யவேண்டியவர்கள் ஆசாரியர்கள் ஆலோசனைச் சங்கத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள். கர்த்தரோ தம்முடைய அப்போஸ்தலரை ஆலயத்திற்கு அழைத்துச் சென்று ஊழியத்தில் பயன்படுத்துகிறார். கர்த்தர் நமக்குக் கொடுக்கும் ஊழியத்தை நாம் பொறுப்பாகச் செய்யவில்லையென்றால், நம்முடைய இடத்தில் வேறொருவரைக் கொண்டுவந்து தம்முடைய ஊழியத்தை நிறைவேற்றுவார்.

சிறைச்சாலையின் வரலாற்றில் பல கைதிகள் தப்பித்து வெளியேறி இருக்கிறார்கள். அவர்கள் சிறைச்சாலைக் கதவுகளை உடைத்துக்கொண்டு தப்பி ஓடிவிடுவார்கள். ஆனால் அப்போஸ்தலர்களோ சிறைச்சாலையின் கதவுகளை உடைக்கவில்லை. அவை தேவனுடைய வல்லமையினால் திறக்கிறது. கர்த்தர் மாத்திரமே பூட்டக்கூடாதபடி திறக்கிறவரும், திறக்கக்கூடாதபடி பூட்டுகிறவருமாயிருக்கிறார். கதவுகள் திறந்திருக்கிறது. அப்போஸ்தலர்கள் சிறைச்சாலையை விட்டு வெளியேறிப்போய்விட்டார்கள். ஆனால் சிறைச்சாலை மிகுந்த பத்திரமாய்ப் பூட்டப்பட்டிருக்கிறது. காவற்காரர் வெளியே கதவுகளுக்கு முன் விழித்திருந்து காவல்காக்கிறார்கள். இதுதான் கர்த்தருடைய கிருபை. இதுவே அவருடைய தெய்வீக வல்லமை.

பிரதான ஆசாரியன்
அப் 5 : 26-28

அப் 5:26. உடனே சேனைத்தலைவன் சேவகரோடே கூடப் போய், ஜனங்கள் கல்லெறிவார்களென்று பயந்ததினால், பலவந்தம்பண்ணாமல் அவர்களை அழைத்துக் கொண்டுவந்தான்.

அப் 5:27. அப்படி அவர்களை அழைத்துக் கொண்டு வந்து, ஆலோசனைச் சங்கத்துக்கு முன்பாக நிறுத்தினார்கள். அப்பொழுது பிரதான ஆசாரியன் அவர்களை நோக்கி:

அப் 5:28. நீங்கள் அந்த நாமத்தைக்குறித்துப் போதகம் பண்ணக்கூடாதென்று நாங்கள் உங்களுக்கு உறுதியாய்க் கட்டளையிடவில்லையா? அப்படியிருந்தும், இதோ, எருசலேமை உங்கள் போதகத்தினாலே நிரப்பி, அந்த மனுஷனுடைய இரத்தப்பழியை எங்கள்மேல் சுமத்தவேண்டுமென்றிருக்கிறீர்கள் என்று சொன்னான்.

பலவந்தம்பண்ணாமல்

உடனே சேனைத்தலைவன் சேவகரோடே கூடப் போய், ஜனங்கள் கல்லெறிவார்களென்று பயந்ததினால், பலவந்தம்பண்ணாமல் அவர்களை அழைத்துக் கொண்டுவந்தான். அப்படி அவர்களை அழைத்துக் கொண்டு வந்து, ஆலோசனைச் சங்கத்துக்கு முன்பாக நிறுத்தினார்கள். அப்பொழுது பிரதான ஆசாரியன் அவர்களை நோக்கி: (அப் 5:26,27)

கர்த்தருடைய தூதன் சொன்ன பிரகாரம் அப்போஸ்தலர்கள் தேவாலயத்திலே நின்று ஜனங்களுக்குப் போதகம்பண்ணுகிறார்கள். அவர்களுடைய பிரசங்கச் செய்தி என்ன என்பது இங்கு குறிப்பிடப்படவில்லை. அவர்கள் கர்த்தரைக் குறித்த ஜீவவார்த்தைகளெல்லாவற்றையும் ஜனங்களுக்குப் போதித்திருக்கவேண்டும். மிகுந்த வல்லமையோடும் தைரியத்தோடும் போதகம்பண்ணியிருக்க வேண்டும். அவர்கள் பிரசங்கம்பண்ணியபோது தேவனுடைய வல்லமை வெளிப்பட்டிருக்கும். ஆனாலும் அப்போஸ்தலர்கள் சிறைச்சாலையில் பாடுகளை அனுபவித்தபோது, தெய்வீக வல்லமை அதைவிட அதிமாய் வெளிப்பட்டிருக்கிறது.

சேனைத்தலைவன் சேவகரோடு போய் அப்போஸ்தலரை இரண்டாந்தரம் பிடித்து வருகிறான். ஏற்கெனவே அவர்கள் அப்போஸ்தலரைப்பிடித்து பொதுவான சிறைச்சாலையில் வைத்தார்கள். சிறைச்சாலையில் வைக்கப்பட்டவர்கள் இப்போது தேவாலயத்திலிருக்கிறார்கள். சேவகர்கள் மறுபடியும் அப்போஸ்தலரைப் பிடித்து வரப்போகிறார்கள். அவர்களை பலவந்தம்பண்ணாமல், எந்தவித பிரச்சனையும் பண்ணாமல், அவர்களை அழைத்துக்கொண்டு வருகிறார்கள். சேவகர்கள் ஜனங்களுக்குப் பயப்படுகிறார்கள்.

அப்போஸ்தலர் கைகளினாலே அடையாளங்களும் அற்புதங்களும் நடைபெறுகிறது. அங்கு தெய்வீக பிரசன்னம் காணப்படுகிறது. ஜனங்கள் அப்போஸ்தலர்மீது மரியாதை வைத்திருக்கிறார்கள். எல்லாம் ஊழியத்திற்குச் சாதகமாகயிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில், ஜனங்கள் மத்தியிலே அப்போஸ்தலரைப் பலவந்தம்பண்ணி இழுத்துவந்தால் குழப்பமுண்டாகும். ஆகையினால் சேனைத்தலைவனும் சேவகரும், ஜனங்கள் தங்கள்மேல் கல்லெறிவார்கள் என்று பயந்து, அப்போஸ்தலரை பலவந்தம் பண்ணாமல் அழைத்துக்கொண்டு வருகிறார்கள்.

அப்போஸ்தலர்கள் தேவாலயத்தில் நின்று போதகம்பண்ணுகிறார்கள். சேனைத்தலைவனும் சேவகரும் தேவாலயத்தை ஒரு புனிதமான ஸ்தலமாக கருதியதினால், ஒருவேளை அங்கு அப்போஸ்தலரை பலவந்தம்பண்ணாமல் இருந்ததற்கும் வாய்ப்புள்ளது. ஒருவேளை இவர்கள் அப்போஸ்தலருக்குப் பயந்திருக்கலாம். அனனியாவும் சப்பீராளும் செத்துப்போனதுபோல, அப்போஸ்தலரை எதிர்த்து நின்றால் தாங்களும் செத்துப்போவோமென்று சேவகர்கள் பயந்திருப்பதற்கும் வாய்ப்புள்ளது.

அப்போஸ்தலர்கள்மீது ஜனங்கள் மரியாதை வைத்திருப்பதுபோல, சேவகரும் மரியாதை வைத்திருக்கிறார்கள். அவர்களைப் பலவந்தம்பண்ணி இழுத்துப்போனால், ஜனங்கள் சேவகருக்கு விரோதமாகக் கலகம்பண்ணுவார்கள். ஒருவேளை கோபத்தில் அவர்கள்மீது கல்லெறிந்துவிடுவார்கள். இவையெல்லாவற்றையும் யோசித்துப் பார்த்துதான், சேவகர்கள் அப்போஸ்தலரைப் பலவந்தம்பண்ணாமல் அழைத்துக்கொண்டு வருகிறார்கள்.

சேவகர்கள் அப்போஸ்தலரைப் பலவந்தம்பண்ணவில்லை. ஆனால் அவர்கள் அப்போஸ்தலரை யாரிடத்தில் அழைத்துக்கொண்டு வருகிறார்களோ, அவர்கள் அப்போஸ்தலர்மீது மூர்க்க வெறியோடிருக்கிறார்கள். சேவகர்கள் அப்போஸ்தலரை அழைத்துக்கொண்டு வந்து ஆலோசனைச்சங்கத்திற்கு முன்பாக நிறுத்துகிறார்கள். அந்தகார சக்திகளுக்கும் துன்மார்க்கருக்கும் விரோதமாக, கர்த்தருடைய வல்லமை அப்போஸ்தலர் மூலமாக வெளிப்படுகிறது.

போதகம்பண்ணக்கூடாது

நீங்கள் அந்த நாமத்தைக்குறித்துப் போதகம் பண்ணக்கூடாதென்று நாங்கள் உங்களுக்கு உறுதியாய்க் கட்டளையிடவில்லையா? அப்படியிருந்தும், இதோ, எருசலேமை உங்கள் போதகத்தினாலே நிரப்பி, அந்த மனுஷனுடைய இரத்தப்பழியை எங்கள்மேல் சுமத்தவேண்டுமென்றிருக்கிறீர்கள் என்று சொன்னான் (அப் 5:28).

அப்போஸ்தலர்கள் ஆலோசனைச் சங்கத்திற்கு முன்பாக நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். பிரதான ஆசாரியன் அவர்கள்மீது குற்றச்சாட்டைக் கூறுகிறான். அப்போஸ்தலர்கள் ஆலோசனைச் சங்கத்தின் கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் மீறியிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின் நாமத்தைக்குறித்துப் போதகம்பண்ணக் கூடாது என்று ஆலோசனைச்சங்கத்தார் அப்போஸ்தலருக்கு உறுதியாய் கட்டளையிட்டிருந்தார்கள். ஆனால் அப்போஸ்தலர்களோ அவர்களுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியவில்லை.

தாங்கள் சொன்ன கட்டளையை பிரதான ஆசாரியன் அவர்களுக்கு நினைவுபடுத்துகிறான். "நீங்கள் அந்த நாமத்தைக்குறித்து போதகம்பண்ணக்கூடாதென்று நாங்கள் உங்களுக்கு உறுதியாய் கட்டளையிடவில்லையா" என்று கேட்கிறான். மெய்யாகவே அவர்கள் அப்போஸ்தலரிடம் இப்படி கட்டளை கொடுத்திருக்கிறார்கள். கட்டளையிட்டது மெய்தான்.

இயேசுவைக்குறித்துப் போதகம் பண்ணக்கூடாது என்று ஆலோசனைச் சங்கத்தார் அப்போஸ்தலரிடம் சொன்னவுடனேயே, பேதுரு அவர்களிடம், ஆலோசனைச் சங்கத்தாரின் அதிகாரத்தைவிட தேவனுடைய அதிகாரம் பெரிது என்று கூறிவிட்டான். "தேவனுக்கு செவிகொடுக்கிறதைப் பார்க்கிலும் உங்களுக்குச் செவிகொடுக்கிறது தேவனுக்கு முன்பாக நியாயமாயிருக்குமோ என்று நீங்களே நிதானித்துப் பாருங்கள். நாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் பேசாமலிருக்கக் கூடாதே" (அப் 4:19,20) என்று பேதுரு அவர்களிடம் சொன்னதை, ஆலோசனைச் சங்கத்தார்தான் மறந்துவிட்டார்கள்.

இப்போது ஆலோசனைச்சங்கத்தார் ஜனங்கள் மத்தியில் தவறான உபதேசத்தைப் பரப்புகிறார்கள். அப்போஸ்தலர்கள் எருசலேமை தங்கள் போகதத்தினாலே நிரப்புவதாக அவர்கள்மீது குற்றம் சுமத்துகிறார்கள். இதனால் ஜனங்கள் மத்தியில் சந்தோஷம் குறைந்துபோயிற்று என்றும், சமாதானம் நீங்கிப்போயிற்று என்றும், குழப்பமுண்டாயிற்று என்றும் குற்றம் சுமத்துகிறார்கள்.

"அந்த மனுஷனுடைய இரத்தப்பழியை எங்கள்மேல் சுமத்தவேண்டும் என்றிருக்கிறீர்கள்" என்றும் பிரதான ஆசாரியன் அப்போஸ்தலரிடத்தில் குற்றம் சுமத்துகிறான். இயேசுகிறிஸ்துவின் இரத்தப்பழியை அப்போஸ்தலர்கள் யூதமார்க்கத்துத் தலைவர்கள்மீது சுமத்தவில்லை. இயேசுகிறிஸ்துவைச் சிலுவையில் அறையும்படிக்கு ஒப்புக்கொடுத்தபோது, யூதமார்க்கத்தார் இயேசுகிறிஸ்துவின் இரத்தப்பழி தங்கள்மேலும், தங்கள் பிள்ளைகள்மேலும் வரட்டும் என்று இறுமாப்பாகச் சொன்னார்கள். ஆனால் இப்போதோ தாங்கள் சொன்னதை மறந்துவிட்டு, இயேசுகிறிஸ்துவின் இரத்தப்பழியைக் குறித்து அப்போஸ்தலர்மீது குற்றம் சுமத்துகிறார்கள். இயேசுகிறிஸ்துவின் இரத்தப்பழியை அப்போஸ்தலர்கள் யூதமார்க்கத்தார் மீது சுமத்தவில்லை. கிறிஸ்துவின் இரத்தப்பழியை யூதர்கள் தாங்களாகவே தங்கள்மீது வரவழைத்துக்கொண்டார்கள்.

அப்போஸ்தலர்
அப் 5 : 29-32

அப் 5:29. அதற்குப் பேதுருவும் மற்ற அப்போஸ்தலரும்: மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப்பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது.

அப் 5:30. நீங்கள் மரத்திலே தூக்கிக் கொலை செய்த இயேசுவை நம்முடைய பிதாக்களின் தேவன் எழுப்பி,

அப் 5:31. இஸ்ரவேலுக்கு மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் அருளுகிறதற்காக, அவரை அதிபதியாகவும் இரட்சகராகவும் தமது வலதுகரத்தினாலே உயர்த்தினார்.

அப் 5:32. இந்தச் சங்கதிகளைக்குறித்து நாங்கள் அவருக்குச் சாட்சிகளாயிருக்கிறோம்; தேவன் தமக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்குத் தந்தருளின பரிசுத்தஆவியும் சாட்சி என்றார்கள்.

தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே

அதற்குப் பேதுருவும் மற்ற அப்போஸ்தலரும்: மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது (அப் 5:29).

பிரதான ஆசாரியன் அப்போஸ்தலர்மீது குற்றம்சுமத்துகிறான். அவனுக்கு பிரதியுத்தரம் கூறும்விதமாக பேதுருவும் மற்ற அப்போஸ்தலர் எல்லோரும் ஒன்றுசேர்ந்து, ஒருமித்த குரலில், பிரதான ஆசாரியனுக்குப் பதில் சொல்லுகிறார்கள். அப்போஸ்தலர் எல்லோரையும் ஒரே ஆவியானவரே நிரப்பியிருக்கிறார். அவர்கள் ஒரே இருதயமும் ஒரே மனமும் உடையவர்களாக இருக்கிறார்கள். அதனால் அவர்கள் ஒரே கருத்தையே சொல்லுகிறார்கள்.

ஆலோசனைச் சங்கத்தாரின் கட்டளைக்குத் தாங்கள் ஏன் கீழ்ப்படியவில்லை யென்பதற்கான காரணத்தைக் கூறி, தங்களை நியாயப்படுத்துகிறார்கள். "மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் தேவனுக்கு கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது" என்று தங்களுடைய நிலமையை எடுத்துச் சொல்லுகிறார்கள். இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே அப்போஸ்தலர்கள் உபதேசம்பண்ணவேண்டுமென்று தேவன் அவர்களுக்குக் கட்டளைகொடுத் திருக்கிறார். தேவனுடைய கட்டளைக்கு அப்போஸ்தலர்கள் கீழ்ப்படிந்து இயேசுவின் நாமத்தைக் குறித்துப் பிரசங்கம்பண்ண வேண்டும். பிரதான ஆசாரியர் அதற்குத் தடையாக இருந்தாலும், அந்தத் தடையையும்மீறி, தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, இயேசுவின் நாமத்தைக்குறித்து பிரசங்கம்பண்ண அப்போஸ்தலர் ஆயத்தமாயிருக்கிறார்கள்.

தங்களுக்குக் கீழ்ப்படியவில்லை யென்பதற்காக ஆலோசனைச்சங்கத்தார் அப்போஸ்தலரைத் தண்டிக்கிறார்கள். கீழ்ப்படியாதவர்களைத் தண்டிப்பது தேவனுக்கு முன்பாக தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கடமை என்றும் நினைக்கிறார்கள். ஆனால் இவர்களோ தேவனுடைய கட்டளை என்ன என்பதை புரிந்துகொள்ளாதவர்களாக அப்போஸ்தலரைத் தண்டிக்கிறார்கள்.

மெய்யாகவே அப்போஸ்தலர்கள் எருசலேமைத் தங்கள் போதகத்தினால் நிரப்பியிருக்கிறார்கள். இந்தப் போதகம் அப்போஸ்தலருடைய சுயபோதகமல்ல. இது இயேசுகிறிஸ்துவின் போதகம். தம்முடைய நாமத்தைக்குறித்து எருசலேமில் பிரசங்கம்பண்ண வேண்டுமென்று இயேசுகிறிஸ்து அப்போஸ்தலருக்குக் கட்டளைகொடுத்திருக்கிறார். கிறிஸ்துவின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, எருசலேமை அவருடைய போதகத்தினால் நிரப்புகிறார்கள். இதில் தவறு ஒன்றுமில்லையென்று அப்போஸ்தலர்கள் உறுதியாயிருக்கிறார்கள். அப்போஸ்தலருடைய போகத்தின் மூலமாக இயேசுகிறிஸ்துவின் இரத்தப்பழி பிரதான ஆசாரியர்மீது வருமென்றால் அதற்கு அப்போஸ்தலர்கள் பொறுப்பாகமாட்டார்கள். பிரதான ஆசாரியர் தாங்கள் செய்த பாவத்தின் பலனையே அனுபவிக்கிறார்கள்.

பிதாக்களின் தேவன்

நீங்கள் மரத்திலே தூக்கிக் கொலை செய்த இயேசுவை நம்முடைய பிதாக்களின் தேவன் எழுப்பி, இஸ்ரவேலுக்கு மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் அருளுகிறதற்காக, அவரை அதிபதியாகவும் இரட்சகராகவும் தமது வலதுகரத்தினாலே உயர்த்தினார் (அப் 5:30,31).

பேதுருவும் அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியரிடத்தில், நேருக்கு நேராக, அவர்களுடைய முகத்திற்கு நேராக, அவர்கள் இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமாகச் செய்த பாவத்தை, அவர்களிடத்தில் தைரியமாக எடுத்துச்சொல்லுகிறார்கள். "நீங்கள் இயேசுவை மரத்திலே தூக்கி கொலை செய்தீர்கள்" என்று பிரதான ஆசாரியர் இயேசுவுக்குச் செய்ததை அவர்களிடத்தில் சொல்லுகிறார்கள். பொதுவாக தவறு செய்கிற ஜனங்கள், தாங்கள் செய்த தவற்றை, மற்றவர்கள் தங்களிடத்தில் சொல்லுவதை விரும்பமாட்டார்கள். அதைப்பற்றி தங்கள் செவிகளால் கேட்கவும் பிரியப்படமாட்டார்கள். ஆனாலும் அப்போஸ்தலர்கள் பிரதான ஆசாரியர் செய்த தப்பிதங்களை அவர்களுக்குச் சொல்லாமல் மறைத்துவைக்கவில்லை. சத்தியத்தைத் தைரியமாக அறிவிக்கிறார்கள்.

தங்களுடைய பாவங்களை ஆசாரியர்களால் தாங்கிக்கொள்ளமுடியாது என்பதற்காக, அவர்களுடைய பாவங்களை அவர்களிடத்தில் சொல்லாமல் இருக்கமுடியாது. பல சமயங்களில் பாவங்களை எடுத்துச்சொன்னால், அதைக் கேட்கிறவர்கள் தாங்கிக்கொள்ளமாட்டார்கள் என்று நினைத்து, அவர்களுடைய பாவங்களைப்பற்றிப் பேசாமலேயே இருந்துவிடுகிறோம். ஏதாவது காரணம் சொல்லுகிறோம். சாக்குப்போக்கு ஏதாவது சொல்லி பாவத்தைப்பற்றிப் பேசுவதைத் தவிர்த்துவிடுகிறோம்.

கர்த்தர் நமக்கு பாவத்தைக்குறித்து கண்டித்து உணர்த்தும் ஊழியத்தைக் கொடுத்திருப்பாரென்றால், தயங்காமல் அந்த ஊழியத்தைச் செய்யவேண்டும். பாவத்தைப்பற்றிப் பேசினால், அதைக் கேட்கிறவர்கள் தாங்கிக்கொள்வார்களா என்றெல்லாம் யோசிக்கக்கூடாது. அவர்கள் தாங்கித்தான் ஆகவேண்டும். பாவத்தை உணர்த்தும் காலம் இப்போது வந்திருக்கிறது.

பிரதான ஆசாரியர் இயேசுவை மரத்திலே தூக்கிக் கொலை செய்தார்கள். ஆனால் தேவனோ இயேசுவை உயர்த்திக் கனம்பண்ணியிருக்கிறார். இயேசுகிறிஸ்து உயர்த்தப்பட்டிருப்பதினால், எது நியாயம் என்பதை பிரதான ஆசாரியரே தீர்மானம்பண்ணவேண்டும். தேவனுக்கு முன்பாக யார் பிரியமாக நடந்துகொள்கிறார்கள் என்பதையும் அவர்களே முடிவுபண்ணவேண்டும்.

இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தைப் போதிக்கிறவர்களா, அல்லது கிறிஸ்துவின் உபதேசத்திற்கு எதிர்த்து நின்று, அவருடைய ஊழியக்காரர்களை துன்பப்படுத்துகிறவர்களா, இவர்களில் யார் கர்த்தருக்குப் பிரியமானவர்கள் என்பதை பிரதான ஆசாரியர் தீர்மானம்பண்ணவேண்டும்.

பேதுருவும் அப்போஸ்தலரும் தேவனைப்பற்றிக் குறிப்பிடும்போது "நம்முடைய பிதாக்களின் தேவன்" என்று சொல்லுகிறார்கள். அவர் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகிய முற்பிதாக்களின் தேவனாகயிருக்கிறார். அதே தேவன் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகவும் இருக்கிறார். பிதாவானவர் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை நான்கு விதங்களில் கனப்படுத்தியிருக்கிறார். அவையாவன: 1. தேவன் இயேசுகிறிஸ்துவை எழுப்பியிருக்கிறார். 2. தேவன் இயேசுகிறிஸ்துவை தமது வலதுகரத்தினாலே உயர்த்தியிருக்கிறார். 3. தேவன் இயேசுகிறிஸ்துவை அதிபதியாகவும் இரட்சகராகவும் நியமித்திருக்கிறார். 4. இஸ்ரவேலுக்கு மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் அருளுகிறதற்காக தேவன் இயேசுகிறிஸ்துவை நியமித்திருக்கிறார்.

யூதமார்க்கத்துத் தலைவர்கள் இயேசுகிறிஸ்துவை மரத்திலே தூக்கிக் கொலைசெய்தார்கள். ஆனால் தேவனோ இயேசுகிறிஸ்துவுக்கு அவருடைய ஜீவனைத் திரும்பவும் கொடுத்தார். யூதர்கள் இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமாக யுத்தம்பண்ணினார்கள். தேவனோ இயேசுகிறிஸ்துவுக்காக யுத்தம்பண்ணுகிறார். இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள், தங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்காக ஊழியம் செய்கிறார்கள்.

தேவன் தமது வலதுகரத்தினாலே இயேசுகிறிஸ்துவை உயர்த்தினார். யூதர்கள் இயேசுவை அவமானப் படுத்தினார்கள். பரியாசம்பண்ணினார்கள். முகத்திலே துப்பினார்கள். ஆனால் தேவனோ இயேசுகிறிஸ்துவை மகிமையினால் முடிசூட்டியிருக்கிறார். தேவன் கனப்படுத்தியிருக்கிற இயேசுகிறிஸ்துவை, தாங்களும் கனப்படுத்துவது நீதியாகயிருக்கிறது என்று அப்போஸ்தலர்கள் பிரதான ஆசாரியரிடம் எடுத்துச் சொல்லுகிறார்கள். எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை தேவன் இயேசுகிறிஸ்துவுக்கு கொடுத்திருக்கிறார்.

தேவன் இயேசுகிறிஸ்துவை அதிபதியாகவும் இரட்சகராகவும் நியமித்திருக்கிறார். நாம் இயேசுகிறிஸ்துவை நம்முடைய அதிபதியாக ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயிருக்கவேண்டும். அவரை நம்முடைய ஜீவியத்திற்கு அதிபதியாகவும் ஆண்டவராகவும் அங்கீகரிக்கவில்லையென்றால், இயேசுகிறிஸ்து நம்முடைய ஆத்துமாவிற்கு இரட்சகராக இருக்கமாட்டார். இயேசுகிறிஸ்து நம்மை ஆளுகை செய்யவேண்டும். நம்மை ஆளுகை செய்யுமாறு, இயேசுகிறிஸ்துவிடம் நம்மை ஒப்புக்கொடுக்கவில்லையென்றால், இயேசு நம்மை இரட்சிப்பாரென்றோ, கனப்படுத்துவாரென்றோ எதிர்பார்க்க முடியாது.

நாம் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கும்போது, அவருடைய பூரண ஆள்தத்துவத்தை விசுவாசிக்கவேண்டும். அவருடைய எல்லா குணாதிசயங்களையும் ஏற்றுக்கொள்ளவேண்டும். இயேசுகிறிஸ்து நம்முடைய பாவத்தில் நம்மை இரட்சிப்பதற்காக இந்தப் பூமிக்கு வரவில்லை. நம்முடைய பாவத்திலிருந்து நம்மை இரட்சிப்பதற்காகவே இயேசு இந்தப் பூமிக்கு வந்தார்.

இஸ்ரவேலுக்கு மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் அருளுகிறதற்காக தேவன் இயேசுகிறிஸ்துவை நியமித்திருக்கிறார். ஆகையினால் இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் அவருடைய நாமத்தினாலே, இஸ்ரவேல் ஜனங்களுக்கு மனந்திரும்புதலின் செய்தியையும், பாவமன்னிப்பையும், இரட்சிப்பின் நற்செய்தியையும் பிரசங்கம்பண்ணவேண்டும்.

தேவனுடைய விசேஷித்த கிருபையும் சிலாக்கியமும் இஸ்ரவேல் ஜனங்களுக்கே முதன்முதலாகக் கிடைத்தது. இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதே தேவனுக்குப் பிரியம். அப்படியிருக்கும்போது இஸ்ரவேலின் மூப்பர்களும் அதிகாரிகளும், அவர்களை ஆசீர்வதிக்கிற இயேசுகிறிஸ்துவுக்கு எதிர்த்து நிற்கக்கூடாது. இயேசுகிறிஸ்து இஸ்ரவேலுக்கு அருளுகிற மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் பெற்றுக்கொள்ளாமல் அவற்றை ஏளனம்பண்ணக் கூடாது. புறக்கணித்துவிடக்கூடாது.

இஸ்ரவேல் ஜனங்கள் தங்களுக்கு மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் தேவையில்லை என்று நினைக்கிறார்கள். இஸ்ரவேலர் மனந்திரும்பி பாவமன்னிப்பைப் பெற்றுக்கொண்டால் அவர்களுக்கு தேவனுடைய ஆசீர்வாதம் கிடைக்கும். ஆனால் அவர்களோ அதைப்பற்றி அக்கரையில்லாதவர்களாக இருக்கிறார்கள். மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எப்போதுமே இணைந்திருக்கும். மனந்திரும்புதல் உண்டாகும்போது பாவமன்னிப்பு உண்டாகும். மனந்திரும்புதல் இல்லாமல் பாவமன்னிப்பு இல்லை.

இயேசுகிறிஸ்துவே இஸ்ரவேலுக்கு மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் அருளுகிறார். இதை அருளுவதற்காகவே தேவன் இயேசுகிறிஸ்துவை நியமித்திருக்கிறார். நாம் மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் பெற்றுக் கொள்வதற்கு ஆயத்தமாகயிருக்கிறோமா என்பதுதான் நமக்கு முக்கியமானது. இயேசுகிறிஸ்துவே நமக்கு புதிய இருதயத்தைக் கொடுக்கிறவர் இது அவருடைய ஊழியம். இயேசுகிறிஸ்துவின் கிருபாதார பலியினாலே நமக்கு நொறுங்குண்ட ஆவி கொடுக்கப்படுகிறது. இயேசுகிறிஸ்து நமக்கு மனந்திரும்புதலைக் கொடுக்கிறார். இயேசுகிறிஸ்து நமக்கு மனந்திரும்புதலைக் கொடுத்துவிட்டு, நமக்கு பாவமன்னிப்பைக் கொடுக்காவிட்டால், அவர் தம்முடைய சொந்தக் கிரியையையே மறுதலிப்பதாக ஆகிவிடும். இயேசுகிறிஸ்து ஒருபோதும் இதுபோல முரண்பட்டு கிரியை நடப்பிக்கிறவரல்ல. இயேசுகிறிஸ்துவின் கிரியை எப்போதும் ஒழுங்கும் கிரமமாகவும், பரிபூரணமாகவும் இருக்கும்.

சாட்சிகளாயிருக்கிறோம்

இந்தச் சங்கதிகளைக்குறித்து நாங்கள் அவருக்குச் சாட்சிகளாயிருக்கிறோம்; தேவன் தமக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்குத் தந்தருளின பரிசுத்தஆவியும் சாட்சி என்றார்கள் (அப் 5:32).

பிரதான ஆசாரியர் இயேசுகிறிஸ்துவை மரத்திலே தூக்கிக் கொலை செய்ததற்கும், தேவன் இயேசுவை உயிரோடு எழுப்பியதற்கும் தாங்கள் சாட்சிகளாகயிருப்பதாக அப்போஸ்தலர்கள் அறிக்கை செய்கிறார்கள். தேவன் இயேசுவை அதிபதியாகவும் இரட்சகராகவும் நியமித்திருப்பதற்கும், தேவன் தமது வலதுகையினாலே இயேசுகிறிஸ்துவை உயர்த்தியிருப்பதற்கும், இஸ்ரவேலுக்கு மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் அருளுகிறதற்காக தேவன் இயேசுகிறிஸ்துவை நியமித்திருப்பதற்கும் தாங்கள் சாட்சிகளாகயிருப்பதாக அப்போஸ்தலர்கள் அறிக்கை செய்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துவைக் குறித்து பேசக்கூடாது என்று யூதருடைய ஆலோசனைச்சங்கத்தார் அப்போஸ்தலரை கட்டுப்பாடு பண்ணுகிறார்கள். அவர்களுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, இயேசுகிறிஸ்துவை அறிவிக்காமல் அமைதியாக இருந்தால், தாங்கள் இயேசுகிறிஸ்துவுக்கு துரோகம்பண்ணுகிறவர்களாக யிருப்போம் என்று அப்போஸ்தலர்கள் பிரதான ஆசாரியருக்குத் தெளிவுபடுத்துகிறார்கள்.

வழக்கு விசாரணையில், ஒரு வழக்கு விசாரிக்கப்படும்போது, அது தொடர்பான சாட்சிகள் மௌனமாக இருக்கக்கூடாது. ஏனெனில் வழக்கின் தீர்ப்பு சாட்சிகளுடைய வாக்குமூலத்தை ஆதாரமாக வைத்தே வழக்கப்படும். அப்போஸ்தலர்கள் இயேசுகிறிஸ்துவைக் குறித்த சங்கதிகளுக்கு சாட்சிகளாகயிருக்கிறார்கள்.

அப்போஸ்தலர்கள் மாத்திரமல்ல, தேவன் தமக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்குத் தந்தருளின பரிசுத்த ஆவியும் இயேசுகிறிஸ்துவைப்பற்றிய சங்கதிகளைக் குறித்து சாட்சியாகயிருக்கிறார். அப்போஸ்தலர்கள் இயேசுகிறிஸ்துவுக்கு இந்தப் பூமியிலிருந்து சாட்சிகளாகயிருக்கிறார்கள். பரிசுத்த ஆவியானவரோ இயேசுகிறிஸ்துவுக்கு பரலோகத்திலிருந்து சாட்சியாக இருக்கிறார். தேவன் அப்போஸ்தலர்களை பரிசுத்த ஆவியினால் நிரப்பியிருக்கிறார். ஆவியானவரின் கிரியைக்கு விரோதமாக அப்போஸ்தலரால் யுத்தம்பண்ண முடியாது. இவர்களால் ஆவியானவருக்கு எதிர்த்து நிற்கவும் முடியாது.

தேவனுக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்கு மாத்திரமே, தேவன் பரிசுத்த ஆவியைத் தந்தருளுகிறார். கீழ்படிதலுள்ள விசுவாசிகளுக்கு மாத்திரமே இந்த ஆசீர்வாதம் கொடுக்கப்படுகிறது. தாங்கள் விசுவாசிக்கிற காரியங்களுக்குக் கீழ்ப்படிவதற்காக மாத்திரமல்ல, தாங்கள் விசுவாசிப்பதைத் தைரியமாக சாட்சியாக அறிவிப்பதற்கும் தேவன் தம்முடைய பிள்ளைகளுக்குப் பரிசுத்த ஆவியானவரை அருளியிருக்கிறார். விசுவாசிகள் தங்களுடைய விசுவாசத்தை வெளிப்படுத்த வேண்டும். அமைதியாக அடக்கி வைத்துக்கொண்டிருக்கக் கூடாது. தேவனுடைய நாமமகிமைக்காக விசுவாசிகள் கிரியை நடப்பிக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவுக்காகத் தைரியமாய் சாட்சிசொல்லவேண்டும்.

இயேசு கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்குத் தேவன் பரிசுத்த ஆவியைத் தந்தருளுகிறார். ஆகையினால் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியவேண்டுமென்பது தேவனுடைய சித்தமாயிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் மனுஷருக்குக் கீழ்ப்படியவேண்டுமா அல்லது தேவனுக்குக் கீழ்ப்படியவேண்டுமா என்பதை ஆலோசனைச்சங்கத்தாரே தீர்மானம் பண்ணவேண்டுமென்று அப்போஸ்தலர்கள் அவர்களிடம் எடுத்துச்சொல்லுகிறார்கள்.

கமாலியேல்
அப் 5 : 33-40

அப் 5:33. அதை அவர்கள் கேட்டபொழுது, மூர்க்கமடைந்து, அவர்களைக் கொலைசெய்யும்படிக்கு யோசனைபண்ணினார்கள்.

அப் 5:34. அப்பொழுது சகல ஜனங்களாலும் கனம்பெற்ற நியாயசாஸ்திரியாகிய கமாலியேல் என்னும் பேர்கொண்ட ஒரு பரிசேயன் ஆலோசனைச் சங்கத்தில் எழுந்திருந்து, அப்போஸ்தலரைச் சற்றுநேரம் வெளியே கொண்டுபோகச்சொல்லி,

அப் 5:35. சங்கத்தாரை நோக்கி: இஸ்ரவேலரே, இந்த மனுஷருக்கு நீங்கள் செய்யப் போகிறதைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்.

அப் 5:36. ஏனென்றால் இந்நாட்களுக்கு முன்னே தெயுதாஸ் என்பவன் எழும்பி, தன்னை ஒரு பெரியவனாகப் பாராட்டினான்; ஏறக்குறைய நானூறுபேர் அவனைச் சேர்ந்தார்கள்; அவன் மடிந்துபோனான்; அவனை நம்பின அனைவரும் சிதறி, அவமாய்ப்போனார்கள்.

அப் 5:37. அவனுக்குப்பின்பு, குடிமதிப்பின் நாட்களிலே, கலிலேயனாகிய யூதாஸ் என்பவன் எழும்பி, தன்னைப் பின்பற்றும்படி அநேக ஜனங்களை இழுத்தான்; அவனும் அழிந்துபோனான்; அவனை நம்பியிருந்த அனைவரும் சிதறடிக்கப்பட்டார்கள்.

அப் 5:38. இப்பொழுது நான் உங்களுக்குச் சொல்லுகிறதென்னவென்றால், இந்த மனுஷருக்கு ஒன்றுஞ்செய்யாமல் இவர்களை விட்டுவிடுங்கள். இந்த யோசனையும் இந்தக் கிரியையும் மனுஷரால் உண்டாயிருந்ததானால் ஒழிந்துபோம்;

அப் 5:39. தேவனால் உண்டாயிருந்ததேயானால், அதை ஒழித்துவிட உங்களால் கூடாது; தேவனோடே போர்செய்கிறவர்களாய்க் காணப்படாதபடிக்குப் பாருங்கள் என்றான்.

அப் 5:40. அப்பொழுது அவர்கள் அவனுடைய யோசனைக்கு உடன்பட்டு, அப்போஸ்தலரை வரவழைத்து, அடித்து, இயேசுவின் நாமத்தைக்குறித்துப் பேசக்கூடாதென்று கட்டளையிட்டு, அவர்களை விடுதலையாக்கினார்கள்.

மூர்க்கமடைந்து

அதை அவர்கள் கேட்டபொழுது, மூர்க்கமடைந்து, அவர்களைக் கொலைசெய்யும்படிக்கு யோசனை பண்ணினார்கள் (அப் 5:33).

யூதருடைய ஆலோசனைச் சங்கத்திற்கு முன்பாக அப்போஸ்தலர்கள் தங்களுடைய நியாயத்தை எடுத்துப் பேசுகிறார்கள். இயேசுகிறிஸ்துவின்மீது தாங்கள் வைத்திருக்கும் விசுவாசத்தையும் அவர்களுக்கு எடுத்துச்சொல்லுகிறார்கள். இயேசுகிறிஸ்துவைப்பற்றிய சங்கதிகளைக் குறித்துத் தாங்களும், பரிசுத்த ஆவியானவரும் சாட்சிகளாக யிருப்பதாகவும் தைரியமாய்ச் சொல்லுகிறார்கள். தங்களுடைய கிரியைகள் தேவனுக்கு முன்பாக நியாயமானது என்று ஆலோசனைச் சங்கத்தாரிடம் எடுத்துச்சொல்லுகிறார்கள். அப்போஸ்தலர் சொல்லுகிற சங்கதிகள் நியாயமானது. ஆகையினால் ஆலோசனைச்சங்கத்தார் அவர்களை விடுவித்துவிடவேண்டும். ஆனால் அவர்களோ மூக்கமடைகிறார்கள்.

அப்போஸ்தலருடைய வார்த்தைகளைக் கேட்டபொழுது, ஆலோசனைச்சங்கத்தார் மூர்க்கமடைந்து, அவர்களைக் கொலைசெய்யும்படிக்கு யோசனைபண்ணுகிறார்கள். ஆலோசனைச் சங்கத்தாருடைய பாவங்களை அப்போஸ்தலர்கள் அவர்களுக்கு விவரித்துச் சொல்லுகிறார்கள். இதனால் அவர்கள் மூர்க்கமடைகிறார்கள். அப்போஸ்தலர்கள்மீது ஆலோசனைச் சங்கத்தாருக்கு கொலைவெறி உண்டாயிற்று.

கிறிஸ்துவின் சுவிசேஷம் ஜீவனுள்ளது. வல்லமை மிகுந்தது. இதை ஆலோசனைச் சங்கத்தாரும் உணருகிறார்கள். இதனாலும் ஆலோசனைச்சங்கத்தாருக்கு இயேசு கிறிஸ்துவின்மீதும், அவருடைய உபதேசத்தின்மீதும், அவருடைய அப்போஸ்தலர்மீதும் கோபமுண்டாயிற்று.

இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷச் செய்தியை நாம் பயபக்தியோடு பிரசங்கிக்கும்போது, அந்த நற்செய்தியைக் கேட்கிறவர்களின் இருதயம் ஆசீர்வதிக்கப்படும். சுவிசேஷத்தைக் கேட்கிறவர்கள் பாவம் செய்தவர்களாக இருப்பார்களென்றால், அவர்களுடைய இருதயத்தில் அவர்கள் குத்தப்படுவார்கள் (அப் 2:37). ஆலோசனைச்சங்கத்தார் சுவிசேஷச் செய்தியைக் கேட்டபோது அவர்கள் தங்களுடைய இருதயத்தில் குத்தப்பட்டவர்களாக இருக்கிறார்கள். மூர்க்கமடைகிறார்கள்.

ஆலோசனைச்சங்கத்தாரின் பாவம் உணர்த்தப்படுகிறது. அவர்கள் இயேசுகிறிஸ்துவை மரத்திலே தூக்கிக் கொலைசெய்தார்கள். தாங்கள் செய்த பாவத்திற்காக அவர்கள் மனந்திரும்பி பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்ளவேண்டும். ஆனால் அவர்களோ தங்கள் இருதயத்தைக் கடினப்படுத்துகிறார்கள். அப்போஸ்தலர்மீது மூர்க்கமடைகிறார்கள். அவர்களைக் கொலை செய்யும்படிக்கு யோசனைபண்ணுகிறார்கள்.

அப்போஸ்தலர்கள் இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்யும்போது அவர்களுக்குத் தெய்வீக பாதுகாப்பு கிடைக்கிறது. அவர்களுடைய சிந்தை தெளிவடைகிறது. தெளிந்த சிந்தையோடு சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணுகிறார்கள். ஆனால் அப்போஸ்தலர்களைத் துன்பப்படுத்து கிறவர்களோ இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறார்கள். அவர்களுடைய சிந்தை குழப்பத்திலிருக்கிறது. தெளிந்த சிந்தனையில்லாமல் ஆலோசனைச் சங்கத்தார் தங்களைத் தாங்களே வருத்திக்கொள்கிறார்கள். தங்களுக்குத் தாங்களே பிரச்சனையாக இருக்கிறார்கள்.

கமாலியேல் என்ற நியாயசாஸ்திரி

அப்பொழுது சகல ஜனங்களாலும் கனம்பெற்ற நியாயசாஸ்திரியாகிய கமாலியேல் என்னும் பேர்கொண்ட ஒரு பரிசேயன் ஆலோசனைச் சங்கத்தில் எழுந்திருந்து, அப்போஸ்தலரைச் சற்றுநேரம் வெளியே கொண்டுபோகச்சொல்லி, (அப் 5:34)

ஆலோசனைச்சங்கத்தில் கமாலியேல் என்னும் பேர்கொண்ட ஒரு நியாயசாஸ்திரி இருக்கிறான். யூதமார்க்கத்தில் இவன் பரிசேயர் வகுப்பைச் சேர்ந்தவன். சிறந்த வேதபண்டிதன். அப்போஸ்தலர் பவுல் கமாலியேலின் பாதபடியில் அமர்ந்து வேதவாக்கியத்தை கற்றுக்கொண்டவர் (அப் 22:3). கமாலியேல் சகல ஜனங்களாலும் கனம்பெற்றிருக்கிறான். கூட்டத்தோடு கூட்டமாக பேசாமல், தெளிந்த சிந்தனையோடு பேசுகிறவன். நியாயத்தை நிதானித்துப் பார்த்து தெளிவாக தன் கருத்துக்களைச் சொல்லுகிறவன். ஆலோசனைச்சங்கத்தார் தவறாக ஆலோசனைபண்ணும்போது அவர்களுடைய தவறுகளை கமாலியேல் திருத்துகிறவன்.

துன்மார்க்கர் மத்தியில் கமாலியேலைப்போல நல்லவர்களும் இருக்கிறார்கள். அவர்களுடைய தப்பிதங்களை சாதுரியமாய் அவர்களுக்குச் சுட்டிக்காட்டுகிறார்கள். துன்மார்க்கரைக் கட்டுப்படுத்த ஒருவரும் ஆலோசனை சொல்லவில்லையென்றால், அவர்கள் எல்லோரையும் சீரழித்துவிடுவார்கள். அவர்களுடைய துன்மார்க்கத்திற்கு அளவே இருக்காது. உலகமே அவர்களுடைய அநீதியினால் பற்றியெரியும்.

கமாலியேல் ஆலோசனைச்சங்கத்தில் எழுந்திருந்து தன்னுடைய கருத்தைச் சொல்லுகிறான். அப்போஸ்தலரைச் சற்று நேரம் வெளியே கொண்டு போகச் சொல்லுகிறான்.

இஸ்ரவேலரே

சங்கத்தாரை நோக்கி: இஸ்ரவேலரே, இந்த மனுஷருக்கு நீங்கள் செய்யப் போகிறதைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள் (அப் 5:35).

கமாலியேல் ஆலோசனைச்சங்கத்தாரை நோக்கி, அவர்களை "இஸ்ரவேலரே" என்று அழைக்கிறான். அப்போஸ்தலருக்கு அவர்கள் செய்யப்போகிறதைக் குறித்து எச்சரிக்கையாக இருக்குமாறு அவர்களிடத்தில் சொல்லுகிறான். ஆலோசனைச்சங்கத்தாரை "இஸ்ரவேலரே" என்று கூப்பிடும்போதே, கமாலியேலின் எச்சரிப்பு வார்த்தை ஆரம்பமாயிற்று. ஆலோசனைச்சங்கத்தார் சாதாரண மனுஷராகயிருந்தாலும், அவர்கள் நியாயமாகச் செயல்படவேண்டும். நீதியினால் ஆளுகை செய்யப்படவேண்டும். ஆலோசனைச்சங்கத்தாரோ சாதாரண மனுஷரைவிட விசேஷித்தவர்கள். அவர்கள் தேவனால் தெரிந்தெடுக்கப்பட்ட இஸ்ரவேல் ஜனங்கள். தேவனுடைய வெளிப்பாடு இஸ்ரவேல் ஜனங்களை ஆளுகை செய்யவேண்டும். ஆகையினால் அவர்கள் செய்யப்போகிறதைக் குறித்து எச்சரிக்கையாக இருக்குமாறு கமாலியேல் அவர்களை எச்சரிக்கிறான்.

தேவனுடைய பிள்ளைகளைத் துன்புறுத்துகிறவர்கள் தங்களைத் தாங்களே நிதானித்துப் பார்க்கவேண்டும். தங்களைச் சோதித்தறியவேண்டும். ஏனெனில் தேவனுக்கும் அவருடைய பிள்ளைகளுக்கும் விரோதமாகக் கிரியை செய்கிறவர்கள், தாங்கள் விரித்த வலையில் தாங்களே விழுவார்கள், தாங்கள் வைத்த கண்ணியில் தாங்களே சிக்கிக்கொள்வார்கள், தாங்கள் வெட்டிய குழியில் தாங்களே விழுவார்கள்.

தெயுதாஸ்

ஏனென்றால் இந்நாட்களுக்கு முன்னே தெயுதாஸ் என்பவன் எழும்பி, தன்னை ஒரு பெரியவனாகப் பாராட்டினான்; ஏறக்குறைய நானூறுபேர் அவனைச் சேர்ந்தார்கள்; அவன் மடிந்துபோனான்; அவனை நம்பின அனைவரும் சிதறி, அவமாய்ப்போனார்கள் (அப் 5:36).

கமாலியேல் ஆலோசனைச் சங்கத்தாரிடம் இரண்டு மனுஷரைப்பற்றிப் பேசுகிறான். அவர்களில் ஒருவன் தெயுதாஸ். மற்றொருவன் கலிலேயனாகிய யூதாஸ். இவர்கள் இருவரும் தங்களைப் பெரியவர்களாகக் காண்பித்துக்கொண்டார்கள். ஆனால் தேவனோ இவர்களை அங்கீகரிக்கவில்லை. ஆகையினால் இவர்கள் மரித்தபோது இவர்களுடைய பேரும் புகழும் அவர்களோடே மரித்துப்போயிற்று. அவர்களை நம்பியிருந்த அனைவரும் மோசம்போனார்கள்.

தெயுதாஸ் என்பவன் தன்னை ஒரு பெரியவனாகப் பாராட்டினான். ஜனங்கள் மத்தியிலே தன்னைப் பெரியவனாகக் காண்பித்துக்கொண்டான். ஏறக்குறைய நானூறுபேர் தெயுதாசைச் சேர்ந்தார்கள். ஆனால் அவன் கட்டிய கற்பனைக் கோட்டை விரைவில் இடிந்துபோயிற்று. அவன் மடிந்துபோனான். அதன் பின்பு அவனை நம்பின அனைவரும் சிதறி அவமாய்ப் போனார்கள். தெயுதாஸ் கொலைசெய்யப்பட்டதினால் அவனுடைய பெருமையும் அழிந்துபோயிற்று. அவனைச் சேர்ந்தவர்களும் அவமாய்ப் போனார்கள்.

யூதருடைய ஆலோசனைச்சங்கத்தார் இயேசுகிறிஸ்துவை மரத்திலே தூக்கிக் கொலைசெய்தார்கள். இயேசுகிறிஸ்து தம்முடைய சுயமகிமையைப் பேசி, தம்மை ஒரு பெரியவராகப் பெருமை பாராட்டியிருந்தால், அவர் மரித்துப்போனபோது, அவரை நம்பின அனைவரும் சிதறி அவமாய்ப் போயிருப்பார்கள். தம்முடைய மரணத்திற்கு இயேசுகிறிஸ்துவே காரணமாகயிருந்திருப்பார். இயேசு கிறிஸ்துவைக் கொன்ற பாவம் யூதர்கள்மீது வந்திருக்காது. ஆனால் இயேசுகிறிஸ்துவோ தம்மை ஒரு பெரியவராகக் காண்பித்துக்கொள்ளவில்லை. அவர் தேவனிடத்திலிருந்து வந்தவர். தேவனுடைய சித்தத்தை மாத்திரமே செய்தவர். இயேசுகிறிஸ்து தம்மை சுயமாய் மேன்மைப்படுத்தவில்லை. பிதாவானவரே இயேசுகிறிஸ்துவை மேன்மைப்படுத்தியிருக்கிறார்.

ஆகையினால் யூதர்கள் இயேசுவை மரத்திலே தூக்கிக் கொலைசெய்தபோதிலும், அவரை நம்பினவர்கள் சிதறி அவமாய்ப் போகவில்லை. அப்போஸ்தலர்கள் ஒருமனப்பட்டு ஒன்றுகூடி இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தைத் தொடர்ந்து செய்கிறார்கள். ஆகையினால் ஆலோசனைச்சங்கத்தார் அப்போஸ்தலருக்கு செய்யப்போவதைக் குறித்து எச்சரிக்கையாயிருக்குமாறு, கமாலியேல் அவர்களை எச்சரிக்கிறான்.

கலிலேயனாகிய யூதாஸ்

அவனுக்குப்பின்பு, குடிமதிப்பின் நாட்களிலே, கலிலேயனாகிய யூதாஸ் என்பவன் எழும்பி, தன்னைப் பின்பற்றும்படி அநேக ஜனங்களை இழுத்தான்; அவனும் அழிந்துபோனான்; அவனை நம்பியிருந்த அனைவரும் சிதறடிக்கப்பட்டார்கள் (அப் 5:37).

தெயுதாசைப்போலவே, அவனுக்குப் பின்பு யூதாஸ் என்பவன் எழும்பினான். இவன் ஒரு கலிலேயன். குடிமதிப்பின் நாட்களிலே இவன் எழும்பி, தன்னைப் பின்பற்றும்படி அநேக ஜனங்களை இழுத்தான். இந்தச் சம்பவங்கள் எந்த வருஷத்தில் நடைபெற்றது என்பது தெளிவாகத் தெரியவில்லை. கமாலியேல் ஆலோசனைச்சங்கத்தாரிடம் இவ்விரண்டு சம்பவங்களைப்பற்றிச் சொல்லும்போது, அவர்கள் அதைப் புரிந்துகொள்கிறார்கள். ஆகையினால் அவர்களுடைய நினைவில் இருக்கும் வண்ணமாக, இந்தச் சம்பவங்கள் சமீபத்தில் நடைபெற்றவையாக இருக்கவேண்டும்.

தெயுதாசிடம் ஏறக்குறைய நானூறுபேர் சேர்ந்தார்கள். அவனைப்போலவே கலிலேயனாகிய யூதாசும் அநேக ஜனங்களைத் தன்னைப் பின்பற்றும்படி இழுத்தான். இந்த யூதாசும் அழிந்துபோனான். அவனை நம்பியிருந்த அனைவரும் சிதறடிக்கப்பட்டார்கள். இவனுடைய முயற்சியும் நிலைத்து நிற்கவில்லை.

இந்த யோசனையும் கிரியையும்

இப்பொழுது நான் உங்களுக்குச் சொல்லுகிறதென்னவென்றால், இந்த மனுஷருக்கு ஒன்றுஞ்செய்யாமல் இவர்களை விட்டுவிடுங்கள். இந்த யோசனையும் இந்தக் கிரியையும் மனுஷரால் உண்டாயிருந்ததானால் ஒழிந்துபோம்; (அப் 5:38)

கமாலியேல் இவ்விரண்டு சம்பவங்களையும் ஆலோசனைச் சங்கத்தாரிடம் எடுத்துச் சொல்லி, அப்போஸ்தலரைத் துன்புறுத்தவேண்டாமென்று அவர்களிடம் எச்சரிக்கிறான். அப்போஸ்தலருக்கு ஒன்றும் செய்யாமல் இவர்களை விட்டுவிடுங்களென்று தன்னுடைய ஆலோசனையை ஆலோசனைச் சங்கத்தாரிடம் கமாலியேல் நிதானமாகச் சொல்லுகிறான். ஆலோசனைச்சங்கத்தில் கமாலியேலுக்கு இப்படிப் பேசுவதற்கு உரிமை இருந்ததா, இல்லையா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

அப்போஸ்தலர்களும் யாருக்கும் விரோதமாக கலகம் எதுவும் செய்யவில்லை. அவர்கள் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்செய்து, அவருடைய நாமத்தினாலே அற்புதங்களை நடப்பித்தார்கள். ஜனங்கள் மத்தியிலே கலகத்தை உண்டுபண்ணும் காரியம் எதையும் செய்யவில்லை. அப்படியிருக்கும்போது இந்த அப்போஸ்தலர்களை ஏன் துன்பப்படுத்த வேண்டும் என்பதுதான் கமாலியேலின் ஆலோசனையாக இருக்கிறது.

ஒருவேளை தேவன் கமாலியேலின் வாயில் இந்த வார்த்தைகளைக் கொடுத்திருக்கலாம். கர்த்தருடைய சித்தத்தின்படியே ஒவ்வொரு காரியமும் நடைபெறும். ஆலோசனைச்சங்கத்திற்கு முன்பாக அப்போஸ்தலர்கள் விசாரிக்கப்படும்போது, தம்முடைய பிள்ளைகள் சார்பாக பேச கர்த்தர் ஒருவரை அந்த ஆலோசனைச் சங்கத்திலிருந்தே தெரிந்தெடுத்து, அந்த நபரை பயன்படுத்துகிறார். கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை ஒருபோதும் கைவிடுவதில்லை.

தேவனோடே போர்செய்கிறவர்கள்

தேவனால் உண்டாயிருந்ததேயானால், அதை ஒழித்துவிட உங்களால் கூடாது; தேவனோடே போர் செய்கிறவர்களாய்க் காணப்படாதபடிக்குப் பாருங்கள் என்றான் (அப் 5:39).

அப்போஸ்தலருடைய ஊழியத்தைப் பற்றி கமாலியேல் ஆலோசனைச் சங்கத்தாரிடம் சொல்லும்போது "இந்த யோசனையும் இந்தக் கிரியையும் மனுஷரால் உண்டாயிருந்ததானால் ஒழிந்துபோம். தேவனால் உண்டாயிருந்ததேயானால் அதை ஒழித்துவிட உங்களால் கூடாது" என்று தெளிவாகப் பேசுகிறான். ஆலோசனைச்சங்கத்தாருக்கு அதிகாரம் இருக்கலாம், அவர்களுக்கென்று சட்டங்கள் இருக்கலாம். ஆனாலும் அவர்களால் தேவனோடே போர்செய்யமுடியாது. அப்போஸ்தலருடைய ஊழியம் தேவனால் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் போது, ஆலோசனைச்சங்கத்தாரால் அவர்களை அழித்துவிடமுடியாது.

தெயுதாஸ் என்பவனும், கலிலேயனாகிய யூதாஸ் என்பவனும் அழிந்துபோனார்கள். அவர்களைப் பின்பற்றியவர்களும் சிதறி அவமாய்ப் போனார்கள். அவர்களுடைய யோசனையும் கிரியையும் தேவனால் உண்டாகவில்லை. அவை மனுஷரால் உண்டாயிற்று. ஆகையினால் அது அழிந்துபோயிற்று. ஆனால் அப்போஸ்தலருடைய ஊழியமோ தேவனால் உண்டாயிருக்கிறது. ஆகையினால் அதை ஆலோசனைச்சங்கத்தாரால் ஒழித்து விட முடியாது.

அப்போஸ்தலர்கள் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் மனுஷருக்கு நன்மை செய்கிறார்கள். தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்துகிறார்கள். நன்மை ஒருக்காலும் ஒழிந்துபோகாது. தீமை நிலைத்து நிற்காது. அது அழிந்துபோகும். அப்போஸ்தலரின் ஊழியம் பட்டயம் ஏந்தி யுத்தம்பண்ணுகிற ஊழியமல்ல. அப்போஸ்தலர்கள் தேவனுடைய வார்த்தையினாலும், வல்லமையினாலும் அன்போடும் மனத்தாழ்மையோடும் ஊழியம் செய்கிறார்கள். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சத்தியத்தின் வல்லமையினால் மனுக்குலத்தை ஆளுகை செய்கிறார். அவர் பட்டயத்தினால் நம்மை ஆளுகை செய்வதில்லை.

அப்போஸ்தலருடைய யோசனையும் கிரியையும் மனுஷரால் உண்டாயிருந்ததானால் அது அழிந்துபோகும் என்று கமாலியேல் சொல்லுகிறான். மனுஷனுடைய யோசனை குறைவுள்ளது. மனுஷஞானம் நிலைத்து நிற்பதில்லை. பல சமயங்களில் மனுஷன் மதியீனமாக யோசனை செய்து, மதியீனமான காரியங்களைச் செய்துவிடுவான். மனுஷனுடைய மூச்சு நின்றுபோகும்போது அவனுடைய யோசனையும் நின்றுபோகும். அவனுடைய கிரியைகளும் நின்றுபோகும்.

ராஜாக்களின் அதிகாரங்களும், அதிகாரிகளின் அதிகாரங்களும் நித்தியமானதல்ல. கர்த்தர் மாத்திரமே நித்திய அதிகாரமுள்ளவர். மனுஷன் தனக்கு சர்வ அதிகாரமுள்ளதாக நினைத்துக்கொள்கிறான். கர்த்தர் மாத்திரமே சர்வ அதிகாரமுள்ளவர். தனக்கு அரசியல் செல்வாக்கு இருப்பதினாலும், பணபலம் இருப்பதினாலும் தன்னால் எதையும் செய்யமுடியுமென்று மனுஷன் தவறாக நினைக்கிறான். கர்த்தர் அனுமதிக்கிற காரியம் மாத்திரமே இப்பிரபஞ்சத்தில் நடைபெறும். கர்த்தருக்குச் சித்தமில்லாமல் ஒன்றும் வாய்க்காது. மனுஷனுடைய முயற்சிகள் சிறிதுகாலம் தொடரலாம். அவனுடைய கிரியைகள் சிறிதுகாலம் நிலைத்திருக்கலாம். ஆனாலும் அவை எதுவும் நித்தியமானவையல்ல.

தேவன் இயற்கையின் மூலமாக மனுக்குலத்திற்கு பல ஆசீர்வாதங்களையும் பராமரிப்புக்களையும் கொடுக்கிறார். மனுஷன் தன் சுயபலத்தினால் இயற்கையாக நடைபெறும் காரியத்தை ஒழித்துப்போட முயற்சிபண்ணுகிறான். சில சமயங்களில் வெற்றியும் காண்கிறான். மனுஷன் இப்படிப்பட்ட காரியங்களை ஒழித்துப்போடாவிட்டாலும், ஏற்றவேளை வரும்போது அது தானாகவே ஒழிந்துபோகும். ஏனெனில் தேவன் எல்லாவற்றிற்கும் ஒரு காலத்தை நியமித்திருக்கிறார்.

மனுஷனுக்கு பிறக்க ஒரு காலமும், இறக்க ஒரு காலமும் உண்டு. மனுஷனைக் கொல்லுகிறவன் கொலைபாதகனாக இருக்கிறான். தான் செய்த தவறை உணராதிருக்கிறான். பிறனை கொலைசெய்ததினால் தன்னைத் தானே பெருமைப்படுத்திக்கொள்கிறான். இவன் அவனைக் கொலை பண்ணாவிட்டாலும், காலம் வரும்போது அவன் தானாகவே மரித்துப்போவான். அவன் மாத்திரமல்ல அவனைக் கொலைசெய்தவனும், அவனுடைய வேளை வரும்போது மரித்துப்போவான். இது தேவன் இயற்கையில் நியமித்திருக்கும் நியதியாகும். மனுஷரால் உண்டாகும் யோசனையும், கிரியையும் ஒழிந்துபோகும். ஆனால் தேவனால் உண்டாகும் யோசனையும் கிரியையும் ஒழிந்துபோகாது. அதை ஒழித்துவிட மனுஷனால் முடியாது.

ஆலோசனைச் சங்கத்தார் அப்போஸ்தலர்மீது மூர்க்கமடைந்து, அவர்களை கொலைசெய்யும்படிக்கு யோசனைபண்ணுகிறார்கள் (அப் 5:33). அப்போஸ்தலர்கள் தங்கள் சுயயோசனையினால், கிரியை செய்தால், ஆலோசனைச்சங்கத்தார் அவர்களை எளிதாக அழித்துப்போடலாம். அவர்கள் அழிக்காவிட்டாலும், அப்போஸ்தலருடைய கிரியைகள் மனுஷ யோசனையாக இருக்குமென்றால், அது தானாகவே ஒழிந்துபோகும்.

அதே வேளையில் அப்போஸ்தலருடைய ஊழியம், மனுஷரால் உண்டாயிருந்த யோசனையாகவும், கிரியையாகவும் இராமல், இது தேவனால் உண்டாயிருக்குமானால், அதை ஒழிக்க மனுஷரால் முடியாது. ஏனெனில் தேவனால் உண்டாயிருக்கும் யோசனையையும் கிரியையையும் ஒழித்து விடுவதற்கு மனுஷன் முயற்சிபண்ணினால், அவன் தேவனோடு போர்செய்கிறவனாக இருப்பான்.

ஆலோசனைச் சங்கத்தார் அப்போஸ்தலருடைய ஊழியத்தை ஒழித்துப்போட முயற்சிபண்ணுகிறார்கள். அவர்களுடைய ஊழியம் மனுஷருடைய யோசனையினால் உண்டாயிருக்குமானால் அது தானாகவே ஒழிந்துபோகும். அப்போஸ்தலருடைய ஊழியம் தேவனால் உண்டாயிருக்குமானால் அதை ஆலோசனைச்சங்கத்தாரால் ஒழித்துவிட முடியாது. கர்த்தருடைய ஊழியத்திற்கு எதிர்ப்புக்கள் வரலாம். ஆனால் கர்த்தருடைய ஊழியத்தை அந்தகார வல்லமையினால் மேற்கொள்ள முடியாது.

நாம் தேவனுக்காக உண்மையாய் ஊழியம் செய்யும்போது தேவன் நம்மோடு கூடயிருப்பார். சில சமயங்களில் எதிர்ப்புக்களும், பாடுகளும் நமக்கு வரலாம். நமக்கு வேதனை உண்டாகலாம். ஆனாலும் நாம் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருக்க வேண்டுமென்பதே தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் ஆலோசனையாகும். சத்துருவின் அந்தகார வல்லமையினால் நம்மையோ அல்லது நம்மூலமாக நடைபெறுகிற கர்த்தருடைய ஊழியத்தையோ அழித்துப்போட முடியாது. நமக்கு விரோதமாக கிரியை செய்கிறவர்கள் கர்த்தருக்கு விரோதமாக போர்செய்கிறவர்களாக இருக்கிறார்கள்.

கமாலியேல் ஆலோசனைச் சங்கத்தாருக்கு எச்சரிப்பின் வார்த்தைகளைச் சொல்லுகிறான். அப்போஸ்தலருடைய ஊழியம் தேவனால் உண்டாயிருக்கிறது. அவர்களுடைய ஊழியத்தை ஒழித்துப்போட நினைப்பது, தேவனோடே போர்செய்கிறதற்குச் சமமாயிருக்கும் என்று அவர்களை எச்சரிக்கிறான். கமாலியேல் தன்னுடைய ஆலோசனையின் முடிவில் "தேவனோடே போர்செய்கிறவர்களாய் காணப்படாதபடிக்கு பாருங்கள்" என்று ஆலோசனைச்சங்கத்தாரை எச்சரிக்கிறான்.

கர்த்தருடைய உண்மையான ஊழியக்காரர்களைப் பகைக்கிறவர்களும், அவமானப் படுத்துகிறவர்களும், தடைபண்ணுகிறவர்களும் கர்த்தருக்கு விரோதமாக போர்செய்கிறவர்களாகவே இருக்கிறார்கள். கமாலியேலின் ஆலோசனை ஆலோசனைச் சங்கத்தாருடைய இருதயத்தில் பேசுகிறது. இதற்கு முன்பு ஆலோசனைச்சங்கத்தார் அப்போஸ்தலர்மீது மூர்க்கமடைந்து, அவர்களை கொலைசெய்யும்படிக்கு யோசனைபண்ணினார்கள். இப்போதோ, கமாலியேலின் யோசனைக்குடபட்டு, அப்போஸ்தலரை கொலைசெய்ய வேண்டாம் என்று தீர்மானம்பண்ணுகிறார்கள்.

விடுதலையாக்கினார்கள்

அப்பொழுது அவர்கள் அவனுடைய யோசனைக்கு உடன்பட்டு, அப்போஸ்தலரை வரவழைத்து, அடித்து, இயேசுவின் நாமத்தைக்குறித்துப் பேசக்கூடாதென்று கட்டளையிட்டு, அவர்களை விடுதலையாக்கினார்கள் (அப் 5:40).

கமாலியேலின் யோசனையை ஆலோசனைச் சங்கத்தார் ஓரளவுக்குத்தான் அங்கீகரிக்கிறார்கள். இதற்கு முன்பு அப்போஸ்தலரை கொலைபண்ண வேண்டுமென்று யோசனைபண்ணினார்கள். இப்போது அந்த யோசனையை விட்டுவிடுகிறார்கள். ஆனாலும் அப்போஸ்தலரைத் தண்டிக்காமல் விடுதலைபண்ண ஆலோசனைச்சங்கத்தாருக்கு மனமில்லை. அப்போஸ்தலரை வரவழைத்து அவர்களை அடிக்கிறார்கள். இயேசுவின் நாமத்தைக்குறித்து பேசக்கூடாது என்று அவர்களுக்குக் கட்டளை கொடுக்கிறார்கள்.

அப்போஸ்தலரை அவமானப்படுத்தும் விதமாக ஆலோசனைச்சங்கத்தார் அவர்கள்மீது கடினமான வார்த்தைகளையும் குற்றச்சாட்டுகளையும் சொல்லியிருக்கலாம். ஆனால் அப்போஸ்தலர்களோ தங்களுக்கு அவமானம் உண்டானாலும், இயேசுகிறிஸ்துவின் நாமத்திற்காக தாங்கள் அவமானமடைவதற்கு பாத்திரராக எண்ணப்பட்டதற்காக, அதை சந்தோஷமாய் சகித்துக்கொள்கிறார்கள். கர்த்தரைத் துதிக்கிறார்கள். ஆலோசனைச்சங்கத்தார் அப்போஸ்தலரை அடித்தபோது, அந்த அடிகளை கர்த்தருடைய ஊழியக்காரர்கள் சந்தோஷமாக ஏற்றுக்கொள்கிறார்கள். கர்த்தர் இதை அனுமதித்திருக்கிறாரென்றும், இப்படிப்பட்ட அடிகளை வாங்குவதற்கு கர்த்தர் தங்களைப் பாத்திரராக அங்கீகரித்திருக்கிறார் என்றும் தீர்மானம்செய்து, மிகுந்த சந்தோஷத்தோடே பாடுகளை அனுபவிக்கிறார்கள்.

அப்போஸ்தலர் அப் 5:41,42

அப் 5:41. அவருடைய நாமத்துக்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால், சந்தோஷமாய் ஆலோசனைச் சங்கத்தைவிட்டுப் புறப்பட்டுப்போய்,

அப் 5:42. தினந்தோறும் தேவாலயத்திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம்பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள்.

அவமானமடைவதற்குப் பாத்திரர்

அவருடைய நாமத்துக்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால், சந்தோஷமாய் ஆலோசனைச் சங்கத்தைவிட்டுப் புறப்பட்டுப்போய், (அப் 5:41)

பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலரை தம்முடைய ஆவியினாலும், பெலத்தினாலும், தைரியத்தினாலும் நிரப்புகிறார். ஆலோசனைச்சங்கத்தார் அப்போஸ்தலரை அடித்து, இயேசுவின் நாமத்தைக்குறித்து பேசக்கூடாது என்று கட்டளையிட்டு, அவர்களை விடுதலையாக்கினார்கள். அப்போஸ்தலர்களோ, இயேசுகிறிஸ்துவின் நாமத்திற்காக தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால், சந்தோஷமாய் ஆலோசனைச்சங்கத்தைவிட்டுப் புறப்பட்டுப் போகிறார்கள்.

அப்போஸ்தலர்கள் ஆலோசனைச் சங்கத்தாருக்கு விரோதமாக ஒரு வார்த்தையும் பேசவில்லை. அவர்களைச் சபிக்கவில்லை. சகலவற்றையும் கர்த்தருடைய கரத்தில் ஒப்புக்கொடுத்துவிட்டு, சந்தோஷமாய் ஆலோசனைச்சங்கத்தை விட்டு புறப்பட்டுப்போகிறார்கள். தங்களுடைய யோசனையும் கிரியையும் தேவனால் உண்டாயிருக்கிறது என்பதை அப்போஸ்தலர்கள் உறுதியாய் நம்புகிறார்கள். ஆகையினால் தங்களுடைய ஊழியத்தை ஆலோசனைச்சங்கத்தாரால் ஒழித்துவிட முடியாது என்றும் அப்போஸ்தலர்கள் உறுதியாயிருக்கிறார்கள்.

அப்போஸ்தலர்கள் தங்களுக்கு உண்டான பாடுகளில் சந்தோஷப்படுகிறார்கள். இயேசு கிறிஸ்துவின் நாமத்தைக்குறித்து அப்போஸ்தலர்கள் அவமானப்படவில்லை. கர்த்தர் தம்முடைய பிள்ளைகளெல்லோருக்கும் பாடுகளை அனுபவிக்கும் சிலாக்கியத்தைக் கொடுப்பதில்லை. ஒரு சிலருக்கு மாத்திரமே இந்தச் சிலாக்கியத்தைக் கொடுக்கிறார். இந்தச் சிலாக்கியத்தைப் பெற்றுக்கொள்வதற்கு கர்த்தருடைய பார்வையில் யார் பாத்திரவான்களாக இருக்கிறார்களோ, அவர்களை மாத்திரமே தம்முடைய நாமத்தினால் பாடுகளையும் வேதனைகளையும், அவமானங்களையும் அடைவதற்கு அனுமதிக்கிறார்.

ஆலோசனைச் சங்கத்தார் அப்போஸ்தலரை அடித்து அவமானப்படுத்தினார்கள். ஆனாலும் அப்போஸ்தலர்களோ இதை அவமானமாக எண்ணவில்லை. இயேசுகிறிஸ்துவின் நாமத்திற்காக, தாங்கள் அவமானமடைவதற்கு, பாத்திரராக எண்ணப்பட்டதாக நினைக்கிறார்கள். அதற்காகச் சந்தோஷப்படுகிறார்கள்.

அப்போஸ்தலர்கள் சமுதாயத்தில் துன்மார்க்கமான காரியம் எதையும் செய்யவில்லை. இயேசுகிறிஸ்து செல்லுமிடங்களிலெல்லாம் நன்மை செய்கிறவராகவே சுற்றித் திரிந்தார். அவருடைய ஊழியத்தைச் செய்கிற அப்போஸ்தலரும், இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஜனங்கள் மத்தியில் நன்மையை மாத்திரமே செய்கிறார்கள். அவமானப்படும்படியான சமுகவிரோத காரியங்கள் எதையும் அப்போஸ்தலர்கள் செய்யவில்லை. ஆகையினால் ஆலோசனைச்சங்கத்தார் அப்போஸ்தலரை அடித்துத் துன்பப்படுத்தினாலும், அவர்கள் அவமானப்படவில்லை.

இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் அப்போஸ்தலருக்குப் பாடுகள் உண்டாயிற்று. அவமானம் வந்தது. இதனால் அப்போஸ்தலர் சோர்வடைந்து போகவில்லை. சந்தோஷப்படுகிறார்கள். இயேசுகிறிஸ்துவின் நாமத்தை மகிமைப்படுத்துவதற்கு தங்களுடைய அவமானமும் ஒரு வாய்ப்பாயிற்று என்று நினைத்து, அதற்காகச் சந்தோஷப் படுகிறார்கள். இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் அவமானப்படுவதற்கு கர்த்தர் தங்களை அனுமதித்திருக்கிறார் என்று நினைத்து அப்போஸ்தலர்கள் சந்தோஷப்படுகிறார்கள். தாங்கள் அவமானப்படுவதன் மூலமாக, இயேசுகிறிஸ்துவின் நாமம் மகிமைப்படுவதை நினைத்து அப்போஸ்தலர்கள் சந்தோஷப்படுகிறார்கள்.

இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் நமக்குப் பாடுகள் வருவது நமக்குக் கிடைத்திருக்கும் பெரிய சிலாக்கியம். கிறிஸ்துவின் ஊழியத்தை நாம் உண்மையாய் செய்யும்போது, நமக்குப் பாடுகளும் வேதனைகளும் வரும்போது, அதை இயேசுவின் நாமத்தினிமித்தம், அவருடைய நாமமகிமைக்காக, அதை சந்தோஷமாகச் சகித்துக்கொள்ளவேண்டும்.

ஆலோசனைச் சங்கத்தார் அப்போஸ்தலரை அடித்தபோது, அவர்களுடைய உள்ளத்தில் இயேசுகிறிஸ்து அவர்களுக்கு ஏற்கெனவே சொன்ன வார்த்தைகள் நினைவுக்கு வந்திருக்கலாம். "என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான் களாயிருப்பீர்கள்; சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே" (மத் 5:11,12) என்று இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடம் ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்.

இயேசுகிறிஸ்து தங்களுக்குச் சொன்ன வார்த்தைகளை நினைத்தும், அப்போஸ்தலர்கள் தங்களுடைய இருதயத்தில் ஆறுதலடைகிறார்கள். சந்தோஷப்படுகிறார்கள். நம்முடைய ஊழியப்பாதையில், நமக்குப் பாடுகள் வேதனைகள் வரும்போது, நாம் சோர்ந்துபோய்விடக்கூடாது. கர்த்தருடைய ஊழியத்தை உண்மையாய், மனத்தாழ்மையாய், சந்தோஷமாய்ச் செய்யவேண்டும். நாம் கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம் செயல்படும்போது, இப்படிப்பட்ட சோதனைகளையும் வேதனைகளையும் தாங்கிக்கொள்ளும் கிருபைகளை கர்த்தர் நமக்குத் தருவார்.

பிரசங்கித்தார்கள்

தினந்தோறும் தேவாலயத்திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம்பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள் (அப் 5:42).

ஆலோசனைச் சங்கத்தார் அப்போஸ்தலரை அடித்து "இயேசுவின் நாமத்தைக்குறித்துப் பேசக்கூடாது" என்று கட்டளையிட்டு, அவர்களை விடுதலை யாக்கினார்கள். அப்போஸ்தலர்களும் சந்தோஷமாய் ஆலோசனைச்சங்கத்தை விட்டுப் புறப்பட்டுப்போகிறார்கள். ஆனால் ஆலோசனைச்சங்கத்தாருக்குக் கீழ்ப்படிவதைப் பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிவதே உத்தமமானது என்று அப்போஸ்தலர்கள் தீர்மானம்பண்ணுகிறார்கள். இயேசுவின் நாமத்தைக் குறித்துப் பேசக்கூடாது என்று ஆலோசனைச்சங்கத்தார் அப்போஸ்தலருக்குக் கட்டளையிட்டார்கள். ஆனால் அப்போஸ்தலர்களோ இயேசுவே கிறிஸ்து என்று தினந்தோறும், இடைவிடாமல், பிரசங்கம் செய்கிறார்கள்.

அப்போஸ்தலர்கள் தினந்தோறும் பிரசங்கம் பண்ணுகிறார்கள். பிரசங்கம்பண்ணுவதற்கு விடுமுறை நாள் எதுவுமில்லை. கர்த்தருடைய ஊழியக்காரர்கள் எல்லா நாட்களிலும் பிரசங்கம்பண்ணவேண்டும். அப்போஸ்தலர்கள் தேவாலயத்திலேயும் பிரசங்கம்பண்ணுகிறார்கள். வீடுகளிலேயும் பிரசங்கம்பண்ணுகிறார்கள். தேவாலயத்தில் பிரசங்கம்பண்ணும் போது அப்போஸ்தலருடைய சத்துருக்களும் அங்கு கூடியிருப்பார்கள். சத்துருக்களின் கண்களுக்கு முன்பாக அப்போஸ்தலர்கள் தைரியமாகப் பிரசங்கம்பண்ணுகிறார்கள்.

அப்போஸ்தலரிடத்தில் சிறிதும் மனுஷபயமில்லை. ஆலோசனைச் சங்கத்தாருக்கும், யூதமார்க்கத்தாருக்கும் பயந்து, வீடுகளில் பயந்து ஒழிந்து, மறைவாகப் பிரசங்கம்பண்ணவில்லை. எல்லோரும் கேட்கும் வண்ணமாக, எல்லோரும் கூடிவரும் தேவாலயத்தில் பிரசங்கம் பண்ணுகிறார்கள். அப்போஸ்தலருக்கு ஆலோசனைச் சங்கத்தின் மூலமாக மறுபடியும் ஆபத்து வருவதற்கு வாய்ப்புள்ளது. ஆனாலும் ஆபத்தைக் கண்டு அவர்கள் பயப்படவில்லை. ஆபத்தைச் சந்திக்க ஆயத்தமாகயிருக்கிறார்கள். தேவாலயத்தில் பிரசங்கம்பண்ண வாய்ப்பிருக்கும்போது, அப்போஸ்தலர்கள் ஆபத்தைக் கண்டு பயந்துவிடாமல், தைரியமாய்ப் பிரசங்கம்பண்ணுகிறார்கள்.

தேவாலயத்தில் திரளான ஜனங்களுக்கு முன்பாக இயேசுகிறிஸ்துவின் நாமத்தைக் குறித்துப் பிரசங்கம்பண்ண அப்போஸ்தலருக்கு வாய்ப்புண்டாயிற்று. அப்போஸ்தலர்கள் தேவாலயத்தில் ஊழியம் செய்தாலும், அவர்கள் வீடுகளிலும் உபதேசம்பண்ணத் தவறவில்லை. ஐசுவரியவானுடைய வீடாகயிருந்தாலும், தரித்திரனுடைய வீடாகயிருந்தாலும் அப்போஸ்தலருக்கு எல்லாம் ஒன்றுதான். எந்தெந்த வீடுகளிலெல்லாம் இயேசுகிறிஸ்துவின் நாமத்தைக்குறித்து உபதேசம்பண்ண வாய்ப்புண்டாயிற்றோ, அங்கெல்லாம் சென்று உபதேசம்பண்ணுகிறார்கள்.

அப்போஸ்தலர்கள் இயேசு கிறிஸ்துவைக் குறித்து மாத்திரமே பிரசங்கம்பண்ணுகிறார்கள். தங்களைக் குறித்தோ, தங்களுடைய சுயபுராணங்களைக் குறித்தோ அவர்கள் ஒன்றும் பேசவில்லை. இயேசுவே கிறிஸ்து என்று மாத்திரமே பிரசங்கம் பண்ணுகிறார்கள். கேட்கிறவர்களைப் பிரியப்படுத்தும்படி அப்போஸ்தலர்கள் உபதேசத்தை மாற்றிக்கொள்ளவில்லை. சிலுவையில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்துவையும், உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவையும், மகிமையுள்ள இயேசுகிறிஸ்துவையும் மாத்திரமே அப்போஸ்தலர்கள் பிரசங்கம் பண்ணுகிறார்கள். இயேசுவே மேசியா என்று அப்போஸ்தலர்கள் சாட்சியாக அறிவிக்கிறார்கள்.

கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நாமும் பிரசங்கம்பண்ணும்போது இயேசுகிறிஸ்துவைக்குறித்து மாத்திரமே பிரசங்கம்பண்ணவேண்டும். இயேசுவின் நாமத்தைக்குறித்து பேசக்கூடாது என்று ஆலோசனைச்சங்கத்தார் அப்போஸ்தலருக்குக் கட்டளை யிட்டிருக்கிறார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவோ சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்குமாறு அப்போஸ்தலருக்குக் கட்டளை கொடுத்திருக்கிறார். கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து, அப்போஸ்தலர்கள், தினந்தோறும் தேவாலயத்திலேயும், வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம்பண்ணி, இயேசுவே கிறிஸ்து என்று பிரசங்கித்து வருகிறார்கள்.

6 அதிகாரம்

ஆதித்திருச்சபையில் விதவைகளுக்கு உதவி செய்யப்பட்டது. ஆனால் அன்றாடக விசாரணையில் தாங்கள் திட்டமாய் விசாரிக்கப்படவில்லையென்று கிரேக்கரானவர்கள் முறுமுறுக்கிறார்கள் (அப் 6:1). விதவைகளை விசாரிப்பதற்கு ஏழுபேரைத் தெரிந்துகொள்ளுமாறு அப்போஸ்தலர்கள் சபையாருக்கு ஆலோசனை சொல்லுகிறார்கள் (அப் 6:2-6). சீஷருடைய தொகை எருசலேமில் பெருகிற்று (அப் 6:7) ஸ்தேவானுடைய ஊழியம் (அப் 6:8). ஸ்தேவானுக்கு எதிர்ப்பு (அப் 6:9,10). ஸ்தேவானுக்கு எதிரான குற்றச்சாட்டு (அப் 6:11-14). ஸ்தேவானின் முகம் தேவதூதன் முகம்போலிருக்கிறது (அப் 6:15).

அன்றாடக விசாரணை அப் 6 : 1-7

அப் 6:1. அந்நாட்களிலே, சீஷர்கள் பெருகினபோது, கிரேக்கரானவர்கள், தங்கள் விதவைகள் அன்றாடக விசாரணையில் திட்டமாய் விசாரிக்கப்படவில்லையென்று, எபிரெயருக்கு விரோதமாய் முறுமுறுத்தார்கள்.

அப் 6:2. அப்பொழுது பன்னிருவரும் சீஷர் கூட்டத்தை வரவழைத்து: நாங்கள் தேவவசனத்தைப் போதியாமல், பந்திவிசாரணை செய்வது தகுதியல்ல.

அப் 6:3. ஆதலால் சகோதரரே, பரிசுத்தஆவியும் ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழுபேரை உங்களில் தெரிந்து கொள்ளுங்கள்; அவர்களை இந்த வேலைக்காக ஏற்படுத்துவோம்.

அப் 6:4. நாங்களோ ஜெபம் பண்ணுவதிலும் தேவவசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருப்போம் என்றார்கள்.

அப் 6:5. இந்த யோசனை சபையாரெல்லாருக்கும் பிரியமாயிருந்தது. அப்பொழுது விசுவாசமும் பரிசுத்தஆவியும் நிறைந்தவனாகிய ஸ்தேவானையும், பிலிப்பையும், பிரொகோரையும், நிக்கானோரையும், தீமோனையும், பர்மெனாவையும், யூதமார்க்கத் தமைந்தவனான அந்தியோகியா பட்டணத்தானாகிய நிக்கொலாவையும் தெரிந்துகொண்டு,

அப் 6:6. அவர்களை அப்போஸ்தலருக்கு முன்பாக நிறுத்தினார்கள். இவர்கள் ஜெபம்பண்ணி, அவர்கள்மேல் கைகளை வைத்தார்கள்.

அப் 6:7. தேவவசனம் விருத்தியடைந்தது; சீஷருடைய தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று; ஆசாரியர்களில் அநேகரும் விசுவாசத்துக்குக் கீழ்ப்படிந்தார்கள்.

முறுமுறுத்தார்கள்

அந்நாட்களிலே, சீஷர்கள் பெருகினபோது, கிரேக்கரானவர்கள், தங்கள் விதவைகள் அன்றாடக விசாரணையில் திட்டமாய் விசாரிக்கப்படவில்லையென்று, எபிரெயருக்கு விரோதமாய் முறுமுறுத்தார்கள் (அப் 6:1).

ஆதித்திருச்சபையில் சீஷர்கள் பெருகினார்கள். அப்போது பிரச்சனையும் பெருகிற்று. ஒரு சில விசுவாசிகள் வேறு சில விசுவாசிகளுக்கு விரோதமாக முறுமுறுக்கிறார்கள். ஆதித்திருச்சபையில் விசுவாசிகளின் எண்ணிக்கை பெருகி சபை வளர்ச்சி பெறுகிறது. இந்த வளர்ச்சி தேவனுக்கும் அப்போஸ்தலருக்கும் பிரியமாக இருக்கிறது.

ஆனால் ஆசாரியரும் சதுசேயரும் சபையின் வளர்ச்சியைக் கண்டு பொறாமைப்படுகிறார்கள். கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கக் கூடாது என்று ஆலோசனைச்சங்கத்தார் அப்போஸ்தலரைத் தடைபண்ணினார்கள். அப்போஸ்தலருடைய ஊழியத்திற்கு எதிர்ப்பு உண்டாயிற்று. ஆனால் எதிர்ப்பு இருக்கிற இடத்தில்தான் வளர்ச்சியும் உண்டாகிறது. சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கக்கூடாது என்று ஆலோசனைச்சங்கத்தார் எங்கெல்லாம் தடைபண்ணுகிறார்களோ, அங்கெல்லாம் தேவன் தம்முடைய கிருபையினால் வசனங்களை அற்புதங்களினாலும் அடையாளங் களினாலும் உறுதிபண்ணுகிறார்.

ஆலோசனைச் சங்கத்தார் அப்போஸ்தலர்களை அடித்தார்கள். அவமானப்படுத்தினார்கள். அவர்கள் மீது தூஷண வார்த்தைகளைச் சொன்னார்கள். இவையெல்லாவற்றிற்கும் மத்தியிலும் அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை விசுவாசத்தோடும், பயபக்தியோடும் ஜனங்கள் மத்தியிலே தைரியமாய்ப் பிரசங்கம்பண்ணுகிறார்கள். ஜனங்களும் அப்போஸ்தலரின் உபதேசத்தை ஏற்று, இயேசுகிறிஸ்துவைத் தங்கள் ஆண்டவராகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொள்கிறார்கள். பிரச்சனைகளுக்கு மத்தியில் அப்போஸ்தலர்கள் நீடியபொறுமையோடும் சந்தோஷத்தோடும் இருக்கிறார்கள். சோதனைகளையும் வேதனைகளையும் சகித்துக் கொள்கிறார்கள். ஜனங்கள் இவையெல்லாவற்றையும் பார்த்து ஆச்சரியப்படுகிறார்கள். கிறிஸ்துவை மகிமைப்படுத்துகிறார்கள்.

சீஷர்கள் திரளாய்ப் பெருகுகிறார்கள். இதனால் திருச்சபை வளர்ச்சி பெறுகிறது. திருச்சபையின் ஆரம்ப காலத்தில் விசுவாசிகளெல்லோரும் ஒரே மனமும் ஒரே இருதயமும் உடையவர்களாயிருந்தார்கள். ஆனால் இப்போதோ சீஷர்களின் எண்ணிக்கை பெருகியபோது, அவர்களுக்குள் பிரச்சனை உண்டாயிற்று. ஒரே மனமும் ஒரே இருதயமும் உடைய விசுவாசிகள் மத்தியில் இப்போது பிரச்சனைகளும், பிரிவினைகளும் உண்டாயிற்று. ஜனங்களின் எண்ணிக்கை பெருகும்போது அவர்கள் மத்தியில் கருத்து வேறுபாடு உண்டாவது இயல்பான காரியம்.

சீஷர்கள் பெருகின போது ஒரு சில விசுவாசிகள், மற்ற விசுவாசிகளுக்கு விரோதமாக முறுமுறுக்கிறார்கள். வெளிப்படையாக யாரும் யாரையும் குற்றம் சுமத்திப் பேசவில்லை. ஆனால் அவர்களுடைய இருதயமோ முறுமுறுப்பினால் நிறைந்திருக்கிறது.

ஆதித்திருச்சபையில் சீஷர்கள் பெருகினபோது, அவர்கள் மத்தியில் சில விதவைகளும் இருக்கிறார்கள். விதவைகள் அன்றாட விசாரணையில் விசாரிக்கப்படுகிறார்கள். அவர்களுக்குத் தேவையான உதவி செய்யப்படுகிறது. ஆதித்திருச்சபையில் இருக்கிறவர் களெல்லோருமே விசுவாசிகள்தான். ஆனால் அவர்கள் கிரேக்கராகவும், எபிரெயராகவும் பிரிந்திருக்கிறார்கள். கிரேக்கர்கள் எபிரெயருக்கு விரோதமாக முறுமுறுக்கிறார்கள்.

முறுமுறுக்கிற கிரேக்கர்களும் யூதர்கள்தான். அவர்கள் கிரேக்கு தேசத்திற்கும், மற்ற தேசங்களுக்கும் சிதறிப்போனவர்கள். இவர்கள் எருசலேமில் நடைபெறும் பண்டிகைகளில் பங்குபெறுவதற்காக அங்கு வருவார்கள். பண்டிகை நாட்களில் இயேசுகிறிஸ்து எருசலேமிலே பிரசங்கம் பண்ணியிருக்கிறார். அவருடைய போதகத்தைக் கேட்டு, கிரேக்கர்களில் அநேகர் இயேசுகிறிஸ்துவை ஆண்டவராகத் தங்கள் இருதயங்களில் ஏற்றுக்கொண்டார்கள். இந்தக் கிரேக்கர்கள்தான் இப்போது எருசலேமிலிருக்கிற யூதர்களுக்கு விரோதமாக முறுமுறுக்கிறார்கள்.

மனந்திரும்பி பாவமன்னிப்பைப் பெற்றவர்கள் மாத்திரமே இரட்சிக்கப் பட்டவர்கள். இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிற எல்லோருமே பரிபூரணமாக ஜீவிப்பதில்லை. அவர்களுக்குள் ஒரு சில குறைபாடுகள் காணப்படலாம். ஒரு சிலர் முழுமையாக மனம்மாறாமல், ஓரளவு மனம்மாறி இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கலாம். விசுவாசிகள் மத்தியில் பொறாமை, முறுமுறுப்பு எதுவும் இருக்கக்கூடாது. ஆனால் இங்கோ கிரேக்கரானவர்கள் யூதருக்கு விரோதமாக முறுமுறுக்கிறார்கள். இவர்கள் மனந்திரும்ப வேண்டிய சுபாவம் இன்னும் உள்ளது.

இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களில் சிலர் தங்கள் விசுவாசத்தில் குறைவுள்ளவர்களாகவும் இருப்பார்கள். பூரணமாக மனந்திரும்பாமல் அறைகுறையாக மனந்திரும்பியிருப்பார்கள். ஆதித்திருச்சபை இவர்களெல்லோரையும் அன்போடு ஏற்றுக்கொள்கிறது. இயேசுகிறிஸ்துவின் அன்பையும் உபதேசத்தையும் பெற்றுக்கொண்டவர்கள், ஒருவருக்கொருவர் அன்பாயிருக்க வேண்டும். தன்னை நேசிப்பதுபோல பிறரை நேசிக்கவேண்டும். ஆனால் இங்கு சீஷர்கள் மத்தியில் அன்புகூருதல் குறைபட்டிருக்கிறது.

தங்கள் விதவைகள் அன்றாடக விசாரணையில் திட்டமாய் விசாரிக்கப்படவில்லை என்று கிரேக்கரானவர்கள் எபிரெயருக்கு விரோதமாக முறுமுறுக்கிறார்கள். ஆதித்திருச்சபையில் முதலாவது பிரச்சனையே பணம் சம்பந்தமாகத்தான் உண்டாயிற்று. ஏழைகளுக்கு உதவி செய்வதற்காக அப்போஸ்தலர்கள் ஏராளமான தர்மப்பணத்தைச் சேகரிக்கிறார்கள். இந்தப் பணத்தை பொதுவாக வைத்து ஏழைகளுக்கும் விதவைகளுக்கும் உதவிசெய்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் எல்லோரையும் திருப்திப்படுத்துவது இயலாத காரியம். ஏதாவது ஒரு விஷயத்தில் ஒருவருக்கு குறைவு வந்துவிடும். மனத்தாங்கல் வந்துவிடும். உடனே முறுமுறுக்க ஆரம்பித்துவிடுவார்கள். எல்லோரையும் எல்லா வேளையிலும் சந்தோஷப்படுத்த முடியாது.

தரித்திரருக்கும் விதவைகளுக்கும் உதவிபுரியும் விஷயத்தில் அப்போஸ்தலர்கள் முகத்தாட்சணியம் பார்த்திருக்கமாட்டார்கள். எந்தவிதமான பாகுபாடும் இல்லாமல், எல்லோரையும் ஒன்றுபோல் பாவித்துதான் உதவிசெய்திருப்பார்கள். அவர்களுக்குள் பட்சபாதம் இருந்திருக்காது. ஆனாலும் அவர்கள் மத்தியில் முறுமுறுப்பு உண்டாயிற்று. உதவிப்பணம் சீராக விநியோகம்பண்ணப்படவில்லை என்னும் குற்றச்சாட்டு எழும்பிற்று.

கிரேக்க விதவைகள் அன்றாடக விசாரணையில் திட்டமாய் விசாரிக்கப்படவில்லை என்பதுதான் முறுமுறுப்புக்குக் காரணம். இந்தக் குற்றச்சாட்டு ஒருவேளை பொய்யாகக்கூட இருக்கலாம். இதற்கு ஆதாரம் எதுவும் இருந்திருக்காது. சிதறிப்போன யூதர்கள் தரித்திரராக இருக்கிறார்கள். எருசலேமிலிருக்கிற யூதர்களோ ஓரளவு வசதியுள்ளவர்களாக இருக்கிறார்கள். வசதியுள்ளவர்களைப் பார்க்கும்போது தரித்திரருக்குச் சில சமயங்களில் மனவருத்தம் உண்டாகலாம். சிலர் ஐசுவரியவான்கள்மீது பொறாமைப்படலாம். ஐசுவரியவான்கள் நல்லவர்களாகவும் நீதியுள்ளவர்களாகவும் இருந்தாலும், அவர்களைப்போல தாங்கள் இல்லையென்று குறைவுபட்டு, தரித்திரர் ஐசுவரியவான்கள் மீது குறைசொல்லலாம். அவர்கள் சொல்லும் குறைகளுக்கும் குற்றச்சாட்டுக்களுக்கும் ஆதாரம் எதுவும் இருக்காது.

கிரேக்கரானவர்கள் யூததேசத்திலிருந்து சிதறிப்போய் கிரேக்கு தேசத்தில் குடியிருக்கிறவர்கள். எருசலேமிலுள்ள யூதர்களைவிட தாங்கள் தரித்திரர்களென்றும், தங்களுக்கு அதிக உதவி தேவைப்படுகிறது என்றும் நினைக்கிறார்கள். தங்களுடைய வாழ்க்கை அந்தஸ்து எருசலேமிலுள்ள யூதர்களைப்போல உயர்ந்ததாகயில்லை என்று தங்களுக்குள் குறைவுபட்டுக்கொள்கிறார்கள். அதிலும் விசேஷமாக கிரேக்கருடைய விதவைகளுக்கு அதிக உதவி தேவைப்படுவதாக எதிர்பார்க்கிறார்கள். அவர்கள் எதிர்பார்க்கிற பிரகாரம் உதவி கிடைக்காமல் போனதினால் முறுமுறுக்கிறார்கள்.

ஏழைகள் மட்டுமல்ல, சில சமயங்களில் ஐசுவரியவான்களும் பொறாமைப் படுகிறார்கள். முறுமுறுக்கிறார்கள். பேராசைப் படுகிறார்கள். எவ்வளவுதான் திரளான ஐசுவரியம் இருந்தாலும் ஒரு சிலருக்கு போதுமென்ற மனப்பக்குவம் இருக்காது. தங்களுக்கு இன்னும் எல்லாம் வேண்டும் என்று பேராசைப்படுவார்கள். பேராசை தரித்திரரிடமும் இருக்கிறது. ஐசுவரியவான்களிடமும் இருக்கிறது.

ஆதித்திருச்சபையில் ஏழைகளுக்கு உதவிசெய்தபோது, அதில் ஒரு சில குறைவுகள் இருந்திருக்கலாம். இது வேண்டுமென்றே செய்யப்பட்ட துணிகரமான தப்பிதமாக இருந்திருக்காது. கவனக்குறைவினால் இப்படிப்பட்ட தப்பிதம் ஏற்பட்டிருக்கலாம். விசுவாசிகள் விதவைகளை மெய்யாகவே விசாரிக்கவேண்டும். அவர்களுக்கு உதவிசெய்யவேண்டும். அவர்களுடைய நன்மையை பாதுகாக்கவேண்டும். அவர்களுக்கு நீதி கிடைக்க உதவிபுரியவேண்டும். பொதுக்காரியங்களில் முடிந்தவரையிலும் பிரச்சனை எதுவும் ஏற்படாதவாறு செயல்படவேண்டும். அதிலும் பணவிஷயத்தில் யாரும் குற்றம் சொல்லாத வழியில் நடந்துகொள்வது ஊழியக்காரருக்கு மிகவும் முக்கியமானது.

எவ்வளவுதான் திட்டமிட்டு, மிகவும் கவனமாகக் காரியங்களைச் செய்தாலும், அதிலும் ஏதாவது தப்பிதம் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளது. பெரிய சபைகளில் இதுபோல முறுமுறுப்புக்கள் அதிகமாகவே இருக்கும். விசுவாசிகள் எண்ணிக்கையில் பெருகும்போது, அவர்கள் மத்தியில் குறைகளும், குற்றச்சாட்டுக்களும், முறுமுறுப்புக்களும், போட்டி பொறாமைகளும் இருக்கும். ஆனாலும் விசுவாசிகள் மத்தியில் இவை இருக்கக்கூடாது. இருக்கக்கூடாத சுபாவம் ஆதித்திருச்சபையில் காணப்படுகிறது.

சீஷர் கூட்டம்

அப்பொழுது பன்னிருவரும் சீஷர் கூட்டத்தை வரவழைத்து: நாங்கள் தேவவசனத்தைப் போதியாமல், பந்திவிசாரணைசெய்வது தகுதியல்ல (அப் 6:2).

ஆதித்திருச்சபையில் சீஷர்களின் எண்ணிக்கை பெருகிற்று. அப்பொழுது அவர்கள் மத்தியில் பிரச்சனையும் பெருகிற்று. ஒருவருக்கு விரோதமாக ஒருவர் முறுமுறுப்பதும் பெருகிற்று. அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியானவரின் ஆலோசனையினால், இந்தப் பிரச்சனையை ஞானமாகத் தீர்த்து வைக்கிறார்கள். பன்னிரண்டு அப்போஸ்தலரும் சீஷர் கூட்டத்தை வரவழைக்கிறார்கள். அப்போஸ்தலர்கள் பன்னிரண்டுபேர்தான். ஆனால் சீஷர்களின் கூட்டமோ அதிகமாய் இருக்கிறது. அப்போஸ்தலர்கள் திருச்சபையின் எல்லா காரியங்களையும் சீஷர்களோடு ஆலோசனை செய்தே தீர்மானம்பண்ணுகிறார்கள். அவர்களை ஆலோசனைப்பண்ணாமல் பன்னிரண்டு அப்போஸ்தலர்களும் எந்தத் தீர்மானமும் பண்ணுவதில்லை.

அப்போஸ்தலர்கள் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணுவதில் அபிஷேகம் பெற்றிருக்கிறார்கள். சாதுரிய வார்த்தைகளினால், எல்லோருக்கும் புரியும் விதமாக பிரசங்கம்பண்ணுகிறார்கள். அப்போஸ்தலர்கள் மூலமாக தேவன் அநேக அற்புதங்களையும் அடையாளங்களையும் நடப்பிக்கிறார். ஆனாலும் ஆதித்திருச்சபையிலுள்ள விசுவாசிகளில் சிலர், ஒரு சில காரியங்களில், அப்போஸ்தலர்களைவிட தேர்ச்சி பெற்றவர்களாக இருக்கிறார்கள். அப்போஸ்தலருக்கு அவர்களுடைய ஆலோசனை தேவைப்படுகிறது.

இதுபோலவே தற்காலத்தில் திருச்சபையின் போதகர் ஊழியம் செய்வதில் அபிஷேகம் பெற்றவராக இருக்கலாம். நன்றாகப் பிரசங்கம்பண்ணலாம். ஆனாலும் சபையிலுள்ள விசுவாசிகளில் ஒரு சிலர், சபையின் போதகரைவிட ஒரு சில காரியங்களில் அதிக ஞானமுள்ளவர்களாக இருப்பார்கள். அவர்களுடைய ஆலோசனையும் போதகருக்குத் தேவைப்படும். ஆதித்திருச்சபையில் அப்படிப்பட்ட சூழ்நிலைதான் இருக்கிறது.

ஆதித்திருச்சபை பிளவுபடுவதை அப்போஸ்தலர் விரும்பவில்லை. ஒரு சிறிய காரியத்திற்காக சீஷர்கள் முறுமுறுக்கிறார்கள். தங்கள் விதவைகள் அன்றாடக விசாரணையில் திட்டமாய் விசாரிக்கப்படவில்லையென்று, கிரேக்கர்கள் எபிரெயருக்கு விரோதமாய் முறுமுறுக்கிறார்கள். அவர்களுடைய முறுமுறுப்பை அறிந்த அப்போஸ்தலர்கள் "நாங்கள் தேவவசனத்தைப் போதியாமல் பந்திவிசாரணை செய்வது தகுதியல்ல" என்று அறிவித்துவிடுகிறார்கள்.

அப்போஸ்தலர்கள் சுவிசேஷச் செய்தியைப் பிரசங்கம்பண்ணுவதற்காகவே அழைக்கப்பட்டிருக்கிறார்கள். பந்திவிசாரணை செய்வதற்காக இவர்கள் அழைக்கப்படவில்லை. சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி மாத்திரமே இயேசுகிறிஸ்து இவர்களுக்கு கட்டளை கொடுத்திருக்கிறார். பந்திவிசாணை செய்யுமாறு இவர்களுக்குக் கட்டளை கொடுக்கவில்லை. ஆகையினால் தாங்கள் தேவவசனத்தைப் போதிக்க வேண்டுமென்றும், அதைப் போதிக்காமல் பந்திவிசாரணை செய்வது அப்போஸ்தலராகிய தங்களுக்குத் தகுதியாக இருக்காது என்றும் தீர்மானம்பண்ணுகிறார்கள்.

அப்போஸ்தலர்கள் தினந்தோறும் இடைவிடாமல் உபதேசம்பண்ணி, இயேசுவே கிறிஸ்து என்று பிரசங்கம்பண்ணுகிறார்கள். இந்த ஊழியத்தை முழுநேரமாகச் செய்கிறார்கள். ஓய்வில்லாமல் செய்கிறார்கள். மற்ற வேலைகளைச் செய்வதற்கு இவர்களுக்குச் சிறிதும் நேரமில்லை. அப்போஸ்தலர்கள் வேறு ஏதாவது ஒரு வேலையைச் செய்ய வேண்டுமென்றால், தேவவசனத்தைப் போதிப்பதை நிறுத்துவிட்டுத்தான், அந்த வேலையைச் செய்யமுடியும்.

ஆதித்திருச்சபையின் விசுவாசிகள் தங்களுடைய சொத்துக்களை விற்று அப்போஸ்தலருடைய பாதத்தில் கொண்டு வந்து வைக்கிறார்கள். அப்போஸ்தலர்களும் அந்தப்பணத்தை பொதுவாக வைத்து அனுபவிப்பதற்கு பயன்படுத்த வேண்டும். இது அப்போஸ்தலருக்குக் கொடுக்கப்பட்ட கூடுதல் பொறுப்பு. இவ்வாறு ஒவ்வொரு பொறுப்பாக அப்போஸ்தலருக்குக் கொடுக்கப்பட்டால், அவர்களுக்கு இதைப் பராமரிப்பதற்கே நேரம் சரியாய் போகும். கர்த்தருடைய வசனத்தைப் பிரசங்கம்பண்ணுவதற்கு நேரம் இருக்காது. எல்லா பாரங்களையும் தங்கள்மேல் சுமந்துகொண்டால், அப்போஸ்தலரால் கர்த்தருக்கு ஊழியம் செய்யமுடியாது. தேவவசனத்தையும் போதித்துக்கொண்டு, விதவைகளை அன்றாடக விசாரணையில் விசாரிப்பது என்பது தங்களால் கூடாதகாரியம் என்பதை அப்போஸ்தலர்கள் உணருகிறார்கள்.

கர்த்தருடைய ஊழியக்காரருக்கு தேவனுடைய வசனத்தைப் போதிப்பதுதான் பிரதான ஊழியமாக இருக்கவேண்டும். இப்பிரபஞ்சத்தின் காரியத்தில் ஊழியக்காரர்கள் தங்களை அதிகமாய் ஈடுபடுத்திக்கொள்ளக் கூடாது. தேவனுடைய வீட்டில் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்யும் காரியத்தில் மாத்திரமே ஊழியக்காரர் ஈடுபடவேண்டும். சபைக்கு வெளியே இருக்கும் காரியங்களில் ஊழியக்காரர் அதிகமாக ஈடுபட்டு, தான் செய்ய வேண்டிய ஊழியத்தை செய்யாமல் போய்விடக்கூடாது.

ஏழுபேரைத் தெரிந்துகொள்ளுங்கள்

ஆதலால் சகோதரரே, பரிசுத்தஆவியும் ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழுபேரை உங்களில் தெரிந்து கொள்ளுங்கள்; அவர்களை இந்த வேலைக்காக ஏற்படுத்துவோம் (அப் 6:3).

ஆதித்திருச்சபையில் ஏற்பட்ட பிரச்சனையைத் தீர்த்துவைப்பதற்கு அப்போஸ்தலர்கள் ஒரு யோசனை சொல்லுகிறார்கள். தேவனுடைய வசனத்தைத் தாங்கள் போதியாமல், பந்திவிசாரணை செய்வது தங்களுக்குத் தகுதியல்ல என்று அப்போஸ்தலர்கள் சீஷர்களிடம் அறிவிக்கிறார்கள். அவர்களில் ஏழுபேரைத் தெரிந்தெடுத்து பந்திவிசாரணை செய்யும் வேலைக்கு அவர்களை ஏற்படுத்தலாமென்று யோசனை சொல்லுகிறார்கள்.

ஆதித்திருச்சபையில் விதவைகள் இருக்கிறார்கள். அவர்களை விசாரிக்க வேண்டியது திருச்சபையின் கடமைகளில் ஒன்று. அதைச் சிறப்பாகச் செய்யவேண்டும். பிரச்சனையில்லாமல் செய்யவேண்டும். எல்லோரும் திருப்தியாயிருக்கவேண்டும். யாரும் முறுமுறுக்கக்கூடாது. இதற்கு முன்பு விதவைகள் விசாரிக்கப்பட்டதைவிட, இனிமேல் இன்னும் நல்லமுறையில் விசாரிக்கப்பட வேண்டும். அப்போஸ்தலர்கள் விதவைகளை விசாரித்ததைவிட, வேறு யாராவது அவர்களை இன்னும் நன்றாக விசாரிக்கவேண்டும். எல்லாம் கிரமமாகவும் ஒழுங்காகவும் நடைபெறவேண்டும். எந்த விதவையையும் விசாரிக்காமல் கைவிட்டுவிடக்கூடாது. விதவைகளை விசாரிப்பதற்கு அப்போஸ்தலருக்கு நேரமில்லை. ஆகையினால் இந்த வேலையைச் செய்வதற்கு ஏழுபேரை அவர்களில் தெரிந்துகொண்டு, அவர்களை இந்த வேலைக்காக ஏற்படுத்தலாம் என்று அப்போஸ்தலர் ஆலோசனை சொல்லுகிறார்கள்.

விதவைகளை விசாரிக்கும் வேலைக்காகத் தெரிந்துகொள்ளப்படுகிற ஏழுபேருக்கும் ஒரு சில தகுதிகள் இருக்கவேண்டுமென்று அப்போஸ்தலர்கள் யோசனை சொல்லுகிறார்கள். அவர்களை சீஷர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். தெரிந்துகொள்ளப்பட்டவர்களை அப்போஸ்தலர்கள் அந்த வேலைக்காக ஏற்படுத்தி பிரதிஷ்டைபண்ணவேண்டும்.

சீஷர்கள் தங்களில் ஏழுபேரை தெரிந்துகொள்ளவேண்டும். அவர்கள் நற்சாட்சி பெற்றிருக்கிறவர்களாக இருக்கவேண்டும். ஊழல் செய்யக்கூடாது. பிறரை நேசிக்கவேண்டும். நம்பிக்கைகுரியவர்களாக இருக்க வேண்டும். அன்பாகவும் நீதியாகவும் பேசவேண்டும். இவர்கள் நல்லவர்களென்று மற்றவர்களும் இவர்களைப்பற்றி நற்சாட்சி சொல்லவேண்டும். இவையெல்லா வற்றிற்கும் மேலாக அவர்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருக்கவேண்டும். அவர்கள் நற்சாட்சி பெற்றவர்களாக மாத்திரம் இருந்தால் போதாது, இந்த ஊழியத்தை உண்மையாகவும், நேர்மையாகவும், தைரியமாகவும் செய்யக்கூடியவர்களாக இருக்கவேண்டும். இதற்கு பரிசுத்த ஆவியினால் நிரம்பியிருப்பது மிகவும் அவசியம்.

அத்துடன் அவர்கள் ஞானமும் நிறைந்தவர்களாக இருக்கவேண்டும். அவர்கள் நல்லவர்களாக இருந்தால் மாத்திரம் போதாது, அவர்கள் நீதியுள்ளவர்களாகவும், ஒவ்வொரு காரியத்தையும் ஞானமாகவும், விவேகமாகவும் செய்யக்கூடியவர்களாகவும் இருக்கவேண்டும். சீஷர்கள் தெரிந்துகொள்ளும் ஏழுபேரும் பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்தவர்களாக இருக்கவேண்டும் என்று அப்போஸ்தலர்கள் சீஷர்களிடம் சொல்லுகிறார்கள். பரிசுத்த ஆவியானவரே ஞானத்தின் ஆவியானவராக இருக்கிறார்.

சீஷர்கள் தெரிந்துகொள்ளும் ஏழுபேரும் பொதுப்பணத்திற்குப் பொறுப்பானவர்களாக இருக்கிறார்கள். இந்தப் பணத்தை உண்மையாக செலவு செய்தால் மாத்திரம் போதாது, அதை ஞானமாகவும் செலவு செய்ய வேண்டியது அவசியம். சீஷர்கள் மத்தியில் இவர்களைத்தான் தெரிந்துகொள்ள வேண்டுமென்று அப்போஸ்தலர்கள் யாரையும் குறிப்பிட்டு, ஒன்றும் சொல்லவில்லை. அவர்களுக்கு என்னென்ன தகுதிகள் இருக்கவேண்டும் என்று மாத்திரமே சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட தகுதியுடைய ஏழுபேரை சீஷர்கள் அவர்களில் தெரிந்துகொள்ளவேண்டும்.

தெரிந்துகொள்ளப்பட்ட இந்த ஏழுபேரும் நல்லவர்களாகவும், பந்திவிசாரணை செய்வதற்கு தகுதியுள்ளவர்களாகவும் இருக்கவேண்டும். பந்திவிசாரணை செய்யும் வேலையில் இந்த ஏழுபேரும் அப்போஸ்தலரைவிட தேறினவர்களாக இருக்கலாம். ஆனாலும் அப்போஸ்தலர்களே இந்த வேலைக்காக அந்த ஏழுபேரையும் ஏற்படுத்த வேண்டும். அப்போஸ்தலர்களே ஜெபம்பண்ணி, அவர்கள்மேல் கைகளை வைத்து, இந்த வேலைக்காக அவர்களைப் பிரதிஷ்டைபண்ண வேண்டும். அப்போஸ்தலர்களே பந்திவிசாரணை செய்யும் அதிகாரத்தை இந்த ஏழுபேருக்கும் கொடுக்கவேண்டும்.

இந்த ஏழுபேரும் விதவைகளை அன்றாடக விசாரணையில் திட்டமாய் விசாரிக்கவேண்டும். ஒருவருக்கும் ஒரு குறையும் இருக்கக்கூடாது. ஒன்றும் வீணாய்ப் போய்விடக்கூடாது. இந்த ஏழுபேரும் பந்திவிசாரணை செய்யும் வேலையை பொறுப்பாய் கவனிக்கவேண்டும்.

ஜெபமும் போதகமும்

நாங்களோ ஜெபம் பண்ணுவதிலும் தேவவசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருப்போம் என்றார்கள் (அப் 6:4).

அப்போஸ்தலர்கள் இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தை மாத்திரமே முழுநேரமாக செய்ய வேண்டியவர்கள். ஜெபம்பண்ணுவதிலும் தேவவசனத்தைப் போதிக்கிறதிலும் இடைவிடாமல் தரித்திருக்க வேண்டுமென்று தீர்மானம்பண்ணுகிறார்கள். இந்த ஊழியத்தைத் தவிர, சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணும் ஊழியத்திற்கு இடையூறாக இருக்கிற எந்தக் காரியத்திலும் அப்போஸ்தலர்கள் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள விரும்பவில்லை.

கர்த்தருடைய வார்த்தையும் ஜெபமும் சுவிசேஷ ஊழியத்தின் முக்கியமான அம்சமாகும். தேவவசனத்தைப் போதிக்கிறதினாலும், ஜெபம் பண்ணுகிறதினாலும் மாத்திரமே கிறிஸ்துவின் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும். விஸ்தாரமாக்கப்படும். தேவனுடைய ஊழியக்காரர்கள் இவ்விரண்டு காரியங்களிலும் தங்களை பூரணமாய் ஈடுபடுத்திக்கொள்ளவேண்டும். எப்போதாவது ஜெபம்பண்ணலாமென்றோ, அல்லது எப்போதாவது தேவவசனத்தைப் போதிக்கலாமென்றோ, ஏனோதானோவென்று ஊழியம் செய்யமுடியாது. இவ்விரண்டு காரியங்களிலும் அப்போஸ்தலர்கள் இடைவிடாமல் தரித்திருக்கவேண்டும்.

ஜனங்கள் மத்தியிலே தேவனுடைய வசனத்தை எடுத்துச்சொல்வதற்கு, அப்போஸ்தலர்கள் தேவனுடைய வாயாக இருந்து ஊழியம் செய்யவேண்டும். அதே வேளையில் ஜனங்களுடைய காரியங்களை தேவனுடைய சமுகத்தில் ஜெபத்தில் விண்ணப்பம்பண்ணுவதற்கு, அப்போஸ்தலர்கள் ஜனங்களுடைய வாயாக இருந்து ஊழியம் செய்யவேண்டும்.

பாவிகளை மனந்திருந்துமாறு வழிநடத்துவதற்கும், அவர்களுடைய பாவங்களை அவர்களுக்கு உணர்த்துவதற்கும், பரிசுத்தவான்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் போஷிக்கப்பட்டு வளர்ச்சி பெறுவதற்கும், அவர்களுக்கு ஜெபம்பண்ணினால் மாத்திரம் போதாது. தேவனுடைய வார்த்தையை அவர்களுக்குப் போதித்து ஊழியம் செய்யவேண்டும். வசனத்தை அவர்களுக்குப் பிரசங்கம்பண்ணினால் மாத்திரம் போதாது. அவர்களுக்காக ஜெபம்பண்ணவும் வேண்டும். நாம் பிரசங்கம்பண்ணாமலேயே தேவனுடைய கிருபையினால் எல்லா காரியங்களும் நடைபெறமுடியும். தேவகிருபையினால் எல்லாம் ஆகும். அதே சமயத்தில் தேவனுடைய கிருபை இல்லையென்றால், நம்முடைய பிரசங்கத்தினால் ஒன்றும் செய்யமுடியாது. கிருபை இல்லையென்றால் கிரியை வீணாய்ப்போகும். விருதாவாக இருக்கும்.

கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நாமும், அப்போஸ்தலரின் சந்ததியாக இருந்து, கர்த்தருடைய ஊழியத்தைச் செய்கிறோம். நம்முடைய முன்னோர்களாகிய அப்போஸ்தலரைப் போலவே நாமும் ஜெபம்பண்ணுவதிலும், தேவவசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருக்கவேண்டும்.

இந்த யோசனை

இந்த யோசனை சபையாரெல்லாருக்கும் பிரியமாயிருந்தது. அப்பொழுது விசுவாசமும் பரிசுத்தஆவியும் நிறைந்தவனாகிய ஸ்தேவானையும், பிலிப்பையும், பிரொகோரையும், நிக்கானோரையும், தீமோனையும், பர்மெனாவையும், யூதமார்க்கத் தமைந்தவனான அந்தியோகியா பட்டணத்தானாகிய நிக்கொலாவையும் தெரிந்துகொண்டு, (அப் 6:5)

அப்போஸ்தலரின் இந்த யோசனை சபையார் எல்லாருக்கும் ஏற்றுக்கொள்ளகூடிய விதத்தில் பிரியமாயிருக்கிறது. அப்போஸ்தலர்கள் தங்களுடைய யோசனையை வலுக்கட்டாயமாகச் சபையாரிடத்தில் திணிக்கவில்லை. தங்களுக்கு நியாயமாய்ப் படுகிற காரியத்தை, சபையாரிடத்தில் யோசனையாய்ச் சொல்லுகிறார்கள். அப்போஸ்தலரின் யோசனை சபையாரின் இருதயத்தைச் சந்தோஷப்படுத்துகிறது.

அப்போஸ்தலர்கள் ஆலோசனை சொன்னபிரகாரம், சபையார் தங்களில் பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழுபேரைத் தெரிந்தெடுக்கிறார்கள். அவர்களுடைய பெயர்கள் இங்கு குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த ஏழுபேரும் விதவைகளின் அன்றாடக விசாரணையை திட்டமாய் விசாரிக்கப்படுவதற்காக நியமிக்கப்படுகிறார்கள். தேவனுடைய பராமரிப்பை இவர்கள் ஜனங்கள் மத்தியில் பகிர்ந்துகொடுப்பதற்காகத் தெரிந்தெடுக்கப்படுகிறார்கள்.

தெரிந்தெடுக்கப்பட்ட ஏழுபேரும், தங்களுடைய நிலங்களை விற்று அப்போஸ்தலருடைய பாதபடியில், பொதுவாய் அனுபவிப்பதற்காக வைத்தவர்கள். அப்போஸ்தலரிடத்தில் பொதுவாக வைக்கப்பட்ட பணத்தை விநியோகம் பண்ணுவதற்காகத்தான் இவர்கள் தெரிந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட தர்மஊழியத்தைச் செய்கிறவர்கள் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக இருக்கவேண்டும். இவர்களுடைய கைகள் சுத்தமாக இருக்கவேண்டும். இவர்கள் தங்களுடைய நிலத்தை விற்று, பொதுவாக அனுபவிப்பதற்கு அப்போஸ்தலருடைய பாதத்தில் வைக்காமல், மற்றவர்கள் கொடுத்திருக்கும் பணத்தை மாத்திரம் இவர்கள் பகிர்ந்துகொடுத்தால் அது சரியாக இராது. பொதுக்காரியங்களில் ஈடுபடுகிறவர்கள் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக இருக்கவேண்டும். ஏழைகளுக்கு பிறருடைய பணத்தை உதவிசெய்வதற்காக நியமிக்கப்பட்டிருக்கிறவர்கள், முதலாவதாக தங்களுடைய பணத்தை ஏழைகளுக்கு உதவி செய்ய ஒப்புக்கொடுக்கவேண்டும்.

ஆதித் திருச்சபையில் தெரிந்தெடுக்கப்பட்ட ஏழுபேரும் கிரேக்க பாரம்பரியத்தைச் சேர்ந்த யூதர்கள். இவர்களுடைய பெயர்களெல்லாமே கிரேக்கப்பெயர்களாகவே இருக்கிறது. ஆதித்திருச்சபையில் சீஷர்கள் பெருகின போது கிரேக்கரானவர்கள்தான் தங்கள் விதவைகள் அன்றாடக விசாரணையில் திட்டமாய் விசாரிக்கப்படவில்லையென்று எபிரெயருக்கு விரோதமாக முறுமுறுத்தார்கள். அவர்களுடைய முறுமுறுப்பை அமைதிப்படுத்தும் வண்ணமாக, தெரிந்தெடுக்கப்பட்ட ஏழுபேரும் கிரேக்கராகவே இருக்கிறார்கள்.

அவர்களில் ஒருவன் நிக்கொலா. இவன் அந்தியோகியா பட்டணத்தைச் சேர்ந்தவன். யூதமார்க்கத்தமைந்தவன். ஏழுபேர்களில் ஸ்தேவானுடைய பெயர் முதலாவதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவன் விசுவாசமும் பரிசுத்த ஆவியும் நிறைந்தவன். பக்தியுள்ளவன். கர்த்தருக்காக வைராக்கியமாக ஊழியம் செய்கிறவன். இவனிடத்தில் மனுஷபயம் எதுவுமில்லை. இவன் மற்ற விசுவாசிகளைவிட விசேஷித்தவனாக இருக்கிறான். ஸ்தேவான் என்னும் பெயருக்கு "கிரீடம்" என்று பொருள். தன்னுடைய பெயருக்கு ஏற்ற பிரகாரம் இவன் எல்லா காரியங்களையும் நேர்த்தியாகச் செய்து முடிக்கிறவன்.

ஸ்தேவானுக்கு அடுத்தபடியாக பிலிப்புவின் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பந்திவிசாரிப்புக்காக நியமிக்கப்பட்ட பிலிப்பு, பிற்காலத்தில் ஒரு அப்போஸ்தலனாகப் பிரதிஷ்டை பண்ணப்படுகிறான். இவன் நீண்ட காலமாக அப்போஸ்தலருக்கு உதவிக்காரனாகவும் அவர்களுடைய உடன்ஊழியனாகவும் ஊழியம் செய்திருக்கிறான் (அப் 21:8). இவனுடைய பிரசங்கமும், இவன் ஞானஸ்நானம்கொடுத்த சம்பவமும் அப் 8:12-ஆவது வசனத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இவன் பந்திவிசாரணை செய்கிற சபை மூப்பன் மாத்திரமல்ல. ஒரு சுவிசேஷகனாகவும் ஊழியம் செய்திருக்கிறான்.

ஏழுபேர்களில் நிக்கொலாவின் பெயர் கடைசியாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் சீஷர்களில் ஒருவனாகிய யூதாஸ்காரியோத்தைப்போல, பிற்காலத்தில் நிக்கொலாவும் கிறிஸ்தவ மார்க்கத்தைவிட்டு விலகிப்போய்விட்டான் என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள். பிற்காலத்தில் இவன் நிக்கொலாய் மதத்தை ஸ்தாபித்தான். இவர்களுடைய உபதேசமும் கிரியைகளும் வெறுக்கப்படத்தக்கவைகள் (வெளி 2:6,15).

கைகளை வைத்தார்கள்

அவர்களை அப்போஸ்தலருக்கு முன்பாக நிறுத்தினார்கள். இவர்கள் ஜெபம்பண்ணி, அவர்கள்மேல் கைகளை வைத்தார்கள் (அப் 6:6).

ஆதித்திருச்சபையார் விதவைகளை விசாரிப்பதற்காக ஏழுபேரைத் தங்களுக்குள் தெரிந்தெடுக்கிறார்கள். அவர்களை அப்போஸ்தலருக்கு முன்பாக நிறுத்துகிறார்கள். விதவைகளை விசாரிக்கும் ஊழியத்திற்காக, அப்போஸ்தலர்களே, அவர்களை பிரதிஷ்டை பண்ணுகிறார்கள். அப்போஸ்தலர்கள் இந்த ஏழுபேருக்காகவும், இந்த ஏழுபேரோடும் ஜெபம்பண்ணுகிறார்கள். சபையின் ஊழியத்திற்கு யாரெல்லாம் நியமிக்கப் படுகிறார்களோ, அவர்களெல்லோரையும் தேவனுடைய கிருபைக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும். சபையார் எல்லாருமாக சேர்ந்து ஜெபிக்கும்போது தேவனுடைய கிருபை அங்கு வந்து இறங்கும்.

அப்போஸ்தலர்கள் ஜெபம்பண்ணி, இந்த ஏழுபேர்மேல் கைகளை வைக்கிறார்கள். அப்போஸ்தலர்கள் தங்கள் கைகளை இந்த ஏழுபேர் மீது வைப்பது, தேவனுடைய ஆசீர்வாதம் அவர்கள்மீது வந்திறங்குவதற்கு அடையாளமாக இருக்கிறது. அவர்களுடைய ஜெபத்திற்கு தேவனிடத்திலிருந்து பதில் கிடைத்ததற்கு அடையாளமாக அப்போஸ்தலர்கள் இந்த ஏழுபேர் மீது கைகளை வைக்கிறார்கள். இவர்கள் எந்த ஊழியத்திற்காக தெரிந்துகொள்ளப்பட்டார்களோ அந்த ஊழியத்தைச் செய்வதற்கு அவர்களை அனுமதிக்கும் வண்ணமாக, அப்போஸ்தலர்கள் அவர்கள்மீது கைகளை வைக்கிறார்கள்.

சீஷருடைய தொகை

தேவவசனம் விருத்தியடைந்தது; சீஷருடைய தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று; ஆசாரியர்களில் அநேகரும் விசுவாசத்துக்குக் கீழ்ப்படிந்தார்கள் (அப் 6:7).

ஆதித்திருச்சபையில் சீஷர்களின் எண்ணிக்கை பெருகிற்று. விதவைகள் அன்றாடக விசாரணையில் திட்டமாய் விசாரிக்கப்படவில்லை என்னும் முறுமுறுப்பு உண்டாயிற்று. அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியானவரின் யோசனையினால் இந்தப் பிரச்சனையைத் தீர்த்து வைக்கிறார்கள். விதவைகளை விசாரிப்பதற்கு ஏழுபேரை சபையார் தெரிந்தெடுக்கிறார்கள். அப்போஸ்தலர்கள் அவர்கள்மீது கைகளை வைத்து ஜெபம்பண்ணி, அவர்களை அந்த ஊழியத்திற்காகப் பிரதிஷ்டை பண்ணுகிறார்கள். அப்போஸ்தலர்களோ ஜெபம்பண்ணுவதிலும் தேவவசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருக்கிறார்கள். இதனால் தேவனுடைய கிருபை ஆதித்திருச்சபையில் பெருகிற்று. தேவனுடைய வசனம் விருத்தியடைகிறது. சீஷருடைய தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் உலகப்பிரகாரமான வேலைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்காமல், ஜெபம்பண்ணுவதிலும் தேவவசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருக்கவேண்டும். அப்போது தேவனுடைய கிருபை அவர்களுடைய ஊழியத்தின் மூலமாக வெளிப்படும். தேவவசனம் விருத்தியடையும். சுவிசேஷம் பிரபல்யமடையும். ஊழியத்தில் முன்னேற்றம் காணப்படும்.

எருசலேமில் சீஷருடைய தொகை பெருகிற்று. இயேசுகிறிஸ்து இந்தப் பூமியில் ஊழியம் செய்த நாட்களில், எருசலேமில் அவருக்கும் அவருடைய ஊழியத்திற்கும் மிகுந்த எதிர்ப்பு உண்டாயிற்று. எருசலேமில் அநேகர் இயேசுகிறிஸ்துவையும் அவருடைய சுவிசேஷத்தையும் ஏற்றுக்கொள்ளவில்லை. எருசலேமிலுள்ள யூதர்கள் இயேசுவின்மீதுள்ள கோபத்தினால் அவரைச் சிலுவையில் அறைந்து கொன்றுபோட்டார்கள். ஆனால் இப்போதோ அங்கு நிலமை மாறியிருக்கிறது. எருசலேமில் சீஷருடைய தொகை மிகவும் பெருகியிருக்கிறது. தேவனுக்கென்று மீதமாயிருக்கிறவர்கள் எல்லா இடங்களிலும் இருக்கிறார்கள். அதிக எதிர்ப்புள்ள இடங்களிலும் இருக்கிறார்கள். மிகவும் மோசமான இடங்களிலும் இருக்கிறார்கள்.

ஆசாரியர்களில் அநேகரும் விசுவாசத்திற்குக் கீழ்ப்படிகிறார்கள். இயேசுகிறிஸ்து ஊழியம் செய்த காலத்தில் ஆசாரியர்கள் அவருக்கு விரோதமாக எழும்பினார்கள். இப்போதோ அந்த ஆசாரியர்களில் அநேகர் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறார்கள். கிறிஸ்துவின் வசனத்திற்குக் கீழ்ப்படிகிறார்கள். ஒரு காலத்தில் ஆசாரியர்கள் கிறிஸ்துவுக்கு விரோதமாகத் தீவிரமாகப் பேசி கிரியை செய்தார்கள்.

இவர்கள் இயேசுகிறிஸ்துவைத் தங்கள் இரட்சகராகவும், ஆண்டவராகவும் ஏற்றுக்கொண்டு ஆத்தும இரட்சிப்பைப் பெறுவதற்கு வாய்ப்பேயில்லை என்றுதான் பொதுவாக எல்லோரும் நினைத்தார்கள். ஆனால் தேவனுடைய ஆவியானவர் ஆசாரியர்களின் உள்ளத்திலும் கிரியை செய்கிறார். இதனால் ஆசாரியர்களில் அநேகர் விசுவாசத்திற்குக் கீழ்ப்படிகிறார்கள். ஆசாரியர்கள் மத்தியில் எழுப்புதல் உண்டாயிற்று.

ஆசாரியர்கள் தங்களுடைய மார்க்கப் பெருமைகளையெல்லாம் தங்களைவிட்டு அகற்றிவிட்டு, இயேசுகிறிஸ்துவின் வசனத்தைத் தங்கள் உள்ளத்தில் ஏற்றுக்கொள்கிறார்கள். சுவிசேஷத்தின் உபதேசத்தை அங்கீகரித்து அதற்குக் கீழ்ப்படிகிறார்கள். இயேசுவைக் கிறிஸ்து என்று ஏற்றுக்கொள்ளாத ஆசாரியர்கள் இப்போது இயேசுவே கிறிஸ்து என்று அங்கீகரிக்கிறார்கள். தேவாலயத்தின் பிரமாணங்களுக்கும், யூதருடைய பாரம்பரியத்திற்கும் மாத்திரம் கீழ்ப்படிந்து ஊழியம் செய்தவர்கள் இப்போது, இயேசுகிறிஸ்துவில் தாங்கள் வைத்திருக்கும் விசுவாசத்திற்குக் கீழ்ப்படிகிறார்கள். கிறிஸ்துவின் உபதேசத்திற்குக் கீழ்ப்படிய ஆசாரியர்கள் தங்களைச் சந்தோஷமாய் ஒப்புக்கொடுக்கிறார்கள்.

ஸ்தேவான்
அப் 6 : 8-15

அப் 6:8. ஸ்தேவான் விசுவாசத்தினாலும் வல்லமையினாலும் நிறைந்தவனாய் ஜனங்களுக்குள்ளே பெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தான்.

அப் 6:9. அப்பொழுது லிபர்த்தீனர் என்னப்பட்டவர்களின் ஆலயத்தைச் சேர்ந்தவர்களிலும், சிரேனே பட்டணத்தாரிலும், அலெக்சந்திரியா பட்டணத்தாரிலும், சிலிசியா நாட்டாரிலும், ஆசியா தேசத்தாரிலும் சிலர் எழும்பி, ஸ்தேவானுடனே தர்க்கம்பண்ணினார்கள்.

அப் 6:10. அவன் பேசின ஞானத்தையும் ஆவியையும் எதிர்த்துநிற்க அவர்களால் கூடாமற்போயிற்று.

அப் 6:11. அப்பொழுது அவர்கள்: மோசேக்கும் தேவனுக்கும் விரோதமாக இவன் தூஷண வார்த்தைகளைப் பேசக்கேட்டோம் என்று சொல்லும்படியாக மனுஷரை ஏற்படுத்தி:

அப் 6:12. ஜனங்களையும் மூப்பரையும் வேதபாரகரையும் எழுப்பிவிட்டு; அவன்மேல் பாய்ந்து, அவனைப்பிடித்து, ஆலோசனைச் சங்கத்தாருக்கு முன்பாக இழுத்துக் கொண்டுபோய்,

அப் 6:13. பொய்ச்சாட்சிகளையும் நிறுத்தினார்கள். இவர்கள்: இந்த மனுஷன் இந்தப் பரிசுத்த ஸ்தலத்துக்கும் வேதப்பிரமாணத்துக்கும் விரோதமாகத் தூஷண வார்த்தைகளை ஓயாமற் பேசுகிறான்.

அப் 6:14. எப்படியென்றால், நசரேயனாகிய அந்த இயேசு இந்த ஸ்தலத்தை அழித்துப்போட்டு, மோசே நமக்குக் கொடுத்த முறைமைகளை மாற்றுவானென்று இவன் சொல்லக்கேட்டோம் என்றார்கள்.

அப் 6:15. ஆலோசனைச் சங்கத்தில் உட்கார்ந்திருந்த அனைவரும் அவன்மேல் கண்ணோக்கமாயிருந்து, அவன் முகம் தேவதூதன் முகம்போலிருக்கக் கண்டார்கள்.

விசுவாசத்தினாலும் வல்லமையினாலும்

ஸ்தேவான் விசுவாசத்தினாலும் வல்லமையினாலும் நிறைந்தவனாய் ஜனங்களுக்குள்ளே பெரிய அற்புதங்களையும் அடையாளங் களையும் செய்தான் (அப் 6:8).

ஆதித்திருச்சபையில் விதவைகளை விசாரிப்பதற்காகத் தெரிந்தெடுக்கப்பட்ட ஏழுபேரில் ஸ்தேவானும் ஒருவன். ஸ்தேவான் தனக்குக் கொடுக்கப்பட்ட ஊழியத்தை உண்மையாகவும் விவேகமாகவும் செய்கிறான். விதவைகளை விசாரிக்கும் ஊழியம் தன்னுடைய தகுதிக்குக் குறைந்த ஊழியம் என்று அதை ஏளனமாக நினைக்கவில்லை. இந்த ஊழியத்தைவிட தன்னால் பெரிய ஊழியத்தைச் செய்யமுடியுமென்று பெருமைப்படவில்லை. இது சிறிய ஊழியமாக இருந்தாலும், இந்த ஊழியத்தில் ஸ்தேவான் உண்மையுள்ளவனாக இருக்கிறான். கொஞ்சத்தில் உண்மையுள்ளவனை கர்த்தர் அநேகத்தின்மேல் அதிகாரியாக்குகிறார். ஸ்தேவான் விதவைகளை விசாரிக்கும் சிறிய ஊழியத்தில் உண்மையாய் இருப்பதினால், கர்த்தர் அவனுக்கு அதிகமான ஊழியப்பொறுப்புக்களைக் கொடுக்கிறார்.

ஸ்தேவான் விசுவாசத்தினாலும் வல்லமையினாலும் நிறைந்திருக்கிறான். ஜனங்களுக்குள்ளே இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் பெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்கிறான். கர்த்தருடைய பிள்ளைகள் விசுவாசத்தில் நிறைந்திருக்கும்போது அவர்கள் தேவவல்லமையிலும் நிறைந்திருப்பார்கள். ஏனெனில் தேவனுடைய வல்லமையானது, தேவனுடைய கிருபையினாலும் நம்முடைய விசுவாசத்தினாலும் வெளிப்படுகிறது.

நாம் விசுவாசத்தில் நிறையும்போது, நமக்குள்ளேயிருக்கும் சுயம் நம்மைவிட்டு வெளியேறுகிறது. கிறிஸ்துவின் சிந்தை நமக்குள் நிறைகிறது. கிறிஸ்துவின் வல்லமை நம்மை நிரப்புகிறது. ஸ்தேவான் விசுவாசத்தினாலும் வல்லமையினாலும் நிறைந்தவனாக இருப்பதினால், தம்முடையநாமத்தினால் அற்புதங்களையும் அடையாளங்களையும் ஜனங்களுக்குள்ளே செய்வதற்கு இயேசுகிறிஸ்து இவனைப் பயன்படுத்துகிறார். ஸ்தேவான் அற்புதங்களையும் அடையாளங்களையும் ஏதோ ஒரு மூலையில் ரகசியமாகச் செய்யவில்லை. ஜனங்கள் மத்தியில், எல்லோரும் அறியும் வண்ணமாக வெளிப்படையாகவே செய்கிறான். அப்போஸ்தலருக்கு விரோதமாக ஆலோசனைச்சங்கத்தார் கோபமாக இருந்தாலும், ஸ்தேவானிடத்தில் மனுஷபயமில்லை. அவன் இயேசுவின் நாமத்தினால் தைரியமாய் ஊழியம் செய்கிறான்.

தர்க்கம்பண்ணினார்கள்

அப்பொழுது லிபர்த்தீனர் என்னப்பட்டவர்களின் ஆலயத்தைச் சேர்ந்தவர்களிலும், சிரேனே பட்டணத்தாரிலும், அலெக்சந்திரியா பட்டணத்தாரிலும், சிலிசியா நாட்டாரிலும், ஆசியா தேசத்தாரிலும் சிலர் எழும்பி, ஸ்தேவானுடனே தர்க்கம்பண்ணினார்கள் (அப் 6:9).

ஸ்தேவான் விசுவாசத்தினாலும் வல்லமையினாலும் நிறைந்து கர்த்தருக்கு ஊழியம் செய்கிறான். இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் ஜனங்களுக்குள்ளே பெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்கிறான். அவனுடைய ஊழியத்திற்கு யூதர்கள் மூலமாக எதிர்ப்பு உண்டாயிற்று. இந்த யூதர்கள் கிரேக்கரானவர்கள். இவர்கள் கிரேக்கு தேசத்தில் யூதர்களாகயிருக்கிறார்கள். கிரேக்கு தேசத்தில் காணப்படும் புறஜாதி மார்க்கத்துப் பழக்கவழக்கங்களுக்கு மத்தியில், இவர்கள் யூதமார்க்கத்தைப் பின்பற்றி வருகிறார்கள்.

கிரேக்கு தேசத்திலிருந்து யூதருடைய பண்டிகையை ஆசரிப்பதற்காக இவர்கள் எருசலேமுக்கு வருவது வழக்கம். அதிக பிரயாணம் செய்து, பணம் செலவு செய்து தேவாலயத்திற்கு இவர்கள் வருகிறார்கள். எருசலேமிலுள்ள யூதர்கள் எப்போது வேண்டுமானாலும் தேவாலயத்திற்குப் போகலாம். தேவாலயத்திற்குப் போவது இவர்களுக்கு எளிதான காரியம். ஆனால் கிரேக்கு தேசத்திலுள்ள யூதர்களோ மிகவும் சிரமப்பட்டு எருசலேமுக்கு வருகிறார்கள்.

எருசலேமிலுள்ள யூதர்களுக்கு தேவாலயத்தின் காரியங்கள் இலகுவாக இருப்பதினால், இவர்களுடைய பக்தியும் இலகுவாகவே இருக்கிறது. ஆனால் கிரேக்கரானவர்களோ மிகுந்த சிரமப்பட்டு எருசலேமுக்கு வருவதினால், யூதமார்க்கத்தில் இவர்களுடைய பக்தி மிகவும் வலுவாக இருக்கிறது. எதையும் இவர்கள் சாதாரணமாக எடுத்துக்கொள்வதில்லை. எல்லாமே வேதவாக்கியத்தின் பிரகாரமாக இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள்.

ஸ்தேவானுக்கு எதிர்த்து நின்ற யூதர்கள் லிபர்த்தீனர் என்னப்பட்டவர்களின் ஆலயத்தைச் சேர்ந்தவர்கள். இன்னும் சிலர் சிரேனே பட்டணத்தைச் சேர்ந்த யூதர்கள். வேறு சிலர் சிலியா நாட்டிலும், ஆசியா தேசத்திலுமிருந்து எருசலேமுக்கு வந்திருக்கிற யூதர்கள்.

ரோமப்பேரரசில் லிபர்த்தீனர் என்பவர்கள் பிறப்பினால் அடிமைகளாக இருந்தவர்கள். அதன்பின்பு ரோமர்கள் அவர்களை விடுதலைபண்ணினார்கள். இவர்கள் யூதர்களாக இருந்தாலும் இவர்களுக்கும் ரோமப்பேரரசின் குடியுரிமை கிடைத்திருக்கிறது. அப்போஸ்தலர் பவுலும் ரோமப்பிரஜையாக இருந்தவர் (அப் 27,28).

யூதேயா தேசத்திலும் யூதர்கள் இருக்கிறார்கள். சிதறிப்போன யூதர்களோ எல்லா தேசங்களிலுமிருக்கிறார்கள். சிலிசியா நாட்டிலும், ஆசியா தேசத்திலும் இருந்த யூதர்கள் அந்த தேசத்தில் ஏதாவது தொழில் செய்துகொண்டிருப்பார்கள். வாய்ப்பு கிடைக்கும்போது எருசலேமுக்கு வந்து தேவாலயத்தில் ஆராதனை செய்வார்கள். ஒவ்வொரு தேசத்திலும் ஜெபாலயம் இருக்கிறது. ஆனால் எருசலேமில் மாத்திரமே தேவாலயம் இருக்கிறது. சிதறிப்போன யூதர்கள் இந்த தேவாலயத்திற்கு வரவேண்டுமென்று, திட்டமிட்டு வருவது வழக்கம்.

ஜெபாலயத்திற்கு வருகிறவர்கள், அதன் நிர்வாகத்தை அவர்களே கவனித்துக்கொள்ள வேண்டும். ஜெபாலயத்தின் ஊழியத்தையும் அவர்களே பார்த்துக்கொள்ளவேண்டும். இதில் அவர்கள் திருப்தியாக இருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின் உபதேசம் ஜெபாலத்திற்குள் வந்துவிடக்கூடாது என்று மிகுந்த எச்சரிக்கையாயிருக்கிறார்கள்.

அப்போஸ்தலர்களும் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணுகிறார்கள். ஸ்தேவானும் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணி, அவருடைய நாமத்தினால் அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்கிறான். இந்த யூதர்கள் அப்போஸ்தலருக்கு விரோதமாக தர்க்கம்பண்ணாமல், ஸ்தேவானுடனே மாத்திரம் தர்க்கம்பண்ணுகிறார்கள். ஒருவேளை அப்போஸ்தலர்கள் படிப்பறிவு இல்லாதவர்களென்றும், பேதமையுள்ளவர்களென்றும் நினைத்து, அவர்களோடு தர்க்கம்பண்ணுவது தங்களுடைய தகுதிக்கு ஏற்றதல்ல என்று நினைத்திருக்கலாம்.

ஸ்தேவானோ படிப்பறிவுள்ளவன். இப்படிப்பட்ட வேதபண்டிதனோடு தர்க்கம்பண்ணுவது தங்களுக்கும் கௌரவமானது என்று இந்த யூதர்கள் நினைத்திருக்கலாம். ஒருவேளை இந்த யூதர்கள் அப்போஸ்தலர்களைப் பார்த்து பயந்திருக்கலாம். அனனியாவும் சப்பீராளும் செத்துப்போன சம்பவம் இவர்களுக்கும் தெரிந்திருக்கும். ஆகையினால் அப்போஸ்தலருக்குப் பயந்து, அவர்களோடு தர்க்கம்பண்ணாமல் விலகியே இருந்திருக்கலாம்.

ஆதித்திருச்சபையில் விதவைகளை விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட ஏழுபேரில் ஸ்தேவானும் ஒருவன். சபையின் மூப்பர்களில் ஒருவன். சாதாரண ஊழியத்தைச் செய்கிறவன். யூதர்களோ அப்போஸ்தலரோடு தர்க்கம்பண்ணாமல் ஸ்தேவானோடு தர்க்கம்பண்ண வேண்டுமென்று தீர்மானம் பண்ணுகிறார்கள். இவன் பந்திவிசாரணை செய்கிற ஊழியத்தைச் செய்தாலும் தேவனுடைய விசேஷித்த கிருபை இவனிடத்தில் காணப்படுகிறது. இவன் மூலமாக அற்புதங்களும் அடையாளங்களும் நடைபெறுகிறது. சாதுரிய ஞானமுள்ளவனாக இருக்கிறான். வேதபாரகரைப்போல வேத ஞானத்திலும் சிறந்த பண்டிதனாக இருக்கிறான்.

ஸ்தேவான் யூதர்களோடு தர்க்கம்பண்ணி கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அவர்களுக்கு விளக்கிக் காண்பிக்கிறான். யூதர்கள் மத்தியில் ஊழியம் செய்வதற்காக கர்த்தர் தன்னை தெரிந்தெடுத்திருக்கிறார் என்று ஸ்தேவான் விசுவாசித்து, அவர்கள் மத்தியில் அதிகமாய் ஊழியம் செய்கிறான். இதனால் யூதர்கள் மற்ற அப்போஸ்தலரிடமோ அல்லது மற்ற மூப்பரிடமோ தர்க்கம்பண்ணுவதற்குப் பதிலாக, ஸ்தேவானுடனே தர்க்கம்பண்ணுகிறார்கள்.

ஞானத்தையும் ஆவியையும்

அவன் பேசின ஞானத்தையும் ஆவியையும் எதிர்த்துநிற்க அவர்களால் கூடாமற்போயிற்று (அப் 6:10).

யூதர்கள் ஸ்தேவானோடு தர்க்கம்பண்ணுகிறார்கள். ஸ்தேவானுடைய பேச்சில் ஞானமும் ஆவியும் நிறைந்திருக்கிறது. அவன் பேசின ஞானத்தையும் ஆவியையும் எதிர்த்து நிற்க யூதர்களால் கூடாமற்போயிற்று. தங்களுடைய தர்க்கத்திற்கு ஆதரவான விவாதத்தையும் யூதர்களால் சொல்ல முடியவில்லை. ஸ்தேவானுடைய கேள்விக்கும் இவர்களால் பதில் சொல்லமுடியவில்லை. தங்களுடைய நம்பிக்கையையும் இவர்களால் உறுதிபண்ண முடியவில்லை. ஸ்தேவானுடைய நம்பிக்கையையும் இவர்களால் எதிர்த்து நிற்க முடியவில்லை.

ஸ்தேவானோடு தர்க்கம் பண்ணியதினால் யூதர்களுக்கு குழப்பம் உண்டாயிற்று. அவன் பேசின ஞானத்தையும் ஆவியையும் அவர்களால் எதிர்க்க முடியவில்லை. ஆனால் ஸ்தேவானை எதிர்க்கவேண்டுமென்று தீர்மானமாய் இருக்கிறார்கள். அவர்கள் ஸ்தேவானோடு தர்க்கம்பண்ணுவதாக நினைத்தார்கள். ஸ்தேவானோ விசுவாசத்தினாலும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினாலும் நிறைந்திருக்கிறான். ஸ்தேவானோடு தர்க்கம்பண்ணுகிறவர்கள் பரிசுத்த ஆவியானவரோடு தர்க்கம் பண்ணுகிறார்கள். பரிசுத்த ஆவியோடு மனுஷரால் எதிர்த்து நிற்கமுடியாது. தேவஞானத்திற்கு முன்பாக மனுஷஞானம் சிறந்து விளங்காது.

யூதர்கள் ஸ்தேவானை மாத்திரமே பார்க்கிறார்கள். ஸ்தேவானோ தனக்குள் வாசம்பண்ணுகிற பரிசுத்த ஆவியானவரையே பார்க்கிறான். அவரையே விசுவாசிக்கிறான். ஆவியானவர் கொடுக்கிற வார்த்தைகளைப் பேசுகிறான். அவனுடைய வார்த்தையில் ஞானமும் ஆவியும் வெளிப்படுகிறது. யூதர்களால் அதை எதிர்த்து நிற்க கூடாமற்போயிற்று.

ஆலோசனைச்சங்கத்தார்

அப்பொழுது அவர்கள்: மோசேக்கும் தேவனுக்கும் விரோதமாக இவன் தூஷண வார்த்தைகளைப் பேசக்கேட்டோம் என்று சொல்லும்படியாக மனுஷரை ஏற்படுத்தி: ஜனங்களையும் மூப்பரையும் வேதபாரகரையும் எழுப்பிவிட்டு; அவன்மேல் பாய்ந்து, அவனைப்பிடித்து, ஆலோசனைச் சங்கத்தாருக்கு முன்பாக இழுத்துக் கொண்டுபோய், (அப் 6:11,12)

யூதர்கள் ஸ்தேவானுடனே தர்க்கம்பண்ணுகிறார்கள். ஆனாலும் அவன் பேசின ஞானத்தையும், ஆவியையும் எதிர்த்து நிற்க அவர்களால் கூடாமற்போயிற்று. இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை ஸ்தேவான் வார்த்தையினால் அறிவித்து, தன்னுடைய இரத்தத்தினால் அதை உறுதிபண்ணுகிறான். கிறிஸ்துவின் நாமத்திற்காக இரத்தசாட்சியாக மரிக்க ஆயத்தமாகயிருக்கிறான்.

ஸ்தேவானோடு யூதர்களால் எதிர்த்து நின்று தர்க்கம்பண்ண முடியவில்லை. முடிவில் ஸ்தேவானை ஒரு குற்றவாளியாகப்பிடித்து விசாரிக்கலாமென்று யூதர்கள் சதிஆலோசனை பண்ணுகிறார்கள். அதற்காக ஜனங்களையும், மூப்பரையும், வேதபாரகரையும் ஸ்தேவானுக்கு விரோதமாக எழுப்பிவிடுகிறார்கள். ஸ்தேவானுக்கு விரோதமாக பொய்ச்சாட்சி சொல்லும்படி மனுஷரை ஏற்படுத்துகிறார்கள். ஸ்தேவான் மோசேக்கும் தேவனுக்கும் விரோதமாகத் தூஷண வார்த்தைகளைப் பேசினதாகக் குற்றம் சுமத்துகிறார்கள்.

ஸ்தேவானுக்கு விரோதமாக திரளான ஜனங்களையும், ஆலோசனைச் சங்கத்தையும் எழுப்புகிறார்கள். ஆலோசனைச்சங்கத்தார் ஸ்தேவானை தண்டியாமல் விடுதலைபண்ணினாலும், அவனை எப்படியாவது விசாரித்துத் தண்டிக்கவேண்டுமென்பதற்காக, அவர்கள் ஜனங்களையும், மூப்பரையும், வேதபாரகரையும் எழுப்பிவிடுகிறார்கள். திரளான ஜனங்கள் ஸ்தேவானுக்கு விரோதமாக எழுப்பப்பட்டால், ஆலோசனைச்சங்கத்தார் அவனை நிச்சயம் தண்டிப்பார்கள் என்று யூதர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

ஸ்தேவானுக்கு ஆதரவாக சிலர் பேசினாலும், அவனுக்கு விரோதமாக ஏராளமான ஜனங்களை எழுப்புகிறார்கள். ஒரே வில்லில் இரண்டு நாண்களை ஏற்றுவதுபோல் ஸ்தேவானுக்கு விரோதமாக ஜனங்களையும் எழுப்புகிறார்கள். ஆலோசனைச் சங்கத்தையும் தூண்டிவிடுகிறார்கள். இவ்விரண்டில் ஏதாவது ஒன்று ஸ்தேவானுக்கு விரோதமாக கிரியை செய்யும் என்று நம்புகிறார்கள்.

யூதர்கள் ஸ்தேவான் மேல் பாய்ந்து, அவனைப் பிடித்து, அவனை ஆலோசனைச்சங்கத்தாருக்கு முன்பாக இழுத்துக்கொண்டு போகிறார்கள். ஒரு சிங்கம் தன் இரையின்மீது பாய்வதுபோல, யூதர்கள் ஸ்தேவான் மீது பாய்கிறார்கள்.

பொய்ச்சாட்சிகள்

பொய்ச் சாட்சிகளையும் நிறுத்தினார்கள். இவர்கள்: இந்த மனுஷன் இந்தப் பரிசுத்த ஸ்தலத்துக்கும் வேதப்பிரமாணத்துக்கும் விரோதமாகத் தூஷண வார்த்தைகளை ஓயாமற் பேசுகிறான். எப்படியென்றால், நசரேயனாகிய அந்த இயேசு இந்த ஸ்தலத்தை அழித்துப்போட்டு, மோசே நமக்குக் கொடுத்த முறைமைகளை மாற்றுவானென்று இவன் சொல்லக்கேட்டோம் என்றார்கள் (அப் 6:13,14).

ஸ்தேவானுக்கு விரோதமாக மூன்று காரியங்களைப் பொய்ச்சாட்சியாகக் கூறுகிறார்கள். அவையாவன: 1. ஸ்தேவான் மோசேக்கும் தேவனுக்கும் விரோதமாக தூஷண வார்த்தைகளைப் பேசினான் (அப் 6:11). 2. ஸ்தேவான் இந்தப் பரிசுத்த ஸ்தலத்திற்கும் வேதப்பிரமாணத்திற்கும் விரோதமாக தூஷண வார்த்தைகளை ஓயாமல் பேசுகிறான் (அப் 6:13). 3. நசரேயனாகிய அந்த இயேசு இந்த ஸ்தலத்தை அழித்துப்போட்டு மோசே நமக்குக் கொடுத்த முறைமைகளை மாற்றுவான் என்று ஸ்தேவான் சொன்னான் (அப் 6:14).

ஸ்தேவானுக்கு விரோதமாக ஆலோசனைச் சங்கத்தாரிடம் பேசுகிறவர்கள். "பொய்ச்சாட்சிகள்" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவர்களுடைய சாட்சியில் ஓரளவு உண்மையிருந்தாலும், இவர்கள் உண்மையைத் திரித்துப் பேசுகிறார்கள். ஸ்தேவானுக்கு விரோதமாக சதி ஆலோசனைபண்ணுகிறார்கள். ஸ்தேவான் தூஷணமான வார்த்தைகளைப் பேசினான் என்பதுதான் அவன்மீது கூறப்படும் பொதுவான குற்றச்சாட்டு. அந்தத் தூஷண வார்த்தைகளை ஸ்தேவான் ஓயாமல் பேசுகிறான் என்று கூறி தங்களுடைய குற்றச்சாட்டை உறுதிபண்ணுகிறார்கள்.

ஸ்தேவான் தூஷண வார்த்தைகளைப் பேசும்போது, தாங்கள் அவனை எச்சரித்ததாகவும், எச்சரித்தும் அவன் அதைக் கேட்காமல், தூஷண வார்த்தைகளை ஓயாமல் பேசுவதாகவும் அவன்மீது குற்றம் சுமத்துகிறார்கள். தேவனுடைய நாமத்தின்மீது தங்களுக்கு மிகுந்த பக்தியிருப்பதாகவும், தாங்கள் தேவனுடைய நாமத்தை கனப்படுத்துகிறவர்கள் என்றும், யூதர்கள் தங்களைக் காண்பித்துக்கொள்கிறார்கள். ஆனால் உண்மையிலேயே இவர்களுக்கு தேவன் மீதுள்ள பக்தியைவிட, ஸ்தேவான் மீதுள்ள கோபமே அதிகமாயிருக்கிறது.

ஸ்தேவான் மோசேக்கும் தேவனுக்கும் விரோதமாக தூஷண வார்த்தைகளைப் பேசக்கேட்டதாக பொய்ச்சாட்சிகள் கூறுகிறார்கள். ஆனால் உண்மையில் ஸ்தேவான் மோசேக்கு விரோதமாக ஒரு வார்த்தையும் பேசவில்லை. இயேசுகிறிஸ்துவோ அல்லது சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிற ஊழியக்காரரோ, மோசேக்கு விரோதமாக எந்த தூஷண வார்த்தையும் பேசியதில்லை. ஸ்தேவானைக் குற்றப்படுத்த வேண்டு மென்பதற்காக, பொய்ச்சாட்சிக்காரர்கள், அவன்மீது பொய்குற்றம் சுமத்துகிறார்கள்.

ஸ்தேவான் இந்தப் பரிசுத்த ஸ்தலத்திற்கும், வேதப்பிரமாணத்திற்கும் விரோதமாக தூஷண வார்த்தைகளைஓயாமல் பேசுவதாக குற்றம் சுமத்துகிறார்கள். பொய்ச்சாட்சிக்காரரின் குற்றச்சாட்டிற்கு ஆதாரம் எதுவுமில்லை. இயேசுகிறிஸ்து தேவாலயத்தைப்பற்றி பேசினார். ஆனால் யூதர்களோ இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகள் தேவாலயத்திற்கு விரோதமான தூஷண வார்த்தைகள் என்று கூறினார்கள். இயேசுவின்மீது ஏதாவது குற்றம் சுமத்தவேண்டுமென்பதற்காக, யூதர்கள் அவர்மீது பொய்குற்றம் சுமத்தினார்கள். இப்போது ஸ்தேவான்மீது குற்றம் சுமத்துகிற யூதர்களும் பொய் பேசுகிறார்கள். ஸ்தேவான் வேதப்பிரமாணத்திற்கு விரோதமாகத் தூஷண வார்த்தைகளைச் சொன்னதாகவும், அதைத் தாங்கள் கேட்டதாகவும் சொல்லுகிறார்கள்.

நசரேயனாகிய இயேசு இந்த ஸ்தலத்தை அழித்துப்போடுவார் என்றும், மோசே தங்களுக்குக் கொடுத்த முறைமைகளை இயேசுகிறிஸ்து மாற்றுவார் என்றும், ஸ்தேவான் தங்களிடத்தில் சொன்னதாக அவன்மீது குற்றம் சுமத்துகிறார்கள். ஸ்தேவானுடைய வார்த்தையில் பரிசுத்த ஸ்தலத்திற்கு விரோதமான தூஷண வார்த்தை எதுவுமில்லை.

ஸ்தேவானின் முகம்

ஆலோசனைச் சங்கத்தில் உட்கார்ந்திருந்த அனைவரும் அவன்மேல் கண்ணோக்கமாயிருந்து, அவன் முகம் தேவதூதன் முகம் போலிருக்கக் கண்டார்கள் (அப் 6:15) .

ஆலோசனைச் சங்கத்தில் உட்கார்ந்திருக்கிற அனைவரும் ஸ்தேவான் மேல் கண்ணோக்க மாயிருக்கிறார்கள். ஸ்தேவானுடைய முகம் தேவதூதன் முகம்போல் இருப்பதைக் காண்கிறார்கள். ஆலோசனைச்சங்கத்தில் அமர்ந்திருக்கிற நியாயாதிபதிகள், குற்றம் சாட்டப்பட்டவருடைய முகத்தைக் கவனிப்பது வழக்கம். சில சமயங்களில் குற்றம் சாட்டப்பட்டவர் மெய்யாகவே குற்றவாளியா, அல்லது அவர் நிரபராதியா என்பது அவருடைய முகத்தோற்றத்திலேயே தெரிந்துவிடும். அதற்காக குற்றம் சுமத்தப்பட்டவரை நீதிபதிகள் கூர்ந்து கவனிப்பது வழக்கம்.

தங்கள் வழக்கத்தின் பிரகாரமாக ஆலோசனைச்சங்கத்தில் உட்கார்ந்திருந்த அனைவரும் ஸ்தேவானின் முகத்தைக் கூர்ந்து பார்க்கிறார்கள். அவனுடைய முகம் தேவதூதன் முகம் போலிருப்பதைக் காண்கிறார்கள். ஸ்தேவான் ஆலோசனைச்சங்கத்திற்கு முன்பாக இருந்தாலும் மிகுந்த சந்தோஷமாக இருக்கிறான். அவனுடைய முகத்தில் பயமோ கவலையோ இல்லை. கெம்பீரமாக இருக்கிறான். தேவதூதன் தேவனைத் துதிப்பதுபோல ஸ்தேவானும் தேவனைத் துதித்துக்கொண்டிருக்கிறான். ஸ்தேவானுக்கும் தேவதூதனுக்கும் ஆலோசனைச்சங்கத்தாரால் வித்தியாசம் காணமுடியவில்லை.

தேவனுடைய கிருபையினாலும் அவருடைய அற்புத வல்லமையினாலும், ஸ்தேவானுடைய முகம் பிரகாசமாகயிருக்கிறது. கர்த்தர் ஸ்தேவானைக் கனப்படுத்துகிறார். தமக்கு உண்மையாய் ஊழியம் செய்த ஸ்தேவானுடைய முகத்தைப் பிரகாசிக்கச் செய்கிறார்.

ஸ்தேவான் மீது குற்றம் சுமத்தியோருக்கும் ஆலோசனைச் சங்கத்தாருக்கும் குழப்பமுண்டாயிற்று. ஸ்தேவானுடைய முகம் தேவதூதன் முகம் போலிருப்பதைக் கூட்டத்திலிருக்கிற ஏதோ ஒருவர் மாத்திரம் காணாமல், ஆலோசனைச்சங்கத்தில் உட்கார்ந்திருக்கிற அனைவரும் காண்கிறார்கள். ஸ்தேவான் தேவனுடைய ஊழியக்காரன் என்பதை அவனுடைய முகத்தின் பிரகாரம் தெளிவாய் வெளிப்படுத்துகிறது. ஸ்தேவானுடைய முகம் பிரகாசமாகயிருக்கிறது. ஆலோசனைச்சங்கத்தாருடைய முகம் அவமானப்படுகிறது.

தேவனுடைய ஞானமும் பரிசுத்தமும் மனுஷனுடைய முகத்தை பிரகாசமடையச் செய்யும். யூதர்கள் ஸ்தேவானைப்பிடித்து ஆலோசனைச்சங்கத்திற்கு முன்பாக இழுத்துக்கொண்டுபோய் நிறுத்தினாலும், ஸ்தேவான் சிறிதும் பயப்படவில்லை. கர்த்தருக்காக ஊழியம் செய்கிறான். கர்த்தருடைய நாமத்தில் அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தான். இப்போதும் கர்த்தருடைய சித்தம் நிறைவேறட்டும் என்று, கர்த்தருக்குள் சந்தோஷமாக இருக்கிறான்.

7 அதிகாரம்

ஸ்தேவான் இரத்தச்சாட்சியாக மரித்த சம்பவம் இந்த அதிகாரத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது. இவனே கிறிஸ்துவுக்காக முதலாவது இரத்தச் சாட்சியாக மரித்தவன். ஆகையினால் இவனுடைய பாடுகளும் மரணமும் விரிவாக எழுதப்பட்டிருக்கிறது. மற்ற அப்போஸ்தலர்களும் இரத்தச்சாட்சிகளாக மரித்திருக்கிறார்கள். ஆனாலும் ஸ்தேவான் முதலாவது இரத்தசாட்சியாக மரித்ததினால், மற்றவர்களைவிட ஸ்தேவான் இரத்தச்சாட்சியாக மரித்த சம்பவம் வேதாகமத்தில் விரிவாக எழுதப்பட்டிருக்கிறது.

ஸ்தேவான் மோசேக்கும் தேவனுக்கும் விரோதமாக தூஷண வார்த்தைகளைப் பேசினான் என்று யூதர்கள் அவன்மீது குற்றம் சுமத்துகிறார்கள். மேலும் இயேசு தேவாலயத்தை அழித்துப் போடுவாரென்றும், மோசே தங்களுக்குக் கொடுத்த முறைமைகளை இயேசு மாற்றுவாரென்றும் ஸ்தேவான் கூறியதாகவும் அவன் மீது குற்றம் சுமத்துகிறார்கள். ஆலோசனைச் சங்கத்திற்கு முன்பாக ஸ்தேவான் தன்னுடைய நியாயத்தை எடுத்துச் சொல்லுகிறான். தேவனுக்கு விரோதமாகவோ அல்லது மோசேயின் பிரமாணத்திற்கு விரோதமாகவோ தான் ஒன்றும் பேசவில்லையென்று தன்னுடைய விவாதத்தை எடுத்துச்சொல்லுகிறான்.

ஸ்தேவான் ஆலோசனைச் சங்கத்தாரிடம் பேசும்போது பழைய ஏற்பாட்டின் வரலாற்றை சுருக்கமாக விவரிக்கிறான். பரிசுத்த ஆலயம், பிரமாணம் ஆகியவை இனி மேல் வரப்போகிற காரியங்களுக்கு அடையாளமாகவே கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை ஸ்தேவான் அவர்களுக்கு விவரித்துக் கூறுகிறான். மேலான காரியங்களுக்கு நாம் இடம் கொடுக்க வேண்டும் என்று சொல்வது தூஷணமான வார்த்தையாகாது என்றும் ஸ்தேவான் விவாதம் பண்ணுகிறான் (அப் 7:1-50).

தன்மீது குற்றம் சுமத்துகிறவர்களுக்கும், ஆலோசனைச் சங்கத்தில் நியாயாதிபதிகளாக அமர்ந்திருக்கிறவர்களுக்கும் ஸ்தேவான் தன்னுடைய விவாதத்தை விரிவாக எடுத்துச் சொல்லுகிறான்(அப் 7:51-53).ஸ்தேவானை யூதர்கள் கல்லெறிந்து கொல்லுகிறார்கள். ஸ்தேவான் தான் மரிக்கும்போதுகூட பொறுமையாகவும், சந்தோஷமாகவும் தன் மரணத்தை ஏற்றுக் கொள்கிறான் (அப் 7:54-60).

ஆபிரகாமின் சந்ததி
அப் 7 : 1-16

அப் 7:1. பிரதான ஆசாரியன் அவனை நோக்கி: காரியம் இப்படியாயிருக்கிறது என்று கேட்டான்.

அப் 7:2. அதற்கு அவன்: சகோதரரே, பிதாக்களே, கேளுங்கள். நம்முடைய பிதாவாகிய ஆபிரகாம் காரானூரிலே குடியிருக்கிறதற்கு முன்னமே மெசொப்பொத்தாமியா நாட்டிலே இருக்கும்போது மகிமையின் தேவன் அவனுக்குத் தரிசனமாகி:

அப் 7:3. நீ உன் தேசத்தையும் உன் இனத்தையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்கு வா என்றார்.

அப் 7:4. அப்பொழுது அவன் கல்தேயர் தேசத்தை விட்டுப் புறப்பட்டு, காரானூரிலே வாசம் பண்ணினான். அவனுடைய தகப்பன் மரித்தபின்பு, அவ்விடத்தை விட்டு நீங்கள் இப்பொழுது குடியிருக்கிற இத்தேசத்திற்கு அவனை அழைத்து கொண்டு வந்து குடியிருக்கும்படி செய்தார்.

அப் 7:5. இதிலே ஒரு அடி நிலத்தையாகிலும் அவனுடைய கையாட்சிக்குக் கொடாமலிருக்கையில், அவனுக்குப் பிள்ளையில்லாதிருக்கும் போது: உனக்கும் உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் இதைச் சுதந்தரமாகத் தருவேன் என்று அவனுக்கு வாக்குத்தத்தம்பண்ணினார்.

அப் 7:6. அந்தப்படி தேவன் அவனை நோக்கி: உன் சந்ததியார் அந்நிய தேசத்தில் சஞ்சரிப்பார்கள்; அத்தேசத்தார் அவர்களை அடிமைகளாக்கி, நானூறு வருஷம் துன்பப்படுத்துவார்கள்.

அப் 7:7. அவர்களை அடிமைப்படுத்தும் ஜனத்தையோ நான் ஆக்கினைக் குட்படுத்துவேன். அதற்குப் பின்பு அவர்கள் புறப்பட்டு வந்து இவ்விடத்திலே எனக்கு ஆராதனை செய்வார்கள் என்றார்.

அப் 7:8. மேலும் விருத்தசேதன உடன்படிக்கையையும் அவனுக்கு ஏற்படுத்தினார். அந்தப்படியே அவன் ஈசாக்கைப் பெற்றபோது, எட்டாம் நாளிலே அவனை விருத்தசேதனம் பண்ணினான். ஈசாக்கு யாக்கோபையும், யாக்கோபு பன்னிரண்டு கோத்திரப்பிதாக்களையும் பெற்றார்கள்.

அப் 7:9. அந்தக் கோத்திரப்பிதாக்கள் பொறாமை கொண்டு யோசேப்பை எகிப்துக்குக் கொண்டுபோகும்படியாக விற்றுப்போட்டார்கள்.

அப் 7:10. தேவனோ அவனுடனேகூட இருந்து, எல்லா உபத்திர வங்களினின்றும் அவனை விடுவித்து, எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் சமுகத்திலேஅவனுக்குக் கிருபையையும் ஞானத்தையும் அருளினார்; அந்த ராஜா அவனை எகிப்துதேசத்திற்கும் தன் வீட்டனைத்திற்கும் அதிகாரியாக ஏற்படுத்தினான்.

அப் 7:11. பின்பு எகிப்து கானான் என்னும் தேசங்களிலெங்கும் பஞ்சமும் மிகுந்த வருத்தமும் உண்டாகி, நம்முடைய பிதாக்களுக்கு ஆகாரம் கிடையாமற்போயிற்று.

அப் 7:12. அப்பொழுது எகிப்திலே தானியம் உண்டென்று யாக்கோபு கேள்விப்பட்டு, நம்முடைய பிதாக்களை முதலாந்தரம் அனுப்பினான்.

அப் 7:13. இரண்டாந்தரம் யோசேப்பு தன்னுடைய சகோதரருக்குத் தன்னைத் தெரியப்படுத்தினான். யோசேப்புடைய வம்சமும் பார்வோனுக்குத் தெரிய வந்தது.

அப் 7:14. பின்பு யோசேப்பு, தன்னுடைய தகப்பன் யாக்கோபும் தன்னுடைய இனத்தார் யாவருமாகிய, எழுபத்தைந்து பேரை அழைக்க அனுப்பினான்.

அப் 7:15. அந்தப்படி யாக்கோபு எகிப்துக்குப் போனான். அவனும் நம்முடைய பிதாக்களும் மரித்து,

அப் 7:16. அங்கேயிருந்து சீகேமுக்குக் கொண்டுவரப்பட்டு, ஆபிரகாம் சீகேமின் தகப்பனாகிய ஏமோருடைய சந்ததியாரிடத்தில் ரொக்கக் கிரயத்துக்கு வாங்கியிருந்த கல்லறையில் வைக்கப்பட்டார்கள்.

பிரதான ஆசாரியன்

பிரதான ஆசாரியன் அவனை நோக்கி: காரியம் இப்படியாயிருக்கிறது என்று கேட்டான் (அப் 7:1).

யூதர்கள் ஸ்தேவான் மேல் பாய்ந்து, அவனைப் பிடித்து, ஆலோசனைச் சங்கத்தாருக்கு முன்பாக இழுத்துக் கொண்டுபோய், அவனுக்கு விரோதமாக அவன்மீது குற்றஞ்சுமத்துகிறார்கள். பிரதான ஆசாரியன் அவர்களுடைய குற்றச் சாட்டுக்களைக் கேட்டு, ஸ்தேவானிடத்தில் தன்னுடைய நியாயத்தை எடுத்துச் சொல்லுமாறு கூறுகிறான். "காரியம் இப்படியாயிருக்கிறது" என்று கேட்கிறான்.

பிரதான ஆசாரியன் தனக்குப் பேச அனுமதிகொடுக்கும்போது, தான் என்ன பேசுவது என்று ஸ்தேவான் யோசிக்க வில்லை. திணறவில்லை. வார்த்தைகள் தடுமாறவில்லை. ஸ்தேவான் பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்தவனாக இருக்கிறான். ஆவியானவர் அவனுடைய இருதயத்தில் வேதவசனங்களை நிரப்பியிருக்கிறார். ஸ்தேவான் புதிதாக எதையும் சொல்லவில்லை. பரிசுத்த ஆவியானவர் அவனுடைய உள்ளத்தில் ஏற்கெனவே நிரப்பியிருக்கும் வேதவாக்கியங்களை அவன் நினைவு படுத்திச் சொன்னாலே போதுமானது.

ஸ்தேவானுடைய இருதயத்தில் பழைய ஏற்பாட்டு வசனங்களெல்லாம் நிரம்பியிருக்கிறது. தன்னுடைய விவாதத்திற்கு ஸ்தேவான் தன்னுடைய இருதயத்திலுள்ள வசனங்களை நினைவு கூர்ந்து, அவற்றைப் பகுத்து, ஆலோசனைச் சங்கத்தாரிடம் சொல்கிறான். பரிசுத்த ஆவியினால் நிரம்பியிருக்கிறவர்கள் வேதவாக்கியத் தினாலும் நிரம்பியிருப்பார்கள்.

சகோதரரே பிதாக்களே

அதற்கு அவன்: சகோதரரே, பிதாக்களே, கேளுங்கள். நம்முடைய பிதாவாகிய ஆபிரகாம் காரானூரிலே குடியிருக்கிறதற்கு முன்னமே மெசொப்பொத்தாமியா நாட்டிலே இருக்கும்போது மகிமையின் தேவன் அவனுக்குத் தரிசனமாகி: (அப் 7:2)

ஸ்தேவான் ஒரு கிரேக்கன். சிதறிப்போன யூதன். இவன் செப்துவஜிந்த் வேதாகமத்தை பயன்படுத்துகிறான். செப்துவஜிந்த் பதிப்பிலிருந்தே வேத வாக்கியங்களை மேற்கோளாகக் கூறுகிறான். தன்னுடைய பேச்சிற்கு ஆரம்பமாக "சகோதரரே, பிதாக்களே, கேளுங்கள்" என்று கூறுகிறான். ஆலோசனைச்சங்கத்தாரையும், தன்மீது குற்றம் சுமத்தியிருக்கிற யூதரையும் மரியாதையாக அழைக்கிறான். முகஸ்துதி செய்யும் வண்ணமாக ஆலோசனைச் சங்கத்தாருக்கு புகழ்ச்சி ஏற்படக்கூடிய பட்டங்கள் எதையும் ஸ்தேவான் கொடுக்கவில்லை. எல்லோரையும் மிகவும் சாதாரணமாக, அதே சமயத்தில் மரியாதையாக, "சகோதரரே, பிதாக்களே" என்று அழைக்கிறான்.

யூதர்கள் ஸ்தேவானை தங்களுடைய சத்துருக்களாகவே பார்க்கிறார்கள். யூதமார்க்கத்தின் தேவாலயத்திற்கும் ஜெபாலயத்திற்கும் ஸ்தேவான் சத்துருவாக இருக்கிறான் என்றே அவர்கள் நினைக்கிறார்கள். தேவதூஷணம் சொன்னானென்று அவன்மீது குற்றம் சுமத்தி, பொய்ச்சாட்சிகள் மூலமாகவாவது அந்தக் குற்றத்தை நிரூபித்து, அவனுக்கு தண்டனை கொடுக்க வேண்டுமென்று ஆலோசனைச் சங்கத்தார் ஆயத்தமாயிருக்கிறார்கள்.

ஆனால் ஸ்தேவானோ ஆலோசனைச் சங்கத்தாரையும், மற்ற யூதர்களையும் குறிப்பிடும் போது "சகோதரரே, பிதாக்களே" என்றே அழைக்கிறான். தன்னை அவர்கள் சத்துருவாகப் பார்க்கவேண்டியதில்லை என்றும், தானும் அவர்களுக்குள் ஒருவன் என்றும் தன்னை வெளிப்படுத்திக் காண்பிக்கிறான். ஆனால் அவர்களோ ஸ்தேவானை தங்களில் ஒருவனாகப் பார்க்கவில்லை. அவனை ஒரு சத்துருவாகவே பார்க்கிறார்கள்.

தன்னுடைய பேச்சிற்கு அவர்கள் செவிகொடுக்கவேண்டுமென்று விரும்பி, அவர்களிடத்தில் "கேளுங்கள்" என்று கூறுகிறான். தன்னுடைய விவாதத்தை தேவையில்லாமல் விரிவாக்காமல், மிகவும் சுருக்கமாகச் சொல்லுகிறான். ஸ்தேவான் பேசுகிற ஒவ்வொரு வார்த்தையிலும் ஆவியானவரின் ஞானம் வெளிப்படுகிறது. ஸ்தேவான் ஆவியில் நிறைந்து பேசுகிறான். இந்த உலகத்தில் பரிசுத்த ஆலயம் ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்பாகவே, தேவனை ஆராதிப்பதற்கு ஒரு கூடாரம் இருந்தது என்பதை அவர்களுக்குத் தெரியப்படுத்துகிறான்.

தேவன் மோசேயின் மூலமாக தம்முடைய பிரமாணத்தைக் கொடுத்தார். மோசேக்கு விரோதமாக ஸ்தேவான் தூஷண வார்த்தைகளைப் பேசினானென்பது அவன்மீது கூறப்படும் குற்றச்சாட்டு. ஆனால் யூதர்களுடைய முற்பிதாக்களே மோசேயின் பிரமாணத்திற்குக் கீழ்ப்படியாமல் எதிர்த்து நின்ற சம்பவங்களை ஸ்தேவான் அவர்களுக்கு விளக்கிச் சொல்லுகிறான். தேவனுக்கு விரோதமாகவோ, மோசேக்கு விரோதமாகவோ தான் தூஷண வார்த்தை எதையும் பேசவில்லை என்பது ஸ்தேவானின் விவாதம்.

கல்தேயர் தேசம்

நீ உன் தேசத்தையும் உன் இனத்தையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்கு வா என்றார். அப்பொழுது அவன் கல்தேயர் தேசத்தை விட்டுப் புறப்பட்டு, காரானூரிலே வாசம்பண்ணினான். அவனுடைய தகப்பன் மரித்தபின்பு, அவ்விடத்தை விட்டு நீங்கள் இப்பொழுது குடியிருக்கிற இத்தேசத்திற்கு அவனை அழைத்து கொண்டுவந்து குடியிருக்கும்படி செய்தார் (அப் 7:3,4).

ஸ்தேவான் தன்னுடைய விவாதத்தை ஆபிரகாமிலிருந்து ஆரம்பிக்கிறான். பழைய ஏற்பாட்டு சபைக்கு ஆபிரகாமே முற்பிதா. தேவன் ஆபிரகாமை அழைத்தார். அப்போது அவன் மெசொப்பொத்தாமியா தேசத்தில் குடியிருந்தான். இந்த தேசத்தில் விக்கிரகாரதனை மிகுந்திருந்தது. இது கல்தேயரின் தேசம். தேவன் ஆபிரகாரமை இந்த தேசத்திலிருந்துதான் அழைத்துக் கொண்டு வந்திருக்கிறார்.

தேவன் ஆபிகாரமை முதலாவதாக கல்தேயருடைய தேசத்திலிருந்து காரானூருக்கு அழைத்துக் கொண்டு வந்தார். இந்த ஊருக்கு ஆரான் என்று மறுபெயருமுள்ளது. இந்த ஊருக்கு வந்து சில வருஷங்களுக்குப் பின்பு ஆபிரகாமின் தகப்பனார் மரித்துப்போனார். அதன்பின்பு தேவன் ஆபிரகாமை கானான் தேசத்திற்கு அழைத்துக் கொண்டு வந்து குடியிருக்கும்படி செய்தார்.

தேவன் ஆபிரகாமுக்குக் கொடுத்த அழைப்பின் மூலமாக நாம் ஒரு சில காரியங்களை அறிந்து கொள்ளலாம். நம்முடைய வழிகளிலெல்லாம் நாம் தேவனையே சார்ந்திருக்க வேண்டும். அவருடைய வழிநடத்துதலுக்குக் கீழ்ப்படிந்து, அவர் காண்பிக்கும் திசையை நோக்கி, நாம் விசுவாசத்தோடு முன்னேறிச் செல்லவேண்டும். எல்லா சூழ்நிலைகளிலும் நாம் தேவனுடைய அடிச்சுவடுகளைப் பின்பற்ற வேண்டும். தேவன் நம்மைப் பராமரிப்பாரென்றும், அவருடைய பராமரிப்பு நமக்குப் போதுமானதாக இருக்குமென்றும் நாம் விசுவாசிக்க வேண்டும். தேவன் ஆபிரகாமை கானான் தேசத்திற்கு அழைத்துக் கொண்டு வந்து குடியிருக்கும்படி செய்தார். அந்த தேசத்தில்தான் யூதர்கள் இப்போது குடியிருக்கிறார்கள்.

தேவன் நம்மோடு உடன்படிக்கை பண்ணும்போது, நாம் இந்த பிரபஞ்சத்தின் கட்டுக்களிலிருந்து அவிழ்க்கப்பட வேண்டும். இந்தப் பிரபஞ்சத்தைவிட தேவனே நமக்கு முக்கியமானவராக இருக்க வேண்டும். இப்பிரபஞ்சத்தின்மீது நாம் வைத்திருக்கும் பிரியத்தைவிட, தேவன்மீது அதிக பிரியம் வைக்க வேண்டும். தேவனால் தெரிந்து கொள்ளப்படுகிறவர்கள் விசுவாசத்தோடும் கீழ்ப்படிதலோடும் அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் செல்வதற்கு ஆயத்தமாயிருக்கவேண்டும்.

ஸ்தேவான் தேவனுக்கு விரோதமாகத் தூஷணவார்த்தைகளைப் பேசினானென்று அவன்மீது குற்றம் சுமத்துகிறார்கள். தன்னுடைய நியாயத்தை எடுத்துச் சொல்லும் வண்ணமாக ஸ்தேவான் தன்னை ஆபிரகாமின் குமாரனாக வெளிப்படுத்திக் காண்பிக்கிறான். ஆபிரகாமைப் பற்றிச் சொல்லும்போது "நம்முடைய பிதாவாகிய ஆபிரகாம்" என்று சொல்லுகிறான். தானும் ஆபிரகாமின் தேவனை உண்மையோடு ஆராதிப்பதாக அவர்களுக்கு எடுத்துச் சொல்லுகிறான். தேவனைப் பற்றிக் குறிப்பிடும்போது, அவரை "மகிமையின் தேவன்" என்று சொல்லுகிறான்.

யூதர்கள் விருத்தசேதனம் பண்ணுகிறார்கள். விருத்தசேதன உடன் படிக்கையில் அவர்கள் பெருமைப் படுகிறார்கள். தேவனுடைய வழிநடத்து தலின்படி ஆபிரகாம் புறப்பட்டுப்போகிறான். ஆபிரகாம் விருத்தசேதனம் பண்ணிக் கொள்வதற்கு முன்பாகவே, அவன் தேவனோடு ஐக்கியமாகயிருந்தான். தேவனை உண்மையான மனதோடு ஆராதித்தான்.

தேவன் ஆபிரகாமுக்கு விருத்தசேதன உடன்படிக்கையை கொடுப்பதற்கு முன்பாகவே, தேவன் அவனோடு ஐக்கியமாகயிருந்தார். அவனை வழிநடத்தினார். அவனை கானான் தேசத்திற்கு அழைத்து வந்து அங்கு குடியிருக்கும்படி செய்திருக்கிறார். யூதர்கள் விருத்தசேதன உடன்படிக்கைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். ஆனால் மகிமையின் தேவனோ, ஆபிரகாம் விருத்தசேதனம் செய்து கொள்வதற்கு முன்பாகவே, அவனை வழி நடத்தியிருக்கிறார். ஆசீர்வதித்திருக்கிறார்.

யூதர்கள் தேவாலயம் இருக்கிற ஸ்தலத்தின்மீது பக்திவைராக்கியமாக இருக்கிறார்கள். இது தவிர யூதர்களில் அநேகர் கானான் தேசத்தின்மீதும் பக்தி வைராக்கியமாயிருக்கிறார்கள். கானான் தேசமானது பரிசுத்தமான பூமியென்று பெருமைப்படுகிறார்கள். ஆனால் யூதர்கள் தங்கள் கானான் தேசத்தைக் குறித்தோ அல்லது தேவாலயம் இருக்கும் ஸ்தலத்தைக் குறித்தோ பெருமை பாராட்டுவதற்கு ஒன்றுமேயில்லை என்று ஸ்தேவான் யூதர்களுக்கு எடுத்துச் சொல்லுகிறான்.

ஏனெனில் அவர்கள் பூர்வத்தில் கானான் தேசத்தில் பிறக்கவில்லை. அவர்களெல்லோருமே கல்தேயருடைய தேசத்தைவிட்டு கானான் தேசத்தைவிட்டு வந்திருக்கிறவர்கள். யூதர்களுடைய சொந்த ஊர், கல்தேயா தேசத்திலுள்ள "ஊர்" என்பதாகும். இஸ்ரவேலர்கள் கானான் தேசத்திற்கு வருவதற்கு முன்பாகவே, இங்கு புறஜாதி ஜனங்கள் குடியிருந்தார்கள். அந்த ஜனங்களே இங்கு பயிரிட்டு ஜீவனம் பண்ணினார்கள். ஆனால் யூதர்கள் தங்களுடைய பூர்வீக வரலாற்றை மறந்து விட்டு, கானான் தேசத்தைக் குறித்து பெருமைப்படுகிறார்கள்.

யூதர்களுடைய ஆரம்பம் மிகவும் அற்பமானது. அவர்கள் விக்கிரகாராதனை நிறைந்த கல்தேயர்களுடைய தேசத்திலிருந்து வந்தவர்கள். தேவனுடைய கிருபையினாலேயே யூதர்கள் கானான் தேசத்தில் குடியிருக்கிறார்கள். தேவன் தம்முடைய கிருபையினால் ஆபிரகாமின் சந்ததியாரான யூதர்களை கானான் தேசத்திற்கு அழைத்துக்கொண்டு வந்து குடியிருக்கும்படி செய்திருக்கிறார். யூதர்கள் கானான் தேசத்தில் இப்போது குடியிருப்பதற்காக, அவர்கள் தேவனுக்கும் அவருடைய கிருபைக்கும் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும். கானான் தேசத்தைக் குறித்து யூதர்களுடைய உள்ளத்தில் பெருமையோ, பக்திவைராக்கியமோ இருக்கக்கூடாது.

ஆபிரகாம் கானான் தேசத்திற்கு அருகில் வருவதற்கு முன்பாகவே, தேவன் தம்முடைய மகிமையை மெசொப்பொத்தாமியா நாட்டிலே அவனுக்கு வெளிப்படுத்திக் காண்பித்தார். தேவன் கானான் தேசத்தில் மாத்திரம்தான் தம்மை வெளிப்படுத்துவா ரென்று நினைத்து, யூதர்கள் தங்கள் தேசத்தைப் பெருமைப்படுத்தக் கூடாது. தேவன் தமக்குச் சித்தமான தேசங்களில், தம்மை வெளிப்படுத்திக் காண்பிப்பார்.

வாக்குத்தத்தம்பண்ணினார்

இதிலே ஒரு அடி நிலத்தையாகிலும் அவனுடைய கையாட்சிக்குக் கொடாமலிருக்கையில், அவனுக்குப் பிள்ளையில்லாதிருக்கும் போது: உனக்கும் உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் இதைச் சுதந்தரமாகத் தருவேன் என்று அவனுக்கு வாக்குத்தத்தம்பண்ணினார். அந்தப்படி தேவன் அவனை நோக்கி: உன் சந்ததியார் அந்நிய தேசத்தில் சஞ்சரிப்பார்கள்; அத்தேசத்தார் அவர்களை அடிமைகளாக்கி, நானூறு வருஷம் துன்பப்படுத்துவார்கள். அவர்களை அடிமைப்படுத்தும் ஜனத்தையோ நான் ஆக்கினைக்குட் படுத்துவேன். அதற்குப்பின்பு அவர்கள் புறப்பட்டுவந்து இவ்விடத்திலே எனக்கு ஆராதனை செய்வார்கள் என்றார் (அப் 7:5-7).

தேவன் ஆபிரகாமை கல்தேயருடைய தேசத்தைவிட்டுப் புறப்பட்டு வருமாறு அழைத்தார். தேவனுடைய அழைப்பை பெற்றுக்கொண்ட பின்பு கூட, பல வருஷங்களாக ஆபிரகாமும் அவனுடைய சந்ததியாரும் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்தில் குடியிராமல், தேசாந்திரிகளாக ஸ்திரமில்லாமல் அலைந்து கொண்டிருந்தார்கள். தேவன் ஆபிரகாமுக்கு கானான் தேசத்திலே ஒரு அடி நிலத்தைக்கூட அவனுடைய கையாட்சிக்குக் கொடுக்கவில்லை. ஆபிரகாமுக்கு பிள்ளையுமில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலையில் தேவன் ஆபிரகாமுக்கும் அவனுக்குப் பின்வரும் அவனுடைய சந்ததிக்கும், கானான் தேசத்தை சுதந்தரமாகத் தருவேனென்று அவனுக்கு வாக்குத்தத்தம்பண்ணினார்.

ஆபிரகாம் தேவனிடத்திலிருந்து இந்த வாக்குத்தத்தத்தைப் பெற்றுக் கொண்ட போது அவனுக்குப் பிள்ளையில்லாதிருந்தது. இந்த வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டு பல வருஷங்களுக்குப் பின்பு தான் ஆபிரகாமுக்கும் சாராளுக்கும் குமாரனாக ஈசாக்குப் பிறந்தான்.

ஆபிரகாம் கல்தேயருடைய தேசத்தைவிட்டுப் புறப்பட்டு கானான் தேசத்தில் வந்து குடியிருப்பதற்கு முன்பாக, அவன் தேசாந்திரியாக சுற்றி அலைந்தான். கானான் தேசத்திலே, தேவன் ஒரு அடி நிலத்தையாகிலும் அவனுடைய கையாட்சிக்குக் கொடாமலிருக்கையில், இந்த கானான் தேசத்தைச் சுதந்தரமாகத் தருவதாக தேவன் ஆபிரகாமுக்கு வாக்குப் பண்ணினார். ஆபிரகாம் இந்த அற்புதமான வாக்குத்தத்தத்தைப் பெற்றுக் கொண்டபோது அவன் கானான் தேசத்திலில்லை. கல்தேயருடைய தேசத்திலிருந்தான்.

ஆபிரகாமின் சந்ததியாரும் கானான் தேசத்தில் உடனடியாக வந்து குடியிருக்க வில்லை. ஆபிரகாமின் சந்தியார் அந்நிய தேசத்தில் சஞ்சரித்தார்கள். அத்தேசத்தார் அவர்களை அடிமைகளாக்கி நானூறு வருஷம் துன்பப்படுத்தினார்கள். அது வரையிலும் ஆபிரகாமின் சந்ததியாரால் கானான் தேசத்தில் வந்து குடியேற முடியவில்லை.

ஆபிரகாமின் சந்ததியார் கானான் தேசத்தைச் சுதந்தரிப்பதற்கு முன்பாக அவர்கள் பல துன்பங்களையும் பாடுகளையும், வேதனைகளையும், உபத்திர வங்களையும் கடந்து வந்தார்கள். அந்நிய தேசத்திலே அவர்கள் அடிமைப் பட்டவர்களாக இருந்தார்கள். அந்நிய தேசத்தார் அவர்களைத் துன்பப் படுத்தினார்கள். ஆனாலும் நானூறு வருஷத்திற்குப் பின்பு, தேவன் ஆபிரகாமின் சந்ததியார்மீது கிருபையாக இரங்கினார். அவர்களை அடிமைப்படுத்திய ஜனத்தை தேவன் ஆக்கினைக்குட் படுத்தினார். அதற்கு பின்பே ஆபிரகாமின் சந்ததியார் அந்நிய தேசத்திலிருந்து புறப்பட்டு வந்து கானான் தேசத்திலே கர்த்தருக்கு ஆராதனை செய்தார்கள்.

ஆபிரகாமுக்கு கையாட்சி நிலமும், பிள்ளையும் இல்லாதிருந்த போதே, தேவன் அவனுக்கு இவ்விரண்டு ஆசீர்வாதங்களையும் கொடுத்தார். ஆபிரகாமுக்கும் அவனுக்குப் பின்வரும் சந்ததிக்கும் கானான் தேசத்தைச் சுதந்தரமாகக் கொடுத்தார். அந்த வாக்குத்தத்தம் உடனடியாக நிறைவேற வில்லை. நானூறு வருஷங்களுக்குப் பின்பே அது நிறைவேறிற்று. தேவனுடைய வாக்குத் தத்தங்கள் மெதுவாக நிறைவேறினாலும், அவை நிச்சயமாகவே நிறைவேறும். தேவன் வாக்குமாறாதவராக இருக்கிறார்.

சில சமயங்களில் தேவனுடைய வாக்குத்தத்தம் நாம் எதிர்பார்ப்பது போல உடனடியாக நிறைவேறுவதில்லை. சில சமயங்களில் தேவனுடைய வாக்குத் தத்தம் நிறைவேறுவதில் காலதாமதம் உண்டாகிறது. நாம் எதிர்பார்ப்பதுபோல தேவன் நம்மை சில சமயங்களில் எல்லா பாடுகளுக்கும் உபத்திரவங்களுக்கும் விலக்கிக் காப்பதுமில்லை. சில சமயங்களில் தேவன் நமக்குப் பாடுகளையும் உபத்திரவங்களையும் அனுமதிக்கிறார். ஆனாலும் நாம் அழிந்து போவதற்கு தேவன் இடங் கொடுக்கமாட்டார். ஏற்ற வேளை வரும்போது நம்முடைய பாடுகளிலிருந்து நம்மை விடுவித்து, நமக்குக் கொடுத்திருக்கும் தமது வாக்குத் தத்தத்தை நிறைவேற்றுவார்.

ஆபிரகாமின் சந்ததியார் அந்நிய தேசத்தில் சஞ்சரித்தார்கள். அத்தேசத்தார் அவர்களை அடிமைகளாக்கி நானூறு வருஷம் துன்பப்படுத்தினார்கள். அவர்களை அடிமைப்படுத்திய ஜனத்தை தேவன் ஆக்கினைக்குட்படுத்தினார். அதன்பின்பு அவர்களைக் கானான் தேசத்திற்கு அழைத்துக்கொண்டு வந்து குடியிருக்கும்படி செய்தார்.

ஸ்தேவான் கானான் தேசத்தின் வரலாற்றை ஆலோசனைச் சங்கத்தாருக்கும், தன்மீது குற்றம் சுமத்தியிருக்கும் யூதருக்கும் எடுத்துச் சொல்லுகிறான். தேசத்தின் வரலாறு அவர்களுக்கும் தெரிந்திருக்கும். ஆனாலும் இந்த சூழ்நிலையில் கானான் தேசத்தின் வரலாற்றை அவர்களுக்கு நினைவுபடுத்துகிறான். கானான் தேசமானது பூர்வத்தில் ஒன்றுமில்லாத சாதாரண பூமியாக இருந்தது. அதில் மேன்மையோ, மகிமையோ, பரிசுத்தமோ எதுவுமில்லை. அவர்களுடைய முற்பிதாவாகிய ஆபிரகாம் கல்தேயருடைய தேசத்திலிருந்து புறப்பட்டுவந்து, கானான் தேசத்தில் குடியிருந்தான்.

ஆனால் ஆபிரகாமின் சந்ததியாரோ எகிப்து தேசத்தில் அடிமைகளாகத் துன்பப்பட்டார்கள். கானான் தேசத்தை விட்டு எகிப்து தேசத்தில் அடிமைகளாகயிருந்தார்கள். தேவனோ தமது கிருபையினால் தம்முடைய பிள்ளைகளை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலைசெய்து, கானான் தேசத்திற்கு மறுபடியுமாக அவர்களை அழைத்துக் கொண்டுவந்து, இங்கு குடியிருக்கும்படி செய்திருக்கிறார்.

எகிப்திலிருந்து கானான் தேசத்திற்கு தம்முடைய பிள்ளைகளை அழைத்துக் கொண்டு வந்த தேவனால், மறுபடியும் கானான் தேசத்திலிருந்து எகிப்து தேசத்திற்கு அழைத்துக்கொண்டுபோய், அங்கு அவர்களை அடிமைப்படுத்த முடியும் தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. இஸ்ரவேல் ஜனங்கள் தங்களை ஆபிரகாமின் சந்ததியார் என்று சொல்லி பெருமைப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஏனெனில் தேவன் சாதாரண கல்லுகளிலிருந்து ஆபிரகாமுக்குச் சந்ததியை உண்டுபண்ண வல்லவராக இருக்கிறார்.

தேவன் ஆபிரகாமுக்குக் கொடுத்த வாக்குத்தத்தம் உடனடியாக நிறைவேற வில்லை. சிறிது சிறிதாக நிறைவேறிற்று. வாக்குத் தத்தம் நிறைவேறுவதில் காலதாமதம் உண்டாயிற்று. வாக்குத் தத்தம் நிறைவேறுவதில் காலதாமதம் உண்டானாலும், ஆபிரகாம் சோர்ந்து போய்விடவில்லை. தேவனை பூரணமாய் விசுவாசித்தான். அவருடைய வார்த்தைக்கு முழுவதுமாகக் கீழ்ப்படிந்து கிரியை செய்தான்.

ஆபிரகாமும் அவனுடைய சந்ததியாரும் உடனடியாக கானான் தேசத்திற்கு வந்து, அதில் குடியிருந்தால், அந்த தேசத்தின் முக்கியத்துவமும், தேவனுடைய மகத்துவமும் அவர்களுக்குத் தெரிந்திருக்காது. கானான் தேசம் சாதாரண தேசமல்ல. தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு வாக்குத் தத்தம் பண்ணியிருக்கிற தேசம். தேவன் தம்முடைய பிள்ளைகளுக்குப் பரலோகத்தில் வாசஸ்தலத்தை ஆயத்தம் பண்ணியிருக்கிறார். இப்பிரபஞ்சத்திலுள்ள கானான் தேசமானது பரலோகத்திலுள்ள கானானுக்கு அடையாளமாக இருக்கிறது.

இயேசு கிறிஸ்துவோ இந்தப் பூமிக்குரிய கானான் தேசத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காமல், பரலோக கானான் தேசத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து, அதைக் குறித்து போதனை செய்தார். நசரேயனாகிய இயேசுகிறிஸ்து இந்த ஸ்தலத்தை அழித்துப்போடுவார் என்று சொன்னது தூஷணமான வார்த்தையாகாது. ஏனெனில் இந்தப் பூமிக்குரிய கானான் தேசம் நம்முடைய நித்திய குடியிருப்பல்ல. தேவன் நம்மை பரம கானானுக்கு அழைத்துச் செல்வதாக வாக்குப்பண்ணியிருக்கிறார். அந்த வாக்குத்தத்தம் நிறைவேற நாம் காத்துக்கொண்டிருக்கிறோம்.

ஆபிரகாமின் சந்ததியார் இப்பிரபஞ்சத்தின் கானான் தேசத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன்பாக, எகிப்து தேசத்தில் நானூறு வருஷம் பாடுகளை அனுபவித்தார்கள். அதன்பின்பு தேவன் அவர்களை கானான் தேசத்திற்கு அழைத்துச் சென்றார். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோ நம்மை பரமகானானுக்கு அழைத்துச் செல்வதாக வாக்குப்பண்ணியிருக்கிறார். அந்த வாக்குத்தத்தம் நிறைவேறுவதற்காக நாம் காத்துக்கொண்டிருக்கிறோம். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு இப்பிரபஞ்சத்தின் கானானைவிட, பரமகானானே மிகவும் முக்கியமானது. ஆகையினால் நாம் பூமிக்குரிய இந்த ஸ்தலத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காமல், பரமகானானுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமென்று ஸ்தேவான் ஆலோசனைச்சங்கத்தாரிடம் கூறுகிறான்.

கோத்திரப்பிதாக்கள்

மேலும் விருத்தசேதன உடன்படிக்கையையும் அவனுக்கு ஏற்படுத்தினார். அந்தப்படியே அவன் ஈசாக்கைப் பெற்றபோது, எட்டாம் நாளிலே அவனை விருத்தசேதனம் பண்ணினான்.ஈசாக்கு யாக்கோபையும், யாக்கோபு பன்னிரண்டு கோத்திரப் பிதாக்களையும் பெற்றார்கள். அந்தக் கோத்திரப் பிதாக்கள் பொறாமை கொண்டு யோசேப்பை எகிப்துக்குக் கொண்டு போகும்படியாக விற்றுப் போட்டார்கள். தேவனோ அவனுடனே கூட இருந்து, எல்லா உபத்திரவங்களினின்றும் அவனை விடுவித்து, எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் சமுகத்திலே அவனுக்குக் கிருபையையும் ஞானத்தையும் அருளினார்; அந்த ராஜா அவனை எகிப்து தேசத்திற்கும் தன் வீட்டனைத்திற்கும் அதிகாரியாக ஏற்படுத்தினான். பின்பு எகிப்து கானான் என்னும் தேசங்களிலெங்கும் பஞ்சமும் மிகுந்த வருத்தமும் உண்டாகி, நம்முடைய பிதாக்களுக்கு ஆகாரம் கிடையாமற்போயிற்று. அப்பொழுது எகிப்திலே தானியம் உண்டென்று யாக்கோபு கேள்விப்பட்டு, நம்முடைய பிதாக்களைமுதலாந்தரம் அனுப்பினான்.

இரண்டாந்தரம் யோசேப்பு தன்னுடைய சகோதரருக்குத் தன்னைத் தெரியப்படுத்தினான். யோசேப்புடைய வம்சமும் பார்வோனுக்குத் தெரிய வந்தது. பின்பு யோசேப்பு, தன்னுடைய தகப்பன் யாக்கோபும் தன்னுடைய இனத்தார் யாவருமாகிய, எழுபத்தைந்து பேரை அழைக்க அனுப்பினான். அந்தப்படி யாக்கோபு எகிப்துக்குப் போனான். அவனும் நம்முடைய பிதாக்களும் மரித்து, அங்கேயிருந்து சீகேமுக்குக் கொண்டு வரப்பட்டு, ஆபிரகாம் சீகேமின் தகப்பனாகிய ஏமோருடைய சந்ததி யாரிடத்தில் ரொக்கக்கிரயத்துக்கு வாங்கியிருந்த கல்லறையில் வைக்கப்பட்டார்கள் (அப் 7:8-16).

தேவன் ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததியாருக்கும் தேவனாக இருக்கிறார். இதை உறுதிபண்ணும் வண்ணமாக தேவன் ஆபிரகாமுக்கு விருத்தசேதன உடன்படிக்கையை ஏற்படுத்தினார். ஆபிரகாமின் சந்ததியில் பிறக்கிற ஒவ்வொரு ஆண்பிள்ளையும் விருத்த சேதனம் பெற்றுக்கொள்ள வேண்டும். ஆபிரகாமுக்கு ஈசாக்கு பிறந்தான். இந்த உடன்படிக்கையின் பிரகாரம், ஈசாக்கு பிறந்த எட்டாம் நாளிலே ஆபிரகாம் அவனை விருத்தசேதனம் பண்ணினான். ஆபிரகாமின் சந்ததி பெருகிற்று. ஈசாக்கு யாக்கோபையும், யாக்கோபு பன்னிரண்டு கோத்திரப்பிதாக்களையும் பெற்றார்கள்.

யோசேப்பு தன் குடும்பத்தில் மிகவும் பிரியமானவனாக இருந்தான். யாக்கோபு யோசேப்பை அதிகமாய் நேசித்தான். ஆனால் யோசேப்பின் சகோதரரோ அவன்மீது பொறாமை கொண்டார்கள். யோசேப்பு தான் கண்ட சொப்பனத்தை தன் சகோதரரிடத்தில் எடுத்துச் சொன்னான். இதைக்கேட்ட அவனுடைய சகோதரர்கள் யோசேப்பின்மீது பொறாமையும் கோபமும் கொண்டு, அவனை எகிப்திற்குக் கொண்டு போகும்படியாக விற்றுப்போட்டார்கள்.

யோசேப்பு எகிப்து தேசத்திலே அடிமையாக இருந்து துன்பங்களை அனுபவிக்கிறான். கர்த்தரோ யோசேப்போடு கூடவே இருக்கிறார். அவனுடைய எல்லா உபத்திர வங்களிலிருந்தும் அவனை விடுவிக்கிறார். தேவன் யோசேப்பின் ஆவியோடு கூடவே இருந்து கிரியை செய்கிறார். இதனால் உபத்திரவங்கள் மத்தியிலும் அவனுடைய மனதிற்கு ஆறுதலும் சமாதானமும் உண்டாயிற்று. தேவன் யோசேப்பின் நிமித்தமாக மற்றவர்களுடைய ஆவியிலும் கிரியை செய்கிறார். இதனால் மனுஷர் கண்களிலும் யோசேப்புக்கு தயவு கிடைக்கிறது. எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் சமுகத்திலே, தேவன் யோசேப்புக்கு கிருபையையும் ஞானத்தையும் அருளுகிறார். அந்த ராஜா யோசேப்பை எகிப்து தேசத்திற்கும், தன் வீட்டைனத்திற்கும் அதிகாரியாக ஏற்படுத்துகிறான்.

எகிப்து, கானான் என்னும் தேசங்களிலெங்கும் பஞ்சமும் மிகுந்த வருத்தமும் உண்டாயிற்று. கோத்திரப் பிதாக்களுக்கு ஆகாரம் கிடையாமற் போயிற்று. எகிப்திலே தானியம் உண்டென்று யாக்கோபு கேள்விப்பட்டு, முதலில் யாக்கோபு, யோசேப்பின் சகோதரர்களை எகிப்திற்கு அனுப்பினான். பின்பு யாக்கோபும் எகிப்து தேசத்திற்குப் போகிறான்.

முதலில் யோசேப்பின் சகோதரர் மாத்திரமே எகிப்திற்குப் போகிறார்கள். யோசேப்பு தன்னுடைய சகோதரருக்கு தன்னைத் தெரியப்படுத்தினான். யோசேப்புடைய வம்சம் பார்வோனுக்கும் தெரியவருகிறது. இதன் பின்பு யோசேப்பு தன்னுடைய தகப்பன் யாக்கோபையும், தன்னுடைய இனத்தார் யாவருமாகிய எழுபத்தைந்துபேரையும் அழைக்க அனுப்பினான். அந்த எழுபத்தைந்து பேரும் எகிப்து தேசத்திற்கு வருகிறார்கள். யாக்கோபும் அவனுடைய குமாரரும் எகிப்து தேசத்திலே மரித்துப் போகிறார்கள். ஆனாலும் அவர்கள் கானான் தேசத்திற்குக் கொண்டு வரப்பட்டு அடக்கம் பண்ணப்படுகிறார்கள்.

ஸ்தேவான் முற்பிதாக்களின் வரலாற்றுச் சம்பவத்தை ஆலோசனைச் சங்கத்தாருக்கும், அங்கு கூடியிருக்கிற யூதர்களுக்கும் எடுத்துச் சொல்லுகிறான். தங்களுடைய முற்பிதாக்களைப்பற்றி யூதர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனாலும் தன்னுடைய விவாதத்தை எடுத்துச் சொல்லுவதற்காக ஸ்தேவான் இந்தச் சம்பங்களையெல்லாம் அவர்களிடத்தில் விவரிக்கிறான்.

யூதர்கள் தங்கள் தேசத்தைக்குறித்து பெருமைப்படுகிறார்கள். இந்த யூததேசத்தின் ஆரம்பம் எப்படியிருந்தது என்பதை ஸ்தேவான் அவர்களுக்கு நினைவுபடுத்துகிறான். தேவனுடைய கிருபையினாலும், இரக்கத்தினாலும், அற்புதத்தினாலும் மாத்திரமே யூதாதேசம் உருவாயிற்று. இது தேவனுடைய சுத்தகிருபை. தங்கள் தேசத்தைப்பற்றிப் பெருமை பாராட்டுவதற்கு யூதரிடத்தில் ஒன்றுமேயில்லை. இவர்கள் ஒன்றுமில்லாமல் வெறுமையாக இருந்த காலத்தில், தேவன் தம்முடைய கிருபையினால் அவர்களுக்கு ஒரு தேசத்தைக் கொடுத்திருக்கிறார். யூதர்கள் தங்கள் சுயமுயற்சியினால் யூததேசத்தை உண்டாக்கவில்லை.

தேவன் யூதர்களுக்கு ஒரு தேசத்தைக் கொடுத்து அவர்களை ஆசீர்வதித்தார். ஆனால் அவர்களோ தேவனுக்கு விரோதமாக கலகம் பண்ணினார்கள். தேவனுடைய நீதியின் பிரகாரம், யூதர்களும் அவர்களுடைய யூததேசமும் அழிக்கப்பட வேண்டும். இந்த நாளில் இஸ்ரவேல் தேசம் அழிக்கப்படாமல் இருப்பதற்கு தேவனுடைய கிருபையே காரணம். முற்பிதாக்கள் தேவனுக்கு விரோதமாக கிரியை செய்தார்கள். இப்போதுள்ள யூதர்களோ இயேசு கிறிஸ்துவுக்கும் அவருடைய சுவிசேஷத்திற்கும் விரோதமாக கிரியை செய்கிறார்கள்.

யோசேப்பின் சகோதரர்கள் அவன்மீது பொறாமைப்பட்டார்கள். முற்பிதாக்கள் துன்மார்க்கராயிருந்தார்கள். எகிப்து தேசத்திற்கு அடிமையாய் கொண்டு போகும்படி, அவர்கள் யோசேப்பை விற்றுப்போட்டார்கள். முற்பிதாக்களிடத்தில் கிரியை செய்த துன்மார்க்கத்தின் ஆவி, இக்காலத்தில் யூதர்கள் மத்தியிலும் கிரியை செய்கிறது. யோசேப்புக்கு விரோதமாக முற்பிதாக்கள் பொறாமைப்பட்டு துன்மார்க்கமான காரியத்தைச் செய்ததுபோல, இக்காலத்து யூதர்கள் இயேசு கிறிஸ்துவின்மீது பொறாமைப்பட்டு, அவரை சிலுவையில் அறைந்து கொன்றுபோட்டார்கள்.

யூதர்கள் தங்களுடைய தேசத்தைக் குறித்து பெருமையோடிருக்கிறார்கள். இது பரிசுத்த பூமியென்று சொல்லுகிறார்கள். ஆனால் யூதர்களுடைய முற்பிதாக்களோ பல வருஷங்களாக கானான் தேசத்தில் குடியிராமல், எகிப்து தேசத்தில் அடிமைகளாக உபத்திரவப்பட்டார்கள். கானான் தேசத்திற்கு வந்தபின்பும் அவர்கள் பாபிலோன் தேசத்தில் அடிமைகளானார்கள். ஜனங்கள் மத்தியில் பாவம் பெருகும்போது தேவனுடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வருகிறது. அவர்களுடைய தேசத்தைவிட்டு அவர்கள் சிதறடிக்கப்படுகிறார்கள்.

இக்காலத்திலும் யூதர்கள் தேவனுக்கு விரோதமாக முரட்டாட்டம் பண்ணினால், பூர்வகாலத்தில் நடைபெற்றது போலவே இப்போதுள்ள யூதர்களும் சிதறடிக்கப்படுவார்கள். முற்பிதாக்களின் காலத்தில் இஸ்ரவேல் தேசம் பாவத்தினால் நிறைந்திருந்தது போல, இக்காலத்திலும் இஸ்ரவேல் தேசம் பாவத்தினால் நிறைந்திருக்கிறது. தேவன் தம்முடைய நீதியினால் இஸ்ரவேல் தேசத்தை அழிப்பதற்கு வாய்ப்புள்ளது என்றும், ஆகையினால் யூதர்கள் தங்கள் தேசத்தைக்குறித்துப் பெருமை பாராட்டக் கூடாது என்றும் ஸ்தேவான் அவர்களிடத்தில் விவரித்துச் சொல்லுகிறான்.

எகிப்தில் இஸ்ரவேலர்
அப் 7 : 17-29

அப் 7:17. ஆபிரகாமுக்கு தேவன் ஆணையிட்டு அருளின வாக்குத்தத்தம் நிறைவேறுங் காலம் சமீபித்தபோது,

அப் 7:18. யோசேப்பை அறியாத வேறொரு ராஜா தோன்றின காலமளவும், ஜனங்கள் எகிப்திலே பலுகிப் பெருகினார்கள்.

அப் 7:19. அவன் நம்முடைய ஜனங்களை வஞ்சனையாய் நடப்பித்து, நம்முடைய பிதாக்களின் குழந்தைகள் உயிரோடிராதபடிக்கு அவர்கள் அவைகளை வெளியே போட்டுவிடும்படி செய்து, அவர்களை உபத்திரவப்படுத்தினான்.

அப் 7:20. அக்காலத்திலே மோசே பிறந்து, திவ்விய சவுந்தரியமுள்ளவனாயிருந்து, மூன்று மாதமளவும் தன் தகப்பன் வீட்டிலே வளர்க்கப்பட்டான்.

அப் 7:21. அவன் வெளியே போட்டுவிடப்பட்டபோது, பார்வோனுடைய குமாரத்தி அவனை எடுத்துத் தனக்குப் பிள்ளையாக வளர்த்தாள்.

அப் 7:22. மோசே எகிப்தியருடைய சகல சாஸ்திரங்களிலும் கற்பிக்கப்பட்டு, வாக்கிலும் செய்கையிலும் வல்லவனானான்.

அப் 7:23. அவனுக்கு நாற்பது வயதானபோது, இஸ்ரவேல் புத்திரராகிய தன்னுடைய சகோதரரைக் கண்டு சந்திக்கும்படி அவனுடைய இருதயத்தில் எண்ணமுண்டாயிற்று.

அப் 7:24. அப்பொழுது அவர்களில் ஒருவன் அநியாயமாய் நடத்தப்படுகிறதை அவன் கண்டு, அவனுக்குத் துணைநின்று, எகிப்தியனை வெட்டி, துன்பப்பட்டவனுக்கு நியாயஞ் செய்தான்.

அப் 7:25. தன்னுடைய கையினாலே தேவன் தங்களுக்கு இரட்சிப்பைத் தருவாரென்பதைத் தன்னுடைய சகோதரர் அறிந்துகொள்வார்களென்று அவன் நினைத்தான்; அவர்களோ அதை அறியவில்லை.

அப் 7:26. மறுநாளிலே சண்டைபண்ணிக்கொண்டிருக்கிற இரண்டு பேருக்கு அவன் எதிர்ப்பட்டு: மனுஷரே நீங்கள் சகோதரராயிருக்கிறீர்கள்; ஒருவருக்கொருவர் அநியாயஞ் செய்கிறதென்ன என்று, அவர்களைச் சமாதானப்படுத்தும்படி பேசினான்.

அப் 7:27. பிறனுக்கு அநியாயஞ் செய்தவன் அவனைப் பிடித்துத் தள்ளி: எங்கள்மேல் அதிகாரியாகவும் நியாயாதிபதியாகவும் உன்னை ஏற்படுத்தினவன் யார்?

அப் 7:28. நேற்று நீ அந்த எகிப்தியனைக் கொன்றது போல என்னையும் கொன்றுபோட மனதாயிருக்கிறாயோ என்றான்.

அப் 7:29. இந்த வார்த்தையினிமித்தம் மோசே ஓடிப்போய், மீதியான் தேசத்திலே சஞ்சரித்துக்கொண்டிருந்தான்; அங்கே இருக்கும்போது அவனுக்கு இரண்டு குமாரர்கள் பிறந்தார்கள்.

காலம் சமீபித்தபோது

ஆபிரகாமுக்கு தேவன் ஆணையிட்டு அருளின வாக்குத்தத்தம் நிறைவேறுங் காலம் சமீபித்தபோது, (அப் 7:17)

எகிப்து தேசத்தில் இஸ்ரவேல் ஜனத்தாரின் தொகை அற்புதமாய் பெருகிற்று. மிகவும் குறுகிய காலத்திற்குள், எழுபத்தைந்து பேராக ஆரம்பிக்கப்பட்ட இஸ்ரவேலின் குடும்பம், இப்போது ஒரு தேசமாயிற்று. ஒரு குடும்பம் தேசமாக வளர்ச்சி பெற்றிருக்கிறது. இக்காலமே தேவனுடைய வாக்குத்தத்தம் நிறைவேறும் காலமாயிற்று. தேவன் ஆபிரகாமுக்கு ஆணையிட்டு அருளின வாக்குத்தத்தம் நிறைவேறும் காலம் சமீபித்தபோது நடைபெற்ற சம்பவங்களை ஸ்தேவான் ஆலோசனைச்சங்கத்தாருக்கு எடுத்துச்சொல்லுகிறான்.

தேவனுடைய பராமரிப்பு இஸ்ரவேல் ஜனத்தாரோடிருக்கிறது. அவர்கள் எண்ணிக்கையில் விருத்தியடைகிறார்கள். ஒரு தேசமாக வளர்ச்சி பெறுகிறார்கள். தேவனுடைய சித்தம் அவருக்குச் சித்தமான காலத்தில் நிறைவேறும். காலம் நிறைவேறும்போது தேவனுடைய கிரியைகளும் விரைவாக நடைபெறும். இஸ்ரவேல் ஜனத்தாரை எகிப்து தேசத்திலிருந்து விடுவித்து கானான் தேசத்திற்கு அழைத்துச் செல்லும் காலம் சமீபமாகயிருப்பதை தேவன் காண்கிறார். அந்நிய தேசத்தில் அடிமைகளாக இருக்கும் தம்முடைய வாக்குத்தத்தத்தின் பிள்ளைகளை, வாக்குத்தத்த தேசமாகிய கானான் தேசத்திற்கு அழைத்துச் சென்று குடியேற்ற தேவன் இக்காலத்தில் சித்தங்கொள்கிறார்.

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்து தேசத்தில் பலுகிப்பெருகியிருக்கிறார்கள். இவர்களை எகிப்து தேசத்திலிருந்து எப்படி விடுவித்து, கானான் தேசத்திற்கு எப்படி அழைத்துச் செல்வது என்பது தேவனுக்குத் தெரியும். விடுதலை கர்த்தருடையது. தேவன் ஒரே காலத்தில் இரண்டுவிதமாக கிரியை செய்கிறார். இஸ்ரவேல் ஜனங்களை எகிப்திலிருந்து விடுதலை பண்ணுவதற்காக, அவர்களுக்கு அந்த தேசத்தில் உபத்திரவங்களை அனுமதிக்கிறார். உபத்திரவங்கள் மத்தியில் ஜனங்கள் கர்த்தரைத் தேடுகிறார்கள்.

சபையிலும் பொதுவாக இப்படிப்பட்ட சூழ்நிலையே காணப்படுகிறது. சபையின் உபத்திரவக்காலம், சபையின் வளர்ச்சி பெறும் காலமாக இருக்கிறது. பாடுகளும் வேதனைகளும் சபைக்கு வரும் போது, சபையானது எண்ணிக்கையிலும், ஊழியத்திலும் வளர்ச்சி பெறுகிறது.

உபத்திரவப்படுத்தினான்

யோசேப்பை அறியாத வேறொரு ராஜா தோன்றின காலமளவும், ஜனங்கள் எகிப்திலே பலுகிப் பெருகினார்கள். அவன் நம்முடைய ஜனங்களை வஞ்சனையாய் நடப்பித்து, நம்முடைய பிதாக்களின் குழந்தைகள் உயிரோடிராதபடிக்கு அவர்கள் அவைகளை வெளியே போட்டு விடும்படி செய்து, அவர்களை உபத்திரவப்படுத்தினான் (அப் 7:18,19).

எகிப்து தேசத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் பலுகிப் பெருகுகிறார்கள். யோசேப்பை அறியாத வேறொரு ராஜா இஸ்ரவேலை ஆளுகை செய்ய வருகிறான். அதுவரையிலும் விடுதலையோடிருந்த இஸ்ரவேல் ஜனங்கள், இந்தப் புதிய ராஜாவின் காலத்தில் உபத்திரவத்திற்கு உட்படுத்தப்படுகிறார்கள். ஸ்தேவான் இந்தச் சம்பவத்தை ஆலோசனைச் சங்கத்தாரிடம் விவரித்துச் சொல்லுகிறான்.

எகிப்து தேசத்து ஜனங்கள் நன்றியறிதல் இல்லாதவர்களாக இருக்கிறார்கள். யோசேப்பின் காலத்தில் எகிப்து தேசத்தில் பஞ்சம் உண்டாயிற்று. இந்தப் பஞ்சகாலத்தில் யோசேப்பின் மூலமாக கர்த்தர் எகிப்து தேசத்திற்கு இரட்சிப்பைக் கட்டளையிட்டார். அதையெல்லாம் எகிப்தியர்கள் இப்போது மறந்துவிட்டார்கள்.

எகிப்து தேசத்திற்கு புதிய ராஜா ஒருவன் முடிசூட்டப்படுகிறான். இவனுக்கு தேசத்தின் பழைய வரலாறு எதுவும் தெரியவில்லை. எகிப்து தேசத்தில் ஏற்பட்ட பஞ்சத்தைப் பற்றியோ, அக்காலத்தில் யோசேப்பு செய்த நன்மையைப்பற்றியோ இந்த புதிய ராஜா கேள்விப்படவே இல்லை. இவனுக்கு யோசேப்பையும் தெரியவில்லை, எகிப்து தேசத்திலுள்ள இஸ்ரவேல் ஜனங்களின் வரலாறும் தெரியவில்லை.

எகிப்து தேசத்தின் புதிய ராஜா நன்மை செய்தவர்களைத் துன்பப்படுத்துகிறான்.நன்றியில்லாதவனாக இருக்கிறான். பொதுவாக நன்றியில்லா தவர்கள் தான் நன்மை செய்தவர்களைத் துன்புறுத்துகிற துன்மார்க்கமான காரியங்களைச் செய்வார்கள்.

எகிப்து தேசத்தின் புதிய ராஜா நன்மை செய்தவர்களைத் துன்பப்படுத்துகிறான். நன்றியில்லாதவனாக இருக்கிறான். பொதுவாக நன்றியில்லாதவர்கள்தான் நன்மை செய்தவர்களைத் துன்புறுத்துகிற துன்மார்க்கமான காரியங்களைச் செய்வார்கள். தங்கள் தேசத்திற்கு நன்மை செய்தவர்களையும் துன்பப்படுத்துவார்கள். தங்கள் காலத்தில் நன்மையான காரியங்களைச் செய்கிறவர்களுக்கு எதிர்த்து நிற்பார்கள்.

எகிப்து தேசத்தின் புதிய ராஜா இஸ்ரவேல் ஜனங்களை வஞ்சனையாய் நடப்பிக்கிறான். இஸ்ரவேலர்கள் எகிப்து தேசத்தாருக்கு உபகாரம்பண்ணுகிறார்கள். ஆனால் அவர்கள் தனக்கு உபத்திரவம் பண்ணுவதாக நினைத்து, அவர்களை உபத்திரவப்படுத்துகிறான். தங்களுக்கு நன்மை உண்டாகவேண்டுமென்பதற்காக இஸ்ரவேலருக்குத் தீமை செய்கிறான். தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்பதற்காக இஸ்ரவேலரை அழிக்கிறான்.

எகிப்து தேசத்தில் பிறந்த இஸ்ரவேல் புத்திரரின் குழந்தைகள் உயிரோடிராத படிக்கு, அந்தக் குழந்தைகளை வெளியே போட்டுவிடும்படி செய்கிறான். சிறிய குழந்தைகள் வளர்ந்து, பிற்காலத்தில் பெரியவர்களாகி, பெரிய காரியங்களைச் செய்வார்கள். அதைத் தடுத்து நிறுத்துவதற்காக,அவர்கள் குழந்தைகளாக இருக்கும் போதே அவர்களை அழித்துப் போடுகிறான்.

ஆலோசனைச் சங்கத்தாரும், யூதர்களும் எகிப்து தேசத்தின் ராஜா இஸ்ரவேலரை உபத்திரவப்படுத்தியது போலவே, இக்காலத்தில் திருச்சபையை உபத்திரவப்படுத்துகிறார்கள். திருச்சபை இப்போது குழந்தைப்பருவத்திலிருக்கிறது. இது வளர்ச்சி பெற்று கர்த்தருக்காக பெரிய ஊழியத்தைச் செய்யும். ஆனால் யூதர்களோ திருச்சபையை ஆரம்பத்திலேயே அழித்துப் போட வேண்டுமென்று துன்மார்க்கச் சிந்தனையோடு செயல்படுகிறார்கள்.

எகிப்து தேசத்திலுள்ள யூதகுழந்தைகளை கொன்று போட்டால் அவர்கள் பலுகிப்பெருகமாட்டார்கள் என்று எகிப்தின் ராஜா நினைத்தான். அதுபோலவே திருச்சபையை அதன் ஆரம்ப காலத்திலேயே அழித்துப்போட்டால், அது வளர்ந்து கனிதராது என்று யூதர்கள் நினைக்கிறார்கள். யூதர்கள் சதிஆலோசனை பண்ணினாலும், தேவனுடைய கிருபையினால், சீஷர்களுடைய எண்ணிக்கை பெருகுகிறது.

மோசே

அக்காலத்திலே மோசே பிறந்து, திவ்விய சவுந்தரியமுள்ளவனாயிருந்து, மூன்று மாதமளவும் தன் தகப்பன் வீட்டிலே வளர்க்கப்பட்டான். அவன் வெளியே போட்டுவிடப்பட்டபோது, பார்வோனுடைய குமாரத்தி அவனை எடுத்துத் தனக்குப் பிள்ளையாக வளர்த்தாள். மோசே எகிப்தியருடைய சகல சாஸ்திரங்களிலும் கற்பிக்கப்பட்டு, வாக்கிலும் செய்கையிலும் வல்லவனானான் (அப் 7:20-22).

எகிப்து தேசத்தார் இஸ்ரவேல் ஜனங்களை உபத்திரவப்படுத்துகிற அந்தக்காலத்தில், மோசே ஒரு யூதகுடும்பத்தில் பிறக்கிறான். மோசே பிறந்த அந்தக்காலம், இஸ்ரவேலருக்கு உபத்திரவம் மிகுந்த காலமாகயிருக்கிறது. மோசேயின் உயிருக்கும் ஆபத்து உண்டாயிற்று. பிறந்த குழந்தைகள் உயிரோடிராத படிக்கு எகிப்தியர்கள் அவைகளை வெளியே போட்டுவிடும்படி செய்கிறார்கள். அந்தப் பிரகாரம் மோசே பிறந்தபோது, குழந்தையாக இருக்கிற மோசேயையும் வெளியே போட்டுவிட வேண்டும். ஆனால் தேவனோ உபத்திரவங்களுக்கு மத்தியிலும் தம்முடைய ஜனங்களை விடுதலைபண்ண வேண்டுமென்று சித்தமுள்ளவராக கிரியை செய்கிறார்.

எகிப்து தேசத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் விடுதலை பெறுவதற்கு வாய்ப்பே இல்லாமல் இருப்பதுபோல தோன்றுகிறது. வெளிச்சத்தின் பாதை தெரியாமல் சகலமும் இருளாக இருப்பதுபோன்று தெரிகிறது. துன்பமும் உபத்திரவமும் அதிகமாக இருக்கிறது. இப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலையில், தேவன் தம்முடைய பிள்ளைகளை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பண்ணுவதற்கு ஆயத்தம் பண்ணுகிறார்.

இப்படிப்பட்ட காலத்தில்தான் மோசே பிறக்கிறான். அவன் திவ்விய சவுந்தரியமுள்ளவனாயிருக்கிறான். அவன் தாயின் கர்ப்பத்திலிருக்கும்போதே, தேவன் அவனை பரிசுத்தப்படுத்தியிருக்கிறார். இதனால் அவன் தேவனுடைய பார்வையில் சவுந்தரியமுள்ளவனாக இருக்கிறான். தேவனுடைய அநாதிதீர்மானத்தின் பிரகாரமாக மோசே சிறுபிள்ளையாக இருக்கும்போது பாதுகாக்கப்படுகிறான். எகிப்து தேசத்திலுள்ள வழக்கத்தின் பிரகாரமாக மோசே குழந்தையாக இருக்கும்போது அவனை வெளியே போட்டு விடுகிறார்கள். ஆனால் பார்வோனுடைய குமாரத்தியே அவனை எடுத்து தனக்குப் பிள்ளையாக வளர்க்கிறாள்.

மோசேயை வளர்ப்பதற்கு, அவனுடைய சொந்த தாயையே பார்வோனுடைய குமாரத்தி நியமிக்கிறாள். தேவனுடைய பராமரிப்பு மிகவும் அற்புதமாக இருக்கிறது. பெற்றோரை விட்டுப் பிரிக்கப்பட்ட மோசே மறுபடியும் பெற்றோரிடம் சேர்க்கப்படுகிறான். கர்த்தர் சேர்க்க நினைத்ததை மனுஷரால் பிரிக்க முடியாது. கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை ஒரு விசேஷித்த ஊழியத்திற்காக பயன்படுத்த சித்தமாயிருக்கும் போது, அவனை விசேஷித்த வழியில் ஆசீர்வதிப்பார். அவன்மீது விசேஷித்த கவனத்தைச் செலுத்துவார். கர்த்தர் நமக்கு விசேஷித்த ஆசீர்வாதத்தைக் கொடுத்திருப்பாரென்றால் அதற்கு ஒரு தெய்வீக நோக்கமிருக்கும். அந்த நோக்கம் என்ன என்பதை தேவனுடைய பாதத்தில் அமர்ந்திருந்து புரிந்து கொண்டு, கர்த்தருடைய சித்தத்திற்கும் நோக்கத்திற்கும் கீழ்ப்படிந்து ஜீவிக்க நம்மை ஒப்புக்கொடுக்க வேண்டும்.

மோசே அற்புதமாக வளர்க்கப்படுகிறான். பார்வோனுடைய குமாரத்தியே மோசேயை எடுத்து அவனைத் தனக்குப் பிள்ளையாக வளர்க்கிறாள். அவன் எகிப்தியருடைய சகல சாஸ்திரங்களிலும் கற்பிக்கப் படுகிறான். வாக்கிலும் செய்கையிலும் வல்லவனாக இருக்கிறான். மோசே திக்குவாயும் மந்தநாவும் உள்ளவன்தான். ஆனாலும் அவனுடைய சிந்தையில் தெளிவு இருக்கிறது. வார்த்தையில் அதிகாரமிருக்கிறது. எகிப்து தேசத்தின் பிரதான மந்திரியின் ஆசனத்தில் அமர்ந்து தேசம் முழுவதையும் ஆளுகை செய்கிறான். அவன் திக்கி திக்கி பேசினாலும், அவனுடைய வார்த்தைக்கு எகிப்து தேசத்தார் எல்லோரும் கீழ்ப்படியவேண்டும். அவன் மந்தநாவோடு பேசினாலும் அவனுடைய வார்த்தைக்கு எகிப்து தேசத்தில் யாரும் எதிர்த்துப் பேசமுடியாது.

ஸ்தேவான் மோசேயின் வரலாற்றை இவ்வாறு எடுத்துச் சொல்லுகிறான். ஆலோசனைச்சங்கத்தாரும் யூதரும் மோசேயின்மீது மிகுந்த மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கிறார்கள். அவர்களைப்போலவே தானும் மோசேயின்மீது மதிப்பு வைத்திருப்பதை இந்தச் சம்பவத்தின் மூலமாக அவர்களுக்கு எடுத்துச் சொல்லுகிறான். அவர்கள் மோசேயைத் தங்கள் வார்த்தையினாலும் சிந்தையினாலும் கனப்படுத்துவதுபோல தானும் கனப்படுத்துவதாகத் தெளிவுபடுத்துகிறான்.

மோசே ஓடிப்போனான்

அவனுக்கு நாற்பது வயதான போது, இஸ்ரவேல் புத்திரராகிய தன்னுடைய சகோதரரைக் கண்டு சந்திக்கும்படி, அவனுடைய இருதயத்தில் எண்ணமுண்டாயிற்று. அப்பொழுது அவர்களில் ஒருவன் அநியாயமாய் நடத்தப்படுகிறதை அவன் கண்டு, அவனுக்குத் துணைநின்று, எகிப்தியனை வெட்டி, துன்பப்பட்டவனுக்கு நியாயஞ் செய்தான். தன்னுடைய கையினாலே தேவன் தங்களுக்கு இரட்சிப்பைத் தருவாரென்பதைத் தன்னுடைய சகோதரர் அறிந்து கொள்வார்களென்று அவன் நினைத்தான்; அவர்களோ அதை அறியவில்லை. மறுநாளிலே சண்டை பண்ணிக் கொண்டிருக்கிற இரண்டு பேருக்கு அவன் எதிர்ப்பட்டு: மனுஷரே நீங்கள் சகோதரராயிருக்கிறீர்கள்; ஒருவருக்கொருவர் அநியாயஞ்செய்கிறதென்ன என்று, அவர்களைச் சமாதானப்படுத்தும்படி பேசினான். பிறனுக்கு அநியாயஞ் செய்தவன் அவனைப் பிடித்துத் தள்ளி: எங்கள்மேல் அதிகாரியாகவும் நியாயாதிபதியாகவும் உன்னை ஏற்படுத்தினவன் யார்? நேற்று நீ அந்த எகிப்தியனைக் கொன்றதுபோல என்னையும் கொன்றுபோட மனதாயிருக்கிறாயோ என்றான். இந்த வார்த்தையினிமித்தம் மோசே ஓடிப்போய், மீதியான் தேசத்திலே சஞ்சரித்துக்கொண்டிருந்தான்; அங்கே இருக்கும் போது அவனுக்கு இரண்டு குமாரர்கள் பிறந்தார்கள் (அப் 7:23-29).

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்து தேசத்தில் அடிமைகளாக இருக்கிறார்கள். எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேல் ஜனங்களை விடுதலை பண்ணுவதற்கு மோசே முயற்சி பண்ணுகிறான். ஆனால் அவர்களோ மோசேக்கு எதிர்த்து நிற்கிறார்கள்.

மோசேக்கு நாற்பது வயதாயிற்று. அப்போது இஸ்ரவேல் புத்திரராகிய தன்னுடைய சகோதரரைக் கண்டு சந்திக்கும்படி அவனுடைய இருதயத்தில் எண்ணம் உண்டாயிற்று. தேவனே இந்த எண்ணத்தை மோசேயின் இருதயத்தில் கொடுத்திருக்கிறார். மோசே தன் தாயின் கர்ப்பத்தில் இருந்தபோதே தேவன் அவனைத் தம்முடைய பரிசுத்தமான ஊழியத்திற்குத் தெரிந்துகொண்டார். காலம் நிறைவேறுகிறபோது தேவனுடைய சித்தமும் நிறைவேறுகிறது.

தன்னுடைய இருதயத்தில் உண்டான எண்ணத்தின் பிரகாரம், மோசே தன்னுடைய சகோதரரைச் சந்திப்பதற்காகப் போகிறான். அப்போது எகிப்தியன் ஒருவன் இஸ்ரவேல் புத்திரன் ஒருவனை அநியாயமாய் நடத்துகிறான். மோசேக்கு இந்த அநியாயத்தைக் காணும் வாய்ப்பு உண்டாயிற்று. இதைக்கண்டபோது மோசே இஸ்ரவேல் சகோதரனுக்குத் துணைநின்று, எகிப்தியனை வெட்டி, துன்பப்பட்டவனுக்கு நியாயம் செய்கிறான். மோசே இஸ்ரவேல் ஜனத்தாரை இரட்சிக்கும் இரட்சகனாக ஊழியம் செய்கிறான். இது அவனுடைய இரட்சிக்கும் ஊழியத்தின் ஒரு பகுதியாக இருக்கிறது.

இஸ்ரவேல் ஜனங்கள் மோசேயின் இரட்சிகும் ஊழியத்தையும், தேவனுடைய திட்டத்தையும், அது நிறைவேறும் காலத்தையும் புரிந்திருப்பார்களென்றால், இந்தச் சம்பவத்தைப் பார்த்து அவர்கள் மோசேக்குச் செவிகொடுத்திருப்பார்கள். ஆனால் அவர்களோ இதை அறியவில்லை. தன்னுடைய கையினாலே தேவன் தங்களுக்கு இரட்சிப்பைத் தருவார் என்று இஸ்ரவேல் புத்திரர் அறிந்து கொள்வார்களென்று மோசே நினைத்தான். ஆனால் அவர்களோ அதை அறியவில்லை.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நியாயம் விசாரிக்கும் நியாயாதிபதியாக ஊழியம் செய்கிறான். இந்த ஊழியத்தின் ஒரு பகுதியும் இங்கு விவரிக்கப்பட்டிருக்கிறது. மறுநாளிலே மோசே இஸ்ரவேல் சகோதரரைச் சந்திக்கப் போகும் போது, இரண்டு இஸ்ரவேல் புத்திரர் தங்களுக்குள் சண்டை போட்டுக் கொண்டிருக்கிறார்கள். மோசே அவர்களிடத்தில்போய் "மனுஷரே நீங்கள் சகோதரராயிருக்கிறீர்கள் ஒருவருக்கொருவர் அநியாயம் செய்கிறதென்ன" என்று அவர்களை சமாதானப்படுத்தும்படி அவர்களிடத்தில் பேசுகிறான்.

இரண்டு பேர் சண்டைபண்ணிக் கொண்டிருக்கும்போது, இரண்டு பேரிடமும் தப்பிதம் இருப்பதற்கு வாய்ப்புள்ளது. இரண்டு பேருமே கோபப்படுகிறார்கள். இரண்டு பேரும் கோபத்தையும் விரோதத்தையும் விட்டுவிட்டு சமாதானமாயிருக்க வேண்டும். ஆனால் இஸ்ரவேல் புத்திரரைச் சமாதானப்படுத்துவது எளிதான காரியமல்ல. அவர்கள் கடிந்து கொள்ளுதலை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். புத்தி சொன்னாலும் அதை அங்கீகரிக்கமாட்டார்கள். எதிர்த்துப் பேசுவார்கள்.

சண்டை பண்ணிக்கொண்டிருக்கிற இரண்டு பேரில், பிறனுக்கு அநியாயம் செய்தவன் மோசேயைப் பிடித்துத் தள்ளி விடுகிறான். அவன் மோசேயைப்பார்த்து "எங்கள்மேல் அதிகாரியாகவும், நியாயாதிபதியாகவும் உன்னை ஏற்படுத்தினவன் யார்" என்று மோசேயிடம் கேட்கிறான். இஸ்ரவேல் புத்திரரிடத்தில் பெருமையின் ஆவியும் கீழ்ப்படியாமையின் ஆவியும் நிரம்பியிருக்கிறது. பொறுமையில்லாமல் சண்டை போடுகிறார்கள். புத்தி சொன்னாலும் கேட்பதில்லை. நல்ல ஆலோசனை சொல்லுகிறவனுக்கு எதிர்த்துப் பேசுகிறார்கள்.

சண்டைபோடுகிற இருவரில் ஒருவன் மோசேயைப்பற்றி நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறான். முந்தின நாளில் மோசே எகிப்தியனை வெட்டி துன்பப்பட்டவனுக்கு நியாயம் செய்ததை இந்த மனுஷன் பார்த்திருக்கிறான். மோசே நியாயம் செய்தது இவனுக்கு அநியாயம் செய்ததாகத் தெரிகிறது. பிறனுக்கு அநியாயம் செய்கிறவர்கள் அநியாயத்தில் சந்தோஷப்படுவார்கள். மோசே நியாயம் செய்தாலும், அந்தச் சம்பவத்தை அநியாயமான சம்பவமென்று மோசேயிடம் கூறுகிறான். "நேற்று நீ அந்த எகிப்தியனைக் கொன்றது போல என்னையும் கொன்று போட மனதாயிருக்கிறாயோ" என்று மோசேயிடம் கேட்கிறான்.

மோசே செய்த நியாயமான காரியத்தைக் குற்றப்படுத்துகிறான். மோசே அமைதியான முறையில் இஸ்ரவேல் ஜனத்தாரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்துச் செல்ல வேண்டுமென்று விரும்புகிறான். மோசேயின் இருதயத்தில் அன்பும் நீதியும் நிறைந்திருக்கிறது. ஆனால் இஸ்ரவேல் சகோதரன் ஒருவனே மோசேயை குற்றவாளியென்று சொல்லி அவனைக் குற்றப்படுத்துகிறான். எகிப்தியனைக் கொன்றது போல தன்னையும் கொன்று போட மனதாயிருக்கும் குற்றவாளியென்று மோசேயின்மீது குற்றம் சுமத்துகிறான். இஸ்ரவேல் ஜனத்தை இரட்சிக்க வந்திருக்கும் மோசேயின் மீது கொலைக்குற்றம் சுமத்துகிறான். இஸ்ரவேலருக்கு நியாயம்செய்ய வந்திருக்கும் மோசேயை அநியாயக்காரன் என்று குற்றம் சுமத்துகிறான்.

தனக்கு எதிராக பேசப்பட்ட இந்த வார்த்தையின் நிமித்தம் மோசே எகிப்து தேசத்தைவிட்டே ஓடிப்போகிறான். மீதியான் தேசத்தில் சஞ்சரித்துக் கொண்டிருக்கிறான். அந்த தேசத்தில் பரதேசியாகச் சஞ்சரித்துக் கொண்டிருக்கும் போது, எத்திரோவின் குமாரத்தி அவனுக்கு மனைவியாகிறாள். அவர்களுக்கு இரண்டு குமாரர்கள் பிறக்கிறார்கள்.

ஸ்தேவான் மோசேயின் வாழ்க்கையில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தை ஆலோசனைச் சங்கத்தாருக்கும் யூதர்களுக்கும் எடுத்துச் சொல்லுகிறான். மோசேக்கு விரோதமாக ஸ்தேவான் தூஷண வார்த்தைகளைப் பேசினான் என்று யூதர்கள் அவன்மீது குற்றம் சுமத்துகிறார்கள். ஆனால் யூதர்களே மோசேக்கு விரோதமாகத் தூஷண வார்த்தைகளைப் பேசுவதாக ஸ்தேவான் அவர்கள்மீது குற்றம் சுமத்துகிறான். எகிப்து தேசத்தில் அடிமைகளாகயிருந்த இஸ்ரவேல் ஜனங்கள், மோசேக்கு விரோதமாக பேசிய தூஷண வார்த்தைகளை, ஆலோசனைச் சங்கத்தாருக்கு எடுத்துச் சொல்லுகிறான். அவர்கள் மோசேயை அவமானப்படுத்தினார்கள்.

முற்பிதாக்கள் மோசேக்கு விரோதமாக கலகம் செய்தததினிமித்தம் ஆலோசனைச் சங்கத்தாரும் யூதரும் தங்கள் இருதயங்களில் வெட்கப்பட வேண்டும். ஆனால் அவர்களோ மோசேயின்மீது தங்களுக்கு மதிப்பும் மரியாதையும் இருப்பதாக மாய்மாலம் பண்ணுகிறார்கள். ஸ்தேவான் மோசேயைக் கனப்படுத்துகிறான். ஆனால் யூதர்களோ ஸ்தேவான்மீது பொறாமைப்படுகிறார்கள்.

ஸ்தேவான் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறான். அவருடைய சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணுகிறான். இதினிமித்தமாக யூதர்கள் ஸ்தேவானை உபத்திரவப்படுத்துகிறார்கள். மோசேயையும் அவனுடைய பிரமாணத்தையும் தங்கள் வாயினால் உயர்த்திப் பேசுகிறார்கள். தங்கள் உள்ளத்திலோ கபடத்தினால் நிறைந்திருக்கிறார்கள். எகிப்து தேசத்திலிருந்த இஸ்ரவேல் ஜனத்தாரைப் போலவே, இக்காலத்து யூதர்கள் தேவனுக்கும், அவர் அனுப்பியிருக்கிற இரட்சகருக்கும் விரோதமாக கிரியை செய்கிறார்கள். இஸ்ரவேலர்கள் மோசேயை அங்கீகரியாமல் புறக்கணித்ததுபோல, யூதர்கள் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவை அங்கீகரியாமல் புறக்கணித்து விடுகிறார்கள்.

தேவன் இயேசு கிறிஸ்துவை அதிபதியாகவும் இரட்சகராகவும் உயர்த்தியிருக்கிறார். மோசே இஸ்ரவேல் ஜனங்களை எகிப்தின் அடிமைத் தனத்திலிருந்து விடுதலைபண்ணுவதற்காக அனுப்பப்பட்டான். தற்காலத்திலுள்ள யூதர்களோ எகிப்தின் அடிமைத்தனத்தை விட, மிகவும் மோசமான அடிமைத்தனத்தில் சிக்கியிருக்கிறார்கள். பாவத்திற்குஅடிமைகளாக இருக்கிறார்கள். இவர்களுடைய பாவங்களிலிருந்து இரட்சிப்பதற்காக, தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை, இந்தப் பூமிக்கு இரட்சகராக அனுப்பியிருக்கிறார். ஆனால் யூதர்களோ இயேசுகிறிஸ்துவைத் தங்களுடைய இரட்சகராக ஏற்றுக் கொள்ளவில்லை.

எகிப்து தேசத்தில் அடிமை களாகயிருந்த யூதர்களினிமித்தமாக மோசே எகிப்து தேசத்தைவிட்டு ஓடிப்போனான். தங்களை இரட்சிக்க வந்த மோசேயை அவர்கள் எகிப்து தேசத்தைவிட்டே துரத்திவிட்டார்கள். அக்காலத்தில் இஸ்ரவேல் புத்திரர் செய்த அதே தப்பிதத்தை, இக்காலத்தில் யூதர்கள் இயேசு கிறிஸ்துவுக்குச் செய்திருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவை நகரத்திற்குப் புறம்பே சிலுவை மரத்தில் தூக்கி கொலைசெய்து விட்டார்கள். இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்ளாமல் அதைப் புறக்கணிக்கிறார்கள்.

மோசே எகிப்து தேசத்திலிருந்து மீதியான் தேசத்திற்கு ஓடிப்போனான். அதுபோலவே யூதருடைய இருதயக் கடினத்தினிமித்தமாக, கிறிஸ்துவின் சுவிசேஷம் இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியில் பிரசங்கம் பண்ணப்படுவதற்குப் பதிலாக, புறஜாதியார் மத்தியில் பிரசங்கிக்கப்படுகிறது. யூதர்கள் இயேசு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்களுடைய இருதயத்தை இயேசுகிறிஸ்து ஆளுகை செய்யவில்லை.

தேவனுடைய தரிசனம்
அப் 7 : 30-41

அப் 7:30. நாற்பது வருஷம் சென்றபின்பு, சீனாய்மலையின் வனாந்தரத்திலே கர்த்தருடைய தூதனானவர் முட்செடி எரிகிற அக்கினிஜுவாலையிலே அவனுக்குத் தரிசனமானார்.

அப் 7:31. மோசே அந்தத் தரிசனத்தைக் கண்டு, அதிசயப்பட்டு, அதை உற்றுப் பார்க்கும்படி சமீபித்துவருகையில்:

அப் 7:32. நான் ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனுமாகிய உன் பிதாக்களுடைய தேவனாயிருக்கிறேன் என்று கர்த்தர் திருவுளம் பற்றின சத்தம் அவனுக்கு உண்டாயிற்று. அப்பொழுது மோசே நடுக்கமடைந்து, உற்றுப்பார்க்கத் துணியாமலிருந்தான்.

அப் 7:33. பின்னும் கர்த்தர் அவனை நோக்கி: உன் பாதங்களிலிருக்கிற பாதரட்சைகளைக் கழற்றிப்போடு; நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமியாயிருக்கிறது.

அப் 7:34. எகிப்திலிருக்கிற என் ஜனத்தின் உபத்திரவத்தை நான் பார்க்கவே பார்த்து, அவர்கள் பெருமூச்சைக் கேட்டு, அவர்களை விடுவிக்கும்படி இறங்கினேன்; ஆகையால், நீ வா, நான் உன்னை எகிப்திற்கு அனுப்புவேன் என்றார்.

அப் 7:35. உன்னை அதிகாரியாகவும் நியாயாதிபதியாகவும் ஏற்படுத்தினவன் யார் என்று சொல்லி அவர்கள் மறுதலித்திருந்த இந்த மோசேயைத்தானே தேவன், முட்செடியில் அவனுக்குத் தரிசனமான தூதனாலே, தலைவனாகவும் மீட்பனாகவும் அனுப்பினார்.

அப் 7:36. இவனே அவர்களை அங்கேயிருந்து அழைத்துக் கொண்டு வந்து, எகிப்து தேசத்திலேயும் சிவந்த சமுத்திரத்திலேயும், நாற்பது வருஷகாலமாய் வனாந்தரத்திலேயும், அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தான்.

அப் 7:37. இஸ்ரவேல் புத்திரரை நோக்கி: உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்கள் சகோதரரிலிருந்து என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை உங்களுக்காக எழும்பப்பண்ணுவார், அவருக்குச் செவிகொடுப்பீர்களாக என்று சொன்னவன் இந்த மோசேயே.

அப் 7:38. சீனாய்மலையில் தன்னுடனே பேசின தூதனோடும் நம்முடைய பிதாக்களோடுங்கூட வனாந்தரத்திலே சபைக்குள்ளிருந்தவனும், நமக்குக் கொடுக்கும்படி ஜீவவாக்கியங்களைப் பெற்றவனும் இவனே.

அப் 7:39. இவனுக்கு நம்முடைய பிதாக்கள் கீழ்ப்படிய மனதாயிராமல், இவனைத் தள்ளிவிட்டு, தங்கள் இருதயங்களில் எகிப்துக்குத் திரும்பி,

அப் 7:40. ஆரோனை நோக்கி: எகிப்துதேசத்திலிருந்து எங்களை அழைத்துக்கொண்டு வந்த அந்த மோசேக்கு என்ன சம்பவித்ததோ அறியோம்; ஆதலால் எங்களுக்கு முன்செல்லும் தெய்வங்களை எங்களுக்கு உண்டுபண்ணும் என்று சொல்லி;

அப் 7:41. அந்நாட்களில் ஒரு கன்றுக்குட்டியை உண்டுபண்ணி, அந்த விக்கிரகத்திற்குப் பலியிட்டு, தங்கள் கையின் கிரியைகளில் களிகூர்ந்தார்கள்.

தரிசனமானார்

நாற்பது வருஷம் சென்றபின்பு, சீனாய்மலையின் வனாந்தரத்திலே கர்த்தருடைய தூதனானவர் முட்செடி எரிகிற அக்கினிஜுவாலையிலே அவனுக்குத் தரிசனமானார். மோசே அந்தத் தரிசனத்தைக் கண்டு, அதிசயப்பட்டு, அதை உற்றுப் பார்க்கும்படி சமீபித்துவருகையில்: (அப் 7:30,31)

தேவன் மோசேக்கு முட்செடி எரிகிற அக்கினிஜுவாலையிலே தரிசனமானார். மோசே எகிப்து தேசத்திலிருந்து ஓடிப்போய், மீதியான் தேசத்தில் நாற்பது வருஷமாக சஞ்சரித்துக் கொண்டிருக்கிறான். நாற்பது வருஷம் சென்ற பின்பே தேவன் மோசேக்கு தரிசனம் கொடுக்கிறார். இந்தத் தரிசனத்தைக் காண்பதற்காகவே மோசே இந்த பூமியில் பிறந்தான். ஆனாலும் இந்த மகிமையைப் பெற்றுக் கொள்வதற்கு இத்தனை வருஷங்களாயிற்று. சீனாய் மலையின் வனாந்தரத்திலே மோசேக்கு தேவனுடைய தரிசனம் கிடைத்திருக்கிறது. தேவன் அந்த இடத்தைப் பரிசுத்த பூமி என்று அழைக்கிறார் (அப் 7:33).

யூதர்கள் தங்களுடைய தேவாலயத்தைக் குறித்துப் பெருமைப்படுகிறார்கள். அது பரிசுத்த ஸ்தலமென்று பெருமையோடு சொல்லிக் கொள்கிறார்கள். அவர்களுடைய பெருமையை மட்டுப்பதற்குவதற்காக, தேவன் மோசேக்குத் தரிசனம் கொடுத்த இடமும் பரிசுத்த பூமி தான் என்று அவர்களிடத்தில் சொல்லுகிறான். எருசலேமிலுள்ள தேவாலயத்தில் தேவன் பிரதான ஆசாரியருக்கோ, ஜனங்களின் மூப்பருக்கோ தரிசனம் கொடுக்கவில்லை. ஆயினும் யூதர்கள் தேவாலயத்தைப் பரிசுத்த ஸ்தலம் என்று சொல்லி பெருமைப்படுகிறார்கள். தங்களைத் தாங்களே வஞ்சித்துக்கொள்கிறார்கள். தேவன் தேவாலயத்தில் மாத்திரமே வாசம்பண்ணுவார் என்று தவறாக நினைக்கிறார்கள்.

தேவன் சர்வவியாபகர். எல்லா இடங்களிலும் அவரால் இருக்கமுடியும். எருசலேமிலுள்ள தேவாலயத்திற்கு ஜனங்களை வரவழைத்து, அங்கு அவர்களை தேவனால் ஆசீர்வதிக்க முடியும். அதே தேவனால், ஜனங்களை வனாந்தரத்திற்கு அழைத்து வந்து, அங்கும் அவர்களோடு ஐக்கியமாகயிருக்க முடியும். தேவனால் வனாந்தரத்தில் ஜனங்களுக்குத் தரிசனம் கொடுக்க முடியும். வனாந்தரத்தில் ஜனங்களோடு பேசமுடியும்.

தேவன் சீனாய் மலையின் வனாந்தரத்திலே, முட்செடி எரிகிற அக்கினிஜுவாலையிலே, மோசேக்குத் தரிசனமானார். முட்செடி எரிகிறது. ஆனால் அந்தச் செடி அக்கினியால் பட்சிக்கப்படவில்லை. மோசே அந்தத் தரிசனத்தைக்கண்டு ஆச்சரியப்படுகிறான். அதை உற்றுப்பார்க்கும்படி அதற்கு சமீபத்தில் வருகிறான். எரிகிற முட்செடியானது சாதாரணமாக நடை பெறுகிற சம்பவம் தான். ஆனால் இந்த முட்செடியோ அக்கினியில் எரிகிறது. ஆயினும் அக்கினி இந்தச் செடியைப் பட்சித்துப்போடவில்லை. அதனால் மோசே இந்தச் செடியைக் கண்டு ஆச்சரியப்படுகிறான்.

அந்தத் தரிசனத்தை இன்னும் அதிகமாக காணவேண்டும் என்று விரும்பி, அதிசயப்பட்டு, அதை உற்றுப்பார்க்கும்படி அதற்கு சமீபித்து வருகிறான். அங்கு கர்த்தருடைய தூதனானவர் எரிகிற முட்செடியில் இருப்பதைக் காண்கிறான். அதனால் மோசேக்கு நடுக்கம் உண்டாயிற்று. அதை உற்றுப் பார்க்கத் துணியாமலிருக்கிறான்.

தேவனாயிருக்கிறேன்

நான் ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனுமாகிய உன் பிதாக்களுடைய தேவனாயிருக்கிறேன் என்று கர்த்தர் திருவுளம் பற்றின சத்தம் அவனுக்கு உண்டாயிற்று. அப்பொழுது மோசே நடுக்கமடைந்து, உற்றுப்பார்க்கத் துணியாமலிருந்தான் (அப் 7:32).

முட்செடி எரிகிற அக்கினி ஜுவாலைக்கு மோசே சமீபித்து வரும் போது, அங்கு தேவனுடைய சத்தத்தைக் கேட்கிறான். "நான் ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாகிய உன் பிதாக்களுடைய தேவனாயிருக்கிறேன்" என்று கர்த்தர் சொல்லுகிற சத்தம் அவனுக்கு உண்டாயிற்று. தேவன் இருக்கிறவராகவே இருக்கிறார். அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராக இருக்கிறார்.

"நான் உன்னோடு, உன் தேவனாகயிருப்பேன்" என்று தேவன் ஆபிரகாமோடு உடன்படிக்கை பண்ணினார். அந்த உடன்படிக்கை இன்றும் நிலைத்திருக்கிறது. ஆகையினால் தான் தேவன் மோசேயிடம் தம்மைப்பற்றிக் கூறும்போது "நான் ஆபிரகாமின் தேவனாயிருக்கிறேன்" என்று சொல்லுகிறார். இஸ்ரவேல் தேசத்திற்கு கிடைத்திருக்கும் சிலாக்கியங்கள், மேன்மைகள், மகிமைகள் ஆகியவை அனைத்தும் தேவன் ஆபிரகாமோடு பண்ணிய உடன்படிக்கையின் மூலமாகவே கிடைத்திருக்கிறது. யூதர்கள் தங்கள் சுயபக்தியினாலோ, சுயபுத்தியினாலோ இந்த மேன்மையைச் சம்பாதிக்கவில்லை. ஆபிரகாமின் மூலமாக, தேவனுடைய உடன்படிக்கையினால் மாத்திரமே, யூதருக்கு இந்த மேன்மையும் சிலாக்கியமும் உண்டாயிற்று.

தேவன் மாறாதவராகயிருக்கிறார். அவர் தேவனாகவே இருக்கிறார். நம்முடைய ஆத்துமாக்களுக்கு அவரே தேவன். முற்பிதாக்களின் ஆத்துமாக்களுக்கும் அவரே தேவனாகயிருக்கிறார். அவர்களுடைய சரீரங்களைவிட்டு, அவர்களுடைய ஆத்துமாக்கள் இப்போது பிரிந்திருக்கிறது. முற்பிதாக்கள் மரித்துப் போனாலும் தேவனாகிய கர்த்தர் இன்றும், இனிமேலும் அவர்களுடைய தேவனாகவே இருப்பார். ஆபிரகாம் மரித்துப்போனான். ஆனால் தேவனோ இன்றும் ஜீவனுள்ளவராக இருக்கிறார். ஆகையினால் ஆபிரகாமும் இன்றும் ஜீவனுள்ளவராகவே இருக்கிறார். தேவன் மரித்தோருக்குத் தேவனாயிராமல் ஜீவனுள்ளோருக்குத் தேவனாயிருக்கிறார் (மத் 22:31,32).

சுவிசேஷத்தின் மூலமாக மனுஷருக்கு நித்திய ஜீவன் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இயேசு கிறிஸ்துவே நமக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறவர். கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் மூலமாக நித்திய ஜீவனைப்பற்றிய நற்செய்தி நமக்கு அறிவிக்கப்படுகிறது. கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவிக்கிற அப்போஸ்தலர்கள் தேவதூஷணம் சொல்லவில்லை. தேவனுடைய சத்தியத்தை சுவிசேஷமாக அறிவிக்கிறார்கள். சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணுகிற தேவன் மோசேக்கு விரோதமாகத் தூஷணமாகப் பேசவில்லை. அவன் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதினால், மோசேயை கனப்படுத்துகிறான். தன்மீது ஆலோசனைச் சங்கத்தார் கூறும் குற்றச்சாட்டு ஆதாரமற்றது என்று ஸ்தேவான் விவாதம்பண்ணுகிறான்.

தேவன் மோசேக்கு தம்மை வெளிப்படுத்தும் போது "உன் பிதாக்களுடைய தேவனாயிருக்கிறேன்" என்று சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் ஆபிரகாமின் சந்ததியில் வந்திருக்கிறவர்கள். ஆகையினால் தேவன் இஸ்ரவேல் தேசத்தாருடைய தேவனாகயிருக்கிறார். அவர்களுடைய பிதாக்களின் தேவனாகயிருந்தவர், இப்போது அவர்களுடைய சந்ததியாரின் தேவனாகவும் இருக்கிறார். இஸ்ரவேலர்கள் ஆபிரகாமின் சந்ததியில் வந்தவர்களாக இருப்பதினால், தேவன் இவர்கள்மீது அன்புகூருகிறார். இந்த அன்பு இவர்களுடைய பக்தியினால் உண்டானதல்ல. தேவன் முற்பிதாக்கள்மீது வைத்திருந்த அன்பினாலும், அவர்களோடு செய்துகொண்ட உடன்படிக்கையினாலும் உண்டாயிருக்கிறது.

கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறவர்கள், தேவன் முற்பிதாக்களோடு செய்து கொண்ட உடன்படிக்கையையும் பிரசங்கிக்கிறார்கள். அப்போஸ்தலர் பவுல் அகிரிப்பா ராஜாவுக்கு முன்பாக தேவனுடைய உடன்படிக்கையைப் பற்றி இவ்வாறு சாட்சியாக அறிவிக்கிறார். "தேவன் நம்முடைய பிதாக்களுக்கு அருளிச்செய்த வாக்குத் தத்தம் நிறைவேறுமென்கிற நம்பிக்கைக்காகவே நான் இப்பொழுது நியாயத் தீர்ப்படைகிறவனாய் நிற்கிறேன். இரவும் பகலும் இடைவிடாமல் ஆராதனை செய்துவருகிற நம்முடைய பன்னிரண்டு கோத்திரத்தாரும் அந்த வாக்குத்தத்தம் நிறைவேறுமென்று நம்பியிருக்கிறார்கள். அகிரிப்பா ராஜாவே, அந்த நம்பிக்கையினிமித்தமே யூதர்கள் என்மேல் குற்றஞ்சாட்டுகிறார்கள்" *(அப் 26:6,7)*.

யூதர்கள் தேவாலயத்தைப்பற்றியும் பிரமாணத்தைப் பற்றியும் பெருமையாய்ப் பேசுகிறார்கள்.தேவாலயம் கட்டப்படுவதற்கு முன்பாகவே, தேவன் மோசேயிடம் பிரமாணங்களைக் கொடுப்பதற்கு முன்பாகவே, அவர் ஆபிரகாமோடும், ஈசாக்கோடும், யாக்கோபோடும் உடன் படிக்கை செய்திருக்கிறார். மோசேயின் பிரமாணத்தை மேன்மைப்படுத்துவதாகப் பெருமை பாராட்டி, தேவன் ஆபிரகாமோடு செய்து கொண்ட உடன்படிக்கையை அவமானப்படுத்திவிடக்கூடாது.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு தேவனுடைய வாக்குத்தத்தம் மிகவும் முக்கியமானது. நாம் பிரமாணத்தினால் இரட்சிக்கப்படாமல், தேவனுடைய கிருபையினாலும் அவருடைய வாக்குத் தத்தினாலும் மாத்திரமே இரட்சிக்கப்படுகிறோம். இயேசு கிறிஸ்துவின் சீஷர்கள் பிரமாணத்தைத் தூஷிப்பதாக யூதர்கள் அவர்கள்மீது குற்றம் சுமத்தி அவர்களைத் துன்பப்படுத்துகிறார்கள். அவர்களைத் துன்பப்படுத்துவதன் மூலமாக, இந்த யூதர்களே தேவனுடைய உடன் படிக்கையையும், வாக்குத்தத்தத்தையும் தூஷிக்கிறார்கள்.

எகிப்திற்கு அனுப்புவேன்

பின்னும் கர்த்தர் அவனை நோக்கி: உன் பாதங்களிலிருக்கிற பாதரட்சைகளைக் கழற்றிப்போடு; நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமியாயிருக்கிறது. எகிப்திலிருக்கிற என் ஜனத்தின் உபத்திரவத்தை நான் பார்க்கவே பார்த்து, அவர்கள் பெருமூச்சைக் கேட்டு, அவர்களை விடுவிக்கும்படி இறங்கினேன்; ஆகையால், நீ வா, நான் உன்னை எகிப்திற்கு அனுப்புவேன் என்றார் (அப் 7:33,34).

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்து தேசத்தில் அடிமைகளாக உபத்திரவப் படுகிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் தான் சீனாய் மலையின் வனாந்தரத்திலே, கர்த்தர் முட்செடி எரிகிற அக்கினி ஜுவாலையிலே, மோசேயோடு பேசிக் கொண்டிருக்கிறார். எகிப்தின் அடிமைத்தனத்திலிருக்கும் இஸ்ரவேல் புத்திரரை விடுவித்து அழைத்து வருமாறு தேவன் மோசேக்கு கட்டளை கொடுக்கிறார்.

தேவன் தம்மைப்பற்றி மோசேயிடம் முதலாவது சொல்லும்போது, "நான் ஆபிரகாமின் தேவனாயிருக்கிறேன்" என்றே கூறினார். இந்த உடன்படிக்கையை மோசே பயபக்தியோடு கேட்கவேண்டும். ஆகையினால் தேவன் மோசேயிடம் "உன் பாதங்களிலிருக்கிற பாதரட்சைகளைக் கழற்றிப்போடு" என்று சொல்லுகிறார். தேவனிடத்தில் வரும்போது அவசரப்பட்டு வரக்கூடாது. பயபக்தியோடு வரவேண்டும்.

தேவன் மோசேக்கு மிகவும் முக்கியமான ஒரு ஊழியத்தைக் கொடுக்கிறார். மோசே பார்வோனைச் சந்திக்கவேண்டும். இஸ்ரவேல் ஜனங்களை எகிப்து தேசத்திலிருந்து விடுதலை பண்ணுமாறு, மோசே கர்த்தருடைய நாமத்தினால் பார்வோனுக்குக் கட்டளையிடவேண்டும். தேவன் தம்முடைய ஜனங்களின் உபத்திரவத்தைப் பார்த்து, அவர்கள் விடுகிற பெருமூச்சைக் கேட்கிறார். தேவனுடைய இரக்கத்தினாலே இஸ்ரவேல் ஜனங்களுக்கு எகிப்து தேசத்திலிருந்து மீட்பு உண்டாயிற்று. "எகிப்திலிருக்கிற என் ஜனத்தின் உபத்திரவத்தை நான் பார்க்கவே பார்த்து, அவர்கள் பெருமூச்சைக் கேட்டு, அவர்களை விடுவிக்கும்படி இறங்கினேன்" என்று கர்த்தர் தம்முடைய மனஉருக்கத்தையும், இரக்கத்தையும் மோசேயிடம் வெளிப்படுத்துகிறார்.

இஸ்ரவேல் ஜனங்களை விடுவிப்பதற்காகவே தேவன் இறங்கி வந்திருக்கிறார். இஸ்ரவேல் ஜனங்களை விடுவிக்கவேண்டுமென்பதில் தேவன் தீர்மானமாயிருக்கிறார். தம்முடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்கு சாதாரண மனுஷனாகிய மோசேயை பயன்படுத்த வேண்டுமென்பது தேவனுடைய தீர்மானமாயிற்று. தம்முடைய தீர்மானத்தின் பிரகாரம் கர்த்தர் மோசேயிடம் "நீ வா, நான் உன்னை எகிப்திற்கு அனுப்புவேன்" என்று சொல்லுகிறார். கர்த்தர் மோசேயை அனுப்பும்போது, மெய்யாகவே அவர் மோசேக்கு ஜெயத்தைக் கட்டளையிடுவார். மோசேயைப்போலவே தேவன் நம்மை ஊழியத்திற்கு அனுப்பும்போது, அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து நாம் ஊழியம் செய்தால், தேவன் நமக்கும் ஊழியத்தில் ஜெயத்தைக் கட்டளையிடுவார்.

தலைவனாகவும் மீட்பனாகவும்

உன்னை அதிகாரியாகவும் நியாயாதிபதியாகவும் ஏற்படுத்தினவன் யார் என்று சொல்லி அவர்கள் மறுதலித்திருந்த இந்த மோசேயைத்தானே தேவன், முட்செடியில் அவனுக்குத் தரிசனமான தூதனாலே, தலைவனாகவும் மீட்பனாகவும் அனுப்பினார். இவனே அவர்களை அங்கேயிருந்து அழைத்துக் கொண்டுவந்து, எகிப்து தேசத்திலேயும் சிவந்த சமுத்திரத்திலேயும், நாற்பது வருஷகாலமாய் வனாந்தரத்திலேயும், அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தான் (அப் 7:35,36).

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தின் அடிமைத்தனத்தில் உபத்திரவப் படுகிறார்கள். தேவன் எகிப்திலிருக்கிற தம்முடைய ஜனத்தின் உபத்திரவத்தைப் பார்த்து, அவர்கள் பெருமூச்சைக் கேட்டு, அவர்களை விடுவிக்கும்படி சித்தமாயிருக்கிறார். அதற்காக மோசேயை எகிப்திற்கு அனுப்புகிறார். ஆனால் எகிப்து தேசத்தில் அடிமைகளாக உபத்திரவப்படும் இஸ்ரவேல் ஜனங்களோ மோசேயை மறுதலிக்கிறார்கள். "உன்னை அதிகாரியாகவும் நியாயாதிபதியாகவும் ஏற்படுத்தினவன் யார்" என்று மோசேயிடம் கேட்கிறார்கள். தேவனே மோசேயை தலைவனாகவும் மீட்பனாகவும் அனுப்பியிருக்கிறார். ஆனால் அந்த ஜனங்களோ தேவனால் அனுப்பப்பட்ட மோசேயை மறுதலித்துவிடுகிறார்கள்.

ஸ்தேவான் ஆலோசனைச் சங்கத்தாருக்கு மோசேயின் வரலாற்றை எடுத்துச் சொல்லுகிறான். முட்செடியில் மோசேக்குத் தரிசனமான தூதனாலே தலைவனாகவும்மீட்பனாகவும் அனுப்பப்பட்ட மோசேயை, "உன்னை அதிகாரியாகவும் நியாயாதிபதியாகவும் ஏற்படுத்தினவன் யார்" என்று சொல்லி அவர்கள் மோசேயை மறுதலித்தார்கள்.

அதுபோலவே இக்காலத்து யூதர்கள் இயேசு கிறிஸ்துவை மறுதலிக்கிறார்கள். பிதாவாகிய தேவனே இயேசுகிறிஸ்துவை இந்தப் பூமிக்கு அனுப்பியிருக்கிறார். தமக்குச் சொந்தமான இஸ்ரவேல் ஜனங்கள் மத்தியில் அவரை அனுப்பினோர். ஆனால் யூதர்களோ இயேசு கிறிஸ்துவிடம் "உமக்கு இந்த அதிகாரத்தைக் கொடுத்தது யார்" என்று சொல்லி, இயேசுகிறிஸ்துவை இரட்சகராக அங்கீகரியாமல் அவரை மறுதலித்து விடுகிறார்கள்.

அப்போஸ்தலர்கள் இயேசு கிறிஸ்துவைப் பற்றி ஆலோசனைச் சங்கத்தாரிடம் ஏற்கெனவே இவ்வாறு கூறியிருக்கிறார்கள். "நீங்கள் மரத்திலே தூக்கிக் கொலை செய்த இயேசுவை நம்முடைய பிதாக்களின் தேவன் எழுப்பி, இஸ்ரவேலுக்கு மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் அருளுகிறதற்காக, அவரை அதிபதியாகவும் இரட்சகராகவும் தமது வலதுகரத்தினாலே உயர்த்தினார்" (அப் 5:30,31). "வீடுகட்டுகிறவர்களாகிய உங்களால் அற்பமாய் எண்ணப்பட்ட அவரே மூலைக்குத் தலைக்கல்லானவர். அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" (அப் 4:11,12).

தேவன் இயேசு கிறிஸ்துவின் மூலமாக யூதஜனங்களுக்கு தம்முடைய சிலாக்கியத்தைக் காண்பித்தார். எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்த இஸ்ரவேல் ஜனங்களுக்கு மோசேயின் மூலமாக தம்முடைய கிருபையை வெளிப்படுத்தினார். மோசே இஸ்ரவேல் ஜனங்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துக்கொண்டு வந்தான். எகிப்து தேசத்திலேயும், சிவந்த சமுத்திரத்திலேயும், நாற்பது வருஷகாலமாய் வனாந்தரத்திலே, அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தான். ஆனால் இஸ்ரவேல் ஜனங்களோ மோசேயையும் மறந்து விட்டார்கள். தேவனையும் மறந்து விட்டார்கள். தேவன் மோசேயின் மூலமாக செய்த பலத்த செய்கைகளையும் மறந்துவிட்டார்கள். மோசேயை மறந்த யூதர்கள்தான், இப்போது ஸ்தேவான் மோசேக்கு விரோதமாகத் தூஷணம் சொல்லுவதாகக் குற்றம் சொல்லுகிறார்கள்.

தேவன் மோசேயின் மூலமாக அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்ததினால், அவர்கள் அவனை நினைவுகூரவேண்டும். அவன் மூலமாக நடந்த நற்கிரியைகளுக்காக தேவனை மகிமைப்படுத்த வேண்டும். ஆனாலும் மோசே தேவனல்ல. தேவனுடைய கருவி. தேவனுடைய அடையாளங்களையும் அற்புதங்களையும் நடப்பிப்பதற்கு, தேவன் மோசேயை ஒரு கருவியாகப் பயன்படுத்தியிருக்கிறார். மோசே தேவனால் பயன்படுத்தப்பட்ட ஒரு கருவி என்று சொல்லும் வாக்கியம் தேவதூஷணமாகாது.

இயேசு கிறிஸ்து மோசேயைவிட பெரியவர். யூதர்கள் இயேசுகிறிஸ்துவின் வார்த்தைக்குச் செவிகொடுக்கவேண்டும். எகிப்து தேசத்திலிருந்த இஸ்ரவேல் ஜனங்கள் மோசேயை மறுதலித்தார்கள். ஆனாலும் மோசேயின் மூலமாகவே அவர்களுக்கு இரட்சிப்பு உண்டாயிற்று. இக்காலத்தில் யூதர்கள் இயேசு கிறிஸ்துவை மறுதலிக்கிறார்கள். ஆனால் இயேசு கிறிஸ்துவின் மூலமாக மாத்திரமே மனுக்குலத்திற்கு இரட்சிப்பு நியமிக்கப்பட்டிருக்கிறது.

ஒரு தீர்க்கதரிசி

இஸ்ரவேல் புத்திரரை நோக்கி: உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்கள் சகோதரரிலிருந்து என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை உங்களுக்காக எழும்பப் பண்ணுவார், அவருக்குச் செவிகொடுப்பீர்களாக என்று சொன்னவன் இந்த மோசேயே (அப் 7:37).

மோசே பழைய ஏற்பாட்டுக்காலத்தில் இயேசுகிறிஸ்துவைக்குறித்தும் அவருடைய கிருபையைக் குறித்தும் தீர்க்கதரிசனமாகச் சொல்லியிருக்கிறான்."உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்கள் சகோதரரிலிருந்து என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை உங்களுக்காக எழும்பப் பண்ணுவார், அவருக்குச் செவிகொடுப்பீர்களாக" என்று சொன்னவன் இந்த மோசேயே.

இயேசு கிறிஸ்துவைப் பற்றிய சத்தியத்தை மோசே தீர்க்கதரிசனமாகச் சொன்னான். தேவனைப் பற்றி தீர்க்க தரிசனமாகச் சொல்வதற்கு மோசேக்குக் கிடைத்திருக்கிற சிலாக்கியம். இந்தத் தீர்க்கதரிசனத்தைச் சொல்லுமாறு தேவன் மோசேயைக் கனப்படுத்தியிருக்கிறார். இயேசு கிறிஸ்துவைப் பற்றி தீர்க்க தரிசனமாக முன்னறிவிக்கும் சிலாக்கியம் மோசேக்குக் கொடுக்கப்பட்டது. இஸ்ரவேல் ஜனங்கள் மத்தியில் தேவன் எழுப்பப்போகிற பெரிய தீர்க்க தரிசியைப்பற்றி மோசே முன்னறிவித்தான்.

இயேசு கிறிஸ்து யூதருடைய பாரம்பரிய பிரமாணங்களை மாற்ற வேண்டுமென்று விரும்பினார். பாரம்பரிய பழக்க வழக்கங்களினால் யாரும் இரட்சிக்கப்படுவதில்லை. தேவனுடைய கிருபையினால் மாத்திரமே மனுஷருக்கு இரட்சிப்பு நியமிக்கப்பட்டிருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகள் மோசேக்கு விரோதமான தூஷண வார்த்தைகள் என்று யூதர்கள் குற்றம் சுமத்துகிறார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவோ மெய்யாகவே மோசேயைக் கனப்படுத்தியிருக்கிறார். "நீங்கள் மோசேயை விசுவாசித் தீர்களானால் என்னையும் விசுவாசிப் பீர்கள்" (யோவா 5:46) என்று இயேசு கிறிஸ்து யூதர்களிடம் சொல்லியிருக்கிறார்.

தேவனாகிய கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரிலிருந்து தன்னைப்போல ஒரு தீர்க்க தரிசியை, அவர்களுக்காக எழுப்பப்பண்ணுவார் என்று மோசே தீர்க்கதரிசனமாகச் சொன்னான். அந்த தீர்க்கதரிசி யூததேசத்திலிருந்து, யூதர் மத்தியில் எழும்புவார். ஆகையினால் யூதர்களுடைய பாரம்பரிய பழக்க வழக்கங்களை மாற்றுகிற அதிகாரம் அந்தத் தீர்க்கதரிசிக்கு உண்டு. பாரம்பரிய பழக்கங்களிலிருந்து யூதர்களை விடுவித்து, மேன்மையான நம்பிக்கைக்கு இயேசு கிறிஸ்து அவர்களை வழிநடத்துகிறார்.

இயேசு கிறிஸ்து தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தராகயிருக்கிறார். அவரே புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தர். இந்தப் புதிய உடன் படிக்கையே மகத்துவமான உடன்படிக்கை. தேவனாகிய கர்த்தர் எழுப்புகிற தீர்க்கதரிசிக்கு இஸ்ரவேல் ஜனங்கள் செவிகொடுக்க வேண்டும் என்று மோசே சொன்னான். யூதர்கள் மோசேயை கனப்படுத்துகிறவர்களென்றால்,மோசேயின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, மோசே "அவருக்குச் செவிகொடுப்பீர்களாக" என்று சொன்ன பிரகாரம், அவர்களெல்லோரும் இயேசு கிறிஸ்துவுக்குச் செவிகொடுக்கவேண்டும்.

வனாந்தரத்திலே சபை

சீனாய்மலையில் தன்னுடனே பேசின தூதனோடும் நம்முடைய பிதாக்களோடுங்கூட வனாந்தரத்திலே சபைக்குள்ளிருந்தவனும், நமக்குக் கொடுக்கும்படி ஜீவவாக்கியங்களைப் பெற்றவனும் இவனே (அப் 7:38).

மோசே இஸ்ரவேல் ஜனங்களுக்குச் செய்த மகத்துவமான ஊழியத்தை ஸ்தேவான் அவர்களுக்கு விவரித்துச் சொல்லுகிறான். எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மோசே இஸ்ரவேல் ஜனங்களை விடுவித்து அழைத்து வருகிறான். இதன் பின்பும் மோசேயின் ஊழியம் தொடருகிறது. மோசே வனாந்தரத்திலே சபைக்குள்ளிருந்தான். இது தேவன் மோசேக்குக் காண்பித்த சிலாக்கியம்.

நாற்பது வருஷங்களாக மோசே இஸ்ரவேல் ஜனங்களை வனாந்தரத்தில் வழிநடத்தினான். ஜனங்களுக்காக மோசே தேவனிடத்தில் பரிந்து பேசினான். தேவன் பல சமயங்களில் இஸ்ரவேல் புத்திரரின் முரட்டாட்டத்தினிமித்தமாக அவர்களை அழித்துப் போட வேண்டுமென்று சித்தமாயிருந்தார். அப்போதெல்லாம் மோசேயின் பரிந்து பேசும் ஜெபத்தினால் தேவன் இஸ்ரவேலரை அழிக்கவில்லை. மோசே அவர்களுக்காக தேவனிடத்தில் பரிந்து பேசாமல் இருந்திருந்தால், இஸ்ரவேல் ஜனங்கள் எல்லாரையும் தேவன் வனாந்தரத்திலே சங்காரம் செய்திருப்பார்.

மோசே வனாந்தரத்திலே சபைக்குள்ளிருந்தான். இயேசுகிறிஸ்துவோ புதிய ஏற்பாட்டு சபைக்கு தலைவராகயிருக்கிறார். மகிமையான சபையை தமது தெய்வீக ஞானத்தினால் வழிநடத்துகிறார். இயேசுகிறிஸ்து திருச்சபையின் ஜீவனாக இருக்கிறார். இயேசு கிறிஸ்துவே மூலைக்குத் தலைக்கல்லாக இருக்கிறார். இயேசு கிறிஸ்து என்னும் கல்லின்மீது புதிய ஏற்பாட்டு சபை கட்டப்பட்டிருக்கிறது. வனாந்தரத்திலே இருந்த சபையில் மோசே பிரவேசித்தான். முற்பிதாக்களோடு அந்த சபையில் கூடயிருந்தான். ஆனால் புதிய ஏற்பாட்டுக்காலத்தில் இயேசுகிறிஸ்துவே மகிமையான சபைக்கு எல்லாமாக இருக்கிறவர். இப்படிப்பட்ட சிலாக்கியம் மோசேக்குக் கொடுக்கப்படவில்லை.

சீனாய் மலையில் தன்னுடனே பேசின தூதனோடு மோசே கூடயிருந்தான். முற்பிதாக்களோடு கூடயிருந்தான். வனாந்தரத்திலே சபைக்குள்ளிருந்தான். இவையெல்லாம் சீனாய் மலையில் மோசேயுடனே பேசின தூதனால் உண்டாயிற்று. அந்த தூதனே மோசேயை வழிநடத்தினார். தூதனுடைய ஆலோசனையில்லாமல் மோசேயினால் இஸ்ரவேல் ஜனங்களை வழிநடத்தியிருக்க முடியாது.

ஆனால் இயேசு கிறிஸ்துவோ சர்வஞானமுள்ளவர். பிதாவின் சித்தத்தின் படி கிரியை செய்கிறவர். இயேசுவே வழியாக இருக்கிறார். இயேசுவை யாரும் வழிநடத்த வேண்டியதில்லை. இயேசு சர்வ அதிகாரமுள்ளவர். ஆனால் மோசேயோ தன்னுடனே சீனாய் மலையில் பேசின தூதனுடைய அதிகாரத்திற்கு கட்டுப்பட்டவன். மோசேயின் அதிகாரத்தைவிட இயேசு கிறிஸ்துவின் அதிகாரம் பெரியது.

மோசே இஸ்ரவேல் ஜனங்களுக்குக் கொடுக்கும்படி ஜீவவாக்கியங்களைப் பெற்றுக் கொண்டான். பத்துக் கற்பனைகளை மாத்திரமல்ல. ஜனங்களுக்குத் தேவையான எல்லா கற்பனைகளையும் மோசே பெற்றுக் கொண்டான். கர்த்தர் மோசேயிடம் சொன்ன எல்லா கட்டளைகளையும் பெற்றுக் கொண்டான். தேவனுடைய வார்த்தைகளெல்லாம் ஜீவவாக்கியங்கள். ஜீவவாக்கியத்தில் பிழை எதுவும் இராது. எல்லா குழப்பங்களுக்கும் ஜீவவாக்கியத்தின் மூலமாகத்தான் தீர்வு உண்டாக வேண்டும். தேவனுடைய வார்த்தையின் படியே பிரச்சனைகளைத் தீர்த்து வைக்கவேண்டும்.

தேவன் பேசுகிற வார்த்தைகளெல்லாம் ஆவியும் ஜீவனுமுள்ளது. ஆகையினால் இவை ஜீவவாக்கியங்கள் என்று அழைக்கப்படுகிறது. மோசேயின் பிரமாணம் ஜீவனைக் கொடுக்காது. ஜீவனுக்குப் போகும் வழியை மாத்திரமே காண்பிக்கும். இந்த வாக்கியங்களை மோசே தேவனிடத்திலிருந்து பெற்றுக் கொண்டான். மோசே தேவனிடத்தில் பெற்றுக் கொண்ட வாக்கியங்களை மாத்திரமே, அவனால் ஜனங்கள் மத்தியில் கொடுக்க முடியும். சுயமாக அவனால் எதையும் கொடுக்க முடியாது.

தேவன் மோசேக்குக் கொடுத்தது ஜீவவாக்கியங்கள். தேவனிடத்தில் பெற்றுக் கொண்ட ஜீவவாக்கியங்களை மோசே விசுவாசத்தோடும் உண்மையோடும் ஜனங்களுக்குக் கொடுத்தான். தேவனே மோசேயின் மூலமாக ஜனங்களுக்குப் பிரமாணத்தைக் கொடுத்திருக்கிறார். பிரமாணத்தைக் கொடுத்தவருக்கு அதை மாற்றுகிற அதிகாரமுண்டு. தேவன் மோசேயின் மூலமாக கொடுத்த பிரமாணத்தை, தம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக மாற்றுவதற்குச் சித்தங்கொண்டிருக்கிறார். மோசேயின் மூலமாக கொடுக்கப்பட்ட ஜீவவாக்கியங்களைவிட, மேலான ஜீவவாக்கியங்களைத் தேவன் இயேசு கிறிஸ்துவின் மூலமாக கொடுத்திருக்கிறார்.

மோசேயை தள்ளிவிட்டார்கள்

இவனுக்கு நம்முடைய பிதாக்கள் கீழ்ப்படிய மனதாயிராமல், இவனைத் தள்ளிவிட்டு, தங்கள் இருதயங்களில் எகிப்துக்குத் திரும்பி, ஆரோனை நோக்கி: எகிப்து தேசத்திலிருந்து எங்களை அழைத்துக்கொண்டு வந்த அந்த மோசேக்கு என்ன சம்பவித்ததோ அறியோம்; ஆதலால் எங்களுக்கு முன் செல்லும் தெய்வங்களை எங்களுக்கு உண்டுபண்ணும் என்று சொல்லி; அந்நாட்களில் ஒரு கன்றுக்குட்டியை உண்டுபண்ணி, அந்த விக்கிரகத்திற்குப் பலியிட்டு, தங்கள் கையின் கிரியைகளில் களிகூர்ந்தார்கள் (அப் 7:39-41).

ஸ்தேவான் மோசேக்கு விரோதமாகத் தூஷண வார்த்தைகளைக் பேசுகிறான் என்று யூதர்கள் அவன்மீது குற்றம் சுமத்துகிறார்கள். தாங்கள் முன்னோர்களின் பாரம்பரியத்தின் பிரகாரம் நடப்பதாகவும், மோசேயின் பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவதாகவும் யூதர்கள் தங்களைப் பெருமையாகக் காண்பித்துக்கொள்கிறார்கள். ஆனால் இவர்களோ மோசேக்குக் கீழ்ப்படியவில்லை. இவர்கள் மாத்திரமல்ல யூதருடைய முற்பிதாக்களும் மோசேக்குக் கீழ்ப்படிய மனதாயிராமல், அவனைத் தள்ளி விட்டார்கள். தங்கள் இருதயங்களில் எகிப்திற்குத் திரும்பிப்போனார்கள்.

யூதர்கள் மோசேயின் பிரமாணத்திற்கு கீழ்ப்படிவதாகத் தங்களைப் பெருமைப்படுத்துகிறார்கள். ஆனால் இவர்களோ, அல்லது இவர்களுடைய முற்பிதாக்களோ மோசேக்கும்அவனுடைய பிரமாணத்திற்கும் கீழ்ப்படிய மனதாயிராமல், அவனையும் அவனுடைய பிரமாணத்தையும் தள்ளி விட்டார்கள். மோசே இஸ்ரவேல் ஜனங்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்து வந்தான். ஆனால் அவர்களோ தங்கள் இருதயங்களில் எகிப்து தேசத்திற்குத் திரும்பிப்போய்விட்டார்கள்.

தேவன் இஸ்ரவேல் ஜனங்களுக்கு வனாந்தரத்தில் மன்னாவைப் போஷிக்கக் கொடுத்தார். ஆனால் இஸ்ரவேல் ஜனங்களோ மன்னாவை புசிப்பதில் பிரியப்படாமல், எகிப்து தேசத்தில் அவர்கள் சாப்பிட்ட வெள்ளைப் பூடுகளையும் வெங்காயங்களையும் ஆசையாய் நினைத்துப் பார்க்கிறார்கள். மோசேயின் வழிநடத்துதலில், அவர்களுக்கு வனாந்தரத்தில் மன்னா மாத்திரமே கிடைத்தது. கானான் தேசத்தில் பாலும் தேனும் கிடைக்கும் என்னும் வாக்குறுதி உண்டாயிற்று. ஆனால் இஸ்ரவேல் ஜனங்களோ தற்போது தங்களுக்குக் கிடைக்கும் மன்னாவிலும் திருப்தியாக இல்லை, இனிமேல் கிடைக்கப்போகும் பாலையும் தேனையும் விசுவாசிக்கவுமில்லை. அவர்கள் மோசேக்குக் கீழ்ப்படிய மனதாயில்லை.

எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டு வந்த இஸ்ரவேல் ஜனங்கள் கானான் தேசத்திற்குப் பிரயாணமாய்ப் போகிறார்கள். அவர்களுடைய சரீரம் மாத்திரமே கானான் தேசத்தை நோக்கி பிரயாணமாய்ப் போகிறது. ஆனால் அவர்களுடைய இருதயமோ எகிப்து தேசத்திற்குத் திரும்பிப் போய் கொண்டிருக்கிறது. மோசே அவர்களுக்குத் தேவனுடைய பிரணமாங்களைக் கொடுத்தான். ஆனால் அந்தப் பிரமாணங்கள் இஸ்ரவேல் ஜனங்களுடைய இருதயத்தை மாற்ற வில்லை. ஆகையினால் இயேசு கிறிஸ்து பெலனற்ற மோசேயின் பிரமாணத்தை மாற்றவேண்டுமென்று சித்தங்கொண்டார்.

இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்தரத்தில் ஒரு கன்றுக்குட்டியை உண்டுபண்ணி, அந்த விக்கிரகத்திற்குப் பலியிட்டு, தங்கள் கையின் கிரியைகளில் களிகூர்ந்தார்கள். இந்தக் கன்றுக்குட்டியே தங்களுக்கு முன்செல்லும் தெய்வம் என்று சொன்னார்கள். எகிப்து தேசத்திலிருந்து தங்களை அழைத்துக்கொண்டு வந்த மோசேக்கு என்ன சம்பவித்ததோ அறியோம் என்று சொல்லி மோசேயை அவமானப்படுத்தினார்கள். இதுவரையிலும் தங்களை மோசே முன்சென்று வழிநடத்தினானென்றும், இப்போது தங்களை வழிநடத்த மோசேயில்லை என்றும் சொல்லி, தங்களை வழிநடத்துவதற்காகத் தங்களுக்கு முன்செல்ல ஒரு கன்றுக்குட்டியை உண்டுபண்ணினார்கள்.

தாங்கள் உண்டுபண்ணின கன்றுக் குட்டி தங்களை வாக்குத்தத்த கானான் தேசத்திற்கு அழைத்துச் செல்லும் என்று நம்பினார்கள். மோசேயால் செய்ய முடியாத காரியங்களை கன்றுக்குட்டியால் செய்ய முடியும் என்று நினைத்தார்கள். அந்தக் கன்றுக்குட்டிக்கு பலியிட்டார்கள். தங்கள் கையின் கிரியைகளை களிகூர்ந்தார்கள். மோசேயை மறந்தார்கள். தேவனையும் மறந்தார்கள்.

மோசே அவர்களுக்கு கர்த்தருடைய பிரமாணத்தைக் கொடுத்தான். ஆனால் அந்தப் பிரமாணத்தினால் இஸ்ரவேல் ஜனங்களை திருத்த முடியவில்லை. ஆகையினால் மோசேயின் பிரமாணமானது, குறைவுள்ளதாக இருக்கிறது. இந்தப் பிரமாணம் பரிபூரணமடையவேண்டும். இயேசுகிறிஸ்து மோசேயின் பிரமாணத்தை மாற்றி, தேவனுடைய பரிபூரணமான பிரமாணத்தை ஜனங்களுக்குக் கொடுத்தார். இயேசு கிறிஸ்து செய்த இந்த நற்காரியம் மோசேக்கு விரோதமாகச் செய்யப்பட்ட காரியமல்ல. மோசேயை தூஷணப்படுத்தும் விதமாகவும் செய்யப்பட்ட காரியமல்ல. மோசேயின் பிரமாணத்தில் மாற்றம் தேவைப்பட்டது. அந்த மாற்றத்தை இயேசுகிறிஸ்து நிறைவேற்றினார்.

தேவனுடைய ஆலயம்
அப் 7 : 42-50

அப் 7:42. அப்பொழுது தேவன் அவர்களை விட்டு விலகி, வானசேனைக்கு ஆராதனை செய்ய அவர்களை ஒப்புக்கொடுத்தார். அதைக் குறித்து: இஸ்ரவேல் வம்சத்தாரே, நீங்கள் வனாந்தரத்திலிருந்த நாற்பது வருஷம்வரையில் காணிக்கைகளையும் பலிகளையும் எனக்குச் செலுத்தினீர்களோ என்றும்,

அப் 7:43. பணிந்து கொள்ளும்படி நீங்கள் உண்டாக்கின சொரூபங்களாகிய மோளோகியனுடைய கூடாரத்தையும், உங்கள் தேவனாகிய ரெம்பான் என்னும் நட்சத்திர சொரூபத்தையும் சுமந்தீர்களே; ஆகையால் உங்களைப் பாபிலோனுக்கு அப்புறத்திலே குடிபோகப்பண்ணுவேன் என்றும், தீர்க்க தரிசிகளின் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறதே.

அப் 7:44. மேலும் நீ பார்த்த மாதிரியின் படியே சாட்சியின் கூடாரத்தை உண்டுபண்ணுவாயாக என்று மோசேயுடனே பேசினவர் கட்டளையிட்ட பிரகாரமாக, அந்தக் கூடாரம் வனாந்தரத்திலே நம்முடைய பிதாக்களோடு இருந்தது.

அப் 7:45. மேலும், யோசுவாவுடனேகூட நம்முடைய பிதாக்கள் அதைப் பெற்றுக்கொண்டு, தேவன் அவர்களுக்கு முன்பாகத் துரத்திவிட்ட புறஜாதிகளுடைய தேசத்தை அவர்கள் கட்டிக் கொள்ளுகையில், அதை அந்த தேசத்தில் கொண்டு வந்து, தாவீதின் நாள்வரைக்கும் வைத்திருந்தார்கள்.

அப் 7:46. இவன் தேவனிடத்தில் தயவு பெற்றபடியினால், யாக்கோபின் தேவனுக்கு ஒரு வாசஸ்தலத்தைத் தான் கட்டவேண்டுமென்று விண்ணப்பம் பண்ணினான்.

அப் 7:47. சாலொமோனோ அவருக்கு ஆலயத்தைக் கட்டினான்.

அப் 7:48. ஆகிலும் உன்னதமானவர் கைகளினால் செய்யப்பட்ட ஆலயங்களில் வாசமாயிரார்.

அப் 7:49. வானம் எனக்குச் சிங்காசனமும் பூமி எனக்குப் பாதபடியுமாயிருக்கிறது; எனக்காக நீங்கள் எப்படிப்பட்ட வீட்டைக் கட்டுவீர்கள்; நான் தங்கயிருக்கத்தக்க ஸ்தலம் எது;

அப் 7:50. இவைகள் எல்லாவற்றையும் என்னுடைய கரம் உண்டாக்கவில்லையா என்று கர்த்தர் உரைக்கிறார் என்று தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறானே.

வானசேனை

அப்பொழுது தேவன் அவர்களை விட்டு விலகி, வானசேனைக்கு ஆராதனை செய்ய அவர்களை ஒப்புக் கொடுத்தார். அதைக் குறித்து: இஸ்ரவேல் வம்சத்தாரே, நீங்கள் வனாந்தரத்திலிருந்த நாற்பது வருஷம் வரையில் காணிக்கைகளையும் பலிகளையும் எனக்குச் செலுத்தினீர்களோ என்றும், (அப் 7:42)

இஸ்ரவேல் ஜனங்களின் முற்பிதாக்கள் விக்கிரகாரதனையில் ஈடுபட்டிருந்ததை ஸ்தேவான் இங்கு குறிப்பிடுகிறான். அவர்களுடைய பாவத்திற்காக தேவனும் அவர்களைத் தண்டித்தார். மற்ற எல்லா பாவங்களைவிட, விக்கிரகாரதனையின் பாவம் மிகவும் கொடியது. இதற்கு அதிகமான தண்டனை கிடைக்கும். இஸ்ரவேல் ஜனங்களின் முற்பிதாக்கள் விக்கிரகாராதனை செய்ததினால் தேவன் அவர்களைவிட்டு விலகினார். வானசேனைக்கு ஆராதனை செய்ய அவர்களை ஒப்புக்கொடுத்தார். ஆமோஸ் 5:25-27 ஆகிய வசனங்களிலிருந்து ஸ்தேவான் இந்தச் சம்பவத்தை மேற்கோளாகக் குறிப்பிடுகிறான்.

"இஸ்ரவேல் வம்சத்தாரே, நீங்கள் வனாந்தரத்திலே இருந்த நாற்பது வருஷம் வரையில் பலிகளையும் காணிக்கைகளையும் எனக்குச் செலுத்தினீர்களோ? நீங்கள் உங்களுக்கு உண்டாக்கின மோளோகுடைய கூடாரத்தையும், உங்கள் தேவர்களின் நட்சத்திர ராசியாகிய உங்கள் சொரூபங்களின் சப்பரத்தையும் சுமந்து கொண்டு வந்தீர்களே. ஆகையால் உங்களைத் தமஸ்குவுக்கு அப்பாலே குடியோட்டுவேன் என்று சேனைகளுடைய தேவன் என்னும் நாமமுள்ள கர்த்தர் சொல்லுகிறார்" (ஆமோ 5:25-27).

ஆலோசனைச் சங்கத்தாரையும், யூதர்களையும் ஸ்தேவான் நேருக்கு நேராக கண்டித்து உணர்த்தாமல், பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் சொன்ன எச்சரிப்பின் வார்த்தைகளை அவர்களுக்கு நினைவுபடுத்துகிறான். பழைய ஏற்பாட்டு ஜனங்களைப் போலவே, ஸ்தேவானின் காலத்திலும் இருந்த யூதர்கள் தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். தேவன் பழைய ஏற்பாட்டு ஜனங்களைத் தண்டித்ததுபோல, இக்காலத்திலிருக்கிற யூதர்களையும் தேவன் தண்டிப்பார் என்று ஸ்தேவான் அவர்களை எச்சரிக்கிறான்.

இஸ்ரவேல் ஜனங்கள் நாற்பது வருஷம் வரையிலும் வனாந்தரத்தில் சுற்றி அலைந்தார்கள். கர்த்தரே அவர்களுடைய தேவனாக இருந்தார். ஆனால் இந்த நாற்பது வருஷம் வரையிலும் அவர்கள் தேவனுக்கு காணிக்கைகளையும் பலிகளையும்செலுத்தவில்லை. தேவனுக்குச் செலுத்த வேண்டிய பலிகளை அவர்கள் முறையாகச் செலுத்தாமல், பல சமயங்களில் பலிசெலுத்தாமல் விட்டு விட்டார்கள். காணிக்கைகளைச் செலுத்தவும் மறந்து விட்டார்கள். இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுக்கு பலிகளையும் காணிக்கைகளையும் செலுத்த வேண்டுமென்று மோசே அவர்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறான். ஆனால் இஸ்ரவேல் ஜனங்களுடைய முற்பிதாக்களோ மோசேயின் கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் மீறி விடுகிறார்கள். ஆனால் ஆலோசனைச் சங்கத்தாரோ மோசேயின் கட்டளைக்குக் கீழ்ப்படிவதாக பாசாங்கு பண்ணுகிறார்கள்.

இயேசு கிறிஸ்து மோசேயின் பிரமாணத்தை மாற்றுவதாக ஆலோசனைச் சங்கத்தார் குற்றம் சொல்லுகிறார்கள். இயேசு கிறிஸ்து முன்னோர்களின் பாரம்பரியங்களை மாற்றிவிடுவாரோ என்று பயப்படுகிறார்கள். ஆனால் யூதருடைய முற்பிதாக்களே தங்களுடைய காலத்தில் மோசேயின் கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் முரட்டாட்டமாக ஜீவித்திருக்கிறார்கள். எகிப்து தேசத்திலிருந்து விடுவிக்கப்பட்ட நாற்பது வருஷகாலங்களாக, இஸ்ரவேலர்கள் கர்த்தருக்கு முறையான காணிக்கைகளையோ பலிகளையோ செலுத்தவில்லை.

ரெம்பான்

பணிந்துகொள்ளும்படி நீங்கள் உண்டாக்கின சொரூபங்களாகிய மோளோகியனுடைய கூடாரத்தையும், உங்கள் தேவனாகிய ரெம்பான் என்னும் நட்சத்திர சொரூபத்தையும் சுமந்தீர்களே; ஆகையால் உங்களைப் பாபிலோனுக்கு அப்புறத்திலே குடி போகப்பண்ணுவேன் என்றும், தீர்க்கதரிசிகளின் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறதே (அப் 7:43).

இஸ்ரவேல் ஜனங்கள் வனாந் தரத்தில் சுற்றி அலைந்து திரிந்துவிட்டு, கர்த்தருடைய பெரிதான கிருபையினால் கானான் தேசத்திற்கு அழைத்து வரப்படுகிறார்கள். ஆனால் அங்கும் அவர்கள் கர்த்தரை ஆராதிக்காமல், புறஜாதி தெய்வங்களை ஆராதிக்கிறார்கள். மோளோகினுடைய கூடாரத்தை கானான் தேசத்தில் உண்டுபண்ணுகிறார்கள். மோளோகு அம்மோன் புத்திரரின் தெய்வம். அம்மோன் புத்திரர் தங்கள் சொந்த பிள்ளைகளையே மோளோகுக்கு பலியாகச் செலுத்துவார்கள். இஸ்ரவேல் ஜனங்கள் கானான் தேசத்திற்குள் பிரவேசித்த போது, அத்தேசத்தில் மோளோகுக்கு நரபலி செலுத்தி ஆராதனை செய்யும் விக்கிரகாராதனை இருந்தது.

இஸ்ரவேல் ஜனங்கள் கானான் தேசத்தில் வருவதற்கு முன்பு, வனாந்தரத்தில் நாற்பது வருஷ காலங்களாக சுற்றி அலைந்தபோதே, தேவன் அவர்களை விட்டு விலகி, வானசேனைக்கு ஆராதனை செய்ய அவர்களை ஒப்புக்கொடுத்துவிட்டார். கானான் தேசத்திற்கு அவர்கள் வரும் போதே, வானசேனையை ஆராதிக்கும் சுபாவத்தோடே வருகிறார்கள். தங்களோடு மோளோகுடைய கூடாரத்தையும் சுமந்து கொண்டு வருகிறார்கள். ரெம்பான் என்னும் நட்சத்திர தேவனையும் இஸ்ரவேல் ஜனங்கள் ஆராதனை செய்தார்கள்.

வானத்திலுள்ள சனிகிரகமானது சீரியாக் மொழியில் ரெம்பான் என்று அழைக்கப்படுகிறது. செப்துவஜிந்த் பதிப்பில் இந்த நட்சத்திரம் "கீயுன்" என்று எழுதப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் ஜனங்கள் கானான் தேசத்தில் நட்சத்திரங்களுக்கு சொரூபங்களை உண்டுபண்ணுகிறார்கள். இந்த சொரூபங்கள் வெள்ளியினால் செய்யப்பட்ட தியானாளின் சொரூபங்களைப் போல உள்ளது. "நீங்கள் உண்டாக்கின சொரூபங்கள்" என்பது இஸ்ரவேல் ஜனங்கள் உண்டுபண்ணின நட்சத்திரங்களின் சொரூபங்களாக இருக்கலாம்.

இஸ்ரவேல் ஜனங்கள் வனாந் தரத்தில் இருந்தபோது பொன்னால் செய்யப்பட்ட கன்றுக்குட்டியை உண்டாக்கி, அதை ஆராதனை செய்தார்கள். இப்போது இஸ்ரவேல் ஜனங்களிடத்தில் விக்கிரகங்களைச் செய்ய பொன்னில்லை. ஆகையினால் வெள்ளியினால் சொரூபங்களைச் செய்கிறார்கள். ஆனாலும் பொன்கன்றுக் குட்டியின் விக்கிரகாராதனையைவிட, இஸ்ரவேலர்கள் இந்தச் சொரூபங்களை ஆராதனை செய்வது தேவனுடைய சமுகத்தில் மிகவும் அருவருப்பாக இருக்கிறது.

இஸ்ரவேல் ஜனங்களின் விக்கிர காரதனையினிமித்தம் தேவன் அவர்கள்மீது கோபம் கொண்டு "உங்களை பாபிலோனுக்கு அப்புறத்திலே குடிபோகப்பண்ணுவேன்" என்று தீர்க்கதரிசிகள் மூலமாகச் சொல்லுகிறார். விக்கிரகாரதனையில் ஈடுபட்டிருக்கும் இஸ்ரவேல் ஜனங்களுடைய குடியிருப்பு பாழாய்ப்போகும். எருசலேம் அழிந்துபோகும் என்று இயேசுகிறிஸ்து முன்னறிவித்தார். இதனால் ஆலோசனைச்சங்கத்தார் அவர்மீது கோபமடைந்தார்கள். ஸ்தேவான் மீதும் கோபமாக குற்றம் சுமத்துகிறார்கள்.

எருசலேம் அழிக்கப்படுமென்று அவர்களுக்கு முன்னறிவிப்பது புதுமையான செய்தியல்ல. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தீர்க்கதரிசிகள் எருசலேமின் அழிவைக்குறித்து ஏற்கெனவே எழுதி வைத்திருக்கிறார்கள். ஸ்தேவான் ஆலோசனைச்சங்கத்தாருக்கு இந்தச் சம்பவத்தை விளக்கிக் கூறி, அவர்களுடைய அநீதியையும், தன்னுடைய பக்கத்திலிருக்கும் நீதியையும் எடுத்துச் சொல்லுகிறான். இயேசுகிறிஸ்து சொன்ன இந்தச் செய்தியை, யூதர்கள் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் மூலமாக பலமுறை கேட்டிருக்கிறார்கள்.

சாட்சியின் கூடாரம்

மேலும் நீ பார்த்த மாதிரியின் படியே சாட்சியின் கூடாரத்தை உண்டு பண்ணுவாயாக என்று மோசேயுடனே பேசினவர் கட்டளையிட்ட பிரகாரமாக, அந்தக் கூடாரம் வனாந்தரத்திலே நம்முடைய பிதாக்களோடு இருந்தது. மேலும், யோசுவாவுடனேகூட நம்முடைய பிதாக்கள் அதைப் பெற்றுக் கொண்டு, தேவன் அவர்களுக்கு முன்பாகத் துரத்திவிட்ட புறஜாதிகளுடைய தேசத்தை அவர்கள் கட்டிக்கொள்ளுகையில், அதை அந்த தேசத்தில் கொண்டு வந்து, தாவீதின் நாள்வரைக்கும் வைத்திருந்தார்கள் (அப் 7:44,45).

பரிசுத்த ஸ்தலத்திற்கு விரோதமாக ஸ்தேவான் தூஷண வார்த்தைகளைப் பேசினதாக யூதர்கள் அவன்மீது குற்றம் சுமத்துகிறார்கள். ஸ்தேவான் பரிசுத்த ஆவியினால் நிறைந்து தன்மீது சுமத்தப்பட்ட இந்தக் குற்றச்சாட்டிற்கும் பதில் சொல்லுகிறான். நசரேயனாகிய இயேசு இந்த ஸ்தலத்தை அழித்துப் போட்டு, மோசே நமக்குக் கொடுத்த முறைமைகளை மாற்றுவார் என்று ஸ்தேவான் சொன்னதாக அவன்மீது யூதர்கள் குற்றம் சுமத்துகிறார்கள்.

தேவாலயமாகிய இந்தப் பரிசுத்த ஸ்தலத்தை அழித்துப்போடுவேன் என்று இயேசுகிறிஸ்து சொன்னது மெய்யான சத்தியம்தான் என்று ஸ்தேவான் விவாதம் பண்ணுகிறான். தேவனுடைய மகிமை ஆலயத்திலிருந்தாலும், வனாந்தரத்திலிருந்தாலும், வேறு எந்த இடத்திலிருந்தாலும் அது தேவனுடைய மகிமையாகவே இருக்கும். அதை மாசுபடுத்த யாராலும் முடியாது. இடத்தைப்பொறுத்து தேவனுடைய மகிமை ஒருபோதும் மாறாது.

இஸ்ரவேல் ஜனங்கள் வனாந் தரத்தில் பிரயாணம் செய்து கொண்டிருக்கிறார்கள். அதுவரையிலும் கர்த்தரை ஆராதிப்பதற்கு அவர்களுக்குப் பரிசுத்த ஸ்தலம் எதுவுமில்லை. ஆரம்பத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரை ஆலயமாகிய பரிசுத்த ஸ்தலத்தில் ஆராதிக்காமல், அவர்கள் எங்கெல்லாம் கூடியிருந்தார்களோ அங்கெல்லாம் கர்த்தரை ஆராதனை செய்தார்கள். அதுவே பழைய ஏற்பாட்டுக்கால சபையாக விளங்கிற்று.

திருச்சபை வரலாற்றில் கர்த்தருடைய பிள்ளைகள் தேவாலயத்தில் ஆராதனை செய்யாமல், வனாந்தரத்தில் ஆராதனை செய்ததையும் கர்த்தர் அங்கீகரித்திருக்கிறார். அவர்களுடைய ஆராதனையும் பரிசுத்தமாயும் கர்த்தரால் அங்கீகரிக்கப்பட்டதாயும் இருந்தது. அப்படிப்பட்ட பரிசுத்த ஆராதனை இந்தப் பூமியில் மறுபடியும் வரப்போகிறது.

யூதர்கள் இப்போது தேவாலயமாகிய பரிசுத்த ஸ்தலத்தில் கர்த்தரை ஆராதனை செய்கிறார்கள். ஆனால் அவர்களுடைய ஆராதனையில் பரிசுத்தமில்லை. யூதர்களுடைய உள்ளத்தில் பாவம் நிறைந்திருக்கிறது. இந்த ஆராதனை தேவாலயமாகிய பரிசுத்த ஸ்தலத்தில் நடைபெற்ற போதிலும், கர்த்தர் இவர்களுடைய ஆராதனையை அங்கீகரிக்கவில்லை.

இயேசு கிறிஸ்து தேவாலயமாகிய இந்தப் பரிசுத்த ஸ்தலத்தை இடித்துப் போடுவார். அதன்பின்பு கர்த்தருடைய ஆராதனை மறுபடியும் பரிசுத்தமாயிருக்கும். ஜனங்களுடைய இருதயத்தில் பாவமில்லாமல் பரிசுத்தம் நிரம்பியிருக்கும். கர்த்தரும் அவர்களுடைய ஆராதனையை அங்கீகரிப்பார். இந்த ஆராதனை புதுப்பிக்கப்பட வேண்டுமென்றால், தேவாலயம் இடிக்கப்பட வேண்டியது அவசியமாயிருக்கிறது.

தேவாலயமாகிய பரிசுத்த ஸ்தலம் ஆரம்பத்தில் ஒரு ஆசரிப்பு கூடாரமாகவே இருந்தது. ஓரிடத்திலிருந்து மற்றொரிடத்திற்கு எளிதாக எடுத்துச் செல்லும் விதத்தில் கூடாரம் அமைக்கப்பட்டது. உலகப்பிரகாரமான மேன்மையோ, மகிமையோ, ஆடம்பரமோ ஆசரிப்புக்கூடாரத்தில் காணப்படவில்லை. ஆனாலும் இந்தக் கூடாரத்தில் தேவனுடைய மகிமை வந்திறங்கிற்று.

ஜனங்கள் கர்த்தரை நித்தியகாலமாக ஆசரிப்புக் கூடாரத்தில் ஆராதிக்க வேண்டுமென்பது தேவனுடைய சித்தமல்ல. இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்தரத்தில் பிரயாணம் பண்ணியபோது அவர்கள் கர்த்தரை ஆசரிப்புக் கூடாரத்தில் ஆராதனை செய்தார்கள். அந்த ஆசரிப்புக்கூடார ஆராதனையை கர்த்தர் தம்முடைய சித்தத்தினால் முடிவுக்குக் கொண்டு வந்தார். கர்த்தரால் ஆரம்பிக்கப்பட்ட ஆசரிப்புக் கூடார ஆராதனை முறைமை, அவரால் முடித்து வைக்கப்பட்டது.

இஸ்ரவேல் ஜனங்கள் இப்போது கர்த்தரை தேவாலயமாகிய பரிசுத்த ஸ்தலத்தில் ஆராதனை செய்கிறார்கள். தேவாலய ஆராதனையையும் கர்த்தரே ஆரம்பித்து வைத்தார். ஆரம்பித்து வைத்த கர்த்தரால் இதை முடிவுக்கும் கொண்டு வரமுடியும். ஆசரிப்புக் கூடார ஆராதனையை கர்த்தர் முடித்து வைத்தது போல, தேவாலயத்து ஆராதனையையும் முடித்து வைக்க கர்த்தர் சித்தங் கொண்டிருக்கிறார்.

வனாந்தரத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் ஸ்தாபித்த ஆசரிப்புக்கூடாரம் "சாட்சியின் கூடாரம்" என்று அழைக்கப்படுகிறது. கர்த்தருடைய மகிமைக்குச் சாட்சியாகவே ஆசரிப்புக் கூடாரமும், தேவாலயமும் ஸ்தாபிக்கப்பட்டது. மோசே சீனாய் மலையில் பார்த்த பிரகாரமாகவே வனாந்தரத்தில் ஆசரிப்புக்கூடாரத்தை உண்டு பண்ணினான். கர்த்தர் கட்டளையிட்ட பிரகாரமாகவே மோசே சாட்சியின் கூடாரத்தை உண்டு பண்ணினான். மிகவும் மேன்மையான காரியங்கள் வரப்போகிறது என்பதற்குச் சாட்சியின் கூடாரம் ஓர் அடையாளமாக இருக்கிறது.

தேவாலயமும் தற்காலிகமாகவே இருக்கும். இந்த ஆலயம் மனுஷரால் கட்டப்பட்டிருக்கிறது. ஒரு குறிப்பிட்ட காலம் வரையிலும் தேவனுடைய மகிமைக்கு தேவாலயம் சாட்சியாக இருக்கிறது. அதன் பின்பு மனுஷரால் கட்டப்பட்ட இந்தத் தேவாலயமும் அழிக்கப்படும். ஏனெனில் உன்னதமானவர் கைகளினால் செய்யப்பட்ட ஆலயங்களில் வாசமாயிரார். வானம் அவருக்குச் சிங்காசனமும் பூமி அவருக்குப் பாதபடியாகவும் இருக்கிறது. கைகளினால் செய்யப்படாத பரிசுத்த ஸ்தலத்தில் வாசம் பண்ணுவதே தேவனுக்குப் பிரியமானது. இதுவே தேவனுடைய சித்தம். இந்தச் சித்தம் நிறைவேறுவதற்காக கைகளினால் செய்யப்பட்ட தேவாலயமாகிய பரிசுத்த ஸ்தலம் அழிக்கப்படும்.

கர்த்தர் தனக்குக் கட்டளையிட்ட பிரகாரமாக, மோசே சாட்சியின் கூடாரத்தை வனாந்தரத்தில் உண்டு பண்ணினான். முதன் முதலில் வனாந்தரத்தில்தான் ஆசரிப்புக்கூடாரம் ஸ்தாபிக்கப்பட்டது. இஸ்ரவேல் புத்திரருக்கு வனாந்தரம் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசமல்ல. அது அவர்களுடைய சுதந்தர பூமியல்ல. அந்நியருடைய காணியாட்சிக்கு உட்பட்ட வனாந்தரத்தில் தான், கர்த்தருடைய மகிமை தங்குவதற்கு ஆசரிப்புக் கூடாரம் முதன்முதலாக ஸ்தாபிக்கப்பட்டது.

வனாந்தரத்தில் உண்டுபண்ணப்பட்ட ஆசாரிப்புக் கூடாரத்தை இஸ்ரவேல் ஜனங்கள் வாக்குத்தத்த பூமியாகிய கானான் தேசத்திற்குக் கொண்டு வந்தார்கள். அவர்கள் கானான் தேசத்திற்கு வந்தபோது அத்தேசத்தில் புறஜாதியார் குடியிருந்தார்கள். தேவன் அவர்களுக்கு முன்பாக கானான் தேசத்தில் குடியிருந்த புறஜாதிகளைத் துரத்தி விட்டார். கர்த்தருடைய வார்த்தையின் பிரகாரம் கானான் தேசம் இஸ்ரவேல் ஜனங்களுக்குச் சுதந்தர வீதமாகப் பங்கு பிரித்துக் கொடுக்கப்பட்டது. அந்தத் தேசத்தில்தான் யோசுவாவின் காலத்தில் முற்பிதாக்கள் ஆசரிப்புக்கூடாரத்தைக் கொண்டு வந்து வைத்தார்கள். தாவீதின் நாள் வரைக்கும் கானான் தேசத்தில் தேவனுடைய ஆசரிப்புக்கூடாரம் வைக்கப்பட்டிருந்தது.

எருசலேம் நகரத்தில் தேவனுடைய பரிசுத்த ஆலயம் இருப்பதற்காக யூதர்கள் பெருமைப்படுகிறார்கள். ஆனால் இந்தத் தேவாலயம் கட்டப்படுவதற்கு முன்பாக, புறஜாதியாருடைய வனாந்தரத்தில்தான் ஆசரிப்புக் கூடாரம் முதன்முதலாக கட்டப்பட்டது. கர்த்தருடைய மகிமை அங்கும் வந்திறங்கிற்று. தேவன் இப்போது தம்முடைய ஆவிக்குரிய ஆலயத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்று சித்தங் கொண்டிருக்கிறார். ஆசரிப்பு கூடாரம் புறஜாதியாருடைய வனாந் தரத்தில் ஸ்தாபிக்கப்பட்டது போல, கர்த்தருடைய ஆவிக்குரிய ஆலயம் புறஜாதியாருடைய தேசத்தில் ஸ்தாபிக்கப்படுவதற்கு வாய்ப்புள்ளது. கர்த்தர் தமக்கு சித்தமான இடத்தில் தம்முடைய ஆவிக்குரிய ஆலயத்தை ஸ்தாபிப்பார். ஆகையினால் எருசலேமில் தேவாலயம் இருப்பதற்காக யூதர்கள் தங்கள் இருதயத்தில் பெருமைப்படக் கூடாது.

வனாந்தரத்திலிருந்து யோசுவாவுடனே கூட வந்த யூதருடைய முற்பிதாக்கள், தங்களோடு ஆசரிப்புக்கூடாரத்தையும் கொண்டு வந்தார்கள். கானான் தேசத்திலிருந்த புறஜாதிகளை தேவன் துரத்தி விட்டார். இஸ்ரவேலர்கள் புறஜாதிகளுடைய தேசத்தைக் கட்டிக் கொள்ளுகையில், தாங்கள் கொண்டுவந்த ஆசரிப்புக்கூடாரத்தை அந்தத் தேசத்தில் வைத்தார்கள். யோசுவா என்னும் எபிரெயப் பெயர், கிரேக்க மொழியில் “இயேசு” என்று எழுதப்படுகிறது.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் யோசுவா ஆசரிப்புக் கூடாரத்தை புறஜாதிகள் குடியிருந்த தேசத்திற்குக் கொண்டுவந்தான். இயேசுகிறிஸ்து புதிய ஏற்பாட்டுக் காலத்து யோசுவாவாக இருக்கிறார். இயேசு மெய்யான கூடாரத்தை புறஜாதியாரின் தேசத்திற்குக் கொண்டுவந்து ஸ்தாபனம்பண்ணுவார். எருசலேமிலுள்ள தேவாலயத்தை இயேசு இடிப்பார். அதை அழித்துப்போடுவார். ஆவிக்குரிய புதிய கூடாரத்தை புறஜாதியாருடைய இருதயத்தில் கட்டி யெழுப்புவார். கர்த்தரால் கூடாத காரியம் ஒன்றுமில்லை.

தாவீதின் நாள் வரைக்கும் இஸ்ரவேல் தேசத்தில் ஆசரிப்புக்கூடாரம் இருந்தது. தேவனுக்கு ஒரு ஆலயம் கட்டவேண்டும் என்னும் தரிசனம் தாவீதுக்கு வருவதற்கு முன்பாகவே, கானான் தேசத்தில் ஆசரிப்புக்கூடாரம் இருந்தது. தேவனுடைய மகிமை அந்தக் கூடாரத்தில் வந்திறங்கிற்று.

யூதர்கள் எருசலேமிலுள்ள தேவாலயத்தைக் குறித்துப் பெருமைப்படுகிறார்கள். இந்தத் தேவாலயம் கட்டப்படுவதற்கு முன்பாகவே, இங்கு ஆசரிப்புக்கூடாரம் இருந்தது என்றும், அதில் தேவனுடைய மகிமை வந்திறங்கிற்று என்றும், ஆகையினால் யூதர்கள் தங்கள் தேவாலயத்தைக் குறித்து பெருமைப்படக்கூடாது என்றும் ஸ்தேவான் ஆலோசனைச்சங்கத்தாரிடமும் யூதர்களிடமும் விரிவாக எடுத்துச் சொல்லுகிறான்.

வாசஸ்தலம்

இவன் தேவனிடத்தில் தயவு பெற்றபடியினால், யாக்கோபின் தேவனுக்கு ஒரு வாசஸ்தலத்தைத் தான் கட்டவேண்டுமென்று விண்ணப்பம் பண்ணினான். சாலொமோனோ அவருக்கு ஆலயத்தைக் கட்டினான். ஆகிலும் உன்னதமானவர் கைகளினால் செய்யப்பட்ட ஆலயங்களில் வாசமாயிரார். வானம் எனக்குச் சிங்காசனமும் பூமி எனக்குப் பாதபடியுமாயிருக்கிறது; எனக்காக நீங்கள் எப்படிப்பட்ட வீட்டைக் கட்டுவீர்கள்; நான் தங்கயிருக்கத்தக்க ஸ்தலம் எது; இவைகள் எல்லாவற்றையும் என்னுடைய கரம் உண்டாக்கவில்லையா என்று கர்த்தர் உரைக்கிறார் என்று தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறானே (அப் 7:46-50).

தாவீது தேவனிடத்தில் தயவு பெற்றான். தேவனுடைய தயவு தனக்கு இன்னும் அதிகமாய் கிடைக்க வேண்டுமென்று தாவீது வாஞ்சையாயிருந்தான். இஸ்ரவேல் தேசத்தின் தேவன் கூடாரத்தில் வாசம் பண்ணுகிறார். யாக்கோபின் தேவனுக்கு ஒரு வாசஸ்தலத்தை கட்ட வேண்டுமென்று தாவீது கர்த்தரிடத்தில் விண்ணப்பம் பண்ணினான். ஆசரிப்புக் கூடாரமானது ஓரிடத்திலிருந்து மற்றொரிடத்திற்கு எடுத்துச் செல்லக் கூடியது. கூடாரத்தை எடுத்துச் செல்லும் போது தேவனுடைய மகிமையும் பிரசன்னமும் அந்தக் கூடாரத்தோடு பிரயாணமாகும்.

தேவன் ஆசரிப்புக் கூடாரத்தில் வாசம் பண்ணுவதற்குப் பதிலாக, அவருக்கு ஒரு நிலையான வாசஸ்தலத்தை கட்ட வேண்டுமென்று தாவீது விரும்புகிறான். தேவனிடத்தில் தயவு பெற்றவனாகயிருந்தாலும், தாவீது இன்னும் அதிக தயவு பெறவேண்டு மென்று வாஞ்சையாயிருக்கிறான். கர்த்தருடைய தயவைப் பெற்றிருக்கிற நம்மிடத்தில் இப்படிப்பட்ட வாஞ்சை காணப்படவேண்டும். தேவனுடைய தயவு நமக்குள் அதிகரிக்க வேண்டுமென்று விரும்பவேண்டும். தேவனுடைய ராஜ்யம் மனுஷர் மத்தியிலே ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்று வாஞ்சிக்க வேண்டும். தேவனுடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப் படுவதையும், அது விஸ்தரிக்கப் படுவதையும் விரும்பவேண்டும்.

யாக்கோபின் தேவனுக்கு ஒரு வாசஸ்தலத்தைக் கட்டவேண்டுமென்று தாவீது விரும்புகிறான். அதற்காக அவன் தேவனிடத்தில் விண்ணப்பம் பண்ணுகிறான். ஆனால் தேவனுக்கோ ஆலயத்தில் விருப்பமில்லை. தாவீது ஆலயம் கட்ட வேண்டுமென்று விரும்பினாலும், தேவன் அதை அனுமதிக்கவில்லை. தாவீது தமக்கு ஆலயம் கட்டுவதை கர்த்தர் தடை பண்ணிவிட்டார். தேவன் எந்தக் காரியத்தையும் அவசரப்பட்டு செய்யமாட்டார். தாவீது தமக்கு ஆலயம் கட்டுவது கர்த்தருடைய சித்தமல்ல. தாவீதுக்குப் பதிலாக அவன் குமாரன் சாலொமோன் தமக்கு ஆலயம் கட்டவேண்டுமென்பதே கர்த்தருடைய சித்தம். அவருடைய சித்தத்தின் பிரகாரம் தாவீது யாக்கோபின் தேவனுக்கு ஒரு வாசஸ்தலத்தை கட்டாமலேயே மரித்துப் போனான். பல வருஷங்களுக்குப் பின்பு தாவீதின் குமாரனாகிய சாலொமோன் கர்த்தருக்கு ஒரு ஆலயத்தைக் கட்டினான்.

மனுஷருடைய கைகளால் கட்டப்படுகிற ஆலயத்தைக் குறித்துத் தேவன் பல சமயங்களில் தம்முடைய சித்தத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். உன்னதமானவர் கைகளினால் செய்யப்பட்ட ஆலயங்களில் வாசமாயிரார். இந்தச் சத்தியத்தை சாலொமோனும் உணர்ந்து, அவருடைய சமுகத்திற்கு முன்பாக இதை அறிக்கை செய்கிறான். வானம் கர்த்தருக்கு சிங்காசனமும், பூமி அவருக்கு பாதபடியுமாயிருக்கிறது. இந்த முழு உலகமும் கர்த்தருடைய ஆலயம்தான். இந்த உலகத்தில் தேவன் சர்வவியாபகராக இருக்கிறார். எல்லா இடங்களிலுமிருக்கிறார். இந்த உலகம் முழுவதையும் தமது மகிமையினால் நிரப்புகிறார். ஆகையினால் தேவனுக்கு ஒரு வீட்டை எந்த மனுஷனாலும் கட்ட முடியாது. அவர் தங்கியிருக்கத்தக்க ஸ்தலம் எதுவுமில்லை.

தேவன் நித்தியமானவர், சத்தியமானவர். ஜீவனுள்ளவர். அவருக்கு ஆலயம் தேவையில்லை. ஏனெனில் வானமே அவருக்கு சிங்காசனமாக இருக்கிறது. அந்த வானத்தில்தான் அவர் வாசம்பண்ணுகிறார். இந்தப் பூமி அவருக்குப் பாதபடியாயிருக்கிறது. இந்தப் பூமியை அவர் ஆளுகை செய்கிறார். ஆகையினால் கர்த்தருக்காக மனுஷர்கள் தங்கள் கைகளினால் எப்படிப்பட்ட வீட்டையும் கட்ட முடியாது. அவர் தங்கியிருக்கத்தக்க ஸ்தலம் எதுவுமே யில்லை. ஒரு குறிப்பிட்ட ஸ்தலத்திற்குள் கர்த்தருடைய பிரசன்னத்தை மட்டுப்படுத்த முடியாது. அவர் சர்வவியாபகராக இருக்கிறார்.

தேவன் ஒரு வாசஸ்தலத்தில்தான் தங்கியிருக்கவேண்டும் என்னும் அவசியம் அவருக்கு இல்லை. ஆலயத்தின் மூலமாகத்தான் தேவன் தம்முடைய மகிமையையோ, அல்லது தம்முடைய கிரியையோ வெளிப்படுத்திக் காண்பிக்க வேண்டும் என்னும் அவசியமும் அவருக்கு இல்லை. ஏனெனில் பூமியிலுள்ள எல்லாவற்றையும் தேவனுடைய கரமே உண்டாக்கியிருக்கிறது.

இந்த முழு உலகமும் தேவனுடைய ஆலயமாக இருக்கிறது. இந்த உலகத்தில் தேவனுடைய மகிமை வெளிப்படுகிறது. தேவனுடைய கிரியைகள் பிரத்தியட்சமாக விளங்குகிறது. ஆகையினால் தேவனை ஆராதிக்கிறவர்கள் இந்த உலகத்தில் எங்கு வேண்டுமானாலும் அவரை ஆராதனை செய்யலாம். நாம் பரிசுத்த அலங்காரத்துடன் கர்த்தரை ஆராதிக்க வேண்டும். தேவன் சர்வவியாபகராக இருக்கிறார். ஆகையினால் தேவனை எந்த இடத்திலிருந்து வேண்டுமானாலும் நாம் ஆராதனை செய்யலாம்.

இந்தப் பூமியில் தேவனுடைய மகிமை நிரம்பியிருக்கிறது. மகிமையிருக்கிற இடத்தில் துதியும் இருக்கும். இந்தப் பூமியில் அவருடைய மகிமை நிரம்பியிருப்பது போலவே, அவரைத் துதிக்கிற துதியும் நிரம்பியிருக்கிறது. தேவாலயமாகிய பரிசுத்த ஸ்தலத்தினால் தேவனுக்கு மகிமை உண்டாகாது. தேவன் வாசம் பண்ணுவதினால்தான் தேவாலயத்திற்கு மேன்மை உண்டாயிற்று. ஆகையினால் தேவனுடைய மகிமைக்கும் தேவாலயமாகிய இந்தப் பரிசுத்த ஸ்தலத்திற்கும் மெய்யான சம்பந்தம் எதுவுமில்லை.

இந்தக் கருத்தையெல்லாம் விளங்குவதற்காகத் தான் இயேசுகிறிஸ்து இந்தத் தேவாலயத்தை அழித்துப் போடுவதாகச் சொன்னார். தேவாலயம் அழிந்தாலும் தேவனுடைய மகிமை அழியாது. இந்தத் தேவாலயத்தை அழித்துவிட்டு இயேசுகிறிஸ்து ஆவிக்குரிய புதிய ஆலயத்தைக் கட்டுவதாக வாக்குப்பண்ணியிருக்கிறார்.

"மற்ற மனுஷரும் என்னுடைய நாமந்தரிக்கப்படும் சகல ஜாதிகளும், கர்த்தரைத் தேடும்படிக்கு, நான் இதற்குப்பின்பு திரும்பிவந்து, விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை மறுபடியும் எடுப்பித்து, அதிலே பழுதாய்ப் போனவைகளை மறுபடியும் சீர்ப்படுத்தி, அதைச் செவ்வையாக நிறுத்துவேன் என்று இவைகளையெல்லாஞ்செய்கிற கர்த்தர் சொல்லுகிறார்" (அப் 15:16,17).

விருத்தசேதனம் பெறாதவர்கள்
அப் 7 : 51-53

அப் 7:51. வணங்காக் கழுத்துள்ளவர்களே, இருதயத்திலும் செவிகளிலும் விருத்தசேதனம் பெறாதவர்களே, உங்கள் பிதாக்களைப் போல நீங்களும் பரிசுத்தஆவிக்கு எப்பொழுதும் எதிர்த்து நிற்கிறீர்கள்.

அப் 7:52. தீர்க்கதரிசிகளில் யாரை உங்கள் பிதாக்கள் துன்பப்படுத்தாமலிருந்தார்கள்? நீதிபரருடைய வருகையை முன்னறிவித்தவர்களையும் அவர்கள் கொலை செய்தார்கள். இப்பொழுது நீங்கள் அவருக்குத் துரோகிகளும் அவரைக் கொலை செய்த பாதகருமாயிருக்கிறீர்கள்.

அப் 7:53. தேவதூதரைக் கொண்டு நீங்கள் நியாயப் பிரமாணத்தைப் பெற்றிருந்தும், அதைக் கைக்கொள்ளாமற்போனீர்கள் என்றான்.

எதிர்த்து நிற்கிறீர்கள்

வணங்காக் கழுத்துள்ளவர்களே, இருதயத்திலும் செவிகளிலும் விருத்தசேதனம் பெறாதவர்களே, உங்கள் பிதாக்களைப்போல நீங்களும் பரிசுத்தஆவிக்கு எப்பொழுதும் எதிர்த்து நிற்கிறீர்கள் (அப் 7:51).

ஸ்தேவான் ஆலோசனைச் சங்கத்தாரிடமும் யூதரிடமும் சத்தியத்தை எடுத்துப் பேசுகிறான். தேவாலயத்தைப் போலவே, தேவாலயத்தின் ஆராதனை முறைமைகளும் முடிவுக்குக் கொண்டு வரப்படவேண்டும் என்று அவர்களிடத்தில் சொல்ல விரும்புகிறான். ஆனால் இந்தச் செய்தியை யூதர்களால் தாங்கிக்கொள்ள முடியாது என்பது ஸ்தேவானுக்குத் தெரியும். இதைப்பற்றிப் பேசினால் அவர்கள் ஸ்தேவானின் பேச்சை பொறுமையோடு கேட்கமாட்டார்கள். அவன்மீது உக்கிரகோபமடைவார்கள். ஆகையினால் தேவாலயத்தைப்பற்றித் தான் பேசுவதை ஸ்தேவான் இத்துடன் நிறுத்திக்கொள்கிறான்.

ஆலோசனைச் சங்கத்தாரிடம் ஸ்தேவான் பேசும்போது அவன் பரிசுத்த ஆவியினாலும், ஞானத்தினாலும், வல்லமையினாலும் நிரம்பியிருக்கிறான். ஆகையினால் தன்னைத் துன்பப்படுத்துகிறவர்களுக்கு எப்படி உத்தரவு சொல்ல வேண்டுமென்று அவனுக்குத் தெரிந்திருக்கிறது. பரிசுத்த ஆவியானவரே அவன் மூலமாகப் பேசுகிறார். அவன் வாயில் வார்த்தைகளைத் தருகிறார். ஆவியானவருடைய பெலத்தினாலும் வல்லமையினாலும், ஸ்தேவான் தன்னைத் துன்பப்படுத்துகிறவர்களைக் கடிந்து கொள்கிறான்.

ஆலோசனைச் சங்கத்தாரும் யூதர்களும் சுவிசேஷத்தின் சாட்சியை தங்கள் இருதயத்தில் ஏற்றுக்கொள்ள வேண்டும். இல்லையென்றால் சுவிசேஷம் அவர்களுக்கு விரோதமான சாட்சியாக இருக்கும். ஆலோசனைச் சங்கத்தார் தங்கள் முற்பிதாக்களைப் போலவே வணங்காக் கழுத்துள்ளவர்களாக இருக்கிறார்கள். தேவன் இஸ்ரவேல் ஜனங்களைத் திருத்துவதற்காக பல விதமான உபாயங்களைக் கடைப் பிடித்தார். ஆனால் அவர்களோ தேவனுடைய வார்த்தைக்குச் செவி கொடுக்க வில்லை. இருதயத்திலும் செவிகளிலும் விருத்தசேதனம் பெறாதவர்களாக இருந்தார்கள். முற்பிதாக்களுக்கும் இவர்களுக்கும் வித்தியாசமே இல்லை.

யூதர்கள் வணங்காக் கழுத்துள்ளவர்களாக இருக்கிறார்கள். தேவனுடைய ராஜ்யத்திற்கு யூதர்கள் தங்களைத் தாழ்த்த வேண்டும். ஒப்புக் கொடுக்க வேண்டும். தேவனுடைய ராஜ்யத்தின் நுகம் மெதுவானது. இனிமையானது. இந்தச் சுமையை யூதர்கள் தங்கள் கழுத்தில் சுமக்க வேண்டும். ஆனால் யூதர்களோ வணங்காக் கழுத்துள்ளவர்களாக இருக்கிறார்கள். தேவனுக்கு முன்பாக இவர்கள் தங்களுடைய தலைகளை தாழ்த்துவதில்லை. தங்களைத் தாழ்த்தி தேவனுடைய சமுகத்தில் இவர்கள் தங்களை ஒப்புக்கொடுப்பதில்லை.

யூதர்கள் இருதயத்திலும் செவிகளிலும் விருத்தசேதனம் பெறாதவர்களாக இருக்கிறார்கள். பெயரளவில் இவர்கள் விருத்தசேதனம் பெற்ற யூதர்கள். பிறருடைய பார்வைக்குத் தங்களை விருத்தசேதனம் பெற்றவர்களாகக் காண்பித்துக் கொள்கிறார்கள். ஆனால் இவர்கள் தங்கள் இருதயத்திலும் செவிகளிலும் விருத்தசேதனம் பெறாத புறஜாதியாராகவே இருக்கிறார்கள். புறஜாதியார் தேவனுடைய வார்த்தைக்குச் செவிகொடுப்பதில்லை. அவர்கள் கர்த்தரை தங்கள் தேவனாக ஏற்றுக்கொள்வதில்லை. அவருடைய அதிகாரத்திற்குக் கீழ்ப்படிவதில்லை. யூதர்களும் புறஜாதியாரைப் போலவே கர்த்தருடைய அதிகாரத்திற்குக் கீழ்ப்படியாமல் வணங்காக் கழுத்துள்ளவர்களாக இருக்கிறார்கள்.

யூதர்களுடைய ஜீவியத்தில் பரிசுத்தமில்லை. வானசேனைகளுக்கும் விக்கிரகங்களுக்கும் புறஜாதியார்கள் ஆராதனை செய்வது போல, இவர்களும் அவற்றிற்கு ஆராதனை செய்கிறார்கள். தேவனுக்கு விரோதமான தீயபழக்க வழக்கங்கள் யூதர்களிடத்தில் காணப்படுகிறது. இவையெல்லாவற்றையும் நீக்கிப் போட்டு, யூதர்களைத் திருத்த வேண்டுமென்று கர்த்தர் சித்தமுள்ளவராக இருக்கிறார். ஆனால் யூதர்களோ கர்த்தருடைய சித்தத்திற்கு எதிர்த்து நிற்கிறார்கள். கர்த்தர் எதிர்க்கிற காரியங்களை யூதர்கள் விரும்புகிறார்கள். தங்களிடத்தில் எந்தெந்த சுபாவங்களெல்லாம் இருக்கக்கூடாது என்று கர்த்தர் விரும்புகிறாரோ, அந்தச் சுபாவங்களை யூதர்கள் விரும்பி அங்கீகரிக்கிறார்கள். பரிசுத்த ஆவிக்கு எப்போதும் எதிர்த்து நிற்கிறார்கள்.

கர்த்தர் தீர்க்கதரிசிகள் மூலமாக இஸ்ரவேல் ஜனத்தாரிடம் பேசினார். யூதருடைய முற்பிதாக்கள் தீர்க்க தரிசிகளில் எல்லோரையும் துன்பப்படுத்தி யிருக்கிறார்கள். பரிசுத்த ஆவியானவர் தீர்க்கதரிசிகள் மூலமாகப் பேசினார். ஆனால் யூதர்களோ ஆவியானவரின் வார்த்தைக்குச் செவிகொடுக்காமல், அவருடைய வார்த்தைகளைப் பேசின தீர்க்க தரிசிகளைத் துன்பப்படுத்து கிறார்கள். யூதருடைய முற்பிதாக்கள் தீர்க்கதரிசிகளைத் துன்பப்படுத்தினார்கள். ஆலோசனைச்சங்கத்தாரும், யூதர்களுமோ இயேசு கிறிஸ்துவின் அப்போஸ் தலர்களையும் ஊழியக்காரர்களையும் துன்பப்படுத்துகிறார்கள்.

யூதர்களுடைய இருதயம் பாவத்தினால் நிறைந்திருக்கிறது. அவர்களுடைய சொந்த மனச்சாட்சியே அவர்களுக்கு விரோதமாகப் போரிடுகிறது. ஆனாலும் பரிசுத்த ஆவியானவரின் சத்தத்திற்கு யூதர்கள் எதிர்த்து நிற்கிறார்கள். பரிசுத்த ஆவியானவரை தங்கள் இருதயத்தில் கிரியை செய்யவிடாமல் தடைபண்ணுகிறார்கள்.

தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட கர்த்தருடைய ஜனமே பரிசுத்த ஆவியானவரின் சத்தத்திற்குச் செவி கொடுக்கிறார்கள். இவர்களுடைய சுயசித்தமும், சுயஆலோசனையும் பரிசுத்த ஆவியானவரின் சித்தத்திற்கும் ஆலோசனைக்கும் விரோதமாகப் போரிடும்போது, இவர்கள் பரிசுத்த ஆவியானவருக்கே கீழ்ப்படிகிறார்கள். தடைகளை மேற்கொள்கிறார்கள். இவர்களுடைய இருதயத்தில் ஆவிக்குரிய போராட்டங்கள் ஏற்பட்டாலும், போராட்டத்தின் முடிவில் கிறிஸ்துவானவரே அவர்களுடைய ஆத்துமாவின் சிங்காசனத்தில் வீற்றிருந்து அவர்களை ஆளுகை செய்கிறார். தேவனுடைய கிருபையினால் ஆவிக்குரிய யுத்தத்தில் ஜெயம் உண்டாகிறது. தேவனுடைய கிருபைக்கு விரோதமாக மனுஷனுடைய சுயஎண்ணங்கள் எதிர்த்து நின்றாலும், தேவனுடைய கிருபையே வெற்றி பெறுகிறது. ஆகையினால் தேவகிருபையானது "ஜெய கிருபை" என்று அழைக்கப்படுகிறது.

துரோகிகள்

தீர்க்கதரிசிகளில் யாரை உங்கள் பிதாக்கள் துன்பப்படுத்தாமலிருந்தார்கள்? நீதிபரருடைய வருகையை முன்னறிவித்தவர்களையும் அவர்கள் கொலை செய்தார்கள். இப்பொழுது நீங்கள் அவருக்குத் துரோகிகளும் அவரைக் கொலை செய்த பாதகருமாயிருக்கிறீர்கள் (அப் 7:52).

யூதருடைய முற்பிதாக்கள் கர்த்தருடைய தீர்க்கதரிசிகளைத் துன்பப்படுத்தினார்கள். கர்த்தர் அனுப்பிய ஊழியக்காரர்களை அவர்கள் உபத்திரவப்படுத்திக் கொலைசெய்தார்கள். ஸ்தேவானின் காலத்திலுள்ள யூதர்களும் அவர்களுடைய முற்பிதாக்களைப்போலவே, கர்த்தருக்கும் அவருடைய ஊழியக்காரர்களுக்கும் விரோதமாகக் கிரியை செய்கிறார்கள்.

யூதருடைய முற்பிதாக்கள் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தீர்க்கதரிசிகளை மிகவும் கொடூரமாகத் துன்பப்படுத்தினார்கள். "தீர்க்கதரிசிகளில் யாரை உங்கள் பிதாக்கள் துன்பப்படுத்தாமலிருந்தார்கள்" என்று ஸ்தேவான் ஆலோசனைச்சங்கத்தாரிடமும் யூதரிடமும் கேட்கிறான். அநேகமாக அவர்கள் எல்லா தீர்க்கதரிசிகளையும் துன்பப்படுத்தினார்கள். எல்லா வேளைகளிலும் துன்பப்படுத்தினார்கள். எல்லாஇடங்களிலும் துன்பப்படுத்தினார்கள்.

பழைய ஏற்பாட்டுக்கால தீர்க்கதரிசிகள் நீதிபரருடைய வருகையை முன்னறிவித்தார்கள். தமக்காக ஊழியம் செய்தவர்களை முற்பிதாக்கள் துன்பப்படுத்தியதினால், தேவனுடைய கோபம் அவர்கள்மீது வந்திறங்கிற்று. மனுஷர் மத்தியில் மேசியாவை அனுப்ப வேண்டுமென்று கர்த்தர் சித்தங் கொண்டார். தேவனுடைய சத்தியத்தைச் சொல்லுகிறவர்களை நாம் ஆதரிக்க வேண்டும். அவர்களுக்கு மதிப்பும் மரியாதையும் கொடுக்க வேண்டும். ஆனால் ஸ்தேவானுடைய காலத்திலிருந்த யூதர்களோ கர்த்தருடைய ஊழியக்காரர்களை அவமதிக்கிறார்கள், துன்பப்படுத்துகிறார்கள், உபத்திரவப்படுத்துகிறார்கள். கர்த்தருடைய ஊழியக்காரர்களை, குற்றவாளிகளை விசாரிப்பது போல விசாரித்துத் தண்டிக்கிறார்கள்.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் வாழ்ந்த முற்பிதாக்கள் நீதிபரருடைய வருகையை முன்னறிவித்தவர்களைக் கொலை செய்தார்கள். ஸ்தேவானுடைய காலத்திலுள்ள யூதர்களோ நீதிபரருக்குத் துரோகிகளும், நீதிபரரைக் கொலைசெய்த பாதகருமாயிருக்கிறார்கள். இந்தச் சத்தியத்தை பேதுருவும் ஆலோசனைச் சங்கத்தாரிடம் ஏற்கெனவே சொல்லியிருக்கிறான். "பரிசுத்தமும் நீதியுமுள்ளவரை நீங்கள் மறுதலித்து, கொலைபாதகனை உங்களுக்காக விடுதலைபண்ண வேண்டுமென்று கேட்டு, ஜீவாதிபதியைக் கொலை செய்தீர்கள்; அவரை தேவன் மரித்தோரிலிருந்தெழுப்பினார்; அதற்கு நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம்" (அப் 3:14,15) என்று பேதுரு சொன்னான்.

இயேசு கிறிஸ்துவைக் காட்டிக் கொடுப்பதற்கு யூதர்கள் யூதாஸ் காரியோத்தை கூலிக்கு அமர்த்துகிறார்கள். இயேசு கிறிஸ்துவைக் குற்றவாளியாகத் தீர்த்து அவரை ஆக்கினைக்குட்படுத்த வேண்டுமென்று யூதர்கள் பிலாத்துவைக் கட்டாயப் படுத்துகிறார்கள். யூதர்களே நீதிபரராகிய இயேசு கிறிஸ்துவைக் காட்டிக் கொடுத்தவர்களாகவும், அவரைக் கொலை செய்த பாதகர்களாகவும் இருக்கிறார்கள்.

இயேசு கிறிஸ்துவைக் கொலை செய்ததினிமித்தமாக யூதர்கள்மீது பாவமும் சாபமும் வந்தது. இயேசுவைக் கொலைசெய்துவிட்டால் தங்கள்மீது குற்றம் சுமராது என்று நினைத்தார்கள். ஆனால் அவர்கள்மீது நீதிபரராகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தப்பழி வந்தது. அவர்கள் கொலைசெய்த எல்லா தீர்க்க தரிசிகளின் இரத்தப்பழிகளும் அவர்கள் மீது வந்தது. தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்துவையே மதிக்காதவர்கள், அவருடைய வருகையை முன்னறிவித்த தீர்க்க தரிசிகளை நிச்சயமாகவே மதிக்கமாட்டார்கள். இயேசுகிறிஸ்துவையே கொலை செய்தவர்கள் அவருடைய வருகையை முன்னறிவித்த தீர்க்க தரிசிகளையும் கொலைசெய்ய தயங்க மாட்டார்கள்.

கைக்கொள்ளாமற்போனீர்கள்

தேவதூதரைக் கொண்டு நீங்கள் நியாயப் பிரமாணத்தைப் பெற்றிருந்தும், அதைக் கைக் கொள்ளாமற் போனீர்கள் என்றான் (அப் 7:53).

யூதருடைய முற்பிதாக்கள் தேவனுடைய தெய்வீக வெளிப்பாட்டிற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. அதை அவமதித்தார்கள். தேவன் யூதருடைய முற்பிதாக்களுக்குத் தம்முடைய பிரமாணத்தை வெளிப்படுத்தினார். ஆனால் அவர்களோ தேவனுடைய கற்பனைக்குக் கீழ்ப்படியாமல் அதை அவமானப்படுத்தினார்கள். இக்காலத்தில் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் யூதர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் யூதர்களோ சுவிசேஷத்தைத் தங்கள் இருதயத்தில் ஏற்றுக் கொள்ளாமல் அதைப் புறக்கணித்து அவமானப்படுத்துகிறார்கள்.

முற்பிதாக்கள் நியாயப்பிரமாணத்தைப் பெற்றுக் கொண்டார்கள். ஆனால் அவற்றைக் கைக்கொள்ளாமற்போனார்கள். தேவன் தம்முடைய பிரமாணத்தில் உன்னதமான காரியங்களையெல்லாம் எழுதியிருக்கிறார். ஆனால் அவை கர்த்தருடைய பிரமாணம் என்று யூதர்கள் அங்கீகரிக்கவில்லை. கர்த்தருடைய கட்டளைகளைமுற்பிதாக்கள் தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொள்ளவில்லை. கர்த்தருடைய வார்த்தை அவர்களுக்கு அந்நிய வார்த்தையாயிற்று.

முற்பிதாக்கள் தேவதூதரைக் கொண்டு நியாயப் பிரமாணத்தைப் பெற்றிருக்கிறார்கள். தேவன் முற்பிதாக்களுக்குத் தம்முடைய நியாயப் பிரமாணத்தைக் கொடுத்த போது, அவர் தேவதூதர்களையும் இதில் பயன்படுத்தினார். கர்த்தருடைய வார்த்தை உண்டான போது இடிமுழக்கமும், மின்னலும் எக்காள சத்தமும் உண்டாயிற்று. இவையெல்லாம் தேவதூதரின் கிரியைகளாகும்.

இவ்வளவு பலத்த கிரியைகளோடு தேவனுடைய நியாயப் பிரமாணம் வெளிப்பட்ட போதிலும், யூதர்களோ அதைக் கைக்கொள்ளாமல், தங்களுக்கு ஒரு பொன்கன்றுக்குட்டியைச் செய்து கொண்டார்கள். கர்த்தருடைய கற்பனைகளைவிட அவர்கள் செய்த பொன்கன்றுக் குட்டி அவர்களுடைய கண்களுக்கு மகிமையுள்ளதாகத் தெரிந்தது. ஆனால் தேவனுடைய பிரமாணத்திற்கு முன்பாக பொன்கன்றுக் குட்டியினால் எதிர்த்து நிற்கமுடியவில்லை.

ஸ்தேவானுடைய காலத்தில் நியாயப் பிரமாணத்திற்குப் பதிலாக சுவிசேஷம் கொடுக்கப்பட்டிருக்கிறது. யூதர்கள் இந்தச் சுவிசேஷத்தைத் தேவதூதரைக் கொண்டு பெற்றுக் கொள்ளாமல் பரிசுத்த ஆவியான வரைக் கொண்டு பெற்றிருக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைத் தங்கள் இருதயத்தில் ஏற்றுக் கொள்ளவில்லை. வசனங்களுக்குக் கீழ்ப்படியவில்லை. கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கைக்கொள்ளவுமில்லை.

யூதர்கள் தேவனுக்கும் அவருடைய பிரமாணத்திற்கும் மதிப்புக் கொடுப்பதாகவும், கீழ்ப்படிந்து நடப்பதாகவும் சொல்லிக் கொள்கிறார்கள். ஆனால் உண்மையில் அவர்கள் தேவனுக்கும் கீழ்ப்படியவில்லை அவருடைய பிரமாணத்திற்கும் கீழ்ப்படியவில்லை. அது மாத்திரமல்லாமல் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கும் கீழ்ப்படியவில்லை. அவர்கள் ஒன்றுக்கும் கீழ்ப்படியாத வணங்காக் கழுத்துள்ளவர்களாக இருக்கிறார்கள். தங்கள் இருதயத்திலும் செவிகளிலும் விருத்தசேதனம் பெறாதவர்களாக இருக்கிறார்கள்.

நித்திரையடைந்தான்
அப் 7 : 54-60

அப் 7:54. இவைகளை அவர்கள் கேட்டபொழுது, மூர்க்கமடைந்து, அவனைப் பார்த்துப் பல்லைக் கடித்தார்கள்.

அப் 7:55. அவன் பரிசுத்தஆவியினாலே நிறைந்தவனாய், வானத்தை அண்ணாந்து பார்த்து, தேவனுடைய மகிமையையும், தேவனுடைய வலதுபாரிசத்தில் இயேசுவானவர் நிற்கிறதைக் கண்டு:

அப் 7:56. அதோ வானங்கள் திறந்திருக்கிறதையும், மனுஷகுமாரன் தேவனுடைய வலதுபாரிசத்தில் நிற்கிறதையும் காண்கிறேன் என்றான்.

அப் 7:57. அப்பொழுது அவர்கள் உரத்தசத்தமாய்க் கூக்குரலிட்டுத் தங்கள் காதுகளை அடைத்துக் கொண்டு, ஒருமனப்பட்டு அவன்மேல் பாய்ந்து,

அப் 7:58. அவனை நகரத்துக்குப் புறம்பே தள்ளி, அவனைக் கல்லெறிந்தார்கள். சாட்சிக்காரர் தங்கள் வஸ்திரங்களைக் கழற்றி, சவுல் என்னப்பட்ட ஒரு வாலிபனுடைய பாதத்தினருகே வைத்தார்கள்.

அப் 7:59. அப்பொழுது: கர்த்தராகிய இயேசுவே, என் ஆவியை ஏற்றுக் கொள்ளும் என்று ஸ்தேவான் தொழுது கொள்கையில் அவனைக் கல்லெறிந்தார்கள்.

அப் 7:60. அவனோ, முழங்காற்படியிட்டு: ஆண்டவரே, இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான். இப்படிச் சொல்லி, நித்திரையடைந்தான்.

மூர்க்கமடைந்தார்கள்

இவைகளை அவர்கள் கேட்டபொழுது, மூர்க்கமடைந்து, அவனைப் பார்த்துப் பல்லைக் கடித்தார்கள் (அப் 7:54).

ஆதித்திருச்சபையில் ஸ்தேவான் முதலாவது இரத்தச் சாட்சியாக மரிக்கிறான். நரகம் இருளிலிருக்கிறது. பரலோகம் ஒளியிலிருக்கிறது. ஆலோசனைச் சங்கத்தார் ஸ்தேவானின் பேச்சுக்களையெல்லாம் கேட்ட போது மூர்க்கமடைந்து, அவனைப் பார்த்து பல்லைக் கடிக்கிறார்கள். ஸ்தேவானுக்கு எப்படிப்பட்ட தண்டனை கொடுக்க வேண்டுமென்று ஆலோசனைச்சங்கத்தார் வாக்கெடுப்பு நடத்தியதாக குறிப்பு எதுவுமில்லை. அதேவேளையில் அங்கு மிகுந்த குழப்பம் உண்டானதாகவும் எழுதப்படவில்லை. யூதர்கள் அவசரப்பட்டு ஸ்தேவானைக் கொலை பண்ணவில்லை. ஆலோசனைச் சங்கத்தாரின் பாரம்பரிய முறைமையின் பிரகாரமாகவே எல்லாம் நடைபெறுகிறது.

ஆலோசனைச் சங்கத்தின் அங்கத்தினர்களில் பெருவாரியானவர்கள் ஸ்தேவானை குற்றவாளியாகத் தீர்த்து, அவனை ஆக்கினைக்குட்படுத்துகிறார்கள். அவர்களுடைய முறைமையின் பிரகாரம் ஸ்தேவானை நகரத்திற்குப் புறம்பே தள்ளி, அங்கே அவனைக் கல்லெறிகிறார்கள். சாட்சிக்காரர்கள் ஸ்தேவான் மீது முதலாவதாக கல்லை எறிகிறார்கள்.

ஸ்தேவான் சொன்னவைகளைக் கேட்டபோது ஆலோசனைச் சங்கத்தார் மூர்க்க மடைகிறார்கள். எபிரெயர் 11:37-ஆவது வசனத்தில் "வாளால் அறுப்புண்டார்கள்" என்னும் வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதற்கான கிரேக்க வார்த்தையே "மூர்க்க மடைந்தார்கள்" என்னும் வாக்கியத்திற்கும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஆதித்திருச் சபையின் விசுவாசிகள் பலவிதமான உபத்திரவங்கள் வழியாக கடந்து வந்திருக்கிறார்கள். இரத்தச்சாட்சியாக மரித்தவர்கள் தங்கள் சரீரங்களில் வேதனைகளை அனுபவித்தது போல, ஏராளமான விசுவாசிகள் தங்களுடைய உள்ளத்திலும், சிந்தனையிலும், எண்ணத்திலும் பலவிதமான பாடுகளையும், வேதனைகளையும், உபத்திரவங்களையும் அனுபவித்தார்கள்.

விசுவாசிகளுக்கு உபத்திரவம் உண்டானபோது, அது இருதயத்தில் குத்தப்பட்ட சாதாரண வேதனையல்ல (அப் 2:37). அது இருதயம் அறுக்கப்பட்ட வேதனையைப் போன்றது. இருதயத்தை வாளால் அறுத்தால் எப்படிப்பட்ட வேதனை உண்டாகுமோ அப்படிப்பட்ட வேதனையை ஆதித்திருச்சபையின் விசுவாசிகள் அனுபவித்தார்கள்.

தேவனுக்கு விரோதமான பகை இருதயத்தை அறுக்கிறது. விசுவாசமும் அன்புமோ இருதயத்தைக் குணப்படுத்துகிறது. ஆரம்பத்தில் ஸ்தேவான் ஆலோசனைச்சங்கத்தாருக்கு முன்பாக நின்றபோது, "அவன் முகம் தேவதூதன் போலிருக்கக்கண்டார்கள்" (அப் 6:15). ஆனால் இப்போதோ, ஸ்தேவான் பேசி முடித்த பின்பு, அதே ஆலோசனைச்சங்கத்தார் மூர்க்கமடைந்து, அவனைப்பார்த்து பல்லைக்கடிக்கிறார்கள்.

ஸ்தேவான் தன் பக்கத்திலுள்ள நியாயத்தைத் தைரியமாக எடுத்துப் பேசுகிறான். பழைய ஏற்பாட்டுச் சம்பவங்களைத் தன்னுடைய விவாதத்திற்கு ஆதாரமாகச் சொல்லுகிறான். அவையெல்லாவற்றையும் கேட்டாலும் ஆலோசனைச்சங்கத்தார் சத்தியத்திற்குச் செவிகொடுத்து, அதற்குக் கீழ்ப்படியாமல், சத்தியத்திற்கு விரோதமாகச் சிந்திக்கிறார்கள். சத்தியத்திற்கு விரோதமாகவே செயல்படுகிறார்கள்.

ஆலோசனைச்சங்கத்தாரும் யூதரும் ஸ்தேவானைப் பார்த்து பல்லைக் கடிக்கிறார்கள். அவன்மீது உக்கிர கோபமாயிருக்கிறார்கள். வெறிநாய்கள் கோபத்தோடு பற்களைக் கடிப்பதுபோல, ஆலோசனைச்சங்கத்தாரும் ஸ்தேவானை ப்பார்த்து பற்களைக் கடிக்கிறார்கள். கர்த்தருடைய பரிசுத்த வான்களுக்கு விரோதமாக செயல்படுகிறவர்கள் மனுஷசுபாவத்திலிருந்து மிருக சுபாவத்திற்கு மாறிவிடுவார்கள்.

ஸ்தேவான் தேவனுடைய வல்லமையினால் பேசுகிறான். ஆலோசனைச் சங்கத்தார் ஸ்தேவானைப் பார்த்து பற்களைக் கடிக்கும்போது, அவர்கள் தேவனைப்பார்த்தே தங்கள் பற்களைக் கடிக்கிறார்கள். "பற்களைக் கடிப்பது" என்னும் வாக்கியம் அதியபயங்கரத்தையும், தாங்க முடியாத வேதனையையும் குறிக்கிற அடையாள வாக்கியமாகும். நரகத்தில் அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும். நரகத்திலிருக்கிறவர்கள் நரக வேதனையைத் தாங்க முடியாமல் தங்கள் பற்களைக் கடிப்பார்கள்.

ஆலோசனைச்சங்கத்தார் தேவனுக்கு விரோதமாகவும், தேவனுடைய பரிசுத்தவானுக்கு விரோதமாகவும் செயல்படுவதினால், அவர்கள் இப்பொழுதே தங்கள் பற்களைக் கடிக்க ஆரம்பித்துவிடுகிறார்கள். இவர்கள் மனந் திரும்பவில்லையென்றால், நரகத்திற்குள் தள்ளப்படுவார்கள். அங்கு அழுகையும் பற்கடிப்பும் நித்தியகாலமாய் உண்டாயிருக்கும்.

பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவனாய்

அவன் பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவனாய், வானத்தை அண்ணாந்து பார்த்து, தேவனுடைய மகிமையையும், தேவனுடைய வலதுபாரிசத்தில் இயேசுவானவர் நிற்கிறதைக் கண்டு: (அப் 7:55)

ஆலோசனைச் சங்கத்தார் மூர்க்க வெறி நிறைந்தவர்களாக இருக்கிறார்கள். ஸ்தேவானோ பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவனாய் இருக்கிறான். அவர்கள் ஸ்தேவானைப்பார்த்து தங்கள் பல்லைக் கடிக்கிறார்கள். ஆனால் ஸ்தேவானோ அவர்களைப் பார்க்கவில்லை. வானத்தை அண்ணார்ந்து பார்க்கிறான். அங்கு தேவனுடைய மகிமையையும், தேவனுடைய வலது பாரிசத்தில் இயேசுவானவர் நிற்கிறதையும் காண்கிறான்.

பரிசுத்த ஆவியானவரின் பெலன் ஸ்தேவான்மீது இறங்கியிருக்கிறது. ஆலோசனைச் சங்கத்தார் சாத்தானின் சுபாவத்தால் நிரம்பியிருக்கும் போது, ஸ்தேவானோ பரிசுத்த ஆவியினாலே நிறைந்திருக்கிறான். ஆதித்திருச்சபையில் விதவைகளின் அன்றாடகத் தேவைகளை விசாரிப்பதற்காக ஏழுபேரைத் தெரிந்தெடுத்தார்கள். அவர்களில் ஸ்தேவானும் ஒருவன் அவர்களெல்லோரும் விசுவாசமும் பரிசுத்த ஆவியும் நிறைந்தவர்களாக இருந்தார்கள் (அப் 6:5).

ஊழியத்திற்குத் தெரிந்தெடுக்கப்பட்ட போது ஸ்தேவான் பரிசுத்த ஆவியினால் நிறைந்தவனாக இருந்தான். இப்போது இரத்தச்சாட்சியாக மரிக்கப்போகிறான். இப்போதும் அவன் பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவனாகவே இருக்கிறான். ஸ்தேவானின் சுபாவம் மாறவில்லை. ஆவியானவரின் அநுக்கிரகம் அவனுக்குக் குறையவில்லை.

கர்த்தருடைய பிள்ளைகள் பரிசுத்த ஆவியினால் நிறைந்தவர்களாக இருக்க வேண்டும். இவர்களே தேவனுடைய ஊழியத்தைச் செய்வதற்குத் தகுதியான வர்களாக இருப்பார்கள். தேவனுக்காக ஊழியம் செய்வதற்கும், தேவனுக்காக பாடுகளை அனுபவிப்பதற்கும் பரிசுத்த ஆவியினால் நிறைந்திருக்கிறவர்கள் எப்போதுமே ஆயத்தமாக இருப்பார்கள். இவ்விரண்டையும் செய்வதற்கு இவர்களே தகுதியுடையவர்கள்.

இயேசு கிறிஸ்துவைப் பின் பற்றுகிறவர்கள் அடிக்கப்படும் ஆடுகளைப் போல எண்ணப்பட்டார்கள். இயேசு கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் அனுதினமும் கொல்லப்பட்டார்கள். ஆனாலும், இயேசு கிறிஸ்துவின் அன்பைவிட்டு இந்த உபத்திரவங்கள் கர்த்தருடைய பிள்ளைகளைப் பிரித்து விடவில்லை. பரிசுத்த வான்களும் உபத்திரவத்தினிமித்தம் கர்த்தர்மீது தாங்கள் வைத்திருக்கும் அன்பைக் குறைத்துக்கொள்ளவில்லை.

ஸ்தேவான் ஆலோசனைச் சங்கத்தாருக்கு முன்பாக நின்று கொண்டிருக்கும் போது கிறிஸ்துவின் கிருபை அவன்மீது பிரத்தியட்சமாக வெளிப்படுகிறது. ஆலோசனைச்சங்கத்தார் மூர்க்கமடைந்து அவனைப் பார்த்து பல்லைக் கடிக்கிறார்கள். ஆனால் ஸ்தேவானோ தேவனுடைய மகிமையைக் காண்கிறான். அவன் பரிசுத்த ஆவியினால் நிறைந்து வானத்தை அண்ணார்ந்து பார்க்கிறான். ஆலோசனைச் சங்கத்தாரின் அதிகாரத்தையும் கோபத்தையும் பார்ப்பதற்குப் பதிலாக, இவையெல்லாவற்றிற்கும் மேலாக கிரியை செய்கிற தேவனுடைய பிரசன்னத்தை நோக்கிப்பார்க்கிறான்.

ஆலோசனைச்சங்கத்தாரின் கண்கள் ஸ்தேவான்மீது பதிந்திருக்கிறது. மிகுந்த கோபத்தோடிருக்கிறார்கள். அவனை கோபத்தோடு பார்க்கிறார்கள். ஆனால் ஸ்தேவானோ அவர்களுடைய கோபத்தைப் பற்றிக் கவலைப்படவில்லை. அதில் அவனுக்கு அக்கரையுமில்லை. ஸ்தேவான் வானத்தை அண்ணார்ந்து பார்க்கிறான். வானத்திலிருந்தே அவனுக்கு ஒத்தாசை வரும். தனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக ஸ்தேவான் தன் கண்களை ஏறிட்டுப் பார்க்கிறான். பரலோகத்தின் பாதை அவனுக்குத் திறந்தே இருக்கிறது. ஆலோசனைச் சங்கத்தார் மூர்க்கமடைந்து அவனைப் பார்த்து பல்லைக்கடித்தாலும், அவன் வானத்தை அண்ணார்ந்து நோக்கிப் பார்ப்பதை அவர்களால் தடுக்க முடியவில்லை.

ஸ்தேவான் தன்னுடையபாடுகளையும் வேதனைகளையும் தேவனுடைய மகிமையின் பிரசன்னத்தில் சமர்ப்பிக்கிறான். ஆலோசனைச் சங்கத்தாரைப் பற்றியும், தன்மீது மூர்க்க வெறிகொண்டிருக்கும் யூதர்களைப்பற்றியும் ஸ்தேவான் தேவனிடத்தில் விண்ணப்பம் பண்ணுகிறான். தன்னைத் தானே ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க ஸ்தேவான் ஆயத்தமாயிருக்கிறான். தன்னுடைய கவனத்தையும், பார்வையையும் வேறுபக்கம் திருப்பாமல், ஸ்தேவான் தேவனுடைய மகிமை நிரம்பியிருக்கும் வானத்தையே நோக்கிப் பார்க்கிறான். வானங்கள் அவனுக்குத் திறந்திருக்கிறது.

ஸ்தேவான் தன்னுடைய ஆத்துமாவையும் தன் கண்களையும் தேவனுக்கு நேராக உயர்த்தி, தன்னுடைய நிலமையை அவரிடத்தில் பயபக்தியுடன் விண்ணப்பம்பண்ணுகிறான். இந்தச் சோதனை வழியாகவும், வேதனை வழியாகவும் தான் கடந்து செல்வதற்கு தனக்குத் தேவையான கிருபையையும் ஞானத்தையும் அருளுமாறு ஸ்தேவான் தேவனிடத்தில் விண்ணப்பம் பண்ணுகிறான்.

நாம் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் பாடுகளை அனுபவிக்கும் போது, தேவன் நம்மோடு கூடயிருப்பதாக வாக்குப் பண்ணியிருக்கிறார். கிறிஸ்துவுக்காக பாடுகளை அனுபவிக்கிறவர்கள் பாக்கியவான்கள். ஸ்தேவானுக்கு முன்பாக பல்லைக்கடிக்கும் ஆலோசனைச்சங்கத்தார் மூர்க்க வெறியோடிருக்கிறார்கள். ஆனாலும், ஸ்தேவானுக்கு மேலாக, தேவன் வானத்தில் தம்முடைய மகிமையிலிருக்கிறார். இந்த உலகத்தில் நமக்கு உபத்திரவங்கள் உண்டு. பரலோகத்தில் தேவனுடைய சமுகத்தில் நமக்கு ஆறுதலும் இளைப்பாறுதலும் உண்டு. இந்தப் பிரபஞ்சம் நமக்குப் பகையாக இருக்கலாம். ஆனால் பரலோகமோ நமக்குச் சிநேகமாயிருக்கிறது.

கர்த்தருடைய பரிசுத்தவான்கள் பாடுகளை அனுபவிக்கும்போது அவர்கள் எப்படி நடந்துகொள்ளவேண்டுமென்பதற்கு ஸ்தேவானின் சாட்சி ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறது. நமக்குப் பாடுகள் வரும்போதும், நாம் இரத்தச் சாட்சியாக மரிக்கவேண்டிய சூழ்நிலைகள் வரும்போதும், நாம் பரலோகத்தையே நோக்கிப் பார்க்கவேண்டும். அப்போதுதான் பவுலைப்போல "மரணமே உன் கூர் எங்கே" என்று நம்மாலும் சொல்லமுடியும்.

ஆலோசனைச் சங்கத்தாருக்கு முன்பாக ஸ்தேவான் நின்று கொண்டிருக்கும் போது அவன் பரிசுத்த ஆவியினால் நிறைந்தவனாக இருக்கிறான். பரிசுத்த ஆவியினால் நிறைந்திருக்கிறவர்கள் பரலோகத்தையே நோக்கிப் பார்த்துக்கொண்டிருப்பார்கள். ஏனெனில் அவர்களுடைய இருதயம் பரலோகத்திலிருக்கும். நாம் தேவனுடைய சத்தத்தை கேட்க வேண்டுமென்று விரும்பினால், நாம் பரலோகத்தையே நோக்கிப்பார்க்க வேண்டும். மனுஷரை நோக்கிப் பார்த்தால் மனுஷருடைய சத்தத்தைத்தான் கேட்கமுடியும்.

வானங்கள் திறந்திருக்கிறது

அதோ வானங்கள் திறந்திருக்கிறதையும், மனுஷகுமாரன் தேவனுடைய வலதுபாரிசத்தில் நிற்கிறதையும் காண்கிறேன் என்றான் (அப் 7:56).

ஸ்தேவான் வானத்தை அண்ணாந்து பார்த்து தேவனுடைய மகிமையைக் காண்கிறான். அத்துடன் வானங்கள் திறந்திருக்கிறதையும் காண்கிறான். பரலோகத்தில் நடைபெறும் சம்பவங்களைக் காண்பதற்கு ஸ்தேவானுக்குத் தெய்வீக சிலாக்கியம் கிடைத்திருக்கிறது. வானங்கள் திறந்திருக்கிறபடியினால், அதன் வழியாக பரலோகத்தின் சந்தோஷத்தை ஸ்தேவான் காண்கிறான்.

சரீரத்தில் மரணமடைந்தால்தான் பரலோகத்தில் பிரவேசிக்க முடியும். சரீர மரணம் வேதனையுள்ளதாக இருந்தாலும் பரலோகத்தின் சந்தோஷம் நித்தியமானது. ஸ்தேவான் திறந்திருக்கிற வானங்கள் வழியாக பரலோகத்தின் சந்தோஷத்தைப் பார்த்து, தன்னுடைய சரீர மரணத்தின் வழியாக சந்தோஷமாய் கடந்துசெல்ல ஆயத்தமாயிருக்கிறான்.

நாமும் இயேசுகிறிஸ்துவைக் குறித்து தியானிக்கும் போது, நம்முடைய விசுவாசத்தில் அவரையே நோக்கிப் பார்க்கவேண்டும். அப்போது பரலோகம் நமக்கும் திறக்கப்படும். நாமும் திறந்திருக்கிற வானங்கள் வழியாக மனுஷகுமாரன் தேவனுடைய வலது பாரிசத்திலிருப்பதை காணமுடியும். நம்மால் தேவனுடைய மகிமையையும் காணமுடியும். தேவனுடைய மகிமையைத் தரிசித்தவர்கள், கிறிஸ்துவுக்காகஎப்படிப்பட்ட பாடுகளையும் அனுபவிப்பதற்கு ஆயத்தமாகயிருப்பார்கள். எல்லா சூழ்நிலைகளிலும் மனரம்மியமாக இருக்கக் கற்றுக் கொள்வார்கள். மரணத்தின் பயங்கரங்களுக்கும், உபத்திரவத்தின் வேதனைகளுக்கும் பயப்பட மாட்டார்கள். ஏனெனில் இவர்களுடைய இருதயமும், சிந்தையும், ஆத்துமாவும் பரலோகத்தையும், அதிலுள்ள தேவனுடைய மகிமையையும் மாத்திரமே நோக்கிப் பார்த்துக்கொண்டிருக்கிறது.

ஸ்தேவான் வானத்தை அண்ணாந்து பார்த்தபோது, வானங்கள் திறந்திருக்கிறதை அவன் காண்கிறான். அதன் வழியாக அவன் பார்த்தபோது மனுஷ குமாரன் தேவனுடைய வலது பாரிசத்தில் நிற்கிறதையும் காண்கிறான். பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளும் தேவனுடைய மகிமையைத் தரிசித்தார்கள். தேவமகிமையைத் தரிசிப்பதற்கு தேவதூதர்கள் அவர்களுக்கு உதவி செய்தார்கள். பழைய ஏற்பாட்டுக் காலத்து தீர்க்க தரிசிகளினால், தேவதூதரின் ஒத்தாசையில்லாமல், தேவமகிமையைக் காணமுடியவில்லை. ஆனால் ஸ்தேவான் வானத்தை அண்ணார்ந்து பார்த்தபோதோ, அவன் தேவனுடைய மகிமையைக் காண்கிறான். தேவதூதர்கள் ஸ்தேவானுக்கு ஒத்தாசை பண்ணியதாக இங்கு எந்தக் குறிப்புமில்லை.

தேவனுடைய மகிமை இயேசு கிறிஸ்துவின் முகத்தில் பிரகாசமாக வெளிப்படுகிறது. இயேசு கிறிஸ்து வானத்திற்கு உயர்த்தப்பட்டதற்கு இந்தச் சம்பவமும் ஒரு சாட்சியாக இருக்கிறது. ஸ்தேவான் வானத்தை அண்ணார்ந்து பார்த்த போது, தேவனுடைய வலது பாரிசத்தில் இயேசு கிறிஸ்துவைக் காண்கிறான். தேவன் தம்முடைய வலதுகரத்தினால் நமக்கு எதைக் கொடுத்தாலும், தேவன் தம்முடைய வலது கரத்தினால் நம்மிடத்திலிருந்து எதைப் பெற்றுக் கொண்டாலும், அவர் தம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாகவே கொடுக்கிறார், பெற்றுக் கொள்கிறார். ஏனெனில் மனுஷகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவே தேவனுடைய வலது பாரிசத்தில் இருக்கிறார்.

ஸ்தேவான் வானத்தை அண்ணாந்து பார்த்தபோது, மனுஷ குமாரன் தேவனுடைய வலதுபாரிசத்தில் நிற்கிறதைக் காண்கிறான். ஸ்தேவானை ஏற்றுக் கொள்ளவும், அவனுக்குக் கிரீடத்தைச் சூட்டவும் இயேசுகிறிஸ்து ஆயத்தமாக எழுந்து நிற்கிறார். தனக்கு முன்பாக நியமிக்கப்பட்டிருக்கும் பரலோகத்தின் சந்தோஷத்தை அனுபவிப்பதற்கு ஸ்தேவானுக்கு ஒரு வாய்ப்பு உண்டாயிற்று. இயேசுகிறிஸ்து தன் பட்சமாக நிற்கிறதை ஸ்தேவான் காண்கிறான். ஆகையினால் அவனுக்கு விரோதமாக யார் நின்றாலும் அதைப்பற்றி அவன் கவலைப்படவில்லை. ஆலோசனைச் சங்கத்தார் மூர்க்கமடைந்து, அவனைப் பார்த்து பல்லைக்கடித்தாலும் ஸ்தேவான் பயப்படவில்லை.

இயேசுகிறிஸ்து இந்தப் பூமியில் பாடுகளை அனுபவித்தபோது தேவதூதன் ஒருவன் வந்து அவருக்குப் பணிவிடை செய்தான். ஸ்தேவான் பாடுகளை அனுபவிக்கிறபோதோ இயேசு கிறிஸ்துவே எழும்பி நின்று அவனை ஆறுதல் படுத்துகிறார். அவனுக்குத் தெய்வீக சமாதானத்தையும் சந்தோஷத்தையும் தருகிறார். தேவனுடைய வலதுபாரிசத்தில் இயேசுகிறிஸ்து இருப்பதை நாமும் விசுவாசத்தினால் தரிசிக்க வேண்டும். நம்முடைய இருதயத்தில் இந்தத் தரிசனம் நிரம்பியிருக்க வேண்டும். இதுவே கர்த்தருடைய பிள்ளைகளுக்கு மிகுந்த ஆறுதலைத் தரும்.

ஸ்தேவான் வானத்தை அண்ணாந்து பார்த்து, அங்கு தான் காண்பதை ஆலோசனைச்சங்கத்தாரிடம் கூறுகிறான். “அதோ வானங்கள் திறந்திருக்கிறதைக் காண்கிறேன்” என்று அவர்களிடத்தில் அறிவிக்கிறான். ஸ்தேவான் தன் கண்களால் கண்டதை அப்படியே அறிவிக்கிறான். பயப்படவில்லை. எதையும் மறைக்கவில்லை. தான் கண்ட சாட்சியினிமித்தம் ஆலோசனைச் சங்கத்தாரும் ஆசீர்வாதம் பெறவேண்டு மென்றும் விரும்புகிறான். தனக்கு கிடைத்த சந்தோஷம் அவர்களுக்கும் கிடைக்க வேண்டுமென்று எதிர் பார்க்கிறான். இந்தத் தரிசனத்தை அவர்களிடத்தில் சொன்னால், அவர்களும் இயேசு கிறிஸ்துவைத் தேவனுடைய குமாரனென்று விசுவாசிப்பார்கள் என்று எதிர்பார்த்து, தான் கண்ட தரிசனத்தை அவர்களுக்குச் சொல்லுகிறான்.

கூக்குரலிட்டு

அப்பொழுது அவர்கள் உரத்தசத்தமாய்க் கூக்குரலிட்டுத் தங்கள் காதுகளை அடைத்துக் கொண்டு, ஒருமனப்பட்டு அவன்மேல் பாய்ந்து, (அப் 7:57)

ஸ்தேவான் வானங்கள் திறந்திருக்கிறதையும், மனுஷகுமாரன் தேவனுடைய வலது பாரிசத்தில் நிற்கிறதையும் காண்கிறதாக ஆலோசனைச் சங்கத்தாரிடம் கூறுகிறான். அதைக்கேட்ட போது அவர்கள் உரத்தசத்தமாய்க் கூக்குரலிடுகிறார்கள். ஸ்தேவான் பேசுவதை அவர்கள் கேட்க விரும்பவில்லை. ஆகையினால் தங்கள் காதுகளை அடைத்துக்கொள்கிறார்கள். “வானங்கள் திறந்திருக்கிறது” என்று ஸ்தேவான் சொன்னவுடனேயே, ஆலோசனைச்சங்கத்தார் உரத்தசத்தமாய்க் கூக்குரலிட ஆரம்பித்து விடுகிறார்கள். இதனால் ஸ்தேவான் பேசுவது யாருக்கும் தெளிவாய்க் கேட்காது.

நாம் நீதிக்காகப் பேசும்போது நம்முடைய சத்தம் துன்மார்க்கரின் அநீதியான கூக்குரலினால் அடங்கிப் போய்விடுவதற்கு வாய்ப்புள்ளது. நாம் சத்திய வார்த்தைகளைப் பேசும்போது, பொய்யான வார்த்தைகளின் கூக்குரல் நம்முடைய சத்தத்தைவிட அதிகமாக இருப்பதற்கு வாய்ப்புள்ளது. பொய் பேசுவோரும், அநீதியான காரியங்களைப் பேசுவோரும், சாதுரிய வார்த்தைகளை ஆடம்பரமாகப் பேசுவார்கள். துன்மார்க்கர் தங்களுடைய உரத்த கூக்குரலினால் நீதியின்மீது ஜெயிக்க விரும்புவார்கள். நாம் சத்தியத்தை மெதுவாகப் பேசினாலும் உறுதியாகப் பேசவேண்டும். சத்தியமே ஜெயிக்கும். கர்த்தருடைய வார்த்தையே சத்தியம்.

ஸ்தேவான் வானங்கள் திறந்திருக்கிறதாகச் சொன்ன போது, ஆலோசனைச் சங்கத்தார் தங்கள் காதுகளை அடைத்துக் கொள்கிறார்கள். ஸ்தேவான் தேவதூஷணம் சொல்லுவதாகவும், அதைக் கேட்பதற்குத் தங்களுக்கு விருப்பமில்லை என்பதைக் காண்பிப்பதற்காகவும் அவர்கள் தங்கள் காதுகளை அடைத்துக்கொள்கிறார்கள். "மனுஷகுமாரன் தேவனுடைய வலது பாரிசத்தில் நிற்கிறார்" என்று ஸ்தேவான் சொல்லுவது அவர்களுக்குத் தூஷண வார்த்தைகளாக இருக்கிறது. தூஷண வார்த்தைகளைக் கேட்கக் கூடாது என்பதற்காகத் தங்கள் காதுகளை அடைத்துக்கொள்கிறார்கள்.

நியாயத்தை விசாரிக்குமாறு தேவன் ஆலோசனைச் சங்கத்தாரை நியமித்திருக்கிறார். ஆனால் அவர்களோ தங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தி நீதியை புறம்பே தள்ளிவிடுகிறார்கள். நீதியான வார்த்தைகளைக் கேட்கக் கூடாதவாறு தங்கள் காதுகளை அடைத்துக் கொள்கிறார்கள். நியாய விசாரணை செய்கிற ஆலோசனைச் சங்கத்தார் இருதரப்பு விவாதங்களையும் கவனமாகக் கேட்கவேண்டும். அவர்கள் செவி திறந்திருக்கவேண்டும். ஆனால் இவர்களோ ஸ்தேவானுடைய விவாதத்தைக் கேட்கக்கூடாது என்று தீர்மானித்து, தங்கள் காதுகளை அடைத்துக்கொள்கிறார்கள்.

ஸ்தேவானுடைய வார்த்தைகளைக் கேட்கக்கூடாது என்று தங்கள் காதுகளை அடைத்துக் கொள்ளுகிற ஆலோசனைச் சங்கத்தார், தேவனுடைய வார்த்தைகளையும் கேட்கக்கூடாது என்று தங்கள் காதுகளை அடைத்துக் கொள்கிறார்கள். தேவனுடைய சத்தத்திற்குச் செவிகொடுக்காதவர்களால் தெளிவாகச் சிந்திக்க முடியாது. அவர்கள் நீதியையும் சத்தியத்தையும் விரும்ப மாட்டார்கள். நீதியாக நியாயத்தீர்ப்பு செய்யமாட்டார்கள். ஆலோசனைச் சங்கத்தார் தங்கள் காதுகளை அடைத்துக் கொள்ளும் போது, தேவனுடைய வார்த்தைகளைக் கேட்கக்கூடா தவாறு அவர்களுடைய இருதயத்தையும் அடைத்துக் கொள்கிறார்கள்.

ஆலோசனைச்சங்கத்தார் எல்லோரும் ஒருமனப்பட்டு ஸ்தேவான் மேல் பாய்கிறார்கள். மிருகங்கள் இறையைப் பட்சிப்பதற்காக அதன்மீது பாய்வதுபோல இவர்கள் ஸ்தேவான்மீது பாய்கிறார்கள். ஸ்தேவான் ஆவியினால் நிறைந்து தெளிந்த சிந்தனையோடு பேசுகிறான். ஆலோசனைச்சங்கத்தார் எல்லோரும் ஒருமனப்பட்டு அவன்மீது பாய்வதினால், அவனைக் குழப்பத்திற்குட்படுத்தலாம் என்று நினைக்கிறார்கள். அமைதியான அவனுடைய ஆத்துமாவை பயமுறுத்த வேண்டுமென்பது ஆலோசனைச் சங்கத்தாரின் விருப்பம்.

சாத்தான் மனுஷருடைய ஆத்துமா ஆறுதலடைவதை விரும்பமாட்டான். ஆலோசனைச்சங்கத்தார் சாத்தானுக்கு ஊழியம் செய்கிறார்கள். ஸ்தேவான்மீது பாய்ந்து அவனுடைய ஆத்தும அமைதியையும், ஆறுதலையும் அழித்துப் போட வகைதேடுகிறார்கள். ஸ்தேவானை பேசவிடாமல் தடுப்பதற்குத் தங்களால் என்னென்ன காரியங்களையெல்லாம் செய்யமுடியுமோ, அவையெல்லாவற்றையும் ஆலோசனைச்சங்கத்தார் துணிகரமாகச் செய்கிறார்கள்.

கல்லெறிந்தார்கள்

அவனை நகரத்துக்குப் புறம்பே தள்ளி, அவனைக் கல்லெறிந்தார்கள். சாட்சிக்காரர் தங்கள் வஸ்திரங்களைக் கழற்றி, சவுல் என்னப்பட்ட ஒரு வாலிபனுடைய பாதத்தினருகே வைத்தார்கள் (அப் 7:58).

ஆலோசனைச் சங்கத்தார் ஒருமனப்பட்டு ஸ்தேவான்மீது பாய்ந்து, அவனை நகரத்திற்குப் புறம்பே தள்ளி, அவனைக் கல்லெறிகிறார்கள். மோசேயின் நியாயப் பிரமாணத்தில் சொல்லப்பட்டிருக்கிற தீர்ப்பை ஆலோசனைச் சங்கத்தார் நிறைவேற்றுகிறார்கள். "கர்த்தருடைய நாமத்தை நிந்திக்கிறவன் கொலை செய்யப்படவேண்டும்; சபையார் எல்லாரும் அவனைக் கல்லெறிய வேண்டும்; பரதேசியானாலும் சுதேசியானாலும் கர்த்தரின் நாமத்தைத் தூஷிக்கிறவன் கொலை செய்யப்பட வேண்டும்" (லேவி 24:16) என்று மோசேயின் பிரமாணம் சொல்லுகிறது.

ஆலோசனைச் சங்கத்தார் ஸ்தேவானை நகரத்திற்குப் புறம்பே தள்ளுகிறார்கள். எல்லா பிரச்சனைகளுக்கும் ஸ்தேவானே காரணமென்று அவன்மீது மூர்க்க மடைந்து, அவனை நகரத்திற்குப் புறம்பே இழுத்துக் கொண்டு போகிறார்கள். மோசேயின் பிரமாணத்தின்படி தேவதூஷணம் சொல்லுகிறவன்மீது கல்லெறிய வேண்டும். ஸ்தேவான் தேவதூஷணம் சொன்னான் என்பதற்கு யாரெல்லாம் சாட்சிகளாக இருக்கிறார்களோ, அவர்களே அவன்மீது முதலாவதாக கல்லெறிய வேண்டும். தங்களுடைய சாட்சி உண்மையானது என்பதை குற்றம் சுமத்தியவர்கள் நிரூபிக்க வேண்டும். குற்றம் சுமத்தப்பட்டவன்மீது கல்லெறிந்து, சாட்சிகள் தங்களுடைய வார்த்தைகளை நிரூபிக்கவேண்டும்.

ஸ்தேவானுக்கு விரோதமான சாட்சிக்காரர் தங்கள் வஸ்திரங்களைக் கழற்றி சவுல் என்னப்பட்ட ஒரு வாலிபனுடைய பாதத்தினருகே வைக்கிறார்கள். வேதாகமத்தில் பவுலைப் பற்றிய குறிப்பு இந்த வசனத்தில்தான் முதன்முதலாக எழுதப்பட்டிருக்கிறது. சவுல் என்னும் இவனுடைய பெயர் பின்பு பவுல் என்று மாற்றப்படுகிறது. ஸ்தேவானின் மரணத்திற்கு சவுலும் உடந்தையாக இருக்கிறான். அப்போஸ்தலர் பவுல் பிற்காலத்தில் இந்தச் சம்பவத்தை வருத்தத்தோடு இவ்வாறு நினைவு கூருகிறான். "உம்முடைய சாட்சியாகிய ஸ்தேவானுடைய இரத்தம் சிந்தப்படுகிற போது, நானும் அருகே நின்று, அவனைக் கொலை செய்வதற்குச் சம்மதித்து, அவனைக் கொலை செய்தவர்களின் வஸ்திரங்களைக் காத்துக் கொண்டிருந்ததையும், இவர்கள் அறிந்திருக்கிறார்களே" (அப் 22:20).

தொழுதுகொள்ளுகையில்

அப்பொழுது: கர்த்தராகிய இயேசுவே, என் ஆவியை ஏற்றுக் கொள்ளும் என்று ஸ்தேவான் தொழுது கொள்கையில் அவனைக் கல்லெறிந்தார்கள் (அப் 7:59).

ஸ்தேவான் இயேசுகிறிஸ்துவைப் பயபக்தியோடு நோக்கிப்பார்க்கிறான். "என் ஆவியை ஏற்றுக்கொள்ளும்" என்று ஸ்தேவான் இயேசு கிறிஸ்துவிடம் தொழுது கொள்கிறான். அப்பொழுது யூதர்கள் அவனைக் கல்லெறிகிறார்கள். அவன் தேவனிடத்தில் விண்ணப்பம் பண்ணுகிறபோதுகூட, யூதர்கள் அவன் மீது தொடர்ந்து கல்லெறிகிறார்கள். ஸ்தேவானைப்போல நமக்கும் பாடுகள் வரலாம். வேதனைகள் உண்டாகலாம். நம்மை நியாயமில்லாமல் அநியாயமாகத் துன்புறுத்தும் போது நாம் பாக்கியவான்களாக இருப்போம். நம்மை அநீதியாக விரோதிக்கும் போது கர்த்தருடைய ஆறுதல் நமக்குக் கிடைக்கும் நம்மோடு கூடயிருக்கிற தேவன் நமக்கு இருக்கிறார்.

ஸ்தேவான் ஆலோசனைச் சங்கத்தாரிடம் பேசியபோது அவர்கள் தங்கள் காதுகளை அடைத்துக் கொண்டார்கள். அதே ஸ்தேவான் தேவனிடத்தில் பேசியபோதோ, அவர் தமது காதுகளை அடைத்துக்கொள்ளவில்லை. அவனுடைய விண்ணப்பத்திற்குச் செவிகொடுக்கிறார். ஸ்தேவானை நகரத்திற்குப் புறம்பே தள்ளிவிட்டார்கள். ஆனால் தேவனுடைய சமுகத்திலிருந்து அவர்களால் அவனை தள்ளமுடியவில்லை.

ஸ்தேவான் இப்பிரபஞ்சத்திலிருந்து புறப்பட்டுப் போவதற்கு ஆயத்தமாகயிருக்கிறான். இங்கிருந்து போகும்போது தன்னுடைய ஆவி எங்கே போகும் என்பது அவனுக்குத் தெரியும். ஆகையினால் “கர்த்தராகிய இயேசுவே என் ஆவியை ஏற்றுக்கொள்ளும்” என்று விண்ணப்பம் பண்ணுகிறான். நாம் ஜெபித்துக் கொண்டிருக்கும் போதே மரிப்போமென்றால், அது நமக்கு மிகுந்த ஆசீர்வாதமாக இருக்கும்.

ஸ்தேவான் மரித்துக் கொண்டிருக்கும் போது தேவனிடத்தில் இரண்டு விண்ணப்பங்களை ஏறெடுக்கிறான். அவையாவன: 1. என் ஆவியை ஏற்றுக்கொள்ளும் 2. இவர்கள் மேல் இந்தப் பாவத்தை சுமத்தாதிரும்.

ஸ்தேவான் முதலாவது ஜெபத்தைத் தனக்காகவே ஏறெடுக்கிறான். “கர்த்தராகிய இயேசுவே என் ஆவியை ஏற்றுக்கொள்ளும்” என்று தனக்காகவே ஜெபிக்கிறான். ஸ்தேவானின் விண்ணப்பத்தை இயேசு கிறிஸ்து அங்கீகரித்து, அவனுடைய ஆவியை பிதாவின் கரங்களில் ஒப்புக் கொடுக்கிறார். நம்முடைய ஜீவனைவிட்டு நாம் பிரியும்போது, நம்முடைய ஆவியை மத்தியஸ்தராகிய இயேசு கிறிஸ்துவின் கரங்களில் பயபக்தியோடு ஒப்புக்கொடுக்க வேண்டும்.

மனுஷனுக்கு அவனுடைய ஆத்துமா மிகவும் முக்கியமானது. ஆகையினால் நம்முடைய ஆத்துமாவைக் குறித்து நாம் மிகுந்த கவனத்தோடிருக்க வேண்டும். நாம் உயிரோடிருந்தாலும், மரித்தாலும் நம்முடைய ஆத்துமாவைக் குறித்த கரிசனை நமக்குள்ளிருக்கவேண்டும். ஸ்தேவான் மரிக்கும்போது, அவனுடைய ஆவியை இயேசுகிறிஸ்துவின் கரங்களில் மிகவும் பாதுகாப்பாக ஒப்புக் கொடுக்கிறான். இயேசு கிறிஸ்துவே நம்முடைய ஆத்துமாவிற்கு மெய்யான பாதுகாப்பைத் தருகிறவர்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே நம்முடைய தேவனாகயிருக்கிறார். எல்லா வேளைகளிலும், எல்லாவற்றிற்காகவும் நாம் அவரையே நோக்கிப் பார்க்கிறோம். இயேசுகிறிஸ்துவே நம்முடைய ஆறுதலாக இருக்கிறார். நாம் ஜீவனோடிருந்தாலும் மரித்தாலும் இயேசுகிறிஸ்துவில் மாத்திரமே நமக்கு ஆறுதல் உள்ளது. ஸ்தேவான் இயேசு கிறிஸ்துவிடம் இங்கு ஜெபிப்பதுபோல, நாமும் அவரிடத்தில் ஜெபிக்கவேண்டும்.

பரலோகத்தில் இயேசு கிறிஸ்து மாத்திரமே நமக்கு ஏற்கெனவே அறிமுகமானவராக இருக்கிறார். இயேசு கிறிஸ்து அல்லாமல் நமக்குப் பரலோகமில்லை. அவர்தாமே நம்மை பரலோகத்தில் ஏற்றுக்கொள்ள வேண்டும். நாம் மரிக்கும் தருவாயில் இயேசுகிறிஸ்து நம்முடைய ஆத்துமாவை ஏற்றுக் கொள்வார் என்னும் விசுவாசம் நமக்குள் உறுதியாயிருக்க வேண்டும். இந்த விசுவாசத்தை நாம் பற்றிக்கொண்டால், நாம் மரிக்கும்போது நமது ஆத்துமாவிற்கு சமாதானம் உண்டாகும்.

நாம் மரிக்கும்போது இயேசுகிறிஸ்து நம்முடைய ஆத்துமாவை ஏற்றுக் கொள்வார் என்பதே நமக்கிருக்கிற மிகப்பெரிய ஆறுதல். நாம் இந்தப் பிரபஞ்சத்தில் ஜீவனோடிருக்கும்போது இயேசு கிறிஸ்துவே நமக்கு ஆதரவாகயிருக்கிறார். இப்பிரபஞ்சத்தில் மாத்திரமல்ல, நாம் மரித்தபின்பு நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே நம்மை பரலோகத்திற்கு அழைத்துச்சென்று, அங்கு நம்மை ஏற்றுக்கொள்கிறார்.

பாவத்தைச் சுமத்தாதிரும்

அவனோ, முழங்காற்படியிட்டு: ஆண்டவரே, இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான். இப்படிச்சொல்லி, நித்திரையடைந்தான் (அப் 7:60).

ஸ்தேவான் இயேசு கிறிஸ்துவிடம் தனக்காக ஜெபம்பண்ணி விட்டு, அதன்பின்பு தன்னை உபத்திரவப் படுத்துகிறவர்களாக ஜெபம்பண்ணுகிறான். அவர்களுக்காக ஜெபம்பண்ணும் போது முழங்காற் படியிட்டு ஜெபிக்கிறான். முழங்கால்படியிடுவது தேவனுக்கு முன்பாக நம்மைத் தாழ்த்துவதற்கு அடையாளம். ஸ்தேவான் ஜெபிக்கும்போது மிகுந்த சத்தமிட்டு ஜெபிக்கிறான். எப்படியாவது கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, தன்மீது கல்லெறிகிறவர்களின் பாவத்தை மன்னிக்க வேண்டுமென்றும், அந்தப் பாவத்தை அவர்கள் மீது சுமத்தாதிருக்க வேண்டுமென்றும் ஸ்தேவான் கெஞ்சி மன்றாடுகிறான்.

ஸ்தேவான் அவனுடைய சத்துருக்களுக்காக ஜெபிக்கிறான். இயேசு கிறிஸ்துவின் உபதேசத்திற்கு விரோதமாக யூதமார்க்கத்தார் எழும்பியிருக்கிறார்கள். அவர்களுக்கு மத்தியில் ஸ்தேவான் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைத் தைரியமாய்ப் பேசுகிறான். சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதோடு, அதற்குச் சாட்சியாக அதன்பிரகாரம் ஜீவிக்கிறான். நம்முடைய சத்துருக்களை நாம் மன்னிக்கவேண்டும் என்று இயேசு கிறிஸ்து நமக்குக் கட்டளையிட்டிருக்கிறார். அந்தக் கட்டளையின் பிரகாரமாக "ஆண்டவரே இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும்" என்று தன்னைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காக ஸ்தேவான் ஜெபிக்கிறான்.

ஸ்தேவான் இயேசு கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிறவன். இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவையில் தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்த போது, தம்மைத் துன்பப்படுத்தியவர் களுக்காகப் பிதாவினிடத்தில் ஜெபம்பண்ணினார். இயேசு கிறிஸ்து ஜெபித்தது போலவே ஸ்தேவானும் ஜெபிக்கிறான். தன்னைத் துன்பப் படுத்தியவர்களுக்காக ஜெபிக்கிறான். கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நாமும், நம்மைத் துன்பப் படுத்துகிறவர்களுக்காக அப்படியே ஜெபிக்க வேண்டும். அவர்களை நாம் மன்னிக்கவேண்டும். கர்த்தரும் அவர்களை மன்னிக்க வேண்டுமென்று நாம் ஜெபிக்கவேண்டும்.

ஸ்தேவானின் ஜெபம் யூதர்கள் மத்தியில் பிரசங்கமாக இருக்கிறது. ஸ்தேவான் தன்மீது கல்லெறிகிறவர் களுக்காக ஜெபிக்கிறான். அவர்கள் மெய்யாகவே தேவனுக்கும், தேவனுடைய பரிசுத்தவானுக்கும் விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். ஸ்தேவான் அவர்களுக்கு நற்செய்தியை அறிவித்தான். ஆனால் அவர்களோ அவனைக் கல்லெறிகிறார்கள்.

இப்படிப்பட்டவர்களை மன்னிப்பது சற்று கடினம்தான். ஆனால் ஸ்தேவானோ ஆவியினால் நிரம்பியிருக்கிறான். ஆவியானவரே அவனை வழிநடத்துகிறார். ஆகையினால் அவனைக் கல்லெறிகிறவர்களை அவனால் மன்னிக்க முடிகிறது. தேவனும் அவர்களை மன்னிக்கவேண்டுமென்று அவர்களுக்காக ஜெபிக்க முடிகிறது.

யூதர்கள் ஸ்தேவான்மீது கல்லெறிந்து துணிகரமான பாவத்தைச் செய்கிறார்கள். ஆனால் அவர்களோ தாங்கள் செய்த பாவத்திற்காக மனம் வருந்தவில்லை. தாங்கள் செய்தது பாவம் என்னும் குற்றவுணர்வுகூட அவர்களிடத்தில் காணப்படவில்லை. மோசேயின் பிரமாணத்தின் பிரகாரம், தாங்கள் நீதியாய் நடந்து, ஸ்தேவான்மீது கல்லெறிவதாக நினைக்கிறார்கள். தாங்கள் செய்த பாவத்திற்காக யூதர்கள் மெய்யாகவே மனந்திருந்தியிருப்பார்க ளென்றால், இயேசுகிறிஸ்து மெய்யாகவே அவர்களை மன்னித்திருப்பார். ஏனெனில் இரட்சிக்கக் கூடாத படிக்கு இயேசு கிறிஸ்துவின் கரம் ஒருபோதும் குறுகிப்போகவில்லை.

BELLWETHER INTERNATIONAL

அப்போஸ்தலர் - விரிவுரை
THE ACTS - COMMENTARY

GOOD NEWS PUBLISHERS

ஸ்தேவான் முழங்காற்படியிட்டு "ஆண்டவரே இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும்" என்று சத்தமிட்டுச் சொல்லி நித்திரையடைகிறான். ஸ்தேவான் மரணமடைகிறான். பரிசுத்தவான்களின் மரணம் அவர்களுக்கு நித்திரையைப் போலிருக்கிறது. ஸ்தேவானுக்கு உடனடியாக மரணமுண்டாயிற்று. அவன்மீது அநேகர் கல்லெறிவதினால் அவன் சீக்கிரத்தில் மரித்துப்போகிறான். அவன் மரிக்கும்போது அவனுடைய ஆத்துமா நித்திரையடைகிறது.

தன்னை உபத்திரவப் படுத்துகிறவர்களுக்காக ஸ்தேவான் ஜெபம்பண்ணுகிற போது, அவன் நித்திரையடைகிறான். தன்மீது கல்லெறிகிறவர்களுக்காக ஸ்தேவான் ஜெபம்பண்ணியிருக்க வில்லையென்றால், அவனுடைய ஆத்துமாவிற்கும் மனதிற்கும் ஆறுதல் உண்டாயிருக்காது. அவனுக்குள் சமாதானம் இருந்திருக்காது. இப்போதோ "இவர்கள்மேல் இந்தப் பாவத்தை சுமத்தாதிரும்" என்று இயேசுகிறிஸ்துவிடம் ஜெபித்திருக்கிறான். ஸ்தேவானுடைய மனதில் ஆறுதலும் சமாதாமுண்டாயிற்று. ஆகையினால் அமைதியாக நித்திரையடைகிறான்.

உயிர்த்தெழுதலின் நாளில் ஸ்தேவான் இந்த நித்திரையிலிருந்து மறுபடியும் எழுந்திருப்பான். அந்த நாளைக் காணும் வாஞ்சையில் ஸ்தேவான் நித்திரையடைகிறான்.

8 அதிகாரம்

யூதர்கள் இயேசு கிறிஸ்துவின் சீஷர்களை துன்பப்படுத்துகிறார்கள். துன்பத்தினால் சீஷர்கள் சோர்ந்து போய்விடவில்லை. எவ்வளவு அதிகமாய் சீஷர்கள் துன்பப்படுத்தப்படுகிறார்களோ, அவ்வளவு அதிகமாய் சீஷர்களுடைய எண்ணிக்கை பெருகிற்று. எருசலேமிலுள்ள சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று (அப் 8:1-3).

ஆதித்திருச்சபை விஸ்தாரகமாகப் பரவுகிறது. சமாரியா தேசத்தில் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது (அப் 8:4,5). சமாரியாவில் ஏராளமானோர் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்கிறார்கள். சுவிசேஷத்தினால் சமாரியாவிலுள்ள பட்டணத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று (அப் 8:6-8).

சீமோன் என்று பெயர்கொண்ட ஒரு மாயவித்தைக்காரன் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றுக் கொள்கிறான் (அப் 8:9-13). சமாரியாவில் விசுவாசிகளான பலர் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்கிறார்கள் (அப் 8:14-17). சீமோன் என்று பெயர் கொண்ட மாயவித்தைக்காரனைப் பேதுரு கடிந்துகொள்கிறான் (அப் 8:18-25).

எத்தியோப்பியா தேசத்திற்கு சுவிசேஷம் எடுத்துச் செல்லப்படுகிறது. எத்தியோப்பியருடைய ராஜஸ்திரீயின் மந்திரி எருசலேமிலிருந்து எத்தியோப்பியாவிற்குத் திரும்பிப் போகிறான் (அப் 8:26-28). எத்தியோப்பிய மந்திரிக்கு சுவிசேஷத்தை எடுத்துச் சொல்ல பரிசுத்த ஆவியானவர் பிலிப்புவை அவனிடத்திற்கு அனுப்புகிறார். மந்திரியின் ரதத்தில் ஏறி, பிலிப்பு அவனுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கிறான் (அப் 8:29-35). பிலிப்பு எத்தியோப்பி மந்திரிக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறான் (அப் 8:36-38). அதன் பின்பு இருவரும் பிரிந்து செல்கிறார்கள் (அப் 8:39,40).

சிதறிப்போனார்கள்
அப் 8 : 1-3

அப் 8:1. அவனைக் கொலை செய்கிதற்குச் சவுலும் சம்மதித்திருந்தான். அக்காலத்திலே எருசலேமிலுள்ள சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று. அப்போஸ்தலர் தவிர, மற்ற யாவரும் யூதேயா சமாரியா தேசங்களில் சிதறப்பட்டுப் போனார்கள்.

அப் 8:2. தேவபக்தியுள்ள மனுஷர் ஸ்தேவானை எடுத்து அடக்கம்பண்ணி, அவனுக்காக மிகவும் துக்கங் கொண்டாடினார்கள்.

அப் 8:3. சவுல் வீடுகள்தோறும் நுழைந்து, புருஷரையும் ஸ்திரீகளையும் இழுத்துக் கொண்டு போய், காவலில் போடுவித்து, சபையைப் பாழாக்கிக்கொண்டிருந்தான்.

சபைக்கு துன்பம் உண்டாயிற்று

அவனைக் கொலைசெய்கிதற்குச் சவுலும் சம்மதித்திருந்தான். அக்காலத்திலே எருசலேமிலுள்ள சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று. அப்போஸ்தலர்தவிர, மற்ற யாவரும் யூதேயா சமாரியா தேசங்களில் சிதறப்பட்டுப் போனார்கள். தேவபக்தியுள்ள மனுஷர் ஸ்தேவானை எடுத்து அடக்கம்பண்ணி, அவனுக்காக மிகவும் துக்கங் கொண்டாடினார்கள் (அப் 8:1,2).

ஆலோசனைச் சங்கத்தார் ஸ்தேவானைக் கல்லெறிந்து கொல்கிறார்கள். ஸ்தேவான் முழங்காற் படியிட்டு கர்த்தரை நோக்கி ஜெபம்பண்ணி நித்திரையடைகிறான். ஸ்தேவான் மரித்துப் போனதினால் ஒரு சிலர் சந்தோஷமாக இருக்கிறார்கள். ஆனால் இயேசு கிறிஸ்துவின் விசுவாசிகளோ அவனுக்காகத் துக்கங் கொண்டாடுகிறார்கள். ஸ்தேவானுடைய மரணத்தினால் சவுல் என்பவன் அதிகமாய்ச் சந்தோஷப்படுகிறான். இவனுடைய பெயர் பின்பு பவுல் என்று அழைக்கப்படுகிறது. ஸ்தேவானைக் கொலை செய்கிறதற்கு சவுலும் சம்மதித்திருந்தான்.

லூக்கா அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தை எழுதினபோது, இந்தச் சம்பவத்தை எழுதுமாறு பவுல் அவனுக்குச் சொல்லியிருக்க வேண்டும். பிற்காலத்தில் பவுல் இயேசு கிறிஸ்துவுக்காக வல்லமையாக ஊழியம் செய்தான். ஆனாலும் ஆரம்பகாலத்தில் அவன் கர்த்தருடைய பிள்ளைகளை அதிகமாய்த் துன்பப்படுத்தினான். தன்னை பெரிய அப்போஸ்தலனென்று ஜனங்கள் சொன்னாலும், ஒரு காலத்தில் தான் விசுவாசிகளைத் துன்பப்படுத்தியதற்காக வேதனைப்படுகிறான். மற்றவர்கள் தன்னை மேன்மைப்படுத்தினாலும், பவுலோ தன்னைத் தானே வெட்கத்திற்குட் படுத்துகிறான். தேவனுடைய கிருபையினால் மாத்திரமே தான் இப்போது கர்த்தருக்காக ஊழியம் செய்வதை அங்கீகாரம் பண்ணுகிறான்.

ஸ்தேவானுடைய மரணத்தினால் பலருக்குத் துக்கமுண்டாயிற்று. அவர்களெல்லோருமே தேவபக்தியுள்ள மனுஷர். எருசலேமிலுள்ள திருச்சபையை யூதர்கள் துன்பப்படுத்துகிறார்கள். திருச்சபை நசுக்கப்படுகிறது. இவற்றிற்கு மத்தியிலும் தேவபக்தியுள்ள மனுஷர் மீதியாக வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் தாங்கள் இருக்குமிடத்தில் கர்த்தரைப் பயபக்தியோடு துதிக்கிறார்கள். ஸ்தேவானின் மரணத்தைக் கேட்டு இவர்கள் மிகுந்த துக்கப்படுகிறார்கள். ஸ்தேவானுக்காக மிகவும் துக்கங் கொண்டாடுகிறார்கள். ஸ்தேவானுடைய சரீரத்தை எடுத்து அடக்கம் பண்ணுகிறார்கள்.

கர்த்தருக்காக ஊழியம் செய்கிறவர்கள் மரித்துப்போகும் போது மற்ற விசுவாசிகளுக்கு மிகவும் துக்கமாகயிருக்கும். பரிசுத்தவான்களின் மரணம் மற்ற விசுவாசிகளின் இருதயத்தில் மிகுந்த பாரமாகயிருக்கும். அவர்களுக்காகத் துக்கப்படுவார்கள். ஸ்தேவானின் மரணத்தினால் தேவபக்தியுள்ள மனுஷன் துக்கங் கொண்டாடுகிறார்கள். ஆனால் இவர்கள் ஆலோசனைச்சங்கத்தாரைக்கண்டு பயப்படவில்லை.

தேவபக்தியுள்ள மனுஷர் ஸ்தேவானின் சரீரத்தை எடுத்து அடக்கம் பண்ணுகிறார்கள். ஸ்தேவான் கல்லெறிந்து கொல்லப்பட்டதற்காகவோ, இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை அவன் பிரசங்கித்ததற்காகவோ தேவபக்தியுள்ள மனுஷர் யாரும் வெட்கப்படவில்லை. ஸ்தேவானை அடக்கம்பண்ணினால் ஆலோசனைச் சங்கத்தார் தங்கள்மீதும் கோபமாகயிருப்பார்களென்று பயப்பட வில்லை. கர்த்தருடைய பிள்ளைகள் சத்துருக்களைக் கண்டு பயப்படக்கூடாது.

இயேசு கிறிஸ்துவின் உண்மையுள்ள ஊழியக்காரனுக்கு தேவபக்தியுள்ள மனுஷர் மதிப்பும் மரியாதையும் கொடுத்து, அவனுடைய சரீரத்தை கண்ணியமாக அடக்கம் பண்ணுகிறார்கள். இயேசு கிறிஸ்து ஸ்தேவானைக் கனப்படுத்துகிறார். தேவபக்தியுள்ள மனுஷர்கள் ஸ்தேவானைக் கனப்படுத்தி, தேவனை மகிமைப்படுத்துகிறார்கள்.

ஸ்தேவான் மரித்த பின்பு, அக்காலத்திலே எருசலேமிலுள்ள சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று. ஸ்தேவான் மரிக்கும்போது வானத்தை அண்ணாந்து பார்த்து முழங்காற்படியிட்டு ஜெபிக்கிறான். "ஆண்டவரே இவர்கள்மேல் இந்தப் பாவத்தை சுமத்தாதிரும்" என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான். அவனுடைய வார்த்தைகள் கல்லான இருதயத்தையும் கரைய வைத்திருக்க வேண்டும். அவனுடைய மரணத்தைக் கண்டு ஆலோசனைச் சங்கத்தார் மன திரங்கியிருக்க வேண்டும். மனமாற்ற மடைந்திருக்க வேண்டும். இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அங்கீகரித்திருக்க வேண்டும். ஆனால் அப்படிப்பட்ட சம்பவம் எதுவும் அங்கு நடைபெறவில்லை.

ஆலோசனைச் சங்கத்தாரும், யூதர்களும் மனந்திரும்பி இயேசு கிறிஸ்துவைத் தங்கள் இருதயத்தில் ஏற்றுக் கொள்வதற்குப் பதிலாக, இயேசுவுக்கும், அவருடைய சுவிசேஷத்திற்கும் இன்னும் அதிகமாக எதிர்த்து நிற்கிறார்கள். இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களை அதிகமாய்த் துன்பப்படுத்துகிறார்கள். விசுவாசிகளைத் துன்பப்படுத்தினால் அவர்கள் தங்கள் விசுவாசத்தை விட்டு விடுவார்கள் என்று தவறாக நினைக்கிறார்கள். சபையைத் துன்பப்படுத்தினால் அவர்கள் இயேசு கிறிஸ்துவை ஆராதனைசெய்ய ஒன்று கூடமாட்டார்கள் என்று நினைக்கிறார்கள். ஆலோசனைச் சங்கத்தார் தேவனுக்கு விரோதமாகக் கிரியை செய்ததினால், எருசலேமிலுள்ள சபைக்கு மிகுந்த துன்பமுண்டாயிற்று. தேவனுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறார்கள்.

யூதமார்க்கத்திற்கு எருசலேம் நகரமே தலைநகரமாக விளங்கிற்று. இங்கு தான் யூதருடைய தேவாலயம் கட்டப்பட்டிருக்கிறது. யூதருடைய ஆலோசனைச்சங்கத்தார் எருசலேமில்தான் கூடுகிறார்கள். ஆனால் இங்குள்ள யூதர்கள் தேவபக்தியுள்ள மனுஷராகயில்லை. தேவனுக்கும், அவருடைய ஊழியக்காரருக்கும் விரோதமாகக் கிரியை செய்கிறார்கள். தேவன் அனுப்பிய தீர்க்கதரிசிகளில் அநேகரை இவர்கள் கல்லெறிந்து கொன்று போட்டார்கள். எருசலேம் எப்படிப்பட்ட நகரமாக இருக்குமென்று இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடம் ஏற்கெனவே முன்னறிவித்து எச்சரித்திருக்கிறார்.

சவுல் விசுவாசிகளைத் துன்பப்படுத்துகிறான். இதனால் விசுவாசிகள் மத்தியில் மிகுந்த பாதிப்பு உண்டாயிற்று. அப்போஸ்தலர் தவிர மற்ற விசுவாசிகள் யாவரும், யூதேயா சமாரியா தேசங்களில் சிதறப்பட்டுப்போனார்கள். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு உபதேசம்பண்ணிய போது, "ஒரு பட்டணத்தில் உங்களைத் துன்பப்படுத்தினால் மறுபட்டணத்திற்கு ஓடிப் போங்கள்" என்று சொல்லியிருக்கிறார். சீஷர்கள் இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளை நினைவு கூருகிறார்கள். எருசலேமில் இவர்களுக்கு மிகுந்த துன்பமுண்டாயிற்று. ஆகையினால் சீஷர்கள் யூதேயா சமாரியா தேசங்களில் சிதறிப்போகிறார்கள்.

இயேசு கிறிஸ்துவின் ஊழியம் எருசலேமில் சிறப்பாக நடை பெற்றிருக்கிறது. எருசலேமில் ஏராளமானோர் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறார்கள். அநேகர் இயேசு கிறிஸ்துவின் சீஷராகயிருக்கிறார்கள். இதுவரையிலும் எருசலேமில் ஊழியம் செய்தவர்கள், இனிமேல் மற்ற இடங்களிலும் ஊழியம் செய்ய வேண்டிய தன் அவசியத்தை சிந்தித்துப் பார்க்கிறார்கள்.

நம்முடைய ஊழியத்தில் நமக்கு உபத்திரவம் வரும்போது நம்முடைய ஊழிய ஸ்தலத்தை மாற்றலாம். ஆனால் ஊழியத்தை நிறுத்திவிடக்கூடாது. ஒரு ஸ்தலத்தில் ஊழியம் செய்ய முடியவில்லையென்றால், அதே ஊழியத்தை வேறு ஸ்தலத்தில் செய்யவேண்டும். எருசலேமிலுள்ள சபைக்குத் துன்பம் உண்டானபோது, அப்போஸ்தலர் தவிர மற்ற பிரசங்கியார் எல்லோரும் சிதறப்பட்டுப்போனார்கள்.

அப்போஸ்தலர்கள் எருசலேமிலேயே தங்கியிருக்க தீர்மானிக்கிறார்கள். மற்ற பிரசங்கியார்கள் மற்ற இடங்களில் ஊழியம் செய்யும்போது, எங்கு உதவி தேவைப்படுகிறதோ, அங்கு போய் அவர்களுக்கு உதவி செய்ய அப்போஸ் தலர்கள் ஆயத்தமாயிருக்கிறார்கள். எருசலேமில் அதிக துன்பம் உண்டானாலும் இயேசு கிறிஸ்துவின் கிருபையினால் துன்பத்தையெல்லாம் சகித்துக் கொள்கிறார்கள். மற்ற பிரசங்கியார்கள் மற்ற இடங்களில் ஊழியம் செய்யும்போது, அவர்களுக்கு கடினமான சூழ்நிலைகள் ஏற்பட்டால், அவற்றிற்கு மத்தியில் அவர்களுக்கு உதவிபுரிய அப்போஸ்தலர்கள் ஆயத்தமாயிருக்கிறார்கள்.

சவுல்

சவுல் வீடுகள்தோறும் நுழைந்து, புருஷரையும் ஸ்திரீகளையும் இழுத்துக் கொண்டுபோய், காவலில் போடுவித்து, சபையைப் பாழாக்கிக்கொண்டிருந்தான் (அப் 8:3).

சபையைத் துன்பப்படுத்துவதில் சவுல் என்பவன் பிரதான பங்கு வகிக்கிறான். இவன் யூதமார்க்கத்தில் பரிசேய வகுப்பைச் சேர்ந்தவன். பக்தி வைராக்கியம் மிகுந்தவன். சவுல் சபையைப் பாழாக்கிக்கொண்டிருக்கிறான். சபைக்கு விரோதமாகத் தன்னால் என்னென்ன செய்ய முடியுமோ அவை அனைத்தையும் செய்து கொண்டிருக்கிறான். அவன் விசுவாசிகளின் வீடுகள்தோறும் நுழைந்து இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிற புருஷரையும் ஸ்திரீகளையும் இழுத்துக் கொண்டுபோய் காவலில் போடுவித்தான். இஸ்ரவேல் தேசத்தில் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை யாரும் பிரசங்கம்பண்ணக் கூடாது என்பதுதான் சவுலின் நோக்கம். சுவிசேஷத்தை அழித்துப்போட வேண்டுமென்று சவுல் முயற்சிபண்ணுகிறான்.

சவுல் படிப்பறிவு மிகுந்தவன். வேதபண்டிதன். கமாலியேலின் பாதபடியில் அமர்ந்து கல்விகற்றவன். மிகுந்த ஒழுக்கமுள்ளவன். ஆனாலும் இவன் இயேசு கிறிஸ்துவுக்கு விரோதமாக சிந்தித்துச் செயல்படுகிறான். யூதமார்க்கத்தில் சவுல் பெரிய அதிகாரியாக பதவிவகிக்கிறவன். ஆனாலும் சுவிசேஷத்தை எருசலேமில் அழித்துப்போட வேண்டுமென்பதற்காக, தன்னுடைய பதவி, அந்தஸ்து ஆகிய எதையும் பார்க்காமல், சவுலே விசுவாசிகளின் வீடுகள்தோறும் நுழைந்து அவர்களைத் துன்பப்படுத்துகிறான்.

சவுலுக்கு விரோதமாக விசுவாசிகளால் எதிர்த்து நிற்க முடியவில்லை. விசுவாசிகள் சிறிய வீடுகளில் குடியிருந்தாலும், மாளிகைகளில் குடியிருந்தாலும், அவர்களால் சவுலின் கோபத்திற்குத் தப்பிக்க முடியவில்லை. சவுல் வீடுகள்தோறும் நுழைகிறான். ஆண் என்றும், பெண் என்றும் வித்தியாசம் பார்க்காமல் விசுவாசிகளெல்லோரையும் இழுத்துக் கொண்டுபோய்க் காவலில் போடுகிறான். ஸ்திரீகள்மீது சவுல் இரக்கம் காண்பிக்கவில்லை. விசுவாசிகளைக் காவலில் போட்டு, அவர்களை விசாரணை செய்து, அவர்களைக் கல்லெறிந்து கொன்று போடவேண்டும் என்பதுதான் பவுலின் வைராக்கியம்.

சமாரியாவில் ஊழியம்
அப் 8 : 4-13

அப் 8:4. சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து, சுவிசேஷவசனத்தைப் பிரசங்கித்தார்கள்.

அப் 8:5. அப்பொழுது பிலிப்பென்பவன் சமாரியாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குப் போய், அங்குள்ளவர்களுக்குக் கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித்தான்.

அப் 8:6. பிலிப்பு செய்த அதிசயங்களை ஜனங்கள் கேள்விப்பட்டு கண்டு, அவனால் சொல்லப்பட்டவைகளை ஒருமனப்பட்டுக் கவனித்தார்கள்.

அப் 8:7. அநேகரிலிருந்த அசுத்த ஆவிகள் மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டு அவர்களை விட்டுப் புறப்பட்டது. அநேகத் திமிர்வாதக்காரரும் சப்பாணிகளும் குணமாக்கப்பட்டார்கள்.

அப் 8:8. அந்தப் பட்டணத்திலே மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று.

அப் 8:9. சீமோன் என்று பேர்கொண்ட ஒரு மனுஷன் அந்தப் பட்டணத்திலே மாயவித்தைக் காரனாயிருந்து, தன்னை ஒரு பெரியவனென்று சொல்லி, சமாரியாநாட்டு ஜனங்களைப் பிரமிக்கப்பண்ணிக்கொண்டிருந்தான்.

அப் 8:10. தேவனுடைய பெரிதான சக்தி இவன்தான் என்று எண்ணி சிறியோர் பெரியோர் யாவரும் அவனுக்குச் செவிகொடுத்துவந்தார்கள்.

அப் 8:11. அவன் அநேக காலமாய்த் தன்னுடைய மாயவித்தைகளினாலே அவர்களைப் பிரமிக்கப் பண்ணினதினால் அவனை மதித்து வந்தார்கள்.

அப் 8:12. தேவனுடைய ராஜ்யத்துக்கும் இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக்குறித்து, பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவாசித்த போது, புருஷரும் ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள்.

அப் 8:13. அப்பொழுது சீமோனும் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்று, பிலிப்பைப் பற்றிக்கொண்டு, அவனால் நடந்த அடையாளங்களையும் பெரிய அற்புதங்களையும் கண்டு பிரமித்தான்.

சிதறிப்போனவர்கள்

சிதறிப்போனவர்கள் எங்குந் திரிந்து, சுவிசேஷவசனத்தைப் பிரசங்கித்தார்கள் (அப் 8:4).

"நான் இந்தப் பூமியின்மீது அக்கினியைப் போடவந்தேன்" என்று இயேசு கிறிஸ்து சொல்லியிருக்கிறார். ஆதித்திருச் சபையின் விசுவாசிகள் அக்கினி அபிஷேகத்தினால் நிரம்பியிருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவுக்காகப் பிரகாசமாக ஜுவாலிக்கிறார்கள். இவர்கள் சிதறிப்போனால் அக்கினி அவிந்துபோகும் என்று ஆலோசனைச்சங்கத்தார் தவறாக நினைத்தார்கள். அவர்கள் எதிர்பார்த்தபடி இயேசுகிறிஸ்து அனுப்பிய அக்கினி அவிந்து போகவில்லை. சீஷர்கள் எந்தெந்த இடங்களுக்கெல்லாம் சிதறிப் போனார்களோ, அங்கெல்லாம் கிறிஸ்துவின் அக்கினி பரவிப் பற்றியெரிகிறது.

சிதறிப் போனவர்கள், தாங்கள் போனதேசத்தில் சும்மாயிருக்கவில்லை. அவர்கள் எங்கும் திரிந்து சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறார்கள். சீஷர்கள் புறஜாதியாரின் தேசங்களுக்குச் சிதறிப் போகிறார்கள். அங்கு புறஜாதியாருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறார்கள். சீஷர்கள் சமாரியாவின் பட்டணங்களுக்கு சிதறிப்போனார்கள். அங்கு சமாரியருக்கு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறார்கள்.

யூதர்கள் சமாரியரோடே சம்பந்தங் கலக்கமாட்டார்கள். சமாரியருடைய பட்டணங்களுக்கோ கிராமங்களுக்கோ யூதர்கள் போகமாட்டார்கள். யூதமார்க்கத்தின் பிரகாரம் அங்கு போவதற்கு அவர்கள் தடை பண்ணப்பட்டிருந்தார்கள். ஆனால் சீஷர்களோ இப்போது யூதேயா சமாரியா தேசங்களில் சிதறப்பட்டுப் போயிருக்கிறார்கள்.எல்லா தேசங்களுக்கும் சிதறிப் போகிறார்கள். வித்தியாசம் எதுவுமில்லை. அங்கு ஏதாவது ஒரு வேலையைத் தேடி பிழைப்பு நடத்த வேண்டும் என்பதற்காக அவர்கள் மற்ற தேசங்களுக்குப் போகவில்லை. ஓய்வெடுப்பதற்காக அந்த தேசங்களுக்குப் போகவில்லை. கிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்வதற்காகவே அங்கு சிதறிப் போயிருக்கிறார்கள்.

இயேசு கிறிஸ்துவின் சீஷர்களுக்கு சமாரியா தேசம் புதிய தேசமல்ல. இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுடன், ஏற்கெனவே சமாரியாவில் பிரவேசித்து அங்கு ஊழியம் செய்திருக்கிறார். சமாரியாவுக்கு சிதறிப்போன சீஷர்களுக்கு, ஏற்கெனவே சுவிசேஷத்தின் அஸ்திபாரம் அங்கு போடப்பட்டிருக்கிறது. இயேசு கிறிஸ்து ஏற்கெனவே போட்டிருக்கிற அஸ்திபாரத்தின்மீது, சீஷர்கள் அவருடைய ராஜ்யத்தைக் கட்டியெழுப்புகிறார்கள்.

பிலிப்பு

அப்பொழுது பிலிப்பென்பவன் சமாரியாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குப் போய், அங்குள்ளவர்களுக்குக் கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித்தான் (அப் 8:5).

ஆதித்திருச்சபையில் விதவைகளின் அன்றாட விசாரிப்புக்காக அப்போஸ் தலர்கள் ஏழு மூப்பர்களை நியமித்தார்கள். அவர்களில் பிலிப்பு என்பவனும் ஒருவன். இந்தப் பிலிப்பு என்பவன் வேறு. இயேசு கிறிஸ்துவின் பன்னிரண்டு சீஷர்களில் ஒருவனாகிய பிலிப்பு என்பவன் வேறு. ஏழு மூப்பர்களில் ஒருவனாகிய ஸ்தேவான் என்பவன் ஏற்கெனவே இரத்தச்சாட்சியாக மரித்துப்போனான். அதன்பின்பு மற்றொரு மூப்பனாகிய பிலிப்புவின் ஊழியத்தைப் பற்றி இங்கு எழுதப்பட்டிருக்கிறது. ஸ்தேவான் இரத்தச்சாட்சியாக மரித்து ஊழியம் செய்தான். பிலிப்பு நல்ல சுவிசேஷகனாக ஊழியம் செய்தான்.

சமாரியா தேசத்திலுள்ள ஒரு பட்டணத்தை பிலிப்பு தன்னுடைய ஊழிய ஸ்தலமாகத் தெரிந்தெடுக்கிறான். அங்குள்ளவர்களுக்குக் கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கிக்கிறான். இயேசு கிறிஸ்து சமாரியாவிலுள்ள சீகார் என்னப்பட்ட ஊருக்கு வந்தார் (யோவா 4:5). இதே பட்டணத்திற்குத்தான் பிலிப்புவும் வந்து அங்குள்ளவர்களுக்குக் கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித் திருக்க வேண்டுமென்று வேதபண்டிதர்கள் கருத்து சொல்லுகிறார்கள். யூதர்கள் சமாரியரோடு எந்த சம்பந்தமும் கலப்பதில்லை. ஆனால் இயேசு கிறிஸ்துவோ தம்முடைய சுவிசேஷத்தை எல்லா ஜனங்களுக்கும் பிரசங்கிக்க வேண்டுமென்று கட்டளை கொடுத்திருக்கிறார்.

பிலிப்புவின் பிரசங்கச் செய்தியும், உபதேசமும் மிகவும் தெளிவாக இருக்கிறது. அவன் கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கம் பண்ணுகிறான். யூதர்களைப் போலவே, சமாரியரும் மேசியா வருவார் என்று எதிர்பார்க்கிறார்கள் (யோவா 4:25). அவர்கள் எதிர்பார்க்கிற மேசியா வந்துவிட்டார் என்னும் நற்செய்தியை பிலிப்பு சமாரியருக்கு அறிவிக்கிறான். சமாரியர்கள் மேசியாவாகிய இயேசு கிறிஸ்துவை வரவேற்று, தங்கள் இருதயத்தில் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று அவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிறான்.

அதிசயங்கள்

பிலிப்பு செய்த அதிசயங்களை ஜனங்கள் கேள்விப்பட்டு கண்டு, அவனால் சொல்லப்பட்டவைகளை ஒருமனப்பட்டுக் கவனித்தார்கள். அநேகரிலிருந்த அசுத்தஆவிகள் மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டு அவர்களை விட்டுப் புறப்பட்டது. அநேகந் திமிர்வாதக்காரரும் சப்பாணிகளும் குணமாக்கப்பட்டார்கள் (அப் 8:6,7).

பிலிப்பு இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை சமாரியா பட்டணத்திலுள்ள ஜனங்கள் மத்தியிலே பிரசங்கம் பண்ணுகிறான். கர்த்தர் தம்முடைய வசனத்தை அற்புதங்களினாலும் அடையாளங்களிலும் உறுதிப்படுத்துகிறார். பிலிப்புவின் மூலமாக அநேக அதிசயங்கள் நடைபெறுகிறது. ஜனங்கள் அதைக் காண்கிறார்கள். பிலிப்பு செய்த அதிசயங்களைக் குறித்து ஜனங்கள் கேள்விப்படுகிறார்கள். ஆகையினால் அற்புதம் நடந்ததா என்னும் சந்தேகத்திற்கே இடமில்லாமற்போயிற்று.

சாத்தானின் வல்லமையை முறியடிப்பதற்காக பிலிப்பு சமாரியா பட்டணத்திற்கு வந்திருக்கிறான். அசுத்த ஆவிகள் அங்கு ஏராளமான ஜனங்களை பிடித்திருக்கிறது. பிலிப்பு அவர்கள் மத்தியில் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணியபோது, அநேகரில் இருந்த அசுத்த ஆவிகள் மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டு அவர்களை விட்டுப் புறப்பட்டது. சாத்தானின் கட்டுக்கள் முறிக்கப்பட்டதற்கு இவையெல்லாம் எடுத்துக்காட்டுக்களாக உள்ளன. இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் கட்டளை கொடுக்கும்போது, அசுத்த ஆவிகள் மிகுந்த சத்தத்தோடே ஜனங்களைவிட்டு வெளியேறிப் போகிறது.

நாம் சுவிசேஷத்தை எங்கெல்லாம் பிரசங்கிக்கிறோமோ அங்கெல்லாம் சாத்தான் தன்னுடைய வல்லமையை இழந்து போவான். அசுத்த ஆவிகள் அந்த இடத்தை விட்டு வெளியேறிப் போகும். ஜனங்கள் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டு, சத்திய வசனத்திற்குக் கீழ்ப்படியும்போது அசுத்த ஆவிகள் அவர்களை விட்டு வெளியேறும். பரிசுத்த ஆவியானவர் அவர்களை ஆளுகை செய்வார்.

இப்படிப்பட்ட சம்பவம்தான் சமாரியாவிலுள்ள இந்தப் பட்டணத்தில் நடைபெறுகிறது. பிலிப்புவின் சுவிசேஷப் பிரசங்கத்தை ஜனங்கள் ஒருமனப்பட்டு கவனிக்கிறார்கள். பிலிப்பு இயேசுவின் நாமத்தினால் பிசாசுகளுக்குக் கட்டளை கொடுக்கிறான். அந்த அசுத்த ஆவிகள் மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டு ஜனங்களைவிட்டு வெளியேறுகிறது.

அசுத்த ஆவிகள் மனுஷரைவிட்டு வெளியேறும்போது மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிடுகிறது. இயேசு கிறிஸ்துவின் சர்வவல்லமைக்கு முன்பாக தாங்கள் ஒன்றுமில்லை என்பதை அசுத்த ஆவிகள் சத்தமிட்டு அறிவிக்கிறது. தாங்கள் பரிசுத்த ஆவியானவரிடம் தோற்றுப் போனதை அசுத்த ஆவிகள் சத்தமிட்டுக் கூப்பிட்டு அங்கீகரிக்கிறது.

பிலிப்பு இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிற போது, ஜனங்களிலிருந்த அசுத்த ஆவிகளைத் துரத்துகிறான். ஜனங்கள் தங்கள் ஆத்துமாக்களில் இரட்சிக்கப்படுகிறார்கள். பிலிப்பு இயேசுவின் நாமத்தில் வியாதியஸ்தருக்காக ஜெபிக்கிறான். அப்போது அநேகம் திமிர்வாதக்காரரும், சப்பாணிகளும் குணமாக்கப்படுகிறார்கள். தேவனுடைய கிருபை சுவிசேஷத்தில் வெளிப்படுகிறது.

நாம் ஆவிக்குரிய ரீதியாக திமிர்வாதமுள்ளவர்களாகவும், சப்பாணிகளாகவும் இருந்தாலும் கிறிஸ்துவின் சுவிசேஷமானது நம்மைக் குணப்படுத்துவதற்கு வல்லமையுள்ளது. திமிர்வாதமுள்ளவர்களும் சப்பாணிகளும் தங்களுக்குத் தாங்களே உதவி செய்து கொள்ள முடியாது. அவர்களுக்கு பிறருடைய உதவி தேவைப்படுகிறது. இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் மூலமாய் நமக்குத் தேவையான ஆவிக்குரிய உதவிகளையும், சரீரப்பிரகாரமான உதவிகளையும் நாம் விசுவாசத்தோடு பெற்றுக்கொள்ளலாம்.

பிலிப்பு கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கிக்கிறான். அவனால் சொல்லப்பட்டவைகளை ஜனங்கள் ஒருமனப்பட்டு கவனிக்கிறார்கள். சுவிசேஷம் பிரய்ங்கம்பண்ணப்படும்போது அதிசயங்களும் அற்புதங்களும் நடைபெறுகிறது. இதைப்பார்த்த ஜனங்களும், இதைக் கேள்விப்பட்ட ஜனங்களும் அவனுடைய பிரசங்கத்தைக் கேட்பதற்காக கூடிவருகிறார்கள். அற்புதம் நடைபெறுகிற இடத்தில் திரளான ஜனங்கள் கூடிவருவார்கள். பிலிப்புவிடம் கூடிவந்திருக்கும் ஜனங்கள் ஒருமனப்பட்டு அவனுடைய பிரசங்கச் செய்தியைக் கேட்கிறார்கள்.

சந்தோஷம் உண்டாயிற்று

அந்தப் பட்டணத்திலே மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று (அப் 8:8).

பிலிப்பு கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கிக்கிறான். இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் அதிசயங்களைச் செய்கிறான். ஏராளமான ஜனங்கள் அவனுடைய பிரசங்கத்தை ஒருமனப்பட்டுக் கேட்கிறார்கள். அநேக திமிர்வாதக் காரரும், சப்பாணிகளும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் குணமடைகிறார்கள். இதனால் ஜனங்கள் மத்தியில் சந்தோஷம் உண்டாயிற்று. இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து ஜனங்கள் பூரண திருப்தியோடிருக்கிறார்கள். பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவாசித்த போது, புருஷரும் ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெறுகிறார்கள் (அப் 8:12).

பிலிப்பு தேவனுடைய ராஜ்யத்திற்கு ஏற்றவைகளைக் குறித்துப் பிரசங்கம் பண்ணுகிறான். இயேசு கிறிஸ்துவே தேவனுடைய ராஜ்யத்திற்கு ராஜா என்று பிரசங்கிக்கிறான். ஜனங்கள் அவனுடைய பிரசங்கச் செய்தியை ஒருமனப்பட்டுக் கேட்கிறார்கள். பிலிப்புவின் பிரசங்கச் செய்தி மனுஷனுடைய செய்தியல்ல என்றும், அது தேவனிடத்திலிருந்து வந்திருக்கும் செய்தியென்றும் விசுவாசிக்கிறார்கள். அவர்கள் விசுவாசித்தபோது, புருஷரும் ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெறுகிறார்கள்.

யூதருடைய ஜெபாலயத்தில் புருஷர்கள் மாத்திரமே அங்கத்தினராக இருக்க முடியும். ஆனால் இயேசு கிறிஸ்துவின் திருச்சபையில் ஆண் என்றும் பெண் என்றும் வித்தியாசமில்லை. இயேசுகிறிஸ்து பட்சபாதம் பார்க்காமல் புருஷரையும் ஸ்திரீகளையும் தம்முடைய சபையில் சேர்த்துக் கொள்கிறார். தேவனுடைய ஆவிக்குரிய இஸ்ரவேல் தேசத்தில் ஸ்திரீகளும் அங்கத்தினார்களாக சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

பிலிப்புவின் ஊழியம் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலும், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினாலும் நடைபெறுகிறது. சரீர சுகமாதல் உண்டாகிறது. ஆத்தும இரட்சிப்பு உண்டாகிறது. அசுத்த ஆவிகள் வெளியேறிப் போகிறது. இதனால் அந்தப் பட்டணத்திலே மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று. சுவிசேஷம் எங்கெல்லாம் வருகிறதோ அங்கெல்லாம் சந்தோஷமும் வரும். அது சாதாரண சந்தோஷமல்ல. உலகப்பிரகாரமான சந்தோஷமல்ல. அது தெய்வீக சந்தோஷம். அப்படிப்பட்ட சந்தோஷமே சமாரியாவிலுள்ள இந்தப் பட்டணத்திலும் உண்டாயிற்று.

சுவிசேஷத்தைக் கேட்பதினால் மனுஷருடைய இருதயத்தில் வருத்தம் உண்டாகாது. சுவிசேஷம் நம்முடைய இருதயத்தைச் சந்தோஷத்தினால் நிரப்பும். இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷச் செய்தியானது எல்லா ஜனத்திற்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியாகும் (லூக் 2:10).

சீமோன்

சீமோன் என்று பேர்கொண்ட ஒரு மனுஷன் அந்தப் பட்டணத்திலே மாயவித்தைக்காரனாயிருந்து, தன்னை ஒரு பெரியவனென்று சொல்லி, சமாரியாநாட்டு ஜனங்களைப் பிரமிக்கப்பண்ணிக் கொண்டிருந்தான். தேவனுடைய பெரிதான சக்தி இவன்தான் என்று எண்ணி சிறியோர் பெரியோர் யாவரும் அவனுக்குச் செவிகொடுத்துவந்தார்கள். அவன் அநேக காலமாய்த் தன்னுடைய மாயவித்தைகளினாலே அவர்களைப் பிரமிக்கப்பண்ணினதினால் அவனை மதித்துவந்தார்கள் (அப் 8:9-11).

சமாரியாவிலுள்ள ஒரு பட்டணத்திலுள்ள ஜனங்களுக்கு பிலிப்பு கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித்து வருகிறான். இந்தப் பட்டணத்தில் சீமோன் என்று பேர் கொண்ட ஒரு மனுஷன் மாயவித்தைக் காரனாயிருக்கிறான். ஜனங்களுக்குச் சந்தோஷம் உண்டாகும்போது சாத்தான் அதை சகித்துக் கொள்வதில்லை. மனுஷருடைய சந்தோஷத்தை அகற்றிப் போடுவதற்கு பிசாசு எதையாவது செய்வான். நமது சந்தோஷத்தை துக்கமாக மாற்றுவான். ஆனால் இயேசு கிறிஸ்துவோ நம்முடைய துக்கத்தைச் சந்தோஷமாக மாற்றுகிறவர்.

சமாரியாவிலுள்ள இந்தப் பட்டணத்திலுள்ள சீமோன் என்னும் பேர் கொண்ட மாயவித்தைக்காரன் தன்னை ஒரு பெரியவன் என்று சொல்லி, சமாரியா நாட்டு ஜனங்களைப் பிரமிக்கப் பண்ணிக் கொண்டிருக்கிறான். இவன் பலவிதமான மந்திர வித்தைகளைச் செய்கிறான். ஏராளமான ஜனங்கள் இவனுடைய மந்திரவித்தையினால் கவரப்பட்டு இவனைப் பின்பற்றுகிறார்கள். இவனுக்குப் பல பக்தர்கள் இருக்கிறார்கள்.

ஜனங்கள் நற்காரியங்களை எளிதாக ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். ஆனால் தீயகாரியங்களை உடனடியாக ஏற்றுக்கொள்வார்கள். தீயசெய்திகளும் தீயகாரியங்களும் ஜனங்கள் மத்தியில் வேகமாக பரவும். தீயகாரியங்களைச் செய்ய கற்றுக்கொள்ள வேண்டியதில்லை. மனுஷனுடைய பாவசுபாவத்தினால் அது தானாகவே அவனுக்குள் வந்துவிடும். ஆனால் நற்காரியங்களைப் பேசவும், செய்யவும் கற்றுக்கொள்ளவேண்டும்.

சீமோன் சமாரியா பட்டணத்திலே மந்திர வித்தைகளைச் செய்து வருகிறான். ஜனங்கள் அதை ஆச்சரியமாய்ப் பார்க்கிறார்கள். தன்னுடைய மாயவித்தையினால் ஜனங்கள் மத்தியில் சீமோன் தன்னைப் பெரியவனாகக் காண்பித்துக் கொள்கிறான். ஜனங்களுடைய மனக்கண்களைக் குருடாக்கி அவர்களை ஆளுகை செய்கிறான்.

சீமோன் அநேக காலமாய் தன்னை மாயவித்தைகளினாலே அந்தப் பட்டணத்து ஜனங்களைப் பிரமிக்கப் பண்ணி வருகிறான். ஜனங்களும் அவனை மதித்து வருகிறார்கள். ஜனங்கள் மத்தியில் சீமோனுக்கு மதிப்பு அதிகரிப்பதினால், அவன் அந்தப் பட்டணத்தில் தன்னை ஒரு பெரியவன் என்று சொல்லிக்கொள்கிறான். ஜனங்களுடைய வாழ்க்கையை ஆசீர்வதிக்கவேண்டுமென்பது அவனுடைய நோக்கமல்ல. ஜனங்களுடைய இருதயத்தில் சீர்திருத்தம் உண்டுபண்ணவேண்டும் என்பதும் அவனுடைய விருப்பமல்ல. தன்னை ஒரு பெரியவனென்று சொல்லிக்கொள்ள வேண்டும். ஜனங்களும் அதை நம்பவேண்டும். இதுவே அவனுடைய பேராசை.

தன்னிடத்தில் ஏதோ ஒரு மந்திர சக்தியிருப்பதாக ஜனங்கள் நம்பவேண்டுமென்று சீமோன் விரும்புகிறான். இதற்காக பல மாயவித்தைக்களைச் செய்து அவர்களைப் பிரமிக்கப் பண்ணுகிறான். அவனுடைய உள்ளத்தில் பெருமையும், பேராசையும், பேரும் புகழும் அடையவேண்டும் என்னும் ஆசையும் நிரம்பியிருக்கிறது. இப்படிப்பட்ட சுபாவம் தேவனுக்கு விரோதமானது. விசுவாசிகளின் உள்ளத்தில் பேராசையோ, பெருமையோ இருக்கக்கூடாது. சபையில் இப்படிப்பட்ட சுபாவங்களிலிருந்தால் அது சபையின் வளர்ச்சிக்குக் கேடாக அமையும்.

சீமோன் ஜனங்கள் மத்தியில் மாயவித்தைகளைச் செய்து அவர்களைப் பிரமிக்கப்பண்ணுகிறான். அதனால் அவன் "தேவனுடைய பெரிதான சக்தி" என்று ஜனங்கள் எண்ணுகிறார்கள். சிறியோர் பெரியோர் யாவரும் அவனுக்குச் செவிகொடுக்கிறார்கள். அவனை மதித்து வருகிறார்கள்.

தேவனுடைய பெரிதான சக்தி இவன் தான் என்று ஜனங்கள் எண்ணுகிறார்கள். சாத்தான் இவர்களுடைய மனக் கண்களைக் குருடாக்கியிருப்பதினால், தேவனுடைய வல்லமையை இவர்களால் காணமுடியவில்லை. சாத்தான் தன்னுடைய அந்தகார வல்லமையினால் இவர்களை ஆளுகை செய்கிறான். சீமோன் தன்னுடைய மாயவித்தைகளினாலே சமாரியா நாட்டு ஜனங்களைப் பிரமிக்கப் பண்ணுகிறான். ஜனங்களைப் பிரமிக்கச் செய்வது தான் சீமோனின் ஊழியம். இதற்காக மாயவித்தைகளைப் பயன்படுத்துகிறான்.

சாத்தானும், தேவனுடைய அனுமதியைப் பெற்று, சமாரியா ஜனங்களின் இருதயத்தைக் குழப்புகிறான். சீமோனைப் பின்பற்றிச் செல்லுமாறு அவர்களை வழிநடத்துகிறான். மாயவித்தைகளை அவர்கள் மத்தியிலே செய்கிறான். சீமோன் அநேககாலமாய் ஜனங்கள் மத்தியில் மாயவித்தைகளைச் செய்து வருகிறான்.

இப்போது பிலிப்பு இதே ஜனங்கள் மத்தியில் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே அதிசயங்களைச் செய்கிறான். ஜனங்கள் மத்தியில் மாயவித்தையும் நடைபெறுகிறது, அதிசயமும் நடைபெறுகிறது. எது மாயவித்தை என்பதையும், எது இயேசு கிறிஸ்துவின் வல்லமையினால் நடைபெறும் அதிசயம் என்பதையும் ஜனங்கள் நிதானித்து அறியவேண்டும்.

ஜனங்கள் மத்தியில் சீமோனும் இருக்கிறான். பிலிப்புவும் இருக்கிறான். ஜனங்கள் இவர்கள் இருவரையும் நிதானித்து அறிகிறார்கள். பிலிப்பு பிரசங்கித்ததை ஜனங்கள் விசுவாசிக்கிறார்கள். ஞானஸ்நானம் பெற்றுக் கொள்கிறார்கள். மாயவித்தைக்காரனாகிய சீமோனும் விசுவாசித்து அவனும் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்கிறான்.

பிலிப்பு

தேவனுடைய ராஜ்யத்துக்கும் இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக்குறித்து, பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவாசித்த போது, புருஷரும் ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள். அப்பொழுது சீமோனும் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்று, பிலிப்பைப் பற்றிக்கொண்டு, அவனால் நடந்த அடையாளங்களையும் பெரிய அற்புதங்களையும் கண்டு பிரமித்தான் (அப் 8:12,13).

தேவனுடைய கிருபை பிலிப்புவின் ஊழியத்தில் வல்லமையாய் வந்திறங்கிற்று. சாத்தான் சமாரியா பட்டணத்தில் ஏராளமான ஜனங்களை சிறைப்பிடித்திருக்கிறான். தேவனுடைய கிருபையானது சுவிசேஷ வார்த்தையின் மூலமாக வல்லமையாய்க் கிரியை செய்து, சாத்தானின் சிறையிருப்பில் சிறைப்பட்டிருப்பவர்களை விடுவிக்கிறது. சாத்தானின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள் இயேசு கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறார்கள்.

விசுவாசித்தவர்களில் சீமோன் என்று பேர் கொண்ட ஒரு மாயவித்தைக்காரனும் ஒருவன். தேவனால் எல்லோரையும் இரட்சிக்க முடியும். மனுஷருடைய பாவம் எவ்வளவு பெரிதாயிருந்தாலும், மனந்திரும்பி தம்மை விசுவாசிக்கிறவர்களை இயேசு கிறிஸ்து இரட்சிக்கிறார். ஆகையினால் ஒருவரையும், "அவர் இரட்சிக்கப்படவே முடியாதவர்" என்று நாம் தீர்மானம் செய்துவிடக்கூடாது.

பிலிப்பு தேவனுடைய ராஜ்யத்திற்கும் இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்திற்கும் ஏற்றவைகளைக் குறித்துப் பிரசங்கம் பண்ணுகிறான். அவனுடைய பிரசங்கச் செய்தியை ஜனங்கள் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றுக் கொள்கிறார்கள். மாயவித்தைக்காரனாகிய சீமோனும் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றுக் கொள்கிறான். பிலிப்பு மெய்யான உபதேசத்தைப் பேசுகிறான் என்பது சீமோனுக்குத் தெரிந்திருக்கிறது. ஏனெனில் பிலிப்புவின் மூலமாக அடையாளங்களும் அற்புதங்களும் நடைபெறுகிறது. சீமோன் மாயவித்தை செய்கிறவன். பிலிப்புவோ இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்கிறவன். பிலிப்பு செய்வது உண்மையான அற்புதம் என்பது மாய வித்தைக்காரனுக்குத் தெரிந்திருக்கிறது.

சீமோன் மாயவித்தை செய்கிறவன். ஜனங்களை வஞ்சிக்கிறவன். தன்னிடத்தில் வல்லமையில்லாதிருந்தும், மாயவித்தை யினால் சீமோன் தன்னை ஒரு பெரியவனாகக் காண்பித்துக்கொள்கிறான். தன்னிடத்தில் ஒன்றுமில்லையென்பது சீமோனுடைய மனச்சாட்சிக்குத் தெரியும். இவனால் அற்புதங்களை நிதானித்து அறியமுடிகிறது. பிலிப்பின் மூலமாக நடைபெறுகிற அடையாளங்களும் பெரிய அற்புதங்களும் மெய்யானவை என்பதை உணர்ந்து, சீமோன் பிரமிக்கிறான்.

பிலிப்புவின் பிரசங்கத்தை சீமோனும் விசுவாசித்து ஞானஸ்நானம் பெறுகிறான். சீமோனுடைய உள்ளத்தில் பாவம் இருந்தாலும், அவன் இப்போது மனந்திரும்பி இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறான். சீமோன் ஞானஸ்நானம் பெறுவதை பிலிப்பு தடைபண்ணவில்லை. கெட்ட குமாரர்கள் வீட்டிற்குத் திரும்பி வரும்போது அவர்களுடைய வீட்டார் அவர்களைச் சந்தோஷமாய் ஏற்றுக் கொள்வார்கள். அவர்கள் மறுபடியும் கெட்டுப் போகமாட்டார்கள் என்னும் நிச்சயம் வீட்டாருக்கு இல்லாதிருந்தும், அவர்களை வீட்டில் அன்போடு ஏற்றுக் கொள்வார்கள். அதுபோலத் தான் பிலிப்புவும் சீமோனை ஏற்றுக்கொள்கிறான். சீமோன் மறுபடியும் மாயவித்தை செய்வானா என்பது பிலிப்புவுக்குத் தெரியாது. ஆனால் தேவன் சீமோனுடைய இருதயத்தை அறிந்திருக்கிறார்.

நம்முடைய சபையில் ஏராளமான விசுவாசிகள் இருப்பார்கள். நாம் எல்லோரையும் நியாயந்தீர்க்கக்கூடாது. அவர்களெல்லோரையும் அன்போடும் மனஉருக்கத்தோடும் ஏற்றுக் கொள்ள வேண்டும். சபையின் அங்கத்தினர்கள் எல்லோரும் மெய்யாகவே மனந் திரும்பியிருப்பார்கள் என்று நாம் விசுவாசித்து, அவர்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில், அவர்கள் வளர்ச்சி பெறுவதற்கு உதவிபுரிய வேண்டும். சபையும் ஊழியக்காரர்களும் மனுஷரை பாவியென்று நியாயந்தீர்த்து, அவர்களை சபைக்குள் வருவதற்கு தடைபண்ணிவிடக் கூடாது. தேவனுடைய கிருபையினால் நன்மையான காரியங்களே நடக்கும் என்று நாம் விசுவாசிக்கவேண்டும்.

சீமோன் மெய்யாகவே இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறான். உள்ளான மனதோடு, மனவிருப்பத்தோடு ஞானஸ் நானம் பெற்றுக்கொள்கிறான். அவன் சிலகாலம் பிலிப்புடனே கூடயிருக்கிறான். அவனுடைய மனமாறுதல் சிலகாலம் உண்மையாயிருக்கிறது. அவனுடைய இரட்சிப்பின் அனுபவம் சிறிதுகாலம் தொடருகிறது. பிலிப்பு இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறான். மாயவித்தைக்காரனாக இருந்த சீமோன் பிலிப்புவின் பாதபடியில் சிறிது காலம் அமர்ந்திருந்து சுவிசேஷத்தைக் கற்றுக் கொள்கிறான். இவனைப் போலவே சமுதாயத்தில் பல தீயவர்கள் இருக்கலாம். இவர்கள்கூட கொஞ்சக் காலம் நல்லவர்களாக இருந்திருப்பார்கள். நல்ல உபதேசங்களைப் பெற்றிருப்பார்கள்.

சீமோன் பிலிப்பைப் பற்றிக் கொள்கிறான். பிலிப்புவினால் நடந்த அடையாளங்களையும் பெரிய அற்புதங்களையும் கண்டு சீமோன் பிரமிக்கிறான். இவனுடைய மனமாற்றத்திற்கு அடையாளங்களும் அற்புதங்களும் காரணமாயிற்று. சீமோனைப் போலவே இக்காலத்திலும் அநேகர் அற்புதங்களைக் கண்டு பிரமிக்கிறார்கள். சிலரிடத்தில் பிரமிப்பு மாத்திரம்தான் இருக்கிறது. அந்த அற்புதங்களை நடத்தும் தெய்வீக வல்லமையை, இவர்கள் தங்கள் இருதயத்தில் அனுபவிக்காமல் போய் விடுகிறார்கள்.

அப்போஸ்தலர்கள் அப் 8 : 14-25

அப் 8:14. சமாரியர் தேவவசனத்தை ஏற்றுக் கொண்டதை எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்கள் கேள்விப்பட்டு, பேதுருவையும், யோவானையும் அவர்களிடத்திற்கு அனுப்பினார்கள்.

அப் 8:15. இவர்கள் வந்தபொழுது அவர்களில் ஒருவனும் பரிசுத்த ஆவியைப் பெறாமல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானத்தை மாத்திரம் பெற்றிருந்தவர்களாகக் கண்டு,

அப் 8:16. அவர்கள் பரிசுத்தஆவியைப் பெற்றுக்கொள்ளும்படி அவர்களுக்காக ஜெபம்பண்ணி,

அப் 8:17. அவர்கள்மேல் கைகளை வைத்தார்கள், அப்பொழுது அவர்கள் பரிசுத்தஆவியைப் பெற்றார்கள்.

அப் 8:18. அப்போஸ்தலர் தங்கள் கைகளை அவர்கள்மேல் வைத்ததினால் பரிசுத்தஆவி தந்தருளப்படுகிறதைச் சீமோன் கண்டபோது, அவர்களிடத்தில் பணத்தைக் கொண்டுவந்து:

அப் 8:19. நான் எவன்மேல் என் கைகளை வைக்கிறேனோ, அவன் பரிசுத்தஆவியைப் பெறத்தக்கதாக எனக்கும் இந்த அதிகாரத்தைக் கொடுக்கவேண்டும் என்றான்.

அப் 8:20. பேதுரு அவனை நோக்கி: தேவனுடைய வரத்தைப் பணத்தினாலே சம்பாதித்துக் கொள்ளலாமென்று நீ நினைத்தபடியால் உன் பணம் உன்னோடேகூட நாசமாய்ப் போகக்கடவது.

அப் 8:21. உன் இருதயம் தேவனுக்கு முன்பாகச் செம்மையாயிராதபடியால், இந்த விஷயத்திலே உனக்குப் பங்குமில்லை பாகமுமில்லை.

அப் 8:22. ஆகையால் நீ உன் துர்க்குணத்தை விட்டு மனந்திரும்பி, தேவனை நோக்கி வேண்டிக்கொள்; ஒருவேளை உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப்படலாம்.

அப் 8:23. நீ கசப்பான பிச்சிலும் பாவக்கட்டிலும் அகப்பட்டிருக்கிறதாகக் காண்கிறேன் என்றான்.

அப் 8:24. அதற்குச் சீமோன்: நீங்கள் சொன்ன காரியங்களில் ஒன்றும் எனக்கு நேரிடாதபடிக்கு, எனக்காகக் கர்த்தரை வேண்டிக் கொள்ளுங்கள் என்றான்.

அப் 8:25. இவ்விதமாய் அவர்கள் கர்த்தருடைய வசனத்தைச் சாட்சியாய் அறிவித்துச் சொன்ன பின்பு, சமாரியருடைய அநேக கிராமங்களில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, எருசலேமுக்குத் திரும்பி வந்தார்கள்.

பேதுருவும் யோவானும்

சமாரியர் தேவவசனத்தை ஏற்றுக்கொண்டதை எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்கள் கேள்விப்பட்டு, பேதுருவையும், யோவானையும் அவர்களிடத்திற்கு அனுப்பினார்கள் (அப் 8:14).

அப்போஸ்தலர்கள் எருசலேமில் தங்கியிருக்கிறார்கள். மற்றவர்கள் சிதறப்பட்டுப் போனார்கள். அவர்களில் அநேகர் சமாரியா தேசங்களுக்குப் போய் அங்கு இயேசுகிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிக்கிறார்கள். சமாரியரில் அநேகர் தேவவசனத்தை ஏற்றுக்கொள்கிறார்கள். இந்த நற்செய்தி எருசலேமிலுள்ள அப்போஸ்தலருக்கு அறிவிக்கப்படுகிறது. தேவனுடைய வார்த்தையானது சமாரியருக்குப் பிரசங்கிக்கப்படுவதோடு நின்று விடவில்லை. பிரசிங்கிக்கப் பட்டவர்கள் தேவவசனத்தை ஏற்றுக் கொள்கிறார்கள்.

எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்கள் இந்த நற்செய்தியைக் கேள்விப்பட்டு, பேதுருவையும் யோவானையும் சமாரியா தேசத்திலுள்ள புதிய விசுவாசிகளிடத்திற்கு அனுப்புகிறார்கள். அப்போஸ்தலர்கள் மத்தியில் பேதுருவும் யோவானும் முக்கியமானவர்கள். இவர்கள் இருவரையும் சமாரியாவுக்கு அனுப்புகிறார்கள். அங்கு ஊழியம் செய்கிற பிலிப்புவை உற்சாகப்படுத்துவதற்காகவும், அவனுடைய கரங்களை பலப்படுத்துவதற்காகவும் இவ்விருவரும் அனுப்பப்பட்டிருக்கிறார்கள். சமாரியாவில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் கர்த்தருடைய ஊழியத்தைத் தொடர்ந்து செய்வதற்காக, எருசலேமிலுள்ள அப்போஸ்தலர், பேதுருவையும் யோவானையும் சமாரியாவுக்கு அனுப்புகிறார்கள்.

பரிசுத்த ஆவி

இவர்கள் வந்தபொழுது அவர்களில் ஒருவனும் பரிசுத்த ஆவியைப் பெறாமல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானத்தை மாத்திரம் பெற்றிருந்தவர்களாகக் கண்டு, அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளும்படி, அவர்களுக்காக ஜெபம்பண்ணி, அவர்கள் மேல் கைகளை வைத்தார்கள், அப்பொழுது அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றார்கள் (அப் 8:15-17).

பேதுருவும் யோவானும் சமாரியாவுக்கு வருகிறார்கள். சமாரியாவிலுள்ள விசுவாசிகள் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறார்கள். ஆனால் அவர்களில் ஒருவனும் பரிசுத்த ஆவியை இன்னும் பெற்றுக் கொள்ளவில்லை. ஆவியானவரின் வல்லமையையும், அபிஷேகத்தையும் அவர்கள் இன்னும் பெற்றுக் கொள்ளவில்லை. தண்ணீர் ஞானஸ் நானம் மாத்திரமே பெற்றிருக்கிறார்கள். பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தை அவர்கள் இன்னும் பெற்றுக் கொள்ளவில்லை. கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ் நானம் பெற்றிருப்பதற்காக சமாரியாவிலுள்ள விசுவாசிகள் சந்தோஷமாகவும் திருப்தியாகவும் இருக்கிறார்கள்.

நம்முடைய ஜீவனை இயேசு கிறிஸ்துவிடம் ஒப்புக்கொடுக்கும் போது, பரிசுத்த ஆவியானவரின் கிருபையினால் நமக்குள் ஆத்தும சுத்திகரிப்பு உண்டாகிறது. ஆவியானவரின் சுத்திகரிக்கிற கிரியைக்காக நாம் அவரைத் துதிக்க வேண்டும். எருசலேமிலுள்ள விசுவாசிகள் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை இன்னும் பெற்றுக்கொள்ளவில்லை. அவர்களுடைய ஆத்துமாவில் இன்னும் சுத்திகரிப்பு உண்டாகவில்லை. ஆவியானவரின் அபிஷேகத்தையும், அவர் கொடுக்கிற வரங்களையும் பெற்றுக் கொள்ளும் போது விசுவாசிகளின் ஜீவியம் பிரகாசமாயிருக்கும்.

இரட்சிக்கப்படுகிற விசுவாசிகள் தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சி பெறவேண்டும். பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளுக்குள் கிரியை நடப்பித்து, அவர்கள் நடக்கவேண்டிய வழிகளை அவர்களுக்குப் போதிக்கிறார். பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டு, அவருடைய வழிநடத்துதலின்படி நாம் ஜீவிக்கும்போது, நம்முடைய ஜீவியம் பரிபூரணமடையும்.

சமாரியாவிலுள்ள விசுவாசிகள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டு பரிபூரணமடைய வேண்டும் என்று பேதுருவும் யோவானும் விரும்புகிறார்கள். அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளும்படி அவர்களுக்காக ஜெபம் பண்ணுகிறார்கள்.

தேவன் பரிசுத்த ஆவியை நமக்கு மாத்திரமே கொடுப்பார் என்று நாம் தவறாக நினைக்கக்கூடாது. பரம பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிற அனைவருக்கும் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் (லூக் 11:13). பேதுருவும் யோவானும் இயேசு கிறிஸ்து கூறிய இந்த வாக்கியத்தை நினைவு கூர்ந்து, சமாரியாவிலுள்ள புதிய விசுவாசிகளுக்காக ஜெபிக்கிறார்கள். அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளும்படி அவர்களுக்காக ஜெபிக்கிறார்கள்.

அப்போஸ்தலரின் ஊழியம் நமக்கும் ஓர் எடுத்துக்காட்டாக இருக்கிறது. விசுவாசிகள் இரட்சிக்கப்படும்போது, அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளும்படி நாமும் அவர்களுக்காக ஜெபம்பண்ண வேண்டும். பரிசுத்த ஆவியானவருடைய கிருபைகளை அவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். ஆவியானவரின் அபிஷேகத்தையும் வரங்களையும் அவர்கள் பெற்றுக் கொண்டு, தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சி பெறவேண்டும். நம்முடைய குடும்பத்திலுள்ள அங்கத்தினர்களுக்காகவும், சிநேகிதர்களுக்காகவும் நாம் ஜெபிக்க வேண்டும். அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதே நம்முடைய பிரதான ஜெபமாக இருக்கவேண்டும்.

சமாரியாவிலுள்ள விசுவாசிகள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளும்படி பேதுருவும் யோவானும் அவர்களுக்காக ஜெபம்பண்ணி, அவர்கள்மேல் தங்கள் கைகளை வைக்கிறார்கள். அப்பொழுது சமாரியாலுள்ள விசுவாசிகள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்கிறார்கள். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் ஒருவர்மீது கைகளை வைப்பது என்பது, அவரை ஆசீர்வதிப்பதற்கு அடையாளம். அந்தப் பாரம்பரிய முறைமையின் பிரகாரம் அப்போஸ்தலர்கள் சமாரியாவிலுள்ள விசுவாசிகளை ஆசீர்வதிக்கிறார்கள். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் ஒருவரை ஆசீர்வதிக்கும் போது, பரிசுத்த ஆவியானவர் அவர்களுடைய ஆசீர்வாத வார்த்தைகளை அங்கீகரித்து, அந்த நபரை ஆசீர்வதிக்கிறார்.

பணத்தைக் கொண்டுவந்து

அப்போஸ்தலர் தங்கள் கைகளை அவர்கள் மேல் வைத்ததினால் பரிசுத்தஆவி தந்தருளப்படுகிறதைச் சீமோன் கண்டபோது, அவர்களிடத்தில் பணத்தைக் கொண்டுவந்து: நான் எவன்மேல் என் கைகளை வைக்கிறேனோ, அவன் பரிசுத்த ஆவியைப் பெறத்தக்கதாக எனக்கும் இந்த அதிகாரத்தைக் கொடுக்க வேண்டும் என்றான் (அப் 8:18,19).

பேதுருவும் யோவானும் விசுவாசிகள் மேல் தங்கள் கைகளை வைப்பதையும், அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்வதையும் மாயவித்தைக் காரனாகயிருந்த சீமோன் பார்க்கிறான். இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கும், மாயவித்தைக்கும் இடையேயுள்ள வித்தியாசம் சீமோனுக்கு வித்தியாசம் தெரியவில்லை. அப்போஸ்தலர் தங்கள் கைகளை விசுவாசிகள் மேல் வைத்ததினால் பரிசுத்த ஆவி தந்தருளப்படுவது, ஒரு விதமான மாயவித்தையென்று சீமோன் தவறாக நினைக்கிறான். பேதுருவையும் சீமோனையும் போல தானும் ஒரு அப்போஸ்தலனாக ஆகவேண்டுமென்று விரும்புகிறான். நாம் அப்போஸ்தலராக ஆவதற்கு முன்பாக, நல்ல விசுவாசியாக நம்மை உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டும்.

அப்போஸ்தலர்களைப்போல தானும் எவன்மேல் தன் கைகளை வைக்கிறானோ அவன் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்று சீமோன் ஆசைப்படுகிறான். மற்றவர்களுக்கு பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் கிடைக்க வேண்டுமென்று நாம் ஜெபிப்பதற்கு முன்பாக, நமக்குள் பரிசுத்த ஆவியானவர் நிரம்பியிருக்க வேண்டும். கிறிஸ்துவின் ஆவியானவர் நம்மை ஆளுகை செய்யவேண்டும். சீமோனிடம் கிறிஸ்துவின் ஆவிக்குப் பதிலாக பெருமையின் ஆவி இருக்கிறது. அப்போஸ் தலர்கள் விசுவாசிகள்மீது தங்கள் கைகளை வைத்தபோது, அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டார்கள். இதனால் விசுவாசிகள் ஆவிக்குரிய ஆசீர் வாதங்களைப் பெற்றுக் கொள்கிறார்கள்.

ஆனால் சீமோனோ விசுவாசிகளுக்கு வரும் ஆசீர்வாதத்தைப் பார்க்கவில்லை. விசுவாசிகள் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்வதினால், அப்போஸ்தலருக்கு பெரும் புகழும் உண்டாகிறது என்று காண்கிறான். அப்படிப்பட்ட புகழ்ச்சி தனக்கும் உண்டாக வேண்டுமென்று ஆசைப்படுகிறான். மற்றவர்களுக்கு நன்மை செய்வதைவிட, தான் எதைச் செய்தாலும் அதன் மூலமாக தான் மகிமையடைய வேண்டுமென்றே சீமோன் ஆசைப்படுகிறான்.

இவனுடைய கண்களின் பார்வை தவறானது. தன்னைப்போலவே பேதுருவும் யோவானும் மாயவித்தைக்காரர்களாக இருப்பார்களோ என்னும் சந்தேகம் சீமோனுக்குள்வருகிறது. எல்லாவற்றையும் பணத்தினால் விலைக்கு வாங்கமுடியும் என்று சீமோன் நினைக்கிறான். அப்போஸ்தலர்கள் பணத்தாசை உடையவர்களாக இருப்பார்களென்றும், அவர்களிடத்திலுள்ள வல்லமையை பணத்திற்கு விற்றுப்போடுவார்கள் என்றும் சீமோன் அப்போஸ்தலர்களைப்பற்றித் தவறுதலாக நினைக்கிறான்.

பிலிப்பு அடையாளங்களையும் பெரிய அற்புதங்களையும் செய்தான். இவற்றை இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலேயே, அவருடைய நாம மகிமைக்காக, விசுவாசிகளின் பிரயோஜனத்திற்காக செய்தான். அவர்கள் செய்த அற்புதங்கள், தான் செய்யும் மாயவித்தையைப்போன்றது என்று சீமோன் தவறுதலாக நினைக்கிறான்.

சீமோன் சமாரியா பட்டணத்திலே மாயவித்தைக்காரனாயிருந்தவன். தன்னை ஒரு பெரியவனென்று சொல்லி சமாரியா நாட்டு ஜனங்களைப் பிரமிக்கப்பண்ணிக் கொண்டிருந்தவன். பிலிப்புவைப் போல தானும் அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்ய வேண்டுமென்று சீமோன் ஆசைப்படுகிறான். இதன் மூலமாக சமாரியாவில் தன்னை இன்னும் அதிக பெரியவனென்று சொல்லி, சமாரியா நாட்டு ஜனங்களை இன்னும் அதிகமாய்ப் பிரமிக்கப் பண்ணலாம் என்று ஆசைப்படுகிறான்.

மாயவித்தைகளை அதிகமாய்ச் செய்யவேண்டும் என்பதும், ஜனங்களைப் பிரமிக்கப்பண்ண வேண்டுமென்பதும், தன்னை ஜனங்கள் மத்தியில் பெரியவனாகக் காண்பித்துக் கொள்ள வேண்டும் என்பதுமே சீமோனுடைய இலக்கு. பிலிப்புவிடத்திலிருந்த வல்லமையைவிட அப்போஸ்தலரிடத்தில் அதிக வல்லமையிருப்பதைக் காண்கிறான். அப்போஸ்தலர் தங்கள் கைகளை விசுவாசிகள்மேல் வைத்ததினால் பரிசுத்த ஆவி தந்தருளப்படுகிறதை சீமோன் காண்கிறான். அவர்களைப் போலவே தானும் எவன்மேல் தன் கைகளை வைக்கிறானோ அவன் பரிசுத்த ஆவியைப் பெறத்தக்கதாக, தனக்கும் இந்த அதிகாரம் கிடைக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறான். இந்த அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக சீமோன் அப்போஸ்தலரிடத்தில் பணத்தைக் கொண்டுவந்து, அந்த அதிகாரத்தைத் தனக்கு விலைக்குக் கொடுக்க வேண்டுமாறு கேட்கிறான்.

தேவனுடைய வரம்

பேதுரு அவனை நோக்கி: தேவனுடைய வரத்தைப் பணத்தினாலே சம்பாதித்துக் கொள்ளலாமென்று நீ நினைத்தபடியால் உன் பணம் உன்னோடேகூட நாசமாய்ப் போகக் கடவது (அப் 8:20).

தேவனுடைய வரத்தைப் பணத்தினால் சம்பாதித்துக் கொள்ளலாமென்று சீமோன் நினைக்கிறான். சீமோனிடம் அதிக பணம் இருக்கிறது. தன்னுடைய மாயவித்தையின் மூலமாக வந்த பணத்தினால் பெரிய ஐசுவரியவானாக இருக்கிறான். இப்பிரபஞ்சத்தின் ஐசுவரியம் அவனிடத்தில் திரளாய் இருக்கிறது. எல்லாவற்றையும் பணத்தினால் வாங்க முடியுமென்று பெருமையோடிருக்கிறான். பணத்தினால் பாவமன்னிப்பையும், பரிசுத்த ஆவியானவரின் வரத்தையும், நித்திய ஜீவனையும் கிரயத்திற்குப் பெற்றுக் கொள்ளலாமென்று சீமோன் தவறாக நினைக்கிறான். அவன் பணத்திற்குக் கொடுக்கிற மதிப்பை தேவனுடைய வரத்திற்குக் கொடுக்கவில்லை. தேவனுடைய வரத்தின் மதிப்பானது பணத்தின் மதிப்பைவிட குறைவானது என்று சீமோன் கணக்கிடுகிறான்.

கடையில் ஒரு பொருளை பணம் கொடுத்து கிரயத்திற்கு வாங்குவதுபோல, அப்போஸ்தலரிடத்திலுள்ள தேவனுடைய வரத்தைத் தன்னிடத்திலுள்ள பணத்தைக் கொடுத்து கிரயத்திற்கு வாங்கலாமென்று சீமோன் நினைக்கிறான். பிலிப்பு தேவனுடைய ராஜ்யத்திற்கும் இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்திற்கும் ஏற்றவைகளைக் குறித்துப் பிரசங்கித்தான். அவனுடைய பிரசங்கத்தை விசுவாசித்து சீமோன் ஞானஸ்நானம் பெற்றான். ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டாலும் சீமோனுடைய இருதயத்தில் பாவசுபாவம் இன்னும் இருக்கிறது. அவனுடைய வார்த்தையிலும் கிரியையிலும் பாவசுபாவம் வெளிப்படுகிறது. தேவனுடைய வரத்தைப் பணத்தினால் சம்பாதித்துக் கொள்ளலாமென்று நினைத்துக் கொள்கிறான். இந்த ஆசையினால் சீமோன் அப்போஸ்தலரிடத்தில் பணத்தைக் கொண்டுவருகிறான்.

தன்னிடத்தில் பணத்தோடு வரும் சீமோனை பேதுரு பார்க்கிறான். சீமோனுடைய இருதயம் தேவனுக்கு முன்பாக செம்மையாய் இல்லை. பேதுரு சீமோனிடத்தில் மிகவும் தெளிவாகப் பேசுகிறான். ஆத்தும பாரத்தோடும் பக்திவைராக்கியத்தோடும் பேசுகிறான். நம்முடைய இருதயம் எப்படியிருக்கிறதோ அப்படியே நாம் இருக்கிறோம். நம்முடைய இருதயம் செம்மையாயிராவிட்டால் நாமும் செம்மையாயிருக்கமாட்டோம்.

தேவனுக்கு முன்பாக நம்முடைய இருதயம் மறைவாயிராது. மனுஷன் முகத்தைப் பார்க்கிறான். தேவனோ நம்முடைய இருதயத்தைப் பார்க்கிறார். இருதயங்களை நிதானித்து அறிகிறார். நம்முடைய இருதயம் எப்படியிருக்கிறது என்பதை வைத்து தேவன் நம்மை நியாயந்தீர்க்கிறார். ஆகையினால் நம்முடைய இருதயம் தேவனுக்கு முன்பாக எப்போதும் செம்மையாயிருக்க வேண்டும்.

நம்முடைய இருதயத்தைக் குறித்து நாம் கவனமில்லாமல் இருப்போமென்றால், நம்மைக் குறித்தே நாம் கவனமில்லாதவர்களாக இருப்போம். இருதயத்தைச் சுத்தமாகக் காத்துக் கொள்ளவில்லையென்றால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாக இருப்போம். நம்முடைய அழிவை நோக்கி நாம் முன்னேறிச்செல்வோம்.

தேவனுடைய வரத்தில் சீமோன் தேவனுடைய மகிமையைத் தேடவில்லை. தேவனுடைய வரத்தினால் கிறிஸ்துவின் நாமம் மகிமைப்படுவதையும் அவன் தேடவில்லை. பரிசுத்த ஆவியானவருடைய வரத்தினால் தனக்கு என்ன லாபம் உண்டாகும் என்பதையே சீமோன் நோக்கிப் பார்க்கிறான். இதனால் அவனுடைய இருதயம் தேவனுக்கு முன்பாக செம்மையாயில்லை.

சீமோன் கசப்பான பிச்சிலும் பாவக்கட்டிலும் அகப்பட்டிருக்கிறான். பேதுரு சீமோனிடத்தில் பேசும்போது ஒழிவு மறைவில்லாமல், சீமோன் எப்படியிருக்கிறானோ அதை அப்படியே அவனிடத்தில் தெரியப்படுத்துகிறான். பேதுரு அவனிடத்தில் எதைக் காண்கிறானோ, அதை அப்படியே அவனிடத்தில் சொல்லிவிடுகிறான். சீமோன் கசப்பான பிச்சிலும் பாவக்கட்டிலும் அகப்பட்டிருப்பதைப் பேதுரு காண்கிறான். இவ்வாறு வெளிப்படையாகப் பேசுவது எப்போதுமே நல்லது. அதிலும் விசேஷமாக ஆத்துமாவைக் குறித்த காரியங்களில் ஒழிவு மறைவில்லாமல் பேசவேண்டும். நித்திய ஜீவனைப்பற்றிய உபதேசமும் பேச்சும் தெளிவாகவும் வெளிப்படையாகவும் இருக்க வேண்டும். பேதுரு சீமோனிடத்தில் சொல்லும்போது "நான் காண்கிறேன்" என்று உறுதியாகச் சொல்லுகிறான்.

சீமோன் மாயவித்தைக்காரன். மாய்மாலக்காரன். அவனுடைய இருதயத்திலிருப்பதை யாராலும் பார்க்க முடியாது என்று நினைக்கிறான். ஆட்டுத் தோலைப் போர்த்துக் கொண்டிருக்கும் ஓநாயைப் போலிருக்கிறான். ஆனால் அப்போஸ்தலருக்கு மறைவான காரியம் ஒன்றுமில்லை. சீமோன் யாரிடம் மறைத்தாலும், அப்போஸ்தலரிடம் மறைக்க முடியவில்லை. சீமோனுடைய சுபாவம் துன்மார்க்கனின் சுபாவமாகயிருக்கிறது. துன்மார்க்கர் எல்லோருமே சீமோனைப்போலவே, தேவனுக்கு முன்பாக செம்மையாயிருக்க மாட்டார்கள். அவர்களுடைய இருதயம் ஒருபோதும் செம்மையாயிராது. கசப்பான பிச்சில் நிறைந்திருப்பார்கள். பாவக்கட்டில் அகப்பட்டிருப்பார்கள். அவர்களுடைய பாவத்தினால் தேவனுடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வரும். சாத்தானுடைய ஆளுகைக்கு அடிமைகளாக இருப்பார்கள். பாவம் அவர்களை ஆளுகை செய்யும்.

பேதுரு சீமோனுடைய இருதயத்தில் இரண்டு காரியங்களைக் காண்கிறான். அவையாவன:1. சீமோன் இப்பிரபஞ்சத்தின் ஐசுவரியத்தில் மூழ்கிக்கொண்டிருக்கிறான். 2. ஆவிக்குரிய ஐசுவரியம் இவனிடத்தில் குறைவாக இருக்கிறது.

மாயவித்தைக்காரனாக இருந்த சீமோன் தன்னுடைய பணத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறான். பணத்தினால் தேவனுடைய வரத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்று தன் மனதில் நினைக்கிறான். பேதுருவோ அவனை நோக்கி "உன் பணம் உன்னோடேகூட நாசமாய்ப் போகக்கடவது" என்று கூறிவிடுகிறான். சீமோன் கொடுக்கிற பணத்தை பேதுரு அங்கீகரிக்கவில்லை. கடினமான வார்த்தைகளைச் சொல்லி சீமோனைச் சபிக்கிறான். பேதுரு பணத்திற்காக ஊழியம் செய்யவில்லை. தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல. பணத்தினால் பாவமன்னிப்பைப் பெற்றுக் கொள்ள முடியாது.

சீமோன் தன் கசப்பான பிச்சிலிருந்தும், பாவக்கட்டிலிருந்தும் விடுதலைபெற வேண்டும். அவன் மனந்திருந்த வேண்டும். இல்லாவிட்டால் அவனுடைய பணம் நாசமாய்ப் போவதுபோல, அவனும் நாசமாய்ப் போய்விடுவான். பணமே பிரதானம் என்று நினைக்கிற சீமோனை பேதுரு எச்சரிக்கிறான்.

பங்குமில்லை பாகமுமில்லை

உன் இருதயம் தேவனுக்கு முன்பாகச் செம்மையாயிராதபடியால், இந்த விஷயத்திலே உனக்குப் பங்குமில்லை பாகமுமில்லை (அப் 8:21).

சீமோனுக்குப் பணமே முக்கியமாகயிருக்கிறது. இப்பிரபஞ்சத்தின் ஆசீர்வாதமே அவனுக்குப் பிரதான ஆசீர்வாதமாகத் தெரிகிறது. ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப்பற்றி அவன் சிறிதும் அக்கறைகொள்ளவில்லை. சீமோனுடைய இருதயம் தேவனுக்கு முன்பாகச் செம்மையாயில்லை. ஆகையினால் ஆவிக்குரிய விஷயத்திலே சீமோனுக்குப் பங்குமில்லை, பாகமுமில்லையென்று கூறி, பேதுரு அவனை எச்சரிக்கிறான். ஆவிக்குரிய ஜீவியம் என்பது இப்பிரஞ்சத்தில் நடைபெறும் வியாபாரம் போன்றதல்ல. தேவனுடைய கிருபையினாலேயே நாம் இரட்சிக்கப்படுகிறோம். நம்முடைய பணத்தினாலோ, சுயபுத்தியினாலோ நம்மால் நம்முடைய இரட்சிப்பை சம்பாதிக்க முடியாது.

வேண்டிக்கொள்

ஆகையால் நீ உன் துர்க்குணத்தை விட்டு மனந்திரும்பி, தேவனை நோக்கி வேண்டிக்கொள்; ஒருவேளை உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப்படலாம். நீ கசப்பான பிச்சிலும் பாவக்கட்டிலும் அகப்பட்டிருக்கிறதாகக் காண்கிறேன் என்றான் (அப் 8:22,23).

பேதுரு சீமோனிடம் கோபமாகப் பேசினாலும், அவனுடைய ஆத்துமாவைக் குறித்து மிகுந்த கரிசனை யோடிருக்கிறான். சீமோனைத் துரத்தி விடவில்லை. அவன் எப்படியாவது இரட்சிக்கப்பட வேண்டும் என்று விரும்பி, அவனுக்கு ஆவிக்குரிய ஆலோசனைகளைக் கூறுகிறான்.

சீமோன் முதலாவது இரட்சிக்கப்பட வேண்டும். அவனுடைய இருதயம் தேவனுக்கு முன்பாகச் செம்மையாயில்லை. அவனிடத்தில் துர்க்குணம் நிறைந் திருக்கிறது. சீமோன் முதலாவதாகத் தன் துர்க்குணத்தை விட்டு மனந்திரும்ப வேண்டும். துர்க்குணம் என்பது துர்குணம்தான். இதற்கு வேறு பெயர் எதுவும் கொடுத்து, அதை மாற்ற நினைக்கக் கூடாது. ஒரு சிலர் துர்க்குணத்தைத் தவறான செய்கை என்று சாதாரணமாகச் சொல்லுகிறார்கள். ஒரு சிலர் இதை தவறான வைராக்கியம் என்று சொல்லுகிறார்கள். இதற்கு எப்படி பெயர் கொடுத்தாலும், இது தேவனுக்கு விரோதமான துர்க்குணமாகவே இருக்கிறது.

துர்க்குணமுள்ளவர்களால் தேவனைப் பிரியப்படுத்த முடியாது. இவர்களுடைய இருதயம் தேவனுக்கு முன்பாகச் செம்மையாயிராது. இவர்களுடைய ஆத்துமா சுத்தமடைய வேண்டுமென்றால், முதலாவதாக இவர்கள் தங்களுடைய துர்க்குணத்திலிருந்து மனந்திரும்ப வேண்டும்.

சீமோன் துர்க்குணத்திலிருந்து மனந்திருந்திய பின்பு, அவன் தேவனை நோக்கி வேண்டிக்கொள்ள வேண்டும். தம்மிடத்தில் விண்ணப்பம் பண்ணும் போது, தேவன் சீமோனுடைய விண்ணப்பத்தைக் கேட்டு அவனுக்குப் பாவமன்னிப்பைக் கொடுப்பார். மனந்திரும்பிய பின்புதான் பாவமன்னிப்பு உண்டாகும். தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்புகிறவர்கள் தேவனிடத்தில் வேண்டிக் கொள்ள வேண்டும். தேவனிடத்தில் விண்ணப்பம்பண்ணுவது என்பது, அவரையே சார்ந்துகொள்வதற்கு அடையாளம். தேவனிடத்தில் நம்பிக்கை வைத்து ஜெபிக்கவேண்டும். மனந்திரும்ப வேண்டுமென்பதும், ஜெபிக்க வேண்டுமென்பதும் இரட்சிக்கப்பட விரும்புகிற எல்லோருக்குமே பொதுவான கட்டளை.

சீமோன் தன் துர்க்குணத்தைவிட்டு மனந்திரும்பி, தேவனை நோக்கி வேண்டிக்கொண்டால், ஒருவேளை அவன் இருதயத்தின் எண்ணம் அவனுக்கு மன்னிக்கப்படலாமென்று பேதுரு அவனுக்கு ஆலோசனை சொல்லுகிறான். மனுஷனுடைய இருதயத்தின் பெரும்பகுதி துர்க்குணம் நிறைந்ததாக இருக்கிறது. நம்முடைய துர்க்குணத்திலிருந்து நாம் மனந்திரும்ப வேண்டும். மனந்திரும்ப வில்லையென்றால், நம்முடைய இருதயம் தேவனுக்கு முன்பாகச் செம்மையானதாக இருக்காது.

மனுஷனுடைய இருதயம் எவ்வளவு துன்மார்க்கமாக இருந்தாலும், அவன் மனந்திரும்பி தேவனிடத்தில் ஜெபிக்கும் போது, அவனுக்கு பாவமன்னிப்பு உண்டாகும். இருதயத்தின் சிந்தனை கேடு நிறைந்ததாக இருந்தாலும், நாம் மனந்திருந்தி ஜெபிக்கும் போது, நம்முடைய இருதயம் இரட்சிக்கப்படும். சுத்திகரிக்கப்படும். நம்முடைய மனந்திருந்துதல் மெய்யானதாக இருக்க வேண்டும். இல்லையென்றால் நமக்கு இரட்சிப்பு உண்டாகாது. கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக நம்மால் மாய்மாலம் பண்ணமுடியாது. அவர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறவர்.

வேண்டிக்கொள்ளுங்கள்

அதற்குச் சீமோன்: நீங்கள் சொன்ன காரியங்களில் ஒன்றும் எனக்கு நேரிடாதபடிக்கு, எனக்காகக் கர்த்தரை வேண்டிக் கொள்ளுங்கள் என்றான் (அப் 8:24).

சீமோன் கசப்பான பிச்சிலும், பாவக்கட்டிலும் அகப்பட்டிருக்கிறதாக பேதுரு காண்கிறான். அவன் தன் துர்க்குணத்தை விட்டு மனந்திரும்ப வேண்டுமென்றும், தேவனை நோக்கி வேண்டிக் கொள்ள வேண்டுமென்றும் பேதுரு அவனுக்கு புத்திமதி சொல்லுகிறான். அப்படிச் செய்தால், ஒருவேளை, அவனுடைய இருதயத்தின் எண்ணம் அவனுக்கு மன்னிக்கப்படலாம் என்று அவனிடத்தில் சொல்லுகிறான்.

அதற்கு சீமோன் "நீங்கள் சொன்ன காரியங்களில் ஒன்றும் எனக்கு நேரிடாதபடிக்கு எனக்காகக் கர்த்தரை வேண்டிக் கொள்ளுங்கள்" என்று சொல்லுகிறான். பேதுரு சீமோனிடம் கடினவார்த்தைகளைப் பேசி அவனைக் கடிந்து கொள்கிறான். சீமோன் கோபப்படவில்லை. தன் இருதயத்தில் உணர்த்தப்படுகிறான். தான் நாசமாய்ப் போய்விடக் கூடாது என்னும் கரிசனையோடிருக்கிறான். ஆகையினால் அப்போஸ்தலர்கள் தனக்காக வேண்டிக் கொள்ள வேண்டுமென்று அவர்களிடத்தில் கேட்டுக்கொள்கிறான்.

சீமோன் தனக்காக ஜெபிக்கவில்லை. தனக்காக ஜெபிக்குமாறு அப்போஸ் தலரிடம் கேட்டுக் கொள்கிறான். தேவனுடைய எச்சரிப்பின் வார்த்தை சீமோனுக்குப் பேதுருவின் மூலமாய் உண்டாயிற்று. தேவனுடைய நியாயத் தீர்ப்பிலிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டுமென்று சீமோன் விரும்புகிறான். அதற்காகத் தனக்கு எச்சரிப்பின் வார்த்தையைச் சொன்ன பேதுருவையே, தனக்காக விண்ணப்பம்பண்ணுமாறு கேட்கிறான்.

நம்முடைய பாவங்களிலிருந்து நாம் மனந்திரும்பும்போது, நாமே நமக்காக தேவனிடத்தில் விண்ணப்பம்பண்ணலாம். தேவன் தம்முடைய கிருபையினால் நம்முடைய விண்ணப்பத்திற்குப் பதில் கொடுப்பார். அப்போஸ்தலர்களின் ஜெபத்தைக்கேட்டு பதில் கொடுப்பதுபோல, நம்முடைய ஜெபத்திற்கும் பதில்கொடுப்பார். இது தேவனுடைய கிருபை. நம்முடைய இருதயம் தேவனுக்கு முன்பாக செம்மையாயிருக்குமாறு நாம் கவனமாய் ஜீவிக்கவேண்டும். நாம் ஜெபிக்கும்போது நம்முடைய வார்த்தையும், நம்முடைய இருதயத்தின் நினைவுகளும் சுத்தமாயிருக்க வேண்டும்.

எருசலேமுக்குத் திரும்பி வந்தார்கள்

இவ்விதமாய் அவர்கள் கர்த்தருடைய வசனத்தைச் சாட்சியாய் அறிவித்துச் சொன்ன பின்பு, சமாரியருடைய அநேக கிராமங்களில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, எருசலேமுக்குத் திரும்பி வந்தார்கள் (அப் 8:25).

பேதுருவும் யோவானும் எருசலேமிலிருந்து சமாரியாவுக்கு வந்திருக்கிறார்கள். கர்த்தருடைய வசனத்தை சமாரியாவில் சாட்சியாய் அறிவிக்கிறார்கள். சமாரியருடைய அநேக கிராமங்களில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து விட்டு எருசலேமுக்குத் திரும்பிப் போகிறார்கள். அப்போஸ்தலரின் ஊழியம் சமாரியாவில் நிறைவுபெறுகிறது. பிலிப்பு சமாரியாவில் ஏற்கெனவே பிரசங்கம் செய்திருக்கிறான். அவன் மூலமாகச் சொல்லப்பட்ட கர்த்தருடைய வசனத்தை அப்போஸ்தலர்கள் சாட்சியாக அறிவித்து உறுதிபண்ணுகிறார்கள்.

அப்போஸ்தலர்கள் சமாரியாவில் கர்த்தருடைய வசனத்தைச் சாட்சியாக அறிவித்து விட்டு எருசலேமுக்குத் திரும்பிப் போகிறார்கள், வழியில் அநேக கிராமங்கள் இருக்கின்றன. இவையெல்லாவற்றிலும் சமாரியர்கள் குடியிருக்கிறார்கள். அவர்களுடைய கிராமங்களில் அப்போஸ்தலர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறார்கள். கர்த்தர் நகரத்திலுள்ள ஜனங்கள்மீது அன்பாயிருப்பதுபோல, கிராமத்திலுள்ள ஜனங்களிடத்திலும் அன்பாயிருக்கிறார். கர்த்தரிடத்தில் பட்சபாதம் எதுவுமில்லை. அவர் எல்லோரையும் நேசிக்கிறவர்.

கந்தாகேயின் மந்திரி
அப் 8 : 26-40

அப் 8:26. பின்பு கர்த்தருடைய தூதன் பிலிப்பை நோக்கி: நீ எழுந்து, தெற்குமுகமாய் எருசலேமிலிருந்து காசா பட்டணத்துக்குப் போகிற வனாந்தரமார்க்கமாய்ப் போ என்றான்.

அப் 8:27. அந்தப்படி அவன் எழுந்துபோனான். அப்பொழுது எத்தியோப்பியருடைய ராஜஸ்திரீயாகிய கந்தாகே என்பவளுக்கு மந்திரியும் அவளுடைய பொக்கிஷமெல்லாவற்றிற்கும் தலைவனுமாயிருந்த எத்தியோப்பியனாகிய ஒருவன் பணிந்துகொள்ளும்படி எருசலேமுக்கு வந்திருந்து;

அப் 8:28. ஊருக்குத் திரும்பிப்போகும் போது, தன் இரதத்திலே உட்கார்ந்து, ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசித்துக் கொண்டிருந்தான்.

அப் 8:29. ஆவியானவர்: நீ போய், அந்த இரதத்துடனே சேர்த்துக்கொள் என்று பிலிப்புடனே சொன்னார்.

அப் 8:30. அப்பொழுது பிலிப்பு ஓடிப்போய்ச்சேர்ந்து, அவன் ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசிக்கிறதைக் கேட்டு: நீர் வாசிக்கிறவைகளின் கருத்து உமக்குத் தெரியுமா என்றான்.

அப் 8:31. அதற்கு அவன்: ஒருவன் எனக்குத் தெரிவிக்காவிட்டால் அது எனக்கு எப்படித் தெரியும் என்று சொல்லி; பிலிப்பு ஏறி, தன்னோடே உட்காரும்படி அவனை வேண்டிக் கொண்டான்.

அப் 8:32. அவன் வாசித்த வேதவாக்கியம் என்னவென்றால்: அவர் ஒரு ஆட்டைப் போல அடிக்கப் படுவதற்குக் கொண்டு போகப்பட்டார்; மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டுக்குட்டியைப் போல அவர் தமது வாயைத் திறவாதிருந்தார்.

அப் 8:33. அவர் தம்மைத் தாழ்த்தினபோது அவருடைய நியாயம் எடுத்துப்போடப்பட்டது; அவருடைய ஜீவன் பூமியிலிருந்து எடுபட்டுப் போயிற்று; அவருடைய வம்சத்தை யாராலே சொல்லிமுடியும் என்பதே.

அப் 8:34. மந்திரி பிலிப்பை நோக்கி: தீர்க்கதரிசி யாரைக்குறித்து இதைச் சொல்லுகிறார்? தம்மைக்குறித்தோ, வேறொருவரைக்குறித்தோ? எனக்குச் சொல்லவேண்டும் என்று கேட்டுக் கொண்டான்.

அப் 8:35. அப்பொழுது பிலிப்பு பேசத் தொடங்கி, இந்த வேதவாக்கியத்தை முன்னிட்டு இயேசுவைக் குறித்து அவனுக்குப் பிரசங்கித்தான்.

அப் 8:36. இவ்விதமாய் அவர்கள் வழிநடந்து போகையில், தண்ணீருள்ள ஓரிடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது மந்திரி: இதோ, தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்குத் தடையென்ன என்றான்.

அப் 8:37. அதற்குப் பிலிப்பு: நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லையென்றான். அப்பொழுது அவன்: இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன் என்று சொல்லி;

அப் 8:38. இரதத்தை நிறுத்தச் சொன்னான். அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள், பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானங் கொடுத்தான்.

அப் 8:39. அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறினபொழுது, கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டு போய்விட்டார் மந்திரி அப்புறம் அவனைக் காணாமல், சந்தோஷத்தோடே தன் வழியே போனான்.

அப் 8:40. பிலிப்பு ஆசோத்திலே காணப்பட்டு, அவ்விடத்திலிருந்து பிரயாணம் பண்ணி, செசரியாவுக்கு வருகிற வரையில் சகல பட்டணங்களிலும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்துக்கொண்டுவந்தான்.

வனாந்தரமார்க்கம்

பின்பு கர்த்தருடைய தூதன் பிலிப்பை நோக்கி: நீ எழுந்து, தெற்குமுகமாய் எருசலேமிலிருந்து காசா பட்டணத்துக்குப் போகிற வனாந்தரமார்க்கமாய்ப் போ என்றான் (அப் 8:26).

எத்தியோப்பியா தேசத்தில் மந்திரியாக இருக்கிறவன் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்ட சம்பவம் இந்த வசனப்பகுதியில் விவரிக்கப்பட்டிருக்கிறது. இந்த எத்தியோப்பியன் எருசலேமிலிருந்து தன்னுடைய ஊருக்குத் திரும்பிப் போகிறான். அவனைச் சந்திக்குமாறு கர்த்தருடைய தூதன் பிலிப்புவிடம் கூறுகிறார்.

தூதன் பிலிப்பை நோக்கி "நீ எழுந்திருந்து தெற்குமுகமாய்ப் போ" என்று கட்டளை கொடுக்கிறார். கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்கு கர்த்தரிடத்திலிருந்து இப்படிப்பட்ட விசேஷித்த கட்டளைகள் கொடுக்கப்படும். எங்கு ஊழியம் செய்யவேண்டுமென்றும், எந்த இடத்திற்குப் போகவேண்டுமென்றும், எந்த இடத்திற்குப் போகக்கூடாது என்றும் தேவன் தம்முடைய விசேஷித்த கட்டளைகளை தம்முடைய ஊழியக்காரர்களுக்கு அவ்வப்போது கொடுத்து வழிநடத்துகிறார். கர்த்தரை நாம் உண்மையான மனதோடு பின்பற்றும்போது, நமக்குத் தெய்வீக வழிநடத்துதல் கிடைக்கும். கர்த்தருடைய சமுகத்தில் நம்மைப் பூரணமாய் ஒப்புக்கொடுக்கும் போது, அவர் நம்மை ஆட்கொண்டு, தம்முடைய சித்தத்தின் பிரகாரமாய் வழிநடத்துகிறார்.

பிலிப்பு தெற்கு முகமாய்ப் போகவேண்டும். எருசலேமிலிருந்து காசா பட்டணத்திற்கு வனாந்தர மார்க்கமாய் ஒரு சாலை போகிறது. இது யூதாவின் வனாந்தரப்பகுதி. இந்த வனாந் தரத்திற்குப் போகவேண்டுமென்று பிலிப்பு இதற்கு முன்பு நினைத்ததில்லை. வனாந்தரத்தில் யாரும் இருக்க மாட்டார்கள். இங்கு ஊழிய வாய்ப்பும் குறைவாக இருக்கும். ஆகையினால் இந்த இடத்தில் ஊழியம் செய்யவேண்டுமென்று பிலிப்பு சிறிதும் நினைத்துப் பார்த்ததில்லை.

ஆனால் கர்த்தரோ பிலிப்புவை யூதேயாவின் இந்த வனாந்தரப் பகுதிக்குத்தான் அனுப்புகிறார். கர்த்தர் பல சமயங்களில் நாம் எதிர்பாராத கதவுகளை நமக்குத் திறந்துகொடுப்பார். நாம் எதிர்பார்க்கிற கதவுகளை நமக்கு மூடிப்போடுவார்கள். எந்தப் பகுதியில் ஊழியம் செய்வதற்கு வாய்ப்பு இல்லையென்று நாம் நினைப்போமோ, அந்தப் பகுதியில் ஊழிய வாய்ப்பை உண்டுபண்ணி கொடுப்பார். கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நாம், அவருடைய சத்தத்திற்கும் சித்தத்திற்கும் கீழ்ப்படிந்து, அவர் வழிநடத்துகிற பாதையில் அவருடைய அடிச்சுவடுகளைப் பயபக்தியுடன் பின்பற்றிச் செல்லவேண்டும். கர்த்தருடைய தூதன் தனக்குக் கொடுத்த கட்டளைக்கு பிலிப்பு கீழ்ப்படிந்து, அந்தப்படி அவன் வனாந்தரத்திற்கு எழுந்து போகிறான்.

எத்தியோப்பியன்

அந்தப்படி அவன் எழுந்து போனான். அப்பொழுது எத்தியோப்பியருடைய ராஜஸ் திரீயாகிய கந்தாகே என்பவளுக்கு மந்திரியும் அவளுடைய பொக்கிஷமெல்லாவற்றிற்கும் தலைவனு மாயிருந்த எத்தியோப்பியனாகிய ஒருவன் பணிந்துகொள்ளும்படி எருசலேமுக்கு வந்திருந்து; ஊருக்குத் திரும்பிப்போகும் போது, தன் இரதத்திலே உட்கார்ந்து, ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசித்துக் கொண்டிருந்தான் (அப் 8:27,28).

பிலிப்பு ஒரு எத்தியோப்பியனைச் சந்திப்பதற்காகப் போகிறான். இவன் இஸ்ரவேலின் காணியாட்சிக்குப் புறம்பானவன். கருப்பு நிறமுடையவன். யூதர்கள் எத்தியோப்பியரை சிறிதும் மதிக்கமாட்டார்கள். நிறத்தின் அடிப்படையில் அவர்களை வேறுபிரித்து மிகவும் தாழ்வாக நினைப்பார்கள். எத்தியோப்பியர்களை வெறுத்து ஒதுக்குவார்கள். யூதர்கள் அவர்களை வெறுத்து ஒதுக்கினாலும், கர்த்தரோ அவர்களை வெறுத்து ஒதுக்கிவிடாமல், அவர்களிடத்திற்கும் சுவிசேஷத்தை அனுப்புகிறார். அவர்களுக்கும் தம்முடைய தெய்வீக கிருபையைக் கொடுக்கிறார்.

யூதர்கள் எத்தியோப்பியரை மதிக்கா விட்டாலும், இங்கு குறிப்பிடப்பட்டிருக்கிற எத்தியோப்பியன் அவனுடைய தேசத்தில் மிக உயர்ந்த ஸ்தானத்திலிருக்கிறான். எத்தியோப்பியருடைய ராஜஸ்திரீயாகிய கந்தாகே என்பவளுக்கு இவன் மந்திரியாகவும், அவளுடைய பொக்கிஷம் எல்லாவற்றிற்கும் தலைவனாகவும் இருக்கிறான். எத்தியோப்பியா தேசத்தில் இவனுக்கு மிகப்பெரிய பொறுப்பும் அதிகாரமும் கொடுக்கப்படுகிறது. ஏராளமான பொக்கிஷங்கள் இவனுடைய பொறுப்பில் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது. மிகவும் நேர்மையானவன். கண்ணியமானவன்.

பொதுவாக சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்துகளில் இருப்பவர்கள் தேவனைத் தேடமாட்டார்கள். ஆனால் இந்த எத்தியோப்பியனோ கர்த்தரை வாஞ்சையாய்த் தேடுகிறான். இவன் எத்தியோப்பியா தேசத்தானாயிருந்தாலும், யூதமார்க்கத்தை ஏற்றுக்கொண்டவன். ஆகையினால் பணிந்து கொள்ளும்படி இவன் எருசலேமுக்கு வந்திருக்கிறான். தேவனைப்பற்றிய அறிவு யூதாதேசத்திலும் மற்ற தேசங்களிலும் அக்காலத்திலேயே பரவியிருந்திருக்கிறது. சாலொமோனுடைய அரமனைக்கு சேபாவின் ராஜஸ்திரீ வந்தாள். அக்காலத்திலிருந்தே அந்தத் தேசங்களில் மெய்யான தேவனைப்பற்றிய அறிவு பரவியிருந்திருக்க வேண்டும்.

எத்தியோப்பியன் தன் ரதத்தில் உட்கார்ந்திருக்கிறான். ஏசாயா தீர்க்க தரிசியின் ஆகமத்தை வாசித்துக் கொண்டே பிரயாணம் பண்ணுகிறான். பிரயாணக்களைப்பு நீங்க ஒருசிலர் புஸ்தகங்களை வாசிப்பது வழக்கம். இவனோ தன்னுடைய ஆத்துமாவுக்கு பிரயோஜனமான ஆகமத்தை வாசிக்கிறான். இதனால் இவனுக்குப் பிரயாணக்களைப்பு நீங்கிப் போவது மாத்திரமல்ல, பரலோகத்தில் இவனுக்கு நித்திய இளைப் பாறுதலும் உண்டாயிருக்கும்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் வேதவாக்கியங்களை அனுதினமும் வாசிக்க வேண்டும். வேதவசனத்தின் பிரகாரம் ஜீவிக்கவேண்டும். உயர்ந்த அந்தஸ்துகளில் இருக்கிறவர்கள் இயேசு கிறிஸ்துவுக்குச் சாட்சியாக இருக்க வேண்டும். இவர்களுடைய சாட்சி பலருக்கு எடுத்துக்காட்டாக இருக்கும். நமக்குப் பல அலுவல்கள் இருந்தாலும், வேதவாசிப்புக்கென்று தனியாக நேரம் ஒதுக்கவேண்டும். தேவன் நம்முடைய ஆத்துமாவை இரட்சிக்கிறார். நாம் தேவனுடைய வார்த்தைகளை வாசிப்பதற்காக, நம்முடைய நேரத்தை இரட்சிக்கவேண்டும்.

நமக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம், அந்த நேரத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளவேண்டும். வேதவாக்கியங்களை ஆர்வமாய் ஆராய்ச்சி செய்யும்போது, நமக்கு வேதவசனங்களைப் பற்றித் தெளிவு உண்டாகும். வசனங்களை வாசிக்கும் போது பரிசுத்த ஆவியானவர் நம்மோடு பேசுவார்.

ஆவியானவர்

ஆவியானவர்: நீ போய், அந்த இரதத்துடனே சேர்த்துக்கொள் என்று பிலிப்புடனே சொன்னார் (அப் 8:29).

எத்தியோப்பியன் ரதத்தில் உட்கார்ந்து ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசித்துக் கொண்டு, பிரயாணம் பண்ணுகிறான். பரிசுத்த ஆவியானவர் பிலிப்பை அவனிடத்திற்கு வழிநடத்துகிறார். இருவரையும் இணைக்கிறார். "தெற்குமுகமாய் எருசலேமிலிருந்து காசா பட்டணத்திற்குப் போகிற வனாந்தர மார்க்கமாய்ப் போ" என்று கர்த்தருடைய தூதன் தனக்குக் கட்டளையிட்டதன் அர்த்தத்தை, பிலிப்பு இப்போது புரிந்துகொள்கிறான். பரிசுத்த ஆவியானவர் பிலிப்புவிடம் "நீ போய் அந்த ரதத்துடனே சேர்ந்துகொள்" என்று சொல்லுகிறார். பிலிப்பு ஆவியானவரின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து அந்த ரதத்துடன் சேர்ந்துகொள்கிறான்.

எத்தியோப்பியன் எருசலேமில் தொழுது கொண்டு தன்னுடைய தேசத்திற்குத் திரும்பிப்போய் கொண்டிருக்கிறான். எருசலேமில் அப்போஸ்தலர்கள் இயேசு கிறிஸ்துவைக் குறித்தும், தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்தும் பிரசங்கம்பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ஒருவேளை அவர்கள் மூலமாக எத்தியோப்பியனுக்கு ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமம் கொடுக்கப்பட்டிருக்கலாம். எத்தியோப்பியன் எருசலேமில் கர்த்தரைப் பணிந்துவிட்டு, தன் ஊருக்குத் திரும்பிப்போகும்போது, தேவனுடைய கிருபை அவனைப் பின்தொடருகிறது. வனாந்தரத்தில் பிலிப்புவின் மூலமாக தேவனுடைய கிருபை அவனைச் சந்திக்கிறது.

கர்த்தருடைய தூதன் சொன்ன பிரகாரமாக பிலிப்பு எழுந்து வனாந்தர மார்க்கமாய்ப் போகிறான். எத்தியோப்பியன் பிரயாணம் செய்து கொண்டிருக்கும் ரதத்திற்கு அருகாமையில் வருகிறான். அப்போது ஆவியானவர் பிலிப்பின் காதுகளில் "நீ போய் அந்த ரதத்துடனே சேர்ந்துகொள்" என்று சொல்லுகிறார். கர்த்தர் தேவாலயத்திலும் பேசுகிறார். வனாந்தரத்திற்குப் போகிற வழியிலும் பேசுகிறார்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் எல்லா இடங்களிலும் அவருடைய ஊழியத்தைச் செய்ய ஆயத்தமாயிருக்க வேண்டும். அறிமுகமானவர்களுக்கும் ஊழியம் செய்ய வேண்டும். அறிமுகமில்லாதவர்களுக்கும் ஊழியம் செய்ய வேண்டும். நம்மோடு பிரயாணம்பண்ணுகிறவர்கள் அந்நியராக இருந்தாலும், இயேசு கிறிஸ்துவின் அன்பினிமித்தம், நாம் அவர்களோடு பேசிப்பழக வேண்டும். பிறருடன் பேசுவதற்கு வெட்கப்படக்கூடாது. கூச்ச சுபாவம் நம்மைவிட்டு நீங்கவேண்டும். மற்றவர்களைப்பற்றி நமக்கு ஒன்றும் தெரியாதிருந்தாலும், அவர்களுக்குள்ளும் ஆத்துமா இருக்கிறது என்னும் அடிப்படைச் செய்தி நமக்குத் தெரிந்திருக்கவேண்டும்.

உமக்குத் தெரியுமா

அப்பொழுது பிலிப்பு ஓடிப்போய்ச் சேர்ந்து, அவன் ஏசாயா தீர்க்க தரிசியின் ஆகமத்தை வாசிக்கிறதைக் கேட்டு: நீர் வாசிக்கிறவைகளின் கருத்து உமக்குத் தெரியுமா என்றான் (அப் 8:30).

ஆவியானவர் தனக்குச் சொன்ன பிரகாரம் பிலிப்பு ஓடிப்போய் ரதத்துடன் சேர்ந்து கொள்கிறான். ரதத்தில் உட்கார்ந்திருக்கும் எத்தியோப்பியன் ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசிக்கிறதை பிலிப்பு தன் காதுகளால் கேட்கிறான். எத்தியோப்பியன் தன்னுடைய பிரயாணத்தை தன் ஆத்துமாவுக்கு நன்மை உண்டாகப் பிரயோஜனப்படுத்திக் கொள்கிறான்.

பிலிப்பு எத்தியோப்பியனிடம் "நீர் வாசிக்கிறவைகளின் கருத்து உமக்குத் தெரியுமா" என்று கேட்கிறான். நாம் பல சமயங்களில் வேதவாக்கியத்தை வாசிக்கலாம். கேட்கலாம். ஒவ்வொரு வேளையிலும் நாமும் நமக்குள் இந்தக் கேள்வியைக் கேட்டுக்கொள்ள வேண்டும். "நாம் வாசிக்கிறவைகளின் அல்லது கேட்கிறவைகளின் கருத்து நமக்குத் தெரியுமா" என்று நமக்கு நாமே கேட்டுக்கொள்ள வேண்டும். நாம் வாசிக்கும் வசனத்தின் கருத்து நமக்குப் புரியவில்லையென்றால் நமக்கு ஒரு பிரயோஜனமும் உண்டாகாது.

தேவனுடைய வசனத்தின் மூலமாக நமக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதம் உண்டாக வேண்டுமென்றால், நாம் வசனத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். பரிசுத்த ஆவியானவர் வேதவாக்கியங்களை நமக்கு விளக்கிச் சொல்லுமாறு அவரிடத்தில் ஜெபம்பண்ண வேண்டும்.

எனக்கு எப்படித் தெரியும்

அதற்கு அவன்: ஒருவன் எனக்குத் தெரிவிக்காவிட்டால் அது எனக்கு எப்படித் தெரியும் என்று சொல்லி; பிலிப்பு ஏறி, தன்னோடே உட்காரும்படி அவனை வேண்டிக் கொண்டான் (அப் 8:31).

ரதத்தில் உட்கார்ந்து பிரயாணம் பண்ணுகிற எத்தியோப்பியன் ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசித்துக் கொண்டிருக்கிறான். ஆனால் அவன் வாசிப்பதன் கருத்து அவனுக்குத் தெரியவில்லை. இதன் கருத்தைப் புரிந்து கொள்ள வேண்டுமென்றால் தனக்கு யாராவது உதவிபுரிய வேண்டுமென்று எதிர்பார்க்கிறான். பிலிப்புவின் உதவியை விரும்புகிறான்.

பிலிப்பு எத்தியோப்பியனிடம் "நீர் வாசிக்கிறவைகளின் கருத்து உமக்குத் தெரியுமா" என்று கேட்டவுடன், எத்தியோப்பியன் "ஒருவன் எனக்குத் தெரிவிக்காவிட்டால் அது எனக்கு எப்படித் தெரியும்" என்று பதில் சொல்லுகிறான். எத்தியோப்பியன் தன்னுடைய அறிவின் அளவைப்பற்றி நிதானித்து அறிந்திருக்கிறான். பெருமைப்படாமல் மிகவும் தாழ்மையோடு, தான் வாசிப்பது தனக்குத் தெரியவில்லை என்பதை அங்கீகரிக்கிறான்.

எத்தியோப்பியன் வாசிப்பது அவனுக்குப் புரியவில்லை. புரியாமலேயே தொடர்ந்து வாசிக்கவேண்டும் என்பதும் அவனுடைய விருப்பமல்ல. தான் வாசிப்பதன் கருத்தை யாராவது தனக்குத் தெரிவிக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறான். கற்றுக்கொள்ளுகிற ஆவி எத்தியோப்பியனிடத்திலிருக்கிறது. நமக்கு யாராவது கற்றுக்கொடுக்க வேண்டும் என்று விரும்புகிறவர்கள் மாத்திரமே, கற்றுக் கொள்வார்கள். எத்தியோப்பியன் கற்றுக் கொள்ள வேண்டுமென்று மிகவும் ஆவலாய் இருக்கிறான். யாராவது தனக்கு கற்றுக் கொடுக்க வேண்டுமென்றும் விரும்புகிறான்.

நாம் வேதவசனத்தை வாசிக்கும் போது சில வசனங்கள் நமக்குப் புரியும். சில வசனங்கள் நமக்குப் புரியாது. ஒரு சில வசனங்கள் புரிந்துகொள்வதற்கு எளிதாக இருக்கும். ஒரு சில வசனங்கள் புரிந்துகொள்வதற்கு கடினமாக இருக்கும். எல்லாம் புரியவில்லை என்பதற்காக வேதாகமத்தை வாசிக்காமல் கீழே வைத்துவிடக்கூடாது. நமக்கு ஏதாவது ஒரு சில வசனங்கள் புரியும் என்று எதிர்பார்த்து வேதாகமத்தை வாசிக்க வேண்டும். ஒன்றும் புரியாது என்று தீர்மானித்து, வேதாகமத்தை வாசிக்காமலேயே விட்டுவிட்டால், நமக்கு ஒரு பிரயோஜனமும் உண்டாகாது.

தேவனுடைய ஞானமும், தேவனுடைய கிருபையும் ஒரே நேரத்தில் மொத்தமாகக் கொடுக்கப்படுவதில்லை. கொஞ்சம் கொஞ்சமாகவே கொடுக்கப்படும். தேவனுடைய ஞானத்திலும் கிருபையிலும் நாம் கொஞ்சம் கொஞ்சமாக வளர்ச்சி பெறுவோம். தன்னுடைய ஞானம் விருத்தியடைய வேண்டுமென்று எத்தியோப்பியன் விரும்புகிறான். தான் வாசிக்கும் ஆகமத்தின் கருத்தை பிலிப்பு தனக்குத் தெரிவிப்பான் என்று எதிர்பார்த்து, அவனைத் தன்னோடு ரதத்தில் உட்காரும்படி வேண்டிக் கொள்கிறான்.

வேதவசனங்களை நாம் சரியாகப் புரிந்துகொள்ளவேண்டுமென்றால், நமக்கு யாராவது வசனங்களை விளக்கிக் கூறி உதவி செய்யவேண்டும். ஆவிக்குரிய பாதையில் நம்மை ஒரு சிலர் வழிநடத்தினால் நாம் முன்னேறிச் செல்வதற்கு அது பேருதவியாக இருக்கும். நல்ல புஸ்தகங்கள் நமக்கு உதவியாக இருக்கும். அனுபவமிக்க நல்லவர்கள் நமக்கு உதவியாயிருப்பார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக பரிசுத்த ஆவியானவரின் கிருபை நமக்கு மிகப்பெரிய உதவியாக இருக்கும். பரிசுத்த ஆவியானவர் நம்மை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துகிறார்.

வாசித்த வேதவாக்கியம்

அவன் வாசித்த வேதவாக்கியம் என்னவென்றால்: அவர் ஒரு ஆட்டைப் போல அடிக்கப்படுவதற்குக் கொண்டு போகப்பட்டார்; மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டுக்குட்டியைப் போல அவர் தமது வாயைத் திறவாதிருந்தார். அவர் தம்மைத் தாழ்த்தினபோது அவருடைய நியாயம் எடுத்துப்போடப்பட்டது; அவருடைய ஜீவன் பூமியிலிருந்து எடுபட்டுப் போயிற்று; அவருடைய வம்சத்தை யாராலே சொல்லிமுடியும் என்பதே (அப் 8:32,33).

எத்தியோப்பியன் ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தில், 53-ஆம் அதிகாரத்தை வாசிக்கிறான். அதிலிருந்து ஒரு சில வசனங்கள் இங்கு மேற்கோளாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எத்தியோப்பியன் செப்துவஜிந்த் பதிப்பிலிருந்து வேதவசனத்தை வாசிக்கிறான். பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழி பெயர்ப்புக்கு செப்துவஜிந்த் என்று பெயர். பழைய ஏற்பாடு ஆரம்பத்தில் எபிரெய மொழியில் எழுதப்பட்டது. எபிரெய மொழியிலுள்ள பழைய ஏற்பாட்டிற்கும், கிரேக்க மொழியில் மொழி பெயர்க்கப்பட்டுள்ள பழைய ஏற்பாட்டிற்கும் வித்தியாசமுள்ளது.

"இடுக்கணிலும் நியாயத் தீர்ப்பிலுமிருந்து அவர் எடுக்கப்பட்டார்" (ஏசா 53:8) என்று எபிரெய மொழியில் எழுதப்பட்டிருக்கிறது. இதே வாக்கியம் கிரேக்க மொழிபெயர்ப்பான செப்துவஜிந்த் பதிப்பில் "அவர் தம்மைத் தாழ்த்தின போது அவருடைய நியாயம் எடுத்துப்போடப்பட்டது" (அப் 8:32) என்று எழுதப்பட்டிருக்கிறது.

நியாயத்தீர்ப்பு கொடுக்கிறவர்களின் பார்வைக்கு இயேசு கிறிஸ்து அற்பமானவராக எண்ணப்பட்டார். அவருக்குச் சாதாரணமாகக் கொடுக்க வேண்டிய நீதியைக்கூட அவருக்குக் கொடுக்காமல் மறுத்துவிட்டார்கள். அவர் ஒரு பாவமும் செய்யாதவர்என்றும், குற்றமற்றவர் என்றும் அறிக்கை செய்தார்கள். ஆனாலும் அவரை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்துவிட்டார்கள். அவருடைய ஜீவன் பூமியிலிருந்து எடுபட்டுப்போயிற்று. அவர் தம்மை தாழ்த்தினபோது அவருடைய நியாயம் எடுத்துப்போடப்பட்டது.

ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தில் எழுதப்பட்டிருக்கிற இந்த வாக்கியங்கள் மேசியாவின் வருகையை முன்னறிவிக்கின்றன. மேசியா மரிக்கவேண்டும். அடிக்கப்படுவதற்கு கொண்டுபோகப்படும் ஆட்டைப்போல மேசியா கொண்டு போகப்பட வேண்டும். பலியிடுவதற்காக ஆடுகளைப் பலிபீடத்திற்கு அழைத்துச் செல்வார்கள். மேசியாவைப் பலியிடுவதற்காக, அவரை கல்வாரி சிலுவைக்கு அழைத்துச் சென்றார்கள்.

மேசியா தம்மைத் தாழ்த்துகிறார். அவர் தம்மைத் தாழ்த்துகிறபோது அவருடைய நியாயம் எடுத்துப் போடப்படுகிறது. அவருக்கு நீதி மறுக்கப்படுகிறது. ஒரு பாவமும் செய்யாதவருக்கு மரணதண்டனை கொடுக்கக் கூடாது. ஆனால் மேசியாவுக்கோ மரணதண்டனை கொடுக்கிறார்கள். அவருக்குக் கிடைக்க வேண்டிய நியாயத்தை நீக்கிப் போடுகிறார்கள்.

மேசியா மிகுந்த பொறுமையோடு தம்முடைய மரணத்தை ஏற்றுக் கொள்கிறார். மயிர்க்கத்தரிக்கிறவனுக்கு முன்பாக சத்தமிடாதிருக்கிற ஆட்டுக் குட்டியைப் போல, மேசியா மரிக்கும்போது அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார். இயேசுகிறிஸ்துவின் நீடிய பொறுமையைப்போல வேறு யாருக்கும் அப்படிப்பட்ட பொறுமை இருந்ததில்லை. அவர்மீது குற்றம் சுமத்தினார்கள். அவரைத் துன்பப்படுத்தினார்கள். ஆனால் மேசியாவோ அமைதியாக இருந்தார். எல்லாவற்றையும் தம்முடைய நீடிய பொறுமையினால் சகித்துக்கொண்டார்.

மேசியா சிலுவையில் மரித்தாலும், அவர் நித்திய காலமாக ஜீவிக்க வேண்டியவர். அவருடைய வம்சத்தை யாராலும் எண்ணமுடியாது. அவருடைய ஜீவன் பூமிலிருந்து எடுபட்டுப்போயிற்று. அவர் பரலோகத்தில் நித்திய காலமாக ஜீவிக்கிறார். அவருடைய வம்சத்தை யாராலும் சொல்லிமுடியாது.

எனக்குச் சொல்லவேண்டும்

மந்திரி பிலிப்பை நோக்கி: தீர்க்கதரிசி யாரைக்குறித்து இதைச் சொல்லுகிறார்? தம்மைக்குறித்தோ, வேறொருவரைக்குறித்தோ? எனக்குச் சொல்லவேண்டும் என்று கேட்டுக் கொண்டான் (அப் 8:34).

எத்தியோப்பியன் ஏசாயா தீர்க்க தரிசியின் ஆகமத்தை வாசிக்கிறான். தான் வாசித்தத்தின் கருத்து அவனுக்குத் தெரியவில்லை. பிலிப்புவைத் தன்னோடு ரதத்தில் உட்காரும்படி வேண்டிக்கொண்டு, அவனிடத்தில் "தீர்க்கதரிசி யாரைக் குறித்து இதைச் சொல்லுகிறார்" என்று கேட்கிறான். மந்திரி உலகப்பிரகாரமான ஒரு கேள்வியைக் கேட்கிறான். பல சமயங்களில் கள்ளத்தீர்க்கதரிசிகள் தங்களைப் பற்றி பெருமையாகப் பேசுவார்கள். மெய்யைப்பேசாமல் பொய்யைப் பேசுவார்கள்.

எத்தியோப்பியா மந்திரிக்கும் ஏசாயா தீர்க்கதரிசியைப்பற்றிச் சரியாகத் தெரியாது. அவர் யாரைப்பற்றிப் பேசுகிறார் என்பதும் தெரியாது. ஆகையினால் மந்திரி பிலிப்பிடம் "தீர்க்கதரிசி யாரைக்குறித்து இதைச் சொல்லுகிறார்? தம்மைக் குறித்தோ, வேறொருவரைக் குறித்தோ? எனக்குச் சொல்லவேண்டும்" என்று கேட்டுக் கொள்கிறான். பிலிப்பிடம் கலந்துரையாட வேண்டும் என்பதற்காக, எத்தியோப்பியா மந்திரி ஒரு கேள்வி கேட்டு தங்களுடைய உரையாடலை ஆரம்பித்து வைக்கிறான். நல்ல உபதேசங்களை நாம் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால் நமக்கு நல்ல கேள்விகளை கேட்கத் தெரிந்திருக்க வேண்டும்.

பிரசங்கித்தான்

அப்பொழுது பிலிப்பு பேசத் தொடங்கி, இந்த வேதவாக்கியத்தை முன்னிட்டு இயேசுவைக் குறித்து அவனுக்குப் பிரசங்கித்தான் (அப் 8:35).

பிலிப்பு எத்தியோப்பியா மந்திரியிடம் இயேசுகிறிஸ்துவைக்குறித்தும், அவருடைய சுவிசேஷத்தைக் குறித்தும் பிரசங்கம் பண்ணுவதற்கு ஒரு வாய்ப்பைத் தேடிக் கொண்டிருக்கிறான். மந்திரி பிலிப்புவிடம் கேட்ட கேள்வியே, சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணுவதற்கு பிலிப்புக்கு ஒரு வாய்ப்பைக் கொடுக்கிறது. இயேசுகிறிஸ்துவைக் குறித்தும், அவர் சிலுவையில் அறையப்பட்டதைக்குறித்தும் பிலிப்பு எத்தியோப்பியா மந்திரிக்குப் பிரசங்கிக்கிறான். சுவிசேஷத்தின் ரகசியத்தை அவனுக்கு விளக்கமாக விவரிக்கிறான்.

ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகத்திலுள்ள இந்த வேதவாக்கியத்தை முன்னிட்டு, பிலிப்பு இயேசுவைக் குறித்து, எத்தியோப்பியா மந்திரிக்குப் பிரசங்கிக்கிறான். பிலிப்புவின் பிரசங்கச் செய்தி இந்த வசனத்தில் விவரமாக எழுதப்படவில்லை. இயேசுவைக்குறித்து, இந்த வேதவாக்கியத்தை முன்னிட்டு பிரசங்கித்தான் என்று மாத்திரமே எழுதப்பட்டிருக்கிறது.

கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நாமும் நமக்குக் கிடைக்கும் எல்லா வாய்ப்புக்களையும் பயன்படுத்தி இயேசு கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கிக்க வேண்டும். தேவனுடைய நற்செய்தியைச் சுவிசேஷமாய் அறிவிக்க எல்லா நேரத்திலும் நாம் ஆயத்தமாகயிருக்க வேண்டும். எல்லா இடங்களிலும் இயேசு கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கம்பண்ண ஆயத்தமாயிருக்க வேண்டும். நாம் வீட்டில் அமர்ந்திருக்கும் போதும், வழியில் நடந்து செல்லும் போதும் இயேசுகிறிஸ்துவைக் குறித்து நாம் பிரசங்கம்பண்ண ஆயத்தமாயிருக்க வேண்டும்.

தடையென்ன

இவ்விதமாய் அவர்கள் வழிநடந்து போகையில், தண்ணீருள்ள ஓரிடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது மந்திரி: இதோ, தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்குத் தடையென்ன என்றான் (அப் 8:36).

எத்தியோப்பிய மந்திரி ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள விரும்புகிறான். தன்னுடைய விருப்பத்தை பிலிப்புவிடம் மிகவும் கண்ணியமாக சொல்லுகிறான். அவர்கள் வழிநடந்து போகையில் தண்ணீருள்ள ஓரிடத்திற்கு வருகிறார்கள். எத்தியோப்பிய மந்திரி தண்ணீரைப் பார்த்தபோது, ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்னும் எண்ணம் அவனுக்குள் உண்டாயிற்று.

தேவன் தம்முடைய பிள்ளைகளோடு பல சமயங்களில் இவ்வாறுதான் பேசுகிறார். ஒரு சில காரியங்களை நாம் பார்க்கும்போது, தேவன் தமக்குச் சித்தமான சில காரியங்களை நமக்கு ஞாபகப்படுத்துகிறார். சாதாரண காரியங்களைப் பார்த்து நம்முடைய கடமைகளை உணர்த்துகிறார். இப்படிப்பட்ட சமயங்களில் நாம் உணர்த்தப்பட வில்லையென்றால், உணராமலேயே போய்விடுவோம். ஆகையினால் கர்த்தருடைய பிள்ளைகளின் வாழ்வில் நடைபெறும் ஒவ்வொரு சம்பவமும் நமக்கு முக்கியமானது. நாம் காணும் காட்சிகளும், கேட்கும் வார்த்தைகளும் மிகவும் முக்கியமானது.

பிலிப்பு தன்னோடு எவ்வளவு நேரம் இருப்பான் என்பது எத்தியோப்பிய மந்திரிக்குத் தெரியாது. அவன் தன்னோடிருக்கும் நேரத்தை தனக்குப் பிரயோஜனப்படுத்திக் கொள்ள எத்தியோப்பியன் விரும்புகிறான். தன்னுடைய ஆலோசனையைப் பிலிப்பு அங்கீகரித்தால், எத்தியோப்பியன் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள விரும்புகிறான். தன்னுடைய விருப்பத்தை பிலிப்புவிடம் "இதோ தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்கு தடையென்ன" என்று அவனிடத்தில் கேட்கிறான்.

தனக்கு ஞானஸ்நானம் கொடுக்குமாறு எத்தியோப்பியன் பிலிப்புவைக் கட்டாயப்படுத்தவில்லை. "இங்கு தண்ணீர் இருக்கிறது, ஆகையினால் நான் ஞானஸ்நானம் பெற வேண்டுமென்று தீர்மானித்திருக்கிறேன்" என்று அதிகாரத்தோடும், ஆணவத்தோடும் பேசவில்லை. தன்னுடைய வாஞ்சையைப் பிலிப்புவிடம் சொல்லுகிறான். எத்தியோப்பின் ஞானஸ்நானம் பெறுவதற்கு ஏதாவது தடையிருக்குமென்றால், பிலிப்பு அந்தத் தடையை அவனுக்குச் சொல்ல வேண்டும். தடை எதுவுமில்லையென்றால் எத்தியோப்பியன் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளவே விரும்புகிறான்.

எத்தியோப்பியன் தன்னுடைய ஆவிக்குரிய காரியங்களில் எதையும் தாமதம் பண்ணவில்லை. எத்தியோப்பியனைப் போலவே நாமும் நம்முடைய ஆவிக்குரிய கடமைகளை விரைவாக நிறைவேற்ற வேண்டும். காலதாமதம் பண்ணக்கூடாது. நமக்குக் கிடைத்திருக்கிற காலமே நல்ல காலம். இதுவே அநுக்கிரக காலம். இதுவே கர்த்தருடைய ஊழியத்தைச் செய்வதற்கு ஏற்ற காலம். இதுவே நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சி பெறுவதற்கு ஏற்றகாலம்.

எத்தியோப்பிய மந்திரியின் இருதயத்தில் இயேசு கிறிஸ்துவின்மீது விசுவாசம் உண்டாயிருக்கிறது. ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளவேண்டுமென்று அவனுடைய வாஞ்சை ஆவலாயிருக்கிறது. இந்த வாஞ்சை எவ்வளவு நேரத்திற்கு இருக்கும் என்பது எத்தியோப்பியனுக்குத் தெரியாது. ஒருவேளை அவனுடைய வாஞ்சை குறைந்து போகலாம். ஆகையினால் தனக்கு வாஞ்சை இருக்கும்போதே, காலதாமதம்பண்ணாமல், ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள விரும்புகிறான்.

ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படுவதற்கு ஆயத்தமாகயிருக்கும்போதே அவர்களை இரட்சிப்புக்குள் வழிநடத்திவிடவேண்டும். தனக்குள் ஆவிக்குரிய வாஞ்சை இருக்கும் போதே, எத்தியோப்பியன் காலதாமதம் பண்ணாமல், தன்னுடைய ஆத்துமாவை கர்த்தரோடு உடன் படிக்கைக்குட்படுத்த விரைந்து செயல்படுகிறான்.

தடையில்லை

அதற்குப் பிலிப்பு: நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லையென்றான். அப்பொழுது அவன்: இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன் என்று சொல்லி; (அப் 8:37)

பரிசுத்த ஆவியானவரே பிலிப்புவை எத்தியோப்பியனிடம் வழிநடத்தியிருக்கிறார். ஆவியானவரின் சித்தத்தைச் செய்ய பிலிப்பு ஆயத்தமாயிருக்கிறான். "நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்கு தடையென்ன" என்று எத்தியோப்பியன் கேட்டவுடனேயே, பிலிப்பு அவனிடம் "தடையில்லை" என்று சொல்லிவிடுகிறான். ஆனாலும் ஞானஸ்நானம் பெறுவதற்கு ஒரு நிபந்தனையையும் சொல்லுகிறான். "நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லை" என்று பிலிப்பு எத்தியோப்பியனிடம் சொல்லுகிறான்.

எத்தியோப்பியன் தன் முழுஇருதயத்தோடும் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டும். நம்முடைய அறிவினாலோ அல்லது நம்முடைய தலையினாலோ மாத்திரம் இயேசுவை விசுவாசித்தால் போதாது. முழு இருதயத்தோடும் அவரை விசுவாசிக்க வேண்டும். சுவிசேஷத்தின் சத்தியத்தை நம்முடைய இருதயத்தில் புரிந்துகொண்டு, கர்த்தரையும் அவருடைய வார்த்தையையும் விசுவாசிக்க வேண்டும். எத்தியோப்பியன் தன் முழு இருதயத்தோடு இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தால், ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள அவனுக்குத் தடை எதுவுமில்லை. எத்தியோப்பியனுடைய ஆத்துமா கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோடு ஐக்கியமாக இணைய வேண்டும். ஞானஸ்நானம் பெற்றுக் கொண்ட பின்பு இயேசுவின் திருச்சபையில் எத்தியோப்பியனும் ஒரு அங்கத்தினராக அங்கீகரிப்படுவான்.

"நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் ஞானஸ்நானம் பெறுகிறதற்கு தடையில்லை" என்று பிலிப்பு சொன்னவுடன், எத்தியோப்பியன் "இயேசு கிறிஸ்துவைத் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன்" என்று அறிக்கையிடுகிறான்.

எத்தியோப்பியன் தேவனைப் பணிந்து கொள்வதற்காக எருசலேமுக்கு வந்திருக்கிறான். இதுவரையிலும் ஒன்றான மெய்தேவனை பணிந்துகொண்டவன், இப்போது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே அந்த ஒன்றான மெய்தேவன் என்று தன் முழுஇருதயத்தோடும் விசுவாசித்து அங்கீகரிக்கிறான். இயேசு கிறிஸ்துவே தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறான். அவரே வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிற மேசியா என்பதையும் விசுவாசிக்கிறான். இயேசு கிறிஸ்துவே மனுஷருடைய பாவங்களை இரட்சிக்கிற உலக இரட்சகர் என்றும் எத்தியோப்பியன் விசுவாசிக்கிறான்.

இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன். இயேசுகிறிஸ்துவிடம் தெய்வீக சுபாவம் இருக்கிறது. பிதாவாகிய தேவனிடத்தில் தெய்வீக சுபாவம் இருப்பது போல, குமாரனாகிய இயேசுவிடத்திலும் தெய்வீக சுபாவம் இருக்கிறது.

ஞானஸ்நானம் கொடுத்தான்

இரதத்தை நிறுத்தச்சொன்னான். அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள், பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானங் கொடுத்தான் (அப் 8:38).

எத்தியோப்பியன் தான் பிரயாணம் செய்கிற ரதத்தை நிறுத்துமாறு தன்னுடைய சாரதிக்குக் கட்டளை கொடுக்கிறான். அவன் தன்னுடைய வழிப்பிரயாணத்தில் பல இடங்களில் தன்னுடைய ரதத்தை நிறுத்தச் சொல்லியிருப்பான். அந்த எல்லா இடங்களையும்விட இந்த இடம் மிகவும் விசேஷமானது. மற்ற இடங்களில் அவனுடைய சரீரத்திற்கு இளைப்பாறுதல் கிடைத்திருக்கும். ஆனால் இங்கோ அவனுடைய சரீரத்தோடு ஆத்துமாவுக்கும் இளைப்பாறுதல் கிடைக்கப்போகிறது.

பிலிப்பும் மந்திரியும் தண்ணீரில் இறங்குகிறார்கள். யூதருடைய பாரம்பரிய வழக்கத்தின் பிரகாரம் அவர்கள் இருவரும் கால்களில் பாதரட்சைகளை அணியாமல் தண்ணீரில் இறங்கி இருந்திருக்க வேண்டும். எத்தியோப்பிய மந்திரியை தண்ணீரில் முழுக்கி ஞானஸ்நானம் கொடுப்பதற்கு வசதியாக, அவர்கள் போதுமான அளவு தண்ணீரின் ஆழமான பகுதிக்குச் சென்றிருக்க வேண்டும். அங்கு பிலிப்பு எத்தியோப்பிய மந்திரிக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறான்.

சமீபத்தில்தான் பிலிப்பு மாயவித்தைக்காரனாயிருந்த சீமோனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான். ஆனால் அந்த சீமோனோ முழுவதுமாக மனந்திருந்த வில்லை. ஆவிக்குரிய சத்தியத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. தேவனுடைய வரத்தை பணத்தினால் வாங்கலாமென்று நினைத்து, அப்போஸ்தலரிடத்தில் பணத்தைக் கொண்டு வந்தான். பேதுரு அவனை நோக்கி “உன் பணம் உன்னோடேகூட நாசமாய்ப் போகக்கடவது” என்று சபித்து விட்டான். “நீ உன் துர்க்குணத்தைவிட்டு மனந்திரும்பு” என்று அவனுக்குப் புத்திமதி சொன்னான். சீமோன் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்ட பின்பும் பாவம் செய்தான். முழு இருதயத்தோடு மனந்திரும்பாமலேயே அவன் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டான்.

மாயவித்தைக்காரனாகிய சீமோனைப் போல, எத்தியோப்பிய மந்திரியும், ஞானஸ்நானம் பெற்றுக்கொண்ட பின்பும் பாவம் செய்துவிடுவானோ என்று பிலிப்பு சந்தேகப்படவில்லை. அவனுக்கு ஞானஸ்நானம் கொடுக்க தடை பண்ணவில்லை. முழுஇருதயத்தோடு விசுவாசித்தால் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள தடையில்லை என்று எத்தியோப்பியனிடம் சொல்லி, அவனுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறான்.

நம்முடைய சபையிலும் சீமோனைப் போல ஒரு சில மாய்மாலக்காரர்கள் இருக்கலாம். ஞானஸ்நானம் பெற்ற பின்பும் மனந்திரும்பாதவர்களாக இருக்கலாம். இவர்கள் ஊழியக் காரர்களுக்குச் சந்தோஷத்தைக் கொடுப்பதற்குப் பதிலாக வருத்தத்தைக் கொடுப்பார்கள். தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு தான் இவர்கள் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறார்கள். ஆனாலும் இப்படிப்பட்டவர்கள் தேவனை விட்டு விலகிப்போய் விடுகிறார்கள். இவர்களுடைய துன்மார்க்கத்திற்கு இவர்களே காரணம். ஊழியக்காரர்கள் இவர்களுக்காக ஜெபிக்கலாம். ஆனாலும் கர்த்தருடைய சமுகத்தில் பின்மாறிப் போனவர்கள்தான் தங்கள் பின் மாற்றத்திற்குக் கணக்கு சொல்ல வேண்டும்.

கர்த்தருடைய ஆவியானவர்

அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறினபொழுது, கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டு போய்விட்டார் மந்திரி அப்புறம் அவனைக் காணாமல், சந்தோஷத் தோடே தன் வழியே போனான் (அப் 8:39).

பிலிப்பும் மந்திரியும் தண்ணீரில் இறங்குகிறார்கள். பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறான். அதன் பின்பு அவர்கள் இருவரும் தண்ணீரிலிருந்து கரையேறுகிறார்கள். அப்போது கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டுபோய் விடுகிறார். பிலிப்பும் எத்தியோப்பிய மந்திரியும் அங்கு பிரிக்கப்படுகிறார்கள். பிலிப்பு இயேசு கிறிஸ்துவைப்பற்றிப் பிரசங்கித்து பல அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்திருக்கிறான். இப்போது அவனுக்கே ஒரு அற்புதம் நடைபெறுகிறது. கர்த்தருடைய ஆவியானவர் அவனைக் கொண்டு போய் விடுகிறார். இந்த அற்புதத்தின் மூலமாக பிலிப்புவின் பிரசங்க வார்த்தை உறுதி பண்ணப்படுகிறது.

கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பை கொண்டுபோய்விடுகிறார். மந்திரி அப்புறம் பிலிப்பைக் காணவில்லை. சத்திய வசனத்தை தனக்கு விளக்கிச் சொன்ன ஊழியக் காரரை மந்திரியால் பார்க்க முடியவில்லை. ஆகையினால் அந்த மந்திரி மறுபடியும் தன்னிடத்திலுள்ள வேதாகமத்தை பயன்படுத்தி தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்கிறான். கர்த்தருடைய வசனமே எப்போதும் நிலைத்து நிற்கும். ஊழியக்காரர்கள் வருவார்கள். போவார்கள். கர்த்தரே நம்மோடுகூட எப்போதும் இருக்கிறவர்.

எத்தியோப்பிய மந்திரி தன்னுடைய தேசத்திற்குச் சந்தோஷத்தோடே திரும்பிப் போகிறான். எத்தியோப்பிய தேசத்தில் அவனுக்கென்று பல வேலைகள் காத்துக் கொண்டிருக்கும். அவற்றை நிறை வேற்றுவதற்காக மந்திரி சந்தோஷத்தோடே போகிறான். ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டதினால் அவனுடைய உத்தியோகம் தடைப்படவில்லை. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம், நம்முடைய உத்தியோகங்களிலும் உண்மையுள்ளவர்களாக இருக்கவேண்டும். சந்தோஷத்தோடே செயல்படவேண்டும்.

எத்தியோப்பிய மந்திரியின் ஜீவியத்தில் மெய்யான சந்தோஷம் உண்டாயிற்று. இயேசுகிறிஸ்துவோடு தான் ஐக்கியமாகயிருப்பதற்காக மந்திரி சந்தோஷமாக இருக்கிறான். மந்திரியிடத்தில் இப்போது இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷம் இருக்கிறது. இந்தச் சுவிசேஷத்தைத் தன்னுடைய தேசத்திலுள்ள ஜனங்களிடத்தில் மந்திரி பிரசங்கம்பண்ணப் போகிறான். அவர்களும் மனந்திரும்பி இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளப் போகிறார்கள். இதையெல்லாம் நினைத்துப் பார்த்து மந்திரி சந்தோஷத்தோடே எத்தியோப்பியா தேசத்திற்குத் திரும்பிப்போகிறான்.

ஆசோத்

பிலிப்பு ஆசோத்திலே காணப்பட்டு, அவ்விடத்திலிருந்து பிரயாணம் பண்ணி, செசரியாவுக்கு வருகிற வரையில் சகல பட்டணங்களிலும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்துக்கொண்டுவந்தான் (அப் 8:40).

பிலிப்பும் மந்திரியும் தண்ணீரிலிருந்து கரையேறின போது, கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டு போய்விடுகிறார். அதன்பின்பு பிலிப்பு ஆசோத்திலே காணப்படுகிறான். பிலிப்பு வனாந்தரத்திலிருந்தாலும், ஆசோத்திலிருந்தாலும் சும்மாயிருக்க வில்லை. சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறான்.

ஆசோத்திலிருந்து செசரியாவுக்குப் போகும் வழியில் ஏராளமான பட்டணங்கள் உள்ளன. செசரியாவுக்கு வரும் வரையிலும், இடையிலுள்ள சகல பட்டணங்களிலும் பிலிப்பு சுவிசேஷத்தைப் பிரசங்கித்துக் கொண்டு வருகிறான். பிலிப்புவின் வீடு செசரியாவிலுள்ளது (அப் 21:8). அவனுக்குத் தீர்க்கதரிசனம் சொல்லுகிற கன்னியாஸ்திரிகளாகிய நாலு குமாரத்திகள் அங்கு இருக்கிறார்கள். பிலிப்புவுக்கு கர்த்தர் ஒரு வாசஸ்தலத்தைக் கொடுத்து ஆசீர் வதிக்கிறார். கர்த்தர் எப்போதுமே தம்முடைய ஊழியக்காரரின் நன்மைகளை விசாரிக்கிறவர்.

9 அதிகாரம்

அப்போஸ்தலர் பவுல் இரட்சிக்கப்பட்ட சம்பவம் இந்த அதிகாரத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது. சவுல் ஆதித்திருச்சபையில் விசுவாசிகளைத் துன்பப்படுத்தினான். சீஷர்களைப் பயமுறுத்தினான். அவர்களை கொலை செய்யவேண்டுமென்று வைராக்கியமாக இருந்தான். தமஸ்குவிலுள்ள விசுவாசிகளை எருசலேமுக்குக் கொண்டுவந்து, அவர்களைத் தண்டிப்பதற்காக, அவன் தமஸ்குவிற்குப் பிரயாணமாய்ப் போனான்.

அப்போது கர்த்தராகிய இயேசுகிறிஸ்து அவனை வழியில் சந்திக்கிறார் (அப் 9:1-9). அனனியா பவுலுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறான் (அப் 9:10-19). ஞானஸ்நானம் பெற்றவுடன் பவுல் இயேசுகிறிஸ்துவைக்குறித்துப் பிரசங்கம் செய்ய ஆரம்பிக்கிறான் (அப் 9:20-22). பவுலைத் துன்பப்படுத்துகிறார்கள் (அப் 9:23-25). எருசலேமிலிருக்கிற விசுவாசிகளோடே பவுல் சேர்ந்துகொள்கிறான். அங்கும் அவனுக்கு உபத்திரவம் உண்டாயிற்று (அப் 9:26-30). சபைகள் சமாதானம் பெற்று பக்திவிருத்தியடைந்து பெருகிற்று (அப் 9:31). திமிர்வாதமுள்ளவனாய்க் கிடந்த ஐனேயா என்பவனைப் பேதுரு சொஸ்தமாக்குகிறான் (அப் 9:32-35). மரித்துப்போன தபீத்தாளை பேதுரு உயிரோடு எழுப்புகிறான் (அப் 9:36-43).

சவுல்
அப் 9 : 1-9

அப் 9:1. சவுல் என்பவன் இன்னுங் கர்த்தருடைய சீஷரைப் பயமுறுத்திக் கொலை செய்யும்படி, சீறிப் பிரதான ஆசாரியரிடத்திற்குப் போய்;

அப் 9:2. இந்த மார்க்கத்தாராகிய புருஷரையாகிலும் ஸ்திரீகளையாகிலும் தான் கண்டுபிடித்தால், அவர்களைக் கட்டி எருசலேமுக்குக் கொண்டுவரும்படி, தமஸ்குவிலுள்ள ஜெபஆலயங்களுக்கு நிருபங்களைக் கேட்டு வாங்கினான்.

அப் 9:3. அவன் பிரயாணமாய்ப் போய், தமஸ்குவுக்குச் சமீபித்தபோது, சடிதியிலே வானத்திலிருந்து ஒரு ஒளி அவனைச் சுற்றி பிரகாசித்தது;

அப் 9:4. அவன் தரையிலே விழுந்தான். அப்பொழுது: சவுலே, சவுலே நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய் என்று தன்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டான்.

அப் 9:5. அதற்கு அவன்: ஆண்டவரே, நீர் யார், என்றான். அதற்குக் கர்த்தர்: நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே; முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம் என்றார்.

அப் 9:6. அவன் நடுங்கித் திகைத்து: ஆண்டவரே, நான் என்னசெய்யச் சித்தமாயிருக்கிறீர் என்றான். அதற்குக் கர்த்தர்: நீ எழுந்து, பட்டணத்துக்குள்ளே போ, நீ செய்யவேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார்.

அப் 9:7. அவனுடனேகூடப் பிரயாணம்பண்ணின மனுஷர்கள் சத்தத்தைக் கேட்டும் ஒருவரையுங் காணாமல் பிரமித்து நின்றார்கள்.

அப் 9:8. சவுல் தரையிலிருந்தெழுந்து, தன் கண்களைத் திறந்தபோது ஒருவரையுங் காணவில்லை. அப்பொழுது கைலாகு கொடுத்து, அவனைத் தமஸ்குவுக்குக் கூட்டிக்கொண்டுபோனார்கள்.

அப் 9:9. அவன் மூன்று நாள் பார்வையில்லாதவனாய்ப் புசியாமலும் குடியாமலும் இருந்தான்.

சவுல் என்பவன்

சவுல் என்பவன் இன்னுங் கர்த்தருடைய சீஷரைப் பயமுறுத்திக் கொலை செய்யும்படி, சீறிப் பிரதான ஆசாரியரிடத்திற்குப் போய்; (அப் 9:1)

ஸ்தேவானைப்பற்றி எழுதப்பட்டிருக்கிற வசனங்களில் சவுலின் பெயர் மூன்றுமுறை வருகிறது. எபிரெய மொழியில் "சவுல்" என்னும் பெயருக்கு "நேசிக்கப்படுகிறவன்" என்று பொருள். ரோமாபுரியில் சவுலின் பெயர் "பவுல்" என்று அழைக்கப்படுகிறது. இந்தப் பெயருக்கு "சிறியது அல்லது சின்னவன்" என்று பொருள். சவுல் தர்ஷீஸ் பட்டணத்தில் பிறந்தவன். இந்தப் பட்டணம் சிலிசியா நாட்டிலுள்ளது. ரோமப்பேரரசில் தர்ஷீஸ் பட்டணம் ஒரு சுதந்தரமான பட்டணம். பவுலும் இந்தப் பட்டணத்தில் சுதந்தர மனுஷனாக இருக்கிறான். சவுலின் தாய் தந்தையர் இருவரும் எபிரெயர்கள். ஆகையினால் பவுல் தன்னைப்பற்றிக் குறிப்பிடும்போது, தான் எபிரெயருக்கு எபிரெயனாக இருப்பதாகக் குறிப்பிடுகிறான். இவன் பென்யமீன் கோத்திரத்தைச் சேர்ந்தவன்.

ஆரம்பகாலத்தில் சவுல் தர்ஷீஸ் பட்டணத்தில் கல்வி கற்றான். அக்காலத்தில் தர்ஷீஸ் பட்டணம் அத்தேனே பட்டணத்தைப்போல கலாசாலைகளில் சிறந்து விளங்கிற்று. சவுலுக்கு யூதமார்க்கத்தின் பிரமாணங்களையும், தேவனுடைய சத்தியங்களையும் கற்றுக்கொள்வதில் ஆர்வமுண்டாயிற்று. இதற்காக சவுல் தர்ஷீஸ் பட்டணத்திலிருந்து எருசலேம் நகரத்திற்கு வந்தான். கமாலியேல் என்னும் பேரறிஞரிடம் கல்விகற்றான்.

கமாலியேலின் பாதபடியில் சவுல் வேதபிரமாணங்களைத் தெளிவாகக் கற்றுக்கொண்டான். இவன் கூடாரம் பின்னும் தொழிலைச் செய்வதிலும் தேறினவன். அக்காலத்தில் யூதமார்க்கத்தில் அறிஞர்களாக இருக்கிறவர்கள் இப்படிப்பட்ட கைத்தொழில் ஒன்றை கற்றுக்கொள்வார்கள். சமுதாயத்தில் ஐசுவரியவான்களாக வேண்டும் என்னும் விருப்பம் இவர்களுக்கு இருக்காது. தங்களுடைய போஜனத்திற்காகவும், வஸ்திரங்களுக்காகவும் இவர்கள் பிறரை எதிர்பார்க்காமல், தங்கள் சொந்தக் கைகளினால் தொழில் செய்து பிழைப்பார்கள். இது யூதமார்க்கத்து பண்டிதர்கள் மத்தியில் பொதுவான வழக்கம்.

பவுல் இரட்சிக்கப்படுவதற்கு முன்பாக இயேசுகிறிஸ்துவுக்கும், அவருடைய உபதேசத்திற்கும், அவரை விசுவாசிக்கிறவர்களுக்கும் சத்துருவாக இருந்தான். கர்த்தருடைய சீஷரை பயமுறுத்திக் கொலைசெய்ய வேண்டுமென்று வெறியோடிருந்தான். தேவனுடைய நாமமகிமைக்காக கிறிஸ்துவின் சீஷர்களைத் தான் துன்பப்படுத்துவதாக நினைத்து, தன்னுடைய வேலையைச் சந்தோஷமாகச் செய்துவந்தான். நியாயப்பிரமாணத்தின் பிரகாரம் தான் நீதிமானாகயிருப்பதாக தனக்குத்தானே நினைத்துக்கொண்டான். கிறிஸ்துவின் சீஷர்களைத் துன்பப்படுத்துவது தேவன் தனக்குக் கொடுத்திருக்கும் ஊழியம் என்று நினைத்து அதைச் சந்தோஷமாகச் செய்துவந்தான்.

ஸ்தேவான் இரத்தச்சாட்சியாக மரித்ததில் பவுலுக்கும் முக்கியப் பங்கு உண்டு. கிறிஸ்துவின் சீஷர்கள்மீது சவுலின் கொலைவெறி இன்னும் தணியவில்லை. கர்த்தருடைய சீஷரைப் பயமுறுத்திக் கொலைசெய்யும்படி சீறிக்கொண்டிருக்கிறான். யாரெல்லாம் தங்களை இயேசுகிறிஸ்துவின் சீஷர்களென்று சொல்லிக் கொள்கிறார்களோ, அவர்களெல்லோரும் சவுலுக்குச் சத்துருக்களாக இருக்கிறார்கள். கிறிஸ்துவின் சீஷர்கள் யூதமார்க்கத்திற்கும், கர்த்தருக்கும் விரோதமானவர்களென்று தன்னுடைய மனதில் நினைத்துக்கொண்டிருக்கிறான்.

அவன் சீஷர்களைத் துன்புறுத்தும்போது இரண்டு வழிமுறைகளைப் பின்பற்றுகிறான். முதலாவதாக சீஷர்களைப் பயமுறுத்துகிறான். அதன்பின்பு அவர்களைக் கொலைசெய்து விடுகிறான். விசுவாசிகள் பயமுறுத்தப்படும்போது அவர்களுடைய ஆவி முறிந்துபோகும். நாம் துன்முறுத்தப்படுவதோடு, பயமுறுத்தவும்பட்டால், நம்முடைய சரீரத்திலும் ஆவியிலும் வேதனை உண்டாகும். பவுல் இப்படிப்பட்ட வழியை கையாளுகிறான். கிறிஸ்துவின் சீஷர்களைத் துன்புறுத்துவதும், அவர்களைப் பயமுறுத்துவதும், அவர்களைக் கொலைசெய்வதும் பவுலுக்கு அன்றாட வழக்கமாயிற்று. சவுல் எங்கெல்லாம் கிறிஸ்துவின் சீஷர்களைக் காண்கிறானோ அங்கெல்லாம் அவர்களைப் பயமுறுத்திக் கொலை செய்துவிடுகிறான். ஆதித் திருச்சபைகளுக்கு சவுல் பயங்கரமான அச்சுறுத்தலாக இருக்கிறான்.

தமஸ்குவிலுள்ள ஜெப ஆலயங்கள்

இந்த மார்க்கத்தாராகிய புருஷரையாகிலும் ஸ்திரீகளையாகிலும் தான் கண்டுபிடித்தால், அவர்களைக் கட்டி எருசலேமுக்குக் கொண்டுவரும்படி, தமஸ்குவிலுள்ள ஜெபஆலயங்களுக்கு நிருபங்களைக் கேட்டு வாங்கினான் (அப் 9:2).

சவுல் கர்த்தருடைய சீஷரைக் கண்ட இடங்களிலெல்லாம் பயமுறுத்திக் கொலைசெய்து வருகிறான். அப்போது அவனுடைய கொலைவெறிப் பார்வை தமஸ்கு பட்டணத்தின்மீது பதிகிறது. அங்குள்ள விசுவாசிகள் அமைதியாகக் கர்த்தரை ஆராதித்துக் கொண்டிருக்கிறார்கள். சீஷர்கள் அமைதியாகயிருப்பது சவுலுக்குப் பிடிக்காது. தமஸ்குவிலுள்ள விசுவாசிகள் அமைதியாக இருக்கிறார்களென்றும், அவர்களுடைய சபைக்குப் பிரச்சனை எதுவுமில்லாமல், அங்குள்ள சபை வளர்ந்து வருகிறது என்றும், விசுவாசிகள் எண்ணிக்கையில் விருத்தியடைகிறார்கள் என்றும் சவுல் கேள்விப்படுகிறான். அவர்களை உபத்திரவப்படுத்தி அவர்களுடைய சமாதானத்தைக் குலைத்துப்போட வேண்டுமென்று தீர்மானம்பண்ணுகிறான்.

சவுல் தான் கண்டுபிடிக்கிற விசுவாசிகளை கட்டி எருசலேமுக்குக் கொண்டுவரும்படி தமஸ்குவிலுள்ள ஜெப ஆலயங்களுக்குப் பிரதான ஆசாரியரிடத்தில் நிருபங்களைக் கேட்டு வாங்கிக்கொள்கிறான். பிரதான ஆசாரியன் விசுவாசிகளைத் துன்பப்படுத்தாமல் அமைதியாக இருக்கிறான். விசுவாசிகளின் எண்ணிக்கை பெருகினாலும், சபை விருத்தியடைந்தாலும் பிரதான ஆசாரியன் கவலைப்படவில்லை. அதற்காக அவன் மனம் கலங்கவுமில்லை. ஆனால் தமஸ்குவில் ஏற்பட்டிருக்கும் ஆவிக்குரிய எழுப்புதலை சவுலால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. சவுல் ஒரு வாலிபன். பிரதான ஆசாரியன் வயதில் முதிர்ந்தவன். முதியவர்களைவிட வாலிபர்களும் இளைஞர்களும் தங்களுடைய நோக்கத்தை நிறைவேற்றுவதில் அதிக வைராக்கியமாய் இருப்பார்கள்.

வேதபாரகரும் பரிசேயரும் யூதமார்க்கத்தில் புதிதாய்ச் சேர்ந்திருக்கிறவர்களுக்கு, மதவெறியைக் கற்றுக்கொடுத்து, அவர்களைப் புறஜாதியாருக்கு விரோதமாகத் திருப்பி பயிற்சி கொடுக்கிறார்கள். பாரம்பரியமாக யூதமார்க்கத்தில் இருப்போரைவிட, பிற மதங்களிலிருந்து யூதமார்க்கத்திற்கு வந்திருக்கிறவர்கள், யூதமார்க்கத்தின் பிரமாணங்களில் பக்தி வெறியோடிருக்கிறார்கள். இவர்களுடைய பக்திவைராக்கியம் மற்றவர்களைவிட அதிகமாயிருக்கிறது.

தமஸ்குவிலுள்ள விசுவாசிகளைக் கட்டுப்படுத்தவேண்டுமென்று சவுல் பிரதான ஆசாரியனிடம் முறையிடுகிறான். அவர்கள் ஒரு குழு அமைத்து, இந்தப் பிரச்சனை பற்றி விவாதித்து, சவுலை தமஸ்குவுக்கு அனுப்புகிறார்கள். தமஸ்குவிலுள்ள ஜெப ஆலயங்களுக்கு நிருபங்களையும் சவுல் மூலமாகக் கொடுத்து அனுப்புகிறார்கள். தமஸ்குவில் கிறிஸ்துவின் சீஷர்கள் யாரையாவது கண்டுபிடித்தால் அவர்களைக் கட்டி எருசலேமுக்குக் கொண்டு வரும் அதிகாரம் சவுலுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. விசுவாசிகள் புருஷராகயிருந்தாலும், ஸ்திரீகளாகயிருந்தாலும், வித்தியாசம் பாராமல் சவுல் அவர்களைக் கட்டி எருசலேமுக்குக் கொண்டுவரலாம்.

இயேசுகிறிஸ்துவை கர்த்தரென்று விசுவாசித்து அறிக்கை செய்கிறவர்களெல்லோரும் தேவதூஷணம் சொல்லுகிறவர்களென்று சவுல் தீர்மானம் செய்திருக்கிறான். அப்படிப்பட்டவர்களுக்கு யூதருடைய பிரமாணத்தின்படி தண்டனை கொடுக்கவேண்டும். அவர்கள் புருஷராகயிருந்தாலும் ஸ்திரீகளாகயிருந்தாலும் அவர்களைத் தண்டிக்கவேண்டும். தமஸ்குவில் அவர்களைத் தண்டிப்பதற்குப் பதிலாக, எருசலேமுக்கு அவர்களைக் கட்டி இழுத்துவந்து, சிறைச்சாலையில் காவல் வைக்கவேண்டுமென்று சவுல் தீர்மானம் செய்திருக்கிறான்.

கிறிஸ்துவின் சீஷர்களுக்கு "இந்த மார்க்கத்தார்" என்னும் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்து தம்மைப்பற்றிச் சொல்லும்போது "நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்" என்று சொல்லியிருக்கிறார். கிறிஸ்துவின் சீஷர்கள் அக்காலத்தில் அவரை "வழி" என்று அழைப்பது வழக்கம். அவர்கள் தங்களைப்பற்றிக் குறிப்பிடும்போது, தங்களை "வழியைச் சேர்ந்தவர்கள்" என்று சொல்லுவது வழக்கம். "வழியைச் சேர்ந்தவர்கள்" என்னும் வார்த்தைக்கு "இயேசுகிறிஸ்துவைச் சேர்ந்தவர்கள்" என்பது பொருள்.

யூதேயா தேசத்தில் ஏராளமான ஜெப ஆலயங்கள் உள்ளன. எருசலேமிலுள்ள ஆலோசனைச்சங்கத்தார் இந்த ஜெப ஆலயங்கள் அனைத்தையும் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து ஆளுகை செய்கிறார்கள். ஜெப ஆலயங்கள்மீது இவர்களுக்கு சர்வ அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையினால் பிரதான ஆசாரியரின் நிருபம் மிகவும் அதிகாரமுள்ளது.

சவுல் விசுவாசிகளெல்லோரையும் துன்புறுத்தவேண்டுமென்று தீர்மானம் செய்திருக்கிறான். ஸ்திரீகள் பலவீனர்களாக இருந்தாலும் அவர்களையும் விட்டு வைக்கவில்லை. சவுலின் கண்களில் கிருபையோ, தயவோ இரக்கமோ இல்லை. சீஷர்களைக் கொலைசெய்யவேண்டுமென்னும் வெறி மாத்திரமே அவனுடைய கண்களில் நிறைந்திருக்கிறது. குற்றவாளிகளைத்தான் கட்டி இழுத்துவருவார்கள். சவுலோ விசுவாசிகளைக் குற்றவாளிகளாகப் பாவிக்கிறான். ஆகையினால் அவர்களைக் கட்டி இழுத்து வரும்படி நிருபங்களைப் பெற்றுக்கொள்கிறான்.

கிறிஸ்துவின் சீஷர்களைத் துன்பப்படுத்துவதற்கு சவுல் ஆயத்தமாகயிருக்கிறான். கர்த்தரோ தம்முடைய கிருபையினால் அவனைச் சந்தித்து, அவனை மாற்றுவதற்கு ஆயத்தமாயிருக்கிறார். அவனுடைய உள்ளத்தில் மிகப்பெரிய மாற்றத்தை உண்டுபண்ண கர்த்தர் சித்தமுள்ளவராகயிருக்கிறார். சவுல் இப்போது மகா பாவியாக இருக்கிறான். ஆனாலும் இவனையும் இரட்சிப்பது கர்த்தருடைய சித்தமாயிற்று.

ஒருவன் எப்பேற்பட்ட பாவியாக இருந்தாலும் கர்த்தர் அவனை மன்னிப்பதற்கு கிருபை மிகுந்தவராக இருக்கிறார். நம்முடைய பாவம் எவ்வளவு பெரியதாக இருந்தாலும் கர்த்தர் தம்முடைய கிருபையினால் நம்முடைய பாவங்களை மன்னிக்கிறார். கிருபையின் தேவனானவர் சவுலுக்குத் தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் காண்பிக்கிறார்.

வானத்திலிருந்து ஒரு ஒளி

அவன் பிரயாணமாய்ப் போய், தமஸ்குவுக்குச் சமீபித்தபோது, சடிதியிலே வானத்திலிருந்து ஒரு ஒளி அவனைச் சுற்றி பிரகாசித்தது; (அப் 9:3)

கர்த்தருடைய சீஷரைப் பயமுறுத்திக் கொலைசெய்யும்படி சவுல் பிரயாணமாய்ப் போய், தமஸ்குவுக்குச் சமீபித்து வருகிறான். அங்கு கர்த்தராகிய இயேசுகிறிஸ்து அவனை வழியில் சந்திக்கிறார். சபையில் மட்டும்தான் ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படும் என்று விதிமுறை எதுவுமில்லை. கர்த்தர் எந்த இடத்தில் வேண்டுமானாலும் ஆத்துமாக்களை சந்தித்து இரட்சிப்பார். சவுல் பிரயாணம்பண்ணிக் கொண்டிருக்கும்போது வழியில் இரட்சிக்கப்படுகிறான். பரிசுத்த ஆவியானவர் காற்றைப்போன்றவர். அவர் தமக்குப் பிரியமான திசையில் வீசுகிறவர்.

சவுல் தன்னுடைய பிரயாணத்தில் தமஸ்குவுக்குச் சமீபமாய் வந்துவிடுகிறான். அவனுடைய பிரயாணம் முடிவுபெறப்போகிறது. புறஜாதியாருக்கு அப்போஸ்தலனாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் சவுல், புறஜாதியாருடைய தேசத்தில் இரட்சிக்கப்படுகிறான். கர்த்தர் சவுலை தமஸ்குவுக்கு அருகாமையிலுள்ள சாலையில் சந்தித்து அவனை இரட்சிக்கிறார்.

சவுல் தமஸ்குவுக்கு அருகாமையில் வரும்போது அவனுடைய இருதயம் முழுவதும் வஞ்சகத்தினாலும், துன்மார்க்கத்தினாலும், கர்த்தருடைய சீஷருக்கு விரோதமான கோபவெறியினாலும் நிறைந்திருக்கிறது. தமஸ்குவிலுள்ள விசுவாசிகளை உபத்திரவப்படுத்த வேண்டும் என்னும் ஆசை அவனுடைய உள்ளத்தில் நிரம்பியிருக்கிறது. சவுல் பாவம் நிரம்பினவனாக, தன் பாவத்தின் உச்சநிலையிலிருக்கிறான்.

கர்த்தர் பல சமயங்களில் பாவிகளைச் சந்திக்கும்போது, அவர்கள் தங்கள் பாவத்தின் மோசமான உச்சநிலையிலிருக்கும்போது அவர்களைச் சந்தித்து, தமது கிருபையைக் காண்பிக்கிறார். தேவனுடைய இரக்கத்திற்கும், மனஉருக்கத்திற்கும், அவருடைய வல்லமைக்கும் இப்படிப்பட்ட சம்பவங்கள் சாட்சியாக இருக்கிறது.

தமஸ்குவிலுள்ள விசுவாசிகளைப் பயமுறுத்திக் கொலைசெய்ய வேண்டுமென்று எருசலேமிலுள்ள ஆலோசனைச்சங்கத்தார் தீர்மானம் செய்திருக்கிறார்கள். அவர்களுடைய ஆணை நிறைவேறப்போகிற வேளை வந்திருக்கிறது. ஆனால் கர்த்தரோ தம்முடைய பிள்ளைகளுக்கு விரோதமான ஆணையை முறித்துப்போடுகிறார். துன்மார்க்கரின் கைகளிலிருந்து கர்த்தர் தம்முடைய பிள்ளைகளைப் பாதுகாக்கிறார்.

தமஸ்குவிலுள்ள விசுவாசிகள் சமுதாயத்தில் சாதாரண அந்தஸ்தில் இருக்கிறவர்கள். அவர்கள் பிரபுக்களோ அல்லது ஐசுவரியவான்களோ அல்ல. தம்முடைய பிள்ளைகள் தரித்திரராக இருந்தாலும், கர்த்தர் தம்முடைய கிருபையின் ஐசுவரியத்தை அவர்களுக்குத் தாராளமாக வெளிப்படுத்துகிறார்.

தங்களைக் கொலைசெய்யும் கொலைவெறியோடு, சவுல் தங்களுடைய பட்டணத்திற்கு வந்துகொண்டிருக்கிறான் என்னும் செய்தி, தமஸ்குவிலுள்ள விசுவாசிகளுக்குத் தெரிந்திருக்கிறது. விசுவாசிகளெல்லோரும் பயத்தோடும் கலக்கத்தோடும் இருக்கிறார்கள்.

அனனியா கர்த்தரிடத்தில் சவுலின் வருகையைப்பற்றி இவ்வாறு குறிப்பிடுகிறான். "ஆண்டவரே, இந்த மனுஷன் எருசலேமிலுள்ள உம்முடைய பரிசுத்தவான்களுக்கு எத்தனையோ பொல்லாங்குகளைச் செய்தானென்று அவனைக்குறித்து அநேகரால் கேள்விப்பட்டிருக்கிறேன். இங்கேயும் உம்முடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிற யாவரையுங் கட்டும்படி அவன் அவன் பிரதான ஆசாரியர்களால் அதிகாரம் பெற்றிருக்கிறானே" (அப் 9:13,14) என்று சொல்லுகிறான்.

தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு வரும் உபத்திரவங்களிலிருந்து, பல்வேறு உபாயங்கள் மூலமாக, அவர்களை மீட்டுக்கொள்கிறார். தம்முடைய பிள்ளைகளைப் பாதுகாக்கிறார். சத்துருக்களின் கண்களுக்குத் தம்முடைய பிள்ளைகளை மறைத்துக்கொள்கிறார். சில சமயங்களில் கர்த்தருடைய பரிசுத்தவான்களைத் துன்பப் படுத்துகிறவர்களின் உள்ளத்தில் மனமாற்றத்தை உண்டுபண்ணுகிறார். அப்படிப்பட்ட சம்பவம்தான் சவுலுக்கு உண்டாயிற்று.

கர்த்தர் தமஸ்குவிலுள்ள தம்முடைய பரிசுத்தவான்கள் மீது இரக்கம் காண்பிக்கிறார். அதே சமயத்தில் அவர்களைத் துன்பப்படுத்துவதற்காக கொலைவெறியோடு வந்திருக்கும் சவுலின்மீதும் இரக்கம் காண்கிறார்.

நாம் பாவம் செய்வதைக் கர்த்தர் தடுக்கிறாரென்றால் அது அவருடைய கிருபைக்கு அடையாளம். நம்மீது அவர் வைத்திருக்கும் அன்புக்கும் இரக்கத்திற்கும் அடையாளம். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம், கர்த்தர் நம்முடைய ஜீவியத்தில் நடத்துகிற ஒவ்வொரு காரியத்தையும் தியானித்துப் பார்த்து, நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் முன்னேறிச் செல்லவேண்டும்.

இயேசுகிறிஸ்து சவுலுக்குத் தம்முடைய மகிமையில் தரிசனங்கொடுக்கிறார். "வானத்திலிருந்து ஒரு ஒளி சவுலைச் சுற்றி பிரகாசித்தது" என்று எழுதப்பட்டிருக்கிறது. இது சாதாரண ஒளியல்ல. அந்த ஒளியில் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இருக்கிறார் (அப் 9:17). இந்த ஒளி சடுதியிலே தோன்றிற்று. கர்த்தர் பல சமயங்களில் நம்முடைய ஆத்துமாக்களில் சடுதியாய்க் கிருபை நடப்பிக்கிறார். இதனால் நமக்கு ஆச்சரியமுண்டாகிறது. தேவனிடத்திலிருந்து நன்மையான காரியங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்னும் ஆவலும் உண்டாகிறது.

இந்த ஒளி வானத்திலிருந்து உண்டாயிற்று. ஒளி உண்டான வேளை மத்தியான வேளையாகும். இந்த ஒளி சூரியனுடைய பிரகாசத்திலும் அதிக பிரகாசமான ஒளியாக இருக்கிறது. இந்த ஒளி வானத்திலிருந்து சவுலையும் அவனுடனேகூட பிரயாணம் பண்ணினவர்களையும் சுற்றிப் பிரகாசிக்கிறது (அப் 26:13). மத்தியான வேளையாக இருந்தாலும், சூரியனின் பிரகாசத்தைவிட, வானத்திலிருந்து உண்டான ஒளியானது அதிக பிரகாசமாகயிருக்கிறது.

இந்த ஒளி சவுலைச் சுற்றிலும் பிரகாசிக்கிறது. இது அவனுடைய முகத்தில் மாத்திரம் படுமாறு பிரகாசிக்கவில்லை. அவனைச் சுற்றிலுமுள்ள எல்லா பக்கங்களிலும் ஒளி பிரகாசிக்கிறது. சாத்தான் ஓர் ஆத்துமாவிற்குள் இருட்டில் வருகிறான். யாருக்கும் தெரியாமல் ரகசியமாய்த் திருடனைப்போல இருட்டில் வந்து, ஒரு ஆத்துமாவிற்குள் புகுந்து, அதைத் தன் வசப்படுத்திக்கொள்கிறான். ஆனால் இயேசுகிறிஸ்துவோ நம்முடைய ஆத்துமாவிற்குள் வெளிச்சத்தில் வருகிறார். அவர்தாமே இந்த உலகத்திற்கு ஒளியாகவும் வெளிச்சமாகவும் இருக்கிறார். இயேசுகிறிஸ்து "வெளிச்சம் உண்டாகக்கடவது" என்று சொல்லி வெளிச்சத்தை உண்டாக்கினார். அவர் வெளிச்சத்தின் தேவனாயிருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் பிரசன்னம் இருக்கிற இடத்தில் இருள் இருக்காது.

சவுலே சவுலே

அவன் தரையிலே விழுந்தான். அப்பொழுது: சவுலே, சவுலே நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய் என்று தன்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டான் (அப் 9:4).

சவுல் தமஸ்குவுக்குச் சமீபித்தபோது, சடிதியிலே வானத்திலிருந்து ஒரு ஒளி அவனைச் சுற்றிப் பிரகாசித்தது. அவன் தரையிலே விழுந்தான். சவுலோடுகூட வந்திருந்த எல்லோரும் தரையிலே விழுந்தார்கள் (அப் 26:14). மற்றவர்கள் கீழே விழுந்தாலும் கர்த்தர் சவுலைச் சந்திக்கவேண்டுமென்று விசேஷித்த வழியில் சித்தங் கொண்டிருக்கிறார். கர்த்தருடைய பிரசன்னம் சவுலைச் சுற்றிலும் ஒளியாகப் பிரகாசிக்கிறது.

கர்த்தருடைய வெளிப்பாடுகள் நம்மைத் தாழ்மைப்படுத்தும். அவருடைய பரிசுத்தமான வெளிப்பாடுகளுக்கு முன்பாக நாம் தரையில் பணிந்து அவரைத் தொழுதுகொள்வோம். நம்முடைய ஆத்துமாவை அவருடைய பிரசன்னத்திற்கு முன்பாகத் தாழ்த்துவோம். கர்த்தர் யாரையெல்லாம் உயர்த்தவேண்டுமென்று சித்தங்கொண்டிருக்கிறாரோ, அவர்களை அவர் முதலாவதாகத் தாழ்த்துகிறார். கர்த்தர் நம்மைப் பயன்படுத்துவதற்கு முன்பாக நாம் அபாத்திரர் என்பதை நமக்கு உணர்த்துகிறார். கர்த்தருடைய கிருபையில்லாமல் நம்மால் ஒன்றும் செய்யமுடியாது என்பதைத் தெளிவுபடுத்துகிறார். நமக்கு உணர்த்திய பின்பே கர்த்தர் தம்முடைய ஊழியத்தில் நம்மைப் பயன்படுத்துகிறார்.

சவுல் தரையிலே விழுந்தபோது கர்த்தருடைய சத்தத்தைக் கேட்கிறான். தரையில் சவுலும் அவனோடுகூட வந்திருந்த அனைவரும் விழுந்து கிடக்கிறார்கள். சவுலோடு கூடவந்திருக்கிறவர்களும் அந்தச் சத்தத்தைக் கேட்கிறார்கள். அந்தச் சத்தமோ சவுலைப் பிரத்தியட்சமாகக் குறிப்பிட்டு பேசுகிறது. சவுலோடு கூடவந்திருக்கிறவர்கள் சத்தத்தைக் கேட்கிறார்கள். ஆனால் அந்த வார்த்தையின் அர்த்தத்தைப் புரிந்துகொள்ளவில்லை. கர்த்தர் சவுலுடனே பேசுகிறார். சவுலுடன் கூடவந்தவர்கள் அவனுடன் பேசினவருடைய சத்தத்தையோ கேட்கவில்லை (அப் 22:9). கர்த்தர் சவுலிடம் "சவுலே சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்" என்று கேட்கிறார்.

சவுல் வானத்திலிருந்து ஒரு ஒளி தன்னைச் சுற்றிலும் பிரகாசிப்பதையும் காண்கிறான். அதோடு வானத்திலிருந்து அவனுடனே சொல்லுகிற சத்தத்தையும் கேட்கிறான். தேவனுடைய வெளிப்பாடுகள் ஊமைப் படம்போல பேசமாட்டாமல் இருக்காது. தேவன் தம்முடைய வெளிப்பாடுகளைப் பிரத்தியட்சமாகவும் வல்லமையாகவும் வெளிப்படுத்துகிறார். தம்முடைய எல்லா நாமத்தைவிட தேவன் தம்முடைய வார்த்தையை உயர்த்துகிறார். ஏனெனில் கர்த்தர் வார்த்தையாக இருக்கிறார். தாம் சொன்ன வார்த்தையை நிறைவேற்றுவதற்கு கர்த்தர் உண்மையுள்ளவராக இருக்கிறார். கர்த்தர் சொன்னது நிறைவேறும்.

சவுல் சத்தத்தைக் கேட்கிறான். விசுவாசம் கேள்வியினால் வரும். அவனோடு பேசின சத்தம் யாரோ பேசின சத்தமல்ல. அது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சத்தம். இயேசுகிறிஸ்துவிடமிருந்து வரும் எல்லா வார்த்தைகளும் நமக்குப் பிரயோஜனமுள்ளதாகவே இருக்கும். நம்முடைய இருதயத்திற்குள் இயேசுகிறிஸ்துவின் சத்தம் மாத்திரமே உட்பிரவேசிக்கும். மற்ற சத்தங்களெல்லாம் நம்முடைய காதுகள் வழியாக மாத்திரமே பிரவேசிக்கக்கூடியது. இயேசுகிறிஸ்து மாத்திரமே நம்முடைய இருதயத்தோடு நேரடியாகப் பேசக்கூடியவர்.

இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகள் சவுலின் இருதயத்தைத் தட்டி எழுப்புகிறது. கர்த்தர் அவனை "சவுலே சவுலே" என்று பெயர் சொல்லி அழைக்கிறார். அவனுடைய பெயரை இரண்டுமுறை கூப்பிடுகிறார். அவனுடைய பெயரைச் சொல்லி கூப்பிடுவதினால், இயேசுகிறிஸ்து அவனுடைய மனச்சாட்சியோடு பேசுகிறார். அவனுடைய மனச்சாட்சியில் உணர்த்துகிறார். தன்னோடு பேசுகிறவர் யார் என்பதை அறிந்துகொள்ளும் ஆர்வத்தை அவனுக்குள் கொடுக்கிறார்.

கர்த்தர் பல சமயங்களில் தம்முடைய ஊழியக்காரர்கள் மூலமாகப் பொதுவாகப் பேசுகிறார். கர்த்தருடைய வார்த்தைகளையும், வாக்குத் தத்தங்களையும் நமக்குச் சொந்தமாக்கிக் கொள்ளும்போது, அவை நம்முடைய ஆத்துமாவிற்கு பிரயோஜனமுள்ளதாக இருக்கும். கர்த்தருடைய வார்த்தைகள் நம்மை ஆசீர்வதிக்கும். கர்த்தருடைய வார்த்தைகளை நமக்குச் சொந்தமாக்கிக் கொள்ளும்போது, அவர் நம்மை பெயர் சொல்லி அழைத்து, அவர் நம்மோடு அந்த வார்த்தைகளைப் பேசுகிறார் என்று விசுவாசிக்கவேண்டும்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சவுலைக் கூப்பிடும்போது, "சவுலே, சவுலே" என்று இரண்டுமுறை அவனுடைய பெயரைச் சொல்லி அழைக்கிறார். கர்த்தர் சவுலின்மீது வைத்திருக்கும் அன்பையும் கிருபையையும், கரிசனையையும் இது வெளிப்படுத்துகிறது. சவுல் மனந்திரும்பி இரட்சிக்கப்பட வேண்டுமென்று இயேசுகிறிஸ்து பிரியப்படுகிறார். அவனுடைய பெயரை வாஞ்சையோடு கூப்பிடுகிறார். அவன் மிகப்பெரிய ஆபத்தில் சிக்கிக்கொள்ளப்போகிறான். அந்த ஆபத்திலிருந்து அவனைத் தடுத்து நிறுத்தி, அவனைக் காப்பாற்றுவதற்காக, கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, அவனுடைய பெயரை இரண்டுமுறை கூப்பிட்டு, அவனைப் பரிவோடு எச்சரிக்கிறார். கர்த்தர் கூப்பிடும் சத்தத்திற்குச் செவிகொடுக்கவில்லையென்றால், சவுல் ஆபத்தின் பள்ளத்தில் விழுந்துவிடுவான்.

இயேசுகிறிஸ்து சவுலைப் பெயர்சொல்லி அழைத்து, "நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்" என்று கேட்கிறார். கர்த்தர் சவுல்மீது குற்றம் சுமத்துகிறார். கர்த்தர் சவுலை ஒரு பரிசுத்தவானாக மாற்றப்போகிறார். அதற்கு முன்பாக தான் ஒரு பாவியென்பதை சவுல் உணரவேண்டும். தனக்குள் பாவமும் துன்மார்க்கமும் நிறைந்திருப்பதை சவுல் இதுவரையிலும் பார்த்ததில்லை. இப்போது கர்த்தர் அவனுடைய இருதயத்தைப் பார்க்கவைக்கிறார். தேவனுக்கு விரோதமாக அவனுடைய இருதயத்திலிருக்கும் துர்ச் சிந்தனைகளையும், தேவனுக்கு விரோதமாக அவன் செய்கிற துர்க்கிரியைகளையும் கர்த்தர் அவனுக்கு வெளிப்படுத்திக் காண்பிக்கிறார்.

நம்முடைய பாவங்களிலிருந்து நாம் இரட்சிக்கப்படுவதற்கு முன்பாக, நாம் ஒரு பாவியென்பதை உணரவேண்டும். கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக நம்மைத் தாழ்த்தவேண்டும். நம்முடைய பாவத்தைக்குறித்துக் குற்றவுணர்வு நமக்குள் உண்டாகவேண்டும். சவுலிடம் காணப்படுகிற மிகப்பெரிய பாவத்தை கர்த்தர் அவனுக்கு உணர்த்துகிறார். ஆனால் அவனோ, தான் செய்கிறது கர்த்தருக்கு முன்பாக நீதியான செயல் என்று, தனக்குத்தானே நினைத்துக் கொண்டிருக்கிறான். யூதருடைய பிரமாணத்தின் பிரகாரம் சவுல் தன்னை நீதிமானாகக் காண்பித்துக்கொள்கிறான்.

சவுல் இயேசுகிறிஸ்துவைத் துன்பப்படுத்துகிறான். "சவுல் துன்பப்படுத்துகிறான்" என்னும் குற்றச்சாட்டை கர்த்தர் அவன்மீது சுமத்துகிறார். சவுலின் பாவத்தைக் கர்த்தர் மிகவும் அன்புடன் வெளிப்படுத்துகிறார். சவுல் வேதவாக்கியத்தில் தேறினவன். நற்குணமுள்ளவன். கர்த்தருக்காக ஊழியம் செய்யவேண்டியவன். ஆனால் கிறிஸ்துவின் சீஷர்களை அவன் துன்பப்படுத்துகிறான். தேவனை மகிமைப்படுத்த வேண்டியவன். ஆனால் சவுலோ இயேசுகிறிஸ்துவைத் துன்பப்படுத்துகிறான்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சவுலுக்காகவும் சிலுவையில் மரித்தார். அவனுக்காகவும் பாடுகளை சகித்துக்கொண்டார். துன்பப்பட்டார். ஆனால் இந்த சவுலோ இயேசுகிறிஸ்துவை இன்னும் துன்பப்படுத்திக் கொண்டிருக்கிறான். தன்னுடைய பாவத்தை சவுல் உணரவில்லை. பாவத்தில் தொடர்ந்து ஜீவிக்கிறான். கிறிஸ்துவின் சீஷர்களை இன்னும் துன்பப்படுத்துகிறான். இப்போதுகூட தமஸ்குவிலுள்ள பரிசுத்தவான்களைக் கட்டி எருசலேமுக்குள் கொண்டு போகும்படியாகத்தான் இங்கு பிரயாணமாக வந்திருக்கிறான். துன்மார்க்கமான காரியங்களைத் திட்டமிட்டு செய்கிறவர்கள், துன்மார்க்கராகவே இருப்பார்கள்.

கர்த்தர் சவுலிடம் சொல்லும்போது "சவுலே சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்" என்று சொல்லுகிறார். இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகள் சவுலைக் குற்றப்படுத்துகிற வார்த்தைகளாகும். தம்முடைய விசுவாசிகளைத் துன்பப்படுத்துகிறவர்கள், தம்மையே துன்பப்படுத்துவதாக கர்த்தர் காண்கிறார். தேவன் நம்மை தம்முடைய கண்ணின் மணியைப்போல பாதுகாக்கிறார். நம்மைத் தொடுகிறவர்கள் கர்த்தரைத் தொடுகிறார்கள். பாவிகளுடைய பாவங்கள் கர்த்தருடைய பார்வைக்கு மிகுந்த பாரமாகவும் அருவருப்பாகவும் இருக்கிறது.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சவுலிடம் ஏனோதானோவென்று பேசாமல், மிகவும் தீர்மானமாகப் பேசுகிறார். கர்த்தர் சவுலிடம் "ஏன் துன்பப்படுத்துகிறாய்" என்று விவாதத்திற்கு இடமில்லாமல் கேள்வி கேட்கிறார். நாமும் நம்மைப் பார்த்து இப்படிப்பட்ட கேள்விகளைக் கேட்டுக்கொள்ளவேண்டும். நாம் பாவம் செய்வோமென்றால், "இந்தப் பாவத்தை நாம் ஏன் செய்யவேண்டும்" என்று நமக்குள் கேள்வி கேட்கவேண்டும். பாவத்தைப்பற்றிய சிந்தனை எதுவுமில்லாமல் நாம் பாவம் செய்தால், நாம் பாவத்தைக் குறித்து கவலைப்படமாட்டோம். தாராளமாகப் பாவம் செய்துகொண்டேயிருப்போம்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சவுலிடம் "நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்" என்று கேட்கிறார். கிறிஸ்துவின் சீஷர்கள் ஏழைகள். பலவீனமானவர்கள். சமுதாயத்தில் முக்கியமானவர்களல்ல. மிகவும் சாதாரணமானவர்கள். அவர்களைத் துன்பப்படுத்தினால், தன்னைக் கேள்வி கேட்பதற்கு யாருமேயில்லை என்று சவுல் இறுமாப்பாக இருக்கிறான். ஆனால் கர்த்தருடைய பிள்ளைகளைத் துன்பப்படுத்துகிற சவுலை நோக்கி, பரலோகமே அவனுக்கு விரோதமாக எதிர்த்து வருகிறது.

கர்த்தருடைய பிள்ளைகள் கஷ்டப்படும்போது கர்த்தர்தாமே கஷ்டப்படுவதாக நமக்காக வழக்காடுகிறார். நாம் ஏழைகளாக இருக்கலாம். சாதாரண ஜனங்களாக இருக்கலாம். கர்த்தர் நம் பக்கத்திலிருக்கிறார். நம்மைத் துன்பப்படுத்துகிறவர்கள் கர்த்தரையே துன்பப்படுத்துகிறார்கள். நமக்கு எதிராக செய்யப்படும் தப்பிதங்களை, தமக்கு எதிராகச் செய்யப்படும் தப்பிதங்களாகவே கர்த்தர் கணிக்கிறார்.

ஆண்டவரே நீர் யார்

அதற்கு அவன்: ஆண்டவரே, நீர் யார், என்றான். அதற்குக் கர்த்தர்: நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே; முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம் என்றார் (அப் 9:5).

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து "சவுலே சவுலே" என்று அழைத்து அவனோடு பேசுகிறார். தன்னுடனே சொல்லுகிற சத்தத்தை சவுல் கேட்கிறான். ஆனால் பேசுவது யார் என்பது அவனுக்குத் தெரியவில்லை. சடிதியிலே வானத்திலிருந்து ஒரு ஒளி அவனைச் சுற்றிப் பிரகாசிக்கிறது. அவன் தரையிலே விழுந்து கிடக்கிறான். அப்பொழுது "சவுலே சவுலே" என்று கூப்பிடுகிற சத்தம் உண்டாயிற்று. அந்தச் சத்தத்தைக் கேட்டு சவுல் "ஆண்டவரே நீர் யார்" என்று கேட்கிறான்.

கர்த்தர் சவுலைப்பார்த்து "நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்" என்று கேட்கிறார். ஆனால் சவுலோ தன்மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டிற்கு பதில் எதுவும் சொல்லவில்லை. அவனுடைய மனச்சாட்சியே அவனுடைய குற்றத்தை அங்கீகரிக்கிறது. தேவன் நம்முடைய பாவங்களை உணர்த்தும்போது, நம்மால் அவருக்கு முன்பாக விவாதம்பண்ணிக்கொண்டிருக்க முடியாது. தேவன் நம்மை பாவியென்று நியாயந்தீர்க்கும்போது, நாம் பரிசுத்தவான்களென்று அவரோடு வாக்குவாதம்பண்ணமுடியாது. கர்த்தர் நம்மிடத்தில் ஆயிரம் குற்றச்சாட்டுக்களைக் கூறினாலும், அதில் ஒன்றைக்கூட நம்மால் மறுத்துப் பேச முடியாது.

இயேசுகிறிஸ்து நம்முடைய பாவங்களை உணர்த்தும்போது, அவர் தம்முடைய வல்லமையினால் நம்முடைய மனச்சாட்சியோடு பேசுகிறார். அவருடைய பரிசுத்தத்திற்கு முன்பாக நாம் அமைதியாகிவிடுவோம். நம்மால் பதில் சொல்லமுடியாது. நம்மை நாமே நீதிமான்களாகக் காண்பித்துக்கொள்ள முடியாது. கர்த்தர் நம்மைக் குற்றப்படுத்தும்போது நம்மால் சாக்குப் போக்குகள் எதையும் சொல்லமுடியாது.

இயேசுவைக் கிறிஸ்து என்று அறிக்கை செய்கிறவர்கள் தேவதூஷணம் சொல்லுகிறார்கள் என்று சவுல் விசுவாசிகள்மீது குற்றம் சுமத்தினான். ஆனால் அதே சவுலே இப்போது, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை "ஆண்டவரே" என்று அழைக்கிறான். தன்னை குற்றவாளியாகத் தீர்க்கிற நியாயாதிபதி யார் என்பதை அறிந்துகொள்ளவேண்டுமென்று சவுல் வாஞ்சையோடிருக்கிறான். மிகவும் தெளிவாகப் பேசுகிறான். "நீர் யார்" என்று கேட்கிறான்.

யூதமார்க்கத்தில் சவுல் தேறினவனாக இருந்தாலும், அவனுக்கு கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைக் குறித்து சரியான வெளிப்பாடு எதுவும் இதுவரையிலும் கிடைக்கவில்லை. இயேசுகிறிஸ்துவோடு அவனுடைய இருதயம் ஐக்கியமாக இல்லை. இப்போது தன்னோடு பேசுகிறவர் யார் என்பதைத் தெரிந்துகொண்டு, அவரோடு ஐக்கியமாக இருக்க விரும்புகிறான். அதற்காகவே, தன்னிடத்தில் "சவுலே சவுலே" என்று கூப்பிடுகிறவரைப் பார்த்து, "ஆண்டவரே நீர் யார்" என்று கேட்கிறான்.

ஒரு சிலர் பாவிகளாகயிருந்தாலும், அவர்கள் இயேசுகிறிஸ்துவை நோக்கிக் கூப்பிடும்போது, அவர்களும் இரட்சிக்கப்படுவதற்கு வாய்ப்புள்ளது. நம்முடைய ஆபத்து வேளைகளில் நாம் கர்த்தரை நோக்கிக் கூப்பிடவேண்டும். பாவிகள் தங்களுடைய பாவவாழ்க்கையில் மூழ்கியிருக்கும்போது, அவர்களும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை நோக்கிக் கூப்பிடவேண்டும். இயேசுகிறிஸ்து யார் என்பதை விசாரித்துத் தெரிந்துகொள்ளவேண்டும்.

சவுல் இயேசுகிறிஸ்துவிடம் "ஆண்டவரே நீர் யார்" என்று கேட்டவுடன் கர்த்தர் அவனுக்கு உடனடியாகப் பதில் சொல்லுகிறார். இயேசுகிறிஸ்து சவுலின்மீது மிகவும் கிருபையோடிருக்கிறார். தம்மை அவனுக்கு வெளிப்படுத்த வேண்டுமென்று வாஞ்சையோடிருக்கிறார். "நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே" என்று அவனிடத்தில் சொல்லுகிறார். இயேசுவின் பெயர் சவுலுக்கு இதுவரையிலும் கேள்விப்படாத பெயரல்ல. அவன் கேள்விப்பட்ட பெயர்தான். ஆனாலும் அவன் இயேசுகிறிஸ்துவைத் துன்பப்படுத்துகிறான். அவருடைய சீஷர்களை உபத்திரவப்படுத்துகிறான். சவுலுக்கு ஏற்கெனவே அறிமுகமான பெயரை கர்த்தர் அவனுக்கு மறுபடியும் வெளிப்படுத்துகிறார். "நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே" என்று அவனுக்குத் தம்முடைய பெயரை வெளிப்படுத்திக் கூறுகிறார்.

நாம் செய்கிற ஒவ்வொரு பாவத்தையும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமாகவே செய்கிறோம். தேவனுக்கு விரோதமாக நாம் பாவம் செய்கிறோம் என்னும் உணர்வு நம்முடைய உள்ளத்தில் வரும்போது, நம்முடைய இருதயம் உணர்வடையும். தேவனுக்கு முன்பாக நாம் நம்மைத் தாழ்த்துவோம். நம்முடைய ஆத்துமாவுக்கு இரட்சிப்பு வேண்டுமென்று தேவனிடத்தில் பணிவுடன் விண்ணப்பம் பண்ணுவோம். இயேசுகிறிஸ்து சவுலின் பாவத்தை உணர்த்துகிறார். அவன் தம்மைத் துன்பப்படுத்துவதாக கர்த்தர் அவனுக்கு வெளிப்படுத்துகிறார்.

தம்மைத் துன்பப்படுத்துகிற சவுலை கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மென்மையாக கடிந்துகொள்கிறார். "முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம்" என்று அவனுக்கு உணர்த்துகிறார். கிறிஸ்துவின் சீஷர்களைத் தன் கால்களால் உதைப்பதற்காக சவுல் தமஸ்குவுக்கு வந்திருக்கிறான். ஆனால் அவனோ கர்த்தருடைய பரிசுத்தவான்களை உதைக்கவில்லை, முள்ளில் உதைக்கிறான் என்று கர்த்தர் அவனுக்கு உணர்த்துகிறார். கர்த்தருடைய பிள்ளைகளைத் துன்பப்படுத்தினால் அவனுடைய மனச்சாட்சி துன்பமடையும். நாம் கர்த்தருக்கு விரோதமாகத் தொடர்ந்து பாவம் செய்து கொண்டேயிருப்போமென்றால், கர்த்தர் தம்முடைய வார்த்தையினாலும், வாதையினாலும் நம்மைக் கண்டித்து உணர்த்துவார். நாம் செய்கிற ஒவ்வொரு பாவமும் முள்ளின்மீது உதைப்பதுபோல நமக்கு வேதனையைத் தரும்.

நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்

அவன் நடுங்கித் திகைத்து: ஆண்டவரே, நான் என்னசெய்யச் சித்தமாயிருக்கிறீர் என்றான். அதற்குக் கர்த்தர்: நீ எழுந்து, பட்டணத்துக்குள்ளே போ, நீ செய்யவேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார் (அப் 9:6).

இயேசுகிறிஸ்துவின் வார்த்தையைக் கேட்டவுடன் சவுல் கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறான். கர்த்தருடைய வார்த்தை அவனை நடுங்கச் செய்கிறது. அவன் திகைக்கிறான். பரிசுத்த ஆவியானவரின் கிருபையினாலும் கிரியையினாலும், சவுல் தன்னுடைய பாவங்களைப்பற்றி உணர்த்தப்படுகிறான். சவுலின் ஆத்துமா விழிப்படைகிறது. கர்த்தருடைய வார்த்தை அவனுடைய ஆத்துமாவை நடுங்கித் திகைக்க வைக்கிறது. இயேசுகிறிஸ்து எங்கே இருக்கிறார் என்பது அவனுக்குத் தெரியவில்லை. ஆனால் தான் ஏதோ ஒரு புதிய உலகத்திலிருப்பதுபோல சவுல் நடுங்கி திகைக்கிறான்.

சவுல் தன்னிடத்தில் பேசுகிற இயேசுகிறிஸ்துவிடம் "ஆண்டவரே, நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்" என்று கேட்கிறான். இயேசுகிறிஸ்துவின் உபதேசம் தனக்குத் தேவையென்பதை சவுல் பணிவுடன் விண்ணப்பம் பண்ணுகிறான். சவுலின் உள்ளத்திலிருந்த பாவசிந்தனைகளை கர்த்தராகிய இயேசுகிறிஸ்து கண்டுபிடித்து வெளிப்படுத்தியிருக்கிறார். இப்போது அவர் அவனை சமாதானத்தின் பாதை வழியாகவும், இரட்சிப்பின் பாதை வழியாகவும் வழிநடத்துகிறார். நம்முடைய இரட்சிப்பின் வழியில் நாம் முன்னேறிச் செல்லும்போது நமக்கு இயேசுகிறிஸ்துவின் உபதேசம் தேவை. கிறிஸ்துவின் உபதேசத்தை வாஞ்சிக்கிறவர்களுடைய ஆத்துமாக்களில் தேவன் மெய்யாகவே நற்கிரியைகளைச் செய்ய ஆரம்பிக்கிறார்.

தமஸ்குவிலுள்ள விசுவாசிகளைத் துன்பப்படுத்துவதற்காக பவுல் பிரயாணமாக இங்கு வந்திருக்கிறான். கர்த்தரோ வழியில் அவனைச் சந்தித்திருக்கிறார். இப்போது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் ஆளுகைக்கு சவுல் தன்னை முழுவதுமாய் ஒப்புக்கொடுக்கிறான். அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் செல்ல ஆயத்தமாயிருக்கிறான். கர்த்தர் வழிநடத்தும் பாதையில் செல்ல சவுல் தீர்மானம்பண்ணுகிறான். தன்னோடு பேசுகிற இயேசுகிறிஸ்துவிடம் சவுல் கேட்ட முதலாவது கேள்வி "ஆண்டவரே நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்" என்பதுதான். இந்தக் கேள்வியோடு சவுலின் ஆவிக்குரிய ஜீவியம் ஆரம்பமாயிற்று.

சவுலின் உள்ளத்தில் மிகப்பெரிய மாற்றம் உண்டாயிற்று. அவனுடைய சுயசித்தம் நீங்கிப்போயிற்று. இப்போது இயேசுகிறிஸ்துவின் சித்தத்தின் பிரகாரம் செயல்படுவதற்கு சவுல் ஆயத்தமாயிருக்கிறான். கிறிஸ்துவின் சித்தமே சவுலின் சித்தமாயிற்று. அவருடைய சித்தம் என்ன என்பதை சவுல் தெரிந்துகொள்ள விரும்புகிறான். அதைப்பற்றி பிறரிடம் கேட்பதற்குப் பதிலாக, அவரிடமே "ஆண்டவரே நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்" என்று கேட்கிறான்.

கர்த்தர் சவுலின் விண்ணப்பத்தைப் பொறுமையோடு கேட்டு அவனை வழிநடத்துகிறார். "நீ எழுந்து, பட்டணத்திற்குள்ளே போ, நீ செய்ய வேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும்" என்று சொல்லுகிறார். இயேசுகிறிஸ்துவிடமிருந்து தெய்வீக ஆலோசனைகளையும், வழிநடத்துதல்களையும் பெற்றுக்கொள்வது நம்முடைய ஆத்துமாவிற்கு உற்சாகத்தைக் கொடுக்கும். சவுல் முழுவதுமாய் மனந்திரும்பியிருக்கிறானா என்பது தெரியவில்லை. விசுவாசிகளைத் துன்பப்படுத்துவதற்காக இங்கு வந்திருக்கிறான். அவர்களைத் துன்பப்படுத்தவேண்டுமா அல்லது அவர்களை அப்படியே விட்டுவிடவேண்டுமா என்பது சவுலுக்கு இன்னும் தெளிவாகத் தெரியவில்லை.

இயேசுகிறிஸ்து சவுலிடம் தம்மைப்பற்றி வெளிப்படுத்துகிறார். "நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே" என்று கூறுகிறார். சவுல் அமர்ந்திருந்து இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளைத் தியானித்துப் பார்க்கவேண்டும். எப்போது, எப்படி அவன் இயேசுகிறிஸ்துவைத் துன்பப்படுத்தினான் என்பதை சவுல் யோசித்துப் பார்க்கவேண்டும். இயேசு கிறிஸ்துவைத் துன்பப்படுத்தியதற்காக சவுல் மனந்திரும்பி, தன்னைத் தாழ்த்தவேண்டும். அப்போதுதான் பட்டணத்திற்குள்ளே போனால் அவன் செய்யவேண்டியது என்ன என்பது அவனுக்குத் தெரியவரும்.

சவுல் தமஸ்குவுக்குச் சமீபித்தபோது வானத்திலிருந்து ஒரு ஒளி அவனைச் சுற்றிப் பிரகாசித்தது. சவுல் தன்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்கிறான். இது தவிர கர்த்தர் தம்மைப்பற்றி சவுலுக்கு அதிகமாய் வெளிப்படுத்தவில்லை. ஒருவேளை சவுலின் ஊழியத்தைப்பற்றி இந்த இடத்தில் வெளிப்படுத்தினால், அது அவனுக்கு புரியுமோ புரியாதோ. சத்தியத்தை அவனால் தாங்கிக்கொள்ள முடியுமோ, முடியாதோ. கர்த்தர் சவுலைப்பற்றி நன்றாய் அறிந்து வைத்திருக்கிறார். ஆகையினால் தம்மைப்பற்றிய வெளிப்பாடுகளை கர்த்தர் சவுலுக்கு கொஞ்சம் கொஞ்சமாக வெளிப்படுத்திக் காண்பிக்கிறார். சவுலுக்கு மாத்திரமல்ல, கர்த்தருடைய பிள்ளைகளாகிய நம் எல்லோருக்குமே கர்த்தருடைய வெளிப்பாடுகள் கொஞ்சம் கொஞ்சமாகவே வெளிப்படுத்திக் காண்பிக்கப்படும்.

பிரமித்து நின்றார்கள்

அவனுடனேகூடப் பிரயாணம்பண்ணின மனுஷர்கள் சத்தத்தைக் கேட்டும் ஒருவரையுங் காணாமல் பிரமித்து நின்றார்கள் (அப் 9:7).

சவுல் தமஸ்குவிலுள்ள விசுவாசிகளைத் துன்பப்படுத்த பிரயாணப்பட்டு வருகிறபோது, அவனோடுகூட மேலும் சில மனுஷர்களும் பிரயாணமாய் வருகிறார்கள். இவர்கள் ஒருவேளை போர்சேவகர்களாக இருக்கலாம். தமஸ்குவுக்குச் சமீபித்த போது கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சவுலோடு பேசுகிறார். சவுலோடு கூடவருகிற மனுஷரும் அந்தச் சத்தத்தைக் கேட்கிறார்கள். அவர்களுக்குக் குழப்பம் உண்டாயிற்று. சத்தத்தை மாத்திரம் கேட்கிறார்கள். ஆனால் அவர்களால் ஒருவரையும் காணமுடியவில்லை. இதனால் அவர்கள் பிரமித்து நிற்கிறார்கள்.

சவுலோடு கூடவந்த மனுஷரில் யாராவது இரட்சிக்கப்பட்டார்களா என்பது தெரியவில்லை. அவர்கள் பிரகாசமான வெளிச்சத்தைப் பார்த்தார்கள். சத்தத்தைக் கேட்டார்கள். இப்போது பேச்சற்றவர்களாகப் பிரமித்து நிற்கிறார்கள். அவர்களுக்கு அருகாமையில் அற்புதங்களும் அடையாளங்களும் நடைபெற்றாலும், அவர்களுடைய ஆத்துமாவில் எந்த ஒரு மாற்றமும் உண்டாகவில்லை. தேவனுடைய கிருபையில்லாமல் ஆத்துமா இரட்சிக்கப்படாது. பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்யவில்லையென்றால் மனுஷருடைய ஆத்துமாவிற்கு இரட்சிப்பு உண்டாகாது.

சவுலையும் அவனோடுகூட பிரயாணம் பண்ணுகிற மனுஷரையும் சுற்றி ஒரு ஒளி பிரகாசிக்கிறது. அவர்களெல்லோருமே சத்தத்தைக் கேட்கிறார்கள். சவுல் மாத்திரமே "நீர் யார்" என்று கேட்கிறான். அவனுடனே கூட பிரயாணம்பண்ணின மனுஷர்களில் யாரும் "நீர் யார்" என்றோ, அல்லது "நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்" என்றோ கேள்வி கேட்கவில்லை. சவுல் மாத்திரமே இந்தக் கேள்வியைக் கேட்கிறான்.

சவுலோடுகூட பிரயாணம்பண்ணின மனுஷர் சத்தத்தை மாத்திரம் கேட்கிறார்கள். ஆனால் அவர்கள் ஒருவரையும் காணவில்லை. அவர்கள் சவுல் பேசுவதையும் கேட்கிறார்கள். ஆனால் சவுல் யாரோடு பேசுகிறான் என்பது அவர்களுக்குத் தெரியவில்லை. அங்கு அவர்கள் யாரையும் காணவில்லை. சவுலுக்குச் சொல்லப்பட்ட செய்தியும் அவர்களுக்குப் புரியவில்லை. அது அவர்களுக்கு வெறும் சத்தமாகவே கேட்கிறது.

சவுலோடுகூட தமஸ்குவுக்குப் பிரயாணம்பண்ணி வந்திருக்கிறவர்கள், விசுவாசிகளைத் துன்பப்படுத்துவதில் சவுலுக்கு உதவி செய்வதற்காக வந்திருக்கிறார்கள். ஆனால் இப்போதோ கர்த்தருடைய வல்லமை சவுலின்மீது வந்திறங்கியதற்கு அவர்கள் சாட்சிகளாக இருக்கிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகளைத் துன்பப்படுத்துவதற்காக வந்தவர்கள், கர்த்தருடைய வல்லமைக்குச் சாட்சிகளாகத் திரும்பிச் செல்கிறார்கள்.

புசியாமலும் குடியாமலும்

சவுல் தரையிலிருந்தெழுந்து, தன் கண்களைத் திறந்தபோது ஒருவரையுங் காணவில்லை. அப்பொழுது கைலாகு கொடுத்து, அவனைத் தமஸ்குவுக்குக் கூட்டிக்கொண்டுபோனார்கள். அவன் மூன்று நாள் பார்வையில்லாதவனாய்ப் புசியாமலும் குடியாமலும் இருந்தான் (அப் 9:8,9).

சவுல் பிரயாணமாய்ப் போய் தமஸ்குவுக்குச் சமீபித்தபோது, சடிதியிலே வானத்திலிருந்து ஒரு ஒளி அவனைச் சுற்றிப் பிரகாசித்தது. உடனே அவன் தரையிலே விழுந்தான். இப்போது சவுல் தரையிலிருந்து எழுந்திருக்கிறான். "நீ எழுந்து பட்டணத்திற்குள்ளே போ" என்று கர்த்தர் கட்டளையிட்ட பின்பே சவுல் எழுந்திருக்கிறான். தரையிலிருந்து எழுந்து சவுல் தன் கண்களைத் திறக்கிறான். அப்போது அவன் ஒருவரையும் காணவில்லை.

வானத்திலிருந்து ஒரு ஒளி அவனைச் சுற்றிப் பிரகாசித்திருக்கிறது. இது சாதாரண வெளிச்சமல்ல. இது இயேசுகிறிஸ்துவின் தரிசனமாகும். இந்தத் தரிசனத்தைக் கண்டபோது அவன் தரையிலே விழுந்து விடுகிறான். தரையிலிருந்து எழுந்து கண்களைத் திறந்து பார்க்கிறான். ஒருவரையும் காணவில்லை. பார்வையில்லாதவனாக இருக்கிறான்.

இயேசுகிறிஸ்துவின் முகத்தில் சவுல் தேவனுடைய மகிமையை விசுவாசத்தோடு காண்கிறான். தன்னோடு பேசுகிறது இயேசுகிறிஸ்துவே என்பதை சவுல் அறிந்துகொள்கிறான். விசுவாசமே எல்லாவற்றிற்கும் ஆதாரம். சவுல் பிரகாசமான ஒளியைக் காண்கிறான். தன்னோடு பேசுகிற சத்தத்தைக் கேட்கிறான். இயேசுகிறிஸ்துவை அவன் முகமுகமாகப் பிரத்தியட்சமாகத் தரிசிக்கவில்லை. பார்வையில்லாதவனாக இருக்கிறான். ஆனாலும் அவனுடைய மனக்கண்கள் விரிவாய்த் திறக்கப்படுகிறது. பிரகாசமுள்ளதாக இருக்கிறது.

"நீ எழுந்து பட்டணத்திற்குள்ளே போ" என்று தன்னுடன் சொன்ன இயேசுகிறிஸ்துவின் வார்த்தைக்கு சவுல் கீழ்ப்படிகிறான். அவன் பார்வையில்லாதவனாக இருப்பதினால், அவனோடே கூட பிரயாணம் பண்ணினவர்கள், அவனுக்குக் கைலாகுக் கொடுத்து அவனை தமஸ்குவுக்குக் கூட்டிக்கொண்டு போகிறார்கள்.

தமஸ்குவிலுள்ள விசுவாசிகளைக் கட்டி, சிறைப்பிடித்து எருசலேமுக்குக் கொண்டு வருவதற்காக சவுல் தமஸ்குவுக்கு வந்திருக்கிறான். ஆனால் கர்த்தரோ சவுலைச் சிறைப்பிடிக்கிறார். கர்த்தருடைய வல்லமையினால் கட்டப்பட்டவனாக சவுல் தமஸ்குவுக்குள் அழைத்துச் செல்லப்படுகிறான். விசுவாசிகளைச் சிறைப்பிடிக்க வந்தவன், இப்போது ஒரு சிறை கைதியைப்போல தமஸ்குவிற்குள் அழைத்துச் செல்லப்படுகிறான்.

சவுல் மூன்றுநாள் பார்வையில்லாதவனாய், புசியாமலும், குடியாமலும் இருக்கிறான். அவனுடைய ஆவிக்குரிய நிலமையைக் குறித்து அவனுக்குள் தெளிந்த சிந்தனையில்லை. ஆவிக்குரிய காரியங்களில் அவன் இருளிலிருப்பதுபோல இருக்கிறான். அவனுடைய பாவத்தினால் அவன் ஆவியும் ஆத்துமாவும் காயமடைந்திருக்கிறது. ஆவிக்குரிய வியாதியஸ்தனாக இருக்கிறான். மூன்றுநாட்களாக அவனால் புசிக்கவும் முடியவில்லை. குடிக்கவும் முடியவில்லை. சரீரப்பிரகாரமாகவும் பலவீனப்பட்டிருக்கிறான்.

அனனியாவும் சவுலும்
அப் 9 : 10-22

அப் 9:10. தமஸ்குவிலே அனனியா என்னும் பேருள்ள ஒரு சீஷன் இருந்தான். அவனுக்குக் கர்த்தர் தரிசனமாகி: அனனியாவே, என்றார். அவன்: ஆண்டவரே, இதோ, அடியேன் என்றான்.

அப் 9:11. அப்பொழுது கர்த்தர்: நீ எழுந்து நேர்த்தெருவு என்னப்பட்ட தெருவுக்குப் போய், யூதாவின் வீட்டிலே தர்சுபட்டணத்தானாகிய சவுல் என்னும் பேருள்ள ஒருவனைத் தேடு; அவன் இப்பொழுது ஜெபம்பண்ணுகிறான்;

அப் 9:12. அனனியா என்னும் பேருள்ள ஒரு மனுஷன் தன்னிடத்தில் வரவும், தான் பார்வையடையும்படி தன்மேல் கைவைக்கவும் தரிசனங்கண்டான் என்றார்.

அப் 9:13. அதற்கு அனனியா: ஆண்டவரே, இந்த மனுஷன் எருசலேமிலுள்ள உம்முடைய பரிசுத்தவான்களுக்கு எத்தனையோ பொல்லாங்குகளைச் செய்தானென்று அவனைக்குறித்து அநேகரால் கேள்விப்பட்டிருக்கிறேன்.

அப் 9:14. இங்கேயும் உம்முடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற யாவரையுங் கட்டும்படி அவன் அவன் பிரதான ஆசாரியர்களால் அதிகாரம் பெற்றிருக்கிறானே என்றான்.

அப் 9:15. அதற்குக் கர்த்தர்: நீ போ; அவன் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்து கொண்ட பாத்திரமாயிருக்கிறான்.

அப் 9:16. அவன் என்னுடைய நாமத்தினிமித்தம் எவ்வளவாய்ப் பாடுபடவேண்டுமென்பதை நான் அவனுக்குக் காண்பிப்பேன் என்றார்.

அப் 9:17. அப்பொழுது அனனியா போய், வீட்டுக்குள் பிரவேசித்து, அவன்மேல் கையை வைத்து: சகோதரனாகிய சவுலே, நீ வந்த வழியிலே உனக்குத் தரிசனமான இயேசுவாகிய கர்த்தர், நீ பார்வையடையும்படிக்கும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்படும்படிக்கும் என்னை அனுப்பினார் என்றான்.

அப் 9:18. உடனே அவன் கண்களிலிருந்து மீன் செதிள்கள் போன்றவைகள் விழுந்தது. அவன் பார்வையடைந்து, எழுந்திருந்து, ஞானஸ்நானம் பெற்றான்.

அப் 9:19. பின்பு அவன் போஜனம்பண்ணிப் பலப்பட்டான். சவுல் தமஸ்குவிலுள்ள சீஷருடனே சிலநாள் இருந்து,

அப் 9:20. தாமதமின்றி, கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று ஆலயங்களிலே பிரசங்கித்தான்.

அப் 9:21. கேட்டவர்களெல்லாரும் ஆச்சரியப்பட்டு: எருசலேமில் இந்த நாமத்தைத் தொழுது கொள்ளுகிறவர்களை நாசமாக்கி, இங்கேயும் அப்படிப்பட்டவர்களைக் கட்டிப் பிரதான ஆசாரியர்களிடத்திற்குக் கொண்டு போகும்படி வந்தவன் இவனல்லவா என்றான்.

அப் 9:22. சவுல் அதிகமாகத் திடன்கொண்டு, இவரே கிறிஸ்துவென்று திருஷ்டாந்தப்படுத்தி, தமஸ்குவில் குடியிருக்கிற யூதர்களைக் கலங்கப்பண்ணினான்.

இதோ, அடியேன்

தமஸ்குவிலே அனனியா என்னும் பேருள்ள ஒரு சீஷன் இருந்தான். அவனுக்குக் கர்த்தர் தரிசனமாகி: அனனியாவே, என்றார். அவன்: ஆண்டவரே, இதோ, அடியேன் என்றான் (அப் 9:10).

தன்னோடு பேசுகிற இயேசுகிறிஸ்துவிடம் சவுல் "ஆண்டவரே நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்" என்று கேட்கிறான். இயேசுகிறிஸ்துவின் பாதபடியில் சவுல் தன்னை ஒப்புக்கொடுக்கிறான். அப்போது கர்த்தர் அவனுடைய உள்ளத்தில் நன்மையான கிரியைகளைச் செய்ய ஆரம்பிக்கிறார். தம்மிடத்தில் வருகிற யாரையும் இயேசுகிறிஸ்து புறம்பே தள்ளுவதில்லை. நம்முடைய பாவங்கள் உணர்த்தப்படும்போது, நாம் தேவனிடத்தில் நம்முடைய பாவங்களை அறிக்கை செய்து பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அப்போது பாவத்தினால் உண்டாகும் குற்றவுணர்வுகளிலிருந்து நாம் இரட்சிக்கப்படுவோம். கர்த்தர் நமக்குச் சமாதானத்தையும் ஆறுதலையும் தருவார்.

கர்த்தர், சவுலைச் சந்திப்பதற்கு அனனியா என்னும் பேருள்ள ஒரு சீஷனை ஆயத்தப்படுத்துகிறார். இவன் தமஸ்குவிலே வாசம்பண்ணுகிறவன். எருசலேம் சபையில் உபத்திரவம் உண்டானபோது, அப்போஸ்தலர் தவிர, விசுவாசிகளெல்லோரும் சிதறிப் போனார்கள். சிதறிப்போன விசுவாசிகளில் அனனியாவும் ஒருவன். இவன் எருசலேமிலிருந்து சிதறி ஓடி தமஸ்குவிற்கு வந்திருக்கிறான். இவன் வேதபிரமாணத்தின்படி பக்தியுள்ளவன். தமஸ்குவில் குடியிருக்கிற சகல யூதராலும் நல்லவன் என்று சாட்சி பெற்றவன் (அப் 22:12).

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து அனனியாவுக்குத் தரிசனமாகிறார். தமஸ்குவுக்கு வந்திருக்கும் சவுலைச் சந்திக்குமாறு கர்த்தர் அனனியாவை வழிநடத்துகிறார். கர்த்தர் அனனியாவுக்குத் தரிசனமாகி, "அனனியாவே" என்று அவனைப் பெயர் சொல்லிக் கூப்பிடுகிறார். கர்த்தர் தன்னுடைய பெயரைச் சொல்வதினால் அனனியாவுக்குப் பயமோ குழப்பமோ உண்டாகவில்லை. கர்த்தருடைய வார்த்தைக்கு அவன் உடனடியாக, "ஆண்டவரே, இதோ அடியேன்" என்று பதில் சொல்லுகிறான். நாம் கர்த்தருடைய வார்த்தைக்குச் செவிகொடுத்து, கீழ்ப்படியும்போது கர்த்தர் நம்மைப் பயன்படுத்துகிறார். நாம் எப்போதுமே கர்த்தரால் பயன்படுத்துவதற்கு ஆயத்தமாகயிருக்கிற பாத்திரமாய் இருக்கவேண்டும்.

ஜெபம்பண்ணுகிறான்

அப்பொழுது கர்த்தர்: நீ எழுந்து நேர்த்தெருவு என்னப்பட்ட தெருவுக்குப் போய், யூதாவின் வீட்டிலே தர்சுபட்டணத்தானாகிய சவுல் என்னும் பேருள்ள ஒருவனைத் தேடு; அவன் இப்பொழுது ஜெபம்பண்ணுகிறான்; (அப் 9:11)

அனனியா கர்த்தருடைய சத்தத்திற்குச் செவிகொடுத்து "ஆண்டவரே, இதோ அடியேன்" என்று அனனியா சொன்னவுடனே, அவன் என்ன செய்யவேண்டுமென்று கர்த்தர் அவனுக்குக் கட்டளை கொடுக்கிறார். "நீ எழுந்து நேர்த்தெருவு என்னப்பட்ட தெருவுக்குப்போய், யூதாவின் வீட்டிலே தர்சுபட்டணத்தானாகிய சவுல் என்னும் பேருள்ள ஒருவனைத் தேடு" என்று கர்த்தர் அனனியாவிடம் சொல்லுகிறார்.

தமக்குச் சொந்தமானவர்கள் எங்கு இருப்பார்கள் என்பது கர்த்தருக்கு நன்றாகத் தெரியும். அவர் நம்மை முழுவதுமாய் அறிந்து வைத்திருக்கிறார். நம்முடைய ஆபத்து வேளைகளில் அவர் நம்மைத் தேடி வந்து விசாரிக்கிறவர். ஒவ்வொரு வேளையிலும் நாம் எங்கு இருக்கிறோம் என்பது கர்த்தருக்குத் தெரியும். அவருக்கு மறைவான காரியம் ஒன்றுமே இல்லை. தமஸ்கு பட்டணத்தில் சவுல் எந்தத் தெருவில், யார் வீட்டில் இருக்கிறான் என்பது கர்த்தருக்குத் தெரிந்திருக்கிறது. கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாகவே சவுல் இங்கு வந்திருக்கிறான்.

நம்மை நன்றாக அறிந்திருக்கிற இயேசுகிறிஸ்து பரலோகத்திலிருப்பது அவருடைய பிள்ளைகளாகிய நமக்கு உண்டாயிருக்கும் சிலாக்கியம். நாம் எந்தத் தெருவில், எந்த வீட்டில் இருக்கிறோம் என்பது மாத்திரமல்ல, அவர் நம்மை பூரணமாய் அறிந்திருக்கிறார். நம்முடைய இருதயத்தின் நினைவுகளையெல்லாம் அவர் அறிந்தவராக இருக்கிறார். நம்முடைய துவக்கமும் முடிவும் அவருக்கு மறைவானதல்ல.

சவுல் இப்பொழுது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவிடத்தில் ஜெபம்பண்ணிக் கொண்டிருக்கிறான். கர்த்தர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்கிறவர்களுக்கு உத்தரவு கொடுக்கிறவர். அவர் ஜெபத்திற்குப் பதில் கொடுக்கிற தேவன். அனனியாவோ சவுலைப் பார்ப்பதற்குப் பயப்படுகிறான். சவுலைக் குறித்து அநேகரால் கேள்விப்பட்டிருக்கிறான். அவன் செய்த பொல்லாங்குகளையும் அனனியா கேள்விப்பட்டிருக்கிறான் (அப் 9:13,14). அனனியாவின் மனபயத்தை கர்த்தர் நீக்கிப்போடுகிறார். சவுல் இப்போது மெய்யாகவே கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறான். "அவன் இப்பொழுது ஜெபம்பண்ணுகிறான்" என்று கர்த்தர் சவுலைக் குறித்துச் சாட்சி சொல்லுகிறார்.

சவுல் இயேசுகிறிஸ்துவிடம் ஜெபம்பண்ணுவதே ஓர் அற்புதமான சம்பவம். சவுலின் ஜீவியத்தில் பலவிதமான மாற்றங்கள் உண்டாயிற்று. இயேசுகிறிஸ்துவையும் அவருடைய சீஷரையும் விரோதித்தவன், இப்போது இயேசுகிறிஸ்துவிடம் ஜெபிக்கிறான். ஜெபம்பண்ணுவது சவுலுக்குப் புதுமையல்ல. இவன் ஒரு பரிசேயன். இதற்கு முன்பு அவன் பரிசேயரின் முறைமையின்படி கர்த்தரிடத்தில் தினந்தோறும் ஜெபம்பண்ணியிருக்கிறான். ஆனால் அந்த ஜெபத்திற்கும், இப்போது சவுல் ஏறெடுக்கும் ஜெபத்திற்கும் வித்தியாசமுள்ளது. இப்போது இயேசுவின் நாமத்தினால் ஜெபம்பண்ணுகிறான்.

பரிசேயரின் பாரம்பரிய முறைமையின்படி ஜெபிக்காமல், சவுல் இப்போது இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் ஜெபிக்கிறான். இதற்கு முன்பு சவுல் தன்னுடைய ஜெபங்களை மனப்பாடமாக ஒப்பித்தான். இதுதான் பரிசேயர் ஜெபம்பண்ணுகிற முறைமை. ஆனால் இப்போதோ சவுல் தன் உள்ளத்தின் ஆழத்திலிருந்து, இருதயத்திலிருந்து ஜெபிக்கிறான்.

நமக்குள் ஆவிக்குரிய ஜீவியம் இருக்கும்போது நாம் ஜெபிக்கிறவர்களாக இருப்போம். சரீரத்தில் சுவாசம் இல்லையென்றால் அதில் ஜீவனில்லை என்று பொருள். அதுபோலவே நமக்குள் ஜெபிக்கும் சுபாவம் இல்லையென்றால், நம்மிடத்திலும் ஆவிக்குரிய சுபாவம் இல்லை என்பதே பொருள். நாம் ஜெபிக்கவில்லையென்றால் நமக்குத் தேவனுடைய கிருபை கொடுக்கப்படமாட்டாது. நமக்குள் ஆவிக்குரிய ஜீவன் இருக்காது.

கர்த்தர் அனனியாவைப் பார்த்து "நீ எழுந்து நேர்த்தெரு என்னப்பட்ட தெருவுக்குப் போ" என்று கட்டளை கொடுக்கிறார். அனனியா காலதாமதம் பண்ணாமல் கர்த்தரின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து விரைந்து செயல்படவேண்டும். கர்த்தருடைய காரியங்கள் எதுவும் காலதாமதத்தினால் தடைபட்டு விடக்கூடாது. சவுல் இப்பொழுது ஜெபம்பண்ணுகிறான். தன்னுடைய பாவத்தைக்குறித்து சவுல் உணர்த்தப்பட்டிருக்கிறான். அவனுடைய இருதயத்தில் பாவஉணர்வு உண்டானதினால், இப்போது ஜெபம்பண்ணுகிறான்.

சவுல் சரீரப்பிரகாரமாகவும் வேதனைப்படுகிறான். பார்வையில்லாதவனாகவும், புசியாமலும் குடியாமலும் பலவீனமானவனாகவும் இருக்கிறான். இயேசுகிறிஸ்து சவுலிடம் "நீ எழுந்து பட்டணத்திற்குள்ளே போ, நீ செய்ய வேண்டியது அங்கு உனக்குச் சொல்லப்படும்" என்று சொன்னார். இயேசுகிறிஸ்துவைக் குறித்து உபதேசம்பண்ண தன்னிடத்தில் ஒருவன் அனுப்பப்பட வேண்டுமென்று சவுல் ஜெபித்துக்கொண்டிருக்கிறான். கர்த்தர் அவனுடைய ஜெபத்தைக்கேட்டு, அவனிடத்தில் அனனியாவை அனுப்பி, அவனுடைய ஜெபத்திற்குப் பதில் கொடுக்கிறார்.

தரிசனங்கண்டான்

அனனியா என்னும் பேருள்ள ஒரு மனுஷன் தன்னிடத்தில் வரவும், தான் பார்வையடையும்படி தன்மேல் கைவைக்கவும் தரிசனங்கண்டான் என்றார் (அப் 9:12).

சவுல் ஜெபிக்கும்பொழுது தரிசனம் காண்கிறான். அனனியா என்னும் பெயருள்ள ஒரு மனுஷன் தன்னிடத்தில் வருவதாக சவுல் தரிசனங்காண்கிறான். தேவனே இந்தத் தரிசனத்தை சவுலுக்குக் காண்பிக்கிறார். அனனியா என்பவன் வந்து, சவுல் பார்வையடையும்படி அவன்மேல் கை வைப்பான் என்னும் தரிசனத்தைக் கர்த்தர் சவுலுக்குக் காண்பிக்கிறார். கர்த்தர் சவுலோடு வார்த்தையினால் பேசினார். இப்போது தரிசனத்தின் மூலமாக தம்முடைய சித்தத்தை சவுலுக்குத் தெளிவுபடுத்துகிறார்.

சவுலின் ஜெபத்திற்கு கர்த்தர் தரிசனம் மூலமாக பதில் கொடுக்கிறார். சவுல் இப்போது கர்த்தரோடு ஜெபத்தில் ஐக்கியமாக இருக்கிறான். உள்ளத்தின் ஆழத்திலிருந்து பேசுகிறான். அவன் பார்வையில்லாதவனாய் இருந்தாலும், அவனுடைய மனக்கண்கள் பிரகாசமுள்ளதாக இருக்கிறது. தன்னுடைய மனக்கண்கள் மூலமாய் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை நோக்கிப் பார்த்து, அவரிடத்தில் விசுவாசத்தோடு ஜெபம்பண்ணுகிறான். கர்த்தர் அவனுடைய ஜெபத்திற்குப் பதில் கொடுக்கிறார்.

அனனியா என்னும் பேருள்ள ஒரு மனுஷன் தன்னிடத்தில் வரும்படியாக சவுல் தரிசனங்காண்கிறான். இந்தத் தரிசனம் சவுலுக்குப் பிரியமாயிருக்கிறது. ஏனெனில் அவன் வந்து, சவுல் பார்வையடையும்படி சவுலின்மேல் தன் கைகளை வைத்து ஜெபிக்கப்போகிறான் என்னும் தரிசனத்தையும் கர்த்தர் சவுலுக்குக் காண்பித்திருக்கிறார். அனனியாவின் வருகை சவுலுக்கு சரீரப்பிரகாரமாகவும், ஆவிக்குரிய பிரகாரமாகவும் மிகுந்த ஆசீர்வாதமாக இருக்கும். அனனியா ஒரு வைத்தியனைப்போல பார்வை யில்லாதிருக்கும் சவுலைப் பார்க்க வருகிறான். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே நம்முடைய பரம வைத்தியராக இருக்கிறார். அவர் நம்முடைய ஆத்துமாவையும், சரீரத்தையும் சொஸ்தமாக்குகிறார்.

கேள்விப்பட்டிருக்கிறேன்

அதற்கு அனனியா: ஆண்டவரே, இந்த மனுஷன் எருசலேமிலுள்ள உம்முடைய பரிசுத்தவான்களுக்கு எத்தனையோ பொல்லாங்குகளைச் செய்தானென்று அவனைக்குறித்து அநேகரால் கேள்விப்பட்டிருக்கிறேன். இங்கேயும் உம்முடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற யாவரையும் கட்டும்படி அவன் அவன் பிரதான ஆசாரியர்களால் அதிகாரம் பெற்றிருக்கிறானே என்றான் (அப் 9:13,14).

கர்த்தர் அனனியாவுக்குத் தரிசனமாகி "யூதாவின் வீட்டிலே தர்சுபட்டணத்தானாகிய சவுல் என்னும் பெயருள்ள ஒருவனைத் தேடு" என்று கட்டளை கொடுக்கிறார். ஆனால் அனனியா கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிய தயங்குகிறான். ஆரம்பத்தில் கர்த்தர் அனனியாவுக்குத் தரிசனமாகி "அனனியாவே" என்று கூப்பிட்ட உடனேயே, அனனியா "ஆண்டவரே இதோ அடியேன்" என்று உடனடியாக கர்த்தருக்குப் பதில் உத்தரவு கொடுத்தான். தன்னுடைய கீழ்ப்படிதலை வெளிப்படுத்தினான். ஆனால் இப்போதோ "சவுலைப் போய் பார்" என்று கர்த்தர் சொன்னவுடனே, அனனியா அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிய தயங்குகிறான்.

அனனியா தன்னுடைய தயக்கத்திற்கான காரணத்தையும் கர்த்தரிடத்தில் சொல்லுகிறான். "ஆண்டவரே, இந்த மனுஷன் எருசலேமிலுள்ள உம்முடைய பரிசுத்தவான்களுக்கு எத்தனையோ பொல்லாங்குகளைச் செய்தானென்று அவனைக்குறித்து அநேகரால் கேள்விப்பட்டிருக்கிறேன்" என்று அனனியா கர்த்தரிடத்தில் தன்னுடைய தயக்கத்தையும் பயத்தையும் வெளிப்படுத்துகிறான்.

சவுலைப்பார்த்து விசுவாசிகளெல்லோரும் பயப்படுகிறார்கள். சவுல் கர்த்தருடைய சீஷரைப் பயமுறுத்திக் கொலைசெய்யும்படி சீறிப்பாய்ந்து கொண்டிருந்தவன். அதனால் சவுலின் பெயரைக் கேட்டாலே விசுவாசிகளுக்குப் பயமுண்டாயிற்று. இப்போது சவுல் தமஸ்கு பட்டணத்திற்கு வந்திருக்கிறான். இயேசுகிறிஸ்துவினுடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற யாவரையும் கட்டும்படி, அவன் பிரதான ஆசாரியர்களால் அதிகாரம் பெற்றிருக்கிறான். ஆகையினால் அனனியா சவுலுக்கு உதவி செய்ய விரும்பவில்லை.

நமக்கு விரோதமாகத் தீங்கு செய்தவர்களுக்கு நாம் பதிலுக்குப் பதில் தீமை செய்யக்கூடாது. நமக்குத் தீமை செய்தவர்களுக்கு நாம் நன்மை செய்யவேண்டும். சவுல் விசுவாசிகளுக்குத் தீங்கு செய்தான். விசுவாசிகள் சவுலுக்கு நன்மை செய்யவேண்டும். இதுவே கிறிஸ்துவின் உபதேசம். நம்மைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காக நாம் ஜெபம்பண்ணவேண்டும். விசுவாசிகளைத் துன்பப்படுத்துகிற சவுலுக்கு ஜெபம்பண்ண கர்த்தர் அனனியாவைப் போகச்சொல்லுகிறார். ஆனால் அனனியாவோ தயங்குகிறான். தனக்கு உயிர் பாதுகாப்பு கிடைக்குமோ என்று பயப்படுகிறான். சவுல் தன்னையும் பிடித்து கொன்றுபோடுவானோ என்று அனனியா யோசிக்கிறான். சவுலிடத்தில் போவதினால் ஏதாவது பிரயோஜனமுண்டோ என்று யோசித்துப் பார்க்கிறான். சவுலைப்போல கடின மனமுள்ளவர்கள் இரட்சிக்கப்படுவதற்கு வாய்ப்பு உண்டோ என்று சந்தேகப்படுகிறான்.

பாத்திரமாயிருக்கிறான்

அதற்குக் கர்த்தர்: நீ போ; அவன் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்துகொண்ட பாத்திரமாயிருக்கிறான். அவன் என்னுடைய நாமத்தினிமித்தம் எவ்வளவாய்ப் பாடுபட வேண்டுமென்பதை நான் அவனுக்குக் காண்பிப்பேன் என்றார் (அப் 9:15,16).

கர்த்தர் அனனியாவின் சந்தேகத்தை நீக்குகிறார். அவனுடைய பயத்தைப் போக்குகிறார். தம்முடைய சித்தத்தை அனனியாவுக்குத் தெரியப்படுத்துகிறார். அனனியா சவுலைப் பற்றி கேள்விப்பட்டது மெய்தான். சவுல் இதுவரையிலும் விசுவாசிகளை உபத்திரவப்படுத்தி வந்தான். ஆனால் கர்த்தரோ அவனைத் தம்முடைய ஊழியத்திற்காகத் தெரிந்தெடுத்திருக்கிறார். கர்த்தருடைய பரிசுத்தவான்களுக்கு சவுல் எத்தனையோ பொல்லாங்குகளைச் செய்தவன். அப்படிப்பட்ட சவுல், கர்த்தர் தெரிந்துகொண்ட பாத்திரமாய் இருக்கிறான்.

கர்த்தர் அனனியாவைப் பார்த்து "நீ சவுலிடத்திற்குப் போ" என்று மறுபடியும் சொல்லுகிறார். மேலும் அவர் அனனியாவிடம் "அவன் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்துகொண்ட பாத்திரமாயிருக்கிறான். அவன் என்னுடைய நாமத்தினிமித்தம் எவ்வளவாய்ப் பாடுபடவேண்டுமென்பதை நான் அவனுக்குக் காண்பிப்பேன்" என்றும் சொல்லுகிறார்.

அனனியா சவுலுக்குப் பயப்படவேண்டிய அவசியமில்லை. ஏனெனில் கர்த்தர் சவுலையும் தம்முடைய ஊழியத்திற்காகத் தெரிந்தெடுத்திருக்கிறார். சுவிசேஷத்தின் பொக்கிஷத்தை சவுல் தன்னுடைய மண்பாண்டத்தில் பெற்றிருக்கிறான் (2கொரி 4:7). சவுல் மண்பாண்டமாக இருந்தாலும், அவன் கர்த்தர் தெரிந்துகொண்ட பாத்திரமாக இருக்கிறான்.

அவன் புறஜாதிகளுக்கு இயேசுகிறிஸ்துவின் நாமத்தை அறிவிக்கவேண்டும். இராஜாக்களுக்கு முன்பாகவும் அவன் இயேசுகிறிஸ்துவின் நாமத்தை அறிவிக்கவேண்டும். புறஜாதிகளுக்கு மாத்திரமல்ல, இஸ்ரவேல் புத்திரருக்கும் அவன் இயேசுகிறிஸ்துவின் நாமத்தை அறிவிக்கவேண்டும். தம்முடைய ஊழியத்தைச் செய்வதற்காக கர்த்தர் சவுலைத் தெரிந்தெடுத்திருக்கிறார்.

தம்முடைய நாமத்தினிமித்தமாக பாடுபடுவதற்காகவும் கர்த்தர் சவுலைத் தெரிந்தெடுத்திருக்கிறார். "அவன் என்னுடைய நாமத்தினிமித்தம் எவ்வளவாய் பாடுபடவேண்டும் என்பதை நான் அவனுக்குக் காண்பிப்பேன்" என்று கர்த்தர் சவுலைப்பற்றி அனனியாவிடம் சொல்லுகிறார். இயேசுகிறிஸ்துவின் சீஷர்களைத் துன்பப்படுத்திய சவுல், இனிமேல் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் துன்பப்படுத்தப்படுவான், பல பாடுகளை அனுபவிப்பான். இயேசுகிறிஸ்துவின் நாமத்தைச் சுமந்துகொள்கிறவர்கள், அவருடைய நாமத்தினிமித்தம் சிலுவையைச் சுமக்கவும் ஆயத்தமாகயிருக்கவேண்டும். கர்த்தர் தம்முடைய ஊழியக்காரில் அநேகரை, தமக்காகப் பாடுகளை அனுபவிப்பதற்காகவே பெயர் சொல்லி அழைக்கிறார்.

போர்வீரர்கள் பயற்சி பெறும்போது அவர்களை உற்சாகப்படுத்துவார்கள். தைரியப்படுத்துவார்கள். பயப்படாமல் இருக்கவேண்டுமென்று சொல்லுவார்கள். இவையெல்லாம் ஆலோசனைகளும் உபதேசங்களும் தான். உண்மையான போர்க்களம் ஒன்று சீக்கிரத்தில் வரப்போகிறது. யுத்தம்பண்ணும்போது உபதேசங்களைக் கேட்க சமயம் இருக்காது. நாம் கேட்ட உபதேசத்தின் பிரகாரம் யுத்தம்பண்ணவேண்டும். யுத்தவீரர்களுக்கு யுத்தத்தைப்பற்றிய உண்மையான காரியங்களை ஒளிவுமறைவில்லாமல் சொல்லவேண்டும். இல்லையென்றால் யுத்தகளம் அவர்களுக்கு பயப்படும் களமாக அதிர்ச்சியடையும் களமாக இருக்கும்.

கர்த்தர் தம்முடைய ஊழியத்திற்காக சவுலைத் தெரிந்துகொள்ளும்போதே, "அவன் என்னுடைய நாமத்தினிமித்தம் எவ்வளவாய்ப் பாடுபடவேண்டுமென்பதை அவனுக்குக் காண்பிப்பேன்" என்று முன்னறிவிக்கிறார். கர்த்தருடைய உபதேசத்தில் ஒளிவுமறைவு எதுவும் இராது. அவர் உள்ளதை உள்ளது என்றும், இல்லாததை இல்லாதது என்றும் தெளிவாய் உபதேசிக்கிறவர். கர்த்தருக்காக ஊழியம் செய்கிறவர்கள், அவருடைய பாதபடியில் அமர்ந்திருந்து, அவருடைய உபதேசங்களைப் பெற்றுக்கொள்ளவேண்டும். அப்போதுதான் எல்லா சூழ்நிலைகளிலும் நம்மால் மனரம்மியமாகயிருந்து கர்த்தருக்காக ஊழியம் செய்யமுடியும்.

சகோதரனாகிய சவுலே

அப்பொழுது அனனியா போய், வீட்டுக்குள் பிரவேசித்து, அவன்மேல் கையை வைத்து: சகோதரனாகிய சவுலே, நீ வந்த வழியிலே உனக்குத் தரிசனமான இயேசுவாகிய கர்த்தர், நீ பார்வையடையும்படிக்கும் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்படும் படிக்கும் என்னை அனுப்பினார் என்றான் (அப் 9:17).

கர்த்தர் அனனியாவுக்குச் சவுலின் காரியத்தை விளக்கமாகச் சொல்லுகிறார். அனனியா கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, நேர்த்தெருவு என்னப்பட்ட தெருவுக்குப்போய், யூதாவின் வீட்டிலே தர்சுபட்டணத்தானாகிய சவுல் என்னும் பெயருள்ள ஒருவனை தேடுகிறான். தேடிக்கண்டுபிடித்து அவன் இருக்கிற வீட்டிற்குள் பிரவேசித்து, அங்கு சவுலைக் காண்கிறான்.

ஆரம்பத்தில் கர்த்தருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிய தயங்கியவன், பின்பு கீழ்ப்படிகிறான். அனனியா கர்த்தருக்கு விரோதமாக முரண்டுபிடிக்கவில்லை. தன்னுடைய பிடிவாத குணத்தில் உறுதியாய் நிலைத்திருக்கவில்லை. கர்த்தருடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்கிறான். கர்த்தர் நம்முடைய பாதையிலிருக்கும் தடைகளை அகற்றிய பின்பு, அவர் நமக்கு நியமித்து வைத்திருக்கும் இலக்கை நோக்கி முன்னேறிச் செல்லவேண்டும். சும்மாயிருந்துகொண்டு விவாதம் பண்ணக்கூடாது. கர்த்தர் அனனியாவின் பயத்தைப்போக்கினார். அதற்குப் பின்பு அவன் கர்த்தரிடத்தில் விவாதம் பண்ணாமல், அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, சவுலைப் பார்க்கப் புறப்பட்டுப்போகிறான்.

அனனியா சவுல் இருக்கிற வீட்டிற்கு வருகிறான். தான் இங்கு வந்ததற்கான காரணத்தை அனனியா அவனிடம் சொல்லுகிறான். வீட்டிற்கு வந்தவுடனேயே அனனியா சவுலின்மேல் தன்னுடைய கையை வைக்கிறான். சவுலும் தமஸ்கு பட்டணத்திலுள்ள விசுவாசிகள்மீது தன்னுடைய கையை வைப்பதற்குத்தான் வந்தான். அவர்களை ஆசீர்வதிப்பதற்கல்ல. அவர்களைக் கட்டி எருசலேமுக்கு இழுத்துச் செல்வதற்காக வந்தான். ஆனால் இப்போதோ கர்த்தருடைய ஊழியக்காரனாகிய அனனியா தன்னுடைய கையை சவுலின்மேல் வைக்கிறான். கர்த்தருடைய சீஷர்களின் கைகள் ஆசீர்வதிக்கிற கைகள். ஆதரிக்கிற கைகள். உதவிபுரிகிற கைகள். சொஸ்தமாக்குகிற கைகள். சவுலின் கையோ விசுவாசிகளை உபத்திரவப்படுத்துகிற கையாக இருந்தது.

அனனியா சவுலைப்பார்த்து “சகோதரனாகிய சவுலே” என்று அழைக்கிறான். தேவன் சவுலைத் தம்முடைய பிள்ளையாக ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயிருக்கிறார். அவன் சமீபகாலம் வரையிலும் இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமாகத் தூஷண வார்த்தைகளைப் பேசினவனாகயிருந்தாலும், கர்த்தருடைய பிள்ளைகளை உபத்திரவப் படுத்தினவனாகயிருந்தாலும், கர்த்தர் அவனைச் சந்தித்து, அவனைத் தம்முடைய பிள்ளையாக அங்கீகரிக்க ஆயத்தமாயிருக்கிறார். கர்த்தர் அங்கீகரிக்கும்போது, அந்த நபரைப் புறக்கணிப்பதற்கு நமக்கு உரிமையில்லை. அனனியா இதைப் புரிந்துகொண்டவனாக சவுலைப் பார்த்தவுடனேயே “சகோரனாகிய சவுலே” என்று அழைக்கிறான். கிறிஸ்துவுக்குள் சவுலைத் தன்னுடைய சகோதரனாக அங்கீகரிக்கிறான்.

அனனியா சவுலிடம் பேசும்போதே, தான் அங்கு வந்ததற்கான காரணத்தை அவனிடத்தில் சொல்லுகிறான். “நீ வந்த வழியிலே உனக்குத் தரிசனமான இயேசுவாகிய கர்த்தர், நீ பார்வையடையும்படிக்கும் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்படும்படிக்கும் என்னை அனுப்பினார்” என்று சவுலிடம் சொல்லுகிறான். காயப்படுத்தினவர் குணப்படுத்துகிறார். சவுலை பார்வையில்லாதவனாக ஆக்கினவர் இப்போது அவனைப் பார்வையடையச் செய்கிறார். சவுல் பார்வையடையும் படியாகவே அனனியா அவனிடத்திற்கு வந்திருக்கிறான்.

பார்வையில்லாதவனாக இருக்கிற சவுலுக்கு மறுபடியும் பார்வை கிடைப்பது சரீரப்பிரகாரமான ஆசீர்வாதம். கர்த்தர் இந்த ஆசீர்வாதத்தோடு மேலும் ஒரு ஆசீர்வாதத்தையும் சவுலுக்கு கொடுக்கிறார். சவுல் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்படும்படிக்கும் கர்த்தர் அனனியாவை அவனிடத்தில் அனுப்பியிருக்கிறார். இது ஆவிக்குரிய ஆசீர்வாதம்.

சவுல் பார்வையடைந்தான்

உடனே அவன் கண்களிலிருந்து மீன் செதின்கள்போன்றவைகள் விழுந்தது. அவன் பார்வையடைந்து, எழுந்திருந்து, ஞானஸ்நானம் பெற்றான் (அப் 9:18).

அனனியாவின் ஊழியம் வெற்றிகரமாக நடைபெறுகிறது. கர்த்தர் சவுல்மீது கிருபையாக இருக்கிறார். தான் வந்த நோக்கத்தை அனனியா சவுலிடம் தெரிவிக்கிறான். அப்போது சவுலின் கண்களிலிருந்து மீன் செதிள்கள் போன்றவைகள் விழுகிறது. அவன் உடனே பார்வையடைகிறான். சவுல் தன் கட்டுக்களிலிருந்து விடுவிக்கப்படுகிறான். அடிமைத்தனத்தின் ஆவியிலிருந்து விடுதலைபெற்று சவுல் மறுபடியும் பார்வையடைகிறான். அவன் பார்வையடைவதற்கு அடையாளமாக, அவனுடைய கண்களிலிருந்து மீன் செதிகள் போன்றவைகள் விழுகிறது. அவன் உடனடியாக சொஸ்தமாகிறான். கர்த்தருடைய வல்லமையினால் மாத்திரமே இப்படிப்பட்ட அற்புத சுகமாதலைப் பெற்றுக்கொள்ள முடியும்.

சவுல் இதுவரையிலும் மனமாறாதவனாக, இரட்சிக்கப் படாதவனாக இருந்தான். அந்த இருளிலிருந்து இப்போது விடுதலைபெற்று வெளிச்சத்திற்கு வந்திருக்கிறான். இயேசுகிறிஸ்து பரிசேயர்களைப்பற்றிக் குறிப்பிடும்போது, அவர்களை "குருடர்" என்று அழைக்கிறார். அவர்கள் குருடருக்கு வழிகாட்டுகிற குருடரைப் போன்றவர்கள். ஆவிக்குரிய சத்தியங்களை அவர்கள் காணாதவர்கள். அப்படிப்பட்ட பரிசேயரின் குருட்டுத் தனத்திலிருந்து சவுல் விடுதலைபெற்று பார்வையடைந்திருக்கிறான். தேவனைப் பற்றிய உணர்வைப் பெற்றிருக்கிறான்.

தேவனுடைய இரட்சிக்கும் கிருபையானது ஆத்துமாவின் கண்களைத் திறக்கிறது. கர்த்தர் சவுலுக்குப் புறஜாதியார் மத்தியில் இந்த ஊழியத்தைத்தான் நியமித்திருக்கிறார். அவன் புறஜாதியாரின் மனக்கண்களைத் திறப்பதற்கு ஊழியம் செய்யவேண்டும். அவர்களுடைய ஆவிக்குரிய குருட்டுத்தனத்திலிருந்து விடுதலைபெற்று அவர்கள் பார்வையடையவேண்டும். இந்த ஊழியத்தைச் செய்வதற்காக, கர்த்தர் சவுலுக்கு இப்படிப்பட்ட ஒரு அனுபவத்தை முதலாவதாகக் கொடுக்கிறார். சவுல் பார்வையில்லாதவனாய் இருந்தான். இப்போது பார்வையடைந்திருக்கிறான்.

கிறிஸ்துவின் சீஷர்களைப் பயமுறுத்திக் கொலைசெய்வதற்காக சவுல் தமஸ்கு பட்டணத்திற்குப் பிரயாணமாய் வந்தான். விசுவாசிகளைப் பயமுறுத்துகிற குருட்டுத்தனத்திலிருந்து சவுல் இப்பொழுது விடுவிக்கப்பட்டு பார்வையடைந்திருக்கிறான். பவுலின் கண்களிலிருந்து செதிள்கள் போன்றவைகள் கீழே விழுந்துவிட்டது. அவனைச் சுற்றிலுமிருந்த அஞ்ஞான மேகம் கலைந்துபோயிற்று. அவனுடைய ஆத்துமாவில் நீதியின் சூரியன் உதித்திருக்கிறது. அவருடைய செட்டையின்கீழ் ஆரோக்கியம் உண்டு.

சவுல் பார்வையடைந்து, எழுந்திருந்து ஞானஸ்நானம் பெற்றுக்கொள்கிறான். கிறிஸ்துவுக்குத் தன்னை ஒப்புக்கொடுக்கிறான். ஞானஸ்நானத்தின் மூலமாக கிறிஸ்துவின் ஆளுகைக்குத் தன்னை உட்படுத்துகிறான். கிறிஸ்துவின் கிருபைக்குத் தன்னைப் பரிபூரணமாகச் சமர்ப்பிக்கிறான். சவுல் இதுவரையிலும் பரிசேய மார்க்கத்திற்கு சீஷனாகயிருந்தான். இப்போது இயேசு கிறிஸ்துவுக்கு சீஷனாகயிருக்கிறான். கிறிஸ்துவின் சீஷர்களைத் துன்பப்படுத்துவதை நிறுத்தியதோடு மாத்திரமல்ல, சவுலே கிறிஸ்துவின் ஊழியத்திற்காகத் தன்னை முழுவதுமாக அர்ப்பணிக்கிறான்.

போஜனம்பண்ணி பலபட்டான்

பின்பு அவன் போஜனம்பண்ணிப் பலப்பட்டான். சவுல் தமஸ்குவிலுள்ள சீஷருடனே சில்நாள் இருந்து, (அப் 9:19)

சவுல் இயேசுகிறிஸ்துவின் சத்தத்தைக் கேட்டபொழுது, மூன்றுநாள் பார்வையில்லாதவனாய் புசியாமலும் குடியாமலும் இருந்தான். இப்போது பார்வையடைந்திருக்கிறான். எழுந்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டான். சரீரத்தில் பெலவீனமாக இருந்தவன், இப்போது தன்னுடைய சரீர பலத்தைத் திரும்பவும் பெற்றுக்கொண்டான். மூன்று நாட்கள் புசியாமலும் குடியாமலும் இருந்ததினால், அவனுடைய சரீரம் பலவீனமாயிற்று. அதன்பின்பு போஜனம் பண்ணினபோதோ அவன் பலப்படுகிறான்.

கர்த்தர் நம்முடைய சரீரத்திற்கும் ஆண்டவராக இருக்கிறார். ஆகையினால் நம்முடைய ஆவியை நாம் கவனிப்பதுபோல, நம்முடைய சரீரத்தையும் பராமரித்துக் கவனிக்கவேண்டும். தேவனுடைய ஊழியத்தில் நம்முடைய ஆவியும் ஆத்துமாவும், சரீரமும் உற்சாகமாய் ஈடுபடும் விதத்தில், நம்முடைய சரீர ஆரோக்கியத்தை நாம் பராமரித்துக் காத்துக்கொள்ளவேண்டும்.

தமஸ்குவிலுள்ள சீஷர்களைப் பயமுறுத்திக் கொலைசெய்யும்படி சவுல் இந்தப் பட்டணத்திற்கு சீறிப்பாய்ந்து வந்தான். இப்போதோ சவுலும் கிறிஸ்துவின் சீஷர்களில் ஒருவனாகயிருக்கிறான். தமஸ்குவிலுள்ள சீஷருடனே சில நாள் தங்கியிருக்கிறான். கிறிஸ்துவின் சீஷர்களைப் பயமுறுத்திக் கொலைசெய்ய வேண்டுமென்று விரும்பியவன், இப்போது அவர்களிடத்தில் தன் அன்பை வெளிப்படுத்துகிறான். அவர்களோடு பிரியமாய் இருக்கிறான்.

கர்த்தரை தங்கள் தெய்வமாக ஏற்றுக்கொண்டிருக்கிற ஜனங்கள், கர்த்தருடைய ஜனங்களையும் நேசிப்பார்கள். அவர்களைத் தங்களுடைய ஜனமாக அங்கீகரிப்பார்கள். தமஸ்குவிலுள்ள விசுவாசிகள் மத்தியில் சவுல் கிறிஸ்துவின்மீது தான் வைத்திருக்கிற விசுவாசத்தை அறிக்கைசெய்கிறான். தானும் கிறிஸ்துவின் சீஷர்களில் ஒருவனென்று வெளிப்படையாக, மற்ற விசுவாசிகள் மத்தியில் சாட்சியாக அறிவிக்கிறான்.

ஆலயங்களிலே பிரசங்கித்தான்

தாமதமின்றி, கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று ஆலயங்களிலே பிரசங்கித்தான் (அப் 9:20).

சவுலின் சிந்தனை முழுவதிலும் கிறிஸ்துவானவர் நிரம்பியிருக்கிறார். சவுலுக்குள்ளிருக்கும் ஆவியானவர், இயேசுகிறிஸ்துவைக் குறித்து மற்றவர்களிடத்தில் பிரசங்கம்பண்ணுமாறு அவனை வழிநடத்துகிறார். யூதர்களுடைய ஜெப ஆலயங்களில் சவுல் கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று பிரசங்கம்பண்ணுகிறான். இந்த ஜெப ஆலயங்களில்தான் பரிசேயர்களும் சதுசேயர்களும் இயேசுவுக்கு விரோதமாகப் பிரசங்கம்பண்ணுவது வழக்கம். இப்படிப்பட்ட ஜெப ஆலயங்களில்தான் அவர்கள் கிறிஸ்துவின் சீஷர்களைத் துன்புறுத்தித் தண்டிப்பார்கள். சவுலோ யாருக்கும் பயப்படாமல், பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று யூதருடைய ஜெப ஆலயங்களில் பிரசங்கிக்கிறான்.

ஜெப ஆலயங்களில் இயேசுகிறிஸ்துவின் சத்துருக்கள் நிரம்பியிருக்கிறார்கள். சவுல் அவர்களைத் தைரியமாகச் சந்திக்கிறான். இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று அவர்களுக்குச் சத்தியத்தைப் பிரசங்கம்பண்ணுகிறான். கிறிஸ்துவையும், அவர் சிலுவையில் அறையப்பட்டதையும் அறிவிப்பதே சவுலின் முக்கியமான பிரசங்கச் செய்தியாயிற்று. ஞானஸ்நானம் பெற்றபின்பு சவுல் பிரசங்கியாராக ஊழியம் செய்ய ஆரம்பிக்கிறான். இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரன். பிதாவானவர் குமாரனில் பிரியமாகயிருக்கிறார். கிறிஸ்துவின் மூலமாக மாத்திரமே மனுக்குலத்திற்கு இரட்சிப்பு உண்டு. இயேசுவே கிறிஸ்து. இதுவே சவுலின் பிரசங்கச்செய்தி.

ஆச்சரியப்பட்டார்கள்

கேட்டவர்களெல்லாரும் ஆச்சரியப்பட்டு: எருசலேமில் இந்த நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவர்களை நாசமாக்கி, இங்கேயும் அப்படிப்பட்டவர்களைக் கட்டிப் பிரதான ஆசாரியர்களிடத்திற்குக் கொண்டுபோகும்படி வந்தவன் இவனல்லவா என்றான் (அப் 9:21).

சவுலின் பிரசங்கத்தைக் கேட்டவர்களெல்லோரும் ஆச்சரியப் படுகிறார்கள். அவர்களுக்கு சவுலைப் பற்றி ஏற்கெனவே தெரிந்திருக்கிறது. "எருசலேமில் இந்த நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவர்களை நாசமாக்கி, இங்கேயும் அப்படிப்பட்டவர்களைக் கட்டிப் பிரதான ஆசாரியர்களிடத்திற்குக் கொண்டுபோகும்படி வந்தவன் இவனல்லவா" என்று தங்களுக்குள் சொல்லிக் கொண்டு ஆச்சரியப்படுகிறார்கள்.

இதே சவுல்தான் தமஸ்குவிலுள்ள கர்த்தருடைய சீஷரைப் பயமுறுத்திக் கொலைசெய்யும்படி, சீறி பிரதான ஆசாரியனிடத்திற்குப் போய், இந்த மார்க்கத்தாராகிய புருஷரையாகிலும் ஸ்திரீகளையாகிலும் தான் கண்டுபிடித்தால், அவர்களைக் கட்டி எருசலேமுக்குக் கொண்டுவரும்படி, தமஸ்குவிலுள்ள ஜெபாலயங்களுக்கு நிருபங்களை கேட்டு வாங்கினவன் (அப் 9:1,2).

கிறிஸ்துவின் சீஷருக்கு விரோதமாக வைராக்கியமாக சீறிப்பாய்ந்தவன், இப்போது இயேசுகிறிஸ்துவைப் பற்றியே பிரசங்கம்பண்ணுகிறதைக் கேட்பதினால், அவனுடைய பிரசங்கத்தைக் கேட்டவர்களெல்லோரும் ஆச்சரியப்படுகிறார்கள்.

சவுலின் சரீரத்தில் நடைபெற்ற அற்புதத்தைவிட, அவனுடைய ஆத்துமாவில் நடைபெற்றுள்ள அற்புதம் ஜனங்கள் மத்தியில் வல்லமையாய்க் கிரியை செய்கிறது. அவனுடைய கண்கள் குருடானதும், அவன் மூன்றுநாட்களாகப் பார்வையில்லாதவனாய் இருந்ததும், இப்போது அவன் பார்வையடைந்தவனாய் அவர்களுக்கு முன்பாக நிற்பதும், அவர்களுக்கு பெரிய காரியமாய்த் தெரியவில்லை. அவனுடைய ஆத்துமாவில் ஏற்பட்டிருக்கிற மனமாற்றம் அவர்களுக்கு ஆச்சரியத்தை உண்டாக்கிற்று.

கிறிஸ்துவின் சீஷர்களைத் துன்புறுத்துவதற்காகச் சீறிப்பாய்ந்து வந்தவன், இப்போது அவருடைய சீஷர்களில் ஒருவனாக சேர்ந்து கொள்கிறான். இதுவே அவர்களுடைய ஆச்சரியத்திற்குக் காரணமாயிற்று. கர்த்தர் நமக்குச் செய்கிற அற்புதங்களில் பிரதான அற்புதம் நம்முடைய இருதயத்தில் மாற்றம் உண்டாக்குவதுதான். நம்முடைய சரீரத்தில் எப்படிப்பட்ட அற்புத சுகம் உண்டானாலும், நம்முடைய ஆத்துமாவை கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இரட்சிப்பதே பிரதான அற்புதமாயிருக்கிறது.

கலங்கப்பண்ணினான்

சவுல் அதிகமாகத் திடன் கொண்டு, இவரே கிறிஸ்துவென்று திருஷ்டாந்தப்படுத்தி, தமஸ்குவில் குடியிருக்கிற யூதர்களைக் கலங்கப்பண்ணினான் (அப் 9:22).

தமஸ்குவிலுள்ள யூதர்கள் இயேசுகிறிஸ்துவுக்கும், அவருடைய உபதேசத்திற்கும் எதிர்த்து நிற்கிறார்கள். அப்படிப்பட்டவர்களோடு சபையில் இயேசுவே கிறிஸ்து என்று திருஷ்டாந்தப்படுத்துகிறான். அவர்களோடு பேசும்போது சவுல் அதிமாய் திடன்கொண்டு பேசுகிறான். சவுல் இயேசுகிறிஸ்துவின்மீதும், அவருடைய சுவிசேஷத்தின் மீதும் பிரிமாயிருக்கிறான். இதனால் இயேசுகிறிஸ்துவின்மீது சவுல் வைத்திருக்கிற பயபக்தி வளர்ச்சி பெறுகிறது. வலுப்பெறுகிறது. சுவிசேஷத்தைத் தைரியமாகப் பிரசங்கிக்கிற கிருபையை கர்த்தர் சவுலுக்குத் தருகிறார். சவுல் பிரசங்கம்பண்ணும்போது அதிகமாய்த் திடன்கொண்டு பேசுகிறான். இயேசுவே கிறிஸ்து என்று திருஷ்டாந்தப்படுத்துகிறான்.

தமஸ்கு பட்டணத்தில் சவுலுக்கு அநேக சிநேகிதர்கள் இருக்கிறார்கள். பழைய சிநேகிதர்கள் எல்லோரும் யூதர்கள். அவர்கள் இயேசுகிறிஸ்துவுக்கும் அவருடைய சுவிசேஷத்திற்கும் எதிர்த்து நிற்கிறார்கள். சவுலின் புதிய சிநேகிதர்கள் எல்லோரும் கிறிஸ்துவின் சீஷர்கள். இவர்கள் இயேசுகிறிஸ்துவையும் அவருடைய சுவிசேஷத்தையும் விசுவாசிக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் மத்தியில் சவுல் இயேசுகிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கிக்கிறான்.

சவுலின் பிரசங்கத்தைக் கேட்ட, அவனுடைய பழைய சிநேகிதர்கள் ஆச்சரியப்படுகிறார்கள். யூதமார்க்கத்திலும், பரிசேய சமயத்திலும் சவுலுக்கிருந்த வைராக்கியத்தைப்பற்றி அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அப்படிப்பட்ட சவுல் இப்போது அதிகமாகத் திடன்கொண்டு, இயேசுவே கிறிஸ்து என்று திருஷ்டாந்தப்படுத்துகிறான். இதனால் தமஸ்குவில் குடியிருக்கிற யூதர்களை கலங்கப்பண்ணுகிறான்.

யூதர்களால் சவுலுக்கு எதிர்த்து நின்று பேசமுடியவில்லை. அவர்கள் ஆச்சரியப்படுகிறார்கள். கலங்குகிறார்கள். யாரும் சவுலுக்கு விரோதமாக எதிர்த்துப் பேச துணியவில்லை. சவுல் அதிகமாய்த் திடன்கொண்டு பேசுகிறான். அவர்களோ அதிகமாய் ஆச்சரியப்பட்டு, அதிகமாய்க் கலங்குகிறார்கள். சவுலின் பிரசங்கத்தைக் கேட்டு அநேகர் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறார்கள். பலர் இரட்சிக்கப் படுகிறார்கள். சவுல் தமஸ்குவில் ஒரு சபையை ஸ்தாபிக்கிறான்.

சவுலும் பர்னபாவும்
அப் 9 : 23-31

அப் 9:23. அநேகநாள் சென்றபின்பு, யூதர்கள் அவனைக் கொலைசெய்யும்படி ஆலோசனை பண்ணினார்கள்.

அப் 9:24. அவர்களுடைய யோசனை சவுலுக்குத் தெரியவந்தது. அவனைக் கொலை செய்யும்படி அவர்கள் இரவும் பகலும் கோட்டைவாசல்களைக் காத்துக்கொண்டிருந்தார்கள்.

அப் 9:25. சீஷர்கள் இராத்திரியிலே அவனைக் கூட்டிக்கொண்டுபோய், ஒரு கூடையிலே வைத்து, மதில்வழியாய் இறக்கிவிட்டார்கள்.

அப் 9:26. சவுல் எருசலேமுக்கு வந்து, சீஷருடனே சேர்ந்துகொள்ளப் பார்த்தான்; அவர்கள் அவனைச் சீஷனென்று நம்பாமல் எல்லாரும் அவனுக்குப் பயந்திருந்தார்கள்.

அப் 9:27. அப்பொழுது பர்னபா என்பவன் அவனைச் சேர்த்துக் கொண்டு, அப்போஸ்தலரிடத்தில் அழைத்துக்கொண்டுபோய், வழியிலே அவன் கர்த்தரைக் கண்டவிதத்தையும், அவர் அவனுடனே பேசினதையும், தமஸ்குவில் அவன் இயேசுவின் நாமத்தினாலே தைரியமாய்ப் பிரசங்கித்ததையும் அவர்களுக்கு விவரித்துச் சொன்னான்.

அப் 9:28. அதன்பின்பு அவன் எருசலேமிலே அவர்களிடத்தில் போக்கும் வரத்துமாயிருந்து;

அப் 9:29. கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே தைரியமாய்ப் பிரசங்கித்து, கிரேக்கருடனே பேசித் தர்க்கித்தான்; அவர்களோ அவனைக் கொலைசெய்ய எத்தனம்பண்ணினார்கள்.

அப் 9:30. சகோதரர் அதை அறிந்து, அவனைச் செசரியாவுக்கு அழைத்துகொண்டு போய், தர்சுவுக்கு அனுப்பிவிட்டார்கள்.

அப் 9:31. அப்பொழுது யூதேயா கலிலேயா சமாரியா நாடுகளிலெங்கும் சபைகள் சமாதானம் பெற்று, பக்திவிருத்தியடைந்து, கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தோடும், பரிசுத்தஆவியின் ஆறுதலோடும் நடந்து பெருகின.

சவுலைக் கொலைசெய்யும்படி

அநேகநாள் சென்றபின்பு, யூதர்கள் அவனைக் கொலைசெய்யும்படி ஆலோசனை பண்ணினார்கள். அவர்களுடைய யோசனை சவுலுக்குத் தெரியவந்தது. அவனைக் கொலை செய்யும்படி அவர்கள் இரவும் பகலும் கோட்டைவாசல்களைக் காத்துக் கொண்டிருந்தார்கள். சீஷர்கள் இராத்திரியிலே அவனைக் கூட்டிக்கொண்டுபோய், ஒரு கூடையிலே வைத்து, மதில்வழியாய் இறக்கிவிட்டார்கள் (அப் 9:23-25).

அப்போஸ்தலருடைய நடபடிகளின் ஆசிரியரான லூக்கா, இந்தச் சம்பவத்தைப்பற்றி எழுதும்போது, சவுல் அரபி தேசத்திற்குப் பிரயாணம் செய்ததைக் குறித்து எழுதவில்லை. ஆனால் சவுல் அரபி தேசத்திற்குப் பிரயாணமாய்ப் போனதைப்பற்றித் தன்னுடைய நிருபத்தில் எழுதுகிறான். தமஸ்குவில் இரட்சிக்கப்பட்ட பின்பு, சவுல் அரபி தேசத்திற்குப் பிரயாணம் செய்து, மறுபடியும் தமஸ்குவுக்குத் திரும்பி வந்தான்.

"தம்முடைய குமாரனை நான் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கும் பொருட்டாக, அவரை எனக்குள் வெளிப்படுத்தப் பிரியமாயிருந்தபோது, உடனே நான் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் யோசனைபண்ணாமலும்; எனக்கு முன்னே அப்போஸ்தலரானவர்களிடத்திலே எருசலேமுக்குப் போகாமலும்; அரபிதேசத்திற்குப் புறப்பட்டுபோய், மறுபடியும் தமஸ்கு ஊருக்குத் திரும்பிவந்தேன்" (கலா 1:16,17).

சவுல் இரட்சிக்கப்பட்டு அரபு தேசத்திற்கு ஊழியம் செய்யப்போனான். மூன்று வருஷங்களுக்குப் பின்பு சவுல் மறுபடியும் தமஸ்குவுக்குத் திரும்பி வருகிறான். இந்த அதிகாரத்தில் எழுதப்பட்டிருக்கும் இந்தச் சம்பவம், சவுல் இரட்சிக்கப்பட்டு மூன்று வருஷங்களுக்குப் பின்பு நடைபெற்ற சம்பவமாகும்.

சவுலுக்குத் தமஸ்குவில் பிரச்சனை உண்டாயிற்று. இங்குள்ள யூதர்கள் சவுலைக் கொலைசெய்யும்படி ஆலோசனைபண்ணுகிறார்கள். சவுலின் ஜீவனுக்கு ஆபத்து வந்திருக்கிறது. யூதர்கள் மத்தியில் சவுல் அதிகமாய்த் திடன்கொண்டு இயேசுவே கிறிஸ்து என்று பிரசங்கம்பண்ணுகிறான். யூதர்கள் அவனுடைய பிரசங்கத்தையும் அவனையும் வெறுக்கிறார்கள். சவுல் யூதருக்கு விரோதமாகப் பேசுகிறான். யூதமார்க்கத்திற்கு விரோதமாகப் பேசுகிறான். ஒரு காலத்தில் இயேசுகிறிஸ்துவுக்கும், அவருடைய உபதேசத்திற்கும் விரோதமாகப் பேசினவன், இப்போது இயேசுவே கிறிஸ்து என்று அதிகமாய்த் திடன்கொண்டு பேசுகிறான்.

தம்முடைய நாமத்தினிமித்தம் சவுல் எவ்வளவாய்ப் பாடுபடவேண்டுமென்று அவனுக்குக் காண்பிப்பேன் என்று கர்த்தர் திருவுளம் பற்றியிருக்கிறார். இப்போது சவுலுக்குப் பாடுகள் ஆரம்பமாயிருக்கிறது. யூதர்கள் தன்னைக் கொலைசெய்யும்படி ஆலோசனைபண்ணுவது சவுலுக்குத் தெரியவருகிறது. சவுலைக் கொலைசெய்யும்படி யூதர்கள் இரவும் பகலும் கோட்டை வாசலைப் பாதுகாத்துக்கொண்டிருக்கிறார்கள்.

சவுலின் ஆவிக்குரிய ஜீவியத்தில் விரைவான வளர்ச்சி உண்டாயிற்று. சவுல் எந்த அளவுக்கு அதிகமாய்த் திடன்கொண்டு இயேசுகிறிஸ்துவைப்பற்றிப் பிரசங்கம்பண்ணுகிறானோ, அந்த அளவுக்கு அவனுக்கு அதிகமாய் உபத்திரவம் உண்டாயிற்று. சவுல் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் பிரசங்கிக்கிறவனாகவும், துன்பப் படுகிறவனாகவும் இருக்கிறான். இதற்கு முன்பு கிறிஸ்துவின் சீஷர்களைத் துன்பப்படுத்தினவன், இப்போது துன்பப்படுகிற சீஷனாக இருக்கிறான்.

கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்கு அதிகமான கிருபைகளைத் தருகிறார். பல சோதனைகள் மூலமாக அவர் தம்முடைய பிள்ளைகளைச் சோதித்தறிகிறார். சோதிக்கப்படுவதினால் நாம் அழிந்துபோகமாட்டோம். கர்த்தர் நம்முடைய ஆபத்து வேளைகளில் நம்மைப் பாதுகாக்கிறார். தமஸ்கு பட்டணத்தில் சவுலுக்கு ஆபத்து உண்டாயிற்று. இந்த ஆபத்திலிருந்து கர்த்தர் சவுலை விடுவித்து பாதுகாக்கிறார். சவுலுக்கு விரோதமாக யூதர்கள் பண்ணின ஆலோசனை அவனுக்குத் தெரியவருகிறது. அவர்களெல்லோரும் அவனைக் கொலைசெய்யும்படி காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

கிறிஸ்துவின் சீஷர்கள் சவுலுக்கு உதவி செய்கிறார்கள். சவுலை ஒரு கூடையிலே வைத்து மதில் வழியாய் இறக்கிவிட்டு, அவன் தப்பித்துச் செல்ல உதவிபுரிகிறார்கள். அப்போஸ்தலர் பவுல் இந்தச் சம்பவத்தை ஒரு நிருபத்தில் இவ்வாறு எழுதுகிறார். "தமஸ்குபட்டணத்து அரேத்தா ராஜாவினுடைய சேனைத்தலைவன் என்னைப் பிடிக்கவேண்டுமென்று தமஸ்கருடைய பட்டணத்தைக் காவல்வைத்துக் காத்தான்; அப்பொழுது நான் கூடையிலே வைக்கப்பட்டு, ஜன்னலிலிருந்து மதில் வழியாய் இறக்கிவிடப்பட்டு, அவனுடைய கைக்குத் தப்பினேன்" (2கொரி 11:32,33).

சவுல் எருசலேமுக்கு வருகிறான்

சவுல் எருசலேமுக்கு வந்து, சீஷருடனே சேர்ந்துகொள்ளப் பார்த்தான்; அவர்கள் அவனைச் சீஷனென்று நம்பாமல் எல்லாரும் அவனுக்குப் பயந்திருந்தார்கள். அப்பொழுது பர்னபா என்பவன் அவனைச் சேர்த்துக்கொண்டு, அப்போஸ்தலரிடத்தில் அழைத்துக் கொண்டுபோய், வழியிலே அவன் கர்த்தரைக் கண்டவிதத்தையும், அவர் அவனுடனே பேசினதையும், தமஸ்குவில் அவன் இயேசுவின் நாமத்தினாலே தைரியமாய்ப் பிரசங்கித்ததையும் அவர்களுக்கு விவரித்துச் சொன்னான் (அப் 9:26,27).

இரட்சிக்கப்பட்ட பின்பு சவுல் முதன்முறையாக எருசலேமுக்கு வருகிறான். அங்கும் அவனுக்குப் பிரச்சனைகள் உண்டாயிற்று. இந்தச் சம்பவத்தைப்பற்றி பவுல் ஒரு நிருபத்தில் இவ்வாறு எழுதியிருக்கிறார். "மூன்று வருஷம் சென்றபின்பு, பேதுருவைக் கண்டுகொள்ளும்படி நான் எருசலேமுக்குப் போய், அவனிடத்தில் பதினைந்துநாள் தங்கியிருந்தேன். கர்த்தருடைய சகோதரனாகிய யாக்கோபைத் தவிர, அப்போஸ்தலரில் வேறொருவரையும் நான் காணவில்லை" (கலா 1:18,19).

சவுல் எருசலேமிலே அப்போஸ்தலரிடத்தில் போக்கும் வரத்துமாய் இருந்திருக்கிறான் (அப் 9:28). இந்த வசனப்பகுதியில், சவுல் எருசலேமுக்குப் போனதாக எழுதப்பட்ட சம்பவம், ஒருவேளை பின்னொரு காலத்தில், அவன் அங்கு போக்கும் வரத்துமாய் இருந்தபோது நடைபெற்றிருக்கலாம் என்று வேதபண்டிதர்களில் சிலர் கூறுகிறார்கள்.

சவுல் எருசலேமுக்கு வந்து சீஷருடனே சேர்ந்துகொள்ளப் பார்க்கிறான். ஆனால் அவர்களோ சவுலுக்குப் பயப்படுகிறார்கள். சவுல் எங்குபோனாலும், அங்குள்ள ஜனங்கள் அவனை விநோதமாகப் பார்க்கிறார்கள். அவன் இதுவரையிலும் கிறிஸ்துவின் சீஷர்களைத் துன்பப்படுத்தியவன். அது மாத்திரமே அவர்களுக்குப் பிரத்தியட்சமாகத் தெரிந்திருக்கிறது. ஆனால் இப்போதோ சவுல் கிறிஸ்துவின் ஊழியக்காரனாகப் பிரயாணம் பண்ணுகிறான். அவனுடைய பழைய வாழ்க்கையை நன்றாக அறிந்திருக்கிற ஜனங்கள், அவனை கிறிஸ்துவின் சீஷனென்று நம்ப மறுக்கிறார்கள்.

சவுல் எங்குபோனாலும் கிறிஸ்துவின் சீஷருடனே சேர்ந்துகொள்ள பிரயாசப்படுகிறான். ஆனால் அவர்களோ அவனுக்குத் தங்கள் நட்பின் கதவுகளையும், ஐக்கியத்தின் கதவுகளையும் அடைத்துப்போடுகிறார்கள். எல்லாரும் அவனுக்குப் பயந்திருக்கிறார்கள். யூதர்கள் அவனைப் புறம்பே தள்ளிவிட்டு, அவனைக் கொலைசெய்ய முயற்சிபண்ணுகிறார்கள். கிறிஸ்துவின் சீஷர்களோ சவுலை ஏற்றுக்கொள்ளாமல் அவனுக்குப் பயப்படுகிறார்கள். சவுல் ஆதரவற்ற நிலையில், கர்த்தரையே சார்ந்திருக்கிறான்.

சவுல் கிறிஸ்துவின் சீஷன் என்று மற்ற சீஷர்கள் நம்ப மறுத்துவிடுகிறார்கள். சவுல் தன்னைக் கிறிஸ்துவின் சீஷன் போல காண்பித்து மாய்மாலம் பண்ணுவதாக நினைக்கிறார்கள். அவனோடு சேர்ந்தால் அவன் தங்களைப்பிடித்துக் கொன்று போடுவானென்று சீஷர்கள் அவனுக்குப் பயப்படுகிறார்கள். சவுல் ஒருவேளை சீஷர்கள் மத்தியில் உளவு பார்க்கவந்திருப்பானோ என்று அவனைப்பற்றி சந்தேகப்படுகிறார்கள்.

சீஷர்கள் தங்கள் ஜீவனைக்குறித்து மிகுந்த எச்சரிப்போடிருக்கிறார்கள். ஏனெனில் இதே சவுல் கிறிஸ்துவின் சீஷரில் அநேகரைப் பயமுறுத்தி, சீறிப்பாய்ந்து, கொலைசெய்திருக்கிறான். ஆகையினால் சவுலின் இரட்சிப்பின் அனுபவத்தை நம்புவதா, வேண்டாமா என்பதில் சீஷர் மத்தியில் குழப்பமுண்டாயிற்று. இயேசுகிறிஸ்துவை நம்புகிறவர்கள், சவுலை கிறிஸ்துவின் சீஷர்களில் ஒருவன் என்று நம்ப மறுத்துவிடுகிறார்கள்.

கர்த்தருடைய பிள்ளைகள் புறாவைப்போல கபடற்றவர்களாக இருக்கவேண்டும். அதேவேளையில் சர்ப்பங்களைப்போல வினாவுள்ளவர் களாகவும் இருக்கவேண்டும். சவுலைப்போன்றவர்களைத் தங்கள் ஐக்கியத்தில் சேர்த்துக்கொள்ளும்போது விசுவாசிகள் கவனமாகத்தான் இருக்கவேண்டும்.

எருசலேமிலுள்ள சீஷர்கள் சவுலுக்குப் பயந்து அவனைத் தங்களோடு சேர்த்துக்கொள்ளவில்லை. ஆனாலும் சவுலுக்கு உதவிபுரிய கர்த்தர் பர்னபா என்பவனை நியமிக்கிறார். மற்ற சீஷர்கள் சவுலை நம்பாமல் அவனுக்குப் பயப்படுகிறபோது, பர்னபா என்பவன் சவுலைச் சேர்த்துக்கொள்கிறான். அவனை அப்போஸ்தலரிடத்தில் அழைத்துக் கொண்டு போகிறான். வழியிலே சவுல் கர்த்தரை கண்ட விதத்தையும், கர்த்தர் சவுலுடனே பேசினதையும், சவுல் இயேசுவின் நாமத்தினால் தைரியமாய்ப் பிரசங்கித்ததையும் பர்னபா அப்போஸ்தலருக்கு விவரித்துச் சொல்லுகிறான்.

சவுல் அதிகமாய்த் திடன்கொண்டு, இயேசுவே கிறிஸ்து என்று திருஷ்டாந்தப்படுத்தி, தமஸ்குவில் குடியிருக்கிற யூதர்களைக் கலங்கப்பண்ணினான். பர்னபாவுக்கு இந்தச் சம்பவம் எப்படி தெரியவந்தது என்று எழுதப்படவில்லை. சவுலையும் அவனுடைய வார்த்தைகளையும், சாட்சியையும் பர்னபா நம்புகிறான். சவுலைக்குறித்து, அப்போஸ்தலரிடத்தில் அவனுக்கு ஆதரவாகச் சாட்சி சொல்லுகிறான்.

சவுல் போக்கும் வரத்துமாயிருந்தான்

அதன்பின்பு அவன் எருசலேமிலே அவர்களிடத்தில் போக்கும் வரத்துமாயிருந்து; கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே தைரியமாய்ப் பிரசங்கித்து, கிரேக்கருடனே பேசித் தர்க்கித்தான்; அவர்களோ அவனைக் கொலைசெய்ய எத்தனம்பண்ணினார்கள். சகோதரர் அதை அறிந்து, அவனைச் செசரியாவுக்கு அழைத்துகொண்டு போய், தர்சுவுக்கு அனுப்பிவிட்டார்கள் (அப் 9:28-30).

சவுல் எருசலேமுக்கு வந்தபோது ஆரம்பத்தில் சீஷர்கள் அவனை, இயேசுகிறிஸ்துவின் சீஷர்களில் ஒருவன் என்று நம்பவில்லை. எல்லாரும் அவனுக்குப் பயந்திருந்தார்கள். பர்னபா என்பவன் சவுலைச் சேர்த்துக்கொண்டு, அப்போஸ்தலரிடத்தில் அறிமுகம் செய்துவைத்தான். அதன்பின்பு சீஷர்கள் சவுலைத் தங்களோடு சேர்த்துக் கொண்டார்கள். அவன் எருசலேமிலே அவர்களிடத்தில் போக்கும் வரத்துமாயிருந்தான்.

சவுல் எருசலேமுக்கு வந்துபோவது அங்குள்ள யூதர்களுக்குப் பிடிக்கவில்லை. அவன் யூதர்கள் மத்தியில் அதிகமாகத் திடன்கொண்டு இயேசுவே கிறிஸ்து என்று திருஷ்டாந்தப்படுத்துவதை அவர்கள் விரும்பவில்லை. அவர்கள் சவுலையும் அவனுடைய பிரசங்கத்தையும் வெறுக்கிறார்கள்.

எதிர்ப்புக்களுக்கு மத்தியிலும், சவுல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே தைரியமாய்ப் பிரசங்கிக்கிறான். அவர்களோ அவனைக் கொலைசெய்ய எத்தனம்பண்ணுகிறார்கள். சவுல் கிரேக்கருடனே பேசித் தர்க்கிக்கிறான். இவர்கள் கிரேக்கு தேசத்தைச் சேர்ந்த யூதர்கள். சவுலின் பிரசங்கத்தைக் கேட்டு இவர்கள் கோபப்படுகிறார்கள். சவுலும் ஒரு காலத்தில் கிரேக்கு தேசத்தைச் சேர்ந்த யூதனாயிருந்தவன். இதனால் அவர்களோடு சவுல் இயேசுவின் நாமத்தினாலே தைரியமாய்ப் பிரசங்கிக்கிறான்.

கிரேக்கர்கள் சவுலோடு தர்க்கம் பண்ணுகிறார்கள். சவுலோடு அவர்களால் எதிர்த்து நிற்கமுடியவில்லை. சவுல் பரிசுத்த ஆவியினால் நிறைந்து, சாதுரிய வார்த்தைகளைப் பேசுகிறான். கர்த்தர் சவுலின் மூலமாகப் பேசுகிறார். பரிசுத்த ஆவியானவரின் அனுக்கிரகத்தினால், சவுலின் வாயிலிருந்து வார்த்தைகள் தாராளமாய்ப் புறப்பட்டு வருகிறது. கிரேக்கரால் அவனோடு எதிர்த்து நிற்கமுடியவில்லை. தர்க்கம்பண்ண முடியவில்லை. சவுல் கிறிஸ்துவின்மீது பக்திவைராக்கியமாக இருக்கிறான்.

சவுலோடு தர்க்கம்பண்ண முடியாத கிரேக்கர்கள் அவனைக் கொலைசெய்ய எத்தனம்பண்ணுகிறார்கள். சவுல் கர்த்தருக்காக எழும்பி பிரகாசித்து ஊழியம் செய்கிறான். அவனுடைய ஊழியம் மிகவும் முக்கியமானது என்பதை உணர்ந்த பரிசுத்தவான்கள், அவன் தப்பித்துப்போக உதவிசெய்கிறார்கள். இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிற சகோதரருக்கு கிரேக்கரின் வஞ்சக ஆலோசனை தெரியவருகிறது. அவர்கள் அதை அறிந்து, சவுலை செசரியாவுக்கு அழைத்துக்கொண்டுபோய், தர்சுவுக்கு அனுப்பிவிடுகிறார்கள்.

சவுல் தப்பித்துப்போனாலும், தான் போகுமிடத்தில் அவன் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் வல்லமையாய்ப் பிரசங்கம்பண்ணுகிறான். சவுல் எருசலேமிலிருந்து தோற்று ஓடிப்போய் விடவில்லை. அவனுடைய ஆவிக்குரிய யுத்தக்களத்தை எருசலேமிலிருந்து தர்சுவுக்கு மாற்றியிருக்கிறான். தர்சு சவுலின் சொந்த ஊர். தான் பிறந்து வளர்ந்த ஊரில் இயேசுகிறிஸ்துவின் நாமத்தைக் குறித்து வாஞ்சையோடு பிரசங்கம்பண்ணுகிறான். இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று திருஷ்டாந்தப்படுத்துகிறான்.

இந்தக் காலத்தில் சவுல் எருசலேமிலிருந்து புறப்பட்டுப்போவது பரலோகத்திலிருந்து தீர்மானம் செய்யப்பட்ட கர்த்தருடைய சித்தமாகயிருக்கிறது. சவுல் இந்தச் சம்பவத்தைப்பற்றி இவ்வாறு குறிப்பிடுகிறான். "பின்பு நான் எருசலேமுக்குத் திரும்பிவந்து, தேவாலயத்திலே ஜெபம்பண்ணிக் கொண்டிருக்கையில், ஞான திருஷ்டியடைந்து, அவரைத் தரிசித்தேன். அவர் என்னை நோக்கி: நீ என்னைக் குறித்துச் சொல்லும் சாட்சியை இவர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்; ஆதலால் நீ தாமதம்பண்ணாமல் சீக்கிரமாய் எருசலேமைவிட்டுப் புறப்பட்டுப்போ என்றார். அதற்கு நான்: ஆண்டவரே, உம்மிடத்தில் விசுவாசமாயிருக்கிறவர்களை நான் காவலில் வைத்து ஜெபஆலயங்களிலே அடித்ததையும், உம்முடைய சாட்சியாகிய ஸ்தேவானுடைய இரத்தம் சிந்தப்படுகிறபோது, நானும் அருகே நின்று, அவனைக் கொலை செய்வதற்குச் சம்மதித்து, அவனைக் கொலைசெய்தவர்களின் வஸ்திரங்களைக் காத்துக்கொண்டிருந்ததையும், இவர்கள் அறிந்திருக்கிறார்களே என்றேன். அதற்கு அவர்: நீ போ, நான் உன்னைத் தூரமாய்ப் புறஜாதிகளிடத்திலே அனுப்புவேன் என்று சொன்னார் என்றான்" (அப் 22:17-21).

சவுல் எருசலேமிலிருந்து தூரதேசங்களிலுள்ள புறஜாதிகளிடத்தில் அனுப்பப்படுவதற்கு, அவன் எருசலேமிலிருந்து புறப்பட்டுப்போவது கர்த்தருடைய சித்தமாயிற்று. புறஜாதிகளுக்கும் கர்த்தருடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக, சவுல் கர்த்தர் தெரிந்துகொண்ட பாத்திரமாயிருக்கிறான் (அப் 9:15).

சபைகள் பெருகின

அப்பொழுது யூதேயா கலிலேயா சமாரியா நாடுகளிலெங்கும் சபைகள் சமாதானம் பெற்று, பக்திவிருத்தியடைந்து, கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தோடும், பரிசுத்தஆவியின் ஆறுதலோடும் நடந்து பெருகின (அப் 9:31).

யூதேயா, கலிலேயா, சமாரியா நாடுகளிலெங்கும் சபைகள் சமாதானம் பெற்றிருக்கிறது. திருச்சபையின் வளர்ச்சிக்கு இது ஆதாரவாகயிருக்கிறது. சுவிசேஷஊழியம் செய்வதற்குச் சாதகமான சூழ்நிலை உண்டாயிற்று. சவுல் இரட்சிக்கப் பட்டிருக்கிறான். யூதமார்க்கத்துத் தலைவர்கள் கிறிஸ்துவின் சீஷர்களைத் துன்பப்படுத்த சவுலை ஒரு கருவியாகப் பயன்படுத்தி வந்தார்கள். இப்போது சவுல் இரட்சிக்கப்பட்டிருப்பதினால், சபைகள் சமாதானம் பெற்றிருக்கிறது. புயலுக்குப் பின்பு அமைதி உண்டானது போன்றிருக்கிறது. திருச்சபை தன்னுடைய ஊழியத்தைச் செய்வதற்கு ஆயத்தமாகிறது. சபையாரும் தங்களுக்குக் கிடைத்திருக்கும் சமாதானத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்கிறார்கள்.

சபைகள் பக்திவிருத்தி அடைகிறது. விசுவாசத்தில் சபையார் வளர்ச்சி பெறுகிறார்கள். கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தோடு ஜீவிக்கிறார்கள். கர்த்தருக்குப் பயப்படுகிற பயம் எல்லா ஜனங்களையும் ஆளுகை செய்கிறது. விசுவாசிகள் பரிசுத்த ஆவியின் ஆறுதலோடு ஜீவிக்கிறார்கள். தங்களுடைய விசுவாச ஜீவியத்தில் சபையார் எல்லோரும் உண்மையாகவும், சந்தோஷமாகவும் இருக்கிறார்கள்.

பரிசுத்தவான்களுக்குத் துன்பம் உண்டானபோது அவர்கள் ஆவியானவரைப் பற்றிக்கொண்டார்கள். ஆவியானவர் அவர்களை ஆறுதல் படுத்தினார். துன்பகாலத்தில் மாத்திரமல்ல, அவர்கள் சமாதானம் பெற்றிருக்கிற காலத்திலும் பரிசுத்த ஆவியின் ஆறுதலினால் அவர்கள் நிறைந்திருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தோடு ஜீவிக்கும்போது, அவர்களுக்கு பரிசுத்த ஆவியானவரின் ஆறுதல் கிடைக்கிறது. கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தினால் வழிநடத்தப்படுகிறவர்களே, தங்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் சந்தோஷமாக முன்னேறிச் செல்வார்கள்.

கர்த்தர் சபைகளை ஆசீர்வதிக்கிறார். விசுவாசிகளின் எண்ணிக்கை பெருகிற்று. கிறிஸ்துவின் சத்துருக்கள் சபைகளைத் துன்பப் படுத்தினார்கள். அந்தத் துன்பத்தின் மத்தியிலும் சபைகள் பெருகிற்று. துன்பம் அதிகரிக்கும்போது சபை வேகமாக வளர்ச்சி பெறும். உன்னதமானவரின் பரிசுத்தவான்களை உபத்திரவப்படுத்தினால் அவர்கள் கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணுவார்கள். கர்த்தர் அவர்களுடைய ஜெபத்தைக்கேட்டு, அவர்களைப் பாதுகாப்பார். அவர்களுக்காக யுத்தம் பண்ணுவார். பிரச்சனை கூடும்போது ஜெபநேரமும் கூடும். ஜெபநேரம் கூடும்போது ஆவிக்குரிய எழுப்புதல் உண்டாகும். எழுப்புதல் உண்டாகும்போது சபை வளர்ச்சி பெற்று பெருகும்.

பேதுரு
அப் 9 : 32-35

அப் 9:32. பேதுரு போய் எல்லாரையும் சந்தித்துவருகையில், அவன் லித்தா ஊரிலே குடியிருக்கிற பரிசுத்தவான்களிடத்திற்கும் போனான்.

அப் 9:33. அங்கே எட்டு வருஷமாய்க் கட்டிலின்மேல் திமிர்வாதமுள்ளவனாய்க் கிடந்த ஐனேயா என்னும் பேருள்ள ஒரு மனுஷனைக் கண்டான்.

அப் 9:34. பேதுரு அவனைப் பார்த்து: ஐனேயாவே, இயேசுகிறிஸ்து உன்னைக் குணமாக்குகிறார்; நீ எழுந்து, உன் படுக்கையை நீயே போட்டுக்கொள் என்றான். உடனே அவன் எழுந்திருந்தான்.

அப் 9:35. லித்தாவிலும் சாரோனிலும் குடியிருந்தவர்களெல்லாரும் அவனைக் கண்டு, கர்த்தரிடத்தில் திரும்பினார்கள்.

லித்தா

பேதுரு போய் எல்லாரையும் சந்தித்துவருகையில், அவன் லித்தா ஊரிலே குடியிருக்கிற பரிசுத்தவான்களிடத்திற்கும் போனான் (அப் 9:32).

யூதேயா, கலிலேயா, சமாரியா நாடுகளிலெங்கும் புதிய சபைகள் ஸ்தாபிக்கப்படுகிறது. பேதுரு எருசலேமிலிருந்து புறப்பட்டுப்போய் சபைகளிலுள்ள விசுவாசிகளையெல்லாம் சந்தித்து வருகிறான். பேதுரு ஒரு அப்போஸ்தலன். அவன் ஒரு ஸ்தல சபையில் போதகராக ஊழியம் செய்யவில்லை. பேதுரு தன்னுடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவைப்போல எல்லா இடங்களுக்கும் நன்மை செய்கிறவனாகச் சுற்றி அலைகிறான். எல்லா இடங்களிலும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணுகிறான்.

பேதுரு பல சபைகளுக்குப் போனாலும் அவனுடைய ஊழியத்தின் தலைமை ஸ்தாபனம் எருசலேமிலிருக்கிறது. பேதுரு எருசலேமில் சிறைச்சாலையில் காக்கப்படுகிறான் (அப் 12:4). பேதுரு ஒவ்வொரு ஊராகப் போகும்போது, அவன் லித்தா ஊரிலே குடியிருக்கிற பரிசுத்தவான்களிடத்திற்கும் போகிறான். இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் "பரிசுத்தவான்கள்" என்று அழைக்கப்படுகிறார்கள். இவர்கள் இந்தப் பூமியிலே பரிசுத்தவான் களாகயிருக்கிறார்கள். கர்த்தரிடத்தில் விசுவாசம் வைத்து ஜீவிக்கிறார்கள்.

ஐனேயா

அங்கே எட்டு வருஷமாய்க் கட்டிலின்மேல் திமிர்வாதமுள்ளவனாய்க் கிடந்த ஐனேயா என்னும் பேருள்ள ஒரு மனுஷனைக் கண்டான். பேதுரு அவனைப் பார்த்து: ஐனேயாவே, இயேசுகிறிஸ்து உன்னைக் குணமாக்குகிறார்; நீ எழுந்து, உன் படுக்கையை நீயே போட்டுக்கொள் என்றான். உடனே அவன் எழுந்திருந்தான் (அப் 9:33,34).

லித்தா ஊரிலே ஐனேயா என்னும் பேருள்ள ஒரு மனுஷன் இருக்கிறான். இவன் எட்டு வருஷமாய்க் கட்டிலின்மேல் திமிர்வாதமுள்ளவனாய்க் கிடக்கிறான். கொடிய வேதனைப்படுகிறான். ஒரே படுக்கையில் எட்டு வருஷமாகப் படுத்திருப்பதினால், இவனுடைய சரீரத்தின் தோல்களிலும் வியாதி வந்திருக்கும். எப்படியாவது தான் குணமடையவேண்டும் என்னும் விருப்பம் ஐனேயாவின் உள்ளத்தில் இருந்திருக்கும். அவனுக்கு மாத்திரமல்ல அவனுடைய உற்றார் உறவினரும் ஐனேயா சீக்கிரத்தில் குணமடையவேண்டும் என்று விருப்பத்தோடிருந்திருப்பார்கள்.

இயேசுகிறிஸ்து தம்முடைய ஊழியக்காலத்தில் இப்படிப்பட்ட வியாதியஸ்தர்களைச் சந்தித்து அவர்களைச் சொஸ்தமாக்கியிருக்கிறார். மருத்துவர்களால் கைவிடப்பட்டவர்கள், மருத்துவ சிகிச்சையில் தங்கள் ஆஸ்திகளையே அழித்துப்போட்டவர்கள், எல்லோராலும் கைவிடப்பட்ட வியாதியஸ்தர்கள் ஆகியோரை, இயேசு சொஸ்தமாக்கி தம்முடைய நாமத்தை மகிமைப்படுத்தியிருக்கிறார்.

ஐனேயா எட்டு வருஷமாய்த் திமிர்வாதமுள்ளவனாய்க் கிடப்பதினால் சரீர பலவீனத்தோடிருக்கிறான். நம்முடைய சரீரத்தில் நாமும் இவனைப்போல பலவீனமாகயிருந்தால் கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணுவோம். கர்த்தர் தாமே நம்மைக் குணப்படுத்தவேண்டுமென்று கருத்தாய் ஜெபிப்போம். லித்தா ஊரிலிருக்கிற ஐனேயாவைப் பேதுரு பார்க்கிறான். அவனைப்பார்த்து "ஐனேயாவே, இயேசுகிறிஸ்து உன்னைக் குணமாக்குகிறார்" என்று சொல்லுகிறான். பேதுரு இயேசுகிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லி ஜெபம்பண்ணுகிறான்.

"குணமாக்குதல்" என்னும் வார்த்தைக்கு "பூரணமாக்குதல்" என்று பொருள். இயேசுகிறிஸ்துவே நம்மைப் பூரணப்படுத்துகிறவர். நமக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், நம்முடைய ஜீவன் பரிபூரணப்படவும் இயேசுகிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்திருக்கிறார்.

பேதுரு ஐனேயாவைப்பார்த்து "நீ எழுந்து, உன் படுக்கையை நீயே போட்டுக்கொள்" என்று சொல்லுகிறான். உடனே ஐனேயா எழுந்திருக்கிறான். எட்டு வருஷமாகக் கட்டிலின்மேல் திமிர்வாதமுள்ளவனாகக் கிடந்தவன், இப்போது யாருடைய உதவியுமில்லாமல், அவனே எழுந்து, தன் படுக்கையைப் போட்டுக்கொள்கிறான். அவனுக்கு அற்புத சுகம் உண்டாயிற்று. இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் திமிர்வாதக்காரன் சொஸ்தமடைந்திருக்கிறான். பேதுரு ஐனேயாவுக்காக ஜெபிக்கும்போது "இயேசுகிறிஸ்து உன்னை குணமாக்குகிறார்" என்று சொல்லுகிறான். இயேசுகிறிஸ்து நம்மைப் பூரணமாகக் குணப்படுத்துகிறவர். வியாதியின் வேதனை குறைந்தால் மாத்திரம் போதாது. வியாதி பூரணமாய்க் குணமடையவேண்டும். இதுவே மெய்யான குணமாதல்.

பேதுரு ஐனேயாவைப்பார்த்து "நீ எழுந்து, உன் படுக்கையை நீயே போட்டுக்கொள்" என்று சொல்லுகிறான். இயேசுகிறிஸ்து நம்மைக் குணப்படுத்துகிறார். நம்முடைய துன்பவேளையில் அவர் நமக்காக யுத்தம்பண்ணுகிறார். எல்லாவற்றையும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே நமக்காகச் செய்து முடிக்கிறார். இதனால் நமக்கு ஒருவேலையும் இல்லையென்று நினைத்து சும்மாயிருக்கக்கூடாது. கர்த்தர் தம்முடைய கிரியையை நமக்குச் செய்கிறார். நாம் செய்யவேண்டிய வேலைகளை நாம் தான் செய்யவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஐனேயாவை குணப்படுத்தினாலும், ஐனேயாதான் எழுந்து, தன்னுடைய படுக்கையைப் போட்டுக்கொள்ளவேண்டும். இயேசுகிறிஸ்துவே தன்னுடைய படுக்கையை, அவருடைய தெய்வீக வல்லமையினால் அற்புதமாகப் போட வேண்டுமென்று ஐனேயா எதிர்பார்க்கக் கூடாது. தேவன் நமக்குக் கொடுக்கிற கடமையை நாம் நிறைவேற்றவேண்டும். நம்முடைய வேலைகளை நேர்த்தியாகச் செய்து முடிப்பதற்கு கர்த்தர் நம்மைப் பலப்படுத்துவார்.

பேதுரு ஐனேயாவிடத்தில் "நீ எழுந்து, உன் படுக்கையை நீயே போட்டுக்கொள்" என்று கூறுகிறான். இதுவரையிலும் அவன் திமிர்வாதமுள்ளவனாயிருந்தான். அவனால் எழுந்து நடக்க முடியாது. ஆகையினால் அவனுக்குப் படுக்கை தேவைப்பட்டது. இப்போதோ இயேசுகிறிஸ்து அவனைக் குணப்படுத்தியிருக்கிறார். இனிமேல் அவனுக்கு வியாதிப் படுக்கை தேவையில்லை. எப்போதாவது ஓய்வெடுப்பதற்கு தன்னுடைய படுக்கையில் படுத்தால் அவனுக்குப் போதுமானது. கர்த்தர் வியாதி படுக்கையை, ஓய்வெடுக்கிற படுக்கையாக மாற்றுகிறவர். பேதுரு இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் பேசின உடனேயே, ஐனேயா தன் வியாதி படுக்கையிலிருந்து எழுந்திருக்கிறான். இயேசுகிறிஸ்து அற்புதமாகச் சுகமளிக்கிறவர். பூரணமாகக் குணப்படுத்துகிறவர்.

கர்த்தரிடத்தில் திரும்பினார்கள்

லித்தாவிலும் சாரோனிலும் குடியிருந்தவர்களெல்லாரும் அவனைக் கண்டு, கர்த்தரிடத்தில் திரும்பினார்கள் (அப் 9:35).

எட்டு வருஷமாய்த் திமிர்வாதமுள்ளவனாகயிருந்த ஐனேயா, இப்போது இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் குணமடைந்திருக்கிறான். இந்த நற்செய்தி லித்தா ஊரில் குடியிருந்தவர்கள் மத்தியில் பரம்பிற்று. இங்கு மாத்திரமல்ல லித்தாவுக்கு அருகிலுள்ள சாரோன் என்னும் ஊரிலும் இந்த நற்செய்தி பரவுகிறது. இந்த ஊர்களில் குடியிருந்தவர்களெல்லோரும் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் குணமடைந்திருக்கிற ஐனேயாவைக் காண்கிறார்கள். அவர்களெல்லோரும் கர்த்தரிடத்தில் திரும்புகிறார்கள்.

ஐனேயாவுக்கு இந்த அற்புதம் எப்படி உண்டாயிற்று என்று விசாரித்து அறிந்து கொள்கிறார்கள். ஐனேயா குணமடைந்திருப்பது பிரத்தியட்சமாக நடைபெற்றிருக்கிற அற்புத சம்பவம். எட்டு வருஷமாய் ஐனேயா திமிர்வாதமுள்ளவனாய்க் கட்டிலின்மேல் படுத்திருந்தது அந்த ஊரார் எல்லோருக்கும் தெரியும். இப்போது அவன் இயேசுகிறிஸ்துவின் வல்லமையினால் எழுந்து நடப்பதும் அவர்களுக்குத் தெரியும். இதையெல்லாம் பார்த்து அந்த ஜனங்களெல்லோரும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவிடத்தில் திரும்புகிறார்கள். இயேசுகிறிஸ்துவே தங்களை ஆளுகை செய்யவேண்டுமென்றும், தங்களுக்கு உபதேசம்பண்ண வேண்டுமென்றும், தங்களை இரட்சிக்கவேண்டுமென்றும் அவரிடத்தில் திரும்புகிறார்கள்.

தொற்காள்
அப் 9 : 36-43

அப் 9:36. யோப்பா பட்டணத்தில் கிரேக்குப் பாஷையிலே தொற்காள் என்று அர்த்தங்கொள்ளும் தபீத்தாள் என்னும் பேருடைய ஒரு சீஷி இருந்தாள்; அவள் நற்கிரியைகளையும் தருமங்களையும் மிகுதியாய்ச் செய்துகொண்டுவந்தாள்.

அப் 9:37. அந்நாட்களில் அவள் வியாதிப்பட்டு மரணமடைந்தாள். அவளைக் குளிப்பாட்டி, மேல்வீட்டிலே கிடத்திவைத்தார்கள்.

அப் 9:38. யோப்பா பட்டணம் லித்தா ஊருக்குச் சமீபமானபடியினாலே, பேதுரு அவ்விடத்தில் இருக்கிறானென்று சீஷர்கள் கேள்விப்பட்டு, தாமதமில்லாமல் தங்களிடத்தில் வரவேண்டுமென்று சொல்லும்படி இரண்டு மனுஷரை அவனிடத்திற்கு அனுப்பினார்கள்.

அப் 9:39. பேதுரு எழுந்து, அவர்களுடனே கூடப்போனான். அவன் போய்ச் சேர்ந்தபொழுது, அவர்கள் அவனை மேல்வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போனார்கள். அப்பொழுது விதவைகளெல்லாரும் அழுது, தொற்காள் தங்களுடனேகூட இருக்கையில் செய்திருந்த அங்கிகளையும் வஸ்திரங்களையும் காண்பித்து, அவனைச் சூழ்ந்துநின்றார்கள்.

அப் 9:40. பேதுரு எல்லாரையும் வெளியே போகச்செய்து, முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணி, பிரேதத்தின் புறமாய்த் திரும்பி: தபீத்தாளே, எழுந்திரு என்றான். அப்பொழுது அவள் தன் கண்களைத் திறந்து, பேதுருவைப் பார்த்து உட்கார்ந்தாள்.

அப் 9:41. அவன் அவளுக்குக் கைகொடுத்து, அவளை எழுந்திருக்கப் பண்ணி, பரிசுத்தவான்களையும் விதவைகளையும் அழைத்து, அவளை உயிருள்ளவளாக அவர்களுக்கு முன் நிறுத்தினான்.

அப் 9:42. இது யோப்பா பட்டணம் எங்கும் தெரியவந்தது. அப்பொழுது அநேகர் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள்.

அப் 9:43. பின்பு அவன் யோப்பா பட்டணத்திலே தோல் பதனிடுகிறவனாகிய சீமோன் என்னும் ஒருவனிடத்தில் அநேகநாள் தங்கியிருந்தான்.

தொற்காள் மரணமடைந்தாள்

யோப்பா பட்டணத்தில் கிரேக்குப் பாஷையிலே தொற்காள் என்று அர்த்தங்கொள்ளும் தபீத்தாள் என்னும் பேருடைய ஒரு சீஷி இருந்தாள்; அவள் நற்கிரியைகளையும் தருமங்களையும் மிகுதியாய்ச் செய்து கொண்டுவந்தாள். அந்நாட்களில் அவள் வியாதிப்பட்டு மரணமடைந்தாள். அவளைக் குளிப்பாட்டி, மேல்வீட்டிலே கிடத்திவைத்தார்கள் (அப் 9:36,37).

யோப்பா பட்டணத்தில் தொற்காள் என்பவள் இருந்தாள். இவளுடைய பெயர் தபீத்தாள். கிரேக்கு பாஷையிலே இந்தப் பெயர் தொற்காள் என்று அழைக்கப்படுகிறது. இவ்விரு பெயர்களுக்கும் "பெண்மான்" என்று பொருள். இவள் இயேசுகிறிஸ்துவுக்குச் சீஷியாகயிருந்தாள். இவள் பல நற்கிரியைகளையும் தருமங்களையும் மிகுதியாய்ச் செய்து கொண்டு வந்தாள். தொற்காள் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்தாள். தன்னுடைய விசுவாசத்தை நற்கிரியைகளின் மூலமாக வெளிப்படுத்தினாள்.

ஒரு மரத்தில் நற்கனிகள் நிறைந்திருப்பதுபோல, தொற்காளின் ஜீவியம் முழுவதிலும் நற்கிரியைகள் நிறைந்திருந்தது. ஒரு சிலர் நல்ல வார்த்தைகளினால் நிறைந்திருப்பார்கள். ஆனால் அவர்களிடத்தில் எந்த நற்கிரியைகளும் காணப்படாது. வெறும் பேச்சுக்களைப் பேசினால் போதாது. நம்முடைய பேச்சை கிரியைகளினால் உறுதிபண்ணவேண்டும். தபீத்தாள் அதிகமாக பேசினதாகத் தெரியவில்லை. ஆனால் அவள் நற்கிரியைகளையும், தருமங்களையும் மிகுதியாகச் செய்துகொண்டு வந்தாள் என்று அவளைப்பற்றி எழுதப்பட்டிருக்கிறது.

தொற்காள் பல தருமங்களைச் செய்தாள். பயபக்தியோடு கர்த்தரை ஆராதித்து, ஆதரவற்ற ஜனங்களுக்கும் அவள் தருமங்களைச் செய்திருக்கிறாள். தொற்காளின் கிரியைகள் பக்தியுள்ள கிரியைகளாகவும், இரக்கமுள்ள கிரியைகளாகவும், தானதருமம் செய்த கிரியைகளாகவும் இருக்கிறது. தொற்காளிடத்தில் காணப்பட்ட அன்பு, தேவையுள்ளோர் எல்லோருக்கும் பகிர்ந்து கொடுக்கப்பட்டிருக்கிறது. அவளுடைய அயலகத்தார் அனைவரும் தொற்காளைப் பற்றி நற்சாட்சி கூறுகிறார்கள்.

தொற்காள் ஏழைகளுக்கு தன்னுடைய பணத்தைக்கொடுத்து தருமம் செய்கிறாள். அவளுடைய தருமகாரியம் அத்துடன் நின்றுவிடவில்லை. தன்னுடைய கைகளினால் அவர்களுக்கு பிரயோஜனமானதைச் செய்து, தேவையுள்ளவர்களுக்குக் கொடுத்தாள். அநேக அங்கிகளையும் வஸ்திரங்களையும் செய்து, வஸ்திரமில்லாதவர்களுக்குக் கொடுத்து உதவிசெய்தாள்.

நாமும் தொற்காளைப்போல நற்கிரியைகளையும் தருமங்களையும் செய்யவேண்டும். தருமம் செய்வதற்கு நம்மிடத்தில் பணமில்லையென்றால், நம்முடைய சரீரத்தினால் செய்யக்கூடிய உதவிகளைப் பிறருக்குச் செய்யலாம். ஏழை எளியவர்களுக்கு நம்முடைய கைகளினால் நற்கிரியைகளைச் செய்து அவர்களுக்கு உதவி செய்யலாம். அவர்களுக்கு கையாகவும், காலாகவும் செயல்பட்டு உதவிபுரியலாம். இவற்றை நம்முடைய சுயஆதாயத்திற்காகச் செய்யாமல், தரித்திரரின் பிரயோஜனத்திற்காகச் செய்யவேண்டும்.

நற்கிரியைகளைச் செய்யவேண்டும் என்னும் விருப்பமில்லாதவர்கள், எவ்வளவு பெரிய ஐசுவரியவான்களாகயிருந்தாலும், அவர்கள் ஏழைகளுக்கு உதவி செய்யமாட்டார்கள். பிறருக்கு உதவி செய்வதுபோல அவர்கள் எவ்வளவுதான் மாய்மாலம் செய்தாலும் அவர்களினால் தரித்திரருக்கு ஒரு பிரயோஜனமும் உண்டாகாது.

தொற்காள் தன் கைகளினால் வேலைசெய்து, தருமம் செய்தாள். அவள் உயிரோடிருக்கையில் அவள் செய்திருந்த அங்கிகளையும் வஸ்திரங்களையும் ஒரு சில விதவை ஸ்திரீகள் பத்திரமாக வைத்திருக்கிறார்கள். அவள் மூலமாக நன்மையைப் பெற்றுக்கொண்டவர்கள், அவளுடைய நற்கிரியைகளுக்கும், தானதருமங்களுக்கும் சாட்சியாக அறிக்கை செய்கிறார்கள்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணுவதோடு, பிறருக்கு நம்மால் செய்ய முடிகிற உதவிகளையும் செய்யவேண்டும். தொற்காளைப்போன்ற ஒரு சிலர் மாத்திரம் உதவி செய்தால் போதும் என்று நினைக்கக்கூடாது. எல்லா விசுவாசிகளும் தேவைப்படுகிற பிறருக்கு உதவிசெய்கிற மனமுள்ளவர்களாக இருக்கவேண்டும்.

ஏராளமானோருக்கு நற்கிரியைகளையும் தருமங்களையும் மிகுதியாய்ச் செய்துகொண்டு வந்த தொற்காள், அந்நாட்களில் வியாதிப்பட்டு மரணமடைந்தாள். அவளுடைய உற்றார் உறவினரும், சிநேகிகளும் மரணமடைந்த தொற்களைக் குளிப்பாட்டி மேல்வீட்டிலே கிடத்தி வைக்கிறார்கள். மரித்தோரின் சடலத்தை இதுபோல குளிப்பாட்டி, கல்லறையில் அடக்கம்பண்ணுகிற வஸ்திரம் தரித்து, மேல்வீட்டில் வைப்பது அக்காலத்து பாரம்பரிய வழக்கம்.

தங்களிடத்தில் வரவேண்டும்

யோப்பா பட்டணம் லித்தா ஊருக்குச் சமீபமானபடியினாலே, பேதுரு அவ்விடத்தில் இருக்கிறானென்று சீஷர்கள் கேள்விப்பட்டு, தாமதமில்லாமல் தங்களிடத்தில் வரவேண்டுமென்று சொல்லும்படி, இரண்டு மனுஷரை அவனிடத்திற்கு அனுப்பினார்கள் (அப் 9:38).

பேதுரு லித்தாவிலே ஊழியம் செய்துகொண்டிருக்கிறான். யோப்பா பட்டணம் லித்தா ஊருக்குச் சமீபமாயிருக்கிறது. பேதுருவின் மூலமாய் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து செய்து வருகிற அதிசயங்களையும் அற்புதங்களையும், யோப்பா பட்டணத்து ஜனங்களும் கேள்விப்படுகிறார்கள். பேதுரு இப்போது லித்தா ஊரிலே இருக்கிறான் என்பதை யோப்பா ஊரிலிருக்கிற சீஷர்கள் கேள்விப்பட்டு, தங்கள் ஊருக்குத் தாமதமில்லாமல் அவன் வரவேண்டும் என்று சொல்லும்படி, இரண்டு மனுஷரை அவனிடத்திற்கு அனுப்புகிறார்கள். அனனியா திமிர்வாதத்திலிருந்து குணமாக்கப்பட்டதை யோப்பா பட்டணத்திலுள்ள சீஷர்கள் கேள்விப்படுகிறார்கள்.

யோப்பா பட்டணத்தில் தொற்காள் வியாதிப்பட்டு மரணமடைந்திருக்கிறாள். லித்தா ஊரிலே திமிர்வாதக்காரன் குணமடைந்திருக்கிறான். ஒருவேளை பேதுரு தங்களிடத்தில் வந்தால், மரித்துப்போன தொற்காளுக்கு ஒரு அற்புதம் நடக்கும் என்று யோப்பா பட்டணத்தார் விசுவாசிக்கிறார்கள். பேதுருவை தாமதமில்லாமல் தங்களிடத்தில் வரவேண்டுமென்று சொல்லி அனுப்புகிறார்கள். மரித்துப்போன பின்பு மருத்துவருக்குச் சொல்லி அனுப்பி பிரயோஜனமில்லை. மருத்துவர்கள் வந்தாலும், மரித்துப்போனவர்களை மறுபடியும் உயிர் பெறச் செய்ய முடியாது. ஆனால் கர்த்தருடைய அப்போஸ்தலனாகிய பேதுருவை காலதாமதம்பண்ணாமல் வருமாறு அழைக்கிறார்கள். தொற்காள் மரித்துப்போனாலும் பேதுரு இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் அற்புதம் செய்வான் என்று எதிர்பார்க்கிறார்கள். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் எப்போது வந்தாலும் ஆசீர்வாதம்தான்.

அங்கிகளும் வஸ்திரங்களும்

பேதுரு எழுந்து, அவர்களுடனே கூடப்போனான். அவன் போய்ச் சேர்ந்தபொழுது, அவர்கள் அவனை மேல்வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போனார்கள். அப்பொழுது விதவைகளெல்லாரும் அழுது, தொற்காள் தங்களுடனேகூட இருக்கையில் செய்திருந்த அங்கிகளையும் வஸ்திரங்களையும் காண்பித்து, அவனைச் சூழ்ந்துநின்றார்கள் (அப் 9:39).

பேதுரு எழுந்து யோப்பா ஊருக்குப் போகிறான். பேதுரு தன்னை அழைத்தவர்களோடு கூடப்போகிறான். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் வாய்ப்பு வரும்போதெல்லாம் ஊழியம் செய்ய ஆயத்தமாயிருக்கவேண்டும். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஊழியம் கொள்ளவராமல், ஊழியம் செய்யவந்தார் என்பதை நாம் நினைவுகூரவேண்டும். ஊழியம் செய்ய வாய்ப்பு வரும்போது, அதைச் செய்யாமல் சோம்பலாய் இருந்துவிடக்கூடாது. கர்த்தர் ஊழியம் செய்வதற்காகவே நம்மை அழைத்திருக்கிறார். நாம் சும்மாயிருப்பதற்காக நம்மை அழைக்கவில்லை. ஊழியம் செய்கிறவர்கள்தான் ஊழியக்காரர்கள். சும்மா இருக்கிறவர்கள் சோம்பற்காரர்கள்.

பேதுரு யோப்பா பட்டணத்தில், மரணமடைந்த தொற்காளை குளிப்பாட்டி வைத்திருக்கிற வீட்டிற்குப் போகிறான். அவன் அங்கு போய்ச் சேர்ந்தபோது, அந்த வீட்டிலுள்ளவர்கள் அவனை மேல்வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போகிறார்கள். அங்குதான் தொற்காளின் சரீரத்தை குளிப்பாட்டி கிடத்தி வைத்திருக்கிறார்கள். பேதுரு மேல்வீட்டிற்குப் போனபோது விதவைகளெல்லோரும் அழுகிறார்கள். தொற்காள் தங்களுடனே கூடயிருக்கையில் செய்திருந்த அங்கிகளையும் வஸ்திரங்களையும் பேதுருவுக்குக் காண்பிக்கிறார்கள். தொற்காள் உயிரோடிருந்த காலத்தில் விதவைகளுக்கு வஸ்திரம் கொடுத்து உதவி செய்திருக்கிறாள்.

வஸ்திரமில்லாதவர்களுக்கு வஸ்திரம் கொடுத்து உதவிசெய்வது மெய்யாகவே ஒரு நற்கிரியை. ஆடம்பரமான வஸ்திரங்களைக் கொடுக்கவில்லையென்றாலும், குளிருக்கு போர்த்திக் கொள்ள உதவுகிற வஸ்திரங்களைக் கொடுக்கலாம். தேவையான வஸ்திரங்களைக் கொடுத்து தரித்திரருக்கு உதவிசெய்யவேண்டும். தொற்காளுக்கு அநேக சிநேகிதிகள் இருந்தார்கள். இவர்களில் ஒருவரும் ஐசுவரியவான்களல்ல. இவர்களெல்லோருமே ஏழை விதவைகள். தொற்காளின் கைகளிலிருந்து இவர்கள் உதவிகளைப் பெற்றுக்கொண்டவர்கள். தொற்காள் மூலமாக நன்மை பெற்றவர்கள். இவர்கள் தொற்காளைப்பற்றி நல்ல வார்த்தைகளைக் கூறுகிறார்கள்.

தேவையுள்ளவர்கள் யார் என்று அறிந்து நாம் உதவிசெய்யவேண்டும். சோம்பேறிகளுக்கு உதவிசெய்வதினால் அவர்களுக்கு ஒரு நன்மையும் உண்டாகாது. எதையாவது கொடுத்தால் அவர்கள் சந்தோஷமாக வாங்கிக் கொள்வார்கள். உதவிபெற்றுக்கொண்ட பின்பு, உதவி செய்தவர்களைப்பற்றி குறைவாகப் பேசுவார்கள். இப்படிப்பட்ட சோம்பேறிகளை நிதானித்து அறிய வேண்டும். இயேசுகிறிஸ்துவின் நாம மகிமைக்காக நாம் தரித்திரருக்கு உதவிசெய்யும்போது கர்த்தர் நம்மை ஆசீர்வதிக்கிறார்.

தொற்காளின் சரீரத்தைச் சுற்றியிருக்கிறவர்களின் கைகளில் அங்கிகளும் வஸ்திரங்களும் இருக்கிறது. இவையெல்லாம் தொற்காள் அவர்களோடு கூடயிருந்தபோது செய்தவை. உதவி பெற்றவர்கள் அந்த உதவியை நினைத்துப் பார்க்கிறார்கள். வஸ்திரமில்லாதவர்களுக்கு நாம் வஸ்திரத்தைக் கொடுத்து உதவிசெய்யவேண்டும். கர்த்தர் இதில் பிரியப்படுகிறார். "பசியுள்ளவனுக்கு உன் ஆகாரத்தைப் பகிர்ந்துகொடுக்கிறதும், துரத்துண்ட சிறுமையானவர்களை வீட்டிலே சேர்த்துக்கொள்ளுகிறதும், வஸ்திரமில்லாதவனைக் கண்டால் அவனுக்கு வஸ்திரங் கொடுக்கிறதும், உன் மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காமலிருக்கிறதும் அல்லவோ எனக்கு உகந்த உபவாசம்" (ஏசா 58:7).

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நம்மிடத்தில் விசுவாசமும் இருக்கவேண்டும். நற்கிரியைகளும் இருக்கவேண்டும். யாக்கோபு பிறருக்கு உதவி செய்வதைப்பற்றி இவ்வாறு தெளிவாக எழுதியிருக்கிறார். "என் சகோதரரே, ஒருவன் தனக்கு விசுவாசமுண்டென்று சொல்லியும், கிரியைகளில்லாதவனானால் அவனுக்குப் பிரயோஜனமென்ன? அந்த விசுவாசம் அவனை இரட்சிக்குமா? ஒரு சகோதரனாவது சகோதரியாவது வஸ்திரமில்லாமலும் அநுதின ஆகாரமில்லாமலும் இருக்கும்போது, உங்களில் ஒருவன் அவர்களை நோக்கி: நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர்காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லியும், சரீரத்திற்கு வேண்டியவைகளை அவர்களுக்குக் கொடாவிட்டால் பிரயோஜனமென்ன? அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலேதானே செத்ததாயிருக்கும்" (யாக் 2:14-17).

விதவைகள் தொற்காள் செய்த அங்கிகளையும் வஸ்திரங்களையும் பேதுருவுக்குக் காண்பிக்கிறார்கள். அவர்கள் ஏழை விதவைகளாக யிருந்தாலும், தங்களுக்கு உதவி செய்தவர்களுக்கு நன்றி கூறுவதில் ஐசுவரியமுள்வர் களாயிருக்கிறார்கள். நமக்கு யாராவது உதவி செய்தால், அந்த உதவியை நன்றியோடு அங்கீகரிக்க வேண்டும். உதவியையும் பெற்றுக் கொண்டு, உதவி செய்தவருக்கு நன்றி சொல்லாமலிருப்பது நல்ல சுபாவமல்ல. உதவிகளைப் பெற்றுக் கொண்டவர்கள், தாங்கள் பெற்றுக் கொண்ட உதவிகளை மற்றவர்களுக்குத் தெரியாமல் மறைக்க வேண்டிய அவசியமில்லை. தொற்காள் செய்த அங்கிகளையும் வஸ்திரங்களையும் காண்பித்ததன் மூலமாக, அவள் உயிரோடிருந்த காலத்தில் எவ்வளவு சுறுசுறுப்பாக வேலை செய்தாள் என்பதை, பேதுருவுக்கு அறிவிக்கிறார்கள்.

தொற்காளின் சரீரத்தைச் சுற்றிலும் விதவைகள் துக்கமாய் அழுதுகொண்டு, நின்றுகொண்டிருக்கிறார்கள். அவர்கள் தொற்காளுக்காக அழவேண்டிய அவசியமில்லை. அவள் இப்போது கர்த்தருடைய சமுகத்தில் இளைப்பாறுதலைப் பெற்றுக்கொண்டாள். அவள் செய்த நற்கிரியைகளுக்கு ஏற்ற பிரகாரம், அவளுக்குப் பரலோகத்தில் வெகுமதி கொடுக்கப்படும். ஒருவேளை ஏழை விதவைகள் தங்களுக்காகவும் தங்கள் பிள்ளைகளுக்காகவும் கண்ணீர் விட்டு அழுதிருக்கலாம். தொற்காளைப் போல உதவி செய்கிற இரக்க குணமுள்ளவர்கள். இவர்களுக்குத் தேவைப்படுகிறார்கள். தொற்காள் மரித்துப்போனதினால், தங்களுக்கு இனிமேல் யார் உதவிசெய்வார்கள் என்பது தெரியாமல், விதவைகள் வருத்தப்பட்டிருக்கலாம்.

தொற்காள் தங்களுடன் இருக்கையில் அவள் செய்த நற்கிரியைகளையெல்லாம் நினைவு கூருகிறார்கள். ஆனால் அந்தத் தொற்காளோ வியாதிப்பட்டு மரணமடைந்தாள். இதனால் அவர்களுக்கு மிகுந்த துக்கமுண்டாயிற்று. விதவைகளெல்லோரும் கண்ணீர் விட்டு அழுகிறார்கள். அவர்கள் அழும்போது, தொற்காள்மீது அவர்கள் வைத்திருந்த பிரியமும், பாசமும், அன்பும் வெளிப்படுகிறது.

விதவைகளெல்லோரும் பேதுருவுக்கு முன்பாக அழுகிறார்கள். தங்கள்மீது மிகுந்த அன்புடனும் கிருபையுடனும், மனதுருக்கதுடனும் இருந்த தொற்காள் உயிரோடு பிழைத்தால் தங்களுக்கு உதவியாக இருக்கும் என்று எதிர்பார்க்கிறார்கள். தர்மம் செய்கிறவர்கள் வியாதியாயிருக்கும்போது, அவர்களிடத்திலிருந்து நன்மைகளைப் பெற்றுக்கொண்டவர்கள் அவர்களுக்காக ஜெபம்பண்ணவேண்டும். அவர்கள் விரைவில் குணமடையவேண்டுமென்று கர்த்தரிடம் விண்ணப்பம்பண்ண வேண்டும். நல்லவர்கள் சீக்கிரத்தில் மரித்துப்போனால் எல்லோருக்கும் துக்கமாகவே இருக்கும்.

தபீத்தாளே, எழுந்திரு

பேதுரு எல்லாரையும் வெளியே போகச்செய்து, முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணி, பிரேதத்தின் புறமாய்த் திரும்பி: தபீத்தாளே, எழுந்திரு என்றான். அப்பொழுது அவள் தன் கண்களைத் திறந்து, பேதுருவைப் பார்த்து உட்கார்ந்தாள். அவன் அவளுக்குக் கைகொடுத்து, அவளை எழுந்திருக்கப் பண்ணி, பரிசுத்தவான்களையும் விதவைகளையும் அழைத்து, அவளை உயிருள்ளவளாக அவர்களுக்கு முன் நிறுத்தினான் (அப் 9:40,41).

பேதுரு மரித்துப்போன தபீத்தாளுக்காக ஜெபம்பண்ணுகிறான். ஜெபிப்பதற்கு முன்பாக எல்லோரையும் மேல்வீட்டிலிருந்து வெளியே போகச் செய்கிறான். அவர்கள் பேதுருவைப் பார்ப்பதற்காகக் கூடிவந்திருக்கிறார்கள். ஆனால் பேதுருவோ தன்னை ஒரு காட்சிப்பொருளாக அவர்களுக்குக் காண்பிக்க விரும்பவில்லை. பேதுரு எதைச் செய்தாலும் அதைச் சுயபெருமையில்லாமல், மனத்தாழ்மையுடன் செய்கிறான். எல்லோருக்கும் முன்பாக ஜெபம்பண்ணாமல், தனிமையில் ஜெபம்பண்ண விரும்புகிறான்.

பேதுரு திமிர்வாதமாய்க் கட்டிலின்மேல் கிடந்த ஐனேயாவை இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் குணப்படுத்தினான். அப்போதும் பேதுரு ஐனேயாவுக்காக ஜெபித்தான். ஆனால் அவன் ஜெபம்பண்ணிய விதம் அந்த வசனங்களில் எழுதப்படவில்லை. இப்போதோ தபீத்தாளுக்காக கர்த்தருடைய சமுகத்தில் பேதுரு கருத்தாய் வேண்டிக்கொள்கிறான். முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணுகிறான். தன்னை இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரனாக மறுபடியும் பிரதிஷ்டைபண்ணுகிறான்.

பேதுரு தபீத்தாளுக்காக ஜெபிக்கும்போது, அவளுடைய பிரேதத்தின் புறம்பாய்த் திரும்பி ஜெபிக்கிறான். இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால், “தபீத்தாளே எழுந்திரு” என்று பேதுரு சொல்லுகிறான். அவனுடைய வார்த்தையின் மூலமாக இயேசுகிறிஸ்துவின் வல்லமை புறப்பட்டு வருகிறது. பேதுருவின் வார்த்தையைக் கேட்டபோது தபீத்தாள் உயிர் பெறுகிறாள். தன் கண்களைத் திறக்கிறாள். பேதுருவைப் பார்த்து உட்காருகிறாள்.

பேதுரு தன்னைப் பார்த்து உட்கார்ந்திருக்கிற தபீத்தாளுக்கு, கைகொடுத்து, அவளை எழுந்திருக்கப் பண்ணுகிறான். மறுபடியும் ஜீவனோடிருப்பதற்குப் பேதுரு அவளை வரவேற்கிறான். தன்னுடைய வலதுகையை அவளுக்குக் கொடுத்து, ஜீவனுள்ளோர் மத்தியில் மறுபடியும் ஐக்கியமாகயிருக்குமாறு அவளைச் சேர்த்துக்கொள்கிறான். தபீத்தாள் வியாதிப்பட்டு மரித்தபோது, ஜீவனுள்ளோரோடு அவளுக்கிருந்த ஐக்கியம் முறிந்துபோயிற்று. அவள் இப்போது மறுபடியும் உயிர்பெற்றதினால், அந்த ஐக்கியம் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. அதன்பின்பு பேதுரு பரிசுத்தவான்களையும் விதவைகளையும் மேல்வீட்டிற்கு அழைக்கிறான். தபீத்தாளை உயிருள்ளவளாக அவர்களுக்கு முன் நிறுத்துகிறான்.

தோல் பதனிடுகிறவனாகிய சீமோன்

இது யோப்பா பட்டணம் எங்கும் தெரியவந்தது. அப்பொழுது அநேகர் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள். பின்பு அவன் யோப்பா பட்டணத்திலே தோல் பதனிடுகிறவனாகிய சீமோன் என்னும் ஒருவனிடத்தில் அநேகநாள் தங்கியிருந்தான் (அப் 9:42,43).

மரித்துப்போன தொற்காளை, பேதுரு இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் மறுபடியும் உயிரோடு எழுப்புகிறான். இந்த அற்புத சம்பவம் யோப்பா பட்டணம் எங்கும் தெரியவருகிறது. இதனால் அநேகர் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவர்களாகிறார்கள். இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷம் அடையாளங் களினாலும் அற்புதங்களினாலும் மனுஷருடைய உள்ளங்களில் நிரூபிக்கப் படுகிறது. யோப்பா பட்டணத்தாரில் அநேகர் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்தாலும், எதையும் கண்டுகொள்ளாமல், இயேசுகிறிஸ்துவை விசுவாசியாமல் போகிற ஜனங்களும் அங்கு இருக்கத்தான் செய்வார்கள்.

பேதுரு யோப்பா பட்டணத்தில் அநேக நாள் தங்கியிருக்கிறான். ஊழிய வாசல் இங்கு விசாலமாய்த் திறக்கப்படுகிறது. மற்ற ஊர்களுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ண போவதற்கு முன்பாக, பேதுரு யோப்பா பட்டணத்தில் அநேக நாள் தங்கியிருக்கிறான். இந்த ஊரில் சீமோன் என்னும் பெயர்கொண்ட ஒருவன் இருக்கிறான். இவன் தோல் பதனிடுகிற வேலையைச் செய்கிறவன். இவனுடைய வீட்டில் பேதுரு அநேகநாள் தங்கியிருக்கிறான்.

தோல் பதனிடுகிற வேலை மிகவும் கஷ்டமான வேலை. இந்த இடத்தில் துர்நாற்றம் வீசும். இது கடற்கரைக்கு அருகாமையிலிருக்கிறது. துர்நாற்றம் வீசுகிற இடங்களில் ஜனங்கள் பிரியப்பட்டுத் தங்கமாட்டார்கள். பேதுருவுக்கோ இந்த இடம் தான் தங்குவதற்குக் கிடைத்திருக்கிறது. இதைப்பற்றி பேதுரு குறைவாக நினைக்கவில்லை. பேதுரு சாதாரண இடத்தில் தங்கியிருந்தாலும் கர்த்தருக்கு மகிமையான ஊழியத்தைச் செய்து வருகிறான்.

10 அதிகாரம்

இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் புறஜாதியார் மத்தியிலும் அறிவிக்கப்படவேண்டும் என்று தேவன் சித்தங் கொண்டிருக்கிறார். அப்போஸ்தலருக்கு புறஜாதியார் தேசத்திலே சுவிசேஷம் அறிவிப்பதற்கு வாசல்கள் திறக்கப்படுகிறது. புறஜாதியாருடைய விசுவாசத்தின் கதவுகளும் திறக்கப்படுகிறது. யூதர்கள் விருத்தசேதனமுடையவர்கள். புறஜாதியாரோ விருத்தசேதனம் அற்றவர்கள். இயேசுகிறிஸ்துவின் திருச்சபையில் விருத்தசேதனம் பெறாத புறஜாதியாரும் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். கர்த்தர் இந்த ஊழியத்தில் பேதுருவைப் பயன்படுத்துகிறார். ரோமப்பேரரசில் நூற்றுக்கு அதிபதியாகயிருக்கிற கொர்நேலியு என்பவனும், அவனுடைய குடும்பத்தாரும், அவனுடைய சிநேகிதரும் புறஜாதியாராக இருக்கிறார்கள். இவர்கள் இரட்சிக்கப்பட்டு ஆதித்திருச்சபையில் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள்.

கொர்நேலியு ஒரு தரிசனத்தைப் பெற்றுக்கொள்கிறான். பேதுருவை அழைத்து வருவதற்கு ஆட்களை அனுப்புகிறான் (அப் 10:1-8). பேதுரு ஒரு தரிசனத்தைப் பெற்றுக் கொள்கிறான். கொர்நேலியுவினிடத்தில் போகுமாறு கர்த்தர் அவனிடத்தில் சொல்லுகிறார் (அப் 10:9-23). செசரியா பட்டணத்தில் பேதுருவும் கொர்நேலியுவும் ஆவிக்குரிய காரியங்களைப்பற்றி உரையாடுகிறார்கள் (அப் 10:24-33). கொர்நேலியுவின் வீட்டில் பேதுரு பிரசங்கம்பண்ணுகிறான் (அப் 10:34-43). கொர்நேலியுவும் அவனுடைய சிநேகிதரும் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்கிறார்கள். அதற்கு பின்பு பேதுரு அவர்களுக்கு தண்ணீரில் ஞானஸ்நானம் கொடுக்கிறான் (அப் 10:44-48).

கொர்நேலியு
அப் 10 : 1-8

அப் 10:1. இத்தாலியா பட்டாளம் என்னப்பட்ட பட்டாளத்திலே நூற்றுக்கு அதிபதியாகிய கொர்நேலியு என்னும் பேர்கொண்ட ஒரு மனுஷன் செசரியா பட்டணத்திலே இருந்தான்.

அப் 10:2. அவன் தேவபக்தியுள்ளவனும் தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்து, ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து, எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தான்.

அப் 10:3. பகலில் ஏறக்குறைய ஒன்பதாம்மணி நேரத்திலே தேவனுடைய தூதன் தன்னிடத்தில் வரவும், கொர்நேலியுவே, என்று அழைக்கவும் பிரத்தியட்சமாய்த் தரிசனங்கண்டு,

அப் 10:4. அவனை உற்றுப்பார்த்து, பயந்து: ஆண்டவரே, என்ன என்றான். அப்பொழுது அவன்: உன் ஜெபங்களும் உன் தருமங்களும் தேவனுக்கு நினைப்பூட்டுதலாக அவர் சந்நிதியில் வந்தெட்டியிருக்கிறது.

அப் 10:5. இப்பொழுது நீ யோப்பா பட்டணத்துக்கு மனுஷரை அனுப்பி, பேதுரு என்று மறுபேர்கொண்ட சீமோனை அழைப்பி.

அப் 10:6. அவன் தோல் பதனிடுகிறவனாகிய சீமோன் என்னும் ஒருவனிடத்திலே தங்கியிருக்கிறான்; அவனுடைய வீடு கடலோரத்திலிருக்கிறது. நீ செய்யவேண்டியதை அவன் உனக்குச் சொல்லுவான் என்றான்.

அப் 10:7. கொர்நேலியு தன்னுடனே பேசின தேவதூதன் போனபின்பு, தன் வீட்டு மனுஷரில் இரண்டுபேரையும் தன்னிடத்தில் சேவிக்கிற போர்ச்சேவகரில் தேவபக்தியுள்ள ஒருவனையும் அழைத்து,

அப் 10:8. எல்லாவற்றையும் அவர்களுக்கு விவரித்துச் சொல்லி, அவர்களை யோப்பா பட்டணத்துக்கு அனுப்பினான்.

தேவபக்தியுள்ளவன்

இத்தாலியா பட்டாளம் என்னப்பட்ட பட்டாளத்திலே நூற்றுக்கு அதிபதியாகிய கொர்நேலியு என்னும் பேர்கொண்ட ஒரு மனுஷன் செசரியா பட்டணத்திலே இருந்தான். அவன் தேவபக்தியுள்ளவனும் தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்து, ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து, எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தான் (அப் 10:1).

புறஜாதியார் மத்தியிலும் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் பிரசங்கம்பண்ணப்படுகிறது. புறஜாதியாரும் இயேசுகிறிஸ்துவைத் தங்களுடைய இரட்சகரும் கர்த்தருமாக விசுவாசித்து, தங்கள் இருதயத்தில் அவரை ஆண்டவராக ஏற்றுக்கொள்கிறார்கள். புறஜாதியாரைக் குறித்து தேவனுடைய தெய்வீக சித்தம் ஆரம்பமாயிற்று. இதுவரையிலும் புறஜாதியாருக்கு கிறிஸ்துவின் சுவிசேஷம் அறிவிக்கப்படவில்லை. புறஜாதியாரில் யாரும் இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளவில்லை. கொர்நேலியு புறஜாதியாரில் முதல் மனுஷனாக ஞானஸ்நானம் பெற்றுக்கொள்கிறான்.

புறஜாதியார் மத்தியில் இயேசுகிறிஸ்துவுக்குள் மறுபடியும் பிறந்தவர்களில் கொர்நேலியு என்பவன் முதல் விசுவாசியாகயிருக்கிறான். இவனைப்பற்றிய விவரம் இந்த வசனப்பகுதியில் விவரிக்கப்பட்டிருக்கிறது. இவன் தன்னுடைய ஊரில் பெரியவன். நல்லவன். இவ்விரண்டு பண்புகளும் இவனிடத்தில் ஒருமித்துக் காணப்படுகிறது. பொதுவாக இவ்விரண்டு சுபாவங்களும் ஒருவரிடத்தில் சேர்ந்திருப்பதில்லை. ஒரு குணம் இருந்தால் மற்றொரு குணம் இருக்காது. பெரியவர்கள் நல்லவர்களாக இருக்கும்போது அவர்களால் அநேகருக்குப் பிரயோஜனமுண்டாகும். சமுதாயத்தில் அவர்களுக்கு இருக்கும் உயர்ந்த அந்தஸ்தும், அதிகாரமும் அநேகருக்கு உதவியாயிருக்கும்.

கொர்நேலியு இத்தாலி பட்டாளம் என்னப்பட்ட பட்டாளத்திலே நூற்றுக்கு அதிபதியாகயிருக்கிறான். ரோமப்பேரரசின் இராணுவத்தில் பணிபுரிகிறான். இவனுடைய படைப்பிரிவுக்கு இத்தாலி பட்டாளம் என்று பெயர். இதில் பணிபுரிகிறவர்களெல்லோருமே ரோமர்கள் அல்லது இத்தாலியர்கள். இந்தப் பட்டாளத்தில் கொர்நேலியு உயர்பதவி வகிக்கிறான். நூற்றுக்கு அதிபதி என்பதற்கு, இவனுக்குக் கீழ் நூறு அதிகாரிகள் பணிபுரிகிறார்கள் என்று பொருள்.

இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தில், நூற்றுக்கு அதிபதி ஒருவன் அவரைச் சந்திப்பதற்காக வந்தான். இயேசுகிறிஸ்துவும் அவனுடைய விசுவாசத்தைக்குறித்து ஆச்சரியப்பட்டு நல்ல வார்த்தைகளைச் சொன்னார் (மத் 8:10).

புறஜாதியார் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்கிறார்கள். புறஜாதியாரில், விசேஷமாக இராணுவத்தில் பணிபுரிகிற போர்வீரர்களே சுவிசேஷத்தை முதலாவதாக ஏற்றுக்கொண்டவர்கள். கொர்நேலியு தெளிவாகச் சிந்திக்கிறவன். பிறருக்குப் பயப்படமாட்டான். போர்வீரனாக யிருப்பதினால் இவன் சுயாதீனமாகச் சிந்தித்து முடிவுபண்ணக்கூடியவன். இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் இவனுக்குப் பிரசங்கிக்கப்படுகிறது. சுவிசேஷச் செய்தியை சுயாதீன மனதோடு தியானம்பண்ணுகிறான். சுவிசேஷம் தன்னுடைய ஆத்துமாவிற்கு நல்லது என்பதை கொர்நேலியு உணருகிறான். சுவிசேஷத்தைத் தன் இருதயத்தில் விசுவாசித்து, இயேசுகிறிஸ்துவையும் தன்னுடைய இரட்சகராக ஏற்றுக்கொள்கிறான்.

இராணுவத்தில் பணிபுரிகிற அநேகர் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். தங்களுடைய வேலை யுத்தம்பண்ணுவது என்றும், இந்த வேலை செய்வதினால் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளமுடியாது என்று சாக்குப்போக்கு சொல்வார்கள். அப்படிச் சொல்லுகிறவர்கள் நூற்றுக்கு அதிபதியாகிய கொர்நேலியுவின் சரித்திரத்தை வாசிக்கவேண்டும்.

யூதர்கள் புறஜாதியாரை மதிக்கமாட்டார்கள். இயேசுகிறிஸ்துவின் சபையில் புறஜாதியார்கள் சேர்த்துக்கொள்ளப்படும் செய்தி யூதர்களுக்கு பேரதிர்ச்சியாகவும், அறுவருப்பாகவும் இருக்கிறது. அதிலும் இத்தாலி பட்டாளத்தில் நூற்றுக்கு அதிபதியாகயிருக்கிற ஒரு ரோமன், இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, திருச்சபையில் சேர்த்துக்கொள்ளப்படுவது யூதர்களுக்கு மிகப்பெரிய அதிர்ச்சியாகவும் அருவருப்பாகவும் இருக்கிறது.

இக்காலத்தில் ரோமர்கள் யூதர்களை அடக்கி ஆளுகை செய்கிறார்கள். யூதசமுதாயத்தார் ரோமப்பேரரசின் ஆளுகையிலிருந்து தங்களுக்கு விடுதலை வேண்டுமென்று விரும்புகிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஒரு ரோமனே, கிறிஸ்துவின் சபையில் சேர்த்துக்கொள்ளப்படுவதை யூதர்களால் அங்கீகரிக்க முடியவில்லை.

கொர்நேலியு தேவபக்தியுள்ளவன். வேதாகமத்தில் இவனைப்பற்றி நற்சாட்சி கொடுத்து எழுதப்பட்டிருக்கிறது. இவன் தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனாகயிருக்கிறான். ஜனங்களுக்கு மிகுந்த தர்மங்களைச் செய்கிறான். எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக் கொண்டிருக்கிறான். இவன் இத்தாலியா பட்டாளத்தில் நூற்றுக்கு அதிபதியாக பணிபுரிந்தாலும், தேவனை நோக்கி ஜெபம்பண்ணுவதை நிறுத்தவில்லை. தேவனுக்குப் பயந்து நடப்பதை விலக்கி ஒதுக்கிவைக்கவில்லை. மனுஷனுக்குப் பயப்படாத போர்வீரனாகயிருந்தாலும், தேவனுக்கு முன்பாக பயந்து நடுங்குகிறான்.

கொர்நேலியு தேவபக்தியுள்ளவன். தன்னுடைய குடும்பத்தாரையும் தேவபக்தியில் வழிநடத்துகிறான். தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்து ஜீவிக்கிறான். தான் மட்டும் தேவனை ஆராதித்தால் போதாது என்றும், தன்னுடைய குடும்பத்தார் அனைவரும் தேவனை ஆராதிக்கவேண்டும் என்றும் விரும்புகிறான். குடும்பத்தலைவர் நல்லவராக இருக்கும்போது, அவர் தன்னுடைய குடும்பத்தாரனைவருக்கும் முன்மாதிரியாக இருப்பார். குடும்பத்தலைவர் தேவபக்தியுள்ளவராக யிருக்கும்போது, தன் குடும்பத்தார் அனைவரையும் தேவபக்தியில் வழிநடத்துவார். தான் பெற்ற நன்மையை தன் குடும்பத்தார் அனைவருக்கும் பகிர்ந்து கொடுக்கவேண்டும் என்று விரும்புவார்.

கொர்நேலியு ஜனங்களுக்கு மிகுந்த தர்மங்களைச் செய்து வருகிறான். எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக் கொண்டிருக்கிறான். நம்முடைய இருதயத்தில் தேவனுக்குப் பயப்படும் பயம் நிரம்பியிருக்கும்போது நாமும் ஜனங்களுக்கு மிகுந்த தானதர்மங்களைச் செய்வோம். எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக் கொண்டிருப்போம். கர்த்தருக்குப் பயப்படுவதே ஞானத்தின் ஆரம்பம்.

தேவனுடைய தூதன்

பகலில் ஏறக்குறைய ஒன்பதாம்மணி நேரத்திலே தேவனுடைய தூதன் தன்னிடத்தில் வரவும், கொர்நேலியுவே, என்று அழைக்கவும் பிரத்தியட்சமாய்த் தரிசனங்கண்டு, (அப் 10:3)

கொர்நேலியு ஏறக்குறைய ஒன்பதாம் மணி நேரத்தில் ஒரு தரிசனம் காண்கிறான். தேவனுடைய தூதன் ஒருவன் தன்னிடத்தில் வரவும், தன்னுடைய பெயரைச் சொல்லி அழைக்கவும் கொர்நேலியு பிரத்தியட்சமாய்த் தரிசனம் காண்கிறான். ஒன்பதாம் மணி நேரத்தில் தேவாலயத்தில் மாலைப்பலியாகிய சந்திப்பலி செலுத்துவது வழக்கம். இந்த வேளையில் பக்தியுள்ளவர்கள் தேவனுடைய சமுகத்தில் ஒன்பதாம் மணி நேரம் முழுவதும் ஒரு மணி நேரம் ஜெபம்பண்ணுவார்கள். அந்த வழக்கத்தின் பிரகாரமாக கொர்நேலியுவும் ஜெபம்பண்ணிக்கொண்டிருக்கிறான். "நாலு நாளைக்கு முன்னே இந்நேரத்திலே நான் உபவாசித்து, ஒன்பதாம் மணி நேரத்தில் என் வீட்டிலே ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தேன்" (அப் 10:30) என்று கொர்நேலியு இந்தச் சம்பவத்தைப்பற்றிப் பேதுருவிடம் கூறுகிறான்.

தேவனுடைய தூதன் ஒருவன் கொர்நேலியுவிடம் வருகிறான். அவனை கொர்நேலியு தன்னுடைய கண்களினால் பிரத்தியட்சமாய்த் தரிசிக்கிறான். இவன் கண்டது கனவல்ல. கற்பனையல்ல. பிரத்தியட்சமாகத் தேவதூதனைக் காண்கிறான். தேவதூதனும் கொர்நேலியுவின் பெயரைச் சொல்லி அழைக்கிறான். தேவன் கொர்நேலியுவுக்கு ஒரு விசேஷித்த செய்தியை வைத்திருக்கிறார். அந்தச் செய்தியைத் தம்முடைய தூதன் ஒருவன் மூலமாக அவனுக்குச் சொல்லி அனுப்புகிறார்.

ஜெபங்களும் தருமங்களும்

அவனை உற்றுப்பார்த்து, பயந்து: ஆண்டவரே, என்ன என்றான். அப்பொழுது அவன்: உன் ஜெபங்களும் உன் தருமங்களும் தேவனுக்கு நினைப்பூட்டுதலாக அவர் சந்நிதியில் வந்தெட்டியிருக்கிறது (அப் 10:4).

தேவனுடைய தூதனைப் பிரத்தியட்சமாய்த் தரிசித்தபோது கொர்நேலியுவின் உள்ளத்தில் குழப்பமுண்டாயிற்று. அவனை உற்றுப் பார்த்து கொர்நேலியு பயப்படுகிறான். "ஆண்டவரே என்ன" என்று தன் பயத்தில் கத்துகிறான். என்ன சம்பவிக்கிறது என்பதை கர்த்தரிடத்தில் கேட்டுத் தெரிந்துகொள்ள விரும்புகிறான். கொர்நேலியுவின் கேள்வி, தேவனுடைய சித்தத்தைத் தெரிந்துகொள்ள அவன் ஆர்வமுள்ளவன் என்பதை வெளிப்படுத்துகிறது. தேவனுடைய சித்தத்திற்கு கொர்நேலியு கீழ்ப்படிய ஆயத்தமாயிருக்கிறான். ஆகையினால் தேவதூதனை உற்றுப்பார்த்து, பயந்து, ஆண்டவரிடத்தில் "ஆண்டவரே இது என்ன, நான் என்ன செய்யவேண்டும், எனக்குத் தெளிவாகச் சொல்லும்" என்று பொருள்படும் விதமாக, கொர்நேலியு கர்த்தரிடத்தில் விண்ணப்பம் பண்ணுகிறான்.

தேவன் கொர்நேலியுவை அங்கீகரித்திருப்பதை அவனுக்கு வெளிப்படுத்துகிறார். "உன் ஜெபங்களும் உன் தருமங்களும் தேவனுக்கு நினைப்பூட்டுதலாக அவர் சந்நிதியில் வந்தெட்டியிருக்கிறது" என்று தேவனுடைய தூதன் கொர்நேலியுவிடம் சொல்லுகிறான். நாம் தருமம் செய்யும்போது நமக்குள்ளது சுத்தமாயிருக்கும் "உங்களுக்கு உண்டானவைகளில் பிச்சை கொடுங்கள், அப்பொழுது சகலமும் உங்களுக்குச் சுத்தமாயிருக்கும்" (லூக் 11:41).

நாம் தருமம் செய்யும்போது ஜெபசிந்தனையோடு தருமம் செய்யவேண்டும். தேவன் தம்முடைய கிருபையினால் நம்முடைய தருமங்களை அங்கீகரிக்குமாறு ஜெபம்பண்ணவேண்டும். கொர்நேலியு ஜெபம்பண்ணுகிறான். அத்துடன் தருமமும் செய்கிறான். தேவனுடைய நாம மகிமைக்காக உண்மையோடு தருமம் செய்கிறான். தரித்திரரின் பிரயோஜனத்திற்காக தருமம் செய்கிறான். ஆகையினால் அவனுடைய ஜெபங்களும் தருமங்களும் தேவனுக்கு நினைப்பூட்டுதலாக அவருடைய சந்நிதியில் வந்தெட்டியிருக்கிறது. ஜெபமும் தருமங்களும் நம்முடைய ஆவிக்குரிய காணிக்கைகளாகும். இந்தக் காணிக்கைகளில் தேவன் பிரியமாயிருக்கிறார்.

அவன் உனக்குச் சொல்லுவான்

இப்பொழுது நீ யோப்பா பட்டணத்துக்கு மனுஷரை அனுப்பி, பேதுரு என்று மறுபேர்கொண்ட சீமோனை அழைப்பி. அவன் தோல் பதனிடுகிறவனாகிய சீமோன் என்னும் ஒருவனிடத்திலே தங்கியிருக்கிறான்; அவனுடைய வீடு கடலோரத்திலிருக்கிறது. நீ செய்யவேண்டியதை அவன் உனக்குச் சொல்லுவான் என்றான் (அப் 10:5,6).

தேவன் கொர்நேலியுவுக்குத் தம்முடைய கிருபைகளை இன்னும் அதிகமாய்க் கொடுப்பதற்குச் சித்தமுள்ளவராயிருக்கிறார். அந்தக் கிருபைகளைப் பெற்றுக்கொள்வதற்கு கொர்நேலியு என்ன செய்ய வேண்டுமென்பதைத் தம்முடைய தூதன் மூலமாக அவனுக்கு வெளிப்படுத்துகிறார். அவன் யோப்பா பட்டணத்திற்கு மனுஷரை அனுப்பி பேதுரு என்று மறுபெயர் கொண்ட சீமோனை அழைக்கவேண்டும். கொர்நேலியு செய்யவேண்டியதை அவன் அவனுக்குச் சொல்லுவான் என்று கர்த்தருடைய தூதன் கொர்நேலியுவுக்கு வெளிப்படுத்துகிறான்.

சீமோன் இப்போது யோப்பா பட்டணத்தில் தோல் பதனிடுகிறவனாகிய சீமோன் என்னும் ஒருவனிடத்திலே தங்கியிருக்கிறான் என்றும், அவனுடைய வீடு கடலோரத்திலிருக்கிறது என்றும் தேவனுடைய தூதன் கொர்நேலியுவுக்குப் பேதுருவின் இருப்பிடத்தைப்பற்றி விவரமாகச் சொல்லுகிறான்.

கொர்நேலியு தேவபக்தியுள்ளவன். தேவனுக்குப் பயந்தவன். தேவனுக்குப் பயந்து ஜெபமும் தருமங்களும் செய்கிறவன். தன்னுடைய குடும்பத்தாரோடு தேவனுக்குப் பயந்து ஜீவிக்கிறான். அவன் இவற்றை மாத்திரம் செய்தால் போதாது. இவன் செய்ய வேண்டிய காரியம் இன்னும் அதிகமாய் உள்ளது. கர்த்தர் இவன்மீது கிருபையாயிருக்கிறார். தம்முடைய ஆசீர்வாதங்களை இவனுக்கு அதிகமாய்க் கொடுப்பதற்கு, இவன் செய்ய வேண்டிய காரியங்களை இவனுக்கு வெளிப்படுத்துகிறார்.

கர்த்தர் வெளிப்படுத்துகிற காரியத்தை கொர்நேலியு கேட்டால் மாத்திரம் போதாது. அதற்கு அவன் கீழ்ப்படிந்து செயல்படவேண்டும். தேவனுக்குப் பயந்து, ஜனங்களுக்கு மிகுந்த தருமகாரியங்களைச் செய்து, எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக் கொண்டிருப்பது நல்லதுதான். ஆனாலும் கொர்நேலியு கர்த்தரிடத்திலிருந்து அதிகமான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள, அவன் செய்ய வேண்டிய காரியம் இன்னும் ஒன்று உள்ளது. இவன் தேவனுடைய வாக்குத்தத்தங்களை விசுவாசிக்கிறான். தமக்கு வாக்குப்பண்ணுகிறவர் தம்முடைய வாக்குத்தத்தை நிறைவேற்றுவார் என்று விசுவாசித்து அவருடைய வார்த்தைக்கு கொர்நேலியு கீழ்ப்படிகிறான். நாம் இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைக்கவில்லையென்றால், நம்முடைய ஜெபங்களும், நம்முடைய தருமங்களும் தேவனுக்கு நினைப்பூட்டுதலாக அவருடைய சந்நிதியில் வந்தெட்டாது.

கொர்நேலியுவிடம் தேவனுடைய தூதன் பேசிக்கொண்டிருக்கிறான். இவன் கொர்நேலியுவைப் பார்த்து பேசுவதற்காக வானத்திலிருந்து வந்திருக்கிறான். ஆனாலும் இந்தத் தேவ தூதனிடத்திலிருந்து கொர்நேலியுவினால் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பெற்றுக் கொள்ள முடியாது. தேவதூதர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்கும் ஊழியம் ஒப்புக்கொடுக்கப்படவில்லை. "பேதுருவை அழைப்பி, நீ செய்யவேண்டியதை அவன் உனக்குச் சொல்லுவான்" என்று மாத்திரமே தேவதூதனால் சொல்ல முடிகிறது. இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணுவது கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நமக்கு தேவன் கொடுத்திருக்கும் உன்னதமான ஊழியம்.

தேவதூதரால் பிரசங்கம்பண்ண முடியாத சுவிசேஷத்தை, அப்போஸ்தலர்கள் பிரசங்கம் பண்ணுகிறார்கள். தேவதூதர்கள்கூட அப்போஸ்தலர்களை அனுப்பித்தான், கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்கு வழிநடத்துகிறார்கள். நம்முடைய ஊழியம் மேன்மையான ஊழியமாகையால், நாம் மிகுந்த பயபக்தியோடும், உண்மையோடும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவேண்டும். தேவதூதருக்குக் கொடுக்கப்படாத பெரிய சிலாக்கியம் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை ஏனோதானோவென்று கவனக்குறைவாக செய்யக்கூடாது. கர்த்தருடைய தூதனானவன் உண்மையுள்ள ஊழியக்காரனையும், சுவிசேஷத்தைக் கேட்க வாஞ்சையுள்ளவர்களையும் ஒன்று சேர்த்து இணைக்கிறான். இதுவே தூதருடைய ஊழியம். ஊழியக்காரர்கள்தான் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவேண்டும்.

யோப்பாவுக்கு அனுப்பினான்

கொர்நேலியு தன்னுடனே பேசின தேவதூதன் போனபின்பு, தன் வீட்டு மனுஷரில் இரண்டுபேரையும் தன்னிடத்தில் சேவிக்கிற போர்ச்சேவகரில் தேவபக்தியுள்ள ஒருவனையும் அழைத்து, எல்லாவற்றையும் அவர்களுக்கு விவரித்துச் சொல்லி, அவர்களை யோப்பா பட்டணத்துக்கு அனுப்பினான் (அப் 10:7,8).

கொர்நேலியு தேவதூதனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிகிறான். பேதுருவை அழைத்து வருவதற்காக, தன் வீட்டு மனுஷரில் இரண்டு பேரையும், தன்னிடத்தில் சேவிக்கிற போர்ச்சேவகரில் தேவபக்தியுள்ள ஒருவனையும், பேதுருவை அழைத்து வருவதற்காக யோப்பா பட்டணத்திற்கு அனுப்புகிறான். தன்னுடனே பேசின தேவதூதன் தன்னைவிட்டுப் போனவுடனேயே கொர்நேலியு இம்மூன்று பேரையும், காலதாமதம்பண்ணாமல், உடனடியாக அனுப்புகிறான். கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவதில் உற்சாகமாயிருக்கிறான். நம்முடைய ஆத்துமாவிற்குப் பிரயோஜனமான காரியங்களைச் செய்வதற்கு நாம் காலதாமதம்பண்ணக்கூடாது.

கொர்நேலியு தேவபக்தியுள்ளவன். தேவனுக்குப் பயந்து நடக்கிறவன். அவனிடத்தில் சேவிக்கிற போர்ச்சேவகரும் தேவ பக்தியுள்ளவர்களாயிருக்கிறார்கள். நூற்றுக்கு அதிபதியினிடத்தில் தேவபக்தி காணப்படும்போது, அந்த நல்ல சுபாவம் மற்ற போர்ச்சேவகருக்கும் பரவும். மேலதிகாரி பக்தியுள்ளவராயிருக்கும் போது, அவரிடத்தில் பணிபுரிகிற மற்ற வேலைக்காரர்களும், மேலதிகாரியின் சுபாவத்தைக் கற்றுக்கொள்வார்கள். ஆகையினால் தேவபக்தியுள்ள மேலதிகாரிகள், தேவனுக்குப் பயந்து சாட்சியுள்ள ஜீவியம் ஜீவிக்கவேண்டும்.

கொர்நேலியு யோப்பா பட்டணத்திற்குப் போக மூன்று பேரைத் தெரிந்தெடுக்கிறான். அவர்களில் இரண்டுபேர் அவனுடைய வீட்டு மனுஷர். எப்போதும் அவனுடைய வீட்டிலிருக்கிறவர்கள். வீட்டு வேலைகளைச் செய்கிறவர்கள். மற்றொருவன் அவனிடத்தில் சேவிக்கிற போர்ச்சேவகன். இவன் தேவபக்தியுள்ளவன். கொர்நேலியு இந்த மூன்று பேரிடம் தேவதூதன் தன்னிடத்தில் சொன்ன எல்லாவற்றையும் அவர்களுக்கு விவரித்துச் சொல்லுகிறான். பேதுரு எங்கே இருக்கிறான் என்பதை மாத்திரம் சொல்லி அவர்களை அனுப்பாமல், பேதுருவை அழைத்து வரவேண்டியதற்கான காரணத்தையும் மறைக்காமல் சொல்லுகிறான். வேலைக்காரர்களுக்கு எஜமானுடைய சித்தமும், விருப்பமும், தெளிவாக அறிவிக்கப்படும்போது, அவர்கள் மிகுந்த அக்கறையோடும் உற்சாகத்தோடும், முழு ஈடுபாடோடும் தங்கள் எஜமானுக்குக் கீழ்ப்படிந்து வேலைசெய்வார்கள்.

பேதுரு
அப் 10 : 9-18

அப் 10:9. மறுநாளிலே அவர்கள் பிரயாணப்பட்டு, அந்தப் பட்டணத்துக்குச் சமீபித்து வருகையில், பேதுரு ஆறாம்மணி நேரத்திலே ஜெபம்பண்ணும்படி மேல்வீட்டில் ஏறினான்.

அப் 10:10. அவன் மிகுந்த பசியடைந்து சாப்பிட மனதாயிருந்தான்; அதற்கு அவர்கள் ஆயத்தம்பண்ணுகையில், அவன் ஞானதிருஷ்டியடைந்து,

அப் 10:11. வானம் திறந்திருக்கிறதாகவும், நாலு முனைகளும் கட்டப்பட்ட பெரிய துப்பட்டியைப்போல ஒருவிதமான கூடு தன்னிடத்தில் இறங்கித் தரையில் விடப்பட்டிருக்கிறதாகவும்,

அப் 10:12. அதிலே பூமியிலுள்ள சகலவிதமான நாலுகால் ஜீவன்களும், காட்டுமிருகங்களும், ஊரும் பிராணிகளும், ஆகாயத்துப் பறவைகளும் இருக்கிறதாகவும் கண்டான்.

அப் 10:13. அல்லாமலும்: பேதுருவே, எழுந்திரு, அடித்துப் புசி என்று அவனுக்குச் சொல்லும் ஒரு சத்தம் உண்டாயிற்று.

அப் 10:14. அதற்குப் பேதுரு: அப்படியல்ல, ஆண்டவரே தீட்டும் அசுத்தமுமாயிருக்கிற யாதொன்றையும் நான் ஒருக்காலும் புசித்ததில்லை என்றான்.

அப் 10:15. அப்பொழுது: தேவன் சுத்தமாக்கினவைகளை நீ தீட்டாக எண்ணாதே என்று இரண்டாந்தரமும் சத்தம் அவனுக்கு உண்டாயிற்று.

அப் 10:16. மூன்றாம்தரமும் அப்படியே உண்டாயிற்று. பின்பு அந்தக் கூடு திரும்ப வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அப் 10:17. அப்பொழுது பேதுரு, தான் கண்ட தரிசனத்தைக்குறித்துத் தனக்குள்ளே சந்தேகப்படுகையில், இதோ, கொர்நேலியுவினால் அனுப்பப்பட்ட மனுஷர்கள் சீமோனுடைய வீட்டை விசாரித்துக் கொண்டு வாசற்படியிலே வந்து நின்று:

அப் 10:18. பேதுரு என்று மறுபேர்கொண்ட சீமோன் இங்கே தங்கியிருக்கிறாரா என்று கேட்டார்கள்.

ஜெபம்பண்ணும்படி

மறுநாளிலே அவர்கள் பிரயாணப்பட்டு, அந்தப் பட்டணத்துக்குச் சமீபித்து வருகையில், பேதுரு ஆறாம்மணி நேரத்திலே ஜெபம்பண்ணும்படி மேல்வீட்டில் ஏறினான் (அப் 10:9).

பேதுருவை அழைத்து வர ஆட்களை அனுப்பும்படி கொர்நேலியுவுக்கு தேவதூதன் மூலமாக பரலோகத்திலிருந்து கட்டளை வந்திருக்கிறது. கொர்நேலியுவுக்கு அறிவிக்கப்பட்ட செய்தி, பேதுருவுக்கும் அறிவிக்கப்பட்டால்தான், அவன் தடையில்லாமல் வருவான். பேதுருவையும் கொர்நேலியுவையும் ஒருமனதோடு இணைப்பது கர்த்தருடைய ஊழியம். கொர்நேலியு ஒரு புறஜாதியான். விருத்தசேதனம்பண்ணாதவன். பேதுரு யூதமார்க்கத்திலிருந்து வந்திருக்கிறவன். விருத்தசேதனம்பண்ணியவன். இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுகிற விசுவாசிகளும் விருத்தசேதனம் பண்ணிக்கொள்ள வேண்டும் என்று பேதுரு விசுவாசிக்கிறான்.

யூதஜனத்தார்மீது பேதுரு பிரியமுள்ளவன். புறஜாதியாரோடு பேதுரு சரியாக பழகமாட்டான். கொர்நேலியு புறஜாதியானாகயிருப்பதினால் அவனுடைய வீட்டிற்குப்போக தயங்குவான். கர்த்தர் பேதுருவின் மனச்சாட்சியில் தெளிவாகவும் உறுதியாகவும் பேசினால் மாத்திரமே, பேதுரு புறஜாதியானாகிய கொர்நேலியுவின் வீட்டிற்குப்போக வாய்ப்புள்ளது. கர்த்தர் தம்முடைய சித்தத்தை நிறைவேற்ற பேதுருவின் மனச்சாட்சியோடும் பேசுகிறார்.

பேதுரு ஜெபம்பண்ணிக் கொண்டிருக்கும்போது கர்த்தர் அவனுடன் தரிசனத்தில் பேசுகிறார். கொர்நேலியுவினால் அனுப்பப்பட்டிருக்கிற மனுஷரை ஏற்றுக்கொள்ள கர்த்தர் பேதுருவின் இருதயத்தை ஆயத்தம் பண்ணுகிறார். சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ண வேண்டும் என்பது இயேசுகிறிஸ்துவின் பிரதான கட்டளை. ஆனால் பேதுருவோ இந்தக் கட்டளையை இன்னும் முழுவதுமாகப் புரிந்துகொள்ளவில்லை. கர்த்தர் தம்முடைய பிரதான கற்பனையைப் பேதுருவுக்கு விளங்க வைப்பதற்காகவும், தம்முடைய கட்டளைக்குப் பேதுருவைக் கீழ்ப்படிய வைப்பதற்காகவும், தம்முடைய வார்த்தைகளைப் பேதுருவுக்கு ஒரு தரிசனத்தில் வெளிப்படுத்துகிறார்.

கொர்நேலியு அனுப்பிய மனுஷர் பிரயாணப்பட்டு யோப்பா பட்டணத்திற்கு சமீபமாய் வருகிறார்கள். அவர்கள் வருவது பேதுருவுக்குத் தெரியாது. அப்போது ஆறாம்மணி வேளையாயிற்று. பேதுரு ஆறாம் மணி நேரத்தில் ஜெபம்பண்ணும்படி மேல்வீட்டில் ஏறி ஜெபிக்கிறான். கொர்நேலியுவின் வேலைக்காரருக்கு பேதுரு ஜெபம்பண்ணுவதும் தெரியாது. இவர்கள் ஒருவருக்கொருவர் தெரியாதவர்களாயிருந்தாலும், கர்த்தர் இவர்களை தெரிந்து வைத்திருக்கிறார். இவர்களைச் சேர்த்து வைக்க வேண்டுமென்று கர்த்தர் சித்தங்கொண்டு செயல்படுகிறார்.

கர்த்தர் தம்முடைய ஊழியக்காரர்களின் இருதயத்தில் அவர்களுக்குத் தெரியாத ரகசியங்களைத் தெரிவிக்கிறார். அவர்கள் செல்ல வேண்டிய பாதைகளையும், அவர்கள் நிறைவேற்ற வேண்டிய ஊழியங்களையும் கர்த்தர் அவர்களுக்குத் தெளிவுபடுத்துகிறார். ஊழியக்காரர்களைத் தம்முடைய சித்தத்தின் பிரகாரம் வழிநடத்துவதில் கர்த்தர் பிரியமாயிருக்கிறார்.

ஆறாம்மணி வேளையில் ஜெபம்பண்ணும்படி பேதுரு மேல் அறையில் ஏறுகிறான். ஜெபத்தில் உறுதியாய்த் தரித்திருக்கிறான். ஆறாம் மணி வேளை என்பது யூதருக்கு மதிய வேளையைக் குறிக்கும். பேதுரு அந்திசந்தியில் ஜெபம்பண்ணுவதுபோல, மதிய வேளையிலும் ஜெபம்பண்ணுகிறான். நாம் மூன்றுவேளையிலும் ஆகாரம் புசித்து, சரீரதைத் திடப்படுத்திக்கொள்வதுபோல, நாம் மூன்றுவேளைகளிலும் ஜெபம்பண்ணி, நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திலும் பெலப்படவேண்டும். போஜனம் பண்ணவில்லையென்றால் சரீரம் சோர்வடையும். ஜெபம் பண்ணவில்லையென்றால் நம்முடைய ஆவியும் ஆத்துமாவும் சோர்ந்துபோகும்.

பேதுரு மேல்வீட்டில் ஏறி ஜெபம்பண்ணுகிறான். ஜெபம்பண்ண ஆரம்பித்தவுடனேயே அவன் ஞானதிருஷ்டியடைந்து தரிசனம் காண்கிறான். நம்முடைய இருதயம் தேவனுக்கு முன்பாக ஜெபத்தில் உயர்த்தப்படும்போது, தேவனுடைய கிருபைகளைக் காலதாமதமில்லாமல் உடனடியாகப் பெற்றுக்கொள்ளலாம். நம்முடைய ஆவியிலும் ஆத்துமாவிலும் தேவனுடைய சித்தமும் விருப்பமும் நிறைந்திருக்கும்போது, நாம் தேவனுடைய கிருபைகளைப் பெற்றுக்கொள்வது எளிதாயிருக்கும்.

ஞானதிருஷ்டியடைந்து

அவன் மிகுந்த பசியடைந்து சாப்பிட மனதாயிருந்தான்; அதற்கு அவர்கள் ஆயத்தம்பண்ணுகையில், அவன் ஞானதிருஷ்டியடைந்து, வானம் திறந்திருக்கிறதாகவும், நாலுமுனைகளும் கட்டப்பட்ட பெரிய துப்பட்டியைப்போல ஒருவிதமான கூடு தன்னிடத்தில் இறங்கித் தரையில் விடப்பட்டிருக்கிறதாகவும், அதிலே பூமியிலுள்ள சகலவிதமான நாலுகால் ஜீவன்களும், காட்டுமிருகங்களும், ஊரும் பிராணிகளும், ஆகாயத்துப் பறவைகளும் இருக்கிறதாகவும் கண்டான் (அப் 10:10-12).

பேதுரு மிகுந்த பசியடைந்து சாப்பிட மனதாயிருக்கிறான். பசி வரும்போது அவனுக்குப் போஜனத்தைக் குறித்த தரிசனம் உண்டாயிற்று. இயேசுகிறிஸ்து வனாந்தரத்தில் பசியாயிருந்தபோது, கல்லுகளை அப்பங்களாக்கும்படி சாத்தான் அவரைச் சோதித்தான். பேதுருவுக்குப் பசி உண்டானபோது அவன் ஞானதிருஷ்டியடைகிறான். இந்த உலகத்தில் இருக்கிற உணர்வே அவனுக்கு இல்லாமற் போயிற்று. உலகக்காரியங்களைப்பற்றிய சிந்தனை அவனைவிட்டு நீங்கிற்று. தேவனுடைய காரியங்களோடு தாராளமாக உரையாடுவதற்கு அவன் ஆயத்தமாயிருக்கிறான். நாம் இந்தப் பிரபஞ்சத்தின் காரியங்களைவிட்டு எந்த அளவுக்கு விலகியிருக்கிறோமோ அந்த அளவுக்கு பரலோகத்தின் காரியங்களோடு நெருக்கமாயிருப்போம்.

பேதுரு ஞானதிருஷ்டியடைந்து வானம் திறந்திருக்கிறதைக் காண்கிறான். கொர்நேலியுவோடு அவன் வீட்டிற்குப்போவது கர்த்தருடைய சித்தம் என்பதை உறுதிபண்ணுவதற்கும், அவனுக்குக் கொடுக்கப்படுகிற கட்டளை வானத்திலிருந்து கொடுக்கப்படுகிறது என்பதை உறுதிபண்ணுவதற்கும், வானம் அவனுக்கு திறந்திருக்கிறதாகக் காணப்படுகிறது.

வானம் திறந்திருக்கிறதை காண்கிற பேதுரு, மற்றும் ஒரு தரிசனத்தையும் காண்கிறான். "நாலுமுனைகளும் கட்டப்பட்ட பெரிய துப்பட்டியைப்போல ஒருவிதமான கூடு தன்னிடத்தில் இறங்கித் தரையில் விடப்பட்டிருக்கிறதாகவும், அதிலே பூமியிலுள்ள சகலவிதமான நாலுகால் ஜீவன்களும், காட்டுமிருகங்களும், ஊரும் பிராணிகளும், ஆகாயத்துப் பறவைகளும் இருக்கிறதாகவும்" காண்கிறான்.

பூமியிலுள்ள மிருகஜீவன்கள் மாத்திரமல்ல, ஆகாயத்திலுள்ள பறவைகளும் பேதுருவினுடைய கால்களில் வந்து கொட்டப்படுகிறது. சமுத்திரத்தின் மச்சங்களைப்பற்றி இங்கு எதுவும் சொல்லப்படவில்லை. சமுத்திரத்து மச்சங்களெல்லாம் யூதருடைய பிரமாணத்தின்படி சுத்தமானவை. அதில் ஒன்றும் அசுத்தமானதல்ல. இங்கு குறிப்பிடப்பட்டிருக்கிற எல்லா மிருகங்களும் பறவைகளும் யூதருடைய பிரமாணத்தின்படி தீட்டும் அசுத்தமுமானவை. இவையெல்லாம் ஒரு கூட்டில் வைக்கப்பட்டு தன்னிடத்தில் இறங்கி தரையில் விடப்பட்டிருக்கிறதாக பேதுரு தரிசனம் காண்கிறான். இந்தக் கூடு நாலு முனைகளும் கட்டப்பட்ட பெரிய துப்பட்டியைப்போல இருக்கிறது.

இந்தக் கூடானது கிறிஸ்துவின் சபையைக் குறிக்கும் என்று வேதபண்டிதர்கள் வியாக்கியானம் கூறுகிறார்கள். எல்லா தேசங்களிலுமுள்ள விசுவாசிகள் கர்த்தருடைய சபையிலிருக்கிறார்கள். யூதரென்றும், கிரேக்கரென்றும் வித்தியாசமில்லாமல் கர்த்தருடைய சபையில் எல்லோரும் சகோதர சிநேகத்தோடிருக்கிறார்கள். சுவிசேஷத்தின் வலையானது ஜனங்களெல்லோரையும் தனக்குள் வாரிக்கொள்கிறது. இவர்களில் நல்லோரும் இருப்பார்கள். தீயோரும் இருப்பார்கள். இவர்களில் சுத்தமானவர்களும் இருப்பார்கள். தீட்டும் அசுத்தமானவர்களும் இருப்பார்கள்.

வலையும், வலையிலுள்ள மிருகஜீவன்களும் பறவைகளும் தேவனுடைய தாராளமான பராமரிப்புக்கு அடையாளமாயிருப்பதாக வேதபண்டிதர்கள் வியாக்கியானம் சொல்லுகிறார்கள். கர்த்தர் தம்முடைய சிருஷ்டிப்பில் நமக்கு இரட்டிப்பான ஆறுதலைத் தருகிறார். கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம் நாம் இவற்றைப் பயன்படுத்தவேண்டும். நம்முடைய ஆசீர்வாதங்களெல்லாம் வானத்திலிருந்து நமக்கு இறங்கி வந்திருக்கிறது என்னும் எண்ணம் நமக்குள் காணப்படவேண்டும்.

அடித்துப் புசி

அல்லாமலும்: பேதுருவே, எழுந்திரு, அடித்துப் புசி என்று அவனுக்குச் சொல்லும் ஒரு சத்தம் உண்டாயிற்று. அதற்குப் பேதுரு: அப்படியல்ல, ஆண்டவரே தீட்டும் அசுத்தமுமாயிருக்கிற யாதொன்றையும் நான் ஒருக்காலும் புசித்ததில்லை என்றான் (அப் 10:13,14).

பேதுரு ஞானதிருஷ்டியடைந்து தரிசனம் காணும்போது, வானத்திலிருந்து அவனோடு சொல்லுகிற ஒரு சத்தமுண்டாயிற்று. தேவன் அவனுக்குப் பூமியிலுள்ள சகலவிதமான மிருகங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், கொடுக்கிறார். இவையெல்லாம் தேவனிடத்திலிருந்து அவனுக்கு வந்திருக்கிறது. தேவன் கொடுக்கிற விதவிதமான ஆசீர்வாதங்களை அவன் பயன்படுத்தவேண்டும் என்னும் கட்டளையும் வானத்திலிருந்து அவனுக்கு உண்டாயிற்று. "பேதுருவே, எழுந்திரு, அடித்துப் புசி" என்று அவனுக்குச் சொல்லும் ஒரு சத்தமுண்டாயிற்று.

யூதர்கள் புறஜாதியாரோடு எந்த சம்பந்தமும் பண்ணமாட்டார்கள். அவர்களோடு போஜனபானம் செய்யமாட்டார்கள். பேதுரு இப்போது காண்கிற மிருகங்களும் பறவைகளும், யூதமார்க்கத்துப் பிரமாணத்தின்படி தீட்டும் அசுத்தமானவை. இவற்றை யூதர்கள் புசிக்கமாட்டார்கள். புறஜாதியார்கள் இவற்றைப் புசிப்பதற்கு அவர்களுக்குத் தடை ஒன்றுமில்லை. ஆனால் இந்த மிருகங்களையும் பறவைகளையும் அடித்துப் புசிக்குமாறு பேதுருவுடனே சொல்லும் சத்தமுண்டாயிற்று.

பேதுருவின் பாரம்பரிய எண்ணத்திற்கும், இப்போது அவனோடு பேசுகிற சத்தத்திற்கும் முரண்பாடு உண்டாயிற்று. பேதுரு ஆண்டவரிடம் "அப்படியல்ல, ஆண்டவரே, தீட்டும் அசுத்தமுமாயிருக்கிற யாதொன்றையும் நான் ஒருக்காலும் புசித்ததில்லை" என்று சொல்லுகிறான். கர்த்தருடைய சத்தத்திற்கு பேதுரு கீழ்ப்படிய மறுத்துவிடுகிறான். ஒரு சிலர் கர்த்தர் சொன்னவுடன் பயந்து, அந்த வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து விடுவார்கள். ஆனால் பேதுருவோ யூதமார்க்கத்தின் பாரம்பரியத்தில் ஆழமாகக் கட்டப்பட்டிருப்பதினால், கர்த்தருடைய வார்த்தைக்கு "அப்படியல்ல ஆண்டவரே" என்று மறுப்பு சொல்லிவிடுகிறான். அவனுடைய மனச்சாட்சி கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிய இடங்கொடுக்கவில்லை.

பேதுருவோ பசியடைந்து சாப்பிட மனதாயிருக்கிறான். பசி வந்தால் ஒரு சிலர் நிதானம் இழந்துவிடுவார்கள். எதையும் சாப்பிட ஆயத்தமாயிருப்பார்கள். ஆனால் பேதுருவோ, தான் பசியாயிருந்தாலும், தன்னுடைய பாரம்பரிய பழக்க வழக்கத்தில் உறுதியாயிருக்கிறான். ஏதேன் தோட்டத்தில் ஆதாமும் ஏவாளும் தடைபண்ணப்பட்ட கனியைப் புசித்தார்கள். அந்தக் கனியைப் புசிக்குமாறு சோதனை வந்தபோது, அதற்கு அவர்கள் எதிர்த்து நிற்காமல், சோதனைக்கு இடங்கொடுத்து பாவம் செய்தார்கள். ஆனால் பேதுருவோ தன்னுடைய மனச்சாட்சியில் உள்ளதை கர்த்தரிடத்தில் அப்படியே வெளிப்படுத்துகிறான். "தீட்டும் அசுத்தமுமாயிருக்கிற யாதொன்றையும் நான் ஒருக்காலும் புசித்ததில்லை" என்று சொல்லிவிடுகிறான்.

பேதுரு இதுவரையிலும் யூதருடைய பாரம்பரியத்தின் பிரகாரம் தீட்டானதையோ, அசுத்தமானதையோ புசித்ததில்லை. இனிமேலும் அதைப் புசிக்க அவன் ஆயத்தமாயில்லை. தன் பாரம்பரிய பழக்க வழக்கத்தைப் பற்றிக்கொள்ளவே விரும்புகிறான். போஜன பழக்க வழக்கங்களை மாற்ற அவனுடைய மனச்சாட்சி இடங்கொடுக்கவில்லை. இதுவரையிலும் அவன் தீட்டும் அசுத்தமுமாயிருக்கிறதைப் புசித்ததில்லையென்று அவனுடைய மனச்சாட்சியும் சாட்சி கொடுக்கிறது.

பல சமயங்களில் நம்முடைய மனச்சாட்சியின் சத்தமும் கர்த்தருடைய சத்தமும் ஒன்றாயிருக்கும். சில சமயங்களில் இவை இரண்டு வேறுபடலாம். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் நம்முடைய மனச்சாட்சிக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், கர்த்தருடைய வார்த்தைக்கே முக்கியத்துவம் கொடுத்து, அதற்குக் கீழ்ப்படிய வேண்டும். பாரம்பரியத்தைவிட கர்த்தருடைய வார்த்தையே மேன்மையானது.

தேவன் சுத்தமாக்கினவைகள்

அப்பொழுது: தேவன் சுத்தமாக்கினவைகளை நீ தீட்டாக எண்ணாதே என்று இரண்டாந்தரமும் சத்தம் அவனுக்கு உண்டாயிற்று. மூன்றாம்தரமும் அப்படியே உண்டாயிற்று. பின்பு அந்தக் கூடு திரும்ப வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது (அப் 10:15,16).

தேவன் வானத்திலிருந்து இரண்டாவது முறையாகப் பேசுகிறார். பேதுரு நியாயப்பிரமாணத்தின் விதிகளைக் காரணமாகக் கூறி, தீட்டும் அசுத்தமுமாயிருக்கிற யாதொன்றையும் தான் ஒருக்காலும் புசித்ததில்லை என்று கர்த்தரிடம் சொல்லுகிறான். கர்த்தரோ அவனுக்கு "தேவன் சுத்தமாக்கினவைகளை தீட்டாக எண்ணாதே" என்று பதில் சொல்லுகிறார். இந்தச் சத்தம் இரண்டாந்தரமும் அவனுக்கு உண்டாயிற்று.

தேவனே நியாயப்பிரமாணத்தை உண்டுபண்ணினவர். தமக்குச் சித்தமானபடி, தமக்குப் பிரியமானபடி, அவரால் நியாயப்பிரமாணத்தை மாற்ற முடியும். தேவன் தீட்டையும் அசுத்தத்தையும் இப்போது விலக்கிபோட்டிருக்கிறார். இதற்கு முன்பு நமக்கு தீட்டாகவும் அசுத்தமாகவும் இருந்ததை இப்போது சுத்தமாக்கியிருக்கிறார். இது தேவனுடைய கிருபையும் இரக்கமும் ஆகும். இதற்காக நாம் தேவனுக்கு நன்றி சொல்லவேண்டும்.

நாம் எல்லா மாம்சங்களையும் போஜனம் பண்ணலாம். ஆனாலும் நம்முடைய சரீரத்திற்கு எது ஏற்றது என்பதை நாமே தீர்மானம் செய்துகொள்ளவேண்டும். இதற்கு முன்பு யூதர்கள் விரும்பினாலும், நியாயப்பிரமாணத்தின்படி ஒரு சில மிருகங்களையும் பறவைகளையும் புசிக்கக்கூடாது என்று அவர்களுக்கு விலக்கப்பட்டிருந்தது. தீட்டு அசுத்தம் என்னும் நுகம் யூதர்கள்மீது சுமத்தப்பட்டிருந்தது. கர்த்தரோ இப்போது அந்த நுகத்தை எடுத்துப்போட்டிருக்கிறார். இனிமேல் கர்த்தர் சுத்தமாக்கினவைகளைப் புசிப்பதற்கு யூதர்கள் தயங்கவேண்டியதில்லை. இதற்கு எதிராக அவர்களுடைய மனச்சாட்சி துக்கப்படவேண்டியதில்லை.

கர்த்தர் மூன்றாந்தரமும் பேதுருவிடம் இதே சத்தியத்தைச் சொல்லுகிறார். இதே சத்தம் மூன்றாந்தரமும் அப்படியே அவனுக்கு உண்டாயிற்று. கர்த்தர் தம்முடைய வார்த்தையையோ, கருத்தையோ மாற்றாமல் பேதுருவிடம் மூன்றுமுறையும் அப்படியே பேசுகிறார். தேவன் பல சமயங்களை தம்முடைய சத்தியத்தை நம்மிடம் திரும்பத் திரும்ப சொல்லுகிறார். சத்தியம் விசேஷித்தது. முக்கியமானது. ஆகையினால் நமக்கு சத்தியத்தைத் திரும்பத் திரும்ப சொல்லுவது அவசியமாயிற்று.

தேவன் பேதுருவிடம் மூன்றாந்தரமும் அதே வார்த்தைகளைச் சொன்னபின்பு அந்தக்கூடு திரும்ப வானத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. வேதபண்டிதர்கள் "கூடு" என்னும் வார்த்தை சபையைக் குறிப்பதாக வியாக்கியானம் சொல்லுகிறார்கள். சபையில் யூதர்களும் புறஜாதியார்களும் இருக்கிறார்கள். விசுவாசிக்கிற புறஜாதியாரைச் சபைக்குள் சேர்த்துக்கொள்ளவும், அவர்கள் பரலோகத்திற்குள் பிரவேசிக்கவும் தடை ஏதுமில்லை என்பதையே இந்தச் சம்பவம் விளக்குகிறது. புறஜாதி ஜனங்கள் விசுவாசிகளாகும்போது கர்த்தர் அவர்களைச் சுத்திகரிக்கிறார். தேவன் சுத்தமாக்கினவர்களை நாம் தீட்டானவர்களாக எண்ணக்கூடாது.

தரிசனம்

அப்பொழுது பேதுரு, தான் கண்ட தரிசனத்தைக்குறித்துத் தனக்குள்ளே சந்தேகப்படுகையில், இதோ, கொர்நேலியுவினால் அனுப்பப்பட்ட மனுஷர்கள் சீமோனுடைய வீட்டை விசாரித்துக் கொண்டு வாசற்படியிலே வந்து நின்று: பேதுரு என்று மறுபேர்கொண்ட சீமோன் இங்கே தங்கியிருக்கிறாரா என்று கேட்டார்கள் (அப் 10:17,18).

பேதுரு தான் கண்ட தரிசனத்தைக் குறித்து தனக்குள்ளே சந்தேகப்படுகிறான். இந்தத் தரிசனத்தின் சத்தியத்தைச் சந்தேகப்படுவதற்கு அவனுக்கு ஒரு காரணமுமில்லை. தரிசனம் மெய்யானது. ஆனால் இதன் அர்த்தம் அவனுக்குத் தெளிவாகப் புரியவில்லை. இயேசுகிறிஸ்து தம்மைப்பற்றி தம்முடைய ஜனங்களுக்கு சிறிது சிறிதாகவே வெளிப்படுத்துகிறார். சில சமயங்களில் விசுவாசிகள் இயேசுகிறிஸ்துவைப்பற்றிச் சரியாகப் புரிந்துகொள்ளாமல் சந்தேகப்படுவதற்கு அவர்களை அனுமதிக்கிறார். அவர்கள் இயேசுகிறிஸ்துவைக் குறித்து விவாதம்பண்ணுகிறார்கள். பிறரிடம் விசாரித்து அறிந்துகொள்கிறார்கள். தங்கள் சிந்தையிலிருக்கும் குழப்பத்தில் தெளிவு பெறுகிறார்கள். இறுதியாக இயேசுகிறிஸ்துவைக் குறித்து விசுவாசிகளுக்குத் தெளிந்த சிந்தனை உண்டாகிறது. தம்முடைய பிள்ளைகளுக்குத் தம்மை பரிபூரணமாக வெளிப்படுத்த வேண்டும் என்பதே இயேசுகிறிஸ்துவின் சித்தம்.

பேதுரு தான் கண்ட தரிசனத்தைக் குறித்து தனக்குள்ளே சந்தேகப்பட்டாலும், கர்த்தர் அந்த தரிசனத்தை அவனுக்குத் தெளிவுபடுத்துகிறார். பேதுரு தனக்குள்ளே சந்தேகப்படுகையில், இதோ, கொர்நேலியுவினால் அனுப்பப்பட்ட மனுஷர்கள் சீமோனுடைய வீட்டை விசாரித்துக்கொண்டு வாசற்படியில் வந்து நிற்கிறார்கள். பேதுரு என்று மறுபெயர் கொண்ட சீமோன் இங்கே தங்கியிருக்கிறாரா என்று கேட்கிறார்கள். அவர்கள் வந்ததன் மூலமாக, பேதுருவுக்குத் தான் கண்ட தரிசனத்தின் அர்த்தம் தெளிவாயிற்று.

கர்த்தர் நமக்கு ஊழியத்தைக் கொடுக்கிறார். நாம் என்னென்ன ஊழியமெல்லாம் செய்யவேண்டுமென்பது கர்த்தருக்கு ஏற்கெனவே தெரியும். அதற்கேற்ற பிரகாரமாக அவர் நம்மை ஆயத்தம்பண்ணுகிறார். நம்முடைய ஊழியப் பாதையில் நாம் ஒவ்வொரு அனுபவமாக கடந்து செல்லும்போது, கர்த்தர் நமக்குக் கற்றுக்கொடுத்த சத்தியமெல்லாம் மிகுந்த பிரயோஜனமாயிருக்கும். ஒரு சில சத்தியங்களை ஆவியானவர் நமக்கு இப்போது ஏன் கற்றுத்தருகிறார் என்று நமக்குத் தெரியாமலிருக்கலாம். ஆனாலும் ஏற்ற வேளை வரும்போது அந்தச் சத்தியத்தின் முக்கியத்துவத்தை நாம் புரிந்துகொள்வோம்.

பேதுருவும் கொர்நேலியுவும் அப் 10 : 19-33

அப் 10:19. பேதுரு அந்தத் தரிசனத்தைக் குறித்துச் சிந்தனைபண்ணிக் கொண்டிருக்கையில், ஆவியானவர்: இதோ, மூன்று மனுஷர் உன்னைத் தேடுகிறார்கள்.

அப் 10:20. நீ எழுந்து, இறங்கி, ஒன்றுக்குஞ் சந்தேகப்படாமல், அவர்களுடனே கூடப்போ; நானே அவர்களை அனுப்பினேன் என்று அவனுக்குச் சொன்னார்.

அப் 10:21. அப்பொழுது பேதுரு கொர்நேலியுவினால் தன்னிடத்தில் அனுப்பப்பட்ட மனுஷரிடத்திற்கு இறங்கிப்போய்: இதோ, நீங்கள் தேடுகிறவன் நான்தான், நீங்கள் வந்திருக்கிற காரியம் என்ன என்றான்.

அப் 10:22. அதற்கு அவர்கள்: நீதிமானும், தேவனுக்குப் பயப் படுகிறவரும், யூதஜனங்களெல்லாராலும் நல்லவரென்று சாட்சி பெற்றவருமாகிய கொர்நேலியு என்னும் நூற்றுக்கு அதிபதி உம்மைத் தம்முடைய வீட்டுக்கு அழைப்பித்து, உம்மால் சொல்லப்படும் வார்த்தைகளைக் கேட்கும்படி பரிசுத்த தூதனாலே தேவயத்தனமாய்க் கட்டளைபெற்றார் என்றார்கள்.

அப் 10:23. அப்பொழுது பேதுரு அவர்களை உள்ளே அழைத்து, அவர்களுக்கு உபசாரஞ்செய்து, மறுநாளிலே அவர்களுடனேகூடப் புறப்பட்டான்; யோப்பா பட்டணத்தாராகிய சகோதரரில் சிலரும் அவனுடனேகூடப் போனார்கள்.

அப் 10:24. மறுநாளிலே செசரியா பட்டணத்தில் பிரவேசித்தார்கள். கொர்நேலியு தன் உறவின் முறையாரையும் தன்னுடைய விசேஷித்த சிநேகிதரையும் கூடவரவழைத்து, அவர்களுக்காகக் காத்திருந்தான்.

அப் 10:25. பேதுரு உள்ளே பிரவேசிக்கிற பொழுது, கொர்நேலியு அவனுக்கு எதிர்கொண்டுபோய், அவன் பாதத்தில் விழுந்து பணிந்து கொண்டான்.

அப் 10:26. பேதுரு அவனைத் தூக்கியெடுத்து: எழுந்திரும், நானும் ஒரு மனுஷன்தான் என்றான்.

அப் 10:27. அவனுடனே பேசிக்கொண்டு, உள்ளேபோய், அநேகர் கூடிவந்திருக்கிறதைக் கண்டு,

அப் 10:28. அவர்களை நோக்கி: அந்நிய ஜாதியானோடே கலந்து அவனிடத்தில் போக்குவரவாயிருப்பது யூதனானவனுக்கு விலக்கப்பட்டிருக்கிறதென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்; அப்படியிருந்தும், எந்த மனுஷனையும் தீட்டுள்ளவனென்றும் அசுத்தனென்றும் நான் சொல்லாதபடிக்கு தேவன் எனக்குக் காண்பித்திருக்கிறார்.

அப் 10:29. ஆகையால் நீங்கள் என்னை அழைப்பித்தபோது நான் எதிர்பேசாமல் வந்தேன். இப்போதும் என்ன காரியத்துக்காக என்னை அழைப்பித்தீர்கள் என்று கேட்கிறேன் என்றான்.

அப் 10:30. அதற்குக் கொர்நேலியு: நாலு நாளைக்கு முன்னே இந்நேரத்திலே நான் உபவாசித்து, ஒன்பதாம்மணி நேரத்தில் என் வீட்டிலே ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தேன்; அப்பொழுது பிரகாசமுள்ள வஸ்திரந்தரித்த மனுஷன் ஒருவன் எனக்கு முன்பாக நின்று:

அப் 10:31. கொர்நேலியுவே, உன் ஜெபம் கேட்கப்பட்டது, உன் தானதருமங்கள் தேவசந்நிதியில் நினைத்தருளப்பட்டது.

அப் 10:32. யோப்பா பட்டணத்துக்கு ஆள் அனுப்பி, பேதுரு என்று மறுபேர் கொண்ட சீமோனை வரவழைப்பாயாக, அவன் கடலோரத்திலே தோல் பதனிடுகிறவனாகிய சீமோனுடைய வீட்டிலே தங்கியிருக்கிறான்; அவன் வந்து உன்னிடத்தில் பேசுவான் என்றார்.

அப் 10:33. அந்தப்படியே நான் உடனே உம்மிடத்திற்கு ஆள் அனுப்பினேன்; நீர் வந்தது நல்ல காரியம்; தேவனாலே உமக்குக் கட்டளையிடப்பட்ட யாவையும் கேட்கும்படிக்கு நாங்கள் எல்லாரும் இப்பொழுது இங்கே தேவசமுகத்தில் கூடியிருக்கிறோம் என்றான்.

ஒன்றுக்குஞ் சந்தேகப்படாமல்

பேதுரு அந்தத் தரிசனத்தைக் குறித்துச் சிந்தனைபண்ணிக் கொண்டிருக்கையில், ஆவியானவர்: இதோ, மூன்று மனுஷர் உன்னைத் தேடுகிறார்கள். நீ எழுந்து, இறங்கி, ஒன்றுக்குஞ் சந்தேகப்படாமல், அவர்களுடனே கூடப்போ; நானே அவர்களை அனுப்பினேன் என்று அவனுக்குச் சொன்னார் (அப் 10:19,20).

கர்த்தர் பேதுருவையும் கொர்நேலியுவையும் தம்முடைய சித்தத்தின் பிரகாரமாகச் சந்திக்க வைக்கிறார். தேவன் பவுலை புறஜாதியாருக்கு அப்போஸ்தலனாகவும், பேதுருவை விருத்தசேதனம் பண்ணியிருக்கிற யூதருக்கு அப்போஸ்தலராகவும் நியமித்திருக்கிறார். ஆனாலும் தேவன் பேதுருவை புறஜாதியார் மத்தியிலும் தம்முடைய சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ண அனுப்புகிறார். புறஜாதியார் மத்தியில் சுவிசேஷம் பிரபல்யமடைவதற்குத் தடையாக இருக்கிற காரியங்களை கர்த்தர் பேதுருவைக் கொண்டு உடைக்கிறார். புறஜாதியார் மத்தியில் முதலாவதாக பேதுருவைக் கொண்டே ஆத்துமாக்களை அறுவடை பண்ணுகிறார்.

யூதமார்க்கத்திலிருந்து இரட்சிக்கப்பட்டிருக்கிற விசுவாசிகள் புறஜாதியாரை சபையில் சேர்த்துக்கொள்ள மறுக்கிறார்கள். அவர்களை தீட்டானவர்களாகவும் அசுத்தமானவர்களாகவும் நினைத்து, அவர்களை அருவருத்து ஒதுக்குகிறார்கள். ஆனால் கர்த்தரோ ஜனங்கள் மத்தியில் பட்சபாதம் பார்க்கிறவரல்ல. புறஜாதியாரையும் இரட்சித்து தம்முடைய சபைக்குள் அழைத்து வந்து, அவர்களையும் ஆசீர்வதிக்க தேவன் சித்தமுள்ளவராகயிருக்கிறார். யூதமார்க்கத்திலிருந்து வந்திருக்கும் விசுவாசிகள், புறஜாதி மார்க்கத்திலிருந்து வந்திருக்கும் விசுவாசிகளையும் தங்கள் சபையில் சேர்த்துக்கொள்வதற்குத் தேவன் அவர்களைப் பக்குவப்படுத்துகிறார். இதற்காக யூதமார்க்கத்திலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட அப்போஸ்தலர்களை புறஜாதியார் மத்தியில் தம்முடைய ஊழியத்தைச் செய்ய பயன்படுத்துகிறார். அவர்களுடைய சொந்த ஜனங்களே புறஜாதியார் மத்தியில் ஊழியம் செய்கிறார்கள்.

கொர்நேலியு அனுப்பியுள்ள மனுஷரோடு கூடப்போகுமாறு பரிசுத்த ஆவியானவர் பேதுருவை வழிநடத்துகிறார். பேதுரு தான் கண்ட தரிசனத்தைக் குறித்துத் தனக்குள்ளே சந்தேகப்படுகிறான். அதைக் குறித்து சிந்தனைபண்ணிக் கொண்டிருக்கிறான். அப்போது ஆவியானவர் அவனுடைய சந்தேகத்தைத் தீர்த்து வைக்கிறார். அவனுக்குள் சிறிது நேரம் குழப்பமும் கலக்கமும் இருந்தாலும், ஆவியானவர் இப்போது அவனுக்குத் தெளிவு கொடுக்கிறார். மறைவாகயிருக்கிற ரகசியத்தை அவனுக்கு வெளிப்படுத்துகிறார்.

ஆவியானவர் கர்த்தருடைய காரியங்களை நமக்குக் கற்றுத்தர வேண்டுமென்று நாம் வாஞ்சையாயிருக்க வேண்டும். ஆவியானவர் பேதுருவை வழிநடத்துவதுபோல நம்மையும் வழிநடத்த வேண்டுமென்று ஜெபிக்கவேண்டும். பேதுரு என்ன செய்யவேண்டுமென்று ஆவியானவர் அவனிடத்தில் சொல்லுகிறார். தேவதூதன் மூலமாக ஆவியானவர் பேசாமல், அவரே நேரடியாகப் பேதுருவிடம் பேசுகிறார். ஆவியானவருடைய வார்த்தையும் வழிநடத்துதலும் தெளிவாகயிருக்கிறது. அவன் என்ன செய்யவேண்டுமென்பதை பேதுருவுக்கு ஆவியானவர் மிகவும் தெளிவாகச் சொல்லுகிறார். "நீ எழுந்து, இறங்கி, ஒன்றுக்குஞ் சந்தேகப்படாமல், அவர்களுடனே கூடப்போ, நானே அவர்களை அனுப்பினேன்" என்று பரிசுத்த ஆவியானவர் தம்முடைய வார்த்தைகளைப் பேதுருவுக்கு அறிவிக்கிறார்.

பேதுரு ஞானதிருஷ்டியடைந்தவனாக, ஒன்றும் புரியமலிருக்கிறான். எந்தத் தெளிவுமில்லாமல் மிகுந்த குழப்பத்திலிருக்கிறான். அவன் முதலாவதாக இந்த நிலையிலிருந்து எழும்ப வேண்டும். தன்னுடைய மேல் வீட்டிலிருந்து கீழே இறங்கிப்போக வேண்டும். சில சமயங்களில் நாம் ஜெபிக்கும்போது கர்த்தர் தம்முடைய சித்தத்தை நமக்கு வெளிப்படுத்தாமல், நாம் கர்த்தரைத் தேடுகையில் அவர் தம்மை நமக்கு வெளிப்படுத்துகிறார். தேவனைப்பற்றிய தரிசனமும், தேவனுடைய வார்த்தைகளும் நாம் ஜெபிக்கும்போது மாத்திரமே நமக்குக் கிடைக்கும் என்பது தேவனுடைய தீர்மானமான முடிவல்ல. சில சமயங்களில் ஆவியானவர் வேறுவிதமாகவும் கிரியை செய்கிறார். நாம் ஜெபிப்பதைவிட்டு எழுந்து, கர்த்தர் நம்மை வழிநடத்துகிற இடத்திற்குப் போகும்போது, அங்கு தேவனுடைய வார்த்தை நமக்கு வெளிப்படுத்தப்படும்.

பரிசுத்த ஆவியானவர் பேதுருவிடம் “நீ எழுந்து இறங்கி, ஒன்றுக்குஞ் சந்தேகப்படாமல் அவர்களுடனே கூடப்போ” என்று சொல்லுகிறார். போகவேண்டுமா, போகவேண்டாமா என்று பேதுரு யோசித்துக்கொண்டிருக்கக்கூடாது. இது அவன் எடுக்க வேண்டிய முடிவல்ல. பரிசுத்த ஆவியானவரே பேதுருவைக் குறித்து முடிவு எடுத்திருக்கிறார். ஆவியானவர் சொன்னபடி அவன் எழுந்து இறங்கி ஒன்றுக்குஞ் சந்தேகப்படாமல் அவர்களுடனே கூடப்போவது அவனுடைய கடமை. கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்குத் தான் கர்த்தருடைய வெளிப்பாடுகள் உண்டாகும்.

ஆவியானவர் பேதுருவிடம் மேலும் “நானே அவர்களை அனுப்பினேன்” என்றும் சொல்லுகிறார். தேவன் நம்மை ஒரு ஊழியத்திற்குத் திட்டமாய் அழைக்கும்போது நாம் நம்முடைய உள்ளத்தில் ஒன்றுக்கும் சந்தேகப்படக்கூடாது. மனுஷர் பயமோ, அவிசுவாசமோ, குழப்பமோ நம்மிடத்தில் காணப்படக்கூடாது. கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, அவருடைய சித்தத்தின் பிரகாரமாகச் செயல்பட நாம் எப்போதுமே ஆயத்தமாயிருக்க வேண்டும். இருமனமுள்ளவர்கள் தங்கள் வழிகளிலெல்லாம் தடுமாறுவார்கள். கர்த்தருடைய பிள்ளைகளுக்கு ஒரே தேவன் இருப்பதுபோல, ஒரே மனமும் இருக்கவேண்டும்.

நான் தான்

அப்பொழுது பேதுரு கொர்நேலியுவினால் தன்னிடத்தில் அனுப்பப்பட்ட மனுஷரிடத்திற்கு இறங்கிப்போய்: இதோ, நீங்கள் தேடுகிறவன் நான்தான், நீங்கள் வந்திருக்கிற காரியம் என்ன என்றான். அதற்கு அவர்கள்: நீதிமானும், தேவனுக்குப் பயப்படுகிறவரும், யூத ஜனங்களெல்லாராலும் நல்லவரென்று சாட்சி பெற்றவருமாகிய கொர்நேலியு என்னும் நூற்றுக்கு அதிபதி உம்மைத் தம்முடைய வீட்டுக்கு அழைப்பித்து, உம்மால் சொல்லப்படும் வார்த்தைகளைக் கேட்கும்படி, பரிசுத்த தூதனாலே தேவயத்தனமாய்க் கட்டளைபெற்றார் என்றார்கள் (அப் 10:21,22).

பேதுரு பரிசுத்த ஆவியானவரின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து எழுந்து இறங்கிப்போகிறான். கொர்நேலியுவினால் தன்னிடத்தில் அனுப்பப்பட்ட மனுஷரிடத்திற்கு இறங்கிப்போகிறான். அவர்களையும் அவர்களுடைய வார்த்தைகளையும் ஏற்றுக்கொள்ள மனதாயிருக்கிறான். அவர்களிடத்தில் “நீங்கள் வந்திருக்கிற காரியம் என்ன” என்று அவர்களிடத்தில் கேட்கிறான். “இதோ நீங்கள் தேடுகிறவன் நான்தான்” என்று தன்னைப்பற்றிச் சொல்லுகிறான். அவர்கள் சீமோனுடைய வீட்டை விசாரித்துக்கொண்டு, வாசற்படியில் வந்து நின்று, பேதுரு என்று மறுபெயர் கொண்ட சீமோன் இங்கே தங்கியிருக்கிறாரா என்று கேட்கிறார்கள். அவர்கள் தேடுகிறவன் தான் தான் என்று பேதுரு அவர்களுக்குப் பிரதியுத்தரம் கூறுகிறான்.

கொர்நேலியுவினால் அனுப்பப்பட்டவர்கள் தாங்கள் வந்த விஷயத்தைப் பேதுருவிடம் கூறுகிறார்கள். "நீதிமானும், தேவனுக்குப் பயப்படுகிறவரும், யூதஜனங்களெல்லாராலும் நல்லவரென்று சாட்சி பெற்றவருமாகிய கொர்நேலியு என்னும் நூற்றுக்கு அதிபதி உம்மைத் தம்முடைய வீட்டுக்கு அழைப்பித்து, உம்மால் சொல்லப்படும் வார்த்தைகளைக் கேட்கும்படி பரிசுத்த தூதனாலே தேவயத்தனமாய்க் கட்டளைபெற்றார்" என்று பேதுருவிடம் சொல்லுகிறார்கள்.

தேவதூதன் கொர்நேலியுவுக்குச் சொன்ன வார்த்தைகளைப் பேதுரு எருசலேமிலிருக்கிற அப்போஸ்தலரிடத்தில் மேலும் விரிவாக எடுத்துச் சொல்லுகிறார். "உடனே செசரியாவிலிருந்து என்னிடத்திற்கு அனுப்பப்பட்ட மூன்று மனுஷர் நான் இருந்த வீட்டுக்குமுன்னே வந்து நின்றார்கள். நான் ஒன்றுக்கும் சந்தேகப்படாமல் அவர்களோடேகூடப் போகும்படி ஆவியானவர் எனக்குக் கட்டளையிட்டார். சகோதரராகிய இந்த ஆறுபேரும் என்னோடேகூட வந்தார்கள்; அந்த மனுஷனுடைய வீட்டுக்குள் பிரவேசித்தோம். அவனோ தன் வீட்டிலே ஒரு தேவதூதன் நிற்கிறதைக் கண்டதாகவும், யோப்பா பட்டணத்திலிருக்கிற பேதுரு என்று மறுபேர்கொண்ட சீமோனை அழைக்கும் படிக்கு மனுஷரை அவ்விடத்திற்கு அனுப்பு; நீயும் உன் வீட்டாரனைவரும் இரட்சிக்கப் படுவதற்கேதுவான வார்த்தைகளை அவன் உனக்குச் சொல்லுவான் என்று அந்தத் தூதன் தனக்குச் சொன்னதாகவும் எங்களுக்கு அறிவித்தான்" (அப் 11:11-14).

செசரியா பட்டணம்

அப்பொழுது பேதுரு அவர்களை உள்ளே அழைத்து, அவர்களுக்கு உபசாரஞ்செய்து, மறுநாளிலே அவர்களுடனேகூடப் புறப்பட்டான்; யோப்பா பட்டணத்தாராகிய சகோதரரில் சிலரும் அவனுடனேகூடப் போனார்கள். மறுநாளிலே செசரியா பட்டணத்தில் பிரவேசித்தார்கள். கொர்நேலியு தன் உறவின்முறையாரையும் தன்னுடைய விசேஷித்த சிநேகிதரையும் கூடவரவழைத்து, அவர்களுக்காகக் காத்திருந்தான் (அப் 10:23,24).

பேதுரு அவர்களை உள்ளே அழைத்து அவர்களுக்கு உபசாரம் செய்கிறான். தன்னைத் தேடி வருபவர்களுக்குத் தான் உபசாரம் செய்வதாக பேதுரு தரிசனம் எதையும் பெற்றுக்கொள்ளவில்லை. ஆனாலும் கர்த்தருடைய கிருபையினால் பேதுரு அந்நியரையும் உபசரிக்கிறான். வந்திருக்கிறவர்களோ புறஜாதியார். யூதர்கள் புறஜாதியார்களைத் தங்கள் வீடுகளில் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். பேதுருவும் மற்ற யூதர்களைப்போலவே புறஜாதியார்களைத் தன் சுபாவத்தின்படி தன் வீட்டில் ஏற்றுக்கொண்டிருக்க மாட்டான். ஆனால் கர்த்தரோ "தேவன் சுத்தமாக்கினவைகளை நீ தீட்டாக எண்ணாதே" என்று மூன்றுதரம் அவனிடத்தில் சொல்லியிருக்கிறார்.

பேதுருவின் இருதயமும் மனச்சாட்சியும் கர்த்தருடைய வார்த்தையினால் இப்போது சுத்திகரிக்கப் பட்டிருக்கிறது. ஆகையினால் பேதுரு இப்போது எவ்வித தயக்கமுமில்லாமல் தன்னைத் தேடி வந்திருக்கும் புறஜாதியார்களை உள்ளே அழைத்து, அவர்களுக்கு உபசாரம் செய்கிறான்.

கொர்நேலியு மூன்றுபேரை பேதுருவிடத்தில் அனுப்பியிருக்கிறான். அவர்களிடல் இரண்டுபேர் கொர்நேலியுவின் வீட்டில் வேலைசெய்கிறவர்கள். மற்றொருவன் அவனிடத்தில் சேவிக்கிற போர்ச்சேவகன். இவர்கள் சாதாரண உத்தியோகம் பார்க்கிறார்கள். சமுதாயத்தில் இவர்கள் உயர்ந்த அந்தஸ்தில் இல்லை. ஆனாலும் பேதுரு அவர்களை எவ்வித தயக்கமுமில்லாமல், தன் உள்ளத்தில் எந்தப் பெருமையுமில்லாமல், அவர்களை உள்ளான அன்போடு ஏற்றுக்கொண்டு உபசரிக்கிறான். தன்னுடைய அந்தஸ்திற்கு அவர்கள் தகுதியானவர்களல்ல என்று பேதுரு பெருமைப்படவில்லை.

பேதுரு அவர்களுக்கு உபசாரம் செய்து மறுநாளிலே அவர்களுடனேகூட கொர்நேலியுவின் வீட்டிற்குப்போகிறான். அவன் போகும்போது யோப்பா பட்டணத்தாராகிய சகோதரரில் சிலரும் அவனுடனே கூடப்போகிறார்கள். அவர்களோடு ஆறுபேர் கூடப்போனதாக பேதுருவின் வார்த்தையிலிருந்து தெரிகிறது. "சகோதரராகிய இந்த ஆறுபேரும் என்னுடனே கூட வந்தார்கள். அந்த மனுஷனுடைய வீட்டிற்குள் பிரவேசித்தோம்" (அப் 11:12). ஆதித்திருச்சபையில் விசுவாசிகள் ஊழியக்காரர்களுக்கு இவ்விதமாய்த் தங்களுடைய மரியாதையைக் காண்பித்தார்கள். ஊழியக்காரர்களுடைய பிரயாணங்களில் விசுவாசிகளும் அவர்களுக்குத் துணையாய்க் கூடப் பிரயாணம் செய்தார்கள். ஊழியக்காரர்களும் விசுவாசிகளின் ஐக்கியத்தை விரும்பினார்கள்.

ஆனால் இக்காலத்திலோ பிரபலமாகயிருக்கிற ஊழியக்காரர்கள் சாதாரண விசுவாசிகளோடு பேசுவதையும், ஐக்கியமாகயிருப்பதையும் தவிர்த்துவிட்டு, தனிமையை நாடுகிறார்கள். தனியாகப் பிரயாணம்பண்ண வேண்டுமென்றும், தனியாக தங்கியிருக்கவேண்டுமென்றும், தங்களோடு சாதாரண விசுவாசிகள் யாரும் கூடயிருக்கக்கூடாது என்றும் ஒரு சில ஊழியக்காரர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

யோப்பா பட்டணத்திலிருந்து புறப்பட்ட மறுநாளிலே பேதுருவும், யோப்பா பட்டணத்தாராகிய விசுவாசிகளில் ஆறுபேரும், கொர்நேலியு அனுப்பிய மூன்றுபேரும் ஆகிய எல்லோரும் செசரியா பட்டணத்தில் பிரவேசிக்கிறார்கள். கொர்நேலியு தன் உறவின்முறையாரையும் தன்னுடைய விசேஷித்த சிநேகிதரையும் கூடவரவழைத்து, அவர்களுக்காகத் தன் வீட்டில் காத்திருக்கிறான்.

கொர்நேலியுவின் வீட்டில் பேதுரு கண்ட சம்பவம் அவனுக்கு மிகுந்த உற்சாகமாக இருந்திருக்கும். கொர்நேலியுவும் அவனுடைய உறவின் முறையாரும், சிநேகிதரும் பேதுருவுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். பேதுருவின் வரவை எதிர்பார்க்கிறார்கள். ஊழியக்காரர்களுக்காக நாம் காத்திருப்பது தவறல்ல. கர்த்தருடைய ஆசீர்வாதம் அவர்கள் மூலமாக வரும்போது, நாம் காத்திருந்தாகிலும் அந்த ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

கொர்நேலியு பேதுருவின் வருகைக்காகத் தான் மாத்திரம் தனிமையில் காத்திருக்கவில்லை. அவனுடைய உறவின் முறையார் எல்லோரையும் தன் வீட்டிற்கு அழைத்து வந்திருக்கிறான். அவர்களோடு தன்னுடைய விசேஷித்த சிநேகிதரையும் தன்னுடைய வீட்டிற்கு அழைத்து பேதுருவின் வருகைக்காகக் காத்துக்கொண்டிருக்கிறான். கர்த்தருடைய ஆசீர்வாதத்தைத் தான் மாத்திரம் பெற்றுக்கொள்ளவேண்டும் என்னும் சுயநலம் கொர்நேலியுவிடம் இல்லை. ஆவிக்குரிய மன்னாவை தான் மாத்திரம் புசித்தால் போதாது என்றும், தன்னுடைய உறவின் முறையாரும், சிநேகிதரும் அதைப் புசித்து ஆசீர்வாதம் பெறவேண்டுமென்றும் கொர்நேலியு விரும்புகிறான்.

விசேஷித்த கூட்டங்களுக்கும், ஆராதனைகளுக்கும் நாம் போகும்போது நம்முடைய சிநேகிதரையும், உறவின் முறையாரையும் அழைத்துச் செல்வது மிகவும் நல்லது. கர்த்தருடைய வார்த்தையை அவர்களும் கேட்க நாம் உதவிபுரியவேண்டும். ஜெபக்கூட்டத்திற்கு நம்மோடு வருமாறு அவர்களையும் அன்போடு அழைக்கவேண்டும்.

நானும் ஒரு மனுஷன் தான்

பேதுரு உள்ளே பிரவேசிக்கிற பொழுது, கொர்நேலியு அவனுக்கு எதிர்கொண்டுபோய், அவன் பாதத்தில் விழுந்து பணிந்துகொண்டான். பேதுரு அவனைத் தூக்கியெடுத்து: எழுந்திரும், நானும் ஒரு மனுஷன்தான் என்றான் (அப் 10:25,26).

சாதாரணமான ஒரு மனுஷனுக்குக் கொடுக்கக்கூடிய மரியாதையிலும் அதிக மரியாதையை கொர்நேலியு பேதுருவுக்குக் கொடுக்கிறான். அவனை அதிகமாய்க் கனப்படுத்துகிறான். பேதுரு உள்ளே பிரவேசிக்கிற பொழுது, கொர்நேலியு அவனுக்கு எதிர்கொண்டுபோய், அவன் பாதத்தில் விழுந்து பணிந்துகொள்கிறான். மனுஷரை ஆராதிக்கக்கூடாது. பாதத்தில் விழுந்து பணிந்துகொள்வது ஆராதனை செய்வதற்குச் சமம். ஆனால் கொர்நேலியுவோ தன் அறியாமையினால் பேதுருவின் பாதத்தில் விழுந்து பணிந்துகொள்கிறான். ஒரு வேளை அவனுடைய பாரம்பரியத்தின் பிரகாரம், வயதில் மூத்தவர்களையும், பெரியவர்களையும், முக்கியமானவர் களையும் பாதத்தில் விழுந்து மரியாதை செய்வது கலாச்சாரமாக இருக்கலாம்.

பேதுருவின் பாரம்பரிய வழக்கத்தின்படியோ தேவனை மாத்திரமே சாஷ்டாங்கமாய் விழுந்து வணங்கவேண்டும். கொர்நேலியு தன்னுடைய பாதத்தில் விழுந்து பணிந்துகொள்வதைப் பார்த்தபோது பேதுருவுக்கு அதிர்ச்சி உண்டாயிற்று. மனுஷனாகயிருக்கிற தன்னை, அவன் தேவனாக நினைத்துவிட்டானோ என்னும் சந்தேகம் உண்டாயிற்று. உடனே பேதுரு கொர்நேலியுவைத் தூக்கியெடுத்து, "எழுந்திரும் நானும் ஒரு மனுஷன்தான்" என்று அவனிடத்தில் சொல்லுகிறான்.

நாம் தேவனை மாத்திரமே ஆராதனை செய்யவேண்டும். தேவதூதர்களைக்கூட ஆராதிக்கக்கூடாது. தேவனுக்குரிய மகிமையை அவருக்கு மாத்திரமே செலுத்தவேண்டும். கர்த்தருடைய ஊழியக்காரர்களும், விசுவாசிகள் தங்களைக் கனப்படுத்துகிற விஷயத்தில் மிகுந்த கவனத்தோடும் எச்சரிப்போடும் இருக்கவேண்டும். தேவனுக்குக் கொடுக்க வேண்டிய மகிமையை ஊழியக்காரர்களும் அபகரித்துக்கொள்ளக்கூடாது.

பேதுரு கொர்நேலியுவுக்கு முன்பாக, தானும் அவனைப்போல ஒரு சாதாரண மனுஷன்தான் என்பதை அங்கீகாரம் பண்ணுகிறான். நாம் கர்த்தர் கொடுத்திருக்கிற பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம். இந்தப் பொக்கிஷம் கர்த்தருக்குரியது. கர்த்தருடைய நாமத்தை மாத்திரமே நாம் மகிமைப்படுத்த வேண்டும். நம்முடைய சுயமகிமையைத் தேடக்கூடாது.

யூதனானவன்

அவனுடனே பேசிக்கொண்டு, உள்ளேபோய், அநேகர் கூடிவந்திருக்கிறதைக் கண்டு, அவர்களை நோக்கி: அந்நிய ஜாதியானோடே கலந்து அவனிடத்தில் போக்குவரவாயிருப்பது யூதனானவனுக்கு விலக்கப் பட்டிருக்கிறதென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்; அப்படியிருந்தும், எந்த மனுஷனையும் தீட்டுள்ளவனென்றும் அசுத்தனென்றும் நான் சொல்லாதபடிக்கு தேவன் எனக்குக் காண்பித்திருக்கிறார். ஆகையால் நீங்கள் என்னை அழைப்பித்தபோது நான் எதிர்பேசாமல் வந்தேன். இப்போதும் என்ன காரியத்துக்காக என்னை அழைப்பித்தீர்கள் என்று கேட்கிறேன் என்றான் (அப் 10:27-29).

பரலோகத்தின் தேவன் பேதுருவையும் கொர்நேலியுவையும் இங்கு கூட்டிச் சேர்த்திருக்கிறார். பேதுரு கொர்நேலியுவுடனே பேசிக்கொண்டு, அவனுடைய வீட்டிற்குள்ளே போகிறான். அங்கு அநேகர் கூடிவந்திருக்கிறதைக் காண்கிறான். அவர்களெல்லோரும் பயபக்தியோடும் எதிர்பார்ப்போடும் கூடிவந்திருக்கிறார்கள். அவர்கள் மத்தியில் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்ய பேதுருவுக்கு ஒரு வாய்ப்புண்டாயிற்று.

தேவன் தன்னை புறஜாதியாரிடத்திற்கு வழிநடத்தி வந்திருக்கிற சம்பவத்தை பேதுரு அவர்களுக்கு எடுத்துச் சொல்லுகிறான். யூதருடைய பழக்கவழக்கங்கள் கொர்நேலியுவுக்கும் தெரியும். அந்நிய ஜாதியாரோடு கலந்து, அவர்களிடத்தில் போக்குவரவாயிருப்பது யூதர்களுக்கு விலக்கப்பட்டிருக்கிறது. இதைப் புறஜாதியாரும் அறிந்திருக்கிறார்கள். யூதர்கள் விருத்தசேதனமுள்ளவர்கள். புறஜாதியார்கள் விருத்த சேதனமில்லாதவர்கள். இவர்கள் இருவரும் பிரிந்திருக்கவேண்டுமென்பது தேவனுடைய பிரமாணமல்ல. இது மனுஷனே நியமித்துக்கொண்ட பிரிவினை.

யூதர்கள் புறஜாதியாரிடத்திலிருந்து முழுவதும் விலகியிருக்கமாட்டார்கள். புறஜாதியாருடைய தெருக்கள் வழியாகப் போகும்போது அவர்களோடு பேசுவார்கள். தங்களுடைய காசுகளை மாற்றுவதற்காகப் புறஜாதியார் நடத்துகிற காசுக்கடைகளுக்குப் போவார்கள். ஆனால் புறஜாதியாரோடு போஜனபானம் பண்ணமாட்டார்கள். புறஜாதியாருடைய வீடுகளுக்குப் போவதையும் யூதர்கள் தவிர்த்து விடுவார்கள்.

யூதர்கள் புறஜாதியாரை அசுத்தமான ஜனங்கள் என்றும், தீட்டுள்ள ஜனங்கள் என்றும் நினைத்தார்கள். அப்படியிருந்தும் பேதுரு புறஜாதியானாகிய கொர்நேலியுவின் வீட்டிற்கு இப்போது வந்திருக்கிறான். தேவனுடைய வழிநடத்துதலின் பிரகாரமாகவே அவன் இங்கு வந்திருக்கிறான். எந்த மனுஷனையும் தீட்டுள்ளவன் என்றும், அசுத்தன் என்றும் பேதுரு சொல்லாதபடிக்கு, தேவன் அவனுக்குக் காண்பித்திருக்கிறார். தேவன் சுத்தமாக்கினவைகளை பேதுரு தீட்டாக எண்ணக்கூடாது. வானத்திலிருந்து உண்டான சத்தம் இந்தச் சத்தியத்தைப் பேதுருவுக்கு மூன்றுதரம் சொல்லி உறுதிபண்ணிற்று.

பெந்தெகொஸ்தே நாளின்போது ஏராளமானோர் இரட்சிக்கப்பட்டார்கள். அவர்களெல்லோரும் விருத்தசேதனமுள்ள யூதர்கள். பேதுரு அவர்களுக்குப் பிரசங்கம்பண்ணியபோது, “மாறுபாடுள்ள இந்தச் சந்ததியைவிட்டு விலகி உங்களை இரட்சித்துக்கொள்ளுங்கள்” (அப் 2:40) என்று புத்தி சொன்னான். மாறுபாடுள்ள இந்தச் சந்ததி என்பது புறஜாதியாரைக் குறிக்கிற வார்த்தையாகும். இவ்வாறு புத்தி சொன்ன பேதுருவே இப்போது புறஜாதியாரோடு சேர்ந்து கொள்கிறான்.

கொர்நேலியு தேவபக்தியுள்ளவன். தேவனுக்குப் பயந்து ஜீவிக்கிறவன். அவன் புறஜாதியானாகயிருந்தாலும் பேதுரு அவனை விலக்காமல் அவனுடைய வீட்டிற்கு வந்திருக்கிறான். அவனுக்கும் அவனுடைய வீட்டாருக்கும் தன்னால் முடிந்த எல்லா ஊழியங்களையும் செய்ய ஆயத்தமாயிருக்கிறான். தேவன் புறஜாதியாரையும் சுத்தமாக்கியிருக்கிறார். புறஜாதியாரின் வீட்டிற்குப் போக தேவன் அவனுக்கு அனுமதி கொடுத்திருக்கிறார். ஆகையினால்தான் அவர்கள் பேதுருவை அழைப்பித்தபோது, அவன் எதிர்பேசாமல் அவர்களோடு கொர்நேலியுவின் வீட்டிற்கு வந்திருக்கிறான்.

பேதுரு அவர்களுக்கு ஊழியம் செய்ய ஆயத்தமாயிருக்கிறான். அவர்களுக்கு எப்படிப்பட்ட உதவி தேவைப்படுகிறது என்பதைத் தெரிந்து கொள்ள ஆவலாயிருக்கிறான். இதற்காக அவன் அவர்களிடம் “இப்போதும் என்ன காரியத்திற்காக என்னை அழைப்பித்தீர்கள்” என்று கேட்கிறான்.

என் ஜெபம் கேட்கப்பட்டது

அதற்குக் கொர்நேலியு: நாலு நாளைக்கு முன்னே இந்நேரத்திலே நான் உபவாசித்து, ஒன்பதாம்மணி நேரத்தில் என் வீட்டிலே ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தேன்; அப்பொழுது பிரகாசமுள்ள வஸ்திரந்தரித்த மனுஷன் ஒருவன் எனக்கு முன்பாக நின்று: கொர்நேலியுவே, உன் ஜெபம் கேட்கப்பட்டது, உன் தானதருமங்கள் தேவசந்நிதியில் நினைத்தருளப் பட்டது. யோப்பா பட்டணத்துக்கு ஆள் அனுப்பி, பேதுரு என்று மறுபேர் கொண்ட சீமோனை வரவழைப்பாயாக, அவன் கடலோரத்திலே தோல் பதனிடுகிறவனாகிய சீமோனுடைய வீட்டிலே தங்கியிருக்கிறான்; அவன் வந்து உன்னிடத்தில் பேசுவான் என்றார் (அப் 10:30-32).

தேவதூதன் தனக்குத் தரிசனமாகி, தன்னிடத்தில் சொன்ன காரியங்களையெல்லாம் கொர்நேலியு பேதுருவுக்குச் சொல்லுகிறான். தேவதூதன் சொன்னப்பிரகாரமாகவே தான் பேதுருவினிடத்திற்கு ஆள் அனுப்பிய செய்தியையும் அவனுக்குச் சொல்லுகிறான். நாலு நாளைக்கு முன்னே கொர்நேலியு இந்நேரத்திலே, உபவாசித்து, ஒன்பதாம் மணி நேரத்தில், அவன் வீட்டிலே ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தான். அவன் ஜெபாலயத்தில் ஜெபிக்கவில்லை. அவனுடைய வீட்டில் ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தான். ஒன்பதாம் மணி நேரம் என்பது மதியம் மூன்று மணியைக் குறிக்கும். இந்த வேளையில் ஜனங்கள் பொதுவாகத் தங்களுடைய சொந்த வேலைகளைப் பார்த்துக்கொண்டிருப்பார்கள். ஆனால் கொர்நேலியுவோ தேவனுடைய சமுகத்தில் ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தான். தேவனிடத்தில் பக்தியுள்ளவர்களும், தேவனுக்குப் பயப்படுகிறவர்களும் ஜெபத்தில் அதிக நேரம் தரித்திருப்பார்கள்.

கொர்நேலியு தனக்குத் தரிசனமான தேவதூதனைப்பற்றிச் சொல்லும்போது "பிரகாசமுள்ள வஸ்திரந்தரித்த மனுஷன் ஒருவன்" என்று குறிப்பிடுகிறான். அப்படிப்பட்ட மனுஷன் கொர்நேலியுவுக்கு முன்பாக நின்றான். தன்னிடத்தில் தேவதூதன் சொன்னது அனைத்தையும் (அப் 10:4-6) கொர்நேலியு பேதுருவிடம் மறுபடியும் சொல்லுகிறான். தான் ஏற்கெனவே சொல்லி அனுப்பிய செய்தியோடு, "உன் ஜெபம் கேட்கப்பட்டது" என்னும் செய்தியையும் சேர்த்துக்கொள்கிறான்.

கொர்நேலியுவினுடைய ஜெபம் என்ன என்பது தெரியவில்லை. இவன் எதற்காக ஜெபித்தானோ அதற்குப் பதிலைப் பெற்றுக்கொண்டான். ஒருவேளை தன்னுடைய ஆத்தும இரட்சிப்புக்காக இவன் ஜெபித்திருக்கலாம். கர்த்தர் தம்மை தனக்கு வெளிப்படுத்த வேண்டுமென்று இவன் ஜெபித்திருக்கலாம். இவனுடைய ஜெபம் எதுவாகயிருந்தாலும் அது தேவனுடைய சமுகத்திற்கு வந்திருக்கிறது.

தேவசமுகம்

அந்தப்படியே நான் உடனே உம்மிடத்திற்கு ஆள் அனுப்பினேன்; நீர் வந்தது நல்ல காரியம்; தேவனாலே உமக்குக் கட்டளையிடப்பட்ட யாவையும் கேட்கும்படிக்கு நாங்கள் எல்லாரும் இப்பொழுது இங்கே தேவசமுகத்தில் கூடியிருக்கிறோம் என்றான் (அப் 10:33).

பேதுருவின் பிரசங்கச் செய்தியைக் கேட்க கொர்நேலியுவும் அவனுடைய வீட்டாரும் ஆயத்தமாயிருக்கிறார்கள். தேவதூதனுடைய வார்த்தையைக் கேட்டவுடன் கொர்நேலியு உடனே பேதுருவினிடத்திற்கு ஆள் அனுப்பினான். பேதுரு தன்னுடைய வீட்டிற்கு வந்தது நல்ல காரியம் என்று அங்கீகரிக்கிறான். உண்மையுள்ள ஊழியக்காரர்கள் உபதேசம் பண்ணுவதற்கு வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் அதைப் பயன்படுத்தி உபதேசம்பண்ணுவார்கள். தேவனுடைய நாமத்தைக் கனப்படுத்துவார்கள். கர்த்தருடைய வார்த்தையைக் கேட்பதற்கு ஆயத்தமாகயிருக்கிற ஜனங்களிடம், ஊழியக்காரர்கள் ஆர்வத்தோடு நற்செய்தியை அறிவிப்பார்கள்.

தேவன் கொர்நேலியுவிடம் என்ன செய்தியைச் சொல்லவேண்டுமென்று கட்டளையிட்டிருக்கிறார். தேவனால் பேதுருவுக்கு கட்டளையிடப்பட்ட யாவையும் கேட்கும்படிக்கு கொர்நேலியுவும், அவனுடைய வீட்டாரும் இப்பொழுது இங்கே தேவசமுகத்தில் கூடியிருக்கிறார்கள். தேவனுடைய சித்தத்தின் பிரகாரமாகவே இவர்கள் கூடிவந்திருக்கிறார்கள். கர்த்தருடைய வார்த்தையைக் கேட்க ஆயத்தமாயிருக்கிறார்கள். இவர்கள் இங்கு அமர்ந்திருக்கும்போது அவர்களுடைய முழுசரீரமும் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்க ஆயத்தமாயிருக்கிறது. அவர்களுடைய இருதயமும் ஆயத்தமாயிருக்கிறது.

ஒரு சிலர் ஆராதனையில் அமர்ந்திருக்கும்போது, அவர்களுடைய சரீரம் அங்கு இருக்கும். ஆனால் அவர்களுடைய மனதோ வேறு இடத்திற்குச் சென்றுவிடும். கொர்நேலியுவின் வீட்டார் தேவசமுகத்தில் அப்படி கூடியிருக்கவில்லை. கர்த்தர் கொடுக்கிற கட்டளைகள் யாவையும் கேட்கும்படிக்கு முழுமனதோடு கூடியிருக்கிறார்கள்.

தேவன் தனக்குக் கட்டளையிட்டிருக்கிற யாவற்றையும் பேதுரு அவர்களுக்குப் பிரசங்கம்பண்ணவேண்டும். அவர்கள் பேதுருவின் பிரசங்கச் செய்தியைக் கேட்பதற்கு ஆயத்தமாயிருக்கிறார்கள். பேதுரு தனக்குப் பிடித்த செய்தியை எல்லாம் சொல்லக்கூடாது. தேவன் அவனுக்கு கட்டளையிட்டிருப்பதை மாத்திரமே சொல்லவேண்டும்.

கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நாம், கர்த்தர் நமக்குக் கொடுக்கிற செய்தி முழுவதையும் பிரசங்கம்பண்ண வேண்டும். கேட்கிறவர்களின் மனது வருத்தப்படுமென்று நாம் தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட செய்தியை அரைகுறையாகப் பேசக்கூடாது. மனுஷரைப் பிரியப்படுத்த வேண்டுமென்பதற்காக தேவன் கொடுக்காத செய்தியையெல்லாம் சொல்லக்கூடாது. கர்த்தருடைய ஊழியத்தை அவருடைய சித்தத்தின் பிரகாரமாகவே செய்யவேண்டும். அவர் கொடுக்கும் கட்டளைகள் முழுவதையும் நாம் திறந்த மனதோடு ஏற்றுக்கொள்ளவேண்டும். பிரசங்கத்தைக் கேட்கிறவர்களும் பிரசங்கச் செய்தி முழுவதையும் கேட்டு ஆசீர்வாதம் பெறவேண்டும்.

பேதுருவின் பிரசங்கம்
அப் 10 : 34-43

அப் 10:34. அப்பொழுது பேதுரு பேசத்தொடங்கி: தேவன் பட்சபாதமுள்ளவரல்ல என்றும்,

அப் 10:35. எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன்.

அப் 10:36. எல்லாருக்கும் கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவைக்கொண்டு அவர் சமாதானத்தைச் சுவிசேஷமாய்க் கூறி, இஸ்ரவேல் புத்திரருக்கு அனுப்பின வார்த்தையை அறிந்திருக்கிறீர்களே.

அப் 10:37. யோவான் ஞானஸ்நானத்தைக் குறித்துப் பிரசங்கித்தபின்பு, கலிலேயா நாடு முதற்கொண்டு யூதேயா தேசமெங்கும் நடந்த சங்கதி இதுவே.

அப் 10:38. நசரேயனாகிய இயேசுவை தேவன் பரிசுத்தஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார்; தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார்.

அப் 10:39. யூதருடைய தேசத்திலும் எருசலேமிலும் அவர் செய்தவைகளெல்லாவற்றிற்கும் நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம். அவரை மரத்திலே தூக்கிக் கொலை செய்தார்கள்.

அப் 10:40. மூன்றாம் நாளிலே தேவன் அவரை எழுப்பிப் பிரத்தியட்சமாய்க் காணும்படி செய்தார்.

அப் 10:41. ஆயினும் எல்லா ஜனங்களுக்கும் பிரத்தியட்சமாகும்படி செய்யாமல், அவர் மரித்தோரிலிருந்து எழுந்தபின்பு அவரோடே புசித்துக் குடித்தவர்களும் தேவனால் முன்பு நியமிக்கப்பட்ட சாட்சிகளுமாகிய எங்களுக்கே பிரத்தியட்சமாகும்படி செய்தார்.

அப் 10:42. அன்றியும் அவரே உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோர்களுக்கும் தேவனால் ஏற்படுத்தப்பட்ட நியாயாதிபதியென்று ஜனங்களுக்குப் பிரசங்கிக்கவும், சாட்சியாக ஒப்புவிக்கவும், அவர் எங்களுக்குக் கட்டளையிட்டார்.

அப் 10:43. அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவானென்று தீர்க்கதரிசிகளெல்லாரும் அவரைக்குறித்தே சாட்சிகொடுக்கிறார்கள் என்றான்.

தேவன் பட்சபாதமுள்ளவரல்ல

அப்பொழுது பேதுரு பேசத்தொடங்கி: தேவன் பட்சபாதமுள்ளவரல்ல என்றும், எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன் (அப் 10:34,35).

பேதுரு பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொண்டு பிரசங்கம்பண்ணுகிறான். ஆவியானவரே பேதுருவின் வாயில் தம்முடைய வார்த்தைகளை நிரப்புகிறார். தடையில்லாமல் தாராளமாய்ப் பேசுகிறான். புறஜாதியாருக்கு பேசும்போது பரிசுத்த ஆவியானவர் அவனுக்கு விசேஷித்த ஞானத்தைத் தருகிறார். செய்தியைக் கேட்கிறவர்கள் எல்லோரும் புறஜாதியார்கள். இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கேட்பதற்கு அவர்கள் ஆர்வமுள்ளவர்களாக கூடிவந்திருக்கிறார்கள். அவர்களுக்கு ஆவிக்குரிய பிரயோஜனம் உண்டாகவேண்டும்.

யூதர்களைப்போலவே புறஜாதியாரும் கர்த்தருடைய பார்வையில் விசேஷித்தவர்களாகயிருக்கிறார்கள். இந்தச் சத்தியத்தை பேதுரு ஆரம்பத்திலேயே மிகவும் தெளிவாகச் சொல்லுகிறான். தேவன் பட்சபாதமுள்ளவரல்ல. ஒருவன் யூதனாகயிருப்பதினால் அவனுக்கு ஒரு விசேஷித்த நியாயத்தீர்ப்பையும், ஒருவன் புறஜாதியானாகயிருப்பதினால் அவனுக்கு வேறுவிதமான நியாயத்தீர்ப்பையும் தேவன் கொடுக்கமாட்டார். தேவன் மனுஷரிடத்தில் பட்சபாதமுள்ளவரல்ல. "எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன்" என்பதை பேதுரு நிச்சயமாய் அறிந்திருக்கிறான்.

யூதர்கள் துன்மார்க்கராகயிருந்தால் தேவன் அவர்களை ஆசீர்வதிக்கமாட்டார். அவர்கள் தேவனுடைய நியாயத்தீர்ப்பிலிருந்து தப்பிக்க முடியாது. அதே சமயத்தில் புறஜாதியார் தேவனுக்குப் பயந்திருந்து நீதியைச் செய்யும்போது, தேவன் அவர்களை ஆசீர்வதியாமலும் இருக்கமாட்டார். யூதராகயிருந்தாலும் புறஜாதியாராகயிருந்தாலும் தேவனுக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவர்கள் மாத்திரமே தேவனுக்கு உகந்தவர்கள்.

மனுஷன் முகத்தைப்பார்க்கிறான். நிறத்தைப் பார்க்கிறான். இனத்தைப் பார்க்கிறான். ஆனால் தேவனோ மனுஷருடைய இருதயத்தைப் பார்க்கிறார். நம்முடைய இருதயத்தை ஆராய்ந்து பார்த்து நமக்கு நியாயத்தீர்ப்பு கொடுக்கிறார். தேவனுக்குப் பயப்படுவதும், நீதியைச் செய்வதும் நம்மிடத்தில் சேர்ந்து காணப்படவேண்டும். இவை இரண்டும் நம்மிடத்தில் இருந்தால்தான் தேவன் நம்மீது பிரியமாயிருப்பார். தேவன் நம்மை அங்கீரிப்பார். ஒரு சிலர் தேவனைப்பற்றி அறியாதவர்களாக யிருக்கலாம். அவர்கள்கூட தேவனுக்குப் பயந்து நீதியைச் செய்யும்போது, அவர்களும் தேவனுடைய கிருபையைப் பெற்றுக்கொள்கிறார்கள். இப்படிப்பட்ட கிருபையை தேவன் கொர்நேலியுவுக்குக் காண்பித்திருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் மூலமாக கொர்நேலியு தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்கிறான்.

தேவன் பட்சபாதமுள்ளவரல்ல என்பதை பேதுரு நிச்சயமாய் அறிந்திருப்பதற்கு முன்பாகவே, இந்தச் சத்தியம் பிரத்தியட்சமாயிருக்கிறது. நியாயத்தீர்ப்பு நாளின்போது, கர்த்தர் நம்மை நியாயம் விசாரிக்கையில், நாம் எந்த தேசத்தார் என்று கேள்வி கேட்கமாட்டார். நாம் எப்படிப்பட்டவர்கள் என்பதைத்தான் ஆராய்ந்து பார்ப்பார். இந்தச் சத்தியத்தை பேதுரு இப்போது நிச்சயமாய் அறிந்திருக்கிறான். கர்த்தர் தனக்குக் கொடுத்த தரிசனத்தையும், கொர்நேலியுவுக்குக் கொடுத்த தரிசனத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கிறான். கர்த்தர் பட்சபாதமுள்ளவரல்ல என்பதை நிச்சயமாய் அறிந்துகொள்கிறான்.

அனுப்பின வார்த்தை

எல்லாருக்கும் கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்துவைக்கொண்டு அவர் சமாதானத்தைச் சுவிசேஷமாய்க் கூறி, இஸ்ரவேல் புத்திரருக்கு அனுப்பின வார்த்தையை அறிந்திருக்கிறீர்களே (அப் 10:36).

கொர்நேலியுவும் அவனுடைய வீட்டாரும் இஸ்ரவேலின் காணியாட்சிக்குப் புறம்பானவர்களா யிருந்தாலும், அவர்கள் இஸ்ரவேல் தேசத்திற்கு அருகாமையிலேயே இருக்கிறார்கள். ஆகையினால் அவர்களுக்கு இயேசுகிறிஸ்துவைப் பற்றியும், அவருடைய சுவிசேஷத்தைப் பற்றியும் கேள்விப்படுவதற்கு வாய்ப்பு உண்டாயிற்று. கலிலேயா நாடு முதற்கொண்டு யூதேயா தேசமெங்கும் நடந்த சங்கதியை புறஜாதியாரும் கேள்விப்பட்டிருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவின் மூலமாய் இஸ்ரவேல் புத்திரருக்கு அனுப்பப்பட்டிருக்கிற வார்த்தையையும் இவர்கள் கேள்விப்பட்டிருக்கிறார்கள்.

சுவிசேஷம் பிரசங்கிக்கப்படும்போது, அதன் ஆசீர்வாதத்தில் புறஜாதியாருக்கு பங்கில்லை என்று யூதர்கள் நினைத்தார்கள். புறஜாதியாரும் அப்படியே நினைத்து சுவிசேஷச் செய்தியை தங்கள் இருதயத்தில் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனாலும் சுவிசேஷச் செய்தி பிரசங்கிக்கப்பட்டபோது, அது அவர்களுடைய காதுகளில் தொனித்தது.

இயேசுகிறிஸ்துவின் கீர்த்தி தேசமெங்கும் பரம்பிற்று. யூதரும் புறஜாதியாரும் அவருடைய கீர்த்தியைப்பற்றிக் கேள்விப்படுகிறார்கள். இயேசுகிறிஸ்துவின் கிருபையையும், வல்லமையையும் புறஜாதியாரும் அறிந்திருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின் மூலமாய் சமாதானம் உண்டு என்பதே அந்த நற்செய்தி. இந்தச் செய்தி முதலாவதாக இஸ்ரவேல் புத்திரருக்கு அனுப்பப்பட்டது. இந்தச் செய்தி யூதருக்குப் பிரசங்கம்பண்ணப்பட்டபோது, புறஜாதியாரும் அந்த வார்த்தையைக் கேட்டு அறிந்திருக்கிறார்கள்.

தேவன் இயேசுகிறிஸ்துவைக் கொண்டு சமாதானத்தைச் சுவிசேஷமாய் கூறுகிறார். இயேசுகிறிஸ்து சமாதானத்தை அறிவிக்கும்போது, யுத்தத்தை அறிவிப்பதற்கு யாரும் உரிமையில்லை. சுவிசேஷச் செய்தி முதன்முதலாக இஸ்ரவேல் புத்திரருக்கே அறிவிக்கப்பட்டது. இப்போது பேதுருவின் மூலமாக புறஜாதியாருக்கும் அறிவிக்கப்படுகிறது. பேதுரு இவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுவதற்கு முன்பாகவே, இஸ்ரவேல் புத்திரருக்கு அனுப்பின வார்த்தையை புறஜாதியார் அறிந்திருக்கிறார்கள்.

நடந்த சங்கதி

யோவான் ஞானஸ்நானத்தைக் குறித்துப் பிரசங்கித்தபின்பு, கலிலேயா நாடு முதற்கொண்டு யூதேயா தேசமெங்கும் நடந்த சங்கதி இதுவே. நசரேயனாகிய இயேசுவை தேவன் பரிசுத்தஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார்; தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார் (அப் 10:37,38).

கொர்நேலியுவும் அவனுடைய வீட்டாரும் இஸ்ரவேல் புத்திரருக்கு கர்த்தர் அனுப்பின வார்த்தையின் ஒரு பகுதியை அறிந்திருக்கிறார்கள். யோவான்ஸ்நானன் பிரசங்கம் பண்ணின மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானத்தைப்பற்றி இவர்கள் கேள்விப்பட்டிருக்கிறார்கள். யோவான் ஸ்நானன் கர்த்தருக்கு வழியை ஆயத்தம்பண்ண வந்தவன். அவன் மனந்திரும்புதலுக்கேற்ற செய்தியைப் பிரசங்கம் பண்ணிவந்தான். யோவான்ஸ்நானன் ஞானஸ்நானத்தைக் குறித்துப் பிரசங்கித்த பின்பு இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷச் செய்தி கலிலேயா நாடு முதற்கொண்டு யூதேயா தேசமெங்கும் பரவுகிறது. இயேசுகிறிஸ்து நன்மை செய்கிறவராக சுற்றி அலைந்தார் என்ற செய்தியையும் கொர்நேலியுவும், அவனுடைய வீட்டாரும், அவனுடைய சிநேகிதரும் அறிந்திருக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்து இந்தப் பூமிக்கு நல்லவராகவே வந்திருக்கிறார். மனுக்குலத்தை ஆசீர்வதிப்பதற்காக வந்திருக்கிறார். அவர் நன்மை செய்கிறவராயும், பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் இந்தத் தேசத்தில் சுற்றித்திரிந்தார். அவர் ஒருபோதும் சும்மாயிருந்ததாக தகவல் எதுவுமில்லை. ஒவ்வொரு இடமாக சுற்றித்திரிந்தார். அவர் எங்கெல்லாம் போனாரோ அங்கெல்லாம் அவர் நன்மை செய்தார்.

தேவன் இயேசுகிறிஸ்துவை இந்தப் பூமிக்கு அனுப்பியிருக்கிறார். அவர் இயேசுவோடு கூடயிருக்கிறார். இயேசுகிறிஸ்துவைப்பற்றியும், அவருடைய சுவிசேஷத்தைப்பற்றியும், அவர் செய்த அற்புதங்களைப்பற்றியும் கொர்நேலியுவின் வீட்டார் ஓரளவு அறிந்திருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து சர்வ வல்லமையுள்ளவர். அவர் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்கினார். பிசாசின் கிரியைகளை அழிப்பதற்காகவே இயேசுகிறிஸ்து இந்தப் பூமிக்கு அனுப்பப்பட்டார். பிசாசின்மீது யுத்தம் செய்து ஜெயம் பெற்றார்.

யூதர்கள் இயேசுகிறிஸ்துவை சிலுவையில் அறைந்து கொலைசெய்தார்கள் என்ற செய்தியையும் கொர்நேலியுவின் வீட்டார் அறிந்திருக்கிறார்கள். அவரை மரத்திலே தூக்கிக் கொலைசெய்தார்கள். அவர்கள் யாரை கொலைசெய்தார்களோ, அவர் அவர்களுக்கு நன்மை செய்கிறவராகவே இருந்தார்.

சாட்சிகளாயிருக்கிறோம்

யூதருடைய தேசத்திலும் எருசலேமிலும் அவர் செய்தவைகளெல்லாவற்றிற்கும் நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம். அவரை மரத்திலே தூக்கிக் கொலைசெய்தார்கள் (அப் 10:39).

கொர்நேலியுவும் அவனுடைய வீட்டாரும் இயேசுகிறிஸ்துவைப்பற்றிய செய்தியை ஒரு அறிக்கையாகக் கேட்டிருக்கிறார்கள். ஆனால் பேதுருவும், மற்ற அப்போஸ்தலர்களும் இயேசு கிறிஸ்துவுக்குச் சாட்சிகளாக யிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து யூதருடைய தேசத்திலும் எருசலேமிலும் செய்தவை எல்லாவற்றிற்கும் இவர்கள் சாட்சிகளாகயிருக்கிறார்கள். இயேசு கிறிஸ்து சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணுவதற்காக இந்தப் பூமிக்கு வந்தார். மனுக்குலத்தை இரட்சிப்பதற்காக வந்தார்.

இயேசுகிறிஸ்து எல்லாவற்றிற்கும் ஆண்டவராகயிருக்கிறார். எல்லோருக்கும் ஆண்டவராகயிருக்கிறார். அவர் யூதருக்கும் ஆண்டவர். புறஜாதியாருக்கும் ஆண்டவர். ருதவனுக்கும் மனுஷருக்கும் நடுவில் இயேசுகிறிஸ்து மத்தியஸ்தராகயிருக்கிறார். வானத்திலும் பூமியிலும் எல்லா அதிகாரங்களும் இயேசுகிறிஸ்துவின் கைகளில் ஒப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. எல்லோரையும் நியாயந்தீர்க்கிற அதிகாரமும் இயேசு கிறிஸ்துவிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

தேவன் நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவைப் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார். கிறிஸ்து என்னும் பெயருக்கு மேசியா அல்லது அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கிறவர் என்று பொருள்.

இயேசுகிறிஸ்து சர்வ அதிகாரமும் சர்வவல்லமையும் உள்ளவர். அவர் அதிகாரத்தோடு பிரசங்கம்பண்ணினார். அற்புதங்களைச் செய்கிற வல்லமை அவரிடத்திலிருந்தது. தம்முடைய வார்த்தைகளை அற்புதங்களினாலும் அடையாளங்களிலும் உறுதிபண்ணினார். தேவன் அவருடனே கூடயிருந்தபடியினால் அவர் அற்புதம் செய்கிறவராகயிருந்தார். பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராய் சுற்றித் திரிந்தார். பிதாவாகிய தேவன் இயேசுகிறிஸ்துவை இந்தப் பூமிக்கு அனுப்பியதோடு, அவர் இயேசுவோடு கூடவே இருக்கிறார்.

தேவன் நம்மை தம்முடைய ஊழியத்தைச் செய்யுமாறு அனுப்பும்போது அவருடைய பிரசன்னம் நம்மோடு கூடயிருக்கும். அவர் நம்மோடு கூட வருவார். கூட இருப்பார். இயேசுகிறிஸ்து யாரோடு கூடயிருக்கிறாரோ அவர்களை பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம்பண்ணுவார்.

தேவன் அவரை எழுப்பினார்

மூன்றாம் நாளிலே தேவன் அவரை எழுப்பிப் பிரத்தியட்சமாய்க் காணும்படி செய்தார். ஆயினும் எல்லா ஜனங்களுக்கும் பிரத்தியட்சமாகும்படி செய்யாமல், அவர் மரித்தோரிலிருந்து எழுந்தபின்பு அவரோடே புசித்துக் குடித்தவர்களும் தேவனால் முன்பு நியமிக்கப்பட்ட சாட்சிகளுமாகிய எங்களுக்கே பிரத்தியட்சமாகும்படி செய்தார் (அப் 10:40,41).

இயேசுகிறிஸ்துவைப்பற்றியும், அவருடைய சுவிசேஷத்தைப்பற்றியும் கொர்நேலியுவுக்கும் அவனுடைய வீட்டாருக்கும் ஓரளவு மாத்திரமே தெரிந்திருக்கிறது. ஆகையினால் இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த சத்தியத்தை அவர்களுக்கு விளக்கிக் கூறுவது அவசியமாயிற்று. இயேசுகிறிஸ்துவை யூதர்கள் மரத்திலே தூக்கிக் கொலைசெய்தார்கள். ஆனால் தேவனோ அவரை மூன்றாம் நாளில் உயிரோடு எழுப்பினார். இயேசுகிறிஸ்து தேவனால் அனுப்பப்பட்டவர் என்பதற்கும், தேவன் அவரோடு கூடயிருக்கிறார் என்பதற்கும் இது சாட்சியாயிற்று.

இயேசுகிறிஸ்து உயிரோடு எழுந்தார் என்னும் செய்தியை செசரியாவிலுள்ள ஜனங்கள் ஓரளவு கேள்விப்பட்டிருப்பார்கள். ஆனால் யூதர்களோ இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு விரோதமாக பொய்யைப் பிரச்சாரம் பண்ணினார்கள். கிறிஸ்துவின் சீஷர்கள் இரவு வேளையில் வந்து அவருடைய சரீரத்தைக் களவாய் எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள் என்று யூதர்கள் ஜனங்கள் மத்தியிலே பொய்ச் செய்தியைப் பரப்பினார்கள். இந்தச் செய்தியையும் செசரியாவிலுள்ள ஜனங்கள் கேள்விப்பட்டிருப்பார்கள். நாளடைவில் மெய்யான செய்தியைவிட, யூதர்கள் தொடர்ந்து பரப்பிய பொய் செய்தியே ஜனங்களுக்கு மத்தியில் பிரபல்யமாயிற்று. ஆகையினால் இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த செய்தியை அவர்களுக்கு அறிவிப்பது நல்லது என்று பேதுரு உணருகிறான்.

பிதாவாகிய தேவனே இயேசுகிறிஸ்துவை மூன்றாம் நாளில் உயிரோடு எழுப்புகிறார். தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக, தெய்வீக பிரமாணத்தின்படி இயேசுகிறிஸ்துவைத் தேவன் உயிரோடு எழுப்புகிறார். இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்பது மெய்யான சத்தியம். சந்தேகத்திற்கு இடமில்லாமல் இந்தச் சத்தியம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. பிதாவாகிய தேவன் இயேசுகிறிஸ்துவை எழுப்பி, அவரைப் பிரத்தியட்சமாய்க் காணும்படி செய்தார். இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்ததன் மூலமாக அவருடைய சுவிசேஷச் செய்தி சத்தியமானது என்று நிரூபிக்கப்படுகிறது. ஆனாலும் எல்லா ஜனங்களுக்கும் அவர் பிரத்தியட்சமாய்க் காணப்படவில்லை.

மூன்றாம் நாளிலே தேவன் இயேசுவை எழுப்பி பிரத்தியட்சமாய்க் காணும்படி செய்தார். ஆயினும் எல்லா ஜனங்களுக்கும் பிரத்தியட்சமாகும்படி செய்யவில்லை. அவருடைய உயிர்த்தெழுதலுக்குச் சாட்சிகளாக தேவனால் ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டவர்களுக்கு மாத்திரமே பிரத்தியட்சமாகும்படி செய்தார். இயேசுகிறிஸ்து இந்தப் பூமியில் ஊழியம் செய்தபோது பலர் அவரை விசுவாசித்தாலும், ஏராளமானோர் அவரை விசுவாசிக்கவில்லை. அவரை மேசியா என்று அங்கீகரிக்கவில்லை. ஆகையினால் தம்முடைய உயிர்த்தெழுதலை எல்லோரும் பிரத்தியட்சமாகக் காண்பதை தேவன் அனுமதிக்கவில்லை. உயிர்த்தெழுந்த கிறிஸ்துவைத் தங்கள் கண்களால் காணும் சிலாக்கியம் ஏராளமானோருக்கு கிடைக்கவில்லை.

இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு விரோதமாக யூதர்கள் பொய்ச்செய்தியைப் பரப்புகிறார்கள். இவற்றிற்கு மத்தியிலும் இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு தம்மைப் பிரத்தியட்சமாக வெளிப்படுத்திக் காண்பித்திருக்கிறார். அவருடைய உயிர்த்தெழுதலுக்கு சீஷர்களே போதுமான சாட்சிகளாகயிருக்கிறார்கள். இவர்களுக்கு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைப்பற்றி எதேச்சையாக தரிசனம் கிடைக்கவில்லை. இவர்கள் தேவனால் முன்பே நியமிக்கப்பட்ட சாட்சிகளாகயிருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு இவர்கள் சாட்சிகளாகயிருக்க வேண்டுமென்று, தேவன் இவர்களை ஏற்கெனவே ஏற்படுத்தியிருக்கிறார்.

உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்து தம்மை இவர்களுக்குப் பிரத்தியட்சமாய்க் காண்பித்தபோது, திடீரென்று தோன்றி உடனே மறைந்துவிடவில்லை. உயிர்த்தெழுந்த இயேசு தம்முடைய சீஷர்களோடு தாராளமாக உரையாடினார். அவர் மரித்தோரிலிருந்து எழுந்த பின்பு சீஷர்கள் அவரோடே கூட புசித்துக் குடித்தார்கள். இயேசுகிறிஸ்துவை பயமில்லாமல் தரிசித்தார்கள். இயேசுவும் அவர்களோடு தாராளமாகப் பேசினார். உயிர்த்தெழுந்த பின்பும் இயேசு தம்முடைய சீஷர்களோடு ஐக்கியமாகயிருந்தார்.

எங்களுக்குக் கட்டளையிட்டார்

அன்றியும் அவரே உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோர்களுக்கும் தேவனால் ஏற்படுத்தப்பட்ட நியாயாதிபதியென்று ஜனங்களுக்குப் பிரசங்கிக்கவும், சாட்சியாக ஒப்புவிக்கவும், அவர் எங்களுக்குக் கட்டளையிட்டார். அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவானென்று தீர்க்கதரிசிகளெல்லாரும் அவரைக் குறித்தே சாட்சிகொடுக்கிறார்கள் என்றான் (அப் 10:42,43).

பேதுரு தன்னுடைய பிரசங்கச் செய்தியின் முடிவுரைக்கு வருகிறான். தன்னுடைய பிரசங்கத்தைக் கேட்கிற அனைவரும் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டும் என்று அவர்களுக்கு உபதேசம் பண்ணுகிறான். கொர்நேலியு என்ன செய்ய வேண்டுமென்று சொல்லுவதற்காகவே பேதுரு இங்கு அனுப்பப்பட்டிருக்கிறான். கொர்நேலியு செய்யவேண்டியது இதுதான். அவன் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டும். கொர்நேலியு தேவபக்தியுள்ளவனாகவும், தேவனுக்குப் பயந்தவனாகவும், தானதருமங்களைச் செய்கிறவனாகவும் இருந்தாலும், அவன் இதுவரையிலும் இயேசுகிறிஸ்துவைத் தன்னுடைய இரட்சகராகவும் ஆண்டவராகவும் விசுவாசிக்கவில்லை. அவனிடத்தில் இந்தக் குறை மாத்திரமே இருக்கிறது. கொர்நேலியு இந்தக் குறையை நீக்கி, அவனும் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கவேண்டும்.

கிறிஸ்தவ உபதேசம் அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள் ஆகியோரின் அஸ்திபாரத்தின்மீது கட்டியெழுப்பப்பட்டிருக்கிறது. இயேசு கிறிஸ்துவைக்குறித்து அவர்கள் கொடுக்கிற சாட்சியின்மீது கட்டியெழுப்பப்பட்டிருக்கிறது. பேதுரு அப்போஸ்தலர்களில் ஒருவன். அப்போஸ்தலர்கள் சார்பாக பேதுரு கொர்நேலியுவுக்கும் அவனுடைய வீட்டாருக்கும் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைச் சாட்சியாக அறிவிக்கிறான். ஜனங்களுக்குப் பிரசங்கிக்கவும் சாட்சியாக ஒப்புவிக்கவும் தேவன் பேதுருவுக்கு கட்டளையிட்டிருக்கிறார். இந்தக் கட்டளை எல்லா அப்போஸ்தலருக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளெல்லோரும் இயேசுகிறிஸ்துவைக் குறித்துச் சாட்சி கொடுத்திருக்கிறார்கள். அப்போஸ்தலர்கள் இயேசுகிறிஸ்துவைக் குறித்து ஜனங்களுக்குப் பிரசங்கிக்கிறார்கள். சாட்சியாக ஒப்புவிக்கிறார்கள். தீர்க்கதரிசிகள் இயேசுகிறிஸ்துவைக் குறித்துத் தீர்க்கதரிசனமாகச் சாட்சி கொடுத்திருக்கிறார்கள். இவர்களுடைய வார்த்தையினால் இயேசு கிறிஸ்துவே உயிரோடிருக்கிறவர்களுக்கும், மரித்தோர்களுக்கும் தேவனால் ஏற்படுத்தப்பட்ட நியாயாதிபதி என்பது சாட்சியாக அறிவிக்கப்படுகிறது.

இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கும்போது அவரை நம்முடைய இரட்சகராகவும், நியாயாதிபதியாகவும் விசுவாசித்து அங்கீகரிக்கவேண்டும். ஏனெனில் தேவன் இயேசுகிறிஸ்துவை நியாயாதிபதியாக ஏற்படுத்தியிருக்கிறார். உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோர்களுக்கும் இயேசுகிறிஸ்துவே நியாயாதிபதி. "அறியாமையுள்ள காலங்களை தேவன் காணாதவர் போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார். மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளக்கப்பண்ணினார்" (அப் 17:30,31).

தன்னுடைய பிரசங்கத்தைக் கேட்கிறவர்களின் பாவங்கள் எப்படி மன்னிக்கப்படும் என்று பேதுரு அவர்களுக்கு எடுத்துச் சொல்லுகிறான். இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவனெவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவான். மனுஷர் எல்லோருமே பாவம் செய்து ஏகமாய்க் கெட்டுப்போயிருக்கிறார்கள். ஆகையினால் எல்லோரும் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து, அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும். நாம் இயேசுகிறிஸ்துவை நம்முடைய இரட்சகராகவும் ஆண்டவராகவும் விசுவாசிக்கிற போது அவர் நம்மை நீதிமான்களாக்குகிறார். அவரே நம்முடைய நீதியாகயிருக்கிறார்.

இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் பாவமன்னிப்பு உண்டாகும் என்னும் சத்தியத்தை பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளும் சாட்சிகளாக முன்னறிவித்திருக்கிறார்கள். இந்தப் பாவமன்னிப்பும் ஆத்தும இரட்சிப்பும் நமக்குத் தேவை. நமக்கு இவை கிடைக்கவில்லையென்றால் நம்முடைய தானதருமத்தினால் ஒரு பிரயோஜனமும் உண்டாகாது. தேவனுடைய ஆசீர்வாதங்களையும் சிலாக்கியங்களையும் நாம் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால் நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டும். ஆவிக்குரிய ஜீவியத்தில் நம்முடைய பாவமன்னிப்பே அஸ்திபாரமாக இருக்கிறது. நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுவது தேவன் நமக்குக் கொடுக்கிற ஆசீர்வாதம். நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு இரட்சிக்கப்பட்டால் நம்முடைய முடிவு நலமாகயிருக்கும். இல்லையென்றால் நம்முடைய முடிவு பரிதாபமாகயிருக்கும்.

பரிசுத்த ஆவியானவர்
அப் 10 : 44-48

அப் 10:44. இந்த வார்த்தைகளைப் பேதுரு பேசிக்கொண்டிருக்கையில் வசனத்தைக் கேட்டவர்கள் யாவர்மேலும் பரிசுத்தஆவியானவர் இறங்கினார்.

அப் 10:45. அவர்கள் பல பாஷைகளைப் பேசுகிறதையும், தேவனைப் புகழுகிறதையும்,

அப் 10:46. பேதுருவோடேகூட வந்திருந்த விருத்தசேதனமுள்ள விசுவாசிகள் கேட்கும் போது, பரிசுத்தஆவியின் வரம் புறஜாதிகள் மேலும் பொழிந்தருளப்பட்டதைக் குறித்துப் பிரமித்தார்கள்.

அப் 10:47. அப்பொழுது பேதுரு: நம்மைப்போல பரிசுத்தஆவியைப் பெற்ற இவர்களும் ஞானஸ்நானம் பெறாதபடிக்கு எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா என்று சொல்லி,

அப் 10:48. கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கும்படி கட்டளையிட்டான். அப்பொழுது சிலநாள் அங்கே தங்கும்படி அவனை வேண்டிக்கொண்டார்கள்.

பரிசுத்த ஆவியானவர் இறங்கினார்

இந்த வார்த்தைகளைப் பேதுரு பேசிக்கொண்டிருக்கையில் வசனத்தைக் கேட்டவர்கள் யாவர்மேலும் பரிசுத்தஆவியானவர் இறங்கினார். அவர்கள் பல பாஷைகளைப் பேசுகிறதையும், தேவனைப் புகழுகிறதையும், பேதுருவோடேகூட வந்திருந்த விருத்தசேதனமுள்ள விசுவாசிகள் கேட்கும் போது, பரிசுத்தஆவியின் வரம் புறஜாதிகள் மேலும் பொழிந்தருளப்பட்டதைக் குறித்துப் பிரமித்தார்கள் (அப் 10:44-46).

பேதுருவின் பிரசங்கத்தைத் தேவன் அங்கீகரிக்கிறார். இந்த வார்த்தைகளைப் பேதுரு பேசிக்கொண்டிருக்கையில் வசனத்தைக் கேட்டவர்கள் யாவர் மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்குகிறார். ஆதியிலே தங்கள் மேல் இறங்கினதுபோலவே, தான் பேசத் தொடங்கினபோது, பரிசுத்த ஆவியானவர் இவர்கள் மேலும் இறங்கினார் (அப் 11:15) என்று பேதுரு இந்த அனுபவத்தைப்பற்றிச் சொல்லுகிறார். பேதுரு பிரசங்கம்பண்ணிக் கொண்டிருக்கும்போதே, பரிசுத்த ஆவியானவர் வசனத்தைக் கேட்ட யாவர்மேலும் இறங்கி வந்து, பேதுருவின் பிரசங்கச் செய்திக்குச் சாட்சி கொடுக்கிறார். பேதுரு சாதாரண வார்த்தைகளாகப் பேசினாலும், தேவன் தம்முடைய தெய்வீக வல்லமையை அந்த வார்த்தைகளோடு இணைக்கிறார்.

பொதுவாக விசுவாசிகள் ஞானஸ்நானம் பெற்ற பின்பு பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்வார்கள். அவர்களுடைய விசுவாசம் உறுதிபடுவதற்கு ஆவியானவரின் அபிஷேகம் அடையாளமாயிருக்கும். ஆனால் புறஜாதியாரோ, தண்ணீரில் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வதற்கு முன்பாக, பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொள்கிறார்கள். தேவன் இந்த வழியில்தான் கிரியை செய்யவேண்டும் என்று அவருக்கு எந்தவிதமான கட்டுப்பாடுமில்லை. அவர் காற்றைப் போன்றவர். தமக்கு இஷ்டமான திசையில் வீசுகிறவர். தமக்கு இஷ்டமான பிரகாரமாகக் கிரியை செய்கிறவர்.

வசனத்தைக் கேட்டவர்கள் யாவர் மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கியபோது, அவர்கள் பல பாஷைகளில் பேசுகிறார்கள். தேவனைப் புகழுகிறார்கள். இயேசுகிறிஸ்துவை மகிமைப் படுத்துகிறார்கள். தங்கள் இரட்சிப்பின் அனுபவத்திற்காக கர்த்தரைத் துதிக்கிறார்கள். கர்த்தர் அவர்களுக்குக் கொடுத்திருக்கிற வரத்தைப் பிரயோஜனப்படுத்துகிறார்கள். அந்த வரத்தின் மூலமாக தேவனைப் புகழுகிறார்கள். நம்முடைய ஜீவியத்திலும் கர்த்தர் நமக்குக் கொடுக்கிற வரங்களை நாம் பயன்படுத்தவேண்டும். அந்த வரங்கள் மூலமாக தேவனை மகிமைப்படுத்த வேண்டும். வரங்களைப் பயன்படுத்துவதில் முன்னேற்றம் காணப்படவேண்டும்.

கொர்நேலியுவின் வீட்டில் புறஜாதியாரும் இருக்கிறார்கள். பேதுருவோடு கூடவந்த விருத்தசேதனமுள்ள விசுவாசிகளும் இருக்கிறார்கள். வசனத்தைக் கேட்ட புறஜாதியார் மேல் பரிசுத்த ஆவியானவர் இறங்கியிருப்பதையும், அவர்கள் பல பாஷைகளைப் பேசுகிறதையும், தேவனைப் புகழுகிறதையும், விருத்தசேதனமுள்ள விசுவாசிகள் கேட்டபோது, பரிசுத்த ஆவியின் வரம் புறஜாதிகள் மேலும் பொழிந்தருளப்பட்டதைக் குறித்துப் பிரமிக்கிறார்கள். பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனத்தை இந்த விசுவாசிகள் அறிந்திருந்தார்களென்றால், அவர்களுக்கு இந்தப் பிரமிப்பு ஏற்பட்டிருக்காது. மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன் என்று கர்த்தர் யோவேல் தீர்க்கதரிசி மூலமாக ஏற்கெனவே தீர்க்கதரிசனமாக முன்னறிவித்தது இப்போது நிறைவேறிக்கொண்டிருக்கிறது.

ஞானஸ்நானம்

அப்பொழுது பேதுரு: நம்மைப்போல பரிசுத்தஆவியைப் பெற்ற இவர்களும் ஞானஸ்நானம் பெறாதபடிக்கு எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா என்று சொல்லி, கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கும்படி கட்டளையிட்டான். அப்பொழுது சிலநாள் அங்கே தங்கும்படி அவனை வேண்டிக் கொண்டார்கள் (அப் 10:47,48).

பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொண்ட விசுவாசிகளுக்கு, பேதுரு ஞானஸ்நானம் கொடுக்க தீர்மானம்பண்ணுகிறான். இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளவேண்டும். இவர்கள் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொண்டாலும், தண்ணீர் ஞானஸ்நானமும் பெற்றுக்கொள்ளவேண்டும். தேவன் எந்த நியதிக்கும் கட்டுப்பட்டவரல்ல. ஆனாலும் தம்முடைய பிள்ளைகளாகிய நமக்கு தேவன் சில நியதிகளையும், நியமங்களையும், ஒழுங்குகளையும் நியமித்திருக்கிறார். அவற்றிற்கு நாம் கீழ்ப்படியவேண்டும். பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டவர்கள் புறஜாதியாராக யிருந்தாலும், தேவனுடைய நியமத்திற்குக் கீழ்ப்படிந்து அவர்களும் தண்ணீர் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளவேண்டும். “நம்மைப்போல பரிசுத்தஆவியைப் பெற்ற இவர்களும் ஞானஸ்நானம் பெறாதபடிக்கு எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா என்று சொல்லி” கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுக்கும்படி பேதுரு கட்டளையிடுகிறான்.

சுவிசேஷச் செய்தி அற்புதங்களினாலும் அடையாளங் களினாலும் உறுதிபண்ணப்படுகிறது. பேதுருவின் பிரசங்கம் நிறைவு பெறுகிறது. பேதுரு கிறிஸ்துவின் சுவிசேஷ வார்த்தைகளைப் பேசிக்கொண்டிருக்கையில் வசனத்தைக் கேட்டவர்கள் யாவர் மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்குகிறார். சுவிசேஷச் செய்தி அற்புதத்தினால் நிரூபிக்கப்படுகிறது. பேதுருவின் பிரசங்கச் செய்தியை விவாதம் செய்து நிரூபிக்கவேண்டிய அவசியமில்லை. ஆவியானவரே இறங்கி வந்து தம்முடைய செய்தியை அடையாளங்களினால் நிரூபிக்கிறார். தேவனுடைய கிருபைகளைப் பெற்றுக்கொண்டவர்கள் அவருடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படியவேண்டும். அவரோடு ஐக்கியமாகயிருக்கவேண்டும்.

புறஜாதி ஜனங்கள் தண்ணீர் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பாகவே பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொள்கிறார்கள். இந்தச் சம்பவம் பேதுருவுக்கும் ஒரு அடையாளமாயிற்று. அவர்கள் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்ளாமல் இருந்திருப்பார்களென்றால், பேதுரு ஒருவேளை அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்காமலேயே செசரியா பட்டணத்தைவிட்டுப் புறப்பட்டுப் போயிருப்பான். அவனுடைய ஊழியமும் நிறைவுபெற்றிருக்காது. அவர்கள் மீது ஆவியானவர் இறங்கி வந்து, பேதுரு செய்ய வேண்டிய ஊழியத்தை அவனுக்கு உணர்த்துகிறார். ஆவியானவரின் சித்தத்திற்கு பேதுரு கீழ்ப்படிகிறான்.

புறஜாதியாரையும் தம்முடைய சபையில் சேர்த்துக்கொள்வது தேவனுக்குப் பிரியமாயிற்று. தம்முடைய தெய்வீக கிருபையினால் தேவன் புறஜாதியாரையும் தமது சபையில் சேர்த்துக்கொள்கிறார். நாம் தானதருமங்களைச் செய்தாலும், கர்த்தருடைய கிருபையினாலேயே ஆசீர்வதிக்கப்படுகிறோம். நம்முடைய நற்கிரியைகளைவிட கர்த்தருடைய கிருபையே பிரதானம். கர்த்தர் தம்முடைய கிருபையை நமக்கு இலவசமாகக் கொடுக்கிறார். நம்முடைய நம்மால் சுயமுயற்சியினாலோ, நற்கிரியைகளினாலோ தேவகிருபையைச் சம்பாதிக்க முடியாது. கர்த்தருடைய கிருபையைப் பெற்றுக்கொண்ட நாம், நற்கிரியைகளைச் செய்யாமல் சும்மாயிருக்கவும் கூடாது.

பேதுரு தன்னுடைய கைகளினால் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கவில்லை. கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி தன்னோடு வந்திருக்கிற விசுவாசிகளுக்கு கட்டளையிடுகிறான். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களை அனுப்பும்போது, "நீங்கள் புறப்பட்டுப்போய் எல்லா ஜாதிகளையும் சீஷராக்கி அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுங்கள்" என்று கட்டளையிட்டார். அப்போஸ்தலர்களோ ஞானஸ்நானம் கொடுக்கிற ஊழியத்தில் தங்களை அதிகமாய் ஈடுபடுத்திக்கொள்ளாமல், ஜெபத்திலும் சுவிசேஷ வார்த்தையின் ஊழியத்திலும் தங்களைப் பூரணமாய் ஈடுபடுத்திக் கொள்கிறார்கள்.

அப்போஸ்தலரின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து, அவர்களுக்குக் கீழ் ஊழியம் செய்கிற ஊழியக்காரர்கள் விசுவாசிகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறார்கள். ஊழியக்காரர்களும் தங்கள் இஷ்டப்படி, தங்களுக்குப் பிடித்தவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்காமல், அப்போஸ்தலர்கள் யாருக்கு ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்களோ, அவர்களுக்கே ஞானஸ்நானம் கொடுக்கிறார்கள்.

பேதுருவின் ஊழியத்தினால் கொர்நேலியுவும் அவனுடைய வீட்டாரும் மிகுந்த ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்கிறார்கள். பேதுரு தங்களோடு மேலும் சில நாள் தங்கியிருந்து, சுவிசேஷச் செய்தியை உபதேசம்பண்ணினால், தங்களுக்கு மிகுந்த பிரயோஜனமாயிருக்கும் என்று நினைக்கிறார்கள். அதற்காக அவர்கள் பேதுருவிடம் சில நாட்கள் தங்களோடு தங்கும்படி வேண்டிக்கொள்கிறார்கள். பேதுருவைத் தங்களைவிட்டு உடனே அனுப்பிவிட மனதில்லை.

இயேசுகிறிஸ்துவோடு ஐக்கியமாகயிருக்கிறவர்கள் இன்னும் அதிக ஐக்கியமாகயிருக்கவேண்டும் என்று விரும்புவார்கள். கிறிஸ்துவின் வெளிப்பாடுகளைப் பெற்றுக் கொண்டவர்கள் இன்னும் அதிக வெளிப்பாடுகளைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று வாஞ்சிப்பார்கள்.

கொர்நேலியுவும் அவன் வீட்டாரும் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொண்டாலும், இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷ வார்த்தைகள் தங்களுக்கு இன்னும் அதிகமாய்ப் பிரசங்கிக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறார்கள். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் முடிவான இலக்கு அல்ல. இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளை நாம் தொடர்ந்து தியானிக்கவேண்டும்.

11 அதிகாரம்

பேதுரு எருசலேமுக்குத் திரும்பி வந்து கொர்நேலியுவுக்கும், அவனுடைய வீட்டாருக்கும் ஊழியம் செய்த அனுபவத்தை அங்குள்ள அப்போஸ்தலருக்கும் சகோதரருக்கும் விவரித்துக் கூறுகிறான் (அப் 11:1-18). அந்தியோகியாவில் சுவிசேஷ ஊழியம் சிறப்பாக நடைபெறுகிறது (அப் 11:19-21). அந்தியோகியாவில் ஆரம்பிக்கப்பட்ட ஊழியம் தொடர்ந்து நடைபெறுகிறது. அங்குள்ள சீஷர்களுக்கு கிறிஸ்தவர்கள் என்கிற பெயர் வழங்கப்படலாயிற்று (அப் 11:22-26). உலகமெங்கும் கொடிய பஞ்சம் உண்டாகும் என்று அகபு என்பவன் தீர்க்கதரிசனம் கூறுகிறான். யூதேயாவில் குடியிருக்கிற சகோதரருக்கு உதவிப்பணம் சேகரித்து அனுப்புகிறார்கள் (அப் 11:27-30).

புறஜாதியாருக்கு இரட்சிப்பு அப் 11 : 1-18

அப் 11:1. புறஜாதியாரும் தேவவசனத்தை ஏற்றுக் கொண்டார்களென்று யூதேயாவிலிருக்கிற அப்போஸ்தலரும் சகோதரரும் கேள்விப்பட்டார்கள்.

அப் 11:2. பேதுரு எருசலேமுக்குத் திரும்பி வந்தபோது, விருத்தசேதன முள்ளவர்கள் அவனை நோக்கி:

அப் 11:3. விருத்தசேதனமில்லாத மனுஷரிடத்தில் நீர் போய், அவர்களோடே போஜனம்பண்ணினீர் என்று, அவனோடே வாக்குவாதம் பண்ணினார்கள்.

அப் 11:4. அதற்குப் பேதுரு காரியத்தை முதலிலிருந்து வரிசையாய் அவர்களுக்கு விவரிக்கத் தொடங்கி:

அப் 11:5. நான் யோப்பா பட்டணத்தில் ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தபோது ஞானதிருஷ்டியடைந்து, ஒரு தரிசனத்தைக் கண்டேன்; அதென்னவென்றால், நாலுமுனைகளும் கட்டப்பட்ட பெரிய துப்பட்டியைப் போல ஒரு கூடு வானத்திலிருந்து என்னிடத்தில் இறங்கிவந்தது.

அப் 11:6. அதிலே நான் உற்றுப்பார்த்துக் கவனிக்கிறபோது, பூமியிலுள்ள நாலுகால் ஜீவன்களையும், காட்டுமிருகங்களையும், ஊரும் பிராணிகளையும், ஆகாயத்துப் பறவைகளையும் கண்டேன்.

அப் 11:7. அல்லாமலும்: பேதுருவே, எழுந்திரு, அடித்துப் புசி என்று என்னுடனே சொல்லுகிற சத்தத்தையும் கேட்டேன்.

அப் 11:8. அதற்கு நான்: ஆண்டவரே, அப்படியல்ல, தீட்டும் அசுத்தமுமாயிருக்கிற யாதொன்றும் ஒருக்காலும் என் வாய்க்குள்ளே போனதில்லை என்றேன்.

அப் 11:9. இரண்டாந்தரமும் வானத்திலிருந்து சத்தம் உண்டாகி: தேவன் சுத்தமாக்கினவைகளை நீ தீட்டாக எண்ணாதேயென்று மறுமொழி சொல்லிற்று.

அப் 11:10. இப்படி மூன்றுதரம் சம்பவித்தபின்பு, எல்லாம் வானத்திற்குத் திரும்ப எடுத்துக்கொள்ளப்பட்டது.

அப் 11:11. உடனே செசரியாவிலிருந்து என்னிடத்திற்கு அனுப்பப்பட்ட மூன்று மனுஷர் நான் இருந்த வீட்டுக்குமுன்னே வந்து நின்றார்கள்.

அப் 11:12. நான் ஒன்றுக்கும் சந்தேகப்படாமல் அவர்களோடேகூடப் போகும்படி ஆவியானவர் எனக்குக் கட்டளையிட்டார். சகோதரராகிய இந்த ஆறுபேரும் என்னோடேகூட வந்தார்கள்; அந்த மனுஷனுடைய வீட்டுக்குள் பிரவேசித்தோம்.

அப் 11:13. அவனோ தன் வீட்டிலே ஒரு தேவதூதன் நிற்கிறதைக் கண்டதாகவும், யோப்பா பட்டணத்திலிருக்கிற பேதுரு என்று மறுபேர்கொண்ட சீமோனை அழைக்கும்படிக்கு மனுஷரை அவ்விடத்திற்கு அனுப்பு;

அப் 11:14. நீயும் உன் வீட்டாரனைவரும் இரட்சிக்கப்படுவதற் கேதுவான வார்த்தைகளை அவன் உனக்குச் சொல்லுவான் என்று அந்தத் தூதன் தனக்குச் சொன்னதாகவும் எங்களுக்கு அறிவித்தான்.

அப் 11:15. நான் பேசத்தொடங்கினபோது, பரிசுத்த ஆவியானவர் ஆதியிலே நம்மேல் இறங்கினதுபோலவே, அவர்கள்மேலும் இறங்கினார்.

அப் 11:16. யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுத்தான், நீங்களோ பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள் என்று கர்த்தர் சொன்ன வார்த்தையை அப்பொழுது நினைவுகூர்ந்தேன்.

அப் 11:17. ஆதலால் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசித் திருக்கிற நமக்கு தேவன் வரத்தை அநுக்கிரகம்பண்ணினதுபோல அவர்களுக்கும் அந்த வரத்தையே அநுக்கிரகம்பண்ணியிருக்கும் போது தேவனைத் தடுக்கிறதற்கு நான் எம்மாத்திரம் என்றான்.

அப் 11:18. இவைகளை அவர்கள் கேட்டபொழுது அமர்ந்திருந்து: அப்படியானால் ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதலை தேவன் புறஜாதியாருக்கும் அருளிச்செய்தார் என்று சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

கேள்விப்பட்டார்கள்

புறஜாதியாரும் தேவ வசனத்தை ஏற்றுக்கொண்டார்களென்று யூதேயாவிலிருக்கிற அப்போஸ்தலரும் சகோதரரும் கேள்விப்பட்டார்கள் (அப் 11:1).

யூதேயாவில் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிற விசுவாசிகளுக்கும், அவரை விசுவாசிக்காத அவிசுவாசிகளுக்கும், புறஜாதியாரும் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்பட்டிருப்பது மிகுந்த ஆச்சரியமாகயிருக்கிறது. கொர்நேலியுவும் அவனுடைய வீட்டாரும் புறஜாதியார்களாகயிருந்தாலும், தேவவசனத்தை ஏற்றுக்கொண்டார்கள் என்று யூதேயாவிலுள்ள ஜனங்கள் கேள்விப்படுகிறார்கள். புறஜாதியாரின் இரட்சிப்பைப் பற்றிய செய்தி எருசலேமிலுள்ள சபைக்கு வருகிறது. பேதுரு எருசலேமுக்குத் திரும்பி வருவதற்கு முன்பாகவே, எருசலேமிலுள்ள விசுவாசிகள் புறஜாதியார் மத்தியில் நடைபெற்ற ஊழியத்தைப்பற்றிக் கேள்விப்படுகிறார்கள்.

யூதர்கள் பொதுவாக புறஜாதியாரோடு சம்மந்தம் பண்ணுவதில்லை. தேவனுடைய பிரமாணத்தின்படி புறஜாதியாருக்கு வேதவசனத்தைப் போதிப்பது தவறானது என்று இதுவரையிலும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். தேவனுடைய வார்த்தையிலிருந்து யூதர்கள் புறஜாதியாரை ஒதுக்கி வைத்திருக் கிறார்கள். ஆனால் இப்போதோ புறஜாதியாரும் தேவவசனத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

தேவ வசனம் புறஜாதியாருக்கும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. கர்த்தரும் யூதர்கள் எதிர்பார்த்ததைவிட புறஜாதியாரை அதிகமாய் ஆசீர்வதித் திருக்கிறார். அவர்களை அபிஷேகம் பண்ணி, தாம் அவர்களையும் அங்கீகரித்திருப்பதை கர்த்தர் உறுதிபண்ணியிருக்கிறார்.

இதனால் யூதர்களுக்கு மிகுந்த ஆச்சரியமுண்டாயிற்று. யூதர்கள் பொதுவாக தங்களுடைய மார்க்கத்தைக் குறித்துப் பெருமைப்படக்கூடியவர்கள். மற்ற மார்க்கத்தாரை மதிக்கமாட்டார்கள். ஆனால் கர்த்தரோ புறஜாதியாருடைய இருதயத்திலும் கிரியை நடப்பித்து, அவர்களும் தம்முடைய வார்த்தையை ஏற்றுக்கொள்ளுமாறு அனுக்கிரகம்பண்ணியிருக்கிறார்.

தெய்வீக சத்தியத்தை புறஜாதியாரும் ஏற்றுக்கொள்கிறார்கள். யூதர்கள் எதிர்பாராத சம்பவம் கொர்நேலியுவின் வீட்டில் நடைபெற்றிருக்கிறது. இஸ்ரவேலின் காணியாட்சிக்குப் புறம்பான யூதர்கள் மத்தியில் கர்த்தர் அவர் களையும் ஆசீர்வதித்து, தம்முடைய ஆவியினால் அவர்களை அபிஷேகம் பண்ணியிருக்கிறார். அவர்கள் கர்த்தருடைய வார்த்தையை ஏற்றுக் கொண்டு தண்ணீரில் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறார்கள். கர்த்தர் கிரியை செய்யும்போது அதை மனுஷரால் தடைபண்ண முடியாது.

வாக்குவாதம்பண்ணினார்கள்

பேதுரு எருசலேமுக்குத் திரும்பி வந்தபோது, விருத்தசேதன முள்ளவர்கள் அவனை நோக்கி: விருத்தசேதனமில்லாத மனுஷரிடத்தில் நீர் போய், அவர்களோடே போஜனம்பண்ணினீர் என்று, அவனோடே வாக்குவாதம் பண்ணினார்கள் (அப் 11:2,3).

எருசலேமிலுள்ள யூதர்கள் விருத்த சேதனமுள்ளவர்கள். பேதுரு புறஜாதியார் மத்தியில் ஊழியம் செய்ததையும், அவர்களோடு போஜனம்பண்ணியதையும் விருத்தசேதனமுள்ள யூதர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. தங்கள் மனதிலுள்ள வெறுப்பை அவர்கள் பேதுருவிடம் வெளிப்படுத்துகிறார்கள். "விருத்தசேதனமில்லாத மனுஷரிடத்தில் நீர் போய், அவர்களோடே போஜனம் பண்ணினீர்" என்று விருத்தசேதனமுள்ள யூதர்கள் பேதுருவோடு வாக்குவாதம் பண்ணுகிறார்கள்.

பேதுரு தன்னையும் தீட்டுப்படுத்திக்கொண்டான் என்றும், அப்போஸ்தல ஊழியத்தின் மேன்மைக்கு களங்கம் விளைவித்துவிட்டான் என்றும் அவன்மீது குற்றம் சுமத்துகிறார்கள்.

கர்த்தர் தங்களுக்கு மாத்திரம்தான் உரியவரென்று எந்த சபையும் சொந்தம் கொண்டாட முடியாது. இயேசுகிறிஸ்து உலக இரட்சகர். நம்மைப்போலவே பிறரையும் நாம் நேசிக்கவேண்டும். சுயபெருமையோடு இருப்போமென்றால் அது நமக்கு அழிவைத் தேடிவரும். சபையில் சரியான உபதேசம் இல்லையென்றால் அது சபையைத் சீரழித்துவிடும்.

கர்த்தருடைய ஊழியக்காரர்களை மற்றவர்கள் கேள்வி கேட்கும்போது அதிர்ச்சியடையக்கூடாது. தங்களுடைய ஊழியங்களைக்குறித்து விசுவாசிகள் வாக்குவாதம்பண்ணினால் கோபப் படக்கூடாது. சத்துருக்களும், சில சமயங்களில் உடன்ஊழியர்களும், சிநேகிதரும் நம்மைக்குறித்தும், நம்முடைய ஊழியங்களைக்குறித்தும் வாக்கு வாதம்பண்ணுவதற்கு வாய்ப்புள்ளது. நாம் செய்கிற ஊழியத்தில் உண்மையா யிருக்கவேண்டும். மாசில்லாத ஊழியம் செய்யவேண்டும். நம்முடைய ஊழியம் நமக்கு ஆறுதலையும் சந்தோஷத்தையும் தரவேண்டும்.

பேதுருவினிடத்தில் எருசலேமிலுள்ள விசுவாசிகள் வாக்குவாதம் பண்ணுகிறார்கள். ஆனால் பேதுருவோ அவர்களுடைய வார்த்தைகளைப் பொறுமையாகக் கேட்டு, தான் செய்த ஊழியத்தை அவர்களிடத்தில் விவரித்துக் கூறுகிறான். தன்னிடத்தில் எப்படிப்பட்ட கேள்விகளைக் கேட்டாலும் பேதுரு அவர்களுக்கு மறுஉத்தரவு சொல்ல ஆயத்தமாயிருக்கிறான்.

கர்த்தருக்காக ஊக்கமாகவும் வைராக்கியமாகவும் ஊழியம் செய்கிறவர்கள், மற்றவர்களுடைய விமர்சனங்களையும் எதிர்பார்க்கவேண்டும். நம்மை விமர்சிக்கிறவர்கள் ஒருவேளை ஆவியில் அனல் இல்லாதவர்களாக யிருக்கலாம். ஒருவேளை நம்மீது பிரியமுள்ளவர்கள்போல தங்களைக் காண்பித்துக்கொள்ளலாம். கர்த்தருடைய ஊழியத்தில் நம்மைவிட அவர்களுக்குத் தான் அதிக அக்கறையும் ஆர்வமும் உள்ளதுபோல் நம்மோடு பேசலாம். அவர்கள் எப்படிப்பட்டவர்களாக யிருந்தாலும், நம்மிடத்தில் வாக்குவாதம் பண்ணும்போது, நாம் பொறுமையோடு உத்தரவு சொல்லவேண்டும்.

முதலிலிருந்து வரிசையாய்

அதற்குப் பேதுரு காரியத்தை முதலிலிருந்து வரிசையாய் அவர்களுக்கு விவரிக்கத் தொடங்கி: நான் யோப்பா பட்டணத்தில் ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தபோது ஞான திருஷ்டியடைந்து, ஒரு தரிசனத்தைக் கண்டேன்; அதென்னவென்றால், நாலுமுனைகளும் கட்டப்பட்ட பெரிய துப்பட்டியைப்போல ஒரு கூடு வானத்திலிருந்து என்னிடத்தில் இறங்கிவந்தது. அதிலே நான் உற்றுப்பார்த்துக் கவனிக்கிறபோது, பூமியிலுள்ள நாலுகால் ஜீவன்களையும், காட்டுமிருகங்களையும், ஊரும் பிராணிகளையும், ஆகாயத்துப் பறவைகளையும் கண்டேன். அல்லாமலும்: பேதுருவே, எழுந்திரு, அடித்துப் புசி என்று என்னுடனே சொல்லுகிற சத்தத்தையும் கேட்டேன். அதற்கு நான்: ஆண்டவரே, அப்படியல்ல, தீட்டும் அசுத்த முமாயிருக்கிற யாதொன்றும் ஒருக்காலும் என் வாய்க்குள்ளே போனதில்லை என்றேன். இரண்டாந் தரமும் வானத்திலிருந்து சத்தம் உண்டாகி: தேவன் சுத்தமாக்கி னவைகளை நீ தீட்டாக எண்ணாதே யென்று மறுமொழி சொல்லிற்று. இப்படி மூன்றுதரம் சம்பவித்த பின்பு, எல்லாம் வானத்திற்குத் திரும்ப எடுத்துக்கொள்ளப்பட்டது (அப் 11:4-10).

தன்னோடு வாக்குவாதம் பண்ணுகிறவர்களுக்குப் போதுமான செய்திகளை பேதுரு அவர்களுக்கு எடுத்துச்சொல்லுகிறான். பேதுரு செய்தது சரியானதுதான் என்பதை அவர்களுக்கு உணர்த்தும் வகையில் தேவையான செய்திகளைச் சொல்லுகிறான். காரியத்தை முதலிலிருந்து வரிசையாய் அவர்களுக்கு விவரிக்கத் தொடங்குகிறான். ஒவ்வொன் றையும் வரிசையாக விவரித்துச் சொன்னால், தன்னோடு விவாதம் பண்ணுகிறவர்கள், புறஜாதியார் மத்தியில் நடைபெற்ற சம்பவங்களைப் புரிந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறான்.

நாமும் மற்றவர்களிடம் விவாதம் பண்ணும்போது திறந்த மனதோடு பேசவேண்டும். நம்முடைய விவாதத்திற்கு ஏற்ற பதில் கிடைக்கும்போது அதை ஏற்றுக்கொள்ளவேண்டும். விவாதம் பண்ணி ஒருவரைக் கவிழ்த்துப்போட வேண்டும் என்பது நம்முடைய நோக்கமாகயிருக்கக்கூடாது. விவாதத்தின் மூலமாக தெளிவு உண்டாகவேண்டும். இருசாராரும் ஆசீர்வதிக்கப்படவேண்டும்.

பேதுரு அவர்களுடைய விவாதத்தைக் கேட்கும்போதே, அவர்களுடைய வார்த்தைக்கு மதிப்பு கொடுக்கிறான். அவர்கள் தன்னிடத்தில் இந்தச் சம்பவத்தைப்பற்றி விவாதிப்பது சரியானதுதான் என்று அங்கீகரிக்கிறான். புறஜாதியாரைக்குறித்து தன்னுடைய உள்ளத்தில் ஏற்பட்ட மாற்றத்தை அவர்களுக்குப் பக்குவமாக எடுத்துச்சொல்ல ஆயத்தமாகயிருக்கிறான். பேதுருவும் அவர்களைப்போலவே விருத்த சேதனமுள்ளவன். யூதமார்க்கத்துப் பாரம்பரிய பழக்க வழக்கங்கள் அவனிடத்திலும் உண்டு. ஆனால் கர்த்தர் அவனுடைய சுபாவத்தை மாற்றி யிருக்கிறார். பேதுருவோடு விவாதம் பண்ணுகிற, விருத்தசேதன முள்ளவர்களோடு, கர்த்தர் பேசினால், அவர்களுடைய உள்ளத்திலும் மாற்றம் உண்டாகும். அவர்களுக்குள் அப்படிப்பட்ட மாற்றத்தை பேதுரு எதிர்பார்க்கிறான். அது அவர்களுக்குள் உண்டாக வேண்டுமென்று விரும்புகிறான்.

யூதருடைய பிரமாணத்தில் சில பிராணிகள் அசுத்தமானது என்றும் தீட்டானது என்றும் புசிப்பதற்கு விலக்கப்பட்டிருக்கிறது. யூதமார்க்கத்தின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட மிருகங்களை மாத்திரமே யூதர்கள் புசிக்கலாம். இது யூதருடைய சடங்காச்சார பிரமாணம். கர்த்தர் இந்தப் பிரிவினையை அகற்றிப்போட சித்தமுள்ளவராகயிருக்கிறார். பேதுருவுக்கு ஒரு தரிசனத்தைக் காண்பித்து, கர்த்தர் சுத்தமாக்கினவைகளை, அவன் தீட்டாக எண்ணக்கூடாது, என்று அவனுடைய உள்ளத்தில் உணர்த்துகிறார். பேதுரு தான் கண்ட தரிசனத்தை அப் 11:5,6 ஆகிய வசனங்களில் விவரித்துக் கூறுகிறான். இந்தத் தரிசனம் ஏற்கெனவே அப் 10:9 ஆவது வசனம் முதல் ஏற்கெனவே விவரிக்கப்பட்டிருக்கிறது.

அப் 10,11 ஆவது வசனத்தில் இந்தத் தரிசனத்தைப்பற்றிச் சொல்லப்படும்போது "ஒருவிதமான கூடு தன்னிடத்தில் இறங்கி தரையில் விடப்பட்டிருக்கிறது" என்று எழுதப்பட்டிருக்கிறது. பேதுரு இந்தத் தரிசனத்தைப்பற்றிச் சொல்லும்போது அப் 11:5 ஆவது வசனத்தில் "ஒரு கூடு வானத்திலிருந்து என்னிடத்தில் இறங்கி வந்தது" என்று கூறுகிறான். தரையில் விடப்பட்டிருக்கிற கூடு இப்போது தன்னிடத்தில் இறங்கி வந்ததாக கூறுகிறான். பொதுவாக தரைக்கு வந்தது, தனக்காகவே வந்ததாக பேதுரு விவரிக்கிறான். கர்த்தர் நமக்கு பொதுவாகக் காண்பிக்கும் தரிசனங்களை, நமக்கென்று விசுவாசத்தினால் சொந்தமாக்கிக்கொள்ளவேண்டும்.

வானத்திலிருந்து தன்னிடத்தில் இறங்கி வந்த கூட்டை பேதுரு உற்றுப் பார்த்து கவனிக்கிறான். தேவன் நமக்குத் தெய்வீக சத்தியங்களை வெளிப் படுத்தும்போது நம்முடைய கவனத்தை அதன்மீது ஒரு நிலைப்படுத்தவேண்டும். அதை உற்றுப் பார்த்து கவனிக்கவேண்டும். அந்தக் கூட்டில் பலவிதமான மிருகங்களும், ஊரும் பிராணிகளும், ஆகாயத்துப் பறவைகளும் இருந்தது.

யூதருடைய பிரமாணத்தின்படி இவையெல்லாம் தீட்டும் அசுத்தமுமானவை. ஆனால் கர்த்தரோ அவற்றை அடித்துப் புசிக்குமாறு கூறுகிறார். பேதுரு இதுவரையிலும் இவற்றை தீட்டானது என்றும், அசுத்தமானது என்றும் நினைத்து, இவற்றில் ஒன்றையும் ஒருக்காலும் புசித்ததில்லை. ஆனால் கர்த்தரோ இவற்றை அடித்துப் புசிக்குமாறு அவனிடத்தில் கூறுகிறார்.

பேதுருவின் உள்ளத்தில் அந்த மிருகங்களையும், ஊரும் பிராணிகளையும், பறவைகளையும் குறித்து ஏற்கெனவே சில பிரமாணங்கள் இருக்கிறது. இது யூதருடைய பாரம்பரியத்தின் பிரகாரமாக உண்டான பிரமாணம். தன்னுடைய உள்ளத்தில் உள்ளதை பேதுரு தேவனிடம் மறைக்காமல் சொல்லுகிறான். "ஆண்டவரே அப்படியல்ல" என்று கர்த்தர் சொன்ன வார்த்தைக்கு மறுப்பு சொல்லிவிடுகிறான். தான் மறுப்பதற்கான காரணத்தையும் "தீட்டும் அசுத்த முமாயிருக்கிறயாதொன்றும் ஒருக்காலும் என் வாய்க்குள்ளே போனதில்லை" என்று சொல்லுகிறான். பேதுரு சொல்லுவது கர்த்தருக்குத் தெரியும். ஆனாலும் கர்த்தர் அவனுடைய உள்ளத்தில் ஒரு மாற்றத்தை உண்டாக்க விரும்புகிறார். அவனிடத்தில் "தேவன் சுத்தமாக்கினவைகளை நீ தீட்டாக எண்ணாதே" என்று சொல்லிவிடுகிறார்.

கூட்டிலுள்ள மிருகங்கள், ஊரும் பிராணிகள், பறவைகள் எல்லாம் பேதுருவுக்கு இதுவரையிலும் தீட்டும் அசுத்தமுமானவை. இந்த மிருகங்களைப்போலவே புறஜாதியாரும் பேதுருவுக்குத் தீட்டும் அசுத்த முமானவர்கள். இதுவரையிலும் பேதுரு அவர்களோடு புசித்ததில்லை. அவர்கள் தீட்டானவர்கள் என்று நினைத்து அவர்கள் மத்தியில் பேதுரு ஊழியமும் செய்யவில்லை. ஆனால் கர்த்தரோ பேதுருவினிடத்தில் ஒரு சத்தியத்தைச் சொல்லுகிறார்.

பேதுரு தீட்டாக எண்ணியதை கர்த்தர் சுத்தமாக்கி யிருக்கிறார். கர்த்தர் சுத்தமாக்கின வைகளை பேதுரு இனிமேல் தீட்டாக எண்ணக்கூடாது.

பேதுரு இதுவரையிலும் புறஜாதியாரைத் தீட்டானவர்களாக எண்ணினான். பேதுரு தீட்டாக எண்ணினவர்களை கர்த்தர் இப்போது சுத்தமாக்கியிருக்கிறார். கர்த்தர் சுத்தமாக்கினவர்களை பேதுரு இனிமேல் தீட்டாக எண்ணக்கூடாது. கர்த்தர் பேதுருவின் உள்ளத்தில் மாற்றத்தை உண்டுபண்ணுகிறார். பேதுரு அந்த மாற்றத்திற்கு அதற்குமேல் எதிர்த்து நிற்கவில்லை. தன்னுடைய உள்ளத்தில் ஏற்பட்ட மாற்றத்திற்காக, விருத்தசேதனமுள்ள யூதர்கள் தன்னைக் குற்றப்படுத்தக்கூடாது என்று பேதுரு அவர்களுக்கு எடுத்துச் சொல்லுகிறான். கர்த்தர் ஒரு மாற்றத்தை உண்டுபண்ணும்போது, நாம் அந்த மாற்றத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

தன்னுடைய சுயயோசனையினால் இந்த மாற்றம் உண்டாகவில்லை என்பதை பேதுரு உறுதிபண்ணுகிறான். தான் அசந்திருக்கும்போது இப்படிப்பட்ட தரிசனம் உண்டாகி, தான் வஞ்சிக்கப்பட்டு விட்டதாக யாரும் நினைத்துவிடக்கூடாது என்பதிலும் பேதுரு உறுதியாகயிருக்கிறான். இந்தத் தரிசனம் மூன்றுதரம் சம்பவித்தது. அதன்பின்பு எல்லாம் வானத்திற்குத் திரும்ப எடுத்துக்கொள்ளப்பட்டது.

தேவன் சுத்தமாக்கினவைகளை மனுஷன் தீட்டாக எண்ணக்கூடாது என்னும் சத்தியம் மிகவும் முக்கியமானது. ஆகையினால் கர்த்தர் இந்தத் தரிசனத்தை அவனுக்கு மூன்று முறை திரும்பத் திரும்பக் கொடுக்கிறார். ஒரே காரியத்தை மூன்று முறை சொல்லி உறுதிபண்ணுகிறார். பேதுரு காண்பது தேவனுடைய தரிசனம் என்பதை கர்த்தர் உறுதிபண்ணுகிறார்.

பேதுரு கண்ட தரிசனம் காற்றில் மறைந்துபோகவில்லை. அவன் கண்டது எல்லாம் வானத்திற்குத் திரும்ப எடுத்துக் கொள்ளப்படுகிறது. வானத்திலிருந்து இறங்கி வந்த கூடு, திரும்பவும் வானத்திற்கே எடுத்துக்கொள்ளப்படுகிறது.

ஆவியானவர் கட்டளையிட்டார்

உடனே செசரியாவிலிருந்து என்னிடத்திற்கு அனுப்பப்பட்ட மூன்று மனுஷர் நான் இருந்த வீட்டுக்குமுன்னே வந்து நின்றார்கள். நான் ஒன்றுக்கும் சந்தேகப்படாமல் அவர்களோடேகூடப் போகும்படி ஆவியானவர் எனக்குக் கட்டளையிட்டார். சகோதரராகிய இந்த ஆறுபேரும் என்னோடேகூட வந்தார்கள்; அந்த மனுஷனுடைய வீட்டுக்குள் பிரவேசித்தோம் (அப் 11:11,12).

கொர்நேலியு மூன்று மனிதரை பேதுருவிடம் அனுப்பினான். ஒன்றுக்கும் சந்தேகப்படாமல் அவர்களோடே கூடப்போகும்படி பரிசுத்த ஆவியானவர் பேதுருவுக்குக் கட்டளைக்கொடுக்கிறார். பேதுரு தன் சுயவிருப்பத்தினாலோ, சுயசித்தத்தினாலோ கொர்நேலியுவின் வீட்டிற்குப்போகவில்லை. பரிசுத்த ஆவியானவரே அங்குபோகுமாறு அவனை வழிநடத்துகிறார். செசரியாவிலிருந்து வந்த மூன்று மனுஷர் தன்னிடத்தில் வந்த வேளையையும் பேதுரு குறிப்பிடுகிறான். தரிசனம் கண்டு முடித்தவுடனேயே அவர்கள் பேதுருவிடத்தில் வருகிறார்கள். அவர்கள் வந்தது ஏற்ற சமயமாக யிருந்தாலும், பேதுரு சந்தேகப்படாமல் அவர்களோடு போகவேண்டும் என்பதை பரிசுத்த ஆவியானவரும் அவனுக்குச் சொல்லி கட்டளையிடுகிறார். எந்தவித தயக்கமும் காண்பிக்காமல், புறஜாதியாரை அருவருக்காமல், மறுப்பு எதுவும் சொல்லாமல் பேதுரு அவர்களோடு போகவேண்டும்.

பேதுரு அவர்களோடு போகும்போது தன்னோடு ஆறு விசுவாசிகளைக் கூட்டிக்கொண்டு போகிறான். அவர்கள் ஆறுபேரும் விருத்தசேதனமுள்ளவர்கள். பரிசுத்த ஆவியானவரின் கட்டளையின் பிரகாரமாகவே செசரியா பட்டணத்திற்கு போகிறோம் என்பதை அந்த ஆறு பேரும் அங்கீகரிக்கிறார்கள். பேதுரு தனியாக முடிவு பண்ணிவிடவில்லை. அவசரப்பட்டு எந்தக் காரியத்தையும் செய்யவில்லை. பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்து தலைப் பெற்றுக்கொள்கிறான். சகவிசுவாசிகளின் ஆதரவையும் பெற்றுக் கொள்கிறான். பேதுரு ஒரு புதிய ஊழியத்திற்கு புறப்பட்டுப் போகிறான்.

எங்களுக்கு அறிவித்தான்

அவனோ தன் வீட்டிலே ஒரு தேவதூதன் நிற்கிறதைக் கண்டதாகவும், யோப்பா பட்டணத்திலிருக்கிற பேதுரு என்று மறுபேர்கொண்ட சீமோனை அழைக்கும்படிக்கு மனுஷரை அவ்விடத்திற்கு அனுப்பு; நீயும் உன் வீட்டாரனைவரும் இரட்சிக்கப்படு வதற்கேதுவான வார்த்தைகளை அவன் உனக்குச் சொல்லுவான் என்று அந்தத் தூதன் தனக்குச் சொன்னதாகவும் எங்களுக்கு அறிவித்தான் (அப் 11:13,14).

கொர்நேலியுவும் ஒரு தரிசனம் கண்டிருக்கிறான். தன் வீட்டில் ஒரு தேவதூதன் நிற்கிறதைக் கண்டதாகவும், பேதுருவை அழைக்கும்படிக்கு மனுஷரை அவ்விடத்திற்கு அனுப்பவேண்டுமென்றும் கொர்நேலியு தரிசனம் கண்டிருக்கிறான். கொர்நேலியுவின் தரிசனத்தால் பேதுருவின் தரிசனம் உறுதிபண்ணப்படுகிறது. அதுபோலவே பேதுருவின் தரிசனத்தினால் கொர்நேலியுவின் தரிசனம் உறுதிபண்ணப்படுகிறது.

கொர்நேலியு தான் கண்ட தரிசனத்தைப்பற்றி முன்பு சொன்னபோது "இப்பொழுது நீ யோப்பா பட்டணத்துக்கு மனுஷரை அனுப்பி, பேதுரு என்று மறுபேர்கொண்ட சீமோனை அழைப்பி. அவன் தோல் பதனிடுகிறவனாகிய சீமோன் என்னும் ஒருவனிடத்திலே தங்கியிருக்கிறான்; அவனுடைய வீடு கடலோரத்திலிருக்கிறது. நீ செய்ய வேண்டியதை அவன் உனக்குச் சொல்லுவான் என்றான்" (அப் 10:5,6). "யோப்பா பட்டணத்துக்கு ஆள் அனுப்பி, பேதுரு என்று மறுபேர் கொண்ட சீமோனை வரவழைப்பாயாக, அவன் கடலோரத்திலே தோல்பதனிடுகிறவனாகிய சீமோனுடைய வீட்டிலே தங்கியிருக்கிறான்; அவன் வந்து உன்னிடத்தில் பேசுவான் என்றார்" (அப் 10:32).

கொர்நேலியு அந்தத் தரிசனத்தைப் பற்றி இப்போது சொல்லும்போது "நீயும் உன் வீட்டாரனைவரும் இரட்சிக்கப் படுவதற்கேதுவான வார்த்தைகளை அவன் உனக்குச் சொல்லுவான் என்று அந்தத் தூதன் தனக்குச் சொன்னதாகவும் எங்களுக்கு அறிவித்தான்" என்று சேர்த்து சொல்லுகிறான்.

சுவிசேஷ வார்த்தைகள் நம்முடைய ஆத்துமா இரட்சிக்கப்படுவதற்கு ஏதுவான வார்த்தைகள். சுவிசேஷ வார்த்தைகளை நம்முடைய காதுகளால் கேட்டால் மாத்திரம் போதாது. அதை விசுவாசித்து அதற்குக் கீழ்ப்படியவேண்டும். சுவிசேஷ வார்த்தைகள் நமக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கும். இரட்சிப்பின் பாதையை நமக்குத் திறந்து கொடுக்கும். இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை நாம் ஏற்றுக்கொள்ளும்போது, நாமும் நம்முடைய வீட்டாரும் இரட்சிக்கப்படுவதற்கு வாய்ப்புண்டாகும். தானும் தன் வீட்டார் அனைவரும் இரட்சிக்கப்படுவதற்கு ஏதுவான வார்த்தைகள் என்று கொர்நேலியு சுவிசேஷ வார்த்தைகளைத் தன் இருதயத்தில் விசுவாசிக்கிறான். புறஜாதியாருக்கும் இப்போது சுவிசேஷம் அறிவிக்கப்படுகிறது.

ஆவியானவர் அவர்கள்மேலும் இறங்கினார்

நான் பேசத்தொடங்கினபோது, பரிசுத்த ஆவியானவர் ஆதியிலே நம்மேல் இறங்கினதுபோலவே, அவர்கள்மேலும் இறங்கினார். யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுத்தான், நீங்களோ பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள் என்று கர்த்தர் சொன்ன வார்த்தையை அப்பொழுது நினைவு கூர்ந்தேன். ஆதலால் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசித்திருக்கிற நமக்கு தேவன் வரத்தை அநுக்கிரகம் பண்ணினதுபோல அவர்களுக்கும் அந்த வரத்தையே அநுக்கிரகம் பண்ணியிருக்கும் போது தேவனைத் தடுக்கிறதற்கு நான் எம்மாத்திரம் என்றான் (அப் 11:15-17).

தான் புறஜாதியார் மத்தியில் செய்த ஊழியத்தை நியாயப்படுத்துவதற்கு தேவையான காரியங்களையும், இதைப்பற்றி அவர்கள் விவாதம் பண்ணாமல் திருப்தியடைவதற்குத் தேவையான காரியங்களையும் பேதுரு அவர்களிடத்தில் விரிவாகப் பேசுகிறான். அவர்கள் நடைபெற்ற சம்பவங்களை சரியாகப் புரிந்துகொள்ளும்போது, அவர்கள் தன்னோடு வாக்குவாதம் பண்ணமாட்டார்கள் என்று எதிர்பார்க்கிறான்.

நாம் பிறரோடு வாக்குவாதம் பண்ணக்கூடாது. சில சமயங்களில் நாம் வாக்குவாதம்பண்ணினாலும், உண்மையை அறிந்துகொள்ள நாம் திறந்த மனதோடு இருக்கவேண்டும். பரிசுத்த ஆவியானவர் புறஜாதியார் மீது வந்திறங்கிய சம்பவத்தை அவர்களிடத்தில் சொன்னால், அவர்கள் வாக்குவாதம்பண்ணுவதை நிறுத்திக் கொள்வார்கள் என்று பேதுரு எதிர்பார்க்கிறான்.

பரிசுத்த ஆவியானவர் புறஜாதியார்மீது வந்திறங்கியது மிகவும் பிரத்தியட்சமாக இருக்கிறது. அதை மறுக்க முடியாது. "நான் பேசத்தொடங்கினபோது, பரிசுத்த ஆவியானவர் ஆதியிலே நம்மேல் இறங்கினதுபோலவே, அவர்கள் மேலும் இறங்கினார்" என்று பேதுரு நடந்த சம்பவத்தை அவர்களுக்குச் சாட்சியாக அறிவிக்கிறான்.

தேவன் புறஜாதியாரை அங்கீகரித்திருக்கிறார். அவர்கள் மத்தியில் ஊழியம் செய்வதை அனுமதித்திருக்கிறார். பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை அவர்களுக்கும் கொடுத்து அவர்களையும் தம்முடைய பிள்ளைகளாக ஏற்றுக்கொள்கிறார். பேதுரு இந்தச் சம்பவத்தை எடுத்துச்சொல்லும்போது, யோவான்ஸ்நானன் ஜலத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்ததையும் நினைவு கூர்ந்து பேசுகிறான். "யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்தான். நீங்களோ பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள்" என்று கர்த்தர் சொல்லி யிருக்கிறார். புறஜாதியார்மீது பரிசுத்த ஆவியானவர் இறங்கினபோது, பேதுரு கர்த்தர் சொன்ன இந்த வார்த்தையை நினைவுகூருகிறான்.

இயேசுகிறிஸ்து தம்மை விசுவாசிக்கிற பிள்ளைகளுக்கு பரிசுத்த ஆவியானவரை வரமாகக் கொடுக்கிறார். அவர் பரமேறிப்போனபோது இந்த வாக்குத்தத்தத்தை அவர்களுக்குக் கொடுத்து, பெந்தெகொஸ்தே நாளில் தம்முடைய வாக்குத்தத்தத்தை நிறை வேற்றினார். பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் இயேசுகிறிஸ்துவிடமிருந்து வரமாக வந்திருக்கிறது என்பதில் சந்தேகம் எதுவுமில்லை. இயேசுகிறிஸ்து தம்முடைய வாயினால் இந்த வாக்குத்தத்தத்தைக் கூறினார். இப்போது தம்முடைய கையினால் இதை நிறைவேற்றுகிறார்.

பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் ஒரு ஞானஸ்நானத்தைப் போன்றது. யோவான் கொடுத்தது தண்ணீர் ஞானஸ்நானம். இயேசுகிறிஸ்து கொடுப்பது பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம்.

பேதுரு இயேசுகிறிஸ்துவின் வாக்குத்தத்தத்தை, புறஜாதியார் மத்தியில் நடைபெற்ற சம்பவத்தோடு ஒப்பிட்டுக் கூறுகிறான். புறஜாதியார் மத்தியில் நடைபெறுகிற ஊழியத்தைப்பற்றி வாக்குவாதம்பண்ண வேண்டிய தில்லை. இயேசுகிறிஸ்து தாமே இந்த ஊழியத்தை நியமித்திருக்கிறார், அங்கீகரித்திருக்கிறார், நடத்துகிறார்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசித்திருக்கிற விருத்தசேதனமுள்ள விசுவாசிகளுக்கு தேவன் பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறும் வரத்தை அநுக்கிரகம்பண்ணியிருக்கிறார். அதுபோலவே இந்த வரத்தை புறஜாதி யாருக்கும் அநுக்கிரகம் பண்ணி யிருக்கிறார். கர்த்தர் அநுக்கிரகம் பண்ணியிருக்கும்போது அவரைத் தடுப்பதற்கு தான் எம்மாத்திரம் என்று பேதுரு விருத்தசேதனமுள்ள விசுவாசி களிடத்தில் கூறுகிறான்.

தேவன் புறஜாதியாரை பரிசுத்த ஆவியினாலே அபிஷேகம்பண்ணும்போது, தான் அவர்களைத் தண்ணீரில் ஞானஸ்நானம் பண்ணுவதற்கு எவ்வாறு மறுக்க முடியும் என்று பேதுரு அவர்களிடத்தில் விவாதம்பண்ணுகிறான். புறஜாதியாரை தேவன் தம்மோடு சேர்த்துக்கொள்ளும்போது, நாம் அவர்களை நம்முடைய ஐக்கியத்திலிருந்து விலக்கி வைக்கக்கூடாது என்று பேதுரு அவர்களிடத்தில் தெளிவாகப் பேசுகிறான். தேவன் சுத்தமாக்கினவர்களை யாரும் தீட்டாக எண்ணக்கூடாது. தேவன் புறஜாதியாரை ஏற்றுக்கொள்ளும்போது நாம அவர்களை விலக்கி வைக்கக்கூடாது.

தேவனை மகிமைப் படுத்தினார்கள்

இவைகளை அவர்கள் கேட்டபொழுது அமர்ந்திருந்து: அப்படியானால் ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதலை தேவன் புறஜாதியாருக்கும் அருளிச்செய்தார் என்று சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினார்கள் (அப் 11:18).

புறஜாதியார் மத்தியில் தேவன் ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதலை அருளிச்செய்தார் என்று பேதுரு விருத்தசேதனமுள்ள விசுவாசிகளுக்கு விவரமாகக் கூறுகிறான். பேதுரு சொன்ன செய்தி அவர்களுக்குத் திருப்தியாக இருக்கிறது. ஆரம்பத்தில் பேதுருவோடு வாக்குவாதம்பண்ணியவர்கள் இப்போது அமைதியாக அமர்ந்திருக்கிறார்கள். சில சமயங்களில் வாக்குவாதம் பண்ணுகிறவர்கள் தங்கள் கருத்தில் பிடிவாதமாகயிருப்பார்கள். அவர்களுக்கு உண்மையை விவரமாக எடுத்துச் சொன்னால் புரிந்துகொள்வார்கள். தங்களுடைய வாக்குவாதத்திற்கு அடிப்படை ஆதாரம் எதுவுமில்லை என்பதையும், தாங்கள் தேவையில்லாமல் வாக்குவாதம்பண்ணுவதையும் புரிந்து கொள்வார்கள். ஒரு சிலரோ எவ்வளவுதான் எடுத்துச்சொன்னாலும், தங்களுடைய வாக்குவாதத்தை விட்டுக் கொடுக்கமாட்டார்கள்.

பேதுருவோடு வாக்குவாதம் பண்ணுகிறவர்கள் உலகப்பிரகாரமாகப் பேசவில்லை. ஆவிக்குரிய ரீதியாக தங்களுடைய மனதில் தோன்றியதை பேதுருவோடு விவாதம்பண்ணுகிறார்கள். பேதுரு அவர்களுக்கு நடந்த சம்பவத்தை வரிசையாக விவரித்துச் சொல்லும்போது, பரிசுத்த ஆவியானவரும் அவர்களுடைய உள்ளத்தில் பேசுகிறார். தாங்கள் வாக்குவாதம்பண்ணுவதை நிறுத்தி விடுகிறார்கள். அதற்கு மேல் பேதுரு புறஜாதியார் மத்தியில் செய்த ஊழியத்திற்கு விரோதமாக அவர்கள் ஒன்றுமே பேசவில்லை. அவர்கள் அமைதியாக அமர்ந்திருப்பதோடு, தங்கள் வாய்களைத் திறந்து தேவனை மகிமைப்படுத்துகிறார்கள்.

விருத்தசேதனமுள்ள விசுவாசிகள் விருத்தசேதனமில்லாத புறஜாதியாருக்கு ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதலைக் குறித்துப் பிரசங்கம்பண்ணவேண்டும். அவர்களுக்குச் சுவிசேஷத்தின் நற்செய்தியை அறிவிக்கவேண்டும்.

கர்த்தர் தமது கிருபையினால் ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதலை விருத்தசேதனமுள்ளவர்களுக்கு அருளிச்செய்ததுபோல, புறஜாதியாருக்கும் அருளிச்செய்திருக்கிறார். இதற்காக எருசலேமிலுள்ள விசுவாசிகள் தேவனை மகிமைப்படுத்துகிறார்கள்.

கர்த்தர் புறஜாதியாருக்கு இரட்சிப்பின் கிருபையை அருளிச் செய்திருக்கிறார். அவர்கள்மீது பரிசுத்த ஆவியானவரின் அருள்மாரியை ஊற்றியிருக்கிறார். அவர்களுடைய பாவத்தைக் குறித்து அவர்களுக்கு உணர்த்தியிருக்கிறார். அதே சமயத்தில் இயேசுகிறிஸ்துவை அவர்களுக்கு வெளிப்படுத்தி, கிறிஸ்துவில் அவர்களுக்குச் சந்தோஷத்தையும் காண்பித்திருக்கிறார்.

மனந்திரும்புதல் மெய்யான மனந்திரும்புதலாகயிருக்கும்போது அது ஜீவனுக்கேதுவான மனந்திரும்பு தலாகயிருக்கும். இதுவரையிலும் மரணத்திற்கேதுவாக பாவம் செய்தவர்கள், இப்போது ஜீவனுக்கேதுவாக மனந்திரும்பியிருக்கிறார்கள். பாவத்தில் மரித்துப்போனவர்கள் இப்போது தேவனுக்குள் ஜீவிக்கிறார்கள். நாம் தேவனுடைய ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதலைப் பெற்றுக் கொள்ளும்போது, நம்முடைய ஜீவன் நித்திய ஜீவனாகயிருக்கும்.

மனந்திரும்புதல் தேவனுடைய ஈவு. தேவன் தம்முடைய கிருபையினால் நம்முடைய பாவங்களை மன்னித்து, நம்மை இரட்சித்து, நம்மை ஏற்றுக்கொள்கிறார். தேவனுடைய வல்லமையுள்ள கிருபை நமக்குள் கிரியை செய்கிறது. நமக்குள் மனந்திரும்புதலை உண்டாக்குகிறது. தேவன் எங்கெல்லாம் தம்முடைய ஜீவனைக்கொடுக்க திட்டமிடுகிறாரோ, அங்கெல்லாம் அவர் மனந்திரும்புதலைக் கொடுக்கிறார்.

இஸ்ரவேலுக்கு மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் அருளுகிறதற்காக, அவரை அதிபதியாகவும் இரட்சகராகவும் தமது வலதுகரத்தினாலே உயர்த்தினார் (அப் 5:31). இஸ்ரவேலுக்கு மாத்திரமல்ல புறஜாதியாருக்கும் இதை அருளுகிறதற்காக தேவன் அவரை உயர்த்தியிருக்கிறார்.

அந்தியோகியாவிலே ஊழியம்
அப் 11 : 19-26

அப் 11:19. ஸ்தேவான் நிமித்தமாய் எழும்பின உபத்திரவத்தினாலே சிதறப் பட்டவர்கள் சுவிசேஷ வசனத்தை யூதர்களுக்கேயன்றி மற்ற ஒருவருக்கும் அறிவியாமல், பெனிக்கேநாடு, சீப்புருதீவு, அந்தியோகியா பட்டணம் வரைக்கும் சுற்றித்திரிந்தார்கள்.

அப் 11:20. அவர்களில் சீப்புருதீவாரும் சிரேனே பட்டணத்தாருமாகிய சிலர் அந்தியோகியா பட்டணத்துக்கு வந்து, கிரேக்கருடனே பேசிக் கர்த்தராகிய இயேசுவைக்குறித்துப் பிரசங்கித்தார்கள்.

அப் 11:21. கர்த்தருடைய கரம் அவர்களோடே இருந்தது; அநேக ஜனங்கள் விசுவாசிகளாகி, கர்த்தரிடத்தில் திரும்பினார்கள்.

அப் 11:22. எருசலேமிலுள்ள சபையார் இந்தக் காரியங்களைக்குறித்துக் கேள்விப்பட்டபோது, அந்தியோகியாவரைக்கும் போகும்படிக்குப் பர்னபாவை அனுப்பினார்கள்.

அப் 11:23. அவன் போய்ச் சேர்ந்து, தேவனுடைய கிருபையைக் கண்டபோது, சந்தோஷப்பட்டு, கர்த்தரிடத்தில் மனநிர்ணயமாய் நிலைத்திருக்கும்படி எல்லாருக்கும் புத்திசொன்னான்.

அப் 11:24. அவன் நல்லவனும், பரிசுத்தஆவியினாலும் விசுவாசத் தினாலும் நிறைந்தவனுமாயிருந்தான்; அநேக ஜனங்கள் கர்த்தரிடமாய்ச் சேர்க்கப்பட்டார்கள்.

அப் 11:25. பின்பு பர்னபா சவுலைத் தேடும்படி, தர்சுவுக்குப் புறப்பட்டுப்போய், அவனைக் கண்டு, அந்தியோகியாவுக்கு அழைத்துக் கொண்டுவந்தான்.

அப் 11:26. அவர்கள் ஒரு வருஷகாலமாய்ச் சபையோடே கூடியிருந்து, அநேக ஜனங்களுக்கு உபதேசம்பண்ணினார்கள். முதல் முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று.

சிதறப்பட்டவர்கள்

ஸ்தேவான் நிமித்தமாய் எழும்பின உபத்திரவத்தினாலே சிதறப் பட்டவர்கள் சுவிசேஷ வசனத்தை யூதர்களுக்கேயன்றி மற்ற ஒருவருக்கும் அறிவியாமல், பெனிக்கேநாடு, சீப்புருதீவு, அந்தியோகியா பட்டணம் வரைக்கும் சுற்றித்திரிந்தார்கள் (அப் 11:19).

சீரியா தேசத்தில் அந்தியோகியா பட்டணம் சிறந்த பட்டணமாக விளங்கிற்று. சீரியப் பேரரசில் இந்தப் பட்டணம் மூன்றாவது பெரிய பட்டணமாகும். லூக்கா, தீயோப்பிலு ஆகியோர் அந்தியோகியா பட்டணத்தைச் சேர்ந்தவர்கள். அப்போஸ்தலர் நடபடிகள் புஸ்தகத்தின் நூலாசிரியர் லூக்கா. இவர் தியோப்பிலுவுக்கு இந்த நூலை எழுதுகிறார். இவர்களுடைய சொந்த ஊர் அந்தியோகியா. ஆகையினால் அந்தியோகியாவில் நடைபெற்ற சுவிசேஷ ஊழியத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து, லூக்கா இந்தச் சம்பவத்தை விவரமாக எழுதியிருக்கலாம்.

எருசலேமில் சீஷர்களுக்கு உபத்திரவம் உண்டாயிற்று. அவர்கள் பல தேசங்களுக்கும் சிதறடிக்கப்பட்டார்கள். பல தேசங்களில் சிதறடிக்கப்பட்ட சீஷர்களே, தாங்கள் சென்ற தேசங்களில் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள். ஸ்தேவான் இரத்தச் சாட்சியாக மரித்தான்.

அவன் நிமித்தமாய் யூததேசத்தில் கிறிஸ்துவின் சீஷர்களுக்கு உபத்திரவம் உண்டாயிற்று. சீஷர்கள் பல தேசங்களுக்கும் சிதறடிக்கப்பட்டார்கள். அவர்கள் பெனிக்கே நாடு வரையிலும் சிதறிச் சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள்.

கிறிஸ்துவின் சீஷர்களே உபத்திரவப்படுத்தினால், அவர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதை நிறுத்தி விடலாமென்று யூதர்கள் நினைத்தார்கள். சபையைத் துன்பப்படுத்தினால் விசுவாசிகள் சோர்ந்துபோய், அவர்கள் சுவிசேஷ ஊழியத்தை செய்ய மாட்டார்களென்றும், சபை அழிந்துபோகு மென்றும் யூதர்கள் நினைத்தார்கள். இதற்காக அவர்கள் சபையைத் துன்பப்படுத்தினார்கள்.

ஆனால் கர்த்தரோ யூதர்கள் செய்த தீமையை, சபைக்கு நன்மைக் கேதுவாக மாற்றிவிடுகிறார். உபத்திரவம் சபையின் வளர்ச்சியை அதிகரிக்கச் செய்கிறது. விசுவாசிகளைச் சிதறடிக்கச் செய்து அவர்களை அழித்துப்போட வேண்டுமென்று யூதமார்க்கத்தார் நினைத்தார்கள். ஆனால் கர்த்தரோ சிதறடிக்கப்பட்ட விசுவாசிகளை, எல்லா தேசங்களிலும் பயன்படுத்துகிறார்.

ஸ்தேவான் நிமித்தமாய் எழும்பின உபத்திரவத்தினால் சீஷர்கள் சிதறடிக்கப் பட்டார்கள். யூததேசத்திலிருந்து அவர்கள் சிதறிப்போனார்கள். ஆனால் அவர்கள் சுவிசேஷ ஊழியத்திலிருந்து சிதறிப்போய் விடவில்லை. சுவிசேஷத்தைப் பிரசங்கிப்ப வர்களைத் துன்பப்படுத்தினால், அவர்கள் புறஜாதியார் மத்தியில் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கமாட்டார்களென்று யூதர்கள் நினைத்தார்கள். ஆனால் சிதறிப்போன யூதர்கள் புறஜாதியார் மத்தியில் விரைந்து சென்று, சுவிசேஷத்தைப் பிரசங்கம் செய்கிறார்கள். ஒரு பட்டணத்தில் சீஷர்களைத் துன்பப்படுத்தினால், அவர்கள் இயேசுகிறிஸ்துவின் கட்டளையின் பிரகாரம் வேறு பட்டணத்திற்குப் போகிறார்கள்.

அவர்கள் போகும் இடங்களுக்கெல்லாம், தங்களோடு சுவிசேஷத்தையும் எடுத்துச் செல்கிறார்கள்.

சிதறிப்போன யூதர்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை வல்லமையாய்ப் பிரசங்கம் பண்ணுகிறார்கள். அவர்கள் இதுவரையிலும் யூதேயாவிலும், சமாரியாவிலும், கலிலேயாவிலும் ஊழியம் செய்துவிட்டு இப்போது பெனிக்கே நாட்டிற்கும், சீப்புரு தீவுக்கும், சீரியா தேசத்திற்கும் ஊழியம் செய்ய புறப்பட்டுப்போகிறார்கள். சீஷர்கள் எந்த அளவிற்கு அதிகமாய்ப் பிரயாணம் பண்ணுகிறார்களோ, அந்த அளவுக்கு அவர்கள் பல தேசங்களில் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணுகிறார்கள். அவர்கள் பல தேசங்களுக்குப் பிரயாணம் செய்தாலும் உலகம் முழுவதும் சென்று கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணுவதே அவர்களுடைய நோக்கமாயிருக்கிறது.

சிதறப்பட்ட சீஷர்கள் சுவிசேஷ வசனத்தை யூதர்களுக்கே அன்றி மற்ற ஒருவருக்கும் அறிவிக்கவில்லை. புறஜாதியாரும் தேவனுடைய சுதந்தரவாளிகளாக ஆகமுடியும் என்னும் நம்பிக்கை இவர்களிடத்திலில்லை. புறஜாதியார் விரும்பினால் யூதமார்க்கத்தை ஏற்றுக்கொள்ளலாம். அதன் பின்பு அவர்கள் கிறிஸ்துவின் சீஷர்களாக மாறவேண்டும் என்பதே இவர்களுடைய நம்பிக்கை. புறஜாதியார் விருத்தசேதனம் பெற்றபின்புதான் அவர்கள் இயேசுகிறிஸ்துவின் சீஷராக முடியும் என்று சிதறப்பட்ட சீஷர்கள் நினைத்தார்கள். புறஜாதியாருக்கு விருத்தசேதனம் செய்துகொள்ள விருப்பமில்லையென்றால், அவர்களை அப்படியே விட்டுவிடுகிறார்கள்.

சிரேனே பட்டணத்தார்

அவர்களில் சீப்புருதீவாரும் சிரேனே பட்டணத்தாருமாகிய சிலர் அந்தியோகியா பட்டணத்துக்கு வந்து, கிரேக்கருடனே பேசிக் கர்த்தராகிய இயேசுவைக்குறித்துப் பிரசங்கித்தார்கள் (அப் 11:20).

சிதறப்பட்ட சீஷர்கள் கிரேக்கருக்கு சுவிசேஷத்தை அறிவிக்கிறார்கள். இவர்கள் கிரேக்கு தேசத்தைச் சேர்ந்த யூதர்கள். பிரசங்கத்தை அறிவிக்கிறவர்களில் பெரும்பாலோர் யூதேயா தேசத்தை அல்லது எருசலேம் நகரத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் தவிர சீப்புருதீவாரும் சிரேனே பட்டணத்தாரும் சுவிசேஷ ஊழியம் செய்கிறார்கள். இந்த இடங்களிலும் கிறிஸ்துவின் சீஷர்கள் இருக்கிறார்கள். பர்னபா சீப்புரு தீவான் (அப் 4:36) சீமோன் சிரேனே ஊரான் (மாற் 15:21). இந்த சீமோன் இயேசுகிறிஸ்துவின் சிலுவையைச் சிறிது தூரம் சுமந்து சென்றான்.

அந்தியோகியா பட்டணத்தில் கிரேக்கு தேசத்தைச் சேர்ந்த யூதர்கள் ஏராளமாயிருக்கிறார்கள். சீப்புரு தீவிலும், சிரேனே பட்டணத்திலும் விருத்தசேதனமுள்ள சீஷர்கள், அந்தியோகியாவுக்குப் போய், அங்குள்ள கிரேக்கு தேசத்தைச் சேர்ந்த யூதர் மத்தியிலே கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணுகிறார்கள். தங்கள் இனத்தாரிடத்திற்குப் போகிறார்கள். அவர்களுக்கு கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கம்பண்ணுகிறார்கள். இயேசுகிறிஸ்துவைக்குறித்துப் பிரசங்கிப்பதே இவர்களுடைய பிரசங்கத்தின் முக்கியமான செய்தி. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அல்லாமல், இவர்கள் வேறு யாரைக் குறித்தும் பிரசங்கம் பண்ணவில்லை.

கர்த்தருடைய கரம்

கர்த்தருடைய கரம் அவர்களோடே இருந்தது; அநேக ஜனங்கள் விசுவாசிகளாகி, கர்த்தரிடத்தில் திரும்பினார்கள் (அப் 11:21).

அந்தியோகியா பட்டணத்திலுள்ள கிரேக்க யூதர் மத்தியில் ஊழியம் சிறப்பாக நடைபெறுகிறது. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கிக்கிறவர்களோடு கர்த்தருடைய கரம் இருக்கிறது.

ஊழியக்காரர்கள் இயேசு கிறிஸ்து வைப்பற்றி பிரசங்கம்பண்ணும் போது அந்த வார்த்தை கேட்போரின் செவிகளில் விழும். கர்த்தர் தாமே தம்முடைய வல்லமையினால் அந்த வார்த்தையை கேட்போரின் இருதயத்தில் பதியச் செய்கிறவர். கேட்போரின் உள்ளத்தில் மனமாற்றத்தை உண்டுபண்ணுகிறவர்.

அந்தியோகியாவில் கிரேக்கருடனே கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கம்பண்ணுகிறவர்கள் அப்போஸ்தலர்களல்ல. இவர்கள் சாதாரண ஊழியக்காரர்கள். ஆனாலும் இவர்க ளோடும் கர்த்தருடைய கரம் இருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் இவர்கள் அற்புதங்களைச் செய்கிறார்கள்.

இவர்களுடைய ஊழியத்தில் ஆத்தும அறுவடை உண்டாயிற்று. அநேக ஜனங்கள் விசுவாசிகளாகி கர்த்தரி டத்தில் திரும்புகிறார்கள். இயேசு கிறிஸ்துவை கர்த்தரென்றும், இரட்சக ரென்றும் அவர்கள் விசுவாசிக்கிறார்கள். சுவிசேஷத்தின் சத்தியம் மெய்யானது என்று தங்கள் இருதயத்தில் அங்கீகரிக் கிறார்கள். இதன் விளைவாக அவர்கள் கர்த்தரிடத்தில் திரும்புகிறார்கள். இதுவரையிலும் அவர்கள் நியாயப் பிரமாணத்தின் நீதியைச் சார்ந்திருந் தார்கள். இப்போது இயேசுகிறிஸ்துவின் நீதியினிடத்தில் திரும்பியிருக்கிறார்கள். விசுவாசத்தினால் நமக்கு நீதி உண்டாகிறது.

கிரேக்கர்கள் கர்த்தரிடத்தில் திரும்புகிறார்கள். கர்த்தர் அவர்களுக்கு எல்லாமாகயிருக்கிறார். சுவிசேஷத்தில் இயேசுகிறிஸ்துவைப்பற்றிய சத்தியம் முழுமையாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. நாம் சுவிசேஷச் செய்தியைக் கேட்டு இயேசுகிறிஸ்துவினிடத்தில் திரும்ப வேண்டும். இல்லையென்றால் நம்முடைய ஆவிக்குரிய ஜீவன் பிரயோஜன முள்ளதாகயிராது. இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து அவரிடமாகத் திரும்பி வருவதே நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு ஆரம்பம்.

பர்னபா

எருசலேமிலுள்ள சபையார் இந்தக் காரியங்களைக்குறித்துக் கேள்விப்பட்டபோது, அந்தியோகி யாவரைக்கும் போகும்படிக்குப் பர்னபாவை அனுப்பினார்கள் (அப் 11:22).

அந்தியோகியாவில் அநேக ஜனங்கள் விசுவாசிகளாகி கர்த்தரிடத்தில் திரும்புகிறார்கள் என்ற நற்செய்தியை எருசலேமிலுள்ள சபையார் கேள்விப்படுகிறார்கள். அங்கு நடைபெறும் ஊழியங்களை விசாரித்து வரும்படி ஆதித்திருச்சபையார் பர்னபாவை அந்தியோகியா வரைக்கும் போகும்படி அனுப்புகிறார்கள். பர்னபா எருசலேமிலுள்ள திருச்சபையின் பிரதிநிதியாக அந்தியோகியாவுக்குப் போகிறார். இப்படிப்பட்ட விசேஷித்த ஊழியத்தைச் செய்வதற்கு, இவருக்கு விசேஷித்த தாலந்து இருந்திருக்கவேண்டும். இந்த ஊழியத்தைச் செய்வதற்கு பர்னபா தகுதியான நபராக இருக்கவேண்டும். கர்த்தர் தம்முடைய பல்வேறு ஊழியங்களைச் செய்வதற்கு, தம்முடைய ஊழியக்காரர்களுக்கு பல்வேறு விதமான வரங்களைக் கொடுக்கிறார். அந்தியோகியாவில் ஆரம்பிக்கப்பட்ட ஊழியம் சிறப்பாக நடைபெறுகிறது. பர்னபாவோடு பவுலும் சேர்ந்து கொள்கிறான். இவ்விருவரும் அந்தியோகியாவில் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்கிறார்கள்.

தேவனுடைய கிருபை

அவன் போய்ச் சேர்ந்து, தேவனுடைய கிருபையைக் கண்டபோது, சந்தோஷப்பட்டு, கர்த்தரிடத்தில் மனநிர்ணயமாய் நிலைத்திருக்கும்படி எல்லாருக்கும் புத்திசொன்னான் (அப் 11:23).

சீப்புரு தீவார் அந்தியோகியாவில் சுவிசேஷத்தை அறிவித்து ஊழியம் செய்துகொண்டிருக்கிறார்கள். பர்னபா அந்தியோகியா பட்டணத்திற்குப் போனபோது அங்கு தேவனுடைய கிருபையைக் காண்கிறான். தேவனுடைய ராஜ்யம் இந்தப் பட்டணத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய கிருபையைக் கண்டபோது பர்னபா சந்தோஷப்படுகிறான்.

ஒருவரிடத்தில் நாம் ஏதாவது நன்மையைக் கண்டால், அந்த நபரிடத்தில் தேவனுடைய கிருபை இருக்கிறது என்பதை புரிந்துகொள்ளவேண்டும். தேவனுடைய கிருபை நம்மிடத்தில் இருப்பதுபோலவே பிறரிடத்திலும் இருக்கும். பிறரிடத்தில் தேவனுடைய கிருபையை நாம் காணும்போது சந்தோஷப்படவேண்டும். சிலரிடத்தில் தேவனுடைய கிருபை இருக்காது என்று நினைப்போம். ஆனால் தேவனோ தம்முடைய கிருபையை அவர்களுக்கும் கொடுத்து அவர்களையும் ஆசீர்வதிப்பார்.

அந்தியோகியாவிலுள்ள கிரேக்கர்கள் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். அவர்களிடத்தில் தேவனுடைய கிருபை இருக்கிறது. அவர்களெல்லோரும் கர்த்தரிடத்தில் மனநிர்ணயமாய் நிலைத்திருக்கும்படி பர்னபா புத்தி சொல்லுகிறான். பர்னபா என்னும் பெயருக்கு "ஆறுதலின் மகன்" (அப் 4:36) என்று பொருள். தன்னுடைய பெயருக்கேற்ற பிரகாரமாக அவன் எல்லா ஜனங்களுக்கும் புத்திசொல்லி, ஆறுதல் சொல்லுகிறான். கர்த்தரிடத்தில் மனநிர்ணயமாய் நிலைத்திருக்கும்போது நமக்கு ஆறுதல் உண்டாகும்.

அந்தியோகியா பட்டணத்திலுள்ள விசுவாசிகளிடத்தில் தேவனுடைய கிருபை நிறைந்திருக்கிறது. பர்னபா அதைக் கண்டு சந்தோஷப்படுகிறான். அந்தக் கிருபையைக் காத்துக்கொள்ள வேண்டுமென்று அவர்களுக்குப் புத்திசொல்லுகிறான்.

கர்த்தரிடத்தில் மனநிர்ணயமாய் நிலைத்திருந்தால் மாத்திரமே, தேவனுடைய கிருபையைக் காத்துக்கொள்ள முடியும். இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் கர்த்தரிடத்தில் நிலைத்திருக்கவேண்டும். அவரைவிட்டு விலகிப்போய்விடக்கூடாது. நாம் கர்த்தரைப் பற்றிக்கொள்வதைவிட, கர்த்தர் நம்மைப் பற்றிக்கொள்வதற்கு நாம் அவரை அனுமதிக்கவேண்டும். நாம் முழுஇருதயத்தோடு கர்த்தரிடத்தில் மனநிர்ணயமாய் நிலைத்திருக்கவேண்டும். கர்த்தரிடத்தில் உறுதியாயும் தீர்மானமாயும் தரித்திருக்கவேண்டும்.

நல்லவன்

அவன் நல்லவனும், பரிசுத்தஆவியினாலும் விசுவாசத்தினாலும் நிறைந்தவனு மாயிருந்தான்; அநேக ஜனங்கள் கர்த்தரிடமாய்ச் சேர்க்கப்பட்டார்கள் (அப் 11:24).

பர்னபா நல்லவன். பரிசுத்த ஆவியினாலும் விசுவாசத்தினாலும் நிறைந்தவன். அவன் நீதிமான் மாத்திரமல்ல. நல்லவனாகவும் இருக்கிறான். நற்குணமுள்ளவன். கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நாம் நல்லவர்களாக இருக்கவேண்டும். நாம் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்போது, அதைக் கேட்கிறவர்கள் நம்முடைய சுபாவத்தை ஆராய்ந்து பார்ப்பார்கள். நாம் நல்லவர்களாக இருந்தால்தான் நம்முடைய வார்த்தையை கேட்பார்கள். இல்லையென்றால் புறக்கணித்து விடுவார்கள்.

பர்னபா தானதர்மம் பண்ணுகிறவன். ஏழைகளுக்கு உதவிபுரிகிறவன். இவன் தனக்குண்டாயிருந்த நிலத்தை விற்று, அதின் கிரயத்தைக் கொண்டுவந்து, அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தவன் (அப் 4:37). தரித்திரனுக்கு இரங்குகிறவன். பரிசுத்த ஆவியானவரின் அநுக்கிரகம் இவனுக்குக் கிடைத்திருக்கிறது.

இவன் பரிசுத்த ஆவியினாலும் விசுவாசத்தினாலும் நிறைந்திருக்கிறான். இவன் நல்லவனாகயிருந்தாலும், பரிசுத்த ஆவியினால் நிறைந்திருக்கவில்லையென்றால், இவனால் கர்த்தருக்கு ஊழியம் செய்யமுடியாது. இவனிடத்தில் விசுவாசமும் நிறைந்திருக்கிறது. ஆவியின் கனிகளும் இவனிடத்தில் நிரம்பியிருக்கிறது. இவன் அன்பினால் கிரியை செய்கிறான்.

கர்த்தர் பர்னபாவை நன்மை செய்கிறதற்கு நியமித்திருக்கிறார். இஸ்ரவேலின் காணியாட்சிக்குப் புறம்பானவர்களுக்கும் பர்னபா நன்மை செய்கிறான். காணியாட்சிக்குட்பட்டவர்களுக்கும் நன்மை செய்கிறான். இவனுடைய ஊழியத்தின் மூலமாக அநேக ஜனங்கள் கர்த்தரிடமாகச் சேர்க்கப்படுகிறார்கள்.

பர்னபாவும் சவுலும்

பின்பு பர்னபா சவுலைத் தேடும்படி, தர்சுவுக்குப் புறப்பட்டுப்போய், அவனைக் கண்டு, அந்தியோகியாவுக்கு அழைத்துக் கொண்டுவந்தான் (அப் 11:25).

சவுலைத் தேடி அந்தியோகியாவுக்கு அழைத்துக்கொண்டு வரும்படி, பர்னபா தர்சீசுக்குப் புறப்பட்டுப் போகிறான். அந்தியோகியாவில் சுவிசேஷ ஊழியம் செய்வதற்கு வாசல் திறந்திருக்கிறது என்றும், அதைப் பயன்படுத்திக்கொள்ள வருமாறு சவுலை அழைப்பதற்காகவும் பர்னபா அவனிடத்திற்குப் போகிறான். சவுல் தன்னோடு அந்தியோகியாவுக்கு வந்து, அங்கு சிறிது காலம் தங்கியிருந்து, அங்குள்ள ஜனங்கள் மத்தியில் ஊழியம் செய்ய வருமாறு, சவுலை அழைக்கப்போகிறான்.

பர்னபா நற்குணமுள்ளவன். சுவிசேஷ ஊழியத்தில் தேவையிருக்கும்போது, அந்தத் தேவையைச் சந்திப்பதற்கு பர்னபா பிரயாசப்படுகிறான். சவுல் ஊழியம் செய்ய முடியாமல் தர்சீசு பட்டணத்தில் தனிமையில் இருக்கிறான். சவுல் ஊழிய வாஞ்சையுள்ளவன். அநேக தாலந்துகள் உள்ளவன். கர்த்தருக்காக வைராக்கியமாக ஊழியம் செய்யக் கூடியவன். பர்னபா அப்படிப்பட்ட பிரயோஜனமுள்ள ஊழியக்காரனை தேடிக்கண்டுபிடித்து, அவனைத் தன்னோடு ஊழியத்தில் பயன்படுத்த வேண்டுமென்று பிரயாசப்படுகிறான்.

சவுலால் எருசலேமில் ஊழியம் செய்ய முடியவில்லை. அவனுடைய சொந்த ஊரான தர்சீசுக்கு அவனை அனுப்பிவிடுகிறார்கள். அங்கு ஜனங்கள் மத்தியில் விளம்பரமில்லாமல் ஒரு மூலையில் அடங்கிக்கிடக்கிறான். அப்படிப்பட்டவனை பர்னபா தேடிக்கண்டுபிடித்து கர்த்தருடைய ஊழியத்தில் அநேக ஜனங்களுக்கு முன்பாக பயன்படுத்த விரும்புகிறான். சவுல் மரக்காலின் கீழ் மூடிவைக்கப்பட்டிருக்கிற விளக்கைப்போல இருக்கிறான். பர்னபா அவனை விளக்குத்தண்டின்மீது ஏற்றி வைக்கிறான்.

சவுல் பிற்காலத்தில் பிரசங்கத்தை நடத்தக்கூடியவனாக மாறுகிறான் (அப் 14:12). பவுல் பர்னபாவைவிட ஊழியத்தில் அதிகமாய்ப் பிரகாசிக்கிறான். பவுலின் ஊழியத்திற்கு முன்னால் பர்னபாவின் ஊழியம் மங்கிப்போயிற்று. பவுலுக்கு முன்பாக தான் குறைவுபட்டவனாகயிருந்தாலும், பவுலை அழைத்து வந்து ஊழியத்தில் பயன்படுத்த விரும்புகிறான். தான் சிறுமைப்பட்டாலும் கர்த்தருடைய ஊழியம் சிறப்பாக நடைபெறவேண்டும் என்கிற நற்பண்பு பர்னபாவிடம் காணப்படுகிறது.

கிறிஸ்தவர்கள்

அவர்கள் ஒரு வருஷகாலமாய்ச் சபையோடே கூடியிருந்து, அநேக ஜனங்களுக்கு உபதேசம்பண்ணினார்கள். முதல் முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று (அப் 11:26).

பர்னபாவும் பவுலும் அந்தியோகியாவில் ஒரு வருஷ காலமாய் சபையோடு கூடயிருந்து ஊழியம் செய்கிறார்கள். அவர்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணுகிறார்கள். அநேக ஜனங்களுக்கு உபதேசம்பண்ணுகிறார்கள். இரட்சிக்கப் படாதவர்களுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணுவது போலவே, இரட்சிக்கப்பட்டிருக்கிற விசுவாசிகளுக்கும் உபதேசம் பண்ணவேண்டும்.

அப்போஸ்தலர்கள் தங்கள் ஜெபங்களில் ஜனங்களுடைய வாயாகச் செயல்பட்டு, ஜனங்களுக்காக ஜெபிக்கிறார்கள். தேவனைத் துதிக்கிறார்கள். ஜெபிப்பதோடு நிறுத்திக்கொள்ளாமல் வேதவசனத்தை உபதேசம்பண்ணுவதற்கும் தங்களுடைய வாய்களைப் பயன்படுத்துகிறார்கள். வேதத்தில் கர்த்தரைப்பற்றி வெளிப்படுத்தப்பட்டிருக்கும் சத்தியங்களை அவர்களுக்குப் புரியும் விதத்தில் உபதேசம்பண்ணுகிறார்கள்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் எல்லா இடங்களிலும், எப்போதும் ஊழியம் செய்ய ஆயத்தமாயிருக்கவேண்டும். தங்களுக்குக் கிடைக்கிற வாய்ப்புக்களை நல்லமுறையில் பயன்படுத்தி ஊழியம் செய்யவேண்டும். அநேக ஜனங்களுக்கு ஊழியம் செய்ய வாய்ப்புக் கிடைக்கும்போது அதைக் கருத்தாய்ப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். திரளான மீன்கள் இருக்கிற இடத்தில் வலைகளைப் போடும்போது, வலையில் திரளான மீன்கள் அகப்படும். அதை மனதில் கொண்டு திரளான ஜனங்களுக்கும் உபதேசம்பண்ண ஆயத்தம்பண்ண வேண்டும்.

இரட்சிக்கப்படாதவர்கள் இரட்சிக்கப் படும்படியாகவும், இரட்சிக்கப்பட்டிருக்கிறவர்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சி பெறும்படியாகவும் உபதேசம் பண்ணவேண்டும்.

முதல்முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்கு கிறிஸ்தவர்கள் என்கிற பெயர் வழங்கிற்று. பவுலும் பர்னபாவும் அந்தியோகியாவில் ஒரு வருஷகாலமாய் ஊழியம் செய்கிறார்கள். இவர்கள் அங்கு ஊழியம் செய்ய வருவதற்கு முன்பாகவே, அங்கு ஒரு சபை ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது. இவர்கள் அநேக ஜனங்களுக்கு உபதேசம்பண்ணியதன் மூலமாக ஏராளமான ஜனங்கள் இரட்சிக்கப்பட்டு சபையில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். சபை வளர்ந்து பெருகிற்று. இதுவரையிலும் சபையிலுள்ள விசுவாசிகள் "சீஷர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். இப்போது முதன்முதலாக அந்தியோகியாவிலே உள்ள சீஷர்களுக்கு "கிறிஸ்தவர்கள்" என்கிற பெயர் வழங்கிற்று.

இதுவரையிலும் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் சீஷர்கள் என்றோ, அல்லது வேறு சில பெயர்களை வைத்தோ யூதசமுதாயத்தாரும், புறஜாதியாரும் அழைத்தார்கள். அவர்களைக் கற்றுத் தேர்ந்தவர்களென்றும், ஞானிகளென்றும் அழைத்தார்கள். இதுவரையிலும் அவர்களை யாரும் "கிறிஸ்தவர்கள்" என்று அழைக்கவில்லை. இப்போதுதான் அந்தியோகியாவிலுள்ள சீஷர்களை முதல்முதலாக "கிறிஸ்தவர்கள்" என்று அழைக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துவுக்கும் அவரைப் பின்பற்றுகிறவர்களுக்கும் விரோதமாக யிருக்கிறவர்கள் சீஷர்களை அவமானப் படுத்தினார்கள். அவர்களை அவமானப் படுத்தக்கூடிய பெயர்களையே அவர்களுக்குக் கொடுத்தார்கள். இயேசு கிறிஸ்துவின் சீஷர்களை "நசரேயர்" என்று அழைத்தார்கள் (அப் 24:5). இவர்களை "இந்த மார்க்கத்தார்" என்று பொதுவாகக் கூப்பிட்டார்கள்.

இவர்களை "கிறிஸ்தவர்கள்" என்று இதுவரையிலும் யாரும் மரியாதையாக அழைக்கவில்லை. மற்ற ஜனங்களும் சீஷர்களை அவமானப்படுத்தவேண்டும் என்பதற்காக, அவர்களுக்கு மரியாதைக் குரிய பெயர்களைக் கொடுக்காமல், அவமானப்படுத்துகிற பெயர்களையே கொடுத்தார்கள்.

இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றுகிற சீஷர்களோ அவமானத்திற்குட் பட்டவர்களல்ல. தேவனுடைய மகிமைக்குப் பாத்திரர்கள். சமுதாயத்தில் தங்களை யாரும் இழிவான பெயரைச்சொல்லி அவமானப்படுத்தக்கூடாது என்று சீஷர்கள் தீர்மானம்பண்ணுகிறார்கள். ஜனங்கள் மத்தியில் தங்களுக்கு ஒரு மேன்மையான பெயர் உண்டாகவேண்டும் என்றும், இதன் மூலமாக தாங்கள் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து, அவரைப் பின்பற்றுகிற வர்கள் என்பது உலகத்தாருக்குத் தெரியவேண்டும் என்றும், தீர்மானம் செய்து, சீஷர்கள் தங்களை "கிறிஸ்தவர்கள்" என்று அழைத்துக் கொள்கிறார்கள். மற்றவர்களும் சீஷர்களை "கிறிஸ்தவர்கள்" என்று அழைக்க ஆரம்பிக்கிறார்கள்.

சீஷர்களுக்கு "கிறிஸ்தவர்கள்" என்னும் பெயர் வழங்கப்படுவதற்கு முன்பாக, அவர்கள் எந்த மார்க்கத்திலிருந்து இரட்சிக்கப் பட்டார்களோ அந்த மார்க்கத்தின் பெயராலேயே அவர்கள் அழைக்கப் பட்டார்கள். யூதமார்க்கத்திலிருந்து வந்தவர்களை விருத்தசேதனமுள்ள விசுவாசிகளென்றும், புறஜாதியாரிலிருந்து வந்தவர்களை விருத்தசேதனமில்லாத விசுவாசிகளென்றும் அழைத்தார்கள். அவர்களும் தங்களை யூதர்களென்றும், புறஜாதியாரென்றும் அழைத்துக் கொண்டார்கள்.

விசுவாசிகளுக்குள் இந்த வேறுபாடு இருந்தது. ஆனால் கர்த்தருடைய சமுகத்திலோ யூதரென்றும், புறஜாதியாரென்றும் வித்தியாசமில்லை. கர்த்தர் பட்சபாதம் பார்க்கிறவரல்ல. எல்லோரும் அவருக்குச் சமமானவர்கள் தான். தங்களுடைய பெயர்களினால் இதுவரையிலும் பிரிந்திருந்தவர்களை, கர்த்தர் இப்போது "கிறிஸ்தவர்கள்" என்னும் ஒரே பெயரினால் இணைக்கிறார்.

சீஷர்கள் தங்களை "கிறிஸ்தவர்கள்" என்று அழைத்துக்கொண்டு, தங்கள் கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்துகிறார்கள். இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து அவரைப் பின்பற்றுவதற்காக தாங்கள் வெட்கப்படவில்லை என்பதை அறிக்கை செய்கிறார்கள். "இயேசு" என்னும் பெயர் தேவனுடைய ஆள்தத்துவத்தை அழைக்கிற பெயர். "கிறிஸ்து" என்னும் பெயர் தேவனுடைய ஊழியத்தைக் குறிப்பிடுகிற பெயர். கிறிஸ்து என்பதற்கு அபிஷேகம்பண்ணப்பட்டவர் என்று பொருள். இயேசுவே கிறிஸ்து என்னும் சத்தியத்தைச், சீஷர்கள் தங்களைக் "கிறிஸ்தவர்கள்" என்று அழைத்து வெளிப்படுத்துகிறார்கள்.

யூதர்கள் இயேசுவின் பெயரை அவமானத்திற்குரிய பெயராக விளம்பரம்பண்ணினார்கள். இயேசுவைக் குற்றவாளி என்று தீர்த்தார்கள். இயேசுவைப் பின்பற்றுகிறவர்களையும் அவமானப்படுத்தினார்கள். ஆனால் சீஷர்களோ தங்களை "கிறிஸ்தவர்கள்" என்று அழைத்துக்கொண்டு, இயேசு கிறிஸ்துவின் பெயரை மகிமைப்படுத்து கிறார்கள். தங்களை கிறிஸ்தவர்கள் என்று அழைப்பதினால், தாங்கள் கிறிஸ்துவை மாத்திரமே சார்ந்திருப்பதையும், தாங்கள் கிறிஸ்துவுக்குரியவர்கள் என்பதையும் அறிக்கை செய்கிறார்கள்.

சீஷர்கள் தங்களை "கிறிஸ்தவர்கள்" என்று அழைத்துக்கொள்வதினால், தங்களுடைய வாழ்க்கையில் மிகுந்த கவனத்தோடு முன்னேறிச் செல்கிறார்கள். தங்கள் மூலமாக இயேசுகிறிஸ்துவின் நாமம் தூஷிக்கப்படக்கூடாது என்பது மிகுந்த கவனத்தோடிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவினுடைய முன்மாதிரியின் பிரகாரம் ஜீவிக்கவேண்டும் என்றும், அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றவேண்டும் என்றும் அக்கறையோடு ஜீவிக்கிறார்கள். தங்களை "கிறிஸ்தவர்கள்" என்று அழைப்பதினால், தங்கள் பெயரின் மூலமாக இயேசு கிறிஸ்துவை மகிமைப்படுத்துகிற பொறுப்பும் கடமையும் தங்களுக்கு இருப்பதாக உணர்ந்து செயல்படு கிறார்கள். தங்களுடைய ஜீவியம் முழுவதையும் இயேசுகிறிஸ்துவை மகிமைப் படுத்துவதற்காகவே அர்ப்பணிக்கிறார்கள்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமும் நம்மை "கிறிஸ்தவர்கள்" என்று அழைத்துக்கொள்கிறோம். "கிறிஸ்தவர்கள்" என்று அழைக்கப்படுகிற நாம் இந்தப் பெயருக்கு பாத்திரமுள்ளவர்களாக நடந்துகொள்ளவேண்டும். நம் மூலமாக இயேசுகிறிஸ்துவின் நாமம் தூஷிக்கப் படாதபடி மிகுந்த எச்சரிப்போடிருக்க வேண்டும். நம்மை "கிறிஸ்தவர்கள்" என்று அழைத்துக்கொண்டு அந்தப் பெயருக்கு ஏற்ற பிரகாரம் ஜீவிக்கவேண்டும். நம்மை அழைத்தவர் உண்மையுள்ளவர். நாம் அழைக்கப்பட்ட அழைப்புக்கு நாமும் பாத்திரவான்களாக நடந்துகொள்ளவேண்டும்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நம்மைப்போலவே ஏராளமான ஜனங்கள் அவரை விசுவாசிக்கிறார்கள். அவர்களும் தங்களை கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக்கொள்கிறார்கள். நாமும் கிறிஸ்தவர்களோடு பழகும்போது மிகுந்த மரியாதையோடும் கண்ணியத்தோடும் பழகவேண்டும். கிறிஸ்தவர்களை நேசிக்கவேண்டும்.

அவர்களுடைய பெயரில் இயேசுகிறிஸ்துவின் பெயரும் இருப்பதினால், இயேசுகிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் அவர்களுக்கு உரிய மரியாதையைக் கொடுக்கவேண்டும். அவர்களும் கிறிஸ்துவுக்குரியவர்கள்.

கொடிய பஞ்சம்
அப் 11 : 27-30

அப் 11:27. அந்நாட்களிலே எருசலேமிலிருந்து சில தீர்க்கதரிசிகள் அந்தியோகியாவுக்கு வந்தார்கள்.

அப் 11:28. அவர்களில் ஒருவனாகிய அகபு என்பவன் எழுந்து, உலகமெங்கும் கொடிய பஞ்சம் உண்டாகும் என்று ஆவியானவராலே அறிவித்தான்; அது அப்படியே கிலவுதியு ராயனுடைய நாட்களிலே உண்டாயிற்று.

அப் 11:29. அப்பொழுது சீஷரில் அவரவர் தங்கள் தங்கள் திராணிக்குத் தக்கதாக யூதேயாவில் குடியிருக்கிற சகோதரருக்கு உதவியாகப் பணஞ் சேகரித்து அனுப்ப வேண்டுமென்று தீர்மானம்பண்ணினார்கள்.

அப் 11:30. அப்படியே அவர்கள் சேகரித்து, பர்னபா சவுல் என்பவர்களுடைய கையிலே கொடுத்து, மூப்பரிடத்திற்கு அனுப்பினார்கள்.

தீர்க்கதரிசிகள்

அந்நாட்களிலே எருசலேமிலிருந்து சில தீர்க்கதரிசிகள் அந்தியோகியாவுக்கு வந்தார்கள் (அப் 11:27).

இயேசுகிறிஸ்து பரமேறிப்போனபோது தம்முடைய சீஷர்களுக்கு வரங்களைக் கொடுத்தார். அவர் சிலரை அப்போஸ்தல ராகவும், சுவிசேஷகராகவும், தீர்க்கதரிசி களாகவும் நியமித்திருக்கிறார். அந்நாட்களிலே எருசலேமிலிருந்து இப்படிப்பட்ட தீர்க்கதரிசிகளில் சிலர் அந்தியோகியாவுக்கு வந்தார்கள்.

தீர்க்கதரிசிகளைக் கொலை செய்வதில் எருசலேம் பிரபலமான நகரம். அது தன்னிடத்தில் வந்த ஏராளமான தீர்க்கதரிசிகளை இதுவரையிலும் கொலை செய்திருக்கிறது. அவர்களை அவமானப்படுத்தியிருக்கிறது. துன்பப்படுத்தியிருக்கிறது. ஆனால் இப்போதோ அதே எருசலேமிலிருந்து தீர்க்கதரிசிகள் அந்தியோகியாவுக்கு வருகிறார்கள்.

பர்னபா அந்தியோகியாவுக்கு வந்து அங்குள்ள சீஷர்களுக்கு இயேசு கிறிஸ்துவைக் குறித்துப் புத்தி சொல்லுவதற்காக, எருசலேமிலிருந்து அனுப்பப்பட்டான். அவர்களும் பர்னபாவின் உபதேசங்களை நன்றாய்க் கேட்டு ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சி பெற்றிருக்கிறார்கள். தீர்க்கதரிசிகள் இனிமேல் வரப்போகிற சம்பவங்களை முன்னறிவித்துக் கூறுகிறவர்கள். நடைபெறப்போகும் சம்பவங்களை முன்னறிவிப்பதற்காக எருசலேமிலுள்ள சபையார் ஒரு சில தீர்க்கதரிசிகளை அந்தியோகியாவுக்கு அனுப்புகிறார்கள்.

அகபு

அவர்களில் ஒருவனாகிய அகபு என்பவன் எழுந்து, உலகமெங்கும் கொடிய பஞ்சம் உண்டாகும் என்று ஆவியானவராலே அறிவித்தான்; அது அப்படியே கிலவுதியு ராயனுடைய நாட்களிலே உண்டாயிற்று (அப் 11:28).

எருசலேமிலிருந்து வந்த தீர்க்கதரிசிகளில் ஒருவனுடைய பெயர் அகபு என்பதாகும். உலகமெங்கும் கொடிய பஞ்சம் உண்டாகும் என்று அகபு முன்னறிவிக்கிறான். பிற்காலத்தில் பவுல் சிறையில் அடைக்கப்படுவான் என்பதையும் இந்த அகபு முன்னறிவித்தான் (அப் 21:10,11). எருசலேமிலிருந்து வந்த அகபு எழுந்து தீர்க்கதரிசனத்தைக் கூறுகிறான். அவனுடைய வார்த்தை பரிசுத்த ஆவியினாலே உண்டாயிற்று. உலகமெங்கும் கொடிய பஞ்சம் உண்டாகும் என்று ஆவியினாலே அறிவிக்கிறான்.

பஞ்சம் உண்டாகும்போது ஜனங்கள் அப்பம் கிடைக்காமல் பசியினால் மடிந்துபோவார்கள். இந்தக் கொடிய பஞ்சம் ஒரு குறிப்பிட்ட தேசத்திற்கு மட்டும் என்று நியமிக்கப்படவில்லை. இது "உலகம் முழுவதும்" உண்டாகும். "உலகம் முழுவதும்" என்னும் வார்த்தை ரோமப்பேரரசை குறிக்கும் வார்த்தையாகும்.

கடைசி காலங்களில் பஞ்சம் உண்டாகும் என்று இயேசுகிறிஸ்து பொதுவாக முன்னறிவித்திருக்கிறார். ஆனால் அகபுவோ, கொடிய பஞ்சம் சீக்கிரத்தில் உண்டாகப் போகிறது என்று முன்னறிவிக்கிறான். அக்காலத்தில் வரப்போகிற மிகவும் கொடிய பஞ்சத்தைப்பற்றி அகபு முன்னறிவித்தான்.

இந்தப் பஞ்சம் கிலவுதியு ராயனுடைய நாட்களிலே உண்டாயிற்று. தீர்க்கதரிசியின் வார்த்தை சீக்கிரத்தில் நிறைவேற்றிற்று. கிலவுதியு ராயனுடைய ஆட்சிக்காலத்தில், அவனுடைய ஆட்சியின் இரண்டாம் வருஷத்தில் இப்பஞ்சம் உண்டாயிற்று. இந்தப் பஞ்சம் இரண்டு வருஷங்கள் நீடித்தது. அதாவது அவனுடைய ராஜ்யத்தின் நான்காம் வருஷம் வரையிலும் பஞ்சம் நீடித்திருந்தது என்று வரலாற்று ஆசிரியர்கள் எழுதியிருக்கிறார்கள். திருச்சபையின் வரலாற்று ஆசிரியரான யோசபஸ் என்பவரும் இந்தப் பஞ்சத்தைப்பற்றி எழுதியிருக்கிறார்.

பணம் சேகரித்து

அப்பொழுது சீஷரில் அவரவர் தங்கள் தங்கள் திராணிக்குத்தக்கதாக யூதேயாவில் குடியிருக்கிற சகோதரருக்கு உதவியாகப் பணஞ் சேகரித்து அனுப்ப வேண்டுமென்று தீர்மானம்பண்ணினார்கள் (அப் 11:29).

கர்த்தருடைய தாசன் மூலமாக தீர்க்கதரிசன வார்த்தை உண்டாயிற்று. ஆவியானவரின் வார்த்தையை கேட்கிற விசுவாசிகளும், அந்த முன்னறிவிப்பைத் தங்களுக்குப் பிரயோஜனப் படுத்திக்கொள்கிறார்கள். பஞ்சம் வரப்போவதினால் தங்களை மாத்திரம் காத்துக்கொள்ளவேண்டுமென்று அவர்கள் சுயநலத்தோடு இருக்கவில்லை. தங்களைப்போன்ற மற்ற கிறிஸ்தவர் களுக்கும் பஞ்சகாலத்தில் உதவிபுரிய வேண்டுமென்று தீர்மானம்பண்ணு கிறார்கள். சீஷரில் அவரவர் தங்கள் தங்கள் திராணிக்குத்தக்கதாக யூதேயாவில் குடியிருக்கிற சகோதரருக்கு உதவியாகப் பணஞ் சேகரித்து அனுப்ப வேண்டுமென்று தீர்மானம்பண்ணு கிறார்கள்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமும் நமக்கு வாய்ப்பு கிடைக்கும்போது எல்லா மனுஷருக்கும் நன்மை செய்யவேண்டும். அதிலும் விசேஷமாக விசுவாசக் குடும்பத்தாருக்கு நன்மை செய்ய முன்னுரிமை கொடுக்கவேண்டும். எந்தத் தரித்திரரையும் ஒதுக்கி வைத்துவிடக்கூடாது. என்றாலும் கர்த்தருடைய பிள்ளைகள் தரித்திரராக இருக்கும்போது, அவர்கள்மீது விசேஷித்த கவனம் செலுத்தி அவர்களுக்கு உதவிபுரிய முன்வரவேண்டும்.

அந்தியோகியாவிலுள்ள கிறிஸ்த வர்கள் யூதேயாவிலுள்ள கிறிஸ்தவர்களின் தேவைகளைச் சந்திக்கவேண்டுமென்று தீர்மானம்பண்ணுகிறார்கள். யூதேயாவி லிருக்கிறவர்களை அந்தியோகியாவி லிருக்கிறவர்கள் "சகோதரர்" என்று அழைக்கிறார்கள். கிறிஸ்தவர்கள் ஒருவரையொருவர் தங்கள் சகோதரராக பாவித்துக்கொள்ளவேண்டும். ஒரு பகுதியில் பஞ்சம் உண்டாகும்போது அவர்களுக்கு நம்முடைய திராணிக்குத் தக்கதாக உதவிபுரிய முன்வரவேண்டும்.

தேசத்தில் பஞ்சம் உண்டாகும்போது அது அநேகருக்கு மிகுந்த பிரச்சனையாக இருக்கும். ஏராளமானோர் பசியினால் மடிந்துபோவார்கள். நம்முடைய கிறிஸ்தவ சகோதரர்கள் பசியினால் மடிந்துபோகும்போது, நாம் திருப்தியாக போஜனம்பண்ணுவது இயேசுகிறிஸ்துவின் நாமத்திற்கு மகிமை உண்டாக்காது. கிறிஸ்தவர்கள் என்று நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பெயருக்கு அது சாட்சியாக இருக்காது. அவமானமாக யிருக்கும். அந்தியோகியாவிலுள்ள கிறிஸ்தவர்கள் இதையெல்லாம் யோசித்துப் பார்க்கிறார்கள். பஞ்சம் வருவதற்கு முன்பாகவே, அவரவர் தங்கள் திராணிக்குத்தக்கதாக பணம் சேகரிக்க வேண்டும் என்றும், அந்தப் பணத்தை யூதேயாவிலே குடியிருக்கிற சகோதரருக்கு உதவியாக அனுப்பவேண்டுமென்றும் தீர்மானம்பண்ணுகிறார்கள். பஞ்சம் வரும்போது தங்களால் பணம் சேகரிப்பதற்கு சிரமமாகயிருக்கும் என்பதை உணர்ந்து, தங்களுக்குத் திராணியிருக்கும்போதே, தங்கள் திராணிக்குத்தக்கதாக உதவிப்பணம் சேகரிக்கிறார்கள்.

அந்தியோகியாவிலுள்ள சபையார் எல்லோருமே அகபுவின் தீர்க்கதரிசனத்தைக் கேட்கிறார்கள். கிறிஸ்தவர்கள் மத்தியில் ஒருமனமும் ஒற்றுமையும் உண்டாயிற்று. அவரவர் தங்கள் தங்கள் திராணிக்குத்தக்கதாக யூதேயாவிலே குடியிருக்கிற சகோதரருக்கு உதவியாக பணம் சேகரித்து அனுப்ப வேண்டும் என்று, அவர்களெல்லோரும் ஒருமனப்பட்டுத் தீர்மானம் பண்ணுகிறார்கள்.

அந்தியோகியாவிலுள்ள கிறிஸ்தவர் களைப்போலவே, நாமும் உதவி தேவைப்படுகிற சகோதரருக்கு உதவி செய்யவேண்டுமென்று தீர்மானம் பண்ணவேண்டும். நம்முடைய திராணிக்குத்தக்கதாக நாம் உதவிபுரிய முன்வரவேண்டும்.

தூரதேசமாக யிருந்தாலும், எந்தத் தேசத்திற்கு உதவிசெய்ய வேண்டுமென்று கர்த்தர் நம்முடைய உள்ளத்தில் ஏவுகிறாரோ, அந்தத் தேசத்திற்கு உதவி செய்யவேண்டும். நாம் அழைக்கப்பட்ட அழைப்புக்கு உண்மையுள்ளவர்களாக இருக்கவேண்டும்.

அந்தியோகியாவிலுள்ள கிறிஸ்தவர்கள் அவரவர் தங்கள் தங்கள் திராணிக்குத்தக்கதாக உதவி செய்ய வேண்டுமென்று தீர்மானம்பண்ணுகிறார்கள். நாமும் நம்முடைய திராணி எப்படிப்பட்டது என்று ஆராய்ந்து பார்க்கவேண்டும். நம்மை நாமே நிதானித்துப் பார்க்கவேண்டும். நம்மை நிதானிக்கும்போது நாம் மிகுந்த கவனமாயிருக்கவேண்டும். ஏனெனில் நம்முடைய நியாயத்தீர்ப்பு நீதியாயும், உண்மையாயும், நேர்மையாயும் இருக்கவேண்டும்.

பர்னபாவும் சவுலும்

அப்படியே அவர்கள் சேகரித்து, பர்னபா சவுல் என்பவர்களுடைய கையிலே கொடுத்து, மூப்பரிடத்திற்கு அனுப்பினார்கள் (அப் 11:30).

அந்தியோகியாவிலுள்ள கிறிஸ்தவர்கள் தாங்கள் தீர்மானம்பண்ணியபடியே, பணம் சேகரிக்கிறார்கள். பணம் சேகரிக்கவேண்டுமென்று பேசிக்கொண்டேயிருக்கவில்லை. திட்டமிட்டுக்கொண்டேயிருக்கவில்லை. அவர்கள் செயல்படுகிறார்கள். தாங்கள் செய்த தீர்மானத்தை நிறைவேற்றுகிறார்கள்.

நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் நாம் பல தீர்மானங்களை எடுக்கலாம். இந்தத் தீர்மானங்களை நாம் நிறைவேற்றவில்லையென்றால், இந்தத் தீர்மானங்களினால் ஒரு பிரயோஜனமும் உண்டாகாது. அதுபோலவே நாம் பல காரியங்களைக்குறித்து திட்டமிடலாம். திட்டங்கள் மிகவும் சிறப்பாகயிருக்கலாம். ஆனாலும் திட்டங்களைச் செயல்படுத்தவில்லையென்றால், அந்தத் திட்டங்களினால் ஒரு பிரயோஜனமும் உண்டாகாது.

அந்தியோகியாவிலுள்ள கிறிஸ்தவர்கள் யூதேயாவில் குடியிருக்கிற சகோதரருக்கு உதவியாக பணம் சேகரித்து அனுப்பவேண்டுமென்று தீர்மானம்பண்ணுகிறார்கள். தாங்கள் பண்ணிய தீர்மானத்தின்படியே பணம் சேகரிக்கிறார்கள். கணிசமான தொகையை சேகரித்துவிடுகிறார்கள். சேகரிக்கப்பட்ட பணத்தைத் தங்கள் கையிலேயே வைத்திருப்பதற்குப் பதிலாக, அதை பர்னபா சவுல் என்பவர்களுடைய கையிலே கொடுத்து, எருசலேமுக்கு அனுப்பவேண்டுமென்றும் தீர்மானம்பண்ணுகிறார்கள்.

எருசலேமிலே யூதேயாவிலுள்ள சபையின் மூப்பர்கள் இருக்கிறார்கள். அந்த மூப்பர்கள் கையில் கொடுத்தால், அவர்கள் விசுவாசிகளின் தேவைக்குத் தகுந்தபடி பகிர்ந்துகொடுப்பார்கள் என்று எதிர்பார்த்து, அவர்களிடத்திற்குக் கொடுத்து அனுப்புகிறார்கள். பணம் சேகரிக்கப்படும்போதும் நாம் நம்முடைய திராணிக்குத்தக்கதாகச் சேகரிக்க வேண்டும். அதுபோலவே அந்தப் பணத்தை தேவையுள்ளவர்களுக்குக் கொடுக்கும்போதும், அவர்களுடைய தேவைக்குத்தக்கதாக கொடுக்கவேண்டும்.

அந்தியோகியாவில் சேகரிக்கப்பட்ட பணத்தை பர்னபா, சவுல் என்பவர்களுடைய கையிலே கொடுத்து அனுப்புகிறார்கள். இவர்கள் இருவரும் அந்தியோகியாவிலே சுவிசேஷ ஊழியம் செய்வதற்காக நியமிக்கப்பட்டிருக்கிற ஊழியக்காரர்கள். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் சுவிசேஷத்தையும் பிரசங்கிக்கவேண்டும், தேவைப்படுகிறவர்களுக்கு உதவியும் செய்யவேண்டும். இப்படிப்பட்ட வேலையைச் செய்வது தங்களுடைய ஊழியத்திற்கு ஏற்றதல்ல என்று புறக்கணித்து விடக்கூடாது.

BELLWETHER INTERNATIONAL

அப்போஸ்தலர் - விரிவுரை
THE ACTS - COMMENTARY

GOOD NEWS PUBLISHERS

சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறவர்கள் சபையின் தர்ம காரியங்களையும் பொறுப்போடு ஈடுபடவேண்டும். கர்த்தருடைய நாமத்தை மகிமைப் படுத்துவதற்கு எங்கெல்லாம் வாய்ப்பு இருக்கிறதோ, அங்கெல்லாம் ஊழியக் காரர்கள் பங்குபெற்று, கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்தவேண்டும். அதுபோலவே கர்த்தருடைய பிள்ளைகளுக்கு எதுவெல்லாம் பிரயோஜன முள்ளதாகயிருக்குமோ அதையெல்லாம் செய்வதற்கு ஊழியக்காரர்கள் தமாயிருக்கவேண்டும்.

12 அதிகாரம்

அப்போஸ்தலனாகிய யாக்கோபு இரத்தச்சாட்சியாக மரிக்கிறான். ஏரோது ராஜா பேதுருவைச் சிறைச்சாலையில் அடைத்து வைக்கிறான் (அப் 12:1-4). சிறைச்சாலையில் இருக்கும் பேதுருவுக்காக விசுவாசிகள் ஜெபிக்கிறார்கள். கர்த்தர் அவர்களுடைய ஜெபத்தைக்கேட்டு பேதுருவை அற்புதமாக விடுதலைபண்ணுகிறார் (அப் 12:6-19). ஏரோது தேவனுக்கு மகிமையைச் செலுத்தாமல் பெருமைப்பட்ட படியினால் இறந்துபோகிறான் (அப் 12:20-23). பர்னபாவும் பவுலும் எருசலேமைவிட்டு அந்தியோகியாவுக்குத் திரும்பிவருகிறார்கள் (அப் 12:24,25).

ஏரோது ராஜா
அப் 12 : 1-4

அப் 12:1. அக்காலத்திலே ஏரோதுராஜா சபையிலே சிலரைத் துன்பப்படுத்தத் தொடங்கி:

அப் 12:2. யோவானுடைய சகோதரனாகிய யாக்கோபைப் பட்டயத்தினாலே கொலைசெய்தான்.

அப் 12:3. அது யூதருக்குப் பிரியமாயிருக்கிறதென்று அவன் கண்டு, பேதுருவையும் பிடிக்கத் தொடர்ந்தான். அப்பொழுது புளிப்பில்லாத அப்பப்பண்டிகை நாட்களாயிருந்தது.

அப் 12:4. அவனைப் பிடித்துச் சிறைச்சாலையிலே வைத்து, பஸ்காபண்டிகைக்குப் பின்பு ஜனங்களுக்கு முன்பாக அவனை வெளியே கொண்டுவரலாமென்று எண்ணி, அவனைக் காக்கும்படி வகுப்புக்கு நான்கு போர்ச்சேவகராக ஏற்படுத்திய நான்கு வகுப்புகளின் வசமாக ஒப்புவித்தான்.

சபையிலே சிலரை

அக்காலத்திலே ஏரோதுராஜா சபையிலே சிலரைத் துன்பப்படுத்தத் தொடங்கி: (அப் 12:1)

சவுல் ஆதித்திருச்சபையின் விசுவாசிகளைச் சீறிப்பாய்ந்து துன்பப்படுத்தி வந்தான். கர்த்தர் அவனைச் சந்தித்து இரட்சித்தார். சவுல் இரட்சிக்கப்பட்ட பின்பு எருசலேமிலுள்ள பரிசுத்தவான்களுக்கு உபத்திரவம் குறைந்துபோயிற்று. சபைகளில் அமைதி உண்டாயிற்று. சபைகள் பக்திவிருத்தியில் அதிகரித்து பெருகிற்று. விசுவாசிகளைத் துன்பப்படுத்த பிரதான ஆசாரியருக்கு சவுலைப்போல ஒரு மூர்க்கமான நபர் வேறு யாரும் கிடைக்கவில்லை.

ஆலோசனைச்சங்கத்தார் மூலமாக விசுவாசிகளுக்கு உபத்திரவம் குறைந்தபோதிலும், வேறு திசையிலிருந்து அவர்களுக்கு உபத்திரவம் உண்டாயிற்று. யூதா தேசத்தின் ராஜாவாகிய ஏரோது ராஜா சபையைத் துன்பப்படுத்த ஆரம்பிக்கிறான். ஏரோது ஏதோமியரின் வம்சத்தைச் சேர்ந்தவன். பிற்காலத்தில் இவன் யூதமார்க்கத்தில் சேர்ந்து கொண்டான். யோசபஸ் இவனைப்பற்றி எழுதும்போது, இவன் மோசேயின் பிரமாணங்களில் மிகவும் வைராக்கியமாகயிருந்தான் என்று எழுதியிருக்கிறார். யூதருடைய பாரம்பரிய பழக்கவழக்கங்களை ஏரோது கடைப்பிடித்து வந்தான்.

ஏரோது கலிலேயா தேசத்திற்கு காற்பங்கு தேசாதிபதியாகயிருந்தான். கிலவுதியு ராயனுடைய காலத்தில், ராயன் ஏரோதை யூதேயா தேசத்திற்கு அதிபதியாக ஆக்கினான். ஏரோது பல ஊர்களில் வசதிப்பதற்கு வாய்ப்பிருந்தாலும், எருசலேமில் வாசம் பண்ணுவதையே விரும்பி அங்கு தங்கியிருக்கிறான்.

இயேசுகிறிஸ்துவின் சீஷர்களுக்கு விரோதமாக ஏரோது மூன்று காரியங்களைச் செய்கிறான். அவையாவன: 1. சபையிலே சிலரை துன்பப்படுத்தத் தொடங்குகிறான். 2. யோவானுடைய சகோதரனாகிய யாக்கோபைப் பட்டயத்தினாலே கொலைசெய்கிறான். 3. பேதுருவைப்பிடித்து சிறையிலே வைக்கிறான்.

ஏரோது கிறிஸ்தவர்களைச் சிறிது சிறிதாகத் துன்பப்படுத்த ஆரம்பிக்கிறான். ஆரம்பத்தில் சபையிலே சிலரைத் துன்பப் படுத்துகிறான். பின்பு அப்போஸ்தலரைத் துன்பப்படுத்த ஆரம்பிக்கிறான். ஆரம்பத்தில் விசுவாசிகளுக்கு சாதாரண துன்பத்தைக் கொடுத்தான். அதன் பின்போ அவர்களுக்கு மிகுந்த உபத்திரவத்தைக்கொடுக்கிறான். அப்போஸ்தலனாகிய யாக்கோபை பட்டயத்தினாலே கொன்றுபோடுகிறான்.

யாக்கோபைக் கொலை செய்தான்

யோவானுடைய சகோதரனாகிய யாக்கோபைப் பட்டயத்தினாலே கொலைசெய்தான் (அப் 12:2).

ஏரோது யோவானுடைய சகோதரனாகிய யாக்கோபை பட்டயத்தினாலே கொலைசெய்கிறான். வேதாகமத்தில் மற்றும் ஒரு யாக்கோபைப்பற்றி எழுதப்பட்டிருக்கிறது. அவன் யோசேயின் சகோதரன். இவ்விரண்டு யாக்கோபுக்கும் வித்தியாசம் காண்பிப்பதற்காக, லூக்கா இவனை "யோவானுடைய சகோதரனாகிய யாக்கோபு" என்று விரிவாக எழுதுகிறார். இயேசுகிறிஸ்துவின் ஆரம்ப சீஷர்கள் மூன்றுபேரில் இவனும் ஒருவன். கிறிஸ்துவின் சீஷர்களில் முதலாவதாக இரத்தச்சாட்சியாக மரிக்கும் சிலாக்கியம் இந்த யாக்கோபுக்குக் கிடைத்திருக்கிறது.

இவன் செபதேயுவின் குமாரர்களில் ஒருவன். "இடியின் குமாரன்" என்று அர்த்தங்கொள்ளும் "பொவர்னகோஸ்" என்னும் பெயரினால் இயேசு இவனையும் இவனுடைய சகோதரனையும் அழைத்தார். இடி முழக்கத்தைப்போல இவன் வல்லமையாய்ப் பிரசங்கம்பண்ணக் கூடியவன்.

வேதாகமத்தில் மற்றொரு ஏரோதைப்பற்றி எழுதப்பட்டிருக்கிறது. அவன் தன் சகோதரனுடைய மனைவியைத் தனக்கு வைத்துக் கொண்டான். அதைக் கண்டித்து உணர்த்திய யோவான்ஸ்நானனை அந்த ஏரோது சிரச்சேதம்பண்ணினான். யோவான்ஸ்நானனைப்போல யாக்கோபு, இந்த ஏரோதுக்கு விரோதமாக வல்லமையாகப் பிரசங்கம் செய்திருக்க வேண்டும். இதனால் கோபமடைந்த ஏரோது அவனைப் பட்டயத்தினால் கொன்றுபோட்டிருக்கலாம்.

இயேசுகிறிஸ்து செபதேயுவின் குமாரரைப்பற்றி ஏற்கெனவே தீர்க்கதரிசனமாக இவ்வாறு முன்னறிவித்திருக்கிறார். "அவர் அவர்களை நோக்கி: என் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள், நான் பெறும் ஸ்நானத்தையும் நீங்கள் பெறுவீர்கள்; ஆனாலும், என் வலது பாரிசத்திலும் என் இடது பாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி என் பிதாவினால் எவர்களுக்கு ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிறதோ அவர்களுக்கே யல்லாமல், மற்றொருவருக்கும் அதை அருளுவது என் காரியமல்ல என்றார்" (மத் 20:23). இயேசுகிறிஸ்து சொன்ன வார்த்தை யாக்கோபின் வாழ்க்கையில் இப்போது நிறைவேறிற்று. இயேசுகிறிஸ்துவுக்காக யாக்கோபு இரத்தச்சாட்சியாக மரிக்கிறான். மற்ற அப்போஸ்தலர்களுக்கு எப்படிப்பட்ட மரணமுண்டாகும் என்பதற்கு இவனுடைய மரணம் ஒரு முன் உதாரணமாயிற்று.

ஏரோது யாக்கோபை பட்டயத்தினாலே கொலைசெய்கிறான். ஸ்தேவான் இரத்தச்சாட்சியாக மரித்தபோது நடைபெற்ற சம்பவம் வேதாகமத்தில் விரிவாக எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் யாக்கோபின் மரணத்தைப்பற்றி அதிகமாக எழுதப்படவில்லை. இவனுடைய மரணத்தைப்பற்றி சுருக்கமாக எழுதப்பட்டிருந்தாலும், ஆதித்திருச்சபையில் சீஷர்களுக்கு எப்படிப்பட்ட உபத்திரவம் உண்டாயிற்று என்பதை இந்தச் சம்பவம் விளக்குகிறது.

அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை உண்மையாய்ப் பிரசங்கம்பண்ணினார்கள். தாங்கள் பிரசங்கம்பண்ணுகிற சுவிசேஷ வார்த்தைகள் சத்தியமானவை என்பதை உறுதிபண்ணுவதற்காக, தங்களுடைய இரத்தத்தினால் தங்கள் பிரசங்க வார்த்தைகளை முத்திரையிட்டிருக் கிறார்கள்.

பேதுருவையும் பிடிக்கத் தொடர்ந்தான்

அது யூதருக்குப் பிரியமாயி ருக்கிறதென்று அவன் கண்டு, பேதுருவையும் பிடிக்கத்தொடர்ந்தான். அப்பொழுது புளிப்பில்லாத அப்பப்பண்டிகை நாட்களாயிருந்தது (அப் 12:3).

ஏரோது யாக்கோபைப் பட்டயத்தினால் கொலைசெய்த பின்பு, அவன் பேதுருவையும் பிடிக்கத் தொடங்குகிறான். சீஷர்களைக் கொல்லவேண்டும் என்னும் இரத்தவெறி ஏரோதின் இருதயத்தில் அதிகரிக்கிறது. இரத்தவெறி பிடித்தவர்கள் பிறரைச் சாதாரணமாகத் துன்பப்படுத்தினால் திருப்தியடையமாட்டார்கள். சாத்தான் இப்படிப்பட்டவர்களைத் தன்னுடைய கருவிகளாகப் பயன்படுத்துகிறான்.

துணிகரமாகப் பாவம் செய்கிறவர்கள் சாத்தானுக்குப் பிரியமானவர்கள். தன்னுடைய துன்மார்க்கமான கிரியைகளைச் செய்வதற்குச் சாத்தான் இப்படிப்பட்டவர்களை அதிகமாய்ப் பயன்படுத்துகிறான். ஏரோது ஆரம்பத்தில் சிறிதளவு பாவம் செய்திருப்பான். அதுவே போகப்போக துணிகரமான பாவமாக மாறிற்று.

ஏரோது யாக்கோபைப் பட்டயத்தினாலே கொலைசெய்கிறான். அது யூதருக்குப் பிரியமாயிருக்கிறது என்று காண்கிறான். யூதர்கள்மீது இரத்தப்பழி அதிகரிக்கிறது. ஏற்கெனவே யூதர்கள் இயேசுகிறிஸ்துவைச் சிலுவையில் கொலைசெய்து அவருடைய இரத்தப்பழியைத் தங்கள்மீது சுமந்து கொண்டிருக்கிறார்கள். இப்போதோ அவருடைய அப்போஸ்தலரில் ஒருவனாகிய யாக்கோபு கொலைசெய்யப்பட்டதில் பிரியப்பட்டு, தங்கள் மீதுள்ள இரத்தப்பழியை அதிகரிக்கிறார்கள்.

பிறரைத் துன்பப்படுத்துகிறவர்கள், பிறர் துன்பப்படும்போது மிகவும் சந்தோஷப்படுவார்கள். பிறரைத் துன்பப்படுத்துகிறவர்களோடு பிரியமாயி ருப்பார்கள். ஏரோது ராஜாவாக யிருக்கிறான். யூதர்களைப் பிரியப்படுத்த வேண்டிய அவசியம் ஏரோதுக்கு இல்லை. ஏரோது யூதரைப்பார்த்து பயப்படமாட்டான். ஆனாலும் அவன் யூதரை மேலும் பிரியப்படுத்த விரும்புகிறான். யாக்கோபைக் கொன்றது யூதருக்குப் பிரியமாகயிருப்பதினால், அவன் பேதுருவையும் கொன்று யூதருடைய பிரியத்தை அதிகரிக்கச் செய்ய விரும்புகிறான். ஏற்கெனவே சாத்தானுக்குப் பிரதிநிதியாகச் செயல்பட்டவன், இப்போது சாத்தானுக்கு முழுநேர வேலைக்காரனாக மாறிவிடுகிறான். மனுஷரைப் பிரியப் படுத்துகிறவர்கள் பிசாசின் வேலைக்காரர்களாகயிருப்பார்கள்.

இந்தச் சம்பவம் நடைபெறுகிற காலம் புளிப்பில்லாத அப்பப்பண்டிகை நாட்களாயிருக்கிறது. இது பஸ்கா பண்டிகையின் காலம். இந்தப் பண்டிகையின்போது பஸ்காவை ஆசரிப்பதற்காக, யூததேசத்திலுள்ள எல்லா பட்டணங்களிலிருந்தும் ஜனங்கள் எருசலேமுக்கு வருவார்கள். யூதர்களுக்கு கிறிஸ்துவின் சீஷர்களைப் பிடிக்காது. எருசலேமில் எல்லா ஊர்களிலுமிருந்து திரளான யூதர்கள் வந்து கூடியிருப்பதினால், சீஷர்கள்மீது அவர்களுடைய கோபம் இன்னும் அதிகரிக்கும். அவர்கள் சீஷர்களுக்கு விரோதமாக எதையாவது பேசுவார்கள், எதையாவது செய்வார்கள். சீஷர்களுக்குச் சாதாரண நாட்களில் உண்டாகும் துன்பத்தைவிட, பண்டிகை நாட்களில் அதிகத் துன்பம் உண்டாகும்.

இப்படிப்பட்ட பண்டிகை நாட்களில்தான் யூதர்கள் ஒன்றுகூடி வந்திருப்பார்கள். அவர்களெல்லோருமே தங்கள் மார்க்க காரியங்களில் பக்திவைராக்கியமாகயிருப்பார்கள். கிறிஸ்துவின் சீஷர்களை உபத்திரவப் படுத்துவது தாங்கள் கர்த்தருக்குச் செய்கிற ஆராதனை என்று நினைத்துக்கொள்வார்கள். இப்படிப்பட்ட காலத்தில் யூதர்களை இன்னும் அதிகமாய்ப் பிரியப்படுத்தவேண்டுமென்று, ஏரோது பேதுருவைப்பிடித்து சிறைச் சாலையில் வைக்கிறான்.

சிறைச்சாலையிலே பேதுரு

அவனைப் பிடித்துச் சிறைச்சாலையிலே வைத்து, பஸ்காபண்டிகைக்குப் பின்பு ஜனங்களுக்கு முன்பாக அவனை வெளியே கொண்டுவரலாமென்று எண்ணி, அவனைக் காக்கும்படி வகுப்புக்கு நான்கு போர்ச்சேவகராக ஏற்படுத்திய நான்கு வகுப்புகளின் வசமாக ஒப்புவித்தான் (அப் 12:4).

ஏரோது பேதுருவைப் பிடித்து சிறைச்சாலையிலே வைக்கிறான். அவனைக் காக்கும்படி நான்கு வகுப்புகளின் வசமாக ஒப்புவிக்கிறான். ஒவ்வொரு வகுப்பிலும் நான்கு போர்ச்சேவகர் இருக்கிறார்கள். பேதுருவைக் காவல்காப்பதற்கு பதினாறு போர்ச்சேவகர்கள் நியமிக்கப்படுகிறார்கள். இத்தனை போர்ச்சேவகர்களை கொண்டு காவல் காத்தால், காவல் பத்திரமாயிருக்குமென்று ஏரோது நினைக்கிறான்.

பஸ்கா பண்டிகைக்குப் பின்பு பேதுருவை ஜனங்களுக்கு முன்பாக வெளியே கொண்டுவரவேண்டும் என்பது ஏரோது ராஜாவின் திட்டம். பண்டிகைக்கு வந்திருக்கிற திரளான ஜனங்களுக்கு பேதுருவை வைத்து வேடிக்கை காண்பிக்கலாம் என்று நினைக்கிறான். பேதுருவின் கைகளையும் கால்களையும் சங்கிலிகளால் கட்டி, யூதஜனங்களுக்கு முன்பு நிறுத்தினால் அவர்கள் அதிகமாய்ச் சந்தோஷப்படுவார்கள் என்று ஏரோது எதிர்பார்க்கிறான். பண்டிகையின் சந்தோஷத்தோடு இந்தச் சந்தோஷத்தையும் அவர்களுக்குச் சேர்த்துக் கொடுக்க விரும்புகிறான். பேதுரு கைதுபண்ணப்பட்டிருக்கும் காட்சி யூதர்களுடைய கண்களுக்கு விருந்தாகயிருக்கும். யூதரைப் பிரியப்படுத்துவதுதான் ஏரோதுவின் பிரியம்.

பஸ்கா பண்டிகையின்போது யூதர்களெல்லோரும் பண்டிகை காரியங்களில் முழுவதுமாக ஈடுபட்டிருப்பார்கள். அதன்பின்பு அவர்களெல்லோருமே எருசலேமை விட்டுத் தங்கள் ஊர்களுக்குப் போய்விடுவார்கள். பண்டிகை முடிந்தபின்பு, அவர்கள் தங்கள் ஊருக்குப் போவதற்கு முன்பாக, பேதுருவை விசாரித்து, யூதருடைய கண்களுக்கு முன்பாக அவனைக் கொன்றுபோட்டு, யூதர்களைப் பிரியப்படுத்தலாமென்று ஏரோது திட்டமிடுகிறான்.

யூதருடைய பஸ்கா பண்டிகை முடிந்தபின்பு, பேதுருவின் மரணம் அவர்களுக்கு இன்னும் அதிக சந்தோஷத்தைத் தரும் என்று எதிர்பார்த்து, பேதுருவைச் சிறைச்சாலையில் வைத்து காவல்காக்கிறான்.

பேதுருவின் விடுதலை அப் 12 : 5-10

அப் 12:5. அப்படியே பேதுரு சிறைச்சாலையிலே காக்கப்பட்டிருக்கையில் சபையார் அவனுக்காக தேவனை நோக்கி ஊக்கத்தோடே ஜெபம்பண்ணினார்கள்.

அப் 12:6. ஏரோது அவனை வெளியே கொண்டு வரும்படி குறித்திருந்த நாளுக்கு முந்தின நாள் இராத்திரியிலே, பேதுரு இரண்டு சங்கிலிகளினாலே கட்டப்பட்டு, இரண்டு சேவகர் நடுவே நித்திரை பண்ணிக்கொண்டிருந்தான்; காவற்காரரும் கதவுக்கு முன்னிருந்து சிறைச்சாலையைக் காத்துக் கொண்டிருந்தார்கள்.

அப் 12:7. அப்பொழுது கர்த்தருடைய தூதன் அங்கே வந்து நின்றான்; அறையிலே வெளிச்சம் பிரகாசித்தது. அவன் பேதுருவை விலாவிலே தட்டி, சீக்கிரமாய் எழுந்திரு என்று அவனை எழுப்பினான். உடனே சங்கிலிகள் அவன் கைகளிலிருந்து விழுந்தது.

அப் 12:8. தூதன் அவனை நோக்கி: உன் அரையைக் கட்டி, உன் பாதரட்சைகளைத் தொடுத்துக்கொள் என்றான். அவன் அந்தப்படியே செய்தான். தூதன் பின்னும் அவனை நோக்கி: உன் வஸ்திரத்தைப் போர்த்துக்கொண்டு என் பின்னே வா என்றான்.

அப் 12:9. அந்தப்படியே அவன் புறப்பட்டு அவனுக்குப் பின்சென்று, தூதனால் செய்யப்பட்டது மெய்யென்று அறியாமல், தான் ஒரு தரிசனங்காண்கிறதாக நினைத்தான்.

அப் 12:10. அவர்கள் முதலாங் காவலையும் இரண்டாங்காவலையும் கடந்து, நகரத்திற்குப் போகிற இருப்புக்கதவண்டையிலே வந்தபோது அது தானாய் அவர்களுக்குத் திறவுண்டது; அதின் வழியாய் அவர்கள் புறப்பட்டு ஒரு வீதி நெடுக நடந்துபோனார்கள்; உடனே தூதன் அவனை விட்டுப் போய்விட்டான்.

ஜெபம்பண்ணினார்கள்

அப்படியே பேதுரு சிறைச் சாலையிலே காக்கப்பட்டிருக்கையில் சபையார் அவனுக்காக தேவனை நோக்கி ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார்கள் (அப் 12:5).

பேதுரு சிறைச்சாலையில் காக்கப்பட்டிருக்கிறான். சபையார் அவனுக்காக தேவனை நோக்கி ஊக்கமாக ஜெபம்பண்ணுகிறார்கள். ஜெபங்களும் கண்ணீர்களும் சபையார் யுத்தம் செய்வதற்கு பயன்படுத்த வேண்டிய கரங்களாகும். இவற்றினால் நாம் சத்துருக்களுக்கு விரோதமாகவும் யுத்தம்பண்ணவேண்டும். நம்முடைய சிநேகிதருக்கு ஆதரவாகவும் யுத்தம்பண்ணவேண்டும். ஏரோது பேதுருவைப்பிடித்து சிறைச்சாலையில் வைக்கிறான். பஸ்கா பண்டிகைக்குப் பின்பு ஜனங்களுக்கு முன்பாக அவனை வெளியே கொண்டு வந்து விசாரிக்கலாம் என்று தீர்மானிக்கிறான். பேதுருவை விசாரிப்பதில் காலதாமதம் உண்டாயிற்று. இந்தக் காலத்தில் சபையார் பேதுருவுக்காக தேவனை நோக்கி ஊக்கத்தோடே ஜெபம்பண்ணுகிறார்கள்.

ஆதித்திருச்சபையார் இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து பக்திவைராக்கியமாக ஜீவிக்கிறார்கள். கர்த்தரையே சார்ந்திருக்கிறார்கள். ஆனால் ஏரோது ராஜாவோ சபையில் சிலரை துன்பப்படுத்தத் தொடங்குகிறான்.

அதன்பின்பு யோவானுடைய சகோதரனாகிய யாக்கோபைப் பட்டயத்தினாலே கொலைசெய்து விடுகிறான். விசுவாசிகள் யாக்கோபை இழந்துவிடுகிறார்கள். ஏரோது பேதுருவையும் கொலைசெய்ய திட்டமிட்டிருக்கிறான். ஆனால் பேதுரு தங்களோடிருக்கவேண்டுமென்றும், அவனைத் தாங்கள் இழந்துவிடக்கூடாது என்றும் சபையார் தேவனிடத்தில் ஊக்கத்தோடே ஜெபம்பண்ணுகிறார்கள்.

பேதுருக்காக ஜெபிக்க சபையாருக்கு கொஞ்ச காலம் அவகாசமே இருக்கிறது. பஸ்கா பண்டிகை முடிந்துவிட்டால், ஏரோது பேதுருவை விசாரித்துக் கொன்று போடுவான். தேவன் அதற்குள் பேதுருவுக்கு ஒரு அற்புதம் செய்து அவனை விடுதலைபண்ணவேண்டும். காலம் கொஞ்சமாகயிருப்பதினால் சபையார் அந்தக் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொண்டு பேதுருவுக்காக தேவனிடத்தில் ஊக்கத்தோடே ஜெபம்பண்ணுகிறார்கள்.

சபையார் தங்கள் ஜெபத்தில் ஒருமனப்பட்டிருக்கிறார்கள். ஒரே ஒரு காரியத்தை மாத்திரம் தேவனிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார்கள். பேதுரு மரித்துப்போகக்கூடாது என்பதே சபையாரின் பொதுவான ஜெபம். கர்த்தர் இவர்களுடைய ஜெபத்தைக் கேட்கிறார். பேதுருவை கொலைசெய்து போடவேண்டும் என்று நினைக்கிற ஏரோதுவின் ஆலோசனையை முறியடிக்கிறார்.

யாக்கோபு ஏற்கெனவே இரத்தச்சாட்சியாக மரித்துப்போய்விட்டான். ஆகையினால் விசுவாசிகள் அதிர்ச்சியடைந்திருக்கிறார்கள். அதே வேளையில் அவர்கள் ஜெபத்தில் மிகுந்த கவனத்தோடிருக்கிறார்கள். எப்படியாவது தேவன் பேதுருவை விடுதலை பண்ணவேண்டுமென்று ஊக்கத்தோடு ஜெபிக்கிறார்கள்.

கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் துன்புறுத்தப்படும்போது, அந்த உபத்திரவம் தேவனுடைய ராஜ்யத்திற்கு அநுகூலமாகவே இருக்கும். விசுவாசிகள் இரத்தச்சாட்சிகளாக மரிக்கும்போது கர்த்தருடைய ஊழியம் வல்லமையாய் நடைபெறும். உபத்திரவக்காலத்தில் கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்கு இரங்கி அவர்களைப் பாதுகாப்பார். அதேவேளையில் தங்களுடைய உபத்திரவத்தில் விசுவாசிகளும் தேவனிடத்தில் ஊக்கமாய் ஜெபிக்க வேண்டும். ஊழியக்காரர்களின் ஜீவனுக்காக ஜெபிக்கவேண்டும். ஊழியத்திற்குத் தடையில்லாமல், ஊழியம் விடுதலையோடு நடைபெறவேண்டுமென்று சபையாரெல்லோரும் ஜெபிக்கவேண்டும்.

பேதுரு சிறைச்சாலையில் காக்கப்பட்டிருக்கிறான். சபையார் அவனுக்காக தேவனை நோக்கி ஊக்கத்தோடே ஜெபிக்கிறார்கள். சபைக்குத் துன்பமான நேரங்களும், உபத்திரவ காலங்களும் வரும்போது, அது சபையின் ஜெபிக்கிற நேரமாகவும், ஜெபிக்கிற காலமாகவும் இருக்கவேண்டும். நாம் எப்போதும் ஜெபிக்கவேண்டும். அதே வேளையில் ஒரு சில குறிப்பிட்ட காரியங்களுக்காக தேவனை நோக்கி ஊக்கத்தோடும் ஜெபிக்கவேண்டும்.

நித்திரைபண்ணிக் கொண்டிருந்தான்

ஏரோது அவனை வெளியே கொண்டு வரும்படி குறித்திருந்த நாளுக்கு முந்தின நாள் இராத்திரியிலே, பேதுரு இரண்டு சங்கிலிகளினாலே கட்டப்பட்டு, இரண்டு சேவகர் நடுவே நித்திரை பண்ணிக்கொண்டிருந்தான்; காவற்காரரும் கதவுக்கு முன்னிருந்து சிறைச்சாலையைக் காத்துக் கொண்டிருந்தார்கள் (அப் 12:6).

ஏரோது ஒரு நாளைக்குறித்து, அந்த நாளில் பேதுருவை வெளியே கொண்டுவந்து, விசாரித்து அவனை கொலை செய்யவேண்டுமென்று திட்டமிட்டிருக்கிறான். அந்த நாளுக்கு முந்தினநாள் இராத்திரியிலே கர்த்தர் பேதுருவை விடுதலைபண்ண சித்தமுள்ளவராயிருக்கிறார். பேதுரு மரித்துப் போகவேண்டுமென்று ஏரேது திட்டமிடுகிறான். ஆனால் தேவனோ பேதுரு பிழைத்திருக்கவேண்டுமென்று திட்டமிடுகிறார். தம்முடைய அற்புத வல்லமையினால் தேவன் பேதுருவைச் சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கிறார். தேவன் அவனுக்கு விடுதலையின் வாசலைத் திறந்துகொடுக்கிறார்.

இந்தச் சம்பவம் ஏரோது பேதுருவை வெளியே கொண்டுவரும்படி குறித்திருந்த நாளுக்கு முந்தின நாள் இராத்திரியிலே நடைபெறுகிறது. அடுத்த நாள் ஏரோதுவின் நாள். ஆனால் இந்த இராத்திரியோ கர்த்தருடைய இராத்திரி. பல சமயங்களில் தேவன் தம்முடைய பரிசுத்தவான்களை கடைசி நேரத்தில் அற்புதமாய் விடுவிக்கிறார். விசுவாசிகள் பல சமயங்களில் அதிகமாய்த் துன்பங்களை அனுபவித்தாலும், முடிவில் தேவன் அவர்களை அந்தத் துன்பங்களிலிருந்து விடுதலை பண்ணுகிறார். கர்த்தர் தமக்குச் சித்தமான நேரத்தில் நமக்கு தம்முடைய கிருபையைக் காண்பிக்கிறார்.

அந்த நாள் இராத்திரியில் பேதுரு சிறைச்சாலையிலே இரண்டு சங்கிலிகளினாலே கட்டப்பட்டு இரண்டு சேவகர் நடுவே நித்திரைபண்ணிக் கொண்டிருக்கிறான். அவனுக்கு அதிகமான பாதுகாப்பு கொடுக்கப் பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட பாதுகாப்புக்களுக்கு மத்தியில் அவனை யாரும் விடுதலைபண்ண முயற்சி பண்ணமாட்டார்கள். காவல் பலமாயிருக்கிறது. மனுஷருடைய முயற்சியினால் இப்படிப்பட்ட சிறைச்சாலையிலிருந்து யாரையும் விடுதலைபண்ணி வெளியே கொண்டு வரமுடியாது.

ஆனாலும் தேவனால் கூடாதகாரியம் ஒன்றுமில்லை. தேவன் ஒருவரும் திறக்கக்கூடாதபடி பூட்டுகிறவர். ஒருவரும் பூட்டக்கூடாதபடி திறக்கிறவர். தேவன் கிரியை செய்ய ஆரம்பிக்கும்போது அவரை எந்த வல்லமையினாலும் தடைபண்ண முடியாது.

பல காரியங்கள் நமக்குப் பெரியதாய் தோன்றலாம். சில பிரச்சனைகளிலிருந்து நாம் விடுதலைபெறுவது மிகவும் சிரமமாகயிருக்கலாம். தேவனால் கூட நமக்கு உதவி செய்யமுடியாது என்று சோர்ந்துபோயிருக்கலாம். ஆனாலும் தேவனால் கூடாதகாரியம் என்று ஒன்றுமேயில்லை. நம்முடைய மாம்சப் பிரகாரமான கண்களால் பார்க்கும்போது எல்லாமே இருளாகவும், நம்பிக்கை யற்றதாகவும் தெரியலாம். அப்படிப்பட்ட சூழ்நிலைகளில் நாம் கர்த்தரை விசுவாசித்து, கர்த்தரால் எல்லாம் முடியும் என்று நம்பி, நம்முடைய விசுவாச கண்களால் அவற்றைப் பார்க்கவேண்டும். பேதுருவை எத்தனை சங்கிலிகளினாலே கட்டியிருந்தாலும், தேவனால் எல்லா கட்டுக்களையும் முறிக்க முடியும்.

பேதுரு இரண்டு சங்கிலிகளினாலே கட்டப்பட்டு இரண்டு சேவகர் நடுவே நித்திரைபண்ணிக்கொண்டிருக்கிறான். தனக்கு நியமிக்கப் பட்டிருக்கிற மரண விசாரணையைக் குறித்து பேதுருவின் உள்ளத்தில் கலக்கமோ, பயமோ இல்லை. அவனுக்கும் மரணத்திற்கும் சில மணி நேரம் மாத்திரமே கால இடைவெளி உள்ளது. ஆனால் அவனிடத்தில் மரணபயமில்லை. அமைதியாக நித்திரை பண்ணுகிறான். சத்துருக்களுக்கு நடுவில் நித்திரைபண்ணுகிறான். பேதுரு சிறைச்சாலையில் அடைக்கப் பட்டிருந்தாலும், இரண்டு சங்கிலிகளினாலே கட்டப்பட்டிருந்தாலும், இரண்டு சேவகர் நடுவே இருந்தாலும், கர்த்தர் அவனுக்கு அந்த இடத்திலும் நித்திரையைக் கொடுத்து ஆசீர்வதிக்கிறார்.

தான் விடுவிக்கப்படுவோம் என்னும் நம்பிக்கை பேதுருவினிடத்தில் இல்லை. பேதுரு தன்னுடைய விடுதலையை எதிர்பார்க்கவுமில்லை. விழித்திருக்கவு மில்லை. ஆகையினால் தேவன் அவனை விடுவித்தபோது அவனுக்கு மிகுந்த ஆச்சரியமுண்டாயிற்று.

கர்த்தருடைய தூதன்

அப்பொழுது கர்த்தருடைய தூதன் அங்கே வந்து நின்றான்; அறையிலே வெளிச்சம் பிரகாசித்தது. அவன் பேதுருவை விலாவிலே தட்டி, சீக்கிரமாய் எழுந்திரு என்று அவனை எழுப்பினான். உடனே சங்கிலிகள் அவன் கைகளிலிருந்து விழுந்தது (அப் 12:7).

கர்த்தர் பரலோகத்திலிருந்து தம்முடைய தூதன் ஒருவனை சிறைச்சாலைக்கு அனுப்பி பேதுருவை விடுவிக்கிறார். கர்த்தருடைய கட்டளையின் பிரகாரம், அந்தத் தூதன் சிறைச்சாலையிலே வந்து நிற்கிறான். பேதுருவை எல்லோரும் கைவிட்டு விட்டார்கள் என்று சிலர் நினைக்கிறார்கள். தம்முடைய பிள்ளைகளை மனுஷர் கைவிட்டாலும், கர்த்தர் ஒருபோதும் கைவிடமாட்டார். நம்மை மனுஷர் மறந்துவிட்டாலும், தேவன் நம்மை ஒரு போதும் மறப்பதில்லை.

சிறைச்சாலையின் கதவுகளும், காவல்காரரும் பேதுருவை மற்ற விசுவாசிகளிடத்திலிருந்து தனிமைப் படுத்தியிருக்கிறது. பேதுருவின் சிநேகிதர்களால் சிறைச்சாலைக்கு வந்து அவனைப் பார்க்க முடியவில்லை. ஆனால் கர்த்தரால் அனுப்பப்பட்ட தூதனை யாராலும் தடைபண்ணமுடியவில்லை. கர்த்தருடைய ஆணையின் பிரகாரம் அந்தத் தூதன் சிறைச்சாலைக்குள் வந்து நிற்கிறான்.

கர்த்தருடைய பிள்ளைகள் எங்கிருந்தாலும் அவர்களுக்கு பரலோகத்தின் வாசல் திறந்தேயிருக்கும். சூழ்நிலையின் கதவுகள் அடைக்கப்பட்டிருந்தாலும், பரலோகத்தின் வாசல் திறந்தேயிருக்கும். சில சமயங்களில் சகவிசுவாசிகளோடு பேசுவதற்கு, கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதற்கு, உரையாடுவதற்கு தடை உண்டாகலாம். ஆனால் விசுவாசிகள் தேவனோடு பேசுவதற்கு எந்தத் தடையுமில்லை. அவர்கள் எப்போது வேண்டுமானாலும் பேசலாம். எங்கிருந்து வேண்டுமானாலும் பேசலாம்.

பேதுரு இரண்டு சங்கிலிகளினால் கட்டப்பட்டு, இரண்டு சேவகர் நடுவே சிறைச்சாலையின் அறையில் நித்திரை பண்ணிக்கொண்டிருக்கிறான். அப்போது கர்த்தருடைய தூதன் அங்கு வந்து நிற்கிறான். அவன் வந்தவுடன் அந்த அறையில் வெளிச்சம் பிரகாசிக்கிறது. அது இராத்திரி நேரம். இருட்டு வேளை. ஆனாலும் கர்த்தருடைய தூதன் அங்கு வந்தவுடன் இருள் அகன்றுபோயிற்று. அங்கு வெளிச்சம் பிரகாசிக்கிறது. பேதுருவினால் இருளில் நடக்க முடியாது. அவன் சிறைச்சாலையிலிருந்து வெளியேறிச் செல்வதற்கு பாதை தெளிவாகத் தெரியவேண்டும். அதற்கு வெளிச்சம் தேவை. அதற்காக தேவதூதன் வந்தவுடன் அந்த அறையில் வெளிச்சம் பிரகாசிக்கிறது.

கர்த்தருடைய தூதன் சிறைச் சாலைக்குள் வந்தவுடன் நித்திரை பண்ணிக்கொண்டிருக்கிற பேதுருவை விலாவில் தட்டி எழுப்புகிறான். மெதுவாகத் தட்டுகிறான். அவனுடைய நித்திரை யிலிருந்து அவனை எழுப்ப இந்தத் தட்டுதல் போதுமானதாகயிருக்கிறது. கர்த்தருடைய பிள்ளைகள் தங்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில், போராட்டங்கள் நடுவில், நித்திரைபண்ணிக் கொண்டிருந்தால் கர்த்தர் அவர்களுடைய விலாவிலும் தட்டுவார். உணர்வடையச் செய்வார்.

தேவதூதன் பேதுருவின் விலாவில் தட்டியபோது, அவனுக்கு சிறிது வேதனை உண்டாயிருக்கலாம். அந்த வேதனை அவனை அழித்துப்போடாது. அவனுடைய நித்திரையிலிருந்து அவனை எழுப்புவதற்காகவே கர்த்தர் அந்த வேதனையை அனுமதிக்கிறார்.

நம்முடைய வாழ்க்கையில் நமக்கு வேதனை உண்டாகும்போது, நம்முடைய ஆவிக்குரிய நித்திரையிலிருந்து எழும்பவேண்டும். நித்திரை செய்வதைவிட தட்டியெழுப்பப்படுவது நமக்கு ஆசீர்வாதமானது. கர்த்தருடைய தூதன் பேதுருவின் விலாவிலே தட்டுகிறான். அந்தத் தட்டுதலுக்கு "சீக்கிரமாய் எழுந்திரு" என்று பொருள்.

கர்த்தருடைய தூதன் பேதுருவை விலாவில் தட்டி, சீக்கிரமாய் எழுந்திரு, என்று எழுப்பின உடனே, சங்கிலிகள் பேதுருவின் கைகளிலிருந்து விழுகிறது. அவனை இரண்டு சங்கிலிகளினாலே கட்டியிருக்கிறார்கள். கர்த்தர் அந்தச் சங்கிலிகளை முறித்துப்போடுகிறார். கர்த்தருடைய தூதன் பேதுருவின் விலாவில்தான் தட்டினான். சங்கிலிகளைத் தட்டவில்லை. ஆனாலும் விலாவில் தட்டும்போது சங்கிலி முறிகிறது. கர்த்தர் நம்மைத் தொடும்போது நம்முடைய கட்டுக்களெல்லாம் முறிந்துபோகும். பேதுருவை சிறைச்சாலையில் காக்க வேண்டும் பாதுகாப்பாக என்பதற்காக சேவகர்கள் அவன் கைகளை இரண்டு சங்கிலிகளினால் கட்டியிருக்கிறார்கள். கர்த்தரோ அவனைச் சிறைச்சாலை யிலிருந்து விடுதலைபண்ணவேண்டும் என்பதற்காக, அவன் கைகளிலுள்ள சங்கிலிகளை முறித்துப்போடுகிறார்.

என் பின்னே வா

தூதன் அவனை நோக்கி: உன் அரையைக் கட்டி, உன் பாதரட்சை களைத் தொடுத்துக்கொள் என்றான். அவன் அந்தப்படியே செய்தான். தூதன் பின்னும் அவனை நோக்கி: உன் வஸ்திரத்தைப் போர்த்துக்கொண்டு என் பின்னே வா என்றான்.

அந்தப்படியே அவன் புறப்பட்டு அவனுக்குப் பின்சென்று, தூதனால் செய்யப்பட்டது மெய்யென்று அறியாமல், தான் ஒரு தரிசனங்காண்கிறதாக நினைத்தான் (அப் 12:8,9).

பேதுருவின் கைகளிலிருந்து சங்கிலிகள் விழுந்தவுடன் கர்த்தருடைய தூதன் அவனுக்குக் கட்டளை கொடுக்கிறான். பேதுரு தன் அரையைக் கட்டி, தன் பாதரட்சைகளைத் தொடுத்துக் கொள்ளவேண்டுமென்பதே கர்த்தருடைய தூதன் பேதுருவுக்குக் கொடுத்த முதலாவது கட்டளை. பேதுருவும் அந்தப்படியே செய்கிறான். பேதுரு நித்திரை தெளிந்து எழுந்தவுடன், அவனுக்கு என்ன செய்யவேண்டும் என்று தெரியவில்லை. இந்தச் சூழ்நிலையில்தான் அவன் என்ன செய்யவேண்டுமென்று கர்த்தருடைய தூதன் அவனுக்குக் கட்டளையிடுகிறான்.

முதலாவதாக பேதுரு தன் அரையைக் கட்டவேண்டும். அதன்பின்பு அவன் தன் பாதரட்சைகளைத் தொடுத்துக் கொள்ளவேண்டும். இவைகளைச் செய்தால்தான் பேதுருவால் நடக்கமுடியும். பேதுரு தன் வஸ்திரங்களைப் போர்த்துக்கொள்ள வேண்டும். அதற்கு பின்பு அவன் கர்த்தருடைய தூதனைப் பின்பற்றிச் செல்லவேண்டும். பேதுருவை விடுவிப்பதற்காக கர்த்தர் பரலோகத்தி லிருந்து தம்முடைய தூதனைச் சிறைச் சாலைக்கு அனுப்பியிருக்கிறார்.

சிறைச்சாலையில் இரண்டு சேவகர் இதுவரையிலும் அவனை காவல்காத்துக் கொண்டிருந்தார்கள். இப்போதோ கர்த்தருடைய தூதனே பேதுருவுக்கு வழிகாட்டியாகவும், காவல்காக்கிறவராகவும் இருக்கிறார். இதைப்பார்த்து பேதுருவுக்கு மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கவேண்டும். பேதுரு தன் ஆவியிலும் சரீரத்திலும் பலப்பட்டு, புறப்பட்டு, கர்த்தருடைய தூதனுக்கு பின்செல்கிறான்.

நம்முடைய ஆவிக்குரிய சிறையிருப்பிலிருந்து நாம் விடுவிக்கப்படும்போது, நம்மை விடுவித்தவர்களைப் பின்தொடர்ந்து செல்லவேண்டும். இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்து தேசத்தில் அடிமைகளாக யிருந்தார்கள். கர்த்தருடைய கட்டளையினால் மோசே அவர்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலைபண்ணினான். விடுவிக்கப்பட்ட இஸ்ரவேல் ஜனங்கள் மோசேயைப் பின்பற்றி கானான் தேசத்திற்குச் சென்றார்கள். தாங்கள் எந்த வழியாகப் போகிறோம் என்பது இஸ்ரவேல் ஜனங்களுக்குத் தெரியவில்லை. ஆனால் யாரைப் பின்பற்றிப்போகிறோம் என்பது அவர்களுக்குத் தெரிந்திருந்தது.

அதுபோலவே இப்போது பேதுரு தன்னை விடுதலைபண்ணின கர்த்தருடைய தூதனுக்குப் பின்செல்கிறான். தூதனால் செய்யப்பட்டது மெய் என்று அறியாமல், தான் ஒரு தரிசனம் காண்கிறதாக நினைக்கிறான். அற்புதமான சம்பவம் நடைபெறுகிறது. இப்படிப்பட்ட அற்புதம் மெய்யாகவே நடைபெறுமா என்னும் சந்தேகம் அவனுக்குள் உண்டாயிற்று. இது ஒரு தரிசனமாகயிருக்கலாம் என்று தன் மனதிற்குள் நினைக்கிறான். ஆனாலும் கர்த்தருடைய தூதன் சொன்ன பிரகாரம் பேதுரு புறப்பட்டு அவனுக்குப் பின் செல்கிறான்.

கதவு தானாய் திறவுண்டது

அவர்கள் முதலாங்காவலையும் இரண்டாங்காவலையும் கடந்து, நகரத்திற்குப் போகிற இருப்புக்கதவண்டையிலே வந்தபோது அது தானாய் அவர்களுக்குத் திறவுண்டது; அதின் வழியாய் அவர்கள் புறப்பட்டு ஒரு வீதி நெடுக நடந்துபோனார்கள்; உடனே தூதன் அவனை விட்டுப் போய்விட்டான் (அப் 12:10).

கர்த்தருடைய தூதன் பேதுருவைச் சிறைச்சாலையிலிருந்து பாதுகாப்பாக வெளியே கொண்டுவருகிறான். காவற்காரர் கதவுக்கு முன்னிருந்து சிறைச்சாலையைக் காவல்காத்துக் கொண்டிருக்கிறார்கள். கர்த்தருடைய தூதனும் பேதுருவும் முதலாங்காவலையும், இரண்டாங்காவலையும் கடந்து, நகரத்திற்குப் போகிற இருப்புக் கதவண்டையில் வருகிறார்கள். காவல் காக்கிறவர்கள் யாரும் இவர்களைத் தடுக்கவில்லை. சேவகர்களின் கண்களுக்கு இவர்கள் தெரியவில்லை. கர்த்தருடைய தூதனும் பேதுருவும் சிறைச்சாலையிலிருந்து கதவுகள் வழியாகத்தான் கடந்துவருகிறார்கள்.

முதலாம் காவலும் இரண்டாம் காவலும் மனுஷரால் காக்கப்படுகிறது. ஒருவேளை சிறைச்சாலையில் இது சாதாரண காவலாகயிருக்கலாம். முதலாம் காவலுக்கும் இரண்டாம் காவலுக்கும் அடுத்தபடியாக இருப்பு கதவு இருக்கிறது. இருப்புக் கதவு கடினமான தாகயிருந்தாலும், அவர்கள் இருப்புக் கதவண்டையிலே வந்தபோது, அது அவர்களுக்கு தானாய் திறவுண்டது. தங்கள் கைகளினால் அவர்கள் இருப்புக்கதவைப் பிரயாசப்பட்டுத் திறக்கவில்லை. கண்களால் காணப்படாத ஒரு வல்லமை அந்த இருப்புக்கதவைத் திறக்கிறது. கர்த்தருடைய வல்லமை அங்கு வந்து இறங்கியவுடன் இருப்புக்கதவு தானாய் திறக்கிறது.

கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை இரட்சிக்கும்போது, அவர் கொடுக்கிற இரட்சிப்பை எந்த வல்லமையாலும் தடைபண்ணமுடியாது. கர்த்தர் கட்டளை யிடும்போது அது இருப்புக் கதவாகயிருந் தாலும், அது தானாய் திறக்கும். இந்த இருப்புக் கதவு நகரத்திற்குப் போகிற வாசலுக்கு அருகில் இருக்கிறது. இந்தக் கதவின் வழியாகத்தான் அவர்கள் சிறைச்சாலையிலிருந்து நகரத்திற்குள் பிரவேசிக்கவேண்டும். இருப்புக்கதவைக் கடந்து வந்துவிட்டால், அவர்கள் நகரத்திலுள்ள வீதிக்கு வந்துவிடலாம்.

சிறைச்சாலையிலிருந்து பேதுரு விடுவிக்கப்பட்டது, நம்முடைய ஆத்தும இரட்சிப்புக்கு ஒப்பாயிருக்கிறது. இயேசுகிறிஸ்து நம்முடைய ஆத்துமாவை இரட்சித்து நமக்கு மீட்பைக் கொடுக்கிறார். ஆத்துமாவின் இரட்சிப்பு என்பது கட்டுண்டவர்களை விடுவிப்பது என்று அழைக்கப்படுகிறது. கட்டுடண்வர் களுக்கு விடுதலையை அறிவிப்பது மாத்திரமல்ல, சிறைச்சாலையில் கட்டப் பட்டிருக்கிறவர்களை வெளியே விடுவித்து வருவதுதான் உண்மையான இரட்சிப்பு.

கர்த்தருடைய தூதனும் பேதுருவும், இருப்புக்கதவின் வழியாகப் புறப்பட்டு ஒரு வீதி நடுவே நடந்துபோகிறார்கள். அப்போது தூதன் பேதுருவைத் தனியே விட்டுவிட்டுப் போய்விடுகிறான். பேதுருவுக்கு இனிமேல் அவனுடைய சத்துருக்களினால் ஆபத்து இல்லை. இனிமேல் அவனுக்குப் பாதுகாப்பு தேவையில்லை. தான் எங்கேயிருக்கிறோம் என்பது பேதுருவுக்குத் தெரியும். இனிமேல் அவனுக்கு பாதை காண்பிக்க வேண்டிய அவசியமில்லை. தன்னுடைய சிநேகிதரிடத்திற்கு எப்படி போகவேண்டு மென்பது பேதுருவுக்குத் தெரியும். நம்முடைய வாழ்க்கையில் சில சம்பவங்கள் இயற்கையாக நடைபெறும். இயற்கையாக நடைபெறக்கூடிய காரியங்களுக்கு நாம் கர்த்தருடைய அற்புதங்களை எதிர்பார்த்துக் காத்திருக்கக்கூடாது. நம்மால் சாதாரணமாக செய்ய முடிகிற காரியங்களை நாமே செய்துகொள்ள வேண்டும்.

சிறைக்கு வெளியே பேதுரு அப் 12 : 11-17

அப் 12:11. பேதுருவுக்குத் தெளிவு வந்த போது: ஏரோதின் கைக்கும் யூதஜனங்களின் எண்ணங்களுக்கும் என்னை விடுதலையாக்கும்படிக்குக் கர்த்தர் தம்முடைய தூதனை அனுப்பினாரென்று நான் இப்பொழுது மெய்யாய் அறிந்திருக்கிறேன் என்றான்.

அப் 12:12. அவன் இப்படி நிச்சயித்துக்கொண்டு, மாற்கு என்னும் பேர்கொண்ட யோவானுடைய தாயாகிய மரியாள் வீட்டுக்கு வந்தான்; அங்கே அநேகர் கூடி ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தார்கள்.

அப் 12:13. பேதுரு வாசற்கதவைத் தட்டினபோது ரோதை என்னும் பேர்கொண்ட ஒரு பெண் ஒற்றுக்கேட்க வந்தாள்.

அப் 12:14. அவள் பேதுருவின் சத்தத்தை அறிந்து சந்தோஷத்தினால் கதவைத் திறவாமல், உள்ளேயோடி, பேதுரு வாசலுக்குமுன்னே நிற்கிறார் என்று அறிவித்தாள்.

அப் 12:15. அவர்கள்: நீ பிதற்றுகிறாய் என்றார்கள். அவளோ அவர்தானென்று உறுதியாய்ச் சாதித்தாள். அப்பொழுது அவர்கள்: அவருடைய தூதனாயிருக்கலாம் என்றார்கள்.

அப் 12:16. பேதுரு பின்னும் தட்டிக்கொண்டிருந்தான். அவர்கள் திறந்தபோது அவனைக் கண்டு பிரமித்தார்கள்.

அப் 12:17. அவர்கள் பேசாமலிருக்கும்படி அவன் கையமர்த்தி, கர்த்தர் தன்னைக் காவலிலிருந்து விடுதலையாக்கின விதத்தை அவர்களுக்கு விவரித்து, இந்தச் செய்தியை யாக்கோபுக்கும் சகோதரருக்கும் அறிவியுங்கள் என்று சொல்லி; புறப்பட்டு, வேறொரு இடத்திற்குப் போனான்.

தெளிவு வந்தபோது

பேதுருவுக்குத் தெளிவு வந்த போது: ஏரோதின் கைக்கும் யூதஜனங்களின் எண்ணங்களுக்கும் என்னை விடுதலையாக்கும்படிக்குக் கர்த்தர் தம்முடைய தூதனை அனுப்பினாரென்று நான் இப்பொழுது மெய்யாய் அறிந்திருக்கிறேன் என்றான் (அப் 12:11).

கர்த்தருடைய தூதன் பேதுருவை விட்டுப் போனபின்பு, அவனுக்கு தெளிவு வந்தது. அவன் சுயநினைவுக்கு வருகிறான். இராத்திரி வேளையிலே பேதுருவுக்கு பல அற்புதங்கள் நடைபெற்றிருக்கிறது. கர்த்தருடைய தூதனால் செய்யப்பட்டது மெய் என்று அறியாமல், தான் ஒரு தரிசனம் காண்கிறதாக பேதுரு நினைத்தான். பேதுருவைப்போலவே நம்முடைய வாழ்க்கையிலும் பல அற்புத சம்பவங்கள் தொடர்ச்சியாக நடைபெறும்போது நமக்குள் ஆச்சரியமும் குழப்பமும் உண்டாகலாம். பேதுரு தான் ஒரு தரிசனம் காண்கிறதாக நினைத்தான். அதன்பின்பு அவனுக்குத் தெளிவு வருகிறது. தான் காண்பது தரிசனமல்ல என்றும், இந்தச் சம்பவம் மெய்யாகவே நடைபெறுகிறது என்பதையும் புரிந்துகொள்கிறான்.

ஏரோதின் கைக்கும், யூதஜனங்களின் எண்ணங்களுக்கும், தன்னை விடுதலையாக்கும்படி கர்த்தர் தம்முடைய தூதனை அனுப்பினாரென்று பேதுரு இப்பொழுது மெய்யாய் அறிந்திருக்கிறான். பேதுரு விடுதலையானதினால் யூதஜனங்கள் ஏமாற்றமடைவார்கள். அவர்களுடைய எதிர்பார்ப்பு வீணாய்ப்போகும். பேதுருவுக்குத் தெளிவு வந்தபோது, நடைபெறுகிற சம்பவம் தரிசனமல்ல என்றும், மெய்யாய் நடைபெறுகிற சம்பவம் என்பதையும் புரிந்துகொள்கிறான். கர்த்தர் தனக்குப் பெரிய காரியங்களைச் செய்திருக்கிறார் என்பதை அறிந்துகொள்கிறான். ஆரம்பத்தில் இந்த அற்புதங்களைப் பார்த்து பேதுருவினால் சந்தோஷப்பட முடியவில்லை. இது அற்புதம் என்றும் அவன் விசுவாசிக்கவில்லை. ஏதோ தரிசனம் என்று நினைத்தான்.

மனுஷருடைய ஆத்துமாக்கள் ஆவிக்குரிய அடிமைத்தனத்திலிருக்கும்போது, கர்த்தர் அந்த ஆத்துமாக்களை மீட்டு இரட்சிக்கிறார். தேவனே அவர்களை இரட்சிக்கிறார். ஆனால் அவர்களோ தங்கள் ஆத்தும இரட்சிப்பு தேவனால் உண்டாயிற்று என்பதை ஆரம்பத்தில் அறியாதவர்களாகயிருக்கிறார்கள். தேவனுடைய கிருபையும் இரக்கமும் நிரூபிக்கப்படவேண்டுமென்று பலர் எதிர்பார்க்கிறார்கள். தேற்றரவாளர் வரும்போது அவர் நம்மை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துவார். நம்முடைய இருதயத்தில் சத்தியத்தை உணர்த்துவார். கர்த்தருடைய ரகசியங்களை நமக்கு வெளிப்படுத்தி உபதேசம்பண்ணுவார்.

ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தார்கள்

அவன் இப்படி நிச்சயித்துக் கொண்டு, மாற்கு என்னும் பேர்கொண்ட யோவானுடைய தாயாகிய மரியாள் வீட்டுக்கு வந்தான்; அங்கே அநேகர் கூடி ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தார்கள் (அப் 12:12).

பேதுரு தனக்கிருந்த ஆபத்தை சிந்தித்துக்கொண்டு, அதே சமயத்தில் கர்த்தர் தன்னை அற்புதமாய் எவ்வாறு விடுதலையாக்கியனார் என்பதையும் நிச்சயித்துக்கொண்டு நடக்கிறான். இப்போது அவன் ஒரு வீதி வழியாக நடந்து போய்கொண்டிருக்கிறான். அடுத்த என்ன செய்யவேண்டுமென்று சிந்தித்துக்கொண்டிருக்கிறான். தேவன் நம்மை அற்புதமாய்ப் பராமரிக்கிறார். அதே வேளையில் நம்முடைய சுயாதீன சிந்தையைப் பயன்படுத்துவதற்கும் தேவன் நம்மை அனுமதிக்கிறார்.

பேதுருவின் ஜீவியத்தில் அற்புதமான சம்பவம் தேவனுடைய கிருபையினால் நடைபெற்றிருக்கிறது. சிறைச்சாலையில் கட்டப்பட்டு நித்திரை செய்துகொண் டிருந்தவன், இப்போது கட்டுக்கள் அவிழ்க்கப்பட்டு, சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறான். கர்த்தர் அவனுக்கு அற்புதத்தைச் செய்ய ஆரம்பித்திருக்கிறார். அடுத்த என்ன செய்யவேண்டுமென்பதை அவன் நிச்சயித்துக்கொள்ளவேண்டும்.

நம்முடைய ஜீவியத்திலும் தேவன் நமக்கு பல நன்மைகளை அற்புதமாகச் செய்வார். அவையெல்லாம் ஆரம்பம் மாத்திரமே ஆகும். அடுத்த என்ன செய்யவேண்டுமென்பதை நாம் தான் சிந்தித்து நிச்சயித்துக்கொள்ளவேண்டும். கர்த்தரே நமக்கு எல்லாவற்றையும் செய்வாரென்று காத்துக்கொண்டிருக்கக்கூடாது.

சிறைச்சாலையிலிருந்து கர்த்தருடைய தூதனும் பேதுருவும் வெளியே வந்து ஒரு வீதி நெடுக நடந்துபோகிறார்கள். உடனே தூதன் பேதுருவைவிட்டு போய் விடுகிறான். அதற்குப் பின்பு பேதுருவுக்குத் தேவதூதனின் ஒத்தாசை கிடைக்கவில்லை. அதுவரையிலும் அவனை வழிநடத்தி வந்த தூதன் இப்போது அவனைவிட்டுப் போய்விடுகிறான். அவன் போனபின்பு பேதுருவுக்குத் தெளிவு வருகிறது. நடந்த சம்பவங்களையும், இனிமேல் தான் செய்ய வேண்டிய காரியங்களையும் பேதுரு தன்னுடைய மனதில் நிச்சயித்துக் கொள்கிறான்.

பேதுரு வீதி வழியாக நடந்துபோகும்போது தன் சிநேகிதன் ஒருவனுடைய வீட்டிற்குப் போகவேண்டும் என்று தீர்மானம் பண்ணுகிறான். கர்த்தருடைய தூதன் பேதுருவை அந்த வீட்டிற்கு வழிநடத்தவில்லை. பேதுருவே சிந்தித்து, தீர்மானித்து, நிச்சயித்துக் கொண்டு அந்த வீட்டிற்குப் போகிறான்.

அது மாற்கு என்னும் பேர் கொண்ட யோவானுடைய தாயாகிய மரியாள் என்பவளுடைய வீடு. மரியாள் பர்னபாவின் சகோதரி. அக்காலத்தில் விசுவாசிகளின் வீடுகளிலும் சபையார் கூடிவந்து ஆராதனை செய்தார்கள். வீட்டில் கூடுகிற சபையானது ஒரு சிறிய ஆலயம் போலவே இருக்கிறது.

மரியாளுடைய வீட்டிலும் அநேகர் கூடி ஜெபித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஜெபிப்பது இரவுவேளை. அவர்கள் பேதுருவுக்காக ஜெபிக்கிறார்கள். பேதுரு சிறைச்சாலையிலே காக்கப் பட்டிருக்கையில் சபையார் அவனுக்காக தேவனை நோக்கி ஊக்கத்தோடே ஜெபித்துக்கொண்டிருக் கிறார்கள். பேதுருவை கர்த்தர் சிறைச்சாலையிலிருந்து விடுதலைசெய்து விட்டார். ஆனால் சபையாரோ அவனுக்காக இன்னும் தொடர்ந்து ஜெபித்துக்கொண்டிருக்கிறார்கள். நாம் கர்த்தருடைய கிருபைக்காகவும் இரக்கத்திற்காகவும் காத்திருக்கும்போது, அதைப் பெற்றுக்கொள்கிற வரையிலும் தொடர்ந்து ஜெபிக்கவேண்டும்.

சபையார் பேதுருவுக்காக ஊக்கமாய் ஜெபித்துக்கொண்டிருக்கிறார்கள். ஏரோது கொலைவெறி பிடித்தவனாக பேதுருவைச் சிறைச்சாலையில் அடைத்து வைத்திருந்தான். பொழுது விடிந்த பின்பு அவனை வெளியே கொண்டுவந்து, விசாரித்து, கொலைசெய்து விடவேண்டு மென்று திட்டமிட்டிருந்தான். பேதுருவின் ஜீவனுக்கு ஆபத்து உண்டாயிற்று என்பதை உணர்ந்த சபையார் அவனுக்காக ஊக்கமாய் ஜெபிக்கிறார்கள். இதுவரையிலும் இல்லாத அளவுக்கு விசுவாசிகளெல்லோரும் கர்த்தருடைய சமுகத்தில் பாரத்தோடும் ஊக்கத்தோடும் ஜெபிக்கிறார்கள்.

பரிசுத்த ஆவியானவரே சபையாருடைய உள்ளத்தில் ஏவி, அவர்களைப் பேதுருவுக்காக ஊக்கமாக ஜெபிக்குமாறு வழிநடத்துகிறார். அவர்களுடைய இருதயத்தில் ஜெபத்தின் ஆவியை ஊற்றியிருக்கிறார். தேவன் பேதுருவை விடுதலை செய்யவேண்டு மென்று சித்தங்கொண்டிருக்கும்போதே, விசுவாசிகளுடைய இருதயத்திலும் ஜெபத்தின் ஆவியை ஊற்றுகிறார். ஆகையினால்தான் அவர்கள் இராத்திரி வேளையாகயிருந்தாலும் ஊக்கத்தோடே ஜெபித்துக்கொண்டிருக்கிறார்கள்.

விசுவாசிகள் ஜெபம்பண்ணுவதற்காக கூடிவந்திருக்கிறார்கள். விசுவாசிகள் ஒருமனப்பட்டு ஒன்றுகூடி ஜெபிக்கும்போது, கர்த்தர் எவ்வாறு கிரியை செய்வாரென்பது அவர்களுக்குத் தெரிந்திருக்கிறது. அவர்கள் ஜெபத்தின் வல்லமையை உணர்ந்திருக்கிறார்கள். நாம் கர்த்தருடைய சமுகத்தில் தனியாக ஜெபிப்பது நல்லதுதான். அதே வேளையில் விசுவாசிகளாக ஒன்றுகூடி ஒருமனப்பட்டு ஜெபிக்கிற பழக்கத்தையும் ஏற்படுத்திக்கொள்ளவேண்டும்.

மரியாளுடைய வீட்டில் அநேகர் கூடிவந்து ஜெபித்துக்கொண்டிருக்கி றார்கள். ஒரு சில விசுவாசிகள் அதிக நேரம் ஜெபிப்பார்கள். அவர்களுக்கு எப்படி ஜெபிப்பது என்பது தெரியும். அவர்கள் கருத்தாய் ஜெபிப்பார்கள். நீண்ட நேரம் ஜெபிப்பார்கள். அப்படிப்பட்ட ஜெபவீரர்கள்தான் மரியாளுடைய வீட்டில் ஜெபம்பண்ணுவதற்காக கூடிவந்திருக் கிறார்கள். ஜெபத்தை எத்தனை மணிக்கு ஆரம்பித்தார்கள் என்பது தெரியவில்லை. அவர்களுடைய விண்ணப்பம் ஒன்றுதான். பேதுரு சிறைச்சாலையிலே காக்கப் பட்டிருக்கிறான். தேவன் அவன் ஜீவனைக் காக்கவேண்டும். இந்தச் சூழ்நிலையில் சபையார் அவனுக்காகத் தேவனை நோக்கி ஊக்கமாய் ஜெபிக்கிறார்கள். இராத்திரி வேளையிலும் ஜெபித்துக் கொண்டிருக்கிறார்கள்.

மரியாளின் வீட்டில், அநேகர் கூடி ஜெபம்பண்ணிக்கொண்டிருக்கும் போது பேதுரு அந்த வீட்டிற்கு வருகிறான். கர்த்தர் அவர்களுடைய ஜெபத்திற்குப் பதில் கொடுக்கிறார். ஏரோதின் கையிலிருந்து பேதுருவை விடுதலை பண்ணவேண்டுமென்று சபையார் ஊக்கமாய் ஜெபித்துக்கொண்டிருக் கிறார்கள். கர்த்தரோ பேதுருவை விடுதலைசெய்து, அவர்களுடைய ஜெபத்திற்குப் பதில் கொடுக்கும் விதத்தில், பேதுருவை அவர்களுக்கு முன்பாக கொண்டு வந்து நிறுத்துகிறார்.

ரோதை

பேதுரு வாசற்கதவைத் தட்டின போது ரோதை என்னும் பேர்கொண்ட ஒரு பெண் ஒற்றுக்கேட்க வந்தாள். அவள் பேதுருவின் சத்தத்தை அறிந்து சந்தோஷத்தினால் கதவைத் திறவாமல், உள்ளேயோடி, பேதுரு வாசலுக்குமுன்னே நிற்கிறார் என்று அறிவித்தாள். அவர்கள்: நீ பிதற்றுகிறாய் என்றார்கள். அவளோ அவர்தானென்று உறுதியாய்ச் சாதித்தாள். அப்பொழுது அவர்கள்: அவருடைய தூதனாயிருக்கலாம் என்றார்கள் (அப் 12:13-15).

பேதுரு மரியாளின் வீட்டிற்கு வந்து வாசற்கதவைத் தட்டுகிறான். கதவைத் திறந்து தன்னை வீட்டிற்குள் ஏற்றுக்கொள்ளுமாறு பேதுரு கதவைத் தட்டுகிறான். அப்போது ரோதை என்னும் பெயர் கொண்ட ஒரு பெண், கதவைத் தட்டுவது யார் என்பதை ஒற்றுக்கேட்க வருகிறாள். அவள் கதவைத் திறக்கவில்லை. கதவைத் தட்டுவது யார் என்பது தெரியாமல் அவள் கதவைத் திறக்க ஆயத்தமாகயில்லை. இந்தப் பெண்ணின் பெயர் ரோதை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகையினால் சபையார் மத்தியில் இவளுடைய பெயர் எல்லோருக்கும் அறிமுகமான பெயராகயிருக்கலாம். சிறு வயதில் இரட்சிக்கப்பட்டு பக்திவைராக்கியமாக இருக்கிற பெண்ணாகவும் இருக்கலாம்.

அவளுக்குப் பேதுருவின் சத்தத்தைத் தெரிந்திருக்கிறது. கதவைத் திறக்காமலேயே கதவைத் தட்டுவது பேதுருதான் என்பதை அவனுடைய சத்தத்தை வைத்தே அறிந்துகொள்கிறாள். மிகுந்த சந்தோஷப்படுகிறாள். ஆனால் கதவைத் திறக்காமல் உள்ளே ஓடிப்போகிறாள். சந்தோஷத்தினால் கதவைத் திறக்க மறந்துவிட்டாளா என்பது தெரியவில்லை. நாமும் நம்முடைய நண்பர்களை அதிகமாக நேசிப்பதினால், சில சமயங்களில் அவர்களை அன்போடு உபசரிக்கத் தவறிவிடுகிறோம்.

ரோதை உள்ளே ஓடி, பேதுரு வாசலுக்கு முன்னே நிற்கிறார் என்று மற்ற விசுவாசிகளிடம் அறிவிக்கிறாள். ஆனால் அவளுடைய பேச்சை அவர்கள் நம்பவில்லை. "நீ பிதற்றுகிறாய்" என்று அவளிடத்தில் கூறிவிடுகிறார்கள். பேதுரு சிறைச்சாலையில் காவலில் வைக்கப்பட்டிருக்கிறான் என்றும், அவன் விடுதலையடைந்து வீட்டிற்கு முன்னே வருவதற்கு வாய்ப்பில்லை என்றும் அவர்கள் நினைக்கிறார்கள். பேதுரு விடுதலைபண்ணப்படவேண்டும் என்பதற்காகத் தான் ஜெபிக்கிறார்கள். ஆனால் கர்த்தர் தங்கள் ஜெபத்தைக்கேட்டு பேதுருவை விடுவிப்பார் என்னும் விசுவாசம் அவர்களிடத்தில்லை.

கர்த்தர் நம்முடைய ஜெபத்தைக் கேட்டு நமக்கு அற்புதமாய்ப் பதில் கொடுப்பார் என்னும் விசுவாசம் இல்லாமலேயே நம்மில் பலர் ஜெபித்துக்கொண்டிருக்கிறோம். கர்த்தர் பதில் கொடுத்தாலும் அதை விசுவாசிக்கத் தவறிவிடுகிறோம்.

ரோதையோ தன்னுடைய வார்த்தையில் உறுதியாக இருக்கிறாள். மற்ற விசுவாசிகள் அவளைப் பார்த்து "நீ பிதற்றுகிறாய்" என்று கூறுகிறார்கள். ரோதையோ, வாசலுக்கு முன்னே நிற்பது பேதுருதான் என்று உறுதியாய்ச் சாதிக்கிறாள். அப்பொழுது அவர்கள், வாசலுக்கு முன்னாக நிற்பது "அவருடைய தூதனாயிருக்கலாம்" என்று சொல்லுகிறார்கள்.

கர்த்தர் தம்முடைய பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் பணிவிடை ஆவிகளை நியமித்திருக்கிறார். இவர்கள் தேவதூதர்கள். கர்த்தர் பேதுருவுக்கும் ஒரு தூதரை நியமித்திருக்கிறார். வாசலுக்கு முன்னே நிற்பது "பேதுருவினுடைய தூதனாகயிருக்கலாம்" என்று பொருள்படுமாறு அவர்கள் பேசியிருக்கலாம். அல்லது வாசலுக்கு முன்னே நிற்பது "கர்த்தருடைய தூதனாகயிருக்கலாம்" என்று பொருள் படுமாறும் அவர்கள் பேசியிருக்கலாம்.

ரோதை பேதுருவின் சத்தத்தை அறிந்திருக்கிறாள். ஆகையினால் வாசலுக்கு முன்னே நிற்பது பேதுருதான் என்று உறுதியாய்ச் சாதிக்கிறாள். வாசலுக்கு முன்னே நிற்பவன், தன்னுடைய பெயரை "பேதுரு" என்று ரோதையிடம் சொல்லியிருக்கலாம் என்று மற்ற விசுவாசிகள் நினைக்கிறார்கள். வாசலில் நிற்பவன் பேதுருவின் பெயரைச் சொல்லுவதினால், அவன் பேதுருவுக்கு நியமிக்கப்பட்டிருக்கிற பணிவிடை ஆவி என்று அவர்கள் தவறுதலாக நினைத்துக்கொள்கிறார்கள். பேதுருவின் மரணம் விரைவில் சம்பவிக்கப்போகிறது என்பதை தங்களுக்கு அறிவிப்பதற்காக, அந்தத் தூதன் தங்களைத்தேடி வந்து துர்ச்சொல்ல வந்திருப்பதாக நினைக்கிறார்கள்.

இவர்களோ பேதுருவுக்காக ஜெபிக்கிறார்கள். இனிமேல் பேதுருவுக்காக ஜெபிக்கவேண்டியதில்லை. ஏனென்றால் ஏரோது அவனை சீக்கிரத்தில் கொலைசெய்யப்போகிறான் என்னும் துர்ச்செய்தியை தங்களிடத்தில் சொல்ல வந்திருப்பதாக நினைக்கிறார்கள். வேறு சிலரோ வாசலுக்கு முன்பாக நிற்பது வானத்திலிருந்து வந்திருக்கிற தூதன் என்றும், தாங்கள் தேவனை நோக்கி ஊக்கத்தோடே ஏறெடுத்த ஜெபத்தைக் கர்த்தர் கேட்டு, தங்களுக்குப் பதில் கொடுக்கப்போகிறார் என்னும் நற்செய்தியை அறிவிப்பதற்காக வந்திருக்கிற தூதன் என்றும் நினைக்கிறார்கள்.

பிரமித்தார்கள்

பேதுரு பின்னும் தட்டிக்கொண்டிருந்தான். அவர்கள் திறந்தபோது அவனைக் கண்டு பிரமித்தார்கள் (அப் 12:16).

வாசலுக்கு முன்னே நிற்பது யார் என்னும் விவாதம் வீட்டிற்குள் விறுவிறுப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வீட்டிற்கு வெளியிலோ பேதுரு வாசற்கதவைத் தொடர்ந்து தட்டிக்கொண்டிருக்கிறான். சிறிது நேரத்திற்குப் பின்பு வீட்டிற்குள் இருக்கிறவர்கள் கதவைத் திறந்து, அங்கு பேதுருவைக் காண்கிறார்கள். அவனைக் கண்டு பிரமிக்கிறார்கள். சிறைச்சாலை யிலுள்ள இருப்புக்கதவு பேதுருவுக்குத் தானாக திறவுண்டது. ஆனால் அவனுடைய சிநேகிதரின் வீட்டுக்கதவு நீண்ட நேரம் தட்டியும் தானாய் திறக்கவில்லை. சிநேகிதரின் வாசற்கதவைப் பேதுரு நீண்ட நேரம் தட்டவேண்டியதாயிற்று. தட்டுகிறவர் களுக்குத்தான் திறக்கப்படும்.

அவர்கள் பேதுருவைக் கண்டு பிரமிக்கிறார்கள். ஆச்சரியமும் சந்தோஷமும் அவர்களை நிரப்புகிறது. இது வரையிலும் அவர்கள் பேதுருவைக் குறித்துப் பயத்தினாலும் கலக்கத்தினாலும் நிறைந்திருந்தார்கள். இப்போதோ அவனைப் பார்த்த போது அவனைக் கண்டு பிரமிக்கிறார்கள்.

விவரித்துச் சொல்லுகிறான்

அவர்கள் பேசாமலிருக்கும்படி அவன் கையமர்த்தி, கர்த்தர் தன்னைக் காவலிலிருந்து விடுதலையாக்கின விதத்தை அவர்களுக்கு விவரித்து, இந்தச் செய்தியை யாக்கோபுக்கும் சகோதரருக்கும் அறிவியுங்கள் என்று சொல்லி; புறப்பட்டு, வேறொரு இடத்திற்குப் போனான் (அப் 12:17).

கதவைத் திறந்து பேதுருவைக் கண்டு பிரமித்தவர்கள், பின்பு அவனை வீட்டிற்குள் அழைத்துச் செல்கிறார்கள். அவர்கள் பேசாமலிருக்கும்படி பேதுரு கையமர்த்துகிறான். கர்த்தர் தன்னை காவலிலிருந்து விடுதலையாக்கின விதத்தை அவர்களுக்கு விவரித்துச் சொல்லுகிறான். அவன் வீட்டிற்குள் வந்தவுடன் மற்ற விசுவாசிகள் அவனைச் சூழ்ந்துகொள்கிறார்கள். அவன் விடுதலை பெற்றதற்காக அவனை வாழ்த்துகிறார்கள். கர்த்தரை மிகுந்த ஆரவாரத்தோடு துதிக்கிறார்கள். இந்த ஆரவாரத்திற்கு மத்தியில் பேதுரு பேசுவது ஒருவருடைய காதிலும் கேட்கவில்லை. ஆகையினால் அவர்கள் பேசாமலிருக்கும்படி பேதுரு கையமர்த்துகிறான்.

கர்த்தர் தன்னைக் காவலிலிருந்து விடுதலையாக்கின விதத்தை அவர்களுக்கு விவரித்துச் சொல்லுகிறான். அதன்பின்பு அவன் புறப்பட்டு வேறொரு இடத்திற்குப் போகிறான். அநேகமாக அவன் அந்த இடத்தைவிட்டுப் புறப்பட்டு வேறொரு இடத்திற்குப் போவதற்கு முன்பாக விசுவாசிகளெல்லோரும் கர்த்தருடைய சமுகத்தில் ஒன்றுகூடி பேதுருவின் விடுதலைக்காக கர்த்தரைத் துதித்திருக்கவேண்டும். ஜெபத்தினால் அவர்களுக்கு ஜெயம் உண்டாயிற்று. அந்தச் ஜெயத்தைத் துதியினால் சுதந்தரித்துக்கொள்ளவேண்டும்.

கர்த்தர் தன்னைச் சிறைச்சாலை யிலிருந்து விடுதலையாக்கின இந்தச் செய்தியை யாக்கோபுக்கும் மற்ற சகோதரருக்கும் அறிவிக்குமாறு பேதுரு அவர்களிடத்தில் கூறுகிறான். அவர்களும் பேதுரு சிறைச்சாலையில் வைக்கப் பட்டிருந்ததினால், அவனுக்கு என்ன ஆகுமோ என்று பயத்தோடிருக்கிறார்கள். அவர்களுடைய பயத்திலிருந்து அவர்கள் விடுதலை பெறவேண்டுமென்று பேதுரு விரும்புகிறான். கர்த்தர் தன்னை விடுதலைபண்ணியதற்காக அவர்களும் தன்னோடு சேர்ந்து அவரைத் துதிக்கவேண்டுமென்று விரும்பி இந்தச் செய்தியை அவர்களுக்கு அறிவிக்குமாறு கூறுகிறான்.

ஏரோது ஏற்கெனவே யாக்கோபைப் பட்டயத்தினால் கொலைசெய்துவிட்டான். அந்த யாக்கோபு வேறு. பேதுரு இங்கு குறிப்பிடுகிற யாக்கோபு வேறு. எருசலேமிலே இந்த யாக்கோபு வேறு சில சகோதரரைச் சேர்த்துக்கொண்டு, பேதுருவை விடுதலைபண்ணவேண்டுமென்று கர்த்தரிடத்தில் ஊக்கமாய் ஜெபிக்கிறான். இந்த ஜெபமும் எருசலேம் நகரத்திலேயே நடைபெறுகிறது.

தான் விடுதலையான செய்தியை பேதுரு மரியாளின் வீட்டில் ஜெபித்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு விவரித்துச் சொல்லுகிறான். அதற்குப் பின்பு அவர்களிடத்தில் பேச பேதுருவுக்கு வேறு செய்தி எதுவுமில்லை. சிறைச்சாலையின் சேவகர் எந்த நேரத்திலும் இவனைப் பிடிப்பதற்குத் துரத்தி வருவார்கள். தன்னுடைய பாதுகாப்பிற்காக பேதுரு வேறொரு இடத்திற்குப் போகவேண்டுமென்று விரும்புகிறான்.

நாம் கர்த்தருக்காக பாடுகளை அனுபவிக்கவேண்டுமென்பது கிறிஸ்துவின் பிரமாணம். அதே சமயத்தில் இயற்கையின் பிரமாணத்தின்படி நம்மை நாமே காத்துக்கொள்ளவும் வேண்டும். ஆபத்துக்களிலிருந்து தப்பித்துச் செல்ல கர்த்தர் நமக்கு வாய்ப்புக்களைக் கொடுக்கும்போது அதைப் பயன்படுத்தி தப்பித்துச் செல்லவேண்டும். தேவையில்லாமல் ஜீவனை விட்டுவிடக் கூடாது. அதே வேளையில் கர்த்தருக்குச் சித்தமானால் தேவைப்படும்போது நம்முடைய ஜீவனைக் கொடுப்பதற்கும் நாம் ஆயத்தமாயிருக்கவேண்டும்.

காவற்காரரின் மரணம்
அப் 12 : 18,19

அப் 12:18. பொழுது விடிந்தபின்பு பேதுருவைக்குறித்துச் சேவகருக்குள்ளே உண்டான கலக்கம் கொஞ்சமல்ல.

அப் 12:19. ஏரோது அவனைத் தேடிக் காணாமற்போனபோது, காவற்காரரை விசாரணை செய்து, அவர்களைக் கொலைசெய்யும்படி கட்டளையிட்டு, பின்பு யூதேயாதேசத்தை விட்டுச் செசரியா பட்டணத்துக்குப் போய், அங்கே வாசம்பண்ணினான்.

கர்த்தர் சிறைச்சாலையிலிருந்து பேதுருவை அற்புதமாய் விடுதலைசெய்திருக்கிறார். இதனால் விசுவாசிகள் சந்தோஷப்படுகிறார்கள். கர்த்தரைத் துதிக்கிறார்கள். பொழுது விடிகிறது. சிறைச்சாலையில் பேதுரு இல்லை. இதனால் பேதுருவைக் குறித்து சேவகருக்குள்ளே அதிக கலக்கமுண்டாயிற்று. குழப்பமும் பயமும் உண்டாயிற்று. பேதுரு சிறைச்சாலையில் பத்திரமாக காவல் வைக்கப்பட்டிருப்பதாக சேவகர்கள் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். பொழுது விடியும்போது பேதுரு கட்டப்பட்டவனாக அங்கே இருப்பான் என்று எதிர்பார்க்கிறார்கள்.

இராத்திரியிலே பேதுரு இரண்டு சேவகர் நடுவே நித்திரைபண்ணிக் கொண்டிருந்தான். இரண்டு சங்கிலிகளினாலே அவனைக் கட்டியிருந்தார்கள். காவற்காரரும் கதவுக்கு முன்னிருந்து சிறைச்சாலையை காத்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் காவலில் வைக்கப்பட்டிருந்த பேதுரு இப்போது சிறைச்சாலையில் இல்லை. கர்த்தருடைய தூதன் பேதுருவை அற்புதமாக விடுதலை செய்திருக்கிறான்.

இக்காலத்தில் கூட கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு ஒரு சிலர் எதிர்த்து நிற்கிறார்கள். கர்த்தருடைய பரிசுத்த வான்களை உபத்திரவப்படுத்துகிறார்கள். அவர்களுடைய பிரயாசம் சித்திக்காமல் போவதைப் பார்க்கும்போது அவர்களுக்குள் கலக்கமுண்டாகிறது. காவற்சேவகர்கள் தப்பி ஓடின பேதுருவை சிறைச்சாலைக்குள் தேடிக் கொண்டிருக்கிறார்கள். அவனை எங்கும் தேடிக் கண்டுபிடிக்க முடியவில்லை.

ஏரோது பேதுருவை தேடுகிறான். அவனாலும் கண்டுபிடிக்க முடியவில்லை. பேதுருவைப் பிடிப்பதற்குப் பதிலாக பேதுருவைக் காவல்காத்த காவற்காரரைப்பிடித்து விசாரணை செய்கிறான். கர்த்தர் ஒருவனை மறைத்து வைத்திருக்கும்போது அவனை யாராலும் கண்டுபிடிக்க முடியாது. எல்லா விசுவாசிகளுக்கும் கர்த்தரே மறைவிடமாகவும் புகலிடமாகவும் இருக்கிறார். கர்த்தரே நமக்கு பாதுகாப்பாக இருக்கிறார். கர்த்தர் நம்மைப் பாதுகாக்கும்போது நம்முடைய சத்துருக்களினால் நம்மை அணுக முடியாது.

ஏரோதினால் பேதுருவைத் தேடிக் கண்டுபிடிக்க முடியவில்லை. அவன் காவற்காரரை விசாரணை செய்து அவர்களைக் கொலைசெய்யும்படி கட்டளையிடுகிறான். பேதுருவைக் கொலைசெய்ய மனதாயிருந்தவன், இப்போது அவனைக் காவல்காத்த காவற்காரரை கொலைசெய்கிறான். ஏரோதுவின் உள்ளத்திலும் குழப்பம் மிகுதியாயிற்று. ஆகையினால் இந்தச் சம்பவத்திற்குப் பின்பு அவன் யூதேயா தேசத்தைவிட்டு செசரியா பட்டணத்திற்குப்போய் அங்கே வாசம்பண்ணுகிறான்.

ஏரோதின் இருதயத்தில் ஏமாற்றமுண்டாயிற்று. தான் காவல்பண்ணி வைத்த பேதுருவைத் தன்னுடைய விருப்பப்படி ஏரோதுவினால் பஸ்கா பண்டிகைக்கு அடுத்த நாளில் விசாரித்துக் கொலை செய்ய முடியவில்லை. யூதஜனங்கள் பேதுருவைக் குறித்துப் பலவிதமாகச் சிந்தனை பண்ணுகிறார்கள். கர்த்தர் பேதுருவை யூதஜனங்களின் எண்ணங்களுக்கும் விடுதலைபண்ணியிருக்கிறார். பஸ்கா பண்டிகைக்கு மறுநாளில் ஏரோது பேதுருவை தங்களுக்கு முன்பாக நிறுத்துவான் என்று யூதர்கள் எதிர்பார்க்கிறார்கள். ஏரோதுவினால் அவர்களுடைய எதிர்பார்ப்பை நிறைவேற்ற முடியவில்லை.

அவன் ராஜாவாகயிருந்தாலும் பேதுருவிடம் தோல்வியடைந்தவனாக வெட்கப்பட்டு யூதேயா தேசத்தைவிட்டு செசரியா பட்டணத்திற்குப் போய் விடுகிறான். யூதஜனங்களுக்கு தான் கொடுத்த வார்த்தையை ஏரோதுவினால் நிறைவேற்ற முடியவில்லை. ஏரோதுவின் இருதயம் இதுவரையிலும் பெருமையினால் நிறைந்திருந்தது. பெருமையின் ஆவி அவனை ஆளுகை செய்தது. இப்போதோ அவன் தாழ்த்தப்பட்டிருக்கிறான். அவனுக்கு அவமானம் உண்டாயிற்று. இந்த அவமானத்தோடு அவனால் யூதேயா தேசத்தில் வாசம்பண்ண முடியவில்லை. ஆகையினால் அந்தத் தேசத்தைவிட்டு செசரியா பட்டணத்திற்குப்போய் வாசம்பண்ணுகிறான்.

ஏரோதுவின் மரணம்
அப் 12 : 20-23

அப் 12:20. அக்காலத்திலே ஏரோது தீரியர்பேரிலும் சீதோனியர்பேரிலும் மிகவும் கோபமாயிருந்தான். தங்கள் தேசம் ராஜாவின் தேசத்தினால் போஷிக்கப்பட்டபடியினால், அவர்கள் ஒருமனப்பட்டு, அவனிடத்தில் வந்து, ராஜாவின் வீட்டு விசாரணைக் காரனாகிய பிலாஸ்துவைத் தங்கள் வசமாக்கிச் சமாதானம் கேட்டுக் கொண்டார்கள்.

அப் 12:21. குறித்தநாளிலே: ஏரோது ராஜவஸ்திரம் தரித்துக்கொண்டு, சிங்காசனத்தின் மேல் உட்கார்ந்து, அவர்களுக்குப் பிரசங்கம்பண்ணினான்.

அப் 12:22. அப்பொழுது ஜனங்கள் இது மனுஷ சத்தமல்ல, இது தேவசத்தம் என்று ஆர்ப்பரித்தார்கள்.

அப் 12:23. அவன் தேவனுக்கு மகிமையைச் செலுத்தாதபடியினால் உடனே கர்த்தருடைய தூதன் அவனை அடித்தான்; அவன் புழுப்புழுத்து இறந்தான்.

சமாதானம் கேட்டுக் கொண்டார்கள்

அக்காலத்திலே ஏரோது தீரியர்பேரிலும் சீதோனியர்பேரிலும் மிகவுங் கோபமாயிருந்தான். தங்கள் தேசம் ராஜாவின் தேசத்தினால் போஷிக்கப்பட்டபடியினால், அவர்கள் ஒருமனப்பட்டு, அவனிடத்தில் வந்து, ராஜாவின் வீட்டு விசாரணைக் காரனாகிய பிலாஸ்துவைத் தங்கள் வசமாக்கிச் சமாதானம் கேட்டுக் கொண்டார்கள் (அப் 12:20).

தேவன் ஏரோது ராஜாவைத் தண்டிக்கிறார். அவன் யாக்கோபைப் பட்டயத்தினால் கொலை செய்தான். பேதுருவையும் கொலை செய்ய திட்டமிட்டு அவனைச் சிறைச்சாலையில் காவல் வைத்தான். இந்தக் காரியங்கள் தேவனுடைய பார்வையில் அருவருப் பாயிருக்கிறது. கர்த்தர் தம்முடைய பிள்ளைகளைப் பாதுகாக்கிறார். பாவிகள் தங்கள் பாவத்தைக் குறித்து தேவனுக்கு கணக்கு ஒப்புவிக்கவேண்டும். ஏரோது ராஜா துணிகரமாகப் பாவம் செய்கிறான். யூதர்களைப் பிரியப்படுத்த வேண்டும் என்பதற்காக பேதுருவைக் கொலை செய்யலாம் என்று துன்மார்க்கமாய்ச் சிந்திக்கிறான். ஏரோதுவின் இருதயத்தில் கொலைபாதக வெறி இருக்கிறது. அத்துடன் அவனுடைய உள்ளத்தில் பெருமையும் நிரம்பியிருக்கிறது.

தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார். சிறுமையுள்ளவர் களுக்கோ கிருபை அளிக்கிறார். தீரியரும் சீதோனியரும் ஏரோதுக்கு விரோதமாக ஏதோ தவறு செய்திருக்கிறார்கள். இதனால் ஏரோது தீரியர் பேரிலும் சீதோனியர் பேரிலும் மிகவும் கோபமாயிருக்கிறான். சிறிய பிரச்சனையாக இருந்தாலும் ஏரோது அதைப் பெரிதுபடுத்துகிறான்.

இவர்கள் ஏதோ ஒரு சிறிய தவறுதான் செய்திருக்கிறார்கள். அவர்களுடைய தப்பிதங்களை ஏரோது மன்னித்துவிடலாம். ஆனால் மன்னிக்கும் சுபாவம் ஏரோதிடம் இல்லை. அவர்கள் பெயரில் மிகவும் கோபமாயிருக்கிறான்.

தீரியருக்கும் சீதோனியருக்கும் ஏரோது ராஜாவின் உதவி தேவைப்படுகிறது. அவர்களுடைய தேசம் ஏரோது ராஜாவின் தேசத்தினால் போஷிக்கப்படுகிறது. தீருவும் சீதோனும் வியாபாரம் செய்கிற பட்டணங்கள். அந்தச் தேசத்தில் தானியம் விளையாது. கானான் தேசத்தில் விளைகிற தானியங்களே இந்தப் பட்டணத்தாரைப் போஷிக்கிறது. ஆனால் ஏரோது ராஜாவோ இவர்கள்மீது கோபப்பட்டு, கானான் தேசத்திலிருந்து தீருவுக்கும் சீதோனுக்கும் தானியம் அனுப்பப்படுவதை தடைபண்ணிவிடுகிறான். இதனால் தீரு பட்டணத்தாரும் சீதோன் பட்டணத்தாரும் தானியம் கிடைக்காமல் பசியினால் வாடுகிறார்கள். அவர்கள் எப்படியாவது ஏரோது ராஜாவிடம் சமாதானம் பண்ணிக்கொள்ளவேண்டும் என்று முயற்சிபண்ணுகிறார்கள்.

ஒரு தேசம் மற்றொரு தேசத்தை உணவுக்காகச் சார்ந்திருக்கும்போது, சில சமயங்களில் அவர்களுக்கு உதவி கிடைக்காமல் போய்விடும். மனுஷரை நம்பினால் ஏமாற்றம் உண்டாகும். ஆனால் கர்த்தரை நம்பும்போது நமக்கு ஒரு நன்மையும் குறைவுபடாது. நாம் தேவனோடு சமாதானமாயிருக்கவேண்டும். அவருக்கு முன்பாக நம்மைத் தாழ்த்தவேண்டும். அவரே நம்முடைய தேவைகளைச் சந்திப்பார் என்று அவரைச் சார்ந்திருக்கவேண்டும். தேவன் நம்மை ஒருபோதும் கைவிடமாட்டார்.

தீரியரும் சீதோனியரும் தங்கள் போஜனத்திற்கு கர்த்தரை நம்புவதற்குப் பதிலாக ஏரோது ராஜாவை நம்புகிறார்கள். கர்த்தரிடத்தில் சமாதானமாயிருப்பதற்குப் பதிலாக, ஏரோது ராஜாவிடம் சமாதானமாகயிருக்க வேண்டுமென்று முயற்சி செய்கிறார்கள். ஏரோது ராஜாவின் அரண்மனையில் பிலாஸ்து என்பவன் வீட்டு விசாரணைக்காரனாக பணிபுரிகிறான். இவன் ஏரோதுக்கு வலதுகையைப்போல செயல் படுகிறான். இவனிடத்தில் சொன்னால் அந்தச் செய்தி ராஜாவுக்குப் போய்விடும். பிலாஸ்துவே ஏரோது ராஜாவுக்கு எல்லா விஷயங்களிலும் பிரதிநிதியாக இருக்கிறான்.

ஏரோது ராஜாவுக்கும் பிலாஸ்துவுக்கும் இடையிலுள்ள நெருங்கிய தொடர்பு தீரியருக்கும் சீதோனியருக்கும் தெரியவருகிறது. இவர்கள் ஒருமனப்பட்டு ஏரோது ராஜாவினிடத்திற்குப் போவதற்குப் பதிலாக, அவனுடைய வீட்டு விசாரணைக் காரனாகிய பிலாத்துவினிடத்திற்குப் போகிறார்கள். அவனைத் தங்கள் வசமாக்கிக்கொள்கிறார்கள். அவன் மூலமாக ஏரோது ராஜாவிடம் சமாதானம் கேட்டுக்கொள்கிறார்கள். தங்களுடைய தப்பிதங்களை ராஜா மன்னிக்க வேண்டுமென்றும், இனிமேல் ஒருபோதும் இப்படிப்பட்ட தப்பிதம் செய்யமாட்டோ மென்றும், தங்கள் தேசத்திற்கு மறுபடியும் தானியத்தை அனுப்பவேண்டுமென்றும் பிலாஸ்துவின் மூலமாய் கேட்டுக் கொள்கிறார்கள். ஏரோது ஏற்கெனவே பெருமைப்படுகிறவன். இப்போது தீருயரும் சீதோனியரும் அவனுக்கு முன்பாக தாழ்ந்துபோவதினால் ஏரோதின் பெருமை அதிகரிக்கிறது.

பிரசங்கம்பண்ணினான்

குறித்தநாளிலே: ஏரோது ராஜவஸ்திரம் தரித்துக்கொண்டு, சிங்காசனத்தின் மேல் உட்கார்ந்து, அவர்களுக்குப் பிரசங்கம்பண்ணினான் (அப் 12:21).

ஏரோது ராஜாவும் தீரியர், சீதோனியர் ஆகியோரும் சந்திப்பதற்கு ஒரு நாள் குறிக்கப்படுகிறது. அந்த நாளில் சீதோனியரும் தீரியரும் ஏரோது ராஜாவுக்கு முன்பாக தங்கள் தவறுகளுக்காக முறைப்படி மன்னிப்புக் கேட்கப்போகிறார்கள். இனிமேல் தப்பிதம் செய்யமாட்டோமென்று வாக்குப்பண்ணப்போகிறார்கள். அதற்காக குறிக்கப்பட்ட நாளிலே ஏரோது ராஜா ராஜவஸ்திரம் தரித்துக்கொண்டு, சிங்காசனத்தின் மேல் உட்காருகிறான்.

மனுஷருடைய வெளித்தோற்றத்தை வைத்து நாம் அவர்களை மதிப்பிடக் கூடாது. மனுஷன் முகத்தைப்பார்க்கிறான். கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார். தான் ராஜவஸ்திரம் தரித்து சிங்காசனத்தில் அமர்ந்திருப்பதினால் ஏரோது தன்னை மிகப்பெரியவனாகக் காண்பித்துக்கொள்கிறான். இக்காலத்தில் ஒரு சிலர் ஏரோது ராஜாவைப்போலவே இருக்கிறார்கள். தங்களுடைய ஆடை ஆபரணங்களினாலும், அலங்காரங் களினாலும் தங்களை பெரியவர்களாகக் காண்பிக்கிறார்கள். அதற்காகப் பெருமைப்படுகிறார்கள்.

ஏரோது ராஜா சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்து தீரியருக்கும் சீதோனியருக்கும் பிரசங்கம்பண்ணுகிறான். ஏரோது ராஜா சாதுரிய வார்த்தைகளைப் பேசக்கூடியவன். வாக்குவல்லவன். ஏரோது என்ன சொல்லப்போகிறானோ என்று தீரியரும் சீதோனியரும் அவனுடைய முகத்தையே பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஏரோது தங்களை மன்னிப்பானா, தங்கள் தேசத்திற்கு மறுபடியும் தானியம் தருவானா என்று தீரியருக்கும் சீதோனியருக்கும் இன்னும் உறுதியாகத் தெரியவில்லை. ஏரோதுவின் முடிவு இன்னும் ரகசியமாகவே இருக்கிறது. ஏரோது தன் வாயைத் திறந்து தங்களுக்கு எப்போது நல்ல வார்த்தை சொல்லுவான் என்று தீரியரும் சீதோனியரும் ஆவலோடு காத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்போது ஏரோது ராஜா அவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிறான். அவர்களைக் குறித்து தான் செய்திருக்கிற முடிவை அவர்களுக்கு அறிவிக்கிறான்.

இது தேவசத்தம்

அப்பொழுது ஜனங்கள் இது மனுஷ சத்தமல்ல, இது தேவசத்தம் என்று ஆர்ப்பரித்தார்கள் (அப் 12:22).

ஏரோது ராஜாவின் பிரசங்கத்தைக் கேட்ட ஜனங்கள் ஆர்ப்பரிக்கிறார்கள். "இது மனுஷசத்தமல்ல, இது தேவசத்தம்" என்று மகா ஆரவாரமாய்ச் சொல்லுகிறார்கள். இவர்களுக்கு ராஜாவின் தயவு தேவைப்படுகிறது. ராஜாவின் பிரசங்கம் நன்றாயிருந்ததா, இல்லையா என்பதில் இவர்களுக்கு அக்கரையில்லை. ஏரோது நல்ல செய்திகளைச் சொன்னா என்பதும் தெரியவில்லை. ஏரோதின் பிரசங்கத்தினால் இவர்களுக்கு ஏதாவது பிரயோஜனமுண்டாயிற்றா என்பதும் தெரியவில்லை. இந்த ஜனங்களோ ராஜாவின் தயவை எதிர்பார்த்திருக்கிறார்கள். அவனை முகஸ்துதி செய்தாவது அவனைச் சமாதானம் பண்ண வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள்.

ஏரோது அவர்களுக்கு பிரசங்கித்தவுடனே "இது மனுஷசத்தமல்ல, இது தேவசத்தம்" என்று ஆர்ப்பரிக்கிறார்கள். ராஜா தங்கள் ஆர்ப்பரிப்பைக் கேட்டு மிகுந்த சந்தோஷப்பட்டு, தங்களோடு சமாதானமாயிருப்பான் என்று எதிர்பார்க்கிறார்கள். இந்த ஆர்ப்பரிப்பின் சத்தமானது ஏரோது ராஜாவின் கோபத்தைத் தணிக்கும் என்று நினைத்து மகா சத்தமாய் ஆர்ப்பரிக்கிறார்கள். ஏரோது ராஜாவைப் புகழ்ந்து பேசினால் அவன் சந்தோஷப்பட்டு, தங்கள் தேசத்திற்குத் தானியம் அனுப்ப சம்மதம் கொடுப்பான் என்று எதிர்பார்க்கிறார்கள். மனதில் இவ்வளவு எண்ணங்களையும் வைத்துக் கொண்டுதான் அந்த ஜனங்கள், ஏரோது ராஜாவின் பிரசங்கத்தைக் கேட்டபோது "இது மனுஷசத்தமல்ல, இது தேவசத்தம்" என்று ஆர்ப்பரிக்கிறார்கள்.

நாம் மனுஷருடைய புகழ்ச்சியை விரும்பினால், அந்தப் புகழ்ச்சிக்கு சீக்கிரம் அடிமையாகிவிடுவோம். சமுதாயத்தில் பல தலைவர்கள் புகழ்ச்சிக்கு அடிமையாகி அழிந்துபோனார்கள். புகழ்ச்சியான வார்த்தைகள் ஒருவரை ஊன்றக் கட்டியெழுப்புவதற்குப் பதிலாக, அவரை அழித்துவிடும். அவருக்குப் பாதிப்பு உண்டாக்கும். பெருமையான வார்த்தை களினால் அவர்கள் தங்களையே மறந்துவிடுவார்கள். தங்களைப்பற்றி எண்ணவேண்டியதற்கு அதிகமாக எண்ணுவார்கள். பெருமை வரும்போது அகந்தை வரும். அகந்தை வந்தால் வீழ்ச்சி உண்டாகும்.

மனுஷர் பேசும் புகழ்ச்சியான வார்த்தைகளைச் சாத்தான் தன்னுடைய ஆயுதமாகப் பயன்படுத்துகிறான். ஒருவரை வீழ்த்துவதற்கு, அவரை அதிகமாய்ப் புகழ்ந்து பேசினாலே போதுமானது. ஒரு மனுஷனைப் புகழ புகழ அந்த மனுஷனுக்கு வீழ்ச்சி வந்துகொண்டேயிருக்கும். நம்மை யாராவது புகழ்ந்தால் அந்தப் புகழ்ச்சியின் வார்த்தைகளுக்கு செவிகொடுக்கக்கூடாது.

துதி கன மகிமை அனைத்தையும் நாம் தேவனுக்கே சொந்தமாக்கவேண்டும். நமக்குச் சொந்தமாக்கிக்கொள்ளக்கூடாது.

ஏரோது ராஜா பிரசங்கம்பண்ணிய பொழுது, ஜனங்கள் "இது மனுஷசத்தமல்ல, இது தேவசத்தம்" என்று ஆர்ப்பரித்து அவனைப் புகழ்ந்தபோது, அந்தப் புகழ்ச்சியான வார்த்தைகளை ஏரோது தனக்குச் சொந்தமாக்கிக் கொள்கிறான். தேவனுக்கு மகிமையைச் செலுத்தவில்லை. ஜனங்கள் தன்னைப் புகழும்போது ஏரோது அமைதியாக இருக்கிறான். தன்னைப் புகழுவதற்காக அவர்களைக் கடிந்துகொள்ளவில்லை. ஏரோது தேவனுக்கு மகிமையையும் செலுத்தவில்லை. ஏரோது தன்னையே தேவனாக நினைத்துக்கொள்கிறான். தேவனுக்குரிய மகிமை தனக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்று எதிர்பார்க்கிறான்.

ஜனங்கள் ஏரோதின் பேச்சைக் கேட்டு "இது தேவசத்தம்" என்று ஆர்ப்பரித்துச் சொன்னதை, ஏரோது அங்கீகரிக்கிறான். தான் மெய்யாகவே தேவனென்றும், தன்னுடைய வார்த்தைகள் தேவசத்தம்தான் என்றும் நினைத்து தன் உள்ளத்தில் பெருமைப்படுகிறான். ஜனங்கள் தனக்குக் கொடுக்கவேண்டிய தேவ மரியாதையைத் தனக்குக் கொடுத்து தன்னை கனப்படுத்துவதாக பெருமைப்படுகிறான்.

புழுப்புழுத்து இறந்தான்

அவன் தேவனுக்கு மகிமையைச் செலுத்தாதபடியினால் உடனே கர்த்தருடைய தூதன் அவனை அடித்தான்; அவன் புழுப்புழுத்து இறந்தான் (அப் 12:23).

மனுஷர் ஏரோதைப் புகழும்போது, அவன் தேவனுக்கு மகிமையைச் செலுத்தவில்லை. ஆகையினால் கர்த்தருடைய தூதன் ஒருவன் ஏரோதை உடனே அடிக்கிறான். ஏரோது புழுப்புழுத்து இறக்கிறான். ஏரோது சபையைத் துன்பப்படுத்தினான், யாக்கோபை பட்டயத்தினால் கொலைசெய்தான், பேதுருவைச் சிறைச்சாலையில் அடைத்து வைத்தான். இவை தவிர அவன் கர்த்தருக்கும் அவருடைய பிள்ளைகளுக்கும் விரோதமாக இன்னும் அநேக துன்மாக்கமான காரியங்களைச் செய்தான்.

பழிவாங்குதல் கர்த்தருக்குரியது. கர்த்தர் ஏரோது ராஜாவைப் பழிவாங்குகிறார். தான் செய்த தீயசெயல்களுக்கு ஏரோது தண்டனை அனுபவிக்கிறான். ஏரோது தன்னை பெரியவனாகக் காண்பித்துக்கொண்டான். அவனை அடிப்பதற்கு கர்த்தர் நேரடியாக வரவில்லை. கர்த்தருடைய பார்வையில் ஏரோது மிகவும் சாதாரணமான மனுஷன். தேவன் தம்முடைய தூதரில் ஒருவனை அனுப்பி, ஏரோதை அடிக்கச் சொல்லுகிறார். அவன் ஏரோதை அடித்தவுடன் புழுப்புழுத்து இறந்துபோகிறான்.

தேவன் தம்முடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்கு பணிவிடை ஆவிகளை நியமித்திருக்கிறார். இந்த ஆவிகள் தேவனுடைய சித்தத்தின் பிரகாரமாக மனுஷருக்குத் தெய்வீக கிருபைகளைக் கொடுக்கும். இதே பணிவிடை ஆவிகள் தேவனுடைய சித்தத்தின் பிரகாரமாக தெய்வீக நீதியையும் நிறைவேற்றும். தேவன் தமக்குச் சித்தமான பிரகாரம் தம்முடைய பணிவிடை ஆவிகளைப் பயன்படுத்துகிறார்.

ஜனங்கள் ஏரோது ராஜாவின் பேச்சைக் கேட்டு "இது மனுஷசத்தமல்ல, இது தேவசத்தம்" என்று ஆர்ப்பரித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஆர்ப்பரிக்கும்போதுதான் கர்த்தருடைய தூதன் ஏரோதை அடிக்கிறான். மனுஷர் ஏரோதைப் புகழுவதும், கர்த்தருடைய தூதன் அவனை அடிப்பதும் ஒரே நேரத்தில் சம்பவிக்கிறது. ஏரோது தேவனுக்கு மகிமையைச் செலுத்தாதபடியினால் அவனுக்கு இந்த நியாயத்தீர்ப்பு உண்டாயிற்று. ஏரோதை அழிப்பதற்கு கர்த்தர் வேறு ஒரு ராஜாவை அனுப்பவில்லை. ஒரு புழுவை அனுப்புகிறார். அந்தப்புழு அவனைத் தின்றுபோடுகிறது. "புழுப்புழுத்து இறந்தான்" என்னும் வாக்கியத்திற்கு "அவனுடைய சரீரத்தை புழுக்கள் தின்றுபோட்டது" என்று பொருள். அவன் சரீரம் அழுகிப்போயிற்று. ஏரோது தன்னுடைய சரீரத்தின்மீது ராஜாவஸ்திரம் தரித்திருக்கிறான். சரீரத்தின் வெளியிலோ ராஜவஸ்திரம். உள்ளேயோ புழுக்கள்.

நம்முடைய சரீரத்தைக்குறித்து நாம் பெருமைப்படக்கூடாது. சரீரத்தைவிட ஆத்துமாவே முக்கியமானது. சரீரத்தின் ஆசையை நிறைவேற்றி ஆத்துமாவை அழித்துப்போடக்கூடாது. நாம் மண் என்பதை நினைவுகூரவேண்டும். நம்முடைய சரீரம் மண்ணுக்குத் திரும்பும் என்பதை மறந்துவிடக்கூடாது. சாதாரண புழுக்கள்கூட நம்முடைய சரீரத்தைத் தின்றுபோடும் என்னும் உணர்வு நமக்குள் எப்போதும் காணப்படவேண்டும். நாம் பலவீனமானவர்கள். தேவனுக்கு எதிர்த்து நிற்கக்கூடாது. தேவன் தம்முடைய நீதியை நமக்கு விரோதமாகச் செயல்படுத்த நினைத்தால், புழுவைப்போல சாதாரண வஸ்துவை அவர் தம்முடைய கருவியாகப் பயன்படுத்துவார்.

ஏரோது ராஜா இருதயத்தில் பெருமைப்பட்டான். அகந்தை உள்ளத்தோடு இருந்தான். அவனைத் தாழ்த்துவதற்கு கர்த்தர் அதிகநேரம் எடுத்துக் கொள்ளவில்லை. மனுஷருடைய புகழ்ச்சி அவனைப் பாதுகாக்கவில்லை. அது அவனை மேன்மைப்படுத்தவில்லை. கர்த்தருடைய தூதன் ஏரோதை அடிக்கும்போது, அவனைப் புகழ்ந்து பேசி ஆர்ப்பரித்த ஜனங்களால், அவனைக் காப்பாற்ற முடியவில்லை. ஏரோது புழுப்புழுத்து இறந்ததினால் அவனுடைய பெருமை எல்லாம் அவனை விட்டு நீங்கிப்போயிற்று. அவனுடைய சரீரமும் அழிந்துபோயிற்று. அவனுடைய பெருமையும் சீர்குலைந்துபோயிற்று.

பர்னபாவும் சவுலும்
அப் 12 : 24,25

அப் 12:24. தேவவசனம் வளர்ந்து பெருகிற்று.

அப் 12:25. பர்னபாவும் சவுலும் தர்ம ஊழியத்தை நிறைவேற்றினபின்பு மாற்கு என்னும் மறுபேர்கொண்ட யோவானைக் கூட்டிக் கொண்டு எருசலேமைவிட்டுத் திரும்பி வந்தார்கள்.

சுவிசேஷம் பிரசங்கிப்பதற்குத் திறந்த வாசல் உண்டாயிற்று. தேவவசனம் வளர்ந்து பெருகுகிற்று. கர்த்தருடைய ஊழியக்காரர்கள் சுவிசேஷத்தைத் தைரியமாய்ப் பிரசங்கிக்கிறார்கள். ஏரோது ராஜா யாக்கோபைப் பட்டயத்தால் கொன்றுபோட்டான். கர்த்தரோ தம்முடைய தூதனை அனுப்பி ஏரோதை அடித்துக் கொன்றுபோடுகிறார். கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை பாதுகாக்கிறார் என்னும் நிச்சயம் சீஷர்கள் மத்தியில் உண்டாயிற்று. ஏராளமான ஜனங்கள் இயேசுகிறிஸ்துவைத் தங்களுடைய இரட்சராக ஏற்றுக்கொண்டு சபையில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். ஏரோது ராஜாவின் மரணத்திற்குப் பின்பு தேவவசனம் இன்னும் அதிகமாய் வளர்ந்து பெருகிற்று.

பர்னபாவும் சவுலும் எருசலேமிலே தரும ஊழியத்தைச் செய்துகொண்டிருக்கிறார்கள். அதை நிறைவேற்றிவிட்டு அவர்கள் எருசலேமைவிட்டுத் திரும்பிவருகிறார்கள். எருசலேமில் அவர்களுக்கு ஏராளமான சிநேகிதர்கள் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் விட்டுவிட்டு தங்களுடைய ஊழியஸ்தலமாகிய அந்தியோகியாவிற்கு பர்னபாவும் சவுலும் திரும்பிவருகிறார்கள். கர்த்தர் நமக்கு எந்த இடத்தில் ஊழியத்தை நியமித்திருக்கிறாரோ, நாம் அந்த இடத்தில் இருந்து ஊழியம் செய்யவேண்டும்.

அவர்கள் இருவரும் அந்தியோகியாவுக்குத் திரும்பி வரும்போது தங்களோடு மாற்கு என்னும் பேர்கொண்ட யோவானைக் கூட்டிக்கொண்டு வருகிறார்கள். இவனுடைய தாயாரின் வீட்டில்தான் விசுவாசிகள் பேதுருவுக்காக ஊக்கமாய் ஜெபித்துக்கொண்டிருந்தார்கள். அவள் பர்னபாவின் சகோதரி. ஒருவேளை பர்னபா எருசலேமுக்குப்போயிருக்கும்போது தன் சகோதரி மரியாளுடைய வீட்டில் தங்கியிருந்திருக்கவேண்டும். பவுலும் அவர்களோடு அந்த வீட்டில் தங்கியிருந்திருக்கவேண்டும்.

மரியாளின் குடும்பத்தாரோடு பர்னபாவுக்கும் சவுலுக்கும் நெருங்கிய பழக்கமுண்டாயிற்று. மரியாளின் குமாரனாகிய மாற்கு என்னும் பேர்கொண்ட யோவானோடு இவர்களுக்குச் சிநேகம் உண்டாயிற்று. ஆகையினால் பர்னபாவும் சவுலும் எருசலேமைவிட்டு அந்தியோகியாவுக்குத் திரும்பி வரும்போது, மாற்குவையும் தங்களோடு கூட்டிக்கொண்டு வருகிறார்கள். ஊழியத்தில் அவனுக்கு பயிற்சி கொடுப்பதற்காக அழைத்து வருகிறார்கள்.

கர்த்தருடைய ஊழியத்தில் வாலிபர்களுக்கு பயிற்சி கொடுத்து அவர்களை ஊழியத்தில் பயன்படுத்துவது மிகவும் நல்லது. மூத்த ஊழியக்காரர்கள் இளைய ஊழியக்காரர்களுக்கு பயிற்சி கொடுக்கவேண்டும். இதைத் தங்கள் ஊழியத்தின் ஒரு பகுதியாக நினைத்து நிறைவேற்றவேண்டும்.

13 அதிகாரம்

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடம் உலகம் முழுவதும் சென்று சகல ஜாதிகளையும் சீஷர்களாக்குமாறு சொன்னார். இது இயேசுகிறிஸ்துவின் பிரதான கட்டளை. சீஷர்கள் இதுவரையிலும் இந்தக் கற்பனையை நிறைவேற்றவில்லை. புறஜாதியார் மத்தியில் ஊழியம் அதியமாய் நடைபெறவில்லை. கொர்நேலியுவுக்கும் அவனுடைய வீட்டாருக்கும் மாத்திரமே ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சம்பவம் தவிர, சுவிசேஷ ஊழியம் இதுவரையிலும் பொதுவாக யூதர்கள் மத்தியிலேயே நடைபெற்று வருகிறது.

கர்த்தர் தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரம் தம்முடைய சுவிசேஷத்தை எல்லா தேசங்களிலும், எல்லா ஜாதிகள் மத்தியிலும் பிரசங்கம்பண்ணுவதற்கு ஆரம்பிக்கிறார். இந்த ஊழியத்திற்காக பர்னபாவையும் பவுலையும் அபிஷேகம்பண்ணுகிறார் (அப் 13:1-3). இவர்கள் இருவரும் சீப்புரு தீவில் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணுகிறார்கள். எலிமா என்னும் பெயருள்ள மாயவித்தைக்காரன் மூலமாக இவர்களுடைய ஊழியத்திற்கு எதிர்ப்பு உண்டாயிற்று (அப் 13:4-13). பிசீதியாவிலுள்ள அந்தியோகியாவில் பவுல் யூதர்கள் மத்தியிலே பிரசங்கம்பண்ணுகிறார் (அப் 13:14-41). புறஜாதியாரின் வேண்டுகோளை ஏற்று பவுல் அவர்கள் மத்தியிலும் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணுகிறார் (அப் 13:42-49). யூதர்கள் மூலமாய் அப்போஸ்தலருக்குப் பிரச்சனை உண்டாயிற்று (அப் 13:50-52).

அந்தியோகியா சபை
அப் 13 : 1-3

அப் 13:1. அந்தியோகியா பட்டணத்திலுள்ள சபையிலே பர்னபாவும், நீகர் என்னப்பட்ட சிமியோனும், சிரேனே ஊரானாகிய லூகியும், காற்பங்கு தேசாதிபதியாகிய ஏரோதுடனேகூட வளர்க்கப்பட்ட மனாயீனும், சவுலும், தீர்க்கதரிசிகளாயும் போதகர்களாயும் இருந்தார்கள்.

அப் 13:2. அவர்கள் கர்த்தருக்கு ஆராதனை செய்து, உபவாசித்துக்கொண்டிருக்கிற போது: பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்துவிடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம்பற்றினார்.

அப் 13:3. அப்பொழுது உபவாசித்து ஜெபம்பண்ணி, அவர்கள்மேல் கைகளை வைத்து, அவர்களை அனுப்பினார்கள்.

தீர்க்கதரிசிகளும் போதகர்களும்

அந்தியோகியா பட்டணத்திலுள்ள சபையிலே பர்னபாவும், நீகர் என்னப்பட்ட சிமியோனும், சிரேனே ஊரானாகிய லூகியும், காற்பங்கு தேசாதிபதியாகிய ஏரோதுடனேகூட வளர்க்கப்பட்ட மனாயீனும், சவுலும், தீர்க்கதரிசிகளாயும் போதகர்களாயும் இருந்தார்கள் (அப் 13:1).

புறஜாதியார் மத்தியில் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணுவதற்கு கர்த்தர் பர்னபாவையும் சவுலையும் பிரித்தெடுத்து அபிஷேகம் பண்ணுகிறார். அந்தியோகியாவிலுள்ள சபை வளர்ந்து பெருகியிருக்கிறது. இந்தச் சபையில் பலர் தீர்க்கதரிசிகளாகவும் போதகர்களாவும் இருக்கிறார்கள். பரிசுத்த ஆவியானவரின் விசேஷித்த வரங்களையும் கிருபைகளையும் இவர்கள் பெற்றிருக்கிறார்கள். தாங்கள் பெற்றுக்கொண்ட வரத்தை இவர்கள் கர்த்தருடைய நாமமகிமைக்காகவும், சபையாரின் பிரயோஜனத்திற்காகவும் பயன்படுத்துகிறார்கள்.

அகபு என்பவன் வரப்போகிற கொடிய பஞ்சத்தைக் குறித்துத் தீர்க்கதரிசனமாகச் சொன்னான். இவன் ஒரு தீர்க்கதரிசி மாத்திரமே. இவன் போதகனல்ல. இவனைப்போலவே பல ஊழியக்காரர்கள் தீர்க்கதரிசிகளாக இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் போதகர்களாக இருக்கமாட்டார்கள். வேறு சிலரோ போதகர்களாக இருப்பார்கள். ஆனால் தீர்க்கதரிசிகளாக இருக்கமாட்டார்கள்.

அந்தியோகியா ஒரு பெரிய பட்டணம். இங்குள்ள சபையில் ஏராளமான விசுவாசிகள் இருக்கிறார்கள். இவர்களெல்லோருக்கும் போதகம் பண்ணுவதற்கு பல போதகர்கள் தேவைப்படுகிறார்கள். இவர்களுக்கு ஊழியம் செய்த போதகர்களின் பெயர் இங்கு குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தப் பெயர் அட்டவணையில் பர்னபாவின் பெயர் முதலாவதாகவும், சவுலின் பெயர் கடைசியாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தச் சம்பவத்திற்குப் பின்பு பவுல் அதிக வல்லமையாய் ஊழியம் செய்கிறான். ஆகையினால் இதற்குப் பின்பு பவுலின் பெயர் முதலாவதாகவும், பர்னபாவின் பெயர் பவுலின் பெயருக்கு அடுத்தபடியாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அந்தியோகியாவிலுள்ள சபையில் பர்னபாவையும், சவுலையும் தவிர மேலும் மூன்றுபேர் தீர்க்கதரிசிகளாயும் போதகர்களாயும் ஊழியம் செய்து வருகிறார்கள். இவர்களில் ஒருவன் சிமியோன். இவன் கருப்பு நிறமுள்ளவன். ஆகையினால் இவனுடைய பெயரோடு "நீகர்" என்னும் வார்த்தையும் சேர்க்கப்பட்டிருக்கிறது. நீகர் என்னும் பெயருக்கு "கருப்பு நிறமுடையவர்" என்பது பொருள். இவனைத் தவிர சிரேனே ஊரானாகிய லூகி என்பவன் அந்தியோகியா சபையில் ஊழியம் செய்கிறான். மனாயீன் என்பவன் சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்துள்ளவன். காற்பங்கு தேசாதிபதியாகிய ஏரோதுடனே கூட இவன் வளர்க்கப்பட்டான். இவனுக்கு அரசியலில் நல்ல எதிர்காலம் இருந்தது. ஆனாலும் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினிமித்தம், இவன் உலக மேன்மையை விட்டுவிட்டு, அந்தியோகியா சபையில் தீர்க்கதரிசியாகவும் போதகராகவும் ஊழியம் செய்கிறான்.

யூதாதேசத்தின் காற்பங்கு தேசாதிபதிகள் கிறிஸ்தவ விசுவாசிகளை உபத்திரவப்படுத்துகிறார்கள். மனாயீன் அவர்களோடு சேர்ந்து விசுவாசிகளைத் துன்பப்படுத்துவதற்குப் பதிலாக, அந்தியோகியா சபையிலுள்ள விசுவாசிகளோடு சேர்ந்து கொண்டு, பாடுகளை அனுபவிப்பதைத் தெரிந்துகொள்கிறான். இவனுக்கு உலக மேன்மையைவிட கிறிஸ்துவின் ஊழியமே பெரியதாயிருக்கிறது. மற்றவர்களை அதிகாரத்தினால் ஆளுகை செய்வதைவிட, கிறிஸ்துவின் ஆளுகைக்குக் கீழ்ப்படிய தீர்மானம்செய்து சபையில் ஊழியம் செய்கிறான்.

பிரித்துவிடுங்கள்

அவர்கள் கர்த்தருக்கு ஆராதனை செய்து, உபவாசித்துக் கொண்டிருக்கிறபோது: பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்துவிடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம்பற்றினார் (அப் 13:2).

அந்தியோகியா சபையில் தீர்க்கதரிசிகளாகவும் போதகர்களாகவும் ஊழியம் செய்கிறவர்கள் கர்த்தருக்கு ஆராதனை செய்து உபவாசித்துக் கொண்டிருக்கிறார்கள். கர்த்தருக்காக ஞானமாய்ப் போதகம்பண்ணுகிறவர்கள் கர்த்தருக்கு மெய்யாகவே ஊழியம் செய்வார்கள். விசுவாசிகளுக்குப் போதகம்பண்ணுகிறவர்கள் கர்த்தருக்கு ஆராதனையும் செய்யவேண்டும். சபையின் ஊழியத்தில் கர்த்தரை ஆராதிப்பது முக்கிய பங்கு வகிக்கவேண்டும். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் எப்படிப்பட்ட ஊழியம் செய்தாலும் அவர்கள் கர்த்தரை ஆராதிப்பதை விட்டுவிடக்கூடாது.

அந்தியோகியா சபையிலுள்ள தீர்க்கதரிசிகளும் போதகர்களும் கர்த்தருடைய சமுகத்தில் உபவாசித்துக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய ஊழியத்தில் உபவாசம் நமக்கு ஆசீர்வாதத்தைத் தரும். இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் அவரோடிருந்த காலத்தில் அதிகமாய் உபவாசம்பண்ணவில்லை. மணவாளன் தங்களோடிருக்கையில் மணவாளனுடைய சிநேகிதர்கள் உபவாசிக்க மாட்டார்களென்று இயேசுகிறிஸ்துவும் சொல்லியிருக்கிறார். ஆனால் இப்போதோ மணவாளனாகிய இயேசுகிறிஸ்து பரமேறிப்போய்விட்டார். மணவாளன் சீஷர்களோடு இல்லை. ஆகையினால் சீஷர்கள் இப்போது உபவாசித்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஊழியக்காரர்கள் கர்த்தருக்கு ஆராதனை செய்து உபவாசித்துக்கொண்டிருக்கிற போது பரிசுத்த ஆவியானவர் அவர்களோடு பேசுகிறார். "பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்திற்காக அவர்களைப் பிரித்துவிடுங்கள்" என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம்பற்றுகிறார். ஆவியானவர் இவர்கள் இருவரையும் எந்த ஊழியத்திற்காக அழைத்திருக்கிறார் என்பதை இங்கு சொல்லவில்லை. ஆனால் ஆவியானவர் இதற்கு முன்பே இவர்களை புறஜாதியார் மத்தியில் ஊழியம் செய்வதற்காக அழைத்திருக்கிறார். ஆகையினால் பரிசுத்த ஆவியானவரின் வார்த்தை உபவாசித்துக்கொண்டிருக்கிற ஊழியக்காரர்களுக்கு நன்றாகப் புரிகிறது.

எருசலேமிலுள்ள ஆதித்திருச்சபையில் விருத்தசேதனமுள்ளவர்களுக்கு மாத்திரம் ஊழியம் செய்யவேண்டுமா, அல்லது விருத்தசேதனமில்லாதவர் களுக்கும் ஊழியம் செய்யலாமா என்று பிரச்சனை உண்டாயிற்று. பரிசுத்த ஆவியானவரின் உதவியினால் ஆதித்திருச்சபையார் இந்தப் பிரச்சனையைத் தீர்த்து வைத்திருக்கிறார்கள். பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகியோர் விருத்தசேதனமுள்ளவர்கள் மத்தியில் ஊழியம் செய்யவேண்டுமென்றும், பவுலும் பர்னபாவும் விருத்தசேதனமில்லாத புறஜாதியார் மத்தியில் ஊழியம் செய்ய வேண்டுமென்றும் தீர்மானிக்கிறார்கள். பரிசுத்த ஆவியானவர் இந்தத் தீர்மானத்தை அவர்களுக்கு ஏற்கெனவே கொடுத்திருக்கிறார்.

பவுலையும் பர்னபாவும் ஏற்கெனவே அழைத்த ஊழியத்திற்காக, இப்போது அவர்களைப் பிரித்துவிடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம்பற்றுகிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய ஆவியினால் தமக்கு ஊழியக்காரர்களை நியமிக்கிறார். இயேசுகிறிஸ்துவின் ஊழியத்திற்காக பரிசுத்த ஆவியானவர் ஒரு சில ஊழியக்காரர்களை வேறு பிரிக்கிறார். அவர்களுக்கு எப்படிப்பட்ட ஊழியத்தைக் கொடுக்கவேண்டுமென்றும் ஆவியானவர் தீர்மானம் செய்கிறார். பரிசுத்த ஆவியானவரே ஊழியக்காரர்களின் உள்ளத்தில் பேசி "பர்னபாவையும் சவுலையும் பிரித்துவிடுங்கள்" என்று சொல்லுகிறார்.

கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் அவருக்காகவும், பரிசுத்த ஆவியானவருக்காகவும் வேறுபிரிக்கப் பட்டவர்கள். ஆவியானவர் அவர்களிடத்தில் சொல்லும்போது "நான் அழைத்த ஊழியத்திற்காக அவர்களைப் பிரித்துவிடுங்கள்" என்று சொல்லுகிறார். இவர்கள் ஆவியானவருக்காகப் பிரிக்கப்படுகிறார்கள். தேவனுடைய ஊழியத்தைச் செய்வதற்காகப் பிரிக்கப்படுகிறார்கள். இவர்கள் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலினால் இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்யவேண்டும்.

இயேசுகிறிஸ்துவின் ஊழியத்திற்காக வேறுபிரிக்கப்பட்டிருக்கிற ஊழியக்காரர்கள் எல்லோரும், அவருடைய ஊழியத்தைச் செய்வதற்காகவே வேறுபிரிக்கப்பட்டிருக் கிறார்கள். தம்முடைய ஊழியத்தைச் செய்வதற்காகத்தான் கர்த்தர் விசுவாசி களை வேறுபிரிக்கிறாரே அல்லாமல், சும்மாயிருப்பதற்காக அவர் யாரையும் வேறுபிரிக்கவில்லை. கிறிஸ்துவுக்காகப் பாடுகளை அனுபவிப்பதற்காகவே அவர்கள் வேறுபிரிக்கப்பட்டிருக்கிறார்கள்.

கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் எல்லோரும், ஆவியானவர் தங்களை எந்த ஊழியத்திற்காக வேறுபிரித்திருக்கிறாரோ, அந்த ஊழியத்தை விசுவாசத்தோடும் உண்மையோடும் செய்யவேண்டும். நாம் அழைக்கப்பட்ட ஊழிய அழைப்பில் உண்மையுள்ளவர்களாக இருக்கவேண்டும்.

அனுப்பினார்கள்

அப்பொழுது உபவாசித்து ஜெபம்பண்ணி, அவர்கள்மேல் கைகளை வைத்து, அவர்களை அனுப்பினார்கள் (அப் 13:3).

அந்தியோகியா சபையிலுள்ள தீர்க்கதரிசிகளும் போதகர்களும் பர்னபாவையும் பவுலையும் பொதுவான ஊழியத்திற்குப் பிரதிஷ்டைபண்ணாமல், ஆவியானவர் அவர்களை எந்த ஊழியத்திற்காகப் பிரித்துவிடுமாறு சொன்னாரோ, அந்த ஊழியத்தைச் செய்வதற்காக அவர்கள் இருவரையும் பிரதிஷ்டைபண்ணி அனுப்புகிறார்கள். சிமியோனும், லூகியும், மனாயீனும் உபவாசித்து ஜெபம்பண்ணி, பர்னபா பவுல் ஆகியோர் மேல் தங்கள் கைகளை வைத்து அவர்களை அனுப்புகிறார்கள். அவர்களுக்காக ஜெபம்பண்ணுகிறார்கள்.

இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷ ஊழியம் ஒரு நற்காரியம். சுவிசேஷ ஊழியர்கள் நன்மை செய்கிறவர்கள். நல்லவர்களை நற்காரியத்திற்காக அனுப்பும்போது அவர்களுக்காக ஜெபம்பண்ணி அவர்களை ஆசீர்வதித்து அனுப்பவேண்டும். அதன்பிரகாரமாக இந்த மூன்று ஊழியக்காரர்களும் பர்னபாவுக்காகவும் பவுலுக்காகவும் உபவாசித்து ஜெபிக்கிறார்கள். பர்னபா மேலும் பவுல் மேலும் கைகளை வைத்து, அவர்களை ஆசீர்வதித்து, பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்கு நியமித்து வைத்திருக்கும் ஊழியத்தைச் செய்வதற்காக, அவர்கள் இருவரையும் வேறுபிரித்து அனுப்புகிறார்கள்.

ஊழியக்காரர்கள் பர்னபா மேலும் சவுல் மேலும் தங்கள் கைகளை வைக்கிறார்கள். அந்தியோகியா சபையில் இவர்கள் இருவருக்கும் கொடுக்கப்பட்டிருக்கும் ஊழியப் பொறுப்பிலிருந்து இவர்களை விடுவிக்கிறார்கள். பவுலும் பர்னபாவும் இனிமேல் செய்யப்போகும் ஊழியத்திற்கு தங்களுடைய ஒப்புதலைக் கொடுக்கிறார்கள். தங்களுடைய அனுமதியோடுதான் இவர்கள் இருவரும் புறஜாதியார் மத்தியில் ஊழியம் செய்யப்போகிறார்கள் என்பதை, அவர்கள் இருவர் மேலும் கைகளை வைத்து அறிக்கை செய்கிறார்கள். அவர்கள் மேல் கைகளை வைக்கும்போது தேவனுடைய ஆசீர்வாதமும், ஆவியானவரின் வழிநடத்துதலும் அவர்களோடு கூட இருக்கவேண்டுமென்று தேவனிடத்தில் ஜெபிக்கிறார்கள். இவர்களுடைய ஊழியம் கனிகொடுக்கிற ஊழியமாக இருக்கவேண்டுமென்று கர்த்தருடைய சமுகத்தில் உபவாசித்து ஜெபிக்கிறார்கள்.

மற்ற ஊழியக்காரர்களிலிருந்து ஆவியானவர் பர்னபாவையும் சவுலையும் தாம் அழைத்த ஊழியத்திற்காகப் பிரித்துவிடுமாறு சொல்லுகிறார். ஆவியானவர் இவர்கள் இருவரையும் கனப்படுத்துகிறார். தாம் அழைத்த ஊழியத்தை மற்ற ஊழியக்காரர்களுக்குக் கொடுக்காமல் இவர்கள் இருவருக்கு மாத்திரமே கொடுக்கிறார். இதனால் மற்ற ஊழியக்காரர்கள் பர்னபா மீதும் சவுல் மீதும் பொறாமைப்படவில்லை. அவர்களைச் சந்தோஷமாக ஊழியத்திற்கு அனுப்புகிறார்கள். அவர்கள் எந்தெந்த தேசங்களுக்கெல்லாம் போகிறார்களோ அங்கெல்லாம் கர்த்தருடைய கிருபையும், பாதுகாப்பு பராமரிப்பும், ஆவியானவரின் அநுக்கிரகமும் அவர்களோடு கூட இருக்கவேண்டுமென்று, அவர்களுக்காக ஜெபம்பண்ணி, அவர்களைச் சந்தோஷமாய் அனுப்புகிறார்கள்.

சீப்புரு தீவில் ஊழியம் அப் 13 : 4-13

அப் 13:4. அப்படியே அவர்கள் பரிசுத்தஆவியினால் அனுப்பப்பட்டுச் செலூக்கியாபட்டணத்துக்கு வந்து, கப்பல் ஏறி, அங்கிருந்து சீப்புருதீவுக்குப் போனார்கள்.

அப் 13:5. சாலமி பட்டணத்தில் வந்தபோது அவர்கள் யூதருடைய ஜெபஆலயங்களில் தேவவசனத்தைப் பிரசங்கித்தார்கள். யோவானும் அவர்களுக்கு உதவிக்காரனாயிருந்தான்.

அப் 13:6. அவர்கள் பாப்போபட்டணம் வரைக்கும் தீவை கடந்து வந்தபோது, பர்யேசு என்னும் பேர்கொண்ட மாயவித்தைக்காரனும் கள்ளத்தீர்க்கதரிசியுமான ஒரு யூதனை கண்டார்கள்.

அப் 13:7. அவன் விவேகமுள்ள மனுஷனாகிய செர்கியுபவுல் என்னும் அதிபதியுடனே கூட இருந்தான். அந்த அதிபதி பர்னபாவையும் சவுலையும் அழைப்பித்து, அவர்களிடத்தில் தேவவசனத்தைக் கேட்க ஆசையாயிருந்தான்.

அப் 13:8. மாயவித்தைக்காரன் என்று அர்த்தங்கொள்ளும் பேரையுடைய அந்த எலிமா என்பவன் அதிபதியை விசுவாசத்தினின்று திருப்பும்படி வகைதேடி, அவர்களோடு எதிர்த்துநின்றான்.

அப் 13:9. அப்பொழுது பவுல் என்று சொல்லப்பட்ட சவுல் பரிசுத்தஆவியினால் நிறைந்தவனாய் அவனை உற்றுப்பார்த்து:

அப் 13:10. எல்லாக் கபடமும் எல்லாப் பொல்லாங்கும் நிறைந்தவனே, பிசாசின் மகனே, நீதிக்கெல்லாம் பகைஞனே, கர்த்தருடைய செம்மையான வழிகளைப் புரட்டுவதில் ஓயமாட்டாயோ?

அப் 13:11. இதோ, இப்பொழுதே, கர்த்தருடைய கை உன்மேல் வந்திருக்கிறது, சிலகாலம் சூரியனைக் காணாமல் நீ குருடனாயிருப்பாய் என்றான். உடனே மந்தாரமும் இருளும் அவன்மேல் விழுந்தது; அவன் தடுமாறி, கைலாகு கொடுக்கிறவர்களைத் தேடினான்.

அப் 13:12. அப்பொழுது அதிபதி சம்பவித்ததைக் கண்டு, கர்த்தருடைய உபதேசத்தைக்குறித்து அதிசயப்பட்டு, விசுவாசித்தான்.

அப் 13:13. பின்பு பவுலும் அவனைச் சேர்ந்தவர்களும் பாப்போ பட்டணத்தைவிட்டுக் கப்பல் ஏறிப் பம்பிலியாவிலிருக்கும் பெர்கே பட்டணத்துக்கு வந்தார்கள். யோவான் அவர்களை விட்டுப் பிரிந்து, எருசலேமுக்குத் திரும்பிப்போனான்.

கப்பல் ஏறிப்போனார்கள்

அப்படியே அவர்கள் பரிசுத்தஆவியினால் அனுப்பப்பட்டுச் செலூக்கியாபட்டணத்துக்கு வந்து, கப்பல் ஏறி, அங்கிருந்து சீப்புருதீவுக்குப் போனார்கள். சாலமி பட்டணத்தில் வந்தபோது அவர்கள் யூதருடைய ஜெபஆலயங்களில் தேவவசனத்தைப் பிரசங்கித்தார்கள். யோவானும் அவர்களுக்கு உதவிக்காரனாயிருந்தான். (அப் 13:4,5).

பர்னபாவும் சவுலும் சீப்புரு தீவுக்கு போகிறார்கள். பர்னபா சீப்புரு தீவைச் சேர்ந்தவன். இது அவனுடைய சொந்தஊர். இந்த ஊரில் பர்னபா ஏற்கெனவே ஊழியம் செய்திருக்கிறான். சுவிசேஷத்தை விதைத்திருக்கிறான். இப்போது ஆத்தும அறுவடையை அறுப்பதற்காக இவர்கள் இருவரும் சீப்புரு தீவுக்குப் போகிறார்கள். பரிசுத்த ஆவியானவரே இவர்கள் இருவரையும் அந்தத் தீவுக்கு அனுப்புகிறார். இவர்கள் தங்கள் சுயசித்தத்தினாலோ, சுயதிட்டத்தினாலோ, சுயமுயற்சியினாலோ இந்த தீவுக்குப் போகவில்லை. பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலினால் இவர்கள் இந்தத் தீவுக்குச் சந்தோஷமாகப் போகிறார்கள்.

இவர்கள் அந்தியோகியா பட்டணத்திலிருந்து புறப்பட்டு முதலில் செலூக்கியா பட்டணத்திற்குப் போகிறார்கள். அங்கிருந்து கப்பல் ஏறி சீப்புரு தீவுக்குப் போகிறார்கள். சீப்புரு தீவுக்குப் போகும்போது சாலமி என்னும் பட்டணத்திற்கு வருகிறார்கள். இங்கு யூதருடைய ஜெபாலங்களில் தேவவசனத்தைப் பிரசங்கிக்கிறார்கள். சுவிசேஷ விதையை விதைக்கிறார்கள். அதன்பின்பு அவர்கள் அங்கிருந்து புறப்பட்டு பாப்போ பட்டணம் வரைக்கும் தீவைக் கடந்து வருகிறார்கள்.

பர்னபாவும் சவுலும் இந்தப் பட்டணங்களிலுள்ள யூதருடைய ஜெபாலயங்களில் தேவவசனத்தைப் பிரசங்கிக்கிறார்கள். புறஜாதியார்கள் மத்தியில் ஊழியம் செய்வதற்காக இவர்கள் அனுப்பப்பட்டிருந்தாலும், யூதர்களுக்கு சுவிசேஷம் சொல்ல வாய்ப்பு இருக்கும்போது, அவர்கள் அந்த வாய்ப்பையும் பயன்படுத்திக்கொள்கிறார்கள். யூதர்கள் இயேசுகிறிஸ்துவுக்கும் அவருடைய சுவிசேஷத்திற்கும் எதிர்த்து வாக்குவாதம்பண்ணுகிறவர்கள். ஆனாலும் பர்னபாவும் சவுலும் சுவிசேஷத்தை அவர்களுக்கு விரிவாக எடுத்துச்சொல்லுகிறார்கள்.

யோவான் அவர்களுக்கு உதவிக் காரனாயிருக்கிறான். அவர்களுடைய வேலைக்காரனாக யோவான் கூடப்போகவில்லை. தேவனுடைய ஊழியத்தில் யோவான் இவர்களுக்கு உதவிசெய்கிறான். அந்நிய தேசத்தில் ஊழியம் செய்யும்போது யோவானைப்போன்ற ஒரு சிலருடைய உதவி கிடைப்பது ஊழியக்காரர்களுக்கு மிகவும் பிரயோஜனமாகயிருக்கும். பர்னபாவும் சவுலும் ஜெபாலயத் தலைவர்களிடம் வாக்குவாதம்பண்ணாமல், தேவவசனத்தை மாத்திரம் பிரசங்கம் பண்ணுகிறார்கள். ஊழியக்காரர்கள் ஆரம்பத்திலேயே பிரச்சனை உண்டுபண்ணிவிட்டால் அது அவர்களுடைய ஊழியத்திற்குத் தடையாக இருக்கும்.

செர்கியு பவுல்

அவர்கள் பாப்போபட்டணம் வரைக்கும் தீவை கடந்து வந்தபோது, பர்யேசு என்னும் பேர்கொண்ட மாயவித்தைக்காரனும் கள்ளத் தீர்க்கதரிசியுமான ஒரு யூதனை கண்டார்கள். அவன் விவேகமுள்ள மனுஷனாகிய செர்கியுபவுல் என்னும் அதிபதியுடனே கூட இருந்தான். அந்த அதிபதி பர்னபாவையும் சவுலையும் அழைப்பித்து, அவர்களிடத்தில் தேவவசனத்தைக் கேட்க ஆசையாயிருந்தான் (அப் 13:6,7).

பர்னபாவும் சவுலும் பாப்போ என்னும் பட்டணத்திற்கு கடந்து வருகிறார்கள். அந்த ஊரில் செர்கியு பவுல் என்னும் பெயரை உடைய அதிபதி இருக்கிறான். இவன் புறஜாதி மார்க்கத்தைச் சேர்ந்தவன். ஆனாலும் தேவவசனத்தைக் கேட்க ஆசையாயிருக்கிறான். இதற்காக பர்னபாவையும் சவுலையும் அழைப்பித்து அவர்களிடத்தில் வசனத்தைக் கேட்க விரும்புகிறான். இவன் ரோமபேரரசின் ராயனுக்குக்கீழ் அதிபதியாக ஆளுகை செய்கிறான். இவன் விவேகமுள்ளவன். நல்லாட்சி செய்கிறான். ஜனங்கள் மத்தியில் இவனுக்கு நற்பெயர் இருக்கிறது.

இந்த உலகத்தில் ஏராளமான விவேகமுள்ளவர்கள் இருக்கிறார்கள். இது உலக ஞானம். செர்கியு பவுல் உலக ஞானமுள்ளவனாகயிருந்தாலும் தேவவசனத்தைக் கேட்கவும் ஆசையாயிருக்கிறான். பொதுவாக இவனைப்போன்ற உயர்பதவி வகிக்கிறவர்கள் பெருமையுள்ளவர்களாக இருப்பார்கள். தேவவசனத்தைக் கேட்க பிரியப்படமாட்டார்கள். ஆனால் இவனோ சற்று வித்தியாசமாக தேவவசனத்தைக் கேட்டு அதை ஏற்றுக்கொள்ளவும் ஆயத்தமாயிருக்கிறான்.

இந்த அதிபதியுடனே கூட பர்யேசு என்னும் பெயர் கொண்ட மாயவித்தைக்காரன் ஒருவன் இருக்கிறான். இவன் ஒரு கள்ளத்தீர்க்கதரிசி. இவன் ஒரு யூதன். தன்னுடைய சுயகற்பனைகளை தேவனுடைய வார்த்தையென்று சொல்லி ஜனங்களை வஞ்சிக்கிறவன். பர்யேசு என்னும் பெயருக்கு "யோசுவாவின் மகன்" என்று பெயர். இந்தப் பெயருக்கு "இரட்சிப்பின் மகன்" என்றும் பொருள் சொல்லலாம். சீரியாக் பாஷையில் இவனுடைய பெயர் "பர்ஷோமா" என்று எழுதப்பட்டிருக்கிறது. இந்தப் பெயருக்கு "பெருமையின் மகன்" அல்லது "பொறாமையின் மகன்" என்று பொருள். இவன் செர்கியு பவுல் என்னும் அதிபதியோடு கூடயிருக்கிறான்.

எலிமா

மாயவித்தைக்காரன் என்று அர்த்தங்கொள்ளும் பேரையுடைய அந்த எலிமா என்பவன் அதிபதியை விசுவாசத்தினின்று திருப்பும்படி வகைதேடி, அவர்களோடு எதிர்த்துநின்றான் (அப் 13:8).

அதிபதியாகிய செர்கியு பவுல் பர்னபாவையும் சவுலையும் அழைப்பித்து அவர்களிடத்தில் தேவவசனத்தைக் கேட்க ஆசையாயிருக்கிறான். ஆனால் மாயவித்தைக்காரன் என்று அர்த்தங்கொள்ளும் பெயரையுடைய அந்த எலிமா என்பவன் பர்னபாவோடும் சவுலோடும் எதிர்த்து நிற்கிறான். அதிபதியை விசுவாசத்தினின்று திருப்பும்படி வகைதேடுகிறான். இது சாத்தானுடைய சூழ்ச்சி. உயர்பதவி வகிக்கிறவர்களும், தலைவர்களும் சுவிசேஷத்தைக் கேட்காதபடி சாத்தான் தடைபண்ணுகிறான்.

சமுதாயத்தில் பெரியவர்கள் எது செய்தாலும் அது உடனே சாதாரண ஜனங்கள் மத்தியில் விளம்பரமாகப் பரவிவிடும். அவர்கள் நல்ல நடத்தையுடையவர்களாக இருந்தாலும், தீயநடத்தையுடையவர்களாக இருந்தாலும், அவர்கள் ஜனங்கள் மத்தியிலே சீக்கிரத்தில் பாதிப்பை உண்டுபண்ணுவார்கள். தலைவர்கள் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டு, இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து இரட்சிக்கப்பட்டால், ஏராளமான ஜனங்கள் இரட்சிக்கப்படுவதற்கு வாய்ப்புள்ளது. ஆகையினால் சாத்தான் மிகுந்த தந்திரமாய் தலைவர்களுக்குச் சுவிசேஷம் அறிவிக்கப்படுவதைத் தடைபண்ணுகிறான். எலிமாவைப்போல ஒரு சிலரை சாத்தான் தன் கருவியாகப் பயன்படுத்துகிறான்.

பவுல்

அப்பொழுது பவுல் என்று சொல்லப்பட்ட சவுல் பரிசுத்தஆவியினால் நிறைந்தவனாய் அவனை உற்றுப்பார்த்து: (அப் 13:9)

சவுலின் பெயர் இங்கு முதன்முறையாக பவுல் என்று அழைக்கப்படுகிறது. இதுவும் பரிசுத்த ஆவியானவரின் தீர்மானம். பவுலைப்பற்றிச் சொல்லப்படும்போது "பவுல் என்று சொல்லப்பட்ட சவுல்" என்று எழுதப்பட்டிருக்கிறது. சவுல் என்பது எபிரெய பாஷையில் வழங்கப்படும் பெயர். இவன் ஒரு ரோமப்பேரரசின் குடிமகன். ரோமப்பேரரசில் இவனுக்குப் பவுல் என்று பெயர். பவுல் இதுவரையிலும் யூதர்கள் மத்தியில் ஊழியம் செய்துகொண்டிருந்தான். ஆகையினால் இவனுக்குச் சவுல் என்னும் எபிரெய பெயரே இதுவரையிலும் வழங்கப்படலாயிற்று. இப்போதோ சவுல் புறஜாதியார் மத்தியில் ஊழியம் செய்வதற்காக அனுப்பப்பட்டிருக்கிறான். ஆகையினால் இங்கு பவுல் என்னும் ரோமப்பெயர் இவனுக்கு வழங்கப்படுகிறது.

பவுல் பரிசுத்த ஆவியினால் நிறைந்திருக்கிறான். தேவனுடைய கோபாக்கினையை எலிமாவுக்கு விரோதமாக வெளிப்படுத்தும் வண்ணமாக பவுல் பரிசுத்த ஆவியின் வல்லமையினால் நிறைந்திருக்கிறான். பவுலின் வார்த்தைகள் அவனுடைய இருதயத்திலிருந்து வெளிப்பட்டிருக்கும் சுயவார்த்தைகளல்ல. பரிசுத்த ஆவியானவர் இந்த வார்த்தைகளைப் பேசுமாறு அவனை ஏவுகிறார். ஆவியானவரின் வார்த்தைகளைச் சொல்லுவதற்கு முன்பாக பவுல் எலிமாவை உற்றுப்பார்க்கிறான். எலிமாவிடத்தில் காணப்படும் துன்மார்க்கமான யோசனைக்கு விரோதமாக பவுல் அவனுக்கு எதிர்த்து நிற்கிறான். பவுல் எலிமாவை உற்றுப்பார்க்கும்போது, அவனுடைய உள்ளத்திலிலுள்ள குணாதிசயங்கள் பவுலுக்குத் தெரியவருகிறது.

பிசாசின் மகனே

எல்லாக் கபடமும் எல்லாப் பொல்லாங்கும் நிறைந்தவனே, பிசாசின் மகனே, நீதிக்கெல்லாம் பகைஞனே, கர்த்தருடைய செம்மையான வழிகளைப் புரட்டுவதில் ஓயமாட்டாயோ? (அப் 13:10)

எலிமா நரகத்தின் பிரதிநிதியாக இருக்கிறான். இவனுடைய பெயர் "பர்யேசு" என்று அழைக்கப்பட்டாலும், அந்தப் பெயருக்கு ஏற்ற பிரகாரமாக இவன் "யோசுவாவின் மகனாகவோ அல்லது இயேசுவின் மகனாகவோ" இல்லை. இவன் பிசாசின் மகனாகயிருக்கிறான். இவனிடத்தில் பிசாசின் குணமே காணப்படுகிறது. எல்லா கபடமும் எல்லாப் பொல்லாங்கும் நிறைந்தவனாக யிருக்கிறான். இவனிடத்தில் தேவஞானம் சிறிதுமில்லை. ஒரு மனுஷனிடத்தில் கபடமும் பொல்லாங்கும் நிறைந்திருக்கும்போது அவன் பிசாசின் மகனாகத்தான் இருப்பான்.

எலிமா பரலோகத்திற்கு விரோதியாகயிருக்கிறான். இவன் பிசாசின் மகனாயிருப்பதினால் நீதிக்கெல்லாம் பகைஞனாகயிருக்கிறான். இப்படிப்பட்ட எலிமாவை பவுல் உற்றுப்பார்த்து "கர்த்தருடைய செம்மையான வழிகளைப் புரட்டுவதில் ஓயமாட்டாயோ" என்று கேட்கிறான். கர்த்தருடைய வழிகள் செம்மையானவை. ஆத்தும சந்தோஷத்தையும் பரலோகத்தையும் செம்மையான வழியில் மாத்திரமே பெற்றுக்கொள்ள முடியும். இந்த வழிகளைப் புரட்டுகிறவர்கள் தாங்களும் சீரழிந்து போவார்கள். மற்றவர்களையும் சீரழித்துவிடுவார்கள். இவர்கள் சாதாரண ஜனங்களுக்குப் பொல்லாத வழிகளைக் காண்பித்து அவர்களை செம்மையான வழியிலிருந்து திசை திருப்பிவிடுவார்கள். இவர்கள் எல்லா கபடமும் எல்லாப் பொல்லாங்கும் நிறைந்தவர்களாக யிருப்பதினால், இவர்களுடைய இருதயம் எப்பொழுதும் தீமையையே யோசித்துக்கொண்டிருக்கும்.

கர்த்தருடைய செம்மையான வழிகளுக்கு எதிர்த்து நிற்கிறவர்களின் இருதயம் கடினமுள்ளதாகயிருக்கும். தங்களுடைய துன்மார்க்கமான கிரியைகளை இவர்கள் நிறுத்தமாட்டார்கள். கர்த்தருடைய செம்மையான வழிகளைப் புரட்டுவதில் ஓயமாட்டார்கள்.

நீ குருடனாயிருப்பாய்

இதோ, இப்பொழுதே, கர்த்தருடைய கை உன்மேல் வந்திருக்கிறது, சிலகாலம் சூரியனைக் காணாமல் நீ குருடனாயிருப்பாய் என்றான். உடனே மந்தாரமும் இருளும் அவன்மேல் விழுந்தது; அவன் தடுமாறி, கைலாகு கொடுக்கிறவர்களைத் தேடினான் (அப் 13:11).

பவுல் எலிமாவின்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பை அறிவிக்கிறான். பவுல் எலிமாவைப் பார்த்து "இப்பொழுதே, கர்த்தருடைய கை உன்மேல் வந்திருக்கிறது, சிலகாலம் சூரியனைக் காணாமல் நீ குருடனாயிருப்பாய்" என்று சொல்லுகிறான். அவனுடைய கண்களைக் குருடாக்கிறான். அவனுடைய மனக்கண்களை அடைத்துப்போடுகிறான். எலிமா சுவிசேஷத்தின் வெளிச்சத்திற்கு விரோதமாகக் கிரியை செய்தான். அவனுடைய மனக்கண்கள் சுவிசேஷத்தின் வெளிச்சத்தைக் காணமுடியாமல் குருடாயிருந்தது. ஆகையினால் பவுல் இப்போது அவனுடைய சரீரத்தின் கண்களையும் குருடாக்கிவிடுகிறான்.

இதுவரையிலும் எலிமாவினால் சுவிசேஷத்தின் வெளிச்சத்தைப் பார்க்க முடியவில்லை. இப்போது சூரியனின் வெளிச்சத்தையும் பார்க்க முடியவில்லை. எலிமா தன்னுடைய துன்மார்க்க குணத்தினால் அதிபதியை விசுவாசத்தினின்று திருப்பும்படி வகைதேடினான். அவனையும் ஆவிக்குரிய குருடனாக்க முயற்சிபண்ணினான். இதையெல்லாம் அறிந்த பவுல் எலிமாவை குருடனாக்கிவிடுகிறான்.

எலிமாவுக்கு கடுமையான தண்டனை கொடுக்கப்படவில்லை. பவுல் அவனிடத்தில் சொல்லும்போது "சில காலம்" சூரியனைக் காணாமல் நீ குருடனாயிருப்பாய் என்று சாதாரணமாகச் சொல்லுகிறான். இந்தத் தண்டனை எலிமாவுக்குச் சிறிது காலம் மாத்திரமே இருக்கும். எலிமா மனந்திரும்பினால் அவனுக்கு மறுபடியும் கண்பார்வை கிடைக்கும். அவன் தேவனை மகிமைப்படுத்தினால் சூரியனைக் காணும் வண்ணமாக அவனுடைய கண்கள் மறுபடியும் திறக்கப்படும்.

பவுல் எலிமாவுக்குக் கொடுத்த தண்டனை உடனடியாக நிறைவேறுகிறது. பவுல் சொன்னவுடனேயே மந்தாரமும் இருளும் அவன்மேல் விழுகிறது. இதற்கு மேல் எலிமாவினால் அதிபதியை விசுவாசத்தினின்று திருப்பும்படி வகைதேட முடியாது. தன்னை ஒரு தீர்க்கதரிசியென்று காண்பித்துக்கொள்ள முடியாது. அவனால் மாய்மாலம் பண்ணமுடியாது. எலிமா உடனே தடுமாறுகிறான். கைலாகு கொடுக்கிறவர்களைத் தேடுகிறான். இவனுடைய மாயவித்தை எதுவும் சித்திக்கவில்லை. கர்த்தருடைய வார்த்தைக்கு முன்பாக மனுஷருடைய மாய்மாலங்களும் மாயவித்தைகளும் எதிர்த்து நிற்கமுடியாது.

அதிபதி

அப்பொழுது அதிபதி சம்பவித்ததைக் கண்டு, கர்த்தருடைய உபதேசத்தைக்குறித்து அதிசயப்பட்டு, விசுவாசித்தான் (அப் 13:12).

எலிமா அதிபதியை விசுவாசத்தினின்று திருப்பும்படி வகைதேடினான். ஆனால் இப்போதோ குருடனாக கைலாகு கொடுக்கிறவர்களைத் தேடிக் கொண்டிருக்கிறான். அதிபதி எலிமாவுக்கு சம்பவித்த காரியத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறான். கர்த்தருடைய வல்லமையைப் புரிந்துகொள்கிறான். எலிமாவின்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு வந்திருக்கிறது. இதுவும் ஒரு அற்புதம் தான். இந்த அற்புதத்தைக் கண்டு செர்கியு பவுல் என்னும் அதிபதி கர்த்தருடைய உபதேசத்தைக் குறித்து அதிசயப்படுகிறான். கர்த்தரை விசுவாசிக்கிறான்.

அதிபதி விவேகமுள்ள மனுஷன். சம்பவிக்கிற ஒவ்வொரு காரியத்தையும் ஆராய்ந்து நிதானித்துப் பார்க்கிறான். ருதவனுடைய வல்லமையினால் எலிமா குருடனாக்கப்பட்டான் என்பதைப் புரிந்துகொள்கிறான். பவுல் அதிபதிக்கு உபதேசம் செய்திருக்கவேண்டும். அதிபதி கர்த்தருடைய உபதேசத்தைக் குறித்து அதிசயப்படுகிறான். கர்த்தருடைய உபதேசம் ஆச்சரியமானது. அதிசயமானது. கர்த்தருடைய உபதேசத்தை நாம் அதிகமாய் தியானிக்கும்போது அதில் அநேக அற்புதங்களை காணமுடியும். அது நமக்கும் ஆச்சரியமாகவும் அதிசயமாகவும் இருக்கும்.

எலிமாவுக்கு சம்பவித்ததைக் கண்டு அதிபதி விசுவாசிக்கிறான். அவன் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டானா என்பது தெரியவில்லை. ஒருவேளை அவன் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டிருப்பதற்கும் வாய்ப்பு இருக்கிறது.

பெர்கே பட்டணம்

பின்பு பவுலும் அவனைச் சேர்ந்தவர்களும் பாப்போ பட்டணத்தைவிட்டுக் கப்பல் ஏறிப் பம்பிலியாவிலிருக்கும் பெர்கே பட்டணத்துக்கு வந்தார்கள். யோவான் அவர்களை விட்டுப் பிரிந்து, எருசலேமுக்குத் திரும்பிப்போனான் (அப் 13:13).

அப்போஸ்தலர்கள் சீப்புரு தீவை விட்டுக் கடந்துபோகிறார்கள். பாப்போ பட்டணத்தைவிட்டு கப்பல் ஏறி பம்பிலியாவிலிருக்கும் பெர்கே பட்டணத்திற்கு வருகிறார்கள். பவுலும் அவனைச் சேர்ந்தவர்களும் பிரயாணம் செய்கிறார்கள். அப்போது யோவான் அவர்களைவிட்டுப் பிரிந்து எருசலேமுக்குத் திரும்பிப்போகிறான். தங்களைவிட்டுப் பிரிந்துபோவதற்கு பவுலும் பர்னபாவும் யோவானுக்கு அனுமதி கொடுக்கவில்லை. ஆனால் அவன் சுயமாய் முடிவு செய்து, அப்போஸ்தலரோடு கூடயிருந்து ஊழியம் செய்யாமல், அவர்களைவிட்டு பிரிந்துபோய்விடுகிறான்.

அந்தியோகியா
அப் 13 : 14,15

அப் 13:14. அவர்கள் பெர்கே பட்டணத்தை விட்டுப் புறப்பட்டு, பிசீதியா நாட்டிலுள்ள அந்தியோகியாவுக்கு வந்து, ஓய்வு நாளிலே ஜெபஆலயத்தில் பிரவேசித்து, உட்கார்ந்தார்கள்.

அப் 13:15. நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசன ஆகமமும் வாசித்துமுடிந்தபின்பு: சகோதரரே, நீங்கள் ஜனங்களுக்குப் புத்தி சொல்ல விரும்பினால் சொல்லுங்கள் என்று சொல்லும்படி ஜெபஆலயத்தலைவர்கள் அவர்களிடத்தில் ஆள் அனுப்பினார்கள்.

ஜெபஆலயம்

அவர்கள் பெர்கே பட்டணத்தை விட்டுப் புறப்பட்டு, பிசீதியா நாட்டிலுள்ள அந்தியோகியாவுக்கு வந்து, ஓய்வு நாளிலே ஜெபஆலயத்தில் பிரவேசித்து, உட்கார்ந்தார்கள் (அப் 13:14).

பம்பிலியாவிலிருக்கும் பெர்கே பட்டணம் ஒரு முக்கியமான பட்டணம். ஆனாலும் பவுலும் பர்னபாவும் இந்தப் பட்டணத்தில் எங்கெல்லாம் ஊழியம் செய்தார்கள் என்பதும், இங்கு அவர்களுடைய ஊழியத்தில் நடைபெற்ற சம்பவங்களும் எழுதப்படவில்லை. அவர்கள் பெர்கே பட்டணத்திற்கு வருகிறார்கள் (அப் 13:13). அதன்பின்பு அவர்கள் பெர்கே பட்டணத்தைவிட்டுப் புறப்பட்டுப்போகிறார்கள் (அப் 13:14).

பெர்கே பட்டணத்தைவிட்டுப் புறப்பட்டு அந்தியோகியா பட்டணத்திற்கு வருகிறார்கள். இது பிசீதியா நாட்டிலுள்ளது. சீரியாவில் ஒரு அந்தியோகியா பட்டணமுள்ளது. அந்தப் பட்டணத்திலிருந்து இந்த அந்தியோகியா பட்டணத்தை வேறுபிரித்துக் காண்பிப்பதற்காக, இது பிசீதியா நாட்டிலுள்ள அந்தியோகியா என்று எழுதப்பட்டிருக்கிறது. அப்போஸ்தலர்கள் சீரியாவிலுள்ள அந்தியோகியாவிலிருந்து புறப்பட்டு பிசீதியாவிலுள்ள அந்தியோகியாவுக்கு வந்திருக்கிறார்கள். இந்தப் பட்டணத்தில் யூதர்கள் ஏராளமானோர் வாசம்பண்ணுகிறார்கள். இங்குள்ள யூதர்களுக்கு சுவிசேஷம் முதன்முதலாக பிரசங்கிக்கப்படுகிறது.

பவுலும் பர்னபாவும் அந்தியோகியாவுக்கு வந்தபோது அங்குள்ள யூதர்கள் ஒன்றுகூடுகிறார்கள். அப்போஸ்தலர்கள் யூதர்களைச் சந்திக்கிறார்கள். ஓய்வுநாளிலே ஜெபஆலயத்தில் பிரவேசித்து யூதர்களோடு உட்கார்ந்திருக்கிறார்கள். பவுலும் பர்னபாவும் புறஜாதியார் மத்தியில் ஊழியம் செய்வதற்காகப் பிரிக்கப்பட்டிருந்தாலும், அவர்கள் யூதர்கள் மேலும் பிரியமாயிருக்கிறார்கள். யூதமார்க்கத்து முறைமையின் பிரகாரம் ஓய்வுநாளிலே ஜெபஆலயத்தில் பிரவேசிக்கிறார்கள். இந்த ஓய்வுநாள் யூதருடைய ஓய்வுநாள். இது வாரத்தின் ஏழாவது நாள். இது சனிக்கிழமை. யூதர்கள் மத்தியில் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்காக, அவர்களுடைய ஓய்வுநாளாகிய ஏழாம் நாளில் ஜெபஆலயத்தில் பிரவேசிக்கிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு வாரத்தின் முதலாம் நாளாகிய ஞாயிற்றுக் கிழமை ஓய்வுநாளாகயிருக்கிறது.

பவுலும் பர்னபாவும் யூதர்களை அவர்களுடைய ஜெபஆலயத்தில் சந்திக்கிறார்கள். அந்தியோகியா பட்டணத்தில் இவர்கள் இருவரும் அந்நியர்கள். இவர்கள் இந்த ஊருக்கு ஊழியம் செய்ய வரும்போது, அந்த ஊரில் தேவபக்தியுள்ளவர்களைக் கண்டுபிடித்து அவர்களோடு சேர்ந்துகொள்வதற்காக, அவர்களுடைய ஜெபாலயத்திற்கு வருகிறார்கள். இவர்கள் அந்நியர்களாக யிருந்தாலும் அங்குள்ள யூதர்கள் தங்கள் ஜெபஆலயத்தில் பிரவேசிப்பதற்கும், தங்களோடு உட்காருவதற்கும் அனுமதிக் கிறார்கள். நம்முடைய ஆராதனை ஸ்தலங்களில் நாமும் அந்நியரை ஏற்றுக்கொள்ளவேண்டும். அவர்களுக்கும் உட்கார இடங்கொடுக்கவேண்டும். அவர்கள் தரித்திரராகயிருந்தாலும் அவர்களையும் நேசித்து நம்மோடு சேர்த்துக்கொள்ளவேண்டும்.

ஜெபஆலயத்தலைவர்கள்

நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசன ஆகமமும் வாசித்துமுடிந்தபின்பு: சகோதரரே, நீங்கள் ஜனங்களுக்குப் புத்தி சொல்ல விரும்பினால் சொல்லுங்கள் என்று சொல்லும்படி ஜெபஆலயத்தலைவர்கள் அவர்களிடத்தில் ஆள் அனுப்பினார்கள் (அப் 13:15).

ஜெபஆலயத்தில் அவர்களுடைய ஒழுங்கு முறைமையின் பிரகாரமாக ஆராதனை நடைபெறுகிறது. நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசன ஆகமமும் வாசிக்கப்படுகிறது. ஒவ்வொரு ஓய்வுநாளுக்கும் வாசிப்பதற்கென்று ஒரு வேதப்பகுதியிருக்கும். அதை அந்த நாளில் வாசிக்கிறார்கள். வேதப்பகுதி வாசித்து முடிந்தபின்பு ஜனங்களுக்குப் புத்திசொல்லும்படி ஜெபஆலயத்தலைவர்கள் அப்போஸ்தலர்களைக் கேட்டுக் கொள்கிறார்கள். அப்போஸ்தலர்களிடத்தில் அவர்கள் ஆள் அனுப்புகிறார்கள். அப்போஸ்தலர்கள் ஜனங்களுக்குப் புத்திசொல்ல விரும்பினால் சொல்லுமாறு அவர்களை அழைக்கிறார்கள்.

யூதர்களுக்கு சுவிசேஷத்தைக் கேட்பதில் ஆர்வமிருக்காது. ஆனாலும் பவுலின் பிரசங்கத்தைக் கேட்கவேண்டுமென்று விரும்புகிறார்கள். பவுல் ஜனங்களுக்கு புத்திசொன்னால் நன்றாயிருக்குமென்று எதிர்பார்க்கிறார்கள். ஜெபஆலயத்தில் நியாயப்பிரமாணத்தையும் தீர்க்கதரிசன ஆகமத்தையும் வாசித்தால் மாத்திரம் போதாது. வாசித்த வேதப்பகுதிக்கு வியாக்கியானம் சொல்லவேண்டும். அந்த வசனப்பகுதியிலிருந்து ஜனங்களுக்குப் பிரயோஜனமான புத்தியும் சொல்லவேண்டும்.

ஜெபஆலயத்தின் ஆராதனைக்கு தலைமை தாங்குகிறவர்கள், ஜனங்களுக்குப் புத்திசொல்லவும் செய்யவேண்டும். பல சமயங்களில் ஜெபஆலயத்தின் உள்ளூர் அங்கத்தினர்கள் ஜனங்களுக்குப் புத்தி சொல்லுவதற்குப் பதிலாக, வெளியூரிலிருந்து வந்திருக்கும் விசேஷித்த ஊழியக்காரர்கள் புத்தி சொன்னால் நன்றாயிருக்கும் என்று ஜெபஆலயத்தலைவர்கள் எதிர்பார்க்கிறார்கள். எருசலேமிலிருக்கிற ஜெபஆலயத்தலைவர்களை விட, அந்தியோகியாவிலிருக்கிற ஜெப ஆலயத்தலைவர்கள் அன்புள்ளவர்களாகவும், மனிதநேயமுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். கண்ணியமாகவும், அன்பாகவும், தாராளமாகவும் பேசுகிறார்கள். பொதுவாக ஜெபஆலயங்களில் கிறிஸ்துவின் ஊழியக்காரர்களை உள்ளே ஏற்றுக்கொள்ள மறுத்துவிடுவார்கள். ஆனால் கர்த்தரின் கிருபையினால், அப்போஸ்தலருக்கு ஜெபஆலயத்திற்குள் பிரவேசிக்கவும், அவர்கள் மத்தியில் உட்காரவும், அவர்களுக்கு புத்திசொல்லவும் வாய்ப்பு உண்டாயிற்று.

பவுலின் பிரசங்கம்
அப் 13 : 16-41

அப் 13:16. அப்பொழுது பவுல் எழுந்திருந்து, கையமர்த்தி: இஸ்ரவேலரே, தேவனுக்குப் பயந்து நடக்கிற சகல ஜனங்களே, கேளுங்கள்.

அப் 13:17. இஸ்ரவேலராகிய இந்த ஜனத்தினுடைய தேவன் நம்முடைய பிதாக்களைத் தெரிந்துகொண்டு, எகிப்து தேசத்தில் அவர்கள் பரதேசிகளாய்ச் சஞ்சரித்த போது ஜனங்களை உயர்த்தி, தமது புயபலத்தினாலே அதிலிருந்து அவர்களைப் புறப்படப்பண்ணி,

அப் 13:18. நாற்பது வருஷகாலமாய் வனாந்தரத்தில் அவர்களை ஆதரித்து,

அப் 13:19. கானான் தேசத்தில் ஏழு ஜாதிகளை அழித்து, அவர்களுடைய தேசத்தை இவர்களுக்குச் சுதந்தரமாகப் பங்கிட்டுக் கொடுத்து,

அப் 13:20. பின்பு ஏறக்குறைய நானூற்றைம்பது வருஷகாலமாய் சாமுவேல் தீர்க்கதரிசிவரைக்கும் அவர்களுக்கு நியாயாதிபதிகளை ஏற்படுத்திவந்தார்.

அப் 13:21. அதுமுதல் தங்களுக்கு ஒரு ராஜா வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள்; அப்படியே தேவன் பென்யமீன் கோத்திரத்தானாகிய கீசுடைய குமாரனான சவுலை நாற்பது வருஷகாலமாய் அவர்களுக்குக் கொடுத்தார்.

அப் 13:22. பின்பு அவர் அவனைத் தள்ளி, தாவீதை அவர்களுக்கு ராஜாவாக ஏற்படுத்தி, ஈசாயின் குமாரனாகிய தாவீதை என் இருதயத்துக்கு ஏற்றவனாகக் கண்டேன்; எனக்குச் சித்தமானவைகளையெல்லாம் அவன் செய்வான் என்று அவனைக்குறித்துச் சாட்சியுங் கொடுத்தார்.

அப் 13:23. அவனுடைய சந்ததியிலே தேவன் தமது வாக்குத்தத்தத்தின்படியே இஸ்ரவேலுக்கு இரட்சகராக இயேசுவை எழும்பப்பண்ணினார்.

அப் 13:24. இவர் வெளிப்படுவதற்கு முன்னே மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானத்தைக்குறித்து யோவான் இஸ்ரவேலர் யாவருக்கும் பிரசங்கித்தான்.

அப் 13:25. யோவான் தன் பணிவிடை ஓட்டத்தை நிறைவேற்றுகிறபோது: நீங்கள் என்னை யார் என்று நினைக்கிறீர்கள், நான் அவர் அல்ல, இதோ, எனக்குப்பின் ஒருவர் வருகிறார், அவருடைய பாதரட்சையை அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரன் அல்ல என்றார்.

அப் 13:26. சகோதரரே, ஆபிரகாமின் சந்ததியில் பிறந்தவர்களே, தேவனுக்குப் பயந்து நடக்கிறவர்களே, இந்த இரட்சிப்பின் வசனம் உங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

அப் 13:27. எருசலேமில் குடியிருக்கிறவர்களும் அவர்கள் அதிகாரிகளும் அவரை அறியாமலும், ஓய்வுநாள்தோறும் வாசிக்கப்படுகிற தீர்க்கதரிசிகளின் வாக்கியங்களை அறியாமலும், அவரை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்ததினால் அந்த வாக்கியங்களை நிறைவேற்றினார்கள்.

அப் 13:28. மரணத்திற்கு ஏதுவானதொன்றும் அவரிடத்தில் காணாதிருந்தும், அவரைக் கொலைசெய்யும்படிக்குப் பிலாத்துவை வேண்டிக்கொண்டார்கள்.

அப் 13:29. அவரைக்குறித்து எழுதியிருக்கிறவைகள் யாவையும் அவர்கள் நிறைவேற்றினபின்பு, அவரை மரத்திலிருந்து இறக்கி, கல்லறையிலே வைத்தார்கள்.

அப் 13:30. தேவனோ அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார்.

அப் 13:31. தம்முடனேகூடக் கலிலேயாவிலிருந்து எருசலேமுக்குப் போனவர்களுக்கு அவர் அநேகநாள் தரிசனமானார்; அவர்களே ஜனங்களுக்கு முன்பாக அவருக்குச் சாட்சிகளாயிருக்கிறார்கள்.

அப் 13:32. நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன் என்று இரண்டாம் சங்கீதத்தில் எழுதியிருக்கிறபடியே,

அப் 13:33. இயேசுவை எழுப்பினதினாலே தேவன் நம்முடைய பிதாக்களுக்கு அருளிச்செய்த வாக்குத்தத்தத்தை அவர்களுடைய பிள்ளைகளாகிய நமக்கு நிறைவேற்றினார் என்று நாங்களும் உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கிறோம்.

அப் 13:34. இனி அவர் அழிவுக்குட்படாதபடிக்கு அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார் என்பதைக்குறித்து: தாவீதுக்கு அருளின நிச்சயமான கிருபைகளை உங்களுக்குக் கட்டளையிடுவேன் என்று திருவுளம்பற்றினார்.

அப் 13:35. அன்றியும், உம்முடைய பரிசுத்தர் அழிவைக் காணவொட்டீர் என்று வேறொரு சங்கீதத்தில் சொல்லியிருக்கிறது.

அப் 13:36. தாவீது தன் காலத்திலே தேவனுடைய சித்தத்தின்படி அவருக்கு ஊழியஞ்செய்தபின்பு நித்திரையடைந்து, தன் பிதாக்களிடத்திலே சேர்க்கப்பட்டு, அழிவைக் கண்டான்.

அப் 13:37. தேவனால் எழுப்பப்பட்டவரோ அழிவைக் காணவில்லை.

அப் 13:38. ஆதலால் சகோதரரே, இவர் மூலமாய் உங்களுக்குப் பாவமன்னிப்பு உண்டாகும் என்று அறிவிக்கப்படுகிறதென்றும்,

அப் 13:39. மோசேயின் நியாயப்பிரமாணத்தினாலே நீங்கள் எவைகளினின்று விடுதலையாகி நீதிமான்களாக்கப்படக் கூடாதிருந்ததோ, விசுவாசிக்கிறவன் எவனும் அவைகளினின்று இவராலே விடுதலையாகி நீதிமானாக்கப் படுகிறான் என்றும் உங்களுக்குத் தெரிந்திருக்கக்கடவது.

அப் 13:40. அன்றியும் தீர்க்கதரிசிகளின் புஸ்தகத்திலே:

அப் 13:41. அசட்டைக்காரரே, பாருங்கள், பிரமித்து அழிந்துபோங்கள்! உங்கள் நாட்களில் ஒரு கிரியையை நான் நடப்பிப்பேன், ஒருவன் அதை உங்களுக்கு விவரித்துச் சொன்னாலும் நீங்கள் விசுவாசிக்கமாட்டீர்கள் என்று சொல்லியிருக்கிறபடி, உங்களுக்கு நேரிடாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் என்றான்.

இஸ்ரவேலரே

அப்பொழுது பவுல் எழுந்திருந்து, கையமர்த்தி: இஸ்ரவேலரே, தேவனுக்குப் பயந்து நடக்கிற சகல ஜனங்களே, கேளுங்கள் (அப் 13:16) .

இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை ஜெப ஆலயத்திலுள்ள யூதருக்குப் பிரசங்கம்பண்ணுகிற வாய்ப்பு பவுலுக்கு உண்டாயிற்று. பவுல் அந்த வாய்ப்பை சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டு அவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிறான். பவுல் எழுந்திருந்து கையமர்த்துகிறான். அவர்களுக்குப் பிரசங்கம்பண்ண தான் ஆர்வத்தோடிருப்பதாகவும், அவர்களைத்தான் அதிகமாய் நேசிப்பதாகவும், அவர்களுக்குத் தெரிவிக்கும் விதத்தில் பவுல் தன் கைகளை அசைக்கிறான்.

பவுல் தன் பிரசங்கத்தை ஆரம்பிக்கும்போது அவர்களைப் பார்த்து "இஸ்ரவேலரே, தேவனுக்குப் பயந்து நடக்கிற சகல ஜனங்களே" கேளுங்கள் என்று சொல்லுகிறான். யூதர்கள் இயேசுகிறிஸ்துவைத் தங்கள் மேசியாவாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும், இல்லையென்றால் யூதர்கள்மீது நியாயத்தீர்ப்பு வருமென்றும் பவுல் அவர்களுக்குத் தெளிவாகச் சொல்லுகிறான். ஜெபஆலயத்தில் இருக்கிற ஜனங்கள் யூதர்களாகயிருப்பதினால், பவுல் அவர்களுக்கு ஏற்ற செய்தியை பிரசங்கம்பண்ணுகிறான்.

எகிப்து தேசத்தில்

இஸ்ரவேலராகிய இந்த ஜனத்தினுடைய தேவன் நம்முடைய பிதாக்களைத் தெரிந்துகொண்டு, எகிப்து தேசத்தில் அவர்கள் பரதேசிகளாய்ச் சஞ்சரித்த போது ஜனங்களை உயர்த்தி, தமது புயபலத்தினாலே அதிலிருந்து அவர்களைப் புறப்படப்பண்ணி, (அப் 13:17)

பவுல் தன் பிரசங்கத்தைக் கேட்கிற ஜனங்களைப் பார்த்து அவர்கள் தேவனுக்குப் பயந்து நடக்கிற ஜனங்கள் என்றும், அவர்கள் தேவனுக்குப் பிரியமானவர்கள் என்றும், தேவன் அவர்களை விசேஷித்த விதமாய் நேசிக்கிறார் என்றும் கூறுகிறான். தேவன் தம்மை யூதஜனங்களோடு விசேஷித்த ஐக்கியத்திற்கு உட்படுத்தியிருக்கிறார். அவர்களுக்காகத் தேவன் பெரிய காரியங்களைச் செய்திருக்கிறார்.

சர்வலோகத்தின் தேவனாகயிருக்கிறவர், இஸ்ரவேல் ஜனத்தின் தேவனாகத் தம்மை விசேஷித்த வழியில் வெளிப்படுத்தியிருக்கிறார். இஸ்ரவேலரைத் தம்முடைய சொந்த ஜனமாகத் தெரிந்துகொண்டு அவர்களோடு உடன்படிக்கை செய்திருக்கிறார். சர்வ சிருஷ்டிக்கும் தேவனாகயிருக்கிறவர் இஸ்ரவேலராகிய இந்த ஜனத்தினுடைய தேவனாகயிருக்கிறார்.

யூதஜனங்களின் பிதாக்களை தேவன் தம்முடைய சிநேகிதராகத் தெரிந்துகொண்டார். ஆபிரகாம் தேவனுடைய சிநேகிதன் என்று அழைக்கப்பட்டார். தாம் யூதஜனங்களுடைய முற்பிதாக்களின் சிநேகிதராகயிருப்பதை தேவன் அவர்களுக்கும் விளங்கப் பண்ணியிருக்கிறார். முற்பிதாக்களின் சிந்தனையில் அவர்கள் தேவனைப்பற்றி நினைக்கும்போது, அவர்கள் தேவனுக்குப் பயந்து நடந்தாலும், அவரைத் தங்கள் சிநேகிதராகவே பாவித்தார்கள். தேவன் யூதருடைய முற்பிதாக்களை சிநேகிதராக நேசித்ததினால், அவர்கள்மீது விசேஷித்த அன்புகூர்ந்தார். அவர்களுக்கு பல சிலாக்கியங்களைக் காண்பித்தார். தேவன் தாமே இஸ்ரவேலருடைய முற்பிதாக்களைத் தெரிந்துகொண்டு, அவர்களோடு உடன்படிக்கை செய்துகொண்டார்.

தேவன் இஸ்ரவேல் ஜனங்களுடைய முற்பிதாக்களைத் தெரிந்துகொண்டு, இஸ்ரவேல் ஜனங்களை உயர்த்தினார். அவர்கள் சாதாரண ஜனங்களாக இருக்கும்போது அவர்களை ஒரு ஜாதியாக மாற்றினார். தேவன் ஒன்றுமில்லாத வெறுமையிலிருந்து சிருஷ்டிக்கிறவர். இஸ்ரவேலர்களை வெறுமையிலிருந்து உயர்த்தினார். அவர்கள் எகிப்து தேசத்தில் பரதேசிகளாய் சஞ்சரித்தார்கள். அவர்கள் ஒன்றுமில்லாமல் இருக்கும்போதே, தேவன் அவர்களை உயர்த்தினார்.

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்து தேசத்தில் அடிமைகளாகயிருந்த சம்பவத்தை மறந்துவிடாமல் நினைவுகூரவேண்டும். தேவன் இஸ்ரவேல் ஜனங்களுக்கு எந்தவிதத்திலும் கடன்பட்டவரல்ல. தேவன் தங்களை உயர்த்தியதற்கு, இஸ்ரவேல் ஜனங்களே அவருக்குக் கடன்பட்டிருக்கிறார்கள். தேவனுடைய சித்தம் என்ன என்பதை இஸ்ரவேல் ஜனங்கள் புரிந்துகொண்டு, அவருக்குக் கீழ்ப்படிந்து ஜீவிக்க, இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுக்குக் கடன்பட்டிருக்கிறார்கள்.

தேவன் இஸ்ரவேல் ஜனங்களைத் தமது புயபலத்தினாலே எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து புறப்படப் பண்ணினார். பல அற்புதங்களைச் செய்தார். தேவனுடைய அற்புதங்கள் இஸ்ரவேல் ஜனங்களுக்கு கிருபையையும், இரக்கத்தையும் வெளிப்படுத்திற்று. அதே சமயத்தில் அதே அற்புதங்கள் இஸ்ரவேல் ஜனங்களை அடிமைப்படுத்திய எகிப்தியர்களுக்கோ, தேவனுடைய நியாயத்தீர்ப்பை வெளிப்படுத்திற்று.

வனாந்தரத்தில்

நாற்பது வருஷகாலமாய் வனாந்தரத்தில் அவர்களை ஆதரித்து, (அப் 13:18)

தேவன் தமது புயபலத்தினாலே இஸ்ரவேல் ஜனங்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணி வனாந்தர வழியாக வழிநடத்தினார். அவர்கள் நாற்பது வருஷகாலமாய் வனாந்தரத்திலிருந்தபோது தேவனே அவர்களை ஆதரித்தார். அவர்களுக்கு அன்றாட போஜனமாக மன்னாவைக் கொடுத்தார். நாற்பது வருஷகாலமாக தேவன் இஸ்ரவேல் ஜனங்களை வனாந்தரத்தில் போஷித்து, ஆதரித்து வந்தார். அவர்களுக்காக பல அற்புதங்களைச் செய்தார்.

இஸ்ரவேல் ஜனங்களோ வனாந்தரத்தில் கர்த்தருக்கு விரோதமாக முரட்டாட்டம் செய்தார்கள் அப்போது, தேவன் அவர்களோடு நீடிய பொறுமையோடிருந்து, தாம் அவர்களோடு செய்துகொண்ட உடன்படிக்கையைக் காத்துக்கொண்டார். ஆனால் இஸ்ரவேல் ஜனங்களோ தேவனுடைய பொறுமையை அசட்டைபண்ணினார்கள். தேவனுக்கு விரோதமாக தொடர்ந்து முரட்டாட்டம் பண்ணினார்கள். இதனால் கோபமடைந்த தேவன், பல சமயங்களில் இஸ்ரவேல் ஜனங்களோடு தாம் செய்த உடன்படிக்கையை முறித்துக்கொள்ளலாம் என்று நினைத்தபோது, மோசே தன்னுடைய ஜனங்களுக்காக பரிந்துபேசினான். கர்த்தர் மோசேயின் ஜெபத்தைக்கேட்டு இஸ்ரவேல் ஜனங்களை அழித்துப்போடாமல் பொறுமையோடிருந்தார்.

கர்த்தர் நமக்கும் இந்த உலகத்தில் ஜீவனைக் கொடுத்திருக்கிறார். ஆயுசு காலத்தைக் கொடுத்திருக்கிறார். நம்முடைய ஜீவியகாலத்தில் கர்த்தருக்கு விரோதமாக நாம் பல பாவங்களைச் செய்திருக்கிறோம். அவையெல்லாவற்றையும் அவர் தம்முடைய கிருபையினால் மன்னித்து, தம்முடைய இரக்கத்தினால் நம்மைப் போஷித்துப் பாதுகாத்து வருகிறார். நம்முடைய துன்மார்க்கத்தினிமித்தம் தேவனுடைய நியாயத்தீர்ப்பு நம்மீது வரவேண்டும். ஆனால் தேவனோ தம்முடைய கிருபையினால் நமக்கு நியாயத்தீர்ப்புக்குப் பதிலாக மன்னிப்பைக் கொடுக்கிறார். நாம் தேவனுடைய பொறுமையை பல சமயங்களில் சோதித்திருக்கிறோம். ஆனாலும் தேவன் தம்முடைய நீடிய பொறுமையினால், நம்மைக் கைவிட்டுவிடாமல், நம்மீது இரக்கமாகவே இருக்கிறார்.

கானான் தேசத்தில்

கானான் தேசத்தில் ஏழு ஜாதிகளை அழித்து, அவர்களுடைய தேசத்தை இவர்களுக்குச் சுதந்தரமாகப் பங்கிட்டுக் கொடுத்து, (அப் 13:19)

இஸ்ரவேல் ஜனங்கள் நாற்பது வருஷகாலமாய் வனாந்தரத்தில் பிரயாணம் செய்தபின்பு, தேவன் அவர்களை கானான் தேசத்திற்கு அழைத்து வந்தார். அவர்கள் இந்தத் தேசத்திற்கு வருவதற்கு முன்பாக அங்கு ஏழுஜாதிகள் இருந்தார்கள். இஸ்ரவேல் ஜனங்களுக்குக் கானான் தேசத்தை சுதந்தரமாக பங்கிட்டுக் கொடுக்கவேண்டும் என்பதற்காக, தேவன் கானான் தேசத்திலிருந்த ஏழுஜாதிகளை அழித்தார். வனாந்தரத்தில் நாற்பது வருஷகாலமாய் இஸ்ரவேல் ஜனங்களை ஆதரித்த தேவன், அவர்களை கானான் தேசத்திற்கும் அழைத்துவந்து, அந்தத் தேசத்தை தம்முடைய ஜனங்களுக்கு சுதந்தரமாகப் பங்கிட்டுக் கொடுத்து, தம்முடைய உடன்படிக்கையில் உண்மையுள்ளவராக இருக்கிறார்.

நியாயாதிபதிகள்

பின்பு ஏறக்குறைய நானூற்றைம்பது வருஷகாலமாய் சாமுவேல் தீர்க்கதரிசிவரைக்கும் அவர்களுக்கு நியாயாதிபதிகளை ஏற்படுத்திவந்தார் (அப் 13:20).

இஸ்ரவேல் ஜனங்கள் கானான் தேசத்தில் குடியேறிய பின்பு, அவர்களுடைய சத்துருக்கள் மூலமாய் அவர்களுக்குப் பிரச்சனைகள் உண்டாயிற்று. சத்துருக்கள் அவர்களை நெருக்கினார்கள். சத்துருக்களின் கைகளிலிருந்து தம்முடைய ஜனங்களை விடுதலைபண்ணுவதற்காக, தேவன் மனுஷர்களை எழுப்பினார். அவர்களுக்கு நியாயாதிபதிகளை ஏற்படுத்தி வந்தார். இஸ்ரவேல் ஜனங்கள் பல சமயங்களில் தேவனுக்கு விரோதமாகக் கலகம்செய்து, அவருக்குக் கோபமூட்டியபோதிலும், தேவனோ அவர்களை அவர்களுடைய சத்துருக்களின் கைகளுக்கு மீட்டு இரட்சித்தார். ஏறக்குறைய நானூற்று ஐம்பது வருஷகாலமாய், சாமுவேல் தீர்க்கதரிசி வரைக்கும் அவர்களுக்கு நியாயாதிபதிகளை ஏற்படுத்தி வந்தார். அதன்பின்பு இஸ்ரவேல் ஜனங்கள் தங்களுக்கு ஒரு ராஜா வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள்.

ராஜாக்கள்

அதுமுதல் தங்களுக்கு ஒரு ராஜா வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள்; அப்படியே தேவன் பென்யமீன் கோத்திரத்தானாகிய கீசுடைய குமாரனான சவுலை நாற்பது வருஷகாலமாய் அவர்களுக்குக் கொடுத்தார். பின்பு அவர் அவனைத் தள்ளி, தாவீதை அவர்களுக்கு ராஜாவாக ஏற்படுத்தி, ஈசாயின் குமாரனாகிய தாவீதை என் இருதயத்துக்கு ஏற்றவனாகக் கண்டேன்; எனக்குச் சித்தமானவைகளையெல்லாம் அவன் செய்வான் என்று அவனைக்குறித்துச் சாட்சியுங் கொடுத்தார் (அப் 13:21,22).

இஸ்ரவேல் ஜனங்கள் தங்களுக்கு ஒரு ராஜா வேண்டுமென்று கேட்டுக்கொண்டபோது, அப்படியே தேவன் அவர்களுக்கு ஒரு ராஜாவைக் கொடுத்தார். பென்யமீன் கோத்திரத்தானாகிய கீசுடைய குமாரனான சவுலை, தேவன் அவர்களுக்கு முதலாவது ராஜாவாகக் கொடுத்தார். சவுல் அவர்களை நாற்பது வருஷகாலமாய் ஆளுகை செய்தான்.

அதன்பின்பு, தேவன் சவுலை தம்முடைய ஜனங்களுக்கு ராஜாவாயிராதபடி தள்ளிவிட்டார். தாவீதை அவர்களுக்கு ராஜாவாக ஏற்படுத்தினார். தேவன் தாவீதோடும் அவனுடைய சந்ததியோடும் உடன்படிக்கை செய்துகொண்டார். தாவீதின் குணாதிசயத்தைக் குறித்து தேவனே சாட்சி கொடுக்கிறார். தாவீது ஈசாயின் குமாரன். தேவன் இந்தத் தாவீதை தம்முடைய இருதயத்துக்கு ஏற்றவனாகக் கண்டார். தாவீது தமக்குச் சித்தமானவைகளையெல்லாம் செய்வானென்று கர்த்தர் தாமே அவனைக் குறித்துச் சாட்சியும் கொடுத்தார்.

தாவீது தன்னுடைய சுயமுயற்சியினால் ராஜாவாகவில்லை. தேவன் தம்முடைய தெய்வீக சித்தத்தினால், அவர் தாமே தாவீதை ராஜாவாக ஏற்படுத்தினார். இது தேவனுடைய தெரிந்தெடுப்பு. "தாவீதை அவர்களுக்கு ராஜாவாக ஏற்படுத்தினேன்" என்று கர்த்தர் தாமே சொல்லுகிறார். இஸ்ரவேல் ஜனத்தாரில் ஏராளமான குடும்பத்தினர் இருக்கிறார்கள். இந்தக் குடும்பங்கள் எல்லாவற்றிலும் கர்த்தர் ஈசாயின் குடும்பத்தைத் தெரிந்தெடுக்கிறார். ஈசாயிக்கு பல குமாரர்கள் இருந்தாலும், கர்த்தர் அவனுடைய குமாரரில், தாவீதையே இஸ்ரவேல் ஜனங்களுக்கு ராஜாவாக ஏற்படுத்தினார்.

தாவீதிடத்தில் தேவனுக்குப் பிரியமான குணாதிசயம் காணப்படுகிறது. அவனுடைய இருதயம் தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றதாகயிருக்கிறது. நாம் தேவசாயலாக சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம். நம்முடைய இருதயமும் தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றதாகயிருக்கவேண்டும். அப்படிப்பட்டவர்களையே தேவன் அங்கீகரித்து தம்முடைய ஊழியத்தில் பயன்படுத்துகிறார். கர்த்தர் தாவீதைப் பார்க்கும்போது, அவன் தமக்குச் சித்தமானவைகளையெல்லாம் செய்வான் என்று அவனைக்குறித்துச் சாட்சியும் கொடுக்கிறார். தேவனுடைய சித்தத்தைச் செய்யவேண்டும் என்னும் விருப்பம் தாவீதினிடத்தில் காணப்படுகிறது. அவனுடைய விருப்பத்தை நிறைவேற்றுவதற்கு கர்த்தர் அவனைப் பலப்படுத்துகிறார். அவனை ராஜாவாக உயர்த்துகிறார். தாவீதின் சித்தமும் தேவனுடைய சித்தமும் ஒன்றாயிருப்பதினால், கர்த்தர் அவனைத் தம்முடைய இருதயத்திற்கு ஏற்றவனாகக் காண்கிறார்.

இஸ்ரவேல் ஜனங்களை வெவ்வேறு ராஜாக்கள் ஆளுகை செய்தார்கள். தேவன் அவர்களுக்கு சவுலைத்தான் முதன்முதலாக ராஜாவாகக் கொடுத்தார். ஆனால் பின்பு கர்த்தர் அவனைத் தள்ளிவிடுகிறார். இந்தப் பூமியிலுள்ள ராஜாக்களோ, ராஜ்யங்களோ பரிபூரணமாக இருக்காது. ஆகையினால் தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாக தம்முடைய ராஜ்யத்தை இந்தப் பூமியில் ஸ்தாபிக்கவேண்டுமென்று தேவன் தீர்மானம் செய்திருக்கிறார். தேவனுடைய ராஜ்யம் உலகப்பிரகாரமான ராஜ்யமல்ல. இது மேசியாவின் ராஜ்யம். இது ஆவிக்குரிய ராஜ்யம். இயேசுகிறிஸ்து தேவனுடைய ராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்காகவே இந்தப் பூமிக்கு வந்தார். சுவிசேஷத்தின் மூலமாக தேவனுடைய ராஜ்யத்தைப்பற்றிய செய்தி ஜனங்களுக்குப் பிரசங்கிக்கப்படுகிறது.

யூதர்கள் இயேசுகிறிஸ்துவுக்கும் அவருடைய சுவிசேஷத்திற்கும் எதிர்த்து நிற்கிறார்கள். இதனால் அவர்கள் தேவனுடைய சித்தத்திற்கே எதிர்த்து நிற்கிறார்கள். யூதர்கள் தேவனுடைய சித்தத்தைப் புரிந்துகொண்டு, தேவனுடைய ராஜ்யம் இந்தப் பூமியில் ஸ்தாபிக்கப்படுவதற்கு இசையவேண்டும். இவர்களும் தேவனுடைய ராஜ்யத்தில் பங்குபெறவேண்டும். சுவிசேஷத்திற்கு எதிர்த்து நிற்கக்கூடாது. பவுல் தேவனுக்கும் யூதருக்குமுள்ள தொடர்பைத் தன்னுடைய செய்தியின் முன்னுரையாகப் பிரசங்கிக்கிறார். இதன் பின்பே, ஜெபஆலயத்திலுள்ள யூதர்களிடத்தில் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷச் செய்தியைப் பிரசங்கம்பண்ணுகிறான்.

இயேசு

அவனுடைய சந்ததியிலே தேவன் தமது வாக்குத்தத்தத்தின்படியே இஸ்ரவேலுக்கு இரட்சகராக இயேசுவை எழும்பப்பண்ணினார் (அப் 13:23).

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைப் பற்றி பவுல் ஜெபாலயத்திலுள்ள யூதருக்குப் பிரசங்கம்பண்ணுகிறான். இயேசுகிறிஸ்துவே தேவனால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட சந்ததியாக இருக்கிறார் என்று பவுல் அவர்களுக்கு விவரித்துச் சொல்லுகிறான். தாவீது தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவனாகயிருக்கிறான். தேவன் தம்முடைய வாக்குத்தத்தத்தின்படியே, தாவீதினுடைய சந்ததியிலே, இஸ்ரவேலுக்கு இரட்சகராக, இயேசுவை எழுப்பப்பண்ணியிருக்கிறார்.

இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பவுல் யூதருக்குப் பிரசங்கம்பண்ணும்போது, இயேசுவையும் சுவிசேஷத்தையும் அவர்களோடு தொடர்புபடுத்திப் பேசுகிறான். இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமாகயிருக்கிறது. இரட்சகரைப்பற்றிய நற்செய்தியை கிறிஸ்துவின் சுவிசேஷம் மனுஷருக்கு அறிவிக்கிறது. மனுஷருடைய பாவங்களே அவர்களுக்குப் பிரதான சத்துரு. மனுஷருடைய பாவங்களிலிருந்து அவர்களை இரட்சிப்பதற்காகத் தேவன் இயேசுகிறிஸ்துவை இரட்சராக எழுப்பப்பண்ணியிருக்கிறார்.

தேவன் தம்முடைய வாக்குத்தத்தத்தின்படியே இயேசுவை முதலாவதாக இஸ்ரவேலுக்கே இரட்சராக எழுப்பப்பண்ணினார். இஸ்ரவேலரை ஆசீர்வதிப்பது தேவனுக்குப் பிரியமானது. இஸ்ரவேல் ஜனங்கள் இயேசுகிறிஸ்துவையும், அவருடைய சுவிசேஷத்தையும் ஏற்றுக்கொள்ளாமல் புறக்கணித்தபோதிலும், தேவன் இயேசுவை அவர்களுக்கு இரட்சகராகவே எழுப்பப்பண்ணியிருக்கிறார். இஸ்ரவேலரை கூட்டிச் சேர்ப்பதே சுவிசேஷத்தின் நோக்கம்.

தேவன் இரட்சகரை தாவீதின் சந்ததியில் எழுப்பப்பண்ணியிருக்கிறார். தாவீது யூதருடைய ராஜா. இஸ்ரவேல் ஜனங்கள் தாவீதினிமித்தமாகப் பெருமைப்படுகிறார்கள். இயேசுகிறிஸ்துவை யூதர்களெல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக, தம்முடைய வாக்குத்தத்தத்தின்படியே, இஸ்ரவேலுக்கு தாவீதின் சந்ததியில் இரட்சராக இயேசுவை தேவன் எழுப்பப்பண்ணியிருக்கிறார். இந்த வாக்குத்தத்தத்தை தேவன் தாவீதுக்குக் கொடுத்தார். இப்படிப்பட்ட மேன்மையான வாக்குத்தத்தத்தை ஏற்றுக்கொள்ள யூதர்கள் தயங்கக்கூடாது. சுவிசேஷத்தைப் புறக்கணித்துவிடக்கூடாது. கர்த்தர் தமது கிருபையினால், தமது சுவிசேஷத்தின் நற்செய்தியை, பவுலின் மூலமாக யூதருக்கு அறிவிக்கிறார்.

யோவான்ஸ்நானன்

இவர் வெளிப்படுவதற்குமுன்னே மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானத்தைக்குறித்து யோவான் இஸ்ரவேலர் யாவருக்கும் பிரசங்கித்தான். யோவான் தன் பணிவிடை ஓட்டத்தை நிறைவேற்றுகிறபோது: நீங்கள் என்னை யார் என்று நினைக்கிறீர்கள், நான் அவர் அல்ல, இதோ, எனக்குப்பின் ஒருவர் வருகிறார், அவருடைய பாதரட்சையை அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரன் அல்ல என்றார் (அப் 13:24,25).

பவுல் யூதருக்கு இயேசுகிறிஸ்துவைப் பற்றி பிரசங்கம்பண்ணும்போது, யோவான்ஸ்நானனைப் பற்றியும் குறிப்பிடுகிறான். யோவான்ஸ்நானன் இயேசுகிறிஸ்துவுக்கு வழியை ஆயத்தம்பண்ணுவதற்காக, அவருக்கு முன்னாக ஓடியவன். மனுஷருக்குள்ளே அவன் பெரியவனாகயிருந்தான். அவனை ஒரு தீர்க்கதரிசியென்று எல்லோரும் அங்கீகாரம் பண்ணினார்கள். மேசியாவின் வருகை யூதருக்கு ஆச்சரியமாகயிருக்கக்கூடாது. ஏனெனில் இயேசுகிறிஸ்து வெளிப்படுவதற்கு முன்னே, யோவான்ஸ்நானன் மனந்திரும்புதலைக்குறித்து ஜனங்களுக்கு எச்சரித்துக் கூறினான். இஸ்ரவேலர் யாவருக்கும் மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானத்தைக் குறித்துப் பிரசங்கித்தான். அவர்களுடைய பாவத்தை உணர்த்திக் காண்பித்தான். அவர்கள் மனந்திரும்பவேண்டுமென்று வலியுறுத்திச் சொன்னான். அவர்கள் மனந்திரும்புதலுக்கேற்ற கனிகளைக் கொடுக்கவேண்டுமென்று அவர்களுக்கு எடுத்துச்சொன்னான்.

யோவான்ஸ்நானன் தன்னுடைய ஊழியத்தை நிறைவேற்றினான். அவன் தன் பணிவிடை ஓட்டத்தை நிறைவேற்றுகிறபோது "நீங்கள் என்னை யார் என்று நினைக்கிறீர்கள்" என்று ஜனங்களிடத்தில் கேட்டான். ஒருவேளை ஜனங்கள் யோவான்ஸ்நானனை மேசியா என்று நினைத்திருக்கலாம். யூதர்கள் மேசியாவின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள். அவர்கள் யோவான்ஸ்நானனை மேசியா என்று நினைப்பார்களென்றால் அது தவறான எண்ணம் என்று அவர்களுக்கு எடுத்துச் சொல்லுகிறான். "நான் அவரல்ல" என்று யூதர்களிடம் சந்தேகத்திற்கு இடமில்லாமல் தெளிவுபடுத்துகிறான்.

யோவான்ஸ்நானன் மேசியாவைப் பற்றிச் சொல்லும்போது "இதோ எனக்குப் பின் ஒருவர் வருகிறார், அவருடைய பாதரட்சையை அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரனல்ல" என்று சொல்லிவிடுகிறான். ஆகையினால் தன்னுடைய வார்த்தையின் மூலமாக, ஜனங்கள் தன்னை யார் என்று கண்டுகொள்வார்கள் என்று யோவான்ஸ்நானன் எதிர்பார்க்கிறான்.

இயேசுவின் மரணம்

சகோதரரே, ஆபிரகாமின் சந்ததியில் பிறந்தவர்களே, தேவனுக்குப் பயந்து நடக்கிறவர்களே, இந்த இரட்சிப்பின் வசனம் உங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. எருசலேமில் குடியிருக்கிறவர்களும் அவர்கள் அதிகாரிகளும் அவரை அறியாமலும், ஓய்வுநாள்தோறும் வாசிக்கப்படுகிற தீர்க்கதரிசிகளின் வாக்கியங்களை அறியாமலும், அவரை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்ததினால் அந்த வாக்கியங்களை நிறைவேற்றினார்கள். மரணத்திற்கு ஏதுவானதொன்றும் அவரிடத்தில் காணாதிருந்தும், அவரைக் கொலைசெய்யும்படிக்குப் பிலாத்துவை வேண்டிக் கொண்டார்கள். அவரைக்குறித்து எழுதியிருக்கிறவைகள் யாவையும் அவர்கள் நிறைவேற்றினபின்பு, அவரை மரத்திலிருந்து இறக்கி, கல்லறையிலே வைத்தார்கள் (அப் 13:26-29).

எருசலேமில் குடியிருக்கிற யூதர்களும், அவர்களுடைய அதிகாரிகளும் இயேசுகிறிஸ்துவைத் தங்களுடைய மேசியாவாக ஏற்றுக்கொண்டு, அவரை வரவேற்றிருக்கவேண்டும். ஆனால் அவர்களோ இயேசுகிறிஸ்துவைத் துன்பப்படுத்தினார்கள். அவரைச் சிலுவையில் அறைந்து கொன்றுபோட்டார்கள். அப்போஸ்தலர்கள் இயேசுகிறிஸ்துவைப் பற்றி பிரசங்கம்பண்ணுகிறபோது, கிறிஸ்துவை இரட்சகராக அவர்களுக்கு வெளிப்படுத்திக் காண்பித்தார்கள். இயேசுகிறிஸ்துவைச் சிலுவையில் அறையப்பட்டவராகவும், அவருடைய சொந்த ஜனங்களே அவரைச் சிலுவையில் அறைந்து கொன்றுபோட்டார்களென்றும் யூதருக்கு எடுத்துச் சொன்னார்கள். இதே சத்தியத்தையே பவுலும் அவர்களுக்குச் சொல்லுகிறான். எருசலேமில் குடியிருக்கிறவர்களும், அவர்கள் அதிகாரிகளும் இயேசுகிறிஸ்துவை மரண ஆக்கினைக்குள்ளாக தீர்த்துவிட்டார்கள் என்று அவர்கள் செய்த தப்பிதங்களை அவர்களுக்கு விளக்கிச் சொல்லுகிறான்.

இயேசுகிறிஸ்துவிடம் மரணத்திற்கு ஏதுவானது ஒன்றும் காணப்படவில்லை. பிலாத்துவுக்கும் இயேசுவைக் கொலை செய்ய மனமில்லை. ஆனால் அவர்களோ இயேசுவைக் கொலைசெய்யும்படி பிலாத்துவை வேண்டிக்கொண்டார்கள். பிலாத்துவின் விருப்பத்திற்கும், மனச்சாட்சிக்கும் விரோதமாக யூதர்கள் பிலாத்துவை சம்மதிக்க வைக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவிடம் மரணத்திற்குகேதுவான குற்றம் எதுவும் காணப்படாதபோதிலும், அவரை சிலுவை மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கிறார்கள்.

யூதர்கள் இயேசுகிறிஸ்துவைச் சிலுவை மரத்தில் தூக்கி கொலைசெய்ததினால், மேசியாவின் மூலமாக அவர்களுக்கு வாக்குப்பண்ணப்பட்டிருந்த எல்லா வாக்குத்தத்தங்களும், ஆசீர்வாதங்களும் சித்திக்காமல் போயிற்று.

சுவிசேஷம் யூதர்கள் மத்தியிலேயே முதன்முதலாகப் பிரசங்கிக்கப்பட்டது. ஓய்வுநாள்தோறும் தீர்க்கதரிசிகளின் வாக்கியங்கள் அவர்களுக்கு முன்பாக வாசிக்கப்பட்டது. ஆனால் அவர்களோ இயேசுகிறிஸ்துவையும் அறியவில்லை. தீர்க்கதரிசிகளின் வாக்கியங்களையும் அறியவில்லை. இயேசுவைக் கொலை செய்கிறபோது தாங்கள் யாரைக் கொலைசெய்கிறோம் என்பதும் அவர்களுக்குத் தெரியவில்லை. ஆகையினால்தான் இயேசுகிறிஸ்து தம்மைச் சிலுவையில் அறைந்தவர்களுக்காக, தம்முடைய பிதாவிடத்தில் ஜெபித்தபோது "பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று தெரியாதிருக்கிறார்களே" என்று கூறி ஜெபித்தார். பேதுருவும் "சகோதரரே நீங்களும் உங்கள் அதிகாரிகளும் அறியாமையினாலே இதைச்செய்தீர்கள் என்று அறிந்திருக்கிறேன்" (அப் 3:17) என்று இதே போன்ற வார்த்தையை யூதர்கள் மத்தியிலே சொன்னான்.

யூதர்கள் ஓய்வுநாள்தோறும் தீர்க்கதரிசிகளின் வாக்கியங்களை தங்கள் காதுகளால் கேட்கிறார்கள். ஆனால் அவர்கள் தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளை அறிந்துகொள்ளவில்லை. மேசியா பாடுகளை அனுபவிக்கவேண்டுமென்று வேதத்தில் முன்னறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் யூதர்களோ இந்தச் சத்தியத்தை கேட்டும் அறிந்துகொள்ளவில்லை. யூதர்கள் தீர்க்கதரிசிகளின் வாக்கியங்களை வாசிக்கிறார்கள். வாசித்தாலும் தீர்க்கதரிசிகளின் சத்தத்தை அவர்களால் அறிந்துகொள்ள முடியாமல் போயிற்று.

இப்போது சுவிசேஷத்தின் சத்தியம் அவர்களுக்குப் பிரசங்கம் பண்ணப்படுகிறது. சுவிசேஷத்தைத் தங்கள் காதுகளால் கேட்கிறார்கள். ஆனால் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை யூதர்கள் அறியாதவர்களாகவே இருக்கிறார்கள். தம்மையும் தம்முடைய சுவிசேஷத்தையும் யூதர்கள் ஏற்றுக்கொள்ளாததினால், தேவனும் அவர்களை ஏற்றுக்கொள்ளாமல் புறக்கணித்து ஒதுக்கி தள்ளிவிடுகிறார்.

யூதர்களுக்கு ஓய்வுநாள்தோறும் தீர்க்கதரிசிகளின் வாக்கியங்கள் வாசிக்கப்பட்டது. அந்த வாக்கியங்களை அவர்கள் கேட்டார்கள். ஆனால் அதன் அர்த்தத்தை அவர்கள் அறிந்துகொள்ளவில்லை. அவர்கள் இயேசுகிறிஸ்துவை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்கள். இதன் மூலமாக தீர்க்கதரிசிகள் சொன்ன வாக்கியங்களை யூதர்கள் நிறைவேற்றினார்கள்.

ஒருவன் இயேசுகிறிஸ்துவின் வார்த்தைக்கு கீழ்ப்படிகிறபோது, அவன் தீர்க்கதரிசிகளின் வாக்கியங்களை நிறைவேற்றுகிறான். அதே வேளையில் ஒருசிலர் தீர்க்கதரிசிகளின் வார்த்தைக்கு கீழ்ப்படியாமலும், தீர்க்கதரிசிகளின் வாக்கியங்களை நிறைவேற்றுகிறார்கள். இயேசுகிறிஸ்துவைக் குறித்து எழுதியிருக்கிற வார்த்தைகள் யாவையும் நிறைவேறிற்று. இந்த வார்த்தைகளை எருசலேமில் குடியிருக்கிற யூதர்களும்அவர்களுடைய அதிகாரிகளும் நிறைவேற்றினார்கள்.

இயேசுகிறிஸ்துவைக் குறித்து எழுதியிருக்கிற வார்த்தைகளை நிறைவேற்றிய பின்பு, அவருடைய மரணத்தைப்பற்றியும், அவர் அடக்கம் பண்ணப்படுவதுபற்றியும், முன்னறிவிக்கப் பட்ட வார்த்தைகளை அவர்கள் நிறைவேற்றினார்கள். இயேசுகிறிஸ்துவை மரத்திலிருந்து இறக்கி கல்லறையில் வைத்தார்கள். இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை யூதர்களுக்கு விளக்கமாகச் சொல்லவேண்டுமென்பதற்காக, பவுல் இயேசுகிறிஸ்துவின் மரணத்தையும், அவரைச் சிலுவை மரத்திலிருந்து இறக்கி, கல்லறையில் வைத்ததையும் விரிவாக எடுத்துச் சொல்லுகிறான். இயேசுகிறிஸ்துவின் சரீரத்தை கல்லறையில் வைத்தபோது, அவருடைய ஜீவியமும், ஊழியமும், உபதேசமும் அத்துடன் முடிந்துபோயிற்று என்று யூதர்கள் நினைத்தார்கள். ஆனால் தேவனோ அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார்.

இயேசுவின் உயிர்த்தெழுதல்

தேவனோ அவரை மரித்தோரி லிருந்து எழுப்பினார் (அப் 13:30).

இயேசுகிறிஸ்து மரித்து மூன்றாம்நாளில் உயிரோடு எழும்புகிறார். இயேசுகிறிஸ்து பிரசங்கம்செய்த சுவிசேஷம் சத்தியமானது என்பதை அவருடைய உயிர்த்தெழுதல் உறுதிபண்ணிற்று. இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு அவருடைய உயிர்த்தெழுதலே, அதை நிரூபிக்கிற ஆதாரமாகயிருக்கிறது. மரித்த இயேசுகிறிஸ்து உயிரோடு எழும்பவேண்டுமென்று தேவன் சித்தங்கொண்டிருக்கிறார். தேவனே அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார். கிறிஸ்துவின் சத்துருக்கள் இயேசுகிறிஸ்துவை மரத்திலிருந்து இறக்கி கல்லறையில் வைத்தார்கள். அவர் நிரந்தரமாக கல்லறையிலேயே இருந்துவிடவேண்டும் என்று எதிர்பார்த்து, அவரைக் கல்லறையில் வைத்தார்கள். இது யூதர்களுடைய விருப்பம். ஆனால் தேவனுடைய சித்தமோ வேறாயிருக்கிறது. கிறிஸ்து உயிர்த்தெழவேண்டுமென்பதே தேவனுடைய சித்தம். தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாக தேவன் இயேசுவை உயிரோடு எழுப்பினார்.

தரிசனமானார்

தம்முடனேகூடக் கலிலேயாவிலிருந்து எருசலேமுக்குப் போனவர்களுக்கு அவர் அநேகநாள் தரிசனமானார்; அவர்களே ஜனங்களுக்கு முன்பாக அவருக்குச் சாட்சிகளாயிருக்கிறார்கள் (அப் 13:31).

இயேசுகிறிஸ்து உயிரோடு எழுந்தார் என்பதற்கு போதுமான அளவு சான்றுகள் உள்ளன. உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்து அநேகநாள் தரிசனமானார். இயேசுகிறிஸ்துவுடனே கூட கலிலேயாவிலிருந்து எருசலேமுக்குப் போனவர்களுக்கு, அவர் அநேக நாள் தரிசனமானார். அவர்களே ஜனங்களுக்கு முன்பாக இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்ததற்கு சாட்சிகளாயிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் குறித்து அவர்கள் அநேகந்தரம் சாட்சியாய் அறிவித்திருக்கிறார்கள். இன்னும் சாட்சியாய் அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள். தங்களுக்கு மரணமே வந்தாலும் இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை சாட்சியாய் அறிவிப்பதற்கு அவர்கள் ஆயத்தமாயிருக்கிறார்கள்.

உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவை தானும் தரிசித்ததாக பவுல் இங்கு சொல்லவில்லை. பவுல் உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவைப் பிரத்தியட்சமாகத் தரிசிக்கவில்லை. அவரைத் தன் தரிசனத்தில் கண்டான். இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைப் பற்றி பிறருக்குச் சாட்சியாய் அறிவிப்பதற்கு, பவுலுக்குக் கிடைத்த தரிசனமே அவனுக்குப் போதுமானதாயிற்று. தான் நிச்சயமாய் நம்புகிற சத்தியத்தை மற்றவர்களுக்கு விசுவாசத்தோடு அறிவிக்கிறான்.

சுவிசேஷமாய் அறிவிக்கிறவன்

நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன் என்று இரண்டாம் சங்கீதத்தில் எழுதியிருக்கிறபடியே, இயேசுவை எழுப்பினதினாலே தேவன் நம்முடைய பிதாக்களுக்கு அருளிச்செய்த வாக்குத்தத்தத்தை அவர்களுடைய பிள்ளைகளாகிய நமக்கு நிறைவேற்றினார் என்று நாங்களும் உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கிறோம் (அப் 13:32,33).

இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் அவருடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுகிற சத்தியமாகும். இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் என்பது மெய்யான செய்தி மாத்திரமல்ல, அது நற்செய்தியாகவும் இருக்கிறது. இந்தச் செய்தியை அப்போஸ்தலர்கள் ஜனங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கிறார்கள். இதே நற்செய்தியையே பவுல் யூதர்கள் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் அவர்களுக்கு சுவிசேஷமாய் அறிவிக்கிறான்.

அப்போஸ்தலர்கள் பிரசங்கிக்கிற உபதேசத்தை யூதர்கள் தங்கள் இருதயங்களில் அங்கீகரித்து ஏற்றுக்கொண்டால் அவர்களுக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதம் உண்டாகும். ஆத்தும திருப்தி உண்டாகும். ஏனெனில் தேவன் இயேசுவை எழுப்பினதினாலே, அவர் அவர்களுடைய பிதாக்களுக்கு அருளிச்செய்த வாக்குத்தத்தத்தை, அவர்களுடைய பிள்ளைகளாகிய யூதஜனத்தாருக்கு நிறைவேற்றியிருக்கிறார்.

பழைய ஏற்பாட்டில் ஏராளமான வாக்குத்தத்தங்கள் எழுதப்பட்டிருந்தாலும், அவையெல்லாவற்றிலும் மேசியாவைப் பற்றிய வாக்குத்தத்தமே மிகவும் பிரதானமானது. ஏனெனில் மேசியாவைப்பற்றிய வாக்குத்தத்தத்தினால் ஆபிரகாமின் சந்ததியார் ஆசீர்வதிக்கப்படுவதோடு, பூமியிலுள்ள எல்லா சந்ததியாரும் இயேசுகிறிஸ்துவில் ஆசீர்வதிக்கப் படுகிறார்கள். உலகத்திலுள்ள எல்லா சந்தியாரும் தெய்வீக ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளும் வண்ணமாக தேவன் இயேசுவை மரித்தோரிலிருந்து உயிரோடு எழுப்பியிருக்கிறார்.

"தேவன் இயேசுவை எழுப்பினார்" என்னும் வாக்கியத்தை "தேவன் இயேசுவை மறுபடியும் எழுப்பினார்" என்று வாசிக்கவேண்டும். இந்த வாக்கியத்திற்கு "தேவன் இயேசுவை மரணத்திலிருந்து எழுப்பினார்" என்பது பொருளாகும். தேவன் முற்பிதாக்களுக்கு அருளிச்செய்த வாக்குத்தத்தமானது, அவர் இயேசுகிறிஸ்துவை மரணத்திலிருந்து உயிரோடு எழுப்பியதன் மூலமாக நிறைவேற்றிற்று. தேவன் மேசியாவை இந்த உலகத்திற்கு அனுப்புவதாக வாக்குப்பண்ணினார். இயேசுகிறிஸ்துவே வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட மேசியா என்பது, தேவன் இயேசுகிறிஸ்துவை உயிரோடு எழுப்பியதினால் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

இயேசுகிறிஸ்துவைப் பற்றிய வாக்குத்தத்தம் முதலாவதாக யூதருக்கே நிறைவேற்றிற்று. ஆகையினால் முற்பிதாக்களின் பிள்ளைகளாகிய யூதருக்கு அப்போஸ்தலர் பவுல் சுவிசேஷத்தை கருத்தாய் அறிவிக்கிறான். யூதரைப்பற்றி பவுல் குறிப்பிடும்போது "பிள்ளைகளாகிய நமக்கு" என்று தன்னையும் சேர்த்துக் குறிப்பிடுகிறான்.

புறஜாதியாருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்படுவதை யூதர்கள் விரும்பவில்லை. புறஜாதியாரின் நிமித்தமாக யூதர்கள் இடறிவிழுகிறார்கள். பூமியிலுள்ள எல்லா ஜனங்களும் இரட்சிக்கப்படுவதற்காக, தேவன் இயேசுவை உலக இரட்சகராக அனுப்பினார். ஆனால் யூதர்களோ, தங்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிற மேசியாவானவர், தங்களை ஆசீர்வதிப்பதற்கு மாத்திரமே வருவார் என்று எதிர்பார்க்கிறார்கள். பூமியிலுள்ள எல்லா ஜனங்களும் இயேசுகிறிஸ்துவில் ஆசீர்வதிக்கப்பட வேண்டும் என்பதே தேவனுடைய சித்தம். எல்லா ஜனங்களும் ஆசீர்வதிக்கப்படாமல், யூதர்கள் மாத்திரம் ஆசீர்வதிக்கப்பட்டால், தேவனுடைய சித்தம் பூரணமாய் நிறைவேறாது. அதே வேளையில் எல்லா ஜனங்களும் ஆசீர்வதிக்கப்படும்போது, யூதஜனங்களும் இயேசுகிறிஸ்துவில் ஆசீர்வதிக்கப்படவேண்டும். அதற்காகவே பவுல், யூதர்களுக்கு இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த சத்தியத்தைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறார்.

மரித்தோரிலிருந்து எழுப்பினார்

இனி அவர் அழிவுக்குட்படாதபடிக்கு அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார் என்பதைக்குறித்து: தாவீதுக்கு அருளின நிச்சயமான கிருபைகளை உங்களுக்குக் கட்டளையிடுவேன் என்று திருவுளம்பற்றினார் (அப் 13:34).

இயேசுகிறிஸ்து கல்வாரி சிலுவையில் தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்தார். அவருடைய சரீரத்தை கல்லறையில் அடக்கம்பண்ணினார்கள். தேவனோ இயேசுவை மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்து எழுப்பினார். ஆகையினால் அவருடைய சரீரம் அழிவுக்குட்படவில்லை. பொதுவாக அடக்கம்பண்ணப்பட்ட சரீரம் மூன்று நாட்களுக்குப் பிறகுதான் அழிவுக்குட்பட ஆரம்பிக்கும். தேவனோ அதற்கு முன்பாகவே, மூன்றாவது நாளிலேயே, இயேசுகிறிஸ்துவை மரித்தோரிலிருந்து உயிரோடு எழுப்பிவிடுகிறார். இயேசுகிறிஸ்துவின் சரீரம் அழிவுக்குட்படாதபடி, மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டிருப்பதினால், "இயேசுவே மேசியா" என்னும் சத்தியத்தை, இந்தச் சம்பவமும் உறுதிபண்ணுகிறது.

இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்துவிட்டார். இனிமேல் மரிக்கமாட்டார். அவர் இனிமேல் மரணத்தைக் காணமாட்டார். லாசரு மரித்துப்போனான். இயேசுகிறிஸ்து அவனை உயிரோடு எழுப்பினார். அவன் கல்லறையிலிருந்து பிரேதச் சீலைகளோடு கட்டப்பட்டவனாக வெளியே வந்தான். அவனுக்கு அந்தச் சேலைகள் மறுபடியும் தேவைப்படும். ஏனெனில் அவன் உயிரோடு எழுந்தாலும், மறுபடியும் அவன் மரிக்கவேண்டும். ஒருதரம் பிறப்பதும், ஒரு தரம் மரிப்பதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இயேசுகிறிஸ்துவுக்கோ அப்படிப்பட்ட பிரமாணம் எதுவும் நியமிக்கப்படவில்லை. உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்து இனிமேல் மரணத்தைக் காணமாட்டார். ஆகையினால் அவர் உயிர்த்தெழுந்தபோது, அவரை அடக்கம்பண்ணுவதற்கு பயன்படுத்தப்பட்ட பிரேதச் சேலைகள், கல்லறையின் ஓரத்தில் தனியாக சுற்றி வைக்கப்பட்டிருந்தது. இனிமேல் அந்தச் சேலை இயேசுவுக்குத் தேவைப்படாது. ஏனெனில் இயேசு இனிமேல் மரிக்கப்போவதில்லை.

அழிவைக்காணவொட்டீர்

அன்றியும், உம்முடைய பரிசுத்தர் அழிவைக் காணவொட்டீர் என்று வேறொரு சங்கீதத்தில் சொல்லியிருக்கிறது (அப் 13:35).

இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்து, இனிமேல் மரிக்காமலிருப்பது மனுக்குலத்திற்கு தேவன் கொடுத்திருக்கும் மிகப்பெரிய கிருபையும், இரக்கமும், ஆசீர்வாதமும் ஆகும். இயேசுகிறிஸ்து மரித்து, உயிரோடு எழும்பி, மறுபடியும் மரித்துப்போவாரென்றால், நமக்கு தேவனுடைய கிருபையும் இரக்கமும் கிடைக்காது. தேவகிருபையைப்பற்றிய நிச்சயமும் நமக்கு உண்டாகாது. தேவன் நம்மேல் அன்பாயிருக்கிறபடியால், தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் நமக்கு உறுதிபண்ணுகிறார். இயேசுகிறிஸ்து மரித்த மூன்றாம் நாளிலேயே, தேவன் அவரை உயிரோடு எழுப்பிவிடுகிறார். ஆகையினால் அவருடைய சரீரம் அழிவுக்குட்படாமல் உயிரோடு எழும்பிவிடுகிறது.

தேவன் தாவீதுக்கு நிச்சயமான கிருபைகளை அருளியிருக்கிறார். "உம்முடைய பரிசுத்தர் அழிவைக்காணவொட்டீர்" என்பதே தேவன் தாவீதுக்கு சொல்லியிருக்கும் வாக்குத்தத்தம். இந்த வாக்குத்தத்தம் தாவீதின் ஜீவியத்தில் நிறைவேறவில்லை. தாவீது மரித்தார். அவருடைய சரீரத்தை அடக்கம்பண்ணினார்கள். அதன்பின்பு தேவன் தாவீதை உயிரோடு எழுப்பவில்லை. அதனால் அடக்கம்பண்ணப்பட்ட தாவீதின் சரீரம் அழிவைக்கண்டது. "உம்முடைய பரிசுத்தர் அழிவைக்காணவொட்டீர்" என்னும் வாக்குத்தத்தம் இயேசுகிறிஸ்துவில் நிறைவேறியிருக்கிறது.

தாவீது அழிவைக்கண்டான்

தாவீது தன் காலத்திலே தேவனுடைய சித்தத்தின்படி அவருக்கு ஊழியஞ்செய்தபின்பு நித்திரையடைந்து, தன் பிதாக்களிடத்திலே சேர்க்கப்பட்டு, அழிவைக் கண்டான் (அப் 13:36).

"உம்முடைய பரிசுத்தர் அழிவைக் காணவொட்டீர்" என்னும் வாக்குத்தத்தம் தாவீதில் நிறைவேறவில்லை. இயேசுகிறிஸ்துவில் இந்த வாக்குத்தத்தம் நிறைவேறிற்று. தாவீது தன் காலத்திலே தேவனுடைய சித்தத்தின்படி கர்த்தருக்கு ஊழியம் செய்தான். அதன்பின்பு நித்திரையடைந்தான். அவனுடைய சரீரம் அவன் பிதாக்களிடத்திலே சேர்க்கப்பட்டது. அவன் அழிவைக்கண்டான். தாவீதின் வரலாற்றை பவுல் மிகவும் சுருக்கமாக கூறுகிறான். தாவீதின் ஜீவியம், அவருடைய மரணம், அவருடைய முற்பிதாக்களோடு அவர் அடக்கம்பண்ணப்பட்ட சம்பவம், அதன்பின்பு மரணத்தின் வல்லமையில் தாவீதும், அவருடைய முற்பிதாக்களும் இன்று வரையிலும் இருக்கிறார்கள் என்னும் சத்தியம் ஆகியவற்றை பவுல் சுருக்கமாகக் கூறுகிறான்.

தாவீது தன் காலத்திலே தேவனுடைய சித்தத்தின்படி அவருக்கு ஊழியம் செய்தான். தாவீது நற்பண்புள்ளவன். பிரயோஜனமுள்ளவன். தேவனுடைய சித்தத்தின்படி இந்த உலகத்தில் அவன் அநேக நன்மைகளைச் செய்தான். அவன் தன்னுடைய காலத்தில் தன்னுடைய சந்ததியாருக்கு நன்மைகளைச் செய்தான். இதன் மூலமாக அவன் தேவனுக்கு ஊழியம் செய்தான். மனுஷருடைய நன்மைக்கு அவன் ஊழியம் செய்தான். அவனால் மனுஷருடைய சித்தத்திற்கு ஊழியம் செய்யமுடியவில்லை.

தாவீது எந்தக்காலத்தில் உயிரோடிருந்தானோ, அந்தச் சந்ததியாருக்கு அவன் மிகப்பெரிய ஆசீர்வாதமாகயிருந்தான். தன்னுடைய காலத்தில் வாழ்ந்த சந்ததியாருக்கு அவன் ஊழியம் செய்தான். அவனுடைய காலத்தில் பலர் ஜனங்களுக்கு சாபமாகவும், கொள்ளைநோயாகவும், வேதனையாகவும் இருந்தார்கள். ஆனால் தாவீதோ அவர்களுக்கு நன்மை செய்கிற ஊழியக்காரனாகயிருந்தான். இந்த உலகத்தில் ஜனங்களுக்கு நன்மை செய்கிறவர்கள், தங்களை எல்லோருக்கும் ஊழியம் செய்கிறவர்களாக பாவித்துக்கொள்வார்கள்.

நாம் இந்த உலகத்தில் நம்முடைய சுயஇச்சைகளை நிறைவேற்றுவதற்காகப் பிறக்கவில்லை. நாம் வாழ்கிற சமுதாயத்தில், நம்முடைய காலத்தில், நம்மால் முடிந்த எல்லா உதவிகளையும் ஜனங்களுக்குச் செய்யவேண்டும். பிறருக்கு உதவிசெய்ய நாம் எப்போதுமே ஆயத்தமாயிருக்கவேண்டும். இந்த உலகத்தில் மற்றவர்களுக்குச் சேவை செய்யவே நாம் பிறந்திருக்கிறோம் என்னும் மனப்பக்குவம் நம்மிடத்தில் காணப்படவேண்டும். இந்த விஷயத்தில் தாவீது நல்லவனாகவே இருந்திருக்கிறான். தன்னுடைய காலத்தில் ஜனங்களுக்கு நன்மை செய்தான்.

தாவீது ஜனங்களுக்கு நன்மை செய்த ஊழியக்காரனாகயிருந்தாலும் அவனுக்கும் இயேசுகிறிஸ்துவுக்கும் வித்தியாசமுள்ளது. தாவீது தன் காலத்தில் வாழ்ந்த ஜனங்களுக்கு மாத்திரமே ஊழியம் செய்தான். ஆனால் இயேசுகிறிஸ்துவோ எல்லா காலங்களிலும் இருக்கிற ஜனங்களுக்கு நன்மை செய்கிறார். எல்லா காலங்களிலும் இயேசுகிறிஸ்து நன்மை செய்கிற ஊழியத்தை செய்யவேண்டுமென்றால், அவர் மரணத்தைக் காணக்கூடாது. அவர் நித்தியமாக ஜீவிக்கவேண்டும். ஆகையினால் இயேசுகிறிஸ்துவின் மரணமானது ஒரு நித்திரையைப் போலிருக்கிறது. தேவனுடைய ஊழியத்தை, தங்களுடைய காலத்தில் செய்கிற ஊழியக்காரர்களுடைய மரணம், தேவனுடைய பார்வையில் ஒரு நித்திரையைப்போலவே இருக்கிறது. அவர்கள் தங்கள் ஊழியத்தைச் செய்துவிட்டு இளைப்பாறுதல் அடைகிறார்கள்.

தாவீது தேவனுடைய சித்தத்தின்படி, அவருடைய ஊழியத்தை நிறைவேற்றுகிற வரையிலும், அவனுக்கு மரணம் உண்டாகவில்லை. ஊழியம் செய்தபின்புதான் தாவீதுக்கு மரணநித்திரை உண்டாயிற்று.

இயேசுகிறிஸ்து கல்வாரி சிலுவையில் மரித்தாலும் தேவன் அவரை மூன்றாம்நாளில் உயிரோடு எழுப்பியிருக்கிறார். எந்த நோக்கத்திற்காக தேவன் இயேசுவை உயிரோடுஎழுப்பியிருக்கிறாரோ, அந்த ஊழியத்தை நிறைவேற்றுகிறவரையிலும் இயேசுகிறிஸ்துவுக்கு மறுபடியும் மரணநித்திரை உண்டாகாது. இயேசு கிறிஸ்துவின் ஊழியம் நித்தியமானது. ஆகையினால் அவர் தம்முடைய அழிவைக்காணமாட்டார். தேவனுக்கு சாட்சியாக ஊழியம் செய்கிறவர்கள், தங்கள் சாட்சியின் ஊழியத்தை நிறைவேற்றுகிறவரையிலும் மரணத்தைக் காணமாட்டார்கள். கர்த்தருக்காக ஊழியம் செய்கிறவர்களின் மரணம் இன்பமான நித்திரையாகயிருக்கும். தாவீதின் மரணமும் மகிழ்ச்சியான நித்திரையாகயிருந்தது. அவர் தன்னுடைய பிதாக்களிடத்தில் சேர்க்கப்படுகிறார். பிதாக்களோடு கல்லறையிலிருக்கிறார்.

தாவீது கல்லறையில் தன் அழிவைக்கண்டார். தாவீது உயிரோடு எழும்பவில்லை என்பது எல்லோருக்கும் தெரியும். ஆகையினால் "உம்முடைய பரிசுத்தர் அழிவைக்காணவொட்டீர்" என்னும் வாக்குத்தத்தம் தாவீதில் நிறைவேறவில்லை. இந்த வாக்குத்தத்தம் இயேசுகிறிஸ்துவில் நிறைவேறிற்று. ஏனெனில் தேவனால் எழுப்பப்பட்டவராகிய இயேசுவே அழிவைக்காணவில்லை.

இயேசு அழிவைக்காணவில்லை

தேவனால் எழுப்பப்பட்டவரோ அழிவைக் காணவில்லை (அப் 13:37).

தேவனுடைய வாக்குத்தத்தம் இயேசுகிறிஸ்துவில் நிறைவேறிற்று. இயேசுகிறிஸ்துவே தேவனால் எழுப்பப்பட்டவர். இவர் அழிவைக்காணவில்லை. பவுல் யூதருக்கு இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த சுவிசேஷத்தை அறிவித்துக் கொண்டிருக்கிறான். பழைய ஏற்பாட்டு வாக்குத்தத்தம் இயேசுகிறிஸ்துவில் நிறைவேறியிருக்கிறது என்பதை தெளிவுபடுத்துகிறான். பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்டிருக்கிற வாக்குத்தத்தத்தையும், அது இயேசுகிறிஸ்துவில் நிறைவேற்றிற்று என்பதையும், தேவன் கொடுக்கும் இரட்சிப்புக்கும் யூதஜனங்களுக்கும் இடையிலுள்ள தொடர்பையும் பவுல் அவர்களுக்கு எடுத்துச் சொல்லுகிறான். ஏனெனில் இந்த இரட்சிப்பின் வசனம் அவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது (அப் 13:26).

பவுல் தன் பிரசங்கத்தைக் கேட்கிற யூதர்களை மிகவும் அன்பான வார்த்தைகளினால் அழைக்கிறான். "சகோதரரே, ஆபிரகாமின் சந்ததியில் பிறந்தவர்களே, தேவனுக்குப் பயந்து நடக்கிறவர்களே" என்று அவர்களை அழைத்து, "இந்த இரட்சிப்பின் வசனம் உங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது" (அப் 13:26) என்று சுவிசேஷத்தை அவர்களுக்கு புரியும் விதத்தில் எடுத்துச்சொல்லுகிறான்.

பவுலும் ஒரு யூதன். எபிரெயரில் தானும் ஒரு எபிரெயன் என்று பவுல் தன்னைப் பற்றி குறிப்பிடுகிறான். ஆபிரகாமின் சந்ததியில் பிறந்த இந்த யூதஜனங்களுக்கு இயேசுகிறிஸ்துவின் இரட்சிப்பின் வசனம் அனுப்பப்பட்டிருக்கிறது. யூதர்கள் தங்களுடைய பாவங்களிலிருந்து இரட்சிக்கப்பட வேண்டும் என்பதற்காகவே, இந்த இரட்சிப்பின் வசனம் அவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. யூதர்கள் ஆபிரகாமின் சந்ததியில் பிறந்திருப்பது அவர்களுடைய சிலாக்கியம். இது அவர்களுக்குக் கிடைத்த மேன்மை.

ஆபிரகாமின் சந்ததியில் பிறந்திருப்பது யூதருக்கு ஒரு மேன்மையாகவும், சிலாக்கியமாகவும் இருந்தாலும், அவர்கள் ஆபிரகாமின் சந்தியில் பிறந்திருக்கிறார்கள் என்பதற்காக அவர்களுக்கு இரட்சிப்பு தானாய் வந்துவிடாது. தங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிற இரட்சிப்பின் வசனத்தை அவர்கள் தங்கள் இருதயத்தில் ஏற்றுக்கொள்ளவேண்டும். அப்போதுதான் அவர்களுக்கு இரட்சிப்பு உண்டாகும்.

பெற்றோர்களும் பிள்ளைகளும் தனித்தனியாக இரட்சிக்கப்படவேண்டும். பெற்றோர்களின் இரட்சிப்பு பிள்ளைகளுக்கு சுதந்தரவீதம் போல வந்துசேராது. ஆனாலும் இரட்சிப்பின் வசனமாவது யூதர்களுக்கு விசேஷமாக அனுப்பப்பட்டிருக்கிறது. ஏனெனில் இவர்கள் ஆபிரகாமின் சந்ததியில் பிறந்திருக்கிறார்கள்.

இரட்சிப்பின் வசனமாவது ஆபிரகாமின் சந்ததியில் பிறந்தவர்களுக்கு மாத்திரமல்ல, தேவனுக்குப் பயந்து நடக்கிறவர்களெல்லோருக்குமே, அனுப்பப்பட்டிருக்கிறது. யூதர்கள் தேவனுக்குப் பயந்து நடக்கிறார்கள். அவர்களுக்கு இது ஒரு சிலாக்கியம். ஆகையினால் அவர்களுக்கும் இரட்சிப்பின் வசனம் அனுப்பப்பட்டிருக்கிறது. அதே சமயத்தில் தேவனுக்குப் பயந்து யார் நடந்தாலும், அவர்கள் யூதர்களாகயிருந்தாலும், புறஜாதியாராக யிருந்தாலும், அவர்களுக்கும் இந்த இரட்சிப்பின் வசனம் அனுப்பப்பட்டிருக்கிறது. யூதர்கள் இந்த சிலாக்கியத்தை ஆபிரகாமின் சந்ததியில் பிறந்து பெற்றிருப்பதினால், இதன் ஆசீர்வாதங்களையும் பெற்று அனுபவிக்கவேண்டும். இரட்சிப்பின் வசனங்களை தங்களுடைய இருதயத்தில் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

பவுல் ஜெபஆலயத்தில் யூதர்களுக்குப் பிரசங்கம்பண்ணும்போது, இயேசுகிறிஸ்துவுக்கும் யூதர்களுக்கும் இடையிலுள்ள சம்பந்தத்தை எடுத்துப் பேசுகிறான். பவுலின் பிரசங்கத்தைக் கேட்டு, அவர்களுக்கு இயேசுவைப்பற்றித் தெரிந்துகொள்ளவேண்டும் என்னும் ஆர்வம் உண்டாயிருக்கவேண்டும். யூதர்களைப் பொறுத்தளவில் இயேசு அவர்களுக்கு யாராக இருக்கிறார் என்பதை பவுல் விளக்கிக் கூறுகிறான். “ஆதலால் சகோதரரே இயேசுகிறிஸ்துவின் மூலமாய் உங்களுக்கு பாவமன்னிப்பு உண்டாகும்” என்று உங்களுக்குத் தெரிந்திருக்கக்கடவது என்று அறிவிக்கிறான்.

பாவமன்னிப்பு உண்டாகும்

ஆதலால் சகோதரரே, இவர் மூலமாய் உங்களுக்குப் பாவமன்னிப்பு உண்டாகும் என்று அறிவிக்கப்படுகிறதென்றும், (அப் 13:38)

இயேசுகிறிஸ்துவின் மூலமாய் தங்களுக்குப் பாவமன்னிப்பு உண்டாகும் என்பது யூதர்களுக்குத் தெரிந்திருக்கவேண்டும். ஆகையினால் பவுல் இந்தச் சுவிசேஷத்தை யூதருக்கு அறிவிக்கிறான். ஜெபஆலயத்தில் யூதருக்கு முன்பாகப் பிரசங்கம்பண்ண வேண்டும் என்பது பவுலின் நோக்கமல்ல. அவர்களுடைய உள்ளத்தில் பதியும் வண்ணமாக அவர்களுக்கு உபதேசம்பண்ணவேண்டும். இது பவுலின் நோக்கம். அவர்களும் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இந்த நம்பிக்கையில் பவுல் அவர்களோடு பேசுகிறான்.

ஜெபஆலயத்திலுள்ள யூதரைக் குறிப்பிடும்போது “சகோதரரே” என்று அழைக்கிறான். தானும் அவர்களில் ஒருவன் என்பதையும், அவர்கள் தன்னைப் போன்றவர்கள்தான் என்பதையும், தாங்கள் எல்லோருமே ஒரே இனத்தையும் ஒரே தேசத்தையும் சேர்ந்தவர்கள் என்பதையும், பவுல் அவர்களுக்கு விவரித்துச் சொல்லுகிறான்.

பிரசங்கியார்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்போது, பிரசங்கத்தைக் கேட்கிறவர்களை “சகோதரரே” என்று அழைப்பது நல்லது. அவர்கள் நன்மையில் தங்களுக்கு இருக்கும் அக்கறையை பிரசங்கியார்கள் இந்த வார்த்தையின் மூலமாக வெளிப்படுத்தலாம். அவர்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணும்போது, அவர்கள் இரட்சிக்கப்படவேண்டும் என்னும் ஆத்தும தாகம் தங்களுக்கும் இருப்பதை, இதன் மூலமாக அவர்களுக்குத் தெரியப்படுத்தலாம்.

சுவிசேஷத்தைக் கேட்கிறவர்கள் மிகவும் கவனத்தோடு கேட்கவேண்டும். சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டால் அவர்களும் தேவனுடைய பிள்ளைகளாக ஆகும் சிலாக்கியத்தைப் பெறுவார்கள். இயேசுகிறிஸ்து தேவனுக்கும் அவர்களுக்கும் மத்தியஸ்தராகயிருப்பார். கிருபையின் பிரமாணம் அவர்களுடைய ஜீவியத்தில் கிரியை நடப்பிக்கும். இயேசுகிறிஸ்துவின் மூலமாக மாத்திரமே மனுஷருக்குப் பாவமன்னிப்பு உண்டாகும். சுவிசேஷ வார்த்தையானது சாதாரண சத்தமல்ல. நம்முடைய ஆத்துமாவிற்கு ஜீவனைக்கொடுக்கிற ஜீவவார்த்தை. ஆகையினால் சுவிசேஷத்தை கருத்தாய்க் கேட்டு, ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

நீதிமானாக்கப்படுகிறான்

மோசேயின் நியாயப் பிரமாணத்தினாலே நீங்கள் எவை களினின்று விடுதலையாகி நீதிமான் களாக்கப்படக் கூடாதிருந்ததோ, விசுவாசிக்கிறவன் எவனும் அவைகளினின்று இவராலே விடுதலையாகி நீதிமானாக்கப் படுகிறான் என்றும் உங்களுக்குத் தெரிந்திருக்கக்கடவது (அப் 13:39).

மோசேயின் நியாயப் பிரமாணத்தினால் செய்யமுடியாததை கிறிஸ்துவின் சுவிசேஷம் செய்து முடிக்கிறது. இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிற எவனும், தங்களுடைய பாவங்களினின்று, இயேசுகிறிஸ்துவினாலே விடுதலையாகி நீதிமானாக்கப்படுகிறான். ஆகையினால் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டால் பாவமன்னிப்பு உண்டு என்பதையும், தாங்கள் நீதிமானாக்கப்படுவோம் என்பதையும் புரிந்துகொண்டு, சுவிசேஷத்தை விசுவாசித்து ஏற்றுக்கொள்ளவேண்டும். சுவிசேஷத்திற்கு விரோதமாக கிரியை நடப்பிக்கிற பிரமாணங்களைப் பின்பற்றிச் செல்லக்கூடாது.

பாவிகள் நீதிமானாக்கப்படுவது மிகப்பெரிய அற்புதம். பாவம் செய்தவர்கள் இயேசுகிறிஸ்துவின் மூலமாய். தேவனுடைய பார்வையில் நீதிமான்களாக ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள். இதுவே நீதிமானாக்கப்படுதல் என்று அழைக்கப்படுகிறது. மெய்யாகவே நீதிமான்களாக்கப் பட்டிருக்கிறவர்கள், தங்களுடைய எல்லா குற்றவுணர்வுகளிலிருந்தும் விடுவிக்கப் படுகிறார்கள். மோசேயின் பிரமாணத்தினால் எந்த மனுஷனையும் நீதிமானாக்க முடியாது. ஆனால் இயேசுகிறிஸ்துவோ நம்மைப் பூரணமாக நீதிமானாக்குகிறார். இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நம்முடைய பாவத்திற்கு பரிபூரணமான பாவநிவாரணம் செய்யப்பட்டிருக்கிறது.

இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவர் களெல்லோரும், தங்களை அவர் ஆளுகை செய்யவேண்டுமென்றும், தாங்கள் அவரால் நீதிமான்களாக்கப்பட வேண்டும் என்றும் விசுவாசித்து, தங்களையே அவரிடத்தில் ஒப்புக்கொடுக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவையும் அவருடைய சுவிசேஷத்தையும் ஏற்றுக்கொள்ளாமல் புறக்கணிக்கிறவர்களுக்கு நித்திய அழிவு உண்டாகும். இப்படிப்பட்டவர்கள், தேவனுடைய கிருபையினால் தாங்கள் நீதிமான்களாக்கப்படுவதை அங்கீகரியாமல், தங்களுடைய சொந்தத் தீர்மானத்தினால், தங்களுக்குத் தாங்களே அழிவைத் தேடிக்கொள்கிறார்கள்.

எச்சரிக்கையாயிருங்கள்

அன்றியும் தீர்க்கதரிசிகளின் புஸ்தகத்திலே: அசட்டைக்காரரே, பாருங்கள், பிரமித்து அழிந்துபோங்கள்! உங்கள் நாட்களில் ஒரு கிரியையை நான் நடப்பிப்பேன், ஒருவன் அதை உங்களுக்கு விவரித்துச் சொன்னாலும் நீங்கள் விசுவாசிக்கமாட்டீர்கள் என்று சொல்லியிருக்கிறபடி, உங்களுக்கு நேரிடாதபடிக்கு எச்சரிக்கையா யிருங்கள் என்றான் (அப் 13:40,41).

தீர்க்கதரிசிகளின் புஸ்தகத்தில் இஸ்ரவேல் புத்திரருக்கு ஏராளமான ஆசீர்வாதங்களும் நன்மைகளும் வாக்குப்பண்ணப் பட்டிருக்கிறது. அவையெல்லாவற்றையும் யூதர்கள் பரிபூரணமாகப் பெற்றுக்கொண்டு, தெய்வீக ஆசீர்வாதங்களை அனுபவிக்கவேண்டும். பவுல் தன்னுடைய பிரசங்கத்தைக் கேட்கிற யூதர்களை எச்சரித்துக் கூறுகிறான். அவர்களுடைய புஸ்தகத்தில் கூறப்பட்டிருக்கிற ஆசீர்வாதங்களை அவர்கள் பெற்றுக்கொள்ளவில்லை யென்றால், அவர்களுடைய புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிற அழிவு அவர்களுக்கு வந்துவிடும். இப்படிப்பட்ட அழிவு தங்களுக்கு வந்துவிடாதவாறு யூதர்கள் எச்சரிக்கையாயிருக்கவேண்டும்.

பவுல் அவர்களை பயமுறுத்துவதற்காக எச்சரிக்கவில்லை. அவர்கள் அசட்டையாயிருந்தால் தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள முடியாது என்பதற்காகவே பவுல் அவர்களை எச்சரித்துக் கூறுகிறான். அப்போஸ்தலர் பவுல் பழைய ஏற்பாட்டு வசனத்தை இங்கு மேற்கோளாகக் கூறும்போது, செப்துவஜிந்த் பதிப்பிலிருந்து எடுத்துப் பேசுகிறான். யூதர்களை "அசட்டைக்காரரே பாருங்கள்" என்று எச்சரிக்கிறான்.

இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை அசட்டை செய்கிறவர்களுக்கு அழிவு நேரிடும். தங்களுடைய சுயதீர்மானத்தினாலேயே இவர்கள் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளாமல், அதை ஒதுக்கிவைத்துவிட்டு, தங்களுக்கு அழிவைத் தேடிக்கொள்கிறார்கள். சுவிசேஷத்தை விசுவாசியாதவர்களுக்கு அழிவு வருமென்று தீர்க்கதரிசிகளின் புஸ்தகத்தில் முன்னறிவிக்கப் பட்டிருக்கிறது. சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளாதவர்கள் பிரமித்து அழிந்துபோவார்கள். பிரமிக்காதவர்கள் இரட்சிக்கப்படுவார்கள். பிரமிக்கிறவர்கள் அழிந்துபோவார்கள்.

நாம் இயேசுகிறிஸ்துவின் பிள்ளைகளாகயிருப்பதினால் நமக்கு அநேக சிலாக்கியங்கள் உண்டு. நாம் ஏராளமான ஆசீர்வாதங்களை அனுபவிக்கிறோம். இந்த ஆசீர்வாதங்களெல்லாம் நமக்கு ஆச்சரியமாகயிருக்கும். விசுவாசியாதவர் களுக்கோ இவை பிரமிப்பாக இருக்கும். விசுவாசித்தால் ஜீவனும், விசுவாசியாமல் பிரமித்தால் அழிவும் உண்டாகும்.

யூதர்களில் அநேகர் இயேசுகிறிஸ்துவைத் தங்கள் மேசியாவாக விசுவாசிக்கவில்லை. தேவன் இவர்களுடைய நாட்களில் ஒரு கிரியை நடப்பிப்பார். அந்தக் கிரியையை அவர்களுக்கு ஒருவன் விவரித்துச் சொல்லுவான். அப்பொழுது அவர்கள் இயேசுகிறிஸ்துவைத் தங்கள் மேசியாவாக விசுவாசிக்கவேண்டும். ஆனால் அவர்களோ தீர்க்கதரிசிகளின் புஸ்தகத்திலே சொல்லியிருக்கிறபடி, தேவனுடைய கிரியையை விசுவாசிக்கமாட்டார்கள்.

இயேசுகிறிஸ்துவின் மூலமாய் தங்களுக்குப் பாவமன்னிப்பு உண்டு என்பதை யூதமார்க்கத்தார் விசுவசிக்கவில்லை. தேவனுடைய மீட்பின் கிரியையை இவர்கள் அசட்டைபண்ணுகிறார்கள். தேவன் நடப்பிக்கிற கிரியையை ஒருவன் இவர்களுக்கு விவரித்துச் சொன்னாலும், இவர்கள் விசுவாசியாமலிருக்கிறார்கள். தங்களுடைய நாட்களில் தேவன் நடப்பிக்கிற கிரியைக் காணும் சிலாக்கியமும் அநுகூலமும் இவர்களுக்குக் கிடைத்திருக்கிறது. ஆனால் தேவனுடைய கிரியையை விசுவாசித்து, இயேசுகிறிஸ்துவைத் தங்களுடைய இரட்சகராக ஏற்றுக்கொள்ளுகிற தேவகிருபை இவர்களிடத்திலில்லை.

இயேசுகிறிஸ்துவைத் தங்களுடைய இரட்சகராக ஏற்றுக்கொள்ளுகிற ஜனங்கள் பரலோகத்திலும் ஏற்றுக் கொள்ளப்படுவார்கள். இரட்சிக்கப் படாதவர்கள் அழிந்துபோவார்கள். பரலோகத்தின் மேன்மையை இழந்துபோவார்கள். கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மீது தேவனுடைய கோபாக்கினை வந்திறங்கும். தேவனுக்குக் கீழ்ப்படியாதோர் எல்லோருமே இயேசுகிறிஸ்துவை அசட்டைபண்ணுகிற அசட்டைக்காரராகவே இருப்பார்கள்.

ஆகையினால் தேவன் தங்கள் நாட்களில் நடப்பிக்கிற கிரியைகளையும், அந்தக் கிரியைகளை நமக்கு விவரித்துச் சொல்லுகிற உபதேசங்களையும் நாம் பயபக்தியோடு கேட்கவேண்டும். கர்த்தருடைய வார்த்தையை விசுவாசிக்க வேண்டும். இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நமக்குக் கொடுக்கப்படும் பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து, நம்முடைய பாவங்களினின்று இயேசுகிறிஸ்துவால் விடுதலைபெற்று நீதிமான்களாக்கப்பட வேண்டும்.

புறஜாதியார் மத்தியில் ஊழியம் அப் 13 : 42-52

அப் 13:42. அவர்கள் யூதருடைய ஜெபஆலயத்திலிருந்து புறப்படுகையில், அடுத்த ஓய்வு நாளிலே இந்த வசனங்களைத் தங்களுக்குச் சொல்லவேண்டும் என்று புறஜாதியார் வேண்டிக்கொண்டார்கள்.

அப் 13:43. ஜெபஆலயத்தில் கூடின சபை கலைந்துபோனபின்பு, யூதரிலும் யூதமார்க்கமைந்த பக்தியுள்ளவர்களிலும் அநேகர் பவுலையும் பர்னபாவையும் பின்பற்றினார்கள். அவர்களுடனே இவர்கள் பேசி, தேவனுடைய கிருபையிலே நிலைகொண்டிருக்கும்படி அவர்களுக்குப் புத்திசொன்னார்கள்.

அப் 13:44. அடுத்த ஓய்வுநாளிலே கொஞ்சங் குறையப் பட்டணத்தாரனைவரும் தேவ வசனத்தைக் கேட்கும்படி கூடிவந்தார்கள்.

அப் 13:45. யூதர்கள் ஜனக்கூட்டங்களைக் கண்டபோது பொறாமையினால் நிறைந்து பவுலினால் சொல்லப்பட்டவைகளுக்கு எதிரிடையாய்ப் பேசி, விரோதித்துத் தூஷித்தார்கள்.

அப் 13:46. அப்பொழுது பவுலும் பர்னபாவும் தைரியங்கொண்டு அவர்களை நோக்கி: முதலாவது உங்களுக்கே தேவவசனத்தைச் சொல்ல வேண்டியதாயிருந்தது; நீங்களோ அதைத் தள்ளி, உங்களை நித்திய ஜீவனுக்கு அபாத்திரராகத் தீர்த்துக் கொள்ளுகிறபடியினால், இதோ, நாங்கள் புறஜாதியாரிடத்தில் போகிறோம்.

அப் 13:47. நீர் பூமியின் கடைசிபரியந்தமும் இரட்சிப்பாயிருக்கும்படி உம்மை ஜாதிகளுக்கு ஒளியாக வைத்தேன் என்கிற வேதவாக்கியத்தின்படி கர்த்தர் எங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறபடியினால் இப்படிச் செய்கிறோம் என்றார்கள்.

அப் 13:48. புறஜாதியார் அதைக் கேட்டுச் சந்தோஷப்பட்டு, கர்த்தருடைய வசனத்தை மகிமைப்படுத்தினார்கள். நித்திய ஜீவனுக்கு நியமிக்கப்பட்டவர்கள் எவர்களோ அவர்கள் விசுவாசித்தார்கள்.

அப் 13:49. கர்த்தருடைய வசனம் அத்தேசமெங்கும் பிரசித்தமாயிற்று.

அப் 13:50. யூதர்கள் பக்தியும் கனமுமுள்ள ஸ்திரீகளையும் பட்டணத்து முதலாளிகளையும் எடுத்துவிட்டு, பவுலையும் பர்னபாவையும் துன்பப்படுத்தும்படி செய்து, தங்கள் எல்லைகளுக்குப் புறம்பாக அவர்களைத் துரத்திவிட்டார்கள்.

அப் 13:51. இவர்கள் தங்கள் கால்களில் படிந்த தூசியை அவர்களுக்கு எதிராக உதறிப் போட்டு, இக்கோனியா பட்டணத்துக்குப் போனார்கள்.

அப் 13:52. சீஷர்கள் சந்தோஷத்தினாலும் பரிசுத்த ஆவியினாலும் நிரப்பப்பட்டார்கள்.

புறஜாதியார் வேண்டிக்கொண்டார்கள்

அவர்கள் யூதருடைய ஜெபஆலயத்திலிருந்து புறப்படுகையில், அடுத்த ஓய்வு நாளிலே இந்த வசனங்களைத் தங்களுக்குச் சொல்லவேண்டும் என்று புறஜாதியார் வேண்டிக்கொண்டார்கள் (அப் 13:42).

பவுல் யூதருடைய ஜெபஆலயத்தில், யூதர்மத்தியிலே இயேசுகிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கம்பண்ணுகிறார். யூதர்களில் ஒருசிலர் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு எதிர்த்து நிற்கிறார்கள். பவுலின் பிரசங்கத்தைக்கேட்க அவர்கள் ஆயத்தமாயில்லை. அப்படிப்பட்ட யூதர்கள் ஜெபஆலயத்தைவிட்டுப் புறப்பட்டுப் போய்விடுகிறார்கள். இவர்களிடத்தில் தேவபக்தியுமில்லை. இயேசுகிறிஸ்துவையும், அவருடைய உபதேசத்தையும் வெளிப்படையாக நிந்திக்கிறார்கள். மற்றவர்களுடைய மனதிலும் சுவிசேஷத்திற்கு விரோதமாக விஷவிதைகளைத் தூவுகிறார்கள். கிறிஸ்துவின் சுவிசேஷத்தைத் தாங்கள் விசுவாசிக்கவில்லை என்பதை, மற்ற யூதர்களுக்குத் தெரிவிக்கும் விதத்தில், விசுவாசியாத யூதர்கள் ஜெபஆலயத்திலிருந்து புறப்பட்டுப்போய்விடுகிறார்கள்.

இயேசுகிறிஸ்துவை விசுவாசியாதோர் உள்ளத்திலிருந்து சுவிசேஷம் நீக்கிப்போடப்படுகிறது. முதலாவதாக இவர்களே தங்கள் இருதயத்திலிருந்து சுவிசேஷத்தை நீக்கிப்போடுகிறார்கள். தேவனும் தம்முடைய நீதியினால் தம்மை விசுவாசியாதோர் உள்ளத்திலிருந்து தம்முடைய சுவிசேஷத்தை அகற்றிப்போடுகிறார். தேவன் யாரையும் தாமாகவே புறம்பே தள்ளிவிடமாட்டார். ஒருவர் இயேசுகிறிஸ்துவைவிட்டுப் பிரிந்துபோகவேண்டுமென்றால், அவர்தான் முதலாவதாக இயேசுவைவிட்டுப் பிரிந்துபோகவேண்டும். அதுவரையிலும் இயேசு அந்த நபரைவிட்டு ஒருபோதும் பிரிந்துபோகமாட்டார்.

கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கேட்பதற்கு யூதர்கள் ஆயத்தமாயில்லை. ஆனால் புறஜாதியாரோ இரட்சிப்பின் சுவிசேஷ வசனத்தைக் கேட்பதற்கு ஆயத்தமாகயிருக்கிறார்கள். "அடுத்த ஓய்வுநாளிலே இந்த வசனங்களைத் தங்களுக்குச் சொல்லவேண்டும்" என்று புறஜாதியார் பவுலையும் பர்னபாவையும் வேண்டிக் கொள்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின் மூலமாய் உண்டாகும் பாவமன்னிப்பைக் குறித்து தங்களுக்கும் சொல்லவேண்டும் என்று புறஜாதியார் அப்போஸ்தலரை வேண்டிக்கொள்கிறார்கள்.

யூதர்கள் சுவிசேஷத்தைக் கேட்க மனதில்லாதவர்களாக விலகிப்போய்விடுகிறார்கள். புறஜாதியாரோ சுவிசேஷத்தைக் கேட்க மனதுள்ளவர்களாக அப்போஸ்தலரைத் தேடிவருகிறார்கள். தங்களை யார் விரும்பி அழைக்கிறார்களோ அவர்கள் மத்தியில் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ண பவுல் ஆயத்தமாயிருக்கிறான். சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க புறஜாதியார் தன்னை விரும்பி வேண்டிக்கொள்வதினால், புறஜாதியார் மத்தியில் சுவிசேஷத்தை அறிவிப்பதை பவுல் நியாயப்படுத்துகிறான்.

ஜீவஅப்பம் தங்களுக்கு வேண்டுமென்று ஒருவர் விரும்பிக் கேட்கும்போது, அதை அவருக்குப் பிட்டுக்கொடுக்க யாரால் மறுக்க முடியும். அப்பத்தின் துணிக்கைகள் மேஜையின் கீழே சிந்தி விழும்போது, பிள்ளைகள் அந்த அப்பத்துணிக்கைகளைப் பெற்றுக்கொள்வதை யாரால் தடைபண்ண முடியும்.

புறஜாதியாரும் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கேட்கிறார்கள். முதல் தடவை கேட்டபோது அவர்களுக்கு சுவிசேஷத்தின் சத்தியம் தெளிவாய் விளங்கவில்லை. ஆகையினால் அடுத்த ஓய்வுநாளிலும் இந்த வசனங்களை தங்களுக்குச் சொல்லவேண்டுமென்றும் புறஜாதியார் வேண்டிக்கொள்கிறார்கள். நாம் ஒரு சத்தியத்தைக் கேட்கும்போது, அதை மறுபடியும் கேட்கவேண்டும் என்னும் தாகம் நமக்குள் உண்டாகவேண்டும். சத்தியத்தைத் திரும்பத் திரும்ப கேட்டால்தான், அது நமக்குள் ஆழமாக வேர்விட்டு வளரும். புறஜாதியாரோ சுவிசேஷத்தைத் திரும்பத் திரும்ப கேட்கவேண்டுமென்று விரும்புகிறார்கள். யூதர்களோ சுவிசேஷத்தை ஒருதடவை கூட கேட்பதற்கு விரும்பவில்லை.

புத்திசொன்னார்கள்

ஜெபஆலயத்தில் கூடின சபை கலைந்துபோனபின்பு, யூதரிலும் யூதமார்க்கமைந்த பக்தியுள்ளவர்களிலும் அநேகர் பவுலையும் பர்னபாவையும் பின்பற்றினார்கள். அவர்களுடனே இவர்கள் பேசி, தேவனுடைய கிருபையிலே நிலைகொண்டிருக்கும்படி அவர்களுக்குப் புத்திசொன்னார்கள் (அப் 13:43).

இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் யூதருடைய உள்ளத்திலும், யூதமார்க்கத்தமைந்த பக்தியுள்ளவர்களின் உள்ளத்திலும் கிரியை செய்கிறது. இவர்களில் அநேகர் பவுலையும் பர்னபாவையும் பின்பற்றுகிறார்கள். தேவனுடைய கிருபைக்குத் தங்களை ஒப்புக்கொடுக்கிறார்கள். சுவிசேஷத்தின் மூலமாய் வரும் ஆறுதலையும் ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொள்ள வாஞ்சையாயிருக்கிறார்கள்.

இவர்கள் பவுலையும் பர்னபாவையும் பின்பற்றுகிறார்கள். இவர்கள் இயேசுகிறிஸ்துவின் சீஷர்களாக இருப்பதற்குப் பதிலாக, இவர்கள் பவுலுக்கும் பர்னபாவுக்கும் சீஷர்களாகயிருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவிடம் சேர்க்கப்படுகிறவர்கள், முதலாவது இவர்கள் தங்களை இயேசுகிறிஸ்துவிடம் வழிநடத்துகிறவர்களை பின்பற்றுவார்கள். ஊழியக்காரர்களின் ஆவிக்குரிய உபதேசங்களைப் பெற்றுக்கொள்வார்கள்.

பவுலும் பர்னபாவும் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிற யூதர்களையும், யூதமார்க்கத்தமைந்த பக்தியுள்ளவர்களையும் தங்களிடமாகச் சேர்த்துக்கொள்கிறார்கள். தங்களுடைய உபதேசத்தைக் கேட்டு, இயேசுகிறிஸ்துவுக்கு கீழ்ப்படிய மனதுள்ள விசுவாசிகளைத் தங்களுடைய சீஷர்களாகச் சேர்த்துக்கொள்கிறார்கள். தேவனுடைய கிருபையிலே நிலைகொண்டிருக்கும்படி அவர்களுக்குப் புத்தி சொல்லுகிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகள் தேவகிருபையில் பெருகியிருக்கவேண்டும். நமக்கு தேவனுடைய கிருபை ஒருபோதும் குறைவுபடக்கூடாது. நாம் தேவகிருபையில் நிலைகொண்டிருந்தால்தான், கர்த்தருடைய ஆசீர்வாதத்தைப்பெற்றுக்கொள்ள முடியும். ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சி பெறமுடியும்.

அடுத்த ஓய்வுநாளிலே

அடுத்த ஓய்வுநாளிலே கொஞ்சங் குறையப் பட்டணத்தாரனைவரும் தேவ வசனத்தைக் கேட்கும்படி கூடிவந்தார்கள் (அப் 13:44).

அடுத்த ஓய்வுநாளிலும் பவுலும் பர்னபாவும் ஜெபஆலயத்தில் உபதேசம்பண்ணுகிறார்கள். அந்நாளிலே கொஞ்சங்குறையப் பட்டணத்தாரனைவரும், தேவவசனத்தைக் கேட்கும்படி கூடிவருகிறார்கள். ஒருசிலர் அப்போஸ்தலரைப்பார்க்க வேண்டும் என்னும் ஆர்வத்தில் வந்திருக்கலாம். வேறு சிலரோ அப்போஸ்தலரின் பிரசங்கத்தைக்கேட்டு, யூதர்கள் அதற்கு எவ்வாறு எதிர்த்து நிற்கிறார்கள் என்பதைப் பார்ப்பதற்காக வந்திருக்கலாம். தேவனுடைய வார்த்தையை ஏற்கெனவே கேட்டவர்கள், அதை இன்னும் அதிகமாய்க் கேட்டவேண்டும் என்னும் ஆவலில் வந்திருக்கலாம்.

அவர்கள் மனுஷருடைய வார்த்தையைக் கேட்க வரவில்லை. தேவனுடைய வார்த்தையைக் கேட்க வந்திருக்கிறார்கள். பவுலும் புறஜாதியாருக்கு தன்னுடைய சுயவார்த்தையைப் பேசாமல், தேவனுடைய வார்த்தையை மாத்திரமே பேசுகிறான். ஏராளமான ஜனங்கள் திரளாய் கூடிவந்திருக்கும்போது, பவுல் அவர்களுக்கு கர்த்தருடைய வார்த்தையை சந்தோஷமாய் அறிவிக்கிறான்.

யூதர்கள் விரோதித்து தூஷித்தார்கள்

யூதர்கள் ஜனக்கூட்டங்களைக் கண்டபோது பொறாமையினால் நிறைந்து பவுலினால் சொல்லப்பட்டவைகளுக்கு எதிரிடையாய்ப் பேசி, விரோதித்துத் தூஷித்தார்கள் (அப் 13:45).

யூதர்கள் சுவிசேஷத்திற்கு விரோதமாக எழும்பி நின்று பேசுகிறார்கள். அப்போஸ்தலரின் பிரசங்கத்தைக் கேட்பதற்கு திரளான ஜனங்கள் கூடிவந்திருக்கிறார்கள். ஜனக்கூட்டங்களைக் கண்டபோது யூதர்கள் பொறாமையினால் நிறைகிறார்கள். அப்போஸ்தலர் ஜனங்கள்மீது கரிசனையுடன் நடந்துகொள்கிறார்கள். ஆத்தும பாரத்தோடு அவர்களுக்கு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணுகிறார்கள். இது யூதர்களுக்குப் பிடிக்கவில்லை. பொறாமைப்படுகிறார்கள். அப்போஸ்தலர் மீது கோபப்படுகிறார்கள்.

இயேசுகிறிஸ்து பிரசங்கம் செய்தபோது, அதைக் கேட்ட பரிசேயர் இயேசுவின்மீது பொறாமைப்பட்டு கோபப்பட்டார்கள். அன்று பரிசேயரிடத்தில் காணப்பட்ட அதே பொறாமையின் ஆவியே, இப்போது யூதரிடத்தில் காணப்படுகிறது. முழுஉலகமும் இயேசுகிறிஸ்துவுக்குப் பின்னால் போகிறதே என்று பரிசேயர் இயேசுவின்மீது பொறாமைப்பட்டார்கள். யூதர்களோ பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்க திரளான ஜனங்கள் கூடிவந்திருக்கிறார்களே என்று பொறாமைப்படுகிறார்கள்.

அப்போஸ்தலர்களின் பிரசங்கத்திற்கு விரோதமாக யூதர்கள் எதிர்த்து நிற்கிறார்கள். பவுலினால் சொல்லப்பட்டவைகளுக்கு எதிர்த்துப் பேசி, விரோதித்துத் தூஷிக்கிறார்கள். பவுல் சொன்ன ஒவ்வொரு வார்த்தையிலும் குற்றம் கண்டுபிடிக்கிறார்கள். அப்போஸ்தலரின் வார்த்தையில் ஏதாவது குற்றம் கண்டுபிடிக்கவேண்டும் என்பதற்காக, யூதர்கள் தேவையில்லாமல் அப்போஸ்தலர்மீது குற்றம் சுமத்துகிறார்கள். அவர்களால் ஒரு குற்றமும் காணமுடியாமல் போனபோது, அவர்கள் இயேசுகிறிஸ்துவையும் அவருடைய சுவிசேஷத்தையும் தூஷிக்கிறார்கள். பொதுவாக ஒருவர் சுவிசேஷத்திற்கு விரோதமாக எதிர்த்துப் பேச ஆரம்பிக்கும்போது, அவர் முடிவில் சுவிசேஷத்தை விரோதித்துத் தூஷிப்பார்.

புறஜாதியாரிடத்தில் போகிறோம்

அப்பொழுது பவுலும் பர்னபாவும் தைரியங்கொண்டு அவர்களை நோக்கி: முதலாவது உங்களுக்கே தேவவசனத்தைச சொல்ல வேண்டியதாயிருந்தது; நீங்களோ அதைத் தள்ளி, உங்களை நித்திய ஜீவனுக்கு அபாத்திரராகத் தீர்த்துக் கொள்ளுகிறபடியினால், இதோ, நாங்கள் புறஜாதியாரிடத்தில் போகிறோம் (அப் 13:46).

யூதர்களும் இரட்சிக்கப்படவேண்டும் என்னும் ஆத்தும பாரத்தோடுதான் பவுல் அவர்களுக்கு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறான். ஆனால் அவர்களோ பொறாமையினால் நிறைந்து, பவுலினால் சொல்லப்பட்டவைகளுக்கு எதிரிடையாய்ப் பேசி, விரோதித்துத் தூஷிக்கிறார்கள். அவர்களுடைய தூஷண வார்த்தையைக் கேட்டபோது பவுல் தேவனுடைய சித்தத்தைப்பற்றி தியானித்துப் பார்க்கிறான். யூதர் மத்தியில் சுவிசேஷத்தை அறிவிக்கவேண்டிய தங்களுடைய பொறுப்பிலிருந்து தாங்கள் விடுதலை பெறுவதாகவும், புறஜாதியார் மத்தியில் தேவனுடைய வார்த்தையை அறிவிக்கப் போவதாகவும், யூதர்கள் மத்தியில் வெளிப்படையாகச் சொல்லுகிறான்.

சுவிசேஷத்தின் ஆசீர்வாதம் முதலாவது யூதருக்கே வாக்குப்பண்ணப்பட்டது. ஆனால் யூதர்களோ சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளாமல் புறக்கணித்து விடுகிறார்கள். புறஜாதியார் மத்தியில் தாங்கள் சுவிசேஷத்தை அறிவிக்கப்போவதாக அப்போஸ்தலர் சொன்னபோது, யூதர்கள் அதைப் பெரிதுபடுத்தவில்லை. அதற்கு எதிராகவும் பேசவில்லை. அவர்கள் சுவிசேஷத்திற்கு எந்த முக்கியத்துவமும் கொடுக்கவில்லை. கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கும் தங்களுக்கும் சம்பந்தமில்லாததுபோல யூதர்கள் நடந்துகொள்கிறார்கள்.

பவுலும் பர்னபாவும் தைரியங்கொண்டு யூதர்களிடத்தில் பேசுகிறார்கள். சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறவர்கள் அப்போஸ்தலர்களைப் போல தைரியமாய்ப் பேசவேண்டும். கர்த்தருடைய பிள்ளைகள் புறாவைப்போல கபடற்றவர்களாகவும், சிங்கத்தைப்போல பலமுள்ளவர்களாவும் இருக்கவேண்டும். கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு சத்துருக்கள் தைரியமாய் எதிர்த்து நிற்கும்போது, கர்த்தருடைய ஊழியக்காரர்கள் பயந்துபோய் ஒடுங்கிவிடக்கூடாது. பரிசுத்த ஆவியினால் நிறைந்து தைரியம்கொள்ளவேண்டும்.

சுவிசேஷத்திற்கு எதிர்த்து நிற்கிறவர்களை நாம் சத்துருக்களாக நினைத்து அவர்களோடு சண்டைபோடக்கூடாது. அவர்களுடைய ஆத்துமாக்களும் இரட்சிக்கப்படவேண்டும் என்னும் ஆத்துமபாரம் நம்மிடத்தில் காணப்படவேண்டும். அவர்களை சத்துருக்களாக நினைக்காமல், சிநேகிதராக நினைத்து, அவர்களுக்கும் சுவிசேஷத்தை ஆத்தும பாரத்தோடு அறிவிக்கவேண்டும். கர்த்தர் நம்மிடத்தில் சுவிசேஷ ஊழியத்தை நம்பி ஒப்புக்கொடுத்திருக்கிறார். அந்த நம்பிக்கைக்கு நாம் பாத்திரவான்களாக நடந்துகொள்ளவேண்டும்.

யூதர்கள் சுவிசேஷத்தை தள்ளியதினால் அவர்களுக்கு என்ன நேரிடும் என்பதை பவுலும் பர்னபாவும் அவர்களுக்குத் தைரியமாய்ச் சொல்லுகிறார்கள். அதே வேளையில் புறஜாதியாருக்கு சுவிசேஷத்தை அறிவிக்கும்போது அவர்களுக்குக் கிடைக்கும் ஆசீர்வாதங்களைப்பற்றியும் சொல்லுகிறார்கள்.

கிறிஸ்துவின் சுவிசேஷம் முதலாவது யூதர்களுக்கே அறிவிக்கப்பட்டது. தேவவசனம் முதலில் அவர்களுக்கே சொல்ல வேண்டியதாகயிருந்தது. கர்த்தருடைய வாக்குத்தத்தம் முதலாவது யூதர்களுக்கே கொடுக்கப்பட்டது. இயேசுகிறிஸ்துவும் யூதர்கள் மத்தியிலேயே முதலாவதாக அனுப்பப்பட்டார். யூதர்களுக்குத் தேவனுடைய கிருபையும், அநுக்கிரகமும், தயவும் கிடைத்தது. ஆனால் அவர்களோ கிறிஸ்துவின் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளாமல் தள்ளிவிடுகிறார்கள்.

நாம் தேவனைத்தள்ளிவிட்டால் அவரும் நம்மைத் தள்ளிவிடுவார். நாம் சுவிசேஷத்தை அங்கீகரிக்காவிட்டால் தேவனும் நம்மை அங்கீகரிக்கமாட்டார். யூதர்கள் தேவவசனத்தை தள்ளிவிடுகிறார்கள். அதனால் தேவனும் அவர்களைத் தள்ளிவிடுகிறார். இது தேவனுடைய நீதி. மனுஷர் சுவிசேஷத்தை தள்ளிவிட்டால் தேவன் அவர்களை தம்முடைய நீதியால் தள்ளிவிடுவார். தேவவசனத்தை யூதர்கள் தள்ளிவிட்டபடியினால் அவர்கள் தங்களை நித்திய ஜீவனுக்கு அபாத்திரராகத் தீர்த்துக்கொள்கிறார்கள்.

நாம் எல்லோருமே மனத்தாழ்மையோடு நம்மை நியாயந்தீர்த்துக்கொள்ள வேண்டும். நித்திய ஜீவனுக்கு நாம் எல்லோருமே அபாத்திரராக இருக்கிறோம் என்னும் எண்ணம் நமக்குள் இருக்கவேண்டும். நம்முடைய சுயமுயற்சியினாலோ, சுயபக்தியினாலும் நித்திய ஜீவனை சுதந்தரித்துக்கொள்ள முடியாது. தேவன்தாமே தம்முடைய பெரிதான கிருபையினால் நமக்கு நித்திய ஜீவனைக்கொடுக்கிறார்.

யூதர்களிடத்தில் தேவபயமில்லை. தங்கள் நித்திய ஜீவனைக்குறித்து அவர்களுக்கு அக்கரையில்லை. தேவவசனத்தினால் தங்களுக்கு ஒரு பிரயோஜனமுமில்லை என்று நினைத்து, அதைத் தள்ளிவிடுகிறார்கள். இதனால் தங்களை நித்திய ஜீவனுக்கு அபாத்திரராகத் தீர்த்துக்கொள்கிறார்கள். கர்த்தர் அவர்களை நித்திய ஜீவனுக்கு அபாத்திரர் என்று தீர்ப்பதற்கு முன்பாக, அவர்கள் தாங்களாகவே தங்களை நித்திய ஜீவனுக்கு அபாத்திரராகத் தீர்த்துக்கொள்கிறார்கள்.

அப்போஸ்தலர்கள் யூதருக்கே தேவவசனத்தை முதலாவதாகச் சொல்லுகிறார்கள். ஆனால் அவர்களோ அதை ஏற்றுக்கொள்ளாமல் தள்ளிவிடுகிறார்கள். அப்போஸ்தலர்களால் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்காமல் இருக்கமுடியாது. யாருக்காவது பிரசங்கிக்கவேண்டும். இது அவர்களுடைய ஊழியம். யூதர்கள் தேவவசனத்தை ஏற்றுக்கொள்ளாமல் தள்ளிவிட்டால், வேறு யார் அதை ஏற்றுக்கொள்கிறார்களோ, அவர்களுக்கு தேவவசனத்தைப் பிரசங்கிக்கவேண்டும். விருத்தசேதனமுள்ள யூதர்கள் சுவிசேஷத்தைத் தள்ளிவிடுகிறார்கள். அதனால் பவுலும் பர்னபாவும் விருத்தசேதனமில்லாத புறஜாதியார் மத்தியில் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கத் தீர்மானித்து, புறஜாதியாரிடத்தில் போகிறார்கள்.

ஜாதிகளுக்கு ஒளி

நீர் பூமியின் கடைசிபரியந்தமும் இரட்சிப்பாயிருக்கும்படி உம்மை ஜாதிகளுக்கு ஒளியாக வைத்தேன் என்கிற வேதவாக்கியத்தின்படி கர்த்தர் எங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிற படியினால் இப்படிச் செய்கிறோம் என்றார்கள் (அப் 13:47).

தாங்கள் புறஜாதியாரிடத்திற்குப் போவது கர்த்தருடைய சித்தம் என்று அப்போஸ்தலர்கள் நியாயப் படுத்துகிறார்கள். வேதவாக்கியத்தின்படி கர்த்தர் தங்களுக்கு கட்டளையிட்டிருக்கிறபடியே, தாங்கள் புறஜாதியாரிடத்திற்குப் போவதாகச் சொல்லுகிறார்கள். இதற்காக அப்போஸ்தலர்கள் பழைய ஏற்பாட்டிலிருந்து ஒரு வசனத்தை மேற்கோளாகச் சொல்லுகிறார்கள். "நீர் பூமியின் கடைசிபரியந்தமும் இரட்சிப்பாயிருக்கும்படி உம்மை ஜாதிகளுக்கு ஒளியாக வைத்தேன்" (ஏசா 49:6) என்று பழைய ஏற்பாட்டில் முன்னறிவிக்கப்பட்டிருக்கிறது.

இயேசுகிறிஸ்து ஜாதிகளுக்கு ஒளியாக வைக்கப்பட்டிருக்கிறார். மனுஷருடைய ஆத்துமாக்களுக்கு ஞானத்தையும் பிரகாசத்தையும் கொடுக்கிறார். ஆத்துமாக்களை இரட்சிக்கிறார். அவரே புறஜாதியாருக்கு ஒளியாகவும் இரட்சிப்பாகவும் இருக்கிறார். புறஜாதியாருக்கு மாத்திரமல்ல இயேசுகிறிஸ்து பூமியின் கடைசி பரியந்தமும் இரட்சிப்பாயிருக்கிறார்.

இந்த பூமியிலுள்ள எல்லா தேசங்களும் தேவனுடைய ராஜ்யத்தில் சேர்க்கப்பட்டிருக்கும். அப்போஸ்தலர்கள் இங்கு குறிப்பிடுகிற பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனம், ஒவ்வொரு தேசத்திலும் ஓரளவு நிறைவேறியிருக்கிறது. இன்னும் நிறைவேற வேண்டி இருக்கிறது. இந்தத் தீர்க்கதரிசனம் பூரணமாய் நிறைவேறும்போது இயேசுகிறிஸ்து பூமியின் கடைசிபரியந்தமும் இரட்சிப்பாயிருப்பார். இந்த வேதவாக்கியத்தின்படி கர்த்தர் அப்போஸ்தலருக்கு கட்டளையிட்டிருக்கிறபடியினால், இப்போது அவர்கள் புறஜாதியாரிடத்திற்குப் போகிறார்கள்.

புறஜாதியார் விசுவாசித்தார்கள்

புறஜாதியார் அதைக் கேட்டுச் சந்தோஷப்பட்டு, கர்த்தருடைய வசனத்தை மகிமைப்படுத்தினார்கள். நித்திய ஜீவனுக்கு நியமிக்கப்பட்டவர்கள் எவர்களோ அவர்கள் விசுவாசித்தார்கள் (அப் 13:48).

யூதர்கள் தேவவசனத்தை ஏற்றுக்கொள்ளாமல் தள்ளிவிட்டார்கள். ஆனால் புறஜாதியாரோ வசனத்தைக் கேட்டு சந்தோஷப்பட்டு, கர்த்தருடைய வசனத்தை மகிமைப்படுத்துகிறார்கள். தங்களுக்கு ஆசீர்வாதமுண்டாக தேவவனத்தை ஏற்றுக்கொள்கிறார்கள்.

புறஜாதியார் தேவவசனத்தைக் கேட்டபொழுது சந்தோஷப்படுகிறார்கள். கர்த்தருடைய வார்த்தை அவர்களுக்கு நற்செய்தியாயிற்று. தேவனுடைய ராஜ்யத்தில் யூதர்கள் சேர்த்துக்கொள்ள ப்படுவதுபோல, இப்போது புறஜாதியாரும் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். யூதருக்கு வாக்குப்பண்ணப்பட்ட ஆசீர்வாதங்களில் இப்போது புறஜாதியாரும் பங்குபெறுகிறார்கள். தேவனுடைய கிருபை தங்களுக்கும் கொடுக்கப்படுகிறது என்பதைக் கேட்டபோது, புறஜாதியாருக்கு மிகுந்த சந்தோஷமுண்டாயிற்று.

கர்த்தருடைய ஆசீர்வாதத்தில் தங்களுக்குப் பங்கு உண்டோ, இல்லையோ என்று ஒரு சிலர் சந்தேகப்பட்டு கலங்குகிறார்கள். அப்படிப்பட்ட கலக்கம் விசுவாசிகளுக்குத் தேவையில்லை. கர்த்தரை நம்பி அவருடைய வாக்குத் தத்தங்களை நமக்குச் சொந்தமாகச் சுதந்தரித்துக்கொள்ள வேண்டும். கர்த்தருடைய வாக்குத்தத்தத்தில் நமக்கும் பங்குள்ளது என்று விசுவாசித்து சந்தோஷப்படவேண்டும்.

தாங்கள் கேட்ட சுவிசேஷச் செய்திக்காக, புறஜாதியார் கர்த்தருடைய வசனத்தை மகிமைப்படுத்துகிறார்கள். கர்த்தருடைய வார்த்தையை எந்த அளவுக்கு அதிகமாகப் புரிந்துகொள்கிறார்களோ, அந்த அளவுக்கு புறஜாதியார் கர்த்தரை மகிமைப்படுத்துகிறார்கள். சுவிசேஷத்தின் வல்லமை, சுவிசேஷத்தின் ஒளி, சுவிசேஷத்தின் ஐசுவரியம் ஆகியவை புறஜாதியாரை ஆச்சரியப்படவைக்கிறது. இவற்றில் தங்களுக்கும் பங்குள்ளது என்பதை அவர்கள் நினைத்துப் பார்த்து, கர்த்தருடைய வசனத்தை மகிமைப்படுத்துகிறார்கள்.

கர்த்தருடைய வசனமானது யூதர்களுக்கு மாத்திரமென்று வேறுபிரித்து வைக்கப்படவில்லை. இது புறஜாதியாருக்கும் இப்போது கடந்து வந்திருக்கிறது. புறஜாதியாரும் தேவனை அறிகிற அறிவில் வளர்ச்சி பெறலாம். தேவனைப்பற்றிய ஞானம் கர்த்தருடைய வசனத்தின் மூலமாக புறஜாதியாருக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

புறஜாதியார் மத்தியில் கர்த்தருடைய வசனம் பிரசங்கிக்கப்படும்போது, தேவனுடைய பிரசன்னம் அவர்கள் மத்தியில் பிரகாசமாகயிருக்கிறது. இது சாதாரண விளக்கின் பிரகாசத்தைப் போன்றதல்ல. இது சூரியனின் பிரகாசத்தைப்போல இருக்கிறது. நீதியின் சூரியனாகிய தேவனுடைய மகிமை இப்போது புறஜாதியார் மத்தியிலும் பிரகாசிக்கிறது. "நீர் பூமியின் கடைசிபரியந்தமும் இரட்சிப்பாயிருக்கும்படி உம்மை ஜாதிகளுக்கு ஒளியாகவைத்தேன்" (ஏசா 49:6) என்கிற வேதவாக்கியம் புறஜாதியார் மத்தியில் நிறைவேறிற்று.

கர்த்தருடைய வசனத்தை மகிமைப்படுத்துகிறவர்கள், அந்த வசனத்திற்குக் கீழ்ப்படிந்து ஜீவிப்பார்கள். கர்த்தருடைய வார்த்தைக்குத் தங்களை ஒப்புக்கொடுப்பார்கள். கர்த்தருடைய வார்த்தையினால் ஆசீர்வாதத்தையும் ஆறுதலையும் பெற்றுக்கொள்வார்கள்.

புறஜாதியாரில் அநேகர் இயேசுகிறிஸ்துவையும் அவருடைய சுவிசேஷ வார்த்தையையும் விசுவாசிக்கிறார்கள். நித்திய ஜீவனுக்கு நியமிக்கப்பட்டவர்கள் எவர்களோ அவர்கள் விசுவாசிக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதற்குத் தேவனே கிருபையைக் கொடுக்கிறார். அதனால் அவர்களுக்கு விசுவாசமுண்டாயிற்று. பிதாவானவர் யாரைத் தம் பக்கமாக இழுத்துக்கொள்கிறாரோ, அவர்கள் இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பார்கள். அப்படிப்பட்டவர்களுடைய உள்ளத்தில் பரிசுத்த ஆவியானவர் வல்லமையாய்க் கிரியை செய்வார்.

நித்திய ஜீவனுக்கு நியமிக்கப்பட்டவர்கள் அனைவருக்கும் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிற கிருபையைத் தேவன் கொடுப்பார். "நியமிக்கப்பட்டவர்கள்" என்னும் வார்த்தையானது, யாரெல்லாம் இயேசு கிறிஸ்துவையும் அவருடைய சுவிசேஷத்தையும் விசுவாசிக்க வேண்டுமென்று வாஞ்சையோடிருக் கிறார்களோ அவர்களைக் குறிக்கிற வார்த்தையாகும். தேவனுடைய கிருபையே இந்த விசுவாசத்தை மனுஷருக்குக் கொடுக்கிறது.

பிரசித்தமாயிற்று

கர்த்தருடைய வசனம் அத்தேசமெங்கும் பிரசித்தமாயிற்று (அப் 13:49).

புறஜாதியார் கர்த்தருடைய வார்த்தையை விசுவாசித்து, அதை மற்றவர்களுக்கும் பிரசங்கம் பண்ணுகிறார்கள். கிறிஸ்துவை அறிகிற அறிவு ஜனங்கள் மத்தியில் பரம்புகிறது. கர்த்தருடைய வசனம் அத்தேசமெங்கும் பிரசித்தமாயிற்று. புதிதாக இரட்சிக்கப்பட்டிருக்கிற விசுவாசிகள், தங்களுடைய இரட்சிப்பின் அனுபவத்தையும், இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தையும் மற்றவர்களுக்கு வாஞ்சையோடு பிரசங்கம்பண்ணுகிறார்கள். இயேசுகிறிஸ்துவோடு ஐக்கியமாக யிருக்கிறவர்கள், மற்றவர்களையும் அவருடைய ஐக்கியத்திற்குள் அழைத்து வருவார்கள்.

பெரிய பட்டணங்களில் சுவிசேஷக் கூட்டங்கள் ஏராளமாய் நடைபெறுகிறது. நகரத்தில் வசிக்கிறவர்கள் தாங்கள் மாத்திரம் இரட்சிக்கப்பட்டால் போதுமென்று நினைக்கக்கூடாது. கிராமங்களில் வசிக்கிறவர்களையும் நினைத்துப்பார்க்க வேண்டும். நகரத்திலுள்ளவர்களைப் போலவே கிராமத் திலுள்ளவர்களுக்கும் ஆத்துமாக்கள் உண்டு. தங்களைப்போலவே அவர்களும் இரட்சிக்கப்பட வேண்டுமென்று வாஞ்சித்து, நகரத்திலிருந்து கிராமங்களுக்குச்சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ண வேண்டும். அப்போது கர்த்தருடைய வசனம் நகரத்திலும் கிராமங்களிலும் பிரசித்தமாகும்.

அப்போஸ்தலரைத் துரத்திவிட்டார்கள்

யூதர்கள் பக்தியும் கனமுமுள்ள ஸ்திரீகளையும் பட்டணத்து முதலாளிகளையும் எடுத்துவிட்டு, பவுலையும் பர்னபாவையும் துன்பப்படுத்தும்படி செய்து, தங்கள் எல்லைகளுக்குப் புறம்பாக அவர்களைத் துரத்திவிட்டார்கள் (அப் 13:50).

பவுலும் பர்னபாவும் அந்தியோகியா பட்டணத்தில், கிறிஸ்தவ சபையின் விதைகளை விதைத்து, அந்தப் பட்டணத்தை விட்டுப் புறப்பட்டுப்போகிறார்கள். அந்தியோகியா பட்டணத்தைபோலவே எல்லா இடங்களிலும் இயேசுகிறிஸ்துவின் சபைகளை ஸ்தாபிக்கவேண்டும் என்பதே அப்போஸ்தலரின் ஊழியமாகும். அந்தியோகியா பட்டணத்தில் அப்போஸ்தலர்கள் தேவனுடைய வார்த்தையை பிரசங்கம்பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடைய வார்த்தையை அற்புதங்களினாலும் அடையாளங் களினாலும் உறுதிபண்ணினாரா என்று தெரியவில்லை. இந்தப் பட்டணத்தில் அற்புதம் நடந்ததாக எழுதப்படவில்லை. ஆனாலும் தேவன் தம்முடைய வார்த்தையை உறுதிபண்ண, அப்போஸ்தலர் மூலமாக அற்புதங்களையும் அடையாளங்களையும் நடப்பித்திருக்க வேண்டும். பரிசுத்த ஆவியானவரின் கிருபையினாலும், கிரியையினாலும் தேவனுடைய வசனத்தைக் கேட்டவர்கள், அதை விசுவாசிக்கிறார்கள். புறஜாதியார் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை விசுவாசித்து ஏற்றுக்கொள்வதே மிகப்பெரிய அற்புதம்.

அப்போஸ்தலர்கள் கர்த்தருக்கு பக்திவைராக்கியமாய் ஊழியம் செய்கிறார்கள். ஆனால் யூதர்களோ அப்போஸ்தலர்களைத் தங்கள் பட்டணத்திலிருந்து துரத்திவிடுகிறார்கள். பவுலையும் பர்னபாவையும் துன்பப்படுத்தும்படி செய்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின் ஊழியம் வெற்றிகரமாக நடைபெறும்போது, சாத்தான் கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்கு விரோதமாகப் பலமாய்க் கிரியை செய்வான். தன்னுடைய பிரதிநிதிகளாகிய பிசாசின் பிள்ளைகளை அவர்களுக்கு விரோதமாக எழுப்பிவிடுவான். இந்தச் சம்பவம் அப்போஸ்தலரின் காலத்திலிருந்து இன்று வரையிலும் நடைபெற்று வருகிறது. கர்த்தருடைய ஊழியக்காரர்களை சாத்தான் பலவிதங்களிலும் துன்பப்படுத்தி வருகிறான்.

அப்போஸ்தலரைத் துன்பப்படுத்துவதற்காக யூதர்கள் பக்தியும் கனமுமுள்ள ஸ்திரீகளையும், பட்டணத்து முதலாளிகளையும் எடுத்துவிடுகிறார்கள். தேவபக்தி என்னும் பெயரில் யூதர்கள் தேவனுடைய ஊழியக்காரர்களுக்கு விரோதமாகக் கிரியை செய்கிறார்கள். இவர்கள் தேவன்மீது பக்தியாகவும், கிறிஸ்துவின்மீது விரோதமாகவும் இருக்கிறார்கள். இது ஒரு விநோதமான முரண்பாடு. ஏனெனில் இயேசுகிறிஸ்து தேவனால் அனுப்பப்பட்டவர். பிதாவின் ஒரே குமாரனானவர். உலக இரட்சகர். பிதாவினிடத்தில் அன்பாயிருக்கிறவர்கள் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவினிடத்திலும் அன்பாயிருப்பார்கள். ஆனால் இவர்களோ தேவனிடத்தில் அன்பாயிருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆனால் கிறிஸ்துவினிடத்திலோ விரோதமாயிருக்கிறார்கள்.

அப்போஸ்தலர்களைத் துன்பப்படுத்துவதற்கு யூதர்கள் பக்தியும் கனமுமுள்ள ஸ்திரீகளை எடுத்துவிடுகிறார்கள். ஸ்திரீகள் இயல்பாகவே பலவீனமானவர்கள். மென்மையான சுபாவமுடையவர்கள். ஆனால் இந்த ஸ்திரீகளோ உபத்திரவக்காரிகளாகயிருக்கிறார்கள். தங்களுடைய பலவீனத்தை மறந்துவிட்டு கிறிஸ்துவுக்கு விரோதமாகக் கிரியைசெய்கிறார்கள். கிறிஸ்தவ ஊழியக்காரர்களைத் துன்பப்படுத்துவதன் மூலமாய், தேவன் தங்களுக்குத் தந்திருக்கும் கனத்தையும் மேன்மையையும் இந்த ஸ்திரீகள் அவமதிக்கிறார்கள். இந்த ஸ்திரீகள் பக்தியில்லாதவர்களல்ல. இவர்கள் கனமும் பக்தியுமுள்ளவர்கள். இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரர்களைக் கொன்றுபோட்டால், அது தேவனுக்குச் செய்யும் ஊழியமாக இருக்குமென்று நினைக்கிறார்கள்.

யூதர்கள் அப்போஸ்தலருக்கு விரோதமாக இப்பேற்பட்ட ஸ்திரீகளோடு பட்டணத்து முதலாளிகளையும் எடுத்துவிடுகிறார்கள். இவர்கள் பட்டணத்து அதிகாரிகளாகவும், நியாயாதிபதிகளாகவும், சமுதாயத்தில் பிரபல்யமானவர்களாகவும் இருக்கிறார்கள். யூதர்கள் அப்பேற்பட்ட முதலாளிகளை அப்போஸ்தலருக்கு விரோதமாக எடுத்துவிடுகிறார்கள். யூதர்களால் எடுத்துவிடப்பட்ட ஸ்திரீகளும் முதலாளிகளும் பவுலையும் பர்னபாவையும் துன்பப்படுத்துகிறார்கள். தங்கள் பட்டணத்து எல்லைகளுக்குப் புறம்பாக அவர்களைத் துரத்திவிடுகிறார்கள்.

யூதர்கள் அப்போஸ்தலருக்குப் பயப்படவில்லை. அப்போஸ்தலருக்குப் பயந்து அவர்களைத் தங்கள் பட்டணத்து எல்லைகளுக்குப் புறம்பாகத் துரத்திவிடவில்லை. பலவந்தமாக அப்போஸ்தலரை வெளியே துரத்திவிடுகிறார்கள். அப்போஸ்தலர்களோ இந்தப் பட்டணத்து ஜனங்களுக்கு உதவிசெய்கிறதற்காக வந்திருக்கிறார்கள். தங்களுக்கு உபகாரம் செய்ய வந்திருக்கிற அப்போஸ்தலரை யூதர்கள் உபத்திரவப்படுத்துகிறார்கள்.

கர்த்தருடைய ஊழியக்காரர்களும் இப்படிப்பட்ட உபத்திரவங்களைத் தங்களுடைய ஊழிய ஸ்தலங்களில் எதிர்பார்க்கவேண்டும். நமக்கு இந்த உலகத்தில் உபத்திரவம் உண்டு என்று இயேசுகிறிஸ்து எச்சரித்துக் கூறியிருக்கிறார். பட்டணத்தின் எல்லையைவிட்டு அப்போஸ்தலர்களை வெளியே துரத்திவிட்டாலும், கிறிஸ்துவின் ஊழியம் தடைபடாமல் வளர்ச்சி பெறும். அப்போஸ்தலருக்கு இன்னும் அநேக புதிய சிநேகிதர்கள் கிடைப்பார்கள். பட்டணத்து முதலாளிகள் தங்கள் பட்டணத்திற்குத் தாங்களே எஜமான்கள் என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் மெய்யாகவே கர்த்தரே அவர்களுடைய பட்டணத்தின் எல்லைகளுக்குள்ளேயும் புறம்பேயும் எஜமானாகயிருக்கிறார்.

கால்களில் படிந்த தூசி

இவர்கள் தங்கள் கால்களில் படிந்த தூசியை அவர்களுக்கு எதிராக உதறிப் போட்டு, இக்கோனியா பட்டணத்துக்குப் போனார்கள் (அப் 13:51).

அந்தியோகியா பட்டணத்திலுள்ள யூதர்கள் அப்போஸ்தலரைத் தங்கள் பட்டணத்தின் எல்லைகளுக்குப் புறம்பாகத் துரத்திவிடுகிறார்கள். ஆனால் அப்போஸ்தலரோ தங்களுக்கு விரோதமாக எழும்பியிருக்கும் யூதர்களையும், பக்தியும் கனமுமுள்ள ஸ்திரீகளையும், பட்டணத்து முதலாளிகளையும் அசட்டை செய்துவிடுகிறார்கள். அவர்களுடைய உபத்திரவங்களையும் அப்போஸ்தலர்கள் ஒரு பொருட்டாக எண்ணவில்லை.

அப்போஸ்தலர்கள் தங்கள் கால்களில் படிந்த தூசியை அவர்களுக்கு எதிராக உதறிப்போடுகிறார்கள். தங்களுக்கு இனிமேல் அவர்களோடு பங்குமில்லை, பாத்தியமுமில்லை என்பதை அறிவிக்கும் விதத்தில், தங்கள் கால்களில் படிந்த தூசியை அவர்களுக்கு எதிராக உதறிப்போடுகிறார்கள். அவர்களுடைய அவபக்திக்கு அவர்களே பொறுப்பு ஏற்கவேண்டுமென்று அவர்களுக்கு எச்சரிக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை விசுவாசித்தால் நித்திய ஜீவனும், விசுவாசியாமல் புறக்கணித்தால் நித்திய அழிவும் உண்டாகும். அவர்களுடைய அழிவை அவர்களே தேடிக்கொள்கிறார்கள்.

யூதர்களும் புறஜாதியாரும் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்தால், தேவன் அவர்களிடத்தில் பட்சபாதம் காண்பிக்காமல் இருஜனத்தாரையும் ஏற்றுக்கொள்வார். தம்மை விசுவாசிக்கிற யூதரையும் புறஜாதியாரையும், வித்தியாசம் பார்க்காமல், அவர்களை நீதிமான் களாக்குவார். ஆனால் அந்தியோகியா பட்டணத்து யூதர்களோ இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தையும் விசுவாசிக்கவில்லை. தங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்த அப்போஸ்தலரையும் துன்பப்படுத்தி, தங்களுடைய பட்டணத்து எல்லைகளுக்குப் புறம்பாக அவர்களைத் துரத்திவிடுகிறார்கள். தங்களுடைய அழிவுக்கு தாங்களே காரணமாகிவிடுகிறார்கள்.

பக்தியில்லாத யூதர்கள் அப்போஸ்தலரை அந்தியோகியா பட்டணத்திலிருந்து துரத்திவிட்டாலும், அந்தப் பட்டணத்தில் ஒருசிலர் இயேசுகிறிஸ்துவையும் அவருடைய சுவிசேஷத்தையும் விசுவாசிக்கிறார்கள். தேவனுடைய கிருபையை கிறிஸ்துவின் மூலமாய் பெற்றுக்கொள்கிறார்கள். விசுவாசித்திருக்கிற அவர்களுக்கு தேவஆசீர்வாதம் கிடைத்திருக்கிறது. ஒரு சிலர் விசுவாசிக்கும்போது, வேறு சிலர் அவிசுவாசிகளாக யிருக்கிறார்கள். கிறிஸ்துவையும் அவருடைய சுவிசேஷத்தையும் அவிசுவாசிகள் வெறுக்கிறார்கள்.

ஒரு பட்டணத்தில் நாம் சுவிசேஷ ஊழியம் செய்யும்போது, அந்தப் பட்டணத்தார் நம்மையும், கிறிஸ்துவின் சுவிசேஷத்தையும் ஏற்றுக்கொள்ளவில்லை யென்றால், நம்முடைய கால்களில் படிந்த தூசியை அவர்களுக்கு எதிராக உதறிப்போடவேண்டும். இது இயேசுகிறிஸ்து தம்முடைய ஊழியக்காரர்களுக்குக் கொடுத்திருக்கும் கட்டளை (மத் 10:14; லூக் 9:5). அப்போஸ்தலர்கள் இயேசுகிறிஸ்துவின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து அந்தியோகியா பட்டணத்தைவிட்டு இக்கோனியா பட்டணத்திற்குப் போகிறார்கள். அப்போஸ்தலர்கள் யூதர்களுக்குப் பயந்து அந்தப் பட்டணத்தைவிட்டுப் புறப்பட்டுப்போகவில்லை. இக்கோனியா பட்டணத்தில் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணுவதற்கு வாய்ப்பு இருக்கிறதினால், அந்தப் பட்டணத்திற்குப் போகிறார்கள்.

சந்தோஷத்தினாலும் பரிசுத்த ஆவியினாலும்

சீஷர்கள் சந்தோஷத்தினாலும் பரிசுத்த ஆவியினாலும் நிரப்பப்பட்டார்கள் (அப் 13:52).

அப்போஸ்தலர்கள் அந்தியோகியா பட்டணத்தைவிட்டுப் புறப்பட்டுப்போனாலும், அந்தப் பட்டணத்தில் புதிய விசுவாசிகளை விட்டுச் செல்கிறார்கள். அந்த சீஷர்கள் அந்தியோகியா பட்டணத்தில் சுவிசேஷ ஊழியத்தைச் செய்கிறார்கள். அவர்கள் சந்தோஷமாகயிருக்கிறார்கள். பவுலும் பர்னபாவும் அந்தியோகியா பட்டணத்தைவிட்டு வெளியேற்றப் பட்டதினால், புதிய விசுவாசிகள் துக்கத்தினாலும் பயத்தினாலும் நிறைந்திருப்பார்கள் என்று யூதர்கள் நினைத்தார்கள். ஆனால் அந்தியோகியாவிலுள்ள சீஷர்களோ சந்தோஷத்தினால் நிறைந்திருக்கிறார்கள்.

பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்கு மெய்யான சந்தோஷத்தைக்கொடுத்தார். ஆவியானவரின் சந்தோஷத்திற்கு முன்பாக அவர்களுடைய மாம்சபயம் செயல்படமுடியாமல் அழிந்துபோயிற்று. அவர்கள் தைரியமாய்க் கிறிஸ்துவைப் பற்றிக்கொள்கிறார்கள். தங்கள் ஜீவியத்தில் பரிசுத்தமடைகிறார்கள். பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுகிறார்கள்.

கர்த்தருக்காக ஊழியம் செய்ய ஆவியானவர் சீஷர்களைப் பெலப்படுத்துகிறார். அவர்களுக்குத் துன்பங்களும் வேதனைகளும் வரும்போது, சீஷர்கள் அதைத் தாங்கிக்கொள்கிறார்கள். கர்த்தர் அவர்களைப் பரிசுத்தப்படுத்தி பெலப்படுத்துகிறார். தெய்வபக்தியினால் அவர்கள் நிரப்பப்பட்டு ஊழியம் செய்கிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகள் எல்லோருமே சந்தோஷத்தினாலும் பரிசுத்த ஆவியினாலும் நிரப்பப்பட்டிருக்கவேண்டும். அப்போதுதான் நம்மால் எல்லா சூழ்நிலைகளிலும் மனரம்மியமாய் இருக்கமுடியும்.

14 அதிகாரம்

பவுலும் பர்னபாவும் புறஜாதியார் மத்தியில் ஊழியம் செய்து கொண்டிருக்கிறார்கள். இக்கோனியா பட்டணத்தில் அவர்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை வல்லமையாய்ப் பிரசங்கம்பண்ணுகிறார்கள். அங்கு அவர்களுக்கு உபத்திரவம் உண்டாயிற்று. அப்போஸ்தலர்கள் அங்கிருந்து லிக்கவோனியா நாட்டிற்கு ஓடிப்போகிறார்கள் (அப் 14:1-7). லிஸ்திராவில் தன் தாயின் வயிற்றிலிருந்து பிறந்தது முதல் சப்பாணியாய் இருக்கிறவனை பவுல் சொஸ்தமாக்குகிறான் (அப் 14:8-18). ஜனங்கள் பவுலுக்கு விரோதமாகக் கலகம்பண்ணி, அவன்மேல் கல்லெறிந்து, அவனைப் பட்டணத்திற்கு வெளியே இழுத்துக்கொண்டு போனார்கள் (அப் 14:19,20). பவுலும் பர்னபாவும் தாங்கள் ஸ்தாபித்த சபைகளைப் பார்த்து விசாரித்து வருவதற்காகப் போகிறார்கள் (அப் 14:21-23). அவர்கள் அந்தியோகியாவுக்குத் திரும்பி வந்து, தேவன் தங்களைக்கொண்டு செய்த ஊழியங்களை சபையாருக்கு விரிவாக எடுத்துச்சொல்லுகிறார்கள் (அப் 14:24-28).

இக்கோனியாவில் ஊழியம் அப் 14 : 1-7

அப் 14:1. இக்கோனியா பட்டணத்திலே அவர்கள் இருவரும் யூதருடைய ஜெபஆலயத்தில் பிரவேசித்து, யூதரிலும் கிரேக்கரிலும் திரளான ஜனங்கள் விசுவாசிக்கத்தக்கதாகப் பிரசங்கித்தார்கள்.

அப் 14:2. விசுவாசியாத யூதர்கள் சகோதரருக்கு விரோதமாகப் புறஜாதியாருடைய மனதை எழுப்பிவிட்டு, பகையுண்டாக்கினார்கள்.

அப் 14:3. அவர்கள் அங்கே அநேகநாள் சஞ்சரித்துக் கர்த்தரை முன்னிட்டுத் தைரியமுள்ளவர்களாய்ப் போதகம் பண்ணினார்கள்; அவர் தமது கிருபையுள்ள வசனத்திற்குச்சாட்சியாக அடையாளங்களும் அற்புதங்களும் அவர்கள் கைகளால் செய்யப்படும்படி அநுக்கிரகம்பண்ணினார்.

அப் 14:4. பட்டணத்து ஜனங்கள் பிரிந்து, சிலர் யூதரையும் சிலர் அப்போஸ்தலரையும் சேர்ந்து கொண்டார்கள்.

அப் 14:5. இவர்களை அவமானப்படுத்தவும் கல்லெறியவும் வேண்டுமென்று, புறஜாதியாரும் யூதரும் அவர்கள் அதிகாரிகளும் அமளிபண்ணுகையில்,

அப் 14:6. இவர்கள் அதை அறிந்து, லிக்கவோனியா நாட்டிலுள்ள பட்டணங்களாகிய லீஸ்திராவுக்கும் தெர்பைக்கும் அவைகளின் சுற்றுப்புறங்களுக்கும் ஓடிப்போய்;

அப் 14:7. அங்கே சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணினார்கள்.

யூதருடைய ஜெபஆலயம்

இக்கோனியா பட்டணத்திலே அவர்கள் இருவரும் யூதருடைய ஜெபஆலயத்தில் பிரவேசித்து, யூதரிலும் கிரேக்கரிலும் திரளான ஜனங்கள் விசுவாசிக்கத்தக்கதாகப் பிரசங்கித்தார்கள் (அப் 14:1).

அப்போஸ்தலர்கள் இக்கோனியா பட்டணத்தில் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவுக்காக இரத்தசாட்சியாக மரித்தவர்களின் இரத்தம் சபைக்கு விதையாக விதைக்கப்படுகிறது. இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறவர்களைத் துன்பப்படுத்தும் போது, ஊழியக்காரர்கள் சிதறிப்போகிறார்கள். அவர்கள் சிதறிப்போகும்போது சபையின் விதை ஒரே இடத்தில் விதைக்கப்படுவதற்குப் பதிலாக, அவர்கள் எங்கெல்லாம் சிதறிப்போகிறார்களோ, அங்கெல்லாம் விதை சிதறி விதைக்கப்படுகிறது.

அப்போஸ்தலர்கள் ஜெப ஆலயங்களிலுள்ள யூதர்களுக்கே கிறிஸ்துவின் சுவிசேஷத்தை முதலாவதாகப் பிரசங்கிக்கிறார்கள். அந்தியோகியாவிலுள்ள யூதர்கள் அப்போஸ்தலரின் பிரசங்கத்தைக் கேட்கவில்லை. அவர்களைத் துன்பப்படுத்தினார்கள். இதற்காக அப்போஸ்தலர்கள் யூதர்கள்மீது கோபப்படவில்லை. இக்கோனியா பட்டணத்திற்கு வந்தபோது, அங்குள்ள ஜெபஆலயத்திற்கு போகாமலிருக்கவில்லை. அங்குள்ள யூதர்களுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ண மறுத்துவிடவில்லை. அப்போஸ்தலர்கள் மறுபடியும் யூதருடைய ஜெபஆலயத்தில் பிரவேசித்து, அவர்களுக்கு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறார்கள்.

ஒரு ஸ்தாபனத்தில் ஒரு சிலர் தவறு செய்தால், அதற்காக அந்த ஸ்தாபனத்தையே குறை சொல்லக்கூடாது. சபையில் ஒரு சிலர் தவறுசெய்தால், அந்த சபை பிரிவினர் அனைவர்மீதும் குற்றம் சொல்லக்கூடாது. அப்போஸ்தலர்கள் இந்தச் சத்தியத்தை நன்றாகப் புரிந்து வைத்திருக்கிறார்கள். அந்தியோகியாவில் யூதர்கள் தங்களைத் துன்பப்படுத்தி வெளியேற்றினாலும், இக்கோனியாவிலுள்ள யூதர்கள் தங்களை ஏற்றுக்கொள்வார்கள் என்று எதிர்பார்த்து அப்போஸ்தலர்கள் அவர்களுடைய ஜெபஆலயத்தில் பிரவேசிக்கிறார்கள். அப்போஸ்தலர்கள் இருவரும் யூதருடைய ஜெபஆலயத்திற்குச் சேர்ந்துபோகிறார்கள். அவர்கள்மீது தங்களுக்கிருக்கும் அன்பையும், கரிசனையையும் அவர்களுக்கு எடுத்துச் சொல்லுவதற்காகப் போகிறார்கள்.

அப்போஸ்தலர்கள் யூதருடைய ஜெபஆலயத்தில் பிரவேசித்து, யூதரிலும் கிரேக்கரிலும் திரளான ஜனங்கள் விசுவாசிக்கத்தக்கதாகப் பிரசங்கிக்கிறார்கள். கிரேக்கர்கள் புறஜாதியாராயிருந்தாலும் அவர்களும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை விசுவாசிக்கிறார்கள். அப்போஸ்தலர்கள் இக்கோனியா பட்டணத்தில் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை, யூதருக்கும் புறஜாதியாருக்கும், ஒரே சமயத்தில் பிரசங்கிக்கிறார்கள். இதற்கு முன்பு அவர்கள் அந்தியோகியாவிலுள்ள யூதருடைய ஜெபஆலயத்தில், முதலாவது யூதருக்கும், அதற்குப் பின்பு புறஜாதியாருக்கும் பிரசங்கித்தார்கள். ஆனால் இக்கோனியா பட்டணத்திலுள்ள ஜெபஆலயத்திலோ, யூதருக்கும் புறஜாதியாருக்கும் ஒரே சமயத்தில் பிரசங்கிக்கிறார்கள்.

அப்போஸ்தலர்கள் யூதர்களை வெறுத்து ஒதுக்கிவிடவில்லை. தேவன் யூதஜனங்களைத் தம்முடைய ஜனமாகத் தெரிந்தெடுத்திருக்கிறார். யூதஜனத்திற்கு தேவன் சில விசேஷித்த சிலாக்கியங்களைக் கொடுத்திருக்கிறார். யூதர்கள்தான் அந்த சிலாக்கியங்களைத் தங்களுக்கு ஆதாயமாகப் பயன்படுத்திக்கொள்ளவில்லை. அதற்காக அப்போஸ்தலர்களும் அவர்களைப் புறம்பே தள்ளிவிடவில்லை. இப்போது யூதரோடு புறஜாதியாரும் சேர்ந்துகொண்டு, தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள ஆயத்தமாயிருக்கிறார்கள். யூதரென்றும் கிரேக்கரென்றும் வித்தியாசமில்லாமல், இருஜாதியாரும் சபையில் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள்.

அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை யூதருடைய ஜெபஆலயத்தில் பிரசங்கித்தபோது, தேவனுடைய கிருபையும் மகிமையும் அந்த இடத்தில் வந்திறங்கிற்று. பரிசுத்த ஆவியானவர் சுவிசேஷத்தைக் கேட்கிறவர்களின் இருதயத்தில் கிரியை செய்கிறார். அப்போஸ்தலர்கள் யூதரிலும் கிரேக்கரிலும் திரளான ஜனங்கள் விசுவாசிக்கத்தக்கதாகப் பிரசங்கிக்கிறார்கள். தெளிவாகவும், அவர்கள் புரிந்துகொள்ளக்கூடிய விதத்திலும், அக்கறையோடும், அன்போடும் அப்போஸ்தலர்கள் பிரசங்கம்பண்ணுகிறார்கள்.

அப்போஸ்தலர்களுடைய பிரசங்கச் செய்தி அவர்களுடைய இருதயத்திலிருந்து புறப்பட்டு வருகிறது. ஆகையினால் அவர்கள் பிரசங்கித்த சுவிசேஷச் செய்தியானது ஜனங்களுடைய இருதயத்திற்கு தடையில்லாமல் எளிதாகப் போய் சேருகிறது. அப்போஸ்தலர்கள் ஆவியில் நிறைந்து சுவிசேஷத்தைத் தைரியமாகப் பிரசங்கிக்கிறார்கள். அப்போஸ்தலரின் பிரசங்கத்தைக் கேட்கிறவர்கள் "தேவன் அவர்களோடிருக்கிறார்" என்றும், "அவர்கள் தேவனுடைய சத்திய வசனத்தைப் பேசுகிறார்கள்" என்றும் சாட்சி சொல்லுகிறார்கள்.

விசுவாசியாத யூதர்கள்

விசுவாசியாத யூதர்கள் சகோதரருக்கு விரோதமாகப் புறஜாதியாருடைய மனதை எழுப்பிவிட்டு, பகையுண்டாக்கினார்கள் (அப் 14:2).

அப்போஸ்தலர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணும்போது அநேகர் விசுவாசிக்கிறார்கள். ஒரு சிலர் விசுவாசியாமல் போய்விடுகிறார்கள். இது எல்லா இடங்களிலும் நடைபெறும் சாதாரண சம்பவம். அதுபோலவே இக்கோனியா பட்டணத்திலும் நடைபெறுகிறது. அப்போஸ்தலர் பிரசங்கம் செய்த சுவிசேஷச் செய்தியை யூதரில் ஒரு சிலர் விசுவாசிக்கவில்லை. அவர்கள் மூலமாக அப்போஸ்தலருக்கு எதிர்ப்பும் பிரச்சனையும் உண்டாயிற்று. விசுவாசியாத யூதர்கள் புறஜாதியாருடைய மனதை அப்போஸ்தலருக்கு விரோதமாக எழுப்பிவிட்டு, பகை உண்டாக்குகிறார்கள்.

புறஜாதியாரில் அநேகர் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை விசுவாசிப்பதைப் பார்த்து விசுவாசியாத யூதர்கள் அப்போஸ்தலர்மீது பொறாமைப்படுகிறார்கள். தங்களுக்குத் தேவனிடத்தில் பக்திவைராக்கியம் இருப்பதாகக் காண்பித்துக் கொள்கிறார்கள். தங்களுக்கு ஆதரவாகப் புறஜாதியாரைத் தங்கள் பக்கமாகச் சேர்த்துக்கொண்டு, அவர்களுக்கும் அப்போஸ்தலருக்கும் பகை உண்டாக்குகிறார்கள். விசுவாசியாத யூதருடைய வஞ்சக வலையில், ஒரு சில புறஜாதியார் சிக்கிக்கொண்டு, அவர்களும் அப்போஸ்தலரை எதிர்க்கிறார்கள்.

விசுவாசியாத யூதர்கள், புறஜாதியாருடைய மனதை, அப்போஸ்தலருக்கு விரோதமாக எழுப்பிவிடுகிறார்கள். அவர்களுடைய ஆவியில் குழப்பத்தை உண்டாக்கி சுவிசேஷத்தை விசுவாசிக்கிறவர்களுக்கு விரோதமாகவும், சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறவர்களுக்கு விரோதமாகவும் எழுப்பிவிடுகிறார்கள்.

கர்த்தருடைய ஊழியக்காரர்களைச் சிநேகிக்காதவர்கள், அவர்களுக்கு விரோதமாகச் சதிசெய்வார்கள். தங்களுக்கு ஆதரவாக ஒரு சிலரைச் சேர்த்துக்கொண்டு, ஊழியக்காரருக்கு விரோதமாக எதிர்த்து நிற்பார்கள். ஊழியக்காரர்களுக்குத் தொடர்ந்து பிரச்சனை கொடுத்துக்கொண்டேயிருப்பார்கள். பிசாசுக்கு தங்கள் உள்ளத்தில் இடங்கொடுப்பார்கள். கிறிஸ்துவுக்கும், அவருடைய சுவிசேஷத்திற்கும், அவருடைய ஊழியக்காரருக்கும் விரோதமாகக் கிரியை செய்துகொண்டேயிருப்பார்கள்.

அநேக நாள் சஞ்சரித்து

அவர்கள் அங்கே அநேகநாள் சஞ்சரித்துக் கர்த்தரை முன்னிட்டுத் தைரியமுள்ளவர்களாய்ப் போதகம்பண்ணினார்கள்; அவர் தமது கிருபையுள்ள வசனத்திற்குச் சாட்சியாக அடையாளங்களும் அற்புதங்களும் அவர்கள் கைகளால் செய்யப்படும்படி அநுக்கிரகம்பண்ணினார் (அப் 14:3).

அப்போஸ்தலர்கள் கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாகவும், அவருடைய வழிநடத்துதலின் பிரகாரமாகவும் இக்கோனியா பட்டணத்திற்கு வந்து ஊழியம் செய்கிறார்கள். விசுவாசியாத யூதர்கள் மூலமாகத் தங்களுக்கும், ஊழியத்திற்கும் எதிர்ப்பு உண்டானபோதிலும், அப்போஸ்தலர்கள் இக்கோனியாவில் அநேக நாள் சஞ்சரித்து கர்த்தருடைய ஊழியத்தைத் தொடர்ந்து செய்கிறார்கள். அப்போஸ்தலர்கள் தங்களுக்காக ஊழியம் செய்யவில்லை. அவர்கள் கிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்கிறார்கள்.

விசுவாசியாத யூதர்கள், அப்போஸ்தலருக்கு விரோதமாகப் புறஜாதியாருடைய மனதை எழுப்பிவிட்டு, பகை உண்டாக்கினபடியால், அப்போஸ்தலர்கள் இக்கோனியா பட்டணத்தைவிட்டு வெளியேறிப் போய்விடுவார்கள் என்று அவர்களுடைய சத்துருக்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால் அப்போஸ்தலர்களோ இக்கோனியா பட்டணத்தில், அநேக நாள் சஞ்சரித்து, கர்த்தரை முன்னிட்டு, தைரியமுள்ளவர் களாய்ப் போதகம்பண்ணுகிறார்கள்.

தங்களுக்கு எவ்வளவு பிரச்சனைகள் வந்தாலும், அவையெல்லாவற்றையும் சந்தித்து, அப்போஸ்தலர்கள் தைரியமுள்ளவர்களாய்க் கிறிஸ்துவின் வசனத்தைப் போதகம்பண்ணுகிறார்கள். விசுவாசியாத யூதர்களைப்பார்த்து அப்போஸ்தலர்கள் பயப்படவில்லை. பயந்து நடுங்குவதற்குப் பதிலாக தைரியமுள்ளவர்களாய்ச் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணுகிறார்கள். அப்போஸ்தலர்கள் கர்த்தரை முன்னிட்டு தைரியமுள்ளவர்களாய்ப் போதகம்பண்ணுகிறார்கள். தங்களுடைய சுயபலத்தில் சார்ந்திராமல், கர்த்தருடைய பலத்தில் பேசுகிறார்கள். இயேசுகிறிஸ்து தம்முடைய வாக்குத்தத்தின் பிரகாரமாக அப்போஸ்தலர்களிடத்தில் கிரியை செய்கிறார். "இதோ நான் எப்போதும் உங்களோடிருக்கிறேன்" என்று வாக்குப்பண்ணிய இயேசுகிறிஸ்து, அப்போஸ்தலரோடு கூடவே இருக்கிறார். தம்முடைய கிருபையுள்ள வசனத்திற்கு கர்த்தர் சாட்சிகொடுக்கிறார். சுவிசேஷம் கிருபையுள்ள வசனம். சுவிசேஷச்செய்தி தேவனுடைய நன்மையை நமக்கு உறுதிபண்ணுகிறது. சுவிசேஷ வசனம் கிறிஸ்துவின் கிருபையின் வசனம். இயேசுகிறிஸ்துவில் மாத்திரமே நாம் தேவனோடு ஐக்கியமாயிருக்கிறோம். தேவனுடைய சிலாக்கியத்தைப் பெற்றுக்கொள்கிறோம். கிறிஸ்து தாமே தம்முடைய வசனங்களை "கிருபையுள்ள வசனங்கள்" என்று சாட்சியாகச் சொல்லுகிறார்.

சுவிசேஷ வசனம் தேவனுடைய வசனம் என்பதை இயேசுகிறிஸ்து நமக்கு உறுதிபண்ணுகிறார். ஆகையினால் இயேசுகிறிஸ்து தமது கிருபையுள்ள வசனத்திற்கு சாட்சியாக அடையாளங்களும் அற்புதங்களும் அப்போஸ்தலருடைய கைகளால் செய்யப்படும்படி அநுக்கிரகம் பண்ணுகிறார். இயற்கையில் ஒரு சில காரியங்கள் அற்புதமாக நடைபெறுகிறது. தேவனுடைய தெய்வீக கிருபையின் வல்லமையினால், இயற்கையின் வல்லமைக்கு அப்பாற்பட்ட அற்புதங்களும் அடையாளங்களும் நடைபெறுகிறது. அப்போஸ்தலர்கள் கர்த்தரோடிருக்கும் போது, கர்த்தரும் அப்போஸ்தலரோடிருக்கிறார்.

பட்டணத்து ஜனங்கள்

பட்டணத்து ஜனங்கள் பிரிந்து, சிலர் யூதரையும் சிலர் அப்போஸ்தலரையும் சேர்ந்து கொண்டார்கள் (அப் 14:4).

சுவிசேஷம் இக்கோனியா பட்டணத்து ஜனங்கள் மத்தியில் பிரசங்கிக்கப்படும்போது, பட்டணத்து ஜனங்கள் எல்லோருமே அதைக் கவனித்துக் கேட்கிறார்கள். அதைப்பற்றித் தியானிக்கிறார்கள். சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளவேண்டுமா, அல்லது ஏற்றுக்கொள்ளவேண்டாமா என்று தீர்மானம்பண்ணுகிறார்கள். ஒரு சிலர் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்கிறார்கள். மற்றவர்கள் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. இவ்விரண்டிற்கும் நடுவில் யாரும் நடுநிலை வகிக்கவில்லை. ஆகையினால் பட்டணத்து ஜனங்கள் மத்தியில் பிரிவினை உண்டாயிற்று. சிலர் யூதரையும், சிலர் அப்போஸ்தலரையும் சேர்ந்துகொள்கிறார்கள்.

இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில் தாம் செய்கிற ஊழியத்தைப்பற்றி இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார். "நான் பூமியிலே சமாதானத்தை உண்டாக்கவந்தேன் என்று நினைக்கிறீர்களோ? சமாதானத்தையல்ல, பிரிவினையையே உண்டாக்கவந்தேன் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். எப்படியெனில், இதுமுதல் ஒரே வீட்டிலே ஐந்துபேர் பிரிந்திருப்பார்கள், இரண்டுபேருக்கு விரோதமாய்ப் மூன்றுபேரும், மூன்றுபேருக்கு விரோதமாய் இரண்டுபேரும் பிரிந்திருப்பார்கள். தகப்பன் மகனுக்கும் மகன் தகப்பனுக்கும், தாய் மகளுக்கும் மகள் தாய்க்கும், மாமி, மருமகளுக்கும் மருமகள் மாமிக்கும் விரோதமாய்ப் பிரிந்திருந்திருப்பார்கள் என்றார்" (லூக் 12:51-53). இயேசுகிறிஸ்துவின் வார்த்தை இப்போது இக்கோனியா பட்டணத்தில் நிறைவேற்றிற்று.

எல்லோருமே சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டால், உலகம் முழுவதிலுமுள்ள எல்லா ஜனங்களும் இரட்சிக்கப்படுவார்கள். ஆனால் கர்த்தரால் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் மாத்திரமே சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்கிறார்கள். மற்றவர்கள் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளாமல், கர்த்தரை விட்டுப் பிரிந்துபோய்விடுகிறார்கள். இந்தப் பிரிவினை மிகவும் பெரிதாயிருக்கிறது.

ஒரு பட்டணத்திலுள்ள எல்லா ஜனங்களும் நரகத்திற்குப் போவதைவிட, அந்தப் பட்டணத்து ஜனங்களில் ஒரு சிலர் பரலோகத்திற்குப்போவது பரவாயில்லை. சுவிசேஷம் ஜனங்கள் மத்தியில் பிரிவினை உண்டாக்குகிறது என்னும் சத்தியம் நமக்கு விநோதமாக இருக்கக்கூடாது. காட்டாற்றில் ஒருவர் விழுந்துவிடும்போது, எதிர்நீச்சல்போட்டால் ஜீவன் பிழைக்கலாம். ஆற்றின் வேகத்திற்கு தன்னை ஒப்புக்கொடுத்தால் அவர் அழிந்துபோவார். நாம் ஜீவனோடிருக்கவேண்டுமா அல்லது அழிந்துபோகவேண்டுமா என்பதை நாம் தான் தீர்மானம்பண்ணவேண்டும்.

அமளி பண்ணுகையில்

இவர்களை அவமானப்படுத்தவும் கல்லெறியவும் வேண்டுமென்று, புறஜாதியாரும் யூதரும் அவர்கள் அதிகாரிகளும் அமளிபண்ணுகையில், (அப் 14:5)

சுவிசேஷத் திநிமித்தமாக இக்கோனியா பட்டணத்து ஜனங்கள் மத்தியில் பிரிவினை உண்டாயிற்று. சத்துருக்கள் அப்போஸ்தலருக்கு விரோதமாக எழும்புகிறார்கள். ஜனங்களைத் தூண்டிவிட்டு அப்போஸ்தலருக்கு விரோதமாக அமளிபண்ண சதிஆலோசனை பண்ணுகிறார்கள். புறஜாதியாரும் யூதரும் ஒன்றுசேர்ந்து அப்போஸ்தலருக்கு விரோதமாக அமளிபண்ணுகிறார்கள். இவர்களோடு இவர்களுடைய அதிகாரிகளும் சேர்ந்துகொண்டு அமளிபண்ணுகிறார்கள்.

பொதுவாக புறஜாதியாரும் யூதரும் ஒருவருக்கொருவர் விரோதமாக யிருப்பார்கள். அப்படிப்பட்டவர்கள் இப்போது அப்போஸ்தலருக்கு விரோதமாக ஒன்றுசேர்ந்துகொள்கிறார்கள். கிறிஸ்துவின் சத்துருக்கள் இதுபோல ஒன்றுசேரும்போது, சபையாரெல்லோரும் தங்கள் பிரிவினைகளை மறந்து சத்துருவுக்கு விரோதமாக ஒன்றுசேரவேண்டும். நாம் பிரிந்திருந்தால் சத்துரு நம்முடைய பிரிவினையை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்வான். யூதரும், புறஜாதியாரும், அவர்கள் அதிகாரிகளும் அப்போஸ்தலரை அவமானப்படுத்தவும், கல்லெறியவும் வேண்டுமென்று அமளிபண்ணுகிறார்கள். முதலாவது அப்போஸ்தலரை அவமானப்படுத்த வேண்டும் என்பது இவர்களுடைய திட்டம். இவர்களை அவமானப்படுத்தினால், ஏராளமான ஜனங்கள் தங்களோடு சேர்ந்து, அப்போஸ்தலர்மீது கல்லெறிவார்கள் என்று எதிர்பார்க்கிறார்கள்.

லிக்கவோனியா நாடு

இவர்கள் அதை அறிந்து, லிக்கவோனியா நாட்டிலுள்ள பட்டணங்களாகிய லீஸ்திராவுக்கும் தெர்பைக்கும் அவைகளின் சுற்றுப்புறங்களுக்கும் ஓடிப்போய்; அங்கே சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணினார்கள் (அப் 14:6,7).

தங்களுக்கு விரோதமாக அமளி உண்டாவதை அப்போஸ்தலரும் அறிந்துகொள்கிறார்கள். அப்போஸ்தலர்கள் சத்துருவுக்கு விரோதமாக யுத்தம்பண்ணவில்லை. இக்கோனியா பட்டணத்தைவிட்டு லிக்கவோனியா நாட்டிற்கு ஓடிப்போகிறார்கள். இவர்கள் யுத்தத்தில் தோற்று ஓடிப்போகவில்லை. கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம், தங்கள் சத்துருக்களோடு யுத்தம்பண்ணுவதற்குப் பதிலாக, கர்த்தர் தங்களுக்கு நியமித்திருக்கும் வேறு ஒரு ஸ்தலத்தில் ஊழியம் பண்ணுவதற்காக ஓடிப்போகிறார்கள். பிரச்சனையைவிட்டு விலகிப்போவது தோல்வியாகாது. நாம் ஊழியத்தைவிட்டு விலகி ஓடிப்போய்விடக்கூடாது.

அப்போஸ்தலர்கள் இக்கோனியா பட்டணத்திலிருந்து லிக்கவோனியா நாட்டிலுள்ள பட்டணங்களாகிய லீஸ்திராவுக்கும் தெர்பைக்கும், அவைகளின் சுற்றுப்புறங்களுக்கும் ஓடிப்போகிறார்கள். தங்களுக்கு அங்கு பாதுகாப்பு இருப்பதை அப்போஸ்தலர்கள் அறிந்துகொள்கிறார்கள். தம்முடைய பிள்ளைகளுக்கு எப்படிப்பட்ட எதிர்ப்பு வந்தாலும் கர்த்தர் அவர்களைப் பாதுகாக்கிறார். புயலுக்கு நடுவிலும் கர்த்தர் தம்முடைய பிள்ளைகள் பாதுகாப்பாகத் தங்குவதற்கு ஒரு தாபரிக்கும் ஸ்தலத்தை உண்டுபண்ணுகிறார்.

அப்போஸ்தலர்கள் லிக்கவோனியா நாட்டிற்கு சும்மா வரவில்லை. கர்த்தருடைய ஊழியத்தைச் செய்வதற்காகவே வந்திருக்கிறார்கள். இந்த நாட்டிற்கு வந்தவுடன் அப்போஸ்தலர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ண ஆரம்பித்து விடுகிறார்கள். ஊழியம் செய்வதற்காகவே வந்தவர்கள், தங்கள் ஊழியத்தை இங்கு ஆரம்பிக்கிறார்கள். கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்கு உபத்திரவங்கள் வரும்போது, அவர்கள் தங்களுடைய ஊழியஸ்தலங்களைவிட்டு வேறு இடத்திற்குப் போகலாம். ஆனால் ஊழியக்காரர்கள் ஒருபோதும் ஊழியத்தைவிட்டு விலகிப்போய்விடக் கூடாது.

லீஸ்திராவிலே ஊழியம் அப் 14 : 8-18

அப் 14:8. லீஸ்திராவிலே ஒருவன் தன் தாயின் வயிற்றிலிருந்து பிறந்ததுமுதல் சப்பாணியாயிருந்து, ஒருபோதும் நடவாமல், கால்கள் வழங்காதவனாய் உட்கார்ந்து,

அப் 14:9. பவுல் பேசுகிறதைக் கேட்டுக்கொண்டிருந்தான். அவனைப் பவுல் உற்றுப்பார்த்து, இரட்சிப்புக்கேற்ற விசுவாசம் அவனுக்கு உண்டென்று கண்டு:

அப் 14:10. நீ எழுந்து காலூன்றி நிமிர்ந்துநில் என்று உரத்த சத்தத்தோடே சொன்னான். உடனே அவன் குதித்தெழுந்து நடந்தான்.

அப் 14:11. பவுல் செய்ததை ஜனங்கள் கண்டு, தேவர்கள் மனுஷரூபமெடுத்து நம்மிடத்தில் இறங்கி வந்திருக்கிறார்கள் என்று லிக்கவோனியா பாஷையிலே சத்தமிட்டுச் சொல்லி,

அப் 14:12. பர்னபாவை யூப்பித்தர் என்றும், பவுல் பிரசங்கத்தை நடத்தினவனானபடியினால் அவனை மெர்க்கூரி என்றும் சொன்னார்கள்.

அப் 14:13. அல்லாமலும் பட்டணத்துக்கு முன்னே இருந்த யூப்பித்தருடைய கோவில் பூஜாசாரி எருதுகளையும் பூமாலைகளையும் வாசலண்டையிலே கொண்டு வந்து, ஜனங்களோடேகூட அவர்களுக்குப் பலியிட மனதாயிருந்தான்.

அப் 14:14. அப்போஸ்தலராகிய பர்னபாவும் பவுலும் அதைக் கேட்டபொழுது, தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, கூட்டத்துக்குள்ளே ஓடி, உரத்த சத்தமாய்:

அப் 14:15. மனுஷரே, ஏன் இப்படிச் செய்கிறீர்கள்? நாங்களும் உங்களைப்போலப் பாடுள்ள மனுஷர்தானே; நீங்கள் இந்த வீணான தேவர்களைவிட்டு, வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின ஜீவனுள்ள தேவனிடத்திற்குத் திரும்ப வேண்டுமென்று உங்களுக்குப் பிரசங்கிக்கிறோம்.

அப் 14:16. சென்ற காலங்களில் அவர் சகல ஜனங்களையும் தங்கள் தங்கள் வழிகளிலே நடக்கவிட்டிருந்தும்,

அப் 14:17. அவர் நன்மை செய்துவந்து, வானத்திலிருந்து மழைகளையும் செழிப்புள்ள காலங்களையும் நமக்குத் தந்து, ஆகாரத்தினாலும் சந்தோஷத்தினாலும் நம்முடைய இருதயங்களை நிரப்பி, இவ்விதமாய் அவர் தம்மைக்குறித்துச் சாட்சி விளங்கப்பண்ணாதிருந்ததில்லை என்றார்கள்.

அப் 14:18. இப்படி அவர்கள் சொல்லியும் தங்களுக்கு ஜனங்கள் பலியிடாதபடிக்கு அவர்களை அமர்த்துகிறது அரிதாயிருந்தது.

சப்பாணி

லீஸ்திராவிலே ஒருவன் தன் தாயின் வயிற்றிலிருந்து பிறந்ததுமுதல் சப்பாணியாயிருந்து, ஒருபோதும் நடவாமல், கால்கள் வழங்காதவனாய் உட்கார்ந்து, பவுல் பேசுகிறதைக் கேட்டுக்கொண்டிருந்தான். அவனைப் பவுல் உற்றுப்பார்த்து, இரட்சிப்புக்கேற்ற விசுவாசம் அவனுக்கு உண்டென்று கண்டு: நீ எழுந்து காலூன்றி நிமிர்ந்துநில் என்று உரத்த சத்தத்தோடே சொன்னான். உடனே அவன் குதித்தெழுந்து நடந்தான் (அப் 14:8-10).

பவுல் லீஸ்திராவிலே சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணுகிறான். பவுல் பேசுகிறதை ஏராளமானோர் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஒரு சப்பாணியும் பவுலின் பிரசங்கத்தைக் கேட்கிறான். இவன் தன் தாயின் வயிற்றிலிருந்து பிறந்ததுமுதல் சப்பாணியாயிருக்கிறான். ஒருபோதும் நடவாமல் கால்கள் வழங்காதவனாய் உட்கார்ந்திருக்கிறான். இவனால் நடக்கவோ நிற்கவோ முடியாது. பிறந்தது முதல் சப்பாணியாய் உட்கார்ந்திருக்கிறான்.

இந்தச் சப்பாணியும் பவுல் பேசுகிறதைக் கேட்டுக்கொண்டிருக்கிறான். பவுலின் பிரசங்கச் செய்தி இவனுடைய உள்ளத்தைத் தொடுகிறது. பவுலுக்கும் இது தெரிகிறது. ஆவிகளைப் பகுத்தறியும் வரம் பவுலிடம் கிரியை செய்கிறது. பவுல் இந்தச் சப்பாணியை உற்றுப்பார்த்து, இரட்சிப்புக்கேற்ற விசுவாசம் அவனுக்கு உண்டு என்று கண்டுகொள்கிறான். கர்த்தருடைய வார்த்தை இந்தச் சப்பாணியைக் குணமாக்கும் என்னும் விசுவாசம் பவுலுக்கும் இருக்கிறது. பவுல் விசுவாசத்தோடு சப்பாணியிடம் "நீ எழுந்து காலூன்றி நிமிர்ந்துநில்" என்று உரத்தசத்தத்தோடே சொல்லுகிறான். உடனே சப்பாணியாயிருந்தவன் குதித்தெழுந்து நடக்கிறான்.

பவுல் சப்பாணியிடம் உரத்தசத்தமாய்ப் பேசுவதினால், அங்கு கூடியிருக்கிற ஜனங்களெல்லோரும் பவுலைக் கவனிக்கிறார்கள். இந்தச் சப்பாணி குணமானால் நன்றாயிருக்கும் என்று எல்லோரும் எதிர்பார்க்கிறார்கள். பவுலின் வார்த்தை அவர்களுடைய எதிர்பார்ப்பை அதிகரிக்கச் செய்கிறது. பவுல் சத்தமாகப் பேசியதினால் அந்த எதிர்பார்ப்பு மேலும் அதிகமாயிற்று.

தாயின் வயிற்றிலிருந்து பிறந்ததுமுதல் சப்பாணியாயிருக்கிற இவன் அங்குள்ள ஜனங்களிடம் பிச்சை கேட்டுக்கொண்டிருக்கவில்லை. இவன் ஒரு பிச்சைக்காரனல்ல. பவுலின் பிரசங்கத்தைக் கேட்க வந்தவன். சுவிசேஷத்தைக் கேட்க வந்தவனுக்கு, சுவிசேஷ வார்த்தையின் மூலமாய் அற்புத சுகதமாதல் உண்டாயிற்று. பிச்சை கேட்கிறவர்கள் பிறருடைய உதவியை எதிர்பார்ப்பார்கள். இவனோ வசனத்தைக் கேட்க வந்தவன். பவுல் இவனைப்பார்த்து "நீ எழுந்து காலூன்றி நிமிர்ந்துநில்" என்று உரத்த சத்தமாய்ச் சொல்லுகிறான். "கர்த்தர் உனக்கு உதவிசெய்வார், கர்த்தர் உன்னை பலப்படுத்துவார், கர்த்தருடைய உதவியினால் நீயே எழுந்து நில்" என்று பொருள்படுமாறு பவுல் அவனிடம் பேசுகிறான்.

பவுலின் வார்த்தையைக் கேட்டவுடன், சப்பாணியாயிருந்தவன் குத்தெழுந்து நடக்கிறான். பவுல் அவனிடம் "நீ எழுந்து காலூன்றி நில்" என்று மாத்திரமே சொன்னான். இவனோ எழுந்தது மாத்திரமல்ல, நடக்கவும் செய்கிறான். அங்கு கூடியிருக்கிற எல்லா ஜனங்களுக்கு முன்பாகவும் நடக்கிறான். தாயின் வயிற்றிலிருந்து பிறந்தது முதல் சப்பாணியாயிருந்தவன் இப்போது தங்களுக்கு முன்பாக நடப்பதை அங்கு கூடியிருந்தவர்கள் கண்டு ஆச்சரியப்படுகிறார்கள்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்குச் சரீர ஆரோக்கியம் இருக்கலாம். ஆனால் நம்மில் சிலர், நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில், முடவனைப் போல செயல்படாதவர்களாகயிருப்போம். தேவனுடைய கிருபை நம்முடைய ஆவிக்குரிய முடத்தை நீக்கிப்போடும். நாமும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வோம். கர்த்தருடைய வல்லமையினால் சப்பாணி குதித்தெழுந்த நடந்தான். நாமும் ஆவியானவரின் வல்லமையினால் குதித்தெழுந்து, நம்முடைய பரிசுத்த ஜீவியத்தில் முன்னேறிச் செல்லவேண்டும்.

தேவர்கள் மனுஷரூபமெடுத்து

பவுல் செய்ததை ஜனங்கள் கண்டு, தேவர்கள் மனுஷரூபமெடுத்து நம்மிடத்தில் இறங்கி வந்திருக்கிறார்கள் என்று லிக்கவோனியா பாஷையிலே சத்தமிட்டுச் சொல்லி, (அப் 14:11)

சப்பாணி குதித்தெழுந்த நடந்த அற்புத சம்பவம் எல்லா ஜனங்களுக்கும் முன்பாக நடைபெறுகிறது. ஜனங்கள் இந்த அற்புதத்தைப் பார்த்து ஆச்சரியப்படுகிறார்கள். இவர்கள் புறஜாதி ஜனங்களாகயிருந்தாலும், சுவிசேஷத்தைக் கேட்கவேண்டும் என்னும் வாஞ்சையோடிருக்கிறார்கள். இவர்களுக்கு முன்பாக ஒரே ஒரு அற்புதம் தான் நடைபெற்றிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் வல்லமையைப் புரிந்துகொள்ளவும், இயேசுகிறிஸ்துவைத் தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ளவும், இந்த ஒரு அற்புதம் மாத்திரமே அவர்களுக்குப் போதுமானதாகயிருக்கிறது.

இயேசுகிறிஸ்து யூதர்கள் மத்தியில் ஏராளமான அற்புதங்களைச் செய்தார். ஆனால் அவர்களோ இயேசுவைக் கிறிஸ்து என்று விசுவாசிக்கவில்லை. லீஸ்திராவிலுள்ள ஜனங்களுக்கு முன்பாக ஒரே ஒரு அற்புதம் மாத்திரமே நடைபெற்றிருக்கிறது. இந்த அற்புதத்தைப் பார்த்து இவர்களெல்லோரும் இயேசுகிறிஸ்துவை ஆண்டவராக ஏற்றுக்கொள்கிறார்கள்.

லீஸ்திரா ஜனங்கள் புறஜாதியார். அவர்கள் அந்நிய தெய்வங்களை ஆராதிக்கிறார்கள். அவர்களுக்கு இயேசுகிறிஸ்துவைப்பற்றி ஒன்றும் தெரியாது. ஆனால் சப்பாணி குதித்தெழுந்து நடப்பது தெய்வீக அற்புதம் என்பதைப் புரிந்துகொள்கிறார்கள். யார் உண்மையான தெய்வம் என்பது அவர்களுக்குத் தெரியாமல் போனாலும், இந்த அற்புதம் தேவனுடைய வல்லமையினால் நடைபெறுகிறது என்பது அவர்களுக்கு நன்றாய்த் தெரிகிறது.

பவுல் செய்ததை லீஸ்திராவிலே உள்ள ஜனங்கள் கண்டு, தேவர்கள் மனுஷரூபமெடுத்து, நம்மிடத்தில் இறங்கி வந்திருக்கிறார்கள் என்று லிக்கவோனியா பாஷையிலே சத்தமிட்டுச் சொல்லுகிறார்கள். தேவர்கள் வானத்திலிருப்பார்கள். ஆனால் இப்போதோ அவர்கள் மனுஷரூபமெடுத்து, வானத்திலிருந்து தங்கள் மத்தியிலே இறங்கி வந்திருப்பதாகச் சத்தமிட்டுச் சொல்லுகிறார்கள். தேவர்கள் தங்களைப் பார்க்க வந்திருப்பதினால் இவர்கள் பெருமையோடு சத்தமிடுகிறார்கள்.

யூப்பித்தர், மெர்க்கூரி

பர்னபாவை யூப்பித்தர் என்றும், பவுல் பிரசங்கத்தை நடத்தினவனானபடியினால் அவனை மெர்க்கூரி என்றும் சொன்னார்கள். அல்லாமலும் பட்டணத்துக்கு முன்னே இருந்த யூப்பித்தருடைய கோவில் பூஜாசாரி எருதுகளையும் பூமாலைகளையும் வாசல்ண்டையிலே கொண்டு வந்து, ஜனங்களோடேகூட அவர்களுக்குப் பலியிட மனதாயிருந்தான் (அப் 14:12,13).

வானத்திலிருந்து எந்தெந்த தேவர்களெல்லாம் மனுஷரூபமெடுத்து தங்கள் மத்தியில் வந்திருக்கிறார்கள் என்று லீஸ்திராவிலுள்ள ஜனங்கள் யோசித்து முடிவுபண்ணுகிறார்கள். யூப்பித்தரும், மெர்க்கூரியும் தங்கள் மத்தியில் வந்திருப்பதாக உரத்த சத்தத்தோடே சொல்லுகிறார்கள். அவர்கள் பர்னபாவை யூப்பித்தர் என்றும், பவுலை மெர்க்கூரி என்றும் சொல்லுகிறார்கள்.

யூப்பித்தர் பல தெய்வங்களுக்கு அதிபதியென்று அவர்கள் நம்புகிறார்கள். பர்னபாவை யூப்பித்தர் என்று அழைப்பதினால், அவன் எல்லா தேவர்களையும் லீஸ்திரா பட்டணத்திற்கு அழைத்து வந்துவிடுவான் என்று சந்தோஷப்படுகிறார்கள். மனுஷனை தெய்வமாக்குகிறார்கள். பவுல் பிரசங்கத்தை நடத்தினவன். அவர்கள் பவுலை மெர்க்கூரி என்று சொல்லுகிறார்கள். மெர்க்கூரி தேவர்களுக்கும் மனுஷருக்கும் நடுவில் செய்தி சொல்லுகிறவன். பவுல் பிரசங்கத்தை நடத்தினபடியால், இவன் தேவர்களிடத்திலிருந்து செய்தியைப் பெற்றுக்கொண்டு, தங்களிடத்தில் சொன்னதாக நம்புகிறார்கள்.

யூப்பித்தருடைய கோவில் பட்டணத்து வாசலுக்கு முன்பாக இருக்கிறது. யூப்பித்தர் தங்கள் பட்டணத்து ஜனங்களைக் காவல்காத்து பாதுகாப்பதாக நம்புகிறார்கள். அதற்காக யூப்பித்தருக்கு பட்டணத்து வாசலிலேயே கோவிலைக் கட்டி வைத்திருக்கிறார்கள். ஜனங்களெல்லோரும் பர்னபாவை யூப்பித்தர் என்று சொன்னதினால், கோவில் பூஜாசாரி யூப்பித்தருக்கு தன்னுடைய கடமையைச் செய்ய ஓடிவருகிறான். தங்கள் மத்தியில் யூப்பித்தர் வந்திருப்பதாக நினைத்து, தங்கள் வழக்கத்தின் பிரகாரம் பலிசெலுத்தி வரவேற்பு கொடுக்க விரும்புகிறான். இதற்காக பூஜாசாரி எருதுகளையும் பூமாலைகளையும் அவர்களுக்குப் பலியிட மனதாயிருக்கிறான்.

இயேசுகிறிஸ்து மனுஷரூபமெடுத்து, இந்தப் பூமியில், மனுஷர் மத்தியிலே வாசம்பண்ணினார். அவர் பல அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தார். இவையெல்லாவற்றையும் யூதஜனங்கள் பார்த்தார்கள். பார்த்தும் அவர்கள் இயேசுவுக்கு ஒரு பலியும் செலுத்தவில்லை. அதற்குப் பதிலாக அவர்கள் இயேசுகிறிஸ்துவையே சிலுவையில் பலியாகச் செலுத்தி விடுகிறார்கள். ஆனால் லீஸ்திரா பட்டணத்து ஜனங்களோ மிகவும் வித்தியாசமாகயிருக்கிறார்கள். பவுலும் பர்னபாவும் அவர்கள் மத்தியில் ஒரே ஒரு அற்புதம் மாத்திரமே செய்தார்கள். இந்த அற்புதத்தைப் பார்த்து ஜனங்கள் அசைக்கப்படுகிறார்கள். எருதுகளையும் பூமாலைகளையும் கொண்டுவந்து அவர்களுக்குப் பலியிட மனதாயிருக்கிறார்கள்.

பர்னபாவும் பவுலும்

அப்போஸ்தலராகிய பர்னபாவும் பவுலும் அதைக் கேட்டபொழுது, தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, கூட்டத்துக்குள்ளே ஓடி, உரத்த சத்தமாய்: (அப் 14:14)

யூப்பித்தருடைய கோவில் பூஜாசாரி எருதுகளையும் பூமாலைகளையும் கொண்டுவந்து அப்போஸ்தலருக்குப் பலியிட மனதாயிருக்கிறான். ஆனால் அப்போஸ்தலர்களோ பூஜாசாரி கொடுக்கிற மரியாதையை ஏற்றுக்கொள்ள மறுத்துவிடுகிறார்கள். தங்களுக்குப் பலியிடாதவாறு அவனைத் தடைபண்ணுகிறார்கள். புறஜாதி தேசத்தின் ராஜாக்களில் அநேகர் தங்களை தெய்வங்கள் என்று சொல்லிக் கொள்கிறார்கள். ஜனங்கள் தங்களைத் தெய்வமாக வழிபடும்போது அந்த ராஜாக்கள் பெருமைப்படுகிறார்கள். ஆனால் கிறிஸ்துவின் ஊழியக்காரர்களோ இப்படிப்பட்ட மேன்மையையும் மகிமையையும் அங்கீகரிக்கக்கூடாது. நாம் தேவனை மாத்திரமே ஆராதிக்கவேண்டும். நம்மை யாராவது தேவனாக நினைத்து, தேவனுக்குரிய ஆராதனையை நமக்குக் கொடுக்கும்போது, அதை ஆரம்பத்திலேயே மறுத்துவிடவேண்டும். மெய்யான தெய்வ ஆராதனையை அவர்களுக்கு உபதேசம்பண்ணவேண்டும்.

யூப்பித்தருடைய பூஜாசாரி அப்போஸ்தலருக்கு எருதுகளையும் பூமாலைகளையும் பலியிட மனதாயிருப்பதைக் கேட்டபோது, அப்போஸ்தலர்கள் தங்கள் வஸ்திரங் களைக் கிழித்துக்கொள்கிறார்கள். தங்களுக்கு விரோதமாக யூதர்கள் எதிர்த்துப் பேசியபோதோ, அல்லது கலகம்பண்ணியபோதோ அப்போஸ்தலர்கள் தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக் கொள்ளவில்லை. எதிர்ப்புக்களையும் உபத்திரவங்களையும் சகித்துக் கொண்டார்கள். ஆனால் ஜனங்கள் தங்களைத் தெய்வங்களாக நினைத்து ஆராதிக்க வரும்போதோ, அப்போஸ்தலர்கள் அதை ஏற்றுக் கொள்ளாமல், தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொள்கிறார்கள்.

ஜனங்கள் தேவனை மாத்திரமே ஆராதிக்கவேண்டும் என்று அப்போஸ்தலர்கள் அவர்களுக்கு உபதேசிக்கிறார்கள். அவர்களைப்போல தாங்களும் சாதாரண மனுஷர்தான் என்றும் எடுத்துச் சொல்லுகிறார்கள். அவர்கள் இப்படிச் சொல்லியும், தங்களுக்கு ஜனங்கள் பலியிடாதபடிக்கு, அவர்களை அமர்த்துகிறது, மிகவும் அரிதாயிருக்கிறது.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களை அப்போஸ்தலர்களாகத் தெரிந்தெடுத்து அவர்களை மேன்மைப்படுத்தியிருக்கிறார். இந்தக் கனமும் மேன்மையுமே அவர்களுக்குப் போதுமானது. அப்போஸ்தல ஊழியம் செய்வதற்கு, இயேசுகிறிஸ்து கொடுக்கிற மேன்மையைவிட, வேறு மேன்மை எதுவும் ஊழியக்காரர்களுக்குத் தேவையில்லை. மனுஷரால் உண்டாகும் மகிமையை ஊழியக்காரர்கள் தேடிப்போகக்கூடாது. தேவனுக்குக் கொடுக்கவேண்டிய கனத்தையும் மகிமையையும், மனுஷர் ஊழியக்காரருக்குக் கொடுக்கும்போது, ஊழியக்காரர்கள் அதை ஏற்றுக்கொள்ளாமல், அதை அங்கீகரிக்க மறுக்கவேண்டும்.

அப்போஸ்தலர்கள் கர்த்தருக்கே துதி, கன, மகிமையை செலுத்துகிறார்கள். பூஜாசாரி தங்களுக்குப் பலியிட மனதாயிருக்கிறபோது, அப்போஸ்தலர்கள் தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொள்கிறார்கள். அத்துடன் ஜனக்கூட்டத்திற்குள்ளே ஓடுகிறார்கள். அப்போஸ்தலர்களால் அமைதியாக நிற்கமுடியவில்லை. அவர்கள் தங்களுக்குக் கொடுக்கும் மேன்மையை அப்போஸ்தலரால் அங்கீகரிக்க முடியவில்லை. ஜனக்கூட்டத்திற்குள் வேகமாக ஓடி, அவர்கள் தங்களுக்குக் கொடுக்கும் மேன்மையை நிராகரித்து விடுகிறார்கள். ஜனக்கூட்டத்தாரிடம், உரத்த சத்தமாய் "மனுஷரே ஏன் இப்படிச் செய்கிறீர்கள்" என்று கேட்கிறார்கள். ஏன் எங்களை உங்களுக்குத் தெய்வங்களாக்குகிறீர்கள் என்று பொருள்படும் விதத்தில், அப்போஸ்தலர்கள் ஜனத்தாரிடம் கேட்கிறார்கள்.

ஜீவனுள்ள தேவன்

மனுஷரே, ஏன் இப்படிச் செய்கிறீர்கள்? நாங்களும் உங்களைப்போலப் பாடுள்ள மனுஷர்தானே; நீங்கள் இந்த வீணான தேவர்களை விட்டு, வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின ஜீவனுள்ள தேவனிடத்திற்குத் திரும்ப வேண்டுமென்று உங்களுக்குப் பிரசங்கிக்கிறோம் (அப் 14:15).

ஜனங்கள் தங்களுக்கு பலியிட மனதாயிருக்கும்போது, அப்போஸ்தலர்கள் அதை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டு, அவர்களிடத்தில் "மனுஷரே ஏன் இப்படிச் செய்கிறீர்கள்? நாங்களும் உங்களைப்போல பாடுள்ள மனுஷர்தானே" என்று உரத்த சத்தமாய்ச் சொல்லுகிறார்கள். தேவனுக்குச் செலுத்த வேண்டிய மகிமையை ஜனங்கள் அப்போஸ்தலருக்குச் செலுத்தினால், அவர்கள் தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். அதே வேளையில் தேவனுக்கு கிடைக்கவேண்டிய மகிமையை, மனுஷர் அங்கீகரித்தால், அவர்களும் தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள்.

அப்போஸ்தலர்கள் தங்களைச் சாதாரண மனுஷர்தான் என்று வெளிப்படுத்திக் காண்பிக்கிறார்கள். சாதாரண மனுஷர் மாத்திரமல்ல, தாங்களும் அவர்களைப்போல பாடுள்ள மனுஷர்தான் என்றும் அவர்களுக்குப் புரியும் விதத்தில் பேசுகிறார்கள். ஆகையினால் தங்களுக்குப் பலிசெலுத்தக்கூடாது என்று அப்போஸ்தலர்கள் அவர்களிடத்தில் உரத்த சத்தமாய்ச் சொல்லுகிறார்கள்.

அப்போஸ்தலரின் பிரசங்கம் மிகவும் எளிமையானது. லீஸ்திரா பட்டணத்திலுள்ள ஜனங்கள் வீணான தேவர்களைவிட்டு, வானத்தையும் பூமியையும், சமுத்திரத்தையும், அவைகளிலுள்ள யாவற்றையும், உண்டாக்கின ஜீவனுள்ள தேவனிடத்திற்குத் திரும்பவேண்டுமென்பதே அப்போஸ்தலரின் பிரசங்கச் செய்தி. இந்தச் சத்தியத்தையே அப்போஸ்தலர்கள் ஜனங்களுக்கு உபதேசம்பண்ணுகிறார்கள்.

அப்போஸ்தலர்கள் யூதர்கள் மத்தியில் பிரசங்கம்பண்ணியபோது, விக்கிரகாரதனையைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. யூதரிடத்தில் விக்கிரகாரதனை யில்லை. இயேசுகிறிஸ்துவே அவர்கள் எதிர்பார்க்கிற மேசியா என்பதை மாத்திரம் அப்போஸ்தலர்கள் யூதருக்குப் பிரசங்கம்பண்ணினார்கள்.

அப்போஸ்தலர்கள் புறஜாதியார் மத்தியில் பிரசங்கம்பண்ணும்போது, விக்கிரகாராதனைக்கு விரோதமாகவும் பிரசங்கம்பண்ணவேண்டிய அவசிய முண்டாயிற்று. அவர்கள் விக்கிரகங்களை தெய்வங்களாக ஆராதிக்கிறார்கள். தங்களுடைய தவறுகளிலிருந்து அவர்கள் விடுதலை பெறவேண்டும். வீணான தேவர்களை ஆராதிப்பதை அவர்கள் விட்டுவிடவேண்டும். ஜீவனுள்ள தேவனை மாத்திரமே அவர்கள் ஆராதனை செய்யவேண்டும்.

புறஜாதியாரும், அவர்களுடைய முற்பிதாக்களும் இதுவரையிலும் வீணான தேவர்களை ஆராதித்து வந்திருக்கிறார்கள். அவர்களுடைய ஆராதனை முறைமைகளும் வீணானவை. விக்கிரகாராதனையினால் அவர்களுக்கு ஒரு பிரயோஜனமும் உண்டாகவில்லை. ஆகையினால் புறஜாதியார் வீணான தேவர்களைவிட்டு விலகி, ஜீவனுள்ள தேவனிடத்திற்குத் திரும்பி வரவேண்டும்.

புறஜாதியார் வீணான தேவர்களை ஆராதனை செய்வதை விட்டுவிட்டால் மாத்திரம் போதாது. அவர்கள் ஜீவனுள்ள தேவனிடத்திற்குத் திரும்பியும் வரவேண்டும். அவர்கள் இதுவரையிலும் ஜீவனில்லாத, மரித்துப்போன செத்த விக்கிரகங்களை ஆராதனை செய்துவந்தார்கள். இந்த வீணான தேவர்களினால் ஜனங்களுக்கு ஒரு உதவியும் செய்யமுடியாது.

விக்கிரகாராதனையில் மூழ்கியிருக்கும் லீஸ்திரா பட்டணத்து ஜனங்கள், தங்கள் விக்கிரகாராதனையைவிட்டு, ஜீவனுள்ள தேவனை மாத்திரம் ஆராதனை செய்யவேண்டுமென்று அப்போஸ்தலர்கள் அவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிறார்கள். ஒன்றான மெய்த்தேவனாகிய கர்த்தர் மாத்திரமே ஜீவனுள்ளவர். அவர் நித்தியகாலமாக ஜீவிக்கிறவர். அவரே நமக்கு ஜீவனைக்கொடுக்கிறவர். அவரை மாத்திரமே நாம் ஆராதிக்கவேண்டும் என்று அப்போஸ்தலர்கள் புறஜாதியாருக்குப் பிரசங்கம்பண்ணுகிறார்கள்.

ஜீவனுள்ள தேவனே வானத்தையும், பூமியையும், சமுத்திரத்தையும், அவைகளிலுள்ள யாவற்றையும் உண்டாக்கினவர். அவர் சர்வவல்லமையுள்ளவர். அவரே சர்வசிருஷ்டிகர். அவரே மெய்யான தேவன். அவரே ஜீவனுள்ளவர். ஜீவனுள்ள அந்த ஒரே தேவனை மாத்திரமே தாங்கள் ஆராதிப்பதாகவும், தங்களைப்போலவே புறஜாதியாரும் ஜீவனுள்ள அந்தத் தேவனை மாத்திரம் ஆராதிக்கவேண்டுமென்றும் அப்போஸ்தலர்கள் புறஜாதியாருக்கு உபதேசம்பண்ணுகிறார்கள்.

சென்ற காலங்கள்

சென்ற காலங்களில் அவர் சகல ஜனங்களையும் தங்கள் தங்கள் வழிகளிலே நடக்கவிட்டிருந்தும், (அப் 14:16)

ஜனங்கள் தம்மை ஆராதனை செய்யாமல், விக்கிரகங்களை ஆராதனை செய்தபோதிலும், கர்த்தரோ உலகத்தை அழித்துவிடாமல், உலகத்து ஜனங்களிடத்தில் இதுவரையிலும் நீடியபொறுமையோடிருக்கிறார். சென்ற காலங்களில் அவர் சகல ஜனங்களையும் தங்கள் தங்கள் வழிகளிலேயே நடக்கவிட்டிருந்தார். புறஜாதியார் விக்கிரகங்களை ஆராதிக்கும்போது, அவர்கள் மெய்யாகவே தேவனுடைய பொறுமையைச் சோதித்துப் பார்க்கிறார்கள்.

பொறுமையுள்ள தேவன் தம்முடைய சுவிசேஷச் செய்தியை இப்போது உலகத்திற்கு அனுப்பியிருக்கிறார். ஆனால் உலகத்தாரோ தங்களுடைய விக்கிரகாராதனையில் இன்னும் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். தேவன் இதுவரையிலும் சென்ற காலங்களில் பொறுமையோடிருந்ததுபோல, இனிமேலும் பொறுமையோடிருக்க மாட்டார். ஜனங்களுடைய விக்கிரகாராதனையைச் சகித்துக்கொள்ளமாட்டார்.

ஜனங்கள் இனிமேலும் விக்கிரகாராதனையில் ஈடுபடக்கூடாது. விக்கிரகாராதனை பழக்க வழக்கங்களை விட்டுவிட்டுத் தேவனிடத்திற்குத் திரும்ப வரவேண்டும். நாம் மனந்திரும்ப வேண்டும் என்பதற்காகவே தேவன் இதுவரையிலும் நம்முடைய தப்பிதங்களைப் பொறுமையோடு சகித்துக்கொண்டார். இப்போதோ நாம் மனந்திரும்பி, விக்கிரகாராதனையை விட்டுவிட்டு, ஜீவனுள்ள தேவனை மாத்திரமே ஆராதனை செய்யவேண்டும் என்று, கர்த்தர் எல்லா ஜனங்களையும் எச்சரிக்கிறார்.

அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர்போல விட்டுவிட்டார். ஆனால் இப்போதோ எங்குமுள்ள ஜனங்களும் மனந்திரும்ப வேண்டுமென்று எச்சரிக்கிறார். நாம் அறியாமையில் செய்த தப்பிதங்களைத் தேவன் சகித்துக்கொள்கிறார். நமக்குச் சுவிசேஷத்தின் சத்தியம் தெளிவாக உபதேசம்பண்ணப்பட்ட பிறகு, நாம் மறுபடியும் விக்கிரகாராதனையில் ஈடுபட்டால், தேவன் அதைச் சகித்துக் கொள்ளமாட்டார். லீஸ்திராவிலுள்ள ஜனங்களுக்கு அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைத் தெளிவாகப் பிரசங்கம்பண்ணுகிறார்கள். அவர்கள் தங்கள் விக்கிரகாராதனையிலிருந்து மனந்திரும்பி, ஜீவனுள்ள தேவனிடத்திற்குத் திரும்ப வரவேண்டும். விக்கிரகங்களை ஆராதியாமல் கர்த்தரை மாத்திரமே ஆராதிக்கவேண்டும்.

தேவனைக் குறித்துச் சாட்சி

அவர் நன்மை செய்துவந்து, வானத்திலிருந்து மழைகளையும் செழிப்புள்ள காலங்களையும் நமக்குத் தந்து, ஆகாரத்தினாலும் சந்தோஷத்தினாலும் நம்முடைய இருதயங்களை நிரப்பி, இவ்விதமாய் அவர் தம்மைக்குறித்துச் சாட்சி விளங்கப் பண்ணாதிருந்ததில்லை என்றார்கள் (அப் 14:17).

புறஜாதி ஜனங்கள் கர்த்தருடைய காணியாட்சிக்குப் புறம்பாயிருந்த காலத்திலேயே, கர்த்தருடைய அநுக்கிரகம் அவர்களுக்குக் கிடைத்தது. தேவனுடைய வார்த்தை அவர்களைக் கண்டித்துத் திருத்துவதற்கு முன்பாகவே, தேவன் அவர்களுக்கு நன்மை செய்தார். சத்திய வசனங்களை அவர்கள் கேட்டு, அதற்குக் கீழ்ப்படிவதற்கு முன்பாகவே, தேவனுடைய நற்கிரியைகளை அவர்கள் பெற்றுக்கொண்டார்கள்.

தேவன் தம்மைக் குறித்தச் சாட்சியை புறஜாதியார் மத்தியில் விளங்கப் பண்ணியிருக்கிறார். இயற்கையின் மூலமாகத் தேவனுடைய நற்கிரியைகளும், அவரைக் குறித்தச் சாட்சியும், புறஜாதியார் மத்தியில் விளங்கிற்று. தேவன் அவர்களுக்கு ஏராளமான நன்மைகளைச் செய்து, அவர்களைப் போஷித்துப் பராமரித்து வந்திருக்கிறார். இது உலகத்திலுள்ள எல்லா ஜனங்களுக்கும் கிடைக்கிற பொதுவான பராமரிப்பு. அவர்களுக்குச் சுவிசேஷம் அறிவிக்கப்படவில்லை. ஆனாலும் தேவனுடைய பொதுவான பராமரிப்புக்களும், ஆசீர்வாதங்களும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

தங்களுக்குச் சுவிசேஷம் அறிவிக்கப்படவில்லையென்பதற்காக, ஜனங்கள் ஜீவனுள்ள தேவனை ஆராதிக்காமல், விக்கிரகத்தை ஆராதிக்கக்கூடாது. சுவிசேஷத்தின் மூலமாகத் தேவனைப்பற்றிய சத்தியம் அவர்களுக்கு அறிவிக்கப்படவில்லையென்றாலும், அவர்களுக்கு இயற்கையின் மூலமாகத் தேவனைக் குறித்தச் சாட்சி அறிவிக்கப்பட்டிருக்கிறது. "இவ்விதமாய்த் தேவன் தம்மைக்குறித்துப் புறஜாதியார் மத்தியில் சாட்சி விளங்கப் பண்ணாதிருந்ததில்லை" என்று அப்போஸ்தலர்கள் ஜனங்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிறார்கள். இயற்கையின் ஆசீர்வாதம் தேவனைத் தெரிந்துகொள்வதற்கு அவர்களுக்கு ஒரு வழிகாட்டியாக இருக்கிறது. ஆகையினால் புறஜாதி ஜனங்கள் தங்களுக்குத் தேவனைத் தெரியாது என்று சாக்குப்போக்குச் சொல்லமுடியாது.

தேவன் சர்வலோகத்திலுள்ள ஜனங்களையும் போஷித்துப் பராமரிக்கிறார். தேவனுடைய பொதுவான ஆசீர்வாதங்கள் எல்லா ஜனங்களுக்கும் கிடைக்கிறது. இவையெல்லாமே "தேவன் இருக்கிறார்" என்னும் சத்தியத்திற்குச் சாட்சியாகயிருக்கிறது. தேவன் வானத்திலிருந்து மழைகளையும், செழிப்புள்ள காலங்களையும் நமக்குத் தருகிறார். ஆகாரத்தினாலும் சந்தோஷத்தினாலும் நம்முடைய இருதயங்களை நிரப்புகிறார்.

மழையும், செழிப்புள்ள காலங்களும் இயற்கையாக வந்துவிடவில்லை. கர்த்தரே இவற்றை நமக்குக் கொடுக்கிறவர். இயற்கையின் எல்லா காரியங்களும் சர்வவல்லமையுள்ள தேவனைக்குறித்துச் சாட்சியாய் அறிவிக்கிறது. தேவனே தம்முடைய சர்வவல்லமையினால் இயற்கையை ஆளுகை செய்கிறார். இதற்கு இயற்கையில் நடைபெறும் ஒவ்வொரு காரியமும் சாட்சியாகயிருக்கிறது. வானம் நமக்கு மழையைத் தரவில்லை. தேவனே வானத்திலிருந்து நமக்கு மழையைத் தருகிறார்.

தேவன் நமக்கு பல நன்மைகளைச் செய்கிறார். பல ஆசீர்வாதங்களைக் கொடுக்கிறார். இவையெல்லாவற்றையும் நாம் பெற்று அனுபவிக்கிறோம். இந்த ஆசீர்வாதங்களை நாம் அனுபவிக்கும் போது, இவையெல்லாவற்றையும் சிருஷ்டித்த சிருஷ்டிகர் ஒருவர் இருக்கிறார் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. சிருஷ்டிப்பின் ஆசீர்வாதங்களை அனுபவிக்கும்போது சிருஷ்டிகரை நினைவுகூர்ந்து அவரைத் துதிக்கவேண்டும்.

தேவன் தாம் செய்கிற ஒவ்வொரு நன்மையிலும், தம்மைக் குறித்தச் சாட்சியை விளங்கப்பண்ணுகிறார். தேவன் நன்மை செய்கிறராகவே இருக்கிறார். தேவனுடைய நன்மையே அவருடைய மகிமையாக இருக்கிறது. தேவன் இயற்கையின் மூலமாக நமக்கு மழைகளையும், செழிப்புள்ள காலங்களையும் கொடுப்பதினால், நம்முடைய அன்றாட தேவைகள் சந்திக்கப்படுகிறது. தேவனே நமக்குப் புசிப்பதற்கு ஆகாரத்தையும், குடிப்பதற்குத் தண்ணீரையும் கொடுக்கிறார். அப்போஸ்தலர்கள் இயற்கையில் காணப்படுகிற தேவனுடைய நன்மைகளை ஜனங்களுக்கு விரிவாக எடுத்துச்சொல்லுகிறார்கள். தேவன் நமக்கு எப்படியெல்லாம் நன்மைசெய்கிறார் என்பதை அவர்களிடத்தில் விவரித்துச் சொல்லுகிறார்கள்.

தேவன் நமக்கு எல்லா நன்மைகளையும் ஆயத்தம்பண்ணி வைத்திருக்கிறார். வானத்திலிருந்து நமக்கு மழையைக் கொடுத்து நன்மை செய்கிறார். மழை பெய்வதினால் நமக்கு குடிப்பதற்குத் தண்ணீர் கிடைக்கிறது. நிலங்களில் பயிரிடப்பட்டிருக்கும் பயிர் வகைகள் முளைக்கிறது. தானியங்கள் நன்றாக வளருவதினால், தேவன் நமக்குச் செழிப்புள்ள காலங்களைத் தருகிறார். இவையெல்லாம் தேவனுடைய பொதுவான ஆசீர்வாதங்களும் பராமரிப்புக்களும் ஆகும்.

தேவன் இயற்கையின் மூலமாக நமக்கு அநேக நன்மைகளைச் செய்கிறார். புறஜாதியாரோ தேவனைப்பற்றி அறியாதவர்களாக, இயற்கையையே தெய்வாக நினைக்கிறார்கள். மனுஷ சக்திக்கு மேலான சக்தி உள்ளதாக புறஜாதியார் நம்புகிறார்கள். அது இடி, மின்னல் போன்ற சக்தியாக இருக்குமோ என்று நினைத்து அவற்றிற்குப் பயப்படுகிறார்கள். தேவன் பயங்கரமானவர் என்றும், மனுஷரை அழிப்பதற்காகவே, இயற்கையின் வல்லமைகளை அவர் பயன்படுத்துவார் என்றும் நினைத்து, அவர்கள் தேவனை நினைத்துப் பயப்படுகிறார்கள். ஆனால் தேவனோ மனுஷருக்கு இயற்கையின் மூலமாக நன்மையை மாத்திரமே செய்கிறார்.

கர்த்தர் கொடுக்கிற ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்கிற ஜனங்கள், தேவனைத் துதிக்கவேண்டும். அவரை நல்லவராகவே பார்க்கவேண்டும். அவரை நேசிக்கவேண்டும். அவரிடத்தில் அன்புகூரவேண்டும். தேவனை நினைத்துச் சந்தோஷப்படவேண்டும். தங்களுக்கு மழைகளையும், செழிப்புள்ள காலங்களையும் கொடுத்து நன்மை செய்கிற தேவனை நன்றியோடு துதிக்கவேண்டும்.

தேவன் நமக்கு மழைகளையும் செழிப்புள்ள காலங்களையும் கொடுத்து, இவற்றின் மூலமாக நமக்கு ஆறுதலையும் கொடுக்கிறார். ஆகாரத்தினாலும் சந்தோஷத்தினாலும் நம்முடைய இருதயங்களை நிரப்புகிறார். தேவன் நமக்கு நன்மை செய்கிறவர் மாத்திரமல்ல. நம்மை நன்மையால் நிரப்புகிறவராகவும் இருக்கிறார். நம்முடைய தேவைக்குத் தகுந்த ஆகாரத்தை மாத்திரம் நமக்குக் கொடுக்காமல், நம்மை ஆகாரத்தினால் நிரப்புகிறார். நம்முடைய தேவைக்கும் அதிகமாகத் தாராளமாய்க் கொடுக்கிறார். விதவிதமான ஆகாரங்களையும், சுவையான பதார்த்தங்களையும் நமக்கு தாராளமாய்க் கொடுத்து, நம்மை போஷிக்கிறார்.

புறஜாதியார் இந்த உலகத்தில் தேவனை அறியாமல் ஜீவிக்கிறார்கள். அவர்களுடைய உள்ளத்தில் தேவபக்தியில்லை. தேவனைப்பற்றிய அறிவுமில்லை. ஆனாலும் அவர்கள் தேவனுடைய ஆசீர்வாதத்தினாலேயே ஜீவிக்கிறார்கள். அவர்கள் புறஜாதியாராகயிருந்தாலும் தேவன் அவர்களுடைய இருதயங்களையும் ஆகாரத்தினாலும் சந்தோஷத்தினாலும் நிரப்புகிறார். ஆனால் இந்த ஆகாரம் அவர்களுடைய ஆத்துமாவை நிரப்பாது. அவர்கள் கர்த்தரை அறிகிற அறிவைப் பெற்றுக்கொண்டால் மாத்திரமே அவர்களுடைய ஆத்துமாவிற்கு ஆசீர்வாதமுண்டாகும். அவர்களுடைய ஆத்துமா திருப்தியடையும். சரீரம் ஆகாரத்தினால் திருப்தியடையும். ஆத்துமாவோ கர்த்தரை அறிகிற அறிவினால் மாத்திரமே திருப்தியடையும்.

தேவன் நம்முடைய இருதயங்களை ஆகாரத்தினால் நிரப்பினால் மாத்திரம் போதாது. சந்தோஷத்தினாலும் நிரப்பவேண்டும். அப்போதுதான் நாம் சந்தோஷமாக ஜீவிக்க முடியும். நாம் ஆகாரத்திற்காக மாத்திரம் தேவனுக்கு நன்றி சொன்னால் போதாது. நம்முடைய சந்தோஷத்திற்காகவும் அவருக்கு நன்றி சொல்லவேண்டும். நம்முடைய இருதயம் ஆகாரத்தினாலும் சந்தோஷத்தினாலும் நிரப்பப்பட்டிருக்குமென்றால், நம்முடைய இருதயம் தேவன்மீதுள்ள அன்பினாலும், தேவனைத் துதிக்கும் வார்த்தைகளினாலும் நிரப்பப்பட்டிருக்கும்.

பலியிடாதபடிக்கு

இப்படி அவர்கள் சொல்லியும் தங்களுக்கு ஜனங்கள் பலியிடாதபடிக்கு அவர்களை அமர்த்துகிறது அரிதாயிருந்தது (அப் 14:18).

தன் தாயின் வயிற்றிலிருந்து பிறந்தது முதல் சப்பாணியாயிருந்து, ஒருபோதும் நடவாமல், கால்கள் வழங்காதவனாய் உட்கார்ந்திருக்கிறவனை பவுல் உற்றுப்பார்த்து, இரட்சிப்புக்கேற்ற விசுவாசம் அவனுக்கு உண்டென்று கண்டு, "நீ எழுந்து காலூன்றி நிமிர்ந்து நில்" என்று உரத்த சத்தத்தோடே சொல்லுகிறான். உடனே அவன் குதித்தெழுந்து நடக்கிறான். பவுல் செய்ததை ஜனங்கள் கண்டு "தேவர்கள் மனுஷரூபமெடுத்து நம்மிடத்தில் இறங்கி வந்திருக்கிறார்கள்" என்று லிக்கவோனியா பாஷையிலே சத்தமிட்டுச் சொல்லுகிறார்கள்.

யூப்பித்தருடைய கோவில் பூஜாசாரி எருதுகளையும் பூமாலைகளையும் கொண்டுவந்து அப்போஸ்தலருக்கு பலியிட மனதாயிருக்கிறான். அவர்கள் இப்படிச் செய்யக்கூடாது என்று அப்போஸ்தலர்கள் அவர்களுக்கு எடுத்துச் சொல்லுகிறார்கள். தாங்களும் அவர்களைப்போல பாடுகள் மனுஷர்தான் என்று சொல்லுகிறார்கள். அப்போஸ்தலர்கள் இப்படிச் சொல்லியும், தங்களுக்கு ஜனங்கள் பலியிடாதபடிக்கு அவர்களை அமர்த்துகிறது அறிதாயிருக்கிறது. நம்முடைய ஊழியங்களில் கர்த்தர் தம்முடைய கிருபையினால் அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்யும்போது, நாம் மனுஷர் மூலமாய் வரும் மகிமையையும் மேன்மையையும் ஏற்றுக்கொள்ளக்கூடாது. தேவனை மாத்திரமே மகிமைப்படுத்தவேண்டும். கர்த்தர் மாத்திரமே நம்முடைய எல்லா துதிகளுக்கும் பாத்திரராயிருக்கிறார்.

அந்தியோகியாவிற்கு வருகிறார்கள்
அப் 14 : 19-25

அப் 14:19. பின்பு அந்தியோகியாவிலும் இக்கோனியாவிலுமிருந்து சில யூதர்கள் வந்து, ஜனங்களுக்குப் போதனைசெய்து, பவுலைக் கல்லெறிந்து, அவன் மரித்துப் போனானென்று எண்ணி, அவனைப் பட்டணத்துக்கு வெளியிலே இழுத்துக்கொண்டு போனார்கள்.

அப் 14:20. சீஷர்கள் அவனைச் சூழ்ந்துநிற்கையில், அவன் எழுந்து, பட்டணத்திற்குள் பிரவேசித்தான். மறுநாளில் பர்னபாவுடனேகூடத் தெர்பைக்குப் புறப்பட்டுப் போனான்.

அப் 14:21. அந்தப் பட்டணத்தில் அவர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, அநேகரைச் சீஷராக்கினபின்பு, லீஸ்திராவுக்கும் இக்கோனியாவுக்கும் அந்தியோகியாவுக்கும் திரும்பி வந்து,

அப் 14:22. சீஷருடைய மனதைத் திடப்படுத்தி, விசுவாசத்திலே நிலைத்திருக்கும்படி அவர்களுக்குப் புத்திசொல்லி, நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டுமென்று சொன்னார்கள்.

அப் 14:23. அல்லாமலும் அந்தந்தச் சபைகளில் அவர்களுக்கு மூப்பர்களை ஏற்படுத்தி வைத்து, உபவாசித்து ஜெபம்பண்ணி, அவர்கள் விசுவாசித்துப் பற்றிக்கொண்ட கர்த்தருக்கு அவர்களை ஒப்புவித்தார்கள்.

அப் 14:24. பின்பு பிசீதியாநாட்டைக் கடந்து, பம்பிலியா நாட்டிற்கு வந்து,

அப் 14:25. பெர்கே ஊரில் வசனத்தைப் பிரசங்கித்து, அத்தலியா பட்டணத்திற்குப் போனார்கள்.

பவுலைக் கல்லெறிந்து

பின்பு அந்தியோகியாவிலும் இக்கோனியாவிலுமிருந்து சில யூதர்கள் வந்து, ஜனங்களுக்குப் போதனைசெய்து, பவுலைக் கல்லெறிந்து, அவன் மரித்துப் போனானென்று எண்ணி, அவனைப் பட்டணத்துக்கு வெளியிலே இழுத்துக்கொண்டு போனார்கள் (அப் 14:19).

அந்தியோகியாவிலும் இக்கோனியா விலுமிருந்து சில யூதர்கள் லீஸ்திரா பட்டணத்திற்கு வருகிறார்கள். இவர்கள் ஏற்கெனவே இயேசுகிறிஸ்துவுக்கும், அவருடைய சுவிசேஷத்திற்கும், அப்போஸ்தலருக்கும் விரோதமாக கலகம்பண்ணியவர்கள். இவர்கள் பவுலின் ஊழியத்தைப்பார்த்து, பொறாமைப்பட்டு அவனைத் துன்புறுத்துகிறார்கள். ஜனங்களுக்குப் போதனை செய்து பவுலை கல்லெறிந்து கொன்றுபோடுகிறார்கள். பர்னபாவைத் துன்புறுத்துவதைவிட, பவுலையே துன்புறுத்தி, அவன்மீது கல்லெறிகிறார்கள். பவுல் கர்த்தருடைய சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணியதினால் யூதர்களுக்கு அவன்மீது அதிக கோபமுண்டாயிற்று.

லீஸ்திராவிலுள்ள ஜனங்கள் இதுவரையிலும் பவுலின் பிரசங்கத்தைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அந்தியோகியாவிலும் இக்கோனியா விலுமிருந்து சில யூதர்கள் வந்து, பவுலுக்கு விரோதமாகப் போதனை செய்கிற வரையிலும், அவர்கள் பவுலின் பிரசங்கத்தைக் கேட்டார்கள். இந்த யூதர்கள் பவுலுக்கு விரோதமாக ஜனங்களைத் தூண்டிவிடுகிறார்கள். கிறிஸ்துவின் சுவிசேஷம் எங்கும் பிரசங்கிக்கக் கூடாது என்பதில் யூதர்கள் மிகவும் வைராக்கியமாகயிருக்கிறார்கள். சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுவதையும், ஜனங்கள் சுவிசேஷத்திற்குச் செவிகொடுப்பதையும் யூதர்களால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

யூதர்கள் ஒரு சிலராகயிருந்தாலும், சதிஆலோசனைசெய்து, தங்கள் பக்கமாக ஏராளமான ஜனங்களைச் சேர்த்துக்கொண்டு அப்போஸ்தலருக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறார்கள். ஜனங்களுக்குப் போதனை செய்து பவுலைக் கல்லெறிந்து கொன்றுபோடுகிறார்கள். பவுல் மரித்துப்போனான் என்று எண்ணி, அவனை பட்டணத்திற்கு வெளியிலே இழுத்துக்கொண்டு போகிறார்கள்.

துன்மார்க்க ஜீவியத்தில் இருக்கும் ஜனங்களை, அவர்களுடைய துன்மார்க்கத்திலிருந்து விடுதலை பண்ணுவதற்கு அப்போஸ்தலர்கள் அவர்களுக்கு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறார்கள். ஆனால் யூதர்களோ துன்மார்க்கத்தில் ஜீவிக்கிற ஜனங்களை, தொடர்ந்து துன்மார்க்கத்திலேயே ஜீவிக்குமாறு வழிநடத்துகிறார்கள். இந்த உலகத்தில் சுவிசேஷமும் பிரசங்கிக்கப்படுகிறது. சுவிசேஷத்திற்கு விரோதமான செய்தியும் பிரசங்கிக்கப்படுகிறது.

ஜனங்கள் பவுலைக் கல்லெறிந்து கொல்லுவதற்கு முந்தின நாளில், அவர்களெல்லோரும் பவுல்மீதும் பர்னபா மீதும் மிகவும் அன்பாயிருந்தார்கள். தேவர்கள் மனுஷரூபமெடுத்து தங்களிடத்தில் இறங்கி வந்திருக்கிறார்கள் என்று அப்போஸ்தலரைப்பற்றி புகழ்ச்சியாய்ப் பேசினார்கள். ஆனால் இன்றோ அதே ஜனங்கள் பவுலை கல்லெறிந்து கொன்றுபோடுகிறார்கள்.

இயேசுகிறிஸ்துவின் ஜீவியத்திலும் இப்படிப்பட்ட சம்பவம் நடைபெற்றது. இயேசு எருசலேமுக்குள் பவனியாக பிரவேசித்தபோது, ஜனங்களெல்லோரும் "ஓசன்னா" என்று சொல்லி ஆர்ப்பரித்து, அவரை வரவேற்றார்கள். அதே ஜனங்கள் பிலாத்துவுக்கு முன்பாக, இயேசுவை "சிலுவையில் அறையும்" என்று உரத்த சத்தமாய்க் கூக்குரலிட்டு, அவரைச் சிலுவையில் அறைந்து கொன்றுபோட்டார்கள்.

லீஸ்திராவிலுள்ள ஜனங்கள் நேற்று அப்போஸ்தலருக்கு எருதுகளையும் பூமாலைகளையும் கொண்டுவந்து பலியிட மனதாயிருந்தார்கள். ஆனால் இன்றோ அவர்கள் பவுலையே பலியாகக் கொன்றுபோடுகிறார்கள்.

சீஷர்கள் சூழ்ந்துநிற்கையில்

சீஷர்கள் அவனைச் சூழ்ந்துநிற்கையில், அவன் எழுந்து, பட்டணத்திற்குள் பிரவேசித்தான். மறுநாளில் பர்னபாவுடனேகூடத் தெர்பைக்குப் புறப்பட்டுப் போனான் (அப் 14:20).

பவுல் லீஸ்திராவில் ஊழியம் செய்தபோது, அங்குள்ள ஜனங்களில் சிலர் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறார்கள். இவர்கள் புதிய விசுவாசிகள். புதிய சீஷர்கள். யூதர்கள் ஜனங்களுக்கு போதனை செய்து, பவுலை கல்லெறிந்து கொன்றுபோடுகிறார்கள். அவனைப் பட்டணத்திற்கு வெளியிலே இழுத்துக் கொண்டுபோகிறார்கள். லீஸ்திராவிலுள்ள புதிய விசுவாசிகளோ, தங்கள் ஆவியில் தைரியங்கொண்டு, பட்டணத்திற்கு வெளியிலே, மரித்தவனாகக் கிடக்கிற பவுலை சூழ்ந்து நிற்கிறார்கள். அப்போஸ்தலர் கீழே விழுந்தாலும் விசுவாசிகள் எழுந்து நிற்கிறார்கள். பவுலின் சரீரத்தைக் காவல்காக்கிறார்கள்.

பவுல் மரித்துப்போவானா அல்லது உயிரோடு எழும்புவானா என்பதைப் பார்ப்பதற்காக சீஷர்கள் அவனைச் சூழ்ந்து நிற்கும்போது, பவுல் எழுந்திருக்கிறான். கர்த்தரே அவனை உயிரோடு எழுப்புகிறார். கர்த்தருடைய உண்மையுள்ள ஊழியக்காரர்கள், மரணத்தின் வாயிலுக்குச் சென்றாலும் கர்த்தர் அவர்களை மரணத்தின் பிடியிலிருந்து தப்புவிப்பார். அவர்களுக்கு நியமித்து வைத்திருக்கும் ஓட்டத்தை அவர்கள் ஓடி முடிக்கும் வரையிலும் பரிசுத்தவான்களுக்கு மரணம் நேரிடாது. நம்முடைய ஜீவியத்தில் கர்த்தருடைய சித்தம் நிறைவேறுகிற வரையிலும்நமக்கும் மரணம் உண்டாகாது. நம்முடைய ஜீவன் கர்த்தருடைய பலத்த கரத்தில் பாதுகாப்பாகயிருக்கிறது.

யூதர்களும் லீஸ்திரா ஊரிலுள்ள ஜனங்களும் பவுலைக் கல்லெறிந்து, அவன் மரித்துப்போனான் என்று எண்ணி, அவனைப் பட்டணத்திற்கு வெளியிலே இழுத்துக்கொண்டு போனார்கள். கர்த்தருடைய ஊழியக்காரனை அவர்கள் ஊருக்குப் புறம்பே கொண்டுபோகிறார்கள். பவுலோ உயிரோடு எழுந்து பட்டணத்திற்குள் பிரவேசிக்கிறான். ஜனங்களால் பவுல் மீது கல்லெறிந்து கொல்லமுடிகிறது. ஆனால் அவனுடைய ஊழியத்தை அவர்களால் தடைபண்ண முடியவில்லை. அவர்கள் பட்டணத்திற்கு வெளியே பவுலை இழுத்துக்கொண்டு போனாலும், அவன் மறுபடியுமாக பட்டணத்திற்குள் பிரவேசிக்கிறான்.

நம்முடைய ஊழிய பாதையில் நமக்கும் பாடுகளும் துன்பங்களும் வரலாம். நம்முடைய ஊழியத்திற்கு தடை உண்டாகலாம். இப்படிப்பட்ட சூழ்நிலையில், நமக்கு ஊழிய வாய்ப்பு வேறு ஏதாவது இடத்தில் இருக்கிறதா என்பதை தேடிப்பார்க்கவேண்டும். கர்த்தர் நமக்கு ஊழிய வாசலை எங்கே திறக்கிறாரோ, அங்கே பிரவேசிப்பதற்கு நாம் ஆயத்தமாயிருக்கவேண்டும். பவுல் லீஸ்திரா பட்டணத்திற்குள் மறுபடியும் பிரவேசித்தாலும், அவன் அந்த ஜனங்களோடு போராடிக் கொண்டிருக்கவில்லை. மறுநாளிலே பவுலும் பர்னபாவும் லீஸ்திரா பட்டணத்தைவிட்டுத் தெர்பைக்கு புறப்பட்டுப் போகிறார்கள். அப்போஸ்தலரின் ஊழியம் தடைபடாமல் தொடர்ந்து நடைபெறுகிறது.

தெர்பை

அந்தப் பட்டணத்தில் அவர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, அநேகரைச் சீஷராக்கினபின்பு, லீஸ்திராவுக்கும் இக்கோனியாவுக்கும் அந்தியோகியாவுக்கும் திரும்பி வந்து, (அப் 14:21)

அப்போஸ்தலர்கள் லீஸ்திரா பட்டணத்திலிருந்து பயந்து ஓடிப்போகவில்லை. ஊழியத்தைவிட்டு அவர்கள் ஓடிப்போய்விடவில்லை. தெர்பை பட்டணத்தில் அவர்களுக்கு ஊழியம் செய்ய வாசல் திறந்திருக்கிறது. அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, அப்போஸ்தலர்கள் தெர்பை பட்டணத்தில் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறார்கள். அநேகரைச் சீஷராக்குகிறார்கள். தெர்பையில் என்னென்ன சம்பவங்களெல்லாம் நடைபெற்றன என்று அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தில் விரிவாக எழுதப்படவில்லை. ஆனாலும் அந்தப் பட்டணத்தில் அநேகர் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து, சீஷர்களானார்கள் என்பது எழுதப்பட்டிருக்கிறது.

கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம் தெர்பை பட்டணத்தில், எத்தனை நாட்கள் ஊழியம் செய்யவேண்டுமோ, அத்தனை நாட்களும் அவர்கள் அங்கு தங்கியிருந்து ஊழியம் செய்கிறார்கள். அதன் பின்பு அவர்கள் லீஸ்திராவுக்கும், இக்கோனியாவுக்கும், அந்தியோகியாவுக்கும் திரும்பி வந்து, கர்த்தருடைய ஊழியத்தைத் தொடர்ந்து செய்கிறார்கள். லீஸ்திராவிலிருந்து தெர்பைக்குப் புறப்பட்டுப்போனவர்கள், மறுபடியும் லீஸ்திராவுக்குத் திரும்பி வருகிறார்கள்.

சீஷருடைய மனதை திடப்படுத்தி

சீஷருடைய மனதைத் திடப்படுத்தி, விசுவாசத்திலே நிலைத்திருக்கும்படி அவர்களுக்குப் புத்தி சொல்லி, நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கவேண்டுமென்று சொன்னார்கள் (அப் 14:22).

லீஸ்திரா, இக்கோனியா, அந்தியோகியா ஆகிய பட்டணங்களில் புதிய விசுவாசிகள் இருக்கிறார்கள். இவர்கள் ஆவிக்குரிய குழந்தைகளைப் போன்றவர்கள். இவர்களுக்கு சிறிய துன்பம் வந்தாலும் விசுவாசத்திலிருந்து விலகிப்போய்விடுவார்கள். சிறிய பிரச்சனைகள் கூட புதிய விசுவாசிகளை அசைத்துவிடும். ஆகையினால் இந்தப் பட்டணத்திலிருக்கும் புதிய சீஷருடைய மனதைத் திடப்படுத்துவதற்காக அப்போஸ்தலர்கள் இங்கு வருகிறார்கள். விசுவாசத்திலே நிலைத்திருக்கும்படி அவர்களுக்குப் புத்தி சொல்லுகிறார்கள்.

நாம் நிர்மூலமாகாமலிருப்பது தேவனுடைய சுத்தக்கிருபை. ஆகையினால் நம்முடைய ஜீவியத்தில் தேவகிருபையை இழந்துவிடக்கூடாது. இயேசுகிறிஸ்துவை விசுவாசத்தோடு பற்றிக்கொள்ளவேண்டும். இயேசுகிறிஸ்துவை விட்டு விலகிப்போய்விட்டால் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு ஆபத்து உண்டாகும். நமக்குப் பிரச்சனைகள், சோதனைகள், வேதனைகள் ஆகிய எது வந்தாலும், நாம் கர்த்தரையே பற்றிக்கொள்ளவேண்டும். விசுவாசத்தில் நிலைத்திருக்கவேண்டும்.

நாம் கர்த்தருக்காகப் பாடுகளை அனுபவிக்கும்போது, ஏற்ற வேளையில் கர்த்தர் நம்மை மேன்மைப்படுத்துவார். நாம் இழந்துபோனதை அவர் நமக்குத் திரும்பக்கொடுப்பார். கர்த்தர் நம்மை ஒருபோதும் கைவிடமாட்டார். கர்த்தர்மீது நாம் வைத்திருக்கும் விசுவாசமே நமக்குப் பெலன். நாம் விசுவாசத்தைவிட்டு விலகிப்போய்விடாமல் விசுவாசத்தில் நிலைத்திருக்க வேண்டும். அப்போஸ்தலர்கள் ஆவிக்குரிய ஆலோசனைகளைப் புதிய சீஷர்களுக்கு எடுத்துச்சொல்லி அவர்களுடைய மனதைத் திடப்படுத்துகிறார்கள்.

மனந்திரும்பியவர்கள் தங்கள் விசுவாசத்தில் நிலைத்திருக்கவேண்டும். கிறிஸ்துவுக்குள் விதைக்கப்பட்டவர்கள் அவருக்குள் வேரூன்ற வேண்டும். கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நாம் பாவிகளை மனந்திரும்புமாறு அழைக்கவேண்டும். அதே வேளையில் மனந்திரும்பியிருக்கிறவர்களை விசுவாசத்திலே நிலைத்திருக்கும்படி அவர்களுக்குப் புத்திசொல்ல வேண்டும். அவர்களுடைய மனதைத் திடப்படுத்தவேண்டும். நம்முடைய மனது திடப்படும்போது நாமும் திடனாயிருப்போம். மனதின் திடமே மெய்யான திடம். தேவனுடைய கிருபை மாத்திரமே விசுவாசிகளின் மனதைத் திடப்படுத்தும். நம்முடைய மனதைத் திடப்படுத்துவதற்கு கர்த்தருடைய கிருபையைத் தவிர வேறு உபாயம் எதுவுமில்லை.

சீஷர்கள் விசுவாசத்திலே நிலைத்திருக்கும்படி அப்போஸ்தலர்கள் அவர்களுக்குப் புத்திசொல்லுகிறார்கள். விசுவாசத்தில் நிலைத்திருப்பது சீஷர்களின் கடமை. நம்முடைய விசுவாசத்தை நாம் காத்துக்கொள்ள வேண்டும். இதில் கவனம் செலுத்த வேண்டும். விசுவாசத்திலிருக்கிறவர்கள், விசுவாசத்தில் நிலைத்திருக்கப் பிரயாசப்படவேண்டும். விசுவாசத்தில் நிலைத்திருக்கும்படி புதிய விசுவாசிகளுக்கு புத்திசொல்லிக் கொண்டேயிருக்கவேண்டும்.

அப்போஸ்தலர்கள் புதிய விசுவாசிகளுக்குப் புத்திசொல்லும்போது "நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கவேண்டும்" என்றும் சொல்லுகிறார்கள். புதிய விசுவாசிகளிடம் உபத்திரவங்களைப்பற்றிப் பேசினால் அவர்கள் சோர்ந்துபோவார்கள். ஒரு சிலர் பயப்படுவார்கள். தங்களால் உபத்திரவங்களைத் தாங்கமுடியுமோ, முடியாதோ என்று சந்தேகப்படுவார்கள். ஆனால் அப்போஸ்தலர்களோ புதிய விசுவாசிகளிடம், சத்தியத்தை மறைக்காமல், வெளிப்படையாக, "நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டும்" என்று அறிவிக்கிறார்கள்.

புதிய விசுவாசிகளுக்கு உண்மையான சத்தியம் ஆரம்பத்திலேயே உபதேசம்பண்ணப்படுகிறது. சத்தியம் அவர்களை உறுதிப்படுத்தும். தேவனுடைய வார்த்தை அவர்களுடைய மனதைத் திடப்படுத்தும். அவர்களுக்கு மெய்யாகவே உபத்திரவம் வரும். உபத்திரவம் வரும்போது, ஏற்கெனவே அவர்கள் உபத்திரவத்தைப்பற்றிப் போதிக்கப் பட்டிருப்பதினால், உபத்திரவத்தைப் பார்த்துப் பயப்பட மாட்டார்கள். உபத்திரவத்தைச் சந்திக்க ஆயத்தமாயிருப்பார்கள். ஒவ்வொரு விசுவாசிக்கும் கர்த்தர் நியமித்திருக்கிற காரியம் நிச்சயம் நடைபெறும். நமக்கு நியமிக்கப்பட்ட காரியம் வழியாக நாம் பிரவேசித்தே ஆகவேண்டும். இதற்கு வேறு வழி எதுவுமில்லை.

சீஷர்கள் உபத்திரவங்களின் வழியாய்த் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கவேண்டும் என்பது கர்த்தருடைய வார்த்தை. கர்த்தரே இந்த உபத்திரவத்தை அவர்களுக்கு நியமித்திருக்கிறார். ஆகையினால் அவர்கள் இந்த வழியாய்ப் பிரவேசித்தே ஆகவேண்டும். இயேசுகிறிஸ்துவில் பக்தியாகவும், பரிசுத்தமாகவும் ஜீவிக்கிற எல்லோருமே பாடுகளை அனுபவிக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றுகிற ஒவ்வொரு சீஷனும், தன்னுடைய சிலுவையைச் சுமந்துகொண்டு இயேசுவைப் பின்பற்றிச் செல்லவேண்டும்.

நாம் இயேசுகிறிஸ்துவைப் பின்பற்ற வேண்டுமென்று தீர்மானம்பண்ணும்போது, முதலாவது உட்கார்ந்து, செல்லும் செலவைக் கணக்குப் பார்க்கவேண்டும். கலப்பையின்மேல் கைவைத்துவிட்டு பின்னிட்டுப் பார்க்கிறவன் கர்த்தருக்குப் பிரியமானவனல்ல. கிறிஸ்துவின் சேனையில் நாம் தலைவர்களாகயிருந்தாலும், சாதாரண சேவகர்களாகயிருந்தாலும், நமக்கு கர்த்தர் நியமித்து வைத்திருக்கும் பாதையின் வழியாய் முன்னேறிச் செல்லவேண்டும். எல்லா விசுவாசிகளுக்கும் உபத்திரவமுண்டு என்பதை அப்போஸ்தலர்கள் புதிய விசுவாசிகளுக்கு எடுத்துச்சொல்லுகிறார்கள்.

உபத்திரவம் விசுவாசிகளுக்கு மாத்திரமல்ல, தங்களுக்கும் உண்டு என்பதை அப்போஸ்தலர்கள் தெளிவுபடுத்துகிறார்கள். ஆகையினால் "நீங்கள்" என்று சொல்லுவதற்குப் பதிலாக, "நாம்" என்னும் வார்த்தையைப் பயன்படுத்தி, அதில் தங்களையும் சேர்த்துக்கொள்கிறார்கள். "நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கவேண்டும்" என்று அப்போஸ்தலர்கள் சீஷர்களோடு தங்களையும் சேர்த்து இந்தச் சத்தியத்தைத் தெளிவுபடுத்துகிறார்கள்.

இந்த உலகத்தில் அப்போஸ்தலர்களுக்குப் பாடுகள் உண்டாகும். ஆனாலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இதைவிட அதிகமான பாடுகளை மனுக்குலத்திற்காக அனுபவித்திருக்கிறார். விசுவாசிகளுக்குப் பாடுகள் ஆச்சரியமானதாகயிருக்கக் கூடாது. பாடுகளை எதிர்பார்க்கவேண்டும். பாடுகள் வழியாய்ப் பிரவேசிப்பதற்கு ஒவ்வொரு விசுவாசியும் தன்னை ஆயத்தப்படுத்திக்கொள்ளவேண்டும்.

தாங்கள் அநேக உபத்திரவங்கள் வழியாய்த் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கவேண்டும் என்று சொல்லி, அப்போஸ்தலர்கள் புதிய சீஷர்களைப் பயமுறுத்தவில்லை. இந்தச் சத்தியத்தைச் சொல்லி அவர்களுடைய மனதைத் திடப்படுத்துகிறார்கள். நமக்கு உபத்திரவமுண்டு. தேவ கிருபையும் உண்டு. இந்த உபத்திரவத்தின் வழியாகப் பிரவேசிப்பதற்குத் தேவன் நம்மைப் பெலப்படுத்துவார்.

நாம் உபத்திரவங்களின் வழியாய்ப் போனாலும், நாம் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறோம். உபத்திரவம் நம்மை தேவனுடைய ராஜ்யத்திற்கு அழைத்துச் செல்கிறது. சிலுவையின் வழியாக நாம் போகவேண்டும் என்பது மெய்யான சத்தியம். அதே சமயத்தில் நாம் சிலுவையின் வழியாகச் சிங்காசனத்திற்குப் போகிறோம் என்பதும் மெய்யான சத்தியம். வழி உபத்திரவம் நிறைந்ததாக இருக்கலாம். ஆனாலும் நாம் பிரவேசிக்கிற ஸ்தலம் மேன்மையானது.

மூப்பர்களை ஏற்படுத்தி வைத்து

அல்லாமலும் அந்தந்தச் சபைகளில் அவர்களுக்கு மூப்பர்களை ஏற்படுத்தி வைத்து, உபவாசித்து ஜெபம்பண்ணி, அவர்கள் விசுவாசித்துப் பற்றிக்கொண்ட கர்த்தருக்கு அவர்களை ஒப்புவித்தார்கள் (அப் 14:23).

அப்போஸ்தலர்கள் தாங்கள் ஏற்கெனவே ஊழியம் செய்த ஸ்தலங்களுக்கு இரண்டாம் முறையாக வருகிறார்கள். அங்கு நடைபெறுகிற ஊழியத்தை முறைப்படுத்தவும், ஸ்திரப்படுத்தவும், பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலினால் ஒரு சில ஒழுங்குமுறைகளைக் கையாளுகிறார்கள். ஒவ்வொரு சபைக்கும் மூப்பரை ஏற்படுத்துகிறார்கள். சபையிலுள்ள விசுவாசிகளைப் பொறுப்பாக வழிநடத்துவதற்கு குறைந்தபட்சம் ஒவ்வொரு சபைக்கும் ஒரு மூப்பர் தேவைப்படுகிறார். இந்தத் தலைவர்கள் "மூப்பர்கள்" என்று அழைக்கப்படுகிறார்கள்.

இயேசுகிறிஸ்துவின் பிரமாணத்தைச் சபையிலுள்ள விசுவாசிகள் ஒவ்வொருவரும் தங்கள் ஜீவியத்தில் சரியாகக் கடைப்பிடித்து ஜீவிக்கிறார்களா என்பதை இந்த மூப்பர்கள் கவனிக்கவேண்டும். மேலும் கர்த்தருடைய பிரமாணத்தின் பிரகாரம் சபை ஆராதனை நடைபெறுவதற்கும் மூப்பர்கள் உதவிபுரியவேண்டும்.

அப்போஸ்தலர்கள் மூப்பர்களை ஏற்படுத்துகிறார்கள். மூப்பர்களைப் பிரதிஷ்டைபண்ணுகிறார்கள். மூப்பர்கள் கர்த்தருடைய ஊழியத்திற்காகத் தங்களை ஒப்புக்கொடுத்தவர்கள். அவர்கள் விசுவாசித்துப் பற்றிக்கொண்ட கர்த்தருக்கு, அப்போஸ்தலர்கள் அவர்களை ஒப்புவிக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்வதற்காக அப்போஸ்தலர்கள் மூப்பர்களை வேறுபிரித்து, பிரதிஷ்டைபண்ணுகிறார்கள். கர்த்தரை விசுவாசிக்கிறவர்கள் தங்கள் விசுவாசத்தில் வளர்ச்சி பெறவேண்டும். விசுவாசிகள் விசுவாசத்தில் வளர்ச்சி பெற, மூப்பர்கள் உதவிபுரியவேண்டும்.

அப்போஸ்தலர்கள் அந்தந்த சபைகளில், அவர்களுக்கு மூப்பர்களை ஏற்படுத்தி வைக்கிறார்கள். உபவாசித்து ஜெபம்பண்ணுகிறார்கள். மூப்பர்கள் கர்த்தரை விசுவாசித்துப் பற்றிக் கொண்டிருக்கிறார்கள். அப்போஸ்தலர்கள் கர்த்தரிடமே மூப்பர்களை ஒப்புவிக்கிறார்கள். ஒருவர் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கும்போது, அவருக்கு ஊழியக்காரருடைய ஆலோசனையும் ஆதரவும் இன்னும் தேவைப்படுகிறது. கர்த்தரை விசுவாசிப்பதினால், ஒரு விசுவாசிக்கு, ஊழியக்காரருடைய ஆலோசனையே தேவையில்லை என்று தனியாகப் போய்விடக்கூடாது. புதிய விசுவாசிகள் தங்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சி பெறவேண்டும். பரிபூரணமடைய வேண்டும். பக்குவப்பட வேண்டும். இவையெல்லாவற்றிற்கும் ஊழியக்காரருடைய ஆலோசனையும் வழிநடத்துதலும் தேவை.

ஊழியக்காரர்களும் விசுவாசிகளுக்கு ஆவிக்குரிய ஆலோசனைகளைச் சொல்லி, அவர்களை கர்த்தருக்கு ஒப்புவிக்கவேண்டும். தங்களிடத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டிருக்கிற விசுவாசிகளை, ஊழியக்காரர்கள் கர்த்தரிடத்தில் ஒப்புவிக்கவேண்டும். விசுவாசிகளும் தங்களை ஊழியக்காரர்களிடத்தில் ஒப்புவிக்க வேண்டும். ஊழியக்காரர்கள் விசுவாசிகளை கர்த்தரிடத்தில் ஒப்புவிக்கும்போது, ஜெபத்தோடும் உபவாசத்தோடும் அவர்களைக் கர்த்தரிடத்தில் ஒப்புவிக்கவேண்டும்.

விசுவாசிகளும் ஊழியக்காரர்களும் உபவாசித்து ஜெபிப்பது மிகவும் நல்லது. நம்முடைய பாவ சுபாவத்தினிமித்தமாக கர்த்தருடைய சமுகத்தில் நம்மைத் தாழ்த்துவதற்கு உபவாசம் உதவியாகயிருக்கும். உற்சாகமாக ஜெபிப்பதற்கும் உபவாசம் உதவிபுரியும். நம்முடைய சிநேகிதர்களையும், குடும்பத்தினரையும், உற்றார் உறவினரையும் விட்டு நாம் பிரிந்து, வேறு ஊர்களுக்குச் செல்லும்போது, அவர்களைக் கர்த்தரிடத்தில் ஒப்புவித்துச் செல்லவேண்டும். கர்த்தரே அவர்களைப் பாதுகாத்து, பராமரிக்கவேண்டும் என்று உபவாசித்து ஜெபிக்கவேண்டும்.

அத்தாலியா பட்டணம்

பின்பு பிசீதியாநாட்டைக் கடந்து, பம்பிலியா நாட்டிற்கு வந்து, பெர்கே ஊரில் வசனத்தைப் பிரசங்கித்து, அத்தலியா பட்டணத்திற்குப் போனார்கள் (அப் 14:24,25).

அப்போஸ்தலர்கள் தாங்கள் ஏற்கெனவே ஊழியம் செய்த ஸ்தலங்களுக்குத் திரும்பவும் போய், அங்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறார்கள். அந்தியோகியாவிலிருந்து பிசீதியா நாட்டைக் கடந்து, பம்பிலியா நாட்டிற்கு வருகிறார்கள். இந்த நாட்டில் பெர்கே என்னும் ஊர் மிகவும் பிரதானமான பட்டணம். இந்த ஊரில் அப்போஸ்தலர்கள் ஏற்கெனவே ஊழியம் செய்திருக்கிறார்கள் (அப் 13:13). இந்த ஊருக்கு அப்போஸ்தலர்கள் மறுபடியும் வந்து வசனத்தைப் பிரசங்கிக்கிறார்கள். அதன்பின்பு பெர்கே ஊரிலிருந்து பம்பிலியா நாட்டிலுள்ள அத்தாலியா பட்டணத்திற்கு வருகிறார்கள்.

அப்போஸ்தலர்கள் எந்த ஊருக்குப் போனாலும் அங்கு அநேக நாட்கள் சஞ்சரிப்பதில்லை. தாங்கள் போகுமிடங்களிலெல்லாம் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறார்கள். சபையை ஸ்தாபிப்பதற்கு அஸ்திபாரம் போடுகிறார்கள். தாங்கள் ஸ்தாபித்த சபையை கர்த்தர் வளரச் செய்வார் என்று விசுவாசித்து, அடுத்த ஊர்களுக்கு ஊழியம் செய்யப்போகிறார்கள். சுவிசேஷ விதையை விதைக்கிறார்கள். விதைக்கப்பட்ட விதை ஏற்ற காலத்தில் பலன்தரும். அப்போஸ்தலர்கள் தாங்கள் ஊழியம் செய்த பட்டணங்களுக்குத் திரும்பி வந்தபோது, அவர்கள் எதிர்பார்த்த பிரகாரம், அந்த இடங்களிலெல்லாம் சபைகள் வளர்ந்து பெருகிற்று.

அந்தியோகியா

அங்கே கப்பல் ஏறி, தாங்கள் நிறைவேற்றின கிரியைக்காக தேவனுடைய கிருபைக்கு ஒப்புவிக்கப்பட்டுப் புறப்பட்டு அந்தியோகியாவுக்கு வந்தார்கள் (அப் 14:26).

அப்போஸ்தலர்கள் அத்தாலியா பட்டணத்திலிருந்து சீரியா நாட்டிலுள்ள அந்தியோகியா பட்டணத்திற்குத் திரும்பி வருகிறார்கள். தாங்கள் நிறைவேற்றின கிரியைக்காகத் தேவனுடைய கிருபைக்கு ஒப்புவிக்கப்படுகிறார்கள். அந்தியோகியா சபையார் அப்போஸ்தலர்களை ஊழியத்திற்கு அனுப்பினார்கள். அவர்களிடத்திற்குத் திரும்பி வந்து, தங்கள் ஊழியத்தின் மூலமாக நடைபெற்ற சம்பவங்களை சபையாருக்கு அறிக்கையாகச் சமர்ப்பிக்கிறார்கள். அந்தியோகியா சபையார் அப்போஸ்தலருக்காக ஜெபித்தார்கள். தங்களுக்காக ஜெபித்தவர்களிடம் ஊழிய அறிக்கையைச் சமர்ப்பித்து, எல்லோருமாக கர்த்தரைத் துதிக்கிறார்கள்.

சபையைக் கூடிவரச்செய்து

அவர்கள் அங்கே சேர்ந்தபொழுது சபையைக் கூடிவரச்செய்து, தேவன் தங்களைக்கொண்டு செய்தவைகளையும், அவர் புறஜாதிகளுக்கு விசுவாசத்தின் கதவைத் திறந்ததையும் அறிவித்து, அங்கே சீஷருடனேகூட அநேகநாள் சஞ்சரித்திருந்தார்கள் (அப் 14:27,28).

அப்போஸ்தலர்கள் அந்தியோகியா பட்டணத்திற்கு வந்து சேர்ந்தபொழுது, அங்குள்ள சபையைக் கூடிவரச்செய்கிறார்கள். சபையாரிடத்தில் இரண்டு காரியங்களைக்குறித்து அறிவிக்கிறார்கள். அவையாவன: 1. தேவன் தங்களைக் கொண்டு செய்தவைகளை அறிவிக்கிறார்கள். 2. தேவன் புறஜாதிகளுக்கு விசுவாசத்தின் கதவைத் திறந்ததை அறிவிக்கிறார்கள்.

அப்போஸ்தலர்கள் பல இடங்களுக்கும் பிரயாணம்செய்து கர்த்தருடைய ஊழியத்தை நிறைவேற்றினார்கள். தேவனுடைய பிரசன்னம் அவர்களோடு கூடயிருந்தது. தாங்கள் செய்த ஊழியத்தை, அப்போஸ்தலர்கள் "தாங்களே செய்த ஊழியம்" என்று சபையாரிடத்தில் அறிவிக்கவில்லை. அதற்குப் பதிலாக "தேவன் தங்களைக் கொண்டு செய்தவைகள்" என்று சொல்லி தேவனை மகிமைப்படுத்துகிறார்கள்.

ஊழியம் கர்த்தருடையது. தேவனே நம்மைத் தம்முடைய ஊழியத்தில் பயன்படுத்துகிறார். அவரே நமக்கு ஊழியம் செய்கிற வாஞ்சையைக் கொடுக்கிறார். நம்மை ஊழியப் பாதையில் நடத்துகிறார். நமக்குள் கிரியை நடப்பிக்கிறார். தேவன் நம்மூலமாக கிரியை செய்யும்போது, கர்த்தருடைய ஊழியம் அவருக்கு மகிமையாக நடைபெறும். ஊழியக்காரருடைய பிரசங்கம் இல்லாமலேயே, தேவன் தம்முடைய கிருபையினால் எல்லாவற்றையும் செய்யக்கூடியவர். அதே சமயத்தில் தேவனுடைய கிருபையில்லாமல், ஊழியக்காரர் தன்னுடைய பிரசங்கத்தினால் ஒன்றும் செய்யமுடியாது.

அப்போஸ்தலருடைய ஊழியத்தின் மூலமாக புறஜாதியாரும் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து இரட்சிக்கப்படுகிறார்கள். தேவன் புறஜாதிகளுக்கு விசுவாசத்தின் கதவைத் திறந்திருக்கிறார். கிறிஸ்துவின் ராஜ்யத்திற்குள் விசுவாசத்தின் கதவு வழியாகவே பிரவேசிக்கமுடியும். விசுவாசமில்லாமல் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது கூடாதகாரியம். தேவனே விசுவாசத்தின் கதவைத் திறக்கிறவர். புறஜாதியாருக்குத் தேவன் விசுவாசத்தின் கதவைத் திறந்ததற்காக, அவரைத் துதிக்கவேண்டும்.

தேவன் திறப்பதை யாராலும் மூடமுடியாது. தேவன் புறஜாதியாருக்கும் விசுவாசத்தின் கதவைத் திறப்பதினால், சுவிசேஷம் எல்லா தேசங்களுக்கும் பரவுகிறது. சுவிசேஷத்தின் ஒளி அதிகமாய்ப் பிரகாசிக்கிறது. அப்போஸ்தலர்கள் அந்தியோகியா சபையைக் கூடிவரச்செய்து அவர்களிடத்தில் ஊழிய அறிக்கையைச் சமர்ப்பிக்கிறார்கள். அதன்பின்பு அவர்கள் அங்குள்ள சீஷருடனே அநேக நாள் சஞ்சரிக்கிறார்கள். அப்போஸ்தலர்கள் சத்துருக்களுக்குப் பயந்து அந்தியோகியாவில் சஞ்சரிக்கவில்லை. அந்தியோகியாவிலுள்ள சீஷர்களைச் சிநேகிப்பதினாலேயே, அங்கு சீஷருடனேகூட அநேக நாள் சஞ்சரித்திருக்கிறார்கள்.

15 அதிகாரம்

அந்தியோகியாவிலே கர்த்தருடைய ஊழியம் சிறப்பாக நடைபெறுகிறது. அப்போஸ்தலரும் சீஷருடனேகூட அநேக நாள் சஞ்சரித்திருக்கிறார்கள். அப்போது ஊழியத்தில் ஒரு பிரச்சனை உண்டாயிற்று. யூதேயாவிலிருந்து வந்த ஊழியக்காரர்கள் விசுவாசிகள் மத்தியில் ஒரு புதிய உபதேசத்தைப் போதகம் பண்ணுகிறார்கள். இதனால் அப்போஸ்தலருக்கும் அந்த ஊழியக்காரருக்கும் இடையே பிரச்சனை உண்டாயிற்று. கர்த்தருடைய பிள்ளைகள் சாத்தானுடைய ராஜ்யத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ணவேண்டும். அதே வேளையில் தேவனுடைய ராஜ்யத்தில் சமாதானத்தையும் காத்துக்கொள்ளவேண்டும்.

யூதேயாவிலிருந்து வந்த யூதமார்க்கத்தமைந்த ஊழியக்காரர்கள் மூலமாய் அந்தியோகியா சபையில் பிரச்சனை உண்டாயிற்று (அப் 15:1,2). இந்தப் பிரச்சனையை எருசலேமிலுள்ள அப்போஸ்தலரிடத்திலும் மூப்பரிடத்திலும் சொல்லி அவர்கள் மூலமாக இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு காணலாம் என்று தீர்மானம்பண்ணுகிறார்கள் (அப் 15:3-5). எருசலேமிலுள்ள சபை அந்தியோகியாவிலுள்ள பிரச்சனையைத் தீர்த்து வைப்பதற்காக கூட்டங்கூடுகிறது (அப் 15:6).

அப்போஸ்தலர் மத்தியில் பேதுரு தன்னுடைய ஆலோசனையைச் சொல்லுகிறார் (அப் 15:7-11). பவுலும் பர்னபாவும் தங்களுடைய ஊழிய அனுபவத்தைச் சொல்லுகிறார்கள் (அப் 15:12). இறுதியாக யாக்கோபு தன்னுடைய ஆலோசனையைச் சொல்லி இந்தப் பிரச்சனையைத் தீர்த்து வைக்கிறார் (அப் 15:13-21). அந்தியோகியாவில் புறஜாதி மார்க்கத்திலிருந்து இரட்சிக்கப்பட்டிருக்கிற விசுவாசிகளுக்கு, எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்கள் ஒரு நிருபத்தை எழுதி அனுப்புகிறார்கள் (அப் 15:22-29). அப்போஸ்தலருடைய தீர்மான நிருபத்தை அந்தியோகியாவிலுள்ள சபையில் வாசிக்கிறார்கள் (அப் 15:30-35).

புறஜாதியார் மத்தியில் ஊழியம் செய்வதற்கு இரண்டாம் முறையாக மிஷனெரிப் பிரயாணம் மேற்கொள்ளவேண்டுமென்று பவுலும் பர்னபாவும் தீர்மானம்பண்ணுகிறார்கள். தங்களோடு யாரைக் கூட்டிச் செல்வது என்பதில் இவர்களுக்குள் கருத்து வேறுபாடு உண்டாயிற்று. பவுலும் பர்னபாவும் வெவ்வேறு திசையில் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்வதற்குப் பிரிந்துபோகிறார்கள் (அப் 15:36-41).

அப்போஸ்தலர்களாகிய பவுலும் பர்னபாவும் பிரிந்துவிடுகிறார்கள். அவர்களுக்குள் பிரச்சனை உண்டாயிற்று. இரண்டு பேருமே கர்த்தருடைய ஊழியத்தைச் செய்கிறார்கள். ஆனாலும் அவர்களுக்குள் கருத்து வேறுபாடு ஏற்பட்டு, வெவ்வேறு இடங்களில் ஊழியம் செய்வதற்காகப் பிரிந்து போகிறார்கள்.

வாக்குவாதமும் தர்க்கமும்
அப் 15 : 1,2

அப் 15:1. சிலர் யூதேயாவிலிருந்து வந்து: நீங்கள் மோசேயினுடைய முறைமையின் படியே விருத்த சேதனமடையாவிட்டால், இரட்சிக்கப்பட மாட்டீர்கள் என்று சகோதரருக்குப் போதகம் பண்ணினார்கள்.

அப் 15:2. அதினாலே அவர்களுக்கும் பவுல் பர்னபா என்பவர்களுக்கும் மிகுந்த வாக்குவாதமும் தர்க்கமும் உண்டானபோது, அந்த விஷயத்தினிமித்தம் பவுலும் பர்னபாவும் அவர்களைச் சேர்ந்த வேறு சிலரும் எருசலேமிலிருக்கிற அப்போஸ்தலரிடத்திற்கும் மூப்பரிடத்திற்கும் போகவேண்டுமென்று தீர்மானித்தார்கள்.

விருத்தசேதனமடையாவிட்டால்

சிலர் யூதேயாவிலிருந்து வந்து: நீங்கள் மோசேயினுடைய முறைமையின் படியே விருத்த சேதனமடையாவிட்டால், இரட்சிக்கப்பட மாட்டீர்கள் என்று சகோதரருக்குப் போதகம் பண்ணினார்கள் (அப் 15:1).

கர்த்தருடைய ஊழியத்தில், எல்லா காரியங்களும், பிரச்சனையில்லாமலும் சந்தோஷமாகவும் நடைபெற்றுக் கொண்டிருந்தாலும், திடீரென்று பிரச்சனை வருவதற்கு வாய்ப்புள்ளது. நாம் எதிர்பாராத பிரச்சனைகள் ஊழியத்தில் திடீரென்று வந்துவிடலாம். சில குழப்பங்கள் உண்டாகலாம். சில சமயங்களில் பிரிவினைகள் உண்டாகலாம். கர்த்தருடைய சபையானது பூமியிலுள்ள பரலோகத்தைப் போன்றது. அந்தியோகியாவிலுள்ள சபை அப்படிப்பட்ட ஆசீர்வாதத்தைப் பெற்று நன்றாயிருக்கிறது. திடீரென்று சபையில் சமாதானம் சீர்குலைகிறது. கருத்து வேறுபாடுகள் உண்டாயிற்று. வாக்குவாதங்களும் தர்க்கங்களும் உண்டாயிற்று.

இதுவரையிலும் அந்தியோகியா சபையில் பவுலும் பர்னபாவும் போதகம் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். இருவரும் ஒருமனமுள்ளவர்களாக சுவிசேஷ ஊழியம் செய்கிறார்கள். ஏராளமான புறஜாதியார் இரட்சிக்கப்பட்டு சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் ஞானஸ்நானம் பெற்றவர்கள். யூதருடைய முறைமையின் பிரகாரம் இவர்களில் யாரும் விருத்தசேதனம் பெற்றுக்கொள்ளவில்லை. இந்தச் சூழ்நிலையில் யூதேயாவிலிருந்து ஒரு சில ஊழியக்காரர்கள் அந்தியோகியாவுக்கு வருகிறார்கள். புறஜாதி மார்க்கத்திலிருந்து இரட்சிக்கப்பட்டிருக்கிறவர்கள் மோசேயின் முறைமையின்படியே விருத்தசேதனமடைய வேண்டும் என்று போதகம் பண்ணுகிறார்கள். அவ்வாறு அவர்கள் விருத்தசேதனம் அடையாவிட்டால், அவர்களால் இரட்சிக்கப்பட முடியாது என்று நூதன உபதேசத்தைக் கொடுக்கிறார்கள்.

அந்தியோகியா சபையில் ஊழியம் சிறப்பாக நடைபெறுகிறது. புறஜாதி மார்க்கத்திலிருந்து ஏராளமானோர் இரட்சிக்கப்பட்டு அந்தியோகியா சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். புறஜாதியார் ஜனங்கள் நடுவில் நடைபெறும் ஊழியத்திற்கு அந்தியோகியா ஒரு மைய ஸ்தலமாக விளங்கிற்று. இதனால் புறஜாதியார் மத்தியில் ஊழியம் செய்ய விரும்புகிறவர்கள் அந்தியோகியாவுக்கு வந்து சேருகிறார்கள். அப்படிப்பட்டவர்களில் ஒரு சிலர் யூதேயாவிலிருந்து இங்கு வந்திருக்கிறார்கள். இவர்கள் யூதமார்க்கத்திலிருந்து இரட்சிக்கப் பட்டவர்கள். யூதேயாவிலிருந்து வந்தவர்கள் மோசேயினுடைய முறைமையின் படியே விருத்தசேதனம் பெற்றிருக்கிறார்கள். அந்தியோகியாவிலுள்ள சபையில், இரட்சிக்கப்பட்டிருக்கிற புறஜாதி ஜனங்கள் யாரும், விருத்தசேதனம் பெற்றுக் கொள்ளவில்லை என்பது இவர்களுக்குத் தெரியவருகிறது.

யூதேயாவிலிருந்து வந்தவர்கள் புறஜாதி மார்க்கத்திலிருந்து இரட்சிக்கப்பட்டவர்களுக்கு மத்தியில் ஊழியம் செய்கிறார்கள். அவர்கள் மோசேயினுடைய முறைமையின்படியே விருத்த சேதனமடையாவிட்டால் இரட்சிக்கப்படமாட்டீர்கள் என்று அவர்களுக்குப் போதகம்பண்ணுகிறார்கள். சபையில் ஒரு நூதன உபதேசத்தைப் பிரசங்கம்பண்ணுகிறார்கள். இது ஒரு புளித்தமாவைப்போன்றது. இதை ஆரம்பத்திலேயே அகற்றிப் போடவேண்டும். இல்லையென்றால் கொஞ்சம் புளித்தமாவானது எல்லா மாவையும் புளிக்க வைத்துவிடும். விருத்தசேதனம்பண்ண வேண்டும் என்னும் உபதேசத்தை உடனடியாக நீக்கிப்போடவேண்டும். இல்லையென்றால் இந்த உபதேசமானது புறஜாதியார் மத்தியிலுள்ள எல்லா சபைகளுக்கும் பரவும். பவுலும் பர்னபாவும் விருத்தசேதனத்தைப்பற்றிப் போதகம் பண்ணுகிறவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார்கள்.

அந்தியோகியாவிலுள்ள விசுவாசிகளுக்கு பவுலும் பர்னபாவும் கர்த்தருடைய சுவிசேஷத்தை நன்றாகப் போதகம் பண்ணியிருக்கிறார்கள். போதகத்தைப் பெற்றுக்கொண்டவர்கள் தங்கள் விசுவாசத்தைக் காத்துக் கொள்ளவேண்டும். துர்உபதேசத்திற்கு விரோதமாக மிகுந்த எச்சரிப்போடிருக்க வேண்டும். தங்களுக்கு சத்திய வசனத்தைப்பற்றிய மெய்யான உபதேசம் இன்னும் தேவை என்னும் ஆர்வம் விசுவாசிகளிடத்தில் காணப்படவேண்டும். இல்லையென்றால் விசுவாசிகள் மத்தியில் உபதேசக் குறைவு காணப்படும். சில சமயங்களில் துர்உபதேசங்களும் இவர்களுக்குள் பிரவேசித்துவிடும்.

ஆதித்திருச்சபையில் ஏராளமான விசுவாசிகள் யூதமார்க்கத்திலிருந்து இரட்சிக்கப் பட்டிருக்கிறார்கள். இவர்கள் நியாயப்பிரமாணத்திற்காக வைராக்கியமுள்ளவர் களாயிருக்கிறார்கள் (அப் 21:20). இயேசுகிறிஸ்துவை விசுவாசித்தாலும் நியாயப்பிரமாணமும் தங்களுக்குத் தேவை என்று நினைக்கிறார்கள். தேவனே நியாயப் பிரமாணத்தைப் கொடுத்தவரென்றும், ஆகையினால் நியாயப்பிரமாணத்தின் அதிகாரம் பரிசுத்தமானது என்னும் இவர்கள் தீர்மானித்திருக்கிறார்கள். நியாயப்பிரமாணத்திற்காக பக்தி வைராக்கியமுள்ளவர்களாயிருக்கிறார்கள்.

யூதர்கள் மாத்திரமல்ல, இரட்சிக்கப்பட்டிருக்கிற விசுவாசிகளும் நியாயப்பிரமாணத்தை அனுசரிக்க வேண்டும் என்று இவர்கள் விசுவாசிக்கிறார்கள். யூதமார்க்கத்திலிருந்து இவர்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிற படியினால், யூதமார்க்கத்து பாரம்பரியம் இவர்களை விட்டு உடனடியாக நீங்கிப்போய் விடவில்லை. இவர்களுக்கு மோசேயின் பிரமாணம் பாரம்பரியமாக போதகம் பண்ணப்பட்டிருக்கிறது. மோசேயின் வார்த்தைகள் இவர்களுடைய உள்ளத்தில் நிரம்பியிருக்கிறது. இவர்கள் இயேசுகிறிஸ்துவை தங்களுடைய இரட்சகரென்று விசுவாசித்தாலும், மோசேயின் பிரமாணத்திலும் வைராக்கியமாயிருக்கிறார்கள்.

யூதமார்க்கத்திலிருந்து இரட்சிக்கப் பட்டவர்கள், மோசேயின் பிரமாணத்தைப் பற்றிய தங்கள் விசுவாசத்தை, தங்களைப்போலவே புறஜாதியாரிலிருந்து இரட்சிக்கப் பட்டிருக்கிறவர்களும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். தங்களைப்போலவே அவர்களும் மோசேயின் பிரமாணத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும் என்றும் சொல்லுகிறார்கள்.

யூதமார்க்கத்திலிருந்து இரட்சிக்கப் பட்டிருக்கிறவர்கள், தங்களுடைய பாரம்பரிய பழக்க வழக்கங்களை மற்றவர்கள்மீதும் திணிக்கிறார்கள். தங்களைப்போலவே மற்றவர்களும் இருக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். தாங்கள் செய்வது போலவே மற்றவர்களும் செய்யவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். தாங்கள் சிந்திப்பதுபோலவே மற்றவர்களும் சிந்திக்கவேண்டும் என்று உபதேசம்பண்ணுகிறார்கள். மற்றவர்கள் தங்களைப்போல இல்லையென்றால், இவர்கள் அவர்களை ஏற்றுக்கொள்ள மறுத்துவிடுகிறார்கள்.

இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிற யூதர்கள் அவரை மேசியாவாக விசுவாசிக்கிறார்கள். மேசியா இந்த உலகத்தில் யூதர்களுக்கு ஒரு ராஜ்யத்தை ஸ்தாபிக்க வருவார் என்பது யூதர்களுடைய பொதுவான எதிர்பார்ப்பு. மேசியாவின் ராஜ்யம் பூமிக்குரிய ராஜ்யமாகயிருக்கும் என்றும் அவர்கள் நம்புகிறார்கள். தங்களுக்கு ஒரு ராஜ்யத்தை ஸ்தாபிக்கவே இயேசுகிறிஸ்து இந்தப் பூமிக்கு வந்திருக்கிறார் என்று யூதர்கள் நம்புகிறார்கள். ஆனால் அவர்கள் எதிர்பார்த்த பிரகாரம் இயேசுகிறிஸ்து இந்தப் பூமியில் யூதர்களுக்கு ஒரு ராஜ்யத்தை ஸ்தாபிக்கவில்லை. இயேசுகிறிஸ்துவின் ராஜ்யம் இந்தப் பூமிக்குரியதல்ல. அது பரலோகத்திற்குரியது. அது ஆவிக்குரியது.

இப்போது இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தை புறஜாதியாரும் கேட்கிறார்கள். இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து புறஜாதியாரும் இரட்சிக்கப்படுகிறார்கள். கிறிஸ்துவின் ராஜ்யம் புறஜாதியார் மத்தியிலும் ஸ்தாபிக்கப்படுகிறது. புறஜாதியார் இரட்சிக்கப் படுவதை யூதமார்க்கத்திலிருந்து இரட்சிக்கப்பட்ட விசுவாசிகள் கவனித்துப் பார்க்கிறார்கள். சபையில் விசுவாசிகளின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. கிறிஸ்து இதன் மூலமாக இந்தப் பூமியில் தங்களுக்கு ஒரு ராஜ்யத்தை ஸ்தாபிக்கப்போகிறார் என்று யூதமார்க்கத்திலிருந்து இரட்சிக்கப் பட்டவர்கள் எதிர்பார்க்கிறார்கள். ஆகையினால் இரட்சிக்கப்பட்டிருக்கிற புறஜாதியாரும், மோசேயின் பிரமாணத்தை ஏற்றுக்கொண்டு அதற்குக் கீழ்ப்படிய வேண்டுமென்று போதகம்பண்ணுகிறார்கள்.

இயேசுகிறிஸ்துவின் ராஜ்யத்தைக் குறித்து யூதமார்க்கத்திலிருந்து இரட்சிக்கப்பட்டவர்கள் தவறாகப் புரிந்துகொள்கிறார்கள். இவர்களுடைய கருத்து தவறாக இருந்தாலும், தங்களுடைய கருத்தை மற்றவர்களுக்கு உபதேசம்பண்ணுகிறார்கள். புறஜாதியாரும் விருத்தசேதனம்பண்ணவேண்டும் என்று வலியுறுத்துகிறார்கள். இந்த உபதேசத்தோடு "நீங்கள் மோசேயினுடைய முறைமையின்படியே விருத்த சேதனமடையாவிட்டால் இரட்சிக்கப்படமாட்டீர்கள்" என்றும் புறஜாதியாருக்குப் போதகம் பண்ணுகிறார்கள். தங்களுடைய மார்க்கத்தின் பிரகாரமாக அவர்கள் செயல்படவில்லையென்றால், அவர்களால் பரலோகத்திற்குள் பிரவேசிக்க முடியாது என்றும், அவர்கள் நரகத்திற்குப் போகவேண்டுமென்றும் போதகம் பண்ணுகிறார்கள்.

யூதமார்க்கத்திலிருந்து இரட்சிக்கப் பட்ட விசுவாசிகளின் போதகத்தின்படி, ஒருவர் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து, நல்லவராகயிருந்தாலும், விருத்த சேதனமடையாவிட்டால், அவரால் இரட்சிக்கப்படமுடியாது. ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தாலும் அவன் மோசேயின் பிரமாணத்திற்குள்ளும் இருக்கவேண்டும் என்பதே இவர்களுடைய போதகம்.

எருசலேமிலிருக்கிற அப்போஸ்தலர்

அதினாலே அவர்களுக்கும் பவுல் பர்னபா என்பவர்களுக்கும் மிகுந்த வாக்குவாதமும் தர்க்கமும் உண்டானபோது, அந்த விஷயத்தினிமித்தம் பவுலும் பர்னபாவும் அவர்களைச் சேர்ந்த வேறு சிலரும் எருசலேமிலிருக்கிற அப்போஸ்தலரிடத்திற்கும் மூப்பரிடத்திற்கும் போகவேண்டுமென்று தீர்மானித்தார்கள் (அப் 15:2).

யூதேயாவிலிருந்து வந்தவர்களுடைய போதகத்தினாலே அவர்களுக்கும், பவுல் பர்னபா என்பவர்களுக்கும் மிகுந்த வாக்குவாதமும் தர்க்கமும் உண்டாயிற்று. யூதேயாவிலிருந்து வந்தவர்களுடைய போதகத்தை அப்போஸ்தலர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. பவுலும் பர்னபாவும் இயேசுகிறிஸ்துவுக்கு உண்மையுள்ள ஊழியக்காரர்கள். கிறிஸ்துவின் சத்தியம் வஞ்சிக்கப்படக்கூடாது என்று அப்போஸ்தலர்கள் எதிர்பார்க்கிறார்கள். எல்லா விதமான பாரம்பரியத்தின் பிரமாணத்திலிருந்தும், அந்த நுகத்தின் பாரத்திலிருந்தும் மனுக்குலத்தை விடுதலைபண்ணுவதற்கே இயேசுகிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்தார். இந்த சத்தியத்தை அப்போஸ்தலர்கள் தங்கள் இருதயத்தில் ஆழமாய் விசுவாசிக்கிறார்கள். விசுவாசிகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பது மாத்திரமே இயேசுகிறிஸ்து அப்போஸ்தலருக்குக் கொடுத்திருக்கிற உபதேசம். விருத்தசேதனம் பெற்றுக்கொள்வது பற்றி இயேசுகிறிஸ்து அப்போஸ்தலரிடம் ஒன்றும் சொல்லவில்லை.

பவுலும் பர்னபாவும் புறஜாதி மார்க்கத்திலிருந்து இரட்சிக்கப்பட்டிருக்கிற விசுவாசிகளுக்கு ஆவிக்குரிய பெற்றோரைப்போல இருக்கிறார்கள். தங்கள் மூலமாக இரட்சிக்கப்பட்ட புறஜாதி ஜனங்கள் மத்தியில் துர்உபதேசம் பரவிவிடக்கூடாது என்பதில் அப்போஸ்தலர்கள் எச்சரிப்பாயிருக்கிறார்கள். புறஜாதியாரின் சுயாதீனத்தை யூதமார்க்கத்தாரின் பாரம்பரிய பழக்க வழக்கங்கள் அபகரித்துக்கொள்ளக்கூடாது என்பதிலும் அப்போஸ்தலர்கள் கவனம் செலுத்துகிறார்கள்.

ஒருவன் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்தால் அவன் இரட்சிக்கப்படுவான் என்பதுதான் அப்போஸ்தலரின் உபதேசம். புறஜாதியாரும் அப்போஸ்தலரின் உபதேசத்தைக் கேட்டு, இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து இரட்சிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்போது யூதேயாவிலிருந்து வந்திருக்கிறவர்கள் விருத்தசேதனத்தைப் பற்றிப் போதகம்பண்ணுகிறார்கள். ஒருவன் மோசேயினுடைய முறைமையின்படியே விருத்தசேதனமடையாவிட்டால் அவன் இரட்சிக்கப்படமாட்டான் என்பது அவர்களுடைய உபதேசம். பவுலும் பர்னபாவும் இந்தப் புதிய உபதேசத்தை ஏற்றுக்கொள்ளாமல் அவர்களோடு வாக்குவாதமும் தர்க்கமும் பண்ணுகிறார்கள்.

வாக்குவாதமும் தர்க்கமும் அதிகரித்தால் சபையில் பிரச்சனையும் பிரிவினையும் உண்டாகும். இந்தப் பிரச்சனையை ஆரம்பத்திலேயே தீர்த்து வைத்துவிடவேண்டும் என்று அப்போஸ்தலர்கள் விரும்புகிறார்கள். பவுலும் பர்னபாவும், அவர்களைச் சேர்ந்த வேறுசிலரும், எருசலேமிலிருக்கிற அப்போஸ்தலரிடத்திற்கும், மூப்பரிடத்திற்கும் போய், இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு காணலாம் என்று தீர்மானிக்கிறார்கள்.

புறஜாதி மார்க்கத்திலிருந்து மனந்திரும்பி சீஷர்களாக இருக்கிறவர்களிடம் யூதேயாவிலிருந்து வந்திருக்கிறவர்கள்தான் விருத்த சேதனத்தைப்பற்றிப் பிரசங்கிக்கிறார்கள். இந்த உபதேசம் எருசலேமிலிருந்து வந்திருப்பதினால், எருசலேமுக்கே போய், இந்தப் பிரச்சனையைப்பற்றி அவர்களிடத்தில் எடுத்துச் சொல்லி, இதற்கு ஒரு தீர்வு காணலாம் என்று தீர்மானம் பண்ணுகிறார்கள். எருசலேமிலுள்ள சபையார் இவர்களை அனுப்பினார்களா, விருத்தசேதனத்தைப் பற்றி இவர்கள் கொடுக்கிற போதகத்தை எருசலேம் சபையார் அங்கீகரிக்கிறார்களா என்பதைக் குறித்து தெளிவு பெறுவதற்காக, பவுலும் பர்னபாவும் எருசலேமுக்குப் போகலாம் என்று தீர்மானம்பண்ணுகிறார்கள்.

விருத்தசேதனத்தைப் பற்றிய உபதேசம் எருசலேமிலிருந்துதான் அந்தியோகியாவுக்கு வந்திருக்கிறது. ஆனால் எருசலேமிலுள்ள சபையார் இவர்களை அனுப்பவில்லை. எருசலேம் சபையில் விருத்தசேதன உபதேசம் போதிக்கப்படவுமில்லை. எருசலேமிலுள்ள சபையார் விருத்தசேதன உபதேசத்தைப் போதிக்குமாறு இவர்களை அந்தியோகியாவுக்கு அனுப்பவுமில்லை.

விசுவாசிகளுக்கு மத்தியில் யாராவது நூதன உபதேசங்களைப் போதித்தால், அதை உடனடியாக அங்கீகரிக்கக்கூடாது. அந்த உபதேசத்தைப்பற்றி சபைத் தலைவர்களிடமும், வேதபண்டிதர்களிடமும் கலந்து ஆலோசனைபண்ணவேண்டும். தேவையில்லாமல் வாக்குவாதமும் தர்க்கமும் பண்ணுவதற்குப் பதிலாக, நூதன உபதேசங்களைப்பற்றித் தெரிந்துகொண்டு, துர்உபதேசங்களை நீக்கிவிடவேண்டும். எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்களும் மூப்பர்களும் விருத்தசேதன உபதேசத்தை அங்கீகரிக்கவில்லையென்றால், இந்த உபதேசத்தை தாங்களும் அங்கீகரிக்கக்கூடாது என்று பவுலும் பர்னபாவும் தீர்மானம்பண்ணுகிறார்கள்.

சபையில் வாக்குவாதமும், தர்க்கமும், பிரச்சனையும், குழப்பமும் உண்டாகும்போது, எருசலேமிலுள்ள அப்போஸ்தலரையும் மூப்பரையும் கலந்து ஆலோசனை பண்ணினால், தங்களுடைய பிரச்சனைகள் தீர்த்துவைக்கப்படும் என்று அந்தியோகியா சபையார் நம்புகிறார்கள். எல்லா பிரச்சனைகளுக்கும் எருசலேமிலுள்ள அப்போஸ்தலரும் தீர்க்கதரிசிகளும் முற்றுப்புள்ளி வைத்துவிடுவார்கள் என்று எதிர்பார்க்கிறார்கள்.

எருசலேம் சபையார்
அப் 15 : 3-5

அப் 15:3. அந்தப்படி அவர்கள் சபையாரால் வழிவிட்டனுப்பப்பட்டு, பெனிக்கே சமாரியா நாடுகளின் வழியாய்ப் போய், புறஜாதியார் மனந்திரும்பின செய்தியை அறிவித்து, சகோதரர் எல்லாருக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கினார்கள்.

அப் 15:4. அவர்கள் எருசலேமுக்கு வந்து, சபையாராலும் அப்போஸ்தலராலும் மூப்பராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட போது, தேவன் தங்களைக் கொண்டு செய்தவைகளை எல்லாம் அறிவித்தார்கள்.

அப் 15:5. அப்பொழுது பரிசேய சமயத்தாரில் விசுவாசிகளான சிலர் எழுந்து, அவர்களை விருத்தசேதனம் பண்ணுகிறதும் மோசேயின் நியாயப் பிரமாணத்தைக் கைக்கொள்ளும்படி அவர்களுக்குக் கற்பிக்கிறதும் அவசியம் என்றார்கள்.

புறஜாதியார் மனந்திரும்பின செய்தி

அந்தப்படி அவர்கள் சபையாரால் வழிவிட்டனுப்பப்பட்டு, பெனிக்கே சமாரியா நாடுகளின் வழியாய்ப் போய், புறஜாதியார் மனந்திரும்பின செய்தியை அறிவித்து, சகோதரர் எல்லாருக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கினார்கள் (அப் 15:3).

அந்தியோகியாவிலுள்ள சபையார் பவுலையும் பர்னபாவையும் எருசலேமுக்கு வழிவிட்டு அனுப்புகிறார்கள். தங்களுக்காக, தங்கள் மத்தியில் ஊழியம் செய்கிற அப்போஸ்தலருக்கு அந்தியோகியா சபையார் ஆதரவு கொடுக்கிறார்கள். தங்கள் ஊரைவிட்டு அவர்கள் புறப்பட்டுப்போகும்போது, தாங்களும் அவர்களோடு கூடயிருப்பதாக அறிவித்து, அவர்களை வழியனுப்புகிறார்கள்.

அப்போஸ்தலர்கள் எருசலேமுக்குப் புறப்பட்டுப்போகும்போது, பெனிக்கே சமாரியா நாடுகளின் வழியாகப் போகிறார்கள். அங்குள்ள சபைகளை சந்தித்து அவர்களுக்கு உபதேசம் பண்ணுகிறார்கள். புறஜாதியார் மனந்திரும்பின செய்தியை அந்தச் சபையாருக்கு அறிவிக்கிறார்கள். எல்லோருக்கும் மிகுந்த சந்தோஷமுண்டாயிற்று. சுவிசேஷச் செய்தி எல்லா இடங்களுக்கும் பரவுவது விசுவாசிகளுக்குச் சந்தோஷமான செய்தி.

தங்களுடைய விசுவாச குடும்பத்தில் இன்னும் அநேக விசுவாசிகள் பிறந்திருக்கிறார்கள் என்பதையும், தங்களுடைய விசுவாச குடும்பம் வளர்ச்சி பெற்று பெரிதாயிருக்கிறது என்பதையும் நினைத்து சகோதரர் எல்லோரும் மிகுந்த சந்தோஷப்படுகிறார்கள். குடும்பத்தில் பிள்ளைகள் அதிகமாகும்போது குடும்பத்தாரின் தேவைகள் நேர்த்தியாகச் சந்திக்கப்படாது. ஆனால் கர்த்தருடைய விசுவாச குடும்பத்தில் இப்படிப்பட்ட பிரச்சனை எதுவுமில்லை. விசுவாசிகளின் எண்ணிக்கை அதிகரித்தாலும், விசுவாச குடும்பம் ஒருபோதும் தரித்திரமடைவதில்லை.

இயேசு கிறிஸ்துவிலும் பரலோகத்திலும் எல்லோருக்குமே திருப்தியான பங்கு இருக்கிறது. தம்முடைய பிள்ளைகள் எல்லோருக்கும் கர்த்தர் தம்முடைய சுதந்தரத்தை பரிபூரண ஈவாகக் கொடுக்கிறார். தம்மிடத்தில் வருகிற யாரையும் இயேசுகிறிஸ்து ஒருபோதும் புறம்பே தள்ளிவிடமாட்டார். ஆகையினால் கிறிஸ்துவின் குடும்பத்தில் விசுவாசிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது, விசுவாசிகள் மத்தியில் அதிக சந்தோஷமுண்டாயிற்று.

அறிவித்தார்கள்

அவர்கள் எருசலேமுக்கு வந்து, சபையாராலும் அப்போஸ்தலராலும் மூப்பராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட போது, தேவன் தங்களைக் கொண்டு செய்தவைகளையெல்லாம் அறிவித்தார்கள் (அப் 15:4).

பவுலும் பர்னபாவும் எருசலேமுக்கு வருகிறார்கள். எருசலேமிலுள்ள சபையாரும், அப்போஸ்தலரும், மூப்பரும் அவர்களை அன்போடு ஏற்றுக்கொள்கிறார்கள். அவர்கள்மீது தாங்கள் அன்பாகவும் சிநேகமாகவும் இருப்பதை தெளிவுபடுத்துகிறார்கள். தங்களுடைய சிநேகிதரை அன்போடு ஏற்று உபசரிக்கிறார்கள். பவுலும் பர்னபாவும் தேவன் தங்களைக்கொண்டு செய்தவைகள் எல்லாவற்றையும் அவர்களுக்கு அறிவிக்கிறார்கள். புறஜாதியார் மத்தியில் கர்த்தர் செய்து வருகிற பெரிய காரியங்களை அவர்களுக்குச் சாட்சியாக அறிவிக்கிறார்கள்.

எருசலேமிலுள்ள சபையார், பவுலையும் பர்னபாவையும், அந்தியோகியாவுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ண அனுப்பினார்கள். அவர்கள் அந்தப்படியே அங்கு சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கித்து சபையை ஸ்தாபித்திருக்கிறார்கள். வசனத்தை விதைத்தார்கள். தண்ணீர் பாய்ச்சினார்கள். தேவன் விளையச் செய்திருக்கிறார். இப்போது ஆத்துமாக்கள் அறுவடைக்கு ஆயத்தமாகயிருக்கிறார்கள். கர்த்தர் தங்களைக் கொண்டு புறஜாதியார் மத்தியில் செய்த எல்லா காரியங்களையும் பவுலும் பர்னபாவும் அவர்களுக்கு விரிவாக அறிவிக்கிறார்கள்.

பரிசேய சமயத்தாரில் விசுவாசிகளானவர்கள்

அப்பொழுது பரிசேய சமயத்தாரில் விசுவாசிகளான சிலர் எழுந்து, அவர்களை விருத்தசேதனம் பண்ணுகிறதும் மோசேயின் நியாயப் பிரமாணத்தைக் கைக்கொள்ளும்படி அவர்களுக்குக் கற்பிக்கிறதும் அவசியம் என்றார்கள் (அப் 15:5).

எருசலேம் சபையிலுள்ள விசுவாசிகளில் சிலர் பவுலுக்கும் பர்னபாவுக்கும் எதிராகப் பேசுகிறார்கள். இவர்கள் பரிசேய சமயத்தாரில் விசுவாசிகளானவர்கள். இவர்கள் இயேசு கிறிஸ்துவையும் விசுவாசிக்கிறார்கள். அதே சமயத்தில் விருத்தசேதனம் பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியம் என்றும் நினைக்கிறார்கள். தங்களுடைய பாரம்பரிய பழக்க வழக்கங்களில் இவர்கள் உறுதியாயிருக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்து இந்தப் பூமியில் ஊழியம் செய்தபோது, ஒரு சில பரிசேயர் மாத்திரமே அவருடைய சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டு அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள். ஆனால் இப்போதோ பரிசேயரில் ஏராளமானோர் கிறிஸ்துவின் சீஷர்களாக இருக்கிறார்கள். எருசலேமிலுள்ள சபையில் பரிசேய சமயத்தாரில் விசுவாசிகளானவர்கள் ஒரு தனி குழுவாகச் செயல்படுகிறார்கள்.

இரட்சிக்கப்படுவதற்கு முன்பாக இவர்கள் பரிசேய சமயத்தார். பரிசேயரின் எல்லா பழக்க வழக்கங்களையும் இவர்கள் கைக்கொண்டு வந்தார்கள். இரட்சிக்கப்பட்டவுடன் இவர்களுடைய பழைய பழக்க வழக்கங்கள் உடனடியாக மாறிவிடவில்லை. தாங்கள் பரிசேயராகயிருப்பதற்காக பெருமைப் படுகிறார்கள். இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, இரட்சிக்கப்பட்ட பின்பும், இவர்களிடத்தில் பரிசேய சமயத்தாரின் பழைய புளித்தமா இருக்கிறது.

பழைய மாவு அதிகமாக இல்லாவிட்டாலும், இரட்சிக்கப்பட்ட பின்பும் இவர்களிடத்தில் ஓரளவு இருக்கிறது. கொஞ்சம் புளித்தமாவானது எல்லா மாவையும் புளிக்க வைத்துவிடும். பரிசேய சமயத்தாரில் விசுவாசிகளான எல்லோரிடத்திலும் பழைய சுபாவம் இல்லை. ஒரு சிலரிடத்தில் மாத்திரமே பழைய புளித்த மா இருக்கிறது.

அப்போஸ்தலர் பவுலும் இரட்சிக்கப்படுவதற்கு முன்பாக ஒரு பரிசேயனாகவே இருந்தான். ஆனால் பவுல் விருத்தசேதனம்பண்ணுவதும், மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளுவதும் அவசியம் என்று போதிக்கவில்லை. ஆனால் எருசலேமிலுள்ள சபையில், பரிசேய சமயத்தார் விசுவாசிகளான சிலர் எழுந்து, புறஜாதி மார்க்கத்திலிருந்து விசுவாசிகளானவர்களை விருத்தசேதனம் பண்ணவேண்டுமென்றும், அவர்கள் மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு கற்பிக்கிறதும் அவசியம் என்று பவுலிடமும் பர்னபாவிடமும் சொல்லுகிறார்கள்.

பேதுருவின் ஆலோசனை
அப் 15 : 6-11

அப் 15:6. அப்போஸ்தலரும் மூப்பரும் இந்தக் காரியத்தைக் குறித்து ஆலோசனைபண்ணும்படி கூடினார்கள்:

அப் 15:7. மிகுந்த தர்க்கம் உண்டானபோது, பேதுரு எழுந்து, அவர்களை நோக்கி: சகோதரரே, நீங்கள் அறிந்திருக்கிறபடி புறஜாதியார் என்னுடைய வாயினாலே சுவிசேஷ வசனத்தைக் கேட்டு விசுவாசிக்கும்படி தேவன் அநேக நாட்களுக்கு முன்னே உங்களில் ஒருவனாகிய என்னைத் தெரிந்துகொண்டார்.

அப் 15:8. இருதயங்களை அறிந்திருக்கிற தேவன் நமக்குப் பரிசுத்தஆவியைத் தந்தருளினதுபோல அவர்களுக்கும் தந்தருளி, அவர்களைக்குறித்துச் சாட்சி கொடுத்தார்;

அப் 15:9. விசுவாசத்தினாலே அவர்கள் இருதயங்களை அவர் சுத்தமாக்கி, நமக்கும் அவர்களுக்கும் யாதொரு வித்தியாசமுமிராதபடி செய்தார்.

அப் 15:10. இப்படியிருக்க, நம்முடைய பிதாக்களாலும் நம்மாலும் சுமக்கக்கூடாதிருந்த நுகத்தடியைச் சீஷர் கழுத்தின்மேல் சுமத்துவதினால், நீங்கள் தேவனைச் சோதிப்பானேன்?

அப் 15:11. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையினாலே அவர்கள் இரட்சிக்கப்படுகிறது எப்படியோ, அப்படியே நாமும் இரட்சிக்கப்படுவோமென்று நம்பியிருக்கிறோமே என்றான்.

அப்போஸ்தலரும் மூப்பரும்

அப்போஸ்தலரும் மூப்பரும் இந்தக் காரியத்தைக் குறித்து ஆலோசனை பண்ணும்படி கூடினார்கள்: (அப் 15:6)

இரட்சிக்கப்படுவதற்கு விருத்த சேதனம்பண்ணுவது அவசியமா என்னும் பிரச்சனையைக் குறித்து ஆலோசனை பண்ணுவதற்காக, எருசலேமிலுள்ள அப்போஸ்தலரும் மூப்பரும் கூடுகிறார்கள். பவுலும் பர்னபாவும் தங்களைப் பார்க்க வந்தவுடன், தங்களுடைய முடிவை அவர்களிடத்தில் உடனடியாக அறிவித்துவிடவில்லை. அதற்குப் பதிலாக அந்தக் காரியத்தைக்குறித்து முதலாவது அப்போஸ்தலரும் மூப்பரும் கூடி ஆலோசனைபண்ணுகிறார்கள். இந்தப் பிரச்சனைக்கு எப்படிப்பட்ட தீர்வு காணவேண்டும் என்னும் தெளிவான சிந்தனை அவர்களிடத்தில் ஏற்கெனவே இருக்கிறது. ஆனாலும் மற்ற அப்போஸ்தலரோடு கூடி, ஆலோசனை பண்ணாமல், தங்களுடைய முடிவை உடனடியாக அறிவித்துவிடவில்லை. ஒரு பிரச்சனையைக் குறித்து ஆலோசனை பண்ணும்போது, இருதரத்தாரும் என்ன சொல்லுகிறார்கள் என்பதைக் கேட்டு அறிந்துகொள்கிறார்கள்.

இக்காலத்தில் கூட சபைகளுக்கிடையே பிரச்சனைகள் உண்டாகலாம். பிரச்சனை வரும்போது சபைகளின் போதகர்கள் ஒன்றுகூடி, பிரச்சனையைக்குறித்து ஆலோசனை பண்ணவேண்டும். ஒருவருக்கொருவர் தங்களுடைய கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளவேண்டும். கர்த்தருடைய ஊழியத்தில் ஒருவருக்கொருவர் உதவிசெய்யவேண்டும். கர்த்தருடைய திராட்சத்தோட்டத்தில் வேலைசெய்கிற ஊழியக்காரர்கள் ஒருவருக்கொருவர் பிரிந்திருக்கக்கூடாது. ஒருவருக்கொருவர் காலை வாரிவிடக்கூடாது. ஒருவருக்கொருவர் நல்ல ஆலோசனைகளைச் சொல்லி, ஒருவருக்கொருவர் கைகளைத் திடப்படுத்திக்கொள்ளவேண்டும்.

பேதுரு

மிகுந்த தர்க்கம் உண்டானபோது, பேதுரு எழுந்து, அவர்களை நோக்கி: சகோதரரே, நீங்கள் அறிந்திருக்கிறபடி, புறஜாதியார் என்னுடைய வாயினாலே சுவிசேஷ வசனத்தைக் கேட்டு விசுவாசிக்கும்படி, தேவன் அநேக நாட்களுக்கு முன்னே உங்களில் ஒருவனாகிய என்னைத் தெரிந்துகொண்டார் (அப் 15:7).

எருசலேமிலுள்ள சபையில் பேதுரு உண்மையுள்ள அங்கத்தினாராகயிருக்கிறான். ஆதி அப்போஸ்தலரில் பேதுருவும் ஒருவன். விருத்தசேதனம் பண்ணுவதைப்பற்றி தர்க்கம் உண்டானபோது, பேதுரு எழுந்து தன்னுடைய ஆலோசனையைச் சொல்லுகிறான். மற்றவர்கள் இந்தக் காரியத்தைக்குறித்து ஆலோசனை சொல்லுவதைவிட பேதுரு இதைப்பற்றிச் சொல்லுவது மிகவும் பொருத்தமாகயிருக்கும். ஏனெனில் அப்போஸ்தலரில் பேதுருவே முதலாவதாக புறஜாதியார் மத்தியில் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணியவன்.

எருசலேமிலுள்ள அப்போஸ்தலரும் மூப்பரும் புறஜாதியாரைக் குறித்த காரியத்தை ஆலோசனை பண்ணும்படி கூடியபோது, மிகுந்த தர்க்கமுண்டாயிற்று. புறஜாதியார் விருத்தசேதனம் பண்ணவேண்டியது அவசியம் என்று ஒரு சிலரும், அது அவசியமில்லை என்று ஒரு சிலரும் தங்கள் கருத்துக்களைச் சொல்லி தர்க்கம் பண்ணுகிறார்கள். ஆதித்திருச்சபையில் விசுவாசிகள் தங்களுடைய கருத்துக்களை தாராளமாகச் சொல்லுவதற்கு உரிமை இருந்தது. அப்போஸ்தலர்களும் மூப்பரும் இருதிறத்தாரின் கருத்துக்களையும் கேட்டு அறிந்துகொள்கிறார்கள். அப்போது பேதுரு எழுந்து நின்று பேசுகிறான்.

பேதுரு புறஜாதியார் மத்தியில் தான் செய்த ஊழியத்தைப்பற்றிப் பேசுகிறான். புறஜாதியார் அவனுடைய வாயினாலே சுவிசேஷ வசனத்தைக்கேட்டு விசுவாசிகளானார்கள். அநேக நாட்களுக்கு முன்னே அவர்களில் ஒருவனாகிய பேதுருவை புறஜாதியார் மத்தியில் ஊழியம் செய்வதற்காகத் தேவன் தெரிந்துகொண்டார். அப்போது இரட்சிக்கப்பட்ட புறஜாதியார் விருத்தசேதனம் பண்ணவேண்டுமென்று யாரும் சொல்லவில்லை. ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதலை, தேவன் புறஜாதியாருக்கும் அருளிச்செய்தார் என்று சொல்லி, அவர்கள் அப்போது தேவனை மகிமைப்படுத்தினார்கள் (அப் 11:18). அவர்கள் விருத்தசேதனம் பண்ணவேண்டுமென்று அப்போது யாரும் சொல்லவில்லை.

புறஜாதியார் பேதுருவினுடைய வாயினாலே சுவிசேஷ வசனத்தைக்கேட்டு விசுவாசிக்கும்படி தேவன் அநுக்கிரகம்பண்ணினார். அதுபோல இப்போது, பவுலின் வாயினாலே அவர்கள் சுவிசேஷ வசனத்தைக்கேட்டு விசுவாசிகளாகும்படி அநுக்கிரகம் பண்ணியிருக்கிறார். அப்படியிருக்கும்போது அவர்கள் விருத்தசேதனம்பண்ண வேண்டுமென்று ஏன் கட்டாயப்படுத்தவேண்டும் என்று பேதுரு அவர்களிடத்தில் கேட்கிறான்.

இருதயங்களை அறிந்திருக்கிற தேவன்

இருதயங்களை அறிந்திருக்கிற தேவன் நமக்குப் பரிசுத்தஆவியைத் தந்தருளினதுபோல அவர்களுக்கும் தந்தருளி, அவர்களைக்குறித்துச் சாட்சி கொடுத்தார்; விசுவாசத்தினாலே அவர்கள் இருதயங்களை அவர் சுத்தமாக்கி, நமக்கும் அவர்களுக்கும் யாதொரு வித்தியாசமுமிராதபடி செய்தார் (அப் 15:8,9).

புறஜாதியாருக்குச் சுவிசேஷத்தை அறிவிப்பதற்குத் தேவன் பேதுருவையும் தெரிந்துகொண்டார். தேவன் யூதர்களைக் குறித்துச் சாட்சி கொடுப்பதுபோலவே புறஜாதியாரைக்குறித்தும் சாட்சி கொடுக்கிறார். பேதுரு கூடியிருக்கிற அப்போஸ்தலரிடத்திலும் மூப்பரிடத்திலும் "இருதயங்களை அறிந்திருக்கிற தேவன் நமக்குப் பரிசுத்தஆவியைத் தந்தருளினதுபோல அவர்களுக்கும் தந்தருளி, அவர்களைக்குறித்துச் சாட்சி கொடுத்தார்" என்று சாட்சியாய் அறிவிக்கிறான்.

பேதுரு கொர்நேலியுவின் வீட்டில் இயேசுகிறிஸ்துவைப்பற்றி பிரசங்கித்தான். பேதுரு பிரசங்கம்பண்ணியபோது நடைபெற்ற சம்பவத்தை அவன் ஏற்கெனவே இவ்வாறு சாட்சியாக அறிவித்திருக்கிறான். "நான் பேசத்தொடங்கினபோது, பரிசுத்த ஆவியானவர் ஆதியிலே நம்மேல் இறங்கினதுபோலவே, அவர்கள்மேலும் இறங்கினார். யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுத்தான், நீங்களோ பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள் என்று கர்த்தர் சொன்ன வார்த்தையை அப்பொழுது நினைவுகூர்ந்தேன். ஆதலால் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசித்திருக்கிற நமக்கு தேவன் வரத்தை அநுக்கிரகம்பண்ணினதுபோல அவர்களுக்கும் அந்த வரத்தையே அநுக்கிரகம்பண்ணியிருக்கும் போது தேவனைத் தடுக்கிறதற்கு நான் எம்மாத்திரம் என்றான்" (அப் 11:15-17).

தேவன் யாருக்கெல்லாம் பரிசுத்த ஆவியைத் தந்தருளியிருக்கிறாரோ அவர்களெல்லோருமே தேவனுக்கு உரியவர்கள். அவர்கள் தமக்குரியவர்கள் என்பதைக் குறித்து தேவன் சாட்சிகொடுக்கிறார். பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டவர்கள் தேவனுக்குரியவர்கள். கர்த்தருடைய வாக்குத்தத்தத்திற்கு நாம் சுதந்தரவாளிகள் என்பதை, தேவன் பரிசுத்த ஆவியினால் முத்திரையிட்டிருக்கிறார்.

தேவன் யூதருக்கும் புறஜாதியாருக்கும் யாதொரு வித்தியாசமும் இல்லாதபடி செய்திருக்கிறார். தேவனுடைய கிருபாசனத்தண்டைக்கு வருவதற்கு யூதர்கள் அழைக்கப்படுகிறார்கள். யூதர்களைப்போலவே புறஜாதியாரும் தேவனுடைய கிருபாசனத்தண்டைக்கு வருமாறு அழைக்கப்படுகிறார்கள். தேவன் புறஜாதியாரை எந்தவித வித்தியாசமும் காண்பிக்காமல், தம்மிடத்தில் சேர்த்துக்கொள்கிறார். தேவனே புறஜாதியாரை நிபந்தனையில்லாமல் சேர்த்துக்கொள்ளும்போது, யூதர்கள் புறஜாதியாரைத் தங்களிடமாகச் சேர்த்துக்கொள்ள, தேவன் அனுமதிக்காத எந்தவிதமான நிபந்தனையையும் சொல்லக்கூடாது.

தேவன் விசுவாசத்தினாலே புறஜாதியாரின் இருதயத்தைச் சுத்தமாக்கியிருக்கிறார். ஆகையினால் அவர்களும் தேவனோடு ஐக்கியமாகயிருப்பதற்கு தகுதி பெற்றிருக்கிறார்கள். தேவனோடு ஐக்கியமாகயிருப்பதற்கு புறஜாதியாருக்கு தகுதியிருக்கும்போது, யூதர்கள் புறஜாதியாரைத் தங்களோடு சேர்த்துக்கொள்ள வேறு தகுதி எதையும் எதிர்பார்க்கக்கூடாது. தேவன் விசுவாசத்தினாலே யாருடைய இருதயத்தை யெல்லாம் சுத்தமாக்கியிருக்கிறாரோ, அவர்களெல்லோருமே தேவனுடைய குடும்பத்தில் சமஅந்தஸ்துடைய அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். தேவனிடத்தில் பட்சபாதம் எதுவுமில்லை.

தேவன் விசுவாசத்தினாலே மனுஷருடைய இருதயங்களைச் சுத்தமாக்குகிறார். தேவன் சுத்தமாக்கிய பின்பு, அவர்களை மறுபடியும் மோசேயுடைய நியாயப்பிரமாணத்தினாலும், விருத்தசேதனத்தினாலும் சுத்தமாக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தக்கூடாது. பரிசுத்தவான்களின் விசுவாசம் மிகவும் மேன்மையானது. நாம் விசுவாசத்தினால் தேவனுடைய சமுகத்திற்கு வருகிறோம். அவரோடு ஐக்கியமாயிருக்கிறோம். அவரோடு ஒன்றாக இணைக்கப்படுகிறோம். தேவனுடைய சமுகத்தில் யூதருக்கும் புறஜாதியாருக்கும் எந்தவிதமான வித்தியாசமுமில்லை. எல்லோருமே கிறிஸ்துவின் சமுகத்தில் ஒன்றாக இணைக்கப்படுகிறார்கள். கர்த்தருடைய பிரசன்னத்தில் யூதர், புறஜாதியார் என்னும் பிரிவினை நீங்கிப்போகிறது.

சுமக்கக்கூடாதிருந்த நுகத்தடி.

இப்படியிருக்க, நம்முடைய பிதாக்களாலும் நம்மாலும் சுமக்கக்கூடாதிருந்த நுகத்தடியைச் சீஷர் கழுத்தின்மேல் சுமத்துவதினால், நீங்கள் தேவனைச் சோதிப்பானேன்? (அப் 15:10)

யூதேயாவிலிருந்து அந்தியோகியாவுக்குப்போன ஊழியக்காரர்கள், மோசேயின் பிரமாணத்தையும், விருத்தசேதனத்தையும் புறஜாதியாரும் கைக்கொள்ளவேண்டும் என்று பிரசங்கித்தார்கள். பேதுரு அவர்களுடைய உபதேசத்திற்கு எதிர்த்து நிற்கிறான். "இப்படியிருக்க, நம்முடைய பிதாக்களாலும் நம்மாலும் சுமக்கக்கூடாதிருந்த நுகத்தடியைச் சீஷர் கழுத்தின்மேல் சுமத்துவதினால், நீங்கள் தேவனைச் சோதிப்பானேன்? என்று அவர்களிடத்தில் கேள்வி கேட்கிறான்.

தேவன் புறஜாதியாரை அங்கீகரித்திருக்கிறார். ஆனால் யூதர்களோ அவர்களை அங்கீகரிக்க ஆயத்தமாயில்லை. யூதர்கள் பரிசுத்த ஆவியானவரைத் துக்கப்படுத்துகிறார்கள். யூதருடைய முற்பிதாக்களினாலும், யூதர்களினாலும் மோசேயின் பிரமாணமானது சுமக்கக்கூடாதிருந்த நுகத்தடியாக இருந்தது. பரிசுத்த ஆவியானவரோ அந்த நுகத்தடியை நீக்கிப்போட்டுவிட்டார். ஆனால் யூதர்களோ புறஜாதியாரின் கழுத்தின்மேல் அந்த நுகத்தடியைச் சுமத்தி, தேவனைச் சோதிக்கிறார்கள். விருத்தசேதனம் செய்தால் மாத்திரமே இரட்சிப்பு உண்டு என்று தங்களுடைய சுயவிருப்பத்தை பிரசங்கம் செய்கிறார்கள். தேவன் நியமிக்காத காரியங்களை யூதர்கள் நியமிக்கிறார்கள்.

இயேசு கிறிஸ்து சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையை அறிவிக்கிறதற்காக வந்தார். ஆனால் யூதர்களோ கிறிஸ்து விடுதலை பண்ணியவர்களை மறுபடியும் சிறைப்படுத்துகிறார்கள். இயேசுகிறிஸ்து நம்முடைய நுகத்தின் சுமையை எளிதாக்குவதற்காக வந்தார். ஆனால் யூதர்களோ நுகத்தின் சுமையை அதிக பாரமாக்குகிறார்கள். புறஜாதியாரின் தோள்கள்மீது யூதர்கள் சுமத்துகிற நுகத்தடியை, யூதர்களாலேயே சுமக்க முடியாது. யூதர்களின் முற்பிதாக்களினாலும் அந்த நுகத்தடியை சுமக்க முடியவில்லை. இயேசுகிறிஸ்து விடுவித்தவர்களை யூதர்களை மறுபடியும் சிறைப்படுத்தி அவர்களுக்கு அதிக காயத்தை உண்டுபண்ணுகிறார்கள். இயேசுகிறிஸ்துவோ காயத்தைக் குணப்படுத்துவதற்காக வந்தார். யூதர்களோ காயத்தை உண்டுபண்ணுகிறவர்களாகவும், அதை அதிகரிக்கச் செய்கிறவர்களாகவும் இருக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துவின் கிருபை

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையினாலே அவர்கள் இரட்சிக்கப்படுகிறது எப்படியோ, அப்படியே நாமும் இரட்சிக்கப் படுவோமென்று நம்பியிருக்கிறோமே என்றான் (அப் 15:11).

புறஜாதியார் இரட்சிக்கப்படுவதற்கு அவர்கள் விருத்தசேதனம் பண்ணிக்கொள்வது அவசியம் என்று யூதமார்க்கத்தார் உபதேசம் பண்ணுகிறார்கள். ஆனால் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையினாலேயே எல்லோரும் இரட்சிக்கப்படுவதாக பேதுரு உபதேசம்பண்ணுகிறான். இயேசுகிறிஸ்துவின் கிருபையினால் தாங்கள் இரட்சிக்கப்படுவதாக யூதர்களும் நம்பியிருக்கிறார்கள். யூதர்கள் விருத்தசேதனம் பெற்றிருக்கிறார்கள். விருத்தசேதனம் பெற்றவர்களுடைய இரட்சிப்புக்கு இயேசுகிறிஸ்துவின் கிருபை எப்படி முக்கியமாக இருக்கிறதோ, அப்படியே விருத்தசேதனம் பெற்றுக்கொள்ளாத புறஜாதியாருக்கும் கிறிஸ்துவின் கிருபை அவர்களுடைய இரட்சிப்புக்கு முக்கியமாயிருக்கிறது.

யூதராகயிருந்தாலும், புறஜாதியாராக இருந்தாலும் தங்களுடைய இரட்சிப்புக்கு கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையையே சார்ந்திருக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவின் கிருபையில்லாமல் இரட்சிக்கப்படுவதற்கு வேறு மார்க்கமேயில்லை. அவ்வாறு இருக்கும்போது புறஜாதியார் மீது மோசேயின் பிரமாணத்தை ஏன் பாரமாகச் சுமத்தவேண்டும் என்று பேதுரு அவர்களிடத்தில் கேட்கிறான். கிறிஸ்துவின் கிருபையும், அவருடைய சுவிசேஷமும் மாத்திரமே யூதருடைய இரட்சிப்புக்கும் புறஜாதியாருடைய இரட்சிப்புக்கும் அவசியமாயிருக்கிறது. விருத்தசேதனம் பண்ணிக்கொள்வது ஆத்தும இரட்சிப்புக்குத் தேவையற்றது.

யாக்கோபின் ஆலோசனை அப் 15 : 12-21

அப் 15:12. அப்பொழுது கூடிவந்திருந்த யாவரும் அமைந்திருந்து, பர்னபாவும் பவுலும் தங்களைக்கொண்டு தேவன் புறஜாதிகளுக்குள்ளே செய்த அடையாளங்கள் அற்புதங்கள் யாவையும் விவரித்துச் சொல்லக் கேட்டார்கள்.

அப் 15:13. அவர்கள் பேசி முடிந்தபின்பு, யாக்கோபு அவர்களை நோக்கி: சகோதரரே, எனக்குச் செவிகொடுங்கள்.

அப் 15:14. தேவன் புறஜாதிகளினின்று தமது நாமத்திற்காக ஒரு ஜனத்தைத் தெரிந்து கொள்ளும்படி முதல்முதல் அவர்களுக்குக் கடாட்சித்தருளின விதத்தைச் சிமியோன் விவரித்துச் சொன்னாரே.

அப் 15:15. அதற்குத் தீர்க்கதரிசிகளுடைய வாக்கியங்களும் ஒத்திருக்கிறது.

அப் 15:16. எப்படியெனில், மற்ற மனுஷரும் என்னுடைய நாமந்தரிக்கப்படும் சகல ஜாதிகளும், கர்த்தரைத் தேடும்படிக்கு,

அப் 15:17. நான் இதற்குபின்பு திரும்பிவந்து, விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை மறுபடியும் எடுப்பித்து, அதிலே பழுதாய்ப்போனவைகளை மறுபடியும் சீர்ப்படுத்தி, அதைச் செவ்வையாக நிறுத்துவேன் என்று இவைகளையெல்லாஞ்செய்கிற கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறது.

அப் 15:18. உலகத்தோற்றமுதல் தேவனுக்கு தம்முடைய கிரியைகளெல்லாம் தெரிந்திருக்கிறது.

அப் 15:19. ஆதலால் புறஜாதிகளில் தேவனிடத்தில் திரும்புகிறவர்களைக் கலங்கப்பண்ணலாகாதென்றும்,

அப் 15:20. விக்கிரகங்களுக்குப் படைத்த அசுசியானவைகளுக்கும், வேசித்தனத்திற்கும், நெருக்குண்டு செத்ததிற்கும், இரத்தத்திற்கும், விலகியிருக்கும்படி அவர்களுக்கு நாம் எழுதவேண்டுமென்றும் நான் தீர்மானிக்கிறேன்.

அப் 15:21. மோசேயின் ஆகமங்கள் ஓய்வுநாள்தோறும் ஜெபஆலயங்களில் வாசிக்கப்பட்டு வருகிறபடியால், பூர்வகாலந்தொடங்கிச் சகல பட்டணங்களிலும் அந்த ஆகமங்களைப் பிரசங்கிக்கிறவர்களும் உண்டே என்றான்.

பர்னபாவும் பவுலும்

அப்பொழுது கூடிவந்திருந்த யாவரும் அமைந்திருந்து, பர்னபாவும் பவுலும் தங்களைக்கொண்டு தேவன் புறஜாதிகளுக்குள்ளே செய்த அடையாளங்கள் அற்புதங்கள் யாவையும் விவரித்துச் சொல்லக் கேட்டார்கள் (அப் 15:12).

பர்னபாவும் பவுலும் தங்களைக் கொண்டு தேவன் புறஜாதிகளுக்குள்ளே செய்த அடையாளங்கள், அற்புதங்கள் யாவையும் விவரித்துச் சொல்லுகிறார்கள். கூடிவந்திருக்கிற யாவரும் அப்போஸ்தலர் சொல்லுவதை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தியோகியா சபையிலும் பவுலும் பர்னபாவும், சபையைக் கூடிவரச் செய்து, தேவன் தங்களைக் கொண்டு செய்தவைகளையும், அவர் புறஜாதிகளுக்கு விசுவாசத்தின் கதவைத் திறந்திருந்ததையும் அறிவித்தார்கள் (அப் 15:27). அந்தியோகியா சபையில் சொன்ன ஊழிய அறிக்கையை, இப்போது எருசலேமிலுள்ள சபையாரிடத்திலும் மறுபடியும் சொல்லுகிறார்கள். எருசலேம் சபையாரை இவர்கள் இருவரையும் ஊழியத்திற்கு வேறு பிரித்து அனுப்பினார்கள். ஆகையினால் இவர்களிடத்தில் ஊழியக்காரியங்களைக் குறித்து அறிக்கை சமர்ப்பிப்பது மிகவும் ஏற்றதாகயிருக்கிறது.

நியாயப்பிரமாணம் இல்லாமலேயே, சுவிசேஷத்தின் மூலமாய், இயேசுகிறிஸ்துவின் கிருபையினால் மாத்திரம் இரட்சிப்பு உண்டு என்பதை பவுலும் பர்னபாவும் பிரசங்கிக்கிறார்கள். தேவன் புறஜாதிகளுக்குள்ளே அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்கிறார். இயற்கையின் மூலமாக தேவன் தம்முடைய தெய்வீக வல்லமையையும், தெய்வீக பராமரிப்பையும் வெளிப்படுத்திக் காண்பிக்கிறார். தேவனுடைய கிருபையானது, இயற்கைக்கு அப்பாற்பட்ட அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்கிறது. அப்போஸ்தலர் மூலமாக தேவன் புறஜாதிகளுக்குள்ளே அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்து தம்முடைய மகத்துவத்தை விளங்கப்பண்ணுகிறார். தேவன் தாமே புறஜாதியாரின் இரட்சிப்பை உறுதிபண்ணுகிறார். அவர்களுடைய இரட்சிப்பை தேவன் உறுதிபண்ணிய பின்பு, அதை விருத்தசேதனத்தின் மூலமாக மறுபடியும் உறுதிபண்ண வேண்டியது அவசியமில்லாதது.

பவுலும் பர்னபாவும் தேவன் தங்களைக்கொண்டு செய்த காரியங்களை விவரித்துச் சொல்லும்போது, கூடிவந்திருந்த யாவரும் அமைதியாகயிருந்து, அவர்கள் சொல்லுவதைக் கேட்கிறார்கள். இதுவரையிலும் தர்க்கம்பண்ணிக் கொண்டிருந்தவர்கள், இப்போது அமைதியாகயிருந்து அப்போஸ்தலரின் பேச்சைக் கேட்கிறார்கள். தர்க்கத்தினாலும் விவாதத்தினாலும் தெளிவு பெற முடியாது. அமர்ந்திருந்து ஆலோசனைபண்ணினால் மாத்திரமே சிந்தனையில் தெளிவு உண்டாகும். ஆவியானவரின் கிரியை விசுவாசிகளுக்கு மத்தியில் நடைபெறுகிறது. பரிசுத்த ஆவியானவர் தம்முடைய கிருபையை அவர்கள் மத்தியில் வெளிப்படுத்துகிறார். இதுவரையிலும் குழப்பத்திலும் தர்க்கத்திலும் நிறைந்திருக்கிறவர்களுக்கு, இப்போது தெளிவும் சமாதானமும் உண்டாயிற்று. இது பரிசுத்த ஆவியினாலேயே உண்டாயிற்று.

எருசலேமில் கூடிவந்திருக்கிற யாவரும் தேவபக்தியுள்ளவர்கள். அவர்களிடத்தில் தேவன் செய்கிற அடையாளங்களையும் அற்புதங்களையும் பற்றி யாராவது விவரித்துச் சொன்னால், அவர்கள் அதை முழுமனதோடு கவனித்துக்கேட்பார்கள். கர்த்தருடைய கிருபையையும், கிரியையையும் அறிந்துகொள்ள ஆவலாயிருப்பார்கள்.

யாக்கோபு

அவர்கள் பேசி முடிந்தபின்பு, யாக்கோபு அவர்களை நோக்கி: சகோதரரே, எனக்குச் செவிகொடுங்கள் (அப் 15:13).

எருசலேம் சபையாருக்கு முன்பாக யாக்கோபு தன்னுடைய ஆலோசனையைச் சொல்லுகிறான். பர்னபாவும் பவுலும் பேசி முடித்தபின்பு யாக்கோபு எழுந்திருந்து அவர்களிடத்தில் பேசுகிறான். விசுவாசிகள் கூடியிருக்கும்போது ஒன்றுக்கும் மேற்பட்ட ஊழியக்காரர்கள் அவர்களுக்குப் பிரசங்கம்பண்ணலாம். நாம் பல ஊழியக்காரர்களின் பிரசங்கச் செய்தியைக் கேட்கும்போது, நமக்குள் குழப்பம் ஏற்படாது. தெளிவு உண்டாகும். ஊழியக்காரர்களெல்லோரும் சுவிசேஷத்தின் சத்தியத்தைப் பிரசங்கம் பண்ணுகிறபடியால், அந்தப் பிரசங்கங்களைக் கேட்கும்போது நம்முடைய ஆத்துமாவில் தெளிவு உண்டாகும். நம்முடைய இருதயம் சத்தியத்தினால் நிரம்பும்.

எருசலேமில் கூடிவந்திருக்கிற விசுவாசிகள் யாவரையும் "சகோதரரே, எனக்குச் செவிகொடுங்கள்" என்று யாக்கோபு மிகவும் மரியாதையாய் அழைக்கிறான். விசுவாசிகளெல்லோருமே கர்த்தருக்குள் சகோதரர்களா யிருக்கிறார்கள். கர்த்தர் நம் எல்லோரையுமே ஒன்றுபோலவே பாவிக்கிறார். நம்முடைய பேச்சுக்களும் செய்கைகளும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கோ அல்லது மற்ற விசுவாசிகளுக்கோ அவமதிப்பைக் கொடுக்கக்கூடாது. விசுவாசிகள் ஒருவரையொருவர் மதித்து நடக்கவேண்டும்.

சிமியோன்

தேவன் புறஜாதிகளினின்று தமது நாமத்திற்காக ஒரு ஜனத்தைத் தெரிந்து கொள்ளும்படி, முதல்முதல் அவர்களுக்குக் கடாட்சித்தருளின விதத்தைச் சிமியோன் விவரித்துச் சொன்னாரே (அப் 15:14).

சிமியோன் என்னும் பெயர் சீமோன் பேதுருவைக் குறிக்கிறது. புறஜாதியாரின் இரட்சிப்பைக் குறித்து சீமோன் பேதுரு குறிப்பிட்டுச் சொன்னதை யாக்கோபு இங்கு விசுவாசிகளுக்குச் சொல்லுகிறான். "திரளான புருஷர்களும் ஸ்திரீகளும் விசுவாசமுள்ளவர்களாய் கர்த்தரிடமாக அதிகமாய்ச் சேர்க்கப்பட்டார்கள்" (அப் 5:14). தேவன் புறஜாதிகளினின்று தமது நாமத்திற்காக ஒரு ஜனத்தைத் தெரிந்துகொள்ளும்படி முதல்முதல் அவர்களுக்குக் கடாட்சித்தருளினார். கொர்நேலியுவின் அவனுடைய வீட்டாரும் இரட்சிக்கப்பட்டார்கள். இவர்கள் புறஜாதியாரிலிருந்து இரட்சிக்கப்பட்ட முதற்கனிகளாக இருக்கிறார்கள்.

தேவனுடைய கிருபையே புறஜாதியாரின் இரட்சிப்புக்கு ஆதாரமாகயிருக்கிறது. ஆகையினால் தேவனே புறஜாதிகளைத் தெரிந்துகொள்ளும்படி அவர்களுக்கு கடாட்சித்தருளியிருக்கிறார். தேவனே புறஜாதியாரைத் தேடிப்போயிருக்கிறார். தேவன் அவர்களைச் சந்தித்தது மாத்திரமல்ல, அவர்களை இரட்சித்துமிருக்கிறார். இவர்கள் தேவனுடைய காணியாட்சிக்குப் புறம்பான, புறஜாதிகளாகயிருந்தாலும், தேவன் புறஜாதிகளினின்று தமது நாமத்திற்காக ஒரு ஜனத்தைத் தெரிந்துகொள்கிறார்.

தம்முடைய நாமம் மகிமைப்பட வேண்டும் என்பதே, தேவன் புறஜாதியாரை இரட்சிப்பதன் பிரதான நோக்கம். இரட்சிக்கப்பட்ட புறஜாதியார் தேவனை மகிமைப்படுத்துவார்கள். அவர்கள் தேவனுக்குள் மகிமையடைவார்கள். பழைய ஏற்பாட்டுக்காலத்தில், தேவன் தம்முடைய நாமமகிமைக்காக யூதர்களைத் தெரிந்துகொண்டார். இப்போதோ அவர் புறஜாதியாரைத் தெரிந்து கொண்டிருக்கிறார்.

தீர்க்கதரிசிகளுடைய வாக்கியங்கள்

அதற்குத் தீர்க்கதரிசிகளுடைய வாக்கியங்களும் ஒத்திருக்கிறது (அப் 15:15).

தேவன் புறஜாதியாரைத் தெரிந்துகொண்ட சத்தியத்தை, சிமியோன் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன வாக்கியத்தை மேற்கோளாக எடுத்துச்சொல்லி உறுதிபண்ணுகிறான். பழைய ஏற்பாட்டில் இந்த வாக்கியம் தீர்க்கதரிசனமாகச் சொல்லப்பட்டிருப்பதினால், அது நிச்சயமாகவே நிறைவேறும். தேவன் புறஜாதிகளினின்று தமது நாமத்திற்காக ஒரு ஜனத்தைத் தெரிந்துகொள்ளும்படி, முதல்முதல் அவர்களுக்குக் கடாட்சித்தருளின விதத்தை சிமியோன் விவரித்துச் சொல்லியிருக்கிறார். அவர் விவரித்துச் சொன்னதற்குத் தீர்க்கதரிசிகளுடைய வாக்கியங்களும் ஒத்திருக்கிறது.

மேசியா புறஜாதிகளுக்குப் பிரகாசிக்கிற ஒளியாகவும், அவருடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு மகிமையாகவும் இருப்பார் என்று பக்தியுள்ள யூதர்கள் பொதுவாக எதிர்பார்த்தார்கள் (லூக் 2:30). யாக்கோபு இந்தப் பொதுவான எதிர்பார்ப்பை, விவரித்துக்கூறி, கர்த்தர் புறஜாதியாரையும் இரட்சிக்கிறார் என்பதை உறுதிபண்ணுவதற்கு ஆமோஸ் 9:11,12 ஆகிய தீர்க்கதரிசன வசனங்களை இங்கு மேற்கோளாகக் கூறுகிறான்.

தாவீதின் கூடாரம்

எப்படியெனில், மற்ற மனுஷரும் என்னுடைய நாமந்தரிக்கப்படும் சகல ஜாதிகளும், கர்த்தரைத் தேடும்படிக்கு, நான் இதற்குபின்பு திரும்பிவந்து, விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை மறுபடியும் எடுப்பித்து, அதிலே பழுதாய்ப்போனவைகளை மறுபடியும் சீர்ப்படுத்தி, அதைச் செவ்வையாக நிறுத்துவேன் என்று இவைகளையெல்லாஞ்செய்கிற கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறது (அப் 15:16,17).

விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை மறுபடியும் எடுப்பித்துக் கட்டுவதாக கர்த்தர் சொல்லுகிறார். இந்த ஆசரிப்புக்கூடாரம் பழுதாய்ப் போயிற்று. அழிந்துபோயிற்று. விழுந்துபோயிற்று. தாவீதின் வீட்டில் பல வருஷங்களாக ராஜா யாரும் இல்லை. அவனுடைய சிங்காசனத்தில் அமர்ந்து இஸ்ரவேலை ஆளுகை செய்வதற்கு, அவனுடைய வம்சத்தில் ஒருவரும் இல்லாமற்போனார்கள். கர்த்தரோ தாம் திரும்பி வந்து விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை மறுபடியும் கட்டுவதாகக் கூறுகிறார்.

இந்தத் தீர்க்கதரிசனம் ஆமோஸ் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. "ஏதோமில் மீதியானவர்களையும், என் நாமம் விளங்கிய சகல ஜாதிகளையும் வசமாக்கிக் கொள்ளும்படிக்கு, அந்நாளிலே விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை நான் திரும்ப எடுப்பித்து, அதின் திறப்புகளை அடைத்து, அதில் பழுதாய்ப்போனதைச் சீர்ப்படுத்தி, பூர்வநாட்களில் இருந்ததுபோல அதை ஸ்தாபிப்பேன் என்று இதைச் செய்கிற கர்த்தர் சொல்லுகிறார்" (ஆமோ 9:11,12).

கர்த்தர் சொன்ன தீர்க்கதரிசனம் இப்போது நிறைவேறியிருக்கிறது. தாவீதின் வம்சத்தில் தேவன் இயேசுவை எழும்பப் பண்ணியிருக்கிறார். கிறிஸ்துவின் சபையை, தாவீதின் கூடாரம் என்று அழைக்கலாம். பல காலமாக தாவீதின் கூடாரம் பழுதாயிருந்தது. கர்த்தரோ அதை மறுபடியும் எடுப்பித்து, சீர்ப்படுத்தி, செவ்வையாக நிறுத்தியிருக்கிறார்.

தாவீதின் கூடாரம் மறுபடியும் எடுப்பித்து கட்டப்பட்டிருப்பதின் விளைவினால் புறஜாதியாரும், தாவீதின் கூடாரத்திற்கு வருகிறார்கள். "மற்ற மனுஷரும், என்னுடைய நாமம் தரிக்கப்படும் சகல ஜாதிகளும், கர்த்தரைத் தேடும்படிக்கு வருவார்கள்". யூதர்கள் மாத்திரமல்ல, மற்ற மனுஷரும் வருவார்கள். மற்ற மனுஷர்களான புறஜாதியார் இதுவரையிலும் தாவீதின் கூடாரத்திற்குப் புறம்பானவர்களாக இருந்தார்கள். இஸ்ரவேலின் காணியாட்சியில் அவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. ஆனால் இப்போதோ கர்த்தரைத் தேடும்படிக்கு அவர்கள் தாவீதின் கூடாரத்தில் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள்.

கர்த்தரின் நாமம் புறஜாதியார் மத்தியிலும் அறிவிக்கப்படும். அவர்கள் இயேசுகிறிஸ்துவின் நாமத்தை அறிந்துகொள்வார்கள். கர்த்தரைத் தேடுவார்கள். அவர்களும் தங்களைத் தேவனுடைய ஜனம் என்று அழைத்துக்கொள்வார்கள். தேவனும் புறஜாதியாரைத் தம்முடைய நாமம் தரிக்கப்படும் ஜாதிகள் என்று அழைப்பார். யூதரும் புறஜாதியாரும், கர்த்தருடைய நாமத்தைத் தரித்துக்கொள்வார்கள். அவர்கள் கர்த்தரைத் தேடுவார்கள்.

பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்டிருக்கும் இந்தத் தீர்க்கதரிசனம் இப்போது நிறைவேறியிருக்கிறது. ஏனெனில் இந்தத் தீர்க்கதரிசனத்தில் "இவைகளையெல்லாம் செய்கிற கர்த்தர் சொல்லுகிறார்" என்று எழுதப்பட்டிருக்கிறது. கர்த்தர் தாமே இவையெல்லாவற்றையும் செய்திருக்கிறார். மனுஷனுக்கு சொல்லுவது வேறாகவும் செய்வது வேறாகவும் இருக்கும். தான் சொன்னதைச் செய்யமாட்டான். செய்யாததைச் சொல்லுவான். செய்ததைச் சொல்லமாட்டான்.

ஆனால் கர்த்தரோ மனுஷனைப்போல அல்ல. கர்த்தருக்குச் சொல்வதும் செய்வதும் ஒன்றுதான். தாம் சொல்வதை மாத்திரமே கர்த்தர் செய்கிறார். தாம் செய்கிறதை மாத்திரமே கர்த்தர் சொல்லுகிறார். "இவைகளையெல்லாம் செய்கிற கர்த்தர் சொல்லுகிறார்" என்னும் தீர்க்கதரிசன வாக்கியத்திற்கு, "கர்த்தர் இவைகள் எல்லாவற்றையும் மெய்யாகவே செய்கிறார்" என்று அர்த்தமாகும்.

தேவன் யூதரையும் புறஜாதியாரையும் ஒரே சரீரமாகக் கூட்டிச் சேர்க்கிறார். பழுதாய்ப்போனவைகளை மறுபடியும் சீர்படுத்தி, அதை செவ்வையாக நிறுத்துகிறார். இதற்காகவே விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை மறுபடியும் எடுப்பித்துக் கட்டுகிறார். கர்த்தர் எப்போதுமே தமக்குச் சித்தமானதைச் செய்கிறார். கர்த்தருக்குச் சித்தமானது அவருக்குப் பிரியமானதாகவும் இருக்கிறது. தாவீதின் கூடாரத்தை மறுபடியும் எடுப்பித்துக் கட்டுவது கர்த்தருடைய சித்தம். தம்முடைய சித்தத்தை கர்த்தர் சந்தோஷமாய் நிறைவேற்றியிருக்கிறார். கர்த்தர் யூதருக்குத் தேவனாகயிருப்பதுபோல புறஜாதியாருக்கும் தேவனாகயிருக்கிறார்.

தேவனுக்குத் தெரிந்திருக்கிறது

உலகத்தோற்றமுதல் தேவனுக்கு தம்முடைய கிரியைகளெல்லாம் தெரிந்திருக்கிறது (அப் 15:18).

யாக்கோபு கூடிவந்திருக்கிற யாவருக்கும் தன்னுடைய ஆலோசனையைச் சொல்லுகிறான். தேவனுடைய நோக்கத்தையும், அவருடைய ஆலோசனையையும் யாக்கோபு விரிவாக எடுத்துப் பேசுகிறான். உலகத்தோற்ற முதல் தேவனுக்கு தம்முடைய கிரியைகளெல்லாம் தெரிந்திருக்கிறது என்று அவர்களிடத்தில் அறிக்கை செய்கிறான். "தேவன் புறஜாதியாரை அழைப்பார்" என்பதைத் தீர்க்கதரிசிகள் மூலமாக முன்னறிவித்திருக்கிறார். தாம் முன்னறிவித்திருப்பதை, அவர் தம்முடைய தெய்வீக ஆதீனத்தில் நித்திய காலமாக அறிந்துமிருக்கிறார். தேவன் இப்போது எதைச் செய்கிறாரோ, அது செய்வதற்குத் திட்டமிடுவதற்கு முன்பாகவே, அவர் அதைப்பற்றி அறிந்துமிருக்கிறார்.

தேவன் தாம் தீர்மானம் பண்ணியிருக்கிற எல்லாவற்றையும் செய்து நிறைவேற்றுகிறார். அதே வேளையில் தம்முடைய கிரியைகள் எல்லாவற்றையும் அவர் தெரிந்து வைத்திருக்கிறார். நாம் ஒரு காரியத்தைச் செய்ய ஆரம்பிக்கும்போது, அதை முடிக்கும் வரையிலும், அது எப்படியிருக்கும் என்று நம்மால் தீர்மானமாய்ச் சொல்லமுடியாது. நம்முடைய ஞானம் குறைவுள்ளது. தேவனோ சர்வஞானமுள்ளவர். ஆகையினால் உலகத்தோற்ற முதல், தேவனுக்குத் தம்முடைய கிரியைகளெல்லாம் தெரிந்திருக்கிறது.

நம்முடைய தரிசனம் மிகவும் குறுகியது. இந்த உலகத்தில் பெரிய ஞானியாக இருக்கிறவன்கூட, ஒரு சில காரியங்களை மாத்திரமே தீர்க்கதரிசனமாகப் பார்ப்பான். அவனுடைய பார்வையும் குறுகினதாகவே இருக்கும். அநேக காலங்களுக்குப் பின்பு நடக்கப்போகிறதை மனுஷனால் தெளிவாகக் காணமுடியாது. அப்படியே அவன் பார்த்தாலும் அவனுடைய தீர்க்கதரிசன பார்வை குறைவுள்ளதாகவே இருக்கும். அவனால் நிச்சயித்துக் கூறமுடியாது.

மனுஷர்கள் குறைவுள்ளவர்கள். நம்முடைய தேவனோ நிறைவானவர். நடைபெறும் காரியங்கள் நமக்குத் தெரியாமல் போனாலும், கர்த்தருக்குத் தெரியாத காரியம் ஒன்றுமேயில்லை. நாம் ஆராதிக்கிற தேவன், தம்முடைய கிரியைகள் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார். ஆகையினால் நாம் ஒவ்வொரு காரியத்திலும் கர்த்தரையே சார்ந்திருக்கவேண்டும். தேவன் தம்முடைய சர்வஞானத்தினால் தம்முடைய கிரியைகளெல்லாவற்றையும் தெரிந்திருப்பதினால், தேவனுடைய சித்தத்தின் பிரகாரம் ஒவ்வொரு காரியமும் அவருக்கேற்ற வேளையில் நடைபெறுகிறது.

புறஜாதியாரும் இக்காலத்தில் சபையில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்பது கர்த்தர் தம்முடைய தெய்வீக ஆதீனத்தில் ஏற்கெனவே தீர்மானித்திருக்கிற காரியம். அது இப்போது, அவருக்குச் சித்தமான இந்தக் காலத்தில், நிறைவேறுகிறது. ஏனெனில் உலகத்தோற்றமுதல் தேவனுக்குத் தம்முடைய கிரியைகள் எல்லாம் தெரிந்திருக்கிறது.

நான் தீர்மானிக்கிறேன்

ஆதலால் புறஜாதிகளில் தேவனிடத்தில் திரும்புகிறவர்களைக் கஷ்டப்படுத்தலாகாதென்றும், விக்கிரகங்களுக்குப் படைத்த அசுசியானவைகளுக்கும், வேசித்தனத்திற்கும், நெருக்குண்டு செத்ததிற்கும், இரத்தத்திற்கும், விலகியிருக்கும்படி அவர்களுக்கு நாம் எழுதவேண்டுமென்றும் நான் தீர்மானிக்கிறேன் (அப் 15:19,20).

யாக்கோபு புறஜாதியாரைக் குறித்த தன்னுடைய ஆலோசனையை கூடிவந்திருக்கிற யாவருக்கும் தீர்மானமாக அறிவிக்கிறான். தன்னுடைய ஆலோசனையைச் சொல்லிவிட்டு அதை "நான் தீர்மானிக்கிறேன்" என்று முடிவாகக் கூறுகிறான். யாக்கோபு மற்றவர்களுக்காகத் தீர்மானிக்கவில்லை. மற்றவர்கள்மீது தன்னுடைய கருத்தை பலவந்தமாகத் திணிக்கவில்லை. தன்னுடைய கருத்தை அவர்களுக்கு ஆலோசனையாகச் சொல்லுகிறான்.

விருத்தசேதனம் பண்ணுவதும், மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வதும் புறஜாதியார்மீது திணிக்கப்படக்கூடாது. புறஜாதிகளில் தேவனிடத்தில் திரும்புகிறவர்களைக் கலங்கப்பண்ணலாகாது. அவர்களுக்கு உபகாரம் மாத்திரமே செய்யவேண்டும். உபத்திரவம் பண்ணக்கூடாது.

புதிய விசுவாசிகள் சபைக்கு வரும்போது, அவர்களை எந்தவிதத்திலும் நாம் கலங்கப்பண்ணிவிடக்கூடாது. அவர்களை சோர்வடையச்செய்து, தங்கள் விசுவாசத்திலிருந்து அவர்கள் விலகிப்போய்விடுவதற்கு நாம் காரணமாகிவிடக்கூடாது. அவர்களிடத்தில் தேவையில்லாத தர்க்கமோ, விவாதமோ செய்து அவர்களைக் கலங்கப்பண்ணலாகாது. புதிய விசுவாசிகளின் இருதயத்தில் விசுவாசம் வேர் ஊன்றவேண்டும். இவர்கள் சத்தியத்தில் உறுதிப்படவேண்டும்.

புறஜாதியார் சபையில் சேர்த்துக்கொள்ளப்படும்போது, யூதர்கள் அருவருக்கிற காரியங்களை அவர்கள் விட்டுவிடவேண்டியது அவசியமாயிருக்கிறது. புறஜாதிகளில் தேவனிடத்தில் திரும்புகிறவர்களைக் கலங்கப்பண்ணலாகாது. அதேவேளையில் தேவனிடத்தில் திரும்புகிற புறஜாதியாரும், யூதமார்க்கத்திலிருந்து தேவனிடத்தில் திரும்பியிருக்கிறவர்களைக் கலங்கப் பண்ணலாகாது. இந்த விஷயத்தில், புறஜாதியார் ஒரு சில காரியங்களைத் தங்களைவிட்டு விலக்கவேண்டும். புறஜாதியார் இதைச் செய்தால், அது யூதர்கள் இடறலடையாமல் நிலைத்திருப்பதற்கு உதவியாயிருக்கும். புறஜாதியார் எதற்கெல்லாம் விலகியிருக்கவேண்டுமென்று யாக்கோபு கூடிவந்திருந்த யாவருக்கும் தன்னுடைய ஆலோசனையைச் சொல்லுகிறார்.

புறஜாதியார் விக்கிரங்களுக்குப் படைத்த அசுசியானவைகளுக்கும், வேசித்தனத்திற்கும் விலகியிருக்க வேண்டும். இவை இரண்டுமே தீயகாரியங்கள். இவற்றிலிருந்து எப்போதுமே விலகியிருப்பது அவசியம். அப்போஸ்தலர்கள் புறஜாதியார் மத்தியில் ஊழியம் செய்யும்போது, அவர்கள் விக்கிரகாராதனைக்கு விரோதமாக உபதேசம்பண்ணவேண்டும். விசுவாசிகள் விக்கிரகாராதனைக்காரரோடும், விக்கிரகாராதனையின் காரியங்களோடும் ஐக்கியமாயிருக்கக்கூடாது. அதிலும் விசேஷமாக விக்கிரங்களுக்குப் படைத்த அசுசியானவைகளுக்கு, புறஜாதிகளில் தேவனிடத்தில் திரும்புகிறவர்கள் விலகியே இருக்கவேண்டும்.

மேலும் தேவனிடத்தில் திரும்பியிருக்கிற புறஜாதியார் வேசித்தனத்திற்கும், எல்லா விதமான அசுத்தங்களுக்கும் விலகியிருக்க வேண்டும். அப்போஸ்தலர் பவுலும் வேசித்தனத்திற்கும் அசுத்தமான யாவற்றிற்கும் விரோதமாகப் போதகம்பண்ணுகிறான். புறஜாதியார் மனந்திரும்பிய பின்பு கூட இவற்றைவிட்டு விலகவேண்டியதில்லை என்று யூதர்கள் உபதேசம்பண்ணுகிறார்கள். ஆனால் புறஜாதியார் மத்தியில் ஊழியம் செய்கிற அப்போஸ்தலர்களோ, வேசித்தனத்திற்கும் விக்கிரகாராதனைக்கும் விரோதமாக எச்சரித்துப் பிரசங்கம்பண்ணுகிறார்கள்.

அப்போஸ்தலரின் உபதேசத்தை யாக்கோபு ஆதரித்துப் பேசுகிறார். விக்கிரகாராதனைக்கும் வேசித்தனத்திற்கும் தேவனிடத்தில் திரும்பியிருக்கிற புறஜாதி விசுவாசிகள் விலகியிருக்க வேண்டுமென்று வெளிப்படையாக எச்சரித்துக் கூறுகிறார்.

மோசேயின் பிரமாணம் இஸ்ரவேல் ஜனங்களுக்குக் கொடுக்கப்படுவதற்கு முன்பாகவே, நெருங்குண்டு செத்ததற்கும், இரத்தத்திற்கும் ஜனங்கள் விலகியிருந்தார்கள். மோசேயின் பிரமாணமும் இவற்றிற்கு விலகியிருக்க வேண்டுமென்று கட்டளையிடுகிறது. இந்தக் கட்டளையை யாக்கோபு அங்கீகரித்து, புறஜாதிகளில் தேவனிடத்தில் திரும்புகிறவர்கள், நெருங்குண்ட செத்ததற்கும் இரத்தத்திற்கும் விலகியிருக்கும்படி தான் தீர்மானிப்பதாக கூடிவந்திருக்கிற யாவருக்கும் முன்பாக யாக்கோபு அறிவிக்கிறார்.

மோசேயின் ஆகமங்கள்

மோசேயின் ஆகமங்கள் ஓய்வுநாள்தோறும் ஜெபஆலயங்களில் வாசிக்கப்பட்டு வருகிறபடியால், பூர்வகாலந்தொடங்கிச் சகல பட்டணங்களிலும் அந்த ஆகமங்களைப் பிரசங்கிக்கிறவர்களும் உண்டே என்றான் (அப் 15:21).

யூதர்கள் பூர்வகாலம் தொடங்கி மோசேயின் ஆகமங்களைப் படித்து வருகிறார்கள். ஓய்வுநாள்தோறும் யூதருடைய ஜெபாலங்களில் மோசேயின் ஆகமங்கள் வாசிக்கப்பட்டு வருகிறது. பூர்வகாலம் தொடங்கி சகல பட்டணங்களிலும் மோசேயின் ஆகமங்களை ஏராளமானோர் பிரசங்கித்தும் வருகிறார்கள். யூதருடைய குடும்பத்தில் பிறந்திருக்கிற ஒவ்வொவருக்கும் மோசேயின் ஆகமங்களை கற்றுக்கொள்வதற்கு ஏராளமான வாய்ப்பு இருக்கிறது. யாக்கோபு யூதருக்கு மரியாதை கொடுக்கிறான். மோசேயின் ஆகமங்களைப்பற்றி அவர்கள் கற்று அறிந்திருக்கிறார்கள் என்று அவர்களை உயர்வாகப் பேசுகிறான்.

மோசேயின் ஆகமங்கள் யூதருக்கு பூர்வகாலம் தொடங்கி பிரசங்கிக்கப்பட்டு வருகிறது. அவர்களும் மோசேயின் ஆகமங்களை நினைவுகூருமாறு அழைக்கப்படுகிறார்கள். தேவனுடைய வார்த்தை எழுதப்பட்டிருக்கிறபோதிலும், அந்த வார்த்தையானது நமக்குப் பிரசங்கிக்கப்பட வேண்டியதும் அவசியமாயிருக்கிறது. வேதத்தின் ரகசியங்களை ஒருவர் நமக்குப் பிரசங்கிக்கும்போது அது நமக்கு எளிதாக விளங்கும்.

யூதர்கள் மோசேயின் ஆகமங்களை ஓய்வுநாள்தோறும் ஜெபாலயங்களில் வாசிக்கிறார்கள். யூதர்கள் சிறுபிள்ளைகளாக இருக்கும்போதே மோசேயின் ஆகமங்களில் அவர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்படுகிறது. இந்தப் பழக்கம் சமீபத்தில் வந்ததல்ல. இது பூர்வகாலம் தொடங்கி கடைப்பிடிக்கப்பட்டு வரும் பழக்கம். மோசேயைக் கனப்படுத்துவதற்காக, யூதருடைய முற்பிதாக்கள், மோசேயின் ஆகமங்களை யூதர்களுக்குப் படித்துக் காண்பிக்கிறார்கள்.

மோசேயின் ஆகமங்கள் சகல பட்டணங்களிலும் பிரசங்கிக்கப்பட்டு வருகிறது. யூதேயா தேசத்தில், யூதர்கள் எந்தப் பட்டணத்தில் குடியிருந்தாலும், அவர்களுக்கு மோசேயின் ஆகமம் அறிமுகம் செய்து வைக்கப்படுகிறது. தாங்கள் எருசலேமில் வாசம்பண்ணாமல், தூர இடங்களிலுள்ள பட்டணங்களில் வாசம்பண்ணுவதினால், தங்களுக்கு மோசேயின் ஆகமங்களைப்பற்றித் தெரியாது என்று எந்த யூதரும் குறைசொல்ல முடியாது. ஏனெனில் பூர்வாகாலம் தொடங்கி சகல பட்டணங்களிலும் மோசேயின் ஆகமங்களைப் பிரசங்கிக்கிறவர்கள் யூதர்கள் மத்தியில் உண்டு.

யூதர்களுக்கு மோசேயின் ஆகமங்களைப்பற்றிய கல்வி திடீரென்று கொடுக்கப்படவில்லை. மோசேயின் ஆகமங்கள் அவர்களுக்கு திடீரென்று உண்டான அதிர்ச்சிப் பிரமாணமல்ல. அது அவர்களுக்கு பூர்வகாலம் தொடங்கி பிரசங்கிக்கப்பட்டு வருகிற பிரமாணம். ஆனால் புறஜாதியாருக்கோ மோசேயின் ஆகமங்களை அறிந்துகொள்ளும் வாய்ப்பு கிடைக்கவில்லை. அவர்களிடத்தில் மோசேயின் ஆகமங்களைக் கடைப்பிடிக்கவேண்டுமென்று திடீரென்று கட்டாயப்படுத்தினால் புறஜாதியாருக்கும் ஒன்றும் புரியாது. அவர்கள் திகைப்பார்கள். கலங்குவார்கள்.

மோசேயின் ஆகமங்களைக் கற்றுக்கொள்வதற்கு புறஜாதியாருக்கு காலஅவசகாசம் தேவைப்படுகிறது. மோசேயின் ஆகங்களைக் கற்றுக்கொள்வதற்கு யூதருக்கு வாய்ப்பு இருந்ததுபோல, புறஜாதியாருக்கு வாய்ப்பு இல்லை. ஆகையினால் புறஜாதியார் மோசேயின் பிரமாணங்களைக் கைக்கொள்ள வேண்டுமென்று கட்டாயப்படுத்துகிற காரியத்தில், யூதர்கள் பொறுமையோடிருக்க வேண்டுமென்று யாக்கோபு ஆலோசனை சொல்லுகிறான்.

யூதர்கள் தங்களுடைய கொள்கைகளைப் புறஜாதியார்மீது தீவிரமாகத் திணித்துவிடக்கூடாது. யாரும் யாரையும் கோபப்படுத்தக்கூடாது. பொறுமையோடிருக்க வேண்டும். அவசரப்படாமல் தேவனுடைய சத்தியத்தைப் பிரசங்கம்பண்ணவேண்டும். நிலத்தில் விதைக்கப்பட்ட விதை, ஒரே நாளில் முளைத்து கனிதராது. அதற்குக் காலஅவகாசம் தேவை. அதுபோலவே யூதர்களும் புறஜாதியார் விஷயத்தில் அவசரப்படாமல் பொறுமையோடிருக்க வேண்டும் என்று யாக்கோபு ஆலோசனை சொல்லுகிறான்.

எருசலேம் சபையாரின் நிருபம் அப் 15 : 22-29

அப் 15:22. அப்பொழுது தங்களில் சிலரைத் தெரிந்துகொண்டு பவுலோடும் பர்னபாவோடும் அந்தியோகியாவுக்கு அனுப்புகிறது அப்போஸ்தலருக்கும் மூப்பருக்கும் சபையாரெல்லாருக்கும் நலமாகக் கண்டது. அவர்கள் யாரென்றால், சகோதரரில் விசேஷித்தவர்களாகிய பர்சபா என்று மறுபேர்கொண்ட யூதாவும் சீலாவுமே.

அப் 15:23. இவர்கள் கையில் அவர்கள் எழுதிக் கொடுத்தனுப்பின நிருபமாவது: அப்போஸ்தலரும் மூப்பரும் சகோதரருமாகிய நாங்கள் அந்தியோகியாவிலும் சீரியாவிலும் சிலிசியாவிலும் இருக்கும் புறஜாதியாராகிய சகோதரருக்கு வாழ்த்துதல் சொல்லி எழுதிய நிருபம் என்னவென்றால்:

அப் 15:24. எங்களால் கட்டளைபெறாத சிலர் எங்களிடத்திலிருந்து புறப்பட்டு, நீங்கள் விருத்தசேதனமடைய வேண்டுமென்றும், நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டுமென்றும் சொல்லி, இப்படிப்பட்ட வார்த்தைகளால் உங்களைக் கலக்கி, உங்கள் ஆத்துமாக்களைப் புரட்டினார்கள் என்று நாங்கள் கேள்விப்பட்டபடியினாலே,

அப் 15:25. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்திற்காகத் தங்கள் பிராணனையும் ஒப்புக்கொடுக்கத் துணிந்தவர்களும் எங்களுக்குப் பிரியமானவர்களுமாயிருக்கிற பர்னபா பவுல் என்பவர்களோடுங்கூட,

அப் 15:26. எங்களால் தெரிந்துகொள்ளப்பட்ட சில மனுஷரை உங்களிடத்திற்கு அனுப்புகிறது ஒருமனப்பட்டுக் கூடின எங்களுக்கு நலமாகக் கண்டது.

அப் 15:27. அந்தப்படியே யூதாவையும் சீலாவையும் அனுப்பியிருக்கிறோம். அவர்களும் இவைகளை வாய்மொழியாக உங்களுக்கு அறிவிப்பார்கள்.

அப் 15:28. எவையெனில், விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளுக்கும், இரத்தத்திற்கும், நெருக்குண்டு செத்ததிற்கும், வேசித்தனத்திற்கும், நீங்கள் விலகியிருக்க வேண்டுமென்பதே.

அப் 15:29. அவசியமான இவைகளையல்லாமல் பாரமான வேறொன்றையும் உங்கள்மேல் சுமத்தாமலிருப்பது பரிசுத்தஆவிக்கும் எங்களுக்கும் நலமாகக் கண்டது; இவைகளுக்கு விலகி நீங்கள் உங்களைக் காத்துக்கொள்வது நலமாயிருக்கும். சுகமாயிருப்பீர்களாக என்று எழுதினார்கள்.

நலமாகக் கண்டது

அப்பொழுது தங்களில் சிலரைத் தெரிந்துகொண்டு பவுலோடும் பர்னபாவோடும் அந்தியோகியாவுக்கு அனுப்புகிறது அப்போஸ்தலருக்கும் மூப்பருக்கும் சபையாரெல்லாருக்கும் நலமாகக் கண்டது. அவர்கள் யாரென்றால், சகோதரரில் விசேஷித்தவர்களாகிய பர்சபா என்று மறுபேர்கொண்ட யூதாவும் சீலாவுமே (அப் 15:22).

யாக்கோபின் ஆலோசனையை எருசலேமிலுள்ள சபையாரெல்லாரும் ஏகமனதாய் ஏற்றுக்கொள்கிறார்கள். புறஜாதியாரில் தேவனிடத்தில் திரும்பியவர்களுக்கு, ஒரு நிருபத்தைக் கொடுத்து அனுப்புகிறார்கள். துர்உபதேசத்திற்கு விரோதமாக இந்த நிருபத்தில் செய்தி அனுப்பப்படுகிறது. மெய்யான உபதேசம் எது என்பதும் இந்த நிருபத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

பவுலும் பர்னபாவும் இந்த நிருபத்தை எடுத்துக்கொண்டு அந்தியோகியாவுக்குத் திரும்பிப்போகிறார்கள். அவர்களைத் தனியாக அனுப்பாமல், அவர்களோடு எருசலேமிலுள்ள சபையாரில் சிலரைச் சேர்த்து அனுப்பவேண்டும் என்று சபையார் தீர்மானிக்கிறார்கள். தங்களில் சிலரைத் தெரிந்துகொண்டு பவுலோடும் பர்னபாவோடும் அந்தியோகியாவுக்கு அனுப்புகிறது அப்போஸ்தலருக்கும், மூப்பருக்கும், சபையாரெல்லாருக்கும் நலமாகக் கண்டது.

அந்தியோகியாவிலுள்ள சபை எருசலேமிலுள்ள சபையின் கிளை சபையாகயிருக்கிறது. அந்தியோகியா சபையின்மீது எருசலேம் சபையார் கரிசனையோடிருக்கிறார்கள். அவர்களுடைய நலனில் அக்கரை கொண்டிருக்கிறார்கள். பவுலும் பர்னபாவும் அந்தியோகியாவுக்குத் தனியாகத் திரும்பிப்போவதற்குப் பதிலாக, அவர்களோடு எருசலேமிலுள்ள சபையில் சிலரை அனுப்பினால், அவர்களுடைய பிரயாணம் இனிமையாக இருக்கும் என்று எருசலேம் சபையார் தீர்மானிக்கிறார்கள்.

பவுலும் பர்னபாவும், எருசலேம் சபையார் தங்களிடத்தில் கொடுத்த நிருபத்தை, அந்தியோகியாவுக்கு எடுத்துச் செல்லுகிறார்கள். நிருபத்திலுள்ள செய்தி மிகவும் முக்கியமானது. அந்தியோகியா சபையிலுள்ள பிரச்சனைக்கு இந்த நிருபத்திலுள்ள செய்தி முற்றுப்புள்ளி வைக்கும். எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்களெல்லாம் ஒருமித்து அந்த நிருபத்தை எழுதி அனுப்பியிருக்கிறார்கள் என்பதை உறுதிபண்ணுவதற்காகவும், எருசலேம் சபையார் தங்களில் சிலரில் தெரிந்துகொண்டு, அவர்களை பர்னபாவோடும் பவுலோடும் அந்தியோகியாவுக்கு அனுப்புகிறார்கள்.

ஆதித் திருச்சபையில் பரிசுத்தவான்கள் மத்தியில் அந்நியோன்னிய ஐக்கியம் ஸ்திரமாகயிருந்தது. ஆதித்திருச்சபைகளில் அநேக விசுவாசிகள் இருந்தாலும், அவர்களெல்லோருமே ஒரே சரீரத்தின் வெவ்வேறு அவயவங்களாக, ஐக்கியமாக இருக்கிறார்கள்.

பவுலோடும் பர்னபாவோடும் அந்தியோகியாவுக்குப் பிரமாணம் பண்ணுவதற்கு சகோதரர்களில் சாதாரணமானவர்களைத் தெரிந்தெடுக்காமல், சகோதரில் விசேஷித்த வர்களைத் தெரிந்தெடுக்கிறார்கள். பர்சபா என்று மறுபெயர் கொண்ட யூதாவும் சீலாவும் எருசலேம் திருச்சபையில் சகோதரரில் விசேஷித்தவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் இருவரையும் பவுலோடும் பர்னபாவோடும் அந்தியோகியாவுக்கு அனுப்புகிறார்கள்.

புறஜாதியாராகிய சகோதரர்

இவர்கள் கையில் அவர்கள் எழுதிக் கொடுத்தனுப்பின நிருபமாவது: அப்போஸ்தலரும் மூப்பரும் சகோதரருமாகிய நாங்கள் அந்தியோகியாவிலும் சீரியாவிலும் சிலிசியாவிலும் இருக்கும் புறஜாதியாராகிய சகோதரருக்கு வாழ்த்துதல் சொல்லி எழுதிய நிருபம் என்னவென்றால்: (அப் 15:23)

எருசலேம் சபையிலுள்ள அப்போஸ்தலர்கள் மிகுந்த மனத்தாழ்மையோடு அந்தி யோகியாவிலுள்ள சகோதரருக்கு நிருபம் எழுதி அனுப்புகிறார்கள். இந்த நிருபத்தில் அந்தியோகியாவில் ஏற்பட்ட உபதேச பிரச்சனையைக் குறித்து, தாங்கள் தீர்மானித்திருக்கிற காரியத்தை எழுதி அனுப்பியிருக்கிறார்கள். அப்போஸ்தலரும், மூப்பரும், சகோதரருமாகிய தாங்கள் இந்த நிருபத்தை எழுதி அனுப்புவதாகச் சொல்லுகிறார்கள். அப்போஸ்தலர்கள் தங்களை "சகோதரர்கள்" என்று சொல்லி மிகுந்த மனத்தாழ்மையோடு இந்த நிருபத்தை எழுதுகிறார்கள்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடம் "நீங்களோ ரபீ என்றழைக்கப்படாதிருங்கள்; கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப் போதகராயிருக்கிறார், நீங்கள் எல்லாரும் சகோதரராயிருக்கிறீர்கள்" (மத் 23:8) என்று ஏற்கனவே சொல்லியிருக்கிறார். தங்கள் ஆண்டவருடைய உபதேசத்தின் பிரகாரம், அப்போஸ்தலர்கள் தங்களை "சகோதரருமாகிய நாங்கள்" என்று அழைக்கிறார்கள்.

புறஜாதி மார்க்கத்திலிருந்து இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட விசுவாசிகளையும், அப்போஸ்தலர்கள் "சகோதரர்" என்றே அழைக்கிறார்கள். முதலாவதாக அவர்களுக்கு வாழ்த்துதல் சொல்லி நிருபத்தை எழுதுகிறார்கள். தாங்கள் அவர்களுக்கு ஆதரவாகயிருப்பத்தையும், அவர்களோடுள்ள ஐக்கியத்தில் தாங்கள் ஸ்திரமாகயிருப்பதையும் இந்த நிருபத்தின் மூலமாக உறுதிபண்ணுகிறார்கள். அந்தியோகியாவிலும், சீரியாவிலும், சிலிசியாவிலும் இருக்கும் விசுவாசிகளை "புறஜாதியாராகிய சகோதரர்" என்று அழைத்து, அவர்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள்.

அவர்கள் புறஜாதியாராகயிருந்தாலும், அவர்களும் அப்போஸ்தலருக்கு சகோதரராகயிருக்கிறார்கள். புறஜாதி மார்க்கத்திலிருந்து இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட விசுவாசிகளும் அப்போஸ்தலருக்கு உடன் சுதந்தரராகயிருக்கிறார்கள். ஒரே சரீரத்தில் அவயவங்களாகயிருக்கிறார்கள். அவர்களை உற்சாகப்படுத்தும் வண்ணமாக, எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்கள், அவர்களை சகோதரரென்று அழைத்து, வாழ்த்துதல் சொல்லுகிறார்கள்.

கட்டளை பெறாத சிலர்

எங்களால் கட்டளைபெறாத சிலர் எங்களிடத்திலிருந்து புறப்பட்டு, நீங்கள் விருத்தசேதனமடைய வேண்டுமென்றும், நியாயப் பிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டுமென்றும் சொல்லி, இப்படிப்பட்ட வார்த்தைகளால் உங்களைக் கலக்கி, உங்கள் ஆத்துமாக்களைப் புரட்டினார்கள் என்று நாங்கள் கேள்விப்பட்ட படியினாலே, (அப் 15:24)

அந்தியோகியா சபையில் ஏற்பட்டிருக்கிற பிரச்சனையை எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்கள் கேள்விப்பட்டிருக்கிறார்கள். அங்கு பிரச்சனையை உண்டுபண்ணியவர்கள் எருசலேமிலுள்ள சபையிலிருந்து புறப்பட்டுப்போனவர்கள். ஆனால் அவர்களை எருசலேம் சபையார் அனுப்பவில்லை. அவர்கள் சபையாரின் கட்டளையையும் பெறவில்லை. அப்படிப்பட்டவர்கள் அந்தியோகியா சபைக்கு வந்து வார்த்தைகளால் அங்குள்ள விசுவாசிகளை கலக்கியிருக்கிறார்கள்.

புறஜாதியாராகிய சகோதரரை வார்த்தையால் கலக்கியவர்கள், எருசலேமிலுள்ள சபையிலிருந்து புறப்பட்டவர்கள்தான் என்பதை அப்போஸ்தலர்கள் அங்கீகரிக்கிறார்கள். புறஜாதியார் விருத்தசேதனமடைய வேண்டும் என்றும், மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டும் என்றும், எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்கள் அவர்களுக்குச் சொல்லி அனுப்பவில்லை. இந்த உபதேசத்தைக் கொடுக்குமாறு அவர்களுக்குக் கட்டளை கொடுக்கவுமில்லை.

எருசலேமிலுள்ள சபையாரால் கட்டளை பெறாத சிலர், எருசலேமிலிருந்து புறப்பட்டு வந்து, அந்தியோகியாவிலுள்ள புறஜாதி சகோதரரிடம் "நீங்கள் விருத்தசேதனமடைய வேண்டும் என்றும், நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டும் என்றும்" சொல்லியிருக்கிறார்கள். தங்களுடைய வார்த்தைகளால் சகோதரரைக் கலக்கியிருக்கிறார்கள். அந்தியோகியாவிலுள்ள விசுவாசிகளுக்கு இதுவரையிலும் பர்னபா, பவுல் ஆகியோர் மூலமாக ஒரே சீரான உபதேசம் கிடைத்தது. அவர்களுடைய உபதேசமும் ஆரோக்கியமாயிருந்தது. ஆனால் எருசலேமிலிருந்து புறப்பட்டு வந்த சிலர், தங்களுடைய வார்த்தைகளால் விசுவாசிகளைக் கலக்கிவிடுகிறார்கள்.

"இயேசுகிறிஸ்துவை விசுவாசித்தால் நீ இரட்சிக்கப்படுவாய்" என்பதுதான் அடிப்படை உபதேசம். ஆனால் எருசலேமிலிருந்து வந்த சிலரோ "நீங்கள் மோசேயின் பிரமாணத்தைக் கைக்கொள்ளவில்லை என்றால் இரட்சிக்கப்படமாட்டீர்கள்" என்று நூதன உபதேசத்தைப் போதகம்பண்ணுகிறார்கள். இவர்களுடைய உபதேசம் சாதாரண வார்த்தைகள்தான். இதில் ஜீவனில்லை. இவை மனுஷனுடைய சுயகற்பனைகள். தேவன் இந்த உபதேசத்தைக் கொடுக்கவில்லை. பரிசுத்த ஆவியானவர் அவர்களுடைய உபதேசத்தை அபிஷேகம்பண்ணவில்லை.

மனுஷருடைய பெருமையினால் சில சமயங்களில் சபை கலக்கமடைகிறது. அவர்கள் கர்த்தரை நேசிப்பதற்குப் பதிலாக தங்களையே நேசித்து, தங்களுக்குப் பிரியமானபடி போதிக்கிறார்கள். தங்களுடைய போதனையைக் கேட்பதற்கு யாராவது கூடிவந்தால், தங்களுக்கு இஷ்டமான வார்த்தைகளைப் பேசிவிடுகிறார்கள். இப்படிப்பட்ட உபதேசத்தினால் விசுவாசிகள் பாதிக்கப்படுவார்கள். அவர்கள் கலக்கமடைவார்கள்.

எருசலேமிலிருந்து வந்த சிலர் நூதன உபதேசங்களைப் போதித்து, அவர்களுடைய ஆத்துமாக்களைப் புரட்டிப்போட்டிருக்கிறார்கள். சீராகயிருந்த உபதேசம் இவர்கள் மூலமாய் தாறுமாறாயிற்று. விசுவாசத்தினால் கட்டியெழுப்பப்பட்டதை இவர்கள் தங்கள் துர்உபதேசத்தினால் இடித்துப் போட்டுவிடுகிறார்கள். சபையை ஊன்றக்கட்டுவது கர்த்தரின் ஊழியம். கட்டப்பட்டிருக்கிற சபையை இடித்துப்போடுவது சாத்தானுடைய கிரியை.

வாய்மொழியாக அறிவிப்பார்கள்

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்திற்காகத் தங்கள் பிராணனையும் ஒப்புக்கொடுக்கத் துணிந்தவர்களும் எங்களுக்குப் பிரியமானவர்களுமாயிருக்கிற பர்னபா பவுல் என்பவர்களோடுங்கூட, எங்களால் தெரிந்துகொள்ளப்பட்ட சில மனுஷரை உங்களிடத்திற்கு அனுப்புகிறது ஒருமனப்பட்டுக் கூடின எங்களுக்கு நலமாகக் கண்டது. அந்தப்படியே யூதாவையும் சீலாவையும் அனுப்பியிருக்கிறோம். அவர்களும் இவைகளை வாய்மொழியாக உங்களுக்கு அறிவிப்பார்கள் (அப் 15:25-27).

எருசலேமிலிருந்து நிருபங்களை எடுத்துச் செல்லுகிற அப்போஸ்தலரைப் பற்றி, எருசலேமிலுள்ள சபையார் நற்சாட்சி கொடுக்கிறார்கள். பவுலும் பர்னபாவும் அந்தியோகியாவில் ஊழியம் செய்து வருகிறார்கள். அப்போது யூதேயா தேசத்திலிருந்து வந்த சிலர், புறஜாதி விசுவாசிகள் விருத்தசேதனம் பெறுவது அவசியம் என்று நூதன உபதேசத்தைச் சொல்லுகிறார்கள். இதனால் அப்போஸ்தலருக்கும் அவர்களுக்கும் வாக்குவாதமுண்டாயிற்று. நூதன உபதேசத்தினால் அப்போஸ்தலரின் ஊழியம் பாதிக்கப்படுகிறது. புறஜாதியார் இயேசுகிறிஸ்துவுக்கு மாத்திரம் தங்களை ஒப்புக்கொடுப்பதற்குப் பதிலாக, மோசேயின் பிரமாணத்திற்கும் ஒப்புக்கொடுக்கவேண்டும் என்று நூதன உபதேசம் உண்டாயிற்று. இந்தப் பிரச்சனையைத் தீர்த்து வைப்பதற்காக, எருசலேமிலுள்ள அப்போஸ்தலர், ஒரு நிருபத்தை பவுல், பர்னபா மூலமாக கொடுத்து அனுப்புகிறார்கள்.

தாங்கள் எழுதி அனுப்புகிற நிருபத்தில் பவுலையும் பர்னபாவையும் பற்றி நற்சாட்சி கொடுத்து எழுதுகிறார்கள். "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்திற்காகத் தங்கள் பிராணனையும் ஒப்புக்கொடுக்கத் துணிந்தவர்களும் எங்களுக்குப் பிரியமானவர்களுமாயிருக்கிற பர்னபா பவுல் என்பவர்கள்" என்று குறிப்பிடுகிறார்கள். ஊழியக்காரர்களுடைய நற்பண்புகளை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லுவது மிகவும் நல்லது. ஊழியக்காரர்கள் சுய பெருமையில்லாதவர்கள். தங்களைப்பற்றி சுயபெருமையோடு பேசமாட்டார்கள். ஆனாலும் அவர்களிடத்திலுள்ள நல்ல குணாதிசயங்களை எல்லோரும் அறிந்துகொள்ள வேண்டும். ஊழியக்காரர்கள் தங்களைப்பற்றி சொல்லாவிட்டாலும், அவர்களைப்பற்றித் தெரிந்தவர்கள், அவர்களுடைய நல்லகுணாதிசயங்களை மற்றவர்களுக்கு எடுத்துச்சொல்லவேண்டும். பவுலையும் பர்னபாவையும் பற்றிச் சொல்லும்போது "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்திற்காக தங்கள் பிராணனையும் ஒப்புக்கொடுக்கத் துணிந்தவர்கள்" என்று அவர்களைப்பற்றி எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்கள் நற்சாட்சி கொடுக்கிறார்கள்.

பவுலும் பர்னபாவும் இயேசுகிறிஸ்துவுக்காக எதையும் செய்யக்கூடியவர்கள். பல சமயங்களில் ஆபத்துக்கள் அவர்களைச் சூழ்ந்திருந்தாலும், அவர்கள் கிறிஸ்துவுக்காகப் பயப்படாமல் ஊழியம் செய்தவர்கள். கிறிஸ்துவின் நல்ல போர்ச்சேவகராக யுத்தம்பண்ணுகிறவர்கள். கர்த்தருக்காக உண்மையுள்ளவர்களாக இருக்கிறவர்கள், அவருக்கு உண்மையுள்ள ஊழியங்களைச் செய்வார்கள். உண்மையுள்ளவர்கள் உண்மையில்லாத காரியங்களைச் செய்யமாட்டார்கள். கர்த்தருக்குப் பிரியமானவர்கள், கர்த்தருக்கு உண்மையாய் ஊழியம் செய்கிறவர்கள், நூதன உபதேசங்களையும், துர்உபதேசங்களையும் போதகம்பண்ணமாட்டார்கள்.

எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்கள், பவுல் பர்னபா ஆகியோரோடு கூடவந்திருக்கும், யூதாவையும் சீலாவையும் பற்றிச் சாட்சியாகச் சொல்லுகிறார்கள். அவர்கள் இருவரும் தங்களால் தெரிந்துகொள்ளப்பட்ட மனுஷர் என்பதை அறிவிக்கிறார்கள். எருசலேமில் விசுவாசிகள் ஒருமனப்பட்டுக் கூடியிருந்தபோது, அங்கு நடைபெற்ற விவாதத்திற்கும், அவர்கள் எடுத்த முடிவுக்கும் யூதாவும் சீலாவும் சாட்சிகளாகயிருக்கிறார்கள். பவுல் பர்னபா ஆகியோரோடு, யூதாவும் சீலாவும் எருசலேமில் ஒருமனப்பட்டுக் கூடின சபையார் எழுதியிருக்கிற நிருபத்தை, வாய்மொழியாக அவர்களுக்கு அறிவிப்பார்கள் என்றும் தங்களுடைய நிருபத்தில் எழுதியிருக்கிறார்கள்.

ஒரு நிருபத்தில் எழுதப்பட்டிருக்கும் செய்தியை வாய்மொழியாக அறிவிக்கும்போது இரட்டிப்பான ஆசீர்வாதமுண்டாகும். விசுவாசிகள் எழுதப்பட்டிருக்கிற சத்தியத்தை வாசிக்கலாம். அதே வேளையில் அந்தச் சத்தியம் உபதேசம்பண்ணப்படும்போது தங்கள் காதுகளாலும் கேட்கலாம். விசுவாசம் கேள்வியினாலே வரும்.

பரிசுத்த ஆவிக்கும் எங்களுக்கும்

எவைவெயனில், விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளுக்கும், இரத்தத்திற்கும், நெருக்குண்டு செத்ததிற்கும், வேசித்தனத்திற்கும், நீங்கள் விலகியிருக்க வேண்டுமென்பதே. அவசியமான இவைகளையல்லாமல் பாரமான வேறொன்றையும் உங்கள்மேல் சுமத்தாமலிருப்பது பரிசுத்தஆவிக்கும் எங்களுக்கும் நலமாகக் கண்டது; இவைகளுக்கு விலகி நீங்கள் உங்களைக் காத்துக்கொள்வது நலமாயிருக்கும். சுகமாயிருப்பீர்களாக என்று எழுதினார்கள் (அப் 15:28,29).

எருசலேமில் சபையார் ஒருமனப்பட்டு கூடியிருக்கும்போது, யாக்கோபு சொன்ன ஆலோசனையை எல்லோரும் ஒருமனதாக அங்கீகரித்து, அதையே தங்கள் முடிவாக இந்த நிருபத்தில் எழுதியிருக்கிறார்கள். புறஜாதியார் விக்கிரகங்களுக்குப் படைத்தது எதையும் புசிக்கக்கூடாது. விக்கிரகமும், விக்கிரகத்திற்குப் படைத்ததும் தீட்டானது. ஆகையினால் புறஜாதியாரில் இயேசுகிறிஸ்துவிடத்திற்குத் திரும்பி வந்திருக்கிறவர்கள் விக்கிரகங்களுக்கும், விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளுக்கும் விலகியிருக்க வேண்டும்.

இரத்தத்திற்கும் நெருங்குண்டு செத்ததற்கும் விலகியிருக்கவேண்டும் என்று நிருபத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இரத்தம் சிந்தப்படவேண்டும். இரத்தத்தைப் புசிக்கக்கூடாது. மோசே யூதருக்குப் பிரமாணத்தைக் கொடுப்பதற்கு முன்பாகவே, ஜனங்கள் மத்தியில் இரத்தத்தையும் நெருங்குண்டு செத்ததையும் புசிக்கக்கூடாது என்னும் பழக்கம் ஜனங்கள் மத்தியில் பொதுவாக காணப்பட்டது. அது அசுத்தமானது. அருவருப்பானது. ஆகையினால் புறஜாதி சகோதரர்கள் இவற்றிற்கு விலகியிருக்கவேண்டும்.

வேசித்தனத்திற்கு விலகியிருக்க வேண்டுமென்று அந்த நிருபத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இந்த மூன்று காரியங்களும் யூதருக்குத் தீட்டானவை. யூதர்கள் இவற்றை அருவருப்பாக கருதுகிறார்கள். புறஜாதி சகோதரர்கள் இந்தக் காரியங்களுக்கு விலகியிருந்து, யூதமார்க்கத்திலிருந்து இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட விசுவாசிகளோடு ஐக்கியமாகயிருக்கவேண்டும். விசுவாசிகள் ஒருவருக்கொருவர் ஆலோசனை கூறி, தங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணவேண்டும். யூதருக்குத் தீட்டானதைச் செய்வதின் மூலமாக, புறஜாதி சகோதரர்கள் யூதர்களைக் கலங்கப்பண்ணலாகாது.

எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்கள் தாங்கள் எழுதின நிருபத்தில், தங்களுடைய தீர்மானத்தை எழுதும்போது, "இது பரிசுத்த ஆவிக்கும் எங்களுக்கும் நலமாகக் கண்டது" என்று எழுதுகிறார்கள். தாங்கள் எடுத்த தீர்மானம் தங்களுடைய சுயதீர்மானம் அல்ல என்றும், பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலினாலேயே தாங்கள் இந்தத் தீர்மானத்தை எடுத்திருப்பதாகவும் உறுதிபண்ணுகிறார்கள். தங்களுக்கு நலமாகக் கண்டதை மாத்திரம் தீர்மானிக்காமல், பரிசுத்த ஆவிக்கும் நலமாகக் கண்டதையே தீர்மானித்திருப்பதாக இந்த நிருபத்தில் தெளிவாக எழுதுகிறார்கள்.

அந்தியோகியாவிலுள்ள விசுவாசிகளுக்கு, எருசலேமிலுள்ள விசுவாசிகள் ஆவிக்குரிய பெற்றோரைப்போல இருக்கிறார்கள். அவர்களுக்கு தங்கள் அன்பையும் கரிசனையையும் காண்பிக்கிறார்கள். புறஜாதி விசுவாசிகள் மீது பாரமான நுகத்தைச் சுமத்திவிடக்கூடாது என்பதில் மிகுந்த எச்சரிப்போடிருக்கிறார்கள்.

இந்த நிருபத்தில் தாங்கள் எழுதியிருக்கிற சுமையை அல்லாமல், வேறு பாரமான எந்த சுமையையும் அவர்கள்மீது சுமத்தக்கூடாது என்பதை உறுதியாய் நம்புகிறார்கள். பாரமான சுமையைச் சுமத்தினால் புறஜாதி சகோதரர் சோர்ந்துபோவார்கள். விசுவாசத்தை விட்டு பின்வாங்கிப்போவார்கள். பாரமான சுமையோடு அவர்களால் விசுவாச ஓட்டத்தை ஓட முடியாது. இவையெல்லாவற்றையும் மனதில் கொண்டு "அவசியமான இவைகளை அல்லாமல் பாரமான வேறொன்றையும் உங்கள்மேல் சுமத்தாமலிருப்பது பரிசுத்த ஆவிக்கும் எங்களுக்கும் நலமாகக் கண்டது" என்று நிருபத்தில் எழுதியிருக்கிறார்கள்.

ஊழியக்காரர்கள் விசுவாசிகள்மீது அவசியமான சுமையை மாத்திரமே சுமத்தவேண்டும். அவசியமானது அல்லாமல், பாரமான வேறொன்றையும் அவர்கள்மீது ஊழியக்காரர்கள் சுமத்தக்கூடாது. இயேசுகிறிஸ்து நமக்கு உபதேசித்திருக்கிற சத்தியம் மாத்திரமே போதுமானது. இதற்குமேல் வேறு எந்த உபதேசத்தையும் ஊழியக்காரர்கள் கூட்டக்கூடாது. கிறிஸ்துவின் பிரமாணத்தை நாம் கடைப்பிடித்தால் மாத்திரம் போதுமானது. இது மாத்திரமே அவசியமானது. இது தவிர ஊழியக்காரர்கள் தங்களுடைய சுயபிரமாணங்களை விசுவாசிகள்மீது சுமத்தக்கூடாது.

புதிய பிரமாணங்களை ஏற்படுத்துவதற்கு எந்த ஊழியக்காரருக்கும் அதிகாரமில்லை. இயேசுகிறிஸ்துவின் பிரமாணத்திற்கு விசுவாசிகள் கீழ்ப்படிகிறார்களா என்பதை மாத்திரமே ஊழியக்காரர்கள் கவனிக்கவேண்டும்.

எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்கள் புறஜாதி சகோதரர்களைக் கடிந்துகொள்ளவில்லை. தங்கள் நிருபத்தில் அவர்களைச் சபிக்கிற வார்த்தைகள் எதையும் பயன்படுத்தவில்லை. "இவைகளுக்கு விலகி நீங்கள் உங்களைக் காத்துக்கொள்வது நலமாயிருக்கும்" என்று மாத்திரமே எழுதுகிறார்கள். அவர்களுக்குச் சாபம் உண்டாகும் என்றோ, அவர்களுக்கு ஐயோ என்றோ எந்தவிதமான வார்த்தையும் அவர்களுடைய நிருபத்தில் இடம்பெறவில்லை. தங்களுடைய ஆலோசனைக்கு மீறினால் அவர்களுக்குச் சாபம் உண்டாகும் என்று கடிந்து கூறாமல், இவைகளுக்கு விலகி நீங்கள் உங்களைக் காத்துக்கொள்வது நலமாயிருக்கும் என்று மாத்திரமே எழுதுகிறார்கள். அப்போஸ்தலருடைய நிருபத்தில் அன்பும் இனிமையுமிருக்கிறது. அவர்கள்மீது கரிசனையோடு இந்த நிருபத்தை எழுதுகிறார்கள்.

அப்போஸ்தலர்கள் தாங்கள் சொல்லுகிற சத்தியத்தை, நயமான வார்த்தைகளைப் பயன்படுத்தி போதகம்பண்ணுகிறார்கள். பரிசுத்த ஆவியானவரே தம்முடைய ஊழியக்காரர்களுக்கு நல்ல வார்த்தைகளைக் கொடுக்கிறார். "நீங்கள் மோசேயின் முறைமையின்படியே விருத்த சேதனமடையாவிட்டால் இரட்சிக்கப்படமாட்டீர்கள்" (அப் 15:1) என்று யூதேயாவிலிருந்து வந்த சிலர் அந்தியோகியாவிலுள்ள சகோதரருக்குப் போதகம்பண்ணினார்கள். ஆனால் எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்களோ, அந்தியோகியாவிலுள்ள சகோதரரைக் கடிந்துகொள்ளாமல், பயமுறுத்தாமல், "இவைகளுக்கு விலகி நீங்கள் உங்களைக் காத்துக்கொண்டால் நலமாயிருக்கும்" என்று மென்மையான வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார்கள்.

அப்போஸ்தலருடைய வார்த்தையில் அன்பும் கரிசனையும் இருக்கிறது. எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்கள் தங்கள் நிருபத்தை எழுதி முடிக்கும்போது "சுகமாயிருப்பீர்களாக" என்கிற வாழ்த்து செய்தியோடு முடிக்கிறார்கள். புறஜாதி சகோதரருக்கு சந்தோஷம் சமாதானமும், மேன்மையும் உண்டாயிருக்கவேண்டும் என்று வாழ்த்துகிறார்கள்.

அந்தியோகியா
அப் 15 : 30-35

அப் 15:30. அவர்கள் அனுப்பி விடப்பட்டு, அந்தியோகியாவுக்கு வந்து, சபையைக் கூடிவரச்செய்து, நிருபத்தை ஒப்புவித்தார்கள்.

அப் 15:31. அதை அவர்கள் வாசித்து, அதனாலுண்டாகிய ஆறுதலுக்காகச் சந்தோஷப்பட்டார்கள்.

அப் 15:32. யூதா சீலா என்பவர்களும் தீர்க்கதரிசிகளாயிருந்த படியினாலே அநேக வார்த்தைகளினால் சகோதரருக்குப் புத்திசொல்லி, அவர்களைத் திடப்படுத்தி;

அப் 15:33. சிலகாலம் அங்கேயிருந்து, பின்பு சகோதரரால் சமாதானத்தோடே அப்போஸ்தலரிடத்திற்கு அனுப்பி விடப்பட்டார்கள்.

அப் 15:34. ஆகிலும் சீலாவுக்கு அங்கே தரித்திருக்கிறது நலமாய்க் கண்டது.

அப் 15:35. பவுலும் பர்னபாவும் அந்தியோகியாவிலே சஞ்சரித்து, வேறே அநேகரோடுங்கூடக் கர்த்தருடைய வசனத்தை உபதேசித்துப் பிரசங்கித்துக் கொண்டிருந்தார்கள்.

நிருபத்தை ஒப்புவித்தார்கள்

அவர்கள் அனுப்பிவிடப்பட்டு, அந்தியோகியாவுக்கு வந்து, சபையைக் கூடிவரச்செய்து, நிருபத்தை ஒப்புவித்தார்கள். அதை அவர்கள் வாசித்து, அதனாலுண்டாகிய ஆறுதலுக்காகச் சந்தோஷப்பட்டார்கள் (அப் 15:30,31).

அப்போஸ்தலர்கள் எருசலேமிலுள்ள சபையாரால் அனுப்பிவிடப்படுகிறார்கள். அவர்கள் அந்தியோகியாவுக்கு உடனடியாக வருகிறார்கள். எருசலேமில் அதிக நாட்கள் தங்கவில்லை. தாங்கள் வந்த வேலை முடிந்தவுடன் அப்போஸ்தலர்கள் எருசலேமிலிருந்து அந்தியோகியாவுக்குப் புறப்பட்டு வந்துவிடுகிறார்கள். அந்தியோகியாவுக்கு வந்தவுடன், சபையைக் கூடிவரச்செய்து, அவர்களிடத்தில் நிருபத்தை ஒப்புவிக்கிறார்கள். அந்தியோகியாவிலுள்ள விசுவாசிகளுக்கு எதுவெல்லாம் தடைபண்ணப்பட்டிருக்கிறது என்பது தெரிந்திருக்கவேண்டும். மேலும் தடைபண்ணப்பட்ட அவைகளையல்லாமல், பாரமான வேறொன்றையும் அவர்கள்மேல் சுமத்தக்கூடாது என்பதும் அவர்களுக்குத் தெரிந்திருக்கவேண்டும்.

சபையார் நிருபத்தை வாசித்து, அதனால் உண்டாகிய ஆறுதலுக்காக சந்தோஷப்படுகிறார்கள். பாரம்பரிய பிரமாணம் என்னும் பாரமான சுமையிலிருந்து விசுவாசிகளுக்கு விடுதலை கிடைத்திருக்கிறது. விருத்தசேதனம் பண்ணவேண்டுமா, அல்லது பண்ணவேண்டியதில்லையா என்பதில் அவர்கள் குழப்பத்தோடிருந்தார்கள். இப்போது நிருபத்தின் மூலமாக, விசுவாசிகள் விருத்தசேதனம் பண்ணவேண்டியதில்லை என்பது உறுதியாயிற்று. அதனால் அவர்கள் குழப்பம் நீங்கி சமாதானமும், ஆறுதலும், சந்தோஷமும் அடைந்திருக்கிறார்கள்.

இரட்சிக்கப்படுவதற்கு விருத்த சேதனம் பண்ணிக்கொள்ளவேண்டியது அவசியமற்றது என்னும் செய்தி புறஜாதியார் மத்தியில் பரம்பிற்று. இதனால் புறஜாதியாரில் அநேகர் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்கிறார்கள். இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறார்கள். இரட்சிக்கப்பட்டு சபையிலே சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். சபையின் சமாதானம் காத்துக்கொள்ளப்படுகிறது.

யூதா, சீலா

யூதா சீலா என்பவர்களும் தீர்க்கதரிசிகளாயிருந்தபடியினாலே அநேக வார்த்தைகளினால் சகோதரருக்குப் புத்திசொல்லி, அவர்களைத் திடப்படுத்தி; சில்காலம் அங்கேயிருந்து, பின்பு சகோதரரால் சமாதானத்தோடே அப்போஸ்தலரிடத்திற்கு அனுப்பி விடப்பட்டார்கள். ஆகிலும் சீலாவுக்கு அங்கே தரித்திருக்கிறது நலமாய்க் கண்டது (அப் 15:32-34).

பவுல் பர்னபா ஆகியோரோடு, எருசலேமிலிருந்து யூதாவும் சீலாவும் வந்திருக்கிறார்கள். இவர்கள் தீர்க்கதரிசிகளாக இருக்கிறார்கள். ஆகையினால் அநேக வார்த்தைகளினாலே சகோதரருக்குப் புத்திசொல்லி அவர்களைத் திடப்படுத்துகிறார்கள். பவுலும் பர்னபாவும் அந்தியோகியாவிலுள்ள விசுவாசிகளுக்குத் தொடர்ந்து பிரசங்கம் செய்திருக்கிறார்கள். ஆனாலும் யூதாவும் சீலாவும் தங்களோடிருப்பதினால், அப்போஸ்தலர் மிகவும் சந்தோஷப்பட்டு, அவர்களையும் ஊழியத்தில் பயன்படுத்துகிறார்கள். கர்த்தர் ஒவ்வொரு ஊழியக்காரருக்கும் தம்முடைய சித்தத்தின் பிரகாரம் வெவ்வேறு வரங்களைக் கொடுத்திருக்கிறார். சபையில் பல்வேறு விதமான வரங்கள் கிரியை செய்யும்போது, அது சபையின் வளர்ச்சிக்கு மிகவும் பிரயோஜனமுள்ளதாக இருக்கும்.

யூதாவும் சீலாவும் சகோதரருக்குப் புத்திசொல்லி அவர்களை இயேசுகிறிஸ்துவில் திடப்படுத்துகிறார்கள். அவர்கள் கிறிஸ்துவைத் தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்டதற்காக அவர்களை உற்சாகப்படுத்துகிறார்கள். கிறிஸ்துவுக்குச் சாட்சியாக ஜீவிக்குமாறு அவர்களுக்குப் புத்திசொல்லுகிறார்கள்.

விசுவாசத்தில் நிலைத்திருக்கும்படி யூதாவும் சீலாவும் சகோதரருக்குப் புத்தி சொல்லுகிறார்கள். அவர்கள் நன்மையானதைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும், பக்தி விருத்திக்கேதுவான காரியங்களில் பங்குபெறவேண்டுமென்றும் அவர்களுக்கு ஆலோசனை சொல்லுகிறார்கள். இவர்களுடைய ஊழியம் விசுவாசிகளுக்கு மிகுந்த ஆறுதலாகவும் ஆசீர்வாதமாகவும் இருந்தது. கர்த்தருடைய சந்தோஷமே நம்முடைய பெலன். கர்த்தருக்குள் நாம் ஒவ்வொருவரும் சந்தோஷமாயிருக்கவேண்டும்.

ஒரு ஊழியக்காரரின் உபதேசச்செய்தி ஒரு சில விசுவாசிகளுக்கு ஆசீர்வாதமாகயிருக்கும். வேறு ஊழியக்காரர் உபதேசம் பண்ணும்போது, அந்தச் செய்தி வேறு சில விசுவாசிகளுக்கு ஆசீர்வாதமாயிருக்கும். ஊழியக்காரர்கள் அநேக வார்த்தைகளைச் சொல்லி உபதேசம்பண்ணினாலும், இவையெல்லாம் சபையின் பக்திவிருத்திக்கேதுவாகவே நடைபெறுகிறது.

யூதாவும் சீலாவும் அந்தியோகியாவில் சில காலம் தங்கியிருக்கிறார்கள். அதன்பின்பு அங்குள்ள சகோதரர்கள் இவர்களை எருசலேமிலுள்ள அப்போஸ்தலரிடத்திற்கு சமாதானத்தோடே அனுப்பிவிடுகிறார்கள். யூதா மாத்திரமே எருசலேமுக்குத் திரும்பிப் போகிறான். சீலா அந்தியோகியாவில் தங்கிவிடுகிறான். இதற்கான காரணம் வேதாகமத்தில் குறிப்பிடப்படவில்லை.

பவுலும் பர்னபாவும்

பவுலும் பர்னபாவும் அந்தியோகியாவிலே சஞ்சரித்து, வேறே அநேகரோடுங்கூடக் கர்த்தருடைய வசனத்தை உபதேசித்துப் பிரசங்கித்துக் கொண்டிருந்தார்கள் (அப் 15:35).

பவுலும் பர்னபாவும் புறஜாதியார் மத்தியிலே ஊழியம் செய்வதற்கு நியமிக்கப் பட்டிருந்தாலும், அந்தியோகியாவிலும் சஞ்சரித்து கர்த்தருடைய வசனத்தை உபதேசித்துப் பிரசங்கிக்கிறார்கள். அந்தியோகியாவில் ஒய்வெடுப்பதற்காக பவுலும் பர்னபாவும் தங்கியிருக்கவில்லை. அவர்கள் அங்கு சஞ்சரிக்கிற காலத்தில் கர்த்தருடைய வசனத்தை உபதேசித்து பிரசங்கிக்கிறார்கள்.

அக்காலத்தில் புறஜாதியாரில் அநேகர் அந்தியோகியாவுக்கு வருவது வழக்கம். இவர்கள் எல்லா பகுதிகளிலிருந்தும் வருவார்கள். அப்போஸ்தலர்கள் பல தேசங்களுக்குப் போய், புறஜாதியார் மத்தியில் ஊழியம் செய்வதற்குப் பதிலாக, அந்தியோகியாவிலே தங்கியிருந்து, அங்கு வருகிற புறஜாதியாருக்கு ஊழியம் செய்கிறார்கள். இதனால் அப்போஸ்தலரின் ஊழியம் சிறப்பாக நடைபெறுகிறது.

பவுல் பர்னபா ஆகியோரோடு வேறே அநேகரும் சேர்ந்து கர்த்தருடைய ஊழியத்தைச் செய்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின் திராட்சத்தோட்டத்தில் வேலையாட்கள் அதிகரிக்கும்போது, நாம் வேலை செய்யாமல் சும்மாயிருந்துவிடக்கூடாது. சோம்பேறியாக இருக்கக்கூடாது. திராட்சத்தோட்டத்தில் எல்லோருக்குமே ஊழிய வாய்ப்பு உண்டு. மற்றவர்கள் உற்சாகமாய் வேலைசெய்யும்போது, நாமும் அதைப்பார்த்து உற்சாகமடையவேண்டும். சோர்ந்துபோகாமல் சுறுசுறுப்பாய் ஊழியம் செய்யவேண்டும்.

பவுலும் பர்னபாவும் பிரிகிறார்கள்
அப் 15 : 36-41

அப் 15:36. சிலநாளைக்குப்பின்பு பவுல் பர்னபாவை நோக்கி: நாம் கர்த்தருடைய வசனத்தை அறிவித்திருக்கிற சகல பட்டணங்களிலுமுள்ள சகோதரர்கள் எப்படியிருக்கிறார்களென்று போய்ப் பார்ப்போம் வாரும் என்றான்.

அப் 15:37. அப்பொழுது பர்னபா என்பவன் மாற்கு என்னும் பேர்கொண்ட யோவானைக்கூட அழைத்துக்கொண்டு போகவேண்டும் என்றான்.

அப் 15:38. பவுலோ: அவன் பம்பிலியா நாட்டிலே நம்மை விட்டுப் பிரிந்து நம்மோடேகூட ஊழியத்துக்கு வாரததினாலே, அவனை அழைத்துக்கொண்டு போகக்கூடாது என்றான்.

அப் 15:39. இதைப்பற்றி அவர்களுக்குள்ளே கடுங்கோபமுண்டானபடியினால் அவர்கள் ஒருவரையொருவர் விட்டுப் பிரிந்தார்கள். பர்னபா மாற்குவைக் கூட்டிக்கொண்டு கப்பல் ஏறிச் சீப்புருதீவுக்குப் போனான்.

அப் 15:40. பவுலோ சீலாவைத் தெரிந்து கொண்டு, சகோதரராலே தேவனுடைய கிருபைக்கு ஒப்புவிக்கப்பட்டு, புறப்பட்டு,

அப் 15:41. சீரியாவிலும் சிலிசியாவிலும் திரிந்து, சபைகளைத் திடப்படுத்தினான்.

போய்ப்பார்ப்போம்

சிலநாளைக்குப்பின்பு பவுல் பர்னபாவை நோக்கி: நாம் கர்த்தருடைய வசனத்தை அறிவித்திருக்கிற சகல பட்டணங்களிலுமுள்ள சகோதரர்கள் எப்படியிருக்கிறார்களென்று போய்ப் பார்ப்போம் வாரும் என்றான் (அப் 15:36).

புறஜாதியார் மத்தியில் பவுலும் பர்னபாவும் கர்த்தருடைய வசனத்தை ஏற்கெனவே அறிவித்திருக்கிறார்கள். அந்தப் பட்டணங்களிலுள்ள சகோதரர்கள் எப்படியிருக்கிறார்கள் என்று போய்ப்பார்க்கவேண்டும் என்று பவுல் விரும்புகிறான். தன்னுடைய யோசனையை பர்னபாவிடம் சொல்லுகிறான்.

அந்தியோகியா பட்டணம் அப்போஸ்தலருக்கு பாதுகாப்பானதாகவும் அமைதியானதாகவும் இருக்கிறது. ஆனால் இந்தப் பட்டணத்தில் ஓய்வெடுப்பது தன்னுடைய ஊழியமல்ல என்பதை உணர்ந்துகொள்கிறான். மறுபடியும் கடல் பிரயாணம் மேற்கொண்டு, ஏற்கெனவே கர்த்தருடைய வசனத்தை அறிவித்திருந்த சகல பட்டணங்களுக்கும் போய், அங்குள்ள சகோதரர்கள் எப்படியிருக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும் என தீர்மானம் பண்ணுகிறான்.

புறஜாதியார் மத்தியில் சுவிசேஷ ஊழியம் செய்வதற்காக கர்த்தர் பவுலை நியமித்திருக்கிறார். அந்த ஊழியத்தை நிறைவேற்றுவதற்காக பவுல் தன்னுடைய இரண்டாவது மிஷினெரி பிரயாணத்தை துவங்குவதற்கு ஆயத்தமாகயிருக்கிறான். எருசலேமிலிருந்து அந்தியோகியாவுக்கு வந்த "சில நாளைக்குப் பின்பு", பவுலுக்கு இந்த யோசனை உண்டாயிற்று. பவுல் தன் ஆவியில் உற்சாகமாக இருக்கிறவன். உற்சாகமுள்ளவர்கள் சும்மாயிருக்க மாட்டார்கள். கர்த்தருடைய ஊழியத்தை உற்சாகமாய்ச் செய்வார்கள்.

பவுல் தன்னுடைய யோசனையைப் பர்னபாவிடம் சொல்லுகிறான். பர்னபா பவுலின் பழைய சிநேகிதன். அவனுடைய உடன்ஊழியன். ஊழியம் செய்யும்போது, ஊழியக்காரர்கள் ஒருவருக்கொருவர் உதவியாக இருக்கவேண்டும். நமக்கு மற்ற ஊழியக்காரர்களுடைய உதவி எப்போதுமே தேவைப்படும். நாமும் மற்ற ஊழியக்காரர்களுக்கு உதவிபுரிய ஆயத்தமாகயிருக்க வேண்டும்.

அவர்களுக்கும் நம்முடைய உதவி தேவைப்படலாம். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் எப்போதுமே உதவிபுரியவும், உதவியைப் பெற்றுக்கொள்ளவும் ஆயத்தமாயிருக்க வேண்டும். ஒவ்வொரு போர்வீரனுக்கும் அந்தச் சேனையில் பணிபுரிகிற மற்ற வீரர்கள் தோழாயிருக்கவேண்டும்.

பவுல் புதிய பட்டணங்களுக்குச் சென்று புதிய ஊழியத்தை ஆரம்பிக்க விரும்பவில்லை. அவர்கள் ஏற்கெனவே கர்த்தருடைய வசனத்தை அறிவித்திருக்கிற பட்டணத்திற்கே போகவேண்டுமென்று பவுல் விரும்புகிறான். தாங்கள் சுவிசேஷ விதையை விதைத்த நிலத்தைப் பார்வையிட விரும்புகிறான். பவுல் பர்னபாவை நோக்கி "நாம் கர்த்தருடைய வசனத்தை அறிவித்திருக்கிற சகல பட்டணங்களிலுமுள்ள சகோதரர்கள் எப்படியிருக்கிறார்கள் என்று போய்ப்பார்ப்போம் வாரும்" என்று சொல்லுகிறான். கிறிஸ்தவ விசுவாசிகளைப் பவுல் "சகோதரர்கள்" என்று அழைக்கிறான். ஒவ்வொரு பட்டணத்திலுமுள்ள விசுவாசிகள்மீது பவுல் கரிசனையோடும் அக்கரையோடும் இருக்கிறான்.

நாம் எங்கெல்லாம் கர்த்தருடைய வார்த்தையை அறிவித்திருக்கிறோமோ, அங்கெல்லாம் நாம் போய் விதைக்கப்பட்ட சுவிசேஷ விதைக்கு தண்ணீர் பாய்ச்சவேண்டும். சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவர்கள், யாருக்கெல்லாம் பிரசங்கித்தார்களோ அவர்களையெல்லாம் மறுபடியும் போய் பார்க்கவேண்டும். சுவிசேஷம் விதைக்கப்பட்ட ஆத்துமாக்களுக்காக நாம் ஜெபிக்கவேண்டும். கர்த்தர் நம்மை எப்படி வழிநடத்துகிறார் என்பதை அவருடைய சமுகத்தில் அமர்ந்திருந்து தியானிக்கவேண்டும். கர்த்தருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படியவேண்டும். நம்முடைய பிரசங்கம் எந்த அளவுக்கு கனிகொடுத்திருக்கிறது என்பதைப் போய்ப்பார்த்து வரவேண்டும்.

"சகோதரர்கள்" எப்படியிருக்கிறார்கள் "என்பதை போய்ப்பார்த்து வரவேண்டும் என்பதே பவுலின் விருப்பம். பவுல் அவர்களைப் போய்ப்பார்த்து, அவர்களோடு தன்னுடைய ஐக்கியத்தை வளர்த்துக்கொள்ள விரும்புகிறான். மருத்துவர்கள் தாங்கள் சிகிச்சை கொடுக்கிற நோயாளிகளைப் போய்பார்ப்பதுபோல, பவுலும் ஆத்துமாக்களைப் பார்க்கவிரும்புகிறான். ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட வேண்டும். அவர்களுக்கு ஆவிக்குரிய ஆலோசனைகள் ஏதாவது தேவைப்பட்டால் அதை அவர்களுக்கு கொடுக்கவேண்டும். ஆத்துமாக்கள் சோர்ந்துபோய்விடக்கூடாது. அவர்களுடைய உள்ளத்தில் விதைக்கப்பட்ட சுவிசேஷ விதையை சாத்தான் திருடிச்சென்றுவிடக்கூடாது.

மற்ற பட்டணங்களிலுள்ள சகோதரர்கள் எப்படிப்பட்ட ஆவியை உடையவர்களாகயிருக்கிறார்கள், அவர்களுடைய ஆவிக்குரிய ஜீவியம் இப்போது எப்படியிருக்கிறது, அவர்கள் கர்த்தருக்குச் சாட்சியாக ஜீவிக்கிறார்களா என்பதையெல்லாம் பார்த்து வரவேண்டுமென்று பவுல் விரும்புகிறான். அந்தச் சகோதரர்கள் கர்த்தருக்குள் சந்தோஷமாகயிருக்கிறார்களா அல்லது துக்கமாகயிருக்கிறார்களா என்பதையும் பவுல் தெரிந்துகொள்ள விரும்புகிறான். சந்தோஷப் படுகிறவர்களுடன் சந்தோஷப்படவும், துக்கப்படுகிறவர்களுடன் துக்கப்படவும் பவுல் ஆயத்தமாயிருக்கிறான். அவர்கள் இப்போது எப்படிப்பட்ட நிலையில் இருக்கிறார்கள் என்பது தெளிவாகத் தெரிந்தால், பவுல் அவர்களுடைய குறிப்பிட்ட காரியங்களுக்கு விசேஷமாக ஜெபிக்க விரும்புகிறான்.

மாற்கு

அப்பொழுது பர்னபா என்பவன் மாற்கு என்னும் பேர்கொண்ட யோவானைக்கூட அழைத்துக்கொண்டு போகவேண்டும் என்றான். பவுலோ: அவன் பம்பிலியா நாட்டிலே நம்மை விட்டுப் பிரிந்து நம்மோடேகூட ஊழியத்துக்கு வாராததினாலே, அவனை அழைத்துக்கொண்டு போகக்கூடாது என்றான் (அப் 15:37,38) .

மாற்கு பர்னபாவின் உறவுக்காரன். தங்களோடு மாற்கு என்னும் பேர்கொண்ட யோவானையும் கூட அழைத்துக்கொண்டு போகவேண்டுமென்று பர்னபா சொல்லுகிறான். ஊழியக்காரியங்களில் உறவினர்களுக்குத் தேவையில்லாமல் முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது. பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலுக்கே முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். நமக்கு உற்றார் உறவினர் தேவைதான். ஆனால் நம்முடைய உறவினர்கள் கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கும் ஊழியத்திற்கு தடைக்கற்களாக இருக்கக்கூடாது. மாற்கை தங்களோடு கூட்டிக்கொண்டு போகவேண்டுமென்று பர்னபா சொல்லுகிறான். ஆனால் பவுலோ மாற்கை தங்களோடு கூட்டிக்கொண்டு போகக்கூடாது என்று சொல்லி பர்னபாவுக்கு எதிர்த்து நிற்கிறான்.

மாற்கு ஏற்கெனவே பவுல், பர்னபா ஆகியோரோடு பிரயாணம் பண்ணியவன். ஆனால் அவன் பம்பிலியா நாட்டிலே அவர்களைவிட்டுப் பிரிந்து, அவர்களோடு ஊழியத்திற்கு வராமற் போய்விட்டான் (அப் 13:13). ஆகையினால் இப்போது மாற்குவைத் தங்களோடு அழைத்துக் கொண்டு போகக்கூடாது என்று பவுல் சொல்லுகிறான்.

மாற்கு ஒருவேளை தான் செய்த தவறுக்கு இப்போது மனம் வருந்தியிருக்கலாம். இப்படிப்பட்ட தவறை இனிமேல் தான் செய்யப்போவதில்லை என்று பர்னபாவுக்கு வாக்குக் கொடுத்திருக்கலாம். ஆகையினால் மாற்கு என்னும் பேர்கொண்ட யோவானை தங்களோடு அழைத்துக்கொண்டு போகவேண்டுமென்று பர்னபா அவனுக்காகப் பரிந்து பேசியிருக்கலாம். ஆனால் பவுலோ மாற்குவை மன்னிக்க ஆயத்தமாகயில்லை. ஏற்கெனவே ஊழியத்தைவிட்டுப் போனவனை, மறுபடியும் தங்களோடு ஊழியத்திற்குக் கூட்டிக்கொண்டுபோக பவுல் ஆயத்தமாகயில்லை. அவனுக்கு மேலும் ஒரு வாய்ப்பைக் கொடுக்க பவுல் விரும்பவில்லை.

பிரிந்தார்கள்

இதைப்பற்றி அவர்களுக்குள்ளே கடுங்கோபமுண்டானபடியினால் அவர்கள் ஒருவரையொருவர் விட்டுப் பிரிந்தார்கள். பர்னபா மாற்குவைக் கூட்டிக்கொண்டு கப்பல் ஏறிச் சீப்புருதீவுக்குப் போனான் (அப் 15:39).

மாற்குவினிமித்தமாக பவுலுக்கும் பர்னபாவுக்கும் வாக்குவாதமுண்டாயிற்று. இதைப்பற்றி அவர்களுக்குள் கடும்கோபமுண்டது. இதனால் அப்போஸ்தலர்கள் இருவரும் ஒருவரையொருவர் விட்டுப்பிரிகிறார்கள். ஒருவரும் மற்றவரோடு ஒத்துப்போகவில்லை. வேறு வழியில்லாமல் பவுலும் பர்னபாவும் பிரிந்துவிடுகிறார்கள்.

பவுலும் பர்னபாவும் பெரிய ஊழியக்காரர்களாகயிருந்தாலும், அவர்களும் மனுஷர்களாகவே இருக்கிறார்கள். அவர்களுக்குள்ளும் மனுஷசுபாவமே இருக்கிறது. விருப்பு, வெறுப்பு, கோபம் ஆகிய எல்லா குணங்களும் இவர்களிடமும் இருக்கிறது. தங்களுடைய மனுஷசுபாவத்தை இவர்கள் மறைக்கவில்லை. லீஸ்திராவிலே யூப்பித்தருடைய கோவில் பூஜாசாரி, இவர்களுக்குப் பலியிட மனதாயிருந்தபோது, "மனுஷரே, ஏன் இப்படிச் செய்கிறீர்கள்? நாங்களும் உங்களைப்போல பாடுள்ள மனுஷர்தானே" என்று தங்களைப்பற்றி மெய்யாய்ச் சொல்லியிருக்கிறார்கள் (அப் 14:15). அவர்கள் தங்களைப்பற்றிச் சொன்ன வாக்கியம் இப்போது மெய்யாயிற்று.

பவுலுக்கும் பர்னபாவுக்கும் கடுங்கோபமுண்டதற்கு யார் காரணம் என்று தெரியவில்லை. யாரிடத்தில் குற்றமுள்ளது என்பதும் விளங்கவில்லை. ஒருவேளை இவ்விருவருமே தவறு செய்திருக்கலாம். இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் பிடிவாத குணமுள்ளவர்களாக இருக்கக்கூடாது. ஒற்றுமையாக இருக்கவேண்டும். ஒருமனப்பாட்டின் ஆவி ஊழியக்காரர்களை ஆளுகை செய்யவேண்டும். ஒரு சில ஊழியக்காரர்கள், ஊழியத்திலுண்டாகும் விரிசலை ஒட்டவைப்பதற்குப் பதிலாக, உடைத்துவிடுகிறார்கள். வெளிப்படையாகப் பேசி எல்லாவற்றையும் சீரழித்து விடுகிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகள் யாரும் அவசரப்பட்டு பேசவும் கூடாது. அவசரப்பட்டு செயல்படவும் கூடாது. நீடிய பொறுமையோடிருக்க வேண்டும்.

நாம் தவறு செய்திருந்தாலும், நம்முடைய தவறுகளுக்கு மனந்திரும்பவேண்டும். மற்றவர்களுக்குரிய மரியாதையைக் கொடுக்கவேண்டும். மற்ற ஊழியக்காரர்களையும், தங்களைப்போன்ற ஊழியக்காரர்கள் என்று பாவித்து, அவர்களை மதித்து நடக்கவேண்டும். கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிற ஊழியக்காரர்கள், சண்டை போடுகிறவர்களாக இருக்கமாட்டார்கள். சமாதானம் பண்ணுகிறவர்களாகவே இருப்பார்கள்.

ஞானிகள் மத்தியிலும், நற்குணமுள்ளவர்கள் மத்தியிலும் கருத்து வேறுபாடும், பிரிவினையும் உண்டாவது மிகவும் விநோதமான காரியம். கர்த்தருடைய ஊழியக்காரர் மத்தியிலே ஒற்றுமை மாத்திரமே காணப்படவேண்டும். பிரிவினை இருக்கவே கூடாது. நாம் எல்லோரும் இயேசுகிறிஸ்துவுக்குள் ஒன்றாய் இணைக்கப்பட்டிருக்கிறோம். ஒரே ஆவியானவராலே பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம். ஆனாலும் நமக்குள் வேறுபட்ட கருத்து காணப்படுகிறது. நாம் பூமியிலிருக்கிற வரையிலும் இப்படிப்பட்ட குறைகள் நம்மிடத்தில் காணப்படத்தான் செய்யும். நாம் பரலோகத்திற்குப் போகும்போதுதான் பரிபூரணமடைவோம். அதுவரையிலும் குறைவுள்ளவர்களாகவே இருப்போம்.

ஊழியக்காரர்கள் மத்தியில் கருத்து வேறுபாடு வரும்போது அதை உடனடியாகச் சரி செய்து விடவேண்டும். பிரச்சனையைத் தீர்த்துவைக்கவேண்டும். இல்லையென்றால் அது பிரிவினையில் போய் முடிந்துவிடும். பவுலும் பர்னபாவும் மாற்குவைக் குறித்து கருத்து வேறுபட்டிருந்தார்கள். அவர்களுக்குள்ளே கடுங்கோபமுண்டாயிற்று. கடைசியில் மாற்குவினிமித்தமாக அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் விட்டுப்பிரிகிறார்கள். யூதர்கள் அப்போஸ்தலரைத் துன்பப்படுத்தியபோது பவுலும் பர்னபாவும் ஒருவரையொருவர் விட்டுப்பிரியவில்லை. உபத்திரவத்தில் பிரியாதவர்கள், இப்போது சமாதானமாகவும் சந்தோஷமாகவும் இருக்கும்போது பிரிந்துவிடுகிறார்கள்.

பவுலும் சீலாவும்

பவுலோ சீலாவைத் தெரிந்து கொண்டு, சகோதரராலே தேவனுடைய கிருபைக்கு ஒப்புவிக்கப்பட்டு, புறப்பட்டு, சீரியாவிலும் சிலிசியாவிலும் திரிந்து, சபைகளைத் திடப்படுத்தினான் (அப் 15:40,41).

அப்போஸ்தலருடைய பிரிவினையிலும் கர்த்தர் ஒரு நல்ல காரியத்தை நடப்பிக்கிறார். தன்னுடைய அனுபவத்தைப்பற்றி பவுல் எழுதும்போது "சகோதரரே, எனக்குச் சம்பவித்தவைகள் சுவிசேஷம் பிரபலமாகும்படிக்கு ஏதுவாயிற்றென்று நீங்கள் அறிய மனதாயிருக்கிறேன்" (பிலி 1:12). அப்போஸ்தலருக்குள்ளே கருத்து வேறுபாடும், பிரிவினையும் உண்டானாலும், அதுவும் சுவிசேஷம் பிரபலமாகும்படிக்கு ஏதுவாயிற்று. தேவனுடைய சித்தமில்லாமல் எந்தக் காரியமும் நடைபெறாது. பவுலும் பர்னபாவும் பிரிந்துபோனால் சுவிசேஷம் பிரபலமாகும் என்று தேவன் காண்கிறார். ஆகையினால் அவர்கள் பிரிந்துபோவதற்கு அனுமதிக்கிறார். இல்லையென்றால் அவர்களுக்குள் பிரிவினை உண்டாயிருக்காது. தேவனுடைய சித்தம் நிறைவேறும். பவுலும் பர்னபாவும் பிரிந்து வெவ்வேறு திசையில் பிரயாணம் செய்கிறார்கள். அவர்கள் போகும் இடங்களிலெல்லாம் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறார்கள்.

பர்னபா மாற்குவைக் கூட்டிக்கொண்டு கப்பல் ஏறி சீப்புரு தீவிற்குப் போகிறான். சீப்புரு தீவில்தான் பவுலும் பர்னபாவும் ஊழியம் செய்ய ஆரம்பித்தார்கள் (அப் 13:4). சீப்புரு தீவு பர்னபாவின் சொந்த நாடு (அப் 4:36). பவுலோ சீலாவைத் தெரிந்துகொண்டு சீரியாவுக்கும் சிலிசியாவுக்கும் போகிறான். சிலிசியா பவுலின் சொந்த நாடு (அப் 21:39).

அப்போஸ்தலர்கள் இருவரும் தங்கள் சொந்த தேசங்களில் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டுமென்று ஆவலாயிருக்கிறார்கள். தங்கள் சொந்த ஜனங்களைக்குறித்த ஆத்தும தாகம் இவர்களிடத்தில் காணப்படுகிறது. எல்லோரும் இரட்சிக்கப்பட வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். ஒருவரும் கெட்டுப்போவதில் தேவனுக்குப் பிரியமில்லை. அப்போஸ்தலர்கள் ஒருவரைவிட்டு ஒருவர் பிரிந்து, தனித்தனியாக ஊழியம் செய்தாலும், இருவருமே தேவனுக்கு வல்லமையாக ஊழியம் செய்கிறார்கள். தேவனுடைய சித்தம் நிறைவேறுகிறது.

புறஜாதியார் மத்தியில் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது. இந்த ஊழியத்தில் பலர் பங்கு பெறுகிறார்கள். மாற்குவை பவுல் விலக்கிய போதிலும், அவனும் உண்மையுள்ள ஊழியக்காரனாக கர்த்தருக்கு ஊழியம் செய்கிறான். சீலா ஊழியத்திற்குப் புதியவன். இவனும் பவுலோடு சேர்ந்து கர்த்தருக்கு நல்லமுறையில் ஊழியம் செய்கிறான்.

அந்தியோகியாவிலுள்ள சபையார் பவுல்மீது அன்பாயிருக்கிறார்கள். அவனுடைய புதிய ஊழியத்தை அங்கீகரிக்கிறார்கள். சபையிலுள்ள சகோதரர் பவுலை தேவனுடைய கிருபைக்கு ஒப்புக்கொடுத்து வழியனுப்புகிறார்கள். பர்னபா மாற்குவைக் கூட்டிக்கொண்டு சீப்புரு தீவுக்குப் போகிறான். இதன் பின்பு பர்னபாவைப்பற்றி வேதத்தில் குறிப்பு இல்லை. பவுல் ஊழியத்திற்குப் புறப்படும்போது, அந்தியோகியாவிலுள்ள சபையார் பவுலைத் தேவனுடைய கிருபைக்கு ஒப்புக்கொடுக்கிறார்கள். பவுலுக்காக எல்லோரும் ஜெபிக்கிறார்கள். பவுல் மூலமாக நடைபெறும் கர்த்தருடைய ஊழியம் ஆசீர்வாதமாயிருக்கவேண்டும் என்று வாழ்த்துகிறார்கள்.

தேவனுடைய கிருபை இருந்தால்தான் ஊழியம் செய்ய முடியும். தேவகிருபையில்லையென்றால் நம்மால் ஒன்றும் செய்யமுடியாது. ஆகையினால் அந்தியோகியா சபையார் பவுலையும் அவனுடைய ஊழியத்தையும் தேவனுடைய கிருபைக்கு ஒப்புக்கொடுக்கிறார்கள். தேவனுடைய கிருபை பவுலுக்குள்ளும், பவுல் மூலமாகவும் கிரியை செய்யவேண்டும் என்று ஜெபிக்கிறார்கள்.

நாம் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்யும்போது, நம்மை நேசிக்கிறவர்கள் சிலர், நமக்காக ஜெபித்தால் அது நமக்கு மிகுந்த ஆசீர்வாதமாகயிருக்கும். நாம் சோர்ந்துபோகும் வேளையில் அவர்களுடைய அன்பும் ஜெபமும் நம்மை உற்சாகப்படுத்தும். பவுல் தன்னுடைய இரண்டாம் மிஷினெரி பிரயாணத்தின்போது மாற்குவைத் தன்னோடு கூட்டிச் செல்ல மறுக்கிறான். அதன்பின்பு பவுல் மாற்குவைப்பற்றி நல்லவார்த்தைகளினால் புகழ்ந்து எழுதுகிறான். தீமோத்தேயுவுக்கு எழுதின இரண்டாவது நிருபத்தில், பவுல் மாற்குவைப்பற்றிக் குறிப்பிடும்போது "மாற்குவை உன்னோடே கூட்டிக்கொண்டு வா. ஊழியத்தில் அவன் எனக்குப் பிரயோஜனமுள்ளவன்" (2தீமோ 4:11) என்று எழுதுகிறான்.

ஊழியக்காரியங்களில் நாம் ஒருவரைக் கடிந்துகொள்ளும்போது மிகவும் நிதானமாய்க் கடிந்துகொள்ளவேண்டும். கனமான வார்த்தைகளைப் பயன்படுத்தக்கூடாது. நாம் கடிந்துகொள்வது அவர்களைத் திருத்துவதற்காகத்தான் இருக்கவேண்டும். நம்முடைய வார்த்தையினால் அவர்களை அழித்துப்போடக்கூடாது. ஊழியத்தில் ஒரு சிலர் தற்பொழுது தவறு செய்யலாம். பின்பு அவர்கள் மனந்திரும்பி கர்த்தருக்கு வல்லமையாய் ஊழியம் செய்யலாம்.

இப்படிப்பட்டவர்களை நாம் ஆரம்பத்தில் மிகவும் கடினமாய்க் கடிந்துகொண்டால், அவர்கள் நன்றாய் ஊழியம் செய்யும்போது, அவர்களைப் பார்க்கும்போது நமக்கு வெட்கமாக இருக்கும். அவர்களைக் கடிந்துகொண்டதற்காக நாம் மிகவும் வருத்தப்படுவோம். ஆகையினால் பிறரைக் கடிந்துகொள்ளும்போது மிகவும் ஞானமாகவும், நிதானமாகவும் செயல்படுவது நல்லது.

ஊழியத்தில் ஒரு சிலர் தவறுசெய்யும்போது நாம் அவர்களைக் கடிந்துகொண்டாலும், அவர்கள் மனந்திரும்பி ஊழியத்தில் உற்சாகமாய் ஈடுபடும்போது, அவர்களை நாம் பாராட்டவும் தவறக்கூடாது. பழையதை மன்னித்து, மறந்து, அவர்களை அன்போடு ஏற்றுக்கொள்ளவேண்டும். வாய்ப்பு வரும்போது நல்ல வார்த்தைகளினால் அவர்களைப் பாராட்டிப் பேசவேண்டும்.

பவுல் சீலாவைக் கூட்டிக்கொண்டு, புறப்பட்டு சீரியாவிலும் சிலிசியாவிலும் கர்த்தருடைய ஊழியத்தைச் சந்தோஷமாய்ச் செய்கிறான். அங்குள்ள சபைகளைத் திடப்படுத்துகிறான். இரட்சிக்கப்படாத ஜனங்களுக்கு நாம் ஊழியம் செய்வது போலவே, இரட்சிக்கப்பட்டிருக்கிற ஜனங்களுக்கும் ஊழியம் செய்யவேண்டும். இரட்சிக்கப்படாத ஜனங்கள் கர்த்தரை விசுவாசிக்குமாறு ஊழியம் செய்யவேண்டும். இரட்சிக்கப்பட்டிருக்கிற ஜனங்கள், தங்கள் விசுவாசத்தில் ஸ்திரப்படுமாறு அவர்களைத் திடப்படுத்த வேண்டும். சீரியாவிலும் சிலிசியாவிலும் உள்ள சபைகளை பவுல் திடப்படுத்துகிறான்.

16 அதிகாரம்

பவுலுக்கும் பர்னபாவுக்கும் கருத்து வேறுபாடு உண்டாயிற்று. இருவரும் பிரிந்து, வெவ்வேறு திசையில் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்கிறார்கள். இந்தச் சம்பவத்திற்குப் பின்பு பர்னபாவைப்பற்றி எந்தச் செய்தியும் கிடைக்கவில்லை. பவுல் கர்த்தருக்காகச் செய்த ஊழியம் நிருபங்களில் அதிகமாய் எழுதப்பட்டிருக்கிறது.

பவுல் தீமோத்தேயுவைத் தன்னுடனே சேர்த்துக்கொள்கிறான் (அப் 16:1-3). பவுல் பட்டணந்தோறும் பிரயாணம் செய்து சபைகளைத் திடப்படுத்துகிறான். சபைகள் விசுவாசத்தில் ஸ்திரப்பட்டு நாளுக்குநாள் பெருகுகிறது (அப் 16:4,5). மக்கெதோனியா தேசத்தான் ஒருவன் தன்னுடைய தேசத்திற்கு வந்து தங்களுக்கு உதவி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறான். பவுல் பிலிப்பி பட்டணத்திற்கு வருகிறான் (அப் 16:6-13). லீதியாள் இரட்சிக்கப்படுகிறாள் (அப் 16:14,15). ஒரு பெண்ணிடம் குறிசொல்ல ஏவுகிற ஆவியிருந்தது. பவுல் இந்த ஆவியைத் துரத்துகிறான் (அப் 16:16-18). அவளுடைய எஜமான்கள் பவுலையும் சீலாவையும் பிடித்து அதிகாரிகளிடத்தில் ஒப்புவிக்கிறார்கள் (அப் 16:19-24). சிறைச்சாலைக்காரன் இரட்சிக்கப்படுகிறான் (அப் 16:25-34). பவுலும் சீலாவும் மரியாதையோடு விடுவிக்கப்படுகிறார்கள் (அப் 16:35-40).

தெர்பை, லீஸ்திரா
அப் 16 : 1-5

அப் 16:1. அதன்பின்பு அவன் தெர்பைக்கும் லீஸ்திராவுக்கும் போனான். அங்கே தீமோத்தேயு என்னப்பட்ட ஒரு சீஷன் இருந்தான்; அவன் தாய் விசுவாசமுள்ள யூதஸ்திரீ, அவன் தகப்பன் கிரேக்கன்.

அப் 16:2. அவன் லீஸ்திராவிலும் இக்கோனியாவிலுமுள்ள சகோதரராலே நற்சாட்சி பெற்றவனாயிருந்தான்.

அப் 16:3. அவனைப் பவுல் தன்னுடனே கூட்டிக் கொண்டு போகவேண்டுமென்று விரும்பி, அவனுடைய தகப்பன் கிரேக்கன் என்று அவ்விடங்களிலிருக்கும் யூதர்களெல்லாரும் அறிந்திருந்தபடியால், அவர்கள் நிமித்தம் அவனுக்கு விருத்தசேதனம்பண்ணினான்.

அப் 16:4. அவர்கள் பட்டணங்கள்தோறும் போகையில், எருசலேமிலிருக்கும் அப்போஸ்தலராலும் மூப்பராலும் விதிக்கப்பட்ட சட்டங்களைக் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு ஒப்புவித்தார்கள்.

அப் 16:5. அதினாலே சபைகள் விசுவாசத்தில் ஸ்திரப்பட்டு, நாளுக்குநாள் பெருகின.

தீமோத்தேயு

அதன்பின்பு அவன் தெர்பைக்கும் லீஸ்திராவுக்கும் போனான். அங்கே தீமோத்தேயு என்னப்பட்ட ஒரு சீஷன் இருந்தான்; அவன் தாய் விசுவாசமுள்ள யூதஸ்திரீ, அவன் தகப்பன் கிரேக்கன். அவன் லீஸ்திராவிலும் இக்கோனியாவிலுமுள்ள சகோதரராலே நற்சாட்சி பெற்றவனாயிருந்தான். அவனைப் பவுல் தன்னுடனே கூட்டிக் கொண்டு போகவேண்டுமென்று விரும்பி, அவனுடைய தகப்பன் கிரேக்கன் என்று அவ்விடங்களிலிருக்கும் யூதர்களெல்லாரும் அறிந்திருந்தபடியால், அவர்கள் நிமித்தம் அவனுக்கு விருத்தசேதனம் பண்ணினான் (அப் 16:1-3).

பவுல் அப்போஸ்தல ஊழியம் செய்யும்போது, தன் மூலமாக இரட்சிக்கப்பட்ட விசுவாசிகளுக்கு, அவன் ஆவிக்குரிய தகப்பனாகவும் இருக்கிறான். தீமோத்தேயு என்பவனை தன் ஆவிக்குரிய மகனாகத் தத்தெடுத்துக்கொள்கிறான். ஒரு ஆவிக்குரிய தகப்பன் தன் மகனுக்கு என்னென்ன ஞானமுள்ள ஆலோசனைகளைச் சொல்லவேண்டுமோ, அவைகள் எல்லாவற்றையும் சொல்லி அவனைத் திடப்படுத்துகிறான்.

தீமோத்தேயு ஒரு சீஷனாகயிருக்கிறான். இவன் கிறிஸ்துவுக்குரியவன். கிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்வதற்காக பவுல் தீமோத்தேயுவை, தன்னோடு சேர்த்துக்கொள்கிறான். அவனைத் தன் குமாரனைப்போல வளர்க்கிறான். தீமோத்தேயுவின் தாயார் ஒரு விசுவாசமுள்ள யூதஸ்திரீ. அவளுடைய பெயர் ஐனிக்கேயாள். அவளுடைய பாட்டியின் பெயர் லோவிசாள். பவுல் இவ்விருவர்மீதும் மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கிறான். அவர்களுடைய விசுவாசத்தைக் குறித்து நல்லவார்த்தைகளால் புகழ்ந்து பேசுகிறான். "அந்த விசுவாசம் முந்தி உன் பாட்டியாகிய லோவிசாளுக்குள்ளும் உன் தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் நிலைத்திருந்தது; அது உனக்குள்ளும் நிலைத்திருக்கிறதென்று நிச்சயித்திருக்கிறேன்" (2தீமோ 1:5) என்று பவுல் தீமோத்தேயுவின் தாயாரையும், பாட்டியையும் புகழ்ந்து எழுதுகிறான்.

தீமோத்தேயுவின் தகப்பன் ஒரு கிரேக்கன். புறஜாதி இனத்தைச் சேர்ந்தவன். இவன் தகப்பன் கிரேக்கனாகயிருப்பதினால், தீமோத்தேயுவுக்கு விருத்தசேதனம் செய்யப்படவில்லை. தீமோத்தேயுவின் தகப்பன் யூதராகயில்லாதபடியினால், விருத்தசேதனப் பிரமாணத்திற்கு அவன் கீழ்ப்படியவேண்டும் என்னும் அவசியமுமில்லை. தீமோத்தேயுவுக்கும் அவன் விருத்தசேதனம்பண்ணவில்லை. தீமோத்தேயு வளர்ந்து பெரியவனான போது, அவன் விரும்பினால், விருத்தசேதனம் செய்துகொள்ளலாம்.

தீமோத்தேயு சிறு பையனாகயிருக்கும்போது, அவனுடைய தாயாரால் அவனுக்கு விருத்தசேதனம் பண்ண ஒழுங்கு செய்யமுடியில்லை. குடும்பத்தில் ஒருவர் யூதராகவும், ஒருவர் கிரேக்கராகவும் இருப்பதினால், தீமோத்தேயுவுக்கு விருத்தசேதனம் பண்ணுகிற விஷயத்தில், அவனுடைய தாயார் பொறுமையோடிருக்கிறாள். ஆனாலும் தீமோத்தேயுவை விசுவாசமுள்ள மகனாக வளர்க்கிறாள். தேவனுக்குப் பயப்படுகிற பயத்தை அவனுக்குக் கற்றுக்கொடுக்கிறாள். உடன்படிக்கையின் அடையாளமான விருத்தசேதனம் தீமோத்தேயுவுக்குக் கொடுக்கப்படவில்லை. ஆனாலும் அவன் தேவபக்தியும், தேவபயமும் உள்ளவனாக வளர்க்கப்படுகிறான்.

சகோதரர் மத்தியிலே தீமோத்தேயுவுக்கு நல்ல பெயர் இருக்கிறது. லீஸ்திராவிலும் இக்கோனியாவிலுமுள்ள ஆவிக்குரிய சகோதரர்களினால் தீமோத்தேயு நற்சாட்சி பெற்றவனாகயிருக்கிறான். நல்ல விசுவாசிகள், இவனைப்பற்றி நற்சாட்சி கொடுக்கிறார்கள். நல்ல சகோதரரோடு ஐக்கியம் வைத்திருக்கிறான். பவுல் தன்னுடைய ஊழியப்பாதையில், தீமோத்தேயுவைத் தன்னுடனே கூட்டிக்கொண்டு போகவேண்டும் என்று விரும்புகிறான். பவுல் தீமோத்தேயுவை அதிகமாய் நேசிக்கிறான்.

பவுல் தீமோத்தேயுவுக்கு விருத்தசேதனம்பண்ணுகிறான். இந்தச் சம்பவம் விநோதமாகயிருக்கிறது. புறஜாதியாரை விருத்தசேதனம்பண்ண கட்டாயப்படுத்தக்கூடாது என்பதுதான் பவுலின் பிரசங்கச்செய்தி. விருத்தசேதனத்திற்கு விரோதமாக எதிர்த்து நிற்கிறான். ஆனால் இப்போதோ பவுலே தீமோத்தேயுவுக்கு விருத்தசேதனம் பண்ணுகிறான்.

யூதருடைய மார்க்கப்பிரமாணத்தை தீமோத்தேயு கைக்கொள்ளவேண்டும் என்பதற்காக அவனுக்கு விருத்தசேதனம் பண்ணவில்லை. யூதர்கள் மத்தியில் தீமோத்தேயுவின் ஊழியம் அங்கீகரிக்கப்படவேண்டும். லீஸ்திராவிலும் இக்கோனியாவிலும் ஏராளமான யூதர்கள் இருக்கிறார்கள். இவர்கள் மத்தியில் ஊழியம் செய்யவேண்டுமானால், யூதர்கள் தங்களைப்போல ஒருவனைத்தான் அங்கீகரிப்பார்கள். அதற்காகவே பவுல் தீமோத்தேயுவுக்கு விருத்தசேதனம் பண்ணுகிறான்.

தீமோத்தேயு விருத்தசேதனம் பண்ணாவிட்டால், யூதர்கள் அவனை தீட்டுள்ளவன் என்றும், அசுத்தமுள்ளவன் என்றும் விலக்கித் தள்ளிவிடுவார்கள். அவனை அங்கீகரிக்கமாட்டார்கள். தீமோத்தேயு விருத்தசேதனம் பெறாதவனென்பது அவர்களெல்லோருக்கும் தெரிந்திருக்கிறது. அவனுடைய தகப்பன் கிரேக்கனென்று அவ்விடங்களிலிருக்கிற யூதர்களெல்லாரும் அறிந்திருந்தபடியால், அவர்களினிமித்தம், பவுல் தீமோத்தேயுவுக்கு விருத்தசேதனம் பண்ணுகிறான்.

விருத்தசேதனம் பண்ணினால்தான் இரட்சிக்கப்பட முடியும் என்கிற உபதேசத்திற்கு பவுல் எதிர்த்து நிற்கிறான். எருசலேமிலிருக்கும் அப்போஸ்தலராலும் மூப்பராலும் விதிக்கப்பட்ட சட்டங்களைக் கைக்கொள்ளும்படி விசுவாசிகளுக்கு ஒப்புவிக்கிறான். அதே வேளையில் தீமோத்தேயுவுக்கு விருத்தசேதனம் செய்து, தான் யூதர்மீதும் அன்பாயிருப்பதைக் காண்பிக்கிறான். எருசலேமிலிருந்து தான் கொண்டு வந்த நிருபத்திலுள்ள எழுத்துக்களின் பிரகாரமாக பவுல் செயல்படவில்லையென்றாலும், அந்த நிருபத்திலுள்ள ஆவியின் பிரகாரமாக பவுல் செயல்படுகிறான். எருசலேம் சபையார் கொடுத்தனுப்பிய நிருபத்தில் அன்பின் ஆவி நிறைந்திருக்கிறது. அதே ஆவியினால் பவுலும் கிரியை செய்கிறான். புறஜாதியார்மீது அன்பாயிருப்பதுபோல, யூதர்மீதும் அன்பாயிருக்கிறான்.

தீமோத்தேயு விருத்தசேதனம் பெறாதவனாகயிருந்தாலும், அவனைத் தன்னுடைய உடன் ஊழியனாகச் சேர்த்துக்கொள்ள பவுல் தயங்கவில்லை. ஆனால் பவுல் ஊழியம் செய்கிற இடத்திலுள்ள யூதர்களோ, தீமோத்தேயு விருத்த சேதனமில்லாதவனாக இருப்பதினால், பவுலின் ஊழியத்தை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அவர்களுக்காக பவுல் தீமோத்தேயுவுக்கு விருத்தசேதனம் செய்து வைத்து, யூதர் மத்தியில் தொடர்ந்து ஊழியம் செய்கிறான்.

பட்டணங்கள்தோறும்

அவர்கள் பட்டணங்கள்தோறும் போகையில், எருசலேமிலிருக்கும் அப்போஸ்தலராலும் மூப்பராலும் விதிக்கப்பட்ட சட்டங்களைக் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு ஒப்புவித்தார்கள். அதினாலே சபைகள் விசுவாசத்தில் ஸ்திரப்பட்டு, நாளுக்குநாள் பெருகின (அப் 16:4,5).

பவுல் கர்த்தருடைய வசனத்தை அறிவித்திருந்த சகல பட்டணங்கள்தோறும் போய், அங்குள்ள சபைகளை விசுவாசத்தில் ஸ்திரப்படுத்துகிறான். எருசலேமிலிருக்கும் அப்போஸ்தலராலும் மூப்பராலும் விதிக்கப்பட்ட சட்டங்களின் பிரதிகளை அவர்களுக்குக் கொடுக்கிறான். எருசலேமிலிருந்து அனுப்பப்பட்டிருக்கிற நிருபம் எல்லா சபையாருக்கும் மிகவும் முக்கியமானது. ஆகையினால் அவர்களெல்லோருக்குமே இந்த நிருபத்தை விநியோகம் பண்ணவேண்டியது அவசியமாயிற்று.

எருசலேமிலுள்ள அப்போஸ்தலராலும் மூப்பராலும் விதிக்கப்பட்ட சட்டங்களை மாத்திரம் சபையார் கைக்கொண்டால் அது போதுமானது. அதினாலே சபைகள் விசுவாசத்தில் ஸ்திரப்படுகிறது. சபைகள் நாளுக்குநாள் பெருகுகிறது.

புறஜாதியாரும், யூதருடைய பாரம்பரிய பிரமாணங்களைக் கட்டாயம் கைக்கொள்ளவேண்டும் என்று ஒரு சிலர் போதகம்பண்ணினார்கள். ஆனால் அது தேவையற்றது என்று எருசலேமிலிருந்து இவர்களுக்கு நிருபம் வந்திருக்கிறது. புறஜாதியாருக்கு இந்த நிருபத்தின் மூலமாய் பெரிய விடுதலை உண்டாயிற்று. புறஜாதியார் சுவிசேஷத்தைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டு, இயேசுகிறிஸ்துவைத் தங்கள் கர்த்தரும் ஆண்டவரும் என்று விசுவாசிக்கிறார்கள். எருசலேமிலிருந்து அனுப்பப்பட்டிருக்கிற நிருபத்தை அங்குள்ள அப்போஸ்தலரும், மூப்பரும், பரிசுத்த ஆவியானவரும் அங்கீகரித்திருக்கிறார்கள். எல்லோருக்கும் இது நலமாய்க் கண்டிருக்கிறது.

நாம் சத்தியத்தைக் குறித்து சாட்சி சொல்லவேண்டும். சத்தியத்திற்கு விரோதமாகச் செயல்படுகிறவர்கள் ஒருவேளை நம்முடைய சாட்சிகளை ஏற்றுக்கொள்ளாமல் போகலாம். ஆனாலும் சத்தியத்தைக் குறித்து சந்தேகப்படுகிறவர்களுக்கு, நம்முடைய சாட்சியினால் தெளிவு உண்டாகும். அவர்கள் தங்கள் விசுவாசத்தில் ஸ்திரப்படுவார்கள். எருசலேமிலிருந்து எழுதப்பட்டிருக்கிற நிருபத்தில் அன்பின் ஆவி நிரம்பியிருக்கிறது. வார்த்தைகள் அன்பினாலும், பிரியத்தினாலும், அக்கறையினாலும் உறுதி பண்ணப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய ஆவியானவரே இந்த நிருபத்தை எழுதுமாறு அப்போஸ்தலரையும் மூப்பரையும் ஏவியிருக்கிறார்.

சபைகள் நாளுக்கு நாள் பெருகுகிறது. புறஜாதி மார்க்கத்திலிருந்து தேவனை ஏற்றுக்கொண்டவர்கள்மீது, இதுவரையிலும் சுமத்தப்பட்ட பாரமான நுகம் இப்போது அகற்றப்படுகிறது. புறஜாதியாரில் அநேகர் பாரமான நுகத்தைப்பார்த்து, பயந்துபோய், சுவிசேஷத்திற்குச் செவிகொடாமலேயே இருந்தார்கள். ஆனால் இப்போதோ நுகம் அகற்றப்பட்டிருப்பதினால், புறஜாதியார் சுவிசேஷத்தைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொள்கிறார்கள். இரட்சிக்கப் படுகிறவர்கள் திரளாய் சபையில் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். சபைகள் நாளுக்குநாள் பெருகுகிறது. சபை வளர்ச்சி பெறும்போது, ஆத்தும பாரமுள்ளவர்களுக்கு மிகுந்த சந்தோஷமாகயிருக்கும். அப்படிப்பட்ட சந்தோஷம் பவுலுக்கும், அவனுடைய உடன் ஊழியருக்கும் உண்டாயிற்று.

மக்கெதோனியா அழைப்பு
அப் 16 : 6-15

அப் 16:6. அவர்கள் பிரிகியா கலாத்தியா நாடுகளைக் கடந்துபோனபோது, ஆசியாவிலே வசனத்தைச் சொல்லாதபடிக்குப் பரிசுத்த ஆவியினாலே தடைபண்ணப்பட்டு,

அப் 16:7. மீசியா தேசமட்டும் வந்து, பித்தினியாநாட்டுக்குப் போகப் பிரயத்தனம் பண்ணினார்கள்; ஆவியானவரோ அவர்களைப் போகவொட்டாதிருந்தார்.

அப் 16:8. அப்பொழுது அவர்கள் மீசியா பக்கமாய்ப் போய், துரோவாவுக்கு வந்தார்கள்.

அப் 16:9. அங்கே இராத்திரியிலே பவுலுக்கு ஒரு தரிசனம் உண்டாயிற்று; அதென்னவெனில், மக்கெதோனியா தேசத்தான் ஒருவன் வந்துநின்று: நீர் மக்கெதோனியாவுக்கு வந்து எங்களுக்கு உதவிசெய்ய வேண்டுமென்று தன்னை வேண்டிக் கொண்டதாக இருந்தது.

அப் 16:10. அந்தத் தரிசனத்தை அவன் கண்டபோது, அவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி கர்த்தர் எங்களை அழைத்தாரென்று நாங்கள் நிச்சயித்துக் கொண்டு, உடனே மக்கெதோனியாவுக்குப் புறப்பட்டுப் போகப் பிரயத்தனம்பண்ணி,

அப் 16:11. துரோவாவில் கப்பல் ஏறி, சாமோத்திராக்கே தீவுக்கும், மறுநாளிலே நெயாப்போலி பட்டணத்துக்கும் நேராய் ஓடி,

அப் 16:12. அங்கேயிருந்து மக்கெதோனியா தேசத்து நாடுகளில் ஒன்றிற்குத் தலைமையானதும் ரோமர் குடியேறினதுமான பிலிப்பி பட்டணத்துக்கு வந்து, அந்தப் பட்டணத்திலே சிலநாள் தங்கியிருந்தோம்.

அப் 16:13. ஓய்வுநாளில் நாங்கள் பட்டணத்துக்கு வெளியே போய், ஆற்றினருகே வழக்கமாய் ஜெபம்பண்ணுகிற இடத்தில் உட்கார்ந்து, அங்கே கூடிவந்த ஸ்திரீகளுக்கு உபதேசித்தோம்.

அப் 16:14. அப்பொழுது தியத்தீரா ஊராளும் இரத்தாம்பரம் விற்கிறவளும் தேவனை வணங்குகிறவளுமாகிய லீதியாள் என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீ கேட்டுக்கொண்டிருந்தாள்; பவுல் சொல்லியவைகளைக் கவனிக்கும்படி கர்த்தர் அவள் இருதயத்தைத் திறந்தருளினார்.

அப் 16:15. அவளும் அவள் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றபின்பு, அவள் எங்களை நோக்கி: நீங்கள் என்னைக் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவளென்று எண்ணினால், என் வீட்டிலே வந்து தங்கியிருங்கள் என்று எங்களை வருந்திக் கேட்டுக்கொண்டாள்.

பிரிகியா, கலாத்தியா

அவர்கள் பிரிகியா கலாத்தியா நாடுகளைக் கடந்துபோனபோது, ஆசியாவிலே வசனத்தைச் சொல்லாதபடிக்குப் பரிசுத்த ஆவியினாலே தடைபண்ணப்பட்டு, (அப் 16:6)

பவுல் பல நாடுகளுக்குப் பிரயாணம் செய்து சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறான். பவுலும் அவனுடைய உடன் ஊழியக்காரன் சீலாவும் பிரிகியா, கலாத்தியா நாடுகளுக்குக் கடந்துபோகிறார்கள். ஆசியாவுக்குப் போகவேண்டுமென்று விரும்புகிறார்கள். ஆனால் பரிசுத்த ஆவியானவரோ ஆசியாவிலே வசனத்தைச் சொல்லாதபடிக்கு அப்போஸ்தலரைத் தடைபண்ணுகிறார். பவுலும் சீலாவும் ஆசியாவுக்குப் போகவில்லை. இந்தச் சமயத்தில் பரிசுத்த ஆவியானவர் பவுலுக்கு ஒரு புதிய ஊழியத்தைக் கொடுக்கிறார். இதுவரையிலும் புறஜாதியாரில் கிரேக்கருக்கு மாத்திரமே பவுல் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணி வந்திருக்கிறான். இப்போதோ ரோமருக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ண ஆவியானவர் வாசலைத் திறந்துகொடுக்கிறார்.

பிலிப்பி பட்டணம் ரோமர்கள் குடியிருக்கிற ஒரு குடியிருப்பு. இதுவரையிலும் இவர்கள் மத்தியில் சுவிசேஷம் அறிவிக்கப்படவில்லை. யூதர்கள் பொதுவாக புறஜாதியாரை நேசிக்கமாட்டார்கள். ரோமர்களைக் கண்டால் யூதர்களுக்குச் சிறிதும் பிடிக்காது. யூதர்கள் ரோமர்களை வெறுக்கிறார்கள். கர்த்தரோ யூதர்களுக்கும் தம்முடைய சுவிசேஷச் செய்தியை அறிவிக்கவேண்டுமென்று சித்தங்கொண்டிருக்கிறார். ஆவியானவர், பவுல் ஆசியாவுக்குப்போவதை தடைசெய்து, அவனை பிலிப்பி பட்டணத்திற்கு அனுப்புகிறார்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் ஆவியானவருடைய வழிநடத்துதலுக்குக் கீழ்ப்படியவேண்டும். கர்த்தர் திறக்கிற வாசல் வழியாகப் பிரவேசிக்கவேண்டும். கர்த்தர் ஒரு வாசலை அடைக்கும்போது, அவர் வேறு எந்த வாசலைத் திறக்கிறார் என்பதை ஜெபத்தோடு பார்க்கவேண்டும். ஊழியக்காரர்கள் தேவனுடைய சித்தத்தின் பிரகாரம் ஊழியம் செய்ய பழகும்போது, அவர்களுடைய ஊழியத்தின் மூலமாய் அதிக கனி உண்டாகும்.

ஏராளமானோர் இரட்சிக்கப்படுவார்கள். ஊழியக்காரருக்குத் தெரியாத பல இரகசியங்கள் ஆவியானவருக்குத் தெரியும். ஆவியானவர் தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக, பவுலை ஆசியாவுக்குப் போக தடைபண்ணுகிறார். ஆதேவேளையில் தேவையுள்ள வேறொரு இடத்திற்குப் போகுமாறு பவுலை வழிநடத்துகிறார்.

ஆவியானவரோ போகவொட்டாதிருந்தார்

மீசியா தேசமட்டும் வந்து, பித்தினியாநாட்டுக்குப் போகப் பிரயத்தனம் பண்ணினார்கள்; ஆவியானவரோ அவர்களைப் போகவொட்டாதிருந்தார் (அப் 16:7).

பவுலும் சீலாவும் பித்தினியா நாட்டிற்குப்போக பிரயத்தனம் பண்ணுகிறார்கள். ஆனால் ஆவியானவரோ அவர்களை அங்கு போகவொட்டாதிருக்கிறார். அவர்கள் மீசியா பக்கமாக வருகிறார்கள். எப்படியாவது பித்தினியா நாட்டிற்குப் போய்விடவேண்டுமென்று தீர்மானமாய் முயற்சிபண்ணுகிறார்கள். ஆனால் அவர்கள் அங்கு போவது ஆவியானவருக்குச் சித்தமில்லாமல் போயிற்று.

நம்முடைய ஊழியப்பாதையில், நாம் சில ஊழியத்தைச் செய்யவேண்டுமென்று விரும்பலாம். அதற்காக நாம் பிரயத்தனம்பண்ணலாம். ஆனாலும் கர்த்தருக்குச் சித்தமான காரியம் மாத்திரமே அவருடைய கையினால் வாய்க்கும். நாம் விரும்புகிற ஊழியத்தை ஆவியானவர் செய்ய வொட்டாதிருப்பாரென்றால், அவருடைய சித்தம் என்ன என்பதை ஜெபத்தில் தரித்திருந்து அறிந்துகொள்ளவேண்டும். ஆவியானவரோடு நாம் போராடிக்கொண்டிருக்கக்கூடாது. நாம் விரும்புகிற ஊழியத்தைச் செய்ய முடியாவிட்டாலும், கர்த்தர் விரும்புகிற ஊழியத்தைச் செய்ய நாம் ஆயத்தமாயிருக்கவேண்டும்.

"ஆவியானவரோ அவர்களைப் போகவொட்டாதிருந்தார்" என்னும் வாக்கியமானது, ஒரு சில பதிப்புக்களில் "இயேசுவின் ஆவியானவர் அவர்களைப் போகவொட்டாதிருந்தார்" என்று எழுதப்பட்டிருக்கிறது. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் எப்போதுமே, கர்த்தராகிய இயேசுவின் ஆவியினால் ஆளுகை செய்யப்படவேண்டும், இயேசுவின் ஆவியினால் வழிநடத்தப்படவேண்டும். நம்முடைய சுயஆவிக்குக் கீழ்ப்படிந்து, நமக்குப் பிரியமான காரியத்தை மாத்திரம் செய்ய பிரயத்தனம் பண்ணக்கூடாது.

மீசியா

அப்பொழுது அவர்கள் மீசியா பக்கமாய்ப் போய், துரோவாவுக்கு வந்தார்கள் (அப் 16:8).

அவர்கள் மீசியா பக்கமாய்ப் போகிறார்கள். அங்கு சுவிசேஷ விதையை விதைக்கிறார்கள். அங்கிருந்து துரோவாவுக்கு வருகிறார்கள். இந்தப் பட்டணத்தில் அப்போஸ்தலர்கள் ஒரு சபையை ஸ்தாபிக்கிறார்கள் (அப் 20:6,7). துரோவா பட்டணத்தில் லூக்கா பவுலோடு சேர்ந்துகொண்டு, மிஷினெரி பிரயாணம் மேற்கொள்கிறான். அப்போஸ்தலர் நடபடிகள் புஸ்தகத்தில், லூக்கா இதுவரையிலும் நடைபெற்ற சம்பவத்தை எழுதும்போது "துரோவாவுக்கு வந்தார்கள்" (அப் 16:8) என்று தன்னைச் சேர்க்காமல், பவுலையும் சீலாவும் மாத்திரம் குறிப்பிட்டு எழுதுகிறான். இந்தச் சம்பவத்திற்குப் பின்போ, லூக்கா தன்னையும் சேர்த்து "அந்தப்பட்டணத்தில் சில நாள் தங்கியிருந்தோம்" (அப் 16:12) என்று எழுதுகிறான்.

மக்கெதோனியா

அங்கே இராத்திரியிலே பவுலுக்கு ஒரு தரிசனம் உண்டாயிற்று; அதென்னவெனில், மக்கெதோனியா தேசத்தான் ஒருவன் வந்துநின்று: நீர் மக்கெதோனியாவுக்கு வந்து எங்களுக்கு உதவிசெய்ய வேண்டுமென்று தன்னை வேண்டிக் கொண்டதாக இருந்தது. அந்தத் தரிசனத்தை அவன் கண்டபோது, அவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி கர்த்தர் எங்களை அழைத்தாரென்று நாங்கள் நிச்சயித்துக் கொண்டு, உடனே மக்கெதோனியாவுக்குப் புறப்பட்டுப் போகப் பிரயத்தனம்பண்ணி, (அப் 16:9,10)

பவுல் மக்கெதோனியாவுக்குப் போவது இயேசுகிறிஸ்துவின் சித்தமாகும். தேவன் தம்முடைய சித்தத்தை ஒரு தரிசனத்தின் மூலமாக அவனுக்குத் தெரியப்படுத்துகிறார். பவுல் இதற்கு முன்பு பித்தினியா நாட்டிற்குப் போக பிரயத்தனம்பண்ணினான். ஆனால் இது கிறிஸ்துவின் சித்தமல்ல. ஆகையினால் இயேசுகிறிஸ்துவின் ஆவியானவர் பவுலை பித்தினியா நாட்டிற்கு போகவொட்டாதிருந்தார். பவுல் மக்கெதோனியா தேசத்திற்குப் போவதைப்பற்றி நினைத்துக்கூட பார்க்கவில்லை. ஆனால் அவன் அங்கு போய் ஊழியம் செய்யவேண்டுமென்பது இயேசுகிறிஸ்துவின் சித்தமாயிருக்கிறது.

இராத்திரியிலே பவுலுக்கு ஒரு தரிசனமுண்டாயிற்று. அந்தத் தரிசனத்தில் மக்கெதோனியா தேசத்தான் ஒருவன் பவுலின் அருகே வந்து நிற்கிறான். தேவன் தம்முடைய அப்போஸ்தலரை ஊழியத்திற்கு அனுப்பும்போது, பொதுவாக தேவதூதனை அனுப்பி தம்முடைய சித்தத்தை அவர்களுக்கு வெளிப்படுத்துவார். ஆனால் இங்கோ சாதாரண ஒரு மனுஷனை அனுப்புகிறார். அந்த மனுஷன் மக்கெதோனியா மனுஷனாயிருக்கிறான். அந்த மனுஷன் மூலமாகவே இயேசுகிறிஸ்து பவுலோடு பேசுகிறார். இவன் மக்கெதோனியா தேசத்தில் ஒரு பிரபல்யமான பிரபுவோ அல்லது நியாயாதிபதியோ அல்ல. இவன் சாதாரண மனுஷன். இவன் பவுலோடு வார்த்தையினால் விளையாட வரவில்லை. பவுலைக் கலங்கப்பண்ணவில்லை. தன்னுடைய தேசத்திற்கு வந்து தங்களுக்கு உதவி செய்யவேண்டுமென்று அவன் பவுலை வேண்டிக் கேட்டுக்கொள்கிறான்.

மக்கெதோனியா தேசத்தாருக்கு ஆவிக்குரிய உதவி தேவைப்படுகிறது. அவர்களுக்கு சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட வேண்டும். பவுல் ஏராளமான புறஜாதியாருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து அவர்களுக்கு உதவிசெய்திருக்கிறான். அதுபோல மக்கெதோனியாவுக்கும் வந்து, தங்களுக்கு உதவிசெய்யவேண்டுமென்று, அந்த மனுஷன் பவுலை வேண்டிக்கொள்கிறான். ஆத்துமாக்களுக்கு உதவிசெய்வது மிகப்பெரிய பாக்கியம். இது அப்போஸ்தலருடைய ஊழியம். தங்களை யாரும் அழைக்காவிட்டாலும்கூட, அப்போஸ்தலர்கள் ஜெபம்பண்ணி ஆத்துமாக்களுக்கு உதவிசெய்யவேண்டும். இங்கோ அந்தத் தேசத்து மனுஷன் மூலமாய் பவுலுக்கு ஒரு அழைப்பு வந்திருக்கிறது.

மக்கெதோனியா தேசத்தில் ஏராளமான ஜனங்கள் இருக்கிறார்கள். இவர்களில் யாருக்கும் இதுவரையிலும் சுவிசேஷம் அறிவிக்கப்படவில்லை. தங்கள் தேசத்திற்கு சீக்கிரமாக வந்து உதவிசெய்யுமாறு மக்கெதோனியா தேசத்தான் பவுலிடம் வேண்டிக்கொள்கிறான். தங்கள் தேசத்திற்காக ஜெபம்பண்ணினால் மாத்திரம் போதாது என்றும், தங்கள் தேசத்திற்கு வந்து, தங்கள் மத்தியில் சுவிசேஷ ஊழியம் செய்யவேண்டுமென்றும் அவன் பவுலை வேண்டிக்கொள்கிறான்.

இந்த உலகத்தில் ஏராளமான ஜனங்களுக்கு ஆத்தும இரட்சிப்பு தேவைப்படுகிறது. அவர்கள் தங்களுடைய தேவையை உணர்ந்து, தங்களுடைய ஆத்துமாக்களுக்கு யார் உத்திரவாதமாய் உதவி செய்யக்கூடியவர்கள் என்று தேடிப்பார்க்கவேண்டும். அப்படிப்பட்ட ஊழியக்காரர்களைத் தங்கள் மத்தியில் வந்து ஊழியம் செய்ய வருமாறு அழைக்கவேண்டும். மக்கெதோனியா தேசத்தான் அப்படிப்பட்ட ஒரு அழைப்பைத்தான் பவுலுக்குக் கொடுக்கிறான்.

பவுல் அந்தத் தரிசனத்தைக் கண்டபோது, தரிசனத்தின் பொருளை ஆவியானவர் அவனுக்கு விளங்கப்பண்ணுகிறார். அவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி கர்த்தர் தன்னை அழைக்கிறார் என்று பவுல் நிச்சயித்துக்கொள்கிறான். பல சமயங்களில் நமக்குத் தேவனுடைய அழைப்பு மனுஷர் மூலமாக வரலாம். மக்கெதோனியா தேசத்தான் "நீர் மக்கெதோனியாவுக்கு வந்து எங்களுக்கு உதவி செய்யவேண்டும்" என்று பவுலை வேண்டிக்கொண்டபோது, தேவனும் தன்னை மக்கெதோனியாவுக்குப்போய் சுவிசேஷத்தை அறிவிக்குமாறு அழைக்கிறார் என்று நிச்சயப்படுத்திக் கொள்கிறான். உடனே மக்கெதோனியாவுக்குப் புறப்பட்டுப்போகப் பிரயத்தனம்பண்ணுகிறான்.

கர்த்தருடைய தரிசனத்தைப் பெற்றுக்கொண்டால் மாத்திரம் போதாது. தரிசனத்தின் பொருளை அறிந்துகொண்டு, அதற்குக் கீழ்ப்படியவேண்டும். தேவனுடைய நாமம் மகிமைப்படவேண்டும் என்பதும், தேவனுடைய சித்தம் நிறைவேறவேண்டும் என்பதும், கர்த்தருடைய பிள்ளைகள் பிரயோஜனமடையவேண்டும் என்பதும் நம்முடைய சித்தமாயிருக்கவேண்டும்.

பிலிப்பி பட்டணம்

துரோவாவில் கப்பல் ஏறி, சாமோத்திராக்கே தீவுக்கும், மறுநாளிலே நெயாப்போலி பட்டணத்துக்கும் நேராய் ஓடி, அங்கேயிருந்து மக்கெதோனியா தேசத்து நாடுகளில் ஒன்றிற்குத் தலைமையானதும் ரோமர் குடியேறினதுமான பிலிப்பி பட்டணத்துக்கு வந்து, அந்தப் பட்டணத்திலே சிலநாள் தங்கியிருந்தோம் (அப் 16:11,12).

பவுல் தான் கண்ட பரமதரிசனத்திற்குக் கீழ்ப்படியாமல் போய்விடவில்லை. தேவனுடைய வழிநடத்துதலுக்குப் பவுல் தன்னை உடனடியாக ஒப்புக்கொடுக்கிறான். தன்னுடைய சுயதீர்மானத்தின்படி பித்தினியா நாட்டிற்கு போகப்பிரயத்தனம்பண்ணினான். ஆனால் இயேசுகிறிஸ்துவின் ஆவியானவரோ அவனை அங்கு போகவொட்டாதிருந்தார். இப்போதோ கர்த்தர் பவுலை மக்கெதோனியா நாட்டிற்குப் போகுமாறு சொல்லுகிறார். இயேசுகிறிஸ்துவின் சித்தத்தை அறிந்து கொண்ட போது பவுலுக்கு மிகுந்த சந்தோஷமுண்டாயிற்று. உடனே மக்கெதோனியாவுக்குப் புறப்பட்டுப்போக பிரயத்தனம் பண்ணுகிறான்.

தான் கண்ட தரிசனத்தை தன்னுடைய உடன்ஊழியக்காரருக்கும் தெரியப்படுத்துகிறான். சீலாவும், லூக்காவும் பவுலோடுகூட மக்கெதோனியாவுக்குப் பிரயாணம்பண்ண தங்களை ஒப்புக்கொடுக்கிறார்கள். பவுல் கிறிஸ்துவைப் பின்பற்றுவதுபோல, அவர்கள் பவுலோடுகூட கிறிஸ்துவைப் பின்பற்றுகிறார்கள். கர்த்தருடைய அழைப்புக்கு நாம் உடனடியாகக் கீழ்ப்படியவேண்டும். இன்று செய்ய வேண்டிய காரியத்தை இன்றே செய்து முடித்துவிடவேண்டும். ஆவிக்குரிய ஜீவியத்தில் காலதாமதம்பண்ணுவதும் ஆபத்தாய் முடியும். சில சமயங்களில் கர்த்தருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படியாதவாறு இருதயம் கடினமாகும்.

இந்த உலகத்தில் ஏராளமான ஜனங்களுக்கு ஆத்தும இரட்சிப்பு தேவைப்படுகிறது. அவர்கள் தங்களுடைய தேவையை உணர்ந்து, தங்களுடைய ஆத்துமாக்களுக்கு யார் உத்திரவாதமாய் உதவி செய்யக்கூடியவர்கள் என்று தேடிப்பார்க்கவேண்டும். அப்படிப்பட்ட ஊழியக்காரர்களைத் தங்கள் மத்தியில் வந்து ஊழியம் செய்ய வருமாறு அழைக்கவேண்டும். மக்கெதோனியா தேசத்தான் அப்படிப்பட்ட ஒரு அழைப்பைத்தான் பவுலுக்குக் கொடுக்கிறான்.

பவுல் அந்தத் தரிசனத்தைக் கண்டபோது, தரிசனத்தின் பொருளை ஆவியானவர் அவனுக்கு விளங்கப்பண்ணுகிறார். அவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி கர்த்தர் தன்னை அழைக்கிறார் என்று பவுல் நிச்சயித்துக்கொள்கிறான். பல சமயங்களில் நமக்குத் தேவனுடைய அழைப்பு மனுஷர் மூலமாக வரலாம். மக்கெதோனியா தேசத்தான் "நீர் மக்கெதோனியாவுக்கு வந்து எங்களுக்கு உதவி செய்யவேண்டும்" என்று பவுலை வேண்டிக்கொண்டபோது, தேவனும் தன்னை மக்கெதோனியாவுக்குப்போய் சுவிசேஷத்தை அறிவிக்குமாறு அழைக்கிறார் என்று நிச்சயப்படுத்திக் கொள்கிறான். உடனே மக்கெதோனியாவுக்குப் புறப்பட்டுப்போகப் பிரயத்தனம்பண்ணுகிறான்.

கர்த்தருடைய தரிசனத்தைப் பெற்றுக்கொண்டால் மாத்திரம் போதாது. தரிசனத்தின் பொருளை அறிந்துகொண்டு, அதற்குக் கீழ்ப்படியவேண்டும். தேவனுடைய நாமம் மகிமைப்படவேண்டும் என்பதும், தேவனுடைய சித்தம் நிறைவேறவேண்டும் என்பதும், கர்த்தருடைய பிள்ளைகள் பிரயோஜனமடையவேண்டும் என்பதும் நம்முடைய சித்தமாயிருக்கவேண்டும்.

அப்போஸ்தலரால் மக்கெதோனியாவுக்கு உடனடியாகப் போகமுடியவில்லை. ஆனாலும் அங்குப் புறப்பட்டுப்போகப் பிரயத்தனம் பண்ணுகிறார்கள். முயற்சி பண்ணுகிறார்கள். ஒரு காரியத்தை நம்மால் தீவிரமாகச் செய்யமுடியவில்லை என்றாலும், அதை உடனடியாக செய்ய ஆரம்பித்துவிடவேண்டும். அதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். அவர்களெல்லோரும் துரோவாவில் கப்பல் ஏறுகிறார்கள். அங்கிருந்து சாமோத்திராக்கே தீவுக்கும், மறுநாளிலே நெயாப்போலி பட்டணத்திற்கும் நேராய் ஓடுகிறார்கள். அதன்பின்பு பிலிப்பி பட்டணத்திற்கு வந்துசேருகிறார்கள்.

பிலிப்பி பட்டணம் மக்கெதோனியா தேசத்து நாடுகளில் ஒன்றிற்குத் தலைமையானதும், ரோமர் குடியேறினதுமான பட்டணமாகும். தலைமைப்பட்டணம் என்பது தலைநகரத்தைக் குறிக்கும் வார்த்தை. அப்போஸ்தலர்கள் சுவிசேஷ ஊழியத்தைத் தலைநகரத்தில் ஆரம்பிக்கிறார்கள். சுவிசேஷம் தலைநகரத்தில் பிரசங்கிக்கப்பட்டு, ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட்டு, சபைகள் ஸ்தாபிக்கப்பட்டால், அதன்பின்பு தலைநகரத்திலிருந்து அந்தத் தேசத்தின் மற்ற எல்லா ஊர்களுக்கும் சுவிசேஷம் பரவுவது எளிதாகயிருக்கும். பிலிப்பி பட்டணம் ஒரு குடியிருப்பு பட்டணம். இங்கு ரோமர்கள் ஏராளமாய்க் குடியிருக்கிறார்கள். ரோமருடைய பட்டாளம் ஒன்று இங்கு இருக்கிறது.

பவுலும் அவனுடைய உடன்ஊழியரும் பிலிப்பி பட்டணத்திற்கு வந்தபோது, அவர்களை யாரும் அன்பாய் வரவேற்கவில்லை. மக்கெதோனியா தேசத்தான் ஒருவன், ஒரு தரிசனத்தில், தங்கள் தேசத்திற்கு வருமாறு அழைத்தான். மக்கெதோனியா பட்டணத்திற்குப் போவது இயேசுகிறிஸ்துவின் சித்தம் என்பது பவுலுக்கும் நிச்சயமாய்த் தெரிந்தது. தேவனுடைய சித்தத்தின் பிரகாரம் பவுல் மக்கெதோனியா பட்டணத்திற்கு வரும்போது, அவனுக்கு அங்கு நல்ல வரவேற்பு இருந்திருக்கவேண்டும். ஆனால் அதுபோன்ற வரவேற்பு அப்போஸ்தலருக்குக் கிடைக்கவில்லை. அவர்கள் பிலிப்பி பட்டணத்தில் சில நாள் தங்கவேண்டியதாயிற்று.

மக்கெதோனியாவுக்கு வந்து தங்களுக்கு உதவி செய்யவேண்டுமென்று, பவுலோடு தரிசனத்தில் சொன்ன மக்கெதோனியா தேசத்தானும் பவுலை வரவேற்க வரவில்லை. அவன் தன்னுடைய தேசத்து ஜனங்களிடத்தில் பேசி, திரளான ஜனங்களைக் கூட்டிக்கொண்டு, பவுலை வரவேற்பதற்கு எந்த ஏற்பாடையும் செய்யவில்லை. வரவேற்பதற்கு யாருமில்லாமல் பவுல் பிலிப்பி பட்டணத்திற்குச் சென்றதும் கர்த்தருடைய சித்தமாயிருக்கிறது.

பவுல் தன்னைத் தாழ்த்துகிறான். தன்னுடைய ஊழியத்தைக் குறித்த பெருமை எல்லாம் அவனை விட்டு நீங்கிப்போகிறது. ஒருவேளை தேவன் பவுலுடைய உள்ளத்தில் தாழ்மையை உண்டுபண்ணுவதற்காக, அவனை அங்கு சில நாள் தங்கியிருக்குமாறு செய்திருக்கலாம். ஏனெனில் பவுல் சில நாட்களுக்கு முன்புதான், தன்னுடைய உடன் ஊழியக்காரனாகிய பர்னபாவோடு கருத்து வேறுபட்டு பிரிந்து வந்திருக்கிறான். தன்னுடைய உள்ளத்தின் பெருமையினால், விட்டுக்கொடுக்காமல் பேசி, பர்னபாவை விட்டு தனியே பிரிந்திருக்கிறான். இப்படிப்பட்ட மனுஷசுபாவங்கள் பவுலை விட்டு நீங்கவேண்டும். கர்த்தருடைய கிருபை இல்லையென்றால் பவுலினால் ஒரு ஊழியமும் செய்யமுடியாது.

மக்கெதோனியா தேசத்தான் பவுலைத் தரிசனத்தில் அழைத்தவுடன், உடனே அவன் அந்தத் தேசத்திற்குப் புறப்பட்டுப்போகப் பிரயத்தனம்பண்ணினான். உடனே கப்பல் ஏறி பிரயாணத்தை ஆரம்பித்து விடுகிறான். மக்கெதோனியா தேசத்திற்கு எவ்வளவு சீக்கிரமாய்ப் போய்ச் சேரவேண்டுமோ, அவ்வளவு சீக்கிரமாய்ச் போய்ச்சேருவதற்கு முயற்சி பண்ணுகிறான். அங்கு தனக்கு நல்ல வரவேற்பு கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறான். ஆனால் அவன் எதிர்பார்த்த பிரகாரமாக அவனுக்கு ஒரு வரவேற்பும் கிடைக்கவில்லை. பிலிப்பு பட்டணத்திற்குப் போய்ச்சேர்ந்தவுடன், மக்கெதோனியா தேசத்தாருக்கு கிறிஸ்துவின் பிரசங்கச் செய்தியை உபதேசித்து, அவர்களுக்கு ஆவிக்குரிய உதவிசெய்ய நல்ல வாய்ப்பு உண்டாயிருக்கும் என்று எதிர்பார்க்கிறான். ஆனால் ஊழிய வாய்ப்பு உடனடியாக கிடைக்கவில்லை. ஒரு ஊழியமும் செய்யமுடியாமல் அவன் பிலிப்பி பட்டணத்தில் சில நாள் தங்கியிருக்க வேண்டியதாயிற்று. ஊழியம் செய்யாமல் இங்கு சும்மாயிருப்பதற்குப் பதிலாக, இந்த ஊருக்கு வந்திருக்கவேண்டியதில்லை என்னும் எண்ணமும், தாங்கள் இருந்த ஊரிலேயே இருந்திருக்கலாம் என்னும் எண்ணமும் அப்போஸ்தலருக்கு உண்டாயிருக்கலாம். இது மனுஷருடைய இயல்பான சிந்தனை.

கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நம்மை ஒரு சிலர் ஏதாவது ஒரு இடத்திற்கு ஊழியத்திற்கு அழைக்கலாம். நாமும் ஜெபம்பண்ணி, ஆயத்தப்பட்டு, மிகுந்த எதிர்பார்ப்போடு அந்த ஸ்தலத்திற்கு ஊழியம் செய்யப்போவோம். ஆனால் நாம் எதிர்பார்க்கிற பிரகாரமாக அங்கு ஊழியம் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்காது. கூட்டத்தைச் சரியாக ஒழுங்கு செய்திருக்கமாட்டார்கள். இந்த ஊழியத்திற்கு வந்திருக்க வேண்டாம் என்று கூட நமக்கு நினைப்பு உண்டாகும். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் நாம் சோர்ந்து போகக்கூடாது. கர்த்தர் நம்மை அழைக்கும்போது, அவர் நிச்சயமாகவே நம்மை தம்முடைய ஊழியத்தில் பயன்படுத்துவார். ஏற்றவேளை வரும் வரையிலும் நாம் ஜெபத்தோடு காத்திருக்கவேண்டும்.

ஓய்வுநாள்

ஓய்வுநாளில் நாங்கள் பட்டணத்துக்கு வெளியே போய், ஆற்றினருகே வழக்கமாய் ஜெபம்பண்ணுகிற இடத்தில் உட்கார்ந்து, அங்கே கூடிவந்த ஸ்திரீகளுக்கு உபதேசித்தோம் (அப் 16:13).

பிலிப்பி பட்டணத்தில் யூதர்கள் அதிகமாகயில்லை. அங்கு வாசம்பண்ணுவோர் எல்லோருமே ரோமராகயிருக்கிறார்கள். யூதருடைய ஜெபாலயம் அந்தப் பட்டணத்திலில்லை. அப்படிப்பட்ட இடத்தில்கூட ஒரு சில ஸ்திரீகள் ஓரிடத்தில் ஜெபம்பண்ணுவதற்காக வழக்கமாக கூடிவருகிறார்கள். இந்த இடம் பட்டணத்திற்கு வெளியே ஆற்றினருகே இருக்கிறது. பிலிப்பி பட்டணத்து ஜனங்கள் விக்கிரகாராதனை செய்கிறார்கள். விக்கிரகாராதனையில் ஈடுபடாமல், மெய்யான தேவனை ஆராதிக்கவேண்டும் என்று விருப்பமுள்ளவர்கள், பட்டணத்திற்கு வெளியே போய், ஆற்றினருகே கூடிவந்து ஜெபிக்கிறார்கள்.

விக்கிரகங்களை ஆராதிக்காமல், மெய்யான தேவனை ஆராதிக்கிறவர்கள், பட்டணத்திற்கு வெளியே உள்ள ஆற்றினருகே, ஒவ்வொரு நாளும் தனித்தனியாக வந்து ஜெபிக்கிறார்கள். ஓய்வுநாளின்போது அநேகர் இங்கு கூடிவந்து ஜெபம்பண்ணுகிறார்கள். இவர்கள் எண்ணிக்கையில் குறைவாயிருக்கிறார்கள். ஆனாலும் இவர்களுடைய இருதயம் பரிசுத்தமாயிருக்கிறது. பரிசுத்த அலங்காரத்துடனே தேவனைத் தொழுதுகொள்ள இந்த இடத்திற்கு வந்திருக்கிறார்கள். இந்த இடம் பட்டணத்தைவிட்டு வெளியே இருக்கிறது. ஆனாலும் கர்த்தருடைய பரிசுத்த பிரசன்னம் இந்த இடத்தில் நிரம்பியிருக்கிறது. பக்தியுள்ளவர்கள் ஓய்வுநாளின்போது, தேவனை ஆராதிப்பதற்காக, இங்கு கூடி வந்து ஜெபிக்கிறார்கள்.

நாம் செய்ய வேண்டிய வேலையை, நம்மால் செய்ய முடியாமல் போனாலும், நம்மால் செய்ய முடிகிற வேலையை சிறப்பாகச் செய்யவேண்டும். கர்த்தரை ஆராதிப்பதற்கு நம்முடைய ஊரில் பரிசுத்த ஆலயம் இல்லையென்றால், விசுவாசிகள் தனியான இடங்களில் ஒன்றுகூடி ஜெபிக்கலாம். கர்த்தருடைய பிள்ளைகள் எங்கே கூடியிருக்கிறார்களோ அங்கே அவருடைய பிரசன்னம் அவர்களோடு கூடயிருக்கும்.

பிலிப்பி பட்டணத்தில், பக்தியுள்ளவர்கள் ஆற்றினருகே வந்து ஜெபம்பண்ணுகிறார்கள். இது அமைதியான இடம். பட்டணத்திற்கு வெளியே இருக்கிறது. இந்த இடத்திற்கு பவுலும் சீலாவும், லூக்காவும் வந்து உட்காருகிறார்கள். ஆலயத்திலிருப்பதுபோல பிரசங்க பீடம் எதுவுமில்லை. அமருவதற்கு ஆசனம் எதுவும் போடப்படவில்லை. ஆற்றினருகே மணல் வெளியில் இவர்களெல்லோரும் தரையில் உட்கார்ந்து, ஒன்றுகூடி ஒருமனப்பட்டு ஜெபம்பண்ணுகிறார்கள். இந்த இடத்தில் கூடிவந்திருக்கிற ஸ்திரீகளுக்கு பவுல் கர்த்தருடைய சத்தியத்தை உபதேசம்பண்ணுகிறான். அவர்களெல்லோரும் கிறிஸ்துவைப்பற்றிய அறிவில் வளர்ச்சி பெறத்தக்கதாக அவர்களுக்குப் போதகம்பண்ணுகிறான்.

லீதியாள்

அப்பொழுது தியத்தீரா ஊராளும் இரத்தாம்பரம் விற்கிறவளும் தேவனை வணங்குகிறவளுமாகிய லீதியாள் என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீ கேட்டுக்கொண்டிருந்தாள்; பவுல் சொல்லியவைகளைக் கவனிக்கும்படி கர்த்தர் அவள் இருதயத்தைத் திறந்தருளினார் (அப் 16:14).

அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தில், அப்போஸ்தலர்கள் ஊழியம் செய்த வெவ்வேறு ஸ்தலங்களைப்பற்றி குறிப்புக்கள் உள்ளன. இந்தக் குறிப்புக்களோடு இரட்சிக்கப்பட்ட மனுஷர்களைப்பற்றிய விசேஷித்த குறிப்புக்களும் உள்ளன. கர்த்தருடைய பார்வையில் ஒவ்வொரு ஆத்துமாவும் விலையேறப்பெற்றது. ஒரு பாவி மனந்திரும்பி இரட்சிக்கப்படுகிறபோது, பரலோகத்தில் மிகுந்த சந்தோஷமுண்டாகிறது.

கர்த்தர் ஒரு சிலரை இரட்சிப்பதற்கு, தம்முடைய பலத்த கையினால் அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்கிறார். பவுல் தேவனுடைய அற்புதத்தையும், அதிசயத்தையும் பார்த்து இரட்சிக்கப்பட்டவன். ஏராளமானோர் அற்புதங்களையும் அதிசயங்களையும் பார்த்து இரட்சிக்கப்படவில்லை. அவர்கள் தேவனுடைய இரட்சிக்கும் கிருபையினால், தங்கள் வாழ்க்கையில் எந்த அற்புதமும் அடையாளமும் நடைபெறாமல், இரட்சிக்கப்படுகிறார்கள். கர்த்தருடைய வசனம் இவர்களுக்குப் போதகம் பண்ணப்படுகிறது. பரிசுத்த ஆவியானவர் அவர்களுடைய உள்ளத்தில் சத்தியத்தை உணர்த்துகிறார். அவர்களுடைய இருதயத்தோடு பேசுகிறார். அவர்களுடைய மனக்கண்களைத் திறக்கிறார். அவர்கள் இரட்சிக்கப்படுகிறார்கள். லீதியாள் என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீ, இதைப்போல, தேவனுடைய இரட்சிக்கும் கிருபையினால் இரட்சிக்கப்பட்டிருக்கிறாள்.

பரிசுத்த வேதாகமம் தேவனுடைய புஸ்தகம். இதில் ஒருவருடைய பெயர் எழுதப்பட்டிருப்பது, மேன்மையான சிலாக்கியம். அப்படிப்பட்ட நல்ல சிலாக்கியம் லீதியாளுக்குக் கிடைத்திருக்கிறது. நம்முடைய பெயர்கள் வேதாகமத்தில் எழுதப்படாமல் இருக்கலாம். ஆனாலும் தேவன் நம்முடைய பெயர்களை பரலோகத்திலுள்ள தம்முடைய ஜீவப்புஸ்தகத்தில் எழுதியிருக்கிறார். பரலோகத்தில் நம்முடைய பெயர்கள் எழுதப்பட்டிருப்பதற்காக நாம் சந்தோஷப்படவேண்டும்.

லீதியாள் இரத்தாம்பரம் விற்கிற வேலை செய்கிறாள். வரலாற்று ஆசிரியர்கள் லீதியாளைப்பற்றி சிறப்பாக எழுதுகிறார்கள். இவள் ஐசுவரியமுள்ள ஸ்திரியல்ல. இரத்தாம்பரத்தை விற்கிறவள் மாத்திரமே. இரத்தாம்பரத்தை அணிகிறவளல்ல. தேவன் இப்படிப்பட்ட சாதாரண மக்களையும் சந்தித்து அவர்களை இரட்சிக்கிறார். தேவன் வெளித்தோற்றமான இரத்தாம்பர வஸ்திரத்தைப் பார்ப்பதில்லை. அவர் நம்முடைய இருதயத்தையே பார்க்கிறார்.

லீதியாளுக்கென்று ஒரு வேலை இருக்கிறது. ஒவ்வொரு நாளும் இரத்தாம்பரம் விற்கவேண்டும். தன்னுடைய வேலையை அவள் செய்தாலும், அதற்கு மத்தியில் அவள் தேவனை வணங்குகிறவளாகவும் இருக்கிறாள். தேவனை ஆராதிப்பதற்கு அவளுடைய தொழில் அவளுக்குத் தடையாகயில்லை. நம்முடைய தொழில்களைப் பார்க்க வேண்டுமென்பதற்காக, கர்த்தரை ஆராதிப்பதை விட்டுவிடக்கூடாது. நாம் வியாபாரத்தை மாத்திரம் பார்த்தால் போதாது. நம்முடைய ஆத்துமாவையும் பார்க்கவேண்டும். நம்முடைய ஆத்துமா செழிப்பதுபோலவே நம்முடைய ஜீவியமும் செழிக்கும். தொழிலையும் செய்யவேண்டும். கர்த்தரையும் ஆராதிக்கவேண்டும்.

லீதியாள் தியத்தீரா ஊரைச் சேர்ந்தவள். இந்த ஊர் பிலிப்பி பட்டணத்திலிருந்து வெகுதூரத்திலுள்ளது. கர்த்தரை ஆராதிப்பதற்கு தூரம் ஒரு தடையல்ல. தியத்தீரா ஊரிலிருந்து, பிலிப்பி பட்டணத்திற்கு வெளியே உள்ள ஆற்றினருகே, மற்ற ஸ்திரீகளோடு கூடிவந்து ஜெபிப்பதற்கு லீதியாளும் வருகிறாள். பவுலின் உபதேசத்தைக் கேட்கிறாள். ஆவிக்குரிய உபதேசங்களையும், ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்கிறாள்.

பவுல் இவளுக்குப் பிரசங்கம்பண்ணுவதற்கு முன்பாகவே, அவள் தேவனை வணங்குகிறவள். தேவனைப்பற்றி தனக்குள்ள ஞானத்தின் பிரகாரம் லீதியாள் தேவனை வணங்குகிறவள். பக்தியுள்ள ஸ்திரீகளில் இவளும் ஒருத்தி. சில சமயங்களில் ஒருவர் மனந்திருந்தி இரட்சிக்கப்படுவதற்கு முன்பாகவே, தேவனுடைய கிருபை அவர்களுக்குள் கிரியை செய்யும். ஒரு சிலர் துன்மார்க்கராகவும், துரோகிகளாகவும் இருப்பார்கள். அப்படிப்பட்டவர்கள்கூட கர்த்தரை ஆராதிக்கிற ஜனங்களோடு சேர்ந்து, இவர்களும் கர்த்தரை ஆராதிப்பார்கள்.

இவர்கள் துன்மார்க்கராகயிருந்தாலும், நல்லவர்களோடு பழக்கம் வைத்திருப்பார்கள். இவர்கள்கூட, ஏற்றவேளை வரும்போது, கர்த்தருடைய இரட்சிக்கும் கிருபையினால், இரட்சிக்கப்பட்டு நல்லவர்களாகவும் பிரயோஜனமுள்ள வர்களாகவும் மாறுவார்கள்.

நாம் தேவனை வணங்குகிறவர்களாக மாத்திரம் இருந்தால் போதாது. இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைத்திருக்கிற விசுவாசிகளாகவும் இருக்கவேண்டும். தேவனை வணங்கவேண்டும் என்று புரிந்துகொள்கிறவர்கள், அந்தத் தேவன் கிறிஸ்துதான் என்பதையும் புரிந்து கொள்வார்கள். பக்தியுள்ளவர்களை கர்த்தர் தம் பக்கமாகச் சேர்த்துக் கொள்கிறார். தேவனை வணங்குகிறவர்களுக்கு, இயேசுகிறிஸ்துவைப் பற்றி உபதேசிக்கவேண்டும். லீதியாள் தேவனை வணங்குகிறாள். இயேசுகிறிஸ்துவே அந்த தேவன் என்னும் சத்தியத்தைப் பவுல் அவளுக்கு உபதேசம்பண்ணுகிறான்.

எந்த இடத்தில் ஜெபம்பண்ணுகிறார்களோ, அந்த இடத்தில் கர்த்தருடைய வசனம் உபதேசம்பண்ணப்படுகிறது. கர்த்தருடைய வார்த்தையை நாம் கேட்காவிட்டால், கர்த்தர் நம்முடைய ஜெபத்திற்குப் பதில் கொடுக்கமாட்டார். ஆகையினால் நம்முடைய ஆராதனையில் ஜெபமும், வேதவசனத்தைத் தியானிப்பதும் சேர்ந்து நடைபெறவேண்டும். இரண்டுமே முக்கியம். வேதமே நமக்கு வெளிச்சம். கர்த்தரை ஆராதிக்கிறவர்கள் வேதவெளிச்சத்தில் அவரை ஆராதிக்கவேண்டும். இருட்டில் ஆராதிக்கக்கூடாது. வேதவசனத்தின் வெளிச்சத்திலிருக்கிறவர்கள், இன்னும் அதிகமான பிரகாசத்தை நாடவேண்டும். வேதவசனத்தை இன்னும் அதிகமாய்த் தியானிக்கவேண்டும். லீதியாள் தேவனை வணங்குகிறாள். பவுலின் உபதேசத்தைக் கேட்கிறாள்.

பவுல் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கூடிவந்த ஸ்திரீகளுக்கு உபதேசிக்கிறான். அப்போது பவுல் சொல்லியவைகளைக் கவனிக்கும்படி கர்த்தர் லீதியாளின் இருதயத்தைத் திறந்தருளுகிறார். கர்த்தரே நம்முடைய இருதயத்தைத் திறக்கக்கூடியவர். இரட்சிப்பு கர்த்தருடையது. கர்த்தருடைய கிருபையினாலேயே நாம் இரட்சிக்கப்படுகிறோம். நம்முடைய மனமாற்றமும் கர்த்தருடைய கிரியையே. கர்த்தரே நம்முடைய இருதயத்தில் சிந்தனையையும், அதைச் செய்வதற்கான ஆற்றலையும் கொடுக்கிறவர். தேவனுடைய கிருபையில்லாமல் நம்மால் ஒன்றும் செய்யமுடியாது. நம்முடைய சுயமுயற்சியினால் நம்மால் எதையும் சாதிக்கமுடியாது. கர்த்தர் லீதியாளின் இருதயத்தைத் திறக்கவில்லையென்றால், பவுலின் பிரசங்கம் அவளுக்கு வெறும் ஓசையாகத்தான் இருக்கும். அதன் கருத்து அவளுக்கு விளங்காது. கர்த்தர் இருதயத்தைத் திறப்பதினால், பவுல் சொல்லுகிற சத்தியத்தை லீதியாள் புரிந்துகொள்கிறாள்.

நம்முடைய ஆத்தும இரட்சிப்புக்காக நாம் தேவனையே துதிக்கவேண்டும். நம்முடைய துதி கன மகிமை அனைத்தையும் தேவனுக்கே செலுத்த வேண்டும். தேவகிருபையில்லையென்றால் இரட்சிப்பும் இல்லை. மனமாற்றம் இருயத்தில் உண்டாகிறது. இரட்சிப்பு கர்த்தருடையது. அந்த இரட்சிப்பு நம்முடைய இருதயத்தில் உண்டாகிறது. கர்த்தர் நம்முடைய இருதயத்தில் கிரியை செய்து, அதைப் புதுப்பிக்கிறார்.

கர்த்தர் லீதியாளின் இருதயத்தைத் தொட்டு, அவளுடைய இருதயத்தைத் திறந்தருளுகிறார். இரட்சிக்கப்படாத ஆத்துமா தேவனுடைய கிருபைக்கு விரோதமாக மூடப்பட்டிருக்கும். இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமாக இந்த ஆத்துமா தன்னை வேலியடைத்துக் காத்துக்கொள்ளும். கர்த்தர் நம்முடைய ஆத்துமாவில் கிரியை நடப்பிக்க வரும்போது, இதன் வாசற்படியில் நின்று தட்டுகிறார். "இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்" (வெளி 3:20) என்று அன்போடு சொல்லுகிறார்.

நாம் இயேசுகிறிஸ்துவின் சத்தத்தைக் கேட்கும்போது, நம்முடைய இருதயத்தின் கதவைத் திறக்கவேண்டும். கர்த்தரே இருதயத்தைத் திறக்கிறவர். நம்முடைய இருதயத்தை அவர் திறப்பதற்கு நாம் ஒப்புக்கொடுக்கவேண்டும். கர்த்தர் நம்முடைய இருதயத்தைத் திறக்கும்போது, இயேசுகிறிஸ்துவின் மகிமை நம்முடைய இருதயத்தில் வந்து நிரம்பும்.

ஞானஸ்நானம்

அவளும் அவள் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றபின்பு, அவள் எங்களை நோக்கி: நீங்கள் என்னைக் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவளென்று எண்ணினால், என் வீட்டிலே வந்து தங்கியிருங்கள் என்று எங்களை வருந்திக் கேட்டுக்கொண்டாள் (அப் 16:15).

பவுல் சொல்லிய வசனங்களைக் கேட்கும்படி கர்த்தர் லீதியாளின் இருதயத்தைத் திறந்தருளுகிறார். கர்த்தருடைய வார்த்தைக்கு லீதியாள் கவனமாய்ச் செவிகொடுக்கிறாள். பவுலின் உபதேச வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, லீதியாள் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்கிறாள். சுவிசேஷ வசனம் லீதியாளின் இருதயத்திற்குள் பிரவேசித்த போது, அவளுக்குள் மாற்றமுண்டாயிற்று. இயேசுகிறிஸ்துவிடத்தில் தன்னை ஒப்புக்கொடுக்கிறாள். கர்த்தருடைய பிரமாணத்தின்படி தான் மாத்திரம் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டால் போதாது என்று நினைத்து, அவளும் அவள் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்கிறார்கள்.

லீதியாள் கர்த்தருடைய ஊழியக்காரரை அதிகமாய் நேசிக்கிறாள். அவர்களுடைய உபதேசம் தனக்கு இன்னும் தேவைப்படுவதை உணருகிறாள். அவள் ஊழியக்காரரிடத்தில் "நீங்கள் என்னை கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவள் என்று எண்ணினால், என் வீட்டிலே வந்து தங்கியிருங்கள்" என்று அவர்களை வருந்திக் கேட்டுக்கொள்கிறாள். தன்னுடைய ஆத்தும இரட்சிப்புக்கு கர்த்தருடைய ஊழியக்காரர்கள் உதவி செய்தார்களென்பதை அங்கீகரித்து, அவர்களைத் தன்னுடைய வீட்டில் ஏற்றுக்கொண்டு, அவர்களை உபசரிக்க விரும்புகிறாள்.

லீதியாளின் இருதயம் இயேசுகிறிஸ்துவுக்காகத் திறக்கப்பட்ட போது, அவளுடைய வீடு கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்காகத் திறக்கப்படுகிறது. ஊழியக்காரர்களைத் தங்கள் வீட்டிற்கு வருமாறு சாதாரணமாக அழைக்காமல், தங்கள் வீட்டிலே வந்து தங்கியிருங்கள் என்று, அவர்களை வருந்திக் கேட்டுக்கொள்கிறாள். லீதியாள் ஊழியக்காரரைத் தன்னுடைய வீட்டிற்கு வருமாறு அழைத்தபோது, பவுல் அங்கு போக மனதில்லாமல் இருந்திருக்கலாம். தயங்கியிருக்கலாம். ஆனால் லீதியாளோ, ஊழியக்காரர்கள் எப்படியாவது தன் வீட்டிற்கு வந்து தங்கவேண்டுமென்று, அவர்களை வருந்திக் கேட்டுக்கொள்கிறாள்.

ஊழியக்காரர்கள் தங்கள் வீட்டிற்கு வந்தால், அவர்கள் மூலமாக கர்த்தருடைய வார்த்தையை இன்னும் அதிகமாய்க் கேட்பதற்கு வாய்ப்புண்டாகும் என்று எதிர்பார்க்கிறாள். அவர்கள் லீதியாளின் வீட்டில் வந்து உபதேசம்பண்ணினால், அவர்களுடைய உபதேசத்தைக் கேட்பதோடு, தன்னுடைய இருதயத்திலிருக்கும் சந்தேகங்களையும் அவர்களிடத்தில் கேள்வி கேட்டு, தெளிவு பெறலாம் என்றும் எதிர்பார்க்கிறாள். தானும் தன்னுடைய குடும்பத்தாரும் அனுதினமும் தனியாக ஜெபிப்பதற்குப் பதிலாக, ஊழியக்காரர்களோடு சேர்ந்து ஜெபிப்பதற்கு வாய்ப்புண்டாகும் என்றும் எதிர்பார்க்கிறாள். தன்னுடைய குடும்பத்திலுள்ள வீட்டார் அனைவரும் ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சி பெறுவதற்கு ஊழியக்காரர்களுடைய உபதேசம் உதவியாயிருக்கும் என்று எதிர்பார்த்து அவர்களைத் தன் வீட்டிலே வந்து தங்கியிருக்குமாறு வருந்திக் கேட்டுக்கொள்கிறாள்.

ஊழியத்தில் பிரச்சனை
அப் 16 : 16-24

அப் 16:16. நாங்கள் ஜெபம்பண்ணுகிற இடத்துக்குப் போகையில் குறிசொல்ல ஏவுகிற ஆவியைக்கொண்டிருந்து, குறிசொல்லுகிறதினால் தன் எஜமான்களுக்கு மிகுந்த ஆதாயத்தை உண்டாக்கின ஒரு பெண் எங்களுக்கு எதிர்ப்பட்டாள்.

அப் 16:17. அவள் பவுலையும் எங்களையும் பின் தொடர்ந்து வந்து: இந்த மனுஷர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர், இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள் என்று சத்தமிட்டாள்.

அப் 16:18. இப்படி அநேகநாள் செய்து கொண்டுவந்தாள். பவுல் சினங்கொண்டு, திரும்பிப்பார்த்து: நீ இவளை விட்டுப் புறப்படும்படி இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உனக்குக் கட்டளையிடுகிறேன் என்று அந்த ஆவியுடனே சொன்னான்; அந்நேரமே அது புறப்பட்டுப் போயிற்று.

அப் 16:19. அவளுடைய எஜமான்கள் தங்கள் ஆதாயத்து நம்பிக்கை அற்றுப் போயிற்றென்று கண்டு, பவுலையும் சீலாவையும் பிடித்து, சந்தை வெளியிலுள்ள அதிகாரிகளிடத்தில் இழுத்துக்கொண்டு போனார்கள்.

அப் 16:20. அவர்களை அதிகாரிகளிடத்தில் ஒப்புவித்து: யூதர்களாகிய இந்த மனுஷர் நம்முடைய பட்டணத்தில் கலகம்பண்ணி,

அப் 16:21. ரோமராகிய நாம் ஏற்றுக்கொள்ளவும் அநுசரிக்கவும் தகாத முறைமைகளைப் போதிக்கிறார்கள் என்றார்கள்.

அப் 16:22. அப்பொழுது ஜனங்கள் கூட்டங்கூடி, அவர்களுக்கு விரோதமாய் எழும்பினார்கள். அதிகாரிகள் அவர்கள் வஸ்திரங்களைக் கிழித்துப்போடவும், அவர்களை அடிக்கவும் சொல்லி;

அப் 16:23. அவர்களை அநேக அடி அடித்த பின்பு, சிறைச்சாலையிலே வைத்து அவர்களைப் பத்திரமாய்க் காக்கும்படி சிறைச்சாலைக்காரனுக்குக் கட்டளையிட்டார்கள்.

அப் 16:24. அவன் இப்படிப்பட்ட கட்டளையைப் பெற்று, அவர்களை உட்காவலறையிலே அடைத்து, அவர்கள் கால்களைத் தொழு மரத்தில் மாட்டிவைத்தான்.

குறிசொல்ல ஏவுகிற ஆவி

நாங்கள் ஜெபம்பண்ணுகிற இடத்துக்குப் போகையில் குறிசொல்ல ஏவுகிற ஆவியைக்கொண்டிருந்து, குறிசொல்லுகிறதினால் தன் எஜமான்களுக்கு மிகுந்த ஆதாயத்தை உண்டாக்கின ஒரு பெண் எங்களுக்கு எதிர்ப்பட்டாள் (அப் 16:16).

பவுலும் அவனுடைய உடன்ஊழியரும், ஜெபம்பண்ணுகிற இடத்திற்குப் போகிறார்கள். அப்போது குறிசொல்ல ஏவுகிற ஆவியைக் கொண்டிருந்த ஒரு பெண் அவர்களுக்கு எதிர்பார்ப்படுகிறாள். ரோமாபுரியாரின் அப்பொல்லோ என்னும் தெய்வத்திடம் வாக்குப்பெற்று, இவள் குறிசொல்லுகிறாள் என்று அந்தப் பட்டணத்து ஜனங்கள் நம்புகிறார்கள். இந்த ஆவியைக் கொண்டிருக்கிற பெண்ணுக்கு எஜமான்கள் இருக்கிறார்கள். இந்தப் பெண் குறிசொல்லுகிறதினால் தன் எஜமான்களுக்கு மிகுந்த ஆதாயத்தை உண்டுபண்ணுகிறாள்.

அக்காலத்தில் ஜனங்கள் விக்கிரகாராதனையிலும், அறியாமையிலும் மூழ்கியிருந்தார்கள். சாத்தான் அவர்களைத் தன் இஷ்டப்பிரகாரம் சிறைப்பிடித்து வைத்திருந்தான். அவர்களை தன்னுடைய ஆலோசனையின் படி வழிநடத்துவதற்கு, இந்தப் பெண்ணைப் போல குறிசொல்லுகிறவர்களை அவர்கள் மத்தியிலே நியமித்திருந்தான்.

அசுத்த ஆவிகள் குறிசொல்ல ஏவுகிற ஆவிகளாகயிருக்கிறது. அவைகள் சாத்தானுடைய துர்ஆலோசனைகளை, ஜனங்களுக்குக் குறியாகச் சொல்லுகிறது. ஜனங்களும் இந்தக் குறியை நம்பி, குறிசொல்லுகிறவர்களிடத்தில் கூட்டமாய்ப்போய் குறிகேட்கிறார்கள்.

இலவசமாகக் குறி சொல்லப்படுவதில்லை அதற்குப் பணம் கொடுக்கவேண்டும். ஒரு சில முதலாளிகள் குறிசொல்லுகிறவர்களை வேலைக்கு அமர்த்தி பணம் சம்பாதிக்கிறார்கள். குறிசொல்லுகிற தொழில் மிகுந்த ஆதாயத்தை உண்டுபண்ணுகிற தொழிலாயிருக்கிறது. அப்படிப்பட்ட அசுத்த ஆவியை உடைய ஒரு பெண் ஊழியக்காரர்களுக்கு எதிர்ப்படுகிறாள்.

தேவனுடைய ஊழியக்காரர்

அவள் பவுலையும் எங்களையும் பின்தொடர்ந்து வந்து: இந்த மனுஷர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர், இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள் என்று சத்தமிட்டாள் (அப் 16:17).

குறிசொல்ல ஏவுகிற ஆவியைக் கொண்டிருந்த பெண் பவுலையும் அவனுடைய உடன்ஊழியரையும் பின்தொடர்ந்து வருகிறாள். இவர்கள் ஜெபம்பண்ணுகிற இடத்திற்குப் போகிறாள். ஊழியக்காரர்கள் இரகசியமாய் ஜெபம்பண்ணவில்லை. அவர்கள் ஜெபம்பண்ணுகிற இடம் எல்லோருக்கும் தெரியும். கர்த்தருடைய பிள்ளைகள் ஜெபம்பண்ணுவதற்கு சாத்தான் தடையாகயிருக்கிறான். அவர்கள் ஜெபம்பண்ணப்போகும்போது, குறிசொல்ல ஏவுகிற ஆவியை கொண்டிருக்கிற பெண்ணையும், அவர்களைப் பின்தொடர்ந்து போகுமாறு அனுப்புகிறான். அவர்களுடைய ஜெபசிந்தனையை சீர்குலைக்கவும், ஜெபம்பண்ணுவதற்கு இடையூறு பண்ணவும் சாத்தான் முயற்சிபண்ணுகிறான்.

குறிசொல்லுகிற ஸ்திரீ ஊழியக்காரரைப் பார்த்து சத்தமிட்டு "இந்த மனுஷர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர், இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள்" என்றும் சொல்லுகிறாள்.

குறிசொல்லுகிற ஸ்திரீ சொன்ன வார்த்தை மெய்யானதுதான். பவுலும் அவன் உடன்ஊழியரும் மெய்யாகவே உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர்கள்தான். தேவனே இவர்களைத் தம்முடைய ஊழியத்திற்கு அழைத்து, பயன்படுத்துகிறார். கர்த்தருடைய ஊழியத்தைச் செய்வதற்காகவே அவர்கள் பிலிப்பி பட்டணத்திற்கு வந்திருக்கிறார்கள். அவர்கள் பிரசங்கிக்கிற செய்தியும் தேவனிடத்திலிருந்து வந்திருக்கிறது.

பிலிப்பி பட்டணத்திலிருக்கிற ரோமர்கள் கர்த்தருடைய காணியாட்சிக்குப் புறம்பான புறஜாதியார்கள். அவர்கள் விக்கிரங்களை ஆராதிக்கிறார்கள். விக்கிரகங்கள் மெய்யான தேவனல்ல. அப்போஸ்தலர்கள் ஆராதிக்கிற தேவனே உன்னதமான தேவன். இந்தச் சத்தியம் பிசாசுக்குத் தெரிந்திருக்கிறது. குறிசொல்ல ஏவுகிற ஆவியைக் கொண்டிருந்த ஸ்திரீ, அசுத்த ஆவியின் வல்லமையினால், கர்த்தருடைய ஊழியக்காரரைப்பார்த்து "இந்த மனுஷர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர்" என்று சத்தமிட்டுச் சாட்சியாகச் சொல்லுகிறாள். இவர்கள் ஆராதிக்கிற தேவனே எல்லா மனுஷரையும்விட, எல்லா தேவர்களையும்விட உயர்ந்தவர் என்றும், உன்னதமானவர் என்றும் சத்தமிட்டுச் சொல்லுகிறாள்.

பவுலும் அவனோடு கூடயிருக்கிற ஊழியக்காரரும் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர் என்று குறிசொல்லுகிற பெண் சத்தமிட்டுச் சாட்சிசொல்லுகிறாள். அவர்கள் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரராக இருப்பதினால், நாம் அவர்களுக்கு செவிகொடுக்க வேண்டியது அவசியம் என்றும், அது நம்முடைய கடமை என்றும், அவர்களுக்குச் செவிகொடுக்கவில்லையென்றால், நமக்கு அழிவு நிச்சயம் என்றும் பொருள்படுமாறு அந்தப் பெண் சொல்லுகிறாள்.

இவர்கள் இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள் என்றும் சத்தமிட்டுச் சொல்லுகிறாள். புறஜாதியாருக்கும் மனுஷருடைய அறிவைக் குறித்தும், இரட்சிப்பைக் குறித்தும் ஓரளவு ஞானம் இருக்கிறது. பிலிப்பி பட்டணத்திலுள்ள ஜனங்கள் இதுவரையிலும் தங்களுடைய இரட்சிப்பை வீணாய்த் தேடினார்கள். அது அவர்களுக்கு கிடைக்காமற்போயிற்று. அப்போஸ்தலரோ உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர்களாக இருக்கிறார்கள். இவர்கள் இரட்சிப்பின் வழியை தங்களுக்கு அறிவிக்கிறவர்களென்று குறிசொல்ல ஏவுகிற ஆவியைக் கொண்டிருந்த பெண் சொல்லுகிறாள்.

இந்தப் பெண்ணோ பிசாசு பிடித்தவள். குறிசொல்ல ஏவுகிற ஆவியைக் கொண்டிருக்கிறவள். இவளுடைய வாயிலிருந்து கர்த்தருடைய ஊழியக்காரரைப்பற்றிச் சாட்சியான வார்த்தை வருகிறது. சாத்தான் தனக்குத்தானே விரோதமாகப் பிரிந்து செயல்படுவது போன்று தெரிகிறது. இதற்கு வேதபண்டிதர்கள் இரண்டு விதமாக வியாக்கியானம் கூறுகிறார்கள்.

தேவனுடைய வல்லமையினால் குறிசொல்லுகிற ஏவுகிற ஆவியும் சுவிசேஷத்தை மகிமைப்படுத்துகிறது. பிசாசுகளும் இயேசுவைக் கிறிஸ்து என்று அறிக்கை செய்கிறது (மாற் 1:24). ஜெபாலயத்திலே அசுத்த ஆவியுள்ள ஒரு மனுஷனிருந்தான். அந்த மனுஷன் இயேசுகிறிஸ்துவிடம் "ஐயோ! நசரேயனாகிய இயேசுவே, எங்களுக்கும் உமக்கும் என்ன? எங்களைக் கெடுக்கவா வந்தீர்? உம்மை இன்னார் என்று அறிவேன், நீர் தேவனுடைய பரிசுத்தர்" என்று சத்தமிட்டான். அதற்கு இயேசு: நீ பேசாமல் இவனை விட்டுப் புறப்பட்டுப்போ என்று அதை அதட்டினார். உடனே அந்த அசுத்த ஆவி அவனை அலைக்கழித்து, மிகுந்த சத்தமிட்டு, அவனைவிட்டுப் போய்விட்டது (மாற் 1:24-26). சத்தியத்தின் சத்துருக்கள்கூட, சில சமயங்களில் தங்கள் வார்த்தையின் மூலமாய்ச் சத்தியத்தை மேன்மைப்படுத்துகிறார்கள்.

பிசாசு வஞ்சக எண்ணமுள்ளவன். சூதுவாது நிறைந்தவன். தந்திரம் மிகுந்தவன். சுவிசேஷத்தின் மேன்மையை சீர்குலைப்பதற்காக பிசாசு தந்திரமாகத் திட்டமிட்டு, குறிசொல்ல ஏவுகிற ஆவியைக் கொண்டிருக்கிற பெண்ணின் மூலமாக இப்படி பேசியிருக்கலாம். பிலிப்பி பட்டணத்திலுள்ள ஜனங்களில் ஏராளமானோர் குறிசொல்ல ஏவுகிற ஆவியை நம்புகிறார்கள். இந்தப் பெண்ணின் மூலமாக குறி கேட்க விரும்புகிறார்கள். இந்தப் பெண் தேவனுடைய ஊழியக்காரரைப்பற்றி உயர்வாகப் பேசினால், பிலிப்பி ஊர் ஜனங்களுக்கு அவர்கள்மீது கோபம் வர வாய்ப்புள்ளது. தங்களுடைய குறிகாரியைவிட இவர்கள் உயர்ந்தவர்களா என்னும் எண்ணம் அவர்கள் உள்ளத்தில் உண்டாகும். பிரிவினை உண்டாகும். ஜனங்கள் ஊழியக்காரருக்கு விரோதமாக எழும்புவார்கள். பிசாசானவன் இதையெல்லாம் எதிர்பார்த்து, அந்தப் பெண்ணின் மூலமாக இப்படிப் பேசியிருக்கலாம் என்றும் வேதபண்டிதர்கள் வியாக்கியானம் கூறுகிறார்கள்.

அநேகநாள்

இப்படி அநேகநாள் செய்து கொண்டுவந்தாள். பவுல் சினங்கொண்டு, திரும்பிப்பார்த்து: நீ இவளை விட்டுப் புறப்படும்படி இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உனக்குக் கட்டளையிடுகிறேன் என்று அந்த ஆவியுடனே சொன்னான்; அந்நேரமே அது புறப்பட்டுப் போயிற்று (அப் 16:18).

குறிசொல்லுகிற பெண்ணோ அநேகநாள் பவுலையும், அவனுடைய உடன் ஊழியக்காரர்களையும் பின்தொடர்ந்து வருகிறாள். ஒவ்வொரு நாளும் தான் ஏற்கெனவே சொன்ன வார்த்தைகளைத் திரும்பத் திரும்ப சொல்லுகிறாள். ஆரம்பத்தில் பவுல் அவளுடைய வார்த்தையைப் பெரியதாக எடுத்துக்கொள்ளவில்லை. அந்தப்பெண் தன்னைப்பற்றித் தொடர்ந்து பேசினாலும், பவுல் தன் ஊழியத்தைத் தொடர்ந்து செய்துவருகிறான். பவுலிடம் ஆவிகளைப் பகுத்தறிகிற வரமுள்ளது. அந்தப் பெண்ணிடம் அசுத்த ஆவியிருப்பதை அறிந்துகொண்டு, அவளிடத்திலுள்ள குறிசொல்ல ஏவுகிற ஆவியைத் துரத்துகிறான்.

குறிசொல்லுகிற பெண்ணின் வார்த்தையினால் ஊழியக்காரருக்குப் புகழ்ச்சி உண்டாகவில்லை. அவர்களுடைய ஊழியத்திற்கு விளம்பரம் கிடைக்கவில்லை. அவளுடைய வார்த்தையின் மூலமாய் ஊழியம் தடைபடுகிறது. பவுல் தன் ஆவியில் சினங்கொள்கிறான். பவுலும் அவனுடைய உடன்ஊழியக்காரரும், உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர் என்பதும், இவர்கள் இரட்சிப்பின் வழியை ஜனங்களுக்கு அறிவிக்கிறவர்கள் என்பதும் மெய்யான சத்தியம்தான். ஆனாலும் இந்தச் சத்திய வார்த்தையை குறிசொல்லுகிற பெண் சொல்லும்போது, அவளுக்குள்ளிருக்கிற பிசாசு இந்த வார்த்தைகளைப் பேசுவதைப் பவுல் அறிந்துகொள்கிறான். அசுத்த ஆவியானது சத்தியத்தை உயர்த்துவதுபோல நடித்து, உண்மையில் தூஷிக்கிறது. பிசாசின் உள்மனதை பவுல் புரிந்துகொண்டு, சினமடைகிறான். பவுலின் சினம் நீதியானது.

தேவனை பரிசுத்த வார்த்தைகளினால் துதிக்கவேண்டும். தேவனைத் துதிக்கிற துதி நம்முடைய இருதயத்தின் ஆழத்திலிருந்து வரவேண்டும். இருதயத்தில் பக்தியில்லாமல், நாம் தேவனை வார்த்தையினால் மாத்திரம் துதிப்போம் என்றால், நம்முடைய வார்த்தைகள் மாய்மாலமானதாகயிருக்கும்.

பவுல் சினங்கொண்டு, குறிசொல்லுகிற பெண்ணைத் திரும்பிப்பார்த்து, அவளிடத்தில் இருக்கிற அசுத்த ஆவியுடனே "நீ இவளைவிட்டுப் புறப்படும்படி இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உனக்குக் கட்டளையிடுகிறேன்" என்று சொல்லுகிறான். பவுல் அசுத்த ஆவியுடனே பேசுகிறான். அந்நேரமே அந்த அசுத்தஆவி அந்தப் பெண்ணைவிட்டுப் புறப்பட்டுப்போயிற்று. அந்தப் பெண் ஊழியக்காரரைப் புகழ்ந்து பேசியபோது நடைபெற்ற ஊழியத்தைவிட, அவளை பேசவொட்டாமல் அமைதிப்படுத்திய பின்பு நடைபெறுகிற ஊழியம் மிகவும் சிறப்பாகயிருக்கிறது.

இயேசுகிறிஸ்துவின் வார்த்தையோடு அவருடைய வல்லமையும் சேர்ந்து புறப்பட்டு வருகிறது. இதற்கு முன்பு ஊழியக்காரரின் பிரசங்கத்தோடு சாத்தானும் சேர்ந்து பிரசங்கம்பண்ணினான். இப்போது அசுத்த ஆவியின் வார்த்தைகள் அகற்றப்பட்ட படியினால், ஊழியக்காரரின் வார்த்தைகள் பரிசுத்தமாயிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் வல்லமைக்கு முன்பாக சாத்தானால் எதிர்த்து நிற்கமுடியாது. அவன் துரத்தப்படுகிறான். கர்த்தருடைய ஊழியக்காரரின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, அசுத்தஆவி குறிசொல்லுகிற பெண்ணைவிட்டு உடனே புறப்பட்டுப்போயிற்று.

எஜமான்கள்

அவளுடைய எஜமான்கள் தங்கள் ஆதாயத்து நம்பிக்கை அற்றுப் போயிற்றென்று கண்டு, பவுலையும் சீலாவையும் பிடித்து, சந்தை வெளியிலுள்ள அதிகாரிகளிடத்தில் இழுத்துக்கொண்டு போனார்கள் (அப் 16:19).

குறிசொல்லுகிற பெண் அசுத்தஆவியின் பிடியிலிருந்து விடுவிக்கப்படுகிறாள். இந்தப் பெண்ணை ஒரு சில எஜமான்கள் குறிசொல்லுவதற்கு அமர்த்திருக்கிறார்கள். இதன் மூலமாக இந்த எஜமான்களுக்கு மிகுந்த ஆதாயமுண்டாயிற்று. இந்தப் பெண் அவர்களுடைய ஆதாயத்திற்கு நம்பிக்கையாக இருக்கிறாள். இவளிடத்திலுள்ள அசுத்த ஆவி துரத்தப்பட்டபின்பு, இவளால் குறிசொல்ல முடியவில்லை. இவளிடத்தில் யாரும் குறி கேட்கவரவில்லை. இதனால் இவள் மூலமாய் வரவேண்டிய ஆதாயம், அவளுடைய எஜமான்களுக்கு வராமல் நின்றுபோயிற்று.

தங்கள் ஆதாயத்தின் நம்பிக்கை அற்றுப்போயிற்று என்பதை அவளுடைய எஜமான்கள் கண்டு கோபமடைகிறார்கள். பணஆசை எல்லா தீமைக்கும் வேராயிருக்கிறது. எஜமான்கள் கர்த்தருடைய ஊழியக்காரர்மீது கோபமடைகிறார்கள். இயேசுகிறிஸ்துவின் வல்லமை, குறிசொல்லிய பெண்ணை, அசுத்த ஆவியின் பிடியிலிருந்து விடுவித்திருக்கிறது. அவள் பிசாசின் கட்டுக்களிலிருந்து விடுவிக்கப் பட்டிருக்கிறாள். இதன் மூலமாகத் தேவனுடைய அன்பு புறஜாதி ஜனங்கள் மத்தியில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் அவளுடைய எஜமான்களோ தேவஅன்பைப் பார்க்காமல், தங்களுடைய ஆதாயத்தின் நம்பிக்கையைப் பார்க்கிறார்கள். அது அற்றுப்போயிற்று என்று காண்கிறார்கள்.

எஜமான்கள் பவுலுக்கும் சீலாவுக்கும் விரோதமாக எழும்புகிறார்கள். பட்டணத்து அதிகாரிகளிடத்தில் அவர்களைப் பிடித்துக் கொடுத்து, தண்டிக்க வேண்டுமென்று முயற்சி பண்ணுகிறார்கள். அந்தப் பெண்ணின் எஜமான்கள், பவுலையும் சீலாவையும் பிடித்து, சந்தைவெளியிலுள்ள அதிகாரிகளிடத்தில் இழுத்துக்கொண்டு போகிறார்கள். ஜனங்களுடைய வழக்குகளை அக்காலத்தில் சந்தைவெளிகளில் தீர்த்துவைப்பது வழக்கம். ரோமாபுரியின் அதிகாரிகளே ஜனங்களுக்கு நியாயாதிபதிகளாகவும் இருக்கிறார்கள். பட்டணத்தில் சமாதானத்தை உண்டுபண்ணும் பொறுப்பு அவர்களிடத்தில் கொடுக்கப் பட்டிருக்கிறது. சந்தைவெளியிலுள்ள அதிகாரிகள் பிலிப்பி பட்டணத்திற்கும் அதிகாரிகளாகயிருக்கிறார்கள்.

யூதர்களாகிய இந்த மனுஷர்

அவர்களை அதிகாரிகளிடத்தில் ஒப்புவித்து: யூதர்களாகிய இந்த மனுஷர் நம்முடைய பட்டணத்தில் கலகம்பண்ணி, ரோமராகிய நாம் ஏற்றுக்கொள்ளவும் அநுசரிக்கவும் தகாத முறைமைகளைப் போதிக்கிறார்கள் என்றார்கள் (அப் 16:20,21).

குறிசொல்லுகிற பெண்ணின் எஜமான்கள் பவுலையும் சீலாவையும் பிடித்து சந்தைவெளியிலுள்ள அதிகாரிகளிடத்தில் இழுத்துக்கொண்டு போகிறார்கள். ஜனங்களை ஊழியக்காரருக்கு விரோதமாக எழும்புமாறு தூண்டுகிறார்கள். கர்த்தருடைய ஊழியக்காரருக்கு விரோதமாகத் திரளான ஜனங்களை எழுப்புவது சாத்தானின் தந்திரம். சாத்தான் முரட்டாட்டமுள்ள ஜனங்களை ஊழியக்காரருக்கு விரோதமாக எழுப்புவான். கர்த்தருடைய ஊழியக்காரருக்கு விரோதமாக எழும்புகிறவர்கள் துன்மார்க்கராகவும் பயங்கரமானவர்களாகவும் இருக்கிறார்கள்.

தங்களுடைய பட்டணத்தில் பவுலும் சீலாவும் கலகம்பண்ணுவதாக எஜமான்கள் பட்டணத்து அதிகாரிகளிடத்தில் முறையிடுகிறார்கள். ஊழியக்காரர்களைப் பற்றிச் சொல்லும்போது "யூதர்களாகிய இந்த மனுஷர்" என்று குறிப்பிடுகிறார்கள். "நம்முடைய பட்டணத்தில் கலகம்பண்ணுகிறார்கள்" என்பது ஊழியக்காரர்கள்மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டு. பட்டணத்தின் அமைதியை ஊழியக்காரர்கள் கெடுக்கிறார்கள் என்று அவர்களைக் குற்றப்படுத்துகிறார்கள்.

பெதஸ்தா குளத்தில் தேவதூதன் ஒருவன் வந்து அந்தக் குளத்திலுள்ள தண்ணீரைக் கலக்குவான். தண்ணீர் கலக்கப்படும்போது யார் முந்தி அதில் இறங்குவானோ அவனுடைய வியாதி சொஸ்தமாகும். குளம் கலங்கியதினால் மனுஷருக்கு ஆரோக்கியமுண்டாயிற்று. அதுபோலவே கர்த்தருடைய ஊழியக்காரர்கள் மூலமாய்ப் பட்டணத்தில் கலகமுண்டானால், அது அந்தப் பட்டணத்து ஜனத்தாரின் நன்மைக்கேதுவாகவே இருக்கும்.

தாங்கள் ஏற்றுக்கொள்ளவும் அநுசரிக்கவும் தாகாத முறைமைகளை ஊழியக்காரர்கள் தங்களுக்குப் போதிப்பதாக எஜமான்கள் அவர்கள்மீது குற்றம் சுமத்துகிறார்கள். பிலிப்பி பட்டணம் ரோமருடைய குடியிருப்பு. ஊழியக்காரரின் உபதேசம் ரோமருடைய பாரம்பரிய பழக்க வழக்கத்திற்கு விரோதமாகயிருப்பதாக அவர்கள்மீது குற்றம் சுமத்தப்படுகிறது.

ரோமர்கள் மார்க்க வைராக்கியமுள்ளவர்கள். பிடிவாத குணமுள்ளவர்கள். தாங்கள் நம்புவது சரியாக இருந்தாலும், தவறாக இருந்தாலும், தங்களுடைய நம்பிக்கையில் உறுதியாகயிருப்பார்கள். இந்தக் கடின இருதயம் இவர்களுடைய முற்பிதாக்கள் மூலமாய் இவர்களுக்கு வந்திருக்கிறது. ரோமர்கள் மத்தியில் அவர்கள் ஆராதிக்காத அந்நிய தெய்வங்கள் எதையும் கொண்டுவருவதற்கோ, அவற்றை ஆராதனை செய்வதற்கோ அனுமதியில்லை.

அதிகாரிகள்

அப்பொழுது ஜனங்கள் கூட்டங்கூடி, அவர்களுக்கு விரோதமாய் எழும்பினார்கள். அதிகாரிகள் அவர்கள் வஸ்திரங்களைக் கிழித்துப்போடவும், அவர்களை அடிக்கவும் சொல்லி; அவர்களை அநேக அடி அடித்த பின்பு, சிறைச்சாலையிலே வைத்து அவர்களைப் பத்திரமாய்க் காக்கும்படி சிறைச்சாலைக்காரனுக்குக் கட்டளையிட்டார்கள். அவன் இப்படிப்பட்ட கட்டளையைப் பெற்று, அவர்களை உட்காவலறையிலே அடைத்து, அவர்கள் கால்களைத் தொழு மரத்தில் மாட்டிவைத்தான் (அப் 16:22-24).

எஜமான்கள் ஊழியக்காரர்களை சந்தைவெளியிலுள்ள அதிகாரிகளிடத்தில் இழுத்துக் கொண்டுபோய் ஒப்புவிக்கிறார்கள். அப்பொழுது ஜனங்கள் கூட்டமாய்கூடி ஊழியக்காரர்களுக்கு விரோதமாக எழும்புகிறார்கள். தாங்கள் ஏற்றுக்கொள்ளவும் அனுசரிக்கவும் தகாத முறைமைகளை ஊழியக்காரர்கள் போதிக்கிறார்கள் என்று அவர்கள்மீது குற்றம் சுமத்துகிறார்கள்.

அதிகாரிகள் ஊழியக்காரர்களை அடிப்பதற்கு உத்தரவு கொடுக்கிறார்கள். வாரினால் அடிப்பதற்கு ஏதுவாக ஊழியக்காரரின் வஸ்திரங்களைக் கிழித்துப்போடுகிறார்கள். பவுல் மூன்றுமுறை வாரினால் அடிக்கப்பட்டான். அவற்றில் இந்தச் சம்பவமும் ஒன்று. ரோமப்பேரரசின் வழக்கத்தின்படி, ஒருவரை எத்தனை அடி வேண்டுமானாலும் வாரினால் அடிக்கலாம். யூதருடைய வழக்கமோ மனுஷாபிமானம் உள்ளதாக இருக்கிறது. யூதமுறைமையின்படி யாரையும் நாற்பது அடிகளுக்கு மேல் வாரினால் அடிக்கக்கூடாது. இவர்கள் பவுலையும் சீலாவையும் வாரினால் அநேக அடிகள் அடிக்கிறார்கள். எத்தனை அடிகள் என்று எண்ணிக்கையில் சொல்லப்படவில்லை.

பொதுவாக ரோமர்கள் ஒருவரை வஸ்திரத்தைக் கிழித்து, அவரை வாரினால் அநேக அடி அடித்துவிட்டால், அதற்கு மேல் அவருக்குத் தண்டனை கொடுக்கமாட்டார்கள். ஆனால் இங்கோ, அவர்கள் பவுலையும் சீலாவையும் அநேக அடி அடித்தபின்பு, சிறைச்சாலையிலும் அடைத்துவிடுகிறார்கள். அதிகாரிகள் தங்களுடைய உத்தரவை மிகவும் கடினமாக்குகிறார்கள். ஊழியக்காரர்களைச் சிறைச்சாலையில் வைத்து, அவர்களைப் பத்திரமாய்க் காக்கும்படி, சிறைச்சாலைக்காரனுக்குக் கட்டளையிடுகிறார்கள்.

ஊழியக்காரர்களைப் பயங்கரவாதிகள் போல நடத்துகிறார்கள். சிறைச்சாலைகளை உடைத்து தப்பித்துப்போய்விடுவார்கள் என்று நினைத்து, அவர்களைப் பத்திரமாய்க் காக்கும்படி கட்டளைகொடுக்கிறார்கள். பட்டணத்தில் இவர்கள் கலகம்பண்ணுகிறவர்கள் என்றும், இவர்களுடைய தோழர்கள் இந்தப் பட்டணத்திலிருப்பார்கள் என்றும், அவர்கள் சதிபண்ணி சிறையில் அடைக்கப்பட்ட இவர்களை விடுவித்துவிடுவார்கள் என்றும் நினைத்து, ஊழியக்காரர்களைப் பத்திரமாய்க் காக்கும்படி கட்டளை கொடுக்கிறார்கள்.

சிறைச்சாலைக்காரன், தன்னுடைய அதிகாரிகளிடத்திலிருந்து, இப்படிப்பட்ட கட்டளையைப் பெற்று, ஊழியக்காரர்களை உட்காவலறையிலே அடைத்துவைக்கிறான். அதிகாரிகள் கடினமாய் நடந்து கொள்ளும்போது, அவனுக்குக் கீழ் பணிபுரிகிறவர்களும் கடினமாய் நடந்துகொள்வார்கள். நியாயம் விசாரித்து, குற்றவாளியென்று தீர்ப்பளிக்கப்பட்டவர்களை மாத்திரமே சிறைச்சாலையின் உள் அறையில் அடைப்பது வழக்கம். ஆனால் பவுலும் சீலாவுமோ இன்னும் விசாரிக்கப்படவில்லை. ஆனாலும் நியாயம் விசாரித்து தண்டிக்கப்பட்ட குற்றவாளிகளைப் போல, உட்காவலறையிலே அடைத்து வைக்கப்படுகிறார்கள்.

சிறைச்சாலைக்காரன் பவுலையும் சீலாவையும் உட்காவலறையிலே அடைத்து வைப்பதோடு, அவர்களுடைய கால்களை தொழுமரத்திலே மாட்டிவிடுகிறான். ஆதித்திருச்சபையில் விசுவாசிகளுக்கு இதைப்போன்ற உபத்திரவங்கள் அநேகமுண்டாயிற்று. அவர்கள் பாடுகள் வழியாகவும், வேதனைகள் வழியாகவும், உபத்திரவங்கள் வழியாகவும் கடந்துவந்து, கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாக ஜீவித்தார்கள். பிசாசானவன் கர்த்தருடைய பிள்ளைகளை அக்காலத்தில் மிகவும் கடுமையாகத் தண்டித்தான். கர்த்தரோ தம்முடைய பிள்ளைகளோடு எல்லா சூழ்நிலைகளிலும் கூடவே இருந்து, அவர்களை விடுவித்து, தம்முடைய நாமத்தை மகிமைப்படுத்தியிருக்கிறார்.

அக்காலத்தில் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு ஏற்பட்ட உபத்திரவங்கள், இக்காலத்திலும் வருவதற்கு வாய்ப்புள்ளது. ஆகையினால் விசுவாசிகளாகிய நாம் எல்லா சூழ்நிலைகளிலும் கர்த்தரையே நம்பி, அவரையே சார்ந்து ஜீவிக்கவேண்டும்.

சிறைச்சாலை
அப் 16 : 25-34

அப் 16:25. நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணி, தேவனைத் துதித்துப் பாடினார்கள்; காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

அப் 16:26. சடிதியிலே சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள் அசையும்படியாக பூமி மிகவும் அதிர்ந்தது; உடனே கதவுகளெல்லாம் திறவுண்டது; எல்லாருடைய கட்டுகளும் கழன்றுபோயிற்று;

அப் 16:27. சிறைச்சாலைக்காரன் நித்திரை தெளிந்து, சிறைச்சாலையின் கதவுகள் திறந்திருக்கிறதைக் கண்டு, கட்டுண்டவர்கள் ஓடிப் போனார்களென்று எண்ணி, பட்டயத்தை உருவித் தன்னைக் கொலைசெய்து கொள்ளப்போனான்.

அப் 16:28. பவுல் மிகுந்த சத்தமிட்டு: நீ உனக்குக் கெடுதி ஒன்றுஞ் செய்துகொள்ளாதே; நாங்கள் எல்லாரும் இங்கேதான் இருக்கிறோம் என்றான்.

அப் 16:29. அப்பொழுது அவன் தீபங்களைக் கொண்டுவரச்சொல்லி, உள்ளே ஓடி, நடுநடுங்கி, பவுலுக்கும் சீலாவுக்கும் முன்பாக விழுந்து,

அப் 16:30. அவர்களை வெளியே அழைத்து வந்து: ஆண்டவமாரே, இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும் என்றான்.

அப் 16:31. அதற்கு அவர்கள்: கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்று சொல்லி,

அப் 16:32. அவனுக்கும் அவன் வீட்டிலிருந்த யாவருக்கும் கர்த்தருடைய வசனத்தைப் போதித்தார்கள்.

அப் 16:33. மேலும் இராத்திரியில் அந்நேரத்திலேதானே அவன் அவர்களை அழைத்துக்கொண்டுபோய், அவர்களுடைய காயங்களைக் கழுவினான். அவனும் அவனுடையவர்கள் அனைவரும் உடனே ஞானஸ்நானம் பெற்றார்கள்.

அப் 16:34. பின்பு அவன் அவர்களைத் தன் வீட்டிற்குக் கூட்டிக்கொண்டுபோய், அவர்களுக்கு போஜனங்கொடுத்து, தன் வீட்டார் அனைவரோடுங்கூட தேவனிடத்தில் விசுவாசமுள்ளவனாகி மனமகிழ்ச்சியாயிருந்தான்.

பவுலும் சீலாவும்

நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணி, தேவனைத் துதித்துப் பாடினார்கள்; காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். சடிதியிலே சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள் அசையும்படியாக பூமி மிகவும் அதிர்ந்தது; உடனே கதவுகளெல்லாம் திறவுண்டது; எல்லாருடைய கட்டுகளும் கழன்றுபோயிற்று; (அப் 16:25,26)

பவுலும் சீலாவும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறார்கள். ஆனால் பிலிப்பி பட்டணத்து ஜனங்களோ கூட்டங்கூடி அவர்களுக்கு விரோதமாய் எழும்புகிறார்கள். அவர்களை அடித்து, துன்புறுத்தி, சிறையில்போட்டு, மனம் தளரச்செய்து, இனிமேல் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கக்கூடாதவாறு அவர்களைப் பயமுறுத்த வேண்டுமென்று நினைக்கிறார்கள். ஆனால் கர்த்தரோ தம்முடைய ஊழியக்காரர்களைப் பெலப்படுத்துகிறார். உற்சாகப்படுத்துகிறார்.

அதிகாரிகள் ஊழியக்காரர்களை அநேக அடி அடிக்கச் சொல்லுகிறார்கள். வாரினால் அடிக்கப்பட்டதினால் ஊழியக்காரருக்கு காயம் உண்டாயிற்று. வேதனை மிகுதியாயிற்று. இப்படிப்பட்ட சூழ்நிலையில், அடிபட்ட சாதாரண ஜனங்கள், வேதனை தாங்காமல் அழுது புலம்புவார்கள். ஊழியக்காரருக்கு உபத்திரவம் இதோடு நிறுத்தப்படவில்லை. அவர்களை சிறைச்சாலையின் உட்காவலறையிலே அடைத்து வைக்கிறார்கள். அவர்களுடைய கால்களை தொழுமரத்தில் மாட்டி வைக்கிறார்கள். இது அவர்களுடைய வேதனையை அதிகரிக்கச் செய்தது. இப்படிப்பட்ட வேதனை நிறைந்த சூழ்நிலையில், நடுஇராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணி, தேவனைத் துதித்துப் பாடுகிறார்கள்.

பவுலும் சீலாவும் ஒன்றுசேர்ந்து இணைந்து ஜெபிக்கிறார்கள். விசுவாசிகள் இணைந்து ஜெபிக்கும்பொழுது அவர்களுக்கு ஆறுதல் உண்டாகும். தேவனிடத்தில் ஜெபிக்கும்போது நமக்குப் பாடுகளில் ஆறுதலும், வேதனையில் மனமகிழ்ச்சியும் உண்டாகும். கர்த்தரே நமக்கு ஆதரவாயிருக்கிறவர். ஊழியக்காரர்கள் கட்டுக்களுக்கும் அடிகளுக்கும் மத்தியில் ஜெபம்பண்ணி தேவனைத் துதித்துப் பாடுகிறார்கள். தங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காக ஜெபிக்கிறார்கள். சுவிசேஷம் அவர்களுக்கும் அறிவிக்கப்பட வேண்டுமென்று விரும்பி, தேவனைத் துதித்து உரத்த சத்தத்தோடே பாடுகிறார்கள். தேவன் அவர்களை மன்னித்து, அவர்களுடைய இருதயங்களில் மனந்திரும்புதலைக் கட்டளையிட வேண்டுமென்று ஜெபிக்கிறார்கள்.

ஊழியக்காரர்கள் பொதுவான ஜெபவேளையில் ஜெபம்பண்ணவில்லை. நடுஇராத்திரியிலே ஜெபம்பண்ணுகிறார்கள். இவர்கள் ஜெபம்பண்ணுவதும் ஜெபவீடு அல்ல. சிறைச்சாலையின் உட்காவலறையிலே ஜெபம் பண்ணுகிறார்கள். வேளை நடுஇராத்திரியாக இருந்தாலும், ஜெபிக்கிற இடம் உட்காவலறையாக இருந்தாலும் கர்த்தர் அவர்களுடைய ஜெபத்தைக் கேட்கிறார். எல்லா வேளையும் ஜெபிப்பதற்கு ஏற்ற வேளைதான்.

நாமும் கர்த்தரிடத்தில் எல்லா வேளையிலும் ஜெபிக்கவேண்டும். இரவு வேளையாக இருந்தாலும், வெளிச்சமில்லாத இருட்டு இடமாக இருந்தாலும், நம்முடைய இருதயத்தின் ஆழத்திலிருந்து கர்த்தரை நோக்கி ஜெபிக்கவேண்டும். நம்முடைய பாடுகளோ, வேதனைகளோ, உபத்திரவங்களோ, கண்ணீர்களோ நம்முடைய ஜெபத்திற்குத் தடையாக இருக்கக்கூடாது.

பவுலும் சீலாவும் நடுஇராத்திரியிலே தேவனைத் துதித்துப் பாடுகிறார்கள். தேவனைத் துதிக்கவேண்டும் என்னும் எண்ணம் அவர்களுடைய இருதயத்தில் நிரம்பியிருக்கிறது. அவர்கள் சூழ்நிலையைப் பார்க்கவில்லை. தங்கள் சரீர வேதனையை ஒரு பொருட்டாய் எண்ணவில்லை. சிறைச்சாலையில், கால்கள் தொழுமரத்தில் மாட்டி வைக்கப்பட்டிருந்தாலும், அவர்களுடைய இருதயம் விடுதலையோடு தேவனைத் துதிக்கிறது. கர்த்தருடைய பிள்ளைகள் எல்லா சூழ்நிலைகளிலும் தேவனைத் துதிக்கவேண்டும். காவல்களோ, கட்டுக்களோ, தொழுமரமோ நாம் தேவனைத் துதிப்பதை தடைபண்ணக்கூடாது. பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணுவதோடு நிறுத்திக் கொள்ளாமல், அவர்கள் தேவனைத் துதித்துப் பாடுகிறார்கள்.

துன்பப்படுகிறவன் ஜெபம்பண்ணக் கடவன். இது வேதாகமத்தின் பிரமாணம். இந்தப் பிரமாணத்தின்படி பவுலும் சீலாவும் இப்போது ஜெபிக்கிறார்கள். சந்தோஷமாகயிருக்கிறவன் சங்கீதம் பாடக்கடவன். இதுவும் வேதத்தின் பிரமாணம். இந்தப் பிரமாணத்தின்படி, பவுலும் சீலாவும், பாடுகளையும் உபத்திரவங்களையும் அனுபவித்தாலும், சந்தோஷமாக இருக்கிறார்கள். ஆகையினால் அவர்கள் தேவனைத் துதித்து சங்கீதம் பாடுகிறார்கள்.

பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணி, தேவனைத் துதித்துப்பாடுவதை, காவலில் வைக்கப்பட்டவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஒருவேளை பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணுவது காவலில் வைக்கப்பட்டவர்களுக்குக் கேட்காமலிருந்திருக்கலாம். ஆனால் அவர்கள் தேவனைத் துதித்துப் பாடுவதை காவலில் வைக்கப்பட்டவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். பவுலும் சீலாவும் உட்காவலறையிலே அடைக்கப்பட்டிருந்தாலும், அவர்களுடைய கால்கள் தொழுமரத்தில் மாட்டி வைக்கப்பட்டிருந்தாலும், அவர்கள் மிகுந்த சத்தமிட்டு தேவனைத் துதித்துப் பாடுகிறார்கள். காவலில் வைக்கப்பட்டவர்கள் எல்லோரும் கேட்கும்வண்ணமாக, அவர்கள் தேவனைத் துதித்துப் பாடுகிறார்கள்.

நாம் சங்கீதப் பாடல்களை நம்முடைய முழுஇருதயத்தோடு பாடவேண்டும். தாங்கள் பாடும்போது காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக்கொண்டிருப்பார்கள் என்பது பவுலுக்கும் சீலாவுக்கும் நன்றாகத் தெரியும். இருந்தாலும் அவர்கள் வெட்கப்படாமல் சத்தத்தை உயர்த்திப் பாடுகிறார்கள். கர்த்தரைத் துதித்துப் பாடுவதற்கு பவுலும் சீலாவும் வெட்கப்படவில்லை.

நம்முடைய வீடுகளிலும் நாம் ஜெபம்பண்ணுவதற்கோ, தேவனைத் துதித்துப் பாடுவதற்கோ வெட்கப்படக்கூடாது. நம்முடைய வீட்டிலுள்ளவர்களோ அல்லது அயலகத்தாரோ நம்மைப்பற்றி என்ன நினைப்பார்கள் என்று நினைத்து, வெட்கப்பட்டு, தயங்கித் தயங்கி பாடக்கூடாது. உலகப்பிரகாரமான ஜனங்கள் உலகப்பிரமான பாட்டுக்களை அதிக சத்தத்தோடு பாடும்போது, கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் கர்த்தரைத் துதித்துப் பாட வெட்கப்படவேண்டிய அவசியமில்லை. நாம் பாடுகிற ஒவ்வொரு வரியையும் நம்முடைய கர்த்தரும் ஆண்டவருமாகிய இயேசுகிறிஸ்து கவனித்துக் கேட்கிறார். நம்முடைய துதிப்பாடலில் அவர் பிரியமாயிருக்கிறார்.

காவலில் வைக்கப்பட்டவர்கள் பவுலும் சீலாவும் தேவனைத் துதித்துப் பாடுவதைக் கேட்கிறார்கள். அவர்களுடைய செவிகளிலும் இருதயத்திலும் ஸ்தோத்திர வார்த்தைகள் நிரம்பியிருக்கிறது. கர்த்தர் அங்கு ஒரு அற்புதம் செய்யப்போகிறார். அந்த அற்புதத்தைப் பார்ப்பதற்கு அவர்களுடைய இருதயம் ஆயத்தமடைகிறது. இந்த அற்புதம் பவுல் சீலா ஆகியோரின் நிமித்தமாய் உண்டாயிற்று. இந்த அற்புதத்தில் அவர்களுக்கும் ஆசீர்வாதமுண்டாகிறது.

பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணி தேவனைத் துதித்துப் பாடும்போது பூமி மிகவும் அதிர்கிறது. சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள் அசையும்படியாக பூமி அதிர்கிறது. கர்த்தருடைய ஊழியக்காரரை நியாயமில்லாமல் அடித்து, சிறைச்சாலையில் காவல் வைத்திருக்கிறார்கள். தம்முடைய ஊழியக்காரரை உபத்திரவப் படுத்துகிறவர்களுக்கு பிரதியுத்தரம் கொடுக்கும் விதத்தில், கர்த்தர் தம்முடைய வல்லமையோடு சிறைச்சாலைக்குள் பிரவேசிக்கிறார்.

சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள் அசையும்படியாக, பூமியை அசைக்கிறார். பூமி அதிரும்போது, உடனே கதவுகளெல்லாம் திறவுண்டது. காவலில் வைக்கப்பட்டவர்கள் அனைவருடைய கட்டுக்களும் கழன்றுபோயிற்று.

கர்த்தருடைய பிள்ளைகள் நிமித்தமாக, எல்லோருடைய கட்டுக்களும் கழன்றுபோயிற்று. ஒரு சமயம் பவுல் கடல் யாத்திரை பண்ணுகிறபோது தேவனுடைய தூதனானவர் இராத்திரியிலே அவனிடத்தில் வந்து நின்று "உன்னுடனே கூட யாத்திரை பண்ணுகிற யாவரையும் தேவன் உனக்குத் தயவுபண்ணினார்" (அப் 27:24) என்று சொன்னார். அதுபோலவே, இப்போது சிறைச்சாலையில் பவுலினிமித்தமாக, எல்லாருடைய கட்டுக்களும் கழன்றுபோயிற்று.

சிறைச்சாலைக்காரன்

சிறைச்சாலைக்காரன் நித்திரை தெளிந்து, சிறைச்சாலையின் கதவுகள் திறந்திருக்கிறதைக் கண்டு, கட்டுண்டவர்கள் ஓடிப் போனார்களென்று எண்ணி, பட்டயத்தை உருவித் தன்னைக் கொலைசெய்து கொள்ளப்போனான் (அப் 16:27).

சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதைத் தடைபண்ணவேண்டுமென்று சத்துருக்கள் முயற்சி பண்ணுகிறார்கள். அப்போஸ்தலர்களை அடித்து சிறைச்சாலையிலே போடுகிறார்கள். கர்த்தரோ தம்முடைய இரட்சிக்கும் கிருபையினால், சிறைச் சாலையிலுள்ளவர்களையும் இரட்சிக்கிறார். சுவிசேஷ ஊழியம் சிறைச்சாலையில் நடைபெறுகிறது. சிறைச்சாலைக்காரன் பவுலையும் சீலாவையும் உள்ளறையில் அடைத்து, அவர்களுடைய கால்களைத் தொழுமரத்தில் கட்டுகிறான். அவர்களை உபத்திரவப்படுத்துகிறான். அவன் இப்போது இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து இரட்சிக்கப்படுகிறான்.

சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்த எல்லாருடைய கட்டுக்களும் கழன்றுபோயிற்று. கதவுகள் திறவுண்டது. கட்டுண்டவர்கள் ஓடிப்போனார்களென்று எண்ணி சிறைச்சாலைக்காரன் பயப்படுகிறான். கைதி தப்பினால், அவனைக் காவல் காக்கும் சிறைச்சாலைக்காரனுக்கு மரணதண்டனை கொடுக்கப்படும். சிறைச்சாலைக்காரன் நித்திரை தெளிந்து எழுந்திருக்கிறான். ஒருவேளை பூமியதிர்ச்சியின் சத்தம் அவனை எழுப்பியிருக்கலாம். காவலில் வைக்கப்பட்டிருக்கிறவர்களுடைய கட்டுக்கள் கழன்று போனபடியினால், அவர்களெல்லோரும் சந்தோஷமாய் ஆர்ப்பரிக்கிறார்கள். இந்தச் சத்தத்தினால் சிறைச்சாலைக்காரன் ஒருவேளை நித்திரை தெளிந்து எழுந்திருக்கலாம்.

இராத்திரியிலே இருட்டு வேளையாகயிருக்கிறது. அப்போது எல்லாருடைய கட்டுக்களும் கழன்றுபோயிற்று. இருட்டாக இருந்தாலும் தங்கள் கட்டுக்கள் கழன்றுபோனதை காவலில் வைக்கப்பட்டவர்கள் அறிந்து கொள்கிறார்கள். சிறைச்சாலைக்காரனும் அதைத் தெரிந்துகொள்கிறான். சிறைச்சாலையைக் காவல்காக்கிறவர்கள் அயர்ந்த நித்திரை பண்ணமுடியாது. உறங்காமல் விழித்திருக்கவேண்டும். சிறிய சத்தம் கேட்டாலும் அவர்கள் நித்திரையைவிட்டு உடனே எழும்ப வேண்டும்.

சிறைச்சாலைக்காரன் நித்திரை தெளிந்து, சிறைச்சாலையின் கதவுகள் திறந்திருக்கிறதைக் காண்கிறான். கட்டுண்டவர்கள் தப்பி ஓடிப்போனார்கள் என்று எண்ணுகிறான். ரோமருடைய சட்டம் எப்படிப்பட்டது என்பது இவனுக்குத் தெரியும். கட்டுண்டவர்கள் தப்பி ஓடிப்போனால், அவர்களைக் காவல் காப்பதற்காக நியமிக்கப்பட்டிருக்கிற சிறைச்சாலைக்காரருக்கு, கொடிய மரணதண்டனை கொடுக்கப்படும். சாதாரண மரணம் உண்டாகாது. சித்திரவதை பண்ணி மரண தண்டனை கொடுப்பார்கள்.

தான் சித்திரவதை அடைந்து மரிக்கக்கூடாது என்று சிறைச்சாலைக்காரன் தீர்மானம் பண்ணுகிறான். அதற்காக அவன் தன் பட்டயத்தை உருவி தன்னைக் கொலைசெய்து கொள்ளப்போகிறான். சித்திரவதையிலிருந்து தப்பிப்பதற்கு இதுவே எளிய வழியென்று தீர்மானிக்கிறான். கட்டுண்டவர்கள் தப்பி ஓடிப்போனதற்கு தான்தான் காரணமென்று, தனக்குள்ளே தீர்மானித்து, தன்னை கொலைசெய்து கொள்ள ஆயத்தமாயிருக்கிறான்.

ரோமருடைய தத்துவத்தின் பிரகாரம் தற்கொலை செய்துகொள்வது அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தேவனுடைய பிரமாணத்தின்படி தற்கொலை செய்து கொள்வது பாவம். நம்முடைய ஜீவன் நமக்குரியதல்ல. இது தேவனுக்குரியது. நம்முடைய ஜீவனை எடுத்துப்போட நமக்கு அதிகாரமில்லை. தேவன் நமக்கு நியமித்து வைத்திருக்கும் காலம் வரையிலும் நாம் ஜீவிக்கவேண்டும். நம்முடைய மரணத்தை நாமே தேடி, நம்மை நாமே கொன்றுபோடக்கூடாது. இது தேவனுடைய பார்வையில் பாவமான காரியம். சிறைச்சாலைக்காரனுக்கு அவனுடைய ஜீவனின் மேன்மை தெரியவில்லை. ஆகையினால் அவன் தன் பட்டயத்தை உருவி தன்னைக் கொலைசெய்து கொள்ளப்போகிறான்.

கெடுதி செய்து கொள்ளாதே

பவுல் மிகுந்த சத்தமிட்டு: நீ உனக்குக் கெடுதி ஒன்றுஞ் செய்துகொள்ளாதே; நாங்கள் எல்லாரும் இங்கேதான் இருக்கிறோம் என்றான் (அப் 16:28).

சிறைச்சாலைக்காரன் தன் பட்டயத்தை உருவி தன்னைக் கொலைசெய்து கொள்ளப்போவதை பவுலும் பார்க்கிறான். இருட்டு வேளையாகயிருந்தாலும் பவுல் அவனுடைய செயலைக் கூர்ந்து கவனிக்கிறான். உடனே பவுல் மிகுந்த சத்தமிட்டு, சிறைச்சாலைக்காரனிடம் "நீ உனக்கு கெடுதி ஒன்றும் செய்துகொள்ளாதே. நாங்கள் எல்லாரும் இங்கே தான் இருக்கிறோம்" என்று கூறுகிறான். பாவத்திற்கு விரோதமாக தேவனுடைய வார்த்தை இப்படித்தான் எச்சரிப்பாக அறிவிக்கப்படவேண்டும். பாவம் செய்கிறவர்களைப் பார்த்து "நீ உனக்கு கெடுதி ஒன்றும் செய்துகொள்ளாதே" என்று நாம் எச்சரிக்கவேண்டும்.

நமக்கு நாமேதான் கெடுதி செய்துகொள்வோம். நம்முடைய பாவம் நமக்கு கெடுதியாயிருக்கும். பாவம் செய்கிற ஆத்துமா சாகும். சிறைச்சாலைக்காரனுக்கு வேறு யாரும் கெடுதி செய்யவில்லை. அவன் தனக்குத்தானே கெடுதி செய்துகொள்கிறான். சிறைச்சாலையில் கட்டுண்டவர்கள் எல்லோரும் அங்கேதான் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் ஓடிப்போனார்கள் என்று எண்ணி, சிறைச்சாலைக்காரன் தன் பட்டயத்தை உருவி தன்னைக் கொலைசெய்து கொள்ளப்போகிறான். அவன் தன்னைத்தான் கொலைசெய்து கொள்ள வேண்டிய அவசியமில்லை.

கட்டுண்டவர்கள் எல்லாருடைய கட்டுக்களும் கழன்றுபோயிற்று. ஆனால் ஒருவர்கூட சிறைச்சாலையிலிருந்து தப்பித்து ஓடிப்போகவில்லை. சிறைச்சாலையின் கதவுகளும் திறவுண்டது. ஆனால் ஒருவரும் தப்பிக்க முயற்சிபண்ணவில்லை. இதுவும் தேவனுடைய அற்புதம். கர்த்தர் அவர்களுடைய கட்டுக்களை கழன்று போகப்பண்ணுகிறார். அதேவேளையில் அவர்கள் தப்பித்துப் போகாதபடி, அவர்களுடைய ஆவிகளைக் கட்டிப்போகிறார். தேவனுடைய வல்லமை கட்டவும் கட்டவிழ்க்கவும் செய்கிறது.

சிறைச்சாலைக்காரன் தன்னைக் கொலைசெய்துகொண்டால், அவனுடைய ஆத்துமாவும் அழிந்துபோகும். பவுலுக்கு அவனுடைய ஆத்துமாவின்மீது அக்கரையிருக்கிறது. தன்னுடைய கால்களை அவன் தொழுமரத்தில் கட்டிவைத்தாலும், பவுல் அவன்மீது அன்பாகவே இருக்கிறான். அவனைக்குறித்த ஆத்தும கரிசனையினால், பவுல் மிகுந்த சத்தமிட்டு "நீ உனக்கு கெடுதி ஒன்றும் செய்துகொள்ளாதே" என்று கூறுகிறான். மரணம் அவனுடைய பிரச்சனைக்கு முடிவல்ல. இயேசுகிறிஸ்துவே மனுஷருடைய எல்லா பிரச்சனைகளுக்கும் நல்ல தீர்வைக் கொடுக்கிறவர். இப்போது அவன் மரித்துப்போனால், ஒருவேளை இப்போதுள்ள தண்டனையிலிருந்து தப்பிக்கலாம். ஆனால் அவன் இயேசுகிறிஸ்துவை அறியாத பாவியாக இருக்கிறான். ஒருவன் பாவத்தில் மரித்தால் அவனுக்கு நித்தியகாலமாக தண்டனை உண்டாகும்.

இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும்

அப்பொழுது அவன் தீபங்களைக் கொண்டுவரச்சொல்லி, உள்ளே ஓடி, நடுநடுங்கி, பவுலுக்கும் சீலாவுக்கும் முன்பாக விழுந்து, அவர்களை வெளியே அழைத்து வந்து: ஆண்டவமாரே, இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும் என்றான் (அப் 16:29,30).

பவுலின் சத்தம் சிறைச்சாலைக்காரனுடைய காதுகளில் விழுகிறது. பவுலும் கட்டுண்டவர்கள் அனைவரும் தப்பித்து ஓடிபோனார்களென்று இவன் நினைத்துக்கொண்டிருக்கிறான். ஆனால் பவுலோ அவனிடத்தில் "நாங்கள் எல்லாரும் இங்கே தான் இருக்கிறோம்" என்று சொல்லுகிறான். பவுலின் வார்த்தை அவனுக்கு ஆறுதலாகயிருக்கிறது. இருட்டு வேளையாகயிருப்பதினால், அங்கு என்ன நடைபெறுகிறது என்பதை பார்ப்பதற்கு விரும்புகிறான். தீபங்களைக் கொண்டு வரச்சொல்லுகிறான். பயத்தினால் நிறைந்திருந்தவன் இப்போது ஆச்சரியத்தினாலும், கலக்கத்தினாலும், குழப்பத்தினாலும் நிரம்பியிருக்கிறான். பரிசுத்த ஆவியானவர் தேற்றரவாளராக இருக்கிறார். சிறைச்சாலைக்காரனின் பயத்தைப்போக்கி, அவனைத் தேற்றுகிறார்.

சிறைச்சாலைக்காரன், சிறைச் சாலைக்குள்ளே ஓடி, நடுநடுங்கி, பவுலுக்கும் சீலாவுக்கும் முன்பாக விழுகிறான். பவுலின் கால்களைத் தொழுமரத்தில் கட்டியவன், இப்போது அவனுடைய கால்களில் நடுநடுங்கி விழுகிறான். நல்லவர்களைத் துன்பப்படுத்துகிறவன், குற்றம் செய்யாதோரை சிறைச்சாலையில் அடைக்கிறவன், ஒரு தீங்கும் செய்யாதோரின் கால்களைத் தொழுமரத்தில் கட்டுகிறவன் இப்போது நடுநடுங்குகிறான்.

மிகுந்த நடுக்கத்தோடு சிறைச்சாலைக்காரன் பவுலுக்கும் சீலாவுக்கும் முன்பாக விழுந்து, அவர்களை வெளியே அழைத்துக்கொண்டு வருகிறான். மிகுந்த மரியாதையோடும், பயபக்தியோடும் அவர்களை "ஆண்டவமாரே" என்று அழைக்கிறான். குறிசொல்லுகிற பெண் பவுலையும் சீலாவையும் குறித்துச் சொன்ன வார்த்தைகளை சிறைச்சாலைக்காரன் ஒருவேளை கேள்விப்பட்டிருக்கலாம். அவள் ஊழியக்காரரைப் பின்தொடர்ந்து வந்து "இந்த மனுஷர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர், இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள்" என்று சத்தமிட்டுச் சொன்னாள். அந்த வார்த்தையை இவன் கேட்டு, பவுலுக்கும் சீலாவுக்கும் முன்பாக நடுநடுங்கி விழுகிறான். தன்னை மன்னிக்குமாறு அவர்களிடத்தில் கெஞ்சுகிறான். ஏனெனில் சிறைச்சாலைக்காரன் இவர்களுக்குத் தீங்கு செய்திருக்கிறான். அவர்களை துன்பப்படுத்தியிருக்கிறான். இப்போது அவர்களுடைய ஆலோசனையின் பிரகாரம் நடப்பதற்கு ஆயத்தமாயிருக்கிறான். தான் என்ன செய்யவேண்டுமென்று, அவர்கள்தான் தனக்கு சொல்லவேண்டும் என்று எதிர்பார்க்கிறான்.

பொதுவாக சிறைச்சாலையில் அடைக்கப் பட்டிருக்கிறவர்களை, "திருடர்கள், கொள்ளைக்காரர், கொலைகாரர், கலகக்காரர்" என்று அழைப்பதுதான் வழக்கம். ஆனால் சிறைச்சாலைக்காரன் இப்போது பவுலையும் சீலாவையும் "ஆண்டவமாரே" என்று அழைக்கிறான். பவுலும் சீலாவும் சிறைச்சாலைக்காரனுக்கு இப்போது எஜமான்களைப்போல இருக்கிறார்கள். நம்முடைய இருதயம் மாறும்போது நம்முடைய வார்த்தைகளும் மாறும். தேவனுடைய கிருபை ஒரு மனுஷனை மாற்றும்போது, அவனுடைய பேச்சு, செயல், சிந்தனை ஆகிய எல்லாமே மாறிப்போகும்.

சிறைச்சாலைக்காரன் பவுல், சீலா ஆகியோரிடத்தில் "ஆண்டவமாரே, இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும்" என்று கேட்கிறான். அவனுக்கு அவனுடைய இரட்சிப்பு பிரதான தேவையாகயிருக்கிறது. அவனுடைய இருதயத்தில் அவன் தன்னுடைய ஆத்தும இரட்சிப்பைப்பற்றி சிந்தித்துப் பார்க்கிறான். உலகப்பிரகாரமான மற்ற காரியங்களைவிட தன்னுடைய ஆத்தும இரட்சிப்புக்கு சிறைச்சாலைக்காரன் அதிக முக்கியதுவம் கொடுக்கிறான். ஆகையினால் அவர்களிடத்தில் "இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும்" என்று கேட்கிறான்.

சிறைச் சாலைக்காரன் தன்னைப்பற்றி அதிக கரிசனையோடிருக்கிறான். மற்றவர்கள் இரட்சிக்கப்படுவதற்கு தான் என்ன செய்யவேண்டும் என்றோ, அல்லது அவர்களுடைய இரட்சிப்புக்கு அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்றோ சிறைச்சாலைக்காரன் கேட்கவில்லை. அவன் தன்னுடைய ஆத்தும இரட்சிப்பைப்பற்றி அதிக கரிசனையோடிருக்கிறான். ஆகையினால் "இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும்" என்று கேட்கிறான். இவனுடைய ஆத்துமா இவனுக்கு முக்கியமானது. இந்த ஆத்துமா இரட்சிக்கப்பட வேண்டும்.

இரட்சிக்கப்படுவதற்கு ஏதோ ஒன்றைச் செய்யவேண்டும் என்பது இவனுக்குத் தெரிந்திருக்கிறது. ஆனால் ஆத்தும இரட்சிப்புக்கு என்ன செய்யவேண்டும் என்று சிறைச்சாலைக்காரனுக்குத் தெரியவில்லை. தன்னுடைய இரட்சிப்புக்கு தான் ஏதோ செய்யவேண்டும் என்பது மாத்திரமே அவனுக்குத் தெரிந்திருக்கிறது. இரட்சிப்பு தானாய் உண்டாகாது. தான் ஏதாவது செய்யவேண்டும் என்று நினைக்கிறான். "என்னுடைய இரட்சிப்புக்கு என்ன நடைபெறும்" என்று அவன் கேட்கவில்லை. அதற்குப் பதிலாக "இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும்" என்று மிகவும் பொறுப்போடு கேட்கிறான்.

சிறைச்சாலைக்காரன் தன்னுடைய ஆத்தும இரட்சிப்புக்கு எதையும் செய்ய ஆயத்தமாயிருக்கிறான். தான் என்ன செய்யவேண்டும் என்பது தனக்குச் சொல்லப்பட்டால், அதைச் செய்வதற்கு சிறைச்சாலைக்காரன் ஆயத்தமாயிருக்கிறான். தான் செல்லவேண்டிய பாதை குறுகியதாகயிருந்தாலும், முள் நிறைந்ததாகயிருந்தாலும், ஏற்றமான மலைப்பகுதியாகயிருந்தாலும், சரியான பாதையில் செல்ல விரும்புகிறான். தன்னுடைய ஆத்தும இரட்சிப்புக்கு தான் எந்த வழியில் பிரவேசிக்கவேண்டும் என்பதைத் தெரிந்துகொண்டு, அந்த வழியாய்ப் பிரவேசிக்க சிறைச் சாலைக்காரன் ஆயத்தமாயிருக்கிறான்.

பாவத்தைக்குறித்து மெய்யான குற்றவுணர்வுள்ளவர்கள், தங்களுடைய ஆத்தும இரட்சிப்பில் மெய்யான கவனம் செலுத்துவார்கள். இயேசுகிறிஸ்துவைத் தங்களுடைய இரட்சகராக ஏற்றுக்கொள்வார்கள். அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவார்கள். தங்களுடைய ஆத்தும இரட்சிப்புக்காக, எதையும் செய்ய ஆயத்தமாயிருப்பார்கள். அதையும் சந்தோஷமாய்ச் செய்வார்கள். உலக சந்தோஷத்தைவிட இரட்சிப்பின் சந்தோஷம் இவர்களுக்கு மிகவும் முக்கியமானதாகத் தெரியும்.

தான் இரட்சிக்கப்படுவதற்கு என்ன செய்யவேண்டும் என்பதை, தனக்குச் சரியான ஆலோசனை சொல்லக் கூடியவர்களிடத்தில் விசாரித்துத் தெரிந்துகொள்கிறான். நமக்கு ஏதாவது சந்தேகம் இருந்தால், அதை நிவிர்த்தி செய்யக்கூடியவர்கள் யார் என்று பார்த்து, அவர்களிடத்தில்தான் கேட்கவேண்டும். எல்லோரிடத்திலும் கேட்பதினால் ஒரு பிரயோஜனமும் உண்டாகாது. ஆவிக்குரிய தலைவர்களிடம் ஆவிக்குரிய காரியங்களைப்பற்றிக் கேட்டுத் தெரிந்துகொள்ளவேண்டும். சீயோனை நோக்கிப் பார்க்கிறவர்கள், அதற்குப் போகும் வழியையும் தெரிந்து கொள்ளவேண்டும்.

இரட்சிப்பின் வழி எது என்பது நமக்குத் தெரியாது. தேவன் மாத்திரமே தம்முடைய வார்த்தையினால், நமக்கு இரட்சிப்பின் வழியை வெளிப்படுத்துகிறார். நமக்கு உதவிசெய்வதற்காகத் தேவன் தம்முடைய ஊழியக்காரர்களை நியமித்திருக்கிறார். நமக்கு உபதேசம்பண்ணுவதற்காக இயேசுகிறிஸ்து நமக்கு பரிசுத்த ஆவியானவரை வாக்குப் பண்ணியிருக்கிறார். ஆவியானவர் நமக்குள் வரும்போது அவர் நம்மை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துவார். இயேசுகிறிஸ்துவே நமக்கு வழியாகயிருக்கிறார்.

பவுலும் சீலாவும் சிறைச்சாலையில் உட்காவலறையில் அடைக்கப்பட்டிருந்தார்கள். சிறைச் சாலைக்காரன் அவர்களை வெளியே அழைத்து வருகிறான். தான் மிகுந்த ஆபத்திலிருப்பதை சிறைச்சாலைக்காரன் உணருகிறான். பவுலும் சீலாவும் உட்காவலறையிலிருந்து வெளியே வந்து, தனக்கு அருகில் இருந்தால், தன்னுடைய ஆபத்திலிருந்து அவர்கள் தன்னைக் காப்பாற்றுவார்கள் என்று எதிர்பார்க்கிறான். ஊழியக்காரர்கள் தன்னோடிருக்க வேண்டுமென்று விரும்புகிறான். இதுவரையிலும் மற்ற சிறைச்சாலைக்காரரின் ஐக்கியத்தை விரும்பியவன், இப்போது ஊழியக்காரரின் ஐக்கியத்தை விரும்புகிறான். இரட்சிக்கப்பட விரும்புகிறவர்கள், இயேசுகிறிஸ்துவையும் அவருடைய ஊழியக்காரரையும் நேசிக்கவேண்டும். கிறிஸ்துவின் ஐக்கியத்தில் வாசம்பண்ணவேண்டுமென்று வாஞ்சையாயிருக்கவேண்டும்.

இயேசுகிறிஸ்துவை விசுவாசி

அதற்கு அவர்கள்: கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்று சொல்லி, (அப் 16:31)

இரட்சிக்கப்படுவதற்கு என்ன செய்யவேண்டுமென்று பவுலும் சீலாவும் சிறைச்சாலைக்காரனுக்கு ஆலோசனை சொல்லுகிறார்கள். ஊழியக்காரர்கள் வாரினால் அடிக்கப்பட்டு வேதனை அடைந்திருந்தாலும், நடுராத்திரியின் குளிரினாலும், நித்திரையில்லாமலும் கஷ்டப்பட்டாலும், அவர்கள் ஊழியம் செய்கிறார்கள். இரட்சிக்கப்படுவதற்கு என்ன செய்யவேண்டும் என்று தங்களிடத்தில் ஒருவன் கேட்கும்போது, தங்களுடைய சொந்தப் பிரச்சனைகளைப் பார்க்காமல், காலதாமதம்பண்ணாமல், அவனுக்கு உடனடியாகப் பதில் சொல்லுகிறார்கள். இரட்சிப்பின் வழியைச் சொல்லுவதற்கு ஏற்ற சமயத்தையும், ஏற்ற ஸ்தலத்தையும் ஊழியக்காரர்கள் தேடிப்போகவில்லை. ஒரு ஆத்துமா இரட்சிக்கப்படுவதற்கு ஆயத்தமாயிருக்கும் போது, அதை இரட்சிப்புக்குள் வழிநடத்திவிடவேண்டும். இரும்பு சூடாகயிருக்கும்போதே அதை அடித்து வளைப்பதுபோல, ஒவ்வொரு காரியத்தையும் காலதாமதம்பண்ணாமல், உடனடியாகச் செய்து முடித்துவிடவேண்டும்.

ஊழியக்காரர்களைத் துன்பப் படுத்தியதற்காக சிறைச்சாலைக்காரன் வருத்தப்படுகிறான். தன்னுடைய தவறை அவன் உணர்ந்திருக்கிறான். அவனுடைய சிந்தை தெளிவடைந்திருக்கிறது. அவனுடைய இருதயத்தில் தேவன் கிரியை செய்ய ஆரம்பித்திருக்கிறார். தேவன் கிரியை செய்யும்போது, தேவனுடைய ஊழியக்காரர்களும், அவரோடு சேர்ந்து கிரியை செய்யவேண்டும். நாம் தேவனுடைய உடன்ஊழியக்காரர்கள்.

பவுலும் சீலாவும் சிறைச்சாலைக்காரனைச் சிநேகிதனாகப் பாவிக்கிறார்கள். இரட்சிக்கப்படுவதற்கு நியமிக்கப்பட்டிருக்கும் வழியை அவனுக்குச் சொல்லுகிறார்கள். மற்றவர்களுடைய இரட்சிப்புக்கு என்ன ஆலோசனை சொல்லுவார்களோ, அதையே சிறைச்சாலைக்காரனுக்கும் சொல்லுகிறார்கள். அவன் இரட்சிக்கப்பட வேண்டுமென்றால், அவன் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்காமல் யாருக்கும் இரட்சிப்பு நியமிக்கப்படவில்லை. சுவிசேஷத்தின் முழுச்சாரமும் இதுதான். கிருபையின் உடன்படிக்கையை பவுலும் சீலாவும் ஒரு சில வார்த்தைகளினால் சிறைச்சாலைக்காரனுக்கு விளக்கிச் சொல்லுகிறார்கள். "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்". இதுவே சுவிசேஷத்தின் மையச்செய்தி.

சிறைச்சாலைக்காரன் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தால், அவனுக்கு இரட்சிப்பின் சந்தோஷம் கிடைக்கும். இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களுக்கு இரட்சிப்பு கிடைக்குமென்பது தேவனுடைய வாக்குத்தத்தம். "நீ இரட்சிக்கப்படுவாய்" என்னும் செய்தி சிறைச்சாலைக்காரனுக்கு ஒரு சந்தோஷமான வாக்குத்தத்தம். இவன் தன்னுடைய நித்திய அழிவிலிருந்து மீட்கப்படுவதோடு, நித்திய ஜீவனையும் பெற்றுக்கொள்கிறான்.

சிறைச்சாலைக்காரன் ஊழியக் காரர்களைத் துன்பப்படுத்தினாலும், இயேசுகிறிஸ்து இவனுடைய பாவத்தையும் மன்னிக்கிறார். கிறிஸ்துவின் கிருபையினால் இவனுடைய கடினமான இருதயம் மென்மையாக்கப்படுகிறது. சிறைச்சாலையில் கைதிகளைக் கொடுமைப்படுத்துகிற இவனுடைய கடின இருதயத்தில், இப்போது அன்பும், கிருபையும், கரிசனையும் நிரம்பியிருக்கிறது. இவனுக்குள் இந்த மாற்றம் உண்டானதற்கு, இவன் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதே காரணம்.

தேவன் இந்த உலகத்து ஜனத்தாரோடு மத்தியஸ்தர் மூலமாக ஒப்புரவாகுகிறார். இதுவே தேவனுடைய ஒப்புரவாகுதலின் திட்டம். தேவனுடைய திட்டத்தை மனுஷரால் மாற்றமுடியாது. நாம் அதை ஏற்றுக்கொண்டு, அவருடைய திட்டத்திற்குக் கீழ்ப்படியவேண்டும். இயேசுகிறிஸ்துவே தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தராகயிருக்கிறார். பிதாவாகிய தேவனே, குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை, நமக்கு மத்தியஸ்தராகத் தந்திருக்கிறார். நாம்தான் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள வேண்டும். அவரை விசுவாசிக்கவேண்டும். நம்முடைய இரட்சிப்புக்கு இது மாத்திரமே வழி. வேறு வழி எதுவுமில்லை.

கிறிஸ்துவின் மூலமாக அல்லாமல், வேறு எந்த உபாயத்தின் மூலமாகவும் மனுஷருக்கு இரட்சிப்பு நியமிக்கப்படவில்லை. இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாமல், நாம் எவ்வளவு தான் முயற்சிபண்ணினாலும் நமக்கு இரட்சிப்பு உண்டாகாது. இந்தச் சுவிசேஷமே சர்வசிருஷ்டிக்கும் பிரசங்கிக்கப்படுகிறது. "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் இரட்சிக்கப்படுவார்கள்" என்பதே சுவிசேஷத்தின் மையச்செய்தி.

தேவன் நம்மை இரட்சிக்கும்போது, நம்முடைய குடும்பத்தாரையும் இரட்சிக்கச் சித்தமுள்ளவராகயிருக்கிறார். நாம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கும்போது, நாமும் நம்முடைய வீட்டாரும் இரட்சிக்கப்படுவோம். இரட்சிக்கப்பட வேண்டியவர்கள் எத்தனை பேராகயிருந்தாலும், அத்தனை பேரும் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து, இரட்சிப்படைய முடியும். இரட்சிக்கக்கூடாத படிக்கு இயேசுகிறிஸ்துவின் கரம் ஒருபோதும் குறுகிப்போகவில்லை.

கர்த்தருடைய வசனம்

அவனுக்கும் அவன் வீட்டிலிருந்த யாவருக்கும் கர்த்தருடைய வசனத்தைப் போதித்தார்கள் (அப் 16:32).

பவுலும் சீலாவும் சிறைச்சாலைக்காரனுக்கும் அவனுடைய வீட்டிலிருக்கிற யாவருக்கும் கர்த்தருடைய வசனத்தைப் போதிக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவுக்கும், அவருடைய சுவிசேஷத்திற்கும் சிறைச்சாலைக்காரன் அந்நியனாக இருக்கிறான். ஆகையினால் இவனுக்கு இயேசுகிறிஸ்துவைப் பற்றிப் போதிக்கவேண்டியது அவசியமாகயிருக்கிறது. இவன் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டுமென்றால், தான் விசுவாசிக்கிறவர் இன்னாரென்பதை இவன் அறிந்துகொள்ளவேண்டும். இயேசுகிறிஸ்துவைப்பற்றியும் அவருடைய வசனத்தைப்பற்றியும் இவனுக்குப் போதித்தால்தான், இவனால் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்க முடியும்.

கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் சமயம் வாய்க்கும்போதெல்லாம் கர்த்தருடைய வசனத்தைப் போதிக்க ஆயத்தமாகயிருக்க வேண்டும். கர்த்தருடைய வசனம் ஊழியக்காரர்களுடைய இருதயத்தில் எப்போதும் நிரம்பி வழியவேண்டும். சுவிசேஷத்தைக் கேட்பதற்கும், பெற்றுக்கொள்வதற்கும் யாரெல்லாம் ஆயத்தமாக இருக்கிறார்களோ, அவர்களுக்கெல்லாம் காலதாமதம் பண்ணாமல் சுவிசேஷத்தைப் போதகம்பண்ணவேண்டும்.

பவுலும் சீலாவும் கர்த்தருடைய வசனத்தை சிறைச்சாலைக்காரனுக்கும், அவன் வீட்டிலிருந்த யாவருக்கும் போதிக்கிறார்கள். அவனுடைய வீட்டில், அவனுடைய குடும்பத்தார், அவனுக்குக் கீழ் பணிபுரிகிறவர்கள், அவர்களுடைய குடும்பத்தார் ஆகிய அநேகர் இருக்கிறார்கள். அவர்களெல்லோருக்கும் பவுலும் சீலாவும் கர்த்தருடைய வசனத்தைப் போதிக்கிறார்கள்.

நம்முடைய குடும்பத்தில் வேலையாட்கள் இருப்பார்களென்றால், அவர்களுக்கும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை நாம் அறிவிக்கவேண்டும். தேவனுடைய கிருபை அவர்களுக்கும் கிடைப்பதற்கு நாம் ஒத்தாசை பண்ணவேண்டும். கர்த்தருடைய வசனத்தை அவர்களுக்குப் போதித்து, அவர்களுக்குச் சத்தியத்தைத் தெளிவுபடுத்தவேண்டும்.

நம்மிடத்தில் வேலை பார்க்கிறவர்கள் ஏழைகளாகயிருக்கலாம். ஆனாலும் அவர்களுடைய ஆத்துமாக்களோ விலைமதிப்பு மிகுந்தது. கர்த்தருடைய பார்வையில் அவர்களுடைய ஆத்துமாக்களும் விசேஷித்தது. நம்முடைய ஆத்துமாவை மீட்பதற்கு இயேசுகிறிஸ்து தம்முடைய திருஇரத்தத்தை மீட்பின் கிரயமாகச் செலுத்தியதுபோலவே, அவர்களுடைய ஆத்துமாக்களையும் மீட்பதற்கு இதே கிரயத்தையே செலுத்தியிருக்கிறார்.

ஞானஸ்நானம்

மேலும் இராத்திரியில் அந்நேரத்திலேதானே அவன் அவர்களை அழைத்துக்கொண்டுபோய், அவர்களுடைய காயங்களைக் கழுவினான். அவனும் அவனுடையவர்கள் அனைவரும் உடனே ஞானஸ்நானம் பெற்றார்கள். பின்பு அவன் அவர்களைத் தன் வீட்டிற்குக் கூட்டிக்கொண்டுபோய், அவர்களுக்கு போஜனங்கொடுத்து, தன் வீட்டார் அனைவரோடுங்கூட தேவனிடத்தில் விசுவாசமுள்ளவனாகி மனமகிழ்ச்சியாயிருந்தான் (அப் 16:33,34).

சிறைச்சாலைக்காரனும் அவனுடைய குடும்பத்தார் அனைவரும் உடனே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்கிறார்கள். கிருபையின் ஆவியானவர் அவர்களுடைய இருதயத்தில் வலுவான விசுவாசத்தைக் கொடுக்கிறார். அவர்கள் ஊழியக்காரரோடு வாக்குவாதம் பண்ணாமல், அவர்களுடைய உபதேசத்திற்குப் பூரணமாய்க் கீழ்ப்படிந்து, உடனே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்கிறார்கள். இங்கு நடைபெறுகிறது தேவனுடைய கிரியை என்பதை பவுலும் சீலாவும் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலினால் அறிந்துகொள்கிறார்கள்.

ஞானஸ்நானம் பெற்றபின்பு சிறைச்சாலைக்காரன் பவுலுக்கும் சீலாவுக்கும் அதிக மரியாதை கொடுக்கிறான். இராத்திரியிலே, அந்நேரத்திலேதானே, அவன் அவர்களை அழைத்துக்கொண்டுபோய், அவர்களுடைய காயங்களைக் கழுவுகிறான். சிறைச்சாலையில் உள்ளறையில் ஊழியக்காரர்களை அதற்குமேல் அடைத்து வைக்கவில்லை. ஊழியக்காரர்கள் காயங்களினால் வேதனைப்படுகிறார்கள். சிறைச்சாலைக்காரன் அவர்களுடைய காயங்களைக் கழுவி வேதனையைக் குறைக்கிறான். அதன்பின்பு அவன் அவர்களைத் தன் வீட்டிற்குக் கூட்டிக்கொண்டு போகிறான்.

சற்று நேரத்திற்கு முன்பு, சிறைச்சாலைக்காரன், பவுலையும் சீலாவையும் உள்ளறையில் அடைத்து, தொழுமரத்தில், அவர்கள் கால்களைக் கட்டினான். அவர்களுக்கு இப்படிப்பட்ட தண்டனை தேவையென்று நினைத்தான். ஆனால் இப்போதோ அவர்களுடைய காயங்களைக் கழுவி, அவர்களைத் தன் வீட்டிற்குக் கூட்டிகொண்டுபோய் உபசரிப்பு செய்கிறான். இப்போது கர்த்தருடைய ஊழியக்காரர்கள் இப்படிப்பட்ட உபசரிப்புக்கு பாத்திரவான்கள் என்று நினைக்கிறான்.

சிறைச்சாலைக்காரன் பவுலுக்கும் சீலாவுக்கும் தன்னுடைய வீட்டில் போஜனம் கொடுக்கிறான். ஊழியக்காரர்கள் அவனுக்கும் அவனுடைய குடும்பத்தாருக்கும் ஜீவஅப்பத்தைப் பிட்டுக்கொடுத்தார்கள். அவர்களுக்கு ஆவிக்குரிய நன்மையைத் தாராளமாகக் கொடுத்தார்கள். தாங்கள் செய்த ஊழியத்திற்கு, பிரதிபலனாக, ஊழியக்காரர்கள் சரீரப்பிரகாரமான நன்மைகளைப் பெற்றுக்கொள்கிறார்கள். நம்முடைய வீடுகளிலும் நாம் கர்த்தருடைய ஊழியக்காரர்களை வரவேற்று, அவர்களுக்குப் போஜனம்கொடுத்து, உபசரிக்கவேண்டும்.

சிறைச்சாலைக்காரனுடைய வீட்டில் இரட்சிப்பின் சந்தோஷம் நிறைந்திருக்கிறது. அவன் தன் வீட்டாரனைவரோடுங்கூட, தேவனிடத்தில் விசுவாசமுள்ளவனாகி, மனமகிழ்ச்சியாயிருக்கிறான். இப்படிப்பட்ட சந்தோஷம் அவன் குடும்பத்தில் இதற்கு முன்பு உண்டானதில்லை. இயேசுகிறிஸ்து இருக்கிற வீட்டில் சந்தோஷம் இருக்கும். இரட்சிக்கப்பட்டிருக்கிற இருதயம் மகிழ்ந்து களிகூரும்.

சிறைச்சாலைக்காரன் இயேசு கிறிஸ்துவில் விசுவாசமுள்ளவனாக இருக்கிறான். "அவன் தேவனிடத்தில் விசுவாசமுள்ளவனானான்" என்று இங்கு எழுதப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பதும், தேவனிடத்தில் விசுவாசம் வைப்பதும் ஒன்றுதான். கிறிஸ்துவே தேவனாகயிருக்கிறார். சுவிசேஷம் நம்மை தேவனிடத்தில் நேரடியாக அழைத்து வருகிறது. தேவனிடத்தில் விசுவாசம் வைக்கும்போது நமக்குள் சந்தோஷமுண்டாகிறது. விசுவாசத்தினால் இயேசுகிறிஸ்துவைத் தேவனாக ஏற்றுக் கொள்ளுகிறவர்களுடைய இருதயத்தில் தெய்வீக சமாதானமும், சந்தோஷமும் நிரம்பி வழியும்.

கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பது என்பதற்கு, கிறிஸ்துவில் மனமகிழ்ச்சியாயிருப்பது என்பது பொருள். சிறைச்சாலைக்காரன் இரட்சிக்கப்பட்ட பின்பு, அவனும் சந்தோஷமாயிருக்கிறான். அவனுடைய வீட்டார் அனைவரும் சந்தோஷமாயிருக்கிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகள் இருக்கிற இடத்தில் எல்லோரும் சந்தோஷமாகயிருப்பார்கள்.

விடுதலை
அப் 16 : 35-40

அப் 16:35. பொழுது விடிந்தபின்பு: அந்த மனுஷரை விட்டுவிடுங்கள் என்று சொல்ல அதிகாரிகள் சேவகர்களை அனுப்பினார்கள்.

அப் 16:36. சிறைச்சாலைக்காரன் பவுலுக்கு இந்த வார்த்தைகளை அறிவித்து: உங்களை விடுதலையாகும்படிக்கு அதிகாரிகள் கட்டளை அனுப்பினார்கள்; ஆகையால் நீங்கள் இப்பொழுது புறப்பட்டுச் சமாதானத்துடனே போங்கள் என்றான்.

அப் 16:37. அதற்குப் பவுல்: ரோமராகிய எங்களை அவர்கள் நியாயம் விசாரியாமல், வெளியரங்கமாய் அடித்து, சிறைச்சாலையிலே போட்டார்கள்; இப்பொழுது இரகசியமாய் எங்களை விடுதலையாக்கு கிறார்களோ? அப்படியல்ல, அவர்களே வந்து எங்களை வெளியே அழைத்து அனுப்பிவிடட்டும் என்றான்.

அப் 16:38. சேவகர் இந்த வார்த்தைகளை அதிகாரிகளுக்கு அறிவித்தார்கள். ரோமராயிருக்கிறார்களென்று அவர்கள் கேட்டபொழுது பயந்துவந்து,

அப் 16:39. அவர்களுடனே தயவாய்ப் பேசி, அவர்களை வெளியே அழைத்துக் கொண்டு போய், பட்டணத்தை விட்டுப் புறப்பட்டுப்போகும்படி கேட்டுக்கொண்டார்கள்.

அப் 16:40. அந்தப்படி அவர்கள் சிறைச்சாலையிலிருந்து புறப்பட்டு லீதியாளிடத்திற்குப் போய், சகோதரரைக் கண்டு, அவர்களுக்கு ஆறுதல் சொல்லிப் போய்விட்டார்கள்.

விட்டுவிடுங்கள்

பொழுது விடிந்தபின்பு: அந்த மனுஷரை விட்டுவிடுங்கள் என்று சொல்ல அதிகாரிகள் சேவகர்களை அனுப்பினார்கள். சிறைச்சாலைக்காரன் பவுலுக்கு இந்த வார்த்தைகளை அறிவித்து: உங்களை விடுதலையாகும்படிக்கு அதிகாரிகள் கட்டளை அனுப்பினார்கள்; ஆகையால் நீங்கள் இப்பொழுது புறப்பட்டுச் சமாதானத்துடனே போங்கள் என்றான் (அப் 16:35,36).

பவுலும் சீலாவும் இன்னும் சிறைச்சாலையில் இருக்கிறார்கள். பொழுது விடிகிறது. அப்பொழுது "அந்த மனுஷரை விட்டுவிடுங்கள்" என்று சொல்ல அதிகாரிகள் சேவகர்களை அனுப்புகிறார்கள். பட்டணத்து அதிகாரிகள் பவுலையும் சீலாவையும், நியாயப்படி விசாரிக்காமல், வாரினால் அநேக அடி அடித்து, சிறைச்சாலையில் வைத்திருக்கிறார்கள். அவசரம் அவசரமாக சிறைச்சாலையில் அடைத்தார்கள். பொழுது விடிந்த பின்போ, அவர்களை அவசரம் அவசரமாகச் சிறைச்சாலையைவிட்டு விடுதலைபண்ண எத்தனப்படுகிறார்கள்.

அதிகாரியின் சேவகர்கள் நேற்றைய தினம் பவுலையும் சீலாவையும் வாரினால் அநேக அடிகள் அடித்தார்கள். இப்போது அதே சேவகர்களை அதிகாரிகள் சிறைச்சாலைக்கு அனுப்பி, பவுலையும் சீலாவையும் விட்டுவிடுமாறு சொல்லச் சொல்லுகிறார்கள். சேவகர்கள் இந்தச் செய்தியை சிறைச்சாலைக்காரனிடத்தில் சொல்ல, சிறைச்சாலைக்காரன் பவுலுக்கு இந்த வார்த்தைகளை அறிவிக்கிறான். "உங்களை விடுதலையாக்கும்படி அதிகாரிகள் கட்டளை அனுப்பினார்கள். ஆகையால் நீங்கள் இப்பொழுது புறப்பட்டு சமாதானத்துடனே போங்கள்" என்று சொல்லுகிறான்.

பவுலும் சீலாவும் சிறைச்சாலையிலிருந்தாலும், சிறைச் சாலைக்காரனுடைய வீட்டில் போஜனம்பண்ணி அவனுடைய விருந்தினராகவும் இருந்திருக்கிறார்கள். சிறைச்சாலையில் ஊழியக்காரர்களின் கால்கள் தொழுமரத்தில் கட்டப்பட்டிருக்கிறது. இந்த வேதனையிலிருந்து ஊழியக்காரருக்கு விடுதலை கிடைத்திருப்பதினால், சிறைச் சாலைக்காரன் சந்தோஷப்படுகிறான். பவுலும் சீலாவும் சிறைச்சாலைக்காரனுடைய வீட்டில், விருந்தினராகயிருந்தாலும், இன்னும் சிறையில் அடைக்கப்பட்டவர்களாகத்தான் இருக்கிறார்கள். ஆகையினால் ஊழியக்காரர்களுடைய விடுதலை சிறைச்சாலைக்காரனுக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கிறது.

ரோமராகிய எங்களை

அதற்குப் பவுல்: ரோமராகிய எங்களை அவர்கள் நியாயம் விசாரியாமல், வெளியரங்கமாய் அடித்து, சிறைச்சாலையிலே போட்டார்கள்; இப்பொழுது இரகசியமாய் எங்களை விடுதலையாக்கு கிறார்களோ? அப்படியல்ல, அவர்களே வந்து எங்களை வெளியே அழைத்து அனுப்பிவிடட்டும் என்றான் (அப் 16:37).

“உங்களை விடுதலையாக்கும்படிக்கு அதிகாரிகள் கட்டளை அனுப்பினார்கள். ஆகையால் நீங்கள் இப்பொழுது புறப்பட்டு சமாதானத்துடனே போங்கள்' என்று சிறைச்சாலைக்காரன் ஊழியக்காரர்களிடத்தில் சொன்னவுடன், அவர்கள் உடனே சந்தோஷத்தோடே புறப்பட்டுப்போய்விடவில்லை. பவுல் சிறைச்சாலைக்காரனிடமும், சேவகரிடமும் “ரோமராகிய எங்களை அவர்கள் நியாயம் விசாரியாமல், வெளியரங்கமாய் அடித்து, சிறைச்சாலையிலே போட்டார்கள்; இப்பொழுது இரகசியமாய் எங்களை விடுதலையாக்குகிறார்களோ? அப்படியல்ல, அவர்களே வந்து எங்களை வெளியே அழைத்து அனுப்பிவிடட்டும்” என்று சொல்லிவிடுகிறான். சேவகர்கள் பவுலுக்கும் சீலாவுக்கும் தவறு செய்திருக்கிறார்கள். அவர்களுடைய தவற்றை அவர்களே நிவிர்த்தி செய்து கொள்ளவேண்டும் என்று பவுல் எதிர்பார்க்கிறான்.

இதற்கு முந்தின நாளில் சேவகர்கள் பவுலையும் சீலாவையும் வாரினால் அநேக அடிகள் அடித்தார்கள். அப்பொழுது பவுலும் சீலாவும் தங்களை “ரோமர்கள்” என்று சொல்லவில்லை. கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதினிமித்தம், பாடுகள் வரும்போது, அதை சந்தோஷமாய் ஏற்றுக்கொள்கிறார்கள். அந்தப் பாடுகளிலும் அவர்களுக்கு ஆறுதலும் சந்தோஷமும் உண்டாயிற்று. சிறைச்சாலையில் உள்ளறையில் அடைக்கப்பட்டபோதும், அவர்களுடைய கால்கள் தொழுமரத்தில் கட்டப்பட்டபோதும், பவுலும் சீலாவும் தங்களை “ரோமர்கள்” என்று சொல்லிக்கொள்ளவில்லை.

எல்லா வேதனைகளையும் அனுபவித்த பின்பு, இப்பொழுது பவுலும் சீலாவும் தங்களை “ரோமர்கள்” என்று சொல்லுகிறார்கள். சுவிசேஷத்திற்கு மேன்மையும் மகிமையும் உண்டாக வேண்டும் என்பதற்காக, தாங்கள் சுவிசேஷத்தினிமித்தம் வேதனையை சகித்துக்கொண்டதை இப்போது எடுத்துச் சொல்லுகிறார்கள். சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறவர்களை, நாம் ஏளனமாக நினைத்து துன்பப்படுத்தக்கூடாது. சுவிசேஷம் தேவனுடைய விசேஷித்த செய்தி. சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறவர்கள் தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள். இவர்களுக்குக் கொடுக்கவேண்டிய மதிப்பையும் மரியாதையும் நாம் கொடுக்கவேண்டும்.

பிலிப்பி பட்டணத்து அதிகாரி இயேசுகிறிஸ்துவின் சீஷர்களை தன் இஷ்டம்போல துன்பப்படுத்த நினைத்தான். சீஷர்களைத் துன்பப்படுத்தினால் அவர்களுக்குச் சாதகமாக யாரும் வழக்காட வரமாட்டார்கள் என்று நினைத்தான். பிலிப்பி பட்டணத்திலுள்ள ஜனங்களும் கிறிஸ்துவின் சீஷர்களையும், அவருடைய சுவிசேஷத்தையும் ஏளனமாக நினைத்தார்கள். பவுலோ தான் கிறிஸ்துவினிமித்தம் அடிகளையும் வேதனைகளையும் தாங்கிக்கொண்டதை அவர்களுக்கு எடுத்துச் சொல்லி, அதே வேளையில் கிறிஸ்துவின் ஊழியக்காரர்களை அவர்கள் ஏளனமாக நினைத்து, காரணமில்லாமல் தண்டிக்கக்கூடாது என்பதையும் எடுத்துச் சொல்லுகிறான்.

பவுல் தன்னுடைய நிலமையைப்பற்றி சேவகரிடம் சொல்லும்போது, அவர்கள் தனக்கு இழைத்த எல்லா தீங்குகளையும் வரிசையாகச் சொல்லுகிறான். ரோமராகிய ஊழியரை அவர்கள் நியாயம் விசாரியாமல் வெளியரங்கமாய் அடித்திருக்கிறார்கள். ரோமப்பேரரசின் சட்டத்தின்படி, ரோமக்குடிமகனை யாரும் நியாயம் விசாரியாமல் தண்டிக்கமுடியாது. பவுலும் சீலாவும் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறவர்களாக வந்திருக்கிறார்கள். கிறிஸ்துவின் ஊழியக்காரர்களுக்கு எந்தவிதமான உரிமையும் இல்லையென்று, பிலிப்பி பட்டணத்து அதிகாரிகள் நினைத்தார்கள்.

பவுலும் சீலாவும் கிறிஸ்துவின் ஊழியக்காரர்களாகவும், ரோமப்பேரரசின் பிரஜைகளாகவும் இருக்கிறார்கள். ரோமப்பேரரசில், கிறிஸ்துவின் ஊழியக்காரர்களை நியாயம் விசாரியாமல் வெளியரங்கமாய் அடித்தால் அவர்களுக்கு ஒரு தண்டனையும் இல்லை. அதே வேளையில் ரோமனாகிய ஒருவனை, நியாயம் விசாரியாமல் வெளியரங்கமாய் அடித்தால், அடித்தவனுக்கு கடுமையான தண்டனை கொடுக்கப்படும். ரோமப்பேரரசில் ஜனங்கள் இயேசுகிறிஸ்துவுக்குப் பயப்படுவதற்குப் பதிலாக ராயனுக்குப் பயப்படுகிறார்கள்.

சேவகர்கள் பவுலையும் சீலாவையும் வெளியரங்கமாய் அடித்தார்கள். அவர்களை அமைதியாக விசாரிக்கவில்லை. அவர்கள்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களைப் பொறுமையாகக் கேட்கவில்லை. குற்றச்சாட்டு சொல்லப்படும்போதே, அதற்கு மேல் நியாயம் விசாரியாமலேயே, அவர்களை வெளியரங்கமாய் அடித்து விடுகிறார்கள். ஊழியக்காரர்களுக்கும் தங்களுடைய நியாயத்தை எடுத்துச்சொல்ல வாய்ப்பு கொடுக்கப்படவில்லை.

கிறிஸ்துவின் ஊழியக்காரர்களுக்கு இந்த உலகத்தில் இதுபோல பல இடங்களிலும் நியாயமான நீதி மறுக்கப்படுகிறது. பட்சபாதத்துடன் நியாயம் விசாரித்து, கிறிஸ்துவின் ஊழியக்காரர்களைத் தண்டித்து விடுகிறார்கள். ஊழியக்காரர்கள் ஒரு தவறும் செய்யாதிருந்தும், கிறிஸ்துவினிமித்தமாக, தங்களுடைய வேதனைகளையும், தண்டனைகளையும், உபத்திரவங்களையும் சகித்துத் தாங்கிக்கொள்கிறார்கள். அதிகாரிகள் பவுலையும் சீலாவையும் மறைவாக அடிக்காமல், வெளியரங்கமாய் அடித்திருக்கிறார்கள்.

பட்டணத்து அதிகாரிகள் பவுலையும் சீலாவையும் வெளியரங்கமாய் அடித்ததோடு, அவர்களை சிறைச்சாலையிலும் போட்டுவிடுகிறார்கள். அதற்கான காரணத்தையும் அவர்களுக்குச் சொல்லவில்லை. வெளியரங்கமாய் அடித்து, அவர்களை வெளியரங்கமாய் சிறைச்சாலையில் போட்டார்கள். இப்பொழுதோ, அவர்களை இரகசியமாய் விடுதலைபண்ணுகிறார்கள். சேவகர்கள் ஊழியக்காரருக்கு விரோதமாகச் செய்த காரியங்களை, அவர்களால் நியாயப்படுத்த முடியாது. ஆனாலும் அவர்கள் தாங்கள் செய்த தப்பிதத்தை இன்னும் உணரவில்லை. தாங்கள் செய்தது தப்பிதம்தான் என்பதையும் அவர்கள் இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை.

சேவகர்கள் தங்களுக்குச் செய்தது தவறான செய்கை என்பதில் பவுல் உறுதியாக இருக்கிறான். ஆகையினால் அவர்கள் தாங்கள் செய்த தவறை அங்கீகரிக்கவேண்டும் என்று பவுல் விரும்புகிறான். சிறைச்சாலையிலிருந்து தங்களை இரகசியமாய் விடுதலையாக்காமல், அதிகாரிகளே சிறைச்சாலைக்கு வந்து, தங்களை வெளியே அழைத்து அனுப்பிவிடவேண்டும் என்று பவுல் வலியுறுத்துகிறான்.

ஊழியக்காரர்கள் அடிக்கப் பட்டதற்கும், சிறைச்சாலையின் உட்காவலறையில் அடைக்கப்பட்டதற்கும், தொழுமரத்தினால் அவர்கள் கால்களைக் கட்டியதற்கும் அவர்கள் எந்தத் தப்பிதமும் செய்யவில்லை என்பதை அதிகாரிகள் வெளிப்படையாகச் சொல்லவேண்டும் என்று பவுல் எதிர்பார்க்கிறான். தனக்குப் பெருமை உண்டாகவேண்டும் என்பதற்காக பவுல் இதைப் பிடிவாதமாகச் சொல்லவில்லை. நீதி மரித்துப்போய்விடக்கூடாது என்றும், நீதி நிலைநிறுத்தப்படவேண்டும் என்றும் பவுல் தன்னுடைய நியாயத்தை எடுத்துச்சொல்லுகிறான். பவுல் ஒருபோதும் தன்னுடைய சுயமகிமைக்காக வழக்காடுகிறவனல்ல. தாங்கள் அனுபவித்த தண்டனை, தாங்கள் செய்த தப்பிதத்தினால் உண்டானதல்ல என்பதை, பவுல் பட்டணத்து அதிகாரிகள் மூலமாகவே, சாட்சியாக அறிவிக்க விரும்புகிறான்.

தயவாய்ப் பேசி

சேவகர் இந்த வார்த்தைகளை அதிகாரிகளுக்கு அறிவித்தார்கள். ரோமராயிருக்கிறார்களென்று அவர்கள் கேட்டபொழுது பயந்துவந்து, அவர்களுடனே தயவாய்ப் பேசி, அவர்களை வெளியே அழைத்துக்கொண்டு போய், பட்டணத்தை விட்டுப் புறப்பட்டுப் போகும்படி கேட்டுக்கொண்டார்கள் (அப் 16:38,39).

பவுல் ஒரு ரோமராகயிருக்கிறான் என்னும் செய்தி அதிகாரிகளைக் கலங்கச் செய்கிறது. ஒருவரை நியாயம் விசாரியாமல் தண்டிப்பது எல்லா தேசத்திலும் குற்றமாகவே கருதப்படும். தேவனுடைய பிரமாணத்திற்கும் இது எதிராகவே இருக்கிறது. ரோமராயிருக்கிற பவுலையும் சீலாவையும் நியாயம் விசாரியாமல், வெளியரங்கமாய் அடித்து சிறைச்சாலையில் போட்டு அதிகாரிகள் தப்பு செய்திருக்கிறார்கள். தங்களுடைய தப்பிதத்தை திருத்திக்கொள்ளும் வண்ணமாகவும், தாங்கள் செய்த தப்பிதத்திற்கு கிடைக்கக்கூடிய தண்டனையிலிருந்து தப்பித்துக்கொள்ளும் வண்ணமாகவும், அதிகாரிகள் பவுலோடும் சீலாவோடும் தயவாய்ப் பேசி, அவர்களைச் சிறைச்சாலைக்கு வெளியே அழைத்துக்கொண்டு வருகிறார்கள்.

பவுலையும் சீலாவையும் சிறையில் போட்டது தாங்கள் செய்த தப்பிதம் என்பதை அதிகாரிகள் ஒத்துக்கொள்கிறார்கள். தாங்கள் செய்த தவறு மற்றவர்களுக்கு விளம்பரமாகத் தெரிவதற்கு முன்பாக, அவர்களை சிறைச்சாலையிலிருந்து இரகசியமாய் விடுதலையாக்க எத்தனம்பண்ணுகிறார்கள். சிறைச்சாலைக்கு வெளியே பவுலையும் சீலாவையும் அழைத்துக்கொண்டுபோய், அவர்களிடத்தில் "பட்டணத்தைவிட்டுப் புறப்பட்டுப் போகும்படி கேட்டுக் கொள்கிறார்கள்".

அதிகாரிகளின் மனந்திரும்புதல் உண்மையானதாக இருக்குமென்றால், பவுலையும் சீலாவையும் பட்டணத்தைவிட்டுப் புறப்பட்டுப் போகும்படி சொல்லமாட்டார்கள். தங்கள் பட்டணத்திலேயே தங்கியிருந்து, இரட்சிப்பின் வழியை தங்களுக்குக் காண்பிக்க வேண்டுமென்று கேட்டிருப்பார்கள். இக்காலத்தில் அநேகர் இந்த அதிகாரிகளைப்போலவே, கிறிஸ்துவின் உபதேசம் நன்மையானது என்று சொல்லுகிறார்கள்.

ஆனாலும் அதை ஏற்றுக்கொள்ள மனதில்லாதவர்களாக, சுவிசேஷத்தின் சத்தியத்தைத் தங்களைவிட்டு வெளியே வைத்திருக்கிறார்கள். உலகத்தார் கிறிஸ்துவையும் அவருடைய ஊழியக்காரர்களையும் மேன்மைப் படுத்துகிறார்கள். ஆனாலும் கிறிஸ்துவின் மூலமாக வரும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளாமல் போகிறார்கள்.

போய்விட்டார்கள்

அந்தப்படி அவர்கள் சிறைச்சாலையிலிருந்து புறப்பட்டு லீதியாளிடத்திற்குப் போய், சகோதரரைக் கண்டு, அவர்களுக்கு ஆறுதல் சொல்லிப் போய்விட்டார்கள் (அப் 16:40).

பவுலும் சீலாவும் சிறைச்சாலையிலிருந்து முறைப்படி விடுவிக்கப்படுகிறார்கள். பிலிப்பி பட்டணத்தைவிட்டு வெளியேறிப்போய்விடத் தீர்மானிக்கிறார்கள். அந்தப் பட்டணத்திலுள்ள புதிய விசுவாசிகளைக் கண்டு, அவர்களிடத்தில் விடைபெற்று செல்லுவதற்காக அவர்கள் லீதியாளிடத்திற்குப் போய், சகோதரரைக்கண்டு, அவர்களுக்கு ஆறுதல்சொல்லி, பிலிப்பி பட்டணத்தைவிட்டுப் போய்விடுகிறார்கள். புதிய விசுவாசிகளுக்கு ஆறுதல் தேவை. கர்த்தருடைய சந்தோஷமே அவர்களுடைய பெலன்.

பிலிப்பி பட்டணத்திற்கு வந்து ஊழியம் செய்யுமாறு பவுல் விசேஷித்த அழைப்பைப் பெற்றுக்கொண்டான். மக்கெதோனியா தேசத்தான் தன் தேசத்திற்கு வந்து தங்களுக்கு உதவிபுரியுமாறு பவுலை வருந்தி அழைத்தான். கர்த்தரும் பவுலின் தரிசனத்தை உறுதிபண்ணினார். அழைப்பு பெரியதாகயிருக்கிறபடியினால், ஊழியமும் பெரியதாகயிருக்குமென்று பவுல் எதிர்பார்த்தான். பவுலும் சீலாவும் பிலிப்பி பட்டணத்திற்கு வந்தார்கள். ஆனால் அங்கு வந்தபோதோ, அவர்களை வரவேற்பதற்கு யாரும் வரவில்லை. வந்தவுடன் ஊழியத்தை ஆரம்பிக்க முடியாமல், அந்தப் பட்டணத்தில் ஒரு சில நாட்கள் ஊழியம் செய்யாமல் தங்கியிருக்கிறார்கள்.

பிலிப்பி பட்டணத்தில் கர்த்தருடைய ஊழியத்தை உண்மையாய் செய்கிறார்கள். ஆனாலும் அவர்கள் எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை. ஏராளமானோர் இரட்சிக்கப்படவில்லை. அவர்களுடைய ஊழியத்திற்கு எதிர்ப்பு உண்டாயிற்று. பிலிப்பி பட்டணத்தைவிட்டுப் புறப்பட்டுப் போய்விடுமாறு அந்தப் பட்டணத்து அதிகாரி, பவுலையும் சீலாவையும் கேட்டுக்கொள்கிறான். மக்கெதோனியா தேசத்தான் இங்கு ஊழியம் செய்ய வருமாறு அழைத்தான். இந்தப் பட்டணத்தின் அதிகாரியோ, பவுலையும் சீலாவையும் இங்கு ஊழியம் செய்ய விடாமல் தடை செய்து, அவர்களை இந்தப் பட்டணத்தைவிட்டுப் போய்விடுமாறு துரத்துகிறான்.

ஊழியத்தில் ஏராளமானோர் இரட்சிக்கப்படாவிட்டாலும், பவுல் பிலிப்பி பட்டணத்திற்கு வந்தது வீணாய்ப் போய்விடவில்லை. பவுலும் சீலாவும் இந்தப் பட்டணத்தில் சபையை ஸ்தாபிப்பதற்கு அஸ்திபாரம் போடுகிறார்கள். சிறிதாய் ஆரம்பிக்கப்பட்ட இந்தச் சபை, பிற்காலத்தில் மிகவும் பெரிதாய் வளர்ச்சி பெறுகிறது. மற்ற சபைகள் பவுலுக்கு ஆதரவாயிருந்ததைவிட, பிலிப்பி பட்டணத்து சபை இவர்களுக்கு அதிக ஆதரவாயிருக்கிறது.

பவுல் பிலிப்பி பட்டணத்து சபையைப்பற்றி தன்னுடைய நிருபத்தில் இவ்வாறு எழுதுகிறான். "இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரராகிய பவுலும் தீமோத்தேயும், பிலிப்பி பட்டணத்தில் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பரிசுத்தவான்கள் அனைவருக்கும், கண்காணிகளுக்கும், உதவிக்காரருக்கும் எழுதுகிறதாவது" (பிலி 1:1) "மேலும், பிலிப்பியரே, சுவிசேஷத்தின் ஆரம்பத்திலே நான் மக்கதோனியாவிலிருந்து புறப்பட்ட போது, கொடுக்கல் வாங்கல் காரியத்தில் நீங்கள் மாத்திரம் எனக்கு உடன்பட்டதே யல்லாமல், வேறொரு சபையும் உடன்படவில்லை என்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்" (பிலி 4:15).

பவுலுக்கு பிலிப்பி பட்டணத்தில் ஏற்பட்ட அனுபவத்தைப்போல, கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நமக்கும், நம்முடைய ஊழிய ஸ்தலத்தில் அனுபவம் உண்டாகலாம், நாம் அதிகமாகப் பிரயாசப்பட்டு ஊழியம் செய்தும், அதிகமான ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படாமல் போகலாம். நாம் விதைக்கப்பட்ட சுவிசேஷ விதைகள் பலன் தராமல் போவதுபோல காணப்படலாம். ஆனாலும் கண்ணீரோடு விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடு அறுப்பார்கள் என்று வேதம் சொல்லுகிறது. விசுவாசத்தோடு விதைக்கிற நமக்கு, கர்த்தர் ஒரு அறுவடை காலத்தை நியமித்திருக்கிறார். கர்த்தருக்காக நாம் செய்கிற ஊழியம் ஒருபோதும் வீணாய்ப் போவதில்லை.

17 அதிகாரம்

பவுல் பிலிப்பி பட்டணத்திலிருந்து மேற்கொள்ளுகிற பிரயாணம் இந்த அதிகாரத்தில் எழுதப்பட்டிருக்கிறது. மேஜையின் மீது வைக்கப்பட்டிருக்கிற விளக்கு அந்த அறைக்கு மாத்திரமே வெளிச்சத்தைத் தரும். ஆனால் சூரியனின் பிரகாசமோ பூமி முழுவதற்கும் வெளிச்சம் தரும். பவுல் ஒரே இடத்திலிருந்து அங்குள்ளவர்களுக்கு மாத்திரம் ஊழியம் செய்யாமல், ஒவ்வொரு இடமாகப் பிரயாணம் செய்து, தாம் சந்திக்கிற எல்லோருக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறான். ஏராளமானோருக்கு பிரகாசிக்கிற விளக்காக இருக்கிறான்.

தெசலோனிக்கேயில் பவுல் உபதேசம்பண்ணுகிறான். அங்கு அவனுக்கு உபத்திவரமுண்டாயிற்று (அப் 17:1-9). பெரோயா பட்டணத்தில் பவுல் ஊழியம் செய்கிறான். அந்தப் பட்டணத்திலிருந்து அவனைத் துன்புறுத்தித் துரத்திவிடுகிறார்கள் (அப் 17:10-15). அத்தேனே பட்டணத்தில் ஏராளமான ஜனங்களோடு தினந்தோறும் சம்பாஷணை பண்ணுகிறான் (அப் 17:16-21). அறியப்படாத தேவனைப்பற்றி பவுல் அவர்களுக்கு விளக்கம் கொடுக்கிறான் (அப் 17:22-31). பவுலின் ஊழியத்தின் மூலமாய் ஒரு சிலர் விசுவாசிகளாகிறார்கள் (அப் 17:32-34).

தெசலோனிக்கே
அப் 17 : 1-9

அப் 17:1. அவர்கள் அம்பிபோலி பட்டணத்தையும் அப்பொலோனியா பட்டணத்தையும் கடந்து, தெசலோனிக்கே பட்டணத்துக்கு வந்தார்கள்; அங்கே யூதருக்கு ஒரு ஜெபஆலயம் இருந்தது.

அப் 17:2. பவுல் தன் வழக்கத்தின்படியே அவர்களிடத்தில் போய், மூன்று ஓய்வுநாட்களில் வேத வாக்கியங்களின் நியாயங்களை எடுத்து அவர்களுடனே சாம்பாஷித்து,

அப் 17:3. கிறிஸ்து பாடுபடவும் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவும் வேண்டியதென்றும், நான் உங்களுக்கு அறிவிக்கிற இந்த இயேசுவே கிறிஸ்து என்றும் காண்பித்து, திருஷ்டாந்தப்படுத்தினான்.

அப் 17:4. அவர்களில் சிலரும், பக்தியுள்ள கிரேக்கரில் திரளான ஜனங்களும், கனம் பொருந்திய ஸ்திரீகளில் அநேகரும் விசுவாசித்து, பவுலையும் சீலாவையும் சேர்ந்து கொண்டார்கள்.

அப் 17:5. விசுவாசியாத யூதர்கள் வைராக்கியங்கள் கொண்டு வீணராகிய சில பொல்லாதவர்களைச் சேர்த்துக் கொண்டு கூட்டங்கூடி, பட்டணத்தில் அமளியுண்டாக்கி, யாசோனுடைய வீட்டை வளைந்துகொண்டு, அவர்களைப் பட்டணத்தாருக்கு முன்பாக இழுத்துக்கொண்டுவர வகைதேடினார்கள்.

அப் 17:6. அவர்களைக் காணாமல், யாசோனையும் சில சகோதரரையும் பட்டணத்து அதிகாரிகளிடத்தில் இழுத்துக்கொண்டு வந்து: உலகத்தைக் கலக்குகிறவர்கள் இங்கேயும் வந்திருக்கிறார்கள்.

அப் 17:7. இவர்களை யாசோன் ஏற்றுக்கொண்டான். இவர்களெல்லாரும் இயேசு என்னும் வேறொருவனை ராஜா என்று சொல்லி இராயனுடைய கட்டளைகளுக்கு விரோதமாகச் செய்கிறார்களென்று கூக்குரலிட்டு,

அப் 17:8. இவைகளைக் கேட்டுக்கொண்டிருந்த ஜனங்களையும் பட்டணத்து அதிகாரிகளையும் கலங்கப்பண்ணினார்கள்.

அப் 17:9. பின்பு அவர்கள் யாசோனிடத்திலும் மற்றவர்களிடத்திலும் ஜாமீன் வாங்கிக் கொண்டு, அவர்களை விட்டுவிட்டார்கள்.

வேதவாக்கியங்களின் நியாயங்கள்

அவர்கள் அம்பிபோலி பட்டணத்தையும் அப்பொலோனியா பட்டணத்தையும் கடந்து, தெசலோனிக்கே பட்டணத்துக்கு வந்தார்கள்; அங்கே யூதருக்கு ஒரு ஜெபஆலயம் இருந்தது. பவுல் தன் வழக்கத்தின்படியே அவர்களிடத்தில் போய், மூன்று ஓய்வுநாட்களில் வேதவாக்கியங்களின் நியாயங்களை எடுத்து அவர்களுடனே சாம்பாஷித்து, (அப் 17:1,2)

அப்போஸ்தலர் பவுல் தெசலோனிக்கேயிலுள்ள சபைக்கு இரண்டு நிருபங்களை எழுதியிருக்கிறான். அந்த சபைகளின் வளர்ச்சி, பக்தி, நற்குணம் ஆகியவை இந்த நிருபங்களின் மூலமாய்த் தெரியவருகிறது. இந்த அதிகாரத்தில் தெசலோனிகேயா பட்டணத்தில் சபை ஸ்தாபிக்கப்பட்ட வரலாறு எழுதப்பட்டிருக்கிறது. பவுலும் சீலாவும் அம்பிபோலி பட்டணத்தையும், அப்பொல்லோனியா பட்டணத்தையும் கடந்து தெசலோனிக்கே பட்டணத்திற்கு வருகிறார்கள்.

பிலிப்பி பட்டணத்தில் பவுலுக்கு கசப்பான அனுபவம் உண்டாயிற்று. அநேகர் இரட்சிக்கப்படவில்லை. வாரினால் அடிக்கப்பட்டான். சிறைச்சாலையில் அடைக்கப்பட்டான். பட்டணத்து அதிகாரி அந்த ஊரை விட்டுப்போய்விடுமாறு பவுலைக் கேட்டுக்கொண்டான். பிலிப்பி பட்டணத்தில் எதிர்பார்த்த அளவுக்கு ஊழியம் சிறப்பாக நடைபெறவில்லை. தெசலோனிக்கேயருக்கு பவுல் எழுதின முதலாவது நிருபத்தில் இந்தச் சம்பவத்தையெல்லாம் பவுல் நினைவுகூருகிறான். "உங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி, முன்னே பிலி ப்பிபட்டணத்திலே நாங்கள் பாடுபட்டு நிந்தையடைந்திருந்தும், வெகு போராட்டத்தோடே தேவனுடைய சுவிசேஷத்தை உங்களுக்குச் சொல்லும்படி, நம்முடைய தேவனுக்குள் தைரியங்கொண்டிருந்தோம்" (1தெச 2:2).

பிலிப்பி பட்டணத்தில் பவுலுக்கு எதிர்ப்பும் உபத்திரவமும் உண்டான போதிலும் அவன் சோர்ந்துபோய் விடவில்லை. ஊழியத்திலிருந்து பின்வாங்கிப்போய் விடவில்லை. கர்த்தருடைய ஆவியானவர் பவுலோடு கூடயிருந்து அவனைப் பலப்படுத்துகிறார். பிலிப்பி பட்டணத்தில் ஊழியம் செய்வதற்கு வாசல் அடைக்கப்பட்டாலும், கர்த்தர் தனக்கு வேறொரு இடத்தில் திறந்த வாசலை வைத்திருக்கிறார் என்று எதிர்பார்த்து, பவுலும் சீலாவும் தெசலோனிக்கே பட்டணத்திற்கு வருகிறார்கள்.

தெசலோனிக்கே பட்டணத்திற்கு வரும்போது, பவுலும் சீலாவும் அம்பிபோலி பட்டணத்தையும், அப்பொலோனியா பட்டணத்தையும் கடந்து வருகிறார்கள். இந்தப் பட்டணங்கள் வழியாக வந்தாலும், பவுல் இங்கும் அநேக நாள் தங்கியிருந்து, இங்குள்ளஜனங்களுக்கு இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கம் செய்திருப்பான். பிற்காலத்தில் மற்ற ஊழியக்காரர்கள் இந்தப் பட்டணத்திற்கு வந்து ஊழியம் செய்ய, ஜனங்கள் உள்ளத்தில் இரட்சிப்பின் பாதையை ஆயத்தம் செய்திருப்பான்.

தெசலோனிக்கே பட்டணத்தில் யூதருக்கு ஒரு ஜெபாலயம் இருக்கிறது. ஜனங்கள் மத்தியில் ஊழியம் செய்வதற்கு, ஜெபாலயத்தின் வழியாக பவுலும் சீலாவும் பிரவேசிக்கிறார்கள். பவுல் எந்தப் பட்டணத்தில் ஊழியம் செய்தாலும், முதலாவதாக யூதர்கள் மத்தியில் தன் ஊழியத்தை ஆரம்பிப்பது வழக்கம். யூதர்கள் சுவிசேஷத்தை ஏற்றுக் கொண்டால் அவர்கள் இரட்சிக்கப் படுவார்கள். புதிய விசுவாசிகளை அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள். யூதர்கள் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டால், பவுல் அவர்களோடு போராடமாட்டான். சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ள யார் ஆயத்தமாயிருக்கிறார்களோ, அவர்கள் மத்தியில் ஊழியம் செய்ய புறப்பட்டுப்போய்விடுவான்.

ஓர் ஓய்வுநாளின்போது, யூதர்கள் வழக்கமாய் கூடுகிற ஜெபாலயத்தில், வேதவாக்கியங்களின் நியாயங்களை யூதர்களுடனே சம்பாஷணை பண்ணுகிறான். யூதர்கள் கூடுகிற ஜெபாலயத்தில், அவர்கள் கூடிவருகிற ஓய்வுநாளில் பவுலின் ஊழியம் நடைபெறுகிறது. கர்த்தருடைய நாளில், அவருடைய ஆலயத்திலிருப்பது மிகவும் ஆசீர்வதமானது. இயேசுகிறிஸ்துவும் ஜெபாலயங்களில் உபதேசம்பண்ணினார். பவுலும், மற்ற அப்போஸ்தலரும் ஜெபாலயங்களில் உபதேசம் பண்ணினார்கள். கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நாமும், கர்த்தருடைய நாளில், கர்த்தருடைய ஆலயத்தில் உபதேசம்பண்ணவேண்டும்.

ஜெபாலயத்திற்கு வந்திருக்கிற யூதர்களுடனே வேதவாக்கியங்களின் நியாயங்களைப் பவுல் சம்பாஷணை பண்ணுகிறான். அவர்கள் வேத வாக்கியங்களை ஏற்றுக்கொள்கிறார்கள். வேதத்தில் பிரியமாயிருக்கிறார்கள். அவர்கள் மேசியாவை எதிர்பார்க்கிறார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவை அவர்கள் மேசியாவாக ஏற்றுக்கொள்ளவில்லை. பவுலும் வேதவாக்கியத்தை ஏற்றுக்கொண்டவன் தான். ஆகையினால் இயேசுகிறிஸ்துவை கர்த்தராக ஏற்றுக்கொண்டு அவருக்கு ஊழியம் செய்கிறான். இயேசுகிறிஸ்துவை ஏற்றுக் கொள்கிறவர்களும், ஏற்றுக்கொள்ளாதவர்களும், வேத வாக்கியத்தையே அதற்குக் காரணமாகச் சொல்லுகிறார்கள். ஆகையினால் நாம் வேதவாக்கியங்களை வாசிக்கும்போது அதன் நியாயங்களை ஆராய்ந்துபார்க்க வேண்டும்.

வேத வாக்கியங்களில் எழுதப்பட்டிருக்கிற சத்தியத்தை பவுல் யூதருக்கு விவரித்துச் சொல்லுகிறான். மேசியாவைக் குறித்து யூதர்கள் தவறான எண்ணங் கொண்டிருக்கிறார்கள். வேதவாக்கியங்களின் நியாயங்களை அவர்களோடு சம்பாஷணைபண்ணி, அவர்களுக்கு இயேசுகிறிஸ்துவைப்பற்றிய சத்தியத்தைத் தெளிவுபடுத்துகிறான்.

நாம் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணும்போது, நம்முடைய பிரசங்கச் செய்தி வேதவாக்கியங்களின் நியாயங்களை எடுத்துச் சொல்லுவதாக இருக்கவேண்டும். கேட்போரின் சந்தேகங்களைத் தீர்த்து வைத்து தெளிவுபடுத்த வேண்டும். வேதவாக்கியங்களிலிருந்தே நியாயங்களை எடுத்துச்சொல்லவேண்டும். வேதமே நம்முடைய பிரசங்கத்திற்கு அடிப்படை ஆதாரமாகயிருக்கவேண்டும். வேதத்தைத் தெளிவுபடுத்துவதற்கு ஓரளவு எடுத்துக்காட்டுக்களை பயன்படுத்தலாம். ஆனாலும் எடுத்துக்காட்டுக்களின் அடிப்படையில் நம்முடைய பிரசங்கம் அமைந்துவிடக்கூடாது. வேத வாக்கியங்களை விளக்குவதே நம்முடைய பிரசங்கத்தின் அடிப்படை நோக்கமாகயிருக்கவேண்டும்.

பவுல் மூன்று ஓய்வு நாட்களில், ஜெபாலயத்திற்குப்போய், அங்கு வருகிறவர்களிடம் வேதவாக்கியங்களின் நியாயங்களைச் சம்பாஷிக்கிறான். பாவிகள் மனந்திரும்வேண்டுமென்று தேவன் பொறுமையோடு காத்திருக்கிறார். திராட்சத்தோட்டத்திற்கு எல்லா வேலையாட்களும் முதலாம் மணி நேரத்தில் வருவதில்லை. சிறைச்சாலைக்காரனைபோல எல்லா ஜனங்களும் ஊழியக்காரர்களைத் தேடிவருவதுமில்லை. ஜனங்கள் விதவிதமாகயிருக்கிறார்கள். எப்படியாவது எல்லாருக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ண வேண்டும் என்று தீர்மானித்து, பவுல் மூன்று ஓய்வுநாட்களில், ஜெபாலத்திற்குத் தொடர்ச்சியாகப் போகிறான். ஒவ்வொரு வாரமும் வேதவாக்கியங்களின் நியாயங்களை எடுத்து அவர்களுடனே சம்பாஷிக்கிறான். இயேசுவே கிறிஸ்து என்பதுதான் பவுலின் செய்தி. இதை நிரூபிப்பதற்காகத்தான் வேதத்திலிருந்து ஆதாரங்களை எடுத்துப்பேசுகிறான்.

இயேசுவே கிறிஸ்து

கிறிஸ்து பாடுபடவும் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவும் வேண்டியதென்றும், நான் உங்களுக்கு அறிவிக்கிற இந்த இயேசுவே கிறிஸ்து என்றும் காண்பித்து, திருஷ்டாந்தப்படுத்தினான் (அப் 17:3).

இயேசுவே கிறிஸ்து என்பதைக் காண்பித்து, திருஷ்டாந்தப்படுத்துவதே பவுலின் பிரதான ஊழியம். இதற்காகவே பவுல் தெசலோனிக்கே பட்டணத்திலுள்ள யூதர்களிடம் வேதவாக்கியங்களின் நியாயங்களைச் சம்பாஷிக்கிறான். பவுல் முதலாவது இயேசுகிறிஸ்துவைக்குறித்த சத்தியத்தை அவர்களுக்குச் சொல்லுகிறான். இந்தச் சத்தியத்தை விளக்குவதற்காகவும், உறுதி பண்ணுவதற்காகவும் வேதவாக்கியங்களின் நியாயங்களை அவர்களுக்குத் தெளிவாக எடுத்துப்போதிக்கிறான்.

கிறிஸ்து பாடுபடவும், மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவும் வேண்டும். பழைய ஏற்பாட்டு தீர்க்கத ரிசனங்களில், மேசியாவைப்பற்றி இப்படித்தான் முன்னறிவிக்கப் பட்டிருக்கிறது. கிறிஸ்துவைப்பற்றிய பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனம் நிறைவேற வேண்டியது அவசியம். அதன்பிரகாரம் கிறிஸ்து பாடுபடவும் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவும் வேண்டியதாயிற்று.

இயேசு கிறிஸ்து வேதவாக்கியத்தின்படி பாடுபட்டார். தம்முடைய பாடுகளின் மூலமாக, பழைய ஏற்பாட்டில் முன்னறிவிக்கப்பட்டிருக்கிற மேசியா "தாமே" என்பதை இயேசுகிறிஸ்து பூரணமாய் நிரூபித்திருக்கிறார். இயேசுகிறிஸ்து மரிக்கவில்லையென்றால், அவரால் மரித்தோரிலிருந்து எழுந்திருக்க முடியாது. அவர் நமக்காக பாடுகளை அனுபவித்தார். நம்முடைய மீட்பை கிரயத்திற்கு வாங்குவதற்கு, கிறிஸ்து பாடுபடுவதும், அவருடைய இரத்தத்தை மீட்பின் கிரயமாகச் செலுத்துவதும் அவசியமாயிற்று.

வேதவாக்கியத்தின் பிரகாரம் மரித்த இயேசு மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்து எழுந்தார். மனுக்குலத்தின் மீட்பை இயேசுகிறிஸ்து கிரயத்திற்கு வாங்கியிருந்தாலும், அந்த மீட்பு நமக்குக் கிடைக்கவேண்டுமென்றால், அவர் மரித்தோரிலிருந்து எழுந்திருப்பது அவசியமாகயிருக்கிறது. நம்முடைய மீட்பின் கிரயத்தைச் செலுத்துவதற்காக கிறிஸ்து சிலுவையிலே மரித்தார். தம்முடைய இரத்தத்தினால் கிரயத்திற்கு வாங்கியிருக்கிற இரட்சிப்பை, நமக்குக் கொடுப்பதற்காக அவர் மரித்தோரிலிருந்து எழுந்தார்.

பழைய ஏற்பாட்டில் மேசியாவைப்பற்றித் தீர்க்கதரிசிகள் முன்னறிவித்திருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவே அந்த மேசியா. மேசியா வருவாரென்று யூதர்கள் எதிர்பார்க்கிறார்கள். அவர்கள் எதிர்பார்க்கிற மேசியா இயேசுகிறிஸ்துவே. தேவன் வேதவாக்கியங்களினாலும், அற்புதங்களினாலும், "இயேசுகிறிஸ்துவே மேசியா" என்பதற்கு சாட்சி கொடுத்திருக்கிறார். சுவிசேஷ ஊழியர்கள் இயேசுகிறிஸ்துவைக் குறித்து பிரசங்கிக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவே நம்முடைய பிரசங்கத்தின் மையச்செய்தியாக இருக்கவேண்டும். இயேசுவைப்பற்றிச் சொல்லும்போது, அவரே கிறிஸ்து என்று காண்பித்து திருஷ்டாந்தப்படுத்த வேண்டும்.

அநேகர் விசுவாசித்தார்கள்

அவர்களில் சிலரும், பக்தியுள்ள கிரேக்கரில் திரளான ஜனங்களும், கனம் பொருந்திய ஸ்திரீகளில் அநேகரும் விசுவாசித்து, பவுலையும் சீலாவையும் சேர்ந்து கொண்டார்கள் (அப் 17:4).

பவுலின் பிரசங்கம் ஜனங்களுடைய இருதயத்தில் கிரியை நடப்பிக்கிறது. யூதரில் அநேகர் விசுவாசித்து பவுலையும் சீலாவையும் சேர்ந்துகொள்கிறார்கள். இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள், அவருடைய உண்மையுள்ள ஊழியக் காரரோடு ஐக்கியமாகயிருக்கிறார்கள். யூதர்களில் அநேகர் இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதோடு, கிரேக்கரில் திரளான ஜனங்களும் இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைக்கிறார்கள். இந்தக் கிரேக்கர்கள் பக்தியுள்ளவர்கள். இவர்களோடு கனம்பொருந்திய ஸ்திரீகளில் அநேகரும் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்கிறார்கள். இவர்களெல்லோருமே பக்தியுள்ள புறஜாதியார். இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, தங்களுடைய இரட்சகராக ஏற்றுக் கொள்கிறவர்களை "பக்தியுள்ள புறஜாதியார்" என்று அக்காலத்தில் அழைப்பது வழக்கம்.

பவுலின் பிரசங்கத்தின் மூலமாக ஜனங்கள் மத்தியில் இயேசுகிறிஸ்துவின் இரட்சிக்கும் கிருபை கிரியை செய்கிறது. அநேகர் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறார்கள். இவர்களில் கனம் பொருந்திய ஸ்திரீகளும் விசுவாசிகளாகயிருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கும், அன்பின் பிரமாணத்திற்கும் இந்த ஸ்திரீகளும் கீழ்ப்படிகிறார்கள். கனம்பொருந்திய ஸ்திரீகள் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கும்போது, அவர்கள் மூலமாக ஏராளமான ஜனங்களுக்கு சுவிசேஷம் பரவ வாய்ப்புள்ளது. சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்தில் இருக்கிறவர்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளும்போது, அவர்கள் மூலமாக சுவிசேஷம் பிறருக்கு வேகமாக பரவும்.

பவுல் தெசலோனிக்கே பட்டணத்தில் பக்தியுள்ள கிரேக்கருக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறான். அவர்கள் மத்தியில் விக்கிரகாராதனையில் ஈடுபட்டிருக்கிற கிரேக்கரும் இருக்கிறார்கள். பவுல் அவர்களுக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கத்தானா என்று இங்கு எழுதப்படவில்லை. ஆயினும் பவுல் விக்கிரகாராதனைக் காரருக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்திருப்பதற்கு வாய்ப்புள்ளது. ஏனெனில் அவர்களில் அநேகர் "விக்கிரகங்களைவிட்டு தேவனிடத்திற்கு மனந்திரும்பினார்கள்" (1தெச 1:9)என்று பவுல் தன் நிருபத்தில் எழுதியிருக்கிறான். பவுல் ஒருவேளை முதலாவது பக்தியுள்ள கிரேக்கருக்கும், அதன்பின்பு விக்கிரகாராதனை செய்கிற கிரேக்கருக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்திருக்கவும் வாய்ப்புள்ளது.

விசுவாசியாத யூதர்கள்

விசுவாசியாத யூதர்கள் வைராக்கியங்கள் கொண்டு வீணராகிய சில பொல்லாதவர்களைச் சேர்த்துக் கொண்டு கூட்டங்கூடி, பட்டணத்தில் அமளியுண்டாக்கி, யாசோனுடைய வீட்டை வளைந்துகொண்டு, அவர்களைப் பட்டணத்தாருக்கு முன்பாக இழுத்துக்கொண்டுவர வகைதேடினார்கள் (அப் 17:5).

பவுலும் சீலாவும் தெசலோனிக்கே பட்டணத்தில் கர்த்தருடைய கிருபையினால் சிறப்பாக ஊழியம் செய்து கொண்டிருக்கிறார்கள். அப்பொழுது அவர்களுடைய ஊழியத்தில் பிரச்சனை உண்டாயிற்று. விசுவாசியாத யூதர்கள் ஊழியக்காரர்மீது வைராக்கியம் கொள்கிறார்கள். விசுவாசிக்கிற யூதர்கள் சுவிசேஷத்தை விசுவாசிக்கிறார்கள். இவர்கள் விசுவாசியாத யூதர்களின் ஆத்தும இரட்சிப்புக்காக ஜெபிக்கிறார்கள். ஆனால் விசுவாசியாத யூதர்களோ விசுவாசிகளோடு சிநேகமாகயிராமல், அவர்களை வெறுக்கிறார்கள். அவர்கள்மீது பொறாமைப்படுகிறார்கள்.

விசுவாசியாத யூதர்கள் கிறிஸ்துவின் ஊழியத்தைத் தடைபண்ணுவதற்கு முயற்சிபண்ணுகிறார்கள். இதற்காக வீணராகிய சில பொல்லாதவர்களைத் தங்களோடு சேர்த்துக்கொள்கிறார்கள். பட்டணத்திலுள்ள நல்லோரும், பெரியோரும், சிறியோரும், ஞானிகளும் ஊழியக்காரர் மீது பிரியமாயிருக்கிறார்கள். அவர்களுக்கு மதிப்பும் மரியாதையும் கொடுத்து அவர்களுடைய உபதேசத்தைக் கேட்கிறார்கள். ஆனால் அந்தப் பட்டணத்திலுள்ள வீணராகிய பொல்லாதவர்களோ யாருடைய பேச்சையும் கேட்கமாட்டார்கள். அப்படிப்பட்டவர்களை விசுவாசியாத யூதர்கள் தங்களோடு சேர்த்துக்கொண்டு, ஊழியக்காரருக்கு விரோதமாக கூட்டங்கூடி, பட்டணத்தில் அமளி உண்டாக்குகிறார்கள்.

பவுலுக்கும் சீலாவுக்கும் விரோதமாக நல்லோர்கள் யாரும் கூட்டங்கூடவில்லை. பட்டணத்திலுள்ள வீணரும் பொல்லாதவர்களும், விசுவாசியாத யூதர்களுமே கூட்டங்கூடுகிறார்கள். நம்முடைய ஊழிய அனுபவத்திலும், நல்லவர்கள் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு எதிர்த்து நிற்க மாட்டார்கள். வீணரான பொல்லாதவர்களே சுவிசேஷத்திற்கு எதிர்த்து நிற்பார்கள்.

விசுவாசியாத யூதர்கள், வீணராகிய சில பொல்லாதவர்களைச் சேர்த்துக்கொண்டு, கூட்டங்கூடி, பட்டணத்தில் அமளி உண்டாக்குகிறார்கள். இதுவரையிலும் அமைதியாக இருக்கிற பட்டணம் இவர்களுடைய பிரச்சனையினால் அமளியாயிற்று. இவர்கள் பக்கமாக ஒரு சிறிய கூட்டம் இருக்கிறது. சாத்தான் தன்னுடைய வஞ்சக எண்ணத்தை, இப்படிப்பட்ட துன்மார்க்கர் மூலமாய் நிறைவேற்றுகிறான். பட்டணத்தில் அமளி உண்டாகும்போது, ஜனங்களுடைய ஆத்துமாவிலும் குழப்பமுண்டாகும். தண்ணீரைக் கலக்கி மீன்பிடிப்பதுபோல, சாத்தான் பட்டணத்தில் அமளி உண்டாக்கி ஜனங்களை தன் பக்கமாகச் சேர்த்துகொள்கிறான்.

விசுவாசியாத யூதர்களும் வீணராகிய பொல்லாதவர்களும் யாசோனுடைய வீட்டை வளைந்து கொள்கிறார்கள். இவனுடைய வீட்டில்தான் பவுலும் சீலாவும் தங்கியிருக்கிறார்கள். இவனுடைய வீட்டில் தங்கியிருக்கிற ஊழியக்காரரை பட்டணத்தாருக்கு முன்பாக இழுத்துக்கொண்டு வர வகைதேடுகிறார்கள். இவர்கள் வீணரும் பொல்லாதவர்களுமாயிருக் கிறார்கள். ஆகையினால் இவர்களுடைய செய்கையும் பொல்லாததாயிருக்கிறது. இவர்களுக்கு யார் மீதாவது ஒரு வழக்கு இருக்கு மென்றால், நியாயாதிபதியினிடத்தில் தங்கள் வழக்கைச் சொல்லவேண்டும். நியாயாதிபதி நியாயத்தை விசாரித்துத் தீர்ப்பு சொல்லவேண்டும். இதுதான் நடைமுறை. ஆனால் இவர்களோ சட்டத்தைத் தங்கள் கைகளில் எடுத்துக்கொள்கிறார்கள். கூட்டங்கூடி யாசோனுடைய வீட்டை வளைந்துகொள்கிறார்கள். நீதி வீதிக்கு வருகிறது. நியாயத்தீர்ப்பு சொல்லுவது பொல்லாதவர்களின் கைக்கு மாறுகிறது.

யாசோன்

அவர்களைக் காணாமல், யாசோனையும் சில சகோதரரையும் பட்டணத்து அதிகாரிகளிடத்தில் இழுத்துக்கொண்டு வந்து: உலகத்தைக் கலக்குகிறவர்கள் இங்கேயும் வந்திருக்கிறார்கள் (அப் 17:6).

யாசோனுடைய வீட்டில் பவுலும் சீலாவும் இல்லை. அவனுடைய வீட்டை வளைந்துகொண்ட பொல்லாத ஜனங்களுக்கு ஏமாற்றமுண்டாயிற்று. அவர்களுக்கு யாசோன்மீது மிகுந்த கோபமுண்டாயிற்று. யாசோன் தெசலோனிக்கேயா பட்டணத்தைச் சேர்ந்தவன். இவன் ஒரு யூதன். இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து இரட்சிக்கப்பட்டிருக்கிறான். இவனும் மேலும் ஒரு சில சகோதரும் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறார்கள். இவன் பவுலுக்கும் சீலாவுக்கும் தன்னுடைய வீட்டில் தங்குவதற்கு இடங் கொடுத்திருக்கிறான். பொல்லாதவர்கள் இவன் வீட்டை வளைந்துகொண்டபோது, பவுலும் சீலாவும் அந்த வீட்டில் இல்லை. அவர்களைக் காணாமல், பொல்லாதவர்கள் யாசோனையும் சில சகோதரரையும் பட்டணத்து அதிகாரிகளிடத்தில் இழுத்துக்கொண்டு வருகிறார்கள்.

"இவர்கள் மிகவும் பயங்கரமானவர்களென்றும், ஆபத்தானவர்களென்றும்" பொல்லாதவர்கள் யாசோனையும் அவனோடு கூடயிருக்கிற சகோதரரையும் பற்றி பட்டணத்து அதிகாரிகளிடத்தில் முறையிடுகிறார்கள். கர்த்தருடைய ஊழியக்காரர்களை யாசோன் ஏற்றுக் கொண்டான் என்பதுதான் அவர்களுடைய பிரதான குற்றச்சாட்டு (அப் 17:7).

ஊழியக்காரர்கள் பட்டணத்தின் அமைதிக்கு சத்துருக்களாகயிருக்கிறார்கள் என்றும், அமைதியாக இருக்கிற பட்டணத்தை கலக்குகிறார்கள் என்றும் பொல்லாதவர்கள் பட்டணத்து அதிகாரிகளிடத்தில் குற்றம் சுமத்துகிறார்கள். ஊழியக்காரர்களைப் பற்றிச் சொல்லும்போது "உலகத்தைக் கலக்குகிறவர்கள் இங்கேயும் வந்திருக்கிறார்கள்" என்று முறையிடுகிறார்கள்.

மெய்யாகவே சுவிசேஷம் எங்கு பிரவேசித்தாலும் அது வல்லமையோடு பிரவேசிக்கும். ஒரு ஆத்துமாவிற்குள் சுவிசேஷச் செய்தி பிரவேசிக்கும்போது அது அந்த ஆத்துமாவில் கிரியை நடப்பித்து, அந்த ஆத்துமாவைக் கலக்கும். தலைகீழாக மாற்றும். தெசலோனிக்கேயா பட்டணத்தில் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டதின் விளைவினால் பட்டணத்தாரின் சுபாவம் மாறிப்போயிற்று. பட்டணம் தலைகீழாக மாற்றப்பட்டிருக்கிறது. மெய்யாகவே கர்த்தருடைய ஊழியக்காரர்கள் எந்த ஊரில் ஊழியம் செய்கிறார்களோ, அந்த ஊரை தலைகீழாக மாற்றுகிறார்கள்.

இயல்பாகவே உலக சிநேகம் நம்முடைய இருதயத்தில் வேரூன்றி இருக்கிறது. உலகத்தின் வழியும் இயேசுகிறிஸ்துவின் வழியும் வெவ்வேறானவை. உலகத்தின் வழி அழிவுக்கு நேராக நம்மை அழைத்துச் செல்லும். இயேசுகிறிஸ்துவின் வழியோ நம்மை நித்திய ஜீவனுக்கு நேராக அழைத்துச் செல்லும். உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகை. சுவிசேஷம் மனுஷர் மத்தியில் பிரசங்கிக்கப்படும்போது, அவர்களுடைய இருதயத்தில் வேரூன்றி இருக்கும் உலக சிநேகம் அவர்களிடத்திலிருந்து அகன்று போகிறது. அவர்களுக்குள் மனமாற்றமுண்டாகிறது.

ஊழியக்காரர்கள் ஊழியம் செய்கிற ஸ்தலங்களில் விக்கிரகாராதனைக் காரர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கு சுவிசேஷம் பிரசங்கிக்கப்படும்போது, இவர்கள் விக்கிரகங்களை ஆராதிக்கிறதை விட்டுவிட்டு, ஜீவனுள்ள மெய்தேவனாகிய இயேசுகிறிஸ்துவை ஆராதிக்கிறார்கள். இரட்சிக்கப்படுவதற்கு முன்பாக இவர்களுடைய உள்ளத்தில் பொறாமையும், துர்குணமும் நிறைந்திருக்குமென்றால், இரட்சிக்கப்பட்ட பின்பு இவர்களுடைய உள்ளத்தில் அன்பும் சமாதானமும் நிரம்பியிருக்கும். சுவிசேஷம் பிரசங்கிக்கப்படும்போது ஜனங்கள் மத்தியிலும், அவர்கள் குடும்பத்தார் மத்தியிலும், அவர்கள் வசிக்கிற சமுதாயத்திலும், பட்டணங்களிலும் மெய்யாகவே மாற்றமுண்டாகும். இந்த மாற்றம் நல்ல மாற்றம். ஆனால் பொல்லாதவர்களுக்கோ நல்ல காரியம்கூட பொல்லாத காரியமாகத் தோன்றுகிறது. ஆகையினால் அவர்கள் கர்த்தருடைய ஊழியக்காரர்களை "உலகத்தைக் கலக்குகிறவர்கள் இங்கேயும் வந்திருக்கிறார்கள்" என்று சொல்லுகிறார்கள்.

இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் ஒரு ஆத்துமாவுக்குப் பிரசங்கிக்கப்படுவதற்கு முன்பாக, அந்த ஆத்துமாவில் சாத்தான் குடியிருப்பான். இந்த உலகம் பிசாசின் ராஜ்யமாக இருக்கிறது. இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில் பிசாசின் ராஜ்யத்தை அகற்றிவிட்டு, பரலோக ராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்காக வந்திருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் வல்லமையினால் உலகம் தலைகீழாக மாற்றப்படுகிறது. இதைச் சகித்துக்கொள்ளாத சாத்தான், சமாதானம் பண்ணுகிறவர்களை, "உலகத்தைக் கலக்குகிறவர்கள்" என்று பொய்யாய்க் குற்றம் சுமத்துகிறான்.

விசுவாசியாத யூதர்களும் வீணராகிய பொல்லாதவர்களும் கூட்டங்கூடி பட்டணத்தில் அமளி உண்டாக்குகிறார்கள். ஆனால் இந்த அமளிக்கு கர்த்தருடைய ஊழியக்காரர்கள் தான் காரணம் என்று பொய்க்குற்றம் சுமத்துகிறார்கள். இவர்களே அமளி உண்டாக்கிவிட்டு, ஊழியக்காரர்கள் பட்டணத்தைக் கலக்குவதாகப் பொய்யாய்க் குற்றம் சொல்லுகிறார்கள். கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நம்மீது இதுபோல யாராவது பொய்யாய்க் குற்றம் சுமத்தினால், நாம் கலங்கவேண்டியதில்லை. இது சாத்தானின் தந்திரம். அவனுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியதது அல்ல. பவுலையும் சீலாவையும் விட நாம் பெரிய ஊழியக்காரர்கள் அல்ல. அவர்கள்மீதே இதுபோல பொய்க்குற்றம் சுமத்தியவர்கள், நம்மீது மிகவும் எளிதாக பொய்க்குற்றம் சுமத்துவார்கள்.

விசுவாசியாத யூதர்களும் பொல்லாதவர்களும், பட்டணத்து அதிகாரிகளிடம் "அவர்கள் இங்கேயும் வந்திருக்கிறார்கள்" என்று சொல்லுகிறார்கள். உலகத்தைக் கலக்குகிறவர்கள் இங்கேயும் வந்திருப்பதினால், நாம் எச்சரிக்கையோடிருக்க வேண்டுமென்றும், அவர்களால் நாம் கலங்கிப்போய்விடக் கூடாது என்றும், ஊழியக்காரர்களுக்கு விரோதமாக கலகமுண்டாக்கி அவர்களைத் துரத்திவிடவேண்டுமென்றும் கர்த்தருடைய ஊழியக்காரர்களைப்பற்றிக் குற்றம் சொல்லுகிறார்கள்.

இயேசு ராஜா

இவர்களை யாசோன் ஏற்றுக்கொண்டான். இவர்களெல்லாரும் இயேசு என்னும் வேறொருவனை ராஜா என்று சொல்லி இராயனுடைய கட்டளைகளுக்கு விரோதமாகச் செய்கிறார்களென்று கூக்குரலிட்டு, (அப் 17:7)

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் அரசாங்கித்திற்கு விரோதமானவர்கள் என்று அவர்கள்மீது பொய்யாய் குற்றம் சொல்லுகிறார்கள். இராயனுடைய கட்டளைகளுக்கு இவர்கள் விரோதமாகச் செய்கிறார்கள் என்று கூக்குரலிடுகிறார்கள். ஊழியக்காரர்கள் எல்லாரும் இயேசு என்னும் வேறொருவனை ராஜா என்று சொல்லுவதாகவும் அவர்கள்மீது குற்றம் சாட்டுகிறார்கள். அக்காலத்தில் ரோமப் பேரரசு வலிமைபெற்றிருந்தது. ராயனுக்கு விரோதமாக யாரும் பேசவோ, செயல்படவோ முடியாது. இராயனுக்குக் கீழ் பணிபுரிகிற எந்த தேசாதிபதியும், தன்னை இராயனுக்கு மேலாக உயர்த்தக்கூடாது. ரோமப்பேரரசு முழுவதும் இராயனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிருக்கவேண்டும் என்பது ரோமப்பேரரசின் சட்டம்.

கர்த்தருடைய ஊழியக்காரர்களோ, இயேசுகிறிஸ்துவை ராஜா என்று சொல்லுகிறார்கள். இயேசுகிறிஸ்து மெய்யாகவே ராஜாதி ராஜா. ஆனால் இவர் பூமிக்குரிய ராஜா அல்ல. இராயன் பூமிக்குரிய ராஜா. இயேசுவோ பரலோகத்தின் ராஜா. இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தினால் பூமியிலுள்ள ராஜாக்கள் தங்கள் சிங்காசனத்திலிருந்து கீழே விழுந்து விடமாட்டார்கள். இந்தப் பூமியில் பூமிக்குரிய ஒரு ராஜ்யத்தை ஸ்தாபிப்பது இயேசுகிறிஸ்துவின் சித்தமோ அல்லது ஊழியமோ அல்ல. இயேசுகிறிஸ்து இந்தப் பூமியில் தேவனுடைய ராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்காகவே வந்தார்.

யூதருக்கு வேதவார்த்தை நன்றாகத் தெரியும். இயேசுகிறிஸ்துவின் சித்தத்தையும் ஊழியத்தையும் அவர்கள் நன்றாய் அறிந்திருக்கிறார்கள். இயேசு கிறிஸ்து ஒருபோதும் இராயனுக்கு விரோதமாக பேசவோ செயல்படவோ இல்லை. யூதர்கள்தான் இராயனையும் ரோமப்பேரரசையும் பகைக்கிறார்கள். இராயனுடைய ஆளுகையிலிருந்து தங்களை மீட்டு இரட்சிக்க, தேவன் தங்களுக்கு ஒரு மேசியாவை அனுப்புவார் என்று யூதர்கள் எதிர்பார்க்கிறார்கள். மேசியா என்பவர் இந்தப் பூமிக்குரிய ராஜாவாகயிருப்பார் என்றும், அவர் இந்தப் பூமியிலுள்ள எல்லா ராஜ்யங்களையும் ஜெயித்து, தங்களுக்கு ஒரு ராஜ்யத்தைக் கொடுப்பார் என்றும் யூதர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துவோ யூதர்கள் எதிர்பார்க்கிற பிரகாரம் பூமிக்குரிய ராஜாவாக இல்லை. அவர்கள் எதிர்பார்க்கிற மேசியா வேறு. இயேசுகிறிஸ்துவின் சுபாவம் வேறு. இயேசுகிறிஸ்து தாங்கள் எதிர்பார்க்கிற மேசியாவைப்போல இல்லாததினால், அவர்கள் இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமாக எதிர்த்து நிற்கிறார்கள். இயேசுவுக்கும் அவருடைய ஊழியக்காரர்களுக்கும் விரோதமாகச் செயல்படும் வண்ணமாக, இயேசுவை ராஜா என்றும், இராயனுடைய கட்டளைகளுக்கு அவர் விரோதமானவர் என்றும், இயேசுவின்மீதும், அவருடைய ஊழியக்காரர்கள்மீதும் பொய்யாய்க் குற்றம் சொல்லுகிறார்கள்.

கலங்கப்பண்ணினார்கள்

இவைகளைக் கேட்டுக் கொண்டிருந்த ஜனங்களையும் பட்டணத்து அதிகாரிகளையும் கலங்கப்பண்ணினார்கள் (அப் 17:8).

விசுவாசியாத யூதர்கள் பட்டணத்தாருக்கு முன்பாகச் சொன்ன செய்தி, அவர்களை கலங்கப்பண்ணிற்று. இவர்கள் சொன்னதைக் கேட்டுக்கொண்டிருந்த ஜனங்களும், பட்டணத்து அதிகாரிகளும் மிகவும் கலங்குகிறார்கள். இவர்களுக்கு அப்போஸ்தலர்மீதோ, அல்லது அவர்களுடைய உபதேசத்தின் மீதோ விரோதம் எதுவுமில்லை. ஆனால் அவர்கள் இராயனுக்கு விரோதமாக செயல்படுகிறவர்கள் என்றால், அவர்களை ஆரம்பத்திலேயே அடக்கிப்போட வேண்டியது இவர்களுக்கு அவசியமாயிருக்கிறது. அப்போஸ்தலர்கள் இராயனுக்கு விரோதிகளாகயிருந்தால், பட்டணத்தாருக்கும் அவர்கள் விரோதிகளாகவே இருப்பார்கள். ஆனால் அப்போஸ்தலர்களோ சுபாவத்தில் நல்லவர்களாக இருக்கிறார்கள். நல்லவர்களைத் துன்பப்படுத்தி அடக்க வேண்டியது இருக்கிறதே என்று நினைத்து ஜனங்களும், பட்டணத்து அதிகாரிகளும் கலங்குகிறார்கள்.

விட்டுவிட்டார்கள்

பின்பு அவர்கள் யாசோனிடத்திலும் மற்றவர்களிடத்திலும் ஜாமீன் வாங்கிக் கொண்டு, அவர்களை விட்டுவிட்டார்கள் (அப் 17:9).

கிறிஸ்துவின் சீஷர்களைத் துன்பப்படுத்த வேண்டும் என்னும் எண்ணம் பட்டணத்து அதிகாரிகளிடத்தில் சிறிதுமில்லை. ஆனாலும் விசுவாசியாத யூதர்கள் மூலமாய் அப்போஸ்தலருக்குப் பிரச்சனை உண்டாயிற்று. இந்தச் சூழ்நிலையில் அப்போஸ்தலர்களைப் பாதுகாப்பதற்கு பட்டணத்தார் முயற்சி பண்ணுகிறார்கள். யூதர்கள் அப்போஸ்தலரையும் பிடித்து வரவில்லை. ஆகையினால் யாசோனிடத்திலும், மற்றவர்களிடத்திலும் ஜாமீன் வாங்கிக்கொண்டு அவர்களை விட்டுவிடுகிறார்கள்.

கிறிஸ்துவின் சீஷர்களுக்கும், சுவிசேஷத்தின் உபதேசத்திற்கும் ஒரு சிலர் எதிர்த்து நின்றாலும், ஜனங்கள் மத்தியில் ஞானமுள்ள நல்லவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். இப்படிப் பட்டவர்கள் பொறுமையுள்ளவர்களாகவும், நற்குணசாலிகளாகவும் இருந்து, நீதியாய் விசாரித்து தீர்ப்பு செய்கிறார்கள். விசுவாசியாத யூதர்கள், அப்போஸ்தலர்களைத் தண்டிக்க வேண்டுமென்று கலகம்பண்ணியபோது, பட்டணத்து அதிகாரிகளோ, அவர்களைத் தண்டியாமல், ஜாமீன் வாங்கிக்கொண்டு விட்டுவிடுகிறார்கள்.

பெரோயா பட்டணம்
அப் 17 : 10-15

அப் 17:10. உடனே சகோதரர் இராத்திரிகாலத்திலே பவுலையும் சீலாவையும் பெரோயா பட்டணத்துக்கு அனுப்பிவிட்டார்கள்; அவர்கள் அங்கே சேர்ந்து, யூதருடைய ஜெபஆலயத்திற்குப் போனார்கள்.

அப் 17:11. அந்தப் பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக் கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலி களாயிருந்தார்கள்.

அப் 17:12. அதனால் அவர்களில் அநேகம்பேரும் கனம்பொருந்திய கிரேக்கரில் அநேக ஸ்திரீகளும் புருஷர்களும் விசுவாசித்தார்கள்.

அப் 17:13. பெரோயாவிலும் தேவவசனம் பவுலினால் அறிவிக்கப் படுகிறதென்று தெசலோனிக்கேயரான யூதர்கள் அறிந்தபோது, அங்கேயும் வந்து, ஜனங்களைக் கிளப்பிவிட்டார்கள்.

அப் 17:14. உடனே சகோதரர் பவுலைச் சமுத்திரவழியாய்ப் போக அனுப்பி விட்டார்கள். சீலாவும் தீமோத்தேயும் அங்கே தங்கியிருந்தார்கள்.

அப் 17:15. பவுலை வழிநடத்தினவர்கள் அவனை அத்தேனே பட்டணம் வரைக்கும் அழைத்துக்கொண்டுபோய்; அங்கே சீலாவும் தீமோத்தேயும் அதிசீக்கிரமாகத் தன்னிடத்திற்கு வரும்படி அவர்களுக்குச் சொல்லக் கட்டளை பெற்றுக்கொண்டு புறப்பட்டுப்போனார்கள்.

யூதருடைய ஜெப ஆலயம்

உடனே சகோதரர் இராத்திரிகாலத்திலே பவுலையும் சீலாவையும் பெரோயா பட்டணத்துக்கு அனுப்பிவிட்டார்கள்; அவர்கள் அங்கே சேர்ந்து, யூதருடைய ஜெபஆலயத்திற்குப் போனார்கள் (அப் 17:10).

தெசலோனிக்கேயா பட்டணத்தில் பவுலும் சீலாவும் சபைக்கு அஸ்திபாரம் போடுகிறார்கள். அவர்களுடைய ஊழியத்திற்கு எதிர்ப்பு உண்டானபோது, அப்போஸ்தலர்கள் அவர்களோடு போராடிக்கொண்டிராமல், அந்தப் பட்டணத்தைவிட்டு வேறு பட்டணத்திற்கு ஊழியம் செய்யப்போகிறார்கள். "உங்களை ஒரு பட்டணத்தில் துன்பப்படுத்தினால், வேறு பட்டணத்தில் போய் ஊழியம் செய்யுங்கள்" என்று இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்குக் கட்டளை கொடுத்திருக்கிறார். பவுலும் சீலாவும் கிறிஸ்துவின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து வேறு பட்டணத்திற்குப் போகிறார்கள்.

தங்களுடைய சொந்தப் பாதுகாப்பைக் கருதி ஊழியக்காரர்கள் வேறு பட்டணத்திற்கு தப்பி ஓடிப்போகவில்லை. இங்கிருந்து தப்பித்து, வேறு பட்டணத்தில் ஒழிந்துகொள்ளப் போகவில்லை. ஊழியக்காரர்கள் எந்தப் பட்டணத்திற்குப் போனாலும், அங்கு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்காகவே போகிறார்கள். சாத்தான் ஊழியக்காரர்களை உபத்திரவப்படுத்தி, அவர்களுடைய ஊழியத்தைத் தடைசெய்ய முயற்சிபண்ணுகிறான். ஆனால் ஊழியக்காரர்களோ, எங்கெல்லாம் ஊழியம் செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறதோ, அங்கெல்லாம் போய் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து ஊழியம் செய்கிறார்கள்.

தெசலோனிக்கே பட்டணத்திலுள்ள விசுவாசிகள் பவுலையும் சீலாவையும் அந்தப் பட்டணத்திலிருந்து பாதுகாப்பாக அனுப்பிவிடுகிறார்கள். அங்குள்ள சகோதரர், ராத்திரி காலத்திலே பவுலையும் சீலாவையும் பெரோயா பட்டணத்திற்கு அனுப்பிவிடுகிறார்கள். கிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்கிறவர்கள், ஏதோ தவறு செய்தவர்கள்போல, தப்பித்துச் செல்லவேண்டியதாயிற்று.

பவுலும் சீலாவும் தெசலோனிக்கே பட்டணத்தில் ஊழியம் செய்யமுடியாமல், பெரோயா பட்டணத்திற்குப் போகிறார்கள். அந்தப் பட்டணத்தில் அவர்கள் கிறிஸ்துவின் ஊழியத்தைத் தொடர்ந்து செய்கிறார்கள். அங்குள்ள யூதருடைய ஜெபஆலயத்திற்குப் போகிறார்கள். பவுலும் சீலாவும் எந்த ஊருக்கு ஊழியம் செய்யப்போனாலும், அங்குள்ள யூதர்களுக்கு மதிப்பு கொடுக்கத் தவறவில்லை. யூதர்கள் மற்ற இடங்களில் இவர்களைத் துன்பப்படுத்திய போதிலும், இவர்கள் யூதர்கள்மீது கோபம் காண்பிக்கவில்லை. தங்களைத் துன்பப்படுத்திய யூதர்களினிமித்தம், இவர்கள் யூதர்களுக்குப் பயப்படவுமில்லை. யூதர்கள் தங்களை ஏற்றுக் கொள்வார்களோ, ஏற்றுக் கொள்ளாமல் புறக்கணித்து விடுவார்களோ என்னும் சந்தேகமும் இவர்களிடத்திலில்லை. மற்றவர்கள் தங்களுக்கு என்ன செய்தாலும், பவுலும் சீலாவும் கர்த்தர் தங்களுக்குக் கொடுத்திருக்கிற ஊழியத்தை உண்மையாயும், உத்தமமாயும் செய்கிறார்கள்.

நற்குணசாலிகள்

அந்தப் பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக் கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலி களாயிருந்தார்கள் (அப் 17:11).

பெரோயா பட்டணத்தார், தெசேலானிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருக் கிறார்கள். சுவிசேஷ வசனம் இவர்களுக்குப் பிரசங்கிக்கப்படும்போது, மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக் கொள்கிறார்கள். தினந்தோறும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கிறார்கள். யூதருடைய பாரம்பரிய உபதேசமும், கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் உபதேசமும் சில இடங்களில் முரண்பட்டிருந்தாலும், பெரோயா பட்டணத்திலுள்ளவர்கள் காரியங்கள் இப்படி இருக்கிறதா என்று வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கிறார்கள். தங்களுடைய பாரம்பரிய சுபாவத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காமல், சத்தியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.

தெசலோனிக்கே பட்டணத்திலுள்ள யூதர்கள் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்க வில்லை. அப்போஸ்தலரின் உபதேசத்தை கேட்பதற்கு அவர்களுக்கு மனதில்லை. ஆகையினால் அங்குள்ளவர்கள் சுவிசேஷத்தைக் கேட்காமலேயே, தங்கள் இருதயத்தை அடைத்துக்கொண்டு, ஊழியக்காரருக்கு விரோதமாகக் கலகம் பண்ணினார்கள். ஆனால் பெரோயா பட்டணத்து ஜனங்களோ மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொள்கிறார்கள். சுவிசேஷத்தின் வெளிச்சத்தைப் பார்க்காதவாறு இவர்கள் தங்கள் கண்களை மூடிக்கொள்ளவில்லை. வசனத்தைக் கேட்காதவாறு இவர்கள் தங்கள் செவிகளை அடைத்துக் கொள்ளவில்லை. ஊழியக்காரரோடு வாக்குவாதம்பண்ணவேண்டும் என்று ஆர்வம் காண்பிக்கவில்லை. ஊழியக்காரர்களை எதிர்ப்பதற்கு சமயம் தேடிக்கொண்டிருக்கவில்லை. கர்த்தருடைய ஊழியக்காரர்களை மனப்பூர்வமாய் வரவேற்று, அவர்களிடத்திலிருந்து சத்திய வசனங்களைக் கேட்கிறார்கள். மிகவும் கண்ணியமாக நடந்துகொள்கிறார்கள்.

யூதர்கள் இயல்பாகவே சுயபெருமையுள்ளவர்கள். தாங்கள் யூதராகப் பிறந்திருப்பதினால் தங்களுடைய பிறப்பைப்பற்றி பெருமைப்படுகிறவர்கள். மற்றவர்களை புறஜாதியார் என்று சொல்லி மதிக்கமாட்டார்கள். ஆனால் பெரோயா பட்டணத்திலுள்ள யூதர்களோ, மற்றவர்களையும் மதிக்கிறார்கள். அவர்களுடைய பேச்சுக்களுக்கும், கருத்துக்களுக்கும் மதிப்பு கொடுத்து, அதைப்பற்றிச் சிந்தித்து ஆராய்ந்து பார்க்கிறார்கள். பெருந்தன்மையோடு வேதவசனத்தை ஆராய்ந்து பார்க்க தங்களை ஒப்புக்கொடுக்கிறார்கள். சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்கிறவர்கள் நற்குணசாலிகளாக இருக்கிறார்கள்.

பவுலும் சீலாவும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிற போது, பெரோயா பட்டணத்தார் வசனத்தை மனோவாஞ்சையாய் ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படி இருக்கிறதா என்று, தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கிறார்கள். வேதவசனங்களை ஆராய்ந்துபார்த்து, சத்தியத்தை தங்கள் இருதயத்தில் ஏற்றுக் கொள்கிறவர்கள் நற்குணசாலிகளாகயிருப் பார்கள். வசனத்தை ஏற்றுக்கொள்வது மாத்திரமல்ல, சத்தியத்தை நம்புகிறார்கள்.

பெரோயா பட்டணத்தாருக்குப் பவுல் வேதவாக்கியங்களிலிருந்து சுவிசேஷத்தின் சத்தியத்தை எடுத்துச்சொல்லுகிறான். இயேசுகிறிஸ்துவைப்பற்றிய சத்தியத்தை நிரூபிப்பதற்கு அவன் பழைய ஏற்பாட்டு வசனங்களை ஆதாரமாக எடுத்துச் சொல்லுகிறான். பெரோயா பட்டணத்தாரும் பவுல் சொன்ன உபதேசம் மெய்யதானதா என்பதை உறுதிபண்ணுவதற்கு, வேதவாக்கியங்களை தினந்தோறும் ஆராய்ந்து பார்க்கிறார்கள். கிறிஸ்துவின் உபதேசம் தெளிவாகயிருக்கிறது. இதில் குழப்பம் எதுவுமில்லை. புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டிருக்கும் சத்தியத்தை பழைய ஏற்பாட்டு வசனங்களினால் ஆராய்ந்து பார்க்க முடியும். புதிய ஏற்பாட்டை பழைய ஏற்பாட்டினால் விளக்க முடியும்.

யூதர்கள் பழைய ஏற்பாட்டைப் பெற்றுக்கொண்டார்கள். பழைய ஏற்பாட்டிலுள்ள சத்தியங்கள் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்டிருக்கிற தீர்க்கதரிசனங்கள் எப்போது நிறைவேறும் என்று காத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தத் தீர்க்கதரிசனங்கள் புதிய ஏற்பாட்டில் நிறைவேறியுள்ளதை, வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்து உறுதிபண்ணிக்கொள்ளலாம். வசனத்தை வாசிக்கிறவர்களும், ஏற்றுக் கொள்கிறவர்களும், அதை ஆராய்ந்து பார்க்கவேண்டும். தியானிக்கவேண்டும். வசனத்தில் சொல்லப்பட்டிருக்கும் பூரண சத்தியத்தை தியானித்துப் புரிந்துகொள்ளவேண்டும்.

நம்முடைய இருதயத்திலும் சிந்தையிலும் சத்திய வசனமும், அதில் கொடுக்கப்பட்டிருக்கும் தேவனுடைய வெளிப்பாடும் நிரம்பியிருக்கவேண்டும். வேதவாக்கியத்தை தினந்தோறும் தியானிக்க வேண்டும். நற்குணசாலிகளாகயிருக்கிறவர்கள் வேத வாக்கியங்களை அதிகமாய்த் தியானிப்பார்கள். வேதத்தின் சத்தியத்தைத் தங்கள் வாழ்க்கைக்குப் பிரமாணமாக ஏற்றுக்கொள்வார்கள். ருவத வாக்கியங்களை தினந்தோறும் தியானித்து, சத்திய வசனங்களை இரவும் பகலும் தியானிக்கிற மனுஷன் பாக்கியவான். இவனுடைய இருதயத்தில் நற்குண சிந்தனை நிரம்பியிருக்கும்.

அநேகம்பேர் விசுவாசித்தார்கள்

அதனால் அவர்களில் அநேகம்பேரும் கனம்பொருந்திய கிரேக்கரில் அநேக ஸ்திரீகளும் புருஷர்களும் விசுவாசித்தார்கள் (அப் 17:12).

பவுல் பெரோயா பட்டணத்தில் செய்த ஊழியத்திற்கு நல்ல பெலன் உண்டாயிற்று. யூதர்களில் அநேகம் பேர் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறார்கள். தெசலோனிக்கேயா பட்டணத்தில் ஒரு சில யூதர்கள் மாத்திரமே விசுவாசித்தார்கள் (அப் 17:4). ஆனால் இங்கோ அநேகம் பேர் விசுவாசிக்கிறார்கள். பெரோயா பட்டணத்திலுள்ள யூதர்கள் திறந்த மனதோடு, தங்களுடைய பாரம்பரிய பழக்க வழக்கங்களுக்கு பட்சபாதம் காண்பிக்காமல், பவுலின் பிரசங்கத்தைக்கேட்டு இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறார்கள். தேவன் வாஞ்சிக்கிறவர்களுக்கு, தம்முடைய கிருபையைக் கொடுக்கிறார். வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்ப்பதற்கு தேவன் இவர்களுக்குக் கிருபை கொடுக்கிறார்.

யூதர்களில் அநேகம் பேரோடு சேர்ந்து, கனம்பொருந்திய கிரேக்கரில் அநேக ஸ்திரீகளும் புருஷர்களும் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறார்கள். இவர்கள் சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்திலுள்ளவர்கள். ஸ்திரீகள் சுவிசேஷத்தை முதலாவது ஏற்றுக்கொள்கிறார்கள். அதன்பின்பு தங்கள் கணவன்மாரும் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்வதற்கு அவர்களை வழிநடத்துகிறார்கள்.

தெசலோனிக்கேயரான யூதர்கள்

பெரோயாவிலும் தேவவசனம் பவுலினால் அறிவிக்கப்படுகிறதென்று தெசலோனிக்கேயரான யூதர்கள் அறிந்தபோது, அங்கேயும் வந்து, ஜனங்களைக் கிளப்பிவிட்டார்கள் (அப் 17:13).

பெரோயா பட்டணத்திலும் பவுலுக்கும் சீலாவுக்கும் விரோதமாக உபத்திவரமுண்டாயிற்று. பெரோயாவில் தேவவசனம் பவுலினால் அறிவிக்கப் படுகிறதென்று, தெசலோனிக்கேயரான யூதர்கள் அறிந்துகொள்கிறார்கள். இதை அறிந்து அவர்கள் பெரோயாவுக்கும் வந்து ஜனங்களை அப்போஸ்தலருக்கு விரோதமாக கிளப்பி விடுகிறார்கள். அவர்கள் பிரசங்கிக்கிற சுவிசேஷத்திற்கு விரோதமாக ஜனங்களைத் தூண்டுகிறார்கள். சாத்தானுடைய பிரதிநிதிகளாகத் தேவனுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறார்கள். கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கும், மனுஷருடைய ஆத்தும இரட்சிப்புக்கும் விரோதமாக சாத்தான் எப்போதுமே யுத்தம்பண்ணுகிறவன். இந்த யுத்தத்தில் தெசலோனிக்கேயரான யூதர்கள் சாத்தானுடைய கருவிகளாக செயல்பட்டு, அவனுடைய பக்கத்தில் நின்று, சுவிசேஷத்திற்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறார்கள்.

பவுலை வழிநடத்தினவர்கள்

உடனே சகோதரர் பவுலைச் சமுத்திரவழியாய்ப் போக அனுப்பி விட்டார்கள். சீலாவும் தீமோத்தேயும் அங்கே தங்கியிருந்தார்கள். பவுலை வழி நடத்தினவர்கள் அவனை அத்தேனே பட்டணம்வரைக்கும் அழைத்துக் கொண்டுபோய்; அங்கே சீலாவும் தீமோத்தேயும் அதிசீக்கிரமாகத் தன்னிடத்திற்கு வரும்படி, அவர்களுக்குச் சொல்லக் கட்டளை பெற்றுக்கொண்டு புறப்பட்டுப்போனார்கள் (அப் 17:14,15).

பெரோயா பட்டணத்தில், பவுலின் ஊழியத்திற்குப் பிரச்சனை உண்டானபோது, அவன் அங்கிருந்து அத்தேனே பட்டணத்திற்குப் போக வேண்டியதாயிற்று. பவுல் பெரோயாவில் நீண்டகாலமாகத் தங்கியிருந்தான். ஊழியத்தில் இங்கு வளர்ச்சி உண்டாயிற்று. ஊழியத்தின் மூலமாக பெரோயா பட்டணத்தில் பலர் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் ஊழியக்காரருக்கு சிநேகிதராகவும், கிறிஸ்துவுக்குள் சகோதரராகவும் இருக்கிறார்கள். ஊழியக்காரர்களின் நன்மையை இவர்கள் விசாரிக்கிறார்கள். பெரோயா பட்டணத்தில் பவுலுக்கு உபத்திரவம் ஆரம்பித்தபோது, அங்குள்ள சகோதரர்கள், பவுல்மீது அக்கறைகொண்டு, பவுலை பெரோயா பட்டணத்திலிருந்து அத்தேனே பட்டணம் வரைக்கும் அழைத்துக்கொண்டு போகிறார்கள்.

தெசலோனிக்கேயரான யூதர்கள் மூலமாக பவுலுக்கு உபத்திரவமுண்டாகும் என்பதை இந்தச் சகோதரர்கள் அறிந்திருக்கிறார்கள். ஆகையினால் காலதாமதம்பண்ணாமல், உடனே பவுலை சமுத்திர வழியாய்ப் போக அனுப்பிவிடுகிறார்கள். பவுல் பெரோயா பட்டணத்தைவிட்டுப் போனாலும், சீலாவும் தீமோத்தேயுவும் பெரோயா பட்டணத்திலேயே தங்கியிருக்கிறார்கள். பவுல் இந்தப் பட்டணத்தில் ஆரம்பித்து வைத்த ஊழியத்தை, இவர்கள் தொடர்ந்து செய்கிறார்கள்.

பெரோயாவிலுள்ள சகோதரர் பவுலை சமுத்திர வழியாய்ப் போக அனுப்பிவிடுகிறார்கள். சமுத்திரத்திற்குச் செல்லும் சாலை வழியாக, பவுல் பெரோயா பட்டணத்திலிருந்து பிரயாணம் செய்கிறான். அத்தேனே பட்டணத்திற்கு தரை மார்க்கமாக பிரயாணம் செய்கிறான். பவுலை வழிநடத்தினவர்கள் அவனை அத்தேனே பட்டணம் வரைக்கும் அழைத்துக்கொண்டு போகிறார்கள்.

தேவனுடைய ஆவியானவர் பவுலை அத்தேனே பட்டணத்திற்கு வழிநடத்தி வருகிறார். அக்காலத்தில் அத்தேனே பட்டணம் மிகவும் பிரசித்திப் பெற்ற பட்டணமாக விளங்கிற்று. ஆரம்பத்தில் ஆளுகையிலும் வல்லமையிலும், சிறந்து விளங்கிய இந்தப்பட்டணம், பிற்காலத்தில் கல்வியிலும் சிறந்து விளங்கிற்று. அக்காலத்தில் உயர்கல்வி கற்க விரும்புகிறவர்கள் அத்தேனே பட்டணத்திற்கு வந்து தங்களுக்குப் பிடித்த கல்வியைக் கற்றுக்கொள்வது வழக்கம். பெரிய ஞானிகள்கூட, தாங்கள் அத்தேனே பட்டணத்தில் கல்வி கற்றவர்கள் என்று சொல்லி, தங்களைப் பெருமைப்படுத்திக் கொள்வார்கள். அக்காலத்தில் இங்கு மிகப்பெரிய பல்கலைக்கழகம் இருந்தது.

பரிசுத்த ஆவியானவர் பவுலை அத்தேனே பட்டணத்திற்கு அழைத்து வருகிறார். இங்கு ஏராளமான தத்துவ ஞானிகள் இருக்கிறார்கள். இவர்களுக்கு முன்பாக சிலுவையில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்துவைப் பிரசங்கம் பண்ணுவதற்கு, பவுல் வெட்கப்படவுமில்லை, பயப்படவுமில்லை.

சீலாவையும் தீமோத்தேயுவையும் அதிசீக்கிரமாய் தன்னிடத்திற்கு வரும்படி பவுல் செய்தி சொல்லி அனுப்புகிறான். அத்தேனே பட்டணத்தில் ஊழிய வாய்ப்பு அதிகமாகயிருக்கிறது. இங்கு பவுலுக்கும் யாரையும் தெரியாது. ஊழியத்தை விரைவாகவும், விரிவாகவும் செய்வதற்காகவும், தன்னுடைய ஊழியத்தில் துணைக்கு சீலாவும்தீமோத்தேயுவும் இருந்தால் நலமாயிருக்கும் என்று நினைத்தும், அவர்களை அத்தேனே பட்டணத்திற்கு அதிசீக்கிரமாய் தன்னிடத்தில் வரும்படி, அவர்களுக்குச் செய்தி சொல்லி அனுப்புகிறான்.

அத்தேனே பட்டணம்
அப் 17 : 16-21

அப் 17:16. அத்தேனே பட்டணத்தில் பவுல் அவர்களுக்காகக் காத்துக்கொண்டிருக்கையில், அந்தப் பட்டணம் விக்கிரகங்களால் நிறைந்திருக்கிறதைக் கண்டு, தன் ஆவியில் மிகுந்த வைராக்கியமடைந்து,

அப் 17:17. ஜெபஆலயத்தில் யூதரோடும், பக்தியுள்ளவர்களோடும், சந்தைவெளியில் எதிர்ப்பட்டவர்களோடும் தினந்தோறும் சம்பாஷணைபண்ணினான்.

அப் 17:18. அப்பொழுது எப்பிக்கூரரும் ஸ்தோயிக்கருமான ஞானிகளில் சிலர் அவனுடனே வாக்குவாதம் பண்ணினார்கள். சிலர்: இந்த வாயாடி என்ன பேசப்போகிறான் என்றார்கள். சிலர்: இவன் அந்நிய தேவதைகளை அறிவிக்கிறவனாகக் காண்கிறது என்றார்கள். அவன் இயேசுவையும் உயிர்த்தெழுதலையும் அவர்களுக்குப் பிரசங்கித்தபடியினாலே அப்படிச் சொன்னார்கள்.

அப் 17:19. அவர்கள் அவனை மார்ஸ் மேடைக்கு அழைத்துக்கொண்டு போய்: நீ சொல்லுகிற புதிதான உபதேசம் இன்னதென்று நாங்கள் அறியலாமா?

அப் 17:20. நூதனமான காரியங்களை எங்கள் காதுகள் கேட்கப்பண்ணுகிறாய்; அவைகளின் கருத்து இன்னதென்று அறியமனதாயிருக்கிறோம் என்றார்கள்.

அப் 17:21. அந்த அத்தேனே பட்டணத்தாரெல்லாரும், அங்கே தங்குகிற அந்நியரும், நவமான காரியங்களைச் சொல்லுகிறதிலும் கேட்கிறதிலுமே யொழிய வேறொன்றிலும் பொழுது போக்குகிறதில்லை.

விக்கிரகங்களால் நிறைந்திருக்கிறது

அத்தேனே பட்டணத்தில் பவுல் அவர்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கையில், அந்தப் பட்டணம் விக்கிரகங்களால் நிறைந்திருக்கிறதைக் கண்டு, தன் ஆவியில் மிகுந்த வைராக்கியமடைந்து, (அப் 17:16)

அதிகக்கல்வி கற்கவிரும்புகிறவர்கள், அக்காலத்தில் அத்தேனே பட்டணத்திற்குப் போகவிரும்புவார்கள். பவுல் கமாலியேலின் பாதபடியில் கல்வி பயின்றவன். ஆனால் அத்தேனே பட்டணத்திற்கு வந்தபோது பவுலின் உள்ளத்தில் சந்தோஷம் உண்டாகவில்லை. இவன் இங்கு கல்வி கற்பதற்காக வரவில்லை. இந்தப் பட்டணம் விக்கிரகங்களால் நிறைந்திருக்கிறது. ஒன்றான மெய்த்தேவனாகிய இயேசுகிறிஸ்துவை இந்தப் பட்டணத்திலுள்ள ஜனங்களுக்கு அறிவிப்பதற்காகவே, பவுல் இங்கு வந்திருக்கிறான். ஏராளமான விக்கிரகங்களைக் கண்டு, பவுல் தன் ஆவியில் மிகுந்த வைராக்கியமடைகிறான். அத்தேனே பட்டணத்திலுள்ள ஜனங்கள் விக்கிரகாராதனையை விட்டுவிட்டு, ஜீவனுள்ள மெய்த்தேவனாகிய இயேசு கிறிஸ்துவை ஆராதிக்கவேண்டுமென்று, பவுல் தன் ஆவியில் வைராக்கியமடைகிறான்.

அத்தேனே பட்டணத்திலுள்ளவர்கள் அதிகக்கல்வி கற்றவர்களாகயிருந்தாலும், அவர்கள் ஏராளமான விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். அவர்களுடைய விக்கிரகாராதனை பவுலின் ஆவியைக் கலங்கப்பண்ணிற்று. அக்காலத்தில் கிரேக்கு தேசத்திலிருந்த விக்கிரகங்களின் மொத்த எண்ணிக்கையைவிட, அத்தேனே பட்டணத்திலிருந்த விக்கிரகங்களின் எண்ணிக்கை மிகவும் அதிகம். அவர்களிடத்தில் யாராவது ஒரு அந்நிய தெய்வத்தை அறிமுகப்படுத்தினால், அந்தப் பட்டணத்தார் உடனே அந்தத் தெய்வத்தை ஏற்றுக்கொண்டு, அதற்கு ஒரு பலிபீடத்தையும் கோவிலையும் கட்டிவிடுவார்கள். மனுஷஞானம் அதிகரித்திருக்கிற இடத்தில் விக்கிரகாராதனையும் அதிகரித்திருக்கிறது. இவ்வுலகத்தின் ஞானத்தை தேவன் பைத்தியமாக்கியிருக்கிறார். உலக ஞானமானது சுயஞானத்தினாலே தேவனை அறியாதிருக்கிறது (1கொரி 1:20,21).

தத்துவ ஞானிகளில் அநேகர் விக்கிரகங்களுக்கு அடிமைகளாகயிருக் கிறார்கள். இவர்களுக்கு தெய்வீக வெளிப்பாடு தேவை. கிறிஸ்துவைப்பற்றிய அறிவும் ஞானமும் தேவை. இயேசுகிறிஸ்து ஒருவரால் மாத்திரமே இவர்களுடைய விக்கிரகாராதனையின் அடிமைத் தனத்திலிருந்து இவர்களை விடுவிக்க முடியும். பரிசுத்த ஆவியானவர் எங்கேயிருக்கிறாரோ அங்கே விடுதலையும் இருக்கும்.

அத்தேனே பட்டணம் விக்கிரகங்களால் நிறைந்திருக்கிறதைக் கண்டு, பவுல் தன் ஆவியில் மிகுந்த வைராக்கியமடைகிறான். தேவனுடைய மகிமையைக் குறித்து மிகுந்த கரிசனையோடிருக்கிறான். இந்தப் பட்டணத்து ஜனங்களோ விக்கிரகங்களை மகிமைப்படுத்துகிறார்கள். தங்களுடைய ஆத்துமாக்களைப் பற்றி கவலையற்றிருக்கிறார்கள். சாத்தானுக்கு அடிமைகளாகயிருக்கிறார்கள். ஆனால் இவர்களெல்லோரும் அதிகமான கல்வி கற்றவர்கள். இதைக்காணும்போது பவுல் தன் ஆவியில் மிகுந்த வைராக்கியமடைகிறான்.

தினந்தோறும் சம்பாஷணை பண்ணினான்

ஜெபஆலயத்தில் யூதரோடும், பக்தியுள்ளவர்களோடும், சந்தை வெளியில் எதிர்ப்பட்டவர்களோடும் தினந்தோறும் சம்பாஷணை பண்ணினான் (அப் 17:17).

பவுல் அத்தேனே பட்டணத்தில் சீலாவுக்காகவும் தீமோத்தேயுவுக்காகவும் காத்துக்கொண்டிருக்கிறான். இடைப்பட்ட காலத்தில் பவுல் அங்கு யூதரையும் பக்தியுள்ளவர்களையும், சந்தைவெளிகளில் கூடுகிறவர்களையும் சந்திக்கிறான். அவர்களிடத்தில் விக்கிரகாராதனைக்கு விரோதமாக உபதேசம்பண்ணுகிறான். சத்தியத்தைக் குறித்த அறிவை அவர்களுக்கு விளக்கிச் சொல்லுகிறான்.

யூதருடைய ஜெபஆலயத்திற்கும் போகிறான். யூதர்கள் இயேசு கிறிஸ்துவுக்கு சத்துருக்களாகயிருந்தாலும், அவர்கள் விக்கிரகாராதனையின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப் பட்டிருக்கிறார்கள். அவர்களிடத்தில் சென்று இயேசு கிறிஸ்துவைப்பற்றி உபதேசம் பண்ணுகிறான். யூதர்கள் மேசியாவை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவே அவர்கள் எதிர்பார்க்கிற மேசியா. ஆனால் யூதர்கள் இயேசுவை மேசியாவாக ஏற்றுக் கொள்வதில்லை. இப்படிப்பட்டவர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பது அவசியமாகயிருக்கிறது.

யூதருடைய ஜெபஆலயத்திற்கு புறஜாதியாரும் வருவார்கள். இவர்கள் விக்கிரகாராதனையில் ஈடுபடாதவர்கள். ஜெபஆலயத்தில் புறஜாதியாருக்கென்று தனியான பிரகாரம் இருக்கும். பவுல் ஜெபஆலயத்திற்குப்போய், பக்தியுள்ள புறஜாதியாரிடத்திலும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறான். தினந்தோறும் பிரசங்கிக்கிறான்.

ஜெபஆலயத்தில் மாத்திரமல்லாமல், பவுல் சந்தைவெளிக்கும்போய், அங்கு எதிர்ப்பட்டவர்களோடும், தினந்தோறும் இயேசுகிறிஸ்துவைக்குறித்து சம்பாஷணை பண்ணுகிறான். சந்தை வெளியிலிருக்கிறவர்கள் புறஜாதியார்கள். இவர்கள் யூதருடைய ஜெபஆலயத்திற்கு வரமாட்டார்கள். எல்லோரும் இரட்சிக்கப்பட வேண்டுமென்பது இயேசுகிறிஸ்துவின் சித்தம். கிறிஸ்துவின் உண்மை ஊழியக்காரனாகிய பவுல், கிறிஸ்துவின் சுவிசேஷத்தை எல்லா ஜனங்களுக்கும் பிரசங்கம்பண்ண தன்னை ஒப்புக்கொடுக்கிறான். வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் சுவிசேஷத்தைப் போதகம்பண்ணுகிறான். யூதருடைய ஜெபஆலயத்திற்கும் போகிறான். சந்தைவெளிக்கும் போகிறான். பவுல் எங்கு போனாலும், கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவேண்டுமென்பதே அவனுடைய பிரதான நோக்கமாகயிருக்கிறது.

கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நாமும், பவுலின் முன்மாதிரியைப் பின்பற்றி, எல்லா இடங்களுக்கும்போய், கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க ஆயத்தமாயிருக்கவேண்டும்.

வாயாடி

அப்பொழுது எப்பிக்கூரரும் ஸ்தோயிக்கருமான ஞானிகளில் சிலர் அவனுடனே வாக்குவாதம் பண்ணினார்கள். சிலர்: இந்த வாயாடி என்ன பேசப்போகிறான் என்றார்கள். சிலர்: இவன் அந்நிய தேவதைகளை அறிவிக்கிறவனாகக் காண்கிறது என்றார்கள். அவன் இயேசுவையும் உயிர்த்தெழுதலையும் அவர்களுக்குப் பிரசங்கித்தபடியினாலே அப்படிச் சொன்னார்கள் (அப் 17:18).

பவுல் ஜெபஆலயத்தில் யூதரோடும், பக்தியுள்ளவர்களோடும், சந்தைவெளியில் எதிர்ப்பட்டவர்களோடும் தினந்தோறும் சம்பாஷணை பண்ணுகிறான். ஆனால் அவர்களில் அநேகர் பவுலைக் கண்டுகொள்ளவே இல்லை. அவனோடு சம்பாஷணை பண்ணுவதற்கு ஒருவரும் ஆர்வம் காண்பிக்கவில்லை. அப்படிப்பட்ட பட்டணத்தில் ஒரு சில ஞானிகள் இருக்கிறார்கள். பவுல் நூதன காரியங்களைப் பேசுவதாக அவர்கள் நினைக்கிறார்கள். அவர்களில் சிலர் எப்பிக்கூரரும், ஸ்தோயிக்கருமான ஞானிகள்.

எப்பிக்கூரரின் உபதேசத்தின்படி, மனுஷன் எப்படியும் வாழலாமென்று சொல்லிவிடுகிறார்கள். மனுஷருடைய சந்தோஷம்தான் முக்கியம். அதற்காக அவன் எதையும் செய்யலாம். தேவன் இந்த உலகத்தை சிருஷ்டித்தாரென்றோ, உலகத்தையும், உலகத்திலுள்ள ஜீவராசிகளையும் ஆளுகை செய்கிறாரென்றோ இவர்கள் நம்புவதில்லை. இவர்களுடைய உபதேசம் கிறிஸ்துவின் உபதேசத்திற்கு முரண்பட்டிருக்கிறது. நம்மை நாம் வெறுத்து, நம்முடைய சிலுவையை எடுத்துக்கொண்டு, இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றிச் செல்லவேண்டுமென்பதே கிறிஸ்துவின் சுவிசேஷம். ஆனால் எப்பிக்கூரரோ, எதையும் வெறுக்க வேண்டியதில்லை என்றும், எப்படியும் வாழலாமென்றும் போதிக்கிறார்கள்.

ஸ்தோயிக்கர்கள் நூதனமாக உபதேசம்பண்ணுகிறார்கள். இவர்களுடைய உபதேசம் எப்பிக்கூரரின் உபதேசத்திற்கு நேர் விரோதமாகயிருக்கிறது. தாங்கள் தேவனைப்போல நல்லவர்களென்று இவர்கள் நினைக்கிறார்கள். மனுஷன் உயர்ந்தவனென்றும், அவன் எந்தவிதத்திலும் தேவனைவிட கீழானவனல்ல என்றும் ஸ்தோயிக்கர் சொல்லுகிறார்கள். இந்த உபதேசம் வேதாகமத்தின் உபதேசத்திற்கு நேர் விரோதமாகயிருக்கிறது. எல்லோரும் பாவம் செய்து, தேவமகிமையற்றவர்களானோம் என்று வேதம் சொல்லுகிறது. இயேசுகிறிஸ்து மாத்திரமே மகிமைக்குப் பாத்திரர்.

எப்பிக்கூரரும் ஸ்தோயிக்கருமான ஞானிகளில் சிலர் பவுலுடனே வாக்குவாதம்பண்ணுகிறார்கள். அவர்கள் பவுலை "வாயாடி" என்று அழைக்கிறார்கள். "வாயாடி" என்னும் பெயருக்கு, அங்கும் இங்கும் அலைந்து சென்று, இங்கு ஒரு வார்த்தையும், அங்கு ஒரு வார்த்தையும் பேசி "பிழைப்பு நடத்துகிறவன்" என்று பொருள். ஒரு பறவை வழிகளில் சிதறிக்கிடக்கிற தானியத்தைப் பொறுக்கித் தின்பதுபோல, வாயாடிகள் பல இடங்களுக்கும் சென்று, எதையாவது சொல்லி, ஜனங்களிடத்தில் பிச்சை கேட்பதுபோல காசைக் கேட்டு, பிழைப்பு நடத்துகிறவர்கள் என்பது "வாயாடி" என்னும் வார்த்தையின் பொருளாகும்.

எப்பிக்கூரரும் ஸ்தோயிக்கரும் கர்த்தருடைய ஊழியக்காரனான பவுலை, ஒரு பிச்சைக்காரனாகப் பாவித்து அவமானப்படுத்துகிறார்கள். பணத்திற்காக அவன் ஒவ்வொரு இடத்திற்கும் சென்று, எதையாவது சொல்லி பிச்சை கேட்கிறவன் என்று கேவலப்படுத்துகிறார்கள். வாயாடியைப்போல பேசுவதுதான் அவனுடைய தொழில் என்றும், அவனுக்கு வேறு வேலை எதுவும் இல்லையென்றும் நினைத்து அவனை அவமானப்படுத்துகிறார்கள்.

அத்தேனே பட்டணத்தில் வேறு சிலரோ பவுலைப்பார்த்து "இவன் அந்நிய தேவதைகளை அறிவிக்கிறவனாகக் காண்கிறது" என்று சொல்லுகிறார்கள். அந்நிய தேவதைகளை அறிவிப்பதற்கு அத்தேனே பட்டணத்தைவிட சிறந்த இடம் வேறு எதுவுமில்லை. புதிய உபதேசங்களையும், புதிய தெய்வங்களையும் இந்தப் பட்டணத்திற்கு வந்துதான் எல்லோரும் அறிமுகம் செய்து வைப்பார்கள். பவுல் இயேசுவையும், உயிர்த்தெழுதலையும் அவர்களுக்குப் பிரசங்கிக்கிறான். பவுலின் உபதேசமோ அந்நிய தேவதைகளை அறிவிக்கிறதுபோல அவர்களுக்குக் காணப்படுகிறது.

கிறிஸ்துவின் சுவிசேஷத்தையும், அவருடைய உயிர்த்தெழுதலையும் பவுல் ஒருபோதும் "தேவதைகள்" என்று சொல்லவில்லை. ஆனால் அவர்களுக்கோ இவை தேவதைகளாகத் தெரிகிறது. பவுல் இவற்றை தேவதைகளாக்க முயற்சி பண்ணுவதாக அவர்கள் நினைக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதையும், உயிர்த்தெழுதலை எதிர்ப்பார்ப்பதையும், அத்தேனே பட்டணத்தார் அந்நிய தேவதைகளை ஆராதனை செய்வதற்கு சமமாக்குகிறார்கள்.

மார்ஸ் மேடை

அவர்கள் அவனை மார்ஸ் மேடைக்கு அழைத்துக்கொண்டு போய்: நீ சொல்லுகிற புதிதான உபதேசம் இன்னதென்று நாங்கள் அறியலாமா? நூதனமான காரியங்களை எங்கள் காதுகள் கேட்கப்பண்ணுகிறாய்; அவைகளின் கருத்து இன்னதென்று அறியமனதாயிருக்கிறோம் என்றார்கள் (அப் 17:19,20).

அத்தேனே பட்டணத்தார் பவுலின் உபதேசத்தை அங்கொன்றும் இங்கொன்றுமாக, ஓரளவு மாத்திரமே கேள்விப்பட்டிருக்கிறார்கள். அவனுடைய உபதேசத்தை முழுமையாகக் கேட்க ஆவலாயிருக்கிறார்கள். பவுலின் உபதேசம் அவர்களுக்கு புதிதான உபதேசமாகயிருக்கிறது. பவுல் நூதனமான காரியங்களை பேசுவதாக நினைக்கிறார்கள். இதற்கு முன்பு அவர்களுடைய காதுகளில் பவுல் நூதனமான காரியங்களைக் கேட்கப்பண்ணியதாகச் சொல்லி, அவைகளின் கருத்து இன்னதென்று அறிய மனதாயிருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள்.

அத்தேனே பட்டணத்தார் அதிகமாகக் கல்வி கற்றவர்கள். அவர்கள் பல புஸ்தகங்களைப் படித்திருக்கிறார்கள். பவுல் மோசேயின் புஸ்தகத்திலிருந்தும், தீர்க்கதரிசிகளின் ஆகமத்திலிருந்தும் அவர்களோடு பேசுகிறான். இந்தப் புஸ்தகங்களை அத்தேனே பட்டணத்தார் இதுவரையிலும் படித்ததில்லை. அதில் சொல்லப்பட்டிருக்கிற காரியங்களெல்லாம் அவர்களுக்கு நூதன காரியங்களாகத் தெரிகிறது. பவுலின் உபதேசம் அவர்களுக்கு புதிதான உபதேசமாகத் தோன்றுகிறது. இந்த ஆகமங்களில் சொல்லப்பட்டிருக்கிற காரியங்களின் கருத்தை அத்தேனே பட்டணத்தார் அறிய மனதாயிருக்கிறார்கள்.

இந்த உலகத்திலுள்ள புஸ்தகங்களில் பரிசுத்த வேதாகமம் மாத்திரமே பரிசுத்தஆவியினாலே ஏவப்பட்டு எழுதப்பட்டிருக்கிறது. இந்தப் புஸ்தகத்தில் மாத்திரமே தேவனைப்பற்றிய வெளிப்பாடு முழுமையாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அத்தேனே பட்டணத்தார் ஏராளமான புஸ்தகங்களைப் படித்திருந்தாலும், அவர்கள் பரிசுத்த வேதாகமத்திற்கு அந்நியராகயிருக்கிறார்கள்.

பரிசுத்த வேதாகமத்திலுள்ள உபதேசம் அவர்களுக்குப் புதிதாயும், நூதனமாயும் இருக்கிறது. இந்தப் புதிதான உபதேசம் இன்னதென்று அவர்கள் அறிந்துகொள்ள விரும்புகிறார்கள். ஒரு உபதேசத்தை ஏற்றுக்கொள்வதற்கு முன்பாக, அதைப்பற்றி அறிந்துகொள்ளவேண்டும். அத்தேனே பட்டணத்தார் ஞானத்தில் தெளிவுள்ளவர்கள். பவுல் சொன்ன உபதேசத்தை அவர்கள் கடிந்து கொள்ளவில்லை. எதிர்க்கவில்லை. அது அவர்களுக்கு புதிதானதாகயிருக்கிறபடியினால், அதன் கருத்தை அறிந்துகொள்ள விரும்புகிறார்கள். பவுல் சொல்லுகிற காரியங்களெல்லாம் நூதனமான காரியங்களாக இருக்கிறபடியினால், அதன் கருத்து இன்னதென்று அவர்கள் அறியமனதாயிருக்கிறார்கள்.

அவர்கள் பவுலை மார்ஸ் மேடைக்கு அழைத்துக்கொண்டு போகிறார்கள். அத்தேனே பட்டணத்து ஜனங்கள் மார்ஸ் மேடைக்கு வந்து, தங்களுடைய காரியங்களைப் பொதுவாக விவாதம்பண்ணுவது வழக்கம். இது பட்டணத்தார் எல்லாரும் வந்து கூடுகிற நியாயாசனம் போன்றது. பட்டணத்து நியாயாதிபதிகள் இங்கு வந்து அமர்ந்து வழக்குகளை விசாரிப்பார்கள். கல்வி கற்றவர்கள் இங்கு வந்து தாங்கள் கற்ற காரியங்களை மற்றவர்களோடு விவாதம்பண்ணுவார்கள். இது ஒரு நீதிமன்றம் போல செயல்பட்டது. இதை வழக்காடுகிற மன்றம் என்றும் சொல்லலாம்.

மார்ஸ் மேடையில் நடைபெறுகிற விவாதம் மிகவும் பிரசித்திப் பெற்றதாக இருக்கும். முக்கியமான காரியங்களை மாத்திரமே மார்ஸ் மேடையில் விவாதம் பண்ணுவார்கள். பவுலின் உபதேசம் அத்தேனே பட்டணத்தாருக்கு மிகவும் முக்கியமானதாயிற்று. அவர்கள் பவுலை ஒரு குற்றவாளியைப்போல விசாரிக்க வில்லை. அவன் சொல்லுகிற உபதேசம் அவர்களுக்குப் புதிதானதாகயிருக்கிறது. அவன் நூதனமான காரியங்களைப் பேசுவதாக நினைக்கிறார்கள். ஆகையினால் அவைகளின் கருத்து இன்னதென்று அறிய, அவர்கள் பவுலை மார்ஸ் மேடைக்கு அழைத்துக்கொண்டு போகிறார்கள்.

அத்தேனே பட்டணத்தார்

அந்த அத்தேனே பட்டணத்தாரெல்லாரும், அங்கே தங்குகிற அந்நியரும், நவமான காரியங்களைச் சொல்லுகிறதிலும் கேட்கிறதிலுமே யொழிய வேறொன்றிலும் பொழுது போக்குகிறதில்லை (அப் 17:21).

பவுலின் உபதேசத்தைக் கேட்பதற்கு அத்தேனே பட்டணத்தாரெல்லாரும் மிகவும் ஆர்வத்தோடிருக்கிறார்கள். பவுலின் உபதேசம் நல்லது என்பதற்காக அல்ல, அவனுடைய உபதேசம் நவமானது என்பதற்காக, அதன் கருத்தை அறிய அவர்கள் மனதாயிருக்கிறார்கள். அத்தேனே பட்டணத்தாரும், அங்கே தங்குகிற அந்நியரும், நவமான காரியங்களைச் சொல்லுகிறதிலும், கேட்கிறதிலுமேயொழிய, வேறொன்றிலும் பொழுதுபோக்குகிறதில்லை.

அத்தேனே பட்டணத்தாரெல்லோரும் நவமான காரியங்களைப்பற்றிச் சம்பாஷணை பண்ணுவதில் மிகுந்த ஆர்வத்தோடிருக்கிறார்கள். நல்லோர் மத்தியில் கூடியிருக்கும்போது, மனுஷருக்கு மிகுந்த பிரயோஜனமுண்டாகும். மனுஷருடைய அறிவு விருத்தியடையும். பல சத்தியங்களைக் கற்றுக்கொள்வதற்கு வாய்ப்புண்டாகும். அவர்கள் ஏற்கெனவே கற்றிருக்கிற சத்தியங்கள் தெளிவடையும். அவர்களுடைய கல்வியின் அறிவு நல்ல அஸ்திபாரத்தைப் பெறும்.

நம்முடைய அறிவு பேச்சில் மாத்திரம் இருந்தால் அதனால் பிரயோஜனம் ஒன்றுமில்லை. மேலோட்டமாகப் பார்க்கும் போது, நாம் அறிவாளிகள் போலிருப்போம். ஆனால் அந்த அறிவினால் நமக்கு எந்தவிதப் பிரயோஜனமும் உண்டாகாது. அத்தேனே பட்டணத்தார் அறிவு மிகுந்தவர்களாயிருந்தாலும் தங்கள் அறிவினால் பிரயோஜனமடையாதவர் களாக இருக்கிறார்கள்.

அவர்கள் நவமான காரியங்களைச் சொல்லவும் கேட்கவும் விரும்புகிறார்கள். புதிய கருத்துக்களும், புதிய திட்டங்களும், புதிய உபதேசங்களும் அவர்களுக்குப் பிடித்திருக்கிறது. ஏதாவது ஒரு மாற்றம் உண்டாகவேண்டும் என்று விரும்புகிறார்கள். மாற்றம் பேச்சில் மாத்திரம் உண்டானால் போதாது. அது செய்கையிலும் உண்டாகவேண்டும்.

அத்தேனே பட்டணத்தார் மற்றவர்களுடைய காரியங்களில் அதிகமாய்த் தலையிடுகிறார்கள். ஆனால் அவர்கள் தங்களுடைய சொந்தக் காரியங்களைத் திட்டமாய் விசாரிப்பதில்லை. நவமான காரியங்களைச் சொல்லுவதும் கேட்பதும் இவர்களுக்கு பொழுது போக்காய் இருக்கிறது. இதைத் தவிர இவர்களுக்கு வேறு வேலை எதுவுமில்லை.

அத்தேனே பட்டணத்தார் மார்ஸ் மேடையில் அமர்ந்து, ஒரு வேலையும் செய்யாமல், யாராவது நவமான காரியங்களைச் சொன்னால் அதைக் கேட்பார்கள். சில சமயங்களில் இவர்களே நவமான காரியங்களைச் சொல்லுவார்கள். நம்முடைய காலமும் நேரமும் மிகவும் முக்கியமானது. நித்திய ஜீவனைச் சுதந்தரிப்பதற்கு நம்முடைய காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ள வேண்டும். ஆனால் அத்தேனே பட்டணத்தாரோ பிரயோஜனமில்லாத சம்பாஷணையில் பொழுதுபோக்குகிறார்கள். தங்கள் காலத்தை வீணாக்குகிறார்கள்.

நாம் ஒரு வேலையும் செய்யாமல், வீணாகப் பேசிக்கொண்டிருந்தால், நம்முடைய நேரம் தான் நமக்கு விரயமாகும். இழந்துபோன நேரம் திரும்பக் கிடைக்காது. ஆகையினால் நமக்கு கொஞ்சக் காலம் இருந்தாலும், அதையும் அதிகமாய்ப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளவேண்டும்.

மார்ஸ் மேடை
அப் 17 : 22-31

அப் 17:22. அப்பொழுது பவுல் மார்ஸ் மேடையின் நடுவிலே நின்று: அத்தேனரே, எந்த விஷயத்திலும் நீங்கள் மிகுந்த தேவதா பக்தியுள்ளவர்களென்று காண்கிறேன்.

அப் 17:23. எப்படியென்றால், நான் சுற்றித்திரிந்து, உங்கள் ஆராதனைக் குரியவைகளைக் கவனித்துப் பார்த்தபொழுது, அறியப்படாத தேவனுக்கு என்று எழுதியிருக்கிற ஒரு பலிபீடத்தைக் கண்டேன்; நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன்.

அப் 17:24. உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர் வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறபடியால் கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம்பண்ணுகிறதில்லை.

அப் 17:25. எல்லாருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர், தமக்கு யாதொன்று தேவையானது போல, மனுஷர் கைகளால் பணிவிடை கொள்ளுகிறதுமில்லை.

அப் 17:26. மனுஷஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி, பூமியின்மீதெங்கும் குடியிருக்கச் செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார்;

அப் 17:27. கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவியாகிலும் கண்டுபிடிக்கத்தக்கதாகத் தம்மைத் தேடும்படிக்கு அப்படிச் செய்தார்; அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே.

அப் 17:28. ஏனெனில் அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்; அப்படியே உங்கள் புலவர்களிலும் சிலர் நாம் அவருடைய சந்ததியார் என்று சொல்லியிருக்கிறார்கள்.

அப் 17:29. நாம் தேவனுடைய சந்ததியாராயிருக்க, மனுஷருடைய சித்திர வேலையினாலும், யுக்தியினாலும் உருவாக்கின பொன், வெள்ளி, கல் இவைகளுக்கு தெய்வம் ஒப்பாயிருக்குமென்று நாம் நினைக்கலாகாது.

அப் 17:30. அறியாமையுள்ள காலங்களை தேவன் காணாதவர் போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்.

அப் 17:31. மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளக்கப்பண்ணினார் என்றான்.

தேவதா பக்தியுள்ளவர்கள்

அப்பொழுது பவுல் மார்ஸ் மேடையின் நடுவிலே நின்று: அத்தேனரே, எந்த விஷயத்திலும் நீங்கள் மிகுந்த தேவதா பக்தியுள்ளவர்களென்று காண்கிறேன் (அப் 17:22).

அப்போஸ்தலர்கள் செல்லுமிடங்களிலெல்லாம் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறார்கள். வேதாகமத்தில் அவர்களுடைய அநேக பிரசங்கங்கள் எழுதப்பட்டிருக்கிறது. பல சமயங்களில் அப்போஸ்தலர்கள் யூதருக்குப் பிரசங்கம் செய்திருக்கிறார்கள். புறஜாதியாருக்கும் பிரசங்கம் செய்திருக்கிறார்கள். இந்தப் புறஜாதியார் தேவபக்தியுள்ளவர்கள். இவர்கள் மத்தியில் இயேசுவே கிறிஸ்து என்பதை திருஷ்டாந்தப்படுத்துவதே அப்போஸ்தலரின் ஊழியம்.

அத்தேனே பட்டணத்திலே, ஜனங்களெல்லோரும் புறஜாதியாராயிருக்கிறார்கள். இவர்கள் அந்நிய தேவதைகளை ஆராதிக்கிறார்கள். பவுல் இவர்களுக்கு இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறான். யூதருக்குப் பிரசங்கிப்பதுபோல, அத்தேனே பட்டணத்தாருக்குப் பிரசங்கித்தால், இவர்கள் பிரசங்கச் செய்தியை சரியாகப் புரிந்துகொள்ளமாட்டார்கள். யூதருக்கும் பக்தியுள்ளவர்களுக்கும் பிரசங்கம் பண்ணும்போது, தீர்க்கதரிசனங்களையும், அற்புதங்களையும் எடுத்துச் சொல்லி, மீட்பரைப்பற்றிய அறிவுக்கு அவர்களை அழைத்து வரவேண்டும். இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பதற்கு அவர்களை வழிநடத்தவேண்டும். அத்தேனே பட்டணத்தாரைப்போன்ற புறஜாதியாருக்குப் பிரசங்கம்பண்ணும் போதோ, சிருஷ்டிகரைப்பற்றிய அறிவை அவர்களுக்குக் கொடுக்கவேண்டும். சிருஷ்டியை ஆராதியாமல், சிருஷ்டிகரை ஆராதிக்க அவர்களை வழிநடத்தவேண்டும்.

ஜீவனுள்ள ஒரே தேவனை அத்தேனே பட்டணத்தார் அறிந்துகொள்ள வேண்டும் என்பதே பவுலின் பிரதான நோக்கம். தன்னுடைய பிரசங்கச் செய்தியை அவர்கள் புரிந்துகொள்ளும் வண்ணமாக மிகவும் எளிமையாக பிரசங்கம்பண்ணுகிறான். எல்லா மார்க்கங்களையும் பற்றிய அடிப்படைச் செய்தியை அவர்களுக்கு முதலாவது எடுத்துச் சொல்லுகிறான். தேவன் ஒருவர் உண்டு என்றும், அவர் ஒருவரே என்றும், அவர் ஜீவனுள்ளவர் என்றும் அவர் மெய்யானவர் என்றும் அவர்களுக்கு விளங்கப்பண்ணுகிறான்.

அத்தேனே பட்டணத்தார் ஏற்கெனவே பல தேவதைகளை ஆராதிக்கிறார்கள். இவர்களை நாஸ்திகர்களாக்க வேண்டுமென்பது பவுலின் விருப்பமல்ல. அவர்கள் பல தேவதைகளை ஆராதிக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை ஒன்றான மெய்த்தேவனை ஆராதிப்பதற்கு வழிநடத்தவேண்டும். புதிய தெய்வங்களை அவர்களுக்கு அறிமுகம் செய்யவேண்டிய அவசியமில்லை. அத்தேனே பட்டணத்தில் ஏற்கெனவே ஏராளமான தெய்வங்கள் உள்ளன. அவர்கள் பல தெய்வங்களைப் பற்றி அறிந்து வைத்திருக்கிறார்கள். ஆனால் ஒன்றான மெய்த்தேவனை அறியவில்லை. அப்படிப்பட்ட ஜனங்களுக்கு மெய்யான ஒரே தேவனைப்பற்றிய அறிவைக் கொடுக்கவேண்டும். அந்த மெய்ஞானத்திற்கு அவர்களை அழைத்துவரவேண்டும்.

தேவன் மனுஷரை சிருஷ்டித்திருக்கிறார். ஆனால் அத்தேனே பட்டணத்தாரோ தங்களை சிருஷ்டித்த தேவனைப்பற்றி அறியாதவர்களாக இருக்கிறார்கள். சிருஷ்டிகரை ஆராதிப்பதற்குப் பதிலாக, தாங்களே தெய்வங்களை சிருஷ்டித்து, அவற்றை ஆராதிக்கிறார்கள். இவர்கள் மிகுந்த தேவதாபக்தியுள்ளவர்களாயிருக்கிறார்கள். பவுலும் இதைக் காண்கிறான். இவர்கள் தேவதைகளுக்குப் பயந்து அவற்றை ஆராதிக்கிறார்கள். தாங்கள் ஆராதிக்கிற தேவதைகளுக்கு சொரூபங்களைச் செய்கிறார்கள்.

பவுலின் உபதேசம் அத்தேனே பட்டணத்தாருக்கு புதிதான உபதேசமாகயிருக்கிறது. நூதனமான காரியங்களைப் பவுல் தங்களுக்குச் சொல்லுவதாக நினைக்கிறார்கள். அவைகளின் கருத்து இன்னதென்று அறிந்துகொள்ள மனதாயிருக்கிறார்கள். அவர்களுக்கு பவுல் மெய்த்தேவனைப்பற்றிச் சொல்லுகிறான். இவர்கள் தேவதாபக்தியுள்ளவர்கள். நாஸ்திகர்களல்ல. ஆகையினால் இவர்களுக்கு தேவனைப்பற்றிச் சொல்லுவது பவுலுக்கு எளிதாயிருக்கிறது.

ஆனாலும் இவர்கள் பாரம்பரியமாக பல தெய்வங்களை ஆராதிக்கிறார்கள். சாத்தான் இவர்களுடைய மனதை கறைப்படுத்தியிருக்கிறான். தேவனைப்பற்றி மெய்யான ஞானமில்லாமல், இவர்கள் குழப்பத்திலிருக்கிறார்கள்.

பவுல் இவர்களுடைய குழப்பத்தை நீக்கி, இயேசுகிறிஸ்துவைப்பற்றி அவர்களுக்குத் தெளிவான உபதேசத்தைச் சொல்லி, அவர்களுக்கு தெளிவை உண்டுபண்ண விரும்புகிறான். அத்தேனே பட்டணத்தார் ஏற்கெனவே பல தேவதைகளை ஆராதிக்கிறார்கள். அவர்களுக்கு அந்த தேவதைகளோடு மேலும் ஒரு தேவதையை அறிமுகம் செய்து வைக்கவேண்டிய அவசியமில்லை. பவுல் அந்நிய தேவதைகளை அறிவிக்கிறவனாகக் காண்கிறார்கள். ஆனால் பவுலோ அவர்களுக்கு இயேசுவையும் உயிர்த்தெழுதலையும் பிரசங்கம்பண்ணுகிறான்.

அறியப்படாத தேவன்

எப்படியென்றால், நான் சுற்றித்திரிந்து, உங்கள் ஆராதனைக்குரியவைகளைக் கவனித்துப் பார்த்தபொழுது, அறியப்படாத தேவனுக்கு என்று எழுதியிருக்கிற ஒரு பலிபீடத்தைக் கண்டேன்; நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன் (அப் 17:23).

பவுல் அத்தேனே பட்டணத்தில் சுற்றித்திரிந்து அவர்களுடைய ஆராதனைக்குரியவைகளைக் கவனித்துப் பார்க்கிறான். அப்போது அறியப்படாத தேவனுக்கு என்று எழுதியிருக்கிற ஒரு பலிபீடத்தைக் காண்கிறான். அத்தேனே பட்டணத்தார் அறியாமலேயே, அந்த அறியப்படாத தேவனை ஆராதிக்கிறார்கள். அவர்களுக்கு ஒன்றான மெய்த்தேவனை தெளிவுபடுத்த வேண்டும் என்பதுதான் பவுலின் நோக்கம். அதற்கு ஏற்ற சமயத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் போது, பவுல் அவர்களிடத்தில் அறியப்படாத தேவனுடைய பலிபீடத்தைப் பற்றிச் சொல்லுகிறான்.

அத்தேனே பட்டணத்தார் கல்வியில் சிறந்து விளங்குகிறார்கள். பல தேசங்களிலிருந்து உயர்கல்வி பெறுவதற்கு ஞானிகளெல்லோரும் அத்தேனே பட்டணத்திற்கு வருகிறார்கள். ஆனால் இப்படிப்பட்ட கல்விமான்களுக்கு மெய்யான தேவன் அறியப்படாத தேவனாகயிருக்கிறார். இந்த உலகத்தில் ஒரே ஒரு தேவன் மாத்திரமே இருக்கிறார். அந்தத் தேவனை அத்தேனே பட்டணத்தார் அறியாதவர்களாகயிருக்கிறார்கள்.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில், சில காரியங்களில் நாம் குறைவுள்ளவர்களாகயிருக்கலாம். சில காரியங்களை அறியாதவர்களாகயிருக்கலாம். நமக்குள் சுவிசேஷம் பிரவேசிக்கும்போது நம்முடைய குறைவு நிறைவாகும். நம்முடைய அறியாமை நீங்கி நமக்குள் மெய்யான அறிவு உண்டாகும்.

அத்தேனே பட்டணத்தார் அறியப்படாத தேவனுக்கு வெவ்வேறு விதமாக வியாக்கியானம் சொல்லுகிறார்கள். அறியப்படாத தேவன் என்பது, "தேவனுடைய மகிமையை அறியமுடியாது" என்று பொருள்படுதாகச் சிலர் சொல்லுகிறார்கள். "அறியப்படாத தேவன்" என்று சொல்லும்போது, அத்தேனே பட்டணத்தார், அது யூதருடைய தேவனை குறிப்பதாக நம்புகிறார்கள். புறஜாதியார் யூதருடைய தேவனைப்பற்றிச் சொல்லும்போது, "யூதருடைய தேவனுக்கு நாமம் இல்லை" என்று சொல்லுவது வழக்கம்.

அறியப்படாத தேவனுக்கு ஒரு பலிபீடத்தைக்கட்டி அத்தேனே பட்டணத்தார் ஆராதிக்கிறார்கள். அவர்கள் அறியாமல் ஆராதிக்கிற அந்தத் தேவனை பவுல் அவர்களுக்கு அறிவிக்கிறான். தேவனை அறியாதிருப்பது வருத்தமான காரியம். அவர்களுக்குப் பவுல் தேவனை அறிவித்து, மெய்யான சந்தோஷத்தைக் கொடுக்கிறான்.

அத்தேனே பட்டணத்தாரிடம் பவுல் பிரசங்கம்பண்ணும்போது மிகவும் ஞானமாக வார்த்தைகளைப் பிரயோகிக்கிறான். "நான் சுற்றித்திரிந்து, உங்கள் ஆராதனைக்குரியவைகளைக் கவனித்துப் பார்த்தபொழுது" என்று தன்னுடைய பிரசங்கத்தை ஆரம்பிக்கிறான். அறியப்படாத தேவனுடைய பலிபீடம் பொது இடத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. அந்த வழியாகப் போவோர் எல்லோருமே அதைப் பார்ப்பார்கள். அது அறியப்படாத தேவனுடைய பலிபீடமாகயிருந்தாலும், அது ஒருவருக்கும் மறைவான பலிபீடமல்ல.

ஒன்றான மெய்த்தேவனைப்பற்றி அத்தேனே பட்டணத்தாருக்கு எடுத்துச்சொல்ல, பவுல் இந்தச் சந்தர்ப்பத்தை ஞானமாகப் பயன்படுத்துகிறான். தான் பிரசங்கிக்கிற தேவனை, அவர்கள் ஏற்கெனவே ஆராதித்துக் கொண்டிருப்பதாகச் சொல்லுகிறான். அவர்கள் அறியாமல் ஆராதிக்கிற அந்தத் தேவனையே, பவுல் அவர்களுக்கு இப்போது அறிவிக்கிறான். இனிமேல் அவர்கள் அறியாமல் ஆராதிப்பதற்குப் பதிலாக, மெய்யான தேவனை அறிந்து ஆராதிக்கலாம்.

நாம் ஆராதிக்கிறவரை இன்னாரென்று அறிந்திருக்கவேண்டும். அப்போதுதான் நம்முடைய ஆராதனை புத்தியுள்ள ஆராதனையாகயிருக்கும். யாரை ஆராதிக்கிறோம் என்பது நமக்குத் தெரியவில்லையென்றால், நம்முடைய ஆராதனையில் உண்மையும் ஜீவனும் இராது.

வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவர்

உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர் வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கிற படியால் கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம்பண்ணுகிறதில்லை (அப் 17:24).

தேவன் ஜீவனுள்ளவர், மெய்யானவர் என்னும் சத்தியத்தை பவுல் உறுதிபண்ணி அத்தேனே பட்டணத்தாருக்குப் போதகம்பண்ணுகிறான். அவரே உலகத்தையும், அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கினவர். வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறவரையே, அவர்கள் ஆராதிக்கவேண்டுமென்று பவுல் அவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிறான். புறஜாதியாரும் தேவபக்தி மிகுந்தவர்கள். தத்துவ மேதைகள், இவர்களுடைய ஆராதனைகளில் தலையிடுவதில்லை. கட்டுக்கதைகளையும், புராணங்களையும் நம்பி இவர்கள் தெய்வங்களை ஆராதிக்கிறார்கள்.

பல தெய்வங்களை ஆராதிக்கிற அத்தேனே பட்டணத்தாரிடம், ஒன்றான மெய்த்தேவனையே ஆராதிக்கவேண்டும் என்று பவுல் போதகம்பண்ணுகிறான். அந்த மெய்த்தேவன் ஜீவனுள்ளவர். அத்தேனே பட்டணத்தாரோ விக்கிர காராதனையில் ஈடுபட்டிருக்கிறார்கள். இவர்களை விக்கிரகாராதனையிலிருந்து விடுவித்து, ஜீவனுள்ள ஒன்றான மெய்த்தேவனை ஆராதிப்பதற்கு, பவுல் அவர்களை தன்னுடைய பிரசங்கித்தின் மூலமாக வழிநடத்துகிறான்.

ஜீவனுள்ள ஒரே தேவனைப்பற்றி பவுல் சொல்லும்போது "உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர்" என்றும், அந்த தேவனானவர் "வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறார்" என்றும் சொல்லுகிறான். தேவன் சர்வ ஞானமுள்ளவர். சர்வவல்லமையுள்ளவர். நித்தியமானவர். அவர் தம்முடைய சர்வவல்லமையினால் இந்த உலகத்தையும், இதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கியிருக்கிறார். தேவன் தம்முடைய அனந்த ஞானத்தின் பிரகாரம், எல்லாவற்றையும் உண்டாக்கியிருக்கிறார். ஆகையினால் அவரே வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறார். அவரே எல்லாவற்றையும் சிருஷ்டித்தவர். அவரே நமக்கு ஜீவனைக் கொடுத்திருக்கிறவர். அவரே நம்மை ஆளுகை செய்கிறவர். ஆகையினால் நாம் அவரை மாத்திரமே ஆராதனை செய்யவேண்டும்.

ஜீவனையும் சுவாசத்தையும் கொடுக்கிறவர்

எல்லாருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர், தமக்கு யாதொன்று தேவையானது போல, மனுஷர் கைகளால் பணிவிடை கொள்ளுகிறதுமில்லை (அப் 17:25).

உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர் எல்லாருக்கும் ஜீவனையும், சுவாசத்தையும், சகலத்தையும் கொடுக்கிறார். அவர் இன்னும் ஒவ்வொரு மனுஷனுடைய நாசியிலும் தம்முடைய ஜீவசுவாசத்தை ஊதுகிறார். இதனால் மனுஷன் ஜீவாத்துமாவாகிறான். மனுஷனுக்கு ஆவியையும் ஆத்துமாவையும் கொடுக்கிறார். இந்த உலகத்தில் பெரியோரும் சிறியோரும், நல்லோரும் தீயோரும் இருக்கிறார்கள். இவர்கள் எல்லோருக்கும் தேவனே ஜீவனையும் சுவாசத்தையும் கொடுக்கிறவர். சாதாரண ஜனங்களும் ஜீவனோடிருக்கும் வண்ணமாக அவர்களுக்கு ஜீவனைக்கொடுக்கிறார். இவ்வுலகத்தில் மிகச் சிறந்த ஞானிகளும், வாக்குவல்லவர்களும், சரீர பெலமுள்ளவர்களும் மாவீரர்களும் தேவனுடைய கிருபையில்லாமல் ஜீவிக்க முடியாது. தேவன் இவர்களுக்கு ஜீவனையும் சுவாசத்தையும் கொடுக்கவில்லையென்றால் இவர்களால் ஜீவனோடிருக்கவே முடியாது.

ஜீவனையும் சுவாசத்தையும் கொடுக்கிற தேவன், எல்லோருக்கும் சகலத்தையும் கொடுக்கிறார். மனுபுத்திரருக்கு மாத்திரமல்ல, இந்த உலகத்திலுள்ள எல்லா ஜீவராசிகளுக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் கொடுக்கிறார். எல்லா ஜீவராசிகளும் தேவனிடத்திலிருந்து ஜீவனையும் சுவாசத்தையும் பெற்றுக்கொண்டு ஜீவனோடிருக்கிறது. மனுஷருக்கும், மற்ற ஜீவராசிகளுக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் கொடுப்பதோடு, அவற்றிற்குத் தேவையான சகலவற்றையும் கொடுத்து, தேவன் எல்லா ஜீவராசிகளையும் பராமரிக்கிறார். தேவன் நமக்குப் போஜனம் கொடுக்கவில்லையென்றால் நம்முடைய ஜீவனுக்கு ஆகாரம் எதுவுமில்லை. தேவனே நம்மை தம்முடைய கிருபையினால் போஷிக்கிறவர்.

ஒரே இரத்தத்தினாலே

மனுஷஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி, பூமியின்மீதெங்கும் குடியிருக்கச் செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார்; (அப் 17:26)

எல்லா மனுஷரையும் தேவனே உண்டாக்கினவர். மனுஷஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப் பண்ணியிருக்கிறார். தேவனே முதலாம் மனுஷனாகிய ஆதாமையும், மனுஷஜாதியான சகல ஜனங்களையும் தோன்றப்பண்ணியவர். அவர் மனுஷஜாதிகளைத் தோன்றப்பண்ணி, ஒவ்வொரு தேசத்திலும் ஜனங்களையும், அது மாத்திரமல்ல, தேசங்களையும் தோன்றப் பண்ணியிருக்கிறார். மனுஷஜாதியான சகல ஜனங்களுக்கும் தேவனே ஸ்தாபகராகயிருக்கிறார். அவர்களை பூமியெங்கும் சமுதாயங்களாக குடியேற்றியிருக்கிறார்.

ஒரே இரத்தத்தினாலே மனுஷஜாதியான சகல ஜனங்களையும் தேவன் தோன்றப்பண்ணியிருக்கிறார். மனுஷஜாதியினர் எல்லோருக்கும் ஒரே மாதிரியான மனுஷசுபாவமே இருக்கிறது. இதனால் மனுஷர்கள் ஒருவருக்கொருவர் நேசமாயும் பிரியமாயும் இருக்கிறார்கள். ஒருவருக்கொருவர் ஒத்தாசை செய்துகொள்கிறார்கள். மனுஷர்கள் அனைவரும் சகசிருஷ்டிகளாயும், சகோதர சகோதரரிகளாயும் இருக்கிறார்கள்.

மனுஷஜாதியான சகல ஜனங்களையும் தேவன் தோன்றப்பண்ணி, அவர்களை பூமியின் மீதெங்கும் குடியிருக்கச் செய்திருக்கிறார். எல்லோரும் ஒரே இடத்தில் வாசம்பண்ணுவது தேவனுடைய சித்தமல்ல. அவர்களை பூமியின் மீதெங்கும் சிதறி குடியிருக்கச் செய்வதே தேவனுடைய சித்தமாயிற்று.

பூமியின் ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு தேசத்தார் குடியிருக்கிறார்கள். ஒவ்வொரு தேசத்தாரும் தங்களைப் பாதுகாத்து, பராமரித்து ஆளுகை செய்துகொள்கிறார்கள். இது மனுஷருடைய பராமக்கிரமத்தினால் உண்டானதல்ல. இது தேவனுடைய கிருபையினாலும் சித்தத்தினாலும் உண்டாயிற்று.

கிரேக்கர்கள் தங்களைக் குறித்துப் பெருமைப்பாராட்டுகிறார்கள். மற்ற தேசத்தாரைவிட தாங்கள் உயர்ந்தவர்களென்று கிரேக்கர்கள் பெருமையோடு நினைக்கிறார்கள். ஆனால் இவர்கள் சுயபெருமைப்படுவதற்கு இவர்களிடத்தில் ஒன்றுமேயில்லை. தேவன் தாமே தம்முடைய சித்தத்தினால் இவர்களெல்லோரையும் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி, பூமியின் மீதுள்ள இந்த இடத்தில் இவர்களை குடியிருக்கச் செய்திருக்கிறார். இவர்கள் தங்களை கிரேக்கர்களென்றும், தங்கள் தேசத்தை கிரேக்கு தேசம் என்றும் சொல்லி பெருமைப்படுகிறார்கள். ஆனால் தேவனே இவர்களை இங்கு குடியிருக்கச் செய்திருக்கிறவர்.

தேவன் முன்தீர்மானிக்கப்பட்ட காலங்களையும், மனுஷருடைய குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார். இது தேவனுடைய அநாதி தீர்மானம். மனுபுத்திரருடைய சகல காரியங்களையும் தேவனே முற்குறித்து, திட்டமிட்டு, தீர்மானித்து செயல்படுத்துகிறவர். தேவன் சர்வஆளுகை உடையவர். எல்லா மனுஷருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் கொடுத்து, எல்லோரையும் தம்முடைய சர்வ ஆளுகையினால் ஆளுகை செய்கிறவர். ஒவ்வொரு காலங்களையும் தேவனே தீர்மானிக்கிறார். ஒரு காலமும் மற்றொரு காலமும் முரண்படாதவாறு, தேவன் தம்முடைய தெய்வீக ஞானத்தினால், எல்லா காலங்களையும் முற்குறித்து ஆளுகை செய்கிறார்.

எல்லா காலங்களையும் தேவன் தம்முடைய தெய்வீக ஞானத்தினால் முன்பாகவே தீர்மானித்திருக்கிறார். தேவனுடைய ஞானம் அனந்தமானது. அவர் காலங்களை தம்முடைய நித்திய ஆலோசனையில் ஏற்கெனவே தீர்மானம் செய்திருக்கிறார். தேவன் ஒவ்வொரு காலங்களையும், திடீர் திடீரென்று, அவ்வப்போது தீர்மானிக்கிறவரல்ல. தேவனுடைய தீர்மானம் எல்லாமே, அவருடைய அனந்த ஞானத்தில் ஏற்கெனவே தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது.

மனுஷருக்கு காலங்களைத் தீர்மானிப்பதுபோலவே, மனுஷர் குடியிருப்பதற்கு அவர்களுடைய குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார். நம்மைக் குறித்த காலங்களை தீர்மானிக்கிறவர் தேவனே. நம்முடைய காலங்கள் தேவனுடைய கரத்திலிருக்கிறது. நாம் செழிப்பான காலத்திலிருந்தாலும், தாழ்ச்சியான காலத்திலிருந்தாலும், இந்தக் காலங்களை தேவனே தீர்மானிக்கிறவர். நம்முடைய காலங்களை நம்மால் தீர்மானிக்க முடியாது. தேவனுடைய அநாதி தீர்மானத்தின் பிரகாரம், நம்முடைய காலங்கள் அவர் முற்குறித்த பிரகாரம் நமக்கு உண்டாகும்.

மனுஷர் எங்கெல்லாம் குடியிருக்கவேண்டும் என்பதையும் தேவனே தீர்மானம் செய்கிறார். மனுஷருக்கு குடியிருப்பின் எல்லைகளைக் குறித்திருக்கிறார். மனுஷர் ஜீவனோடிருக்கும் வண்ணமாக தேவன் பூமியை ஆசீர்வதிக்கிறார். இந்தப் பூமியின் எந்தெந்த இடங்களில், என்னென்ன இருக்கவேண்டும் என்பதை, தேவனே திட்டமிட்டு தீர்மானம் செய்திருக்கிறார். நாம் இப்போது குடியிருக்கிற தேசம் நமக்கு எதேச்சையாய் உண்டானதல்ல. இது தேவனுடைய தீர்மானித்தின் பிரகாரமாகவே உண்டாயிற்று. நாம் இருக்கிற ஸ்தலத்தில், நாம் சந்தோஷமாக ஜீவிக்க கற்றுக்கொள்ளவேண்டும். தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் ஆசீர்வாதங்களை ஸ்தோத்திரத்தோடே அனுபவிக்கவேண்டும். தேவனுடைய பராமரிப்புக்களை நல்லமுறையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். ஏனெனில் நாம் குடியிருக்கும் எல்லைகளையும் தேவனே குறித்திருக்கிறார்.

தூரமானவரல்லவே

கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவியாகிலும் கண்டுபிடிக்கத்தக்கதாகத் தம்மைத் தேடும்படிக்கு அப்படிச் செய்தார்; அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே (அப் 17:27).

தேவன் சர்வ வியாபகர். எல்லா இடங்களிலும் இருக்கிறவர். ஆகையினால் அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்ல. தேவன் ஆவியாகயிருக்கிறார். அவர் நமக்கு அருகாமையிலிருக்கிறார். நாம் தேவனைத் துதிக்கும்போது, நம்முடைய துதியின் வார்த்தைகளைக் கேட்கும் வண்ணமாக அவர் நமக்கு அருகாமையிலிருக்கிறார். அது மாத்திரமல்ல. நாம் தேவனிடத்தில் கெஞ்சி விண்ணப்பம்பண்ணும்போது, தம்முடைய கிருபையை நமக்குக் கொடுப்பதற்காகவும் அவர் நமக்கு சமீபமாயிருக்கிறார். ஒருவேளை நாம் பலிபீடத்திற்கு அருகாமையில் இருக்கமுடியாமல் தூரமாகயிருக்கலாம். தேவாலயத்திற்குத் தூரமாகயிருக்கலாம். நாம் எங்கிருந்தாலும் அவர் நமக்கு தூரமாயிராமல் சமீபமாயிருக்கிறார்.

நாம் ஒருவேளை மாளிகையில் இருக்கலாம். அல்லது ஒரு ஓலை குடிசையில் இருக்கலாம். திரளான ஜனங்களுக்கு நடுவில் இருக்கலாம். அல்லது நாம் தனிமையாக இருக்கலாம். ஒருவேளை நாம் ஒரு மூலையில் இருக்கலாம். அல்லது நாம் நகரத்திலோ, வனாந்தரத்திலோ, ஆழ்கடலின் நடுவிலோ, ஆழத்திலோ இருக்கலாம். நாம் எங்கிருந்தாலும் தேவன் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்ல.

அவருக்குள்

ஏனெனில் அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்; அப்படியே உங்கள் புலவர்களிலும் சிலர் நாம் அவருடைய சந்ததியார் என்று சொல்லியிருக்கிறார்கள் (அப் 17:28).

நாம் ஜீவிப்பதற்கு தேவனுடைய பராமரிப்பையே சார்ந்திருக்கிறோம். ஒரு நீரோடையில் தண்ணீர் ஓடவேண்டுமென்றால் அது ஊற்றைச் சார்ந்திருக்கும். ஒளிக்கதிர்கள் பிரகாசமாக இருக்கவேண்டுமென்றால் அது சூரியனைச் சார்ந்திருக்கும். அதுபோலவே நாம் ஜீவிக்கவேண்டுமென்றால் தேவனுடைய பராமரிப்பைச் சார்ந்திருக்கவேண்டும். ஏனெனில் தேவனுக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்.

நாம் நிர்மூலமாகாமலிருப்பது தேவனுடைய சுத்தகிருபை. தேவன் தம்முடைய நீடியபொறுமையினால் நம்மை அழித்துப்போடாமல் ஜீவனோடு வைத்திருக்கிறார். தம்முடைய பொறுமையோடு, அவர் நம்மை ஒரு தகப்பனைப்போல பராமரிக்கிறார். இதனால் நம்முடைய ஜீவியகாலத்தை அதிகரிக்கச் செய்கிறார். தேவன் தம்முடைய நன்மையை நமக்குக் காண்பிக்காமல் நிறுத்திப்போட்டால், நாம் மடிந்துபோவோம். நம்முடைய சுயபராமரிப்பினால் நம்மால் ஜீவிக்க முடியாது.

நாம் தேவனுக்குள் அசைகிறோம். நம்முடைய ஆத்துமாக்கள் நம்முடைய சரீரத்தில் தேவனாலே அசைகிறது. தேவனே நம்மை அசையச் செய்கிறவர். தேவன் நம்மை அசைக்கவில்லையென்றால், நாம் அசையாத ஜடம்போல இருப்போம். நாம் தேவனுக்குள் இருக்கிறோம். நாம் தேவனிடத்திலிருந்து ஜீவனைப் பெற்றுக்கொண்டோம். இப்போது தேவனுக்குள் ஜீவனோடிருக்கிறோம். தம்மை அறியும் சிலாக்கியத்தைத் தேவன் நமக்குக் கொடுத்திருக்கிறார். தேவனுடைய சமுகத்தில் நாம் சந்தோஷமாயிருக்கிறோம். தேவன் நம்மை மிருகங்களாகவோ, அல்லது பரிதாபமான பிசாசுகளாகவோ சிருஷ்டிக்காமல், நம்மை மனுஷராக சிருஷ்டித்திருக்கிறார். நாம் தேவனுக்குள் மனுஷராகயிருக்கிறோம்.

நாம் எல்லோருமே தேவனுடைய சந்ததியாராகயிருக்கிறோம். "அரத்தஸ்" என்பவன் கிரேக்க தத்துவ ஞானி. இவன் பவுலின் சொந்த ஊரான சிலிசியா பட்டணத்தைச் சேர்ந்தவன். இவன் ஒரு புலவன். "நாம் தேவனுடைய சந்ததியார்" என்று அரத்தஸ் என்னும் புலவன் அக்காலத்திலேயே சொல்லியிருக்கிறான்.

பவுல் அக்காலத்தில் கமாலியேலின் பாதபடியில் படித்தவன். தத்துவ மேதை. பவுல் ஒரு பேரறிஞன். பவுல் மாத்திரமல்ல, அக்காலத்தில் பவுலைப்போல இன்னும் ஏராளமான தத்துவ மேதைகள் இருந்தார்கள். தேவனுடைய சத்தியங்களை அவர்களும் எடுத்துச்சொல்லுகிறார்கள். கிரேக்கர்கள் தங்களுக்கு தத்துவங்களைச் சொல்லுகிற ஞானிகளை மதிக்கிறவர்கள். அப்படிப்பட்ட ஞானியின் வார்த்தையை, பவுல் அவர்களுக்கு மேற்கோளாகச் சொல்லி, கிறிஸ்துவின் சுவிசேஷத்தை விளங்கப்பண்ணுகிறான். அவர்களுடைய பட்டயத்தையே, எடுத்து, அவர்களோடு யுத்தம்பண்ணுகிறான். தாவீது கோலியாத்தின் பட்டயத்தை எடுத்து அவனுடைய தலையையே வெட்டியதுபோல, பவுல் கிரேக்கப் புலவர்களுடைய தத்துவ வார்த்தைகளைப் பயன்படுத்தி, அவர்களுக்குச் சத்தியத்தை விளங்கப்பண்ணுகிறான்.

சத்தியத்திற்கு சத்துருவாகயிருக்கிறவர்களும் ஞானிகளாகயிருக்கிறார்கள். அறிவில் தேறினவர்களாகயிருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய தத்துவத்தின் மெய்யான ஞானம், அவர்களுடைய உள்ளத்தில் பிரவேசிக்கவில்லை. தத்துவத்தின் மெய்ப்பொருளை அவர்கள் உணராதவர்களாக இருக்கிறார்கள்.

நாம் தேவனுக்குள் ஜீவிக்கிறோம். ஆகையினால் நாம் அவருக்காக ஜீவிக்கவேண்டும். நாம் தேவனுக்குள் அசைகிறோம். ஆகையினால் நாம் தேவனை நோக்கி அசையவேண்டும். அவரை நோக்கி முன்னேறி வரவேண்டும். நாம் தேவனுக்குள் ஜீவனோடிருக்கிறோம். ஆகையினால் நம்முடைய ஜீவனை தேவனிடத்தில் பிரதிஷ்டை பண்ணவேண்டும். அவருக்குப் பிரியமான பரிசுத்த ஜீவியம் ஜீவிக்கவேண்டும். நாம் தேவனுக்காக ஜீவிக்கவேண்டும்.

தேவனுடைய சந்ததியார்

நாம் தேவனுடைய சந்ததியாராயிருக்க, மனுஷருடைய சித்திர வேலையினாலும், யுக்தியினாலும் உருவாக்கின பொன், வெள்ளி, கல் இவைகளுக்கு தெய்வம் ஒப்பாயிருக்குமென்று நாம் நினைக்கலாகாது (அப் 17:29).

பவுல் தேவனைப்பற்றிய சத்தியத்தை அத்தேனே பட்டணத்தாருக்கு எடுத்துச் சொல்லும்போது, அவர்களுடைய விக்கிரகாராதனை பழக்க வழக்கத்தின் பாவத்தையும் அவர்களுக்கு விளக்கிச் சொல்லுகிறான். தேவனை ஒரு சொரூபத்திற்கு ஒப்பாக்க முடியாது. நாம் தேவனுடைய சந்ததியாராக இருக்கிறோம். நம்முடைய தேவனோ நம்முடைய ஆவிகளுக்குப் பிதாவாகயிருக்கிறார். அவர் ஆவியாகயிருக்கிறார். தேவன் மனுஷருடைய சித்திர வேலையினாலும், யுக்தியினாலும் உருவாக்கின பொன், வெள்ளி, கல் இவைகளுக்கு ஒப்பாயிருக்கமாட்டார்.

தேவன் மனுஷனை தம்முடைய சாயலாக சிருஷ்டித்து, அவனைக் கனப்படுத்தியிருக்கிறார். மனுஷனுடைய ஆத்துமா தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. மனுஷன் தன்னுடைய சரீரத்திற்கு ஒப்பாக தேவனைச் சிருஷ்டித்தால், அவன் தேவனுக்கு அவமரியாதை செய்கிறான். தேவனுடைய சாயலாக நம்முடைய ஆவி சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது.

தேவன் மனுஷருடைய கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் வாசம் பண்ணுகிறதில்லை (அப் 17:24). கோவில் மூலமாக, தேவன் ஒருபோதும் நமக்குச் சமீபமாக வரப்போவதில்லை. தேவன் கோவிலில் இருக்கிறார் என்பதற்காக, அவர் நம்மோடு எப்போதும் கூடவே இருக்கப்போவதில்லை. தேவனை ஆராதிப்பதற்கு, கோவில் மனுஷருக்கு வசதியான இடமாக இருக்கிறது. தனக்கு வசதியான இடத்தில் தேவன் வாசம்பண்ணவேண்டும் என்று மனுஷன் விரும்புகிறான். ஆனால் தேவனுக்கோ வாசஸ்தலமோ, ஓய்வு எடுக்கிற ஸ்தலமோ, நித்திரைபண்ணுகிற ஸ்தலமோ தேவையில்லை.

தேவன் மனுஷர் கைகளாலே பணிவிடை கொள்ளுகிறதுமில்லை (அப் 17:25). தேவனுக்கு எதுவும் தேவையில்லை. தேவன் எல்லாவற்றையும் பராமரிக்கிறவர். நாம் தேவனை பராமரிக்க வேண்டிய அவசியமில்லை. நம்முடைய உதவியோ, ஒத்தாசையோ, பராமரிப்போ, பாதுகாப்போ தேவனுக்குத் தேவையில்லை. தேவன் தம்மிலே தாமே பரிபூரணமாக இருக்கிறார். நம்மிடத்திலோ நன்மையான காரியம் எதுவுமில்லை. குறைவான நம்மால் நிறைவான தேவனுக்கு பணிவிடை செய்ய முடியாது. நம்முடைய பணிவிடையும் தேவனுக்குத் தேவையில்லாதது.

தேவன் நம்மோடு கூடயிருக்கிறார். அவர் நம் மத்தியிலே இருக்கிறார். நாம் தேவனைத் தேடிக் கண்டுபிடிக்கவேண்டும். தேவனுடைய பரிசுத்த பிரசன்னம் நம் மத்தியிலே இருக்கிறது. தேவனே நம்மை சிருஷ்டித்தவர். நம்மை உண்டாக்கின தேவன் எங்கே இருக்கிறாரென்று நாமே தேடிக்கண்டுபிடிக்கவேண்டும். தேவன் ஒருவர் இருக்கிறார் என்று நமக்கு யாரும் நிரூபிக்க வேண்டியதில்லை. நம்முடைய சொந்த வல்லமையினாலோ, சுய அறிவினாலோ, தேவன் இருக்கிறார் என்பதை நம்மால் உறுதிபண்ண முடியாது. மனுஷனுடைய அறிவு தேவனைக் கண்டுபிடிப்பதற்குப் போதுமானதல்ல. மனுஷஅறிவு குறைவுள்ளது. நம்முடைய அறிவு குறைவானது என்பது தேவனுக்கும் தெரியும். ஆகையினால் தேவன் தாமே தம்மை மனுஷருக்கு வெளிப்படுத்துகிறார். தேவனைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கு நமக்கு ஒரு உபாயமும் இல்லையென்றாலும், கர்த்தராகிய தேவனை நாம் தடவியாகிலும் கண்டுபிடித்துத் தேடவேண்டும்.

அறியாமையுள்ள காலங்கள்

அறியாமையுள்ள காலங்களை தேவன் காணாதவர்போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார் (அப் 17:30).

அத்தேனே பட்டணத்திலுள்ள புறஜாதி ஜனங்கள் தங்கள் விக்கிரகாராதனையிலிருந்து விடுபட வேண்டும். தங்கள் பாவங்களுக்காக மனந்திரும்பவேண்டும். மார்ஸ் மேடையில் கூடியிருக்கிற ஜனங்களுக்கு முன்பாக பவுல் பிரசங்கம்பண்ணுகிற போது, இந்தச் சத்தியத்தை வலியுறுத்திக் கூறுகிறான். அவர்கள் அறியாதிருக்கிற தேவனை பவுல் அவர்களுக்கு அறிவிக்கிறான். இப்போது அவர்கள் மனந்திரும்பி தேவனிடத்திற்குத் திரும்பி வரவேண்டுமென்று பிரசங்கம் செய்கிறான். அவர்களெல்லோரும் ஏராளமான விக்கிரகங்களை ஆராதித்து வருகிறார்கள். அவர்கள் விக்கிரகாராதனையை விட்டுவிட்டு, ஜீவனுள்ள, ஒன்றான மெய்த்தேவனை ஆராதிப்பதற்கு மனந்திரும்பி, தங்களை ஒப்புக்கொடுக்கவேண்டும்.

புறஜாதியார் மத்தியில் சுவிசேஷம் அறிவிக்கப்படுவதற்கு "முந்தின காலம்" அவர்களுக்கு "அறியாமையுள்ள காலங்களாக" இருந்தது. இக்காலத்தில் அவர்கள் மெய்யான தேவனை அறிந்துகொள்ளவில்லை. தேவனுக்குரிய காரியங்கள் அவர்களுக்கு அந்நிய காரியங்களாக இருந்தது. தேவனை அறியாமல் அவர்கள் விக்கிரகங்களை ஆராதனை செய்தார்கள். மெய்யான தேவனை அவர்கள் அறியாமல் "அறியப்படாத தேவனை", அறியாமலேயே ஆராதிக்கிறார்கள். அறியாமையுள்ள இந்தக் காலங்களை தேவன் காணாதவர் போலிருக்கிறார். தேவனுடைய பொறுமையினாலும், கிருபையினாலும் நாம் சத்தியத்தை அறிந்துகொள்கிறோம்.

விக்கிரகாராதனைக் காரருக்கு, அறியாமையுள்ள காலம் இருந்தது. ஆனால் இப்போதோ தேவன் தமது தெய்வீக கிருபையினால் அவர்களுக்கு தம்மைப்பற்றிய அறிவை வெளிப்படுத்தியிருக்கிறார். "சென்ற காலங்களில் அவர் சகல ஜனங்களையும் தங்கள் தங்கள் வழிகளிலே நடக்க விட்டிருந்தும், அவர் நன்மை செய்துவந்து, வானத்திலிருந்து மழைகளையும் செழிப்புள்ள காலங்களையும் நமக்குத் தந்து, ஆகாரத்தினாலும் சந்தோஷத்தினாலும் நம்முடைய இருதயங்களை நிரப்பி, இவ்விதமாய் அவர் தம்மைக்குறித்துச் சாட்சி விளங்கப் பண்ணாதிருந்ததில்லை" (அப் 14:16,17).

அத்தேனே பட்டணத்தார் தங்கள் அறியாமையினால் விக்கிரகங்களை தெய்வங்களாக ஆராதனை செய்தார்கள். தேவனோ அவர்கள் அறியாமையினால் செய்த தப்பிதங்களை தம்முடைய பொறுமையினால் காணாதவர் போலிருந்தார். அவர்களை உடனே தண்டித்து விடாமல், தேவன் தம்முடைய பொறுமையினால், அவர்களுடைய அறியாமையைச் சகித்துக்கொண்டார். ஆனால் இப்போதோ பவுலின் மூலமாக அவர்களுக்கு கிறிஸ்துவின் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய அறியாமையின் காலம் முடிந்துபோயிற்று. இனிமேல் அவர்கள் விக்கிரகங்களை ஆராதிக்காமல் மனந்திரும்ப வேண்டும்.

"மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும்" தேவன் கட்டளையிடுகிறார். விக்கிரகாராதனைக்காரர் தங்களுடைய மனதையும், விக்கிரகாராதனை வழியையும் மாற்றிக்கொள்ளவேண்டும். அவர்களுடைய பாவங்களுக்கு வெட்கப்பட வேண்டும். பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டும். தேவனிடத்தில் திரும்பி வரவேண்டும். இது தேவனுடைய கட்டளை. நம்முடைய நன்மைக்காகவே தேவன் இந்தக் கட்டளையை நமக்குக் கொடுக்கிறார். நம்முடைய நன்மைக்காகவே தேவன் தம்முடைய அதிகாரத்தை நம்மீது காண்பிக்கிறார். தேவனை ஆராதிப்பது நம்முடைய கடமையும் சிலாக்கியமுமாயிருக்கிறது.

மனந்திரும்ப வேண்டும் என்னும் கட்டளை எல்லா இடங்களிலுமுள்ள, எல்லா மனுஷருக்கும் கொடுக்கப்படுகிறது. எல்லா மனுஷருமே பாவம் செய்திருக்கிறார்கள். ஆகையினால் எல்லோருமே மனந்திரும்ப வேண்டும். மனந்திரும்ப வேண்டும் என்னும் அழைப்பு எல்லா மனுஷருக்கும் கொடுக்கப்படுகிறது. மனந்திரும்புகிற எல்லோருமே, மனந்திரும்புதலின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வார்கள். இயேசுகிறிஸ்துவைத் தங்களுடைய இரட்சகராக ஏற்றுக்கொண்டவர்களுக்கு பாவமன்னிப்பு உண்டாகும். மனுஷருடைய பாவங்களுக்கு, இதற்கு முன்பு இருந்ததைவிட, பாவமன்னிப்பு இப்போது சமீபமாகயிருக்கிறது. இதற்கு முன்பு பாவமன்னிப்பின் வாசல் திறக்கப்பட்டிருந்ததைவிட, இப்போது விரிவாய்த் திறக்கப்பட்டிருக்கிறது. பாவமன்னிப்பின் வாக்குத்தத்தம் இப்போது பூரணமாய் உறுதிபண்ணப்பட்டிருக்கிறது. ஆகையினால் இப்பொழுது எங்குமுள்ள மனுஷரெல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார்.

நியாயந்தீர்ப்பார்

மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளக்கப்பண்ணினார் என்றான் (அப் 17:31).

மனுஷரெல்லோரும் மனந்திரும்ப வேண்டுமென்று தேவன் கட்டளையிடுகிறார். தேவனுடைய கட்டளைக்கு ஒரு காரணம் உண்டு. ஏனெனில் அவர் ஒரு நாளை குறித்திருக்கிறார். அந்த நாளிலே அவர் பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார். தேவனே இந்தப் பூமியையும் பூமியிலுள்ள சகலத்தயும் உண்டாக்கினவர். அவரே இந்தப் பூமியை நியாயந்தீர்க்கப்போகிறவர். தேவன் இப்போது இந்தப் பூமியை ஆளுகை செய்கிறார். இந்தப் பூமியில் தம்முடைய ஆளுகைக்குக் கீழ்ப்படிந்து, உண்மையுள்ளவர்களாய் ஜீவித்தவர்களுக்கு, நியாயத்தீர்ப்பு நாளின்போது வெகுமதியைக் கொடுப்பார். தம்முடைய கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் முரட்டாட்டம் பண்ணியவர்களையோ தேவன் அந்நாளிலே தண்டிப்பார்.

நியாயத்தீர்ப்பின் நாளை தேவனே நியமித்திருக்கிறார். எல்லா மனுஷரையும் நியாயந்தீர்ப்பதற்காக இந்த நாள் நியமிக்கப்பட்டிருக்கிறது. இந்த நாளில் வெகுமதி அல்லது தண்டனை கொடுக்கப்படும். எல்லா நாளுக்கும் இந்த நாளே கடைசி நாளாகயிருக்கும்.

தேவன் நீதியுள்ளவர். ஆகையினால் அவர் பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார். தேவன் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு பூலோகத்தை நியாயந்தீர்ப்பார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே தேவன் நியமித்திருக்கிற மனுஷன். இயேசு கிறிஸ்துவிடத்தில் எல்லா நியாயத்தீர்ப்புக்களும் ஒப்புக்கொடுக்கப் பட்டிருக்கிறது. சர்வ சிருஷ்டிகளையும் நீதியாய் நியாயந்தீர்க்கிற அதிகாரம் இயேசு கிறிஸ்துவிடத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது.

தேவன் இயேசுகிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பியிருக்கிறார். பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்க்க, தேவன் இயேசுகிறிஸ்துவை நியமித்திருக்கிறார் என்பதற்கு, இதுவே மிகப்பெரிய ஆதாரமாகயிருக்கிறது. இயேசுகிறிஸ்துவே நியாயந்தீர்க்கப் போகிறார் என்பதன் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணும்படியாக, தேவன் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பியிருக்கிறார்.

தேவன் எல்லா மனுஷருக்கும் நிச்சயத்தைக் கொடுக்கிறார். மனுஷருடைய விசுவாசம் கட்டியெழுப்படவேண்டும். விசுவாசம் வளர்ச்சி பெறுவதற்கு தேவையான எல்லா ஆதாரங்களையும் தேவன் மனுஷனுக்குக் கொடுக்கிறார். தேவன் குறித்திருக்கிற நாளில் மனுஷர் நியாயந்தீர்க்கப்படுவார்கள் என்பதை நாம் விசுவாசிக்கவேண்டும். பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பதற்கு, தேவன் இயேசுகிறிஸ்துவை நியமித்திருக்கிறார் என்பதையும் நாம் விசுவாசிக்கவேண்டும். கிறிஸ்துவே நம்முடைய நியாயாதிபதியாக இருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் சத்துருக்கள் இந்தச் சத்தியத்தைப் புரிந்துகொண்டு, அவருக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவதை நிறுத்திக்கொள்ளவேண்டும். அவருடைய சமுகத்திற்கு முன்பாக நடுங்கி தாழவிழவேண்டும். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கோ இந்தச் சத்தியம் மிகுந்த ஆறுதலையும் சந்தோஷத்தையும் கொடுக்கவேண்டும். நாம் இந்தச் சத்தியத்தினிமித்தமாக தேவனுடைய சமுகத்தில் சந்தோஷமாக ஆர்ப்பரிக்கவேண்டும்.

நம்முடைய பாவங்களுக்கு நாம் மனந்திருந்தி, தேவனிடத்தில் திரும்பி வரவேண்டும். நியாயத்தீர்ப்பு நாளின்போது நாம் மனந்திருந்தியிருக்கிறோமா என்பதும், தேவனிடத்தில் வந்திருக்கிறோமா என்பதும் நியாயமாய் விசாரிக்கப்படும். தேவனை ஆராதிக்கிறவர்கள் நியாயத்தீர்ப்பு நாளின்போது ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வார்கள். தேவனை ஆராதிக்காமல், விக்கிரகங்களை ஆராதிக்கிறவர்களோ ஆக்கினைத்தீர்ப்பைப் பெற்றுக் கொள்வார்கள். தேவன் இப்படிப்பட்ட நியாயத்தீர்ப்பு நாளை நியமித்திருக்கிறார் என்பதை பவுல் அத்தேனே பட்டணத்தாருக்கு விவரமாகச் சொல்லுகிறான். ஆகையினால் அவர்கள் தங்கள் விக்கிரகாராதனையிலிருந்து மனந்திரும்பி, மெய்யான தேவனை ஆராதிக்க வேண்டும் என்று அவர்களுக்கு போதகம்பண்ணுகிறான்.

அத்தேனே ஊழியம்
அப் 17 : 32-34

அப் 17:32. மரித்தோரின் உயிர்த்தெழுதலைக் குறித்து அவர்கள் கேட்டபொழுது, சிலர் இகழ்ந்தார்கள். சிலர்: நீ சொல்லுகிறதை இன்னொரு வேளை கேட்போம் என்றார்கள்.

அப் 17:33. இப்படியிருக்க, பவுல் அவர்களை விட்டுப் போய்விட்டான்.

அப் 17:34. சிலர் அவனைப் பற்றிக்கொண்டு, விசுவாசிகளானார்கள். அவர்களில் மார்ஸ்மேடையின் நியாயாதிபதிகளில் ஒருவனாகிய தியொனீசியு என்பவனும், தாமரி என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீயும், இவர்களுடனே வேறு சிலரும் இருந்தார்கள்.

மரித்தோரின் உயிர்த்தெழுதல்

மரித்தோரின் உயிர்த்தெழுதலைக் குறித்து அவர்கள் கேட்டபொழுது, சிலர் இகழ்ந்தார்கள். சிலர்: நீ சொல்லுகிறதை இன்னொருவேளை கேட்போம் என்றார்கள். இப்படியிருக்க, பவுல் அவர்களை விட்டுப் போய் விட்டான் (அப் 17:32,33).

கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பவுல் செல்லுமிடங்களிலெல்லாம் பிரசங்கம் பண்ணுகிறான். பிரசங்கத்தைக் கேட்கிறவர்களில் சிலர் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறார்கள். ஏராளமானோர் விசுவாசியாமல் போய்விடுகிறார்கள். அத்தேனே பட்டணத்திலும் இப்படிப்பட்ட சூழ்நிலையே உருவாயிற்று. ஒரு சிலர் மாத்திரமே விசுவாசிகளாகிறார்கள். மற்றவர்கள் பவுலையும் அவனுடைய உபதேசத்தையும் பரியாசம் பண்ணுகிறார்கள். அவனை இகழ்கிறார்கள். மரித்தோரின் உயிர்த்தெழுதலைக் குறித்துப் பவுல் பேசுகிறவரையிலும், அவர்கள் அவனுடைய உபதேசத்தைப் பொறுமையோடு கேட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால் அவன் மரித்தோரின் உயிர்த்தெழுதலைக் குறித்து பேசியபோதோ, சிலர் அவனை இகழுகிறார்கள்.

பவுல் மரித்தோரின் உயிர்த்தெழுதலைக்குறித்துப் பேசும்போது, இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் குறித்தே பேசினான். இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்தது மெய்யான சத்தியம். ஆனால் அவர்களுக்கோ இது நூதன உபதேசமாகயிருக்கிறது. இந்த உபதேசத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயில்லை. ஆகையினால் அவர்கள் பவுலையும், அவனுடைய உபதேசத்தையும் இகழுகிறார்கள்.

அத்தேனே பட்டணத்தார், தாங்கள் விரும்புகிற மனுஷர் மரித்தபின்பு, அவர்களுக்கு சிலைகளைச் செய்து பராட்டுவது வழக்கம். அந்தப் பட்டணத்தில் மரித்துப்போன ஒருவரும் இதுவரையிலும் எழும்பி வந்ததில்லை. மரித்துப்போன அவர்களுடைய தலைவர்களோ, ராஜாக்களோ, யாரும் உயிரோடு இதுவரையிலும் எழும்பி வரவில்லை. மரித்துப்போன அவர்கள் எழும்பி வருவார்கள் என்னும் எதிர்பார்ப்பும் அத்தேனே பட்டணத்தாரிடம் இல்லை. ஆகையினால் இந்த உபதேசத்தை இகழுகிறார்கள். கர்த்தருடைய பரிசுத்தவான்களுக்கு ஆறுதலாகவும் சந்தோஷமாகவும் இருக்கிற உயிர்த்தெழுதலின் உபதேசம், அத்தேனே பட்டணத்தாருக்கு இகழ்ச்சியும் உபதேசமாயிற்று.

இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் ஜீவனுள்ளது. மனுஷரை நித்திய ஜீவனுக்கு நேராக வழிநடத்தக்கூடியது. இரட்சிக்கப்படுகிற நமக்கு ஆசீர்வாதமாகயிருக்கிற இந்த உபதேசம், கெட்டுப்போகிறவர்களுக்கு பைத்தியமாகத் தெரிகிறது. நாம் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்போது, ஒரு சிலர் நம்மையோ, நாம் பிரசங்கிக்கிற சுவிசேஷத்தையோ இகழ்ச்சியாகப் பேசினால், இது புதுமையான சம்பவமல்ல. பவுலுக்கு ஏற்பட்ட அனுபவமே நமக்கும் ஏற்பட்டிருக்கிறது என்று நினைக்கவேண்டும்.

வேறு சிலர் பவுலின் உபதேசத்தை சிந்தித்துப் பார்ப்பதற்கும், தியானித்துப் பார்ப்பதற்கும் தங்களுக்கு காலஅவகாசம் தேவைப்படுவதாக நினைக்கிறார்கள். அவர்கள் பவுலிடம் "நீ சொல்லுகிறதை இன்னொரு வேளை கேட்போம்" என்று சொல்லிவிடுகிறார்கள். இவர்கள் பவுலின் பிரசங்கத்தை எதிர்க்கவுமில்லை, ஏற்றுக்கொள்ளவுமில்லை. சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளாதவர்கள், அதன் ஆசீர்வாதத்தை இழந்துபோவார்கள். சுவிசேஷத்தை எதிர்க்கவில்லை என்பதற்காக, அவர்களுக்கு எந்த ஆசீர்வாதமும் உண்டாகாது. சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டு, இயேசுகிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறவர்கள் மாத்திரமே இரட்சிக்கப்படுவார்கள்.

ஒருவருக்கு கிறிஸ்துவின் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படும்போது, அவர் காலதாமதம் பண்ணாமல், தன்னுடைய ஆத்தும இரட்சிப்பைக் குறித்துத் தீர்மானம்பண்ணவேண்டும். ஆத்தும இரட்சிப்பு மிகவும் முக்கியமானது. காலதாமதம் பண்ணினால் இரட்சிப்பை இழந்துபோவதற்கும் வாய்ப்புள்ளது. காலதாமதம் பண்ணுவது பிசாசின் தந்திரம். இப்பொழுதே இரட்சிக்கப் படுவதற்கு வாய்ப்பிருக்கும்போது, சாத்தானோ அவர்களுடைய உள்ளத்தில் கிரியை செய்து, இன்னொரு வேளையில் இரட்சிப்பைப்பற்றி யோசித்துப் பார்க்கலாம் என்று அவர்களை வஞ்சிக்கிறான்.

பவுல் அத்தேனே பட்டணத்தில் தன்னுடைய ஊழியத்தை நிறைவேற்றிய பின்பு, அவர்களை விட்டுப் போய்விடுகிறான். அத்தேனே பட்டணத்தில் ஏராளமானோர் இரட்சிக்கப்பட்டு பெரிய எழுப்புதல் உண்டாகவில்லை. சுவிசேஷத்தைக் கேட்டவர்களில் சிலர் இகழுகிறார்கள். வேறு சிலரோ இன்னொரு வேளை கேட்போம் என்று காலதாமதம் பண்ணுகிறார்கள். இப்படியிருக்க பவுலோ அவர்களைவிட்டுப் போய்விடுகிறான்.

சிலர் விசுவாசிகளானார்கள்

சிலர் அவனைப் பற்றிக்கொண்டு, விசுவாசிகளானார்கள். அவர்களில் மார்ஸ்மேடையின் நியாயாதிபதிகளில் ஒருவனாகிய தியோனீசியு என்பவனும், தாமரி என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீயும், இவர்களுடனே வேறு சிலரும் இருந்தார்கள் (அப் 17:34).

அத்தேனே பட்டணத்தாரில் சிலர் பவுலின் பிரசங்கத்தை இகழ்ந்து பேசினாலும், வேறு சிலர் பவுலைப் பற்றிக்கொண்டு விசுவாசிகளாகிறார்கள். பவுல் அத்தேனே பட்டணத்தைவிட்டுப் புறப்பட்டுப்போய்விடுகிறான். இந்தப் பட்டணத்தில் விசுவாசிகளானவர்கள் யாரும் பவுலோடுகூட புறப்பட்டுப்போகவில்லை. இவர்கள் அத்தேனே பட்டணத்திலேயே தங்கியிருக்கிறார்கள்.

இவர்களில் இரண்டு பேருடைய பெயர்கள் இங்கு குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவர்களில் மார்ஸ்மேடையின் நியாயாதிபதிகளில் ஒருவனாகிய தியோனீசியு என்பவன். பட்டணத்து அதிகாரிகளில் இவனும் ஒருவன். மார்ஸ் மேடையில் பவுலை விசாரிக்கிற நியாயாதிபதிகளில் இவனும் ஒருவன். பவுலின் நியாயாதிபதியே இப்போது இரட்சிக்கப்பட்டிருக்கிறான்.

விசுவாசிகளானவர்களில் ஒரு ஸ்திரீயும் இருக்கிறாள். இவளுடைய பெயர் தாமரி. அத்தேனே பட்டணத்தில் மிகப்பெரிய ஆத்தும அறுவடை நடைபெறவில்லை. ஒரு சிலரே இரட்சிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனாலும் பவுலின் பிரயாசம் வீணாய்ப் போய்விடவில்லை. ஒரு ஆத்தும இரட்சிக்கப்பட்டாலும் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும். கர்த்தர் தனக்கு கொடுத்த சுவிசேஷ ஊழியத்தை பவுல் உண்மையாய் நிறைவேற்றியிருக்கிறான். பவுல் நட்டாலும், தண்ணீர் பாய்ச்சினாலும், தேவனே விளையச் செய்கிறவர்.

18 அதிகாரம்

பவுல் கொரிந்து பட்டணத்திற்கு வருகிறான். ஆக்கில்லா, பிரிஸ்கில்லாள் ஆகியோரைச் சந்திக்கிறான். யூதருடைய ஜெபஆலயத்தில் உபதேசம்பண்ணுகிறான். யூதர்கள் அவனை ஏற்றுக்கொள்ளவில்லை. பவுல் புறஜாதியாரிடத்திற்குப் போகிறான் (அப் 18:1-6). புறஜாதியார் மத்தியில் சுவிசேஷ ஊழியம் நன்றாக நடைபெறுகிறது. அநேகர் சுவிசேஷத்தைக் கேட்டு விசுவாசித்து ஞானஸ்நானம் பெறுகிறார்கள். பவுல் ஒருவருஷமும் ஆறுமாதமும் அங்கே தங்கி தேவவசனத்தை அவர்களுக்குள்ளே உபதேசம்பண்ணிக்கொண்டு வருகிறான் (அப் 18:7-11).

பவுலின் ஊழியத்திற்கு யூதர்கள் எதிர்த்து நிற்கிறார்கள். அகாயா நாட்டிற்கு அதிபதியான கல்லியோன் என்பவனுக்கு முன்பாக பவுலை நிறுத்துகிறார்கள். ஆனால் கல்லியோனோ பவுலின் வழக்கை விசாரியாமல், அவர்களை நியாயாசனத்தினின்று துரத்திவிடுகிறான் (அப் 18:12-17). பவுல் கொரிந்து பட்டணத்தில் ஊழியம் செய்த பின்பு பல தேசங்களுக்கும் பிரயாணம் செய்து, எருசலேமுக்கு வருகிறான் (அப் 18:18-23). அப்பொல்லோ என்பவன் எபேசு பட்டணத்திற்கு வந்து ஊழியம் செய்கிறான் (அப் 18:24-28).

கொரிந்து பட்டணம்
அப் 18 : 1-6

அப் 18:1. அதன்பின்பு பவுல் அத்தேனே பட்டணத்தை விட்டு, கொரிந்து பட்டணத்துக்கு வந்து:

அப் 18:2. யூதரெல்லாரும் ரோமாபுரியை விட்டுப்போகும்படி கிலவுதியுராயன் கட்டளையிட்டபடியினாலே, இத்தாலியாவிலிருந்து புதிதாய் வந்திருந்த பொந்துதேசத்தானாகிய ஆக்கில்லா என்னும் நாமமுள்ள ஒரு யூதனையும் அவன் மனைவியாகிய பிரிஸ்கில்லாளையும் அங்கே கண்டு, அவர்களிடத்திற்குப் போனான்.

அப் 18:3. அவர்கள் கூடாரம்பண்ணுகிற தொழிலாளிகளாயிருந்தார்கள்; தானும் அந்தத்தொழில் செய்கிறவனானபடியினாலே அவர்களிடத்தில் தங்கி, வேலைசெய்துகொண்டு வந்தான்.

அப் 18:4. ஓய்வுநாள்தோறும் அவன் ஜெபஆலயத்திலே சம்பாஷணைபண்ணி, யூதருக்கும் கிரேக்கருக்கும் புத்திசொன்னான்.

அப் 18:5. மக்கெதோனியாவிலிருந்து சீலாவும் தீமோத்தேயும் வந்தபோது, பவுல் ஆவியில் வைராக்கியங்கொண்டு, இயேசுவே கிறிஸ்து என்று யூதருக்குத் திருஷ்டாந்தப்படுத்தினான்.

அப் 18:6. அவர்கள் எதிர்த்துநின்று தூஷித்த போது, அவன் தன் வஸ்திரங்களை உதறி: உங்கள் இரத்தப்பழி உங்கள் தலையின் மேல் இருக்கும்; நான் சுத்தமாயிருக்கிறேன்; இதுமுதல் புறஜாதியாரிடத்திற்குப் போகிறேனென்று அவர்களுடனே சொல்லி,

கூடாரம்பண்ணுகிற தொழில்

அதன்பின்பு பவுல் அத்தேனே பட்டணத்தை விட்டு, கொரிந்து பட்டணத்துக்கு வந்து: யூதரெல்லாரும் ரோமாபுரியை விட்டுப்போகும்படி கிலவுதியுராயன் கட்டளையிட்ட படியினாலே, இத்தாலியாவிலிருந்து புதிதாய் வந்திருந்த பொந்துதேசத்தானாகிய ஆக்கில்லா என்னும் நாமமுள்ள ஒரு யூதனையும் அவன் மனைவியாகிய பிரிஸ்கில்லாளையும் அங்கே கண்டு, அவர்களிடத்திற்குப் போனான். அவர்கள் கூடாரம்பண்ணுகிற தொழிலாளிகளாயிருந்தார்கள்; தானும் அந்தத்தொழில் செய்கிறவனான படியினாலே அவர்களிடத்தில் தங்கி, வேலைசெய்துகொண்டு வந்தான் (அப் 18:1-3).

அத்தேனே பட்டணத்தில் பவுலை யாரும் உபத்திரவப்படுத்தவில்லை. அந்தப் பட்டணத்திலிருந்து அவனை யாரும் துரத்திவிடவுமில்லை. அதே வேளையில் அந்தப் பட்டணத்திலுள்ள ஜனங்கள் பவுலின் பிரசங்கத்தைக் கேட்டு இரட்சிக்கப்படவுமில்லை. தான் அத்தேனே பட்டணத்தில் இருப்பதினால் அதிகப் பிரயோஜனம் ஒன்றுமில்லை என்று தீர்மானித்து, பவுல் அவர்களைவிட்டு கொரிந்து பட்டணத்திற்குப் போய்விடுகிறான்.

பவுலும் அதிகக் கல்வி கற்றவன். கமாலியேலின் பாதபடியில் வேதவாக்கியங்களை நன்றாய் ஆராய்ந்து கற்றிருக்கிறான். அதே வேளையில் அவன் கூடாரம்பண்ணுகிற தொழிலையும் செய்கிறான். யூதமார்க்கத்தார் தங்களுடைய பிள்ளைகளுக்கு ஏதாவது ஒரு கைத்தொழிலைக் கற்றுக்கொடுப்பது வழக்கம். அவர்கள் எவ்வளவு ஐசுவரியவான்களாக இருந்தாலும், எவ்வளவு அதிகமான கல்வி கற்றவர்களாக இருந்தாலும், ஏதாவது ஒரு கைத்தொழிலையும் கற்றுக்கொள்வார்கள். பிறரை ஏமாற்றிப் பிழைப்பதற்குப் பதிலாக, ஏதாவது ஒரு தொழிலை கண்ணியமாகச் செய்து பிழைத்துக்கொள்வார்கள்.

யூதருடைய வழக்கத்தின் பிரகாரம் பவுல் தன் வாலிப நாட்களில் கூடாரம் பண்ணுகிற தொழிலைக் கற்றுக் கொண்டான். பிற்காலத்தில் அவன் பல ஊர்களுக்கும் சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கித்தாலும், தான் கற்றுக்கொண்ட கூடாரம் பண்ணுகிற தொழிலையும் மறந்துவிடவில்லை.

பவுல் பல பட்டணங்களில் சபைகளை ஸ்தாபித்திருக்கிறான். அவர்களுக்கு சுவிசேஷத்தின் மூலமாய் ஞானநன்மைகளை விதைத்திருக்கிறான். அவர்களிடத்திலிருந்து சரீர நன்மைகளைப் பெற்றுக்கொள்கிற உரிமை பவுலுக்கு உண்டு. ஆனாலும் பிறருடைய உதவியை எதிர்பார்க்காமல், பவுல் கூடாரம்பண்ணுகிற தொழிலைச் செய்து, தன்னுடைய அன்றாடத் தேவைகளைச் சந்தித்துக்கொள்கிறான். தன்னுடைய ஜீவனத்திற்காகப் பிறரை எதிர்பார்க்காமல், தன்னுடைய சொந்தக் கைகளினாலே வேலை செய்து, ஜீவனம்பண்ணுவது பவுலுடைய நற்பண்புகளில் ஒன்றாயிருக்கிறது.

பவுல் தாழ்மையுள்ளவன். சுறுசுறுப்புடன் வேலை செய்கிறவன். அறிவாற்றல் மிகுந்தவன். அதிகமாகச் சிந்திக்கக்கூடியவன். பவுல் தன்னுடைய மனதில் சிந்தித்து பல வேலைகளைச் செய்கிறான். அதே சமயத்தில் தன் கைகளால் வேலை செய்து பிழைப்பு நடத்துவதை தன்னுடைய தகுதிக்குக் குறைவானது என்று அவன் ஒருபோதும் நினைத்ததில்லை. கர்த்தருடைய ஊழியத்தைச் செய்கிறவர்கள், தன்னைப் போலவே ஏதாவது ஒரு கைத்தொழிலை செய்து, ஊழியமும் செய்யவேண்டும் என்று பவுல் ஆலோசனை சொல்லுகிறான். "நீங்கள் உயர்த்தப்படும்படி நான் என்னைத்தானே தாழ்த்தி தேவனுடைய சுவிசேஷத்தை இலவசமாய் உங்களுக்குப் பிரசங்கித்தேன்" (2கொரி 11:7) என்றும், "எவ்விதத்திலேயும் உங்களுக்குப் பாரமாயிராத படிக்கு ஜாக்கிரதையாயிருந்தேன், இனிமேலும் ஜாக்கிரதையாயிருப்பேன்" (2கொரி 11:8) என்றும் பவுல் தன் நிருபத்தில் எழுதுகிறான்.

பவுல் கூடாரம்பண்ணுகிற தொழிலைச் செய்தாலும், அந்தத் தொழிலில் மூழ்கிப்போய்விடவில்லை. அந்தத் தொழிலை மாத்திரம் செய்து கர்த்தருடைய ஊழியத்தைச் செய்யாமல் உதாசீனப்படுத்திவிடவில்லை. கொரிந்து பட்டணத்தில் ஆக்கில்லா அவன் மனைவி பிரிஸ்கில்லாள் ஆகியோரைக் கண்டு அவர்களிடத்தில் தங்கி, கூடாரம்பண்ணுகிற வேலையைச் செய்கிறான். இவனுடைய வேலைக்கு நாள் சம்பளம் மாத்திரமே கொடுக்கப்படும். வேலை செய்தால் சம்பளம். வேலை செய்யாவிட்டால் சம்பளமில்லை. தனக்குக் கிடைத்த கொஞ்சம் வருமானத்தை வைத்து, புசித்து, சரீர பெலனடைந்து, கர்த்தருக்கு வைராக்கியமாக ஊழியம் செய்கிறான்.

பவுல் மிகச்சிறந்த அப்போஸ்தலன். ஆனாலும் சாதாரண ஜனங்களான ஆக்கில்லா, பிரிஸ்கில்லாள் ஆகியோரிடத்தில் தங்கி வேலை செய்வதற்கு சம்மதிக்கிறான். இவர்கள் இருவரும் தேவனுடைய மார்க்கத்தை திட்டமாய் விவரித்துக் காண்பிக்கக்கூடியவர்கள். பிற்காலத்தில், பவுல் இவர்கள் இருவரையும் கிறிஸ்துவுக்குள் தன் உடன் வேலையாட்களாக அங்கீகரிக்கிறான் (ரோமர் 16:3). பவுல் வேலை செய்யும் ஸ்தலத்தை தேர்ந்தெடுக்கும்போதே, தன்னுடைய ஊழியத்திற்கு ஆதரவான ஸ்தலத்தில் வேலை செய்ய தேர்ந்தெடுக்கிறான். தன்னுடைய ஊழியத்தில் பிற்காலத்தில் யார் உதவியாகயிருப்பார்கள் என்பதை நிதானித்து அறிந்து, அவர்களிடத்தில் போய் தங்கி வேலை செய்கிறான்.

ஆக்கில்லா ஒரு யூதன். பொந்து தேசத்தில் பிறந்தவன். பின்பு இவன் இத்தாலி தேசத்திலிருந்து கொரிந்து பட்டணத்திற்கு வந்திருக்கிறான். கிலவுதியுராயனுடைய காலத்தில், யூதரெல்லாரும் ரோமாபுரியைவிட்டு வெளியேறும்படி கட்டளை பிறப்பிக்கப்பட்டது. இந்தக் கட்டளையின் பிரகாரம் ஆக்கில்லா இத்தாலி தேசத்தைவிட்டு வெளியேற வேண்டியதாயிற்று. ஆக்கில்லா இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்ககிற விசுவாசியாகயிருந்தாலும், ஒரு யூதனாகப் பாவிக்கப்பட்டு, ரோமபுரியைவிட்டு வெளியேற்றப்பட்டிருக்கிறான். யூதர்கள் கிறிஸ்துவின் சீஷர்களை உபத்திரவப் படுத்துகிறார்கள். புறஜாதியாரோ யூதரையும் கிறிஸ்துவின் சீஷரையும் உபத்திரவப்படுத்துகிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகளை உபத்திரவப் படுத்துகிறவர்களுக்கு, ஏதாவது ஓரிடத்திலிருந்து அவர்களுக்கும் உபத்திரவம் வருகிறது.

யூதருக்கும் கிரேக்கருக்கும்

ஓய்வுநாள்தோறும் அவன் ஜெப ஆலயத்திலே சம்பாஷணைபண்ணி, யூதருக்கும் கிரேக்கருக்கும் புத்திசொன்னான் (அப் 18:4).

அக்காலத்தில் அப்போஸ்தலர்கள் சம்பாஷணை பண்ணி சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறார்கள். யாரையும் கட்டாயப்படுத்தவில்லை. பலவந்தப்படுத்தவில்லை. சம்பாஷணை பண்ணி, புத்திசொல்லி சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறார்கள். அப்போஸ்தலர் பவுல் வேதவசனத்தைப் போதகம்பண்ணுகிறவன். அதே வேளையில் அவன் ஞானமாய்ச் சம்பாஷணைபண்ணி புத்திசொல்லுகிறவன். ஒய்வுநாள்தோறும் பவுல் ஜெபஆலயத்திலே சம்பாஷணை பண்ணுகிறான். அங்குள்ள யூதருக்கும் கிரேக்கருக்கும் புத்தி சொல்லுகிறான்.

சுவிசேஷத்தின் முக்கியத்துவத்தை பவுல் அவர்களுக்கு எடுத்துச்சொல்லுகிறான். காலதாமதம் பண்ணாமல் உடனடியாக இரட்சிக்கப்படுவதற்கு அவர்கள் கவனம் செலுத்தவேண்டும் என்று வலியுறுத்துகிறான். அவர்கள் மீது அன்போடும் கரிசனையோடும் புத்திசொல்லி சம்பாஷணை பண்ணுகிறான். அவர்களுக்கு இரட்சிப்பின் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது. இதை அவர்கள் ஒதுக்கித் தள்ளிவிடக்கூடாது என்பதில், பவுல் மிகுந்த கவனம் செலுத்தி, அவர்களோடு சம்பாஷணை பண்ணி, அவர்களுக்குப் புத்திசொல்லுகிறான். அவனுடைய சம்பாஷணையினால் நல்ல பலன் உண்டாயிற்று. அநேகர் அவனுடைய சம்பாஷணையை ஏற்றுக்கொண்டு, இயேசுகிறிஸ்துவுக்குத் தங்களை ஒப்புக்கொடுக்கிறார்கள்.

சீலாவும் தீமோத்தேயும்

மக்கெதோனியா விலிருந்து சீலாவும் தீமோத்தேயும் வந்தபோது, பவுல் ஆவியில் வைராக்கியங்கொண்டு, இயேசுவே கிறிஸ்து என்று யூதருக்குத் திருஷ்டாந்தப்படுத்தினான் (அப் 18:5).

பவுல் கொரிந்து பட்டணத்திலிருக்கும்போது, மக்கெதோனியாவிலிருந்து சீலாவும் தீமோத்தேயுவும் பவுலினிடத்திற்கு வருகிறார்கள். இவர்கள் பவுலுக்கு ஊழியத்தில் உதவிசெய்வதற்காக வருகிறார்கள். இவர்கள் இருவரும் தன்னிடத்தில் வந்தபோது, பவுல் ஆவியிலே வைராக்கியங்கொள்கிறான். பவுலின் பிரசங்கத்தில் வேகமும் வைராக்கியமும் அதிகரிக்கிறது. தன்னுடைய பிரசங்கத்தின் வார்த்தைகளை உறுதிப்படுத்துகிறான். இயேசுவே கிறிஸ்து என்று யூதருக்குத் திருஷ்டாந்தப்படுத்துகிறான். சத்தியத்தைச் சாட்சியாய் அறிவிக்கிறான்.

புறஜாதியாரிடத்திற்குப் போகிறேன்

அவர்கள் எதிர்த்துநின்று தூஷித்தபோது, அவன் தன் வஸ்திரங்களை உதறி: உங்கள் இரத்தப்பழி உங்கள் தலையின் மேல் இருக்கும்; நான் சுத்தமாயிருக்கிறேன்; இதுமுதல் புறஜாதியாரிடத்திற்குப் போகிறேனென்று அவர்களுடனே சொல்லி, (அப் 18:6)

பவுல் ஆவியிலே வைராக்கியங்கொண்டு, இயேசுவே கிறிஸ்து என்று யூதருக்குத் திருஷ்டாந்தப்படுத்துகிறான். ஆனால் அவர்களோ பவுலின் பிரசங்கித்திற்கு எதிர்த்து நின்று, அவனையும் அவனுடைய பிரசங்கத்தையும் தூஷிக்கிறார்கள். சுவிசேஷத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறார்கள். அவர்களால் பவுலோடு எதிர்த்து நின்று விவாதம்பண்ண முடியவில்லை. நிதானமாகச் சிந்தித்து நல்ல வார்த்தைகளை அவர்களால் பேசமுடியவில்லை. தூஷண வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார்கள்.

பவுலோ அவர்களோடு எதிர்த்து நின்று போராடவில்லை. அவர்கள் இயேசு கிறிஸ்துவை விசுவாசியாமற் போனதினால், அவர்களை அப்படியே விட்டுவிடுகிறான். ஆவியில் வைராக்கியங்கொண்டு, இயேசுவே கிறிஸ்து என்று பவுல் யூதருக்குத் திருஷ்டாந்தப்படுத்தினான். ஆனால் அவர்களோ பவுலின் பிரசங்கத்திற்கு எதிர்த்து நின்று தூஷித்தபோது, பவுல் அதே ஆவியில் வைராக்கியங்கொண்டு அவர்களுக்கு விரோதமாக எதிர்த்துப் பேசுகிறான்.

பவுல், தன் வஸ்திரங்களை உதறி "உங்கள் இரத்தப்பழி உங்கள் தலையின்மேல் இருக்கும்" என்று சபிக்கிறான். தன் கால்களில் படிந்த தூசியை அவர்களுக்கு விரோதமாகத் துடைத்துப்போடுகிறான். அவர்களுடைய இரத்தப்பழியில் தனக்கு சம்பந்தமுமில்லை, பங்குமில்லை என்று அறிவிக்கிறான். தேவனுடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வருமென்று எச்சரித்துக் கூறுகிறான். தேவன் தனக்கு நியமித்து வைத்த ஊழியத்தை பவுல் நேர்த்தியாகச் செய்து முடித்திருக்கிறான்.

இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதும், விசுவாசியாமற்போவதும் ஜனங்கள் எடுக்க வேண்டிய முடிவு. அவர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கவில்லையென்றால், அதனால் பவுல் மீது இரத்தப்பழி எதுவும் வராது. அவர்களுடைய ஆத்துமாக்களின் இரத்தப்பழிக்கு பவுல் விலகி சுத்தமாகயிருக்கிறான். அவர்களுடைய இரத்தப்பழிக்கு அவர்களே காரணம். ஆகையினால் அந்த இரத்தப்பழி அவர்கள் தலையின் மேல் இருக்கிறது.

பவுல் ஒரு ஜாமக்காரனைப்போல ஊழியம் செய்கிறான். ஆபத்து வரும்போது அவர்களை எச்சரிக்கிறான். ஜனங்கள் எச்சரிப்படைந்து தங்களைக் காத்துக்கொள்ள முன்வரவேண்டும். யூதர்கள் தங்கள் அவிசுவாசத்தினால் அழிந்துபோனால், அவர்களுடைய அழிவுக்கு அவர்களே பொறுப்பு. அவர்களுடைய இரத்தப்பழியின் கணக்கை தேவன் பவுலினிடத்தில் கேட்கமாட்டார். அவர்களே அவர்களுடைய இரத்தப்பழிக்குப் பொறுப்பானவர்கள்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் சுவிசேஷ ஊழியத்தை உண்மையாய்ச் செய்யவேண்டும். பாவிகளுடைய பாவங்களை அவர்களுக்கு எச்சரித்துக் கூறவேண்டும். ஊழியக்காரரின் மனச்சாட்சி சுத்தமாயிருக்கவேண்டும். தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் செய்தியை ஊழியக்காரர்கள் உண்மையாயும், உத்திரவாதமாயும் அறிவிக்கவேண்டும். அப்போது ஜனங்கள் மனந்திரும்பினால் அவர்களுக்கு ஆசீர்வாதம் வரும். அவர்கள் இயேசுகிறிஸ்துவை விசுவாசியாமல், மனந்திரும்பாமல்போனால் அவர்களுக்குச் சாபம் வரும். அவர்களுடைய சாபத்தில் ஊழியக்காரருக்குப் பங்கில்லை. அவர்கள் அழிந்துபோனால், அவர்களுடைய அவிசுவாசத்தினிமித்தமே அவர்கள் அழிந்துபோவார்கள். இதனால் வரும் இரத்தப்பழிக்கு அவர்களே காரணம். அவர்களுடைய இரத்தப்பழி அவர்கள் தலையின் மேல் இருக்கும்.

பவுல் மிகவும் கடினமான வார்த்தைகளைக் கூறி சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறான். அவர்களை பயமுறுத்தவேண்டும் என்பது பவுலின் நோக்கமல்ல. தங்களை எதிர்நோக்கியிருக்கும் ஆபத்துக்களை அவர்கள் புரிந்துகொள்ளவேண்டும். இரட்சிப்பின் அவசியத்தையும், அதன் அவசரத்தையும் அவர்கள் புரிந்துகொண்டு, தங்கள் ஆத்துமாக்களைக் காத்துக்கொள்ள அவர்கள் பிரயாசப்படவேண்டும்.

பவுலின் பிரசங்கத்தைக் கேட்டு யூதர்கள் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கவில்லை. இதனால் பவுல் சோர்வடைந்து தன்னுடைய ஊழியத்தை விட்டு நின்றுவிடவில்லை. யூதர்கள் சுவிசேஷத்தைக் கேட்காமல் போனதினால், பவுல் புறஜாதியாரிடத்தில் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கப் புறப்பட்டுப்போகிறான். விருந்திற்கு முதலாவதாக அழைக்கப்பட்டவர்கள் யாரும் வரவில்லை. இதனால் விருந்தை ஆயத்தம் பண்ணினவன், சந்தைவெளியிலும், தெருவீதியிலும் இருக்கிறவர்களை விருந்து சாலைக்கு அழைத்துவந்து அவர்களுக்கு விருந்து கொடுப்பதுபோல, பவுல் யூதரைவிட்டுவிட்டு, இப்போது புறஜாதியாருக்கு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கப் புறப்பட்டுப்போகிறான். பவுல் யூதர்களைவிட்டுப் புறப்பட்டுப் போனதினால் யூதருடைய ஆத்துமாக்களுக்கு நஷ்டமும், புறஜாதியாரின் ஆத்துமாக்களுக்கும் லாபமும் உண்டாயிற்று.

ஒருவருஷமும் ஆறுமாதமும் அப் 18 : 7-11

அப் 18:7. அவ்விடத்தைவிட்டு, தேவனை வணங்குகிறவனாகிய யுஸ்து என்னும் பேருள்ள ஒருவனுடைய வீட்டிற்கு வந்தான்; அவன் வீடு ஜெபஆலயத்திற்கு அடுத்ததாயிருந்தது.

அப் 18:8. ஜெபஆலயத்தலைவனாகிய கிறிஸ்பு என்பவன் தன் வீட்டார் அனைவரோடும் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவனானான். கொரிந்தியரில் அநேகரும் சுவிசேஷத்தைக் கேட்டு, விசுவாசித்து, ஞானஸ்நானம் பெற்றார்கள்.

அப் 18:9. இராத்திரியிலே கர்த்தர் பவுலுக்குத் தரிசனமாகி: நீ பயப்படாமல் பேசு, மவுனமாயிராதே;

அப் 18:10. நான் உன்னுடனேகூட இருக்கிறேன், உனக்குத் தீங்குசெய்யும்படி ஒருவனும் உன்மேல் கைபோடுவதில்லை; இந்தப் பட்டணத்தில் எனக்கு அநேக ஜனங்கள் உண்டு என்றார்.

அப் 18:11. அவன் ஒரு வருஷமும் ஆறு மாதமும் அங்கே தங்கி, தேவவசனத்தை அவர்களுக்குள்ளே உபதேசம்பண்ணிக் கொண்டுவந்தான்.

யுஸ்து

அவ்விடத்தைவிட்டு, தேவனை வணங்குகிறவனாகிய யுஸ்து என்னும் பேருள்ள ஒருவனுடைய வீட்டிற்கு வந்தான்; அவன் வீடு ஜெபஆலயத்திற்கு அடுத்ததாயிருந்தது (அப் 18:7).

பவுல் தன்னுடைய ஊழிய ஸ்தலத்தை மாற்றுகிறான். கொரிந்து பட்டணத்திலிருந்து வேறு பட்டணத்திற்குப் போகவில்லை. கொரிந்து பட்டணத்திலுள்ள ஜெபாலயத்திலிருந்து, அதே பட்டணத்தில், தேவனை வணங்குகிறவனாகிய யுஸ்து என்னும் பேருள்ள ஒருவனுடைய வீட்டிற்கு வருகிறான்.

பவுல் இவனுடைய வீட்டில் தங்கி வாசம்பண்ணுவதற்காக வரவில்லை. பவுல் இன்னும் ஆக்கில்லா, பிரிஸ்கில்லாள் ஆகியோரிடத்தில் தங்கி, கூடாரம்பண்ணுகிற தொழிலை செய்து வருகிறான். அங்கே தங்கி யுஸ்துவின் வீட்டில் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணுவதற்காக வருகிறான். யுஸ்து நல்லமனதுள்ளவன். சுவிசேஷ ஊழியம் நடைபெறுவதற்கு தன்னுடைய வீட்டின் கதவுகளை திறந்துகொடுக்கிறான். யூதருடைய ஜெபஆலயத்தில் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பவுலினால் விடுதலையோடு பிரசங்கிக்க முடியவில்லை. ஆனால் யுஸ்துவின் வீட்டில் விடுதலையோடு, ஆவியில் வைராக்கியங்கொண்டு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க முடிகிறது.

யுஸ்துவின் வீடு ஜெபஆலயத்திற்கு அடுத்ததாயிருக்கிறது. யூதருக்கு பக்கத்து வீட்டில் வசிக்கிறான். இவன் தேவனை வணங்குகிறவன். இவன் ஒரு புறஜாதியானாகயிருந்தாலும், விக்கிரகாராதனைக்காரனல்ல. பவுல் ஜெபஆலயத்திற்கு அடுத்த வீட்டில்போய் ஊழியம் செய்வது, யூதர்மீது அவன் வைத்திருக்கிற அன்பையும் கரிசனையையும் காண்பிக்கிறது. ஒரு வேளை யூதர்கள் மனந்திரும்பி, தங்கள் மத்தியில் ஊழியம் செய்வதற்கு வருமாறு பவுலை அழைத்தால், பவுல் யூதருடைய ஜெபஆலயத்திற்கு மறுபடியும் போய் ஊழியம் செய்வதற்கு வசதியாக, ஜெபஆலயத்திற்கு அடுத்த வீட்டில் ஊழியம் செய்கிறான்.

கிறிஸ்பு

ஜெப ஆலயத்தலைவனாகிய கிறிஸ்பு என்பவன் தன் வீட்டார் அனைவரோடும் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவனானான். கொரிந்தியரில் அநேகரும் சுவிசேஷத்தைக் கேட்டு, விசுவாசித்து, ஞானஸ்நானம் பெற்றார்கள் (அப் 18:8).

யுஸ்துவின் வீட்டில் பவுல் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறான். யூதருக்கும் புறஜாதியாருக்கும் பிரசங்கிக்கிறான். ஊழியத்தில் நல்ல பலன் உண்டாயிற்று. கிறிஸ்பு என்பவன் இரட்சிக்கப்படுகிறான். இவன் ஒரு யூதன். ஜெபஆலயத்திற்குத் தலைவன். இவனும் இவன் வீட்டாரனைவரும் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவர்களாகிறார்கள். யூதர்கள் பவுலுக்கு எதிர்த்து நின்று, கிறிஸ்துவின் சுவிசேஷத்தைத் தூஷிக்கிறார்கள். யூதருடைய ஜெபஆலயத்தலைவனோ இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறான். ஜெபஆலயத்தலைவன் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்தாலும், ஜெபஆலயத்திலுள்ள யூதர்களோ சுவிசேஷத்திற்கு விரோதமாக எதிர்த்து நின்று அதைத் தூஷிக்கிறார்கள்.

கிறிஸ்பு என்பவன் தான் மாத்திரம் கர்த்தரிடத்தில் விசுவாசம் வைக்காமல், தன் வீட்டாரனைவரோடும் விசுவாசம் வைக்கிறான். கொரிந்தியரில் அநேகர் புறஜாதியாராயிருக்கிறார்கள். அவர்கள் சுவிசேஷத்தைக் கேட்டு, விசுவாசித்து ஞானஸ்நானம் பெறுகிறார்கள். ஒரு சிலர் தங்கள் மனச்சாட்சியில் உணர்த்தப்பட்டு, பவுலின் பிரசங்கத்தைக் கேட்க வந்திருக்கலாம். வேறு சிலர் பவுல் என்ன பிரசங்கம்பண்ணுகிறான் என்பதை கேட்கும் ஆர்வத்தில் வந்திருக்கலாம். கேள்வியினால் விசுவாசம் உண்டாகும். அவர்கள் சுவிசேஷத்தைக் கேட்டு இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றுக்கொள்கிறார்கள். ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டு இயேசு கிறிஸ்துவுக்குச் சாட்சியாய் ஜீவிக்கிறார்கள்.

கர்த்தர் பவுலுக்குத் தரிசனமாகி

இராத்திரியிலே கர்த்தர் பவுலுக்குத் தரிசனமாகி: நீ பயப்படாமல் பேசு, மவுனமாயிராதே; நான் உன்னுடனேகூட இருக்கிறேன், உனக்குத் தீங்குசெய்யும்படி ஒருவனும் உன்மேல் கைபோடுவதில்லை; இந்தப் பட்டணத்தில் எனக்கு அநேக ஜனங்கள் உண்டு என்றார் (அப் 18:9,10).

இராத்திரியிலே கர்த்தர் பவுலுக்குத் தரிசனமாகிறார். கொரிந்துவில் பவுல் செய்யவேண்டிய ஊழியத்தைப்பற்றி அவனுக்கு எடுத்துச்சொல்லி, அவனை உற்சாகப்படுத்துகிறார். புறஜாதியாருக்குச் சுவிசேஷத்தை அறிவிப்பதற்காக தேவன் பவுலைத் தெரிந்துகொண்டு, தம்முடைய ஊழியத்திற்கு அழைத்திருக்கிறார். தாம் அழைத்த ஊழியத்தை கர்த்தர் மறுபடியும் புதுப்பிக்கிறார். தம்முடைய ஊழியத்தைச் செய்யுமாறு பவுலை உற்சாகப்படுத்துகிறார்.

கர்த்தர் பவுலுக்குத் தரிசனமாகி "நீ பயப்படாமல் பேசு, மவுனமாயிராதே" என்று சொல்லுகிறார். பவுல் யூதருக்குப் பயப்படவேண்டியதில்லை. கொரிந்து பட்டணத்தின் அதிகாரிகளுக்கும் பயப்படவேண்டியதில்லை. பரலோகத்தின் ஊழியத்தை பவுல் பூமியில் செய்துகொண்டிருக்கிறான். ஆகையினால் தான் செய்கிற ஊழியத்தை பவுல் தைரியமாய்ச் செய்யவேண்டும். வெட்கப்பட்டோ, பயத்துடனோ சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டியதில்லை. தெளிவாகவும் முழுமையாகவும், தைரியமாகவும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டும். சுவிசேஷத்தைப் பிரசங்கிக்காமல் மௌனமாக இருக்கக்கூடாது.

கர்த்தர் பவுலோடு கூடயிருக்கிறார். பவுலுக்கு கர்த்தருடைய பிரசன்னம் போதுமானது. தாம் பவுலோடு கூடயிருப்பதை கர்த்தர் அவனுக்கு உறுதிபண்ணுகிறார். பவுலுக்கு ஒரு தீங்கும் உண்டாகாது. பவுல் மீது யாரும் கைபோடுவதில்லை. பவுலுக்கு எத்தனை பிரச்சனைகள் வந்தாலும் கர்த்தர் அவனை அந்தப் பிரச்சனையிலிருந்து விடுதலைசெய்வார். பவுலின் ஊழியத்தில் தேவன் அவனோடு கூடயிருந்து கிரியை நடப்பிப்பார். பவுல் பிரசங்கிக்கிற சுவிசேஷ வார்த்தைகளைக் கர்த்தர் அற்புதங் களினாலும் அடையாளங்களினாலும் உறுதிபண்ணுவார்.

கர்த்தர் நம்மோடு கூடயிருக்கும்போது நாம் பயப்படவேண்டிய அவசியமில்லை. ஊழியம் செய்யாமல் சும்மாயிருக்கக்கூடாது. சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணாமல் நாம் மவுனமாயிருக்கக்கூடாது. கர்த்தரே நம்மை ஊழியத்திற்கு அழைத்திருக்கிறவர். நம்மை அழைத்தவர் உண்மையுள்ளவர்.

கர்த்தர் பவுலைப் பாதுகாப்பதாக வாக்குப்பண்ணுகிறார். "உனக்குத் தீங்கு செய்யும்படி ஒருவனும் உன்மேல் கைபோடுவதில்லை" என்று வாக்குப்பண்ணுகிறார். பவுலின்மீது கைபோடுவார்கள். ஆனால் அவர்கள் கைபோடுவதினால் பவுலுக்கு ஒரு தீங்கும் உண்டாகாது. பவுலை அவர்கள் உபத்திரவப்படுத்தலாம். ஆனாலும் அந்த உபத்திரவத்தினால் பவுலுக்கு ஒரு தீங்கும் உண்டாகாது. பவுலுக்கு விரோதமாக சத்துருக்கள் எழும்பலாம். பவுலை நியாயசனத்திற்கு முன்பாக கொண்டு போய்விடலாம் (அப் 18:12). ஆனாலும் ஒருவனாலும் பவுலுக்கு ஒரு தீங்கும் செய்ய முடியாது.

கொரிந்து பட்டணத்தில் தமக்கு அநேக ஜனங்கள் உண்டு என்று கர்த்தர் பவுலுக்கு வெளிப்படுத்துகிறார். ஆகையினால் பவுல் இந்த ஜனங்கள் மத்தியில் உற்சாகமாய் ஊழியம் செய்யவேண்டும். அவர்களெல்லோரும் இரட்சிக்கப்படும்படி அவர்களுக்குப் புத்தி சொல்லவேண்டும். பவுல் சுவிசேஷத்தைப் பேசாமல் மவுனமாயிருக்கக்கூடாது. தனக்கு தீங்கு வருமோ என்று பயப்படக்கூடாது. பவுலின் ஊழியத்தின் மூலமாய், கொரிந்து பட்டணத்தில் ஏராளமானோர் இரட்சிக்கப்படுவார்கள்.

கர்த்தர் தம்முடையவர்களை அறிந்திருக்கிறார். ஒருவேளை அவர்கள் கர்த்தரை அறியாதிருக்கலாம். ஆனால் கர்த்தரோ அவர்களை அறிந்திருக்கிறார். பிதாவானவர் அவர்களை குமாரனாகிய இயேசு கிறிஸ்துவுக்குக் கொடுத்திருக்கிறார். பிதாவானவர் தமக்குக் கொடுத்திருக்கிறவர்களில் ஒருவரையும், குமாரனாகிய கிறிஸ்துவானவர் இழந்துபோகமாட்டார்.

கொரிந்து பட்டணம் துன்மார்க்கமாயிருக்கிறது. ஜனங்கள் கர்த்தரை ஆராதியாமல் விக்கிரகாராதனை செய்கிறார்கள். இருதயத்தில் அசுத்தமாயிருக்கிறார்கள். இந்தப் பட்டணத்தில் வீனஸ் என்னும் தேவதைக்கு பெரிய கோவிலைக் கட்டியிருக்கிறார்கள். இந்தப் பட்டணத்திலுள்ள ஜனங்களெல்லோரும் பார்ப்பதற்கு பதரைப்போல இருக்கிறார்கள். ஆனால் கர்த்தரோ அவர்களை கோதுமை மணிகளாகப் பார்க்கிறார்.

நம்முடைய பார்வைக்கு ஜனங்கள் பாவிகளாகத் தெரியலாம். அவர்கள் இரட்சிக்கப்படுவதற்கு வாய்ப்பே இல்லாதது போல நமக்குத் தோன்றலாம். ஆனால் கர்த்தரோ அவர்களை இரட்சிப்பதற்கு சித்தமுள்ளவராகயிருக்கிறார்.

கொரிந்து பட்டணத்தில் பவுல் ஊழியம் செய்தபோது, அவனுக்குப் பிரச்சனைகளும், சோர்வுகளும் உண்டாயிற்று. ஏராளமானோர் இரட்சிக்கப்படவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் கர்த்தர் பவுலிடம் "இந்தப் பட்டணத்தில் எனக்கு அநேக ஜனங்கள் உண்டு" என்று சொல்லி அவனை உற்சாகப்படுத்துகிறார்.

நாம் ஊழியம் செய்கிற ஊர்களிலும் கர்த்தருக்கு அநேக ஜனங்கள் உண்டு. கர்த்தருக்குரியவர்களை கர்த்தரிடத்தில் அழைத்து வரவேண்டும். நம்முடைய ஊழியத்தில் நாம் சோர்ந்துபோகாமல் உற்சாகமாய் ஊழியம் செய்யவேண்டும். சுவிசேஷத்தைப் பிரசங்கியாமல் மவுனமாயிருக்கக்கூடாது. பயந்துபோய் சத்தியத்தை பேசாமலிருந்துவிடக்கூடாது. நாம் கர்த்தருடைய ஊழியக்காரர்கள். கர்த்தருக்காகப் பேசவேண்டும். பயப்படாமல் பேசவேண்டும்.

உபதேசம் பண்ணிக்கொண்டு வந்தான்

அவன் ஒரு வருஷமும் ஆறு மாதமும் அங்கே தங்கி, தேவவசனத்தை அவர்களுக்குள்ளே உபதேசம்பண்ணிக் கொண்டுவந்தான் (அப் 18:11).

பவுல் கொரிந்து பட்டணத்திலே ஒரு வருஷமும் ஆறு மாதமும் தங்கி, தேவவசனத்தை அவர்களுக்குள்ளே உபதேசம்பண்ணிக்கொண்டு வருகிறான். பவுல் இந்தப் பட்டணத்தில் அதிக நாட்களாகத் தங்கி ஊழியம் செய்கிறான். இஸ்ரவேலின் காணியாட்சிக்குப் புறம்பானவர்களை, தேவனுடைய காணியாட்சிக்கு உட்படுத்துவதற்கு பவுல் ஊழியம் செய்கிறான். தேவனுடைய ஊழியத்தை ஒரே நாளில் செய்து முடிக்க முடியாது. கொரிந்து பட்டணத்தில் ஏராளமான ஜனங்கள் இருக்கிறார்கள். இவர்களெல்லோருக்கும் சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டுமென்றால், தினந்தோறும் ஒவ்வொரு பகுதியாகச் சென்று, கிரமமாக ஊழியம் செய்யவேண்டும். கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நாமும், நம்முடைய ஊழியப்பொறுப்புக்களை அன்றாடம் நிறைவேற்றவேண்டும். ஒரே நாளில் எல்லாவற்றையும் செய்து முடித்துவிடலாம் என்று அவசரப்படக்கூடாது.

இயேசு கிறிஸ்துவை விசுவாசியாதவர்களுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, அவர்களை விசுவாசத்திற்குள் வழிநடத்துவது ஒரு ஊழியம். ஏற்கெனவே விசுவாசிக்கிறவர்களை, உற்சாகப்படுத்தி, அவர்களுடைய விசுவாசத்தை ஸ்திரப்படுத்துவது மற்றொரு ஊழியம். பவுல் கொரிந்து பட்டணத்தில் இந்த இரண்டு ஊழியத்தையும் செய்கிறான். விசுவாசிக்கிற ஜனங்களுக்கு தேவவசனத்தை உபதேசம்பண்ணுகிறான். இவர்களுடைய இருதயத்தில் சுவிசேஷத்தின் விதை விதைக்கப்பட்டிருக்கிறது. சத்துரு வந்து அவர்களுடைய உள்ளத்தில் களையை விதைத்துவிடுவான். கள்ள அப்போஸ்தலர்கள் வந்து கள்ள உபதேசத்தைப் பிரசங்கித்து விடுவார்கள். பவுல் கொரிந்தியருக்கு எழுதின நிருபத்தில் கள்ள அப்போஸ்தலரின் உபதேசத்தைக் குறித்து எச்சரித்துச் சொல்லியிருக்கிறான்.

பவுல் கொரிந்து பட்டணத்திற்கு வந்தவுடன், தெசலோனிக்கேயருக்கு முதலாவது நிருபத்தை எழுதினான். இதற்கு நீண்டகாலத்திற்குப் பின்பு, அதே தெசலோனிக்கேயா சபைக்கு பவுல் தன்னுடைய இரண்டாம் நிருபத்தையும் எழுதினான். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் விசுவாசிகளுக்கு நல்ல நிருபங்களையும் நல்ல பிரசங்கச் செய்திகளையும் பிரசங்கம் செய்ய வேண்டும். எழுதவேண்டும். கடிதம் எழுதுவதன் மூலமாகவும் கர்த்தருக்கு ஊழியம் செய்யலாம்.

கல்லியோன்
அப் 18:12-17

அப் 18:12. கல்லியோன் என்பவன் அகாயா நாட்டிற்கு அதிபதியான போது, யூதர்கள் ஒருமனப்பட்டு, பவுலுக்கு விரோதமாய் எழும்பி, அவனை நியாயாசனத்துக்கு முன்பாகக் கொண்டுபோய்:

அப் 18:13. இவன் வேதப்பிரமாணத்துக்கு விகற்பமாய்த் தேவனைச் சேவிக்கும்படி மனுஷருக்குப் போதிக்கிறான் என்றார்கள்.

அப் 18:14. பவுல் பேசுவதற்கு எத்தனப்படுகையில், கல்லியோன் யூதரை நோக்கி: யூதர்களே, இது ஒரு அநியாயமாய், அல்லது பொல்லாத நடக்கையாயிருக்குமேயானால் நான் உங்களுக்குப் பொறுமையாய்ச் செவிகொடுப்பது நியாயமாயிருக்கும்.

அப் 18:15. இது சொற்களுக்கும், நாமங்களுக்கும், உங்கள் வேதத்துக்கும் அடுத்த தர்க்கமானபடியினாலே, இப்படிப்பட்டவைகளைக்குறித்து விசாரணைசெய்ய எனக்கு மனதில்லை, நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்லி,

அப் 18:16. அவர்களை நியாயாசனத்தினின்று துரத்திவிட்டான்.

அப் 18:17. அப்பொழுது கிரேக்கரெல்லாரும் ஜெபஆலயத் தலைவனாகிய சொஸ்தேனேயைப் பிடித்து, நியாயாசனத்துக்கு முன்பாக அடித்தார்கள். இவைகளில் ஒன்றையுங்குறித்துக் கல்லியோன் கவலைப்படவில்லை.

பவுலுக்கு விரோதமாய்

கல்லியோன் என்பவன் அகாயா நாட்டிற்கு அதிபதியானபோது, யூதர்கள் ஒருமனப்பட்டு, பவுலுக்கு விரோதமாய் எழும்பி, அவனை நியாயாசனத்துக்கு முன்பாகக் கொண்டுபோய்: (அப் 18:12)

கொரிந்து பட்டணத்தில் பவுலின் ஊழியத்திற்குப் பிரச்சனை உண்டாயிற்று. ஆனால் மிகப்பெரிய பாதிப்பு எதுவும் உண்டாகவில்லை. பவுல் கொரிந்துவில் ஊழியம் செய்யும்போதோ கல்லியோன் என்பவன் அகாயா நாட்டிற்கு அதிபதியாக இருக்கிறான். இவன் சிநேக்கா என்ற பிரசித்திப்பெற்ற தலைவனுடைய மூத்த சகோதரன். நற்குணமுள்ளவன். ஜனங்கள் இவனை அதிகமாய் நேசிக்கிறார்கள். இவன் அகாயா நாட்டிற்கு அதிபதியான போது யூதர்கள் ஒருமனப்பட்டு பவுலுக்கு விரோதமாய் எழும்புகிறார்கள். பவுலை கல்லியோனுடைய நியாயாசனத்திற்கு முன்பாக கொண்டு போய் நிறுத்துகிறார்கள்.

எல்லா யூதர்களும் பவுலுக்கு விரோதமாக எழும்பவில்லை. விசுவாசியாத யூதர்கள் மாத்திரம் அவனுக்கு விரோதமாக ஒருமனப்பட்டு ஒன்று கூடுகிறார்கள். பட்டணத்தில் குழப்பத்தை உண்டு பண்ணுகிறார்கள். குழப்பத்திற்கு பவுல் தான் காரணம் என்று அவன்மீது பொய்யாக் குற்றம் சுமத்தி, அவனை நியாயசனத்திற்கு முன்பாகக் கொண்டுபோகிறார்கள்.

வேதப்பிரமாணத்திற்கு விகற்பமாய்

இவன் வேதப்பிரமாணத்துக்கு விகற்பமாய்த் தேவனைச் சேவிக்கும்படி மனுஷருக்குப் போதிக்கிறான் என்றார்கள் (அப் 18:13).

யூதர்கள் ஒருமனப்பட்டு, பவுலுக்கு விரோதமாய் எழும்பி, அவனை நியாயாசனத்திற்கு முன்பாக கொண்டுபோய் நிறுத்துகிறார்கள். பவுல் வேதப்பிரமாணத்திற்கு விகற்பமாய் தேவனைச் சேவிக்கும்படி மனுஷருக்குப் போதிக்கிறான் என்பது, பவுலின்மீது சுமத்தப்படுகிற குற்றச்சாட்டு. தேவனைச் சேவிக்கும்படி மனுஷருக்குப் போதிப்பது குற்றமாகாது. ஆனால் யூதர்களோ, பவுலின் வழக்கை தங்களுக்குச் சாதகமாக திசைதிருப்பும்படி, "பவுல் வேதப்பிரமாணத்திற்கு விகற்பமாய் போதிக்கிறான்" என்று அவன்மீது குற்றம் சுமத்துகிறார்கள்.

யூதருடைய குற்றச்சாட்டில் நீதியில்லை. யூதர்கள் தேவாலயத்தில் கர்த்தரை எப்படி ஆராதிக்கவேண்டும் என்று அவர்களுடைய வேதப்பிரமாணம் அவர்களுக்குத் தெளிவாகச் சொல்லுகிறது. ஆனால் கொரிந்து பட்டணத்து யூதர்களோ வேதப் பிரமாணத்திற்கு ஏற்றபடி தேவனைச் சேவிக்கவில்லை. பவுலும் அவர்களுடைய வேதப்பிரமாணத்திற்கு விகற்பமாய் தேவனைச் சேவிக்கும்படி அவர்களுக்குப் போதிக்கவில்லை. அவர்கள் பவுலின்மீது பொய்க்குற்றச்சாட்டு கூறுகிறார்கள்.

நாம் தேவனை கிறிஸ்துவில் ஆராதனை செய்யவேண்டும். அவரை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளவேண்டும். இந்தச் சத்தியத்தை நாம் ஜனங்களுக்குப் போதிக்கும்போது, அவர்கள் நமக்கு விரோதமாய் எழும்புகிறார்கள். தங்களுடைய வேதப் பிரமாணத்திற்கு விகற்பமாய், தேவனைச் சேவிக்கும்படி நாம் அவர்களுக்குப் போதிப்பதாக நம்மீது குற்றம் சொல்லுகிறார்கள். தேவனைத் தொழுது கொள்கிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ள வேண்டும். இதுவே வேதப்பிரமாணம். பரிசுத்த அலங்காரத்துடனே அவரைத் தொழுதுகொள்ளவேண்டும்.

விசாரணை செய்ய எனக்கு மனதில்லை

பவுல் பேசுவதற்கு எத்தனப்படுகையில், கல்லியோன் யூதரை நோக்கி: யூதர்களே, இது ஒரு அநியாயமாய், அல்லது பொல்லாத நடக்கையாயிருக்குமேயானால் நான் உங்களுக்குப் பொறுமையாய்ச் செவிகொடுப்பது நியாயமாயிருக்கும். இது சொற்களுக்கும், நாமங்களுக்கும், உங்கள் வேதத்துக்கும் அடுத்த தர்க்கமான படியினாலே, இப்படிப் பட்டவைகளைக் குறித்து விசாரணை செய்ய எனக்கு மனதில்லை, நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்லி, அவர்களை நியாயாசனத்தினின்று துரத்தி விட்டான் (அப் 18:14-16).

தன்மீது கூறப்படுகிற குற்றசாட்டிற்கு, பவுல் பதில் சொல்ல எத்தனப்படுகிறான். ஆனால் நியாயசனத்தில் அமர்ந்திருக்கும் கல்லியோன், பவுல் பேசுவதற்கு முன்பே யூதரிடம் தன்னுடைய கருத்தைச் சொல்லுகிறான். அவர்களுடைய வழக்கை விசாரணை செய்ய தனக்கு மனதில்லை என்று சொல்லி, அவர்களை நியாயசனத்தினின்று துரத்திவிடுகிறான். அவர்களுக்கு பொறுமையாய்ச் செவிகொடுப்பது தனக்கு நியாயமற்றது என்று அறிவிக்கிறான். வழக்கை விசாரிக்கவோ, விவாதங்களுக்குச் செவிகொடுக்கவோ, பவுலை குற்றவாளியென்று தீர்த்து அவனுக்குத் தண்டனை கொடுக்கவோ தனக்கு மனதில்லை என்று சொல்லிவிடுகிறான்.

கல்லியோன் தன்னைப்பற்றி நன்றாக அறிந்துவைத்திருக்கிறான். தான் எப்படிப்பட்ட வழக்குகளை விசாரிக்க வேண்டும் என்றும், எப்படிப்பட்ட காரியங்களில் தான் தலையிட வேண்டும் என்றும், தலையிடக்கூடாது என்றும் கல்லியோன் தெரிந்து வைத்திருக்கிறான். பவுல்மீது யூதர்கள் குற்றம் சுமத்தும்போது "இவன் வேதப்பிரமாணத்திற்கு விகற்பமாய் தேவனைச் சேவிக்கும்படி மனுஷருக்குப் போதிக்கிறான்" என்று குற்றம் சொல்லுகிறார்கள். கல்லியோன் அவர்களுடைய வார்த்தைகளைக் கேட்டு "இது சொற்களுக்கும் நாமங்களுக்கும், உங்கள் வேதத்திற்கும் அடுத்த தர்க்கம்" என்று அறிவிக்கிறான்.

மேலும் அவர்களுடைய குற்றச்சாட்டு அநியாயத்தைப்பற்றியதோ, அல்லது பொல்லாத நடத்தையைப்பற்றியோ அல்ல என்பதையும் அவர்களுக்கு அறிவிக்கிறான். ஆகையினால் அவர்களுடைய வழக்குக்கு தான் பொறுமையாய்ச் செவிகொடுக்க ஆயத்தமாயில்லை என்பதையும் சொல்லிவிடுகிறான். தன்னுடைய நியாயசனத்தில் இப்படிப்பட்ட வழக்குகள் விசாரிக்கப்படக்கூடாது என்று கட்டளை பிறப்பிக்கிறான்.

நியாயாதிபதிகள் நியாயத்தின்படி தீர்ப்பு சொல்லவேண்டும். பாதிக்கப் பட்டவர்களுக்கு நன்மை செய்யவேண்டும். காயம்பட்டவர்களுக்கு காயத்தை ஆற்றவேண்டும். அநியாயம் நடக்கும்போது அந்த அநியாயத்தை தட்டிக்கேட்க வேண்டும். பொல்லாத நடக்கையைக் கட்டுப்படுத்தவேண்டும். தன்னுடைய நியாயசனத்தில் இப்படிப்பட்ட வழக்குகளை விசாரிப்பதுதான் கல்லியோனுடைய வழக்கம். ஆனால் யூதர்கள் பவுலின்மீது கூறுகிற குற்றச்சாட்டுக்களில் இப்படிப்பட்ட குற்றம் எதுவும் சொல்லப்படவில்லை.

யூதர்கள் பவுல்மீது சொல்லுகிற குற்றச்சாட்டு, அவர்களுடைய சொற்களுக்கும், நாமங்களுக்கும், வேதத்திற்கும் அடுத்த தர்க்கமாயிருக்கிறது. இப்படிப்பட்ட தர்க்கத்தில் கல்லியோன் தலையிட விரும்பவில்லை. இது சம்பந்தமான வழக்கை அவன் நியாயம் விசாரிக்கவும் முன்வரவில்லை. இப்படிப் பட்டவைகளைக் குறித்து விசாரணை செய்ய தனக்கு மனதில்லை என்று அறிவித்துவிடுகிறான். அவர்களுடைய வழக்கை அவர்களையே பார்த்துக் கொள்ளுமாறு சொல்லி, அவர்களை நியாயசனத்தினின்று துரத்திவிடுகிறான்.

கல்லியோன் நற்குணமுள்ள வனாகயிருக்கிறான். மாய்மாலம் பண்ணவில்லை. தனக்குத் தெரியாத காரியத்தை தெரிந்ததுபோல காண்பித்துக்கொள்ளவில்லை. தனக்குப் புரியாத காரியத்தில் தலையிட்டு, தனக்குப் புரிந்தது போல நடிக்கவில்லை. யூதர்கள் பவுலின்மீது சுமத்துகிற குற்றச்சாட்டு யூதமார்க்கத்தின் வேதப்பிரமாணத்திற்குட் பட்டது. கல்லியோனுக்கு யூதருடைய வேதப்பிரமாணத்தைப்பற்றி ஒன்றும் தெரியாது. ஆனால் யூதர்களோ ஒருமனப்பட்டு பவுலுக்கு விரோமாக எழும்பியிருக்கிறார்கள். அவன்மீது யூதருடைய வேதப்பிரமாணத்தின்படி குற்றம் சாட்டுகிறார்கள். இதைப்பற்றி விசாரணை செய்ய கல்லியோனுக்கு மனதில்லை. யூதர்களுடைய வேதப்பிரமாணத்தைப்பற்றி அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆகையினால் இந்த வழக்கை அவர்களையே பார்த்துக் கொள்ளுமாறு சொல்லி, அவர்களை நியாயசனத்திலிருந்து துரத்திவிடுகிறான்.

தேவனுடைய பிரமாணத்தை நாம் அறிந்து வைத்திருக்கவேண்டும். தேவனுக்கு முக்கியத்துவம் கொடுப்பது போல, வேதப்பிரமாணத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். கல்லியோன் அதிபதியாகயிருந்தாலும், அவனுக்கும் வேதப்பிரமாணம் தெரிந்திருக்க வேண்டும். வேதப்பிரமாணத்தை அசட்டை செய்யக்கூடாது. தனக்கு வேதப்பிரமாணத்தைப்பற்றித் தெரியாது என்று சொல்லும்போது, அதைப்பற்றித் தனக்கு தெரிந்து கொள்ளவேண்டிய அவசியமில்லை என்பதுபோல கல்லியோன் பேசுகிறான். தன்னுடைய உயர்ந்த தகுதிக்கு வேதப்பிரமாணம் தேவையற்றது என்று நினைக்கிறான். தேவனுடைய பிரமாணம் எல்லோருக்கும் தேவை. நாம் எல்லோருமே வேதப்பிரமாணத்தைக் கற்றுக்கொண்டு, அதற்குக் கீழ்ப்படிந்து ஜீவிக்கவேண்டும்.

சொஸ்தேனே

அப்பொழுது கிரேக்கரெல்லாரும் ஜெப ஆலயத்தலைவனாகிய சொஸ்தேனேயைப் பிடித்து, நியாயாசனத்துக்கு முன்பாக அடித்தார்கள். இவைகளில் ஒன்றையுங்குறித்துக் கல்லியோன் கவலைப்படவில்லை (அப் 18:17).

யூதர்கள் பவுலுக்கு விரோதமாய் எழும்பி அவனை கல்லியோனுடைய நியாயசனத்திற்கு முன்பாக கொண்டு போகிறார்கள். ஆனால் கல்லியோனோ அவர்களுடைய வழக்கை விசாரிக்க தனக்கு மனதில்லை என்றும், உங்கள் வழக்கை நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள் என்றும் சொல்லி, அவர்களை நியாயசனத்தினின்று துரத்திவிடுகிறான். இதனால் பவுலை நியாயசனத்திற்கு கொண்டு வந்தவர்களுக்கு மிகுந்த கோபமுண்டாயிற்று. அவர்களில் யூதரும் கிரேக்கரும் இருக்கிறார்கள்.

அப்பொழுது கிரேக்கரெல்லாரும் ஜெப ஆலயத்தலைவனாகிய சொஸ்தேனேயைப் பிடித்து நியாயசனத்திற்கு முன்பாக அடிக்கிறார்கள். நீதிமன்றத்தை அவமதிக்கிறார்கள். சொஸ்தேனே யார் என்னும் விவரம் அறியப்படவில்லை. இவனை அடித்த கிரேக்கர்களும் யார் என்பது தெரியவில்லை. ஒருவேளை சொஸ்தேனே கிறிஸ்துவின் சீஷர்களில் ஒருவனாகயிருக்கலாம். இவன் பவுலின் சிநேகிதனாகயிருப்பதற்கு வாய்ப்புள்ளது. இவன் கொரிந்து பட்டணத்தில் முக்கியமான நபராகயிருக்கலாம். பவுல் இவனை சகோதரனென்று அழைக்கிறான். கொரிந்து சபைக்கு எழுதின முதலாம் நிருபத்தில் பவுல் "சகோதரனாகிய சொஸ்தேனேயும்" (1கொரி 1:1) என்று இவனைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறான்.

சொஸ்தேனே என்பவன் ஜெபஆலயத்தலைவன் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. கிரேக்கர்கள் இவனை நியாயசனத்திற்கு முன்பாக அடிக்கிறார்கள். கொரிந்து பட்டணத்தில் பவுல் இயேசுவே கிறிஸ்து என்று யூதருக்கு திருஷ்டாந்தப்படுத்தியபோது, யூதரும் கிரேக்கரும் அவனுக்கு எதிர்த்து நின்று, அவனைத் தூஷித்தார்கள் (அப் 18:4,6). இங்கு சொஸ்தேனேயை அடிக்கிற கிரேக்கர்கள், அன்று பவுலுக்கு எதிர்த்து நின்று அவனைத் தூஷித்தவர்களாக இருக்கலாம்.

இந்தக் கிரேக்கருக்குப் பவுல்மீதும், கல்லியோன்மீதும் மிகுந்த கோபமுண்டாயிற்று. தங்கள் கோபத்தை இவர்கள்மீது காண்பிக்க முடியவில்லை. ஆகையினால் தங்கள் கையில் சிக்கிய சொஸ்தேனேயைப் பிடித்து, நியாயசனத்திற்கு முன்பாகவே அடிக்கிறார்கள். நீதியை தங்கள் கையில் எடுத்துக்கொள்கிறார்கள். தாங்கள் கல்லியோனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியப் போவதில்லை என்பதை, சொஸ்தேனேயை அடித்து வெளிப் படுத்துகிறார்கள். நியாயசனத்திலேயே அவனை அடிப்பதினால், இவர்களுக்கு நியாயசனத்தின்மீது மதிப்பு இல்லை என்பது தெளிவாகிறது.

கல்லியோன் இவைகளில் ஒன்றையும் குறித்து கவலைப்படவில்லை. தன்னுடைய நியாயசனத்தில், தனக்கு முன்பாக, கிரேக்கர்கள் சொஸ்தேனேயை அடிக்கிறார்கள். அகாயா நாட்டிற்கு கல்லியோன் அதிபதியாகயிருக்கிறான். இவன் தன்னுடைய அதிகாரத்தை நிலைநிறுத்தவேண்டும். தனக்கு முன்பாக யாரும், யாரையும், தன்னுடைய அனுமதியில்லாமல் அடிக்கக்கூடாது என்பதில் கல்லியோன் கவனமாயிருக்க வேண்டும். ஆனால் கல்லியோனோ இவைகளில் ஒன்றையும் குறித்து கவலைப்படாதவனாகயிருக்கிறான். துன் மார்க்கருடைய கிரியைகளை இவன் கட்டுப்படுத்தவேண்டும். கல்லியோனுக்கு முன்பாக கிரேக்கர்கள் சொஸ்தேனேயை அடிப்பதினால், அவர்கள் கல்லியோனையும் அவமானப்படுத்துகிறார்கள். ஆனால் கல்லியோனோ தன்னுடைய அவமானத்தைப் பற்றியும் கவலைப்படவில்லை.

கல்லியோன் நியாயசனத்திற்கு நியாயாதிபதியாக இருக்கிறான். இவன் சொஸ்தேனேயை பாதுகாக்கவேண்டும். கிரேக்கர்கள் இவனை தனக்கு முன்பாக அடிக்கிற போது, கல்லியோன் தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி, கிரேக்கருடைய கையிலிருந்து சொஸ்தேனேயை விடுவிக்க வேண்டும். ஆனால் இவனோ இவைகளில் ஒன்றையும் குறித்து கவலைப்படவில்லை.

இக்காலத்தில் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு சில சமயங்களில் துன்பம் உண்டாகிறது. ஊழியக்காரர்கள் படுகிற துன்பத்தை ஒரு சிலர் தங்கள் கண்களால் காண்கிறார்கள். தங்கள் காதுகளால் கேட்கிறார்கள். ஆனாலும் ஊழியக்காரர்கள் படுகிற துன்பத்தைப்பற்றி இவர்கள் சிறிதும் கவலைப்படுவதில்லை. யார் எப்படி போனால் தங்களுக்கென்ன என்று கவலைப்படாமலிருக்கிறார்கள். கல்லியோனின் ஆவி இக்காலத்தில் ஏராளமான ஜனங்களிடத்தில் இருக்கிறது. நல்லோர் காரணமில்லாமல் துன்பப்படுத்தப் படும்போது, அவர்களுக்கு ஆதரவாகப் பேசவோ, செயல்படவோ இக்காலத்தில் அநேகர் முன்வருவதில்லை. கல்லியோனைப்போலவே இவைகளில் ஒன்றையும் குறித்து கவலைப்படாதவர்களாக இருக்கிறார்கள்.

எருசலேமுக்குப் பிரயாணம் அப் 18 : 18-23

அப் 18:18. பவுல் அநேகநாள் அங்கே தரித்திருந்தபின்பு, சகோதரரிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டு, தனக்கு ஒரு பிரார்த்தனை உண்டாயிருந்த படியினால் கெங்கிரேயா பட்டணத்தில் தலைச்சவரம் பண்ணிக்கொண்டு, சீரியா தேசத்துக்குப் போகக் கப்பல் ஏறினான். பிரிஸ்கில்லாளும் ஆக்கில்லாவும் அவனுடனே கூடப் போனார்கள்.

அப் 18:19. அவன் எபேசுபட்டணத்துக்கு வந்தபோது, அங்கே அவர்களை விட்டு நீங்கி, ஜெபஆலயத்தில் பிரவேசித்து, யூதருடனே சம்பாஷணை பண்ணினான்.

அப் 18:20. அவன் இன்னுஞ் சிலகாலம் தங்களுடனே இருக்கவேண்டுமென்று அவர்கள் கேட்டுக்கொண்டபோது, அவன் சம்மதியாமல்,

அப் 18:21. வருகிற பண்டிகையிலே எப்படியாயினும் நான் எருசலேமில் இருக்கவேண்டும், தேவனுக்குச் சித்தமானால் திரும்பி உங்களிடத்திற்கு வருவேனென்று சொல்லி, அவர்களிடத்தில் உத்தரவு பெற்றுக் கொண்டு, கப்பல் ஏறி, எபேசுவை விட்டுப் புறப்பட்டு,

அப் 18:22. செசரியா பட்டணத்துக்கு வந்து, எருசலேமுக்குப் போய், சபையைச் சந்தித்து, அந்தியோகியாவுக்குப் போனான்.

அப் 18:23. அங்கே சிலகாலம் சஞ்சரித்தபின்பு, புறப்பட்டு, கிரமமாய்க் கலாத்தியா நாட்டிலேயும் பிரிகியா நாட்டிலேயும் சுற்றித்திரிந்து, சீஷரெல்லாரையும் திடப்படுத்தினான்.

பிரார்த்தனை

பவுல் அநேகநாள் அங்கே தரித்திருந்தபின்பு, சகோதரரிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டு, தனக்கு ஒரு பிரார்த்தனை உண்டாயிருந்த படியினால் கெங்கிரேயா பட்டணத்தில் தலைச்சவரம் பண்ணிக்கொண்டு, சீரியாதேசத்துக்குப் போகக் கப்பல் ஏறினான். பிரிஸ்கில்லாளும் ஆக்கில்லாவும் அவனுடனே கூடப் போனார்கள் (அப் 18:18).

பவுலுக்குப் பிரச்சனை உண்டானவுடன் அவன் கொரிந்து பட்டணத்தைவிட்டு வெளியேறிப் போய்விடவில்லை. யூதர்கள் ஒருமனப்பட்டு பவுலுக்கு விரோதமாக எழும்பி அவனை நியாயசனத்திற்கு முன்பாக கொண்டுபோய் விட்ட பின்பும், அவன் அநேகநாள் அங்கே தரித்திருக்கிறான். கொரிந்து பட்டணத்தில் பவுல் ஓய்வெடுக்கவில்லை. கிறிஸ்துவின் சுவிசேஷத்தை இடைவிடாமல் பிரசங்கம்பண்ணுகிறான்.

பவுல் மற்ற பட்டணங்களில் ஊழியம் செய்தபோது, அங்கு பிரச்சனை ஏற்பட்டால், அந்தப் பட்டணத்தைவிட்டு உடனே வேறு பட்டணத்திற்குப் போய்விடுவது வழக்கம். ஆனால் கொரிந்து பட்டணத்தில் பவுல் அப்படிச் செய்யவில்லை. பிரச்சனை வரும். பிரச்சனை போகும். பிரச்சனைகளைப் பார்த்தால் ஊழியம் செய்யமுடியாது. பவுல் இதையெல்லாம் உணர்ந்தவனாக, அங்கே அநேக நாள் தரித்திருந்து ஊழியம் செய்கிறான்.

கொரிந்து பட்டணத்தில் தன்னுடைய பிரயாசம் வீணாய்ப் போகவில்லை என்பதைப் பவுல் காண்கிறான். ஆகையினால் தொடர்ந்து ஊழியம் செய்யவேண்டும் என்று தீர்மானித்து அங்கே தங்கியிருந்து, தன்னுடைய ஊழியத்தை நிறைவேற்றிய பின்பே, கொரிந்துவைவிட்டுப் புறப்பட்டுப் போகிறான். போகும்போது சகோதரரிடத்தில் உத்தரவு பெற்றுக் கொள்கிறான். சகோதரர்கள் பவுலின்மீது பிரியமாயும் சிநேகமாயும் இருக்கிறார்கள். தன்னுடனேகூட பிரிஸ்கில்லாளையும் ஆக்கில்லாவையும் கூட்டிக்கொண்டு போகிறான். இவர்கள் இருவரும் இத்தாலியாவிலிருந்து கொரிந்து பட்டணத்திற்கு வந்து கூடாரம்பண்ணுகிற தொழிலைச் செய்கிறார்கள். பவுலும் இவர்களிடத்தில் தங்கி வேலை செய்து, சுவிசேஷ ஊழியமும் செய்து வருகிறான்.

பவுல் கொரிந்து பட்டணத்தை விட்டுப் புறப்படும்போது, இவர்களும் அவனோடுகூட பிரயாணம்பண்ண ஆயத்தமாயிருக்கிறார்கள். ஒரு சிலர் தங்களுக்கு வேறு பட்டணத்தில் நல்ல வாய்ப்பு இருக்கும்போது அங்கு போவது வழக்கம். நன்மையை எதிர்பார்த்துப் போகிறார்கள். இவ்வாறு இடம் பெயருகிறவர்களை நாம் தவறாக நினைக்க முடியாது.

கெங்கிரேயா ஒரு துறைமுகப் பட்டணம். இங்கிருந்து கப்பல் ஏறி சீரியா தேசத்திற்குப் போகவேண்டும். இந்த வசனத்தில் "தனக்கு ஒரு பிரார்த்தனை உண்டாயிருந்தபடியினால் கெங்கிரேயா பட்டணத்தில் தலைச்சவரம் பண்ணிக் கொண்டு" என்று எழுதப் பட்டிருக்கிறது. இந்தப் பிரார்த்தனை நசரேய விரதத்தைக் குறிக்கிற பிராத்தனையாகும். இந்தப் பிரார்த்தனையை ஆக்கில்லா நிறை வேற்றினானா அல்லது பவுல் நிறை வேற்றினானா என்பது தெளிவாகயில்லை. யூதேயா தேசத்திலிருக்கிறவர்கள் எருசலேமிலுள்ள தேவாலயத்திற்குச் சென்று தலைச்சவரம் பண்ணிக்கொண்டு, தங்கள் பிரார்த்தனையை நிறைவேற்றுவது வழக்கம். மற்ற தேசங்களில் வாசம்பண்ணுகிறர்களோ, எருசலேமுக்குப் போகாமல், வேறு பட்டணங்களில் தலைச்சவரம்பண்ணி பிரார்த்தனையை நிறைவேற்றுவார்கள்.

ஒருவேளை பவுல் தலைச்சவரம் பண்ணிக்கொண்டு, தன்னுடைய பிரார்த்தனையை நிறைவேற்றியிருப்பதற்கு வாய்ப்புள்ளது. இதில் தவறு ஒன்றுமில்லை என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். பவுல் யூதர்கள் மத்தியில் அதிகமாய் ஊழியம் செய்கிறான். யூதரை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு பவுல் யூதரைப்போல இருக்கிறான் *(1கொரி 9:20)*. யூதர் மத்தியிலே தன்னுடைய ஊழியம் நன்றாக நடைபெறவேண்டும் என்பதற்காக, பவுல் தன்னை ஒரு யூதனாகப் பாவித்து, யூதருடைய முறைமைகளைக் கைக்கொள்வதாக வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

எபேசு பட்டணம்

அவன் எபேசுபட்டணத்துக்கு வந்தபோது, அங்கே அவர்களை விட்டு நீங்கி, ஜெபஆலயத்தில் பிரவேசித்து, யூதருடனே சம்பாஷணை பண்ணினான் (அப் 18:19).

சின்ன ஆசியாவிலே எபேசு பட்டணம் ஒரு பிரசித்திப் பெற்ற பட்டணமாகும். பவுல், பிரிஸ்கில்லாள், ஆக்கில்லா ஆகியோரோடு எபேசு பட்டணத்திற்கு வருகிறான். இந்தப் பட்டணத்தில் பவுல் இவர்கள் இருவரையும் வாசம்பண்ணுமாறு சொல்லுகிறான். எபேசு பட்டணத்தில் இவர்கள் இருவரும் சுவிசேஷ ஊழியத்தை செய்ய வேண்டும். பவுல் இந்தப் பட்டணத்தில் சிறிது காலம் மாத்திரமே தங்கியிருந்து ஊழியம் செய்ய வேண்டுமென்று திட்டமிட்டிருக்கிறான். பவுல் இந்தப் பட்டணத்தைவிட்டுப் போன பின்பு, அவன் ஆரம்பித்த ஊழியத்தை ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் தொடர்ந்து செய்யவேண்டும். பவுல் எபேசு பட்டணத்தில் ஊழியம் செய்யும்போது இவர்கள் இருவரும் அவனோடு கூடவே இருக்கிறார்கள். ஆகையினால் பவுல் இந்தப் பட்டணத்தைவிட்டு சென்ற பின்பு, அந்தப் பட்டணத்தார் இவர்கள் இருவரையும் ஏற்றுக்கொள்வதில், அவர்களுக்குப் பிரச்சனை எதுவும் இருக்காது.

பவுல் எபேசு பட்டணத்தில், ஜெபஆலயத்தில் பிரவேசித்து யூதருடனே சம்பாஷணை பண்ணுகிறான். ஜெபாலயத்தில் போய் வேறு யாராவது பிரசங்கம்பண்ணுவதைக் கேட்பதற்காக பவுல் அங்கு போகவில்லை. சத்திய வசனத்தைப் பிரசங்கம் பண்ணுவதற்காகவும், யூதருடனே சம்பாஷணை பண்ணுவதற்காகவும் போகிறான். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் பிறருடைய பிரசங்கத்தைக் கேட்கவும்வேண்டும். அதே வேளையில் விசுவாசிகளுக்கும் அவிசுவாசிகளுக்கும், பிரசங்கம்பண்ணவும் ஆயத்தமாயிருக்கவேண்டும்.

கொரிந்து பட்டணத்தில் யூதர்கள் பவுலை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகையினால் பவுல் அந்தப் பட்டணத்தில், யூதர்களைவிட்டு புறஜாதியார் மத்தியில் ஊழியம் செய்யப்போய்விட்டான். கொரிந்து பட்டணத்து யூதர்கள் பவுலுக்கு விரோதமாக எழும்பி நின்றதினால், பவுலுக்கு எல்லா யூதர்கள்மீதும் வெறுப்பு உண்டாகவில்லை. கொரிந்துவில் யூதருடைய ஜெபஆலயத்தைவிட்டு வெளியேறினதினால், எல்லா ஊர்களிலுமுள்ள ஜெபஆலயங்களில் பிரவேசிக்கக்கூடாது என்று பவுல் தீர்மானம்பண்ணவில்லை. ஒரு சில யூதர்கள் தவறு செய்ததற்காக, அவன் யூதர்கள் எல்லோரையும் மொத்தமாக குற்றம் சொல்லவில்லை. நம்முடைய ஆவிக்குரிய அனுபவத்தில் சபையில் ஒரு சிலர் தவறு செய்தால், அதற்காக சபையார் எல்லாரையும் குற்றம் சொல்லக்கூடாது. ஒரு குறிப்பிட்ட ஸ்தாபனத்தில் ஒரு சிலர் தவறு செய்தால், அந்த ஸ்தாபனத்தையே மொத்தமாகக் குற்றம் சொல்லிவிடக்கூடாது.

இன்னுஞ் சில்காலம்

அவன் இன்னுஞ் சில்காலம் தங்களுடனே இருக்கவேண்டுமென்று அவர்கள் கேட்டுக்கொண்டபோது, அவன் சம்மதியாமல், (அப் 18:20)

எபேசு பட்டணத்திலுள்ள யூதர்கள் பவுலிடத்தில் அன்புகூருகிறார்கள். அவன் இன்னும் சிலகாலம் தங்களுடனே இருக்கவேண்டுமென்று பவுலைக் கேட்டுக்கொள்கிறார்கள். கொரிந்து பட்டணத்திலுள்ள யூதர்களைவிட, எபேசு பட்டணத்திலுள்ள யூதர்கள் நற்குணசாலிகளாகயிருக் கிறார்கள். தேவன் தம்முடைய பிள்ளைகள் எல்லோரையும் தம்மைவிட்டு வெளியே துரத்திவிடவில்லை. இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியில், ஒரு கூட்டம் ஜனத்தை, தமக்காக மீதியாக வைத்திருக்கிறார். இவர்கள் எல்லா பட்டணங்களிலும் இருக்கிறார்கள்.

பவுல் தங்களுடனே இருக்க வேண்டுமென்று எபேசு பட்டணத்தார் கேட்டுக்கொண்டபோது, பவுல் அதற்கு சம்மதிக்கவில்லை. அவர்களிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டு எபேசுவைவிட்டுப் புறப்படுப்போகிறான். எப்படியாயினும் பண்டிகையிலே எருசலேமிலிருக்க வேண்டுமென்று விரும்புகிறான். இது என்ன பண்டிகை என்று இந்த வசனத்தில் குறிப்பிடப்படவில்லை.

எருசலேமில் பண்டிகையிலே பங்குபெற்ற பிறகு, மறுபடியும் எபேசுவுக்குத் திரும்பி வந்து, அங்குள்ள சகோதரரோடு சிறிதுகாலம் தங்கியிருக்க விரும்புகிறான். எபேசு பட்டணத்திலுள்ள ஜனங்கள் இன்னும் சிலகாலம் தங்களுடனே கூடயிருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டபோது, அதை உடனே மறுத்துவிடாமல், வாய்ப்பு வரும்போது மறுபடியும் வருகிறேன் என்று சொல்லுகிறான்.

கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நாமும், நமக்கு ஊழிய வாய்ப்பு கிடைக்கும்போது, அந்த வாய்ப்பை புறக்கணித்துவிடக்கூடாது. அந்த ஊழியத்தில் பங்குபெற தற்பொழுது நமக்கு வாய்ப்பு இல்லையென்றாலும், உடனே கர்த்தருக்குச் சித்தமான மற்றொரு சமயத்தில் அந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள ஆயத்தமாயிருக்கவேண்டும்.

தங்களுடனே இன்னும் சிலகாலம் தங்கவேண்டுமென்று எபேசு பட்டணத்தார் பவுலிடத்தில் சொன்னபோது "திரும்பி உங்களிடத்திற்கு வருவேன்" என்று பதில் சொல்லுகிறான். இந்த வாக்கியத்தைச் சொல்லும்போதே "தேவனுக்குச் சித்தமானால்" என்னும் வாக்கியத்தையும் சேர்த்துச் சொல்லுகிறான். நம்முடைய காலங்கள் தேவனுடைய கரங்களிலிருக்கிறது. மனுஷன் நினைக்கிறான். தேவனே அதை நிறைவேற்றுகிறார். ஆகையினால் நாம் எந்தக் காரியத்தைச் செய்தாலும் தேவனுடைய சித்தத்திற்கு கீழ்ப்படிந்து செயல்படவேண்டும். "கர்த்தருக்குச் சித்தமானால்" என்னும் வாக்கியத்தைப் பயன்படுத்தியே, நாம் மற்றவர்களுக்கு வாக்குப்பண்ணவேண்டும்.

செசரியா பட்டணம்

வருகிற பண்டிகையிலே எப்படியாயினும் நான் எருசலேமில் இருக்கவேண்டும், தேவனுக்குச் சித்தமானால் திரும்பி உங்களிடத்திற்கு வருவேனென்று சொல்லி, அவர்களிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டு, கப்பல் ஏறி, எபேசுவை விட்டுப் புறப்பட்டு, செசரியா பட்டணத்துக்கு வந்து, எருசலேமுக்குப் போய், சபையைச் சந்தித்து, அந்தியோகியாவுக்குப் போனான் (அப் 18:21,22).

பவுல் எருசலேமுக்கு வருகிறான். கொஞ்சக்காலமே எருசலேமில் தங்கியிருக்கிறான். எபேசு பட்டணத்திலிருந்து கப்பல் ஏறி செசரியா பட்டணத்திற்கு வருகிறான். இந்தப் பட்டணம் எருசலேமுக்கு அருகிலுள்ள துறைமுகப்பட்டணம். செசரியா பட்டணத்திற்கு வந்து, அங்கிருந்து எருசலேமுக்குப் போய், சபையைச் சந்தித்து, சபையாரை வாழ்த்துகிறான். "சபை" என்னும் வார்த்தை இந்த வசனத்தில், எருசலேமிலுள்ள திருச்சபையைக் குறிக்கும் வார்த்தையாகும். பவுல் மிகுந்த சிநேகத்தோடும், அன்போடும் எருசலேம் சபையாரைச் சந்திக்கிறான். எருசலேம் சபையார் பவுலின் பழைய சிநேகிதர்கள். பவுல் தன் ஊழியக்காலத்தில் பல இடங்களுக்குப் பிரயாணம் செய்கிறான். அவனுக்கு ஏராளமான புதிய சிநேகிதர்கள் இருக்கிறார்கள். புதியவர்கள் இருந்தாலும் பவுல் எருசலேமிலுள்ள பழைய சிநேகிதரை மறந்துவிடவில்லை. நம்முடைய ஊழியப்பாதையில் நாம் புதியவர்களோடும் பழகவேண்டும், பழைய சிநேகிதரையும் மறந்துவிடக்கூடாது.

எருசலேமிலுள்ள சபையோடு பவுல் நேர்த்தியான ஐக்கியம் வைத்திருக்கிறான். அவர்களோடு முறைப்படி தகவல் பரிமாறிக்கொள்கிறான். அவர்களுடைய சுகசெய்தியை விசாரிக்கிறான். ஊழிய அனுபவங்களை அவர்களோடு பகிர்ந்துகொள்கிறான். சிறிதுகாலமே பவுல் எருசலேமில் தங்கியிருக்கிறான். பவுல் எருசலேமுக்குப்போய் சபையைச் சந்தித்து, அதன்பின்பு உடனே அந்தியோகியாவுக்குப் புறப்பட்டுப்போய்விடுகிறான். பவுல் திட்டமிட்ட பிரகாரம் எருசலேமுக்குப் போனாலும், அங்கு நீண்டகாலம் தங்கியிருக்காமல், கர்த்தர் தனக்கு நியமித்து வைத்திருக்கும் ஊழியப்பாதையில் முன்னேறிச்செல்கிறான். நம்முடைய ஊழியத்தில் நாம் முழுநேரமும் ஈடுபட்டிருந்தாலும், நம்முடைய ஆவிக்குரிய சிநேகிதர்களைச் சந்திக்கவும் நேரம் ஒதுக்கிக்கொள்ளவேண்டும்.

அந்தியோகியா

அங்கே சிலகாலம் சஞ்சரித்தபின்பு, புறப்பட்டு, கிரமமாய்க் கலாத்தியா நாட்டிலேயும் பிரிகியா நாட்டிலேயும் சுற்றித்திரிந்து, சீஷரெல்லாரையும் திடப்படுத்தினான் (அப் 18:23).

பவுல் ஏற்கெனவே ஊழியம் செய்த பட்டணங்களுக்கு மறுபடியும் வருகிறான். எருசலேமிலிருந்து, அந்தியோகியா பட்டணத்திற்கு திரும்பவும் வந்து அங்கு சிலகாலம் சஞ்சரிக்கிறான். புறஜாதியார் மத்தியில் பிரசங்கம்பண்ணுவதற்காக, எருசலேம் சபையார் பவுலை இங்கு ஏற்கெனவே அனுப்பியிருந்தார்கள் (அப் 13). பவுல் அந்தியோகியாவுக்குப் போய், அங்குள்ள ஊழியர்களைச் சந்தித்து அவர்களை ஆறுதல்படுத்துகிறான். தானும் ஆறுதலடைகிறான். சில காலம் பவுல் இங்கு தங்கியிருந்து ஊழியம் செய்கிறான். தன்னுடைய ஊழியஸ்தலத்திற்கு வந்து, அங்குள்ள ஊழியக்காரர்களையும் விசுவாசிகளையும் சந்தித்து, அங்கு சிலகாலம் அவர்களோடு சஞ்சரித்து, கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்கிறான்.

அந்தியோகியாவிலிருந்து புறப்பட்டு, கிரமமாய் கலாத்தியா நாட்டிலேயும், பிரிகியா நாட்டிலேயும் சுற்றித் திரிகிறான். பவுல் இங்கு ஏற்கெனவே வந்து, சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, சபைகளை ஸ்தாபித்திருக்கிறான். "கலாத்தியா நாட்டிலுள்ள சபைகளுக்கு எழுதுகிறதாவது" (கலா 1:2) என்று பவுல் தன் நிருபத்தில் குறிப்பிடுவது, இங்குள்ள சபைகளையே குறிக்கும். கலாத்தியா தேசத்தில் எந்தப் பட்டணத்திற்கு பவுல் போனான் என்று குறிப்பிடப்படவில்லை. கலாத்தியா நாட்டிலே ஒவ்வொரு சபையையும் கிரமமாய் சென்று சந்திக்கிறான். கலாத்தியா நாடு முழுவதும் கிரமமாய்ச் சுற்றித்திரிந்து, சீஷரெல்லாரையும் திடப்படுத்துகிறான். கலாத்தியா நாட்டில் சபைகளை ஸ்தாபிப்பதற்கு பவுல் காரணமாகயிருந்தவன். சுவிசேஷ வசனத்தை விதைத்து, தண்ணீர் பாய்ச்சினவன். இப்போது அங்குள்ள சீஷரெல்லாரையும் திடப்படுத்துகிறான்.

தங்கள் தேசத்திற்கு பவுல் வந்தது கலாத்தியா நாட்டிலுள்ள சீஷரெல்லாருக்கும் மிகுந்த உற்சாகத்தைக் கொடுக்கிறது. பவுலோ அவர்களை சாதாரணமாகச் சந்தித்துவிட்டுப் போய்விடாமல், சீஷரெல்லாரையும் திடப்படுத்துகிறான். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் விசுவாசிகளைத் திடப்படுத்தவேண்டும். கிறிஸ்துவின் சமுகத்திற்கு அவர்களை நெருக்கமாய் அழைத்துவரவேண்டும். அவர்களுடைய பலவீனங்களில் கிறிஸ்துவின் பெலன் பூரணமாய் விளங்குவதற்கு நாம் அவர்களுக்கு உபதேசம்பண்ணவேண்டும்.

அப்பொல்லோ
அப் 18 : 24-28

அப் 18:24. அப்பொழுது அலெக்சந்திரியா பட்டணத்தில் பிறந்தவனும் சாதுரியவானும் வேதாகமங்களில் வல்லவனுமான அப்பொல்லோ என்னும் பேர்கொண்ட ஒரு யூதன் எபேசுபட்டணத்துக்கு வந்தான்.

அப் 18:25. அவன் கர்த்தருடைய மார்க்கத்திலே உபதேசிக்கப்பட்டு, யோவான் கொடுத்த ஸ்நானத்தை மாத்திரம் அறிந்தவனாயிருந்து, ஆவியில் அனலுள்ளவனாய்க் கர்த்தருக்கு அடுத்தவைகளைத் திட்டமாய்ப் போதகம்பண்ணிக் கொண்டுவந்தான்.

அப் 18:26. அவன் ஜெபஆலயத்தில் தைரியமாய்ப் பேசத்தொடங்கின போது, ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் அவன் பேசுகிறதைக் கேட்டு, அவனைச் சேர்த்துக் கொண்டு, தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள்.

அப் 18:27. பின்பு அவன் அகாயா நாட்டிற்குப் போகவேண்டுமென்றிருக்கையில், சீஷர்கள் அவனை ஏற்றுக்கொள்ளும்படி சகோதரர் அவர்களுக்கு எழுதினார்கள்.

அப் 18:28. அவன் அங்கே வந்தபின்பு வெளியரங்கமாக யூதர்களுடனே பலமாய்த் தர்க்கம்பண்ணி, இயேசுவே கிறிஸ்து என்று வேதவாக்கியங்களைக் கொண்டு திருஷ்டாந்தப்படுத்தின படியால், கிருபையினாலே விசுவாசிகளானவர்களுக்கு மிகவும் உதவியாயிருந்தான்.

வேதாகமங்களில் வல்லவன்

அப்பொழுது அலெக்சந்திரியா பட்டணத்தில் பிறந்தவனும் சாதுரியவானும் வேதாகமங்களில் வல்லவனுமான அப்பொல்லோ என்னும் பேர்கொண்ட ஒரு யூதன் எபேசுபட்டணத்துக்கு வந்தான் (அப் 18:24).

பவுல் கலாத்தியா நாட்டிலேயும், பிரிகியா நாட்டிலேயும் சுற்றித்திரிந்து சீஷரெல்லாரையும் திடப்படுத்துகிறான். பவுலின் சுவிசேஷ பிரயாண அனுபவத்தைத் தொடர்ந்து, அப்பொல்லோ என்பவனுடைய ஊழிய அனுபவம் இங்கு விவரிக்கப்படுகிறது. அப்பொல்லோ எகிப்து தேசத்திலுள்ள அலெச்சந்திரியா பட்டணத்தில் பிறந்தவன். இவனுடைய பெற்றோர் யூதர்கள். இவன் சாதுரியவான். வேதாகமங்களில் வல்லவன். ஊழியத்திற்குப் பயற்சி பெற்றவன். பிரசங்கம்பண்ணும்போது சாதுரிய வார்த்தைகளைப் பயன்படுத்தி ஞானமாய்ப் பேசக்கூடியவன்.

அப்பொல்லோ எபேசு பட்டணத்திற்கு வருகிறான். இவன் வேதாகமங்களில் வல்லவனானபடியினால், எபேசு பட்டணத்தில் வந்து கர்த்தருக்கு அடுத்தவைகளைத் திட்டமாய்ப் போதகம் பண்ணுகிறான். வேதவாக்கியங்களை தாராளமாக மேற்கோளாகச் சொல்லுகிறான். வேதாகமங்களில் வல்லவனாகயிருக்கிற படியினால், வசனங்கள் எந்தப்புஸ்தகத்தில், எந்த அதிகாரத்தில் இருக்கிறது என்பதை நினைவில் வைத்திருக்கிறான். ஒத்தவேதவாக்கியம் இவனுடைய இருதயத்தில் மனப்பாடமாக பதிந்திருக்கிறது.

வேதத்தின் ரகசியங்களையும் அறிந்திருக்கிறான். அதன் அர்த்தத்தைப் புரிந்தவனாக, கர்த்தருக்கு அடுத்தவைகளைத் திட்டமாய்ப் போதகம்பண்ணிக்கொண்டு வருகிறான். ஜனங்களுக்கு சத்திய வசனங்களை உபதேசம்பண்ணி, வேதத்தை ஆராய்ந்து பார்ப்பதற்கு அவர்களுக்குப் பயிற்சி கொடுக்கிறான்.

ஆவியில் அனலுள்ளவன்

அவன் கர்த்தருடைய மார்க்கத்திலே உபதேசிக்கப்பட்டு, யோவான் கொடுத்த ஸ்நானத்தை மாத்திரம் அறிந்தவனாயிருந்து, ஆவியில் அனலுள்ளவனாய்க் கர்த்தருக்கு அடுத்தவைகளைத் திட்டமாய்ப் போதகம்பண்ணிக் கொண்டுவந்தான் (அப் 18:25).

அப்பொல்லோ கர்த்தருடைய மார்க்கத்தில் உபதேசிக்கப்பட்டிருக்கிறான். கிறிஸ்துவின் உபதேசத்தைக் குறித்து இவனுக்கு ஓரளவு தெரிந்திருக்கிறது. சுவிசேஷத்தின் ரகசியத்தையும் இவன் ஓரளவு புரிந்திருக்கிறான். இரட்சிப்பின் வழியை அறிந்திருக்கிறான். கிறிஸ்துவைப் பற்றி இவனுக்கு உபதேசிக்கப்பட்டிருக்கிறது.

கர்த்தருடைய மார்க்கத்தில் அப்பொல்லோவுக்கு ஓரளவே உபதேசிக்கப்பட்டிருந்தாலும், இவன் கர்த்தருக்கு அடுத்தவைகளைத் திட்டமாய்ப் போதகம்பண்ணிக்கொண்டு வருகிறான். மற்றவர்களுக்குப் போதகம்பண்ணுகிறவர்கள், முதலாவது தங்களுக்குள் போதிக்கப்பட்டிருக்க வேண்டும். கர்த்தருடைய வார்த்தை ஊழியக்காரர்களுக்கு உபதேசிக்கப்பட வேண்டும். கர்த்தருடைய வார்த்தையை, பேசுவதற்கு மாத்திரம் உபதேசிக்கப்பட்டால் போதாது, கர்த்தருடைய வழியில் நடப்பதற்கும் உபதேசிக்கப்படவேண்டும். கர்த்தருடைய வார்த்தையைப் பேசுவதற்கு நம்முடைய நாவு பயிற்சி பெற்றிருந்தால் மாத்திரம் போதாது, கர்த்தருடைய வழியில் நடப்பதற்கு நம்முடைய கால்களும் பயிற்சி பெற்றிருக்கவேண்டும்.

அப்பொல்லோ கர்த்தருடைய மார்க்கத்திலே உபதேசிக்கப்பட்டிருக்கிறான். ஆனால் இவன் யோவான் கொடுத்த ஸ்நானத்தை மாத்திரம் அறிந்தவனாயிருக்கிறான். கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துவது எப்படி என்பது அப்பொல்லோவுக்குத் தெரிந்திருக்கிறது. ஆனால் கர்த்தரே வழி என்பது அவனுக்கு இன்னும் சரியாகத் தெரியவில்லை. யோவான் கொடுத்த ஞானஸ்நானத்தைமாத்திரம் அப்பொல்லோ பெற்றிருக்கிறான். இன்னும் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெற்றுக்கொள்ளவில்லை.

அப்பொல்லோவிடத்தில் ஒரு சில குறைகள் காணப்பட்டாலும், கர்த்தர் தனக்குக் கொடுத்த வரத்தை அவன் விசுவாசத்தோடும், உண்மையோடும் பயன்படுத்துகிறான். கர்த்தருடைய மார்க்கத்தில் உபதேசிக்கப்பட்டவனாக, கர்த்தருக்கு அடுத்தவைகளைத் திட்டமாய்ப் போதிப்பதற்கு எபேசு பட்டணத்திற்கு வந்திருக்கிறான். கர்த்தர் தனக்குக் கொடுத்த வரங்களை எபேசு பட்டணத்திலே பயன்படுத்துகிறான். ஆவியில் அனலுள்ளவனாக, கர்த்தருக்கு அடுத்தவைகளைத் திட்டமாய்ப் போதகம் பண்ணிக்கொண்டு வருகிறான். பரிசுத்த ஆவியானவருடைய அற்புதங்களைச் செய்கிற வரம் அப்பொல்லோவிடத்தில் இல்லை. ஆனாலும் தன்னிடத்தில் இருக்கிற வரத்தை உண்மையாய் பயன்படுத்துகிறான்.

அப்பொல்லோ அறிவில் சிறந்தவன். வேதாகமங்களில் வல்லவன். சாதுரியமாகப் பேசக்கூடியவன். கர்த்தர் தனக்குக் கொடுத்திருக்கிற இந்தத் தாலந்துகளைப் பயன்படுத்திப் போதகம்பண்ணுகிறான். அவனுடைய இருதயம் செம்மையாயிருக்கிறது. ஆவியில் அனலுள்ளவனாயிருக்கிறான். தன்னுடைய பிரசங்கத்தைக் கேட்போரிடத்தில் அன்புகூருகிறான். தேவனுடைய வெளிச்சம் இவனிடத்தில் பிரகாசமாகயிருக்கிறது. கர்த்தர் தனக்குக் கொடுத்த ஊழியத்தை உண்மையாய்ச் செய்கிறான். சாதுரியமாகப் பிரசங்கம்பண்ணுகிறான். இவன் ஆவியில் அனலுள்ளவனாயும், சாதுரியவானாயும், வேதாகமங்களில் வல்லவனாயும் இருப்பது, இவனுடைய விசேஷித்த தாலந்துகளாக இருக்கிறது.

ஒரு சில ஊழியக்காரர்கள் ஆவியில் அனலுள்ளவர்களாக இருப்பார்கள். ஆனால் அவர்கள் வேதாகமங்களில் வல்லவர்களாக இருக்கமாட்டார்கள். ஒரு சிலர் சாதுரியமாகப் பிரசங்கம் பண்ணுவார்கள். வேதாகமங்களில் வல்லவர்களாகவும் இருப்பார்கள். ஆனால் அவர்களிடத்தில் ஜீவன் இருக்காது. ஆவியில் அனலுள்ளவர்களாக இருக்கமாட்டார்கள். கர்த்தருடைய ஊழியக்காரர்களிடத்தில் இம்மூன்று குணங்களும் சேர்ந்திருக்கவேண்டும். சாதுரியவான்களாகவும், வேதாகமங்களில் வல்லவர்களாகவும், ஆவியில் அனலுள்ளவர்களாகவும் இருக்கவேண்டும்.

அப்பொல்லோ சாதுரியவானாகவும், வேதாகமங்களில் வல்லவனாகவும், ஆவியில் அனலுள்ளவனாகவும் இருக்கிறான். கர்த்தருக்கு அடுத்தவைகளைத் திட்டமாய்ப் போதகம் பண்ணுகிறான். ஜெபஆலயத்தில் தைரியமாய்ப் பிரசங்கம்பண்ணுகிறான். இவனுடைய பிரசங்க வார்த்தைகளெல்லாம் நிதானமாக இருக்கிறது. ஆராய்ந்து அறிந்து, அளந்து பேசுகிறான். இவனுக்கு யோவான் கொடுத்த ஸ்நானம் மாத்திரமே தெரிந்திருக்கிறது. இது கிறிஸ்துவின் சுவிசேஷத்தினுடைய ஆரம்பம். ஆரம்பத்தை மாத்திரம் தெரிந்து வைத்திருந்தாலும், தனக்குத் தெரிந்ததை, திட்டமாய்ப் போதகம்பண்ணுகிறான்.

கர்த்தரிடத்தில் எப்படி போவது என்பதும், கர்த்தருக்கு அடுத்தவைகளும் அவனுக்குத் தெரிந்திருக்கிறது. கர்த்தரே வழி என்னும் சத்தியம் இவனுக்கு இன்னும் தெரியவில்லை. தனக்கு ஓரளவு மாத்திரமே தெரிந்திருந்தாலும், தனக்குத் தெரிந்திருப்பதைத் தைரியமாய்ப் பேசுகிற கிருபையைப் பெற்றிருக்கிறான். ஜெபஆலயத்திற்குப் போகிறான். ஜெபஆலயத்திலுள்ள யூதர்கள் ஜனங்கள் மத்தியில் அதிகாரமுள்ளவர்கள். ஆனாலும் அவர்கள் மத்தியிலும் பயப்படாமல், தைரியமாய், கர்த்தருக்கு அடுத்தவைகளைத் திட்டமாய்ப் போதகம்பண்ணுகிறான்.

ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும்

அவன் ஜெபஆலயத்தில் தைரியமாய்ப் பேசத்தொடங்கின போது, ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் அவன் பேசுகிறதைக் கேட்டு, அவனைச் சேர்த்துக் கொண்டு, தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள் (அப் 18:26).

அப்பொல்லோ ஜெபஆலயத்தில் தைரியமாய்ப் பேசுகிறதை ஆக்கிலாவும், பிரிஸ்கில்லாளும் கேட்கிறார்கள். இவர்கள் அவனுடைய ஊழியத்தை உற்சாகப்படுத்துகிறார்கள். அவன் பேசுவதை மிகவும் கவனமாகக் கேட்கிறார்கள். அவன் பேசுகிறபோதெல்லாம் இவர்கள் இருவரும், அவனுடைய போதகத்தைக் கவனித்துக் கேட்டு, அவனுடைய ஊழியத்தை உற்சாகப்படுத்துகிறார்கள். இளம் ஊழியர்களை முதிர்ந்த அனுபவமுள்ள விசுவாசிகள் உற்சாகப்படுத்த வேண்டும். அவர்களுடைய பிரசங்கத்தைக் கவனித்துக் கேட்கவேண்டும்.

அப்பொல்லோவின் ஊழியத்தில் ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் ஒரு சிறிய குறையைக் காண்கிறார்கள். அவன் கர்த்தருடைய மார்க்கத்தில் உபதேசிக்கப்பட்டிருக்கிறான். ஆனால் யோவான் கொடுத்த ஸ்நானத்தை மாத்திரம் அறிந்திருக்கிறான். அவனுக்கு இயேசுகிறிஸ்துவைப்பற்றிய உபதேசம் அதிகமாய்த் தேவைப்படுகிறது. பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை அவன் அறியாதவனாயிருக்கிறான். ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் அப்பொல்லோவுக்கு ஆவிக்குரிய காரியங்களை விவரித்துச் சொல்லி, அவனுக்கு உதவிசெய்ய விரும்புகிறார்கள். இதற்காக அவர்கள் அவனைச் சேர்த்துக்கொண்டு, தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பிக்கிறார்கள்.

ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் அப்பொல்லோவைக் கடிந்துசொல்லவில்லை. அவனுடைய குறையை மற்றவர்களிடத்தில் சொல்லி அவனை அவமானப்படுத்தவில்லை. ஊழியம் செய்வதற்கு அவன் தகுதியற்றவன் என்று பிறரிடத்தில் புரணி பேசவில்லை. அதற்குப் பதிலாக அவனுக்கு தேவனுடைய மார்க்கத்தை அதிகத் திட்டமாய் விவரித்துக் காண்பிக்கிறார்கள். அவன் கர்த்தருடைய மார்க்கத்தில் உபதேசிக்கப்பட்டிருந்தாலும், ஒரு சில காரியங்களில் அவன் இன்னும் உபதேசிக்கப்படவில்லை. இயேசு கிறிஸ்துவைக் குறித்து அவனிடத்தில் தெளிவு இல்லை. ஆவிக்குரிய காரியங்கள் சிலவற்றில் அவன் தெளிவு இல்லாமல் குழப்பத்தோடிருக்கிறான். ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும், அவனைத் தங்களிடத்தில் சேர்த்துக்கொண்டு, அவனுக்குத் தெரியவேண்டிய காரியங்களை விவரித்துக் காண்பிக்கிறார்கள். அவனுடைய குழப்பத்தை நீக்குவதற்கு உதவிபுரிகிறார்கள்.

ஆக்கில்லா ஜெபஆலயத்தில் அப்பொல்லோவைப்போல தைரியமாய்ப் பிரசங்கம் பண்ணவில்லை. பிரசங்கம் பண்ணுகிற தாலந்து ஆக்கில்லாவிடத்தில் இல்லை. இந்தத் தாலந்து அப்பொல்லோவிடத்தில் இருக்கிறது. அப்பொல்லோ வாக்குவல்லவனும் சாதுரியவானுமாகயிருக் கிறான். ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளுமோ, சாதுரியமாகப் பிரசங்கம் பண்ணாவிட்டாலும், தேவனுடைய மார்க்கத்தைத் திட்டமாய் விவரித்துச் சொல்லக்கூடியவர்களாக இருக்கிறார்கள். அப்பொல்லோவின் பிரசங்கச் செய்திக்கு, ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் ஜீவனையும் தெளிவையும் கொடுக்கிறார்கள்.

இளம் ஊழியர்களை அனுபவமுள்ள விசுவாசிகள், தனியாக அழைத்து, அவர்களுக்கு நல்ல ஆலோசனைகளைக் கொடுக்கவேண்டும். அவர்களுடைய ஊழியம் சிறப்பாக நடைபெறுவதற்கு நல்ல புத்திமதிகளைச் சொல்லவேண்டும். இளம் ஊழியர்களும் தங்களுக்கு எல்லா தெரியுமென்று இறுமாப்பாக இருக்கக்கூடாது. கற்றுக்கொள்ளும் ஆவி ஊழியர்களிடத்தில் காணப்படவேண்டும். அப்பொல்லோ சாதுரியவானும், வேதாகமங்களில் வல்லவனுமாய் இருக்கிறான். ஆனாலும் மிகுந்த மனதாழ்மையோடு ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் தேவனுடைய மார்க்கத்தை அதிகத் திட்டமாய் தனக்கு விவரித்துக் காண்பிக்கும்போது, அதை மிகுந்த கவனத்தோடு கருத்தாய் கவனித்துக் கேட்கிறான். அவர்கள் மூலமாய் சத்தியத்தைக் கற்றுக்கொள்ள ஆவலவாயிருக்கிறான்.

அப்பொல்லோவின் சாதுரியமான பிரசங்கத்தை எல்லோரும் விரும்பிக் கேட்கிறார்கள். வருங்காலத்தில் இவன் மிகச்சிறந்த ஊழியக்காரனாக இருப்பான் என்று எல்லோரும் எதிர்பார்க்கிறார்கள். அவனுடைய பிரசங்கத்தைக் கேட்டு அநேகர் ஆர்ப்பரித்து அவனைப் பின்பற்றுகிறார்கள். ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் மற்றவர்களைப் போலவே அவன் பேசுகிறதைக் கேட்கிறார்கள். ஆனால் மற்றவர்களைப்போல இவர்கள் சும்மாயிருக்காமல், அவனைத் தங்களிடத்தில் சேர்த்துக்கொண்டு, தேவனுடைய மார்க்கத்தை அதிகத் திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பிக்கிறார்கள்.

ஆக்கிலாவும் பிரிஸ்கில்லாளும் கூடாரம்பண்ணுகிற தொழிலைச் செய்கிறவர்கள். அப்பொல்லோவோ சாதுரியமாகப் பிரசங்கிக்கக்கூடியவன். ஆனாலும் தன்னுடைய தவறுகள் சுட்டிக்காண்பிக்கப்படும் போது, அப்பொல்லோ அதற்குச் செவிகொடுக்கிறான். தன்னுடைய தவற்றை திருத்திக்கொள்கிறான். இளம் ஊழியர்கள் அனுபவம் மிகுந்த விசுவாசிகளிடம் பேசிப் பழகவேண்டும். அவர்களுடைய ஆவிக்குரிய ஆலோசனைகள் இளம் ஊழியருக்கு மிகவும் பிரயோஜனமாயிருக்கும்.

அப்பொல்லோ ஏற்கெனவே வேதாகமங்களில் வல்லவனாகயிருக்கிறான். ஆனால் இந்த வேதஅறிவில் அவன் திருப்தியடைந்துவிடவில்லை. எல்லாம் அடைந்தாயிற்று என்று நினைத்து, இதற்கு மேல் அறிவை வளர்த்துக் கொள்ளாமல் சும்மாயிருக்கவில்லை. தனக்கு ஓரளவு தான் தெரியுமென்றும், இன்னும் அறிந்துகொள்ள வேண்டியது ஏராளமாயிருக்கிறது என்றும் நினைத்து, எப்போதுமே கற்றுக்கொள்ள ஆயத்தமாயிருக்கிறான். ஆக்கில்லாவோடு பிரிஸ்கில்லாளும் சேர்ந்துகொண்டு, தேவனுடைய மார்க்கத்தை அப்பொல்லோவுக்கு அதிகத் திட்டமாய் விவரித்துக் காண்பிக்கிறாள். பிரிஸ்கில்லாள் தேவனைப்பற்றிய அறிவில் சிறந்து விளங்கினாலும், அப்பொல்லோவை வெளிப்படையாகக் குறை கூறாமல், கணவனும் மனைவியுமாகச் சேர்ந்து, அப்பொல்லோவைத் தனியாக அழைத்து, அவனுக்குத் தேவனுடைய மார்க்கத்தை அதிகத் திட்டமாய் விவரித்துக் காண்பிக்கிறார்கள்.

அகாயா நாடு

பின்பு அவன் அகாயா நாட்டிற்குப் போகவேண்டுமென்றிருக்கையில், சீஷர்கள் அவனை ஏற்றுக்கொள்ளும்படி சகோதரர் அவர்களுக்கு எழுதினார்கள் (அப் 18:27).

கொரிந்து சபையில் ஊழியம் செய்வதற்கு ஊழியக்காரர்கள் தேவைப்படுகிறார்கள். பவுல் கொரிந்து பட்டணத்தில் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, கர்த்தருடைய ஊழியத்தை ஆரம்பித்து வைக்கிறான். பவுலின் பிரசங்கத்தினால் அநேகர் சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்கிறார்கள். இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறார்கள். அவர்கள் விசுவாசத்தில் உறுதிப்படவேண்டும். பவுல் இங்கு ஊழியம் செய்த பின்பு கொரிந்து பட்டணத்தைவிட்டு வேறு தேசங்களுக்கு ஊழியம் செய்யப்போகிறான். இங்கு ஊழியம் செய்ய ஊழியக்காரர் தேவைப்படுகிறார். அந்த வெற்றிடத்தை அப்பொல்லோ நிரப்புவதற்கு ஆயத்தமாகயிருக்கிறான். பவுல் சுவிசேஷத்தை விதைத்து நட்டியிருக்கிறான். அப்பொல்லோ பவுல் நட்டியதற்கு நீர்ப்பாய்ச்ச ஆயத்தமாயிருக்கிறான்.

அப்பொல்லோ அகாயா நாட்டிற்குப் போகவேண்டுமென்றிருக்கிறான். அகாயா நாட்டிலே கர்த்தர் தனக்கென்று ஒரு ஊழியத்தை வைத்திருக்கிறார் என்று அப்பொல்லோ விசுவாசிக்கிறான். ஆவியானவரே அப்பொல்லோவின் இருதயத்தில் இப்படிப்பட்ட வாஞ்சையைக் கொடுக்கிறார். அப்பொல்லோவின் சிநேகிதரும் அவனை அகாயா நாட்டிற்குப் போகுமாறு உற்சாகப்படுத்துகிறார்கள். அங்குள்ள சீஷர்கள் அப்பொல்லோவை ஏற்றுக்கொள்ளும்படி எபேசுவிலுள்ள சகோதரர் அவர்களுக்கு நிருபங்களை எழுதுகிறார்கள்.

அப்பொல்லோ எபேசு பட்டணத்திலிருந்து அகாயா பட்டணத்திற்குப் போவதினால், எபேசு பட்டணத்திலுள்ள சகோதரருக்கு இழப்பு உண்டாகும். அப்பொல்லோவின் பிரசங்கத்தை இவர்களால் கேட்கமுடியாது. ஆனாலும் கர்த்தருடைய ஊழியம் தங்கள் மத்தியில் மாத்திரமே நடைபெறவேண்டுமென்று எபேசு பட்டணத்திலுள்ள சகோதரர்கள் சுயநலத்தோடு இல்லை. தங்கள் மத்தியில் ஆவியில் அனலுள்ளவனாய், கர்த்தருக்கு அடுத்தவைகளைத் திட்டமாய்ப் போதகம்பண்ணிக்கொண்டு வந்த அப்பொல்லோவை, அகாயா நாட்டிற்கு அனுப்பி, அங்குள்ளவர்களுக்கு உதவிபுரிய ஆயத்தமாயிருக்கிறார்கள். அவனை அனுப்பும்போது, அவனை ஏற்றுக்கொள்ளும்படி அங்குள்ள சகோதரருக்கு நிருபங்களையும் எழுதுகிறார்கள்.

மிகவும் உதவியாகயிருந்தான்

அவன் அங்கே வந்தபின்பு வெளியரங்கமாக யூதர்களுடனே பலமாய்த் தர்க்கம்பண்ணி, இயேசுவே கிறிஸ்து என்று வேதவாக்கியங்களைக் கொண்டு திருஷ்டாந்தப்படுத்தினபடியால், கிருபையினாலே விசுவாசிகளானவர்களுக்கு மிகவும் உதவியாயிருந்தான் (அப் 18:28).

அப்பொல்லோ அகாயா நாட்டிற்கு வந்தபின்பு, வெளியரங்கமாய் யூதர்களுடனே பலமாய்த் தர்க்கம்பண்ணுகிறான். இயேசுவே கிறிஸ்து என்று வேதவாக்கியங்களைக் கொண்டு திருஷ்டாந்தப் படுத்துகிறான். கிருபையினாலே விசுவாசிகளானவர்களுக்கு மிகவும் உதவியாகயிருக்கிறான். இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் எல்லோரும், தேவனுடைய கிருபையினாலேயே அவரை விசுவாசிக்கிறார்கள். விசுவாசம் அவர்களுடைய சுயமுயற்சியினால் வருவதில்லை. தேவனே தம்முடைய ஈவாக நமக்கு விசுவாசத்தைக் கொடுக்கிறார்.

நாம் தேவகிருபையினாலே கர்த்தரை விசுவாசித்தாலும், நமக்கு இன்னும் ஆவிக்குரிய உதவி தேவைப்படுகிறது. உண்மையுள்ள ஊழியக் காரர்கள், கிருபையினாலே விசுவாசிகளானவர்களுக்கு, மிகவும் உதவியாக இருக்கவேண்டும். இதுவே ஊழியக்காரர்களின் மெய்யான ஊழியம்.

அவிசுவாசிகள் ஊழியத்திற்கு எதிர்த்து நிற்பார்கள். அவர்கள் பல காரியங்களைக் குறித்து தர்க்கம் பண்ணுவார்கள். புதிய விசுவாசிகளினால் அவர்களுக்கு எதிர்த்து நின்று தர்க்கம் பண்ண முடியாது. அப்பொல்லோவைப்போல கர்த்தருடைய மார்க்கத்தில் திட்டமாய் உபதேசிக்கப் பட்டிருக்கிற ஊழியக்காரர்கள், அவிசுவாசிகளின் தர்க்கங்களுக்கு ஆவிக்குரிய பிரதியுத்தரம் சொல்லவேண்டும். அவர்களுடைய வீண்பேச்சுக்களை அடக்கவேண்டும். அவர்களுக்கு அவமானம் உண்டாகத்தக்கதாக தெளிவாக பதில் சொல்லவேண்டும் (அப் 5:28).

அப்பொல்லோ யூதர்களுடனே வெளியரங்கமாகவும் பலமாயும் தர்க்கம்பண்ணுகிறான். அவர்களிடத்தில் பேசும்போது ஆத்தும தாகத்தோடும், ஆத்தும பாரத்தோடும் பேசுகிறான். அவர்களுக்குப் புரியும் விதத்திலும், அவர்கள் சத்தியத்தை ஏற்றுக்கொள்ளும் விதத்திலும் அவர்களுடனே தர்க்கம்பண்ணுகிறான். இயேசுவே கிறிஸ்து என்னும் சத்தியத்தை யூதர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும். யூதருடைய பிரமாணமும் இந்தச் சத்தியத்தை அவர்களுக்கு விளக்கமாய்ச் சொல்லுகிறது.

விசுவாசம் கேள்வியினால் வரும். யூதர்கள் அப்பொல்லோவின் மூலமாக இயேசுவே கிறிஸ்து என்னும் சத்தியத்தைத் தங்கள் காதுகளினால் கேட்டு, தேவகிருபையினால் விசுவாசிக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவைப் பிரசங்கிப்பதே ஊழியக்காரரின் வேலை. இயேசுவே கிறிஸ்து என்று வேதவாக்கியங்களைக் கொண்டு ஊழியக்காரர்கள் திருஷ்டாந்தப்படுத்த வேண்டும். புறஜாதியாரோடு தர்க்கம் பண்ணும்போது, ஊழியக்காரர்களுக்கு வேதவாக்கியங்களே ஆதாரமாக இருக்கவேண்டும். வீண்வார்த்தைகளை அலப்பக்கூடாது. உலகப்பிரகாரமான சம்பாஷணைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது. வேதவசனங்களை இருபுறமும் கருக்குள்ள பட்டயமாக பயன்படுத்தி ஆவிக்குரிய யுத்தம்பண்ணவேண்டும்.

ஊழியக்காரர்கள் சத்தியத்தைப் பிரசங்கம்பண்ணினால் மாத்திரம் போதாது. சத்தியத்தை நிரூபிக்கவேண்டும். சத்தியத்திற்கு விரோதமாக எழுப்பப்படும் தர்க்கங்களுக்கு பிரதியுத்தரம் சொல்ல வேண்டும். சத்தியத்தை வேத வாக்கியங்களைக் கொண்டு திருஷ்டாந்தப்படுத்த வேண்டும். தாழ்மையோடு நாம் பேசினாலும், பரிசுத்த ஆவியானவருடைய வல்லமையோடும் அதிகாரத்தோடும் பேசவேண்டும். இயேசுகிறிஸ்துவின் நாமம் மகிமைப்படவேண்டும் என்பதும், ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதுமே நம்முடைய பிரதான இலக்காகயிருக்கவேண்டும். அப்பொல்லோ அகாயா நாட்டிலே, கிருபையினால் விசுவாசிகளானவர்களுக்கு, தன் ஊழியத்தின் மூலமாய், மிகவும் உதவியாயிருக்கிறான்.

19 அதிகாரம்

பவுல் ஒவ்வொரு நாட்டிலேயும் கிரமமாய்ச் சுற்றித்திரிந்து, அங்குள்ள சபைகளுக்குப்போய், சீஷர் எல்லாரையும் திடப்படுத்துகிறான் (அப் 18:23). தேவனுக்குச் சித்தமானால் உங்களிடத்திற்குத் திரும்பி வருவேன் என்று எபேசு பட்டணத்திலுள்ள சீஷரிடத்தில் வாக்குப்பண்ணினான். தான் வாக்குப்பண்ணினதை நினைவுகூர்ந்து பவுல் மறுபடியும் எபேசு பட்டணத்திற்கு வருகிறான்.

பவுல் எபேசு பட்டணத்தில் சீஷர்களைச் சந்திக்கிறான். அவர்களில் சிலர் யோவான் கொடுத்த ஞானஸ்நானம் மாத்திரமே பெற்றிருக்கிறார்கள். விசுவாசத்தில் பலவீனமாகயிருக்கிறார்கள். அவர்களுக்கு சத்தியத்தைப் பிரசங்கம்பண்ணி அவர்களைத் திடப்படுத்துகிறான். பவுல் அவர்கள்மேல் கைகளை வைத்தபோது, பரிசுத்த ஆவியானவர் அவர்கள்மேல் வருகிறார் (அப் 19:1-7). பவுல் ஜெபஆலயத்தில் மூன்றுமாதளவும் தேவனுடைய இராஜ்ஜியத்திற்கு அடுத்தவைகளைக் குறித்து சம்பாஷணைபண்ணி புத்திசொல்லுகிறான் (அப் 19:8).

திறன்னு என்னும் ஒருவனுடைய வித்தியாசாலையிலே புறஜாதியாருக்கு கர்த்தராகிய இயேசுவின் வசனத்தை உபதேசம்பண்ணுகிறான் (அப் 19:9,10). பவுலின் கைகளினாலே தேவன் விசேஷித்த அற்புதங்களைச் செய்து தம்முடைய சத்திய வசனத்தை உறுதிபண்ணுகிறார் (அப் 19:11,12).

மந்திரவாதிகளாகிய யூதரில் சிலர் இயேசுவின் நாமத்தைச் சொல்லத்துணிந்து பொல்லாத ஆவிகளைத் துரத்த முயற்சி செய்கிறார்கள். ஆனால் அவர்களால் முடியவில்லை. யூதருக்கும் கிரேக்கருக்கும் தேவபயமுண்டாயிற்று. கர்த்தராகிய இயேசுவின் நாமம் மகிமைப்படுகிறது (அப் 19:13-17). விசுவாசித்தவர்களில் அநேகர் இரட்சிக்கப்படுகிறார்கள் (அப் 19:18-20).

பவுல் மக்கெதோனியா, அகாயா என்னும் நாடுகளில் சுற்றி நடந்து ஊழியம் செய்கிறான் (அப் 19:21,22). தெமேத்திரியு என்னும் பேர் கொண்ட தட்டான் பவுலின் ஊழியத்திற்கு எதிர்த்து நிற்கிறான். தன்னைப்போல தொழில் செய்கிற மற்ற வேலையாட்களைக் கூட்டிக்கொண்டு தியானாளே பெரியவள் என்று சத்தமிட்டுக் கலகம்பண்ணுகிறான் (அப் 19:23-34). பட்டணத்து சம்பிரதியானவன் கலகத்தை ஞானமாய் அடக்குகிறான் (அப் 19:35-41).

எபேசு
அப் 19 : 1-7

அப் 19:1. அப்பொல்லோ என்பவன் கொரிந்து பட்டணத்திலே இருக்கையில், பவுல் மேடான தேசங்கள் வழியாய்ப் போய், எபேசுவுக்கு வந்தான்; அங்கே சில சீஷரைக் கண்டு:

அப் 19:2. நீங்கள் விசுவாசிகளான போது, பரிசுத்தஆவியைப் பெற்றீர்களா என்று கேட்டான். அதற்கு அவர்கள்: பரிசுத்தஆவி உண்டென்பதை நாங்கள் கேள்விப்படவே இல்லை என்றார்கள்.

அப் 19:3. அப்பொழுது அவன்: அப்படியானால் நீங்கள் எந்த ஞானஸ்நானம் பெற்றீர்கள் என்றான். அதற்கு அவர்கள்: யோவான் கொடுத்த ஞானஸ்நானம் பெற்றோம் என்றார்கள்.

அப் 19:4. அப்பொழுது பவுல்: யோவான் தனக்குப் பின் வருகிறவராகிய கிறிஸ்து இயேசுவில் விசுவாசிகளாயிருக்கவேண்டும் என்று ஜனங்களுக்குச் சொல்லி, மனந்திரும்புதலுக்கு ஏற்ற ஞானஸ்நானத்தைக் கொடுத்தானே என்றான்.

அப் 19:5. அதைக் கேட்டபோது அவர்கள் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள்.

அப் 19:6. அல்லாமலும் பவுல் அவர்கள்மேல் கைகளை வைத்தபோது, பரிசுத்தஆவி அவர்கள்மேல் வந்தார்; அப்பொழுது அவர்கள் அந்நியபாஷைகளைப் பேசித் தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள்.

அப் 19:7. அந்த மனுஷரெல்லாரும் ஏறக்குறையப் பன்னிரண்டு பேராயிருந்தார்கள்.

சில சீஷர்

அப்பொல்லோ என்பவன் கொரிந்து பட்டணத்திலே இருக்கையில், பவுல் மேடான தேசங்கள் வழியாய்ப் போய், எபேசுவுக்கு வந்தான்; அங்கே சில சீஷரைக் கண்டு: (அப் 19:1)

ஆசியா தேசத்திலே எபேசு பட்டணம் மிகவும் பிரசித்திப் பெற்ற பட்டணமாக விளங்குகிறது. இங்கு தியானாளுக்கு ஒரு கோவிலைக் கட்டியிருக்கிறார்கள். அக்காலத்து உலக அதிசயங்களில் இந்தக் கோவிலையும் ஒன்றாகக் கருதினார்கள். பவுல் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்காக எபேசு பட்டணத்திற்கு வருகிறான். இந்த வேளையில் அப்பொல்லோ கொரிந்து பட்டணத்திலிருக்கிறான். கொரிந்துவில் விதைக்கப்பட்ட சுவிசேஷ விதைக்கு அப்பொல்லோ தண்ணீர் பாய்ச்சும்போது, பவுலோ எபேசுவில் சுவிசேஷ விதையை விதைக்கிறான்.

பவுல் ஏற்கெனவே எபேசு பட்டணத்திற்கு வந்து அவர்களுடைய ஜெபஆலயத்திலே பிரவேசித்து ஊழியம் செய்திருக்கிறான் (அப் 18:19). ஆனால் அப்போது பவுலினால் எபேசு பட்டணத்தில் நீண்டநாள் தங்க முடியவில்லை. எபேசு பட்டணத்தார் பவுல்மீது சிநேகமாகயிருந்தார்கள். அவன் இன்னும் சிலகாலம் தங்களுடனே இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். ஆனால் பவுலோ தேவனுக்குச் சித்தமானால் திரும்பி உங்களிடத்திற்கு வருவேன் என்று சொல்லி, அவர்களிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டு எருசலேமுக்குப் புறப்பட்டுப் போனான்.

பவுல் எபேசு பட்டணத்தைவிட்டு புறப்பட்டுப்போனாலும், ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் எபேசு பட்டணத்திலிருக்கிறார்கள். அப்பொல்லோ என்பவன் அந்தப் பட்டணத்திற்கு ஊழியம் செய்ய வருகிறான். சிறிது காலம் ஊழியம் செய்த பின்பு அவன் கொரிந்து பட்டணத்திற்குப் போகிறான். அவன் எபேசு பட்டணத்தைவிட்டு கொரிந்திற்குப் போனபோது, பவுல் எபேசு பட்டணத்திற்கு வருகிறான். ஒவ்வொரு பட்டணத்திலும் யாராவது ஒரு ஊழியக்காரர் கர்த்தருடைய ஊழியத்தைத் தொடர்ந்து செய்துகொண்டிருக்கிறார்கள்.

பவுல் கலாத்தியா, பிரிகியா ஆகிய நாட்டிலே சுற்றித்திரிந்து சீஷரையெல்லாம் திடப்படுத்துகிறான். அதன்பின்பு பவுல் மேடான தேசங்கள் வழியாய்ப் போய் எபேசுவுக்கு வருகிறான். எபேசுவில் ஏற்கெனவே ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் இருக்கிறார்கள். அவர்களை பவுல் மறுபடியும் சந்திக்கிறான். எபேசு பட்டணத்தில் சில சீஷர்களையும் காண்கிறான். இவர்கள் இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைத்திருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவே மேசியா என்று நம்புகிறார்கள். இவர்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் இன்னும் வளர்ச்சி பெறவில்லை. யோவான்ஸ்நானனுடைய உபதேசத்தைப் பின்பற்றுகிறார்கள். இந்த சீஷர்களுடைய எண்ணிக்கை பன்னிரண்டு ஆகும் (அப் 19:7).

பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா

நீங்கள் விசுவாசிகளானபோது, பரிசுத்தஆவியைப் பெற்றீர்களா என்று கேட்டான். அதற்கு அவர்கள்: பரிசுத்தஆவி உண்டென்பதை நாங்கள் கேள்விப்படவே இல்லை என்றார்கள் (அப் 19:2).

எபேசுவிலுள்ள சீஷர்கள் இயேசுகிறிஸ்துவைத் தேவனுடைய குமாரனாக விசுவாசிக்கிறார்கள். பவுல் அவர்களிடத்தில் "நீங்கள் விசுவாசிகளானபோது, பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா" என்று கேட்கிறான். பரிசுத்த ஆவியைக்குறித்து அவர்கள் கேள்விப்பட்டிருக்கிறார்களா, ஆவியானவரின் சத்தியம் அவர்களுக்கு உபதேசிக்கப்பட்டிருக்கிறதா என்று அவர்களிடத்தில் விசாரிக்கிறான். இயேசுகிறிஸ்து பரமேறிப்போனபின்பு, பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை அப்போஸ்தலரும் சீஷர்களும் பெற்றுக்கொள்கிறார்கள். அந்த அபிஷேகத்தை, எபேசு பட்டணத்திலுள்ள சீஷர்களும் பெற்றிருக்கிறார்களா என்று பவுல் அவர்களிடத்தில் அன்பாய் விசாரிக்கிறான்.

கிறிஸ்துவின் உபதேசத்தைப் பரிசுத்த ஆவியானவர் முத்திரையிட்டு உறுதிபண்ணுகிறார். ஆவியானவரின் கிருபைகளும் வரங்களும் எல்லா விசுவாசிகளுக்கும் கொடுக்கப்படுகிறது. வாஞ்சையாகவும் மனப்பூர்வமாகவும் ஆவியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறவர்களை ஆவியானவர் அபிஷேகிக்கிறார்.

பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பொறுத்தளவில் ஒரு சிலர் தெளிவில்லாமல் குழப்பத்தோடிருக்கிறார்கள். ஒரு சிலர் வஞ்சிக்கப்பட்டும் இருக்கிறார்கள். பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ளாமலேயே, ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொண்டதாகச் சிலர் சொல்லுகிறார்கள். ஆவியானவரின் வரங்களைப் பெற்றுக்கொள்ளாமலேயே, தங்களிடத்தில் ஆவியின் வரம் கிரியை செய்வதாகச் சிலர் சொல்லுகிறார்கள். பரிசுத்த ஆவியானவர், தம்மிடத்தில் வாஞ்சையோடு கேட்கிறவர்களிடத்தில், வந்து வாசம்பண்ணுவார். தம்முடைய ஆவியினால் அவர்களை நிரப்புவார். அவர்களுக்கு ஆவியானவரின் கிருபைகளும் ஆறுதல்களும் கொடுக்கப்படும்.

விசுவாசிகளெல்லோரும் தங்களைத் தாங்களே ஆராய்ந்து பார்க்கவேண்டும். நாம் விசுவாசிகளானபோது, பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டிருக்கிறோமா என்று, நம்மை நாமே சோதித்தறியவேண்டும். மரம் அதன் கனியினால் அறியப்படும். நாம் பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்கிறோமா என்பதை, நம்முடைய கனிகளினால் அறியலாம். ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றிருக்கிறவர்கள் ஆவியின் கனிகளையும் பெற்றிருப்பார்கள். ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றிருக்கிறோம் என்று சொல்லுகிற நாம், நம்முடைய ஜீவியத்தில், ஆவியின் கனிகளை வெளிப்படுத்தவேண்டும். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியம் பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்படவேண்டும். நாம் ஆவியில் நடக்கவேண்டும்.

எபேசு பட்டணத்திலுள்ள சீஷர்களோ பரிசுத்த ஆவியை இன்னும் பெற்றுக்கொள்ளவில்லை. பரிசுத்த ஆவியானவரைப்பற்றிய தங்கள் அறியாமையை அவர்கள் வெளிப்படையாகச் சொல்லுகிறார்கள். "பரிசுத்த ஆவி உண்டென்பதை நாங்கள் கேள்விப்படவே இல்லை" என்று சொல்லுகிறார்கள்.

வேதவாக்கியங்களில் பரிசுத்த ஆவியானவரைப்பற்றி வாக்குப் பண்ணப்பட்டிருக்கிறது. இதை இவர்கள் அறிந்திருக்கிறார்கள். ஏற்றகாலத்தில் ஆவியானவர் விசுவாசிகளை அபிஷேகிப்பார் என்பதையும் எபேசுவிலுள்ள சீஷர்கள் விசுவாசிக்கிறார்கள். ஆனால் பரிசுத்த ஆவியானவர் இப்போது கர்த்தருடைய பிள்ளைகளை அபிஷேகித்துக் கொண்டிருக்கிறார் என்பதை இவர்கள் இன்னும் அறியவில்லை. இந்தக் காலம் அபிஷேகத்தின் காலம். மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன் என்று யோவேல் தீர்க்கதரிசி மூலமாக, தேவன் வாக்குப்பண்ணின காரியம், இக்காலத்தில் நிறைவேறிக்கொண்டிருக்கிறது. இவர்கள் இதை இன்னும் கேள்விப்படவே இல்லை.

சுவிசேஷத்தின் வெளிச்சமானது அதிகாலைப் பொழுதின் வெளிச்சத்தைப்போல நம்முடைய இருதயத்திற்குள் பிரகாசிக்க ஆரம்பிக்கிறது. காலை வெளிச்சம் நேரம் ஆக ஆக அதிகரிக்கும். வெளிச்சம் அதிகரிக்கும்போது மேகம் நீங்கும். எல்லா தெளிவாய்த் தெரியும். சந்தேகமும் அவிசுவாசமும் நீங்கும். இருதயத்தில் தெளிவு உண்டாகும்.

எந்த ஞானஸ்நானம் பெற்றீர்கள்

அப்பொழுது அவன்: அப்படியானால் நீங்கள் எந்த ஞானஸ்நானம் பெற்றீர்கள் என்றான். அதற்கு அவர்கள்: யோவான் கொடுத்த ஞானஸ்நானம் பெற்றோம் என்றார்கள் (அப் 19:3).

எபேசுவிலுள்ள சீஷர்கள் பரிசுத்த ஆவி உண்டென்பதை கேள்விப்படவே இல்லை. ஆகையினால் அவர்கள் எந்த ஞானஸ்நானத்தைப் பெற்றிருக்கிறார்கள் என்பதை அறிந்துகொள்ள பவுல் விரும்புகிறான். அவர்களிடத்தில் "அப்படியானால் நீங்கள் எந்த ஞானஸ்நானம் பெற்றீர்கள்" என்று கேட்கிறான். அதற்கு அவர்கள் "யோவான் கொடுத்த ஞானஸ்நானம் பெற்றோம்" என்று பதில் சொல்லுகிறார்கள். இவர்கள் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறார்கள். ஆனால் பரிசுத்த ஆவியானவர் இப்போது விசுவாசிகளை அபிஷேகித்துக் கொண்டிருக்கிறார் என்பதை கேள்விப்படாதவர்களாக இருக்கிறார்கள்.

பரிசுத்த ஆவியானவர் உண்டு என்பதை கேள்விப்படாதவர்கள், இயேசுவே கிறிஸ்து என்பதையும் கேள்விப்படாதவர்களாக இருக்கிறார்கள். பரிசுத்த ஆவியானவரைப்பற்றிய அறியாமை, கிறிஸ்துவைப்பற்றிய அறியாமைக்கு வழிநடத்தும். நாம் எந்த ஞானஸ்நானம் பெற்றிருக்கிறோம் என்பதில் தெளிவாயிருக்கவேண்டும். கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே, அதாவது பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவரின் நாமத்தினாலே, நாம் ஞானஸ்நானம் பெற்றிருப்போமென்றால், நாம் பெற்றிருக்கிற ஞானஸ்நானத்திற்கு சாட்சியுள்ளவர்களாக ஜீவிக்கவேண்டும். ஞானஸ்நானத்தையும் பெற்றுக்கொண்டு, சாட்சியில்லாமல் ஜீவிப்பது தேவனை அவமதிக்கிற காரியமாகவே இருக்கும்.

எபேசுவிலுள்ள சீஷர்கள் யோவான் கொடுத்த ஞானஸ்நானத்தைப் பெற்றிருக்கிறார்கள். எபேசு பட்டணத்தில் அப்பொல்லோ சிறிது காலம் ஊழியம் செய்தான். அவன் யோவான் கொடுத்த ஸ்நானத்தை மாத்திரம் அறிந்தவனாயிருந்தான் (அப் 18:25). ஒருவேளை அப்பொல்லோ ஆரம்பத்தில் கொடுத்த பிரசங்கச் செய்தியை, இவர்கள் கேட்டு, இவர்களும் யோவான் கொடுத்த ஞானஸ்நானத்தைப் பெற்றிருக்கலாம்.

ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும், யோவான் கொடுத்த ஸ்நானத்தை மாத்திரம் அறிந்தவனாயிருந்த அப்பொல்லோவை, சேர்த்துக்கொண்டு, தேவனுடைய மார்க்கத்தை அதிகத் திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள் (அப் 18:26). அதன்பின்பு அப்பொல்லோ கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதை அறிந்துகொள்கிறான். ஆனாலும் எபேசுவிலுள்ள இந்தப் பன்னிரண்டு சீஷரும் யோவான் கொடுத்த ஞானஸ்நானத்தை மாத்திரம் பெற்றிருக்கிறார்கள். ஒருவேளை இவர்கள் யோவானுடைய சீஷர்களாகவும் இருக்கலாம்.

மனந்திரும்புதலுக்கு ஏற்ற ஞானஸ்நானம்

அப்பொழுது பவுல்: யோவான் தனக்குப் பின் வருகிறவராகிய கிறிஸ்து இயேசுவில் விசுவாசிகளாயிருக்கவேண்டும் என்று ஜனங்களுக்குச் சொல்லி, மனந்திரும்புதலுக்கு ஏற்ற ஞானஸ்நானத்தைக் கொடுத்தானே என்றான் (அப் 19:4).

பவுல் அவர்களுக்கு யோவான் கொடுத்த ஞானஸ்நானத்தின் உண்மையான பொருளை விளக்கிக் கூறுகிறான். யோவான் மனந்திரும்புதலுக்கு ஏற்ற ஞானஸ்நானத்தைக் கொடுத்தான். எபேசுவிலுள்ள சீஷர்கள் அறியாமையில் விடப்பட்டிருக்கிறார்கள். சரியான உபதேசமில்லாமல் ஆவிக்குரிய தப்பிதங்களைச் செய்கிறார்கள். இவர்களுக்கு மெய்யான சத்தியத்தைப் பொறுமையோடு உபதேசம் பண்ணவேண்டும். பவுல் தன்னுடைய சீஷர்களுக்கு சத்தியத்தை மறைக்காமல் தெளிவாக உபதேசம்பண்ணுகிறான். ஆனால் எபேசுவிலுள்ள இந்தப் பன்னிரண்டு சீஷர்களுக்கும் இதுவரையிலும் முழுமையான உபதேசம் கிடைக்கவில்லை.

பவுல் அவர்களுக்கு யோவான் கொடுத்த ஞானஸ்நானத்தைப்பற்றி விளக்கமாகச் சொல்லுகிறான். யோவான் மனந்திரும்புதலுக்கு ஏற்ற ஞானஸ்நானத்தைக் கொடுத்தான். யோவான் கொடுத்த ஞானஸ்நானம் நல்ல ஞானஸ்நானம்தான். ஆனால் யோவானுடைய ஞானஸ்நானம் முழுமையான ஞானஸ்நானம் அல்ல. அவன் ஞானஸ்நானம் கொடுக்கும்போதே "தனக்குப் பின்வருகிறவராகிய கிறிஸ்து இயேசுவில் விசுவாசிகளாயிருக்கவேண்டும்" என்று சொன்னான். சீஷர்கள் யோவான் கொடுத்த ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொண்டாலும், அவர்கள் கிறிஸ்து இயேசுவில் விசுவாசிகளாயிருக்கவேண்டும்.

யோவான்ஸ்நானன் கர்த்தருக்கு வழியை ஆயத்தம்பண்ண வந்தவன். அவன் இயேசுகிறிஸ்துவைப் பார்த்து "இதோ தேவஆட்டுக்குட்டி" என்று அறிக்கை செய்தான். இயேசுவே கர்த்தாதி கர்த்தாவாகவும், இராஜாதி இராஜாவாகவும் இருக்கிறார். யோவான்ஸ்நானனோ அவருக்கு வழியை ஆயத்தம்பண்ணுகிறவனாக மாத்திரமே இருக்கிறான். யோவான் கொடுத்த ஞானஸ்நானம் ஜனங்களை பாவத்திலிருந்து மனந்திரும்புதலுக்கு வழிநடத்தும். இயேசுகிறிஸ்துவோ பரிசுத்த ஆவியினாலும், அக்கினியினாலும் ஞானஸ்நானம் கொடுக்கிறார்.

கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினால்

அதைக் கேட்டபோது அவர்கள் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள் (அப் 19:5).

எபேசுவிலுள்ள சீஷர்கள், பவுலின் போதகத்தைக் கேட்டு, தங்களுடைய தப்பிதங்களை உணர்ந்துகொள்கிறார்கள். கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்கிறார்கள். சத்தியத்தை அறிந்துகொள்ளும்போது, அவர்களுடைய அறியாமை நீங்கிப்போகிறது. பவுல் அவர்களுக்கு ஞானஸ்நானத்தைக் குறித்து தெளிவான உபதேசம் கொடுக்கிறான். அவர்கள் யோவான் கொடுத்த ஞானஸ்நானம் பெற்றிருந்தாலும், கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டியதன் அவசியத்தை, அவர்களுக்குப் போதிக்கிறான்.

அவர்கள் யோவானுடைய சீஷர்களாகயிருந்தாலும், அவர்கள் இயேசுவின் சீஷர்களாகவும் இருக்கவேண்டும். தனக்குப் பின்வருகிறவராகிய கிறிஸ்து இயேசுவில் விசுவாசிகளாயிருக்க வேண்டுமென்று சொல்லித்தான், யோவான் அவர்களுக்கு மனந்திரும்புலுக்கு ஏற்ற ஞானஸ்நானத்தைக் கொடுத்தான். இந்தச் சத்தியத்தையெல்லாம் கேட்டபோது, அவர்கள் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெறுகிறார்கள்.

பரிசுத்த ஆவி

அல்லாமலும் பவுல் அவர்கள்மேல் கைகளை வைத்தபோது, பரிசுத்தஆவி அவர்கள்மேல் வந்தார்; அப்பொழுது அவர்கள் அந்நியபாஷைகளைப் பேசித் தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள். அந்த மனுஷரெல்லாரும் ஏறக்குறையப் பன்னிரண்டு பேராயிருந்தார்கள் (அப் 19:6,7).

கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே பன்னிரண்டு சீஷரும் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்கிறார்கள். அப்போது பவுல் அவர்களுக்காக தேவனிடத்தில் ஜெபித்து, அவர்கள்மேல் தன்னுடைய கைகளை வைக்கிறான். தேவன் பவுலின் ஜெபத்திற்குப் பதில் கொடுக்கிறார். அப்போது பரிசுத்த ஆவி அந்தப் பன்னிரண்டுபேர் மேலும் வருகிறார். அவர்கள் அந்நிய பாஷைகளைப்பேசி தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள். தேவனுடைய ராஜ்யத்தின் ரகசியங்களை அறிந்து கொள்வதற்கு பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்குத் தீர்க்கதரிசன வரத்தைக் கொடுக்கிறார். அவர்கள் அந்நிய பாஷைகளில் பேசுகிறார்கள்.

ஆவியானவர் அவர்களுக்கு பற்பல பாஷைகளைப் பேசும் வரத்தையும் கொடுக்கிறார். பல தேசங்களில், பல பாஷைகளில் கர்த்தருடைய சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணுவதற்கு, ஆவியானவர் அவர்களுக்கு விசேஷித்த வரத்தைத் தருகிறார். பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொண்டபின்பு சீஷர்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் மிகப்பெரிய மாற்றம் உண்டாயிற்று.

சத்திய ஆவியானவர் அவர்களை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துகிறார். பரிசுத்த ஆவி உண்டென்பதை கேள்விப்படாத சீஷர்கள்மேல், இப்போது பரிசுத்த ஆவியானவர் வந்திறங்கியிருக்கிறார். தம்முடைய ஆவியினால் அவர்களை அபிஷேகம்பண்ணியிருக்கிறார். அவர்கள் அந்நிய பாஷைகளில் பேசி தேவனை மகிமைப்படுத்துகிறார்கள். தங்களுக்கு பக்திவிருத்தி உண்டாவதற்கு ஏதுவாக, ஆவியானவர் ஏவுகிறபடி தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள்.

விசேஷித்த அற்புதங்கள்
அப் 19 : 8-12

அப் 19:8. பின்பு பவுல் ஜெபஆலயத்தில் பிரவேசித்து, தைரியமாய்ப் பிரசங்கித்து, மூன்று மாதமளவும் தேவனுடைய ராஜ்யத்துக் கடுத்தவைகளைக் குறித்துச் சம்பாஷணைபண்ணி, புத்திசொல்லிக் கொண்டு வந்தான்.

அப் 19:9. சிலர் கடினப்பட்டு அவிசுவாசிகளாகிக் கூட்டத்திற்கு முன்பாக இந்த மார்க்கத்தை நிந்தித்தபோது, அவன் அவர்களை விட்டு விலகி, சீஷரை அவர்களிலிருந்து பிரித்துக்கொண்டு, திறன்னு என்னும் ஒருவனுடைய வித்தியாசாலையிலே அநுதினமும் சம்பாஷித்துக்கொண்டு வந்தான்.

அப் 19:10. இரண்டு வருஷகாலம் இப்படி நடந்ததினாலே ஆசியாவில் குடியிருந்த யூதரும் கிரேக்கருமாகிய எல்லாரும் கர்த்தராகிய இயேசுவின் வசனத்தைக் கேட்டார்கள்.

அப் 19:11. பவுலின் கைகளினாலே தேவன் விசேஷித்த அற்புதங்களைச் செய்தருளினார்.

அப் 19:12. அவனுடைய சரீரத்திலிருந்து உறுமால்களையும் கச்சைகளையும் கொண்டு வந்து, வியாதிக்காரர்மேல் போட வியாதிகள் அவர்களைவிட்டு நீங்கிப்போயின; பொல்லாத ஆவிகளும் அவர்களை விட்டுப் புறப்பட்டன.

தேவனுடைய ராஜ்யத்துக்கடுத்தவைகள்

பின்பு பவுல் ஜெபஆலயத்தில் பிரவேசித்து, தைரியமாய்ப் பிரசங்கித்து, மூன்று மாதமளவும் தேவனுடைய ராஜ்யத்துக் கடுத்தவைகளைக் குறித்துச் சம்பாஷணைபண்ணி, புத்திசொல்லிக் கொண்டு வந்தான் (அப் 19:8).

பவுல் எபேசு பட்டணத்தில் யூதருடைய ஜெபஆலயத்தில் பிரவேசித்து பிரசங்கம்பண்ணுகிறான். இங்கு இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிற சீஷர்களுடைய சபை இன்னும் ஸ்தாபிக்கப்படவில்லை. இப்படிப்பட்ட சபை இல்லாத இடங்களில், பவுல் யூதருடைய ஜெபஆலயங்களுக்குப் போய் அங்கு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறான். அங்கு ஏற்கெனவே தேவனை விசுவாசிக்கிற ஜனங்கள் கூடியிருக்கிறார்கள். அவர்களுக்கு மேசியாவைத் தெரியும். மேசியாவை எதிர்பார்க்கிறார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துதான் மேசியா என்னும் சத்தியம் அவர்களுக்கு இன்னும் தெரியவில்லை.

பவுல் அவர்களிடத்தில்போய் இயேசுவே கிறிஸ்து என்றும், தேவனுடைய ராஜ்ஜியத்திற்கடுத்தவைகளைக் குறித்தும் பிரசங்கம்பண்ணுகிறான். எல்லா மனுஷருமே தேவனுக்குக் கீழ்ப்படியவேண்டும். மனுஷருடைய சந்தோஷம் உலகப்பிரகாரமான சந்தோஷமாக இருக்கக்கூடாது. நாம் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்க வேண்டும். கர்த்தர் நம்மை ஆளுகை செய்ய ஒப்புக்கொடுக்கவேண்டும்.

தேவனுடைய ராஜ்ஜியத்திற் கடுத்தவைகளைப்பற்றி நமக்குத் தெரிந்திருக்க வேண்டும். பவுல் ஜெபஆலயங்களுக்குப்போய், அங்கு வருகிற யூதர்களிடம் ஆவிக்குரிய பிரதான சத்தியங்களை அவர்களுக்கு எடுத்துச்சொல்லுகிறான். அவர்களுடைய தவறான எண்ணங்களை அவர்களுக்கு விளக்கமாகச் சொல்லுகிறான்.

பவுல் அவர்களிடத்தில் தைரியமாய்ப் பிரசங்கம்பண்ணுகிறான். வெறும் வார்த்தைகளினால் மாத்திரம் சுவிசேஷத்தைச் சொன்னால் போதாது. பவுல் அவர்களோடு விவாதம்பண்ணுகிறான். சம்பாஷணை பண்ணுகிறான். அவர்களுடைய தர்க்கங்களுக்குப் பதில் சொல்லுகிறான். அவர்கள் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்தால் மாத்திரம் போதாது. தாங்கள் அவரை ஏன் விசுவாசிக்கவேண்டும் என்பதற்காக காரணத்தையும் அறிந்திருக்கவேண்டும். பவுல் அவர்களிடத்தில் ஆத்தும பாரத்தோடும், தாகத்தோடும் பிரசங்கம்பண்ணுகிறான்.

பவுல் ஒவ்வொரு இடமாகப் பிரயாணம் செய்து சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணுகிறவன். ஜனங்கள் மத்தியில் சத்தியத்தைப் பக்குவமாக எடுத்துச் சொல்லி, சம்பாஷணை பண்ணி, புத்திசொல்லி, அவர்களுக்குப் புரியவைக்கவேண்டும் என்பது பவுலுக்கு நன்றாய்த் தெரிந்திருக்கிறது. பவுல் பிரசங்கிக்கிறபோது எப்போதுமே தெளிந்த சிந்தையுடனும், பயபக்தியுடனும், அதே சமயத்தில் தைரியமாயும் பிரசங்கம்பண்ணுவது வழக்கம்.

பவுல் ஜெபஆலயத்தில் மூன்று மாதமளவும் பிரசங்கம்பண்ணுகிறான். மூன்றுமாத காலமாக யூதர்கள் பவுலின் பிரசங்கத்தை ஆர்வத்தோடு கேட்கிறார்கள். சிலர் விசுவாசிகளாகிறார்கள். சிலர் கடினப்பட்டு அவிசுவாசிகளாகிறார்கள். பவுல் ஒருநாள் மாத்திரம் இங்கு பிரசங்கம்பண்ணிவிட்டு வேறு இடத்திற்குப் போய்விடவில்லை. மூன்றுமாத காலமாக, தொடர்ந்து பிரசங்கம்பண்ணுகிறான். ஜனங்கள் மத்தியில் மனமாற்றம் உண்டாகும் என்று எதிர்பார்த்து, விசுவாசத்தோடு பிரசங்கம்பண்ணுகிறான்.

திறன்னுவின் வித்தியாசாலை

சிலர் கடினப்பட்டு அவிசுவாசிகளாகிக் கூட்டத்திற்கு முன்பாக இந்த மார்க்கத்தை நிந்தித்தபோது, அவன் அவர்களை விட்டு விலகி, சீஷரை அவர்களிலிருந்து பிரித்துக்கொண்டு, திறன்னு என்னும் ஒருவனுடைய வித்தியாசாலையிலே அநுதினமும் சம்பாஷித்துக் கொண்டுவந்தான் (அப் 19:9).

பவுல் எபேசுவிலுள்ள ஜெபஆலயத்தில் பிரவேசித்து, மூன்று மாதமளவும் தைரியமாய்ப் பிரசங்கிக்கிறான். ஜனங்களுக்குப் புத்திசொல்லிக்கொண்டு வருகிறான். அவனுடைய பிரசங்கத்தைக் கேட்டு ஒரு சிலர் இரட்சிக்கப்படுகிறார்கள். இயேசுகிறிஸ்துவே கர்த்தரென்று விசுவாசிக்கிறார்கள். வேறு சிலரோ தங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தி அவிசுவாசிகளாகிறார்கள். இவர்கள் இயேசுகிறிஸ்துவுக்கும், அவருடைய சுவிசேஷத்திற்கும் எதிர்த்து நிற்கிறார்கள்.

பவுல் மூன்றுமாதகாலமாக பிரசங்கம்பண்ணிய சுவிசேஷச் செய்தி ஜனங்களுடைய இருதயத்திற்குள் பிரவேசித்திருக்கிறது. அவர்களுடைய மனச்சாட்சியோடு பேசுகிறது. அதை அவர்கள் புரிந்துகொள்கிறார்கள். ஒரு சிலர் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டு இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறார்கள். வேறு சிலரோ தங்கள் இருதயத்தையும் மனச்சாட்சியையும் கடினப்படுத்தி, சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளாமல் புறக்கணித்துவிடுகிறார்கள். இயேசுவே கிறிஸ்து என்று விசுவாசியாமற் போகிறார்கள். இவர்களுடைய அவிசுவாசம் இருதயகடினத்தினிமித்தமாய் உண்டாயிற்று.

ஒரு சிலர் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டு, இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பது, அவிசுவாசிகளுடைய மனதில் மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அவர்களுடைய மனதைக் குழப்ப விரும்புகிறார்கள். ஏராளமான கூட்டத்திற்கு முன்பாக இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தையும், அவருடைய மார்க்கத்தையும் நிந்திக்கிறார்கள். இந்த நிந்தனையைக் கேட்டு ஏற்கெனவே விசுவாசிகளாக இருக்கிறவர்கள், தங்கள் விசுவாசத்தை விட்டுவிட்டு, மறுபடியும் யூதமார்க்கத்திற்குத் திரும்பி வந்துவிடுவார்கள் என்று எதிர்பார்க்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின் மார்க்கத்தில் இவர்களால் தவறு ஒன்றும் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆகையினால் தங்கள் பொல்லாத வார்த்தைகளினால் கிறிஸ்துவின் சுவிசேஷத்தையும், மார்க்கத்தையும் நிந்திக்கிறார்கள்.

பவுல் எல்லா எதிர்ப்புக்களையும், நிந்தைகளையும் சகித்துக்கொண்டு, ஜெபஆலயத்தில் மூன்றுமாதமளவும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை தைரியமாய்ப் பிரசங்கித்து வருகிறான். கிறிஸ்துவின் மார்க்கத்திற்கு விரோதமாக அவிசுவாசிகளின் நிந்தனையான வார்த்தைகள் அதிகரிக்கிறது. இவர்கள் மனந்திரும்புதலை விரும்பவில்லை. தாங்கள் போதிக்கப்படுவதை வெறுக்கிறார்கள். பவுல் இவர்களுக்கு பிரசங்கம்பண்ணும்போது, அவனுடைய பிரசங்கத்தைக் கேட்காமல் அவனையும், அவன் பிரசங்கிக்கிற சுவிசேஷச் செய்தியையும் நிந்திக்கிறார்கள். இதற்கு மேல் அவர்களோடு போராட மனதில்லாமல், பவுல் ஜெபஆலயத்திலுள்ள அவர்களைவிட்டு விலகி தனியே போய்விடுகிறான்.

பவுல் ஜெபஆலயத்திலுள்ள யூதர்களைவிட்டு விலகிப்போகும்போது, கிறிஸ்துவின் சீஷர்களை அவர்களிலிருந்து பிரித்துக்கொண்டு போய்விடுகிறான். அவர்களுடைய தூஷணமான வார்த்தைகளும், நிந்தையான பேச்சுக்களும் விசுவாசிகளுடைய மனதையும் இருதயத்தையும் பாதித்து விடக்கூடாது என்னும் அக்கரையோடு, சீஷரை அவர்களிலிருந்து பிரித்துக்கொண்டு தனியாகப் போய்விடுகிறான். இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள், அந்தப் பட்டணத்திலுள்ள சபைக்கு அஸ்திபாரத்தைபோல இருக்கிறார்கள். அவிசுவாசிகளோ சபையின் அஸ்திபாரமாக இருக்கும் விசுவாசிகளைத் தங்கள் நிந்தையான வார்த்தைகளினால் பலவீனப்படுத்துகிறார்கள். இதற்குமேல் அவிசுவாசிகளோடு கூடயிருந்தால், விசுவாசிகளுக்கு பாதிப்பு உண்டாகும் என்பதை உணர்ந்தவனாக, பவுல் சீஷரை அவர்களிலிருந்து பிரித்து தனியே போய்விடுகிறான். பவுல் எங்கே போனாலும், சீஷர்களும் அவனோடு கூடப் போவதற்கு ஆயத்தமாயிருக்கிறார்கள்.

பவுல் ஜெபஆலயத்திலுள்ள யூதர்களைவிட்டு விலகி, சீஷர்களை அவர்களிலிருந்து பிரித்துக்கொண்டு, திறன்னு என்னும் ஒருவனுடைய வித்தியாசாலைக்குப்போகிறான். அங்கு அனுதினமும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை சம்பாஷித்துக்கொண்டு வருகிறான். பவுல் ஜெபஆலயத்திலிருந்து பிரிந்து போனதினால், ஊழியத்தில் இரட்டிப்பான நன்மை உண்டாயிற்று. அவையாவன:

1. ஜெபஆலயத்தில் வாரம் ஒருமுறை, ஓய்வுநாளில் மாத்திரமே பிரசங்கம்பண்ண முடியும் (அப் 13:43). ஆனால் திறன்னுவின் வித்தியாசாலையோ கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அனுதினமும் சம்பாஷிக்க வாய்ப்புண்டாயிற்று.

2. ஜெபஆலயத்தில் யூதர்களும், யூதமார்க்கத்தை ஏற்றுக்கொண்டவர்களும் மாத்திரமே வருவது வழக்கம். புறஜாதியார் யூதருடைய ஜெபஆலயத்திற்கு வர அனுமதியில்லை. திறன்னுவின் வித்தியாசாலையிலோ யூதரும் வரலாம், புறஜாதியாரும் வரலாம். பவுல் இங்கு ஊழியம் செய்யும்போது யூதரும் கிரேக்கருமாகிய எல்லாரும் கர்த்தராகிய இயேசுவின் வசனத்தைக் கேட்கிறார்கள் (அப் 19:10).

திறன்னுவின் வித்தியாசாலையைப் பற்றி வேதபண்டிதர்கள் பலவிதமான கருத்துக்களைச் சொல்லுகிறார்கள். இது யூதருடைய மார்க்கத்தைக் கற்றுக்கொடுக்கிற பாடசாலை என்றும், இங்கு பழைய ஏற்பாட்டு ஆகமங்களைக் கற்றுக்கொடுப்பார்கள் என்றும் ஒரு சிலர் சொல்லுகிறார்கள். அடிப்படையில் இது யூதருடைய மார்க்க பாடசாலை என்பது இவர்களுடைய கருத்து. பெரிய பட்டணங்களில் யூதருக்கு ஜெபஆலயமும் இருக்கும், அத்துடன் இதுபோன்ற பாடசாலையும் இருக்கும். இதை யூதர்கள் "பெத்மித்ராஸ்" என்று அழைப்பது வழக்கம்.

திறன்னுவின் வித்தியாசாலையைப் பற்றி வேறு சிலர் சொல்லும்போது, இது புறஜாதியாரின் தத்துவ பாடசாலை என்று சொல்லுகிறார்கள். இது திறன்னு என்பவனுக்குச் சொந்தமானது. பவுலுடைய ஊழியம் நடைபெறுவதற்கு திறன்னு தன்னுடைய வித்தியாசாலையில் இடம்கொடுக்கிறான். சீஷர்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, இவனுடைய வித்தியாசாலைக்கு வந்து, பவுலின் பிரசங்கத்தைக் கேட்கிறார்கள். திறன்னு ஒருவேளை பவுலின்மீதுள்ள அன்பினால் அல்லது பவுலிடத்தில் வாடகை பணத்தை வாங்கிக்கொண்டு, தன்னுடைய வித்தியாசாலையில் அவனுடைய ஊழியம் நடைபெறுவதற்கு அனுமதி கொடுத்திருக்கலாம்.

இரண்டு வருஷகாலம்

இரண்டு வருஷகாலம் இப்படி நடந்ததினாலே ஆசியாவில் குடியிருந்த யூதரும் கிரேக்கருமாகிய எல்லாரும் கர்த்தராகிய இயேசுவின் வசனத்தைக் கேட்டார்கள் (அப் 19:10).

பவுல் எபேசு பட்டணத்தில் இரண்டு வருஷகாலமாய் ஊழியம் செய்கிறான். மூன்றுமாதம் ஜெபஆலயத்தில் ஊழியம் செய்தான் (அப் 19:8). மூன்று மாதத்திற்குப் பின்பு மேலும் இரண்டு வருஷகாலம் திறன்னுவின் வித்தியாசாலையில் தங்கியிருந்து ஊழியம் செய்கிறான். பவுல் இந்த ஊழியத்தைக்குறித்து "நான் மூன்றுவருஷகாலமாய் இரவும் பகலும் கண்ணீரோடே இடைவிடாமல் அவனவனுக்குப் புத்திசொல்லிக்கொண்டு வந்ததை நினைத்து விழித்திருங்கள்" (அப் 20:31) என்று சொல்லுகிறான்.

சுவிசேஷம் சமீபமாயிருக்கிறவர்களுக்கும், தூரமாயிருக்கிறவர்களுக்கும் பிரசங்கிக்கப்படுகிறது. ஆசியாவில் குடியிந்த யூதரும் கிரேக்கருமாகிய எல்லாரும் கர்த்தராகிய இயேசுவின் வசனத்தைக் கேட்கிறார்கள். எபேசுவில் குடியிந்தவர்கள் மாத்திரமல்ல, ஆசியா தேசத்திலே குடியிருந்த எல்லோருக்கும் பவுல் சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கிக்கிறான். ஆசியாவிலே எபேசு பிரதான பட்டணமாக விளங்குகிறது. தேசத்தில் எல்லா பாகங்களிலிருந்தும் ஜனங்கள் எபேசுவுக்கு வருகிறார்கள். பவுல் எபேசுவிலிருந்து சுவிசேஷச் செய்தியை பிரசங்கம்பண்ணும்போது, அந்தச் செய்தியை, எபேசுவுக்கு வருகிற கிராமத்து ஜனங்களும், நகரத்து ஜனங்களும் தங்கள் காதுகளால் கேட்கிறார்கள். தங்கள் ஊர்களுக்குத் திரும்பிப்போகும்போது, தங்கள் இருதயத்தில் சுவிசேஷச் செய்தியையும் தங்களோடு சுமந்துபோகிறார்கள்.

அவர்களெல்லோரும் கர்த்தராகிய இயேசுவின் வசனத்தைக் கேட்கிறார்கள். எல்லா மார்க்கப் பிரிவுகளைச் சேர்ந்தவர்களும் வசனத்தைக் கேட்கிறார்கள். பட்டணத்திலுள்ளவர்களும், கிராமத்திலுள்ளவர்களும் வசனத்தைக் கேட்கிறார்கள். சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிகிறார்கள். இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறார்கள். கிறிஸ்துவின் சுவிசேஷத்தை மற்றவர்களுக்கும் அறிவிக்கிறார்கள்.

உறுமால்களையும் கச்சைகளையும்

பவுலின் கைகளினாலே தேவன் விசேஷித்த அற்புதங்களைச் செய்தருளினார். அவனுடைய சரீரத்திலிருந்து உறுமால்களையும் கச்சைகளையும் கொண்டு வந்து, வியாதிக்காரர்மேல் போட வியாதிகள் அவர்களைவிட்டு நீங்கிப்போயின; பொல்லாத ஆவிகளும் அவர்களை விட்டுப் புறப்பட்டன (அப் 19:11,12).

பவுலின் மூலமாகப் பிரசங்கிக்கப்படுகிற சுவிசேஷச் செய்தியை தேவன் அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும் உறுதி பண்ணுகிறார். தெசலோனிக்கேயா, பெரேயா, அத்தேனே ஆகிய பட்டணங்களில் கர்த்தர் பவுலின் கைகளினாலே அற்புதம் செய்தாரா என்பது தெரியவில்லை. ஒருவேளை அற்புதங்கள் நடந்திருக்கலாம். ஆனால் அவை அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தில் எழுதப்படவில்லை. எபேசு பட்டணத்தில் பவுலின் கைகளினாலே தேவன் விசேஷித்த அற்புதங்களைச் செய்தருளினார் என்று எழுதப்பட்டிருக்கிறது. பவுலின் ஊழியத்தைத் தேவன் அங்கீகரித்திருக்கிறார். அவனுடைய பிரசங்கச் செய்தியை கர்த்தர் உறுதிபண்ணுகிறார்.

பவுலின் மூலமாய் தேவன் சாதாரண அற்புதங்களைச் செய்யாமல், விசேஷித்த அற்புதங்களைச் செய்தருளுகிறார். சாதாரணமாக இயற்கையில் நடைபெறும் அற்புதமான சம்பவங்களுக்குப் பதிலாக, இயற்கைக்கு அப்பாற்பட்ட விசேஷித்த அற்புதசம்பவங்களை, தேவன் பவுலின் கைகளினாலே செய்தருளுகிறார். எல்லா அற்புதங்களுமே விசேஷித்தவை தான். இயற்கையின் சக்திக்கு அப்பாற்பட்டுதான் அற்புதங்கள் நடைபெறும். ஆனால் இங்கோ மிகவும் விசேஷித்த அற்புதங்கள் நடைபெறுகிறது. இந்த அற்புதங்களைப் பவுல் செய்யவில்லை. தேவன் பவுலின் கைகளினால் விசேஷித்த அற்புதங்களைச் செய்கிறார். தேவன் தாம் செய்கிற அற்புதங்களுக்குப் பவுலை ஒரு கருவியாகப் பயன்படுத்துகிறார்.

தன்னிடத்தில் அழைத்து வரப்படுகிற வியாதியஸ்தரை பவுல் இயேசுவின் நாமத்தில் குணப்படுத்துகிறான். ஒரு சிலர் வியாதிக்காரரைப் பவுலிடத்தில் அழைத்து வராமல், அவனுடைய சரீரத்திலிருந்து உறுமால்களையும் கச்சைகளையும் கொண்டுவந்து வியாதிக்காரர்மேல் போடுகிறார்கள். அப்போது வியாதிகள் அவர்களைவிட்டு நீங்கிப்போயின. பொல்லாத ஆவிகளும் அவர்களை விட்டுப் புறப்பட்டன.

பன்னிரண்டு வருஷமாய் பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரீ, இயேசுகிறிஸ்துவின் வஸ்திரத்தைத் தொட்டு குணமடைந்தாள். அவளுடைய உதிரத்தின் ஊறல் உடனே நின்றுபோயிற்று. அப்போது தம்மிடத்திலிருந்து வல்லமை புறப்பட்டதை இயேசுகிறிஸ்து உடனே உணர்ந்தார். ஆனால் இங்கோ வியாதியஸ்தரர் யாரும் பவுலின் வஸ்திரத்தைத் தொடவில்லை. அதற்குப் பதிலாக அவனுடைய சரீரத்திலிருந்து உறுமால்களையும் கச்சைகளையும் வியாதிக்காரர்மேல் போட, வியாதிகள் அவர்களைவிட்டு நீங்கிப்போயின.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு அசுத்த ஆவிகளைத் துரத்தவும், சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கவும், அவர்களுக்கு அதிகாரங்கொடுத்திருக்கிறார் (மத் 10:1). இயேசுகிறிஸ்து கொடுத்திருக்கிற அதிகாரம் இப்போது கிரியை செய்கிறது. வியாதிக்காரருக்கு வியாதிகள் நீங்கிப்போகிறது. பொல்லாத ஆவிகளும் அவர்களை விட்டு நீங்கிப்போகிறது.

பொல்லாத ஆவி
அப் 19 : 13-17

அப் 19:13. அப்பொழுது தேசாந்தரிகளாய்த் திரிகிற மந்திரவாதிகளாகிய யூதரில் சிலர் பொல்லாத ஆவிகள் பிடித்திருந்தவர்கள் மேல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தைச் சொல்லத் துணிந்து: பவுல் பிரசங்கிக்கிற இயேசுவின்பேரில் ஆணையிட்டு உங்களுக்குக் கட்டளையிடுகிறோம் என்றார்கள்.

அப் 19:14. பிரதான ஆசாரியனாகிய ஸ்கேவா என்னும் ஓர் யூதனுடைய குமாரர் ஏழு பேர் இப்படிச் செய்தார்கள்.

அப் 19:15. பொல்லாத ஆவி அவர்களை நோக்கி: இயேசுவை அறிவேன், பவுலையும் அறிவேன், நீங்கள் யார் என்று சொல்லி,

அப் 19:16. பொல்லாத ஆவியையுடைய மனுஷன் அவர்கள்மேல் பாய்ந்து, பலாத்காரம்பண்ணி, அவர்களை மேற்கொள்ள, அவர்கள் நிருவாணிகளும் காயப்பட்டவர்களுமாகி அந்த வீட்டை விட்டு ஓடிப் போனார்கள்.

அப் 19:17. இது எபேசுவிலே குடியிருந்த யூதர் கிரேக்கர் அனைவருக்கும் தெரியவந்தபோது, அவர்களெல்லாரும் பயமடைந்தார்கள்; கர்த்தராகிய இயேசுவின் நாமம் மகிமைப்பட்டது.

மந்திரவாதிகளாகிய யூதரில் சிலர்

அப்பொழுது தேசாந்தரிகளாய்த் திரிகிற மந்திரவாதிகளாகிய யூதரில் சிலர் பொல்லாத ஆவிகள் பிடித்திருந்தவர்கள் மேல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தைச் சொல்லத் துணிந்து: பவுல் பிரசங்கிக்கிற இயேசுவின்பேரில் ஆணையிட்டு உங்களுக்குக் கட்டளையிடுகிறோம் என்றார்கள் (அப் 19:13).

தேவன் பவுலின் கைகளினாலே விசேஷித்த அற்புதங்களைச் செய்தருளுகிறார். அவனுடைய சரீரத்திலிருந்து உறுமால்களையும் கச்சைகளையும் வியாதிக்காரர் மேல் போட வியாதிகள் அவர்களைவிட்டு நீங்கிப்போயின. பொல்லாத ஆவிகளும் அவர்களைவிட்டுப் புறப்பட்டன. இந்தச் சம்பவத்தை தேசாந்திரிகளாய்த் திரிகிற மந்திரவாதிகளாகிய யூதரில் சிலர் கவனித்துப் பார்க்கிறார்கள். இவர்களும் பொல்லாத ஆவிகள் பிடித்திருந்தவர்கள்மேல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தை சொல்லத் துணிகிறார்கள். "பவுல் பிரசங்கிக்கிற இயேசுவின் பெயரில் ஆணையிட்டு உங்களுக்குக் கட்டளையிடுகிறோம்" என்று பிசாசுகளுக்குக் கட்டளைகொடுக்கிறார்கள்.

இவர்கள் தேசாந்திரிகளாய்த் திரிகிறவர்கள். யூதர்களாகயிருந்தாலும் மந்திரவாதிகளாகவும் இருக்கிறார்கள். தங்களுடைய மந்திரவாதத்திற்கு இயேசுகிறிஸ்துவின் பெயரைப் பயன்படுத்துகிறார்கள். இவர்கள் யூதர்கள் மத்தியிலும் புறஜாதியார் மத்தியிலும் மந்திரம் ஓதி, அவர்களுடைய வருங்காலங்களைச் சொல்லுவார்கள். சாபங்களை நீக்குவதற்கும், வியாதிகளைக் குணப்படுத்துவதற்கும், பிசாசுகளைத் துரத்துவதற்கும் மந்திரம் ஓதுவார்கள். இந்த மந்திர வித்தையை இவர்கள் சாலொமோன் ராஜாவினிடத்தில் கற்றுக்கொண்டதாகப் பெருமையோடு சொல்லிக்கொள்வார்கள். இயேசுகிறிஸ்து இந்த மந்திரவாதிகளைப்பற்றிச் சொல்லும்போது "உங்கள் பிள்ளைகள் அவைகளை யாராலே துரத்துகிறார்கள்" என்று கேட்கிறார் (மத் 12:27).

ஸ்கேவாவின் குமாரர்

பிரதான ஆசாரியனாகிய ஸ்கேவா என்னும் ஓர் யூதனுடைய குமாரர் ஏழு பேர் இப்படிச் செய்தார்கள் (அப் 19:14).

தேசாந்திரிகளாய்த் திரிகிற மந்திரவாதிகள் பொல்லாத ஆவிகளைத் துரத்துவதற்கு முயற்சி செய்த ஒரு சம்பவம் இங்கு எழுதப்பட்டிருக்கிறது. எபேசு பட்டணத்தில் ஸ்கேவா என்னும் பெயருள்ள பிரதான ஆசாரியன் ஒருவன் இருக்கிறான். இவன் ஒரு யூதன். இஸ்ரவேலின் இருபத்துநான்கு ஆசாரிய வகுப்புக்களில் இவன் ஒரு வகுப்புக்குத் தலைவன். தேவாலயத்தில் பணிவிடை செய்கிறவன். ஆனால் இக்காலத்திலோ தேவாலயத்தில் ஆவிக்குரிய ஆராதனையோடு, மந்திரவாதமும் சேர்ந்திருக்கிறது. அதை பிரதான ஆசாரியனுடைய குமாரர்களே செய்கிறார்கள்.

ஸ்கேவாவுக்கு ஏழு குமாரர்கள் இருக்கிறார்கள். இவர்கள் பிசாசு பிடித்தவர்களிடத்தில் போய், கர்த்தராகிய இயேசுவின் நாமத்தைச் சொல்லத்துணிந்து, "பவுல் பிரசங்கிக்கிற இயேசுவின் பெயரில் ஆணையிட்டு உங்களுக்குக் கட்டளையிடுகிறோம்" என்று இயேசுவின் பெயரையும் பவுலின் பெயரையும் பயன்படுத்துகிறார்கள். ஆனால் அந்த பொல்லாத ஆவிகளோ இவர்களுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியவில்லை. தாங்கள் பிடித்திருந்த மனுஷரைவிட்டு புறப்பட்டுப்போகவில்லை.

அதற்குப் பதிலாக ஸ்கேவாவின் குமாரரிடத்தில் "இயேசுவை அறிவேன், பவுலையும் அறிவேன், நீங்கள் யார்" என்று எதிர்த்துப் பேசுகிறது. அத்தோடு நிற்காமல் பொல்லாத ஆவியையுடைய மனுஷன் அவர்கள்மேல் பாய்ந்து, பலாத்காரம்பண்ணி, அவர்களை மேற்கொள்கிறான். அப்பொழுது அவர்கள் நிர்வாணிகளும், காயப்பட்டவர்களுமாகி அந்த வீட்டைவிட்டு ஓடிப்போகிறார்கள்.

இயேசுகிறிஸ்து ஊழியம் செய்தபோது, அவரைப் பின்பற்றாத ஒரு சிலர் இயேசுவின் நாமத்தில் பிசாசுகளைத் துரத்தினார்கள். அப்போது யோவான் அவரை நோக்கி "ஐயரே, ஒருவன் உம்முடைய நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துகிறதை நாங்கள் கண்டு, அவன் எங்களுடனே உம்மைப் பின்பற்றாதவனானபடியால், அவனைத் தடுத்தோம்" என்றான். அதற்கு இயேசு "தடுக்கவேண்டாம், நமக்கு விரோதியாயிராதவன் நமது பட்சத்திலிருக்கிறான்" என்றார் (லூக் 9:49). இவர்களைப்போலவே இயேசுவைப் பின்பற்றாத அநேகர், தங்களுடைய சுயபெருமைக்காக, சுயலாபத்திற்காக, இயேசுவின் நாமத்தைப் பயன்படுத்துகிறார்கள். தங்களுடைய துன்மார்க்கமான மந்திரவாத வேலைகளுக்கு, இயேசுவின் நாமத்தைப் பயன்படுத்தி தங்களுக்கு சுயஆதாயம் தேட முயற்சிபண்ணுகிறார்கள்.

ஸ்கேவாவின் குமாரர் பொல்லாத ஆவிகள் பிடித்தவனிடத்தில் "பவுல் பிரசங்கிக்கிற இயேசுவின் பெயரில் ஆணையிட்டு உங்களுக்குக் கட்டளை யிடுகிறோம்" என்று சொல்லுகிறார்கள். ஆனால் அந்தப் பிசாசோ பவுலையும் அறிந்து வைத்திருக்கிறது. இயேசுவையும் அறிந்து வைத்திருக்கிறது. ஸ்கேவாவின் குமாரர்களையும் அறிந்து வைத்திருக்கிறது. பொல்லாத ஆவிகள் புறப்பட்டுப் போவதற்குப் பதிலாக, ஸ்கேவாவின் ஏழுகுமாரரையும் துரத்திவிடுகிறது. அவர்களும் நிர்வாணமாய் ஓடிப்போகிறார்கள். இவர்கள் பிசாசைத் துரத்தும்போது, பவுல் பிரசங்கிக்கிற இயேசுவை நாங்கள் நம்புகிறோம் என்றோ, அந்த இயேசுவை நாங்கள் சார்ந்திருக்கிறோம் என்றோ சொல்லவில்லை.

நீங்கள் யார்

பொல்லாத ஆவி அவர்களை நோக்கி: இயேசுவை அறிவேன், பவுலையும் அறிவேன், நீங்கள் யார் என்று சொல்லி, பொல்லாத ஆவியையுடைய மனுஷன் அவர்கள்மேல் பாய்ந்து, பலாத்காரம்பண்ணி, அவர்களை மேற்கொள்ள, அவர்கள் நிருவாணிகளும் காயப்பட்டவர்களுமாகி அந்த வீட்டை விட்டு ஓடிப் போனார்கள் (அப் 19:15,16).

ஸ்கேவாவின் குமாரருக்கு பொல்லாத ஆவிகள் ஏற்ற பதிலைச் சொல்லுகிறது. "இயேசுவை அறிவேன், பவுலையும் அறிவேன், நீங்கள் யார்" என்று அவர்களிடத்தில் கேள்வி கேட்கிறது. இயேசுவின் நாமத்தினால் தங்களைத் துரத்துவதற்கு அவர்களுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது என்று அவர்களிடத்தில் கேட்கிறது. இப்படிப்பட்ட அதிகாரத்தை உங்களுக்குக் கொடுத்தது யார் என்றும் அவர்களிடத்தில் கேட்கிறது. இயேசுவின் உபதேசத்தை ஏற்றுக்கொள்ளாத உங்களுக்கு, அவருடைய நாமத்தைப் பயன்படுத்த என்ன உரிமை இருக்கிறது என்றும் கேட்கிறது.

பொல்லாத ஆவியையுடைய மனுஷனோ, ஸ்கேவாபாவின் குமாரர்மேல் பாய்கிறான். அவர்களைப் பலாத்காரம் பண்ணுகிறான். அவர்களை மேற்கொள்கிறான். அவர்களோ நிர்வாணிகளும் காயப்பட்டவர் களுமாகிறார்கள். அந்த வீட்டைவிட்டே ஓடிப்போகிறார்கள். இயேசுவின் நாமத்தை வீணிலே வழங்குகிறவர்களுக்கு இந்தச் சம்பவம் ஒரு எச்சரிப்பாக எழுதப்பட்டிருக்கிறது. பொல்லாத ஆவிகள் அவர்களைப் பயமுறுத்திவிட்டது.

நாம் பிசாசுக்கு எதிர்த்து நின்றால் அவன் நம்மைவிட்டு ஓடிப்போவான். நாம் அவனுக்கு எதிர்த்து நிற்கும்போது இயேசுகிறிஸ்துவில் விசுவாசத்தோடிருக்க வேண்டும். நமக்குள் சத்தியமும் ஜீவனும் இருக்கவேண்டும். இயேசுவின் பெயரை ஒரு மந்திரவார்த்தைபோல பயன்படுத்தினால், அதனால் ஒரு பிரயோஜனமும் உண்டாகாது. இயேசுவின் பெயரை மந்திரவார்த்தை போல சொல்லி பொல்லாத ஆவிகளைத் துரத்த முடியாது. பொல்லாத ஆவிகள் நம்மைத் துரத்திவிடும்.

இயேசுவின் நாமம் மகிமைப்பட்டது

இது எபேசுவிலே குடியிருந்த யூதர் கிரேக்கர் அனைவருக்கும் தெரியவந்தபோது, அவர்களெல்லாரும் பயமடைந்தார்கள்; கர்த்தராகிய இயேசுவின் நாமம் மகிமைப்பட்டது (அப் 19:17).

பொல்லாத ஆவிகள் ஸ்கேவாவின் குமாரரை துரத்திய சம்பவம் எபேசுவிலே குடியிருந்த யூதர், கிரேக்கர் அனைவருக்கும் தெரியவருகிறது. ஸ்கேவா எபேசுவிலே பிரசித்திபெற்ற யூதன். அவன் ஒரு பிரதான ஆசாரியன். அவனுடைய குமாரர் ஏழுபேருக்கும் இப்படிப்பட்ட சம்பவம் நடந்ததினால், எபேசுவிலுள்ளவர்கள் எல்லோரும் பயமடைகிறார்கள். எபேசு பட்டணம் முழுவதிலும் இந்தச் சம்பவத்தைப்பற்றியே பேசுகிறார்கள்.

இயேசு கிறிஸ்துவை ஆராதிக்காதவர்கள் பிசாசுகளை ஆராதிக்கிறார்கள். தாங்கள் ஆராதிக்கிற பொல்லாத ஆவிகள் மனுஷர்மேல் எவ்வாறு பாய்ந்து, பலாத்காரம்பண்ணி, அவர்களை மேற்கொள்கிறது என்பதைத் தெரிந்துகொள்கிறார்கள். இதனால் இவர்களுக்கு பயமுண்டாயிற்று. இவர்கள் இயேசுகிறிஸ்துவின் வல்லமைக்கு எதிர்த்து நிற்கிறார்கள். இந்தச் சம்பவத்திற்குப் பின்பு இவர்களுக்கு இயேசுகிறிஸ்துவின் வல்லமை தெரியவருகிறது. இதனால் கர்த்தராகிய இயேசுவின் நாமம் மகிமைப்படுகிறது. இயேசுவின் நாமம் எல்லா நாமத்திற்கும் மேலான நாமம் என்பதை எபேசு பட்டணத்தார் புரிந்துகொள்கிறார்கள்.

மாயவித்தைக்காரரர் அப் 19 : 18-20

அப் 19:18. விசுவாசித்தவர்களில் அநேகர் வந்து, தங்கள் செய்கைகளை வெளிப்படுத்தி அறிக்கையிட்டார்கள்.

அப் 19:19. மாயவித்தைக் காரராயிருந்தவர்களில் அநேகர் தங்கள் புஸ்தகங்களைக் கொண்டுவந்து, எல்லாருக்கு முன்பாகச் சுட்டெரித் தார்கள்; அவைகளின் கிரயத்தைத் தொகைபார்த்து, ஐம்பதினாயிரம் வெள்ளிக்காசாகக் கண்டார்கள்.

அப் 19:20. இவ்வளவு பலமாய்க் கர்த்தருடைய வசனம் விருத்தியடைந்து மேற்கொண்டது.

தங்கள் செய்கைகளை வெளிப்படுத்தி

விசுவாசித்தவர்களில் அநேகர் வந்து, தங்கள் செய்கைகளை வெளிப்படுத்தி அறிக்கையிட்டார்கள் (அப் 19:18).

மந்திரவாதிகளைப்போல துன் மார்க்கமான கிரியைகளைச் செய்தவர்கள், இப்போது மனந்திரும்பி இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறார்கள். அவர்கள் தங்கள் பழைய துன்மார்க்கமான செய்கைகளை வெளிப்படுத்தி அறிக்கையிடுகிறார்கள். தங்களுடைய பாவங்களை அறிக்கையிட்டு, தாங்கள் நடந்து வந்த பொல்லாத வழிகளையும், செய்துவந்த பொல்லாத செய்கைகளையும், மற்றவர்களுக்குச் சாட்சியாக அறிவித்து, இப்போது மனந்திரும்பி இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதை உறுதிபண்ணுகிறார்கள்.

அவர்களுடைய மனச்சாட்சியில் அவர்களுக்கு மாத்திரமே தெரிந்திருந்த ரகசிய பாவங்களையெல்லாம் அறிக்கையிடுகிறார்கள். தங்களுக்கு அவமானம் உண்டாகவும், மற்றவர்களுக்கு எச்சரிப்பு உண்டாகவும், தேவனுக்கு மகிமை உண்டாகவும் தங்கள் செய்கைகளை வெளிப்படுத்தி அறிக்கையிடுகிறார்கள். உண்மையான மனந்திரும்புதல் இருக்கும்போது, உண்மையான பாவஅறிக்கை இருக்கும். மனுஷருக்கு விரோதமாகச் செய்த பாவங்களை இவர்கள் அறிக்கையிட்டு மனுஷரிடத்தில் ஒப்புவாகுகிறார்கள்.

புஸ்தகங்களை சுட்டெரித்தார்கள்

மாயவித்தைக்காரராயிருந்தவர்களில் அநேகர் தங்கள் புஸ்தகங்களைக் கொண்டுவந்து, எல்லாருக்கு முன்பாகச் சுட்டெரித்தார்கள்; அவைகளின் கிரயத்தைத் தொகைபார்த்து, ஐம்பதினாயிரம் வெள்ளிக்காசாகக் கண்டார்கள் (அப் 19:19).

மாயவித்தைக்காரராயிருந்தவர்கள், தங்கள் மந்திரவாத புஸ்தகங்களை எல்லோருக்கும் முன்பாக சுட்டெரிக் கிறார்கள். மந்திரம் ஓதுவதற்கும், மாயவித்தைகளைச் செய்வதற்கும் இவர்கள் இதுவரையிலும் இந்த மந்திரவாத புஸ்தகங்களைப் பயன்படுத்தி வந்தார்கள். இப்போது இவர்கள் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டு, மனந்திரும்பி, இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறார்கள். இனிமேல் இவர்களுக்கு மந்திரவாத புஸ்தகங்கள் தேவையில்லை. தாங்கள் செய்த துன்மார்க்கமான கிரியையினிமித்தம் இவர்கள் தங்கள் மனச்சாட்சியில் குத்தப்பட்டிருக்கிறார்கள். ஆகையினால் தங்கள் புஸ்தகங்களைக்கொண்டு வந்து எல்லாருக்கும் முன்பாகச் சுட்டெரிக்கிறார்கள்.

எபேசு பட்டணத்தில் மந்திரவாதிகளும் மாயவித்தைக்காரரும் அநேகர் இருக்கிறார்கள். இந்தப் பட்டணம் முழுவதுமே மந்திரவாதத்திற்குப் பிரசித்திப்பெற்ற பட்டணம். இந்தப் பட்டணத்திலுள்ள மாயவித்தைக்காரர்கள் இரட்சிக்கப்பட்டிருப்பது தேவனுடைய மகாபெரிய அற்புதமான கிரியை. மந்திரவாதத்திற்கு எதிராக சுவிசேஷச் செய்தி சாட்சியாய் அறிவிக்கப்படுகிறது. மந்திவாதிகள் மனந்திரும்பியதினால் இயேசுகிறிஸ்துவின் நாமம் மகிமைப்படுகிறது.

மந்திரவாதிகள் மனந்திரும்பியதினால், இவர்களுக்கு இனிமேல் மந்திரவாத புஸ்தகங்கள் தேவையில்லை. தாங்கள் செய்த பாவத்திற்காக இவர்கள் தங்கள் இருதயத்தில் குத்தப்பட்டவர்களாகயிருக்கிறார்கள். இனிமேல் மந்திரவாத புஸ்தகம் தேவையில்லை என்று தீர்மானித்து அதைச் சுட்டெரிக்கிறார்கள். தங்களிடத்தில் மந்திரவாத புஸ்தகம் இருந்தால், தங்கள் ஜீவியத்தில் பின்மாற்றமடைந்து, அந்தப்புஸ்தகத்தை மறுபடியும் பயன்படுத்துவதற்கு வாய்ப்பு உண்டாகும் என்று நினைத்து, ஒரு சிலர் அவற்றைச் சுட்டெரித்துப்போடுகிறார்கள்.

மாயவித்தைக்காரர்கள் தங்கள் துன்மார்க்கமான கிரியைகளிலிருந்து இப்போது விடுதலை பெற்றிருக்கிறார்கள். பழைய பாவத்திற்கு இவர்கள் திரும்பிப் போய்விடக்கூடாது. இயேசுவைப் பின்பற்றவேண்டும் என்று தாங்கள் எடுத்த தீர்மானத்தில் இவர்கள் உறுதியாய் நிலைத்து நிற்கவேண்டும். பழைய ஜீவியத்திற்கு திரும்பிப் போய்விடக்கூடிய சோதனை எதுவும் இவர்களுக்கு வரக்கூடாது. இவர்களுடைய மனந்திரும்புதல் உண்மையானதாக நிலைத்திருக்கவேண்டும். இவர்களுடைய மந்திரவாத புஸ்தகங்களை மற்றவர்கள் பயன்படுத்தி, மாயவித்தைகளைச் செய்யக்கூடாது. மந்திரவாதத்திற்கு ஒரு முடிவு உண்டாகவேண்டும். தங்களுடைய துன்மார்க்கமான கிரியை அழியவேண்டும். யாருடைய கையிலும் மந்திரவாத புஸ்தகம் கிடைக்கக்கூடாது என்று தீர்மானம்பண்ணி, தங்கள் புஸ்தகங்களைக் கொண்டு வந்து எல்லாருக்கும் முன்பாகச் சுட்டெரிக்கிறார்கள்.

இந்தப் புஸ்தகங்கள் அதிக விலையுள்ளவை. அன்று சுட்டெரிக்கப்பட்ட புஸ்தகங்களின் கிரயம் ஐம்பதினாயிரம் வெள்ளிக்காசுகளாகும். புஸ்தகங்கள் அதிக விலையுள்ளதாக இருந்தாலும், அவர்களுடைய ஆத்தும இரட்சிப்பு அதைவிட அதிக விலையுள்ளது. இயேசுகிறிஸ்து தம்முடைய சொந்த இரத்தத்தையே மீட்பின் கிரயமாகச் செலுத்தி அவர்களை மீட்டு இரட்சித்திருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் இரத்தத்திற்கு முன்பாக மந்திரவாத புஸ்தகங்களின் கிரயம் மிகவும் அற்பமானது.

மந்திரவாத புஸ்தகத்தின் கிரயம் அதிகமாகயிருந்தாலும் இவை பிசாசின் புஸ்தகங்கள். இதை இவர்கள் எளிதாக பிறருக்கு விற்றுப்போடலாம். ஆனால் இந்தப் புஸ்தகங்கள் இருக்கும்போது, பொல்லாத மாயவித்தையை மற்றவர்களுக்கு விற்றுப்போடுகிறார்கள். இவர்களுடைய மனமாற்றம் உண்மையானதாக இருக்கிறது. தங்களைப்போல மற்றவர்கள் துன்மார்க்கமான மந்திரவாதம் செய்யக்கூடாது என்று தீர்மானம்செய்து, மற்றவர்களுடைய கைகளில் இந்தப் புஸ்தகங்கள் போகாதபடி பார்த்துக்கொள்கிறார்கள்.

மந்திரவாத புஸ்தகங்களை யாருக்கும் தெரியாமல் ரகசியமாக இருப்பதற்குப் பதிலாக, எல்லாருக்கும் முன்பாக அவற்றைச் சுட்டெரிக்கிறார்கள். தனித்தனியாக சுட்டெரிக்காமல், மனந்திரும்பிய மாயவித்தைக்காரர் எல்லாரும் அவற்றை மொத்தமாகக் கொண்டுவந்து, எல்லாருக்கும் முன்பாக சுட்டெரிக்கிறார்கள். இயேசுவின் நாமம் மகிமைப்படுகிறது. சாத்தானின் அந்தகார வல்லமை அக்கினியில் சுட்டெரிக்கப்படுகிறது. மந்திரவாத புஸ்தகங்களின் மேன்மை அவமாய்ப் போயிற்று. தேவனுடைய கிருபையும் அவருடைய இரட்சிப்பும் உயர்த்தப்படுகிறது.

கர்த்தருடைய வசனம்

இவ்வளவு பலமாய்க் கர்த்தருடைய வசனம் விருத்தியடைந்து மேற்கொண்டது (அப் 19:20).

எபேசு பட்டணத்தில் மந்திரவாத ஆவிகளின் வல்லமைகளும், மாயவித்தையின் ஆவிகளுடைய வல்லமைகளும், பொல்லாத ஆவிகளின் வல்லமைகளும் கிரியை செய்தாலும், கர்த்தருடைய வசனம் பலமாய் விருத்தியடைந்து, பொல்லாத ஆவிகளின் அந்தகார வல்லமையை மேற்கொள்கிறது. கர்த்தருடைய வசனம் விருத்தியடைவது மிகப்பெரிய ஆசீர்வாதம். ஏராளமானோர் சுவிசேஷ வசனத்தை தங்கள் இருதயத்தில் ஏற்றுக்கொண்டு, இரட்சிக்கப்பட்டு சபையில் சேர்க்கப்படுகிறார்கள். வசனம் விருத்தியடையும்போது சபையும் விருத்தியடைகிறது.

சுவிசேஷத்திற்கு விரோதமாய் எழும்பியவர்கள் ஒடுங்கிப்போனார்கள். இயேசுகிறிஸ்துவுக்கும் அவருடைய வார்த்தைக்கும் எதிராய்க் கிரியை செய்தவர்கள், அடங்கி ஒடுங்கி, இப்போது கிறிஸ்துவுக்கும் அவருடைய வார்த்தைக்கும் கீழ்ப்படிகிறார்கள். கர்த்தருடைய வசனம் பலமாய் விருத்தியடைகிறது. அந்தகார வல்லமைகளை மேற்கொள்கிறது.

துன்மார்க்கமான கிரியைகள் அழியும்போது ஆவிக்குரிய கிரியைகள் பிரத்தியட்சமாக வெளிப்படும். குழப்பங்களும் பிரச்சனைகளும் நீங்கும்போது அங்கு சந்தோஷமும் சமாதானமும் நிரம்பியிருக்கும். பாவம் அழியும்போது அங்கு பரிசுத்தம் இருக்கும். இயேசுகிறிஸ்து பலமாய்க் கிரியை செய்யும்போது, அவருடைய வார்த்தை பலமாய் விருத்தியடைந்து மேற்கொள்ளும்.

தியானாள்
அப் 19 : 21-34

அப் 19:21. இவைகள் முடிந்தபின்பு, பவுல் மக்கெதோனியா அகாயா என்னும் நாடுகளில் சுற்றிநடந்து, எருசலேமுக்குப் போகும்படி ஆவியில் நிருணயம்பண்ணிக் கொண்டு: நான் அங்கே போனபின்பு ரோமாபுரியையும் பார்க்கவேண்டியதென்று சொல்லி,

அப் 19:22. தனக்கு உதவிசெய்தவர்களில் இரண்டு பேராகிய தீமோத்தேயுவையும் எரஸ்துவையும் மக்கெதோனியாவுக்கு அனுப்பிவிட்டு; தான் பின்னுஞ் சிலகாலம் ஆசியாவிலே தங்கினான்.

அப் 19:23. அக்காலத்திலே இந்த மார்க்கத்தைக் குறித்துப் பெரிய கலகம் உண்டாயிற்று.

அப் 19:24. எப்படியென்றால், தெமேத்திரியு என்னும் பேர்கொண்ட ஒரு தட்டான் தியானாளின் கோவிலைப்போல வெள்ளியினால் சிறிய கோவில்களைச் செய்து, தொழிலாளிகளுக்கு மிகுந்த ஆதாயம் வருவித்துக் கொண்டிருந்தான்.

அப் 19:25. இவர்களையும் இப்படிப்பட்ட தொழில்செய்கிற மற்ற வேலையாட்களையும் அவன் கூடிவரச்செய்து: மனுஷர்களே, இந்தத் தொழிலினால் நமக்கு நல்ல பிழைப்பு உண்டாயிருக்கிறதென்று அறிவீர்கள்.

அப் 19:26. இப்படியிருக்க, கைகளினால் செய்யப்பட்ட தேவர்கள் தேவர்களல்லவென்று இந்தப் பவுல் என்பவன் சொல்லி, எபேசுவிலே மாத்திரமல்ல, கொஞ்சங்குறைய ஆசியா எங்கும் அநேக ஜனங்களுக்குப் போதித்து, அவர்களை வசப்படுத்திக்கொண்டான் என்று நீங்கள் கண்டும் கேட்டும் இருக்கிறீர்கள்.

அப் 19:27. இதனால் நம்முடைய தொழில் அற்றுப்போகும்படியான அபாயம் நேரிட்டிருக்கிறதுமல்லாமல், மகா தேவியாகிய தியானாளுடைய கோவில் எண்ணமற்றுப் போகிறதற்கும், ஆசியா முழுமையும் பூச்சக்கரம் சேவிக்கிற அவளுடைய மகத்துவம் அழிந்துபோகிறதற்கும் ஏதுவாயிருக்கிறது என்றான்.

அப் 19:28. அவர்கள் இதைக் கேட்டு, கோபத்தால் நிறைந்து: எபேசியருடைய தியானாளே பெரியவள் என்று சத்தமிட்டார்கள்.

அப் 19:29. பட்டணம் முழுவதும் கலகத்தினால் நிறைந்தது. பவுலுக்கு வழித்துணையாய் வந்த மக்கெதோனியாராகிய காயுவையும் அரிஸ்தர்க்குவையும் அவர்கள் இழுத்துக் கொண்டு, ஒருமனப்பட்டு அரங்கசாலைக்குப் பாய்ந்தோடினார்கள்.

அப் 19:30. பவுல் கூட்டத்துக்குள்ளே போக மனதாயிருந்தபோது, சீஷர்கள் அவனைப் போகவிடவில்லை.

அப் 19:31. ஆசியாநாட்டுத் தலைவரில் அவனுக்குச் சிநேகிதராயிருந்த சிலரும் அவனிடத்திற்கு ஆள் அனுப்பி, அரங்கசாலைக்குள் போகவேண்டாம் என்று எச்சரித்தார்கள்.

அப் 19:32. கூட்டத்தில் அமளியுண்டாகி, சிலர் இப்படியும் சிலர் அப்படியுமாகப் பேசினார்கள்; தாங்கள் கூடிவந்த காரணம் இன்னதென்று அநேகருக்குத் தெரியாதிருந்தது.

அப் 19:33. அப்பொழுது யூதர்கள் அலெக்சந்தா என்பவனை முன்னிற்கத் தள்ளுகையில், கூட்டத்திலே சிலர் அவனை முன்னே இழுத்துவிட்டார்கள். அலெக்சந்தா கையமர்த்தி, ஜனங்களுக்கு உத்தரவுசொல்ல மனதாயிருந்தான்.

அப் 19:34. அவன் யூதனென்று அவர்கள் அறிந்தபோது, எபேசியருடைய தியானாளே பெரியவள் என்று இரண்டுமணி நேரமளவும் எல்லாரும் ஏகமாய்ச் சத்தமிட்டுக்கொண்டிருந்தார்கள்.

மக்கெதோனியா, அகாயா

இவைகள் முடிந்தபின்பு, பவுல் மக்கெதோனியா அகாயா என்னும் நாடுகளில் சுற்றிநடந்து, எருசலேமுக்குப் போகும்படி ஆவியில் திருனயம்பண்ணிக் கொண்டு: நான் அங்கே போனபின்பு ரோமாபுரியையும் பார்க்கவேண்டியதென்று சொல்லி, தனக்கு உதவிசெய்தவர்களில் இரண்டுபேராகிய தீமோத்தேயுவையும் எரஸ்துவையும் மக்கெதோனியாவுக்கு அனுப்பிவிட்டு; தான் பின்னுஞ் சிலகாலம் ஆசியாவிலே தங்கினான் (அப் 19:21,22).

பவுல் எபேசு பட்டணத்திலிருந்து மற்ற நாடுகளுக்கும் பிரயாணம் செய்து சுவிசேஷ ஊழியம் செய்யவேண்டும் என்று விரும்புகிறான். தேவனுக்காக பவுல் பெரியதாய்த் திட்டமிடுகிறான். கிறிஸ்துவின் சுவிசேஷம் எல்லா இடங்களிலும் பிரசங்கிக்கப்பட வேண்டும் என்று விரும்பி, தனக்கு அறிமுகமானவர்கள் இருக்கும் இடங்களுக்கும், புதிய இடங்களுக்கும் பிரயாணம் செய்து சுவிசேஷ ஊழியம் செய்கிறான். மக்கெதோனியாவிலும், அகாயா நாடுகளிலுமுள்ள சபைகளுக்குப் போய், அங்குள்ள விசுவாசிகளைச் சந்திக்கவேண்டுமென்று பவுல் விரும்புகிறான். இந்த நாடுகளில் பவுல் சபைகளை ஸ்தாபித்திருக்கிறான். இப்போது அங்குள்ள விசுவாசிகள் ஆவிக்குரிய நிலமையில் எப்படியிருக்கிறார்கள் என்பதைப் பார்த்து வர விரும்புகிறான்.

பவுல் மக்கெதோனியா, அகாயா என்னும் நாடுகளில் சுற்றி நடந்து, எருசலேமுக்குப் போகும்படி ஆவியில் நிர்ணயம்பண்ணிக்கொள்கிறான். பவுல் தன்னுடைய சொந்த ஆவியில் நிர்ணயம்பண்ணிக்கொண்டானா, அல்லது பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலின் பிரகாரம் பரிசுத்த ஆவியில் நிர்ணயம் பண்ணிக்கொண்டானா என்பது தெரியவில்லை. பவுலின் ஊழியத்தை பரிசுத்த ஆவியானவரே வழிநடத்துகிறார். அவனுடைய பிரயாணங்களில் ஆவியானவரே அவனுக்கு வழிகாட்டியாக இருக்கிறார்.

பவுல் மக்கெதோனியா, அகாயா ஆகிய நாடுகளுக்குப்போய் அங்கு தேவனுடைய ஊழியம் எவ்வாறு நடைபெறுகிறது என்பதை பார்த்து வருவதற்கு விரும்புகிறான். அதன்பின்பு எருசலேமுக்கும் போகவேண்டுமென்று ஆவியில் நிர்ணயம்பண்ணுகிறான். அங்குள்ள சகோதரர்களைச் சந்தித்து, சுகசெய்தியை விசாரித்து, ஊழியக்காரியங்களைப் பகிர்ந்துகொண்டு, அதன்பின்பு ரோமாபுரியையும் பார்க்க வேண்டியது என்று சொல்லுகிறான்.

அக்காலத்தில் "ரோமாபுரியை பார்க்கவேண்டும்" என்று ஜனங்கள் பொதுவாகச் சொல்லுவது வழக்கம். நட்பாகப் பழகியவர்கள் பிரியும்போது, "மறுபடியும் நாம் ரோமாபுரியில் சந்திப்போம்" என்று சொல்லி விடைபெறுவது வழக்கம். பவுல் ரோமாபுரிக்குப்போய் அங்குள்ள விசுவாசிகளைப் பார்க்கவேண்டுமென்று விரும்புகிறான். ரோமாபுரியிலுள்ள நற்குணசாலிகள் அந்தப் பட்டணத்திற்கு மகிமையாக இருக்கிறார்கள். அவர்களைப் பார்க்கவேண்டுமென்று பவுல் வாஞ்சிக்கிறான்.

தீமோத்தேயுவும் எரஸ்துவும் பவுலுக்கு உதவியாயிருக்கிறவர்கள். பவுல் அவர்கள் இருவரையும் எபேசுவிலிருந்து மக்கெதோனியாவுக்கு அனுப்புகிறான். அங்குள்ள சபைகளுக்கு தான் வரப்போவதாகவும், அங்குள்ள விசுவாசிகளைத் தான் சந்திக்க விரும்புவதாகவும் இவர்கள் இருவர் மூலமாகவும் செய்தி சொல்லி அனுப்புகிறான். இவர்கள் இருவரும் பவுலுக்கு முன்பாகவே மக்கெதோனியாவுக்குப்போய், பவுலின் ஊழியக்காரியங்களை ஆயத்தம் பண்ணுகிறார்கள். பவுல் இவர்கள் இருவரையும் அனுப்பிய பின்பு இன்னும் கொஞ்சகாலம் ஆசியாவிலே தங்குகிறான்.

எபேசுவிலே பவுல் நீண்டகாலமாக தங்கி ஊழியம் செய்கிறான். இந்தப் பட்டணத்தில் பவுலின் ஊழியத்திற்கு பல எதிர்ப்புகளும் உபத்திரவங்களும் உண்டாயிற்று. இவற்றிற்கு மத்தியிலும் பவுல் அங்கு நீண்டகாலமாகத் தங்கி கர்த்தருடைய ஊழியத்தைச் செய்கிறான். அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தில், பவுல் எபேசுவிலிருந்தபோது, அவனுக்கு உண்டான உபத்திரவங்களைப்பற்றி ஒன்றும் எழுதப்படவில்லை. ஆனாலும் இவற்றைப்பற்றி பவுல் தன் நிருபங்களில் எழுத மறக்கவில்லை. "நாம் எபேசுவிலே துஷ்டமிருகங்களுடனே போராடினேன்" (1கொரி 15:32) என்று பவுல் கொரிந்தியருக்கு எழுதின முதலாம் நிருபத்தில் குறிப்பிட்டிருக்கிறான்.

எபேசுவுக்கு அருகிலுள்ள ஆசியாவிலே பவுலின் ஜீவனுக்கு ஆபத்து உண்டாயிற்று என்பதை கொரிந்தியருக்கு எழுதின இரண்டாம் நிருபத்தில் பவுல் குறிப்பிடுகிறான். "ஆகையால் சகோதரரே, ஆசியாவில் எங்களுக்கு நேரிட்ட உபத்திரவத்தை நீங்கள் அறியாதிருக்க எங்களுக்கு மனதில்லை. என்னவெனில், பிழைப்போம் என்கிற நம்பிக்கை, அற்றுப்போகத்தக்கதாக, எங்கள் பலத்திற்கு மிஞ்சின அதிக பாரமான வருத்தம் எங்களுக்கு உண்டாயிற்று. நாங்கள் எங்கள்மேல் நம்பிக்கையாயிராமல், மரித்தோரை எழுப்புகிற தேவன் மேல் நம்பிக்கையாயிருக்கத்தக்கதாக, மரணம் வருமென்று நாங்கள் எங்களுக்குள்ளே நிச்சயித்திருந்தோம். அப்படிப்பட்ட மரணத்தினின்றும் அவர் எங்களைத் தப்புவித்தார், இப்பொழுதும் தப்புவிக்கிறார், இன்னும் தப்புவிப்பார் என்று அவரை நம்பியிருக்கிறோம்" (2கொரி 1:8-10).

தியானாளின் கோவில்

அக்காலத்திலே இந்த மார்க்கத்தைக் குறித்துப் பெரிய கலகம் உண்டாயிற்று. எப்படியென்றால், தெமேத்திரியு என்னும் பேர்கொண்ட ஒரு தட்டான் தியானாளின் கோவிலைப்போல வெள்ளியினால் சிறிய கோவில்களைச் செய்து, தொழிலாளிகளுக்கு மிகுந்த ஆதாயம் வருவித்துக் கொண்டிருந்தான் (அப் 19:23,24).

எபேசுவிலே பவுலுக்கு அநேக உபத்திரவங்கள் உண்டானாலும், இந்த வசனப்பகுதியில் பவுலின் ஊழியத்திற்கு உண்டான ஒரு எதிர்ப்பு மாத்திரம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அக்காலத்திலே பவுல் பிரசங்கிக்கிற மார்க்கத்தைக் குறித்து பெரிய கலகமுண்டாயிற்று. எபேசு பட்டணத்தில் தியானாளின் கோவில் இருக்கிறது. ஜனங்களெல்லோரும் தியானாளை தங்கள் பெண் தெய்வமாக ஆராதிக்கிறார்கள். பவுல் தன்னுடைய ஊழியத்தின் மூலமாக, ஜனங்களை தியானாளை ஆராதிப்பதிலிருந்து விடுவித்து, தன் பக்கமாகச் சேர்த்துக்கொள்கிறான் என்று, அவன்மீது குற்றம்சாட்டுகிறார்கள்.

எபேசு பட்டணத்திலே தெமேத்திரியு என்னும் பேர்கொண்ட ஒரு தட்டான் இருக்கிறான். இவன் தியானாளின் கோவிலைப்போல வெள்ளியினால் சிறிய கோவில்களைச் செய்கிறான். இதனால் தொழிலாளிகளுக்கு மிகுந்த ஆதாயத்தை வருவித்துக் கொடுக்கிறான். தியானாளின் கோவிலுக்கு வருவோர் எல்லோரும், வெள்ளியினால் செய்யப்பட்ட சிறிய கோவிலை, விலைக்கு வாங்கி, தங்கள் வீட்டிற்கு எடுத்துச் செல்வது வழக்கம். எபேசுவிலுள்ள தியானாளின் கோவில் தங்கள் வீட்டிலும் இருக்கிறது என்று நினைத்து, ஜனங்கள் எல்லா வீடுகளிலும் தியானாளை ஆராதனை செய்தார்கள். ஜனங்களுக்கு இப்படிப்பட்ட பக்தியிருப்பதினால், எபேசுவிலே வெள்ளியினால் செய்யப்பட்ட தியானாளின் சிறிய கோவில்கள் அதிகமாய் விற்பனையாயிற்று. வியாபாரம் அதிகரிக்கும்போது தட்டானாகிய தெமேத்திரியுவுக்கும், இந்தத் தொழிலைச் செய்கிற தொழிலாளிகளுக்கும் மிகுந்த ஆதாயம் உண்டாயிற்று.

பிழைப்பு உண்டாயிருக்கிறது

இவர்களையும் இப்படிப்பட்ட தொழில்செய்கிற மற்ற வேலையாட்களையும் அவன் கூடிவரச்செய்து: மனுஷர்களே, இந்தத் தொழிலினால் நமக்கு நல்ல பிழைப்பு உண்டாயிருக்கிறதென்று அறிவீர்கள் (அப் 19:25).

பவுல் எபேசுவில் ஊழியம் செய்யும்போது ஜனங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டு இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறார்கள். தியானாளின் கோவிலுக்குப் போவோரின் கூட்டம் குறைந்துவிடுகிறது. வெள்ளியினால் செய்யப்பட்ட தியானாளின் சிறிய கோவில்களின் விற்பனையும் குறைந்துவிடுகிறது. தொழிலாளிகளின் ஆதாயமும் குறைந்துவிடுகிறது. தன்னுடைய வியாபாரமும், ஆதாயமும் குறைந்துபோனதினால் தெமேத்திரியு என்னும் பேர்கொண்ட தட்டான் பவுலுக்கும், அவனுடைய ஊழியத்திற்கும் விரோதமாக எழும்புகிறான்.

தெமேத்திரியு தன்னுடைய பிரச்சனையை பட்டணத்தில் நியாயாதிபதியினிடத்தில் முறையிடவில்லை. அதற்குப் பதிலாக தன்னைப்போலவே இப்படிப்பட்ட தொழிலை செய்கிற மற்ற வேலையாட்களை பவுலுக்கு விரோதமாகக் கூடிவரச்செய்கிறான். கலகத்தை உண்டுபண்ணுகிறான். வெள்ளியினால் தியானாளின் சிறிய கோவில்களைச் செய்யும் இந்தத் தொழிலினால், தங்களுக்கு நல்ல பிழைப்பு உண்டாயிருக்கிறது என்று இந்தத் தொழில்செய்கிற மற்ற வேலையாட்களிடத்தில் சொல்லுகிறான். பவுலின் ஊழியத்தினால் தங்களுடைய தொழில் குறைந்துபோயிற்று என்றும், தங்களுடைய வருமானமும் குறைந்துபோயிற்று என்றும் பவுலுக்கு விரோதமாகப் பேசுகிறான்.

பொதுவாக ஜனங்கள் தங்களுக்கு அதிக ஆதாயம் கொடுக்கக்கூடிய தொழிலில் அக்கரை காண்பிப்பார்கள். கிறிஸ்துவின் சுவிசேஷம் தங்கள் தொழிலுக்கு நஷ்டத்தை உண்டுபண்ணும்போது, இவர்கள் சுவிசேஷத்திற்கு எதிர்த்து நிற்பார்கள். ஒரு சிலர் சமுதாயத்தில் தேவனால் அங்கீகரிக்கப்படாத தொழிலைச் செய்வார்கள். இதனால் அவர்களுக்கு அதிக ஆதாயம் கிடைக்கலாம். இப்படிப்பட்டவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாமல், அவருக்கும் அவருடைய சுவிசேஷத்திற்கும் எதிர்த்து நிற்பார்கள். எபேசு பட்டணத்தில் இப்படிப்பட்ட நிலமையே உண்டாயிற்று.

ஜனங்கள் விக்கிரகங்களை ஆராதனை செய்கிறார்கள். பவுல் விக்கிரகாராதனைக்கு விரோதமாகப் பிரசங்கம்பண்ணுகிறான். இதனால் விக்கிரகாராதனை செய்வோரின் எண்ணிக்கை குறைந்துபோயிற்று. தியானாளின் கோவிலுக்கு வருவோரின் எண்ணிக்கை குறைந்துபோயிற்று. வெள்ளியினால் செய்யப்பட்ட தியானாளின் சிறிய கோவில்களின் விற்பனையும் குறைந்துபோயிற்று. இதைச் செய்கிற தொழிலாளிகளின் ஆதாயமும் குறைந்துபோயிற்று. இதனால் இவர்களெல்லோரும் பவுலுக்கு விரோதமாக எழும்புகிறார்கள்.

கைகளினால் செய்யப்பட்ட தேவர்கள்

இப்படியிருக்க, கைகளினால் செய்யப்பட்ட தேவர்கள் தேவர்களல்லவென்று இந்தப் பவுல் என்பவன் சொல்லி, எபேசுவிலே மாத்திரமல்ல, கொஞ்சங்குறைய ஆசியா எங்கும் அநேக ஜனங்களுக்குப் போதித்து, அவர்களை வசப்படுத்திக்கொண்டான் என்று நீங்கள் கண்டும் கேட்டும் இருக்கிறீர்கள் (அப் 19:26).

கைகளினால் செய்யப்பட்ட தேவர்கள் தேவர்களல்ல என்று பவுல் பிரசங்கம்பண்ணுகிறான். பவுலுடைய பிரசங்க வார்த்தை சத்தியமானது. விக்கிரகங்கள் கைகளினால் செய்யப்பட்டது. இவை தேவனல்ல. தேவனுடைய சத்தியத்தை பவுல் மிகவும் தெளிவாகவும், எல்லோரும் புரிந்து கொள்ளும் விதத்திலும் எடுத்துச் சொல்லுகிறான். சிலைகளை மனுஷனே செய்கிறான். மனுஷனால் செய்யப்படுவது தேவனாக இருக்கமுடியாது.

ஆனால் எபேசு பட்டணத்திலுள்ள தொழிலாளிகளோ, தங்கள் கைகளினால் தியானாளின் விக்கிரத்தைச் செய்கிறார்கள். தியானாளின் கோவிலை வெள்ளியினால் செய்கிறார்கள். இதையே தெய்வம் என்று சொல்லி ஜனங்களுக்கு விற்பனை செய்கிறார்கள். கைகளினால் செய்யப்பட்ட தேவர்கள் தேவர்களல்ல என்றால், தொழிலாளிகள் செய்வது தேவர்களாக இருக்க முடியாது. ஜனங்கள் இதை ஏற்றுக்கொண்டால் அவர்கள் கைகளினால் செய்யப்பட்ட தேவர்களை விலைக்கு வாங்கி, தங்கள் வீட்டிற்கு எடுத்துச்சென்று, அவற்றிற்கு ஆராதனை செய்யமாட்டார்கள். தொழிலாளிகளின் ஆதாயம் குறைந்துபோகும்.

பவுல் சத்தியத்தைப் பேசினாலும், அவனுடைய வார்த்தைகள் தங்களுடைய தொழிலுக்கு பாதகத்தைக் கொடுப்பதினால், அவர்கள் பவுலின் உபதேசத்திற்கு எதிர்த்து நிற்கிறார்கள்.

பவுல் சத்தியத்தைப் பேசினதினால், விக்கிரகங்களைச் செய்கிற தொழிலாளிகள் மத்தியில், அவன் ஒரு குற்றவாளியைப்போல இருக்கிறான். பவுல் சத்தியத்தைப் பேசுகிறான். ஆனால் பவுலின் வார்த்தைகளோ அவர்களுக்கு தேவதூஷண வார்த்தைகளாகத் தெரிகிறது. பவுல் எபேசுவில் மாத்திரமல்ல, கொஞ்சம் குறைய ஆசியா எங்கும் அநேக ஜனங்களுக்கு இந்தச் சத்தியத்தைப் போதிக்கிறான். இதுவரையிலும் தியானாளை ஆராதித்து வந்த ஜனங்களை இப்போது தன்னுடைய சத்தியத்தின் பக்கமாய் வசப்படுத்திக்கொள்கிறான்.

வெள்ளியினால் தியானாளின் கோவிலைச்செய்கிற தொழிலாளிகள் சத்தியமில்லாத காரியங்களில் ஆர்வம் காண்பிக்கிறார்கள். தங்களுடைய தொழில் அற்றுப்போகக்கூடாது என்பதற்காக சத்தியத்திற்கு எதிர்த்து நிற்கிறார்கள். உலகப்பிரகாரமான ஆதாயமே இவர்களுக்குப் பெரிதாய் தெரிகிறது. உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகை. தேவனே நம்மை சிருஷ்டித்தவர். நம்மால் தேவனை சிருஷ்டிக்க முடியாது. தெமேத்திரியுவுக்கும், மற்ற தொழிலாளிகளுக்கும் பவுல் பிரசங்கம்பண்ணுகிற சத்தியம் நிச்சயம் புரிந்திருக்கும். ஆனாலும் தங்களுடைய தொழில் அற்றுப்போகக்கூடாது என்பதற்காக, இவர்கள் சத்தியத்திற்கு எதிர்த்து நிற்கிறார்கள்.

அபாயம் நேரிட்டிருக்கிறது

இதனால் நம்முடைய தொழில் அற்றுப்போகும்படியான அபாயம் நேரிட்டிருக்கிறதுமல்லாமல், மகா தேவியாகிய தியானாளுடைய கோவில் எண்ணமற்றுப் போகிறதற்கும், ஆசியா முழுமையும் பூச்சக்கரம் சேவிக்கிற அவளுடைய மகத்துவம் அழிந்து போகிறதற்கும் ஏதுவாயிருக்கிறது என்றான் (அப் 19:27).

கைகளினால் செய்யப்பட்ட தேவர்கள் தேவர்களல்ல என்று பவுல் பிரசங்கம்பண்ணுகிறான். இந்தப் பிரசங்கத்தை அநேக ஜனங்களுக்குப் போதிக்கிறான். ஜனங்களும் அவனுடைய பிரசங்கத்தைக் கேட்டு விக்கிரகாராதனையை விட்டுவிட்டு, மெய்யான தேவனை ஆராதிக்கிறார்கள். பவுலின் பிரசங்கத்தினால், வெள்ளியினால் தியானாளின் சிறிய கோவிலைச் செய்கிற தொழில் அற்றுப்போகும்படியான அபாயம் நேரிட்டிருக்கிறது என்று, தெமேத்திரியு இந்தத் தொழிலைச் செய்கிற மற்ற தொழிலாளிகளிடம் சொல்லுகிறான். பவுலின் பிரசங்கம் தொடர்ந்து நடைபெறுமானால், தங்களுடைய விக்கிரக கடைகளை மூடிவிடவேண்டிய அபாயம் நேரிடும் என்று, அவர்களுக்கு எச்சரிக்கிறான்.

தெமேத்திரியு தன்னுடைய தொழிலுக்கு உண்டான அபாயத்தைப்பற்றிப் பேசும்போது, தியானாளின்மீது தனக்கு பக்தியிருப்பதாகவும் காண்பித்துக் கொள்கிறான். பவுலின் பிரசங்கத்தினால் "மகா தேவியாகிய தியானாளுடைய கோவில் எண்ணமற்று போவதற்கு ஏதுவாயிருக்கிறது" என்று சொல்லுகிறான். பவுல் தொடர்ந்து பிரசங்கம்பண்ணினால் "ஆசியா முழுமையும் பூச்சக்கரமும் சேவிக்கிற அவளுடைய மகத்துவம் அழிந்துபோகிறதற்கும் ஏதுவாயிருக்கிறது" என்று சொல்லி, தியானாளின்மீது தனக்குப் பக்தியிருப்பதாக பாசாங்கு பண்ணுகிறான்.

எபேசு பட்டணத்தில் தியானாளுக்கு மிகப்பெரிய கோவில் இருக்கிறது. இது மிகவும் பிரசித்திப்பெற்றது. ஏராளமான ஜனங்கள் இந்தக் கோவிலுக்கு வந்து தியானாளை ஆராதிக்கிறார்கள். தியானாளின் கோவில் பெரிதாகயிருப்பதை ஜனங்கள் பார்த்து, பிரமித்து, தியானாளே தங்கள் தெய்வம் என்று வசப்பட்டிருக்கிறார்கள். ஆசியா முழுமையும், பூச்சக்கரமும் தியானாளைச் சேவிக்கிறார்கள். இவர்களுடைய எண்ணிக்கை அதிகம். ஆனால் இவர்களோ தங்களுடைய வியாபாரம் குறைந்து போகும் என்பதற்காக, ஜனங்களுடைய பக்தியை தங்களுக்குச் சாதகமாகவும், ஆதாயமாகவும் பயன்படுத்துகிறார்கள்.

தியானாளே பெரியவள்

அவர்கள் இதைக் கேட்டு, கோபத்தால் நிறைந்து: எபேசியருடைய தியானாளே பெரியவள் என்று சத்தமிட்டார்கள் (அப் 19:28).

தெமேத்திரியுவின் பேச்சைக்கேட்டு, விக்கிரகங்களைச்செய்கிற தொழிலாளிகள் எல்லாரும் கோபத்தினால் நிறைந்தார்கள். சுவிசேஷத்திற்கு விரோதமாகவும், அதைப் பிரசங்கிக்கிற ஊழியக்காரர்களுக்கு விரோதமாகவும் கோபத்தினால் நிறைகிறார்கள். அவர்களுடைய தொழில் அற்றுப்போகும்படியான அபாயம் நேரிட்டிருக்கிறது என்று சொன்னவுடன், தொழிலாளிகளின் கோபம் அதிகரிக்கிறது.

மகாதேவியாகிய தியானாளுடைய கோவில் எண்ணமற்றுப்போகும் என்றும், அவளுடைய மகத்துவம் அழிந்துபோகும் என்றும் தெமேத்திரியு சொன்னபோது, தொழிலாளிகளுக்கு தியானாளின்மீது பக்தி அதிகரிக்கிறது. "எபேசியருடைய தியானாளே பெரியவள்" என்று சத்தமிட்டு ஓலமிடுகிறார்கள்.

கைகளினால் செய்யப்பட்ட தேவர்கள் தேவர்களல்ல என்று பவுல் பிரசங்கம்பண்ணினாலும், தியானாளே எங்களுக்குப் பெரியவள் என்று இவர்கள் சத்தமிட்டுச் சொல்லுகிறார்கள். சத்தியம் எப்படியிருந்தாலும் தங்களுடைய தேசத்தின் மார்க்கம்தான் தங்களுக்கு முக்கியம் என்று மார்க்க வெறியோடிருக்கிறார்கள். ஒரு காரியம் சத்தியமானதா அல்லது பொய்யானதா என்பதை, சத்தமிட்டுப் பேசி நிரூபிக்க முடியாது. ஆனால் எபேசு பட்டணத்திலுள்ள ஜனங்களோ "தியானாளே பெரியவள்" என்று சத்தமிட்டுச் சொன்னால், தாங்கள் சொல்வது மெய்யான சத்தியமாயிருக்கு மென்று நினைக்கிறார்கள்.

பிலாத்து இயேசுகிறிஸ்துவை விசாரிக்கும்போது, யூதர்கள் "இயேசுவைச் சிலுவையில் அறையும்" என்று சத்தமிட்டுச் சொன்னார்கள். பல சமயங்களில் பலத்த சத்தத்திற்கு நடுவில் சத்தியம் அமைதியாயிருக்கிறது. தொழிலாளிகள் சத்தமிடுவதினால் பட்டணம் முழுவதும் கலகத்தினால் நிறைகிறது. தியானாளின் மார்க்கம் பொய்யான மார்க்கமாகயிருந்தாலும், எபேசு பட்டணத்தாரோ அந்த மார்க்கமே மெய்யான மார்க்கமென்று சத்தமிடுகிறார்கள்.

காயுவும் அரிஸ்தர்க்குவும்

பட்டணம் முழுவதும் கலகத்தினால் நிறைந்தது. பவுலுக்கு வழித்துணையாய் வந்த மக்கெதோனியாராகிய காயுவையும் அரிஸ்தர்க்குவையும் அவர்கள் இழுத்துக் கொண்டு, ஒருமனப்பட்டு அரங்கசாலைக்குப் பாய்ந்தோடினார்கள். பவுல் கூட்டத்துக்குள்ளே போக மனதாயிருந்தபோது, சீஷர்கள் அவனைப் போகவிடவில்லை (அப் 19:29,30).

காயுவும் அரிஸ்தர்க்குவும் மக்கெதோனியா தேசத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் இருவரும் பவுலுக்கு வழித்துணையாய் வந்தவர்கள். பட்டணம் முழுவதும் கலகத்தினால் நிறைந்திருக்கிற போது, ஜனங்கள் பவுலைப் பிடிக்க முயற்சிபண்ணுகிறார்கள். ஆனால் பவுல் அவர்களுடைய கைகளில் அகப்படவில்லை. ஜனங்கள் கோபத்தினால் நிறைந்து, பவுலுக்கு வழித்துணையாய் வந்த இவர்கள் இருவரையும் பிடித்து, இழுத்துக்கொண்டு, ஒருமனப்பட்டு, அரங்க சாலைக்கு பாய்ந்தோடுகிறார்கள்.

காயு தெர்பை நாட்டைச் சேர்ந்தவன் (அப் 20:4). அரிஸ்தர்க்கு தன்னோடு காவலில் இருந்ததாக பவுல் கொலோசெயருக்கு எழுதின நிருபத்தில் குறிப்பிடுகிறான் (கொலோ 4:10). இவர்கள் இருவரும் ஒரு தப்பிதமும் செய்யவில்லை. பவுலுக்கு வழித்துணையாய் வந்திருக்கிறார்கள். இது பட்டணத்து ஜனங்களின் பார்வைக்கு தப்பிதமாகத் தெரிகிறது.

பட்டணத்து ஜனங்கள் பவுலைப் பிடிக்காமல் இவர்கள் இருவரையும் பிடித்திருக்கிறார்கள். இது பவுலுக்குத் தெரியவருகிறது. தன்னுடைய சிநேகிதர்கள் ஆபத்தில் சிக்கியிருக்கும்போது பவுல் அவர்களுக்கு உதவிசெய்ய முயற்சிபண்ணுகிறான். பவுலும் கூட்டத்துக்குள்ளே போக மனதாயிருக்கிறான். ஆனால் சீஷர்களோ பவுலை கூட்டத்திற்குள்ளே போக விடவில்லை. பவுல் தன் உடன் ஊழியரை நேசிக்கிறான். அவர்களுக்கு தன்னிமித்தமாக எந்தத் தீங்கும் வந்துவிடக்கூடாது என்று கரிசனையோடிருக்கிறான். ஆகையினால் ஆபத்துக்களுக்கு மத்தியிலும் தன்னுடைய சிநேகிதரைக் காப்பாற்றுவதற்காக, பவுல் கூட்டத்திற்குள்ளே போக மனதாயிருக்கிறான்.

சீஷர்கள் பவுலின்மீது பிரியமாயிருக்கிறார்கள். கர்த்தருடைய ஊழியத்தைச் செய்கிற பவுலுக்கு ஒரு தீங்கும் வரக்கூடாது என்று கரிசனையோடிருக்கிறார்கள். ஆகையினால் அவர்கள் பவுலை கூட்டத்திற்குள்ளே போகவிடவில்லை.

ஆசியா நாட்டுத் தலைவர்

ஆசியாநாட்டுத் தலைவரில் அவனுக்குச் சிநேகிதராயிருந்த சிலரும் அவனிடத்திற்கு ஆள் அனுப்பி, அரங்கசாலைக்குள் போகவேண்டாம் என்று எச்சரித்தார்கள் (அப் 19:31).

ஆசியா நாட்டுத் தலைவரில் சிலரும் பவுலுக்கு சிநேகிதராயிருக்கிறார்கள். அவர்கள் பவுலினிடத்திற்கு ஆள் அனுப்பி, அவனை அரங்கசாலைக்குள் போகவேண்டாம் என்று எச்சரிக்கிறார்கள். இவர்கள் கிறிஸ்தவ விசுவாசிகளா, அல்லது எபேசு பட்டணத்தில் இருக்கிற பொதுவான புறஜாதி ஜனங்களா என்பது தெரியவில்லை. இவர்கள் பவுலின் சிநேகிதர்கள். அவனுக்கு தீங்கு ஒன்றும் உண்டாகக்கூடாது என்று அக்கறையோடிருக்கிறார்கள்.

நல்லோர் இவர்களைப்போல பிறருக்கு உதவிசெய்வார்கள். தங்களுடைய நன்மையைப் பார்க்கும்போது, இவர்கள் பிறருடைய நன்மையையும் பார்ப்பார்கள். பவுலுக்கு இப்படிப்பட்ட நல்ல சிநேகிதர்கள் கிடைத்திருப்பது தேவனுடைய பெரிதான கிருபை. கர்த்தர் தம்முடைய ஊழியக்காரர்களுக்கு இவர்களைப்போல நல்ல சிநேகிதர்களைக் கொடுத்து உதவிசெய்கிறார்.

தன்னுடைய உடன் ஊழியக்காரர்களைக் காப்பாற்றுவதற்கு பவுல் அரங்கசாலைக்குள் போக முயற்சிபண்ணுகிறான். ஆனால் பவுலின் சிநேகிதர்களோ, முதலாவதாக பவுல் தன்னைக் காத்துக்கொள்ளவேண்டும் என்று ஆலோசனை சொல்லுகிறார்கள். பவுலின் வேகத்தைவிட, அவனுடைய சிநேகிதரின் ஆலோசனை மேற்கொள்கிறது. பவுல் ஆபத்திலிருந்து விலகி தன்னைக் காத்துக்கொள்கிறான். கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நாமும் தேவையில்லாமல் ஆபத்தில் சிக்கிக்கொள்ளக்கூடாது. அதே வேளையில் ஆபத்து இருந்தாலும் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்ய தயங்கக்கூடாது. கர்த்தருக்காக நம்முடைய ஜீவனையும் கொடுக்க ஆயத்தமாயிருக்கவேண்டும். அதற்காக தேவையில்லாமல் நம்முடைய ஜீவனைப் போக்கிக்கொள்ள முன்வரக்கூடாது.

கூட்டத்தில் அமளி

கூட்டத்தில் அமளியுண்டாகி, சிலர் இப்படியும் சிலர் அப்படியுமாகப் பேசினார்கள்; தாங்கள் கூடிவந்த காரணம் இன்னதென்று அநேகருக்குத் தெரியாதிருந்தது (அப் 19:32).

அரங்கசாலைக்குள் திரளான ஜனங்கள் கூடியிருக்கிறார்கள். கூட்டத்தில் அமளி உண்டாயிற்று. சிலர் இப்படியும், சிலர் அப்படியுமாகப் பேசுகிறார்கள். தாங்கள் என்ன பேசுகிறோம் என்பது அவர்களுக்கே தெரியவில்லை. தாங்கள் கூடிவந்த காரணமும் இன்னதென்று அவர்களுக்குத் தெரியாதிருக்கிறது. ஏராளமானோர் கூடியிருக்கும்போது, அவர்கள் எதற்காக கூடியிருக்கிறார்கள் என்று பார்ப்பதற்காக சிலர் கூடிவருகிறார்கள். ஏதோ ஒரு ஆர்வத்தில் கூடுகிறார்கள். கூட்டத்தோடு கூட்டமாக ஓடுகிறார்கள். எங்கு அதிகமான ஆட்கள் கூடியிருக்கிறார்களோ, அங்கு இன்னும் அதிகமான ஆட்கள் வந்து கூடுவார்கள்.

அலெக்சந்தர்

அப்பொழுது யூதர்கள் அலெக்சந்தர் என்பவனை முன்னிற்கத் தள்ளுகையில், கூட்டத்திலே சிலர் அவனை முன்னே இழுத்துவிட்டார்கள். அலெக்சந்தர் கையமர்த்தி, ஜனங்களுக்கு உத்தரவுசொல்ல மனதாயிருந்தான் (அப் 19:33).

கூட்டத்தில் குழப்பமும் அமளியும் உண்டானபோது, யூதர்கள் இந்தக் குழப்பத்திற்கு நடுவிலும் தங்களுக்கு ஆதாயம் தேட முயற்சிபண்ணுகிறார்கள். எபேசு பட்டணத்தில் பவுலுக்கு விரோதமாக யூதர்கள் எந்தக் கூட்டத்தையும் கூட்டவில்லை. ஆனால் எபேசு பட்டணத்தாரோ பவுலுக்கு விரோதமாகக் கூடியிருக்கிறார்கள். இந்தக் கூட்டத்தை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தவேண்டுமென்று யூதர்கள் விரும்புகிறார்கள்.

அதற்காக யூதர்கள் அலெக்சந்தர் என்பவனை கூட்டத்திற்கு முன்னிற்கத் தள்ளுகிறார்கள். இவன் யூதருக்கு ஆதரவாகவும், பவுலுக்கு விரோதமாகவும் தங்கள் சார்பாக பேசுவான் என்று எதிர்பார்க்கிறார்கள். இதற்காக யூதர்கள் அவனை கூட்டத்திற்கு முன்பாக நிறுத்துகிறார்கள். தெமேத்திரியுவும், வெள்ளியினால் கோவில்களைச்செய்கிற தொழிலாளிகளும் பவுலுக்கு விரோதமாக எழும்பியிருக்கிறார்கள். பவுலுக்கு விரோதமாகக் குற்றம் சொல்லுகிறார்கள். தாங்களும் பவுலுக்கு விரோதமானவர்கள் என்பதை உறுதிபண்ணுவதற்காக யூதர்கள் அலெக்சந்தரை முன்னிற்கத் தள்ளுகிறார்கள்.

யூதர்கள் தங்கள் மார்க்கத்தின் சார்பாக பொதுவாகப் பேசவிரும்புகிறார்கள். யூதர்களும் விக்கிரகங்களை ஆராதிக்கமாட்டார்கள். எபேசு பட்டணத்தார் பவுலையும் யூதர்களையும் ஒன்றாக நினைக்கக்கூடாது என்று யூதர்கள் கவனமாயிருக்கிறார்கள். தாங்களும் பவுலின் உபதேசத்திற்கு விரோதமானவர்கள் என்றும், அவனுடைய உபதேசத்தை எதிர்க்கிறவர்கள் என்றும் எபேசு பட்டணத்தாருக்கு விளக்கமாய்ச் சொல்லவிரும்புகிறார்கள்.

யூதர்களுடைய சார்பாக அலெக்சந்தர் ஜனங்களுக்கு உத்தரவு சொல்ல மனதாயிருக்கிறான். அதற்காக அவன் கையமர்த்துகிறான். பவுலுக்கு விரோதமாகப் பேசவிரும்புகிறான். கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு விரோதமாக யூதர்களும் புறஜாதியாரும் எப்போதுமே எதிர்த்து நிற்கிறார்கள். யூதர்கள் மூலமாகவோ அல்லது புறஜாதியார் மூலமாகவோ கர்த்தருடைய ஊழியத்திற்கும், ஊழியக்காரர்களுக்கும் உபத்திரவமும் பிரச்சனையும் தொடர்ந்து வருகிறது.

இயேசுகிறிஸ்துவுக்கும், அவருடைய சுவிசேஷத்திற்கும், கிறிஸ்துவின் ஊழியக்காரர்களுக்கும் யூதர்களால் பிரச்சனை பண்ண முடியாமல் போகும்போது, அவர்களுக்கு வேறு யார் மூலமாவது பிரச்சனை வந்தால், யூதர்கள் பிரச்சனைபண்ணுவர்களோடு சேர்ந்து கொள்கிறார்கள். ஊழியக்காரர்களுக்கு விரோதமாக பிரச்சனை அதிகரிக்க உதவிசெய்கிறார்கள்.

அலெக்சந்தர் என்பவன் ஒரு யூதன். இவன் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டு இயேசுகிறிஸ்துவை விசுவாசித்தவன். அதன்பின்பு, இவன் விசுவாசத்தில் பின்வாங்கிப்போய், மறுபடியும் யூதமார்க்கத்தில் சேர்ந்துகொண்டான். ஒருவேளை இவன் பவுலினுடைய ஊழியத்தின் மூலமாக இரட்சிக்கப்பட்டு, அதற்குப்பின்பு இவன் பின்மாறிப்போயிருக்கவேண்டும். பவுலுக்கு விரோதமாகக் குற்றம் சுமத்துவதற்கு அலெச்சந்தர்தான் சரியான நபர் என்று, யூதர்கள் தீர்மானித்து, அவனை கூட்டத்திற்கு முன்னே இழுத்துவிடுகிறார்கள்.

தீமோத்தேயுவுக்கு எழுதின இரண்டு நிருபத்திலும், பவுல் அலெச்சந்தரைப்பற்றி குறிப்பிடுகிறான். "கன்னானாகிய அலெக்சந்தர் எனக்கு வெகுதீமை செய்தான்" (2தீமோ 4:14) என்றும், அலெக்சந்தர் விசுவாசமாகிய கப்பலை சேதப்படுத்தினானென்றும், அவனை சாத்தானிடத்தில் ஒப்புக்கொடுக்கிறேன் (1தீமோ 1:20) என்றும் பவுல் அலெச்சந்தரைப்பற்றி தன் நிருபத்தில் எழுதியிருக்கிறான்.

யூதனென்று அறிந்தபோது

அவன் யூதனென்று அவர்கள் அறிந்தபோது, எபேசியருடைய தியானாளே பெரியவள் என்று இரண்டுமணி நேரமளவும் எல்லாரும் ஏகமாய்ச் சத்தமிட்டுக் கொண்டிருந்தார்கள் (அப் 19:34).

அலெக்சந்தர் ஜனங்களுக்கு முன்னின்று, ஜனங்களுக்கு உத்தரவு சொல்ல மனதாயிருக்கையில், அவன் யூதனென்று ஜனங்கள் அறிந்துகொள்கிறார்கள். அவனை உத்தரவு சொல்லவிடாமல் தடைபண்ணுகிறார்கள். கூட்டத்தில் பவுலுக்கு வழித்துணையாய் வந்த காயுவையும் அரிஸ்தர்க்குவையும் எபேசியர்கள் பிடித்து வைத்திருக்கிறார்கள். அலெக்சந்தர் உத்தரவுசொல்ல மனதாயிருக்கும்போது, ஜனங்கள் பவுலின் சிநேகிதரைத் துன்புறுத்துவதை விட்டுவிட்டு, தியானாளைப்பற்றிப் பெருமையாய்ப் பேசுவதற்கு முன்வருகிறார்கள்.

அலெக்சந்தர் ஒரு யூதன் என்பதை அவர்கள் அறிந்துகொள்கிறார்கள். தியானாளை ஆராதிப்பதற்கு யூதர்களும் விரோதமாகயிருக்கிறார்கள் என்று எபேசியர் தீர்மானம்பண்ணுகிறார்கள். அலெக்சந்தரின் பேச்சைக் கேட்கக்கூடாது என்றும், தியானாளைப்பற்றிப் புகழ்ந்து பேசவேண்டும் என்று தீர்மானித்து "எபேசியருடைய தியானாளே பெரியவள்" என்று இரண்டு மணி நேரமளவும் எல்லாரும் ஏகமாய்ச் சத்தமிட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

அலெக்சந்தர் யூதனா, கிறிஸ்துவை விசுவாசிக்கிறவனா என்பது எபேசியருக்கு முக்கியமில்லை. அவர்களுடைய தியானாளே அவர்களுக்கு முக்கியமாய்த் தெரிகிறது. பவுல் அவர்களிடத்தில் கைகளினால் செய்யப்பட்ட தேவர்கள் தேவர்களல்ல என்று சொல்லியிருக்கிறான். இது மெய்யான சத்தியம். ஆனால் எபேசியரோ "தியானாளே பெரியவள்" என்று ஏகமாய்ச் சத்தமிடுகிறார்கள். பல சமயங்களில் மெய்யான சத்தியம் பலத்த சத்தங்களுக்கும், கூக்குரல்களுக்கும் நடுவில் அமைதியாயிருக்கிறது. ஜனங்கள் ஆர்ப்பரிப்பையும் ஆரவாரத்தையும் விரும்புகிறார்கள். சத்தியமோ அமைதியாக அதே சமயத்தில் உறுதியாகயிருக்கிறது.

பட்டணத்து சம்பிரதியானவன் அப் 19 : 35-41

அப் 19:35. பட்டணத்துச் சம்பிரதியானவன் ஜனங்களை அமர்த்தி: எபேசியரே, எபேசியருடைய பட்டணம் மகா தேவியாகிய தியானாளுக்கும் வானத்திலிருந்து விழுந்த சிலைக்கும் கோவிற்பரிசாரகியாயிருக்கிறதை அறியாதவன் உண்டோ?

அப் 19:36. இது எதிர்பேசப்படாத காரியமாகையால், நீங்கள் ஒன்றும் பதறிச்செய்யாமல் அமர்ந்திருக்கவேண்டும்.

அப் 19:37. இந்த மனுஷரை இங்கே கொண்டு வந்தீர்கள்; இவர்கள் கோவிற்கொள்ளைக் காரருமல்ல, உங்கள் தேவியைத் தூஷிக்கிறவர்களுமல்ல.

அப் 19:38. தெமேத்திரியுக்கும் அவனைச் சேர்ந்த தொழிலாளிகளுக்கும் ஒருவன்மேல் ஒரு காரியம் உண்டாயிருந்தால், நியாயம் விசாரிக்கிற நாட்களுண்டு, தேசாதிபதிகளும் இருக்கிறார்கள்; ஒருவர்பேரிலொருவர் வழக்காடிக் கொள்ளட்டும்.

அப் 19:39. நீங்கள் வேறே யாதொரு காரியத்தைக்குறித்து விசாரிக்க வேண்டியதானால், அது நியாயசங்கத்திலே தீர்க்கப்படும்.

அப் 19:40. இன்றைக்கு உண்டான கலகத்தைக்குறித்து நாம் உத்தரவு சொல்லுகிறதற்கு ஏதுவில்லாதபடியால், இந்தக் கலகத்தைக்குறித்து நாங்கள் விசாரிக்கப்படும் போது, குற்றவாளிகளாகிறதற்கு ஏதுவாயிருப்போமே என்று சொல்லி,

அப் 19:41. பின்பு கூட்டத்தை அனுப்பிவிட்டான்.

மகாதேவியாகிய தியானாள்

பட்டணத்துச் சம்பிரதியானவன் ஜனங்களை அமர்த்தி: எபேசியரே, எபேசியருடைய பட்டணம் மகா தேவியாகிய தியானாளுக்கும் வானத்திலிருந்து விழுந்த சிலைக்கும் கோவிற் பரிசாரகியாயிருக்கிறதை அறியாதவன் உண்டோ? (அப் 19:35)

எபேசு பட்டணத்தில் ஜனங்கள் மத்தியிலே அமளி உண்டாயிற்று. பட்டணத்து சம்பிரதியானவன் மிகவும் ஞானமாக அமளியை கட்டுப்படுத்துகிறான். ஜனங்கள் அப்படியும் இப்படியுமாகப் பேசுகிறார்கள். தாங்கள் கூடிவந்த காரணம் இன்னதென்பது கூட அவர்களுக்குத் தெரியவில்லை. பட்டணத்து சம்பிரதி தியானாளைப்பற்றிப் பெருமையாகப் பேசுகிறான். எபேசியருடைய பட்டணம் மகாதேவியாகிய தியானாளுக்கும், வானத்திலிருந்து விழுந்த சிலைக்கும் கோவிற்பரிசாரகியாயிருக்கிறது என்று சொல்லி அவர்களை அமைதிப்படுத்துகிறான்.

தியானாளுடைய மகத்துவம் அழிந்துபோயிற்று என்றோ, தியானாளுடைய கோவில் எண்ணமற்றுப்போயிற்று என்றோ நினைத்து, ஜனங்கள் அமளிபண்ணவேண்டியதில்லை என்று அவர்களை அமைதிப்படுத்துகிறான். எபேசியருடைய பட்டணம் மகாதேவியாகிய தியானாளுடைய பட்டணம் என்பது எதிர்பேசப்படாத காரியம் என்றும், ஆகையினால் அவர்கள் ஒன்றும் பதறிச்செய்யாமல் அமர்ந்திருக்கவேண்டும் என்றும் அவர்களுக்குச் சொல்லுகிறான். எபேசியருடைய பட்டணத்தில் மகாதேவியாகிய தியானாளை எல்லோரும் ஆராதிக்கிறார்கள் என்பது எல்லோரும் அறிந்த விஷயம். தியானாளுடைய கோவிலும் மிகவும் பிரமாண்டமாகக் கட்டப்பட்டிருக்கிறது. இந்தக் கோவிலுக்குள் தியானாளின் சிலை மிகவும் பெரியதாகயிருக்கிறது.

கைகளினால் செய்யப்பட்ட தேவர்கள் தேவர்களல்ல என்று பவுல் எபேசு பட்டணத்தில் பிரசங்கம்பண்ணுகிறான். தியானாளின் சிலையோ கைகளினால் செய்யப்பட்டது அல்ல என்றும், இது வானத்திலிருந்து விழுந்த சிலை என்றும் சம்பிரதி அமளிபண்ணுகிற ஜனங்களிடத்தில் பொறுமையாகப் பேசுகிறான். இந்தச் சிலையை யார் செய்தார்களென்றோ, எப்பொழுது செய்தார்களென்றோ யாராலும் சொல்லமுடியாது என்றும் அவர்களுக்கு எடுத்துச்சொல்லுகிறான். இது வானத்திலிருந்து விழுந்த சிலை. ஆகையால், இதை கைகளினால் செய்யப்பட்டது என்று யாரும் சொல்ல முடியாது என்றும் அவர்களிடத்தில் சொல்லுகிறான். தியானாளின் சிலை வானத்திலிருந்து விழுந்த சிலை என்பதை எல்லோரும் அறிந்திருக்கிறார்கள் என்று சொல்லி, இதை அறியாதவன் உண்டோ என்று பட்டணத்து சம்பிரதி அமளிபண்ணுகிற ஜனங்களிடம் கேட்கிறான். உலகமெங்குமுள்ள ஜனங்கள் இந்த உண்மையை அறிந்திருக்கும்போது, எபேசு பட்டணத்து ஜனங்கள் ஏன் தேவையில்லாமல் அமளிபண்ண வேண்டுமென்று அவர்களிடத்தில் கேட்கிறான்.

எதிர்பேசப்படாத காரியம்

இது எதிர்பேசப்படாத காரியமாகையால், நீங்கள் ஒன்றும் பதறிச்செய்யாமல் அமர்ந்திருக்கவேண்டும் (அப் 19:36).

எபேசு பட்டணத்து ஜனங்கள் அமளிபண்ணுகிறார்கள். அவர்கள் எந்தக் காரணத்திற்காகவும் அமளிபண்ணவேண்டிய அவசியமில்லை என்று பட்டணத்து சம்பிரதி அவர்களிடத்தில் எச்சரித்துக் கூறுகிறான். அவர்கள் ஒன்றும் பதறிச்செய்யாமல் அமர்ந்திருக்கவேண்டும் என்று அவர்களிடத்தில் கண்டிப்புடன் சொல்லுகிறான். பட்டணத்து சம்பிரதி சொல்லுகிற ஆலோசனை எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடியது. தனிப்பட்ட சொந்தக் காரியமாகயிருந்தாலும், பொதுகாரியமாகயிருந்தாலும் நாம் ஒன்றும் பதறிச்செய்யாமல் அமர்ந்திருக்கவேண்டும். நீடியபொறுமையோடு பிரச்சனையை ஆராய்ந்து பார்க்கவேண்டும். ஏதாவது ஒரு காரியத்தை அவசரப்பட்டு பதறிச்செய்தால் பின்பு வருத்தப்படவேண்டியது வரும்.

கோவிற்கொள்ளைக்காரருமல்ல

இந்த மனுஷரை இங்கே கொண்டு வந்தீர்கள்; இவர்கள் கோவிற் கொள்ளைக்காரருமல்ல, உங்கள் தேவியைத் தூஷிக்கிறவர்களுமல்ல (அப் 19:37).

பவுலுக்கு உதவி செய்த இரண்டுபேரை எபேசு பட்டணத்தார் அரங்கசாலைக்குப் பிடித்து இழுத்துவந்திருக்கிறார்கள். அவர்கள்மீதும், பவுல்மீதும் தேவையில்லாத குற்றச்சாட்டுக்களைக் கூறுகிறார்கள். பட்டணத்து சம்பிரதி இவர்களைக் கொண்டு வந்தவர்களிடம் "இந்த மனுஷரை இங்கே கொண்டு வந்தீர்கள்". ஆனால் இவர்களிடத்தில் அவர்கள் சொல்லுகிற குற்றம் எதுவுமில்லை. அவர்களுடைய குற்றச்சாட்டுக்களை நிரூபிக்கவும் முடியவில்லை. இவர்கள் கோவிற்கொள்ளைக்காரரோ அல்லது தியானாளைத் தூஷிக்கிறவர்களோ அல்ல என்று பட்டணத்து சம்பிரதி இவர்களைப்பற்றிச் சாட்சிசொல்லுகிறான்.

பவுலுக்கு உதவிசெய்தவர்களை எபேசு பட்டணத்தார் காரணமில்லாமல் பிடித்து இழுத்து வந்திருக்கிறார்கள். அவர்கள்மீது பொறாமையினாலும் கோபத்தினாலும் நிறைந்திருக்கிறார்கள். பவுலுக்கு உதவிசெய்தவர்களோ மிகவும் அமைதியாக இருக்கிறார்கள். ஆனால் எபேசு பட்டணத்தாரோ மிகவும் கோபமாகயிருக்கிறார்கள். அவர்களுடைய உள்ளத்தில் இருக்கிற தியானாளின் ஆவி அவர்களைக் கோபப்பட வைக்கிறது.

கைகளினால் செய்யப்பட்ட தேவர்கள் தேவர்களல்ல என்று பவுல் உபதேசம்பண்ணுவது மெய்யான சத்தியம். கிறிஸ்துவின் சுவிசேஷம் விக்கிரகாராதனைக்கு எதிர்த்து நிற்கிறது. பவுல் மெய்யாகவே விக்கிரகத்திற்கு எதிர்த்துப் பேசுகிறான். தியானாளால் கர்த்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ணமுடியாது. கர்த்தருடைய வல்லமையினால் விக்கிரகாராதனையும், விக்கிரகாராதனைக்காரரும் அழிந்து போவார்கள். ஆனாலும் கர்த்தருடைய ஊழியக்காரர்கள் விக்கிரகாராதனைக்காரரோடு பேசும்போது நீடியபொறுமையோடு பேச வேண்டியதாயிருக்கிறது. தங்கள் பக்கத்தில் நீதியும், சத்தியமும் இருந்தாலும், மிகவும் பொறுமையோடு பேசவேண்டியதிருக்கிறது.

விக்கிரகாராதனைக்காரரைப் போல கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் அமளிபண்ணவேண்டிய அவசியமில்லை. யுத்தம் கர்த்தருடையது. கர்த்தர் தமக்காகவும், நமக்காகவும் யுத்தம்பண்ணுவார். நாம் விக்கிரகாராதனைக்காரரைப் போல ஜனங்கள் மத்தியில் அமளிபண்ணாமல், நம்முடைய வேண்டுதல்களையும் விண்ணப்பங்களையும் தேவனுடைய சமுகத்தில் ஜெபத்துடன் ஏறெடுக்கவேண்டும். கர்த்தர் பார்த்துக்கொள்வார் என்று பொறுமையோடு காத்திருக்கவேண்டும்.

வழக்காடிக்கொள்ளட்டும்

தெமேத்திரியுக்கும் அவனைச் சேர்ந்த தொழிலாளிகளுக்கும் ஒருவன்மேல் ஒரு காரியம் உண்டாயிருந்தால், நியாயம் விசாரிக்கிற நாட்களுண்டு, தேசாதிபதிகளும் இருக்கிறார்கள்; ஒருவர்பேரிலொருவர் வழக்காடிக் கொள்ளட்டும். நீங்கள் வேறெ யாதொரு காரியத்தைக்குறித்து விசாரிக்கவேண்டியதானால், அது நியாயசங்கத்திலே தீர்க்கப்படும் (அப் 19:38,39).

இதுவரையிலும் எபேசு பட்டணத்தாருக்கு பொறுமையோடு ஆலோசனை சொன்ன பட்டணத்து சம்பிரதி, இப்பொழுது பட்டணத்தின் சட்டதிட்டங்களையும், நீதி நியாயங்களையும்பற்றி பேச ஆரம்பிக்கிறான். எபேசு பட்டணத்தில் அமைதி நிலவுகிறது. வழக்குகள் விசாரிக்கப்பட்டு நீதியாய்த் தீர்ப்பு வழக்கப்படுகிறது. ஜனங்களும் அமைதியாகவும் சந்தோஷமாகவும் ஜீவனம் பண்ணுகிறார்கள். ஜனங்கள் மத்தியிலே வழக்கு உண்டு என்றால், அதை விசாரிப்பதற்கு நியாயம் விசாரிக்கிற நாட்கள் உண்டு. நியாயசங்கத்திலே தீர்ப்பு வழங்கப்படும். ஒருவர் பெயரில் ஒருவர் வழக்கு உண்டானால், அவர்கள் வழக்காடிக் கொள்வதற்கு அனுமதி கொடுக்கப்படும். எல்லாம் நீதியாயும் கிரமமாயும் நடைபெறும்.

தெமேத்திரியுவும், அவனைச்சேர்ந்த தொழிலாளர்களும் பவுலின்மீதும், அவனுக்கு உதவிசெய்தவர்கள்மீதும் குற்றம் சுமத்துகிறார்கள். அவர்களுக்கு ஒருவன்மேல் ஒரு காரியம் உண்டாயிருந்தால், நியாயம் விசாரிக்கிற நாட்களில், வழக்காடிக்கொள்ளவேண்டும் என்று பட்டணத்து சம்பிரதி கூறிவிடுகிறான். நியாயசனத்தில் உட்கார்ந்திருக்கிறவர் இரண்டு பக்கத்து விவாதங்களையும் கேட்டு ஆராய்ந்து, நீதியாய்த் தீர்ப்பு சொல்லுவார். வழக்கு கொண்டுவருகிறவர்களே நீதிபதிகளாக மாறிவிடக்கூடாது. சட்டத்தை தங்கள் கையில் எடுத்துக்கொண்டு, தங்களுக்குப் பிடிக்காதவர்களைத் தாங்களே தண்டித்து விடக்கூடாது.

ஜனங்களுக்கு ஒருவன் பெயரில் பொதுவான வழக்கு இருக்குமென்றால், அவர்களும் நியாயசங்கத்திற்கு வரவேண்டும். கூட்டமாகக் கூடி அமளிபண்ணக்கூடாது. எந்தக் காரியத்தைக் குறித்து விசாரிக்க வேண்டியதானாலும், அது நியாயசங்கத்திலே தீர்க்கப்படும். தனிநபர்கள் பொது ஜனங்களுக்கு இடையூறு உண்டாக்கக்கூடாது. ஒவ்வொருவரும் அவரவர்களுடைய வேலையைப் பார்க்கவேண்டும். யாரும் யாருக்கும் பிரச்சனை உண்டுபண்ணக்கூடாது என்று பட்டணத்து சம்பிரதி, எபேசு பட்டணத்தின் சட்டதிட்டங்களை அவர்களுக்கு எடுத்துச்சொல்லுகிறான்.

நாங்கள் விசாரிக்கப்படும்போது

இன்றைக்கு உண்டான கலகத்தைக்குறித்து நாம் உத்தரவு சொல்லுகிறதற்கு ஏதுவில்லாதபடியால், இந்தக் கலகத்தைக்குறித்து நாங்கள் விசாரிக்கப்படும் போது, குற்றவாளிகளாகிறதற்கு ஏதுவாயிருப்போமே என்று சொல்லி, (அப் 19:40)

எபேசு பட்டணத்து ஜனங்கள் அமளிபண்ணுவதினால் தங்களுக்குத் தாங்களே ஆபத்தை உண்டுபண்ணிக் கொள்கிறார்கள். இன்றைக்கு உண்டான கலகத்தைக் குறித்து, உத்தரவு சொல்லுகிறதற்கு அவர்களுக்கு ஒரு காரணமுமில்லை. இந்தக் கலகத்தைக்குறித்து பட்டணத்து சம்பிரதிகளிடம் விசாரிக்கப்படும். அவர்களால் இதைக்குறித்து ஒரு உத்தரவும் சொல்லமுடியாது. ஆகையினால் இந்தக் கலகத்தைக் குறித்து விசாரிக்கப்படும்போது, சம்பிரதிகளும், எபேசு பட்டணத்து ஜனங்களும் குற்றவாளிகளாகிறதற்கு ஏதுவாகயிருப்பார்கள்.

இப்போது ஏற்பட்டிருக்கிற அமளியை இத்துடன் முடித்துக்கொள்ள வேண்டுமென்று சம்பிரதி கண்டிப்பாய்க் கட்டளையிடுகிறான். ஏற்கெனவே பிரச்சனை அதிகரித்திருக்கிறது என்றும், இன்னும் அதிகரித்தால், இதன் விளைவு மோசமாக இருக்குமென்றும் சொல்லி எச்சரிக்கிறான். தேவனுடைய நியாயத்தீர்ப்பைவிட, மனுஷருடைய நியாயத்தீர்ப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமென்று எபேசு பட்டணத்தார் விரும்புகிறார்கள். அமளிபண்ணி தங்களுடைய பலத்தைக் காண்பிக்கிறார்கள். ஆனால் பட்டணத்து சம்பிரதியோ, தங்கள் இஷ்டம்போல யாரும் கலகம்பண்ணமுடியாது என்றும், இந்தக் கலகத்தைப்பற்றி விசாரிக்கப்படும் நாள் உண்டு என்றும், அந்த நாளில் அவர்களெல்லோரும் குற்றவாளிக்காகத் தீர்க்கப்படுவார்கள் என்றும் எச்சரிக்கிறான்.

கூட்டத்தை அனுப்பிவிட்டான்

பின்பு கூட்டத்தை அனுப்பிவிட்டான் (அப் 19:41).

பட்டணத்து சம்பிரதி அமளிபண்ணுகிற எபேசு பட்டணத்தாரிடம் தன்னுடைய கருத்தைச் சொல்லி, அந்தக் கூட்டத்தாரை அரங்கசாலையிலிருந்து அனுப்பி விடுகிறான். அவர்கள் அமளிபண்ணினாலும் சம்பிரதியின் வார்த்தைக்குக் கட்டுப்படுகிறார்கள். தேவன் பட்டணத்து சம்பிரதியின் மூலமாய்க் கிரியை நடப்பிக்கிறார். மனுஷருடைய அமளிபண்ணுகிற வல்லமையைவிட, தேவனுடைய சமாதானம்பண்ணுகிற வல்லமை மிகவும் பெரியது. மனுஷருடைய ஆவியைவிட தேவனுடைய ஆவி பலமுள்ளது.

இந்த உலகத்தில் தேவன் ஒரு ஆளுகையை நியமித்திருக்கிறார். உலகத்து ஜனங்களெல்லோருமே தங்களுடைய தேசத்தின் சட்டதிட்டங்களுக்கு ஓரளவு கட்டுப்பட்டே ஜீவிக்கிறார்கள். எல்லோரும் தங்கள் இஷ்டம்போல ஜீவித்தால், இந்த உலகத்தில் சட்டமும் ஒழுங்கும் சீர்குலைந்துவிடும். தேவன் தம்முடைய தெய்வீக ஆளுகையினால், பூச்சக்கரத்திலுள்ள ஜனங்களை ஆளுகை செய்கிறார். தேவனுடைய ஆளுகை ஒரு சர்வாதிகாரியின் ஆளுகையைப்போல கொடூரமாய் இருக்காது. தேவனுடைய சித்தத்திற்கும், வழிநடத்துதலுக்கும் நாம் கீழ்ப்படிந்து ஜீவிக்கும்போது நமக்கு சந்தோஷமும், சமாதானமும், ஆசீர்வாதமும் உண்டாகும்.

தேவன் தம்முடைய ஜனங்களை அற்புதமாய்ப் பாதுகாக்கிறார். எபேசு பட்டணத்து ஜனங்கள் கர்த்தருடைய ஊழியக்காரருக்கு விரோதமாக, ஒன்றுகூடி அமளிபண்ணினாலும், தேவன் தம்முடைய தெய்வீக வல்லமையினால், பட்டணத்து சம்பிரதியை தம்முடைய கருவியாகப் பயன்படுத்தி, அமளிபண்ணுகிற கூட்டத்தையெல்லாம் அனுப்பிவிடுகிறார். பட்டணத்து சம்பிரதி பவுலின் சிநேகிதனல்ல. ஆனாலும் அவனுடைய உலகஞானம் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்கு பயனுள்ளதாயிருக்கிறது.

20 அதிகாரம்

பவுல் மக்கெதோனியா கிரேக்கு, ஆசியா ஆகிய நாடுகளின் வழியாய்ப் பிரயாணம்செய்து துரோவா பட்டணத்திற்கு வருகிறான் (அப் 20:1-6). துரோவாவில் வாரத்தின் முதல்நாளிலே, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கிறார்கள். பவுல் நீண்டநேரம் பிரசங்கிக்கிறான். ஐத்திகு என்னும் பேர் கொண்ட ஒரு வாலிபன் நித்திரை மயக்கத்தில் மெத்தையிலிருந்து கீழே விழுந்து மரித்துப்போகிறான். பவுல் அவனை உயிரோடெழுப்புகிறான் (அப் 20:7-12). பவுல் எருசலேமை நோக்கி பிரயாணம்பண்ணுகிறான் (அப் 20:13-16). பவுல் எபேசுவைவிட்டுப் போகும்போது மூப்பருக்குப் பிரசங்கம்பண்ணுகிறான் (அப் 20:17-35). பவுல் மூப்பரிடத்தில் கண்ணீரோடு விடைபெற்று, எபேசுவிலிருந்து புறப்பட்டுப் போகிறான் (அப் 20:36-38).

பவுலின் ஊழியப் பிரயாணம் அப் 20 : 1-6

அப் 20:1. கலகம் அமர்ந்தபின்பு, பவுல் சீஷரைத் தன்னிடத்திற்கு வரவழைத்து, விடைபெற்றுக்கொண்டு, மக்கெதோனியாவுக்குப் போகப் புறப்பட்டான்.

அப் 20:2. அவன் அந்தத் திசைகளிலே சுற்றி நடந்து, சீஷர்களுக்கு வெகுவாய்ப் புத்தி சொல்லி, கிரேக்கு தேசத்திலே சேர்ந்தான்.

அப் 20:3. அங்கே மூன்றுமாதம் சஞ்சரித்த பின்பு, அவன் கப்பல் ஏறி, சீரியா தேசத்துக்குப்போக மனதாயிருந்தபோது, யூதர்கள் அவனுக்குத் தீமைசெய்யும்படி இரகசியமான யோசனைகொண்டிருந்த படியால், மக்கெதோனியா தேசத்தின் வழியாய்த் திரும்பிப்போகத் தீர்மானம்பண்ணினான்.

அப் 20:4. பெரோயா ஊரானாகிய சோபத்தரும், தெசலோனிக்கேயரில் அரிஸ்தர்க்கும், செக்குந்தும், தெர்பையானாகிய காயுவும், தீமோத்தேயும், ஆசியா நாட்டாராகிய தீகிக்கும் துரோப்பீமும், ஆசியாநாடு வரைக்கும் அவனுக்கு வழித்துணையாய் வந்தார்கள்.

அப் 20:5. இவர்கள் முன்னாகப் போய், துரோவா பட்டணத்திலே எங்களுக்காகக் காத்திருந்தார்கள்.

அப் 20:6. புளிப்பில்லாத அப்பப்பண்டிகை நாட்களுக்குப்பின்பு நாங்கள் கப்பல் ஏறிப் பிலிப்பிபட்டணத்தை விட்டு ஐந்து நாளைக்குள்ளே துரோவா பட்டணத்துக்கு அவர்களிடத்தில் வந்து, அங்கே ஏழுநாள் தங்கியிருந்தோம்.

கலகம் அமர்ந்தபின்பு

கலகம் அமர்ந்தபின்பு, பவுல் சீஷரைத் தன்னிடத்திற்கு வரவழைத்து, விடைபெற்றுக்கொண்டு, மக்கெதோனியாவுக்குப் போகப் புறப்பட்டான் (அப் 20:1).

பவுல் எபேசு பட்டணத்தைவிட்டுப் புறப்பட்டுப்போகிறான். பவுல் மற்ற பட்டணங்களில் அதிகமாய்த் தங்கியிருந்ததைவிட, எபேசு பட்டணத்தில் நீண்டகாலமாகத் தங்கி ஊழியம் செய்திருக்கிறான். பவுல் மற்ற பட்டணங்களிலும் பிரசங்கம்பண்ண வேண்டியதாகையினால், எபேசு பட்டணத்தைவிட்டுப் புறப்பட்டு வேறு பட்டணங்களுக்குப் போகவேண்டுமென்று தீர்மானிக்கிறான்.

பவுல் எபேசு பட்டணத்தைவிட்டுப் புறப்பட்டுப்போன பின்பு, புதிய பட்டணங்களில் புதிய சபைகள் எதையும் ஸ்தாபித்ததாக எழுதப்படவில்லை. இங்கிருந்து புறப்பட்டுப்போனபின்பு பவுல் சிறையில் அடைக்கப்படுகிறான். அதன்பின்பு அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தில் பவுலின் வரலாறு முடிவுபெறுகிறது.

எபேசு பட்டணத்தில் கலகம் அமர்ந்தபின்பு பவுல் இந்தப் பட்டணத்தைவிட்டுப் போகப்புறப்படுகிறான். ஒருவேளை பவுல் இந்தப் பட்டணத்தைவிட்டுப் புறப்பட்டுப்போனால், அவனுடைய சத்துருக்கள் அமைதியடைவார்கள். அங்குள்ள விசுவாசிகள் அமைதியாக ஜீவனம்பண்ண வாய்ப்புண்டாகும். தன் மூலமாக எபேசு பட்டணத்தில் பிரச்சனையும், குழப்பமும், அமளியும் உண்டாகவேண்டாம் என்று நினைத்து பவுல் இந்தப் பட்டணத்தைவிட்டுப் புறப்பட்டுப்போயிருக்கலாம்.

பவுல் எபேசு பட்டணத்தைவிட்டுப் புறப்பட்டுப்போவதற்கு முன்பாக, கொரிந்தியருக்கு தன்னுடைய முதலாம் நிருபத்தை எழுதினான் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். இந்த நிருபத்தில் எபேசுவிலே துஷ்டமிருகங்களோடே தனக்குப் போராட்டம் உண்டாயிற்று என்று பவுல் குறிப்பிடுகிறான். எபேசு பட்டணத்தில் உண்டான அமளியையே பவுல் இவ்வாறு குறிப்பிடுவதாக வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

எபேசு பட்டணத்தில் அமளியுண்டானபோது, பவுல் எல்லோரையும் அப்படியே விட்டுவிட்டு, அந்தப் பட்டணத்தை விட்டு ஓடிப்போய்விடவில்லை. அந்தப் பட்டணத்திலுள்ள சகோதரிடத்தில் முறைப்படி வினவிக்கொண்டு, விடைபெற்று, அங்கிருந்து புறப்பட்டுப்போகிறான். எபேசுவிலுள்ள சீஷரை பவுல் தன்னிடத்திற்கு வரவழைத்து, வினவிக்கொண்டு, அங்கிருந்து மக்கெதோனியாவுக்குப்போகப் புறப்படுகிறான். சீரியாக் மொழி வேதாகமத்தில் "பவுல் சீஷர்களை வரவழைத்து, அவர்களைக் கட்டித்தழுவிக்கொண்டு, அன்பின் முத்தம்கொடுத்து, அவர்களைவிட்டுப் புறப்பட்டுப்போனான்" என்று எழுதப்பட்டிருக்கிறது.

அதிகமாய்ச் சிநேகிக்கிறவர்கள், தாங்கள் பிரிந்துபோகும்போது, தங்களுடைய அன்பை முறைப்படி வெளிப்படுத்துவார்கள். அவர்களுடைய இருதயத்திலுள்ள அன்பை ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்வார்கள். சரீரத்தில் அவர்கள் இனிமேல் தூரமாயிருந்தாலும், இருதயத்தின் நினைவுகளில் அவர்கள் எப்போதுமே சமீபமாயிருப்பார்கள்.

கிரேக்கு தேசம்

அவன் அந்தத் திசைகளிலே சுற்றி நடந்து, சீஷர்களுக்கு வெகுவாய்ப் புத்தி சொல்லி, கிரேக்கு தேசத்திலே சேர்ந்தான். அங்கே மூன்றுமாதம் சஞ்சரித்த பின்பு, அவன் கப்பல் ஏறி, சீரியா தேசத்துக்குப்போக மனதாயிருந்தபோது, யூதர்கள் அவனுக்குத் தீமைசெய்யும்படி இரகசியமான யோசனைகொண்டிருந்த படியால், மக்கெதோனியா தேசத்தின் வழியாய்த் திரும்பிப்போகத் தீர்மானம்பண்ணினான் (அப் 20:2,3).

பவுல் கிரேக்கு தேசத்தில் சபைகளை ஸ்தாபித்திருக்கிறான். அந்தச் சபைகளைப்பற்றிய நினைவு பவுலின் இருதயத்தில் எப்போதுமே நிரம்பியிருக்கிறது. கிரேக்கு தேசத்திலுள்ள சபையாரைச் சந்தித்து அவர்களுக்கு ஆவிக்குரிய புத்திசொல்லுவதற்காக, பவுல் கிரேக்கு தேசத்திற்குப் போய்ச்சேருகிறான். அதற்கு முன்பாக அவன் மக்கெதோனியா வழியாகப் புறப்பட்டுப்போனான். பட்டணத்தில் அமளி உண்டாவதற்கு முன்பாக, மக்கெதோனியா, அகாயா என்னும் நாடுகளில் சுற்றி நடந்து, எருசலேமுக்குப் போகும்படி பவுல் ஆவியிலே நிருணயம்பண்ணியிருந்தான் (அப் 19:21).

பவுல் அங்கு பிலிப்பி சபைகளையும், தெசலோனிக்கேயா சபைகளையும் பவுல் சந்தித்து, அங்குள்ள சீஷர்களுக்கு வெகுவாய்ப் புத்திசொல்லுகிறான். அவர்களுக்குப் புத்திசொல்லவேண்டியது ஏராளமாயிருக்கிறது. ஆகையினால் அந்தப் பட்டணங்களுக்கு போனவுடன், உடனே அங்கிருந்து வெளியேறிப்போய்விடாமல் அங்கு மூன்றுமாதம் சஞ்சரிக்கிறான். கிரேக்கு தேசம் அகாயா நாட்டிலிருக்கிறது. பவுல் ஆவியிலே நிருணயம்பண்ணியபோது மக்கெதோனியா நாட்டிற்கும், அதோடு அகாயா நாட்டிற்கும் போகவேண்டுமென்று நினைத்தான் (அப் 21:21).

பவுல் அங்கிருந்து கப்பல் ஏறி சீரியா தேசத்திற்குப் போக மனதாயிருந்தான். சீரியா தேசத்தில் அந்தியோகியா பட்டணம் இருக்கிறது. ஆனால் பவுல் தன் மனதை மாற்றிக்கொண்டு மக்கெதோனியா தேசத்தின் வழியாய்த் திரும்பிப்போகிறான். எந்த வழியாய்ப் புறப்பட்டு வந்தானோ அந்த வழியாய்த் திரும்பிப்போகிறான்.

பவுலின் பிரயாண மாற்றத்திற்கு ஒரு காரணமுண்டு. சீரியா தேசத்திலுள்ள யூதர்கள் பவுலுக்கு தீமை செய்யும்படி ரகசியமான யோசனை கொண்டிருக்கிறார்கள். அந்த தீமையில் சிக்கிக்கொள்ளாதவாறு, பவுல் சீரியாவுக்குப் போவதைத் தவிர்த்து, மக்கெதோனியா தேசத்தின் வழியாய்த் திரும்பிப்போகத் தீர்மானிக்கிறான். சீரியாவிலுள்ள யூதர்கள் ஒருவேளை பவுலின் ஜீவனுக்கு தீங்குசெய்ய ரகசிய யோசனை செய்திருக்கலாம்.

பவுல் தேவையில்லாமல் தன்னுடைய ஜீவனுக்கு ஆபத்தான காரியங்களில் சிக்கிக்கொள்வதில்லை. அதே சமயத்தில் கர்த்தருடைய ஊழியத்திற்காகப் பவுல் தன் ஜீவனையும் கொடுக்க ஆயத்தமாயிருக்கிறான்.

வழித்துணை

பெரோயா ஊரானாகிய சோபத்தரும், தெசலோனிக்கேயரில் அரிஸ்தர்க்கும், செக்குந்தும், தெர்பையானாகிய காயுவும், தீமோத்தேயும், ஆசியா நாட்டாராகிய தீகிக்கும் துரோப்பீமும், ஆசியாநாடு வரைக்கும் அவனுக்கு வழித்துணையாய் வந்தார்கள் (அப் 20:4).

பவுல் கிரேக்கு தேசத்திலிருந்து ஆசியா தேசத்திற்கு பிரயாணம்பண்ணும்போது, அவனுக்கு ஒரு சிலர் வழித்துணையாய் வருகிறார்கள். அவர்களுடைய பெயர்கள் இங்கு குறிப்பிடப்பட்டிருக்கிறது. பெரோயா ஊரானாகிய சோபத்தர். பவுல் ரோமருக்கு எழுதின நிருபத்தில் இவனுடைய பெயரை "சொசிபத்தர்" (ரோம 16:21) என்று குறிப்பிட்டிருக்கிறான்.

பவுலோடு கூட வந்தவர்களில் தீமோத்தேயுவும் ஒருவன். பவுல் எபேசுவிலிருந்து புறப்பட்டுப்போனபோது, தீமோத்தேயுவை அங்கு விட்டுவந்தான். அதன்பின்பு தீமோத்தேயு பவுலின் பிரயாணத்தில் அவனோடு சேர்ந்துகொள்கிறான். ஆசியா நாடு வரைக்கும் மற்ற சீஷரோடு, தீமோத்தேயுவும் பவுலுக்கு வழித்துணையாய் வருகிறான்.

ஊழியத்தில் அதிகப்பிரயோஜனமுள்ள எல்லோரும் பவுலுக்கு வழித்துணையாய் வருகிறார்கள். எல்லோரும் பவுலோடு கூடவந்தால், மற்ற இடங்களில் ஊழியம் செய்வதற்குப் போதுவான ஊழியக்காரர்கள் இருக்கமாட்டார்கள். ஆனாலும் பவுல் திட்டமிட்டே, இந்த சீஷர்களைத் தன்னோடு வழித்துணையாக அழைத்துவருகிறான். பிரயாணம் பண்ணும்போது அவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிறான். பவுல் மற்ற இடங்களில் பிரசங்கம்பண்ணும்போது இவர்கள் அவனுக்கு உதவியாயிருக்கிறார்கள்.

பெரிய ஊழியக்காரர், ஊழியம் செய்யும்போது, அவருக்குத் துணையாக அங்கு அநேகர் உதவி ஊழியர்கள் இருப்பது மிகவும் ஆசீர்வாதமாகயிருக்கும். பவுல் தனக்கு வழித்துணையாய் வருகிற சீஷர்களுக்கு சீஷத்துவ பயிற்சி கொடுக்கிறான். இதனால் அவர்கள் இனிமேல் செய்ய வேண்டிய ஊழியங்களை, அதிகத் திறமையோடு செய்வார்கள்.

துரோவா பட்டணம்

இவர்கள் முன்னாகப் போய், துரோவா பட்டணத்திலே எங்களுக்காகக் காத்திருந்தார்கள் (அப் 20:5).

பவுல் துரோவா பட்டணத்திற்கு வருகிறான். ஆசியா நாடுவரைக்கும் பவுலுக்கு வழித்துணையாய் வந்த சீஷர்கள், பவுலுக்கு முன்னாகவே துரோவா பட்டணத்திற்குப் போய், அங்கு அவனுடைய வருகைக்காகக் காத்திருக்கிறார்கள். பிரயாணம் பண்ணும்போது சிநேகிதரும் கூடவந்தால் பிரயாணம் இனிமையானதாக இருக்கும். ஆனாலும் தேவனுடைய சித்தத்தின் பிரகாரமாகவே, பவுல் தனக்கு வழித்துணையாய் வந்த சீஷர்களை, தனக்கு முன்னாக துரோவா பட்டணத்திற்கு அனுப்பிவிடுகிறான்.

இப்போது லூக்காவும் பவுலோடு கூட பிரயாணம்பண்ணுகிறான். இந்த வசனத்தில் லூக்கா, தன்னையும் சேர்த்து "தங்கியிருந்தோம்" (அப் 20:6) என்னும் வார்த்தையைப் பயன்படுத்தி எழுதுகிறான். லூக்கா பவுலோடு சேர்ந்து கொண்ட சம்பவம் முதன்முதலாக துரோவா பட்டணத்தில்தான் நடைபெறுகிறது (அப் 16:11).

புளிப்பில்லா அப்பப்பண்டிகையின் நாட்களுக்குப் பின்பு இவர்கள் பிலிப்பி பட்டணத்தைவிட்டு, துரோவா பட்டணத்திற்கு வருகிறார்கள். அவர்கள் பிரயாணம்பண்ணிய காலத்தைக் குறிப்பதற்காகவே, "புளிப்பில்லா அப்பப்பண்டிகை" யைப்பற்றி இங்கு குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவர்கள் பிலிப்பி பட்டணத்திலிருந்து கப்பல் ஏறி ஐந்து நாளைக்குள்ளே துரோவா பட்டணத்திற்கு வருகிறார்கள். துரோவா பட்டணத்திலே இவர்கள் ஏழுநாள் தங்கியிருக்கிறார்கள். துரோவா பட்டணத்தில் நன்மை செய்வதற்காக பவுல் ஐந்துநாள் பிரயாணம் செய்து வருகிறான்.

பிரயாணம்பண்ணுவது தவிர்க்க முடியாதது என்றால், பிரயாணம் பண்ணித்தான் ஆகவேண்டும். இயேசுகிறிஸ்து செல்லுமிடங்களிலெல்லாம் நன்மை செய்கிறவராகவே சுற்றித்திரிந்தார். நன்மை செய்வதற்காக நாம் மேற்கொள்கிற பிரயாணம் ஒருபோதும் வீணாய்ப் போவதில்லை. இது காலவிரயமுமல்ல. துரோவா பட்டணத்தில் ஏழுநாள் மாத்திரமே தங்கியிருந்து ஊழியம் செய்ய முடியும் என்பது பவுலுக்குத் தெரியும். ஆனால் அந்த ஒரு வார கால ஊழியத்தைச் செய்வதற்காக, பவுல் ஐந்து நாட்கள் கடலில் பிரயாணம் செய்கிறான். பவுல் எல்லா ஊழிய வாய்ப்புக்களையும் பயன்படுத்துகிறான்.

துரோவாவில் ஏழுநாள் அப் 20 : 7-12

அப் 20:7. வாரத்தின் முதல்நாளிலே, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்பட வேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரிமட்டும் பிரசங்கித்தான்.

அப் 20:8. அவர்கள் கூடியிருந்த மேல்வீட்டிலே அநேக விளக்குகள் வைத்திருந்தது.

அப் 20:9. அப்பொழுது ஐத்திகு என்னும் பேர் கொண்ட ஒரு வாலிபன் ஜன்னலில் உட்கார்ந்திருந்து, பவுல் நெடுநேரம் பிரசங்கம் பண்ணிக்கொண்டிருக்கையில், மிகுந்த தூக்கமடைந்து, நித்திரை மயக்கத்தினால் சாய்ந்து, மூன்றாம் மெத்தையிலிருந்து கீழே விழுந்து, மரித்தவனாய் எடுக்கப்பட்டான்.

அப் 20:10. உடனே பவுல் இறங்கிப்போய், அவன்மேல் விழுந்து, அவனை அணைத்துக் கொண்டு: கலங்காதிருங்கள், இவன் உயிர் இவனுக்குள் இருக்கிறது என்றான்.

அப் 20:11. பின்பு ஏறிப்போய், அப்பம் பிட்டுப் புசித்து, விடியற்காலமளவும் வெகுநேரம் பேசிக்கொண்டிருந்து, பின்பு புறப்பட்டான்.

அப் 20:12. அந்த வாலிபனை அவர்கள் உயிருள்ளவனாகக் கூட்டிக்கொண்டுவந்து, மிகுந்த ஆறுதலடைந்தார்கள்.

வாரத்தின் முதல்நாளிலே

வாரத்தின் முதல்நாளிலே, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்பட வேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரிமட்டும் பிரசங்கித்தான் (அப் 20:7).

பவுல் துரோவாவிலே ஏழுநாள் தங்கி ஊழியம் செய்த சம்பவம் இந்த வசனப்பகுதியில் விரிவாக எழுதப்பட்டிருக்கிறது. சீஷர்கள் வாரத்தின் முதல்நாளிலே அப்பம்பிட்கும்படி கூடிவந்திருக்கிறார்கள். அவர்கள் வேதம் வாசிக்கிறார்கள். வேதவசனங்களைத் தியானிக்கிறார்கள். சங்கீதம் பாடுகிறார்கள். இதன் மூலமாக அவர்கள் தேவனோடு ஐக்கியமாகயிருக்கிறார்கள். ஆயினும் அவர்களுடைய பக்திவிருத்திக்கு இவையெல்லாம் போதுமானதாகயில்லை.

தேவனோடு ஐக்கியமாகயிருப்பது போல, சீஷர்களும் ஒருவருக்கொருவர் ஐக்கியமாகயிருக்கவேண்டும். சீஷர்கள் ஒரு குறிப்பிட்ட நாளிலே கூடிவரவேண்டும். எல்லா சீஷர்களும் ஒரே இடத்திற்கு கூடிவருவது ஒருவேளை இயலாத காரியமாகயிருக்கலாம். ஆனாலும் எங்கெல்லாம் வாய்ப்பு இருக்கிறதோ, அங்கெல்லாம் சீஷர்கள் கூடிவந்து, தங்களுடைய ஐக்கியத்தைப் பலப்படுத்திக்கொள்ளவேண்டும்.

துரோவா பட்டணத்திலுள்ள சீஷர்கள் வாரத்தின் முதல்நாளிலே கூடிவந்திருக்கிறார்கள். வாரத்தின் முதல்நாளானது "கர்த்தருடைய நாள்" (வெளி 1:10) என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. வாரத்தின் முதலாம் நாள் நாம் சபையாராகக் கூடிவந்து கர்த்தரை ஆராதிக்கிறோம். வாரத்தின் முதல்நாள் கிறிஸ்துவின் சீஷர்களெல்லோரும் கூடிவருவதற்காக நியமிக்கப்பட்டிருக்கிற நாள். கிறிஸ்துவுக்கும் அவருடைய விசுவாசிகளுக்கும் இடையிலுள்ள ஐக்கியத்தை வாரத்தின் முதலாம் நாளில் கூடிவந்து புதுப்பித்துக்கொண்டு, பலப்படுத்திக்கொள்ளவேண்டும்.

சீஷர்கள் கூடிவந்திருக்கும்போது பவுல் அவர்களுடனே சம்பாஷித்து, நடு இராத்திரி வரைக்கும் பிரசங்கம்பண்ணுகிறான். பவுல் அவர்களைவிட்டுப் பிரிந்து வேறு பட்டணத்திற்குப் பிரயாணம் பண்ணப்போகிறான். ஆகையினால் தான் ஊருக்குப் போவதற்கு முன்பாக, இந்தப் பிரசங்கத்தை நீண்ட நேரம் பிரசங்கம்பண்ணுகிறான். பிரசங்கவேளையின்போது சீஷர்கள் அப்பம் பிட்கிறார்கள். கர்த்தருடைய பந்தியை ஆசரிக்கிறார்கள்.

பவுலின் பிரசங்கம் சீஷர்களிடத்தில் விடைபெற்றுக் கொள்கிற பிரசங்கமாகயிருக்கிறது. மறுநாளில் பவுல் அவர்களைவிட்டுப் புறப்பட்டுப்போகிறான். அவன் புறப்பட்டுப்போனபின்பு, சீஷர்களும் அதே சுவிசேஷத்தைத்தான் பிரசங்கிக்கவேண்டும். அவனைப்போல பிரசங்கிக்கவேண்டியதில்லை. ஆனாலும் அவன் பிரசங்கித்த கிறிஸ்துவின் சுவிசேஷத்தையே சீஷர்களும் பிரசங்கிக்கவேண்டும். ஆகையினால் பவுல் சீஷர்களோடு கூடயிருக்கும் காலத்தை, அவர்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கு அதிகமாய்ப் பிரயோஜனப்படுத்திக்கொள்ள விரும்புகிறான். அதிக நேரமானாலும், பவுல் அவர்களுக்கு நடுஇராத்திரி வரையிலும் பிரசங்கம்பண்ணுகிறான்.

பவுலின் பிரசங்கம் மிகவும் நீளமான பிரசங்கமாகயிருக்கிறது. பவுல் சீஷர்களுடனே சம்பாஷித்து, நடுஇராத்திரி மட்டும் பிரசங்கிக்கிறான். அவர்களிடத்தில் சொல்ல வேண்டிய காரியம் பவுலிடத்தில் ஏராளமாயிருக்கிறது. இந்தச் சத்தியத்தையெல்லாம் அவர்களுக்கு மறுபடியும் பிரசங்கம்பண்ணுவதற்கு தனக்கு வாய்ப்பு கிடைக்குமோ, கிடைக்காதோ என்பது பவுலுக்குத் தெரியவில்லை. ஆகையினால் கிடைக்கும் வாய்ப்பைப் பயன்படுத்தி, நடுஇராத்திரியானாலும், அவர்களுக்குச் சொல்லவேண்டிய செய்தி எல்லாவற்றையும் சொல்லி முடித்துவிடுகிறான். பவுல் சமயம் வாய்த்தாலும், சமயம் வாய்க்காவிட்டாலும், திருவசனத்தை உண்மையாய்ப் பிரசங்கம்பண்ணுகிறவன்.

அதிகநேரம் பிரசங்கம்பண்ணினால் கேட்கிறவர்கள் சோர்ந்துபோவார்களென்று ஒரு சிலர் சொல்லுகிறார்கள். ஆனால் கேட்போர் சத்தியத்தைக் கேட்பதற்கு ஆயத்தமாயிருக்கும் வரையிலும், பிரசங்கம்பண்ணுவதில் தவறு ஒன்றுமில்லை. பவுல் அவர்களுடைய முகத்தைப்பார்க்கிறான். இருதயத்தைப் பார்க்கிறான். பிரசங்கத்தைக் கேட்க அவர்கள் ஆர்வமாயிருப்பதை உணர்ந்துகொள்கிறான். ஆகையினால் தன்னுடைய பிரசங்கத்தை உடனே நிறுத்திவிடாமல், நடுஇராத்திரி மட்டும் தொடர்ந்து பிரசங்கம்பண்ணுகிறான்.

நடுஇராத்திரி மட்டும் பிரசங்கம்பண்ணுவதற்கு பவுலின் இருதயத்தில் பிரசங்கச் செய்தி நிரம்பியிருக்கிறது. ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஒருபோதும் வற்றிப்போகாது. பவுலின் இருதயத்திலிருந்துபுறப்பட்டு வருகிற சத்திய உபதேசம் ஒருபோதும் குறைந்துபோகவில்லை. பவுல் தன் நிருபங்களில் எழுதியுள்ள சத்தியங்களை, துரோவாவிலுள்ள சீஷர் மத்தியிலே பிரசங்கம் செய்திருக்கவேண்டும்.

சீஷர்கள் கூடியிருந்த மேல்வீட்டில் அநேக விளக்குகள் வைத்திருக்கிறது. நடுஇராத்திரி வேளையாகயிருந்தாலும் விளக்குகள் எரிந்துகொண்டிருக்கிறது. ஏனெனில் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கும், அவருடைய ஊழியக்காரர்களுக்கும் விரோதமாக சத்துருக்கள் இரவு வேளையில் எழும்பி வருவதற்கு வாய்ப்புள்ளது. சத்துருக்கள் இருட்டின் பிள்ளைகள். அவர்கள் இருளின் கிரியைகளைச் செய்கிறவர்கள். இடம் இருட்டாக இருந்தால் அது அவர்களுடைய சதிஆலோசனையை நிறைவேற்றுவதற்கு எளிதாகயிருக்கும். சத்துருக்களுக்கு இடங்கொடுக்காதபடி, சீஷர்கள் கூடியிருந்த மேல்வீட்டில் அநேக விளக்குகளை ஏற்றி வைத்திருக்கிறார்கள்.

கூடியிருந்த மேல்வீடு

அவர்கள் கூடியிருந்த மேல்வீட்டிலே அநேக விளக்குகள் வைத்திருந்தது (அப் 20:8).

பவுலும் சீஷர்களும் மேல்வீட்டிலே கூடிவந்திருக்கிறார்கள். அவர்கள் கர்த்தரை ஆராதிப்பதற்கு பெரிய தேவாலயம் எதுவும் அங்கு கட்டப்படவில்லை. சாதாரணமாக ஜனங்கள் வசிக்கிற ஒரு வீட்டில் மேல்லறையில் அவர்கள் ஆராதனைக்காகக் கூடிவந்திருக்கிறார்கள். சீஷர்களுடைய எண்ணிக்கையும் குறைவு. ஆகையினால் இவர்களுக்குப் பெரிய தேவாலயமும் தேவையில்லை. மேலும் இவர்கள் ஐசுவரியவான்களல்ல. சாதாரண ஏழை ஜனங்கள். இவர்களால் பெரிய தேவாலயங்களைக் கட்டவும் முடியாது. தேவாலயம் இல்லையென்றாலும் இவர்கள் கர்த்தரை ஆராதிப்பதற்காகக் கூடிவருகிறார்கள்.

நாம் வசிக்கிற இடத்தில் தேவாலயம் இல்லையென்பதற்காக, நாம் கர்த்தரை ஆராதிக்காமல் விட்டுவிடக்கூடாது. ஏதாவது ஒரு இடத்தில் கூடிவந்து கர்த்தரை ஆராதிக்கவேண்டும். சீஷர்கள் வாரத்தின் முதல்நாளிலே, அப்பம் பிட்கும்படி மேல்வீட்டிலே கூடிவந்திருக்கிறார்கள். தங்களுக்கு இருக்கிற வசதியைப் பயன்படுத்தி, அதில் ஆராதிக்க வருகிறார்கள். இங்கு கர்த்தருடைய பந்தியை ஆசாரிக்கிறார்கள்.

நாம் அப்பம்பிட்கும்போது இயேசுகிறிஸ்துவின் சரீரம் நமக்காக பிட்கப்பட்ட சம்பவத்தை நினைவுகூருகிறோம். அவர் நம்முடைய பாவங்களுக்காக தம்மையே பலியாகச் செலுத்தினார். நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டதை நினைவுகூர்ந்து கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருக்கிறோம். இயேசுகிறிஸ்துவின் சரீரம் நமக்காகப் பிட்கப்பட்டது நம்முடைய ஆத்துமாக்களுக்குப் போஜனமாகவும் விருந்தாகவும் இருக்கிறது.

ஒரு சில சபைகளில் ஒவ்வொரு வாரத்தின் முதல்நாளிலும், விசுவாசிகள் கூடிவரும்போது கர்த்தருடைய பந்தியை ஆசரிக்கிறார்கள். கூடிவந்திருக்கிற சீஷர்களெல்லோரும் விசுவாசத்தில் ஐக்கியமாகயிருக்கிறார்கள் என்பதை உறுதிபண்ணுவதற்காகவும், ஒரே கர்த்தரையே ஆராதிக்கிறோம் என்பதை சாட்சியாக அறிவிப்பதற்காகவும், ஒவ்வொரு வாரமும், சபை ஆராதனையின்போது திருவிருந்து நடைபெறுகிறது.

ஐத்திகு

அப்பொழுது ஐத்திகு என்னும் பேர் கொண்ட ஒரு வாலிபன் ஜன்னலில் உட்கார்ந்திருந்து, பவுல் நெடுநேரம் பிரசங்கம் பண்ணிக் கொண்டிருக்கையில், மிகுந்த தூக்கமடைந்து, நித்திரை மயக்கத்தினால் சாய்ந்து, மூன்றாம் மெத்தையிலிருந்து கீழே விழுந்து, மரித்தவனாய் எடுக்கப்பட்டான் (அப் 20:9).

சீஷர்கள் ஒரு மேல்வீட்டில் மூன்றாம் மெத்தையில் கூடியிருக்கிறார்கள். பவுல் அவர்களுடனே சம்பாஷித்து, நடுஇராத்திரி மட்டும் பிரசங்கம்பண்ணுகிறான். அங்கு கூடியிருக்கிறவர்களில் ஐத்திகு என்னும் பேர் கொண்ட ஒரு வாலிபனும் இருக்கிறான். இவன் ஒரு ஜன்னலின் மேல் உட்கார்ந்து பவுலின் பிரசங்கத்தைக் கேட்டுக்கொண்டிருக்கிறான். பவுல் நெடுநேரம் பிரசங்கம்பண்ணிக் கொண்டிருக்கிறான். அப்போது ஐத்திகு மிகுந்த தூக்கமடைந்து, நித்திரை மயக்கத்தினால் சாய்ந்து, மூன்றாம் மெத்தையிலிருந்து கீழே விழுந்து மரித்துப்போகிறான். பவுல் மரித்துப்போன அவனை உயிரோடு எழுப்புகிறான்.

ஐத்திகு ஜன்னலில் உட்கார்ந்திருக்கிறான். இந்த ஜன்னலில் கம்பிகளோ, அல்லது கதவுகளோ இல்லை. திறந்த ஜன்னலாக இருக்கிறது. தரையில் உட்கார்ந்தால் பாதுகாப்பாக இருக்கும். ஆனால் இவனோ தரையில் உட்காராமல் ஜன்னலில் உட்கார்ந்திருக்கிறான். பிரசங்கியார் பிரசங்கம்பண்ணும்போது, பிரசங்கச் செய்தியை கவனமாகக் கேட்கவேண்டும். ஆவியில் அனலாயிருக்கவேண்டும். கனநித்திரையின் ஆவிக்கு நாம் இடங்கொடுக்கக்கூடாது. ஆனால் இந்த வாலிபனோ பவுல் பிரசங்கம்பண்ணிக் கொண்டிருக்கையில் தூங்குகிறான். இவன் பவுலின் பிரசங்கத்தை கவனமாய்க் கேட்கவில்லை.

பவுலின் பிரசங்கத்தை கேட்டவர்களில் வேறு யாரும் தூங்கவில்லை. அது நடுஇராத்திரியாக இருந்தாலும், எல்லோரும் இரவு போஜனத்தைப் புசித்திருந்தாலும், யாருக்கும் தூக்கம் வரவில்லை. நடுஇரவு நேரம் தூங்குகிற நேரம் தான். ஆனால் இந்த இராத்திரியோ இவர்களுக்கு விசேஷித்த இராத்திரியாக இருக்கிறது. கர்த்தருடைய வசனத்தினால் இவர்களுக்கு விருந்து பரிமாறப்படுகிறது. எல்லோரும் பயபக்தியோடும், சந்தோஷத்தோடும் கர்த்தருடைய வசனத்தைக் கேட்கிறார்கள்.

மிகுந்த தூக்கமடைந்து நித்திரை மயக்கத்தினால் சாய்ந்து மூன்றாம் மெத்தியிலிருந்து கீழே விழுந்த ஐத்திகு மரித்துப்போகிறான். எல்லோரும் கீழே இறங்கிவந்து பார்த்தபோது, ஐத்திகு மரித்தவனாகக் கிடக்கிறான். பவுல் பிரசங்கம்பண்ணும்போது சாத்தான் இங்கு கிரியை செய்கிறான். பிரசங்கவேளையில் குழப்பத்தை உண்டுபண்ணுவதற்காகவும், பவுலுக்கு நிந்தையையும் அவமானத்தையும் உண்டுபண்ணுவதற்காகவும் சாத்தான் இங்கு கிரியை செய்கிறான்.

தேவனுடைய வார்த்தை பிரசங்கிக்கப்படும்போது, நாம் விழித்திருந்து கேட்கவேண்டும். கனநித்திரையின் ஆவிக்கு இடங்கொடுத்து விடக்கூடாது. கர்த்தருடைய வசனம் பிரசங்கிக்கப்படும்போது, நாம் தூங்கக்கூடாது என்று தேவன் இந்தச் சம்பவத்தின் மூலமாய் நமக்கு எச்சரிக்கிறார். பிரசங்கத்தின் போது நாம் தூங்கினால் தேவனுடைய வார்த்தைக்கு நாம் முக்கியத்துவம் கொடுக்காமல், அதை அவமதிக்கிறோம். தூங்காமல் விழித்திருப்பதற்கு நாம் என்ன செய்யவேண்டுமோ, அதைச் செய்து, விழித்திருந்து ஜெபிக்கவேண்டும். தூங்காமல் பிரசங்கத்தைக் கேட்கவேண்டும். தேவனுடைய வசனம் நம்முடைய இருதயத்திற்குள் வரும்போது, நம்முடைய இருதயம் ஆவியினால் அனல்கொண்டு பற்றியெறியவேண்டும்.

உயிர் இருக்கிறது

உடனே பவுல் இறங்கிப்போய், அவன்மேல் விழுந்து, அவனை அணைத்துக் கொண்டு: கலங்காதிருங்கள், இவன் உயிர் இவனுக்குள் இருக்கிறது என்றான் (அப் 20:10).

ஐத்திகு மூன்றாம் மெத்தையிலிருந்து தூக்கமடைந்து கீழே விழுந்து விடுகிறான். சீஷர்களெல்லோரும் கீழே இறங்கிப்போய் பார்க்கிறார்கள். பவுலும் உடனே இறங்கிப்போய் பார்க்கிறான். ஐத்திகு அங்கு மரித்தவனாகக் கிடக்கிறான். பவுல் அவன்மேல் விழுந்து அவனை அணைத்துக்கொள்கிறான். இந்த வாலிபன் மீது தனக்குள்ள அன்பையும், கரிசனையையும் காண்பிக்கிறான். பவுலின் ஆவி மிகவும் இளகியது. அவன் நல்மனமுள்ளவன். துயரமான சம்பவம் நடைபெறும்போது, மற்றவர்கள் கண்கலங்கும்போது, பவுலும் அவர்களோடு சேர்ந்து கண்கலங்குகிறவன். தூக்கத்தினால் ஐத்திகு கீழே விழுந்தாலும், பவுல் அவனுடைய தூக்கத்தைக் குறைசொல்லவில்லை. அவனை நியாயந்தீர்க்கவோ சபிக்கவோ இல்லை. அவன் மறுபடியும் உயிர்பெறவேண்டும் என்று விரும்புகிறான்.

தேவனுடைய வல்லமை அந்த இடத்தில் கிரியை செய்யவேண்டுமென்று பவுல் எதிர்பார்க்கிறான். தெய்வீக வல்லமையின் கிரியைக்கு அடையாளமாக பவுல் மரித்துப்போன ஐத்திகுவின்மேல் விழுந்து அவனை அணைத்துக்கொள்கிறான். அப்போது மரித்துப்போனவனுக்குள் ஜீவன் திரும்ப வருகிறது. பவுலின் ஜெபத்தைக் கர்த்தர் கேட்டு அந்த வாலிபனை உயிரோடெழுப்புகிறார். ஐத்திகு கீழே விழுந்ததைப்பார்த்து, அங்குள்ள சீஷர்கள் பலவிதமாகப் பேசியிருக்கலாம். அவற்றிற்கு மத்தியில் பவுல் "கலங்காதிருங்கள் இவன் உயிர் இவனுக்குள் இருக்கிறது" என்று மாத்திரமே சொல்லுகிறான். மனுஷருடைய வீண்பேச்சுக்களுக்கு ஒரு முடிவான வார்த்தையை பவுல் சொல்லுகிறான்.

வெகுநேரம் பேசிக்கொண்டிருந்து

பின்பு ஏறிப்போய், அப்பம் பிட்டுப் புசித்து, விடியற்காலமளவும் வெகுநேரம் பேசிக்கொண்டிருந்து, பின்பு புறப்பட்டான் (அப் 20:11).

மரித்துப்போன ஐத்திகு மறுபடியும் உயிர்பிழைக்கிறான். அதன்பின்பு பவுலும் மற்ற சீஷரும் மேல்வீட்டிற்கு ஏறிப்போகிறார்கள். தாங்கள் இடையில் விட்டுவந்த ஊழியத்தை மறுபடியும் செய்கிறார்கள். அவர்கள் ஏறிப்போய் அப்பம்பிட்டு புசிக்கிறார்கள். விடியற்காலமளவும் வெகுநேரம் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இரவுவேளையில் சீஷர்கள் மத்தியிலே அன்பின் விருந்து நடைபெறுகிறது. பவுல் இதுவரையிலும் பிரசங்கம்பண்ணிக் கொண்டிருந்தான். பிரசங்கச்செய்தி முடிவுபெறுகிறது. இப்போது சீஷர்கள் விடியற்காலமளவும் வெகுநேரம் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

பவுலை மறுபடியும் சந்திக்கும் வாய்ப்பு தங்களுக்குக் கிடைக்குமா என்று சீஷருக்குத் தெரியாது. ஆகையினால் பவுலோடு கூடயிருப்பதற்கு வாய்ப்பு கிடைத்திருக்கும்போது, அந்த வாய்ப்பை தங்கள் ஆவிக்குரிய பிரயோஜனத்திற்கு நல்லமுறையில் பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறார்கள். தூக்கம் அவர்களுக்கு பெரியதாய் தெரியவில்லை. தூக்கத்தை தியாகம்பண்ணுகிறார்கள். சீஷர்கள் ஒருவருக்கொருவர் ஆவிக்குரிய காரியங்களைப் பேசி, ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்கிறார்கள்.

ஆறுதலடைந்தார்கள்

அந்த வாலிபனை அவர்கள் உயிருள்ளவனாகக் கூட்டிக்கொண்டுவந்து, மிகுந்த ஆறுதலடைந்தார்கள் (அப் 20:12).

சீஷர்கள் பிரிந்துபோவதற்கு முன்பாக, மறுபடியும் உயிர்பிழைத்த ஐத்திகுவை மேலறைக்கு கூட்டிக்கொண்டு வருகிறார்கள். ஐத்திகு உயிரோடிருப்பதைப் பார்த்து மிகுந்த ஆறுதலடைகிறார்கள். ஐத்திகு உயிரோடிருப்பது அவனுடைய குடும்பத்தாருக்கு மாத்திரமல்ல, சீஷர்களெல்லோருக்குமே சந்தோஷமாகவும் ஆறுதலாகவும் இருக்கிறது.

எருசலேமுக்குப் பிரயாணம் அப் 20 : 13-16

அப் 20:13. பவுல் ஆசோபட்டணம் வரைக்கும் கரைவழியாய்ப் போக மனதாயிருந்தபடியால், அவன் திட்டம்பண்ணியிருந்தபடியே, நாங்கள் கப்பல் ஏறி, அந்தப் பட்டணத்தில் அவனை ஏற்றிக்கொள்ளும்படி முன்னாக அங்கே போயிருந்தோம்.

அப் 20:14. அவன் ஆசோபட்டணத்திலே எங்களைக் கண்டபோது, நாங்கள் அவனை ஏற்றிக்கொண்டு, மித்திலேனே பட்டணத்துக்கு வந்தோம்.

அப் 20:15. அவ்விடம்விட்டு, மறுநாளிலே கீயுதீவுக்கு எதிராக வந்து,

அப் 20:16. பவுல் கூடுமானால் பெந்தெகொஸ்தே பண்டிகைநாளிலே எருசலேமிலிருக்க வேண்டுமென்று தீவிரப்பட்டதினிமித்தம், தான் ஆசியாவிலே காலம்போக்காதபடிக்கு, எபேசு பட்டணத்தைக் கடந்து போகவேண்டுமென்று தீர்மானித்ததினால், மறுநாளிலே சாமுதீவு பிடித்து, துரோகில்லியோன் ஊர்த்துறையிலே தங்கி, மறுநாள் மிலேத்துபட்டணத்துக்கு வந்தோம்.

ஆசோ பட்டணம்

பவுல் ஆசோபட்டணம் வரைக்கும் கரைவழியாய்ப் போக மனதாயிருந்தபடியால், அவன் திட்டம்பண்ணியிருந்தபடியே, நாங்கள் கப்பல் ஏறி, அந்தப் பட்டணத்தில் அவனை ஏற்றிக்கொள்ளும்படி முன்னாக அங்கே போயிருந்தோம் (அப் 20:13).

பவுல் எருசலேமில் இருக்கவேண்டுமென்று தீவிரப்படுகிறான். துரோவாவிலிருந்து தரைமார்க்கமாக ஆசோ பட்டணத்திற்குப் போகிறான். மற்றவர்கள் கப்பல் ஏறி, பவுலுக்கு முன்பாகவே ஆசோ பட்டணத்திற்குப் போகிறார்கள். அவனை ஏற்றுக்கொள்வதற்காக அவர்கள் அங்கு காத்திருக்கிறார்கள். பவுல் தரைமார்க்கமாகப் போகும்போது பல சபைகளைச் சந்திப்பதற்கு வாய்ப்புண்டாகும். அவர்கள் மத்தியில் ஊழியம் செய்யலாம். இதையெல்லாம் மனதில் நினைத்துக்கொண்டு, பவுல் கப்பல் ஏறி பிரயாணம்பண்ணாமல், தரைமார்க்கமாக, தன் கால்களால் நடந்து ஆசோ பட்டணத்திற்குப் போகிறான்.

பவுல் பிரயாணம்பண்ணுகிற பாதை பழங்காலத்து சாலை. வழி பழுதடைந்திருக்கும். நடப்பதற்குச் சிரமமாகயிருக்கும். ஆனாலும் துரோவாவிலிருந்து ஆசோ பட்டணத்திற்குப்போக, தரைமார்க்கமே குறைந்த தூரம். கப்பல் ஏறிப்போனால் பிரயாணம் எளிதாகயிருக்கும். சரீர களைப்பு குறையும். ஆனால் பவுலோ தரைமார்க்கமாகப் போவதையே திட்டம்பண்ணுகிறான்.

பவுல் போகும்வழியில் தன்னுடைய சிநேகிதரைச் சந்திக்க திட்டமிட்டிருக்கிறான். மேலும் அவனோடு சீஷர்கள் யாரும் போகாமல், அவன் தனிமையாகப் பிரயாணம்பண்ணுவதினால் ஜெபம்பண்ணுவதற்கும், தேவனோடு ஐக்கியமாயிருப்பதற்கும் அவனுக்கு அதிகநேரம் கிடைக்கும். பவுல் தன் இருதயத்தைச் சுத்திகரித்துக்கொண்டு, தேவனைத் துதித்துக்கொண்டு, தரைமார்க்கமாய் சந்தோஷமாய்ப் பிரயாணம்பண்ணுகிறான். தரைவழியாய்ப் பிரயாணம்பண்ணுவது கடினமானது. ஆனாலும் பவுல் எப்போதும் எளிதான வழியைத் தெரிந்தெடுப்பதில்லை. கர்த்தருக்காக கடினமாக உழைக்கக் கூடியவன். தன்னைத்தானே வெறுத்து, தன் சிலுவையைச் சுமந்துகொண்டு, இயேசுகிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிச்செல்லுகிறான்.

மிலேத்து பட்டணம்

அவன் ஆசோபட்டணத்திலே எங்களைக் கண்டபோது, நாங்கள் அவனை ஏற்றிக்கொண்டு, மித்திலேனே பட்டணத்துக்கு வந்தோம். அவ்விடம்விட்டு, மறுநாளிலே கீயுதீவுக்கு எதிராக வந்து, பவுல் கூடுமானால் பெந்தெகொஸ்தே பண்டிகைநாளிலே எருசலேமிலிருக்க வேண்டுமென்று தீவிரப்பட்டதினிமித்தம், தான் ஆசியாவிலே காலம்போக்காதபடிக்கு, எபேசு பட்டணத்தைக் கடந்து போக வேண்டுமென்று தீர்மானித்ததினால், மறுநாளிலே சாமுதீவு பிடித்து, துரோகில்லியோன் ஊர்த்துறையிலே தங்கி, மறுநாள் மிலேத்துபட்டணத்துக்கு வந்தோம் (அப் 20:14-16).

பவுல் துரோவா பட்டணத்திலிருந்து கால்நடையாய் நடந்தே ஆசோ பட்டணத்திற்கு வருகிறான். அங்கு மற்ற சீஷர்கள் பவுலை சந்திக்கிறார்கள். அதன்பின்பு சீஷர்கள் பவுலை கப்பலில் ஏற்றிக்கொண்டு ஆசோ பட்டணத்திலிருந்து மித்திலேனே பட்டணத்திற்கு வருகிறார்கள். அவ்விடம் விட்டு மறுநாளிலே கீயு தீவுக்கு எதிராக வருகிறார்கள். பவுல் பெந்தெகொஸ்தே பண்டிகை நாளிலே எருசலேமிலிருக்க வேண்டுமென்று தீவிரப்படுகிறான். இதனால் ஆசியாவிலே அதிகக் காலம் போக்காதபடிக்கு, எபேசு பட்டணத்தைக் கடந்து, மறுநாளிலே சாமுத்தீவுக்கு வருகிறார்கள். துரோகில்லியோன் ஊர்த்துறையில் தங்குகிறார்கள். இது சாமு தீவுக்கு அருகிலுள்ள துறைமுகப்பட்டினம். அங்கிருந்து மறுநாள் மிலேத்துப் பட்டணத்திற்கு வருகிறார்கள். இது எபேசு பட்டணத்திற்கு அருகிலுள்ள துறைமுகப்பட்டினம்.

பவுல் ஏற்கெனவே நான்கு அல்லது ஐந்து வருஷங்களுக்கு முன்பு எருசலேமுக்கு வந்திருக்கிறான் (அப் 18:21,22). இப்போது பவுல் அங்கு மறுபடியும் வருகிறான். எருசலேமிலுள்ள திருச்சபையாரையும், சபையின் மூப்பரையும் பவுல் அதிகமாய் நேசிக்கிறான். அவர்கள்மீது அன்பும் மரியாதையும் வைத்திருக்கிறான். பெந்தெகொஸ்தே பண்டிகை நாளிலே, ஏராளமான ஜனங்கள் எருசலேமுக்கு வருவார்கள். இந்தப் பண்டிகை நாளில்தான் பரிசுத்த ஆவியானவர் தம்முடைய சீஷர்களை ஆவியினால் அபிஷேகம்பண்ணினார். இதனால் கிறிஸ்துவின் சீஷர்களுக்கு பெந்தெகொஸ்தே பண்டிகை நாள் மிகவும் முக்கியமான நாளாகயிருக்கிறது.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு பல வேலைகள் இருக்கலாம். நாம் ஓய்வேயில்லாமல் ஊழியம் செய்துகொண்டிருக்கலாம். இவற்றிற்கு மத்தியிலும் நம்முடைய சிநேகிதரைச் சந்தித்து, அவர்களோடு ஐக்கியமாகயிருக்க நாடவேண்டும். ஊழியம் தடைபடக்கூடாது. அதே வேளையில் சிநேகிதரையும் புறக்கணித்துவிடக்கூடாது. பவுல் எருசலேமுக்குப் பொழுதுபோக்குவதற்காகப் போகவில்லை. அங்கு போய் தன்னுடைய சிநேகிதரைச் சந்தித்து, ஆவிக்குரிய காரியங்களையும், ஊழியக்காரியங்களையும் அவர்களோடு பகிர்ந்துகொள்வதற்காகப் போகிறான்.

எபேசுவில் பவுலின் பிரசங்கம் அப் 20 : 17-35

அப் 20:17. மிலேத்துவிலிருந்து அவன் எபேசுவுக்கு ஆள் அனுப்பி, சபையின் மூப்பரை வரவழைத்தான்.

அப் 20:18. அவர்கள் தன்னிடத்தில் வந்து சேர்ந்தபொழுது, அவன் அவர்களை நோக்கி: நான் ஆசியாநாட்டில் வந்த முதல்நாள் தொடங்கி எல்லாக்காலங்களிலும் உங்களுடனே இன்னவிதமாய் இருந்தேன் என்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்.

அப் 20:19. வெகு மனத்தாழ்மையோடும், மிகுந்த கண்ணீரோடும், யூதருடைய தீமையான யோசனைகளால் எனக்கு நேரிட்ட சோதனைகளோடும், நான் கர்த்தரைச் சேவித்தேன்.

அப் 20:20. பிரயோஜனமானவைகளில் ஒன்றையும் நான் உங்களுக்கு மறைத்துவைக்காமல், வெளியரங்கமாக வீடுகள்தோறும் உங்களுக்குப் பிரசங்கித்து, உபதேசம் பண்ணி,

அப் 20:21. தேவனிடத்திற்கு மனந்திரும்புவதைக் குறித்தும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதைக் குறித்தும், நான் யூதருக்கும் கிரேக்கருக்கும் சாட்சியாக அறிவித்தேன்.

அப் 20:22. இப்பொழுதும் நான் ஆவியிலே கட்டுண்டவனாய் எருசலேமுக்குப் போகிறேன்; அங்கே எனக்கு நேரிடுங்காரியங்களை நான் அறியேன்.

அப் 20:23. கட்டுகளும் உபத்திரவங்களும் எனக்கு வைத்திருக்கிறதென்று பரிசுத்த ஆவியானவர் பட்டணந்தோறும் தெரிவிக்கிறதை மாத்திரம் அறிந்திருக்கிறேன்.

அப் 20:24. ஆகிலும் அவைகளில் ஒன்றையுங்குறித்துக் கவலைப்படேன்; என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன்; என் ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிக்கவும், தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணும்படிக்கு நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன்.

அப் 20:25. இதோ, நான் உங்களுக்குள்ளே சஞ்சரித்து, தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கம்பண்ணினதைக் கேட்டவர்களாகிய நீங்களெல்லாரும் இனி என் முகத்தைப் பார்க்க மாட்டீர்களென்று அறிந்திருக்கிறேன்.

அப் 20:26. தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் நான் மறைத்துவைக்காமல், எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தபடியினாலே,

அப் 20:27. எல்லாருடைய இரத்தப்பழிக்கும் நீங்கி நான் சுத்தமாயிருக்கிறேனென்பதற்கு உங்களை இன்றையத்தினம் சாட்சிகளாக வைக்கிறேன்.

அப் 20:28. ஆகையால், உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்தஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்.

அப் 20:29. நான் போனபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும்.

அப் 20:30. உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக் கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன்.

அப் 20:31. ஆனபடியால், நான் மூன்றுவருஷகாலமாய் இரவும் பகலும் கண்ணீரோடே இடைவிடாமல் அவனவனுக்குப் புத்திசொல்லிக்கொண்டுவந்ததை நினைத்து விழித்திருங்கள்.

அப் 20:32. இப்பொழுது சகோதரரே, நீங்கள் பக்திவிருத்தியடையவும், பரிசுத்தமாக்கப் பட்ட அனைவருக்குள்ளும் உங்களுக்குச் சுதந்தரத்தைக் கொடுக்கவும் வல்லவராயிருக்கிற தேவனுக்கும் அவருடைய கிருபையுள்ள வசனத்துக்கும் உங்களை ஒப்புக்கொடுக்கிறேன்.

அப் 20:33. ஒருவனுடைய வெள்ளியையாகிலும் பொன்னையாகிலும் வஸ்திரத்தையாகிலும் நான் இச்சிக்கவில்லை.

அப் 20:34. நீங்கள் அறிந்திருக்கிறபடி எனக்கும் என்னுடனேகூட இருந்தவர்களுக்கும் வேண்டியவைகளுக்காக இந்தக் கைகளே வேலைசெய்தது.

அப் 20:35. இப்படிப் பிரயாசப்பட்டு, பலவீனரைத் தாங்கவும், வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தைகளை நினைக்கவும் வேண்டுமென்று எல்லா விதத்திலேயும் உங்களுக்குக் காண்பித்தேன் என்றான்.

மூப்பரை வரவழைத்தான்

மிலேத்துவிலிருந்து அவன் எபேசுவுக்கு ஆள் அனுப்பி, சபையின் மூப்பரை வரவழைத்தான் (அப் 20:17).

பவுல் மிலேத்து பட்டணத்திற்கு வருகிறான். அங்கு வந்தபோது எபேசுவுக்கு ஆள் அனுப்பி, அங்குள்ள சபையின் மூப்பரை தன்னிடத்திற்கு வரவழைக்கிறான். மூப்பர்கள் தன்னிடத்தில் வரும்வரைக்கும் பவுல் மிலேத்துவில் தங்கியிருக்கிறான். பவுல் எபேசுக்குப் போயிருந்தால், அவன் தங்களோடு அதிகக்காலம் தங்கியிருக்க வேண்டுமென்று எபேசுவிலுள்ள விசுவாசிகள் விரும்புவார்கள். பவுல் அவர்கள் விருப்பத்தின்படி அங்கு அதிகக்காலம் தங்கினால், பெந்தெகொஸ்தே பண்டிகை நாளில் எருசலேமில் இருக்க முடியாமல் போய்விடும். ஆகையினால் தான் எபேசுவுக்குப் போவதற்குப் பதிலாக, எபேசுவுக்கு ஆள்அனுப்பி சபையின் மூப்பரை தன்னிடமாக வரவழைக்கிறான். மூப்பர்களுக்கு ஆவிக்குரிய ஆலோசனைகளைச் சொல்லி, அவர்களை ஊழியத்தில் உற்சாகப்படுத்தி, அவர்களுடைய விசுவாசத்தைத் திடப்படுத்த விரும்புகிறான்.

இன்னவிதமாயிருந்தேன்

அவர்கள் தன்னிடத்தில் வந்து சேர்ந்தபொழுது, அவன் அவர்களை நோக்கி: நான் ஆசியாநாட்டில் வந்த முதல்நாள் தொடங்கி எல்லாக் காலங்களிலும் உங்களுடனே இன்னவிதமாய் இருந்தேன் என்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள் (அப் 20:18).

பவுல் நற்குணமுள்ளவனாகயிருக்கிறான். மூப்பர்கள் தன்னிடத்தில் வந்தபோது, அவர்களோடு மனம்விட்டுப்பேசுகிறான். பவுலின் உரையாடலில், அவனிடத்தில் காணப்படுகிற ஆவியின்கனி, அவனுடைய ஒவ்வொரு வார்த்தையிலும் வெளிப்படுகிறது. பவுல் சீக்கிரத்தில் எபேசுவிலுள்ள மூப்பர்களைவிட்டு எருசலேமுக்குப் போகப்போகிறான். இனிமேல் அவர்களைப் பார்ப்பதற்கு தனக்கு வாய்ப்பு கிடைக்காது என்று, தனக்குள் தீர்மானித்திருக்கிறான்.

எபேசுவிலிருந்து வந்திருக்கிற மூப்பரிடத்தில், விடைபெற்று, அங்கிருந்து புறப்பட்டுப்போவதற்கு முன்பாக, தான் அவர்களோடிருந்தபோது, எப்படியிருந்தான் என்பதை அவர்களுக்குச் சாட்சியாக அறிவிக்கிறான். தன்னுடைய ஜீவியமும் உபதேசமும் மனுஷருக்கு முன்பாகவும் தேவனுக்கு முன்பாகவும் மாசற்றிருந்ததை அவர்களுக்குத் தெளிவுபடுத்துகிறான். பவுல் அவர்களோடு கூடயிருந்தபோது, அவன் அவர்களுடனே என்னவிதமாய் இருந்தான் என்பதை அவர்கள் அறிந்திருக்கிறார்கள். பவுல் கிருபையுள்ளவன். பரலோகத்தின் ஆவியினால் அபிஷேகம்பண்ணப் பட்டிருக்கிறவன். சுயமகிமையை நாடாதவன். இயேசுகிறிஸ்துவுக்காக உற்சாகமாய் ஊழியம் செய்கிறவன்.

பவுல் தன்னுடைய சுயமுயற்சியினாலோ, சுயபக்தியினாலோ, சுயபுத்தியினாலோ கிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்யவில்லை. தன்னுடைய பாடுகளிலும் ஊழியத்திலும் பவுல் தேவனை மகிமைப்படுத்துகிறான். இப்படிப்பட்ட கனமான ஊழியத்தை தேவனுடைய கிருபையும், அவருடைய வல்லமையும் இல்லாமல் செய்யமுடியாது. பவுலின் பிரசங்கத்திலும், அவனுடைய சம்பாஷணையிலும், தேவன் பவுலோடு கூடயிருக்கிறார் என்பது நிரூபிக்கப்படுகிறது. பவுல் எபேசுவிலுள்ள சீஷர்களுடனே நல்மனச்சாட்சியுடன் இருந்திருக்கிறான். தன்னைப்போலவே அவர்களும் கிறிஸ்துவின் உண்மையுள்ள விசுவாசிகளாகவும், உண்மையுள்ள ஊழியக்காரர்களாகவும் ஊழியம் செய்யவேண்டுமென்று அவர்களுக்கு ஆலோசனை சொல்லுகிறான்.

பவுல் எபேசுவிலுள்ள மூப்பரோடு பேசும்போது, அவனுடைய நற்குணம் வெளிப்படுகிறது. அவனிடத்திலிருக்கிற நல்ல ஆவி அவனைக் குறித்துச் சாட்சிகொடுக்கிறது. ஆசியா நாட்டில் வந்த முதல்நாள் தொடங்கி, பவுல் எல்லா காலங்களிலும், அவர்களுடனே நல்லவிதமாகவே இருந்திருக்கிறான். இதை அவர்களும் அறிந்திருக்கிறார்கள். தன்னுடைய பேச்சிலும் செயலிலும் பவுல் ஒருபோதும் முரண்பட்டதில்லை. அவனுடைய ஆவிக்குரிய ஜீவியம் ஒரே சீராக வளர்ச்சி பெற்றிருக்கிறது. கர்த்தரைப் பின்பற்றுவதில் வலது இடதுபக்கம் சாயாமல், அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி, நேராக நடந்திருக்கிறான். எல்லா காலங்களிலும் ஒன்றுபோல் இருந்திருக்கிறான். உயர்வும் தாழ்வும் பவுலுக்கு ஒன்றுதான். ஜீவனையும் சாவையும் பவுல் ஒன்றுபோலவே நோக்கிப் பார்க்கிறான்.

கர்த்தரைச் சேவித்தேன்

வெகு மனத்தாழ்மையோடும், மிகுந்த கண்ணீரோடும், யூதருடைய தீமையான யோசனைகளால் எனக்கு நேரிட்ட சோதனைகளோடும், நான் கர்த்தரைச் சேவித்தேன் (அப் 20:19).

கர்த்தரைச் சேவிப்பது பவுலின் பிரதான ஊழியம். அவன் ஒருபோதும் தன்னைத்தானே சேவிக்கவில்லை. மனுஷரையும் சேவிக்கவில்லை. காலத்தையும் சேவிக்கவில்லை. அவன் எப்போதுமே கர்த்தரையே சேவிக்கிறான். கர்த்தரைச் சேவிக்கும்போது பவுல் வெகுமனத்தாழ்மையோடு சேவிக்கிறான். தன்னுடைய சுயபெருமையை அவன் ஒருபோதும் நாடியதில்லை. பவுல் ஜனங்களோடு ஐக்கியமாகயிருக்காமல், ஒருபோதும் ஜனங்களை தூரத்தில் ஒதுக்கி வைக்கவில்லை. விசுவாசிகளோடு பேசும்போதும் பழகும்போதும் பவுல் மிகுந்த மனத்தாழ்மையைக் காண்பிக்கிறான். மற்ற சீஷரிடத்தில் அன்பாயும் தாராளமாயும் பேசுகிறான். மற்றவர்களைவிட தான் உயர்ந்தவன் என்று பவுல் ஒருபோதும் தன்னைப்பற்றி உயர்வாக நினைக்கவில்லை.

பவுலின் இருதயம் மென்மையானது. அன்புள்ளது. கரிசனையுள்ளது. கர்த்தரை மிகுந்த கண்ணீரோடு சேவிக்கிறான். பவுலின் சுபாவம் இயேசுகிறிஸ்துவின் சுபாவம் போலிருக்கிறது. பவுல் பிரசங்கம்பண்ணும்போது தன்னுடைய செய்தியை "கண்ணீரோடு சொல்லுகிறான்" (பிலி 3:18). அழுகிறவர்களோடு அழுவது பவுலின் சுபாவம்.

யூதருடைய தீமையான யோசனைகளால் பவுலுக்கு அநேக சோதனைகள் நேரிட்டது. பல பிரச்சனைகள் உண்டாயிற்று. அந்த எதிர்ப்புக்களுக்கும், உபத்திரவங்களுக்கும் நடுவே பவுல் உண்மையோடு கர்த்தரைச் சேவிக்கிறான். நீடியபொறுமையோடு தன் விசுவாசத்தைக் காத்துக்கொள்கிறான். சோதனைகள் வந்தாலும் பவுல் விசுவாசத்தில் உறுதியாயிருக்கிறான். ஆவியானவருடைய பலத்தைப் பெற்றுக்கொண்டு கர்த்தருக்குச் சாட்சியாய் ஜீவிக்கிறான்.

யூதர்கள் பவுலைக்குறித்து இன்னும் தீமையாக யோசனை பண்ணுகிறார்கள். பவுலுக்கு உபத்திரவமும் பிரச்சனையும் கொடுக்கவேண்டுமென்பது அவர்களுடைய விருப்பம். பவுல் அழிந்துபோவதற்கு என்னென்ன செய்யவேண்டுமோ அவையெல்லாவற்றையும் செய்கிறார்கள். இவையெல்லாவற்றிற்கும் நடுவில் பவுல் கர்த்தரை உண்மையாய்ச் சேவிக்கிறான்.

பிரசங்கித்து உபதேசம்பண்ணி

பிரயோஜனமானவைகளில் ஒன்றையும் நான் உங்களுக்கு மறைத்துவைக்காமல், வெளியரங்கமாக வீடுகள்தோறும் உங்களுக்குப் பிரசங்கித்து, உபதேசம் பண்ணி, தேவனிடத்திற்கு மனந்திரும்புவதைக் குறித்தும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதைக் குறித்தும், நான் யூதருக்கும் கிரேக்கருக்கும் சாட்சியாக அறிவித்தேன் (அப் 20:20,21).

பவுல் சத்தியத்தைப் பிரசங்கம்பண்ணும்போது எதையும் மறைத்து வைப்பதில்லை. வெளியரங்கமாகப் பிரசங்கிக்கக்கூடியவன். சத்தியத்தை எப்படிப் பிரசங்கம்பண்ணவேண்டுமோ அப்படிப் பிரசங்கம்பண்ணுகிறவன். மிகவும் எளிமையாகவும் தெளிவாகவும் பேசக்கூடியவன். பவுலின் பிரசங்கச் செய்தியை எல்லோரும் புரிந்துகொள்வார்கள். பவுல் தன் பிரசங்கத்தைப்பற்றிச் சொல்லும்போது "நான் பிரசங்கித்து உபதேசம் பண்ணினேன்" என்று குறிப்பிடுகிறான். பவுல் பிரசங்கம்பண்ணும்போது யாருடைய மனதிலும் குழப்பம் உண்டாகாது. வீணான விவாதத்திற்கு அங்கு இடம் இருக்காது. சத்தியத்தை எல்லோரும் புரியும் விதத்தில் பவுல் தெளிவுபடுத்துவான்.

சிறு பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுப்பதுபோல, பவுல் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை ஜனங்களுக்குப் புரியும் விதத்தில் கற்றுக்கொடுக்கிறான். அதே சமயத்தில் பவுல் வல்லமையோடும் பிரசங்கம்பண்ணுகிறவன். பவுலின் பிரசங்கத்தில் ஜீவன் இருக்கும். வல்லமை இருக்கும். சத்தியத்திற்கு சாட்சி கூறுவான். ஒருவன் ஆணையிட்டுப் பேசுவதுபோல, பவுல் சத்தியத்தை உறுதியாக பேசுகிறவன். வழிப்போக்கர்கள் தெருவில் எதையாவது பேசிக்கொண்டு போவதுபோல, பவுல் சுவிசேஷச்செய்தியை பேசுவதில்லை. பவுல் பேசும்போது அதில் உறுதியிருக்கும். சத்தியத்திற்கு அவன் சாட்சிசொல்லுவான். பவுல் பிரசங்கம்பண்ணும்போது அவனுடைய இருதயமும், அவனுடைய மனச்சாட்சியும், அவனுடைய வாயோடு சேர்ந்து பேசும்.

பவுல் பிரசங்கம்பண்ணும்போது அதைக் கேட்போருக்கு மிகுந்த பிரயோஜனமுண்டாகும். மனுஷருடைய ஆத்துமாவுக்கு பிரயோஜனமானவைகளை மாத்திரமே பவுல் பிரசங்கம்பண்ணுவான். இதனால் ஞானிகள் நல்லவர்களாவார்கள். அறிவில் தேறியவர்கள் நற்குணத்திலும் தேறுவார்கள். அவர்களுடைய இருதயங்களும் ஜீவியமும் புதுப்பிக்கப்படும். பிரயோஜனமானவைகளில் ஒன்றையும் பவுல் அவர்களுக்கு மறைத்து வைக்கவில்லை. தெய்வீக வெளிச்சத்தை பவுல் தன்னுடைய பிரசங்கத்தின் மூலமாக அவர்களுக்கு வெளிப்படுத்திக் காண்பிக்கிறான். பவுலின் பிரசங்கத்தினால் ஜனங்களுடைய ஆத்துமா பெலனடைகிறது.

ஒரு சிலர் பிரசங்கம்பண்ணும்போது மற்றவர்களைக் குறைசொல்லியே பேசுவார்கள். மற்றவர்களுடைய இருதயத்தைப் புண்படுத்துவார்கள். குத்திப்பேசுவார்கள். இருதயத்தை நோகும்படி பிரசங்கிப்பதைவிட, அவர்களுக்கு பிரயோஜனமுண்டாகும்படி பிரசங்கிப்பது மிகவும் நல்லது. பவுலின் பிரசங்கச் செய்தி ஜனங்களை புண்படுத்தும் விதமாயிருக்காது. அவர்களுக்கு பிரயோஜனம் உண்டாகும் விதமாகவே இருக்கும்.

பவுல் ஏனோதானோவென்று பிரசங்கம் பண்ணுகிறவனல்ல. அக்கரையோடு பிரசங்கம்பண்ணுகிறவன். வெளியரங்கமாக வீடுகள்தோறும் சென்று ஜனங்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிறான். சுவிசேஷத்தை வெளியரங்கமாகப் பிரசங்கம்பண்ணுவதற்கு பவுல் பயப்படுவதில்லை. வெட்கப்படுவதில்லை. கேட்போர் கொஞ்சம்பேராயிருந்தாலும், அதிகம் பேராயிருந்தாலும் தன்னுடைய பிரசங்கச்செய்தியை மிகுந்த அக்கரையோடும், கவனத்தோடும், கண்ணீரோடும் பிரசங்கம்பண்ணுவான்.

பவுல் வீடுகள்தோறும் சென்று பிரசங்கிக்கிறான். கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நாம் சபைகளிலும், பொதுஇடங்களிலும் பிரசங்கம்பண்ண வேண்டும். அதே சமயத்தில் வீடுகளையும் சந்திக்கவேண்டும். சுவிசேஷத்தின் நற்செய்தியை வீட்டிலுள்ளவர்களோடு பகிர்ந்து சொல்லவேண்டும். பொது இடங்களில் பிரசங்கம்பண்ணுகிற சத்தியத்தை, வீடுகள்தோறும் சொல்லவேண்டும். வீடுகளில் சத்தியத்தைப் பகிர்ந்து சொல்லும்போது, வீட்டிலுள்ளவர்கள் சுவிசேஷத்தின் சத்தியத்தைத் தங்கள் சொந்த வாழ்வில் பயன்படுத்துவார்கள். அப்போது கர்த்தர் நல்லவர் என்பதை தங்களுடைய வாழ்வில் ருசித்துப்பார்ப்பதற்கு அவர்களுக்கு ஒரு வாய்ப்பு கிடைக்கும்.

பவுல் உண்மையுள்ள பிரசங்கியாயிருக்கிறான். பிரயோஜன மானவைகளில் ஒன்றையும் மறைத்து வைக்காமல் அனைத்தையும் பிரங்கம் பண்ணுகிறான். பிரயோஜனமானவைகளை ஒருவேளை ஜனங்கள் ஏற்றுக்கொள்ளலாம். ஏற்றுக்கொள்ளாமலும் போகலாம். பிரயோஜனமானவைகள் உலக நாகரீகத்திற்கு ஏற்றதாகவும் இருக்கலாம். நாகரீகத்திற்கு ஒத்துப்போகாததாகவும் இருக்கலாம். பவுல் அதைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல், பிரயோஜனமானவைகளில் ஒன்றையும் மறைத்துவைக்காமல், வெளியரங்கமாய்ப் பிரசங்கம்பண்ணுகிறான்.

சத்தியத்தைப் பிரசங்கம்பண்ணினால் ஜனங்களுடைய மனது புண்படும் என்றோ, அவர்கள் வருத்தப்படுவார்களென்றோ, அவர்கள் கோபப்படுவார்களென்றோ பவுல் ஒன்றையும் குறித்துக் கவலைப்படுவதில்லை. சத்தியத்தை உண்மையாய்ப் பிரசங்கிக்கிறவன். கிறிஸ்துவின் சுவிசேஷம் யூதருக்கு தடைக்கல்லாக இருக்கிறது. கிரேக்கருக்கு பைத்தியமாக இருக்கிறது. சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறவர்களை கிரேக்கர்கள் பைத்தியக்காரர்கள் என்று சொல்லுகிறார்கள். பவுல் அதைப்பற்றியெல்லாம் கவலைப்படவில்லை. கர்த்தர் தனக்குக் கொடுத்த செய்தியை மறைக்காமல் பேசுகிறான். கர்த்தருடைய சுவிசேஷம் ஆத்துமாக்களுக்குப் பிரயோஜனமானது என்று உறுதியாய் நம்புகிறான்.

பவுல் பட்சபாதம் பார்க்காமல் எல்லோருக்கும் பிரசங்கம்பண்ணுகிறான். யூதருக்கும் கிரேக்கருக்கும் சுவிசேஷத்தைச் சாட்சியாக அறிவிக்கிறான். பவுல் ஒரு யூதனாகப் பிறந்திருந்தபோதிலும், புறஜாதியாருக்கு விரோதமான கருத்துக்கள் அவனுக்கு கற்றுக்கொடுக்கப்பட்டிருந்த போதிலும், அவன் புறஜாதியாரை வெறுக்கவில்லை. அவர்களுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்காமல் அவர்களை ஒதுக்கி வைத்துவிடவில்லை. யூதர்களுக்கு சத்தியத்தைச் சாட்சியாய் அறிவிக்கிறது போல, புறஜாதியாராகிய கிரேக்கருக்கும் அறிவிக்கிறான்.

புறஜாதியார் மத்தியில் சுவிசேஷத்தை அறிவிக்க கர்த்தர் பவுலை தெரிந்தெடுத்திருக்கிறார். பவுல் புறஜாதியார் மத்தியில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தாலும், அவன் யூதர்களையும் மறந்துவிடவில்லை. யூதர்களுக்கும் சத்தியத்தைப் பிரசங்கம்பண்ணுகிறான். பவுலிடத்தில் பட்சபாதம் எதுவுமில்லை.

கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நாமும் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணுகிறபோது பட்சபாதம் காண்பிக்கக்கூடாது. நாம் உலகமெங்கும் சென்று, எல்லா ஜாதிகளுக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்கு அழைக்கப்பட்டவர்கள். ஒரு குறிப்பிட்ட ஜனத்தாருக்கு மாத்திரம்தான் நான் பிரசங்கம் செய்வேன் என்று, நம்முடைய ஊழியத்தின் எல்லையை குறுக்கிக்கொள்ளக்கூடாது. எங்கெல்லாம் வாய்ப்பு கிடைக்கிறதோ, அங்கெல்லாம் சுவிசேஷத்தைச் சாட்சியாய் அறிவிக்கவேண்டும். கர்த்தருடைய உண்மையுள்ள ஊழியக்காரர்களாய் ஊழியம் செய்யவேண்டும்.

பவுல் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை மாத்திரமே பிரசங்கம்பண்ணுகிறான். பிரசித்திப்பெற்ற தத்துவ கருத்துக்களையோ, அரசியல் கருத்துக்களையோ பவுல் பிரசங்கம்பண்ணவில்லை. விசுவாசத்தைக் குறித்தும், மனந்திரும்புதலைக்குறித்தும் பவுல் பிரசங்கம்பண்ணுகிறான். இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் மனுஷருடைய பாவங்கள் கழுவப்படும். நாம் தேவனிடத்திற்கு மனந்திரும்பவேண்டும். அறியாமையுள்ள காலங்களை தேவன் காணாதவர்போல் இருந்தாரென்றும், இப்பொழுதோ மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷர் எல்லாருக்கும் தேவன் கட்டளையிடுகிறாரென்றும் (அப் 17:30) பவுல் மனந்திரும்புதலின் செய்தியை எல்லா இடங்களிலும் பிரசங்கம்பண்ணுகிறான்.

யூதரிடத்திலும் புறஜாதியாரிடத்திலும் பவுல் புறப்பட்டுப்போய் "அவர்கள் தேவனிடத்திற்கு மனந்திரும்பி குணப்படவும், மனந்திரும்புதலுக்கேற்ற கிரிகைளைச் செய்யவும் வேண்டும்" (அப் 26:20) என்று அறிவிக்கிறான். இஸ்ரவேலுக்கு மனந்திரும்புதலையும், பாவமன்னிப்பையும் அருளுகிறதற்காக தேவன் இயேசுகிறிஸ்துவை அதிபதியாகவும், இரட்சகராகவும் தமது வலதுகரத்தினாலே உயர்த்தினார் (அப் 5:31) என்றும் பவுல் பிரசங்கம்பண்ணுகிறான்.

தேவனிடத்திற்கு மனந்திரும்ப வேண்டும் என்பதும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கவேண்டும் என்பதுமே பவுலின் முக்கியமான பிரசங்கச் செய்தியாகும். மனந்திரும்புதலின் மூலமாகவே நம்மால் தேவனை நோக்கி முன்னேறிச்செல்ல முடியும். இயேசுகிறிஸ்துவை விசுவாசித்தால் மாத்திரமே தேவனுடைய சமுகத்தில் பிரவேசிக்க முடியும். தேவனிடத்திற்கு மனந்திரும்பினால் மாத்திரம் போதாது. இயேசுகிறிஸ்துவே நம்முடைய மீட்பர் என்றும், நம்முடைய இரட்சகர் என்றும் நாம் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவே தேவனுக்கும் மனுஷருக்கும் நடுவே மத்தியஸ்தராயிருக்கிறார். நாம் மனந்திரும்பினாலும், இயேசுகிறிஸ்துவின் மூலமாக மாத்திரமே, பிதாவின் சமுகத்திற்குள் பிரவேசிக்க முடியும்.

ஆவியில் கட்டுண்டவன்

இப்பொழுதும் நான் ஆவியிலே கட்டுண்டவனாய் எருசலேமுக்குப் போகிறேன்; அங்கே எனக்கு நேரிடுங்காரியங்களை நான் அறியேன். கட்டுகளும் உபத்திரவங்களும் எனக்கு வைத்திருக்கிறதென்று பரிசுத்த ஆவியானவர் பட்டணந்தோறும் தெரிவிக்கிறதை மாத்திரம் அறிந்திருக்கிறேன் (அப் 20:22,23).

பவுல் எருசலேமுக்குப் போகவேண்டுமென்று தீவிரப்படுகிறான். அங்கு கட்டுகளும் உபத்திரவங்களும் அவனுக்கு வைத்திருக்கிறது என்று பரிசுத்த ஆவியானவர் அவனுக்குத் தெரிவிக்கிறார். ஆனாலும் ஆவியில் கட்டுண்டவனாய் பவுல் எருசலேமுக்குப் போகிறான். "நான் ஆவியிலே கட்டுண்டவனாய் எருசலேமுக்குப் போகிறேன்" என்னும் வாக்கியத்திற்கு வேதபண்டிதர்கள் இரண்டுவிதமாக வியாக்கியானம் கூறுகிறார்கள். அவையாவன:

1. கட்டுகளும் உபத்திரவங்களும் தனக்கு வைக்கப்பட்டிருப்பதை பவுல் முன்னறிகிறான். உபத்திரவமுண்டு என்பது பவுலுக்குத் தெரியும். கர்த்தருடைய ஊழியத்தைச் செய்யும்போது ஒவ்வொரு நாளும் உபத்திரவமுண்டு. ஆனால் பவுலோ கட்டுகளையும் உபத்திரவங்களையும் எதிர்கொள்வதற்குத் தன்னை ஒவ்வொரு நாளும் ஆயத்தப்படுத்துகிறான்.

2. கட்டுகளும் உபத்திரவங்களும் தனக்கு வைக்கப்பட்டிருப்பதை பவுல் முன்னறிகிறான். அவனுடைய மாம்ச பலவீனத்தினால், இந்தக் கட்டுகளையும் உபத்திரவங்களையும் தவிர்த்துப்போடலாம் என்னும் யோசனை அவனுக்குள் ஏற்படலாம். ஆனால் ஆவியானவரே அவனை ஆளுகை செய்கிறார். கட்டுகளும் உபத்திரவங்களும் இருந்தாலும், ஆவியானவர் அவனைப் பலப்படுத்தி, தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக அவனை எருசலேமுக்கு அழைத்து செல்கிறார். பவுல் ஆவியில் கட்டுண்டவனாய் இருக்கிறான். இந்தக் கட்டிலிருந்து அவனால் விடுபடமுடியாது. பரிசுத்த ஆவியானவரின் வல்லமைக்கு முன்பாக, பவுலின் சுயஆவி பலமடைந்திருக்கிறது. ஆகையினால் ஆவியானவர் தன்னை எங்கே நடத்துகிறாரோ, தான் அங்கே போவதற்கு ஆயத்தமாயிருக்கிறான்.

எருசலேமில் பவுலுக்குக் கட்டுகளும் உபத்திரவங்களும் வைத்திருக்கிறது என்பது மாத்திரம் அவனுக்குத் தெரிகிறது. எப்படிப்பட்ட உபத்திரவம் என்பது பவுலுக்கு இன்னும் தெரியவில்லை. இந்த வேளையில் இதை பவுலுக்கு வெளிப்படுத்த தேவன் சித்தமாயில்லை. நம்முடைய வருங்காலங்களில் பல சம்பவங்கள் நமக்கு அறிவிக்கப்படாமலேயே இருக்கிறது. கர்த்தர் நம்முடைய நன்மைக்காகவே, வருங்காலத்தில் நமக்கு நடைபெறப்போகிற ஒரு சில காரியங்களை, நமக்கு மறைத்துவைத்திருக்கிறார். இதனால் நம்முடைய வருங்காலத்திற்காக நாம் தேவனுடைய சமுகத்தில் காத்திருப்போம்.

வருங்காலத்தில், நமக்கு எந்த நாளில், எந்த மணி நேரத்தில், எந்த வேளையில், நமக்கு எந்தக் காரியம் நடைபெறும் என்று வெளிப்படுத்தப்படாமலிருக்கிறது. எல்லா காரியங்களுக்கும் நாம் கர்த்தரையே சார்ந்திருக்கவேண்டும். கர்த்தர் நம்மை கரம்பிடித்து வழிநடத்துவார். தமக்குப் பிரியமான வழியில் தேவன் நம்மை அற்புதமாய் வழிநடத்துவார்.

பவுலுக்கு எப்படிப்பட்ட உபத்திரவம் உண்டாகும் என்று அவனுக்குத் தெளிவாகத் தெரியவில்லை. ஆனாலும் கட்டுகளும் உபத்திரவங்களும் அவனுக்கு வைத்திருக்கிறது என்று பரிசுத்த ஆவியானவர் பட்டணந்தோறும் தெரிவிக்கிறார். அதைப் பவுல் அறிந்திருக்கிறான். பவுல் ஒவ்வொரு பட்டணத்திற்குப் போகும்போதும், அங்குள்ள தீர்க்கதரிசிகள் மூலமாக, அவனுக்கு உண்டாகப்போகும் உபத்திரவத்தை முன்னறிவிக்கிறான். பவுல் இதனால் சோர்ந்துபோய்விடாமல், எச்சரிப்பு பெற்று, தன் ஆவிக்குரிய ஜீவியத்தில் பெலப்படுகிறான். தைரியமாய் முன்னேறிச் செல்கிறான்

பவுல் ஒவ்வொரு பட்டணத்திற்கு ஊழியத்திற்குப் போகும்போதும், "கட்டுகளும் உபத்திரவங்களும் உனக்கு வைத்திருக்கிறது" என்று பரிசுத்த ஆவியானவர் சொல்லும்போது, அவனுடைய மனதில் சோர்வு உண்டாகலாம். கலக்கமுண்டாகலாம். ஆனால் தேவனுடைய கிருபையினாலே, பவுல் எந்தவிதக் கலக்கமுமில்லாமல், மனச்சோர்வுமில்லாமல், தேவன் தனக்கு நியமித்து வைத்திருக்கிற ஓட்டத்தில் விசுவாசத்தோடு ஓடுகிறான். தனக்கு வைக்கப்பட்டிருக்கிற கட்டுகளிலும் உபத்திரவங்களும் ஒன்றையும் குறித்து பவுல் கவலைப்படவில்லை.

ஒன்றையுங் குறித்து கவலைப்படேன்

ஆகிலும் அவைகளில் ஒன்றையுங்குறித்துக் கவலைப்படேன்; என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன்; என் ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிக்கவும், தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணும்படிக்கு நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன் (அப் 20:24).

பவுல் எருசலேமுக்குப் போவதில் தீர்மானமாயிருக்கிறான். கட்டுகளும் உபத்திரவங்களும் தனக்கு வைத்திருக்கிறது என்று பரிசுத்த ஆவியானவர் பட்டணந்தோறும் அவனுக்குத் தெரிவிக்கிறார். ஆகிலும் அவைகளில் ஒன்றையும் குறித்து பவுல் கவலைப்படவில்லை. தன்னுடைய பிராணனையும் பவுல் அருமையாக எண்ணவில்லை. கட்டுகளும் உபத்திரவங்களும் பவுலுக்கு வைக்கப்பட்டிருந்தாலும், அவற்றில் எதுவும் அவனுடைய இருதயத்திற்குள் பிரவேசிக்கவில்லை. கிறிஸ்துவும் பரலோகமுமே பவுலின் இருதயத்தில் நிரம்பியிருக்கிறது.

கட்டுகளையும் உபத்திரவங்களையும் பார்த்து பவுல் ஊழியத்தைவிட்டு ஓடிப்போய்விட வில்லை. பின்வாங்கிப்போய்விட வில்லை. புயல்வரும்போது தீர்மானமாக முன்னேறிச் செல்லவேண்டுமென்று விரும்புகிறான். கட்டுகளும் உபத்திரவங்களும் தனக்கு முன்பாக இருந்தாலும், அவற்றின் வழியாகவும் பிரவேசித்து, கர்த்தர் தனக்கு வைத்திருக்கும் ஊழியத்தை நிறைவேற்றவே விரும்புகிறான்.

கட்டுகளும் உபத்திரவங்களும் பவுலின் ஆறுதலையும் அமைதியையும் நீக்கிப்போடவில்லை. கட்டுகளையும் உபத்திரவங்களையும் குறித்து பவுல் கவலைப்படவே இல்லை. அவற்றைப்பற்றிய கரிசனை பவுலின் உள்ளத்தில் சிறிதுமில்லை. பவுலின் பார்வை பரலோகத்தையே நோக்கிப்பார்க்கிறது. பரலோகத்தின்மீது கரிசனை யோடிருக்கிறவர்களுக்கு பூலோகத்தின் காரியங்கள் எந்தவித பாதிப்பையும் கொடுக்காது.

பவுல் தன்னுடைய பிராணனையும் அருமையாக எண்ணவில்லை. பொதுவாக மனுஷருக்கு அவர்களுடைய ஜீவன் பிரியமானது. ஜீவிக்கவேண்டுமென்றே விரும்புவார்கள். யாரும் மரிக்க ஆசைப்படமாட்டார்கள். மனுஷன் தன்னுடைய ஜீவனுக்காக தனக்குள்ளது அனைத்தையும் கொடுக்க முன்வருவான். ஆனால் பவுலோ தன் பிராணனை அருமையாக எண்ணவில்லை என்று அறிவிக்கிறான். பரலோகத்தின் காரியங்களை விசுவாசத்தோடு நோக்கிப்பார்க்கிறான். நித்திய ஜீவனை அருமையானதாக எண்ணுகிற பவுலினால், இந்தப் பூமிக்குரிய ஜீவனை அருமையானதாக எண்ண முடியவில்லை. கிறிஸ்துவுக்காக தன் ஜீவனை சந்தோஷமாகக் கொடுக்க முன்வருகிறான்.

கர்த்தர் பவுலுக்குக் கொடுத்திருக்கிற ஓட்டத்தை சந்தோஷமாக ஓடி முடிக்க விரும்புகிறான். தேவன் தம்முடைய ஊழியத்தை பவுலுக்குக் கொடுத்திருக்கிறார். தன்னுடைய ஜீவியகாலத்தில் தேவன் தனக்குக் கொடுத்திருக்கும் ஊழியத்தை, பவுல் நிறைவேற்ற விரும்புகிறான். தன்னுடைய வாழ்க்கையில் பாடுகளும், கட்டுகளும், உபத்திரவங்களும் வந்தாலும் அவைகளில் ஒன்றையும் குறித்து கவலைப்படாமல், கர்த்தர் தனக்குக் கொடுத்திருக்கும் ஊழியத்தை நிறைவேற்றவே விரும்புகிறான்.

கர்த்தர் தன்னிடத்தில் பொறுப்பாக ஒப்புக்கொடுத்திருக்கும் ஊழியத்தை பவுல் உண்மையாய் நிறைவேற்ற விரும்புகிறான். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து விடத்திலிருந்து பெற்றிருக்கிற ஊழியத்தை உத்தமமாய் நிறைவேற்ற விரும்புகிறான். தனக்கு நியமிக்கப்பட்டிருக்கும் ஓட்டத்தை சந்தோஷமாய் முடிக்க விரும்புகிறான். தன்னுடைய ஊழியத்தில் பாதியை நிறைவேற்றிவிட்டு, மீதியை நிறைவேற்றாமல் விட்டுவிட பவுல் விரும்பவில்லை. ஊழியத்தை முடிப்பதற்கு விரும்புகிறான். தம்முடைய ஊழியத்தைச் செய்யுமாறு கர்த்தர் பவுலை இந்த உலகத்திற்கு அனுப்பியிருக்கிறார். கர்த்தருடைய ஊழியம் இந்த உலகத்தில் எங்கு நடைபெறவேண்டுமோ, அங்கு பவுல் புறப்பட்டுப்போக ஆயத்தமாயிருக்கிறான்.

பவுல் இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலனாக ஊழியம் செய்கிறான். அப்போஸ்தல ஊழியம் என்பது கிறிஸ்துவுக்கும், மனுஷருடைய ஆத்துமாவுக்கும் செய்கிற ஊழியமாகும். அப்போஸ்தல ஊழியத்திற்காக அழைக்கப்பட்டிருக்கிறவர்கள், இந்த ஊழியத்தை பொறுப்பாய் நிறைவேற்றவேண்டும். அப்போஸ்தல பட்டம் என்பது ஒரு ஊழியம் என்னும் நினைவு இவர்களுடைய இருதயத்தைவிட்டு நீங்கக்கூடாது. அப்போஸ்தல பட்டத்தின் கனத்தையும், மரியாதையையும், அதிகாரத்தையும் மாத்திரம் விரும்பிக்கொண்டு, அதன் ஊழியத்தை நிறைவேற்றாமல் விட்டுவிடக்கூடாது.

தான் செய்கிற ஊழியம் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியம் என்று பவுல் அறிக்கை செய்கிறான். கர்த்தரே இந்த ஊழியத்தை பவுலிடத்தில் ஒப்புக் கொடுத்திருக்கிறார். ஊழியக்காரர்கள் கர்த்தரிடமிருந்தே ஊழியத்தைப் பெற்றுக்கொள்கிறார்கள். தேவனுடைய நாமத்தினாலும், தேவனுடைய வல்லமையினாலும் ஊழியக்காரர்கள் தேவனுடைய ஊழியத்தைச் செய்கிறார்கள். தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணுவதே தேவனுடைய ஊழியம்.

தேவன் நம்மிடத்தில் தம்முடைய தயவுள்ள சித்தத்தை நிறைவேற்றுகிறார். தம்முடைய நற்கிரியைகளை நமக்குக் கொடுத்து ஆசீர்வதிக்கிறார். தேவனுடைய கிருபையின் சுவிசேஷம் நமக்குப் பிரசங்கம்பண்ணப்படுவது நமக்கு மிகப்பெரிய ஆசீர்வாதம். தேவன் நம்மீது கிருபையாயிருப்பதினாலேயே, நமக்கு தேவனுடைய கிருபையின் சுவிசேஷம் கிடைத்திருக்கிறது. பவுல் அனுதினமும் இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ண தீர்மானம்பண்ணுகிறான். சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணுவதற்கு தான் ஒரு கருவியாகப் பயன்படவேண்டும் என்பதே பவுலின் விருப்பம்.

தேவன் தன்னிடத்தில் கொடுத்திருக்கும் ஊழியத்தை பவுல் நிறைவேற்ற விரும்புகிறான். அவனுக்கு மரணம் எப்பொழுது வரும் என்றோ, எதுவரையிலும் அவன் ஜீவனோடிருப்பான் என்றோ அவனுக்குத் தெரியாது. ஆயினும் அவனுக்கு நியமிக்கப்பட்டிருக்கிற ஜீவியகாலத்தில், கர்த்தர் அவனுக்குக் கொடுத்திருக்கிற ஊழியத்தை பவுல் நிறைவேற்றவே விரும்புகிறான். அவன் ஓட்டத்தை சந்தோஷமாய் முடிக்க விரும்புகிறான். பவுலின் ஜீவியம் ஒரு ஓட்டத்தைபோலிருக்கிறது.

ஓட்டப்பந்தையத்தில் ஓடுகிறவர்கள் பிரயாசம் எடுத்து ஓடுவார்கள். அவர்களுக்கு ஆரம்பமும் முடிவும் குறிக்கப்பட்டிருக்கும். அதுபோலவே நம்முடைய ஜீவியகாலமானது ஆரம்பமும் முடிவும் உடையது. இந்தக் காலத்தில் நாம் ஒவ்வொரு காரியத்தையும் பிரயாசப்பட்டு செய்யவேண்டும். ஓட்டப்பந்தயத்தில் ஓடுகிறவர்கள் நிரந்தரமாக ஓடுவதில்லை. குறிக்கப்பட்ட எல்லை வரையிலும் ஓடுவார்கள். அதுபோலவே நாமும் இந்தப் பூமியில் நிரந்தரமாக ஜீவிப்பதில்லை. நம்முடைய குறிக்கப்பட்ட எல்லையான மரணம் வரும் வரையிலும் நாம் ஜீவிக்கவேண்டும். சந்தோஷத்தோடு ஜீவித்து முடிக்கவேண்டும்.

பவுல் தனக்கு நியமிக்கப்பட்டிருக்கிற ஜீவிய ஓட்டத்தை ஓடி முடிப்பதில் நம்பிக்கையோடிருக்கிறான். தன்னுடைய ஓட்டம் விரைவில் முடிவடையப்போகிறது என்பதில் பவுல் உறுதியோடிருக்கிறான். நிச்சயத்தோடு ஓடுகிறான். மரணமே நம்முடைய ஜீவிய ஓட்டத்தின் முடிவு. ஓடி முடிக்கிறவர்கள் வெற்றியடைவார்கள். அல்லது தோல்வியடைவார்கள். வெற்றி பெறுகிறவர்களுக்கு மகிமையும், தோல்வியடைகிறவர்களுக்கு அவமானமும் உண்டாகும். கர்த்தருடைய ஊழியத்தை நிறைவேற்றி வெற்றி பெறுகிறவர்களுக்கு மகிமையும் கனமும் உண்டாகும். ஊழியத்தை நிறைவேற்றாமல் பாதியிலேயே விட்டுவிட்டு ஓடிப்போய்விடுகிறவர்களுக்கு அவமானமே உண்டாகும். ஆகையினால் பவுல் மிகவும் கவனமாகத் தன்னுடைய ஓட்டத்தை ஓடி முடிக்கப் பிரயாசப்படுகிறான்.

தன்னுடைய ஜீவிய ஓட்டத்தில் பவுல் எதைக் குறித்தும் கவலைப்படவில்லை. பவுல் எதையுமே தனக்கு தடையாக நினைக்கவில்லை. கர்த்தருடைய ஊழியம் அதிககடினமானது என்னும் எண்ணம் பவுலின் மனதில் இல்லை. ஓட்டத்தை ஓடி முடிக்காமல் பாதியிலேயே விட்டுவிட நேரிடுமோ என்னும் பயமும் அவனிடத்தில் காணப்படவில்லை. தன்னுடைய ஓட்டத்தை சந்தோஷத்தோடே ஓடி முடிப்பதில் நிச்சயத்தோடிருக்கிறான். அதையே விரும்புகிறான். பவுலின் மரணம் அவனுக்குச் சந்தோஷமாயிருக்கிறது.

நம்முடைய வாழ்க்கையைப்பற்றி நாம் சந்தோஷமாய் நினைத்துப் பார்க்கவேண்டும். நம்முடைய ஓட்டத்தைச் சந்தோஷமாய் ஓடி முடிக்க விரும்பவேண்டும். மரணத்தின்போது நமக்குச் சந்தோஷமுண்டாக வேண்டுமென்றால், நாம் ஜீவனோடிருக்கும்போது, தேவன் நமக்கு நியமித்திருக்கும் ஒவ்வொரு வேலையையும், வரிசையாயும், கிரமமாயும், நேர்த்தியாயும் செய்து முடிக்கவேண்டும். அப்போதுதான் நம்முடைய மரணம் பாதுகாப்பாக இருக்கும். அது நமக்கு ஆறுதலாகவும் சந்தோஷமாகவும் இருக்கும்.

இனி என் முகத்தைப் பார்க்கமாட்டீர்கள்

இதோ, நான் உங்களுக்குள்ளே சஞ்சரித்து, தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கம்பண்ணினதைக் கேட்டவர்களாகிய நீங்களெல்லாரும் இனி என் முகத்தைப் பார்க்கமாட்டீர்களென்று அறிந்திருக்கிறேன் (அப் 20:25).

பவுல் எபேசு சபையின் மூப்பரோடு பேசிக்கொண்டிருக்கிறான். இப்போது அவர்களைப் பார்ப்பதுதான் கடைசி சந்திப்பு. இனிமேல் அவர்கள் பவுலின் முகத்தைப் பார்க்கமாட்டார்கள். பவுல் இவர்களுக்குள்ளே சஞ்சரித்து, தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்து பிரசங்கம்பண்ணினான். இவர்களும் பவுலின் பிரசங்கத்தைக் கேட்டார்கள். இதுவரையிலும் இவர்கள் பவுலின் முகத்தைப் பார்த்தார்கள். ஆனால் இனிமேல் அவர்களெல்லோரும் பவுலின் முகத்தைப் பார்க்கமாட்டார்கள்.

பவுல் இதைப்பற்றிச் சொல்லும்போது அதிக நிச்சயத்தோடு சொல்லுகிறான். எபேசியர்கள் எல்லோரும் இனி பவுலின் முகத்தைப் பார்க்கமாட்டாகள் என்பது நிச்சயம். பவுல் இந்த வார்த்தையை சந்தேகத்தோடு சொல்லாமல், அதிக நிச்சயத்தோடு சொல்லுகிறான். பரிசுத்த ஆவியானவரே பவுலுக்கு அவனுடைய ஜீவனைப்பற்றிய நிச்சயத்தைக் கொடுத்திருக்கிறார். பரிசுத்த ஆவியானவர் இந்தக் காரியத்தைக்குறித்து பவுலுக்கு வெளிப்படுத்தவில்லையென்றால், அவனால் இதை நிச்சயத்தோடு சொல்லமுடியாது. பரிசுத்த ஆவியானவரே பவுலுக்கு இந்த அறிவின் நிச்சயத்தைக் கொடுத்திருக்கிறார்.

பவுல் சொன்ன இந்த வாக்கியத்தை நாமும் நம்முடைய இருதயத்தில் பதிய வைத்திருக்கவேண்டும். தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து நமக்கு ஏராளமானோர் பிரசங்கம்பண்ணுகிறார்கள். அவர்கள் நம்மைவிட்டு கடந்துபோய்விடுவார்கள். அவர்களில் அநேகருடைய முகத்தை நாம் இனிமேல் பார்க்கமாட்டோம் என்பதை நாம் அறிந்திருக்கவேண்டும். அவர்கள் ஒரு குறிப்பிட்ட காலம் மாத்திரமே நம்மோடு தங்கியிருந்து ஊழியம் செய்கிறார்கள். நம் மத்தியில் தேவன் நியமித்திருக்கிற காலம் வரையிலும் விளக்காய் பிரகாசிக்கிறார்கள். இதை நாம் புரிந்துகொண்டு, அவர்கள் நமக்கு தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கம்பண்ணும்போது, தேவனைப்பற்றிய அறிவில் வளர்ச்சி பெறவேண்டும். ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள பிரயாசப்படவேண்டும்.

மகாநாளின்போது நமக்கு தேவனுடைய ராஜ்யத்தைப்பற்றி பிரசங்கம்பண்ணின ஊழியக்காரர்களின் முகத்தைப் பார்ப்போம். ஒருவேளை இந்தப் பூமியில் அவர்களுடைய முகத்தைப் பார்க்கும் வாய்ப்பு நமக்கு கிடைக்காமல் போகலாம். ஆகையினால் நாம் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ள வேண்டும். ஊழியக்காரர்களின் ஊழியத்தை, நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு ஆசீர்வாதமாகப் பயன்படுத்தவேண்டும்.

தேவனுடைய ஆலோசனை

தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் நான் மறைத்துவைக்காமல், எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தபடியினாலே, (அப் 20:26)

பவுல் எபேசியர் மத்தியிலே உண்மையாயும், உத்தமமாயும், உத்திரவாதத்தோடும் ஊழியம் செய்திருக்கிறான். தேவனுடைய ஆலோசனை அனைத்தையும் பவுல் அவர்களுக்கு அறிவித்திருக்கிறான். தேவனுடைய ஆலோசனை அல்லாமல், மனுஷருடைய ஆலோசனையையோ அல்லது தன்னுடைய சுயஆலோசனையையோ பவுல் அவர்களுக்கு அறிவிக்கவில்லை. தேவனுடைய ஆலோசனையோடு தன்னுடைய சுயபுராணத்தையோ அல்லது தன்னுடைய சுயகண்டுபிடிப்பையோ கலந்து அவர்களுக்கு அறிவிக்கவில்லை.

பவுல் அவர்களுக்கு அறிவித்தது பூரண சுவிசேஷம். சுவிசேஷமே தேவனுடைய ஆலோசனையாயிருக்கிறது. கர்த்தருடைய ஊழியக்காரர்கள் தேவனுடைய ஆலோசனையாகிய சுவிசேஷத்தை மாத்திரமே ஜனங்களுக்கு அறிவிக்கவேண்டும். வேதத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் தேவனுடைய ஆலோசனையைத் தவிர, வேறு ஆலோசனை எதையும் தேவனுடைய ஊழியக்காரர்கள் ஜனங்களுக்கு அறிவிக்கவேண்டியதில்லை.

பவுல் தேவனுடைய ஆலோசனை எல்லாவற்றையும் எபேசியருக்கு அறிவித்திருக்கிறான். தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் அறிவிக்காமல் பவுல் அவர்களுக்கு எதையும் மறைத்து வைக்கவில்லை. ஆகையினால் பவுல் பிரசங்கித்தது சுத்த சுவிசேஷமாயும், பூரண சுவிசேஷமாயும் இருக்கிறது. சுவிசேஷத்தின் கடினமான பகுதியைக்கூட பவுல் அவர்களுக்கு மறைத்து வைக்கவில்லை. மிகவும் எளிதான சத்தியத்தைப் பிரசங்கித்துவிட்டு, சத்தியத்தின் கடினமான பகுதியை அறிவிக்காமல் மறைத்துவைக்கவில்லை. விசுவாசிகளிடம் எச்சரித்துக் கூறவேண்டிய சமயத்தில், அவன் அவர்களை எச்சரிக்காமல் விட்டுவிடவில்லை. சுவிசேஷத்திற்கு சத்துருவாக இருக்கிறவர்களை பவுல் கடிந்துகொள்ளத் தவறவில்லை. கள்ள உபதேசம்பண்ணுகிற கள்ள அப்போஸ்தலரையும் பவுல் கடிந்து கொள்ளத் தவறவில்லை. இதனால் பவுல் எல்லாருடைய இரத்தப்பழிக்கும் நீங்கி சுத்தமாயிருக்கிறான்.

இரத்தப்பழி

எல்லாருடைய இரத்தப்பழிக்கும் நீங்கி நான் சுத்தமாயிருக்கிறேனென்பதற்கு உங்களை இன்றையத்தினம் சாட்சிகளாக வைக்கிறேன் (அப் 20:27).

கர்த்தர் தன்னிடத்தில் ஒப்புக்கொடுத்த ஊழியத்தைப் பவுல் உண்மையாய் நிறைவேற்றியிருக்கிறான். அவனுடைய ஊழியத்தில் உண்மையில்லையென்று யாரும் பவுல்மீது குற்றம் சொல்ல முடியாது. எச்சரிக்கவேண்டியவர்களை பவுல் எச்சரித்திருக்கிறான். ஆலோசனை சொல்லவேண்டியவர்களுக்கு பவுல் ஆலோசனை சொல்லியிருக்கிறான். தேவனுடைய ஆலோசனையில் பவுல் ஒன்றையும் அவர்களுக்கு மறைத்து வைக்காமல் எல்லாவற்றையும் அறிவித்திருக்கிறான். ஆகையினால் பவுல் எல்லாருடைய இரத்தப்பழிக்கும் நீங்கி சுத்தமாயிருக்கிறான். இதற்கு எபேசு பட்டணத்திலுள்ள மூப்பர்களும் விசுவாசிகளும் சாட்சியாகயிருக்கிறார்கள்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் எல்லோரும் உண்மையாய் ஊழியம் செய்யவேண்டும். இரத்தப்பழிக்கு நீங்கி சுத்தமாயிருக்கவேண்டும். நம்மூலமாக பிரசங்கச் செய்தியைக் கேட்கிறவர்கள் நம்மைக் குறித்து நற்சாட்சி சொல்லவேண்டும். ஒரு சிலர் நம்முடைய பிரசங்கத்தைக் கேட்டும் மனந்திரும்பாமல் போகலாம். பிரசங்கிப்பது நம்முடைய கடமை. மனந்திரும்புவது அவர்களுடைய வேலை. பவுல் பிரசங்கித்தபோது ஒரு சிலர் அவனுடைய பிரசங்கத்தைக் கேட்டு இரட்சிக்கப்படவில்லை. அப்படிப்பட்டவர்கள் தங்களுடைய சுயதீர்மானத்தினால் தங்களுக்கு அழிவைத் தேடிக்கொள்கிறார்கள். அவர்களுடைய இரத்தப்பழி அவர்கள் மீதே இருக்கும். பவுல் அவர்களுடைய இரத்தப்பழிக்கு நீங்கி சுத்தமாயிருக்கிறான்.

எபேசு பட்டணத்தில் பவுல் செய்த ஊழியத்தை, அங்குள்ள சபையின் மூப்பர்கள் தொடர்ந்து செய்யவேண்டும். மிகுந்த கவனத்தோடும், எச்சரிப்போடும் அவர்கள் கர்த்தருடைய ஊழியத்தை நிறைவேற்ற வேண்டும். தன்னுடைய ஊழியத்திற்கு, பவுல் அவர்களை "இன்றைய தினம் சாட்சியாக வைக்கிறேன்" என்று அறிவிக்கிறான். பவுலின் ஊழியத்திற்கு அவர்கள் சாட்சிகளாக இருப்பதுபோல, அவர்களும் சாட்சியுள்ள ஊழியம் செய்யவேண்டும்.

சபையை மேய்ப்பது

ஆகையால், உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்தஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள் (அப் 20:28).

பவுல் இதுவரையிலும் எபேசு சபையில் கர்த்தருடைய ஊழியத்தை செய்து வந்திருக்கிறான். இப்பொழுது எபேசு சபையில் ஊழியம் செய்கிற பொறுப்பை, அந்தச் சபையின் மூப்பர்களிடத்தில் ஒப்புக்கொடுக்கிறான். எபேசு பட்டணத்தில் ஏராளமான விசுவாசிகள் இருக்கிறார்கள். அவர்களெல்லோராலும் ஒரே இடத்தில் கூடிவர முடியாது. ஆனாலும் எபேசு பட்டணத்திலுள்ள விசுவாசிகளெல்லோரையும் "மந்தை" என்று பவுல் குறிப்பிடுகிறான். இது ஒரே மந்தையாகயிருக்கிறது. இவர்களெல்லோரிடத்திலும் ஒரே விசுவாசமேயிருக்கிறது. விசுவாசம் மாத்திரமல்ல, விசுவாசிகளெல்லோரும் அநேக காரியங்களில் ஒற்றுமையாயும், ஒருமனப்பட்டவர்களாயும், ஐக்கியமுள்ளவர்களாயும் இருக்கிறார்கள்.

சபையின் மூப்பர்களை பவுல் "கண்காணிகள்" என்று குறிப்பிடுகிறான். சபையை மேய்க்கும் ஊழியத்தை பவுல் இந்தக் கண்காணிகளிடம் ஒப்புக்கொடுக்கிறான். பவுல் இவர்களை கண்காணிகளாக நியமிக்கவில்லை. பரிசுத்த ஆவியானவரே இவர்களை கண்காணிகளாக நியமித்திருக்கிறார். இனிமேல் சபையின் மூப்பர்கள் பவுலின் உதவியில்லாமலேயே, சபையை வழிநடத்திச் செல்லவேண்டும். பவுல் இனிமேல் அவர்களோடு கூடயிருக்கமாட்டான். தன் முகத்தை இனிமேல் அவர்கள் பார்ப்பதில்லை என்று பவுல் அவர்களிடத்தில் சொல்லுகிறான்.

பரிசுத்த ஆவியானவர் அவர்களை கண்காணிகளாக வைத்திருப்பதினால், ஆவியானவர் கொடுக்கிற ஊழியத்தை அவர்கள் ஆவியானவரின் பலத்தினாலும், ஆலோசனையினாலும் செய்யவேண்டும். பரிசுத்த ஆவியானவர் அவர்களைத் தகுதிப்படுத்துகிறார். அவர்களுக்குத் தேவையான கிருபைகளையும், தாலந்துகளையும், வரங்களையும் கொடுக்கிறார். கர்த்தருடைய ஊழியம் மிகவும் பெரியது. பவுல் அவர்கள்மேல் கைகளை வைத்தபோது "பரிசுத்த ஆவியானவர் அவர்கள்மேல் வந்தார்" (அப் 19:6).

பரிசுத்த ஆவியானவர், யாரை ஊழியத்திற்கு அழைக்கிறாரோ, அவர்களை பிரதிஷ்டை பண்ணுகிறார், அபிஷேகம்பண்ணுகிறார், ஊழியப் பாதையில் வழிநடத்துகிறார்.

ஆவியானவர் சபையின் மூப்பர்களை, தமது சபையை மேய்ப்பதற்கு கண்காணிகளாக வைத்திருக்கிறார். தங்களிடத்தில் பொறுப்பாய் ஒப்புவிக்கப்பட்டிருக்கிற ஊழியத்திற்கு கண்காணிகள் உண்மையுள்ளவர்களாக இருக்கவேண்டும். ஆவியானவர் தங்களை எந்த ஊழியத்திற்கு அழைத்திருக்கிறாரோ, அந்த ஊழியத்தை கண்காணிகள் உண்மையாய் செய்யவேண்டும். அவர்களுடைய கடமையில் கண்ணியம் இருக்கவேண்டும்.

ஊழியக்காரர்கள் முதலாவதாக தங்களைக் குறித்து மிகுந்த எச்சரிப்போடிருக்கவேண்டும். தாங்கள் அழைக்கப்பட்டிருக்கிற ஊழியத்தைச் செய்வதற்கு, ஊழியக்காரர்கள் ஒவ்வொருவரும் எப்போதுமே தகுதியுள்ளவர்களாக இருக்கவேண்டும். சாட்சியுள்ள ஜீவியம் ஜீவிக்கவேண்டும். எல்லா சூழ்நிலைகளிலும் கர்த்தருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடக்கவேண்டும். மற்றவர்கள் ஊழியக்காரர்களைப் பார்த்து, அவர்களுடைய சுபாவத்தை முன்மாதிரியாகப் பின்பற்றுவதற்கு வாய்ப்புள்ளது. ஊழியக்காரர்கள் சாட்சியுள்ளவர்களாக இருந்தால்தான், விசுவாசிகளும் சாட்சியுள்ளவர்களாக இருப்பார்கள்.

சில சமயங்களில் விசுவாசிகள் ஊழியக்காரரோடு வாக்குவாதம்பண்ணலாம். தேவையில்லாத பிரச்சனைகளை எழுப்பலாம். எல்லா சூழ்நிலைகளிலும் ஊழியக்காரர்கள் பிழையற்றவர்களாக இருக்கவேண்டும். தங்களைக் குறித்து மிகுந்த எச்சரிக்கையோடிருக்கவேண்டும். தங்களுடைய சொந்த திராட்சத்தோட்டத்தை சரியாகப் பராமரிக்காதவர்கள், பிறருடைய திராட்சத்தோட்டத்தை நிச்சயமாகவே சரியாகப் பராமரிக்கமாட்டார்கள். தங்கள் வேலைகளைத் திறமையோடு செய்யாதவர்கள் மற்றவர்கள் வேலைகளை திறமையோடு செய்யமாட்டார்கள். தங்கள் காரியங்களில் உண்மையில்லாதவர்கள் மற்றவர்களுடைய காரியங்களிலும் உண்மையுள்ளவர்களாக இருக்க மாட்டார்கள். ஆகையினால் ஊழியக்காரர்கள் தங்களைக் குறித்து மிகவும் எச்சரிக்கையாயிருக்க வேண்டியது அவசியமாகும்.

தமது சபையை மேய்ப்பதற்கு பரிசுத்த ஆவியானவர் மூப்பர்களை கண்காணிகளாக வைத்திருக்கிறார். ஆகையினால் ஊழியக்காரர்கள் தங்களுடைய சொந்த ஆத்துமாக்களைக் குறித்து எச்சரிக்கையோடு இருந்தால் மாத்திரம் போதாது. தங்களிடத்தில் ஆவியானவர் பொறுப்பாய் ஒப்புக்கொடுத்திருக்கும் சபையாருடைய ஆத்துமாக்களைக் குறித்தும் மிகுந்த எச்சரிக்கையாயிருக்கவேண்டும்.

தமது சபையை மேய்ப்பதற்கு பரிசுத்த ஆவியானவர் ஊழியக்காரர்களை கண்காணிகளாக வைத்திருக்கிறார். ஆகையினால் அவர்கள் மந்தை முழுவதையும் குறித்து எச்சரிக்கையாயிருக்கவேண்டும். யாரும் தொழுவத்தைவிட்டு அங்குமிங்கும் அலையாதபடி பார்த்துக்கொள்ளவேண்டும். கொடிய மிருகங்கள் மந்தையிலுள்ள ஆடுகளை பிடித்துச் சென்றுவிடாதபடி கண்காணிகள் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். பரிசுத்த ஆவியானவர் தங்களிடத்தில் ஒப்புக்கொடுத்திருக்கிற மந்தை முழுவதையும் காத்துக்கொள்ளவேண்டும். ஒரு ஆட்டையும் இழந்துவிடக்கூடாது.

ஊழியக்காரர்கள் சபையை மேய்க்கவேண்டும். தமது சபையை மேய்ப்பதற்குத்தான் பரிசுத்த ஆவியானவர் ஊழியக்காரர்களை கண்காணிகளாக வைத்திருக்கிறார். அவர்கள் சபையாருக்கு ஆவிக்குரிய போஜனம் கொடுக்கவேண்டும். கிறிஸ்துவின் ஆடுகளை புல்லுள்ள தரைகளிலும், அமர்ந்த தண்ணீர்களண்டையிலும் வழிநடத்திச் செல்லவேண்டும். அவர்களுக்கு அவ்வப்போது திடமான ஆகாரத்தையும் கொடுக்கவேண்டும். சத்தியத்தைப் பூரணமாய் உபதேசிக்கவேண்டும். அவர்களுக்கு ஒரு குறைவுமில்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக்கொள்வதற்கு தேவையான அனைத்து உபதேசங்களையும் அவர்களுக்கு கிரமமாய்ப் போதிக்கவேண்டும். சிதறியிருக்கிற ஆடுகளை ஊழியக்காரர்கள் ஒன்றுகூட்டி சேர்க்கவேண்டும். அதே வேளையில் தங்களுடைய மந்தையில் சேர்க்கப்பட்டிருக்கிற ஆடுகளுக்கு ஆவிக்குரிய போஜனமும் கொடுக்க வேண்டும். சபையை மேய்க்கிறவரே சபைக்கு மேய்ப்பராகயிருக்கிறார்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் தங்கள் மந்தையை பகலிலும் இரவிலும் பாதுகாக்கவேண்டும். மந்தைக்கு விரோதமாக வருகிற எல்லா சத்துருக்களையும் குறித்து ஊழியக்காரர்கள் மிகுந்த எச்சரிப்போடு விழித்திருக்கவேண்டும். அவர்களுக்குத் தேவையான ஆலோசனைகளை இரவும் பகலும் இடைவிடாமல் போதிக்கவேண்டும்.

மூப்பர்கள் சபையை ஏன் வழிநடத்தவேண்டும் என்பதற்கு பவுல் இங்கு ஒரு சில காரணங்களைக் கூறுகிறான். தேவன் தம்முடைய சுயஇரத்தத்தினாலே தமது சபையை சம்பாதித்துக்கொண்டார். சபை கர்த்தருடையது. கர்த்தருக்கே உரியது. கர்த்தருடைய ஊழியக்காரர்கள், கர்த்தருடைய சார்பாக, சபையை வழிநடத்திச் செல்கிறார்கள். ஊழியக்காரர்கள் தங்கள் ஊழியத்தில் கவனமில்லாமல் இருக்கக்கூடாது. உண்மையில்லாமல் இருக்கக்கூடாது. தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் ஊழியப்பொறுப்புக்களை உற்சாகமாய் நிறைவேற்றாமல் சோம்பல் தனமாயிருக்கக்கூடாது. உண்மையில்லாத ஊழியக்காரர்கள் கர்த்தருக்கு விரோதமாக தவறு செய்கிறார்கள்.

கர்த்தருடைய மந்தையில் ஆடுகளும், ஆட்டுக்குட்டிகளும் இருக்கும். மேய்ப்பன் அவற்றை அன்போடு மேய்க்கவேண்டும். தன்னுடைய கரிசனையையும், முழுபராமரிப்பையும் அவற்றிற்குக் கொடுக்கவேண்டும். தம்முடைய சபையை மேய்ப்பதற்கு பரிசுத்த ஆவியானவர் யாரை கண்காணிகளாக நியமித்திருக் கிறார்களோ, அவர்களிடத்திலிருந்து உண்மையையும், உற்சாகத்தையும், ஒழுக்கத்தையும், நற்சாட்சியையும் தேவன் எதிர்பார்க்கிறார்.

தேவன் தாமே தம்முடைய சுயஇரத்தத்தினாலே நம்முடைய ஆத்துமாக்களை கிரயத்திற்கு வாங்கியிருக்கிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய சுயஇரத்தத்தையே, நம்மை மீட்பதற்கு, மீட்பின் கிரயமாகச் செலுத்தியிருக்கிறார். ஆகையினால் இரட்சிக்கப்பட்டிருக்கிற ஆத்துமாக்கள் கர்த்தருக்கு விசேஷித்தவர்கள். மனுஷருடைய ஆத்தும இரட்சிப்பு விலை மிகுந்தது. தேவன் ஊழியக்காரர்களிடத்தில் ஆத்துமாக்களை ஒப்புக்கொடுக்கும்போது, ஒவ்வொரு ஆத்துமாவும் தேவனுடைய இரத்தத்தினால் கிரயத்திற்கு வாங்கப்பட்டிருக்கிறார்கள் என்னும் உணர்வு இருக்கவேண்டும். ஒவ்வொரு ஆத்துமாவும் விலை மிகுந்தவர்கள் என்னும் எண்ணம் ஊழியக்காரரின் இதயத்தில் பதிந்திருக்கவேண்டும்.

தேவன் தங்களிடத்தில் ஒப்புகொடுத்திருக்கிற மந்தையை, ஏனோதானோ வென்று மேய்க்காமல், மிகுந்த எச்சரிப்போடு மேய்க்கவேண்டும். அதிக அன்பைக் காண்பிக்கவேண்டும். ஏனென்றால் சபையிலுள்ள ஆத்துமாக்கள் எல்லோரையும் தேவன் தம்முடைய சுயஇரத்தத்தினாலே சம்பாதித்திருக்கிறார்.

இயேசுகிறிஸ்துவின் இரத்தம் விலையேறப்பெற்றது. இந்த இரத்தத்தினாலேயே தேவன் சபையைச் சம்பாதித்திருக்கிறார். மிகப்பெரிய கிரயத்தை தேவன் இந்தச் சபைக்காகக் கொடுத்திருக்கிறார். ஆகையினால் சபையை மேய்ப்பதற்காக தேவன் நியமித்திருக்கிற ஊழியக்காரர்களிடத்தில், மிகப்பெரிய பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. தன்னுடைய சபையிலுள்ள ஒவ்வொரு விசுவாசியும் விலையேறப்பெற்ற ஆத்துமா என்பதை ஊழியக்காரர் எப்போதும் நினைவுகூரவேண்டும். இயேசுகிறிஸ்து சபைக்காக தம்முடைய ஜீவனையே ஒப்புக்கொடுத்திருக்கிறார். தேவனுடைய சபைக்கு ஊழியக்காரர்கள் கண்காணிகளாக நியமிக்கப்பட்டிருப்பது, அவர்களுக்குக் கிடைத்திருக்கிற மிகப்பெரிய சிலாக்கியம். ஆகையினால் ஒவ்வொரு ஊழியக்காரரும் உண்மையாயும் உத்தமமாயும் மந்தையை மேய்க்கவேண்டும். மந்தையை மேய்க்காமல் ஆடுகளை பட்டினி போட்டுவிடக்கூடாது.

கொடிதான ஓநாய்கள்

நான் போனபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும் (அப் 20:29).

மந்தையிலுள்ள ஆடுகளுக்கு கொடிதான ஓநாய்கள் மூலமாக ஆபத்து வருவதற்கு வாய்ப்புள்ளது. ஓநாய்கள் மந்தையிலுள்ள ஆடுகளை தப்பவிடாமல் பட்சித்துப்போடும். சபையின் மூப்பர்கள் தங்களைக் குறித்தும், பரிசுத்த ஆவியானவர் அவர்களை கண்காணிகளாக வைத்த சபை முழுவதையும் குறித்தும் எச்சரிக்கையாயிருக்கவேண்டும். ஏனெனில் கொடிதான ஓநாய்கள் மந்தையை தப்பவிடாதவாறு, மந்தைக்குள் வருவதற்கு வாய்ப்புள்ளது. ஓநாய்களைப் போன்ற சுபாவமுள்ளவர்கள் சபைக்குள் பிரவேசித்துவிடுவார்கள். அவர்கள் விசுவாசிகளைத் தப்பவிடாதவாறு பட்சித்துப்போடுவார்கள்.

பவுல் இந்த வாக்கியத்தைச் சொல்லும்போது “நான் போனபின்பு” என்னும் வார்த்தையைப் பயன்படுத்துகிறான். கொடிதான ஓநாய்கள் என்பது சபையை உபத்திரவப்படுத்துகிறவர்களைக் குறிக்கும் வார்த்தையாக இருக்கலாம். இப்போது பவுல் விசுவாசிகளுடனே கூடயிருக்கிறான். யூதர்கள் பவுலுக்கு விரோதமாகவே கோபத்தோடிருக்கிறார்கள். பவுல் அவர்களைவிட்டு போனபின்பு, யூதர்களுடைய உபத்திரவம் நின்று போகாது. நிச்சயமாகவே யூதர்களுடைய பிரச்சனை தொடரும். அவர்களுடைய “உபத்திரவப்படுத்துகிற ஆவி” சபைக்கு விரோதமாகத் தொடர்ந்து கிரியை செய்யும். சபையிலுள்ள விசுவாசிகளுக்கு உபத்திரவம் வரும்போது, ஊழியக்காரர்கள் விசுவாசிகள்மீது அதிக கவனமும், அக்கரையும் காண்பிக்கவேண்டும்.

கொடிதான ஓநாய்கள் என்பது கள்ளப்போதகர்களைக் குறிக்கிற வார்த்தையாகயிருக்கலாம். இரட்சிக்கப்பட வேண்டுமென்றால் விருத்தசேதனம் பண்ணுவது அவசியம் என்று இவர்கள் உபதேசம்பண்ணுகிறார்கள். நியாயப்பிரமாணத்தையும், பாரம்பரிய பிரமாணங்களையும் கைக்கொள்ள வேண்டியது அவசியம் என்று இவர்கள் போதகம்பண்ணுகிறார்கள். பவுல் இப்படிப்பட்ட கள்ளப்போதகர்களைக் "கொடிதான ஓநாய்கள்" என்று இங்கு குறிப்பிடுகிறான்.

பவுல் எபேசுவில் இருந்தகாலத்தில், கள்ளப்போதகர்கள் யாரும் சபைக்குள் பிரவேசிக்கவில்லை. அவர்களால் பவுலை எதிர்த்து நிற்கமுடியவில்லை. பவுல் சபையைவிட்டுப் போனபின்பு, கள்ளப்போதகர்கள் சபைக்குள் பிரவேசிப்பதற்கு வாய்ப்புள்ளது. தங்களை எதிர்ப்பதற்கு ஒருவருமில்லை என்பதை அறிந்தபின்பு, கள்ளப்போதகர்கள் சபைக்குள் எளிதாக பிரவேசித்துவிடுவார்கள்.

மாறுபாடானவைகள்

உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக் கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன் (அப் 20:30).

ஒரு சில மேய்ப்பர்கள் சத்தியத்திற்கு விரோதமாக மாறுபாடானவைகளைப் போதிப்பதற்கும் வாய்ப்புள்ளது. ஆகையினால் மேய்ப்பர்கள் தங்களைக் குறித்தும் மந்தையைக் குறித்தும் மிகுந்த எச்சரிக்கையோடிருக்கவேண்டும். மாறுபாடானவைகளைப் போதிக்கிறவர்கள், தங்களுடைய தப்பிதங்களை மறைப்பதற்காக, சுவிசேஷத்தைக் கலப்படமாகப் போதிப்பார்கள். மந்தையிலுள்ள ஆடுகளைத் துரத்தி விடுவார்கள். ஒரு சிலர் மந்தையிலுள்ள ஆடுகளைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும் வண்ணமாக மாறுபாடானவைகளைப் போதிப்பார்கள்.

சபையிலுள்ள விசுவாசிகள் இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றுகிறார்கள். மாறுபாடானவைகளைப் போதிக்கிறவர்கள், விசுவாசிகளை இயேசுகிறிஸ்துவிடமிருந்து பிரித்து, தங்களைப் பின்பற்றுமாறு வழிநடத்துவார்கள். எபேசு சபையில் மாறுபாடானவைகளைப் போதிக்கிற கள்ளப்போதகர்கள் ஒரு சிலர் இருக்கிறார்கள். ஆனால் எபேசு சபையைவிட, மற்ற சபைகளில் கள்ளப்போதகர்கள் ஏராமானோர் இருக்கிறார்கள். தேவனுடைய கிருபையினால் எபேசு சபையில் சுவிசேஷத்தின் பரிசுத்தம் பாதுகாக்கப்படுகிறது. சமாதானம் நிலவுகிறது. கள்ளப்போதகர்களின் மாறுபாடான உபதேசங்களுக்கு எபேசு சபையில் இடமில்லாமல் போயிற்று. கள்ள உபதேசம் எபேசு சபைக்குள் பிரவேசித்து விடக்கூடாது என்பதற்காக பவுல் மிகுந்த பாரத்தோடு இரவும் பகலும், மூன்று வருஷகாலமாய், கண்ணீரோடே அவர்களுக்குப் புத்திசொல்லிவந்தான்.

நினைத்து விழித்திருங்கள்

ஆனபடியால், நான் மூன்றுவருஷகாலமாய் இரவும் பகலும் கண்ணீரோடே இடைவிடாமல் அவனவனுக்குப் புத்திசொல்லிக் கொண்டுவந்ததை நினைத்து விழித்திருங்கள் (அப் 20:31).

எபேசு சபையை ஸ்தாபிப்பதற்கு பவுல் அதிகமாய்ப் பிரயாசப்பட்டிருக்கிறான். பல வேதனைகளையும், பாடுகளையும், துன்பங்களையும், உபத்திரவங்களையும் அனுபவித்திருக்கிறான். இவை யெல்லாவற்றையும் எபேசு சபையின் மூப்பர்கள் நினைத்து விழித்திருக்கவேண்டும். பவுல் மூன்று வருஷகாலமாய் இரவும் பகலும் கண்ணீரோடே இடைவிடாமல் அவனவனுக்குப் புத்திசொல்லிக்கொண்டு வந்ததையும் இவர்கள் நினைத்து விழித்திருக்கவேண்டும்.

பவுல் ஒரு ஜாமக்காரனைப்போல எபேசு சபையில் ஊழியம் செய்திருக்கிறான். அவ்வப்போது எச்சரிப்பின் சத்தத்தை அவர்களுக்குக் கொடுத்திருக்கிறான். தவறான வழிகளில் ஜனங்கள் போய்க்கொண்டிருக்கும்போது, பவுல் அவர்களைச் சந்தித்து, அவர்களுக்கு எச்சரிப்பின் செய்தியைச் சொல்லி, அவர்களை சபைக்கு அழைத்து வந்திருக்கிறான். அவன் எல்லோருக்கும் எச்சரித்துப் புத்திசொல்லியிருக்கிறான். பவுலின் பிரசங்கச் செய்தியில் எல்லா ஜனங்களுக்கும் பொதுவான எச்சரிப்பு இருக்கும். இது தவிர பவுல் அவனவனுக்கு எச்சரித்து புத்திசொல்லியிருக்கிறான். பொதுவான எச்சரிப்பு கொடுத்தாலும், தவறு செய்கிற தனிமனிதர்களையும், தவறான பாதையில் செல்கிற தனிமனிதர்களையும் சந்திக்கும்போது, அவர்களுக்கு தனிப்பட்ட முறையில் எச்சரித்துப் புத்திசொல்லுவது அவசியமாகும்.

பவுல் எபேசு சபையின் விசுவாசிகளுக்கு இரவும் பகலும் புத்தி சொல்லிக்கொண்டு வந்ததாகக் குறிப்பிடுகிறான். பவுலின் ஊழியத்தில் இடைவெளியே இல்லை. ஓய்வு இல்லாமல், களைப்படைந்து போகாமல், பவுல் இரவும் பகலும் ஊழியம் செய்திருக்கிறான். அவனவனுக்கு புத்திசொல்லுவதை பவுல் ஒருபோதும் நிறுத்திவிடவில்லை. நீதிமான்களாக இருக்கிறவர்கள், தங்களுடைய நீதியைவிட்டு வழிவிலகி போய்விடக்கூடாது என்று அவர்களுக்கு எச்சரித்துப் புத்திசொல்லுகிறான். துன்மார்க்க மாயிருக்கிறவர்கள், தங்களுடைய துன்மார்க்கமான வழியைவிட்டு விலகி, இயேசுகிறிஸ்துவிடம் வரவேண்டுமென்று அவர்களுக்கு எச்சரித்துப் புத்திசொல்லுகிறான்.

மனுஷருடைய ஆத்துமாவைக் குறித்து பவுல் மிகுந்த கரிசனையோடும் அன்போடும் இருக்கிறான். அவர்களோடு பேசும்போது அவர்களுடைய ஆத்தும பிரயோஜனத்திற்கு ஏற்ற காரியங்களையே அதிகமாகப் பேசுகிறான். பவுல் அவர்களுக்கு புத்தி சொன்னாலும், அவன் அவர்களுக்கு கண்ணீரோடு புத்திசொல்லுகிறான். பவுல் கர்த்தருக்கு ஊழியம் செய்வது போலவே, விசுவாசிகளுக்கும் கண்ணீரோடு ஊழியம் செய்கிறான். பவுல் எபேசு சபையின் விசுவாசிகளுக்காக வேதனைகளையும் துன்பங்களையும் அனுபவித்திருக்கிறான். பவுல் அவர்களைவிட்டுப் போனபின்பு, சபையின் மூப்பர்கள், வேதனையும் துன்பமும் வந்தாலும், பவுல் சபையாருக்கு இரவும் பகலும் கண்ணீரோடே புத்திசொல்லிக்கொண்டு வந்ததை நினைத்து விழித்திருக்கவேண்டும்.

உங்களை ஒப்புக்கொடுக்கிறேன்

இப்பொழுது சகோதரரே, நீங்கள் பக்திவிருத்தியடையவும், பரிசுத்த மாக்கப்பட்ட அனைவருக்குள்ளும் உங்களுக்குச் சுதந்தரத்தைக் கொடுக்கவும் வல்லவராயிருக்கிற தேவனுக்கும் அவருடைய கிருபையுள்ள வசனத்துக்கும் உங்களை ஒப்புக்கொடுக்கிறேன் (அப் 20:32).

எபேசு சபையின் மூப்பர்களையும் விசுவாசிகளையும், பவுல் தேவனுடைய வழிநடத்துதலுக்கும், ஆளுகைக்கும் ஒப்புக்கொடுக்கிறார். பவுல் அவர்களுக்கு ஆலோசனை சொல்லும்போது "உங்களை தேவனுக்கு ஒப்புக்கொடுக்கிறேன்" என்று குறிப்பிடுகிறான். சபையின் மூப்பர்கள் தங்களுடைய விசுவாச கண்களினால் தேவனை நோக்கிப் பார்க்கவேண்டும். தேவன் தம்முடைய கிருபையுள்ள கண்களினால் தங்களை நோக்கிப் பார்க்கவேண்டுமென்று, அவர்கள் தேவனிடத்தில் விண்ணப்பம்பண்ண வேண்டும்.

சபையின் மூப்பர்களையும் விசுவாசிகளையும் பவுல் தேவனுக்கு ஒப்புக்கொடுக்கிறான். தேவனே அவர்களுடைய தேவைகளைச் சந்தித்து, அவர்களைப் பாதுகாத்து பராமரிக்கவேண்டுமென்று தேவனிடத்தில் தயவாய் விண்ணப்பம்பண்ணுகிறான். விசுவாசிகளும் தங்களுடைய எல்லா தேவைகளையும் தேவனுடைய சமுகத்தில் ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று அவர்களுக்கு ஆலோசனை சொல்லுகிறான். அவர்களுடைய தேவைகள் எதுவாகயிருந்தாலும் அவர்கள் தேவனுடைய சமுகத்திற்குச் சென்று விண்ணப்பம்பண்ணவேண்டும். நாம் விண்ணப்பம்பண்ணுவதற்கு நமக்கு ஒரு தேவன் இருக்கிறார். நம்முடைய தேவைகளைச் சந்திப்பதற்கு நமக்கு ஒரு தேவன் இருக்கிறார். நமக்கு சந்தோஷத்தையும், சமாதானத்தையும், ஆறுதலையும் கொடுப்பதற்கு நமக்கு ஒரு தேவன் இருக்கிறார். எல்லாவற்றிற்கும் அவர் போதுமானவராகயிருக்கிறார்.

நாம் மனுஷருடைய தயவிலிருந்து பிரிக்கப்பட்டிருக்கலாம். மனுஷருடைய சந்தோஷத்திற்கும், ஆறுதலுக்கும் தூரமாக விலக்கி வைக்கப்பட்டிருக்கலாம். இப்படிப்பட்ட சூழ்நிலையில் கூட தேவன் நமக்கு அருகாமையிலிருக்கிறார்.

எபேசு சபையின் மூப்பர்களையும் விசுவாசிகளையும் பவுல் தேவனுடைய கிருபையுள்ள வசனத்திற்கு ஒப்புக்கொடுக்கிறான். இந்த வாக்கியத்திற்கு வேதபண்டிதர்கள் வியாக்கியானம் கொடுக்கும்போது "தேவனே வார்த்தையாகயிருக்கிறார்" (யோவா 1:1) என்னும் வசனத்தைச் சொல்லி, பவுல் விசுவாசிகளை தேவனுக்கு ஒப்புக்கொடுப்பதாக வியாக்கியானம் பண்ணுகிறார்கள்.

தேவனுடைய வசனத்தைப்பற்றி பவுல் இங்கு குறிப்பிடும்போது "தேவனுடைய கிருபையுள்ள வசனம்" என்று சொல்லுகிறான். ஏனெனில் நாம் எல்லோருமே தேவனுடைய பரிபூரணத்திலிருந்து கிருபையின் மேல் கிருபையைப் பெற்றுக்கொள்கிறோம். பவுல் விசுவாசிகளை ஒப்புக்கொடுக்கும்போது, தேவனுக்கும் அவருடைய பராமரிப்புக்கும் என்று மாத்திரம் ஒப்புக்கொடுக்காமல், கிறிஸ்துவுக்கும் அவருடைய கிருபைக்கும் ஒப்புக்கொடுக்கிறோம்.

தேவனுக்கும் அவருடைய கிருபையுள்ள வசனத்திற்கும் என்னும் வார்த்தை ஒரே பொருளையே கொடுக்கிறது. தேவனுடைய கிருபையுள்ள வசனத்தினால் நாம் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் புரிந்துகொள்கிறோம். தேவனுடைய பராமரிப்பின்மீது நாம் விசுவாசம் வைத்து கிரியை நடப்பிக்கும்போது நமக்குள் மிகப்பெரிய ஆறுதல் உண்டாகும். அதைவிட பெரிய ஆறுதல் சுவிசேஷத்தின் வாக்குத்தத்தை விசுவாசித்து கிரியை நடப்பிக்கும்போது உண்டாகும்.

தேவனுடைய கிருபையுள்ள வசனமே நம்முடைய நம்பிக்கைக்கும், நம்முடைய சந்தோஷத்திற்கும் ஆதாரமாயிருக்கிறது. அதே சமயத்தில் தேவனுடைய கிருபையுள்ள வசனமே நம்மை வழிநடத்துகிற வழிகாட்டியாகவும், நம்முடைய பாதைக்கு தீபமாகவும், நம்முடைய நடக்கையை ஆளுகை செய்கிற பிரமாணமாகவும் இருக்கிறது. ஆகையினால் பவுல் எபேசு சபையின் மூப்பர்களையும் விசுவாசிகளையும் ஒப்புக்கொடுக்கும்போது "தேவனுக்கும் அவருடைய கிருபையுள்ள வசனத்திற்கும் உங்களை ஒப்புக்கொடுக்கிறேன்" என்று குறிப்பிடுகிறான்.

எபேசு சபையிலுள்ள விசுவாசிகள் தேவனுடைய கிருபையினால் சுவிசேஷத்தைப் பெற்றிருக்கிறார்கள். இப்போது அதே கிருபையினாலே, சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிற பொறுப்பு இவர்களுக்கு ஒப்புக்கொடுக்கப் பட்டிருக்கிறது. சகோதரர் பக்திவிருத்தியடைய வேண்டும். அவர்களிடத்தில் இப்போது ஆவியின் வரங்களில் ஒரு சில வரங்கள் கிரியை செய்கிறது. இந்த வரங்களைவிட இன்னும் அதிக வரங்கள் அவர்களுக்குத் தேவைப்படுகிறது. ஊழியக்காரர்கள் முதலாவதாக தாங்கள் பக்திவிருத்தியடைய வேண்டுமென்று விரும்பவேண்டும். அதே சமயத்தில் மற்றவர்களுக்கும் பக்திவிருத்தியடைய வேண்டுமென்று வாஞ்சிக்கவேண்டும்.

கர்த்தருடைய பிள்ளைகள் எவ்வளவு பெரிய ஊழியங்களைச் செய்தாலும், அவர்கள் இந்த உலகத்திலிருக்கும் வரையிலும், இன்னும் பக்திவிருத்தியடைந்து கொண்டேயிருக்க வேண்டும். அவர்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் அவர்கள் இன்னும் வளர்ச்சி பெறுவதற்கு வாய்ப்புள்ளது.

தேவனுடைய வார்த்தையானது கர்த்தருடைய பிள்ளைகளுக்கு சுதந்தரத்தைக் கொடுக்க வல்லமையுள்ளது. தேவனே பரிசுத்தமாக்கப்பட்ட அனைவருக்குள்ளும், தம்முடைய ஊழியக்காரர்களுக்கு சுதந்தரத்தைக் கொடுக்க வல்லவராயிருக்கிறார். தேவனுடைய கிருபையுள்ள வசனமே கர்த்தருடைய ஊழியத்தைச் செய்கிறவர்களுக்கு விசேஷித்த சுதந்தரத்தை அருளிச்செய்கிறது. ஊழியக்காரர்களுக்கு தேவனுடைய வார்த்தையைக்குறித்த அறிவின் வளர்ச்சி கிடைக்கிறது. வசனத்தின் மூலமாக வாக்குத்தத்தத்தைப் பெற்றுக்கொள்கிறார்கள்.

தேவனுடைய வாக்குத்தத்தம் நிச்சயமாய் நிறைவேறும். பொய் சொல்லுவதற்கு தேவன் ஒரு மனுஷரல்ல. வசனத்தின் மூலமாக கிருபையின் ஆவியானவர் கொடுக்கப்படுகிறார். பேதுரு கொர்நேலியுவின் வீட்டில் சுவிசேஷ வார்த்தைகளைப் பேசிக்கொண்டிருக்கையில், வசனத்தைக் கேட்டவர்கள் யாவர்மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார் (அப் 10:44). பரிசுத்த ஆவியானவரே தேவனுடைய வாக்குத்தத்தத்திற்கு அச்சாரமாயிருக்கிறார்.

கர்த்தருடைய பிள்ளைகளுக்கு பரலோகம் சுதந்தரமாகக் கொடுக்கப்படுகிறது. தேவனுடைய சுதந்தரவாளிகள் எல்லோரும் பரலோகத்தில் பிரவேசிக்கிற உரிமையையும் சிலாக்கியத்தையும் பெற்றிருக்கிறார்கள். தேவனுடைய சுதந்தரம் பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்கு மாத்திரமே உரியது. தேவனுடைய பரிசுத்த சமுகத்தில் பரிசுத்தமாக்கப்பட்டவர்கள் மாத்திரமே வரவேற்கப்படுகிறார்கள். துன்மார்க்கரும் அசுத்தரும் தேவனுடைய பரிசுத்த சமுகத்தில் பிரவேசிப்பதில்லை. இப்படிப்பட்டவர்கள் மெய்யான பரலோகத்திலும் பிரவேசிக்கமாட்டார்கள். பரலோகம் பாவிகளுக்குச் சந்தோஷத்தைத் தராது. தேவனுடைய சமுகம் இவர்களுக்குப் பிரியமாயிராது. ஆனால் பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்கோ தேவனுடைய சமுகம் இன்பமாயும் சந்தோஷமாயும் இருக்கும்.

மனந்திரும்பி, இயேசுகிறிஸ்துவின் திருஇரத்தத்தினால் கழுவப்பட்டவர்கள் இரட்சிக்கப்பட்டவர்கள், பரிசுத்தமாக்கப் பட்டவர்கள். இயேசுகிறிஸ்துவை நாம் நம்முடைய இரட்சகராக விசுவாசித்து, நம்முடைய இருதயத்தில் அவரை நம்முடைய ஆண்டவராக ஏற்றுக்கொள்ளும்போது, அவர் நம்மை நீதிமான்களாக்குகிறார். விசுவாசத்தினால் நாம் நீதிமான்களாக்கப்படுகிறோம். தேவனுடைய வல்லமை நித்தியமானது. அவருடைய சத்திய வார்த்தைகள் நித்தியமும் சத்தியமுமானது.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் பரிசுத்தமாக்கப்பட வேண்டியது மிகவும் அவசியம். நாம் இந்தப் பூமியில் பரிசுத்தமுள்ளவர்களாக இல்லையென்றால், பரலோகத்தில் பரிசுத்தமாக்கப்பட்டவர்கள் மத்தியில் நம்மால் பிரவேசிக்கவும் முடியாது. பரிசுத்தமாக்கப்பட்ட அனைவருக்குள்ளும், தேவனே நமக்கு சுதந்தரத்தைக் கொடுக்க வல்லவராயிருக்கிறார். அந்த தேவனுக்கும் அவருடைய கிருபையுள்ள வசனத்திற்கும், பவுல் எபேசுவிலுள்ள மூப்பரையும் விசுவாசிகளையும் ஒப்புக்கொடுக்கிறான்.

நான் இச்சிக்கவில்லை

ஒருவனுடைய வெள்ளியை யாகிலும் பொன்னையாகிலும் வஸ்திரத்தையாகிலும் நான் இச்சிக்கவில்லை (அப் 20:33).

பவுல் இந்த உலகத்திற்கு ஒத்த வேஷம் தரிக்கவில்லை. தேவனுடைய ஆவிக்குரிய ஆசீர்வாதமே நமக்கு மேன்மையான ஆசீர்வாதம். பவுல் ஒருவனுடைய வெள்ளியையாகிலும், பொன்னையாகிலும் இச்சித்ததில்லை. அவனுக்கும் அவனோடே கூடயிருந்தவர் களுக்கும் வேண்டியவைகளுக்காக அவனுடைய கைகளே வேலை செய்தது. எல்லாவிதத்திலும் பவுல் அவர்களுக்கு ஒரு முன்மாதிரியைக் காண்பிக்கிறான்.

பவுல் ஒருபோதும் உலகப்பிரகாரமான ஐசுரியத்தை இச்சித்ததில்லை. எபேசு பட்டணத்தில் ஏராளமான ஐசுவரியவான்கள் இருக்கிறார்கள். அவர்களில் அநேகர் நேர்த்தியாய் வஸ்திரம் தரித்து, விலை உயர்ந்த ஆபரணங்களை அணிந்திருக்கிறார்கள். பவுல் அவர்களைப்போல இருக்கவேண்டுமென்று ஒருபோதும் ஆசைப்பட்டதில்லை. "ஒருவனுடைய வெள்ளியையாகிலும், பொன்னையாகிலும், வஸ்திரத்தையாகிலும் நான் இச்சிக்கவில்லை" என்று எபேசு சபையின் மூப்பர்களிடம் பவுல் தன்னைப்பற்றி சாட்சியாகச் சொல்லுகிறான். இவற்றை மற்றவர்கள் வைத்திருப்பதற்காக பவுல் அவர்களைக் குற்றப்படுத்தவுமில்லை, அவர்கள்மீது பொறாமைப்படவுமில்லை.

உலகப்பிரகாரமான ஐசுவரிய மில்லாமலேயே, பவுல் குறைவில்லாமலும், பயனுள்ள விதத்திலும் வாழ்க்கற்றுக் கொண்டிருக்கிறான். பவுலுக்கு வாழ்ந்திருக்கவும் தெரிகிறது. தாழ்ந்திருக்கவும் தெரிகிறது. எல்லா சூழ்நிலைகளிலும் அவன் மனரம்மியமாக இருக்கிறான். பிறரிடத்திலிருந்து வெள்ளியையோ, பொன்னையோ, வஸ்திரங்களையோ பெற்றுக்கொள்ள வேண்டுமென்று பவுல் ஒருபோதும் பேராசைப்பட்டதில்லை. பிறருக்கு உள்ளதைப்போல தனக்கு ஆடம்பரமான வசதியில்லையே என்று பவுல் ஒருபோதும் ஏங்கியதுமில்லை. பவுல் பிறருடைய பொருளை இச்சிக்கவுமில்லை. அவன் பிறருக்கு பாரமாக இருந்ததுமில்லை.

இந்தக் கைகளே வேலை செய்து

நீங்கள் அறிந்திருக்கிறபடி, எனக்கும் என்னுடனேகூட இருந்தவர்களுக்கும் வேண்டியவை களுக்காக இந்தக் கைகளே வேலைசெய்தது (அப் 20:34).

பவுல் தன்னுடைய ஜீவனத்திற்காக தானே வேலைசெய்கிறான். தான் புசிக்கவேண்டிய அப்பத்தை வாங்குவதற்கு, தன் கைகளினால் வேலை செய்து சம்பாதிக்கிறான். பவுல் இவ்வாறு வாழ்க்கை நடத்துவதை எபேசு சபையின் மூப்பர்களும் அறிந்திருக்கிறார்கள். ஆகையினால் இது குறித்து தன்னைப்பற்றிச் சொல்லும்போது "நீங்கள் அறிந்திருக்கிறபடி" என்று குறிப்பிடுகிறான். பவுலுக்கும் அவனுடனே கூடயிருந்தவர்களுக்கும் வேண்டியவைகளுக்காக, பவுலுடைய கைகளே வேலைசெய்தது. இதை அவர்களெல்லோரும் அறிந்திருக்கிறார்கள்.

பவுலுக்கு சில சமயங்களில் தேவைகள் உண்டாயிற்று. அவனுடைய போஜனத்திற்கும், வஸ்திரத்திற்கும் தேவை உண்டாயிற்று. பவுல் மிகப்பெரிய அறிஞன். நல்ல ஊழியக்காரன். அப்படிப்பட்ட பவுல் பல சமயங்களில் உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களில் ஐசுவரியவானாகயிராமல், தரித்திரனாகவே இருந்திருக்கிறான். தன்னுடைய தேவைகள் மாத்திரம் சந்திக்கப்பட்டால் போதுமென்று திருப்தியோடிருக்கிறான். தன்னுடைய தேவைக்கு மிகுதியானது எதையும் சேர்த்து வைக்கவேண்டும் என்னும் விருப்பம் அவனிடத்திலில்லை.

பவுலுக்குப் போஜனம் தேவைப்பட்டபோது, அவன் தன் கைகளினால் வேலைசெய்து, சம்பாதித்து, அப்பத்தைக் கிரயத்திற்கு வாங்கிப் புசிக்கிறான். அவனுக்கு மாத்திரமல்ல, அவனுடனே கூடயிருந்தவர்களுக்கும் வேண்டியவைகளுக்காக அவனுடைய கைகளே வேலை செய்கிறது. இந்தக் காரியத்தை பவுல் எபேசு சபையின் மூப்பரிடத்தில் சொல்லும்போது, அவர்கள் எப்படிப்பட்ட ஜீவியம் ஜீவிக்கவேண்டுமென்று அவர்களுக்குப் போதகம்பண்ணுகிறான்.

கர்த்தருடைய ஊழியத்தைச் செய்யும்போது அவர்கள் தங்களுடைய அடிப்படை ஜீவஆதார தேவைகளை மாத்திரம் பார்த்துக்கொள்ளவேண்டும். ஆடம்பரமாக ஜீவிக்கவேண்டுமென்று விரும்பக் கூடாது. ஐசுவரியவான்களாக வேண்டுமென்று விரும்பி உலகக்காரியங்களில் சிக்கிக்கொள்ளக்கூடாது.

தேவன் கொடுக்கிற ஆசீர்வாதமே போதுமென்னும் மனப்பக்குவம் அவர்களிடத்தில் வளரவேண்டும். கர்த்தருடைய ஊழியத்தில் அதிகமாய் ஈடுபடும்போது அவர்களுக்கு வசதி குறைவு உண்டாகலாம். அப்பத்தில் தாழ்ச்சி உண்டாகலாம். நேர்த்தியான போஜனம் கிடைக்காமல் போகலாம். போதுமென்ற மனதுடன் சந்தோஷமாய் இருக்கக் கற்றுக்கொள்ளவேண்டும்.

பவுல் கர்த்தருக்காக ஊழியம் செய்கிறபோது, அவனோடு ஒரு சில உடன்ஊழியக்காரர்களும் இருக்கிறார்கள். பவுல் தனக்கு வேண்டியவைகளுக்காக மாத்திரம் தன் கைகளினால் வேலை செய்யாமல், தன் உடன் ஊழியக்காரர்களுக்கு வேண்டியவைகளுக்காகவும் தன் கைகளினால் வேலைசெய்கிறான். இது மிகவும் கடினமான வேலை. பவுலின் உடன் ஊழியக்காரர்கள், தங்களுடைய தேவைகளைச் சந்திப்பதற்கு, தங்கள் கைகளினால் வேலை செய்து கொள்ளட்டும் என்று, பவுல் அவர்களை அப்படியே விட்டிருக்கலாம். ஆனால் பவுலோ அவர்களை அப்படி விட்டுவிடவில்லை. அவர்கள்மீது மிகுந்த கரிசனையோடிருக்கிறான். தன்னோடு உடன்ஊழியர்களாக வேலை செய்கிறவர்களுக்கு, தானும் அவர்களுடைய உடன்ஊழியனாகயிருந்து வேலை செய்கிறான்.

உங்களுக்குக் காண்பித்தேன்

இப்படிப் பிரயாசப்பட்டு, பலவீனரைத் தாங்கவும், வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தைகளை நினைக்கவும் வேண்டுமென்று எல்லா விதத்திலேயும் உங்களுக்குக் காண்பித்தேன் என்றான் (அப் 20:35).

பவுல் தனக்கு வேண்டியவைகளுக்காக தன் கைகளினால் வேலை செய்கிறான். தன்னுடைய உடன்ஊழியக்காரர்களுக்கு வேண்டியவைகளுக்காகவும் பவுல் தன் கைகளினால் வேலை செய்கிறான். தன்னுடைய வேலையை பவுல் இதோடு நிறுத்திக்கொள்ளவில்லை. பலவீனரை தாங்குவதற்காகவும் வேலை செய்கிறான்.

தன்னுடைய தேவையை மாத்திரம் சந்தித்துக்கொண்டால் போதுமென்று பவுல் ஒருபோதும் நினைத்ததில்லை. வறுமையில் வாடுகிறவர்களையும், தரித்திரரையும், பசியாலும் பட்டினியாலும் பரிதபிக்கிறவர்களையும் ஆதரிக்க வேண்டுமென்று பவுல் விரும்புகிறான். அவர்களுக்கு வேண்டியவைகளுக்காகவும் பவுல் தன் கைகளினால் வேலைசெய்கிறான். பவுல் தன்னுடைய வேலையை ஏனோதானோவென்று செய்யவில்லை. தன்னுடைய வேலையில் பிரயாசப்படுகிறான். எபேசு சபையின் மூப்பரிடத்தில் இதைப்பற்றிச் சொல்லும் போது "இப்படி பிரயாசப்பட்டு பலவீனரைத் தாங்கவும்" என்று குறிப்பிடுகிறான்.

வியாதியஸ்தருக்கு உதவிசெய்ய வேண்டும். தரித்திரருக்கு ஆதரவாயிருக்கவேண்டும். வேலை செய்யமுடியாமல் கஷ்டப்படுகிறவர்களுக்கு உதவிபுரியவேண்டும் என்பது பவுலின் உபதேசம். "திருடுகிறவன் இனித் திருடாமல், குறைச்சலுள்ளவனுக்குக் கொடுக்கத்தக்கதாகத் தனக்கு உண்டாயிருக்கும்படி, தன் கைகளினால் நலமான வேலை செய்த, பிரயாசப்படக்கடவன்" (எபே 4:28). கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் எல்லோருமே ஏதாவது ஒரு கண்ணியமான வேலையைச் செய்யவேண்டும். நம்முடைய ஜீவாதாரத்திற்கு மாத்திரமல்ல, குறைச்சலுள்ள பிறருக்கு கொடுக்கத் தக்கதாகவும் நம்முடைய கைகளினால் நலமான வேலைசெய்யவேண்டும்.

பவுலின் இந்த உபதேசம் கேட்போருக்கு கடினமான உபதேசமாகயிருக்கலாம். ஆகையினால் தன்னுடைய வார்த்தையைச் சொல்லும்போது, கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சொன்ன உபதேசத்தையும் பவுல் தனக்கு ஆதரவாக இங்கு குறிப்பிடுகிறான். "வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்" என்று இயேசுகிறிஸ்து சொல்லியிருக்கிறார். ஐசுவரியவான்களாக இருப்பதைவிட பிறருக்குக் கொடுக்கிறதே ஆசீர்வாதமானது. தரித்திரராகயிருந்து பிறரிடத்தில் வாங்குவதைவிட, நாம் ஐசுவரியவானாக இல்லாவிட்டாலும், நமக்கு இருப்பதை பிறருக்குக் கொடுப்பதே நமக்கு ஆசீர்வாதம். நம்மால் சிறிதளவே கொடுக்க முடிந்தாலும், நாம் கொடுக்கிறவர்களாக இருக்க வேண்டுமேயல்லாமல் வாங்குகிறவர்களாக இருக்கக்கூடாது.

"வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்" என்பது இயேசுகிறிஸ்துவின் உபதேசம். இந்த உலகத்தின் உபதேசம் இயேசுகிறிஸ்துவின் உபதேசத்திற்கு நேர்மாறாக இருக்கிறது. உலகப்பிரகாரமான ஜனங்கள் பிறருக்குக் கொடுக்க பயப்படுகிறார்கள். கொடுத்தால் தங்களுக்குக் குறைந்துவிடுமோ என்று பதறுகிறார்கள். உலகத்து ஜனங்கள் எப்போதுமே எதையாவது பெற்றுக்கொள்ள வேண்டுமென்றுதான் ஆசைப்படுகிறார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவோ வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று தெளிவாகச் சொல்லுகிறார்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நமக்காக தம்முடையது எல்லாவற்றையும் கொடுத்து தீர்த்துவிட்டார். தம்முடைய ஜீவனையே நமக்காகக் கொடுத்தார். தம்முடைய திருஇரத்தத்தை நமக்காக முழுவதும் செலுத்தினார். அவர் யாரிடத்திலிருந்தும் எதையும் பெற்றுக்கொள்ளவில்லை. அவர் செல்லுமிடங்களிலெல்லாம் நன்மை செய்கிறவராகவே சுற்றித்திரிந்தார்.

நமக்கு நன்மை செய்தவர்களுக்கு பிரதிபலனாக நாம் ஏதாவது உதவி செய்ய நினைப்போம். இது நல்லதுதான். இதைவிட நல்லது, நமக்கு நன்மை செய்யாதவர்களுக்கும், நமக்குத் தீமை செய்தவர்களுக்கும் ஏதாவது நன்மை செய்வதுதான். ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன்கொடுக்கிறான். கர்த்தர் தாம் பட்ட கடனை திரும்பக் கொடுத்துத் தீர்ப்பார். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம், நம்மால் முடிந்த வரையிலும் பிறருக்கு கொடுத்து பழகவேண்டும். நாம் கொடுப்பது சிறிய அளவாக இருந்தாலும், அதைச் சந்தோஷமாய்க் கொடுக்கவேண்டும்.

பவுல் எபேசுவிலிருந்து போகிறான் அப் 20 : 36-38

அப் 20:36. இவைகளைச் சொன்னபின்பு, அவன் முழங்காற்படியிட்டு, அவர்களெல்லாரோடுங்கூட ஜெபம்பண்ணினான்.

அப் 20:37. அவர்களெல்லாரும் மிகவும் அழுது, என் முகத்தை நீங்கள் இனிப் பார்க்க மாட்டீர்களென்று அவன் சொன்ன வார்த்தையைக்குறித்து அதிகமாய்த் துக்கப்பட்டு,

அப் 20:38. பவுலின் கழுத்தைக் கட்டிக் கொண்டு, அவனை முத்தஞ்செய்து, கப்பல்வரைக்கும் அவனுடனே கூடப்போனார்கள்.

ஜெபம்பண்ணினான்

இவைகளைச் சொன்னபின்பு, அவன் முழங்காற்படியிட்டு, அவர்களெல்லாரோடுங் கூட ஜெபம்பண்ணினான் (அப் 20:36).

பவுல் எபேசு சபையின் மூப்பர்களைத் தன்னிடத்தில் அழைத்து, அவர்களுக்கு அநேக உபதேசங்களைப் போதிக்கிறான். இவைகளைச் சொன்னபின்பு பவுல் அவர்கள் எல்லோரோடுங்கூட ஜெபம்பண்ணுகிறான். இந்த ஜெபம் தனிநபராக ஏறெடுக்கிற ஜெபமல்ல. எல்லோரும் சேர்ந்து ஜெபம்பண்ணுகிறார்கள். பவுல் அவர்களுக்காகவும் ஜெபம்பண்ணுகிறான். அவர்களோடும் ஜெபம்பண்ணுகிறான். "அவர்களெல்லாரோடுங் கூட ஜெபம்பண்ணினான்" என்று எழுதப்பட்டிருக்கிறது.

நாம் தனியாக ஜெபிக்கும்போது, நம்முடைய இருதயத்தின் ரகசியங்களை, அந்தரங்க காரியங்களை தேவனிடத்தில் எடுத்துச் சொல்லி ஜெபம்பண்ணுவோம். எல்லோருமாகச் சேர்ந்து ஜெபிக்கும்போது, நம்முடைய ஜெபம் ஒருவருக்கொருவர் உற்சாகம் கொடுக்கக்கூடியதாகயிருக்கும்.

எபேசு சபையின் மூப்பரும் பவுலும் பயபக்தியோடும் மனத்தாழ்மையோடும் ஜெபம் பண்ணுகிறார்கள். அவர்களெல்லோரும் முழங்காற்படியிட்டு ஜெபிக்கிறார்கள். தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, தேவன் தங்களை மன்னிக்குமாறு ஜெபிப்பதற்கு அடையாளமாக முழங்காற்படியிட்டு ஜெபிக்கிறார்கள். வேண்டுதல்களையும் விண்ணப்பங்களையும் முழங்காற்படியிட்டு பயபக்தியோடு ஏறெடுக்கிறார்கள். எபேசு சபையின் விசுவாசிகளுக்கு, பவுல் தன்னுடைய வார்த்தைகளை உபதேசித்துச் சொன்னபின்பு, எல்லாருமாகச் சேர்ந்து ஜெபிக்கிறார்கள்.

எபேசு சபையின் மூப்பர்கள், எபேசுவிலுள்ள சபையை பொறுப்பெடுத்து நடத்தவேண்டுமென்று, பவுல் அவர்களிடத்தில் ஊழியபொறுப்பை ஒப்புக் கொடுத்திருக்கிறான். அவர்களிடத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கும் ஊழியத்தை அவர்கள் நல்லமுறையில் செய்வதற்கு தேவன் அவர்களை பரிசுத்தப்படுத்த வேண்டுமென்றும், பலப்படுத்த வேண்டுமென்றும் பவுல் அவர்களுக்காக ஜெபம்பண்ணுகிறான். அவர்களிடத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிற ஊழியப் பொறுப்பை அவர்கள் உண்மையோடும் உத்திரவாதத்தோடும் நிறைவேற்ற வேண்டும்.

எபேசு சபையின் மூப்பர்களுக்கு சபையிலுள்ள ஆடுகளை மேய்க்கும் ஊழியம் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆடுகளை மேய்ப்பதற்குத் தேவையான தாலந்துகளையும் கிருபைகளையும் தேவன் தாமே அவர்களுக்கு தரவேண்டுமென்று, பவுல் பிரதான மேய்ப்பராகிய இயேசுகிறிஸ்துவிடம் அவர்களை ஒப்புக்கொடுத்து ஜெபிக்கிறான். கொடிதான ஓநாய்களிடமிருந்து மூப்பர்களும் தப்பித்துக்கொள்ளவேண்டும், சபையின் விசுவாசிகளையும் பாதுகாக்கவேண்டும்.

சபையின் மூப்பர்கள் விசுவாசிகளுக்கு ஊழியம் செய்யும்போது, அவர்களுக்காக ஜெபிக்கவேண்டும். பவுல் மூப்பர்களுக்கு பிரசங்கம்பண்ணிவிட்டு, இப்போது அவர்களுக்காக ஜெபிக்கிறான். பவுலைப்போல எபேசு சபையின் மூப்பர்களும் விசுவாசிகளுக்காக ஜெபிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும்.

பவுல் மூப்பரோடு ஏறெடுக்கிற ஜெபம், விடைபெறுகிற ஜெபமாகயிருக்கிறது. அவர்களைவிட்டுப் பவுல் கடந்துபோகப்போகிறான். சிநேகிதர்கள் ஒருவரையொருவர் விட்டுப்பிரிந்து போகும்போது, ஜெபம்பண்ணிவிட்டுப் பிரிவது நல்லது. சிநேகிதர்கள் ஜெபசிந்தனையோடு பிரியவேண்டும். அவர்கள் பிரிந்து சென்ற பின்பும், அவர்கள் ஒருவருக்கொருவர் ஜெபிக்கவேண்டும். தேவன் தாமே அவர்களுக்கு ஜெபிக்கிற வாஞ்சையைக் கொடுக்கவேண்டும்.

பவுல் இயேசுகிறிஸ்துவின் முன்மாதிரியைப் பின்பற்றி, எபேசு சபையின் மூப்பர்களுக்காக ஜெபிக்கிறான். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு போதகம்பண்ணினார். போதகம்பண்ணிய பின்பு, அவர்களைவிட்டு பிரிந்துபோகும் முன்பு, அவர்களுக்காக ஜெபிக்கிறார். "இயேசு இவைகளைச் சொன்னபின்பு தம்முடைய கண்களை வானத்திற்கு ஏறெடுத்து" (யோவா 17:1) ஜெபித்தார்.

மிகவும் அழுது

அவர்களெல்லாரும் மிகவும் அழுது, என் முகத்தை நீங்கள் இனிப் பார்க்க மாட்டீர்களென்று அவன் சொன்ன வார்த்தையைக்குறித்து அதிகமாய்த் துக்கப்பட்டு, பவுலின் கழுத்தைக் கட்டிக் கொண்டு, அவனை முத்தஞ்செய்து, கப்பல்வரைக்கும் அவனுடனே கூடப்போனார்கள் (அப் 20:37,38).

அவர்களெல்லோரும் மிகவும் அழுது கண்ணீரோடே விடைபெறுகிறார்கள். பாசத்தோடு அவர்கள் பவுலின் கழுத்தைக் கட்டிக்கொண்டு அவனை முத்தம் செய்கிறார்கள். பவுல் பல சமயங்களில் அவர்களோடு கண்ணீரோடே இருந்திருக்கிறான். மிகுந்த கண்ணீரோடு அவர்கள் மத்தியில் பவுல் கர்த்தரை சேவித்தான் (அப் 20:19). மூன்று வருஷகாலமாய் பவுல் இரவும் பகலும் கண்ணீரோடே இடைவிடாமல் அவர்களெல்லோருக்கும் புத்தி சொல்லிக்கொண்டுவந்தான் (அப் 20:31). இப்போது அவர்களெல்லோரும் பவுலின் கழுத்தைக்கட்டிக்கொண்டு அழுகிறார்கள். இந்த அழுகையின் கண்ணீர் அன்பின் கண்ணீராகும். இது ஒருவருக்கொருவர் பிரியமாய் நேசிப்பதினால் உண்டாகும் கண்ணீராகும்.

அவர்களெல்லோரும் பவுலின் கழுத்தைக்கட்டிக்கொண்டு, அவனை முத்தம் செய்கிறார்கள். இவர்களுடைய அன்பு ஜீவனுள்ளது. இவர்கள் ஒருவருக்கொருவர் மெய்யாய் நேசிக்கிறார்கள். பவுல் தன் சிநேகிதரெல்லோரையும் அன்பாய் நேசிக்கிறவன். பவுலைப்போலவே அவனுடைய சிநேகிதர்களும் அவனிடத்தில் அன்பாயிருக்கிறார்கள்.

பவுல் அவர்களிடத்தில் "என் முகத்தை நீங்கள் இனி பார்க்கமாட்டீர்கள்" என்று சொன்னான். அந்த வார்த்தை அவர்களுடைய இருதயத்தைத் தொடுகிறது. அவன் சொன்ன வார்த்தையைக் குறித்து அவர்கள் அதிகமாய்த் துக்கப்படுகிறார்கள். இந்த உலகத்தில் அவர்கள் இனிமேல் பவுலின் முகத்தைப் பார்க்கமாட்டார்கள். இதை நினைத்துப் பார்க்கும்போது அவர்களுடைய துக்கம் அதிகரிக்கிறது. நம்முடைய உற்றார் உறவினரும், நெருங்கிய சிநேகிதரும் மரித்துப்போகும்போது, அவர்களுடைய முகத்தை நாம் இனிமேல், இந்த உலகத்தில் பார்க்க முடியாமல் போகிறது. இதனால் நமக்கு மிகுந்த மனவேதனையும், துக்கமும், கண்ணீரும் வருகிறது.

விசுவாசிகளாகிய நாம் இந்த உலகத்தில் ஒருவரையொருவர் விட்டுப் பிரியும்போது, ஒருவருடைய முகத்தை ஒருவர் இனிமேல் பார்க்க முடியாமல் போனாலும், பரலோகத்தில் ஒருவரையொருவர் பார்த்துக்கொள்ளலாம் என்னும் நம்பிக்கை நமக்கு இருக்கிறது. விசுவாசிகளாகிய நாம் நித்திய காலமாக கர்த்தருடைய சமுகத்தில் மகிழ்ச்சியாயிருப்போம். இதுவே நம்முடைய ஆனந்த பாக்கிய நம்பிக்கை.

பவுல் அவர்களைவிட்டு விடைபெற்று செல்லும்போது, அவர்களெல்லோரும் கப்பல் வரைக்கும் அவனுடனே கூடப்போகிறார்கள். இனிமேல் அவர்களால் பவுலின் முகத்தைப் பார்க்கமுடியாது. ஜெபிக்கிற இடத்திலிருந்து, கப்பல் இருக்கிற இடம் வரையிலும், பவுலின் முகத்தைப் பார்க்கவேண்டுமென்று எபேசு சபையின் மூப்பர்கள் விரும்புகிறார்கள்.

நாம் எங்குபோனாலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிரசன்னம் நம்மோடே கூடயிருக்கிறது. பவுல் அவர்களைவிட்டுப் பிரிந்துசென்றாலும் கிறிஸ்துவின் பிரசன்னம் அவனோடும் கூடயிருக்கிறது. அதே வேளையில் எபேசு சபையின் மூப்பர்கள் பவுலைவிட்டுப் பிரிந்துசென்றாலும், கிறிஸ்துவின் பிரசன்னம் அவர்களோடும் கூடயிருக்கிறது. தேவனுடைய பிரசன்னம் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு கிடைத்திருக்கும் பெரிய ஆசீர்வாதம்.

21 அதிகாரம்

பவுல் எபேசு பட்டணத்திலிருந்து எருசலேமுக்குப் போகிறான். அங்கே அவனுக்கு கட்டுகளும் உபத்திரவங்களும் வைக்கப்பட்டிருக்கிறது. கர்த்தருக்காக பவுல் வல்லமையாக ஊழியம் செய்கிறான். ஆனாலும் பவுலை சிறைச்சாலையில் அடைக்கிறார்கள். பிரசங்க மேடைகளில் பவுல் தேவனை மகிமைப்படுத்தியது போலவே, சிறைச்சாலையிலும் தேவனை உண்மையாய் மகிமைப்படுத்துகிறான்.

எபேசு பட்டணத்திலிருந்து செசரியா பட்டணத்திற்கு பவுல் பிரயாணம் பண்ணுகிறான் (அப் 21:1-7). எருசலேமுக்குப் போகவேண்டாமென்று செசரியாவிலுள்ள சகோதரர்கள் பவுலிடம் வேண்டிக்கொள்கிறார்கள். (அப் 21:8-14). பவுல் செசரியாவிலிருந்து எருசலேமுக்குப் பிரயாணமாய்ப் போகிறான் (அப் 21:15-17). எருசலேமுள்ள சகோதரர்கள் பவுலுக்கு சில ஆலோசனைகளைச் சொல்லுகிறார்கள். யூதர்கள் பவுலை ஏற்றுக்கொள்ளும் வண்ணமாக, யூதருடைய மார்க்கத்தின் பிரகாரம் பவுல் தன்னை சுத்திகரித்துக்கொண்டு தேவாலயத்திற்கு காணிக்கை செலுத்தவேண்டுமென்று ஆலோசனை சொல்லுகிறார்கள் (அப் 21:18-26). அவர்கள் சொன்ன ஆலோசனையே பவுலுக்குப் பிரச்சனையாயிற்று. யூதர்கள் பவுலுக்கு விரோதமாக எழும்பி வருகிறார்கள் (அப் 21:27-30). பவுல் கலகக்காரரிடத்திலிருந்து உயிர்தப்பி பிழைக்கிறான். யூதஜனங்களிடம் பேசுவதற்கு பவுலுக்கு வாய்ப்பு கிடைக்கிறது (அப் 21:31-40).

எபேசுவிலிருந்து செசரியாவுக்கு பிரயாணம்
அப் 21 : 1-7

அப் 21:1. நாங்கள் அவர்களை விட்டுப் பிரிந்து, துறைபெயர்ந்தபின்பு, நேராயோடி, கோஸ்தீவையும், மறுநாளில் ரோதுதீவையும் சேர்ந்து, அவ்விடம் விட்டுப் பத்தாரா பட்டணத்துக்கு வந்து,

அப் 21:2. அங்கே பெனிக்கே தேசத்திற்குப் போகிற ஒரு கப்பலைக் கண்டு, அதிலே ஏறிப்போனோம்.

அப் 21:3. சீப்புருதீவைக் கண்டு, அதை இடதுபுறமாக விட்டு, சீரியாநாட்டிற்கு ஓடி, தீருபட்டணத்துறையில் இறங்கினோம்; அங்கே கப்பலின் சரக்குகளை இறக்க வேண்டியதாயிருந்தது.

அப் 21:4. அவ்விடத்திலுள்ள சீஷரைக் கண்டுபிடித்து, அங்கே ஏழுநாள் தங்கினோம். அவர்கள் பவுலை நோக்கி: நீர் எருசலேமுக்குப் போகவேண்டாம் என்று ஆவியின் ஏவுதலினாலே சொன்னார்கள்.

அப் 21:5. அந்த நாட்கள் நிறைவேறினபின்பு, நாங்கள் புறப்பட்டுப் போகையில், அவர்களெல்லாரும் மனைவிகளோடும் பிள்ளைகளோடுங் கூடப் பட்டணத்துக்குப் புறம்பே எங்களை வழிவிட்டனுப்பும்படி வந்தார்கள். அப்பொழுது கடற்கரையிலே நாங்கள் முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணினோம்.

அப் 21:6. ஒருவரிடத்திலொருவர் உத்தரவு பெற்றுக்கொண்டபின்பு, நாங்கள் கப்பல் ஏறினோம்; அவர்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பிப்போனார்கள்.

அப் 21:7. நாங்கள் கப்பல்யாத்திரையை முடித்து, தீருபட்டணத்தை விட்டுப் பித்தொலோமாய் பட்டணத்துக்கு வந்து, சகோதரரை வினவி, அவர்களிடத்தில் ஒருநாள் தங்கினோம்.

சீப்புரு தீவு

நாங்கள் அவர்களை விட்டுப் பிரிந்து, துறைபெயர்ந்தபின்பு, நேராயோடி, கோஸ்தீவையும், மறுநாளில் ரோதுதீவையும் சேர்ந்து, அவ்விடம் விட்டுப் பத்தாரா பட்டணத்துக்கு வந்து, அங்கே பெனிக்கே தேசத்திற்குப் போகிற ஒரு கப்பலைக் கண்டு, அதிலே ஏறிப்போனோம். சீப்புருதீவைக் கண்டு, அதை இடதுபுறமாக விட்டு, சீரியாநாட்டிற்கு ஓடி, தீருபட்டணத்துறையில் இறங்கினோம்; அங்கே கப்பலின் சரக்குகளை இறக்க வேண்டியதாயிருந்தது (அப் 21:1-3).

எபேசுவிலுள்ள சபையின் மூப்பரிடத்திலிருந்து பவுல் விடைபெற்று செசரியாவுக்கு பிரயாணம்பண்ணுகிறான். விடைபெறுவதற்கு முன்பாக மூப்பரும் பவுலும் அழுது ஜெபிக்கிறார்கள். பிரிவதற்கு மனமில்லாமல் பிரிகிறார்கள். "நாங்கள் அவர்களைவிட்டுப் பிரிந்து" என்று பவுலின் பிரயாண வாக்கியம் ஆரம்பமாகிறது. இவர்களுக்கு ஒருவரையொருவர் பிரிவதற்கு மனமில்லையென்றாலும், தேவனுடைய சித்தத்தின்படி இவர்கள் பிரிந்து, தங்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிற ஊழியஸ்தலங்களில், கர்த்தர் கொடுக்கிற ஊழியங்களைச் செய்யவேண்டும்.

பவுல் எபேசுவிலுள்ள மூப்பர்களைவிட்டுப் பிரிந்து, துறை பெயர்ந்த பின்பு, நேராயோடி, கோஸ் தீவை சேருகிறான். மறுநாளில் பவுலும் அவன் உடன்ஊழியரும் கோஸ் தீவிலிருந்து ரோது தீவை சேருகிறார்கள். அதன்பின்பு அவ்விடம் விட்டு பத்தாரா பட்டணத்திற்கு வருகிறார்கள். இது அக்காலத்தில் மிகவும் பிரசித்திப் பெற்ற துறைமுகப்பட்டினம். லீசியா தேசத்திலுள்ள முக்கியமான வணிகப்பட்டினம்.

பத்தாரா பட்டணத்தில் பெனிக்கே தேசத்திற்குப் போகிற ஒரு கப்பலைப் பார்த்து அதிலே ஏறிப்போகிறார்கள். பவுலின் பிரயாணம் தடைபடாமல் தொடர்ந்து நடைபெறுகிறது. பவுல் ஒரு துறைமுகத்திற்கு வருவதற்கு முன்பாகவே, அவனுடைய பிரயாண காரியங்களை கர்த்தர் ஒழுங்கு செய்து வைத்திருக்கிறார். பத்தாரா பட்டணத்திற்கு வரும்போது, அங்கே பெனிக்கே தேசத்திற்குப் போக ஒரு கப்பல் ஆயத்தமாயிருக்கிறது.

பெனிக்கே தேசத்திற்குப் போகும்போது பவுலும் மற்ற உடன் ஊழியரும் சீப்புரு தீவு வழியாகப் போகிறார்கள். பவுலும் பர்னபாவும் இந்த இடத்தில் ஏற்கெனவே ஊழியம் செய்தார்கள். பவுல் சீப்புரு தீவில் பர்னபாவை விட்டுப் பிரிந்து சென்றுவிட்டான். சீப்புரு தீவில் பர்னபா ஊழியம் செய்து கொண்டிருக்கிறான். அவனுடைய ஊழியத்திற்குப் போட்டியாக பவுல் எதையும் செய்யவில்லை. ஆகையினால் பவுல் சீப்புரு தீவுக்குப் போகாமல், அதை இடதுபுறமாக விட்டுச்செல்லுகிறான். சீரியா நாட்டிற்கு ஓடி தீரு பட்டணத்துறையில் இறங்குகிறான். இங்கே கப்பலின் சரக்குகளை இறக்குகிறார்கள்.

தீருவிலுள்ள சீஷர்

அவ்விடத்திலுள்ள சீஷரைக் கண்டுபிடித்து, அங்கே ஏழுநாள் தங்கினோம். அவர்கள் பவுலை நோக்கி: நீர் எருசலேமுக்குப் போகவேண்டாம் என்று ஆவியின் ஏவுதலினாலே சொன்னார்கள் (அப் 21:4).

பவுல் சீரியா நாட்டிற்கு ஓடி தீரு பட்டணத்துறையில் இறங்குகிறான். இவ்விடத்திலுள்ள சீஷரை பவுல் கண்டுபிடித்து, இங்கு பவுலும் அவனுடைய உடன்ஊழியரும் ஏழுநாள் தங்குகிறார்கள். பவுல் எந்த ஊருக்குப் போனாலும், அங்கு சீஷர்கள் யாராவது இருக்கிறார்களா என்று விசாரித்து, அவர்களோடு ஐக்கியமாகயிருக்கிறான். பறவைகளுக்கு அதன் இறகுகள் பிரயோஜனமுள்ளவை. அதுபோலவே கர்த்தருடைய பிள்ளைகளுக்கு மற்ற விசுவாசிகள் பிரயோஜனமுள்ளவர்கள்.

இயேசுகிறிஸ்து இந்தப் பூமியில் இருந்தகாலத்தில், அவர் தீருவின் கரை வழியாய் சில சமயங்களில் பிரயாணம் செய்திருக்கிறார். சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்காக இயேசுகிறிஸ்து தீருவுக்குப் போனதில்லை. இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷ ஊழியம் விரிவடைந்த பின்பு அவர் தீருவில் பிரசங்கம் செய்தார். இங்கு அவருடைய சீஷர்கள் இருக்கிறார்கள்.

பவுல் தீருவிலுள்ள சீஷரைக் கண்டுபிடித்து, அங்கே ஏழுநாள் தங்குகிறான். துரோவா பட்டணத்தில் பவுல் ஏழுநாள் தங்கினான் (அப் 20:6). அங்கு தங்கியதுபோலவே தீருவிலும் ஏழுநாள் தங்குகிறான். கர்த்தருடைய நாளை தீருவிலுள்ள சீஷரோடு செலவு பண்ணவேண்டும் என்பது பவுலின் விருப்பம்.

தீருவிலுள்ள சீஷர்கள் ஆவிக்குரிய காரியங்களில் வளர்ச்சி பெற்றிருக்கிறார்கள். ஆவியின் வரங்களைப் பெற்றிருக்கிறார்கள். பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலினால் தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள். எருசலேமுக்குப் போகவேண்டாம் என்று ஆவியின் ஏவுதலினால் பவுலிடத்தில் சொல்லுகிறார்கள். கட்டுகளும் உபத்திரவங்களும் தனக்கு வைத்திருக்கிறது என்று பரிசுத்த ஆவியானவர் பட்டணந்தோறும் தெரிவிக்கிறதை பவுல் அறிந்திருக்கிறான் (அப் 20:23).

கர்த்தருடைய பிள்ளைகளுக்கு நேரிடப்போகும் சம்பவங்களை, தேவன் தம்முடைய கிருபையினால், தீர்க்கதரிசிகள் மூலமாக முன்னறிவிக்கிறார். இதனால் சீஷர்கள் விசுவாசத்தில் இடறிவிழாமல் உறுதியாயிருப்பார்கள். பிரச்சனைகளைச் சந்திப்பதற்கு ஆயத்தமாயிருப்பார்கள்.

தீருவிலுள்ள சீஷர்கள் எருசலேமில் பவுலுக்கு வரப்போகிற பிரச்சனையை ஆவியின் ஏவுதலினால் அறிந்துகொள்கிறார்கள். பவுலின்மீது அவர்கள் வைத்திருக்கிற அன்பினால், அவர்கள் பவுலை நோக்கி "நீர் எருசலேமுக்குப் போகவேண்டாம்" என்று ஆவியின் ஏவுதலினாலே சொல்லுகிறார்கள். தன்னுடைய பாடுகளும் வேதனைகளும், உபத்திரவங்களும் தேவனை மகிமைப்படுத்துகிறதற்கும், சுவிசேஷம் பரவுவதற்கும் ஏதுவாகயிருக்கும் என்பதை பவுல் அறிந்திருக்கிறான்.

முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணினோம்

அந்த நாட்கள் நிறைவேறினபின்பு, நாங்கள் புறப்பட்டுப்போகையில், அவர்களெல்லாரும் மனைவிகளோடும் பிள்ளைகளோடுங் கூடப் பட்டணத்துக்குப் புறம்பே எங்களை வழிவிட்டனுப்பும்படி வந்தார்கள். அப்பொழுது கடற்கரையிலே நாங்கள் முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணினோம் (அப் 21:5).

தீருவிலுள்ள சீஷர்கள் பவுலின் ஊழியத்தின் மூலமாக இரட்சிக்கப்பட்டவர்களல்ல. ஆனாலும் அவர்கள் பவுலின்மீது அதிக மரியாதை காண்பிக்கிறார்கள். பவுல் அவர்களோடு ஏழுநாட்கள் மாத்திரமே தங்கியிருக்கிறான். இந்த ஏழு நாட்களுக்குள் சீஷர்களெல்லோரும் பவுலிடத்தில் சிநேகமாய் பழகுகிறார்கள். பவுல் அவர்களைவிட்டுப் புறப்பட்டுப் போகையில், சீஷர்களெல்லோரும், தங்கள் மனைவிகளோடும் பிள்ளைகளோடுங்கூட பவுலை வழியனுப்பும்படி வருகிறார்கள்.

நம்முடைய சபையின் ஊழியக்காரர்களுக்கு நாம் மதிப்பு கொடுக்கவேண்டும். அதே வேளையில் வாய்ப்பு கிடைக்கும்போது, கர்த்தருடைய உண்மையுள்ள மற்ற ஊழியக்காரர்களுக்கும் மதிப்பு கொடுக்கவேண்டும். ஊழியக்காரர்களுக்கு மதிப்பு கொடுக்க வேண்டும் என்று நம்முடைய பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுக்கவேண்டும். பெரியோருக்கும் நல்லோருக்கும் மரியாதை கொடுக்கும்படி, நம்முடைய பிள்ளைகளுக்கு பயிற்சி கொடுப்பது மிகவும் நல்லது.

தீருவிலுள்ள சீஷர்கள் தங்கள் பிள்ளைகளை நற்குணத்தோடு வளர்க்கிறார்கள். நல்ல பழக்க வழக்கங்களைக் கற்றுத்தருகிறார்கள். பவுல் அவர்களைவிட்டுப் புறப்பட்டுப் போகையில், சீஷர்கள் தங்கள் பிள்ளைகளோடு வந்து பவுலை வழியனுப்புகிறார்கள். சிறுபிள்ளைகளுக்கு நல்ல பழக்க வழக்கங்களைக் கற்றுக்கொடுக்கிறார்கள். சிறு பிள்ளைகளின் வாயிலிருந்து வரும் துதிகளைக் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து அங்கீகரிக்கிறார்.

நமக்கு வருகிற எல்லா வாய்ப்புக்களையும் நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு சம்பவத்தையும் நம்முடைய ஆத்துமாக்களின் நன்மைக்காக பிரயோஜனப்படுத்திக் கொள்ளவேண்டும். சீஷர்கள்எல்லோரும் மனைவிகளோடும் பிள்ளைகளோடுங்கூட, பட்டணத்திற்குப் புறம்பே, பவுலையும் அவனுடைய உடன்ஊழியரையும், வழிவிட்டனுப்பும்படி வருகிறார்கள். போகிற வழியில் பவுலின் உபதேச வார்த்தைகளை கேட்டுக் கொண்டே போகிறார்கள். பவுலின் போதகத்தைக் கேட்பதற்கும், அவனோடுகூட ஜெபிப்பதற்கும் வாய்ப்பு கிடைக்கும் என்று எதிர்பார்த்து சீஷர்கள் பவுலோடுகூட போகிறார்கள்.

பவுலும், அவனுடைய உடன்ஊழியரும், அவர்களை வழிவிட்டனுப்பும்படி வந்திருக்கிற சீஷரும், கடற்கரையிலே முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணுகிறார்கள். பவுல் தன் சிநேகிதரை விட்டுப் பிரிந்து செல்லும்போது, அவர்களை கர்த்தருடைய கரத்தில் ஒப்புக்கொடுத்துவிட்டு, அவர்களுக்காக ஜெபம்பண்ணிவிட்டு, அவர்களைவிட்டுப் பிரிந்து செல்வது வழக்கம். எபேசுவிலுள்ள மூப்பர்களை விட்டுப் பிரிந்து செல்லும்போதும், பவுலும் அவர்களும் ஜெபம்பண்ணினார்கள் (அப் 20:36). அதுபோலவே இங்கும் ஜெபம்பண்ணுகிறார்கள்.

இவர்கள் கடற்கரையிலே முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணுகிறார்கள். பவுல் அதிகநேரம் ஜெபிக்கிறவன். ஜெபத்தில் வல்லமையாய்த் தரித்திருக்கிறவன். கடல் பிரயாணம் மேற்கொள்கிறவர்களும், வேறு எல்லாவிதமான பிரயாணங்களை மேற்கொள்கிறவர்களும், தங்களுடைய பிரயாணங்களை கர்த்தருடைய கரங்களில் ஜெபம்பண்ணி ஒப்புக்கொடுக்கவேண்டும். கர்த்தரே நம்மையும், நம்முடைய வாகனங்களையும் பிரயாணங்களையும் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமென்று ஜெபிக்கவேண்டும். கர்த்தருடைய கிருபையும், பாதுகாப்பும், பராமரிப்பும் நமக்கு எப்போதுமே தேவைப்படுகிறது.

பவுலும் தீரு பட்டணத்திலுள்ள சீஷரும் இப்போது பிரிந்து சென்றாலும், கர்த்தருடைய சமுகம் இவர்களோடு கூடவே இருக்கிறது. பவுல் இவர்களுக்கு இதுவரையிலும் உபதேசம்பண்ணி உதவிசெய்தான். இனிமேல் பரிசுத்த ஆவியானவரே அவர்களுக்குப் போதிப்பார். அவர்களை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துவார். விசுவாசிகள் தங்கள் விசுவாசத்தில் உறுதியாய்த் தரித்திருக்கிறார்கள். தேவனுடைய பராமரிப்பை நம்பி ஜீவிக்கிறார்கள். கடற்கரையிலே அவர்களெல்லோரும் கர்த்தரிடத்தில் முழங்காற்படியிட்டு ஜெபிக்கிறார்கள். இந்த இடம் பாறை மிகுந்ததா, மணல் மிகுந்ததா என்பது பற்றி அவர்களுக்குக் கவலையில்லை. கர்த்தரை நோக்கி கடற்கரையிலே, அது எப்படிப்பட்ட இடமாகயிருந்தாலும், அங்கு முழங்காற்படியிட்டு ஜெபிக்கிறார்கள். பவுல் தன் ஜெபத்தை வானத்திற்கு உயரே ஏறெடுக்கிறபோது, தன்னுடைய முழங்கால்களைத் தாழ்த்துகிறான்.

பித்தொலோமாய் பட்டணம்

ஒருவரிடத்திலொருவர் உத்தரவு பெற்றுக்கொண்டபின்பு, நாங்கள் கப்பல் ஏறினோம்; அவர்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பிப்போனார்கள். நாங்கள் கப்பல் யாத்திரையை முடித்து, தீருபட்டணத்தை விட்டுப் பித்தொலோமாய் பட்டணத்துக்கு வந்து, சகோதரரை வினவி, அவர்களிடத்தில் ஒருநாள் தங்கினோம் (அப் 21:6,7).

அவர்கள் ஒருவரிடத்திலொருவர் உத்தரவு பெற்றுக்கொள்கிறார்கள். அதன்பின்பு பவுலும் அவனுடைய உடன்ஊழியரும் கப்பல் ஏறுகிறார்கள். சீஷர்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பிப்போகிறார்கள். வீடுகளுக்கு திரும்பிப்போகிற சீஷர்களோடு பவுல் தன்னுடைய ஆசீர்வாதத்தை விட்டு செல்லுகிறான். பிரயாணம் பண்ணுகிறவர்களை வழிவிட்டனுப்பும்படி வருகிறவர்கள், பிரயாணம் பண்ணுகிறவர்களுக்காக ஜெபிக்க வேண்டும். பிரயாணம் பண்ணுகிறவர்களும் தங்களை வழிவிட்டனுப்பும்படி வருகிறவர்களை ஆசீர்வதிக்கவேண்டும்.

பவுல் கப்பல் யாத்திரையை முடித்து, தீரு பட்டணத்தைவிட்டு பித்தொலோமாய் பட்டணத்திற்கு வருகிறான். இந்தப் பட்டணத்திலுள்ள சகோதரரைச் சந்தித்து, அவர்களோடு ஐக்கியமாக யிருப்பதற்காகவும், கர்த்தரிடத்தில் ஜெபிப்பதற்காகவும், பவுலும் அவனுடைய உடன் ஊழியரும் கப்பலை விட்டு இறங்குகிறார்கள். இந்தப் பட்டணத்திலுள்ள சகோதரிடத்தில் ஒருநாள் மாத்திரமே தங்கியிருக்கிறார்கள். சகோதரரை சந்திக்காமலிருப்பதைவிட, சிறிது நேரம் சந்திப்பது மேல். பவுல் அவர்களைச் சந்தித்து அவர்களுடைய சுகசெய்தியை விசாரித்து, ஊழியக்காரியங்களைப் பகிர்ந்து கொள்கிறான்.

எருசலேமுக்குப் போக எதிர்ப்பு அப் 21 : 8-14

அப் 21:8. மறுநாளிலே பவுலைச் சேர்ந்தவர்களாகிய நாங்கள் புறப்பட்டுச் செசரியாபட்டணத்துக்கு வந்து, ஏழுபேரில் ஒருவனாகிய பிலிப்பென்னும் சுவிசேஷகனுடைய வீட்டிலே பிரவேசித்து, அவனிடத்தில் தங்கினோம்.

அப் 21:9. தீர்க்கதரிசனஞ்சொல்லுகிற கன்னியாஸ்திரீகளாகிய நாலு குமாரத்திகள் அவனுக்கு இருந்தார்கள்.

அப் 21:10. நாங்கள் அநேகநாள் அங்கே தங்கியிருக்கையில், அகபு என்னும் பேர் கொண்ட ஒரு தீர்க்கதரிசி யூதேயாவிலிருந்து வந்தான்.

அப் 21:11. அவன் எங்களிடத்தில் வந்து, பவுலினுடைய கச்சையை எடுத்துத் தன் கைகளையும் கால்களையும் கட்டிக்கொண்டு: இந்தக் கச்சையை யுடையவனை எருசலேமிலுள்ள யூதர் இவ்விதமாய்க் கட்டிப் புறஜாதியார் கைகளில் ஒப்புக்கொடுப்பார்கள் என்று பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறார் என்றான்.

அப் 21:12. இவைகளை நாங்கள் கேட்டபொழுது, எருசலேமுக்குப் போகவேண்டாமென்று, நாங்களும் அவ்விடத்தாரும் அவனை வேண்டிக்கொண்டோம்.

அப் 21:13. அதற்குப் பவுல்: நீங்கள் அழுது என் இருதயத்தை ஏன் உடைத்துப்போகப் பண்ணுகிறீர்கள்? எருசலேமில் நான் கர்த்தராகிய இயேசுவின் நாமத்திற்காகக் கட்டப்படுவதற்கு மாத்திரமல்ல, மரிப்பதற்கும் ஆயத்தமாயிருக்கிறேன் என்றான்.

அப் 21:14. அவன் சம்மதியாதபடியினாலே, கர்த்தருடைய சித்தம் ஆகக்கடவதென்று அமர்ந்திருந்தோம்.

பிலிப்பு

மறுநாளிலே பவுலைச் சேர்ந்தவர்களாகிய நாங்கள் புறப்பட்டுச் செசரியாபட்டணத்துக்கு வந்து, ஏழுபேரில் ஒருவனாகிய பிலிப்பென்னும் சுவிசேஷகனுடைய வீட்டிலே பிரவேசித்து, அவனிடத்தில் தங்கினோம். தீர்க்கதரிசனஞ் சொல்லுகிற கன்னியாஸ்திரீகளாகிய நாலு குமாரத்திகள் அவனுக்கு இருந்தார்கள் (அப் 21:8,9).

பவுலும் அவனைச் சேர்ந்தவர்களும் செசரியா பட்டணத்திற்கு வருகிறார்கள். புறஜாதியாருக்கு இந்தப் பட்டணத்தில்தான் முதன்முதலில் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டது. இந்தப் பட்டணத்தில் பேதுரு இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷ வார்த்தைகளைப் பேசிக்கொண்டிருக்கையில் வசனத்தைக் கேட்டவர்கள் யாவர் மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார் (அப் 10:44).

பவுல் எந்தப் பட்டணத்திற்குப் போனாலும், அவனுடைய சிநேகிதரில் யாராவது ஒருவர், அவனை ஏற்றுக்கொண்டு உபசரிக்கிறார்கள். அந்தப் பட்டணத்தை விட்டுப்போகும்போது அவர்கள் அவனை வழிவிட்டனுப்புகிறார்கள். இந்த உலகத்தில் நாம் எல்லோருமே பிரயாணம்பண்ணுகிறவர்களைப் போலவே இருக்கிறோம். மரணம் நம்மைப் பிரித்துவிடுகிறது. "மறுநாளிலே பவுலைச் சேர்ந்தவர்களாகிய நாங்கள்" என்னும் வாக்கியம் இந்த வசனத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. பவுலைச் சேர்ந்தவர்கள் யார் என்பது தெளிவாக விளக்கப்படவில்லை. நாம் பரலோகத்திற்குப் போகும்போது "பவுலைச் சேர்ந்தவர்கள்" யார் என்பது நமக்கு தெரியவரும்.

பல வருஷங்களுக்கு முன்பு பிலிப்பு எத்தியோப்பிய மந்திரிக்கு சுவிசேஷத்தைச் சொல்லி ஞானஸ்நானம் கொடுத்தான். பிலிப்பும் மந்திரியும் தண்ணீரிலிருந்து கரையேறின பொழுது, கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டுபோய் விட்டார். பிலிப்பு ஆசோத்திலே காணப்பட்டு, அவ்விடத்திலிருந்து பிரயாணம்பண்ணி, செசரியாவுக்கு வருகிற வரையில், சகல பட்டணங்களிலும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்துக்கொண்டு வந்தான் (அப் 8:39,40). பிலிப்பு அந்த வேளையிலிருந்து, இப்போது வரையிலும் செசரியா பட்டணத்தில் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்து கொண்டு வருகிறான்.

ஆரம்பத்தில் பிலிப்பு எருசலேமிலுள்ள சபையின் மூப்பர்களில் ஒருவனாகயிருந்தான். பன்னிரு அப்போஸ்தலரும், சீஷரின் கூட்டத்தை வரவழைத்து, பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழுபேரை பந்திவிசாரணை செய்வதற்காக தெரிந்துகொண்டு, அவர்களை அந்த வேலைக்காக பிரதிஷ்டைபண்ணினார்கள். அவர்களில் பிலிப்பும் ஒருவன். அப்போஸ்தலர்கள் இவர்கள்மேல் கைகளை வைத்து ஜெபம்பண்ணியபோது, பிலிப்புவின் மேலும் கைகளை வைத்து ஜெபம்பண்ணினார்கள் (அப் 6:1-6). அதன்பின்பு பிலிப்பு செசரியா பட்டணத்தில் இத்தனை வருஷமாய் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, கர்த்தருடைய ஊழியத்தைச் செய்துவருகிறான்.

பிலிப்புவுக்கு செசரியாவில் ஒரு வீடு இருக்கிறது. பவுலையும் அவனைச் சேர்ந்தவர்களையும் தன்னுடைய வீட்டில் தங்குமாறு பிலிப்பு வரவேற்கிறான். அவர்கள் இந்த பிலிப்பு என்னும் சுவிசேஷகனுடைய வீட்டில் பிரவேசித்து அவனிடத்தில் தங்கியிருக்கிறார்கள்.

பிலிப்புவுக்கு நாலு குமாரத்திகள் இருக்கிறார்கள். இவர்கள் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிற கன்னியாஸ்திரிகள். இவர்கள் ஒருவேளை பவுலுக்கு எருசலேமில் வரப்போகிற பிரச்சனைகளைத் தீர்க்க தரிசனமாகச் சொல்லியிருக்கலாம். ஒருவேளை பவுலை ஆறுதல்படுத்துகிற வார்த்தைகளையும், உற்சாகப்படுத்துகிற வார்த்தைகளையும் இவர்கள் அவனுக்குத் தீர்க்கதரிசனமாகச் சொல்லியிருக்கலாம்.

அகபு என்னும் தீர்க்கதரிசி

நாங்கள் அநேகநாள் அங்கே தங்கியிருக்கையில், அகபு என்னும் பேர் கொண்ட ஒரு தீர்க்கதரிசி யூதேயாவிலிருந்து வந்தான். அவன் எங்களிடத்தில் வந்து, பவுலினுடைய கச்சையை எடுத்துத் தன் கைகளையும் கால்களையும் கட்டிக்கொண்டு: இந்தக் கச்சையையுடையவனை எருசலேமிலுள்ள யூதர் இவ்விதமாய்க் கட்டிப் புறஜாதியார் கைகளில் ஒப்புக்கொடுப்பார்கள் என்று பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறார் என்றான் (அப் 21:10,11).

எருசலேமில் பவுலுக்கு வரப்போகும் பாடுகளையும் உபத்திரவங்களையும் குறித்து அகபு என்னும் பேர் கொண்ட ஒரு தீர்க்கதரிசி முன்னறிவிக்கிறான். பவுலும் அவனைச் சேர்ந்தவர்களும் செசரியா பட்டணத்தில் அநேக நாட்கள் தங்கியிருக்கிறார்கள். இந்தப் பட்டணத்தில் பவுல் அநேக நாள் தங்கியதற்கான காரணம் தெரியவில்லை. பவுல் எங்கேயிருந்தாலும் சும்மாயிருக்கமாட்டான். கர்த்தருடைய ஊழியத்தைச் செய்துகொண்டேயிருப்பான். ஒருவேளை செசரியா பட்டணத்தில் ஊழியத்திற்கு திறந்த வாசல் இருந்திருக்கும். பவுல் அதைப் பயன்படுத்தி, செசரியா பட்டணத்தில் அநேகநாள் தங்கி, கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்திருப்பான்.

பவுல் செசரியா பட்டணத்தில் அநேக நாள் தங்கியிருக்கையில், அகபு என்னும் பேர் கொண்ட ஒரு தீர்க்கதரிசி யூதேயாவிலிருந்து, செசரியாவுக்கு வருகிறான். தேசத்தில் பெரிய பஞ்சம் உண்டாகும் என்று அகபு ஏற்கெனவே தீர்க்கதரிசனமாக முன்னறிவித்திருக்கிறான். அப்போது இவன் எருசலேமிலிருந்து அந்தியோகியாவுக்கு வந்தான் (அப் 11:27,28). கர்த்தர் தம்முடைய வரங்களை, தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக, தம்முடைய ஊழியக்காரர்களுக்குக் கொடுக்கிறார். பரிசுத்த ஆவியானவர் பவுலுக்கு ஞானத்தை உணர்த்தும் வசனமும், அறிவை உணர்த்தும் வசனமும் கொடுத்திருக்கிறார். மேலும் குணமாக்கும் வரங்களையும் ஆவியானவர் அவனுக்குக் கொடுத்திருக்கிறார்.

அதே ஆவியானவர் அகபுவுக்கும், பிலிப்புவின் நாலு குமாரத்திகளுக்கும் தீர்க்கதரிசனம் சொல்லுகிற வரத்தையும் கொடுத்திருக்கிறார். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தீர்க்கதரிசன வரமே கர்த்தருடைய பிள்ளைகள் மத்தியில் அதிகமாய்க் கிரியை செய்தது. வரப்போகிற காரியங்களைத் தீர்க்கதரிசிகள் முன்னறிவித்து சொன்னார்கள். புதிய ஏற்பாட்டுக் காலத்திலோ, பரிசுத்த ஆவியானவர் தீர்க்கதரிசனம் சொல்லுகிற வரத்தோடு மேலும் அநேக வரங்களை தம்முடைய பிள்ளைகளுக்குக் கொடுக்கிறார்.

பவுலுக்கு தீர்க்கதரிசனம் சொல்லுவதற்காகவே, அகபு யூதேயா தேசத்திலிருந்து செசரியா பட்டணத்திற்கு வந்திருக்கவேண்டும். எருசலேமில் பவுலுக்கு வரப்போகும் கட்டுக்களைக் குறித்து அகபு முன்னறிவிக்கிறான். பழைய ஏற்பாட்டுக் கால தீர்க்கதரிசிகளைப்போல, தீர்க்கதரிசன வார்த்தையை சாதாரணமாகச் சொல்லாமல், அதை ஒரு அடையாளத்தோடு சொல்லுகிறான். அகபு பவுலினுடைய கச்சையை எடுத்து, தன் கைகளையும் கால்களையும் கட்டிக் கொண்டு, "இந்தக் கச்சையையுடையவனை எருசலேமிலுள்ள யூதர் இவ்விதமாய்க் கட்டி புறஜாதியார் கைகளில் ஒப்புக்கொடுப்பார்கள் என்று பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறார்" என்று தீர்க்கதரிசனமாகச் சொல்லுகிறான்.

தீர்க்கதரிசன வார்த்தைகளை நாம் சாதாரணமாகக் கேட்பதைவிட, தீர்க்கதரிசனச் செய்தியை அடையாளங்களினால் விவரித்துச் சொல்லும்போது, அது நம்முடைய மனதில் ஆழமாய்ப் பதியும். அகபு தீர்க்கதரிசன வார்த்தையைச் சொல்லும்போது, அதை தன்னுடைய வார்த்தையாகச் சொல்லாமல், "பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறார்" என்று சொல்லுகிறான். ஆவியானவர் பவுலுக்கு எருசலேமில் வரப்போகும் பாடுகளையும் உபத்திரவங்களையும் பற்றி ஏற்கெனவே முன்னறிவித்து சொல்லியிருக்கிறார். இப்போது அகபுவின் மூலமாக ஏற்கெனவே சொன்ன தீர்க்கதரிசனத்தை உறுதிபண்ணுகிறார். இதனால் பவுல் பல பாடுகளையும் உபத்திரவங்களையும் அனுபவிப்பதற்கு தன்னை ஆயத்தப்படுத்திக்கொள்கிறான்.

எருசலேமுக்குப் போகவேண்டாம்

இவைகளை நாங்கள் கேட்டபொழுது, எருசலேமுக்குப் போகவேண்டாமென்று, நாங்களும் அவ்விடத்தாரும் அவனை வேண்டிக்கொண்டோம் (அப் 21:12).

அகபுவின் தீர்க்கதரிசன வார்த்தைகளைக் கேட்டு பவுலைச் சேர்ந்தவர்களும், செசரியா பட்டணத்திலுள்ள விசுவாசிகளும் கலக்கமடைகிறார்கள். அவர்கள் அகபுவின் வார்த்தைகளைக் கேட்டபோது, பவுலிடத்தில் "எருசலேமுக்குப் போகவேண்டாம்" என்று வேண்டிக் கொள்கிறார்கள். அவனை எப்படியாவது எருசலேமுக்குப் போகவிடாமல் தடுத்துவிட வேண்டுமென்று முயற்சிபண்ணுகிறார்கள். பவுலிடத்தில் இதை வேண்டிக்கொள்ளும் போது, பவுலைச் சேர்ந்தவர்களோடு, செசரியா பட்டணத்திலுள்ள விசுவாசிகளும் சேர்ந்துகொள்கிறார்கள். இவர்களெல்லோரும் பவுலின்மீது பிரியமாயிருக்கிறார்கள்.

பவுல் கர்த்தருக்குப் பிரியமானவன். கிறிஸ்துவின் சுவிசேஷ ஊழியத்தை உற்சாகமாகச் செய்கிறவன். பல சமயங்களில் பவுல் தனக்கு நியமிக்கப்பட்ட ஊழியத்தைவிட அதிகமான ஊழியத்தைச் செய்கிறான். பல சமயங்களில் தன்னால் சுமக்க முடியாத பாரத்தையும் பவுல் தன்மீது சுமக்கிறான். மிகவும் தைரியமாக இருக்கிறான். பல சமயங்களில் கர்த்தருடைய ஊழியக்காரர்கள், தங்களுக்கு ஆபத்து இருக்கிறது என்று தெரிந்தும், தைரியமாய் முன்னேறிச் சென்று ஆபத்தில் சிக்கிகொள்கிறார்கள்.

பவுலோ தன்னுடைய சுயவிருப்பத்தினாலோ அல்லது சுய சித்தத்தினாலோ எருசலேமுக்குப் போகவில்லை. தெய்வீக வழிநடத்துதலினால் பவுல் எருசலேமை நோக்கிப் பிரயாணம் செய்கிறான். பவுலைச் சேர்ந்தவர்கள் அவன்மீதுள்ள அன்பினால், அவனை எருசலேமுக்குப் போகவிடாதவாறு தடைபண்ணப் பார்க்கிறார்கள். ஆனால் பவுலோ அழைக்கப்பட்ட அழைப்புக்கு உண்மையாயும் உறுதியாயும் இருக்கிறான்.

கர்த்தருடைய ஊழியத்தைச் செய்கிற நமக்கும் பாடுகளும் உபத்திரவங்களும் நியமிக்கப்பட்டிருக்கிறது. உபத்திரவங்கள் மிகவும் தூரத்திலிருக்கும்போது நாம் அதைப்பற்றி கவலைப்படுவதில்லை. ஆனால் அந்த உபத்திரவங்கள் நமக்கு அருகாமையில் நெருங்கி வரும்போது, நாம் கலங்கிப்போய்விடுகிறோம். நம்மில் சிலர் ஊழியத்தைவிட்டே பின்வாங்கிப் போய்விடுகிறோம். கலப்பையின்மேல் கை வைத்தவர்கள் பின்னிட்டுத் திரும்பிப்பார்க்கக் கூடாது. இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றுகிற ஒவ்வொருவரும், அவனவன் தன்னுடைய சிலுவையைச் சுமந்துகொண்டு, இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றி செல்லவேண்டும். எருசலேமுக்குப் போகும் விஷயத்தில் பவுல் பயப்படாமல், மனஉறுதியோடு, தைரியத்தோடிருக்கிறான்.

மரிப்பதற்கும் ஆயத்தமாயிருக்கிறேன்

அதற்குப் பவுல்: நீங்கள் அழுது என் இருதயத்தை ஏன் உடைத்துப்போகப் பண்ணுகிறீர்கள்? எருசலேமில் நான் கர்த்தராகிய இயேசுவின் நாமத்திற்காகக் கட்டப்படுவதற்கு மாத்திரமல்ல, மரிப்பதற்கும் ஆயத்தமாயிருக்கிறேன் என்றான் (அப் 21:13).

பவுல் கர்த்தருக்குள் தைரியமாயிருக்கிறான். பரிசுத்த ஆவியானவர் தன்னை அழைத்த அழைப்புக்கு பவுல் உண்மையுள்ளவனாயிருக்கிறான். பவுலைச் சேர்ந்தவர்களும், செசரியா பட்டணத்து விசுவாசிகளும், எருசலேமுக்குப் போகவேண்டாமென்று பவுலை வேண்டிக் கொள்கிறார்கள். ஆனால் பவுலோ அவர்களைக் கடிந்துகொள்கிறான். அவர்கள் அன்பினிமித்தமாகவே பவுலை இவ்வாறு வேண்டிக்கொள்கிறார்கள். பவுலும் அவர்கள் மீதுள்ள அன்பினாலேயே அவர்களைக் கடிந்துகொள்கிறான். அன்பினிமித்தமாக இவர்களுக்குள் வாக்குவாதமுண்டாயிற்று.

பவுலைச் சேர்ந்தவர்கள் அவன்மீது மிகவும் அன்பாயிருப்பதினால், அவனை எப்படியாவது எருசலேமுக்குப் போகவிடாமல் தடுத்துவிடவேண்டுமென்று விரும்புகிறார்கள். அவனுடைய முகத்திற்கு முன்பாக அழுகிறார்கள். பவுல் அவர்களைப் பார்த்து "நீங்கள் அழுது என் இருதயத்தை ஏன் உடைந்துபோகப்பண்ணுகிறீர்கள்" என்று கேட்கிறான். அவர்கள் அழுவது பவுலின் இருதயத்தை உடைந்துபோகப் பண்ணுகிறது. அவர்கள் அழுவது பவுலுக்கு ஒரு சோதனையாயிற்று. அவர்களுடைய கண்ணீரைப் பார்த்து பவுல் எருசலேமுக்குப் போகவேண்டும் என்னும் தன் தீர்மானத்தில் பலவீனமடைகிறான்.

எருசலேமில் தனக்கு கட்டுகள் வைக்கப்பட்டிருக்கிறது என்பது பவுலுக்குத் தெரியும். ஆனால் பவுலைச் சேர்ந்தவர்களோ, எருசலேமுக்குப்போக அவனை உற்சாகப்படுத்துவதற்குப் பதிலாக, அவனுடைய இருதயத்தை உடைந்துபோகப் பண்ணுகிறார்கள். நம்முடைய சிலுவையை எடுத்துக்கொண்டு, இயேசுவைப் பின்பற்ற வேண்டும் என்று கர்த்தராகிய இயேசுகிறிஸ்து கட்டளை கொடுத்திருக்கிறார். பவுல் தன்னுடைய சிலுவையை எடுத்துக்கொண்டு எருசலேமுக்குப் போக ஆயத்தமாயிருக்கிறான். எருசலேமில் அவனுக்கு கட்டுகள் இருக்கிறது என்பது தெரிந்தும், அங்கே போக ஆயத்தமாயிருக்கிறான். ஆனாலும் தன்னுடைய சிநேகிதர்கள் தனக்காக அழுகிறபோது, அவனுடைய இருதயம் உடைந்துபோகிறது.

பவுலைச் சேர்ந்தவர்கள் அவனுடைய ஊழியத்தில் அவனுக்கு உதவியாயிருக்கவேண்டும். அவனை உற்சாகப்படுத்தவேண்டும். ஆனால் அவர்களோ அவன்மீது அதிக பாசத்தைக் காண்பித்து, அவனுக்கு ஏற்படப்போகும் கட்டுகளுக்காக அவனுக்கு முன்பாகவே அழுது, அவனை எருசலேமுக்குப் போகவேண்டாம் என்று அவனிடத்தில் வேண்டிக்கொள்கிறார்கள். பவுலோ தன்னை வழிநடத்துகிற பரிசுத்த ஆவியானவருக்கு உண்மையுள்ளவனாக இருக்கிறான். தன்னுடைய மனச்சாட்சியில் சுத்தமுள்ளவனாக இருக்கிறான்.

நம்முடைய சிநேகிதர்களுக்கு பாடுகள் நியமிக்கப்பட்டிருந்தால், நாம் அவர்களுக்கு முன்பாக அழுது புலம்பி, அவர்களுடைய இருதயத்தை உடைந்து போகப்பண்ணக்கூடாது. அதற்குப் பதிலாக அவர்களுக்கு ஆறுதலான வார்த்தைகளைப் பேசவேண்டும். அவர்களை உற்சாகப்படுத்தவேண்டும்.

பவுலைச் சேர்ந்தவர்களோடு, செசரியா பட்டணத்திலுள்ள விசுவாசிகளும், பவுலுக்காக அழுகிறார்கள். எருசலேமுக்குப் போகவேண்டாமென்று அவனை வேண்டிக்கொள்கிறார்கள். பவுல் எருசலேமுக்குப் போவதினால், இனிமேல் என்ன நடைபெறும் என்பதை அவர்கள் முன்னறிந்திருந்தால், இப்போது பவுலுக்காக அழமாட்டார்கள். அவனுடைய இருதயத்தை உடைந்துபோகப் பண்ணமாட்டார்கள். சந்தோஷத்தோடே பவுலை எருசலேமுக்கு வழியனுப்புவார்கள். ஏனெனில் பவுல் எருசலேமுக்குப்போன பின்பு கைது பண்ணப்பட்டு, பின்பு அவன் செசரியாவுக்கு அனுப்பப்படுகிறான் (அப் 23:33). பவுல் செசரியாவில் இரண்டு வருஷம் தங்கியிருக்கிறான் (அப் 24:27). செசரியா பட்டணத்திற்கு பவுல் கட்டப்பட்டவனாக வரும்போது ஏராளமான காவல்காரரோடு வருகிறான் (அப் 24:23).

பவுல் செசரியா பட்டணத்தில் விடுதலையோடு இருந்ததைவிட, அவன் அங்கு சிறைப்பட்டிருந்த காலத்தில், செசரியா சபைக்கு அதிகமாய் ஊழியம் செய்திருக்கிறான். செசரியா பட்டணத்து விசுவாசிகளுக்கு, பிற்காலத்தில், பவுல் தங்களுக்கு ஆவிக்குரிய காரியங்களில் உதவியாகத் திரும்பி வருவான் என்பது தெரியவில்லை. ஆகையினால் அவர்கள் அழுது பவுலின் இருதயத்தை உடையப்பண்ணுகிறார்கள். எருசலேமக்குப் போகவேண்டாமென்று அவனை வேண்டிக்கொள்கிறார்கள்.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் பல சமயங்களில் நாம் நமக்கு ஆசீர்வாதத்தையே எதிர்பார்க்கிறோம். கட்டுகளும் உபத்திரவங்களும் நமக்கு வந்தால், உடனடியாக அதிலிருந்து தப்பிப்பதற்கான வழியை தேடிப்பார்க்கிறோம். நமக்கு நாமே அழுது, நம்முடைய இருதயத்தை உடைந்துபோகப்பண்ணுகிறோம். நமக்கு பிரச்சனை வருகிற காலங்களில், ஆவியில் சோர்ந்து போகாமல், தேவன் நமக்கு வாக்குப்பண்ணியிருக்கிற பாதுகாப்பையும் பராமரிப்பையும் தியானித்துக்கொண்டிருக்க வேண்டும். கர்த்தர் தம்முடைய தெய்வீக ஆதீனத்தில், தம்முடைய பராமரிப்பை, நமக்குக் கொடுப்பார் என்று விசுவாசத்தோடு எதிர்பார்த்து, கர்த்தரையே சார்ந்திருக்கவேண்டும்.

எவ்வளவு பிரச்சனையிருந்தாலும் பவுல் பின்வாங்கிப்போகாமல் முன்னேறிச் செல்ல தீர்மானித்திருக்கிறான். பவுலைச் சேர்ந்தவர்களோ அழுது அவனுடைய இருதயத்தை உடையப்பண்ணுகிறார்கள். ஆனால் பவுலோ தனக்கு நியமித்திருக்கிற எல்லா கட்டுகளையும், உபத்திரவங்களையும், வேதனைகளையும் சந்திப்பதற்கு ஆயத்தமாயிருக்கிறான். கர்த்தராகிய இயேசுவின் நாமத்திற்காக பாடுகளை அனுபவிக்க தான் ஆயத்தமாயிருக்கும்போது, தன்னைச் சேர்ந்தவர்கள் ஏன் அழவேண்டும் என்று அவர்களிடத்தில் கேட்கிறான்.

கர்த்தர் பவுலை சந்தித்தபோது "அவன் என்னுடைய நாமத்தினிமித்தம் எவ்வளவாய் பாடுபடவேண்டும் என்பதை நான் அவனுக்கு காண்பிப்பேன்" (அப் 9:16) என்று கூறினார். கர்த்தருக்காக பாடுகளை அனுபவிப்பதற்கு பவுல் ஆயத்தமாயிருக்கிறான். பாடுகளை நினைத்து பயந்து ஓடிப்போகாமல், அதை மனப்பூர்வமாக வரவேற்கிறான். தேவனுடைய கிருபையினால் பவுல் பாடுகளை சந்திக்கவும், பாடுகளில் சந்தோஷமாயிருக்கவும் ஆயத்தமாயிருக்கிறான்.

கர்த்தராகிய இயேசுவின் நாமத்திற்காக பவுல் கட்டப்படுவதற்கு மாத்திரமல்ல, அவன் மரிப்பதற்கும் ஆயத்தமாயிருக்கிறான். பிரச்சனைகள் வரும்போது, பிரச்சனையிலேயே கொடிதான பிரச்சனையை பிரச்சனையின் உச்சக்கட்டத்தை நாம் தியானித்துப் பார்க்கவேண்டும். அப்போதுதான் நமக்குப் பிரச்சனைகள் வரும்போது, அதைச் சந்திப்பதற்கு நம்மை ஆயத்தப்படுத்திக்கொள்ள முடியும்.

பவுல் கட்டப்படுவதற்கும் ஆயத்தமாயிருக்கிறான். மரிப்பதற்கும் ஆயத்தமாயிருக்கிறான். இவையெல்லா வற்றையும் இயேசுகிறிஸ்துவின் நாமத்திற்காகவே சந்திக்க விரும்புகிறான். ஒரு மனுஷன் தன்னுடைய ஜீவனுக்காக தனக்குள்ளது எல்லாவற்றையும் கொடுத்துவிடுவான். ஆனால் பவுலோ இயேசுகிறிஸ்துவின் நாம மகிமைக்காக, அவருடைய ஊழியத்திற்காக, தன்னுடைய ஜீவனையே கொடுக்க ஆயத்தமாயிருக்கிறான்.

கர்த்தருடைய சித்தம் ஆகக்கடவது

அவன் சம்மதியாதபடியினாலே, கர்த்தருடைய சித்தம் ஆகக்கடவதென்று அமர்ந்திருந்தோம் (அப் 21:14).

பவுல் தன்னைச் சேர்ந்தவர்களின் ஆலோசனையை சம்மதிக்கவில்லை. ஆகையினால் பவுலைச் சேர்ந்தவர்கள் அவனுடைய ஆலோசனைக்கு சம்மதிக்கிறார்கள். பவுல் எருசலேமுக்குப் போவதை வார்த்தையினாலும், அழுகையினாலும் தடை செய்யப்பார்த்தார்கள். ஆனால் அவனோ இயேசுகிறிஸ்துவுக்காக கட்டப்படுவதற்கும், மரிப்பதற்கும் ஆயத்தமாகயிருப்பதாக அறிவித்துவிடுகிறான். பவுலைச் சேர்ந்தவர்களால், தங்களுடைய ஆலோசனைக்கு, அவனை சம்மதிக்க வைக்க முடியவில்லை. ஆகையினால் அவர்கள் தங்கள் முயற்சியை கைவிட்டுவிடுகிறார்கள்.

பவுல் தன்னுடைய ஊழியப்பாதையில் தெளிந்த சிந்தனையோடு முன்னேறிப் போகிறான். கர்த்தருக்காக தான் என்ன செய்யவேண்டும் என்பதில் தீர்மானத்தோடிருக்கிறான். கர்த்தருக்காக கட்டப்படுவதற்கும், மரிப்பதற்கும் பவுல் தீர்மானமாகச் சிந்தித்து ஆயத்தமாயிருக்கிறான். தன்னுடைய தீர்மானத்தில் உறுதியாயிருக்கிறான்.

கர்த்தருக்காக ஊழியம் செய்கிற விஷயத்தில் ஒரு சிலர் உறுதியான தீர்மானத்தோடு இருக்கும்போது, நாம் அவர்களுடைய தீர்மானத்தை பாழாக்கிவிடக்கூடாது. நம்முடைய அதிகாரத்தையும், செல்வாக்கையும் அவர்கள்மீது திணித்து, அவர்களுடைய உறுதியைக் குலைத்துவிடக்கூடாது.

பவுலைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய ஆலோசனையை அவன்மீது திணிக்கவில்லை. தங்களுடைய ஆலோசனைக்கு பவுலைச் சம்மதிக்க வைக்க முயற்சிபண்ணுகிறார்கள். ஆனால் பவுலோ சம்மதிக்கவில்லை. அதன்பின்பு பவுலுடைய காரியத்தை தேவனுடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்துவிடுகிறார்கள். கர்த்தருடைய சித்தம் ஆகக்கடவது என்று அமர்ந்திருக்கிறார்கள்.

பவுல் இயேசுகிறிஸ்துவுக்காக பாடுகளை அனுபவிக்க ஆயத்தமாயிருக்கிறான். தன்னுடைய தீர்மானத்தில் உறுதியாயிருக்கிறான். இந்த விஷயத்தில் கர்த்தருடைய சித்தம் ஆகக்கடவது என்று பவுலைச் சேர்ந்தவர்கள் அமைதியாயிருக்கிறார்கள். அதற்குமேல் அவர்கள் அவனை தொந்தரவு பண்ணவில்லை.

பவுல் தன்னுடைய தீர்மானத்தில் உறுதியாயிருப்பதை அவனைச் சேர்ந்தவர்கள் காண்கிறார்கள். தேவனுடைய சித்தம் இதன் மூலமாக நிறைவேறப்போகிறது என்பதையும் அவர்கள் காண்கிறார்கள். தேவனுடைய சித்தத்திற்கு விரோதமாக யாராலும் போராட முடியாது. கர்த்தருடைய சித்தம் நிச்சயமாய் நிறைவேறும். தேவனுடைய சித்தத்திற்கு மாற்று ஆலோசனைகளை யாரும் சொல்லக்கூடாது. பவுலின் காரியத்தை தேவனிடத்தில் ஒப்புக்கொடுக்கிறார்கள். அவனுடைய சிந்தனைகளையும் செய்கைகளையும் இயேசுகிறிஸ்து தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக ஆளுகை செய்யுமாறு ஒப்புக்கொடுக்கிறார்கள். இனிமேல் தங்களுடைய சித்தமல்ல, கர்த்தரடைய சித்தம் ஆகக்கடவது என்று கர்த்தருடைய சமுகத்தில் அமர்ந்திருக்கிறார்கள்.

தேவன் சர்வஞானமுள்ளவர். சகலவற்றையும் நன்மைக்கேதுவாக எவ்வாறு நடத்துவது என்பது அவருக்குத் தெரியும். ஆகையினால் தேவனுடைய சித்தம் எப்போதுமே நமக்கு நன்மையாகவும் ஆசீர்வாதமாகவும் இருக்கும். நாம் ஒவ்வொரு காரியத்தைக் குறித்துத் தீர்மானிக்கும்போதும், "கர்த்தருடைய சித்தம் ஆகக்கடவது" என்று சொல்லி தீர்மானம் செய்யவேண்டும். கர்த்தருடைய சித்தத்திற்கு மிஞ்சின காரியம் ஒன்றுமில்லை. தேவனுடைய சித்தமே ஆகும். ஏனெனில் தேவனுடைய சித்தத்தில் அவருடைய ஞானம் விளங்குகிறது.

நமக்குப் பாடுகளும் வேதனைகளும் வரும்போது, நம்முடைய துன்பமும் துயரமும் அதிகரிக்கலாம். இந்த வேளையில்கூட கர்த்தருடைய சித்தம் ஆகக்கடவது என்று அவரிடத்தில் ஜெபிக்கவேண்டும். பிரச்சனைகள் வரும்போது நாம் அதை பிரச்சனையாக நினைக்கக்கூடாது. அதை கர்த்தருடைய சித்தமாக நினைக்கவேண்டும். அப்போதுதான் பயம் நம்மைவிட்டு நீங்கும். நம்முடைய ஜீவியத்தில் கர்த்தருடைய சித்தம் நிறைவேறுவதற்கு நம்மை ஒப்புக்கொடுப்போம்.

செசரியாவிலிருந்து எருசலேமுக்குப் பிரயாணம் அப் 21 : 15-17

அப் 21:15. அந்த நாட்களுக்குப்பின்பு நாங்கள் பிரயாண சாமான்களை ஆயத்தம் பண்ணிக்கொண்டு எருசலேமுக்குப் போனோம்.

அப் 21:16. செசரியா பட்டணத்திலுள்ள சீஷரில் சிலர் எங்களுடனேகூட வந்ததுமன்றி, சீப்புருதீவானாகிய மினாசோன் என்னும் ஒரு பழைய சீஷனிடத்திலே நாங்கள் தங்கும்படியாக அவனையும் தங்களோடே கூட்டிக்கொண்டு வந்தார்கள்.

அப் 21:17. நாங்கள் எருசலேமுக்கு வந்தபோது, சகோதரர் எங்களைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டார்கள்.

எருசலேமுக்குப் போனோம்

அந்த நாட்களுக்குப்பின்பு நாங்கள் பிரயாண சாமான்களை ஆயத்தம் பண்ணிக்கொண்டு எருசலேமுக்குப் போனோம் (அப் 21:15).

பவுல் செசரியாவிலிருந்து எருசலேமுக்குப் பிரயாணம் பண்ணுகிறான். பவுலைச் சேர்ந்தவர்களும், செசரியா பட்டணத்திலுள்ள சீஷரில் சிலரும் பவுலுடனே கூட எருசலேமுக்கு போகிறார்கள். எருசலேமுக்குப் போவதற்கு முன்பாக அவர்கள் பிரயாணச் சாமான்களை ஆயத்தம்பண்ணுகிறார்கள். யுத்தவீரர்கள் தங்களுடைய சாமான்களைத் தாங்களே சுமப்பதுபோல, கர்த்தருடைய ஊழியக்காரர்கள் தங்களுடைய பிரயாண சாமான்களை தாங்களே சுமந்துகொண்டு போகிறார்கள்.

பவுல் எருசலேமுக்குப் போவதற்குப் பதிலாக, தன்னைச் சேர்ந்தவர்களின் ஆலோசனையைக் கேட்டு, வேறு ஏதாவது பட்டணத்திற்குப்போவோம் என்று சொல்லியிருந்தால், அவர்களெல்லோரும் மிகுந்த சந்தோஷத்தோடே அவனோடேகூட, அந்தப் பட்டணத்திற்குப் போயிருப்பார்கள். ஆனால் பவுலோ எருசலேமுக்குப் போகவேண்டுமென்று உறுதியாயிருக்கிறான். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் அவனைச் சேர்ந்தவர்கள், பவுலை தனியாக விட்டுவிடவில்லை. "நீயே தனியாகப் போய்க்கொள்" என்றோ, "நாமும் பவுலோடு போய் எருசலேமில் மரிப்போம்" என்றோ அவனுடைய உடன் ஊழியர்கள் சொல்லவில்லை. பவுல் எங்குபோனாலும், அவனைச் சேர்ந்தவர்கள் அவனோடு கூடபோவதற்கு ஆயத்தமாயிருக்கிறார்கள்.

பவுலிடத்தில் காணப்படுகிற துணிச்சல் அவனைச் சேர்ந்தவர்களிடத்திலும் காணப்படுகிறது. பவுலோடுகூட செசரியா பட்டணத்திலுள்ள சீஷரில் சிலரும் எருசலேமுக்குப்போகிறார்கள். பவுலோடு கூடயிருந்து, ஆவிக்குரிய காரியங்களைக் குறித்து அவனோடு பேசி, ஆவிக்குரிய நன்மைகளைப் பெற்றுக்கொள்ள விரும்புகிறார்கள். அதற்காகவே அவர்கள் பவுலோடுகூட எருசலேமுக்குப் போகிறார்கள்.

சீப்புரு தீவானாகிய மினாசோன்

செசரியா பட்டணத்திலுள்ள சீஷரில் சிலர் எங்களுடனேகூட வந்ததுமன்றி, சீப்புருதீவானாகிய மினாசோன் என்னும் ஒரு பழைய சீஷனிடத்திலே நாங்கள் தங்கும்படியாக அவனையும் தங்களோடே கூட்டிக்கொண்டு வந்தார்கள் (அப் 21:16).

பவுலைச் சேர்ந்தவர்கள் தங்களோடு மினாசோன் என்பவனையும் எருசலேமுக்கு அழைத்துக்கொண்டு போகிறார்கள். அவனுக்கு எருசலேமில் ஒரு வீடு இருக்கிறது. இவன் சீப்புரு தீவைச் சேர்ந்தவன். இயேசுகிறிஸ்துவின் பழைய சீஷர்களில் இவனும் ஒருவன். இவர்களெல்லோரும் மினாசோனின் வீட்டில் தங்கும்படியாக அவனையும் தங்களோடு எருசலேமுக்குக் கூட்டிக்கொண்டு போகிறார்கள்.

அக்காலத்தில் ஊழியக்காரர்கள் வெவ்வேறு பட்டணங்களுக்குப் பிரயாணம்பண்ணும்போது, அவர்களுக்கு தங்குவதற்கு இடம் கிடைப்பது கடினம். எருசலேமில் பண்டிகை காலம் வந்துவிட்டால் சத்திரத்தில் தங்குவதற்கு இடம் இருக்காது. சிநேகிதருடைய வீடுகளில் தங்கவேண்டும். சத்திரத்தில் வாடகையும் அதிகமாக இருக்கும். கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்கு பெருந்தொகையை வாடகையாகக் கொடுக்க பணம் இருக்காது. ஆகையினால் ஊழியக்காரர்கள் எருசலேமுக்குப் போகும்போது, தங்களுக்குத் தெரிந்தவர்களின் வீடுகளில் தங்குவது வழக்கம்.

சீப்புரு தீவானாகிய மினாசோன் நற்குணமுள்ளவன். அவன் பவுலையும், அவனோடு சேர்ந்தவர்களையும் எருசலேமிலுள்ள தன்னுடைய வீட்டில் தங்கவைத்து உபசரிக்க விரும்புகிறான். எருசலேமில் பவுலுக்கு கட்டுகள் நியமிக்கப்பட்டிருக்கிறது என்பது மினாசோனுக்கும் தெரிந்திருக்கும். ஆனால் இவனோ அதைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல், பவுலுக்கும் அவனைச் சேர்ந்தவர்களுக்கும் தன் வீட்டில் தங்குவதற்கு இடம் கொடுக்கிறான்.

மினாசோன் என்பவன் பழைய சீஷனென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவன் ஆரம்பகாலத்திலிருந்தே சீஷனாகயிருக்கிறான். இவன் பல வருஷங்களாக இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து அவருக்கு சீஷனாகயிருக்கிறான். இயேசு கிறிஸ்துவின் பழைய சீஷனாகயிருப்பது மிகப்பெரிய சிலாக்கியம். கர்த்தருடைய கிருபையினால் இப்படிப்பட்டவர்கள், விசுவாசத்தைவிட்டு விலகிப்போய்விடாமல், விசுவாசத்தைக் காத்துக்கொண்டு, நீண்டகாலமாக கிறிஸ்துவின் சீஷராகயிருக்கிறார்கள். இப்படிப்பட்ட பழைய சீஷர்களுடைய வீட்டில் ஊழியக்காரர்கள் தங்கவிரும்புவார்கள். இவர்களுடைய ஆவிக்குரிய அனுபவங்கள் மற்றவர்களுக்குப் பிரயோஜனமுள்ளதாக யிருக்கும். தங்களுடைய அனுபவத்தின் மூலமாக இவர்கள் மற்றவர்களுக்கு ஞானத்தைப் போதிப்பார்கள்.

சகோதரர் ஏற்றுக்கொண்டார்கள்

நாங்கள் எருசலேமுக்கு வந்தபோது, சகோதரர் எங்களைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டார்கள் (அப் 21:17).

எருசலேமிலுள்ள சகோதரர் பவுலையும் அவனைச் சேர்ந்தவர்களையும் சந்தோஷமாய் ஏற்றுக்கொள்கிறார்கள். பவுலை ஏற்றுக்கொள்கிறார்கள் என்னும் வார்த்தைக்கு, "பவுலின் உபதேசத்தை ஏற்றுக்கொள்கிறார்கள்" என்பது பொருளாகும். பேதுருவின் வார்த்தையை சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள் (அப் 2:41). அது போலவே எருசலேமிலுள்ள சகோதரர்கள் பவுலின் வார்த்தையை சந்தோஷமாய் ஏற்றுக்கொள்கிறார்கள்.

இக்காலத்தில் பவுலைப்போன்ற ஊழியக்காரர்கள் நம் மத்தியில் வந்தால், நாமும் அவர்களை சந்தோஷமாய் ஏற்றுக்கொள்வோம். அவர்களை ஏற்றுக்கொள்வதைவிட, அவர்களுடைய வார்த்தைகளை நாம் சந்தோஷமாய் ஏற்றுக்கொள்ளவேண்டும். அவர்களுடைய உபதேசத்தை நம்முடைய இருதயத்தில் ஏற்றுக்கொள்வதே நமக்கு மிகுந்த ஆசீர்வாதம்.

நியாயப்பிரமாணத்தை கைக்கொண்டு நடக்கிறவன் அப் 21 : 18-26

அப் 21:18. மறுநாளிலே பவுல் எங்களைக் கூட்டிக்கொண்டு, யாக்கோபினிடத்திற்குப் போனான்; மூப்பரெல்லாரும் அங்கே கூடி வந்தார்கள்.

அப் 21:19. அவர்களை அவன் வினவி, தன் ஊழியத்தினாலே தேவன் புறஜாதிகளிடத்தில் செய்தவைகளை ஒவ்வொன்றாய் விவரித்துச் சொன்னான்.

அப் 21:20. அதைக் அவர்கள் கேட்டுக் கர்த்தரை மகிமைப்படுத்தினார்கள். பின்பு அவர்கள் அவனை நோக்கி: சகோதரனே, யூதர்களுக்குள் அநேகமாயிரம்பேர் விசுவாசிகளா யிருக்கிறதைப் பார்க்கிறீரே, அவர்களெல்லாரும் நியாயப்பிரமாணத்துக்காக வைராக்கிய முள்ளவர்களாயிருக்கிறார்கள்.

அப் 21:21. புறஜாதிகளிடத்திலிருக்கிற யூதரெல்லாரும் தங்கள் பிள்ளைகளுக்கு விருத்தசேதனம் பண்ணவும், முறைமைகளின்படி நடக்கவும் வேண்டுவதில்லையென்று நீர் சொல்லி, இவ்விதமாய் அவர்கள் மோசேயை விட்டுப் பிரிந்துபோகும்படி போதிக்கிறீரென்று இவர்கள் உம்மைக் குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறார்கள்.

அப் 21:22. இப்பொழுது செய்யவேண்டியது என்ன? நீர் வந்திருக்கிறீரென்று இவர்கள் கேள்விப்பட்டு, நிச்சயமாகக் கூட்டங் கூடுவார்கள்.

அப் 21:23. ஆகையால் நாங்கள் உமக்குச் சொல்லுகிறபடி நீர் செய்யவேண்டும்; அதெப்னவென்றால், பிரார்த்தனை பண்ணிக் கொண்டவர்களாகிய நாலுபேர் எங்களிடத்தில் இருக்கிறார்கள்.

அப் 21:24. அவர்களை நீர் சேர்த்துக் கொண்டு, அவர்களுடனேகூடச் சுத்திகரிப்பு செய்து கொண்டு, அவர்கள் தலைச்சவரம்பண்ணிக் கொள்வதற்குச் செல்லுமானதைச் செலவு செய்யும்; அப்படிச் செய்தால் உம்மைக் குறித்துக் கேள்விப்பட்ட காரியங்கள் அபத்தமென்றும், நீரும் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டு நடக்கிறவரென்றும் எல்லாரும் அறிந்துகொள்வார்கள்.

அப் 21:25. விசுவாசிகளான புறஜாதியார் இப்படிப்பட்டவைகளைக் கைக்கொள்ளாமல், விக்கிரகங்களுக்குப் படைத்ததற்கும், இரத்தத்திற்கும், நெருக்குண்டு செத்ததிற்கும், வேசித்தனத்திற்கும், விலகியிருக்க வேண்டுமென்று நாங்கள் தீர்மானம்பண்ணி, அவர்களுக்கு எழுதியனுப்பினோமே என்றார்கள்.

அப் 21:26. அப்பொழுது பவுல் அந்த மனுஷரைச் சேர்த்துக்கொண்டு, மறுநாளிலே அவர்களுடனேகூடத் தானும் சுத்திகரிப்பு செய்துகொண்டு, தேவாலயத்தில் பிரவேசித்து, அவர்களில் ஒவ்வொருவனுக்காக வேண்டிய பலிசெலுத்தித் தீருமளவும் சுத்திகரிப்பு நாட்களை நிறைவேற்றுவேனென்று அறிவித்தான்.

யாக்கோபு

மறுநாளிலே பவுல் எங்களைக் கூட்டிக்கொண்டு, யாக்கோபினிடத்திற்குப் போனான்; மூப்பரெல்லாரும் அங்கே கூடி வந்தார்கள் (அப் 21:18).

பவுலும் அவனைச் சேர்ந்தவர்களும் யாக்கோபுவையும், எருசலேமிலுள்ள சபையின் மூப்பர்களையும் சந்திப்பதற்காகப் போகிறார்கள். இக்காலத்தில் அப்போஸ்தலர்களில் யாக்கோபு மாத்திரமே எருசலேமில் வாசம்பண்ணுகிறார். எருசலேமில் ஒரு அப்போஸ்தலன் இருக்கவேண்டுமென்று, மற்ற அப்போஸ்தலர்களெல்லாரும் தீர்மானம் செய்து, யாக்கோபுவை இங்கே வைத்திருக்கிறார்கள். எல்லா தேசத்திலுமிருந்து யூதர்கள் எருசலேமுக்கு வருவார்கள். கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களும் இங்கு வருவார்கள். இவர்களெல்லோருக்கும் ஊழியம் செய்வதற்காக யாக்கோபு எருசலேமிலேயே தங்கியிருக்கிறான்.

பவுல் எருசலேமுக்கு வந்தபோது, யாக்கோபுவும், சபையின் மற்ற மூப்பர்களும் எருசலேமிலிருக்கிறார்கள். பவுல் அவர்களை வினவுகிறான். அவர்களுடைய நலம் விசாரிக்கிறான். ஊழியக்காரியங்களையும் விசாரிக்கிறான். யூதர்கள் ஒருவரை வாழ்த்தும்போது, "உங்களுக்கு இரட்சிப்பு உண்டாவதாக" என்று சொல்லி வாழ்த்துவது வழக்கம். இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் மத்தியிலும் இவ்வாறு வாழ்த்துகிற பழக்கம் தொடர்ந்து வருகிறது. ஒருவருக்கொருவர் தங்கள் அன்பை வெளிப்படுத்தும் விதமாகவும், இருவரும் சேர்ந்து கர்த்தரை துதிக்கும் விதமாகவும் விசுவாசிகள் வாழ்த்துகிறார்கள். "உங்களுக்கு இரட்சிப்பு உண்டாவதாக" என்று சொல்லும்போது இயேசுகிறிஸ்துவின் நாமம் மகிமைப்படுகிறது. ஏனெனில் இயேசுகிறிஸ்துவின் நாமமேயல்லாமல் வேறு எந்த நாமத்தினாலும் மனக்குலத்திற்கு இரட்சிப்பு இல்லை.

விவரித்துச் சொன்னான்

அவர்களை அவன் வினவி, தன் ஊழியத்தினாலே தேவன் புறஜாதிகளிடத்தில் செய்தவைகளை ஒவ்வொன்றாய் விவரித்துச்சொன்னான் (அப் 21:19).

புறஜாதியார் மத்தியில் ஊழியம் செய்வதற்காக தேவன் பவுலை அங்கு அனுப்பியிருக்கிறார். பவுலும் தேவன் புறஜாதிகளிடத்தில் செய்தவைகளை அவர்களுக்கு ஒவ்வொன்றாய் விவரித்துச் சொல்லுகிறான். யாக்கோபும், சபையின் மூப்பரெல்லாரும் பவுலின் சாட்சியைக் கேட்டு மிகுந்த சந்தோஷமடைகிறார்கள். பவுல் தன் சுயமுயற்சியினால் புறஜாதியார் மத்தியில் ஊழியம் செய்யவில்லை. தேவனே பவுலுடைய ஊழியத்தில் கிரியை செய்கிறார். "நானல்ல, எனக்குள்ளேயிருக்கிற தேவனுடைய கிருபையினாலேயே நான் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்கிறேன்" என்று பவுல் சாட்சியாய் அறிவிக்கிறான். தேவனுடைய கிருபை தன்னுடைய ஊழியத்தில் பிரத்தியட்சமாய் வெளிப்பட்டதை பவுல் அவர்களுக்குச் சாட்சியாக அறிவிக்கிறான். இதன் மூலமாக பவுல் கர்த்தரைத் துதிக்கிறான்.

தேவன் பவுலின் ஊழியத்தினாலே, புறஜாதிகளிடத்தில் செய்தவைகளைக் கேட்டபோது, அவர்களெல்லோரும் கர்த்தரை மகிமைப்படுத்துகிறார்கள். தனக்கு பெருமையோ, மரியாதையோ, புகழோ உண்டாகவேண்டும் என்பதற்காக பவுல் தன் ஊழியத்தில் நடைபெற்ற சம்பவங்களைச் சொல்லவில்லை. தேவனுக்கே மகிமை உண்டாகவேண்டும் என்பதுதான் பவுலின் விருப்பம். ஆகையினால் பவுல் தன் ஊழியக்காரியங்களைப் பற்றிச் சொல்லும்போது, இவையெல்லாவற்றையும் தேவனே செய்திருக்கிறார் என்று சொல்லுகிறான். தன்னுடைய சாட்சியைக் கேட்கிறவர்கள் எல்லோரும் தேவனை மகிமைப்படுத்துமாறு அவர்களை வழிநடத்துகிறான். அவர்களும் பவுலின் வார்த்தைகளைக் கேட்டு கர்த்தரை மகிமைப்படுத்துகிறார்கள்.

புறஜாதியார் மத்தியில் தேவன் பவுலைக்கொண்டு பெரிய காரியங்களைச் செய்திருக்கிறார். இவையெல்லாவற்றையும் பவுல் அவர்களிடத்தில் சாட்சியாய் அறிவிக்கிறான். இவற்றைக் கேட்டபோது, யாக்கோபும் மூப்பர்களும் பவுலின்மீது பொறாமைப்படவில்லை. அவனுடைய ஊழியத்தில் மிகப்பெரிய வளர்ச்சி உண்டாயிருப்பதைக் கண்டு இவர்கள் வருத்தப்படவில்லை. இதற்குப் பதிலாக அவர்கள் கர்த்தரை மகிமைப்படுத்துகிறார்கள். கர்த்தர் மகிமைப்படும்போது பவுல் சந்தோஷப்படுகிறான்.

யூதர்களுக்குள் விசுவாசிகள்

அதைக் அவர்கள் கேட்டுக் கர்த்தரை மகிமைப்படுத்தினார்கள். பின்பு அவர்கள் அவனை நோக்கி: சகோதரனே, யூதர்களுக்குள் அநேகமாயிரம் பேர் விசுவாசிகளாயிருக்கிறதைப் பார்க்கிறீரே, அவர்களெல்லாரும் நியாயப்பிரமாணத்துக்காக வைராக்கிய முள்ளவர்களாயிருக்கிறார்கள் (அப் 21:20).

எருசலேம் நகரத்தில் ஏராளமான யூதர்கள் இருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிற யூதர்களும் இங்கு அநேகமாயிரம் பேர் இருக்கிறார்கள். பவுலின் ஊழியத்திற்கும், எருசலேமிலே யூதர்கள் மத்தியிலே நடைபெறுகிற ஊழியத்திற்கும் வித்தியாசமுள்ளது. பவுல் யூதருடைய முறைமைகளுக்கும் நியாயப்பிரமாணத்திற்கும் எதிர்த்து நிற்பதாக எருசலேமிலுள்ள யூதர்கள் நினைக்கிறார்கள். நியாயப்பிரமாணத்திற்கு விரோதமாகப் பேசினால் யூதர்கள் அந்தப் பிரசங்கத்தைச் செவிகொடுத்து கேட்கமாட்டார்கள். பவுல் எருசலேமிலுள்ள யூதர்களோடு ஒத்துப்போனால்தான், அவனால் அவர்கள் மத்தியில் ஊழியம் செய்ய முடியும். இதற்காக யாக்கோபும் சபையின் மூப்பர்களும் பவுலுக்கு ஒரு சில ஆலோசனைகள் சொல்லுகிறார்கள்.

புறஜாதியார் மனந்திரும்பி இரட்சிக்கப்படும்போது அவர்கள் யூதருடைய முறைமையை பின்பற்ற வேண்டிய அவசியம் எதுவுமில்லை. ஆனால் எருசலேமிலுள்ள யூதர்கள், இயேசுகிறிஸ்துவை தங்கள் ஆண்டவராக ஏற்றுக்கொண்ட பின்பு, அவர்கள் யூதருடைய முறைமையைப் பின்பற்றுகிறார்கள். யூதருடைய பாரம்பரிய முறைமை மரித்துப்போய்விட்டது. ஆனால் இன்னும் அடக்கம்பண்ணப்படவில்லை. மரித்துப்போனது அடக்கம் பண்ணினால்தான் அது அவர்களைவிட்டு நீங்கும். அது முழுவதுமாக மரித்துப்போகாமல், குற்றுயிராய் விட்டுவிடப்பட்டது போல இருக்கிறது.

யூதர்களுக்குள் விசுவாசிகளானவர்களில் அநேகமாயிரம் பேர் நியாயப்பிரமாணத்திற்காக இன்னும் வைராக்கியமுள்ளவர்களா யிருக்கிறார்கள். பவுலுக்கு ஆலோசனை சொல்லுகிறவர்கள் அவனை "சகோதரனே" என்று அழைக்கிறார்கள். எருசலேமிலுள்ளவர்கள் நியாயப்பிரமாணத்திற்காக பக்தி வைராக்கியம் காண்பிக்கிறார்கள். பவுலோ நியாயப்பிரமாணம் செத்துப்போயிற்று என்று பிரசங்கிக்கிறான். உபதேசத்தில் இவர்களுக்குள் வித்தியாசமிருக்கிறது. ஆனாலும் அவர்கள் பவுலை "சகோதரனே" என்று தான் கூப்பிடுகிறார்கள்.

எருசலேமிலுள்ள மேலறையில், இயேசுகிறிஸ்துவின் சீஷர்களும், மற்ற விசுவாசிகளும் ஒருமனப்பட்டு கூடிவந்து கர்த்தரைத் துதித்தார்கள். பரிசுத்த ஆவியானவர் அவர்கள்மீது வந்திறங்கினார். அப்போது அவர்கள் நூற்றியிருபது பேர் மாத்திரமே இருந்தார்கள். இப்போது விசுவாசிகளின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. எத்தனைபேர் என்று தெளிவாக எழுதப்படவில்லை. அவர்கள் "அநேகமாயிரம்பேர்" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆரம்பம் அற்பமாக இருந்தாலும், நாம் அதை அசட்டை பண்ணக்கூடாது. சிறிய காரியத்தை தேவன் பெரிதாக மாற்ற வல்லவர்.

பவுல் தன் ஊழியத்தினாலே தேவன் புறஜாதிகளிடத்தில் செய்தவைகளை ஒவ்வொன்றாய் விவரித்துச் சொல்லுகிறான். புறஜாதியார் மத்தியில் பவுலின் ஊழியம் சிறப்பாக நடப்பதற்கு இவனுடைய வார்த்தைகள் சாட்சி கொடுக்கிறது. அதே சமயத்தில் தேவன் எருசலேமிலும், யூதர்கள் மத்தியிலே பலத்த கிரியைகளைச் செய்கிறார். அதனால், இங்கு அநேகமாயிரம்பேர் விசுவாசிகளாயிருக்கிறார்கள். இங்கு நடைபெறுகிற ஊழியத்திற்கு, விசுவாசிகளின் எண்ணிக்கை அதிகரித்திருப்பது ஒரு சாட்சியாக இருக்கிறது. பவுல் புறஜாதியார் மத்தியில் கிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்து வந்தாலும், யூதர்களும் இரட்சிக்கப்பட வேண்டும் என்று அவன் ஜெபிக்கிறான்.

எருசலேமிலுள்ள யூதர்களுக்குள் அநேகமாயிரம்பேர் விசுவாசிகளா யிருக்கிறார்கள். இவர்களெல்லோரும் நியாயப்பிரமாணத்திற்காக வைராக்கிய முள்ளவர்களாயிருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவே மெய்யான மேசியா என்னும் சத்தியத்தை இந்த யூதர்கள் விசுவாசிக்கிறார்கள். அதே வேளையில் மோசேயின் பிரமாணமும் தேவனிடத்திலிருந்து வந்திருக்கிறது என்பதையும் அறிந்து வைத்திருக்கிறார்கள்.

மோசேயின் பிரமாணத்தைக் கைக்கொள்வதினால் தங்களுக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதம் கிடைக்கிறது என்றும் விசுவாசிக்கிறார்கள். ஆகையினால் மோசேயின் பிரமாணத்தை விட்டு வெளியேறி வர இவர்களுக்கு விருப்பமில்லை. இயேசுகிறிஸ்துவைத் தங்களுடைய இரட்சகராக ஏற்றுக்கொண்ட பின்பு, இவர்கள் இன்னும் மோசேயின் பிரமாணத்தை ஆசரிக்கிறார்கள். நியாயப்பிரமாணத்திற்காக வைராக்கிய முள்ளவர்களாயிருக்கிறார்கள்.

கிறிஸ்துவின் சுவிசேஷமே பிரத்தியட்சமான சத்தியம். இந்தச் சத்தியத்திற்கு மோசேயின் பிரமாணம் ஒரு நிழலாகவே இருக்கிறது. இயேசுகிறிஸ்துவைத் தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்ட பின்பு, இவர்கள் சத்தியத்தைப் பின்பற்றாமல், சத்தியத்தின் நிழலாயிருக்கும் நியாயப்பிரமாணத்தை பின்பற்றுகிறார்கள். இது யூதர்களுக்குள்ளே விசுவாசிகளா யிருக்கிறவர்களிடத்தில் காணப்படுகிற ஆவிக்குரிய பலவீனம்.

மோசேயின் பிரமாணம் யூதர்களுடைய பாரம்பரிய பிரமாணம். இந்தப் பிரமாணத்தை கடைப்பிடிக்க வேண்டுமென்று யூதர்கள் சிறுபிராயம் முதற்கொண்டே கற்றுக்கொள்கிறார்கள். அதைக் கடைப்பிடிக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட பின்பும் இவர்களால் பாரம்பரிய பழக்க வழக்கங்களை விட்டு வெளியேறி வரமுடியவில்லை.

யூதர்களுக்குள் விசுவாசிகளாகயிருக்கிறவர்கள், நியாயப்பிரமாணத்திற்காக வைராக்கியமாயிருப்பதை, எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்களும் மூப்பர்களும் அங்கீகரிக்கிறார்கள். இதைக் கண்டும் காணாதவர்கள் போலிருக்கிறார்கள். நியாயப்பிரமாணத்திற்காக அவர்கள் வைராக்கியமுள்ளவர்களாக இருக்கும் போது, அவர்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நல்ல பழக்க வழக்கங்கள் உண்டாகிறது. ஆகையினால் சபையின் அப்போஸ்தலரும் மூப்பரும், அவர்களுடைய பழக்க வழக்கங்களை அங்கீகரித்து விடுகிறார்கள்.

யூதர்களுக்குள் விசுவாசிகளாகயிருக்கிறவர்கள் தவறு செய்கிறார்கள். ஆனால் இந்தத் தவறுகளின் விளைவினால் நன்மை உண்டாகிறது என்று நினைத்து, எருசலேமிலுள்ள அப்போஸ்தலரும், சபையின் மூப்பரும், அவர்கள் நியாயப்பிரமாணத்திற்காக வைராக்கியமுள்ளவர்களாகயிருப்பதை அங்கீகரிக்கிறார்கள்.

புறஜாதிகளிடத்தில் இருக்கிற யூதர்

புறஜாதிகளிடத்திலிருக்கிற யூதரெல்லாரும் தங்கள் பிள்ளைகளுக்கு விருத்தசேதனம் பண்ணவும், முறைமைகளின்படி நடக்கவும் வேண்டுவதில்லையென்று நீர் சொல்லி, இவ்விதமாய் அவர்கள் மோசேயை விட்டுப் பிரிந்துபோகும்படி போதிக்கிறீரென்று இவர்கள் உம்மைக் குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறார்கள் (அப் 21:21).

பவுலின் போதகத்தைக்குறித்து எருசலேமிலுள்ள விசுவாசிகள் கேள்விப்பட்டிருக்கிறார்கள். பவுலின் உபதேசத்தில் அவர்களுக்கு உடன்பாடு இல்லை. பவுலின் உபதேசத்தினால் அவர்கள் தங்கள் உள்ளத்தில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பவுலின் உபதேசம் எருசலேமிலுள்ள யூதர்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை. புறஜாதிகள் தங்கள் பிள்ளைகளுக்கு விருத்தசேதனம் பண்ண வேண்டாம் என்றும், யூதருடைய முறைமைகளின்படி நடக்க வேண்டாம் என்றும் பவுல் போதித்திருந்தால், அது எருசலேமிலுள்ள யூதர்களுக்குப் பிரச்சனையாயிருக்காது. ஆனால் பவுலோ புறஜாதிகளிடத்தில் இருக்கிற யூதரும் இந்தக் கற்பனைகளைக் கைக்கொள்ள வேண்டியதில்லை என்று போதித்திருக்கிறான். இதை இவர்களும் கேள்விப்பட்டிருக்கிறார்கள்.

மோசேயின் பிரமாணத்தினால் யாரும் நீதிமானாக ஆகமுடியாது. நியாயப்பிரமாணம் யாரையும் பரிசுத்தமாக்காது. ஆகையினால் பவுல் நியாயப்பிரமாணத்திற்கு விரோதமாக போதகம்பண்ணியிருப்பது உண்மைதான். ஆனால் மோசேயைவிட்டு ஜனங்கள் பிரிந்து போகவேண்டுமென்று அவன் ஒருபோதும் பிரசங்கம் பண்ணியதே இல்லை. நியாயப்பிரமாணத்தை அழிக்க வேண்டுமென்பது பவுலின் விருப்பமல்ல. அதை நிறைவேற்ற வேண்டுமென்பதே பவுலின் உபதேசம்.

பவுல் மோசேக்கு சத்துருவாக இருக்கிறான் என்று யூதர்களும் நினைக்கிறார்கள். யூதர்களுக்குள் விசுவாசிகளாகயிருக்கிறவர்களும் நினைக்கிறார்கள். இதனால் இவர்களெல்லோருக்கும் பவுலின்மீது கோபம் இருக்கிறது. எருசலேமிலுள்ள சபையின் மூப்பர்கள் பவுலை நேசிக்கிறார்கள். அவனைக் கனப்படுத்துகிறார்கள். பவுலை "சகோதரனே" என்று அழைக்கிறார்கள். ஆனால் எருசலேமிலுள்ள விசுவாசிகளிடத்திலோ, பவுலைக் குறித்து நல்ல அபிப்பிராயம் எதுவுமில்லை. யூதருக்குள் விசுவாசிகளாக இருக்கிறவர்கள் இயேசுகிறிஸ்துவுக்கு முக்கியத்துவம் கொடுப்பதுபோல, மோசேக்கும், நியாயப்பிரமாணத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். ஆகையினால் பவுலின் போதகம் எல்லாமே இவர்களுக்குத் தப்பிதமாகத் தெரிகிறது. இவர்கள் சிந்தனையிலும், விசுவாசத்திலும் பலவீனமானவர்களாக இருக்கிறார்கள். சிந்தையில் பலவீனமானவர்கள் கோபப்படுவதில் பலமுள்ளவர்களாக இருப்பார்கள்.

நீர் செய்ய வேண்டும்

இப்பொழுது செய்யவேண்டியது என்ன? நீர் வந்திருக்கிறீரென்று இவர்கள் கேள்விப்பட்டு, நிச்சயமாகக் கூட்டங் கூடுவார்கள். ஆகையால் நாங்கள் உமக்குச் சொல்லுகிறபடி நீர் செய்யவேண்டும்; அதென்னவென்றால், பிரார்த்தனை பண்ணிக் கொண்டவர்களாகிய நாலுபேர் எங்களிடத்தில் இருக்கிறார்கள். அவர்களை நீர் சேர்த்துக்கொண்டு, அவர்களுடனேகூடச் சுத்திகரிப்பு செய்து கொண்டு, அவர்கள் தலைச்சவரம்பண்ணிக் கொள்வதற்குச் செல்லுமானதைச் செலவு செய்யும்; அப்படிச் செய்தால் உம்மைக் குறித்துக் கேள்விப்பட்ட காரியங்கள் அபத்தமென்றும், நீரும் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டு நடக்கிறவரென்றும் எல்லாரும் அறிந்துகொள்வார்கள் (அப் 21:22-24).

பவுலின்மீது கூறப்படுகிற குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை என்பதை யூதருக்குள் விசுவாசிகளாகயிருக்கிறவர்கள் புரிந்து கொள்ளவேண்டும். யூதர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு விருத்தசேதனம் பண்ணவும், முறைமைகளின்படி நடக்கவும் வேண்டுவதில்லையென்று பவுல் உபதேசிக்கவில்லை என்பதை அவர்கள் புரிந்துகொள்ளவேண்டும். இப்படிப்பட்ட போதனையைச் சொல்லி யூதர்கள் மோசேயைவிட்டுப் பிரிந்துபோகும்படி பவுல் அவர்களுக்குப் போதிக்கவில்லை என்பதையும் தெரிந்துகொள்ளவேண்டும். அவர்கள் பவுலைக் குறித்து மெய்யான காரியங்களைத் தெரிந்துகொள்ளவில்லை என்பதையும், அவர்கள் பவுலைக் குறித்து தப்பிதமாகக் கேள்விப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் அவர்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

யூதர்களுக்குள் விசுவாசிகளாகயிருக்கிறவர்கள் நியாயப்பிரமாணத்திற்காக வைராக்கியமுள்ளவர்களாயிருக்கிறார்கள். நியாயப் பிரமாணத்தை பவுலும் கடைப்பிடித்து வருகிறான். ஆகையினால் அவர்கள் பவுலைப்பற்றி தவறாகவே கேள்விப்பட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில், பவுல் எருசலேமில் என்ன செய்யவேண்டுமென்று, சபையின் மூப்பர்கள் அவனுக்கு ஆலோசனை சொல்லுகிறார்கள்.

"இப்பொழுது நீர் செய்ய வேண்டியது என்ன" என்று மூப்பர்கள் பவுலிடத்தில் கேட்டு, அவன் செய்ய வேண்டியதை அவர்களே அவனுக்குச் சொல்லுகிறார்கள். பவுல் எருசலேமுக்கு வந்திருக்கிறான் என்று யூதர்களுக்குள் விசுவாசிகளாயிருக்கிறவர்கள் கேள்விப் பட்டிருக்கிறார்கள். ஆகையினால் அவர்களெல்லோரும் நிச்சயமாகவே பவுலுக்கு விரோதமாக கூட்டங் கூடுவார்கள் பவுலுடைய உபதேசத்தை கேட்க வேண்டும் என்று அவனிடத்தில் கூட்டங்கூடி வருவார்கள். இயேசு கிறிஸ்துவைப்பற்றிய சுவிசேஷத்தை பவுல் அவர்களுக்கு உபதேசம்பண்ணினால் அதற்கு செவிகொடுத்து கேட்கமாட்டார்கள். விருத்தசேதனம் பண்ணுவது பற்றியும், யூதருடைய முறைமைகளின்படி நடப்பது பற்றியும் பவுல் தங்களுக்கு உபதேசம் பண்ணவேண்டுமென்று கூடிவருவார்கள். தாங்கள் செய்கிற காரியங்களுக்கு பவுல் விரோதமாகப் போதனை செய்தால், யூதருக்குள் விசுவாசிகளாக இருக்கிறவர்களெல்லோரும் அவனுக்கு விரோதமாக எழும்புவார்கள்.

பவுல் மீது கோபமாகயிருக்கிற விசுவாசிகளை அமைதிப்படுத்துவதற்கு ஏதாவது செய்யவேண்டும். பவுல் மோசேயைவிட்டுப் பிரிந்துபோகும்படி போதிக்கவில்லை என்பதை அவர்களுக்குச் சொல்லவேண்டும். மேலும் புறஜாதிகளிடத்திலிருக்கிற யூதர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு விருத்தசேதனம் பண்ணவேண்டியதில்லை என்று பவுல் போதிக்கவில்லை என்பதையும் அவர்களுக்குச் சொல்லவேண்டும். அத்துடன் யூதருடைய முறைமைகளின்படி அவர்கள் நடக்க வேண்டியதில்லையென்று பவுல் போதிக்கவில்லை என்பதையும் அவர்களுக்குச் சொல்லவேண்டும். ஏனெனில் இவையெல்லாவற்றையும் அவர்கள் அவசியம் என்று தீர்மானித்து, அவற்றை ஆசரித்து வருகிறார்கள்.

எருசலேமிலுள்ள யூதர்களுக்கு மத்தியில் பவுலுக்கு நல்ல பெயர் இருந்தால் மாத்திரமே, அவனால் அவர்கள் மத்தியில் ஊழியம் செய்யமுடியும். அவர்கள் பவுலுக்கு விரோதமாக எழும்பினால், பவுலால் அவர்களுக்கு ஒரு ஊழியமும் செய்ய முடியாது. ஆகையினால் அவன்மீது சுமத்தப்படுகிற குற்றச்சாட்டுக்களை முதலாவது நீக்கிப்போடவேண்டுமென்று சபையின் மூப்பர்கள் விரும்புகிறார்கள்.

பவுல் மிகவும் நல்லவன். கர்த்தருடைய ஊழியக்காரன். அவனுக்கு விரோதமாக எருசலேமில் யூதருக்குள் விசுவாசிகளாகயிருக்கிறவர்கள் எழும்புவது அவர்களுக்கு நல்லதல்ல. விசுவாசிகள் ஊழியக்காரர்களுக்கு விரோதமாக எழும்பினால் கர்த்தருடைய சாபம் அவர்கள்மேல் வரும். தங்கள் சொந்த ஜனத்தார் மீதுள்ள அக்கரையினாலும், எருசலேம் சபையின் மூப்பர்கள் பவுல் செய்ய வேண்டிய காரியங்களை அவனுக்கு ஆலோசனையாகச் சொல்லுகிறார்கள்.

பவுலின் ஊழியம் எருசலேம் சபைக்குத் தேவை. பவுலைத் தங்களோடு வைத்துக்கொள்ள வேண்டுமென்று சபையின் மூப்பர்கள் விரும்புகிறார்கள். அவனுடைய ஊழியம் ஜனங்கள் மத்தியில் அங்கீகரிக்கப்படவேண்டும். போதகம் பண்ணுவதற்கு முன்பாகவே ஜனங்கள் எதிர்ப்பு தெரிவித்தால், ஒரு போதகமும் பண்ண முடியாது. பவுல் எருசலேம் சபையில் இருப்பதினால், யூதருக்குள் விசுவாசிகளாகயிருக்கிறவர்கள் சபையின் மூப்பருக்கு விரோதமாகவும், சபைக்கு விரோதமாகவும் கூட்டங்கூடி விடக்கூடாது. தங்களுடைய சபையின் ஊழியம் சிறப்பாக நடைபெற வேண்டுமென்பதற்காகவும், சபையின் மூப்பர்கள் பவுல் என்ன செய்யவேண்டுமென்று அவனுக்கு ஆலோசனை சொல்லுகிறார்கள்.

தன்மீதுள்ள குற்றச்சாட்டுக்களை நீக்குவதற்கு, பவுல் என்ன செய்யவேண்டுமென்று எருசலேம் சபையின் மூப்பர்கள் அவனுக்கு ஆலோசனை சொல்லுகிறார்கள். யூதருக்குள் விசுவாசிகளாகயிருக்கிறவர்கள், பவுலைப்பற்றி கேள்விப்பட்டிருக்கிற காரியங்கள் பொய்யானது என்பதை நிரூபிப்பதற்கு, இவர்களுக்கு ஒரு வாய்ப்பு உண்டாயிருக்கிறது. இந்த வாய்ப்பை பவுல் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று சபையின் மூப்பர்கள் அவனுக்கு ஆலோசனை சொல்லுகிறார்கள். அவர்கள் பவுலிடத்தில் "ஆகையால் நாங்கள் உமக்குச் சொல்லுகிறபடி நீர் செய்யவேண்டும்" என்று தங்கள் விருப்பத்தைச் சொல்லுகிறார்கள். சபையின் மூப்பர்களிடத்தில் பிரார்த்தனை பண்ணிக்கொண்டவர்களாகிய நாலு பேர் இருக்கிறார்கள். இந்த நால்வரும் யூதருக்குள் விசுவாசிகளாயிருக்கிறவர்கள். இவர்கள் ஒரு குறிப்பிட்ட காலம் வரையிலும் நசரேய விரதம் இருப்பதாக பொருத்தனை பண்ணிக்கொண்டவர்கள். இப்போது அவர்களுடைய பிரார்த்தனை காலம் முடிவு பெறுகிறது. யூதருடைய முறைமைகளின்படி அவர்கள் நியாயப்பிரமாணத்தில் சொல்லப்பட்டிருக்கிற காணிக்கைகளைச் செலுத்தவேண்டும். சுத்திகரிப்பு செய்துகொள்ளவேண்டும். தலைச்சவரம் பண்ணிக்கொள்ளவேண்டும். அவர்கள் நியாயப்பிரமாணத்தில் எழுதப்பட்டிருக்கிற பிரகாரம், சர்வாங்க தகனபலியாக ஒரு ஆட்டுக்குட்டியையும், பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்குட்டியையும், சமாதான பலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்தவேண்டும்.

பவுல் யூதருடைய நியாயப்பிரமாணத்தைவிட்டு வெகுதூரம் கடந்து வந்திருக்கிறான். ஆனாலும் நியாயப்பிரமாணத்தில் சொல்லப்பட்டிருக்கிற ஒரு சில காரியங்களை இவனும் கடைப்பிடித்து வருகிறான். சமீபத்தில்தான் இவனுடைய நசரேய பொருத்தனை விரதம் முடிந்தது. இந்த விரதத்தை நிறைவேற்றும் விதமாக பவுல் கெங்கிரேயா பட்டணத்தில் தலைச்சவரம் பண்ணிக்கொண்டான் (அப் 18:18). பவுல் தலைச்சவரம் பண்ணிக்கொண்டது எருசலேமிலுள்ள சபையின் மூப்பர்களுக்கும் தெரிந்திருக்கும். ஆகையினால் பவுலைத் தங்களுடைய ஆலோசனைகளுக்கு சம்மதிக்க வைப்பது எளிதான காரியம் என்று நினைக்கிறார்கள். அவன் கெங்கிரேயாவில் செய்த காரியத்தைவிட, இப்போது சற்று அதிகமாகச் செய்யவேண்டுமென்று ஆலோசனை சொல்லுகிறார்கள்.

பிரார்த்தனை பண்ணிக்கொண்டவர்களாகிய நாலுபேர் சபையின் மூப்பர்களிடத்திலிருக்கிறார்கள். பவுல் அவர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும். அவர்களுடனேகூட அவன் சுத்திகரிப்பு செய்துகொள்ளவேண்டும். அவர்கள் தலைச்சவரம் பண்ணிக்கொள்வதற்கு செல்லுமானதை பவுல் செலவு செய்யவேண்டும் என்று மூப்பர்கள் பவுலுக்குச் சொல்லுகிறார்கள். "நாங்கள் உமக்குச் சொல்லுகிறபடி நீர் செய்யவேண்டும்" என்று அவனிடத்தில் கேட்டுக்கொள்கிறார்கள்.

பவுல் இவையெல்லாவற்றையும் செய்தால், யூதருக்குள் விசுவாசிகளாயிருக்கிறவர்கள் அவன்மீது பிரியமாகயிருப்பார்கள் என்று மூப்பர்கள் நம்புகிறார்கள். பவுலுக்கு விரோதமாக பேசப்படுகிற குற்றச்சாட்டுக்களெல்லாம் அடங்கிப் போகுமென்று எதிர் பார்க்கிறார்கள். புறஜாதிகளிடத்திலிருக்கிற யூதரெல்லாரும், தங்கள் பிள்ளைகளுக்கு விருத்தசேதனம் பண்ண வேண்டியதில்லை என்றோ, நியாயப்பிரமாணத்து முறைமைகளின்படி அவர்கள் நடக்க வேண்டியதில்லை என்றோ, பவுல் போதனை செய்யவில்லை என்று எல்லோரும் நம்புவார்கள் என்று மூப்பர்கள் எதிர்பார்க்கிறார்கள். மோசேயைவிட்டு பிரிந்துபோகும்படி அவன் போதிக்கவில்லை என்றும் அவர்கள் நம்புவார்கள். மேலும் பவுலைக் குறித்து தாங்கள் கேள்விப்பட்டது பொய்யான காரியம் என்றும் அவர்கள் நம்புவார்கள் என்று மூப்பர்கள் எதிர்பார்க்கிறார்கள். இதற்காக பவுல் ஒரு சில காரியங்களைச் செய்யவேண்டுமென்று அவனிடத்தில் சொல்லி “நாங்கள் உமக்குச் சொல்லுகிறபடி நீர் செய்யவேண்டும்” என்று அவனுக்கு ஆலோசனை சொல்லுகிறார்கள். பவுல் இதையெல்லாம் செய்தால், அவனும் நியாயப்பிரமாணத்து முறைமையின்படி நடக்கிறவன் என்பது யூதஜனங்கள் மத்தியில் நிரூபணமாகும். மேலும் அவன் மோசேயை நேசிக்கிறவனென்றும், மோசேயைவிட்டு பிரிந்துபோகும்படி அவன் யாருக்கும் போதிக்கவில்லையென்றும் ஜனங்கள் நம்புவார்கள் என்று மூப்பர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

விசுவாசிகளான புறஜாதியார்

விசுவாசிகளான புறஜாதியார் இப்படிப்பட்டவைகளைக் கைக் கொள்ளாமல், விக்கிரகங்களுக்குப் படைத்ததற்கும், இரத்தத்திற்கும், நெருக்குண்டு செத்ததிற்கும், வேசித்தனத்திற்கும், விலகியிருக்க வேண்டுமென்று நாங்கள் தீர்மானம்பண்ணி, அவர்களுக்கு எழுதியனுப்பினோமே என்றார்கள் (அப் 21:25).

புறஜாதியாரில் விசுவாசிகளானவர்கள் என்னென்ன காரியங்களைச் செய்யவேண்டும், என்னென்ன காரியங்களைச் செய்யக் கூடாது என்பதைக் குறித்து ஏற்கெனவே பிரச்சனை உண்டாயிற்று. அப்போது எருசலேமிலுள்ள அப்போஸ்தலரும், சபையின் மூப்பர்களெல்லாரும் ஒன்றுகூடி விசுவாசிகளான புறஜாதியார் எதைக் கைக்கொள்ளவேண்டும் என்றும், எதைக் கைக்கொள்ள வேண்டியதில்லை என்றும் தீர்மானம்பண்ணினார்கள்.

விசுவாசிகளான புறஜாதியார் விருத்தசேதனம் பண்ண வேண்டியதில்லை. மோசேயின் நியாயப்பிரமாண முறைமைகளின்படி நடக்கவேண்டியதில்லை. அவர்கள் விக்கிரகங்களுக்குப் படைத்ததற்கும், இரத்தத்திற்கும், நெருக்குண்டு செத்ததற்கும், வேசித்தனத்திற்கும் விலகியிருக்க வேண்டும். இது எருசலேம் சபையார் எல்லோருமாக எடுத்த தீர்மானம். இந்தத் தீர்மானத்தை அவர்கள் புறஜாதி சபைக்கு எழுதியனுப்புயிருக்கிறார்கள். இதை அவர்கள் பவுலிடத்தில் சொல்லுகிறார்கள். புறஜாதியார் மத்தியில் நடைபெறுகிற ஊழியத்தில் பவுல் அதிக அக்கரை காண்பிக்கிறவன். விசுவாசிகளான புறஜாதியாரை அதிகமாய்த் துன்பப்படுத்தக்கூடாது என்பது பவுல் உறுதியாக இருக்கிறான். யூதமார்க்கத்தின் கட்டுகளிலிருந்தும், சுமக்க முடியாத பாரமான சுமைகளிலிருந்தும் அவர்கள் விடுதலை பெற்றிருக்கவேண்டுமென்று பவுல் தீர்மானமாகவும், வைராக்கியமாகவும் இருக்கிறான். பவுலின் சுபாவம் எருசலேம் சபையின் மூப்பருக்கும் நன்றாகத் தெரியும். ஆகையினால் விசுவாசிகளான புறஜாதியார் இப்படிப்பட்டவைகளைக் கைக்கொள்ளவேண்டியதில்லை என்றும்,

யூதர்களுக்குள் விசுவாசிகளாக யிருக்கிறவர்கள் இப்படிப்பட்டவைகளைக் கைக்கொள்வதினால் தப்பிதம் ஒன்றுமில்லை என்றும் மூப்பர்கள் பவுலுக்கு எடுத்துச்சொல்லுகிறார்கள். பவுலும் யூதமார்க்கத்திலிருந்து வந்த விசுவாசியாக இருப்பதினால், எருசலேமில் யூதர்களுக்குள் விசுவாசிகளாக யிருக்கிறவர்கள், அவனை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதற்காக, பவுலும் இப்படிப்பட்டவைகளைக் கைக்கொள்ளவேண்டும் என்றும், இந்தப் பொருத்தனைகளை நிறைவேற்றுகிற நாலுபேருக்கு அவன் உதவிசெய்ய வேண்டும் என்றும் அவனிடத்தில் சொல்லுகிறார்கள்.

பவுலும் சுத்திகரிப்பு செய்துகொண்டு

அப்பொழுது பவுல் அந்த மனுஷரைச் சேர்த்துக்கொண்டு, மறுநாளிலே அவர்களுடனேகூடத் தானும் சுத்திகரிப்பு செய்துகொண்டு, தேவாலயத்தில் பிரவேசித்து, அவர்களில் ஒவ்வொருவனுக்காக வேண்டிய பலிசெலுத்தித் தீருமளவும் சுத்திகரிப்பு நாட்களை நிறைவேற்றுவேனென்று அறிவித்தான் (அப் 21:26).

எருசலேம் சபையின் மூப்பருடைய ஆலோசனையை பவுல் ஏற்றுக் கொள்கிறான். அவனை எருசலேமுக்குப் போகவேண்டாமென்று அவனிடத்தில் அநேகர் ஆலோசனை சொன்னார்கள். அதையெல்லாம் பவுல் ஏற்றுக்கொள்ளவில்லை. தீர்க்கதரிசனம் சொல்லிப்பார்த்தார்கள், அவனுக்கு முன்பாக அழுது பார்த்தார்கள். அப்பொழுதெல்லாம் பவுல் அவர்களுடைய ஆலோசனை நிராகரித்துவிட்டான். ஆனால் இப்போதோ சபையின் மூப்பர்கள் "நாங்கள் உமக்குச் சொல்லுகிறபடி நீர் செய்யவேண்டும்" என்று சொன்னபோது, பவுல் மறுப்பு எதுவும் சொல்லாமல், சம்மதித்து, அவர்கள் சொல்லுகிறபடி செய்கிறான்.

பவுல் பிரார்த்தனை பண்ணிக்கொண்டவர்களாகிய நாலு மனுஷரை தன்னிடத்தில் சேர்த்துக்கொள்கிறான். மறுநாளில் அவர்களுடனே கூட தானும் சுத்திகரிப்பு செய்துகொண்டு தேவாலயத்தில் பிரவேசிக்கிறான். அப்பொழுது தேவாலயத்தில் கூட்டமோ, அமளியோ உண்டாகவில்லை. தான் கூட்டமில்லாமலும் அமளியில்லாமலும் தேவாலயத்திலே சுத்திகரிப்பு செய்து கொண்டதாக தேசாதிபதிக்கு முன்பாக சாட்சியாக அறிவிக்கிறான் (அப் 24:18).

பவுல் சுத்திகரிப்பு செய்துகொண்டு தேவாலயத்தில் பிரவேசிக்கிறான். சுத்திகரிப்பு நாட்கள் நிறைவேறிற்று என்பதை ஆசரியருக்குத் தெரிவிக்கும் வண்ணமாக அவன் தேவாலயத்தில் பிரவேசிக்கிறான். அப்போஸ்தலனாகிய யாக்கோபும், சபையின் மூப்பர்களும் பவுலுக்கு இந்த ஆலோசனையைச் சொல்லியிருக்கிறார்கள். இவர்களுடைய ஆலோசனையைக் குறித்து வேதபண்டிதர்கள் பலவிதமாக வியாக்கியானம் சொல்லுகிறார்கள். இவர்கள் பவுலை தவறான பாதையில் வழிநடத்திவிட்டார்களென்றும், இவர்களுடைய ஆலோசனை தவறானது என்றும் ஒரு சிலர் யாக்கோபின்மீதும் சபையின் மூப்பர்கள்மீதும் குற்றம் சுமத்துகிறார்கள்.

வேதபண்டிதர்களில் சிலர் இந்த விஷயத்தில் பவுலின் மீது குற்றம் சுமத்துகிறார்கள். பவுல் யூதருடைய நியாயப்பிரமாண முறைமைகளின்படி இங்கு நடக்கிறான். நியாயப்பிரமாணத்தின் கட்டுக்களை இயேசுகிறிஸ்து அவிழ்த்துவிட்டார். அதன் நுகத்தை முறித்துப்போட்டார். இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களுக்கு, நியாயப் பிரமாணத்திலிருந்து விடுதலை கிடைத்திருக்கிறது. ஆனால் யூதர்களுக்குள் விசுவாசிகளாக யிருக்கிறவர்களோ, இயேசுகிறிஸ்துவின் மூலமாய் இரட்சிப்பையும் பெற்றுக்கொண்டு, நியாயப்பிரமாணத்தின் நுகத்தையும் சுமக்கிறார்கள். இவர்களுக்கு பூரண விடுதலை இன்னும் கிடைக்கவில்லை. கிறிஸ்துவினால் விடுதலையும், நியாயப்பிரமாணத்தினால் அடிமைத்தனமும் இவர்களுக்கு உண்டாயிருக்கிறது. இப்பேற்பட்ட ஜனங்கள் மத்தியில், பவுல் கிறிஸ்துவின் விடுதலையின் சுவிசேஷத்தைத் தைரியமாய்ப் பிரசங்கம்பண்ணவேண்டும். ஆனால் பவுலோ அவர்களிடத்தில் சத்தியத்தைச் சொல்லுவதற்குப் பதிலாக, நியாயப்பிரமாணத்தின் அடிமைத்தனத்தின் நுகத்தை தன்மீது சுமந்துகொள்கிறான் என்று வேதபண்டிதர்களில் சிலர் பவுல்மீது குற்றம் சொல்லுகிறார்கள்.

மனிதனுடைய ஞானத்தைவிட தேவனுடைய கிருபையே பெரிது. பவுல் தெய்வீக ஞானத்தினால் நியாயப்பிரமாணத்தின் முறைமைகளின்படி இப்போது நடப்பதாக ஒரு சிலர் வியாக்கியானம் சொல்லுகிறார்கள்.

பவுல் கொரிந்தியருக்கு எழுதின முதலாம் நிருபத்தில், தன்னைப்பற்றி இவ்வாறு எழுதுகிறான். "நான் ஒருவருக்கும் அடிமைப்படாதவனா யிருந்தும், நான் அதிக ஜனங்களை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு, என்னைத்தானே எல்லாருக்கும் அடிமையாக்கினேன். யூதரை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு யூதருக்கு யூதனைப் போலவும் நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப் பட்டவர்களை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு நியாயப் பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவனைப் போலவுமானேன். நியாயப் பிரமாணமில்லாதவர்களை ஆதாயப் படுத்திக் கொள்ளும்படிக்கு அவர்களுக்கு நியாயப்பிரமாணம் இல்லாதவனைப் போலவுமானேன். அப்படியிருந்தும், நான் தேவனுக்கு முன்பாக நியாயப்பிரமாண மில்லாதவனாயிராமல், கிறிஸ்துவின் பிரமாணத்துக் குள்ளானவனாயிருக்கிறேன். பலவீனரை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்குப் பலவீனருக்குப் பலவீனனைப் போலானேன்; எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன்" (1கொரி 9:19-22).

யூதரைப் பிரியப்படுத்துவதற்காக பவுல் தீமோத்தேயுவுக்கு விருத்தசேதனம் பண்ணிவித்தான். ஒரு சிலர் விசுவாசத்தில் பலவீனமாகயிருக்கிறார்கள். அவர்களை ஆதாயப்படுத்திக் கொள்வதற்காக பவுல் பலவீனருக்கு பலவீனனைப்போல ஆகியிருக்கலாம். பவுல் சுத்திகரிப்பு செய்துகொண்டு, தேவாலயத்திலும் பிரவேசித்து, அவர்களில் ஒவ்வொருவனுக்காகவும் வேண்டிய பலி செலுத்தி தீருமளவும் சுத்திகரிப்பு நாட்களை நிறைவேற்றியது, அவனுடைய ஊழியத்தில் ஒரு கறையாகவே இருக்கிறது. பவுல் ஒருவேளை இந்தக் காரியத்தை சரியாகவே செய்திருந்தாலும், இதற்காக அவன் பாடுகளை அனுபவிக்கிறான்.

கிறிஸ்துவின் சுவிசேஷத்தை உபதேசிக்கிறவர்கள் உபதேசத்தில் உறுதியாகயிருக்க வேண்டும். இவர்களுடைய உபதேசமும், ஜீவியமும் ஒத்துப்போகவேண்டும். எப்போதுமே மாறாமல் ஒன்றுபோல் இருக்கவேண்டும். பிரசங்கம் ஒருவிதமாகவும், ஜீவியம் வேறுவிதமாகவும் இருந்தால், அது கர்த்தருக்கு மகிமையைத் தராது. இவர்களுடைய ஜீவியமும் சாட்சியுள்ளதாகயிராது. யாக்கோபும், சபையின் மூப்பர்களும் பவுலுக்கு உதவி செய்யவேண்டுமென்று நினைத்துதான் இந்த ஆலோசனையைச் சொன்னார்கள். ஊழிய வாய்ப்பு பெருகுமென்று நினைத்தார்கள். பவுலும் ஏதோ ஒரு காரணத்திற்காக அவர்களுடைய ஆலோசனையை ஏற்றுக்கொண்டான். ஆனால் யாக்கோபின் ஆலோசனை பவுலுக்குப் பிரச்சனையாயிற்று. யாக்கோபின் ஆலோசனை பவுலின் மனதிற்கு ஒத்துப்போகவில்லையென்றாலும், அவர்களெல்லோரும் சொன்னதற்காக பவுல் சம்மதம் தெரிவிக்கிறான். தான் செய்த தப்பிதத்திற்கு பவுல் தண்டனை அனுபவிக்கிறான். பவுலுக்கு ஏற்பட்ட அனுபவம் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு ஒரு எச்சரிப்பாக இங்கு எழுதப்பட்டிருக்கிறது. நமக்கு பலர் ஆலோசனை சொல்லலாம். மனுஷருடைய ஆலோசனையைவிட பரிசுத்த ஆவியானவரின் ஆலோசனையே மேலானது என்னும் உறுதியான விசுவாசம் நம்மிடத்தில் இருக்கவேண்டும். கர்த்தர் நம்முடைய மனதில் கொடுக்கும் தெய்வீக ஆலோசனைக்கு விரோதமாக நாம் சிந்திக்கவோ, செயல்படவோ கூடாது. ஆவியானவர் நம்மை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துகிறவர். நம்முடைய ஜீவியத்தை கர்த்தருடைய கரத்தில் ஒப்புக்கொடுத்து, அவர் நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடு ஓடவேண்டும். விசுவாசத்தையும் சாட்சியையும் காத்துக்கொள்ளவேண்டும். நம்முடைய பேச்சிலும் செயலிலும் தேவனை மகிமைப்படுத்தவேண்டும்.

பவுலுக்கு எதிராக யூதரின் கலகம் அப் 21 : 27-30

அப் 21:27. அந்த ஏழுநாட்களும் நிறைவேறி வருகையில், ஆசியா நாட்டிலிருந்து வந்த யூதர்கள் அவனை தேவாலயத்திலே கண்டு, ஜனங்களெல்லாரையும் எடுத்துவிட்டு, அவன்மேல் கைபோட்டு:

அப் 21:28. இஸ்ரவேலரே, உதவிசெய்யுங்கள். நம்முடைய ஜனத்திற்கும் வேதப்பிரமாணத்திற்கும் இந்த ஸ்தலத்திற்கும் விரோதமாக எங்கும் எல்லாருக்கும் போதித்து வருகிறவன் இவன்தான்; இந்த தேவாலயத்திற்குள்ளே கிரேக்கரையும் கூட்டிக் கொண்டுவந்து, இந்தப் பரிசுத்த ஸ்தலத்தைத் தீட்டுப்படுத்தினான் என்று சத்தமிட்டார்கள்.

அப் 21:29. எபேசியனாகிய துரோப்பீமு என்பவன் முன்னே நகரத்தில் பவுலுடனே கூட இருக்கிறதைக் கண்டிருந்தபடியால், பவுல் அவனை தேவாலயத்தில் கூட்டிக்கொண்டு வந்திருப்பானென்று நினைத்தார்கள்.

அப் 21:30. அப்பொழுது நகரமுழுவதும் கலக்கமுற்றது; ஜனங்கள் கூட்டமாய் ஓடிவந்து, பவுலைப் பிடித்து, அவனை தேவாலயத்திற்குப் புறம்பே இழுத்துக்கொண்டு போனார்கள்; உடனே கதவுகள் பூட்டப்பட்டது.

ஆசியா நாட்டிலிருந்து வந்த யூதர்கள்

அந்த ஏழுநாட்களும் நிறைவேறி வருகையில், ஆசியா நாட்டிலிருந்து வந்த யூதர்கள் அவனை தேவாலயத்திலே கண்டு, ஜனங்களெல்லாரையும் எடுத்துவிட்டு, அவன்மேல் கைபோட்டு: (அப் 21:27)

பவுலுக்கு விரோதமாகக் கலகமுண்டாயிற்று. கலகக்காரர்கள் பவுல்மேல் கைபோட்டு அவனைப் பிடிக்கிறார்கள். ஒவ்வொரு முறை பவுலுக்குப் பிரச்சனை வரும்போதும், அது அவனுடைய ஜீவனையே எடுத்துப்போடுவதுபோல தோன்றும். பவுல் பல பிரச்சனைகள் வழியாகக் கடந்து வந்திருக்கிறான். ஒவ்வொருமுறை பிரச்சனை ஆரம்பிக்கும்போதும், அது எப்படி முடியுமென்று யாராலும் உறுதியாகச் சொல்லமுடியாது. அதுபோலவே இங்கும் பவுலுக்குப் பிரச்சனை ஆரம்பித்திருக்கிறது. பவுல் சுத்திகரிப்பு செய்துகொண்டு தேவாலயத்தில் பிரவேசிக்கிறான். எருசலேமின் சபை மூப்பரிடத்திலிருந்த நாலுபேர்களில், ஒவ்வொருவனுக்காக வேண்டிய பலி செலுத்தித்திருமளவும் சுத்திகரிப்பு நாட்களை நிறைவேற்றிக்கொண்டு வருகிறான். அந்த ஏழுநாட்களும் நிறைவேறி வருகிறது. ஏழுநாள் வரையிலும் தேவாலயத்தில் பவுலை யாரும் கவனிக்கவில்லை. தேவாலயத்திற்கு வருகிற ஒவ்வொருவரையும், ஆலயத்திற்குப் பொறுப்பாக இருக்கிறவர்கள் பாதுகாக்கவேண்டும். தேவாலயம் தேவனுடைய பரிசுத்த வாசஸ்தலம். ஆனால் இந்த தேவாலயத்தில் ஆசியா நாட்டிலிருந்து வந்த யூதர்கள், பவுலைக் கண்டு, ஜனங்களெல்லாரையும் எடுத்துவிட்டு அவன்மேல் கைபோடுகிறார்கள். பவுல் பலிசெலுத்தும்போது, அந்தப் பலியில் அவனுடைய இரத்தத்தையும் கலக்கவேண்டுமென்று யூதர்கள் கொலைவெறியோடிருக்கிறார்கள். பவுல் தேவாலயத்தைத் தீட்டுப்படுத்தவில்லை. ஆசியா நாட்டிலிருந்து வந்த யூதர்களே தேவாலயத்தைத் தீட்டுப்படுத்துகிறார்கள்.

எருசலேமிலிருக்கிற யூதர்கள் பவுலுக்கு ஒரு பிரச்சனையும் பண்ணவில்லை. ஆசியா நாட்டிலிருந்து வந்த யூதர்களே பவுலுக்கு பிரச்சனையாக இருக்கிறார்கள். இவர்கள் சிதறிப்போனவர்கள். பவுலுக்கு எதிராக கோப வெறியோடிருக்கிறார்கள். தேவாலயத்திற்கு இவர்கள் எப்போதாவதுதான் வருவார்கள். ஆகையினால் இவர்களுக்கு எருசலேமிலுள்ள தேவாலயத்தின்மீது பக்தி வைராக்கியம் அதிகமாகயிருக்கிறது. எருசலேமிலிருக்கிற யூதர்கள் தேவாலயத்திற்கு அடிக்கடி போவதினால், ஆலயத்தின்மீது இவர்களுடைய பக்திவைராக்கியம் குறைவாகவே காணப்படுகிறது. ஒருவேளை எருசலேமிலுள்ள யூதர்களுக்கு தேவாலயத்திற்குப் போவது அனுதினமும் நடைபெறுகிற சாதாரண சம்பவமாகயிருக்கலாம். ஆகையினால் இவர்கள் பல காரியங்களைக் கவனிக்காமல் விட்டுவிடுகிறார்கள். சபை ஆராதனையில் ஒழுங்காகக் கலந்துகொள்கிறவர்கள் சபையில் பிரச்சனை செய்யமாட்டார்கள். சபைக்கு எப்போதாவது வருகிறவர்கள்தான் சபையில் பிரச்சனை செய்வார்கள். தங்களுக்கு சபையின்மீது பக்திவைராக்கியம் அதிகமாயிருப்பதுபோல காண்பித்துக்கொள்வார்கள்.

ஆசியா நாட்டிலிருந்து வந்த யூதர்கள் ஜனங்களெல்லாரையும் எடுத்துவிடுகிறார்கள். பவுலுக்கு விரோதமாக கூட்டங்கூடுகிறார்கள். கிறிஸ்துவுக்கும் அவருடைய சுவிசேஷத்திற்கும் விரோதமாக சத்துருக்கள் காரணமில்லாமல் கூட்டங்கூடுகிறார்கள். தேவையில்லாமல் ஜனங்களை சுவிசேஷத்திற்கு விரோதமாக எடுத்துவிடுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் தெளிந்த சிந்தனையில்லாதவர்கள். தங்கள் ஆத்துமாவைக்குறித்தும், பிறருடைய ஆத்துமாவைக் குறித்தும் கவலையில்லாதவர்கள்.

இஸ்ரவேலரே உதவிசெய்யுங்கள்

இஸ்ரவேலரே, உதவிசெய்யுங்கள். நம்முடைய ஜனத்திற்கும் வேதப்பிரமாணத்திற்கும் இந்த ஸ்தலத்திற்கும் விரோதமாக எங்கும் எல்லாருக்கும் போதித்து வருகிறவன் இவன்தான்; இந்த தேவாலயத்திற்குள்ளே கிரேக்கரையும் கூட்டிக் கொண்டுவந்து, இந்தப் பரிசுத்த ஸ்தலத்தைத் தீட்டுப்படுத்தினான் என்று சத்தமிட்டார்கள் (அப் 21:28).

ஆசியாவிலிருந்து வந்த யூதர்கள் பவுலின்மீது பொய்யாக் குற்றம் சுமத்துகிறார்கள். அவர்களுடைய வார்த்தையில் நீதியில்லை. அநியாயம் அவர்களை ஆளுகை செய்கிறது. “இஸ்ரவேலரே உதவிசெய்யுங்கள்” என்று தேவாலயத்தில் சத்தமிட்டுக் கூப்பிடுகிறார்கள். கிறிஸ்துவுக்கும் அவருடைய சுவிசேஷத்திற்கும் விரோதமாக எழும்புகிறவர்கள் நியாயமாக யுத்தம்பண்ணமாட்டார்கள். சத்தியத்திற்கு விரோதமாக அவர்களால் ஒன்றும் பேசமுடியாது. அவர்களுக்கு முறைப்படி விவாதம்பண்ணவும் தெரியாது.

ஆகையினால் தங்களுடைய கைகளை வலுப்படுத்துவதற்காக கிறிஸ்துவுக்கும் அவருடைய சுவிசேஷத்திற்கும் விரோதமாக திரளான ஜனங்களை எடுத்துவிடுவார்கள். தங்களுக்கு உதவிசெய்யுமாறு அவர்களிடத்தில் கேட்பார்கள். மிகுந்த சத்தமிட்டு கூக்குரலிடுவார்கள். கிறிஸ்துவின் ஊழியக்காரர்களுக்கு அவப்பெயர் உண்டாக்கும்வண்ணமாக கூட்டங்கூடி கலகம்பண்ணுவார்கள். தங்களுடைய விருப்பத்தை மிகுந்த சத்தத்தினாலும் கூக்குரலினாலும் சாதித்துக்கொள்ள திட்டமிடுகிறார்கள்.

ஆசியாவிலிருந்து வந்த யூதர்கள் பவுலுக்கு விரோதமாக குற்றம் சொல்லும்போது, அவனுடைய உபதேசத்திற்கும், அவனுடைய நடபடிக்கைகளுக்கும் விரோதமாகப் பேசுகிறார்கள். இரண்டு விதமான குற்றச்சாட்டுக்களை அவன்மீது சொல்லுகிறார்கள். ஆவையாவன: 1. பவுல் யூதஜனத்திற்கும், வேதப்பிரமாணத்திற்கும், பரிசுத்த ஆலயத்திற்கும் விரோதமாகப் போதிக்கிறான். 2. பவுல் தேவாலயத்திற்குள்ளே கிரேக்கரைக் கூட்டிக்கொண்டு வந்து, இந்தப் பரிசுத்த ஸ்தலத்தைத் தீட்டுப்படுத்தியிருக்கிறான்.

பவுல் எருசலேமில் மாத்திரமல்ல, எங்கும் தேவதூஷணமாக போதனை செய்கிறான் என்று அவன்மீது குற்றம் சுமத்துகிறார்கள். பவுல் தவறான உபதேசத்தை எருசலேம் ஜனத்தாருக்கு மாத்திரமல்ல, எல்லாருக்கும் போதித்து வருகிறான் என்றும் அவன்மீதும் குற்றம் சுமத்துகிறார்கள். பவுலுடைய போதனையில் ஆசியா நாட்டிலிருந்து வந்த யூதர்கள் மூன்றுவிதமான குற்றச்சாட்டுக்களைச் சொல்லுகிறார்கள். அவையாவன :

1. பவுல் யூதஜனத்திற்கு விரோதமாகப் போதிக்கிறான். தேவனுக்கு முன்பாக யூதரும், புறஜாதியாரும் சமம் என்றும், தேவனிடத்தில் பட்சபாத மில்லையென்றும் பவுல் போதிக்கிறான். கர்த்தருக்கு முன்பாக விருத்தசேதனமும், விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுமில்லை என்று உபதேசிக்கிறான். யூதர்கள் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்க வில்லையென்றால், அவர்கள் பரலோக ராஜ்யத்திற்குள் பிரவேசிக்க முடியாது என்று சொல்லி யூதருக்குள் ஒரு பிரிவினையை உண்டுபண்ணுகிறான். பவுல் தன்னுடைய போதனையினால் யூதர்களை ஜெபஆலயத்திலிருந்தும் யூதசமுதாயத்திலிருந்தும் பிரித்துச் செல்கிறான் என்று அவன்மீது குற்றம் சுமத்துகிறார்கள்.

ஒரு சிலர் சபையின்மீது பக்தி வைராக்கியமாகயிருப்பார்கள். இவர்களுடைய வைராக்கியம் பெயரளவில்தான் இருக்கும். இவர்களால் சபைக்கு எந்தப் பிரயோஜனமும் இருக்காது. அப்படித்தான் ஆசியா நாட்டிலிருந்து வந்த யூதர்களும், தேவாலயத்தின்மீது பக்தி வைராக்கியத்தோடு இருப்பதாகக் காண்பித்துக்கொள்கிறார்கள்.

2. பவுல் வேதப்பிரமாணத்திற்கு விரோதமாக போதிக்கிறான். கிறிஸ்துவின் சுவிசேஷம் எல்லா நியாயப்பிரமாணத்திற்கும் முடிவாக இருக்கிறது. சுவிசேஷமே நியாயப் பிரமாணத்தைப் பூரணப்படுத்துகிறது. ஆகையினால் யூதர்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை விசுவாசிக்க வேண்டுமென்று பவுல் போதனை செய்கிறான். அவனுடைய போதனையானது வேதப்பிரமாணத்திற்கு விரோதமான போதனையென்று ஆசியா நாட்டிலிருந்து வந்த யூதர்கள் பவுலின்மீது குற்றம் சுமத்துகிறார்கள்.

3. பவுல் தேவாலயத்திற்கு விரோதமாகப் போதிக்கிறான். தேவன் சர்வ வியாபகர். அவர் எல்லா இடங்களிலுமிருக்கிறார். ஜனங்கள் தேவனை எல்லா இடங்களிலும் ஆராதனை செய்யலாம் என்று பவுல் போதிக்கிறான். ஆகையினால் பவுல் தேவாலயத்திற்கு விரோதியாக இருக்கிறானென்று அவன்மீது குற்றம் சுமத்துகிறார்கள்.

ஸ்தேவான் இரத்தச்சாட்சியாக மரித்தான். அவனைக் கொலைபண்ணியதில் பவுலுக்கும் முக்கிய பங்குண்டு. ஸ்தேவான் பரிசுத்த ஸ்தலத்திற்கு விரோதமாக பேசினான் என்னும் காரணத்திற்காகவே யூதர்கள் அவனைக் கல்லெறிந்து கொன்றுபோட்டார்கள். ஸ்தேவான்மீது கூறப்பட்ட அதே குற்றச்சாட்டை, யூதர்கள் இப்போது பவுலின்மீதும் சுமத்துகிறார்கள்.

ஒரு காலத்தில் யூதமார்க்கத்திற்கு விரோதமாக எழும்பியவர்களை பழிவாங்குவதற்காக, மார்க்கத்தலைவர்கள் பவுலை ஒரு கொலைசெய்கிற கருவியாகப் பயன்படுத்தினார்கள். இப்போது அதே பவுல் யூதருடைய கோபத்திற்கு நடுவில் இருக்கிறான். அவனைக் கொன்றுபோடுகிற கொலைவெறியோடு யூதர்கள் பவுலுக்கு விரோதமாக எழும்பியிருக்கிறார்கள்.

எபேசியனாகிய துரோப்பீமு

எபேசியனாகிய துரோப்பீமு என்பவன் முன்னே நகரத்தில் பவுலுடனே கூட இருக்கிறதைக் கண்டிருந்தபடியால், பவுல் அவனை தேவாலயத்தில் கூட்டிக்கொண்டு வந்திருப்பானென்று நினைத்தார்கள் (அப் 21:29).

பவுல் யூதமார்க்கத்திற்கு விரோதமாக தவறான காரியங்களைச் செய்கிறான் என்றும் அவன்மீது குற்றம் சுமத்துகிறார்கள். தேவாலயத்தை அசுத்தப்படுத்துகிறான் என்பது பவுலின்மீது சுமத்தப்படுகிற முக்கியமான குற்றச்சாட்டு. தேவாலயத்திற்குள் புறஜாதி மார்க்கத்தைச் சேர்ந்தவர்களைக் கூட்டிக்கொண்டு வந்திருப்பான் என்று அவன்மீது குற்றம் சுமத்துகிறார்கள். தேவாலயத்தின் உட்பிரகாரத்திற்குள் யூதர்களைத் தவிர புறஜாதியார் யாரும் பிரவேசிக்கக்கூடாது. விருத்தசேதனமில்லாதவர்கள் யாரும் தேவாலயத்தின் உட்பிரகாரத்திற்குள் பிரவேசிப்பதற்கு அனுமதியில்லை.

பவுல் ஒரு யூதன். விருத்தசேதனம் பண்ணியிருக்கிறவன். தேவாலயத்தின் உட்பிரகாரத்தில், யூதர்கள் மாத்திரமே பிரவேசிக்கக்கூடிய இந்த இடத்தில் பிரவேசிப்பதற்கு, பவுலுக்கும் உரிமை உண்டு. ஆனால் பவுலோ இந்த உட்பிரகாரத்திற்குள் தன்னோடுகூட, விருத்தசேதனமில்லாத புறஜாதியாரை அழைத்துக்கொண்டு வந்திருக்கிறான் என்று அவன்மீது குற்றம் சுமத்துகிறார்கள்.

எபேசியனாகிய துரோப்பீமு என்பவன் ஒரு புறஜாதியான். பவுல் தேவாலயத்தில் கூட்டிக்கொண்டு வந்த புறஜாதியாரில் துரோப்பீமும் ஒருவன் என்று பவுலின்மீது குறிப்பிட்டுக் குற்றம் சொல்லுகிறார்கள். ஆனால் தேவாலயத்திற்குள் துரோப்பீமை யூதர்கள் யாரும் பார்க்கவில்லை. பவுல் அவனைத் தேவாலயத்தில் கூட்டிக்கொண்டு வந்திருப்பான் என்று நினைக்கிறார்கள். யூகம்பண்ணுகிறார்கள்.

எருசலேம் நகரத்திலே எபேசியனாகிய துரோப்பீமு என்பவன் முன்னே பவுலுடனேகூட இருந்தான். இதை ஆசியா நாட்டிலிருந்து வந்த யூதர்கள் பார்த்திருக்கிறார்கள். ஆகையினால் அவனை பவுல் தேவாலயத்தில் கூட்டிக்கொண்டு வந்திருப்பான் என்று நினைக்கிறார்கள். அவன்மீது பொய்யான குற்றச்சாட்டு கூறுகிறார்கள்.

பவுல் அவர்கள் சொல்லுகிற குற்றம் எதையும் செய்யவில்லை. கள்ளம் கபடமில்லாதவனாக இருக்கிறான். ஆனாலும் தவறான குற்றச் சாட்டுக்களுக்கும், பொய் பேச்சுக்களுக்கும் விரோதமாக கள்ளம் கபடமில்லாத நற்குணத்திற்கு வேலியடைப்பு எதுவும் இல்லை. ஆகையினால் யாரும் யார்மீதும் எளிதாக குற்றம் சொல்லிவிடுகிறார்கள்.

துன்மார்க்கன் தீயகாரியங்களை உற்பத்தி பண்ணுகிறான். பிறர்மீது தவறான குற்றச்சாட்டுக்களைக் கூறுகிறான். தான் சொன்ன பொய் குற்றச்சாட்டுக்களுக்கு ஆதாரம் தேடுகிறான். இவர்களுடைய குற்றச்சாட்டில் நீதியில்லை. ஆதாரமில்லை. ஆனாலும் தங்களுடைய தவறான செய்கைகளை நியாயப்படுத்துவதற்காக ஜனங்களைத் தூண்டிவிடுகிறான். நன்மைக்கு விரோதமாக தீமையை எழுப்புகிறான். நியாயத்திற்கு விரோதமாக அநியாயத்தைத் தூண்டிவிடுகிறான்.

பவுல் தேவாலயத்திற்குள் போவதினால், யூதர்கள் மத்தியில் தனக்கு அங்கீகரிப்பு கிடைக்கும் என்று நினைத்து சுத்திகரிப்பு செய்துகொள்கிறான். தேவாலயத்தில் பிரவேசிக்கிறான். பலிசெலுத்தி சுத்திகரிப்பு நாட்களை நிறைவேற்றுகிறான். ஆனால் அவன் எதிர்பார்த்தது ஒன்று. இங்கு நடப்பதோ வேறொன்று.

யூதர்களுக்கு தன்மீது நல்ல அபிப்பிராயம் வரும் என்று நினைத்து தேவாலயத்திற்குப் போகிறான். ஆனால் யூதர்களோ அவன் தேவாலயத்திற்கு வந்ததையே, அவனுக்கு விரோதமான காரியமாகப் பேசுகிறார்கள். அவன்மீது குற்றம் சுமத்துவதற்கு, அவன் தேவாலயத்திற்கு வருவதையே முக்கியமான காரணமாக்குகிறார்கள். பவுல் தேவாலயத்தைவிட்டு தூரமாய் விலகியிருந்தால், அவனுக்கு இப்படிப்பட்ட பிரச்சனைகள் வந்திருக்காது. கர்த்தருடைய ஆலோசனையைக் கேட்காமல், மூப்பருடைய ஆலோசனையைக் கேட்டதினால், பவுல் பிரச்சனையில் சிக்கிக்கொள்கிறான்.

நகரம் முழுவதும் கலக்கமுற்றது

அப்பொழுது நகரமுழுவதும் கலக்கமுற்றது; ஜனங்கள் கூட்டமாய் ஓடிவந்து, பவுலைப் பிடித்து, அவனை தேவாலயத்திற்குப் புறம்பே இழுத்துக் கொண்டுபோனார்கள்; உடனே கதவுகள் பூட்டப்பட்டது (அப் 21:30).

பவுலுக்கு விரோதமாக எழும்பியிருக்கிற ஜனத்தாரிடம் தேவபக்தியுமில்லை, மனுஷநேயமுமில்லை. பவுலைப்பிடித்து தேவாலயத்திற்குப் புறம்பே இழுத்துக்கொண்டு போகிறார்கள். அவர்கள் கைகளினால் பவுல் பீறிட்டுப்போகும் ஆபத்து உண்டாயிற்று. பவுல்மீது குற்றம் சுமத்துகிறவர்கள் விசாரணைக்கு காத்திருக்கவில்லை. விசாரிக்காமலேயே, தாங்களே தீர்மானித்து பவுலைத் தண்டிக்கிறார்கள். அவனை விசாரிப்பதற்குப் பதிலாக, உடனே தண்டனை கொடுத்துவிடவேண்டுமென்று தீர்மானித்து, தேவாலயத்திற்குப் புறம்பே அவனை இழுத்துக்கொண்டு போகிறார்கள்.

எருசலேம் நகரம் முழுவதும் கலக்கமுற்றது. தேவாலயத்திற்குள் ஆசியா நாட்டிலிருந்து வந்த யூதர்கள் "இஸ்ரவேலரே உதவிசெய்யுங்கள்" என்று சத்தமிட்டு கூக்குரலிட்டதை, தேவாலயத்திற்கு வெளியேயிருந்த யூதர்கள் கேட்கிறார்கள். அந்தச் சத்தத்தைக் கேட்ட ஜனங்கள் தேவாலயத்திற்குள் கூட்டமாய் ஓடிவந்து பவுலைப் பிடித்துக்கொள்கிறார்கள். நகரம் முழுவதும் கலக்கமுற்று வந்ததாக எழுதப்பட்டிருக்கிறது. ஆகையினால் திரளான ஜனங்கள் கூட்டமாய் ஓடிவந்து பவுலைப் பிடித்திருக்கவேண்டும்.

எபேசு பட்டணத்தில் தியானாளுக்கு ஒரு கோவில் இருக்கிறது. எபேசியர்கள் எல்லாரும் தியானாளின்மீதும், அவளுடைய கோவில்மீதும் பக்தி வைராக்கியத்தோடிருக்கிறார்கள். எபேசியர்கள் பவுலுக்கு விரோதமாகக் கலகம்பண்ணியபோது, அவர்கள் கோபத்தால் நிறைந்து "எபேசியருடைய தியானாளே பெரியவள்" என்று சத்தமிட்டார்கள். பட்டணம் முழுவதும் கலகத்தினால் நிறைந்தது (அப் 19:28,29). புறஜாதியார்கள் தங்கள் தெய்வத்தின்மீதும், கோவிலின்மீதும் பக்தி வைராக்கியமாகயிருக்கிறார்கள். இங்கோ யூதர்கள், எபேசியரைப்போல, தங்கள் தேவாலயத்தின்மீது பக்திவைராக்கியம் காண்பிக்கிறார்கள். நகரம் முழுவமும் கலக்கமுற்றது.

தேவாலயத்திற்குள் கூட்டமாய் ஓடிவந்த ஜனங்கள், பவுலைப்பிடித்து, அவனை தேவாலயத்திற்குப் புறம்பே இழுத்துக்கொண்டு போகிறார்கள். உடனே தேவாலயத்தின் கதவுகள் பூட்டப்படுகிறது. பவுலை அவர்கள் இழுத்துக்கொண்டு போவதினால், அவன் ஒரு யூதனாகயிருப்பதற்கே தகுதியற்றவன் என்று நினைத்து, அவன்மீது கோபத்தைக் காண்பிக்கிறார்கள். அவன் மூலமாக தேவாலயம் தீட்டுப்படக்கூடாது என்று நினைத்து தேவாலயத்தின் கதவைகளையே மூடிவிடுகிறார்கள்.

தேவாலயத்தில் ஆராதிக்கிற ஜனங்களை பவுல் பிரித்துக்கொண்டு போய்விடுகிறான் என்றுதான் அவன்மீது யூதர்கள் இதுவரையிலும் குற்றம் சொன்னார்கள். இப்போதோ தேவாலயத்தில் சுத்திகரிப்பு செய்துகொண்டு, பலிசெலுத்தி சுத்திகரிப்பு நாட்களை நிறைவேற்றுகிற பவுலை பிடித்து, தேவாலயத்திற்குப் புறம்பே இழுத்துக்கொண்டு போகிறார்கள்.

தேவாலயத்து அதிகாரிகள் தேவாலயத்தின் கதவுகளை உடனே பூட்டிவிடுகிறார்கள். இன்னும் ஏராளமான ஜனங்கள் தேவாலயத்திற்குள் பிரவேசித்தால் தேவாலயம் அவர்களைக் கொள்ளாது. தேவாலயத்திற்கு சேதம் உண்டாகிவிடும். தேவாலயத்திற்குள்ளே வருகிற ஜனங்கள் உக்கிரகோபத்தோடு ஓடிவருகிறார்கள். இவர்கள் மூலமாக தேவாலயத்திற்கு அசுத்தம் ஏற்பட்டுவிடக்கூடாது என்று பயந்து தேவாலயத்தின் கதவுகளை மூடிவிடுகிறார்கள்.

பவுல் மரணத்திலிருந்து தப்பிக்கிறான்
அப் 21 : 31-40

அப் 21:31. அவர்கள் அவனைக் கொலைசெய்ய எத்தனித்திருக்கையில், எருசலேம் முழுவதும் கலக்கமாயிருக்கிறதென்று போர்ச் சேவகரின் சேனாபதிக்குச் செய்திவந்தது.

அப் 21:32. உடனே அவர் போர்ச்சேவகரையும் அவர்களுடைய அதிபதிகளையும் கூட்டிக்கொண்டு, அவர்களிடத்திற்கு ஓடினான்; சேனாபதியையும் போர்ச்சேவகரையும் அவர்கள் கண்டபோது பவுலை அடிக்கிறதை விட்டு நிறுத்தினார்கள்.

அப் 21:33. அப்பொழுது சேனாபதி கிட்டவந்து அவனைப் பிடித்து, இரண்டு சங்கிலிகளினாலே கட்டும்படி சொல்லி: இவன் யார் என்றும் என்ன செய்தான் என்றும் விசாரித்தான்.

அப் 21:34. அதற்கு ஜனங்கள் பலவிதமாய்ச் சத்தமிட்டார்கள்; சந்தடியினாலே நிச்சயத்தை அவன் அறியக்கூடாமல், அவனைக் கோட்டைக்குள்ளே கொண்டு போகும்படி கட்டளையிட்டான்.

அப் 21:35. அவன் படிகள்மேல் ஏறினபோது ஜனக்கூட்டம் திரண்டு பின்சென்று,

அப் 21:36. இவனை அகற்றும் என்று உக்கிரமாய்க் கூப்பிட்டபடியினாலே, போர்ச்சேவகர் அவனைத் தூக்கிக் கொண்டு போக வேண்டியதாயிருந்தது.

அப் 21:37. அவர்கள் பவுலைக் கோட்டைக்குள்ளே கொண்டுபோகிற சமயத்தில், அவன் சேனாபதியை நோக்கி: நான் உம்முடனே ஒரு வார்த்தை பேசலாமா என்றான். அதற்கு அவன்: உனக்குக் கிரேக்கு பாஷை தெரியுமா?

அப் 21:38. நீ இந்த நாட்களுக்குமுன்னே கலகமுண்டாக்கி, நாலாயிரங் கொலைபாதகரை வனாந்தரத்திற்குக் கொண்டுபோன எகிப்தியன் அல்லவா என்றான்.

அப் 21:39. அதற்குப் பவுல்: நான் சிலிசியா நாட்டிலுள்ள கீர்த்திபெற்ற தர்சுபட்டணத்து யூதன்; ஜனங்களுடனே பேசும்படி எனக்கு உத்தரவாகவேண்டுமென்று உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான்.

அப் 21:40. உத்தரவானபோது, பவுல் படிகளின் மேல் நின்று ஜனங்களைப் பார்த்துக் கையமர்த்தினான்; மிகுந்த அமைதலுண்டாயிற்று; அப்பொழுது அவன் எபிரெயு பாஷையிலே பேசத்தொடங்கினான்.

போர்ச்சேவகரின் சேனாபதி

அவர்கள் அவனைக் கொலைசெய்ய எத்தனித்திருக்கையில், எருசலேம் முழுவதும் கலக்கமாயிருக்கிறதென்று போர்ச் சேவகரின் சேனாபதிக்குச் செய்திவந்தது. உடனே அவர் போர்ச்சேவகரையும் அவர்களுடைய அதிபதிகளையும் கூட்டிக்கொண்டு, அவர்களிடத்திற்கு ஓடினான்; சேனாபதியையும் போர்ச்சேவகரையும் அவர்கள் கண்டபோது பவுலை அடிக்கிறதை விட்டு நிறுத்தினார்கள் (அப் 21:31,32).

பவுலைப் பிடித்தவர்கள் அவனைக் கொலைசெய்ய எத்தனிக்கிறார்கள். அவனைப்பிடித்து அடிக்கிறார்கள். அடித்தே அவனைக் கொன்றுபோடவேண்டும் என்பது அவர்களுடைய வெறி. பவுல் சிங்கத்தின் குகையில் வீசி எறியப்பட்ட ஒரு ஆட்டுக்குட்டியைப் போலிருக்கிறான். பவுல் எருசலேமுக்குப் போவதற்கு முன்பாக "எருசலேமில் நான் கர்த்தராகிய இயேசுவின் நாமத்திற்காக கட்டப்படுவதற்கு மாத்திரமல்ல, மரிப்பதற்கும் ஆயத்தமாயிருக்கிறேன்" (அப் 21:13) என்று சொன்னான். சத்துருக்கள் பவுலைப் பிடித்து அடிக்கிறபோது அவனுடைய இருதயத்தில் இந்த வாக்கியமே நிரம்பியிருந்திருக்கும்.

எருசலேம் முழுவதும் கலக்கமாயிருக்கிறது என்று போர்ச்சேவகரின் சேனாபதிக்கு செய்தி வருகிறது. சுவிசேஷத்திற்கு யூதரும், ரோமரும் சத்துருக்களாகயிருக்கிறார்கள். யூதருடைய கைகளிலிருந்து, ரோமருடைய கைகளினால் பவுல் விடுவிக்கப்படுகிறான். போர்ச்சேவகரின் சேனாபதிக்கு எருசலேம் முழுவதும் கலக்கமாயிருக்கிறது என்ற செய்தியை யாரோ சொல்லுகிறார்கள். இவர்கள் பவுலின்மீது அனுதாபப்பட்டு இந்தச் செய்தியைச் சொல்லவில்லை. நகரத்தில் அமைதியும், பாதுகாப்பும் ஏற்படவேண்டும் என்பதற்காகவே, சேனாபதியிடம் இந்தக் கலகத்தைப்பற்றிச் சொல்லுகிறார்கள். ரோமப்பேரரசின் சேனாபதிகள் எப்போதுமே யூதர்களைக் கவனித்துக்கொண்டிருப்பார்கள். ஏனெனில் யூதரில் அநேகர் ரோமப்பேரரசுக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறவர்கள். எப்போது வேண்டுமானாலும் எருசலேமில் கலகம் உண்டாகலாம் என்று போர்ச்சேவகரின் சேனாபதி எதிர்பார்த்து எச்சரிப்போடிருக்கிறான்.

எருசலேம் நகரம் முழுவதும் கலக்கமாயிருக்கிறது என்று சொன்னவன் பவுலின் சிநேகிதனல்ல. ஆனாலும் அவன் மூலமாயும் பவுலுக்கு ஒரு நன்மை உண்டாயிற்று. எருசலேம் முழுவதும் கலக்கமாயிருக்கிறது என்ற செய்தியை கேட்டவுடன், போர்ச்சேவகரின் சேனாபதி, போர்ச்சேவகரையும் அவர்களுடைய அதிபதிகளையும் கூட்டிக்கொண்டு அவர்களிடத்திற்கு ஒடுகிறான். கலகத்தை அடக்குவதற்காக ஓடுகிறான். திரளான ஜனங்கள் பவுலைப் பிடித்து தேவாலயத்திற்கு புறம்பே, அவனை அடித்துக்கொண்டிருக்கிறார்கள். அவனைக் கொலைசெய்ய எத்தனித்திருக்கிறார்கள். அவர்கள் சேனாபதியையும் போர்ச்சேவகரையும் கண்டபோது பவுலை அடிக்கிறதை விட்டு நிறுத்துகிறார்கள். சேனாபதிக்குப் பயப்படுகிறார்கள். ரோமப்பேரரசின் சட்டதிட்டங்கள் மிகவும் கடினமானது. யூதர்கள் தேவனுடைய நீதிக்குப் பயப்படவில்லை. ஆனால் ரோமப்பேரரசின் நீதிக்குப் பயப்படுகிறார்கள்.

தேவன் தம்முடைய பிள்ளைகளை பலவிதமாக பாதுகாத்து பராமரிக்கிறார். பல சமயங்களில் தேவனிடத்தில் பக்தியில்லாதவர்கள்கூட, தேவனுடைய ஊழியக்காரர்களைப் பாதுகாத்து பராமரிக்கிறார்கள். மேய்ப்பர்கள் ஆடுகளை மேய்க்கும்போது, தங்களோடு காவல் நாய்களையும் அழைத்துச் செல்வார்கள். ஆடுகளும் நாய்களும் ஒத்துப்போகாது. ஆனாலும் அந்த நாய்கள் ஆடுகளை ஓநாய்களிடமிருந்து பாதுகாக்கும்.

இவன் யார்

அப்பொழுது சேனாபதி கிட்டவந்து அவனைப் பிடித்து, இரண்டு சங்கிலிகளினாலே கட்டும்படி சொல்லி: இவன் யார் என்றும் என்ன செய்தான் என்றும் விசாரித்தான் (அப் 21:33).

தேவாலயத்திற்குப் புறம்பே யூதஜனங்களெல்லோரும் பவுலைப் பிடித்து அடித்துக் கொண்டிருக்கிறார்கள். போர்ச்சேவகரின் சேனாபதி பவுலை அவர்களுடைய கைகளிலிருந்து விடுவிக்கிறான். சேனாபதிக்கு பவுலின்மீது அன்போ அல்லது அக்கரையோ இல்லை. நீதியையும், சமாதானத்தையும் நிலைநிறுத்த வேண்டும் என்பதே இவனுடைய விருப்பம். ஒருவனை விசாரியாமலேயே அவனை யாரும் கொன்றுபோடக்கூடாது. யூதர்கள் பவுலை உக்கிரமமாய் அடிக்கிறார்கள். அவனைக் கொலை செய்ய எத்தனித்திருக்கிறார்கள். என்ன காரணத்திற்காக யூதர்கள் அவனை அடிக்கிறார்கள் என்பது சேனாபதிக்குத் தெரியவில்லை. ஆகையினால் சேனாபதி கிட்டவந்து பவுலைப் பிடிக்கிறான். அவனை இரண்டு சங்கிலிகளினால் கட்டும்படி சொல்லுகிறான். "இவன் யார் என்றும், இவன் என்ன செய்தான் என்றும்" விசாரிக்கிறான்.

துன்மார்க்கருடைய கையிலிருந்து பவுல் விடுவிக்கப்பட்டிருக்கிறான். தங்கள் கைப்பிடியிலிருந்த சேனாபதி பவுலை விடுவித்தது குற்றம் என்று யூதர்கள் வாதிடுகிறார்கள். பவுல் பெலிக்ஸ்க்கு முன்பாக விசாரிக்கப்படுகிறான். அப்போது யூதர்கள் சேனாபதியைக் குறித்து அவனிடத்தில் இவ்வாறு குற்றம் சுமத்துகிறார்கள். "அப்பொழுது சேனாபதியாகிய லீசியா வந்து, மிகுந்த பலாத்காரமாய் இவனை எங்கள் கைகளிலிருந்து பறித்துக் கொண்டுபோய், இவன்மேல் குற்றஞ்சாட்டுகிறவர்கள் உம்மிடத்தில் வரும்படி கட்டளையிட்டார். இவனிடத்தில் நீர் விசாரித்தால் நாங்கள் இவன்மேல் சாட்டுகிற குற்றங்கள் யாவையும் அறிந்துகொள்ளலாம்" (அப் 24:7,8) என்று யூதருடைய நியாயசாதுரியனாகிய தெர்த்துல்லு என்பவன் குற்றம் சாட்டுகிறான்.

பலவிதமாய் சத்தமிட்டார்கள்

அதற்கு ஜனங்கள் பலவிதமாய்ச் சத்தமிட்டார்கள்; சந்தடியினாலே நிச்சயத்தை அவன் அறியக்கூடாமல், அவனைக் கோட்டைக்குள்ளே கொண்டுபோகும்படி கட்டளையிட்டான் (அப் 21:34).

சேனாபதி பவுலைப்பிடித்து, அவனை இரண்டு சங்கிலிகளினால் கட்டும்படி சொல்லி, அவனைப் பற்றி விசாரிக்கிறான். அதற்கு ஜனங்கள் பலவிதமாய்ச் சத்தமிடுகிறார்கள். பவுல் தனக்காக உத்தரவு சொல்லவேண்டுமென்று சேனாபதி விரும்புகிறான். திரளான கூட்டத்திற்கு மத்தியில் சேனாபதி உள்ளே நுழைந்து, யூதருடைய கைகளிலிருந்து பவுலை மீட்டிருக்கிறான். ஆனாலும் பவுலினால் தனக்காகப் பேசமுடியவில்லை. ஜனங்கள் பலவிதமாய்ச் சத்தமிடுகிறார்கள்.

சந்தடி மிகவும் அதிகமாயிருக்கிறது. சந்தடியினாலே, பவுல் யார் என்றும், அவன் என்ன செய்தான் என்றும் சேனாபதியால் அறியமுடியவில்லை. ஜனங்களுடைய மனதையும் அறியமுடியவில்லை. அங்கு மிகுந்த குழப்பமுண்டாயிற்று. யூதர்களெல்லோரும் கூட்டமாய் ஓடிவந்திருக்கிறார்கள். ஆசியா நாட்டிலிருந்து வந்த யூதர்கள் "இஸ்ரவேலரே உதவி செய்யுங்கள்" என்று சத்தமிட்டு சொன்னபோது, நகரம் முழுவதும் கலக்கமுற்றது. ஜனங்களெல்லோரும் கூட்டமாய் ஓடிவந்திருக்கிறார்கள். ஆனால் தாங்கள் கூடிவந்ததற்கான காரணம் என்னவென்று அவர்களுக்கே தெரியவில்லை. ஏதோ ஒரு ஆர்வத்தில் வந்திருக்கிறார்கள். பவுலை அடிக்கிறார்கள். சேனாபதி அதைப்பற்றி விசாரிக்கும்போது பலவிதமாய்ச் சத்தமிடுகிறார்கள். எதுவுமே நிச்சயமில்லாமலும், தெளிவில்லாமலும் நடைபெறுகிறது.

சந்தடியினால் நிச்சயத்தை சேனாபதியால் அறியமுடியவில்லை. ஆகையினால் பவுலை கோட்டைக்குள்ளே கொண்டுபோகும்படி கட்டளையிடுகிறான். இது அந்தோனியா கோட்டை என்று அழைக்கப்படுகிறது. இங்கு ரோமப் போர்வீரர்கள் முகாமிட்டிருக்கிறார்கள். எருசலேமிலுள்ள தேவாலயத்திற்கு அருகில் இந்தப் பாளையம் இருக்கிறது. யூதர்கள் மிகவும் முரட்டாட்டமாய் கலகம்பண்ணுகிறார்கள். அவர்களுடைய கைகளிலிருந்து பவுலை மிகவும் பிரயாசப்பட்டு, தப்பிக்க வைத்து, கோட்டைக்குள்ளே அழைத்துப் போகிறார்கள்.

இவனை அகற்றும்

அவன் படிகள்மேல் ஏறினபோது ஜனக்கூட்டம் திரண்டு பின்சென்று, இவனை அகற்றும் என்று உக்கிரமாய்க் கூப்பிட்டபடியினாலே, போர்ச்சேவகர் அவனைத் தூக்கிக்கொண்டு போக வேண்டியதாயிருந்தது (அப் 21:35,36).

பவுல் அந்தோனியா கோட்டையின் படிகள்மேல் ஏறிப்போகிறான். ஜனக்கூட்டமும் திரண்டு அவனுக்குப் பின்செல்கிறது. போர்ச்சேவகர்கள் பவுலை தூக்கிக்கொண்டு போகிறார்கள். ஜனங்களுடைய கோபத்திலிருந்து பவுலைத் தப்பிக்க வைக்க அவர்களுக்கு வேறு வழி ஒன்றும் தெரியவில்லை. பவுல் யூதருடைய கைகளில் சிக்கினால் அவனை பிய்த்து எறிந்துவிடுவார்கள். அவர்களுடைய கைகளில் சிக்காதவாறு சேவகர்கள் அவனைத் தூக்கிக்கொண்டு போகிறார்கள். யூதர்களோ அவனுக்குப் பின்சென்று " இவனை அகற்றும்" என்று உக்கிரமாய்க் கூப்பிடுகிறார்கள். "இவனை இந்த உலகத்தைவிட்டு அகற்றும்", "இவனைக் கொன்றுபோடும்" என்பதே அவர்கள் உக்கிரமாய்க் கூப்பிட்டதன் பொருளாகும்.

ஒரு வார்த்தை பேசலாமா

அவர்கள் பவுலைக் கோட்டைக்குள்ளே கொண்டுபோகிற சமயத்தில், அவன் சேனாபதியை நோக்கி: நான் உம்முடனே ஒரு வார்த்தை பேசலாமா என்றான். அதற்கு அவன்: உனக்குக் கிரேக்கு பாஷை தெரியுமா? (அப் 21:37)

சேவகர்கள் பவுலை கோட்டைக்குள்ளே தூக்கிக்கொண்டு போகிறார்கள். அந்த சமயத்தில் பவுல் சேனாபதியை நோக்கி "நான் உம்முடனே ஒரு வார்த்தை பேசலாமா" என்று கேட்கிறான். மிகவும் பணிவுடன் விண்ணப்பம்பண்ணுகிறான். பவுலுக்கு எங்கு, எப்படி பேசுவது என்று தெரியும். தன்னைவிட உயர்ந்த அதிகாரத்திலிருக்கிறவர்களோடு எவ்வாறு மரியாதையாகவும், பணிவாகவும் பேசவேண்டும் என்பதை பவுல் கற்று அறிந்திருக்கிறான். தன்னைத் தூக்கிச்செல்கிற சாதாரண சேவகரிடம் பேசாமல், சேவகருடைய சேனாபதியிடம் பேசுகிறான். சேனாபதிதான் அவர்களெல்லோருக்கும் மேல் அதிகாரி. அவனிடத்தில் பேசினால்தான் பவுலுக்கு அனுமதி கிடைக்கும். சேனாதிபதி பவுலிடம் "உனக்கு கிரேக்கு பாஷை தெரியுமா" என்று கேட்கிறான்.

எகிப்தியன்

நீ இந்த நாட்களுக்குமுன்னே கலகமுண்டாக்கி, நாலாயிரங் கொலைபாதகரை வனாந்தரத்திற்குக் கொண்டுபோன எகிப்தியன் அல்லவா என்றான் (அப் 21:38).

தன்னிடத்தில் பேசுகிற பவுலிடத்தில், சேனாபதி "உனக்கு கிரேக்கு பாஷை தெரியுமா" என்றும், "நீ கலகமுண்டாக்கிய எகிப்தியன் அல்லவா" என்றும் கேட்கிறான். அக்காலத்தில், தேசத்தில் ஏதோ ஒரு இடத்தில் மிகப்பெரிய கலகம் நடைபெற்றிருக்கிறது. எகிப்தியன் ஒருவன் அந்தக் கலகத்திற்கு தலைமைப்பொறுப்பேற்றிருக்கிறான். அந்த எகிப்தியன் நாலாயிரம் கொலைபாதகரை வனாந்தரத்திற்குக் கொண்டு போயிருக்கிறான். கிலவுதியுராயனுடைய ஆட்சியின் பதின்மூன்றாவது வருஷத்தில் இந்தக் கலகம் உண்டானதாக வரலாற்று ஆசிரியர்கள் மூன்று வருஷங்களுக்கு முன்பு இந்தக் கலக சம்பவம் நடைபெற்றிருக்கிறது.

இந்தக் கலகத்திற்கு தலைவனாகயிருந்த எகிப்தியன் தப்பி ஓடிப்போய்விட்டான். தன்னோடுகூட நாலாயிரம் கொலைப்பாதகரையும் வனாந்தரத்திற்குக் கூட்டிக்கொண்டு போய்விட்டான். கலகக்காரர்களெல்லோரும் தப்பித்துவிட்டார்கள். எல்லாவற்றிற்கும் அந்த எகிப்தியன்தான் காரணம். ஒருவேளை பவுலின் உருவத்தோற்றமும், எகிப்தியனின் உருவத்தோற்றமும் ஒன்றுபோலிருந்திருக்கலாம். அல்லது இவ்விருவருடைய பேச்சு குரலும் ஒன்றுபோல் இருந்திருக்கலாம். ஆகையினால் சேனாபதி சந்தேகப்பட்டு, பவுலைப்பார்த்து, "கலகம் உண்டாக்கிய எகிப்தியன் நீ அல்லவா" என்று கேட்கிறான். ஏராளமான யூதர்கள் பவுலைப் பிடித்து அடிக்கிறார்கள். ஆகையினால் பவுல் சாதாரண குற்றவாளியாக இருக்க முடியாது என்று சேனாதிபதி நினைக்கிறான். பெரிய கலகமுண்டாக்கின எகிப்தியனைப்போல, பவுலும் ஒரு பெரிய குற்றவாளியென்று நினைக்கிறான். நல்லோருக்கு இது போன்ற அவப்பெயர் வருவதற்கு எப்போதுமே வாய்ப்புள்ளது. கர்த்தருடைய ஊழியக்காரர்மீது உலகத்து ஜனங்கள் எளிதில் பழிபோட்டுவிடுவார்கள்.

யூதன்

அதற்குப் பவுல்: நான் சிலிசியா நாட்டிலுள்ள கீர்த்திபெற்ற தர்சுபட்டணத்து யூதன்; ஜனங்களுடனே பேசும்படி எனக்கு உத்தரவாகவேண்டுமென்று உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான் (அப் 21:39).

தன்னைப்பற்றி சேனாபதி தவறாக நினைக்கிறான் என்பது பவுலுக்குத் தெரிகிறது. ஆகையினால் பவுல் அவனிடத்தில் தான் ஒரு யூதன் என்று தன்னைப்பற்றிச் சொல்லுகிறான். மிகவும் விரிவாகப் பேசுகிறான். "நான் சிலிசியா நாட்டிலுள்ள கீர்த்தி பெற்ற தர்சு பட்டணத்து யூதன்" என்று தன்னைப்பற்றி விவரமாகச் சொல்லுகிறான். தர்சு பட்டணம் என்று பவுல் குறிப்பிடுவது ஒருவேளை ரோமாபுரி பட்டணமாககூட இருக்கலாம். அக்காலத்தில் தர்சு பட்டணமும், ரோமாபுரி பட்டணமும் மிகவும் கீர்த்தி பெற்ற பட்டணங்களாகும். பவுல் இவ்விரண்டு பட்டணங்களிலும் விடுதலையுள்ள பிரஜையாக இருக்கிறான்.

சேனாபதி பவுலைக் குறித்து சந்தேகமாகப் பேசுகிறான். அவன்மீது தவறாகக் குற்றம் சாட்டுகிறான். ஆனால் பவுலோ அவனைக் குற்றப்படுத்தவில்லை. அவனைப்போல வீண் வார்த்தைகளைப் பேசவில்லை. சேனாபதியின் குற்றச்சாட்டை கண்ணியமாக மறுக்கிறான். தான் யார் என்பதை அவனுக்கு விரிவாகச் சொல்லுகிறான்.

பவுல் தன்னைப்பற்றி சேனாபதியிடம் சொன்னபின்பு "ஜனங்களுடனே பேசும்படி எனக்கு உத்தரவாகவேண்டும் என்று உம்மை வேண்டிக்கொள்கிறேன்" என்று கேட்டுக்கொள்கிறான். தனக்காக இந்தச் சகாயத்தைச் செய்யுமாறும், இந்த உதவிக்கு தான் நன்றியுள்ளவனாக யிருப்பதாகவும், பவுல் சேனாபதியிடம் விண்ணப்பம்பண்ணுகிறான்.

யூதர்கள் பவுலைப்பிடித்து அடிக்கிறார்கள். அவனைக் கொன்றுபோட வேண்டுமென்று எத்தனப்படுகிறார்கள். சேனாபதியோ யூதருடைய கைகளிலிருந்து பவுலை விடுவித்து காப்பாற்றியிருக்கிறான். பவுலைப்பற்றித் தெரிந்துகொள்ள விரும்புகிறான். பவுல் தனக்காகப் பேசவேண்டுமென்றும் எதிர்பார்க்கிறான். பவுல் தன்னிடத்தில் பேசுவதற்கு அனுமதி கேட்டபோது, சேனாபதி அவனுக்கு உடனடியாக உத்தரவு கொடுக்கிறான். பவுல் தன்னைப்பற்றி யோசித்துப் பேசவேண்டிய அவசியமில்லை. அவன் உண்மையைப் பேசுகிறவன். தான் சொல்லவேண்டியதை மறைக்காமல் சொல்லுகிற பழக்கமுள்ளவன். தேவன் கொடுத்திருக்கிற வார்த்தைகள் பவுலின் இருதயத்தில் நிரம்பியிருக்கிறது.

எபிரெயு பாஷை

உத்தரவானபோது, பவுல் படிகளின் மேல் நின்று ஜனங்களைப் பார்த்துக் கையமர்த்தினான்; மிகுந்த அமைதலுண்டாயிற்று; அப்பொழுது அவன் எபிரெயு பாஷையிலே பேசத்தொடங்கினான் (அப் 21:40).

பவுல் ஜனங்களுடனே பேசும்படி தனக்கு உத்தரவாகவேண்டுமென்று சேனாபதியிடம் வேண்டிக்கொள்கிறான். சேனாபதி பவுலுக்கு உத்தரவு கொடுக்கிறான். தனக்கு உத்தரவானபோது பவுல் தனக்காகப் பேச ஆரம்பிக்கிறான். யூதஜனங்களிடத்தில் பேசுவதற்கு பவுலுக்கு யாரும் உதவிசெய்ய தேவையில்லை. பிதாவின் ஆவியானவர் பவுலோடு கூடயிருக்கிறார். ஆவியானவர் வார்த்தைகளைத் தருகிறார் (மத் 10:20). சேனாபதியும் பவுலுக்கு பேசுவதற்கு உத்தரவு கொடுக்கிறான்.

தன்னுடைய இனத்தாராகிய யூதர்கள் பவுலுக்கு உதவிசெய்யவில்லை. அவனுடைய வார்த்தையைக் கேட்க யூதர்கள் ஆயத்தமாயில்லை. பவுல் பேசுவதற்கு அவர்கள் உத்தரவு கொடுக்கவில்லை. ஆனால் சேனாபதியோ பவுல் ஜனங்களுடனே பேசுவதற்கு உத்தரவு கொடுக்கிறான். பவுல் தனக்காகப் பேசி தன்னுடைய நியாயத்தை எடுத்துச் சொல்கிறான்.

பவுல் கோட்டைப்படிகளின் மேல் நின்று, ஜனங்களைப்பார்த்து கையமர்த்துகிறான். ஜனங்கள் மத்தியில் மிகுந்த அமைதலுண்டாயிற்று. பவுல் பிரசங்கம்பண்ணுவதற்கு அங்கு பிரசங்க மேடை எதுவுமில்லை. கோட்டைப்படிகளில் நின்று பேசுகிறான். பேசுவதற்கு அவனுக்கு ஒரு இடம் கிடைத்திருக்கிறது. ஜனங்களெல்லோரும் இதுவரையிலும் அமளிபண்ணிக் கொண்டிருந்தார்கள். பலவிதமாய்ச் சத்தமிட்டார்கள். அவர்களுடைய சந்தடியினாலே ஒருவனாலும் நிச்சயத்தை அறியமுடியவில்லை. ஆனால் பவுல் படிகளின்மேல் நின்று ஜனங்களைப்பார்த்து கையமர்த்தியபோது, அங்கு மிகுந்த அமைதலுண்டாயிற்று. ஜனங்கள் அமைதியாக இருக்குமாறு பவுல் தன் கைகளினால் சைகை காண்பிக்கிறான்.

பவுல் இயேசுகிறிஸ்துவுக்காகவும், அவருடைய சுவிசேஷத்திற்காகவும் பேசுகிறவன். இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படும்போது சத்துருவின் வாய் கட்டப்படும். பிசாசினால் எதிர்த்து பேசமுடியாது. இதுவரையிலும் மிகுந்த சந்தடி பண்ணிய ஜனங்கள், இப்போது மிகவும் அமைதியாயிருக்கிறார்கள். அவன் பேசுவதைச் செவிகொடுத்துக் கேட்கிறார்கள்.

பவுல் சேனாபதியோடு கிரேக்கு பாஷையில் பேசினான். இப்போது தன் இனத்தாராகிய யூதரிடத்தில் பேசும்போதோ எபிரெயு பாஷையில் பேசுகிறான். தானும் அவர்களில் ஒருவன் என்பதை தன் பாஷையின் மூலமாக அவர்களுக்கு எடுத்துச் சொல்லுகிறான். அவர்களிடத்தில் எபிரெயு பாஷையில் பேசி அவர்களுக்கு மரியாதை கொடுக்கிறான். அவர்களுடைய கவனத்தை ஈர்ப்பதற்காக அவர்களுடைய பாஷையிலேயே பேசுகிறான்.

22 அதிகாரம்

பவுல் கட்டப்பட்டிருக்கிறான். ஆனால் அவனுடைய நாவு கட்டப்படவில்லை. இயேசுகிறிஸ்துவின் நாமமகிமைக்காக பவுல் விடுதலையுடன் பேசுகிறான். தான் கட்டப்பட்டிருப்பதை மறந்து, தைரியமாகப் பேசுகிறான். இயேசுகிறிஸ்து தனக்குச் செய்த பெரிய காரியங்களையெல்லாவற்றையும் அவர்களுக்கு எடுத்துச் சொல்லுகிறான். பவுல் அவர்களுக்குப் பயப்படவுமில்லை. தன்னுடைய சாட்சியில் எதையும் மறைக்கவுமில்லை.

பவுல் ஜனங்களுடைய கவனத்தை ஈர்த்து அவர்களுடன் பேசத் துவங்குகிறான் (அப் 22:1,2). பவுல் தன்னைப்பற்றிச் சொல்லுகிற காரியங்கள். பவுல் பக்தியுள்ள யூதனாகயிருந்தவன் (அப் 22:3-5). இயேசுகிறிஸ்துவினுடைய வல்லமையினால் பவுல் அற்புதமாக இரட்சிக்கப் பட்டிருக்கிறான் (அப் 22:6-11). அனனியா பவுலைச் சந்தித்து அவனுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறான் (அப் 22:12-16). புறஜாதியாருக்கு அப்போஸ்தல ஊழியம் செய்யுமாறு கர்த்தர் பவுலை அழைக்கிறார் (அப் 22:17-21).

யூதர்கள் பவுலின் பேச்சை கேட்க விரும்பாமல் அவன்மீது சீறிப்பாய்கிறார்கள் (அப் 22:22,23). கலகக்காரரின் கைகளிலிருந்து பவுல் இரண்டாம் முறையாக தப்புகிறான் (அப் 22:24,25). தான் ஒரு ரோமன் என்பதை பவுல் வெளிப்படுத்துகிறான் (அப் 22:26-29). சேனாபதி அவனை பிரதான ஆசாரியனிடத்திற்கு முன்பாக கொண்டு வந்து நிறுத்துகிறான் (அப் 22:30).

கோட்டைப்படிகளில் பவுல்
அப் 22 : 1-2

அப் 22:1. சகோதரரே, பிதாக்களே, நான் இப்பொழுது உங்களுக்குச் சொல்லப்போகிற நியாயங்களுக்குச் செவிகொடுப்பீர்களாக என்றான்.

அப் 22:2. அவன் எபிரெயுபாஷையிலே தங்களுடனே பேசுகிறதை அவர்கள் கேட்டபொழுது, அதிக அமைதலாயிருந்தார்கள். அப்பொழுது அவன்:

சகோதரரே, பிதாக்களே

சகோதரரே, பிதாக்களே, நான் இப்பொழுது உங்களுக்குச் சொல்லப்போகிற நியாயங்களுக்குச் செவிகொடுப்பீர்களாக என்றான் (அப் 22:1).

பவுல் சுத்திகரிப்புச் செய்துகொண்டு, தேவாலயத்தில் பிரவேசிக்கிறான். ஆசியா நாட்டிலிருந்து வந்த யூதர்கள் அவனை தேவலாயத்தில் கண்டு, ஜனங்களெல்லாரையும் எடுத்துவிட்டு, பவுலுக்கு விரோதமாகக் கலகம் பண்ணுகிறார்கள். அவனைக் கொலைசெய்ய எத்தனித்திருக்கிறார்கள். எருசலேம் முழுவதும் கலகமாயிருக்கிறது. சேனாபதி பவுலை யூதர்கள் கையிலிருந்து விடுவித்து, இரண்டு சங்கிலிகளினாலே அவனை கட்டி, கோட்டைக்குள்ளே கொண்டுபோகும்படி கட்டளையிடுகிறான். அவன் படிகளின் மேல் ஏறினபோது, ஜனக்கூட்டமும் அவனுக்குப் பின்செல்கிறது. ஜனங்களுடனே பேசும்படி தனக்கு உத்தரவாகவேண்டுமென்று, பவுல் சேனாபதியைக் கேட்டுக்கொள்கிறான். உத்தவானபோது பவுல் படிகளின்மேல் நின்று ஜனங்களைப்பார்த்து, எபிரெயு பாஷையிலே பேசத்தொடங்குகிறான்.

திரளான ஜனங்கள் பவுலுக்கு விரோதமாக கூடியிருக்கிறார்கள். ஆனால் பவுல் அவர்களைப் பார்த்து பயப்படவில்லை. தெளிந்த சிந்தனையுடன் இருக்கிறான். கர்த்தர் அவனுடைய இருதயத்தைத் தளரவிடாமல், திடப்படுத்தியிருக்கிறார். எல்லா சூழ்நிலைகளிலும் பவுல் மனரம்மியமாயிருக்க கற்றுக் கொண்டிருக்கிறான். ஏராளமான ஜனங்கள் தன்னைத் தூஷிப்பதினால், பவுல் அவர்கள்மீது கோபப்படவில்லை. அவர்களுக்கு விரோதமாக கோப வார்த்தைகளையோ, சாப வார்த்தைகளையோ பேசவில்லை. பவுல் அவர்களை மிகவும் மரியாதையோடு "சகோதரரே, பிதாக்களே" என்று அழைக்கிறான்.

யூதர்கள் பவுலைத் துன்பப்படுத்துகிறார்கள். ஆனால் பவுலோ அவர்களை நேசிக்கிறான். அவர்களை "சகோதரரே" அழைக்கிறான். தான் சொல்லப்போகிற நியாயங்களுக்கு அவர்கள் செவிகொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறான். பவுல் அவர்களை "சகோதரரே" என்று அழைப்பதினால், தன்னையும் அவர்களில் ஒருவனாகப் பாவிக்கிறான். அவர்களை "பிதாக்களே" என்றும் அழைக்கிறான். அவர்கள் ஆசாரியரின் பிதாக்களாகயிருக்கிறார்கள். பவுல் யூதரின் மகனாயிருக்கிறான். தன்னையும் அவர்களையும் வேறுபிரிக்காமல், ஒன்றுபோல பாவித்துப் பேசுகிறான்.

நாம் மனுஷரை முகஸ்துதி செய்யக்கூடாது. ஆனாலும் பிறருக்குக் கொடுக்கவேண்டிய மரியாதையை நாம் கட்டாயம் கொடுக்கவேண்டும். யாரையும் அவமரியாதை செய்யக்கூடாது. நம்முடைய பேச்சினால் யாரையும் கோபப்படுத்தக் கூடாது. யூதர்கள் அவன்மீது பாய்ந்து அவனைக் கொலைசெய்ய எத்தனம்பண்ணினார்கள். சேனாபதியும் போர்ச்சேவகரும் பவுலை அவர்களுடைய கைகளிலிருந்து பாதுகாத்து கோட்டைக்குள் கொண்டு வந்திருக்கிறார்கள். அப்படியிருந்தும் பவுல் யூதர்களோடு பேசுவதை நிறுத்தவில்லை. தன்னுடைய ஜீவனுக்கு ஆபத்து நேரிட்டாலும், கர்த்தருடைய சுவிசேஷத்தை அவர்களுக்கு அறிவிக்க வேண்டுமென்பதில் பவுல் உறுதியாகயிருக்கிறான்.

பவுல் அவர்களிடம் "நான் இப்பொழுது உங்களுக்குச் சொல்லப்போகிற நியாயங்களுக்குச் செவிகொடுப்பீர்களாக" என்று அவர்களிடம் கேட்டுக்கொள்கிறான். பவுலின் வார்த்தைகள் நியாயமான வார்த்தைகள். நாம் ஒருவரை குற்றப்படுத்தும்போது, அவருடைய நியாயத்தை அவர் எடுத்துச்சொல்ல, அவருக்கு வாய்ப்புக் கொடுக்கவேண்டும். அப்படிப்பட்ட வாய்ப்பு தனக்கும் கொடுக்கப்பட வேண்டுமென்றும், தான் சொல்லப்போகிற நியாயங்களுக்கு அவர்கள் செவிகொடுக்கவேண்டுமென்றும் பவுல் அவர்களைக் கேட்டுக்கொள்கிறான்.

எபிரெயு பாஷை

அவன் எபிரெயுபாஷையிலே தங்களுடனே பேசுகிறதை அவர்கள் கேட்ட பொழுது, அதிக அமைதலாயிருந்தார்கள். அப்பொழுது அவன்: (அப் 22:2)

பவுல் அவர்களோடு எபிரெயு பாஷையில் பேசுகிறான். இது யூதருடைய பாஷை. பழைய ஏற்பாடு ஆதியிலே எபிரெயு பாஷையில் எழுதப்பட்டது. அந்த எபிரெயு பாஷைக்கும் இக்காலத்து எபிரெயு பாஷைக்கும் வித்தியாசமுள்ளது. இவர்கள் எபிரெயு பாஷையில், ஒரு கிளை பாஷையான சீரியாக் பாஷையைப் பேசுகிறார்கள். தன்னுடைய பேச்சைக் கேட்கிறவர்கள் எல்லோரும் யூதர்கள் என்பது பவுலுக்குத் தெரியும். தன்னுடைய இனத்தாரிடம், அவர்கள் பேசுகிற எபிரெயு பாஷையில் பேசி, பவுல் அவர்களுக்குரிய மரியாதையைக் கொடுக்கிறான். இதன் மூலமாக தானும் ஒரு யூதன் என்பதை, பவுல் மற்ற யூதர்களுக்குத் தெளிவுபடுத்துகிறான்.

பவுல் சொல்லுகிற நியாயங்கள் அங்கு கூடியிருக்கிற யூதர்களுக்குத் தெளிவாகப் புரிகிறது. அவர்களெல்லோரும் பேசுகிற பொதுவான பாஷையாகிய எபிரெயு பாஷையிலே பவுல் பேசுகிறான். அவன் தங்களுடனே எபிரெயு பாஷையிலே பேசுகிறதை அவர்கள் கேட்டபோது, அதிக அமைதலாயிருக்கிறார்கள். சேனாபதி பவுலை கோட்டைக்குள்ளே கொண்டுபோகிற சமயத்தில், பவுல் சேனாபதியிடம் கிரேக்கு பாஷையில் பேசினான். இது சேனாபதிக்கு ஆச்சரியமாயிற்று (அப் 21:37). பவுல் எபிரெயு பாஷையில் பேசுவதைக்கேட்டு யூதர்கள் ஆச்சரியப்படுகிறார்கள்.

சேனாபதியும் யூதர்களும் பவுலின் வார்த்தைக்குச் செவிகொடுக்கிறார்கள். பவுல் தங்கள் பாஷையில் பேசுவதினால் அவனுடைய வார்த்தைகளைக் கவனித்துக் கேட்கிறார்கள். இந்த உலகத்தில் ஏராளமான ஞானிகளும் நல்லவர்களும் இருக்கிறார்கள். இவர்கள் மற்றவர்கள் மத்தியில் பேசும்போது அவர்களுக்குப் புரிகிற பாஷையில் பேசவேண்டும். புரியாத பாஷையில் பேசுகிறவர்கள் ஆகாயத்தில் சிலம்பம்பண்ணுகிறவர்கள் போல இருப்பார்கள்.

பவுலின் சரித்திரம் அப் 22 : 3-5

அப் 22:3. நான் யூதன், சிலிசியா நாட்டிலுள்ள தர்சுபட்டணத்திலே பிறந்து, இந்த நகரத்திலே கமாலியேலின் பாதத்தருகே வளர்ந்து, முன்னோர்களுடைய வேதப் பிரமாணத்தின்படியே திட்டமாய்ப் போதிக்கப்பட்டு, இன்றையத்தினம் நீங்களெல்லாரும் தேவனைக் குறித்து வைராக்கியமுள்ளவர்களாயிருக்கிறதுபோல நானும் வைராக்கியமுள்ளவனாயிருந்தேன்.

அப் 22:4. நான் இந்த மார்க்கத்தாராகிய புருஷரையும் ஸ்திரீகளையும் கட்டி, சிறைச்சாலைகளில் ஒப்புவித்து, மரணபரியந்தம் துன்பப்படுத்தினேன்.

அப் 22:5. அதற்குப் பிரதான ஆசாரியரும் மூப்பர் யாவரும் சாட்சிகொடுப்பார்கள்; அவர்கள் கையிலே நான் சகோதரருக்கு நிருபங்களை வாங்கிக்கொண்டு, தமஸ்குவிலிருக்கிறவர்களும் தண்டிக்கப்படும்படிக்கு, அவர்களைக் கட்டி, எருசலேமுக்குக் கொண்டுவரும்படி அவ்விடத்திற்குப் போனேன்.

நான் யூதன்

நான் யூதன், சிலிசியாநாட்டிலுள்ள தர்சுபட்டணத்திலே பிறந்து, இந்த நகரத்திலே கமாலியேலின் பாதத்தருகே வளர்ந்து, முன்னோர்களுடைய வேதப் பிரமாணத்தின்படியே திட்டமாய்ப் போதிக்கப்பட்டு, இன்றையத்தினம் நீங்களெல்லாரும் தேவனைக் குறித்து வைராக்கியமுள்ளவர்களாயிருக்கிறதுபோல நானும் வைராக்கியமுள்ளவனாயிருந்தேன் (அப் 22:3).

சேனாபதி பவுலை கோட்டைக்குள்ளே அழைத்துக்கொண்டு போகிறபோது, சேனாபதி அவனை எகிப்தியன் என்று நினைத்தான். அவன் நினைக்கிற பிரகாரம் தான் ஒரு எகிப்தியன் அல்ல என்பதை பவுல் அவனுக்குத் தெளிவுபடுத்துகிறான். அதே சமயத்தில், தன்னைக் கொலைசெய்ய எத்தனமாயிருக்கும் யூதருக்கும், தன்னை ஒரு யூதனாக வெளிப்படுத்துகிறான். பவுல் நியாயப்பிரமாணத்திற்கும், தேவனுடைய ஆலயத்திற்கும் சத்துருவாகயிருக்கிறான் என்று யூதர்கள் நினைக்கிறார்கள். தான் அவர்களுக்குச் சத்துருவல்ல என்றும், தானும் அவர்களைப்போல ஒரு யூதனென்றும் அவர்களுக்குத் தன்னைப்பற்றிச் சொல்லுகிறான்.

பவுல் யூதருக்குள்ளே ஒரு யூதனாகயிருக்கிறான். யூதேயா தேசத்தை நேசிக்கிறான். பவுல் தன்னுடைய பிறப்பையும், வளர்ப்பையும், கல்வியையும் அவர்களுக்குச் சரித்திரம்போல் எடுத்துச்சொல்லுகிறான். "நான் யூதன், சிலிசியா நாட்டிலுள்ள தர்சு பட்டணத்தில் பிறந்தவன்" என்று பவுல் தன்னுடைய பிறப்பைப்பற்றிச் சொல்லுகிறான். அக்காலத்தில் சிலிசியா நாட்டிலுள்ள தர்சு பட்டணம் மிகவும் பிரசித்திப்பெற்ற பட்டணங்களில் ஒன்றாக விளங்கிற்று. பவுல் பிறப்பினால், அந்தப் பட்டணத்தில், விடுதலையுள்ள ஒரு மனுஷனாகயிருக்கிறான்.

இதைச் சொல்லுவதினால் பவுலுக்கு எந்தப் பெருமையும் வந்துவிடப்போவதில்லை. தர்சு பட்டணத்தில் தான் பிறந்தவனென்று சொன்னவுடன், ஜனங்கள் பவுலுக்குப் பயந்துவிடப்போவதில்லை. ஆனாலும் இங்குள்ள சூழ்நிலையை மனதில் வைத்து, தனக்கு விரோதமாக எழும்பியிருக்கும் யூதர்கள் மத்தியிலே, தன்னையும் ஒரு யூதனாக காண்பித்துக்கொள்வது நலமென்று நினைத்து, பவுல் "நான் யூதன்" என்று சொல்லுகிறான்.

பவுல் அதிகக்கல்வி கற்றவன். வேதபண்டிதன். கல்வி கற்பதற்காக எருசலேமுக்கு வந்திருக்கிறான். யூதமார்க்கத்தைக் கற்றுக்கொடுக்கிற கலாசாலை எருசலேம் நகரத்திலுள்ளது. இந்த நகரத்திலே, பவுல், கமாலியேலின் பாதத்தருகே வளர்ந்தவன். கமாலியேல் பிரசித்தப் பெற்ற வேதபண்டிதன். அவரிடத்தில் பவுல் முன்னோர்களுடைய வேதபிரமாணத்தின்படி திட்டமாய்ப் போதிக்கப்பட்டிருக்கிறான். ஆகையினால் பவுல் வேதப்பிரமாணத்தை அறியாத அஞ்ஞானியல்ல. பவுலுக்கு வேதப்பிரமாணத்தைப் பற்றி சரியாகத் தெரியாது என்று யூதர்கள் அவனுடைய வேத அறிவைப்பற்றித் தவறுதலாக நினைத்துவிடக்கூடாது.

பவுல் தன்னுடைய வாலிபநாட்களிலேயே யூதமார்க்கத்தின் முறைமையின் பிரகாரமாகப் போதிக்கப்பட்டிருக்கிறான். இவனுடைய ஆசிரியர் கமாலியேல். அவருடைய பாதபடியில் பவுல் போதிக்கப்பட்டவன். கமாலியேலிடம் காணப்பட்ட வேத அறிவு பவுலிடமும் காணப்படுகிறது. கமாலியேலின் பாதத்தருகே வளர்ந்து, பவுல் முன்னோர்களுடைய வேதப்பிரமாணத்தின்படியே திட்டமாய்ப் போதிக்கப்பட்டிருக்கிறான். வேத பிரமாணத்தில் இவன் கற்றுக்கொள்ளாத பாடம் எதுவுமில்லை. கமாலியேல் எல்லா வேதபாடங்களையும் பவுலுக்குத் திட்டமாய்ப் போதித்திருக்கிறார்.

பவுல் இப்போது யூதருடைய மார்க்கத்திற்கு எதிர்த்து நிற்கிறான். யூதருடைய வேதப்பிரமாணத்தைவிட, இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையின் பிரமாணத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறான். மோசேயின் பிரமாணத்தைவிட்டு கிறிஸ்துவின் பிரமாணத்திற்கு வந்திருக்கிறான். மோசேயின் பிரமாணத்தைச் சரியாகக் கற்றுக்கொள்ளாததினாலோ, அல்லது அதை சரியாகப் புரிந்து கொள்ளாததினாலோ, அதைவிட்டுப் பிரிந்து வரவில்லை. மோசேயின் பிரமாணத்தில் அதிகமாய்ப் போதிக்கப்பட்டு, திட்டமாய்க் கற்றுத் தேர்ச்சி பெற்றிருக்கிறான்.

பவுல் முன்னோர்களுக்கு மதிப்பு கொடுக்கிறவன். பாரம்பரிய பழக்க வழக்கங்களையும் மதிக்கிறவன். மற்ற யூதர்களைப்போல இவனும் சமுதாயத்தில் மிகவும் நல்லவன். இவனுடைய காலத்தில் பவுலைப்போல வேதப்பிரமாணத்தைக் கற்றவன் வேறொருவனுமில்லை. பவுலைப்போல வேறு யாராலும் வேதப்பிரமாணத்தை விளக்கிக் கூறமுடியாது. பவுலைப்போல யாராலும் வசனங்களுக்கு வியாக்கியானம் சொல்லவும் முடியாது.

யூதர்களெல்லாரும் இன்றைய தினம் தேவனைக்குறித்துப் பக்தி வைராக்கியமுள்ளவர்களாகயிருக்கிறார்கள். அவர்களைப்போலவே பவுலும் தேவனைக் குறித்துப் பக்திவைராக்கியமுள்ளவனாயிருந்தான். வேதப்பிரமாணத்தின்படி திட்டமாய்ப் போதிக்கப்பட்டிருக்கிறவர்கள், தாங்கள் கற்றுக்கொண்டவற்றை மற்றவர்களுக்கு முறைப்படி கற்றுக்கொடுப்பது வழக்கம்.

யூதர்களுடைய பக்திவைராக்கியத்தைப்பற்றி பவுல் ரோமருக்கு எழுதின நிருபத்தில் இவ்வாறு எழுதியிருக்கிறார். "சகோதரரே, இஸ்ரவேலர் இரட்சிக்கப்படவேண்டும் என்பதே என் இருதயத்தின் விருப்பமும் நான் தேவனை நோக்கிச் செய்யும் விண்ணப்பமுமாயிருக்கிறது. தேவனைப்பற்றி அவர்களுக்கு வைராக்கியமுண்டென்று அவர்களைக் குறித்துச் சாட்சிசொல்லுகிறேன்; ஆகிலும் அது அறிவுக்கேற்ற வைராக்கியமல்ல. எப்படியென்றால், அவர்கள் தேவநீதியை அறியாமல், தங்கள் சுயநீதியை நிலைநிறுத்தத் தேடுகிறபடியால் தேவநீதிக்குக் கீழ்ப்படியாதிருக்கிறார்கள். விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும்படியாகக் கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார்" (ரோம 10:1-4).

யூதமார்க்கத்து ரபீமார்களைப்போல பவுலும் தேவனைக்குறித்து பக்திவைராக்கியமுள்ளவன். தன்னுடைய பேச்சைக் கேட்கிறவர்கள் யாவரும் தன்னைப்போலவே தேவனைக்குறித்துப் பக்திவைராக்கியமுள்ளவர்களென்று பவுல் அங்கீகரிக்கிறான். ஆனாலும் யூதர்கள் பவுலைப் புரிந்துகொள்ளவில்லை. பவுலைக் கொலைசெய்யவேண்டுமென்று எத்தனம்பண்ணிக்கொண்டிருக்கிறார்கள்.

அவர்களைப்போல தனக்கும் தேவனைக்குறித்துப் பக்திவைராக்கியம் உண்டு என்பதற்காக பவுல் அவர்களை விரோதிக்கவில்லை. "பிதாவே இவர்களை மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்பதை இவர்கள் அறியாதிருக்கிறார்கள்" என்று இயேசுகிறிஸ்து தம்மைச் சிலுவையில் அறைந்தவர்களுக்காக ஜெபம் பண்ணினார். பவுலும் இயேசுகிறிஸ்துவின் முன்மாதிரியைப் பின்பற்றி, அவர்களுக்காக விண்ணப்பம் பண்ணுகிறான்.

துன்பப்படுத்தினேன்

நான் இந்த மார்க்கத்தாராகிய புருஷரையும் ஸ்திரீகளையும் கட்டி, சிறைச்சாலைகளில் ஒப்புவித்து, மரணபரியந்தம் துன்பப்படுத்தினேன். அதற்குப் பிரதான ஆசாரியரும் மூப்பர் யாவரும் சாட்சிகொடுப்பார்கள்; அவர்கள் கையிலே நான் சகோதரருக்கு நிருபங்களை வாங்கிக் கொண்டு, தமஸ்குவிலிருக்கிறவர்களும் தண்டிக்கப்படும்படிக்கு, அவர்களைக் கட்டி, எருசலேமுக்குக் கொண்டுவரும்படி, அவ்விடத்திற்குப் போனேன் (அப் 22:4,5).

பவுல் ஒரு யூதன். யூதமார்க்கத்தில் பரிசேய சமயத்தைச் சேர்ந்தவன். தேவனைக்குறித்து வைராக்கியமுள்ளவன். தன்னுடைய ஆரம்பகாலத்தில் பவுல் கிறிஸ்துவின் சீஷர்களைத் துன்பப்படுத்தினான். விசுவாசிகள் மீது சீறிப்பாய்ந்து அவர்களைக் கொலைசெய்தான். அவர்களைத் துன்பப்படுத்தின சம்பவத்தை பவுல் இந்தச் சமயத்தில் யூதர்களுக்கு எடுத்துச்சொல்லுகிறான். தன்னுடைய உள்ளத்திலுள்ள மாற்றத்தை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக, பவுல் தன்னுடைய இரட்சிப்பின் சாட்சியை அவர்களுக்கு அறிவிக்கிறான்.

தேவனுடைய வல்லமையினால் பவுல் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிற சீஷர்களில் ஒருவனாகச் சேர்க்கப்பட்டிருக்கிறான். கர்த்தருடைய வல்லமையினால் பவுலுக்குள் மனமாற்றம் உண்டாயிற்று. இந்த மனமாற்றம் உண்டாவதற்கு முன்பாக, பவுல் இயேசுகிறிஸ்துவின் சீஷர்களைச் சிறைச்சாலைகளில் ஒப்புவித்து, மரணபரியந்தம் அவர்களைத் துன்பப்படுத்தினவன்.

பவுல் இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமாகத் தூஷண வார்த்தைகளைப் பேசினான். கிறிஸ்துவின் சீஷர்களைத் துன்பப்படுத்தினான். ஆனாலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவிடத்தில் கிருபையையும் இரக்கத்தையும் பெற்றுக்கொண்டான். ஒரு காலத்தில் பவுல் இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமாக இருந்ததுபோலவே, இப்போது யூதர்கள் இயேசுவுக்கு விரோதமாகயிருக்கிறார்கள். இவர்களுக்கும் மனந்திரும்பினால், தேவன் பவுலுக்கு இரக்கம் காண்பித்ததுபோல அவர்களுக்கும் இரக்கம் காண்பிப்பார். இவர்கள் மனந்திரும்பினால் இயேசுகிறிஸ்து இவர்களையும் இரட்சிப்பார்.

பவுல் இரட்சிக்கப்படுவதற்கு முன்பாக இயேசுகிறிஸ்துவின் சீஷர்களை அதிகமாய்த் துன்பப்படுத்தினான். "நான் இந்த மார்க்கத்தாராகிய புருஷரையும் ஸ்திரீகளையும் கட்டி, சிறைச்சாலைகளில் ஒப்புவித்து, மரணபரியந்தம் துன்பப்படுத்தினேன்" என்று தன்னுடைய பழைய சுபாவத்தை பவுல் அவர்களுக்கு எடுத்துச்சொல்லுகிறான். பவுல் விசுவாசிகள்மீது சீறிப்பாய்ந்து அவர்களைக் கொலைசெய்தான் (அப் 9:1). சீஷர்கள் கொலைசெய்யப்படுகையில் பவுலும் அதற்கு சம்மதித்திருந்தான் (அப் 26:10).

பவுல் விசுவாசிகளை மிகவும் கடுமையாகத் துன்பப்படுத்தினான். அவர்களை மரணபரியந்தம் துன்பப் படுத்தினான். இயேசுகிறிஸ்துவுக்கும், அவருடைய உபதேசத்திற்கும், அவரை விசுவாசிக்கிறவர்களுக்கும் பவுல் பயங்கரமான சத்துருவாகயிருந்தான். இயேசுகிறிஸ்துவின் சீஷர்களை அழிப்பதற்காகப் பவுல் மரிப்பதற்கும் ஆயத்தமாகயிருந்தான். தன் ஜீவனைக் கொடுத்தாவது கிறிஸ்துவின் சீஷர்களைக் கொன்றுபோடவேண்டுமென்று பவுல் கொலைவெறியோடிருந்தான்.

கிறிஸ்துவின் சீஷர்களைப் பவுல் பயமுறுத்தினான். கிறிஸ்துவை விசுவாசிக்கிற புருஷரையும் ஸ்திரீகளையும் கட்டி சிறைச்சாலைகளில் ஒப்புவித்தான். விசுவாசிகளை கட்டிய பவுல், இப்போதோ கட்டப்பட்டவனாக அவர்களுக்கு முன்பாக நிற்கிறான். பவுல் இரட்சிக்கப்படுவதற்கு முன்பாக விசுவாசிகளைக் கட்டி, சிறைச்சாலைகளில் ஒப்புவித்து, துன்பப்படுத்தின சம்பவத்தை இங்கு யூதர்களிடத்தில் சாட்சியாக அறிவிக்கிறான். புருஷர்களை மாத்திரமல்ல அவன் ஸ்திரீகளையும் துன்பப்படுத்தினான்.

ஆலோசனைச்சங்கத்தார் கிறிஸ்துவின் சீஷர்களைத் துன்பப்படுத்த பவுலுக்குப் பூரண அதிகாரத்தைக் கொடுத்திருந்தார்கள். சீஷர்களை அடக்கவும், சபைகளை அழிக்கவும் பிரதான ஆசாரியர் பவுலை ஒரு கருவியாகப் பயன்படுத்தினார்கள். பிரதான ஆசாரியரும், மூப்பரும், ஆலோசனைச்சங்கத்தார் எல்லாரும் ஒரு காலத்தில் பவுலுக்கு மிகவும் வேண்டியவர்கள். கிறிஸ்துவின் சீஷருக்கு விரோதமாகப் பவுல் செய்த காரியங்களெல்லாவற்றிற்கும் அவர்கள் யாவரும் சாட்சி கொடுப்பார்கள்.

அக்காலத்தில் தமஸ்கு பட்டணத்தில் ஏராளமானோர் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்கள். அந்தப் பட்டணத்தில் சபை வளர்ந்து பெருகிற்று. அவர்களை அழிக்க வேண்டுமென்றும், சபையின் வளர்ச்சியை தடை செய்து அதை ஒழித்துப்போடவேண்டுமென்றும் ஆலோசனைச்சங்கத்தார் தீர்மானம் பண்ணினார்கள். கிறிஸ்துவின் சீஷர்களைக் கட்டி சிறைச்சாலையில் போட்டு கொலைசெய்கிற பொறுப்பை பவுலிடம் ஒப்புவித்தார்கள். அதற்குரிய அனுமதிச்சீட்டையும் பவுலிடம் கொடுத்து அனுப்பினார்கள்.

சீஷர்களைத் துன்பப்படுத்த தன்னை அனுப்பின யூதர்களை, பவுல் இப்பொழுது "சகோதரரே, பிதாக்களே" என்று அழைக்கிறான். யூதர்களை "பிதாக்களே" என்று அழைப்பதினால், தான் ஒரு காலத்தில் எப்படிப்பட்ட மகனாகயிருந்தான் என்பதையும் பவுல் அவர்களுக்குத் தெளிவுபடுத்துகிறான்.

அக்காலத்தில் பவுல் கிறிஸ்துவின் சீஷர்களைக் கட்டி சிறைச்சாலைகளில் ஒப்புவித்தான். அவர்களைத் துன்பப் படுத்தினான். இயேசுகிறிஸ்துவின்மீது அவர்கள் வைத்திருக்கும் விசுவாசத்தை மறுதலித்து விடுமாறு, அவர்களைக் கட்டாயப்படுத்தினான். மறுதலிக்க மறுத்தால் அவர்களை மரணபரியந்தம் துன்பப்படுத்தினான். கிறிஸ்துவின் சீஷர்கள்மீது சீறிப்பாய்ந்து கொலை செய்தான். இதனால் பவுலைப்பார்த்து மற்ற விசுவாசிகளுக்குப் பயமுண்டாயிற்று. ஆரம்பகாலத்தில் பவுலின் இருதயம், கிறிஸ்துவின் சீஷர்களைத் துன்பப்படுத்துகிற இருதயமாகயிருந்தது.

இப்போதோ யூதர்களுடைய இருதயம் பவுலைத் துன்பப்படுத்துகிற இருதயமாகயிருக்கிறது. இப்போது பவுலின் இருதயம் மனமாற்றமடைந்துள்ள, இரட்சிக்கப்பட்டிருக்கிற இருதயமாக யிருக்கிறது. ஒரு காலத்தில் தன்னைப்போலவே இருந்த யூதர்கள், இப்போது இரட்சிக்கப்படுவதற்கு வாய்ப்புள்ளது என்பதை பவுல் யூதரிடத்தில் சொல்லுகிறான்.

கிறிஸ்துவின் தரிசனம் அப் 22 : 6-11

அப் 22:6. அப்படி நான் பிரயாணப்பட்டுத் தமஸ்குவுக்குச் சமீபமானபோது, மத்தியான வேளையிலே, சடிதியாய் வானத்திலிருந்து பேரொளி உண்டாகி, என்னைச் சுற்றிப் பிரகாசித்தது.

அப் 22:7. நான் தரையிலே விழுந்தேன். அப்பொழுது: சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய் என்று என்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டேன்.

அப் 22:8. அதற்கு நான்: ஆண்டவரே, நீர் யார் என்றேன். அவர்: நீ துன்பப்படுத்துகிற நசரேயனாகிய இயேசு நானே என்றார்.

அப் 22:9. என்னுடனேகூட இருந்தவர்கள் வெளிச்சத்தைக் கண்டு, பயமடைந்தார்கள்; என்னுடனே பேசினவருடைய சத்தத்தையோ அவர்கள் கேட்கவில்லை.

அப் 22:10. அப்பொழுது நான்: ஆண்டவரே, நான் என்னசெய்யவேண்டும் என்றேன். அதற்குக் கர்த்தர்: நீ எழுந்து, தமஸ்குவுக்குப் போ; நீ செய்யும்படி நியமிக்கப்பட்டதெல்லாம் அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார்.

அப் 22:11. அந்த ஒளியின் மகிமையினாலே நான் பார்வையற்றுப் போனபடியினால், என்னோடிருந்தவர்களால் கைலாகு கொடுத்து வழிநடத்தப்பட்டுத் தமஸ்குவுக்கு வந்தேன்.

பேரொளி

அப்படி நான் பிரயாணப்பட்டுத் தமஸ்குவுக்குச் சமீபமானபோது, மத்தியான வேளையிலே, சடிதியாய் வானத்திலிருந்து பேரொளி உண்டாகி, என்னைச் சுற்றிப் பிரகாசித்தது. நான் தரையிலே விழுந்தேன். அப்பொழுது: சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய் என்று என்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டேன் (அப் 22:6,7).

தான் இரட்சிக்கப்பட்ட சம்பவத்தைப் பவுல் இங்கு விவரிக்கிறான். தமஸ்கு பட்டணத்திற்குச் சமீபமாய்ப் போய்கொண்டிருக்கிறான். அப்போது கர்த்தருடைய வல்லமை அவனுக்கு வெளிப்படுகிறது. பவுலின் உள்ளத்தில் ஏற்பட்ட மனமாற்றம் இயற்கையினால் உண்டானதல்ல. இது தேவனுடைய கிரியை. அவனைச் சுற்றிலும் நடைபெற்ற சம்பவங்களும், உண்டான சூழ்நிலைகளும் தேவனுடைய பலத்த செய்கைக்குச் சான்றாயிருக்கிறது.

தேவனுடைய வல்லமைக்கு பவுல் தன்னை முழுவதுமாய் ஒப்புக்கொடுத்து, தன்னுடைய பாவங்களுக்கு மனந்திரும்பினான். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து அவனுடைய ஆத்துமாவை இரட்சித்தார். தன்னுடைய இரட்சிப்பின் அனுபவத்தை ஒரு விசேஷித்த நோக்கத்திற்காக பவுல் யூதர்களிடம் சொல்லுகிறான். இந்தச் சம்பவம் அப்போஸ்தலர் 9-வது அதிகாரத்தில் ஏற்கெனவே விவரிக்கப்பட்டிருக்கிறது. இது தேவனுடைய பிரத்தியட்சமான கிரியை என்பதை உறுதிபண்ணுவதற்காகவே பவுல் இந்தச் சம்பவத்தை இங்கு மறுபடியும் குறிப்பிடுகிறான்.

இயேசுகிறிஸ்து பவுலை ஆட்கொள்வதற்கு முன்பாக, அவன் கிறிஸ்துவின் சீஷர்களை கொடூரமாய்த் துன்பப்படுத்தினான். தமஸ்குவில் இருக்கிற சீஷர்களைத் தண்டிக்கும்படிக்கு, அவர்களைக் கட்டி எருசலேமுக்கு இழுத்து வர பிரயாணப்பட்டு, பவுல் தமஸ்குவுக்குச் சமீபமாய்ப்போனான். அவனுடைய இருதயத்தில் சீஷர்களைத் துன்பப்படுத்தவேண்டும் என்னும் சிந்தனையே அல்லாமல் வேறு சிந்தனை எதுவுமில்லை. தான் என்ன நோக்கத்திற்காக தமஸ்குவுக்குப் புறப்பட்டு வந்திருக்கிறானோ அந்த நோக்கத்தை நிறைவேற்ற வேண்டுமென்பதில் வைராக்கிய வெறியோடிருக்கிறான்.

பவுல் தமஸ்குவுக்குச் சமீபமானபோது, அது மத்தியான வேளையாயிருக்கிறது. அந்த வேளையில் சடிதியாய் வானத்திலிருந்து பேரொளி உண்டாயிற்று. அந்த ஒளி பவுலைச் சுற்றிப் பிரகாசித்தது. தேவன் ஒளியாயிருக்கிறார் என்பது யூதருக்குச் தெரிந்த சத்தியம். மத்தியான வேளையிலே, இப்படிப்பட்ட பேரொளி வானத்திலிருந்து உண்டாக வேண்டுமென்றால், அது தேவனிடத்திலிருந்துதான் வந்திருக்க வேண்டுமென்பதை யூதர்கள் எளிதாக நம்புவார்கள்.

பேரொளி உண்டான வேளை மத்தியானவேளை. அந்த ஒளி அவனைச் சுற்றிப்பிரகாசிக்கிறது. பவுலால் நிற்க முடியவில்லை. அவன் தரையில் விழுந்துவிடுகிறான். பவுலோடுகூட வந்தவர்களும் தரையிலே விழுந்துவிடுகிறார்கள் (அப் 26:14).

பவுலும் அவனோடு கூடவந்தவர்களும் தரையில் விழுந்தபோது வானத்திலிருந்து ஒரு சத்தமுண்டாயிற்று. இதுவரையிலும் இயேசுகிறிஸ்துவைப்பற்றி பயபக்தியோடு சிந்தனை செய்யாத பவுல், இப்போது கிறிஸ்துவின் சத்தத்தை தன் காதுகளால் கேட்கிறான். அந்தச் சத்தம் சவுலை பெயர் சொல்லி அழைத்தது. "சவுலே, சவுலே நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்" என்று அந்தச் சத்தம் அவனுடனே சொல்லிற்று. பவுலும் அந்தச் சத்தத்தைக் கேட்கிறான்.

நீர் யார்

அதற்கு நான்: ஆண்டவரே, நீர் யார் என்றேன். அவர்: நீ துன்பப்படுத்துகிற நசரேயனாகிய இயேசு நானே என்றார். என்னுடனேகூட இருந்தவர்கள் வெளிச்சத்தைக் கண்டு, பயமடைந்தார்கள்; என்னுடனே பேசினவருடைய சத்தத்தையோ அவர்கள் கேட்கவில்லை (அப் 22:8,9).

சவுல் தன்னுடனே சொல்லுகிற சத்தத்தைக் கேட்டவுடனே, "ஆண்டவரே, நீர் யார்" என்று கேட்கிறான். அதற்கு கர்த்தர் "நீ துன்பப்படுத்துகிற நசரேயனாகிய இயேசு நானே" என்று அவனுக்குப் பதில் சொல்லுகிறார். பவுல் தன்னைச் சுற்றிப்பிரகாசிக்கிற ஒளியையும், வானத்திலிருந்து உண்டான சத்தத்தையும் கேட்டு இரட்சிக்கப்படுகிறான்.

ஆனால் அவனோடு கூட பிரயாணம்பண்ணினவர்கள் யாரும் இரட்சிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அவனுடன் கூடயிருந்தவர்களும் வெளிச்சத்தைக் கண்டார்கள். ஆனால் அவனுடனே பேசினவருடைய சத்தத்தையோ அவர்கள் கேட்கவில்லை. அந்தச் சத்தத்தின் அர்த்தம் அவர்களுக்குத் தெரியவில்லை. பேரொளியும், வானத்திலிருந்து உண்டான சத்தமும் அவர்களுடைய ஆத்துமாவில் எந்தக் கிரியையும் நடப்பிக்கவில்லை. ஆகையினால் அவர்கள் இரட்சிக்கப்படவில்லை.

நான் என்ன செய்யவேண்டும்

அப்பொழுது நான்: ஆண்டவரே, நான் என்னசெய்யவேண்டும் என்றேன். அதற்குக் கர்த்தர்: நீ எழுந்து, தமஸ்குவுக்குப் போ; நீ செய்யும்படி நியமிக்கப்பட்டதெல்லாம் அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார். அந்த ஒளியின் மகிமையினாலே நான் பார்வையற்றுப்போனபடியினால், என்னோடிருந்தவர்களால் கைலாகு கொடுத்து வழிநடத்தப்பட்டுத் தமஸ்குவுக்கு வந்தேன் (அப் 22:10,11).

கர்த்தருடைய தெய்வீக வழிநடத்துதலின் பிரகாரமாகவே ஒவ்வொரு காரியமும் நடைபெறுகிறது என்பதை பவுல் யூதருக்கு விவரித்துச் சொல்லுகிறான். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தன்னுடனே பேசினவுடனே, பவுல் கர்த்தரிடம் "ஆண்டவரே நான் என்ன செய்யவேண்டும்" என்று கேட்கிறான். கர்த்தருடைய வார்த்தையைக் கேட்கும் முன்பாக பவுல் தவறான பாதையில் சென்றுகொண்டிருந்தான். கர்த்தருடைய வார்த்தை இப்போது பவுலை சரியான பாதையில் வழிநடத்துகிறது.

கர்த்தர் பவுலிடம் "நீ எழுந்து தமஸ்குவுக்குப் போ" என்று கூறுகிறார். மேலும் "நீ செய்யும்படி நியமிக்கப்பட்டதெல்லாம் அங்கே உனக்குச் சொல்லப்படும்" என்றும் சொல்லுகிறார். தேவனுடைய வெளிப்பாடு பவுலுக்கு விசேஷித்த வழியில் உண்டாயிற்று.

கர்த்தர் தரிசனங்கள் மூலமாகவும், தெய்வீக சத்தங்களின் மூலமாகவும், தேவதூதர்களின் தரிசனத்தின் மூலமாகவும் நம்மை அற்புதமாக வெளிப்படுத்துகிறார். பவுல் என்ன செய்யவேண்டுமென்று வானத்திலிருந்து உண்டான சத்தம் அப்போது ஒன்றும் சொல்லவில்லை. அவன் எழுந்து தமஸ்குவுக்குப் போகவேண்டும் என்று மாத்திரமே அந்தச் சத்தம் அவனோடு சொல்லிற்று. அந்தச் சத்தத்திற்கு பவுல் கீழ்ப்படிந்து அங்குபோனால், அவன் செய்யும்படி நியமிக்கப்பட்டதெல்லாம் அங்கே அவனுக்குச் சொல்லப்படும்.

கர்த்தர் மத்தியானவேளையிலே வானத்திலிருந்து பேரொளி உண்டாக்கி, அதை பவுலைச் சுற்றிலும் பிரகாசிக்கச் செய்கிறார். அந்த ஒளியின் மகிமையினாலே பவுல் பார்வையற்றுப் போய்விடுகிறான். தற்காலிகமாக அவன் குருடனாகிறான். நியாயந்தீர்க்கப்படுகிற பாவிகள் அந்தகார வல்லமையினால் குருடராக்கப்படுவார்கள். இந்தக் குருடு நித்திய குருடாயிருக்கும். ஆனால் தங்களுடைய உள்ளத்தில் பாவங்களைக் குறித்து உணர்வடைகிறவர்களோ, குருடரானாலும், தற்காலிக குருடராகவே இருப்பார்கள். இந்தக் குருடு இருளினால் உண்டானதல்ல. தேவனுடைய வெளிச்சத்தினால் உண்டானது. பவுல் ஒளியின் மகிமையினாலே பார்வையற்றுப்போனான். இந்தக் குருடு இருளின் வல்லமையினால் உண்டானதல்ல. பவுலின் மனக்கண்கள் பிரகாசமுள்ளதாய் பார்க்கவேண்டுமென்பதற்காக, இப்போது அவன் பார்வையற்றுப்போயிருக்கிறான்.

பவுலோடு கூட பிரயாணம் செய்தவர்களும் அந்தப் பேரொளியைக் கண்டார்கள். ஆனால் அவர்கள் அந்த ஒளியின் மகிமையினாலே பார்வையற்றுப் போகவில்லை. அவர்களுக்கு பார்வையிருப்பதினால், அவர்கள் பவுலுக்கு கைலாகு கொடுத்து, அவனை தமஸ்குவுக்கு வழிநடத்தி கூட்டிக்கொண்டு வருகிறார்கள்.

பவுல் ஒரு பரிசேயன். தன்னுடைய ஆவிக்குரிய தரிசனங்களைக் குறித்து அவன் இருதயத்தில் பெருமைப்படுகிறவன். இயேசுகிறிஸ்து பரிசேயரிடம் "காணாதவர்கள் காணும்படியாகவும், காண்கிறவர்கள் குருடராகும்படியாகவும் நியாயத்தீர்ப்புக்கு நான் இந்த உலகத்தில் வந்தேன்" என்று கூறினார். அதற்கு அவருடனே கூடயிருந்த பரிசேயரில் சிலர் இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளைக் கேட்டு "நாங்களும் குருடரோ" என்று அவரிடத்தில் கேட்டார்கள் (யோவா 9:39,40). பவுல் பரிசேயனாகயிருந்தாலும் ஆவிக்குரிய காரியங்களை காணக் கூடாதவாறு பார்வையற்றவனாயிருக்கிறான். அவனுடைய ஆவிக்குரிய குருட்டுத்தனம் நீங்க வேண்டுமென்பதற்காக, இப்போது அவன் தன் சரீரத்தில் பார்வையற்றவனாயிருக்கிறான்.

அனனியா
அப் 22 : 12-16

அப் 22:12. அப்பொழுது வேதப்பிரமாணத்தின் படியே பக்தியுள்ளவனும், அங்கே குடியிருக்கிற சகல யூதராலும் நல்லவனென்று சாட்சிபெற்றவனுமாகிய அனனியா என்னும் ஒருவன்,

அப் 22:13. என்னிடத்தில் வந்துநின்று: சகோதரனாகிய சவுலே, பார்வையடைவாயாக என்றான்; அந்நேரமே நான் பார்வையடைந்து, அவனை ஏறிட்டுப்பார்த்தேன்.

அப் 22:14. அப்பொழுது அவன்: நம்முடைய முன்னோர்களின் தேவனுடைய திருவுளத்தை நீ அறியவும், நீதிபரரைத் தரிசிக்கவும், அவருடைய திருவாய்மொழியைக் கேட்கவும், அவர் உன்னை முன்னமே தெரிந்துகொண்டார்.

அப் 22:15. நீ கண்டவைகளையும் கேட்டவைகளையும் குறித்துச் சகல மனுஷருக்கு முன்பாக அவருக்குச் சாட்சியாயிருப்பாய்.

அப் 22:16. இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றான்.

சவுலே பார்வையடைவாயாக

அப்பொழுது வேதப்பிரமாணத்தின்படியே பக்தியுள்ளவனும், அங்கே குடியிருக்கிற சகல யூதராலும் நல்லவனென்று சாட்சிபெற்றவனுமாகிய அனனியா என்னும் ஒருவன், என்னிடத்தில் வந்துநின்று: சகோதரனாகிய சவுலே, பார்வையடைவாயாக என்றான்; அந்நேரமே நான் பார்வையடைந்து, அவனை ஏறிட்டுப்பார்த்தேன் (அப் 22:12,13).

பவுல் தமஸ்குவுக்குப் போகும்போது, அவன் செய்யும்படி நியமிக்கப்பட்டதெல்லாம் அங்கே அவனுக்குச் சொல்லப்படும் என்று கர்த்தர் அவனிடத்தில் சொல்லுகிறார். அவனோடு பேசுவதற்கு கர்த்தர் அனனியா என்பவனைத் தெரிந்தெடுக்கிறார். பவுல் செய்யும்படி நியமிக்கப்பட்டதையெல்லாம், அனனியா தமஸ்குவிலே அவனுக்குச் சொல்லுவான்.

அனனியா வேதப்பிரமாணத்தின்படி பக்தியுள்ளவன். யூதேயா தேசத்திற்கோ, யூதமார்க்கத்திற்கோ அனனியா விரோதியல்ல. யூதருடைய வேதப்பிரமாணத்தின்படி இவன் பக்தியுள்ளவன். இப்போது இவன் இயேசுகிறிஸ்துவைத் தன்னுடைய இரட்சகராக விசுவாசிக்கிறான். தமஸ்கு பட்டணத்திலே குடியிருக்கிற சகல யூதராலும் அனனியா நல்லவனென்று சாட்சி பெற்றிருக்கிறான். பவுல் சிநேகத்தோடு சந்தித்த முதலாவது விசுவாசி அனனியா தான்.

கர்த்தருடைய வழிநடத்துதலின் பிரகாரமாக அனனியா பவுலினிடத்தில் வந்து நின்று "சகோதரனாகிய சவுலே, பார்வையடைவாயாக" என்று சொல்லுகிறான். இயேசுகிறிஸ்துவின் தெய்வீக ஆலோசனையின் பிரகாரமாகவே அனனியா பவுலைப் பார்க்க வந்திருக்கிறான். இயேசுகிறிஸ்துவின் கட்டளைப் பிரகாரம் அனனியா "சவுலே பார்வையடைவாயாக" என்று சொன்ன அந்நேரமே பவுல் பார்வையடைகிறான்.

கர்த்தருடைய வார்த்தையோடு, அவருடைய வல்லமையும் புறப்பட்டு வருகிறது. அற்புதம் உடனடியாக நடைபெறுகிறது. தான் பார்வையடைந்தவுடன் பவுல் அனனியாவை ஏறிட்டுப் பார்க்கிறான். இதற்கு மேலும் அவன் தனக்குச் சொல்லப்போகிற கர்த்தருடைய வார்த்தைகளைக் கேட்க, பவுல் ஆயத்தமாய் அவனை ஏறிட்டுப் பார்க்கிறான்.

உன்னைத் தெரிந்துகொண்டார்

அப்பொழுது அவன்: நம்முடைய முன்னோர்களின் தேவனுடைய திருவுளத்தை நீ அறியவும், நீதிபரரைத் தரிசிக்கவும், அவருடைய திருவாய்மொழியைக் கேட்கவும், அவர் உன்னை முன்னமே தெரிந்துகொண்டார் (அப் 22:14).

அனனியா பவுலைக் குறித்த கர்த்தருடைய சித்தத்தை அவனுக்கு வெளிப்படுத்துகிறான். கர்த்தருடைய கிருபையும் அநுக்கிரகமும் தனக்குக் கிடைத்திருப்பதை பவுல் புரிந்துகொள்கிறான். பவுலின் ஜீவியத்தையும், ஊழியத்தையும் குறித்து கர்த்தர் விசேஷித்த சித்தங்கொண்டிருக்கிறார். பவுலைப்பற்றிய கர்த்தருடைய திட்டத்தையும் அனனியா அவனுக்கு வெளிப்படுத்துகிறான்.

அனனியா பவுலிடம் பேசும்போதே "நம்முடைய முன்னோர்களின் தேவன் உன்னைத் தெரிந்துகொண்டார்" என்று கூறுகிறான். தேவனுடைய அழைப்பை அனனியா அறிவிக்கிறான். அனனியா தேவனைப்பற்றிச் சொல்லும்போது "நம்முடைய முன்னோர்களின் தேவன்" என்று குறிப்பிடுகிறான். ஆகையினால் அனனியாவும் பிறப்பினால் ஒரு யூதனாகவே இருக்கிறான்.

தேவனுடைய திருவுளத்தை அறிவதற்காக கர்த்தர் பவுலைத் தெரிந்துகொண்டார். கர்த்தர் யாரைத் தெரிந்துகொள்கிறாரோ, அவர்களைத் தம்முடைய சித்தத்தைத் தெரிந்துகொள்வதற்காகவும், அந்தச் சித்தத்தின் பிரகாரம் ஊழியம் செய்வதற்காகவும் தெரிந்துகொள்கிறார்.

நீதிபரரைத் தரிசிக்கவும், அவருடைய திருவாய் மொழியைக் கேட்கவும் கர்த்தர் பவுலை முன்னமே தெரிந்துகொண்டார். தேவனுடைய சித்தம் பவுலுக்குத் தெளிவாக வெளிப்படுத்தப்படுகிறது. அது உடனடியாகவும் வெளிப்படுத்தப்படுகிறது. இது ஒரு விசேஷித்த கிருபை. இயேசுகிறிஸ்து பரமேறிப்போனபின்பு, அவருடைய பிரசன்னத்தைத் தரிசிக்கிற சிலாக்கியம் பவுலுக்குக் கிடைத்திருக்கிறது.

இயேசுகிறிஸ்து பிதாவின் வலதுபாரிசத்தில் நிற்பதை ஸ்தேவான் தரிசித்தான். ஆனால் பவுலோ தேவனுடைய பிரசன்னம் தன்னைச் சுற்றிலுமிருப்பதை தரிசிக்கிறான். ஸ்தேவான் கிறிஸ்துவின் பிரசன்னத்தைத் தரிசித்தாலும், அவருடைய சத்தத்தைக் கேட்கவில்லை. பவுலோ கிறிஸ்துவின் பிரசன்னத்தையும் தரிசித்து, அவருடைய சத்தத்தையும் கேட்கிறான்.

அனனியா இயேசுகிறிஸ்துவைப் பற்றிக் குறிப்பிடும்போது, அவரை "நீதிபரர்" என்று அழைக்கிறான். இயேசுகிறிஸ்து நீதியுள்ளவர். ஆனால் அவரை நீதியில்லாமல் அநியாயமாகத் துன்புறுத்தி, சிலுவையில் அறைந்தார்கள். தம்முடைய சித்தத்தைத் தெரிந்துகொள்வதற்கு கர்த்தர் யாரை தெரிந்துகொள்கிறாரோ அவர்கள் இயேசு கிறிஸ்துவைக் குறித்து தியானிக்க வேண்டும். அவரைத் தரிசிக்கவேண்டும். அவருடைய வார்த்தைகளைக் கேட்கவேண்டும்.

சாட்சியாயிருப்பாய்

நீ கண்டவைகளையும் கேட்டவைகளையும் குறித்துச் சகல மனுஷருக்கு முன்பாக அவருக்குச் சாட்சியாயிருப்பாய் (அப் 22:15).

பவுல் யூதருக்கும் புறஜாதியாருக்கும் சாட்சியாகயிருப்பான். தான் கண்டவைகளையும் கேட்டவைகளையும் குறித்துச் சாட்சியாகயிருப்பான். பவுல் யூதரிடத்தில் பேசும்போது, தான் இரட்சிக்கப்பட்ட சம்பவத்தை, இந்த அதிகாரத்திலும், அப்போஸ்தலர் 26-ஆவது அதிகாரத்திலும் விவரித்துக் கூறுகிறான். அவன் இரட்சிக்கப்படும்போது நடைபெற்ற சம்பவத்தை பவுல் திரும்பத் திரும்ப கூறுகிறான். கர்த்தர் தன்னுடைய ஆத்துமாவிற்குச் செய்த நன்மையை ஜனங்களிடத்தில் விவரித்துச் சொல்லுகிறான். கர்த்தரை விசுவாசித்தால் அவர்களுடைய ஆத்துமாவுக்கும் நன்மை உண்டாக வாய்ப்புள்ளது என்று அவர்களை உற்சாகப்படுத்துகிறான்.

ஞானஸ்நானம் பெறு

இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றான் (அப் 22:16).

அனனியா பவுலைக் குறித்த கர்த்தருடைய சித்தத்தை அவனுக்கு அறிவிக்கிறான். ஞானஸ்நானத்தின் மூலமாக கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைச் சேர்ந்துகொள்ள வேண்டுமென்று அவனுக்கு ஆலோசனை சொல்லுகிறான். ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வதற்கு தாமதம்பண்ணவேண்டாம் என்றும் அவனிடத்தில் சொல்லுகிறான். "நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு ஞானஸ்நானம் பெறு" என்பது அனனியா பவுலுக்குக் கூறுகிற முதலாவது ஆலோசனை.

பவுல் ஒரு யூதன். யூதமார்க்கத்து முறைமையின்படி அவன் எட்டாம்நாளில் விருத்தசேதனம் செய்திருக்கிறான். தேவனோடு விருத்தசேதன உடன்படிக்கை பண்ணியிருக்கிறான். அப்போதே தன்னைத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறான். ஆனாலும் இப்போது ஞானஸ்நானத்தின் மூலமாக அவன் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவிடத்தில் தன்னை ஒப்புக்கொடுக்கவேண்டும்.

இயேசுகிறிஸ்துவின் கிருபையினால் நமக்கு பாவமன்னிப்பு உண்டாகிறது. நம்முடைய ஆத்துமாவுக்கு இரட்சிப்பு கிடைக்கிறது. தண்ணீர் ஞானஸ்நானத்தின் மூலமாக தேவன் நம்முடைய பாவமன்னிப்பை உறுதிபண்ணுகிறார். அனனியா பவுலிடம் "ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போக கழுவப்படு" என்று சொல்லுகிறான். கர்த்தருக்குக் கீழ்ப்படியும்போது இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நமக்கு ஆறுதல் உண்டாகும். நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டிருக்கிறது என்னும் சந்தோஷம் நமக்குள் உண்டாகும். நாம் தேவனிடத்திலிருந்து பாவத்திற்கு விரோதமான வல்லமையை பெற்றுக்கொள்கிறோம். பாவங்கள் போக கழுவப்படுகிறவர்கள் நீதிமானாக்கப்படுகிறார்கள். பரிசுத்தப் படுத்தப்படுகிறார்கள். நாம் விசுவாசத்தினால் ஞானஸ்நானம் பெறுகிறோம். இயேசுகிறிஸ்துவில் நாம் வைத்திருக்கிற விசுவாசத்தை ஞானஸ்நானத்தின் மூலமாக அறிக்கை செய்கிறோம்.

ஞானஸ்நானம் பெற்றிருக்கிற நாம் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளவேண்டும். இயேசுகிறிஸ்துவே கர்த்தரென்று அங்கீகரிக்கவேண்டும். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை நம்முடைய ஜீவனுக்கும், ஆத்துமாவுக்கும் ஆண்டவராக அங்கீகரிக்கவேண்டும். கர்த்தருடைய ஆலோசனையின் பிரகாரமாக ஜீவிக்கவேண்டும். நம்முடைய பாவங்கள் போக கழுவப்படவேண்டும். கர்த்தருடைய நாமத்தை நாம் தொழுதுகொள்ள வேண்டும். இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலேயே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படும்.

நம்முடைய ஆத்தும இரட்சிப்புக்கான காரியங்களை நாம் காலதாமதம் பண்ணாமல் உடனடியாகச் செய்யவேண்டும். தேவனுக்காக நாம் செய்ய வேண்டிய ஊழியத்தில் காலதாமதம் பண்ணக்கூடாது. தேவனுடைய ஊழியம் மிகவும் முக்கியமானது. அதை உடனடியாகச் செய்யவேண்டும். இப்போதே செய்யவேண்டிய ஊழியத்தை, பிறகு செய்துகொள்ளலாமென்று காலதாமதம் பண்ணினால், நம்மால் ஊழியம் செய்யமுடியாது. அனனியா பவுலுக்கு ஆலோசனை சொல்லும்போது "நீ தாமதிக்கிறது என்ன" என்று கேட்டு, அவனை உடனே ஞானஸ்நானம் பெறுமாறு சொல்லுகிறான்.

எருசலேமில் பவுல்
அப் 22 : 17-21

அப் 22:17. பின்பு நான் எருசலேமுக்குத் திரும்பிவந்து, தேவாலயத்திலே ஜெபம்பண்ணிக் கொண்டிருக்கையில், ஞான திருஷ்டியடைந்து, அவரைத் தரிசித்தேன்.

அப் 22:18. அவர் என்னை நோக்கி: நீ என்னைக் குறித்துச் சொல்லும் சாட்சியை இவர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்; ஆதலால் நீ தாமதம்பண்ணாமல் சீக்கிரமாய் எருசலேமைவிட்டுப் புறப்பட்டுப்போ என்றார்.

அப் 22:19. அதற்கு நான்: ஆண்டவரே, உம்மிடத்தில் விசுவாசமாயிருக்கிறவர்களை நான் காவலில் வைத்து ஜெபஆலயங்களிலே அடித்ததையும்,

அப் 22:20. உம்முடைய சாட்சியாகிய ஸ்தேவானுடைய இரத்தம் சிந்தப்படுகிறபோது, நானும் அருகே நின்று, அவனைக் கொலை செய்வதற்குச் சம்மதித்து, அவனைக் கொலை செய்தவர்களின் வஸ்திரங்களைக் காத்துக் கொண்டிருந்ததையும், இவர்கள் அறிந்திருக்கிறார்களே என்றேன்.

அப் 22:21. அதற்கு அவர்: நீ போ, நான் உன்னைத் தூரமாய்ப் புறஜாதிகளிடத்திலே அனுப்புவேன் என்று சொன்னார் என்றான்.

தரிசித்தேன்

பின்பு நான் எருசலேமுக்குத் திரும்பிவந்து, தேவாலயத்திலே ஜெபம்பண்ணிக் கொண்டிருக்கையில், ஞானதிருஷ்டியடைந்து, அவரைத் தரிசித்தேன் (அப் 22:17).

புறஜாதியார்களிடத்தில் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணுவதற்கு கர்த்தர் பவுலைத் தெரிந்துகொள்கிறார். இயேசுகிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கம்பண்ணுவதற்காக யூதர்கள் பவுலின்மீது கோபமாயிருக்கிறார்கள். பவுலோ தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து செயல்பட ஆயத்தமாயிருக்கிறான். "நீ கண்டவைகளையும் கேட்டவைகளையும் குறித்து சகல மனுஷருக்கு முன்பாக அவருக்குச் சாட்சியாயிருப்பாய்" என்று அனனியா கர்த்தருடைய வார்த்தையைப் பவுலுக்கு அறிவித்தான். புறஜாதியார் மத்தியில் பவுல் சுவிசேஷ ஊழியம் செய்யவேண்டுமென்பது தேவனுடைய சித்தம். பவுல் இரட்சிக்கப்பட்டு எருசலேமுக்குத் திரும்பி வந்தபின்பு, புறஜாதியாருக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கிற ஊழியத்தைக் கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக் கொள்கிறான்.

பவுல் எருசலேமுக்குத் திரும்பி வந்து தேவாலயத்திலே ஜெபம்பண்ணிக் கொண்டிருக்கிறான். தேவாலயம் எல்லா ஜனங்களுக்கும் ஜெபவீடு என்னப்படுகிறது. இங்கு எல்லா ஜனங்களும் கர்த்தரை நோக்கி ஜெபம்பண்ணவேண்டும். அதே வேளையில் எல்லா ஜனங்களும் தங்களுக்காகவும் ஜெபம்பண்ணவேண்டும். பவுல் தேவாலயத்தைத் தேவனுடைய வாசஸ்தலமாக தன் இருதயத்தில் நினைத்து அதை மேன்மைப் படுத்துகிறான். தேவாலயத்தில் ஜெபம் பண்ணிக்கொண்டிருக்கையில் கர்த்தர் அவனோடு பேசி, புறஜாதியாருக்கு ஊழியம் செய்யுமாறு அவனைப் பிரதிஷ்டை பண்ணுகிறார்.

பவுல் தேவாலயத்திலே ஜெபம்பண்ணிக் கொண்டிருக்கையில், ஞானதிருஷ்டியடைந்து, கர்த்தரைத் தரிசிக்கிறான்.

எருசலேமைவிட்டுப் புறப்பட்டுப்போ

அவர் என்னை நோக்கி: நீ என்னைக் குறித்துச் சொல்லும் சாட்சியை இவர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்; ஆதலால் நீ தாமதம்பண்ணாமல் சீக்கிரமாய் எருசலேமைவிட்டுப் புறப்பட்டுப்போ என்றார் (அப் 22:18).

கர்த்தர் பவுலை புறஜாதியார் மத்தியில் அனுப்புவதற்கு முன்பாக, பவுலின் ஊழியத்தினால் எருசலேமில் ஒரு நன்மையும் உண்டாகாது என்பதை அவனுக்குத் தெளிவுபடுத்துகிறார். பவுல் இயேசுகிறிஸ்துவைக் குறித்துச் சொல்லும் சாட்சியை எருசலேமிலுள்ளவர்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். சுவிசேஷத்தைக் கேட்டாலும், அதை மறுதலிக்கிற ஜனங்களிடத்தில், சுவிசேஷத்தைத் தொடர்ந்து பிரசங்கம்பண்ணுவதால் ஒரு பிரயோஜனமும் உண்டாகாது. ஆகையினால் பவுல் எருசலேமைவிட்டுப் புறஜாதியார் தேசத்திற்குப் போகவேண்டுமென்பது கர்த்தருடைய சித்தம். இதற்காக எருசலேம் நகரத்தார் பவுலின்மீது குற்றம் சுமத்த முடியாது. சுவிசேஷத்தைக் கேட்கக்கூடாதவாறு அவர்களே தங்கள் காதுகளை அடைத்துக்கொள்கிறார்கள்.

பவுல் எருசலேமைவிட்டுத் தாமதம்பண்ணாமல் சீக்கிரமாய்ப் புறப்பட்டுப்போகுமாறு கர்த்தர் அவனுக்குக் கட்டளைகொடுக்கிறார். தம்முடைய சுவிசேஷத்தை யார் ஏற்றுக் கொள்வார்களென்பதும், யார் ஏற்றுக்கொள்ளாமல் புறக்கணிப்பார்களென்பதும் கர்த்தருக்குத் தெரியும். கர்த்தர் தம்முடைய சித்தத்தின் பிரகாரமாகத் தம்முடைய ஊழியக்காரர்களை ஒவ்வொரு ஊழிய ஸ்தலத்திற்கும் அனுப்புகிறார்.

இவர்கள் அறிந்திருக்கிறார்களே

அதற்கு நான்: ஆண்டவரே, உம்மிடத்தில் விசுவாசமாயிருக்கிறவர்களை நான் காவலில் வைத்து ஜெபஆலயங்களிலே அடித்ததையும், உம்முடைய சாட்சியாகிய ஸ்தேவானுடைய இரத்தம் சிந்தப்படுகிறபோது, நானும் அருகே நின்று, அவனைக் கொலை செய்வதற்குச் சம்மதித்து, அவனைக் கொலைசெய்தவர்களின் வஸ்திரங்களைக் காத்துக் கொண்டிருந்ததையும், இவர்கள் அறிந்திருக்கிறார்களே என்றேன் (அப் 22:19,20).

பவுல் கர்த்தரிடத்தில் தன்னுடைய நிலைமையை மறுபடியும் எடுத்துச் சொல்லுகிறான். பவுல் இரட்சிக்கப்படுவதற்கு முன்பாக அவன் எப்படிப்பட்டவனாகயிருந்தான் என்பது எருசலேம் நகரத்தாருக்கும், சுற்றிலுமுள்ள ஜனங்களுக்கும் நன்றாகத் தெரியும். அவனுடைய பழைய வாழ்க்கையை இந்த ஜனங்களெல்லோரும் அறிந்திருக்கிறார்கள். ஆகையினால் இதே எருசலேமில் ஊழியம் செய்தால், தன்னுடைய ஊழியம் பிரயோஜனப்படும் என்று பவுல் யோசிக்கிறான். தன்னுடைய யோசனையைக் கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறான்.

“ஆண்டவரே உம்மிடத்தில் விசுவாசமாயிருக்கிறவர்களை நான் காவலில் வைத்து ஜெபாலயங்களில் அடித்ததை அறிந்திருக்கிறார்களே” என்று தன்னைப்பற்றியும், இந்த ஜனங்களைப்பற்றியும் கர்த்தரிடத்தில் அறிக்கை செய்கிறான். கர்த்தருக்குச் சாட்சியாக ஊழியம் செய்த ஸ்தேவானுடைய இரத்தம் சிந்தப்படுகிறபோது, பவுலும் அங்கே நின்று அவனைக் கொலைசெய்வதற்குச் சம்மதித்தான். அவனைக் கொலைசெய்தவர்களின் வஸ்திரங்களைக் காத்துக் கொண்டிருந்தான். இவையெல்லாவற்றையும் இந்த ஜனங்கள் அறிந்திருக்கிறார்கள் என்று பவுல் கர்த்தரிடத்தில் மேலும் விண்ணப்பம்பண்ணுகிறான். தன்னுடைய பழைய ஜீவியத்தை நன்றாய் அறிந்திருக்கிற எருசலேம் ஜனங்கள் மத்தியில் தான் ஊழியம் செய்ய விரும்புவதாகப் பவுல் கர்த்தரிடத்தில் வேண்டிக் கொள்கிறான்.

ஸ்தேவான் இயேசுகிறிஸ்துவைக் குறித்துச் சாட்சியாகப் பிரசங்கித்தான். அவனைக் கொன்றுபோடுவதற்குப் பவுலும் காரணமாகயிருந்தான். ஸ்தேவான் பிரசங்கித்ததுபோலவே, இப்போது பவுலும் இயேசுகிறிஸ்துவைக் குறித்துச் சாட்சியாகப் பிரசங்கிக்கிறான். இதனால் ஜனங்கள் தன்னுடைய பிரசங்கத்திற்குச் செவிகொடுப்பார்கள் என்று பவுல் நினைக்கிறான். கர்த்தரோ பவுலிடத்தில் "நீ என்னைக் குறித்து சொல்லும் சாட்சியை இவர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்" என்று அறிவித்துவிடுகிறார். பவுல் எருசலேமில் ஊழியம் செய்ய விரும்புகிறான். கர்த்தரோ அவனை எருசலேமைவிட்டு, தூரமாய்ப் புறஜாதிகளிடத்தில் போகுமாறு கட்டளையிடுகிறார்.

புறஜாதிகளிடத்திலே அனுப்புவேன்

அதற்கு அவர்: நீ போ, நான் உன்னைத் தூரமாய்ப் புறஜாதிகளிடத்திலே அனுப்புவேன் என்று சொன்னார் என்றான் (அப் 22:21).

எருசலேமில் ஊழியம் செய்யலாமென்று பவுல் ஏறெடுக்கிற விண்ணப்பத்தைக் கர்த்தர் மறுத்துவிடுகிறார். "நீ போ, நான் உன்னை தூரமாய் புறஜாதிகளிடத்திலே அனுப்புவேன்" என்று கர்த்தர் பவுலிடத்தில் கூறுகிறார். கர்த்தர் நம்முடைய விண்ணப்பங்களுக்குப் பதில் கொடுக்கிறார். அவர் எப்போதுமே தம்முடைய சித்தத்தின் பிரகாரமாகப் பதில் கொடுக்கிறவர். நமக்கு நன்மையானது எது என்பது கர்த்தருக்குத் தெரியும். ஆகையினால் சில சமயங்களில் நாம் வேண்டிக்கொள்வதைக் கர்த்தர் நமக்குக் கொடுக்காவிட்டாலும், அவர் நமக்குக் கொடுப்பதே நமக்கு மெய்யான ஆசீர்வாதமாயிருக்கும்.

கர்த்தர் பவுலை ஆட்கொண்டிருக்கிறார். அவனை கர்த்தரே ஊழியத்திற்கு அனுப்புகிறார். எந்த ஸ்தலத்தில், எந்த ஜனங்களுக்கு மத்தியில் பவுல் ஊழியம் செய்யவேண்டுமென்று கர்த்தரே தீர்மானம்பண்ணுகிறார். பல சமயங்களில் நம்முடைய தீர்மானமும் கர்த்தருடைய தீர்மானமும் ஒன்றாகயிருக்கலாம். சில சமயங்களில் வேறுபட்டும் இருக்கலாம். அப்படிப்பட்ட வேளைகளில் கர்த்தருடைய சித்தத்தையும் தீர்மானத்தையும் அறிந்து, நம்மைக் கர்த்தருடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்க வேண்டும். அப்போதுதான் நம்முடைய ஊழியம் ஆசீர்வாதமாகயிருக்கும்.

பவுல் எருசலேமில் ஊழியம் செய்ய விரும்புகிறான். எருசலேமிலேயே சுற்றிக்கொண்டிருக்கவேண்டும் என்று நினைக்கிறான். தன்னுடைய விருப்பத்தின்படி எருசலேமில் ஊழியம் செய்தால் ஜனங்கள் மத்தியில் பெரிய எழுப்புதல் உண்டாகும் என்று பவுல் நினைக்கிறான். ஆனால் கர்த்தருடைய சித்தமோ வேறுவிதமாயிருக்கிறது. கர்த்தர் தம்முடைய சித்தத்தின் பிரகாரமாகப் பவுலைப் பூரணப்படுத்துகிறார். அவனுடைய விருப்பத்தை நிறைவேற்றாவிட்டாலும், அவனுக்கு மேன்மையானதையே கர்த்தர் நியமித்து வைத்திருக்கிறார்.

பல சமயங்களில் கர்த்தர் பவுலுக்குச் செய்ததுபோலவே நமக்கும் செய்கிறார். நம்முடைய வாஞ்சைகளைக் கர்த்தர் நிறைவேற்றாவிட்டாலும், அவர் நமக்குக் கொடுக்கிற பராமரிப்பு மிகுந்த ஆசீர்வாதமாயிருக்கும். கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாக நாம் செயல்படுவதே நமக்கு ஆசீர்வாதம். கர்த்தருடைய சித்தமும் நம்முடைய விருப்பமும் முரண்படும்போது, நாம் உடனடியாக நம்முடைய விருப்பத்தை நிறைவேற்றி விடக்கூடாது. கர்த்தருடைய சமுகத்தில் அமர்ந்திருந்த ஜெபிக்கவேண்டும். கர்த்தருடைய சித்தத்தைத் தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும். அவருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து செயல்படத் தீர்மானித்து, நம்மை ஒப்புக்கொடுக்கவேண்டும்.

கர்த்தர் பவுலைப் புறஜாதியார் மத்தியில் ஊழியம் செய்ய அனுப்பவில்லையென்றால், பவுல் அங்கு போகாமல் எருசலேமிலேயே இருந்திருப்பான். கர்த்தர் அவனிடத்தில் மிகவும் தெளிவாக "நான் உன்னை தூரமாய்ப் புறஜாதிகளிடத்திலே அனுப்புவேன்" என்று திட்டமாய்ச் சொல்லுகிறார். இயேசுகிறிஸ்து பவுலைப் புறஜாதியார் மத்தியில் அனுப்பும்போது, பரிசுத்த ஆவியானவரும் அவனோடு கூட பிரயாணம் செய்வார். அவனுடைய ஊழியத்தின் பலன்களை காண்பதற்கு அவனுக்கு அருள்புரிவார்.

கர்த்தர் பவுலைத் தூரதேசங்களுக்கு அனுப்புகிறார். பவுல் புறஜாதியார் மத்தியில் ஊழியம் செய்வதற்காக யூதர்கள் அவன்மீது கோபமாயிருக்கிறார்கள். புறஜாதியாரிடத்தில் போகவேண்டுமென்பது பவுலின் சுயசித்தமோ, சுயவிருப்பமோ அல்ல. இது தேவனுடைய சித்தம். தேவனே பவுலைப் புறஜாதிகளிடத்திலே அனுப்புகிறவர். பவுல் எருசலேமில் தங்கியிருக்க வேண்டுமென்று விரும்பினாலும், அவன் தூரமாய்ப் புறஜாதிகளிடத்திலே போக வேண்டுமென்னும் கர்த்தருடைய சித்தமே நிறைவேறிற்று. ஆகையினால் யூதர்கள் பவுலின்மீது கோபமாயிருப்பதில் நியாயம் எதுவுமில்லை.

சேனாபதி பவுலை விசாரிக்கிறான்
அப் 22 : 22-30

அப் 22:22. இந்த வார்த்தைவரைக்கும் அவனுக்குச் செவிகொடுத்தார்கள். பின்பு: இப்படிப்பட்டவனை பூமியிலிருந்து அகற்ற வேண்டும்; இவன் உயிரோடிருக்கிறது நியாயமல்லவென்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னார்கள்.

அப் 22:23. இவ்விதமாய் அவர்கள் கூக்குரலிட்டுத் தங்கள் மேல்வஸ்திரங்களை எறிந்துவிட்டு, ஆகாயத்திலே, புழுதியைத் தூற்றிக்கொண்டிருக்கையில்,

அப் 22:24. சேனாபதி அவனைக் கோட்டைக்குள்ளே கொண்டுவரும்படி கட்டளையிட்டு, அவர்கள் அவனுக்கு விரோதமாய் இப்படிக் கூக்குரலிட்ட முகாந்தரத்தை அறியும்படிக்கு அவனைச் சவுக்கால் அடித்து விசாரிக்கச் சொன்னான்.

அப் 22:25. அந்தப்படி அவர்கள் அவனை வாரினால் அழுந்தக் கட்டும்போது, பவுல் சமீபமாய் நின்ற நூற்றுக்கு அதிபதியை நோக்கி: ரோமனும் நியாயம் விசாரிக்கப் படாதவனுமாயிருக்கிற மனுஷனை அடிக்கிறது உங்களுக்கு நியாயமா என்றான்.

அப் 22:26. நூற்றுக்கு அதிபதி அதைக்கேட்டு, சேனாபதியினிடத்திற்குப் போய், அதை அறிவித்து: நீர் செய்யப்போகிறதைக் குறித்து எச்சரிக்கையாயிரும்; இந்த மனுஷன் ரோமன் என்றான்.

அப் 22:27. அப்பொழுது சேனாபதி பவுலினிடத்தில் வந்து: நீ ரோமனா? எனக்குச் சொல் என்றான். அதற்கு அவன்: நான் ரோமன் தான் என்றான்.

அப் 22:28. சேனாபதி பிரதியுத்தரமாக: நான் மிகுந்த திரவியத்தினாலே இந்தச் சிலாக்கியத்தைச் சம்பாதித்தேன் என்றான். அதற்குப் பவுல்: நானோ இந்தச் சிலாக்கியத்திற்குரியவனாகப் பிறந்தேன் என்றான்.

அப் 22:29. அவனை அடித்து விசாரிக்கும்படி எத்தனமாயிருந்தவர்கள் உடனே அவனை விட்டுவிட்டார்கள். சேனாபதி அவன் ரோமனென்று அறிந்து, அவனைக் கட்டுவித்ததற்காகப் பயந்தான்.

அப் 22:30. பவுலின்மேல் யூதராலே ஏற்படுத்தப்பட்ட குற்றம் இன்னதென்று நிச்சயமாய் அறிய விரும்பி, அவன் மறுநாளிலே அவனைக் கட்டவிழ்த்து, பிரதான ஆசாரியரையும் ஆலோசனைச் சங்கத்தார் அனைவரையும் கூடிவரும்படி கட்டளையிட்டு, அவனைக் கூட்டிக்கொண்டுபோய், அவர்களுக்கு முன்பாக நிறுத்தினான்.

உயிரோடிருக்கிறது நியாயமல்ல

இந்த வார்த்தைவரைக்கும் அவனுக்குச் செவிகொடுத்தார்கள். பின்பு: இப்படிப்பட்டவனை பூமியிலிருந்து அகற்ற வேண்டும்; இவன் உயிரோடிருக்கிறது நியாயமல்லவென்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னார்கள் (அப் 22:22).

பவுல் தன்னுடைய நியாயத்தை எடுத்துச்சொல்லுகிறான். ஆனால் அவனுடைய உள்ளத்திலிருப்பதை பேசவிடாதவாறு யூதர்கள் மிகுந்த சத்தமிடுகிறார்கள். பவுல் ஸ்தேவானைப்பற்றி சொன்னது வரையிலும் யூதர்கள் அவனுக்குச் செவிகொடுக்கிறார்கள். புறஜாதிகளிடத்தில் தேவன் தன்னை அனுப்பியதாக பவுல் சொன்னபோது, “இப்படிப்பட்டவன் உயிரோடிருக்கிறது நியாயமல்ல” என்று மிகுந்த சத்தமிட்டுச் சொல்லுகிறார்கள்.

பவுல் ஜனங்களுக்கு முன்பாக கையமர்த்தி பேச ஆரம்பித்தபோது, யூதர்கள் அமைதியாக இருக்கிறார்கள். அவன் சொல்வதை பொறுமையோடும், ஆர்வத்தோடும் கேட்கிறார்கள். தேவன் தன்னை புறஜாதிகளிடத்தில் அனுப்பியிருக்கிறார் என்று பவுல் சொன்னபோது, அந்த வார்த்தைகளை யூதர்களால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. பவுல் “புறஜாதிகள்” என்று சொன்னவுடனேயே அவர்களுடைய அமைதி கலைந்துபோயிற்று. அங்குள்ள சூழ்நிலைகளை மறந்து, கட்டுப்பாடுகள், நீதி நியாயம் எல்லாவற்றையும் மீறி மிகுந்த சத்தமிட்டுக் கூக்குரலிடுகிறார்கள்.

தேவன் தம்முடைய தெய்வீக கிருபையினால் புறஜாதியாரையும் நேசிக்கிறார். தம்முடைய பரலோக ராஜ்யத்திற்குள் பிரவேசிப்பதற்கு அவர்களுக்கும் சிலாக்கியம் கொடுத்திருக்கிறார். ஆனால் யூதர்களோ புறஜாதியாரை வெறுக்கிறார்கள். பரலோகம் தங்களுக்கு மாத்திரமே சுதந்தரவீதமானது என்று இறுமாப்போடிருக்கிறார்கள். சுய பெருமையினால் நிரம்பியிருக்கிறார்கள்.

பவுல் புறஜாதியாரைப்பற்றி பேச ஆரம்பித்தபோது, அவனுடைய பேச்சை கேட்பதற்கு இதற்குமேல் யாரும் ஆயத்தமாகயில்லை. அவர்கள் மனச்சாட்சியில் குத்தப்பட்டவர்களாக, தங்களுடைய கோபத்தையும் வேகத்தையும் வார்தைகளிலும் சத்தத்திலும் வெளிப்படுத்துகிறார்கள். அவர்களைக் கட்டுப்படுத்துவது கூடாதகாரியமாக இருக்கிறது. தெளிவாக சிந்திக்க மறுக்கிறார்கள். தாங்கள் நினைத்தது சரியென்று கூக்குரலிட்டு சாதிக்கிறார்கள். தங்களுக்கு எல்லாம் தெரியுமென்று ஆணவத்தோடிருக்கிறவர்களுக்கு ஒரு சத்தியத்தையும் கற்றுக்கொடுக்க முடியாது. ஒருவன் சத்தியத்தைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்றால் அவனிடத்தில் கற்றுக்கொள்ளுகிற ஆவி இருக்கவேண்டும்.

பவுலின் ஜீவனுக்கு யூதர்கள் முடிவு கட்ட தீர்மானித்துவிடுகிறார்கள். பவுல் இந்தப் பூமியில் உயிரோடிருக்கும்போது நியாயமல்லவென்று மிகுந்த சத்தமிட்டுச் சொல்லுகிறார்கள். இப்படிப்பட்டவனை பூமியிலிருந்து அகற்றவேண்டுமென்றும், கொன்றுபோட வேண்டுமென்றும் கூக்குரலிடுகிறார்கள்.

மனுக்குலத்திற்கு ஆசீர்வாதமான செய்தியை கொடுப்பதற்கு தேவன் பவுலை அபிஷேகம்பண்ணியிருக்கிறார். ஆனால் யூதர்களோ இப்படிப்பட்ட பவுல் இந்தப் பூமியில் உயிரோடிருப்பது நியாயமல்ல என்று சொல்லுகிறார்கள். ஜனத்திற்கு மத்தியில் இவன் ஒரு கொள்ளைநோயாக இருக்கிறான் என்று பவுல்மீது குற்றம் சுமத்துகிறார்கள். தேவனோ பவுலை கொள்ளை நோயை சொஸ்தமாக்குவதற்காக அனுப்பியிருக்கிறார்.

பவுலுக்கு விரோதமாக கலகம்பண்ணுகிறவர்கள் பக்தியில்லாத யூதர்கள். இவர்களுக்கு தேவன்மீதும் பக்தியில்லை. தேவனுடைய ஊழியத்தைச் செய்கிற ஊழியக்காரர்கள்மீதும் மரியாதையில்லை. கர்த்தருடைய ஊழியத்தை உண்மையாய்ச் செய்து வருகிற பவுலை பூமியிலிருந்து அகற்றவேண்டுமென்று சொல்லுகிறார்கள். பவுல் செத்துப்போனால், அவன் செய்ய வேண்டிய ஊழியத்தை இவர்களில் யாரும் செய்யமாட்டார்கள். இவர்களும் ஊழியம் செய்யமாட்டார்கள், ஊழியம் செய்கிறவர்களையும் ஊழியம் செய்ய விடமாட்டார்கள். தேவனுடைய ஆசீர்வாதம் யூதருக்குப் பாரமாகத் தெரிகிறது. ஆசீர்வாதத்தை நாம் பெற்றுக்கொள்ள விரும்புவோம். ஆனால் யூதர்களோ தேவன் கொடுத்திருக்கிற ஆசீர்வாதத்தைப் பாரமாக நினைத்து, அதை இந்தப் பூமியைவிட்டே அகற்றவேண்டும் என்று மிகுந்த சத்தமிடுகிறார்கள்.

மேல் வஸ்திரங்கள்

இவ்விதமாய் அவர்கள் கூக்குரலிட்டுத் தங்கள் மேல்வஸ்திரங்களை எறிந்துவிட்டு, ஆகாயத்திலே, புழுதியைத் தூற்றிக் கொண்டிருக்கையில், (அப் 22:23)

பவுலுக்கு விரோதமாய் கூக்குரலிடுகிறவர்கள், தங்கள் மேல் வஸ்திரங்களை எறிந்துவிடுகிறார்கள். பவுலை இதற்குமேல் விசாரிக்க வேண்டியதில்லை என்று தீர்மானித்து விடுகிறார்கள். மேல்வஸ்திரங்களை கழற்றி எறிவது, பவுலை கல்லெறிந்து கொல்வதற்கு அவர்கள் ஆயத்தமாகயிருக்கிறார்கள் என்பதற்கு அடையாளம். ஸ்தேவான் கொலைசெய்யப்படுகிற போது, அவனைக் கொலைசெய்தவர்களின் வஸ்திரங்களைப் பவுல் காத்துக்கொண்டிருந்தான் (அப் 22:20).

இதுவரையிலும் பவுல் பேசியது தேவதூஷணம் என்று யூதர்கள் தீர்மானித்திருக்கிறார்கள். ஆகையினால் ஆகாயத்திலே புழுதியை தூற்றிக்கொண்டிருக்கிறார்கள். தாங்கள் எல்லோரும் பவுலுக்கு விரோதமாக கூடியிருப்பதையும், அவனைக் கொன்றுபோட வேண்டுமென்று தீர்மானித்திருப்பதையும், யூதர்கள் சேனாபதிக்கு தெரியப்படுத்துகிறார்கள். யூதர்கள் தங்களுடைய முடிவை கூக்குரலினாலும், மேல்வஸ்திரங்களை எறிவதினாலும், ஆகாயத்திலே புழுதியைத் தூற்றுவதினாலும் சேனாபதிக்கு அடையாளமாய்க் காண்பிக்கிறார்கள்.

கூக்குரலிட்ட முகாந்தரம்

சேனாபதி அவனைக் கோட்டைக்குள்ளே கொண்டுவரும்படி கட்டளையிட்டு, அவர்கள் அவனுக்கு விரோதமாய் இப்படிக் கூக்குரலிட்ட முகாந்தரத்தை அறியும்படிக்கு அவனைச் சவுக்கால் அடித்து விசாரிக்கச் சொன்னான் (அப் 22:24).

சேனாபதி பவுலுக்குப் பாதுகாப்பு கொடுக்கிறான். யூதஜனங்களோ பவுலைக் கொலைசெய்ய வேண்டுமென்று எத்தனமாயிருக்கிறார்கள். அதற்காக தங்கள் மேல்வஸ்திரங்களை எறிந்து, பவுலைக்கொல்ல தாங்கள் ஆயத்தமாகயிருப்பதாக அடையாளமாய் காண்பிக்கிறார்கள். சேனாபதியோ பவுலை கோட்டைக்குள்ளே கொண்டு வரும்படி கட்டளையிடுகிறான். பவுல் கோட்டைக்குள் வந்துவிட்டால், அவனுக்குப் பாதுகாப்பு கிடைக்கும். சேனாபதியின் காவலை மீறி யூதஜனத்தாரால் கோட்டைக்குள் பிரவேசிக்க முடியாது. சில சமயங்களில் நல்லோருக்கு சிறைச்சாலைகூட பாதுகாப்பான இடமாகவே இருக்கிறது. பவுலின் வேளை இன்னும் வரவில்லை. ஆகையினால் பவுலைப் பாதுகாப்பதற்கு தேவன் சேனாபதியை எழுப்புகிறார்.

சேனாபதி பவுலை சவுக்கால் அடித்து விசாரிக்கச் சொல்லுகிறான். ஜனங்களெல்லோரும் அவனுக்கு விரோதமாய்க் கூக்குரலிடுகிறார்கள். பவுல் உயிரோடிருக்கிறது நியாயமல்ல என்று சத்தமிட்டுச் சொல்லுகிறார்கள். அவர்கள் கூக்குரலிட்ட முகாந்தரத்தை சேனாபதி அறிய விரும்புகிறான். அதற்காகவே அவன் பவுலை சவுக்கால் அடித்து விசாரிக்கச் சொல்லுகிறான்.

சேனாபதியின் விசாரணை நியாயமானதல்ல. ஜனங்கள் கூக்குரலிடுகிறார்கள். பவுல் அமைதியாக இருக்கிறான். ஜனங்கள் கூக்குரலிடுவதன் முகாந்தரத்தை அறியவேண்டுமென்றால், அவர்களைத்தான் சவுக்கால் அடித்து விசாரிக்கவேண்டும். ஆனால் சேனாபதியோ பவுலை சவுக்கால் அடிக்கச் சொல்லுகிறான்.

சில சமயங்களில் ஒரு குற்றமும் செய்யாத நிரபராதிகளை அடித்துத் துன்புறுத்தும்போது, அவர்கள் அடிகளுக்குப் பயந்து, தாங்கள் செய்யாத தப்பிதங்களைக்கூட, தாங்கள் செய்ததாக வாக்குமூலம் சொல்லுவார்கள். அடித்துத் துன்புறுத்தும்போது நிரபராதிகூட, அவர்கள் பார்வைக்கு, அவர்கள் விரும்பிய பிரகாரம் குற்றவாளியாகக் காணப்படுவான். ஜனங்கள் பவுலுக்கு விரோதமாகக் கூக்குரலிடுகிறார்கள். அவர்கள் கூக்குரலிடுவதன் முகாந்தரம் அவர்களுக்கே தெரியவில்லை.

ரோமனை அடிக்கிறது

அந்தப்படி அவர்கள் அவனை வாரினால் அழுந்தக் கட்டும்போது, பவுல் சமீபமாய் நின்ற நூற்றுக்கு அதிபதியை நோக்கி: ரோமனும் நியாயம் விசாரிக்கப் படாதவனுமாயிருக்கிற மனுஷனை அடிக்கிறது உங்களுக்கு நியாயமா என்றான் (அப் 22:25).

ரோமப்பேரரசின் குடிமகனாக இருக்கிற ஒருவனை சவுக்கினால் அடித்து விசாரிக்க முடியாது. அவன் இப்படிப்பட்ட விசாரணைக்கு விடுதலையுள்ளவன். தான் ஒரு ரோமன் என்பதை பவுல் நூற்றுக்கு அதிபதியினிடத்தில் சொல்லுகிறான். பவுலை சவுக்கால் அடிப்பதற்காக, அவனை வாரினால் அழுந்தக் கட்டுகிறார்கள். தனக்கு விரோதமாக அவர்கள் குற்றம் செய்கிறார்கள் என்பது பவுலுக்குத் தெரிகிறது. ஒரு குற்றவாளிக்குக் கொடுக்கவேண்டிய தண்டனையை நிரபராதிக்கு கொடுப்பது அநீதியான செயல் என்பதை பவுல் அறிந்திருக்கிறான். ஆனால் சேனாபதியோ தான் செய்கிற தப்பிதத்தை உணராதவனாக, தன்னுடைய இஷ்டம்போல் பவுலை சவுக்கினால் அடிக்கச் சொல்லுகிறான்.

தன்னை வாரினால் அழுந்தக் கட்டும்போது, பவுல் தனக்குச் சமீபமாய் நின்ற நூற்றுக்கு அதிபதியை நோக்கி "ரோமனும் நியாயம் விசாரிக்கப் படாதவனுமாயிருக்கிற மனுஷனை அடிக்கிறது உங்களுக்கு நியாயமா" என்று கேட்கிறான்.

கர்த்தர் தம்முடைய பெரிதான கிருபையை பவுலுக்குக் காண்பித்திருக்கிறார். அவனுக்கு விரோதமாக திரளான ஜனங்கள் கூடியிருக்கிறார்கள். சேனாபதி அவனைச் சவுக்கால் அடிக்கச் சொல்லுகிறான். இந்த வேளையிலும் தேவன் தம்முடைய கிருபையினால் பவுலைப் பாதுகாக்கிறார். மனுஷர் மூலமாக பவுலுக்கு மெய்யான பாதுகாப்பு கிடைக்கவில்லை. தேவனுடைய பாதுகாப்பே நமக்கு மெய்யான பாதுகாப்பு. அந்த வேளையில் தான் என்ன சொல்லவேண்டும் என்பதை தேவன் பவுலுக்குத் தெரியப்படுத்துகிறார்.

பவுலின் உள்ளத்தில் கோபமோ, பயமோ இல்லை. அவன் தெளிந்த சிந்தனையோடிருக்கிறான். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமும் எல்லா சூழ்நிலைகளிலும் தெளிந்த சிந்தனையோடு இருக்கவேண்டும். கர்த்தருடைய பிரசன்னம் நம்மோடு கூடவே இருக்கிறது என்னும் விசுவாசம் நம்முடைய இருதயத்தில் நிரம்பியிருக்கவேண்டும்.

நான் ரோமன்தான்

நூற்றுக்கு அதிபதி அதைக்கேட்டு, சேனாபதியினிடத்திற்குப் போய், அதை அறிவித்து: நீர் செய்யப்போகிறதைக் குறித்து எச்சரிக்கையாயிரும்; இந்த மனுஷன் ரோமன் என்றான். அப்பொழுது சேனாபதி பவுலினிடத்தில் வந்து: நீ ரோமனா? எனக்குச் சொல் என்றான். அதற்கு அவன்: நான் ரோமன் தான் என்றான். சேனாபதி பிரதியுத்தரமாக: நான் மிகுந்த திரவியத்தினாலே இந்தச் சிலாக்கியத்தைச் சம்பாதித்தேன் என்றான். அதற்குப் பவுல்: நானோ இந்தச் சிலாக்கியத்திற்குரியவனாகப் பிறந்தேன் என்றான் (அப் 22:26-28).

பவுலின் வார்த்தை நூற்றுக்கு அதிபதிக்கு அதிர்ச்சியாயிற்று. அவன் அந்தச் செய்தியை சேனாபதியினிடத்திற்குப் போய் அறிவிக்கிறான். "நீர் செய்யப்போகிறதைக் குறித்து எச்சரியாயிரும். இந்த மனுஷன் ரோமன்" என்று நூற்றுக்கு அதிபதி சேனாபதியிடம் சொல்லுகிறான்.

இந்த தேசத்தில் மூன்று வருஷங்களுக்கு முன்பு நடைபெற்ற கலகத்தில் ஒரு எகிப்தியன் கலகத்திற்குக் காரணமாகயிருந்தான். பவுல் அந்த எகிப்தியன் தான் என்று சேனாபதி இதுவரையிலும் நினைத்தான். ஆனால் பவுல் எகிப்தியனல்ல, அவன் ஒரு ரோமன் என்னும் செய்தி சேனாபதிக்கு அறிவிக்கப்படுகிறது. பவுலின் மேன்மை சேனாபதிக்கு இதுவரைக்கும் தெரியவில்லை.

கர்த்தருடைய பிள்ளைகளும் தேவனுடைய பார்வையில் விசேஷித்தவர்கள். உலகத்தாருக்கு விசுவாசிகளின் சிலாக்கியம் என்ன என்பது தெரியவில்லை. ஆகையினால் உலகத்து ஜனங்கள் கர்த்தருடைய பிள்ளைகளை ஏளனமாகவும் தவறாகவும் நினைக்கிறார்கள். நடத்துகிறார்கள்.

தேவாலயத்திற்குப் புறம்பே யூதர்கள் பவுலைக் கொலைசெய்ய எத்தனமாயிருந்தார்கள். சேனாபதி போர்ச்சேவகரையும் அவர்களுடைய அதிபதிகளையும் கூட்டிக்கொண்டு அவர்களிடத்திற்கு ஓடிவந்தான் (அப் 21:32). அவர்களே இப்போது பவுலுக்குப் பாதுகாப்பாகயிருக்கிறார்கள். பவுலைப் பாதுகாக்கிற போர்வீரர்களில் நூற்றுக்கு அதிபதியும் ஒருவன். அவன் தான் சேனாபதியிடம் "நீர் செய்யப் போகிறதைக்குறித்து எச்சரிக்கையாயிரும்" என்று சொல்லுகிறான்.

ரோமப்பேரரசின் குடிமகனாக இருக்கிறவனுக்கு என்னென்ன சிலாக்கியங்களெல்லாம் உண்டு என்பது சேனாபதிக்கும் போர்ச்சேவகருக்கும் நன்றாகத் தெரியும். அவர்களை விசாரணையில்லாமல் கைதுபண்ண முடியாது. நியாயம் விசாரித்து தீர்ப்பு சொல்லாமல் தண்டிக்க முடியாது. ஆனால் சேனாபதியோ பவுலை சவுக்கால் அடித்து விசாரிக்குமாறு கட்டளை கொடுத்திருக்கிறான்.

ரோமப்பேரரசின் குடிமகனை இவ்வாறு தண்டிப்பது தவறு என்பது சேனாபதிக்குத் தெரியும். ஆனாலும் பவுல் ரோமனா என்பதை அவன் வாயாலேயே தெரிந்துகொள்ள விரும்பி, சேனாபதி பவுலினிடத்தில் வந்து "நீ ரோமனா எனக்குச் சொல்" என்று சொல்லுகிறான். அதற்கு பவுல் "நான் ரோமன் தான்" என்று பதில் சொல்லுகிறான்.

பவுல் தன்னை ரோமன்தான் என்று சொல்லும்போது, சேனாபதி தன்னைக் குறித்தும் நினைத்துப்பார்க்கிறான். ஏனெனில் சேனாபதியும் ஒரு ரோமன்தான். சேனாபதி மிகுந்த திரவியத்தினாலே ரோமனாகயிருக்கிற சிலாக்கியத்தைச் சம்பாதித்திருக்கிறான். ஆனால் பவுலோ இந்தச் சிலாக்கியத்திற்குரியவனாகப் பிறந்திருக்கிறான். இவ்விருவருடைய சிலாக்கியத்தை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, பவுலின் சிலாக்கியம் உன்னதமானது. மேன்மையானது. பவுல் இந்தச் சிலாக்கியத்தைக் கிரயத்திற்கு வாங்காமல், இந்தச் சிலாக்கியத்திற்குரியவனாகவே பிறந்திருக்கிறான்.

பவுல் தன்னைப்பற்றி பேசுகிறபோது, தான் ஒரு ரோமன் என்று குறிப்பிட்டு, தன்னை விசாரியாமல் தண்டிப்பது ரோமாபுரியின் சட்டப்படி தவறானது என்பதை அவனுக்கு உணர்த்துகிறான்.

பவுலை விட்டுவிட்டார்கள்

அவனை அடித்து விசாரிக்கும்படி எத்தனமாயிருந்தவர்கள் உடனே அவனை விட்டுவிட்டார்கள். சேனாபதி அவன் ரோமனென்று அறிந்து, அவனைக் கட்டுவித்ததற்காகப் பயந்தான் (அப் 22:29).

பவுல் தன்னை ரோமனென்று சொல்லுகிறான். ரோமனாகயிருக்கிற இந்தச் சிலாக்கியத்திற்குரியவனாக தான் பிறந்திருப்பதாக சேனாபதியிடம் சொல்லுகிறான். உடனே அவனை அடித்து விசாரிக்கும்படி எத்தனமாயிருக்கிறவர்கள், அவனை அடிக்காமல் அப்படியே விட்டுவிடுகிறார்கள். சேனாபதிகூட பவுல் ரோமன் என்று அறிந்து, அவனைக் கட்டுவித்ததற்காகப் பயப்படுகிறான்.

சேனாபதிக்கு தேவனைக்குறித்த பயமில்லை. மனுஷரைக் குறித்த பயமிருக்கிறது. இக்காலத்தில் உலகப்பிரகாரமான ஜனங்கள் தேவனுக்குப் பயப்படாமல், மனுஷருக்குப் பயப்படுகிறார்கள். தேவனுடைய தெய்வீக அதிகாரத்திற்குக் கீழ்ப்படியாமல், மனுஷருடைய அதிகாரத்திற்குக் கீழ்ப்படிகிறார்கள்.

தேவன் சர்வ வல்லமையுள்ளவர். சர்வ ஆளுகையுள்ளவர். சேனாபதி ஆள் பலம் மிகுந்தவன். அவனோடுகூட போர்ச்சேவகர் அநேகர் இருக்கிறார்கள். பவுலோ தனிமையாக இருக்கிறான். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில், தம்முடைய ஊழியக்காரனைப் பாதுகாப்பதற்காக, தேவன் உலகப்பிரகாரமான சட்டதிட்டங்களை பயன்படுத்துகிறார். துன்மார்க்கருடைய கரத்திலிருந்து அவர்களுடைய சட்டங்களையே ஓர் உபாயமாகப் பயன்படுத்தி, தம்முடைய ஊழியக்காரர்களை, பாதுகாக்கிறார்.

நாமும் ஆளுகைக்கும் அதிகாரத்திற்கும் கீழ்ப்படியவேண்டும். அதிகாரத்திலுள்ளவர்களுக்காக ஜெபிக்க வேண்டும். அவர்கள் தேவனுடைய சித்தத்தினால் இந்தத் தேசத்தில் சமாதானத்தை உண்டு பண்ணுகிறவர்களாக இருக்கிறார்கள்.

பிரதான ஆசாரியரும் ஆலோசனைச்சங்கத்தாரும்

பவுலின்மேல் யூதராலே ஏற்படுத்தப்பட்ட குற்றம் இன்னதென்று நிச்சயமாய் அறிய விரும்பி, அவன் மறுநாளிலே அவனைக் கட்டவிழ்த்து, பிரதான ஆசாரியரையும் ஆலோசனைச் சங்கத்தார் அனைவரையும் கூடிவரும்படி கட்டளையிட்டு, அவனைக் கூட்டிக்கொண்டுபோய், அவர்களுக்கு முன்பாக நிறுத்தினான் (அப் 22:30).

சேனாபதி மறுநாளிலே பவுலைக் கட்டவிழ்க்கிறான். ஆலோசனைச் சங்கத்தாருக்கு முன்பாக பவுலை நிறுத்துகிறான். முதலாவது பவுலைக் கட்டவிழ்த்து, அதன்பின்பு பிரதான ஆசாரியரையும், ஆலோசனைச்சங்கத்தார் அனைவரையும் கூடிவரும்படி கட்டளையிடுகிறான். பவுலைக் கூட்டிக்கொண்டுபோய் அவர்களுக்கு முன்பாக நிறுத்துகிறான். பவுலின்மேல் யூதராலே ஏற்படுத்தப்பட்ட குற்றம் இன்னதென்று நிச்சயமாய் அறிய விரும்பி, அவனை ஆலோசனைச்சங்கத்தாருக்கு முன்பாக நிறுத்துகிறான்.

சேனாபதி ஒரு ரோமன். இராணுவத்தலைவன். தன்னுடைய அதிகாரத்திற்குக் கீழ்ப்பட்டவர்கள் யாருக்கும் அநீதி நேரிடக்கூடாது என்பதில் நிச்சயமாய் இருக்கிறான். எல்லாம் நீதியாய் நடைபெறவேண்டுமென்று விரும்புகிறான். பவுலைப் பிரதான ஆசாரியருக்கும், ஆலோசனைச்சங்கத்தாருக்கும் முன்பாக விசாரித்தால், பவுலின்மீது ஏற்படுத்தப்பட்ட குற்றம் இன்னதென்று நிச்சயமாய் அறிந்துகொள்ளலாம் என்று எதிர்பார்க்கிறான்.

பவுலுக்கு நீதி கிடைக்கவேண்டும் என்பதில் சேனாபதிக்கு அக்கரையில்லை. ஆலோசனைச்சங்கத்தாரைப் பிரியப்படுத்த வேண்டும் என்னும் அவசியமும் சேனாபதிக்கு இல்லை. யூதர்கள் பவுலின்மேல் குற்றம் சுமத்துகிறார்கள். அவனுக்கு விரோதமாகக் கூக்குரலிடுகிறார்கள். இந்தப் பிரச்சனைக்கு மெய்யான காரணம் என்ன என்பது சேனாபதிக்குப் புரியவில்லை. இது அவனுக்குப் புரியாத புதிராக இருக்கிறது. இந்தக் காரணத்தை நிச்சயமாய் அறிய விரும்புகிறான். அதற்காகவே பவுலை ஆலோசனைச்சங்கத்திற்கு முன்பாக நிறுத்துகிறான்.

23 அதிகாரம்

தேவாலயத்திற்குப் புறம்பே யூதர்கள் பவுலைப் பிடித்து அடிக்கிறார்கள். சேனாபதி பவுலை விடுவித்து கோட்டைக்குள் கொண்டு போகிறான். ஆலோசனைச் சங்கத்தாருக்கு முன்பாக பவுலை விசாரிக்கும்படி அவனை அங்கு நிறுத்துகிறான். ஆலோசனைச்சங்கத்தார் மத்தியில் அமைதி நிலவும் என்றும், ஜனங்கள் கூக்குரலிடமாட்டார்கள் என்றும் சேனாபதி எதிர்பார்க்கிறான். ஆனால் சேனாபதி எதிர்பார்த்தது போல ஆலோசனைச் சங்கத்தாருக்கு முன்பாக அமைதி உண்டாகவில்லை. குழப்பமும் கூக்குரலும் அதிகரிக்கிறது.

பவுல் ஆலோசனைச்சங்கத்தாருக்கு முன்பாக தன்னுடைய நியாயத்தை எடுத்துச்சொல்லுகிறான். பவுல் பேச ஆரம்பிக்கும் போதே பிரச்சனை ஆரம்பித்துவிடுகிறது (அப் 23:1-5). பவுல் சாதுரிய ஞானத்தினால் பரிசேயரையும் சதுசேயரையும் பற்றி ஆலோசனைச் சங்கத்தாருக்கு முன்பாகப் பேசுகிறான் (அப் 23:6-11). பவுலைக் கொல்லுவதற்கு யூதர்கள் சர்ப்பனையான சதிஆலோசனை பண்ணுகிறார்கள் (அப் 23:12-15). சேனாபதி யூதருடைய சர்ப்பனையான ஆலோசனையை அறிந்துகொள்கிறான் (அப் 23:16-22). சேனாபதி பவுலுக்குப் பாதுகாப்பு கொடுக்கிறான். அவனைப் பாதுகாப்பாக எருசலேமிலிருந்து செசரியாவுக்கு அனுப்புகிறான் (அப் 23:23-35).

ஆலோசனைச்சங்கத்தார் அப் 23 : 1-5

அப் 23:1. பவுல் ஆலோசனைக் சங்கத்தாரை உற்றுப் பார்த்து: சகோதரரே, இந்நாள் வரைக்கும் எல்லா விஷயங்களிலும் நான் நல்மனச் சாட்சியோடே தேவனுக்குமுன்பாக நடந்துவந்தேன் என்று சொன்னான்.

அப் 23:2. அப்பொழுது பிரதான ஆசாரியனாகிய அனனியா அவனுக்குச் சமீபமாய் நின்றவர்களை நோக்கி: இவன் வாயில் அடியுங்கள் என்று கட்டளையிட்டான்.

அப் 23:3. அப்பொழுது பவுல் அவனைப்பார்த்து: வெள்ளையடிக்கப் பட்ட சுவரே, தேவன் உம்மை அடிப்பார்; நியாயப்பிரமாணத்தின்படி என்னை நியாயம் விசாரிக்கிறவராய் உட்கார்ந்திருக்கிற நீர் நியாயப் பிரமாணத்திற்கு விரோதமாய் என்னை அடிக்கச் சொல்லலாமா என்றான்.

அப் 23:4. சமீபத்திலே நின்றவர்கள்: தேவனுடைய பிரதான ஆசாரியரை வைகிறாயா என்றார்கள்.

அப் 23:5. அதற்குப் பவுல்: சகோதரரே இவர் பிரதான ஆசாரியரென்று எனக்குத் தெரியாது; உன் ஜனத்தின் அதிபதியைத் தீது சொல்லாயாக என்று எழுதியிருக்கிறதே என்றான்.

நல்மனச்சாட்சி

பவுல் ஆலோசனைக் சங்கத்தாரை உற்றுப்பார்த்து: சகோதரரே, இந்நாள் வரைக்கும் எல்லா விஷயங்களிலும் நான் நல்மனச்சாட்சியோடே தேவனுக்குமுன்பாக நடந்துவந்தேன் என்று சொன்னான் (அப் 23:1).

ஆலோசனைச்சங்கத்தாருக்கு முன்பாக தான் நிறுத்தப்பட்டால் அங்கு அமைதியிருக்கும் என்று பவுல் எதிர்பார்க்கிறான். சேனாபதிக்கு முன்பாக யூதஜனங்கள் பவுல்மீது கொலை வெறியோடிருக்கிறார்கள். ஆனால் பவுல் எதிர்பார்த்தது போல, ஆலோசனைச் சங்கத்தாருக்கு முன்பு அமைதி ஏற்படவில்லை. கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம் பவுல் ஆலோசனைச் சங்கத்தாருக்கு முன்பாக, கர்த்தர் கொடுத்த வார்த்தைகளைப் பேசுகிறான்.

பவுல் பேசும்போது தன்னிடத்தில் ஒரு தவறும் இல்லை என்பதை எடுத்துச் சொல்லுகிறான். "இன்னாள் வரைக்கும் எல்லா விஷயங்களிலும் நான் நல்மனச் சாட்சியோடே தேவனுக்கு முன்பாக நடந்துவந்தேன்" என்று சாட்சியாக அறிவிக்கிறான். பவுலின் இருதயத்தில் பயமோ, குழப்பமோ காணப்படவில்லை. தெளிந்த சிந்தனையோடு பேசுகிறான். ஆலோசனைச்சங்கத்திற்கு முன்பாக நிற்பதினால் பவுலின் மனதில் பதட்டம் எதுவும் காணப்படவில்லை. பவுல் ஆலோசனைச் சங்கத்தாரை உற்றுப் பார்க்கிறான். அவர்களை "சகோதரரே" என்று அழைக்கிறான்.

ஸ்தேவானை ஆலோசனைச் சங்கத்திற்கு முன்பாக அழைத்து வந்தார்கள். அவனைப்பார்த்து தங்கள் பற்களை கோபத்தோடு கடித்தார்கள். ஸ்தேவான் தங்களைப் பார்த்து பயந்துவிடுவான் என்று எதிர்பார்த்தான். ஆனால் அவனோ ஆலோசனைச் சங்கத்தாரைப் பார்ப்பதற்குப் பதிலாக, பரலோகத்திலுள்ள தேவனை நோக்கிப் பார்த்தான். அவனுடைய முகம் பயந்து நடுங்குவதற்குப் பதிலாக, தேவதூதனுடைய முகம் போல பிரகாசித்தது. இந்தச் சம்பவம் நடைபெற்றபோது பவுல் அங்கு நின்று, அதைப் பார்த்துக் கொண்டிருந்தான். இப்போது பவுலுக்கும் ஆலோசனைச் சங்கத்திற்கு முன்பாக நிற்கவேண்டிய வேளை வந்திருக்கிறது. அவனுடைய இருதயத்தில் பரிசுத்த நம்பிக்கை பிறந்திருக்கிறது.

ஆலோசனைச் சங்கத்தார் துன்மார்க்கமான ஆலோசனையோடு கூடியிருக்கிறார்கள். பவுலைக் கொலை செய்ய வேண்டுமென்று எத்தனித்திருக்கிறார்கள். ஆலோசனைச் சங்கத்தாரை உற்றுப்பார்த்தால், அவர்கள் பயந்துவிடுவார்கள் என்று பவுல் எதிர்பார்க்கிறான். ஆனால் அவர்கள் பவுலுக்குப் பயப்படுவது போலில்லை. பவுல்மீது மிகுந்த கோபத்தோடிருக்கிறார்கள்.

பவுலின் மனச்சாட்சி சுத்தமாயிருக்கிறது. அவன் ஆலோசனைச் சங்கத்தாரைப் பார்த்து "சகோதரரே, இன்னாள் வரைக்கும் எல்லா விஷயங்களிலும் நான் நல்மனச் சாட்சியோடே தேவனுக்கு முன்பாக நடந்துவந்தேன்" என்று சொல்லுகிறான். பவுல் தன் சிறு பிராயம் முதற்கொண்டு தேவபக்தியோடும், தேவபயத்தோடும் ஜீவித்திருக்கிறான். நன்மை தீமை என்ன என்பது அவனுக்கு நன்றாகத் தெரியும். துன்மார்க்கத்தை விட்டு தூரவிலகி ஜீவிக்கிறான். அவனிடத்தில் வஞ்சனை எதுவும் காணப்படவில்லை. தன்னுடைய சித்தத்தின் பிரகாரம் நடக்க வேண்டும் என்னும் தீர்மானம் அவனிடத்தில் எப்போதும் இல்லை. தன்னுடைய ஜீவியகாலத்தை அவன் இப்படித்தான் ஜீவிக்க வேண்டுமென்று திட்டமிட்டது மில்லை. கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம் ஜீவிக்கவே விரும்புகிறான். தன்னுடைய முடிவு கர்த்தருடைய கரத்திலிருக்கிறது என்றும் உறுதியாய் நம்புகிறான்.

அவன் கர்த்தருடைய சபையைத் துன்பப்படுத்திய போதுகூட, தான் கர்த்தருக்கு ஊழியம் செய்வதாகவே நினைத்தான். அவனுடைய மனச்சாட்சியில் சுத்தமிருந்தது. இயேசு கிறிஸ்துவின் சீஷர்கள்மீது பவுல் சீறிப்பாய்ந்தபோது, தான் கர்த்தருக்காக பக்தி வைராக்கியமாக இருப்பதாகவே நினைத்தான். பவுலின் மனச்சாட்சி அவனுக்கு தவறான சத்தியத்தை அறிவித்தது. அந்த வேளையில் கூட அவன் தன் மனச்சாட்சிக்கு உண்மையுள்ளவனாகவே நடந்து கொண்டான்.

பவுல் இப்போது ஆலோசனைச் சங்கத்தாரிடம் பேசும்போது "இந்நாள் வரைக்கும்" என்னும் வார்த்தையைச் சொல்லுகிறான். பவுல் இரட்சிக்கப்பட்ட நாளிலிருந்து, இப்போது ஆலோசனைச் சங்கத்திற்கு முன்பாக நிற்கும் காலம் வரையிலும் என்று இந்த வார்த்தைக்குப் பொருள் சொல்லவேண்டும். தான் இரட்சிக்கப்பட்ட நாளிலிருந்து, இந்நாள் வரைக்கும், பவுல் நல்மனச்சாட்சியோடே, தேவனுக்கு முன்பாக நடந்து வந்திருக்கிறான்.

தேவனைப் பிரியப்படுத்துவதே பவுலின் பிரதான நோக்கம். அதைத் தன் கடமையாகச் செய்துவருகிறான். தன்னுடைய வார்த்தையிலும் செயலிலும் பவுல் கண்ணியமுள்ளவனாக இருக்கிறான். தன்னுடைய நல்மனச் சாட்சிக்குத் தேவனை சாட்சியாகக் நிறுத்துகிறான். பவுலின் ஜீவியம் ஒழிவு மறைவாக நடைபெறவில்லை. அது தேவனுக்கு முன்பாக பிரத்தியட்சமாய் இருக்கிறது. பவுலின் மனச்சாட்சி அவனிடத்தில் என்ன செய்யச் சொல்லிற்றோ, அதை அவன் அப்படியே செய்திருக்கிறான். சில வேளைகளில் பவுல் சில தவறுகளைச் செய்திருக்கலாம். அப்போதுகூட அவன் தன் மனச்சாட்சியின்படி நடந்ததாகச் சாட்சி சொல்லுகிறான்.

பவுலுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் ஏற்ற இரக்கம் எதுவும் காணப்படவில்லை. அவனுடைய மனச்சாட்சி நல்மனச் சாட்சியாகவும், உண்மையான மனச் சாட்சியாகவும் இருக்கிறது. பவுல் இரட்சிக்கப்பட்ட நாளிலிருந்து, தன் விசுவாசத்தைப் காத்துக் கொண்டு ஜீவிக்கிறான். இந்நாள் வரைக்கும் எல்லா விஷயங்களிலும், பவுல் நல்மனச் சாட்சியோடே, தேவனுக்கு முன்பாக நடந்து வருவதாக சாட்சிசொல்லுகிறான். பவுலுடைய ஜீவியத்தில் பல சம்பவங்கள் நடைபெற்றன. அவனைச் சுற்றிலும் பல மாற்றங்கள் உண்டாயிற்று. இவை யெல்லாவற்றிலும் பவுல் மாறவில்லை. அவனுடைய விசுவாசம் மாறவில்லை. அவனுடைய உபதேசமும் மாறவில்லை. அவனுடைய மனச்சாட்சி நல்மனச் சாட்சியாகவே இருந்து வருகிறது.

பிரதான ஆசாரியனாகிய அனனியா

அப்பொழுது பிரதான ஆசாரியனாகிய அனனியா அவனுக்குச் சமீபமாய் நின்றவர்களை நோக்கி: இவன் வாயில் அடியுங்கள் என்று கட்டளையிட்டான் (அப் 23:2).

பவுல் தன்னுடைய சாட்சியைப்பற்றிச் சொல்லும்போது பிரதான ஆசாரியனாகிய அனனியா தன்னுடைய மனச்சாட்சியில் குத்தப்படுகிறான். அவன் பவுலுக்குச் சமீபமாய் நின்றவர்களை நோக்கி, பவுலினுடைய வாயில் அடிக்குமாறு சொல்லுகிறான். பவுல் கோபத்தோடு பேசவில்லை. அவனுடைய வார்த்தையில் வீரமோ, விறுவிறுப்போ, பாவசிந்தனையோ எதுவுமில்லை.

பிரதான ஆசாரியனுக்குப் பவுலின் வார்த்தையினால் கோபமுண்டாயிற்று. பவுலை பேசவிடாமல், அவனைக் குற்றவாளியாகத் தீர்த்துவிட வேண்டு மென்று, பிரதான ஆசாரியன் ஏற்கெனவே தீர்மானம் செய்திருக்கிறான். பவுல்மீது யாரும் ஒரு குற்றமும் சொல்லவில்லை. ஆனால் அவன் கள்ளம் கபடமில்லாமல், அமைதியாக இருப்பதே, அவனைக்குற்றப்படுத்துவதற்கு போதுமான காரணமாயிற்று.

பிரதானஆசாரியனும், ஆலோசனைச் சங்கத்திலுள்ள பலரும் பவுலின்மீது கோபமாயிருக்கிறார்கள். ஆசாரியன் தன் அதிகாரத்தைப் பயன்படுத்தி, பவுலை வாயில் அடிக்குமாறு கட்டளையிடுகிறான். பவுல் தன் வாயின் வார்த்தைகளினால் பாவம் செய்கிறான் என்பதை பிறருக்கு உணர்த்துவதற்காக, அவனுடைய வாயில் அடிக்கச் சொல்லுகிறான். பவுலை பேசவிடாதவாறு அவனை அமைதிப்படுத்த வேண்டும். பவுல் அமைதியாக இருந்தால்தான் பிரதான ஆசாரியனால் தான் விரும்பியபடி பவுலுக்குத் தண்டனை கொடுக்க முடியும். அதற்காக அவனை அடித்து, அவனைப் பேசவிடாதவாறு தடைபண்ண முயற்சி பண்ணுகிறான்.

நல்லோருக்கு இதுபோல அநீதி ஏற்படுவது புதுமையான காரியமல்ல. நாம் பல சமயங்களில் நன்மை செய்திருக்கலாம். நல்ல வார்த்தைகளைப் பேசியிருக்கலாம். ஆனாலும் பிறர் நம்மைப் பாராட்டுவதற்குப் பதிலாக, நம்மைத் தூஷிக்கலாம். இது ஏதோ புதுமை என்று நாம் ஆச்சரியப்படக்கூடாது. இயேசு கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம், நம்முடைய வாயில் அடிக்கப்பட்டால், தேவன் தமது வாயின் முத்தங்களால் நம்மை முத்தமிடுவார் (உன் 1:2).

நியாயப்பிரமாணத்திற்கு விரோதம்

அப்பொழுது பவுல் அவனைப் பார்த்து: வெள்ளையடிக்கப்பட்ட சுவரே, தேவன் உம்மை அடிப்பார்; நியாயப்பிரமாணத்தின்படி என்னை நியாயம் விசாரிக்கிறவராய் உட்கார்ந்திருக்கிற நீர் நியாயப் பிரமாணத்திற்கு விரோதமாய் என்னை அடிக்கச் சொல்லலாமா என்றான் (அப் 23:3).

பிரதான ஆசாரியனுக்கு விரோதமாக தேவனுடைய கோபம் எழும்பும் என்று பவுல் தைரியமாக எச்சரித்துச் சொல்லுகிறான். "வெள்ளையடிக்கப்பட்ட சுவரே, தேவன் உம்மை அடிப்பார்" என்று தேவனைத் தன் பக்கமாகச் சேர்த்துப் பேசுகிறான். பிரதான ஆசாரியன் தன்னுடைய அதிகாரத்தை மீறுகிறான். தேவன் ஆசாரியனுக்கு ஒரு பரிசுத்த அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறார். அதை அவன் தவறாகப் பயன்படுத்துகிறான். இதனால் பவுலுக்கு அவன்மீது கோபமுண்டாயிற்று. இது மாம்சப்பிரகாரமான கோபமல்ல. துன்மார்க்கத்திற்கு விரோதமான பக்திவைராக்கியமான கோபம்.

பிரதான ஆசாரியனை பவுல் அழைக்கும்போது "வெள்ளையடிக்கப்பட்ட சுவரே" என்று கூப்பிடுகிறான். இதற்கு "மாய்மாலக்காரனே" என்பது பொருள். உள்ளே மண்ணும், வைக்கோலும், தேவையில்லாத பழைய பொருட்களும் இருக்கும். வெளியேயோ சாந்து பூசப்பட்டிருக்கும். வெள்ளையடிக்கப்பட்டு பார்ப்பதற்கு நன்றாகத் தெரியும். அடிக்கப்பட்ட வெள்ளையை சுரண்டிப் பார்த்தால், உள்ளே இருக்கிற அசிங்கம் வெளியே தெரியும்.

இக்காலத்தில் அநேகர் வெள்ளையடிக்கப்பட்ட சுவரைப்போல மாய்மாலம் பண்ணுகிறார்கள். பார்வைக்கு சுத்தமானவர்களைப்போல நடிக்கிறார்கள். ஆனால் அவர்களுக்குள்ளேயோ பாவம் நிரம்பியிருக்கிறது. பவுல் பிரதான ஆசாரியனுக்குத் தன்னுடைய நீதியான தண்டனையை அறிவிக்கிறான். "தேவன் உம்மை அடிப்பார்" என்று எச்சரித்துச் சொல்லுகிறான். தேவனுடைய நியாயத் தீர்ப்பு பிரதான ஆசாரியர்மீது வரும். அவனுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில், தேவனுடைய ஆவிக்குரிய நியாயத்தீர்ப்பு நிறைவேறும்.

பவுல் பிரதான ஆசாரியனைப்பார்த்து "தேவன் உம்மை அடிப்பார்" என்று சொல்லுவதற்கான காரணத்தையும் சொல்லுகிறான். "நியாயப்பிரமாணத்தின்படி என்னை நியாயம் விசாரிக்கிறவராய் உட்கார்ந்திருக்கிற நீர் நியாயப் பிரமாணத்திற்கு விரோதமாய் என்னை அடிக்கச் சொல்லலாமா" என்று பவுல் அவனிடத்தில் கேள்வி கேட்கிறான்.

பிரதான ஆசாரியன் தனக்குச் சமீபமாய் நிற்கிறவர்களை நோக்கி, பவுலின் வாயில் அடிக்கச் சொன்னது நியாயப்பிரமாணத்திற்கு விரோதமான காரியம். மேலும் இது மனிதாபி மானத்திற்கும், தெய்வீகத்திற்கும், இயற்கைக்கும், மனுஷநீதிக்கும் விரோதமான காரியம். ஒருவன் குற்றம் விசாரிக்கப்படும் போது, தன் சார்பாக பேசுவதற்கு அவனுக்கு அனுமதி கொடுக்கப்பட வேண்டும். ஒருவனை விசாரியாமலேயே தண்டித்துவிடக் கூடாது.

பிரதான ஆசாரியன் நியாயப் பிரமாணத்தின்படி, நியாயம் விசாரிக்கிறவனாக, நியாயசனத்தில் உட்கார்ந்திருக்கிறான். தேவனுடைய பிரதிநிதியாக நியாயம் விசாரிக்க வேண்டியவன், அநியாயம் செய்யக்கூடாது. பிரதான ஆசாரியன் அநீதி செய்தால், அதனால் தேவனுடைய நாமம் அவமதிக்கப்படும்.

தேவனுடைய பிரதான ஆசாரியர்

சமீபத்திலே நின்றவர்கள்: தேவனுடைய பிரதானஆசாரியரை வைகிறாயா என்றார்கள் (அப் 23:4).

பிரதான ஆசாரியருக்கு விரோதமாகப் பவுல் பேசுவதை, அவனுக்குச் சமீபத்தில் நிற்கிறவர்கள் கேட்டு, அவன்மீது கோபப்படுகிறார்கள். பவுல் அவனை பிரதான ஆசாரியன் என்று மாத்திரமே சொல்லுகிறான். ஆனால் ஜனங்களோ "தேவனுடைய பிரதான ஆசாரியர்" என்று அவனுக்கு ஒரு மரியாதையைக் கொடுக்கிறார்கள்.

பவுல் தன்னுடைய வார்த்தையில் தவறு செய்கிறான். அவசரப்பட்டுப் பேசுகிறான். நியாயம் விசாரிக்கப்படும் போது மிகவும் நிதானமாகப் பேசவேண்டும். பவுலுக்கு அருகில் நிற்கிறவர்கள் அவனுக்குச் சத்துருக்களல்ல. ஆனால் பவுல் பிரதான ஆசாரியனைக் குறித்துச் சொன்ன வார்த்தைகளை, அவர்கள் அங்கீகரிக்கவில்லை. அவர்கள் உடனே பவுலிடம் "தேவனுடைய பிரதான ஆசாரியரை வைகிறாயா" என்று அவனிடத்தில் கேட்கிறார்கள். பவுல் இவர்களிடம் விவாதம்பண்ணினால், இவர்கள் பவுலுக்குத் சத்துரு ஆவார்கள்.

நம்முடைய வார்த்தைகளை நாம் நிதானமாகப் பேசவில்லையென்றால், நம்முடைய சத்துருக்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். பவுல் பிரதான ஆசாரியனுடைய அதிகாரத்தை அவமானப் படுத்துவதாக அவர்கள் நினைக்கிறார்கள். பவுலின் சத்துருக்கள் பவுல்மீது குற்றம் சுமத்துகிறார்கள். இப்போது பவுலுக்கு அருகாமையிலிருக்கிறவர்கள் கூட, அவனுடைய வார்த்தையை நிதானமாகப் பேசுமாறு ஆலோசனை சொல்லுகிறார்கள். நடுநிலையாக இருப்போரும் சத்துருகளாகிறார்கள்.

ஜனத்தின் அதிபதி

அதற்குப் பவுல்: சகோதரரே இவர் பிரதான ஆசாரியரென்று எனக்குத் தெரியாது; உன் ஜனத்தின் அதிபதியைத் தீது சொல்லாயாக என்று எழுதியிருக்கிறதே என்றான் (அப் 23:5).

ஆலோசனைச் சங்கத்தாருக்கு முன்பாக பவுல் பிரதான ஆசாரியனுடைய அதிகாரத்தைப் பற்றி அவதூறாகப் பேசுகிறான். அவனுடைய வார்த்தைகளே அவனுடைய விவாதத்திற்குத் தடையாயிற்று. நியாயம் விசாரிக்கப்படும் போது தன்னுடைய பக்கத்திலுள்ள நியாயத்தை எடுத்துச்சொல்ல பவுலுக்கு உரிமையுள்ளது. ஆனால் பவுலோ தன்னைப்பற்றி நியாயப்படுத்துவதற்குப் பதிலாக, பிரதான ஆசாரியனைக் குற்றப்படுத்திப் பேசுகிறான்.

பவுலுக்குச் சமீபத்தில் நின்றவர்கள் அவனுடைய தவறைச் சுட்டிக்காட்டுகிற போது, பவுல் தன் பேச்சின் வேகத்தைக் குறைத்து மறுபடியும் நிதானத்திற்கு வருகிறான். தான் அவசரப்பட்டு பேசியதன் தப்பிதத்தை உணர்ந்து கொள்கிறான். அவர்களிடத்தில் "சகோதரரே, இவர் பிரதான ஆசாரியர் என்று எனக்குத் தெரியாது" என்று அறிக்கை செய்கிறான். இவர் பிரதான ஆசாரியர் என்று பவுலுக்குத் தெரிந்திருந்தால், அவன் அப்படி பேசியிருக்கமாட்டான் என்பதுதான் அவனுடைய வார்த்தையின் பொருள்.

யூதர்கள் மோசேயின் பிரமாணத்தை விசுவாசிக்கிறார்கள். மற்றவர்களுக்கு இல்லாத உரிமைகள் தீர்க்கதரிசிகளுக்கு உண்டு என்று யூதர்கள் நம்புகிறார்கள். கர்த்தர் கொடுக்கிற வார்த்தைகளைத் தீர்க்கதரிசிகள் எல்லா இடங்களிலும், எல்லோருக்கும் முன்பாகவும் சொல்லலாம் என்று யூதர்கள் அவர்களை அங்கீகரிக்கிறார்கள். பிரதான ஆசாரியன் மனுஷனால் தெரிந்தெடுக்கப்படவில்லையென்றும், தேவனே அவனை பிரதான ஆசாரிய பட்டத்திற்கு நியமித்திருக்கிறார் என்றும் யூதர்கள் விசுவாசிக்கிறார்கள். ஆகையினால்தான் பவுல் பிரதான ஆசாரியனுக்கு விரோதமாகப் பேசியபோது, அவனுக்குச் சமீபத்தில் நின்றவர்கள் "தேவனுடைய பிரதான ஆசாரியர்" என்று குறிப்பிடுகிறார்கள்.

பவுல் தன் இஷ்டம்போல் பேசினால், அவனுக்கு மோசேயின் பிரமாணத்தின் மீதும், யூதருடைய பாரம்பரிய பழக்க வழக்கங்களின்மீதும் மதிப்பு இல்லை என்பது தெளிவாகும். இதன் மூலமாக யூதர்களெல்லோருமே அவனுக்கு விரோதமாக ஒன்று சேர்ந்துவிடக்கூடும். இந்தச் சூழ்நிலையில் பவுல் தன் தப்பிதத்தை உணருகிறான். நியாயப் பிரமாணத்தின்மீது தனக்கு மதிப்புள்ளது என்பதை காண்பிக்க வேண்டும் என்று தீர்மானித்து "உன் ஜனத்தின் அதிபதியை தீது சொல்லாயாக என்று எழுதியிருக்கிறதே" என்று பேசுகிறான். எழுதப்பட்டிருக்கிற நியாயப்பிரமாணத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறான்.

பிரதான ஆசாரியனுடைய ஆசனத்தில் உட்கார்ந்திருக்கிற ஒரு சிலர் தவறு செய்யலாம். அதற்காக பிரதான ஆசாரியனுடைய ஆசனத்தையோ, ஆசாரியப் பட்டத்தையோ, ஆசாரிய ஊழியத்தையோ ஒட்டு மொத்தமாகக் குறைசொல்லக்கூடாது. தேவனே பிரதான ஆசாரியரை நியமித்திருக்கிறார். ஒரு சில ஆசாரியர்கள் தங்களிடத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்ட ஊழியத்தை உண்மையாய்ச் செய்யாமல் மாய்மாலம்பண்ணுகிறார்கள். இவர்கள் செய்கிற தப்பிதங்களுக்காக, பிரதான ஆசாரியருடைய ஊழியத்தையே குறைசொல்லக் கூடாது. தேவன் நியமித்திருக்கிற அதிகாரத்திற்கு நாம் மதிப்பு கொடுக்கவேண்டும்.

ஒரு குறிப்பிட்ட நபர்மீது நமக்கு குற்றச்சாட்டு இருக்குமென்றால், அதை முறைப்படி விசாரிப்பதற்கு ஒழுங்கு செய்யவேண்டும். மிகுந்த கவனத்தோடு இப்படிப்பட்ட பிரச்சனைகளை அணுக வேண்டும். ஏனெனில் தாம் நியமித்திருக்கிற அதிகாரத்திற்கு நாம் மதிப்பு கொடுக்கவேண்டும் என்று, தேவன் நம்மிடத்தில் எதிர்பார்க்கிறார். தேவனுடைய ஊழியக்காரர்கள் தவறு செய்யும்போது, எல்லா ஊழியக்காரர்களும் தவறு செய்கிறார்கள் என்று நினைத்து, தேவனுடைய ஊழியத்தையே குறை சொல்லிவிடக் கூடாது. பழிவாங்குதல் கர்த்தருக்குரியது. கர்த்தர் கணக்கு கேட்பார். தம்முடைய ஊழியக்காரர்களிடத்திலும் கேட்பார். தம்முடைய ஊழியக்காரர்களுக்கு விரோதமாகப் பேசியவர்களிடத்திலும், செயல் பட்டவர்களிடத்திலும் கணக்கு கேட்பார்.

சதுசேயரும் பரிசேயரும்
அப் 23 : 6-11

அப் 23:6. பின்பு அவர்களில், சதுசேயர் ஒரு பங்கும் பரிசேயர் ஒரு பங்குமாயிருக்கிறார்களென்று பவுல் அறிந்து: சகோதரரே, நான் பரிசேயனும் பரிசேயனுடைய மகனுமாயிருக்கிறேன். மரித்தோருடைய உயிர்த்தெழுதலைப் பற்றியும் நம்பிக்கையைக் குறித்து நான் நியாயம் விசாரிக்கப்படுகிறேன் என்று ஆலோசனைச் சங்கத்திலே சத்தமிட்டுச் சொன்னான்.

அப் 23:7. அவன் இப்படிச் சொன்னபோது, பரிசேயருக்கும் சதுசேயருக்கும் வாக்குவாதமுண்டாயிற்று; கூட்டம் இரண்டாகப் பிரிந்தது.

அப் 23:8. என்னத்தினாலென்றால், சதுசேயர் உயிர்த்தெழுதல் இல்லையென்றும், தேவதூதனும் ஆவியும் இல்லையென்றும் சொல்லுகிறார்கள். பரிசேயரோ அவ்விரண்டும் உண்டென்று ஒப்புக் கொள்ளுகிறார்கள்.

அப் 23:9. ஆகையால் மிகுந்த கூக்குரல் உண்டாயிற்று. பரிசேய சமயத்தாரான வேதபாரகரில் சிலர் எழுந்து: இந்த மனுஷனிடத்தில் ஒரு பொல்லாங்கையும் காணோம்; ஒரு ஆவி அல்லது ஒரு தேவதூதன் இவனுடனே பேசினதுண்டானால், நாம் தேவனுடனே போர்செய்வது தகாது என்று வாதாடினார்கள்.

அப் 23:10. மிகுந்த கலகம் உண்டானபோது, பவுல் அவர்களால் பீறுண்டுபோவானென்று சேனாபதி பயந்து, போர்ச்சேவகர் போய், அவனை அவர்கள் நடுவிலிருந்து இழுத்துக் கோட்டைக்குக் கொண்டு போகும்படி கட்டளையிட்டான்.

அப் 23:11. அன்று இராத்திரியிலே கர்த்தர் பவுலின் அருகே நின்று: பவுலே, திடன்கொள்; நீ என்னைக் குறித்து எருசலேமிலே சாட்சி கொடுத்தது போல ரோமாவிலும் சாட்சிகொடுக்கவேண்டும் என்றார்.

நான் பரிசேயன்

பின்பு அவர்களில், சதுசேயர் ஒரு பங்கும் பரிசேயர் ஒரு பங்குமாயிருக்கிறார்களென்று பவுல் அறிந்து: சகோதரரே, நான் பரிசேயனும் பரிசேயனுடைய மகனுமாயிருக்கிறேன். மரித்தோருடைய உயிர்த்தெழுதலைப் பற்றியும் நம்பிக்கையைக் குறித்து நான் நியாயம் விசாரிக்கப்படுகிறேன் என்று ஆலோசனைச் சங்கத்திலே சத்தமிட்டுச் சொன்னான் (அப் 23:6).

தன்னுடைய ஜீவியத்தில் எல்லாமே தேவனுடைய சித்தத்தின் பிரகாரமாகவே நடைபெறுகிறது என்று பவுல் விசுவாசிக்கிறான். ஆலோசனைச் சங்கத்தாருக்கு முன்பாக தன்னை அழைத்து வந்திருக்கிற தேவனால், அவர்களிடமிருந்து தன்னை விடுவிக்கவும் முடியும் என்று பவுல் நம்பிக்கையோடிருக்கிறான். யூதஜனங்கள் திரளாக ஒன்றுகூடி பவுலைப் பிடித்து அடித்தார்கள். அவனைக் கொலை செய்ய வேண்டுமென்று எத்தனம் பண்ணினார்கள். தேவனோ பவுலை அந்தத் துன்மார்க்கருடைய பிடியிலிருந்து விடுவித்திருக்கிறார். அதே தேவன் இப்போது தன்னை ஆலோசனைச் சங்கத்தாரிடமிருந்தும் விடுவிப்பார் என்று பவுல் நம்புகிறான்.

ஆலோசனைச் சங்கத்தாருக்கு மத்தியில் பவுல் நிறுத்தப்படும்போது, தேவன் அவனுக்கு விசேஷித்த ஞானத்தைத் தருகிறார். பவுல் அவர்களோடு எப்படிப் பேசினால், அவன் விடுதலையாக முடியும் என்பது தேவனுக்குத் தெரியும். பவுலிடத்தில் தேவன் கொடுத்திருக்கிற விசேஷித்த ஞானம் இருக்கிறது. அந்த ஞானத்தைப் பயன்படுத்தி பவுல் ஆலோசனைச் சங்கத்தாரிடமிருந்து விடுதலை பெறுவதற்கு மிகுந்த கவனத்தோடு செயல்படுகிறான்.

தான் இயேசுகிறிஸ்துவின் சீஷன் என்பதிலும், தான் கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களில் ஒருவன் என்பதிலும் பவுல் மேன்மை பாராட்டுகிறான். தன்னுடைய ஜீவியத்தில் இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தல ஊழியத்தைச் செய்வது, தேவன் தனக்குக் கொடுத்திருக்கிற விசேஷித்த சிலாக்கியம் என்று பவுல் நினைக்கிறான். ஆனாலும் சில சமயங்களில், பவுல் தன்னிடத்திலுள்ள வேறு சில தகுதிகளைக் குறித்தும் அவன் பெருமை பாராட்டுகிறான்.

சேனாபதியும் நூற்றுக்கு அதிபதியும் தன்னை கட்டி சவுக்கால் அடிக்க எத்தனம்பண்ணியபோது, தான் ஒரு ரோமன் என்று பவுல் அவர்களிடத்தில் சொன்னான். இந்தச் சிலாக்கியத்திற்குரியவனாக தான் பிறந்திருப்பதாகவும் பவுல் தன்னைப்பற்றி பெருமையோடு சொன்னான். இதனால் போர்ச்சேவகர்கள் பவுலை அடிக்காமல் விட்டுவிட்டார்கள்.

பவுல் ஒரு பரிசேயன். தான் ஒரு பரிசேயன் என்பதற்காகவும் பவுல் பெருமைப்படுகிறான். அவன் பரிசேயனாக இருப்பதினால், ஆலோசனைச் சங்கத் தாரால் ஒருமனப்பட்டு பவுலை தண்டிக்க முடியவில்லை. ஆலோசனைச் சங்கத்தாரில் பரிசேயர் ஒரு பங்கும் சதுசேயர் ஒரு பங்குமாக இருக்கிறார்கள். பரிசேயர் எல்லோரும் பவுலிடத்தில் ஒரு பொல்லாங்கையும் காணோம் என்று அறிவித்துவிடுகிறார்கள்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் கர்த்தருக்காக பாடுகளை அனுபவிக்க ஆயத்தமாகயிருக்க வேண்டும். அதே வேளையில் அந்தப் பாடுகளிலிருந்து தப்பிப்பதற்கு நியாயமான வழிகள் நமக்கு இருக்குமென்றால், அவற்றையும் நாம் பயன்படுத்த வேண்டும். பாடுபடவும் ஆயத்தமாயிருக்க வேண்டும். பாடுகளிலிருந்து தப்பிக்கவும் ஆயத்தமா யிருக்க வேண்டும்.

ஆலோசனைச் சங்கத்தார் பவுலை விசாரிக்கும்போது, பவுல் ஆலோசனைச் சங்கத்தாரை இருபிரிவாகப் பிரித்து விடுகிறான். தன்னுடைய நன்மைக்காக அவர்களைப் பிரிக்கிறான். இப்போது ஆலோசனைச்சங்கத்தாரில் ஒரு பிரிவினர் பவுலுக்கு ஆதரவாகவும், மற்றொரு பிரிவினர் பவுலுக்கு விரோதமாகவும் பேசுகிறார்கள்.

ஆலோசனைச்சங்கத்தாரில் சதுசேயர் ஒரு பங்கும், பரிசேயர் ஒரு பங்கு மாயிருக்கிறார்கள். இவ்விரு பிரிவினரும் யூதராகயிருந்தாலும், இவர்களுடைய விசுவாசத்தில் வித்தியாசமிருக்கிறது. ஆனாலும் யூதமார்க்கத்தைக் குறித்த காரியங்களில், இவ்விரு பிரிவினரும் ஆலோசனைச் சங்கத்தில் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள்.

சதுசேயர் உயிர்த்தெழுதல் இல்லையென்றும், தேவதூதனும் ஆவியும் இல்லையென்றும் சொல்லுகிறார்கள். பரிசேயரோ அவ்விரண்டும் உண்டென்று ஒப்புக் கொள்கிறார்கள். பரிசேயர் யூதமார்க்கத்தின் பாரம்பரிய பழக்க வழக்கங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறவர்கள். மரித்தோரின் உயிர்த் தெழுதல்மீதும், மரித்தப்பின் தாங்கள் ஜீவிக்கப்போகிற ஜீவனைப்பற்றியும் பரிசேயர்கள் விசுவாசிக்கிறார்கள்.

சதுசேயர்கள் வேதவாக்கியத்தையோ, தெய்வீக வெளிப்பாடுகளையோ அதிகமாய் நம்புவதில்லை. மோசேயின் பிரமாணம் இவர்களுக்கு ஒரு வரலாற்று புஸ்தகம் போலவே இருக்கிறது. மோசே மனுக்குலத்திற்கு நல்ல சட்டதிட்டங்களை கொடுத்திருக்கிறான் என்று மாத்திரமே நம்புகிறார்கள். மோசேயின் பிரமாணம் தெய்வீக வெளிப்பாடு என்பதை சதுசேயர் நம்புவதில்லை. வேதவாக்கியங்களெல்லாம் தேவஆவியினாலே அருளப்பட்டிருக்கிறது என்னும் நம்பிக்கையும் சதுசேயரிடத் தில்லை. பழைய ஏற்பாட்டிலுள்ள மற்ற புஸ்தகங்களையும் சதுசேயர் அதிகமாய் மதிப்பதில்லை.

சதுசேயர் மரித்தோரின் உயிர்த் தெழுதலை மறுக்கிறார்கள். இது இல்லை யென்று சொல்லுகிறார்கள். மரித்துப்போன சரீரம் மறுபடியும் ஜீவனைப்பெறுவதில்லை என்பது சதுசேயரின் நம்பிக்கை. மரித்தப்பின்பு நியாயத்தீர்ப்பு உண்டு என்பதையும், நல்லோருக்கு வெகுமதியும், தீயோருக்குத் தண்டனையும் கொடுக்கப் படும் என்பதையும் சதுசேயர் நம்புவதில்லை.

பழைய ஏற்பாட்டில் தேவதூதர்களைப் பற்றி எழுதப்பட்டிருக்கிறது. இந்த தேவதூதர்கள் உண்மையிலேயே இல்லை யென்றும், இவையெல்லாம் மனுஷருடைய கற்பனை என்றும் சதுசேயர் சொல்லுகிறார்கள். மனுஷருடைய ஆத்து மாவைப் பற்றி, சதுசேயர் சொல்லும்போது ஆத்துமாவும் சரீரமும் ஒருபோதும் பிரிவதில்லை என்று நம்புகிறார்கள். மனுஷருடைய ஆத்துமாவுக்கும், மிருகங்களுடைய ஆத்துமாவுக்கும் வித்தியாசமில்லையென்பது சதுசேயரின் உபதேசம். சதுசேயர் வேதத்திலுள்ள சத்தியத்தின் பிரகாரமாக சிந்திக்காமல், தங்கள் மனம் போன போக்கில் சிந்திக்கிறார்கள்.

வேதத்தை நம்பாதவர்கள், யூதருடைய ஆலோசனைச் சங்கத்தில் அங்கத்தினாராக இருக்கிறார்கள். வேதாகமத்தை நம்புகிறவர்கள் ஆலோசனைச் சங்கத்தில் இடம்பெற முடியாமலும், வேதத்தை நம்பாதவர்கள் ஆலோசனைச் சங்கத்தில் இடம்பெற முடிவதும் அக்காலத்தில் ஒரு பிரச்சனையாகவே இருந்திருக்கிறது. வேதத்தை நம்பாதவர்கள் தேவாலயத்திலும், ஜெப ஆலயங்களிலும் ஆளுகை செய்யும்போது, விசுவாசத்திற்கு அங்கு இடமிராது. சதுசேயருக்கு நியாயத்தீர்ப்பைப் பற்றிய பயமில்லை. இவர்கள் மனம்போகிற போக்கில் ஜீவிக்கிறவர்கள். இப்படிப் பட்டவர்கள் ஆளுகை செய்யும்போது, யூதஜனத்தாரின் ஆவிக்குரிய தரம் சற்று குறைந்தே காணப்படுகிறது.

ஆலோசனைச்சங்கத்தாரில் சதுசேயர் ஒரு பங்கும், பரிசேயர் ஒரு பங்குமாயிருக்கிறார்கள் என்று பவுல் அறிந்துகொள்கிறான். "நான் பரிசேயனும், பரிசேயனுடைய மகனுமாயிருக்கிறேன்" என்று ஆலோசனைச்சங்கத்திலே பவுல் சத்தமிட்டுச் சொல்லுகிறான். தான் மரித்தோருடைய உயிர்த்தெழுதலைப்பற்றிய நம்பிக்கையைக் குறித்து நியாயம் விசாரிக்கப்படுவதாகவும் ஆலோசனைச் சங்கத்திலே சத்தமிட்டுச் சொல்லுகிறான். பரிசேயருடைய நம்பிக்கையே சரியானது என்று பவுல் அறிவிக்கிறான்.

பரிசேயர்கள் கிறிஸ்துவின் உபதேசத்தை அங்கீகரிப்பதில்லை. அவர்கள் இயேசு கிறிஸ்துவுக்கும், அவருடைய சீஷருக்கும் விரோதமாகயிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில், அவர்கள் சதுசேயருக்கு விரோதமாகயிருக்கிறார்கள் என்னும் ஒரு காரணத்தினால், பவுல் தன்னையும் ஒரு பரிசேயன் என்று காண்பித்துக் கொள்கிறான்.

தேவனுடைய சத்தியத்தை அறிவிப்பதற்கு நாம் தயங்கக்கூடாது. நாம் மௌனமாயிருந்தால் சத்துரு நம்மை மேற்கொள்வான். அவனுடைய வார்த்தைகளே எல்லோருடைய செவிகளிலும் கேட்கும். ஆகையினால் கர்த்தர் நமக்குக் கொடுக்கிற வார்த்தைகளை தெளிவாகப் பேச வேண்டும். ஆலோசனைச் சங்கத்திற்கு முன்பாக பவுல் தன்னை, கிறிஸ்துவின் சீஷனென்றும், கிறிஸ்துவின் அப்போஸ் தலனென்றும் சொல்ல வேண்டும். இதற்காகத்தான் பவுலை ஆலோசனைச் சங்கத்திற்கு முன்பாக அழைத்து வந்திருக்கிறார்கள். ஆனால் பவுலோ "நான் ஒரு பரிசேயனும், பரிசேயனுடைய மகனும்" என்று சொல்லுகிறான்.

மரித்தோர் உயிர்த்தெழுவார்கள் என்பது இயேசுகிறிஸ்துவின் உபதேசம். பவுல் இந்த உபதேசத்தை நம்புகிறான், இதைப் பிரசங்கம் பண்ணுகிறான். மரித்தோர் உயிர்த்தெழுவார்கள் என்பதை தான் நம்புவதாக பவுல் பின்பு சாட்சியாக அறிவிக்கிறான். "நீதிமான்களும் அநீதிமான்களுமாகிய மரித்தோர் உயிர்த் தெழுந்திருப்பது உண்டென்று இவர்கள் தேவனிடத்தில் நம்பிக்கை கொண்டிருக்கிறது போல, நானும் நம்பிக்கை கொண்டிருக்கிறேன்" (அப் 24:15)

"தேவன் நம்முடைய பிதாக்களுக்கு அருளிச்செய்த வாக்குத்தத்தம் நிறைவேறுமென்கிற நம்பிக்கைக்காகவே நான் இப்பொழுது நியாயத் தீர்ப்படைகிறவனாய் நிற்கிறேன். இரவும் பகலும் இடைவிடாமல் ஆராதனை செய்துவருகிற நம்முடைய பன்னிரண்டு கோத்திரத்தாரும் அந்த வாக்குத்தத்தம் நிறைவேறுமென்று நம்பியிருக்கிறார்கள். அகிரிப்பா ராஜாவே, அந்த நம்பிக்கையினிமித்தமே யூதர்கள் என்மேல் குற்றஞ் சாட்டுகிறார்கள்" (அப் 26:6,7) என்று பவுல் மரித்தோரின் உயிர்த் தெழுதலைக் குறித்து சாட்சியாக அறிவிக்கிறான்.

வாக்குவாதமுண்டாயிற்று

அவன் இப்படிச் சொன்னபோது, பரிசேயருக்கும் சதுசேயருக்கும் வாக்குவாத முண்டாயிற்று; கூட்டம் இரண்டாகப் பிரிந்தது. என்னத்தினாலென்றால், சதுசேயர் உயிர்த்தெழுதல் இல்லையென்றும், தேவதூதனும் ஆவியும் இல்லையென்றும் சொல்லுகிறார்கள். பரிசேயரோ அவ்விரண்டும் உண்டென்று ஒப்புக் கொள்ளுகிறார்கள் (அப் 23:7,8).

பவுல் தன்னை பரிசேயன் என்று சொன்ன போது, ஆலோசனைச் சங்கத்திலுள்ள பரிசேயருக்கும் சதுசேயருக்கும் வாக்குவாத முண்டாயிற்று. ஆலோசனைச் சங்கத்தார் இரண்டாகப் பிரிந்து விடுகிறார்கள். பவுல் மரித்தோருடைய உயிர்த் தெழுதலைத் தான் நம்புவதாகச் சொன்னவுடன் ஆலோசனைச் சங்கத்திலுள்ள பரிசேயர் அவனுக்கு ஆதரவாகவும், சதுசேயர் அவனுக்கு விரோதமாகவும் வாக்குவாதம் பண்ணுகிறார்கள். இதனால் இவர்கள் ஒரே ஆலோசனைச் சங்கத்தில் இருந்தாலும், சதுசேயரும் பரிசேயரும் இரண்டாகப் பிரிந்துவிடுகிறார்கள்.

இது வரையிலும் யூதஜனங்கள் பவுலுக்கு விரோதமாக கூக்குரலிட்டார்கள். பவுல் உயிரோடிருக்கிறது நியாயமல்லவென்று சத்தமிட்டுச் சொன்னார்கள். பவுலுக்கு விரோதமாக சத்தமிட்டவர்கள், இப்போது தங்களுக்குள்ளே விரோதமாக வாக்குவாதம்பண்ணுகிறார்கள். அவர்கள் மத்தியில் மிகுந்த கூக்குரல் உண்டாயிற்று.

ஆவிக்குரிய காரியங்களில் விவாதம் வரும்போது, அதைச் சத்தமிட்டு தீர்த்து வைக்க முடியாது. தெய்வீக ஆலோசனையினாலும், தெய்வீக ஞானத்தினாலும்,பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையோடும் ஆவிக்குரிய காரியங்களில் உண்டாகும் கருத்து வேறுபாடுகளைத் தீர்த்து வைக்க வேண்டும். ஆனால் ஆலோசனைச் சங்கத்திலுள்ளவர்களோ தங்களுக்குள் வாக்குவாதம் பண்ணி, மிகுந்த கூக்குரலிடுகிறார்கள். ஒருவரும் இந்த வழக்கைக் குறித்து தேவனுடைய சமுகத்தில் ஜெபம்பண்ணவில்லை. யாரும் ஆவியானவருடைய உதவியையோ, ஒத்தாசையையோ, வழிநடத்துதலையோ நாடவில்லை.

ஒரு பொல்லாங்கையும் காணோம்

ஆகையால் மிகுந்த கூக்குரல் உண்டாயிற்று. பரிசேய சமயத்தாரான வேதபாரகரில் சிலர் எழுந்து: இந்த மனுஷனிடத்தில் ஒரு பொல்லாங்கையும் காணோம்; ஒரு ஆவி அல்லது ஒரு தேவதூதன் இவனுடனே பேசினதுண்டானால், நாம் தேவனுடனே போர்செய்வது தகாது என்று வாதாடினார்கள் (அப் 23:9).

ஆலோசனைச் சங்கத்தார் இரண்டாகப் பிரிகிறார்கள். அவர்களில் பரிசேயர் "பவுலிடத்தில் ஒரு பொல்லாங்கையும் காணோம்" என்று அறிவித்து விடுகிறார்கள். பவுல் தன்னைப்பற்றி அவர்களுக்கு தெளிவாகச் சொல்லியிருக்கிறான். "நான் பரிசேயனும், பரிசேயனுடைய மகனுமாயிருக்கிறேன்" என்று அவர்களிடத்தில் சொன்னதினால், ஆலோசனைச் சங்கத்திலுள்ள பரிசேயரெல்லாம், பவுலின் சார்பாக, அவனுக்கு ஆதரவாகப் பேசுகிறார்கள். அவனிடத்தில் தாங்கள் ஒரு பொல்லாங்குகளையும் காணவில்லை யென்று அறிவித்து விடுகிறார்கள். மரித்தோருடைய உயிர்த்தெழுதலை பவுல் நம்புகிறான். ஆகையினால் இவன் மரணத்திற்கோ அல்லது, கட்டுகளுக்கோ ஏதுவான பொல்லாங்கு எதையும் செய்யவில்லை என்று பரிசேயர் பவுலைப்பற்றி சொல்லுகிறார்கள்.

பவுலிடத்தில் ஒரு தப்பிதமும் இல்லை என்று சொல்லுவதோடு "ஒரு ஆவி அல்லது ஒரு தேவதூதன் இவனுடனே பேசினதுண்டானால் நாம் தேவனுடனே போர் செய்வது தகாது" என்றும் சொல்லுகிறார்கள். பவுல் கமாலியேலின் பாதபடியில் வேதம் படித்தவன். ஒரு சமயம் ஆலோசனைச்சங்கத்தார் அப்போஸ்தலரை விசாரித்தபோது, அவர்களில் ஒருவனாகிய கமாலியேல் என்பவன் ஆலோசனைச் சங்கத்தாருக்கு இதுபோலவே இவ்வாறு ஆலோசனை சொன்னான். "இப்பொழுது நான் உங்களுக்குச் சொல்லுகிறதென்னவென்றால், இந்த மனுஷருக்கு ஒன்றுஞ் செய்யாமல் இவர்களை விட்டுவிடுங்கள். இந்த யோசனையும் இந்தக் கிரியையும் மனுஷரால் உண்டாயிருந்ததானால் ஒழிந்துபோம்; தேவனால் உண்டாயிருந்ததேயானால், அதை ஒழித்துவிட உங்களால் கூடாது; தேவனோடே போர் செய்கிறவர்களாய்க் காணப்படாதபடிக்குப் பாருங்கள் என்றான்" (அப் 5:38,39).

சுவிசேஷத்தின் வார்த்தை சத்தியமானது. வல்லமையுள்ளது. மேன்மையும் மகிமையுமுள்ளது. கர்த்தருடைய ஊழியக்காரர்கள் சுவிசேஷத்திற்கு சாட்சி சொல்லுவதுபோல, சில சமயங்களில் சுவிசேஷத்திற்கு சத்துருக்களாக இருக்கிறவர்கள்கூட அதற்குச் சாட்சி சொல்லுகிறார்கள். சுவிசேஷம் உண்மையென்று அறிக்கை செய்கிறார்கள். சுவிசேஷத்திற்கு விரோதமாக எழும்புகிறவர்கள், பல சமயங்களில் சுவிசேஷத்தின் வல்லமைக்கும், அதிகாரத்திற்கும் சாட்சி கொடுக்கிறார்கள்.

இயேசு கிறிஸ்துவை பிலாத்து விசாரிக்கிறான். இயேசுகிறிஸ்துவிடத்தில் ஒரு குற்றமும் காணவில்லையென்று அறிவித்தான். ஆனாலும் அவன் இயேசு கிறிஸ்துவை சிலுவையில் அறையுமாறு ஒப்புக் கொடுத்தான். அதுபோலவே இப்போது பரிசேயரும் பவுலிடத்தில் ஒரு பொல்லாங்கும் இல்லையென்று அறிக்கை செய்கிறார்கள். ஒரு ஆவி அல்லது தேவதூதன் பவுலுடனே பேசினதினால், அவன் கிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்வதாக அறிக்கைசெய்கிறார்கள். வானத்திலிருந்து பவுலுக்கு தெய்வீக கட்டளை பிறந்திருப்பதாக எல்லோருக்கும் முன்பாக சொல்லியிருக்கிறார்கள். பரிசேயர்கள் பவுலைப்பற்றி இவ்வளவு ஆதரவாகப் பேசினாலும், பின்பு இவர்களே பிரதான ஆசாரியரோடு சேர்ந்துகொண்டு, பவுலைத் துன்புறுத்துகிறார்கள். பவுலுக்கு விரோதமாய் தேசாதிபதியினிடத்தில் பிராது பண்ணுகிறார்கள் (அப் 24:1).

பரிசேயருக்கு சத்தியம் தெரிந்திருக்கிறது. தங்களுக்குத் தெரிந்திருக்கிற சத்தியத்திற்கு விரோதமாக பரிசேயர்கள் பாவம் செய்கிறார்கள். மரித்தோரின் உயிர்த்தெழுதலைப்பற்றிய சத்தியம் பரிசேயரின் இருதயத்தில் நிரம்பியிருக்கிறது. இதை அவர்கள் நம்புகிறார்கள். ஆனாலும் தாங்கள் நம்புகிற சத்தியத்திற்கு விரோதமாக பாவம் செய்ய முன் வருகிறார்கள். பவுல் தன்னைப்பற்றி சொன்னபோது, பரிசேயரில் சிலர், பவுலின் பக்கத்தில் நியாயம் இருப்பதாக நம்புகிறார்கள். அவனுக்கு ஆதரவாகப் பேசுகிறார்கள். ஆனாலும் முன்னோர்களின் பாரம்பரியத்தில் பரிசேயர் அதிக வைராக்கியமாயிருக்கிறார்கள்.

முன்னோர்களின் பாரம்பரியத்தைப் பற்றியும், மரித்தோரின் உயிர்த்தெழுதலைப் பற்றியும் பரிசேயருடைய மனதிற்குள் குழப்பமுண்டாயிற்று. இந்தக் குழப்பத்தில் பாரம்பரியமே அவர்களுடைய மனதில் உறுதியாய் நிலைத்திருக்கிறது. சத்தியத்தைவிட பாரம்பரியமே முக்கியம் என்று பரிசேயர் பட்சபாதம் காண்பிக்கிறார்கள். சதுசேயர்கள் மரித்தோரின் உயிர்த் தெழுதலை நம்புவதில்லை. ஆனாலும் பரிசேயர் தாங்கள் நம்புகிற சத்தியத்தை விட்டு விட்டு, பாரம்பரியத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து, சதுசேயரோடு சேர்ந்து கொள்கிறார்கள். பவுலுக்கு ஆதரவாக இருந்தவர்கள் இப்போது பவுலுக்கு விரோதமாக ஒன்று சேருகிறார்கள்.

தேவனுடைய வழிநடத்துதலின்படி பவுல் ஊழியம் செய்கிறான் என்று அவனைப்பற்றி சாட்சி சொன்னவர்கள், இப்போது பவுலுக்கு விரோதமாக சதுசேயரோடு சேர்ந்து கொள்கிறார்கள். ஆலோசனைச் சங்கத்தார் சத்தியத்திற்கு ஆதரவாகச் சிந்திக்க வேண்டும். செயல்படவேண்டும். ஆனால் அவர்களோ சத்தியத்திற்கு விரோதமாகச் சிந்தித்துச் செயல்படுகிறார்கள்.

பவுல் பீறுண்டுபோவான்

மிகுந்த கலகம் உண்டானபோது, பவுல் அவர்களால் பீறுண்டு போவானென்று சேனாபதி பயந்து, போர்ச்சேவகர் போய், அவனை அவர்கள் நடுவிலிருந்து இழுத்துக் கோட்டைக்குக் கொண்டு போகும்படி கட்டளையிட்டான் (அப் 23:10).

ஆலோசனைச் சங்கத்தாருக்கு முன்பாக மிகுந்த கலகமுண்டாயிற்று. பவுல் அவர்களால் பீறுண்டுபோகிற சூழ்நிலை உண்டாயிற்று. பவுல் அவர்களால் பீறுண்டு போவான் என்று சேனாபதி பயப்படுகிறான். போர்ச் சேவகருக்கு சேனாபதி கட்டளை யிடுகிறான். அவர்கள் பவுலை யூதர்கள் நடுவிலிருந்து எடுத்து, கோட்டைக்குள் கொண்டு போகிறார்கள். சேனாபதி பவுலுக்கு உதவி செய்கிறான். பரிசேயருக்கும் சதுசேயருக்கும் இடையிலுள்ள பிரச்சனை மிகவும் பெரிதாயிற்று. அந்தப் பிரச்சனையில் அவர்கள் பவுலை பீறுண்டு போகப்பண்ணுகிற சூழ்நிலை உருவாயிற்று.

சேனாபதி ஏற்கெனவே இரண்டு முறை பவுலை யூதருடைய கைகளிலிருந்து தப்புவித்திருக்கிறான் (அப் 21:32; 22:24). முன்பு செய்ததுபோலவே இப்போதும் சேனாபதி பவுலை அவர்களுடைய முரட்டுக்கைகளிலிருந்து பாதுகாக்கிறான். பரிசேயர் பவுலுக்குச் சாதகமாக இருக்கிறார்கள். சதுசேயர் அவனுக்கு விரோதமாகயிருக்கிறார்கள். இவர்களிடையே மிகுந்த கலக முண்டாயிற்று. பவுல் கலகக்காரருக்கு நடுவிலிருக்கிறான். இந்தக் கலகத்தில் அவர்கள் பவுலைக் கொன்றுபோடக்கூடும். ஆகையினால் சேனாபதி பவுலை அவர்கள் நடுவிலிருந்து இழுத்து கோட்டைக்குள் கொண்டுபோய்விடுகிறான்.

சேனாபதி பவுலை ஆலோசனைச் சங்கத்தாரிடமிருந்து தப்புவித்துக் கொண்டு போனாலும், அவன் இன்னும் பவுலை காவலிலேயே வைத்திருக்கிறான். கோட்டைக்குள்ளிருப்பது பவுலுக்கு ஒரு பாதுகாப்பாக இருக்கிறது. மிகப்பெரிய ஆபத்திலிருந்து பவுல் தப்பி வந்திருக்கிறான். கோட்டைக்குள் பவுல் கட்டப்பட்டிருந்தாலும், அதுவே அவனுக்குப் பாதுகாப்பாக இருக்கிறது. மறுநாளில் தனக்கு என்ன நடைபெறும் என்பது பவுலுக்குத் தெரியாது.

பவுலே திடன்கொள்

அன்று இராத்திரியிலே கர்த்தர் பவுலின் அருகே நின்று: பவுலே, திடன்கொள்; நீ என்னைக்குறித்து எருசலேமிலே சாட்சிகொடுத்ததுபோல ரோமாவிலும் சாட்சிகொடுக்கவேண்டும் என்றார் (அப் 23:11).

பவுல் கோட்டைக்குள் காவலில் வைக்கப்பட்டிருக்கிறான். மிகுந்த கலகத்திலிருந்து தப்பி வந்திருக்கிறான். தன்னுடைய ஜீவியத்தில் கர்த்தருடைய சித்தம் எவ்வாறு இருக்குமென்பதை அறிந்து கொள்ள ஆவலாயிருக்கிறான். கர்த்தரிடத்தில் ஜெபிக்கிறான். அன்று இராத்திரியிலே கர்த்தர் பவுலின் அருகே நிற்கிறார்.

நமக்கு விரோதமாக ஏராளமான பேர் எழும்பி வந்தாலும், கர்த்தர் நமக்கு அருகில் நிற்கிறார். கர்த்தர் நம்மோடு கூடயிருக்கும் போது, அவரே நமக்கு அரணாகவும்பாதுகாப்பாகவும் இருக்கிறார். தேவன் நம்மோடு கூடயிருக்கும்போது நமக்கு விரோதமாக எந்தச் சத்துருவினாலும் தீங்கு செய்யமுடியாது. தேவன் நமக்கு அருகில் நிற்கும்போது நாம் சூழ்நிலைகளைக் குறித்து கவலைப்பட வேண்டியதில்லை. கர்த்தர் பவுலைப் பார்த்து "பவுலே திடன்கொள்" என்று ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லி அவனை உற்சாகப்படுத்துகிறார்.

கர்த்தருடைய உண்மையுள்ள ஊழியக்காரர்கள், எல்லா சூழ்நிலைகளிலும் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்பதே தேவனுடைய சித்தம். இயேசு கிறிஸ்து தம்முடைய வார்த்தையினால் பவுலுக்கு ஆறுதலைக் கொடுக்கிறார். பவுலுக்கு நடைபெறுகிற ஒவ்வொரு சம்பவமும் தேவனுடைய சித்தத்தின் பிரகாரமாகவே நடைபெறுகிறது. பவுலை உற்சாகப்படுத்துவதற்காக, கர்த்தர் அவனிடத்தில் "நீ என்னைக் குறித்து எருசலேமிலே சாட்சி கொடுத்ததுபோல ரோமாவிலும் சாட்சி கொடுக்கவேண்டும்" என்று சொல்லுகிறார்.

பவுலுக்கு எருசலேமில் கசப்பான அனுபவம் நடைபெற்றிருக்கிறது. ஆலோசனைச்சங்கத்திற்கு முன்பாக பவுல் நிறுத்தப்பட்டிருக்கிறான். கோட்டைக்குள் காவலில் அடைக்கப்பட்டிருக்கிறான். கர்த்தரோ அவன் அருகில் நின்று "பவுலே திடன்கொள்" என்று சொல்லுகிறார். இது அவனுக்கு ஆறுதலான வார்த்தைதான். ஆனால் கர்த்தரோ, அவனுக்கு ஆறுதலான வார்த்தையைச் சொல்லி விட்டு, "எருசலேமிலே சாட்சி கொடுத்தது போல, ரோமாவிலும் சாட்சி கொடுக்க வேண்டும்" என்று சொல்லுகிறார். தனக்கு எருசலேமில் உண்டான அனுபவத்தைப் போல, ரோமாவிலும் பாடுகள் நிறைந்த அனுபவம் உண்டாகுமோ என்று பவுல் சிந்தித்திருக்கலாம். பவுலை பயமுறுத்துவதற்காக கர்த்தர் இந்த வார்த்தைகளைச் சொல்லவில்லை. அவனை உற்சாகப்படுத்துவதற்காகவே, கர்த்தர் அவன் அருகே வந்து இந்த வார்த்தைகளைச் சொல்லுகிறார்.

பவுல் கர்த்தருடைய ஊழியக்காரன். அவர் தனக்குக் கொடுத்திருக்கிற ஊழியத்தை உண்மையாய் செய்திருக்கிறான். இதுவரையிலும் அவன் பல பாடுகளை அனுபவித்து வந்தாலும், கர்த்தருக்காக உண்மையுள்ள ஊழியக்காரனாகவே இருந்திருக்கிறான். பவுலின் ஊழியத்திற்கு கர்த்தரே சாட்சிகொடுக்கிறார். பல பாடுகள் மத்தியிலும், உபத்திரவங்கள் மத்தியிலும், பவுல் தம்மைக் குறித்து சாட்சி கொடுத்ததை கர்த்தரே அங்கீகரிக்கிறார். பவுலின் ஊழியம் இத்துடன் முடிந்து போவதில்லையென்றும், இன்னும் தொடரப் போகிறது என்றும் கர்த்தரே தம்முடைய வார்த்தையினால் அறிவிக்கிறார்.

பவுல் ஜனங்கள் மத்தியில் கர்த்தரைக் குறித்து சாட்சி கொடுக்கிறான். அவனுடைய சாட்சியின் ஊழியம் இன்னும் முடிவடையவில்லை. அவனுடைய ஓட்டம் இன்னும் முடிந்துபோகவில்லை. அவன் இன்னும் ஓடவேண்டும். கர்த்தர் அவனுக்கு ஒரு பரிசுத்தமான இலக்கை நியமித்திருக்கிறார். அந்த இலக்கை அடைவதற்கு அவன் விசுவாசத்தோடு ஓடுவான் என்று கர்த்தரே சாட்சி கொடுக்கிறார்.

கிறிஸ்துவின் ஊழியத்தைவிட்டு விலகிப்போய்விடுவோமோ என்னும் பயம் பவுலின் உள்ளத்தில் காணப்படவில்லை. மனுஷருடைய ஆத்துமாக்களின் ஆசீர்வாதத்திற்காக பவுல் இதுவரையிலும் ஊழியம் செய்து வந்திருக்கிறான். இந்த ஊழியம் தன்னைவிட்டு நீங்கிப்போகுமோ என்னும் சந்தேகம் பவுலின் இருதயத்தில் ஒருபோதும் உண்டானதில்லை. ஆனாலும் எருசலேமில் உண்டான கலகத்தினிமித்தமும், வேதனை பாடுகள் ஆகியவற்றினிமித்தமும் பவுல் ஒருவேளை சோர்ந்துபோயிருக்கலாம். அப்படிப்பட்ட சூழ்நிலையில், அவனை ஆறுதல் படுத்துவதற்காக, கர்த்தரே அவனிடத்தில் வந்து, அவனுக்கு அருகில் நின்று "பவுலே திடன்கொள்" என்று சொல்லுகிறார்.

கர்த்தர் பவுலின் ஊழியத்தை எருசலேமோடு முடிந்து போகப்பண்ண வில்லை. ரோமாவிற்குப் போகவேண்டும் என்னும் வாஞ்சை பவுலின் உள்ளத்தில் ஏற்கெனவே இருக்கிறது. பவுலும் ஒரு ரோமனாக இருக்கிறான். ரோமர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்கவேண்டுமென்று விரும்புகிறான். எருசலேமுக்குப் போன பின்பு, ரோமாபுரியையும் பார்க்க வேண்டியதென்று தன் ஆவியில் நிர்ணயம்பண்ணியிருக்கிறான் (அப் 19:21). எருசலேமிலேதான் கட்டப்பட்டிருப்பதினால், தனக்கு ரோமாபுரிக்குப்போய் ஊழியம் செய்கிற வாய்ப்பு கிட்டாமல் போய்விடுமோ என்று பவுல் தன் இருதயத்தில் சோர்ந்து போயிருக்கிறான். கர்த்தரோ அவனுடைய இருதய சோர்வை நீக்குவதற்காகவே, பவுலைச் சந்திக்கிறார். அவனைத் திடப்படுத்துகிறார். இயேசு கிறிஸ்துவைக் குறித்து அவன் எருசலேமிலே சாட்சி கொடுத்ததுபோல, ரோமாவிலும் சாட்சி கொடுக்க வேண்டுமென்று அவனுக்குச் சொல்லுகிறார். பவுல் கோட்டைக்குள் கட்டப்பட்டிருந்தாலும், கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு மிகுந்த ஆறுதலாக இருக்கிறது.

பவுலைக் கொலை செய்ய சர்ப்பனை அப் 23 : 12-15

அப் 23:12. விடியற்காலமானபோது, யூதரில் சிலர் ஒருமித்து, தாங்கள் பவுலைக் கொலை செய்யுமளவும் புசிப்பதுமில்லை குடிப்பது மில்லையென்று சபதம்பண்ணிக் கொண்டார்கள்.

அப் 23:13. இப்படிக் கட்டுப்பாடு பண்ணிக் கொண்டவர்கள் நாற்பது பேருக்கு அதிகமாயிருந்தார்கள்.

அப் 23:14. அவர்கள் பிரதான ஆசாரியர்களிடத்திலும் மூப்பர் களிடத்திலும் போய்: நாங்கள் பவுலைக் கொலை செய்யுமளவும் ஒன்றும் புசிப்பதில்லையென்று உறுதியான சபதம் பண்ணிக்கொண்டோம்.

அப் 23:15. ஆனபடியினால் நீங்கள் ஆலோசனைச் சங்கத்தாரோடே கூடப்போய், அவனுடைய காரியத்தை அதிக திட்டமாய் விசாரிக்க மனதுள்ளவர்கள் போலச் சேனாபதிக்குக் காண்பித்து, அவர் நாளைக்கு அவனை உங்களிடத்தில் கூட்டிக் கொண்டு வரும்படி அவரிடத்தில் கேட்பீர்களாக. அவன் கிட்டவருகிறதற்குள்ளே நாங்கள் அவனைக் கொலை செய்ய ஆயத்தமாயிருப்போம் என்றார்கள்.

சபதம்பண்ணிக்கொண்டார்கள்

விடியற்காலமானபோது, யூதரில் சிலர் ஒருமித்து, தாங்கள் பவுலைக் கொலைசெய்யுமளவும் புசிப்பதுமில்லை குடிப்பதுமில்லையென்று சபதம் பண்ணிக் கொண்டார்கள். இப்படிக் கட்டுப்பாடு பண்ணிக் கொண்டவர்கள் நாற்பதுபேருக்கு அதிகமாயிருந்தார்கள் (அப் 23:12,13).

யூதர்கள் பவுலைத் தேவாலயத்திற்குப் புறம்பே இழுத்துக் கொண்டுபோகிறார்கள். அவனை அடிக்கிறார்கள். அவனைக் கொலை செய்யவேண்டுமென்று எத்தனம் பண்ணுகிறார்கள். அவனுக்கு விரோதமாக கூக்குரலிடுகிறார்கள். ஆலோசனைச் சங்கத்தில் அவனை விசாரிக்கிறார்கள். ஆனாலும் அவர்களால் பவுலைக் கொல்ல முடியவில்லை. நீதியின் பிரகாரமாக விசாரணை செய்து பவுலைக் கொல்லுவது யூதருக்குக் கூடாமற் போயிற்று. ஆகையினால் அவனை இரகசியமாகக் கொன்றுபோடலாமென்று அவனுக்கு விரோதமாக சதிஆலோசனை பண்ணுகிறார்கள்.

யூதர்கள் எல்லோருமே பவுலைக் கொல்ல வேண்டுமென்று சர்ப்பனை பண்ணவில்லை. யூதரில் ஒரு சிலர் மாத்திரமே ஒருமித்து, பவுலைக் கொலை செய்யுமளவும் புசிப்பதுமில்லை, குடிப்பதுமில்லை என்று சபதம் பண்ணிக் கொள்கிறார்கள். இப்படி கட்டுப்பாடு பண்ணிக்கொண்டவர்கள் நாற்பது பேருக்கு அதிகமாயிருக்கிறார்கள்.

இவர்கள் விடியற்காலமான போது சதிஆலோசனை பண்ணுகிறார்கள். இராத்திரியிலே கர்த்தர் பவுலுக்கு அருகே நின்றார். "பவுலே திடன்கொள்" என்று ஆறுதல் சொன்னார். எருசலேமில் தம்மைக் குறித்து சாட்சி கொடுத்தது போல, ரோமாவிலும் சாட்சி கொடுக்க வேண்டுமென்று பவுலிடத்தில் பிரத்தியட்சமாகச் சொன்னார். ஆனால் விடியற்காலமானபோதோ, யூதரில் ஒரு சிலர் பவுலைக் கொலைசெய்ய வேண்டுமென்று சபதம்பண்ணுகிறார்கள். அவனுடைய ஜீவனுக்கு விரோதமாக சதிஆலோசனை செய்கிறார்கள். இவர்கள் தங்கள் ஆலோசனையை ஆரம்பிப்பதற்கு முன்பாகவே, கர்த்தர் பவுலுக்கு தரிசனமாகி அவனைத் திடப்படுத்துகிறார். சத்துரு தூங்கும்போது கர்த்தர் விழித்திருக்கிறார். இஸ்ரவேலைக் காக்கிறவர் தூங்குவதுமில்லை. உறங்குவதுமில்லை.

யூதர்களில் சிலர் பவுலைக் கொலை செய்வதற்காக ஒருமித்துக் கூடுகிறார்கள். யூதருடைய ஆலோசனைச்சங்கத்தாரால் நிறைவேற்ற முடியாத காரியத்தை, தாங்கள் நிறைவேற்ற வேண்டுமென்று கொலைவெறியோடு கூடியிருக்கிறார்கள். பவுலைக் கொலை செய்வதற்காக ஒருவருக்கொருவர் உதவி செய்வது என்று தீர்மானிக்கிறார்கள். நீதிக்கும் சத்தியத்திற்கும் ஒரு தேசத்தில் இடமில்லையென்றால், இதுபோன்ற துன்மார்க்கம் ஓங்கி நிற்கும். நியாயம் விசாரிக்க வேண்டிய ஆலோசனைச் சங்கத்தார், அமைதியாக இருக்கிறார்கள். துன்மார்க்கரோ தங்கள் இஷ்டம்போல துன்மார்க்கக் கிரியைகளைச் செய்ய எத்தனம்பண்ணுகிறார்கள்.

பவுலைக் கொலை செய்ய வேண்டுமென்பது இவர்களுடைய வெறி. பவுலைக் கொலைசெய்யுமளவும் தாங்கள் புசிப்பதுமில்லை குடிப்பதுமில்லை என்று சபதம் பண்ணிக்கொள்கிறார்கள். பவுலைக் கொலைசெய்யவில்லையென்றால் "தங்கள் மீது சாபம் வருவதாக" என்று தங்களுக்குள் சபதம் பண்ணுகிறார்கள். அவனை விரைவில் கொன்றுபோட வேண்டும் என்று தீர்மானித்து, அதுவரையிலும் தாங்கள் ஒன்றும் புசிப்பதில்லை என்று உறுதியான சபதம்பண்ணிக்கொள்கிறார்கள்.

பவுலைக் கொலைசெய்ய எத்தனமாய் கூடியிருக்கிறவர்களின் துன்மார்க்கம் மிகவும் பயங்கரமானது. ஒரு பாவமும் செய்யாத ஒரு மனுஷனை கொலை பண்ணுவதற்காக சதிஆலோசனை பண்ணுகிறார்கள். பவுல் இவர்களுக்கு நன்மையே அல்லாமல், ஒரு தீங்கும் செய்ததில்லை. இப்படிப்பட்டவர்கள் காயீனின் வழியில் நடக்கிறவர்கள். துன்மார்க்கமான எண்ணங்களினால் இவர்களுடையஇருதயம் நிரம்பியிருக்கிறது. துன்மார்க்கத்தின் கட்டுக்களினால் இவர்கள் கட்டப்பட்டிருக்கிறார்கள். தங்கள் இருதயங்களில் பிசாசுக்கு இடங் கொடுத்திருக்கிறார்கள். பிசாசு இவர்களை ஆளுகை செய்கிறான்.

தீமை செய்ய நினைப்பதே தவறு. தீமை செய்யவேண்டுமென்று சபதம் பண்ணுவது அதைவிட மிகப்பெரிய தவறு. இவர்கள் மனுஷரோடு சபதம் பண்ணவில்லை. பிசாசோடு சபதம் பண்ணுகிறார்கள். இவர்களுடைய இருதயத்தில் மனந்திரும்புவதற்கு சிறிதும் இடமில்லை. தங்களுடைய ஆத்துமாக்களை தாங்களே அழித்துக் கொள்கிறார்கள். தங்களுடைய ஆத்துமாக்களை அழிவிலிருந்து காத்துக் கொள்வதற்கு எந்தவித வாய்ப்புமில்லாமல், இவர்கள் சாத்தானோடு உடன்படிக்கை பண்ணுகிறார்கள்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் ஒவ்வொரு காரியத்தையும் மிகவும் கவனமாய்ச் செய்யவேண்டும். "நாளைக்கு இதைச் செய்வோம் என்றோ, அல்லது அதைச் செய்வோம் என்றோ" துணிகரமாகச் சொல்லக்கூடாது. நம்முடைய ஒவ்வொரு தீர்மானமும், "கர்த்தருக்குச் சித்தமானால் நாம் அதைச் செய்வோம்" என்று பணிவோடும் பக்தியோடும் சொல்லவேண்டும். பவுலைக் கொலைசெய்யவேண்டுமென்று ஒருமித்துக் கூடியிருக்கிறவர்களோ, தாங்கள் பவுலைக் கொலைசெய்யுமளவும் புசிப்பதுமில்லை குடிப்பதுமில்லை என்று, தங்கள் சுயபலத்தில் சபதம்பண்ணுகிறார்கள். தேவனுடைய தீர்மானம் இவர்களுடைய வாழ்வில் நிறைவேறுவதற்கு வாய்ப்பு இல்லாதவாறு, இவர்கள் தங்களை சாத்தானுக்குப் பூரணமாக ஒப்புக் கொடுத்துவிடுகிறார்கள்.

பாவம் செய்கிறவர்கள் மெய்யாய் மனந்திரும்பினால், கர்த்தர் அவர்களை மன்னிப்பார். கர்த்தர் கிருபையுள்ளவர். மன்னிப்பதில் இரக்கம் மிகுந்தவர். ஆனால் இவர்களோ துணிகரமாய்ப் பாவம் செய்கிறார்கள். மனந்திரும்பவேண்டும் என்னும் எண்ணம் இவர்களிடத்தில் சிறிதுமில்லை. தங்களுடைய துன்மார்க்கமான சிந்தனையை நிறைவேற்றும் வரையிலும் புசிப்பதுமில்லை, குடிப்பது மில்லையென்று, சபதமிட்டு, தங்கள் துன்மார்க்கத்தில் உறுதியாயிருக்கிறார்கள். பிசாசின் கிரியைகளைச் செய்கிறவர்கள் பிசாசின் பேச்சுக்களைப் பேசுகிறார்கள். பிசாசு இவர்களை ஆளுகை செய்யும் போது, இவர்களிடத்தில் இப்படிப்பட்ட பேச்சுக்கள்தான் புறப்பட்டு வரும்.

கொலைசெய்ய ஆயத்தமாயிருப்போம்

அவர்கள் பிரதான ஆசாரியர்களிடத்திலும் மூப்பர்களிடத்திலும் போய்: நாங்கள் பவுலைக் கொலை செய்யுமளவும் ஒன்றும் புசிப்பதில்லையென்று உறுதியான சபதம் பண்ணிக் கொண்டோம். ஆனபடியினால் நீங்கள் ஆலோசனைச் சங்கத்தாரோடே கூடப்போய், அவனுடைய காரியத்தை அதிக திட்டமாய் விசாரிக்க மனதுள்ளவர்கள் போலச் சேனாபதிக்குக் காண்பித்து, அவர் நாளைக்கு அவனை உங்களிடத்தில் கூட்டிக்கொண்டு வரும்படி அவரிடத்தில் கேட்பீர்களாக. அவன் கிட்டவருகிறதற்குள்ளே நாங்கள் அவனைக் கொலை செய்ய ஆயத்தமாயிருப்போம் என்றார்கள் (அப் 23:14,15).

பவுலைக் கொலை செய்ய வேண்டுமென்று கொலைவெறியோடு இருக்கிற யூதர்களினால் கோட்டைக்குள் பிரவேசிக்க முடியவில்லை. கோட்டை மிகுந்த பாதுகாப் போடிருக்கிறது. பவுல் இந்தப் பாதுகாப்புக்குள் காக்கப் பட்டிருக்கிறான். தங்களால் கோட்டைக்குள் போகமுடியாது என்பது இவர்களுக்குத் தெரியும். ஆகையினால் பவுலைக் கோட்டைக்கு வெளியே அழைத்து வருவதற்கு சதிபண்ணுகிறார்கள்.

கட்டுப்பாடு பண்ணிக்கொண்ட யூதர்கள் பிரதான ஆசாரியர்களிடத்திலும், மூப்பர்களிடத்திலும் போகிறார்கள். பவுலைக் கொலை செய்யுமளவும் தாங்கள் ஒன்றும் புசிப்பதில்லையென்று உறுதியான சபதம் பண்ணிக் கொண்டதை அவர்களிடத்தில் சொல்லுகிறார்கள். தங்களுடைய சபதம் நிறைவேற உதவிபுரியவேண்டுமென்று, அவர்களிடத்தில் கேட்டுக்கொள்கிறார்கள்.

பிரதான ஆசாரியர்களும், மூப்பர்களும், ஆலோசனைச் சங்கத்தாரோடே கூடப்போய் சேனாபதியைச் சந்திக்கவேண்டும். பவுலின் காரியத்தை அதிகத் திட்டமாய் விசாரிப்பதற்கு மனதுள்ளவர்கள்போல அவர்கள் தங்களை சேனாபதிக்குக் காண்பிக்கவேண்டும். நாளைக்கு ஆலோசனைச்சங்கத்தைக் கூட்டி, அந்த ஆலோசனைச்சங்கத்திற்கு சேனாபதி பவுலைக் கூட்டிக்கொண்டு வரும்படி அவனிடத்தில் கேட்கவேண்டும் என்று, பிரதான ஆசாரியரிடத்திலும் மூப்பரிடத்திலும் சொல்லுகிறார்கள். பவுலைக் கொன்றுபோடுவதன் மூலமாக இந்தப் பிரச்சனைக்கு ஒரு முடிவு பண்ணலாம் என்று ஆலோசனை சொல்லுகிறார்கள்.

ஆலோசனைச் சங்கத்திலுள்ள பிரதான ஆசாரியர்களிடத்திலும், மூப்பர்களிடத்திலும் இவர்கள் தங்கள் சதிஆலோசனையை வெளிப்படுத்துகிறார்கள். தங்கள் சதிஆலோசனைக்கு அவர்களும் ஒத்துப்போவார்கள் என்னும் நம்பிக்கை இவர்களுக்கு இருக்கிறது. ஒரு தவறும் செய்யாத ஒரு மனுஷனை கொலை செய்யப்போகிறோமே என்னும் குற்றவுணர்வு இவர்களிடத்தில் சிறிதும் காணப்படவில்லை. பவுலைக் கொலை செய்யுமளவும் ஒன்றும் புசிப்பதில்லை என்று தாங்கள் உறுதியான சபதம் பண்ணிக் கொண்டதற்காக வெட்கப்படவுமில்லை. பாவத்தை துணிகரமாகச் செய்ய தீர்மானித்திருக்கிறார்கள்.

அடுத்த வேளை போஜனம்பண்ணும் போது, அதில் பவுலின் இரத்தத்தைக் கலந்து புசிக்கவேண்டுமென்று கொலை வெறியோடிருக்கிறார்கள். பிரதான ஆசாரியர்கள் தங்களுடைய சதி ஆலோசனைக்கு உதவிசெய்வார்கள் என்னும் நிச்சயத்தோடிருக்கிறார்கள். ஆலோசனைச் சங்கத்திலுள்ள பிரதான ஆசாரியர்களையும், மூப்பர்களையும், தங்களுடைய சதிஆலோசனையை நிறைவேற்றுவதற்கு ஒரு கருவியாகப் பயன்படுத்துகிறார்கள்.

சேனாபதியிடம் பிரதான ஆசாரியர்களும் மூப்பர்களும் போனால், அவன் இவர்களுடைய விண்ணப்பத்திற்கு செவிகொடுப்பான் என்று எதிர் பார்க்கிறார்கள். நேற்றைய தினத்தில் ஆலோசனைச் சங்கத்தார் பவுலை முழுவதுமாக விசாரிக்கமுடியவில்லை. பரிசேயருக்கும் சதுசேயருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டு, மிகுந்த கலகமுண்டாயிற்று. இப்போது கலகம் அமர்ந்திருக்கிறது. பவுலுடைய காரியத்தைத் தாங்கள் அதிகத் திட்டமாய் விசாரிப்பதற்கு மனதுள்ளவர்களாக இருக்கிறோம் என்று இவர்கள் சேனாபதியிடம் சொன்னால், அவன் அதை நம்புவான் என்று எதிர்பார்க்கிறார்கள்.

ஆசாரியர்கள் ஜனத்திற்கு நன்மை செய்யவேண்டியவர்கள். ஜனத்தாரின் ஜீவனை பாதுகாப்பதற்கு ஏதுவான காரியத்தைச் செய்ய வேண்டியவர்கள். ஆனால் இங்கோ பிரதான ஆசாரியர்களும் மூப்பர்களும், பவுலின் ஜீவனை எடுப்பதற்கு துன்மார்க்கரோடு ஒத்துப்போகிறார்கள். தங்களிடத்தில் துர்ஆலோசனையைச் சொல்லுகிறவர்களை இவர்கள் கண்டித்து உணர்த்தவேண்டும். அவர்களைத் திருத்த வேண்டும். ஆனால் இவர்களோ துன்மார்க்கருடைய ஆலோசனையில் பிரியப்படுகிறார்கள். அவர்களுடைய சதிஆலோசனையில் பங்கு பெறுவதற்கு உடன்படுகிறார்கள். தாங்கள் விரோதிக்கிற பவுல் செத்துப்போனால் கவலையில்லை என்று இவர்களும் பவுலைக் கொலை செய்ய உடந்தையாகயிருக்கிறார்கள்.

சேனாபதியின் கட்டளை
அப் 23 : 16-22

அப் 23:16. இந்தச் சர்ப்பனையைப் பவுலினுடைய சகோதரியின் குமாரன் கேள்விப்பட்டு, கோட்டைக்குள்ளே போய், பவுலுக்கு அறிவித்தான்.

அப் 23:17. அப்பொழுது பவுல் நூற்றுக்கு அதிபதிகளில் ஒருவனை அழைத்து, இந்த வாலிபனைச் சேனாபதியினிடத்திற்குக் கூட்டிக்கொண்டுபோம்; அவரிடத்தில் இவன் அறிவிக்கவேண்டிய ஒரு காரியம் உண்டு என்றான்.

அப் 23:18. அந்தப்படியே, அவன் இவனைச் சேனாபதியினிடத்திற்குக் கூட்டிக் கொண்டுபோய்: காவலில் வைக்கப்பட்டிருக்கிற பவுல் என்னை அழைத்து, உமக்கொரு காரியத்தைச் சொல்லவேண்டுமென்றிருக்கிற இந்த வாலிபனை உம்மிடத்திற்குக் கொண்டு போகும்படி என்னைக் கேட்டுக் கொண்டான் என்றான்.

அப் 23:19. அப்பொழுது சேனாபதி அவனுடைய கையைப் பிடித்துத் தனியே அழைத்துக் கொண்டுபோய்: நீ என்னிடத்தில் அறிவிக்க வேண்டிய காரியம் என்னவென்று கேட்டான்.

அப் 23:20. அதற்கு அவன்: யூதர்கள் பவுலின் காரியத்தை அதிக திட்டமாய் விசாரிக்க மனதுள்ளவர்கள்போல, நீர் நாளைக்கு அவனை ஆலோசனைச் சங்கத்தாரிடத்தில் கொண்டுவரும்படி உம்மை வேண்டிக் கொள்ள உடன்பட்டிருக்கிறார்கள்.

அப் 23:21. நீர் அவர்களுக்குச் சம்மதிக்க வேண்டாம்; அவர்களில் நாற்பதுபேருக்கு அதிகமானவர்கள் அவனைக் கொலை செய்யுமளவும் தாங்கள் புசிப்பதுமில்லை குடிப்பது மில்லையென்று சபதம் பண்ணிக் கொண்டு, அவனுக்குப் பதிவிருந்து, உம்முடைய உத்தரவுக்காக இப்பொழுது காத்துக் கொண்டு ஆயத்தமாயிருக்கிறார்கள் என்றான்.

அப் 23:22. அப்பொழுது சேனாபதி: நீ இவைகளை எனக்கு அறிவித்ததாக ஒருவருக்குஞ் சொல்லாதே என்று கட்டளையிட்டு, வாலிபனை அனுப்பிவிட்டான்.

பவுலினுடைய சகோதரியின் குமாரன்

இந்தச் சர்ப்பனையைப் பவுலினுடைய சகோதரியின் குமாரன் கேள்விப்பட்டு, கோட்டைக்குள்ளே போய், பவுலுக்கு அறிவித்தான் (அப் 23:16).

யூதரில் சிலர் ஒருமித்து, தாங்கள் பவுலைக் கொலை செய்யுமளவும் புசிப்பதுமில்லை, குடிப்பதுமில்லை என்று சபதம் பண்ணிக்கொள்கிறார்கள். அவர்கள் பிரதான ஆசாரியர்களிடத்திலும், மூப்பர்களிடத்திலும் போய் தங்களுடைய சதிஆலோசனையைச் சொல்லி, பவுலுடைய காரியத்தை அதிகத் திட்டமாய் விசாரிக்க மனதுள்ளவர்கள் போல சேனாபதிக்கு காண்பிக்குமாறு சொல்லுகிறார்கள். சேனாபதி பவுலை உங்களிடத்தில் கூட்டிக் கொண்டு வருகிறபோது அவனைக் கொலை செய்ய தாங்கள் ஆயத்தமாயிருப்போம் என்று அறிவிக்கிறார்கள். இந்தச் சர்ப்பனையை பவுலினுடைய சகோதரியின் குமாரன் கேள்விப்படுகிறான்.

யூதருடைய சதிஆலோசனை கண்டு பிடிக்கப்படுகிறது. சத்துருக்கள் இருட்டில் சதிஆலோசனை பண்ணினாலும், கர்த்தர் தம்முடைய தெய்வீக சித்தத்தினால் அதை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்து, அதை ஒன்றுமில்லாமல் அவமாக்கிப் போடுகிறார். பவுலினுடைய சகோதரியின் குமாரன் இந்தச் சதிஆலோசனையைக் கேள்விப் படுகிறான். சத்துருவின் மறைவான காரியங்களை வெளிச்சத்திற்குக் கொண்டு வருவதற்கு, கர்த்தர் பல உபாயங்களைப் பயன்படுத்துகிறார். இங்கு பவுலின் உறவினர் ஒருவரைப் பயன்படுத்தி, சத்துருக்களின் சர்ப்பனையை அம்பலப்படுத்துகிறார். கர்த்தருக்கு மறைவான காரியம் ஒன்றுமில்லை.

நூற்றுக்கு அதிபதிகளில் ஒருவன்

அப்பொழுது பவுல் நூற்றுக்கு அதிபதிகளில் ஒருவனை அழைத்து, இந்த வாலிபனைச் சேனா பதியினிடத்திற்குக் கூட்டிக் கொண்டுபோம்; அவரிடத்தில் இவன் அறிவிக்க வேண்டிய ஒரு காரியம் உண்டு என்றான். அந்தப்படியே, அவன் இவனைச் சேனா பதியினிடத்திற்குக் கூட்டிக் கொண்டு போய்: காவலில் வைக்கப்பட்டிருக்கிற பவுல் என்னை அழைத்து, உமக்கொரு காரியத்தைச் சொல்ல வேண்டு மென்றிருக்கிற இந்த வாலிபனை உம்மிடத்திற்குக் கொண்டுபோகும்படி என்னைக் கேட்டுக் கொண்டான் என்றான் (அப் 23:17,18).

பவுல் கோட்டைக்குள் காவலில் வைக்கப்பட்டிருக்கிறான். யூதரில் சிலர் பவுலைக் கொல்லுவதற்கு சர்ப்பனை பண்ணுகிறார்கள் என்னும் செய்தி அவனுடைய சகோதரியின் குமாரன் மூலமாக அவனுக்குத் தெரியவருகிறது. உடனே பவுல் நூற்றுக்கு அதிபதிகளில் ஒருவனை அழைத்து தனக்கு உதவிபுரியுமாறு கேட்டுக்கொள்கிறான். பவுல் காவலிலிருந்தாலும், அவனைக் காவல் காக்கிறவர்கள் அவனுக்கு உதவிபுரிய முன்வருகிறார்கள். பவுல் தன்னுடைய அமைதியான நற்குணத்தினால் தன்னைக் காவல்காக்கிறவர்களின் அன்பைப் பெற்றுக் கொள்கிறான். ஆகையினால் நூற்றுக்கு அதிபதிகளில் ஒருவனை அழைத்து, தனக்கு உதவிபுரியுமாறு பவுலினால் கேட்கமுடிகிறது. அந்த நூற்றுக்கு அதிபதியும் அவனுக்கு உதவிபுரிய சம்மதம் தெரிவிக்கிறான்.

பவுல் நூற்றுக்கு அதிபதிகளில் ஒருவனை அழைத்து, தன்னுடைய சகோதரியின் குமாரனை சேனாபதியிடம் கூட்டிக் கொண்டு போகுமாறு சொல்லுகிறான். அவரிடத்தில் இவன் அறிவிக்கவேண்டிய காரியம் ஒன்று உள்ளது என்றும் சொல்லுகிறான். பவுலின் வேண்டுகோளுக்கு நூற்றுக்கு அதிபதி உடனடியாக சம்மதம் தெரிவிக்கிறான். அந்தப்படியே நூற்றுக்கு அதிபதி, பவுலுடைய சகோதரியின் குமாரனை சேனாபதியினிடத்திற்கு கூட்டிக்கொண்டு போகிறான்.

நூற்றுக்கு அதிபதி அந்த வாலிபனை சேனாபதியிடம் கூட்டிக் கொண்டு போகும்போது, அந்த வாலிபன் தான் சொல்லவேண்டிய காரியத்தை சேனாபதியிடம் சொல்லுவதற்கு முன்பாகவே, நூற்றுக்கு அதிபதி சேனாபதியிடம் பவுலுக்கு உதவிபுரியும் விதத்தில் பேசுகிறான். "காவலில் வைக்கப்பட்டிருக்கிற பவுல் என்னை அழைத்து, உமக்கு ஒரு காரியத்தைச் சொல்லவேண்டும் என்றிருக்கிற இந்த வாலிபனை உம்மிடத்திற்குக் கொண்டு போகும்படி என்னைக் கேட்டுக் கொண்டான்" என்று சொல்லுகிறான்.

காவலில் அடைக்கப்பட்டிருக்கிற வர்களுக்கு இந்த நூற்றுக்கு அதிபதியைப் போல உதவி செய்கிறவர்களும் இருக்கிறார்கள். இயேசு கிறிஸ்து தம்மைப்பற்றி சொல்லும்போது, "நான் காவலிலிருந்தேன் என்னை விசாரிக்க வந்தீர்கள், நான் வியாதியாயிருந்தேன், என்னைப் பார்க்க வந்தீர்கள்" என்று சொல்லுகிறார். வியாதியாக இருக்கிறவர்களையும், காவலிலிருக்கிறவர்களையும், நமக்கு வாய்ப்பு கிடைக்குமென்றால், அவர்களைப் பார்த்து விசாரிக்க வேண்டும். அவர்களுக்கு ஆறுதல் சொல்லவேண்டும். நம்மால் முடிந்த உதவிகளை அவர்களுக்குச் செய்யவேண்டும்.

ஒரு சிலருக்கு சிறைச் சாலைக்குள்ளே போவதற்கு செல்வாக்கு இருக்கும். அப்படிப்பட்டவர்கள் தங்களுடைய அதிகார செல்வாக்கை கர்த்தருடைய நாமமகிமைக்காகவும், சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறவர்களின் பிரயோஜனத்திற்காகவும் பயன்படுத்த முன்வரவேண்டும். துயரப்படுகிறவர்களுக்கு ஆறுதல் சொல்லவேண்டும்.

நூற்றுக்கு அதிபதி பவுலுக்கு சிறிய உதவியைத்தான் செய்திருக்கிறான். பவுல் கேட்டுக்கொண்ட பிரகாரம், அவனுடைய சகோதரியின் மகனை, சேனாபதியிடம் அழைத்துக் கொண்டு போகிறான். இதுதான் அவன் செய்த உதவி. ஆனாலும் இந்தச் சிறிய உதவியே பவுலின் ஜீவனை சத்துருக்களின் கையிலிருந்து பாதுகாக்க உதவிபுரிகிறது. கர்த்தருடைய ஊழியக்காரர்கள் சிறைச் சாலையிலிருக்கும் போது, நம்மால் அவர்களுக்கு வெகுமதிகளைக் கொடுக்க முடியாமல் போனாலும், அவர்களைக் குறித்து நல்ல வார்த்தைகளைப் பேசவேண்டும். கர்த்தருக்காக ஊழியம் செய்கிறவர்கள் பாடுகளை அனுபவிக்கும் போது, நாம் அவர்களைக் குறித்து கவலையற்றவர்களாக இருக்கக்கூடாது.

சேனாபதி

அப்பொழுது சேனாபதி அவனுடைய கையைப் பிடித்துத் தனியே அழைத்துக் கொண்டுபோய்: நீ என்னிடத்தில் அறிவிக்கவேண்டிய காரியம் என்னவென்று கேட்டான். அதற்கு அவன்: யூதர்கள் பவுலின் காரியத்தை அதிக திட்டமாய் விசாரிக்க மனதுள்ளவர்கள்போல, நீர் நாளைக்கு அவனை ஆலோசனைச் சங்கத்தாரிடத்தில் கொண்டு வரும்படி உம்மை வேண்டிக் கொள்ள உடன்பட்டிருக்கிறார்கள். நீர் அவர்களுக்குச் சம்மதிக்க வேண்டாம்; அவர்களில் நாற்பது பேருக்கு அதிகமானவர்கள் அவனைக் கொலை செய்யுமளவும் தாங்கள் புசிப்பது மில்லை குடிப்பதுமில்லையென்று சபதம்பண்ணிக்கொண்டு, அவனுக்குப் பதிவிருந்து, உம்முடைய உத்தரவுக்காக இப்பொழுது காத்துக் கொண்டு ஆயத்தமாயிருக்கிறார்கள் என்றான். அப்பொழுது சேனாபதி: நீ இவைகளை எனக்கு அறிவித்ததாக ஒருவருக்குஞ் சொல்லாதே என்று கட்டளையிட்டு, வாலிபனை அனுப்பிவிட்டான் (அப் 23:19-22).

பவுலின் காரியத்தை சேனாபதி செவிகொடுத்துக் கேட்கிறான். அவனுடைய உள்ளம் பவுலுக்கு உதவிசெய்ய விரும்புகிறது. பவுலுடைய சகோதரியின் குமாரன், தன்னிடத்தில் சொல்ல விரும்புவதை செவிகொடுத்து கேட்க சேனாபதி ஆர்வமாயிருக்கிறான். சேனாபதி அவனுடைய கையைப் பிடித்து, தனியே அழைத்துக்கொண்டுபோய், "நீ என்னிடத்தில் அறிவிக்க வேண்டிய காரியம் என்ன" என்று கேட்கிறான். அந்த வாலிபனை உற்சாகப்படுத்துகிறான். தன்னிடத்தில் பேச வந்ததற்காக சேனாபதி அவனை தண்டிக்கப் போவதில்லை. அவனுக்கு உதவிசெய்ய விரும்புவதை சேனாபதி தன் வார்த்தையினாலும், செய்கையினாலும் அறிவிக்கிறான்.

உயர்ந்த அதிகாரத்தில் இருப்பவர்களை சாதாரண மனுஷரால் எழுதில் பார்க்க முடியாது. பல கட்டுப்பாடுகளைத் தாண்டித்தான் அவர்கள் அருகில் போகமுடியும். ஆனால் இந்தச் சேனாபதியோ உயர்பதவி வகித்தாலும், மிகவும் எளிமையாகப் பழகுகிறான். இவனிடத்தில் யாரும் எளிதாகப் போகமுடிகிறது. பேசமுடிகிறது. ரோமப்பேரரசின் முக்கிய பதவி வகிக்கிற சேனாபதி, பவுலினுடைய சகோதரியின் குமாரனை தனியே அழைத்துக்கொண்டு போய் விசாரிப்பது அவனுடைய நற்குணத்தைக் காண்பிக்கிறது.

பவுல் காவலில் வைக்கப்பட்டிருக்கிறான். சேனாபதி அவனைக் காவலில் வைத்திருக்கிறான். இதனால் சேனாபதியை பவுலின் சத்துரு என்று சொல்லமுடியாது. அவனுடைய பிரச்சனையை செவிகொடுத்துக் கேட்பதற்கு ஆயத்தமாயிருக்கிறான். அவன் சேனாபதியாக இருப்பதினால் அவனால் நன்மைசெய்ய முடியாது என்று நாம் தீர்மானம் செய்யக்கூடாது. சமுதாயத்தில் நாம் தாழ்ந்த நிலைமையிலிருப்பதினால் நமக்கு யாரும் உதவி செய்யமாட்டார்கள் என்றும் தீர்மானம் செய்யக்கூடாது. கர்த்தருடைய கிருபை இருக்குமென்றால், எல்லோருக்கும் எல்லா உதவிகளும் கிடைக்கும். எல்லோரும் எல்லா உதவிகளையும் செய்வார்கள்.

சேனாபதி வாலிபனுடைய கையைப் பிடித்து தனியே அழைத்துக்கொண்டு போய், "நீ என்னிடத்தில் அறிவிக்க வேண்டிய காரியம் என்ன" என்று கேட்டபோது, அந்த வாலிபன் சேனாபதியிடம் "யூதர்கள் பவுலின் காரியத்தை திட்டமாய் விசாரிக்க மனதுள்ளவர்கள்போல, நீர் நாளைக்கு அவனை ஆலோசனைச்சங்கத்தாரிடத்தில் கொண்டுவரும்படி உம்மை வேண்டிக் கொள்ள உடன்பட்டிருக்கிறார்கள்" என்று யூதருடைய சர்ப்பனையை சேனாபதிக்கு அறிவிக்கிறான்.

இந்த வாலிபன் சேனாபதியிடம் யூதருடைய சர்ப்பனையை அறிவிக்கும் போது, "நீர் அவர்களுக்கு சம்மதிக்க வேண்டாம்" என்று தன்னுடைய ஆலோசனையையும் சொல்லுகிறான். சாதாரண வாலிபன், உயர்பதவி வகிக்கும் சேனாபதிக்கு ஆலோசனை சொல்லுகிறான். இதைச் சொல்லும்போது, அந்த வாலிபன், தான் இவ்வாறு சொல்லுவதற்கான காரணத்தையும் சேனாபதிக்கு அறிவிக்கிறான். "அவர்களில் நாற்பது பேருக்கு அதிகமானவர்கள் அவனைக் கொலை செய்யுமளவும் தாங்கள் புசிப்பதுமில்லை குடிப்பதுமில்லையென்று சபதம்பண்ணிக் கொண்டு, அவனுக்குப் பதிவிருந்து, உம்முடைய உத்தரவுக்காக இப்பொழுது காத்துக் கொண்டு ஆயத்த மாயிருக்கிறார்கள்" என்று யூதருடைய சர்ப்பனையை சேனாபதிக்கு அறிவிக்கிறான்.

சேனாபதி வாலிபன் சொன்னதை கவனமாகக் கேட்டு, "நீ இவைகளை எனக்கு அறிவித்ததாக ஒருவருக்கும் சொல்லாதே" என்று அவனுக்குக் கட்டளையிட்டு அவனை அனுப்பி விடுகிறான். இரகசியத்தைக் காத்துக் கொள்ளாதவன் எந்த வேலைக்கும் உதவமாட்டான். இந்த வாலிபனோ, சேனாபதியின் கட்டளைபடி, தான் இவைகளை சேனாபதிக்கு அறிவித்ததாக ஒருவருக்கும் சொல்லவில்லை.

செசரியாவுக்குப் பிரயாணம்
அப் 23 : 23-35

அப் 23:23. பின்பு அவன் நூற்றுக்கு அதிபதிகளில் இரண்டு பேரை அழைத்து, செசரியாபட்டணத்திற்குப் போகும்படி இருநூறு காலாட்களையும், எழுபது குதிரை வீரரையும், இருநூறு ஈட்டிக்காரரையும், இராத்திரியில் மூன்றாம் மணி வேளையிலே, ஆயத்தம்பண்ணுங்களென்றும்;

அப் 23:24. பவுலை ஏற்றி, தேசாதிபதியாகிய பேலிக்ஸினிடத்திற்குப் பத்திரமாய்க் கொண்டு போகும் படிக்குக் குதிரைகளை ஆயத்தப் படுத்துங்களென்றும் சொன்னதுமன்றி,

அப் 23:25. ஒரு நிருபத்தையும் எழுதினான்; அதின் விவரமாவது:

அப் 23:26. கனம்பொருந்திய தேசாதிபதியாகிய பேலிக்ஸ் என்பவருக்குக் கிலவுதியுலீசியா வாழ்த்துதல் சொல்லி அறிவிக்கிறது என்னவென்றால்:

அப் 23:27. இந்த மனுஷனை யூதர் பிடித்துக் கொலைசெய்யப்போகிற சமயத்தில், நான் போர்ச்சேவகரோடே கூடப்போய், இவன் ரோமனென்று அறிந்து, இவனை விடுவித்தேன்.

அப் 23:28. அவர்கள் இவன்மேல் சாட்டின குற்றத்தை நான் அறிய வேண்டுமென்று இவனை அவர்கள் ஆலோசனைச் சங்கத்துக்குமுன் கொண்டுபோனேன்.

அப் 23:29. இவன் அவர்களுடைய வேதத்திற்கடுத்த விஷயங்களைக் குறித்துக் குற்றஞ் சாட்டப் பட்டவனென்று விளங்கினதே யல்லாமல், மரணத்துக்காவது விலங்குக்காவது ஏற்ற குற்றம் யாதொன்றும் இவனிடத்தில் இல்லையென்று கண்டறிந்தேன்.

அப் 23:30. யூதர்கள் இவனுக்கு விரோதமாய்ச் சர்ப்பனையான யோசனை செய்கிறார்களென்று எனக்குத் தெரியவந்தபோது, உடனே இவனை உம்மிடத்திற்கு அனுப்பினேன்; குற்றஞ்சாட்டுகிறவர்களும் இவனுக்கு விரோதமாய்ச் சொல்லுகிற காரியங்களை உமக்கு முன்பாக வந்து சொல்லும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டேன். சுகமாயிருப்பீராக, என்றெழுதினான்.

அப் 23:31. போர்ச்சேவகர் தங்களுக்குக் கட்டளையிட்ட படியே, பவுலைக் கூட்டிக் கொண்டு, இராத்திரியிலே அந்திப்பத்திரி ஊருக்குப் போய்,

அப் 23:32. மறுநாளில் குதிரைவீரரை அவனுடனே கூடப் போகும்படி அனுப்பிவிட்டு, தாங்கள் கோட்டைக்குத் திரும்பினார்கள்.

அப் 23:33. அவர்கள் செசரியாபட்டணத்தில் சேர்ந்து, நிருபத்தைத் தேசாதிபதியினிடத்தில் கொடுத்து, பவுலையும் அவன் முன்பாக நிறுத்தினார்கள்.

அப் 23:34. தேசாதிபதி அதை வாசித்து: எந்த நாட்டானென்று கேட்டு, சிலிசியா நாட்டானென்று அறிந்த போது:

அப் 23:35. உன்மேல் குற்றஞ் சாட்டுகிறவர்களும் வந்திருக்கும்போது உன் காரியத்தைத் திட்டமாய்க் கேட்பேனென்று சொல்லி, ஏரோதின் அரமனையிலே அவனைக் காவல் பண்ணும்படி கட்டளையிட்டான்.

நூற்றுக்கு அதிபதிகளில் இரண்டுபேர்

பின்பு அவன் நூற்றுக்கு அதிபதிகளில் இரண்டு பேரை அழைத்து, செசரியாபட்டணத்திற்குப் போகும்படி இருநூறு காலாட்களையும், எழுபது குதிரை வீரரையும், இருநூறு ஈட்டிக்காரரையும், இராத்திரியில் மூன்றாம் மணி வேளையிலே, ஆயத்தம்பண்ணுங்களென்றும்; பவுலை ஏற்றி, தேசாதிபதியாகிய பேலிக்ஸினிடத்திற்குப் பத்திரமாய்க் கொண்டுபோகும்படிக்குக் குதிரைகளை ஆயத்தப்படுத்துங்களென்றும் சொன்னதுமன்றி, (அப் 23:23,24)

பவுலுக்கு விரோதமான சர்ப்பனையை சேனாபதி முறியடிக்கிறான். பவுலைக் கொலைசெய்யுமளவும் யூதர்களில் சிலர் புசிப்பதுமில்லை, குடிப்பதுமில்லை என்று சபதம் பண்ணியிருப்பது, சேனாபதியை சிந்திக்கத் தூண்டுகிறது. பவுலை விரைவில் கொலை செய்து விடவேண்டுமென்று சத்துருக்கள் சதிபண்ணுகிறார்கள். சேனாபதியோ பவுலை கோட்டையிலிருந்து விரைவில் வெளியேற்றி அழைத்துச் சென்று, அவனுடைய ஜீவனைப் பாதுக்க வேண்டுமென்று திட்டமிடுகிறான். யூதர்களுடைய கைகளில் பவுல் சிக்கிவிடாதவாறு அவனைத் தப்புவிப்பதற்கு சேனாபதி விரைந்து செயல்படுகிறான்.

ஒருவேளை யூதருடைய சர்ப்பனை சேனாபதிக்கு பயமாக இருந்திருக்கலாம். எப்படியாவது யூதர்கள் பவுலைக் கொன்று போடுவார்களென்று அவன் சந்தேகப்பட்டிருக்கலாம். பவுலைக் கோட்டையில் காவலில் வைத்திருந்தாலும் அவனுடைய ஜீவனுக்கு இங்கு பாதுகாப்பு இல்லை என்பதை சேனாபதி அறிந்திருக்கிறான். யூதரிடமிருந்து பாதுகாப்பதற்குத்தான் சேனாபதி பவுலைக் கோட்டைக்குள் கூட்டிவந்தான். ஆனால் இங்கும் பவுலுக்கு பாதுகாப்பு இல்லை என்பது தெரியவரும்போது, சேனாபதி ஒரு மாற்று உபாயத்தை யோசிக்கிறான்.

பவுலைக் காப்பாற்றுவதில் சேனாபதி அக்கறை காண்கிறான். ஆலோசனைச் சங்கத்திலுள்ள பிரதான ஆசாரியர்களும் மூப்பர்களும் பவுலைக் கொலைசெய்வதற்கு உடந்தையாகயிருப்பது சேனாபதிக்கு மிகுந்த ஆச்சரியமாக இருந்திருக்கும். ஆலோசனைச்சங்கத்தார் ஜனங்களுடைய பாதுகாப்புக்காகவும், நன்மைகளுக்காகவும் கூடிவந்து ஆலோசனை சொல்லக் கூடியவர்கள். ஆனால் இப்போதோ அவர்களில் சிலர் பவுலைக் கொலை செய்வதற்காக ஒருமனப்படுகிறார்கள்.

ஆலோசனைச் சங்கத்திலுள்ள பிரதான ஆசாரியர்கள் பவுலைக் கொலை செய்வதற்கு சர்ப்பனையான ஆலோசனை பண்ணுகிறார்கள். அவர்களுடைய சதி ஆலோசனையை முறியடிப்பதற்கு, கர்த்தர் ரோமப் பேரரசிலுள்ள சேனாபதியைப் பயன்படுத்துகிறார். சேனாபதிக்கு பவுல்மீது மதிப்போ அல்லது மரியாதையோ இல்லை. சேனாபதி சுவிசேஷத்தை ஏற்றுக் கொண்டு இரட்சிக்கப்படவுமில்லை. ஆனாலும் அவனிடத்தில் மனிதாபிமானமும், மனிதநேயமும், இரக்க குணமுமிருக்கிறது. ஆலோசனைச் சங்கத்திலுள்ள பிரதான ஆசாரியர் களிடத்தில் இந்த நற்குணங்கள் அதிகமாகயிருக்க வேண்டும். ஆனால் அவர்களிடத்திலோ நற்குணங்களுக்குப் பதிலாக துர்க்குணங்கள் அதிகமா யிருக்கிறது. கர்த்தர் தம்முடைய ஊழியக் காரனை சத்துருக்களின் கைகளிலிருந்து விடுவிப்பதற்கு, ரோமப் பேரரசில் பணிபுரியும் சேனாபதியைப் பயன்படுத்துகிறார்.

பவுலை செசரியா பட்டணத்திலுள்ள தேசாதிபதியாகிய பேலிக்ஸிடம் அனுப்பிவிட வேண்டுமென்று சேனாபதி திட்டமிடுகிறான். பவுல் செசரியா பட்டணத்திற்கு பாதுகாப்பாகப் போய் விட்டால், அங்கு அவனைக் கொலை செய்ய எத்தனித்திருக்கிற யூதர்களினால், அவ்வளவு எளிதாக பவுலை நெருங்க முடியாது என்று சேனாபதி தீர்மானம் பண்ணுகிறான். தன்னுடைய யோசனையின் பிரகாரமாக பவுலை தேசாதிபதியாகிய பேலிக்ஸிடத்திற்கு பத்திரமாகக் கொண்டுபோகும்படி ஆவன செய்கிறான்.

சேனாபதிக்கு பவுலைக் குறித்து நல்ல அபிப்பிராயம் இருக்கிறது. மரணத்திற்காவது விலங்குக்காவது ஏற்ற குற்றம் யாதொன்றையும் சேனாபதி பவுலிடத்தில் காணவில்லை (அப் 23:29).

பவுல் மரித்துப்போவதைவிட அவன் ஜீவனோடிருப்பதே நியாயமானது என்று சேனாபதி நினைக்கிறான். பவுலைத் தன்னோடு கோட்டையில் வைத்திருந்தால், அவன்மீது யூதருடைய கோபம் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கிறான். ஆகையினால் பவுலை பாதுகாப்பாக செசரியா பட்டணத்திற்கு அனுப்பிவிட தீர்மானம்பண்ணுகிறான்.

பவுலை செசரியா பட்டணத்திற்கு அழைத்துப் போகும் பொறுப்பை நூற்றுக்கு அதிபதிகளில் இரண்டு பேரிடம் ஒப்படைக்கிறான். இருநூறு காலாட்களையும், எழுபது குதிரை வீரரையும், இருநூறு ஈட்டிக்காரரையும், இராத்திரியில் மூன்றாம் மணி வேளையில் ஆயத்தம்பண்ணுமாறு சேனாபதி இரண்டு நூற்றுக்கு அதிபதிகளுக்கும் கட்டளை கொடுக்கிறான். கர்த்தருடைய ஊழியக் காரருக்கு இவ்வளவு பெரிய பாதுகாப்பு கொடுக்கப்படுகிறது.

சேனாபதி மிகவும் ஞானமாக செயல்பட்டு பவுலைப் பாதுகாக்கிறான். பவுலுக்கு விரோதமாக கட்டுபாடு பண்ணிக் கொண்டவர்கள் நாற்பது பேருக்கு அதிகமாயிருக்கிறார்கள். இவர்களோடு சேர்ந்து இன்னும் ஏராளமானோர் பவுலுக்குச் சத்துருக்களாக இருக்கிறார்கள். ஆலோசனைச் சங்கத்திலுள்ள பிரதான ஆசாரியர்களும், மூப்பர்களும் பவுலை சர்ப்பனையாக கொலை பண்ணுகிற விஷயத்தில் அவர்களுக்கு உடந்தையாக யிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் பவுலை சாதாரணமாகக் காவல்காத்தால் போதாது என்று சேனாபதி புரிந்துகொள்கிறான். பவுலுக்கு அதிகமான பாதுகாப்பை கொடுத்து, அவனை பத்திரமாக செசரியா பட்டணத்திற்கு கூட்டிக்கொண்டுபோக கட்டளையிடுகிறான்.

தனக்குக் கொடுக்கப்படுகிற பாதுகாப்பைப் பார்த்து பவுல் உற்சாகமடைந்திருப்பான். கர்த்தரைத் துதித்திருப்பான். இவ்வளவு பெரிய பாதுகாப்புக்கு தான் பாத்திரவானே அல்ல என்பது பவுலுக்குத் தெரியும். தேவனே தன்னுடைய பாதுகாப்பு என்று அவரையே சார்ந்திருக்கிறான். கர்த்தர் தான் மெய்யாகவே பவுலைப் பாதுகாக்கிறார். இப்போது பவுலைப் பாதுகாப்பதற்கு அவர் சேனாபதியையும், அவனுடைய போர்ச்சேவகரையும் பயன்படுத்துகிறார். கர்த்தருடைய மிகப்பெரிய ஊழியக்காரன், இப்போது மிகப்பெரிய கைதியைப்போல நடத்தப்படுகிறான். "இதனால் அரமனை எங்குமுள்ளவர்களுக்கும், மற்ற யாவருக்கும் பவுலின் கட்டுக்கள் கிறிஸ்துவுக்குள்ளான கட்டுகளென்று வெளியரங்கமாயிற்று" (பிலி 1:13).

பவுலின் சத்துருக்கள் அவனை விரோதிக்கிறார்கள். அவனுடைய சிநேகிதர்கள்கூட அவனுக்கு உதவிபுரிய முடியாமல் ஒதுங்கியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில், ரோமப் பேரரசின் சேனாபதி அவனைக் கவனமாகப் பாதுகாக்கிறான்.

ஆலோசனைச் சங்கத்தார் பவுலுக்கு விரோதமாகத் தீர்ப்பு செய்து, அவனை எருசலேமிலிருந்து துரத்திவிட வேண்டுமென்று முடிவு செய்திருந்தால், பவுல் கால்நடையாகவே ஓடவேண்டியது இருந்திருக்கும். அவனை செசரியாவுக்கு அனுப்ப வேண்டுமென்று ஆலோசனைச் சங்கத்தார் தீர்மானம் செய்திருந்தால், ஒரு வண்டியில் கட்டி அவனை இழுத்துக் கொண்டு போயிருப்பார்கள்.

கர்த்தருடைய அநுக்கிரகம் பவுலின் மீது இருப்பதினால், சேனாபதி பவுலை ராஜமரியாதையோடு, அதிக பாதுகாப்போடு செசரியா பட்டணத்திற்கு அனுப்பி வைக்கிறான். எழுபது குதிரை வீரர்களும், இருநூறு காலாட்களும், இருநூறு ஈட்டிக்காரரும் பவுலோடுகூட அவனுடைய பாதுகாப்புக்கு செசரியா பட்டணத்திற்குப் புறப்பட்டுப்போகிறார்கள்.

சேனாபதி நூற்றுக்கு அதிபதிக்கு கட்டளை கொடுக்கும் போது, "பவுலை ஏற்றி தேசாதிபதியாகிய பேலிக்ஸினிடத்திற்கு பத்திரமாகக் கொண்டு போகும்படி குதிரைகளை ஆயத்தப்படுத்துங்கள்" என்று சொல்லுகிறான். யூதருடைய எல்லா காரியங்களுக்கும் தேசாதிபதியாகிய பேலிக்ஸே தலைமை நியாயாதிபதியாக அதிகாரப் பொறுப்பிலிருக்கிறான். யூதேயா தேசம் முழுவதற்கும் தேசாதிபதியாகிய பேலிக்ஸே இராணுவதற்கும் தளபதி. ரோமப்பேரரசின் வரலாற்றை எழுதியிருக்கிற ஆசிரியர்கள் இவனைப்பற்றி மிகவும் மோசமாகவே எழுதியிருக்கிறார்கள். இவன் துர்க்குணமுள்ளவன் என்றும், சதிசெய்து யூதேயா தேசத்திற்கு தேசாதிபதியானான் என்றும் இவனைப்பற்றிக் குறிப்புள்ளது. இப்படிப்பட்ட துன்மார்க்கனுடைய நியாயசனத்திற்கு முன்பாக, நியாயம் விசாரிக்கப்படுவதற்கு, பவுல் அழைத்து வரப்படுகிறான். இவன் துன்மார்க்கனாக யிருந்தாலும் பிரதான ஆசாரியனாகிய அனனியா இவனைவிட கொடூரமான துன்மார்க்கனாகயிருக்கிறான்.

சேனாபதி பவுலை இராத்திரியில் மூன்றாம் மணி வேளையில் செசரியா பட்டணத்திற்கு அழைத்துக் கொண்டு போகுமாறு கட்டளை கொடுக்கிறான். விடிவதற்கு முன்பாகவே புறப்பட்டுப் போகிறார்கள். பவுலின் பிரயாணம் மிகவும் இரகசியமாக இருக்கிறது. பவுலைக் கொலைசெய்யவேண்டுமென்று சர்ப்பனையான யோசனை செய்த யூதர்கள் யாவருக்கும் இந்தப் பிரயாணத்தைப்பற்றி ஒன்றுமே தெரியாது. ஆகையினால் பவுலின் ஜீவனுக்கு இராத்திரி வேளையில் அச்சுறுத்தல் குறைந்திருக்கிறது. மேலும் இராத்திரி வேளையில் பிரயாணம் செய்வதினால், வெய்யிலின் உஷ்ண பாதிப்பு இல்லாமல், குளிர்ச்சியான வேளையில் பிரயாணம் பண்ணுகிற வாய்ப்பு அவர்களுக்கு உண்டாயிற்று.

நிருபம்

ஒரு நிருபத்தையும் எழுதினான்; அதின் விவரமாவது: கனம்பொருந்திய தேசாதிபதியாகிய பேலிக்ஸ் என்பவருக்குக் கிலவுதியுலீசியா வாழ்த்துதல் சொல்லி அறிவிக்கிறது என்னவென்றால்: இந்த மனுஷனை யூதர் பிடித்துக் கொலைசெய்யப் போகிற சமயத்தில், நான் போர்ச்சேவகரோடே கூடப்போய், இவன் ரோமனென்று அறிந்து, இவனை விடுவித்தேன். அவர்கள் இவன்மேல் சாட்டின குற்றத்தை நான் அறிய வேண்டுமென்று இவனை அவர்கள் ஆலோசனைச் சங்கத்துக்குமுன் கொண்டு போனேன். இவன் அவர்களுடைய வேதத்திற்கடுத்த விஷயங்களைக் குறித்துக் குற்றஞ் சாட்டப்பட்டவனென்று விளங்கினதே யல்லாமல், மரணத்துக்காவது விலங்குக்காவது ஏற்ற குற்றம் யாதொன்றும் இவனிடத்தில் இல்லையென்று கண்டறிந்தேன். யூதர்கள் இவனுக்கு விரோதமாய்ச் சர்ப்பனையான யோசனை செய்கிறார்களென்று எனக்குத் தெரியவந்தபோது, உடனே இவனை உம்மிடத்திற்கு அனுப்பினேன்; குற்றஞ்சாட்டுகிறவர்களும் இவனுக்கு விரோதமாய்ச் சொல்லுகிற காரியங்களை உமக்கு முன்பாக வந்து சொல்லும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டேன். சுகமாயிருப்பீராக, என்றெழுதினான் (அப் 23:25-30).

சேனாபதி தேசாதிபதியாகிய பேலிக்ஸிற்கு ஒரு நிருபம் எழுதுகிறான். இதன் பின்புபவுலை விசாரிக்கிற பொறுப்பு முழுவதும் தேசாதிபதியாகிய பேலிக்ஸிடம் கடந்து வருகிறது. இந்த அதிகாரத்தில் சேனாபதி எழுதிய நிருபம் ஓர் இணைப்பாக இணைக்கப்பட்டிருக்கிறது. சேனாபதி தன் கடிதத்தை எழுதும்போது, முதலாவது தேசாதிபதிக்கு முறைப்படி வாழ்த்துதல் சொல்லி எழுதுகிறான். பேலிக்ஸை "கனம்பொருந்திய தேசாதிபதி" என்று குறிப்பிடுகிறான். தன்னைவிட உயர்பதவியில் இருக்கிறவர்களுக்கு எப்படிப்பட்ட மரியாதையைக் கொடுக்க வேண்டுமோ, அந்த மரியாதையைக் கொடுக்க சேனாபதி தவறவில்லை.

சேனாபதி தன்னுடைய நிருபத்தில் பவுலைப்பற்றியும், அவனுடைய வழக்கு விசாரணையைப் பற்றியும் மிகவும் தெளிவாக எழுதுகிறான். நியாயமாகவும் குறிப்பிடுகிறான். யூதர்கள் பவுலைப் பிடித்து கொலைசெய்யப் போனார்கள். அந்த சமயத்தில் சேனாபதி போர்ச்சேவகரோடே கூடப்போய், பவுல் ரோமன் என்று அறிந்து, அவனைத் தான் விடுவித்த சம்பவத்தை, சேனாபதி தேசாதிபதியாகிய பேலிக்ஸிற்கு தன் நிருபத்தில் குறிப்பிட்டு எழுதுகிறான். திரளான ஜனங்கள் பவுலைக் கொலை செய்யப்போனதினால், அவன் மிகப்பெரிய கொடூரமான குற்றவாளியாக இருப்பான் என்று தேசாதிபதி நினைத்துவிடக்கூடாது என்பதிலும் சேனாபதி மிகுந்த கவனத்தோடு நிருபத்தை எழுதுகிறான்.

பவுலை ஒரு ரோமன் என்று குறிப்பிடுகிறான். பவுலை ரோமன் என்று அறிந்து சேனாபதி அவனை விடுவித்ததையும் எழுதுகிறான். ரோமப் பேரரசின் குடியுரிமை பெற்றிருக்கிற ஒருவனைப் பற்றிய வழக்கை, ரோமப் பேரரசின் தேசாதிபதிக்கு எழுதுகிறான்.

பவுலின் வழக்கு விசாரணையை தான் புரிந்துகொள்ளவில்லை என்பதையும் சேனாபதி ஒளிவு மறைவில்லாமல் குறிப்பிடுகிறான். யூதர்கள் பவுலின்மேல் சாட்டின குற்றத்தை, சேனாபதி அறியவேண்டுமென்று, அவனை அவர்கள் ஆலோசனைச் சங்கத்திற்கு முன் கொண்டுபோனான். பவுல் யூதருடைய வேதத்திற்கடுத்த விஷயங்களைக் குறித்து குற்றம் சாட்டப்பட்டவன் என்பது மாத்திரமே சேனாபதிக்கு விளங்கிற்று. மரித்தோருடைய உயிர்த்தெழுதல் பற்றிய நம்பிக்கை குறித்து பவுல் நியாயம் விசாரிக்கப்படுகிறதை சேனாபதி அறிந்து கொள்கிறான் (அப் 23:6).

ரோமப்பேரரசார் பல தேசங்களின் மீது யுத்தம் செய்து அந்தத் தேசங்களை தங்களுடைய ஆளுகைக்குட் படுத்தினார்கள். தங்களுடைய ஆளுகைக்குட்பட்ட பின்பும், அந்தத் தேசத்தாருடைய மார்க்க விஷயங்களில் ரோமர்கள் தலையிடுவதில்லை. அவரவர்கள் தங்கள் தங்கள் மார்க்கத்தின் பிரகாரமாக ஜீவிப்பதற்கு அவர்களுக்கு ரோமர்கள் அனுமதி கொடுத்திருக்கிறார்கள். தங்களுடைய நம்பிக்கையையோ, மார்க்க பழக்க வழக்கங்களையோ ரோமர்கள் எந்தத் தேசத்தாரின்மீதும் திணிப்பதில்லை. அதே சமயத்தில் மார்க்கத்தின் பெயரால் ஜனங்களுக்குள் கலகம் உண்டாவதையும் ரோமர்கள் அனுமதிப்பதில்லை.

ரோமப்பேரரசு முழுவதிலும் அமைதி நிலவவேண்டும் என்பதில் இராயன் மிகவும் தீர்மானமாக இருக்கிறான். மார்க்கத்தின் பெயரால் யாரும் யாரையும் துன்புறுத்தக் கூடாது. பவுலின்மீது கூறப்பட்டிருக்கிற குற்றச்சாட்டு மார்க்க சம்பந்தமானது என்பதை சேனாபதி அறிந்துகொள்கிறான். மேலும் மரணத்திற்காவது, விலங்குக்காவது ஏற்ற குற்றம் யாதொன்றும் பவுலிடத்தில் இல்லையென்று சேனாபதி கண்டறிகிறான்.

யூதர்கள் பவுலுக்கு விரோதமாய் சர்ப்பனையான யோசனை செய்கிறார்கள் என்று சேனாபதிக்கு தெரிய வந்திருக்கிறது. பவுலைக் கொலை செய்வதற்காக அவர்கள் சதிபண்ணி காத்திருக்கிறார்கள். சேனாபதிக்கு இந்த விஷயம் தெரியவந்தபோது, அவன் உடனே பவுலை பேலிக்ஸிடத்திற்கு அனுப்பி வைத்திருக்கிறான். பவுலுக்கு விரோதமாய் குற்றம் சொல்லுகிறவர்கள், தாங்கள் சொல்லுகிற காரியங்களை பேலிக்ஸிற்கு முன்பாக வந்து சொல்லும் படிசேனாபதி ஆலோசனைச்சங்கத்தாருக்கு கட்டளை கொடுத்திருக்கிறான்.

சேனாபதி தேசாதிபதியாகிய பேலிக்ஸிற்கு பவுலின் வழக்கைக் குறித்த காரியத்தை, தன் நிருபத்தில் இவ்வாறு விளக்கமாக எழுதிய பின்பு, முடிவில் "சுகமாயிருப்பீராக" என்று எழுதுகிறான்.

தேசாதிபதியாகிய பேலிக்ஸ்

போர்ச்சேவகர் தங்களுக்குக் கட்டளையிட்டபடியே, பவுலைக் கூட்டிக்கொண்டு, இராத்திரியிலே அந்திப்பத்திரி ஊருக்குப் போய், மறுநாளில் குதிரைவீரரை அவனுடனே கூடப் போகும்படி அனுப்பி விட்டு, தாங்கள் கோட்டைக்குத் திரும்பினார்கள். அவர்கள் செசரியா பட்டணத்தில் சேர்ந்து, நிருபத்தைத் தேசாதிபதியினிடத்தில் கொடுத்து, பவுலையும் அவன் முன்பாக நிறுத்தினார்கள். தேசாதிபதி அதை வாசித்து: எந்த நாட்டானென்று கேட்டு, சிலிசியா நாட்டானென்று அறிந்த போது: உன்மேல் குற்றஞ் சாட்டுகிறவர்களும் வந்திருக்கும்போது உன் காரியத்தைத் திட்டமாய்க் கேட்பேனென்று சொல்லி, ஏரோதின் அரமனையிலே அவனைக் காவல் பண்ணும்படி கட்டளையிட்டான் (அப் 23:31-35).

சேனாபதியின் கட்டளைப் பிரகாரம் போர்ச்சேவகர் பவுலை இராத்திரியிலே மூன்றாம் மணி வேளையில் எருசலேமிலிருந்து செசரியா பட்டணத்திற்குக் கூட்டிக் கொண்டு போகிறார்கள். பவுலை கொலை செய்யுமளவும் ஒன்றும் புசிப்பதில்லை யென்று உறுதியான சபதம் பண்ணிக்கொண்டவர்கள், குடித்தார்களா, அல்லது புசித்தார்களா என்பது தெரியவில்லை. தாங்கள் செய்த தப்பிதங்களுக்கு இவர்கள் மனந்திரும்ப வேண்டும். தங்களுடைய சபதத்திலும் துன்மார்க்கத்திலும் இவர்கள் உறுதியாக இருந்தால், இவர்கள் புசியாமலும் குடியாமலும் பட்டினியாகக் கிடந்து சாவதைத்தவிர வேறு வழியில்லை. மறுநாளிலே பவுலைக் கொல்லவேண்டும் என்கிற இவர்களுடைய சர்ப்பனையான ஆலோசனை நிறைவேறாமல் போயிற்று.

போர்ச்சேவகர்கள் தங்களுக்குக் கட்டளையிட்டபடியே பவுலைக் கூட்டிக் கொண்டு இராத்திரியிலே அந்திப்பத்திரி ஊருக்குப் போகிறார்கள். எருசலேமுக்கும் செசரியாவுக்கும் இடையே இந்த ஊர் பாதி தூரத்திலிருக்கிறது. இருநூறு காலாட்களும் இருநூறு ஈட்டிக்காரரும், பவுலையும் எழுபது குதிரைவீரரையும், அங்கே விட்டுவிட்டு, எருசலேமுக்குத் திரும்பி வருகிறார்கள். அந்திப்பத்திரி ஊருக்குப்போன பின்பு பவுலுக்கு அதிக பாதுகாப்பு தேவையில்லை என்று தீர்மானம் செய்கிறார்கள். குதிரைவீரர்கள் பவுலைப் பாதுகாப்பாக செசரியாவுக்கு அழைத்துச் செல்லுவார்கள் என்று தீர்மானித்து, அவர்களை விட்டுவிட்டு மற்றவர்கள் எருசலேமுக்குத் திரும்பிப் போகிறார்கள். குதிரைவீரர்கள் மாத்திரம் பவுலோடு போகும்போது, அவர்கள் குதிரை ஓடுகிற வேகத்தில், அவற்றின்மீது ஏறி, செசரியாவுக்கு விரைந்து சென்றடைய முடியும்.

குதிரைவீரர்கள் எழுபதுபேரும் பவுலைக் கூட்டிக்கொண்டு செசரியா பட்டணத்தில் சேருகிறார்கள். குதிரை வீரர்களுக்கு பொறுப்பாக இருக்கிற அதிகாரிகள் சேனாபதியின் நிருபத்தை தேசாதிபதியிடத்தில் கொடுத்து, பவுலையும் அவன் முன்பாக நிறுத்துகிறார்கள். பெரிய அதிகாரத்திலுள்ளவர்களைப் பார்க்கும் போது பவுல் ஒருபோதும் பயந்து நடுங்கியதில்லை. பவுலுக்கு வாழ்ந் திருக்கவும் தெரியும். தாழ்ந்திருக்கவும் தெரியும். எல்லோரோடும் பேசிப் பழக்கக்கூடியவன். சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்தில் இருக்கிறவர்களைப் பார்க்கும் போதும், பெரிய அதிகாரிகளைப் பார்க்கும் போதும், இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அவர்களுக்கும் அறிவிக்கக் கூடிய சிலாக்கியம் தனக்குக் கிடைத்திருப்பதாக நினைத்து பவுல் சந்தோஷப்படுகிறான்.

தேசாதிபதி சேனாபதியின் நிருபத்தை வாசித்து, பவுல் எந்த நாட்டானென்று கேட்கிறான். அவன் சிலிசியா நாட்டானென்று அறிந்து கொள்கிறான். பவுலின் காரியத்தை திட்டமாய்க் கேட்பேனென்று உறுதி பண்ணுகிறான். பவுலின்மேல் குற்ற சாட்டியிருக்கிறவர்கள் வந்திருக்கும்போது, பவுலின் காரியத்தை விரைந்து விசாரிக்கப்படும் என்று வாக்கு பண்ணுகிறான். பவுலை ஏரோதின் அரமனையிலேயே காவல்பண்ணும்படி கட்டளையிடுகிறான்.

24 அதிகாரம்

பவுலை செசரியாவுக்கு கைதியாக அழைத்து வருகிறார்கள். தேசாபதியாகிய பேலிக்ஸிற்கு முன்பாக பவுலை விசாரிக்கிறார்கள். தெர்த்துல்லு என்னும் ஒரு நியாய சாதுரியன், யூதருடைய சார்பாக, பவுலுக்கு விரோதமாக தேசாதிபதியினிடத்தில் பிராது பண்ணுகிறான் (அப் 24:1-9). தன்மீது சொல்லப்படுகிற குற்றச்சாட்டை பவுல் மறுக்கிறான் (அப் 24:10-13). பவுல் தேசாபதியிடம் மரித்தோர் உயிர்த் தெழுந்திருப்பது பற்றிய தன்னுடைய விசுவாசத்தை எடுத்துச் சொல்லுகிறான் (அப் 24:14-16). எருசலேமில் தனக்கு நேரிட்ட சம்பவங்களைப் பவுல் விவரமாகச் சொல்லுகிறான் (அப் 24:17-21). சேனாபதியாகிய பேலிக்ஸ் பவுலின் வழக்கு விசாரணையைத் தள்ளி வைக்கிறான் (அப் 24:22,23). பவுலும் பேலிக்ஸும் தனியாகப் பேசிக்கொள்கிறார்கள் (அப் 24:24-26). அடுத்த தேசாதிபதி வரும் வரையிலும், பவுல் இரண்டு வருஷம் காவலில் வைக்கப்படுகிறான் (அப் 24:27).

பவுலுக்கு விரோதமாய் யூதரின் பிராது
அப் 24 : 1-9

அப் 24:1. ஐந்துநாளைக்குப்பின்பு பிரதான ஆசாரியனாகிய அனனியா மூப்பர்களோடும் தெர்த்துல்லு என்னும் ஒரு நியாய சாதுரியனோடுங்கூடப் போனான், அவர்கள் பவுலுக்கு விரோதமாய்த் தேசாதிபதியினிடத்தில் பிராதுபண்ணினார்கள்.

அப் 24:2. அவன் அழைக்கப்பட்ட போது, தெர்த்துல்லு குற்றஞ்சாட்டத் தொடங்கி:

அப் 24:3. கனம்பொருந்திய பேலிக்ஸே, உம்மாலே நாங்கள் மிகுந்த சமாதான சவுக்கியத்தை அநுபவிக்கிறதையும், உம்முடைய பராமரிப்பினாலே இந்த தேசத்தாருக்குச் சிறந்த நன்மைகள் நடக்கிறதையும் நாங்கள் எப்பொழுதும் எங்கும் மிகுந்த நன்றியறிதலுடனே அங்கிகாரம்பண்ணுகிறோம்.

அப் 24:4. உம்மை நான் அநேக வார்த்தைகளினாலே அலட்டாதபடிக்கு, நாங்கள் சுருக்கமாய்ச் சொல்வதை நீர் பொறுமையாய்க் கேட்கவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

அப் 24:5. என்னவென்றால், இந்த மனுஷன் கொள்ளை நோயாகவும், பூச்சக்கரத்திலுள்ள சகல யூதர்களுக்குள்ளும் கலகம் எழுப்புகிறவனாகவும் நசரேயருடைய மதபேதத்துக்கு முதலாளியாகவும் இருக்கிறானென்று கண்டறிந்தோம்.

அப் 24:6. இவன் தேவாலயத்தையும் தீட்டுப்படுத்தப் பார்த்தான். நாங்கள் இவனைப் பிடித்து எங்கள் வேதப்பிரமாணத்தின் படியே நியாயத் தீர்க்க மனதாயிருந்தோம்.

அப் 24:7. அப்பொழுது சேனாபதியாகிய லீசியா வந்து, மிகுந்த பலாத்காரமாய் இவனை எங்கள் கைகளிலிருந்து பறித்துக் கொண்டுபோய்,

அப் 24:8. இவன்மேல் குற்றஞ் சாட்டுகிறவர்கள் உம்மிடத்தில் வரும்படி கட்டளையிட்டார். இவனிடத்தில் நீர் விசாரித்தால் நாங்கள் இவன்மேல் சாட்டுகிற குற்றங்கள் யாவையும் அறிந்து கொள்ளலாம் என்றான்.

அப் 24:9. யூதர்களும் அதற்கு இசைந்து, இவைகள் யதார்த்தந்தான் என்றார்கள்.

தெர்த்துல்லு

ஐந்துநாளைக்குப்பின்பு பிரதான ஆசாரியனாகிய அனனியா மூப்பர்களோடும் தெர்த்துல்லு என்னும் ஒரு நியாய சாதுரியனோடும்கூடப் போனான், அவர்கள் பவுலுக்கு விரோதமாய்த் தேசாதிபதியினிடத்தில் பிராதுபண்ணினார்கள். அவன் அழைக்கப்பட்டபோது, தெர்த்துல்லு குற்றஞ்சாட்டத்தொடங்கி: (அப் 24:1,2)

சேனாபதியாகிய லீசியா பவுலைப் பாதுகாப்பாக எருசலேமிலிருந்து செசரியாவுக்கு அனுப்பியிருக்கிறான். அவன்மீது குற்றம் சாட்டுகிறவர்களும், பவுலுக்கு விரோதமாய்ச் சொல்லுகிற காரியங்களை தேசாதிபதியாகிய பேலிக்ஸிற்கு முன்பாக வந்து சொல்லுமாறு அவர்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறான். யூதர்கள் பவுலின்மீது குற்றம் சுமத்துவதற்காக செசரியாவுக்கு வருகிறார்கள். தேசாதிபதியிடம் தாங்களே நேரடியாகப் பேசுவதற்குப் பதிலாக தெர்த்துல்லு என்னும் நியாய சாதுரியனை தங்களோடு கூட்டிக்கொண்டு போகிறார்கள்.

பவுலின் வழக்கு விசாரணை ஐந்து நாளைக்குப் பின்பு ஆரம்பமாயிற்று. பவுல் தொழுதுகொள்ளும்படியாக எருசலேமுக்குப் போனது முதல் இதுவரையிலும் பன்னிரண்டு நாட்கள் ஆயிற்று (அப் 24:11). பவுல் ஏழுநாட்கள் தேவாலயத்தில் தன்னை சுத்திகரித்தான். யூதருடைய ஆலோசனைச்சங்கத்தில், நியாயதிபதியாக நியாயாசனத்தில் உட்கார்ந்து தீர்ப்பு சொல்லவேண்டிய பிரதான ஆசாரியனாகிய அனனியா, இப்போது பவுலுக்கு விரோதமாய் பிராது சொல்லுவதற்காக வந்திருக்கிறான். பிரதான ஆசாரியன் என்னும் பட்டம் மிகவும் கண்ணியமுள்ளது. ஜனங்கள் மத்தியில் மரியாதை மிகுந்தது. பிரதான ஆசாரியனாகிய அனனியா தன் பதவியையும், பட்டத்தையும், மரியாதையையும், கண்ணியத்தையும் பற்றிக் கவலைப்படாமல், தேசாதிபதியாகிய பேலிக்ஸிற்கு முன்பாக பவுலுக்கு விரோதமாக பிராது பண்ணுவதற்காக வந்திருக்கிறான். பவுலின்மீது அனனியாவுக்கு அதிக கோபம் இருக்கிறது.

பிரதான ஆசாரியனாக இருக்கிறவன் கர்த்தருடைய கற்பனையின் பிரகாரம் ஜீவிக்கவேண்டும். எல்லோரையும் நேசிக்கவேண்டும். ஆனால் இவனோ பவுலுக்கு சத்துருவாகயிருக்கிறான். யூதமார்க்கத்திலுள்ள ஒருவனுக்கு விரோதமாக தான் சத்துருவாகயிருப்பதைப் பற்றி அனனியா வெட்கப்படவில்லை. அனனியா தனியாக வராமல் தன்னோடு மூப்பர்களையும் அழைத்து வந்திருக்கிறான். பவுலுக்கு விரோதமாக தாங்கள் ஒரு கூட்டமாக கூடிவந்திருப்பதை தேசாதிபதியாகிய பேலிக்ஸிற்கு காண்பிக்கிறான்.

துன்மார்க்கர் தங்களுடைய துன்மார்க்கமான காரியங்களை அதிகமாய்த் திட்டமிட்டு, சோம்பலில்லாமல் சுறுசுறுப்பாக நிறைவேற்ற பிரயத்தனப் படுகிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் நன்மையான காரியங்களை பிரசங்கிக்கிறோம். கர்த்தருக்குப் பிரியமான காரியங்களைச் செய்கிறோம். தேவனுடைய ஊழியக் காரர்களாகிய நாம் நம்முடைய ஊழியங்களில் சோர்ந்து போய்விடக் கூடாது. சுறுசுறுப்பாகவும், உற்சாகமாகவும், கர்த்தருக்கு ஊழியம் செய்யவேண்டும். அநீதிக்கு ஊழியம் செய்கிறவர்கள் சபிக்கப்பட்டவர்கள். நீதிக்கு ஊழியம் செய்கிறவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்.

ஆலோசனைச்சங்கத்தார் பவுலுக்கு விரோதமாக தேசாதிபதியினிடத்தில் பிராது பண்ணுவதற்காக வந்திருக்கிறார்கள். தங்களோடுகூட தெர்த்துல்லு என்னும் ஒரு நியாய சாதுரியனை அழைத்து வந்திருக்கிறார்கள். இவன் ஒரு ரோமன். ரோமப்பேரரசின் தேசாதிபதிக்கு முன்பாக, ஒரு ரோமன் தங்களுடைய காரியங்களை எடுத்துச் சொன்னால் அது நன்றாயிருக்குமென்று ஆலோசனைச் சங்கத்தார் தீர்மானித்திருக்கிறார்கள். தெர்த்துல்லு ஒரு ரோமனாகயிருப்பதினால், ரோமப்பேரரசின் தேசாதிபதியாகிய பேலிக்ஸ், இந்த வழக்கில் தங்களுக்கு சாதகமாகத் தீர்ப்பு சொல்லுவான் என்று எதிர்பார்க்கிறார்கள்.

பிரதான ஆசாரியரும் மூப்பரும் சாதுரியமாகப் பேசக் கூடியவர்கள். உரத்தசத்தமிட்டு கூக்குரலிடக் கூடியவர்கள். ஆனாலும் இவர்களுக்கு தங்களுடைய வார்த்தையில் நம்பிக்கையில்லை. தங்களுடைய உரத்த சத்தமும் கூக்குரலும் தேசாதிபதிக்கு முன்பாக எடுபடாது என்று நினைக்கிறார்கள். அதற்காக, தங்கள் சார்பாக பேச, தெர்த்துல்லு என்னும் நியாய சாதுரியனை தங்களோடு அழைத்து வந்திருக்கிறார்கள்.

பவுல் ஏரோதின் அரமனையிலே காவல்பண்ணப்பட்டிருக்கிறான். பிரதான ஆசாரியரும் மூப்பரும் பவுலுக்கு விரோதமாக தேசாதிபதியினிடத்தில் பிராது பண்ணியபோது, தேசாதிபதி பவுலை தனக்கு முன்பாக அழைத்து வருமாறு கட்டளையிட்டிருக்கிறான். பவுல் அழைக்கப்பட்டபோது தெர்த்துல்லு அவன்மீது குற்றம் சாட்டதொடங்குகிறான். பவுல்மீது குற்றம் சுமத்தியிருக்கிற யூதருடைய ஆலோசனைச்சங்கத்தாருக்கு ஆதரவாக தெர்த்துல்லு பேசுகிறான்.

பவுலின்மீது கூறப்பட்டிருக்கிற குற்றச் சாட்டுக்களை தெர்த்துல்லு தேசாதிபதியிடம் சொல்லத் தொடங்குகிறான். தெர்த்துல்லு மிகுந்த ஞானத்துடனும், சாதுரியமான வார்த்தையுடனும் பேசக் கூடியவன். அவனுடைய வார்த்தையில் உண்மையில்லை. ஆனால் அவனுடைய வார்த்தைகள் ஜோடிக்கப்பட்டதாக இருக்கிறது. தெர்த்துல்லு தீமையை நன்மையென்று சொல்லுகிறான். நன்மையை தீமையென்று சொல்லுகிறான்.

தெர்த்துல்லு தேசாதிபதியாகிய பேலிக்ஸிடம், பவுலைப்பற்றி குற்றம் சாட்ட தொடங்கியபோது, பேலிக்ஸை மிகவும் அதிகமாகப் புகழ்ந்து பேசுகிறான். வரலாற்று ஆசிரியர்கள் பேலிக்ஸைப்பற்றிக் குறிப்பிடும்போது, அவன் மிகவும் மோசமானவன் என்றே அவனைப்பற்றி எழுதியிருக்கிறார்கள். மிகவும் மோசமான பேலிக்ஸை, தெர்த்துல்லு இங்கு புகழ்ந்து பேசுகிறான். பேலிக்ஸ் நியாயாசனத்தில் உட்கார்ந்திருப்பதினால், அவனுடைய தயவை அடைவதற்கு, தெர்த்துல்லு அவனைப் புகழுகிறான். பேலிக்ஸிடம் எல்லாவிதமான துன்மார்க்க குணங்களும் உண்டு. ஜனங்களை கொடூரமாக ஆளுகை செய்கிறவன். பேராசை பிடித்தவன். யூதருடைய வரலாற்று ஆசிரியராகிய யோசபஸ் என்பவரும் பேலிக்ஸிப் பற்றி இப்படித்தான் எழுதியிருக்கிறார். ஆனாலும் தெர்த்துல்லு பேலிக்ஸைப் புகழுகிறான்.

பிரதான ஆசாரியர், மூப்பர் ஆகியோரின் சார்பாக தெர்த்துல்லு பேலிக்ஸை அதிகமாய்ப் புகழுகிறான். அவனைப்போல நல்ல நியாயாதிபதி இந்த உலகத்தில் வேறு எங்கும் இல்லை என்று சொல்லுமளவுக்கு அவனைப் புகழுகிறான். பேலிக்ஸ் நல்ல வார்த்தைகளினால் புகழப்பட்டாலும், அவனிடத்தில் எந்த நற்குணமும் காணப்படவில்லை. பவுலுக்கு விரோதமாக தங்கள் குற்றச்சாட்டை பெரிதுபடுத்திக் கூறுவதற்காக, நியாயா சனத்தில் உட்கார்ந்திருக்கிற பேலிக்ஸை பெரிதுபடுத்திப் புகழுகிறார்கள். தங்கள் தேசத்திற்கும், யூதமார்க்கத்திற்கும், தேவாலயத்திற்கும், ஜெபஆலயங்களுக்கும் பேலிக்ஸ் மிகுந்த ஆசீர்வாதமாக யிருக்கிறான் என்று அவனைப்பற்றி தெர்த்துல்லு புகழ்ந்து பேசுகிறான்.

சமாதான சவுக்கியம்

கனம்பொருந்திய பேலிக்ஸே, உம்மாலே நாங்கள் மிகுந்த சமாதான சவுக்கியத்தை அநுபவிக்கிறதையும், உம்முடைய பராமரிப்பினாலே இந்த தேசத்தாருக்குச் சிறந்த நன்மைகள் நடக்கிறதையும் நாங்கள் எப்பொழுதும் எங்கும் மிகுந்த நன்றியறிதலுடனே அங்கிகாரம்பண்ணுகிறோம் (அப் 24:3).

பேலிக்ஸின் ஆட்சியில் தாங்கள் மிகுந்த சாமாதான சவுக்கியத்தை அனுபவிக்கிறதாக யூதர்கள் தேசாதிபதியிடம் சாட்சியாகச் சொல்லுகிறார்கள். பேலிக்ஸின் பராமரிப்பினாலே, யூததேசத்தாருக்கு சிறந்த நன்மைகள் நடக்கிறது என்றும் தேசாதிபதியிடம் சொல்லுகிறார்கள். இதற்காக யூதர்கள் தேசாதிபதிக்கு, எப்பொழுதும் எங்கும் மிகுந்த நன்றியறிதலுடனே அங்கீகாரம் பண்ணுவதாகவும் தெரிவிக்கிறார்கள். யூதா தேசத்தில் ஒரு பெரிய கலகமுண்டாயிற்று. எகிப்தியன் ஒருவன் அந்தக் கலகத்திற்கு தலைமை தாங்கினான் (அப் 21:38). தேசாதிபதியாகிய பேலிக்ஸ் அந்தக் கலகத்தை அடக்கி, தேசத்தில் சமாதான சவுக்கியத்தை ஏற்படுத்தியதாக யூதர்கள் அறிக்கை செய்கிறார்கள்.

யூதர்கள் தேசாதிபதியை அளவுக்கு அதிகமாகப் புகழுகிறார்கள். தேசாதிபதி நற்குணமுள்ளவனாக இருந்தால், புகழ்ச்சியான இந்த வார்த்தைகளை அங்கீகரிக்கமாட்டான்.அவனோ அநியாயக் காரனாக இருக்கிறான். அநியாயக் காரனை யூதர்கள் நல்லவனென்று புகழ்ந்து பேசுகிறார்கள். அவனிடத்தில் ஏராளமான குறைகள் உள்ளது என்பது யூதருக்குத் தெரியும். ஆனால் அந்தக் குறைகளையெல்லாம் அவனுக்கு முன்பாக யூதர்களால் சொல்லமுடியாது.

யூதர்கள் தங்கள் சிந்தனையிலும், வார்த்தையிலும் பாவம் செய்கிறார்கள். தீயவனை நல்லவனென்று சொல்லி பொய் சொல்லுகிறார்கள். தங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தி, மெய்யைப் பேசாமல், பொய்யைப் பேசுகிறார்கள். யூதர்கள் பேலிக்ஸை புகழ்ந்து பேசி, அவன் தங்கள் சார்பாக தீர்ப்பு சொல்லவேண்டுமென்று அவனை வசப்படுத்துகிறார்கள்.

தேசாதிபதியாகிய பேலிக்ஸின் பராமரிப்பினாலே, யூதா தேசத்தாருக்கு சிறந்த நன்மைகள் நடக்கிறதை யூதர்கள் அங்கீகாரம்பண்ணுகிறார்கள். இந்த நன்மைகள் எப்பொழுதும் எங்கும் நடப்பதாகவும் சொல்லுகிறார்கள். தாங்கள் அங்கீகாரம் பண்ணுவதை மிகுந்த நன்றியறிதலுடனே அங்கீகாரம் பண்ணுவதாக அறிக்கை செய்கிறார்கள். யூதர்கள் பேலிக்ஸை புகழ்ந்து பேசுகிற வார்த்தைகள், அவனுடைய குணாதிசயத்தைப் பிரதிபலிக்கிற மெய்யான வார்த்தைகளாக இருக்கு மென்றால், அவன் நிச்சயமாகவே இந்தப் புகழ்ச்சியின் வார்த்தைகளுக்கு பாத்திரவானகவே இருப்பான். ஆனால் பேலிக்ஸோ இவர்கள் புகழ்ந்து பேசுகிற வார்த்தையின்படி நல்லவனல்ல.

உயர்ந்த பதவியில் இருக்கிறவர்கள் தேவனுக்கு நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும். மனுஷர்மீது அன்பு செலுத்த வேண்டும். மிகுந்த ஞானத்தோடும், நேர்மையோடும் ஆட்சிபுரியவேண்டும். ஆனால் பேலிக்ஸிடத்தில் நீதியோ, நியாயமோ, நேர்மையோ, மனுஷஅன்போ எதுவுமேயில்லை. தாங்கள் விரும்புகிற காரியம் நிறைவேற வேண்டு மென்பதற்காக, யூதர்கள் பேலிக்ஸை முகஸ்துதி செய்கிறார்கள். தாங்கள் பேலிக்ஸைப்பற்றி பேசுகிற வார்த்தைகள் பொய்யானது என்பது யூதர்களுக்குத் தெரியும். தெரிந்தும் தங்கள் ஆசை நிறைவேற வேண்டுமென்பதற்காக இந்தத் தப்பிதத்தைச் செய்கிறார்கள்.

பிரார்த்திக்கிறேன்

உம்மை நான் அநேக வார்த்தைகளினாலே அலட்டாதபடிக்கு, நாங்கள் சுருக்கமாய்ச் சொல்வதை நீர் பொறுமையாய்க் கேட்கவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன் (அப் 24:4).

தெர்த்துல்லு யூதருடைய வழக்கை தேசாதிபதியிடம் மிகவும் ஞானமாகவும், சாதுரியமாகவும் சமர்ப்பிக்கிறான். தெர்த்துல்லு அநேக வார்த்தைகளினால் தேசாதிபதியை அலட்டவில்லை. மிகவும் சுருக்கமாய்ச் சொல்லுகிறான். தாங்கள் சுருக்கமாய்ச் சொல்லுவதை, தேசாதிபதி பொறுமையாய்க் கேட்கவேண்டுமென்று பிரார்த்திக்கிறான்.

தேசாதிபதியினிடத்தில் சிலாக்கியத்தைப் பெற்றால் தான் யூதருடைய எண்ணம் நிறைவேறும். எருசலேமில் கலகம் பண்ணியதுபோல தேசாதிபதிக்கு முன்பாக கலகம்பண்ண முடியாது. அங்கு உரத்தசத்தமிட்டு கூக்குரலிட்டது போல, தேசாதிபதிக்கு முன்பாக உரத்த சத்தமிட்டு கூக்குரலிட்டால், தேசாதிபதியின் நன்மதிப்பை பெறமுடியாது. யூதர்கள் நினைக்கிற காரியம் அவர்களுக்கு நடக்காது. ஆகையினால் யூதர்களுக்கு தேசாதிபதியின்மீது கோபம் இருந்தாலும், அந்தக் கோபத்தை வெளிப்படுத்திக் காண்பிக்காமல், அவனைப்பற்றி மிகவும் மதிப்பும் மரியாதையும் மிகுந்த வார்த்தைகளையே பயன்படுத்துகிறார்கள். பணிவோடும், பயபக்தியோடும், மரியாதையோடும் தேசாதிபதியாகிய பேலிக்ஸிற்கு முன்பாக நிற்கிறார்கள்.

பிரதான ஆசாரியரும் மூப்பரும் தேசாதிபதியாகிய பேலிக்ஸை வெறுக்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனாலும் தேசாதிபதி பவுலைத் தண்டிக்கவேண்டும் என்பதற்காக, யூதர்கள் பேலிக்ஸிற்கு அதிக மரியாதையைக் காண்பிக்கிறார்கள். ராஜாக்களைப் பார்த்து ஜனங்கள் கைதட்டி வாழ்த்துதல் சொல்லுவார்கள். கைதட்டுதலை வைத்து ஜனங்கள் ராஜாவின்மீது அன்பாகவும் பிரியமாகவும், மரியாதையாகவும் இருக்கிறார்கள் என்று தீர்மானம் செய்துவிடக்கூடாது. வாயினால் புகழ்ந்து பேசுவது வேறு. இருதயத்தில் அன்பை வெளிப்படுத்துவது வேறு.

நசரேயருடைய மதபேதம்

என்னவென்றால், இந்த மனுஷன் கொள்ளை நோயாகவும், பூச்சக்கரத்திலுள்ள சகல யூதர்களுக்குள்ளும் கலகம் எழுப்புகிறவனாகவும் நசரேயருடைய மதபேதத்துக்கு முதலாளியாகவும் இருக்கிறானென்று கண்டறிந்தோம் (அப் 24:5).

பவுல் நற்குணமுள்ளவன். கர்த்தருடைய ஊழியக்காரன். பவுலைப் பற்றி கர்த்தரே நல்ல வார்த்தைகளினால் சாட்சிகொடுக்கிறார். ஆனால் யூதர்களோ பவுலைப்பற்றி சொல்லும்போது, அவன் கலகம் எழுப்புகிறவன் என்றும், கொள்ளைநோயாகயிருக்கிறவன் என்றும் அவன்மீது தூஷண வார்த்தைகளைப் பேசுகிறார்கள். தெர்த்துல்லு இது வரையிலும் தேசாதிபதியாகிய பேலிக்ஸை புகழ்ந்து பேசினவன், இப்போது பவுலை இகழ்ந்து பேசுகிறான். தன்னுடைய காரியத்தில் குறியாக இருக்கிறான். தன்னுடைய வார்த்தையை வியாபாரம் பண்ணுகிறான்.

தெர்த்துல்லு நியாயசாதுரியனாக இருந்தாலும், உண்மைக்குப் புறம்பாக பேசுகிறான். நீதியை அநீதி என்கிறான். அநீதியை நீதி என்கிறான். தெர்த்துல்லு பவுல்மீது இரண்டு முக்கியமான குற்றச் சாட்டுக்களைக் கூறுகிறான். அவையாவன: 1. பவுல் யூததேசத்தின் சமாதானத்தை கெடுத்துப்போட்டான். 2. யூதருடைய ஆலோசனைச்சங்கத்தார் பவுலை நியாயமாக விசாரித்தபோது, சேனாபதியாகிய லீசியா, பவுலை விசாரிக்க விடாமல் தடுத்து மிகுந்த பலாத்காரமாய் பவுலை ஆலோசனைச் சங்கத்தாரின் கைகளிலிருந்து பறித்துக் கொண்டுபோய்விட்டான்.

கிறிஸ்துவின் சீஷர்கள் யாருமே கலகக்காரர்களல்ல. அவர்கள் சமாதானம் பண்ணுகிறவர்கள். சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள் என்று இயேசு கிறிஸ்து உபதேசம் பண்ணியிருக்கிறார். கிறிஸ்துவின் சீஷர்களில் யாரும் சமாதானத்தைக் குலைத்துப்போடும் வண்ணமாக கலகம் பண்ணியதில்லை.

சீஷர்கள் பாதிக்கப்பட்டார்கள். யாரையும் பாதிக்கவில்லை. சீஷர்கள் நிந்தைகளையும், அடிகளையும், கட்டு களையும், காவலையும் அனுபவித்தார்கள். கல்லெறியுண்டார்கள். வாளால் அறுப்புண்டார்கள். பட்டயத்தினால் வெட்டப் பட்டு மரித்தார்கள், செம்மறியாட்டுத் தோல்களையும் வெள்ளாட்டுத் தோல்களையும் போர்த்துக் கொண்டு திரிந்து, குறைவையும் உபத்திரவத்தையும், துன்பத்தையும் அனுபவித்தார்கள். உலகம் அவர்களுக்கு பாத்திரமாயிருக்கவில்லை. அவர்கள் வனாந்தரங்களிலேயும், மலைகளிலேயும், குகைகளிலேயும், பூமியின் வெடிப்புகளிலேயும் சிதறுண்டு அலைந்தார்கள் (எபி 11:36,37). கிறிஸ்துவின் சீஷர்கள் பல கஷ்டங்களை அனுபவித்தார்கள். அவர்கள் யாருக்கும் கஷ்டம் தரவில்லை.

கிறிஸ்துவின் சீஷர்கள் கள்ளங் கபடமில்லாதவர்கள். சமுதாயத்திற்குப் பிரயோஜனமானவர்கள். சத்துருக்கள் சீஷர்களுக்கு விரோதமாகத் தீங்கு செய்தபோது, சீஷர்கள் அந்தத் தீங்குகளை சகித்துக்கொள்கிறார்கள். யூதர்கள் பவுலைப்பற்றி சொல்லும்போது, இந்த மனுஷன் கொள்ளை நோயாகவும், பூச்சக்கரத்திலுள்ள சகல யூதர்களுக்குள்ளும் கலகம் எழுப்புகிறவனாகவும் இருக்கிறானென்று பவுலைப்பற்றி தூஷண வார்த்தைகளைச் சொல்லுகிறார்கள். இந்த வார்த்தைகளைக் கேட்கும்போது, தேசாதிபதியாகிய பேலிக்ஸ் தெளிந்த சிந்தனையில் இல்லையென்றால், அவனுக்கும் பவுல்மீது தப்பிதமான அபிப்பிராயமே உண்டாயிருந்திருக்கும்.

நியாயாசனத்தில் விவாதம் பண்ணும் போது நீதி ஜெயிக்கவேண்டுமென்று விவாதம் பண்ண வேண்டும். நியாயாசனத்தில் நீதி தோற்றுப்போய் விடக்கூடாது. அநீதி ஜெயித்துவிடக் கூடாது. அநீதி ஜெயிக்குமானால் அது நியாயாசனமாக இல்லாமல், அநியாயாசனமாகவே இருக்கும்.

யூதர்கள் பவுலைப்பற்றிச் சொல்லும் போது, "இந்த மனுஷன் பயங்கரமானவன் என்று நாங்கள் சந்தேகிக்கிறோம்" என்பது போன்ற மெதுவான வார்த்தைகளைப் பேசவில்லை. பவுலைப் பற்றி இவர்களெல்லோருக்கும் தெரிந்ததுபோல, தீர்மானமான வார்த்தைகளைப் பேசுகிறார்கள். "இந்த மனுஷன் மிகவும் மோசமானவன் என்பதை நாங்கள் கண்டுபிடித்திருக்கிறோம், பவுலைப்பற்றிய குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குற்றச்சாட்டில் நாங்கள் உறுதியாயிருக்கிறோம்" என்று தங்கள் வார்த்தையை நிச்சயத்தோடு பேசுகிறார்கள்.

பவுல் ஒரு குற்றவாளி போலவும், இவனுடைய குற்றங்கள் ஏற்கெனவே நிரூபிக்கப்பட்டு தண்டனை அனுபவிக்கிறவன் போலவும், இவனுக்குக் கொடுக்கப்பட வேண்டிய தண்டனை இன்னும் அதிகமாக வேண்டும் என்பதற்காக, தாங்கள் தேசாதிபதியிடம் முறையிடுவது போலவும் யூதர்கள் பேசுகிறார்கள்.

பவுல் நற்குணமுள்ளவன். கர்த்தருடைய ஆசீர்வாதத்தை யூதஜனத்தாருக்கு உபதேசம் பண்ணுகிறவன். தேசத்து ஜனங்கள் எல்லோருக்கும் பவுல் ஆசீர்வாதமாகவே இருக்கிறவன். ஆனால் நல்ல மனுஷனாகிய பவுலை இவர்கள் கொள்ளை நோயைப் போன்றவன் என்று சொல்லுகிறார்கள். பவுல் பூச்சக்கரத்திலுள்ள சகல யூதருக்குள்ளும் கலகம்பண்ணுகிறவன் என்று அவன்மீது குற்றம் சுமத்துகிறார்கள். பவுல் நடமாடுகிற கொள்ளை நோயாக இருக்கிறான் என்பதுதான் யூதருடைய குற்றச்சாட்டு.

ஒரு தேசத்தில் கொள்ளைநோய் மிகப்பெரிய பாதிப்பை உண்டுபண்ணும். அந்தப் பாதிப்பைவிட பவுல் அதிகமான பாதிப்பை உண்டுபண்ணுகிறான் என்று யூதர்கள் பவுலைப்பற்றி சொல்லுகிறார்கள். பவுலுடைய துர்க்குணம் ஒரு கொள்ளை நோயைப்போல இருப்பதினால், அது ஜனங்கள் மத்தியில் வேகமாக பரவுகிறது என்றும், இதனால் ஜனங்கள் திரளாய்ப் பாதிக்கப்படுகிறார்கள் என்றும் அவன்மீது குற்றம் சுமத்துகிறார்கள். கொள்ளைநோய் வந்தால் அதன் விளைவு மிகவும் பயங்கரமாகயிருக்கும். கொள்ளை நோய்க்கு விரோதமாக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் கடைப்பிடித்து, கொள்ளை நோயை ஒழித்துக் கட்டவேண்டும். அந்த நோய் மேலும் பரவாதவாறு தடைபண்ணவேண்டும். பவுல் கொள்ளை நோயைப்போல இருக்கிற படியினால் அவனை ஒழித்துக்கட்ட வேண்டுமென்று யூதர்கள் பேலிக்ஸிடம் சொல்லுகிறார்கள்.

பவுல் சமாதானம் பண்ணுகிறவன். அவன் சமாதானத்தோடும் அமைதியோடும் ஜீவிக்கிறவன். மற்றவர்களும் சமாதானமாயிருக்க வேண்டுமென்று அவர்களுக்கு உபதேசம் பண்ணுகிறவன். ஆனாலும் யூதர்கள் பவுலைப்பற்றிச் சொல்லும்போது "இந்த மனுஷன் பூச்சக்கரத்திலுள்ள சகல யூதர்களுக்குள்ளும் கலகம் எழுப்புகிறவன்" என்று சொல்லுகிறார்கள்.

யூதருக்கு ரோமப்பேரரசின் ஆட்சியை சிறிதும் பிடிக்காது. ரோமப்பேரரசினால் தாங்கள் ஆளுகை செய்யப்படுவதை யூதர்கள் வெறுக்கிறார்கள். இந்த உண்மை பேலிக்ஸிற்கும் தெரியும். தாங்கள் ரோமப்பேரரசை வெறுப்பதற்கு பவுல்தான் காரணம் என்பதுபோல, பவுல்மீது பொய்யாக் குற்றம் சுமத்துகிறார்கள். யூதர்கள்தான் எல்லா இடங்களுக்கும் சென்று யூதர்கள் மத்தியில் கலகம் எழுப்புகிறார்கள். ஆனால் அந்தப் பழியை அவர்கள் இப்போது பவுலின்மீது சுமத்துகிறார்கள். யூதருக்குள்ளே ஏற்படும் கலகத்திற்கு பவுல்தான் காரணம் என்று தேசாதிபதியிடம் சொல்லுகிறார்கள்.

பவுல் ஜனங்களுக்கு உதவி செய்கிறவன். ஜனங்களுடைய நன்மைக்காக பவுல் தன்னை ஒரு வேலைக்காரனைப் போல பாவித்து, அவர்களுக்கு உதவிசெய்கிறான். யூதர்கள் அப்படிப்பட்ட பவுலை "நசரேயருடைய மதபேதத்திற்கு முதலாளி" என்று சொல்லுகிறார்கள். இயேசுகிறிஸ்துவின் போதனைகளைப் பவுல் ஜனங்களுக்கு உபதேசம் பண்ணுகிறான் என்பது உண்மைதான்.

இயேசு கிறிஸ்துவின் உபதேசம் மதபேதமல்ல. மெய்யான கிறிஸ்தவ மார்க்கம் மனிதநேயம் மிகுந்தது. நாம் நம்மை நேசிப்பதுபோல பிறரையும் நேசிக்கவேண்டும் என்பதே கிறிஸ்துவின் உபதேசம். கிறிஸ்துவின் சீஷர்கள் கலகம் பண்ணுகிறவர்களல்ல. சமாதானம் பண்ணுகிறவர்கள். ஆகையினால் கிறிஸ்தவமார்க்கம் ஒரு மதபேதமாகாது.

இது ஒரு மார்க்கத்தின் பிரிவுமல்ல. கிறிஸ்தவ மார்க்கம் மனுஷரைப் பிரிக்கவில்லை. எல்லா மனுஷரும் இரட்சிக்கப்பட்டு தேவனுடைய மெய்யான ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதே கிறிஸ்துவின் உபதேசம். ஆனால் யூதர்களோ கிறிஸ்தவ மார்க்கத்தை ஒரு மதபேதம் என்று சொல்லுகிறார்கள். ஜனங்களைப் பிரிக்கிற உபதேசம் என்று தவறாய்ப் பேசுகிறார்கள். கிறிஸ்துவின் உபதேசம் மனுப்புத்திரர் அனைவரையும் ஒன்றாய் இணைக்கிறது. மனுஷருடைய இருதயத்தில் கிறிஸ்துவின் உபதேசம் நிரம்பியிருக்கும்போது, மனுஷர் மத்தியில் சகோதர சிநேகம் வலுவாக இருக்கும். ஒருவரை ஒருவர் நேசிப்பார்கள். தங்கள் பிரிவினைகளை மறந்து சமாதானமாய் ஜீவனம்பண்ணுவார்கள்.

உலகம் முழுவதற்கும் மெய்யான ஆசீர்வாதம் கிடைக்க வேண்டுமென்பதே கிறிஸ்துவின் உபதேசம். ஒரு மதப்பிரிவை சேர்ந்தவர்கள் பணத்திற்காகவோ, புகழுக்காகவோ, அல்லது வேறு ஏதாவது ஆதாயத்திற்காகவோ அந்த மதப்பிரிவில் சேர்ந்திருப்பார்கள். அந்த மதப்பிரிவிற்கு தங்கள் ஆதரவைக்கொடுப்பார்கள். கிறிஸ்துவின் மார்க்கத்தில் நாம் எந்த ஆதாயமும் எதிர்பார்க்க முடியாது. கிறிஸ்துவின் மார்க்கத்தில் நாம் எந்த ஆதாயமும் எதிர்பார்க்க முடியாது. நம்மைநாமே வெறுக்க வேண்டும் என்பதுதான் கிறிஸ்துவின் உபதேசம். இந்தப் பிரபஞ்சத்தின்மீது நாம் ஆசைவைக்காமல், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிடத்தில் பக்தியாயிருக்க வேண்டும் என்று வேதம் உபதேசிக்கிறது.

யூதர்கள் கிறிஸ்தவ மார்க்கத்தைப் பற்றிச் சொல்லும்போது அது "நசரேயருடைய மதபேதம்" என்று சொல்லுகிறார்கள். இயேசு கிறிஸ்துவை நசரேயன் என்று சொல்லி, அவருடைய மார்க்கத்தை "நசரேயருடைய மதபேதம்" என்று பேரிட்டு அழைக்கிறார்கள். நாசரேத்திலிருந்து எந்த நன்மையும் வராது என்பது யூதருடைய நம்பிக்கை. இயேசு கிறிஸ்து நாசரேத்தூரில் பிறந்தவரல்ல. அவர் பெத்லகேமில் பிறந்தவர். பழைய ஏற்பாட்டு தீர்க்க தரிசிகளும் "மேசியா பெத்லகேமில் பிறப்பார்" என்று முன்னறிவித்திருக்கிறார்கள். பிரதான ஆசாரியருக்கும், மூப்பருக்கும் சத்தியம் தெரிந்திருந்தும், கிறிஸ்துவின் மார்க்கத்தை "நசரேயருடைய மார்க்க பேதம்" என்று பேலிக்ஸிடம் வேண்டுமென்றே தவறாகச் சொல்லுகிறார்கள்.

நியாயம் தீர்க்க மனதாயிருந்தோம்

இவன் தேவாலயத்தையும் தீட்டுப்படுத்தப் பார்த்தான். நாங்கள் இவனைப் பிடித்து எங்கள் வேதப்பிரமாணத்தின் படியே நியாயத் தீர்க்க மனதாயிருந்தோம் (அப் 24:6).

பவுல் யூதருக்குள்ளே கலகம் எழுப்பவில்லை. ஜனங்கள் தன்னைப் பின்பற்றி வருமாறு பவுல் யாரிடத்திலும் போதகம் பண்ணவில்லை. இயேசு கிறிஸ்துவைப் பின்பற்ற வேண்டுமென்பதே பவுலின் பிரதானச் செய்தி. ஒரு மதபேதத்தை ஏற்படுத்தி, அதற்கு தான் தலைவனாக இருக்கவேண்டும் என்னும் ஆசை பவுலிடத்தில் காணப்படவில்லை.

பவுல் தேவாலயத்தையும் தீட்டுப்படுத்தப் பார்த்தான் என்று அவன்மீது யூதர்கள் பிராது பண்ணுகிறார்கள். பவுல் ஒருபோதும் தேவாலயத்தைத் தீட்டுப்படுத்தவில்லை. சமீபத்தில் சுத்திகரிப்பு செய்வதற்காகத் தான் பவுல் தேவாலயத்திற்குப் போயிருக்கிறான். மார்க்க ஆராதனையில் பங்குபெறப்போனவனை, தேவாலயத்தை தீட்டுப்படுத்தப் பார்த்தான் என்று பவுல்மீது பொய்யாய் பிராது பண்ணுகிறார்கள்.

யூதர்கள் பவுலைப் பிடித்து தங்களுடைய வேதப்பிரமாணத்தின் படியே அவனை நியாயந் தீர்க்க மனதாயிருந்நததாகச் சொல்லுகிறார்கள். யூதர்கள் தங்களைப்பற்றி தவறான செய்தியை தேசாதிபதியாகிய பேலிக்ஸிற்கு முன்பாக அறிக்கை செய்கிறார்கள். வேதப்பிரமாணத்தின்படி அவர்கள் பவுலை நியாயந் தீர்க்கவில்லை. அவனைக் கொன்றுபோட எத்தனமாகயிருந்தார்கள். அவனைக் கொலைசெய்ய வேண்டுமென்று சர்ப்பனையான ஆலோசனை பண்ணினார்கள். அவனைக் கொலை செய்யும் வரையிலும் புசிப்பதுமில்லை குடிப்பதுமில்லை என்று சபதம் பண்ணிக் கொண்டார்கள். இப்படிப்பட்ட நியாயத் தீர்ப்பு எதுவும் வேதப்பிரமாணத்தில் சொல்லப்படவே இல்லை.

தாங்கள் என்ன செய்யவேண்டும் என்று மனுஷருக்கு தெரியும்போது, அதைத் தாங்கள் செய்திருப்போம் என்று சொல்லுவது எளிது. ஆனாலும் தங்களுக்குத் தெரிந்த பிரகாரம் செய்வது கடினம். ஒன்றும் செய்யாமல், அதைச் செய்திருக்கலாமென்று ஒரு சிலர் கற்பனையில் பேசுகிறார்கள். இப்படிப்பட்ட கற்பனையாளர்கள் ஒரு காரியத்தையும் ஒழுங்காய்ச் செய்யமாட்டார்கள்.

சேனாபதியாகிய லீசியா

அப்பொழுது சேனாபதியாகிய லீசியா வந்து, மிகுந்த பலாத்காரமாய் இவனை எங்கள் கைகளிலிருந்து பறித்துக் கொண்டுபோய், இவன்மேல் குற்றஞ்சாட்டுகிறவர்கள் உம்மிடத்தில் வரும்படி கட்டளையிட்டார். இவனிடத்தில் நீர் விசாரித்தால் நாங்கள் இவன்மேல் சாட்டுகிற குற்றங்கள் யாவையும் அறிந்து கொள்ளலாம் என்றான் (அப் 24:7,8).

யூதர்கள் பவுலைப் பற்றி தேசாதிபதியிடம் பிராது பண்ணியபோது, சேனாபதியாகிய லீசியாவைப் பற்றியும் சொல்லுகிறார்கள். தாங்கள் தங்களுடைய வேதப்பிரமாணத்தின்படியே பவுலை நியாயந்தீர்க்க மனதாயிருந்தபோது, சேனாபதியாகிய லீசியா வந்து, மிகுந்த பலாத்காரமாய் பவுலைத் தங்கள் கைகளிலிருந்து பறித்துக் கொண்டு போய்விட்டதாக அவன்மீதும் பிராது பண்ணுகிறார்கள். சேனாபதியின் தலையிட்டால் தங்களால் பவுலை நியாயந்தீர்க்க முடியாமல்போயிற்று என்று அறிக்கை செய்கிறார்கள்.

சேனாபதி வந்ததினால் ஆலோசனைச் சங்கத்தார் ஏமாற்ற மடைந்திருக்கிறார்கள். தாங்கள் விரும்பிய படி அவர்களால் பவுலை நியாயந்தீர்க்க முடியவில்லை. சேனாபதி வந்ததற்காக ஆலோசனைச் சங்கத்தார் நன்றியுள்ள வர்களாக இருக்கவேண்டும். அவர்கள் செய்ய எத்தனித்திருந்த பெரிய தவற்றிலிருந்து சேனாபதி அவர்களைத் தடுத்து நிறுத்தியிருக்கிறான். ஆனால் ஆலோசனைச் சங்கத்திலுள்ள துன்மார்க்கரோ தங்களுடைய பாவமான செய்கையை நியாயமானதென்று நியாயப்படுத்துகிறார்கள்.

தங்களுடைய கைகளினால் பவுலைக் கொன்றுபோடவேண்டுமென்று யூதர்களில் சிலர் மனதாயிருந்தார்கள். சேனாபதி அவர்களுடைய சதிஆலோசனையை முறித்துவிட்டான். இதனால் சேனாபதியும் யூதருக்கு சத்துருவாகிறான். பவுல்மேல் குற்றம் சாட்டுகிறவர்கள் தேசாதிபதியிடம் வரும்படி சேனாபதி கட்டளையிட்டதாக பேலிக்ஸிடம் அறிவிக்கிறார்கள். தாங்களே இந்த வழக்கை தங்களுடைய வேதப்பிரமாணத்தின்படி நியாயந் தீர்த்திருப்போம் என்றும், சேனாபதியின் தலையிட்டினால் தாங்கள் தேசாதிபதிக்கு முன்பாக வரவேண்டியதாயிற்று என்றும் பேலிக்ஸிடம் முறையிடுகிறார்கள். பவுல்மேல் சாட்டுகிற குற்றங்கள் யாவையும் அறிந்துகொள்வதற்கு, தேசாதிபதி பவுலை விசாரிக்கலாமென்றும் பேலிக்ஸிடம் முறையிடுகிறார்கள்.

இவைகள் யதார்த்தந்தான்

யூதர்களும் அதற்கு இசைந்து, இவைகள் யதார்த்தந்தான் என்றார்கள் (அப் 24:9).

நியாய சாதுரியனாகிய தெர்த்துல்லுவும் பிரதான ஆசாரியனும், மூப்பரும் பவுலுக்கு விரோதமாக பேலிக்ஸிடம் பிராது பண்ணுகிறார்கள். அவர்கள் சொல்லுவதற்கு யூதர்கள் இசைந்து, "இவைகள் யதார்த்தந்தான்" என்று தங்களுடைய சம்மதத்தையும் தெரிவிக்கிறார்கள். பவுலுக்கு விரோதமாக சொல்லப்பட்டிருக்கிற பிராதுக்கு, தாங்கள் சாட்சிகளாகயிருப்பதாக அறிக்கை செய்கிறார்கள். தேசாதிபதியிடம் தெர்த்துல்லு முறையிட்டதை, பிரதான ஆசாரியனும் மூப்பரும் அங்கீகரிக்கும் வண்ணமாக, "தெர்த்துல்லு சொன்னது யதார்த்தந்தான்" என்று சொல்லுவதாகவும் வேதபண்டிதர்கள் வியாக்கியானம் பண்ணுகிறான்.

ஒரு சிலர் செய்கிற தப்பிதங்களில் எல்லோருக்கும் பங்கு இருக்காது. இருந்தாலும் தப்பிதம் செய்தவர்கள் நிரபராதிகளைக்கூட தங்களோடு கூட்டாளியாகச் சேர்த்துக் கொள்வார்கள். அதுபோலவே பிரதான ஆசாரியனும் மூப்பரும் செய்கிற தப்பிதத்தில், யூதர்கள் எல்லோருமே உடன்படுகிறார்கள். பவுலுக்கு விரோதமாக சொல்லப் பட்டிருக்கிற குற்றச் சாட்டுக்களை யூதர்களால் நிரூபிக்கமுடியாது. ஆனாலும் இவர்கள் ஆலோசனைச்சங்கத்தாரோடு சேர்ந்து கொண்டு, அவர்களுடைய பாவத்திற்குப் பங்காளிகளாகிறார்கள்.

பாகால் தான் தெய்வம் என்று வழக்காட முடியாதவர்கள்கூட, தங்கள் துன்மார்க்கத்தினால் அவர்களோடு சேர்ந்துகொண்டு பாகால்தான் தெய்வம் என்று கூக்குரலிடுகிறார்கள். இப்படிப் பட்டவர்கள் சுயமாய் சிந்திக்க மாட்டாதவர்கள். சுயசிந்தனையோ, சுயயோசனையோ இல்லாதவர்கள். கூட்டத்தோடு கூட்டமாகச் சேர்ந்து கொண்டு, தாங்கள் செய்வது என்ன என்பது தெரியாமலேயே, அவர்களோடு தங்கள் சத்தத்தை உயர்த்தி கூக்குரலிடுகிறவர்கள்.

பவுலின் உத்திரம்
அப் 24 : 10-21

அப் 24:10. பவுல் பேசும்படி தேசாதிபதி சைகைகாட்டின போது, அவன் உத்தரவாக: நீர் அநேக வருஷகாலமாய் இந்த தேசத்தாருக்கு நியாயாதிபதியாயிருக்கிறீரென்றறிந்து, நான் என் காரியங்களைக் குறித்து அதிக தைரியத்துடன் உத்தரவு சொல்லுகிறேன்.

அப் 24:11. நான் தொழுதுகொள்ளும்படியாக எருசலேமுக்குப் போனதுமுதல் இதுவரைக்கும் பன்னிரண்டு நாள்மாத்திரம் ஆயிற்றென்று நீர் அறிந்துகொள்ளலாம்.

அப் 24:12. தேவாலயத்திலே நான் ஒருவரிடத்திலாவது தர்க்கம் பண்ணினதையும், நான் ஜெப ஆலயங்களிலாகிலும் நகரத்திலாகிலும் ஜனங்களுக்குள்ளே கலகமெழுப்பினதையும், இவர்கள் கண்டதில்லை.

அப் 24:13. இப்பொழுது என்மேல் சாட்டுகிற குற்றங்களை இவர்கள் ரூபிக்கவுமாட்டார்கள்.

அப் 24:14. உம்மிடத்தில் ஒன்றை ஒத்துக் கொள்ளுகிறேன்; அதென்னவென்றால், இவர்கள் மதபேதம் என்று சொல்லுகிற மார்க்கத்தின்படியே எங்கள் முன்னோர்களின் தேவனுக்கு ஆராதனை செய்து நியாயப்பிரமாணத்திலேயும் தீர்க்கதரிசிகள் புஸ்தகங்களிலேயும் எழுதியிருக்கிற எல்லாவற்றையும் நான் விசுவாசித்து,

அப் 24:15. நீதிமான்களும் அநீதிமான்களுமாகிய மரித்தோர் உயிர்த்தெழுந்திருப்பது உண்டென்று இவர்கள் தேவனிடத்தில் நம்பிக்கை கொண்டிருக்கிறது போல, நானும் நம்பிக்கைகொண்டிருக்கிறேன்.

அப் 24:16. இதனால் நான் தேவனுக்கும் மனுஷருக்கும் முன்பாக எப்பொழுதும் குற்றமற்ற மனச்சாட்சியை உடையவனாயிருக்கப் பிரயாசப்படுகிறேன்.

அப் 24:17. அநேக வருஷங்களுக்குப் பின்பு நான் என் ஜனத்தாருக்குத் தர்மப்பணத்தை ஒப்புவிக்கவும், காணிக்கைகளைச் செலுத்தவும் வந்தேன்.

அப் 24:18. அப்பொழுது கூட்டமில்லாமலும் அமளியில்லாமலும் தேவாலயத்திலே சுத்திகரித்துக் கொண்டவனாயிருக்கையில், ஆசியா நாட்டாரான சில யூதர்கள் என்னைக் கண்டார்கள்.

அப் 24:19. அவர்களுக்கு என்பேரில் விரோதமான காரியம் ஏதாகிலும் உண்டாயிருந்தால், அவர்களே இங்கே வந்து, உமக்கு முன்பாகக் குற்றஞ்சாட்டவேண்டும்.

அப் 24:20. நான் ஆலோசனைச் சங்கத்தாருக்கு முன்பாக நின்றபோது அவர்கள் யாதொரு அநியாயத்தை என்னிடத்தில் கண்டதுண்டானால் இவர்களே அதைச் சொல்லட்டும்.

அப் 24:21. நான் அவர்களுக்குள்ளே நின்ற போது மரித்தோர் உயிர்த்தெழுந்திருப்பதைக் குறித்து, இன்று உங்களாலே நியாயத் தீர்க்கப்படுகிறேனென்று நான் சொன்ன ஒரு சொல்லினிமித்தமேயன்றி வேறொன்றினிமித்தமும் குற்றங் காணப்படவில்லையென்றான்.

தைரியத்துடன் உத்தரவு சொல்லுகிறேன்

பவுல் பேசும்படி தேசாதிபதி சைகைகாட்டின போது, அவன் உத்தரவாக: நீர் அநேக வருஷகாலமாய் இந்த தேசத்தாருக்கு நியாயாதிபதியாயிருக்கிறீரென்றறிந்து, நான் என் காரியங்களைக்குறித்து அதிக தைரியத்துடன் உத்தரவு சொல்லுகிறேன் (அப் 24:10).

பவுலுக்கு தன்னுடைய நியாயத்தை எடுத்துச் சொல்லுகிற வாய்ப்பு கொடுக்கப்படுகிறது. நாம் ராஜாக்களுக்கு முன்பாகவும், பெரிய அதிகாரிகளுக்கு முன்பாகவும் நிற்கும்போது எதைப் பேசுவது என்று கலங்கவேண்டியதில்லை. ஏனெனில் நாம் பேசவேண்டிய வார்த்தைகளை, தேவன் தாமே நமக்கு அந்த வேளையில் கொடுப்பார். பவுல் பேசும்படி தேசாதிபதி சைகை காட்டுகிறான். உடனே பவுல் தேவன் தனக்குக் கொடுக்கிற வார்த்தைகளை உத்தரவாகப் பேசுகிறான்.

தெர்த்துல்லு தேசாதிபதியிடம் பேசின போது, அவன் பவுலை தூஷணமாகப் பேசினான். தன்னுடைய சாதுரிய ஞானத்தைப் பயன்படுத்தி, பவுல்மீது பொய்யான குற்றச் சாட்டுக்களையெல்லாம் கூறினான். ஆனால் பவுலோ, தனக்குப் பேச உத்தரவு கிடைத்தபோது, தெர்த்துல்லுவைப் பற்றி ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. தன்னுடைய காரியத்தை மாத்திரமே பவுல் எடுத்துப் பேசுகிறான்.

தெர்த்துல்லு பேசும்போது, அவன் பேசியது அனைத்தையும் பவுல் அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்தான். தனக்கும் பேசுவதற்கு அனுமதி கிடைக்குமென்று பொறுமையோடு காத்துக் கொண்டிருந்தான். அவன் எதிர்பார்த்த அனுமதி பவுலுக்குக் கிடைக்கிறது. பவுல் பேசும்படி தேசாதிபதி சைகை காண்பிக்கிறான். தனக்கு விரோதமாக ஆலோசனைச் சங்கத்தார் தேசாதிபதியிடம் பிராது பண்ணியிருக்கிறார்கள். தான் பேசுவதற்கு வாய்ப்பு கிடைத்தபோது, தனக்கு எதிராக பிராது பண்ணியவர்களைப்பற்றியோ, தெர்த்துல்லுவைப்பற்றியோ பவுல் ஒன்றும் சொல்லவில்லை.

பவுல் தேசாதிபதியிடம் பேசும்போது, அவனுக்கு மிகுந்த மரியாதையைக் கொடுக்கிறான். தெர்த்துல்லு தேசாதிபதியைப் புகழ்ந்தபோது, அநேக புகழ்ச்சியான வார்த்தைகளைப் பேசினான். ஆனால் பவுல் அப்படிப்பட்ட பொய்யான வார்த்தைகள் எதையும் பேசவில்லை. பவுல் அதிக தைரியத்துடன் உத்தரவு சொல்லுகிறான். சந்தோஷமாகப் பேசுகிறான். தேசாதிபதி வழக்கை நியாயமாக விசாரிப்பான் என்றும், அவனிடத்திலிருந்து நீதி கிடைக்கும் என்றும் எதிர்பார்த்து, பவுல் தன்னுடைய காரியங்களை எடுத்துச்சொல்லுகிறான்.

பவுல் தன்னைப்பற்றி அறிந்து வைத்திருக்கிறான். உண்மைச் சம்பவத்தை மாத்திரமே பேசுகிறான். ஆகையினால் பவுலின் வார்த்தையில் தடுமாற்றம் காணப்படவில்லைமிகுந்த உற்சாகமாகவும் தைரியமாகவும் பேசுகிறான். ஆலோசனைச் சங்கத்தாரைப் போல ஏராளமான நியாயாபதிகள் இப்போது பவுலை விசாரிக்கவில்லை. தேசாதிபதி மாத்திரமே பவுலை விசாரிக்கிறான். ஆகையினால் தன்னைப்பற்றி பேசுவதற்கு பவுலுக்கு மிகுந்த தைரியமுண்டாயிற்று.

பேலிக்ஸ் அநேக வருஷமாய் இந்த தேசத்தாருக்கு நியாயாதிபதியாயிருக்கிறான் என்பதை பவுல் அறிந்திருக்கிறான். பவுல் சொன்ன வார்த்தை மெய்யானதுதான். இது வரையிலும் பவுலுக்கு விரோதமாக தேசாதிபதியினிடத்தில் எந்தப் பிராதும் சமர்ப்பிக்கப்படவில்லை. இப்போதுதான் முதன்முறையாக விசாரணைக்கு வந்திருக்கிறான். இது தேசாதிபதிக்கும் தெரியும். தேசாதிபதி அநேக வருஷமாய் நியாயாதிபதியாயிருப்பதினால், பவுல் இதற்கு முன்பு நியாயம் விசாரிக்கப்பட்டதில்லை என்பதை அவனுக்கு எடுத்துச்சொல்லவேண்டியதில்லை.

யூதர்கள் பவுலைப்பற்றிச் சொல்லும் போது, இந்த மனுஷன் கொள்ளைநோயாகவும், பூச்சக்கரத்திலுள்ள சகல யூதர்களுக்குள்ளும் கலகம் எழுப்புகிறவனாயும் இருக்கிறான் என்று பவுலுக்கு விரோதமாக பிராது பண்ணுகிறார்கள். பேலிக்ஸிற்கு யூதேயா தேசத்தைப்பற்றி நன்றாகத் தெரியும். செலோத்தியர்கள் என்னப்பட்ட யூதமார்க்கத்துத் தீவிரவாதிகள் ரோமப் பேரரசிற்கு எதிராக அடிக்கடி கலகம்பண்ணுவது வழக்கம். பவுல் அந்தக் கூட்டத்தோடு ஒருபோதும் தன்னை இணைத்துக்கொண்டதில்லை. அந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் தான் தேசத்தில் கலகம் பண்ணுகிறவர்கள். அவர்கள் கலகம்பண்ணும்போதெல்லாம் சேனாபதி அவர்களை தேசாதிபதிக்கு முன்பாக அழைத்து வந்து விசாரிப்பார்கள்.

பேலிக்ஸ் பல சமயங்களில் இப்படிப்பட்ட வழக்குகளை விசாரித்திருக்கிறான். அந்த வழக்குகள் எதிலும் தேசாதிபதி பவுலைப் பார்க்கவில்லை. கலகத்தைப்பற்றி விசாரிக்கப்படும் போது, யூதருடைய ஆலோசனைச்சங்கத்தாரும் தேசாதிபதிக்கு முன்பாக விசாரிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகையினால் தேசாதிபதிக்கு பவுலைப் பற்றித் தெரியாவிட்டாலும், அவன்மீது குற்றம் சுமத்துகிற ஆலோசனைச் சங்கத்தாரைப்பற்றி நன்றாகத் தெரியும். ஏனெனில் தேசாதிபதி அநேக வருஷகாலமாய் இந்த தேசத்தாருக்கு நியாயாதிபதியாயிருக்கிறான். இதைப் பவுல் அறிந்து தன்னுடைய காரியங்களை அதிகத் தைரியத்துடன் உத்தரவு சொல்லுகிறான்.

இவர்கள் கண்டதில்லை

நான் தொழுதுகொள்ளும்படியாக எருசலேமுக்குப் போனதுமுதல் இது வரைக்கும் பன்னிரண்டு நாள்மாத்திரம் ஆயிற்றென்று நீர் அறிந்து கொள்ளலாம். தேவாலயத்திலே நான் ஒருவரிடத்திலாவது தர்க்கம் பண்ணினதையும், நான் ஜெப ஆலயங்களிலாகிலும் நகரத்திலாகிலும் ஜனங்களுக்குள்ளே கலகமெழுப் பினதையும், இவர்கள் கண்டதில்லை (அப் 24:11,12).

தனக்கு விரோதமாக சொல்லப்படுகிற குற்றச்சாட்டுக்களை பவுல் ஒட்டுமொத்தமாக மறுக்கிறான். அந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு அடிப்படை ஆதாரம் எதுவுமில்லை என்று விவாதம் பண்ணுகிறான். தான் ஒருபோதும் தேவாலயத்தைத் தீட்டுப்படுத்தியதில்லையென்றும், யூதர்களுக்குள் கலகம் எழுப்பியதில்லையென்றும் தன்னைப் பற்றி விவரமாகச் சொல்லுகிறான். ஆலோசனைச் சங்கத்தார் பவுல்மீது இப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்களைத்தான் கூறியிருக்கிறார்கள். தேவாலயம் சம்பந்தமான வழக்குகளையோ, யூதமார்க்கத்து சம்பந்தமான வழக்குகளையோ எப்படி முறைப்படி விசாரிப்பதென்று தேசாதிபதிகளுக்குத் தெரியாது. யூதமார்க்கத்தில் அவர்களுக்கு பழக்கமும் இல்லை.

ஆலோசனைச் சங்கத்தார் தன்மீது கூறுகிற குற்றச்சாட்டில் உண்மை எதுவுமில்லை என்று பவுல் உத்தரவு சொல்லுகிறான். தேசாதிபதிக்கு யூதமார்க்கத்தைப் பற்றித் தெரியாதிருந்தாலும், தன்னிடத்தில் ஒரு குற்றமும் இல்லையென்பதை ரூபிப்பதற்காக, பவுல் நடந்த காரியங்களை பேலிக்ஸிற்கு விவரமாக அறிவிக்கிறான். இவனுடைய உத்தரவுகளைக் கேட்டு பேலிக்ஸ் பவுலுக்கு விரோதமாகச் சொல்லப்பட்டிருக்கிற குற்றச் சாட்டுக்களை அறிந்துகொள்ளக்கூடும்.

பவுல் எருசலேமுக்குத் தேவனை ஆராதிப்பதற்காக போனான். சமாதானத்தோடும் பரிசுத்தத்தோடும் எருசலேமுக்குப் போனான். யூதர்களோடு ஐக்கியமாகயிருக்க வேண்டும் என்ற விருப்பத்தோடுதான் பவுல் எருசலேமுக்குப் போனான். அவர்களுக்குள்ளே கலகம் எழுப்புகிற நோக்கம் எதுவும் பவுலிடத்திலில்லை.

பவுல் இப்போது தேசாதிபதிக்கு முன்பாக நிற்கிறான். அவன் எருசலேமுக்குப் போனது முதல் இதுவரைக்கும் பன்னிரண்டு நாளாயிற்று. ஆறுநாட்களாக கைதியாகக் கட்டப்பட்டிருக்கிறான். பவுல் எருசலேமில் விடுதலையாகயிருந்த மிகக் குறுகிய காலத்தில், யூதர்களுக்குள்ளே கலகம் எழுப்புவதற்கு வாய்ப்பில்லை. ஆனால் ஆலோசனைச்சங்கத்தாரோ பவுல் ஒரு கலகக்காரன் என்றும், யூதர்களுக்குள்ளே கலகத்தை எழுப்புகிறவன் என்றும் அவன்மீது குற்றம் சுமத்துகிறார்கள். எருசலேமுக்குப் போனது முதல் இதுவரைக்கும் பன்னிரண்டு நாட்கள் மாத்திரமே ஆகியிருப்பதினால், அவர்கள் தன்மீது கூறுகிற குற்றச்சாட்டு உண்மையாயிருப்பதற்கு சாத்தியமேயில்லை என்று பவுல் உத்தரவு சொல்லுகிறான்.

பவுல் எருசலேமுக்கு அமைதியாகவும் மிகுந்த சமாதானத்தோடும் போனான். தேவாலயத்தில் பவுல் தன்னைச் சுத்திகரித்து கொண்டான். தேவாலயத்து ஆராதனைகளில் பங்கு பெற்றான். ஜெபாலயங்களுக்குப் போனான். நியாயப் பிரமாணம் அங்கு வாசிக்கப்படுவதைக் கேட்டான். எருசலேமில் அவனுடைய உற்றார் உறவினர்கள், சிநேகிதர்கள் ஆகியோருடைய வீடுகளுக்குச் சென்று அவர்களைச் சந்தித்தான். பவுல் ஒருபோதும் யூதர்களைக் கூட்டமாகச் சேர்த்து அவர்களுக்குள்ளே கலகம் எழுப்பியதில்லை. தேவாலயத்தின் அமைதிக்கு விரோதமாக பவுல் ஒருபோதும் செயல்பட்டதில்லை.

பவுலிடத்தில் சமாதானம் பண்ணுகிற ஆவியே நிரம்பியிருக்கிறது. கலகம் எழுப்புகிற ஆவி அவனிடத்தில் சிறிதுமில்லை. பவுல் ஒருவரிடத்திலாவது தர்க்கம் பண்ணினதை ஆலோசனைச்சங்கத்தார் யாரும் பார்த்ததேயில்லை. தன்னுடைய விசுவாசத்தைப்பற்றி யாராவது பவுலிடத்தில் கேட்டால், அவன் அவர்களுக்கு விவரமாக எடுத்துச் சொல்லுவான். அவர்களுக்கு உபதேசம் பண்ணுவான். ஆனால் தன்னுடைய விசுவாசத்தைக் குறித்து பவுல் யாரோடும் வாக்குவாதம்பண்ணியதில்லை.

பவுலிடத்தில் கலகம் எழுப்புகிற ஆவியும் இல்லை. எருசலேம் நகரத்தில் ஜனங்களுக்குள்ளே பவுல் கலகம் எழுப்பினதாக இவர்களில் யாரும் கண்டதுமில்லை. இயேசுகிறிஸ்துவினுடைய மெய்யான சீஷன் எப்படி நடந்துகொள்ள வேண்டுமோ அப்படியே பவுல் நடந்துகொண்டான். அவனிடத்தில் அன்பும் சாந்தமும், ஆவியின் மற்ற கனிகளும் நிரம்பியிருக்கிறது. தனக்கு மேலான அதிகாரத்திற்கு பவுல் கீழ்ப்படிகிறவன். சுவிசேஷத்தை அறிவிக்கும்போது, அதை ஆயுதம் ஏந்தி பலவந்தமாக அறிவிக்க வேண்டும் என்னும் எண்ணம் பவுலிடத்தில் காணப்படவே இல்லை. சமாதானத்தின் சுவிசேஷத்தை பவுல் சமாதானத்தின் ஆவியோடே அறிவிக்கிறான்.

ரூபிக்கவுமாட்டார்கள்

இப்பொழுது என்மேல் சாட்டுகிற குற்றங்களை இவர்கள் ரூபிக்கவு மாட்டார்கள் (அப் 24:13).

பிரதான ஆசாரியரும், மூப்பரும் பவுலுக்கு விரோதமாக பிராது பண்ணும்போது, பவுல் யூதர்களுக்குள்ளே கலகம் எழுப்புகிறவன் என்றும், தேவாலயத்தை தீட்டுப்படுத்தப் பார்த்தவனென்றும் அவனுக்கு விரோதமாகச் சொல்லுகிறார்கள். ஆனால் பவுலோ ஒரு குற்றமும் செய்யாதவன். யூததேசத்தில் மாத்திரமல்ல, பூச்சக்கரத்திலுள்ள சகல யூதர்களுக்குள்ளும் பவுல் கலகம் எழுப்புகிறவன் என்று அவன்மீது குற்றம் சொல்லுகிறார்கள். ஆனால் இந்தக் குற்றசாட்டுகள் எதிலும் உண்மையில்லை. அவன்மேல் சாட்டுகிற குற்றங்களை இவர்கள் ரூபிக்கவுமாட்டார்கள்.

தான் ஒரு குற்றமும் செய்யவில்லை என்று பவுல் தைரியமாகச் சொல்லுகிறான். பவுலின் வார்த்தையில் உண்மையும் உறுதியும் இருக்கிறது. பவுல் சமாதானத்திற்கு சத்துருவல்ல. தனக்கு எதிராக குற்றம் சுமத்துகிறவர்கள்மீது, பவுல் இப்போது குற்றம் சுமத்துகிறான். தன்மேல் சாட்டுகிற குற்றங்களை இவர்கள் ரூபிக்கமாட்டார்கள் என்று அவர்களைப் பற்றி சொல்லுகிறான். அவர்களுடைய குற்றச் சாட்டுக்களில் உண்மையில்லை என்றும், தேசாதிபதிக்கு முன்பாக அவர்கள் பொய் சொல்லுகிறார்கள் என்றும் சொல்லுகிறான்.

நல்லவர்கள் மீது பல சமயங்களில் பொய் குற்றச் சாட்டுக்களைக்கூறி சிலர் நல்லவர்களைக் காயப்படுத்து விடுகிறார்கள். இப்படிப்பட்ட குற்றச் சாட்டுக்கள் தங்கள்மீது சுமத்தப்படும் என்பதை நல்லவர்கள் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். அவர்கள் எதிர்பாராத காரியங்களெல்லாம் அவர்களுக்கு நடைபெறும். நல்லவர்கள்மீது குற்றம் சொல்லுகிறவர்களிடத்தில் உண்மையிருக்காது. அவர்கள் சொல்லுகிற குற்றச் சாட்டுக்களை அவர்களால் நிரூபிக்கவும் முடியாது. ஆனாலும் பொய்யான குற்றச் சாட்டுக்களை துணிகரமாகச் சொல்லுவார்கள்.

தன்மீது குற்றம் சாட்டுகிறவர்களைப் பற்றி பவுலுக்கு நன்றாகத் தெரிந்திருக்கிறது. அவர்கள் வார்த்தையில் சாதுரியமாகப் பேசக் கூடியவர்கள். உண்மையில்லாமலேயே குற்றச் சாட்டுக்களைக் கூறுவார்கள். அவர்கள் தன்மேல் சாட்டுகிற குற்றச்சாட்டுகளை அவர்களால் ரூபிக்க முடியாது என்று பவுல் அவர்களைப்பற்றி அறிந்து வைத்திருக்கிறான். அவர்கள் பவுலுக்கு அநீதி செய்கிறார்கள். தன்மீது தவறான குற்றச் சாட்டுக்களைக் கூறி, தேசாதிபதியையும் தவறு செய்யத் தூண்டுகிறார்கள். பவுல் தேசாதிபதியிடம் பேசும்போது, நியாயாதிபதியிடத்தில் காணப்பட வேண்டிய நற்குணத்தைப் பற்றியும் எடுத்துச்சொல்லுகிறான். ஒரு குற்றம் பலமாய் ரூபிக்கப்பட்டால்தான், குற்றம் சுமத்தப்பட்டவனை குற்றவாளியாகத் தீர்க்க முடியும். அதன் பின்பே நியாயாதிபதி அவனுக்குத் தண்டனை கொடுக்க முடியும். ஆனால் தன்மீது இவர்கள் சாட்டுகிற குற்றங்களை இவர்களால் நிரூபிக்கமுடியாது என்று பவுல் தைரியமாகச் சொல்லுகிறான்.

நான் விசுவாசித்து

உம்மிடத்தில் ஒன்றை ஒத்துக் கொள்ளுகிறேன்; அதென்னவென்றால், இவர்கள் மதபேதம் என்று சொல்லுகிற மார்க்கத்தின் படியே எங்கள் முன்னோர்களின் தேவனுக்கு ஆராதனை செய்து நியாயப் பிரமாணத்திலேயும் தீர்க்கதரிசிகள் புஸ்தகங்களிலேயும் எழுதியிருக்கிற எல்லாவற்றையும் நான் விசுவாசித்து, (அப் 24:14)

பவுல் தன்னைப்பற்றி நீதியாயும், நேர்மையாயும், உண்மையாயும் உத்தரவு சொல்லுகிறான். யூதர்கள் தன்னை தேசாதிபதிக்கு முன்பாக அழைத்து வந்து, தன்மீது குற்றம் சுமத்துவதற்கான உண்மையான காரணத்தை பவுல் தேசாதிபதிக்கு உத்தரவாகச் சொல்லுகிறான். யூதர்கள் தன்மீது கூறுகிற குற்றச்சாட்டுக்களில் ஒன்றை பவுல் ஒத்துக்கொள்கிறான். அவர்கள் மதபேதம் என்று சொல்லுகிற மார்க்கத்தின்படியே, பவுல் எல்லாவற்றையும் விசுவாசிக்கிறான். பவுல்மீது குற்றம் சுமத்துகிறவர்கள் அவனுக்கு விரோதமாகக் கூடிவந்ததையும், தேவாலயத்திற்குப் புறம்பே அவனை இழுத்துச்சென்று அடித்ததையும், அவன்மீது கொலை வெறியோடிருந்ததையும் சேனாபதி நேரில் பார்த்தான். ஆனால் தேசாதிபதியோ இவற்றில் எதையும் பார்க்கவில்லை. ஆலோசனைச்சங்கத்தார் பவுல்மீது சொல்லுகிற குற்றச்சாட்டுக்களை மாத்திரமே தேசாதிபதி கேட்கிறான்.

பவுலுக்கு விரோதமாக ஏராளமானோர் வந்திருக்கிறார்கள். தெர்த்துல்லு பவுலுக்கு விரோதமாக பிராது பண்ணியபோது, அவர்களெல்லாம் "யதார்த்தந்தான்" என்று சொன்னார்கள். பவுலுக்கு விரோதமாகக் கூக்குர லிட்டார்கள். இவை யெல்லாவற்றையும் தேசாதிபதி பார்த்துக்கொண்டிருக்கிறான். ஆகையினால் பவுல் மெய்யாகவே குற்றவாளியாக இருப்பானோ என்னும் சந்தேகம் அவனுக்குள் வந்திருக்கலாம். அந்தச் சந்தேகத்தை நீக்கும்வண்ணமாக பவுல் தன்னைப்பற்றி சொல்லுகிறான்.

யூதர்கள் மதபேதம் என்று சொல்லுகிற மார்க்கத்தின்படியே, தான் எல்லாவற்றையும் விசுவாசித்து, அதில் நம்பிக்கை கொண்டிருப்பதாக பவுல் அறிவிக்கிறான். இந்த மார்க்கத்தின்படியே பவுலின் முன்னோர்கள் தேவனுக்கு ஆராதனை செய்தார்கள். நியாயப் பிரமாணத்திலேயும் தீர்க்க தரிசிகள் புஸ்தகங்களிலேயும் எழுதியிருக்கிற எல்லாவற்றையும் பவுல் விசுவாசிக்கிறான்.

தேவனை ஆராதிப்பது புதிய காரியமல்ல என்றும், இது ஒரு மதபேதம் அல்ல என்றும், தங்களுடைய முன்னோர்கள் தேவனுக்கு ஆராதனை செய்த பிரகாரமே தானும் தேவனுக்கு ஆராதனை செய்வதாகவும், பவுல் சொல்லுகிறான். நியாயப்பிரமாணத்திலும், தீர்க்க தரிசிகள் புஸ்தகங்களிலும் எழுதியிருக்கிற எல்லாவற்றையும் தங்கள் முன்னோர்கள் விசுவாசிக்கிற பிரகாரம், தானும் விசுவாசிப்பதாகவும் பவுல் சொல்லுகிறான்.

முன்னோர்கள் காலத்திலிருந்து, நீண்டகாலமாக நடைபெற்று வருகிற ஆராதனையை யூதர்கள் மதபேதம் என்று சொல்லுகிறார்கள். அந்த நல்ல ஆராதனைக்கு அவப்பெயர் கொடுக்கிறார்கள். நியாயப் பிரமாணத்திலும், தீர்க்க தரிசிகள் புஸ்தகங்களிலும் எழுதியிருக்கிறதை முன்னோர்கள் விசுவாசித்தார்கள். இப்போது அதைப் பவுலும் விசுவாசிக்கிறான். ஆகையினால் இது மதபேதமாகாது என்றும், இது மெய்யான ஆராதனை என்றும் பவுல் உத்தரவு சொல்லுகிறான்.

யூதர்கள் பவுலை மதபேதத்திற்கு முதலாளியாகயிருக்கிறான் என்று சொல்லி அவன்மீது குற்றம் சாட்டுகிறார்கள். தன்னுடைய விசுவாசம் மதபேதமல்ல என்றும், தங்களுடைய முன்னோர்கள் விசுவாசித்தது போலவே, தானும் விசுவாசிப்பதாகவும் பவுல் தேசாதிபதியிடம் விவரித்துச் சொல்லுகிறான்.

தங்கள் முன்னோர்களின் தேவனுக்கு பவுல் ஆராதனை செய்கிறான். ஆகையினால் அவனுடைய ஆராதனை சரியானது. யாரை ஆராதிக்கவேண்டுமோ அவரைத்தான் ஆராதிக்கிறான். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோரின் தேவனையே பவுலும் ஆராதனை செய்கிறான். தேவன் முற்பிதாக்களோடு உடன்படிக்கை செய்து கொண்டான். அந்த உடன்படிக்கையில் பவுலும் தன்னை இணைத்துக் கொள்கிறான். இதற்கு விரோதமாக பவுல் எதுவும் சொல்லவில்லை.

யூதர்களெல்லோருமே ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோரைத் தங்களுடைய முற்பிதாக்களாக அங்கீகாரம்பண்ணுகிறார்கள். யூதமார்க்கம் மிகவும் பழமையானது. தங்கள் முன்னோர்களின் பாரம்பரியத்தில் யூதர்கள் பெருமைப்படுகிறார்கள். முன்னோர்களின் காலத்திலிருந்து, இப்போது வரையிலும், தேவனை ஆராதிப்பதில் எந்தவித குழப்பமும் ஏற்பட்டதில்லை. நாம் தேவனை ஆராதிக்கும்போது அவரை நம்முடைய தேவனாகவே ஆராதனை செய்கிறோம். அதே சமயத்தில், நம்முடைய முற்பிதாக்களும், நாம் ஆராதிக்கிற தேவனையே ஆராதனை செய்திருக்கிறார்கள்என்பதை தியானிக்கும் போது அது நம்முடைய ஆத்துமாவுக்கு மிகுந்த ஆறுதலைத் தருகிறது.

பவுல் தன்னைப்பற்றி சொல்லும் போது, யூதருடைய முற்பிதாக்களை தன்னுடைய முற்பிதாக்கள் என்று அங்கீகரிக்கிறான். யூதர்கள் யாரை தங்களுடைய முன்னோர் என்று சொல்லுகிறார்களோ, அவர்களை பவுலும் தன்னுடைய முன்னோர் என்று சொல்லுகிறான். அவர்கள் ஆராதனை செய்வதுபோலவே பவுலும் ஆராதனை செய்கிறான். ஆகையினால் பவுல் எந்த ஒரு மதபேதத்திற்கும் முதலாளியல்ல. அவர்கள் எந்த மார்க்கத்தைச் சேர்ந்தவர்களோ, பவுலும் அதே மார்க்கத்தைச் சேர்ந்தவன் தான்.

நியாயப் பிரமாணத்திலேயும், தீர்க்க தரிசிகள் புஸ்தகங்களிலேயும் எழுதியிருக்கிற எல்லாவற்றையும் பவுல் விசுவாசிக்கிறான். ஆகையினால் பவுலின் ஆராதனை நியாயப் பிரமாணத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.வேதவாக்கியம் முழுவதையும் பவுல் விசுவாசிக்கிறான். நியாய புஸ்தகங்களிலேயும், தீர்க்கதரிசிகள் புஸ்தகங்களிலேயும் எழுதியிருக்கிற யாவற்றையும் பவுல் பரிசுத்தமானதாக அங்கீகரித்து விசுவாசிக்கிறான். வேதவாக்கியங்களைத் தவிர தன்னுடைய விசுவாசத்திற்கும் உபதேசத்திற்கும் பவுல் வேறு எதையும் ஆதாரமாகச் சொல்லுவதில்லை.

பரிசுத்த வேதாகமமே பவுலை ஆளுகை செய்கிற நியாய புஸ்தகம். வேதவாக்கியங்களில் தேவனைப் பற்றிய தெய்வீக வெளிப்பாடு எழுதப் பட்டிருக்கிறது. நாம் வேதவாக்கியத்தில் சொல்லியிருக்கிற படியே ஜீவிக்க வேண்டும். பவுல் வேதவாக்கியத்தின் பிரகாரமாக ஜீவிக்க வேண்டுமென்றும், மரிக்க வேண்டுமென்றும் தீர்மானம் செய்திருக்கிறான். ஆகையினால் பவுல் ஒருபோதும் மதபேதத்திற்கு முதலாளி அல்ல.

நம்பிக்கை கொண்டிருக்கிறேன்

நீதிமான்களும் அநீதிமான்களுமாகிய மரித்தோர் உயிர்த்தெழுந்திருப்பது உண்டென்று இவர்கள் தேவனிடத்தில் நம்பிக்கைகொண்டிருக்கிறது போல, நானும் நம்பிக்கைகொண்டிருக்கிறேன் (அப் 24:15).

பவுல் வரப்போகிற காலத்தைக் குறித்தும் நோக்கிப் பார்க்கிறான். தன்னுடைய ஆராதனை முடிவு காலத்தில் அங்கீகரிக்கப்பட்டதாக இருக்க வேண்டும் என்று பவுல் கரிசனையோடிருக்கிறான். மதபேதத்தைப் பின்பற்றுகிறவர்கள் இப்பிரபஞ்சத்தின்மீது ஆசைப்படுகிறவர்கள். இவ்வுலக ஜீவியத்தை இன்பமாய் அனுபவிக்க வேண்டும் என்பதற்காக, ஒருசிலர் வேதத்தைப் புரட்டுகிறார்கள். ஆனால் பவுலுக்கோ இப்பிரபஞ்சத்தின் மீது ஆசை எதுவுமில்லை. வேதவாக்கியத்தை விசுவாசித்து, நித்திய ஜீவனைப் பெற்றுக் கொண்டு, பரலோகத்திற்குப் போகவேண்டுமென்பதே பவுலின் இலக்கு. தேவனிடத்தில் பவுல் நித்திய ஜீவனையும், பரலோக வாழ்வையும் தவிர வேறு எதையும் எதிர்பார்க்கவில்லை.

பவுல் தேவனிடத்தில் நம்பிக்கை கொண்டிருக்கிறான். அவன் இப்பிரபஞ்சத்தினிடத்தில் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. தேவன்மீதும் அவருடைய தெய்வீக வல்லமையின்மீதும் பவுல் நம்பி சார்ந்திருக்கிறான். மரித்தோர் உயிர்த்தெழுந்திருப்பது உண்டென்று பவுல் தேவனிடத்தில் நம்பிக்கை கொண்டிருக்கிறான்.

மரித்தோர் எல்லோருமே உயிர்த் தெழுவார்கள். இந்த உலகம் சிருஷ்டிக்கப்பட்ட காலத்திலிருந்து, இந்த உலகத்தின் முடிவு காலம் வரையிலும், மரித்தோர் எல்லோருமே உயிர்த் தெழுந்திருப்பார்கள். நாம் மரித்தபின்பும் நாம் ஜீவிப்பதற்கு நமக்கு ஒரு ஜீவன் உண்டு. இந்தப் பிரபஞ்சத்தின் ஜீவன் நமக்கு முடிவு பெறும்போது, நாம் மறுஜீவனுக்குள் பிரவேசிப்போம். மறுஜீவன் இருப்பது போலவே, மறுஉலகமும் இருக்கிறது.

நீதிமான்களும் அநீதிமான்களுமாகிய மரித்தோர் உயிர்த்தெழுந்திருப்பார்கள். நன்மை செய்தவர்கள் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளும் வண்ணமாக உயிர்த்தெழுவார்கள். தீமை செய்தவர்கள் நித்திய ஆக்கினையைப் பெற்றுக் கொள்ளும் வண்ணமாக உயிர்த் தெழுவார்கள். மரித்தோர் உயிர்த்தெழுந்த பின்பு இறுதி நியாயத்தீர்ப்பு உண்டாகும். நீதிமான்கள் உயிர்த்தெழுந்து இயேசு கிறிஸ்துவோடு நித்திய காலமாய் ஜீவிப்பார்கள். அநீதிமான்களோ உயிர்த் தெழுந்து தேவனுடைய ஆக்கினைத் தீர்ப்பைப் பெற்றுக்கொள்வார்கள். தேவன் அநீதிமான்களுக்கு அவர்களுடைய நியாயாதிபதியாக இருப்பார்.

மரித்தோரின் உயிர்த்தெழுதலுக்கு நாம் தேவனிடத்தில் நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும். மரித்தோர் உயிர்த்தெழுந்திருப்பது உண்டென்று யூதர்கள் தேவனிடத்தில் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். அவர்களைப் போலவே பவுலும் தேவனிடத்தில் நம்பிக்கை கொண்டிருக்கிறான். தேவனுடைய சர்வவல்லமையினால் மரித்தோரின் உயிர்த்தெழுதல் நடைபெறும். மரித்தோரின் உயிர்த்தெழுதல் நம்முடைய விசுவாச அறிக்கையின் அஸ்திபாரமாக யிருக்கிறது. யூதர்களும் மரித்தோரின் உயிர்த்தெழுதலை நம்புகிறார்கள்.

மரித்தோர் உயிர்த்தெழுந்திருப்பது உண்டென்று யூதர்கள் நம்புவது, சுவிசேஷத்தில் தெளிவாய் வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. நாம் தேவனை ஆராதிக்கும் போது, மரித்தோர் உயிர்த்தெழுந்திருப்பது உண்டு என்னும் நிச்சயத்தோடு ஆராதிக்கவேண்டும். இந்த விசுவாசத்தோடும், எதிர்பார்ப்போடும் ஜீவிக்கும்போது நம்முடைய ஆவிக்குரிய ஜீவியம் சந்தோஷமும் சமாதானமும் நிறைந்ததாகயிருக்கும்.

குற்றமற்ற மனச்சாட்சி

இதனால் நான் தேவனுக்கும் மனுஷருக்கும் முன்பாக எப்பொழுதும் குற்றமற்ற மனச்சாட்சியை உடைய வனாயிருக்கப் பிரயாசப்படுகிறேன் (அப் 24:16).

பவுல் தேசாதிபதியிடம் தன்னுடைய விசுவாசத்தைத் தைரியமாய் அறிவிக்கிறான். மரித்தோர் உயிர்த் தெழுவது பற்றிய தன்னுடைய நம்பிக்யையைப் பற்றி சொல்லும்போது "இதனால் நான் தேவனுக்கும் மனுஷருக்கும் முன்பாக எப்பொழுதும் குற்றமற்ற மனச்சாட்சியை உடையவனா யிருக்கப் பிரயாசப்படுகிறேன்" என்று விசுவாசத்தோடு சொல்லுகிறான். இதற்கு முன்பு ஆலோசனைச்சங்கத்தாருக்கு முன்பாக பவுல் விசாரிக்கப்படும்போது, "பவுல் ஆலோசனைக் சங்கத்தாரை உற்றுப்பார்த்து: சகோதரரே, இந்நாள் வரைக்கும் எல்லா விஷயங்களிலும் நான் நல்மனச்சாட்சியோடே தேவனுக்குமுன்பாக நடந்துவந்தேன் என்று சொன்னான்" (அப் 23:1).

தேவனுக்கு முன்பாக குற்றமற்ற நல்மனச்சாட்சியுடன் ஜீவிக்க வேண்டுமென்பது பவுலின் வாஞ்சையும் நோக்கமுமாயிருக்கிறது. பவுலின் மனச்சாட்சி யாரையும் குற்றப்படுத்தவில்லை. அவனுடைய மனச்சாட்சி அவனுக்கு தவறான காரியத்தைச் சொல்லிக் கொடுக்கவுமில்லை. பவுலின் மனச்சாட்சி அவனை தவறான பாதையில் வழிநடத்தவுமில்லை.

பவுலின் மனச்சாட்சி பிறரைக் குற்றப்படுத்தவில்லை. பவுலின் மனச்சாட்சி நல்மனச்சாட்சியாயிருக்கிறது. அதே வேளையில் அவனுடைய மனச்சாட்சியை வேற யாரும் குற்றப்படுத்தவும் முடியாது. ஏனெனில் அவன் தேவனுக்கு முன்பாக எப்பொழுதும் குற்றமற்ற மனச்சாட்சியை உடையவனாக இருக்கவே பிரயாசப்படுகிறான். ஆகையினால் தன்னுடைய சொந்த மனச்சாட்சிக்கு பிரியமாய் நடந்துகொள்ள பவுல் பிரயாசப்படுகிறான். தன்னுடைய மனச்சாட்சியை தான் குற்றப்படுத்தி விடாதவாறு மிகுந்த எச்சரிப் போடிருக்கிறான். மற்றவர்களுடைய மனச்சாட்சியை தான் குற்றப்படுத்தாததுபோல, தன்னுடைய மனச்சாட்சியையும், தானோ அல்லது மற்ற வேறு யாரோ, குற்றப்படுத்திவிடாதவாறு மிகவும் எச்சரிப்போடிருக்கிறான்.

பவுல் தேவனுக்கும் மனுஷருக்கும் முன்பாக எப்பொழுதும் குற்றமற்ற மனச்சாட்சியை உடையவனாகயிருக்கப் பிரயாசப்படுகிறான். "பிரயாசப்படுதல்" என்னும் வார்த்தைக்கு எப்போதும், இடைவிடாமல், தொடர்ந்து முயற்சி பண்ணுதல் என்பது பொருளாகும். பவுல் ஒருபோதும் தான் பூரணமடைந்து விட்டதாகச் சொல்வதில்லை. பூரணமடைவதற்கு அவன் முயற்சி செய்து கொண்டிருக்கிறான். குற்றமற்ற மனச்சாட்சியைத் தான் உடையவனாக யிருப்பதாக பவுல் சொல்லவில்லை. குற்றமற்ற மனச்சாட்சியை உடையவனாக யிருக்க தான் எப்பொழுதும் பிரயாசப்படுகிறதாக சொல்லுகிறான்.

பல சமயங்களில் பவுல் தான் விரும்புகிற நன்மையைச் செய்யாமல், விரும்பாத தீமையைச் செய்துவிடுகிறான். பவுல் தவறு செய்யும்போது, அது தவறு என்பது அவனுடைய மனச்சாட்சிக்குத் தெரிகிறது. அப்போது அவனுடைய மனச்சாட்சி அவனைக் குற்றப்படுத்துகிறது. ஆனாலும் அவன் தன்னை குற்றப்படுத்துகிற மனச்சாட்சியோடு ஜீவிக்க விரும்பவில்லை. குற்றமற்ற மனச்சாட்சியை உடையவனாயிருக்கவே பிரயாசப்படுகிறான். நாமும் குற்றமற்ற மனச்சாட்சியை உடையவர்களாகயிருக்க பிரயாசப்படவேண்டும்.

பவுல் ஏதாவது ஒரு காரியத்தில், எப்போதாவது குற்றமற்ற மனச்சாட்சியை உடையவனாகயிருந்தால் போதுமென்று நினைக்கவில்லை. தேவனுக்கும் மனுஷருக்கும் முன்பாக, எப்பொழுதும், எல்லா விஷயத்திலும், குற்றமற்ற மனச்சாட்சியை உடையவனாகயிருக்கப் பிரயாசப்படுகிறான். தேவனுடைய பிரமாணத்தை அவன் மீறிவிடுவானோ என்னும் பயமும் அக்கறையும் பவுலிடத்தில் எப்போதும் காணப்படுகிறது. தேவனிடத்தில் அன்பு கூருகிற பிரமாணத்தையோ அல்லது மனுஷரிடத்தில் அன்புகூருகிற பிரமாணத்தையோ, அவன் மீறிவிடுவானோ என்னும் பயத்தோடும் எச்சரிப்போடும் ஜீவிக்கிறான். நம்முடைய வார்த்தையும் செய்கையும் சுத்தமாயிருக்க வேண்டும். தேவனுக்கு விரோதமாகவோ அல்லது மனுஷருக்கு விரோதமாகவோ நாம் எதுவும் பேசிவிடாதவாறும், எதுவும் செய்துவிடாதவாறும் மிகுந்த எச்சரிப் போடிருக்கவேண்டும்.

பவுல் தன்னுடைய குற்றமற்ற மனச்சாட்சியைப்பற்றிச் சொல்லும்போது, "இதனால்" என்னும் வார்த்தையைப் பயன்படுத்துகிறான். "இதனால்" என்னும் வார்த்தைக்கு "மரித்தோரின் உயிர்த்தெழுதல்" என்பது பொருளாகும். மரித்தோர் உயிர்த்தெழுவதை பவுல் நம்புகிறான். தன்னுடைய ஜீவியத்தில், தான் மரிக்கும்போது, தானும் உயிர்த்தெழுவேன் என்று எதிர்பார்ப்போடு ஜீவிக்கிறான். மரித்தோரின் உயிர்த்தெழுதல் உண்டு என்று பவுல் நம்பிக்கை கொண்டிருப்பதினால், அவன் தேவனுக்கும் மனுஷருக்கும் முன்பாக, எப்பொழுதும் குற்றமற்ற மனச்சாட்சியை உடையவனாகயிருக்க பிரயாசப்படுகிறான்.

குற்றம்காணப்படவில்லை

அநேக வருஷங்களுக்குப் பின்பு நான் என் ஜனத்தாருக்குத் தர்மப்பணத்தை ஒப்புவிக்கவும், காணிக்கைகளைச் செலுத்தவும் வந்தேன். அப்பொழுது கூட்டமில்லாமலும் அமளியில்லாமலும் தேவாலயத்திலே சுத்திகரித்துக் கொண்டவனாயிருக்கையில், ஆசியா நாட்டாரான சில யூதர்கள் என்னைக் கண்டார்கள். அவர்களுக்கு என்பேரில் விரோதமான காரியம் ஏதாகிலும் உண்டாயிருந்தால், அவர்களே இங்கே வந்து, உமக்கு முன்பாகக் குற்றஞ்சாட்ட வேண்டும். நான் ஆலோசனைச் சங்கத்தாருக்கு முன்பாக நின்றபோது அவர்கள் யாதொரு அநியாயத்தை என்னிடத்தில் கண்டதுண்டானால் இவர்களே அதைச் சொல்லட்டும். நான் அவர்களுக்குள்ளே நின்ற போது மரித்தோர் உயிர்த்தெழுந்திருப்பதைக் குறித்து, இன்று உங்களாலே நியாயத்தீர்க்கப்படுகிறேனென்று நான் சொன்ன ஒரு சொல்லினிமித்தமேயன்றி வேறொன்றினிமித்தமும் குற்றங் காணப்படவில்லையென்றான் (அப் 24:17-21).

பவுல் தன்னுடைய விசுவாசத்தை தேசாதிபதிக்கு முன்பாக அறிக்கை செய்கிறான். அதன்பின்பு தன்னுடைய காரியத்தை விரிவாக எடுத்துச் சொல்லுகிறான். மேலும் தனக்கு விரோதமாகப் பிராது பண்ணியவர்களின் தப்பிதங்களையும் சொல்லுகிறான். தன்மீது சாட்டப்பட்ட குற்றத்தை அவர்களால் ரூபிக்க முடியாது என்றும் உறுதியாகச் சொல்லுகிறான். பவுல் தேவாலயத்திற்குப் போனான். தங்கள் தேசத்திற்கும், தேவாலயத்திற்கும் சத்துருவாக இருக்கிறவன்மீது பாய்வதுபோல, யூதர்கள் பவுலின்மீது பாய்ந்து அவனைப் பிடித்தார்கள். யூதஜனத்திற்கும், வேதப்பிராமணத்திற்கும், பரிசுத்த ஆலயத்திற்கும் விரோதமாக எங்கும் எல்லோருக்கும் போதித்து வருகிறவன் இவன்தான் என்று யூதர்கள் பவுலைப்பற்றி சத்தமிட்டுச் சொன்னார்கள் (அப் 21:28).

யூததேசத்திற்கு பவுல் சத்துருவாகயிருக்கிறான் என்று அவன்மீது குற்றம் சுமத்தமுடியாது. ஏனெனில் அவன் அநேக வருஷங்களுக்குப் பின்பு, தன் ஜனத்தாருக்கு தருமப்பணத்தை ஒப்புவிக்கவும், காணிக்கைகளைச் செலுத்தவுமே எருசலேமுக்கு வந்தான். ஜனங்கள் மத்தியில் அமளிபண்ண வேண்டும் என்பது பவுலின் நோக்கமல்ல. அமளிபண்ணுவதற்கான காரியம் எதையும் பவுல் செய்யவில்லை. ஜனங்களுக்குத் தேவையான எல்லா நல்ல உதவிகளையும் செய்வதற்கு பவுல் எப்போதுமே ஆயத்தமாகயிருந்தான்.

தேவாலயத்தில் பவுல் சுத்திகரித்துக் கொண்டவனாக இருக்கிறான். ஆனால் யூதர்களோ பவுல் தேவாலயத்தை தீட்டுப்படுத்த முயற்சிப்பதாக அவன்மீது குற்றம் சொல்லுகிறார்கள் (அப் 21:24). பவுல் தேவாலயத்தில் தன்னைச் சுத்திகரித்துக்கொண்டபோது, அங்கு கூட்டமோ, அமளியோ இல்லை. அப்போது ஆசியா நாட்டாரானா சில யூதர்கள் பவுலைத் தேவாலயத்தில் கண்டார்கள்.

ஆசியா நாட்டு யூதருக்கு குழப்பம் விளைவிக்கவேண்டும் என்னும் நோக்கம் எதுவுமில்லை. பவுலுக்கு விரோதமாக ஜனங்களை கூட்ட வேண்டும் என்பதும் அவர்களுடைய நோக்கமல்ல. அவர்களுக்கு பவுல் பேரில் விரோதமான காரியம் ஏதாவது இருக்குமானால், அவர்களே இங்கே வந்து தேசாதிபதிக்கு முன்பாக குற்றம் சாட்டவேண்டும் என்று பவுல் சொல்லுகிறான். ஆசியா நாட்டு யூதர்களையும் தேசாதிபதிக்கு முன்பாக விசாரிக்க வேண்டும். அப்போதுதான் உண்மை தெரியும் என்று பவுல் தன் பக்கத்திலுள்ள நியாயத்தை எடுத்துச் சொல்லுகிறான்.

பவுல் ஆலோசனைச்சங்கத்தாருக்கு முன்பாக நின்றான். அப்போது அவர்கள் பவுலிடத்தில் யாதொரு அநியாயத்தையும் காணவில்லை. மரித்தோர் உயிர்த்தெழுந் திருப்பதைக் குறித்து அவர்களுக்குள் வாக்குவாத முண்டாயிற்று. பரிசேயர் பவுலின்மீது ஒரு குற்றமும் காணவில்லை. சதுசேயர் மரித்தோரின் உயிர்த்தெழுதலை நம்புவதில்லை. அவர்கள் மாத்திரமே பவுலின்மீது குற்றம் சாட்டுகிறார்கள். சதுசேயரின் விசுவாசமும் பரிசேயரின் விசுவாசமும் மாறுபட்டிருக்கிறது. பவுலின் விசுவாசம் சதுசேயரின் விசுவாசத்திற்கு ஒத்துப்போகவில்லை. ஆகையினால் அவர்கள் பவுலை மதபேதத்திற்கு முதலாளி என்று சொல்லி அவன்மீது குற்றம் சொல்லுகிறார்கள். பவுலின் விசாரணை மார்க்க சம்பந்தமானது. விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்டது. பவுல் ஒரு கலகக்காரனல்ல. அவன் தேவாலயத்தைத் தீட்டுப்படுத்தவுமில்லை. யூதர்களில் ஒரு பிரிவினர், பவுல்மீது உள்ள விரோதத்தினால், அவனுக்கு எதிராக தேசாதிபதிக்கு முன்பு பிராது பண்ணியிருக்கிறார்கள்.

பேலிக்ஸ் விசாரணையை ஒத்திவைக்கிறான்
அப் 24 : 22-27

அப் 24:22. இந்த மார்க்கத்தின் விஷயங்களை விவரமாய் அறிந்திருந்த பேலிக்ஸ் இவைகளைக் கேட்டபொழுது: சேனாபதியாகிய லீசியா வரும்போது உங்கள் காரியங்களைத் திட்டமாய் விசாரிப்பேன் என்று சொல்லி

அப் 24:23. பவுலைக் காவல்பண்ணவும், கண்டிப்பில்லாமல் நடத்தவும், அவனுக்கு ஊழியஞ் செய்கிறதற்கும் அவனைக் கண்டு கொள்ளுகிறவதற்கும் வருகிற அவனுடைய மனுஷர்களில் ஒருவரையும் தடைசெய்யாதிருக்கவும் நூற்றுக்கு அதிபதியானவனுக்குக் கட்டளையிட்டு, அவர்களைக் காத்திருக்கும்படி செய்தான்.

அப் 24:24. சில நாளைக்குப்பின்பு பேலிக்ஸ் யூத ஸ்திரீயாகிய தன் மனைவி துருசில்லாளுடனேகூட வந்து, பவுலை அழைப்பித்து, கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தைக் குறித்து அவன் சொல்லக்கேட்டான்.

அப் 24:25. அவன், நீதியையும், இச்சையடக்கத்தையும், இனிவரும் நியாயத் தீர்ப்பையும் குறித்துப் பேசுகையில், பேலிக்ஸ் பயமடைந்து: இப்பொழுது நீ போகலாம், எனக்குச் சமயமான போது உன்னை அழைப்பிப்பேன் என்றான்.

அப் 24:26. மேலும், அவன் பவுலை விடுதலைபண்ணும்படி தனக்கு அவன் பணங் கொடுப்பானென்று நம்பிக்கையுள்ளவனாயிருந்தான்; அதினிமித்தம் அவன் அநேகந்தரம் அவனை அழைத்து, அவனுடனே பேசினான்.

அப் 24:27. இரண்டு வருஷம் சென்றபின்பு பேலிக்ஸ் என்பவனுக்குப் பதிலாய்ப் பொர்க்கியுபெஸ்து தேசாதிபதியாக வந்தான்; அப்பொழுது பேலிக்ஸ் யூதருக்கு தயவு செய்ய மனதாய்ப் பவுலைக் காவலில் வைத்துவிட்டுப்போனான்.

சேனாபதியாகிய லீசியா

இந்த மார்க்கத்தின் விஷயங்களை விவரமாய் அறிந்திருந்த பேலிக்ஸ் இவைகளைக் கேட்டபொழுது: சேனாபதியாகிய லீசியா வரும்போது உங்கள் காரியங்களைத் திட்டமாய் விசாரிப்பேன் என்று சொல்லி (அப் 24:22)

தேசாதிபதியாகிய பேலிக்ஸ் பவுலின் வழக்கு விசாரணையைத் தள்ளிப் போடுகிறான். பேலிக்ஸ் யூதமார்க்கத்தின் விஷயங்களை விவரமாய் அறிந்திருக்கிறான். பிரதான ஆசாரியரும் மூப்பரும் தாங்கள் யூதமார்க்கத்தின் விஷயங்களை விவரமாக அறிந்திருப்பதாக தங்களுக்குள் எண்ணிக்கொள்கிறார்கள். ஆனாலும் இவர்களைவிட பேலிக்ஸ் யூதமார்க்கத்தின் விஷயங்களை விவரமாக அறிந்திருப்பதாக வேதத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

யூதமார்க்கத்தைப் பற்றி அறிந்திருக்கிற பேலிக்ஸ், கிறிஸ்தவ மார்க்கத்தைப் பற்றியும் அறிந்திருக்கிறான். கிறிஸ்தவ மார்க்கம் தீமையான மார்க்கம் அல்ல என்றும், யூதருக்குள்ளே கலகம் எழுப்புகிற மார்க்கமல்ல என்றும், யூதருடைய தேவாலயத்தை தீட்டுப்படுத்துகிற மார்க்கமல்ல என்றும் பேலிக்ஸ் தெரிந்து கொண்டிருக்கிறான். ஆலோசனைச் சங்கத்தார் பிராது பண்ணுகிறதுபோல, கிறிஸ்தவ மார்க்கம் ஒரு மோசமான மார்க்கமல்ல என்பதை பேலிக்ஸ் அறிந்து வைத்திருப்பதினால், பவுலின் காரியங்களை அவசரப்பட்டு விசாரித்து உடனே தீர்ப்பு சொல்லி விடாமல், சேனாபதியாகிய லீசியா வரும்போது, அவனிடமும் இந்த வழக்கைப்பற்றி தெளிவாகக் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம் என்றும், திட்டமாய் விசாரிக்கலாம் என்றும் பேலிக்ஸ் தீர்மானம்பண்ணுகிறான்.

யூதருக்குள் கலகம் எழுப்பியதற்காக பவுல் தண்டிக்கப்படவேண்டுமா, அல்லது ஆலோசனைச்சங்கத்தார் அவ்வப்போது ஜனங்கள் மத்தியிலே கலகம் எழுப்புவதற்காக அவர்கள் தண்டிக்கப்பட வேண்டுமா என்பதை தேசாதிபதிதான் தீர்மானம்பண்ண வேண்டும். பவுலின் வழக்கை விசாரிக்கும் போது, சேனாபதியிடமும் அதைப்பற்றி கேட்டு அறிந்து விசாரித்து, இவர்களுடைய காரியங்களை திட்டமாக விசாரிப்பதாக பேலிக்ஸ் அறிவித்துவிடுகிறான்.

பேலிக்ஸ் வழக்கைத் தள்ளிப் போடுவது பிரதான ஆசாரியனுக்கும் மூப்பருக்கும் ஏமாற்றமாகயிருந்திருக்கும். பவுல் உடனே தண்டிக்கப்பட வேண்டுமென்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். தேசாதிபதி தண்டிக்க வில்லையென்றாலும், தங்களுடைய நியாயப்பிரமாணத்தின் பிரகாரமாக பவுலை விசாரித்து தண்டிக்கிற அதிகாரம் தங்களுக்கு வேண்டுமென்று ஆலோசனைச்சங்கத்தார் விரும்புகிறார்கள். இவர்களுடைய விருப்பம் உடனே நிறைவேறவில்லை. இதனால் இவர்களுக்கு ஏமாற்றமுண்டாயிற்று.

கர்த்தருடைய பிள்ளைகளுக்கு விரோதமாக ஆலோசனைச் சங்கத்தாரைப் போல பல சத்துருக்கள் எழும்புகிறார்கள். கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை சத்துருக்களின் கைகளிலிருந்து விலக்கி, விடுவித்துப் பாதுகாக்கிறார். தம்முடைய பிள்ளைகளைப் பாதுகாப்பதற்கு, சில சமயங்களில் அவர்களுடைய சிநேகிதரைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, அந்நியர்களைப் பயன்படுத்தியும் தம்முடைய பிள்ளைகளைப் பாதுகாக்கிறார். ஆலோசனைச் சங்கத்தாரின் கொலை வெறியிலிருந்து பவுலைப் பாதுகாப்பதற்கு, கர்த்தர் அந்நியனாகிய பேலிக்ஸைப் பயன்படுத்துகிறார்.

பேலிக்ஸ் பவுலின் வழக்கை விசாரித்து, அவன் நிரபராதி என்று தீர்ப்பளித்து அவனை உடனே விடுதலைபண்ணிவிடவில்லை. தன்னுடைய வழக்கு விசாரணை உடனே நிறைவு பெறாமல், காலதாமதமாவது பவுலுக்கும் ஏமாற்றமாக இருந்திருக்கும். பவுலின் ஊழியத்திற்கு காவலிலிருப்பது ஒரு தடையாகவே இருக்கிறது. தேசாதிபதியாகிய பேலிக்ஸ் தேவனுக்குப் பயப்படுகிறவனல்ல. மனுஷரை நேசிக்கிறவனுமல்ல. கல்மனமுள்ளவன். கொடூரசிந்தையுடையவன். இப்படிப்பட்ட துன்மார்க்கனிடத்திலிருந்து நீதியான தீர்ப்பை யாரும் எதிர்பார்க்கமுடியாது.

பவுலை காவல்பண்ணவும்

பவுலைக் காவல்பண்ணவும், கண்டிப்பில்லாமல் நடத்தவும், அவனுக்கு ஊழியஞ்செய்கிறதற்கும் அவனைக் கண்டு கொள்ளுகிறவதற்கும் வருகிற அவனுடைய மனுஷர்களில் ஒருவரையும் தடைசெய்யாதிருக்கவும் நூற்றுக்கு அதிபதியானவனுக்குக் கட்டளையிட்டு, அவர்களைக் காத்திருக்கும்படி செய்தான் (அப் 24:23).

தேசாதிபதி பவுலின் வழக்கு விசாரணையைத் தள்ளிவைத்துவிட்டு, அவனை காவல்பண்ணுமாறு உத்தரவிடுகிறான். தன்னைப்போலவே பவுலும் ஒரு முக்கியமான மனுஷன் என்று தேசாதிபதி நினைக்கிறான். பவுலைக் கண்டு கொள்வதற்கு அவனுடைய சிநேகிதர்கள் வருவார்கள். அவனுடைய மனுஷர்களில் ஒருவரையும் தடைபண்ணக்கூடாது என்றும் பேலிக்ஸ் தீர்மானம் பண்ணுகிறான். பவுலைக் கண்டிப்பில்லாமல் நடத்த வேண்டுமென்பது பேலிக்ஸின் கட்டளை. பவுலின் காவல் நீடிக்கப்படுகிறது. பவுலை காவல்பண்ணும் பொறுப்பை தேசாதிபதி நூற்றுக்கு அதிபதியிடம் ஒப்புக்கொடுக்கிறான்.

பவுல் காவலிலிருந்தாலும் அவனுக்கு சில சலுகைகள் கிடைக்கிறது. காவலில் அவன் கண்டிப்பில்லாமல் நடத்தப்படுகிறான். அவனுக்கு ஊழியம் செய்வதற்கு ஆட்கள் நியமிக்கப்படுகிறார்கள். அவனைக் கண்டுகொள்ள வருகிறவர்கள் யாரும் தடைபண்ணப்படவில்லை. பவுல் காவலில் வைக்கப்பட்டாலும், அவனுக்கு அங்கு ஓரளவு சுதந்தரம் இருக்கிறது.

பிரதான ஆசாரியனும் மூப்பரும் பவுலைக் கொன்றுபோட வேண்டுமென்று சதி ஆலோசனையோடிருக்கிறார்கள். மிகுந்த கோபத்தோடிருக்கிறார்கள். ஆனால் பேலிக்ஸோ பவுலுக்கு சுதந்தரம் கொடுத்து அவனைக் காவலில் வைக்கிறான். பவுல் காவலில் வைக்கப்பட்டாலும், அவனுக்கு ஓரளவு உரிமை கொடுத்து, அவனை ஆதரிக்கிறான். வீட்டுக்காவலில் வைக்கப்படுவதுபோல பவுல் காவலில் வைக்கப்பட்டிருக்கிறான். நூற்றுக்கு அதிபதியும், அவனுடைய சேவகரும் பவுலைக் காவல் காக்கிறார்கள்.

கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசம்

சில நாளைக்குப்பின்பு பேலிக்ஸ் யூத ஸ்திரீயாகிய தன் மனைவி துருசில்லாளுடனேகூட வந்து, பவுலை அழைப்பித்து, கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தைக் குறித்து அவன் சொல்லக் கேட்டான். அவன், நீதியையும், இச்சையடக்கத்தையும், இனிவரும் நியாயத்தீர்ப்பையும் குறித்துப் பேசுகையில், பேலிக்ஸ் பயமடைந்து: இப்பொழுது நீ போகலாம், எனக்குச் சமயமானபோது உன்னை அழைப்பிப்பேன் என்றான் (அப் 24:24,25).

பேலிக்ஸ் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தைக்குறித்து கேட்டு அறிந்து கொள்ளவேண்டுமென்று விரும்புகிறான். அதற்காக சில நாளைக்குப் பின்பு பேலிக்ஸ் பவுலை அழைத்து அவனிடத்தில் பேசுகிறான். பேலிக்ஸ் நியாயாசனத்தில் உட்கார்ந்திருக்கும்போது, அவன் பவுலிடத்தில் அதிகமாய் பேசவில்லை. அவனுடைய விசுவாசத்தைக்குறித்து அதிகமாய் விசாரித்தறிந்து கொள்ள வில்லை. ஆலோசனைச்சங்கத்தார் பவுலின்மீது பிராது பண்ணுவதைக் கேட்டு, பவுலிடத்திலிருக்கிற விசுவாசத்தைப் பற்றி கேட்டு அறிந்துகொள்ள வேண்டும் என்னும் ஆர்வம் பேலிக்ஸிற்கு உண்டாயிற்று.

பேலிக்ஸினுடைய மனைவியின் பேர் துருசில்லாள். இவள் ஒரு யூதஸ்திரீ. ஏரோது அக்கிரிப்பாவின் குமாரத்தி. துருசில்லாள் யூதமார்க்கத்தைப்பற்றி அறிந்திருக்கிறாள். நியாயப்பிரமாணத்தைக் கற்றிருக்கிறாள். இவளுக்கும் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தைக் குறித்து கேட்டு அறிந்துகொள்ளவேண்டும் என்னும் ஆவல் உண்டாயிற்று. ஒருவேளை பேலிக்ஸ் தன் மனைவியினுடைய விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக, பவுலை அழைப்பித்து, கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தைக்குறித்து அவன் சொல்ல, பேலிக்சும் அவன் மனைவி துருசில்லாளும் கேட்டிருக்கலாம்.

துருசில்லாள் யூதமார்க்கத்தைச் சேர்ந்த ஸ்திரீ. அவள் எந்த மார்க்கத்தைச் சேர்ந்தவள் என்பது முக்கியமல்ல. அவள் எப்படிப்பட்டவள் என்பதுதான் முக்கியம். இவள் ஒரு துன்மார்க்க ஸ்திரீ. கபடு நிறைந்தவள். உண்மையில்லாதவள். இவள் ஒரு வேசியென்று சரித்திர ஆசிரியர்கள் இவளைப் பற்றி எழுதியிருக்கிறார்கள். இவள் நியாயப் பிரமாணத்தைக் கற்றிருந்தாலும், யூதமார்க்கத்து ஸ்திரீயாக இருந்தாலும், இவளுடைய ஜீவியம் துன்மார்க்கமாக இருக்கிறது. நியாயப் பிரமாணமோ, தேவனுடைய கற்பனைகளோ இவளுடைய ஜீவியத்தை ஆளுகை செய்யவில்லை. இக்காலத்தில் ஒரு சிலர் துருசில்லாளைப் போலவே இருக்கிறார்கள். வேதத்தை அறிந்து வைத்திருக்கிறார்கள். ஆனால் வேதத்தின் பிரமாணம் இவர்களுடைய ஜீவியத்தை ஆளுகை செய்யவில்லை. விவாதத்திற்காக வேதவசனங்களைப் பயன்படுத்துகிறார்கள். ஆனால் வேதவசனம் தங்களுடைய ஜீவியத்தை ஆளுகை செய்வதை இவர்கள் விரும்பாமல் வெறுக்கிறார்கள்.

பவுல் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தைக்குறித்து பேலிக்ஸிற்கும் அவனுடைய மனைவி துருசில்லாளுக்கும் விவரித்துச் சொல்லுகிறான். பவுல் அதிசயங்களையும், அற்புதங்களையும் பற்றி அவர்களுக்குச் சொல்லுவான் என்றும், அதைக்கேட்டு ஆச்சரியப்படலாமென்றும், தேசாதிபதியும் அவன் மனைவியும் ஆவலோடு பவுலின் வார்த்தைகளைக் கேட்கிறார்கள். ஆனால் பவுலோ தேவனுடைய அற்புதங்களையும் அடையாளங்களையும் சொல்லுவதற்குப் பதிலாக, தேவன் மனுஷருக்கு எச்சரிப்பாகக் கொடுத்திருக்கும் கட்டளைகளை அவர்களுக்கு விவரமாகச் சொல்லுகிறான்.

பேலிக்ஸ் பவுலிடம் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தைக்குறித்து தனக்குச் சொல்லுமாறு கேட்டுக் கொண்டான். பவுலோ நீதியையும், இச்சையடக்கத்தையும், இனிவரும் நியாயத்தீர்ப்பையும் குறித்து அவர்களிடத்தில் பேசுகிறான். பவுலின் வார்த்தையில் தெளிவும் உறுதியும் இருக்கிறது. கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தில் நீதியும், இனிவரும் நியாயத்தீர்ப்பும் அடங்கியிருக்கிறது. நாம் கிறிஸ்துவில் விசுவாசம் வைத்தால், மகாநாளின் நியாயத்தீர்ப்பின்போது நமக்கு ஆசீர்வாதம் கிடைக்கும். இப்பிரபஞ்சத்தில் இச்சையடக்கமில்லாமல், இஷ்டம்போல துன்மார்க்கமாய் ஜீவித்தால் நியாயத்தீர்ப்பு நாளின்போது நமக்கு தண்டனையும் சாபமும் கிடைக்கும்.

புறஜாதி மார்க்கத்தாரும் நீதியையும், நியாயத்தையும், நற்குணத்தையும் பற்றி பேசுகிறார்கள். பவுல் இயேசு கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தைப்பற்றி தேசாதிபதியிடத்தில் பேசுகிறான். இயேசு கிறிஸ்துவை விசுவாசத்தால், நம்முடைய ஜீவியத்தில் நீதியோ, நியாயமோ, இச்சையடக்கமோ தேவையில்லை என்று பவுல் சொல்லியிருந்தால், தேசாதி பதியாகிய பேலிக்ஸ் உடனே இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு விசுவாசித்திருப்பான். ஆனால் பவுலோ தேசாதிபதியின் விருப்பத்தின்படி பேசாமல், சத்தியத்தை பயபக்தியோடு அறிவிக்கிறான். எதையும் மறைக்காமல் சொல்லுகிறான்.

தேசாதிபதியிடத்தில் நீதியும் இச்சையடக்கமும் இல்லை. அவன் இனிவரும் நியாயத்தீர்ப்பைக் குறித்து கவலையற்றவனாக ஜீவிக்கிறான். இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தால் தனக்கு ஆசீர்வாதம் கிடைக்குமென்று தேசாதிபதி நினைக்கிறான். பவுலோ இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கும்போது, நாம் நீதியாயும் இச்சையடக்கமாயும் ஜீவிக்க வேண்டியதன் அவசியத்தை அவனிடத்தில் வலியுறுத்துகிறான். விசுவாசமும் கிரியையும் இணைந்து செயல்பட வேண்டும். கிரியை இல்லாத விசுவாசம் செத்தது. தேவனுக்குப் பிரியமான கிரியைகளை நாம் நடப்பிக்க வேண்டும். இஷ்டம்போல வாழக்கூடாது.

ஒருதரம் மரிப்பதும் ஒருதரம் நியாயத்தீர்ப்பு அடைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து, நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தைக் காத்துக் கொள்ள வேண்டும். இனிவரும் நியாயத் தீர்ப்பைப் பற்றி கவலையில்லாமல் இருக்கிறவர்கள்தான், தங்கள் இஷ்டம் போல ஜீவிப்பார்கள். இவர்களிடத்தில் நீதியும் இச்சையடக்கமும் இருக்காது. இவர்கள்மீது நியாயத்தீர்ப்பு வரும்.

ஒரு சிலர் இப்பிரபஞ்சத்தில் ஜீவிக்கிற நாட்களை சந்தோஷமாக அனுபவிக்கவேண்டும் என்று தீர்மானித்து, துன்மார்க்கமாய் ஜீவிப்பார்கள். இது தங்களுடைய நாள் என்று இறுமாப்பாயிருக்கிறார்கள். பேலிக்ஸ் இவர்களைப் போலத்தான் இருக்கிறான். துன்மார்க்கமாய் ஜீவிக்கிறான். தான்தான் மற்றவர்களை நியாயந் தீர்க்க வேண்டியவன் என்றும், தன்னை நியாயந் தீர்க்கும் அதிகாரம் யாருக்கும் இல்லை யென்றும் இறுமாப் போடிருக்கிறான். இப்படிப்பட்டவர்கள் மீது கர்த்தருடைய நாள் வரப்போகிறது அவருடைய நியாயத்தீர்ப்பு நாள் வரப்போகிறது. அந்த நாளில், இப்போது நியாயாசனத்தில் அமர்ந்து நியாயந்தீர்க்கிற பேலிக்ஸ், கர்த்தருடைய நியாயாசனத்திற்கு முன்பாக நியாயந்தீர்க்கப்படுவான். தன்னுடைய ஜீவியத்தைக்குறித்து அவன் கர்த்தருக்கு முன்பாக கணக்கு ஒப்புவிக்கவேண்டும்.

பவுல் தேசாதிபதியிடம் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தைப் பற்றி சொல்லும் போது, முகஸ்துதி பண்ணாமல் சொல்லுகிறான். தேவனிடத்தில் பட்சபாத மில்லை. பவுல் தேசாதிபதியினிடத்திலும், துருசில்லாளிடத்திலும் பேசும் போது அவர்களுடைய மனச்சாட்சியோடு பேசுகிறான். அவர்களுடைய பாவங்களைக் குறித்து அவர்களுடைய மனச்சாட்சிகளே அவர்களை உணர்த்தும் வண்ணமாக, விசுவாசத்தோடும் தைரியமாயும் கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தை அறிவிக்கிறான்.

இயேசு கிறிஸ்துவை நம்முடைய இரட்சகராக ஏற்றுக்கொள்ளும்போது, அவர் நம்முடைய ஆத்துமாக்களை இரட்சிக்கிறார். இதுவே நமக்கு மெய்யான ஜீவன். அவர் நமக்கு நித்திய ஜீவனைக்கொடுக்கிறார். தேவனுடைய பாதுகாப்பே நமக்கு மெய்யான பாதுகாப்பு. தேவனுடைய அதிகாரமே சர்வ அதிகாரம். பேலிக்ஸ் தேசாதிபதியின் அதிகாரத்திலிருந்தாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அவனுக்கும் அதிகாரியாகயிருக்கிறார். அவனையும் இயேசுகிறிஸ்து நியாயந்தீர்ப்பார் என்னும் சத்தியத்தை பவுல் அவனுக்கு தெளிவாக எடுத்துச்சொல்லுகிறான்.

பவுல் இப்போது காவலில் வைக்கப்பட்டிருந்தாலும், அவன் சத்தியத்தைச் சொல்ல தயங்கவில்லை. பவுலுக்கு இப்போது ஊழியம் செய்ய அதிக வாய்ப்பில்லை. பேலிக்சும் துருசில்லாளும் பவுலிடத்தில் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தை கேட்பதற்காக வந்திருக்கிறார்கள். இவர்கள் இருவருமே துன்மார்க்கர்கள். பவுலின் பிரசங்கத்தைக் கேட்டு இவர்கள் இருவரும் உடனே மனந்திரும்புவதற்கு அதிக வாய்ப்பு இல்லை. ஆனாலும் கர்த்தர் தனக்குக் கொடுத்திருக்கிற வாய்ப்பை பவுல் நல்ல முறையில் பயன்படுத்துகிறான். விசுவாசத்தோடு சத்தியத்தை அறிவிக்கிறான். இனிவரும் நியாயத் தீர்ப்பைக் குறித்து இரண்டு பாவிகளுக்கும் எச்சரித்துச் சொல்லுகிறான்.

பவுல் ஒரு ஜாமக்காரனைப் போன்றவன். ஆபத்து வரும்போது ஜாமக்காரன் ஜனங்களை எச்சரிப்பான். அதுபோலவே தேசாதிபதியின் ஆத்துமாவுக்கு ஆபத்து வந்திருக்கிறது பவுல் அவனுக்கு எச்சரித்துச் சொல்லுகிறான். தேசாதிபதியும் அவனுடைய மனைவி துருசில்லாளும் சத்தியத்தைக் கேட்டு மனந்திரும்ப வேண்டும். இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து ஆத்தும இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளவேண்டும். நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்ள வேண்டும். பேலிக்சும் துருசில்லாளும் இரட்சிக்கப்பட வில்லையென்றால், அது அவர்களுக்குத்தான் கேடாக லபிக்கும். அவர்கள் தங்கள் ஆத்துமாக்களை நஷ்டப்படுத்திக் கொள்வார்கள்.

பவுல் நீதியையும் இச்சையடக்கத்தையும், இனிவரும் நியாயத் தீர்ப்பையும் குறித்து தேசாதிபதியிடம் பேசுகிறான். தேசாதிபதியாகிய பேலிக்ஸ் பவுல் பேசுவதைக்கேட்டு பயமடைகிறான். பவுல் தேசாதிபதிக்கு முன்பாக பயப்படவில்லை. ஆனால் பவுலுக்கு முன்பாக தேசாதிபதி பயப்படுகிறான். பவுலின் வார்த்தைகளைக்கேட்டு துருசில்லாள் பயப்பட்டதாக இங்கு எழுதப்படவில்லை. இவளும் பேலிக்ஸைப் போலவே துன்மார்க்கம் மிகுந்தவள்தான்.

தேவனுடைய வார்த்தை வல்லமையுள்ளது. இருதயத்தை ஆராய்ந்து பார்க்கக் கூடியது. இருதயத்தில் பெருமையுள்ள பாவிகளுக்குள்ளும் சத்திய வசனம் கிரியை செய்கிறது. அவர்களுடைய பாவங்களை உணர்த்துகிறது. அவர்கள் எவ்வளவு பெரிய அதிகாரத்திலுள்ளவர் களாகயிருந்தாலும், அவர்களை எச்சரிக்கிறது. தேவனுடைய எச்சரிப்பைப் பெறும்போது பெரியோரும் சிறியோரும், அதிகாரத்திலிருக்கிறவர்களும், சாதாரண ஜனங்களும் பயமடைகிறார்கள். பயமடைந்தால் மாத்திரம் போதாது. மனந்திருந்தவேண்டும்.

பவுல் பேசுவதைக்கேட்டு பேலிக்ஸ் பயமடைந்தாலும், பவுலுக்கு முன்பாக அவன் தன் பயத்தை வெளிப்படுத்திக் காண்பிக்க விரும்பவில்லை. அவன் பவுலிடம் "இப்பொழுது நீ போகலாம், எனக்கு சமயமானபோது உன்னை அழைப்பிப்பேன்" என்று சொல்லுகிறான். கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தைக் கேட்டு பேலிக்ஸ் பயப்படுகிறான். இவனுடைய உள்ளத்தில் பயம் மாத்திரமே வந்திருக்கிறது. மனந்திரும்புதலோ, மனமாற்றமோ வரவில்லை. சுவிசேஷத்தைக் கேட்டு பயப்படுவதினால் நமக்கு ஒரு பிரயோஜனமும் உண்டாகாது. நம்முடைய பாவங்கள் உணர்த்தப்படும்போது, நாம் மனந்திரும்பவேண்டும். நம்முடைய இரட்சிப்புக்கு இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டும். அப்போதுதான் ஆத்தும இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இக்காலத்தில் பேலிக்சைப்போலவே ஏராளமானோர் சுவிசேஷத்தைக் கேட்கிறார்கள். கேட்டும் அவர்களுடைய உள்ளத்தில் எந்தவித மாற்றமும் உண்டாவதில்லை. ஒரு சிலர் பாவத்தின் விளைவைக் குறித்து நினைத்து பயமடைகிறார்கள். சாபத்தையும் மரணத்தையும் நினைத்துப் பயப்படுகிறார்கள். பயம் வந்தாலும் அவர்கள் பாவத்தை நேசிக்கிறார்கள். பாவத்திலேயே தொடர்ந்து ஜீவிக்கிறார்கள். பாவத்தோடு உடன்படிக்கை பண்ணிக் கொள்கிறார்கள். பாவத்தைக் குறித்தும், அதன் தீயவிளைவுகளைக் குறித்தும் பயமிருந்தாலும், பாவத்தைவிட்டு விலகி ஜீவிக்கவேண்டும் என்னும் தீர்மானம் அவர்களிடத்திலில்லை.

பவுல் பேலிக்சிடம் நீதியையும், இச்சையடக்கத்தையும், இனிவரும் நியாயத் தீர்ப்பையும் குறித்து பேசுகிறான். பேலிக்ஸ் அதைக் கேட்டு பயமடைகிறான். வேதவசனம் தன் இருதயத்தில் கிரியை செய்ய அனுமதிக்க மறுக்கிறான். வேதவசனம் அவனை உணர்த்துகிறது. அதனால் அவனுக்குள் பயமுண்டாயிற்று. சத்திய வசனம் தொடர்ந்து தனக்குள் கிரியை செய்ய அவன் அனுமதித்தால், அவன் தன் ஆத்துமாவைக்குறித்து நல்ல தீர்மானம் எடுக்க முடியும். ஆனால் அவனோ, சத்திய வசனத்தைக் கேட்டவுடன், அது தனக்குள் கிரியை செய்ய அனுமதி கொடுக்காமல், தன்னுடைய கவனத்தை வேறு பக்கமாகத் திருப்புகிறான்.

பவுல் தன்னிடத்தில் இனிவரும் நியாயத்தீர்ப்பைப்பற்றி பேசும் போது, "அந்த நியாயத்தீர்ப்பிலிருந்து தப்பித்துக் கொள்ள தான் என்னசெய்ய வேண்டும்" என்று அவனிடத்திலிலேயே கேட்டிருக்கலாம். பவுலும் அவனுக்கு பிரயோஜனமுள்ள ஆலோசனை சொல்லியிருப்பான். ஆனால் பேலிக்ஸ் நியாயத்தீர்ப்பிலிருந்து தப்பித்துக்கொள்ள வகைதேடுவதற்குப் பதிலாக, தன்னிடத்தில் நியாயத்தீர்ப்பைப் பற்றி பேசுகிற பவுலிடத்திலிருந்து தப்பித்துக் கொள்ள வகைதேடுகிறான். நீதியையும் இச்சையடக்கத்தையும் பற்றி தன்னிடத்தில் பேசுகிற பவுலிடம், "இப்பொழுது நீ போகலாம், எனக்கு சமயமானபோது உன்னை அழைப்பிப்பேன்" என்று சொல்லி அவனை அனுப்பிவிடுகிறான்.

ஒரு கடன்காரன் தான் பட்ட கடனை அடைக்க முடியாமல், கடன்பட்டவனிடம், கடனை அடைப்பதற்கு மேலும் ஒருநாள் அவகாசம் கேட்பதுபோல, பேலிக்ஸ் பவுலிடத்தில் அவகாசம் கேட்கிறான். பேலிக்சுக்கும் துருசில்லாளுக்கும் இயேசு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தைக்குறித்து பவுல் தெளிவாக உபதேசம்பண்ணியிருக்கிறான். நீதியையும், இச்சையடக்கத்தையும், இனிவரும் நியாயத்தீர்ப்பையும் பற்றி பவுல் அவர்களுக்கு விரிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறான். பவுலின் உபதேசத்தைக் கேட்டு ஒருவேளை இவர்கள் இருவரும் பயமடைந்து, சோர்ந்துபோயிருக்கலாம். இதற்குமேல் பவுலின் வார்த்தைகளைக்கேட்டால், தன்னுடைய பயம் அதிகரிக்கும் என்றோ அல்லது இதற்குமேல் தாங்கிக்கொள்ள முடியாது என்று நினைத்து, தேசாதிபதி பவுலை அனுப்பிவிடுகிறான்.

பேலிக்ஸ் பவுலை அனுப்பும்போது "இப்பொழுது நீ போகலாம், எனக்கு சமயமானபோது உன்னை அழைப்பிப்பேன்" என்று சொல்லி அவனை அனுப்புகிறான். தேசாதிபதிக்கு இதுவே இரட்சிப்பின் வேளை. இரும்பை சூடாக இருக்கும்போதே வளைக்க வேண்டும். அதை வளைப்பதற்கு அதுதான் ஏற்றவேளை. அதுபோலவே தேசாதிபதி இரட்சிக்கப்படுவதற்கு இதுவே ஏற்றவேளை. ஆனால் அவனோ தனக்கு இது ஏற்ற வேளையில்லை என்று நினைத்து, தன்னுடைய ஆத்தும இரட்சிப்பை அலட்சியப்படுத்தி விடுகிறான்.

பேலிக்ஸ் தன்னுடைய இருதயத்தில் இப்போது பாவத்தைக்குறித்தும், இனிவரும் நியாயத் தீர்ப்பைக் குறித்தும் உணர்த்தப்பட்டிருக்கிறான். அவன் அதைப்பற்றி உணர்த்தப்படும் போது, இயேசுகிறிஸ்துவின் சமுகத்தில் வந்து, தன்னுடைய பாவத்தை அறிக்கை செய்து, தன்னை முழுவதுமாக கர்த்தரிடத்தில் ஒப்புக்கொடுக்கவேண்டும். அப்போது இயேசுகிறிஸ்து அவனுக்கு ஆத்தும இரட்சிப்பை கட்டளையிடுவார். ஆனால் பேலிக்ஸோ தன்னுடைய இரட்சிப்பின் வேளையை அலட்சியம் செய்து, வேறொரு வேளை வருவதற்காகக் காத்திருக்கிறான். வேறொரு வேளை அவனுக்கு வருமோ அல்லது வராதோ என்பது அவனுக்கே தெரியாது. நம்முடைய ஆத்தும இரட்சிப்பை காலதாமதம்பண்ணுவது மிகவும் ஆபத்தானது.

"எனக்கு சமயமானபோது உன்னை அழைப்பிப்பேன்" என்று பேலிக்ஸ் பவுலிடம் சொல்லுகிறான். அதன் பின்பு அவனுக்கு சமயமாயிற்றோ அல்லது ஆகவில்லையோ என்பது தெரியவில்லை. அவனுடைய இரட்சிப்புக்கு இதைப்போன்ற ஏற்றவேளை மறுபடியும் அவனுக்கு உண்டாயிற்றோ அல்லது உண்டாகவில்லையோ என்பதும் தெரியவில்லை. பேலிக்சிற்கு இது தான் ஏற்ற சமயம். அந்த சமயத்தை அவன் தனக்குப் பிரயோஜனமாக பயன்படுத்திக் கொள்ளவில்லை. நம்முடைய வாழ்க்கையில் கர்த்தர் நமக்குக் கொடுக்கிற தருணங்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். காலதாமதம்பண்ணக் கூடாது. காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளாமல், வேறு ஏதாவது சாக்குப் போக்குகள் சொல்லக்கூடாது. இதுவே இரட்சிப்பின் வேளை. இதுவே அநுக்கிரக காலம்.

பணங்கொடுப்பான்

மேலும், அவன் பவுலை விடுதலை பண்ணும்படி, தனக்கு அவன் பணங் கொடுப்பானென்று நம்பிக்கையுள்ளவனாயிருந்தான்; அதினிமித்தம் அவன் அநேகந்தரம் அவனை அழைத்து, அவனுடனே பேசினான் (அப் 24:26).

பவுல் மரணத்திற்கு ஏதுவானதோ அல்லது கட்டுகளுக்கு ஏதுவானதோ ஒரு குற்றமும் செய்யவில்லை. இது தேசாதிபதிக்கும் தெரியும். ஆனாலும் பேலிக்ஸ் பவுலை விடுதலைபண்ணாமல் காவல் பண்ணுகிறான். நிரபராதியை காவலில் அடைத்துவைப்பது நியாயமல்ல. விசாரணைக்காக சிறிது காலம் காவலில் வைத்திருக்கலாம். ஆனால் பேலிக்ஸ் பவுலை ஒரு சில சொந்தக் காரணங்களுக்காக இரண்டு வருஷம் காவலில் வைத்திருக்கிறான். அதன்பின்பு இவனுக்குப் பதிலாய் பொர்க்கியுபெஸ்து என்பவன் தேசாதிபதியாக வருகிறான். அப்போது பேலிக்ஸ் யூதருக்கு தயவுசெய்ய மனதாய் பவுலைக் காவலில் வைத்துவிட்டுப்போகிறான்.

பேலிக்ஸ் பணத்தாசை பிடித்தவன். பவுலை விடுதலைபண்ணும்படி தனக்கு அவன் பணங்கொடுப்பான் என்று நம்பிக்கையுள்ளவனாயிருக்கிறான். பவுலுக்கு ஏராளமான சிநேகிதர்கள் இருக்கிறார்கள். பவுல் காவலிலிருந்த காலத்தில் அவனுடைய மனுஷர்களில் அநேகர் அவனைக் கண்டுகொள்வதற்கு வந்ததை தேசாதிபதி கவனித்துக் கொண்டிருக்கிறான். பவுலின் சிநேகிதர்களில் சிலர் செல்வந்தர்களாக இருக்கக்கூடும். பவுலை விடுவிக்க ஒருவேளை அவர்கள் தனக்கு பணங்கொடுப்பார்கள் என்று பேலிக்ஸ் நம்பிக்கையாயிருக்கிறான்.

பேலிக்ஸ் தேசாதிபதியின் நியாயாசனத்தில் அமர்ந்து நியாயம் செய்யவேண்டியவன். ஆனால் அவனோ தன் கைக்குப் பணம் வந்தால்தான் தன்னுடைய கடமையைச் செய்கிறான். பணத்திற்காக பவுலின் காவலை நீடிக்கிறான். அநேகந்தரம் அவன் பவுலை அழைத்து, அவன் தனக்கு பணங்கொடுப்பான் என்று நினைத்து, அவனோடே பேசுகிறான். அவன் பணங் கொடுக்கக்கூடிய மனநிலைமையிலிருக்கிறானா, பணங் கொடுப்பதற்குரிய வாய்ப்புக்கள் அவனுக்கு இருக்கிறதா, பவுலை விடுதலை பண்ணினால் தனக்கு என்ன ஆதாயம் கிடைக்கும் என்றெல்லாம் கணக்குப் பார்த்து, பவுலை அநேகந்தரம் அழைத்து அவனோடே பேசுகிறான்.

பேலிக்ஸ் பவுலை அழைப்பித்து, கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தைக் குறித்து அவன் சொல்லக்கேட்டான். பவுல் அவனிடம் நீதியையும், இச்சையடக்கத்தையும், இனிவரும் நியாயத் தீர்ப்பையும் குறித்துப் பேசினான். பேலிக்ஸ் பவுல் சொன்னதையெல்லாம் கேட்டுவிட்டு, "இப்பொழுது நீ போகலாம், எனக்கு சமயமானபோது உன்னை அழைப்பிப்பேன்" என்று சொல்லி அவனை அனுப்பிவிட்டான். இரட்சிக்கப்படுவதற்கு பேலிக்ஸிற்கு சமயம் வாய்க்கவில்லை. ஆனால் அவனிடத்தில் பணம் வாங்குவதற்கு, எப்போதுமே சமயம் வாய்த்திருக்கிறது. பவுலை விடுதலை செய்வதற்கு அவனிடத்தில் பணம் வாங்கவேண்டும் என்பதே தேசாதிபதியின் முக்கிய குறிக்கோளாயிருக்கிறது. பவுல் ஒரு செல்வந்தனல்ல. பவுலை விடுவிப்பதற்கு அவனால் பணங்கொடுக்க முடியாது. ஆனால் பவுலுக்கு உதவி செய்ய ஏராளமானோர் இருக்கிறார்கள் என்பதை தேசாதிபதி அறிந்து வைத்திருக்கிறான்.

பவுல் தேசாதிபதிக்கு பணங் கொடுத்து விடுதலையாக வேண்டுமா என்பது பற்றி வேதபண்டிதர்கள் இரண்டு விதமாக கருத்து சொல்லுகிறார்கள். பணங்கொடுத்து விடுதலையாவதினால் தவறு ஒன்றுமில்லை என்று ஒரு சிலரும், விடுதலையாவதற்கு பவுல் பணங் கொடுக்கக்கூடாது என்று வேறு சிலரும் தங்கள் கருத்துக்களைச் சொல்லுகிறார்கள்.

ஒரு மனுஷனுக்கு லஞ்சம் கொடுத்து, அநியாயமான ஒரு காரியத்தை செய்யச் சொல்லுவது தவறு. ஆனால் பவுலோ ஒரு தப்பிதமும் செய்யவில்லை. அவனிடத்தில் மரணத்திற்கேதுவான குற்றமோ, கட்டுகளுக்கு ஏதுவான குற்றமோ காணப்படவில்லை. அவன் ஒரு நிரபராதி. விடுவிக்கப்பட வேண்டியவன். ஆனால் தேசாதிபதியோ, பணங்கொடுத்தால்தான் பவுலை விடுவிக்க முடியும் என்று பிடிவாதமாகயிருக்கிறான். ஒரு நீதியான காரியத்தைச் செய்வதற்குக்கூட தனக்கு பணம் வேண்டும் என்று எதிர்பார்க்கிறான். இப்படிப்பட்ட சூழ்நிலையில் பவுலை விடுதலை பண்ணுவதற்காக யாராவது பேலிக்ஸிடம் பணங்கொடுப்பதில் தவறில்லை என்று ஒரு சிலர் கூறுகிறார்கள்.

பவுல் எருசலேமுக்குப்போகவேண்டும் என்று நினைத்தபோது, செசரியா பட்டணத்திலுள்ள சீஷர்கள் அவனை அங்கு போகவேண்டாமென்று தடை பண்ணினார்கள். அழுதார்கள். பவுலின் இருதயம் உடைந்து போகுமளவுக்கு அவர்கள் அழுதார்கள் (அப் 21:13). அந்தச் சீஷர்கள் இருக்கிற செசரியா பட்டணத்தில்தான் பேலிக்சும் இருக்கிறான். பவுல் இங்குதான் காவலில் வைக்கப்பட்டிருக்கிறான். பவுலுக்காக அழுதவர்கள், பவுலை விடுதலை பண்ணுவதற்காக ஒருவேளை பணங் கொடுக்க முன்வரலாம்.

சீஷர்கள் பவுலின் மீதுள்ள பிரியத்தினால், பவுலை விடுதலை பண்ணுவதற்காக, தேசாதிபதிக்கு பணங் கொடுத்தாலும், தேசாதிபதி அந்தப் பணத்தை வாங்குவது தவறு. நீதியை விலை பேசக்கூடாது. பணத்திற்காக நீதி செய்ய விரும்புகிறவன், அதே பணத்திற்காக அநியாயம் செய்யவும் ஆயத்தமாயிருப்பான். பேலிக்ஸ் தவறு செய்வதற்கு பவுல் ஒரு காரணமாகயிருக்கக்கூடாது. ஆகையினால் பவுல் விடுதலை பெறுவதற்கு அவனோ அல்லது அவனுடைய சிநேகிதர்களோ பேலிக்ஸிற்கு பணங்கொடுக்க வேண்டியதில்லை என்று வேறு சிலர் இந்தச் சம்பவத்திற்கு விளக்கம் சொல்லுகிறார்கள்.

பொர்க்கியுபெஸ்து

இரண்டு வருஷம் சென்றபின்பு பேலிக்ஸ் என்பவனுக்குப் பதிலாய்ப் பொர்க்கியுபெஸ்து தேசாதிபதியாக வந்தான்; அப்பொழுது பேலிக்ஸ் யூதருக்கு தயவுசெய்ய மனதாய்ப் பவுலைக் காவலில் வைத்துவிட்டுப் போனான் (அப் 24:27).

பவுல் இரண்டு வருஷம் காவலிலிருக்கிறான். இரண்டு வருஷம் சென்றபின்பு பேலிக்ஸ் என்பவனுக்குப் பதிலாய் பொர்க்கியுபெஸ்து என்பவன் தேசாதிபதியாக வருகிறான். அப்பொழுது கூட பேலிக்ஸ் பவுலை விடுதலை பண்ணவில்லை. பேலிக்ஸ் யூதருக்கு தயவு செய்ய மனதாய் பவுலை காவலில் வைத்துவிட்டுப்போகிறான். பேலிக்ஸிற்கு யூதருடைய மனதைப் புண்படுத்த விரும்பவில்லை. பேலிக்ஸ் யூதருக்கு விரோதமாக ஏராளமான தப்பிதங்களைச் செய்திருக்கிறான். தான் செய்த தவறுகளுக்கு பிராயச்சித்தமாக யூதருக்கு தயவுசெய்ய விரும்புகிறான். யூதர்களைப் பிரியப்படுத்துவதற்காக பவுலின் காவலை நீடித்துவிட்டுப்போய்விடுகிறான்.

ஒரு சில தப்பிதங்களைச் செய்கிறவர்கள், தாங்கள் செய்த தப்பிதங்களை மூடி மறைப்பதற்காக, மேலும் மேலும் தப்பிதங்களைச் செய்வார்கள். பேலிக்ஸ் துர்க்குண முள்ளவன் என்பதை நிரூபித்து விட்டுப்போகிறான். தனக்கு பவுல் பணங்கொடுத்தால் அவனை விடுவிக்க மனதாயிருந்தான். பவுலை இலவசமாக விடுவிக்கவேண்டும். அதுதான் நீதியும் நியாயமும். ஆனால் பேலிக்ஸோ நீதி நியாயத்தைப் பற்றிக் கவலைப்படாமல், பணத்தின்மீது பற்றுதலாயிருக்கிறான். தன்னுடைய பதவி காலம் முடிந்த பின்புகூட, நீதியின்படி செயல்படவேண்டும் என்று தீர்மானிப்பதற்குப் பதிலாக, பவுலை காவலிலேயே வைத்துவிடுகிறான்.

பேலிக்ஸ் யூதருக்கு தயவுசெய்ய மனதாய் பவுலை காவலில் வைத்து விட்டுப்போகிறான். ஆனால் யூதர்களோ பேலிக்ஸ் தங்களுக்கு நன்மை செய்தானென்று ஒருபோதும் சொல்ல வில்லை. அவர்கள் இராயனுக்கு முன்பாக பேலிக்ஸிற்கு விரோதமாக பிராது பண்ணுகிறார்கள். மனுஷரைப் பிரியப்படுத்த விரும்புகிறவர்களின் முடிவு பரிதாபமாகயிருக்கும். நாம் மனுஷரைப் பிரியப்படுத்தினாலும், மனுஷர் நம்மைப் பிரியப்படுத்துவார்கள் என்னும் உத்தரவாதமில்லை. அதே வேளையில் நாம் தேவனைப்பிரியப்படுத்துவோம் என்றால், தேவன் நம்மை ஆசீர்வாதிப்பார். தேவனைப் பிரியப்படுத்துவதற்காக நாம் மனுஷருக்கு நன்மை செய்யும்போது, தேவன் நமக்கு ஏற்ற நன்மைகளைக் கொடுப்பார். பேலிக்ஸோ பவுக்குத் தீமை செய்து, யூதரைப் பிரியப்படுத்த மனதாயிருந்தான். இதனால் அவனுக்கு ஒரு பிரயோஜனமும் உண்டாகவில்லை.

25 அதிகாரம்

பவுலின் வழக்கு விசாரணை தேசாதிபதியாகிய பெஸ்துவின் காலத்திலும் தொடர்ந்து நடைபெறுகிறது (அப் 25:1-3). பவுலின் விசாரணையை எருசலேமில் நடத்தவேண்டுமென்று ஆலோசனைச்சங்கத்தார் விரும்புகிறார்கள். ஆனால் இந்த விசாரணை செசரியாவில் நடைபெற வேண்டுமென்று பெஸ்து ஆணையிடுகிறான் (அப் 25:4-6). பவுலுக்கு விரோதமாக யூதர்கள் அநேக குற்றங்களை அவன்மேல் சாட்டுகிறார்கள் (அப் 25:7). பவுலோ தான் ஒரு குற்றமும் செய்யவில்லை என்று சொல்லுகிறான் (அப் 25:8).

எருசலேமில் போய் தான் விசாரிக்கப்படுவதில் பவுலுக்கு சம்மதியில்லை. ஆகையினால் இராயனுக்கு அபயமிடுகிறான் (அப் 25:9-12). அகிரிப்பா ராஜா செசரியாவுக்கு வருகிறான். பெஸ்து பவுலின் சங்கதியை அகிரிப்பா ராஜாவிடம் சொல்லுகிறான் (அப் 25:13-21). பவுல் சொல்லுகிறதை கேட்க அகிரிப்பா மனதாயிருக்கிறான் (அப் 25:22). நியாயம் விசாரிக்கப்படுவதற்கு பவுல் கொண்டு வரப்படுகிறான் (அப் 25:23). பெஸ்து பவுலின் வழக்கு விசாரணையை ஆரம்பித்து வைக்கிறான் (அப் 25:24-27).

பொர்க்கியு பெஸ்து
அப் 25 : 1-3

அப் 25:1. பெஸ்து என்பவன் நாட்டிற்கு அதிபதியாக வந்து, மூன்றுநாளான பின்பு, செசரியாவிலிருந்து எருசலேமுக்குப் போனான்.

அப் 25:2. அப்பொழுது பிரதான ஆசாரியனும் யூதரில் முதன்மையானவர்களும் அவனிடத்தில் வந்து, பவுலுக்கு விரோதமாகப் பிராதுபண்ணி,

அப் 25:3. அவனை வழியிலே கொன்றுபோடும்படி சர்ப்பனையான யோசனையுள்ளவர்களாய், தங்கள் மேல் தயவுசெய்து, அவனை எருசலேமுக்கு அழைப்பிக்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டார்கள்.

எருசலேம்

பெஸ்து என்பவன் நாட்டிற்கு அதிபதியாக வந்து, மூன்றுநாளான பின்பு, செசரியாவிலிருந்து எருசலேமுக்குப் போனான் (அப் 25:1).

பேலிக்ஸ் என்பவனுக்குப் பதிலாக பொர்கியு பெஸ்து யூதேயா தேசத்திற்கு தேசாதிபதியாக வந்திருக்கிறான். ஆட்சி மாற்றம் உண்டாயிற்று. புதிய தேசாதிபதி வந்தால் புதிய சட்டம் பிறப்பிக்கப்படும். எல்லாம் புதிதாகும். பழைய பழக்க வழக்கங்கள் ஒழிந்துபோய் புதிய பழக்கங்கள் பிரவேசிக்கும். யூதேயா தேசத்தில் பேலிக்ஸ் இதுவரையிலும் தேசாதிபதியாக இருந்தான். இப்போது அவனுக்குப் பதிலாக, புதிய தேசாதிபதியாக பெஸ்து என்பவன் நாட்டிற்கு அதிபதியாக வந்திருக்கிறான். ஆட்சியில் மாற்றமுண்டாயிற்று. ஆனால் பவுலுக்கு ஒரு மாற்றமும் உண்டாகவில்லை. அவன் இன்னும் சிறையில் தான் இருக்கிறான். பெஸ்து பவுலைக் காவலிலிருந்து விடுதலைபண்ணவில்லை.

பவுல் காவலில் வைக்கப்பட்டு இரண்டு வருஷமாயிற்று. ஆனாலும் யூதருக்கு அவன்மீது கோபம் இன்னும் குறையவில்லை. அவனை கொன்றுபோட வேண்டுமென்று இன்னும் சர்ப்பனையான ஆலோசனையோடிருக்கிறார்கள். பெஸ்து என்பவன் நாட்டிற்கு அதிபதியாக வந்து மூன்றுநாளாயிற்று. அதன்பின்பு பெஸ்து செசரியாவிலிருந்து எருசலேமுக்குப் போகிறான். பொதுவாக தேசாதிபதி தங்கள் ஊருக்கு வரும்போது, யூதருடைய ஆலோசனைச் சங்கத்தார், அவனுக்கு முறைப்படி வரவேற்பு கொடுப்பது வழக்கம். பிரதான ஆசாரியனும் யூதரில் முதன்மையானவர்களும் புதிய தேசாதிபதியைச் சந்திக்கிறார்கள்.

பவுல் செசரியாவில் காவலில் வைக்கப்பட்டிருக்கிறான். இந்தப் பட்டணத்தில் பெஸ்து தேசாதிபதியான பின்பு மூன்றுநாட்கள் மாத்திரமே தங்கியிருக்கிறான். பெஸ்து எருசலேமுக்கு வந்தவுடன், யூதமார்க்கத்து தலைவர்கள் தங்களுடைய தேசத்தின் தேவைகள் எதையும் சொல்லாமல், பவுலைப்பற்றியே பேசுகிறார்கள்.

பவுலுக்கு விரோதமாக பிராது

அப்பொழுது பிரதான ஆசாரியனும் யூதரில் முதன்மையானவர்களும் அவனிடத்தில் வந்து, பவுலுக்கு விரோதமாகப் பிராதுபண்ணி, அவனை வழியிலே கொன்றுபோடும்படி சர்ப்பனையான யோசனையுள்ளவர்களாய், தங்கள் மேல் தயவுசெய்து, அவனை எருசலேமுக்கு அழைப்பிக்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டார்கள் (அப் 25:2,3).

பெஸ்து புதிய தேசாதிபதியாக பதவி ஏற்று மூன்று நாளான பின்பு செசரியாவிலிருந்து எருசலேமுக்கு வருகிறான். பிரதான ஆசாரியனும் யூதரில் முதன்மையானவர்களும் பெஸ்துவினிடத்தில் வருகிறார்கள். அவனிடத்தில் பவுலுக்கு விரோதமாக பிராது பண்ணுகிறார்கள். பவுலின் விசாரணை இன்னும் முடிவுபெறவில்லை. அதற்கு முன்பே யூதர்கள் தேசாதிபதியை தங்கள் பக்கமாகச் சேர்த்துக்கொள்ள பிரயத்தனம்பண்ணுகிறார்கள்.

பவுலை எருசலேமில் விசாரிப்பதற்கு தேசாதிபதி அனுமதி கொடுக்கவேண்டுமென்று அவனிடத்தில் வேண்டிக்கொள்கிறார்கள். இவர்களுடைய வார்த்தை வேறு. எண்ணம் வேறு. பவுலை எருசலேமுக்கு அழைத்துக்கொண்டு வந்தால், அவனை வழியிலே கொன்றுபோடும்படி சர்ப்பனையான, யோசனையுள்ளவர்களாக இருக்கிறார்கள். தேசாதிபதி அனுமதி கொடுத்தால்தான் வழக்கு விசாரணையை செசரியாவிலிருந்து எருசலேமுக்கு மாற்ற முடியும். ஆகையினால் தங்கள்மேல் தயவுசெய்து, பவுலை எருசலேமுக்கு அழைப்பிக்கவேண்டுமென்று, யூதர்கள் தேசாதிபதியிடம் வேண்டிக்கொள்கிறார்கள். பவுலின் வழக்கு விசாரணை எருசலேமில் நடைபெறுவதற்கு தேசாதிபதி உத்தரவு கொடுக்கவேண்டுமென்று அவனிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார்கள்.

பவுல் தேவாலயத்தை தீட்டுப்படுத்தினான் என்பது அவன்மீது கூறப்பட்டிருக்கிற குற்றச்சாட்டு. தீட்டுப்படுத்தின சம்பவம் எருசலேமில் நடைபெற்றிருக்கிறது. ஆகையினால் பவுலை எருசலேமில் வைத்து விசாரணை செய்வதுதான் நியாயமாகயிருக்கும் என்று யூதர்கள் தேசாதிபதியிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார்கள். பவுலை எருசலேமுக்கு அழைத்துக்கொண்டு வந்தால், அவனை வழியிலேயே கொன்றுபோடவேண்டும் என்பதுதான் இவர்களுடைய சர்ப்பனையான யோசனை.

குற்றம் சாட்டப்பட்ட ஒருவனை நீதியாய் விசாரித்து, அவன் செய்த குற்றம் நிரூபிக்கப்படும்போது, அவனுக்கு நியாயப்படி தண்டனை கொடுக்கவேண்டும். இதுதான் நீதியான செயல். குற்றம் சாட்டுகிறவர்கள், குற்றம் சாட்டப்பட்டவன்மீதுள்ள குற்றத்தை நிரூபிக்கவேண்டும். யூதர்கள் பவுலின்மீது குற்றம் சாட்டியிருக்கிறார்கள். ஆனால் இவர்கள் பவுலின்மீது சாட்டப்பட்டிருக்கிற குற்றத்தை நிரூபிப்பதற்குப் பதிலாக, அவனுக்கு விரோதமாக தேசாதிபதி தங்களுக்கு தயவு காண்பிக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள்.

பவுலின்மீது சுமத்தப்பட்ட குற்றத்தை யூதர்களால் ரூபிக்கமுடியவில்லை. இதனால் நியாயத்தின்படி அவனுக்கு தண்டனை கொடுப்பதற்கு வாய்ப்பில்லாமல் போயிற்று. எப்படியாவது பவுலைத் தண்டித்து, அவனைக் கொன்றுபோடவேண்டுமென்று யூதர்களில் சிலர் கொலைவெறியோடிருக்கிறார்கள். தங்களுடைய சர்ப்பனையான யோசனையினால் நிறைந்து, பவுலை எருசலேமுக்குக் கொண்டுவந்து, அவனுடைய வழக்கை இங்கு விசாரித்து, தங்களுக்கு தயவுபண்ணவேண்டுமென்று தேசாதிபதியிடம் விண்ணப்பம் பண்ணுகிறார்கள்.

ஆனால் தேசாதிபதியோ இவர்களுடைய விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. காவலில் வைக்கப்பட்டிருக்கிறவனுக்கு விரோதமாக யூதர்கள் விண்ணப்பம்பண்ணுவது முறையான செயல் அல்ல. பொதுவாக காவலில் வைக்கப்பட்டவனுக்கு ஆதரவாகத்தான் பாதிக்கப்பட்டவர்கள் தேசாதிபதியிடம் விண்ணப்பம் பண்ணுவார்கள். ஆனால் இங்கோ நிலமை தலைகீழாக மாறியிருக்கிறது. காவலில் வைக்கப்பட்டவனுக்கு விரோதமாக, தேசாதிபதி தங்களுக்குத் தயவு காண்பிக்கவேண்டுமென்று, பிரதான ஆசாரியனும் யூதரில் முதன்மையானவர்களும் விண்ணப்பம் பண்ணுகிறார்கள்.

செசரியா
அப் 25 : 4-8

அப் 25:4. அதற்கு பெஸ்து பிரதியுத்தரமாக: பவுலைச் செசரியாவிலே காவல் பண்ணியிருக்கிறதே; நானும் சீக்கிரமாக அங்கே போகிறேன்.

அப் 25:5. ஆகையால் உங்களில் திறமுள்ளவர்கள் கூடவந்து, அந்த மனுஷனிடத்தில் குற்றம் ஏதாகிலும் உண்டானால், அந்தக் குற்றத்தை அவன்மேல் சாட்டட்டும் என்றான்.

அப் 25:6. அவன் அவர்களிடத்திலே ஏறக்குறைய பத்துநாள் சஞ்சரித்து, பின்பு செசரியாவுக்குப் போய், மறுநாளிலே நியாயாசனத்தில் உட்கார்ந்து, பவுலைக் கொண்டுவரும்படி கட்டளையிட்டான்.

அப் 25:7. அவன் வந்தபோது, எருசலேமிலிருந்து வந்த யூதர்கள் அவனைச் சூழ்ந்து நின்று, தங்களால் ரூபிக்கக்கூடாத அநேகங் கொடிய குற்றங்களை அவன்மேல் சாட்டினார்கள்.

அப் 25:8. அதற்கு அவன் உத்தரவாக: நான் யூதருடைய வேதப் பிரமாணத்துக்காகிலும், தேவாலயத்துக்காகிலும், இராயருக்காகிலும் விரோதமாக ஒரு குற்றமும் செய்யவில்லையென்று சொன்னான்.

உங்களில் திறமுள்ளவர்கள்

அதற்கு பெஸ்து பிரதியுத்தரமாக: பவுலைச் செசரியாவிலே காவல்பண்ணியிருக்கிறதே; நானும் சீக்கிரமாக அங்கே போகிறேன். ஆகையால் உங்களில் திறமுள்ளவர்கள் கூடவந்து, அந்த மனுஷனிடத்தில் குற்றம் ஏதாகிலும் உண்டானால், அந்தக் குற்றத்தை அவன்மேல் சாட்டட்டும் என்றான் (அப் 25:4,5).

பவுலின் வழக்கு விசாரணை செசரியாவிலே நடைபெறவேண்டுமென்று பெஸ்து தீர்ப்பு சொல்லுகிறான். எருசலேமில் விசாரணை நடத்தவேண்டும் என்று விண்ணப்பம்பண்ணின யூதரின் வேண்டுகோளை நிராகரித்துவிடுகிறான். பவுல் செசரியாவிலே காவலில் வைக்கப்பட்டிருக்கிறான். தானும் சீக்கிரமாக செசரியாவுக்கு போவதாக பெஸ்து சொல்லுகிறான்.

யூதரின் விண்ணப்பத்திற்கு பெஸ்து மறுப்பு சொன்னதற்கு என்ன காரணம் என்பது தெளிவாகத் தெரியவில்லை. பவுலை அவனுடைய சத்துருக்களின் கைகளிலிருந்து விடுவித்து, அவனைப் பாதுகாப்பதற்காக தேவன் பல்வேறு உபாயங்களைக் கையாளுகிறார். இப்போது கர்த்தர் பெஸ்துவைப் பயன்படுத்துகிறார். பவுலை செசரியாவிலிருந்து எருசலேமுக்கு கொண்டுபோனால், யூதர்கள் அவனை வழியிலே கொன்றுபோடுவார்கள் என்பது கர்த்தருக்குத் தெரியும். ஆகையினால் பவுலை எருசலேமுக்கு அனுப்பாமல் தடைபண்ணுகிறார்.

கர்த்தர் நினைக்கிற காரியம் மாத்திரமே வாய்க்கும். கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாக, தேசாதிபதியாகிய பெஸ்து, யூதரின் விண்ணப்பத்திற்கு சம்மதம் தெரிவிக்க மறுத்துவிடுகிறான். தேவன் எப்போதுமே ஒரே மாதிரியான காரியத்தை செய்வார் என்று எதிர்பார்க்க முடியாது. அவர் புதிய புதிய காரியங்களைச் செய்யக்கூடியவர். தம்முடைய பிள்ளைகளின் இரட்சிப்புக்காக, தேவன் பல கிரியைகளை நடப்பிக்கிறார்.

பவுலை செசரியாவிலிருந்து எருசலேமுக்கு அழைத்துக்கொண்டு வந்து, அவனை அங்கு விசாரணை செய்யவேண்டுமென்று யூதர்கள் விரும்புகிறார்கள். ஆனால் தேசாதிபதியோ யூதர்கள் எருசலேமிலிருந்து செசரியாவுக்கு வந்து, பவுலினிடத்தில் குற்றம் ஏதாகிலும் உண்டானால், அந்தக் குற்றத்தை அவன்மேல் சாட்டட்டும் என்று அறிவித்துவிடுகிறான். "உங்களில் திறமுள்ளவர்கள் கூடவந்து பவுல்மேல் குற்றம் சாட்டட்டும்" என்று பெஸ்து யூதர்களுக்குச் சொல்லுகிறான்.

பவுல்மீது சுமத்தப்பட்டிருக்கிற குற்றச்சாட்டுக்கள் ரூபிக்கப்பட வேண்டுமென்று பெஸ்து எதிர்பார்க்கிறான். யூதர்கள் சொல்லுகிறார்கள் என்பதற்காக பெஸ்து பவுலை குற்றவாளியாக நினைக்கவில்லை. பவுல் குற்றவாளியாக இருப்பானென்றால், அவனுடைய குற்றத்தை ரூபிக்கவேண்டிய பொறுப்பு, அவன்மீது குற்றம் சுமத்தியவர்களுக்கு உள்ளது. தேசாதிபதிக்கு முன்பாக எல்லோராலும் வழக்காட முடியாது. சாதுரிய ஞானமுள்ளவர்களும், திறமையுள்ளவர்களும் மாத்திரமே தேசாதிபதியிடம் பேசமுடியும். ஆகையினால் பெஸ்து யூதரிடம் "உங்களில் திறமுள்ளவர்கள்" எருசலேமுக்கு வந்து பவுல்மீது குற்றம்சாட்டுங்கள் என்று சொல்லிவிடுகிறான்.

மறுபடியும் செசரியாவில்

அவன் அவர்களிடத்திலே ஏறக்குறைய பத்துநாள் சஞ்சரித்து, பின்பு செசரியாவுக்குப் போய், மறுநாளிலே நியாயாசனத்தில் உட்கார்ந்து, பவுலைக் கொண்டுவரும்படி கட்டளையிட்டான் (அப் 25:6).

பெஸ்து எருசலேமில் ஏறக்குறைய பத்துநாள் சஞ்சரிக்கிறான். அதன்பின்பு மறுபடியும் செசரியாவுக்குப் போகிறான். பவுல்மீதுள்ள வழக்கு சீக்கிரத்தில் விசாரிக்கப்பட வேண்டுமென்று யூதர்கள் விரும்புகிறார்கள். ஆகையினால் பெஸ்து செசரியாவுக்குப் போன மறுநாளிலே, வேறு எந்த அரசு வேலையையும் பார்க்காமல், நியாயசனத்தில் உட்கார்ந்து, பவுலைக் கொண்டுவரும்படி கட்டளையிடுகிறான்.

கொடிய குற்றங்கள்

அவன் வந்தபோது, எருசலேமிலிருந்து வந்த யூதர்கள் அவனைச் சூழ்ந்து நின்று, தங்களால் ரூபிக்கக்கூடாத அநேகங் கொடிய குற்றங்களை அவன்மேல் சாட்டினார்கள் (அப் 25:7).

எருசலேமிலிருந்து வந்த யூதர்கள் பவுல்மீது குற்றம் சாட்டுகிறார்கள். பெஸ்து நியாயசனத்தில் உட்கார்ந்திருக்கிறான். எருசலேமிலிருந்து வந்த யூதர்கள் பெஸ்துவைச் சூழ்ந்து நிற்கிறார்கள். யாரையோ பயமுறுத்துவதுபோல கூட்டமாகச் சூழ்ந்துநிற்கிறார்கள். ஒருவேளை தங்களுடைய விருப்பத்தின்படி தீர்ப்பு சொல்லவேண்டுமென்று தேசாதிபதியை பயமுறுத்துவதற்காக அவர்கள் பெஸ்துவைச் சூழ்ந்து நின்றிருக்கலாம். அல்லது பவுலைப் பயமுறுத்துவதற்காக அங்கு கூட்டமாய் வந்திருக்கலாம். அவர்களுடைய முயற்சிகள் ஒன்றும் பலனளிக்கவில்லை எல்லாம் வீணாயிற்று. பெஸ்து இவர்களுடைய உரத்த சத்தத்திற்கும், கூட்டத்திற்கும் பயப்படுகிறவனல்ல. விசாரணையை நீதியாக நடத்தவேண்டுமென்று பெஸ்து தீர்மானிக்கிறான்.

எருசலேமிலிருந்து வந்த யூதர்கள், பெஸ்துவைச் சூழ்ந்து நின்று தங்களால் ரூபிக்கக்கூடாத அநேக கொடிய குற்றங்களை பவுலின்மேல் சாட்டுகிறார்கள். தேசத்திலே பவுல் ஒரு கொள்ளைநோயாக இருக்கிறான் என்றும், யூதர்கள் மத்தியிலேயே கலகம் எழுப்புகிறவன் என்றும் அவன்மீது குற்றம் சொல்லுகிறார்கள். இந்தக் குற்றங்கள் தவிர இன்னும் அநேக மோசமான குற்றச்சாட்டுக்களை அவன்மேல் சாட்டுகிறார்கள். ஆனால் அவர்கள் சொல்லுகிற குற்றச்சாட்டுக்கள் எதையும் அவர்களால் ரூபிக்க முடியவில்லை. அவர்கள் பவுலுக்கு விரோதமாக என்னென்ன குற்றச்சாட்டுக்களைக் கூறுகிறார்களோ, அந்தக் குற்றச்சாட்டுக்கள் எதிலும் உண்மையில்லை. எல்லாம் பொய்யாகவே இருக்கிறது. யூதர்கள் நியாயசனத்திற்கு முன்பாக நின்றாலும், பொய்சொல்லுவதற்கு தயங்கவில்லை.

ஒரு குற்றமும் செய்யவில்லை

அதற்கு அவன் உத்தரவாக: நான் யூதருடைய வேதப் பிரமாணத்துக்காகிலும், தேவாலயத்துக்காகிலும், இராயருக்காகிலும் விரோதமாக ஒரு குற்றமும் செய்யவில்லையென்று சொன்னான் (அப் 25:8).

யூதர்கள் தன்மேல் குற்றம்சாட்டின பின்பு, பவுல் தான் ஒரு நிரபராதி என்றும், தன்மீது கூறப்படுகிற ஒரு குற்றமும் தான் செய்யவில்லையென்றும் உத்தரவு சொல்லுகிறான். யூதருடைய வேதப்பிரமாணத்திற்கு விரோதமாகவோ, தேவாலயத்திற்கு விரோதமாகவோ, இராயனுக்கு விரோதமாகவோ தான் ஒரு குற்றமும் செய்யவில்லையென்று பவுல் உத்தரவு சொல்லுகிறான்.

பவுல் ஒருபோதும் யூதருடைய சட்டதிட்டங்களை மீறவில்லை. அவர்களுடைய சட்டங்களைப் பவுல் உறுதிபண்ணுகிறான். இயேசுகிறிஸ்துவின் உபதேசம் நியாயப்பிரமாணத்திற்கு ஒரு முடிவாயிருக்கிறது. கிறிஸ்துவின் சுவிசேஷம் நியாயப்பிரமாணத்திற்கு விரோதமானதல்ல. பவுல் ஒருபோதும் தேவாலயத்தைத் தீட்டுப்படுத்தியதுமில்லை. இராயனுக்கு விரோதமாகவோ அல்லது ரோமப்பேரரசுக்கு விரோதமாகவோ பவுல் ஒருபோதும் கலகம் செய்ததுமில்லை. ஆனால் யூதர்களோ பவுல்மீது அநேக கொடிய குற்றங்களைச் சுமத்துகிறார்கள். அந்தக் குற்றங்களில் ஒன்றையும் அவர்களால் ரூபிக்க முடியவில்லை. பவுலும் அந்தக் குற்றங்கள் எதையும் தான் செய்யவில்லை என்று உத்தரவு சொல்லுகிறான்.

பவுல் தனக்காகப் பேசும்போது, நீதிக்காகவும், நியாயத்திற்காகவும் பேசுகிறான். தன்மீது குற்றச்சாட்டு கூறப்படும்போது, தான் குற்றமற்றவன் என்பதை நிரூபிக்கவேண்டியதும் பவுலின் கடமையாயிருக்கிறது. ஆகையினால் அமைதியாயிராமல், தன்மீது கூறப்படுகிற குற்றச்சாட்டுக்கள் அனைத்தையும் நியாயமாய் மறுக்கிறான்.

இராயனுக்கு அபயம்
அப் 25 : 9-12

அப் 25:9. அப்பொழுது பெஸ்து யூதருக்குத் தயவுசெய்ய மனதாய், பவுலை நோக்கி: நீ எருசலேமுக்குப் போய், அவ்விடத்திலே இந்தக் காரியங்களைக்குறித்து எனக்கு முன்பாக நியாயம் விசாரிக்கப்பட உனக்குச் சம்மதியா என்றான்.

அப் 25:10. அதற்குப் பவுல்: நான் இராயருடைய நியாயாசனத்துக்கு முன்பாக நிற்கிறேன். அதற்கு முன்பாக நான் நியாயம் விசாரிக்கப்பட வேண்டியது; யூதருக்கு நான் அநியாயம் ஒன்றும் செய்யவில்லை, அதை நீரும் நன்றாய் அறிந்திருக்கிறீர்.

அப் 25:11. நான் அநியாயஞ்செய்து, மரணத்துக்குப் பாத்திரமானது ஏதாகிலும் நடப்பித்ததுண்டானால், நான் சாகாதபடிக்கு மனுகேட்கமாட்டேன். இவர்கள் என் மேல் சாட்டுகிற குற்றங்கள் முற்றிலும் அபத்தமானால், அவர்களுக்குத் தயவுபண்ணும்பொருட்டு ஒருவரும் என்னை அவர்களுக்கு ஒப்புக்கொடுக்கலாகாது. இராயருக்கு அபயமிடுகிறேன் என்றான்.

அப் 25:12. அப்பொழுது பெஸ்து தன் ஆலோசனைக்காரருடனே ஆலோசித்து: நீ இராயருக்கு அபயமிட்டாயே; இராயரிடத்திற்கே போகக்கடவாயென்று உத்தரவு சொன்னான்.

உனக்குச் சம்மதியா

அப்பொழுது பெஸ்து யூதருக்குத் தயவுசெய்ய மனதாய், பவுலை நோக்கி: நீ எருசலேமுக்குப் போய், அவ்விடத்திலே இந்தக் காரியங்களைக்குறித்து எனக்கு முன்பாக நியாயம் விசாரிக்கப்பட உனக்குச் சம்மதியா என்றான் (அப் 25:9).

பெஸ்து யூதருக்கு தயவு செய்ய மனதாயிருக்கிறான். "நீ எருசலேமுக்குப்போய் அவ்விடத்திலே இந்தக் காரியங்களைக் குறித்து எனக்கு முன்பாக நியாயம் விசாரிக்கப்பட உனக்குச் சம்மதியா" என்று கேட்கிறான். பவுலுக்கு இதில் சம்மதமில்லை. தேசாதிபதி பவுலுக்கு உதவி செய்வதற்குப் பதிலாக, அவனுடைய சத்துருக்களுக்கு உதவி செய்ய விரும்புகிறான். அவர்களுக்கு தயவுபண்ண மனதாயிருக்கிறான். ஆனாலும் பவுலை கட்டாயப்படுத்தி எருசலேமுக்கு அனுப்பாமல், எருசலேமுக்குப் போய் அவ்விடத்தில், நியாயம் விசாரிக்கப்பட அவனுக்குச் சம்மதமா என்று கேட்கிறான். எருசலேமில் நியாயம் விசாரிக்கப்பட்டாலும், பவுல் ஆலோசனைச்சங்கத்தாருக்கு முன்பாக அல்ல, தனக்கு முன்பாகவே நியாயம் விசாரிக்கப்படும் என்றும் பெஸ்து சொல்லுகிறான்.

பவுலை எருசலேமில் விசாரிக்கவேண்டுமென்பது யூதருடைய விருப்பமல்ல. அவன் எருசலேமுக்கு வரும்போது வழியிலேயே அவனைக் கொன்றுபோட வேண்டுமென்பதே அவர்களுடைய சர்ப்பனையான யோசனை. யூதர்களின் சதிஆலோசனை பெஸ்துவுக்கும் தெரிந்திருக்கிறது. ஆகையினால் தேசாதிபதி பவுலை பிரதான ஆசாரியனுக்கு முன்பாக விசாரிக்கப்படுவதற்கு ஒப்புக் கொடுக்கவில்லை. விசாரணை தனக்கு முன்பாகவே நடைபெறவேண்டுமென்று பெஸ்து விரும்புகிறான்.

தேசாதிபதி தன்னுடைய ஆலோசனையைச் சொல்லுகிறான். ஆனாலும் பவுலின் சம்மதமில்லாமல், வழக்கு விசாரணையை செசரியாவிலிருந்து எருசலேமுக்கு மாற்ற முடியவில்லை.

இராயருடைய நியாயாசனம்

அதற்குப் பவுல்: நான் இராயருடைய நியாயாசனத்துக்கு முன்பாக நிற்கிறேன். அதற்கு முன்பாக நான் நியாயம் விசாரிக்கப்பட வேண்டியது; யூதருக்கு நான் அநியாயம் ஒன்றும் செய்யவில்லை, அதை நீரும் நன்றாய் அறிந்திருக்கிறீர் (அப் 25:10).

பெஸ்துவின் ஆலோசனைக்கு பவுல் சம்மதம் தெரிவிக்கவில்லை. பவுல் ஒரு ரோமன். ஆகையினால் இராயருடைய நியாயாசனத்திற்கு முன்பாக பவுலை நியாயம் விசாரிப்பதே நீதியானது. பவுல் இப்போது இராயருடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்கிறான். அந்த நியாயாசனம் இப்போது செசரியாவில் இருக்கிறது. இராயருடைய பிரதிநிதியாக, பெஸ்து அந்த நியாயசனத்தின்மேல் அமர்ந்திருக்கிறான். பெஸ்து நியாயசனத்திலிருந்தாலும், இந்த நியாயாசனத்திற்கு இராயருடைய நியாயாசனம் என்பதே பெயர். ஏனெனில் இராயருடைய பெயரினாலேயே இங்கு நியாயம் விசாரிக்கப்படும், நீதியான தீர்ப்பு வழங்கப்படும். இராயரின் அதிகாரமே இந்த நியாயாசனத்தில் நிறைவேற்றப்படும். இராயர் யாரை நியமிக்கிறாரோ, அவர் மாத்திரமே அவருடைய நியாயாசனத்தில் அமர்ந்து, அவருடைய சார்பாக நியாயம் விசாரிக்க முடியும். ஆகையினால் இந்த நியாயாசனம் "இராயருடைய நியாயாசனம்" என்று அழைக்கப்படுகிறது.

தான் இராயருடைய நியாயசனத்திற்கு முன்பாக நிற்கிறேன் என்றும், அதற்கு முன்பாக தான் நியாயம் விசாரிக்கப்பட வேண்டும் என்றும் பவுல் சொல்லுகிறான். கர்த்தருடைய பிள்ளைகளும், ஊழியக்காரர்களும் அவர்களுடைய தேசத்தின் சட்ட திட்டங்களுக்கு கட்டுப்பட்டவர்கள்தான். அந்தந்த தேசங்களிலுள்ள நீதிமன்றங்களுக்கு கர்த்தருடைய பிள்ளைகளையும் ஊழியக்காரர்களையும் விசாரணை செய்வதற்கு உரிமையுள்ளது. நாம் கர்த்தருடைய பிள்ளைகளாகவும் ஊழியக்காரர்களாகவும் இருப்பதினால், நம்முடைய தேசத்தின் நீதி விசாரணைகளுக்கு நாம் விலக்கு பெற்றிருக்கிறோம் என்று சொல்லக்கூடாது. நாம் குற்றம் செய்தவர்களானால், நம்முடைய தேசத்தின் சட்டத்தின்படி நாம் தண்டிக்கப்படுவோம். நாம் குற்றம் செய்யாதவர்களானால், நாம் நிரபராதி என்பதை நிரூபிக்கும் உரிமையும் நமக்கு உள்ளது.

பவுல் ரோமப்பேரரசில் ஒரு பிரஜையாக இருக்கிறான். அதே சமயத்தில் யூததேசத்திலுள்ள ஒரு யூதனாகவும் இருக்கிறான். தான் யூதருக்கு அநியாயம் ஒன்றும் செய்யவில்லை என்று பவுல் தன்னுடைய நிலமையை எடுத்துச்சொல்லுகிறான். தான் நிரபராதி என்பதை வலியுறுத்துகிறான். "அதை நீரும் நன்றாய் அறிந்திருக்கிறீர்" என்று பெஸ்துவையும் தனக்குச் சாட்சியாக்குகிறான். குற்றம் செய்யாத நிரபராதிகள், தாங்கள் ஒரு குற்றமும் செய்யவில்லை என்பதில் உறுதியாயிருக்கவேண்டும். பயந்துபோய் செய்யாத குற்றங்களை செய்ததாக ஒப்புக்கொள்ளக்கூடாது.

இராயருக்கு அபயமிடுகிறேன்

நான் அநியாயஞ்செய்து, மரணத்துக்குப் பாத்திரமானது ஏதாகிலும் நடப்பித்ததுண்டானால், நான் சாகாதபடிக்கு மனுகேட்கமாட்டேன். இவர்கள் என்மேல் சாட்டுகிற குற்றங்கள் முற்றிலும் அபத்தமானால், அவர்களுக்குத் தயவுபண்ணும்பொருட்டு ஒருவரும் என்னை அவர்களுக்கு ஒப்புக்கொடுக்கலாகாது. இராயருக்கு அபயமிடுகிறேன் என்றான் (அப் 25:11).

ரோமப்பேரரசின் சட்டங்களுக்கு பவுல் கீழ்ப்படிகிறான். தான் அநியாயஞ்செய்து, மரணத்திற்குப் பாத்திரமானது ஏதாகிலும் நடப்பித்ததுண்டானால், தான் சாவுகிறதற்கும் ஆயத்தமாயிருப்பதாக பவுல் அறிக்கை செய்கிறான். நீதிக்கு விரோதமாக பவுல் யுத்தம்பண்ணவில்லை. நியாயத்தீர்ப்புக்குப் பயந்து பவுல் ஓடி ஒழிந்துகொள்ளவுமில்லை. பவுல் ஒரு அநியாயமும் செய்யாதவன். குற்றமில்லாதவன். ஆகையினால் அவன் சாகவேண்டிய அவசியம் எதுவுமில்லை.

யூதர்கள் பவுலின்மேல் சாட்டுகிற குற்றங்கள் முற்றிலும் அபத்தமானது. அவர்கள் சொல்லுகிற எந்தக் குற்றத்தையும் அவர்களால் ரூபிக்க முடியவில்லை. பவுலை நியாயப்படி உடனே விடுதலைபண்ணவேண்டும். ஆனால் தேசாதிபதி யூதருக்குத் தயவுசெய்ய விரும்புகிறான். அதற்காகவே பவுலை காவலில் வைத்திருக்கிறான். இப்பொழுது பெஸ்து யூதருக்கு இன்னும் தயவு பண்ணும்பொருட்டு, பவுலை எருசலேமுக்கு அனுப்ப விரும்புகிறான். எருசலேமில் தனக்குப் பாதுகாப்பு கிடைக்காது என்று பவுலுக்குத் தெரியும். நியாயமில்லாமல் பவுல் மரிக்க விரும்பவில்லை. தேசாதிபதி நிரபராதியை பாதுகாக்கவேண்டும். குற்றவாளியை மாத்திரமே தண்டிக்கவேண்டும். தான் ஒரு நிரபராதியாக இருப்பதினால், தேசத்தினுடைய சட்டதிட்டத்தின் பிரகாரமாக, தனக்குப் பாதுகாப்பு வேண்டும் என்று பவுல் தேசாதிபதியிடம் சொல்லுகிறான்.

யூதர்கள் பவுலை அநேகந்தரம் கொலைபண்ண முயற்சி பண்ணியிருக்கிறார்கள். பவுலின் உயிருக்கு யூதர்களினால் தொடர்ந்து ஆபத்து இருக்கிறது. ஒவ்வொரு சர்ப்பனையாக அவர்கள் யோசனைபண்ணுகிறார்கள். பவுல் யூதர்களுடைய கைகளில் சிக்காமலிருந்தால்தான் அவனுக்குப் பாதுகாப்பு கிடைக்கும். யூதருடைய நியாயாசனத்தில் பவுலுக்கு நியாயம் கிடைக்காது. எருசலேமில் விசாரிக்கப்பட்டால் தான் சாகிறதற்கு வாய்ப்புள்ளது என்பதை பவுல் அறிந்து வைத்திருக்கிறான். ஆகையினால் பவுல் தான் சாகாதபடிக்கு மனு கேட்கிறான். தன்னை ஒருவரும் யூதர்களுக்கு ஒப்புக்கொடுக்கக்கூடாது என்று சொல்லுகிறான். இராயருக்கு அபயமிடுகிறேன் என்றும் சொல்லுகிறான்.

யூதருடைய கைகளில் தன்னை ஒப்புக்கொடுப்பதற்குப் பதிலாக, பவுல் தன்னை ரோமப்பேரரசின் இராயராகிய நீரோவிடத்தில் ஒப்புக்கொடுக்கிறான். ஆபிரகாமின் குமாரனாகிய பவுல் தன்னுடைய வழக்கை கர்த்தருடைய பிள்ளைகளுக்கு மத்தியில் நீதியாய் விசாரிக்க முடியவில்லை. ஆபிரகாமின் சந்ததியாருக்கு யூதருடைய ஆலோசனைச்சங்கத்தில் நியாயம் கிடைக்கவில்லை. கர்த்தருடைய பிள்ளையாகிய பவுல், புறஜாதி ராஜாவாகிய இராயருக்கு அபயமிடுகிறான். ஆபிரகாமின் வித்தாக இருக்கிற பவுலுக்கு எருசலேமில் பாதுகாப்பு இல்லை. ரோமாபுரியில் பாதுகாப்பு இருக்கிறது. கர்த்தருடைய பிள்ளைகளுக்கு அவர்களுடைய சொந்த தேசத்தில் பாதுகாப்பு இல்லாமல், அந்நிய தேசத்திலேயே பாதுகாப்பு இருக்கிறது.

இராயரிடத்திற்கே போகக்கடவாய்

அப்பொழுது பெஸ்து தன் ஆலோசனைக்காரருடனே ஆலோசித்து: நீ இராயருக்கு அபயமிட்டாயே; இராயரிடத்திற்கே போகக் கடவாயென்று உத்தரவு சொன்னான் (அப் 25:12).

பவுலின் சத்துருக்கள், அவனை எருசலேமுக்கு அழைத்து வந்து, வரும் வழியிலேயே அவனைக் கொன்றுபோட வேண்டுமென்று சர்ப்பனையான யோசனையோடிருக்கிறார்கள். பவுல் மரித்தால்தான் அவனுடைய பிரச்சனை முடிவுக்கு வரும் என்று நினைக்கிறார்கள். பவுல் விடுவிக்கப்பட்டால்தான் நீதியும் நியாயமும் ஜெயிக்குமென்று, அவனுடைய சிநேகிதர்கள் எதிர்பார்க்கிறார்கள். ஆனால் இருதிறத்தாருடைய எதிர்பார்ப்பும் நிறைவேறவில்லை. வழக்கு விசாரணை முடிவு பெறவில்லை. பவுல் யூதருடைய கைகளில் ஒப்புக்கொடுக்கப்படவுமில்லை. பவுல் விடுவிக்கப்படவுமில்லை. எல்லோருக்கும் ஏமாற்றமுண்டாயிற்று. முன்பு இருந்ததுபோலவே பவுல் இன்னும் காவலிலிருக்கிறான்.

கர்த்தருடைய சித்தம் சில சமயங்களில் உடனடியாக நிறைவேறும். கர்த்தருடைய காரியங்கள் சில சமயங்களில் விரைவாக நடைபெறும். சில சமயங்களில் கொஞ்சம் கொஞ்சமாக, மெதுவாக நிறைவேறும். கர்த்தருடைய உதவி கிடைப்பதில் காலதாமதம் ஏற்படும்போது நம்முடைய விசுவாசத்திற்கு சோர்வு உண்டாகிவிடுகிறது. சில சமயங்களில் நம்முடைய சமாதானம் நம்மைவிட்டு நீங்கி, நமக்குள் பயம் வந்துவிடுகிறது. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம், எல்லா சூழ்நிலைகளிலும், கர்த்தருடைய சமுகத்தில் பொறுமையோடு அமர்ந்திருக்க பழகவேண்டும். எல்லாவற்றிற்கும், எல்லா வேளையிலும், நாம் கர்த்தரையே சார்ந்திருக்கவேண்டும்.

பவுல் தன்னுடைய காரியத்தை எடுத்துச்சொல்லும்போது யூதர்கள் தன்மேல் சாட்டுகிற குற்றங்கள் முற்றிலும் அபத்தமானது என்று குறிப்பிடுகிறான். யூதர்களுக்கு தயவு பண்ணும்பொருட்டு ஒருவரும் தன்னை அவர்களுக்கு ஒப்புக்கொடுக்கலாகாது என்று சொல்லிவிட்டு, "இராயருக்கு அபயமிடுகிறேன்" என்றும் சொல்லுகிறான்.

பெஸ்து பவுலின் வார்த்தைகளைக் கேட்டு, தன் ஆலோசனைக்காரருடனே ஆலோசனை பண்ணுகிறான். யூதமார்க்கத்து ஆலோசனைச் சங்கத்தாரோடு பெஸ்து ஆலோசனைபண்ணாமல், தன்னுடைய ஆலோசனைக்காரருடனே ஆலோசனை பண்ணுகிறான். பெஸ்துவுக்கு, யூதருடைய ஆலோசனைச்சங்கத்தார் மீதோ, அவர்களுடைய ஆலோசனையின் மீதோ, நம்பிக்கையில்லை.

பெஸ்து பவுலை ரோமாபுரிக்கு அனுப்ப தீர்மானம்பண்ணுகிறான். ரோமப்பேரரசின் பிரஜையாக இருக்கிற ஒவ்வொருவனுக்கும், தன்னுடைய வழக்கு விசாரணையை, ரோமாபுரியிலுள்ள இராயரின் நியாயாசனத்திற்கு முன்பாக அபயமிடுவதற்கு உரிமையுள்ளது. இராயரின் தீர்ப்பே இறுதியானது. பவுல் இராயருக்கு அபயமிட்டபடியினால் பெஸ்து அவனிடத்தில், "நீ இராயருக்கு அபயமிட்டாயே, இராயரிடத்திற்கே போகக்கடவாய்" என்று உத்தரவு சொல்லுகிறான்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்படுகிறோம். ஒரு சிலர் விசுவாசத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காமல், நியாயப்பிரமாணத்தினால் நீதிமானாகவேண்டுமென்று முயற்சி பண்ணுகிறார்கள். நியாயப்பிரமாணத்தை நம்புகிறவர்களை, நியாயப்பிரமாணமே ஆக்கினைக் குள்ளாகத்தீர்க்கும். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை நம்புகிறவனோ பிழைப்பான். நாம் பாவம் செய்தவர்களாக இருந்தாலும், நாம் செய்த பாவங்களுக்காக மனந்திரும்பி, இயேசுகிறிஸ்துவை நம்முடைய இரட்சகரென்று விசுவாசித்து, அவரிடத்தில் நம்முடைய பாவங்களை அறிக்கை செய்தால், அவர் நம்மை மன்னிப்பதற்கு கிருபை மிகுந்தவர். சுவிசேஷம் நம்மை இரட்சிக்கிறது. நியாயப்பிரமாணம் நம்மை ஆக்கினைக்குள்ளாகத்தீர்க்கிறது.

பவுலைப்பற்றி பெஸ்து சொல்லுகிறான் அப் 25 : 13-21

அப் 25:13. சிலநாள் சென்றபின்பு, அகிரிப்பா ராஜாவும் பெர்னீக்கேயாளும் பெஸ்துவைக் கண்டுகொள்ளும்படி செசரியாவுக்கு வந்தார்கள்.

அப் 25:14. அவர்கள் அங்கே அநேகநாள் சஞ்சரித்திருக்கையில், பெஸ்து பவுலின் சங்கதியை ராஜாவுக்கு விவரித்து: பேலிக்ஸ் காவலில் வைத்துப்போன ஒரு மனுஷன் இருக்கிறான்.

அப் 25:15. நான் எருசலேமில் இருந்தபோது, பிரதானஆசாரியர்களும் யூதருடைய மூப்பர்களும் அவனைக்குறித்து என்னிடத்தில் பிராதுபண்ணி, அவனுக்கு விரோதமாகத் தீர்ப்புசெய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள்.

அப் 25:16. அவர்களுக்கு நான் பிரதியுத்தரமாக: குற்றஞ்சாட்டப்பட்ட மனுஷன் குற்றஞ்சாட்டினவர்களுக்கு முகமுகமாய் நின்று, சாட்டின குற்றத்துக்குத் தனக்காக எதிருத்தரவு சொல்ல அவனுக்கு இடங்கிடைக்கிறதற்கு முன்னே, குற்றஞ் சாட்டினவர்கள் பட்சமாய் அவனை மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கிறது ரோமருக்கு வழக்கமல்ல என்றேன்.

அப் 25:17. ஆகையால் அவர்கள் இங்கே கூடி வந்தபோது, நான் எவ்வளவும் தாமதம் பண்ணாமல், மறுநாள் நியாயாசனத்தில் உட்கார்ந்து, அந்த மனுஷனைக் கொண்டு வரும்படி கட்டளையிட்டேன்.

அப் 25:18. அப்பொழுது குற்றஞ்சாட்டினவர்கள் வந்துநின்று, நான் நினைத்திருந்த குற்றங்களில் ஒன்றையும் அவன்மேல் சுமத்தாமல்,

அப் 25:19. தங்களுடைய மார்க்கத்தைக்குறித்தும், மரித்துப்போன இயேசு என்னும் ஒருவன் உயிரோடிருக்கிறனென்று பவுல் சாதித்ததைக்குறித்தும் சில தர்க்கவிஷயங்களை அவன்பேரில் விரோதமாய்ச் சொன்னார்கள்.

அப் 25:20. இப்படிப்பட்ட தர்க்க விஷயங்களைக் குறித்து எனக்குச் சந்தேகமிருந்தபடியினால்: நீ எருசலேமுக்குப் போய், அங்கே இவைகளைக் குறித்து நியாயம் விசாரிக்கப்பட உனக்குச் சம்மதியா என்று கேட்டேன்.

அப் 25:21. அதற்குப் பவுல், தான் இராயருக்கு முன்பாக நியாயம் விசாரிக்கப்படும்படிக்கு நிறுத்தி வைக்கப்பட வேண்டுமென்று அபயமிட்டபோது, நான் அவனை இராயனிடத்திற்கு அனுப்புமளவும் காவல்பண்ணும்படி கட்டளையிட்டேன் என்றான்.

செசரியாவுக்கு வந்தார்கள்

சிலநாள் சென்றபின்பு, அகிரிப்பா ராஜாவும் பெர்னீக்கேயாளும் பெஸ்துவைக் கண்டுகொள்ளும்படி செசரியாவுக்கு வந்தார்கள் (அப் 25:13).

பவுல் தன்னுடைய வழக்கை விசாரிப்பதற்கு இராயருக்கு அபயமிடுகிறான். பெஸ்துவும், "நீ இராயரிடத்திற்கு அபமிட்டாயே, இராயரிடத்திற்கே போகக்கடவாய்" என்று உத்தரவு சொல்லிவிடுகிறான். சில நாள் சென்றபின்பு அகிரிப்பா ராஜாவும், பெர்னீக்கேயாளும் பெஸ்துவைக் கண்டுகொள்ளும்படி செசரியாவுக்கு வருகிறார்கள். பெஸ்து யூதேயா தேசத்திற்கு புதிய தேசாதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறான். இவர்கள் இருவரும் ஒருவேளை பெஸ்துவை வாழ்த்துவதற்காக, நட்பின் நிமித்தமாக, செசரியாவுக்கு வந்திருக்கலாம்.

அகிரிப்பா ராஜா ஏரோது ராஜாவின் குமாரன். அப்போஸ்தலனாகிய யாக்கோபை இந்த ஏரோது கொன்றுபோட்டான். ஏரோது தன் சிங்காசனத்திலிருந்து விழுந்து புழுபுழுத்து இறந்துபோனான். இவனுடைய தாத்தாவின் பெயரும் ஏரோது என்பதுதான். அந்த ஏரோது ராஜாவின் காலத்தில்தான் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இந்தப் பூமியில் பிறந்தார்.

அகிரிப்பா ராஜாவோடு பெர்னீக்கேயாளும் செசரியாவுக்கு வந்திருக்கிறாள். பெர்னீக்கேயாள் அகிரிப்பா ராஜாவின் சொந்த சகோதரி. அகிரிப்பாவின் மாமனாகிய ஏரோதின் மனைவி. ஏரோது மரித்துப்போன பின்பு, விதவையான பெர்னீக்கேயாள், தன் சகோதரனாகிய அகிரிப்பாவோடு வாசம்பண்ணுகிறாள். இதன்பின்பு பெர்னீக்கேயாள் சிலிசியாவின் ராஜாவாகிய போலிமோன் என்பவனை இரண்டாந்திருமணம் செய்து கொண்டாள். இந்தத் திருமணம் விவாகரத்தில் முடிவுபெற்றது. இதன்பின்பு பெர்னீக்கேயாள் மறுபடியும் தன் சகோதரனாகிய அகிரிப்பா ராஜாவிடத்தில் வந்துவிடுகிறாள். பேலிக்ஸின் மனைவியாகிய துருசில்லாள் அகிரிப்பாவின் மற்றொரு சகோதரி. அக்காலத்தில் உறவின் முறையில் இருக்கிறவர்களே உயர்ந்த பதவிகளை வகித்திருக்கிறார்கள். உயர்ந்த பதவி வகித்தவர்களுக்குள் பெண் கொடுப்பதும் பெண் எடுப்பதும் அதிகமாய் நடைபெற்றிருக்கிறது.

அகிரிப்பா ராஜாவும் பெர்னீக்கேயாளும் பெஸ்துவைக் கண்டுகொள்ளும்படி செசரியாவுக்கு வந்திருக்கிறார்கள். அவன் தேசாதிபதியானதற்காக அவனுக்கு வாழ்த்துதல் சொல்ல வந்திருக்கலாம். தங்களுடைய அரசாங்க உத்தியோகத்திலிருந்து ஓய்வெடுப்பதற்காக இவர்கள் இங்கு வந்திருக்கலாம். பெஸ்துவின் நியாயாசனத்தில் நடைபெறுகிற வழக்கு விசாரணைகளைப் பார்த்து பொழுதுபோக்குவதற்காகக்கூட இவர்கள் வந்திருக்கலாம்.

பவுலின் சங்கதி

அவர்கள் அங்கே அநேகநாள் சஞ்சரித்திருக்கையில், பெஸ்து பவுலின் சங்கதியை ராஜாவுக்கு விவரித்து: பேலிக்ஸ் காவலில் வைத்துப்போன ஒரு மனுஷன் இருக்கிறான். நான் எருசலேமில் இருந்தபோது, பிரதான ஆசாரியர்களும் யூதருடைய மூப்பர்களும் அவனைக்குறித்து என்னிடத்தில் பிராதுபண்ணி, அவனுக்கு விரோதமாகத் தீர்ப்புசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அவர்களுக்கு நான் பிரதியுத்தரமாக: குற்றஞ்சாட்டப்பட்ட மனுஷன் குற்றஞ்சாட்டினவர்களுக்கு முகமுகமாய் நின்று, சாட்டின குற்றத்துக்குத் தனக்காக எதிருத்தரவு சொல்ல அவனுக்கு இடங்கிடைக்கிறதற்கு முன்னே, குற்றஞ்சாட்டினவர்கள் பட்சமாய் அவனை மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கிறது ரோமருக்கு வழக்கமல்ல என்றேன் (அப் 25:14-16).

அகரிப்பா ராஜாவிடம் பெஸ்து பவுலைப்பற்றியும் அவனுடைய வழக்கின் விவரத்தைப்பற்றியும் விரிவாக எடுத்துச் சொல்லுகிறான். அகிரிப்பா ஒரு யூதன். அவனும் நியாயாசனத்தில் அமர்ந்து நியாயம் விசாரிக்கிறவன். பவுல்மீது சுமத்தப்பட்ட குற்றம் அவர்களுடைய மார்க்கத்தைக் குறித்த காரியமாகயிருக்கிறது. இயேசு இன்னும் உயிரோடிருக்கிறார் என்று பவுல் சாதிக்கிறான்.

யூதர்கள் பவுலுக்கு விரோதமாய்ச் சில தர்க்க விஷயங்களை சொல்லுகிறார்கள். இந்த விஷயங்களைக்குறித்து பெஸ்துவுக்கு சந்தேகமிருக்கிறது. அகிரிப்பா ஒரு யூதனாகயிருப்பதினால், அவனுக்கு இந்த மார்க்கத்தைக்குறித்தும், இந்த தர்க்க விஷயங்களைக் குறித்தும் விவரம் தெரிந்திருக்கும் என்று பெஸ்து எதிர்பார்க்கிறான்.

பவுலின் வழக்கு விஷயத்தில் அகிரிப்பா ராஜாவின் ஆலோசனையை பெஸ்து பெற்றுக்கொள்ள விரும்புகிறான். பெஸ்து இப்போதுதான் தேசாதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறான். நியாயாசனத்தில் அமர்ந்து நியாயம் விசாரிப்பது பெஸ்துவுக்குப் புதிய அனுபவம். ஆகையினால் இதற்கு முன்பு நியாயம் விசாரித்து பழக்கமும் அனுபவமுமுள்ள, மூத்த தேசாதிபதியிடம் ஆலோசனை பெற்றுக்கொள்ள விரும்புகிறான். அகிரிப்பா ராஜாவினிடத்தில் பவுலைப் பற்றியும், அவனுடைய வழக்கு சங்கதியைப்பற்றியும் விரிவாக எடுத்துச்சொல்லுகிறான்.

பெஸ்து யூதேயா தேசத்திற்கு தேசாதிபதியாக வந்தபோது, அங்கு பவுல் என்பவன் காவலில் வைக்கப்பட்டிருக்கிறான். "பேலிக்ஸ் காவலில் வைத்துப்போன ஒரு மனுஷன் இருக்கிறான்" என்று பவுலைப்பற்றி சொல்லுகிறான். தான் பவுலை காவலில் வைக்கவில்லையென்றும், அவனைப்பற்றி ஆரம்பத்தில் தனக்கு ஒன்றும் தெரியாது என்றும், பேலிக்ஸ்தான் அவனை காவலில் வைத்துவிட்டுப்போனான் என்றும் பெஸ்து சொல்லுகிறான்.

யூதருடைய ஆலோசனைச்சங்கத்தார் பவுலுக்கு விரோதமாக மிகுந்த கோபத்தோடிருக்கிறார்கள். பெஸ்து எருசலேமிலிருந்தபோது, பிரதான ஆசாரியர்களும் யூதருடைய மூப்பர்களும் பவுலைக் குறித்து பெஸ்துவிடத்தில் பிராது பண்ணினார்கள். பவுலுக்கு விரோதமாக தீர்ப்பு செய்யவேண்டுமென்று அவர்கள் தேசாதிபதியிடம் கேட்டுக்கொண்டார்கள். பவுலுக்கு மரணதண்டனை கொடுக்கவேண்டும் என்பது யூதருடைய விருப்பம். பெஸ்து யூதர்களிடத்தில் ரோமப்பேரரசின் சட்டதிட்டங்களைப்பற்றி பேசுகிறான். குற்றம் சாட்டப்பட்டவனை முறைப்படி விசாரிக்காமல் அவனுக்குத் தண்டனை கொடுக்கக்கூடாது. "குற்றம் சாட்டப்பட்ட மனுஷன் குற்றஞ்சாட்டினவர்களுக்கு முகமுகமாய் நின்று, சாட்டின குற்றத்திற்கு தனக்காக எதிருத்தரவு சொல்ல அவனுக்கு இடங்கிடைக்கிறதற்கு முன்னே, குற்றஞ்சாட்டினவர்கள் பட்சமாய் அவனை மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கிறது ரோமருடைய வழக்கமல்ல" என்று பெஸ்து பிரதான ஆசாரியர்களிடமும், யூதருடைய மூப்பர்களிடமும் சொல்லிவிடுகிறான்.

இரண்டு பக்கத்து நியாயத்தையும் கேட்டு அறிந்துகொள்ளவேண்டும். ஒருவனைப்பற்றி விசாரிக்காமல், தன்னைப்பற்றி நியாயத்தை எடுத்துச்சொல்லுவதற்கு அவனுக்கு வாய்ப்பு கொடுக்காமல், அவனைக் குற்றவாளியாகத் தீர்த்துவிடக்கூடாது. மற்றவர்களின் பேச்சைக்கேட்டு, உண்மை நிலவரம் தெரியாமல் யாரையும் குற்றப்படுத்தக்கூடாது. தீர விசாரிக்கவேண்டும். இருபக்கத்து சாட்சிகளுக்கும் தங்களுடைய நியாயத்தைச் சொல்லுவதற்கு வாய்ப்பு கொடுக்கவேண்டும். அதன்பின்பே தீர்ப்பு சொல்லவேண்டும்.

நியாயாசனத்தில் உட்கார்ந்து

ஆகையால் அவர்கள் இங்கே கூடி வந்தபோது, நான் எவ்வளவும் தாமதம் பண்ணாமல், மறுநாள் நியாயாசனத்தில் உட்கார்ந்து, அந்த மனுஷனைக் கொண்டு வரும்படி கட்டளையிட்டேன் (அப் 25:17).

பெஸ்து செசரியாவுக்கு வருகிறான். பவுலின்மீது குற்றம் சுமத்துவதற்கு யூதர் மத்தியிலே திறனுள்ளவர்களை செசரியாவுக்கு வருமாறு சொல்லுகிறான். அவர்கள் செசரியாவுக்கு வந்தபோது, பெஸ்து எவ்வளவும் தாமதம்பண்ணாமல், மறுநாளில் நியாயாசனத்தில் உட்காருகிறான். பவுலைக் கொண்டுவரும்படி கட்டளையிடுகிறான். முறையான வழக்கு விசாரணை நடைபெறுகிறது. பவுலை விசாரிப்பதற்கு பெஸ்து, அதிகாரப்பூர்வமாக நியாயாசனத்தில் உட்கார்ந்து விசாரிக்கிறான். இதனால் பவுலின் வழக்கு விசாரணை பூர்த்தியாகும். பவுலுக்கு ஏதாவது தண்டனை கொடுத்தால், அது சட்டத்தின் பிரகாரம் உறுதிபண்ணப்பட்டதாக இருக்கும்.

தர்க்க விஷயங்கள்

அப்பொழுது குற்றஞ் சாட்டினவர்கள் வந்துநின்று, நான் நினைத்திருந்த குற்றங்களில் ஒன்றையும் அவன்மேல் சுமத்தாமல், தங்களுடைய மார்க்கத்தைக்குறித்தும், மரித்துப்போன இயேசு என்னும் ஒருவன் உயிரோடிருக்கிறனென்று பவுல் சாதித்ததைக்குறித்தும் சில தர்க்கவிஷயங்களை அவன்பேரில் விரோதமாய்ச் சொன்னார்கள் (அப் 25:18,19).

யூதர்கள் பவுலின்மீது குற்றம் சாட்டுகிறார்கள். பவுல் எப்படிப்பட்ட குற்றங்களைச் செய்திருப்பான் என்று பெஸ்துவும் கற்பனை செய்து நினைத்துக்கொண்டிருக்கிறான். ஆனால் பெஸ்து நினைத்திருந்த குற்றங்களில் ஒன்றையும் யூதர்கள் பவுலின்மேல் சுமத்தவில்லை. இதனால் பெஸ்துவுக்கு மிகுந்த ஏமாற்றமுண்டாயிற்று. பவுலின் வழக்கு விசாரணையை சீக்கிரமாய் முடிக்கவேண்டுமென்று யூதர்கள் துரிதப்படுத்துகிறார்கள். ஆகையினால் பவுல் மிகப்பெரிய பாதகத்திற்கு பாத்திரவானாக இருப்பானென்று பெஸ்து எதிர்பார்க்கிறான்.

யூதர்கள் ஒவ்வொரு தேசாதிபதியிடமும் பவுலுக்கு விரோதமாக பிராது பண்ணுகிறார்கள். ஆகையினால் பவுல் மிகவும் பயங்கரமானவனாக இருக்கக்கூடும் என்றும், தனியார் சொத்துக்களுக்கும், தேசத்தின் அமைதிக்கும் அவன் களங்கம் செய்கிறவனாக இருக்கக்கூடும் என்றும் பெஸ்து நினைத்திருக்கிறான்.

ஆதித்திருச்சபையின் காலத்தில் விசுவாசிகளுக்கு விரோதமாக பல சத்துருக்கள் எழும்பினார்கள். பயங்கர கோபத்தினாலும், உரத்த சத்தத்தினாலும், கொலைவெறியோடும் கிறிஸ்துவின் சீஷர்களுக்கு விரோதமாக திரளாக எழும்பி வந்தார்கள். இந்தச் சம்பவங்களையெல்லாம் பார்க்கும்போது, கிறிஸ்துவின் சீஷர்கள் மிகவும் மோசமானவர்கள் என்னும் எண்ணமே பொது ஜனங்கள் மத்தியில் உண்டாயிற்று. அவர்கள் சீஷர்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணவில்லை. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமாகவே யுத்தம்பண்ணினார்கள். அமைதியாக யிருக்கிறவர்களுக்கு விரோதமாக, திரளான கூட்டத்தார் கோபத்தோடு வரும்போது, அமைதியாக இருக்கிறவர்கள் ஏதோ தவறு செய்திருக்கிறார்கள் என்னும் எண்ணம்தான் பொதுவாக உண்டாகும். அப்படிப்பட்ட எண்ணம்தான் பெஸ்துவுக்கு பவுலைப்பற்றி உண்டாயிருக்கிறது.

ரோமப் பேரரசினுடைய நியாயாசனத்தில் அமர்ந்திருக்கிற தேசாதிபதிக்கு முன்பாக யூதர்கள் கூட்டமாய்க் கூடிவந்து பவுலுக்கு விரோதமாக பிராது பண்ணுகிறார்கள். கல்லியோன் என்பவன் அகாயா நாட்டிற்கு அதிபதியானபோது, யூதர்கள் ஒருமனப்பட்டு பவுலுக்கு விரோதமாய் எழும்பி, அவனை நியாயாசனத்திற்கு முன்பாகக் கொண்டுபோய் நிறுத்தினார்கள். பவுல் வேதப்பிரமாணத்திற்கு விரோதமாய் தேவனைச் சேவிக்கும்படி மனுஷருக்குப் போதிக்கிறானென்று அவன்மீது குற்றம் சுமத்தினார்கள். கல்லியோன் யூதரை நோக்கி, "யூதர்களே, இது ஒரு அநியாயமாய், அல்லது பொல்லாத நடக்கையாயிருக்குமேயானால் நான் உங்களுக்குப் பொறுமையாய்ச் செவிகொடுப்பது நியாயமாயிருக்கும். இது சொற்களுக்கும், நாமங்களுக்கும், உங்கள் வேதத்துக்கும் அடுத்த தர்க்கமானபடியினாலே, இப்படிப் பட்டவைகளைக்குறித்து விசாரணைசெய்ய எனக்கு மனதில்லை, நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்லி, அவர்களை நியாயாசனத்தினின்று துரத்திவிட்டான் (அப் 18:14-16).

ரோமப்பேரரசில் எல்லா மார்க்கத்திற்கும் சட்டத்தின் அடிப்படையில் அனுமதியும் பாதுகாப்பும் கொடுக்கப்பட்டிருக்கிறது. யூதமார்க்கத்திற்கும் அனுமதியும் பாதுகாப்பும் இருக்கிறது. மார்க்கங்கள் வெவ்வேறாக இருப்பதுபோல, அவர்களுடைய நம்பிக்கைகளும் வெவ்வேறாக இருக்கிறது. மரித்துப்போன இயேசு இன்னும் உயிரோடிருக்கிறார் என்று பவுல் சாதிக்கிறான். யூதர்கள் அதை நம்பவில்லை.

பெஸ்து இயேசுகிறிஸ்துவைப்பற்றி மிகவும் சாதாரணமாகச் சொல்லுகிறான். "மரித்துப்போன இயேசு என்னும் ஒருவன் உயிரோடிருக்கிறான்" என்று இயேசுவைப்பற்றி சாதாரண வார்த்தைகளினால் சொல்லுகிறான். இயேசுகிறிஸ்துவின் மரணமும் உயிர்த்தெழுதலும் பெஸ்துவுக்கு மிகவும் சாதாரண சம்பவமாகத் தெரிகிறது. இயேசுகிறிஸ்துதான் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட மேசியா. கிறிஸ்துவின் சீஷர்கள் இந்தச் சத்தியத்தை விசுவாசிக்கிறார்கள். யூதர்களும் மேசியாவை விசுவாசிக்கிறார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துதான் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியா என்பதை யூதர்கள் விசுவாசிக்கவில்லை. மேசியா இன்னும் வரவில்லை என்று சொல்லி, யூதர்கள் மேசியாவின் வருகைக்காக இன்னும் காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துதான் மேசியா என்பதை அவருடைய மரணமும் உயிர்த்தெழுதலும் நிரூபிக்கிறது. மரித்துப்போன இயேசு இன்னும் உயிரோடிருக்கிறார் என்று பவுல் சாதிக்கிறான். இயேசுகிறிஸ்துவே மேசியா என்பதற்கு அவருடைய உயிர்த்தெழுதலே சாட்சியாயிருக்கிறது. ஆகையினால் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் அவருடைய சீஷருக்கு விசுவாசத்தின் ஆதாரமாக இருக்கிறது. ஆனால் பெஸ்துவுக்கோ இது சாதாரணமான சம்பவமாகத் தெரிகிறது.

இராயனிடத்திற்கு அனுப்புமளவும்

இப்படிப்பட்ட தர்க்க விஷயங்களைக் குறித்து எனக்குச் சந்தேகமிருந்தபடியினால்: நீ எருசலேமுக்குப் போய், அங்கே இவைகளைக் குறித்து நியாயம் விசாரிக்கப்பட உனக்குச் சம்மதியா என்று கேட்டேன். அதற்குப் பவுல், தான் இராயருக்கு முன்பாக நியாயம் விசாரிக்கப்படும்படிக்கு நிறுத்திவைக்கப்பட வேண்டுமென்று அபயமிட்டபோது, நான் அவனை இராயனிடத்திற்கு அனுப்புமளவும் காவல்பண்ணும்படி கட்டளையிட்டேன் என்றான் (அப் 25:20,21).

பெஸ்துவுக்கு யூதமார்க்கத்தைக் குறித்த விஷயங்களில் சந்தேகமிருக்கிறது. ஆகையினால் பவுலை எருசலேமுக்கு அழைத்துக்கொண்டுபோய், அங்கு இவைகளைக்குறித்து நியாயம் விசாரிக்கலாமா என்று பவுலிடத்தில் கேட்கிறான். பவுல் அதற்கு சம்மதிக்கவில்லை. இராயருக்கு அபயமிடுகிறான். எருசலேமுக்குப் போவதற்குப் பதிலாக தன்னுடைய வழக்கு விசாரணையை ரோமாபுரியில் நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறான். பெஸ்து பவுலின் விண்ணப்பத்தை ஏற்று, அவனை இராயனிடத்திற்கு அனுப்புமளவும் காவல் பண்ணும்படி கட்டளையிட்டிருக்கிறான். இவ்வாறு பெஸ்து பவுலைப்பற்றியும் அவனுடைய வழக்கு விசாரணையைப்பற்றியும் அகிரிப்பா ராஜாவிடம் விரிவாக எடுத்துச்சொல்லுகிறான்.

அகிரிப்பாவின் விருப்பம் அப் 25 : 22,23

அப் 25:22. அப்பொழுது அகிரிப்பா பெஸ்துவை நோக்கி: அந்த மனுஷன் சொல்லுகிறதை நானும் கேட்க மனதாயிருக்கிறேன் என்றான். அதற்கு அவன்: நாளைக்கு நீர் கேட்கலாம் என்றான்.

அப் 25:23. மறுநாளிலே அகிரிப்பாவும் பெர்னீக்கேயாளும் மிகுந்த ஆடம்பரத்துடனே வந்து சேனாபதிகளோடும் பட்டணத்துப் பிரதான மனுஷரோடுங்கூட நியாயஸ்தலத்தில் பிரவேசித்தார்கள். உடனே பெஸ்துவினுடைய கட்டளையின்படி பவுல் கொண்டுவரப்பட்டான்.

நானும் கேட்க மனதாயிருக்கிறேன்

அப்பொழுது அகிரிப்பா பெஸ்துவை நோக்கி: அந்த மனுஷன் சொல்லுகிறதை நானும் கேட்க மனதாயிருக்கிறேன் என்றான். அதற்கு அவன்: நாளைக்கு நீர் கேட்கலாம் என்றான் (அப் 25:22).

பவுல் சொல்லுகிறதைக் கேட்க அகிரிப்பா ராஜாவும் விரும்புகிறான். யூதமார்க்கத்தைப்பற்றி பெஸ்துவுக்குத் தெரிந்திருப்பதைவிட, அகிரிப்பா ராஜாவுக்கு நன்றாகத் தெரியும். பெஸ்து ஏற்கெனவே பவுல் சொல்லுகிறதைக் கேட்டிருக்கிறான். இப்போது அகிரிப்பா ராஜாவும் பவுல் சொல்லுகிறதைக் கேட்க விரும்புகிறான். பவுல் சொல்லுவதைக் கேட்க வேண்டும் என்னும் அவசியம் அகிரிப்பா ராஜாவுக்கு இல்லை. பவுலின் பிரசங்கத்தைக்கேட்டு உலகமே இரட்சிக்கப்பட்டாலும் அகிரிப்பா ராஜா மனந்திரும்பமாட்டான். ஆனாலும் பவுல் பேசுகிறதைக் கேட்கவேண்டும் என்னும் ஆவல் அவனுக்கும் உண்டாயிற்று. இயேசுகிறிஸ்து பேசுகிறதைக் கேட்கவேண்டுமென்று ஏரோது ராஜா விரும்பினான். ஆனாலும் அவன் இரட்சிக்கப்படவில்லை. மனந்திரும்ப வேண்டும் என்னும் வாஞ்சை அவனுடைய உள்ளத்தில் இல்லை. ஏதோ ஒரு ஆர்வத்தில், இவர்கள் சொல்லுவதைக் கேட்கலாமென்று விரும்புகிறார்கள்.

அகிரிப்பா விரும்புகிறபடி, பெஸ்து, பவுல் பேசுகிறதைக் கேட்பதற்கு ஆவனசெய்கிறான். "நாளைக்கு நீர் கேட்கலாம்" என்று சொல்லிவிடுகிறான். பவுல் காவலில் வைக்கப்பட்டிருக்கிறான். ஊழியம் செய்வதற்கு அவனுக்கு வாய்ப்பேயில்லை. நன்றாக ஊழியம் செய்யக்கூடியவன். ஊழிய வாய்ப்புகளெல்லாம் அடைக்கப்பட்ட நிலமையில், உயிரோடு அடக்கம்பண்ணப்பட்டவன்போல், காவலில் அடைக்கப்பட்டிருக்கிறான். நன்மை செய்வதற்கு பவுலுக்கு ஒரு வாய்ப்பும் கிடைக்கவில்லை. இப்போது தான் பேசுவதை அகிரிப்பா ராஜா கேட்கவிரும்புகிறான் என்னும் செய்தி பவுலுக்கு அறிவிக்கப்படுகிறது. இந்தச்செய்தி சோர்ந்துபோயிருக்கிற பவுலை அதிகமாய் உற்சாகப்படுத்தியிற்று. பெரிய சபைகளுக்கு முன்பாகவும், ராஜாக்களுக்கு முன்பாகவும் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணுகிற வாய்ப்பு பவுலுக்கு உண்டாயிற்று. கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தை பவுல் பேலிக்சுக்குச் சொன்னான். பேலிக்ஸின் தனிமையில் பவுல் சொன்னதைக் கேட்டான். இப்போது எல்லோருக்கும் முன்பாக, அரண்மனையில் அகிரிப்பாவும் பெஸ்தும் பவுல் சொல்லுவதைக்கேட்க ஆயத்தமாயிருக்கிறார்கள்.

மிகுந்த ஆடம்பரம்

மறுநாளிலே அகிரிப்பாவும் பெர்னீக்கேயாளும் மிகுந்த ஆடம்பரத்துடனே வந்து சேனாபதிகளோடும் பட்டணத்துப் பிரதான மனுஷரோடுங்கூட நியாயஸ்தலத்தில் பிரவேசித்தார்கள். உடனே பெஸ்துவினுடைய கட்டளையின்படி பவுல் கொண்டுவரப்பட்டான் (அப் 25:23).

மறுநாளிலே பெஸ்துவினுடைய கட்டளையின்படி பவுல் நியாயஸ்தலத்திற்கு கொண்டுவரப்படுகிறான். அகிரிப்பாவும் பெர்னீக்கேயாளும் தங்களுடைய அந்தஸ்தை எல்லாருக்கும் முன்பாக விளம்பரப்படுத்திக் காண்பிக்கவிரும்புகிறார்கள். இதற்காக இவர்கள் இருவரும் மிகுந்த ஆடம்பரத்துடனே நியாயஸ்தலத்தில் பிரவேசிக்கிறார்கள். இவர்களோடுகூட சேனாபதிகளும் பட்டணத்து பிரதான மனுஷரும் நியாயஸ்தலத்தில் பிரவேசிக்கிறார்கள்.

மிகுந்த ஆடம்பரம் பார்ப்பதற்கு பளபளப்பாக இருக்கிறது. ஆனால் ஆடம்பரத்தை வைத்து யாருடைய உண்மையான சுபாவமும் வெளிப்படாது. ஆடம்பரத்திற்கு உண்மையான மதிப்போ மரியாதையோ கிடைக்காது. ஆடம்பரம் ஒரு மாயை. ஆடம்பரத்தினால் தங்களுடைய அந்தஸ்தை வெளிப்படுத்தலாமென்று ஒரு சிலர் முயற்சி செய்கிறார்கள். ஆடம்பரம் உண்மையில் மாயையாயும் வெளிவேஷமாயும் இருக்கிறது. ஆடம்பரம் ஒரு சொப்பனம் போன்றது. ஆடம்பரத்தில் உண்மை நிலை பிரத்தியட்சமாக வெளிப்படாது.

அகிரிப்பாவும் பெர்னீக்கேயாளும் மிகுந்த ஆடம்பரத்துடனே நியாயஸ்தலத்தில் பிரவேசிக்கிறார்கள். அவர்களிடத்தில் நியாயமில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அவர்களுடைய வெளிஅலங்காரம் ஆடம்பரமாக இருந்தாலும், உள்அலங்காரம் அலங்கோலமாக இருக்கிறது. நீதியின்மீதும், நியாயத்தின்மீதும் உண்மையான மதிப்பு வைத்திருக்கிறவர்கள் அகிரிப்பாவின் ஆடம்பரத்தை நியாயஸ்தலத்தில் அங்கீகரிக்கமாட்டார்கள். அவர்கள் இருவரும் நியாயஸ்தலத்தை அவமதிப்பதாகவே நினைப்பார்கள்.

நியாயசனத்தில் அகிரிப்பா ராஜாவும் பெர்னீக்கேயாளும் ஆடம்பரத்துடனே பிரவேசிக்கிறார்கள். ஆனால் காவலில் வைக்கப்பட்டிருக்கிறவர்களோ விலங்கிடப்பட்டவர்களாக இருக்கிறார்கள். இவர்களுடைய விலங்கு இரும்பினாலோ அல்லது வெண்கலத்தினாலோ செய்யப்பட்டிருக்கிறது. அகிரிப்பா பெர்னீக்கேயாள் ஆகியோர் பொன்னினால் செய்த விலங்கை அணிந்திருக்கிறார்கள். பொன்விலங்கு ஆடம்பரமானது. பவுலின் விலங்கோ உன்னதமானது. தன் விசுவாசத்திற்காக பவுல் கட்டப்பட்டவனாக இருக்கிறான். பவுல் விசுவாசத்தைக் காண்பிக்கிறான். அகிரிப்பாவும் பெர்னீக்கேயாளும் ஆடம்பரத்தைக் காண்பிக்கிறார்கள்.

அகிரிப்பாவும் பெர்னீக்கேயாளும் துன்மார்க்கர்கள். இவர்கள் ஆடம்பரமான அலங்காரத்துடன் இருக்கிறார்கள். ஒரு பாவமும் செய்யாத நிரபராதியான பவுலோ சங்கிலிகளினால் கட்டப்பட்டவனாக, உலக ஆடம்பரத்திற்கு முன்பாக நின்றுகொண்டிருக்கிறான்.

அகிரிப்பாவும் பெர்னீக்கேயாளும் நியாயஸ்தலத்தில் பிரவேசிக்கிறபோது, அவர்களுடனேகூட சேனாபதிகளும் பட்டணத்து பிரதான மனுஷரும் நியாயஸ்தலத்தில் பிரவேசிக்கிறார்கள். இவர்கள் பெஸ்துவுக்கும், அவனுடைய ராஜவிருந்தினராகிய அகிரிப்பாவுக்கும், பெர்னீக்கேயாளுக்கும் மரியாதை செலுத்தும்வண்ணமாக, அவர்களோடுகூட நியாயஸ்தலத்தில் பிரவேசிக்கிறார்கள். அகிரிப்பாவும் பெர்னீக்கேயாளும் மிகுந்த ஆடம்பரத்துடனே இருந்தாலும், அவர்களுக்கு பவுலின் சங்கதியைக்குறித்து மெய்யான அக்கறை எதுவுமில்லை. பவுல் விலங்கிடப்பட்டவனாக இருந்தாலும், தன்னுடைய ஆடம்பரத்தைக் குறித்து மிகுந்த அக்கறையுடையவனாக இருக்கிறான். அகிரிப்பாவுக்கும் பெர்னீக்கேயாளுக்கும் தங்கள் ஆடை ஆபரணங்கள்மீது இருக்கும் அக்கறையைவிட, பவுலின்மீது அக்கறை குறைவாகவே இருக்கிறது.

பெஸ்து
அப் 25 : 24-27

அப் 25:24. அப்பொழுது பெஸ்து: அகிரிப்பா ராஜாவே, எங்களோடேகூட இவ்விடத்தில் வந்திருக்கிறவர்களே, நீங்கள் காண்கிற இந்த மனுஷனைக் குறித்து யூதஜனங்களெல்லாரும் எருசலேமிலும் இவ்விடத்திலும் என்னை வருந்திக் கேட்டுக்கொண்டு, இவன் இனி உயிரோடிருக்கிறது தகாதென்று சொல்லிக் கூக்குரலிட்டார்கள்.

அப் 25:25. இவன் மரணத்துக்குப் பாத்திரமான தொன்றையும் செய்யவில்லையென்று நான் அறிந்து கொண்டதினாலும், இவன்தானே இராயனுக்கு அபயமிட்டபடியினாலும், அவரிடத்தில் இவனை அனுப்பும்படி தீர்மானம்பண்ணினேன்.

அப் 25:26. இவனைக்குறித்து ஆண்டவனுக்கு எழுதுகிறதற்கு நிச்சயப்பட்ட காரியமொன்றும் எனக்கு விளங்கவில்லை. காவல் பண்ணப்பட்ட ஒருவன் செய்த குற்றங்களை எடுத்துக்காட்டாமல் அனுப்புகிறது புத்தியீனமான காரியமென்று எனக்குத் தோன்றுகிறபடியினாலே,

அப் 25:27. இவனை விசாரித்துக் கேட்டபின்பு எழுதத்தக்க விசேஷம் ஏதாகிலும் எனக்கு விளங்கும்படி, இவனை உங்களுக்கு முன்பாகவும், விசேஷமாய் அகிரிப்பா ராஜாவே, உமக்குமுன்பாகவும் கொண்டுவந்தேன் என்றான்.

அகிரிப்பா ராஜாவே

அப்பொழுது பெஸ்து: அகிரிப்பா ராஜாவே, எங்களோடேகூட இவ்விடத்தில் வந்திருக்கிறவர்களே, நீங்கள் காண்கிற இந்த மனுஷனைக்குறித்து யூதஜனங்களெல்லாரும் எருசலேமிலும் இவ்விடத்திலும் என்னை வருந்திக் கேட்டுக்கொண்டு, இவன் இனி உயிரோடிருக்கிறது தகாதென்று சொல்லிக் கூக்குரலிட்டார்கள் (அப் 25:24).

பெஸ்து பவுலின் சங்கதியை அறிமுகம் செய்துவைக்கிறான். நியாயஸ்தலத்தில் பிரவேசித்திருக்கிற எல்லோருக்கும் மிகுந்த மதிப்பும் மரியாதையும் கொடுத்து பேசுகிறான். "அகிரிப்பா ராஜாவே, எங்களோடேகூட இவ்விடத்தில் வந்திருக்கிறவர்களே" என்று மரியாதை மிகுந்த சொற்களைப் பயன்படுத்துகிறான். "இவ்விடத்தில் வந்திருக்கிறவர்களே" என்று சொல்லும் வார்த்தை, பெர்னீக்கேயாளை மரியாதையோடு அழைக்கும் வார்த்தையாக இருக்கலாம். ஆண்களுக்கு கொடுக்கப்படும் மரியாதைச் சொல், பெர்னீகேயாளுக்குக் கொடுக்கப்படுகிறது. நியாயஸ்தலத்தில் பெர்னீக்கேயாளுக்கு ஒரு வேலையும் இல்லை. ஏதோ ஒரு ஆர்வத்தில், மிகுந்த ஆடம்பரத்துடனே வந்திருக்கிறாள்.

பெஸ்து பவுலைப்பற்றிச் சொல்லும்போது யூத ஜனங்களெல்லோரும் எருசலேமிலும் இவ்விடத்திலும் கூக்குரலிட்டார்கள் என்றும், தன்னிடத்தில் அவன் இனி உயிரோடிருக்கிறது தகாது என்று வருந்திக்கேட்டுக்கொண்டார்கள் என்றும் குறிப்பிடுகிறான்.

மரணத்திற்குப் பாத்திரமானது

இவன் மரணத்துக்குப் பாத்திரமான தொன்றையும் செய்யவில்லையென்று நான் அறிந்து கொண்டதினாலும், இவன்தானே இராயனுக்கு அபயமிட்டபடியினாலும், அவரிடத்தில் இவனை அனுப்பும்படி தீர்மானம்பண்ணினேன் (அப் 25:25).

பவுல் மரணத்துக்குப் பாத்திரமான குற்றம் ஒன்றும் செய்யவில்லை என்று பெஸ்து அங்கீகாரம் பண்ணுகிறான். தன்னுடைய சொந்த மனச்சாட்சியின்படி, பவுல் குற்றமற்றவன் என்று தீர்மானிக்கிறான். ஆனாலும் பெஸ்து பவுலை விடுதலைபண்ணவில்லை. ஏனெனில் யூதஜனங்களெல்லாரும் பவுலுக்கு விரோதமாக எழும்பியிருக்கிறார்கள். பவுல் இனி உயிரோடிருக்கிறது தகாதென்று சொல்லி கூக்குரலிடுகிறார்கள். யூதருக்கு சத்துருவாக இருக்கிறவனை விடுதலைபண்ணினால், அவர்களுக்கு தான் சத்துருவாக வேண்டியது வரும் என்று பெஸ்து பயப்படுகிறான். மனச்சாட்சியின்படி தீர்ப்பு செய்து பவுலை விடுவிக்கக்கூடிய தைரியம் பெஸ்துவுக்கு இல்லை.

பெஸ்து பவுலை விடுவிக்கவுமில்லை. யூதர்கள் பவுலை உயிரோடு விடுகிறதாகவுமில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் பவுல் தானே இராயனுக்கு அபயமிட்டிருக்கிறான். இதனால் இராயரிடத்தில் பவுலை அனுப்பும்படி பெஸ்து தீர்மானம்பண்ணிவிடுக்கிறான். தன்னுடைய சொந்த மனச்சாட்சிக்குக் கீழ்ப்படிந்து, பெஸ்துவினால் பவுலை விடுதலைபண்ண முடியவில்லை. ஆனால் பவுலின் வார்த்தையைக்கேட்டு, அவனை இராயரிடத்திற்கு அனுப்ப முடிகிறது. பெஸ்து அதிகாரத்திலிருந்தாலும், தனக்கு எந்தவிதமான பிரச்சனையும் வந்துவிடக்கூடாது என்று பயப்படுகிறான்.

எழுதத்தக்க விசேஷம்

இவனைக்குறித்து ஆண்டவனுக்கு எழுதுகிறதற்கு நிச்சயப்பட்ட காரியமொன்றும் எனக்கு விளங்கவில்லை. காவல் பண்ணப்பட்ட ஒருவன் செய்த குற்றங்களை எடுத்துக்காட்டாமல் அனுப்புகிறது புத்தியீனமான காரியமென்று எனக்குத் தோன்றுகிறபடியினாலே, இவனை விசாரித்துக் கேட்டபின்பு எழுதத்தக்க விசேஷம் ஏதாகிலும் எனக்கு விளங்கும்படி, இவனை உங்களுக்கு முன்பாகவும், விசேஷமாய் அகிரிப்பா ராஜாவே, உமக்குமுன்பாகவும் கொண்டுவந்தேன் என்றான் (அப் 25:26,27).

நியாயஸ்தலத்தில் அகிரிப்பாவும், பெர்னீக்கேயாளும், சேனாபதிகளும், பட்டணத்து பிரதான மனுஷரும் அமர்ந்திருக்கிறார்கள். பெஸ்துவுக்கு இவர்களுடைய ஆலோசனை தேவைப்படுகிறது. பவுலை விசாரித்துக் கேட்ட பின்பு, அவன் எப்படிப்பட்ட குற்றத்தை செய்திருக்கிறான் என்று தனக்கு விளங்கும்படி சொல்லுமாறு பெஸ்து நியாயஸ்தலத்தில் உட்கார்ந்திருக்கிறவர்களிடம் கேட்கிறான்.

பவுல் இராயனுக்கு அபயமிட்டிருக்கிறான். பெஸ்துவும் பவுலை இராயரிடத்தில் அனுப்பும்படி தீர்மானம் பண்ணியிருக்கிறான். இராயனிடத்தில் பவுலை அனுப்பும்போது அவன் செய்த குற்றங்களை எடுத்துக்காட்டி அனுப்பவேண்டும். குற்றங்களை எடுத்துக்காட்டாமல் அனுப்புவது தேசாதிபதிக்கு புத்தியீனமான காரியமாக இருக்கும். பவுலைப்பற்றி எழுதத்தக்க விசேஷம் ஏதாகிலும் பெஸ்துவுக்கு விளங்கவேண்டும். இதற்காகவே பவுலை சேனாபதிகளுக்கு முன்பாகவும், பட்டணத்து பிரதான மனுஷருக்கு முன்பாகவும், விசேஷமாய் அகிரிப்பா ராஜாவுக்கு முன்பாகவும் கொண்டுவந்திருக்கிறான். அவர்கள் பவுலை விசாரித்துக் கேட்டு, அவனைப்பற்றி எழுதத்தக்க விஷயத்தை பெஸ்துவுக்கு விளங்கும்படி சொல்லவேண்டும். பெஸ்து அந்த விஷயங்களை பெஸ்து இராயருக்கு எழுதி அனுப்புவான்.

பவுலின் வழக்கு விசாரணையில் பெஸ்து குழப்பமடைந்திருக்கிறான். யூதர்கள் பவுலின்மீது ரூபிக்கக்கூடாத குற்றச்சாட்டுக்களைக் கூறுகிறார்கள். ஆனால் பவுலோ மரணத்திற்குப் பாத்திரமானது ஒன்றையும் செய்யவில்லையென்று பெஸ்து அறிந்திருக்கிறான். பெஸ்துவினால் இந்த வழக்கைத் தீர்த்து வைக்கமுடியவில்லை. இப்போது எல்லாருக்கும் முன்பாக விசாரித்து, பவுலைப்பற்றி ஏதாவது ஒரு சில காரியங்களை விளங்கிக்கொண்டு, அவற்றை நிரூபத்தில் எழுதி, பவுலை இராயரிடத்திற்கு அனுப்பிவிடலாம் என்று தீர்மானம்பண்ணுகிறான். இத்துடன் தன்னுடைய பிரச்சனை முடிவுக்கு வந்துவிட்டதாக பெஸ்து நினைக்கிறான்.

26 அதிகாரம்

பவுல் தன்னைப்பற்றி சாட்சியாக கூறுகிறான். அகிரிப்பா ராஜாவினிடத்தில் பவுல் மிகுந்த பணிவோடு பேசுகிறான் (அப் 26:1-3). தன்னுடைய சிறு வயதில் தான் ஆதிமுதல் நடந்த நடக்கை, தான் பரிசேயனாக நடந்தது, மரித்தோரின் உயிர்த்தெழுதலை தான் நம்புகிறது ஆகிய எல்லா காரியங்களையும் பவுல் விவரமாக எடுத்துச் சொல்லுகிறான் (அப் 26:4-8). இயேசுவின் நாமத்திற்கு விரோதமாய் தான் அநேக காரியங்களை நடப்பித்ததை பவுல் நினைவுகூர்ந்து சொல்லுகிறான் (அப் 26:9-11). பவுல் அற்புதமாக மனந்திரும்புகிறான் (அப் 26:12-16).

புறஜாதியாரிடத்திற்கு சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ண வேண்டுமென்று கர்த்தர் பவுலுக்கு கட்டளை கொடுக்கிறார் (அப் 26:17-18). கர்த்தருடைய கட்டளையின்பிரகாரம் பவுல் புறஜாதியாருக்கு பிரசங்கம்பண்ணுகிறான் (அப் 26:19-21). பவுல் புறஜாதியாரிடம் பிரசங்கித்த செய்தி (அப் 26:22,23).

பவுல் பிதற்றுவதாக பெஸ்து உரத்த சத்தமாய்ச் சொல்லுகிறான் (அப் 26:24). அகிரிப்பா ராஜா தான் சொல்லுவதை அறிந்திருப்பதாக பவுல் அறிவிக்கிறான் (அப் 26:25-27). தான் கிறிஸ்தவனாகிறதற்கு கொஞ்சம் குறைய பவுல் தன்னை சம்மதிக்கப்பண்ணுவதாக அகிரிப்பா சொல்லுகிறான் (அப் 26:28). பவுல் அகிரிப்பாவின் இரட்சிப்பை வரவேற்கிறான் (அப் 26:29).

பவுல் மரணத்திற்காவது கட்டுகளுக்காகவது பாத்திரமானது ஒன்றையும் செய்யவில்லையென்றும், இவன் இராயனுக்கு அபயமிடாதிருந்தானானால், இவனை விடுதலைபண்ணலாகும் என்று எல்லோரும் ஒருமனதாக யோசனைபண்ணி சொல்லுகிறார்கள் (அப் 26:30-32).

பவுல் உத்தரவு சொல்லுகிறான் அப் 26 : 1-8

அப் 26:1. அகிரிப்பா பவுலை நோக்கி: நீ உனக்காகப் பேச உனக்கு உத்தரவாகிறது என்றான். அப்பொழுது பவுல் கையை நீட்டி, தனக்காக உத்தரவு சொல்லத் தொடங்கினான்.

அப் 26:2. அகிரிப்பா ராஜாவே, யூதர்கள் என்மேல் சாட்டுகிற சகல காரியங்களைக்குறித்தும் நான் இன்றைக்கு உமக்கு முன்பாக உத்தரவு சொல்லப்போகிறபடியினாலே என்னைப் பாக்கியவான் என்றெண்ணுகிறேன்.

அப் 26:3. விசேஷமாய் நீர் யூதருடைய சகல முறைமைகளையும் தர்க்கங்களையும் அறிந்தவரானதால் அப்படி எண்ணுகிறேன்; ஆகையால் நான் சொல்வதைப் பொறுமையோடே கேட்கும்படி உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன்.

அப் 26:4. நான் என் சிறுவயதுமுதற்கொண்டு, எருசலேமிலே என் ஜனத்தாருக்குள்ளே இருந்தபடியால், ஆதிமுதல் நான் நடந்த நடக்கையை யூதரெல்லாரும் அறிந்திருக்கிறார்கள்.

அப் 26:5. நம்முடைய மார்க்கத்திலுள்ள சமய பேதங்களில் மிகவும் கண்டிப்பான சமயத்துக்கு இசைந்தபடி பரிசேயனாய் நடந்தேனென்று சாட்சிசொல்ல அவர்களுக்கு மனதிருந்தால் சொல்லலாம்.

அப் 26:6. தேவன் நம்முடைய பிதாக்களுக்கு அருளிச்செய்த வாக்குத்தத்தம் நிறைவேறுமென்கிற நம்பிக்கைக்காகவே நான் இப்பொழுது நியாயத்தீர்ப்படைகிறவனாய் நிற்கிறேன்.

அப் 26:7. இரவும் பகலும் இடைவிடாமல் ஆராதனை செய்துவருகிற நம்முடைய பன்னிரண்டு கோத்திரத்தாரும் அந்த வாக்குத்தத்தம் நிறைவேறுமென்று நம்பியிருக்கிறார்கள். அகிரிப்பா ராஜாவே, அந்த நம்பிக்கையினிமித்தமே யூதர்கள் என்மேல் குற்றஞ்சாட்டுகிறார்கள்.

அப் 26:8. தேவன் மரித்தோரை எழுப்புகிறது நம்பப்படாத காரியமென்று நீங்கள் எண்ணுகிறதென்ன?

நீ உனக்காகப் பேச

அகிரிப்பா பவுலை நோக்கி: நீ உனக்காகப் பேச உனக்கு உத்தரவாகிறது என்றான். அப்பொழுது பவுல் கையை நீட்டி, தனக்காக உத்தரவு சொல்லத் தொடங்கினான் (அப் 26:1).

நியாயசபையில் அகிரிப்பா கனம் பொருந்தியவனாக அமர்ந்திருக்கிறான். அகிரிப்பாவைப்பற்றிச் சொல்லும்போது, "அகிரிப்பா ராஜா" என்னும் பட்டமும் சேர்த்துச் சொல்லப்படுகிறது. அகிரிப்பா பெஸ்துவைவிட அதிகாரத்தில் உயர்ந்தவனல்ல. ஆனாலும் பெஸ்துவைவிட மூத்தவன். பவுலின் வழக்கு விசாரணையை பெஸ்து துவக்கி வைக்கிறான். அகிரிப்பா வழக்கை நடத்துகிறான். தன் கையை நீட்டி "நீ உனக்காகப் பேச உனக்கு உத்தரவாகிறது" என்று பவுலுக்குச் சொல்லுகிறான்.

தனக்காகப் பேச பவுலுக்குக் கிடைத்திருக்கிற உத்தரவு, அவனுக்கு ஒரு மேன்மையான அனுபவம். இது பவுலுக்கு கிடைத்திருக்கிற ஒரு சிலாக்கியம். தனக்காக தாராளமாகப் பேச அகிரிப்பா ராஜா பவுலுக்கு உத்தரவு கொடுக்கிறான். யூதருடைய ஆலோசனைச்சங்கத்தார் பவுலைப் பேசவிடவில்லை. அவன் பேசும் முன்பாகவே உரத்த சத்தமிட்டு, கூக்குரலிட்டு, அவனைப் பேசவிடாமல் தடுத்தார்கள். ஆனால் இங்கோ அகிரிப்பா ராஜா, அவனுக்காகப் பேச பவுலுக்கு உத்தரவு கொடுக்கிறான். பவுல் பேசும்போது தன் கையை நீட்டி, தனக்காக உத்தரவு கொடுக்கிறான். கையை நீட்டிப் பேசுவது என்பது, விடுதலையோடு பேசுவதைக் குறிக்கும். எந்தவித கட்டுக்களும், கட்டுப்பாடும் இல்லாமல் பேசுகிறவர்களால் மாத்திரம்தான் கையை நீட்டிப் பேசமுடியும். அகிரிப்பா ராஜாவுக்கு முன்பாக தன் கையை நீட்டிப் பேசுகிற சிலாக்கியம் பவுலுக்குக் கிடைத்திருக்கிறது.

அகிரிப்பா ராஜாவே

அகிரிப்பா ராஜாவே, யூதர்கள் என்மேல் சாட்டுகிற சகல காரியங்களைக்குறித்தும் நான் இன்றைக்கு உமக்கு முன்பாக உத்தரவு சொல்லப்போகிறபடியினாலே என்னைப் பாக்கியவான் என்றெண்ணுகிறேன். விசேஷமாய் நீர் யூதருடைய சகல முறைமைகளையும் தர்க்கங்களையும் அறிந்தவரானதால் அப்படி எண்ணுகிறேன்; ஆகையால் நான் சொல்வதைப் பொறுமையோடே கேட்கும்படி உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன் (அப் 26:2,3).

பவுல் தனக்காக உத்தரவு சொல்லும்போது மிகுந்த பணிவோடு பேசுகிறான். அகிரிப்பாவை மிகுந்த மரியாதையோடு "அகிரிப்பா ராஜாவே" என்று அழைக்கிறான். பேலிக்ஸிற்கு முன்பாக பவுல் தைரியமாய்ப் பேசினான். பேலிக்ஸ் அநேக வருஷகாலமாய் யூதேயா தேசத்தாருக்கு நியாயாதிபதியாயிருக்கிறார் என்று அறிந்து, பவுல் தன் காரியங்களைக்குறித்து அதிகத் தைரியத்துடன் உத்தரவு சொன்னான் (அப் 24:10).

பேலிக்ஸைவிட அகிரிப்பா ராஜா பவுலின் பார்வையில் உயர்ந்தவனாகத் தெரிகிறான். பவுலுக்கு விரோதமாக யூதர்கள் குற்றம் சுமத்தியிருக்கிறார்கள். மார்க்க சம்பந்தமான பல காரியங்களைக்குறித்து அவர்களுக்குள் விவாதம் நடைபெறுகிறது. யூதர்கள் பவுலைக்குறித்து தப்பிதமான அபிப்பிராயம் வைத்திருக்கிறார்கள். யூதமார்க்கத்திற்கு விரோதமாக அவன் தூஷண உபதேசங்களைப் பேசுகிறான் என்று அவன்மீது குற்றம் சுமத்துகிறார்கள். இப்போது தன்மீது சுமத்தப்பட்டிருக்கிற, மார்க்க சம்பந்தமான குற்றச்சாட்டுக்களைப்பற்றி பேசி, தன்னிடத்தில் தவறு ஒன்றும் இல்லையென்பதை நிரூபிப்பதற்கு, பவுலுக்கு ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கிறது.

"நீ உனக்காகப் பேச உனக்கு உத்தரவாகிறது" என்று அகிரிப்பா ராஜா பவுலுக்குச் சொன்னான். இதுவே பவுலுக்குக் கிடைத்திருக்கிற சிலாக்கியம். பவுல் தன்னைப்பற்றி அகிரிப்பா ராஜாவிடம் பேசுவது இதைவிட பெரிய சிலாக்கியம். அகிரிப்பா ராஜாவும் ஒரு யூதன். புறஜாதி மார்க்கத்திலிருந்து யூதமார்க்கத்தை ஏற்றுக்கொண்டவன். ரோமப்பேரரசின் மற்ற தேசாதிபதிகளைவிட, அகிரிப்பா ராஜாவுக்கு யூதமார்க்கத்தைப்பற்றிய காரியங்கள் நன்றாகத் தெரியும். "விசேஷமாய் நீர் யூதருடைய முறைமைகளையும் தர்க்கங்களையும் அறிந்தவரானதால், யூதர்கள் என்மேல் சாட்டுகிற சகல காரியங்களைக்குறித்தும் நான் இன்றைக்கு உமக்கு முன்பாக உத்தரவு சொல்லப்போகிறபடியினாலே என்னை பாக்கியவான் என்று எண்ணுகிறேன்" என்று பவுல் சொல்லுகிறான்.

யூதருடைய சகல முறைமைகளையும் தர்க்கங்களையும் அகிரிப்பா ராஜா நன்றாக அறிந்திருக்கிறான். யூதமார்க்கத்தின் முறைமைகளைக் குறித்து ஏதாவது தர்க்கமுண்டானால், அதைப்பற்றிய கேள்விகளையும் அகிரிப்பா தெளிவாக அறிந்திருக்கிறான். பழைய ஏற்பாட்டின் வேதவசனங்கள் அகிரிப்பா ராஜாவுக்கு நன்றாகத் தெரியும். ஆகையினால் பவுல் சொல்லுகிற காரியங்களை அகிரிப்பா தெளிவாக விளங்கிக்கொள்ளுவான்.

இயேசுவே மேசியா என்று பவுல் சாதிக்கிறான். யூதர்களோ தங்கள் மேசியா இன்னும் வரவில்லை என்றும், இயேசு தங்களுடைய மேசியா அல்ல என்றும் சாதிக்கிறார்கள். மேசியாவைக்குறித்து பவுலுக்கும் யூதருக்கும் இடையே கருத்து வேறுபாடு உண்டாயிற்று. அகிரிப்பா ராஜா யூதமார்க்கத்தின் முறைமைகளையும் தர்க்கங்களையும் நன்றாக அறிந்திருப்பதினால், தங்களுடைய பிரச்சனைக்கு அவன் ஒரு நல்ல தீர்ப்பைக் கொடுப்பானென்று பவுல் எதிர்பார்க்கிறான்.

வேதவாக்கியங்களை தியானித்துப் பார்க்கிறவர்கள் மத்தியில் பிரசங்கம்பண்ணும்போது பிரசங்கியாருக்கு உற்சாகமாகயிருக்கும். அவர்கள் பிரசங்கிக்கப்படுகிற வேதவசனங்களை ஆராய்ந்து பார்ப்பார்கள். அகிரிப்பா ராஜாவும் யூதருடைய சகல முறைமைகளையும் தர்க்கங்களையும் அறிந்திருக்கிறான். ஆகையினால் தான் சொல்லுவதை பொறுமையோடு கேட்கும்படி பவுல் அகிரிப்பா ராஜாவை வேண்டிக்கொள்கிறான்.

பவுல் ஒரு நீண்ட பிரசங்கத்தைப் பிரசங்கிப்பதற்கு ஆயத்தமாயிருக்கிறான். ஆகையினால் தான் சொல்லுவதை பொறுமையோடு கேட்கும்படி அகிரிப்பாவை வேண்டிக்கொள்கிறான். தான் பேசும்போது தன்மீது கோபப்படக்கூடாது என்றும், தான் பேசுவதைப் பொறுமையாய்க் கேட்கவேண்டுமென்றும் வேண்டிக் கொள்கிறான். கிறிஸ்துவைப்பற்றிய விசுவாசத்தை நாம் பிரசங்கம்பண்ணும்போது, இந்தப் பிரசங்கத்தைக் கேட்கிறவர்கள் மிகவும் பொறுமையோடு கேட்கவேண்டும். இல்லையென்றால் சத்தியம் அவர்கள் இருதயத்தில் கிரியை செய்யாது. அவர்களுக்குள் மனமாற்றமுண்டாகாது.

சிறுவயதுமுதற்கொண்டு

நான் என் சிறுவயதுமுதற்கொண்டு, எருசலேமிலே என் ஜனத்தாருக்குள்ளே இருந்தபடியால், ஆதிமுதல் நான் நடந்த நடக்கையை யூதரெல்லாரும் அறிந்திருக்கிறார்கள். நம்முடைய மார்க்கத்திலுள்ள சமய பேதங்களில் மிகவும் கண்டிப்பான சமயத்துக்கு இசைந்தபடி பரிசேயனாய் நடந்தேனென்று சாட்சிசொல்ல அவர்களுக்கு மனதிருந்தால் சொல்லலாம் (அப் 26:4,5).

பவுல் தேவதூஷணம் சொல்லுவதாக யூதர்கள் அவன்மீது குற்றம் சுமத்துகிறார்கள். ஆனால் பவுலோ தான் சிறுவயதுமுதற்கொண்டு, யூதமார்க்கத்திலுள்ள சமயத்தில், தான் பரிசேயனாய் நடந்ததாக தன்னைப்பற்றி சாட்சியாய் சொல்லுகிறான். பவுலின் ஜீவியத்தையும், அவனுடைய நடக்கையையும் யூதரெல்லாரும் அறிந்திருக்கிறார்கள். அவன் சிறுவயது முதற்கொண்டு யூதஜனத்தாருக்குள்ளே எப்படியிருந்தான் என்பதையும், ஆதிமுதல் அவன் நடந்த நடக்கையையும் யூதர்களெல்லாரும் அறிந்திருக்கிறார்கள். பவுல் யூதேயா தேசத்தில் பிறந்தது மாத்திரமல்ல, மற்ற யூதர்களோடு எருசலேம் நகரத்திலே சிறுவயது முதற்கொண்டு வளர்ந்திருக்கிறான்.

பவுல் அந்நிய தேசத்தில் கல்வி கற்கவில்லை. யாரிடத்திலும் நூதன பாடங்களை கற்றுக்கொள்ளவில்லை. யூதேயா தேசத்தில் எருசலேம் நகரத்தில் பவுல் கல்விகற்றான். அவன் சிறுவயது முதற்கொண்டு, எருசலேமிலே, யூதஜனத்தாருக்குள்ளே இருந்தபடியினால், யூதர்களெல்லோரும் பவுலைப்பற்றி அறிந்திருக்கிறார்கள். ஆதிமுதல் அவன் நடந்த நடக்கையை அறிந்திருக்கிறார்கள். அவன் ஒரு பரிசேயனாய் நடந்தான். இதற்கு அவர்கள் சாட்சி சொல்ல மனதிருந்தால் சொல்லலாம் என்று பவுல் தன்னைப்பற்றி சொல்லுகிறான். யூதமார்க்கத்திலுள்ள சமயபேதங்களில் மிகவும் கண்டிப்பான சமயத்திற்கு இசைந்தபடி பவுல் பரிசேயனாய் நடந்தான்.

பவுல் ஒரு பரிசேயன் என்று அழைக்கப்படுவது சாதாரண விஷயம். அவன் பரிசேயன் என்று அழைக்கப்படுவதோடு, அவன் ஒரு பரிசேயனாய் நடந்திருக்கிறான் என்பதுதான் விசேஷம். கமாலியேலின் பாதபடியில் கல்வி பயின்றவன். யூதமார்க்கத்து ரபீமார்கள் பவுலுக்கு வேதப்பிரமாணத்தைக் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள். பவுல் ஹில்லேல் என்னும் ரபீயினுடைய கலாசாலையில் பாடம் பயின்றவன்.

பவுல் ஒரு பரிசேயனாக இருப்பானென்றால், பரிசேய சமயத்திற்கு இசைந்தபடி நடந்திருப்பானென்றால், அவன் மெய்யாகவே வேத அறிவில் தேறினவனாகயிருப்பான். வேத வசனங்களைக் கற்றுத் தேர்ச்சி பெற்றிருப்பான். பரிசேயருக்கு நியாயப்பிரமாணம் நன்றாகத் தெரியும். பரிசேயரெல்லோரும் நியாயப்பிரமாணத்தில் அதிக ஞானமுள்ளவர்களாயிருப்பார்கள். மற்ற அப்போஸ்தலர்களெல்லாம் பவுலைப்போல உயர்ந்த கல்வி கற்கவில்லை. அவர்கள் மீன்பிடிக்கிற சாதாரண தொழில்களைச் செய்தவர்கள் (அப் 4:13). ஆனால் பவுலோ கமாலியேலின் பாதபடியில் கல்வி பயின்றவன்.

பவுல் ஒழுக்கம் மிகுந்தவன். நீதியின் பிரகாரமாக ஜீவிக்கிறவன். தன்னுடைய வாலிப நாட்களை உலகப்பிரகாரமாக ஜீவிக்காமல், பக்தியுள்ள பரிசேயனாய் நடந்து வந்திருக்கிறான். குற்றமில்லாத நியாயப்பிரமாணத்தை ஆசரித்து வந்திருக்கிறான். வேதப்பிரமாணத்தில் பவுலுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. ஆகையினால் பவுல் தன் அறியாமையில் பிரமாணத்தை மீறிவிட்டான் என்று அவன்மீது யாரும் குற்றம் சொல்ல முடியாது.

பவுல் விசுவாசத்தில் ஸ்திரமாக இருக்கிறான். பரிசேய மார்க்கத்தை நம்புகிறான். சதுசேயருக்கு எதிர்த்து நிற்கிறான். தேவனுடைய வெளிப்பாடு பவுலுக்குக் கிடைக்கவில்லையென்று யாரும் அவன்மீது குற்றம் சொல்லமுடியாது. யூதமார்க்கத்தைப் புரிந்துகொள்ள முடியாமல், யூதமார்க்கத்தைவிட்டு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டானென்று யாரும் பவுலைக் குற்றம் சொல்லமுடியாது. தேவன் முற்பிதாக்களுக்கு அருளிச்செய்த வாக்குத்தத்தம் நிறைவேறும் என்று பவுல் நம்பிக்கையோடிருக்கிறான்.

தன்னைப்பற்றிய நலமான காரியங்கள் எதுவும் தேவனுக்கு முன்பாக தன்னை நீதிமானாக ஆக்காது என்பது பவுலுக்குத் தெரியும். என்றாலும் தன்மீது குற்றம் சுமத்துகிற யூதருக்கு பிரதியுத்தரம் சொல்லும் வண்ணமாக, பவுல் தன்னைப்பற்றி அவர்களுக்கு எடுத்துச்சொல்லுகிறான். தன் சிறுவயது முதற்கொண்டு, எருசலேமிலே தன் ஜனத்தாருக்குள்ளே, தான் நடந்த நடக்கையையும், பரிசேயனாய் நடந்த விதத்தையும் அவர்களுக்கு விவரமாய் எடுத்துச்சொல்லுகிறான்.

யூதர்கள் தன்மீது சுமத்துகிற குற்றச்சாட்டு எதிலும் உண்மையில்லை என்பதை அகிரிப்பா ராஜா புரிந்து கொள்ளவேண்டும் என்பதில் அக்கறை காண்பிக்கிறான். கிறிஸ்துவுக்காக தன்னை ஆதாயப்படுத்த, எல்லாவற்றையும் நஷ்டமாக எண்ணுகிறான். தன்னைப்பற்றி சொல்லுவது கிறிஸ்துவின் நாமத்தை மகிமைப்படுத்தும் என்று எதிர்பார்த்து, பவுல் தன்னுடைய சிறுபிள்ளைப் பிராயத்தின் சாட்சியைக் கூட அறிவிக்கிறான். தேவனுக்கு முன்பாக தான் நல்மனச்சாட்சியோடு ஜீவித்ததை பவுல் மிகுந்த ஆறுதலோடு அகிரிப்பாவுக்கு முன்பாக அறிவிக்கிறான்.

பிதாக்களுக்கு வாக்குத்தத்தம்

தேவன் நம்முடைய பிதாக்களுக்கு அருளிச்செய்த வாக்குத்தத்தம் நிறைவேறுமென்கிற நம்பிக்கைக்காகவே நான் இப்பொழுது நியாயத் தீர்ப்படைகிறவனாய் நிற்கிறேன் (அப் 26:6).

பவுல் தன் இளமைப்பருவத்தில் யூதருடைய பாரம்பரிய பழக்க வழக்கங்களில் மிகுந்த பக்தி வைராக்கியத்தோடிருந்தான். ஆனால் இப்போது பவுலுக்கு யூதரின் பாரம்பரிய பழக்கத்தில் பக்தி வைராக்கியம் எதுவுமில்லை. ஆனாலும் யூதமார்க்கத்தின் அடிப்படை விசுவாசத்தை பவுல் இன்னும் நம்புகிறான். இந்த விஷயத்தில் அவனுக்குள் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை.

தேவன் முற்பிதாக்களுக்கு அருளிச்செய்த வாக்குத்தத்தம் நிறைவேறும் என்னும் நம்பிக்கையிலேயே யூதமார்க்கம் கட்டியெழுப்பப்பட்டிருக்கிறது. தேவனுடைய தெய்வீக வெளிப்பாடு, தெய்வீக கிருபை ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்டே யூதமார்க்கம் கட்டியெழுப்பப்பட்டிருக்கிறது. தேவனுடைய வாக்குத்தத்தினால் தேவகிருபை வெளிப்படுத்தப்படுகிறது. தேவனுடைய வாக்குத்தத்தமே யூதமார்க்கத்திற்கு வழிகாட்டியாகவும் அஸ்திபாரமாகவும் இருக்கிறது.

யூதருடைய பாரம்பரிய பிரமாணங்களைவிட, தேவன் முற்பிதாக்களுக்கு அருளிச் செய்த வாக்குத்தத்தம் பழமையானது. இயேசுகிறிஸ்துவும் பரலோகமும் சுவிசேஷத்தின் இரண்டு முக்கியமான உபதேசங்கள். தேவன் நமக்கு நித்திய ஜீவனைக் கொடுத்திருக்கிறார். இந்த ஜீவன் தேவனுடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவில் நமக்குக் கிடைத்திருக்கிறது. முற்பிதாக்களுக்கு தேவன் இந்த இரண்டு பிரமாணங்களையும் வாக்குத்தத்தமாக அருளியிருக்கிறார்.

பவுலின் மார்க்கமும் இந்த வாக்குத்தத்தத்தை நம்புகிறது. பவுலும் இதை நம்புகிறான். யூதரும் இதை நம்புகிறார்கள். தேவன் முற்பிதாக்களுக்கு அருளிச் செய்த வாக்குத்தத்தம் நிறைவேறும் என்கிற நம்பிக்கையே யூதமார்க்கத்தின் சாரமாகும். இந்த உடன்படிக்கையிலும், வாக்குத்தத்தத்தின் மீதும் தேவனுடைய கிருபை இருக்கிறது என்பதை யூதமார்க்கத்தாரும், பவுலும் விசுவாசித்து சார்ந்திருக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துவே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட வித்து என்று பவுல் நம்பிக்கையாயிருக்கிறான். இயேசு கிறிஸ்துவில் தான் ஆசீர்வதிக்கப்பட்டவன் என்றும் பவுல் விசுவாசிக்கிறான். பவுலிடத்தில் பரலோகத்தைப்பற்றிய நம்பிக்கை இருக்கிறது. பவுல் தன் மாம்சத்தில் நம்பிக்கை வைக்காமல், இயேசுகிறிஸ்துவில் நம்பிக்கை வைத்திருக்கிறான்.

வாக்குத்தத்தம் நிறைவேறும்

இரவும் பகலும் இடைவிடாமல் ஆராதனை செய்துவருகிற நம்முடைய பன்னிரண்டு கோத்திரத்தாரும் அந்த வாக்குத்தத்தம் நிறைவேறுமென்று நம்பியிருக்கிறார்கள். அகிரிப்பா ராஜாவே, அந்த நம்பிக்கையினிமித்தமே யூதர்கள் என்மேல் குற்றஞ்சாட்டுகிறார்கள் (அப் 26:7).

யூதமார்க்கத்தில் பக்தியுள்ளவர்களும் இருக்கிறார்கள். துன்மார்க்கரும் இருக்கிறார்கள். யூதருடைய பன்னிரண்டு கோத்திரத்தாரும் தேவனை இரவும் பகலும் இடைவிடாமல் ஆராதனை செய்துவருகிறார்கள். தேவன் பிதாக்களுக்கு அருளிச் செய்த வாக்குத்தத்தம் நிறைவேறும் என்று அவர்களும் நம்பிக்கையாயிருக்கிறார்கள். இஸ்ரவேல் தேசத்தாரெல்லோருமே "கிறிஸ்து, பரலோகம் ஆகிய இரண்டும் இடம்பெற்றிருக்கிற இந்த வாக்குத்தத்தம்" நிறைவேறும் என்று நம்பிக்கையா யிருக்கிறார்கள். யூதர்களெல்லோரும் மேசியா வரப்போகிறார் என்று நம்பிக்கையாயிருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களோ, அந்த மேசியா ஏற்கெனவே வந்துவிட்டார் என்று விசுவாசத்தோடிருக்கிறார்கள். இவ்வாறாக யூதரும், கிறிஸ்துவின் சீஷர்களும் ஒரே வாக்குத்தத்தத்தை ஆதாரமாக வைத்தே, தங்கள் மார்க்கங்களை கட்டியெழுப்பியிருக்கிறார்கள்.

மரித்தோர் உயிர்த்தெழுவதையும் யூதர்கள் விசுவாசத்தோடு எதிர்பார்க்கிறார்கள். அவர்களைப்போலவே தானும் மரித்தோரின் உயிர்த்தெழுதலை எதிர்பார்ப்பதாக பவுல் சொல்லுகிறான். யூதருடைய அடிப்படை விசுவாசத்தை பவுலும் ஒத்துக்கொள்கிறான். அப்படியிருக்கும்போது யூதமார்க்கத்திற்கு விரோதமாக, தான் தேவதூஷணம் சொல்லுவதாக, தன்மீது ஏன் குற்றம் சுமத்தவேண்டும் என்று பவுல் விவாதம்பண்ணுகிறான்.

யூதர்கள் பரலோகம் உண்டு என்று நம்புகிறார்கள். தானும் பரலோகம் உண்டு என்று நம்புவதாக பவுல் அறிக்கை செய்கிறான். மரித்தபின்பு உயிர்த்தெழுந்து, பரலோகத்திற்குப்போவோம் என்று யூதர்கள் நம்பிக்கையாயிருப்பதுபோலவே, பவுலும் நம்பிக்கையாயிருக்கிறான். எல்லோருமே பரலோகத்திற்கு சந்தோஷமாகப் போகப்போகிறோம் என்றும், போகிற வழியில் நாம் ஏன் மார்க்கபேதமென்று சண்டையிட்டுக் கொண்டு, ஒருவரையொருவர் வருத்தப்படுத்திக்கொள்ளவேண்டும் என்று பவுல் விவாதம்பண்ணுகிறான்.

யூதருடைய பன்னிரண்டு கோத்திரத்தாரும் இரவும் பகலும் தேவனை ஆராதிக்கிறார்கள். அவர்களைப்போலவே பவுலும் சுவிசேஷத்தில் சொல்லப்பட்டிருக்கிற தேவனுடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை, இரவும் பகலும் ஆராதிக்கிறான். இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாரைப்பற்றி மோசேயின் பிரமாணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தப் பன்னிரண்டு கோத்திரத்தாரும், பவுலும் தேவன் பிதாக்களுக்கு அருளிச்செய்த அந்த வாக்குத்தத்தம் நிறைவேறும் என்று நம்பிக்கையோடிருக்கிறார்கள். இவர்களுடைய நம்பிக்கை ஒன்றே. நம்பிக்கையில் வித்தியாசமில்லை.

கிறிஸ்துவின் சீஷர்களாகிய நம்முடைய நம்பிக்கை இயேசுகிறிஸ்துவில் இருக்கிறது. நாமும் யூதர்கள் நம்புகிற அதே பரலோகத்தையே நம்புகிறோம். யூதர்களுடைய ஆராதனை முறைமைகளும், நம்முடைய ஆராதனை முறைமைகளும் வித்தியாசமாக இருக்கலாம். ஆனால் நாம் எல்லோருமே பரிசுத்த அன்பினால் இணைக்கப்பட்டவர்களாக ஜீவிக்கவேண்டும். கற்பாறையின்மேல் கட்டிய வீடு அழிந்துபோகாது. கர்த்தருடைய வசனத்தை அஸ்திபாரமாகக் கொண்டிருக்கிற விசுவாசம் ஆட்டம் காண்பிக்காது. நாம் இயேசுகிறிஸ்துவையும், அவருடைய வார்த்தைகளையும் விசுவாசிக்கும்போது, நம்முடைய விசுவாசம் ஸ்திரமாயும், உறுதியாயும் இருக்கும்.

கர்த்தரிடத்தில் பக்தியுள்ளவர்கள் எல்லோருமே நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று வாஞ்சையோடிருக்கிறார்கள். தேவனை இரவும் பகலும் ஆராதிக்கும் சிலாக்கியமே நமக்கு நித்திய ஜீவன். நாம் நித்திய ஜீவனைப்பெற்றுக்கொள்வோம் என்னும் நம்பிக்கையில் நம்முடைய ஜீவியம் பரிசுத்தமாகயிருக்கவேண்டும். பயபக்தியோடு தேவனை ஆராதிக்கவேண்டும்.

தேவனை இடைவிடாமல் ஆராதனை செய்கிற இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தார் பவுலின்மீது கோபமாகயிருக்கிறார்கள். அவர்களுடைய ஆராதனை முறைமைக்கும், பவுலின் ஆராதனை முறைமைக்கும் வித்தியாசமிருக்கலாம். ஆனால் இருவருமே ஒரே தேவனையே ஆராதிக்கிறார்கள். எல்லோருக்கும் ஒரே தேவனே பிதாவாகயிருக்கிறார். ஆகையினால் ஒருவருக்கொருவர் அன்பாயிருக்க வேண்டும். ஒருவரையொருவர் நியாயந்தீர்க்கும்போது விட்டுக்கொடுத்து பழகவேண்டும்.

தேவன் முற்பிதாக்களுக்கு அருளிச் செய்த வாக்குத்தத்தம் நிறைவேறும் என்று யூதர்கள் நம்புகிறார்கள். இதைப் பவுலும் நம்புகிறான். இந்த நம்பிக்கையின் நிமித்தமே யூதர்கள் தன்மீது குற்றம் சாட்டுவதாக பவுல் அகிரிப்பா ராஜாவுக்கு அறிவிக்கிறான். பவுல் யூதருடைய பாரம்பரிய பிரமாணங்களை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் தேவன் முற்பிதாக்களுக்கு அருளிச் செய்த வாக்குத்தத்தம் நிறைவேறும் என்று நம்புகிறான். ஆனால் யூதர்களோ தேவன் அருளிச்செய்த வாக்குத்தத்தத்தைவிட, யூதருடைய பாரம்பரிய பழக்க வழக்கங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.

இக்காலத்தில் மார்க்கப் பிரிவினருக்குள்ளே பிரச்சனைகள் உண்டாகிறது. சமாதானம் குறைந்துபோகிறது. மனுஷருக்குள் வாக்குவாதங்களும் பிரிவினைகளும் உண்டாகிறது. ஒவ்வொருவரும் தங்களுடைய மார்க்கம்தான் சிறந்தது என்று நினைக்கிறார்கள். தங்களுடைய மார்க்கத்தைப்பற்றி பெருமையோடு நினைக்கிறவர்கள், மற்ற மார்க்கத்தை மதிக்கமாட்டார்கள். மற்ற மார்க்கத்திலுள்ள கொள்கைகளை ஏளனமாகப் பேசுவார்கள்.

தேவன் மரித்தோரை எழுப்புகிறது

தேவன் மரித்தோரை எழுப்புகிறது நம்பப்படாத காரியமென்று நீங்கள் எண்ணுகிறதென்ன? (அப் 26:8)

நீதிமான்களும் அநீதிமான்களுமாகிய மரித்தோர் உயிர்த்தெழுந்திருப்பது உண்டென்று யூதர்கள் தேவனிடத்தில் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். அதுபோல பவுலும் நம்பிக்கை கொண்டிருக்கிறான். அவர்கள் நம்பும்போது அவர்களுக்கு அது ஆசீர்வாதமாகத் தெரிகிறது. அதே காரியத்தைப் பவுல் நம்பும்போது, அது அவர்களுக்கு தேவதூஷணமாகத் தெரிகிறது. தேவாலயத்தைத் தீட்டுப்படுத்துவதாகத் தெரிகிறது. யூதமார்க்கத்திற்கு விரோதமான பிரசங்கமாகத் தெரிகிறது.

மரித்தோரின் உயிர்த்தெழுதலை நம்பவேண்டுமென்று பவுல் யூதருக்குப் பிரசங்கம்பண்ணுகிறான். ஆனால் தேவன் மரித்தோரை எழுப்புகிறது நம்பப்படாத காரியம் என்று யூதர்கள் எண்ணுகிறார்கள். தேவன் முற்பிதாக்களுக்கு அருளிச்செய்த வாக்குத்தத்தத்தை பவுல் யூதருக்கு விளக்கிச் சொல்லுகிறான். மரித்தோரின் உயிர்த்தெழுதலும், நித்திய ஜீவனுமே தேவன் பிதாக்களுக்கு அருளிச் செய்த வாக்குத்தத்தம். பவுல் இந்த வாக்குத்தத்தத்தை விசுவாசிக்கிறான்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து கல்வாரி சிலுவையில் தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்தார். அவருடைய சரீரத்தை கல்லறையில் அடக்கம்பண்ணினார்கள். அவர் மூன்றாம் நாளில் உயிரோடு எழும்பினார். மரித்தோர் உயிர்த்தெழுந்திருப்பது உண்டென்று முற்பிதாக்கள் நம்பினார்கள். அந்த நம்பிக்கையின் பிரகாரமாகவே தேவன் இயேசுகிறிஸ்துவை உயிரோடு எழுப்பியிருக்கிறார். அவர்கள் நம்பிய காரியம் நிறைவேற்றிற்று.

பவுல் மரித்தோரின் உயிர்த்தெழுதலைப்பற்றி பெஸ்துவின் நியாயஸ்தலத்திற்கு முன்பாகப் பேசுகிறான். பவுலின் வார்த்தைகளைக் கேட்கிறவர்கள் அநேகர் புறஜாதியார். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைப்பற்றியும், மரித்தோரின் உயிர்த்தெழுதலைப்பற்றியும் பவுல் பேசுவது அவர்களுக்கு புரியாத சத்தியமாக இருக்கிறது. ஏனெனில் மரித்தோரின் உயிர்த்தெழுதல் இயற்கையின் பிரமாணத்தின்படி சாத்தியமானதல்ல. மரித்தோர் உயிர்த்தெழுவது தேவனுடைய வல்லமையினால் நடைபெறக்கூடியது. தேவனுடைய வல்லமை இயற்கையின் வல்லமையைவிட மேலானது. தேவன் இயற்கைக்கும் தேவனாகயிருக்கிறார்.

இயற்கையிலும் உயிர்த்தெழுதலின் சாயல் நமக்கு வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. பருவகாலங்கள் மாறி மாறி வருகிறது. கோடைகாலம், மழைகாலம், குளிர்காலம் என ஒவ்வொரு பருவகாலங்களாக மாறிவருகிறது. கோடைகாலத்தில், ஒரு சில தாவரங்கள் மரித்துப்போனதுபோல காய்ந்துபோகிறது. தண்ணீரும் சூரிய வெளிச்சமும் அதன்மீது பட்டவுடன் அவை மறுபடியும் உயிர்பெறுகிறது. இயற்கையின் சம்பவங்கள் இதுபோல உயிர்த்தெழுதலுக்கு நிழலாகயிருக்கிறது. தேவன் தம்முடைய சர்வவல்லமையினால் மரித்தோரை உயிரோடு எழுப்புவது சாத்தியமானதுதான் என்று பவுல் நியாயாசனத்திற்கு முன்பாக சாட்சியாகச் சொல்லுகிறான்.

பரிசுத்தவான்களுக்குத் துன்பம் அப் 26 : 9-11

அப் 26:9. முன்னே நானும் நசரேயனாகிய இயேசுவின் நாமத்திற்கு விரோதமாய் அநேக காரியங்களை நடப்பிக்க வேண்டுமென்று நினைத்திருந்தேன்.

அப் 26:10. அப்படியே நான் எருசலேமிலும் செய்தேன். நான் பிரதான ஆசாரியர்களிடத்தில் அதிகாரம் பெற்று, பரிசுத்தவான்களில் அநேகரைச் சிறைச்சாலைகளில் அடைத்தேன்; அவர்கள் கொலைசெய்யப்படுகையில் நானும் சம்மதித்திருந்தேன்.

அப் 26:11. சகல ஜெபஆலயங்களிலும், நான் அவர்களை அநேகந்தரம் தண்டித்து, தேவதூஷணஞ் சொல்லக் கட்டாயப்படுத்தினேன்; அவர்கள்பேரில் மூர்க்க வெறிகொண்டவனாய் அந்நியபட்டணங்கள் வரைக்கும் அவர்களைத் துன்பப்படுத்தினேன்.

இயேசுவின் நாமத்திற்கு விரோதமாய்

முன்னே நானும் நசரேயனாகிய இயேசுவின் நாமத்திற்கு விரோதமாய் அநேக காரியங்களை நடப்பிக்க வேண்டுமென்று நினைத்திருந்தேன் (அப் 26:9).

அகிரிப்பா ராஜாவுக்கு முன்பாக பவுலை விசாரிக்கிறார்கள். பவுல் தனக்காகப் பேச அவனுக்கு அகிரிப்பா உத்தரவு கொடுக்கிறான். அப்பொழுது பவுல் கையை நீட்டி தனக்காக உத்தரவு சொல்லத் தொடங்குகிறான். தான் இரட்சிக்கப்படுவதற்கு முன்பாக கர்த்தருடைய பரிசுத்தவான்களைத் துன்பப்படுத்தின சம்பவங்களையும், கர்த்தர் தன்னைச் சந்தித்து இரட்சித்த சம்பவத்தையும், கர்த்தர் தனக்குக் கொடுத்திருக்கிற ஊழியத்தையும் பவுல் விரிவாக எடுத்துச் சொல்லுகிறான்.

பவுல் ஒரு யூதன். பரிசேய சமயத்தைச் சேர்ந்தவன். அக்காலத்தில் பவுல் இரட்சிக்கப்படுவதற்கு முன்பாக இயேசுகிறிஸ்துவின் உபதேசத்திற்கும், அவருடைய சீஷருக்கும் சத்துருவாகயிருந்தான். கிறிஸ்துவின் சீஷர்களைத் துன்பப்படுத்தி, காவலில் வைத்து, அவர்களைக் கொன்றுபோடுவது கர்த்தர் தனக்குக் கொடுத்திருக்கும் ஊழியம் என்று நினைத்தான். சீஷர்களை மரணபரியந்தம் துன்பப்படுத்தினான். இதன் மூலமாக தேவனுடைய நாமம் மகிமைப்படுவதாக பவுல் தவறாக நினைத்தான்.

பவுலுக்கு கிறிஸ்துவின் உபதேசம் பிடிக்காது. கிறிஸ்துவின் சீஷர்களையும் அவனுக்குப் பிடிக்காது. யூதமார்க்கத்தில் அவனுக்கு பகை எதுவுமில்லை. யூதருடைய நியாயப்பிரமாணத்தை அவன் வெறுக்கவுமில்லை. ஆனாலும் இயேசுகிறிஸ்து பவுலைச் சந்தித்து இரட்சித்தார். தம்முடைய ஊழியத்தைச் செய்யுமாறு அவனை அபிஷேகித்தார். இதற்கு முன்பு கிறிஸ்துவின் உபதேசத்தைப்பற்றித் தெரியாதவன், இப்போது அவருடைய சுவிசேஷத்தைப் பிரசங்கித்துக்கொண்டிருக்கிறான்.

இயேசுகிறிஸ்துவை பவுல் தேடி வரவில்லை. அவரே இவனைத் தேடி வந்து இரட்சித்தார். இயேசுகிறிஸ்து இவனைச் சந்திக்கும் வரையிலும், அவரைக் குறித்தும், அவருடைய உபதேசங்களைக் குறித்தும், அவருடைய சீஷர்களைக் குறித்தும் பவுல் தவறான எண்ணங்கொண்டிருந்தான். இயேசுகிறிஸ்து பவுலை இரட்சித்த பின்போ அவனுடைய இருதயத்தில் மாற்றமுண்டாயிற்று. இயேசுகிறிஸ்துவை இப்போது நேசிக்கிறான். அவருடைய உபதேசத்தை வாஞ்சையாய்த் தியானிக்கிறான். கிறிஸ்துவின் சீஷர்களை நேசித்து அவர்களோடு ஐக்கியமாகயிருக்கிறான்.

பவுல் இரட்சிக்கப்பட்ட அனுபவம் ஒரு தெய்வீக அற்புதம். இந்த அற்புதத்தினால் பவுலுக்கும், அவன் மூலமாக ஏராளமானோருக்கும் ஆவிக்குரிய பிரயோஜனமுண்டாயிற்று. கிறிஸ்துவின் உபதேசத்திற்கு பவுல் சாட்சியாகயிருக்கிறான். ஒரு காலத்தில் பவுல் கிறிஸ்துவின் சீஷர்களைத் துன்பப்படுத்தினான். பவுல் இரட்சிக்கப்பட்ட பின்போ, யூதமார்க்கத்தார் அவனைத் துன்பப்படுத்துகிறார்கள். தன்னை துன்பப் படுத்துகிறவர்களையும், உபத்திரவப்படுத்துகிறவர்களையும் பவுல் தன்னுடைய இருதயத்தில் மன்னிக்கிறான். நம்முடைய சத்துருக்களை மன்னித்து, அவர்களை சிநேகிக்கவேண்டுமென்பது இயேசுகிறிஸ்துவின் உபதேசம். இந்த உபதேசத்திற்கு பவுல் சாட்சியாகயிருக்கிறான்.

பவுலும் ஒரு காலத்தில் கிறிஸ்துவின் சீஷர்களைத் துன்பப்படுத்தினான். தான் செய்தது மிகப்பெரிய தவறு என்பதை இப்போது பவுல் அங்கீகரிக்கிறான். இதே போன்ற தவறை யூதமார்க்கத்துத் தலைவர்கள் இப்போது செய்கிறார்கள். அவர்கள் பவுலையும், கிறிஸ்துவின் மற்ற சீஷர்களையும் துன்பப்படுத்துகிறார்கள்.

பவுல் இரட்சிக்கப்படுவதற்கு முன்பாக, நசரேயனாகிய இயேசுவின் நாமத்திற்கு விரோதமாய் அநேக காரியங்களை நடப்பிக்கவேண்டுமென்று நினைத்திருந்தான். பவுல் கமாலியேலின் பாதபடியில் கல்வி பயின்றவன். வேதபண்டிதன். தேவனுடைய ராஜ்யத்தைப்பற்றி இவன் உபதேசம் பெற்றிருக்கிறான். ஆனால் பவுல் விசுவாசித்த உபதேசம் தவறானது. தேவனுடைய ராஜ்யத்தைப்பற்றி இயேசுகிறிஸ்து உபதேசம்பண்ணியது வேறு. இதைப்பற்றி பவுல் கற்றுக்கொண்டது வேறு. இவ்விரண்டிற்கும் இடையில் வித்தியாசமுள்ளது.

மேசியாவாகிய கிறிஸ்து இன்னும் வரவில்லை என்று, எல்லா யூதர்களைப்போலவே பவுலும் நினைத்தான். ஆனால் இயேசுவோ தம்மை மேசியாவாகிய கிறிஸ்து என்று வெளிப்படுத்தினார். பவுல் கிறிஸ்துவின் உபதேசத்தை விசுவாசிக்கவில்லை. இயேசுகிறிஸ்துவும், அவரை விசுவாசிக்கிறவர்களும் கர்த்தருக்கு விரோதமாகவும், தேவனுடைய ராஜ்யத்திற்கு விரோதமாகவும் தேவதூஷணம் சொல்லுவதாகப்பவுல் நினைத்தான். இயேசுகிறிஸ்துவின் நாமத்தைத் தொழுதுகொள்கிறவர்களைத் துன்பப்படுத்துவது, கர்த்தர் தனக்குக் கொடுத்திருக்கும் பிரயோஜனமுள்ள ஊழியம் என்று நினைத்து, கர்த்தருடைய சீஷர்களையெல்லாம் துன்பப்படுத்தினான்.

பவுல் தவறான பாதையில் சென்றுகொண்டிருந்தாலும், தான் செல்வது சரியான பாதை தான் என்று தவறாக நினைத்தான். பவுலைப்போல நாமும் கூட சில சமயங்களில் நமக்குச் சரியானது என்று நினைத்து, தவறானதைச் செய்வதற்கு வாய்ப்புள்ளது. ஆகையினால் ஒரு காரியத்தை நாம் செய்வதற்கு முன்பாக, கர்த்தருடைய சமுகத்தில் அமர்ந்திருந்து, அவருடைய ஆலோசனைகளைப் பெற்றுக்கொண்டு, அவருடைய வழிநடத்துதலின் பிரகாரம் ஒவ்வொரு காரியத்தையும் செய்யவேண்டும்.

துன்பப்படுத்தினேன்

அப்படியே நான் எருசலேமிலும் செய்தேன். நான் பிரதான ஆசாரியர்களிடத்தில் அதிகாரம் பெற்று, பரிசுத்தவான்களில் அநேகரைச் சிறைச்சாலைகளில் அடைத்தேன்; அவர்கள் கொலைசெய்யப்படுகையில் நானும் சம்மதித்திருந்தேன். சகல ஜெபஆலயங்களிலும், நான் அவர்களை அநேகந்தரம் தண்டித்து, தேவதூஷணஞ் சொல்லக் கட்டாயப்படுத்தினேன்; அவர்கள்பேரில் மூர்க்கவெறி கொண்டவனாய் அந்நியபட்டணங்கள் வரைக்கும் அவர்களைத் துன்பப்படுத்தினேன் (அப் 26:10,11).

கிறிஸ்துவின் சீஷர்கள்மீது பவுல் மூர்க்கவெறிகொண்டு அவர்களைக் கட்டி, மரணபரியந்தம் உபத்திரவப்படுத்தினான். அவன் செய்த தப்பிதத்தை அவனுடைய மனச்சாட்சி அவனுக்கு உணர்த்தவில்லை. அவனுடைய மனச்சாட்சியும் குருடாயிருக்கிறது. ஆவிக்குரிய சத்தியத்தை அது புரிந்து கொள்ளவில்லை. பவுலின் மனச்சாட்சி அவனைத் தவறான பாதையில் வழிநடத்திற்று. பொய்யை மெய் என்று அவனுக்குள் தவறாக உணர்த்திற்று. பவுல் தன் மனச்சாட்சியின் பிரகாரம் கிறிஸ்துவின் சீஷர்களை உபத்திரவப்படுத்தினான். தன் மனச்சாட்சி தன்னை தேவனுடைய நாமமகிமைக்கு நேராகச் சரியாக நடத்துவதாக நினைத்தான்.

அகிரிப்பா ராஜாவுக்கு முன்பாக பவுல் தன்னுடைய கடந்த கால அனுபவங்களை எடுத்துச் சொல்லுகிறான். பவுல் இரட்சிக்கப்படுவதற்கு முன்பாக கிறிஸ்துவின் சீஷர்களை உபத்திரப்படுத்தினான். சிறைச்சாலைகளில் அடைத்தான். அவர்கள் கொலை செய்யப்படுவதற்குச் சம்மதம் தெரிவித்தான். இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் அவருடைய உபதேசத்தை விசுவாசித்து, அவரே மெய்யான வழி என்றும், அவரே சத்தியமும் ஜீவனுமாகயிருக்கிறார் என்றும் நம்புகிறார்கள். கிறிஸ்துவின்மீது பயபக்தியாயிருக்கிறார்கள். ஆனால் பவுலோ அவர்களுடைய வழி தவறான வழி என்று தன்னுடைய உள்ளத்தில் உறுதியாயிருக்கிறான்.

கர்த்தருடைய பரிசுத்தவான்களைப் பிடித்து சிறைச்சாலைகளில் அடைக்கிறான். சிறைச்சாலைகள் பரிசுத்தவான்களினால் நிரப்பப்படுகிறது. புருஷரும் ஸ்திரீகளும் சிறைச்சாலைகளில் அடைக்கப்படுகிறார்கள் (அப் 8:3). பிரதான ஆசாரியருக்கு பவுல் வலது கையைப்போல செயல்படுகிறான்.

கிறிஸ்துவின் சீஷர்களை உபத்திரவப்படுத்துவதற்குப் பிரதான ஆசாரியர்கள் பவுலை ஒரு கருவியாக பயன்படுத்துகிறார்கள். கிறிஸ்துவின் பரிசுத்தவான்களைத் துன்பப்படுத்தவும், அவர்களைச் சிறைச்சாலைகளில் அடைக்கவும் பிரதான ஆசாரியர்களிடத்தில் பவுல் அதிகாரம் பெற்றுக்கொள்கிறான். தனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்திற்காக பவுல் பெருமைப்படுகிறான். இந்த அதிகாரத்தை நல்லமுறையில் நிறைவேற்றுவது, கர்த்தருக்காகத் தான் செய்கிற ஊழியம் என்று நினைத்து, கர்த்தருடைய பரிசுத்தவான்கள் கொலைசெய்யப்படுகையில் பவுலும் அதற்குச் சம்மதிக்கிறான்.

யூதமார்க்கத்து சட்டத்தின் பிரகாரம் கிறிஸ்துவின் சீஷர்களை மரணஉபாதிக்குட் படுத்துகிறான். பரிசுத்தவான்களைக் கொலைசெய்ய வேண்டுமென்பதில் பவுல் வைராக்கியத்தோடிருக்கிறான். ஸ்தேவான் கொலைசெய்யப்படுவதற்கு பவுலும் முக்கியமான ஒரு காரணமாகயிருந்தான். ஸ்தேவானைக் கொலை செய்கிறதற்கு பவுலும் சம்மதித்திருந்தான் (அப் 8:1).

கர்த்தருடைய பரிசுத்தவான்களை பவுல் பிடித்து, அவர்களை ஜெபாலயங்களில் அநேகந்தரம் தண்டிக்கிறான். ஜெபாலயம் ஜெபிக்கிற ஸ்தலம். ஆனால் பவுலுக்கோ ஜெபாலயங்கள் கிறிஸ்துவின் சீஷர்களை தண்டிக்கிற ஸ்தலமாயிற்று. கிறிஸ்துவின் சீஷர்கள் ஜெபாலயங்களின் சட்டங்களுக்கும், ஒழுங்கு முறைகளுக்கும் விரோதமானவர்கள் என்றும், ஜெபாலயங்களின் சட்டங்களை மீறியவர்கள் என்றும் அவர்கள்மீது குற்றம் சுமத்தி, அவர்களை ஜெபாலயங்களிலேயே தண்டிக்கிறான்.

கிறிஸ்துவின் சீஷர்கள்மீது பவுலுக்கிருந்த கோபவெறி அவர்களைத் தண்டிப்பதோடு நின்றுவிடவில்லை. தங்களுடைய விசுவாசத்தை மறுதலிக்குமாறு அவர்களைக் கட்டாயப்படுத்துகிறான். இயேசுகிறிஸ்து தேவன் அல்ல என்றும், அவர் மேசியா அல்ல என்றும் அவர்களுடைய வாயினாலே சொல்லுமாறு பவுல் அவர்களை அடித்து துன்புறுத்திக் கட்டாயப்படுத்துகிறான். அவர்கள் பேரில் மூர்க்கவெறிகொண்டவனாய் அவர்களைத் துன்பப்படுத்துகிறான்.

பவுலின் அச்சுறுத்தலுக்குப் பயந்து, ஒரு சில பரிசுத்தவான்கள் வேதனை தாங்கமுடியாமல் இயேசுகிறிஸ்துவை மறுதலிக்கிறார்கள். அவர்கள் கர்த்தரை மறுதலிக்கும்போது, சரீர வேதனையைவிட மனச்சாட்சியின் மூலமாக உண்டாகும் ஆத்தும வேதனை மிகவும் அதிகமாயிருந்திருக்கும். பவுல் கிறிஸ்துவின் சீஷர்களை, அவர்களுடைய மனச்சாட்சிக்கு விரோதமாக தேவதூஷணம் சொல்லுமாறு கட்டாயப்படுத்துகிறான்.

பவுலின் மூர்க்கவெறி எருசலேமோடு நின்றுவிடவில்லை. அவன் கிறிஸ்துவின் சீஷர் பெயரில் மூர்க்கவெறி கொண்டவனாய், அந்நிய பட்டணங்கள் வரைக்கும் அவர்களைத் துன்பப்படுத்துகிறான். அவனுடைய மூர்க்கவெறியினால், அவன் சீஷர்களைத் துன்பப்படுத்துவதும் மூர்க்கத்தனமாகவே இருக்கிறது. கட்டுக்கடங்காமல் கொலைவெறி பிடித்தவனாக கிறிஸ்துவின் சீஷர்களை எருசலேமிலும் மற்ற பட்டணங்களிலும் துன்பப்படுத்துகிறான்.

துன்பப்படுத்துகிறவர்கள் சாதாரணமாகவே வெறிபிடித்தவர்களாகயிருப்பார்கள். அதிலும் இயேசுகிறிஸ்துவின் சீஷர்களைத் துன்பப்படுத்துகிறவர்கள் மூர்க்க வெறிபிடித்தவர்களாகவே இருப்பார்கள். இவர்களுடைய மனச்சாட்சி தெளிந்த சிந்தனையுடையதாகயிராது. மூர்க்கவெறிபிடித்து பிறரை துன்பப்படுத்தினாலும், தாங்கள் செய்வது நியாயம் என்று இவர்களுடைய மனச்சாட்சி சொல்லும் இவர்களுடைய தப்பான கிரியைகளை நியாயப்படுத்தும்.

கிறிஸ்துவின் தரிசனம்
அப் 26 : 12-18

அப் 26:12. இப்படிச் செய்துவருகையில், நான் பிரதான ஆசாரியர்களிடத்தில் அதிகாரமும் உத்தரவும் பெற்று, தமஸ்குவுக்குப்போகும்போது,

அப் 26:13. மத்தியான வேளையில், ராஜாவே, நான் வழியிலே சூரியனுடைய பிரகாசத்திலும் அதிகமான ஒளி வானத்திலிருந்து என்னையும் என்னுடனேகூடப் பிரயாணம் பண்ணினவர்களையும் சுற்றிப் பிரகாசிக்கக் கண்டேன்.

அப் 26:14. நாங்களெல்லாரும் தரையிலே விழுந்தபோது: சவுலே, சவுலே நீ ஏன் என்னைத் துன்பப்படுத்துகிறாய்? முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாமென்று எபிரெயு பாஷையிலே என்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டேன்.

அப் 26:15. அப்பொழுது நான்: ஆண்டவரே, நீர் யார் என்றேன். அதற்கு அவர்: நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே.

அப் 26:16. இப்பொழுது நீ எழுந்து, காலூன்றி நில். நீ கண்டவைகளையும் நான் உனக்குத் தரிசனமாகிக் காண்பிக்கப் போகிறவைகளையும் குறித்து உன்னை ஊழியக்காரனாகவும் சாட்சியாகவும் ஏற்படுத்துகிறதற்காக உனக்குத் தரிசனமானேன்.

அப் 26:17. உன் சுயஜனத்தாரிடத்தினின்றும் அந்நிய ஜனத்தாரிடத்தினின்றும் உன்னை விடுதலையாக்கி,

அப் 26:18. அவர்கள் என்னைப் பற்றும் விசுவாசத்தினாலே பாவமன்னிப்பையும் பரிசுத்தமாக்கப் பட்டவர்களுக்குரிய சுதந்தரத்தையும் பெற்றுக்கொள்ளும் படியாக, அவர்கள் இருளைவிட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தைவிட்டு தேவனிடத்திற்கும் திரும்பும்படிக்கு நீ அவர்களுடைய கண்களைத் திறக்கும் பொருட்டு, இப்பொழுதுஉன்னை அவர்களிடத்திற்கு அனுப்புகிறேன் என்றார்.

அதிகாரமும் உத்தரவும்

இப்படிச் செய்துவருகையில், நான் பிரதான ஆசாரியர்களிடத்தில் அதிகாரமும் உத்தரவும் பெற்று, தன்ஸ்குவுக்குப்போகும் போது, (அப் 26:12)

தேவனுக்கு விரோதமாகப் பேசுகிறவர்கள் அவருக்கு விரோதமாகப் போர்செய்கிறார்கள். பவுலும் ஒரு காலத்தில் கர்த்தருக்கு விரோதமாக போர்செய்துகொண்டிருந்தான். கர்த்தரோ அவனைச் சந்தித்து, இரட்சித்து, தம்முடைய ஊழியத்திற்காக அவனைப் பிரதிஷ்டை பண்ணுகிறார். புறஜாதியாரின் தேசங்களுக்கு இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்குமாறு அவன் தேவனிடத்திலிருந்து அழைப்பைப் பெற்றுக்கொள்கிறான்.

தேவனுடைய மகத்துவமான வல்லமையினால் பவுல் இரட்சிக்கப்பட்டிருக்கிறான். தேவனுடைய கரம் அவனைத் திடீரென்று சந்திக்கிறது. ஆவிக்குரிய அதிகாரத்தோடு கர்த்தர் அவனைச் சந்திக்கிறார். வானத்திலிருந்து இயேசுகிறிஸ்து தம்முடைய தெய்வீக பிரசன்னத்தை அவனுக்கு வெளிப்படுத்துகிறார். தமஸ்கு பட்டணத்திலுள்ள கிறிஸ்துவின் சீஷர்களைப் பிடித்து சிறைச்சாலையில் போடவேண்டும் என்னும் பாவசிந்தனை பவுலின் உள்ளத்தில் நிரம்பியிருக்கிறது. தன்னுடைய பாவ யோசனையை நிறைவேற்றுவதற்காக பவுல் தமஸ்குவுக்குப் போய்கொண்டிருக்கிறான்.

பவுலின் யோசனையும் யூதமார்க்கத்துத் தலைவர்களின் யோசனையும் இயேசுகிறிஸ்துவுக்கும், அவருடைய சுவிசேஷத்திற்கும், அவருடைய சீஷர்களுக்கும் விரோதமாயிருக்கிறது. அவர்கள் பவுலை தங்கள் ஆசையை நிறைவேற்றுகிற ஒரு கருவியாகப் பயன்படுத்துகிறார்கள். பரிசுத்தவான்களைத் துன்பப்படுத்துவதில் பவுல் பிரியமாயிருக்கிறான். அதைத் தேவனுக்குச் செய்கிற ஊழியமாகக் கருதி அவர்களைத் துன்பப்படுத்துகிறான்.

பிரதான ஆசாரியர்களும் பவுலுக்கு கிறிஸ்துவின் சீஷர்களைத் துன்பப்படுத்தவும், சிறைச்சாலையில் அடைக்கவும் அதிகாரமும் உத்தரவும் கொடுக்கிறார்கள். இதுவரையிலும் ஆலோசனைச் சங்கத்தாரின் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல், கிறிஸ்துவின் சீஷர்களைத் துன்பப் படுத்தினவன், இப்போது அவர்களுடைய அதிகாரத்தையும் உத்தரவையும் பெற்றுக்கொண்டு, மூர்க்கவெறி கொண்டவனாய் அதிகார பூர்வமாகப் பரிசுத்தவான்களைத் துன்பப்படுத்துகிறான்.

கண்டேன்

மத்தியான வேளையில், ராஜாவே, நான் வழியிலே சூரியனுடைய பிரகாசத்திலும் அதிகமான ஒளி வானத்திலிருந்து என்னையும் என்னுடனேகூடப் பிரயாணம் பண்ணினவர்களையும் சுற்றிப் பிரகாசிக்கக் கண்டேன் (அப் 26:13).

பவுல் தமஸ்குவுக்குப் போகும் வழியில் பரம தரிசனத்தைக் காண்கிறான். இது இயற்கையான தரிசனமல்ல. மெய்யாகவே தேவனிடத்திலிருந்து வந்திருக்கிற தெய்வீக தரிசனம். வானத்திலிருந்து ஒரு ஒளி தன்னைச் சுற்றிலும் பிரகாசிப்பதை பவுல் காண்கிறான். தன்னுடைய அனுபவத்தை பவுல் மெய்யாய்ச் சொல்லுகிறான். அவன் அகிரிப்பா ராஜாவுக்கு முன்பாக பொய் சொல்லவில்லை.

இது ஏதோ ஒரு மூலையில் நடைபெற்ற சம்பவமல்ல. அல்லது பூட்டிய கதவுக்குள் ஒரு வீட்டில் மறைவாக நடைபெற்ற சம்பவமுமல்ல. இந்தச் சம்பவம் தமஸ்குவுக்குப் போகிற பொதுவான வழியில் நடைபெறுகிறது. வானத்திலிருந்து பிரகாசித்த ஒளி பவுலையும், அவனுடனே கூட பிரயாணம்பண்ணியவர்களையும் சுற்றிப் பிரகாசிக்கிறது. இந்த ஒளி சூரியனுடைய பிரகாசத்திலும் அதிகப்பிரகாசமான ஒளியாகயிருக்கிறது. ஆகையினால் இது ஒரு கற்பனையான சம்பவமுமல்ல. பவுல் தன் கண்களை மூடிக்கொண்டு இந்த ஒளியைத் தரிசிக்கவில்லை. அல்லது சொப்பனம் காணவில்லை. மத்தியானவேளையில் இந்தச் சம்பவம் மெய்யாக பிரத்தியட்சமாக நடைபெற்றது.

பவுலும் அவனோடுகூட பிரயாணம் பண்ணியவர்களும் மத்தியானவேளையில் சூரியனுடைய பிரகாசத்தையும் காண்கிறார்கள். வானத்திலிருந்து தங்களைச் சுற்றிப் பிரகாசிக்கிற பேரொளியையும் காண்கிறார்கள். இந்தப் பேரொளிக்கு முன்பாக சூரியனுடைய பிரகாசம் மங்கலாகயிருக்கிறது. பேரொளியோ சூரியப்பிரகாசத்தைவிட அதிகப்பிரகாசமாகயிருக்கிறது.

இந்த ஒளியைக் கண்டவுடன் பவுலும் அவனுடனேகூட பிரயாணம்பண்ணினவர்கள் அனைவரும் தரையிலே விழுந்துவிடுகிறார்கள். கர்த்தருடைய பேரொளிக்கு முன்பாக அவர்களால் நிமிர்ந்து நிற்கமுடியவில்லை. அந்த ஒளியை அவர்களால் நேருக்கு நேர் பார்க்கவும் முடியவில்லை. கர்த்தருடைய வல்லமை அந்தப் பேரொளியில் வெளிப்படுகிறது. தேவன் ஆதியிலே வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்து, வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார். வெளிச்சம் உண்டாயிற்று. வெளிச்சம் நல்லது என்று தேவன் கண்டார்.

"இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச்சொன்ன தேவன் இயேசுகிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப்பண்ணும்பொருட்டாக, எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார்" (2கொரி 4:6). இயேசுகிறிஸ்து ஒளியிலிருக்கிறார். சூரியனுடைய பிரகாசத்திலும் அதிகமான ஒளி வானத்திலிருந்து பவுலையும் அவனுடனே கூட பிரயாணம்பண்ணினவர்களையும் சுற்றிப் பிரகாசிக்கிறது. அவர்களெல்லோருமே அந்த ஒளியைக் காண்கிறார்கள். பவுல் மாத்திரமே அந்த ஒளியில் இயேசுகிறிஸ்துவைக் காண்கிறான். மற்றவர்களோ அந்த ஒளியை மாத்திரமே காண்கிறார்கள். அந்த ஒளியில் அவர்கள் இயேசுகிறிஸ்துவைக் காணவில்லை.

கேட்டேன்

நாங்களெல்லாரும் தரையிலே விழுந்தபோது: சவுலே, சவுலே நீ ஏன் என்னைத் துன்பப்படுத்துகிறாய்? முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாமென்று எபிரெயு பாஷையிலே என்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டேன் (அப் 26:14).

பவுலும் அவனுடனேகூட வந்தவர்களும் தங்களைச் சுற்றிப் பிரகாசிக்கிற பேரொளியைக் கண்டார்கள். அவர்களெல்லோரும் தரையிலே விழுந்துவிடுகிறார்கள். அப்பொழுது பவுல் வானத்திலிருந்து தன்னுடனே பேசுகிற ஒரு சத்தத்தைக் கேட்கிறான். இந்தச் சத்தம் எபிரெயு பாஷையில் உண்டாயிற்று. இந்த பாஷை இவனுடைய தாய் பாஷை. யூதர்கள் எபிரெயு பாஷையைப் பேசுகிறவர்கள். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே வானத்திலிருந்து அவனுடனே பேசுகிறார். அவனைப் பெயர் சொல்லி அழைக்கிறார். இப்பொழுது பவுல் என்று அழைக்கப்படுகிறவன், அப்போது சவுல் என்று அழைக்கப்பட்டான். கர்த்தர் அவனை "சவுலே, சவுலே" என்று இரண்டுமுறை அவனுடைய பெயரைச் சொல்லி கூப்பிடுகிறார்.

பவுல் கிறிஸ்துவின் சீஷர்களைத் துன்பப்படுத்துகிற பாவத்தைச் செய்கிறான். கர்த்தர் அவனுடைய பாவத்தை அவனுக்கு உணர்த்துகிறார். தம்முடைய சீஷர்கள் துன்புறுத்தப்படுவதைப் பார்த்து கர்த்தர் அவர்கள்மீது மிகுந்த கரிசனையோடிருக்கிறார். கர்த்தர் பவுலிடம் "நீ ஏன் என்னை துன்பப்படுத்துகிறாய்" என்று கேட்கிறார். அவனிடத்தில் கர்த்தர் மேலும் பேசும்போது "நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே" என்றும் சொல்லுகிறார். தம்முடைய பரிசுத்தவான்களை யாராவது துன்பப்படுத்தினால் கர்த்தர் அதைச் சகித்துக்கொள்ளமாட்டார். கர்த்தருடைய பிள்ளைகளைத் துன்பப்படுத்துகிறவர்கள் தம்மையே துன்பப்படுத்துவதாக கர்த்தர் பாவிக்கிறார்.

கிறிஸ்துவின் சீஷர்களைத் துன்பப்படுத்தினால், தன்னை எதிர்த்துக் கேட்பதற்கு யாருக்கும் தைரியமில்லை என்று பவுல் இறுமாப்பாகயிருக்கிறான். இந்த பூமியில் கிறிஸ்துவின் பரிசுத்தவான்கள் சாதாரண ஜனங்கள்தான் என்றும், அவர்கள் தேவதூஷணம் சொல்லுகிறார்கள் என்றும், அவர்களுக்கு ஆதரவாக யாருமேயில்லை என்றும் பவுல் இதுவரையிலும் நினைத்துக்கொண்டிருந்தான். ஆனால் இப்போதோ கர்த்தரே பவுலிடம் நேரடியாகப் பேசுகிறார். தம்முடைய பரிசுத்தவான்களைத் துன்பப்படுத்துகிறவனிடம் "நீ ஏன் என்னைத் துன்பப்படுத்துகிறாய்" என்று கேட்கிறார். தம்முடைய பிள்ளைகளுக்காகக் கர்த்தர் பரிந்து பேசுகிறார். பரலோகத்திலிருந்து தரிசனம் கொடுக்கிறார். கர்த்தருடைய வல்லமை பவுலுக்கு வெளிப்படுத்திக் காண்பிக்கப்படுகிறது.

இயேசுகிறிஸ்துவின் சீஷர்களைத் துன்பப்படுத்துவதின் மூலமாக, தான் கர்த்தருக்கு ஊழியம் செய்வதாகப் பவுல் நினைத்துக்கொண்டிருக்கிறான். ஆனால் கர்த்தரோ அவனுடைய கிரியைகளை அங்கீகரிக்கவில்லை. "முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம்" என்று அவனிடத்தில் எபிரெயு பாஷையில் பேசுகிறார். அவனோ கிறிஸ்துவின் சீஷர்களைத் துன்பப்படுத்துவதற்காக கர்த்தர் தன்மீது பிரியமாயிருப்பார் என்று எதிர்பார்க்கிறான். ஆனால் கர்த்தரோ, தம்முடைய சீஷர்களைத் துன்பப்படுத்துவது, முள்ளில் உதைக்கிறதற்கு சமமானது என்றும், முள்ளில் உதைத்தால் உதைக்கிறவனுக்குத்தான் சேதமுண்டாகும் என்றும் அவனிடத்தில் எச்சரித்துக் கூறுகிறார்.

நீர் யார்

அப்பொழுது நான்: ஆண்டவரே, நீர் யார் என்றேன். அதற்கு அவர்: நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே (அப் 26:15).

எபிரெயு பாஷையிலே தன்னுடனே பேசுகிற சத்தத்தைக் கேட்டு பவுல் மிகுந்த ஆச்சரியமடைகிறான். அவன் இதற்கு முன்பு இப்படிப்பட்ட சத்தத்தைக் கேட்டதில்லை. இது சாதாரண சத்தமல்ல என்பதும், தேவனுடைய மகத்துவமான வல்லமையினால் இந்தச் சத்தமுண்டாயிற்று என்பதும் பவுலுக்குத் தெரிகிறது. ஆனாலும் தன்னுடனே பேசுகிறவர் யார் என்பதை தெரிந்துகொள்ள பவுல் ஆசைப்படுகிறான். தன்னோடு பேசுகிறவரிடம் "ஆண்டவரே நீர் யார்" என்று கேட்கிறான். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பவுலுக்குத் தம்மை வெளிப்படுத்திக் காண்பிக்கிறார். "நான் இயேசு" என்று அவனிடத்தில் சொல்லுகிறார். தம்மைப்பற்றிச் சொல்லும்போது, "நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே" என்று சொல்லுகிறார்.

பவுலுக்கு இயேசுகிறிஸ்துவைப்பற்றி நன்றாகத் தெரியும். அவர் கல்வாரி சிலுவையில் மரித்துப்போனாரென்றும், அவரை கல்லறையில் அடக்கம் பண்ணினார்களென்றும் பவுலுக்குத் தெரியும். இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் கல்லறையில் அடக்கம்பண்ணப்பட்டிருந்த அவருடைய சரீரத்தை களவாய்க் கொண்டுபோய்விட்டார்கள் என்று பவுல் இதுவரையிலும் நினைத்துக் கொண்டிருக்கிறான். யூதர்களெல்லோருக்கும் இயேசுகிறிஸ்துவைப்பற்றி இப்படித்தான் கற்றுக்கொடுக்கிறார்கள். இயேசுகிறிஸ்து மரித்து மூன்றாம்நாளில் உயிரோடு எழும்பினார் என்பதை யூதர்கள் நம்பவில்லை. அவர்களில் ஒருவனாகிய பவுலும் நம்பவில்லை.

ஆனால் இயேசுகிறிஸ்துவோ இப்போது வானத்திலிருந்து பவுலுடனே பேசுகிறார். இதனால் பவுலுக்கு மிகுந்த ஆச்சரியமுண்டாயிற்று. அவருடைய சத்தத்தைக் கேட்பதும், அவருடைய மகிமை தன்னைச் சுற்றிப் பிரகாசிப்பதைக் காண்பதும் பவுலுக்கு அதிர்ச்சியாகவும் ஆச்சரியமாகவும் இருக்கிறது. இயேசுகிறிஸ்து மரித்துப்போனார் என்றும், அத்துடன் அவருடைய சரித்திரம் முடிந்துபோயிற்று என்றும் நினைத்துக் கொண்டிருக்கிறவனோடு, இயேசுகிறிஸ்து வானத்திலிருந்து பேசிக்கொண்டிருக்கிறார்.

தான் இதுவரையிலும் இயேசுகிறிஸ்துவைப்பற்றி கேள்விப்பட்ட உபதேசங்கள் தவறானவை என்பதை பவுல் இப்போது புரிந்துகொள்கிறான். இயேசுகிறிஸ்துவின் உபதேசங்கள் பரலோகத்திற்குரியது என்றும், அது தெய்வத்தன்மையுடையது என்றும் பவுல் அங்கீகரிக்கிறான். கிறிஸ்துவின் உபதேசத்திற்கு எதிர்த்து நிற்கக்கூடாது என்று தன்னுடைய உள்ளத்தில் பவுல் உணர்த்தப்படுகிறான். இயேசுகிறிஸ்துவுக்கு எதிர்த்து நிற்காமல், அவரைச் சார்ந்துகொள்ளவேண்டும் என்னும் விருப்பம் பவுலின் இருதயத்தில் உண்டாயிற்று. மனமாற்றமுண்டாயிற்று.

இயேசுகிறிஸ்துவை பவுல் தன்னுடைய இரட்சகராக ஏற்றுக் கொள்வதற்கு இந்த அற்புத சம்பவமே அவனுக்குப் போதுமானதாயிற்று. பவுல் உடனடியாக இயேசுகிறிஸ்துவைத் தன்னுடைய இரட்சகராக ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்படுகிறான்.

தரிசனமானேன்

இப்பொழுது நீ எழுந்து, காலூன்றி நில். நீ கண்டவைகளையும் நான் உனக்குத் தரிசனமாகிக் காண்பிக்கப் போகிறவைகளையும் குறித்து உன்னை ஊழியக்காரனாகவும் சாட்சியாகவும் ஏற்படுத்துகிறதற்காக உனக்குத் தரிசனமானேன் (அப் 26:16).

கர்த்தருடைய தெய்வீக அதிகாரத்தினால் பவுல் அவருடைய ஊழியக்காரனாக்கப்படுகிறான். சூரியனுடைய பிரகாசத்திலும் அதிக பிரகாசமான ஒளியாக கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, வானத்திலிருந்து பவுலைச் சுற்றிப் பிரகாசிக்கிறார். அவரே அவனை புறஜாதியாரிடத்திற்குப்போய் அவர்களுக்கு ஊழியம் செய்யுமாறு கட்டளை கொடுக்கிறார். தமஸ்குவுக்குப் போகும்வழியில் கர்த்தருடைய கட்டளைப் பிரகாரம், பவுல் அப்போஸ்தலனாக அங்கீகரிக்கப்படுகிறான்.

கர்த்தர் அவனுக்கு இரண்டு காரியங்களைக் கட்டளையிடுகிறார். "நீ எழுந்து காலூன்றி நில்" என்று அவனிடத்தில் கூறுகிறார். இயேசுகிறிஸ்து பவுலின் மூலமாக கிரியை நடப்பிக்கவேண்டுமென்றால் முதலாவதாக அவன் எழுந்து நிற்கவேண்டும். பவுலை ஊழியக்காரனாக ஏற்படுத்துகிறதற்காக கர்த்தர் அவனுக்குத் தரிசனமாயிருக்கிறார்.

கிறிஸ்து தம்முடைய ஊழியக்காரர்களைத் தாமாகவே ஏற்படுத்துகிறார். தம்மால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற எல்லா ஊழியக்காரர்களுக்கும் இயேசுகிறிஸ்து தாமே தம்மைப் பிரத்தியட்சமாக வெளிப்படுத்துகிறார். இயேசுகிறிஸ்துவை அறியாதவர்களினால் அவரைப்பற்றிப் பிறருக்கு அறிவிக்க முடியாது. கர்த்தர் தம்மை வெளிப்படுத்தவில்லையென்றால் நம்மால் அவரை அறிந்துகொள்ளவும் முடியாது. பரிசுத்த ஆவியானவரே இயேசுகிறிஸ்துவை நமக்கு வெளிப்படுத்துகிறவர்.

கர்த்தர் பவுலைத் தமக்கு ஊழியக்காரனாக ஏற்படுத்துகிறார். பவுல் இயேசுகிறிஸ்துவுக்கு பணிவிடை செய்யவேண்டும். அவருக்கு ஊழியம் செய்யவேண்டும். அவருடைய சாட்சியாக அவருக்காக காரியங்களைச் செய்யவேண்டும். பவுல் மனுஷருக்கு முன்பாக கிறிஸ்துவின் ஊழியக்காரனாகத் தன்னை வெளிப்படுத்திக் காண்பிக்கவேண்டும். இதற்காகவே கர்த்தர் தம்மைப் பவுலுக்கு முன்பாக வெளிப்படுத்திக் காண்பித்திருக்கிறார்.

கர்த்தர் பவுலைத் தமக்குச் சாட்சியாகவும் ஏற்படுத்தியிருக்கிறார். தான் கண்டவைகளைக் குறித்துப் பவுல் இந்த உலகத்திற்குச் சாட்சியாக அறிவிக்கவேண்டும். இவற்றைப் பிறருக்கு அறிவிக்க வேண்டுமென்பதற்காகவே கர்த்தர் அவனுக்குத் தரிசனம் கொடுத்திருக்கிறார். தனக்குக் கிடைக்கும் எல்லா வாய்ப்புக்களையும் பயன்படுத்தி பவுல் தான் கண்டவைகளைக் குறித்து எல்லோருக்கும் சாட்சியாக அறிவிக்கவேண்டும். பவுல் கண்டவைகளோடு, கர்த்தர் அவனுக்கு இனிமேல் காண்பிக்கப்போகிறவைகளையும் குறித்து அவன் சாட்சியாக அறிவிக்கவேண்டும்.

பவுலுக்கு ஆரம்பத்தில் சுவிசேஷத்தைக் குறித்துத் தெளிவான உபதேசம் கொடுக்கப்படவில்லை. இயேசுகிறிஸ்து யார் என்பதில் அவன் தெளிவில்லாமல் குழப்பமடைந்திருந்தான். சுவிசேஷத்தின் செய்தியும் அவனுக்குக் குழப்பமாகவே இருந்தது. கர்த்தர் அவனைச் சந்திக்கும் வரையிலும் இந்தக் குழப்பம் அவனுக்குள் நீடித்தது. கர்த்தர் அவனுக்குத் தரிசனம் கொடுத்த பின்போ, இயேசுகிறிஸ்துவைக் குறித்தும், அவருடைய சுவிசேஷத்தைக் குறித்தும் அவனிடத்தில் காணப்பட்ட குழப்பம் நீங்கி, அவனுக்குள் தெளிவு உண்டாயிற்று. கர்த்தர் தம்மைப் பவுலுக்குப் பூரணமாய் வெளிப்படுத்தியிருக்கிறார்.

பவுல் பிரசங்கிக்கவேண்டிய சுவிசேஷத்தை, கர்த்தர் அவனுக்கு முழுவதுமாய் உபதேசம்பண்ணியிருக்கிறார். தான் பிரசங்கிக்கிற சுவிசேஷத்தைப்பற்றி பவுல் தன்னுடைய நிருபத்தில் இவ்வாறு எழுதியிருக்கிறான். "மேலும், சகோதரரே, என்னால் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷம் மனுஷருடைய யோசனையின் படியானதல்லவென்று உங்களுக்குத் தெரிவிக்கிறேன். நான் அதை ஒரு மனுஷனால் பெற்றதுமில்லை, மனுஷனால் கற்றதுமில்லை, இயேசுகிறிஸ்துவே அதை எனக்கு வெளிப்படுத்தினார்" (கலா 1:11,12).

பவுல் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக்கொண்டாலும், இயேசுகிறிஸ்து அதை அவனுக்கு ஒரே வேளையில் முழுவதுமாக வெளிப்படுத்தாமல், கொஞ்சம் கொஞ்சமாகவே வெளிப்படுத்தினார். இயேசுகிறிஸ்து பல சமயங்களில் பவுலுக்குத் தரிசனம் கொடுத்து, அவனுக்குத் தொடர்ந்து போதித்து வந்தார்.

விடுதலையாக்கினேன்

உன் சுயஜனத்தாரிடத்தினின்றும் அந்நிய ஜனத்தாரிடத்தினின்றும் உன்னை விடுதலையாக்கி, (அப் 26:17)

பவுல் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து அவருடைய ஊழியத்தைச் செய்கிறபோது, அவருக்கு ஆவிக்குரிய பாதுகாப்பு உண்டாயிற்று. கர்த்தர் அவனை யூதஜனத்தாரிடத்தினின்றும், புறஜாதி ஜனத்தாரிடத்தினின்றும் விடுதலை யாக்கினார். இயேசுகிறிஸ்து அனனியாவிடம் பவுலுக்கு வரப்போகும் பாடுகளைக்குறித்து வெளிப்படுத்தினார். "அவன் என்னுடைய நாமத்தினிமித்தம் எவ்வளவாய்ப் பாடுபடவேண்டும் என்பதை நான் அவனுக்குக் காண்பிப்பேன்" (அப் 9:16) என்று கர்த்தர் அனனியாவிடம் சொன்னார். இப்போதோ கர்த்தர் பவுலிடம், அவனுக்குப் பாடுகள் உண்டானாலும், அந்தப் பாடுகளிலிருந்து அவனை விடுதலையாக்குவதாக அவனுக்கு வாக்குப்பண்ணுகிறார்.

கர்த்தருடைய பிள்ளைகளுக்குப் பாடுகள் வரலாம். இந்தப் பாடுகள் மத்தியிலும் கர்த்தர் நம்மோடு கூடயிருக்கிறார். இந்தப் பாடுகளிலிருந்து நம்மை விடுதலையாக்குவதாக கர்த்தர் நமக்கு வாக்குப்பண்ணியிருக்கிறார். சில சமயங்களில் கர்த்தர் தம்முடைய பரிசுத்தவான்களை, அவர்களை உபத்திரவப்படுத்துகிறவர்களின் கைகளில் ஒப்புக்கொடுத்துவிடுகிறார். கர்த்தர் அவர்களுடைய கைகளிலிருந்து தம்முடைய பிள்ளைகளை மீட்கும்போது தேவனுடைய நாமம் மகிமைப்படுகிறது. ஆகையினால் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் பாடுகளைச் சகித்துக்கொள்கிற பரிசுத்தவான்கள் பாக்கியவான்கள்.

அனுப்புகிறேன்

அவர்கள் என்னைப் பற்றும் விசுவாசத்தினாலே பாவமன்னிப்பையும் பரிசுத்த மாக்கப்பட்டவர்களுக்குரிய சுதந்தரத்தையும் பெற்றுக் கொள்ளும்படியாக, அவர்கள் இருளைவிட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தைவிட்டு தேவனிடத்திற்கும் திரும்பும்படிக்கு நீ அவர்களுடைய கண்களைத் திறக்கும் பொருட்டு, இப்பொழுது உன்னை அவர்களிடத்திற்கு அனுப்புகிறேன் என்றார் (அப் 26:18).

கர்த்தர் பவுலுக்கு விசேஷித்த ஊழியத்தைக்கொடுக்கிறார். அவன் புறஜாதியார் மத்தியில் போய் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்யவேண்டும். பவுல் புறஜாதியாருக்கு ஊழியம் செய்யப்போகும் முன்பாக, கர்த்தர் இந்தக் கட்டளையை அவனுக்குக் கொடுத்தார். இந்தச் சம்பவம் பவுல் இரட்சிக்கப்பட்டு ஒரு சில வருஷங்களுக்குப் பின்பு நடைபெற்றது.

புறஜாதியார் மத்தியில் கர்த்தருக்காக அதிகமாய் ஊழியம் செய்யவேண்டியதிருக்கிறது. இந்த ஊழியத்தைச் செய்வதற்கு கர்த்தர் பவுலை தம்முடைய கருவியாகத் தெரிந்தெடுத்துப் பயன்படுத்துகிறார். இருளிலிருக்கிற உலகம் வெளிச்சத்திற்குத் திரும்பி வரவேண்டும். புறஜாதியாரின் கண்களை திறக்கிறதற்காகவும், இருளைவிட்டு அவர்களை ஒளியினிடத்திற்குத் திரும்பி அழைத்து வருவதற்காகவும் கர்த்தர் பவுலை புறஜாதியார் மத்தியில் அனுப்புகிறார்.

பவுல் புறஜாதியாரின் கண்களைத் திறக்கவேண்டும். அவர்கள் வெளிச்சத்தைப் பார்க்க மனதில்லாதவர்களாய், வெளிச்சத்திற்கு விரோதமாக தங்கள் கண்களை மூடிக்கொண்டவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் இருளிலிருப்பதை அவர்களுக்கு உணர்த்தவேண்டும். அத்துடன் அவர்கள் தங்கள் கண்களை மூடிக்கொண்டிருப்பதையும் அவர்களுக்கு உணர்த்தவேண்டும். கர்த்தர் நம்முடைய மனக்கண்களைத் திறப்பதின் மூலமாக நம்முடைய இருதயங்களைத் திறக்கிறார். நம்மைக் குருடராக வைத்திருந்து அவர் நம்மை வழிநடத்தமாட்டார். நாம் போகும் பாதையில் கர்த்தரே நமக்கு வெளிச்சமாகயிருக்கிறார். நம்முடைய பாதையைக் காண்பதற்கு நம்முடைய கண்களை அவர் திறக்கிறார்.

பவுல் புறஜாதியார் மத்தியில் சென்று அவர்களுடைய கண்களைத் தற்காலிகமாகத் திறந்தால் அது போதுமானதாகயிருக்காது. அவர்களுடைய கண்கள் எப்போதும் திறக்கப்பட்டதாகயிருக்க வேண்டும். அவர்கள் இருளைவிட்டு ஒளியினிடத்திற்குத் திரும்பி வரும்படிக்கு அவர்களுடைய கண்களைத் திறக்கவேண்டும். அவர்களுடைய கண்கள் மூடப்பட்டிருந்தால், ஆபத்தில் விழுந்துவிடுவார்கள். தங்களுக்கு உதவி செய்து வழிநடத்துமாறு குருடர்களிடம் வேண்டிக்கொள்வார்கள். குருடரால் வழிநடத்தப்படுகிற குருடராகயிருப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் தேவனுடைய வெளிப்பாட்டைக் காணமுடியாது. கர்த்தருடைய வெளிச்சத்திற்குள் பிரவேசிக்க முடியாது.

தேவனுடைய வெளிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளும்போது, சத்தியம் நமக்குள் தெளிவுபடுத்தப்படும். உறுதிபண்ணப்படும். சந்தேகங்களெல்லாம் நீக்கப்படும். இதுவே இருளிலிருந்து வெளிச்சத்திற்குத் திரும்பி வருவதாகும். இருளின் வழிகளிலிருந்து வெளிச்சத்தின் வழிக்குத் திரும்பி வருவது என்றும் இதை அழைக்கலாம்.

சுவிசேஷம் ஜனங்களுடைய இருதயத்தில் கிரியை செய்யும்போது அவர்கள் இருளைவிட்டு வெளிச்சத்திற்குத் திரும்பி வருகிறார்கள். தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்தவர்கள் தங்கள் பாவத்தை உணர்ந்து, மனந்திரும்பி, கர்த்தரிடத்தில் பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்வதற்காக வருகிறார்கள். மனுஷர் இருளிலிருக்கும்போது அவர்களுடைய பாவங்கள் அவர்களுக்குத் தெரியாது. அவர்கள் வெளிச்சத்திற்கு வந்தால்தான் அவர்களுடைய பாவங்களை அவர்களால் பார்க்கமுடியும்.

இந்த உலகம் துன்மார்க்கத்திலிருக்கிறது. இந்த உலகத்திற்குச் சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும். துன்மாக்கத்திலிருக்கிற உலகம் மனந்திரும்பவேண்டும். மறுமலர்ச்சியடைய வேண்டும். இவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டால் மாத்திரம் போதாது. இவர்களுடைய இருதயங்களும் புதுப்பிக்கப்படவேண்டும். சாத்தான் தன்னுடைய அந்தகார சக்தியினால் இந்த உலகத்தை ஆளுகை செய்கிறான். ஆனால் கர்த்தரோ ஒளியின் வெளிச்சத்தில், சத்தியத்தை ஆதாரத்தோடு உணர்த்தி, மனுஷருடைய இருதயங்களை ஆளுகை செய்கிறார்.

பாவிகள் சாத்தானுடைய அந்தகார வல்லமைக்கு அடிமைகளாகயிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து இவர்களுடைய பாவங்களை மன்னித்து இரட்சிக்கும்போது, இவர்கள் சாத்தானுடைய அடிமைத் தனத்திலிருந்து விடுவிக்கப்படுகிறார்கள். விடுவிக்கப்பட்டவர்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் ஆளுகைக்குட் படுத்தப்படுகிறார்கள். மனுஷருடைய ஆத்துமாவில் தேவனுடைய கிருபை வல்லமையாய்க் கிரியை நடப்பிக்கும்போது அவர்கள் இருளைவிட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தைவிட்டு தேவனிடத்திற்கும் திரும்புகிறார்கள்.

தேவன் புறஜாதியாருக்குத் தம்முடைய தெய்வீக சந்தோஷத்தைத் திட்டம் பண்ணியிருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டு, அவரைப்பற்றும் விசுவாசத்தினால் அவர்கள் பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்வார்கள். அத்துடன் பரிசுத்தமாக்கப் பட்டவர்களுக்குரிய சுதந்தரத்தையும் பெற்றுக்கொள்வார்கள். சாத்தானின் அதிகாரத்திலிருந்து விடுவிக்கப் படுகிறவர்கள் இயேசுகிறிஸ்துவின் ஆளுகையைப் பெற்றுக்கொள்வார்கள்.

பவுல் புறஜாதியார் மத்தியில் சென்று அவர்களுடைய கண்களைத் தற்காலிகமாகத் திறந்தால் அது போதுமானதாகயிருக்காது. அவர்களுடைய கண்கள் எப்போதும் திறக்கப்பட்டதாகயிருக்க வேண்டும். அவர்கள் இருளைவிட்டு ஒளியினிடத்திற்குத் திரும்பி வரும்படிக்கு அவர்களுடைய கண்களைத் திறக்கவேண்டும். அவர்களுடைய கண்கள் மூடப்பட்டிருந்தால், ஆபத்தில் விழுந்துவிடுவார்கள். தங்களுக்கு உதவி செய்து வழிநடத்துமாறு குருடர்களிடம் வேண்டிக்கொள்வார்கள். குருடரால் வழிநடத்தப்படுகிற குருடராகயிருப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் தேவனுடைய வெளிப்பாட்டைக் காணமுடியாது. கர்த்தருடைய வெளிச்சத்திற்குள் பிரவேசிக்க முடியாது.

தேவனுடைய வெளிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளும்போது, சத்தியம் நமக்குள் தெளிவுபடுத்தப்படும். உறுதிபண்ணப்படும். சந்தேகங்களெல்லாம் நீக்கப்படும். இதுவே இருளிலிருந்து வெளிச்சத்திற்குத் திரும்பி வருவதாகும். இருளின் வழிகளிலிருந்து வெளிச்சத்தின் வழிக்குத் திரும்பி வருவது என்றும் இதை அழைக்கலாம்.

சுவிசேஷம் ஜனங்களுடைய இருதயத்தில் கிரியை செய்யும்போது அவர்கள் இருளைவிட்டு வெளிச்சத்திற்குத் திரும்பி வருகிறார்கள். தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்தவர்கள் தங்கள் பாவத்தை உணர்ந்து, மனந்திரும்பி, கர்த்தரிடத்தில் பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்வதற்காக வருகிறார்கள். மனுஷர் இருளிலிருக்கும்போது அவர்களுடைய பாவங்கள் அவர்களுக்குத் தெரியாது. அவர்கள் வெளிச்சத்திற்கு வந்தால்தான் அவர்களுடைய பாவங்களை அவர்களால் பார்க்கமுடியும்.

பாவங்கள் மன்னிக்கப்பட்டவர்கள் சாத்தானுக்கு ஊழியம் செய்வதை நிறுத்திவிட்டு கர்த்தருக்காக ஊழியம் செய்யவேண்டும். இரட்சிக்கப்பட்டவர்கள் தேவனுடைய கிருபையையும் சிலாக்கியத்தையும் பெற்றுக்கொள்வார்கள். இதுவரையிலும் மனுஷருடைய பாவங்கள் அவர்களை இருளில் வைத்திருந்தது. அவை சாத்தானுடைய அதிகாரத்திற்கு அவர்களை அடிமைப்படுத்தியிருந்தது. கர்த்தருடைய சுதந்தரத்தைப் பெற்றுக்கொள்ள முடியாதவாறு அவர்களுடைய பாவமே அவர்களுக்குத் தடையாயிருந்தது.

புறஜாதியாரின் பாவங்கள் மன்னிக்கப்படும்போது, அவர்கள் தேவனுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவதை நிறுத்திவிடுவார்கள். கர்த்தருடைய அநுக்கிரகத்தைப் பெற்றுக்கொள்வார்கள். கர்த்தரோடு ஐக்கியமாகயிருப்பார்கள். இதனால் அவர்களுக்கு ஆவிக்குரிய சந்தோஷம் உண்டாகும். கர்த்தருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வார்கள். இரட்சிக்கப்பட்டவர்கள் கர்த்தருடைய பார்வையில் பரிசுத்தவான்களாகயிருக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே பாவமன்னிப்பைப் பெற்றுக்கொண்டவர்கள், பரிசுத்தமாக்கப் பட்டவர்களுக்குரிய சுதந்தரத்தைப் பெற்றுக்கொள்வார்கள். பரலோகமே பரிசுத்தவான்களின் சுதந்தரம். இந்தச் சுதந்தரம் கர்த்தருடைய பிள்ளை களெல்லோருக்கும் கொடுக்கப்படுகிறது. கர்த்தருடைய பரிசுத்தவான்களும், அவர்களுடைய பரிசுத்த சந்ததியாரும் கர்த்தருடைய சுதந்தரத்தைப் பெற்றுக்கொள்வார்கள்.

கர்த்தருடைய சுதந்தரத்தை நம்முடைய சுயமுயற்சியினால் சம்பாதிக்க முடியாது. தேவன் தம்முடைய சுத்தக்கிருபையினால் மாத்திரமே, நமக்குத் தம்முடைய சுதந்தரத்தைக் கொடுக்கிறார். நம்முடைய பாவங்களிலிருந்து நாம் மனந்திரும்பி கர்த்தரிடத்தில் வரும்போது அவர் நம்முடைய பாவங்களை மன்னிக்கிறார். அத்துடன் தம்முடைய சுதந்தரத்திற்கு அவர் நம்மை சுதந்தரவாளியாகவும் அங்கீகரிக்கிறார்.

இரட்சிக்கப்பட்டவர்கள் எல்லோருமே பரிசுத்தமாக்கப் படுகிறார்கள். பரிசுத்தமில்லாதவர்கள் கர்த்தருடைய சமுகத்தில் சந்தோஷமாயிருக்க முடியாது. இரட்சிக்கப்பட்டவர்கள் இரட்சிப்பின் சந்தோஷத்தை அனுபவிக்க வேண்டுமென்றால், அவர்கள் பரிசுத்தமுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். பாவம் செய்கிறவர்களால் பரலோகத்தில் பிரவேசிக்க முடியாது. ஆகையினால் கர்த்தரை விசுவாசிக்கிற பிள்ளைகள் பாவமன்னிப்பையும் பரிசுத்தத்தையும் கர்த்தருடைய கரங்களிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

பாவிகளாகயிருந்த நாம், கர்த்தருடைய இரட்சிக்கும் கிருபையினால், நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு, நாம் பரிசுத்தமாக்கப்பட்டு, இப்போது பரிசுத்தவான்களோடே நிறுத்தப்பட்டிருக்கிறோம். பாவிகளோடு நிற்க வேண்டிய நாம், தேவனுடைய கிருபையினாலே, பரிசுத்தவான்களோடு நிற்கிறோம். இதுவே தேவன் நமக்குக்கொடுக்கிற மிகப்பெரிய ஆசீர்வாதம். பரிசுத்தமாக்கப்படுகிறவர்கள் மகிமைப்படுத்தப்படுவார்கள்.

நாம் பாவிகளாகயிருக்கையில் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நம்மைத் தேடி வந்து, தம்முடைய திருரத்தத்தினால் நம்மைக் கழுவிச் சுத்திகரித்திருக்கிறார். கர்த்தர் நம்மைப் பரிசுத்தவான்களின் கூட்டத்தோடு சேர்க்கிறார். நாம் இயேசுகிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தினால் இரட்சிக்கப்படுகிறோம், பரிசுத்தமாக்கப்படுகிறோம். விசுவாசம் நம்முடைய இருதயத்தைச் சுத்தப்படுத்துகிறது. இயேசுகிறிஸ்துவில் நாம் வைக்கும் விசுவாசத்தினால், நாம் இரட்சிக்கப்பட்டு, நீதிமானாக்கப் படுவதோடு, பரிசுத்தமாக்கப்பட்டு, மகிமைப்படுத்தவும்படுகிறோம்.

நம்முடைய விசுவாசம் சுத்தமாயிருக்கவேண்டும். இது இயேசுகிறிஸ்துவைப் பற்றும் விசுவாசமாகயிருக்கவேண்டும். இந்த விசுவாசம் நமக்குள்ளிருக்கும்போது நாம் அவருடைய வார்த்தைகளைத் தியானம் பண்ணுவோம். இயேசுகிறிஸ்துவோடு ஐக்கியமாகயிருப்போம். நம்முடைய இரட்சிப்புக்கு இயேசுகிறிஸ்துவையே சார்ந்திருப்போம். இயேசுகிறிஸ்துவே நம்மை ஆளுகை செய்யுமாறு, நம்முடைய ஜீவனை அவருடைய கரங்களில் ஒப்புக்கொடுப்போம்.

பவுலின் ஊழியம்
அப் 26 : 19-23

அப் 26:19. ஆகையால், அகிரிப்பா ராஜாவே, நான் அந்தப் பரமதரிசனத்துக்குக் கீழ்ப்படியாதவனாயிருக்கவில்லை.

அப் 26:20. முன்பு தமஸ்குவிலும் எருசலேமிலும் யூதேயா தேசமெங்குமுள்ளவர்களிடத்திலும், பின்பு புறஜாதியாரிடத்திலும் நான் போய், அவர்கள் தேவனிடத்திற்கு மனந்திரும்பிக் குணப்படவும், மனந்திரும்புதலுக்கேற்ற கிரியைகளைச் செய்யவும் வேண்டுமென்று அறிவித்தேன்.

அப் 26:21. இதினிமித்தமே யூதர்கள் தேவாலயத்திலே என்னைப் பிடித்துக் கொலைசெய்யப் பிரயத்தனம் பண்ணினார்கள்.

அப் 26:22. ஆனாலும் தேவ அநுக்கிரகம் பெற்று, நான் இந்நாள்வரைக்கும் சிறியோருக்கும் பெரியோருக்கும் சாட்சிகூறி வருகிறேன்.

அப் 26:23. தீர்க்கதரிசிகளும் மோசேயும் முன்னமே சொல்லியிருந்தபடியே, கிறிஸ்து பாடுபடவேண்டியதென்றும், மரித்தோர் உயிர்த்தெழுதலில் அவர் முதல்வராகி, சுயஜனங்களுக்கும் அந்நிய ஜனங்களுக்கும் ஒளியை வெளிப்படுத்துகிறவரென்றும் சொல்லுகிறேனே யன்றி, வேறொன்றையும் நான் சொல்லுகிறதில்லை என்றான்.

பரமதரிசனம்

ஆகையால், அகிரிப்பா ராஜாவே, நான் அந்தப் பரமதரிசனத்துக்குக் கீழ்ப்படியாதவனாயிருக்கவில்லை (அப் 26:19).

பவுலின் ஊழியம் அவனுடைய சுயசித்தத்தினாலோ, சுயமுயற்சியினாலோ நடைபெறவில்லை. தேவனுடைய தெய்வீக வழிநடத்துதலின் பிரகாரமாக பவுல் கர்த்தருக்கு ஊழியம் செய்கிறான். பவுலின் ஊழியப்பாதையில் கர்த்தரே அவனுக்குப் பாதுகாப்புக் கொடுக்கிறார். தம்முடைய தெய்வீக உதவிகளையும், கிருபைகளையும் அவனுக்கு அருளுகிறார்.

பவுலின் இருதயம் தேவனுடைய சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது. அவருடைய அழைப்புக்குக் கீழ்ப்படிகிறது. தேவன் கொடுத்த அந்தப் பரமதரிசனத்திற்கு பவுல் கீழ்ப்படியாதவனாயிருக்கவில்லை. பவுல் மாம்சத்தினாலும் இரத்தத்தினாலும் வழிநடத்தப்படவில்லை. அவனுக்கு இப்பிரபஞ்சத்தின்மீது பற்று இல்லை. அவன் உலகக்காரியங்களில் சிக்கிக்கொள்ளவில்லை.

பவுல் மாம்ச சித்தத்தோடிருந்திருந்தால், பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசியாகிய யோனாவைப்போல திசைமாறிப் போயிருப்பான். பவுல் அதிகம் படித்தவன். திறமையுள்ளவன். எங்காவது போய் பெரிய தொழில் செய்து பிழைத்துக்கொள்வான். கர்த்தருக்காக ஊழியம் செய்து கட்டுக்களை ஏற்றுக்கொள்ளமாட்டான்.

பவுலின் இருதயத்திலோ தேவனுடைய பரமதரிசனமே நிரம்பியிருக்கிறது. அந்தத் தரிசனத்திற்கு கீழ்ப்படியவேண்டும் என்னும் வாஞ்சை அவனுக்குள் பூரணமாய்க் காணப்படுகிறது. ஆகையினால் கிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்வதற்காக, தனக்கு என்னென்ன பாடுகள் வந்தாலும், பவுல் அவையெல்லாவற்றையும் பொறுமையோடு சகித்துக்கொண்டு, தன்னுடைய ஓட்டத்தில் பொறுமையோடு ஓடுகிறான்.

அறிவித்தேன்

முன்பு தமஸ்குவிலும் எருசலேமிலும் யூதேயா தேசமெங்குமுள்ளவர்களிடத்திலும், பின்பு புறஜாதியாரிடத்திலும் நான் போய், அவர்கள் தேவனிடத்திற்கு மனந்திரும்பிக் குணப்படவும், மனந்திரும்புதலுக்கேற்ற கிரியைகளைச் செய்யவும் வேண்டுமென்று அறிவித்தேன் (அப் 26:20).

கர்த்தர் பவுலை தம்முடைய ஊழியப் பாதையில் வழிநடத்துகிறார். ஊழியத்தில் பல போராட்டங்களும், வேதனைகளும் பாடுகளும் மிகுந்திருந்தாலும், கர்த்தர் அவனை அந்தப் பாதையில் தொடர்ந்து வழிநடத்தி வருகிறார். கர்த்தர் பவுலின் மூலமாக அநேக ஊழியங்களை நிறைவேற்றியிருக்கிறார். இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணுவதற்கு பவுல் தன்னை ஒப்புக்கொடுக்கிறான். பவுலின் ஊழியம் தமஸ்குவில் ஆரம்பமாயிற்று. இந்தப் பட்டணத்தில்தான் பவுல் இரட்சிக்கப்பட்டான்.

தமஸ்குவிலிருந்து பவுல் எருசலேமுக்கு வந்து கர்த்தருடைய ஊழியத்தைச் செய்கிறான். இந்தப் பட்டணத்தில்தான் கமாலியேலின் பாதபடியில் பவுல் கல்வி கற்றான். இங்குள்ள யூதருக்கு பவுல் கிறிஸ்துவைப்பற்றிச் சாட்சியாக அறிவிக்கிறான். பவுலுக்கு விரோதமாக எருசலேமில் எதிர்ப்புக்கள் உண்டாயிற்று. பவுலைக் கொலைசெய்யவேண்டுமென்று யூதர்கள் சதிஆலோசனை செய்தார்கள். தன் உயிருக்கு ஆபத்து வந்தபோதிலும், பவுல் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைத் தொடர்ந்து பிரசங்கித்து வந்தான்.

யூதேயா தேசமெங்குமுள்ளவர்களிடத்தில் பவுல் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தான். ஆரம்பத்தில் பவுலின் ஊழியம் யூதர்கள் மத்தியிலேயே நடைபெற்றது. கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம் பவுல் முதலாவது யூதருக்கு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவித்தான். யூதர்களோ சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளாமல், கிறிஸ்துவையும் அவருடைய சுவிசேஷத்தையும் புறக்கணித்துவிட்டார்கள். கர்த்தருடைய சித்தத்தின்பிரகாரமாக பவுல் புறஜாதியாரிடத்திற்கும்போய், அவர்கள் மத்தியில் சுவிசேஷத்தை அறிவிக்கிறான்.

பவுலின் பிரசங்கச் செய்தி மிகவும் எளிமையாக இருக்கிறது. தன்னுடைய பிரசங்கத்தைக் கேட்கிறவர்கள் நடைமுறையில் எப்படி ஜீவிக்கவேண்டும் என்று, அவர்களுக்கு சுவிசேஷத்தின் அடிப்படையில் பிரசங்கம்பண்ணுகிறான். பவுல் யூதருக்கும் புறஜாதியாருக்கும் மூன்று ஆலோசனைகளைக் கொடுக்கிறான். அவையாவன:

1. அவர்கள் தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பவேண்டும். தாங்கள் செய்த பாவங்களுக்காக மனம் வருந்தவேண்டும். பாவத்திற்கு விரோதமாக தீர்மானம்பண்ணவேண்டும். தங்களுடைய இருதயத்தில் பாவஇச்சைகளுக்கு இடங்கொடுக்கக் கூடாது. பாவத்தைவிட்டு விலகி ஜீவிக்கவேண்டும். இதுவரையிலும் தாங்கள் சென்ற பாவவழியை விட்டுவிட்டு, இயேசுகிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி வரவேண்டும்.

2. ஜனங்கள் தேவனிடத்திற்கு திரும்பி வரவேண்டும். அவர்களுக்கு பாவத்தைக்குறித்து ஒரு கசப்பு உணர்வு வந்தால் மாத்திரம் போதாது. தாங்கள் செய்த பாவத்திற்காக வருத்தப்பட்டால் மாத்திரம் போதாது. அவர்கள் மனுஷருக்கும் தேவனுக்கும் விரோதமாக பாவம் செய்திருக்கிறார்கள். ஆகையினால் அவர்கள் தேவனோடு ஒப்புரவாக வேண்டியது அவசியமாயிருக்கிறது. இதற்காக அவர்கள் தேவனிடத்தில் வரவேண்டும். கீழ்ப்படிதலோடும், பயபக்தியோடும் தேவனிடத்தில் வரவேண்டும். உலகத்தையும், மாம்சத்தையும், அதின் பாவஇச்சைகளையும் விட்டுவிலகி, தேவனுடைய பரிசுத்த சமுகத்திற்கு முன்பாக வரவேண்டும்.

3. அவர்கள் மனந்திரும்புதலுக்கேற்ற கிரியைகளைச் செய்யவேண்டும். யோவான்ஸ்நானன் இந்தச் சத்தியத்தைத்தான் பிரசங்கித்தான் (மத் 3:8). மனந்திரும்புதலைப்பற்றி பிரசங்கிக்கிறவர்கள், தங்கள் ஜீவியத்தில் மனந்திரும்பியிருக்கவேண்டும். அவர்கள் மனந்திரும்புதலுக்கேற்ற கிரியைகளைச் செய்யவேண்டும். நாம் பக்தியுள்ள வார்த்தைகளைப் பேசினால் மாத்திரம் போதாது. நம்மிடத்தில் பக்தியுள்ள கிரியைகள் காணப்படவேண்டும். நம்முடைய வார்த்தைகளும் கிரியைகளும் ஒத்துப்போகவேண்டும். நம்முடைய பேச்சு ஒன்றும், நம்முடைய கிரியைகள் வேறொன்றுமாக இருக்கக்கூடாது. பவுல் தான் பிரசங்கிக்கிற பிரகாரமாகவே ஜீவிக்கிறான்.

கொலைசெய்யப் பிரயத்தனம்

இதினிமித்தமே யூதர்கள் தேவாலயத்திலே என்னைப் பிடித்துக் கொலைசெய்யப் பிரயத்தனம் பண்ணினார்கள் (அப் 26:21).

தேவனிடத்திற்கு ஜனங்கள் மனந்திரும்பி குணப்படவேண்டும் என்றும், அவர்கள் மனந்திரும்புதலுக்கேற்ற கிரியைகளை செய்யவேண்டும் என்றும் பவுல் பிரசங்கம்பண்ணியதினால் யூதர்களுக்கு அவன்மீது கோபம் உண்டாகவில்லை. ஆனால் பவுல் இந்தச் சத்தியங்களையெல்லாம் பிரசங்கம்பண்ணும்போது, ஜனங்களுக்கு இயேசுகிறிஸ்துவைப் பற்றியும் பிரசங்கம்பண்ணுகிறான். இயேசுவே கிறிஸ்து என்று அறிவிக்கிறான். இயேசுகிறிஸ்துவின் மூலமாகவே ஜனங்கள் தேவனுடைய சமுகத்தில் பிரவேசிக்க முடியும் என்று சத்தியத்தை எடுத்துச்சொல்லுகிறான்.

இதனால் யூதர்களுக்குப் பவுலின்மேல் கோபமுண்டாயிற்று. பவுல் தேவாலயத்திலிருந்தபோது அவர்கள் பவுலைப் பிடித்து கொலைசெய்யத் பிரயத்தனம்பண்ணினார்கள். தான் செய்தது மரணத்திற்கு அல்லது கட்டுகளுக்கு ஏதுவான குற்றமல்ல என்றும், யூதர்களின் முன்னோர்கள் நம்புவதையே தானும் பிரசங்கம்பண்ணியதாகவும் பவுல் நியாயசபையில் எடுத்துப்பேசுகிறான். பவுல் தேவாலயத்தில் தேவனை ஆராதித்துக் கொண்டிருக்கும்போது, யூதர்கள் அவனைக் கொலைசெய்வதற்காகப் பிடித்திருக்கிறார்கள். தேவாலயமானது நற்கிரியைகள் நடைபெறவேண்டிய பரிசுத்த ஸ்தலம். யூதர்களுக்கோ பவுலைக் கொலைசெய்வது ஒரு நற்கிரியையாகத் தெரிகிறது.

தேவ அநுக்கிரகம்

ஆனாலும் தேவ அநுக்கிரகம் பெற்று, நான் இந்நாள்வரைக்கும் சிறியோருக்கும் பெரியோருக்கும் சாட்சிகூறி வருகிறேன் (அப் 26:22).

பவுல் தேவஅநுக்கிரகம் பெற்று கர்த்தருடைய ஊழியத்தைச் செய்கிறான். தேவனுடைய கிருபையில்லாமல் நம்மால் தேவனுக்கு ஊழியம் செய்யமுடியாது. நாம் நிர்மூலமாகாமலிருப்பது தேவனுடைய சுத்தக்கிருபை. தான் தேவஅநுக்கிரகம் பெற்று இந்நாள் வரைக்கும் சாட்சி கூறிவருவதாக பவுல் அறிவிக்கிறான். தான் பிரசங்கிக்கிற உபதேசத்தைக்குறித்து பவுல் வெட்கப்படவில்லை. தான் விசுவாசிக்கிற சத்தியத்தில் அவன் உறுதியோடிருக்கிறான். சொல்வதைச் செய்கிறான். செய்வதையே சொல்லுகிறான்.

பவுல் தன் சுயமுயற்சியினால் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்யவில்லை. தேவனுக்காக ஜீவிக்க வேண்டும், அவருக்காக ஊழியம் செய்யவேண்டும் என்று நம்முடைய மாம்சத்தில் தீர்மானம்பண்ண முடியாது. அப்படிப்பட்ட தீர்மானம் நிலைத்து நிற்காது. தேவஅநுக்கிரகத்தை நாம் பெற்றுக்கொண்டால் மாத்திரமே, கர்த்தருக்காக உண்மையோடு ஊழியம் செய்ய முடியும். பவுல் தேவஅநுக்கிரகம் பெற்று இந்நாள் வரைக்கும் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்கிறான்.

பவுலிடத்தில் தேவனுடைய அநுக்கிரகம் இல்லையென்றால், அவனால் இந்நாள் வரைக்கும் இயேசுகிறிஸ்துவைக்குறித்துச் சாட்சி சொல்லி வரமுடியாது. கர்த்தருக்காக ஊழியம் செய்கிற ஊழியக்காரர்களெல்லோருமே தேவஅநுக்கிரகத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். நாம் ஊழியத்தில் தொடர்ந்து நிலைத்திருக்கவேண்டுமென்றால், நமக்கு தேவனுடைய அநுக்கிரகம் தேவை. சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறவர்களுக்கு பரலோகத்திலிருந்து ஒத்தாசை தேவைப்படுகிறது. தேவஒத்தாசையில்லாமல் யாராலும் சுவிசேஷத்தை வல்லமையாய்ப் பிரசங்கிக்க முடியாது.

பழைய ஏற்பாட்டு வேதவாக்கியங்களில் எழுதப்பட்டிருக்கிற சத்தியத்தையே பவுல் உபதேசம்பண்ணுகிறான். அவன் இந்நாள் வரைக்கும் சிறியோருக்கும் பெரியோருக்கும் சத்தியத்தை சாட்சியாக அறிவித்து வருகிறான். சமுதாயத்தில் தரித்திருக்கும், பாவிகளுக்கும், ஐசுவரியவான்களுக்கும் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது. இது சுவிசேஷத்தின் கிருபை. சுவிசேஷத்தின் அறிவைப் பெற்றுக்கொள்வதற்கு எல்லோருக்குமே வாய்ப்பு உண்டாயிருக்கிறது. இப்படிப்பட்ட மேன்மையான சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதுதான் பவுலின் ஊழியம். சத்தியத்தை சிறியோருக்கும் பெரியோருக்கும் சாட்சியாக அறிவிக்கும்போது பவுல் வெட்கப்படவில்லை. பயப்படவில்லை.

பவுல் யூதரிடத்திலும் புறஜாதியாரிடத்திலும் போய், "அவர்கள் தேவனிடத்திற்கு மனந்திரும்பி குணப்படவும், மனந்திரும்புதலுக்கேற்ற கிரியைகளை செய்யவும் வேண்டும்" என்று அறிவிக்கிறான். ஆனால் யூதர்களோ பவுலின்மீது குற்றம் சொல்லுகிறார்கள். அவனுடைய பிரசங்கச் செய்தி இத்துடன் முடிந்துவிடவில்லை என்றும், தங்களால் ஏற்றுக்கொள்ள முடியாத வேறு சில காரியங்களையும் பவுல் அறிவிக்கிறான் என்று அவன்மீது குற்றம் சொல்லுகிறார்கள்.

மரித்தோர் உயிர்த்தெழுதல்

தீர்க்கதரிசிகளும் மோசேயும் முன்னமே சொல்லியிருந்தபடியே, கிறிஸ்து பாடுபடவேண்டியதென்றும், மரித்தோர் உயிர்த்தெழுதலில் அவர் முதல்வராகி, சுயஜனங்களுக்கும் அந்நிய ஜனங்களுக்கும் ஒளியை வெளிப்படுத்துகிறவரென்றும் சொல்லுகிறேனேயன்றி, வேறொன்றையும் நான் சொல்லுகிறதில்லை என்றான் (அப் 26:23).

பவுல் மனந்திரும்புதலைப்பற்றிப் பிரசங்கித்ததோடு, இயேசுகிறிஸ்துவைப் பற்றியும், அவருடைய மரணம், உயிர்த்தெழுதல் ஆகியவற்றைப்பற்றியும் பிரசங்கம்பண்ணுகிறான். இதனால் யூதர்கள் பவுலின் பிரசங்கத்தைக்குறித்து கோபப்படுகிறார்கள். அவனோடு வாக்குவாதம்பண்ணுகிறார்கள். ஆனால் பவுலோ, வேதவாக்கியத்தில் எழுதப்பட்டிருக்காத, புதிய காரியம் எதையும் தான் பிரசங்கம்பண்ணவில்லை என்று சொல்லுகிறான். கிறிஸ்து பாடுபடவேண்டியது என்று தீர்க்கதரிசிகளும், மோசேயும், முன்னோர்களும் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொன்னதைத்தான் தான் பிரசங்கம்பண்ணுவதாக பவுல் நியாயாசனத்திற்கு முன்பாக அறிவிக்கிறான்.

தீர்க்கதரிசிகளும், மோசேயும், முன்னோரும் முன்னமே சொல்லியிருந்த காரியம் இப்போது நிறைவேறியிருக்கிறது. அவர்கள் தீர்க்கதரிசனமாகச் சொன்ன மூன்று காரியங்களை பவுல் பிரசங்கம்பண்ணுகிறான். அவையாவன:

1. கிறிஸ்து பாடுபடவேண்டியது. மேசியா பாடுகளை அனுபவிக்கிறவராகவே வேதாகமத்தில் வெளிப்படுத்தப் பட்டிருக்கிறார். கிறிஸ்துவின் பாடுகளையும், வேதனைகளையும் தீர்க்கதரிசிகள் ஏற்கெனவே முன்னறிவித்திருக்கிறார்கள். அதன் பிரகாரமாகவே இயேசுகிறிஸ்து பாடுகளை அனுபவித்திருக்கிறார். இயேசுகிறிஸ்து சிலுவையில் தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்தார். கிறிஸ்துவின் சிலுவை யூதருக்கு தடைக்கல்லாக இருக்கிறது. ஆனால் பவுலோ கிறிஸ்துவின் சிலுவை மரணத்தைப் பிரசங்கிக்கிறான். பழைய ஏற்பாட்டில் முன்னறிவிக்கப்பட்டிருக்கிற தீர்க்கதரிசனம், இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணத்தில் நிறைவேறியிருப்பதாக பிரசங்கம்பண்ணுகிறான்.

2. மரித்தோர் உயிர்த்தெழுதலில் கிறிஸ்து முதல்வராகிறார். இயேசுகிறிஸ்துவே உயிர்த்தெழுதலாக இருக்கிறார். அவரே உயிர்த்தெழுந்தோர் எல்லோருக்கும் முதல்வராகவும் இருக்கிறார். மரித்து உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்து இனிமேல் மரணத்தைக் காணமாட்டார். மரணத்தை இனிமேல் காணாதபடி உயிர்த்தெழுந்தவர்களில், இயேசுகிறிஸ்துவே முதல்வராகயிருக்கிறார்.

3. கிறிஸ்து சுயஜனங்களுக்கும் அந்நியஜனங்களுக்கும் ஒளியை வெளிப்படுத்துகிறவர். இயேசுகிறிஸ்து முதலாவதாகத் தம்மை யூதருக்கே வெளிப்படுத்தினார். அதன் பின்பே புறஜாதியாருக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்படுகிறது. இயேசுகிறிஸ்து தாமே முன்பு யூதருக்கு தம்மை ஒளியாக பிரத்தியட்சமாகக் காண்பித்தார். அதன்பின்பு தம்முடைய அப்போஸ்தலருடைய ஊழியத்தின் மூலமாக, புறஜாதியாருக்கும் தம்முடைய ஒளியை வெளிப்படுத்துகிறார்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பவுலை தம்முடைய ஊழியத்திற்காக அழைத்தார். "புறஜாதியார் என்னைப் பற்றும் விசுவாசத்தினாலே பாவமன்னிப்பையும் பரிசுத்தமாக்கப் பட்டவர்களுக்குரிய சுதந்தரத்தையும் பெற்றுக் கொள்ளும்படியாக, அவர்கள் இருளைவிட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தைவிட்டு தேவனிடத்திற்கும் திரும்பும்படிக்கு நீ அவர்களுடைய கண்களைத் திறக்கும் பொருட்டு, இப்பொழுது உன்னை அவர்களிடத்திற்கு அனுப்புகிறேன்" (அப் 26:18) என்று சொல்லி இயேசுகிறிஸ்து பவுலை தம்முடைய ஊழியத்திற்கு அழைத்தார்.

ஜனங்களுக்கு தம்முடைய ஒளியைக் காண்பிக்கவேண்டும் என்பது கிறிஸ்துவின் சித்தம். இதற்காகவே கிறிஸ்து மரித்தோர் உயிர்த்தெழுதலில் முதல்வராகியிருக்கிறார். இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளும் முன்னறிவித் திருக்கிறார்கள். புறஜாதியாரும், மேசியாவின் மூலமாக, தேவனைப்பற்றிய அறிவைப் பெற்றுக்கொள்வார்கள். பவுல் இந்தச் சத்தியத்தைத்தான் பிரசங்கம்பண்ணிக் கொண்டிருக்கிறான். ஆனால் அவன் பிரசங்கம்பண்ணுகிற சத்தியத்தை யூதரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அவனுக்கு விரோதமாக எழும்பியிருக்கிறார்கள். பவுலைக் கொலை செய்யவேண்டுமென்று எத்தனமாயிருக்கிறார்கள்.

பெஸ்துவும் பவுலும் அப் 26 : 24-26

அப் 26:24. இவ்விதமாய் அவன் தனக்காக உத்தரவு சொல்லுகையில், பெஸ்து உரத்த சத்தமாய்: பவுலே, நீ பிதற்றுகிறாய், அதிகக் கல்வி உனக்குப் பயித்தியமுண்டாக்குகிறது என்றான்.

அப் 26:25. அதற்கு அவன்: கனம்பொருந்திய பெஸ்துவே, நான் பயித்தியக்காரனல்ல, சத்தியமும் சொஸ்தபுத்தியுமுள்ள வார்த்தைகளைப் பேசுகிறேன்.

அப் 26:26. இந்தச் சங்கதிகளை ராஜா அறிந்திருக்கிறார்; ஆகையால் தைரியமாய் அவருக்கு முன்பாகப் பேசுகிறேன்; இவைகளில் ஒன்றும் அவருக்கு மறைவானதல்லவென்று எண்ணுகிறேன்; இது ஒரு மூலையிலே நடந்த காரியமல்ல.

நீ பிதற்றுகிறாய்

இவ்விதமாய் அவன் தனக்காக உத்தரவு சொல்லுகையில், பெஸ்து உரத்த சத்தமாய்: பவுலே, நீ பிதற்றுகிறாய், அதிகக் கல்வி உனக்குப் பயித்தியமுண்டாக்குகிறது என்றான் (அப் 26:24).

பவுல் நியாயஸ்தலத்திலே தனக்காக உத்தரவு சொல்லிக்கொண்டிருக்கிறான். அவன் சொல்லவேண்டிய வார்த்தைகள் இன்னும் ஏராளமாயிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் மரணத்தையும், உயிர்த்தெழுதலையும் பற்றி இப்பொழுதுதான் சொல்ல ஆரம்பித்திருக்கிறான். இவனுடைய பிரசங்கம் எப்போது முடியுமென்று யாருக்கும் தெரியாது. ஏனெனில் கிறிஸ்துவின் மரணத்தைப்பற்றிய வல்லமையை சொல்லிக்கொண்டே போகலாம். அதற்கு ஒரு முடிவே இல்லை. இதைப்போன்றே, இயேசுகிறிஸ்துவின் பாடுகளைப்பற்றியும் விரிவாகப் பிரசங்கம்பண்ணலாம். பவுல் பேசுவதற்கு உத்தரவு கிடைத்திருக்கிறது. தனக்குக் கிடைத்திருக்கிற இந்தச் சிலாக்கியத்தை, பவுல் பயன்படுத்தி, நியாயஸ்தலத்திற்கு முன்பாக கிறிஸ்துவின் பூரண சுவிசேஷத்தை அறிவித்துக் கொண்டிருக்கிறான்.

பவுல் பேசுவதற்கு உத்தரவு கிடைத்தபோதிலும், அவனுடைய பேச்சுக்களுக்குத் தடை உண்டாயிற்று. திட்டமிட்ட பிரகாரம் அவனால் பேசமுடியவில்லை. தேசாதிபதியாகிய பெஸ்துவுக்கு பவுல் பேசுவதெல்லாம் விளங்காத காரியமாயிருக்கிறது. அவனுடைய சிந்தனையில் ஒன்றும் புரியவில்லை. அவன் பவுல் பேசுவதை தடைபண்ணுகிறான். "நீ பிதற்றுகிறாய்" என்று பவுலிடத்தில் சொல்லுகிறான். பவுல் பேசுவதை செவிகொடுத்துக் கேட்க அவனுக்கு மனமில்லை. பவுல் பெஸ்துவுக்கு முன்பாக காவலில் வைக்கப்பட்டவன்தான். பவுல் பேசுவதையெல்லாம் கேட்கவேண்டும் என்னும் அவசியம் பெஸ்துவுக்கு இல்லை. ஆனாலும் அகிரிப்பா ராஜா பவுலுக்கு அனுமதி கொடுத்தினால், அவன் தனக்காக உத்தரவு சொல்லிக்கொண்டிருக்கிறான். பெஸ்துவோ தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி பவுலின் பிரசங்கத்தைத் தடைபண்ணுகிறான்.

பவுல் தனக்காக உத்தரவு சொல்லுகையில், பெஸ்து உரத்த சத்தமாய் அவனுடைய பேச்சைத் தடைபண்ணுகிறான். பெஸ்துவின் உரத்த சத்தத்தைக் கேட்கும்போது, பவுல் தன்னுடைய பேச்சுக்களை அப்படியே நிறுத்திக்கொள்ளவேண்டும். பெஸ்துவின் சத்தத்தைவிட உரத்த சத்தமாய் பேசவேண்டுமென்று பவுல் நினைக்கக்கூடாது. பெஸ்துவின் உரத்த சத்தத்தைக் கேட்டு, நியாயஸ்தலத்தில் அமர்ந்திருப்போர் எல்லோரும், பெஸ்துவின் பக்கமாக தங்கள் கவனத்தைத் திருப்புகிறார்கள். அப்போது பெஸ்து உரத்த சத்தமாய் "பவுலே, நீ பிதற்றுகிறாய். அதிகக்கல்வி உனக்கு பயித்தியமுண்டாக்குகிறது" என்று சொல்லுகிறான்.

பெஸ்து பவுலை அவமானப்படுத்துகிறான். பவுல் சொன்னது பெஸ்துவுக்குப் புரியவில்லை. ஆகையினால் பவுலை அவமானப்படுத்தும் விதமாக, அவன் பிதற்றுகிற வார்த்தைகளைப் பேசுகிறான் என்று குறிப்பிடுகிறான். மரித்தோரின் உயிர்த்தெழுதலைப்பற்றிப் பேசுவது பெஸ்துவுக்கு புரிந்துகொள்ள முடியாது ஒரு புதிராக இருக்கிறது. ஆகையினால் பவுலின் வார்த்தையில் உண்மையில்லை என்றும், அவையெல்லாமே கற்பனை வார்த்தைகள் என்றும் சொல்லுகிறான். பவுல் மெய்யைப் பேசாமல், பிதற்றுவதாக அவன்மீது குற்றம் சுமத்துகிறான்.

பெஸ்து பவுலைப்பற்றி சொல்லும்போது அவன் அதிகக்கல்வி கற்றவன் என்பதை அங்கீகரிக்கிறான். மெய்யாகவே பவுல் அதிகக்கல்வி கற்றவன்தான். கமாலியேலின் பாதபடியில் படித்தவன். கிறிஸ்துவின் மற்ற அப்போஸ்தலர்களெல்லாம் மீன்பிடிக்கிற சாதாரண தொழிலைச் செய்கிறவர்கள். ஆனால் பவுலோ அதிகக்கல்வி கற்றவன். பிரசித்திப் பெற்ற பல்கலைக்கழக மாணவன். தான் அதிகம் படித்ததாக பவுல் வேஷம் போடவில்லை. மெய்யாகவே அதிகம் படித்திருக்கிறான். பவுலின் அதிகக்கல்வியைக்கூட, பெஸ்து "பயித்தியம்" என்று வியாக்கியானம்பண்ணுகிறான்.

கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்கு விரோதமாகச் சத்துருக்கள் பல்வேறுவிதமான தூஷண வார்த்தைகளைப் பேசுகிறார்கள். ஊழியக்காரர்களிடத்தில் நற்குணங்களும், நல்ல தகுதிகளும் இருந்தாலும், அதைப்பற்றியும் தவறாகவே சொல்லுகிறார்கள். பெஸ்துவும் பவுலைப்பற்றி அப்படித்தான் சொல்லுகிறான். "அதிகக்கல்வி உனக்கு பயித்தியமுண்டாக்குகிறது" என்று பவுலை தூஷிக்கிறான். கர்த்தருடைய ஊழியக்காரர்களை இதுபோல தகாத வார்த்தைகளினால் தூஷிப்பது புதுமையல்ல. இயேசுகிறிஸ்துவையும், யோவான்ஸ்நானனையும் பிசாசு பிடித்தவர்கள் என்று தூஷித்தார்கள்.

பெஸ்து உரத்த சத்தமாய், "பவுலே, நீ பிதற்றுகிறாய், அதிகக்கல்வி உனக்கு பயித்தியமுண்டாக்குகிறது" என்று சொல்லுகிறான். பவுலின் வார்த்தைகளில் உண்மையில்லை என்றும், சொஸ்தபுத்தி இல்லையென்றும், அவனுடைய வார்த்தைகளெல்லாம் பிதற்றுகிற வார்த்தைகள் என்றும், அவன் ஒரு பயித்தியக்காரனென்றும் பவுலைப்பற்றி தவறாகப் பேசுகிறான்.

சத்தியமும் சொஸ்தபுத்தியும்

அதற்கு அவன்: கனம்பொருந்திய பெஸ்துவே, நான் பயித்தியக்காரனல்ல, சத்தியமும் சொஸ்தபுத்தியுமுள்ள வார்த்தைகளைப் பேசுகிறேன் (அப் 26:25).

பெஸ்து தன்மீது தகாத வார்த்தைகளைப் பேசியவுடன், பவுல் தன்மீது கூறப்பட்ட குற்றச்சாட்டை மறுக்கிறான். தான் பிதற்றவில்லையென்றும், தான் ஒரு பயித்தியக்காரனல்ல என்றும் பெஸ்துவிடம் அறிவிக்கிறான். பவுல் ஒரு பயித்தியக்காரனென்றால், அவனுடைய வார்த்தைகளை யாரும் கேட்கவேண்டிய அவசியமில்லை. ஆனால் பவுலோ தெளிந்த புத்தியுள்ளவன். பயித்தியக்காரனல்ல. நியாயஸ்தலத்தில் அமர்ந்திருக்கிறவர்கள் எல்லோருக்கும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவிக்கவேண்டும் என்னும் வாஞ்சையோடு பவுல் பேசிக்கொண்டிருக்கிறான். ஆகையினால் தன்மீது குற்றம் சுமத்தப்பட்டவுடன், பவுல் காலதாமதமில்லாமல் அந்தக் கறையை நீக்குகிறான்.

பவுல் பெஸ்துவைப்பார்த்து "கனம்பொருந்திய பெஸ்துவே, நான் பயித்தியக்காரனல்ல, சத்தியமும் சொஸ்தபுத்தியுமுள்ள வார்த்தைகளைப் பேசுகிறேன்" என்று தன்னைப்பற்றி சொல்லுகிறான். பவுல் பேசுவது பெஸ்துவுக்குப் புரியாமலிருக்கலாம். அதற்காக பவுலை பயித்தியக்காரனென்று சொல்லிவிடமுடியாது. பவுல் சத்தியமான வார்த்தைகளைப் பேசுகிறான்.

பெஸ்து பவுலை "பயித்தியக்காரன்" என்று சொன்னாலும், பவுல் அவனுக்கு மிகுந்த மரியாதையைக் கொடுக்கிறான். "கனம்பொருந்திய பெஸ்துவே" என்று அவனை மரியாதையோடு அழைக்கிறான். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நம்மையும் ஒரு சிலர் ஏளன வார்த்தைகளால் பேசலாம். நம்மை அவமானப்படுத்தலாம். உடனே நாம் கோபப்பட்டுவிடக்கூடாது. அவர்களைப்போலவே நாமும் பதிலுக்கு தூஷண வார்த்தைகளைப் பேசிவிடக்கூடாது. நம்மை சபிக்கிறவர்களையும் நாம் ஆசீர்வதிக்கவேண்டும்.

ராஜா அறிந்திருக்கிறார்

இந்தச் சங்கதிகளை ராஜா அறிந்திருக்கிறார்; ஆகையால் தைரியமாய் அவருக்கு முன்பாகப் பேசுகிறேன்; இவைகளில் ஒன்றும் அவருக்கு மறைவானதல்லவென்று எண்ணுகிறேன்; இது ஒரு மூலையிலே நடந்த காரியமல்ல (அப் 26:26).

பெஸ்து தன்னைப்பற்றி மோசமாகப் பேசினாலும், பவுல் சோர்ந்துபோகவில்லை. அகிரிப்பா ராஜாவிடம் தான் சொல்ல விரும்புகிற சத்தியத்தைத் தொடர்ந்து பேசுகிறான். தான் பேசுகிற சங்கதிகளை அகிரிப்பா ராஜா அறிந்திருக்கிறார் என்று பெஸ்துவிடம் சொல்லுகிறான். ஆகையினால் தான் தைரியமாய் அகிரிப்பா ராஜாவுக்கு முன்பாக பேசுவதாகவும் சொல்லுகிறான். பவுல் பேசுவது பெஸ்துவுக்குப் புரியவில்லை. ஆனால் அகிரிப்பா ராஜாவுக்குப் புரிகிறது. ஒருவேளை அகிரிப்பாவுக்கு பவுலின் வார்த்தைகள் ஓரளவு புரிந்திருக்கலாம். அப்படிப்பட்டவர் இன்னும் அறிந்துகொள்ள வேண்டுமென்று ஆர்வத்தோடிருக்கிறார். ஆகையினால் தான் அவருக்கு முன்பாக தைரியமாய்ப் பேசுவதாகப் பவுல் அறிவிக்கிறான்.

தான் பேசுகிற காரியம் ஒன்றும் அகிரிப்பா ராஜாவுக்கு மறைவானது அல்ல என்று பவுல் எண்ணுகிறான். ஏனென்றால் பவுல் பேசுகிற சம்பவங்கள் ஒரு மூலையிலே நடந்த காரியமல்ல. யூதாதேசத்திலுள்ளோர் எல்லோருக்கும் முன்பாக கிறிஸ்துவின் சுவிசேஷ சம்பவங்கள் நடைபெற்றிருக்கிறது. பவுல் ஒரு கற்பனைக் கதையைப் பேசவில்லை. இயேசுகிறிஸ்து யூதேயா தேசத்தில் யூதர்களுக்கு மத்தியில் ஜீவித்தார். யூதர்கள்தான் இயேசுகிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்தார்கள். இயேசுகிறிஸ்து மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார். இவையெல்லாமே பிரத்தியட்சமாக நடைபெற்ற சம்பவம். இது ஏதோ ஒரு மூலையில், யாருக்கும் தெரியாமல் ரகசியமாக நடைபெறவில்லை. யூதேயா தேசம் முழுவதிலும் இயேசுகிறிஸ்துவின் ஜீவியத்தில் நடைபெற்ற சம்பவங்களைக் குறித்துப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இது அகிரிப்பா ராஜாவுக்கும் தெரியும். இவைகளில் ஒன்றும் அகிரிப்பாவுக்கு மறைவானது அல்ல. ஆனாலும் பெஸ்து இந்தச் சத்தியங்களையெல்லாம் அறியாதவனாகயிருக்கிறான்.

அகிரிப்பாவும் பவுலும் அப் 26 : 27-29

அப் 26:27. அகிரிப்பா ராஜாவே, தீர்க்கதரிசிகளை விசுவாசிக்கிறீரா? விசுவாசிக்கிறீர் என்று அறிவேன் என்றான்.

அப் 26:28. அப்பொழுது அகிரிப்பா பவுலை நோக்கி; நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங்குறைய நீ என்னைச் சம்மதிக்கப்பண்ணுகிறாய் என்றான்.

அப் 26:29. அதற்குப் பவுல்: நீர் மாத்திரமல்ல, இன்று என் வசனத்தைக் கேட்கிற யாவரும், கொஞ்சங்குறையமாத்திரம் அல்ல, இந்தக் கட்டுகள் தவிர, முழுவதும் என்னைப்போலாகும்படி, தேவனை வேண்டிக் கொள்ளுகிறேன் என்றான்.

தீர்க்கதரிசிகளை விசுவாசிக்கிறீரா

அகிரிப்பா ராஜாவே, தீர்க்கதரிசிகளை விசுவாசிக்கிறீரா? விசுவாசிக்கிறீர் என்று அறிவேன் என்றான் (அப் 26:27).

பவுல் தனக்காகப் பேசும்போது, பெஸ்து அவன் பிதற்றுவதாகவும், அவன் ஒரு பயித்தியக்காரன் என்றும் சொல்லுகிறான். ஆனால் அகிரிப்பா ராஜாவோ பவுல் பேசுவதைக் கவனமாய்க் கேட்கிறான். பவுல் பிதற்றுவதாகவோ, அவன் ஒரு பயித்திக்காரனென்றோ அகிரிப்பா நினைக்கவில்லை. பயித்தியக்காரனால் இவ்வளவு தெளிவாகப் பேசமுடியாது. தனக்கு முன்பாக மார்க்கக் காரியங்களை பவுலைப்போல தைரியமாய்ப் பேசின யாரையும் அகிரிப்பா இதுவரையிலும் பார்த்ததில்லை. பவுல் மெய்யாகவே சத்தியமும் சொஸ்தபுத்தியுமுள்ள வார்த்தைகளையே பேசுகிறான்.

பெஸ்து தன்னைப்பற்றி பயித்தியக்காரன் என்று சொன்னவுடன், பவுல் அவனுடைய வார்த்தைகளை மறுத்துவிட்டு, மறுபடியும் அகிரிப்பா ராஜாவோடு தொடர்ந்து பேசுகிறான். பவுல் மெய்யாகவே அகிரிப்பாவின் மனச்சாட்சியோடு பேசுகிறான். தான் பேசுவது அகிரிப்பாவுக்கு புரியும் என்றும், தன்னைப்போலவே அவனும் பழைய ஏற்பாட்டை விசுவாசிக்கிறான் என்றும் பவுல் நம்புகிறான்.

பவுல் அகிரிப்பாவைப் பார்த்து "அகிரிப்பா ராஜாவே, தீர்க்கதரிசிகளை விசுவாசிக்கிறீரோ" என்று கேட்கிறான். அகிரிப்பா பதில் சொல்லுவது வரையிலும் பவுல் காத்திருக்கவில்லை. "விசுவாசிக்கிறீர் என்று அறிவேன்" என்று பவுல் அகிரிப்பாவின் சார்பாக பதிலும் சொல்லுகிறான். அகிரிப்பா ஒரு யூதன் என்பது எல்லோருக்கும் தெரியும். அவன் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களைப் படித்திருக்கிறான். வசனங்களை நம்புகிறான். ஆகையினால் அவன் தீர்க்கதரிசிகளையும் விசுவாசிக்கிறான். இதை எல்லோரும் அறிந்திருக்கிறார்கள். பவுலும் அறிந்திருக்கிறான். வேதவாக்கியங்களை வாசிக்கிறவர்கள், அதை விசுவாசிக்கவேண்டும். விசுவாசித்து அதன் பிரகாரம் ஜீவிக்கவேண்டும். விசுவாசிக்காமல் வாசிப்பதினால் பயனில்லை.

கிறிஸ்தவனாகிறதற்கு

அப்பொழுது அகிரிப்பா பவுலை நோக்கி; நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங்குறைய நீ என்னைச் சம்மதிக்கப்பண்ணுகிறாய் என்றான் (அப் 26:28).

பவுல் அகிரிப்பாவிடம் "தீர்க்கதரிசிகளை விசுவாசிக்கிறீரோ" என்றுதான் கேள்வி கேட்டான். ஆனால் அகிரிப்பாவோ பவுல் கேட்ட கேள்விக்கு பதில் சொல்வதைவிட, தன் உள்ளத்திலுள்ள விசுவாசத்தை வெளிப்படுத்துகிறான். "நான் கிறிஸ்தவனாகிறதற்கு கொஞ்சங்குறைய நீ என்னை சம்மதிக்கப்பண்ணுகிறாய்" என்று பவுலிடத்தில் சொல்லுகிறான். "நான் இன்னும் கொஞ்சநேரம் உன்னுடைய பிரசங்கத்தைக் கேட்டால், இன்னும் சிறிது நேரத்தில் நான் கிறிஸ்தவனாகிவிடுவேன்" என்று பொருள்படுமாறு அகிரிப்பா பவுலிடம் சொல்லுகிறான்.

அகிரிப்பா இரட்சிக்கப்படவேண்டும் என்னும் நோக்கத்தோடுதான் பவுல் அவனோடு பேசிக்கொண்டிருக்கிறான். மிகுந்த கவனத்தோடும் எச்சரிப்போடும், பயபக்தியோடும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவிக்கிறான். பவுலின் வார்த்தைகள் பெஸ்துவுக்கு பிதற்றுகிற வார்த்தைகளாகத் தெரிகிறது. ஆனால் அகிரிப்பா ராஜாவுக்கோ, பவுலின் வார்த்தைகள் இரட்சிப்புக்கேதுவான வார்த்தைகளாகத் தெரிகிறது.

இதற்கு முன்பு தேசாதிபதியாகிய பேலிக்ஸ் பவுலிடத்தில் கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தைப்பற்றி, அவன் சொல்லக்கேட்டான். பவுல் பாவத்தைக்குறித்தும், இனிவரும் நியாயத்தீர்ப்பைக் குறித்தும் பேலிக்ஸிடத்தில் பேசினான். அதைக் கேட்டவுடன் பேலிக்ஸிற்குப் பயமுண்டாயிற்று. பவுல் பேசுவதைத் தொடர்ந்து கேட்காமல் அவனை அனுப்பிவிட்டான்.

பெஸ்துவைப்போல, அகிரிப்பாவைப் போல, அநேகர் இரட்சிப்பின் அனுபவத்திற்கு அருகாமையில் வந்துவிடுகிறார்கள். சத்திய வசனம் அவர்களுடைய இருதயத்தில் பேசுகிறது. அவர்களுடைய மனச்சாட்சியோடு பேசுகிறது. ஆனாலும் சத்தியத்திற்குச் செவிகொடுக்காமல், இரட்சிப்பின் அனுபவத்தை ஏற்றுக்கொள்ளத் தவறிவிடுகிறார்கள். வேறு காரியங்களினால் ஈர்க்கப்பட்டு, சுவிசேஷத்திற்கு தொடர்ந்து செவிகொடுக்காமல், தங்கள் ஆத்தும இரட்சிப்பை இழந்துபோகிறார்கள்.

என்னைப்போலாகும்படி

அதற்குப் பவுல்: நீர் மாத்திரமல்ல, இன்று என் வசனத்தைக் கேட்கிற யாவரும், கொஞ்சங்குறையமாத்திரம் அல்ல, இந்தக் கட்டுகள் தவிர, முழுவதும் என்னைப்போலாகும்படி தேவனை வேண்டிக் கொள்ளுகிறேன் என்றான் (அப் 26:29).

பவுல் நியாயஸ்தலத்தில் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பயபக்தியோடு பிரசங்கம்பண்ணுகிறான். தன்னுடைய வார்த்தைகளைக் கேட்கிறவர்கள் எல்லோரும் இரட்சிக்கப்பட வேண்டுமென்று விரும்புகிறான். இதற்காக தேவனை வேண்டிக் கொள்கிறான். அகிரிப்பா மாத்திரமல்ல, தன்னுடைய வசனத்தைக் கேட்கிற யாவரும் இரட்சிக்கப்படவேண்டுமென்பது பவுலின் விருப்பமும் நோக்கமுமாகும்.

அகிரிப்பா பவுலை நோக்கி "நான் கிறிஸ்தவனாகிறதற்கு கொஞ்சங்குறைய நீ என்னை சம்மதிக்கப்பண்ணுகிறாய்" என்று சொன்னதற்கு, பவுல் "நீர் மாத்திரமல்ல, இன்று என் வசனத்தைக் கேட்கிற யாவரும், கொஞ்சங்குறைய மாத்திரமல்ல, இந்தக் கட்டுகள் தவிர, முழுவதும் என்னைப்போலாகும்படி, தேவனை வேண்டிக்கொள்கிறேன்" என்று சொல்லுகிறான். தன்னுடைய பிரசங்கத்தைக்கேட்டு, நியாயஸ்தலத்தில் அமர்ந்திருக்கிறவர்கள் எல்லோரும், இயேசுகிறிஸ்துவைத் தங்களுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, இரட்சிக்கப்பட வேண்டுமென்பது பவுலின் விருப்பம்.

பவுல் அவனுடைய இரட்சிப்பைப்பற்றிச் சொல்லும்போது எல்லோரும் தன்னைப்போலாகும்படி தேவனை வேண்டிக்கொள்வதாக அறிவிக்கிறான். எல்லோரும் இரட்சிக்கப்பட்டு இயேசுகிறிஸ்துவின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறான். இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றுவதே மெய்யான சந்தோஷம். இரட்சிக்கப்படுகிற ஒவ்வொருவருக்கும் இயேசுகிறிஸ்துவின் கிருபை கிடைக்கிறது. ஆகையினால் எல்லோரும் தன்னைப்போலாகும்படி பவுல் தேவனை வேண்டிக்கொள்கிறான்.

ஆனால் பவுல் இப்போது, நியாயஸ்தலத்தில் கட்டப்பட்டவனாக இருக்கிறான். பவுலின் சரீரம் கட்டப்பட்டிருக்கிறது. அவனுடைய ஆத்துமா விடுதலையோடிருக்கிறது. எல்லோரும் தன்னைப்போலாக வேண்டுமென்று, பவுல் சொல்லும்போது, எல்லோரும் கட்டப்பட்டிருக்கவேண்டுமென்று பவுல் விரும்பவில்லை. "இந்தக் கட்டுகள் தவிர, முழுவதும் என்னைப்போலாகும்படி தேவனை வேண்டிக்கொள்கிறேன்" என்று பவுல் சொல்லுகிறான்.

பவுல் இப்போது இயேசுகிறிஸ்துவின் நிமித்தமாகப் பாடுகளை அனுபவித்துக் கொண்டிருக்கிறான். இப்படிப்பட்ட பாடுகள் அவர்களுக்கு வரக்கூடாது என்று விரும்புகிறான். அவர்களுக்கு தேவனுடைய கிருபையும், ஆசீர்வாதமும் மாத்திரமே வரவேண்டுமென்று, பவுல் அவர்களுக்காக ஜெபிக்கிறான். நியாயஸ்தலத்தில் உட்கார்ந்திருக்கிறவர்களிடத்தில் பவுலுக்கு மெய்யான அன்பு இருக்கிறது. அவர்களுடைய ஆத்துமாக்களைக்குறித்து பவுல் மிகுந்த பாரத்தோடிருக்கிறான். அவர்கள் பாவத்தில் கட்டப்பட்டவர்களாக இருக்கிறார்கள். அவர்களுடைய பாவக்கட்டுகள் நீங்கப்படவேண்டும் என்று பவுல் ஜெபிக்கிறான்.

பவுல் சரீரத்தில் கட்டப்பட்டிருக்கிறான். இப்படிப்பட்ட சரீர கட்டுக்கள் அவர்களுக்கு வரக்கூடாது என்றும் ஜெபிக்கிறான். தேவனுடைய கிருபையையும் அன்பையும், பவுல் மென்மையான வார்த்தைகளினால் அகிரிப்பா ராஜாவுக்கும், நியாயஸ்தலத்தில் அமர்ந்திருக்கிற முக்கிய பிரமுகர்களுக்கும் சாட்சியாகச் சொல்லுகிறான்.

தங்களுக்குள்ளே பேசிக்கொண்டார்கள்
அப் 26 : 30-32

அப் 26:30. இவைகளை அவன் சொன்னபோது, ராஜாவும் தேசாதிபதியும் பெர்னீக்கேயாளும் அவர்களுடனே கூட உட்கார்ந்திருந்தவர்களும் எழுந்து,

அப் 26:31. தனியே போய்: இந்த மனுஷன் மரணத்துக்காவது கட்டுகளுக்காவது பாத்திரமான தொன்றையும் செய்யவில்லையென்று தங்களுக்குள்ளே பேசிக்கொண்டார்கள்.

அப் 26:32. அகிரிப்பா பெஸ்துவை நோக்கி: இந்த மனுஷன் இராயனுக்கு அபயமிடாதிருந்ததானானால், இவனை விடுதலைபண்ணலாகும் என்றான்.

அவன் சொன்னபோது

இவைகளை அவன் சொன்னபோது, ராஜாவும் தேசாதிபதியும் பெர்னீக்கேயாளும் அவர்களுடனேகூட உட்கார்ந்திருந்தவர்களும் எழுந்து, (அப் 26:30)

பவுல் ஒரு குற்றமும் செய்யவில்லை என்று அகிரிப்பா ராஜாவும், பெஸ்துவும், நியாயஸ்தலத்தில் அமர்ந்திருக்கிற அனைவரும் ஒப்புக்கொள்கிறார்கள். பவுலைப்பற்றிய காரியத்தைத் தங்களுக்குள்ளே பேசிக்கொள்வதற்காக இவர்கள் அனைவரும் எழுந்து போகிறார்கள்.

பவுல் அகிரிப்பா ராஜாவிடத்தில், அவனும், தன் வசனத்தைக் கேட்கிற யாவரும், தன்னைப்போலாக வேண்டுமென்று தேவனை வேண்டிக்கொள்வதாகச் சொல்லுகிறான். இதனால் பவுல் இன்னும் அதிகமாய் ஏதாவது சொல்லுவானோ என்று அகிரிப்பா ராஜாவுக்குப் பயமுண்டாயிற்று. ராஜாவின் இருதயம் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளும் வண்ணமாக மென்மையாக இருக்கிறது. பவுலின் உபதேசத்தை இன்னும் கொஞ்சநேரம் கேட்டால், அகிரிப்பா ராஜா ஒருவேளை தன் இருதயத்தில் இயேசுகிறிஸ்துவைத் தன் இரட்சகராக ஏற்றுக்கொள்வதற்கு வாய்ப்புள்ளது.

இரட்சிக்கப்படுவதற்கு வாய்ப்புள்ள ஏற்ற சமயத்தை அகிரிப்பா ராஜா பயன்படுத்தாமல் விட்டுவிடுகிறான். பேலிக்ஸைப்போல, பவுல் பேசுவதை வேறொரு சமயத்தில் கேட்கலாமென்று தீர்மானித்துவிடுகிறான். பவுல் தன் வார்த்தைகளைச் சொன்னபோது, ராஜாவும், தேசாதிபதியும், பெர்னீக்கேயாளும், அவர்களுடனே உட்கார்ந்திருந்தவர்களும் எழுந்து, பவுலைப்பற்றி தங்களுக்குள்ளே ஆலோசனை பண்ணுவதற்காகப் புறப்பட்டுப்போகிறார்கள்.

தனியே போய்

தனியே போய்: இந்த மனுஷன் மரணத்துக்காவது கட்டுகளுக்காவது பாத்திரமான தொன்றையும் செய்யவில்லையென்று தங்களுக்குள்ளே பேசிக்கொண்டார்கள் (அப் 26:31).

நியாயஸ்தலத்தில் உட்கார்ந்திருக்கிறவர்கள் எழுந்து, தனியே போய், பவுலின் காரியத்தைக்குறித்து தங்களுக்குள்ளே பேசிக்கொள்கிறார்கள். எல்லோரும் ஒருமனப்பட்டு, "இந்த மனுஷன் மரணத்துக்காவது, கட்டுகளுக்காவது பாத்திரமான தொன்றையும் செய்யவில்லை" என்று பவுலைப்பற்றி தங்களுக்குள்ளே பேசிக்கொள்கிறார்கள்.

இவர்கள் பவுலின் உபதேசத்தை இன்னும் அங்கீகரிக்கவில்லை. ஆனாலும் அவர்களுடைய மனச்சாட்சியில் பவுல் குற்றமற்றவனானகயிருக்கிறான். யூதர்கள் தங்களை பக்தியுள்ளவர்கள் என்று சொல்லிக்கொள்கிறார்கள். ஆனாலும் அவர்கள் பவுலைப்பற்றிச் சொல்லும்போது, "பவுல் உயிரோடிருப்பதற்கு தகுதியற்றவன்" என்று கூக்குரலிடுகிறார்கள். பல சமயங்களில் பக்தியில்லாதவர்கள்கூட மனிதநேயத்தோடு நடந்துகொள்கிறார்கள். தங்களைப் பக்தியுள்ளவர்களென்று சொல்லிக்கொள்கிறவர்கள், பக்தியின் வேஷந்தரித்து அநியாயம் பண்ணுகிறார்கள்.

விடுதலைபண்ணலாகும்

அகிரிப்பா பெஸ்துவை நோக்கி: இந்த மனுஷன் இராயனுக்கு அபயமிடாதிருந்ததானானால், இவனை விடுதலைபண்ணலாகும் என்றான் (அப் 26:32).

அகிரிப்பா பெஸ்துவிடம், பவுலைப்பற்றிய தன்னுடைய தீர்ப்பைச் சொல்லுகிறான். "இந்த மனுஷன் இராயனுக்கு அபயமிடாதிருந்தானானால், இவனை விடுதலைபண்ணலாகும்" என்று தீர்ப்பு சொல்லுகிறான். பவுல் தன்னுடைய வார்த்தையினால், தன்னைத்தானே காவலில் வைத்துக்கொள்கிறான். அகிரிப்பா கிறிஸ்தவனாகிறதற்கு கொஞ்சங்குறைய சம்மதம் தெரிவிக்கிறான். ஆனாலும் அதற்குரிய மனமாற்றம்கூட அவனிடத்தில் காணப்படவில்லை.

பவுல் இராயனுக்கு அபயமிட்டது, அவனை விடுதலைபண்ணுவதற்கு அகிரிப்பாவுக்குத் தடையாயிற்று. ஒருவேளை பவுல் இராயனுக்கு அபயமிடாதிருந்தால், அவர்கள் அவனை விடுதலைபண்ணியிருக்கலாம். பவுல்கூட, தான் இராயருக்கு அபயமிட்டதை நினைத்து மனம் வருத்தப்பட்டிருப்பான். பவுலை விடுதலைபண்ணுவதற்கு, இப்போது அவனுடைய வார்த்தைகளே தடையாகயிருக்கிறது. சில சமயங்களில் நாம் நல்லது என்று நினைப்பது நமக்கு தீங்காக இருக்கும். நல்வழி என்று போவோம். அது நமக்கு கண்ணி நிறைந்த வழியாக இருக்கும்.

பவுல் தனக்கு நேரிடும் ஒவ்வொரு சம்பவத்தையும் கர்த்தருடைய சமுகத்தில் தியானித்துப் பார்க்கிறான். கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமே ஒவ்வொரு காரியமும் தனக்கு நடைபெறுவதாக நினைத்து ஆறுதலோடு இருக்கிறான். கர்த்தரை நம்புகிற பிள்ளைகளுக்கு சகலமும் நன்மைக்கேதுவாகவே நடைபெறும். நம்முடைய ஜீவனைக் கர்த்தரிடத்தில் ஒப்புக்கொடுக்கும்போது, நமக்குள் கர்த்தரின் சித்தம் நிறைவேறும்.

பவுல் ரோமாபுரியில் இயேசுகிறிஸ்துவைக் குறித்துச் சாட்சிகொடுக்கவேண்டும். ஒரு இராத்திரியிலே கர்த்தர் பவுலின் அருகே நின்று "பவுலே திடன்கொள். நீ என்னைக் குறித்து எருசலேமிலே சாட்சி கொடுத்ததுபோல ரோமாவிலும் சாட்சி கொடுக்கவேண்டும்" (அப் 23:11) என்று சொன்னார். கர்த்தரின் வார்த்தை இப்போது நிறைவேறுகிறது. அவன் ரோமாவுக்குப் போகிறான். விடுதலையோடு போவதற்குப் பதிலாக, கட்டப்பட்டவனாகப் போகிறான்.

27 அதிகாரம்

பவுல் ரோமாவை நோக்கி பிரயாணம்பண்ணுகிறான். பவுலின் பிரயாணம் ஆரம்பத்தில் அமைதியான சூழ்நிலையில் நல்லமுறையில் நடைபெறுகிறது (அப் 27:1-8). கப்பல் பிரயாணத்தின்போது புயல்காற்று வரப்போவதை பவுல் முன்னறிவிக்கிறான் (அப் 27:9-11). கப்பல் பெருங்காற்று மழையில் அடிபடுகிறது. அதில் பிரயாணம்பண்ணுகிறவர்களெல்லோரும் மிகுந்த சிரமத்திற்குள்ளாகிறார்கள் (அப் 27:12-20). கப்பற்சேதமேயல்லாமல் ஒருவருக்கும் பிராணச்சேதம் வராது என்று பவுல் கர்த்தரின் நல்வார்த்தையை அறிவிக்கிறான் (அப் 27:21-26). எல்லோரும் மெலித்தா தீவில் கரை ஒதுங்குகிறார்கள் (அப் 27:27-36). கப்பல் உடைந்துபோயிற்று எல்லோரும் தப்பி கரை சேருகிறார்கள் (அப் 27:37-44).

இத்தாலியா தேசம்
அப் 27 : 1-11

அப் 27:1. நாங்கள் இத்தாலியா தேசத்துக்குக் கப்பல் ஏறிப் போகும்படி தீர்மானிக்கப்பட்டபோது, பவுலையும் காவலில் வைக்கப்பட்டிருந்த வேறுசில்லரையும் அகுஸ்து பட்டாளத்தைச்சேர்ந்த யூலியு என்னும் பேர்கொண்ட நூற்றுக்கு அதிபதியினிடத்தில் ஒப்புவித்தார்கள்.

அப் 27:2. அதிரமித்தியம் ஊர்க்கப்பலில் நாங்கள் ஏறி, ஆசியா நாட்டுக் கரைபிடித்தோடே வேண்டுமென்று நினைத்துப் புறப்பட்டோம். மக்கெதோனியா தேசத்துத் தெசலோனிக்கே பட்டணத்தானாகிய அரிஸ்தர்க்கு எங்களுடனேகூட இருந்தான்.

அப் 27:3. மறுநாள் சீதோன் துறைபிடித்தோம். யூலியு பவுலைப் பட்சமாய் நடப்பித்து, அவன் தன் சிநேகிதரிடத்திலே போய்ப் பராமரிப் படையும்படிக்கு உத்தரவு கொடுத்தான்.

அப் 27:4. அவ்விடம்விட்டு நாங்கள் புறப்பட்டு, எதிர்காற்றாயிருந்த படியினால், சீப்புரு தீவின் ஒதுக்கிலே ஓடினோம்.

அப் 27:5. பின்பு சிலிசியா பம்பிலியா நாடுகளின் கடல்வழியாய் ஓடி, லீசியா நாட்டு மீறாப்பட்டணத்தில் சேர்ந்தோம்.

அப் 27:6. இத்தாலியாவுக்குப் போகிற அலெக்சந்திரியாபட்டணத்துக் கப்பலை நூற்றுக்கு அதிபதி அங்கே கண்டு, எங்களை அதில் ஏற்றினான்.

அப் 27:7. காற்று எங்களைத் தடுத்தபடியினாலே, நாங்கள் அநேகநாள் மெதுவாய்ச் சென்று, வருத்தத்தோடே கினீதுபட்டணத்திற்கு எதிரே வந்து, சல்மோனே ஊருக்கு எதிராய்க் கிரேத்தாதீவின் ஒதுக்கில் ஓடினோம்.

அப் 27:8. அதை வருத்தத்தோடே கடந்து, நல்ல துறைமுகம் என்னப்பட்ட ஒரு இடத்திற்கு வந்தோம்; லசேயபட்டணம் அதற்குச் சமீபமாயிருந்தது.

அப் 27:9. வெகுகாலம் சென்று, உபவாசநாளும் கழிந்துபோன படியினாலே, இனிக் கப்பல் யாத்திரை செய்கிறது மோசத்திற்கு ஏதுவாயிருக்குமென்று, பவுல் அவர்களை நோக்கி:

அப் 27:10. மனுஷரே, இந்த யாத்திரையினாலே சரக்குக்கும் கப்பலுக்கும் மாத்திரமல்ல,நம்முடைய ஜீவனுக்கும் வருத்தமும் மிகுந்த சேதமும் உண்டாயிருக்குமென்று காண்கிறேன் என்று சொல்லி, அவர்களை எச்சரித்தான்.

அப் 27:11. நூற்றுக்கு அதிபதி பவுலினால் சொல்லப்பட்டவைகளைப் பார்க்கிலும் மாலுமியையும் கப்பல் எஜமானையும் அதிகமாய் நம்பினான்.

யூலியு

நாங்கள் இத்தாலியா தேசத்துக்குக் கப்பல் ஏறிப் போகும்படி தீர்மானிக்கப்பட்டபோது, பவுலையும் காவலில் வைக்கப்பட்டிருந்த வேறுசில்லரையும் அகுஸ்து பட்டாளத்தைச்சேர்ந்த யூலியு என்னும் பேர்கொண்ட நூற்றுக்கு அதிபதியினிடத்தில் ஒப்புவித்தார்கள் (அப் 27:1).

பவுலை இத்தாலியா தேசத்திற்கு கப்பலில் ஏற்றி அனுப்புகிறார்கள். இது நீண்ட தூர பிரயாணம். பவுல் இராயருக்கு அபயமிட்டான். ஆகையினால் அவன் இராயரிடத்திற்கு போகவேண்டியதாயிற்று. பவுல் இத்தாலியா தேசத்திற்கு கப்பல் ஏறி போகுமாறு தீர்மானிக்கப்பட்டது. பவுல் இத்தாலியா தேசத்திற்குப்போவது தேவனுடைய தீர்மானம். பெஸ்து பவுலைப்பற்றி தீர்மானிப்பதற்கு முன்பாகவே, தேவன் அவனைப்பற்றி தீர்மானித்துவிட்டார். அவன் ரோமாவுக்குப்போய் தம்மைக்குறித்து சாட்சிகொடுக்க வேண்டுமென்று தேவன் திட்டமிட்டிருக்கிறார். பவுலுக்கு ரோமாபுரியில் ஊழியம் நியமிக்கப்பட்டிருக்கிறது.

அகஸ்து பட்டணத்தைச் சேர்ந்த யூலியு என்னும் பேர்கொண்ட நூற்றுக்கு அதிபதி ஒருவன் இருக்கிறான். பவுலை அவனிடத்தில் ஒப்புவிக்கிறார்கள். யூலியுவும் அவனுடைய சேவகரும் பவுலைக் காவல்காத்து, இத்தாலி தேசத்திற்கு கப்பலில் அழைத்துச் செல்கிறார்கள்.

அதிரமித்தியம் ஊர்க்கப்பல்

அதிரமித்தியம் ஊர்க்கப்பலில் நாங்கள் ஏறி, ஆசியா நாட்டுக் கரைபிடித்தோடே வேண்டுமென்று நினைத்துப் புறப்பட்டோம். மக்கெதோனியா தேசத்துத் தெசலோனிக்கே பட்டணத்தானாகிய அரிஸ்தர்க்கு எங்களுடனேகூட இருந்தான் (அப் 27:2).

அதிரமித்தியம் என்பது ஆப்பிரிக்கா கண்டத்திலுள்ள ஒரு துறைமுகப் பட்டினமாகும். இந்த ஊர் கப்பலில் பவுலை ஏற்றுகிறார்கள். பவுல் கப்பலில் எந்த தளத்திலிருந்தான் என்பது தெரியவில்லை. பவுலோடுகூட காவலில் வைக்கப்பட்டிருந்த வேறுசிலரையும் அழைத்துப் போகிறார்கள். இவர்களெல்லோருமே நூற்றுக்கு அதிபதியாகிய யூலியு என்பவனின் காவலிலிருக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டபோது, அவரோடுகூட மேலும் இரண்டு கள்ளர்களை சிலுவைகளில் அறைந்தார்கள். இயேசுகிறிஸ்து இரண்டு கள்ளர்கள் நடுவே சிலுவையில் தொங்கினார். பவுலும் ரோமாவுக்குப் போகும்போது தனியாகப்போகாமல், காவலில் வைக்கப்பட்டிருந்த வேறு சிலரோடு போகிறான். பிரயாணத்தின்போது அவர்கள் நிமித்தமாக பவுல் கொல்லப்படவேண்டிய சூழ்நிலை உண்டாயிற்று. இதே பிரயாணத்தில் பவுலினிமித்தமாக, மரித்துப்போக வேண்டிய அவர்கள், உயிர்பிழைக்கிறார்கள்.

பவுலோடுகூட அவனுடைய சிநேகிதரும் கப்பலில் பிரயாணம் பண்ணுகிறார்கள். அவர்களில் லூக்காவும் ஒருவன். அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தின் ஆசிரியரான லூக்கா, இந்தச் சம்பவத்தைப்பற்றி எழுதும்போது "அதிரமித்தியம் ஊர்க்கப்பலில் நாங்கள் ஏறி", "புறப்பட்டோம்" என்னும் தன்னிலைப்பன்மை வார்த்தைகளைப் பயன்படுத்துகிறான். பவுலின் பிரயாணத்தில் தன்னையும் சேர்த்துக்கொண்டு எழுதுகிறான்.

தெசலோனிக்கே பட்டணத்தானாகிய அரிஸ்தர்க்கு என்பவனும் இவர்களோடு கூட பிரயாணம்பண்ணுகிறான். பவுலுக்கு தன் சிநேகிதரோடு பிரயாணம்பண்ணுவது மிகவும் ஆறுதலாகயிருந்திருக்கும். பிரயாண தூரம் அதிகமாகயிருப்பதினால், சிநேகிதரின் ஐக்கியம் அவனுடைய களைப்பை நீக்கியிருக்கும். கப்பலில் பலதரத்து மக்கள் இருப்பார்கள். நல்லோரும் தீயோரும் கப்பலில் கலந்திருப்பார்கள். அவர்கள் மூலமாக பவுலுக்கு தீங்கு ஒன்றும் நேரிடக்கூடாது. பவுல் காவலில் வைக்கப்பட்டவனாக பிரயாணம்பண்ணுகிறான். பவுலின் சிநேகிதர்கள் அவனோடுகூட பிரயாணம்செய்து அவனுக்கு ஆறுதலாகயிருக்கிறார்கள். ரோமாவில் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்யவேண்டும் என்னும் வாஞ்சையே பவுலின் இருதயத்தில் நிரம்பியிருக்கிறது.

சீதோன் துறை

மறுநாள் சீதோன் துறைபிடித்தோம். யூலியு பவுலைப் பட்சமாய் நடப்பித்து, அவன் தன் சிநேகிதரிடத்திலே போய்ப் பராமரிப்படையும்படிக்கு உத்தரவு கொடுத்தான் (அப் 27:3).

பவுல் அதிரமித்தியம் ஊர்க்கப்பலில் ஏறி பிரயாணம்பண்ணுகிறான். எந்தெந்த வழியாக கப்பல் போயிற்று, எந்தத் துறைமுகத்திலெல்லாம் கப்பல் தங்கிற்று என்னும் விவரம் இந்த அதிகாரத்தில் விரிவாக எழுதப்பட்டிருக்கிறது. மறுநாளில் அவர்கள் சீதோன் துறை பிடிக்கிறார்கள். நூற்றுக்கு அதிபதியாகிய யூலியு பவுலை பட்சமாய் நடப்பிக்கிறான். அகிரிப்பாவும் பெர்னீக்கேயாளும் சேனாபதிகளோடும், பட்டணத்து பிரதான மனுஷரோடுங்கூட நியாயஸ்தலத்தில் உட்கார்ந்து, பவுல் சொல்வதைக் கேட்டார்கள் (அப் 25:23). அந்த சேனாபதிகளில் நூற்றுக்கு அதிபதியாகிய யூலியுவும் ஒருவனாக இருந்திருக்கவேண்டும். பவுல் மரணத்திற்கு ஏதுவான குற்றமோ, கட்டுகளுக்கு ஏதுவான குற்றமோ எதுவும் செய்யவில்லையென்று யூலியுவும் நம்புகிறான்.

பவுல் நூற்றுக்கு அதிபதியாகிய யூலியுவின் காவலில் வைக்கப் பட்டிருக்கிறான். ஆனாலும் அவன் பவுலை ஒரு சிநேகிதனைப்போல பட்சமாய் நடப்பிக்கிறான். தன் சிநேகிதர்களிடத்தில் போய் பவுல் பராமரிப்படையும்படிக்கு அவனுக்கு உத்தரவு கொடுக்கிறான். லூக்காவும், மக்கெதோனியா தேசத்து தெசலோனிக்கே பட்டணத்தானாகிய அரிஸ்தர்க்குவும் பவுலுக்கு பிரயாணத்துணையாய் வருகிறார்கள்.

யூலியு நூற்றுக்கு அதிபதியாக அதிகாரத்திலிருக் கிறான். அதிகாரத்திலிருக்கிறவர்கள் மற்றவர்களை ஏளனமாக நினைக்கக்கூடாது. யாருக்கு மரியாதை காண்பிக்கவேண்டுமோ அவர்களுக்கு மரியாதை காண்பிக்கவேண்டும். இந்த விஷயத்தில் யூலியு மற்ற அதிகாரிகளுக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாக இருக்கிறான்.

பவுல் கர்த்தருக்காக ஊழியம் செய்கிறான். அவருக்காகப் பாடுகளை அனுபவிக்கிறான். தம்முடைய பிள்ளைகளை கர்த்தர் ஒருபோதும் கைவிடுவதில்லை. பிரயாணத்தில் பவுலுக்குத் தேவையான உதவிகளை கர்த்தர் அவனுக்குச் செய்கிறார். நூற்றுக்கு அதிபதியின் சிநேகம் பவுலுக்கு கர்த்தருடைய கிருபையினாலேயே கிடைத்தது. பொதுவாக காவலில் வைக்கப் பட்டிருக்கிறவர்களுக்கு, அவர்களுடைய மேலதிகாரிகளின் சிநேகம் கிடைக்காது. கைதிகளிடம் மிகவும் கண்டிப்பாக நடந்துகொள்வார்கள். ஆனால் யூலியுவோ பவுலை பட்சமாய் நடப்பிக்கிறான்.

பவுல் யூலியுவின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்துகொள்கிறான். யூலியு தன்னிடத்தில் பட்சமாய் நடந்துகொண்டாலும், பவுல் காவலிலிருந்து தப்பித்துச் செல்ல முயற்சிபண்ணவில்லை. நேர்மையாகவும், கண்ணியமாகவும் நடந்துகொள்கிறான். பவுலை நம்பலாம். அவன் சொல்வதைச் செய்வான். செய்வதைச் சொல்வான். பவுலிடத்தில் மாய்மாலம் இல்லை. கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்கு பவுல் ஒரு நல்ல முன்மாதிரியாக இருக்கிறான்.

சீப்புரு தீவு

அவ்விடம்விட்டு நாங்கள் புறப்பட்டு, எதிர்காற்றாயிருந்த படியினால், சீப்புரு தீவின் ஒதுக்கிலே ஓடினோம் (அப் 27:4).

சீதோன் துறையிலிருந்து புறப்பட்டு, சீப்புரு தீவின் ஒதுக்கிலே கப்பல் பயணம் செய்கிறது. காற்று அவர்களுக்கு சாதகமாகயிருந்திருந்தால், அவர்கள் சீப்புரு தீவின் வலதுபக்கமாக கப்பலை செலுத்தியிருப்பார்கள். ஆனால் காற்று அவர்களுக்குச் சாதகமாகயில்லை. எதிர்காற்றாயிருக்கிறது. ஆகையினால் அவர்கள் சீப்புரு தீவின் இடதுபுறமாக கப்பலை செலுத்துகிறார்கள். கப்பலின் மாலுமிகள் தங்களால் முடிந்த மட்டும் தாங்கள் விரும்புகிற பிரகாரம் கப்பலை செலுத்துவார்கள். தங்களால் ஒன்றும் முடியாத பட்சத்தில், காற்றின் திசைக்கு கப்பலைப் போகவிட்டுவிடுவார்கள். காற்று கப்பலை எந்த திசையில் அடித்துச் சென்றாலும், அதைத் திசைதிருப்ப மாலுமிகளால் ஒன்றும் செய்யமுடியாது.

பல சமயங்களில் இந்த உலகத்தில் நம்முடைய ஜீவியம் ஒரு கப்பல் பிரயாணம் போலவே இருக்கிறது. ஒவ்வொரு காரியத்தையும் நாம் திட்டமிட்டு, தீர்மானம் செய்து நடத்துகிறோம். சில சமயங்களில் நம்முடைய திட்டத்திற்கு மீறி சில காரியங்கள் நடைபெறும்போது, அவற்றை கர்த்தருடைய பரிசுத்த சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்துவிடவேண்டும். கர்த்தர் வழிநடத்துகிற பாதையில் ஜெபத்தோடும் கீழ்ப்படிதலோடும் முன்னேறிச் செல்லவேண்டும்.

மீறாப்பட்டணம்

பின்பு சிலிசியா பம்பிலியா நாடுகளின் கடல்வழியாய் ஓடி, லீசியா நாட்டு மீறாப்பட்டணத்தில் சேர்ந்தோம். இத்தாலியாவுக்குப் போகிற அலெக்சந்திரியாபட்டணத்துக் கப்பலை நூற்றுக்கு அதிபதி அங்கே கண்டு, எங்களை அதில் ஏற்றினான் (அப் 27:5,6).

பவுல் பிரயாணம் செய்கிற கப்பல் சீப்புரு தீவின் ஒதுக்கிலே ஓடி, லீசியா நாட்டிலுள்ள மீறாப்பட்டணத்திற்கு வந்துசேருகிறது. இங்கிருந்து பவுலும் அவனோடுகூட பிரயாணம் செய்கிறவர்களும் வேறு கப்பலில் ஏற்றி அனுப்பப்படுகிறார்கள். இத்தாலியாவுக்குப் போகிற அலெக்சந்திரியா பட்டணத்து கப்பலில் எல்லோரையும் ஏற்றுகிறார்கள்.

அக்காலத்தில் இத்தாலியா தேசத்திற்கும் லீசியா நாட்டிலுள்ள மீறாப்பட்டணத்திற்கும் இடையில் அதிக அளவில் வியாபாரம் நடைபெற்றது. அலெக்சந்திரியாவிலிருந்து தானிய வகைகளை ரோமாவுக்கு ஏற்றுமதி செய்வார்கள். கிழக்கிந்திய தேசங்களிலிருந்தும், பெர்சியா தேசத்திலிருந்தும், ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிற பொருட்களை, செங்கடலில் இறக்குமதி செய்து, அவற்றை மறுபடியும் இத்தாலியா தேசத்திற்கு ஏற்றுமதி செய்வார்கள். இதனால் மீறாப்பட்டணத்து துறைமுகத்தில் இத்தாலியா பட்டணத்திற்கு புறப்பட்டுப்போகிற அலெக்சந்திரியா பட்டணத்துக் கப்பல்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படும். இந்தத் துறைமுகத்தில் அவர்கள் பாய்களை இறக்கிவிட்டு, அநேகநாள் காத்திருக்கவேண்டிய அவசியமில்லை. அலெக்சந்திரியா பட்டணத்துக் கப்பலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, உடனே அதை அனுப்பிவிடுவார்கள்.

நல்ல துறைமுகம்

காற்று எங்களைத் தடுத்தபடியினாலே, நாங்கள் அநேகநாள் மெதுவாய்ச் சென்று, வருத்தத்தோடே கினீதுபட்டணத்திற்கு எதிரே வந்து, சல்மோனே ஊருக்கு எதிராய்க் கிரேத்தாதீவின் ஒதுக்கில் ஓடினோம். அதை வருத்தத்தோடே கடந்து, நல்ல துறைமுகம் என்னப்பட்ட ஒரு இடத்திற்கு வந்தோம்; லசேயபட்டணம் அதற்குச் சமீபமாயிருந்தது (அப் 27:7,8).

கிரேத்தா தீவில் நல்ல துறைமுகம் என்னும் பேரில் ஒரு துறைமுகப்பட்டணம் இருக்கிறது. மீறாப்பட்டணத்திலிருந்து கப்பல் கிரேத்தா தீவிலுள்ள நல்ல துறைமுகத்தை நோக்கி பிரயாணம் மேற்கொள்கிறது. காற்று அவர்களுக்குச் சாதகமாகயில்லை. காற்று அவர்களைத் தடுத்தது. ஆகையினால் அவர்கள் அநேகநாள் மெதுவாய்ச் சென்றார்கள். கினீது பட்டணத்திற்கு எதிரே வரும்போது, அவர்கள் அநேகநாள் அதிக வருத்தத்தோடே, கப்பலை செலுத்தி வந்திருக்கிறார்கள். சீப்புரு தீவுக்குப் போகும் முன்பாக கிரேத்தா தீவின் ஒதுக்கில் கப்பல் பயணம் செய்கிறது. சல்மோனே ஊருக்கு எதிராய் மிகுந்த வருத்தத்தோடே பிரயாணம் பண்ணுகிறார்கள். இந்த ஊர் கிரேத்தா தீவின் கிழக்கு கடற்கரையிலுள்ளது.

பவுலின் கப்பற் பிரயாணத்தில் இதுவரையிலும் பலத்த புயல்காற்று எதுவும் வீசவில்லை. ஆனாலும் காற்று அவர்களுக்கு சாதகமாகயில்லாத படியினால், அதிக வருத்தத்தோடே பிரயாணம் பண்ணுகிறார்கள். இவர்களுடைய பிரயாணம் தடைபடவில்லை. மெதுவாகச் செல்கிறார்கள். இவர்களுடைய பிரயாணம் முன்னோக்கிச் செல்லவுமில்லை பின்னோக்கியும் செல்லவில்லை.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திலும், சில சமயங்களில் வேகமான வளர்ச்சி காணப்படாது. நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் அதிக வருத்தங்கள் காணப்படும். விசுவாசத்தை விட்டு விலகிப்போகவும்மாட்டோம். பின்மாரியும் போய்விடமாட்டோம். மெதுவாக முன்னேறிச் சென்றுகொண்டிருப்போம். நமக்கு சாதகமான சூழ்நிலை வருமென்று கர்த்தருடைய சமுகத்தில் பொறுமையோடு காத்துக் கொண்டிருப்போம். கப்பலில் பிரயாணம் செய்கிறவர்களும், கிரேத்தா தீவின் ஒதுக்கில், அதிக வருத்தத்தோடே கப்பலைச் செலுத்துகிறார்கள். கப்பல் மெதுவாக பயணம் செய்கிறது.

கப்பல் நல்ல துறைமுகம் என்னப்பட்ட ஓரிடத்திற்கு வருகிறது. இக்காலத்திலும் இந்தத் துறைமுகத்திற்கு "நல்ல துறைமுகம்" என்னும் இதே பெயரே வழங்கப்பட்டு வருகிறது. பெயருக்கேற்றாற்போல், இந்தத் துறைமுகத்தில் அதிக ஆசீர்வாதங்கள் உண்டு. ஏராளமான பொருட்கள் இங்கு கிடைக்கிறது. கப்பலில் பிரயாணம் செய்கிறவர்கள் நல்லதுறைமுகம் பட்டணத்திற்கு போகவேண்டிய அவசியம் எதுவுமில்லை. இது நல்லதுறைமுகம் தான். ஆனால் இது அவர்கள் போகவேண்டிய துறைமுகமல்ல. இந்தத் துறைமுகத்தின் பெயர்தான் நல்லதுறைமுகம். இந்தத் துறைமுகத்தில் மழைக்காலத்திலே தங்குவதற்கு வசதியில்லை (அப் 27:11). எல்லா நல்ல துறைமுகங்களும் பாதுகாப்பான துறைமுகங்களல்ல. சில சமயங்களில் சந்தோஷம் இருக்கிற இடத்தில் ஆபத்தும் இருக்கும்.

எச்சரித்தான்

வெகுகாலம் சென்று, உபவாச நாளும் கழிந்துபோனபடியினாலே, இனிக் கப்பல் யாத்திரை செய்கிறது மோசத்திற்கு ஏதுவாயிருக்குமென்று, பவுல் அவர்களை நோக்கி: மனுஷரே, இந்த யாத்திரையினாலே சரக்குக்கும் கப்பலுக்கும் மாத்திரமல்ல,நம்முடைய ஜீவனுக்கும் வருத்தமும் மிகுந்த சேதமும் உண்டாயிருக்குமென்று காண்கிறேன் என்று சொல்லி, அவர்களை எச்சரித்தான் (அப் 27:9,10).

கப்பல் பிரயாணம் மிகவும் வருத்தமாயிருக்கிறது. காற்று அவர்களைத் தடுக்கிறது. மிகவும் கஷ்டப்பட்டு நல்ல துறைமுகத்திற்கு வந்திருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் பவுல் அவர்களுக்கு ஆலோசனை சொல்லுகிறான். பவுல் காவலில் வைக்கப்பட்டிருக்கிறான். ஆனாலும் கர்த்தர் அவனுக்குச் சொல்லுகிற ஆலோசனைகளை, அவன் தைரியமாய் நூற்றுக்கு அதிபதியிடம் சொல்லுகிறான்.

இனி கப்பல் யாத்திரை செய்கிறது மோசத்திற்கு ஏதுவாயிருக்கும் என்று பவுல் அவர்களை எச்சரிக்கிறான். ஏனெனில் வெகுகாலம் சென்று உபவாச நாளும் கழிந்துபோயிற்று. இந்த உபவாச நாள் யூதருக்கு முக்கியமான பண்டிகைநாள். இந்த உபவாச நாள் பழைய ஏற்பாட்டுக்காலத்தில் "பாவநிவிர்த்தியின் நாள்" என்று அழைக்கப்பட்டது. தங்களுடைய ஏழாம்மாதம், பத்தாந்தேதியிலே யூதர்கள் இந்த உபவாச நாளை ஆசரிப்பது வழக்கம். நம்முடைய நாள்காட்டியில் இது செப்டம்பர் மாதம் இருபதாம் நாள் வரும். புதிய ஏற்பாட்டில் இந்த வசனத்தில் மாத்திரமே இந்த உபவாச நாளைப்பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. யூதர்கள் புதிய ஏற்பாட்டுக்காலத்தில் இந்த உபவாச நாளை எப்படி ஆசரித்தார்கள் என்னும் விவரம் நமக்குத் தெரியவில்லை.

இது மழைக்காலம். இந்தக் காலத்தை குறிப்பிடுவதற்காகவே, உபவாச நாளின் காலம் இங்கு குறிப்பிடப்பட்டிருக்கிறது. இக்காலத்தில் கப்பல் பிரயாணம் செய்வது மிகவும் ஆபத்தானது. கர்த்தரும் இந்த ஆபத்தை பவுலுக்கு உணர்த்துகிறார். பவுல் அவர்களை நோக்கி இனி கப்பல் யாத்திரை செய்கிறது மோசத்திற்கேதுவாய் இருக்குமென்று எச்சரித்துச் சொல்லுகிறான். இந்த யாத்திரையினாலே சரக்குக்கும் கப்பலுக்கும் மாத்திரமல்ல, ஜீவனுக்கும் வருத்தமும் மிகுந்த சேதமும் உண்டாயிருக்குமென்று அவர்களை எச்சரிக்கிறான்.

கப்பலில் நல்லோர் சிலர் இருக்கிறார்கள். தீயோர் அநேகர் இருக்கிறார்கள். இயற்கையின் சம்பவம் நல்லோருக்கும் தீயோருக்கும் ஒன்றுபோலவே நடைபெறுகிறது. ஒரே கப்பலில் இவர்கள் இருப்பதினால், இவர்களெல்லோருக்குமே ஒன்றுபோலவே ஆபத்து வரும். இவர்கள் எல்லாருடைய ஜீவனுக்கும் வருத்தமும் மிகுந்த சேதமும் உண்டாகும்.

மாலுமியை நம்பினான்

நூற்றுக்கு அதிபதி பவுலினால் சொல்லப்பட்டவைகளைப் பார்க்கிலும் மாலுமியையும் கப்பல் எஜமானையும் அதிகமாய் நம்பினான் (அப் 27:11).

பவுலின் எச்சரிப்புக்கு நூற்றுக்கு அதிபதி செவிகொடுக்கவில்லை. தன்னிடத்தில் காவலில் வைக்கப்பட்டிருக்கிறவர்கள் அனைவரையும் தாமதமில்லாமல் அழைத்துச் செல்ல தீர்மானம்பண்ணுகிறான். பவுல் எச்சரித்தாலும், நூற்றுக்கு அதிபதி பவுல் சொன்னதைப்பற்றி மாலுமியிடமும், கப்பல் எஜமானிடமும் விசாரிக்கிறான். அவர்கள் "ஒரு சேதமும் வராது, ஜீவனுக்கு வருத்தமும் எந்த தேசமும் உண்டாகாது" என்று ஆலோசனை சொல்லுகிறார்கள். நூற்றுக்கு அதிபதியோ, பவுலினால் சொல்லப்பட்டவைகளைப் பார்க்கிலும், மாலுமியையும் கப்பல் எஜமானையும் அதிகமாய் நம்புகிறான்.

கப்பலுக்கு மாலுமியும், கப்பல் எஜமானும்தான் அதிகாரிகள். அவர்களுக்கு யார் என்ன யோசனை சொன்னாலும், அவர்களுடைய யோசனையைத்தான் அவர்கள் நிறைவேற்றுவார்கள். அவர்களுக்கு எது பிரியமாகவும், நலமாகவும் தோன்றுகிறதோ, அதன் பிரகாரமாகவே கப்பல் பிரயாணம் செய்யும். ஏனெனில் இது அவர்களுடைய கப்பல். நூற்றுக்கு அதிபதி பவுலை பட்சமாய் நடப்பிக்கிறான். ஆனால் பவுலின் ஆலோசனைக்குச் செவிகொடுக்க மறந்துவிடுகிறான். இந்த நூற்றுக்கு அதிபதியைப்போலவே, இக்காலத்தில் சிலர் வேதாகமத்தில் சொல்லப்பட்டவைகளைப் பார்க்கிலும், ஒரு சில மனுஷரை நம்புகிறார்கள்.

யூரோகிலிதோன்
அப் 27 : 12-20

அப் 27:12. அந்தத் துறைமுகம் மழைக்காலத்திலே தங்குவதற்கு வசதியாயிராதபடியினால், அவ்விடத்தை விட்டுத் தென்மேற்கையும் வடமேற்கையும் நோக்கியிருக்கும் கிரேத்தாதீவிலுள்ள துறைமுகமாகிய பேனிக்ஸ் என்னும் இடத்தில் சேரக்கூடுமானால், சேர்ந்து, மழைக்காலத்தில் தங்கும்படி அநேகம்பேர் ஆலோசனை சொன்னார்கள்.

அப் 27:13. தென்றல் மெதுவாயடித்தபடியால், தாங்கள் கோரினது கைகூடிவந்ததென்று எண்ணி, அவ்விடம்விட்டுப் பெயர்ந்து கிரேத்தாதீவுக்கு அருகாக ஓடினார்கள்.

அப் 27:14. கொஞ்சநேரத்துக்குள்ளே யூரோக்கிலிதோன் என்னுங் கடுங்காற்று அதில் மோதிற்று.

அப் 27:15. கப்பல் அதில் அகப்பட்டுக்கொண்டு, காற்றுக்கு எதிர்த்துப் போகக்கூடாதபடியினால் காற்றின் போக்கிலே கொண்டுபோகப்பட்டோம்.

அப் 27:16. அப்படிக் கிலவுதா என்னப்பட்ட ஒரு சின்ன தீவின் ஒதுக்கிலே ஓடுகையில் வெகு வருத்தத்தோடே படவை வசப்படுத்தினோம்.

அப் 27:17. அதை அவர்கள் தூக்கியெடுத்த பின்பு, பல உபாயங்கள் செய்து, கப்பலைச் சுற்றிக் கட்டி, சொரிமணலிலே விழுவோமென்று பயந்து, பாய்களை இறக்கி, இவ்விதமாய்க் கொண்டுபோகப்பட்டார்கள்.

அப் 27:18. மேலும் பெருங்காற்றுமழையில் நாங்கள் மிகவும் அடிபட்டபடியினால், மறுநாளில் சில சரக்குகளைக் கடலில் எறிந்தார்கள்.

அப் 27:19. மூன்றாம் நாளிலே கப்பலின் தளவாடங்களை எங்கள் கைகளினாலே எடுத்து எறிந்தோம்.

அப் 27:20. அநேகநாளாய்ச் சூரியனாவது நட்சத்திரங்களாவது காணப்படாமல், மிகுந்த பெருங்காற்றுமழையும் அடித்துக்கொண்டிருந்தபடியினால், இனி தப்பிப் பிழைப்போமென்னும் நம்பிக்கை முழுமையும் அற்றுப்போயிற்று.

பேனிக்ஸ்

அந்தத் துறைமுகம் மழைக்காலத்திலே தங்குவதற்கு வசதியாயிராதபடியினால், அவ்விடத்தை விட்டுத் தென்மேற்கையும் வடமேற்கையும் நோக்கியிருக்கும் கிரேத்தாதீவிலுள்ள துறைமுகமாகிய பேனிக்ஸ் என்னும் இடத்தில் சேரக்கூடுமானால், சேர்ந்து, மழைக்காலத்தில் தங்கும்படி அநேகம்பேர் ஆலோசனை சொன்னார்கள் (அப் 27:12).

பவுலின் கப்பல் பிரயாணம் மறுபடியும் தொடருகிறது. தென்றல் மெதுவாய் அடிக்கிறது. ஆகையினால் தாங்கள் கோரினது கைகூடிவந்தது என்று நல்ல துறைமுகத்திலிருந்து பெயர்ந்து கிரேத்தா தீவுக்கு அருகாக கப்பலை செலுத்துகிறார்கள். நல்ல துறைமுகம் மழைகாலத்தில் தங்குவதற்கு வசதியாயிராது. பெரிய மழை பெய்தால், இந்தத் துறைமுகத்தில் கப்பலைப் பாதுகாப்பாக நிறுத்த முடியாது. ஆகையினால் இந்த ஆபத்தைத் தவிர்ப்பதற்காக, நல்ல துறைமுகத்தைவிட்டு புறப்பட்டுப்போய்விட வேண்டுமென்று தீர்மானம் பண்ணுகிறார்கள். நமக்கும் ஏதாவது ஓரிடத்தில் ஆபத்து வரும் என்று தெரிந்தால், நாமும் அங்கு இருக்கமாட்டோம்.

கப்பலில் வேலை செய்கிறவர்களில் சிலர், மழைகாலமாகயிருந்தாலும், நல்ல துறைமுகத்திலேயே தங்கியிருக்கலாம் என்று ஆலோசனை சொல்கிறார்கள். இக்காலத்தில் கடலும் கொந்தளிப்பாக இருக்கும். கடுங்காற்று வீசும். நடுக்கடலில் புயல்காற்றில் சிக்கி தவிப்பதைவிட, நல்ல துறைமுகத்தில் தங்கியிருப்பது ஓரளவு பாதுகாப்பாக இருக்கும் என்று சிலர் நினைக்கிறார்கள். ஆனால் இவர்களுடைய ஆலோசனை ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு மழைக்காலத்தில் பேனிக்ஸ் என்னும் துறைமுகத்தில் தங்கும்படி அநேகர் ஆலோசனை சொல்லுகிறார்கள். அவர்களுடைய ஆலோசனையின் பிரகாரமாக, கப்பல் நல்ல துறைமுகத்திலிருந்து புறப்பட்டுப்போகிறது.

அதிகத் தூரம் போகவேண்டுமென்பது இவர்களுடைய நோக்கமல்ல. நல்ல துறைமுகம் கிரேத்தா தீவிலுள்ளது. இப்போது பேனிக்ஸ் என்னும் துறைமுகத்திற்கு பிரயாணம் பண்ணுகிறார்கள். இதுவும் கிரேத்தா தீவில்தான் இருக்கிறது. இவை இரண்டும் ஒரே தீவிலுள்ள வெவ்வேறு துறைமுகங்கள். பேனிக்ஸ் துறைமுகம் மழைகாலத்தில் தங்குவதற்கு வசதியாயிருக்கிறது. கிரேத்தா தீவில் இந்தத் துறைமுகம் தென்மேற்கேயும் வடமேற்கேயும் நோக்கியிருக்கிறது. கிழக்கு காற்று எவ்வளவு வேகமாக அடித்தாலும், பேனிக்ஸ் துறைமுகத்தின் அமைப்பு இயற்கையிலேயே மிகவும் பாதுகாப்பாக இருக்கிறது. இது இயற்கையில் உண்டாயிருக்கிற பாதுகாப்பு.

கப்பல் பிரயாணம் செய்வதற்கு கடலும் தேவை. கடலில் தண்ணீரும் தேவை. அதே வேளையில் காற்றடித்தால் ஒதுங்குவதற்கு பாதுகாப்பான துறைமுகங்களும் தேவை. இவர்களுக்கு பேனிக்ஸ் துறைமுகத்தின் இயற்கை அமைப்பு தெரிந்திருக்கிறது. ஆகையினால் மழைக்காலத்தில் பேனிக்ஸ் துறைமுகத்தில் தங்கும்படி, மிகுந்த எதிர்பார்ப்போடு நல்ல துறைமுகத்திலிருந்து பிரயாணம் பண்ணுகிறார்கள்.

தென்றல்

தென்றல் மெதுவாயடித்தபடியால், தாங்கள் கோரினது கைகூடி வந்ததென்று எண்ணி, அவ்விடம் விட்டுப் பெயர்ந்து கிரேத்தாதீவுக்கு அருகாக ஓடினார்கள் (அப் 27:13).

நல்ல துறைமுகத்திலிருந்து பிரயாணம் ஆரம்பித்த போது தென்றல் மெதுவாய் அடித்தது. இதனால் இவர்களுக்கு பெரிய நம்பிக்கை உண்டாயிற்று. தாங்கள் கோரினது கைகூடிவந்ததுதென்று எண்ணுகிறார்கள். பேனிக்ஸ் பட்டணத்திற்கு எவ்வித சிரமமுமின்றி, எளிதாய்ப் போய் சேர்ந்துவிடாலாம் என்று நம்புகிறார்கள். இந்த நம்பிக்கையில் அவர்களுடைய கப்பல் கிரேத்தா தீவுக்கு அருகாக பயணம் செய்கிறது. கடலில் பிரயாணம் செய்கிறவர்களுக்கு, எப்பொழுது கடுங்காற்று வீசும் என்று தெரியாது. ஆபத்து எப்போது வரும் என்றும் அவர்கள் அறியார்கள். கடலில் கப்பல் பிரயாணம் செய்கிறவர்களுக்கு மெய்யான பாதுகாப்பு இல்லை. கர்த்தர் தாமே நம்முடைய எல்லா பிரயாணங்களிலும் பாதுகாப்பாக இருக்கிறவர்.

கடுங்காற்று

கொஞ்ச நேரத்துக்குள்ளே யூரோக்கிலிதோன் என்னுங் கடுங்காற்று அதில் மோதிற்று. கப்பல் அதில் அகப்பட்டுக்கொண்டு, காற்றுக்கு எதிர்த்துப் போகக்கூடாதபடியினால் காற்றின் போக்கிலே கொண்டு போகப்பட்டோம் (அப் 27:14,15).

கப்பல் பிரயாணத்தின் ஆரம்பத்தில் தென்றல் மெதுவாய் அடித்தது. கொஞ்ச நேரத்திற்குள்ளே கடுங்காற்று கப்பலின் மேல் மோதிற்று. இந்தக் காற்றிற்கு யூரோக்கிலிதோன் என்று பெயர். தென்றல் காற்று மெதுவாய் அடித்தபடியினால், தங்கள் பிரயாணம் முழுவதிலும் தென்றல் காற்று அடிக்கும் என்று எல்லோரும் எதிர்பார்த்தார்கள். காற்றின்மீது நம்பிக்கை வைத்தார்கள். காற்றை நம்பி கடலில் பிரயாணம் செய்கிறார்கள்.

பவுல் தேவனுடைய மனுஷன். இனி கப்பல் யாத்திரை செய்கிறது மோசத்திற்கு ஏதுவாயிருக்கும் என்று பவுல் சொன்னான். இந்த யாத்திரையினாலே சரக்குக்கும், கப்பலுக்கும் மாத்திரமல்ல, மனுஷருடைய ஜீவனுக்கும் வருத்தமும் மிகுந்த சேதமும் உண்டாயிருக்கும் என்று சொல்லி அவர்களை எச்சரித்தான். ஆரம்பத்தில் பவுல் எச்சரித்தப் பிரகாரம் ஒன்றும் நடைபெறவில்லை. தென்றல் காற்று மெதுவாய் அடித்தது. அப்போது பவுலின் எச்சரிப்பின் வார்த்தைகள் அவர்களுக்கு ஏளனமாய்த் தோன்றிற்று.

தென்றல் காற்று நீடிக்கவில்லை. கொஞ்ச நேரத்திற்குள்ளே கடுங்காற்று கப்பலின்மேல் மோதிற்று. யூரோக்கிலிதோன் காற்று வடகிழக்கு திசையில் வேகமாக அடிக்கிற கடுங்காற்று. இது கப்பலை சுழற்றிவிடும். கடலில் அமிழ்த்துவிடும். மிகவும் ஆபத்தானது. இந்தப் பெருங்காற்றோடு மழையும் சேர்ந்துகொள்ளும் (அப் 26:18). விளையாட்டு மைதானத்தில் அடிக்கப்படுகிற பந்தைப்போல, கப்பல் அங்கும் இங்கும் ஓடுகிறது. கப்பலின் கட்டுப்பாடு மாலுமிகளின் கையில் இல்லை. காற்று கப்பலை ஆளுகை செய்கிறது. காற்றுக்கு எதிர்த்துப்போக கப்பலால் கூடாதிருக்கிறது. கப்பல் காற்றின் போக்கிலே கொண்டுபோகப்படுகிறது.

கடுங்காற்று வீசும்போது மாலுமிகள் பாய்மரங்களை சுருட்டி வைத்துவிடுவது வழக்கம். தென்றல் காற்று அடித்தால் பாய்மரம் உதவியாயிருக்கும். புயல்காற்று அடிக்கும்போது பாய்மரத்தினால் ஒரு உதவியும் இருக்காது. மாலுமிகளாலும் காற்றிற்கு எதிர்த்துப் போராட முடியவில்லை. ஆகையினால் கப்பல் கடுங்காற்றின் போக்கிலே கொண்டுபோகப்படுகிறது.

கப்பல் அவர்கள் எதிர்பார்த்த பிரகாரம் பேனிக்ஸ் என்னும் துறைமுகத்திற்கு அருகில்தான் இருக்கிறது. அது அமைதியான துறைமுகம். மழைக்காலத்தில் தங்குவதற்கு வசதியாக இருக்கும். அங்குபோய் சேர்ந்துவிட்டால் தங்களுடைய பிரயாணம் பாதுகாப்பாகவும், சுகமாகவும் இருக்குமென்று மாலுமிகள் தீர்மானம் செய்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் எதிர்பாராத வேளையில், அவர்கள் எதிர்பாராத யூரோக்கிலிதோன் என்னும் பெருங்காற்று கப்பலின்மேல் மோதுகிறது. அவர்கள் எதிர்பாராத ஆபத்து அவர்கள்மீது வந்து விழுகிறது.

கப்பல் காற்றின் போக்கிலே கொண்டுபோகப்படுகிறது. திசைகாட்டும் கருவி வேலைசெய்யவில்லை. அது வேலைசெய்தாலும் தாங்கள் விரும்புகிற திசையில் மாலுமிகளால் கப்பலை செலுத்த முடியவில்லை. அவர்களை வழிநடத்துவதற்கு இரவில் வானத்தில் நட்சத்திரங்களோ, பகலில் சூரியனும் அவர்களுக்குத் தெரியவில்லை. கடுங்காற்றும் மழையுமாக இருப்பதினால், எல்லாம் இருட்டாக இருக்கிறது. அவர்கள் போகவேண்டிய இடத்திற்கு அவர்களால் போகமுடியவில்லை.

சில சமயங்களில் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியமும் இப்படித்தான் கடுங்காற்றில் அகப்பட்ட கப்பல் போல் பல கஷ்டங்களை அனுபவிக்கிறது. நாம் ஜீவிக்கவேண்டிய பிரகாரமாக நம்மால் ஜீவிக்க முடியவில்லை. போகும் பாதையும் தெரிவதில்லை. கப்பல் காற்று அடிக்கிற திசையில் போவதுபோல, நாமும் உலகம் போகிற போக்கில் போய்விடுகிறோம். மழைக்காலத்தில் பெருங்காற்று இந்தக் கப்பல்மீது மோதுகிறது. இது சாதாரண புயல்காற்று அல்ல. கடுங்காற்று என்று எழுதப்பட்டிருக்கிறது. நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் இதுபோன்ற கடுங்காற்று நம்மீது மோதலாம். இப்படிப்பட்ட சோதனையான வேளையிலும், கர்த்தர் நம்மோடு கூடயிருக்கிறார் என்னும் விசுவாசத்தோடு, கர்த்தருடைய சமுகத்தில் அமர்ந்திருக்கவேண்டும்.

மழைக்காலமாக இருப்பதினால் குளிரும் அதிகமாயிருக்கிறது. கடுங்காற்று ஒரே நாளில் வீசி முடிந்துவிடவில்லை. பலநாட்களாக கடுங்காற்று வீசிக் கொண்டேயிருக்கிறது. மாலுமிகளாலும், கப்பலில் பிரயாணம் செய்கிறவர்களாலும் ஒன்றும் செய்யமுடியவில்லை. கப்பல் யூரோக்கிலிதோன் என்கிற கடுங்காற்றில் சிக்கிகொள்கிறது. கடலில் பிரயாணம் செய்கிறவர்கள் இப்படிப்பட்ட ஆபத்துக்களையெல்லாம் சந்திக்க வேண்டியது இருக்கிறது. கடலில் பிரயாணம் செய்கிறவர்களுக்கு கடலிலும் பிரச்சனை இருக்கிறது. அதேவேளையில் அவர்கள் கரைவந்த சேர்ந்தபின்பு, அவர்களுடைய ஜீவியத்திலும் பிரச்சனை இருக்கிறது.

கடலில் பிரச்சனையிருந்தாலும், கடலில் பிரயாணம் செய்கிறவர்கள் அந்தப் பிரச்சனைகளை சந்திக்க ஆயத்தத்தோடு இருக்கிறார்கள். கஷ்டம் வரும் என்று தெரிந்திருந்தாலும் அந்தக் கஷ்டத்தின் வழியாக முன்னேறிச் செல்ல ஆயத்தமாயிருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவின் சீஷர்களில் அநேகர் மீன்பிடிக்கிற தொழிலைச் செய்கிறவர்கள். இவர்களெல்லோருமே கடல் பிரயாணத்தின் கஷ்டத்தை அனுபவித்திருக்கிறார்கள். வாழ்க்கையில் கஷ்டம் என்றால் என்ன என்பது இவர்களுக்கு நன்றாகவே தெரியும். ஒருவேளை இயேசுகிறிஸ்து இதையெல்லாம் அறிந்தவராக, மீன்பிடிக்கிற தொழிலை செய்கிறவர்களில் அநேகரை தம்முடைய சீஷராகத் தேர்ந்தெடுத்திருக்கிறார். இவர்கள் வாழ்க்கையில் கஷ்டத்தைச் சந்திப்பதற்கு ஏற்கெனவே பயிற்சி பெற்றவர்கள்.

கில்வுதா

அப்படிக் கில்வுதா என்னப்பட்ட ஒரு சின்ன தீவின் ஒதுக்கிலே ஓடுகையில் வெகு வருத்தத்தோடே படவை வசப்படுத்தினோம் (அப் 27:16).

கப்பல் காற்றுக்கு எதிர்த்து போகக்கூடாதிருந்தது. கப்பல் காற்றின் போக்கிலே கொண்டு போகப்படுகிறது. மாலுமிகளால் தங்கள் சரீர பெலனை பயன்படுத்தி காற்றை எதிர்க்க முடியவில்லை. சரீர முயற்சியினால் பிரயோஜனமுண்டாக வில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் கர்த்தர் நமக்குக் கொடுக்கிற ஞானமும் அறிவும் உதவிபுரியும்.

கப்பல்மீது கடுங்காற்று மோதியவுடன், கப்பல் அதில் அகப்பட்டுக்கொள்கிறது. காற்றுக்கு எதிர்த்துப் போகமுடியவில்லை ஆனாலும் கடுங்காற்றை சமாளிக்க முயற்சிபண்ணுகிறார்கள். அவர்கள் சிக்கியிருக்கிற ஆபத்திலிருந்து எப்படியாவது தப்பித்துக்கொள்ள வகைதேடுகிறார்கள். காற்றின் போக்கிலே கொண்டுபோகப்படுகிறார்கள். அப்போது கப்பல் கிலாவுதா என்னப்பட்ட சின்னத்தீவின் ஒதுக்கிலே ஓடுகிறது. மிகவும் வருத்தத்தோடே படவை வசப்படுகிறார்கள். பெருங்காற்றினால் படவு உடைந்துபோகாதபடி, அதை வசப்படுத்த முயற்சிபண்ணுகிறார்கள். தீவை விட்டு விலகிப்போய்விடாமல், தீவின் ஒதுக்கிலே கப்பலைச் செலுத்துகிறார்கள்.

கப்பலை பாதுகாக்க முடியுமா என்பதில் அவர்களுக்குச் சந்தேகமுண்டாயிற்று. கப்பலை காப்பாற்ற முடியாவிட்டாலும், படவையாவது காப்பாற்றவேண்டுமென்று நினைத்து, வெகுவருத்தத்தோடே படவை வசப்படுத்துகிறார்கள். கப்பல் உடைந்தாலும், படவு தங்களுக்கு உதவியாயிருக்கும் என்று எதிர்பார்க்கிறார்கள். இந்தப் படவை வசப்படுத்துவதற்குக் கூட அவர்கள் அதிகமாய் பிரயாசப்படவேண்டியதாயிற்று.

நல்ல துறைமுகத்திலிருந்து பிரயாணத்தை ஆரம்பித்தபோது, தென்றல் மெதுவாய் அடித்தது. ஆகையினால் தாங்கள் கோரினது கைகூடிவந்தது என்று எண்ணினார்கள். பவுலின் வார்த்தையை அலட்சியம்பண்ணினார்கள். இப்போதோ பெருங்காற்று கப்பலின்மீது மோதியவுடன், கப்பலிலுள்ள படவைக்கூட, வெகு வருத்தத்தோடே வசப்படுத்த வேண்டியதாயிற்று.

கடலில் எறிந்தார்கள்

அதை அவர்கள் தூக்கியெடுத்த பின்பு, பல உபாயங்கள் செய்து, கப்பலைச் சுற்றிக் கட்டி, சொரிமணலிலே விழுவோமென்று பயந்து, பாய்களை இறக்கி, இவ்விதமாய்க் கொண்டுபோகப்பட்டார்கள். மேலும் பெருங்காற்றுமழையில் நாங்கள் மிகவும் அடிபட்டபடியினால், மறுநாளில் சில சரக்குகளைக் கடலில் எறிந்தார்கள். மூன்றாம் நாளிலே கப்பலின் தளவாடங்களை எங்கள் கைகளினாலே எடுத்து எறிந்தோம் (அப் 27:17-18).

கப்பல் கடுங்காற்றில் அகப்பட்டுக்கொண்டபோது, அந்த வேளையில் என்ன காரியத்தைச்செய்தால் அது அவர்களுக்கு உபயோகமாக இருக்குமோ, அதை அவர்கள் சிந்தித்து செயல்படுத்துகிறார்கள். பல உபாயங்களைச் செய்து படவுகளை வசப்படுத்தி, அவற்றைக் கப்பலைச் சுத்தி கட்டுக்கிறார்கள். பெருங்காற்றினால் படவுகள் சேதமடையாதபடி அவற்றைப் பாதுகாக்கிறார்கள். கப்பல் சொரிமணலிலே விழுந்துவிடும் என்று பயந்து, பாய்களை இறக்குகிறார்கள்.

பெருங்காற்று மழையில் கப்பல் மிகவும் அடிபடுகிறது. மறுநாளிலே கப்பலிலுள்ள சில சரக்குகளை கடலில் எறிகிறார்கள். இந்த உலகத்தின் சம்பத்து நமக்குத் தேவை தான். நம்முடைய ஜீவன் நமக்கு அதைவிட முக்கியமானது. தங்களுக்குத் தேவை என்றுதான் சரக்குகளை கப்பலில் ஏற்றி வந்திருக்கிறார்கள். ஆனால் இப்போதோ அந்தச் சரக்குகளில் சிலவற்றை கடலில் எறிந்துவிடுகிறார்கள்.

இந்த உலகத்தில் ஐசுவரியமும், சம்பத்தும் நமக்குத் தேவைதான். ஆனால் இது நமக்கு பாரமாகிவிடக்கூடாது. கர்த்தருக்கு முன்பாக நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தை தொடர்ந்து ஜீவிக்க முடியாதபடி, உலகத்தின் ஐசுவரியம் நமக்கு தாங்கக்கூடாத பாரமாகயிருக்கக்கூடாது. ஐசுவரியத்தில் மூழ்கி நித்திய ஜீவனை இழந்துபோய்விடக்கூடாது.

கப்பலிலிருக்கிறவர்கள் தங்களையும், தாங்கள் கொண்டு செல்லுகிற சரக்குகளையும் நிதானித்துப் பார்க்கிறார்கள். சரக்குகளைவிட தங்களுடைய ஜீவன் அவர்களுக்கு முக்கியமானதாகத் தெரிகிறது. ஆகையினால் தங்கள் ஜீவனைக் காப்பாற்ற, தங்கள் சரக்குகளில் சிலவற்றை கடலில் தூக்கியெறிந்துவிடுகிறார்கள்.

இப்பிரபஞ்சத்தின் பிள்ளைகள் பண ஆசை பிடித்தவர்களாகயிருக்கிறார்கள். உலகப்பொருட்களின் மீது ஆசைப்படுகிறார்கள். தங்கள் ஐசுவரியம் தங்கள் ஜீவனைப் பாதுகாக்கும் என்று நினைத்து அதன்மீது நம்பிக்கை வைக்கிறார்கள். தங்கள் ஐசுவரியத்தைக்கொடுத்து யாருக்கும் உதவி செய்யாமல், தாங்களே அவற்றை அனுபவிக்கவேண்டும் என்று நினைத்து, அவற்றை பத்திரமாகப் பாதுகாக்கிறார்கள். ஆனால் இந்த ஐசுவரியமே சில சமயங்களில் அவர்களுக்கு கேடாக முடிந்துவிடுகிறது. ஐசுவரியத்தை பாதுகாக்கும் முயற்சியில் தங்கள் ஜீவனை இழந்துபோகிறார்கள்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் கர்த்தருக்காகவே ஜீவிக்கவேண்டும். அவருக்காகவே பாடுகளை அனுபவிக்கவேண்டும். உலகத்தின் ஐசுவரியங்களை சம்பாதிக்க வேண்டுமென்று அதிகமாய்ப் பாடுபடக்கூடாது. ஐசுவரியம் நம்மைப் பாதுகாக்காது. அது நம்மோடு நிலைத்து நிற்காது. கர்த்தருடைய அன்பு நமக்குத் தேவையென்றும், அது நமக்குப் போதுமென்றும் நாம் எண்ணவேண்டும்.

கப்பலில் பிரயாணம் பண்ணுகிறவர்கள் தங்களைப் பாதுகாப்பதற்காக பல உபாயங்களைச் செய்கிறார்கள். தங்களுடைய சரக்குகளைவிட தங்கள் ஜீவன் முக்கியமானது என்று தீர்மானிக்கிறார்கள். சரக்குகளில் சிலவற்றை கடலில் எறிகிறார்கள். விசுவாசிகளாகிய நாம் நம்முடைய விசுவாசத்தின் கப்பலை உடைத்துப்போடக்கூடாது. ஆரம்பத்தில் சில சரக்குகளை மாத்திரமே கடலில் எறிந்தவர்கள், மூன்றாம் நாளிலே கப்பலின் தளவாடங்களையும் தங்கள் கைகளினால் எடுத்து எறிகிறார்கள்.

நம்பிக்கை அற்றுப்போயிற்று

அநேகநாளாய்ச் சூரியனாவது நட்சத்திரங்களாவது காணப்படாமல், மிகுந்த பெருங்காற்றுமழையும் அடித்துக் கொண்டிருந்தபடியினால், இனி தப்பிப் பிழைப்போமென்னும் நம்பிக்கை முழுமையும் அற்றுப்போயிற்று (அப் 27:20).

இனி தப்பிப்பிழைப்போம் என்னும் நம்பிக்கை அவர்களுக்கு முழுவதும் அற்றுப்போயிற்று. மிகுந்த பெருங்காற்றும் மழையும் அடித்துக்கொண்டிருக்கிறது. வானம் மந்தாரமாகயிருக்கிறது. அநேகநாளாய் சூரியனாவது நட்சத்திரங்களாவது அவர்களுக்குக் காணப்படவில்லை. பல உபாயங்களைச் செய்து உயிர்தப்பிக்க நினைத்தார்கள். ஆனால் ஒன்றும் பயன்தரவில்லை. அவர்கள் புசிப்பதற்கு கோதுமை அவர்களோடிருக்கிறது (அப் 27:38). ஆனால் புசிப்பதற்கும் குடிப்பதற்கும் அவர்கள் மனமில்லாதவர்களாயிருக்கிறார்கள். மரண பயம் அவர்களை ஆளுகை செய்கிறது. மரித்துவிடுவோமோ என்னும் பயத்தில், ஜீவனுக்கு ஆதாரமாகயிருக்கிற போஜனத்தைப் புசிப்பதற்குக்கூட மனதற்றவர்களாகயிருக்கிறார்கள்.

தேவனுடைய தூதனானவர் அப் 27 : 21-26

அப் 27:21. அநேகநாள் அவர்கள் போஜனம்பண்ணாமல் இருந்தபோது, பவுல் அவர்கள் நடுவிலே நின்று: மனுஷரே, இந்த வருத்தமும் சேதமும் வராதபடிக்கு என் சொல்லைக்கேட்டு, கிரேத்தாதீவை விட்டுப் புறப்படாமல் இருக்கவேண்டியதாயிருந்தது.

அப் 27:22. ஆகிலும், திடமனதாயிருங்களென்று இப்பொழுது உங்களுக்குத் தைரியஞ்சொல்லுகிறேன். கப்பற் சேதமேயல்லாமல் உங்களில் ஒருவனுக்கும் பிராணச்சேதம் வராது.

அப் 27:23. ஏனென்றால், என்னை ஆட்கொண்டவரும் நான் சேவிக்கிறவருமான தேவனுடைய தூதனானவன் இந்த இராத்திரியிலே என்னிடத்தில் வந்துநின்று:

அப் 27:24. பவுலே, பயப்படாதே, நீ இராயனுக்கு முன்பாக நிற்கவேண்டும். இதோ, உன்னுடனேகூட யாத்திரைபண்ணுகிற யாவரையும் தேவன் உனக்குத் தயவுபண்ணினார் என்றான்.

அப் 27:25. ஆனபடியினால் மனுஷரே, திடமனதாயிருங்கள். எனக்குச் சொல்லப்பட்ட பிரகாரமாகவே நடக்கும் என்று தேவனிடத்தில் நம்பிக்கையாயிருக்கிறேன்.

அப் 27:26. ஆயினும் நாம் ஒரு தீவிலே விழ வேண்டியதாயிருக்கும் என்றான்.

வருத்தமும் சேதமும் வராதபடிக்கு

அநேகநாள் அவர்கள் போஜனம்பண்ணாமல் இருந்தபோது, பவுல் அவர்கள் நடுவிலே நின்று: மனுஷரே, இந்த வருத்தமும் சேதமும் வராதபடிக்கு என் சொல்லைக்கேட்டு, கிரேத்தாதீவை விட்டுப் புறப்படாமல் இருக்க வேண்டியதாயிருந்தது (அப் 27:21).

மிகுந்த பெருங்காற்றும் மழையும் அடித்துக்கொண்டிருக்கிறது. கப்பல் இதில் சிக்கி தவிக்கிறது. கப்பலில் பிரயாணம்பண்ணுகிறவர்களுக்கு, இனி தப்பிப்பிழைப்போம் என்னும் நம்பிக்கை முழுமையும் அற்றுப்போயிற்று. ஜீவன் பிழைத்திருக்கிறார்கள். வேறு ஒரு சகாயமும் கிடைக்கவில்லை. கப்பலில் மொத்தம் இருநூற்று எழுபத்தாறுபேர் இருக்கிறார்கள் (அப் 27:37). இவர்களில் பவுலும் ஒருவன். கர்த்தருடைய பார்வையில் பவுல் விசேஷித்தவன். ஆனாலும் இவனும் புயல்காற்றில் சிக்கி, மற்றவர்களைப்போலவே தவிக்கிறான்.

யோனா தர்சீசுக்குப்போகிற கப்பலில் பிரயாணம் செய்தபோது, பெருங்காற்றும் மழையும் உண்டாயிற்று. இயற்கையின் அந்தச் சீற்றத்திற்கு யோனாவே காரணம். இப்போது பவுல் பிரயாணம் செய்கிற கப்பலும் பெருங்காற்றிலும் மழையிலும் சிக்கியிருக்கிறது. இயற்கையின் இந்தச் சீற்றத்திற்கு பவுல் காரணமல்ல. புயலுக்கு நடுவிலும் பவுல் அவர்களுக்கு ஆறுதலான வார்த்தைகளை அறிவிக்கிறான்.

கப்பலில் பிரயாணம் செய்கிற ஒருவருக்கும் பிரணாச்சேதம் வராது என்று பவுல் தேவனுடைய வார்த்தையைச் சொல்லுகிறான். முதலாவதாக அவர்களுடைய சந்தேகத்திலிருந்தும், பயத்திலிருந்தும் அவர்களை விடுவிக்கிறான். அவர்களுக்கு மரணம் நேரிடாது என்ற நிச்சயமான செய்தியைச் சொல்லுகிறான். அவர்களோ மரணபயத்தினால் நிறைந்து, அநேகநாள் போஜனம் பண்ணாமலிருக்கிறார்கள். இன்னும் சிலநாள் இப்படியே போஜனம் பண்ணாமலேயே இருந்துவிட்டால், அவர்களெல்லோரும் பட்டினியினால் செத்துப்போவார்கள். அவர்கள் மிகுந்த துன்பத்திலும் துயரத்திலும் இருந்தபோது, பவுல் அவர்கள் நடுவே நின்று பேசுகிறான்.

கப்பல் கடுங்காற்றில் அகப்பட்டுக்கொண்டபோது, படவையும் கப்பலையும் பாதுகாப்பதற்கு கப்பலிலுள்ளவர்கள் பல உபாயங்களைச் செய்தார்கள். அதிகமாய் முயற்சிபண்ணினார்கள். அப்பொழுது பவுலும் அவர்களில் ஒருவனாகயிருந்து, அவர்களுடைய உபாயங்களில் பங்குபெற்றான். கப்பலிலுள்ளவர்கள் சில சரக்குகளை கடலில் எறிந்தபோது, பவுலும் அவர்களுக்கு உதவியாக, சில சரக்குகளை கடலில் தூக்கியெறிந்தான். ஆனால் இப்போதோ, தன்னோடு பிரயாணம் பண்ணுகிறவர்களுக்கு ஆறுதல் சொல்லுகிற ஊழியத்தையும், தேற்றுகிற ஊழியத்தையும் செய்கிறான். பவுல் காவலில் வைக்கப்பட்டிருக்கிறவன்தான். ஆனாலும் அவன் அவர்களுக்கு விடுதலையின் வார்த்தைகளைப் பேசுகிறான்.

நல்ல துறைமுகம் என்னப்பட்ட ஓரிடத்திற்கு வந்தபோது, பவுல் அவர்களை நோக்கி "மனுஷரே, இனி கப்பல் யாத்திரை செய்கிறது மோசத்திற்கு ஏதுவாயிருக்கும், இந்த யாத்திரையினாலே சரக்குக்கும் கப்பலுக்கும் மாத்திரமல்ல, நம்முடைய ஜீவனுக்கும் வருத்தமும், மிகுந்த சேதமும் உண்டாயிருக்கும்" என்று எச்சரித்துச் சொன்னான். தான் ஏற்கெனவே அவர்களிடத்தில் எச்சரிப்பாகச் சொன்ன வார்த்தைகளை, இப்போது அவர்களுக்கு நினைவுபடுத்துகிறான். "மனுஷரே, இந்த வருத்தமும், சேதமும் வராதபடிக்கு, என் சொல்லைக்கேட்டு, கிரேத்தா தீவைவிட்டுப் புறப்பட்டுப் போகாமலிருக்க வேண்டியதாயிருந்தது" என்று அவர்களுக்கு பழைய சம்பவத்தை நினைவுபடுத்துகிறான்.

அவர்கள் பவுலினுடைய எச்சரிப்பின் வார்த்தைகளுக்குச் செவி கொடுக்கவில்லை. இதற்காகப் பவுல் அவர்கள்மீது கோபப்படவில்லை. அவர்கள் மெய்யாகவே ஆபத்தில் சிக்கிக்கொண்ட போது, பவுல் அவர்களுக்கு ஆறுதலான வார்த்தைகளைப் பேசுகிறான். தேவனுடைய கிருபையையும் இரக்கத்தையும், மனஉருக்கத்தையும் அவர்களுக்கு தெளிவாகச் சொல்லுகிறான். துயரப்படுகிறவர்களுக்கு கர்த்தரே துணையாக இருக்கிறவர். சில சமயங்களில் நம்முடைய சொந்த தப்பிதங்களினால் நாம் கஷ்டப்பட்டாலும், அப்போதும் கர்த்தரே நமக்கு ஆறுதலாகயிருக்கிறவர்.

பவுல் கப்பலில் சிக்கி தவிக்கிறவர்களுக்கு ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லுவதற்கு முன்பாக, தன்னுடைய வார்த்தைகளுக்கு அவர்கள் செவிகொடாமல் போன பாவத்தை, அவர்களுக்கு நினைவுபடுத்தி உணர்த்துகிறான். கிரேத்தா தீவைவிட்டுப் புறப்பட்டுப்போவதற்கு முன்பாக அவர்கள் பாதுகாப்பாக இருந்தார்கள். இனிமேல் தங்களுக்கு ஆபத்து வரும் என்பதை அறியாதவர்களாயிருந்தார்கள்.

கர்த்தருடைய பிள்ளைகளில் சிலர் தாங்கள் சந்தோஷமாகவும், சமாதானமாகவும், ஆசீர்வாதமாகவும் இருக்கும்போது, தங்களுக்கு இனிமேல் பிரச்சனையே வராது என்று மெத்தனமாய் இருக்கிறார்கள். பாடுகளையும் வேதனைகளையும் குறித்து யாராவது இவர்களுக்கு எச்சரித்துச் சொன்னாலும், எச்சரிப்பின் சத்தத்திற்குச் செவிகொடுக்கமாட்டார்கள். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் மெத்தனமாகயிருக்கக்கூடாது. நமக்கு ஆலோசனைகள் சொல்லப்படும்போது, நாம் அவற்றை மிகுந்த கவனமாய் கவனித்துக் கேட்கவேண்டும். இப்போது பிரச்சனையில்லையென்றாலும், இனிமேல் பிரச்சனை வந்தால், அந்தப் பிரச்சனையை எப்படி சந்திப்பது என்பதற்கான ஆலோசனைகளை ஏற்றவேளையில் பெற்றுக்கொள்ள வேண்டும். ஆலோசனையில்லாமல், முன்னெச்சரிப்பு இல்லாமல் அவதிப்படக்கூடாது.

திடமனதாயிருங்கள்

ஆகிலும், திடமனதாயிருங்களென்று இப்பொழுது உங்களுக்குத் தைரியஞ்சொல்லுகிறேன். கப்பற் சேதமேயல்லாமல் உங்களில் ஒருவனுக்கும் பிராணச்சேதம் வராது (அப் 27:22).

தன்னோடு பிரயாணம் பண்ணுகிறவர்களுக்கு பவுல் ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லுகிறான். திடமனதாகயிருக்குமாறு அவர்களுக்கு ஆலோசனைசொல்லுகிறான். அவர்கள் ஒருவேளை தங்கள் கப்பலை இழந்துபோகலாம். ஆனால் அவர்கள் தங்கள் ஜீவனை இழந்துபோகமாட்டார்கள் என்று அவர்களை தைரியப்படுத்துகிறான். "கப்பற்சேதமேயல்லாமல் உங்களில் ஒருவருக்கும் பிராணச்சேதம் வராது" என்று அவர்களிடத்தில் மிகுந்த ஆறுதலாகவும், உறுதியாகவும் சொல்லுகிறான்.

நாம் பாவிகளுக்கு புத்திமதி சொல்லும்போது, இப்படிப்பட்ட வார்த்தைகளைத்தான் சொல்லவேண்டும். "எங்களுடைய வார்த்தைகளுக்குச் செவிகொடுங்கள். பாவத்தைவிட்டு விலகி, கர்த்தரிடத்தில் வாருங்கள், கர்த்தரிடத்தில் உங்கள் ஆத்துமாவுக்கு இரட்சிப்பும் பாதுகாப்பும் உண்டு" என்று அவர்களை எச்சரிக்கவேண்டும். நம்முடைய எச்சரிப்பின் வார்த்தைகளை அவர்கள் கேட்காமல், பாவத்தில் விழுந்து, கஷ்டங்களை அனுபவித்தால், அவர்களுக்கு நாம் ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லி தைரியப்படுத்த வேண்டும். "திடமனதாயிருங்கள், கர்த்தர் கிருபையுள்ளவர், அவர் உங்களை கைவிடமாட்டார்" என்று சொல்லி அவர்களுக்கு தைரியம் சொல்லவேண்டும்.

பவுல் தன்னோடு பிரயாணம் பண்ணுகிறவர்களைப் பார்க்கிறான். அவர்களெல்லோரும் மரணபயத்தில் இருக்கிறார்கள். அநேகநாள் போஜனம் பண்ணாமலிருக்கிறார்கள். கப்பலில் கோதுமை இருக்கிறது. ஆனால் அவற்றைப் புசிக்கும் தைரியமும் மனமும் இவர்களிடத்தில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் பவுல் அவர்களுக்கு ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லி, தைரியப்படுத்துகிறான். அவர்களுடைய ஜீவனுக்கு ஒரு சேதமும் வராது என்று அவர்களுக்கு உறுதிசொல்லுகிறான். கப்பற்சேதமுண்டாகும். இந்தச் சேதத்தை அவர்கள் எதிர்பார்க்கவேண்டும். கப்பல் உடைந்துபோகும். ஆனாலும் அவர்களில் ஒருவனுக்கும் பிராணச்சேதம் வராது. உயிருக்கு எந்த மோசமும் வராது. இவர்களெல்லோரும் மரண பயத்திலிருக்கிறார்கள். இவர்களில் யாரும் மரித்துப்போகமாட்டார்கள் என்பது இவர்களெல்லோருக்கும் நற்செய்தியாக இருக்கிறது.

நான் சேவிக்கிறவர்

ஏனென்றால், என்னை ஆட்கொண்டவரும் நான் சேவிக்கிறவருமான தேவனுடைய தூதனானவன் இந்த இராத்திரியிலே என்னிடத்தில் வந்துநின்று: (அப் 27:23)

தன்னோடு பிரயாணம் பண்ணுகிறவர்களுக்கு பவுல் தன்னுடைய சுயயோசனையை சொல்லி அவர்களுக்கு தைரியம் சொல்லவில்லை. "கப்பற்சேதமேயல்லாமல், உங்களில் ஒருவனுக்கும் பிராணச்சேதம் வராது" என்று பவுல் சொன்னாலும், இந்த வார்த்தைகள் அவனுடைய சுயவார்த்தைகளல்ல. தேவனே இந்த வார்த்தைகளை பவுலுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். தேவனுடைய தூதனானவர் அந்த இராத்திரியிலே பவுலினிடத்தில் வந்து, இந்த வார்த்தைகளை அவனுக்குச் சொல்லியிருக்கிறார். பவுலினிமித்தமாக, அவனோடுகூட கப்பலில் பிரயாணம்பண்ணுகிறவர்கள் எல்லோரும் ஜீவன் தப்புவிக்கப்படுகிறார்கள். இது தேவனுடைய அநுக்கிரகம். கர்த்தர் பவுலுக்கு இந்தச் சிலாக்கியத்தைக் கொடுக்கிறார். பவுலினிமித்தமாக மற்றவர்களும் உயிர் தப்பி பிழைக்கிறார்கள்.

பவுல் கர்த்தரைப்பற்றிச் சொல்லும்போது, மிகவும் பயபக்தியோடு பேசுகிறான். தனக்கும் தேவனுக்கும் இடையிலுள்ள உறவை தன்னோடு பிரயாணம் செய்கிறவர்களுக்கு எடுத்துச் சொல்லுகிறான். தேவன் தன்னை ஆட்கொண்டவர் என்றும், தான் அவரை சேவிப்பதாகவும் பவுல் அவர்களிடத்தில் சொல்லுகிறான். தேவனே பவுலை ஆட்கொண்டவர். ஆகையினால் தன்னுடைய துன்பவேளையில், பவுல் தன்னை ஆட்கொண்ட தேவனை நோக்கிப்பார்க்கிறான். தேவனுக்குத் தன்மீது சர்வ ஆளுகையின் உரிமையிருக்கிறது. பவுல் தனக்குரியவனல்ல. அவன் தேவனுக்குரியவன். ஏனெனில் தேவன் பவுலை ஆட்கொண்டிருக்கிறார்.

பவுலைப்போலவே கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமும் நமக்குரியவர்களல்ல. நாம் தேவனுக்குரியவர்கள். அவரே நம்மை ஆளுகை செய்கிறவர். அவரே நம்முடைய ஆண்டவர். அவர் நமக்கு பிரமாணங்களைக் கொடுக்கிறார். நாம் இப்படித்தான் ஜீவிக்கவேண்டும் என்று நமக்கு கட்டளையிடும் உரிமை அவருக்கு இருக்கிறது. கர்த்தர் நம்மை ஆட்கொண்டிருப்பதினால் நாம் அவரை ஆராதிக்கவேண்டும். பவுல் ஆண்டவரைப்பற்றி சொல்லும்போது "என்னை ஆட்கொண்டவரும், நான் சேவிக்கிறவருமான தேவன்" என்று குறிப்பிடுகிறான்.

பவுலோடு கப்பலில் பிரயாணம் செய்கிறவர்களில் அநேகர், தேவனுக்கு அந்நியராகயிருக்கிறார்கள். அவர்கள் தேவனை சேவிக்கவில்லை. ஏனெனில் தேவன் தங்களை ஆட்கொண்டிருப்பதாக அவர்கள் நம்பவில்லை. இவர்கள் கர்த்தருடைய காணியாட்சிக்குப் புறம்பாயிருக்கிறார்கள். இவர்களிடத்தில், பவுல் தன்னை ஆட்கொண்டிருக்கிற தேவனைப்பற்றி சாட்சியாக அறிவிக்கிறான். தன்னோடு பிரயாணம் பண்ணுகிற அவர்கள் இதுவரையிலும் கர்த்தரைச் சேவிக்கவில்லை. தன்னைப்போலவே அவர்கள் கர்த்தரைச் சேவித்தால், கர்த்தருடைய அநுக்கிரகம் அவர்களுக்கும் கிடைக்கும் என்று பவுல் அவர்களுக்கு உறுதியாகச் சொல்லுகிறான்.

கர்த்தர் தனக்குக் கொடுத்த வார்த்தைகளைப்பற்றி பவுல் தன்னோடு பிரயாணம் பண்ணுகிறவர்களுக்கு எடுத்துச்சொல்லும்போது "தேவனுடைய தூதனானவர் இந்த இராத்திரியிலே என்னிடத்தில் வந்து நின்றார்" என்று சொல்லுகிறான். தாவீது சங்கீதத்தில் கர்த்தரைப்பற்றி இவ்வாறு ஸ்தோத்திரித்துப்பாடுகிறான். "பூமியின் கடையாந்தரங்களிலும் தூரமான சமுத்திரங்களிலுமுள்ளவர்கள் எல்லாரும் நம்பும் நம்பிக்கையாயிருக்கிற எங்கள் இரட்சிப்பின் தேவனே, நீர் பயங்கரமான காரியங்களைச் செய்கிறதினால் எங்களுக்கு நீதியுள்ள உத்தரவு அருளுகிறீர்" (சங் 65:5).

பவுல் தூரமான சமுத்திரத்தில் இருக்கிறான். தேவனோ அங்கேயும் அவனோடுகூடயிருக்கிறார். பவுல் சமுத்திரத்திலிருந்தாலும், அவன் தேவனோடு ஐக்கியமாகயிருக்கிறான். அவர்களுக்கு இடையில் இருக்கும் ஐக்கியத்திற்கு சமுத்திரம் தடையாகயில்லை. கப்பல் பெருங்காற்றில் சிக்கி தவித்துக்கொண்டிருக்கிறபோது, பவுலோ தன்னை ஆட்கொண்டவரும், அவன் சேவிக்கிறவருமான தேவனை நோக்கிப் பார்க்கிறான்.

தேவன் தம்முடைய தூதனை, அந்த இராத்திரியிலே பவுலினிடத்தில் அனுப்புகிறார். கப்பல் புயல்காற்றில் சிக்கி தவிக்கிறது. பெரிய அலைகள் கப்பலின்மீது மோதுகிறது. கப்பலினால் கடலில் பிரயாணம் செய்ய முடியவில்லை. இந்தச் சூழ்நிலையில் தேவனுடைய தூதனானவர் எந்தவித பிரச்சனையுமில்லாமல், தடையுமில்லாமல், கடலில் தத்தளித்துக் கொண்டிருக்கிற கப்பலுக்கு வருகிறார்.

கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்கு தம்முடைய கிருபைகளையும், சிலாக்கியங்களையும், அநுக்கிரகங்களையும் காண்பிக்கிறார். தம்முடைய பிள்ளைகளுக்கு உதவிபுரிகிறார். கர்த்தர் உதவிசெய்யும்போது எப்படிப்பட்ட புயலாகயிருந்தாலும், பெரிய அலைகளாகயிருந்தாலும், கர்த்தருடைய கிரியைகளை இவற்றினால் தடைபண்ண முடியாது. கர்த்தர் பவுலுக்கு உதவி செய்யவேண்டுமென்று சித்தமாயிருக்கிறார். அவருடைய சித்தத்திற்கு பெருங்காற்றினால் எதிர்த்து நிற்கமுடியவில்லை.

பவுல் கப்பலில் காவலில் வைக்கப்பட்டிருக்கிறான். இந்தக் கப்பலில் இவனுக்கென்று தனிஅறை எதுவும் கொடுக்கப்பட்டிருக்காது. கப்பலில் பிரயாணம் செய்கிற மற்றவர்களோடு கூட்டத்தோடு கூட்டமாகப் பிரயாணம்பண்ணவேண்டும். பெருங்காற்று மழையில், அநேகநாளாய் சூரியனாவது நட்சத்திரங்களாவது காணப்படவில்லை. எல்லாம் இருட்டாக இருக்கிறது. அந்த இடமே அசுத்தமாகயிருக்கிறது. அது எப்படிப்பட்ட இடமாக இருந்தாலும், கர்த்தருடைய தூதனானவர் அந்த இராத்திரியிலே, அவனிடத்திலே வந்து நிற்கிறார்.

நாம் சமுதாயத்தில் சாதாரண ஜனங்களாகயிருக்கலாம். ஐசுவரியவான்களாக இல்லாமல் தரித்திரராகயிருக்கலாம். கர்த்தரோடு நாம் ஜெபத்தில் ஐக்கியமாகயிருப்பதற்கு இவையெல்லாம் தடையாக இருக்காது. நாம் தேவனை உண்மையோடு நோக்கிக் கூப்பிடும்போது, நாம் எப்படிப்பட்ட சூழ்நிலையிலிருந்தாலும், நம்முடைய அந்தஸ்து எப்படிபட்டதாயிருந்தாலும், கர்த்தர் நம்மைத் தேடிவந்து விசாரிக்கிறவர். நடுக்கடலில் பவுலுக்கு இப்படிப்பட்ட அனுபவம் உண்டாயிற்று.

பவுல் காவலில் வைக்கப்பட்ட கைதியாகயிருந்தாலும், கர்த்தருடைய தூதனானவர், கடலில், புயல்காற்றுக்கு நடுவில், அவன் அருகில்வந்து நிற்கிறார். பவுலும் மற்றவர்களைப்போலவே அநேகநாளாய் போஜனம் பண்ணாமலிருக்கிறான். எல்லாருடைய ஜீவனுக்கும் வருத்தமும் மிகுந்த வேதனையும், சேதமும் உண்டானதுபோல பவுலின் ஜீவனுக்கும் ஆபத்து உண்டாயிற்று. இந்தச் சூழ்நிலையில் கர்த்தருடைய தூதனானவர் அவனிடத்தில் வந்து நின்று, அவனோடு பேசுவது, அவனுக்கு மிகுந்த ஆறுதலாகயிருக்கிறது. கர்த்தரிடத்தில் அவன் வைத்திருக்கிற விசுவாசம் உற்சாகமடைகிறது. அவனுடைய பாதுகாப்பு உறுதிப்பண்ணப்படுகிறது. பவுலோடுகூட, அவனோடு பிரயாணம்பண்ணுகிற அவனைவரும் பாதுகாக்கப்படுவார்கள் என்னும் உறுதி பரலோகத்திலிருந்து உண்டாயிற்று.

பவுலே, பயப்படாதே

பவுலே, பயப்படாதே, நீ இராயனுக்கு முன்பாக நிற்கவேண்டும். இதோ, உன்னுடனேகூட யாத்திரைபண்ணுகிற யாவரையும் தேவன் உனக்குத் தயவுபண்ணினார் என்றான் (அப் 27:24).

பவுலுக்கு தேவனிடத்திலிருந்து ஆறுதலான வார்த்தை வந்திருக்கிறது. முதலாவதாக, பவுல் பயப்படவேண்டிய அவசியமில்லை. பவுல் பயப்படக்கூடாது. பவுலைச் சுற்றி இருக்கிற சூழ்நிலை மிகவும் மோசமாகத்தான் இருக்கிறது. பவுலோடிருக்கிறவர்கள் எல்லோரும் தப்பிப்பிழைப்போம் என்னும் நம்பிக்கை முழுமையும் இல்லாதவர்களாகயிருக் கிறார்கள். தாங்கள் மரித்துபோவோமே என்று நினைத்து பயப்படுகிறார்கள். மரணபயத்தினால் அநேகநாள் போஜனம்பண்ணாமலும் இருக்கிறார்கள். அவர்கள் பயந்தாலும் பவுல் பயப்படக்கூடாது. பவுல் மாத்திரமல்ல கர்த்தருடைய பிள்ளைகளெல்லோருமே, எந்த சூழ்நிலையிலும் பயப்படாதிருக்க வேண்டும். கடலாகயிருந்தாலும், புயலாகயிருந்தாலும் சேனையின் கர்த்தர் நம்மோடுகூடயிருக்கிறார்.

பவுல் இராயனுக்கு முன்பாக நிற்கவேண்டும் என்று கர்த்தருடைய தூதனானவர் அவனுக்கு அறிவிக்கிறார். ரோமாபுரிக்குப்போக பாதுகாப்பான பிரயாணம் பவுலுக்கு வாக்குப்பண்ணப்படுகிறது. இப்பொழுது கடல் கொந்தளிக்கிறது. கடல்காற்று வீசுகிறது. ஆனால் தேவனுடைய சித்தமோ, பவுல் ரோமாபுரிக்குப் போகவேண்டும் என்பதாயிருக்கிறது. தேவனுடைய சித்தத்திற்கு விரோதமாக கடல் கொந்தளிப்பினாலோ, கடுங்காற்றினாலோ கிரியை நடப்பித்து, ஜெயிக்க முடியாது. ரோமாபுரியில் பவுல் கர்த்தருக்கு சாட்சி சொல்லுவேண்டும் என்பது தேவனுடைய சித்தம். இது நிறைவேறும். தேவனுடைய சித்தத்திற்கு விரோதமாக கடுங்காற்றினால் எதிர்த்து நின்று போராடி ஜெயிக்க முடியாது.

கர்த்தருடைய ஊழியத்தை உண்மையாய்ச் செய்கிற எல்லா ஊழியக்காரர்களுக்கும் இந்த வார்த்தை மிகவும் ஆறுதலாயிருக்கிறது. ஊழியங்களில் நமக்கு போராட்டங்கள் இருக்கலாம். கஷ்டங்கள் வரலாம். ஆனாலும் கர்த்தர் நமக்கு நியமித்திருக்கிற ஊழியத்தை செய்து முடிக்கிற வரையிலும், நமக்கு பிராணச் சேதம் எதுவும் உண்டாகாது. நம்முடைய ஜீவியத்தைக் குறித்து கர்த்தர் கொண்டிருக்கிற சித்தம் நிச்சயமாகவே நிறைவேறும். நம்முடைய ஜீவன் கர்த்தருடைய கரத்திலிருக்கிறது. அவருடைய அனுமதியில்லாமல் எந்த வல்லமையினாலும், நம்முடைய ஜீவனை அவருடைய கரத்திலிருந்து அபகரித்துக்கொள்ள முடியாது.

பவுலினிமித்தமாக, அவனுடனேகூட யாத்திரைபண்ணுகிற எல்லோரும் ஜீவன் தப்புகிறார்கள். தேவன் அவனுடனேகூட யாத்திரை பண்ணுகிற யாவரையும் அவனுக்குத் தயவுபண்ணியிருக்கிறார். பவுலினிமித்தமாக, அவனோடே யாத்திரை பண்ணுகிறவர்களை கர்த்தர் பாதுகாக்க சித்தங்கொண்டிருக்கிறார். கப்பலில் பவுலைத் தவிர, மேலும் இருநூற்று எழுபத்தைந்துபேர் இருக்கிறார்கள். இவர்கள் அனைவருடைய ஜீவனையும் பவுனிமித்தமாக கர்த்தர் பாதுகாக்கிறார். கர்த்தருடைய பிள்ளைகள் நிமித்தமாக, தேவன் இந்தப் பூமியையும், இந்தப் பூமியிலுள்ள எல்லா ஜீவராசிகளையும் ஆசீர்வதிக்கிறார்.

தன்னோடு யாத்திரைபண்ணுகிற எல்லோருடைய ஜீவனையும் பவுல் பாதுகாக்கிறான். இவர்களில் நல்லோரும் தீயோரும் இருக்கிறார்கள். தேவன் இந்த உலகத்தில் நல்லோர் நிமித்தமாக தீயோரை அழித்துப்போடாமல் விட்டுவைக்கிறார். இந்த உலகத்தில் துன்மார்க்கர் நல்லோரைப் பகைக்கிறார்கள். நல்லோரைத் துன்பப்படுத்துகிறார்கள். இந்த உலகத்தில் ஜீவிப்பதற்கு அவர்கள் தகுதியற்றவர்கள் என்று சொல்லி அவர்களைத் தூஷிக்கிறார்கள். ஆனால் மெய்யாகவே இந்த நல்லோர்களின் நிமித்தமாகவே இந்த உலகம் அழிந்துபோகமலிருக்கிறது.

கர்த்தர் பவுலுக்கு மிகப்பெரிய சிலாக்கியத்தைச் செய்கிறார். பவுனிமித்தமாக, அவனுடனேகூட யாத்திரைபண்ணுகிற யாவரையும் தப்புவிக்கச் செய்கிறார். அவர்களை பவுலுக்கு தயவுபண்ணியிருக்கிறார். தாங்கள் பிறருக்கு ஆசீர்வாதமாகயிருப்பதை நினைக்கும் போது, நல்லோருடைய இருதயம் சந்தோஷப்படும். அவர்கள் திருப்தியோடிருப்பார்கள். பவுலுக்கு அப்படிப்பட்ட சந்தோஷம் உண்டாயிற்று. தன் மூலமாக மற்றவர்கள் காப்பாற்றப்படுகிறார்கள் என்னும் செய்தி பவுலுக்கு மிகுந்த ஆறுதலையும் சந்தோஷத்தையும் தருகிறது.

மனுஷரே திடமனதாயிருங்கள்

ஆனபடியினால் மனுஷரே, திடமனதாயிருங்கள். எனக்குச் சொல்லப்பட்ட பிரகாரமாகவே நடக்கும் என்று தேவனிடத்தில் நம்பிக்கையாயிருக்கிறேன். ஆயினும் நாம் ஒரு தீவிலே விழ வேண்டியதாயிருக்கும் என்றான் (அப் 27:25,26).

பவுல் அவர்களுக்கு ஆறுதலான வார்த்தைகளைப் பேசுகிறான். "மனுஷரே திடமனதாயிருங்கள்" என்று அவர்களிடத்தில் சொல்லுகிறான். "எனக்குச் சொல்லப்பட்ட பிரகாரமாகவே நடக்கும்" என்று தான் தேவனிடத்தில் நம்பிக்கையாயிருப்பதையும் அவர்களுக்குச் சாட்சியாகச் சொல்லுகிறான். தன் நிமித்தமாக, தன்னோடு யாத்திரைபண்ணுகிறவர்கள் பாதுகாக்கப்பட்டாலும், பவுல் அதற்காக அவர்களிடத்திலிருந்து எந்த மேன்மையை எதிர்பார்க்கவில்லை. தன்னைப் பெருமைப்படுத்தவில்லை. அந்தச் சூழ்நிலையிலும் கர்த்தர் சொன்ன பிரகாரமாக நடக்கும் என்றுதான் கர்த்தரை நம்புவதாகவே அறிவிக்கிறான். இந்த வார்த்தைகளைத் தான் சொல்லவில்லையென்றும், கர்த்தரே சொல்லியிருக்கிறார் என்றும் அவர்களுக்கு எடுத்துச்சொல்லுகிறான்.

கர்த்தருடைய வார்த்தை அவர்களுக்கு அறிவிக்கப்பட்டிருப்பதினால், அவர்கள் திடமனதாயிருக்கவேண்டும். வருத்தத்தை நீக்கி சந்தோஷப்படவேண்டும். கர்த்தர் சொல்லுவதும் செய்வதும் வெவ்வேறான காரியமல்ல. அவர் சொல்லுவதைச் செய்கிறவர். செய்வதைச் சொல்லுகிறவர். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமும், கர்த்தருடைய வார்த்தையை விசுவாசிக்கவேண்டும். விசுவாசித்து சந்தோஷப்படவேண்டும். கர்த்தர் சொன்ன வார்த்தை நிறைவேறிய பின்புதான் சந்தோஷப்பட முடியும் என்று, நம்முடைய சந்தோஷத்தைத் தாமதம்பண்ணக்கூடாது. நம்முடைய ஜீவியத்திலும் விசுவாசமும் கிரியையும் வெவ்வேறாகயிராமல், ஒன்றாயிருக்கவேண்டும்.

கப்பல் இப்போது கடுங்காற்றில் சிக்கியிருக்கிறது. புயல்காற்று கப்பலின்மேல் மோதுகிறது. காற்றின் போக்கிலே கப்பல் போய்க்கொண்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் கப்பலுக்கும் தங்களுக்கும் என்ன நேரிடும் என்பதையும் பவுல் அவர்களுக்கு முன்னறிவிக்கிறான். "நாம் ஒரு தீவிலே விழவேண்டியதாயிருக்கும்" என்று அறிவிக்கிறான். கப்பல் உடைந்துபோகும். கப்பலில் யாத்திரைபண்ணுகிறவர்கள் ஜீவன் தப்பிப்பிழைப்பார்கள். கர்த்தருடைய கிருபையினால் எல்லோரும் ஜீவன் தப்பி ஒரு தீவுக்கு வந்து சேருவார்கள். அந்தத் தீவிலே அவர்களுக்கு ஆறுதல் உண்டாயிருக்கும்.

ஆதிரியாக் கடல்
அப் 27 : 27-29

அப் 27:27. பதினாலாம் இராத்திரியானபோது, நாங்கள் ஆதிரியாக் கடலிலே அலைவுபட்டு ஓடுகையில், நடுஜாமத்திலே கப்பலாட்களுக்கு ஒரு கரை கிட்டிவருகிறதாகத் தோன்றிற்று.

அப் 27:28. உடனே அவர்கள் விழுதுவிட்டு இருபது பாகமென்று கண்டார்கள்; சற்றப்புறம் போனபொழுது, மறுபடியும் விழுது விட்டுப் பதினைந்து பாகமென்று கண்டார்கள்.

அப் 27:29. பாறையிடங்களில் விழுவோமென்று பயந்து, பின்னணியத்திலிருந்து நாலு நங்கூரங்களைப்போட்டு, பொழுது எப்போது விடியுமோ என்றிருந்தார்கள்.

கரை கிட்டிவருகிறதாக தோன்றிற்று

பதினாலாம் இராத்திரியானபோது, நாங்கள் ஆதிரியாக் கடலிலே அலைவுபட்டு ஓடுகையில், நடுஜாமத்திலே கப்பலாட்களுக்கு ஒரு கரை கிட்டிவருகிறதாகத் தோன்றிற்று (அப் 27:27).

கப்பல் கடுங்காற்றில் சிக்கி பதினாலாம் இராத்திரியாயிற்று. ஒவ்வொரு நாளும் அவர்கள் மரணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். தப்பிப்பிழைப்போம் என்னும் நம்பிக்கை அவர்களுக்கு முழுமையும் அற்றுப்போயிற்று. பதினாலாம் இராத்திரியானபோது அவர்கள் ஆதிரியாக்கடலிலே அலைபட்டு ஓடுகிறார்கள். அப்போது, நடுஜாமத்திலே கப்பலாட்களுக்கு ஒரு கரை கிட்டி வருகிறதாகத் தோன்றிற்று. ஆதிரியாக்கடல் மத்தியதரைக்கடல் பகுதியிலுள்ளது. ஆப்பிரிக்காவின் கடற்கரை ஓரம் வரையிலும் ஆதிரியாக் கடல் விரிந்து பரவியிருக்கிறது. இவர்கள் ஆதியாக்கடலில் அலைவுபட்டு ஓடிய இடம் எந்த இடத்திலுள்ளது என்பது தெரியவில்லை. தண்ணீரின் ஆழம் குறைவாகயிருக்கிறது. ஆகையினால் ஒரு கரை கிட்டிவருவதாக அவர்களுக்குத் தோன்றிற்று.

பொழுது எப்போது விடியுமோ

உடனே அவர்கள் விழுதுவிட்டு இருபது பாகமென்று கண்டார்கள்; சற்றப்புறம் போனபொழுது, மறுபடியும் விழுது விட்டுப் பதினைந்து பாகமென்று கண்டார்கள். பாறையிடங்களில் விழுவோமென்று பயந்து, பின்னணியத்திலிருந்து நாலு நங்கூரங்களைப்போட்டு, பொழுது எப்போது விடியுமோ என்றிருந்தார்கள் (அப் 27:28,29).

ஒரு கரை கிட்டி வருகிறதாகத் தோன்றியவுடன், அவர்கள் உடனே விழுதுவிட்டுப் பார்க்கிறார்கள். கடலின் ஆழம் இருபது பாகமென்று காண்கிறார்கள். சற்று அப்புறம் போனபொழுது மறுபடியும் விழுதுவிட்டு பதினைந்து பாகமென்று காண்கிறார்கள். கடலின் ஆழம் குறைந்துகொண்டே வருகிறது. ஆகையினால் ஒரு கரை கிட்டி வருவதாக அவர்களுக்குத் தோன்றிற்று.

கரைக்கு அருகாமையில் வரும்போது கப்பல் பாறையிடங்களில் விழுந்துவிடும் என்று பயப்படுகிறார்கள். பின்னணியத்திலிருந்து நாலு நங்கூரங்களைப்போடுகிறார்கள். பொழுது எப்போது விடியுமென்று காத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வெளிச்சம் உண்டாயிருந்தபோது, அவர்கள் பார்ப்பதற்கு ஒரு கரையும் இல்லை. இப்போதோ கடலில் ஆழம் குறைந்திருக்கிறது. ஒரு கரை கிட்டி வருகிறது. ஆனால் இதைப் பார்ப்பதற்கு அங்கு வெளிச்சமில்லை. ஆகையினால் பொழுது எப்போது விடியுமோ என்று காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

துன்மார்க்கமாய் ஜீவிக்கிறவர்கள் இருளில் நடக்கிறார்கள். அவர்களுடைய பாதைக்கு வெளிச்சம் இல்லை. இப்படிப்பட்டவர்கள் கப்பலாட்கள் செய்வது போல, தங்களுடைய நங்கூரங்களை இயேசுகிறிஸ்துவின் சமுகத்தில் போட வேண்டும். இயேசுகிறிஸ்துவின் வெளிச்சம் தங்களுக்கு எப்போது கிடைக்குமென்று காத்துக் கொண்டிருக்கவேண்டும். பொழுது நிச்சயமாகவே விடியும் என்று நம்புவதுபோல, இயேசுகிறிஸ்துவின் வெளிச்சம் நமக்கு நிச்சயமாகவே கிடைக்குமென்று நம்பிக்கையாயிருக்க வேண்டும்.

கப்பலாட்கள்
அப் 27:30-32

அப் 27:30. அப்பொழுது கப்பலாட்களை கப்பலை விட்டோடிப் போக வகைதேடி, முன்னணியத்திலிருந்து நங்கூரங்களைப் போடப் போகிற பாவனையாய்ப் படவைக் கடலில் இறக்குகையில்,

அப் 27:31. பவுல் நூற்றுக்கு அதிபதியையும் சேவகரையும் நோக்கி: இவர்கள் கப்பலில் இராவிட்டால் நீங்கள் தப்பிப் பிழைக்க மாட்டீர்கள் என்றான்.

அப் 27:32. அப்பொழுது, போர்ச்சேவகர் படவின் கயிறுகளை அறுத்து, அதைத் தாழ விழவிட்டார்கள்.

கப்பலை விட்டோடிப்போக

அப்பொழுது கப்பலாட்களை கப்பலை விட்டோடிப்போக வகைதேடி, முன்னணியத்திலிருந்து நங்கூரங்களைப் போடப் போகிற பாவனையாய்ப் படவைக் கடலில் இறக்குகையில், (அப் 27:30)

கப்பலாட்கள், கப்பலின் பின்னணியத்திலிருந்து நாலு நங்கூரங்களைப் போடுகிறார்கள். ஆனால் கப்பலைவிட்டு ஓடிப்போவதற்கு வகை தேடுகிறார்கள். கப்பல் மூழ்கிக் கொண்டிருக்கிறது. கப்பலாட்கள்தான் பல உபாயங்களைச் செய்து, கப்பல் மூழ்கிப் போகாமல் பாதுகாக்கவேண்டும். ஆனால் அவர்களோ கப்பலைவிட்டு ஓடிப்போக வகைதேடுகிறார்கள். மற்றவர்கள் செத்துப் போனாலும் தாங்கள் பிழைத்துக்கொள்ள வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். இதற்காக அவர்கள் கப்பலையும், கப்பலிலுள்ளவர்களையும் அப்படியே விட்டுவிட்டு, முன்னணியத்திலிருந்து நங்கூரங்களைப் போடப்போகிற பாவனையாய் படவை கடலில் இறக்குகிறார்கள். தாங்கள் தப்பித்துப் போவதற்கு உபாயம்பண்ணுகிறார்கள்.

வெளிப்பார்வைக்கு அவர்கள் நங்கூரங்களை போடப்போவதுபோல இருக்கிறது. ஆனால் அவர்கள் நங்கூரங்களைப்போடாமல், தாங்கள் தப்பித்துப்போவதற்கு படவுகளைப் போடுகிறார்கள். பவுல் அவர்களுக்கு ஆதரவான வார்த்தைகளைச் சொல்லி திடப்படுத்தியிருக்கிறான். அவர்களுக்கு கப்பற்சேதமேயல்லாமல், ஒருவனுக்கும் பிராணச்சேதம் வராது என்று கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லியிருக்கிறான். ஆனாலும் கப்பலாட்களோ கர்த்தருடைய வார்த்தையில் நம்பிக்கை வைக்காமல், படகுகளில் நம்பிக்கை வைக்கிறார்கள். நம்முடைய மெய்யான பாதுகாப்பு கர்த்தருடைய கரத்தில்தான் இருக்கிறது.

இவர்கள் கப்பலில் இராவிட்டால்

பவுல் நூற்றுக்கு அதிபதியையும் சேவகரையும் நோக்கி: இவர்கள் கப்பலில் இராவிட்டால் நீங்கள் தப்பிப் பிழைக்க மாட்டீர்கள் என்றான் (அப் 27:31).

கப்பலாட்கள் கப்பலை விட்டோடிப்போக வகைதேடி, படவை கடலில் இறக்குவதை பவுல் கவனிக்கிறான். அவர்களுடைய சதிஆலோசனையை நூற்றுக்கு அதிபதிக்கும், சேவகருக்கும் அறிவிக்கிறான். "இவர்கள் கப்பலில் இராவிட்டால் நீங்கள் தப்பிப் பிழைக்கமாட்டீர்கள்" என்று உண்மை நிலமையை அவர்களுக்கு எடுத்துச் சொல்லுகிறான். கப்பலில் யாத்திரை பண்ணுகிற எல்லோருமே மரண பயத்திலிருக்கிறார்கள். எல்லோருக்குமே இனி தப்பிப்பிழைப்போம் என்னும் நம்பிக்கை முழுவதும் அற்றுப்போயிற்று. இப்போது அவர்கள் கப்பலை நங்கூரங்களைப்போட்டு பத்திரமாக நிறுத்தவேண்டும். இல்லையென்றால் கப்பல் பாறையிடங்களில் முட்டிமோதி உடைந்துபோகும். ஆகையினால் கப்பலாட்களின் உதவி இப்போது அதிகமாய்த் தேவைப்படுகிறது. கரை கிட்டி வருகிறது. இந்த வேளையில் கப்பலாட்கள் பல உபாயங்களைச் செய்து, கப்பலைக் கரை சேர்க்கவேண்டும்.

நம்மால் செய்ய முடியாத காரியங்களை தேவன் நமக்குச் செய்து உதவிபுரிகிறார். இதன்பின்பு நாம் கர்த்தருடைய பெலத்தினால், நம்முடைய காரியங்களை நாமே கவனித்துக்கொள்ள வேண்டும். நம்முடைய காரியங்களெல்லா வற்றையும் கர்த்தரே நடப்பிக்கிறவர். கர்த்தர் தாம் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்யும்போது, நாமும் நாம் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்வதற்கு ஆயத்தமாயிருக்கவேண்டும்.

கப்பலில் யாத்திரை பண்ணுகிறவர்களின் முடிவை தேவன் தீர்மானம்பண்ணியிருக்கிறார். அவர்களில் ஒருவருக்கும் பிராணச்சேதம் வராது என்று தம்முடைய முடிவை வெளிப்படுத்தி விட்டார். பவுலோடுகூட யாத்திரை பண்ணுகிற யாவரையும் தேவன் அவனுக்குத் தயவுபண்ணியிருக்கிறார். அதன்பிரகாரமாக கப்பலில் யாத்திரை பண்ணுகிறவர்கள் யாவரும் தப்பிப் பிழைக்கப்போகிறார்கள். கரையில் கப்பலை நிறுத்தி அவர்கள் தப்பித்துச்செல்ல வேண்டும். இதற்கு கப்பலாட்களின் உதவிதேவைப்படுகிறது. இந்த முக்கியமான வேளையில் அவர்கள் கப்பலை விட்டோடிப்போக வகைதேடுகிறார்கள்.

கர்த்தர் நமக்கு நியமித்திருக்கிற காரியங்களை நாம் செய்யவேண்டும். நம்முடைய கடமைகளை செய்ய நாம் தவறக்கூடாது. நாம் என்ன காரியத்தைச் செய்தாலும், காரியசித்தி கர்த்தரால் மாத்திரமே வரும். நாம் ஒருவேலையும் செய்யாமல்சும்மாயிருந்துகொண்டு, காரியம் தானாய் நடக்குமென்று எதிர்பார்க்கக் கூடாது. தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற உபாயங்களை நாம் பயன்படுத்தாதே போனால், நாம் கர்த்தரைச் சோதிக்கிறவர்களாகவே இருப்போம். நம்மால் முடிந்தவற்றை நாம் செய்யவேண்டும். நம்மை மீறிய காரியங்களை கர்த்தர் பார்த்துக் கொள்வார் என்று, அவருடைய சமுகத்தில் பொறுமையோடு காத்திருக்கவேண்டும். கர்த்தர்மீது நம்பிக்கை வைக்கவேண்டும்.

படவின் கயிறுகளை அறுத்து

அப்பொழுது, போர்ச்சேவகர் படவின் கயிறுகளை அறுத்து, அதைத் தாழ விழவிட்டார்கள் (அப் 27:32).

பவுல் கப்பலாட்களின் சதி யோசனையை நூற்றுக்கு அதிபதிக்கும் சேவகருக்கும் அறிவிக்கிறான். கப்பலாட்கள் நங்கூரங்களைப் போடப்போகிற பாவனையாய் படவை கடலில் இறக்குகிறார்கள். பவுலின் வார்த்தையினால் எச்சரிப்படைந்த போர்ச்சேவகர், படவின் கயிறுகளை அறுத்து, அதை தாழவிழவிட்டுவிடுகிறார்கள். படவு கடலில் விழுந்துவிடுகிறது. இனிமேல் கப்பலாட்கள் படவில் ஏறி தப்பித்துப்போகமுடியாது.

போர்ச்சேவகர் கப்பலாட்களோடு விவாதம்பண்ணவில்லை. அவர்களுடைய சதிஆலோசனையைக் குறித்து அவர்களிடத்தில் பேசிக்கொண்டிருக்க வில்லை. அவர்களைச் சபிக்கவில்லை. அவர்கள் செய்தது தவறு என்று அவர்களுக்குப் புத்திமதியும் சொல்லவில்லை. இதற்கெல்லாம் அங்கு நேரமேயில்லை. சிறிது காலதாமதம் பண்ணினாலும், கப்பலாட்கள் படவை கடலில் இறக்கி, அதில் தப்பித்துச் சென்றுவிடுவார்கள். போர்ச்சேவகர் சிறிதும் காலதாமதமில்லாமல், உடனே படவின் கயிறுகளை அறுத்து விடுகிறார்கள். படவு கப்பலிலிருந்து கடலுக்குள் விழுந்துவிடுகிறது. கப்பலாட்கள் எல்லோரும் கப்பலிலேயே இருந்துவிடுகிறார்கள்.

இப்போது கப்பலுக்கு ஏதாவது சேதம் வந்தால், கப்பலில் யாத்திரைபண்ணுகிற எல்லோரையும் போலவே, கப்பலாட்களும் பாதிக்கப் படுவார்கள். தங்களுடைய பாதுகாப்புக்கு அவர்கள் கப்பலைப் பாதுகாக்கவேண்டும். வேறு வழியில்லை. அவர்கள் அழிந்தால் கப்பலாட்களும் அழிந்துபோவார்கள். கப்பல் பாறையிடங்களில் முட்டிமோதினால், கப்பல் உடைந்துபோகும். கப்பலாட்களும் தப்பித்துச் செல்லாமல் கப்பலிலேயே இருக்கிறார்கள். வேறு வழியில்லாமல் கப்பலைப் பாதுகாப்பதற்கு தங்களால் முடிந்த எல்லா உபாயங்களையும் செய்கிறார்கள்.

புசிக்கிறார்கள் அப் 27 : 33-38

அப் 27:33. பொழுது விடிகையில் எல்லாரும் போஜனம்பண்ணும்படி பவுல் அவர்களுக்குத் தைரியஞ்சொல்லி: நீங்கள் இன்று பதினாலுநாளாய் ஒன்றும் சாப்பிடாமல் பட்டினியாயிருக்கிறீர்கள்.

அப் 27:34. ஆகையால் போஜனம் பண்ணும்படி உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன், நீங்கள் தப்பிப் பிழைப்பதற்கு அது உதவியாயிருக்கும்; உங்கள் தலையிலிருந்து ஒரு மயிரும் விழாது என்றான்.

அப் 27:35. இப்படிச் சொல்லி, அப்பத்தை எடுத்து, எல்லாருக்கு முன்பாகவும் தேவனை ஸ்தோத்தரித்து, அதைப் பிட்டுப் புசிக்கத்தொடங்கினான்.

அப் 27:36. அப்பொழுது எல்லாரும் திடமனப்பட்டுப் புசித்தார்கள்.

அப் 27:37. கப்பலில் இருநூற்றெழுபத்தாறு பேர் இருந்தோம்.

அப் 27:38. திருப்தியாகப் புசித்தபின்பு அவர்கள் கோதுமையைக் கடலிலே எறிந்து, கப்பலை இலகுவாக்கினார்கள்.

ஒன்றும் சாப்பிடாமல்

பொழுது விடிகையில் எல்லாரும் போஜனம்பண்ணும்படி பவுல் அவர்களுக்குத் தைரியஞ்சொல்லி: நீங்கள் இன்று பதினாலுநாளாய் ஒன்றும் சாப்பிடாமல் பட்டினியாயிருக் கிறீர்கள். ஆகையால் போஜனம் பண்ணும்படி உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன், நீங்கள் தப்பிப் பிழைப்பதற்கு அது உதவியாயிருக்கும்; உங்கள் தலையிலிருந்து ஒரு மயிரும் விழாது என்றான் (அப் 27:33,34).

கப்பலில் பிரயாணம் செய்கிறவர்களுக்கு தப்பிப்பிழைப்போம் என்னும் நம்பிக்கை முழுமையும் அற்றுப்போயிற்று. அவர்கள் பதினாலுநாளாய் ஒன்றும் சாப்பிடாமல் பட்டினியாயிருக்கிறார்கள். அவர்களுக்குப் பவுல் புதுதெம்பையும், புதுதைரியத்தையும், புதுஉற்சாகத்தையும் கொடுக்கிறான். விசுவாசிகளுக்கு மத்தியில் பவுலைப்போன்ற சுபாவமுள்ளவர்கள் ஆசீர்வாதமாகயிருக்கிறார்கள். பவுல் அவர்களுக்கு தைரியம் சொல்லுகிறான். இப்போது சூரியனாவது, நட்சத்திரங்களாவது காணப்படாமற் போனாலும், அவற்றைக் காணக்கூடிய ஒரு நாள் வரப்போகிறது என்று பவுல் அவர்களுக்கு தைரியம் சொல்லுகிறான்.

பொழுது விடிகையில் கப்பலில் இருக்கிறவர்களுக்கு ஓரளவு உற்சாகமுண்டாயிற்று. ஓரளவு தைரியமுண்டாயிற்று. பவுல் அவர்களுடைய தைரியத்தை அதிகரிக்கச் செய்கிறான். அவர்கள் இத்தனை நாளாய் தங்களைப்பற்றி மறந்துவிட்டார்கள். மரணபயத்தினால் பதினாலுநாளாய் ஒன்றும் சாப்பிடாமல் பட்டினியாயிருக்கிறார்கள். அவர்களை போஜனம்பண்ணும்படி பவுல் வேண்டிக் கொள்கிறான். அவர்கள் தப்பிப்பிழைப்பதற்கு அது உதவியாயிருக்குமென்று அவர்களுக்கு தைரியம் சொல்லுகிறான்.

கப்பலில் யாத்திரை பண்ணுகிறவர்களுக்கு முன்பாக மிகப்பெரிய போராட்டம் காத்துக்கொண்டிருக்கிறது. இவர்கள் ஒன்றும் சாப்பிடாமல் பட்டினியாயிருந்து சரீரத்தில் பலவீனமாயிருக்கிறார்கள். சரீர பலவீனமுடையவர்களினால் யுத்தம்பண்ண முடியாது. போராட்டத்தில் வெற்றி பெறமுடியாது. இவர்கள் போஜனம்பண்ணி சரீரப்பெலனைப் பெற்றுக்கொள்ளவேண்டும். அப்போதுதான் கடல் அலைகளை அவர்களால் சமாளிக்கமுடியும். இல்லையென்றால் பட்டினியாயிருந்தே அவர்கள் மடிந்துபோவார்கள்.

கப்பலில் யாத்திரைபண்ணுகிறவர்கள் எல்லோரும் தப்பிப்பிழைக்கவேண்டும். கடலின் அலைகளிலிருந்து தப்பிப்பதற்கு முன்பாக, அவர்கள் தங்கள் பட்டினியிலிருந்து தப்பிப்பிழைக்கவேண்டும். வேலைசெய்யாதவன் சாப்பிடக்கூடாது என்று வேதம் சொல்லுகிறது. அப்படியானால் வேலைசெய்கிறவன் சாப்பிடவேண்டும் என்பதே இதன் பொருள். கப்பலில் இருக்கிறவர்கள் தங்கள் ஜீவன் தப்பிக்க எல்லா உபாயங்களையும் செய்து வேலைசெய்கிறார்கள். ஆனால் மரணபயத்தினால் போஜனம்பண்ணாமல் பட்டினியாயிருக்கிறார்கள்.

அதிகநாள் போஜனம்பண்ணாமல் உயிர்பிழைக்க முடியாது. சரீர பெலத்திற்குப் போஜனம் தேவை. அதுபோலவே நம்முடைய ஆவிக்குரிய பெலத்திற்கு ஆவிக்குரிய போஜனம் தேவை. வேதவசனமே ஆவிக்குரிய போஜனம். நாம் வேதவசனத்தைத் தியானிக்காமலிருந்தால் நம்முடைய ஆவி பலவீனமுள்ளதாகயிருக்கும். பலவீனமுள்ள விசுவாசிகளிடத்தில் சந்தேகமும் பயமும் நிரம்பியிருக்கும். தெய்வீக ஆலோசனைகளை அங்கீகரியாமல் நாம் பட்டினியாயிருக்கக் கூடாது. ஆவிக்குரிய போஜனத்தைப் பெற்றுக்கொள்ளாமல், ஆவிக்குரிய காரியங்களில் நம்மால் ஈடுபட முடியவில்லை என்று குறைவுபடக்கூடாது. ஆவிக்குரிய போஜனம் இருந்தால்தான் நம்முடைய ஆத்துமா ஆரோக்கியமாயிருக்கும்.

தன்னோடு யாத்திரைபண்ணுகிற எல்லோரையும் போஜனம்பண்ணும்படி பவுல் வேண்டிக்கொள்கிறான். அத்தோடு "உங்கள் தலையிலிருந்து ஒரு மயிரும் விழாது" என்று அவர்களோடு ஆறுதலாகப் பேசுகிறான். மரணபயத்தினால் அவர்கள் போஜனம் பண்ணாமலிருக்கிறார்கள். அவர்கள் மரிக்கப்போவதில்லை என்று பவுல் அவர்களுக்கு உறுதியாகச் சொல்லி, போஜனம்பண்ணுமாறு அவர்களை வேண்டிக்கொள்கிறான்.

தேவனை ஸ்தோத்திரித்து

இப்படிச் சொல்லி, அப்பத்தை எடுத்து, எல்லாருக்கு முன்பாகவும் தேவனை ஸ்தோத்தரித்து, அதைப் பிட்டுப் புசிக்கத்தொடங்கினான். அப்பொழுது எல்லாரும் திடமனப்பட்டுப் புசித்தார்கள் (அப் 27:35,36).

பவுல் அவர்களுக்கு பந்தியை ஆயத்தம்பண்ணுகிறான். அவர்களுக்குத் தைரியம்சொல்லிவிட்டு எல்லோருக்கும் முன்பாக அப்பத்தை எடுக்கிறான். கப்பலில் உணவு பஞ்சம் இல்லை. அவர்களுக்குத் தேவையான அளவு அப்பம் இருக்கிறது. இருந்தாலும் அவர்கள் இதுவரையிலும் மரண பயத்தினால், அந்த அப்பத்தைப் புசிக்க முடியாமலிருக்கிறார்கள். நம்முடைய போஜனத்திற்காக நாம் கர்த்தரைத் துதிக்கவேண்டும். போஜனம் பண்ணுவதற்கு கர்த்தர் நமக்கு சரீர ஆரோக்கியத்தைக் கொடுத்திருப்பதற்காகவும் அவரைத் துதிக்கவேண்டும்.

பவுல் அந்தக் கப்பலில் யாத்திரைபண்ணுகிறவர்களுக்கு ஒரு போதகரைப்போல ஊழியம் செய்கிறான். இதற்காக அவர்கள் கர்த்தருக்கு நன்றி சொல்லவேண்டும். பவுலின் போதக ஊழியத்திற்காக அவர்கள் பெருமைப்பட வேண்டும். பவுல் அப்பத்தை எடுத்து எல்லோருக்கும் முன்பாக தேவனை ஸ்தோத்திரிக்கிறான். பவுல் கப்பலில் யாத்திரைபண்ணுகையில், இதற்கு முன்பு, எல்லோருக்கும் முன்பாக தேவனை ஸ்தோத்திரித்து ஜெபம்பண்ணினானா என்று எழுதப்படவல்லை. இப்போதுதான் அவன் எல்லோருக்கும் முன்பாக தேவனை ஸ்தோத்திரிப்பதாக இங்கு எழுதப்பட்டிருக்கிறது.

பவுல் தேவனை ஸ்தோத்திரிக்கிறான். கப்பலில் யாத்திரை பண்ணுகிறவர்களில் ஒருவரும் மரித்துப் போகாமல் எல்லோரும் ஜீவனோடிருக்கிறார்கள். கப்பற் சேதமேயல்லாமல் அவர்களுடைய ஜீவனுக்கு ஒரு சேதமும் உண்டாகாது என்று கர்த்தர் வாக்குப்பண்ணியிருக்கிறார். கர்த்தர் கொடுத்த ஆசீர்வாதத்திற்காக பவுல் அவரைத் துதிக்கிறான். கர்த்தர் போஜனம் கொடுக்கிறார். அந்த அப்பத்தை ஆசீர்வதித்து தருமாறு பவுல் தேவனை ஸ்தோத்திரிக்கிறான்.

நாம் எல்லா காரியங்களிலும் தேவனை ஸ்தோத்திரம் பண்ணவேண்டும். விசேஷமாக நாம் புசிக்கிற போஜனத்திற்காக கர்த்தரைத் துதிக்க வேண்டும். கர்த்தரே நமக்கு போஜனம் கொடுக்கிறார் என்னும் எண்ணம், நாம் ஒவ்வொருமுறை போஜனம்பண்ணும்போதும் நம்முடைய உள்ளத்திலிருக்கவேண்டும். பவுல் எல்லாருக்கும் முன்பாக தேவனை ஸ்தோத்திரிக்கிறான். தான் ஆராதிக்கிற தேவனை எல்லோருக்கும் முன்பாக ஸ்தோத்திரிக்க பவுல் வெட்கப்படவில்லை. கர்த்தரைத் துதிக்கிற இந்த ஆராதனையில், எல்லோரும் பங்குபெற வருமாறு அவர்களை அன்போடு அழைக்கிறான்.

நாம் போஜனம்பண்ணும்போது கர்த்தரைத் துதிக்கவேண்டும். நம்முடைய போஜனம் நேர்மையான முறையில் சம்பாதித்ததினால் கிடைத்திருக்க வேண்டும். பிறரை வஞ்சித்து, ஏமாற்றி புசிப்பதை கர்த்தர் ஆசீர்வதிக்கமாட்டார். பிறரை வஞ்சிப்பது கர்த்தருக்குப் பிரியமில்லாத காரியம். நாம் புசிக்கிற போஜனம் நம்மைக்குறித்து மற்றவர்களுக்குச் சாட்சிசொல்லவேண்டும்.

பவுல் அப்பத்தை எடுத்து எல்லாருக்கும் முன்பாகவும் தேவனை ஸ்தோத்திரித்து, அதைப் பிட்டு புசிக்கத் தொடங்குகிறான். மற்றவர்கள் புசிக்க ஆயத்தமாகயிருக்கிறார்களா, அல்லது இல்லையா என்பது தெரியவில்லை. ஆனால் பவுல் தன் போஜனத்தைப் புசிக்க ஆயத்தமாயிருக்கிறான். பவுல் அப்பத்தைப் புசிக்கத் தொடங்குகிறான். இந்த அப்பத்திற்காக அவன் தேவனை ஸ்தோத்திரம் பண்ணுகிறான். மற்றவர்களுக்கு முன்பாக பவுல் புசிப்பது, அவர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறது. எல்லோரும் புசியுங்கள் என்று வேண்டிக்கொண்டவன், அவர்களுக்கு முன்மாதிரியாக முதலாவதாகப் புசிக்கிறான்.

நாம் மற்றவர்களுக்கு பிரசங்கம்பண்ணும்போது, நம்முடைய பிரசங்கச் செய்திக்கு ஏற்ற பிரகாரம் நம்முடைய ஜீவியம் அமைந்திருக்க வேண்டும். முன்மாதிரியான சாட்சியுள்ள ஜீவியம் நம்முடைய பிரசங்கத்தை முத்திரை இடும். எல்லோருக்கும் முன்பாக பவுல் அப்பத்தைப் புசிக்கத் தொடங்குகிறபோது, கப்பலில் யாத்திரை பண்ணுகிற மற்றவர்கள் அதைப் பார்க்கிறார்கள். அவர்களும் அப்பொழுது திடமனப்பட்டு புசிக்கிறார்கள்.

அவர்கள் திடமனப்பட்டு புசித்த போது, பவுல் மூலமாக தேவன் கொடுத்த செய்தியை விசுவாசிக்க ஆரம்பிக்கிறார்கள். பவுல் தான் சொன்ன செய்தியை நம்புகிறான். மற்றவர்கள் அவனுடைய நம்பிக்கையைப் பார்த்து, அவர்களும் அந்தச் செய்தியை நம்புகிறார்கள்.

நாம் எல்லோரும் இரட்சிக்கப்பட வேண்டுமென்று பிரசங்கம்பண்ணுகிறோம். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று பிறருக்கு உபதேசம் பண்ணுகிறோம். பிறருக்கு உபதேசம்பண்ணுவது நல்லதுதான். நாம் இரட்சிக்கப்பட்டால்தான் நம்முடைய பிரசங்கம் பிரயோஜனமுள்ளதாகயிருக்கும். நம்முடைய ஜீவியத்தில் நாம் இயேசு கிறிஸ்துவை நம்முடைய இரட்சகராக ஏற்றுக்கொண்டிருப்பதை மற்றவர்களுக்கு சாட்சியாகக் காண்பிக்கவேண்டும். அப்போதுதான் இயேசுகிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்னும் உற்சாகம் அவர்கள் இருதயத்திலும் உண்டாகும்.

திருப்தியாகப் புசித்தபின்பு

கப்பலில் இருநூற்றெழுபத்தாறு பேர் இருந்தோம். திருப்தியாகப் புசித்தபின்பு அவர்கள் கோதுமையைக் கடலிலே எறிந்து, கப்பலை இலகு வாக்கினார்கள் (அப் 27:37,38).

கப்பலில் இருநூற்று எழுபத்தாறு பேர் இருக்கிறார்கள். அவர்களில் பவுலும் ஒருவன். பவுல் புசிக்கத் தொடங்கிய போது, அவனைப் பார்த்து மீதமுள்ள இருநூற்று எழுபத்தைந்துபேரும் திடமனப்பட்டு புசிக்கிறார்கள். எல்லோரும் திருப்தியாகப் புசிக்கிறார்கள். ஒருவன் நல்ல முன்மாதிரியாக இருக்கும்போது, அதனால் அநேகருக்கு பிரயோஜனமுண்டாகிறது.

எல்லோரும் திருப்தியாகப் புசித்த பின்பு, அவர்கள் மறுபடியும் கப்பலை இலகுவாகிறார்கள். இதற்கு முன்பு கப்பலிலுள்ள சரக்குகளையும் தளவாடங்களையும் கடலில் எறிந்து கப்பலை இலகுவாக்கினார்கள். இப்போதோ கோதுமையைக் கடலிலே எறிந்து கப்பலை இலகுவாக்குகிறார்கள். போஜனம் இவர்களை தண்ணீரில் மூழ்கடிப்பதற்குப் பதிலாக, இவர்கள் போஜனத்தை தண்ணீரில் மூழ்கடிக்கிறார்கள்.

நமக்கு ஆதரவாகயிருக்குமென்று சில சமயங்களில் உலகப்பிரகாரமான சம்பத்துக்களை நமக்கு சேகரித்து வைத்திருப்போம். சில சமயங்களில் அவை நமக்கு ஆதரவாகயிருப்பதற்குப் பதிலாக ஆபத்தாகயிருக்கும். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் அவற்றினால் ஆபத்தைத் தேடிக்கொள்வதற்குப் பதிலாக, அவற்றை நம்மைவிட்டு நீக்கிவிட்டு, நாம் ஆபத்தில்லாமல் பாதுகாப்பாக இருக்க பழகிக்கொள்ளவேண்டும். உலகத்தின் சம்பத்துக்களினால் நம்முடைய ஜீவனை நஷ்டப்படுத்திவிடக்கூடாது. ஒருவன் இந்த உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், அவன் தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு ஒரு லாபமும் இல்லை. எல்லாமே நஷ்டமாகிவிடும்.

எல்லாரும் தப்பி கரை சேர்ந்தார்கள்
அப் 27 : 39-44

அப் 27:39. பொழுது விடிந்தபின்பு, இன்ன பூமியென்று அறியாதிருந்தார்கள். அப்பொழுது சமமான கரையுள்ள ஒரு துறைமுகம் அவர்களுக்குத் தென்பட்டது; கூடுமானால் அதற்குள் கப்பலையோட்ட யோசனையாயிருந்து,

அப் 27:40. நங்கூரங்களை அறுத்துக் கடலிலே விட்டுவிட்டு, சுக்கான்களுடைய கட்டுகளைத் தளரவிட்டு, பெரும்பாயைக் காற்றுமுகமாய் விரித்து, கரைக்கு நேராய் ஓடி,

அப் 27:41. இருபுறமும் கடல் மோதிய ஒரு இடத்திலே கப்பலைத் தட்டவைத்தார்கள்; முன்னணியம் ஊன்றி அசையாமலிருந்தது, பின்னணியம் அலைகளுடைய பலத்தினால் உடைந்து போயிற்று.

அப் 27:42. அப்பொழுது காவல்பண்ணப்பட்டவர்களில் ஒருவனும் நீந்தி ஓடிப்போகாதபடிக்கு அவர்களைக் கொன்றுபோட வேண்டுமென்று போர்ச்சேவகர் யோசனையாயிருந்தார்கள்.

அப் 27:43. நூற்றுக்கு அதிபதி பவுலைக் காப்பாற்ற மனதாயிருந்து, அவர்களுடைய யோசனையைத் தடுத்து, நீந்தத்தக்கவர்கள் முந்திக் கடலில் விழுந்து கரையேறவும்,

அப் 27:44. மற்றவர்களில் சிலர் பலகைகள் மேலும், சிலர் கப்பல் துண்டுகள் மேல் போய்க் கரையேறவும் கட்டளையிட்டான்; இவ்விதமாய் எல்லாரும் தப்பிக் கரைசேர்ந்தார்கள்.

இன்ன பூமியென்று அறியாதிருந்தார்கள்

பொழுது விடிந்தபின்பு, இன்ன பூமியென்று அறியாதிருந்தார்கள். அப்பொழுது சமமான கரையுள்ள ஒரு துறைமுகம் அவர்களுக்குத் தென்பட்டது; கூடுமானால் அதற்குள் கப்பலையோட்ட யோசனையாயிருந்து, (அப் 27:39)

மறுநாளிலே சமமான கரையுள்ள ஒரு துறைமுகம் அவர்களுக்குத் தென்பட்டது. அது இன்னபூமியென்று அவர்கள் அறியாதிருக்கிறார்கள். கூடுமானால் அந்தத் துறைமுகத்திற்குள் கப்பலை ஓட்டுவதற்கு யோசனையாயிருக்கிறார்கள். கப்பல் கடுங்காற்றில் சிக்கியதினால், இப்போது அவர்கள் எந்த திசையிலிருக்கிறார்கள் என்பது அவர்களுக்கே தெரியவில்லை. கப்பலாட்கள் இந்த வழியாக பலமுறை வந்திருக்கலாம். அவர்களுக்குக்கூட இது இன்னபூமியென்று தெரியவில்லை.

சமமான கரையுள்ள ஒரு துறைமுகம் அவர்களுக்குத் தென்படுகிறது. அந்தப் பூமி இன்னபூமியென்று அவர்கள் அறியாதிருந்தாலும், அதற்குள் கப்பலை ஓட்ட யோசனையாயிருக்கிறார்கள். அங்கு ஜனங்கள் இருக்கிறார்களா, அவர்கள் சொந்த ஜனங்களா அல்லது அந்நிய ஜனங்களா, அவர்கள் தங்களை ஆதரிப்பார்களா அல்லது எதிர்ப்பார்களா என்பதெல்லாம் கப்பலிலுள்ளவர்களுக்கு ஒன்றும் தெரியவில்லை. அவர்களிடத்தில் போய் அவர்களுடைய உதவியைப் பெற்றுக்கொள்ளலாமென்று எல்லோரும் யோசனையாயிருக்கிறார்கள்.

அது ஒரு சமமான கரையுள்ள பூமி. இவர்கள் பல நாட்களாக கடலில் தத்தளித்துக்கொண்டு வந்திருக்கிறார்கள். இவர்களுக்கு சமமான கரையுள்ள பூமி மிகுந்த ஆறுதலாகயிருக்கிறது. கடலில் பிரயாணம் செய்கிறவர்களுக்கு தரையைப் பார்க்கும்போது மிகுந்த சந்தோஷமாகயிருக்கும். அதிலும் பெருங்காற்றில் அடிபட்டு வந்தவர்களுக்கு சமமான பூமி மிகுந்த ஆறுதலாகயிருக்கும். அந்தத் துறைமுகத்தைப் பார்த்தபோது அவர்களுக்கு மிகுந்த சந்தோஷமுண்டாயிற்று. இருதயத்தில் பலவிதமான எதிர்பார்ப்புக்களோடு அந்த துறைமுகத்திற்குள் கப்பலை ஓட்ட யோசனையாயிருக்கிறார்கள்.

நங்கூரங்கள்

நங்கூரங்களை அறுத்துக் கடலிலே விட்டுவிட்டு, சுக்கான்களுடைய கட்டுகளைத் தளரவிட்டு, பெரும்பாயைக் காற்று முகமாய் விரித்து, கரைக்கு நேராய் ஓடி, இருபுறமும் கடல் மோதிய ஒரு இடத்திலே கப்பலைத் தட்டவைத்தார்கள்; முன்னணியம் ஊன்றி அசையாமலிருந்தது, பின்னணியம் அலைகளுடைய பலத்தினால் உடைந்து போயிற்று (அப் 27:40,41).

நங்கூரங்களை அறுத்து கடலிலே விட்டுவிடுகிறார்கள். சுக்கான்களுடைய கட்டுக்களை தளரவிடுகிறார்கள். கப்பல் புயல்காற்றில் சிக்கிக்கொண்டபோது அவர்கள் தளர்ந்துபோயிருக்கும் சுக்கான்களை இறுகக் கட்டியிருந்திருப்பார்கள். சுக்கான்கள் இறுகலாகக் கட்டப்பட்டால்தான் கப்பல் பாதுகாப்பாகயிருக்கும். ஆனால் இப்போதோ அவர்கள் கரைக்கு நேராய் ஓடவேண்டும். அதற்காக சுக்கான்களுடைய கட்டுகளைத் தளரவிட்டு, பெரும்பாயை காற்றுமுகமாய் விரிக்கிறார்கள்.

கப்பலைச் செலுத்துகிற மாலுமியின் கட்டுப்பாட்டிற்குள் கப்பல் பயணம்செய்கிறது. இதற்கு முன்பு புயல்காற்றில், காற்று அடிக்கிற திசையில் கப்பல் ஓடினது. மாலுமிகளால் கப்பலின் ஓட்டத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இப்போதோ மாலுமிகள் கப்பலை கரைக்கு நேராய் ஓட்டுகிறார்கள்.

அவர்கள் சமமான கரையுள்ள துறைமுகத்தைப் பார்த்தவுடன், அதை நோக்கி கப்பலை விரைவாக செலுத்துகிறார்கள். சாதாரணமாக செல்லும் நல்ல வேகத்தைவிட, அதிவேகமாக கப்பலைச் செலுத்துகிறார்கள். தங்களுக்கு பாதுகாப்பான இடம் வேண்டுமென்று ஆவலாய் அங்கு ஓடுகிறார்கள்.

நம்முடைய ஜீவியத்திலும் நாம் பல போராட்டங்களையும், கஷ்டங்களையும், பாடுகளையும் அனுபவிக்கிறோம். பல வேதனைகளைச் சகித்துக்கொள்கிறோம். இந்த உலகத்தின் ஜீவன் நமக்குப் பாடுகள் நிறைந்ததாகயிருக்கிறது. இப்படிப்பட்ட நமக்கு பரலோகமே ஒய்வு எடுக்கிற இடமாக இருக்கும். அந்த நித்திய ஆறுதலும், நித்திய ஓய்வும் எப்போதும் கிடைக்குமென்று நாம் ஆவலாய்க் காத்துக்கொண்டிருப்போம்.

கப்பலை ஓட்டுகிறவர்கள் பெரும்பாயை காற்றுமுகமாய் விரிப்பதுபோல, கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம், நம்முடைய விசுவாசமாகிய பெரும்பாயை பரிசுத்த ஆவியானவர் முகமாய் விரிக்கவேண்டும். பரிசுத்த ஆவியானவர் தமக்குச் சித்தமானபடி நம்மை வழிநடத்துவதற்கு, நம்மை நாமே அவரிடத்தில் ஒப்புக்கொடுக்கவேண்டும்.

கப்பலை கரைக்கு நேராய் ஓட்டி இருபுறமும் கடல்மோதிய ஓரிடத்திலே கப்பலைத் தட்டவைக்கிறார்கள். இரண்டு பக்கத்துக் கடல்களும் இந்த இடத்தில் மோதுவதினால், இது மணல் திட்டாகயிருக்கிறது. கப்பலின் முன்னணியம் மணலில் ஊன்றி அசையாமலிருக்கிறது. கப்பலின் பின்னணியம் கடலிலிருக்கிறது. பலத்த அலைகள் பின்னணியத்தில் மோதியதினால், பின்னணியம் உடைந்துபோயிற்று.

கப்பல் கடலில் பிரயாணம் செய்தபோது, அதன்மீது புயல்காற்று வீசியது. பெரிய அலைகள் மோதியது. அப்போதெல்லாம் அந்தக் கப்பல் பல திசைகளிலும் சுற்றி ஓடுவதற்கு கடலில் இடம் இருந்தது. ஆனால் இப்போதோ முன்னணியம் மணலில் சிக்கியிருப்பதினால், பின்னணியத்தில் அலைகள் மோதியபோது, கப்பலால் எங்கும் போகமுடியவில்லை. முன்னணியம் அசையாமல் நிற்கிறது. பின்னணியத்தின்மீது அலைகள் மோதி அது உடைந்துபோயிற்று.

இப்பிரபஞ்சத்தின்மீது பற்று வைத்திருக்கிறவர்கள் இப்படித்தான் உடைந்துபோவார்கள். சாத்தானுடைய சோதனைகள் பலத்த அலைகளைப்போல நம்மீது மோதும். நாம் இப்பிரபஞ்சத்தின்மீது ஆசை வைக்காமல், பரலோகத்தின் தேவனை நோக்கிப் பார்த்துக் கொண்டிருப்போமென்றால், கடலில் பிரயாணம் செய்கிற கப்பலைப்போல தப்பிப்போம். இப்பிரபஞ்சத்தின்மீது ஆசைவைத்து, இதில் சிக்கிக்கொள்வோமென்றால், மணலில் சிக்கிய கப்பலைப்போல இருப்போம். பேரலைகள் மோதும்போது கப்பல் உடைந்துபோவதுபோல, சாத்தானுடைய சோதனைகள் நம்மீது மோதும்போது, நம்முடைய ஆவிக்குரிய ஜீவியமும் உடைந்துபோகும்.

சமமான கரையுள்ள ஓர் துறைமுகம் அவர்களுக்குத் தென்படுகிறது. ஆனாலும் அந்தத் துறைமுகத்திற்குப் போகும் முன்பாகவே அவர்களுடைய கப்பல் அலைகளுடைய பலத்தினால் உடைந்துபோயிற்று. கரைக்கு சிறிது தூரம்தான் இருக்கிறது. ஆனால் கப்பல் உடைந்துபோயிற்று. இந்த உலகத்தில் நமக்கு எப்போது வேண்டுமானாலும் பாடுகள் வரலாம் என்பதை இந்தச் சம்பவம் உணர்த்துகிறது. மெய்யாகவே நமக்கு பாடுகள் உண்டு. கிறிஸ்துவின்மீது நாம் வைத்திருக்கிற விசுவாசத்தினால், இந்தப் பாடுகளை சகித்துக்கொண்டு, சோதனைகளை மேற்கொள்ளவேண்டும்.

அவர்களைக் கொன்று போடவேண்டும்

அப்பொழுது காவல்பண்ணப்பட்டவர்களில் ஒருவனும் நீந்தி ஓடிப்போகாதபடிக்கு அவர்களைக் கொன்று போடவேண்டுமென்று போர்ச்சேவகர் யோசனையாயிருந்தார்கள் (அப் 27:42).

கப்பல் அலைகளுடைய பலத்தினால் உடைந்துபோனபோது, பவுலுக்கும் காவலில் வைக்கப்பட்டிருந்த மற்றவர்களுக்கும் புதிய பிரச்சனையும் ஆபத்தும் உண்டாயிற்று. காவலில் வைக்கப்பட்டவர்கள் தப்பித்து நீந்தி ஓடிப்போய்விடுவார்கள் என்று போர்ச்சேவகர் பயப்படுகிறார்கள். காவல்பண்ணப்பட்டவர்களில் ஒருவனும் நீந்தி ஓடிப்போகாதபடிக்கு அவர்களைக் கொன்றுபோடவேண்டுமென்று போர்ச் சேவகர் யோசனையாயிருக்கிறார்கள். அவர்களால் நீந்தி தப்பித்துப்போகமுடியாது. பல நாட்களாக பட்டினியாகயிருந்து சரீரத்தில் பெலனற்றவர்களாக இருக்கிறார்கள். போர்ச்சேவகர்களும் பெலனற்றவர்களாக இருக்கிறார்கள். காவல் பண்ணப் பட்டவர்களும் பெலனற்றவர்களாகயிருக் கிறார்கள். ஆனால் போர்ச்சேவகர்களின் பார்வைக்கோ, காவல்பண்ணப்பட்டவர்கள் தப்பித்து ஓடிப்போகிறவர்கள்போல காணப்படுகிறார்கள்.

பவுலைக் காப்பாற்ற மனதாயிருந்து

நூற்றுக்கு அதிபதி பவுலைக் காப்பாற்ற மனதாயிருந்து, அவர்களுடைய யோசனையைத் தடுத்து, நீந்தத்தக்கவர்கள் முந்திக் கடலில் விழுந்து கரையேறவும், (அப் 27:43)

கப்பலில் யாத்திரைபண்ணுகிற எல்லோருமே ஆபத்தில் இருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் ஒருவருக்கொருவர் உதவிபுரிந்து, ஒருவரையொருவர் காப்பாற்றுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். கர்த்தருடைய அநுக்கிரகம் இருந்தால்தான் இவர்கள் தப்பிக்க முடியும். ஆனால் போர்ச்சேவகர்களோ காவலில் வைக்கப்பட்டவர்களைக் கொன்றுபோட வேண்டுமென்று யோசனை பண்ணுகிறார்கள். தங்கள் யோசனையை நூற்றுக்கு அதிபதியிடமும் சொல்லுகிறார்கள்.

நூற்றுக்கு அதிபதி பவுலின்மீது பட்சமாயிருக்கிறான். பவுலைக் கொன்றுபோட அவனுக்கு மனதில்லை. அவனைக் காப்பாற்ற மனதாயிருக்கிறான். ஆகையினால் பவுலின் நிமித்தமாக, காவல்பண்ணப்பட்டவர்கள் எல்லோரையும் கொன்றுபோடவேண்டும் என்னும் அவர்களுடைய யோசனையை தடுத்து நிறுத்துகிறான்.

நூற்றுக்கு அதிபதி பவுலினால் சொல்லப்பட்டவைகளைப் பார்க்கிலும் மாலுமியையும் கப்பல் எஜமானையும் அதிகமாய் நம்பினவன் (அப் 27:11). பவுலின் யோசனையை அங்கீகரிக்காதவன். ஆனால் இப்போதோ அவன் பவுலைக் காப்பாற்ற மனதாயிருக்கிறான். காவல் பண்ணப்பட்டவர்களை கொன்றுபோட வேண்டும் என்னும் யோசனையைத் தடுக்கிறான். பவுலின் நிமித்தமாக கப்பலில் யாத்திரைபண்ணுகிற எல்லோருடைய ஜீவனையும் கர்த்தர் பாதுகாக்கிறார். பவுலின் நிமித்தமாக நூற்றுக்கு அதிபதி காவலில் பண்ணப்பட்ட மற்றவர்களை கொன்றுபோடாமல் விட்டுவிடுகிறான். ஒரு நல்லவன் நிமித்தமாக மற்றவர்களுக்கு ஜீவரட்சணை உண்டாயிற்று.

கரையேற கட்டளையிட்டான்

மற்றவர்களில் சிலர் பலகைகள் மேலும், சிலர் கப்பல் துண்டுகள் மேல் போய்க் கரையேறவும் கட்டளையிட்டான்; இவ்விதமாய் எல்லாரும் தப்பிக் கரைசேர்ந்தார்கள் (அப் 27:44).

காவல்பண்ணப்பட்டவர்களில் சிலர் நீந்தத்தக்கவர்கள். இவர்கள் முந்திக் கடலில் விழுந்து கரையேறுமாறு நூற்றுக்கு அதிபதி கட்டளையிடுகிறான். மற்றவர்களில் சிலர் பலகைகள்மேலும், சிலர் கப்பல் துண்டுகளிலும் போய் கரையேறவும் கட்டளையிடுகிறான். முந்திப்போகிறவர்கள் சீக்கிரமாய் கரைசேர்ந்து, நீந்தி வருகிற கைதிகளை மறுபடியும் காவல்பண்ணவேண்டும். அவர்கள் தப்பித்து ஓடிவிடாமல் அவர்களை காவல்பண்ணவேண்டும் என்பதில் நூற்றுக்கு அதிபதி எச்சரிப்போடிருக்கிறான். எல்லோரும் மரிக்கிற ஆபத்திலிருந்தாலும், நூற்றுக்கு அதிபதி தன்னுடைய கடமையில் கருத்தாயிருக்கிறான்.

மற்றவர்கள் பலகைகள்மேலும் கப்பல் துண்டுகளிலும்போய் கரையேறுகிறார்கள். அவர்களுடைய பிரயாசம் ஒன்றும் வீணாய்ப்போய் விடவில்லை. கர்த்தருடைய அநுக்கிரகத்தினால் எல்லாரும் தப்பி கரைசேருகிறார்கள்.

கடுங்காற்றிலிருந்து தப்பித்து இந்தத் தீவுக்கு வந்திருக்கிறார்கள். பல கஷ்டங்களை அனுபவித்தார்கள். முடிவில் ஒரு ஆறுதலான இடத்திற்கு வருகிறார்கள். கர்த்தர் நமக்கு இரட்சிப்பை வாக்குப்பண்ணியிருக்கிறார். இரட்சிப்பின் பாதையில் நமக்குப் பல பாடுகளும் போராட்டங்களும் இருக்கலாம். வேதனைகள் வரலாம். ஆனாலும் முடிவில் நாம் இரட்சிப்பின் சந்தோஷத்தைப் பெற்றுக்கொள்வோம்.

கப்பல் உடைந்துபோனாலும், கப்பலில் யாத்திரை பண்ணுகிறவர்கள் பலகைகளையும் கப்பல் துண்டுகளையும் பிடித்துக்கொண்டு கரைசேருகிறார்கள். எல்லா நம்பிக்கையும் இழந்துபோனாலும், கப்பல் உடைந்துபோனாலும், கப்பலின் பலகைகளும் துண்டுகளும் அவர்கள் கரைசேர உதவிசெய்கிறது. தப்பித்துக் கரைசேரவேண்டும் என்பது கர்த்தருடைய அநுக்கிரகமாக இருக்கும்போது, கப்பலின் சிறிய பாகங்கள்கூட அவர்கள் ஜீவன் தப்பிப்பதற்கு உதவியாயிருக்கிறது.

28 அதிகாரம்

பவுலின் சரித்திரம் இந்த அதிகாரம் வரையிலும் விவரிக்கப்பட்டிருக்கிறது. இதற்குப் பின்பு பவுலின் சரித்திரத்தைப் பற்றி, அவன் எழுதிய நிருபங்கள் மூலமாக நாம் தெரிந்துகொள்கிறோம். இந்த அதிகாரத்தின் முடிவில், பவுல் காவலில் வைக்கப்பட்டவனாகவே இருக்கிறான். காவலிலிருந்தாலும் தன்னைப் பார்க்க வருகிற ஜனங்களைச் சந்தித்துப் பேசுவதற்கு பவுலுக்குத் தடை எதுவும் விதிக்கப்படவில்லை.

எல்லோரும் கரை சேருகிறார்கள். அந்தத் தீவின் பெயர் மெலித்தா. பவுலின் கையை ஒரு விரியன் பாம்பு கவ்விக்கொள்கிறது (அப் 28:1-6). தீவின் முதலாளியினுடைய தகப்பனை பவுல் குணமாக்குகிறான் (அப் 28:7-9). கப்பலில் யாத்திரை பண்ணியவர்களுக்கு மெலித்தா தீவார் அநேக மரியாதைகளைச் செய்கிறார்கள் (அப் 28:10).

பவுல் ரோமாபுரிக்குப் போய்சேருகிறான். அங்கு தன்னைக் காத்திருக்கிற சேவகனுடனே தனித்துக் குடியிருக்கும்படி உத்தரவு பெற்றுக்கொள்கிறான் (அப் 28:11-14). ரோமாபுரியிலுள்ள விசுவாசிகள் பவுலை வரவேற்கிறார்கள் (அப் 28:15). சேனாபதி பவுலைப் பட்சமாய் நடப்பிக்கிறான் (அப் 28:16).

ரோமாபுரியிலுள்ள யூதர்கள் பவுலைச் சந்தித்துப் பேசுகிறார்கள் (அப் 28:17-22). ரோமாபுரியிலுள்ள யூதர்களுக்கு பவுல் இயேசுவுக்கடுத்த விசேஷங்களைப் போதிக்கிறான் (அப் 28:23). பவுலின் வார்த்தைகளை ஒரு சிலர் விசுவாசிக் கிறார்கள். ஒரு சிலர் விசுவாசியாமல் போய்விடுகிறார்கள் (அப் 28:24-29). பவுல் இரண்டு வருஷமாய் மிகுந்த தைரியத்தோடே இயேசுகிறிஸ்துவைப் பற்றிய சுவிசேஷத்தை உபதேசிக்கிறான் (அப் 28:30-31).

மெலித்தா தீவு
அப் 28 : 1-10

அப் 28:1. நாங்கள் தப்பிக் கரைசேர்ந்தபின்பு, அந்தத் தீவின்பேர் மெலித்தா என்று அறிந்தோம்.

அப் 28:2. அந்நியராகிய அந்தத் தீவார் எங்களுக்குப் பாராட்டின அன்பு கொஞ்சமல்ல. அந்த வேளையிலே பிடித்திருந்த மழைக்காகவும் குளிருக்காகவும் அவர்கள் நெருப்பை மூட்டி, எங்கள் அனைவரையும் சேர்த்துக்கொண்டார்கள்.

அப் 28:3. பவுல் சில விறகுகளை வாரி அந்த நெருப்பின்மேல் போடுகையில், ஒரு விரியன்பாம்பு அனலுறைத்துப் புறப்பட்டு அவனுடைய கையைக் கவ்விக்கொண்டது.

அப் 28:4. விஷப்பூச்சி அவன் கையிலே தொங்குகிறதை அந்நியராகிய அந்தத் தீவார் கண்டபோது, இந்த மனுஷன் கொலைபாதகன், இதற்குச் சந்தேகமில்லை; இவன் சமுத்திரத்துக்குத் தப்பிவந்ததும், பழியானது இவனைப் பிழைக்க வொட்டவில்லையென்று தங்களுக்குள்ளே சொல்லிக் கொண்டார்கள்.

அப் 28:5. அவன் அந்தப் பூச்சியைத் தீயிலே உதறிப்போட்டு, ஒரு தீங்கும் அடையாதிருந்தான்.

அப் 28:6. அவனுக்கு வீக்கங்கண்டு, அல்லது அவன் சடிதியாய் விழுந்து சாவானென்று அவர்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள்; நெடுநேரமாய்ப் பார்த்துக்கொண்டிருந்தும், ஒரு சேதமும் அவனுக்கு வராததைக் கண்டபோது, வேறு சிந்தையாகி, இவன் தேவனென்று சொல்லிக்கொண்டார்கள்.

அப் 28:7. தீவுக்கு முதலாளியாகிய புபிலியு என்னும் பேர்கொண்டவனுடைய நிலங்கள் அந்த இடத்திற்குச் சமீபமாயிருந்தது; அவன் எங்களை ஏற்றுக்கொண்டு, மூன்று நாள் பட்சமாய் விசாரித்தான்.

அப் 28:8. புபிலியுவினுடைய தகப்பன் ஜுரத்தினாலும் இரத்தபேதியினாலும் வருத்தப்பட்டுக் கிடந்தான்; பவுல் அவனிடத்திற்குப் போய் ஜெபம்பண்ணி, அவன் மேல் கைகளை வைத்து, அவனைக் குணமாக்கினான்.

அப் 28:9. இது நடந்தபின்பு, தீவிலே இருந்த மற்ற வியாதிக்காரரும் வந்து, குணமாக்கப்பட்டார்கள்.

அப் 28:10. அவர்கள் எங்களுக்கு அநேக மரியாதை செய்து, நாங்கள் கப்பல் ஏறிப் போகிறபோது எங்களுக்குத் தேவையானவைகளை ஏற்றினார்கள்.

மெலித்தா

நாங்கள் தப்பிக் கரைசேர்ந்தபின்பு, அந்தத் தீவின்பேர் மெலித்தா என்று அறிந்தோம். அந்நியராகிய அந்தத் தீவார் எங்களுக்குப் பாராட்டின அன்பு கொஞ்சமல்ல. அந்த வேளையிலே பிடித்திருந்த மழைக்காகவும் குளிருக்காகவும் அவர்கள் நெருப்பை மூட்டி, எங்கள் அனைவரையும் சேர்த்துக் கொண்டார்கள் (அப் 28:1,2).

பவுல் தன்னுடைய பிரயாணத்தில் வெவ்வேறு இடங்களுக்குப் போகிறான். அங்குள்ள சூழ்நிலைகளும் வெவ்வேறு விதமாகயிருக்கிறது. பவுல் ஒருபோதும் ஒரே இடத்தில் தங்கியிருந்து ஊழியம் செய்வதில்லை. கர்த்தர் வழிநடத்துகிற பிரகாரமாக, பவுல் ஒவ்வொரு ஊராகச் சென்று ஊழியம் செய்யக்கூடியவன். இப்போது பவுல் கட்டப்பட்டவனாக செசரியா பிலிப்பி பட்டணத்திலிருந்து ரோமாவுக்கு பிரயாணம்பண்ணுகிறான். பிரயாணத்தில் பிரச்சனை உண்டாயிற்று. கடல் கொந்தளிக்கிறது. காற்று பயங்கரமாக வீசுகிறது. கடலில் பிரயாணம் செய்வோருக்கு புயல்காற்றினால் ஒரு பிரயோஜனமும் உண்டாகாது. புயல்காற்று தீமை செய்யக்கூடியது. ஆனால் கர்த்தரோ இந்தப் புயல்காற்றிலும் ஒரு நன்மையைச் செய்கிறார். மெலித்தா தீவாருக்கு புயல்காற்று நன்மையை அழைத்து வருகிறது. பவுல் எங்கு சென்றாலும் அவன் அங்குள்ளவர்களுக்கு ஆசீர்வாதமாகயிருப்பான். புயல்காற்று பவுலை மெலித்தா தீவுக்கு இழுத்து வருகிறது. அவர்களுக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைக் கொடுப்பதற்காக பவுல் மெலித்தா தீவுக்கு வந்துசேருகிறான்.

மெலித்தா தீவிலுள்ளவர்கள் அந்நியராகயிருக்கிறார்கள். அவர்கள் யூதருமல்ல கிரேக்கருமல்ல. இவர்களுடைய பாஷைகளும் அவர்களுக்குத் தெரியாது. தீவாரின் பழக்க வழக்கங்களும் மிகவும் வித்தியாசமானவை. அப்படியிருந்தாலும் அந்நியராகிய அந்தத் தீவார் பவுலுக்கும், அவனோடுகூட மெலித்தாதீவுக்கு கடலில் தப்பிப்பிழைத்து வந்திருக்கிறவர்களுக்கும் அதிக அன்பு பாராட்டுகிறார்கள். தேவனுடைய பராமரிப்பு அவர்களுக்குத் தொடர்ந்து கிடைக்கிறது. மனுஷர் நமக்கு உதவிசெய்தாலும், இந்த உதவி தேவனுடைய கரத்திலிருந்தே நமக்கு வருகிறது என்று நாம் நினைக்கவேண்டும். கர்த்தருடைய கிருபையில்லாமல் நமக்கு ஒரு உதவியும் கிடைக்காது.

பவுல் சமாதானமாகயிருந்த காலத்திலேயே அவனுக்கு அதிக சத்துருக்கள் இருந்தார்கள். பவுலின் உபதேசத்தினிமித்தம் ஏராளமானோர் அவனைப் பகைத்தார்கள். அவனுடைய சிநேகிதரும், சொந்த ஜனங்களும் அவனுக்குச் சத்துருக்களானார்கள். இப்போதோ பவுல் மெலித்தா தீவில் அந்நியர் மத்தியில் இருக்கிறான். அவர்கள் அந்நியர்களாகயிருந்தாலும் பவுலுக்கு அவர்கள் சிநேகிதர்களாயிருக்கிறார்கள். தேவையில் உதவிபுரிகிற நண்பனே மெய்யான நண்பன்.

மெலித்தா தீவாரைப்பற்றியும், அவர்கள் பவுலுக்கு காண்பித்த அன்பைப்பற்றியும் இந்த வசனத்தில் விளக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் அந்நியர்கள். இவர்களுடைய பாஷை, பழக்க வழக்கங்கள், கலாச்சாரம் போன்றவை அவர்களுக்குத் தெரியாது. அவர்களுடைய பாஷையும் பழக்க வழக்கங்களும் வித்தியாசமாயிருக்கிறது. அவர்கள் கிரேக்கரைப்போலவோ அல்லது ரோமரைப்போலவோ பேசவுமில்லை, பழகவுமில்லை. அவர்கள் அந்நியராகயிருப்பதுபோல அவர்களுடைய பழக்க வழக்கங்களும் அந்நியமாகவே இருக்கிறது.

பாஷை வித்தியாசமாகயிருந்தாலும், அந்தத் தீவாரிடத்தில் விருந்தினரை உபசரிக்கிற நற்பண்பு அதிகமாய் காணப்படுகிறது. மனிதாபிமானத்தோடு நடந்துகொள்கிறார்கள். அந்நியராகிய அந்தத் தீவார் இவர்களுக்குப் பாராட்டின அன்பு கொஞ்சமல்ல. இதுவரையிலும் இவர்கள் கப்பல் சேதத்தில் அடிப்பட்டு உயிருக்குப் போராடிக்கொண்டிருந்தார்கள். காற்றோ அலையோ இவர்களுக்கு உதவிபுரியவில்லை. ஆனால் அந்நியராகிய இந்தத் தீவாரோ இவர்களுக்கு உதவிபுரிய முன்வருகிறார்கள்.

இந்தச் சம்பவம் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு ஒரு உபதேசமாக எழுதப்பட்டிருக்கிறது. ஆபத்துக்களிலும், விபத்துக்களிலும், பல்வேறு பிரச்சனைகளிலும் சிக்கியிருக்கிற ஜனங்களுக்கு நாம் உதவிபுரிய முன்வரவேண்டும். நம்முடைய இருதயம் கடினஇருதயமாக இருக்கக்கூடாது. நாம் மனதுருக்கமுள்ளவர்களாக இருக்க வேண்டும். நம்மால் முடிந்தவரையிலும், முடியுமானால் அதற்கு மிஞ்சியும் நாம் பிறருக்கு உதவிபுரிய வேண்டும். பிறருக்கு உதவிபுரிவதற்காகவே கர்த்தர் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார் என்னும் எண்ணம் நமக்குள் எப்போதும் காணப்படவேண்டும். நம்முடையது எல்லாம் நமக்குத்தான் என்னும் சுயநலம் நம்மிடத்தில் காணப்படக்கூடாது.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நமக்காக தம்முடைய ஜீவனையே கொடுத்தார். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமும், நம்மிடத்திலுள்ளதை பிறருக்குக் கொடுத்து உதவிபுரிந்து, அவர்களை ஆசீர்வதிக்கவேண்டும்.

பவுலும் அவனோடுகூட உயிர்தப்பிப்பிழைத்தவர்களும் மெலித்தா தீவுக்கு வந்தபோது அங்கு மழை பெய்துகொண்டிருக்கிறது. அதிக குளிராகயிருக்கிறது. அந்தத் தீவார் நெருப்பை மூட்டி இவர்கள் அனைவரையும் சேர்த்துக்கொள்கிறார்கள். இவர்கள் நெருப்பைச் சுற்றிலும் அமர்ந்து குளிர்காய்வதற்கு உதவிசெய்கிறார்கள். அவர்களை மெய்யாகவே நேசிக்கிறார்கள். அவர்களை வரவேற்று நன்றாய் உபசரிக்கிறார்கள். வானத்திலிருந்து பெரும்மழை பெய்கிறது. இவர்கள் இதுவரையிலும் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தார்கள். கடல் தண்ணீரில் நீந்தி வந்தவர்கள் இப்போது மழைத்தண்ணீரில் நனைகிறார்கள். சீதோஷ்ணநிலை மிகவும் குளிராகயிருக்கிறது. இவர்களுடைய சரீரத்திற்கு உஷ்ணம் தேவைப்படுகிறது. மெலித்தா தீவார் இவர்களுடைய பிரச்சனைகளை அறிந்துகொண்டு, நெருப்பை மூட்டி அவர்கள் அனைவரையும் சேர்த்துக்கொள்கிறார்கள்.

விரியன்பாம்பு

பவுல் சில விறகுகளை வாரி அந்த நெருப்பின்மேல் போடுகையில், ஒரு விரியன்பாம்பு அனலுறைத்துப் புறப்பட்டு அவனுடைய கையைக் கவ்விக்கொண்டது (அப் 28:3).

பவுல் கடலில் தப்பி மெலித்தா தீவுக்கு வந்து சேருகிறான். பவுலுக்கு வந்த ஆபத்து கடலோடு முடிந்துபோகவில்லை. மெலித்தா தீவிலும் ஆபத்து அவனைச் சந்திக்கிறது. ஒரு விரியன்பாம்பு பவுலின் கையைக் கவ்விக்கொள்கிறது. மெலித்தா தீவார் நெருப்பை மூட்டி இவர்கள் அனைவரையும் சேர்த்துக்கொள்கிறார்கள். பவுல் சில விறகுகளை வாரி அந்த நெருப்பின்மேல் போடுகிறான். நெருப்பு நன்றாக எரிவதற்கு உதவிசெய்கிறான். பவுல் எப்போதுமே சுறுசுறுப்பாக வேலை செய்கிறவன். ஒருபோதும் சும்மாயிருக்கமாட்டான். அந்தத் தீவார் நெருப்பை மூட்டினாலும், பவுல் அந்த நெருப்பை சுற்றி சும்மா உட்கார்ந்திராமல், அவனும் சில விறகுகளை வாரி அந்த நெருப்பின்மேல் போடுகிறான். மெலித்தா தீவார் பவுலுக்கு உதவிசெய்கிறார்கள். பவுலோ தன்னால் முடிந்த உதவியை அவர்களுக்குச் செய்கிறான்.

பவுல் எங்கு சென்றாலும் தன்னால் செய்ய முடிந்த உதவிகளை பிறருக்குச் செய்யக்கூடியவன். விறகுகளை பொறுக்குகிற வேலையாக இருந்தாலும், வேறு சாதாரண வேலையாக இருந்தாலும், எந்த வேலையையும் பவுல் செய்வான். வேலையில் கௌரவம் பார்க்கமாட்டான். நம்முடைய சகோதரருக்கு நாமும் உதவிசெய்ய முன்வரவேண்டும். நம்மால் முடிந்த எந்த உதவியையும் அவர்களுக்குச் செய்யலாம். மிகவும் சாதாரண வேலையாகயிருந்தாலும், அதையும் சுயகௌரவம் பார்க்காமல் செய்யவேண்டும். நெருப்பு இவர்களுக்காக த்தான் மூட்டிப்பட்டிருக்கிறது. மூட்டப்பட்டிருக்கிற நெருப்பினால் சூட்டைப்பெற்றுக் கொள்கிறவர்கள், அந்த நெருப்பு பற்றியெறிவதற்கு விறகுகளைப் பொறுக்கி உதவிசெய்யவேண்டும். நாம் ஒரு ஆசீர்வாதத்தை அனுபவிக்கும்போது, அந்த ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நம்மால் செய்ய முடிகிற காரியங்களை நாமும் செய்யவேண்டும். ஆசீர்வாதம் மட்டும் வேண்டும், ஆனால் அதற்காக நான் ஒன்றுமே செய்யமாட்டேன் என்று சும்மாயிருக்கக்கூடாது.

மெலித்தா தீவார் நெருப்பை மூட்டி, பவுலையும் அவனோடு உயிர்த்தப்பிப் பிழைத்து வந்திருக்கிறவர்கள் அனைவரையும் தங்களிடமாகச் சேர்த்துக்கொள்கிறார்கள். பவுல் சில விறகுகளை வாரி அந்த நெருப்பின்மேல் போடுகிறான். அப்போது ஒரு விரியன்பாம்பு அனலுறைத்து புறப்படுகிறது. இதுவரையிலும் இந்தப்பாம்பு, விறகுகளுக்குள் செத்ததுபோல இருந்திருக்கிறது. நெருப்பின் உஷ்ணம் அதின்மேல் பட்டவுடன், அது அனலுறைத்து விறகை விட்டு வெளியே வருகிறது. பவுலுக்கு விறகில் பாம்பு இருப்பது தெரியவில்லை. பாம்போடு விறகையும் சேர்த்து தூக்குகிறான். அப்போது விறகிலிருந்த பாம்பு, பவுலின் கையைக் கவ்விக்கொள்கிறது. பசும்புல்லின்கீழ் பாம்பு இருப்பதுபோல, காய்ந்த சருகுகளிலும் பாம்பு இருக்கிறது.

நம்முடைய அன்றாட ஜீவியத்தில் நாம் இதுபோன்ற பல ஆபத்துக்களைச் சந்தித்து வருகிறோம். சாதாரண ஜீவராசிகள்கூட நமக்கு ஆபத்தாகயிருக்கிறது. சில காரியங்கள் நமக்கு ஆசீர்வாதமாகயிருக்குமென்று நினைப்போம். ஆனால் அந்தக் காரியங்களில் நமக்குத் தெரியாத ஆபத்துக்களும் மறைந்திருக்கும். உபாயமுண்டாவதற்குப் பதிலாக உபத்திரவமுண்டாகும். நெருப்பின்மேல் போடுவதற்கு விறகு உதவியாயிருக்கும். ஆனால் அந்த நெருப்பில்தான் விரியன்பாம்பு மறைந்திருக்கிறது. பவுல் நல்லமனதோடு நெருப்பை மூட்டுவதற்கு உதவிசெய்கிறான். ஆனால் விரியன்பாம்போ அவனுடைய கையை கவ்விக்கொள்கிறது. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் நம்முடைய வேலைகளை உண்மையாகவும், உத்தமமாகவும் செய்யும்போது இப்படிப்பட்ட ஆபத்துக்கள் நமக்கும் வருவதற்கு வாய்ப்புள்ளது. நம்முடைய பாதுகாப்பு கர்த்தருடைய கரத்திலிருக்கிறது.

கொலைபாதகன்

விஷப்பூச்சி அவன் கையிலே தொங்குகிறதை அந்நியராகிய அந்தத் தீவார் கண்டபோது, இந்த மனுஷன் கொலைபாதகன், இதற்குச் சந்தேகமில்லை; இவன் சமுத்திரத்துக்குத் தப்பிவந்ததும், பழியானது இவனைப் பிழைக்க வொட்டவில்லையென்று தங்களுக்குள்ளே சொல்லிக் கொண்டார்கள் (அப் 28:4).

மெலித்தா தீவார் பவுலைப் பார்க்கிறார்கள். அவன் கையில் தொங்குகிற விஷப்பூச்சியையும் பார்க்கிறார்கள். தேவனுடைய ஆக்கினைத்தீர்ப்பு பவுலின்மீது வந்திருப்பதாக அவர்கள் தீர்மானம் பண்ணுகிறார்கள். "இந்த மனுஷன் கொலைபாதகன். இதற்கு சந்தேகமில்லை. இவன் சமுத்திரத்திற்குத் தப்பிவந்தும் பழியானது இவனை பிழைக்க வொட்டவில்லை" என்று தங்களுக்குள்ளே சொல்லிக் கொள்கிறார்கள். இயற்கையில் நடைபெறுகிற சம்பவத்தை இவர்கள் நியாயப்படுத்துகிறார்கள்.

மெலித்தா தீவார் அந்நியராகயிருந்தாலும் இவர்களிடத்திலும் நன்மை தீமையைப்பற்றிய ஞானம் இருக்கிறது. கொலைசெய்வது பாதகம் என்பதை இவர்கள் அறிந்து வைத்திருக்கிறார்கள். தேவன் இந்த உலகத்தை சிருஷ்டித்து ஆளுகை செய்கிறார் என்று இவர்கள் நம்புகிறார்கள். ஆகையினால் இந்த உலகத்தில் நடைபெறுகிற எல்லா காரியங்களும் தேவனுடைய சித்தத்தின் பிரகாரமாக, அவருடைய அனுமதியோடு நடைபெறுவதாக மெலித்தா தீவார் நம்புகிறார்கள். பாவிகளை தீமை பின்தொடர்ந்து பிடிக்கும். நன்மை செய்வோருக்கு தேவன் வெகுமதி கொடுப்பார். துன்மார்க்கரைத் தேவன் தண்டிப்பார். மெலித்தா தீவார் தேவனைப்பற்றிய இதுபோன்ற பொதுவான காரியங்களில் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்.

கொலைசெய்வது பெரும்பாதகம். கொலைசெய்தவர்களைத் தேவன் தண்டியாமல் விடமாட்டார். ஒருவேளை தேவன் ஒரு குற்றவாளியை மன்னித்து தண்டியாமல் விட்டுவிட்டாலும், மெலித்தா தீவார் அவர்களை மன்னிக்கமாட்டார்கள். தங்கள் வாயின் வார்த்தையினால் அந்த மனுஷனுக்குத் தண்டனை கொடுப்பார்கள். இவர்கள் பவுலுக்கு நடைபெற்ற சம்பவங்களை யோசித்துப்பார்க்கிறார்கள். பவுல் சமுத்திரத்திற்குத் தப்பி வந்திருக்கிறான். ஆனால் தேவனுடைய நியாயத்தீர்ப்பு அவன் தலையின்மேல் தொங்கிக் கொண்டிருக்கிறது. பவுல் சமுத்திரத்திற்குத் தப்பி வந்தாலும், தேவன் அவனை தப்பவிடவில்லை. இந்தத் தீவில் வைத்து அவன் செய்த பாவத்தினிமித்தம், தேவன் அவனைக் கொன்றுபோட மனதாயிருக்கிறார் என்று மெலித்தா தீவார் தங்களுக்குள்ளே பேசிக்கொள்கிறார்கள்.

இயற்கையாக நடைபெறும் எல்லா காரியங்களையும் தேவனுடைய சித்தத்தோடு சம்பந்தப்படும்போது, அதில் ஒரு சில பிரச்சனைகள் உண்டாகும். துன்மார்க்கரெல்லோருமே இம்மையில் தண்டிக்கப்படுவார்கள் என்பது இந்தத் தீவாரின் நம்பிக்கை. மெய்யாகவே துன்மார்க்கரில் அநேகர் இம்மையிலேயே தண்டிக்கப் படுகிறார்கள். துன்மார்க்கருக்குத் தண்டனை உண்டு என்பதை எடுத்துக்காட்டாக நிரூபிப்பதற்கு, இப்படிப்பட்ட சம்பவங்கள் இப்பிரபஞ்சத்தில் நடைபெறுகிறது. இதனால் தேவன் ஒருவர் இருக்கிறார் என்பதை உலகஜனங்கள் அறிந்துகொள்வார்கள்.

துன்மார்க்கரில் அநேகர் இம்மையில் தண்டிக்கப்பட்டாலும், ஒரு சில துன்மார்க்கர் இம்மையில் தண்டிக்கப்படவில்லை. தவறு செய்துவிட்டு எந்தவித தண்டனையும் அடையாமல், ஒரு சிலர் சுகமாக ஜீவிக்கிறார்கள். இவர்களுடைய தனிப்பட்ட ஜீவியத்திலோ, குடும்பத்திலோ இவர்கள் செய்த தீமைக்குத்தக்கதாய் இவர்களுக்கு ஒரு தண்டனையும் கிடைப்பதில்லை. எல்லோரும் நன்றாகவே இருக்கிறார்கள். துன்மார்க்கர் இம்மையில் தண்டனையிலிருந்து தப்பித்தாலும், நியாயத்தீர்ப்பு நாளின்போது இவர்களால் தப்பிக்கவே முடியாது. ஒரு தரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்பு அடைவதும் எல்லா மனுஷருக்கும் நியமிக்கப்பட்டிருக்கிறது. மெலித்தா தீவாரிடத்திலோ இப்படிப்பட்ட விசுவாசம் காணப்படவில்லை. தீமை செய்தவர் எல்லோரும் இம்மையிலேயே தண்டிக்கப்படுவார்கள் என்று நம்புகிறார்கள்.

இம்மையிலுள்ள இந்த ஜீவியத்தில் கஷ்டம் அனுபவிப்போர் எல்லோருமே துன்மார்க்கர் என்று மெலித்தா தீவார் முடிவு செய்திருக்கிறார்கள். துன்மார்க்கர் இம்மையில் கஷ்டம் அனுபவிப்பது மெய் என்றாலும், கஷ்டம் அனுபவிப்போர் எல்லோருமே துன்மார்க்கர்தான் என்று தீர்மானம் செய்துவிடமுடியாது. ஏனெனில் இயற்கையான காரியங்கள் நல்லோருக்கும் தீயோருக்கும் ஒன்றுபோலவே வருகிறது. துன்மார்க்கரைவிட நல்லவர்களே இம்மையில் அதிக கஷ்டத்தை அனுபவிக்கிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகள் தங்கள் விசுவாசத்திற்காக பல பாடுகளையும் வேதனைகளையும் அனுபவிக்கிறார்கள். உபத்திரவங்களைச் சகித்துக்கொள்கிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகளுக்கு கஷ்டம் வருகிறது என்பதற்காக, அவர்களை துன்மார்க்கர் என்று நாம் நியாயந்தீர்த்துவிடமுடியாது. மெலித்தா தீவாரோ, பவுலுக்கு தீங்கு வந்தபோது, அவன் ஒரு கொலைபாதகன் என்று தீர்மானம் செய்துகொள்கிறார்கள்.

இவன் தேவன்

அவன் அந்தப் பூச்சியைத் தீயிலே உதறிப்போட்டு, ஒரு தீங்கும் அடையாதிருந்தான். அவனுக்கு வீக்கங்கண்டு, அல்லது அவன் சடிதியாய் விழுந்து சாவானென்று அவர்கள் பார்த்துக்கொண்டிருந்தார்கள்; நெடுநேரமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தும், ஒரு சேதமும் அவனுக்கு வராததைக் கண்டபோது, வேறு சிந்தையாகி, இவன் தேவனென்று சொல்லிக்கொண்டார்கள் (அப் 28:5,6).

ஒரு விரியன்பாம்பு பவுலின் கையை கவ்விக்கொண்டிருக்கிறது. பவுல் அந்தப் பூச்சியை தீயில் உதறிப்போடுகிறான். அவனுக்கு ஒரு தீங்கும் உண்டாகவில்லை. பவுலை விசப்பூச்சி கவ்விக்கொண்டவுடன் அவனுக்கு வீக்கம் கண்டுவிடும் என்று மெலித்தா தீவார் எதிர்பார்க்கிறார்கள். அல்லது அவன் சடுதியாய் விழுந்து சாவான் என்று அவனையே பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். பவுலுக்கு வீக்கமும் காணவில்லை. அவன் சடுதியாய் விழுந்து சாகவுமில்லை. ஆனால் அவன் செத்துப்போவானென்று அந்தத் தீவார் அவனை நெடுநேரமாய் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஒரு மனுஷனுக்கு ஏதாவது தீங்கு வந்துவிட்டால், உடனே மற்றவர்கள் அந்தத் தீங்கு வந்ததற்கான காரணத்தைப்பற்றி சிந்திக்க ஆரம்பித்து விடுவார்கள். ஒருவனைப்பற்றி தப்பான அபிப்பிராயம் ஏற்பட்டுவிட்டால், தங்களுடைய அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ளமாட்டார்கள். அவனைப்பற்றி பேசும்போதும், அவனைப்பார்க்கும்போதும் அந்தத் தப்பான அபிப்பிராயமே அவர்களுடைய மனதில் இருக்கும். தாங்கள் விரும்பிய பிரகாரம் தேவன் அந்த மனுஷனை தண்டிக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள். அந்த மனுஷனைப்பற்றி தாங்கள் தீர்மானம் பண்ணியிருப்பதை தேவன் அங்கீகரித்து உறுதிபண்ணவேண்டும் என்றும் ஆசைப்படுவார்கள்.

பவுலின் கையை விரியன்பாம்பு கவ்விக்கொண்டவுடன், அவன் சடுதியாய் விழுந்து சாவானென்று பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் பவுல் சாகவில்லை. ஆனாலும் அவன் எப்படியாவது செத்துப்போவான் என்று நினைத்து, அவனை நெடுநேரமாய்ப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். பவுலோ தன்னைப் பார்த்துக்கொண்டிருக்கிற மெலித்தா தீவாரைப் பார்த்துக் கொண்டிருக்கிறான்.

விரியன்பாம்பு பவுலின் கையை கவ்விக்கொண்டது. ஆனால் பவுல் ஒரு தீங்கும் அடையாதிருக்கிறான். கர்த்தர் இந்த ஆபத்திலிருந்து பவுலைப் பாதுகாக்கிறார். மெலித்தா தீவாரோ விரியன்பாம்பு பவுலின் கையைக் கவ்விக்கொண்டதினால், அவனைப்பற்றி பலவிதமாக யோசனைபண்ணிக் கொண்டிருக்கிறார்கள். பவுலின் கையை விரியன்பாம்பு கவ்வியதினால் அவனுக்கு பயமோ, குழப்பமோ உண்டாகவில்லை. பாம்பைப் பார்த்தவுடன் அவன் அலறி கூக்குரலிடவில்லை. அந்த ஆபத்தான சூழ்நிலையிலும் அடுத்து என்னசெய்ய வேண்டுமென்று தெளிந்த சிந்தனையோடு, சிந்தித்து செயல்படுகிறான். இப்படிப்பட்ட சூழ்நிலையில் நிதானமாயும் ஞானமாயும் சிந்தித்துச் செயல்படுவதற்கு நமக்கு தேவனுடைய கிருபை தேவை.

தன்னுடைய கையை விரியன்பாம்பு கவ்விக்கொண்டிருப்பதை பவுல் பார்க்கிறான். விஷப்பூச்சி அவன் கையில் தொங்குகிறது. உடனே அவன் அந்தப் பூச்சியை தீயிலே உதறிப்போடுகிறான். கிறிஸ்துவின் கிருபையினால் அவனுக்குள் பெலனுண்டாயிற்று. கர்த்தர் கொடுத்த பலத்தினால், பவுல் பயப்படாமல் விரியன் பாம்பை தீயிலே உதறிப்போடுகிறான்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நம்மை, சாத்தான் விரியன்பாம்பைப்போல கவ்விக்கொள்ளுவான். நம்மைப் பிடித்துக்கொண்டு தொங்குவான். நம்மைவிடமாட்டான். இப்படிப்பட்ட சோதனையான வேளைகளில் நாம் பயப்படக்கூடாது. பவுல் விரியன்பாம்பை தீயிலே உதறிப்போட்டதுபோல, நாமும் சாத்தானுடைய சோதனைகளை உதறிப் போடவேண்டும். இதற்கு தேவனுடைய கிருபையும் வல்லமையும் நமக்குத் தேவை.

நம்முடைய வாழ்க்கையில் நமக்கு ஏற்படும் ஒவ்வொரு சம்பவங்களையும் பிறர் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நம்மைக்குறித்து வெவ்வேறுவிதமான சிந்தனையோடிருப்பார்கள். நமக்குத் தீங்கு வரும்போது சிலர் நமக்காகப் பரிதாபப்படுவார்கள். சிலர் நம்மைக் குற்றப்படுத்துவார்கள். மனுஷர் நம்மை நிந்தித்தாலும், கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக நம்முடைய மனச்சாட்சி சுத்தமாயிருக்க வேண்டும். சுத்தமனச் சாட்சியுள்ளவர்கள் சோதனையை மேற்கொள்வார்கள். பிறர் நம்மை ஏளனமாய்ப் பேசுகிற பேச்சுக்களையும், குற்றப்படுத்திப் பேசுகிற பேச்சுக்களையும், பவுல் விரியன்பாம்பை தீயிலே உதறிப்போட்டதுபோல, நாமும் தீயிலே உதறிப்போட்டுவிடவேண்டும்.

பவுல் அந்தப் பூச்சியை தீயில் உதறிப்போட்டு ஒரு தீங்கும் அடையாதிருக்கிறான். அதுபோலவே நாமும் பிறருடைய அவப்பேச்சுக்களை, தீயிலே உதறிப்போடுவதுபோல, உதறிப்போட்டுவிட்டால் நாமும் ஒரு தீங்கும் அடையாதிருப்போம். விஷப்பூச்சி பவுலின் கையில் தொங்குகிறதை மெலித்தா தீவார் பார்த்து, அவன் செத்துப்போவானென்று எதிர்பார்த்து, அவனுடைய மரணத்தை எதிர்நோக்கியிருக்கிறார்கள். பவுலின் கையில் தொங்குகிற விஷப்பூச்சி அவனைக் கடித்துவிடும் என்றும், விஷம் அவனைக் கொன்றுபோடும் என்றும், அவனுக்கு வீக்கம் கண்டுவிடும் என்றும், அவன் சடுதியாய் விழுந்து சாவானென்றும் எதிர்பார்த்து ஜனங்கள் பவுலைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் எதிர்பார்த்ததுபோல பவுலுக்கு ஒன்றும் நடைபெறவில்லை. ஆனாலும் தாங்கள் எதிர்பார்க்கிற பிரகாரமாக நடைபெறும் என்று நம்பி, அவர்களெல்லோரும் அவனை நெடு நேரமாய்ப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் பவுலுக்கு ஒரு சேதமும் வரவில்லை. அவன் சேதமில்லாமல் இருப்பதையும் அவர்கள் பார்க்கிறார்கள்.

மெலித்தா தீவார் மத்தியில் தம்முடைய சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட வேண்டுமென்பது கிறிஸ்துவின் சித்தம். தேவன் பவுலுக்கு ஏற்பட்ட இந்தச் சந்தர்ப்பத்தை, தம்முடைய சுவிசேஷம் பிரபல்யமடைவதற்காக பயன்படுத்துகிறார். விரியன்பாம்பு பவுலின் கையைக் கவ்விக்கொண்டபோது, அவன் ஒரு கொலைபாதகனென்றும், இதற்கு சந்தேகமேயில்லை என்றும் சொன்னார்கள். பவுல் அந்த விஷப்பாம்பை தீயிலே உதறிப்போட்டு ஒரு தீங்கும் அடையாதிருக்கிறான். இப்போது அவர்கள் பவுலைப்பார்த்து "இவன் தேவன்" என்று சொல்லுகிறார்கள். தங்கள் வாயினால்தான் பவுலை கொலைபாதகன் என்றார்கள். இப்போது அதே வாயினால் அவனைத் தேவனென்று சொல்லுகிறார்கள்.

மெலித்தா தீவில் ஏராளமான விரியன்பாம்புகள் உள்ளன. பல சமயங்களில் இந்தப் பாம்புகள் மெலித்தா தீவாரைக் கடித்திருக்கிறது. பாம்பு கடித்த எல்லோருமே வீக்கம்கண்டு செத்துப்போயிருக்கிறார்கள். இதுதான் இந்தத் தீவில் இதுவரையிலும் நடந்து வருகிற சம்பவம். ஆனால் இப்போதோ ஒரு புதிய சம்பவம் நடைபெறுகிறது. விரியன்பாம்பு பவுலின் கையைக் கவ்விக்கொண்டது. ஆனால் பவுல் செத்துப்போகவில்லை. அவன் தீயிலே பாம்பை உதறிப்போட்டுவிட்டு, ஒரு தீங்கும் அடையாதிருக்கிறான். இது அவர்களுக்கு புதிய அனுபவமாகயிருக்கிறது. பவுலைக் கொலைபாதகன் என்று நினைத்தவர்கள், இப்போது அவனைத் தேவனென்று சொல்லுகிறார்கள். மனுஷருடைய பேச்சு வேளைக்கு வேளை மாறுபடும். காற்று வெவ்வேறு திசைகளில் அடிப்பதுபோல மனுஷருடைய சிந்தனைகளும் வெவ்வேறு விதமாய் மாறும். அதுபோலவே இங்கும் நடைபெறுகிறது.

புபிலியு

தீவுக்கு முதலாளியாகிய புபிலியு என்னும் பேர்கொண்டவனுடைய நிலங்கள் அந்த இடத்திற்குச் சமீபமாயிருந்தது; அவன் எங்களை ஏற்றுக்கொண்டு, மூன்று நாள் பட்சமாய் விசாரித்தான். புபிலியுவினுடைய தகப்பன் ஜூரத்தினாலும் இரத்தபேதியினாலும் வருத்தப்பட்டுக் கிடந்தான்; பவுல் அவனிடத்திற்குப் போய் ஜெபம்பண்ணி, அவன் மேல் கைகளை வைத்து, அவனைக் குணமாக்கினான். இது நடந்தபின்பு, தீவிலே இருந்த மற்ற வியாதிக்காரரும் வந்து, குணமாக்கப்பட்டார்கள் (அப் 28:7-9).

மெலித்தா தீவுக்கு புபிலியு என்பவன் முதலாளியாகயிருக்கிறான். இவனுடைய தகப்பன் ஜூரத்தினாலும் இரத்தபேதியினாலும் வருத்தப்பட்டுக் கிடக்கிறான். பவுல் அவன்மேல் கைகளை வைத்து, அவனைக் குணப்படுத்துகிறான். இயேசுகிறிஸ்துவின் அற்புத சுகமளிக்கும் வல்லமையினால் புபிலியுவின் தகப்பன் தன் வியாதி நீங்கி சொஸ்தமடைந்திருக்கிறான்.

புபிலியு நற்குணமுள்ளவன். பவுலின் கையை விரியன்பாம்பு கவ்விக்கொண்ட அந்த இடத்திற்கு அருகில் புபிலியுவின் நிலங்கள் இருக்கிறது. புபிலியு பவுலையும் அவனோடுகூட கப்பற்பிரயாணத்தில் தப்பிப்பிழைத்த எல்லோரையும் ஏற்றுக்கொண்டு, மூன்றுநாள் பட்சமாய் விசாரிக்கிறான். அந்நியரை உபசரிக்கிறான். இந்தத் தீவார் அந்நியராகயிருந்தாலும், அந்நியரை உபசரிக்கிற நல்ல சுபாவமுள்ளவர்களாக இருக்கிறார்கள். கர்த்தர் பவுலினிமித்தமாக எல்லோருக்கும் கிருபை கொடுக்கிறார். அவர்கள் தங்குவதற்கு ஸ்தலமும், புசிப்பதற்குப் போஜனம் கொடுத்து அவர்களை ஆதரிக்கிறார். இந்தத் தீவில் புபிலியு ஐசுவரியவானாகயிருக் கிறான். இவனுடைய நற்கிரியைகளும் ஐசுவரியமுள்ளதாயிருக்கிறது.

மெலித்தா தீவில் தம்முடைய வல்லமை வெளிப்படவேண்டுமென்பது தேவனுடைய சித்தமாயிற்று. புபிலியுவினுடைய தகப்பன் இந்தச் சமயத்தில் ஜூரத்தினாலும், இரத்த பேதியினாலும் வருத்தப்பட்டுக்கிடக்கிறான். பல மருத்துவ சிகிச்சைகளை மேற்கொண்டும், இவனுடைய வியாதி குணமடையவில்லை. ஒருவேளை தேவனுடைய நாமம் மகிமைப்படவேண்டும் என்பதற்காக, இவன் இந்த வேளையில் வியாதியாயிருந்திருக்கலாம். புபிலியு பவுலை அன்போடு உபசரித்து விசாரிக்கிறான். இந்த விருந்து உபசரணைக்கு பிரதி உபகாரம் செய்யும் விதமாக, பவுல் புபிலியுவின் தகப்பனுக்காக ஜெபம்பண்ணியிருக்கலாம். அவனுடைய வியாதி நீங்கவேண்டுமென்று அவன்மேல் கைகளை வைத்து அவனுக்காக ஜெபிக்கிறான். இயேசுகிறிஸ்து அந்த மனுஷனை சொஸ்தமாக்குகிறார்.

பவுல் ஒரு மருத்துவனல்ல. அவனிடத்தில் மருந்தோ அல்லது மாத்திரையோ இல்லை. பவுலோடுகூட லூக்காவும் மெலித்தா தீவில் இருக்கிறான். லூக்கா ஒரு வைத்தியன். லூக்காவின் வைத்திய சிகிச்சையினால் புபிலியுவின் தகப்பன் குணமானதாக வேதத்தில் எழுதப்படவில்லை. பவுல் அவனைத் தொட்டு ஜெபம்பண்ணியதினாலேயே, அவன் சொஸ்தமடைகிறான். பவுல் ஒரு மருத்துவனாக இல்லாவிட்டாலும், பரமவைத்தியராகிய இயேசுகிறிஸ்துவுக்காக ஊழியம் செய்கிறவன். பரமவைத்தியரிடத்தில் பவுல் தன் முழுநம்பிக்கையை வைத்திருக்கிறான்.

ஒரு வைத்தியர் வியாதியஸ்தரின் கையைத் தொட்டுப் பார்ப்பதுபோல, பவுல் புபிலியுவின் தகப்பன்மேல் தன் கைகளை வைக்கிறான். அவனுக்கு மருந்து கொடுப்பதற்குப் பதிலாக, பரமவைத்தியராகிய இயேசுகிறிஸ்துவிடம் அந்த மனுஷனுக்காக ஜெபிக்கிறான். அப்போது பவுலின் கையின் மூலமாக கிறிஸ்துவின் குணமாக்கும் வல்லமை புறப்பட்டு வருகிறது. அது புபிலியுவின் தகப்பனிடத்திற்குள் வருகிறது. அந்தத் தெய்வீக வல்லமை அவனைக் குணமாக்குகிறது. அந்த மனுஷன் பூரணகுணமடைகிறான். உடனடியாக குணமடைகிறான்.

புபிலியுவின் தகப்பனுக்கு எத்தனை வயது ஆயிற்று என்பது தெரியவில்லை. அவன் இன்னும் எத்தனை வருஷம் உயிரோடிருப்பான் என்பதும் தெரியவில்லை. அவனுடைய வியாதி குணமடையவில்லையென்றால் அவன் ஜூரத்தினாலும், இரத்தபேதியினாலும் வருத்தப்பட்டு கிடக்கவேண்டியதிருக்கும். இப்போதோ அவன் குணமடைந்து பூரண ஆரோக்கியத்தோடிருக்கிறான். இந்தச் சம்பவத்தை மெலித்தா தீவிலிருக்கிற ஜனங்களெல்லோரும் கேள்விப் படுகிறார்கள். இது ஏதோ ஒரு மூலையில் இரகசியமாக நடைபெற்ற சம்பவமல்ல. எல்லோருக்கும் முன்பாக பிரத்தியட்சமாக நடைபெற்றிருக்கிறது. புபிலியுவின் தகப்பன் குணமடைந்தபின்பு, தீவிலே இருந்த மற்ற வியாதிக்காரரும் பவுலிடத்தில் வருகிறார்கள். பவுல் அவர்களைத் தொட்டு ஜெபிக்கிறான். அவர்களெல்லோரும் தங்கள் வியாதிகளிலிருந்து குணமடைகிறார்கள்.

ஒரு வைத்தியரிடத்தில் வியாதி குணமானால், அந்த வைத்தியரைத் தேடி அநேக வியாதியஸ்தர்கள் வருவார்கள். திறமையுள்ள வைத்தியர்களிடம் ஏராளமான வியாதியஸ்தர்கள் வருவார்கள். அதுபோலவே பவுலிடத்தில் அநேக வியாதிக்காரர் வருகிறார்கள். பவுல் எல்லோரையும் குணமாக்குகிறான்.

மெலித்தா தீவில் கரை சேர்ந்தபோது, இந்த தீவுக்கு தான் எதற்காக வந்தான் என்பது பவுலுக்குத் தெரியாது. இந்தத் தீவாரும் அந்நியர்கள். இவனும் அவர்களுக்கு அந்நியன். பெருங்காற்று அடித்ததினால் இந்தக் கரையில் வந்து சேர்ந்ததாக நினைத்தான். ஆனால் இப்போது நடைபெறுகிற சம்பவங்களையெல்லாம் பார்க்கும்போது, கர்த்தரே தன்னை இந்தத் தீவுக்கு அழைத்து வந்திருப்பதைப் பவுல் புரிந்துகொள்கிறான். இந்தத் தீவில் கர்த்தருக்கு ஊழியம் செய்ய பவுலுக்கு வாய்ப்புண்டாயிற்று. தனக்குக் கிடைத்த வாய்ப்பை அசட்டைபண்ணவில்லை. பவுல் கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்துகிறான்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள், எல்லா இடங்களிலும், எல்லா சூழ்நிலைகளிலும் ஊழியம் செய்ய ஆயத்தமாயிருக்கவேண்டும். அதுபோலவே நன்மை செய்ய மனதுள்ளவர்கள், எல்லா சூழ்நிலைகளிலும் நன்மை செய்ய ஆயத்தமாயிருக்கவேண்டும். மெலித்தா தீவார் மத்தியில் கர்த்தர் தனக்கு ஊழியம் செய்ய கொடுத்த வாய்ப்புக்காக, பவுல் அவரை நன்றியோடு துதிக்கிறான். இந்தத் தீவாரும் அந்நியரை உபசரித்ததினால் ஆசீர்வாதம் பெறுகிறார்கள். நாமும் அந்நியரை உபசரிக்க மறவாதிருக்கவேண்டும். இதனால் சில சமயங்களில் தேவதூதரையும் உபசரிக்கிற சிலாக்கியம் நமக்குக் கிடைக்கும்.

கர்த்தர் தம்முடைய பிள்ளைகளோடு எப்போதும் கூடயிருக்கிறார். நம்முடைய ஆபத்து வேளைகளில் அவர் நம்மை தேடி வந்து விசாரிக்கிறார். நம்மை இரட்சிக்கக்கூடாதபடிக்கு கர்த்தருடைய கரம் ஒருபோதும் குறுகிப்போவதில்லை. கடலில் செல்ல வேண்டிய கப்பல் உடைந்து போனதினால் இவர்களுக்கு ஒரு நஷ்டமும் உண்டாகவில்லை. மிகுந்த ஆசீர்வாதமுண்டாயிற்று. இந்தத் தீவார் பவுலின் சரீர நன்மைகளை விசாரித்தார்கள். அவர்கள் ஆவிக்குரிய நன்மைகளைப் பெற்றுக்கொண்டார்கள்.

அநேக மரியாதை

அவர்கள் எங்களுக்கு அநேக மரியாதை செய்து, நாங்கள் கப்பல் ஏறிப் போகிறபோது எங்களுக்குத் தேவையானவைகளை ஏற்றினார்கள் (அப் 28:10).

மெலித்தா தீவாருக்கு பவுல் மிகவும் உதவியாயிருக்கிறான். அவர்களுடைய வியாதிகளையெல்லாம் குணமாக்குகிறான். பவுல் தங்களுக்குச்செய்த நன்மைக்காக, அந்தத் தீவார் அவனுக்கு பிரதி நன்மை செய்கிறார்கள். பவுலுக்கும் அவனோடுகூட தீவிலே தப்பிக் கரைசேர்ந்த அனைவருக்கும் அவர்கள் அநேக மரியாதை செய்கிறார்கள். பவுல் தங்களுக்குச் செய்த நன்மையை நன்றியுள்ள இருதயத்தோடு நினைத்துப்பார்க்கிறார்கள். அவர்கள் கப்பல் ஏறிப்போகிறபோது, அவர்களுக்குத் தேவையானவைகளை ஏற்றுகிறார்கள்.

மெலித்தா தீவார் தங்களுக்குச் செய்த உபகாரங்களை பவுல் அன்போடு ஏற்றுக்கொள்கிறான். வியாதியஸ்தரை குணப்படுத்தியதற்கு கூலியாக பவுல் இதை அங்கீகரிக்கவில்லை. பவுல் எப்போதுமே கர்த்தரிடத்தில் இலவசமாய்ப் பெற்றதை பிறருக்கு இலவசமாய்க் கொடுக்கிறவன். கப்பல் பிரயாணத்தில் தனக்கும், தன்னோடுகூட பிரயாணம் செய்கிறவர்களுக்கும் தேவைகள் ஏற்படுகிற போது, இந்தப் பொருட்களெல்லாம் உதவியாயிருக்கும் என்று நினைத்து, அவர்கள் கொடுக்கிற பொருட்களை பவுல் அன்போடு ஏற்றுக்கொள்கிறான்.

ரோமாபுரிக்குப் பிரயாணம்
அப் 28 : 11-16

அப் 28:11. மூன்றுமாதம் சென்றபின்பு, அந்தத் தீவிலே மழைகாலத்திற்குத் தங்கியிருந்த மிதுனம் என்னும் அடையாளமுடைய அலெக்சந்திரியா பட்டணத்துக் கப்பலிலே நாங்கள் ஏறிப் புறப்பட்டு,

அப் 28:12. சீரகூசா பட்டணத்தைச் சேர்ந்து, அங்கே மூன்றுநாள் தங்கினோம்.

அப் 28:13. அவ்விடம்விட்டுச் சுற்றியோடி, ரேகியுதுறைமுகத்துக்கு வந்து சேர்ந்தோம். மறுநாளில் தென்றற் காற்றெடுக்கையில் புறப்பட்டு, இரண்டாம் நாள் புத்தேயோலி பட்டணத்திற்கு வந்து,

அப் 28:14. அங்கே சகோதரரைக் கண்டோம்; அவர்கள் எங்களை ஏழுநாள் தங்களிடத்தில் இருக்கும்படி வேண்டிக்கொண்டார்கள்; அந்தப்படி நாங்கள் இருந்து, பின்பு ரோமாபுரிக்குப் போனோம்.

அப் 28:15. அவ்விடத்திலுள்ள சகோதரர்கள் நாங்கள் வருகிற செய்தியைக் கேள்விப்பட்டு, சிலர் அப்பியுபுரம்வரைக்கும், சிலர் மூன்று சத்திரம்வரைக்கும், எங்களுக்கு எதிர்கொண்டுவந்தார்கள்; அவர்களைப் பவுல் கண்டு, தேவனை ஸ்தோத்திரித்துத் தைரியமடைந்தான்.

அப் 28:16. நாங்கள் ரோமாபுரியில் சேர்ந்தபோது, நூற்றுக்கு அதிபதி தன் காவலிலிருந்தவர்களைச் சேனாபதியினிடத்தில் ஒப்புக் கொடுத்தான்; அப்பொழுது பவுல் தன்னைக் காத்திருக்கிற சேவகனுடனே தனித்துக் குடியிருக்கும்படி உத்தரவு பெற்றுக்கொண்டான்.

மூன்றுமாதம் சென்றபின்பு

மூன்றுமாதம் சென்றபின்பு, அந்தத் தீவிலே மழைகாலத்திற்குத் தங்கியிருந்த மிதுனம் என்னும் அடையாளமுடைய அலெக்சந்திரியா பட்டணத்துக் கப்பலிலே நாங்கள் ஏறிப் புறப்பட்டு, (அப் 28:11)

பவுலின் ரோமாபுரி பிரயாணம் மறுபடியும் தொடருகிறது. நீண்ட பிரயாணத்திற்குப் பின்பு பவுல் ரோமாபுரியை அடைகிறான். வழியில் புயல்காற்று வீசிற்று. காற்றில் அடிபட்டு கப்பல் உடைந்துபோயிற்று. கர்த்தர் பவுலுக்குச் சொன்னபிரகாரம் கப்பல் சேதமடையேயல்லாமல், பிராணச்சேதம் யாருக்கும் ஏற்படவில்லை. அவர்களெல்லோரும் உயிர்தப்பி மெலித்தா என்னும் தீவில் கரைசேருகிறார்கள். இங்கிருந்து ரோமாபுரிக்கு பிரயாணம் பண்ணுகிறார்கள். இந்தக் கடற்பிரயாணத்தில் புயல்காற்று எதுவும் வீசவில்லை. கடல் கொந்தளியாமல் அமைதலாயிருக்கிறது.

எல்லோரும் மெலித்தா தீவிலிருந்து புறப்பட்டுப்போகிறார்கள். மறுபடியும் கடற்பிரயாணம் மேற்கொள்வதற்கு தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்கிறார்கள். இதுவரையிலும் புயல்காற்று வீசிற்று. ஆனாலும் பிரயாணத்தைப் பாதியில் நிறுத்திவிடாமல், பிரயாணத்தைத் தொடருகிறார்கள். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திலும் பல பாடுகளும் வேதனைகளும் வரலாம். இவற்றிற்கு மத்தியிலும் நாம் முன்னேறிச் செல்லவேண்டும். கிறிஸ்துவைவிட்டு விலகிப்போய்விடக் கூடாது. விசுவாசத்திலிருந்து பின்வாங்கிப் போய்விடக்கூடாது.

பவுலும் அவனோடு பிரயாணம்பண்ணுகிறவர்களும் மெலித்தா தீவில் மூன்றுமாதம் தங்கியிருக்கிறார்கள். இந்த மூன்று மாதங்களும் மழைக்கால மாதங்களாகும். மழைக்காலத்தில் கடல்பிரயாணம் செய்வது மிகவும் ஆபத்தானது. ஆபத்தான காலத்தில் பிரயாணம்பண்ணுவதற்குப் பதிலாக, ஏற்ற காலத்திற்காக பொறுமையோடு காத்திருப்பது நல்லது. நல்ல துறைமுகத்தில் எல்லோரும் இருந்தபோது, மழைகாலத்தில் கடற்பிரயாணம் போகவேண்டாமென்று பவுல் அவர்களை எச்சரித்தான். ஆனால் அவர்களோ பவுலின் வார்த்தைக்குச் செவி கொடுக்கவில்லை. நூற்றுக்கு அதிபதி மாலுமியையும் கப்பல் எஜமானையும் அதிகமாய் நம்பினான். அவர்களுடைய கப்பல் புயலில் சிக்கிக்கொண்டது. கப்பல் உடைந்துபோயிற்று.

இப்போது அவர்களெல்லோரும் மழைகாலத்தில் மெலித்தா தீவில் இருக்கிறார்கள். பவுலின் எச்சரிப்பையும் மீறி, ஏற்கெனவே மழைகாலத்தில் கடல்பிரயாணம் மேற்கொண்டதினால், அவர்களுக்கு மிகுந்த உபத்திரமுண்டாயிற்று. பல கஷ்டங்களை அனுபவித்தார்கள். இப்போது பழைய துன்ப அனுபவங்களை நினைத்துப்பார்த்து, மழைகாலத்தில் கடல்பிரயாணம் செய்வதைத் தவிர்த்துவிடுகிறார்கள். மழைகாலம் முழுவதிலும் மூன்றுமாதமாக மெலித்தா தீவிலேயே தங்கியிருக்கிறார்கள். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திலும், ஆவியானவர் நம்முடைய அனுபவத்தின் மூலமாக நமக்கு பல சத்தியங்களைக் கற்றுக்கொடுக்கிறார். சில சமயங்களில் ஒரு சிலருக்கு பட்டு அனுபவித்தால்தான் புத்தி வருகிறது. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமோ, வேதத்தில் சொல்லப்பட்டிருக்கும் எச்சரிப்பின் வார்த்தைகளை, இருதயத்தில் வைத்திருந்து, மிகுந்த எச்சரிப்போடு ஜீவிக்கவேண்டும்.

பவுலும் மற்றவர்களும் அலெக்சந்திரியா பட்டணத்தில் கப்பலிலே ஏறி புறப்படுகிறார்கள். இந்தக் கப்பல் மெலித்தா தீவிலே மழைகாலத்திற்குத் தங்கியிருக்கிறது. இக்காலத்தில் கடலில் பிரயாணம்பண்ணுவதற்குப் பதிலாக, இந்தத்தீவில் தங்கியிருப்பது பாதுகாப்பானது என்று நினைத்து, அலெக்சந்திரியா பட்டணத்து கப்பல் இங்கு தங்கியிருக்கிறது. இதுவரையிலும் இரண்டு அலெக்சந்திரியா பட்டணத்து கப்பல்களைப்பற்றி பவுலின் பிரயாணத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒரு கப்பல் உடைந்துபோயிற்று. இப்போது மற்றொரு கப்பலில் பவுலும் மற்றவர்களும் பிரயாணம்பண்ணுகிறார்கள்.

நம்முடைய வாழ்க்கையில் பல சம்பவங்கள் நடைபெறலாம். எல்லா சம்பவங்களும் ஒன்றுபோல் இருப்பதில்லை. எல்லா சம்பவங்களினாலும் ஒரே மாதிரியான நிகழ்வுகளும் உண்டாவதில்லை. இரண்டு கப்பல்களுக்கு அலெக்சந்திரியா பட்டணத்து கப்பல்கள் என்று பேரிடப்பட்டிருந்தாலும், அவ்விரண்டு கப்பல்களில் ஒன்று மாத்திரமே உடைந்துபோயிற்று. கடல்பிரயாணத்திற்கு அது பிரயோஜனமில்லாமல் போயிற்று. மற்றொரு கப்பலோ உடைந்துபோகாமல் பாதுகாப்பாகயிருக்கிறது. அது பவுலின் பிரயாணத்திற்கு உபயோகமாயிருக்கிறது.

அலெக்சந்திரியா பட்டணத்து கப்பலிலே மிதுனம் என்னும் அடையாளம் இருக்கிறது. இந்த அடையாளத்தையுடைய அலெக்சந்திரியா பட்டணத்து கப்பலுக்கு அக்காலத்து துறைமுகங்களில் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படும். சாதாரண கப்பல்களில் கடல்பிரயாணம் செய்வதற்குப் பதிலாக, அலெக்சந்திரியா பட்டணத்து கப்பல்களில் பிரயாணம்பண்ணுவது மிகவும் பாதுகாப்பானது.

புத்தேயோலி பட்டணம்

சீரகூசா பட்டணத்தைச் சேர்ந்து, அங்கே மூன்றுநாள் தங்கினோம். அவ்விடம்விட்டுச் சுற்றியோடி, ரேகியுதுறைமுகத்துக்கு வந்து சேர்ந்தோம். மறுநாளில் தென்றற் காற்றெடுக்கையில் புறப்பட்டு, இரண்டாம் நாள் புத்தேயோலி பட்டணத்திற்கு வந்து, அங்கே சகோதரரைக் கண்டோம்; அவர்கள் எங்களை ஏழுநாள் தங்களிடத்தில் இருக்கும்படி வேண்டிக்கொண்டார்கள்; அந்தப்படி நாங்கள் இருந்து, பின்பு ரோமாபுரிக்குப் போனோம் (அப் 28:12-14).

மெலித்தா தீவிலிருந்து பவுலும் மற்றவர்களும் அலெக்சந்திரியா பட்டணத்து கப்பலில் ஏறி புறப்பட்டுப்போகிறார்கள். ரோமாபுரியை நோக்கி இந்தப் பிரயாணம் மேற்கொள்ளப்படுகிறது. இத்தாலி தேசத்திலுள்ள புத்தேயோலி பட்டணம் வரைக்கும் இந்தக் கப்பலில் பிரயாணம் செய்யலாம். இவர்களெல்லோரும் மெலித்தா தீவிலிருந்து புறப்பட்டு சீரகூசா பட்டணத்திற்கு வருகிறார்கள். இது சிசிலியா தேசத்திலுள்ள பிரசித்திப்பெற்ற பட்டணம். இதுவே சிசிலி தீவின் தலைநகரம். இங்கு இவர்கள் மூன்றுநாட்களாக தங்கியிருக்கிறார்கள்.

சீரகூசா பட்டணத்திலிருந்து ரேகியு துறைமுகத்திற்கு வருகிறார்கள். இது இத்தாலி தேசத்திலுள்ள பட்டணம். ஒருநாள் தங்கியிருக்கிறார்கள். இந்தத் துறைமுகப்பட்டணத்தில் இவர்களுக்கு அதிகமான வேலையிருந்ததாக தெரியவில்லை. இங்கு நங்கூரம் பாய்ச்சி ஒரு நாள் தங்கியிருக்கிறார்கள். ரேகியு துறைமுகத்திலிருந்து மறுநாளில் தென்றல் காற்று எடுக்கையில் புறப்பட்டு இரண்டாம்நாள் புத்தேயோலி பட்டணத்திற்கு வந்து சேருகிறார்கள். இது நேப்பல்ஸ் பட்டணத்திற்கு அருகிலுள்ள துறைமுகப்பட்டணம்.

மெலித்தா தீவிலிருந்து புறப்பட்ட அலெக்சந்தரியா பட்டணத்து கப்பல் புத்தேயோலி பட்டணம் வரைக்கும் கடலில் பிரயாணம் பண்ணக்கூடியது. இங்கு பவுலும் மற்றவர்களும் கப்பலிலிருந்து இறக்கிவிடப்படுகிறார்கள். ரோமாபுரிக்குப் போக புத்தேயோலி பட்டணத்திலிருந்து தரைமார்க்கமாகப் போகவேண்டும். புத்தேயோலி பட்டணம் வரையில் மாத்திரமே கடல்பிரயாணம் மேற்கொள்ள முடியும். பவுலின் கப்பல் பிரயாணம் புத்தேயோலி பட்டணத்தோடு முடிவுபெறுகிறது.

புத்தேயோலி பட்டணத்தில் பவுலும் அவனோடு பிரயாணம் செய்கிற சீஷர்களும், ஒரு சில சகோதரர்களைக் காண்கிறார்கள். இவர்களுக்கு கிறிஸ்துவைப்பற்றிய சத்தியத்தை இந்தப் பட்டணத்தில் வந்து யார் அறிவித்தார்கள் என்பது தெரியவில்லை. தேவனுடைய ராஜ்யம் புளித்த மாவைப்போன்றது. கொஞ்சம் புளித்தமா அதிகம் மாவைப் புளிப்புள்ளதாக்கும். அதுபோலவே யூதேயா தேசத்தில் பிரசங்கிக்கப்பட்ட கிறிஸ்துவின் சுவிசேஷம் புத்தேயோலி பட்டணம் வரைக்கும் வந்து சேர்ந்திருக்கிறது. தேவனுடைய ஜனங்கள் எல்லா இடங்களிலுமிருக்கிறார்கள். சில இடங்களில் விசுவாசிகளே இருக்கமாட்டார்கள் என்று நாம் நினைப்போம். ஆனால் அங்கும் சில விசுவாசிகள் இருப்பார்கள்.

புத்தேயோலி பட்டணத்தில் ஒருவேளை ஒரு சில விசுவாசிகள் மாத்திரமே இருந்திருக்கலாம். அவர்கள் கொஞ்சம் பேராகயிருந்தாலும் பவுல் அவர்களையும் தேடி கண்டுபிடித்து விடுகிறான். விசுவாசிகளைக் கண்டுபிடிப்பது மிகவும் எளிது. பரிசுத்த ஆவியானவர் சகவிசுவாசிகளைக் கண்டுபிடிப்பதற்கு நமக்கு உதவிபுரிவார். நாம் எந்த ஊருக்குப்போனாலும், அந்த ஊரிலுள்ள விசுவாசிகளைத் தேடிக்கண்டுபிடித்து அவர்களோடு ஐக்கியமாகயிருக்கவேண்டும். நாம் சொந்த தேசத்திலிருந்தாலும், அந்நிய தேசத்திற்குப் போனாலும் அங்குள்ள விசுவாசிகளோடு ஐக்கியமாகயிருக்கவேண்டும்.

புத்தேயோலி பட்டணத்திலுள்ள விசுவாசிகள், பவுலையும் அவனோடு கூடயிருக்கிற சீஷரையும் தங்களிடத்தில் ஏழுநாள் இருக்கும்படி வேண்டிக் கொள்கிறார்கள். வாரத்தின் முதலாம் நாளாகிய கர்த்தருடைய நாளில் பவுல் தங்களோடிருக்கவேண்டுமென்று அவர்கள் விரும்புகிறார்கள். பவுல் அவர்களோடு கூடயிருப்பதற்கு சம்மதம் தெரிவிக்கிறான். பவுல் காவலிலிருக்கிறான். நூற்றுக்கு அதிபதி அனுமதி கொடுத்தால் மாத்திரமே அவனால் புத்தேயோலி பட்டணத்தில் ஏழுநாள் தங்கியிருக்க முடியும். நூற்றுக்கு அதிபதி பவுலின் விண்ணப்பத்திற்குச் செவிகொடுத்து, அங்கே ஏழுநாள் தங்கியிருப்பதற்கு அனுமதி கொடுக்கிறான். அதன்பின்பு பவுல் புத்தேயோலி பட்டணத்திலிருந்து ரோமாபுரிக்குப் புறப்பட்டுப்போகிறான். ரோமாபுரியே பவுலுடைய பிரயாணத்தின் கடைசிபாகம்.

அப்பியுபுரம்

அவ்விடத்திலுள்ள சகோதரர்கள் நாங்கள் வருகிற செய்தியைக் கேள்விப்பட்டு, சிலர் அப்பியுபுரம் வரைக்கும், சிலர் மூன்று சத்திரம் வரைக்கும், எங்களுக்கு எதிர்கொண்டு வந்தார்கள்; அவர்களைப் பவுல் கண்டு, தேவனை ஸ்தோத்திரித்துத் தைரியமடைந்தான் (அப் 28:15).

ரோமாபுரியிலுள்ள விசுவாசிகள் பவுலைப்பற்றி அநேக நற்செய்திகளைக் கேள்விப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் பவுலுக்கு வரவேற்பு கொடுக்கிறார்கள். கிறிஸ்துவின் ராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்கு பவுல் செய்திருக்கிற எல்லா ஊழியங்களைப்பற்றியும் அவர்கள் கேள்விப்பட்டிருக்கிறார்கள். பவுல் அனுபவித்த பாடுகளையும், வேதனைகளையும், அவன் சந்தித்த போராட்டங்களையும் அவர்கள் கேள்விப்பட்டிருக்கிறார்கள். தேவன் பவுலை ஆட்கொண்டு, தம்முடைய ஊழியத்தில் வல்லமையாய் பயன்படுத்துகிறதையும் அவர்கள் கேள்விப்பட்டிருக்கிறார்கள். ஆகையினால் கர்த்தருடைய ஊழியக்காரனாகிய பவுலுக்கு, மரியாதை காண்பிக்கும் விதமாக அவனை வரவேற்கிறார்கள்.

பவுல் ரோமாபுரிக்கு வருவதற்கு முன்பாக, அவர்களுக்கு ஒரு நிருபத்தை எழுதியிருந்தான். அந்த நிருபத்தை வாசித்து, அதில் பவுல் தங்களுக்குச் சொல்லியிருக்கிற ஆலோசனைகளைப் படித்து, ஆசீர்வாதம் பெற்று, அதற்காகவும் அவர்கள் பவுலுக்கு மரியாதை காண்பிக்கிறார்கள். பவுல் ரோமாபுரிக்கு வருகிற செய்தியைக் கேள்விப்பட்டு, அவனையும் அவனோடுகூட வருகிற மற்ற சீஷரையும் வரவேற்பதற்காக வருகிறார்கள். பவுல் காவலில் வைக்கப் பட்டவனாகயிருந்தாலும், அவனுக்கு மரியாதையும் வரவேற்பும் கொடுக்கிறார்கள். ரோமாபுரியிலிருந்து அவனை வரவேற்பதற்காக வந்த ஒரு சிலர், அப்பியுபுரம் வரைக்கும் வந்து பவுலை வரவேற்கிறார்கள். அப்பியுபுரம் ரோமாபுரியிலிருந்து ஐம்பத்தொரு மைல் தூரத்திலிலுள்ளது. ரோமாபுரியிலுள்ள விசுவாசிகளில் சிலர் மூன்று சத்திரம் வரைக்கும் வந்து பவுலை வரவேற்கிறார்கள்.

பவுல் காவலில் வைக்கப் பட்டவனாகயிருந்தாலும், ரோமாபுரியிலுள்ள விசுவாசிகள் பவுலின் காவலைக் குறித்து வெட்கப்படவில்லை. அவனை அன்போடு வரவேற்க வருகிறார்கள். இதனால் பவுலின் சந்தோஷம் இரட்டிப்பாகிறது. ரோமாபுரி விசுவாசிகள் அவனுக்கு இரட்டிப்பான மேன்மையை கொடுக்கிறார்கள்.

ரோமாபுரியிலிருந்து சீஷர்கள் பவுலை வரவேற்க வருவது அவனுக்கு ஆறுதலாகயிருக்கிறது. பவுல் இப்போது ரோமாபுரிக்கு அருகாமையில் வந்துவிடுகிறான். இராயருக்கு அபயமிட்டிருக்கிறான். இதன் விளைவு என்ன ஆகுமோ என்பது பவுலுக்குத் தெரியாது. இராயருக்கு அபயமிட்டது தன்னுடைய தவறான முடிவாக இருக்குமோ என்னும் எண்ணம் பவுலின் மனதில் இருந்திருக்கலாம். இராயருக்கு அபயமிடாதிருந்திருந்தால், ரோமாபுரிக்கு காவலில் வைக்கப்படாமல், விடுதலையோடு வந்திருக்கலாம். பவுல் இப்படிப்பட்ட சிந்தனைகளினால் நிரம்பி, உள்ளத்தில் சோர்வடைந்தவனாக ரோமாபுரிக்கு வருகிறான்.

ரோமாபுரியில் பவுலுக்கு என்ன நேரிடும் என்பது அவனுக்கே தெரியாது. இதை நினைத்து அவனுடைய உள்ளமும் சோர்ந்துபோயிற்று. இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் ரோமாபுரியிலுள்ள விசுவாச சகோதரர்கள், பவுல் வருகிற செய்தியைக் கேள்விப்பட்டு, அவனைச் சந்திப்பதற்கு எதிர்கொண்டு வருகிறார்கள். பவுல் அவர்களைக் காண்கிறான். அவர்களைக் காணும் சிலாக்கியத்திற்காக தேவனை ஸ்தோத்திரித்து தைரியமடைகிறான். நம்முடைய சிநேகிதர்கள் நம்மோடு அன்பாகவும் பிரியமாகவும் இருக்கிறார்களென்றால், அதற்கு தேவனே முக்கிய காரணம். தேவனுடைய கிருபையினால்தான் அவர்கள் நம்மீது அன்பு செலுத்துகிறார்கள். அதற்காக நாம் தேவனை ஸ்தோத்திரிக்கவேண்டும்.

பவுல் புத்தேயோலி பட்டணத்திலிருந்து, ரோமாபுரிக்கு அருகிலுள்ள அப்பியுபுரம் வரைக்கும் வரும்போது, அங்கு ரோமாபுரியிலிருந்து தன்னை வரவேற்பதற்கு வந்திருக்கிற அநேக விசுவாசிகளைக் காண்கிறான். கிறிஸ்துவின் சுவிசேஷம் ரோமாபுரி வரையிலும் பரவியிருப்பதற்காக கர்த்தரைத் துதிக்கிறான். ரோமப்பேரரசின் தலைநகரமாக விளங்குகிற ரோமாபுரிக்கே சுவிசேஷம் வந்து சேர்ந்திருக்கிறது.

நாம் இந்த உலகத்தில் எந்த தேசத்திற்குப் போனாலும், அங்கு கிறிஸ்துவின் விசுவாசிகளைக் காண முடியும். அது இந்தப் பூமியின் எந்த ஓரத்திலுள்ள ஊராகயிருந்தாலும், அந்த ஊரிலும் கிறிஸ்துவுக்குச் சாட்சியாக யாராவது இருக்கிறார்கள். அவர்கள் தேவனுக்குப் பயந்து ஜீவிக்கிறார்கள். எல்லா இடங்களிலும் கர்த்தருடைய பிள்ளைகள் இருப்பதற்காக நாம் கர்த்தரை நன்றியோடு துதிக்கவேண்டும். இந்தப் பூமியில் துன்மார்க்கர் ஏராளமானோர் இருந்தாலும், கர்த்தருடைய பிள்ளைகளும் இந்தப் பூமியில் பரவியிருக்கிறார்கள். அதற்காக பரலோகத்தின் தேவனை நாம் நன்றியோடு துதிக்கவேண்டும்.

ரோமாபுரியிலிருந்து தன்னைச் சந்திப்பதற்காக வந்திருக்கிற விசுவாச சகோதரர்களைக் கண்டு பவுல் தைரியமடைகிறான். சோர்ந்துபோயிருக்கிற அவனுக்கு புதிய தெம்பும் உற்சாகமும் உண்டாயிற்று. அவனுக்குள் புதிய ஜீவன் பிரவேசித்திருக்கிறது. பவுல் கட்டப் பட்டவனாகயிருந்தாலும் ரோமாபுரிக்குள் உற்சாகமாகப் பிரவேசிக்கிறான். எருசலேமில் விடுதலையோடு உற்சாகமாகப் பிரவேசித்ததுபோல, இப்போது கட்டப்பட்டிருந்தாலும் ரோமாபுரிக்குள் உற்சாகமாய் பிரவேசிக்கிறான்.

ரோமாபுரியில் பவுலை நேசிக்கிறவர்கள் இருக்கிறார்கள். பவுலை மதிக்கிறவர்கள் இருக்கிறார்கள். தன்னைப் போல இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் இருக்கிறார்கள். இந்தப் பூமியில் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் எல்லோருமே பரலோகத்தை நோக்கி பிரயாணம் பண்ணுகிறோம். இந்தப் பிரயாணத்தில் நம்மோடு பரலோகத்திற்கு பிரயாணம் செய்கிற உடன் பிரயாணிகளை காணும்போது நமக்குள் சந்தோஷமும் ஆறுதலும் உண்டாகவேண்டும். இந்தப் பூமியில் கர்த்தருடைய பிள்ளைகள் அநேகரை நாம் காணும்போது அதற்காக கர்த்தரை ஸ்தோத்திரம்பண்ணவேண்டும். நம்முடைய உள்ளத்தில் தைரியமடையவேண்டும்.

ரோமாபுரியில் சேர்ந்தபோது

நாங்கள் ரோமாபுரியில் சேர்ந்தபோது, நூற்றுக்கு அதிபதி தன் காவலிலிருந்தவர்களைச் சேனாபதியினிடத்தில் ஒப்புக் கொடுத்தான்; அப்பொழுது பவுல் தன்னைக் காத்திருக்கிற சேவகனுடனே தனித்துக் குடியிருக்கும்படி உத்தரவு பெற்றுக்கொண்டான் (அப் 28:16).

பவுலின் ரோமாபுரி பிரயாணம் முடிவு பெறுகிறது. பவுலோடு கூட வந்த நூற்றுக்கு அதிபதி, பவுலை சேனாபதியினிடத்தில் ஒப்புக்கொடுக்கிறான். பவுல் இன்னும் காவலில் வைக்கப்பட்டவனாகவே இருக்கிறான். ரோமாபுரிக்கு வரவேண்டுமென்பது பவுலின் நீண்டநாள் விருப்பம். ஆனால் இங்கு வந்தபோதோ, அவன் சேனாபதியிடம் ஒப்புக்கொடுக்கப் படுகிறான். சேனாபதி எந்த அளவுக்கு அனுமதி கொடுக்கிறானோ, அந்த அளவுக்கு மாத்திரமே பவுலினால் ரோமாபுரிக்குள் பிரவேசிக்க முடியும்.

ரோமாபுரியில் ஏராளமானோர் இருக்கிறார்கள். கிரீடம் தரித்தவர்கள், வெற்றிவாகை சூடியவர்கள், ஐசுவரியவான்கள் அநேகர் ரோமாபுரியிலிருக்கிறார்கள். இவர்கள்தான் மெய்யாகவே சமுதாயத்திற்கு கொள்ளை நோயாக இருக்கிறவர்கள். பவுலோ சமுதாயத்திற்கு ஆசீர்வாதமாகயிருக்கிறவன். ஆனால் இந்தப் பவுலோ கட்டப்பட்டவனாக இருக்கிறான்.

ரோமாபுரிக்கு ஏராளமானோர் வருகிறார்கள். அவர்களில் பவுலும் ஒருவன். பவுல் நற்குணமுள்ளவன். ஆனால் இப்போது கட்டப்பட்டிருக்கிறான். நாம் இந்தப் பிரபஞ்சத்தில் கர்த்தருடைய கிருபையை உபதேசம் பண்ணுகிறோம். இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் ஜனங்களை ஆசீர்வதிக்கிறோம். ஜனங்களுக்கு நன்மை செய்கிறோம். இப்பிரபஞ்சத்தின் ஜனங்களைப்போல நமக்கு ஐசுவரியமோ, உயர்பதவியோ, உயர்கல்வியோ இல்லாமலிருக்கலாம். ஆனாலும் கர்த்தர் நம்மையும் தம்முடைய ஊழியத்தில் பயன்படுத்துகிறார்.

பவுல் கட்டப்பட்டவனாகயிருந்தாலும், கர்த்தர் இங்கும் அவனுக்கு தம்முடைய கிருபையை வெளிப்படுத்துகிறார். பவுல் சிறைச்சாலையில் அடைக்கப்படவில்லை. பவுல் தன்னைக் காத்திருக்கிற சேவகனுடனே தனித்து குடியிருக்கும்படி உத்தரவு பெற்றுக்கொள்கிறான். பவுலின் காவலுக்கு சேனாபதி ஒரு சேவகனை நியமித்திருக்கிறான். பவுல் அவனுடைய வீட்டில் போய் தனித்து குடியிருக்கிறான். பவுல் காவல்பண்ணப் பட்டவனாகயிருந்தாலும் அவனுக்கு சேவகனுடைய வீட்டில் தனித்து குடியிருக்கிற விடுதலையும் கிடைத்திருக்கிறது. பவுலைக் காவலில் அடைத்து வைக்கவேண்டியவன், அவனுக்கு சலுகை காண்பிக்கிறான். சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்தால் பவுலின் நிலமை மிகவும் பரிதாபமாகயிருந்திருக்கும். அப்படிப்பட்ட வேதனையிலிருந்து கர்த்தர் பவுலைப் பாதுகாக்கிறார். பவுல் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருப்பதற்குப் பதிலாக, ஒரு வீட்டில் தனித்து குடியிருக்கிறான். இதுவும் கர்த்தருடைய அநுக்கிரகமே. இதற்காகப் பவுல் கர்த்தரைத் துதிக்கிறான்.

யூதரோடு சம்பாஷணை
அப் 28 : 17-22

அப் 28:17. மூன்றுநாளைக்குப்பின்பு, பவுல் யூதரில் பிரதானமானவர்களை வரவழைத்தான்; அவர்கள் கூடிவந்திருந்தபோது, அவன் அவர்களை நோக்கி: சகோதரரே, நம்முடைய ஜனங்களுக்கும் நம்முடைய முன்னோர்களின் முறைமைகளுக்கும் விரோதமானதொன்றையும் நான் செய்யாமலிருந்தும், கட்டப்பட்டவனாக எருசலேமிலிருந்து ரோமர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்பட்டேன்.

அப் 28:18. அவர்கள் என்னை நியாயம் விசாரித்தபோது மரணத்துக்கேதுவான குற்றம் ஒன்றும் என்னிடத்தில் காணாதபடியினால், என்னை விடுதலையாக்க மனதாயிருந்தார்கள்.

அப் 28:19. யூதர்கள் அதற்கு எதிர்பேசினபோது, நான் இராயனுக்கு அபயமிட வேண்டியதாயிருந்தது; ஆயினும் என் ஜனத்தார்மேல் யாதொரு குற்றஞ் சாட்ட வேண்டுமென்று நான் அப்படிச் செய்யவில்லை.

அப் 28:20. இந்தக் காரியத்தினிமித்தமே உங்களைக் காணவும் உங்களுடனே பேசவும் உங்களை அழைப்பித்தேன். இஸ்ரவேலுடைய நம்பிக்கைக்காகவே இந்தச் சங்கிலியால் கட்டப்பட்டிருக்கிறேன் என்றான்.

அப் 28:21. அதற்கு அவர்கள்: உன்னைக்குறித்து யூதேயாவிலிருந்து எங்களுக்குக் காகிதம் வரவுமில்லை, வந்த சகோதரரில் ஒருவனும் உன்பேரில் ஒரு பொல்லாங்கை அறிவித்ததுமில்லை, அதைப்பற்றிப் பேசினதுமில்லை.

அப் 28:22. எங்கும் இந்த மதபேதத்துக்கு விரோதமாய்ப் பேசுகிறதாக நாங்கள் அறிந்திருக்கிறபடியால், இதைக்குறித்து உன்னுடைய அபிப்பிராயம் என்னவென்று கேட்டறிய விரும்புகிறோம் என்றார்கள்.

யூதரில் பிரதானமானவர்கள்

மூன்றுநாளைக்குப்பின்பு, பவுல் யூதரில் பிரதானமானவர்களை வரவழைத்தான்; அவர்கள் கூடி வந்திருந்தபோது, அவன் அவர்களை நோக்கி: சகோதரரே, நம்முடைய ஜனங்களுக்கும் நம்முடைய முன்னோர்களின் முறைமைகளுக்கும் விரோதமானதொன்றையும் நான் செய்யாமலிருந்தும், கட்டப்பட்டவனாக எருசலேமிலிருந்து ரோமர் கைகளில் ஒப்புக் கொடுக்கப்பட்டேன் (அப் 28:17).

ரோமாபுரியிலுள்ள யூதர்களிடத்தில் பவுல் தன் பக்கத்திலுள்ள நியாயத்தை எடுத்துப் பேசுகிறான். பவுல் இப்போது ஒரு சேவகனுடனே தனித்து குடியிருக்கிறான். ரோமாபுரியில் யூதரில் பிரதானமானவர்களை பவுல் தன்னிடத்தில் வரவழைக்கிறான். அவர்களெல்லோரும் பவுல் குடியிருக்கிற சேவகனுடைய வீட்டிற்கு கூடிவருகிறார்கள். தனக்கும் அவர்களுக்கும் இடையில் கருத்து வேறுபாடு இருக்கக்கூடாது என்று பவுல் விரும்புகிறான். அவர்களுடைய உள்ளத்தில் தன்னைக்குறித்து ஏதாவது சந்தேகமோ, அல்லது தவறான அபிப்பிராயமோ இருக்குமானால் அவற்றை தீர்த்து வைத்துவிடவேண்டுமென்று பவுல் விரும்புகிறான்.

தன்னிடத்தில் ஒரு குற்றமும் இல்லையென்றும், தான் குற்றமற்ற நிரபராதி என்றும் பவுல் அவர்களுக்கு எடுத்துச்சொல்லுகிறான். "நம்முடைய ஜனங்களுக்கும் நம்முடைய முன்னோர்களின் முறைமைகளுக்கும் விரோதமானதொன்றையும் நான் செய்யவில்லை" என்று அவர்களிடத்தில் அறிக்கை செய்கிறான். யூதர்களுடைய முன்னோர்களின் முறைமைகளைப் பவுல் புறஜாதியார் மத்தியில் திணிக்கவில்லை. புறஜாதியார் யூதருடைய முன்னோர்களின் முறைமைகளைக் கைக்கொள்ளவேண்டும் என்னும் அவசியமுமில்லை. அதேவேளையில் பவுல் யூதருடைய முன்னோர்களின் முறைமைகளுக்கு விரோதமான தொன்றையும் செய்யவுமில்லை. பவுல் முன்னோர்களின் முறைமைகளை ஏற்றுக்கொள்கிறான்.

தன்னிடத்தில் ஒரு தப்பிதமும் இல்லாதபோதிலும், தான் கட்டப்பட்டவனாக எருசலேமிலிருந்து ரோமர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்பட்டிருப்பதாக, பவுல் தன் நிலமையை யூதரில் பிரதானமானவர்களிடத்தில் எடுத்துச் சொல்லுகிறான். தன்னைப்பற்றிய முழுசெய்தியையும் பவுல் அவர்களிடத்தில் உண்மையாகச் சொல்வானென்றால், இதனால் யூதர்களுக்கு அவப்பெயர் உண்டாகும். பவுலுக்கு விரோதமாக அவர்கள் செய்த சர்ப்பனையான சதியோசனைகளையெல்லாம் பவுல் சொல்லவேண்டியிருக்கும். ரோமர்கள் பவுலை பாதுகாக்கவில்லையென்றால் யூதர்கள் அவனை இந்நேரம் கொன்றுபோட்டிருப்பார்கள். பவுலை ஒரு குற்றவாளியென்றும், பூச்சக்கரத்திற்கு கொள்ளைநோயாக இருக்கிறான் என்றும் தேசாதிபதியாகிய பேலிக்ஸிற்கு முன்பாக பவுலின் மீது குற்றம் சுமத்தினார்கள். முடிவில் யூதர்களே பவுலை ரோமருடைய கைகளில் ஒப்புக்கொடுத்துவிடுகிறார்கள்.

விடுதலையாக்க மனதாயிருந்தார்கள்

அவர்கள் என்னை நியாயம் விசாரித்தபோது மரணத்துக்கேதுவான குற்றம் ஒன்றும் என்னிடத்தில் காணாதபடியினால், என்னை விடுதலையாக்க மனதாயிருந்தார்கள் (அப் 28:18).

ரோமப்பேரரசின் நியாயாசனத்திற்கு முன்பாக பவுல் விசாரிக்கப்பட்டான். பவுலிடத்தில் மரணத்திற்கேதுவான குற்றம் ஒன்றையும் அவர்கள் கண்டுபிடிக்கவில்லை. தேசாதிபதி பவுலை விசாரித்தான். அவன்மீது சுமத்தப்பட்ட எல்லா குற்றச்சாட்டுக்களையும் பற்றி கேட்டுத் தெரிந்துகொண்டான். சேனாபதியும், பேலிக்சும், பெஸ்துவும், அகிரிப்பா ராஜாவும் பவுலை விசாரித்தார்கள். இவர்களில் யாரும் பவுலிடத்தில் மரணத்திற்கேதுவான குற்றம் ஒன்றையும் கண்டுபிடிக்கவில்லை. பவுல் குற்றமற்றவனாக இருக்கிறபடியினால் அவனை விடுதலையாக்க மனதாயிருந்தார்கள். ஆனால் யூதர்களோ பவுலை கொன்றுபோட மனதாயிருந்தார்கள். பவுலுக்கு விரோதமாக அவர்கள் கொலை வெறியோடிருந்தார்கள். குற்றமற்ற பவுலின் இரத்தத்தை சிந்த அவர்கள் ஒன்றுகூடி வந்தார்கள்.

இராயனுக்கு அபயம்

யூதர்கள் அதற்கு எதிர்பேசினபோது, நான் இராயனுக்கு அபயமிட வேண்டியதாயிருந்தது; ஆயினும் என் ஜனத்தார்மேல் யாதொரு குற்றஞ் சாட்ட வேண்டுமென்று நான் அப்படிச் செய்யவில்லை (அப் 28:19).

ரோமருடைய தேசாதிபதிகள் பவுலிடத்தில் மரணத்திற்கேதுவான குற்றம் ஒன்றும் காணவில்லை. அவனை விடுதலையாக்க மனதாயிருந்தார்கள். ஆனால் யூதர்களோ பவுலை விசாரணைக்காக எருசலேமுக்கு அழைத்துவந்து, வரும்வழியில், அவனைக் கொன்றுபோட சர்ப்பனையான யோசனை பண்ணினார்கள். கொலை வெறியோடிருக்கும் யூதர்களிடத்திலிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்வதற்காக, பவுல் தன்னுடைய வழக்கு விசாரணையை இராயருடைய நீதிமன்றத்தில் விசாரிக்கவேண்டுமென்று அபயமிட்டான். பவுல் தன்னுடைய பாதுகாப்புக்காகவே இராயனுக்கு அபயமிட வேண்டியதாயிருந்தது. யூதஜனத்தார்மேல் யாதொரு குற்றம்சாட்ட வேண்டுமென்று பவுல் அப்படிச் செய்யவில்லை.

யூதருடைய தேசத்தின்மேல் குற்றம் சுமத்தினால், யூதர்களெல்லோரும் பவுலுக்கு விரோதமாக எழும்புவார்கள். பவுல் ஒருபோதும் யூததேசத்தின்மீதோ அல்லது யூதஜனத்தார் மீதோ குற்றம்சாட்டவில்லை. பவுல் யூதர்களுக்காக பரிந்து பேசுகிறவன். அவர்களுக்கு விரோதமாக ஒருபோதும் பேசாதவன். பவுலின் விசாரணை நடந்துகொண்டிருக்கிற இக்காலத்தில், ரோமப்பேரரசுக்கு யூததேசத்தின்மீது தப்பான அபிப்பிராயம் இருந்தது. இந்த சூழ்நிலையில் யூததேசத்திற்கும் யூதஜனத்தாருக்கும் விரோதமாக, அவர்கள்மீது இராயருக்கு முன்பாக குற்றம் சுமத்துவது பவுலுக்கு மிகவும் எளிதான காரியம். இராயரும் அதை நம்பிவிடுவார். இராயர் ஏற்கெனவே யூதேயா தேசத்தின்மீது கோபமாயிருக்கிறார்.

பவுல் யூதர்கள்மீது குற்றஞ்சாட்டினால், யூதஜனத்தார் மீது இராயருடைய கோபம் அதிகரிக்கும். இராயர் பவுலின்மீது பட்சமாயிருப்பதற்கு வாய்ப்புண்டாகும். ஆனால் பவுலோ இராயருக்கு அபயமிட்டதினால் தனக்கு சுயஆதாயம் எதையும் தேடவில்லை. தன்னுடைய சுயபாதுகாப்புக்காகவே பவுல் இராயருக்கு அபயமிடவேண்டியதாயிற்று. பவுல் ஒருபோதும் யூதஜனத்தாருக்கு விரோதமாக இராயரிடத்தில் அபயமிட்டதில்லை. பவுல் இப்படிப்பட்ட தீயகாரியங்களைச் செய்வதுமில்லை. மற்றவர்களைக் கெடுத்துத்தான் வாழவேண்டும் என்னும் தீயஎண்ணம் பவுலிடத்திலில்லை. எல்லோரும் நன்றாயிருக்கவேண்டும் என்பதே பவுலின் விருப்பம். யூதர்கள் தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்று நன்றாயிருக்கவேண்டும் என்றுதான் பவுல் அவர்கள் மத்தியில் ஊழியம் செய்கிறான். அவர்கள் கெட்டுப்போவதோ அல்லது அழிந்துபோவதோ பவுலின் விருப்பமல்ல.

சங்கிலியால் கட்டப்பட்டிருக்கிறேன்

இந்தக் காரியத்தினிமித்தமே உங்களைக் காணவும் உங்களுடனே பேசவும் உங்களை அழைப்பித்தேன். இஸ்ரவேலுடைய நம்பிக்கைக்காகவே இந்தச் சங்கிலியால் கட்டப்பட்டிருக்கிறேன் என்றான் (அப் 28:20).

பவுல் ரோமாபுரியில் சங்கிலியால் கட்டப்பட்டிருக்கிறான். தான் இவ்வாறு கட்டப்பட்டிருப்பதற்கான காரணத்தையும் பவுல் யூதரில் பிரதானமானவர்களுக்கு அறிவிக்கிறான். பவுல் இவர்களிடத்தில் வாக்குவாதம் பண்ணுவதற்காகவோ, சண்டைபண்ணுவதற்காகவோ இவர்களை தன்னிடத்தில் அழைப்பிக்கவில்லை. தன்னுடைய சொந்த தேசத்தாரைப்பார்த்து, அவர்களைக் காணவும், அவர்களுடனே பேசவும் விரும்பியே பவுல் அவர்களை அழைத்திருக்கிறான். ஏனெனில் இஸ்ரவேலுடைய நம்பிக்கைக்காகவே பவுல் இந்தச் சங்கிலியால் கட்டப்பட்டிருக்கிறான்.

பவுல் சேவகனுடைய வீட்டில் தனித்து குடியிருக்கிறான். ஒருவேளை இங்கும் இவன் சங்கிலியால் கட்டப்பட்டிருக்கவேண்டும். பவுல் காவலில் வைக்கப்பட்டிருக்கிறான். சிறைச்சாலையில் காவல்பண்ணப்படும்போது, கைதிகளை சங்கிலிகளால் கட்டுவது வழக்கம். பவுலோ இப்போது சேவகனுடைய வீட்டில் தனித்து குடியிருக்கிறான். சேவகனுடைய விருந்தாளியாக அல்ல, இங்கும் காவல்பண்ணப்பட்ட கைதியாகவே இவனுடைய வீட்டிலிருக்கிறான். காவலுக்கு அடையாளமாக ஒருவேளை பவுலின் கைகளை சங்கிலிகளினால் கட்டியிருக்கலாம்.

மேசியா வருவார் என்பது இஸ்ரவேலுடைய நம்பிக்கை. அந்த மேசியா வந்துவிட்டார் என்னும் நற்செய்தியை பவுல் அவர்களுக்கு பிரசங்கம்பண்ணினான். இஸ்ரவேலர் எதிர்பார்க்கிற மேசியாவே இஸ்ரவேல் ஜனங்களுக்கு மகிமையாக இருக்கிறவர். இதை யூதர்களெல்லோரும் அங்கீகரிப்பார்கள்.

பவுலும் அவர்கள் எதிர்பார்க்கிற மேசியாவைப்பற்றியே அவர்களிடத்தில் பிரசங்கம்பண்ணினான். இயேசுகிறிஸ்துவே அந்த மேசியா என்றும், அவர் வந்துவிட்டாரென்றும் அவர்களிடத்தில் உபதேசம்பண்ணினான். கர்த்தருக்குள் நாம் மனமகிழ்ச்சியாயிருக்கவேண்டும் என்றும் பவுல் யூதருக்கு எடுத்துச் சொன்னான். மரித்தோரின் உயிர்த்தெழுதல் நடைபெறும் என்றும் பவுல் அவர்களுக்கு உபதேசம்பண்ணினான். இவையெல்லாம் இஸ்ரவேலின் நம்பிக்கையாகும்.

இக்காலத்தில் யூதேயா தேசத்தாரெல்லோரும் ரோமப்பேரரசின் ஆளுகைக்குட்பட்டிருக்கிறார்கள். பல வேதனைகளையும் துன்பங்களையும் அனுபவிக்கிறார்கள். தங்களுக்கு ஒரு மேசியா வருவாரென்றும், அவர் தங்களை ரோமப்பேரரசின் நுகத்திலிருந்து விடுதலைபண்ணுவாரென்றும் யூதர்கள் நம்புகிறார்கள். தாங்கள் எதிர்பார்க்கிற மேசியா இந்தப் பூமியில் தங்களை பெரிய ஜாதியாக்கி ஆசீர்வாதிப்பார் என்றும் எதிர்பார்க்கிறார்கள்.

பவுலும் மேசியாவைப்பற்றி பேசுகிறான். யூதர்கள் இப்பூமிக்குரிய மேசியாவை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எதிர்பார்க்கிற மேசியா ரோமப்பேரரசிடமிருந்து மாத்திரமே அவர்களை விடுவிப்பார். ஆனால் பவுல் பிரசங்கிக்கிற மேசியாவோ மெய்யான மேசியா. இயேசுகிறிஸ்துவே அந்த மேசியா. யூதர்கள் யூதேயா தேசத்தை ஸ்தாபிப்பதைப்பற்றி பேசுகிறார்கள். பவுலோ தேவனுடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப் படுவதைப்பற்றி பேசுகிறான். யூதேயா தேசம் இப்பூமிக்குரியது. தேவனுடைய ராஜ்யமோ ஆவிக்குரியது. ஆவிக்குரிய ராஜ்யம் பரிசுத்தமுள்ளது. மனுஷருடைய இருதயங்களில் தேவனுடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும்.

மரித்தோர் உயிர்த்தெழுவார்களென்றும், கர்த்தரை நம்புகிறவர்கள் நித்திய ஜீவனைப்பெற்றுக்கொள்வார்கள் என்றும், கர்த்தருடைய பிள்ளைகளெல்லோருமே தேவனுடைய பரலோக ராஜ்யத்திற்குள் பிரவேசிப்பார்களென்றும் பவுல் பிரசங்கம் பண்ணுகிறான். பவுலின் பிரசங்கச் செய்தி வேறு. யூதருடைய நம்பிக்கை வேறு. இந்த நம்பிக்கை பேதத்தினிமித்தமாகவே, யூதர்கள் பவுலின்மீது கோபமாயிருக்கிறார்கள். பவுலுக்கு விரோதமாக பிராதுபண்ணினார்கள். அவனைக் கொன்றுபோடவேண்டுமென்று சதி ஆலோசனைபண்ணினார்கள். இஸ்ரவேலின் இந்த நம்பிக்கைகாகவே பவுல் சங்கிலிகளினால் கட்டப்பட்டிருக்கிறான்.

காகிதம் வரவுமில்லை

அதற்கு அவர்கள்: உன்னைக்குறித்து யூதேயாவிலிருந்து எங்களுக்குக் காகிதம் வரவுமில்லை, வந்த சகோதரரில் ஒருவனும் உன்பேரில் ஒரு பொல்லாங்கை அறிவித்ததுமில்லை, அதைப்பற்றிப் பேசினதுமில்லை (அப் 28:21).

யூதரில் பிரதானமானவர்கள் பவுல் சொல்லுவதைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். பவுலைக்குறித்து யூதேயாவிலிருந்து தங்களுக்கு காகிதம் வரவில்லையென்று யூதர்கள் பவுலுக்குச் சொல்லுகிறார்கள். பவுலுக்கு விரோதமாக இவர்களில் ஒருவரும் ஒன்றும் சொல்லவில்லை. யூததேசத்திலிருந்தும் பவுலுக்கு விரோதமாகத் தங்களுக்கு ஒரு கடிதமும் வரவில்லையென்று அறிவிக்கிறார்கள். யூதேயா தேசத்திலிருந்து வந்த சகோதரரில் ஒருவனும் பவுல் பெயரில் ஒரு பொல்லாங்கையும் அறிவித்ததுமில்லை, அதைப்பற்றி பேசியதுமில்லை என்று யூதரில் பிரதானமானவர்கள் பவுலிடத்தில் சொல்லுகிறார்கள்.

யூதருடைய பிரதியுத்தரம் மிகவும் விநோதமாகயிருக்கிறது. ஏனெனில் யூதேயா தேசத்திலுள்ள யூதர்கள் பவுலுக்கு விரோதமாக ஓயாமல் கலகம்பண்ணுகிறார்கள். பவுல் எங்கெல்லாம் போகிறானோ அங்கெல்லாம் யூதர்களும் போய் அவனுக்கு விரோதமாக கலகம் எழுப்புகிறார்கள். பவுலுக்கு விரோதமாக எல்லா இடங்களுக்கும் போனவர்கள் ரோமாபுரிக்கும் வந்திருப்பார்கள். ஆகையினால் பவுலிடத்தில் பேசிக்கொண்டிருக்கிற யூதரில் பிரதானமானவர்கள், உண்மையைப் பேசாமல், ஒருவேளை பொய்சொல்லுகிறார்களோ என்று வேதபண்டிதர்களில் சிலர் சந்தேகப்படுகிறார்கள். அவர்கள் பொய்சொல்லாமல் உண்மை சொல்லுவதாகவும் வேதபண்டிதர்களில் சிலர் கருத்து சொல்லுகிறார்கள்.

தேசாதிபதிக்கு முன்பாக பவுல் விசாரிக்கப்பட்டபோது அவன் இராயருக்கு அபயமிட்டான். அவன் அபயமிட்ட பிரகாரம், பவுல் இராயரிடத்திற்குப்போக தேசாதிபதி உத்தரவு கொடுத்தான். பவுல் இப்போது இராயருடைய நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட வேண்டியவன். யூதர்கள் இராயரை விரும்புவதில்லை. இராயரும் யூதேயா தேசத்தார்மீது கோபமாகயிருக்கிறார். யூதர்கள் பவுலுக்கு விரோதமாக எல்லா ஊரிலும் கலகம்பண்ணினாலும், அவர்களில் யாரும் ரோமாபுரிக்கு வரத்துணியவில்லை. ரோமாபுரியின் ஆட்சி பீடம் யூதருக்கு விரோதமாகவே இருக்கிறது. ஆகையினால் ரோமாபுரியிலுள்ள யூதர்களுக்கு யூதேயாவிலிருந்து பவுலைக்குறித்து ஒரு காகிதமும் வரவில்லை. யூதேயாவிலிருந்து வந்த யூதர்களில் ஒருவனும் பவுலின் பெயரில் ஒரு பொல்லாங்கையும் அறிவித்ததில்லை. அவர்களில் யாரும் பவுலைப்பற்றியோ, பவுலுடைய வழக்கு விசாரணையைப்பற்றியோ ஒன்றும் பேசியதுமில்லை.

கேட்டறிய விரும்புகிறோம்

எங்கும் இந்த மதபேதத்துக்கு விரோதமாய்ப் பேசுகிறதாக நாங்கள் அறிந்திருக்கிறபடியால், இதைக்குறித்து உன்னுடைய அபிப்பிராயம் என்னவென்று கேட்டறிய விரும்புகிறோம் என்றார்கள் (அப் 28:22).

பவுல் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறான். கிறிஸ்துவின் சுவிசேஷம் யூதமார்க்கத்தாருக்கு மதபேதமாகத் தெரிகிறது. பவுல் யூதமார்க்கத்திற்கு விரோதமாகப் பேசுகிறதாக ரோமாபுரியிலுள்ள யூதர்களும் அறிந்திருக்கிறார்கள். இதைக்குறித்து பவுலின் அபிப்பிராயம் என்னவென்று கேட்டறிய அவர்கள் விரும்புகிறார்கள். கிறிஸ்துவின் உபதேசத்தைக் குறித்து ரோமாபுரியிலுள்ள யூதருக்கு அதிகமாகத் தெரியாது. ஆனால் கிறிஸ்துவின் சுவிசேஷம் யூதமார்க்கத்திற்கு விரோதமான மதபேதம் என்று இவர்கள் அறிந்து வைத்திருக்கிறார்கள். யூதர்களெல்லோரும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை மதபேதம் என்று சொல்லி, அதற்கு விரோதமாகப் பேசுகிறார்கள்.

கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு செவிகொடுப்பதற்குப் பதிலாக, அதை ஆரம்பத்திலேயே மதபேதம் என்று சொல்லி, அதைப் புறக்கணித்துவிடுகிறார்கள். கிறிஸ்துவின் உபதேசம் ஒரு தவறான உபதேசமென்றும், இது யூதமதத்திற்கு விரோதமான மதபேதமென்றும் யூதர்கள் சொல்லுகிறார்கள்.

மெய்யான கிறிஸ்தவ மார்க்கம் எல்லா மனுஷரையும் நேசிக்கிறது. மனுக்குலத்திலுள்ள எல்லோருடைய ஆத்துமாக்களைக் குறித்தும் கரிசனையோடிருக்கிறது. யூதர்கள் மட்டும் ஆசீர்வதிக்கப்படவேண்டும் என்பது கிறிஸ்துவின் சுவிசேஷமல்ல. இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள், யூதராகயிருந்தாலும், வேறு எந்த இனத்தாராகயிருந்தாலும், அவர்கள் தேவனுடைய காணியாட்சியில் சேர்த்துக் கொள்ளப் படுகிறார்கள். இரட்சிக்கப்படுகிறவர்கள் எல்லோருமே பரலோக ராஜ்யத்திற்குள் பிரவேசிப்பார்கள்.

இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தில் யூதனென்றும், கிரேக்கனென்றும் வித்தியாசமில்லை. எல்லோரும் ஒன்றுதான். தேவனிடத்தில் பட்சபாதமில்லை. கிறிஸ்துவின் சுவிசேஷம் மனுக்குலத்திலுள்ள எல்லா இனத்தாரையும் ஒன்றாய் இணைக்கிறது. யூதமார்க்கமோ மனுக்குலத்திலிருந்து அவர்களைப் பிரிக்கிறது. யூதர்கள் தங்களை தேவனுடைய ஜாதியாரென்றும் மற்றவர்களை புறஜாதியாரென்றும் சொல்லுகிறார்கள். கிறிஸ்துவின் மார்க்கமோ எல்லோரையும் சகோதர சிநேகத்தோடு அங்கீகரிக்கிறது. இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களெல்லோரும் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வார்கள். கர்த்தர் அவர்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தை ஆசீர்வதிக்கிறார்.

யூதர்கள் எல்லா தேசங்களிலும் பரவியிருக்கிறார்கள். அவர்கள் மத்தியிலே யூதர்கள் கிறிஸ்தவ மார்க்கத்திற்கு விரோதமாக பேசிக்கொண்டிருக்கிறார்கள். கிறிஸ்துவின் உபதேசத்தை சரியாக அறிந்துகொள்ளாதவர்கள்கூட, அதை மதபேதமென்று சொல்லி, அதற்கு விரோதமாகப் பேசுகிறார்கள். இது அக்காலத்தில் மாத்திரமல்ல, இக்காலத்திலும் அப்படித்தான் நடைபெறுகிறது. இக்காலத்தில்கூட இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷ சத்தியத்தை சரியாகப் புரிந்து கொள்ளாதவர்கள்கூட, கிறிஸ்துவுக்கும், அவருடைய சுவிசேஷத்திற்கும் விரோதமாகப் பேசுகிறார்கள்.

புறஜாதியாருக்கு இரட்சிப்பு அப் 28 : 23-29

அப் 28:23. அதற்காக அவர்கள் ஒரு நாளைக்குறித்து, அநேகம்பேர் அவன் தங்கியிருந்த வீட்டிற்கு அவனிடத்தில் வந்தார்கள். அவன் காலமே தொடங்கி சாயங்காலமட்டும் மோசேயின் நியாயப் பிரமாணத்திலும், தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் இருந்து இயேசுவுக்கடுத்த விசேஷங்களை அவர்களுக்குப் போதித்து, தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துச் சாட்சி கொடுத்து விஸ்தரித்துப் பேசினான்.

அப் 28:24. அவன் சொன்னவைகளைச் சிலர் விசுவாசித்தார்கள், சிலர் விசுவாசியாதிருந்தார்கள்.

அப் 28:25. இப்படி அவர்கள் ஒருவரோடொருவர் ஒவ்வாமலிருந்து, புறப்பட்டுப் போகையில், பவுல் அவர்களுக்குச் சொன்ன வாக்கியமாவது:

அப் 28:26. நீங்கள் காதாரக்கேட்டும் உணராதிருப்பீர்கள், கண்ணாரக்கண்டும் பாராதிருப்பீர்கள்.

அப் 28:27. இவர்கள் கண்களினால் காணாமலும், காதுகளினால் கேளாமலும், இருதயத்தினால் உணர்ந்து குணப்படாமலும், நான் இவர்களை ஆரோக்கியமாக்காமலும், இருக்கும்படிக்கு, இந்த ஜனத்தின் இருதயம் கொழுத்திருக்கிறது; காதுகளினால் மந்தமாய்க் கேட்டுத் தங்கள் கண்களை மூடிக் கொண்டார்கள் என்று இந்த ஜனத்தினிடத்தில் போய்ச் சொல்லு என்பதைப் பரிசுத்தஆவி ஏசாயா தீர்க்கதரிசியைக் கொண்டு நம்முடைய பிதாக்களுடனே நன்றாய்ச் சொல்லியிருக்கிறார்.

அப் 28:28. ஆதலால் தேவனுடைய இரட்சிப்பு புறஜாதியாருக்கு அனுப்பப் பட்டிருக்கிறதென்றும், அவர்கள் அதற்குச் செவிகொடுப்பார்களென்றும் உங்களுக்குத் தெரிந்திருக்கக்கடவது என்றான்.

அப் 28:29. இப்படி அவன் சொன்னபின்பு, யூதர்கள் தங்களுக்குள்ளே மிகவும் தர்க்கம்பண்ணிக் கொண்டு, போய்விட்டார்கள்.

இயேசுவுக்கடுத்த விசேஷங்கள்

அதற்காக அவர்கள் ஒரு நாளைக்குறித்து, அநேகம்பேர் அவன் தங்கியிருந்த வீட்டிற்கு அவனிடத்தில் வந்தார்கள். அவன் காலமே தொடங்கி சாயங்காலமட்டும் மோசேயின் நியாயப் பிரமாணத்திலும், தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் இருந்து இயேசுவுக்கடுத்த விசேஷங்களை அவர்களுக்குப் போதித்து, தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துச் சாட்சி கொடுத்து விஸ்தரித்துப் பேசினான் (அப் 28:23).

ரோமாபுரியில் யூதர்கள் அநேகம் பேர் இருக்கிறார்கள். அவர்களெல்லோரும் பவுலோடு பேசுவதற்காக ஒரு நாளைக் குறித்திருக்கிறார்கள். அந்த நாளில் அவர்களில் அநேகம்பேர் பவுல் தங்கியிருந்த வீட்டிற்கு அவனிடத்தில் வருகிறார்கள். பவுல் அவர்களோடு இயேசுகிறிஸ்துவின் மார்க்கத்தைக்குறித்து நீண்ட உபதேசம்பண்ணுகிறான். எருசலேமிலுள்ள யூதர்கள் பவுல் பேசுவதைக்கேட்க மனதில்லாதவர் களாகயிருந்தார்கள். ஆனால் ரோமாபுரியிலுள்ள யூதர்களோ பவுல் சொல்லுவதைக் கேட்க மனதுள்ளவர்களாக கூடி வந்திருக்கிறார்கள்.

இந்தச் சம்பாஷணையை பவுல் ஒழுங்கு செய்கிறான். ஒருநாளை குறித்து அந்த நாளில் யூதமார்க்கத்தைக் குறித்தும், கிறிஸ்துவின் மார்க்கத்தைக்குறித்தும் அவர்களோடு பேசுவதற்குத் தீர்மானம்பண்ணுகிறான். பவுலின் உபதேசத்தைக்கேட்டு யூதர்கள் தங்கள் இருதயத்தில் தொடப்படுகிறார்கள். சத்தியம் அவர்களை உணர்த்துகிறது. ஆனாலும் எல்லா யூதர்களும் பவுலின் உபதேசத்தை ஏற்றுக்கொள்ளவில்லை.

யூதர்களில் அநேகர் பவுல் தங்கியிருந்த வீட்டிற்கு, அவனிடத்தில் வருகிறார்கள். பவுல் அந்த வீட்டில் காவலில் வைக்கப்பட்டவனாக இருக்கிறான். ஆனாலும் யூதர்கள் பவுல் தங்கியிருந்த வீட்டிற்கு வந்து, அவனைப் பார்க்க வருகிறார்கள். பவுல் அவர்களோடு அதிகமாய் தர்க்கம்பண்ணவில்லை. கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அவர்களோடு எடுத்துச் சொல்லுகிறான். இயேசுகிறிஸ்துவின் சத்தியமே மெய்யான சத்தியம் என்று அவர்களுக்கு உறுதி பண்ணுகிறான். யூதமார்க்கத்தைக் குறித்து பவுல் அவர்களோடு தர்க்கம்பண்ணவில்லை. அது அவனுடைய நோக்கமுமல்ல. கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதே பவுலின் நோக்கம். அந்த நோக்கத்திற்காகவே பவுல் இப்போது காவலில் வைக்கப்பட்டிருக்கிறான். கிறிஸ்துவின் சுவிசேஷத்தினிமித்தம் தான் காவலிலிருப்பதை தனக்குக் கிடைத்த சிலாக்கியம் என்று பவுல் கருதுகிறான்.

பவுல் காவலில் வைக்கப்பட்டிருக்கும்போது, அவனைப் பார்ப்பதற்கு அநேகர் வருவார்கள். பவுலை சும்மா பார்த்துவிட்டுப் போவதினால் அவர்களுக்கு ஒரு பிரயோஜனமுமில்லை. பவுலைப் பார்க்க வரும்போது அவன் சொல்லுகிற உபதேசத்தையும் கேட்க வேண்டும். அவனுடைய போதகத்தைக் கேட்டு இருதயத்தில் தெளிவு பெறவேண்டும். ஆவிக்குரிய ஜீவியத்தில் அவர்கள் வளர்ச்சி பெறவேண்டும். பவுல் கட்டப்பட்டவனாகயிருந்தாலும், தன்னைப் பார்க்க வந்திருக்கிற யூதர்களிடம், கிறிஸ்துவின் சுவிசேஷத்தைத் தெளிவாகப் பேசுகிறான்.

அவர்களுக்கு பிரியமானபடி பேசி, இந்தக் காவலிலிருந்து தான் விடுதலைபெறுவதற்கு யூதர்கள் தனக்கு சிபாரிசு பண்ணவேண்டுமென்று பவுல் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்ளவில்லை. தன்னுடைய சுயவசதியை பவுல் ஒருபோதும் தேடியதில்லை. கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்கு பவுல் வாய்ப்பை உண்டுபண்ணுகிறான். அந்த வாய்ப்பை நல்லமுறையில் பயன்படுத்துகிறான்.

பவுல் தன்னைப் பார்க்க வந்த ரோமாபுரியிலுள்ள யூதரிடத்தில் கிறிஸ்துவின் சுவிசேஷம் முழுவதையும் அறிவிக்கிறான். எதையும் மறைக்காமல், பூரண சுவிசேஷத்தை அவர்களுக்கு அறிவித்துவிடுகிறான். அவர்கள் மனந்திரும்பி, இயேசுகிறிஸ்துவை தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதுதான் பவுலின் விருப்பம். பவுல் அவர்களிடத்தில் தன் சுயவிருப்பத்தையோ, சுயகருத்துக்களையோ பிரசங்கம் பண்ணவில்லை. தேவனுடைய ராஜ்யத்தைப்பற்றியே பேசுகிறான்.

கிறிஸ்துவின் சுவிசேஷத்தில் தேவனுடைய ராஜ்யமானது முக்கியமான சத்தியம். பவுல் அவர்களிடத்தில் தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்து சாட்சி கொடுத்து விஸ்தரித்துப் பேசுகிறான். தேவனுடைய ராஜ்யத்தின் தன்மையை அவர்களுக்கு எடுத்துச் சொல்லுகிறான். தேவனுடைய ராஜ்யமானது பரலோகத்திற்குரியது. இது ஆவிக்குரியது. இருதயத்தின் சுத்தத்திலும், ஜீவியத்தின் பரிசுத்தத்திலும் தேவனுடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுகிறது. தேவனுடைய ராஜ்யத்தில் வெளியரங்கமான ஆடம்பரமோ, ஆரவாரமோ, அலங்காரமோ இருக்காது. தேவனுடைய ராஜ்யமானது முற்றிலும் ஆவிக்குரியது. பரலோகத்திற்குரியது. தேவராஜ்யம் இப்பிரபஞ்சத்திற்குரியதல்ல.

பவுல் யூதர்களுக்கு தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து சாட்சிகொடுத்து விஸ்தரித்துப் பேசும்போது, அவர்கள் இந்த சத்தியத்தைப் புரிந்துகொள்ளவேண்டும் என்றும், மெய்யான வெளிச்சத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்றும், தேவனுடைய ராஜ்யத்திற்கு அவர்கள் கீழ்ப்படிய வேண்டுமென்றும் எதிர்பார்க்கிறான். பவுல் தேவனுடைய ராஜ்யத்தைப்பற்றி சாதாரணமாகப் பேசுவதுபோல பேசாமல், அதைக் குறித்து சாட்சிகொடுத்து விஸ்தரித்துப் பேசுகிறான். தேவனுடைய ராஜ்யத்தை விவரிக்கிறான். அதைச் சாட்சியினால் உறுதிபண்ணுகிறான்.

தேவனுடைய கிருபையின் ராஜ்யத்தில் தெய்வீக வல்லமை கிரியை செய்கிறது. தேவனுடைய ராஜ்யமானது, தேவனுடைய சர்வவல்லமையினால் ஸ்தாபிக்கப்படுகிறது. தேவன் செய்கிற அற்புதங்களினாலும் அடையாளங் களினாலும் தேவனுடைய ராஜ்யத்தின் தன்மையானது உறுதிபண்ணப்படுகிறது. பவுல் தேவனுடைய ராஜ்யத்தின் வல்லமையை அனுபவித்திருக்கிறான். தன்னுடைய அனுபவத்தை சாட்சியாகச் சொல்லி, தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து விஸ்தரித்துப் பேசுகிறான்.

பவுல் தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்து, சாட்சிகொடுத்து, விஸ்தரித்துப் பேசி தன்னுடைய பிரசங்கத்தை இத்துடன் முடித்துக் கொள்ளவில்லை. தேவனுடைய ராஜ்யத்தில் யூதர்களெல்லோரும் பங்குபெறவேண்டும் என்று பவுல் எதிர்பார்க்கிறான். தேவனுடைய ராஜ்யத்தை யூதர்கள் முழுவாஞ்சையாய் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்னும் விருப்பத்தோடு பவுல் அவர்களுக்கு உபதேசம்பண்ணுகிறான்.

பவுல் யூதர்களோடு பேசும்போது அவர்களுக்குப் புரியும் வண்ணமாக எடுத்துக்காட்டுக்களோடு பேசுகிறான். இயேசுவுக்கடுத்த விசேஷங்களை பவுல் அவர்களுக்குப் போதிக்கிறான். இயேசுவே கிறிஸ்து என்பதை பவுல் அவர்களுக்கு எடுத்துச்சொல்லவேண்டும். தங்களுக்கு ஒரு மேசியா வருவார் என்று யூதர்கள் எதிர்பார்க்கிறார்கள். இயேசுவே அந்த மேசியா என்பதை பவுல் அவர்களுக்கு எடுத்துக்காட்டுக்களோடு உபதேசம் பண்ணுகிறான்.

இயேசுவுக்கடுத்த விசேஷங்களை பவுல் அவர்களுக்குப் போதிக்கும்போது, மோசேயின் நியாயப்பிரமாணத்திலும், தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலிருந்தும் எடுத்துக்காட்டுக்களாகச் சொல்லிப் போதிக்கிறான். பழைய ஏற்பாட்டிலுள்ள தீர்க்கதரிசனங்கள் அனைத்தையும் இயேசுகிறிஸ்துவில் நிறைவேறியிருக்கிறது என்பதைப் பவுல் அவர்களுக்குப் புரியவைக்கிறான். பழைய ஏற்பாட்டு வேதவசனங்களை தன்னுடைய பிரசங்கத்தில் மேற்கோளாக எடுத்துச் சொல்லுகிறான். யூதர்களுக்கு மோசேயின் நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களும் நன்றாகத் தெரியும். இவற்றிலிருந்து எடுத்துச் சொல்லும்போது யூதர்கள் அந்தப் பிரசங்கத்தை எளிதாகப் புரிந்துகொள்வார்கள்.

பவுல் பழைய ஏற்பாட்டு வசனங்களை அவர்களுக்குச் சொல்லும்போது, அந்த வசனங்கள் அவர்களுடைய இருதயங்களைத் தொடும். இயேசுக்கடுத்த விசேஷங்களோடு அவர்களுக்கு தொடர்பு உண்டாகும். பழைய ஏற்பாட்டோடே யூதர்கள் தங்களைத் தொடர்புபடுத்தியிருக் கிறார்கள். பவுல் பழைய ஏற்பாட்டு வசனங்களை எடுத்துச் சொல்லி, இயேசுவுக்கடுத்த விசேஷங்களை அவர்களுக்குப் போதிப்பதினால், யூதர்கள் இயேசுகிறிஸ்துவைத் தங்களோடும், தங்களுடைய யூதமார்க்கத்தின் நம்பிக்கையோடும் தொடர்பு படுத்துகிறார்கள்.

பவுல் சுருக்கமாக உபதேசம் பண்ணுவதற்குப் பதிலாக காலமே தொடங்கி, சாயங்காலமட்டும் விஸ்தரித்துப் பேசுகிறான். யூதர்கள் இப்படிப்பட்ட பிரசங்கத்தை இதுவரையிலும் கேள்விப் பட்டதில்லை. அவர்களுக்கு மேசியாவைத் தெரியும். ஆனால் இயேசுகிறிஸ்துதான் அவர்கள் எதிர்பார்க்கிற மேசியா என்பது அவர்களுக்குத் தெரியாது. இந்தச் சத்தியத்தைப் பவுல் அவர்களுக்குப் பூரணமாக விவரித்துச் சொல்லுகிறான்.

கிறிஸ்துவைப்பற்றிய சத்தியத்தை அவர்களிடத்தில் மறுபடியும் சொல்லுவதற்கு தனக்கு வாய்ப்பு கிடைக்குமோ, கிடைக்காதோ என்பது பவுலுக்குத் தெரியாது. ஆகையினால் தனக்குக் கிடைத்திருக்கும் வாய்ப்பை பவுல் நல்லமுறையில் பயன்படுத்துகிறான். காலமே தொடங்கி, சாயங்காலம் மட்டும் மோசேயின் நியாயப்பிரமாணத்திலும், தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலுமிருந்து இயேசுவுக்கடுத்த விசேஷங்களை அவர்களுக்குப் போதித்து, தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்து, சாட்சிகொடுத்து விஸ்தரித்துப் பேசுகிறான். ஆகையினால் பவுலின் பிரசங்கம் நீண்ட பிரசங்கமாகயிருக்கிறது. காலை முதல் சாயங்காலம் மட்டும் பிரசங்கம் நடைபெறுகிறது.

சிலர் விசுவாசியாதிருந்தார்கள்

அவன் சொன்னவைகளைச் சிலர் விசுவாசித்தார்கள், சிலர் விசுவாசியாதிருந்தார்கள் (அப் 28:24).

பவுல் யூதருக்கு நீண்டநேரம் பிரசங்கம்பண்ணுகிறான். பழைய ஏற்பாட்டு வசனங்களையெல்லாம் மேற்கோளாகச் சொல்லுகிறான். மிகுந்த வாஞ்சையோடும் கரிசனையோடும் அவர்களிடத்தில் பேசுகிறான். பவுல் நன்றாகப் பிரசங்கிக்கக்கூடியவன். சாதுரிய வார்த்தைகளைப் பயன்படுத்தக்கூடியவன். வேதபண்டிதன். அன்றைய தினம், இவனுடைய பிரசங்கத்தைக் கேட்ட யூதர்கள் அனைவரும் இரட்சிக்கப் பட்டிருக்கவேண்டும். ஆனால் எல்லோரும் இரட்சிக்கப்படவில்லை. பவுல் சொன்னவைகளை சிலர் விசுவாசிக்கிறார்கள். சிலர் விசுவாசியாதிருக்கிறார்கள். பவுல் சொன்ன பிரசங்கத்தின் கருத்தைக்குறித்து அவர்கள் ஒருவரொடோருவர் ஒவ்வாமிலிருந்து, அந்த இடத்தைவிட்டுப் போய்விடுகிறார்கள்.

இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் ஒரு சிலருக்கு இடறிவிழுவதற்கு ஏதுவான தடைக்கல்லாக இருக்கிறது. வேறு சிலருக்கோ இதே சுவிசேஷம், எழும்பி நிற்பதற்கு ஏதுவான ஆதரமாகயிருக்கிறது. இயேசுகிறிஸ்துவே மூலைக்குத் தலைக்கல்லாகயிருக்கிறார். ஒரு சிலருக்கு கிறிஸ்துவைப்பற்றிய சத்தியம் அவர்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு அஸ்திபாரக்கல்லாக இருக்கிறது. வேறு சிலருக்கோ இடறிவிழுகிறதற்கு ஏதுவான தடைக்கல்லாக இருக்கிறது. பவுல் சொன்னவைகளைக் கேட்ட எல்லோரும் அவனுடைய உபதேசத்தை விசுவாசிக்கவில்லை. அவர்கள் ஒருவரோடொருவர் பவுலின் உபதேசத்தைக் குறித்து ஒவ்வாமலிருக்கிறார்கள்.

இயேசுவுக்கடுத்த விசேஷங்களை பவுல் அவர்களுக்குப் போதிக்கிறான். தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து சாட்சி கொடுத்து விஸ்தரித்துப்பேசுகிறான். அவனுடைய பிரசங்கத்தைக் கேட்டவர்களில் சிலர் அவன் கொடுத்த சாட்சியை ஏற்றுக்கொள்ளவில்லை. அவன் சொன்னவைகளை சிலர் விசுவாசியாமல் போய்விடுகிறார்கள். ஆனால் வேறு சிலரோ அவன் கொடுத்த சாட்சியை ஏற்றுக்கொள்கிறார்கள். இவர்கள் பவுல் சொன்னவைகளை விசுவாசிக்கிறார்கள். கிறிஸ்துவின் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளும் வண்ணமாக சிலருடைய இருதயம் பக்குவமடைந்திருக்கிறது. வேறு சிலருடைய இருதயமோ சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்ளாதபடி கல்லாயிருக்கிறது. அவர்களுடைய இருதயம் கடினப்பட்டிருக்கிறது.

இக்காலத்தில் நாம் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை ஜனங்களுக்குப் பிரசங்கம்பண்ணும்போது ஒரு சிலர் அதை விசுவாசித்து கிறிஸ்துவைத் தங்கள் இருதயத்தில் ஏற்றுக்கொள்கிறார்கள். ஒரு சிலர் விசுவாசியாமல் போய்விடுகிறார்கள். விசுவாசிக்கிறவர்களுக்கு கிறிஸ்துவின் சுவிசேஷம் அவர்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு வெளிச்சமாகயிருக்கிறது. இயேசு கிறிஸ்துவே அவர்களுடைய பாதைக்கு வெளிச்சமாகயிருக்கிறார்.

விசுவாசியாதவர்களோ கிறிஸ்துவின் சுவிசேஷத்தை காணவேண்டாம் என்று தீர்மானம்பண்ணி, தங்கள் கண்களை மூடிக்கொள்கிறார்கள். தங்கள் செவிகளை அடைத்துக்கொள்கிறார்கள். ஒரு சிலர் கிறிஸ்துவை விசுவாசிக்கிறார்கள். ஒரு சிலர் கிறிஸ்துவைத் தூஷிக்கிறார்கள். ஜனங்கள் எப்படியிருந்தாலும், அவர்களுக்குச் சுவிசேஷத்தை பிரசங்கிப்பது நம்முடைய கடமை.

ஏசாயா தீர்க்கதரிசி

இப்படி அவர்கள் ஒருவரோடொருவர் ஒவ்வாமலிருந்து, புறப்பட்டுப் போகையில், பவுல் அவர்களுக்குச் சொன்ன வாக்கியமாவது: நீங்கள் காதாரக்கேட்டும் உணராதிருப்பீர்கள், கண்ணாரக்கண்டும் பாராதிருப்பீர்கள். இவர்கள் கண்களினால் காணாமலும், காதுகளினால் கேளாமலும், இருதயத்தினால் உணர்ந்து குணப்படாமலும், நான் இவர்களை ஆரோக்கியமாக்காமலும், இருக்கும் படிக்கு, இந்த ஜனத்தின் இருதயம் கொழுத்திருக்கிறது; காதுகளினால் மந்தமாய்க் கேட்டுத் தங்கள் கண்களை மூடிக் கொண்டார்கள் என்று இந்த ஜனத்தினிடத்தில் போய்ச் சொல்லு என்பதைப் பரிசுத்தஆவி ஏசாயா தீர்க்கதரிசியைக் கொண்டு நம்முடைய பிதாக்களுடனே நன்றாய்ச் சொல்லியிருக்கிறார் (அப் 28:25-27).

பவுல் பிரசங்கம்பண்ணி முடித்துவிட்டான். ரோமாபுரியிலுள்ள யூதர்களும் பவுலைவிட்டுப் புறப்பட்டுப்போக ஆயத்தமாகயிருக்கிறார்கள். அந்த வேளையில் பவுல் அவர்களுடைய இருதயத்தைத் தொடும்படியாக, மேலும் சில வார்த்தைகளை அவர்களிடத்தில் சொல்லுகிறான். அவர்கள் சுவிசேஷத்தைக் கேட்கிறார்கள். ஆனால் சத்திய வசனத்திற்குத் தங்களை ஒப்புக்கொடுக்க வில்லை. பவுலின் பிரசங்கத்தை கேட்டவர்களில் சிலருடைய காதுகள் மந்தமாகயிருக்கிறது. அவர்களிடத்தில் எப்படியாவது தான் சொன்ன சுவிசேஷ சத்தியத்தை மறுபடியும் சொல்லவேண்டும் என்று பவுல் விரும்புகிறான். விசுவாசிக் காதவர்கள் விசுவாசிக்க வேண்டுமென்று விரும்பி, பவுல் அவர்களிடத்தில் மேலும் சில வார்த்தைகளைச் சொல்லுகிறான்.

ஒரு சிலர் சுவிசேஷத்தைக் கேட்டும், அதைத் தங்கள் இருதயத்தில் ஏற்றுக்கொள்ளமாட்டார்களென்று ஏசாயா தீர்க்கதரிசி ஏற்கெனவே சொல்லியிருக்கிறான் (ஏசா 6:9,10). ஏசாயா சொன்னபிரகாரமாகவே இப்போது யூதர்களில் சிலர் விசுவாசியாமலிருக்கிறார்களென்று பவுல் அவர்களுக்கு உணர்த்தும்படியாகப் பேசுகிறான். தேவனுடைய நீதியான நியாயத்தீர்ப்பின்படியே இவர்களில் சிலர் இயேசுகிறிஸ்துவை விசுவாசியாமலிருக் கிறார்கள். ஏசாயா இந்தத் தீர்க்கதரிசன வார்த்தையைப் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் சொன்னாலும், அவன் இந்த யூதர்களைக் குறித்தே சொன்னானென்று பவுல் அவர்களுக்கு எடுத்துச் சொல்லுகிறான்.

பழைய ஏற்பாட்டில் சுவிசேஷத்தைப் பற்றி வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது. அதை விசுவாசிக்கிறவர்கள் எல்லோருக்கும் சுவிசேஷத்தின் வாக்குத்தத்தங்கள், நிறைவேறும். விசுவாசிக்கிறவர்களுக்கு ஆசீர்வாதம் கிடைக்கும். பழைய ஏற்பாட்டில் ஆசீர்வாதத்தைப்போலவே, ஒரு சில எச்சரிப்புக்களும் சொல்லப் பட்டிருக்கிறது. சுவிசேஷத்தை விசுவாசிக்கிறவர்களுக்கு ஆசீர்வாத முண்டு. சுவிசேஷத்தை விசுவாசியாதவர் களுக்கோ ஆக்கினைத் தீர்ப்பு உண்டு. இந்தச் சத்தியத்தை முன்னறிவிக்கும் வண்ணமாக, ஏசாயா தீர்க்கதரிசி இந்த வசனத்தை தீர்க்கதரிசனமாகச் சொல்லியிருக்கிறான்.

இந்த வார்த்தைகள் ஏசாயாவின் சொந்த வார்த்தைகளல்ல. பரிசுத்த ஆவியானவரின் வார்த்தைகள். "இந்த ஜனத்தினிடத்தில் போய் சொல்லு என்பதை பரிசுத்த ஆவி சொல்லியிருக்கிறார்" என்று பவுல் சொல்லுகிறான். பரிசுத்த ஆவியானவர் ஏசாயா தீர்க்கதரிசியைக்கொண்டு நம்முடைய பிதாக்களுடனே நன்றாய்ச் சொல்லியிருக்கிறார் என்று பவுல் யூதரிடத்தில் பேசுகிறான். ஏசாயா இந்த வார்த்தைகளைச் சொன்னபோது மிகுந்த மனவேதனையோடு சொன்னான். ஆத்தும பாரத்தோடு சொன்னான். விசுவாசியாதவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பு உண்டாகும் என்பது நற்செய்தியல்ல. அது அவர்களுக்கு எச்சரிப்பின் செய்தி. எச்சரிப்புக்குக் கீழ்ப்படிந்து மனந்திரும்பவில்லை என்றால், அது அவர்களுக்கு சாபமான செய்தி. இப்படிப்பட்ட செய்தியை "பரிசுத்த ஆவி ஏசாயா தீர்க்கதரியைக் கொண்டு நம்முடைய பிதாக்களுடனே நன்றாய்ச் சொல்லியிருக்கிறார்" என்று பவுல் சொல்லுகிறான்.

எச்சரிப்பின் செய்தியாகயிருந்தாலும், ஆசீர்வாதத்தின் செய்தியாகயிருந்தாலும், ஆவியானவரின் செய்தி எப்போது நற்செய்திதான். "விசுவாசமுள்ளவன் இரட்சிக்கப்படுவான்" என்பதும், "விசுவாசியாதவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற் 16:16) என்பதும் சுவிசேஷத்தின் முக்கியமான செய்தியாகும். இதே செய்தியையே ஏசாயா யூதர்களுடனே நன்றாய்ச் சொல்லியிருக்கிறான். பரிசுத்த ஆவியானவர் யூதருடைய முற்பிதாக்களோடு இந்தச் செய்தியை ஏசாயா மூலமாக சொன்னார். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் ஆவியானவர் சொன்ன இந்த வார்த்தைகள், இப்போது பவுலின் பிரசங்கத்தை கேட்கிற யூதர்களிடத்தில் நிறைவேறியிருக்கிறது.

ஏசாயா தீர்க்கதரிசி சொன்னபிரகாரம் இவர்கள் கண்களினால் காணாமலும், காதுகளினால் கேளாமலும், இருதயத்தினால் உணர்ந்து குணப்படாமலுமிருக்கிறார்கள். தேவனைக் காணாதபடி இவர்கள் தங்கள் கண்களை மூடிக்கொள்வது தேவனுக்கு விரோதமாக இவர்கள் செய்கிற பாவம். தேவனுடைய கரம், அவருடைய நியாயத்தீர்ப்பில் முற்பிதாக்களுக்கு எதிராக உயர்த்தப்பட்டிருந்தது. ஆனால் யூதர்களுடைய முற்பிதாக்களோ தங்களுக்கு விரோதமாக உயர்த்தப்பட்ட தேவனுடைய கரத்தை காணாதபடி தங்கள் கண்களை மூடிக்கொண்டார்கள். கிறிஸ்துவின் சுவிசேஷத்தில் தேவனுடைய கிருபையின் கரம் யூதர்களுக்கு நேராக நீட்டப்பட்டிருக்கிறது. புதிய ஏற்பாட்டுக் காலத்து யூதர்களோ தங்களுக்கு நேராக நீட்டப்பட்டிருக்கிற தேவனுடைய கிருபையின் கரத்தை காணாதபடி தங்களுடைய கண்களை மூடிக்கொள்கிறார்கள்.

காணக்கூடாது என்று தீர்மானம் பண்ணியிருப்பதினாலேயே இவர்கள் காணாமலிருக்கிறார்கள். இவர்கள் குருடர்களல்ல. பார்வையுள்ளவர்கள். ஆனாலும் தேவனுடைய கிருபையின் கரத்தை காணக்கூடாது என்று, தங்கள் இருதயத்தில் தீர்மானம்பண்ணி, தங்கள் கண்களை மூடிக்கொள்கிறார்கள். கண்கள் இருந்தும் குருடர்களாகயிருக்கிறார்கள்.

ஏசாயா தீர்க்கதரிசி யூதர்களுடைய முற்பிதாக்களிடத்தில் "நீங்கள் காதாரக்கேட்டும் உணராதிருப்பீர்கள், கண்ணாரக்கண்டும் பாராதிருப்பீர்கள்" என்று தீர்க்கதரிசனமாகச் சொன்னான். அவன் சொன்ன பிரகாரமாகவே தேவனுடைய மகத்துவமான காரியங்களை காணக்கூடாது என்று தீர்மானம்பண்ணி, அவர்கள் தங்கள் கண்களை மூடிக்கொண்டார்கள். தேவன் அவர்களுக்கு நித்திய சமாதானத்தை வாக்குப்பண்ணியிருக்கிறார். ஆனால் இந்த வாக்குத்தத்தத்தைத் தங்கள் காதுகளால் கேட்கக்கூடாது என்று தீர்மானம்பண்ணி தங்கள் காதுகளினால் மந்தமாய் கேட்கிறார்கள். இதனால் தேவனுடைய நித்திய சமாதானத்தின் வாக்குத்தத்தத்தை யூதர்கள் உணராதவர்களாகயிருக்கிறார்கள். இதனால் அந்த சமாதானத்தைப் பெற்றுக் கொள்ளாதவர்களாகவும் இருக்கிறார்கள்.

முற்பிதாக்கள் ஒருவேளை தங்கள் பயத்தினால் கண்களை மூடியிருக்கலாம். அதுபோலவே பயத்தினாலும் அவர்கள் தங்கள் காதுகளை அடைத்திருக்கலாம். அவர்கள் இருதயத்தினால் உணர்ந்து குணப்படாமல் இருக்கிறார்கள். தேவன் இவர்களை ஆரோக்கியமாக்காமல் இருக்கும்படி இந்த ஜனங்களுடைய இருதயம் கொழுத்திருக்கிறது.

இவர்கள் தங்களுடைய மனதை இருளில் வைத்திருக்கிறார்கள். எப்போதுமே குழப்பத்தில் இருக்கிறார்கள். இவர்களிடத்தில் தெளிந்த சிந்தனை இல்லை. தேவன் ஜனங்களுக்கு தம்முடைய சத்தியத்தை உபதேசம் பண்ணும்போது, அவர்கள் அந்த சத்தியத்தை தங்கள் இருதயத்தில் உணர்ந்து குணப்படவேண்டும். இதற்காக அவர்கள் முதலாவதாக தேவனுடைய கிரியைகளை தங்கள் கண்களால் காணவேண்டும். அதேவேளையில் தேவன் சொல்லுவதை அவர்கள் தங்கள் காதுகளால் கேட்கவும் வேண்டும். இதன் பின்பு ஜனங்கள் தங்களுடைய சுயசித்தத்தை தேவனுடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்கவேண்டும். அப்போது தேவன் இவர்களை ஆரோக்கியமாக்குவார். இவர்களுடைய ஆத்துமா குணமடையும்.

தேவனுடைய கிரியைகளை சாத்தான் அறிந்துவைத்திருக்கிறான். தேவனுடைய வார்த்தைகள் மனுஷருக்குள் பிரவேசிக்காதபடி, மனுஷருடைய கண்களை அடைத்துப்போடுகிறான். அவர்களுடைய செவிகளையும் மந்தமாக்குகிறான். தேவனுடைய சத்தியத்தை அறிந்துகொள்ளமுடியாதபடி அவர்களுடைய மனதைக் குழப்புகிறான். அவர்களிடத்திலுள்ள தெளிந்த சிந்தனையை அவர்களைவிட்டு நீக்கிப்போடுகிறான். பாவிகள் சாத்தானோடு சேர்ந்து, அவனுடைய கண்ணியில் விழுந்து, தங்களுடைய ஆத்தும இரட்சிப்பை இழந்துபோவது மிகவும் பரிதாபமான காரியம்.

சாத்தான் மனுஷருடைய கண்களை குருடாக்குகிறான். அவர்கள் வேண்டுமென்றே தங்கள் கண்களை மூடிக்கொள்ளுகிறார்கள். அவர்களிடத்தில் தெளிந்த சிந்தனை இல்லை. ஆகையினால் அவர்கள் தங்கள் வியாதியை நேசிக்கிறார்கள். வியாதியோடு இருக்கவேண்டும் என்று விரும்புகிறார்கள். தேவன் தங்களை குணப்படுத்திவிடுவாரோ என்று பயப்படுகிறார்கள். இதற்காகவே அவர்கள் தங்கள் கண்களினால் காணாமலும், காதுகளினால் கேளாமலும், இருதயத்தினால் உணர்ந்து குணப்படாமலும், இருக்கிறார்கள். தேவன் இவர்களை ஆரோக்கியமாக்காமல் இருக்கிறார். தங்கள் பாவத்தில் விரும்பி ஜீவிக்கிறார்கள்.

மனுஷருடைய பாவத்தின் நிமித்தமாய் தேவனுடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வந்திருக்கிறது. இவர்கள் தேவனுடைய வார்த்தைகளைத் தங்கள் காதுகளினால் கேட்கிறார்கள். ஆனால் மந்தமாய் கேட்டு தங்கள் கண்களை மூடிக்கொள்ளுகிறார்கள். காதுகளினால் கேட்கும்போது, தாங்கள் கேட்டதை புரிந்துகொள்ளவேண்டும் என்று இவர்கள் விரும்புவதில்லை. இவர்களிடத்தில் தெளிந்த சிந்தனையில்லை. குழப்பத்தில் இருக்கிறார்கள். ஆகையினால் தேவனுடைய சத்தியத்தை இவர்களால் புரிந்துகொள்ளமுடியவில்லை. தம்முடைய சத்தியத்தை புரிந்துகொள்ளுவதற்கு தேவன் இவர்களுக்கு தமது கிருபையை கொடுக்கவில்லை. இவர்களை பலப்படுத்துவதில்லை. தேவனுடைய நியாயத்தீர்ப்பு இவர்கள்மீது வந்திருக்கிறது.

இவர்கள் தங்கள் கண்ணாரக் கண்டும் பாராதிருக்கிறார்கள். காதாரக்கேட்டும் உணராதிருக்கிறார்கள். தேவனுடைய கிருபைக்கு இவர்கள் எதிர்த்து நிற்கிறார்கள். தேவனுடைய வெளிச்சத்திற்கு விரோதமாக இவர்கள் யுத்தம் பண்ணுகிறார்கள். ஆகையினால் தேவன் தம்முடைய கிருபையையும், வெளிச்சத்தையும் இவர்களை விட்டு நீக்கிப்போடுகிறார். தேவனுடைய கிருபை இவர்களுக்கு கிடைக்காதபடியினால், இவர்களால் சத்தியத்தின் அன்பைப் பெற்றுக்கொள்ளமுடியவில்லை.

ஜனங்கள் சத்தியத்தை விசுவாசியாமல் பொய்யை விசுவாசிக்கிறார்கள். இவர்களால் தங்கள் இருதயத்தில் உணர்ந்து குணப்பட முடியவில்லை. இவர்களுடைய இருதயம் கொழுத்திருக்கிறது. காதுகள் மந்தமாய் கேட்கிறது. எந்த மருத்துவராலும் இவர்களைக் குணப்படுத்தமுடியாது. மருந்துகளின் மூலமாக இவர்களுடைய கொழுத்த இருதயங்களையும், மந்தமான காதுகளையும் குணப்படுத்துவதற்கு வாய்ப்பில்லை. இது இவர்களுக்குத் தீராத வியாதியாய் இருக்கிறது.

தேவன் ஒரு ஆத்துமாவைக் குணப்படுத்தவேண்டுமானால், அந்த ஆத்துமா தன் கண்களினால் காணவேண்டும், தன் காதுகளினால் கேட்கவேண்டும். இதுதான் தேவன் பயன்படுத்துகிற முறை. ஆத்துமா குணமடைவதற்கு வேறுகுறுக்குவழி எதுவும் இல்லை. தேவன் பயன்படுத்துகிற இந்த முறைமைகளோடு மனுஷர் ஒத்துப் போகவேண்டும். தங்கள் கண்களினால் காணவேண்டும். தங்கள் காதுகளினால் கேட்கவேண்டும். ஆனால் இவர்களோ கண்களினால் காணாமலும், காதுகளினால் கேளாமலும் இருக்கிறார்கள். இதனால் இவர்கள் இருதயத்தினால் உணர்ந்து குணப்படாமல் போகிறார்கள். தம்முடைய சித்தத்திற்கு இவர்கள் கீழ்ப்படியாமல் போனதினால் தேவன் இவர்களை ஆரோக்கியமாக்காமல் விட்டுவிடுகிறார்.

மனுஷருடைய இருதயம் தேவனுடைய வார்த்தைகளைக் கேட்பதற்கு ஆஸ்தமா இருக்கவேண்டும். மென்மையான இருதயம்தான் தேவனுடைய உபதேசங்களை கேட்டு அதற்கு கீழ்ப்படியும். ஆனால் இந்த ஜனத்தின் இருதயமோ கொழுத்திருக்கிறது. இருதயத்தை கடினப்படுத்துகிற ஜனங்கள் நரகத்திற்கு நேராக பிரயாணம் செய்கிறார்கள். கண்களை மூடிக் கொள்ளுகிறார்கள். தங்கள் காதுகளையும் அடைத்துக் கொள்ளுகிறார்கள். இவர்கள் தெளிந்த புத்தியில்லாமல் இருக்கிறார்கள். இவர்களுடைய இருதயம் குணப்படாமலும், ஆரோக்கியம் அடையாமலும் இருக்கிறது.

கண்களை மூடிக்கொண்டு நடப்பதினால், தாங்கள் எங்கே போகிறோம் என்பது தெரியாமலேயே போகிறார்கள். ஆபத்தைப்பற்றிய எச்சரிப்பின்சத்தம். இவர்களுக்கு அறிவிக்கப்படுகிறது. ஆனால் அதைக் கேட்காதவாறு இவர்கள் தங்கள் காதுகளையும் அடைத்துக்கொள்ளுகிறார்கள். முடிவில் சாத்தானுடைய கண்ணியில் சிக்கி அவனுக்கு அடிமைகளாகிவிடுகிறார்கள். சாத்தானோடு இவர்கள் நித்திய நரகஅக்கினியில் விழுந்துவிடுகிறார்கள்.

புறஜாதியார்

ஆதலால் தேவனுடைய இரட்சிப்பு புறஜாதியாருக்கு அனுப்பப் பட்டிருக்கிறதென்றும், அவர்கள் அதற்குச் செவி கொடுப்பார்களென்றும் உங்களுக்குத் தெரிந்திருக்கக்கடவது என்றான் (அப் 28:28).

யூதர்கள் இயேசுகிறிஸ்துவைத் தங்கள் மேசியா என்று விசுவாசிக்கவில்லை. கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கும் அவர்கள் செவிகொடுக்கவில்லை. ஆகையினால் தேவன் தம்முடைய தெய்வீக நீதியினால், தம்முடைய சுவிசேஷத்தைப் புறஜாதியாருக்கு அனுப்புகிறார்.

தேவனுடைய கிருபையை இவர்கள் தங்களை விட்டு விலக்கிவைத்து விடுகிறார்கள். தேவனுடைய தெய்வீக சத்தியத்திற்கும் அன்புக்கும் கீழ்ப்படியாதிருக்கிறார்கள். தேவனுடைய வல்லமைக்கு தங்களை ஒப்புக்கொடுக்காமல் இருக்கிறார்கள். ஆகையினால் தேவனுடைய இரட்சிப்பு புறஜாதியாருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. புறஜாதியார் தேவனுடைய சுவிசேஷத்திற்கு செவிகொடுப்பார்கள். அவர்கள் தங்களுடைய ஆத்தும இரட்சிப்பைப் பெற்றுக்கொள்வார்கள். தங்கள் இரட்சிப்பில் சந்தோஷப்படுவார்கள்.

பவுல் யூதரிடத்தில் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப்பற்றி விரிவாக எடுத்துச்சொல்லுகிறான். புறஜாதியாருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்படுகிறது. ஆனால் இதை யூதர்கள் விரும்பவில்லை. புறஜாதியாருக்கு சுவிசேஷத்தை அறிவிக்ககூடாது என்று யூதர்கள் வைராக்கியமாய் இருக்கிறார்கள். யூதர்களும் தங்கள் ஆத்தும இரட்சிப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. தங்கள் ஆத்தும இரட்சிப்பு அற்பபிரயோஜனமுள்ளது என்று நினைத்து, அதை அசட்டை பண்ணுகிறார்கள். ஆனால் புறஜாதியாருக்கு இரட்சிப்பின் சுவிசேஷம் அனுப்பப்படுவதற்கும் எதிர்த்து நிற்கிறார்கள். இவர்களுக்கு இரட்சிப்பு என்பது மிகவும் சாதாரணமானதாக தெரிகிறது. இந்த சாதாரண இரட்சிப்பை புறஜாதியாருக்கு அறிவிக்ககூடாதென்று சொல்லுகிறார்கள்.

தேவனுடைய இரட்சிப்பு மனுக்குலத்தார் எல்லாருக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. யூதர்களுக்கே முதலாவதாக தேவனுடைய சுவிசேஷம் அனுப்பப்பட்டது. ஆனால் யூதர்கள் தேவனுடைய சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்ளாமல் புறக்கணித்துவிட்டார்கள். கலியாண விருந்திற்கு வருமாறு யூதர்களே முதலாவதாக அழைக்கப் பட்டார்கள். ஆனால் யூதர்கள் கலியாண விருந்திற்குப்போகாமல், அந்த விருந்தைப் புறக்கணித்தார்கள். அதே சமயம், கலியாணவிருந்துக்கு புறஜாதியார் அழைக்கப் படுவதற்காக கோபப்படுகிறார்கள். கலியாண விருந்துக்கு யூதர்களும் போகவில்லை. மற்றவர்கள் விருந்துக்கு அழைக்கப்பட்டால். அதற்கும் கோபப்படுகிறார்கள். தங்களுக்கு பதிலாக புறஜாதியார் கலியாண விருந்தில் கலந்துகொள்ளுவதைப் பார்த்து யூதர்கள்சந்தோஷப்படவேண்டும். ஆனால் சந்தோஷப்படாமல் கோபப்படுகிறார்கள்.

தேவன் புறஜாதியாருக்கு கொடுத்திருக்கும் சிலாக்கியத்திற்காக யூதர்கள் வேதனைப்படுகிறார்கள். அதே சமயத்தில் தேவன் கொடுக்கிற சிலாக்கியத்தை பெற்றுக்கொள்ளவும் யூதர்கள் ஆர்வமாக இல்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில், தேவனுடைய இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள யூதருக்கு இன்னும் வாய்ப்புள்ளது என்பதை பவுல் அவர்களுக்கு தெளிவுபடுத்துகிறான். ஒரு தீமையிலிருந்து நன்மையை உண்டுபண்ண முயற்சிபண்ணுகிறான்,

யூதர்கள் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளாமல் புறக்கணித்து பாவம்செய்திருக்கிறார்கள். தங்கள் பாவங்களுக்காக யூதர்கள் மனந்திரும்பவேண்டும். மனம்திரும்பி கிறிஸ்துவின் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்வதற்கு, யூதருக்கு இன்னும் கால அவகாசம் இருக்கிறது. முதலில் ஏற்றுக்கொள்ளமறுத்தாலும், பின்பு மனந்திரும்பி சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளலாம். இயேசு சொன்ன உவமையில், மூத்த குமாரன் தன் தகப்பனிடம், முதலாவது "மாட்டேன்" என்று சொன்னான். பின்பு மனம் வருந்தி, தன் தகப்பன் சொன்னபிரகாரம் வயலுக்குப்போய் வேலைசெய்தான் (மத் 21:29).

தேவனுடைய இரட்சிப்பு புறஜாதியாருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இதனால் யூதருக்கு இழப்பு ஒன்றும் இல்லை. இரட்சிப்பு எங்கு அனுப்பப்பட்டிருக்கிறதோ, அங்கு யூதர்களும் போய் அதைப்பெற்றுக்கொள்ள வேண்டும். இரட்சிக்கப்படாமல் இருப்பதைவிட, இரட்சிக்கப்படுவது மேன்மையானது.

அறியாமையில் இருந்த காலங்களில், யூதர்கள் காதாரக்கேட்டும் உணராதிருந்தார்கள். கண்ணாரக்கண்டும் பாராதிருந்தார்கள். தேவனுடைய இரட்சிப்பின் சிலாக்கியம் முதலாவது யூதருக்கே அனுப்பப்பட்டிருந்தது. மற்ற ஜாதிகளைவிட, யூதருக்கே தேவன் மிகவும் சமீபமாக இருந்தார். தம்மைநோக்கி கூப்பிடுகிற யாவருக்கும் தேவன் சமீபமாகவேஇருக்கிறார். யூதர்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி தேவனைநோக்கி கூப்பிடவேண்டும். புறஜாதியாருக்கு அனுப்பப்பட்டிருக்கிற தேவனுடைய இரட்சிப்பைப் பெற்றுக்கொள்வதற்கு யூதர்கள் வெட்கப்படக்கூடாது. புறஜாதியார் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளும்போது, அந்த சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ள யூதர்கள் தயங்கக்கூடாது.

புறஜாதியார் தேவனுடைய சுவிசேஷத்திற்கு செவிகொடுப்பார்கள். இதை யூதர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். புறஜாதியாருக்கு தேவனுடைய சுவிசேஷம் அறிவிக்கப்படுவதற்காக யூதர்கள் கோபப்படக்கூடாது. யூதர்களும் மனம்திரும்பி சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும். தேவனுடைய இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

யூதர்கள் போய்விட்டார்கள்

இப்படி அவன் சொன்னபின்பு, யூதர்கள் தங்களுக்குள்ளே மிகவும் தர்க்கம்பண்ணிக் கொண்டு, போய்விட்டார்கள் (அப் 28:29).

தன்னிடத்தில் வந்த யூதர்களிடம் பவுல் காலமே தொடங்கி சாயங்காலம் மட்டும் இயேசுவுக்கடுத்த விசேஷங்களைப் போதித்துக் கொண்டிருக்கிறான். யூதர்களும் அவன் சொன்னதைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். சிலர் பவுல் சொன்னவைகளை விசுவாசிக்கிறார்கள். சிலர் விசுவாசியாதிருக்கிறார்கள். தங்களுக்குள்ளே பவுல் சொன்னதைக்குறித்து மிகவும் தர்க்கம் பண்ணுகிறார்கள். பவுல் போதகம்பண்ணுவதை அதற்கு மேல் கேட்க மனதில்லாதவர்களாய், யூதர்கள் அவ்விடத்தைவிட்டு போய்விடுகிறார்கள்.

பவுல் அவர்களுக்கு சுவிசேஷத்தைப் பூரணமாய் உபதேசம்பண்ணியிருக்கிறான். அவர்களுக்கு எவ்வளவு சொல்லவேண்டுமோ, அவ்வளவையும் சொல்லி முடித்திருக்கிறான். இவையெல்லாவற்றையும் சொன்னபின்பு, யூதர்கள் எல்லோரும் மனந்திரும்பி இரட்சிக்கப்படவேண்டும். ஆனால் அவர்களோ தங்களுக்குள்ளே மிகவும் தர்க்கம் பண்ணிக்கொண்டு போய்விடுகிறார்கள். அவர்களுடைய இருதயத்தில் இரட்சிப்புக்கு ஏதுவான மாற்றம் உண்டாகவில்லை. பவுல் அவர்களிடம் ஆறுதலான வார்த்தைகளைப் பேசினான். தேவனுடைய நியாயத்தீர்ப்பைச் சொல்லி அவர்களைக் கடிந்துகொண்டான். அன்பாகப் பேசினாலும், எச்சரித்துப்பேசினாலும் அவர்களுக்கு ஒரு பிரயோஜனமும் உண்டாகவில்லை.

பவுலின் பிரசங்கத்தைக்கேட்டு அவர்கள் இரட்சிக்கப்படவில்லை. அவர்களுக்குள் கருத்து ஒற்றுமை உண்டாகவில்லை. மிகுந்த தர்க்கம் உண்டாயிற்று. பவுலுக்கு விரோதமாக அவர்கள் எல்லோரும் தங்கள் முகத்தை வேறுபக்கமாகத் திருப்பிக் கொள்ளுகிறார்கள். அந்த இடத்தை விட்டுப் போய்விடவேண்டும் என்று ஒருமனப்பட்டு தீர்மானித்து, அங்கிருந்து போய்விடுகிறார்கள். பவுல் சொன்னவைகளை விசுவாசித்த சிலரும் அவ்விடம்விட்டுப் போய்விடுகிறார்கள். தாங்கள் ஏன் போகிறோம் என்பதற்கான காரணம் அவர்களுக்கே தெரியவில்லை. சிலர் தவறாக தீர்மானம் செய்து அவ்விடம் விட்டுப் போய்விடுகிறார்கள்.

இக்காலத்திலும் சிலர் பவுலைபார்க்கவந்த யூதர்களைப்போல தீர்மானம் பண்ணுகிறார்கள். தங்கள் தீர்மானத்தில் உறுதியாக இருக்கிறார்கள். ஆனால் இவர்கள் தீர்மானம் தப்பான தீர்மானமாக இருக்கிறது. தப்புசெய்கிறவர்கள் மனந்திரும்பவேண்டும். நம்முடைய தப்பிதங்களைப் புரிந்துகொள்வதற்கு தேவனுடைய கிருபை நமக்குத் தேவைப்படுகிறது. தேவனுடைய கிருபையே நம்முடைய மனக்கண்களைப் பிரகாசமுள்ளதாக மாற்றுகிறது. தேவனுடைய கிருபையில்லாமல் நம்மால் ஒன்றும் செய்யமுடியாது. நாம் இரட்சிக்கப்படுவதற்குத் தேவனுடைய இரட்சிக்கும் கிருபை நமக்குத் தேவைப்படுகிறது.

இரண்டு வருஷம்
அப் 28:30-31

அப் 28:30 பின்பு பவுல் தனக்காக வாடகைக்கு வாங்கியிருந்த வீட்டிலே இரண்டு வருஷமுழுதும் தங்கி, தன்னிடத்தில் வந்த யாவரையும் ஏற்றுக்கொண்டு,

அப் 28:31 மிகுந்த தைரியத்துடனே தடையில்லாமல், தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கித்து, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைப் பற்றிய விசேஷங்களை உபதேசித்துக் கொண்டிருந்தான்

யாவரையும் ஏற்றுக்கொண்டு

பின்பு பவுல் தனக்காக வாடகைக்கு வாங்கியிருந்த வீட்டிலே இரண்டு வருஷமுழுதும் தங்கி, தன்னிடத்தில் வந்த யாவரையும் ஏற்றுக்கொண்டு (அப் 28:30).

பவுல் ரோமாபுரியில் கட்டப்பட்டவனாக இருக்கிறான். பவுலின் வரலாறு இந்த அதிகாரத்தில் நிறைவுபெறுகிறது. பவுலின் சரித்திரத்தில் நடைபெற்ற ஒவ்வொரு சம்பவமும் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு உபதேசமாக இருக்கிறது. பவுல் ரோமாபுரியில் இரண்டு வருஷம் காவலில் வைக்கப்பட்டிருக்கிறான். இந்தக் காலத்தில் அவனால் எந்த தேசத்திற்கும் பிரயாணம்செய்து கர்த்தருடைய ஊழியத்தைச் செய்யமுடியவில்லை. பவுல் தன்னுடைய வழக்கு விசாரணையை ராயருக்கு அபயமிட்டான். இராயருக்கு அபயமிட்டால் தன்னுடைய வழக்கு விசாரணை சீக்கிரத்தில் முடிந்துவிடும் என்றும், தன்னுடைய காவலிலிருந்து தனக்கு சீக்கிரத்தில் விடுதலைகிடைக்கும் என்றும் எதிர் பார்த்தான். ஆனால் அவன் எதிர்பார்த்தபிரகாரணம் பவுல் சீக்கிரத்தில் விடுதலையாகவில்லை. இரண்டு வருஷம் ரோமாபுரியில் காவலில் வைக்கப்பட்டிருக்கிறான்.

பவுல் கிறிஸ்துவுக்காகக் கட்டப்பட்டிருக்கிறான். அவனுடைய கட்டுகள் கிறிஸ்துவுக்குள்ளான கட்டுகளாகும். இது அரமனை எங்கும் உள்ளவர்களுக்கும், யாவருக்கும் வெளியரங்கமாய் தெரிந்திருக்கிறது என்று, பவுல் பிலிப்பியருக்கு எழுதின நிருபத்தில் எழுதியிருக்கிறான் (பிலி 1:13). பவுல் ரோமாபுரியில் காவலில் இருந்த இரண்டு வருஷங்களில் நான்கு நிருபங்களை எழுதினான். எபேசியர், பிலிப்பியர், கொலோசெயர், பிலேமோன் ஆகியவை இந்த நான்கு நிருபங்களாகும். இந்த நிருபங்களை எழுதுவதற்கு பவுலுக்கு எப்படிப்பட்ட விடுதலை கொடுக்கப்பட்டது என்பது நமக்கு தெரியவில்லை. இரண்டுவருஷம் மாத்திரம் பவுல் காவலிலிருந்தான் என்று எழுதப்பட்டிருக்கிறது.

பவுல் விடுதலையானபின்பு இத்தாலியா தேசத்திலிருந்து ஸ்பானியா தேசத்திற்கு போனான் என்று சரித்திரம் சொல்லுகிறது. அங்கிருந்து கிரேத்தா தீவுக்கு போனான். அதன் பின்பு தீமோத்தேயுவோடு யூதேயா தேசத்திற்கு போனான். அங்கிருந்து ஆசியாவிலுள்ள சபைகளை சந்தித்தான். நீண்ட காலத்திற்குப் பின்பு, இரண்டாம்முறையாக ரோமாபுரிக்குவந்தான். இங்கு நீரோ மன்னனுடைய கடைசி வருஷ ஆட்சியில், பவுல் சிரச்சேதம் பண்ணப்பட்டான்.

பவுல் கர்த்தருக்காக வல்லமையாய் ஊழியம்செய்தவன். ஆனாலும் அவன் பூரணவிடுதலையோடு ஊழியம் செய்யமுடியாதவாறு பல சமயங்களில் காவலில் வைக்கப்பட்டிருக்கிறான். தேசாதிபதியாகிய பேலிக்ஸ் பவுலை இரண்டு வருஷம் காவலில் வைத்தான் (அப் 24:27). அதன் பின்பு நீரோ ராயன் பவுலை ரோமாபுரியில் இரண்டு வருஷம் காவலில் வைத்தான். பவுல் காவலில் வைக்கப்படாமல், விடுதலையோடு இருந்திருந்தால், இன்னும் அநேக சபைகளை ஸ்தாபித்திருப்பான். பவுல் ஏன் காவலில் வைக்கப்பட்டான் என்பது தேவன் மாத்திரமே அறிந்திருக்கிற ரகசியம். பவுலுக்கு ஊழியத்தில் பல பாடுகள் உண்டாயிற்று. இவையெல்லாவற்றிற்கும் மத்தியில் பவுல் உண்மையோடு ஊழியம்செய்திருக்கிறான். பவுல் ரோமாபுரியில் காவலில் வைக்கப்பட்டதும் சுவிசேஷம் அறிவிக்கப்படுவதற்கு ஏதுவாயிற்று (பிலி 1:12-14).

பவுல் இரண்டு வருஷம் காவலில் இருந்தாலும், கர்த்தர் அவனுக்குச் சில சிலாக்கியங்களைக் காண்பித்தார். அவன் தனக்காக வாடகைக்கு வாங்கியிருந்த வீட்டிலே இரண்டு வருஷம் முழுவதும் தங்கியிருந்தான். ஏராளமான காவல்கள் உள்ள சிறைச்சாலையில் அடைக்கப்படுவதற்குப்பதிலாக, வீட்டில் தங்கியிருப்பதற்கு பவுலுக்கு வாய்ப்பு கிடைத்தது. தேசாதிபதியாகிய பேலிக்ஸ் பவுலை இரண்டு வருஷம் காவலில் வைத்தபோது, பவுலுக்கு இப்படிப்பட்ட சிலாக்கியம் கிடைக்கவில்லை.

பவுல் இரண்டு வருஷமாய் ஒரே வீட்டில் தங்கியிருக்கிறான். பல இடங்களுக்கும் சுற்றி அலைந்து ஊழியம் செய்த பவுலுக்கு, இந்த வீடு ஒரு இளைப்பாறுகிற ஸ்தலம் போலிருக்கிறது. இயேசு கிறிஸ்து ஊழியம் செய்த காலத்தில், தம்முடைய சீஷர்களை அழைத்துக்கொண்டு, வனாந்தரமான ஓர் இடத்தில் தனித்து சற்றே இளைப்பாறும்படி போனார் (மாற் 6:31). அதுபோலவே பவுல் இந்த வீட்டில் தனித்து சற்றே இளைப்பாறும்படி தங்கியிருக்கிறான். பவுல் விடுதலையோடு இருந்த காலத்தில் யூதர்கள் அவனுக்கு விரோதமாகத் தீமையான யோசனைகளை செய்தார்கள். அவனைக் கொலைசெய்வதற்குச் சற்பனையான சதியாலோசனை பண்ணினார்கள் (அப் 20:19). இப்போதோ பவுல் இராயருடைய மேற்பார்வையில், இந்த வீட்டில் இரண்டு வருஷம் மிகவும் பாதுகாப்பாக, தங்கியிருக்கிறான்.

பவுல் ரோமாபுரியில் காவலில் வைக்கப்பட்டிருந்தாலும் அவன் கிறிஸ்துவின் ஊழியத்தைத் தொடர்ந்து செய்கிறான். கிறிஸ்துவுக்காகக் கட்டப்பட்டிருக்கிறான். கிறிஸ்துவுக்காக ஊழியம் செய்கிறான். இவனுடைய சிறைச்சலையே இவனுக்கு தேவாலயமாகவும், ஜெபாலயமாகவும் இருக்கிறது. இது சாதாரண வீடாக இருந்தாலும். பவுலுக்கு இது ஒரு அரண்மனையைப்போலிருக்கிறது. பவுல் காவலில் இருந்தாலும், இவனுடைய வாய் கட்டப்படவில்லை. மிகுந்த தைரியத்துடனே தடையில்லாமல் தேவனுடைய ராஜ்ஜியத்தைக்குறித்துப் பிரசங்கிக்கிறான். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைப்பற்றிய விசேஷங்களை உபதேசித்துக் கொண்டிருக்கிறான்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் ஊழியம் செய்யாமல் அமைதியாக இருக்கமாட்டார்கள். துன்பங்களும் பாடுகளும் வந்தாலும், அவற்றைச் சகித்துக்கொண்டு, கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணுவார்கள். பவுல் கட்டப்பட்டிருக்கிறான். கர்த்தருடைய வார்த்தை கட்டப்படவில்லை. தேவனுடைய வார்த்தையை எந்த அந்தகார சக்தியினாலும் கட்டிப்போடமுடியாது.

பவுல் தங்கியிருந்த வீட்டில் அவனைப் பார்ப்பதற்கு அநேகர் வருகிறார்கள். தன்னிடத்தில் வந்த யாவரையும் பவுல் ஏற்றுக்கொள்ளுகிறான். அவர்களுக்கு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணுகிறான். ஊழியக்காரர்கள் கர்த்தருடைய சுவிசேஷத்தை அறிவிக்க எப்போதும் ஆயத்தமாக இருக்கவேண்டும். தங்களிடத்தில் சுவிசேஷம் கேட்க வருகிறவர்களை எப்போதும் ஏற்றுக் கொள்ளவேண்டும். நம்மிடத்தில் கிறிஸ்துவின் உபதேசத்தை கேட்க வருகிறவர்களுக்குத் தடையில்லாமல் இருப்பதற்காக, ஊழியக்காரர்களுடைய வீடுகளின் கதவுகளும், ஆலயத்தின் கதவுகளும் எப்போதும் திறந்தே இருக்கவேண்டும். கர்த்தருடைய ஊழியத்தை ஒருவேளை நம்மால் அதிகமாய் செய்யமுடியாமல் போனாலும், நம்மால் முடிந்தவரையிலும் கர்த்தருக்கு ஊழியம் செய்யவேண்டும்.

பவுல் தனக்காக வாடகைக்கு வாங்கியிருந்த வீட்டிலே இரண்டு வருஷம் தங்கியிருக்கிறான். அவனைப்பார்க்க அநேகர் வருகிறார்கள். அவர்களில் சிலர் ஐசுவரியவான்களாகவும், பெரிய அதிகாரிகளாகவும் இருக்கிறார்கள். பவுல் அவர்களைப்பார்த்துப் பயப்படவில்லை. அவர்களையும் ஏற்றுக்கொள்ளுகிறான். பவுலைப்பார்ப்பதற்கு தரித்திரரும், சாதாரண ஜனங்களும் வருகிறார்கள். அவர்களை ஏற்றுக்கொள்ளவும் பவுல் வெட்கப்படவில்லை. தன்னிடத்தில் வந்த யாவரையும் ஏற்றுக்கொள்ளுகிறான். இவர்கள் எல்லோரும் சுவிசேஷத்தைக் கேட்பதற்கு வாஞ்சையோடு வந்திருக்கிறார்கள். இவர்களிடத்தில் கற்றுக்கொள்ளும் இருதயம் இருக்கிறது. இரட்சிப்பின் செய்தியைக்கேட்க விரும்பி வருகிறர்களை, ஏற்றுக்கொண்டு, அவர்களுக்கு காலதாமதம் பண்ணாமல் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை போதகம் பண்ணுகிறான்.

உபதேசித்துக் கொண்டிருந்தான்

மிகுந்த தைரியத்துடனே தடையில்லாமல், தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கித்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப்பற்றிய விசேஷங்களை உபதேசித்துக் கொண்டிருந்தான் (அப் 28:31).

பவுல் தேவனுடைய ஸ்தானாபதி. அவன் கர்த்தருக்கு உக்கிராணத்துவ ஊழியம் செய்கிறான். தேவனுடைய ராஜ்ஜியத்தைக்குறித்து ஜனங்களுக்கு பிரசங்கம் பண்ணுகிறான். மனுஷருடைய ராஜ்ஜியத்துக்கடுத்த காரியங்களில் பவுல் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளவில்லை. பூமிக்குரிய ராஜ்ஜியங்களில் பங்குள்ளவர்கள் அதைக் குறித்து கரிசனையோடு இருப்பார்கள். பவுலோ தேவனுடைய ராஜ்ஜியத்திற்குரியவன். ஆகையினால், பவுல் மனுஷர் மத்தியிலே தேவனுடைய ராஜ்ஜியத்தைக்குறித்து மாத்திரமே பிரசங்கம் பண்ணுகிறான்.

யூதர்களில் சிலர் பவுலிடத்தில் வந்து தேவனுடைய ராஜ்ஜியத்தைப் பற்றி தர்க்கம் பண்ணினார்கள். பவுல் அவர்களுக்கு தேவனுடைய ராஜ்ஜியத்தைக்குறித்து சாட்சிகொடுத்து விஸ்தரித்துப்பேசினான் (அப் 28:23). பவுலின் பிரசங்கத்தைக்கேட்டவர்கள், தங்களுடைய இருதயத்தில் மாற்றம் தெரிகிறார்கள். ஞானிகள் நல்லவர்களாக மாறுகிறார்கள். புத்திமான்கள் தங்கள் புத்தியில் விருத்தியடைகிறார்கள். பவுலுடைய பிரசங்கத்தின் மூலமாய் ஜனங்களுக்கு மிகுந்த ஆசீர்வாதம் உண்டாயிற்று. சுவிசேஷத்தை நாம் ஒரு நோக்கத்தோடு பிரசங்கிக்கிறோம். பிரசங்கத்தைக் கேட்கிற ஜனங்கள் இரட்சிக்கப்படவேண்டும். இரட்சிக்கப்பட்ட ஜனங்கள் தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சி பெறவேண்டும். கர்த்தர் கொடுக்கிற ஆசீர்வாதங்களைத் தடையில்லாமல் பெற்றுக்கொண்டு பரிபூரணப்படவேண்டும்.

பவுல் இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரன். கிறிஸ்துவின் ஸ்தானிகராக ஊழியம் செய்கிறான். தன்னிடத்தில் வந்தவர்களுக்குக் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைப்பற்றிய விசேஷங்களை உபதேசித்துக் கொண்டிருக்கிறான். இயேசு கிறிஸ்துவின் பூரண சரித்திரத்தை அவர்களுக்கு விரிவாகச்சொல்லுகிறான். தேவனுக்கடுத்த இரகசியங்களை ஜனங்களுக்கு விவரிக்கிறான். கிறிஸ்துவையும், அவர் சிலுவையில் அறையப்பட்டதையும் மாத்திரமே பவுல் பிரசங்கம் பண்ணுகிறான். இந்த சத்தியமே பவுலுடைய பிரசங்கத்தின் மையச்செய்தி. தன்னுடைய பிரசங்கத்தில் பவுல் இந்த சத்தியத்தையல்லாமல், வேறு எந்த சத்தியத்தையும் பிரசங்கம் பண்ணுவதில்லை.

பவுல் தன்னிடத்தில் வந்திருக்கிற ஜனங்களிடத்தில் மிகுந்த தைரியத்தோடே பிரசங்கம் பண்ணுகிறான். தேவனுடைய ராஜ்ஜியத்தைக் குறித்து பிரசங்கம் பண்ணுவதற்கும், கர்த்தராகிய இயேசுவைப்பற்றிய விசேஷங்களை உபதேசம் பண்ணுவதற்கும் பவுலுக்கு ஒரு தடையும் ஏற்படவில்லை. தடையில்லாமல் ஊழியம் செய்கிறான். தேவன் தம்முடைய கிருபையினால் பவுலுக்கு விடுதலையின் ஆவியைக் கொடுத்திருக்கிறார். ஆகையினால் பவுல் மிகுந்த தைரியத்துடனே, தடையில்லாமல் பிரசங்கம் பண்ணுகிறான். கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து பவுல் வெட்கப்படவில்லை.

பவுல் காவலில் வைக்கப்பட்டிருக்கிறான். ஆனாலும் அவனுடைய பிரசங்கத்திற்கு யாரும் தடைபண்ணவில்லை. புறஜாதியாரிடத்தில் சுவிசேஷத்தை அறிவிப்பதற்கு யூதர்கள் தடைபண்ணினார்கள். ஆனால் அந்த யூதர்களுக்கு ரோமப்பேரரசில், பவுலின் பிரசங்கத்தைத் தடைபண்ண ஒரு அதிகாரமும் இல்லை. கிறிஸ்தவ மார்க்கத்தை ரோமப்பேரரசு தடைபண்ணவில்லை. கிறிஸ்துவின் உபதேசத்தை யூதர்கள் எதிர்த்தார்கள். அதை மதபேதம் என்று சொல்லி தூஷித்தார்கள். கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பிரசங்கிப்பவர்கள் இப்பூச்சக்கரத்தில் கொள்ளை நோயைப்போல தீங்குசெய்கிறார்கள் என்று யூதர்கள் சொன்னார்கள். ஆனால் யூதர்களுடைய குற்றச்சாட்டுகளை ரோமப்பேரரசு அங்கீகரிக்கவில்லை.

ரோமாபுரியில் ஏராளமான யூதர்களும் புறஜாதியாரும் இருக்கிறார்கள். இவர்களில் அநேகர் கிறிஸ்தவ மார்க்கத்தை எதிர்க்கிறார்கள். ஆனால் பவுலோ கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பிரசங்கிக்கவேண்டும் என்று தீர்மானமாய் இருக்கிறான். பவுல் ரோமாபுரியில் கட்டப்பட்டவனாக இருந்தாலும், கிறிஸ்துவின் சுவிசேஷத்தை மிகுந்த தைரியத்துடனே, தடையில்லாமல் பிரசங்கம் பண்ணுகிறான்.

யூதருடைய ஆலோசனைச் சங்கத்தார், தங்கள் அதிகாரத்தைப்பயன்படுத்தி, பவுலின் ஊழியத்தைத் தடைபண்ண முயற்சிசெய்தார்கள். ஆனால் தேவனோ பவுலின் ஊழியம் தடையில்லாமல் நடைபெறவேண்டும் என்று தீர்மானம் செய்திருக்கிறார். தேவனுடைய சித்தத்திற்கு விரோதமாக யூதமார்க்கத்தாரால், பவுலில் ஊழியத்தைத் தடைபண்ணமுடியவில்லை.

பவுல் காவலில் வைக்கப்பட்டிருந்தாலும், தேவன் அவனுக்கு ஆறுதலாக இருக்கிறார். சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ண, பவுல் காவலில் வைக்கப்பட்டிருக்கும்போது, விரிவான வாசல் திறக்கப்படவில்லை. அதே வேளையில் ஊழிய வாசல் முற்றிலுமாக அடைக்கப்படவும் இல்லை. ஊழியம் செய்ய பவுலுக்கு ஒரு வாசல் திறக்கப்பட்டிருக்கிறது. அந்த வாசல் தேவனால் திறக்கப்பட்டவாசல். இதை யாராலும் அடைக்கமுடியவில்லை. பவுல் அந்தத் திறந்த வாசலைப்பயன்படுத்துகிறான். மிகுந்த தைரியத்துடனே தடையில்லாமல் சுவிசேஷத்தை பிரசங்கம் பண்ணுகிறான்.

பவுலுடைய ஊழியத்தின் மூலமாக, ரோமப்பேரரசின் அதிபதியாகிய ராயருடைய அரமனையில் அநேகர் இரட்சிக்கப்படுகிறார்கள். பவுல் பிலிப்பியருக்கு நிருபம் எழுதும்போது, "ராயனுடைய அரமனையிலுள்ள பரிசுத்தவான்கள்" அவர்களுக்கு வாழ்துதல் சொல்லுவதாக எழுதுகிறான்.

நாம் வாசம் பண்ணுகிற பட்டணம் சமாதானமுள்ளதாக இருக்கும்போது கர்த்தருக்கு நன்றி சொல்லவேண்டும். சுவிசேஷ ஊழியம் செய்வதற்கு வாய்ப்புக்கள் கிடைக்கும்போது, அதைப் பயன்படுத்தி, தேவனுடைய ராஜ்ஜியத்தைக்குறித்து பிரசங்கம் பண்ணவேண்டும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப்பற்றிய விசேஷங்களை உபதேசம் பண்ணவேண்டும்.

இப்பிரபஞ்சத்தில் நம்முடைய வாசஸ்தலம், சமாதானம் நிறைந்ததாகவும், அமைதியுள்ளதாகவும், சந்தோஷம் மிகந்ததாகவும் இருந்தாலும், இது நம்முடைய நித்திய வாசஸ்தலம் அல்ல. நம்முடைய நித்திய வாசஸ்தலம் பரலோகத்தில் உள்ளது. அங்கு கர்த்தரைத் துதிப்பதற்கு நமக்கு தடையேதும் இருக்காது. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம், அந்தப் பரமவாசஸ்தலத்திற்குள் பிரவேசிக்கப்போகிற நாளைப் ஆவலோடு, வாஞ்சையாய், எதிர்பார்த்து காத்துக்கொண்டிருக்கிறோம்.